[illegible]

# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண் : 151.

சேலம் - 1. தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

| | |
|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) .. .. | 3¼% |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) .. .. | 3½% |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் .. .. | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் .. .. | 4½% |
| **பிக்சட் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு : | |
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் .. .. | 5½% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் .. .. | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் .. .. | 6¾% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் .. .. | 7¼% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் .. .. | 7½% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் .. .. | 7¾% |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் .. .. | 8 % |
| நடப்பு கணக்கு ½% சேமிப்பு கணக்கு | 4½% |

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு ½% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/–க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., தலைவர். வை. இராமலிங்கம், செயலாளர். தி. இராஜமாணிக்கம், நிர்வாக அலுவலர்.



# காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி

தபால் பெட்டி எண் : 9

தொலைபேசி { அலுவலகம் : 338
பெருந்தலைவர் : 368 }

சேமிப்புக்கு

பாதுகாப்புக்கு

உரிய வட்டி

உயரிய வட்டி

செல்வ வரிச் சலுகை

வருமான வரி விலக்கு

இன்னும் பல சலுகைகள்

விவரங்களுக்கு நேரில் வருக அல்லது வரைக

கிளைகள் : திருவள்ளூர், திருத்தணி, செங்கற்பட்டு, படாளம், மதுராந்தகம், பொன்னேரி, ஊத்துக்கோட்டை, பள்ளிப்பட்டு, அச்சரப்பாக்கம், தாம்பரம், பூவிருந்தவல்லி உத்திரமேரூர், திருப்போரூர், மீஞ்சூர், செங்குன்றம், குன்றத்தூர், இராம கிருஷ்ணராஜு பேட்டை, ஆலந்தூர், ஆவடி, திருவொற்றியூர், கும்முடிப்பூண்டி.

சி. பி. சந்திரன், பி.காம். (ஹானர்ஸ்), செயலர். சி. வி. எம். அண்ணாமலை, எம்.எல்.ஏ., பெருந்தலைவர்.

வி. பி. அகிலன், துணைப்பெருந் தலைவர்.


தாலோ காரிய சித்தியாலோ நஷ்டஈடு வழங்குவது தியாகத்தை அவமதிப்பதுபோல ஆகிவிடும் ... தியாகியின் நோக்கத்திற்குக் களங்கம் தேடுவது போல் ஆகிவிடும்'' என்று தத்துவ விளக்கம் கூறியபடி உதவியைத் தள்ளிப்போடத் தொடங்குகிறான் மணிவாசகன். அவன் சட்டம் படித்தவன் நீதியைப் படியாதவன்.

முத்தையாவின் மனங்கோணாமல் நடந்து கொள்ள வேண்டும்; அது ஒன்றுதானே அவனுடைய குறிக்கோள்! அது ஒன்றுதானே அவனது அறிவுச் சேமிப்பு.

நர்மதாவின் நியாய வாதங்களும் உரிமைக் குரலொலியும் சாதிக்க முடியாத ஒன்றை, ராதையின் எளிமையான அமைதி நிறைந்த வேண்டுகோள் நிறைவேற்றி வைத்து விடுகிறது...

இத்தனைக்கும், முத்தையாவிடம் அதிகம் பேசவில்லை; ஆர்ப்பாட்டமாகவோ அச்சுறுத்தும் படியாகவோ ஏதும் கூறவில்லை ராதை.

''மாமா!...நீங்கள் அஞ்சலைக்கு உங்கள் ஆலையில் ஒரு வேலை போட்டுத்தருகிறீர்கள்... என் அத்தானுக்கு நீங்கள் தரவிருந்த சட்ட ஆலோசகன் பதவியைக் கூடத் துச்சமாகத் தூக்கியெறிந்து விட்டுப் புறப்பட்டுப் போனவர் இந்த ராதை. இப்போது நானே வலியவந்து, உங்கள் வாசலில் ஏறிநின்று இந்த உதவியைக் கேட்கிறேன்.... ஏழைக் குடும்பத்து அஞ்சலைக்கு வாழ்வு கிடைக்கும் என்ற ஒரு காரணத்திற்காக மட்டும் கேட்கவில்லை; அவள் காரணமாக எங்கள் குடும்பத்துள் எழுந்திருக்கும் பிரச்னை ஒன்று அடங்க வேண்டும். வக்கீல் அத்தானுக்கும் — டாக்டர் அக்காவுக்குமிடையை அமைதியும் அன்பும் நிலவ வேண்டும். அஞ்சலைக்குச் செய்யும் நன்மை இவ்விருவர் வாழ்க்கைக்கும் நன்மை செய்யும். அதனால் உரிமையோடு உங்களைக் கேட்கிறேன், எனக்காக இந்த உதவியைச் செய்யுங்கள்'' என்று ராதை மன்றாடியதனால், பாண்டித்துரை மனம்மாறி அஞ்சலைக்குத் தன் தொழிற்சாலை ஒன்றில் வேலை போட்டுத் தர ஏற்பாடுகளைச் செய்கிறார்!

செண்பகா மில்லின் தொழிலாளர் நல மருத்துவ மனை—






ஒரு டாக்டர் என்ற முறையில் பணிபுரிந்து வந்த நர்மதாவுக்கு, வேறொரு டாக்டர் மருத்துவம் பார்க்க வேண்டிய நேரம்!

மகப்பேற்றுக்காக மருத்துவ மனையில் நர்மதாவைச் சேர்ப்பித்துவிட்டு அமைதியின்றி அறைவாசலில் தவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கிறான் மணிவாசகன்.

ஆணா? பெண்ணா?

என்ன குழந்தை பிறக்கும்!.. யாருடைய ஜாடையைக் கொண்டிருக்கும்?... எத்தனை பவுண்டு எடை இருக்கும் என்பதைப் பற்றி ராதையும் மணிவாசகனும் பரபரப்புக்கும் தவிப்புக்கும் மத்தியில் சர்ச்சை செய்து கொண்டிருக்கும் நேரம்.

ஆபரேசன் தியேட்டரின் அறையைத் திறந்து கொண்டு பெரிய டாக்டர் வருகிறார்...

''டாக்டர்! என்ன குழந்தை..ஆணா? பெண்ணா?'' என்று பரபரப்பாகக் கேட்கிறாள் ராதை.

''ஆணா பெண்ணா என்ற சர்ச்சையைவிட, பிழைக்க வேண்டியது பெரிய உயிரா, சின்ன உயிரா என்ற பிரச்னைக்கு முடிவு சொல்லுங்கள். சீக்கிரம்!'' என்கிறார் பெரிய டாக்டர்.

மணிவாசகனின் இதயம் அதிர்கின்றது?

பிற குடும்பங்களுக்காக, பிற மனிதர்களுக்காக, சிறிதும் அதிர்ச்சியோ ஆயாசமோ அடையாத சட்ட மூளைக்குள் சஞ்சலம் கொதிக்கிறது.

அவன் மனிதனாக — கணவனாகக் கண் கலங்கி நிற்கிறான்.

(வளரும்)

**மின்னணுத் துறைக் கண்காட்சி.**

கடந்த 1967–ல் உருவாக்கப்பட்ட ஆசிய மின்னணுத் துறைக் கூட்டமைப்பில், ஆசிய நாடுகளின் தேசிய நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன.

வருகிற டிசம்பர் 5-ஆம் நாள் முதல் 11-ஆம் நாள் வரை ஏழாவது ஆசிய மின்னணுத்துறை மாநாடு புதுடில்லியில் நடைபெற இருக்கிறது. இந்தியாவில் முதன்முதலாக நடைபெற இருக்கும் இம் மாநாட்டையொட்டி, புதுடில்லி மதுரா சாலையிலுள்ள கண்காட்சித் திடலில், மின்னணுக் கருவிகள் கண்காட்சியொன்று நடைபெறும். நாட்டிலுள்ள பல்வேறு அரசுத்துறை, தனியார் துறை நிறுவனங்களும் ஆசியப் பிராந்திய நிறுவனங்கள் பலவும் கண்கர்ட்சியில் பங்கு கொள்ளும்.

## பண்டைத் தமிழகத்துத் தலைநகர்கள்

**புகார்:** (காவிரிப்பூம்பட்டினம்) சங்க காலச் சோழ மன்னர்களின் முதல் தலைநகர்.

**மதுரை:** சங்க காலம் முதல், பாண்டிய மன்னர்களின் தலைநகர்.

**தஞ்சை:** விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றி அங்குச் சோழப் பேரரசை கி.பி. 850–ல் நிறுவினான். தஞ்சை, மூன்றாம் இராஜ ராஜன் காலம்வரை சோழர் தலைநகராய் விளங்கியது.

**கங்கை கொண்ட சோழபுரம்:** முதலாம் இராஜேந்திரன் கங்கை வரை வெற்றி கொண்டு, கங்கை கொண்ட சோழபுரத்தை ஏற்படுத்தி அதைத் தலைநகராக்கினான். அதிலிருந்து, சோழப் பேரரசின் தலைநகராக அது விளங்கியது.

சண்முகம் என்ற காரோட்டி—சண்முகம் என்ற நன்றியின் சின்னம் அந்த அறைக்குள் நிற்பதை முத்தையா உணர்ந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. பஞ்சாலையின் முதலாளி இதயம் பஞ்சினைப்போல் மென்மையாகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லையே! அதற்குள் இரும்பின் உறுதியும் எஃகின் கடினமும் இடியின் வலிமையும் இருக்கலாமே!

அறையை விட்டு முத்தையா அப்பால் போனவுடன்—ஒரு விநாடி தயக்கத்திற்குப் பிறகு சண்முகமும் சரேலென வெளியேறி வருகிறான்.

அஞ்சலைக்கு அதிர்ச்சி....நர்மதாவுக்கும் நர்ஸ் தங்கத்திற்கும் வியப்பு. மனைவியைக் காணவந்தவன் அனுதாபக் கண்ணீர் சிந்தாமல், ஆறுதல் வார்த்தை கூறாமல், அன்னியனைப்போல் எப்படி வெளியேறிவிட முடியும்? கணவனின் பாசமும் பந்தமும் அவ்வளவு பலவீனப் பட்டுப்போய் விடக் கூடிய அளவுக்கு அஞ்சலை என்ன பாவம் செய்துவிட்டாள்....?

சண்முகத்தின் போக்கிற்கான காரணத்தைக் கண்டறிவதற்காக, அவனைத் தொடர்ந்து விரைந்து வருகிறாள் நர்மதா.

மருத்துவமனை வராந்தாவின் மறுகோடியில் நடந்து போய்க்கொண்டிருக்கும் சண்முகம், டாக்டர் நர்மதா தன்னைத் தொடர்ந்து வருவதை உணருகிறான். கால்கள் தாமாக நிற்கின்றன.

"சண்முகம்....ஒரு விநாடி டாக்டர் அறைக்குள் வந்துவிட்டுப் போ...." என்று அழைக்கிறாள் நர்மதா.

"மன்னிக்க வேண்டும் டாக்டரம்மா...." என் மனைவியின் முகத்தின் விழிக்க எனக்கு விருப்பமில்லை!" என்று மூர்க்கமாக வர மறுக்கிறான் சண்முகம்.

"உன் மனைவியைப் பார்க்க நீ போவதும் போகாததும் உன் சொந்த விருப்பம். நான் உன்னிடம் ஒரே ஒரு கேள்வி கேட்கவேண்டும். அதற்காகத்தான் என் அறைக்கு வரும்படி உன்னைக் கூப்பிடுகின்றேன்" என்று கூறிவிட்டுக் காவலரின் அனுமதிக்காகக் காத்திருக்கிறாள் நர்மதா.

"வருகிறேன் டாக்டரம்மா...." என்று பணிவுடன் அறைக்குள் வந்து நிற்கிறான் காரோட்டியான சண்முகம்.

'சண்முகம்—உன்னைப் பார்க்க வேண்டும். உன் குரலைக் கேட்க வேண்டும் என்று உன் மனைவி எப்படித் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள் என்பது மற்றவர்களைவிட எனக்குத்தான் நன்றாகத் தெரியும்...."

"அத்தனையும் நாடகம் டாக்டரம்மா. என்மேல் உண்மையான அக்கறை இருந்தால் நான்தான் அவள்மீது காரை ஏற்றினேன் என்று வாக்குமூலம் கொடுத்திருப்பாளா?" என்று புலியாய் உறுமுகிறான் சண்முகம்.

"அடப்பாவி—அவள் ஏன் அப்படிச் சொன்னாள் என்பதை நான் விளக்குகிறேன்..." என்று நர்மதா ஆரம்பம் செய்தாள்.

அதற்குள் சண்முகம் பொறுமை அற்றவனாகிப் படபடப்புடன், "மன்னிக்க வேண்டும் டாக்டரம்மா.... இரண்டு நாட்களாக எங்களுக்குள் மனத்தாங்கல் இருந்தது உண்மை...! மூத்த மகளுக்குக் கல்யாணம் பண்ணக் கூடத் துப்பில்லை' என்று அவள் என்னைக் குத்திக் காட்டியதால், நான் கோபப்பட்டதும் உண்மை. ஆனால் அதற்காகக் கார்விபத்து வழக்கில் அவளே என்னைக் குற்றவாளியாக்கி வாக்குமூலம் கொடுத்து வஞ்சந் தீர்த்துக் கொள்வாள் என்பதை நான் கனவிலும் நினைக்கவில்லை. இப்படி ஒரு வேஷக்காரியுடன் குடும்பம் நடத்துவதைவிடச் சிறைச்சாலைக் கொட்டிலைக் குடும்பமாக ஒப்புக் கொள்ளுவது மேலான காரியம். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கண்ணிமைக்கும் நேரத்தில் அறையைவிட்டு—ஏன், மருத்துவ மனையைவிட்டே வெளியேறிப் போகிறான் சண்முகம்.

நர்மதா கல்லாய்ச் சமைந்து நிற்கிறாள்.

கணவனே வலியச் சென்று குற்றத்தை ஏற்றுக் கொண்டிருப்பதால் அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று நம்பித்தானே அஞ்சலை அதையே தன் வாக்குமூலத்திலும் கூறியிருக்கிறாள். கணவனின் கருத்துக்கு முரணாகக் கூறக் கூடாதே என்றுதானே நெஞ்சு வெடிக்கக் கூடிய சோகத்தையும் தாங்கிக் கொண்டு, "என் கணவன் தான் குற்றவாளி" என்று எழுதிக் கையெழுத்திட்டும் கொடுத்தாள்? அவளுடைய நேர்மையைப் புரிந்துகொள்ள தெரியாமல் சண்முகம் அவளுடைய நோக்கத்திற்கே களங்கம் கற்பித்துப் பேசிவிட்டுப் போகிறானே....

அட ஆண்டவனே! ஆலை முதலாளி முத்தையாவின் அஜாக்கிரதையினால் இங்கே இரண்டு இதயங்களுக்கிடையே பெரும் பிளவு விழுந்துவிட்டதே, முத்தையா என்னும் இந்த முதலாளி முத்தையா என்னும் இந்த முள்வேலி இன்னும் எத்தனை எத்தனை இதயங்களைக் கூறு போடப் போகிறதோ!

# 6

# அன்பின் கவசங்கள்

அன்பை விதைத்து அமைதியை அறுவடை செய்பவள் ராதை. எத்தனை யுகங்களானாலும் வற்றாமல் வளங்கொழிக்கும் விளைநிலம் அவள் இதயம். பண்பட்ட அந்த இதயமும் அவள் தந்தை பாண்டித்துரை விட்டுச் சென்ற ஒரே சொத்து!

தன்னுடைய அமைதியைவிட, தன்னைச் சுற்றியுள்ளவர்களின் மன நிம்மதியையே பெரிதும் விரும்பும் இயல்பு கொண்ட ராதைக்கு, கார் விபத்துக் காரணமாகக் கணவன்–மனைவிக்குள் கருத்து வேறுபாடு பிறந்திருப்பதை அறிந்ததும் வேதனை அதிகரிக்கின்றது. அதுவும் மற்றவர் இதயம் நோகக் கூடாதே என்பதற்காக ஒத்த கருத்துக்களைத் தெரிவிக்கப் போய் அதுவே கணவன் மனைவி இருவருக்கும் காலனாக வந்துவிட்டதே என்பதால் அவளுடைய பரிவிரக்கம் பன்மடங்காகிறது.

ராதையை மிகவும் அதிகமாகப் பாதித்த விஷயம், இந்த விபத்து–இதனைத் தொடர்ந்து பிறந்துவிட்ட வழக்கு–இவ்விரண்டின் காரணமாக நர்மதா–மணிவாசகன் இருவருக்கும் அதிகப்படியான வேலையும் அளவுக்கு மீறிய மன வேதனையும் வந்துவிட்டதே என்பதுதான்...!

கணவன் வக்கீல், மனைவி டாக்டர். கண் நிறைந்த உருவங்கள்; கை நிறையச் சம்பாத்தியம்; கௌரவமான வாழ்க்கை என்ற கணக்குகளுக்கும் அப்பால் தொழிற் பிணக்குகளுக்கும் இந்தக் குடும்பத்தில் இடங் கொடுத்துவிடக் கூடுமே என்ற பயம் அவளைப் பற்றிக் கொள்கிறது! அனுசரித்துக் கொண்டு போகிற இதயங்களாக இருந்தால் அந்த அளவுக்கு ராதையின் பொறுப்பும் கவலையும் குறையும்...! இந்த இரண்டு இதயங்களுமோ... தமக்குத் தாமே இடையூறாக நிற்கும் வீம்பு படைத்தவை.

குதிரைச் சவாரியில் தொடங்கிக் கொள்கைப் பிரச்சினை வரையில் வீம்பு பிடித்து வெற்றிக்குப் போட்டியிடுகின்ற வக்கிரங்கள்....!

அமைதிக்குரிய வழியைப் போற்றி அறியாத இதயங்கள்.

நர்மதா இப்போது நிறைமாதக் கர்ப்பிணி. புதிய உயிர் ஒன்றை உலகத்திற்கு அறிமுகப் படுத்தபோகும் பெருமையைச் சுமந்தபடி தன் தொழிற் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறாள்.

மருந்தகத்தில் நோயாளிகளின் உடல் வேதனைகளுடன் அவர்களது மன உளைச்சல்களையும் தீர்த்து வைக்கும் பொறுப்பைத் தானாக வலிய ஏற்றுக் கொண்டிருப்பவள் டாக்டர் நர்மதா. கார் விபத்தில் சிக்கி மருத்துவமனைக்குள் வந்த அஞ்சலை, உடல் நன்றாகத் தேறி நடமாடும் தெம்பும் பெற்று வீட்டுக்குப் போவதற்குள், நர்மதாவின் இதயத்துள் 'தனியான இடத்தைப் பெற்றுவிட்டிருந்தாள்.

அஞ்சலையின் மேல் பிறந்த அன்பு, அனுதாபத்தின் அடிப்படையில் பிறந்ததாயிற்றே? அதனால் அந்த அன்புக்கு ஆழம் அதிகம்; உறுதி அதிகம். இந்த உண்மையை உறுதிப் படுத்தும் அளவுக்கு மணிவாசகனிடமும் முத்தையாவிடமும் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறாள் நர்மதா.

"அஞ்சலைக்கு எனது ஆலையிலேயே ஒரு வேலை போட்டுத் தருகிறேன்" என்று கூறிவிட்டு மருத்துவமனையை விட்டு வெளியேறும்போதே அந்த எண்ணத்தையும் உதறிவிட்டுத்தான் புறப்பட்டிருக்கிறார் முத்தையா. அவர் ஆலைமுதலாளி. அனுபவம் மிக்கவர். சொல்வேறு செயல் வேறாக இருந்தால்தான் சொத்தும் சுகமும் ஒன்றாகும்படியாக வாழ முடியும் என்ற அடிப்படைத் தத்துவத்தில் அபார நம்பிக்கை கொண்டவர். அதனை நம்பி வாழ்க்கைப் பாதையில் அடியெடுத்து வைத்த கைகாரப் பேர்வழி.

அவர் தம் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்; நைந்து கிடக்கும் அஞ்சலையின் இதயத்திற்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்; அவர் வாக்களித்தபடி அஞ்சலைக்கு அவருடைய தொழிற்சாலையில் கௌரவமான வேலை ஒன்றைப் போட்டுத்தர வேண்டும்—இத்தனைக்கும் மணிவாசகனின் தூண்டுதலும் வேண்டுகோளும் துணைநிற்க வேண்டும்.

இதற்காக மணிவாசகனிடம் மாதக் கணக்கில் நர்மதா வாதாடிக் கொண்டிருக்கிறாள்.

"அத்தான் . உங்கள் முதலாளிக்கு வரவிருந்த சிறைத் தண்டனையைச் சண்முகம் அனுபவித்து வருகிறான். அந்த நன்றியை அடுத்த கணமே மறந்தவர் உங்கள் முதலாளி! சண்முகத்தின் மனைவிக்கு மருந்தகத்தில் ஆறுதலாகச் சொன்னவர், அதையே நடைமுறையில் செயலாற்றத் தயங்குகிறார்; தாட்சணியம் பார்க்கிறார்; இந்தப் பழிபாவம் அவரைச் சும்மாவிடப் போவதில்லை. நீங்கள் மனம் வைத்த காரணத்தால் அவர் வெளியே மனிதனாக நடமாடுகிறார். இவரைப் போல் பணம் படைத்தவர்கள் பலர் சிறைச்சாலைக்குப் பதிலாகச் செல்வ மாளிகையில் வாழ முடிகிறது. ஏழைகள், இல்லாதவர்கள் வெளியுலகத்தில் வாழ வேண்டியவர்கள், சிறைச்சாலைக்குள் வாழ்கிறார்கள். காசுக்காக உங்கள் முதலாளியின்மேல் காட்டுகிற விசுவாசத்தைக் கருணைக்காக அந்த ஏழைப் பெண்மேல் அனுதாபமாக்கிப் பாருங்கள். அஞ்சலையின் குடும்பத்து விளக்கை அணையாமல் காப்பாற்றுங்கள்" என்று இரவும் பகலும் மன்றாடுகிறாள்.

முதலாளி முத்தையா கிடக்கட்டும்; அவரிடம் சம்பளம் பெறும் மணிவாசகனே அதற்கு மசிய மாட்டேன் என்கிறானே! "ஒரு தொழிலாளியின் தியாகத்திற்கு உடனே காசுபணத்

**உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை உயர்கிறது!**

1971-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்து சென்ற உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 3,00,995.

1972-ல் இவ் வெண்ணிக்கை 3,42,950 ஆக உயர்ந்திருக்கிறது.

1·2·73

ஐ 40 காசு





அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

· பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

· சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புதுடில்லி
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247,

# தமிழரசு

மலர் 3. இதழ் 15.
1-2-1973



பேறிஞர் அண்ணா அவர்களின் நான்காவது நினைவுநாளில், அண்ணா வழியில் அய
உழைப்போம்—தொடர்ந்து தொண்டாற்றுவோம்—என்ற உறுதியை ஏற்கிறது தமிழக அ









கண்டாலே நாவில் நீர் சுரக்க வைக்கும் ஐஸ்கிரீமும் அழகிய வெள்ளி மென்தாளில் சுற்றப்பட்ட இனிப்பு வகைகளும் காண்போர் கருத்தைக் கவரும் வண்ணம் கடைகளில் காட்சியளிக்கின்றன. ஆனால் இவற்றை வாங்கித் தின்றால் கொஞ்ச நாட்களுக்கோ அன்றி ஆயுள் முழுவதுமோ நோயினால் அவதிப்படும் நிலைமை நேரிடலாம் என்பதைப் பலர் அறிய மாட்டார்கள். சில சமூக விரோத தயாரிப்பாளர்களும், வியாபாரிகளும் இந்தத் தின் பண்டங்கள் மட்டுமின்றி வேறு பல உணவுப் பொருட்களிலும் மனிதர் உண்ணத் தகாத பொருட்களைக் கலப்படம் செய்துவிடுகிறார்கள். நச்சுத் தன்மை வாய்ந்த பொருட்கள் கூட உணவுப் பொருட்களில் கலக்கப்படுகின்றன.

சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கல்கத்தாவுக்கு அருகே டம்டம் என்னுமிடத்தில் நடந்த துன்ப நிகழ்ச்சி இன்னும் நம் நெஞ்சை விட்டு அகலவில்லை. பிளாஸ்டிக் பொருட்கள் செய்வதற்கு உபயோகிக்கப்படும் ஒரு வித நச்சுத் திரவம் கலந்த கடுகு எண்ணெயை உட்கொண்டதால் ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாக 275 பேர் பாதிக்கப்பட்டனர். நச்சுப் பொருளை உட்கொண்டதால் அவர்களது கால்களில் முடக்கு வாதம் ஏற்பட்டது. இந்த மாதிரிச் சம்பவங்கள் நமது நாட்டில் அடிக்கடி நடக்கின்றன. டம்டம் சம்பவத்தில் ஏராளமான பேர் பாதிக்கப்பட்டதால் பத்திரிகைகளின் கவனத்தையும், பொதுமக்களின் கவனத்தையும் அது கவர்ந்தது. உணவுப் பண்டங்களில் நச்சுப் பொருட்களைக் கலப்படம் செய்வதாலேயே இம்மாதிரித் துன்ப நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன.

பொதுவாக பால், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள், தேயிலை, காப்பி, மசாலாப் பொருட்கள், வெள்ளி மென் தகடு போன்றவற்றில் கலப்படம் அதிகமாகக் காணப்படுகிறது. நச்சுக் கசகசா எண்ணெய் கலந்த கடுகெண்ணெயை உட்கொண்டால் கண் பார்வை பாதிக்கப்படும். இதய நோய், கட்டி போன்றவையும் ஏற்படும். சில சமயத்தில் மரணமும் ஏற்படக் கூடும். கனிஜ எண்ணெய் கலந்த சமையல் எண்ணெய்களை உட்கொண்டால் ஈரல் பாதிக்கப்படும். புற்று நோய் ஏற்படக்கூடும். நச்சுத் தன்மை வாய்ந்த ஒருவகைப் பருப்புக் கலந்த கடலைப் பருப்பை உட்கொண்டால் கால்களில் முடக்குவாதம் ஏற்படும். உண்ணத் தகாத நிறம் கலந்த இனிப்புப் பண்டங்களையும், சோடா முதலிய சுவை நீர்களையும் அருந்தினால் புற்று நோய் ஏற்படும்.

நமது நாட்டில் மிகப் பெரிய அளவில் உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்படுகிறது என்ற உண்மையை எப்படி மறுக்க முடியும்? கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் உணவுப் பொருள் ஆய்வாளர்கள் பரிசோதனைக்கென்று தெரிந்தெடுத்த உணவுப் பண்டங்களில் பெரும்பாலானவை கலப்படம் செய்யப்பட்டவையாக இருந்தன. மக்களின் நல்வாழ்வுக்குச் சுத்தமான உணவுப் பொருட்கள் தேவை; இதிலும் சத்துணவின் தரம் மிகவும் குறைவாக உள்ள இந்திய நாட்டில் உணவுப் பொருட்கள் மேலும் சுத்தமாக இருக்க வேண்டும் என்ற உண்மை எல்லாருக்கும் தெரிந்திருந்தும் கூட இங்கு இந்த நிலைமை நீடிக்கிறது.





அதிகாரிகளும், பொதுமக்களும் இந்த விஷயத்தில் ஒருமித்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். நிலைமை நாளுக்குநாள் மோசமடைந்து வருவதை இந்திய அரசு உணர்ந்து கொண்டிருக்கிறது. மத்திய சுகாதார சபை, உள்ளாட்சி நிர்வாகங்கள், திட்டக்குழு ஆகியவற்றின் ஆலோசனையின் பேரில் 1954-ம் ஆண்டு உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தில் சில மாறுதல்கள் செய்யப்பட்டன. சட்டத்தை மேலும் பயனுள்ள முறையில் செயல்படுத்துவதற்காக உணவுப் பொருள் ஆய்வாளர்களையும், ஆராய்ச்சி நிபுணர்களையும் நியமிப்பதற்கு சட்டத்திருத்தம் வகை செய்கிறது. தடுப்புச் சட்டத்தை மீறுபவர்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனை மேலும் கடுமையாக்கப்பட்டது. கலப்படம் செய்பவர்களுக்குக் குறைந்தபட்சம் 6 மாதச் சிறைத் தண்டனையும், 1000 ரூபாய் அபராதமும் விதிப்பதற்குச் சட்டத்தில் வகை செய்யப்பட்டது. உணவு ஆய்வாளர், ஒரு தயாரிப்பாளர் அல்லது கடைக்காரரின் உணவுப் பொருளில் இருந்து ஆய்வுக்காக மாதிரி எடுத்தால், கடைக்காரர் தம்மிடமுள்ள சரக்கின் மொத்த மதிப்புக்கு இணையான தொகைக்கு உத்தரவாதப் பத்திரம் கொடுக்க வேண்டும் என்றும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம். மாதிரி எடுக்கும் போது இரண்டு சாட்சிகள் இருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. திருத்திய சட்டத்தின்படி, ஒரு சாட்சி இருந்தாலே போதும்.

கலப்படம் செய்வோரைத் தண்டிப்பதற்குச் சட்டத்தில் கடுமையான தண்டனைகள் இருந்தாலும் எல்லா இடங்களிலும் எப்போதும் போலவே நிலைமை மோசமாக இருப்பது ஏன்? உணவுக் கலப்படத்தின் தீமைகளால் பாதிக்கப்படும் சாதாரண மனிதனுக்கு இது புரியாத புதிராகவே உள்ளது. உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்றும் முக்கியப் பொறுப்பு உள்ளாட்சி நிர்வாகங்களுக்குத் தான் உள்ளது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். ஆனால் நிதிவசதி போதாததால் முழுநேர உணவு ஆய்வாளர்களை நியமிக்க இந்த நிர்வாகங்களால் இயலவில்லை. ஆகவே, சுகாதார ஆய்வாளர்களே (சானிடரி இன்ஸ்பெக்டர்கள்) மற்றப் பணிகளோடு இந்த வேலையையும் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மகாராஷ்டிரத்தில் மட்டும் இந்தத் தீமையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பை மாநில அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

பறிமுதல் செய்யப்பட்ட மாதிரி உணவுப் பண்டங்களை உடனடியாக ஆராய்வதற்குப் போதிய ஆய்வுக்கூட வசதிகள் இல்லாததும் பெரிய குறையாக உள்ளது. இவ்வளவு பெரிய நாட்டில் 66 உணவு ஆய்வுக் கூடங்களே உள்ளன. இவற்றுள் 22 ஆய்வுக்கூடங்கள் உள்ளாட்சி நிர்வாகங்களின் பொறுப்பிலும் எஞ்சியவை மாநில அரசாங்கங்களின் பொறுப்பிலும் உள்ளன.



இவற்றில் பெரும்பாலானவற்றில் போதிய ஆராய்ச்சி வசதிகள் இல்லை; தகுதிவாய்ந்த ஆட்களும் இல்லை.

மத்திய சுகாதார, குடும்ப நல அமைச்சகம் இந்தத் துறையில் சில நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. புது தில்லியில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் 5415 என்ற இலக்கமிட்ட சிறப்புத் தபால் பெட்டி நிறுவப்பட்டிருக்கிறது. நாடெங்கிலும் உள்ளவர்கள், உணவுக் கலப்படத்தைத் தடுக்கும் பணியில் மாநில அரசாங்கங்களும், உள்ளாட்சி நிர்வாகங்களும் தத்தம் பகுதியில் மட்டுமே இயங்க முடியுமாதலால், ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்துக்கு நகர்ந்து பணிபுரிவதற்காக மத்திய உணவு ஆய்வாளர் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவிற்குச் சட்ட ரீதியில் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டில் இந்தக் குழுவினர் 134 மாதிரி உணவுப் பண்டங்களைப் பறிமுதல் செய்து ஆராய்ச்சி நடத்தினர். பெரிய அளவில் கலப்படம் செய்யும் பல முக்கிய நபர்களைக் கண்டுபிடிப்பதற்கு இவர்கள் உதவினர்.



உணவில் கலப்படம் செய்வது மனித குலத்துக்கு எதிராக இழைக்கும் பாவமாகும். செல்வந்தர்களாயினும் சரி, ஏழைகளாயினும் சரி, எங்கோ மூலையில் இருப்பவர்களாயினும் சரி, இந்தப் பாவச் செயலை ஒழித்துக் கட்டுவதற்கு நாமெல்லாரும் உதவ வேண்டும். அரசாங்கத்தால் தனித்து எதுவும் செய்ய முடியாது. பொதுமக்கள் இந்த விஷயத்தில் அக்கறையில்லாமல் காணப்படுகிறார்கள். மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூட ஏனோதானோவென்று இருந்து விடுகின்றனர். கலப்படம் செய்யும் கயவர்களைக் கண்டுபிடித்து, காட்டிக் கொடுக்கும்படி பொதுமக்கள் மனத்தைத் தட்டியெழுப்ப வேண்டும். தயாரிப்பாளர்கள், வியாபாரிகள் ஆகியோரின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்புவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். இந்த முக்கியப் பணியில் பொதுமக்கள் அனைவரும் ஒருமித்துச் செயல்பட வேண்டும்.







# முத்தான முத்தல்லவோ...!

குமரன்

கடல்தரும் பல்வேறு செல்வங்களுள் முத்தும் ஒன்று! முத்து, வரலாற்றுக் காலத்திற்கு முன்னமேயே மனிதனைக் கவர்ந்த மதிப்பு மிக்க சொத்து! கிறிஸ்து பிறப்பதற்கு 2,300 ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது, இன்றைக்கு 4,275 ஆண்டுகளுக்கு முன்பே, சீனர்கள் முத்துக்களை அலங்காரப் பொருளாகப் பயன்படுத்தினர். பிற்காலத்தில், முத்து செல்வச் செழிப்பின் அறிகுறியாகக் கருதப்பட்டது. அரசக் குடும்பத்தினரும், மேட்டுக் குடியினரும் முத்துக்களை அணிந்திருந்தனர். எழிலரசி கிளியோபாத்ரா ஏறத்தாழ 60 ஆயிரம் பொன் மதிப்புள்ள முத்துக்களை அணிந்திருந்தாள். பிரெஞ்சுப் பேரரசி யஜின், 12,500 பொன் மதிப்புள்ள முத்துக்களை வைத்திருந்தாளாம்.

கவிஞர்களுக்கு மிகவும் விருப்பமான பொருள் முத்து! முத்துப் பிறக்கும் இடங்களாகக் கவிஞர்கள் பல்வேறிடங்களைச் சொல்வார்கள்.

'பனிமதி கதலி மேகம்
பைந்தொடிக் கழுத்து
ஆவின்பல்
தனியானை யேனக் கொம்பு
தடங்கரா வுடும்பு கொக்கு
வினையராச் சலஞ்ச லந்நந்
திப்பிமீன் மூங்கில் பூகம்
நினைசெந்நெல் கரும்பு கஞ்ச
நிகழிரு பதின்முத் தாகும்!'

என்று, முத்து விளையும் இடங்களாக இருபது இடங்களைச் சொல்கிறது பழந்தமிழ்ப் பாடல் ஒன்று! இன்னொரு தமிழ்ப்பாடல் — முத்தொள்ளாயிரப் பாடல், கனிமொழிக் கோதையரின் கண்ணீரையே முத்தாக்கிக் காட்டுகிறது.

பாண்டியன் மீது காதல் கொண்டாள் பைங்கிளி ஒருத்தி! நீண்ட நெடு நாட்களாகவே அவள் காதல் நிறைவேறவில்லை! நாளாக நாளாகக் காதல் கனல் அந்தக் கோதையைச் சுட்டெரிக்க ஆரம்பித்தது! தன்னுடைய காதல் கனவு நிறைவேறாமலேயே போய் விடுமோ? தான் இப்படியே ஏங்கித் தவித்துச் சாகவேண்டியதுதானா? என்று எண்ணி எரியிடைப்பட்ட புழுப்போலத் துடித்தாள்! இதயம் வெடித்துவிடும்போல் இருந்தது. அவளது, கயற்கண்கள் குளமாயின! அவை கண்ணீரை அருவியென வழிந்தோட விட்டன! கன்னத்தில் சில துளிகள்! அவை ஒன்றையொன்று முந்திவந்து ஒளி சிந்தின. அவளது உயிர்த் தோழி இதனைக் கண்டாள்! அவள் நிலைக்கு மனமிரங்கினாள்! அந்த இரங்கத்தக்க நிலையை இன்னொரு தோழிக்கு எடுத்துச் சொல்கிறாள்!

'தோழி! ஒளிமுத்துக்கள் பாண்டிய மன்னனின் கொற்கைத் துறையில் மட்டுமா கிடைக்கின்றன? இல்லை? அந்தக் கொற்கைத் துறைக்குத் தலைவனும் போரில் மாற்றாரைப் புறங்காணச் செய்வதால் குருதி தோய்ந்து தோன்றும் கூர்வேலைக் கையகத்துக் கொண்டவனுமாகிய பாண்டிய மன்னனின் அத்தாணி மண்டபத்து மார்பினை ஆரத்தழுவ எண்ணி ஏங்கித் தவித்துக் கிடக்கும் ஏந்திழையாரின் கண்களிலும் முத்துக்கள் பிறக்கின்றனவே. என்கிறாள். ஆம்! இங்கே கண்ணீர்த் துளிகளைக் கவின் முத்துக்களாக்கிக் காட்டுகிறாள்! கண்ணீர்த் துளிக்கு முத்தை உவமையாக்கிக் காட்டும் முத்தொள்ளாயிரப் பாடலைப் பாருங்கள்:





'' இப்பியீன்று இட்ட
எரிகதிர் நித்திலம்
கொற்கையே யல்ல
'படுவது — கொற்கைக்
குருதிவேல் மாறன்
குளிர்சாந் தகலம்
கருதியார் கண்ணும்
படும்!''

# வரிவிதிப்புக் கொள்கையில் மாற்றம் தேவை!

தேசிய வளர்ச்சிக் குழுவின் முன் வைக்கப்பட்டுள்ள ஐந்தாவது திட்டத்திற்கான வடிவமைப்புக் குறித்து, தமிழகத்தின் கருத்தினை இங்கு எடுத்துக் கூறக் கிடைத்திட்ட வாய்ப்பினை ஒரு நல்வாய்ப்பாகக் கருதுகிறேன். இந்த ஐந்தாவது திட்ட நடவடிக்கை குறித்து, சென்ற 1972 மே மாதத்தில் அளிக்கப்பட்ட அறிக்கையில் காணப்பட்ட கொள்கை வரைவுகளை விரிந்த முறையில் நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

திட்ட வரைவு பற்றி இப்போதைய அறிக்கையில் ஓரளவு விரிவான விவரங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இந்த அறிக்கையினைத் தயாரிப்பதில் நுட்ப ரீதியான செயல்முறைகள் தக்க வகையில் கையாளப்பட்டுள்ளன.

ரூ. 51,000 கோடிக்கான திட்டம் ஒன்றை வகுப்பது முதல் நடவடிக்கைதான். இத்திட்டத்தை நிறைவேற்றும் நடவடிக்கையை நாம் சீரமைத்தாலன்றி மறுபடியும் நம்மைத் தோல்விதான் எதிர்கொள்ளும். திட்டங்களை நிறைவேற்றும் விஷயத்தில் திட்டம் சம்பந்தமாக அடிப்படையாகத் தேவைப்படும், உருக்கு, சிமிண்ட், உரம், மற்றும் மின்சாரம் ஆகியவை பற்றாக்குறை காரணமாகப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பது நமது கடந்த கால அனுபவம். இந்தப் பற்றாக்குறை நமது திட்டங்களையே குலைத்திருக்கின்றது.

எடுத்துக் காட்டாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்குவது ஒரு தேசிய இலட்சியமாகும். இது எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனினும் இப்போதுள்ள சிறிய தொழிற்சாலைகளுக்குக் கிடைக்க வேண்டிய அளவு மூலப் பொருட்களும், மின்சக்தியும் கிடைக்குமானால் அந்தத் தொழிற்சாலைகளிலேயே அதிக வேலை வாய்ப்பினை உண்டாக்க முடியும் என்ற கருத்து, பெரும்பாலும் ஏற்கப்படாமலே உள்ளது.

மூலப் பொருள்கள் தக்கபடி கிடைக்காத காரணத்தால் நாட்டில் தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுக் கிடக்கின்றன. உருக்குச் சேமிப்புப் பற்றிப் பேசப்பட்டு வருகிறது. ஆனால், உண்மையான நடைமுறைக்கு அது எப்போது வரும் என்பது தான் தெரியவில்லை.

உருக்கைப் பொறுத்தவரையில் தனியார் துறைக்கு அது ஏராளமாகக் கிடைக்கின்றது. ஆனால், அத்தியாவசியமான பொதுத்துறைக்கு அது கிடைப்பதில்லை.

இரசாயன உரம் கிடைப்பது (கட்டுப்பாட்டு விலையில்) கடினமாக இருக்கின்றது. ஆனால், வெளிச் சந்தையில் அதே உரம் அதிக விலையில் விற்கப்படுகிறது.

இம்மாதிரி நெருக்கடியான நிலைமைகளையெல்லாம் நாம் திருத்தியாக வேண்டும். இலட்சியத் தன்மைகள் வாய்ந்ததொரு ஐந்தாவது திட்டத்தின் குறிக்கோளை நோக்கி நாம் அடி எடுத்து வைக்குமுன் இப்படிப்பட்ட குறைபாடுகளைக் களைந்தெறிய வேண்டும். நமது மிச்சத் தேவைகளை—அவசியம் ஏற்படுமானால் நீண்ட கால ஏற்பாட்டின் அடிப்படையில் வெளிநாடுகளிலிருந்து வாங்குவதற்குக் கூட ஒப்பந்தம் செய்துகொள்ளலாம்.

குறிப்பாக மின்சாரத் திட்டங்கள் மோசமான அளவில் தாமதம் அடைந்துள்ளன. இது, விவசாயத்தையும், மற்றத் தொழில்களையும் பாதித்துள்ளது. எனவே, ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள மின்சாரத் திட்டங்களை நிறைவேற்றிமுடிப்பதில் உயர்ந்த பட்ச முதன்மை காட்ட வேண்டும். இத் திட்டத்திற்குத் தேவைப்படும் சாதனங்களில் இங்கே உற்பத்தி செய்ய முடியாதவற்றை — அவசியமானால் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகூட நிறைவேற்ற வேண்டும். இந்த வகையில் மின்சார வாரியங்கள் தங்களுக்குத் தேவையான நிதியை வங்கிகள் மூலம் பெற அனுமதி வழங்கப்பட வேண்டும். அத்துடன் நிதி நிறுவனங்களிடம் கூடுதல் கடன்களை எழுப்பும் வகையிலும் மின்சார வாரியங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும்.

நம் முன் உள்ள இந்த அறிக்கையில் வேலையில்லா நிலைமையைப் போக்குவது பற்றியும், வறுமையை ஒழிப்பது பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கது.

சில அம்சங்களில் இந்த இரண்டுமே ஒரே நடவடிக்கை மூலம் அகற்றப்படக் கூடியவை. இந்த வகையில் நமது திட்டங்களில் பல, உண்மையாகவே ஏழ்மையில் உள்ளவர்களுக்குப் பயன்படவில்லை. ஆனால், வசதி பெற்ற வட்டாரத்திற்கே பயனளித்துள்ளன என்பதை நாம் ஒப்புக் கொண்டாக வேண்டும்.

இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுகூட, கீழ் மட்டத்திலுள்ள 30 சதவீத மக்களின் சராசரி நபர்வாரி வருவாய் ரூ. 37 ஆகவே இருக்கும்—1971–72-ன் விலைகளின் அடிப்படையில் இந்த அளவிலேயே வருமானம் இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. வறுமையின் எல்லைக்கோட்டுக்குக் கீழ், பெரிய அளவில் உள்ள இந்த மக்களின் நிலைபற்றித்தான் நாம் முதலில் கவனம் செலுத்த வேண்டும்.

இவர்களுக்கு அதிக அளவில் வேலையும், வாய்ப்புக்களும், அளிக்கும் வகையிம் நாம் தேசிய மட்டத்தில் தக்கதொரு முடிவினை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் தற்போது அதிக அளவில் வசதிகளோடு விளங்கும் சில வட்டாரத்தினரின் வசதிகள் குறைவாகவே இருந்தால்கூட இம்மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொண்டேயாக வேண்டும். இது விலைக்கொள்கை, மற்றும் ஊதியக் கொள்கையோடு சம்பந்தப்பட்டது.

நாட்டு மக்களில் ஊழியர்களாக உள்ள சில பகுதியினர் உட்பட அதிக வசதி படைத்த வட்டாரத்தினர் கூடுதலான நன்மைகளைத் தொடர்ந்து பெற்று வரும் அதே நேரத்தில் நமது மக்களில் பெரும்பான்மை



# வறுமையை அகற்றும் திட்டங்களுக்கு முதலிடம்!

யினர் மிக மிகக் குறைந்த வருவாயோடு அதிக வறுமையில் கிடக்கின்றனர். இவ்வாறு வளர்ந்து வரும் வேறுபாடுகள் போக்கப்பட வேண்டும்.

உற்பத்தியில் கிடைக்கக்கூடிய இலாபத்திற்கும் ஊதியஉயர்வுக்குமிடையே தொடர்பு இருக்க வேண்டிய அவசியத்தை இந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது. இதை நாம் தொடர்ந்துசெய்து முடிக்கும் வரையில் பண வீக்கம் தொடர்ந்து இருந்து வரத்தான் செய்யும்.

பொதுவாக உற்பத்தி மூலம் கிடைக்கக்கூடிய இலாபம் ஒரு சிறிய வட்டாரத்தினருக்கு மட்டுமே போய்ச்சேரும் வகையில் நமது தற்போதையக் கொள்கைகள் தொடர்ந்து இருக்கும் வரையில் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளிலிருந்து நம் நாடு தப்ப முடியாது.

கிராமப் பகுதிகளையுடைய குறைந்த பட்சத் தேவைகளை நிறைவேற்றும் திட்டத்துக்கான நிர்வாக ஏற்பாடுகள் இன்னின்னவை என்று முழுமையாக இந்த அறிக்கையில் கூறப்படவில்லை. நாட்டின் பிற்பட்ட திட்டுகளாக உள்ள பகுதிகள் அனைத்தையும், ஒப்புக் கொள்ளப்பட்ட தேசிய வளர்ச்சி அளவை எய்திடச் செய்ய வேண்டுமென்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். இந்த இலக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் இவற்றுக்கான நிதியானது நிதிக்குழு மூலம் மாநிலங்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டுமேயன்றி மத்தியத் திட்டப் பணிகள் என்ற உருவில் இவை வரக் கூடாது. மாநில அரசுகள் கவனிக்க வேண்டியவைகளை அமல் செய்வதற்கென்று மத்திய அரசிலே தனி வேறு அமைப்பு ஒன்று இருப்பதென்பது கூடாது என்பதே எங்கள் கருத்தாகும்.

மாநிலங்களின் சேவையைக் கண்டறிய அரசியல் சட்டத்தின் கீழ் நிதிக்குழு நிறுவப்பட்டுள்ளது. திட்டத்திற்கு உட்பட்ட ஒதுக்கீடுகள் என்றும், உட்படாத ஒதுக்கீடுகள் என்றும் காட்டப்படுகிற வேறுபாடு, குழப்புவதாக இருக்கிறது. எனவே இது கைவிடப்பட வேண்டும். மாநிலங்களின் எல்லாத் தேவைகளும், திட்டத்துக்கு உட்பட்டவற்றுக்கும் திட்டத்துக்கு உட்படாதவற்றுக்கும் குறைந்தபட்சத் திட்டத் தேவைகளுக்குமான நிதி ஆகியவை குறித்து நிதிக்குழு திட்டக் குழுவிடம் கலந்து பரிசீலிக்க வேண்டும். இந்த அடிப்படையிலே நிதிக்குழு மாநிலங்கள் பெற வேண்டிய வருவாய் நிலைகளை வகுத்துப் பரிந்துரை செய்ய வேண்டும். இந்த ஏற்பாடு ஒன்றே மாநிலங்களின் அத்தியாவசியத் தேவையான வளர்ச்சித் திட்டங்களை அவை சுதந்தரமாக வகுத்திடத் துணை புரிவதாக இருக்கும். இத்தகைய சீர்திருத்தம் ஒன்றே, குவிந்திருக்கும் அதிகாரத்தைப் பரவலாக்கும் கொள்கையைப் பொருள் உள்ளதாக ஆக்கிடும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலங்களுக்குக் கிடைக்கக் கூடிய திட்ட உதவி ரூ. 3,500 கோடி அளவு மட்டுமே என்று முற்றுப் புள்ளி வைத்து விட்டுக் கிட்டத்தட்ட அதே அளவு பெருந்தொகையைப் பல்வேறு மத்திய அமைச்சகங்கள், மத்தியத் திட்டப் பணிகள் என்பதாகச் செலவிட்டுள்ளன. இதன் விளைவாகப் பல்வேறு துறைகளில் மாநில அரசின் கொள்கைகள் மத்திய அரசுத் துறையினரால் கட்டுப்படுத்தப்பட்டன.

நம் அரசியலமைப்புச் சட்டத்தினை உருவாக்கியவர்கள் கருதிய நிதி ஏற்பாடுகளுக்கு முற்றிலும் புறம்பானதாக இது இருக்கிறது. கல்வி, விவசாயம், சுகாதாரம் ஆகிய துறைகளில் இப்படி மத்திய அரசுத் துறைகளது திட்டப் பணிகளின் வளர்ச்சி ஏற்படுவது முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும். இவற்றுக்காகக் கிடைக்கிற நிதியை மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளித்திடும் பொறுப்பை மத்திய அரசானது நிதிக்குழுவினிடமும் திட்டக் குழுவினிடமும் விட்டுவிடவேண்டும்.

ஒவ்வொரு மாநிலமும் குறைந்தது ஒரு குறிப்பிட்ட அளவேனும் முன்னேறி விட வேண்டுமென்ற திட்டம் முன் வைக்கப்பட்டுள்ளதால் மானிய உதவிக்கான அளவை விதி மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று நாங்கள் எண்ணுகிறோம். குறைந்தபட்ச முன்னேற்றத்தேவைத்திட்டத்தின்படி ஒவ்வொரு மாநிலத்தின் தேவைகளும் கணக்கிலெடுத்துக் கொள்ளப்பட்டான பிறகு வரி வாய்ப்புகளைப் பிரித்தளிப்பதிலோ மத்திய மானியப் பங்கிலோ அதற்கென்று தனிச் சலுகை காட்டிடத் தேவையில்லை.



பெரும் முதலீட்டுத் திட்டங்களுக்காகவென்று மாநிலங்களுக்குள்ளான வளர்ச்சி வங்கி ஒன்று அமைவதை நாங்கள் விரும்புகிறோம். மாநிலங்களில் குடிநீர் வழங்கு திட்டங்கள், மின் திட்டங்கள், தொழில் வளர்ச்சித்

என்பது முத்தொள்ளாயிரப் பாடல். இவ்வாறு, கவிஞர்கள் காட்டும் கற்பனை முத்துக்கள் கருத்துக்கு இன்பம் பயப்பன என்பதில் ஐயமில்லை! எனினும் கை நிறைய அந்நியச் செலாவணியை அள்ளித்தருகிற முத்துக்கள் கடல்தரும் முத்துக்களே!

பொதுவாக, நாம் வாழும் இவ்வுலகத்தின் பெரும் பகுதி 70 விழுக்காடுப் பரப்பு கடல் நீரில்தான் அமிழ்ந்துள்ளது. நாம் வாழும் நிலப்பரப்பில் 36 கோடி கிலோ மீட்டர் தூரம் கடல் நீர்ப் பரப்பாகவே உள்ளது. இதில் இயற்கையாக, ஒரு ஹெக்டேர் கடல் நீர்ப் பரப்பில் 4 முதல் 5 டன் வரை சிப்பிகள் — முத்துச் சிப்பிகள் கிடைக்கும் என்றும், சிப்பி வளர்ப்பு முறையைக் கைக்கொள்வதன் மூலம் ஒரு ஹெக்டேர் கடல நீர்ப் பரப்பில் 300 மெட்ரிக் டன் அளவிற்குச் சிப்பிகள் பெறலாம் என்றும் கணக்கிட்டுள்ளனர்.

வரலாற்றுக்கு முந்திய — பழங்காலந்தொட்டே தென்னகத்தின் கடல் முத்துக்கள் எங்கும் சிறப்பாக மதிக்கப்பட்டன. கிரேக்கத்திலும் ரோமாபுரியிலும் தமிழகக் கடல் முத்துக்கள் மான்விழி மங்கையரின் மதிப்பு மிக்க அணிகலன்களாகி, மாமன்னர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன : பிரிட்டனிலுள்ள மன்ஹாட்டனில் தமிழகத்துக் கடல் முத்துக்கள் முதல் வரிசையில் இடம் பெற்றன என்பது உலகறிந்த செய்தி. தமிழக முத்து வளத்தையும் அதன் சிறப்பையும் அம்முத்துச் செல்வத்தைத் தங்கள் நாடுகளுக்கு அள்ளிச் செல்வதற்காக அந்நிய நாட்டு வணிகர்கள் பலர், இங்கு வந்து காத்துக் கிடந்தனர் என்ற வரலாற்றுச் செய்தியை நாம் இலக்கியங்களில் காண்கிறோம்.

“முத்துக் குளிப்பதொரு
தென்கடலி லே
மொய்த்து வணிகர்பல
நாட்டினர்வந் தே
நத்தி நமக்கினிய
பொருள்கொணர்ந் தே
நம்மருள் வேண்டுவது
மேல்கரையி லே ”

என்னும் பாரதியாரின் பாடல் வரிகள் முத்துக்காகப் 'பன்னாட்டு வணிகர்கள் இங்கு வந்து மொய்த்துக் கிடந்த செய்தியைக் கூறுகிறது.

முத்துக்கள் எப்படிப் பிறக்கின்றன ?

கடலில் எத்தனை எத்தனையோ வகை வகையான வியக்கத்தக்க பிராணிகள்— உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் முத்துச்சிப்பி. இந்த முத்துச்சிப்பி என்னும் ஒருவித ஆளியின் சிப்பிக்குள்ளே ஒரு நுண்ணிய சிறு மணலோ அல்லது வேறு உறுத்தும் பொருளோ புகுகின்றது; அப்போது அந்தப்பிராணி தன் புறத்தோல் அடுக்காகிய எப்பித்தீலியம் என்னும் ஒருவகையான படலத்தால் அதனைப் பொதிந்து கொள்கின்றது. பிராணி அந்தப்பையினுள் சுரக்கும் நீர், மெல்லிய அடுக்கடுக்காக வந்து சேர்ந்த பொருளைப் பொதிகின்றது ; இவ்வாறு முற்றிலும் நன்கு பொதியப் பெற்ற பொருள்தான் முத்து. அடுக்குகள் மிக மிக மென்மையானவை ; அவை ஒளியை உள்ளே நுழைய விடுவனவாகவும், அதனைப் பிரதிபலிக்கச் செய்வனவாகவும் உள்ளன. இதனாலேயே முத்து அழகாக ஒளிர்கின்றது.

முத்துக்களில் வெண் முத்துக்களைத் தானே நாம் பார்க்கிறோம் ; கறுப்பு நிறமான முத்துக்களும் உள்ளன. ஆனால், அவை கிடைப்பது அருமை. எனவே கறுப்பு முத்துக்களின் விலை மதிப்பு மிக மிக அதிகம்.

பொதுவாக முத்தில் ஏதேனும் கீறல் ஏற்பட்டால், மேல் அடுக்கை மெதுவாக உரித்து எடுத்து விடலாம். அதன் பின் அம்முத்து முன்போலவே நன்றாக ஒளிவிடும்.

முத்துக்களில் பல்வேறு வடிவங்கள் உள்ளன. அவற்றுள், முற்றிலும் உருண்டை வடிவான முத்துக்களே பெரிதும் விரும்பப்படுகின்றன. முட்டையின் வடிவுடையனவும், பொத்தான் வடிவுடையனவும் வரிசைப்படி மதிப்பிடப்படுகின்றன.

முத்து மிகவும் மென்மையான பொருள். கீறல்பட்டாலும் எளிதில் கெட்டுப் போகும். நீண்ட நாள் காற்றுப்பட்டால் ஒளி மங்கிப் போகும் ; அமிலம், தூசி, வேர்வை, ஈரம் ஆகியன சேர்ந்தாலும், முத்து பழுது பட்டுப் போகும்.

இவ்வளவு அருமையான— விலை மதிப்பு மிக்க முத்துக்

யம் வைத்துத்தான் முத்துக் குளிக்கிறார்கள். இத்தகைய முத்துக் குளிப்பு எங்கெங்கே நடைபெறுகிறது ?

முத்துக் குளிக்கும் இடங்கள் உலகில் மிகச் சிலவே உள்ளன. அவற்றுள், பாரசீக வளைகுடாவிலுள்ள பாரன், மன்னார் வளைகுடா, தூத்துக்குடிக் கடல், ஐப்பானிலுள்ள டோக்கியோக் கடல், சுலூத் தீவுக் கூட்டம், ஆஸ்திரேலியாவின் வடக்கு மேற்குக் கடற் கரையோரங்கள், கலிபோர்னியா கடற்கரைப் பகுதி ஆகியவை குறிப்பிடத்தக்கன. எனினும் விலை மதிப்புள்ள முத்துக்களை மிகுதியாகத் தருபவை மன்னார் வளைகுடாவும், பாரசீக வளைகுடாவுமே !

பொதுவாக, முத்துக் குளிப்பு எப்போது ஆரம்பமானது என்பதை நாம் தெளிவாக அறுதியிட்டுக் கூற முடியவில்லை. எனினும், தமிழகத்தில் மன்னார் வளைகுடாவில் நடைபெறும் முத்துக் குளிப்புப் பற்றி ரோம, எகிப்திய, கிரேக்கப் பயணிகள் தங்கள் பயணநூல்களில் குறிப்பிட்டுள்ளனர். மன்னார் வளைகுடாவில் முத்துக் குளிப்பது பற்றிய தெளிவான வரலாற்றுக் குறிப்பினை முதன் முதல் தந்தவர் உலகம் சுற்றிய வீரர் மார்க்கோ போலோ தான்.

முத்துக் குளிக்கும் பண்ணைகள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருப்பதால் அவர்களின் மேற்பார்வையில்தான் முத்துக் குளிக்க வேண்டும். முத்துக் குளிப்பவர் 60 அடி ஆழமுள்ள கடற்படுகையில் சிப்பிகளைச் சேகரிக்க வேண்டும் ; அவர் 80-90 சிறு மணித்துளி நேரத்திற்கு அதிகமாகக் கீழே தங்க முடியாது. அவர் மூச்சை அடக்கவும், தம்மீது நிற்கும் நீரின் கனத்தைத் தாங்கவும் வேண்டியவராக இருக்கிறார். அதனால் முத்துக் குளிக்கப் புதிதாகத் தொடங்குவோரின் மூக்கிலும் காதுகளிலும் இரத்தம் வருவதுமுண்டு. முத்துக் குளிப்போர் சுறா மீன்களுக்குத் தப்பித்துக் கொள்ள கருங்காலி மரத்தடிகளை வைத்திருப்பர். முத்துக் குளிப்பவர் தவறாக அதிக நேரம் தங்கிவிட்டால் மூச்சுத்திணறி இறந்துவிடுவர். அதனால், முத்துக் குளிப்பவர்கள் உடல் வலிமை உடையவராக இருத்தல் வேண்டும்.

முத்துக் குளிப்போர் காலை 5 மணிக்குக் கடற்கரைக்கு வந்து, அரசாங்கத்தாரின் அனுமதிச் சீட்டுக்களைப் பெறுவர். தோணிகள் 60-70 ஆக அணிவகுத்து நிற்கும். ஒவ்வொரு தோணியிலும் முத்துக் குளிப்போர் சுமார் பதின்மர் இருப்பர்.

தூத்துக்குடிக் கடலில் பண்ணைகள் 20 மைல் தொலைவிலிருக்கின்றன. தோணிகள் அவற்றை நோக்கிப் புறப்பட்டுப் போகும். முத்துப் பண்ணை இருக்குமிடத்தைக் காட்ட அதில் நீண்ட மூங்கிற் கழிகளில் சிவப்புக் கொடிகள் கட்டி நட்டு வைத்திருப்பர்.

முத்துக் குளிப்போர் ஆடைகளைக் களைந்துவிட்டுக் கோவணத்துடன் மட்டுமே இறங்குவர். முத்துச் சிப்பிகளைச் சேகரிப்பதற்காக இடுப்பில் ஒரு வலையைக் கட்டிக் கொள்வர். அவர் நீரில் குதித்துத் தோணியைப் பற்றி நிற்பர். அப்போது தோணியிலிருப்பவர் சுமையான கல் ஒன்றைக் கட்டிய நீண்ட கயிற்றை நீரில் விடுவர். அப்போது முத்துக் குளிப்பவர் கல்லைக் கட்டிய கயிற்றுச் சுருக்கில் ஒரு பாதத்தை நுழைத்துக் கொண்டு நீரில் மூழ்குவர். அடிப் படுகையில் போய்ச் சேர்ந்ததும் கல்லை விட்டுவிடுவர். தோணியிலிருப்பவர் அதை மேலே தூக்கி, முத்துக் குளிக்கும் வேறொருவரை இறக்கப் பயன் படுத்துவர்.

முத்துக் குளிப்பவர் கல்லை நீக்கியதும் பரபரப்புடன் முத்துச் சிப்பிகளைப் [illegible]றுக்கி, இடுப்பிலுள்ள வலைப் பையில் போட்டுக் கொண்டு ஒன்றரை மணித்துளி ஆகு[illegible] வெளியே வந்து விடு[illegible]. தோணியிலுள்ளவர்கள் [illegible] பற்றிக் கவனித்துக் [illegible]டேயிருப்பார்கள்.

## வேலைக்கு ஆட்கள் தேவைப்படும் பணிப் பிரிவுகள்

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட வகை வேலைகளுக்குப் போதிய பணியாளர்கள் கிடைக்காத நிலைமை இருந்து வருகின்றது.

உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்—ஹையர் கிரேடு (பெண்கள்); துப்புரவு ஆய்வாளர்கள் (சேனிடரி இன்ஸ்பெக்டர்) (தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்); சுகாதார உதவியாளர்கள் ; பி.டி. ஆசிரியர் (கன்னடம்), ஹையர் கிரேடு ஆசிரியர் (உருது) டிரில் ஆபரேட்டர் ; மருந்து கலக்குவோர் ; சுருக்கெழுத்தர்கள் (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ; தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்); கர்னாடக இசையில் வித்வான் தகுதியுடன் இசை ஆசிரியர் ; எலெக்ட்ரீஷியன் ; பவர் டிரில் டிரைவர் ; பி. டி. ஆசிரியர்கள் (கணிதம்) (பெண்கள்) ; விமான மெக்கானிக்குகள் ; லைன் ஆபரேட்டர் ; நூலகர் ; அராபிக் முன்ஷி ; போட்டோ டார்க் ரூம் உதவியாளர்கள் ; மெயின்ஸ் சூபர்வைசர் ; ரேடியோகிராபர் ; தெலுங்கு பண்டிட் கிரேடு I.

தேசிய வேலை வாய்ப்புப் பணி 1973 ஜூன் மாத அறிக்கையில் மேற்கண்ட விவரம் தரப்பட்டுள்ளது.

## கம்பியில்லா டெலிபோன்

கம்பியில்லாத் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது கையடக்கமானது! எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லக்கூடியது ; வழியில் சாலையிலிருந்து பேசலாம். எடையோ 28 அவுன்சுதான்.

“டைனா டி-ஏ-ஸி” என்ற இந்தப் புதுமைத் தொலைபேசியை அமெரிக்க நாட்டிலுள்ள மோட்டரோலா இன்கார்ப்பரேட்டடு என்ற நிறுவனம் இயக்கிக் காட்டியிருக்கிறது.

எஃப். எம். ரேடியோ அலை வரிசையில் இது இயங்குகிறது.

மிக நுணுக்கமான கம்ப்யூட்டர் கணக்கிடு பொறிமுறை அமைப்பு, இந்தத் தொலைபேசியை இயங்க வைக்கிறது. சாலையில் போய்க் கொண்டிருக்கையிலும் ஊர்தியில் சென்று கொண்டிருக்கையிலும் அலுவலகத்திலோ இல்லத்திலோ இருக்கும் தொலைபேசியின் எண்களை இந்தத் தொலைபேசியில் சுழற்றிப் பேசலாம். இந்த ரேடியோ—தொலைபேசி என்ன செய்கிறது தெரியுமா ? முக்கிய இடங்களில் வைத்திருக்கும் பலப் பல ரேடியோ டிரான்ஸ்மீட்டர்களுக்கும் ரிசீவர்களுக்கும் ஒரு மின்காந்த அலையை அனுப்புகிறது. இந்த ரேடியோ டிரான்ஸ்மீட்டர்களையும் ரிசீவர்களையும் ஆட்சி செய்யும் மத்திய கம்ப்யூட்டர் பொறி, தொலைபேசிச் செய்தியை முறையான தொலைபேசி அமைப்புக்குள் அனுப்பி விடுகிறது.

சாதாரணத் தொலைபேசியிலிருந்தும் இந்தக் கையடக்கத் தொலைபேசிக்கு எண்களைச் சுழற்றிப் பேசலாம்.

திட்டங்கள் ஆகியவற்றுக்கு இந்த வங்கி உதவிட வேண்டும். இந்த வங்கியானது திட்டக் குழுவின் மேற்பார்வையில் இயங்கிட வேண்டும். ஆனால், இந்த வங்கியில் மாநில அரசின் பிரதிநிதிகள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

பெரு நகரங்களின் சீரான வளர்ச்சிக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்று கருதுகிறேன். பெரு நகரங்களில் குடிநீர் வழங்கு திட்டங்கள், குடிசை மாற்றுத் திட்டங்கள், சாலை வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுக்கான ஐந்தாவது திட்டத்தில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மக்கட் பெருக்கத்தைத் தடுத்தாக வேண்டிய முக்கியத்துவம் இந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆயினும்; இதில் அரசியல் காரணங்களும், பொருளாதாரக் காரணங்களும் உள்ளடங்கியுள்ளன. சில மாநிலங்களில் மக்கள் தொகை கட்டுப்படுத்தப்படுகிற அளவுக்கு அவை நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை இழந்துவிடுகின்றன. மத்திய உதவியும் குறைகிறது. இதே போலச் சமயங்களுக்கிடையே வேறுபாடுகளும் தலை காட்டுகின்றன. இந்த அம்சங்களையெல்லாம் நீக்கிடத் தக்க புதிய கொள்கை ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

தொழில் உற்பத்தியின் விகிதாசாரம் பற்றி இந்த அறிக்கை வலியுறுத்துகின்றது. கடந்த சில ஆண்டுகளில் புதிய முதலீடுகள் குறைந்து கொண்டே வந்துள்ளன. பெரிய தொழில் நிறுவனங்களைப் பற்றியும் கூட்டுத் தொழில் பற்றியும் நமது கொள்கை இன்னது என்று நாம் அறிவித்திட வேண்டும். இது பற்றி நாம் பரிசீலிக்கிற இந்நேரம், தொழில் வளர்ச்சியில் தொழில் முதலீட்டு வாரியங்கள் வகிக்கக் கூடிய முக்கியப் பங்கினைப் பற்றி நான் கூற விரும்புகிறேன். பெரும் பெரும் தொழில்களை நடத்தும் நிறுவனங்களிடையே உற்சாகம் குன்றியுள்ளதால் தொழில் முதலீட்டு வாரியங்களே புதிய தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்திட முடியும். இத்தகைய வாரியங்களை நாம் ஊக்குவித்திட வேண்டும். நிதியளவிலும், தேவையான அளவுக்கு மத்திய முதலீட்டு நிறுவனங்கள் மாநில முதலீட்டு வாரியங்களுக்கு உதவ முன்வர வேண்டும்.

1972 மே மாதத்தில் தேசிய வளர்ச்சிக் குழுவில் நான் பேசிய நேரத்தில் அந்நியத் தொழில் நுணுக்க உதவியை நாடுவதில் பயனை நாட்டமாகக் கொண்டதோர் அணுகுமுறை வேண்டினேன். இரசாயன உரம், பெட்ரோலியப் பொருளுற்பத்தித் துறைகளில் இத்தகைய அணுகுதல் இருக்கக்கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நாட்டின் பொருளாதாரத்துக்கும், நாட்டிற்கும் முக்கியத்துவமிக்க மற்றொன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தற்போதைய வரி விதிப்பு அமைப்பின் காரணமாகப் பெருமளவு பணம் கணக்குக்கு வராமல் போகிறது. வருமான வரியானது அளவை மீறியிருப்பது சமநீதிச் சமுதாய அமைப்புக்கு ஒத்ததாக இருக்கலாம். ஆனால், இது தனியாரின் செயலூக்கத்தைக் கெடுப்பதாகவும் உள்ளது. ஏகபோக ஆதிக்கப் பெரு முதலாளித்துவத்தை அகற்றிடுவது நம் கொள்கை என்றாலும், ஒரு கலப்புப் பொருளாதாரத்தில் தாங்களும் சேமித்துப் பிறருக்கும் வேலை வாய்ப்புக்களை அளித்திடக்கூடிய நடுத்தர வர்க்கத்தை நாம் ஒழித்து விடக் கூடாது. சேமித்து முதலீடு செய்யக் கூடியவர்களை வளர்த்தாலன்றி நம்மால் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிட முடியாது. இந்தக் கருத்தின் அடிப்படையில் சேமித்திடக் கூடியவர்களான நடுத்தர வர்க்கத்தினரை மேலும் மேலும் வருவாய் தேடும்படியாக ஊக்குவித்திட வேண்டும். இந்தப் பாதையில் நாம் துணிந்து நடவடிக்கை எடுத்தாக வேண்டும். தற்போது இந்த மக்கள், முறையான வழிகளில் வருவாய் தேடியும், தேடிய வருவாயை முதலீடு செய்யவும் தேவையான ஊக்கம் அவர்களுக்கு இல்லை. வரி ஏய்ப்புகளால் நாட்டின் பொது நிதிக்கு இழப்பு ஏற்படுவதோடு ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கின்றன. இந்த அளவுக்கு நாட்டிற்குக் கிடைக்கக் கூடிய சேமிப்புப் பாதிக்கப்பட்டுக் குறைகின்றது. இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கிற நேரத்தில் நாம் சித்தாந்தத்தின் பிடியில் சிக்கிவிடக் கூடாது. ஒரு யோசனை கூறிட நான் விரும்புகிறேன். நடுத்தர வருவாய் உள்ளவர்கள், தொழில் வல்லுநர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வருவாய் தேடுவார்களானால் அவர்கள் அரசினர் கடன் பத்திரங்களிலோ அல்லது பிற்பட்ட பகுதிகளில் தொழில்களிலோ முதலீடு செய்ய முற்படுவார்களேயானால் வரிச் சலுகை அளிக்கலாம். இவ்வாறு செய்யப்படுமானால் வரி ஏய்ப்புச் செய்வதில் ஆர்வம் குறையும். வரிகளைப் பற்றி விசாரணைக் குழுவினிடம் இந்த அம்சத்தையும் ஆராயும்படிக் கூறலாம்.

## சமதர்மப் பணிகளுக்குத் துணை நிற்போம்!

வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் நம்முடைய பிரதானப் பிரச்சினைகளாகும். முடிவெடுக்க முடியாமல் தவிப்பதும் வெற்றுத் தீவிர வாதங்களும் இவற்றுக்கான தீர்வு காண நமக்கு உதவிட மாட்டா. இந் நாட்டிலிருந்து வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்திடப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களது அரசு எடுக்கும் எல்லாச் சமதர்ம முடிவுகளிலும் எங்களது முழு நிறைவான ஒத்துழைப்பும் இருக்குமென்பதைத் தமிழ் நாடு அரசின் சார்பில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். கட்சிகளுக்கப்பாற்பட்ட - பிராந்திய எல்லைகளைக் கடந்த தேசியப் பிரச்சினைகளாக இந்தப் பிரச்சினைகளை நாம் கருத வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**19-1-73 அன்று டில்லியில் கூடிய தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.**








# ஒருமைப்பாட்டுக்கு ஓர் உயர்ந்த திட்டம்

கல்வி நிலையங்கள், அறிவுக் கண்களைத் திறந்து விடும் ஆலயங்கள். அந்த ஆலயங்களில்தான் அநேக அற்புத நிகழ்ச்சிகள் உருவாகின்றன. பெற்றோரின் அரவணைப்பிலே சிலகாலம் இருந்து, மழலை பேசி, அவர்களை மகிழ்வூட்டி வாழும் பிஞ்சுக் குழந்தைகள், பெற்றோரை மறந்து, எதிர் காலக் கடமை வீரர்களாக மாறுவதற்கு அனுப்பப்படும் பயிற்சி நிலையம்தான் பள்ளிக் கூடம்.

செல்வத்திலே பிறந்த சிறுராக இருந்தாலும், வறுமைச் சேற்றிலே நெளிகின்ற சிறுவர்களாக இருந்தாலும் அறிவாலயத்தில். அனைவரும் ஒன்றே! எழுத்தறிவிக்கும் ஆசிரியன் என்னும் இறைவனின் முன்னே எல்லாரும் சமமே!

சீருடை அணிந்து, சித்தத்தில் ஒருமைப்பாட்டு உணர்வுடன் நாள்தோறும் பள்ளிக்கு வந்து செல்லும் சிறுவர் சிறுமியரிடையேதான் எவ்வளவு அன்பு, எவ்வளவு ஆர்வம், எவ்வளவு ஒற்றுமை!

உயர்ந்தவர், தாழ்ந்தவர்; பணக்காரர், ஏழை என்ற வேற்றுமைகள் பள்ளிப்பருவத்துக் குழந்தைகளிடம் பரவுவது கிடையாது. பாடும் பறவைகளாக—ஆடும் மயில்களாகத் திரியும் இளம் மாணவர் உலகத்திற்கு எந்தத் தொல்லையும் கிடையாது. ஒட்டடை போக்கி வெள்ளையடிக்கப் பெற்ற—பொங்கற் காலத்து இல்லங்களைப் போல, என்றும் சுத்தமாக—மாசு மருவற்றுப் பொலிவு பெற்று விளங்கும் உள்ளங்களுக்குச் சொந்தக்காரர்கள் பள்ளி மாணவர்கள்.

எனவேதான், இரக்கக் குணமும், இளம் உணர்வும் கொண்ட மாணவச் செல்வங்களிடம் உயர்ந்த நோக்கங்களையும், ஒருமைப்பாட்டு உணர்வையும் எளிதில் புகுத்த முடிகிறது.

பள்ளிப்பருவத்தைத் தாண்டிய பின் அவர்களில் சிலர் கல்விப் பயணத்தைத் தொடரும் வாய்ப்புப் பெறுகிறார்கள்; மிகப் பலர் வாழ்க்கைப் பாதையை நாடிச் செல்கிறார்கள். அதனால்தான், எந்த ஒரு திட்டத்தையும் பள்ளிப் பருவத்திலேயே அறிமுகம் செய்வது தேவையாகி விடுகிறது.

ஆத்திசூடியையும், கொன்றை வேந்தனையும், நீதிநெறி விளக்கத்தையும், மூதுரையையும் கல்லூரிகள் எடுத்துச் சொல்வதில்லை. அடிப்படைக் கல்வி நிலையங்களே சொல்லித் தந்து விடுகின்றன.

ஈசாப் நீதிக் கதைகளையும், பஞ்சதந்திரக் கதைகளையும் கல்லூரிகள் சந்திக்க வாய்ப்பில்லை. அவை, பள்ளிகளிலேயே உலா வருகின்றன.

எனவேதான், வளரும் பயிர்களின் வாழ்வு செழிக்க உதவும் பருவமழை போலப் பள்ளி மாணவர்கள் நலம் பெறுவதற்குப் பயன்படும் திட்டங்களை உருவாக்கும் அரசு, அந்தத் திட்டங்களைப் பள்ளிகளிலேயே அமல் செய்கின்றது.

தேசிய ஒருமைப்பாட்டு உணர்வை வலியுறுத்தும் வகையில்—தேசிய ஒருமைப்பாட்டு உணர்வு பெருக வேண்டும் என்ற கருத்தில்—மத்திய அரசின் கல்வித்துறை நிறுவனமான தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்குழு (National Council of Educational Research and Training) ஒரு புதிய திட்டத்தை 1969-ஆம் ஆண்டிலிருந்து உருவாக்கிச் செயலாற்றி வருகிறது.

பள்ளி மாணவர்களின் உள்ளங்களில் தேசிய ஒருமைப்பாட்டுணர்வினை ஊட்டுவதற்காக, அனைத்து மாநில மாணவர், ஆசிரியர் முகாம்களை (Inter-State–Student–Teacher Camps) உருவாக்கிப் பதினைந்து நாட்கள் பள்ளி மாணவ–மாணவியர்கள் கலந்து பழகுவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தி வருகிறது மத்திய அரசின் கல்வித்துறை.

இதுவரை தமிழ்நாட்டில் மாணவருக்கெனக் கோயம்புத்தூரில் ஒரு மாணவர் முகாம் ( Boys Camp ) நடைபெற்றிருக்கிறது. அதன் பிறகு அண்மையில் 1972 டிசம்பர் 22-ஆம் நாள் முதல், 1973 சனவரி 4-ஆம் நாள் முடிய மாணவியருக்கான முகாம் ( Girls Camp ) சென்னை வேப்பேரியிலுள்ள பெண்டிங்க் மகளிர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதைத் தவிர, இந்த ஆண்டில், இந்தியாவில் இன்னும் 5 முகாம்கள் நடைபெற்றிருக்கின்றன.

குசராத், அஸ்ஸாம், கேரளம், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் மாணவர்முகாம்களும், இமாசலப் பிரதேசத்தில் மகளிர் முகாமும் நடைபெற்றிருக்கின்றன. குசராத்தில் நடைபெற்ற முகாமில், தமிழ்நாட்டு மாணவர்கள் கலந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு, ஆடவர் மகளிர் இருவரும் பங்கு பெறும் 'கலப்பு முகாம் (Mixed Camp) டெல்லியில் ஆய்வுக்காக உருவாக்கப்பட்டிருக்கிறது. டெல்லி, பஞ்சாப், மராட்டியம், ஜம்மு-காஷ்மீர், மேற்கு வங்கம், இராஜஸ்தானம், குசராத், கேரளம் ஆகிய

என்பது முத்தொள்ளாயிரப் பாடல். இவ்வாறு, கவிஞர்கள் ! காட்டும் கற்பனை முத்துக்கள் கருத்துக்கு இன்பம் பயப்பன என்பதில் ஐயமில்லை ! எனினும் கை நிறைய அந்நியச் செலாவணியை அள்ளித்தருகிற முத்துக்கள் கடல் தரும் முத்துக்களே !

பொதுவாக, நாம் வாழும் இவ்வுலகத்தின் பெரும் பகுதி 70 விழுக்காடுப் பரப்பு கடல் நீரில்தான் அமிழ்ந்துள்ளது. நாம் வாழும் நிலப்பரப்பில் 36 கோடி கிலோ மீட்டர் தூரம் கடல் நீர்ப் பரப்பாகவே உள்ளது. இதில் இயற்கையாக, ஒரு ஹெக்டேர் கடற் நீர்ப் பரப்பில் 4 முதல் 5 டன் வரை சிப்பிகள் — முத்துச் சிப்பிகள் கிடைக்கும் என்றும், சிப்பி வளர்ப்பு முறையைக் கைக்கொள்வதன் மூலம் ஒரு ஹெக்டேர் கடல நீர்ப் பரப்பில் 300 மெட்ரிக் டன் அளவிற்குச் சிப்பிகள் பெறலாம் என்றும் கணக்கிட்டுள்ளனர்.

வரலாற்றுக்கு முந்திய — பழங்காலந்தொட்டே தென்னகத்தின் கடல் முத்துக்கள் எங்கும் சிறப்பாக மதிக்கப்பட்டன. கிரேக்கத்திலும் ரோமாபுரியிலும் தமிழகக் கடல் முத்துக்கள் மான்விழி மங்கையரின் மதிப்பு மிக்க அணிகலன்களாகி, மாமன்னர்களின் மனதைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன : பிரிட்டனிலுள்ள மன்றாட்டவில் தமிழகத்துக் கடல் முத்துக்கள் முதல் வரிசையில் இடம் பெற்றன என்பது உலகறிந்த செய்தி. தமிழக முத்து வளத்தையும் அதன் சிறப்பையும் அம்முத்துச் செல்வத்தைத் தங்கள் நாடுகளுக்கு அள்ளிச் செல்வதற்காக அந்நிய நாட்டு வணிகர்கள் பலர், இங்கு வந்து காத்துக் கிடந்தனர் என்ற வரலாற்றுச் செய்தியை நாம் இலக்கியங்களில் காண்கிறோம்.

முத்துக் குளிப்பதொரு
தென்கடலி லே
மொய்த்து வணிகர்பல
நாட்டினர்வந் தே
நத்தி நமக்கினிய
பொருள்கொணர்ந் தே
நம்மருள் வேண்டுவது
மேல்கரையி லே ''

என்னும் பாரதியாரின் பாடல் வரிகள் முத்துக்காகப் பன்னாட்டு வணிகர்கள் இங்கு வந்து மொய்த்துக் கிடந்த செய்தியைக் கூறுகிறது.

முத்துக்கள் எப்படிப் பிறக்கின்றன ?

கடலில் எத்தனை எத்தனையோ வகை வகையான வியக்கத்தக்க பிராணிகள்— உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றுள் ஒன்றுதான் முத்துச்சிப்பி. இந்த முத்துச்சிப்பி என்னும் ஒருவித ஆளியின் சிப்பிக்குள்ளே ஒரு நுண்ணிய சிறு மணலோ அல்லது வேறு உறுத்தும் பொருளோ புகுகின்றது; அப்போது அந்தப்பிராணி தன் புறத்தோல் அடுக்காகிய எப்பித்தீலியம் என்னும் ஒருவகையான படலத்தால் அதனைப் பொதிந்து கொள்கின்றது. பிராணி அந்தப்பையினுள் சுரக்கும் நீர், மெல்லிய அடுக்கடுக்காக வந்து சேர்ந்த பொருளைப் பொதிகின்றது ; இவ்வாறு முற்றிலும் நன்கு பொதியப் பெற்ற பொருள்தான் முத்து. அடுக்குகள் மிக மிக மென்மையானவை ; அவை ஒளியை உள்ளே நுழைய விடுவனவாகவும், அதனைப் பிரதிபலிக்கச் செய்வனவாகவும் உள்ளன. இதனாலேயே முத்து அழகாக ஒளிர்கின்றது.

முத்துக்களில் வெண் முத்துக்களைத் தானே நாம் பார்க்கிறோம் ; கறுப்பு நிறமான முத்துக்களும் உள்ளன. ஆனால், அவை கிடைப்பது அருமை. எனவே கறுப்பு முத்துக்களின் விலை மதிப்பு மிக மிக அதிகம்.

பொதுவாக முத்தில் ஏதேனும் கீறல் ஏற்பட்டால், மேல் அடுக்கை மெதுவாக உரித்து எடுத்து விடலாம். அதன் பின் அம்முத்து முன் போலவே நன்றாக ஒளிவிடும்.

முத்துக்களில் பல்வேறு வடிவங்கள் உள்ளன. அவற்றுள், முற்றிலும் உருண்டை வடிவான முத்துக்களே பெரிதும் விரும்பப்படுகின்றன. முட்டையின் வடிவுடையனவும், பொத்தான் வடிவுடையனவும் வரிசைப்படி மதிப்பிடப்படுகின்றன.

முத்து மிகவும் மென்மையான பொருள். கீறல்பட்டாலும் எளிதில் கெட்டுப் போகும். நீண்ட நாள் காற்றுப்பட்டால் ஒளி மங்கிப் போகும் ; அமிலம், தூசி, வேர்வை, ஈரம் ஆகியன சேர்ந்தாலும், முத்து பழுதுபட்டுப் போகும்.

இவ்வளவு அருமையான— விலை மதிப்பு மிக்க முத்துக்

## வேலைக்கு ஆட்கள் தேவைப்படும் பணிப் பிரிவுகள்

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட வகை வேலைகளுக்குப் போதிய பணியாளர்கள் கிடைக்காத நிலைமை இருந்து வருகின்றது.

உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்—ஹையர் கிரேடு (பெண்கள்); துப்புரவு ஆய்வாளர்கள் (சேனிடரி இன்ஸ்பெக்டர்) (தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்); சுகாதார உதவியாளர்கள் ; பி.டி. ஆசிரியர் (கன்னடம்), ஹையர் கிரேடு ஆசிரியர் (உருது) டிரில் ஆபரேட்டர் ; மருந்து கலக்குவோர் ; சுருக்கெழுத்தர்கள் (தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ; தாழ்த்தப்பட்ட பழங்குடியினர்) ; கர்னாடக இசையில் வித்வான் தகுதியுடன் இசை ஆசிரியர் ; எலெக்ட்ரீஷியன் ; பவர் டிரில் டிரைவர் ; பி. டி. ஆசிரியர்கள் (கணிதம்) (பெண்கள்) ; விமான மெக்கானிக்குகள் ; லைன் ஆபரேட்டர் ; நூலகர் ; அராபிக் முன்ஷி ; மெயின்ஸ் சூபர்வைசர் ; போட்டோ டார்க் ரூம் உதவியாளர்கள் ; ரேடியோகிராபர் ; தெலுங்கு பண்டிட் கிரேடு 1.

தேசிய வேலை வாய்ப்புப் பணி 1973 ஜூன் மாத அறிக்கையில் மேற்கண்ட விவரம் தரப்பட்டுள்ளது.

## கம்பியில்லா டெலிபோன்

கம்பியில்லாத் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது கையடக்கமானது! எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லக்கூடியது! வழியில் சாலையிலிருந்து பேசலாம். எடையோ 28 அவுன்சுதான்.

"டைனு டி-ஏ-ஸி" என்ற இந்தப் புதுமைத் தொலைபேசியை அமெரிக்க நாட்டிலுள்ள மோட்டரோலா இன்கார்ப்பரேட்டடு என்ற நிறுவனம் இயக்கிக் காட்டியிருக்கிறது.

எஃப். எம். ரேடியோ அலை வரிசையில் இது இயங்குகிறது.

மிகு நுணுக்கமான கம்ப்யூட்டர் கணக்கிடு பொறிமுறை அமைப்பு, இந்தத் தொலைபேசியை இயங்க வைக்கிறது. சாலையில் போய்க்கொண்டிருக்கையிலும் ஊர்தியில் சென்று கொண்டிருக்கையிலும் அலுவலகத்திலோ இல்லத்திலோ இருக்கும் தொலைபேசியின் எண்களை இந்தத் தொலைபேசியில் சுழற்றிப் பேசலாம். இந்த ரேடியோ—தொலைபேசி என்ன செய்கிறது தெரியுமா? முக்கிய இடங்களில் வைத்திருக்கும் பலப் பல ரேடியோ டிரான்ஸ்மீட்டர்களுக்கும் ரிசீவர்களுக்கும் ஒரு மின்காந்த அலையை அனுப்புகிறது. இந்த ரேடியோ டிரான்ஸ்மீட்டர்களையும் ரிசீவர்களையும் ஆட்சி செய்யும் மத்திய கம்ப்யூட்டர் பொறி, தொலைபேசிச் செய்தியை முறையான தொலைபேசி அமைப்புக்குள் அனுப்பி விடுகிறது.

சாதாரணத் தொலைபேசியிலிருந்தும் இந்தக் கையடக்கத் தொலைபேசிக்கு எண்களைச் சுழற்றிப் பேசலாம்.

யம் வைத்துத்தான் முத்துக் குளிக்கிறார்கள். இத்தகைய முத்துக் குளிப்பு எங்கெங்கே நடைபெறுகிறது ?

முத்துக் குளிக்கும் இடங்கள் உலகில் மிகச் சிலவே உள்ளன. அவற்றுள், பாரசீக வளைகுடாவிலுள்ள பாரன், மன்னார் வளைகுடா, தூத்துக்குடிக் கடல், ஜப்பானிலுள்ள டோக்கியோக் கடல், சுலூத் தீவுக் கூட்டம், ஆஸ்திரேலியாவின் வடக்கு மேற்குக் கடற் கரையோரங்கள், கலிபோர்னியா கடற்கரைப் பகுதி ஆகியவை குறிப்பிடத்தக்கன. எனினும் விலை மதிப்புள்ள முத்துக்களை மிகுதியாகத் தருபவை மன்னார் வளைகுடாவும், பாரசீக வளைகுடாவுமே !

பொதுவாக, முத்துக் குளிப்பு எப்போது ஆரம்பமானது என்பதை நாம் தெளிவாக அறுதியிட்டுக் கூற முடியவில்லை. எனினும், தமிழகத்தில் மன்னார் வளைகுடாவில் நடைபெறும் முத்துக் குளிப்புப் பற்றி ரோம, எகிப்திய, கிரேக்கப் பயணிகள் தங்கள் பயணநூல்களில் குறிப்பிட்டுள்ளனர். மன்னார் வளைகுடாவில் முத்துக் குளிப்பது பற்றிய தெளிவான வரலாற்றுக் குறிப்பினை முதன் முதல் தந்தவர் உலகம் சுற்றிய வீரர் மார்க்கோ போலோ தான்.

முத்துக் குளிக்கும் பண்ணைகள் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருப்பதால் அவர்களின் மேற்பார்வையில்தான் முத்துக் குளிக்க வேண்டும். முத்துக் குளிப்பவர் 60 அடி ஆழமுள்ள கடற்படுகையில் சிப்பிகளைச் சேகரிக்க வேண்டும் ; அவர் 80-90 சிறு மணித்துளி நேரத்திற்கு அதிகமாகக் கீழே தங்க முடியாது. அவர் மூச்சை அடக்கவும், தம்மீது நிற்கும் நீரின் கனத்தைத் தாங்கவும் வேண்டியவராக இருக்கிறார். அதனால் முத்துக் குளிக்கப் புதிதாகத் தொடங்குவோரின் மூக்கிலும் காதுகளிலும் இரத்தம் வருவதுமுண்டு. முத்துக் குளிப்போர் சுறா மீன்களுக்குத் தப்பித்துக் கொள்ள கருங்காலி மரத் தடிகளை வைத்திருப்பர். முத்துக் குளிப்பவர் தவறாக அதிக நேரம் தங்கிவிட்டால் மூச்சுத்திணறி இறந்துவிடுவர். அதனால், முத்துக் குளிப்பவர்கள் உடல் வலிமை உடையவராக இருத்தல் வேண்டும்.

முத்துக் குளிப்போர் காலை 5 மணிக்குக் கடற்கரைக்கு வந்து, அரசாங்கத்தாரின் அனுமதிச் சீட்டுக்களைப் பெறுவர். தோணிகள் 60-70 ஆக அணிவகுத்து நிற்கும். ஒவ்வொரு தோணியிலும் முத்துக் குளிப்போர் சுமார் பதின்மர் இருப்பர்.

தூத்துக்குடிக் கடலில் பண்ணைகள் 20 மைல் தொலைவிலிருக்கின்றன. தோணிகள் அவற்றை நோக்கிப் புறப்பட்டுப் போகும். முத்துப் பண்ணை இருக்குமிடத்தைக் காட்ட அதில் நீண்ட மூங்கிற் கழிகளில் சிவப்புக் கொடிகள் கட்டி நட்டு வைத்திருப்பர்.

முத்துக் குளிப்போர் ஆடைகளைக் களைந்துவிட்டுக் கோவணத்துடன் மட்டுமே இறங்குவர். முத்துச் சிப்பிகளைச் சேகரிப்பதற்காக இடுப்பில் ஒரு வலையைக் கட்டிக் கொள்வர். அவர் நீரில் குதித்துத் தோணியைப் பற்றி நிற்பர். அப்போது தோணியிலிருப்பவர் சுமையான கல் ஒன்றைக் கட்டிய நீண்ட கயிற்றை நீரில் விடுவர். அப்போது முத்துக் குளிப்பவர் கல்லைக் கட்டிய கயிற்றுச் சுருக்கில் ஒரு பாதத்தை நுழைத்துக் கொண்டு நீரில் மூழ்குவர். அடிப் படுகையில் போய்ச் சேர்ந்ததும் கல்லை விட்டுவிடுவர். தோணியிலிருப்பவர் அதை மேலே தூக்கி, முத்துக் குளிக்கும் வேறொருவரை இறக்கப் பயன் படுத்துவர்.

முத்துக் குளிப்பவர் கல்லை நீக்கியதும் பரபரப்புடன் முத்துச் சிப்பிகளைப் பெ... றுக்கி, இடுப்பிலுள்ள வலைப் பையில் போட்டுக் கொ... ஒன்றரை மணித்துளி ஆகும் வெளியே வந்து விடு... தோணியிலுள்ளவர்கள் ... பற்றிக் கவனித்துக் கொ... டேயிருப்பார்கள். மு...

குளிப்பவர் மேலே வந்ததும் முத்துச் சிப்பிகளைத் தோணியிலிருப்பவரிடம் தந்துவிட்டு சிறிது நேரம் தோணியைப் பிடித்துத் தொங்கிக் கொண்டே ஓய்வு கொள்வர். பிறகு மீண்டும் முன்போல் இறங்குவர்.

நண்பகலில் முத்துக் குளித்தல் முடிவடையும். முத்துச் சிப்பிகளைக் கடற்கரையில் குவித்து ஏலம் விடுவர். வாங்குவோர் அவற்றைச் சில நாட்கள் அழுகவிட்டுப் பின்னர்த் திறந்து கழுவி முத்துக்களை எடுப்பர்.

**கிடைக்கின்ற சிப்பிக்களை மூன்று சம பங்காகப் பிரித்து, முத்துக் குளிப்போர்க்கு ஒரு பங்கைக் கொடுத்துவிட்டு அரசாங்கம் 2 பங்கை எடுத்துக் கொள்கிறது.**

முத்துக் குளித்தலை ஆண்டு தோறும் நடத்த முடியாது. முத்துக்கள் நன்கு முழு வளர்ச்சியடைந்ததைக் கண்டறிந்த பிறகே முத்துக் குளித்தலை நடத்தலாம். முத்துக்களின் வளர்ச்சி பற்றி ஆராய்வதற்கு மத்திய அரசும் மாநில அரசும் ரூபாய் 15,59,400 செலவிடுகின்றன. இந்த முத்து வளர்ச்சி பற்றி ஆராய்வதற்கான ஆராய்ச்சி நிலையம் மண்டபத்தில் உள்ளது.

இயற்கையில் கிடைக்கும் இந்த முத்துக்களைப்போல இப்பொழுது ஜப்பான், ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் செயற்கை முத்துக்களை உற்பத்தி செய்கிறார்கள். இவற்றை வளர்ப்பு முத்துக்கள் அல்லது செயற்கை முத்துக்கள் என்கிறார்கள்.



முத்து உற்பத்தி செய்யும் முறையை ஜப்பான் இன்னும் இரகசியமாகவே வைத்திருக்கிறது. இன்று, உலகச் சந்தைகளில் விற்பனையாகும் முத்துக்களில் பெரும்பகுதி ஜப்பானில் வளர்க்கப்படும் வளர்ப்பு முத்துக்களே. இவை இயற்கை முத்துக்களைவிட அழகாகவும் இருக்கும்—உருண்டையாகவும் இருக்கும். எனவே, பலரும் இவற்றை விரும்பி வாங்குகின்றனர்.

பொதுவாக, முத்து விளைச்சலில்—முத்து வளர்ப்பில் ஈடுபட்டுள்ள அயல்நாடுகளுக்குள்ளே கடந்த 50 ஆண்டுகளில் ஜப்பானே தலை தூக்கி நிற்கிறது. இன்று, ஜப்பானின் வருமானத்தில் பெரும் பகுதி செயற்கை முத்து ஏற்றுமதியின் மூலம் கிடைப்பதேயாகும். முத்து ஏற்றுமதியில் ஜப்பானிய அரசாங்கம், முத்துக்களின் தரத்தைக் காப்பாற்றுவதில் பெரிதும் அக்கறை காட்டுகிறது. அது இரண்டாந்தர முத்தை ஏற்றுமதி செய்ய அனுமதிப்பதில்லை. 'தேசிய முத்து ஆராய்ச்சிக் கூடம்' (நேஷனல் பேர்ல் ரிசர்ச்லேபரட்டரி) என்ற நிறுவனத்தை 1955லேயே ஜப்பான் ஏற்படுத்தி நடத்தி வருகிறது. அண்மையில் ஜப்பானின் பேருதவியோடு ஆஸ்திரேலியாவில் செயற்கை முத்து உற்பத்தித் தொழில் தொடங்கியுள்ளது. இவற்றைப் பின் பற்றி நாமும் முத்து விளைச்சலில் தீவிரமாக இறங்கினுல், ஏராளமான அந்நியச் செலாவணியைப் பெற வாய்ப்பு ஏற்படும்!

—சாமி பழ



**பண்டைத் தமிழகத்துத் தலைநகர்கள்**

வஞ்சி: சங்ககாலச் சேர மன்னர்களின் தலைநகர்.

காஞ்சி: சங்ககாலத்தில் திரையர் அரசர்களின் தலைநகராகத் திகழ்ந்தது. கி.பி. 3-ஆம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 9-ஆம் நூற்றுண்டு வரை 600 ஆண்டுகள் பல்லவர்களின் தலைநகரமாகத் திகழ்ந்தது.

தகடூர்: சங்ககாலம் முதல் கி.பி. 7-ஆம் நூற்றுண்டு வரை அதியமான் அரசர்களின் தலைநகராக விளங்கியது.

கிடங்கில்: சங்க காலத்தில் ஒய்மானுட்டு நல்லியக் கோடன் என்ற அரசனின் தலைநகராக விளங்கியது.

திருக்கோவலூர்: மலையமான் திருமுடிக்காரி என்னும் அரசனின் தலைநகராகச் சங்ககாலத்தில் திகழ்ந்தது.

# ஒரு தொழில் நகரம் உருவாகிறது!

அம்பத்தூர் நகரியம் ஆற்றும் அரும் பணிகள் குறித்து விளக்கம் தருகிறது இக் கட்டுரை.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பல குக்கிராமங்களைக் கொண்ட கிராமமாக அம்பத்தூர் இருந்தது. ஆனல் இன்று? அதன் வளர்ச்சியில் எத்தனை வேகம்! ரயில் நிலையமும், ஆங்காங்கே பல்வேறு தொழிற்சாலைகளும் நிறைந்த நகரமாக அல்லவா அது காட்சியளிக்கிறது!

வகை வகையான தொழிற்கூடங்கள் நாளுக்கு நாள் வளர்ந்தும், உருவாகியும் வருகின்றன. இப்பகுதியில் வளர்ந்துவரும் அதிவிரைவான தொழில் வளர்ச்சியின் காரணமாகத் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் இங்கே குடியேறியவண்ணமுள்ளனர். அன்று கிராமமாகக் காட்சியளித்த அம்பத்தூர் இன்று தொழில் மயமான நகரமாகி வருகிறது. பொதுச் சுகாதார சமூகத் தேவைகளை நிறைவேற்றும் நோக்கோடு, ஊராட்சி ஒன்றியமாக இருந்த இது, நகராட்சியாகி இன்று நகரியமாக மாறி (Township) நற்பணிகள் பல ஆற்றி வருகின்றது.

தொழிலுக்கு ஏற்ற இடமாகத் திகழும் அம்பத்தூரில் சுமார் 1,200 ஏக்கராவில் தொழிற்பேட்டையும், 40 பெரிய தொழிற்சாலைகளும், 78 நடுத்தரத் தொழிற்சாலைகளும், 134 சிறிய தொழிற்சாலைகளும் இருக்கின்றன. தொழிற்கூடங்கள் நிறைந்த சூழ்நிலையில் உள்ள ஓர் நகரியம், தமிழ்நாட்டில் இது ஒன்றே என்று கூடச் சொல்லலாம்.

இந்நகரிய நிருவாகத்தில் அம்பத்தூர் பேரூராட்சி, கொரட்டூர், காக்காப்பாளையம், பாடி, மொகப்பேர், மண்ணூர், பட்டறைவாக்கம், அத்திப்பட்டு, மேனும்பேடு ஆகிய ஒன்பது கிராமங்கள் உள்ளன. இந்நகரியத்தின் பரப்பளவு 12·5 சதுர மைல்கள். மக்கள் தொகை 43,058 நகரியக் குழுவின் மொத்த உறுப்பினர்கள் 26. இவற்றில் அரசு அலுவலர்கள் 14. அரசு அலுவலர் அல்லாதோர் 12. செங்கை மாவட்ட ஆட்சித் தலைவர், நகரியச் குழுவின் தலைவராக இருக்கிறார்.

நகராட்சிக்கும்(Municipality), நகரியத்திற்கும் (Township) உள்ள ஒரு வேறுபாடு. நகராட்சி, தேர்தலின் மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது; நகரியம் நியமன உறுப்பினர்களைக் கொண்டிருக்கிறது. அங்கே ஆணையர் என்றால், இங்கே நிருவாக இயக்குநர்.

பணிகள் சீராக, சீக்கிரமாக நடைபெறப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை: 1. நியமனக் குழு 2. ஒப்பந்தக்குழு. 3. நகரமைப்புக் குழு. 4. வரி மேல் முறையீட்டுக் குழு 5. நிதிக்குழு. 5. பொதுப் பணிக் குழு. 7. பொதுச் சுகாதாரக்குழு. 8. கல்விக் குழு.

நல்ல நகரமென்றால் முத[illegible]லில் போக்குவரத்துக்கு[illegible] வசதியான சாலைகள் இருக்[illegible] வேண்டும். இதனை உணர்ந்[illegible] நகரியம் புதிய புதிய சாலைகளை அமைத்த வண்ண[illegible]மிருக்கின்றன. தார்போட்[illegible] சாலைகள் 4,480 கி.மீட்[illegible]டரும், ஜல்லி போட்[illegible] சாலைகள் 5,975 கி மீட்[illegible]ரும், கிராவல் போட்[illegible] சாலைகள் 2,425 கிலோமீட்[illegible]ரும் ஆக 12,880 கி. மீட்டர் புதிய சாலைகள் 1971—72-ல் போடப்பட்டுள்ளன. இவற்றுக்காக ரூ. 92,636 செலவு செய்யப்பட்டுள்ளது. இதே ஆண்டு களில் பராமரிக்கப்பட்டு வரும் மொத்தச் சாலைகளின் நீளம் 60,154 கி.மீ. இந்[illegible]

மூர்த்து

மாநிலங்களைச் சார்ந்த மாணவர்களும் மாணவியரும் பங்கு பெறும் இந்த முகாம் வெற்றி பெற்ருல், எதிர்காலத்தில் இது போன்ற கலப்பு முகாம்கள் அதிகம் உருவாகலாம்.

சென்னையில் நடைபெற்ற மகளிர் முகாமில் அஸ்ஸாம், இமாசலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், கர்நாடகம், தமிழ் நாடு ஆகிய 5 மாநிலங்களைச் சேர்ந்த மாணவியர் பங்கு பெற்றனர்.

ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் 3 பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பெற்றன. ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் 5 மாணவியர் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். 14 வயதுக்கு மேலும், 16 வயதுக்கு மேற்படாமலும் உள்ள மாணவியர்தாம் இந்த முகாமில் கலந்து கொள்ள முடியும் என்பதால், ஒரு மாநிலத்துக்கு 15 மாணவியர் வீதம் ஐந்து மாநிலங்களைச் சேர்ந்த 75 மாணவியர் இந்த முகாமில் கலந்து கொண்டார்கள். பள்ளிக்கு ஓர் ஆசிரியை வீதம் 15 ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.



இந்த முகாம்களில் மாணவியர்கள் பல அலுவலாளர்களின் உரைகளைக் கேட்கும் வாய்ப்புப் பெற்ருர்கள். புது டில்லியிலுள்ள ஐ.எஸ்.டி. தேர்வுக்குத் தேர்வுக்குழுவின் செயலாளர், தமிழ்நாடு, பாண்டிச்சேரி, மைசூர் ஆகிய மாநிலங்களின் கள ஆலோசகர் (Field Adviser) ஆகியோர் மாணவியருக்கு உரையாற்றியவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள்.



மாணவியர் இந்த முகாமுக்கு வந்தவுடன் அவர்களுக்கு ஒரு தேர்வு வைக்கப்படுகிறது. அது முன் தேர்வு (Pre-Test) என்று வழங்கப்படுகிறது. பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு தேர்வு வைக்கப்படுகிறது. அது Post Test என்று வழங்கப்படுகிறது. அதன் பிறகு முகாம் முடிவடைவதற்கு முன்னர் Evaluation Test என்று ஒரு தேர்வு வைக்கப்படுகிறது. இந்தத் தேர்வில் கேட்கப்படும் விளுக்கள், உளநூலின் அடிப்படையில் உருவானவை. அந்தக் கேள்விகளில் ஒரு சில :

இந்த முகாமில் எந்த மாணவியுடன் நீ நன்கு பழகிளுய்?

அந்த மாணவியின் எந்தச் சிறப்பம்சம் உன்னைக் கவர்ந்தது?

இது போன்ற விளுக்கள் கேள்வித் தாளில் இருக்கும். முகாமில் கலந்து கொள்ளும் மாணவியர் இவற்றிற்குப் பதில் இறுக்க வேண்டும். விடைத் தாள்கள் டெல்லியில் உள்ள கல்வி அமைச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அங்கே அவை திருத்தப்படுகின்றன. விடை எழுதியவர்களுக்கு அந்த விடைத் தாள்கள் அனுப்பப்படுவதில்லை.



ஆனல், மாணவியரின் உள்ளங்களையும், அவர்கள் ஒருமைப்பாட்டு உணர்ச்சியில் எந்த அளவுக்குப் பக்குவப்பட்டு வருகிருர்கள் என்பதையும் இந்தத் தேர்விளுல் அறிந்து கொள்ள முடிகிறது.

இந்த முகாம்களுக்கு ஆகின்ற செலவு, மத்திய அரசிளுல் கொடுக்கப்படுகிறது. மாணவியரின் உணவுச் செலவு, தங்கும் இடச் செலவு, பயணச் செலவு ஆகிய அனைத்தையும் கொடுத்துக் கைச் செலவுக்காக ஒவ்வொருவருக்கும் 15 ரூபாயும் கொடுக்கிருர்கள்.

இந்த முகாமில் மாணவியருக்கு நாள்தோறும் திரைப் படக்காட்சிகள் நடைபெற்றன. திரைப்படம் என்ருல், புகழ்பெற்ற நட்சத்திரங்கள் மின்னிவரும் படங்களல்ல ; வெளிநாட்டு மக்களின் வாழ்க்கையை எடுத்துரைக்கும் செய்திப் படங்கள். அவை படங்கள் மட்டுமல்ல—பாடங்களாகவும் திகழ்ந்தன. ஜப்பான் ஜெர்மனி, ஆகிய நாட்டுக் குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோரைப்பற்றிய செய்திப் படங்கள் காண்பிக்கப்பட்ட போது, முகாமில் கலந்து கொண்ட மாணவியர் மிகமிக ஆர்வத்துடன் ரசித்துப் பார்த்தனர்.

மாணவியர், மாமல்லபுரம், காஞ்சி, வேடந்தாங்கல், சென்னைத் துறைமுகம், ஆகிய இடங்களுக்கெல்லாம் அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தச் சுற்றுலா, அவர்களை மிகவும் கவர்ந்து விட்டது. வடஇந்தியாவிலுள்ள அஸ்ஸாம், இமாசலப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஆகிய மூன்று மாநிலங்களிலிருந்தும் வந்திருந்த மாணவியர் கடலைப் பார்த்தது கிடையாது. கப்பலைப் பார்த்ததும் கிடையாது. அதளுல் துறைமுகத்தையும், கப்பலையும் பார்க்க நேர்ந்த போது அவர்களின் அகமகிழ்வுக்கு அளவே இல்லை. கடல் தண்ணீர் கால்களிலே பட்டபோது ஒரு சில மாணவியர்க்கு மெய்சிலிர்ப்பே ஏற்பட்டு விட்டதாம்.

கடற்கரையில் பெருமதிப்புடன் நிறுவப்பட்டிருக்கும் தமிழ்ச்சான்ருேர்களின் சிலைகள், வெளி மாநிலத்து மாணவியரின் அகங்களிலே புதிய சிந்தனையை உருவாக்கியிருக்கின்றன. அவை எவருடைய சிலைகள் என்பதை அந்த மாணவியர் நுணுகி நுணுகிக் கேட்டுத் தெரிந்து கொண்டார்களாம்.

கற்புக்கரசி கண்ணகியின் சிலையைப் பார்த்துக் கர்நாடக மாணவி ஒருவர் கேட்டார்,

"கண்ணகி கடலைப் பார்த்து நிற்காமல் நகரத்தைப் பார்த்து நிற்கிருளே, ஏன்?"—என்று

"கண்ணகி சிலை மட்டுமல்ல, மற்ற அனைவரின் சிலைகளும் நகரத்தைத்தான் நோக்குகின்றன. கடலை நோக்கவில்லை. காரணம், நகரத்து மக்கள் பார்ப்பதற்குத்தான் இந்தச் சிலைகள் உருவாகியுள்ளனவே தவிரக் கடல்நீர் பார்ப்பதற்காக அல்ல"—பெண்டிங்க் மகளிர் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியையும் அனைத்து—மாநில—மாணவியர்— ஆசிரியர் முகாமின் கௌரவ இயக்குநருமான திலகவதி பால் இப்படிப் பதில் தந்தபின், கர்நாடக மாணவி தெளிவடைந்திருக்கிருர்.

அஸ்ஸாம், உத்தரப்பிரதேசம், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலத்தைச் சேர்ந்த மாணவியரும், மிகுந்த அக்கறை காட்டிச் சிலைகளைப் பற்றி அறிந்து கொண்டார்கள்.

மாணவியர், ஆளுநர் மாளிகைக்கு அழைத்துச் செல்லப் பட்டார்கள். தமிழக ஆளுநர் மேதகு கே.கே.ஷா அவர்கள் மாணவியரை மிகுந்த அன்பு காட்டி வரவேற்ருர். அனைவருக்கும் தேநீர் விருந்தளித்தார். மாணவியரைப் பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ந்தார்.

மாணவியர்கள் இந்த முகாம் நடைபெற்ற போது உருவாக்கிய கைத்திறன் பொருள்கள் இந்தப் பள்ளியில் ஒரு கண்காட்சியாகவே வைக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. காண்பவர் கண்களையும், கருத்தையும் கவரும் வண்ணம் அந்தக் கண்காட்சி அமைந்திருந்தது.

இந்த முகாமின் நோக்கம்—மாணவியர் ஒருமைப்பாடு உணர்வில் சிறந்து விளங்க வேண்டும் என்பதுதான்! அதாவது மற்றவர்களோடு, மனந்திறந்து பழக வேண்டும்—சங்கோஜமோ, ஒதுங்கிச் செல்லுதலோ கூடாது ; ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளாது உள்ளன்போடு வாழவேண்டும் என்பது இந்த ஒருமைப்பாட்டின் பொருள்.

அதளுல்தான் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு மாணவி, மிகவும் உரிமையுடன் தனது தேவைகளைக் கேட்டிருக்கிருர்.

"சாப்பாட்டிற்கு எனக்குக் கடல்மீன் வேண்டும்"— இப்படிக் கேட்டாராம் அந்த மாணவி. உடனே கடல்மீன் வாங்கி வரப்பட்டு, சமையல்



பராமரிப்புக்கு ஆன செலவு ரூ. 24,656. நகரியப் பகுதியினுள் சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை தவிர மற்ற சாலைகள் அனைத்தும் நகரியத்தாலேயே பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அறிவு ஒளிக்குக் கல்வியும், இருள் ஒளிக்கு விளக்கும் அவசியம் அன்றோ ? 'இளமையிற் கல்' என்பதனைச் செயலாக்கவும், 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதனை எடுத்துக் காட்டவும் கல்விச் சாலைகள் வேண்டும். இதனையும் நிறைவேற்றி வருகின்றது இந் நகரியம். இங்கே மூன்று உயர்நிலைத் துவக்கப் பள்ளிகளும், ஏழு துவக்கப்பள்ளிகளும் உள்ளன. இப்பள்ளிகளில் பயிலும் பிள்ளைகளின் சராசரி மொத்த எண்ணிக்கை 2,519. எல்லாப் பள்ளி ஏழை மாணவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று தொடங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொது அறிவை வளர்க்கும் வகையில் நகரியம் சார்பில் குமரன் பூங்காவிலும், மங்களாபுரம் பூங்காவிலும் படிப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் நாளிதழ்கள், வார இதழ்கள் முதலியன வரவழைக்கப்படுகின்றன. இவை தவிர செங்கை மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் ஒரு நூலகமும், படிப்பகமும் நடத்தப்பட்டு வருகின்றது. செய்திகள் முதலானவற்றை அறிந்துகொள்ள 15 இடங்களில் வானொலிப் பெட்டிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகள் நிறைந்துள்ளதால், இரவு முழுவதும் தொழிலாளர் நடமாட்டம் இருக்கத்தானே செய்யும்? அதற்காக இந்தப் பகுதிகளில் இரவு முழுவதும் தெரு விளக்குகள் எரிந்திட நகரியம் வசதி செய்திருக்கிறது. நகரியக் குழு சார்பில் மொத்தம் 633 விளக்குகள் உள்ளன. மேலும் 203 விளக்குகளை அமைக்க நகரியம் மின்வாரியத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறது. 1971–72-ல் விளக்கு வசதிக்காக ரூ. 45,675 செலவிடப்பட்டுள்ளது. மின் சார விநியோகம், மின் விளக்குகள் பராமரிப்பு ஆகியவை தமிழ்நாடு மின்வாரியப் பொறுப்பில் உள்ளது என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

நகரம் நலமுடன் திகழப் பொதுச் சுகாதாரம் மிக்க அவசியமன்றோ?

கடந்த திங்களின் போது சென்னையில் காலரா நோயினால் பாதிக்கப்பட்ட ஏராளமான பேர்களுக்குத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டதை நாம் அறிவோம். அதே போன்று அக்காலங்களில் இந்நகரியப் பகுதிகளிலும் நாள்தோறும் தடுப்பு ஊசிகள் போடப்பட்டு வந்துள்ளன.

வந்த நோயைக் காக்கவும், வரும் நோயைக் தடுக்கவும் மருத்துவமனை மிக முக்கியமன்றோ? நகரியக் குழுவால் ஒரு பகுதி நேர மருத்துவ மனை ஒன்றும், மகப்பேறு மருத்துவ மனை ஒன்றும் இயங்கி வருகின்றது. தொழிலாளர் நலனுக்காக மாநிலத் தொழிலாளர் காப்பீட்டு மருத்துவ மனை ஒன்றும், தனியார் துறையில் இவான் ஸ்டேட் போர்ட் மருத்துவமனை ஒன்றும் இப்பகுதியில் இயங்கி வருகின்றது. இது பொது மக்களுக்கும் பயனளித்து வருகின்றது.



துப்புரவுப் பணிகளின் மூலம் 1971–72-ல் 399 டன் உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் 51 டன் உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. துப்புரவுப் பணியாளர்களுக்காகக் குடியிருப்புகளும் கட்டப்பட்டுள்ளன. உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழ் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் வருகின்றன.

தண்ணீர்!

தலையாயப் பிரச்சினைகளில் இதுவும் ஒன்று. இதனை முழு அளவில் தீர்த்து வைப்பது எத்தனை அரிய செயல் என்பது ஊராட்சி, நகராட்சி, நகரியம் போன்றவைகளின் விடா முயற்சியிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. இந்நகருக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதியளிப்பது மிக முக்கியமான ஒன்றாகும். இதற்காக ரூ. 80 இலட்சம் செலவில் மதிப்பீடு செய்யப்பெற்று அதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவை தவிர இந்நகரியத்தில் மொத்தம் 6,235 தனியார் கிணறுகளும், 44 பொதுக் கிணறுகளும் உள்ளன. மின்சாரம் மூலம் தண்ணீர் இறைக்க 13 பம்பு இல்லங்களும் இந் நகரியத்தால்பராமரிக்கப்பட்டு வருகின்றன. பாதாளச் சாக்கடைத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

நகரியத்துக்கு வருவாய்தரத் தக்க தொழில்கள் பெரிய அளவில் ஏதுமில்லை என்றாலும், சிறிய அளவில் காய்கறி, இறைச்சி அங்காடி ஒன்று பராமரிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ரூ. 1,122.75 வருமானம் கிடைத்து வருகிறது.

மேலும் இந்நகரம் புதுப் பொலிவும், வலிவும் பெற பல நல்ல திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தினரால் நகரியப் பகுதியில் வீடு கட்டும் திட்டம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றது. நகரமைப்புத் திட்டங்கள் போன்றவை இத்தகைய வளர்ச்சிப் பணிகளுக்குப் பெருந்துணை புரியும் என்று நிச்சயமாக நம்பலாம்.

நகரிய ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்ட ரூ. 80 ஆயிரம் செலவில் பணிகள் நடந்து வருகின்றன. இது மூன்று திங்களில் முடிந்துவிடும். ரூ. 30,400 செலவில் துப்புரவுப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1973–74-ல் அலுவலகம், குடியிருப்புகள் போன்ற கட்டடங்கள் கட்ட ரூ. 3,10,000 ஒதுக்கப் பெற்றுள்ளது. சாலைகள் அமைக்க ரூ. 5,00,000ம், படிப்பகங்கள் அமைக்க ரூ. 25,000ம், துப்புரவுச் சாதனங்கள் வாங்க ரூ. 2,50,000ம், தண்ணீர் வழங்கிட ரூ.4,00,000ம், அங்காடிகள், பேருந்துநிலையம் கட்ட ரூ. 2,35,000ம், துவக்கப் பள்ளிகள் கட்ட ரூ. 3,40,000ம் தொகைகள் ஒதுக்கப் பெற்றுள்ளன.

இந்த எதிர்காலப் பணிகளெல்லாம் முழுமை பெற்றால், அம்பத்தூர் ஏற்றமும் தோற்றமும் பெற்ற எழில் நகராக—தொழில் நகரமாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—பி.வி.ஜி.

# உழவனின் தோழன்

உழவே தலை !
இது உலகம் உணர்ந்த உண்மை !

உழவைப் பெருக்கி உலகைக் காக்கும் உன்னதமான தொழிலைப்பற்றி வான் புகழ் வள்ளுவர் கூட, 'சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்' என்று உணர்த்தியிருக்கிறார்.

'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்ற புரட்சித் திட்டம் புத்தொளி பெற்றிட உழவனுக்குப் போதிய உதவிகள் நாம் புரியவேண்டும். இதனை உணர்ந்த தமிழக அரசு உழுபவனுக்குப் பலப்பல உதவிகளைச் சலுகைகளைத் தவறாமல் வழங்கி வருகின்றது.

தமிழகம் முழுதுமுள்ள கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களும் உழவர் பெருங்குடி மக்களுக்கு ஏற்ற வகையில் உதவிகள் பல புரிந்து வருகின்றன. அவற்றுள் ஒன்று தான்செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நூம்பல் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம்.

பசுமைப் புரட்சித் திட்டத்தின் கீழ் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், செங்கற்பட்டு மாவட்டத்திலேயே சிறந்த கூட்டுறவுச் சங்கமாக நூம்பல் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தைத் தமிழக அரசு அங்கீகரித்து, விவசாயக் கிடங்கு கட்ட ரூ. 36,000 அனுமதி அளித்துள்ளது. இது போல் தமிழ் நாட்டில் பிற மாவட்டங்களில் 16 விவசாயக் கிடங்குகள் கட்டவும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.




ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்குக் கிடங்கு கட்டத் தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. அவ்வாறு செங்கற்பட்டு மாவட்டத்தில் வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பரிந்துரை செய்யப்பட்ட நூம்பல் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் ஒன்றுக்குத்தான் இந்த நிதியுதவி கிடைத்திருக்கிறது.

கிடங்கு கட்டுவதற்காகத் தமிழக அரசு அளிக்கும் உதவி ரூ. 18,750 ; கடன் ரூ.11,250 இதோடு கூட்டுறவுச் சங்கம் ரூ. 6,000 சேர்த்து ரூ.36,000, செலவில் விவசாயக் கிடங்கு கட்டப்படும். இப்பணி இவ்வாண்டு சூலைத் திங்களில் ஆரம்பிக்கப்படுகிறது. ஓராண்டுக்குள் கட்டடப்பணி முடிந்துவிடும்.

இந்தக் கிடங்கினால் உழவர்களுக்கு என்ன நன்மை ?

நாம் பல வகைகளில் சேமிக்கிறோம்; எதிர்கால நல்வாழ்வுக்காகச் சேமிக்கிறோம். பணத்தைமட்டுமின்றி உணவுத் தானியங்களையும் சேமிக்கும் பழக்கம் ஒரு சிறந்த பழக்கம் என்பதை உழவர்களுக்கு எடுத்துக்காட்டவும், அவர்களின் வருங்கால வாழ்வுக்கு வழி வகுக்கவும் இந்தக் கிடங்கு பயன்படும்.

ஏழை உழவனுக்கென்று உணவு தானியங்களைச் சேமிக்க இடமிருக்கிறதா ? இவற்றைச் சேமிக்க இடவசதி இல்லாததால்தானே மழைக்காலத்தில் அவர் உழைத்த உழைப்பெல்லாம் வீணாகிறது ? இக்குறை,



செய்யப்பட்டு, அந்த மாணவிக்குக் கொடுக்கப்பட்டதாம். இங்கே ஓர் உண்மையை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். வேறொரு மாநிலத்துக்கு வந்திருக்கிறோம்—அதிலும் ஒரு முகாமுக்கு வந்திருக்கிறோம் என்ற எண்ணம் இல்லாமல் தனது வீட்டிலே கேட்கின்ற பாவனையில் மனந்திறந்து, தனது தேவையை ஒரு மாணவி கேட்டிருக்கிறார் என்றால், அதற்குக் காரணம் என்ன ? இந்த இடம் அயல் இடம் என்ற உணர்வு அந்த மாணவிக்குத் தோன்றாததற்கு என்ன காரணம் ? தமிழ்நாட்டவரின் சிறந்த விருந்தோம்பும் பண்புதான்.

அது மட்டுமல்ல, வெளி மாநிலத்து மாணவியர்—அதிலும் குறிப்பாக வடபுலத்தைச் சேர்ந்தவர்கள்—நமது அரிசிச் சோற்றைச் சாப்பிடுவதற்கு முதலில் சிரமப் பட்டிருக்கிறார்கள். பிறகு, இரண்டு, மூன்று நாட்களுக்குள் எளிதில் பழகி விட்டார்கள். அரிசிச் சோற்றைப் பல ஆண்டுகளாகச் சாப்பிடுபவர்களைப் போல அவர்கள் மாறிவிட்டார்கள். ஒருமைப்பாடு, உணர்வில் மட்டுமல்ல—உணவிலும் ஏற்பட வேண்டும் என்ற கொள்கைக்கு, அந்த மாணவியர்கள் எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள்.

இந்த முகாமில், மாணவியர் நடத்திய கலை நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தகுந்தவை—பாராட்டத்தகுந்தவை.

அஸ்ஸாம் மாநிலத்து மாணவியரின் கிராமிய நடனம், இமாசலப் பிரதேசத்து மாணவியரின் கிராமிய நடனம், உத்தரப் பிரதேசத்து மாணவியரின் 'இது எனது இந்தியா' என்ற நடனம் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கத் தவறவில்லை. நாட்டுப் பற்றினை எடுத்துரைக்கும் வகையில் கர்நாடக மாணவியர் ஆடிய நடனம் சிறப்பாக இருந்தது. இன்றைய விஞ்ஞான அறிவினைப் போற்றிப் பாராட்டத்தக்க வகையில் பெண்டிங்க் மகளிர் பள்ளி மாணவியர், ''நிலாவில் இறங்குதல்'' என்ற ஒரு நிகழ்ச்சியை நடத்திக் காண்பித்தார்கள். இந்த நிகழ்ச்சிக்குப் பின்னணி ஒலியும் ஒளி அமைப்பும் குறிப்பிடத்தக்க விதத்தில் அமைந்திருந்தன.

முகாமின் இறுதிநாள் விழாவில் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். முகாமின் பணி பற்றியும், முகாமினால் ஏற்படும் பயன்பற்றியும், வரலாற்றுப் பின்னணியில் எடுத்துரைத்தார். மிகப் பழங்காலத்திலேயே வட இந்தியாவிலிருந்து தமிழகத்துக்கு வந்திருந்து காஞ்சியில் இருந்த பல்கலைக் கழகத்தில் பயின்ற செய்தியைச் சுட்டிக்காட்டி, ஒருமைப் பாட்டுணர்வில் தமிழகம் முன்னணியில் இருந்த செய்தியை எடுத்துரைத்தார்கள்.

சனவரி மாதம் 5-ஆம் நாள்.

அனைத்து மாநில—மாணவியர் தங்களது மாநிலங்களை நோக்கிப் புறப்படும் நாள்!

புகைவண்டி நிலையத்திற்குப் புறப்படுவதற்கு முன்பு—மாணவியரின் கண்கள் குளமாகிவிட்டன. குரல் தழுதழுக்கத் தொடங்கிவிட்டது. தமிழ்நாட்டிற்கு வந்து பதினைந்து நாட்கள் பழகியதற்குள் அன்புப் பிணைப்பு—பாச உணர்வு அவர்களை ஈர்த்துவிட்டது. பல்லாண்டுகளாகப் பழகியவர்களை விட்டுச் செல்வது போன்ற ஏக்க உணர்வு அந்த மாணவியருக்கு ஏற்பட்டுவிட்டது. பிரியா விடை பெற்றுச் சென்றனர். மாணவியர் மட்டுமல்ல—ஆசிரியைகளே அந்த நிலைக்கு ஆளாகிவிட்டனர். அஸ்ஸாம், இமாசலப் பிரதேசம், ஆகிய மாநிலத்தைச் சேர்ந்த ஆசிரியைகள்—வாய்விட்டே அழுதுவிட்டனராம். இனிமேல் என்று, எப்போது சந்திக்கப் போகிறோம் என்ற ஏக்கம்—அன்புடன் பழகியவர்களை விட்டுச் செல்கிறோம் என்ற வேதனை—இவைதாம் அவர்களுக்குக் கலக்கத்தையும் கண்ணீரையும் வரவழைத்துவிட்டன.

விதை விழும் நிலத்தைப் பொறுத்துத்தான் விளைச்சல் இருக்கும் என்பார்கள். தமிழ் நிலம் நல்ல நிலம். எனவேதான் இங்கே அன்புப் பயிர் செழித்து வளர்கிறது. இங்கு வந்து செல்வோரை அந்தப் பயிர் கவர்கிறது. ஒருமைப் பாட்டு உணர்வு தமிழ்நிலத்திற்கு எப்போதும் உண்டு என்பதைத் தான் மற்ற மாநிலத்து மாணவியரின் 'பிரியாவிடைக் காட்சி உறுதிப் படுத்தியிருக்கிறது.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மண்ணில் ஒலித்த அமுத வாக்கு—உயர்ந்த நோக்கு இன்று பல நாட்டவராலும் போற்றிப் புகழப்படுகிறது—ஏற்றுப் பெருமைப்படுத்தப் படுகிறது என்பதை எண்ணும்போது நமது சிந்தை எல்லாம் தேனூறு பாய்கிறது—அது நியாயந்தானே!

—த.பி.





கெண்டை விழி. கருவண்டு நிகர் கூந்தல். குங்கும வண்ணத்தில் குறுநகையைச் சிந்துகின்ற அந்தி வானத்துச் சிவப்பெல்லாம் அவள் இதழில்! ...... கன்னத்தில்! தாங்குமோ அன்றித் தளர்ந்து வளையுமோ என்றெண்ணத் தோன்றும் வகையிலே இடையழகும். இளமைப் பேரழகும் போட்டியிடும், பொற்பாவை அலைதோறும் அலைதோறும் வருகின்ற நுரை போல, அவள் உதிர்க்கின்ற சொல்லில் எல்லாம் சுவை மணக்கும் தேன் துளிகள். நிலம் நோகும் என அஞ்சும் அவள் நெஞ்சம் நடையழகில் தெளிவாகும். சிப்பியிலே முத்து விளைகின்ற உண்மையினைப் பொய்யாக்கும் அவள் சிரிக்கின்ற போது தெரிகின்ற நிலவின் ஒளி! யாழினிலே, குழலினிலே இனிய இசை தான் எழும் என்போர், மறைந்திருந்து அவள் பாட்டைக் கேட்டு ''யார் சொன்னார்; யாழ் குழலின் பாட்டும் உண்டு'' எனக் கருத்தை மாற்றிக் கொள்வார்.

அவன் பெற்ற பேறே அரும்பேறு என வாழ்த்தியது அவளைப் பெற்றவனை உலகம். ''உனைப் பெற்றவரை வணங்குகிறேன் தமிழே! உயிரே! ஓவியமே' உனைப் பிரிந்து ஒரு கணமும் நில்லாது என்றன் கூடு'' என உறுதி எடுத்துக் கொண்டிருந்தான். இலக்கியத்து எழிலெல்லாம், காவியத்துச் சுவையெல்லாம் அவளோடு வாழ்வதிலே காண்கின்றோமே எனப் பெருமை கொண்டிருந்தான்!

அத்தகையோன் எப்படித்தான் அவளைப் பிரிந்தான் என்று ஊரெல்லாம் வியப்பினிலே மூழ்கிவிட, அவள் விழிகள் நீரூற்றாய் மாறிவிட, நிலைமையொன்று உருவாகித் தனியானாள்.

'' தேனமுதம் தெவிட்டியதோ வானமுத வதனத்தை மறந்

## தேனலைகள்

தானோ? ஏன் கிளியே! உனக்கிந்த இன்னல்?'' என்று ஊர்ப் பெண்கள் கேள்வி போட்டார்.

''உள்ளத்தை ஒப்படைத்தேன். உயிர் மூச்சு அவரென்றே எண்ணிக் கிடந்தேன். பனித் துளியால் சுகம் பெற்ற மலர்மீது பாலைவனக் கடுங் காற்று வீசுமென்று நினைக்கவில்லை. இரு கிழமை அவள் உள்ளம் நிலையாக இருக்கவில்லை. அதனை அவர் பேச்சாலே உணர்ந்து கொண்டேன். இப்படியாகுமென்று அப்போது தெரியாது தோழி.'' என அழுதாள் தமிழ்ப்பாவை.

''கலங்காதே, கண்ணீர் சிந்தாதே! வழியொன்று சொல்லுகின்றேன் கேள்! ஆற்றுக்குத் தென் புறத்தில் அழகான சோலையிடை யிருக்கின்ற புத்தரது கோயிலுக்குச் சென்று, குறை சொல்லி முறையிட்டால் கொழுநன் திரும்பிடுவான் நிற்காதே போ'' என்றாள் உயிர்த் தோழி.

அங்ஙனமே அவள் சென்றாள். ''அருள் வடிவே ! அன்பின் பிழம்பே! செயற்கரிய செய்திட்ட சித்தார்த்தப் பெருமானே! போதி நிழலாலே உலகுக்குக் குளிர் தந்தாய்! இன்று உன் நிழலால் என் துயரம் போக்கிடுவாய்! அழகரசன்; என் ஆளன்; உயிர்த் துணைவன், 'பிரிவு' எனும் வேதனையைத் தர மாட்டேன் எனச் சொன்ன என் அத்தான், அவரில்லை என்னிடத்தில் இப்போது! எங்குற்றார்? ஏன்சென்றார்? என்ற சேதி தெரியாது இவ் வேழைக்கு! தூயவனே! என் துன்பம் துடைத்திடுவாய்; காசினியோர் வாழ்வதற்கு வழி சொன்ன பெரியவனே! கருணைக் கடலே! அலைக் கரத்தால் வறண்ட கரையை நீ நனைத்துவிடு! என் மனத்தை மகிழவைப்பாய்'' என அழுதாள், தொழுதாள். விளக்கேற்றி வைத்து விழி நீரைச் சிலைமுன்பு சிந்தி நின்றாள். சிலை பேசிற்று. கண் மூடிக் கொண்டு அதைக் கேட்டாள்,

''பெண்பாவாய், கணவன் பிரிந்துவிட்ட கவலைதனை என்னிடத்தில் உரைக்க வந்தாய். என்னே மதி உனக்கு! அழகுமனையாட்டி-அவளருகே உறங்குகின்ற அருமைச் செல்வம் - இருவரையும் ஏங்கவிட்டு ''அன்பு'' போதிக்கத் துறவு பூண்டவன் நான். அவனிக்கு நான் தந்த படிப்பினையோ, அன்பு....அன்பு

முதல்வர் கலைஞர்




யைப் போக்குகிறது விவசாயக் கிடங்குகள்.

நெல், கேழ்வரகு, வேர்க்கடலை போன்ற தானியங்களைப் பாதுகாக்கவும், தேவையான விதை நெல், பூச்சி மருந்து, மேல்உரம், அடி உரம் இவைகளை விற்பனை செய்யவும் இந்தக் கிடங்கு தக்க உதவிகளைச் செய்யும். விவசாயிகளின் விரோதிகளான எலி, கரப்பான்பூச்சி, அந்துப்பூச்சி போன்றவைகள் தானியங்களை அழிக்காமல் பாதுகாக்கவும் அந்தச் சமயத்தில் சுகாதார முறைப்படிப் பார்த்துக் கொள்ளவும் இந்தக் கிடங்குகள் பயன்படுகின்றன.

கிடங்கு வசதி இல்லாத உழவர்கள், அறுவடைக்காலங்களில் உணவுப் பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்கின்ற அவல நிலையைக் களைந்திடவும், அடி உரம், மேல் உரம் போன்றவைகளைக் கள்ளச் சந்தையில் வாங்குவதைத் தடுக்கவும் சங்கம் வகை செய்கிறது. குறித்த காலத்தில் குறித்த நேரத்தில், குறைந்த விலையில் உரங்கள் கிடைக்கவும் சங்கம் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

விளைச்சலைப் பெருக்கும் வகையில் உழவர்களுக்குக் கடன்கள் கொடுத்தும் உதவுகிறது சங்கம். ஒரு ஏக்கர் நெற்பயிர் செய்யும் விவசாயிக்கு ரூ. 500 கடன் அளிக்கிறது. பணப்பயிர்களான வாழை, கரும்பு ஆகியுவற்றை பயிர் செய்பவர்களுக்கு ரூ. 600, ரூ. 900 என ஒரு ஏக்கருக்குக் கடன் வசதி செய்கிறது. நெற்பயிருக்கு ரூ. 250 விதைநெல், பூச்சி மருந்து, அடி உரம், மேல் உரம், இவற்றுக்கு ரூ. 250 ஆக ஒரு ஏக்கர் நிலத்திற்கு ரூ. 500 கடன் அளிக்கப்படுகிறது. கணவன் மனைவி இருவரும் சேர்ந்து ஒரு குடும்பத்திற்கு அதிகமாக ரூ. 10,000 வரை பிணையம் (ஜாமீன்) மீது கடன் தரப்படுகிறது. கரும்பு, நெல் இரண்டும் சேர்ந்து பயிர் செய்யும் குடும்பத்திற்கு ரூ. 15,000 வரை கடன் தரப்படுகிறது. கடன்கள் மூன்று வகையில் அளிக்கப்படும். (1) குறுகியக் காலக் கடன், (2) மத்தியக் காலக் கடன், (3) நீண்டகாலக் கடன்.

கடன்களைக் குறித்த காலத்தில் செலுத்தியவர்க்கு உடனே கடன் வசதி செய்யப்படும்.



கடன்களைக் குறித்த காலத்தில் செலுத்தியவர்க்கு உடனே கடன் வசதி செய்யப்படும். கடன்கள் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் 10 திங்களுக்குள் வசூல் செய்யப்படும். இதுவரை ஒரு இலட்சம்ரூபாய் வரை கடன்கொடுக்கப் பட்டிருக்கிறது.

1962-ல் துவக்கப்பெற்ற இந்தச் சங்கம் முதலில் 'பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்' என்றபெயரில் இயங்கிவந்தது. இப்போது இதன் தலைவர் திரு. மு. இராமச்சந்திரன் நல்ல உழைப்பாளர், இளைஞர், விடாமுயற்சி இருந்தால் வெற்றி நிச்சயம் என்பதற்கு இச்சங்கத்தின் நற்பணிகளே சான்று பகரும்.

உழவனுக்குத் தோழனாக இருந்து, உற்பத்தியில் தன்னிறைவைக் காணும் வகையில் உதவிகள் பலபுரிந்து வரும் இந்தச் சங்கம், பசுமைப் புரட்சித் திட்டம் மேலும் பல வெற்றிகளைக் குவிக்க விரைந்து பணியாற்றுவதைப் பாராட்டவேண்டும். —பி.வி.ஜி.


## மைய கூட்டுறவு வங்கி லிமிடெட், வேலூர்

(வட ஆற்காடு மாவட்டம்)

சேமிப்பு சிறந்த பழக்கம். சேமிப்பதோ சிக்கலான பணி. உங்களுக்காகவும் உங்கள் குடும்பத்தாருக்காகவும் மட்டுமின்றி நாட்டின் நலனுக்காகவும் சேமிப்பு மிகவும் அவசியம்.

**வேலூர் மையக் கூட்டுறவு வங்கி**

வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள எல்லாப் பகுதிகளையும் ஒருங்கிணைத்து 32 கிளைகளின் மூலமாக அவரவர் வருமானத்துக்கும், பழக்கத்துக்கும் ஏற்ற வகையில் பல சேமிப்புத் திட்டங்களை அறிமுகப் படுத்திச் செயலாற்றி வருகிறது.

உங்கள் சேமிப்பு, எங்கள் வங்கியில் ஏதாவதொரு திட்டத்தில் சேர்வதின் மூலம் முதலீடு செய்யுங்கள். அது உங்கள் நிலையினை உயர்த்திட உதவுவதுடன், வங்கியின்நிலையினையும் மாவட்ட உழவர் பெருங்குடி மக்களின் நிலையினையும் அதன் மூலம் தமிழகத்தின் நிலையினையும் உயர்த்திட வழிகோலும்.

உங்கள் தேவைக்கு உதவிடக் காத்திருக்கும் எங்கள் வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளில் பணியாற்றும் பணியாளர்களைத் தயவு செய்து அணுகுங்கள்.

ஆர். செல்வன், பி.எல்.பி., பி.காம்.,
செயலாளர்.

முல்லை பொ. வடிவேல்,
பெருந்தலைவர்.

கே. நடராசன், பி.காம்.,
தலைமை நிர்வாக அதிகாரி.

பி. எஸ். சந்தானம்,
துணைத் தலைவர்.

'அன்பு'....ஆனாலும், அந்த அன்புதனை எனை நம்பி வாழ்ந்திட்ட துணைவியிடம், அவள் பெற்ற பிள்ளையிடம் காட்டாமல் வெளிவந்தவன் நான். கணவனைப் பிரிந்த உன் கவலையைப் புரிந்து கொள்ளும் சத்தி எனக்கில்லை.

''போ-போ!''

குரல் கேட்டாள். ''அய்யோ பகவானே!'' என அழுதாள்.

சிரிப்பொலி கேட்டது. விழி திறந்தாள். சிலைக்குப் பின்னிருந்து அவள் கணவன் வந்திட்டான்.

அத்தான் எனப் பாய்ந்தாள்.

அணைத்தபடி, ''ஆருயிரே! விளையாடிப் பார்த்தேன் உன்னோடு—அதற்குள் நீ வேதனை உருவாகி விட்டாயே; வா வா போவோம்'' என்றான்.

''சித்தார்த்தன் அருள்'' என்றாள்.

''அவர் அருளியது உலகை வாழ்விக்கும் உயர் கொள்கை. உன்னையும் என்னையும் சேர்த்து வைக்க—உலகோரின் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் காணிக்கைக் கூலி பெற அவரில்லை.; அந்தோ அவரைக் கடவுளாக ஆக்கிவிட்டார்—தீமை! தீமை!!'' என்றான்.

''பின்னர் பேசியது யார்?'' என்றாள்.

''சிலையல்ல; நானே!'' என்றான்.

தழுவிக் கொண்டார்.





# சொக்கவைக்கும் தமிழ்நாடு

சேல் குதிக்கும் மலர்ச் சோலை. தேன் குதிக்கும் நான்கு திக்கும் என்று கூறப்பட்டிருப்பது மொழியின் அழகுக்கு மட்டுமல்ல; தமிழ் நிலத்தின் எழிலுக்கும் முற்றிலும் பொருத்தம்தான். எரிமலை இல்லை, அருவி உண்டு; பாலைவனம் இல்லை, சோலை எங்கும்! தமிழ்நாடு இப்படியல்லவா இருக்கிறது! காண்போரைச் சொக்கவைக்கிறது!

அதோ காவிரி! இதோ தாமிரபரணி! இந்த ஆற்றோரங்களிலே வளர்ந்த பண்பாடு எத்தகையது? இதோ உழவர்! இதோ கற்றுணர்ந்த பெரியோர்கள்! சிற்றறிவினரின் செயல் கண்டு வருந்தித் தலை குனிந்து விடுவது போலச் செந்நெல் கற்றைகள், பழமுதிர்ச் சோலைகள், வாளை துள்ளும் வாவிகள்! சுருக்கமாகச் சொன்னால்—

பச்சை மாமலைகள்!

பாங்கான காட்சிகள்!

பாடும் அருவிகள்!

பயமற்ற மிருகங்கள்!

ஓங்கி வளர்ந்த மரங்கள்!

தேக்கங்கள்!

தேனாறுகள்!

இவை தமிழகத்தின் எழிலுக்கு எடுத்துக் காட்டுகள்.



உப்பில்லாப் பண்டம் குப்பையிலே !

உப்பு இருந்தும் சுவையற்ற பண்டம் ?

அதுவும் சில சமயங்களில் குப்பைத் தொட்டியை நாடுவதுண்டு.

எந்த உணவுக்கும், பண்டத்துக்கும், இனிப்பு வகைக்கும் மிக முக்கியமாகத் தேவைப்படுவது எண்ணெய்தானே ?

எண்ணெய்யற்ற பண்டம் எள்ளளவும் சுவைப்பதில்லை ; அப்படியே அதை உண்டாலும் மன நிறைவு ஏற்படுவதில்லை.

உணவு வகைக்கு மிக இன்றியமையாத பொருளாகத் திகழும் கடலை எண்ணெய், தேங்காயெண்ணெய், நெய், டால்டா போன்ற வகைகளுள் நல்லெண்ணெய்யும் ஒன்று என்பது நமக்குத் தெரியும்.

நல்ல பாம்பு என்கிறோம் ; அது உண்மையில் 'நல்ல' பாம்புதானா ?

நல்ல எண்ணெய் என்கிறோம்; அது உண்மையில் 'நல்ல' எண்ணெய்தானா?

இதைக் கண்டுபிடித்து நல்லெண்ணெய் மிக நல்ல எண்ணெய்தான் என்று உத்தரவாதம் தருகிறது 'அக்மார்க்' முத்திரை.

நல்லெண்ணெய், கெட்ட எண்ணெய்யாக மாறுவது, நல்லெண்ணம் இல்லாதவர்கள் செய்யும் கலப்படத்தினால்தானே?

'அக்மார்க்' முத்திரையோடு கலப்படமில்லாத, நல்ல தரமான எண்ணெய்களைத் தயாரிக்கத் தமிழகத்தின் சில பகுதிகளில் எண்ணெய் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று காஞ்சியிலுள்ள எண்ணெய் உற்பத்தியாளர், சோப்புத் தொழிலாளர் கூட்டுறவுக் குடிசைத் தொழிற்சங்கம்.

# எண்ணெய் வளம் பெருகிட

இந்தச் சங்கம் 1956-ல் துவக்கப்பட்டது. தற்போது பதினாறு அங்கத்தினர்கள் உள்ளனர். இவர்களின் பங்குத் தொகை ரூ. 8,735. ஐந்து இயக்குநர்களின் நிருவாகத்தில் இது சிறப்பாக இயங்கி வருகிறது.

இந்தச் சங்கத்திற்குத் தேவையான உதவிகளைத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அளித்திருக்கிறது. மூலதனக் கடன், பங்குத் தொகைக் கடன் ஆகியவற்றுடன், அலுவலகக் கட்டடம் கட்டவும், தொழிற் கூடம்,கிடங்கு கட்டவும் கடனும் மானியமும் தந்து உதவியுள்ளது கதர் வாரியம். சங்கத்தின் எல்லா வித முன்னேற்றத்திற்கும் கை கொடுத்து ஆதரவு தருகிறது இந்த வாரியம்.

இந்தக் கூட்டுறவுச் சங்கம், சங்க அங்கத்தினர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து, அவர்கள் சொந்தமாகச் செக்கும் மாடுகளும் வாங்கக் கடனுதவி புரிகிறது; அந்தக் கடனைத் தவணை முறையில் பெற்றுப் பிறகு அவர்களுக்கே செக்கையும், மாடுகளையும் சொந்தமாக்குகிறது.

மாட்டுச் செக்கினால் எண்ணெய் தயாரிப்பது வேலையில் மந்த நிலைமை உண்டாக்குவதால், இப்போது மின்சாரத்தினால் இயங்கும் செக்குகளை அமைத்து வருகிறார்கள். இந்த உற்பத்திக் கூடத்தில் ஒரு மின் செக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. இது புதுமையானது; தனியார் எண்ணெய் உற்பத்தியாளர்களிடம் இல்லாதது. சோலாப்பூரில் தயாரான இது, மதுரை, கன்னியாகுமரி எண்ணெய் உற்பத்திக் கூடங்களிலும் நிறுவப்பட்டுள்ளது. இந்த மின் செக்கின் விலை ரூ. 3,000.

பிற எண்ணெய் உற்பத்தியாளர்களிடம், ரோட்டரி, பிண்டோ செக்குகள் இருக்கின்றன. இவை இங்குள்ள மின் செக்கை விட விலை உயர்ந்தவை. இங்குள்ள உற்பத்திக் கூடத்தில் மாட்டுச் செக்குகள் பத்து உள்ளன. மின் செக்குகள் வெற்றிகரமாக நடப்பதால், மற்ற கூட்டுறவு எண்ணெய் உற்பத்திக் கூடங்களிலும் இவற்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மின் செக்கினால் என்ன பயன்?

மாட்டுச் செக்கைவிட, மின் செக்கில் விரைவாக எண்ணெய் பிழிய முடிகிறது ; எண்ணெய் கூடுதலாகக் கிடைக்கிறது ; மாடுகளைப் பராமரிப்பதில் ஏற்படும் தொல்லைகளிலிருந்து விடுபட முடிகிறது ; மாட்டுச் செக்கை ஓட்ட மூன்று பேர் தேவை ; ஆனால், இதற்கு ஓர் ஆள் போதும்; மேலும், மின்செக்குக்கு ஆகும் மூலதனச் செலவு, ரோட்டரி, பிண்டோ செக்குகளுக்கு ஆகும் மூலதனச் செலவைவிட மிகக் குறைவு. மாட்டுச் செக்கில் ஒரு மூட்டை எள்ளை அரைக்க 13 மணி நேரமாகும் ; மின் செக்கில் இந்த அளவு எள்ளை அரைக்க 8 மணி நேரமாகிறது.

எள் வித்துக்களைக் காய வைக்கப் பரந்த இடமும், உற்பத்தியாகும் எண்ணெய்களைப் பத்திரப்படுத்த ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித்தனி அறையும் இருக்கிறது. ஆகவே, தயாரான பொருள்கள் வெளியே போக வாய்ப்பில்லை ;




கடந்த ஆண்டு ஏப்ரல் முதல், டிசம்பர் வரையிலான 9 மாதக் காலத்தில் சுமார் 82 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள, குளிர் சாதனங்களையும் குளிர்பதனப் பெட்டிகளையும் இந்தியா ஏற்றுமதி செய்திருக்கிறது. 1971–72-ல் இந்தச் சாதனங்களின் ஏற்றுமதி மூலம் 85 இலட்சம் ரூபாய் கிட்டியுள்ளது. 1970–71-ல் இந்தச் சாதனங்களின் ஏற்றுமதி 61 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் என்ற அளவில்தான் இருந்தது.

1972 ஏப்ரல் டிசம்பர் மாதங்களில் குளிர்பதனப் பெட்டிகள், உதிரி உறுப்புகள் ஏற்றுமதி அதிகமாக்கப்பட்டது. இப்பொருட்களின் ஏற்றுமதியால் 35 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் அந்நியச்செலாவணி கிடைத்தது. குளிர் சாதனம் குளிர்பதன இயந்திரங்கள் ஏற்றுமதியின் மூலம் 26 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அளவும், குளிர் சாதனங்கள், உதிரி உறுப்புக்களின் ஏற்றுமதி மூலம் 10 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், நீர் குளிர்விக்கும் சாதனங்கள், உதிரி உறுப்புக்கள் ஏற்றுமதி மூலம் 10 இலட்சம் ரூபாயும் நமக்கு அந்நியச் செலாவணி கிடைத்தது.

போலந்து, ஈரான், நைஜீரியா, குவாயத், எகிப்திய அரபுக குடியரசு ஆகியவை நமது குளிர் பதனப் பெட்டிகளை அதிகம் வாங்குகின்றன. இந்தியக் குளிர்சாதனம், குளிர் பதன இயந்திரங்களைச் சிங்கப்பூர், எகிப்திய அரபுக் குடியரசு, ஸ்ரீலங்கா, மலேசியா, துபாய், மஸ்கட், அங்கேரி, ஆகிய நாடுகள் அதிக அளவில் வாங்குகின்றன. குளிர் சாதனங்களும் உதிரி உறுப்புக்களும் முக்கியமாக துபாய், அபுதாபி, நைஜீரியா, போலந்து நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.



1973ஆம் ஆண்டில் 10,000 அதிகாரிகள், 24,000 எழுத்தர்களுக்கும் பல்வேறு பயிற்சி வசதிகள் அளிப்பது என்று அரசுத்துறை வங்கிகள் முடிவு செய்துள்ளன. பயிற்சித் திட்டத்தின் வளர்ச்சி பற்றிக் காலாண்டுக் காலத்துக்கு ஒரு முறை ஒவ்வொரு அரசுத்துறை வங்கியின் இயக்குநர்கள் வாரியமும் ஆய்வு செய்யும் என்று வங்கி இயக்குநர்கள் குழு நிச்சயித்துள்ளது.



வங்கிகளின் ஊழியர்கள் பட்டியல் தயாரிப்பது, பயிற்சி வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வது, அரசுத் துறை வங்கிகளின் நிர்வாகத் துறை அமைப்பது முதலிய பொருள்களையும் இக்குழு வலியுறுத்தியுள்ளது.

# இந்தியாவில்

இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளில் நடத்திய ஆராய்ச்சிகளின் விளைவாக, எண்ணெய் நிலவாயுக் குழு, எண்ணெய் அல்லது நிலவாயு கிடைக்கக்கூடிய 14 இடங்களைக் கண்டுபிடித்திருக்கிறது. எண்ணெய் வளம் நிறைந்த இடங்களைக் கண்டுபிடிப்பதற்காக நாட்டில் வாய்ப்பு உள்ள இடங்களில் பற்பல ஆய்வுகள் நடந்து வருகின்றன. இந்த இடங்களில் நில அதிர்வு ஆய்வுகள் நடத்தி எண்ணெய் வாய்ப்புப் பற்றி மேலான தகவல்கள் பெறுவதற்காக இந்தக் குழு, நில அதிர்வுச் சாதனங்கள் போன்ற மிக நவீன கருவிகளை இறக்குமதி செய்துவருகிறது. நில அதிர்வு ஆய்வின் மூலம் எண்ணெய் கிடைப்பதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரிந்தால் அந்த இடங்களில் எண்ணெய்க் கிணறுகள் அகழ்வதற்குக் குழு நடவடிக்கை மேற்கொள்கிறது.

இந்திய எண்ணெய் நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் 64 கிணறுகள் தோண்டியிருக்கிறது. இந்த எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவதில் கிடைத்துள்ள அனுபவமும், எண்ணெய் உற்பத்தி விவரங்களும், இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் எவ்வளவு எண்ணெய் தோண்டி எடுக்க முடியும் என்று மதிப்பிடுவதற்கு உதவியிருக்கின்றன.

இந்திய எண்ணெய் நிறுவனத்தின் தொலை நோக்குத் திட்டங்கள் 1973 முதல் 1979 வரையிலான 7 ஆண்டுத் திட்டத்தின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன. இந்தக் காலத்தில் 60 எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இவற்றில் பெரும்பாலானவை, எண்ணெய் வள ஆராய்ச்சிக்காகத் தோண்டப்படுபவையாகும். ஆண்டுக்கு 30 இலட்சம் டன் என்ற அளவில் கச்சா எண்ணெய்யை உற்பத்தி செய்வது இந்திய எண்ணெய் நிறுவனத்தின் நோக்கமாகும்.



அதனால் கலப்படத்துக்கும் வழி யில்லை.

நல்ல சுத்தமான நல்லெண்ணெய் என்று வேளாண்மைத் துறையினரால் 'அக்மார்க்' முத்திரையிடப்பட்ட பிறகே விற்பனைக்கு வெளியே கொண்டு போகப் படுகின்றது.

இங்கே உற்பத்தியாகும் நல்லெண்ணெய் அரசு சம்பந்தப்பட்ட துறைகளுக்கும், வீடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. காதி விற்பனை நிலையங்களில் இந்தச் சுத்தமான எண்ணெய் விற்கப்படுகிறது. பிண்ணாக்குகள் அவ்வப்போது உள்ளூரிலேயே விற்கப்பட்டு விடுகின்றன. ஒரு நாளைக்குச் சராசரி 200 கிலோ நல்லெண்ணெய் இங்கே உற்பத்தியாகிறது. 1971–72-ஆம் ஆண்டில் 1,63,870 கிலோ எண்ணெய் ரூ. 4,17,700-க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒருவர் திரு பி. கோபால். இவர் தற்போது மாட்டுச் செக்கை ஓட்டி வருகிறார். இவர் என்ன சொல்கிறார். தெரியுமா ?

''நான் பத்தாண்டுகளாக இந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறேன். இந்தத் தொழில் என் பரம்பரைத் தொழில். என்னுடைய தந்தையும், அண்ணனும் இதே தொழில்தான் செய்கின்றனர். ஒரு நாளைக்கு ஒரு மூட்டை எள் அரைத்துக் கொடுக்கிறேன். இதில் சுமார் 70 கிலோ எண்ணெய் கிடைக்கிறது. ஒரு நாளைக்கு எனக்கு ரூ. 11·50 வருமானம் கிடைக்கிறது. இதில் மாட்டுத் தீவனம், உதவி ஆளுக்கான கூலி ரூ. 6 போக மீதி எனக்குக் கிடைக்கிறது. இந்த மாடுகளையும், செக்கையும் நான் வாங்குவதற்காகச் சங்கம் எனக்கு ரூ. 600 கடன் தந்துள்ளது. இப்போது இவை எனக்கே சொந்தமாகிவிட்டன.

''தனியாரிடம் போய் வேலை செய்தால் இந்த வசதிகள் எனக்குக் கிடைத்திருக்குமா ? கூலி வேலை செய்கிறோம் என்ற உணர்வுதான் வருமே தவிரச் சொந்தமான ஒரு வேலை செய்கிறோம் என்ற மன நிறைவு ஏற்படுவதில்லை. இப்போது மின் செக்கை இயக்கவும் கற்றுக் கொண்டேன் '' என்று மன நிறைவோடு கூறுகிறார் இவர்.



இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓர் அங்கமாகச் சோப்பு உற்பத்தியும் நடைபெறுகிறது. இதற்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உதவி புரிந்துள்ளது. ' காஞ்சி பார்' என்ற பெயரில் இந்தச் சோப்புகள் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதற்கிணங்கச் சிறப்பாக இயங்கிவரும் இந்தக் கூட்டுறவுச் சங்கம், மக்கள் நலனில் அக்கறை கொண்டு தரமான பொருள்களை வழங்குவதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதை நாம் பாராட்ட வேண்டும்.

—பி.வி.ஜி.

### ஏற்றுமதியாகும் தமிழகப் பொருள்கள்

அரசாங்க வர்த்தகக் கார்ப்பரேசன் தமிழகத்திலிருந்துவெளிநாடுகளுக்குபுதிய பொருள் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. கொய்னு உப்பே அப்புதிய பொருளாகும். வர்த்தகக் கார்ப்பரேசன் அரசாங்கக் காட்டுவனத்துறை மூலம் இந்த ஏற்றுமதிக்கு வழி செய்துள்ளது. வெளிநாட்டுச் செலாவணி ஈட்டுகின்ற தமிழ் நாட்டின் மற்றொரு பொருள் மாம்பழச் சாறாகும்.

# மூங்கில் செல்வம்

'மூங்கில் இலைமேலே
தூங்கும் பனிநீரே
தூங்கும் பனிநீரை
வாங்கும் கதிரோனே'

என்பது, தமிழகத்தில் நீண்ட நெடு நாட்களாக வழங்கிவரக் கூடிய-ஓர் அருமையான 'ஏற்றப் பாட்டு !'

இன்று பலவகையிலும் மூங்கில் நமக்குப் பயன்படுகிறது. நீளமாகவும், உறுதியாகவும் வளர்ந்து நமக்குப் பயன்படுகிற மூங்கிலை நாம், பொதுவாக மரம் என்றே வழங்கினாலும் மூங்கில் என்பது மரமே அல்ல என்பார் தாவர நூலார். அப்படியானால், மூங்கில் எந்த இனத்தைச் சேர்ந்தது? அது, ஒற்றை விதையிலைத் தாவர வகையைச் சேர்ந்த ஒருவகைப் 'புல்'லேயாகும். உலகிலேயே மிகவும் உயரமாக ஓங்கி வளர்ந்துள்ள புல், மூங்கில் தான்.

நாம், காடுகளிலும், மலைச் சரிவுகளிலும், ஆற்றோரங்களிலும், பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் மூங்கில் புதர்களைக் காணலாம். அமைதி நிலவும் நேரத்தில், நாம் மூங்கிற் புதரின் அருகிற் போய்ச் சற்று உன்னிப்பாகச் செவி கொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தால் ' மொற மொற'' வென்னும் ஒருவகையான விந்தை ஒலியைக் கேட்கலாம். அவ்வொலி, இளம் மூங்கிற் கன்று கிளைத்து, முகிழ்த்து வளரும்போது எழுகின்ற ஒலியே தவிர வேறெதுவுமல்ல. மூங்கிற் புதர் சூழ்ந்த தரையின் வேரடி மண்ணிலிருந்து மூங்கிற் குருத்து வளரும்போது இந்த விந்தைஒலி உண்டாகிறது. மூங்கிற் கன்றுகள், ஒரு மணிக்கு 38-லிருந்து 40 மில்லி மீட்டர் வரை வளரக் கூடியது என்றால், நமது வியப்பு மேலும் பன்மடங்கு அதிகமாகும். நல்ல வளர்ச்சிப் பருவத்தில், மூங்கில், ஒருநாளில் சுமார் 900 செ.மீ. வரை கூட வளரும். இத்தகைய வேகமான—விந்தையான வளர்ச்சி வேறெந்தத் தாவரத்திற்கும் இல்லை என்பார் தாவர இயல் வல்லுநர்கள்.

மூங்கில், ஓங்கி வளர்வதில் மட்டுமின்றிப் பக்க வாட்டில் பெருத்து வளர்வதும் மிகவேகமான வளர்ச்சியேயாகும். மூங்கிலின் வேர்கள் மண்ணில் இறங்குவதும் அப்படித்தான். மிக மிக வேகமாக வேர் மண்ணுக்குள் இறங்கும். ஒரு மூங்கிற் புதரில் நூற்றுக் கணக்கான மூங்கில்களைக் காணலாம். மண்ணுக்கு அடியில் தரையில் நேர்க் கோடு மட்டத்தில் பரவும் அந்த வேர்கள் புதரிலிருந்து 20 மீட்டருக்கு அப்பாலும் செல்லக் கூடியன.

பொதுவாக, மூங்கிற் காடுகளை வளமிக்க பகுதி என்றும், வறண்ட காட்டுப் பகுதி என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். நீரோடைகளின் கரைகளையடுத்தும், செம்மையான வடிகால் இல்லாத பள்ளத்தாக்குப் பகுதிகளையடுத்தும் காணப்படுகின்ற ஈரப்பசைக் காடுகளில் மூங்கில் அடர்த்தியாக வளரும். தமிழகத்தில் கோவை மாவட்டம் ஆனைமலைச் சரிவுகளிலும், திருநெல்வேலி மாவட்டத்திலும் இத்தகைய ஈரப்பசைக் காடுகள் மிகுந்து காணப்படுகின்றன.

அடுத்து, இலையுதிர் காட்டுப் பகுதிகளில் காணப்படும் புதர்களில் மூங்கில்கள் 60 அடிக்கும் [illegible]மாக வளரும். இவ்வகைக் காடுகள் மங்களூர் போன்ற இடங்களில் உள்ளன.

உலகில் எத்தனை வகையான மூங்கில்கள் இருக்கின்றன என்பது இதுகாறும் சரியாகக் கணக்கிடப்படவில்லை. 200 முதல் 700 வரை இருக்கலாம் என்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மூங்கிலின் அளவும் பலதரப்பட்டவையேயாகும். சில மூங்கில்கள் 30 மீட்டர் உயரம் வளரும். சில மூங்கில்களின் குறுக்களவு 30 செ. மீ. இருக்கும்.

இந்தியாவில் மட்டுமின்றி, தெற்கு சீனா, தென் கிழக்கு ஆசிய நாடுகளிலும் மூங்கில்கள் பெருமளவில் வளர்கின்றன. ஜப்பானில் அழகான சில மூங்கில் வகைகள் உள்ளன. ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, மடகாஸ்கர் ஆகியவைகளிலும் மூங்கில்கள் சிறு அளவில் வளர்கின்றன.

மூங்கில்களிலும் ஆண் மூங்கில் பெண் மூங்கில் என இரு பிரிவுகளுண்டு. பொதுவாகக் கூடை முடைதல், தட்டி பின்னுதல், நாற்காலிகள் கட்டில்கள் செய்தல், பந்தல்களுக்குத் தூண்கள்-உத்தரங்கள் போடுதல், வீட்டுக்கு வேண்டிய பல[illegible] பொருள்களும், [illegible] சாமான்களும் செய்தல் [illegible]லிய பல்வேறு தொழில்களுக்கும் மூங்கில்கள் பயன்படுகின்றன. அஸ்ஸாமில் வீடுகள் கட்ட மூங்கிலைப் பெரும் அளவில் பயன்படுத்துகின்றனர். வலுவேற்றப்பட்ட சிமெண்ட், கான்கிரீட் கட்டுமான வேலைகளுக்கு மாற்று ஏற்பாடாக மூங்கிலைப் பயன்படுத்தலாமா என்று பொறியாளர்கள் முயற்சி செய்கின்றனர். காகிதத் தொழிலுக்கு மூங்கில் கச்சாப் பொருளாகப் பயன்படுகிறது. ஏரியல் குச்சிகள், கழிகள், மீன் தூண்டில்கள் முதலியவற்றிற்கும் மூங்கில் பயன்படுகிறது. இன்றைய விஞ்ஞான [illegible] மின்கலங்கள் செய்ய மூங்கில் கரி பெரிதும் பயன்படுகிறது.

# அவருக்கென்று ஓர் ஆலயம்

**புத்தூர் மகாலிங்கம்**

சிகாமணியை உங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்க முடியாது. உங்களுக்கென்ன? அவர் வசிக்கும் தெருவிலுள்ளவர்களுக்குக் கூட வாலிபப் பருவத்தில் அவரை அதிகம் தெரியாது. அந்த அளவுக்கு அடக்கமான மனிதர் அந்தக் காலத்தில்தான்!

அடக்கமா அது?

நாம் எது வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அப்பொழுதெல்லாம் சிகாமணிக்கு அதுதான் கொள்கை, அறநெறி, வாழும் முறை.

உங்களுக்கு இன்னும் புரியவில்லையா? சிகாமணியின் பக்கத்து வீட்டுக்காரருக்கே அது புரியாதே! அவர் ஒரு 'டைப்'. சாதாரண 'டைப்' இல்லை, காரியக்கார 'டைப்'.

காரணம் இதுதான்—

இயற்கையிலே வசதியான குடும்பத்தில் பிறந்தவர். யாருடனாவது அதிகமாகப் பழகினால் கையிலுள்ள பணம் போகுமோ.... கடன் கேட்பார்களோ என்று நினைப்பார். ஆனால், பணத்தைச் சேர்ப்பதில் மட்டும் அபரிதமான சுறுசுறுப்பு உடையவர். அவருக்குத் தகுந்தாற் போல வளமான நிலம்.... தோட்டம், கோயில் நிலம் குத்தகை வேறு.

தானுண்டு தனது பணப் பெட்டி உண்டு என்றிருப்பவர். தம் மனைவி மங்களத்திடம் கூட அதிகம் பேச மாட்டார். பேசினால் எங்கே அதிகம் செலவு வைத்து விடுவாளோ என்று அஞ்சி நடப்பவர். மனைவியிடம் அதிகம் பேசாவிட்டாலென்ன? மூன்று குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்டார். 'சிகாமணியின் பாடு குழந்தைகள் பாடு' என்று மங்களமும் சீக்கிரமே கண்ணை மூடி விட்டாள்.

சிக்கன சிகாமணிக்கு மூன்று குழந்தைகளை வளர்ப்பதுவும் சிரமமாகத்தான் இருந்தது. எப்படியோ வளர்த்து விட்டார்.

'துப்பாக்கிக்குப் பிறந்தது பீரங்கியாகத்தான் இருக்கும்' என்பார்களே அதுபோல 'டீப் பாய்க்குப் பிறந்தது 'டேபிளா'கவே இருந்தது. ஆமாம், சிகாமணியின் மூன்று பிள்ளைகளும் அப்பாவை மிஞ்சியவை. ஆனால் மூன்று பிள்ளைகளும் ஆளுக்கொரு விதம்.

வளர்ந்து பெரியவர்களாகி விட்டார்கள். வழக்கமான திருமண வைபவத்தை சிகாமணியே செய்து முடிப்பதற்குள் மூவரும் தேடிக் கொண்டனர். அல்லது முடித்துக் கொண்டனர்.

மூவரும் தம்தம் குடும்பங்களுடன் மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்தி வரும் போதுதான் இகழ்ச்சிப் பொருளாக்கப்பட்டார் சிகாமணி.

அது வழக்கமான குடும்ப நிகழ்ச்சி அல்ல!

பெற்ற பிள்ளைகளே அப்பாவை எட்டி நின்று பேசச் சொன்னார்கள்.

காலத்தின் கோலம் எப்படி விசித்திரமாக அமைந்து விட்டது.

அப்பொழுது எல்லாம் மற்றவர்களைக் கண்டு ஒதுங்கி ஒதுங்கிச் சென்ற சிகாமணி இப்பொழுது எல்லாம் நெருங்கி நெருங்கிச் சென்று பேச விரும்பினார்.

ஆனால் மற்றவர்களோ சிகாமணியைக் கண்டு விட்டால் ஒதுங்கி ஒதுங்கி ஓடினார்கள் அல்லது பதுங்கி மறைந்தார்கள்.

காரணம்—

தொழு நோய்க்காரராக சிகாமணி மாறியதுதான்! உடல் முழுதும் அந்நோயின் அடையாளச் சின்னங்களைத் தாங்கி வலம் வருபவரை வரவேற்றுப் பேசிக் கொண்டிருப்பார்களா மற்றவர்கள்.

ஊரார்தான் இப்படி, வீட்டுக்கு வந்த மாதரசிகளோ கேட்க வேண்டும்.

மாமனாரைக் கண்டவுடன் இஞ்சித் தின்ற மந்தியின் முகமாக மாறிவிடும்.

மூத்தவன் முருகனின் மனைவி மனோகரி இருக்கிறாளே சரியான உபகாரி— மாமனாரை மாட்டுத் தொழுவத்துப் பக்கத்திலே உள்ள கொட்டடியிலேயே குடியேற்றி விட்டாள்.

இரண்டாவது மகன் கனகசபையின் மனைவி கல்யாணியோ மாமனார் வீட்டுக்குள் நுழைந்து சாப்பிடுவதைக்கூட விரும்பவில்லை. சிகாமணி வீட்டுக்குள் நுழைந்தால் பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சுவார். அவருக்குள்ள நோயும் குழந்தைகளுடன் கொஞ்சுமென்று விளக்கம் தந்தாள்.

விளக்கத்தின் விளைவு?

ஊர்க் கோடியிலிருக்கும் டீக்கடையில்தான் சிகாமணிக்கு உணவு, அதுவும் வெளியே இருந்துதான் சாப்பிடணும்.

மீதி நேரத்திலே எல்லாம் சிகாமணி மாட்டுத் தொழுவத்துக்குப் பக்கத்திலுள்ள கொட்டடியில் அடைபட்டு கிடப்பார்.

வேறு யாருடைய கண்ணிலும்படக்கூடாது என்பது சிகாமணியின் முடிவு. ஓடியாடி எல்லாருடன் பழக வேண்டிய பருவத்திலேயே அடைந்து கிடந்தவருக்கு இப்பொழுது அடைந்து கிடப்பதில் அவதி ஏதும் தெரியவில்லை.

ஆனாலும் அவருக்கிருந்த மனக்குறை—

தனது பிள்ளைகளும் மனைவிமார்களின் பேச்சுக்கேற்ப ஆடுவதும் தன்னை அலட்சியப் படுத்தி ஒதுக்கியதும்தான்.

ஆனால், மைந்தர்கள் மூவரும், ''மனைவி சொல் மிக்க மந்திரமேதுமில்லை'' என்ற நீதியின் படி நடக்கும் ஞான சிகாமணிகள், ஆமாம் சிகாமணியின் செல்வர்களாச்சே...,

இந்த விஷயங்கள் இப்படியிருந்தாலும் சிகாமணியின் கெட்டிக்காரத்தனம் ஒன்று— அவருக்கென்று பணத்தை யாருக்கும் தெரியாமல் அவர் பெயரில் வைத்துக் கொண்டது.

அந்தப் பணம் சிகாமணியின் கையில் இருக்கும் அந்தஸ்து காரணமாகவே அந்த வீட்டின் பின்புறத்தில் இருக்க சிகாமணிக்கு அனுமதி அளித்தனர் மருமகளாக வந்திருக்கும் மாதரசிகள்.

இந்த உண்மை சிகாமணிக்குத் தெரியும். தெரிந்தும் அவரால் என்ன செய்ய முடியும்? இப்பொழுது தான் எல்லாரிடமும் பழக வேண்டும். பேச வேண்டும் என்ற ஆசை சிகாமணிக்கு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருந்தது.

சிகாமணியின் மூன்றாவது மகன் சகாதேவனின் மனைவி ரேவதி உண்மையிலேயே கெட்டிக்காரி. வீட்டிலே யாவருக்கும் தெரியாமல் அடிக்கடி வந்து சிகாமணியிடம் பேசுவாள்.

ரேவதியின் அப்பா ஒரு நியூஸ் பேப்பர் ஏஜெண்ட். அதனாலோ என்னவோ உலக விஷயங்களை எல்லாம் சிகாமணியிடம் சொல்லுவாள். எப்படியாவது சிகாமணியிடம் இருக்கும் பணத்தைப் பெற்றிடவேண்டும். அந்தப் பணம் எவ்வளவு இருக்கும்? அவை எப்படியாவது மற்றவர்களுக்குப் பங்கில்லாமல் தானும் தனது கணவரும் வாங்கிட வேண்டும் என்பது தான் ரேவதியின் குறிக்கோள்.

பாசத்தைவிட பணம்தான் பெரியது என்பதை தன் நோயின் மூலம் அறிந்த சிகாமணியும் ரேவதியின் உள் நோக்கத்தை ஓரளவு புரிந்து கொண்டார். ஜாக்கிரதையுடன் பதிலுரைப்பார்.

ரேவதி வந்து சொல்லுவாள்—

''மாமா உங்களுக்குச் சேதி தெரியுமா? நம்ப அரசாங்கம் தருமபுரி மாவட்டம் பருகூரிலே தொழு நோயாளிகளுக்காக மறுவாழ்வு இல்லம் கட்டியிருக்காங்க.... ஆமா ஆமாம். உங்களை அங்கே சேர்த்துக்குவாங்களோ என்னவோ ஆதரவு இல்லாதவங்களை அங்கே சேர்ப்பாங்க........ உங்களுக்கு நாங்கள் இல்லையா? உங்களிடம்தான் பணமில்லையா? ஏன் மாமா தனியா நீங்கள் எவ்வளவு பணம் வைத்திருப்பீங்க....?

சிகாமணி சர்வ ஜாக்கிரதையுடன் பேச்சைமாற்றி, ''போன ஜென்மத்திலே செய்த வினைகளை அனுபவிக்கின்றேன்.... இந்த ஊர்லே பிறந்தவன் இந்த மண்ணிலே மறைஞ்சிடுறேன்'' என்பார்.

சிகாமணியின் இந்த மறுமொழிகளால் ரேவதி மனந் தளர்வதில்லை.



மூங்கில்கள் ஆண்டு தோறும் பூப்பதில்லை; 15—30—48—60 அல்லது 120 ஆண்டுகளுக்கு ஒருமுறையே பூக்கும். அப்படிப் பூக்கும் போது புதரில் உள்ள எல்லா மூங்கில்களிலிருந்தும் ஒரே சமயத்தில் மலர்கள் மலரும். இப்படி மலர்வது, அந்த மூங்கிலின் ஆயுள் முடிவைக் காட்டும். ஆம். பூப்பூத்துவிட்டால், அந்த மூங்கில் மிக விரைவில் பட்டுப் போகும்.

மூங்கிலில் ஒரு வகையான அரிசியும் விளைகிறது. இன்றும் மலைவாழ்வோர் பலர் இந்த மூங்கில் அரிசியைச் சமைத்து உணவாகப் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்கள் அனைவரும் நல்ல உடல் நலத்தோடும், வலுவோடும் விளங்குகிறார்கள். நாம் சாதாரணமாகப் பயன்படுத்துகிற அரிசியில் உள்ளதைவிட அதிகப்படியான புரதச் சத்தும், நமக்குத் தேவையான பிற சத்துக்களும் மூங்கில் அரிசியில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

'[illegible] வெதிரின்
நெல்விளை யும்மே!'

என்னும் கபிலரின் பாடல் வரி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மூங்கில் அரிசி உணவாகப் பயன்பட்டு வந்த உண்மையை நமக்கு உணர்த்துகிறது. 'உழவர் உழாமல்-பரம் படிக்காமல்—என்? பாடின்றிப் பயன்விளைக்கும் இந்த மூங்கில் அரிசி, நாம் பத்திரப்படுத்தித் தேவையான போது பயன்படுத்திக் கொள்ளத் தக்க ஒரு நல்ல சத்துணவாகும்.

மூங்கில் நமக்கு நல்லுணவாக-சத்துணவாக அரிசியை மட்டும்தான் தருகிறதா? இல்லை முளைப்பும் தருகிறது. ஆம். மூங்கிலின் மெல் இளங் கன்றான அந்த முளைப்பையும் நாம் சமைத்துக் கறியாகப் பயன்படுத்தலாம். உருளைக் கிழங்கு, மீன் ஆகியவற்றுடன் கலந்தும் சமைத்து உண்ணலாம். இவ்விளங் கன்றுகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி ஊறுகாய் போட்டும், சர்க்கரைப் பாகில் ஊறவைத்தும் சாப்பிடலாம். உப்பாவது, சர்க்கரையாவது சேர்த்துப் பல்வகைப் பண்டங்கள் தயாரிக்கலாம். இவற்றிலிருந்து ஒருவகை மதுவும் தயாரிக்கப்படுகிறது. இந்த இளங்கன்றுகளைப் பச்சையாக மட்டும் உண்ணக் கூடாது.

மூங்கிலுக் குள்ளே ஒருவகையான வெள்ளைப் பொடி உள்ளது. இந்திய மருத்துவ முறையில் தயாரிக்கப்படும் மருந்து சிலவற்றில் இந்த வெள்ளைப்பொடி பயன்படுத்தப்படுகிறது.

மூங்கிலின் சிற்றிலையை மாடு, குதிரை, யானை முதலியவற்றிற்கு நல்ல தீவனமாகப் பயன்படுத்தலாம்.

இன்று சீனர்களுடைய வாழ்வில் மூங்கில் முக்கிய இடம் வகிக்கிறது. அவர்களின் நாகரிகமே 'மூங்கில் நாகரிகம்' என்று வழங்கப்படுகிறது. சோவியத்து ரஷ்யாவை இரும்புத் திரை நாடு என்று குறிப்பிடுவது போல, சீனாவை 'மூங்கில்திரை நாடு' என்றே வழங்கலாம்.

நமக்குப் பலவகையாலும் பயன்படுகிற மூங்கிற் செல்வத்தைப் பெருக்குவதன் மூலம், இந்த நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்துவதோடு, சத்துணவுப் பெருக்கத்திற்கும் வழி செய்தவர்களாகலாம். மூங்கிற் செல்வம், பாங்குற வளரப் பாடுபடுவோமாக.

—சாமி. பழ.


## தமிழ் நாடு இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவு இணையம் XNC 744

### சென்னை-4

(தொடக்கம் : 19—1—1972)

| | | |
|---|---|---|
| பதிவாகியுள்ள இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகங்கள் | .. | 2030 |
| இதுவரை வகுத்துள்ள திட்டங்களின் மதிப்பீடு .. | .. | ரூ. 7·68 கோடி |
| அனுமதித்துள்ள கடன் தொகை (30—11—1972 வரை) | .. | ரூ. 2 கோடி |

சின்னஞ்சிறு நிலப்பரப்பும் நீர்வளம் பெற்று மேம்பாடுற்று மூன்று போகம் விளைச்சல் கொடுக்கச் செய்து பசுமைப் புரட்சியின் வெற்றிக்குத் துணை செய்வதே எமது பணி.

சிறிய விவசாயிகளின் மேம்பாட்டிற்கு உறுதுணையாகவுள்ளது இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவுக் கழகம். சிறிய விவசாயிகளின் நிலங்களுக்கு நீர்வளம் சேர்ப்பதோடு, விதை, உரம், பூச்சி மருந்து முதலியன விநியோகித்து பயிர்க்கடன் வழங்கி தீவிர சாகுபடிக்கு உதவி செய்வதே இக்கழகத்தின் நோக்கம். தானியங்களை நல்ல விலைக்கு விற்பதிலும் இது சேவை செய்கிறது. இவ்விதக் கூட்டுறவுக் கழகங்கள் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அமைப்பித்து அவை செவ்வனே செயல்படுமாறு செய்வதே தமிழ்நாடு இறைவை நீர்ப்பாசனக் கூட்டுறவு இணையத்தின் முக்கிய நோக்கம்.

தமிழ்நாட்டின் எல்லாச் சிறு விவசாயிகளும் இவ்விணையத்தின் மூலம் பயன்பெற்று மேம்பாடு பெறுவார்களாக.

திரு சிவ. தபேந்திரன், பி.ஏ., இணைப் பதிவாளர்/செயலாளர்.
திரு வே. இரத்தினவேலு, துணைப் பெருந்தலைவர்.
திரு எஸ். எம். கிருட்டிணன், தலைவர்.

இயக்குநர்கள் : திரு மணலூர் எஸ். இராமநாதன், தமிழ்நாடு சட்ட மன்ற உறுப்பினர்,
திரு மானூர் தம்பிதுரை,
திரு வேலம் தம்பிதாசன்.


# கொய்தவை

### சென்னையில் ஒரு ராடார் நிலையம்!

சென்னைக் கடற்கரையையொட்டியுள்ள துறைமுக அலுவலகத்தின் ஐந்தாவது மாடியில், கடலில் புயல் உருவாவதை முன்னதாக அறிவிக்கும் புயல் எச்சரிக்கை நிலையம் (ராடார் நிலையம்) ஒன்று ரூ. 30 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படும் நுட்பம் வாய்ந்த ராடார்களுக்கு இணையாகச் சென்னை ராடார் நிலையம் இருக்கும். இந்திய வானிலை ஆராய்ச்சி நிலையத்துக்காக, ராடார் கருவியை ஜப்பான் நாடு வழங்கி இருக்கிறது.

இந்த நிலையம், சென்னையைச் சுற்றி 500 கிலோ மீட்டர் வரை எங்காவது புயல் உருவானால் அதனை முன்னதாகத் தெரிவிக்கும் சக்தி வாய்ந்தது. 500 மீட்டர் தொலைவில் மையம்கொண்டு இருக்கும் புயல் நகர்ந்து கரையைக் கடக்க 2 நாட்கள் ஆகும். ஆனால், இந்த கருவி மூலம் புயல் வருகிறது என்று 2 நாட்களுக்கு முன்பாகவே மக்களை எச்சரிக்கை செய்ய முடியும்!

புயல் எச்சரிக்கைக்கு இது பயன்படுவதுடன், நிலத்தில் எவ்வளவு மழை பெய்துள்ளது என்பதையும் இது காட்டும். இதனால் எந்த ஆற்றில் எப்போது வெள்ளம் என்பதையும் முன்கூட்டியே அறிய முடியும்!

அமெரிக்கா, வானிலை ஆராய்ச்சியில் இன்னும் ஒருபடி மேலே போய் இருக்கிறது. அவர்கள் புயல் தோன்றியதும், ராடார் கருவியில் அந்த இடத்தைக் கண்டு பிடித்து, கடலில் புயல் இருக்கும் இடத்துக்கே விமானத்தில் சென்று வானிலை ஆராய்ச்சி செய்கிறார்கள்; உயிரையும் பொருட்படுத்தாமல், இதற்கென்று தயாரிக்கப்படும் தனிரக விமானங்களில் சென்று இந்த ஆராய்ச்சி நடத்தப்படுகிறது.

இதே போல இந்தியாவிலும் கடலில் புயல் இருக்கும் இடத்துக்குச் சென்று ஆராயும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இது அமலாக்கப்படலாம். இந்தியாவில் விசாகப்பட்டினத்தில் மட்டும்தான் ஒரு ராடார் நிலையம் இருக்கிறது; சென்னை நிலையம் இரண்டாவதாகும். காரைக்கால், மசூலிப்பட்டணம், கோவா, பம்பாய் ஆகிய இடங்களில் 1974-ஆம் ஆண்டில் ராடார் நிலையங்கள் அமைக்கப்படும்.

### ஓர் அரிய ஆராய்ச்சி !

தென் இந்தியாவிலுள்ள சில நீர் நிலைகளில் வாழும் உயிரினங்களின் இனப் பெருக்கம் பற்றிய ஆராய்ச்சித் திட்டம் ஒன்றை மதுரைப் பல்கலைக் கழகம் தொடங்கியுள்ளது.

மீனளங்களைச் சிறந்த முறையில் நடத்துதல், இறுதியில் மீனவர்களுக்கு ஏராளமாக மீன் கிடைக்கச் செய்தல் ஆகியவற்றிற்கு மதுரை விஞ்ஞானிகள் திரட்டும் விவரங்கள் இதற்கு வழிகோலும். மதுரைப் பல்கலைக் கழகத்தின் உயிரியல் பிரிவுத் தலைவரின் தலைமையில் விஞ்ஞானிகளின் குழு ஒன்று, இப் புதிய ஆராய்ச்சித் திட்டத்தை மேற்கொள்கிறது. சுற்றுச் சூழ்நிலைக்கும், ஏரித் தண்ணீரில் வாழும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்று குழுவினர் ஆராய்வார்கள். இந்த ஏரிகளில் தாவரங்களும், உயிரினங்களும் எவ்வாறு வாழ்கின்றன; எவ்வழிகளில் எல்லாம் அவற்றின் உற்பத்தித் திறன் கட்டுப்படுத்தப்படுகிறது என்று அறிவது ஆராய்ச்சியின் நோக்கமாகும்.

இந்த ஆராய்ச்சிக்கு மதுரையை ஏன் தேர்ந்தெடுத்தார்கள்?

சுற்று வட்டத்திலுள்ள நீர் நிலைகளில் தண்ணீரின் வெப்பம் ஒரே சீராக (ஏறத்தாழ 30 டிகிரி சென்ட்டி கிரேடு) இருக்கிறது; மேலும், பகல் நேரமும் ஆண்டு முழுவதும் ஒரு சீராக (ஏறத்தாழ 12 மணி நேரம்) இருக்கிறது. இவ்விரு இயல்புகளுக்கும், நீர்வாழ் உயிரினங்களின் இனப் பெருக்கத்துக்கும் பெரிதும் தொடர்பு உண்டு. இவை இரண்டும் மாறுமல் நிலையாக இருப்பதால், இது போன்ற உயிரியல் ஆராய்ச்சியை ஒழுங்குபடுத்தி நடத்துவது எளிதாகும். இந்த ஐந்தாண்டு ஆராய்ச்சித் திட்டத்தை நடத்தும் செலவுக்காக, மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு அமெரிக்க அரசு ரூ. 9,33,000 நன்கொடை வழங்கியுள்ளது.

### தென் மாநிலங்களில் குடும்பநல முன்னேற்றம்

1972-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் முடிய தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், மைசூர், புதுவை, இலட்சத் தீவுகள் ஆகியவற்றில் 35·78 இலட்சத்திற்கும் அதிகமான கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு, ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் 12·42 இலட்சம் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப நல அறுவைச் சிகிச்சையில் இவ்விரு மாநிலங்களும் முதல் இடம் பெறுகின்றன.

1965-ல் இத்திட்டம் துவங்கப்பட்டது முதல் சூலைத் திங்கள் முடிய 8·79 இலட்சத்திற்கும் அதிகமான பெண்கள் கருத்தடைச் சாதனங்களின் உபயோகத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த வகையில் முதல் இடம் பெறும் மைசூர், கேரளம் மாநிலங்களில் 2·63 இலட்சம், 2·41 இலட்சம் கருத்தடைச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

தென் மாநிலங்களில் 1972—73-ஆம் ஆண்டு மொத்தம் 13·99 இலட்சம் குடும்பநல அறுவைச் சிகிச்சைகள் செய்வதற்கும், 2·03 இலட்சம் பேருக்குக் கருத்தடைச் சாதனங்கள் பொருத்துவதற்கும் திட்டமிடப்பட்டது.

ஒரு நீண்ட கால அதாவது இரண்டு மாதக் குடும்பநல இயக்கம் ஒன்று தமிழ்நாடு, ஆந்திரம் மாநிலங்களின் மாவட்டங்கள் சிலவற்றில் அண்மையில் நடத்தப்பட்டது. இவ்வியக்கத்தின் இரண்டாவது கட்டம் விரைவிலேயே இவ்விரு மாநிலங்களிலும் துவக்கப்படும்.

—[illegible]

மறுநாள் யாருக்கும் தெரியாமல் ஓடி வருவாள் ரேவதி.

''மாமா, செங்கல்பட்டு மாவட்டத்திலே பரனூர் என்ற ஊரிலே....'' அவள் தொடர்வாள்.

சிகாமணியின் வாயிலிருந்து வழக்கமான பதில் தான் வரும்.

இப்படித்தான் புதுப்பட்டி, புதுக்கோட்டை, உளுந்தூர்ப்பேட்டை, மனையேரிப்பட்டு, மல்லவாடி என்று ஒவ்வொரு தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களைப் பற்றியும் செய்திகளைச் சொல்லிக் கடைசியில் தனக்குச் சாதகமான பதிலை எதிர்பார்ப்பாள்.

தன் மனைவி மங்களத்திடமே அதிகம் வார்த்தை பேசாமல், ஏமாறாமலிருந்த சிகாமணி மருமகளிடமா ஏமாறுவார்.

ஆனால் தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் எங்கெங்கே தொடங்கப்பெற்றிருக்கின்றன என்றவிவரத்தைக் கவனமாகக் கேட்க ஆரம்பித்தார். அங்கே என்ன செய்யுறாங்க...... என்ன சிகிச்சை அளிக்கிறாங்க.... என்னென்ன தொழில் கற்றுக் கொடுக்கிறார்கள் இந்த விவரத்தை எல்லாம் கேட்பார்.

டீக்கடைக்குச் சாப்பிடப் போகும்போது பக்கத்திலுள்ள வெற்றிலை பாக்குக் கடைக்குச் சென்று பேப்பர் வாங்கி ஆவலோடு படிப்பார்.

இப்படி நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

● ● ●

ஒருநாள் பேப்பர் கடைக்காரரும் மற்றவர்களும் ஆவலோடு வரவேற்றனர். போட்டோ ஸ்டுடியோ ஆள் ஒருவர் வந்து படம் எடுத்தார். யார் யாரோ இதுவரை சிகாமணியைக் கண்டு நெருங்காதவர்கள் எல்லாம் மிகுந்த நெருக்கத்துடன் வந்து பேசினார்கள். என்னென்னவோ கேட்டார்கள்.

சிகாமணிக்கு உலகத்தின் உயிர்நாடி புரிந்தது.

வீட்டுக்கு வந்து யாரிடமும் எதுவும் சொல்லாமல் கொட்டடியில் அடைக்கலம் புகுந்தார். வெகுநேரம் யோசனை செய்து கொண்டிருந்தார். நள்ளிரவுக்குப் பின்தான் தூங்கினார். விடியற்காலை வெகு நேரம் வரை எழுந்திருக்கவில்லை.

● ● ●

சிகாமணியை அவர் மூத்த மகன் முருகனும், அவன் மனைவி மனோகரியும் வந்து எழுப்பினார்கள். மனோகரி கையில் காப்பியுடன் நின்று கொண்டிருந்தாள்.

சிகாமணிக்கு எல்லாம் புரிய ஆரம்பித்தது.

இரண்டாவது மகன் கனகசபையும் அவன் மனைவி கல்யாணியும் சிகாமணியை வீட்டுக்குள் அழைத்தார்கள். கனகசபை அப்பாவின் கையைப் பிடித்து வீட்டுக்குள் அழைத்துச் சென்றான்.

மூன்றாவது மகன் சகாதேவனும் தந்தை குளிப்பதற்கு ஏற்பாடு செய்தான். மருமகள் ரேவதி சிகாமணிக்கு சிற்றுண்டி பரிமாறத் தயாராக இருந்தாள்.

பிள்ளைகள், மருமகள்கள் ஆகியோரின் 'திடீர் பாசத்தை' உணர்ந்த சிகாமணியும் அவர்கள் விருப்பப்படியே நடந்தார்.

பிள்ளைகளுக்கு அப்படி திடீர் பாசமும் பற்றும் வரக் காரணம் என்ன?

அன்று பத்திரிகையில் வந்திருந்த சிகாமணியின் புகைப் படம் தான்.

சிகாமணியின் படத்தோடு அவருக்குத் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டில்இலட்சம்ரூபாய் பரிசு கிடைத்ததையும் போட்டிருந்தார்கள்.

செய்தித்தாள் வாங்க கடைக்குப் போன பொழுது ஒருநாள் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டையும் வாங்கியிருந்தார், சிகாமணி. அதற்குத்தான் முதல் பரிசு கிடைத்திருக்கிறது.

ஆகவே, தீண்டப்படாதவராகக்கருதப்பட்டசிகாமணிக்கு வீட்டில் திடீர் மதிப்பு மரியாதை. புதல்வர்களின் அன்பிலும் மருமகள்களின் உபசரிப்பிலும் மகிழ்ந்தார்.

இரண்டு நாட்கள் இப்படி ஓடியது.

மூன்றாவது நாள் வீட்டை விட்டு வெளியே போன சிகாமணி வீட்டுக்குத் திரும்பவில்லை. தந்தையைக் காணாமல் புதல்வர்கள் துடிதுடித்தார்கள்.

மறுநாள் பத்திரிகைகளில் மீண்டும் சிகாமணியின் படத்துடன் செய்திகள் வெளி வந்திருந்தன.

சிகாமணி என்ற தொழுநோயாளி தனக்குத் தமிழ்நாடு பரிசுச் சீட்டு மூலம் கிடைத்த முதல் பரிசுத் தொகை முழுவதையும் தமிழ்நாடு அரசு பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அளித்து விட்டார். அத்துடன், இதுவரை அவர் சேர்த்து வைத்திருந்த ரூபாய் முப்பதாயிரத்தையும் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களுக்கு அளித்து விட்டார்.

இனிமேல் மறுவாழ்வு இல்லங்களில் தங்கி கைத்தொழில்கள் கற்று வாழப் போவதாகவும் சிகாமணி தெரிவித்தார். மறுவாழ்வு இல்லமே தமது ஆலயமென்றும் அவர் கூறினார்.

**எழுத்தாளன் என்பவன் யார்?**

எழுத்தாளனைப் பற்றி மூன்று மேலைநாட்டு அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர்.

"எழுத்தாளன் ஆவதற்குச் சாமர்த்தியம் மட்டுமிருந்தால் போதாது; சரக்கும் இருக்க வேண்டும்" என்கிறார் எமர்சன்.

பிரான்டீஸ் என்னும் அறிஞர் கூறுகிறார்: "எழுத்தாளன் தொழில், மிகுந்த மேன்மையுடையது".

"ஆபாச விஷயங்களை எழுதாதிருப்பதே ஆசிரியனுக்குரிய கற்பாகும்" இவ்வாறு கூறுவது அறிஞர் மாண்டன்.


தபால் பெட்டி எண்: 3 தொலைபேசி எண்: 214

தோற்றம்: 1910



## ஸ்ரீ கமலாம்பிகா கூட்டுறவு அர்பன் பாங்கு லிமிடெட், நெ. 378, திருவாரூர், தஞ்சை மாவட்டம்.

தலைவர்: திரு எம். ராமதாஸ் முதலியார், பி.ஏ., பி.எல்.

(தமிழ்நாட்டில் சிறந்த கூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டுதல் தெரிவித்து இப்பாங்குக்குச் சென்னை மாநில அரசு 1964-லும், தமிழக அரசு 1970-லும் கேடயங்கள் வழங்கியுள்ளன.)

புள்ளி விவரங்கள்: 30-6-1973-ல் உள்ளபடி.

(SUBJECT TO AUDIT)

| | |
|---|---|
| மெம்பர்கள் ... ... ... ... | ரூ. 13,581 |
| பங்குத் தொகை ... ... ... ... | ரூ. 10,02,464 |
| டெப்பாசிட்டுகள் ... ... ... ... | ரூ. 55,71,308 |
| கடன்கள் ... ... ... ... | ரூ. 49,53,749 |
| 30-6-1973 உடன் முடிந்த ஒரு வருஷ நிகர லாபம் ... | ரூ. 1,79,528 |

கீழ்க்கண்ட விகிதங்களில் பிக்சட் டெப்பாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

| | |
|---|---|
| 3 மாத கெடுவிற்கு ... ... ... | 5 % P.A. |
| 6 ,, ,, ... ... ... | $5\frac{1}{2}$% P.A. |
| 12 ,, ,, ... ... ... | $6\frac{1}{4}$% P.A. |
| 24 ,, ,, ... ... ... | $6\frac{3}{4}$% P.A. |
| 36 ,, ,, ... ... ... | $7\frac{1}{4}$% P.A. |
| 48 ,, ,, ... ... .... | $7\frac{1}{2}$% P.A. |
| 60 மாத கெடுவிற்கும் அதற்கு மேலும் ... | 8 % P.A. |

ரூ. 5,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் டெப்பாசிட்டர்கள் விரும்பினால் மாதாந்திர வட்டி வழங்கப்படும்.

| | |
|---|---|
| கால் டெப்பாசிட் ... ... ... | $4\frac{1}{2}$% P.A. |

பாதுகாப்புப் பெட்டக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விவரங்களுக்குக் காரியதரிசிக்கு எழுதவும்.

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை–600001.

தந்தி விலாசம் : 'அர்பாங்க்'

தபால் பெட்டி எண் : 226.

தொலைபேசி எண் : 20367, 20368, 20369

டெலக்ஸ் எண் : எம். எஸ். 7225

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

**வட்டி விகிதங்கள்**

நடப்புக் கணக்குகள் .. (வருடத்திற்கு) ½%

சேமிப்புக் கணக்குகள் .. 4%

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது)

காலாந்திர கணக்குகள் : ரூ. 1,000-ம் அதற்கு மேலும் (வருடத்திற்கு)

15 நாட்கள் — 3%

45 நாட்கள் — 3

நிரந்தரக் கணக்குகள் : ரூ. 100-ம் அதற்கு மேலும்

| | | | |
|---|---|---|---|
| 91 நாட்கள் | .. 4¾% | 24 மாதங்கள் | .. 6¾% |
| 6 மாதங்கள் | .. 5¼% | 36 மாதங்கள் | .. 7¼% |
| 12 மாதங்கள் | .. 6¼% | 60 மாதங்கள் | .. 7½% |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதைவிட ½% கூடுதல் வட்டி தரப்படும்.

தொடர் கணக்குகள்

| | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| ரூ. 5-ம் அதன் மடங்குகளும் | ரூ. 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

கிளைகள் :—மயிலாப்பூர், எழும்பூர், திருவல்லிக்கேணி, தியாகராய நகர், காந்திநகர், ஷெனாய் நகர், கெல்லீஸ், சாந்தோம், கிரீன்வேஸ் ரோடு, மயிலாப்பூர்–குளம், அண்ணாசாலை (காமதேனு), சாஸ்திரி நகர், அசோக் நகர், அண்ணா நகர், அண்ணாசாலை (அண்ணா சிலை), ஜவஹர் நகர், நுங்கம்பாக்கம், பெஸன்ட் நகர்.

ஆர். கனகசபை, தலைவர். குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி, துணைத் தலைவர். டி. வர்தமானன், செயலர்.







தமிழ்நாட்டில் அந்நியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக் கூடிய பொருள்கள் ஆயிரக் கணக்கில் உள்ளன! அந்நியச் செலாவணியை அள்ளித்தரும் அப்பொருள்களுடன், அண்மைக் காலத்தில் இருவகைத் தவளைகளும் சேர்ந்துள்ளன !

தவளைகள் மனித இனத்திற்குத் தீங்கிழைப்பவை அல்ல! ஆனால், அவைகள் மழைக்காலத்தில், இரவு நேரங்களில், பலத்த ஒலியெழுப்பி, இரவின் அமைதியைக் குலைத்துவிடக் கூடியவை!

தவளைகளைக் கண்டுவிட்டால் அவைகளை அடித்து, அவைகள் துடித்துச் சாவதைக் கண்டு மகிழ்வதிலே சிறுவர்களுக்குத் தான் எத்தனை மகிழ்ச்சி!

சேற்றில் வாழ்வதால், தவளைகளை நாம் ஒரு காலத்தில் தொடுவதற்கும் அஞ்சியதுடன், அருவருக்கத் தக்க ஒரு அற்ப உயிராகக் கருதி வந்தோம்!

அந்தக் காலம் மாறிவிட்டது! நேற்றுவரை யாருக்கும் எந்த வகையிலும் பயன்தராத அற்பப் பொருளாகவோ அல்லது உயிராகவோ இருந்தவை, இன்று தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமல்ல, நாட்டிற்கே, ஏன் மனித சமுதாயத்திற்கே நலம் பயக்கும் பொருளாகவோ அல்லது உயிராகவோ மாற்றம் பெற்றுள்ளன! காலம் செய்யும் கோலம் எடுத்தியம்பவொண்ணாதது. காலம் செய்யும் கோலத்திற்கோர் எடுத்துக்காட்டாக, ஏற்றுமதி செய்வதற்கு ஏற்றதாக தவளைகள் விளங்குகின்றன!

அண்மைக் காலத்தில் இரு இந்தியத் தவளை வகைகள் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன! அவ்வகைத் தவளைகளின் கால்கள் பெருமளவில் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், குறுகிய காலத்தில் பெரும் புகழ் பெற்றுள்ளன!

'கிரீன் பிராக்' (Rana hexatactyla ) என்னும் பச்சைத் தவளை வகையும், 'இண்டியன் புல் பிராக்' ( Rana tigrina ) என்னும் 'இந்தியக் காளைத் தவளை' வகையுமே பெரும் புகழ் பெற்றுள்ளன! இவ்விரு இந்தியத் தவளை வகையும் உண்பதற்கு ஏற்றவை. இவைகள் குறிப்பிடத் தகுந்த ஏற்றுமதி வாய்ப்பினைப் பெற்றுள்ளன. மங்களூர், கொச்சி, கோவா ஆகிய இடங்கள் இவ்வகைத் தவளைகளை ஏற்றுமதி செய்யும் முக்கிய இடங்களாக விளங்குகின்றன.



இந்தியக் காளைத் தவளை.

முன்பெல்லாம் ரோம் நாட்டினர் ஐரோப்பிய வகையைச் சேர்ந்த உண்ணத் தகுந்த தவளையின் ( Rana esculenta ) பின் கால்களையே பெரிதும் விரும்பி உண்டனர். முதன் முதலாகப் பிரான்சு நாட்டில் தோன்றிய, தவளைகளின் கால்களை உண்ணும் ஆர்வத்தின் அடிப்படையான பழக்கம் ( Fancy ), நாளடைவில் இங்கிலாந்திலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் பரவிவிட்டது.

தவளைக் கறி, எளிதில் கிடைக்கக் கூடிய மாமிசப் புரதச் சத்து நிறைந்ததாக விளங்குகிறது. தவளைக் கறி, கோழிக்கறியைப்போல் இருப்பதாகவும் கூறுகிறார்கள்.

தவளையில், சதைப்பிடிப்பான பின்கால்கள் மட்டுமே உண்பதற்கு ஏற்றதாம்! மேல் நாடுகளில் ஒருவருக்கு நல்ல உணவு படைக்க, 15 முதல் 20 தவளைகள் தேவைப்படுகின்றனவாம்.

'இந்தியக் காளைத் தவளை' என்று கூறப்படுவதற்கு அவ்வகைத் தவளைகளின் உருவமும், அவைகள் எழுப்பும் ஒலியின் வலிமையும், அவைகள் இந்தியாவெங்கும் காணப்படுவதுமே காரணமாகும்.

'பச்சைத் தவளைகள்' இந்தியக் காளைத்தவளைகளைவிடக் குறைந்த பருமன் உள்ளவை. ஆனால், இவை நமது குளங்களில் அடர்த்தியாக வளர்ந்துள்ள நீர்த் தாவரங்களுக்கு இடையிலும், தென் இந்தியாவிலும், வங்காளத்திலும் நிறைந்துள்ள சதுப்பு நிலப்பகுதிகளிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன. பச்சைத் தவளைகள் உயிராக இருக்கும் பொழுது இலைப்பச்சை நிறத்தில் காணப்படும். இதிலிருந்தே இவைகளை எளிதில் இனம் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு பச்சை நிறத்தில் உள்ளதனாலேயே களைச் செடிகள் நிறைந்த குளங்களில், பச்சைத் தவளைகள் மறைந்து வாழ்கின்றன.

பச்சைத் தவளைகளை இரையுடன் கூடிய தூண்டில் மூலமாக பிடிக்கப்படுகிறது; அல்லது வலையின் மூலம் பெருமளவில் பிடிக்கப்படுகிறது. ஆனால், இந்தியக் காளைத் தவளைகளைப் பிடிப்பது எளிதல்ல! ஏனெனில், இவ்வகைத் தவளைகள் நீரோடைகளிலும், வாய்க்கால்களிலும், அடிப்பகுதி பாறையாகவோ அல்லது மண

மறுநாள் யாருக்கும் தெரியாமல் ஓடி வருவாள் ரேவதி.

"மாமா, செங்கல்பட்டு மாவட்டத்திலே பரனூர் என்ற ஊரிலே...." அவள் தொடர்வாள்.

சிகாமணியின் வாயிலிருந்து வழக்கமான பதில்தான் வரும்.

இப்படித்தான் புதுப்பட்டி, புதுக்கோட்டை, உளுந்தூர்ப்பேட்டை, மனையேறிப்பட்டி, மல்லவாடி என்று ஒவ்வொரு தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களைப் பற்றியும் செய்திகளைச் சொல்லிக் கடைசியில் தனக்குச் சாதகமான பதிலை எதிர்பார்ப்பாள்.

தன் மனைவி மங்களத்திடமே அதிகம் வார்த்தை பேசாமல், ஏமாறாமலிருந்த சிகாமணி மருமகளிடமா ஏமாறுவார்.

ஆனால் தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள் எங்கேங்கே தொடங்கப்பெற்றிருக்கின்றன என்றவிவரத்தைக் கவனமாகக் கேட்க ஆரம்பித்தார். அங்கே என்ன செய்யுறாங்க...... என்ன சிகிச்சை அளிக்கிறாங்க.... என்னென்ன தொழில் கற்றுக் கொடுக்கிறார்கள் இந்த விவரத்தை எல்லாம் கேட்பார்.

டீக்கடைக்குச் சாப்பிடப் போகும்போது பக்கத்திலுள்ள வெற்றிலை பாக்குக் கடைக்குச் சென்று பேப்பர் வாங்கி ஆவலோடு படிப்பார்.

இப்படி நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

● ● ●

ஒருநாள் பேப்பர் கடைக்காரரும் மற்றவர்களும் ஆவலோடு வரவேற்றனர். போட்டோ ஸ்டூடியோ ஆள் ஒருவர் வந்து படம் எடுத்தார். யார் யாரோ இதுவரை சிகாமணியைக் கண்டு நெருங்காதவர்கள் எல்லாம் மிகுந்த நெருக்கத்துடன் வந்து பேசினார்கள். என்னென்னவோ கேட்டார்கள்.

சிகாமணிக்கு உலகத்தின் உயிர்நாடி புரிந்தது.

வீட்டுக்கு வந்து யாரிடமும் எதுவும் சொல்லாமல் கொட்டடியில் அடைக்கலம் புகுந்தார். வெகுநேரம் யோசனை செய்து கொண்டிருந்தார். நள்ளிரவுக்குப் பின்தான் தூங்கினார். விடியற்காலை வெகு நேரம் வரை எழுந்திருக்கவில்லை.

● ● ●

சிகாமணியை அவர் மூத்த மகன் முருகனும், அவன் மனைவி மனோகரியும் வந்து எழுப்பினார்கள். மனோகரி கையில் காப்பியுடன் நின்று கொண்டிருந்தாள்.

சிகாமணிக்கு எல்லாம் புரிய ஆரம்பித்தது.

இரண்டாவது மகன் கனகசபையும் அவன் மனைவி கல்யாணியும்சிகாமணியைவீட்டுக்குள் அழைத்தார்கள். கனகசபை அப்பாவின் கையைப் பிடித்துவீட்டுக்குள்அழைத்துச் சென்றான்.

மூன்றாவது மகன் சகாதேவனும் தந்தை குளிப்பதற்கு ஏற்பாடு செய்தான். மருமகள் ரேவதி சிகாமணிக்கு சிற்றுண்டி பரிமாறத் தயாராக இருந்தாள்.

பிள்ளைகள், மருமகள்கள் ஆகியோரின் 'திடீர் பாசத்தை' உணர்ந்த சிகாமணியும் அவர்கள் விருப்பப்படியே நடந்தார்.

பிள்ளைகளுக்கு அப்படி திடீர் பாசமும் பற்றும் வரக் காரணம் என்ன?

அன்று பத்திரிகையில் வந்திருந்த சிகாமணியின் புகைப் படம் தான்.

சிகாமணியின் படத்தோடு அவருக்குத் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டில்இலட்சம்ரூபாய் பரிசு கிடைத்ததையும் போட்டிருந்தார்கள்.

கடைக்குப் போன பொழுது ஒருநாள் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டையும் வாங்கியிருந்தார், சிகாமணி. அதற்குத்தான் முதல் பரிசு கிடைத்திருக்கிறது.

ஆகவே, தீண்டப்படாதவராகக்கருதப்பட்டசிகாமணிக்கு வீட்டில் திடீர் மதிப்பு மரியாதை. புதல்வர்களின் அன்பிலும் மருமகள்களின் உபசரிப்பிலும் மகிழ்ந்தார்.

இரண்டு நாட்கள் இப்படி ஓடியது.

மூன்றாவது நாள் வீட்டை விட்டு வெளியே போன சிகாமணி வீட்டுக்குத் திரும்பவில்லை. தந்தையைக் காணாமல் புதல்வர்கள் துடிதுடித்தார்கள்.

மறுநாள் பத்திரிகைகளில் மீண்டும் சிகாமணியின் படத்துடன் செய்திகள் வெளிவந்திருந்தன.

சிகாமணி என்ற தொழுநோயாளி தனக்குத் தமிழ்நாடு பரிசுச் சீட்டு மூலம் கிடைத்த முதல் பரிசுத் தொகை முழுவதையும் தமிழ்நாடு அரசு பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு அளித்து விட்டார். அத்துடன், இதுவரை அவர் சேர்த்து வைத்திருந்த ரூபாய் முப்பதாயிரத்தையும் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களுக்கு அளித்து விட்டார்.

இனிமேல் மறுவாழ்வு இல்லங்களில் தங்கி கைத்தொழில்கள் கற்று வாழப் போவதாகவும் சிகாமணி தெரிவித்தார். மறுவாழ்வு இல்லமே தமது ஆலயமென்றும் அவர் கூறினார்.

### எழுத்தாளன் என்பவன் யார்?

எழுத்தாளனைப் பற்றி மூன்று மேலைநாட்டு அறிஞர்கள் விளக்கம் தருகின்றனர்.

"எழுத்தாளன் ஆவதற்குச் சாமர்த்தியம் மட்டுமிருந்தால் போதாது; சரக்கும் இருக்க வேண்டும்" என்கிறார் எமர்சன்.

பிராண்டீஸ் என்னும் அறிஞர் கூறுகிறார்: "எழுத்தாளன் தொழில், மிகுந்த மேன்மையுடையது".

"ஆபாச விஷயங்களை எழுதாதிருப்பதே ஆசிரியனுக்குரிய கற்பாகும்" இவ்வாறு கூறுவது அறிஞர் மாண்டன்.


தபால் பெட்டி எண்: 3 தொலைபேசி எண்: 214

தோற்றம்: 1910



## ஸ்ரீ கமலாம்பிகா கூட்டுறவு அர்பன் பாங்கு லிமிடெட், நெ. 378, திருவாரூர், தஞ்சை மாவட்டம்.

தலைவர்: திரு எம். ராமதாஸ் முதலியார், பி.ஏ., பி.எல்.

(தமிழ்நாட்டில் சிறந்த கூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டுதல் தெரிவித்து இப்பாங்குக்குச் சென்னை மாநில அரசு 1964-லும், தமிழக அரசு 1970-லும் கேடயங்கள் வழங்கியுள்ளன.)

புள்ளி விவரங்கள்: 30-6-1973-ல் உள்ளபடி.

(SUBJECT TO AUDIT)

| | | |
|---|---|---|
| மெம்பர்கள் ... ... ... ... | ரூ. | 13,581 |
| பங்குத் தொகை ... ... ... ... | ரூ. | 10,02,464 |
| டெப்பாசிட்டுகள் ... ... ... ... | ரூ. | 55,71,308 |
| கடன்கள் ... ... ... ... | ரூ. | 49,53,749 |
| 30-6-1973 உடன் முடிந்த ஒரு வருஷ நிகர லாபம் ... | ரூ. | 1,79,528 |

கீழ்க்கண்ட விகிதங்களில் பிக்சட் டெப்பாசிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 3 | மாத கெடுவிற்கு ... ... ... | 5 % P.A. |
| 6 | ,, ,, ... ... ... | 5½% P.A. |
| 12 | ,, ,, ... ... ... | 6¼% P.A. |
| 24 | ,, ,, ... ... ... | 6¾% P.A. |
| 36 | ,, ,, ... ... ... | 7¼% P.A. |
| 48 | ,, ,, ... ... ... | 7½% P.A. |
| 60 | மாத கெடுவிற்கும் அதற்கு மேலும் ... | 8 % P.A. |

ரூ. 5,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் டெப்பாசிட்டர்கள் விரும்பினால் மாதாந்திர வட்டி வழங்கப்படும்.

சால் டெப்பாசிட் ... ... ... 4½% P.A.

பாதுகாப்புப் பெட்டக வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

விவரங்களுக்குக் காரியதரிசிக்கு எழுதவும்.




லாகவோ உள்ள குளங்களிலும் காணப்படுவதில்லை.

இந்தியக் காளைத் தவளைகள் தனிமையை விரும்பக் கூடியவை; பெரும்பாலும் வெளிச்சத்திற்கு வருவதற்கு வெட்கப்படக் கூடியவை; பகல் நேரத்தில் மணிக் கணக்காகப் புதர்களின் கீழேயோ அல்லது தண்ணீருக்கு அருகில் மண்ணில் உள்ள குழியான வெற்றிடங்களிலோ தங்கியிருக்கக் கூடியவை; இரவில் மட்டுமே சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவை; மழைக்காலங்களில் மிகவும் சுறுசுறுப்பாக இயங்குவதுடன், இனப் பெருக்கம்செய்வதற்காகத் கூட்டமாகத் திரளுகின்றன. இவ்வகைத் தவளைகளை இரவு நேரத்தில் 'பேட்டரி' விளக்கு கொண்டு திடீரென ஒளி ஏற்படுத்தி, எளிதில் பிடிக்கலாம். திடீரெனத் தோன்றும் வெளிச்சத்தினால் இவ்வகைத் தவளைகள் திகைப் புற்றுப் பயத்துடன் நகராமல் அப்படியே இருக்கின்றன. அந் நிலையில், அவைகளைப் பிடித்து, டின்களில் அல்லது கோணிகளில் போடப்படுகின்றன.

இவ்விருவகைத் தவளைகளும் எப்பொழுதும், எதையாவது தின்று கொண்டிருக்கக்கூடியவை; உயிராக உள்ள எல்லாவற்றையும் அல்லது பழக்கப்பட்டவைகளையும் தின்னக் கூடியவை; பல்வேறு வகையான பூச்சிகளையும், முக்கியமாக 'Beetles' எனப்படும் வண்டுகளையும், புழுக்களையும், நீர்வாழ் உயிரினங்களையும், மீன்களையும் உண்ணக் கூடியவை; சிறு தவளைகளையும் தின்று வாழக் கூடியவை.

தற்பொழுது, உண்ணத் தக்க தவளை வகைகளைப் பிடித்துப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யப் படுகிறது. குளிர்பதனப் பெட்டியில் வைத்திருந்து, பின்பு டின்களில் அடைக்கப்படக் கூடிய பதப்படுத்தப்பட்ட உணவாகச் செய்ய, முன்பெல்லாம் தவளைகளின் பின் கால்களைவெட்டிப் பிறகு தவளைகள் அணு அணுவாகத் துடித்துச் சாகடிக்கப்பட்டன. இவ்வாறு தவளைகள் துடித்துச் சாவதையும், இரத்தம் வடிவதையும் காண்பது மனத்திற்கு மிகவும் வேதனை தரக்கூடியதாக இருந்ததால், தவளைகளைக் கொல்லப் புதிய முறை கண்டு பிடிக்கப்பட்டது. இப்புதிய முறையில் உயிருடன் கூடிய தவளைகள் 10 சத உப்பு நீரில் (Brine solution) அமிழ்த்தப்படுகின்றன. இதனால் தவளைகள் அறிவியல் அடிப்படையில் மயக்கம் அடைகின்றன. உப்பு நீரில் தவளைகள் உயிர் வாழ முடியாததாதலின், கொடிய வலியின்றி மெதுவாக இறந்துவிடுகின்றன.

நமது நாட்டில் இன்னும் தவளைகளை உண்ணும் பழக்கம் ஏற்படவில்லையாயினும், தவளையின் கால்களை ஏற்றுமதி செய்வதனால் நமது நாட்டிற்குக் கிடைக்கும் அந்நியச் செலாவணி நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், நாம் தவளைகளுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம் என்றால் மிகையாகாது!

ஒரு பக்கம் மக்கள் தொகைப் பெருக்கமும், மறு பக்கம் உணவு உற்பத்திப் பற்றாக் குறையும் பயமுறுத்தி வருவதால், இந்தியர்கள் தங்கள் உணவில் தவளைகளையும் சேர்த்துக் கொள்ளக் கூடிய காலம் வெகு தொலைவில் இல்லை என்று உறுதியாக நம்பலாம்.

ஒரு காலத்தில் ஒன்றுக்கும் உதவாததாகக் கருதப்பட்ட, அருவருக்கத்தக்கதாகக் கருதப்பட்ட தவளைகள், இன்று நாடு நலம் பெறுவதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை அள்ளித் தருவதுடன், பலருக்கு வேலை வாய்ப்பளித்துப் பிழைக்கும் வழியையும் காட்டியுள்ளது. விரைவில் 'தவளைப் பண்ணைகள்' நாடெங்கும் ஏற்பட்டாலும் வியப்பில்லை! எனவே, "தவளைகள் வாழ்க! வளர்க!" என வாழ்த்துவோம்.

தகவல்; டி. எஸ். [illegible]
கட்டுரையாக்கம்: [illegible]



## முதலாவது உலர் துறை

நம் நாட்டின் முதலாவது கடற்படை உலர் துறைக்கான கட்டுமான அலுவல்கள் விசாகப்பட்டினத்தில் துவங்கியுள்ளன. இது இந்தியாவிலேயே மிகப் பெரிய துறையாக இருக்கும். கிழக்குக் கடலோரத்தில் வரும் கப்பல்களைப் பழுது பார்க்கும் வசதி இங்கே இருக்கும். 80 ஆயிரம் டன் எடையளவுள்ள கப்பல்கள் இங்கு வந்து செல்லமுடியும். இதை நாலாண்டுகளில் அமைத்து விடுவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதற்குச் சுமார் 10 கோடி ரூபாய் செலவாகும்.

## முன்னேறும் தீவு

அந்தமான் தீவுகளிலுள்ள கார் நிக்கோபார் தீவு, வெகு வேகமாக முன்னேறி வருகிறது. அங்கே இப்போது அமைக்கப் பட்டுள்ள மருத்துவமனை ஒன்றில் 74 பேர் தங்கிச் சிகிச்சைப் பெறமுடியும். அதில் எக்ஸ்ரே கருவிகளும், அறுவைச் சிகிச்சைக்கான தனி வசதிகளும் உள்ளன. இரண்டு மகப்பேறு மருத்துவ நிலையங்களும், இரு மருத்துவ நிலையங்களும் இருக்கின்றன.

அந்தத் தீவின் தலைமை இடத்தில் குழாய் மூலம் தண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஒரு விமான நிலையமும், இரண்டு மின்சார நிலையங்களும் இங்கு இருக்கின்றன.

# மாவட்டங்களிலிருந்து...

தமிழ்நாடு பல்வேறு துறைகளில் முன்னேறிக் கொண்டு வருகின்றது. வேளாண்மை, கல்வி, தொழில்வளம் போன்றவை நாளுக்கு நாள் வளம்பெற்று வருகின்றன. ஒரு மாவட்டத்தில் என்னென்ன வளர்ச்சிப் பணிகள் நடக்கின்றன என்பதைப் பிற மாவட்டத்தினரும் தெரிந்து கொள்வது நல்லதல்லவா? இதனை விளக்குகிறது இந்தப் பக்கம்.

மதுரை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அண்மையில் நடந்துள்ள நற்பணிகள் பற்றிய விவரங்கள்தான் இவை:

**மதுரை கிழக்கு:** இவ்வட்டாரத்தில் கருணை, காஞ்சி நெல் விதைகள் பயிரிடும்படி விவசாயிகளுக்கு விளம்பரப் படுத்தப்பட்டுள்ளன. சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 56,645 இம்மாதத்தில் வசூலிக்கப்பட்டுள்ளளது.

மேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 797 கிலோ நெல் விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 2·064 டன் பூச்சி, பூஞ்சாள மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 725 மண் மாதிரிகள் எடுக்கப்பட்டுப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. சாகுபடி விளக்கக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ், ரூ. 22,800 வசூல் செய்யப்பட்டுள்ளது.

**உசிலம்பட்டி:** தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இலவசக் கண் சிகிச்சை முகாம் 2—6—'73 முதல் 9—5—'73 முடிய உசிலம்பட்டியில் நடைபெற்றது. 482 பேர்களுக்கு இம்முகாமில் கண் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

சேடபட்டியில் குப்பல்நத்தம் கிராமத்தில் மேல்நிலைத் தொட்டியும், பள்ளிக்கூடமும் கட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வட்டாரத்தைச் சேர்ந்த இளைஞர் அணியினர் வானொலி மன்றங்கள் அமைத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டனர்.

**கள்ளக்குடி:** இவ் வட்டாரத்தில் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 12,000 வசூல் ஆகியுள்ளது. இவ்வட்டாரத்தைச் சேர்ந்த 12 கிராமங்களில் சாகுபடி முன்னோடிக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

**வேடசந்தூர்:** இவ்வூராட்சி ஒன்றியத்தில் நெல், கரும்பு சாகுபடிக்காக உழவர்களுக்கு 1,913 கிலோ விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. தேனியில் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 1,365 வசூல் செய்யப்பட்டு முதலீடு செய்யப்பட்டுள்ளது. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பாலகிருட்டிணாபுரம் கிராமத்தில் வெள்ளி விழாச் சீருர் பள்ளிக் கட்டடமும், பூமலைக்குண்டு குடும்ப நலத் திட்டக் கிளை நிலையக் கட்டடமும், கோவிந்த நகரம் குடும்பநலத் திட்டக் கிளை நிலையக் கட்டடமும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**கம்பம்:** இவ்வூராட்சி ஒன்றிய விவசாயக் கிடங்கிலிருந்து சுமார் 20,945 கிலோ நெல், ராகி விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 1,095 மண் மாதிரி எடுத்து பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது. 1971–72-ஆம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் சிறந்த கிராமமாக இந்த ஒன்றியத்தைச் சேர்ந்த காமயக் கவுண்டன்பட்டி தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது. சிறந்த கிராம நல ஊழியராக திரு. கருப்பையா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**கண் சிகிச்சை முகாம்:** மதுரை தமுக்கம் கலையரங்கில், முதல்வர் டாக்டர் கலைஞர் இலவசக் கண் சிகிச்சை முகாம் 15—6—'73 முதல் 30—6—'73 முடிய நடைபெற்றது. இம்முகாமில் 719, பேர்களுக்குக் கண் அறுவைச்சிகிச்சை செய்யப்பட்டது. கண் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

**தோட்டக் கலை:** தோட்ட வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திராட்சை பயிரிட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதம் 10 ஏக்கருக்கு ரூ. 15,000 வரையிலும், மற்றும் பிற பழ வகைகள் பயிரிட ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதம் ரூ. 10,500 வரையிலும் கடன்களாக வழங்க உசிலம்பட்டி வேளாண்மைத் தோட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் காய்கறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குக் கடன் வழங்க ரூ. 18,000 வரையிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புதிய உயர்வள நெல்:** பெரியகுளம் வேளாண்மைக் கோட்டத்தில் ஏற்கெனவே பயிரிடப்பட்டு வரும் உயர் வளரக நெல்களுடன் சாகுபடி செய்து ஒப்பிட்டு நோக்க, புதிய உயர் வள நெல் ரகங்களான பவானி, கண்ணகி, கரிகாலன், கோ. 36 போன்றவற்றிற்கு ஆராய்ச்சிப் பாத்திகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு நாற்றங்கால்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. மானாவாரி பருத்தி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 15,04,500 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**பூச்சி ஒழிப்பு:** கடலைப் பயிரில் விழும் சிவப்பு கம்பளிப் பூச்சி முதலிய பயிர் நாசினிகளை ஒழிக்க விரிவான அளவில் மருந்து தெளிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1973–74-ஆம் ஆண்டில் புதிதாக 1,000 ஏக்கரில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்யத் திட்டம் தீட்டப்பட்டு இதுவரை 924 ஏக்கரில் விளைச்சல் செய்யப்பட்டுள்ளது. உருளைக் கிழங்கு அமோக விளைச்சல் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 4·28 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**வன வளர்ச்சி:** வன வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கம்பம் மெட்டில் குங்கிலியத் தோட்டம் 4 ஹெக்டேரிலும், பண்ணைத்திப் பாறையில் தேக்குத் தோட்டம் 3 ஹெக்டேரிலும் சூன் மாதத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளில் பணியாற்றும் துப்புரவு ஊழியர்களுக்கு வீடுகட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் வேடசந்தூர் பேரூராட்சி துப்புரவு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காக மேற்படி பேரூராட்சிக்கு ரூ. 3,000 அரசு கடனாக வழங்கியுள்ளது.

# கோவை, சேலம் மாவட்டங்களுக்கு ஏற்ற புதிய ரக நெல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழுள்ள கோவை நெல் இனவிருத்தி நிலையத்தில் 1965-ஆம் ஆண்டிலிருந்து உயர்விளைச்சல் நெல் ரகங்களில் இனவிருத்தி செய்து மேலும் அதிக மகசூல் கொடுக்கும் வகைகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இந்த ஆராய்ச்சியின் பயனாக, 'கோ. 29', 'ஏ.டி.டீ. 27', 'டி.கே.எம். 6', 'ஏ.எஸ்.டி. 1' ஆகிய ரகங்களுக்குப் பதிலாக முறையே 'காஞ்சி', 'கருணை' 'காவேரி', 'பெண்ணை' ஆகிய அதிக விளைச்சல் தரும் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஆனால் ஒரு போக நன்செய் நிலங்களில் நடுத்தர வயதுடைய 'கோ. 32', 'ஐ. ஆர். 8', 'ஐ. ஆர். 20' போன்றவைகள் பயிரிடப்படுகின்றன.

கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களில் ஒருபோக நன்செய்ப் பட்டத்தில் (ஆடிப் பட்டம்) 'திருச்செங்கோடு சம்பா' எனப்படும் 'கோ. 32' ரகம் வழக்கமாகப் பயிரிடப்பட்டு வருகிறது.

இந்த ரகம் மிதமான உரத்தினால், ஓரளவுக்கு நல்ல விளைச்சல் கொடுப்பதுடன், சன்னமான அரிசியைக் கொடுக்கிறது. ஒரு எக்டேருக்கு 100 கிலோவுக்கு மேல் தழைச்சத்து போட்டால் இந்த ரகத்தின் பயிர் சாய்ந்து, விளைச்சல் குறைந்து விடுகிறது.

'கோ. 32' ரகத்தின் சிறப்புத் தன்மைகளைக் கொண்டும், ஆனால் அதிக உரமேற்றுச் சாயாத தன்மை வாய்ந்த அமோக விளைச்சல் தரும் ரகம் ஒன்றினை உருவாக்கும் பணியில் கோயம்புத்தூர் நெல் இனவிருத்தி நிலையம் ஈடுபட்டது. அமோக விளைச்சல் தரும் குட்டை ரகமான 'ஐ.ஆர். 8'-யும், சன்ன அரிசியுடைய 'கோ. 32' ரகத்தையும் இனக் கலப்பு செய்து, பல வளர்ப்புகள் (கல்சர்) தேர்வு செய்யப்பட்டன. இவற்றில், வளர்ப்பு (கல்சர்) 14466 என்பது 'கோ. 32' நெல்லின் சிறப்பையும், 'ஐ.ஆ. 8' நெல்லின் சாயாத, அமோக விளைச்சல் கொடுக்கும் தன்மையையும் ஒருங்கே அமையப்பெற்றது எனத் தேர்வு செய்யப்பட்டது.

கோவை நெல் இனவிருத்தி நிலையத்தில் நடத்திய விளைச்சல் சோதனையில், கோ. 32 நெல் எக்டேருக்கு சராசரியாக 7,056 கிலோ விளைச்சல் கொடுத்தபோது, வளர்ப்பு 14466 சராசரியாக 8,516 கிலோ விளைச்சல் கொடுத்தது! பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலும், கோவை மாவட்ட உழவர்கள் நிலத்திலும் நடத்திய பரிசோதனையில் எக்டேருக்கு 120 கிலோ தழைச்சத்து இட்டதில் 'கோ. 32' ரகம் 4,325 கிலோவும், 'வளர்ப்பு 14466' என்ற புதிய ரகம் 7,453 கிலோவும் மகசூல் கொடுத்துள்ளது.

இந்த வளர்ப்பை ஜூன்–ஆகஸ்டு மாதங்களில் விதைத்ததில் அதிக விளைச்சல் கொடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

உரத்திற்கான உழவியல் சோதனையில், இந்த வளர்ப்பு 'கோ. 32'ஐப் போல் அல்லாமல் குட்டையாக உள்ளதால் எக்டேருக்கு 200 கிலோ தழைச்சத்து இட்டபோதிலும் சாயாத தன்மையுடையதாக இருந்தது. ஆனால் 'கோ 32' ரகமானது எக்டேருக்கு 100 கிலோ தழைச்சத்துக்கு மேல் போட்டால் சாய்ந்துவிடும்!

இந்த வளர்ப்பு 14466, கோ. 32 ரகத்தைப் போன்று சன்ன அரிசியைக் கொண்டது. மேலும் எக்டேருக்கு 200 கிலோ தழைச் சத்தை ஏற்று, சாயாமல் அதிக மகசூல் கொடுக்க வல்லது. இந்த வளர்ப்பைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அண்மையில் 'கோ. 36' என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.

கோயம்புத்தூர், சேலம் மாவட்டங்களிலுள்ள 60,000 எக்டேர் ஒருபோக நன்செய் நிலங்களில் 'கோ. 36' ரகத்தைக் 'கோ. 32'க்குப் பதிலாகப் பயிரிட்டால் அதிகப்படியாக 50,000 டன் நெல் கிடைக்கும். அதன் மூலம் மூன்று கோடி ரூபாய் உபரியாகப் பெறலாம்!

## கோ. 36 நெல் கட்டுக் கோப்பு சாகுபடி முறைகள்

**வயது:** 125–140 நாட்கள்.

**விதைப்பும், பருவமும்:** ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் மட்டும் நாற்றுவிட உகந்தது. மற்ற மாதங்களில் விதைத்தால் வயது அதற்குத் தகுந்தாற்போல் அதிகரிக்கும்.

**விதையளவு:** எக்டேருக்கு 45 கிலோ (ஏக்கருக்கு 18 கிலோ)

**விதை நேர்த்தி:** ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவில் 'செரசான்' அல்லது 'அக்ரசான்' ஆகிய கரிம பாதரசக் கலவை மருந்துடன் கலந்து விதைக்கவும்.

**நாற்றங்கால்:** எக்டேருக்கு 50 வண்டி (ஏக்கருக்கு 20 வண்டி) தொழு எரு போடவும்.

**நாற்றின் வயது:** 25 முதல் 28 நாட்கள்.

**உரமிடுதல்:** வயலை நன்கு உழுது, எக்டேருக்கு 25 வண்டி (ஏக்கருக்கு 10 வண்டி) தொழு எரு அல்லது 7,000 கிலோ (ஏக்கருக்கு 2800 கிலோ) பசுந்தாள் உரம் போடவும். கடைசி உழவில் எக்டேருக்கு 60 கிலோ மணிச்சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும், நடும்பொழுது 60 கிலோ தழைச்சத்தும் போடவும். (கடைசி உழவில் ஏக்கருக்கு 24 கிலோ மணிச்சத்து, 24 கிலோ சாம்பல் சத்து, நடும்பொழுது 24 கிலோ தழைச்சத்து போடவும்). நட்ட 25-வது நாளில் 30 கிலோ (ஏக்கருக்கு 12 கிலோ) தழைச்சத்தும், 45-வது நாளில் 30 கிலோ (ஏக்கருக்கு 12 கிலோ) தழைச் சத்தும் போடவேண்டும்.

**களையெடுத்தல்:** தேவைக்கேற்ப ஒன்று அல்லது இரு முறை களை எடுக்கவும்.

**பயிர்ப் பாதுகாப்பு:** 1. நாற்றுகள் பறிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு 0·05 சதவிகிதம் 'பாரதியான்', 0·04 சதவிகிதம் 'என்டிரின்', 0·05 சதவிகிதம் 'ஃபெனிட்ரோதியான்', 0·05 சதவிகிதம் 'ஃபாஸ்பாமிடான்', 0·05 சதவிகிதம் 'ஃபெந்தியான்' இவை




# வருவாய் பெருகிட வளர்ப்போம் சுற்றுலா

## முதல்வர் கலைஞர்

பொங்கல் கொண்டாடும் இந்த நல்ல நாளில் சுற்றுலா வாரியத் தலைவரும், நிர்வாக இயக்குநரும், மத்திய-மாநிலச் சுற்றுலாத் துறை அதிகாரிகளும், இணைந்து நின்று பொங்கல் வாரத்தைச் சுற்றுலா வாரமாகக்கொண்டாட முடிவு எடுத்தது போற்றுதற்குரிய, பாராட்டத் தகுந்த செயலாகும்.

ஆண்டுக்கு ஒரு முறை வரும் பொங்கல் விழாவினைச் சுற்றுலா வாரமாகக் கொண்டாடப்படுவது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இதன் தொடக்க விழாவே நேர்த்தியாகவும், கவர்ச்சியாகவும் அமைந்துள்ளது.

சென்னை நகரத்திலும் கிராமியச் சூழ்நிலையை உருவாக்கிக் காட்டிட முடியும் என்ற வகையில் கிராமியச் சூழ்நிலையின் இயற்கை அழகு, நெற்களத்தையும், களத்தின் அருகே கதிர் அடிக்கும் உழவர் பெருமக்களையும், அந்த உழவர் பெருமக்கள் ஓய்வு பெறும் உறைவிடத்தையும், ஒய்யாரமாக ஆடிப்பாடும் அழகு மங்கையரின் வாயிலிருந்து கிளம்பும் இசையையும், தமிழினத்தின் பொருள் நயம் காட்டுகின்ற அளவுக்கு— வெளிநாட்டினரும் கண்டு களித்துப் பாராட்டுகின்ற அளவுக்கு அருமையான காட்சியாக அமைந்து இருந்தது.

கிராமியச் சூழ்நிலையைப் பார்த்த போது எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

நான் அமெரிக்கா சென்று இருந்தபோது ஆர்லந்தோ நகரில் அமெரிக்கர்கள் ஒரு விழாவினைக் கொண்டாடினார்கள். தனியார் நிறுவனத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த விழாவில் தனிச் சிறப்பு விருந்தினராக நான் கலந்து கொண்டேன். அவர்கள் கேட்டுக் கொண்டபடி நான் நமது நாட்டுத் தேசிய உடையான வேட்டி - சட்டையுடன்தான் சென்றிருந்தேன்.

செவ்விந்தியர்கள் கிராமத்திற்குச் சென்றுவிட்டோமோ என்று எண்ணும் வகையில், 200 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் வாழ்ந்த செவ்விந்தியர்களின் கிராமியச் சூழ்நிலையைத் தத்ரூபமாக அவர்கள் செய்து காட்டி இருந்தார்கள்.

ஆற்றங்கரையோரத்தில் மரங்கள், வீடுகளிலே அகல் விளக்குகள்-சிமினி விளக்குகள்-பழங்கால படகுகள் காட்சி அளித்தன. அமெரிக்கர்கள் செவ்விந்தியர் உடையிலே காட்சி தந்தனர். செவ்விந்தியர் நாகரிகத்திற்கு ஏற்ப எங்களுக்கு உணவு பரிமாறப்பட்டது.

அது போன்ற ஒரு கிராம நிகழ்ச்சியினை இங்கே சுற்றுலாத் துறையினர் செய்து காட்டிய போது எனக்கு அந்த நினைவு வந்தது. அதற்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்த ஆண்டு பொங்கல் விழாக் கொண்டாடப்படும் போது சென்னையைப் போன்ற ஒரு நகருக்கு வெளிநாட்டினரை வரவழைத்து நேரு ஸ்டேடியத்தில் கிராமியச் சூழ்நிலை ஒன்றை உருவாக்கி, நடனங்கள், கிராமிய நிகழ்ச்சி, இசை, கலை நிகழ்ச்சி போன்றவை சித்திரித்துக் காட்டப்படுமேயானால் அது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

சுற்றுலாத் துறை மூலம் நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க முடியும். நமக்கு முன்னே இருந்தவர்கள் சுற்றுலாவைப் பற்றிக் கவலைப்படவில்லை. இன்றோ சுற்றுலாத் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

சுற்றுலா-சுற்றுதல். இது பலருக்குப் பிடிக்கவில்லை. ஊர் சுற்றுகிறான் என்பார்கள் பெற்றோர்கள், பிடிக்காத பையனை. தவறான காரியங்களுக்கு ஊர் சுற்றினால் தவறுதான். ஊர்-உலகம்-நாடு-சுற்றுவதால் நாகரிகம் கற்று, அறிவுக்குத் தெளிவு ஏற்படுகிறது. சுற்றுலா வளர்ச்சியினால் பொருளாதாரம் நல்ல முறையில் உயர்வடைகிறது.

களில் ஒன்றை, முதல் தடவையாகத் தெளிக்கவும்.

2. நடவு செய்து 2 வாரங்கள் சென்றபின் மேற்கூறிய வாறே இரண்டாவது முறை மருந்து தெளிக்கவும்.

3. மற்றும் 3-வது, 4-வது தெளிப்புகள் 3 வாரத்திற்கு ஒருமுறை செய்யவும். தத்துப் பூச்சிகள், இலையைத் தின்னும் புழுக்கள் காணப்படின் பி.எச்.சி. 10 சதவிகிதம் தூளையும், டி.டி.டி. 5 சதவிகிதம் தூளையும், சம அளவில் கலந்து ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவவும்.

மகசூல்: எக்டேருக்கு 6,000 முதல் 7,500 கிலோ (ஏக்கருக்கு 2,400 முதல் 3,000 கிலோ).

வேண்டுகோள்: 'கோ. 36' என்ற இப்புதிய ரக நெல் மூலம் கோவை, சேலம் மாவட்ட உழவர் பெருமக்களுக்கு மூன்று கோடி ரூபாய் உபரி வருவாய் கிடைக்குமாதலின், 'கோ-36' நெல் ரகத்தை கோவை, சேலம் மாவட்டங்களின் ஒருபோக நன்செய் நிலங்களில் பயிரிடுமாறு, கோவை, சேலம் மாவட்ட உழவர் பெருமக்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்: தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர், 641003.

## எது விடுதலை?

விடுதலை விடுதலை என்கிறோம். விடுதலை என்றால் எப்படி இருக்க வேண்டும்? இதற்கு விளக்கம் தருகிறார் பேரறிஞர் அண்ணா:

"சுதந்திர இந்தியாவிலே, வளைவுகளை நிமிர்த்த, படு குழிகளை மூட, பாதைகளைச் செப்பனிட, சூது மதியினரை அடக்க, மதியற்றோருக்கு அறிவு புகட்ட, சுரண்டுபவனை அடக்க, சோர்ந்திருப்பவனுக்கு உரம் ஊட்ட, பஞ்சம் வராமல் தடுக்க, படிப்பைப் பரப்ப, தொழிலை வளர்க்க, வாலிபத்தை வளமாக்க—எண்ணப் போனால் மளமளவென்று பலப்பல வேலைகள் தெரியும் மனக் கண் முன், இவைகளைச் செய்ய வேண்டும். அதற்கான உறுதி வேண்டும். செய்வதைத் திருந்தச் செய்ய வேண்டும்.

"உரிமைக்காகப் போராடிய உத்தமர்கள், அக்கிரமங்களை அழிக்க அனைத்தையும் அர்ப்பணித்த தியாகிகள், மக்கள் வாழ உழைத்த மாவீரர்கள் ஆகியோர் பற்றிய வரலாறு படித்தறிந்த அவர்கள் சிந்தனையிலே நம்மாலாவதென்ன பராபரமே, என்ற பஜனைப் போக்கு ஏற்பட முடியாதல்லவா? ஆகவேதான் வாலிபர்கள் விறுவிறுப்புடன் காணப்படுகின்றனர்.

"எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்று பாரதியார் சொன்னபடி அனைவரும் உரிமையுடன் உவகையுடன் வாழ வேண்டும். நாடு பூந்தோட்டமாக விளங்கி, நானிலத்தோர் கண்டு புகழும் நிலை அடைதல் வேண்டும்.

"சுதந்திரம்—விடுதலை—என்றால், சட்ட சம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது. புதிய நிலை—புது அழகு—புது உருவம்—புதிய மகிழ்ச்சி—நாடு புதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான்; உண்மையும் அதுதான்.

"மக்களின் சுதந்திரம் காக்கப்பட வேண்டுமானால் மக்களாட்சி ஏற்பட வேண்டும். ஓநாயைச் சாதுவாக்கி ஆட்டுக்குக் காவல் வைக்கவும் முடியாது; உருத்திராட்சம் அணிந்ததாலேயே பூனை, போதகாசிரியனாகி விடாது!

"மனிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக் கூடிய, வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடும், சுதந்தரத்தின் பரம விரோதியே!"

# வெண்பாப் போட்டி

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு. கே. ஆர். வெங்கடாசலம் பிஎஸ்ஸி., பி.டி.,
அரசுயர் பள்ளி,
ஆலாம்பாளையம் (அஞ்சல்)
(வழி) அந்தியூர், ஈரோடு ஆர். எம். எஸ்.

பட்டிமுதல் பட்டினமும் பாலைமுதல் சோலைகளும்
ஒட்டி உறவாடி ஓங்குதற்குத்—திட்டங்கள்
தீட்டியே நம்மரசு திக்கெலாந் தார்ச்சாலை
போட்டுவக்கும் நற்செயலைப் போற்று.

—கே. ஆர். வெங்கடாசலம், ஆலாம்பாளையம்.

ஒற்றையடிப் பாதையிலே ஒண்டி நடந்தோமே !
இற்றைத் தமிழரசின் ஏற்றங்கேள் !—பொற்சிலையே !
செப்பனிட்ட நற்சாலை சேர்த்துவிட்டார் நம்மூர்க்கும்
ஒப்பரிய பாதையிலே ஓடு !

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

பேரறியா ஊருக்கும் பேருந்துப் பாதைகள் ;
சீருறவே நீண்டபெருஞ் சாலைகள் ; —பார்புகழ்மேம்
பாலங்கள் பாங்காய் அமைத்த தமிழரசை
ஞாலமிசை நாம்வாழ்த்து வோம் !

—சி. புனிதவதி; கீழ்நாயகன் பாளையம்.

கல்லுமுள்ளு மல்கிய காடெலாம் பேருந்து
செல்லும் வழியாகச் செப்பனிட்டு—நல்லரசு
நாட்டுப் புறமும் நகரமும் ஒன்றாகக்
காட்டும் பணியினையே காண்.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

மக்கள் நலனுக்கே மாநகரும் சிற்றூரும்
எக்காலும் சேர்த்தே இணைந்திட—தக்கபெருஞ்
சாலைபல செப்பனிட்டுத் தந்துதவும் நம்மரசை
மாலையிட்டு வாழ்கவென வாழ்த்து.

—நா. செயக்கனி, பெருமாள்தேவன்பட்டி.

கொட்டும் மழைமீதும் கொள்ளி வெயில்மீதும்
[illegible]—எட்டுக்கல்
[illegible] செந்தாக் கல்லுரின்று
[illegible]

நாட்டுப் பணிகளிலே நாட்டம் உடையதமிழ்
நாட்டை இனிதாளும் நங்கலைஞர்—ஆட்சியேதான்
பாதை பலசாலை பாங்காகப் போட்டமைத்துச்
சாதனையைக் கண்டதெனச் சாற்று !

—கா. உ. கிருட்டிணமூர்த்தி, சென்னை, 7.

காட்டு வழிமாற்றிக் கள்ளர் பயம்போக்கிப்
போட்ட பெருவழியால் பூங்கொடி ! நாட்டினில்
சிற்றூரும் பேரூரும் சீராம் பெருநகரும்
தெற்றென வொன்றான தே.

—புலவர் க. சு. தமிழ்ப்பிரியன், ஆலாம்பாளையம்.

நீர்தேங்காத் தீஞ்சாலை, நீள்பாதை, மேகந்தான்
ஊர்கின்ற மேம்பாலம், ஊர்மக்கள்—சீராகச்
செல்வதற்கு நற்சுரங்கம், செம்மையுறச் செய்ததால்
எல்லோரும் ஏத்துகின்றார் இன்று.

—ஞான. அமரேசன், வடமாதிமங்கலம்.

ஆக்கப் பொருள்குவித்(து) ஆர்வமுடன் நாடெங்கும்
போக்கு வரவாலே பொன்கொழிக்கத்—தேக்கமிலா
மேம்பாலம் கட்டி விரைந்துநலம் செய்வதனால்
ஓம்பிடுவோம் நம்மரசை ஓர்ந்து.

—சு. பொன்னுராசு, பெரியவாளவாடி.

வண்டியும் மாடும் வழிச்செல்ல ஒல்லாத
பண்டைநாள் ஒற்றையடிப் பாதைகளை—இன்று
பெருவழிக ளாக்கிநற் பேருந்தை யோட்டும்
அருஞ்செயலைச் செய்த தரசு.

—சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

ஆற்றின்மேற் சாலைகள் ; ஆகா வெனவியந்து
மேற்றிசையார் போற்றும்மேம் பாலங்கள்—நாற்றிசையும்
நல்லநெடுஞ் சாலையிட்டு நாட்டோர் நலங்காக்கும்
வல்லரசை வாழ்த்தி வணங்கு !

சின்னஞ்சிறு நாடுகள் சுற்றுலாத் துறை மூலம் வருமானத்தை அதிகரிக்கிறது. மக்கள் தொகையில், பரப்பளவில் குறைவான சுவிட்சர்லாந்து நாட்டில் சுற்றுலாத் துறை மூலம் ஆண்டு ஒன்றுக்குக் கிடைக்கும் வருமானம்தான் அமெரிக்காவின் சுற்றுலா வருமானம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இத்தாலி நாட்டின் சுற்றுலா வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 500-ல் இருந்து 600 கோடி ரூபாய் வரையில் ஆகும்.

அனைத்துலகச் சுற்றுலாக் கணக்கெடுப்பின்படி 1980-ஆம் ஆண்டில் 44 கோடிச் சுற்றுலாப் பயணிகள் 40 ஆயிரம் கோடி ரூபாய் செலவு செய்வார்கள் என்றும், அதில் 10 சதவீதத்தினர் இந்தியாவுக்கு வந்தால் இந்தியாவின் சுற்றுலா வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 400 கோடி ரூபாய் உயரும் என்றும் கூறுவதால், அதில் ஒருபகுதியினர் தமிழ்நாட்டுக்கு வந்தால் இங்கேயும் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்பதையும் நாம் உணராமல் இருக்க முடியாது.

**பயண நூலின் பெருமை**

**தமிழில் பயண நூல்கள் அதிகமாக எழுதப்பட வேண்டும். தமிழ் எழுத்தாளர்கள் எல்லா இடங்களுக்கும் சென்று அந்தந்த இடங்களைப் பற்றி அதிகமாக எழுத வேண்டும். அப்பொழுதுதான் அந்த இடங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடம் எழும்.**

**—அறிஞர் அண்ணா**

சுற்றுலாத் துறைக்கு அதிகப் பணம் செலவு செய்யத் தமிழக அரசு முன் வந்துள்ளது. கலை, கலாச்சாரம், புராதனச் சின்னம் ஆகியவற்றையும், இசை, கருவி, பண்பாடு, நாகரிகம், சரித்திரம் ஆகியவற்றையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் ஆற்றல் படைத்தது சுற்றுலாத் துறை. இதன் மூலம் பொருளாதாரத் துறை மேம்பாடு அடைய முடியும்.

சுற்றுலாத் துறைக்கு மத்திய அரசு ஒதுக்கிடும் தொகை குறைவு. இதனால் மத்திய அரசு சுற்றுலாத் துறை கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

ஒவ்வொரு மாநிலமும் போட்டி போட்டுக் கொண்டு சுற்றுலாத் துறையை வளர்க்கப் பாடுபடுகின்றது. தமிழகச் சுற்றுலாத் துறைக்குத் தமிழக அரசின் சார்பில் ஒரு கணிசமான தொகையை அளிக்க நான் தயாராக உள்ளேன்.

சுற்றுலாத் துறை விழாக்கள் எந்த அளவுக்குப் பயன்படும் என்பதனை உணர்ந்து இது போன்ற விழாக்களை மாமல்லபுரம், திருச்சி, தஞ்சை ஆகிய நகரங்களில் தொடர்ந்து நடத்த இருக்கிறார்கள். சுற்றுலாத் துறையை வளர்க்கத் தமிழக அரசு எடுக்கும் முயற்சிகளுக்குப் பொது மக்களும் ஆதரவு தர வேண்டும்.

பொங்கல் விழாவில் மட்டுமல்ல. ஒவ்வொரு நாளிலும் தமிழ்நாட்டுக்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளைக் கன்னியாகுமரி, தஞ்சை, மதுரை, திருமலை நாயக்கர் மகால், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லும் ஏற்பாடுகளை நாம் செய்ய வேண்டும்.

நமது நாட்டின் கலைகள், சிற்பங்கள், ஓவியங்கள், புராதனச் சின்னங்கள் ஆகியவை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்குமேயானால் அவர்கள் நம் நாட்டுக்கு வருவதில் அக்கறை கொள்வார்கள்.

அந்த முயற்சியில் ஈடுபட வேண்டிய மத்திய அரசுச் சுற்றுலாத் துறை தாராள மனப்பான்மையுடன், இது சிறிய மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கிற விவகாரம் என்று கருதி—இந்தத் துறைக்கு அதிகப் பணம் ஒதுக்குவதன் மூலம்-இந்தியப் பொருளாதாரத்தில் மகத்தான வளர்ச்சியைக் காணமுடியும்.

**—14-1-73 அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற சுற்றுலா வார விழாவைத் துவக்கிவைத்து ஆற்றிய உரை.**






# சுற்றுலாப் பயணிகள் பண்பாட்டுத் தூதுவர்கள்!

பொங்கற் புதுநாள். தமிழர் தம் உள்ளமெல்லாம் பூரித்திடும் பொன்னாள். நாற்றெடுத்து நட்டபயிர் விளையும்போது சேற்றிலே பாடுபட்டோன் நெஞ்சம் பொங்கும் இன்பநாள்.

பழையன கழித்துப் புதியன கூட்டி இல்லங்கள் தோறும் எழில் ஊட்டிப் புத்தாடை அணிந்து புத்தரிசிப் பொங்கலிட்டுப் பொங்கலோ, பொங்கலென்று இல்லமெல்லாம் இன்பம் பொங்கும் நாள்.

தமிழ்ச் சமுதாயத்தின் விருந்தோம்பும் பண்பினை உலகத்திற்கு எடுத்துக் காட்டுகின்ற தன்மையில் அமைந்துள்ளதோர் அற்புதத் திருவிழா.

உழவர் பெருமக்கள் பாடுபட்ட பலனை ஒன்று சேர்த்து, பலன் காணப் பாடுபட்டோர்களையும் சேர்த்து உறுதுணை நின்ற அனைவருக்கும் நன்றி கூறிப் பண்பினை வெளிப்படுத்திடும் பண்பட்ட நாள்.

இவ்விழாவின் போது வரும் விருந்தினர்களை இருகரம் கூப்பி இன்முகத்தோடு வரவேற்று விருந்தோம்பி அனுப்பும் காட்சியை நாம் இல்லங்கள் தோறும் காணலாம்.

இத்தகைய தமிழர்களின் தனிச்சிறப்பு மிக்க பொங்கல் விழாவின் போது அண்டை அயல்நாடுகளில் இருந்து தமிழகத்தின் பண்டைச் சிறப்பு, பண்பாடு, கலைகள், சிற்பத் திறன்மிக்க கோயில்கள், அவற்றின் நெடிதுயர்ந்து நிற்கும் கோபுரங்கள், சரித்திரச் சிறப்பு மிக்க இடங்கள், கவின்மிகு கடற்கரைகள் ஆகியவற்றைக் கண்டு களித்துச் செல்லவரும் உல்லாசப்பயணிகள் நமது சிறப்பு மிக்க விருந்தினர்கள் அன்றோ? அவர்களை அகமும் முகமும் மலர வரவேற்று விருந்தோம்பி அனுப்புவது நமது கடமையல்லவா?

தமிழகம், உலக அரங்கில் நல்லபடி விளம்பரம் பெறவில்லை. தற்போதுதான் அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1971-ஆம் ஆண்டு நம் இந்திய நாட்டிற்கு 3,00,995 வெளிநாட்டுப் பயணிகள் வந்தனர், அவர்களில் 38,074 பேர்கள் தமிழகத்திற்கு வந்திருந்தனர். ஆண்டு வாரியாக வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையைப் பார்ப்போமேயானால் அது கூடிக் கொண்டேவருவதைக்காணலாம்.

1980-ஆம் ஆண்டில் குறைந்தது பத்து இலட்சம் பேர்களாவது இந்தியாவிற்கு வருவார்கள் என இந்தியப் பேரரசு கருதுகிறது. அவர்களில் சுமார் ஒன்றரை இலட்சம் பேராவது தமிழ்நாட்டிற்கு வருதல் கூடும். நாம் தற்போது எடுத்துக்கொள்ளும் முயற்சிகளின் விளைவாக 1980-ஆம் ஆண்டு குறைந்தது மூன்று லட்சம் வெளிநாட்டுப் பயணிகளையாவது இங்குக் கொண்டு வந்து சேர்த்திட இயலும்.

ஏனெனில், வெளிநாடுகளில் இந்தியா என்றால் காஷ்மீர், இந்தியா என்றால் ஆக்ரா என்ற நிலையோடு இருந்த மாயை அகன்று தமிழ்நாடு தலை தூக்கி வருகிறது.

தமிழக அரசு பொங்கல் விழாவின்போது வரும் வெளிநாட்டுப் பயணிகளைச் சிறப்பிக்கும் நோக்குடன் ஆண்டு தோறும்பொங்கல் விழாவை, சுற்றுலா விழாவாகக் கொண்டாடுவது என்று முடிவு செய்து அதன்படி 1971-ஆம் ஆண்டிலிருந்து இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டு சுற்றுலா விழா, பொங்கற் புதுநாளிலிருந்து சனவரித்திங்கள் 21-ஆம் நாள் வரை தமிழகத்தில் சென்னை மாமல்லபுரம், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் கொண்டாடச் சுற்றுலாத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.


சுற்றுலா அமைச்சர்
திரு. க. இராசாராம்

சென்னை மாநகரில் உள்ள இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நட்சத்திர ஓட்டல்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு நாள் வெளிநாட்டுப் பயணிகளை உபசரிக்கவும், அவர்களுக்காகக் கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யவும் முன்வந்துள்ளன. இப்பொங்கல் சுற்றுலா விழாவை ஒட்டி, சென்னையில் ஓவியக் கண்காட்சியும், மாமல்லபுரத்தில் உள்ள புலிக்குகையில் பல்லவர்கள் காலத்தில் நடைபெற்றது போலக் கலைநிகழ்ச்சியும், மதுரையில் மஞ்சு விரட்டும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இவ்விழாவை நடத்துவதன் நோக்கம் தமிழகம் தனது விருந்தோம்பும் பண்பினால் எண்ணற்ற வெளிநாட்டுப்பயணிகளை வரவேற்க வேண்டும் என்பதுதான்.

சுற்றுலா உலகிலேயே இன்று பெரிய தொழிலாக வளர்ந்து விட்டது. அன்றாடம் இயந்திர நாகரிகத்தில் சுழன்று, சுழன்று சலித்துப்போய் அவற்றிலிருந்து விடுபட்டு ஆண்டில் சிலநாட்களாவது எங்காவது சென்று இயற்கை அளிக்கும் அமைதியான சூழ்நிலையில் ஓய்வு பெற்று நிம்மதியாக இருந்துவிட்டு வர வேண்டும் என்ற வேட்கை அண்மைக் காலமாக மேலைநாட்டினரிடையே அதிகரித்துள்ளது. புதியன காணவேண்டும் என்னும் பொழுது போக்கிற்காகவும், இன்னும் பல்வேறு காரணங்களுக்காகவும், எண்ணிறந்தோர் தினந்தோறும் சுற்றுலாப் பயணம் மேற்கொள்கின்றனர். இவையாவும் சுற்றுலாத் தொழிலின் வேகமான வளர்ச்சிக்கு முக்கியக் காரணங்களாகும்.

இத்தாலி, ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, போன்ற சிறுநாடுகள் சுற்றுலாத் தொழில் ஒன்றின் மூலமாகவே கோடிக் கணக்கான வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதித்து அதன் மூலமாகப் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் கண்டுவருகின்றன.

உதாரணமாகக் கூறவேண்டுமானால், ஸ்பெயின் நாட்டினைக் கூறலாம். ஸ்பெயின் நாட்டின் மக்கள்தொகை மூன்று கோடி.

# வெண்பாப் போட்டி

நண்பா, உனக்கொரு வெண்பா மொழிவதற்(கு)
என்பால் பொருள்கிடைத்த ஏற்றம்பார்—இன்றேநீ
பாதைகள் தாமமைத்துச் சாலைக ளோடிணைத்து
வாதை தவிர்த்தோரை வாழ்த்து

—மா. சே. இராசு, திருப்பூர்.

காலத்தை வென்றுநலம் கண்டுவரும் நல்லரசு
பாலங்கள் பாதைகள் பாங்குமிகு—சாலைகள்
இல்லாத சிற்றூரே இல்லையென ஆக்குமுயர்
நல்வழியை நீவாழ்த்து நன்று.

—புலவர் சு. விசுவநாதன், ஆ. தெற்கூர்.

எத்திக்கும் சென்றுவர ஏற்றவழி உண்டென்றால்
தித்திக்கும் செல்வமெலாம் சேர்ந்திடுமே;—முத்தமிழின்
சீரோடு சாலைகளைச் செப்பனிடல் இல்லையெனில்
ஈரோடு காஞ்சிஆரூர் ஏது ?

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

சிற்றூர்க்கும் பேரூர்க்கும் சீராம் நெடுஞ்சாலை
கற்றுத் தெளிந்த கலைஞரின்—கொற்றம்
நடைபாதை செப்பனிட்டு, நற்றெழில் உய்ய ;
இடையறு இப்பணியை ஏத்து !

—இல. பழ. முருகுதாசன், சின்னாளப்பட்டி.

அண்ணாமேம் பாலம், அடுக்காய் இருபாலம்
கண்கண்ட சாலைகள், கால்வாய்கள் ;—வண்ணமிகும்
கூவத்தில் நம்தோணி ஊர்ந்திடவும் நம்முதல்வர்
ஏவலராய் நின்றார் இயம்பு.

—ஜி. சந்திராஏஞ்சலின், சாத்தூர்.

அண்ணாமேம் பாலம் அழகா யமைத்துள்ளார்
கண்ணாரக் கண்டு களிப்போமே—கண்ணாளா!
பாதைகள் சாலைகள் பற்றாக் குறையொழித்துச்
சாதனை செய்த தரசு.

—ப. தண்டபாணி, சென்னை-5.

கள்ளத்தை நெஞ்சினின்று நீக்கிக் கருணையெனும்
வெள்ளத்தைப் பாய்ச்சுகின்ற விந்தைபோல்—பள்ளத்தை
மேவிப் பலபாதை மேலாய்ச் சமைத்தோரைப்
பாவின் கருப்பொருளாய்ப் பாடு

—த.ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

மலைக்கும் மடுவுக்கும் பாதைகள் ! எங்கோ
தலைதெரியா ஊருக்கும் பாதை !—நிலைத்துநிற்குந்
தார்ப்பாதை ! நீள்தூரச் சாலைகளுந் தண்ணென்று !
'பார்' குறுக்கு மிந்தப் 'பணி !

—சு. சுந்தரராசன், கருங்காலக்குடி.

எல்லா வளங்களுமே எம்நாட்டில் உண்டென்று
சொல்லி மகிழ்ந்திடவே சொன்னபடி—நல்லரசு
பாலைவனப் பாதையெலாம் பாங்கான நற்சாலை
சோலையென ஆக்குவதைச் சொல்.

எஸ். தியாகராசன், திருப்பத்தூர்.

பாட்டனார் காலத்துப் பாதைகள் சாலைகள்
காட்டென்றான் பேரன் ; கலைஞரோ—வாட்டமிலா
கண்மாய்கள், மேம்பாலம், கல்வெட்டாய் மாறினவே
எண்ணிப்பார் என்றார் ; இனிது.

—புலவர் இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

மழைநீர்ப் பெருக்கால் வழித்தடம் சற்றும்
பழுதடை யாதிருக்கப் பாலம்—பலகட்டி
நாற்றிசையும் நல்லிசை நாட்டும் கலைஞரைப்
போற்றுகபா மாலை புனைந்து.

—சு. தருமர், மேலாண்மறைநாடு.

வேற்றூர்ப் பயணம் வெயிலிலும் சென்றிட
ஏற்றபடிச் சாலை இருமருங்கும்—மாற்றாரும்
கண்டுவக்கத் தின்தீங் கனிமரங்கள் நாட்டியதை
நண்பநம் நாடறியும் நன்கு.

—சு. மாரியம்மாள், முதலிப்பட்டி.

ஏழைக்கு வாழ்வென்னும் பாதையீந் தேற்றமிலாச்
சாலைக்குப் புத்தழகைத் தந்திடுவோர்—வேலைக்கும்
காப்பளித்த மேலான நம்மரசைத் தூற்றியிங்கு
நாப்பழிப்ப தில்லையே நம்பு.

—செ. த. சின்னசாமி, சென்னிமலை பாளையம்.

ஆலைத் தொழில்பெருக அன்றாடம் ஏழைமக்கள்
வேலையினைத் தேடி வெளிக்கிளம்ப—மூலை
முடுக்கெல்லாம் நாகரிகம் முன்னேறச் சாலை
அடுத்தடுத்துச் செய்தாரிங் காய்ந்து.

—அ. காந்தி, தேவத்தூர்.

# வெண்பாப் போட்டி

சிற்றூர்க்குப் பாதை; சிறப்பார்ந்த பேரூர்க்கு,
நற்றமிழ்போல் நீண்டநல நற்சாலை,—குற்றமின்றிப்
பல்லிடத்துந் தானமைத்த பண்பார் தமிழரசு
செல்வமுடன் வாழ்க சிறந்து !

—நா. சிவராமமுத்துக்குமாரவேல், தேனி.

சிற்றூரும் பேரூரும் சேர்ந்து வளமாக்கி
வற்றா நலமாகும் வாழ்விற்கே—சுற்றுலா
செல்வதற்கும் செய்தபொருள் சேர்வதற்கும் நம்மரசு
நல்லபணி செய்ததின்று நன்று !

—மு. ஜாபர்அலி, கிருஷ்ணகிரி.

அண்ணாமேம் பாலம் அழகுத் திருக்கோலம்
கண்ணாரக் கண்டு களித்தவர்கள்—எந்நாளும்
சாலை விபத்துக்கள் சற்றுமிலை என்றுரைக்குங்
காலைக் கதிரவ'னைக் காண்.

— ம. சக்குபாய், உடுமலை.

ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் மூலமாய்
நேராய், வளைவாய், நெடியதுமாய்—பேரூர்கள்,
சிற்றூர்கள் சேர்த்திணைக்கும் சாலைகளைப் போட்டதால்
பெற்றார் தமிழரசார் பேறு.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

அமரா வதியில் அமைத்திரோர் பாலம்
எமக்கினிமேல் வெள்ளத்தால் ஏதும்—இமிசையிலை
பிள்ளைகுட்டி பள்ளி செல்லும் பேருந்தும் ஓடிவரும்
உள்ளநிறை நன்றி உமக்கு.

—கா. அப்துல்லா, கணியூர்.

உந்திலே செல்வோர்க்கும் ஊர்ந்து நடப்போர்க்கும்
எந்தவித ஆபத்தும் இல்லாமல்—இந்தஆட்சி
சென்று வரவே சிறப்பான சாலைகளை
நன்றாய் அமைத்தார் நனி.

—நா. ரெங்கராஜு, பொன்மலை.

எல்லார்க்கு மெல்லாமென் றின்கொள்கை கொண்டாடி
இல்லார்க்குப் போய்ச்சேர இந்நாளில்—நல்லார்க்கு
வாய்க்கும் நலம்போல் வழித்தடங்கள் செய்தரசு
ஆய்க்கு மொருபுடிமேற் றன்.

—ஜெயாதங்கமுத்து, வே. கள்ளிப்பாளையம்.

பட்டணமும் சிற்றூரும் பாங்கோ டிணையநல்
திட்டமுடன் பாதை திருத்திமக்கள்—கட்டமின்றிச்
சென்றுவர நம்மரசு செய்திட்ட இப்பணியை
என்றுமற வோமென் றியம்பு.

—மு. நாராயணன், சத்திரப்பட்டி.

நான்மாடக் கூடலிலே, நம்மருமைச் சென்னையிலே
நான்காணும் மேம்பாலம், நற்சாலை—கோணுள்வோரி
ஏழைக்குப் பாலம்போல் என்றும் இலங்குவதைக்
காணப்பறை சாற்றும் காண்.

—சோ. முத்துமாணிக்கம், அமரப்பூண்டி.

பேருந்து செல்லாத பேரூர்இல் ; பாதைகள்
ஊருக்குள் செல்லவிடா ஒன்றியம்இல்—சேரும்சீர்ச்
சாலை அமைப்பில் தமிழ்அரசின் சாதனை
வேலைவாய்ப் பிறகான வித்து.

—புலவர் சுப. கலைச்செல்வி, அருப்புக்கோட்டை.

தேக்கமின்றிப் பண்டங்கள் தேவையுள்ள மாந்தர்க்கே
போக்கு வரத்தால் போயடைய—வீக்கமிலாச்
சீரான சாலையுடன் செப்பனிட்ட பாதைகளும்
பாராய் தமிழரசின் பண்பு!

—து. ம. இராமசாமி, துடியலூர்.

நாடி நரம்புகளாம் நாட்டிற்குச் சாலைகள்தாம் ;
ஓடிச்சிற் றூரும் உறவாக்கிக்—கூடுநலம்
காக்கும் மருத்துவராய், காவிரியாய்த் தொண்டாற்றல்
மாத்தமிழர் ஆட்சிக்கோர் மாண்பு.

—புலவர் சீரான், கோம்பை.

பாதையெலாம் செப்பனிட்டோம் பைந்தமிழில் போர்வைத்தோம்
மேதைகள் பாராட்டும் மேம்பாலம்—தீதின்றிக்
கட்டிவைத்தோம், சாலையெலாம் கண்காட்சி சேர்த்தமைத்தோம்
நட்புச்சூழ் ஆட்சியிலே நாம்.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

உன்னதச் சாலைகள் ஒண்சுரங்கப் பாதைகள்
வன்மைப்பா லங்கள் மகிழ்ந்தமைத்து — அன்பாக
ஆளுந் தமிழரசின் ஆற்றலினை எண்ணியெண்ணி
நாளும் புகழ்தல் நலம்.

—உ. தாமோதரன், சென்னை-7.

அந்த நாடு இந்த ஆண்டு எதிர் பார்க்கும் சுற்றுலாப் பயணி களின் எண்ணிக்கை மூன்றரைக் கோடி. எப்பேர்ப்பட்ட வளர்ச்சி என்பதனை எண்ணிப்பாருங்கள். ஒருகணம் மனக்கண் முன் நிறுத்திப் பாருங்கள்.

ஆசிய நாடுகளில் ஜப்பான் ஏராளமான மக்களை ஈர்க்கின்றது. காரணம் அந்த மக்கள் அவ்வளவு சிறப்பாகச் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவுகின்றனர். எனது பயணத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றினையே குறிப்பிட விரும்புகிறேன். நானும் எனது நாடாளு மன்ற நண்பர்களும் டோக்கியோ நகரத்தைச் சென்றடைந்தபோது மாலை நான்கு மணி. அங்குள்ள நண்பர் ஒருவருக்கு அறிமுகக் கடிதம் கொண்டுபோயிருந்தேன். அவரது அலுவலகம் ஐந்து மணிவரை தான் இயங்கும். நாங்கள் தங்க ஒய். எம். சி. ஏவில் இடம் ஏற்பாடாகியிருந்தது. நான் எனது பொருட்களையெல்லாம் அறையில் போட்டவுடன், நண்பர் உள்ள அலுவலகம் போக வேண்டும். நேரமோ மிகவும் குறைவு. எனக்கோ ஜப்பானிய மொழி தெரியாது. ஆங்கிலம் தெரிந்த ஒருவரிடம் விசாரிக்க எண்ணினேன். ஒரு மாணவர் அங்கு நின்றிருந்தார். அவரிடத்தில் உரையாடினேன். அவருக்கு ஆங்கிலம் தெரிந்த காரணத்தால் பழகுவது எளிதாயிற்று.

நண்பரின் விலாசத்தை அவரிடம் காண்பித்தேன். ஜப்பானில் ஒரு சிறந்த பழக்கம். எந்த இடத்திற்கு யாரிடம் வழி கேட்டாலும், உடனடியாக ஒரு காகிதத்தை எடுத்து, அந்த இடத்திற்கு இப்படித்தான் போக வேண்டும் என்று படம் போட்டுக் காட்டிவிடுவார்கள். மாணவத் தோழர் அதேபோல் படம் போட்டுக் காட்டினார். நான் விரைவாகப் போக வேண்டும், உடன் வந்து உதவமுடியுமா? என்றேன். காலமின்மையைச் சுட்டிக் காட்டினேன். சற்றும் தயங்காமல் என்னை டிராமில் ஏற்றினார். டிராமில் ஏறிய பிறகுதான் எனக்கு, என்னிடமுள்ள வெளிநாட்டு நாணயத்தை ஜப்பான் நாட்டு யென் நாணயமாக மாற்றாதது நினைவு வந்தது. என் நிலையைப் புரிந்துகொண்ட மாணவத்தோழர், சில்லறையைத் தானே எடுத்துக் கொடுத்து டிக்கெட்டும் வாங்கினார். நான் நண்பரை அவரது அலுவலக நேரம் முடிவதற்குள் சந்தித்து விட்டேன். மீண்டும் ஒய். எம். சி. ஏ. விற்கு வந்து, என்னிடம் இருந்த நாணயத்தை மாற்றி, அம்மாணவத் தோழரிடம், டிக்கெட் பணத்தை அளித்தேன். அவர் காட்டிய அன்பு இன்னமும் என்னுள்ளத்தில் பசுமையாக உள்ளது. அப்படிப்பட்ட தன்மைகள் நம் நாட்டிலும் பரவிட வேண்டும் என விரும்புகிறேன். ஒரு முறை வந்தவர், மறுமுறையும் வரும் வண்ணம் நாம் அன்போடு நடந்து கொள்ளவேண்டும்.

அன்பால், பண்பால், நட்பால் வெளிநாட்டுப் பயணிகளை உபசரிப்பதோடு நின்றுவிடுவது மட்டும் நல்லதல்ல. நம் நாட்டின் எழிற்சிற்பங்கள், சரித்திரச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள புகழ்மிக்க இடங்கள், சிற்பக் கலைக்கூடங்களாகத் திகழும் கோயில்கள், இயற்கை தந்த செல்வங்களான மலை வளம், கடற்கரை போன்ற இடங்களை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அவற்றின் தன்மை மாறாமல் வைத்திருக்க வேண்டும். மாறாக நமது பொறுப்பற்ற போக்கினாலும், சுய நலத்தாலும் கோட்டைகள் பாழடிக்கப்பட்டால், சிற்பங்கள் சிதைவுற்றால், காடுகள் அழிவுற்றால், காலத்தினால் சிறப் பெய்திநின்ற அவைகள் யாவும் சிறப்பற்றுப் போய். சுற்றுலா வளர்ச்சி பாதிக்கப்படும்.

இப்படிப்பட்ட இடங்களைச் சுத்தமாக நல்ல முறையில் வைத்திருப்பதோடு மட்டும் இல்லாமல், அவற்றைக் காண வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்குத் தொல்லைகள் ஏதும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும். வெளிநாட்டினர் வந்தால், அவர்கள் பின்னால் பிச்சைக் காரர்களும், சிறு பொருள் விற்பனையாளர்களும் கூட்டமாகச் சென்று கொடுக்கும் தொல்லைகளை நாம் தினந்தோறும் கண்கூடாகக் காண்கிறோம். பத்திரிகைகளிலும் படிக்கிறோம். வழிகாட்டுகிறேன் என்று ஏமாற்றுபவர்கள் வேறு! ஓயாத தொல்லைகளை அனுபவிக்கவா வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றார்கள்? இப்படிப்பட்ட அனுபவம் நேர்ந்தால் மறுபடியும் அவர்கள் வருவார்களா? எனவே, இத்தகைய தொல்லைகளைக் கொடுப்பது யாராக இருந்தாலும் அதனைப் பார்க்கும் எவரும் அவற்றைத் தடுக்க வேண்டும். திரும்பிச் செல்லும் இவர்கள் இவற்றைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லமாட்டார்களா? இதனால் நமது நாட்டின்பெருமை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை நாம் எல்லாரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரயில்வே நிலையங்கள், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள், பல்வேறு அரசாங்கத் துறைகள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் சுற்றுலா இடங்கள் ஆகியவற்றில் பணிபுரிபவர்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்களை அணுகும்போது இன்முகத்தோடு வரவேற்று அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

சுற்றுலா வளர்ச்சிக்காக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. ஆனால், அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் மட்டும் போதாது. பொது மக்களின் ஒத்துழைப்பு முழு அளவில் தேவை. அப்போது தான் தமிழகத்தில் சுற்றுலாத் துறை வளரும். பொருளாதாரம் மேன்மையடையும். நமக்கு மிகவும் தேவையான வெளி நாட்டுச் செலாவணியும் கிடைக்கும். நமது நாட்டின் அருமை உலகெங்கும் பரவும். தாழ்ந்து கிடந்த நமது பெருமை உயர்வு பெறும். சுற்றுலா வரும் வெளிநாட்டுப் பயணிகள் நமது பண்பாட்டுத் தூதுவர்கள். நாளையிலிருந்து நடைபெறும் பொங்கல் சுற்றுலா விழாவின் போது நாம் நமது உயர்ந்த பண்புகளை எடுத்துக் காட்டும் முயற்சியில் பணிவோடும், இனிய முகத்தோடும் ஈடுபட்டு வெளிநாட்டுப் பயணிகளை வரவேற்று நண்பர்களாக அனுப்பி வைப்பது நம் எல்லாருடைய கடமையாகும்.

இதற்காகத் தமிழ்நாட்டின் பெருமக்களாகிய உங்களனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

**(13—1—73 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை).**

## அடுத்த இதழிலிருந்து

**ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள் பற்றிய செய்திகள் தொடர்ந்து இடம்பெறும்.**





## பல்லவன் போக்குவரத்துக் கழகம்

தமிழக அரசின் ஓர் நிறுவனம்.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் பயணிகளின் வசதியை முன்னிட்டு ஞாயிறுதோறும் நகரில் பல்வேறு இடங்களில் இருந்து திருவேற்காட்டிற்குக் கீழ்க் கண்ட நேரப்படி தனிப்பேருந்துகளை இயக்குகிறது.

| | | | |
|---|---|---|---|
| ஹாமில்டன் பாலம்—திருவேற்காடு | | திருவேற்காடு—ஹாமில்டன் பாலம் | |
| (முதல் வண்டி) | 06·00 | (முதல் வண்டி) | 07·20 |
| (கடைசி வண்டி) | 20·35 | (கடைசி வண்டி) | 21·50 |
| (கட்டணம் 70 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்) | | | |
| வில்லிவாக்கம்—திருவேற்காடு | | திருவேற்காடு—வில்லிவாக்கம் | |
| (முதல் வண்டி) | 06·00 | (முதல் வண்டி) | 07·20 |
| (கடைசி வண்டி) | 20·40 | (கடைசி வண்டி) | 22·00 |
| (கட்டணம் 65 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்) | | | |
| பெரம்பூர்—திருவேற்காடு | | திருவேற்காடு—பெரம்பூர் | |
| (முதல் வண்டி) | 05·45 | (முதல் வண்டி) | 07·05 |
| (கடைசி வண்டி) | 20·25 | (கடைசி வண்டி) | 21·45 |
| (கட்டணம் 70 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்) | | | |
| வள்ளலார் நகர்—திருவேற்காடு | | திருவேற்காடு—வள்ளலார் நகர் | |
| (முதல் வண்டி) | 05·10 | (முதல் வண்டி) | 06·30 |
| (கடைசி வண்டி) | 19·35 | (கடைசி வண்டி) | 20·50 |
| (கட்டணம் 65 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்) | | | |
| மந்தவெளி—திருவேற்காடு | | திருவேற்காடு—மந்தவெளி | |
| (முதல் வண்டி) | 05·50 | (முதல் வண்டி) | 07·10 |
| (கடைசி வண்டி) | 20·15 | (கடைசி வண்டி) | 21·30 |
| (கட்டணம் 70 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்) | | | |
| சைதை—திருவேற்காடு | | திருவேற்காடு—சைதை | |
| (முதல் வண்டி) | 05·45 | (முதல் வண்டி) | 07·00 |
| (கடைசி வண்டி) | 20·40 | (கடைசி வண்டி) | 21·55 |
| (கட்டணம் 75 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்) | | | |
| திருவல்லிக்கேணி—திருவேற்காடு | | திருவேற்காடு—திருவல்லிக்கேணி | |
| (முதல் வண்டி) | 05·35 | (முதல் வண்டி) | 06·50 |
| (கடைசி வண்டி) | 20·10 | (கடைசி வண்டி) | 21·30 |
| (கட்டணம் 65 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்) | | | |
| சென்னை (பிராட்வே)—திருவேற்காடு | | திருவேற்காடு—சென்னை (பிராட்வே) | |
| (முதல் வண்டி) | 06·00 | (முதல் வண்டி) | 07·00 |
| (கடைசி வண்டி) | 19·35 | (கடைசி வண்டி) | 20·40 |
| (கட்டணம் 60 பைசா : பயண நேரம் : 50 நிமிடம்) | | | |
| வடபழனி—திருவேற்காடு | | திருவேற்காடு—வடபழனி | |
| (முதல் வண்டி) | 06·10 | (முதல் வண்டி) | 07·30 |
| (கடைசி வண்டி) | 20·35 | (கடைசி வண்டி) | 21·50 |
| (கட்டணம் 70 பைசா : பயண நேரம் : 65 நிமிடம்) | | | |

இரா. தில்லைநாயகம்,
நிர்வாக இயக்குநர்.

வழிகாட்டும் தமிழ்நாடு

# அனைக்கும் கிடைக்கும் அருமையான திட்டம்

## போலீசார் ஓய்வு பெறும் நாளிலேயே

மூப்பது ஆண்டுகளுக்கு மேலாக உழைத்துவிட்டு, அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெறும்போது, ஓய்வு பெறும் அதே நாள் மாலையில் பணிக்கொடைத் தொகை, ஓய்வூதிய ஆணைக் கடிதம், வருங்கால நல நிதித் தொகை ஆகிய மூப்பலன்களையும் பெறுகின்ற நிலை அந்தந்தத் துறைகளுக்குத் தனிப் பெருமையும், அந்தப் பணியாளர்களுக்கு நிறைவான நிம்மதியும் தருவதாகும். அரசுப் பணி வரலாற்றில் குறித்து வைக்கத் தகுந்த அத்தகைய சாதனையைச் செயல்படுத்தி வைத்திருக்கிறது தமிழ்நாடு அரசின் காவல் துறை.

1973 ஜூலை 6-ஆம் நாளன்று, காவல் துறையின் பல்வேறு சார்நிலைப் பிரிவுகளைச் சேர்ந்த 50 பேர்கள், இப்படி மூப்பலன்களையும் பெற்றபோது, சென்னை காவல்துறை ஆணையர் அலுவலகம் எந்த அளவுக்கு முன்கூட்டியே, பல மாதங்களுக்கு முன்னதாகவே திட்டமிட்டு, விடாப்பிடியாக உழைத்து இதனை முடித்துக் கொடுத்தது என்பது தெரியவந்தது. அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகம், சம்பளக் கணக்கு அலுவலகம் ஆகியவற்றை முறைப்படி அணுகி எல்லாருடைய ஒத்துழைப்பையும் பெற்று, இப்பணியினை முடித்து, ஓய்வு பெறுவோருக்கு அதே நாளில் அதே இடத்தில் பணத்தைப் பட்டுவாடாச் செய்து பாராட்டுப் பெற்றனர் அந்த அலுவலகத்தினர். ஓய்வு பெறும் சென்னை நகரக் காவல் படையினர் 50 பேர்களுக்கு ஜூலை 6-ஆம் நாள் நடந்த பிரியா விடை அணி வகுப்பில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும், சென்னை போலீஸ் கமிஷனரும் நிகழ்த்திய உரையில், ஓய்வு பெறும் ஊழியர்களுக்காக, மற்ற ஊழியர்கள் எந்த அளவுக்கு அரும்பாடு பட்டிருக்கிறார்கள் என்பதை எடுத்துரைத்தார்கள்.

### இது போன்ற மகிழ்ச்சி

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. எப்.ஜி. அருள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

*இந்த விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். காவல் துறையினர் நலனுக்காக நடவடிக்கைகள் போன்ற மகிழ்ச்சியும் மனநிறைவும் எனக்குத் தரக் கூடியது வேறு எதுவுமே இல்லை. சென்னை நகரப் போலீஸ் கமிஷனர், அக்கவுண்டன்ட் ஜெனரல், சம்பளக் கணக்கு அலுவலர் ஆகிய மூன்று அலுவலகத்தினரும் இணைவாக மேற்கொண்ட நிருவாகச் செயல் முறைகள் காரணமாக, இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் போலீசார் உருவான நன்மைகளை அடைந்திருக்கிறார்கள். இந்தச் செயல், சென்னை நகரப் போலீசாருக்கு மட்டுமல்ல, மாநிலம் முழுவதிலுமுள்ள போலீசாருக்கும் புதிய ஊக்கமும் தெம்பும் அளிக்கும். காவல் துறையிலேயே மேல் வகை அணிகளைச் சேர்ந்தவர்களுக்கும் அடிமட்ட அணிவகைகளைச் சேர்ந்தவர்களுக்கு மிடையே நல்லெண்ணத்தையும் பரஸ்பரம் நன்மதிப்பையும் இது வளர்க்கும்.*

## அடுத்த இதழிலிருந்து

**ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள் பற்றிய செய்திகள் தொடர்ந்து இடம்பெறும்.**

அந்த நாடு இந்த ஆண்டு எதிர்பார்க்கும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மூன்றரைக் கோடி. எப்பேர்ப்பட்ட வளர்ச்சி என்பதனை எண்ணிப்பாருங்கள். ஒருகணம் மனக்கண் முன் நிறுத்திப் பாருங்கள்.

ஆசிய நாடுகளில் ஜப்பான் ஏராளமான மக்களை ஈர்க்கின்றது. காரணம் அந்த மக்கள் அவ்வளவு சிறப்பாகச் சுற்றுலாப் பயணிகளுக்கு உதவுகின்றனர். எனது பயணத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றினையே குறிப்பிட விரும்புகிறேன். நானும் எனது நாடாளு மன்ற நண்பர்களும் டோக்கியோ நகரத்தைச் சென்றடைந்தபோது மாலை நான்கு மணி. அங்குள்ள நண்பர் ஒருவருக்கு அறிமுகக் கடிதம் கொண்டுபோயிருந்தேன். அவரது அலுவலகம் ஐந்து மணிவரைதான் இயங்கும். நாங்கள் தங்க ஒய். எம். சி. ஏவில் இடம் ஏற்பாடாகியிருந்தது. நான் எனது பொருட்களையெல்லாம் அறையில் போட்டவுடன், நண்பர் உள்ள அலுவலகம் போக வேண்டும். நேரமோ மிகவும் குறைவு. எனக்கோ ஜப்பானிய மொழி தெரியாது. ஆங்கிலம் தெரிந்த ஒருவரிடம் விசாரிக்க எண்ணினேன். ஒரு மாணவர் அங்கு நின்றிருந்தார். அவரிடத்தில் உரையாடினேன். அவருக்கு ஆங்கிலம் தெரிந்த காரணத்தால் பழகுவது எளிதாயிற்று.

நண்பரின் விலாசத்தை அவரிடம் காண்பித்தேன். ஜப்பானில் ஒரு சிறந்த பழக்கம். எந்த இடத்திற்கு யாரிடம் வழி கேட்டாலும், உடனடியாக ஒரு காகிதத்தை எடுத்து, அந்த இடத்திற்கு இப்படித்தான் போக வேண்டும் என்று படம் போட்டுக் காட்டிவிடுவார்கள். மாணவத் தோழர் அதேபோல் படம் போட்டுக் காட்டினார். நான் விரைவாகப் போக வேண்டும், உடன் வந்து உதவமுடியுமா ? என்றேன். காலமின்மையைச் சுட்டிக் காட்டினேன். சற்றும் தயங்காமல் என்னை டிராமில் ஏற்றினார். டிராமில் ஏறிய பிறகுதான் எனக்கு, என்னிடமுள்ள வெளிநாட்டு நாணயத்தை ஜப்பான் நாட்டு யென் நாணயமாக மாற்றாதது நினைவு வந்தது. என் நிலையைப் புரிந்துகொண்ட மாணவத்தோழர், சில்லறையைத் தானே எடுத்துக் கொடுத்து டிக்கெட்டும் வாங்கினார். நான் நண்பரை அவரது அலுவலக நேரம் முடிவதற்குள் சந்தித்து விட்டேன். மீண்டும் ஒய். எம். சி. ஏ. விற்கு வந்து, என்னிடம் இருந்த நாணயத்தை மாற்றி, அம்மாணவத் தோழரிடம், டிக்கெட் பணத்தை அளித்தேன். அவர் காட்டிய அன்பு இன்னமும் என்னுள்ளத்தில் பசுமையாக உள்ளது. அப்படிப்பட்ட தன்மைகள் நம் நாட்டிலும் பரவிட வேண்டும் என விரும்புகிறேன். ஒரு முறை வந்தவர், மறுமுறையும் வரும் வண்ணம் நாம் அன்போடு நடந்து கொள்ளவேண்டும்.

அன்பால், பண்பால், நட்பால் வெளிநாட்டுப் பயணிகளை உபசரிப்பதோடு நின்றுவிடுவது மட்டும் நல்லதல்ல. நம் நாட்டின் எழிற்சிற்பங்கள், சரித்திரச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள புகழ்மிக்க இடங்கள், சிற்பக் கலைக்கூடங்களாகத் திகழும் கோயில்கள், இயற்கை தந்த செல்வங்களான மலைவளம், கடற்கரை போன்ற இடங்களை நாம் போற்றிப் பாதுகாக்க வேண்டும். அவற்றின் தன்மை மாறாமல் வைத்திருக்க வேண்டும். மாறாக நமது பொறுப்பற்ற போக்கினாலும், சுய நலத்தாலும் கோட்டைகள் பாழடிக்கப்பட்டால், சிற்பங்கள் சிதைவுற்றால், காடுகள் அழிவுற்றால், காலத்தினால் சிறப்பெய்திநின்ற அவைகள் யாவும் சிறப்பற்றுப் போய். சுற்றுலா வளர்ச்சி பாதிக்கப்படும்.

இப்படிப்பட்ட இடங்களைச் சுத்தமாக நல்ல முறையில் வைத்திருப்பதோடு மட்டும் இல்லாமல், அவற்றைக் காண வரும் வெளிநாட்டுப் பயணிகளுக்குத் தொல்லைகள் ஏதும் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டும். வெளிநாட்டினர் வந்தால், அவர்கள் பின்னால் பிச்சைக் காரர்களும், சிறு பொருள் விற்பனையாளர்களும் கூட்டமாகச் சென்று கொடுக்கும் தொல்லைகளை நாம் தினந்தோறும் கண்கூடாகக் காண்கிறோம். பத்திரிகைகளிலும் படிக்கிறோம். வழிகாட்டுகிறேன் என்று ஏமாற்றுபவர்கள் வேறு! ஓயாத தொல்லைகளை அனுபவிக்கவா வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருகின்றார்கள் ? இப்படிப்பட்ட அனுபவம் நேர்ந்தால் மறுபடியும் அவர்கள் வருவார்களா ? எனவே, இத்தகைய தொல்லைகளைக் கொடுப்பது யாராக இருந்தாலும் அதனைப் பார்க்கும் எவரும் அவற்றைத் தடுக்க வேண்டும். திரும்பிச் செல்லும் இவர்கள் இவற்றைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லமாட்டார்களா? இதனால் நமது நாட்டின்பெருமை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை நாம் எல்லாரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இரயில்வே நிலையங்கள், பேருந்து நிலையங்கள், விமான நிலையங்கள், பல்வேறு அரசாங்கத் துறைகள், பொது நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் சுற்றுலா இடங்கள் ஆகியவற்றில் பணிபுரிபவர்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்களை அணுகும்போது இன்முகத்தோடு வரவேற்று அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

சுற்றுலா வளர்ச்சிக்காக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. ஆனால், அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் மட்டும் போதாது. பொது மக்களின் ஒத்துழைப்பு முழு அளவில் தேவை. அப்போதுதான் தமிழகத்தில் சுற்றுலாத் துறை வளரும். பொருளாதாரம் மேன்மையடையும். நமக்கு மிகவும் தேவையான வெளிநாட்டுச் செலாவணியும் கிடைக்கும். நமது நாட்டின் அருமை உலகெங்கும் பரவும். தாழ்ந்து கிடந்த நமது பெருமை உயர்வு பெறும். சுற்றுலா வரும் வெளிநாட்டுப் பயணிகள் நமது பண்பாட்டுத் தூதுவர்கள். நாளையிலிருந்து நடைபெறும் பொங்கல் சுற்றுலா விழாவின் போது நாம் நமது உயர்ந்த பண்புகளை எடுத்துக் காட்டும் முயற்சியில் பணிவோடும், இனிய முகத்தோடும் ஈடுபட்டு வெளிநாட்டுப் பயணிகளை வரவேற்று நண்பர்களாக அனுப்பி வைப்பது நம் எல்லாருடைய கடமையாகும்.

இதற்காகத் தமிழ்நாட்டின் பெருமக்களாகிய உங்களனைவரையும் ஒத்துழைக்குமாறு வேண்டுகிறேன்.

**(13—1—73 அன்று சென்னை வானொலியில் ஆற்றிய உரை).**

# தமிழகம் அழைக்கிறது





முத்து

இந்த ஆண்டு பொங்கல் வார விழாவைச் சுற்றுலா வாரமாகத் தமிழகம் கொண்டாடியது. தமிழகத்திற்கு வந்துள்ள வெளி நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். பலவேறு கலைநிகழ்ச்சிகள் அவர்களுக்காகவே ஏற்பாடு செய்யப் பெற்றன.

சென்னையில் 14–1–73 அன்று ராஜாஜி மண்டபத்தில் பொங்கல் சுற்றுலா வாரத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

ராணி மேரி கலைக் கல்லூரி மாணவியர் பொங்கல் காட்சி களை நாட்டியத்தில் அமைத்துக் காட்டினர்.

வேண்டிய நிலை இருந்தது. நாளாக ஆக அவர்கள் சோர்வுற்றுக் குன்றிப் போகின்ற நிலையும் கண் கூடான உண்மை. அந்த நேரத்தில் அவர்கள் ''இத் துறையில் 30 ஆண்டுகளுக்கு மேலாக உழைத்ததற்குப் பலன் இதுதானா ?'' என்றும் எண்ணியிருக்கக் கூடும். ஓய்வு பெறுகின்றவர்கள் விஷயத்தில் சார்நிலைப் பணியாளர்களுக்கு உள்ளார்ந்த அனுதாபம் உண்டு என்றாலும் அன்றாட வேலைப் பளுவின் காரணமாக, ஓய்வு பெறுவோர் விஷயத்தில் உரிய கவனம் செலுத்த முடியாத நிலை இருந்தது. ஓய்வு பெற்றவர்கள், சில விஷயங்களை நேர் செய்வதற்காகப் பல மணி நேரம் காத்திருந்தும் கூட அலுவலர்களைச் சந்திக்க இயலாமல் போன நிலை இருந்திருக்கலாம். இந்தச் சங்கடமான நிலைமைக்கு ஒரு முடிவு காண வேண்டும் என்பதற்காக ஓய்வூதியப் பட்டுவாடாவுக்கும், ஓய்வு நிதிகளுக்கும் பூர்வாங்க ஆணைகளை, ஓய்வு பெறும் அதே நேரத்தில் தந்துவிடுவது நலம் என்று கருதினோம். ஓய்வு பெறுவோருக்கு இதுவே ஒரு உகந்த நன்மையாக அமையும் என்று எண்ணினோம்.

### வேறு சங்கடங்கள்

ஓய்வு பெற்றவர்கள் தாங்கள் குடியிருந்து வந்த அரசினர் குடியிருப்பைக் காலி செய்து விட்டுச் செல்வதிலும் பல சங்கடங்கள் உள்ளன. வேறு வீடு வாங்குவதற்கோ அல்லது வேறு வாடகை வீட்டுக்கு முன்பணம் கொடுக்கவோ இயலாத நிலை இருந்தது. எனவே, இருக்கும் வீட்டிலேயே இன்னும் சில காலம் தொடர்ந்து வசிக்க அனுமதிக்க வேண்டும் என்ற முறையீடுகளும் வந்தபடி இருக்கும். இதனால் பணிபுரிவோருக்கு, வீட்டு வசதி அமைத்துத் தருவதில் சங்கடங்களும் ஏற்படும். பல நேரங்களில் இது காரணமாக, மனத்துக்குச் சங்கடமான இக்கட்டுகளும் ஏற்பட்டு வந்தன.

இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் இப்பணியைத் தலைமை நிலைய டிப்டி கமிஷனரிடமும், எனது அணுக்க உதவியாளரிடமும் ஒப்படைத்தேன். பணியை முடித்துத் தர வேண்டிய நாளையும் குறிப்பிட்டுச் சொன்னேன். இதனால் அவர்களுக்கு அதிகமான கூடுதல் வேலை. ஆனால் அவர்களும் மற்றப் பணியாளர்களும் உற்சாகத்தோடு இக்கடமையை மேற்கொண்டனர். பூர்வாங்க ஓய்வூதிய ஆணையையும், பூர்வாங்கப் பணிக் கொடை ஆணையையும் குறித்த நாளில் தந்துவிட முடியும் என்று அவர்கள் உறுதி கூறினர். வருங்கால நல நிதி (Provident Fund) விஷயத்தில் (அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகம் பார்த்து அனுப்ப வேண்டிய பணி ஆகையினால்) அதனை உடனே பட்டுவாடாச் செய்வது என்பது 'இயலாது' என்று அவர்கள் பதிலளித்தனர். இங்கு நான் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். நம்மில் சிலருக்கு அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகம், மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகம் ஆகியவை மீது பழி போடும் இயல்பு உண்டு. அந்த நிலைமைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று விரும்பினேன். அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகத்திலும் சம்பளக் கணக்கு அலுவலர் அலுவலகத்திலும் நமது கணக்குகளை ஒழுங்கு முறைப்படி வைப்போமானால் அவர்களும் நம்முடன் ஒத்துழைப்பார்கள் என்று அலுவலாளர்களிடம் எடுத்துரைத்தேன். அதன்படியே காரியம் வெற்றிகரமாக நடந்தேறியது. இந்த இனிய நேரத்தில் அக்கவுண்டன்ட் ஜெனரல், சம்பளக் கணக்கு அலுவர் ஆகியோருக்கும் அவர்களுடைய அலுவலகத்தினருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அவர்களுடைய ஒத்துழைப்பால் தான் இந்த நாளில் இத்தகைய நல்ல பலனை அடைய முடிந்தது. அக்கவுண்டன்ட் ஜெனரலும், சம்பளக் கணக்கு அலுவலரும் சுற்றுப் பயணம் சென்றிருக்கிறார்கள். ஆதலால் இவ்விழாவில் அவர்கள் கலந்து கொள்ள இயலாது போனது பற்றி வருந்துகிறேன். ஆயினும் சீனியர் டிப்டி அக்கவுண்டன்ட் ஜெனரல் திரு. எட்வின், உதவிச் சம்பளக் கணக்கு அலுவலர் திரு. பாண்டுரங்கராவ் இருவரும் இங்கு வந்திருக்கிறார்கள். தங்களுடைய உதவி பெற்றவர்களின் நன்றியுணர்வை அவர்கள் இவ்விழாவில் நேருக்கு நேர் காண முடிகின்றது என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். மிகக் குறுகிய காலத்தில் அவர்கள் ஓய்வு கால நிதி சம்பந்தப்பட்ட பணிகளை முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுடைய அரிய பணிக்கும் அரிய ஒத்துழைப்புக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**1973 ஜூலை 1-ல் ஓய்வு பெற்றோர் இன்னும் சிறிது நேரத்தில் பூர்வாங்க ஓய்வூதிய ஆணையைப் பெற இருக்கிறார்கள். ஓய்வூதிய மொத்தத் தொகையில் 90 சதவிகிதத்**தைப் பெற இந்தப் பூர்வாங்க ஆணை வழி செய்கின்றது. பணிக் கொடைத் தொகையில் 75 சதவிகிதம் இந்தப் பூர்வாங்க ஆணையின் மூலம் கிடைத்துவிடும். மொத்தம், இன்று ரொக்கமாகப் பட்டுவாடாச் செய்யப்பட இருக்கும் பணிக் கொடைத்தொகை ரூ. 1,27,118 ஆகும். வருங்கால நல நிதியில் போட்டிருந்த பணமும் வட்டியுடன் தரப்படும். ஏற்கனவே வாங்கிவிட்ட தொகை மட்டும் கழிக்கப்பட்டுவிடும். இவற்றுடன் கூட வேலையிலிருந்து விடுவிக்கப் பெற்றதற்குச் சான்றிதழ், நடத்தைச் சான்றிதழ் ஆகியனவும் தரப்படுகின்றது.

### பணப் பாதுகாப்பு

ஓய்வு பெற்ற நீங்கள் இன்று பெருந் தொகையை எடுத்துச் செல்லுகின்ற நேரத்தில் நான் சொல்ல வேண்டிய யோசனை ஒன்று உண்டு. பணத்தைப் பத்திரமாக வையுங்கள். இதனை வீட்டுக்குக் கொண்டு போகும்போதும், அடுத்துச் செலவுகள் செய்யும்போதும் மிகுந்த விழிப்புடன் இருங்கள். எனது வேண்டுகோளின்பேரில் இந்திய ஸ்டேட் பாங்கினர் இதே திடலில் சேமிப்பு வைப்புத் தொகையை ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாட்டினை இங்கு அன்புடன் செய்திருக்கிறார்கள். பணத்தை, இங்கு இந்த பாங்கியில் நீங்கள் வைக்கலாம் என்பது என் யோசனை.

உங்களுடைய நல்ல பணிக்காகப் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டு நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் மகிழ்ச்சியாக வாழ வாழ்த்துகிறேன்.


## தி. சீ. புட்ஸ் எக்ஸ்போர்ட் கார்ப்பரேசன்

குளிர்சாதன மீன் பதனிடுவோர், உலர்ந்த மீன் தயாரிப்போர், சகல கடற் பொருட்களும் ஏற்றுமதி செய்வோர்.

41, கொக்கோப் தெரு,
தூத்துக்குடி-1.

தந்தி : சிறுமலர்.

தொலைபேசி : அலுவலகம் : 146
இல்லம் : 1315

சகோதர பகுதி : தி கல்ப்பிஷ் எக்ஸ்போர்ட் அவுஸ்

தொழிலிணக்கம் : தி ஸ்டேட்டிங் கார்ப்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட்
இந்தியா டொபாக்கோ கம்பெனி லிமிடெட்

தூத்துக்குடி பகுதியில் மீன் பதனிடுவதற்கென முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் ஏக குளிர்சாதன தொழிலகம் (FREEZING PLANT) எமதென்பதில் பெருமிதமடைகிறோம்.

குளிர்சாதன முறையில் பதனிடப்பட்ட இரால், சிங்கிரால், மீன் முதலிய கடலுணவுகளுக்கும், உலர்ந்த மீன் வகைகளுக்கும் ஏனைய கடற்பொருட்களுக்கும் எம்மை அணுகுக.





## மீன்வளம் பெருக தாயின் பணி!

மீன் பிடித்தொழில் வளர்ச்சி பெற, மீனவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் தாய்—நிறுவனம் பல்வேறு வழிகளில் அரும்பணி ஆற்றுகிறது.

* மெல்லிய நைலான் இழைகள், மற்றும் மீன்பிடி வலைகளை அமைத்தல்.
* இறக்குமதி செய்யப்பட்ட மீன் பிடிபடகுகளின் மூலம் ஆழ்கடலில் அபரிமிதமான மீன்வளம் பெற பெரும் பணி ஆற்றுதல்.
* மீன்களைப் பதப்படுத்திப் பாதுகாக்கும் பொருட்டுச் சென்னையில் நூறு டன்கள் கொள்முதல் உள்ள மீன் பதனிடும் நிலையம் செயல் புரிதல்.

தாய்—தருவது வளர்ச்சிக்குச் சேவை

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகம், வேளாண் இல்லம், தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-600032.




ஓய்வு பெறும் போலீசார், உடனடியாக ஓய்வூதியம், ஓய்வு நிதி வசதிகள் கிடைக்கப் பெருமல், சொல்லொணு அவதிகளுக்கு உள்ளாகி வந்தனர். ஓய்வூதிய ஆணை, பணிக் கொடைத் தொகை, வருங்கால நல நிதி ஆகியவைகளைப் பெற மாதக் கணக்கில், சில சமயங்களில் ஓராண்டுக்கு மேலாகக் கூட அலைய வேண்டிய நிலை இருந்தது. அந்த நிலையை மாற்றி, அவதியில்லாமல் நிம்மதியைத் தருகின்றன ஒரு வழிமுறையை இன்று கண்டோம். ஓய்வு பெற்றதற்கும், ஓய்வு காலத் தொகைகள். கிடைப்பதற்கும் இடையே உள்ள இடைப்பட்ட காலத்தில் வறுமைக்கும் துன்பங்களுக்கும் ஆளானவர்கள், அந்தக் கஷ்டத்தினூடே, கிராமத்திலிருந்து பலமுறை நகரத்துக்கு வந்து அலுவலகம் அலுவலகமாக ஏறி இறங்க வேண்டியிருந்தது. இடர் மிகுந்த இந்தக் கால கட்டத்திலே, கிராமத்திலே அவர்கள் குடும்பம் பசி பட்டினியை எதிர்நோக்க வேண்டிய நிலை இருக்கும், ஏதோ நாடக வசனம்போல இதை நான் சொல்லுவதாக எண்ண வேண்டாம். அப்பட்டமான உண்மை நிலையைத்தான் சொல்லுகிறேன். இந்தத் துன்பமான நிலையை மாற்றியமைக்க வேண்டிய கடமை, நிருவாக அலுவலர்களாகிய நம்மைச் சேரும். தேவையில்லாமல் துன்பங்களை ஏற்க வைக்கிற பழங்கால விதி முறைகளுக்கு இடமில்லாமல் விரைந்து செயல்பட்டு நல்லனவற்றை உடனுக்குடன் செய்து முடிக்க வேண்டிய கடமை நமக்கு உண்டு.

### இவர்கள் உழைப்பு

இன்று ஓய்வு பெறுகின்ற சப் இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டபிள்கள் மற்றும் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 52 பேர்களும் முப்பது ஆண்டுகளுக்குமேலாக இரவு பகலாக, எங்கெங்கெல்லாமோ பணிகளில் ஈடுபட்டு உழைத்தவர்கள். தங்கள் அரும்பணியின் மூலம் அவர்கள் இந்தக் காவல் துறையின் பெருமையை உயர்த்தினர்கள். மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தார்கள்.

கஷ்டங்களைக் காண்பித்துக் கொள்ளாமல், அதற்காகக் குறைகூறிக் கொண்டிருக்காமல் காவல் துறையினர் சோதனைகளையும் நெருக்கடிகளையும் சமாளிக்கிருர்கள். காயங்களையும் மரணத்தையும் கூட ஏற்றவர்கள் பலர். இன்று ஓய்வு பெறும் இந்த 50 பேர்களும் அதே போல, பகல் இரவு பாராமல், மழை என்றும் வெய்யில் என்றும் பாராமல் உழைத்து இப்போது கடைசிக் கட்டமாகப் பணியில் நிறைவும் ஒய்வும் கண்டிருக்கிருர்கள். ஓய்வு பெற்ற 6 நாட்களுக்குள்ளாக, ஓய்வூதிய ஆணை, மற்றும் ஓய்வு கால நிதிகள் ஆகியன வழங்கப் பெற்றமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று ஓய்வு பெறுகின்ற நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அமைதியும் நிறைவும் கண்டு மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று இந்த நேரத்தில் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இன்று இந்த நல்ல பணிகளை நிறைவேற்றித் தந்த பெருமை முழுவதும், உழைப்பில் வல்லவரான சென்னை நகரப்போலீஸ் கமிஷனர் திரு.கே.ஆர்.ஷெணுய்அவர்களைச் சாரும். இப் பணியைத் தொலை நோக்குடன் திட்டமிட்டு, ஆர்வத்துடனும் விடா முயற்சியுடனும் பணியாற்றி தமது நல்ல எண்ணத்தைச் செயல் வடிவமாக்கிக் காட்டியிருக்கிருர் அவர். திரு. ஷெணுய் இன்று இங்குச் செய்திருப்பது மாநிலம் முழுவதிலும், இந்திய மாநிலங்கள் அனைத்திலும் காணப்படாத ஒரு சாதனை, இது ஒரு சிறந்த முன்மாதிரி ஆகும்.

இந்த நேரத்தில், அக்கவுண்டன்ட் ஜெனரல், அவரது அலுவலகத்தினர், குறிப்பாக திரு. எட்வின், மற்றும் சம்பளக் கணக்கு அலுவலர், தலைமை நிலையத்தைச் சேர்ந்த போலீஸ் டிப்டி கமிஷனர், போலீஸ் கமிஷனர் அலுவலகத்தைச்சேர்ந்த சார் நிலைப் பணியாளர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வது எனது கடமையாகும். துறைகளுக்கிடையே ஒத்துழைப்பின் மூலம் இன்று நாம் சாதித்திருப்பது வருங்காலத்துக்கு, ஒரு நல்ல அறிகுறியாகும். இத்தகைய ஒத்துழைப்பு தொடர்ந்து வளரும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதன் மூலம் காவல் துறையின் முதுகெலும்பாக விளங்குகின்ற பல்லாயிரக் கணக்கான கான்ஸ்டபிள்கள் பெரிதும் நன்மையடைவார்கள். இன்று ஓய்வு பெறும் அனைவரும் வாழ்வில் மகிழ்வும் வளமும் பெற்று இனிது வாழ மீண்டும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### எடுத்துக்காட்டான திறன்

சென்னை நகர போலீஸ் கமிஷனர் திரு. கே. ஆர். ஷெணுய் இந்த விழாவில் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டதாவது :

இன்று நடைபெற்ற பிரியாவிடை அணிவகுப்பு 3 சப்-இன்ஸ்பெக்டர்கள், 3 ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள், 16 தலைமைக் கான்ஸ்டபிள்கள், 27 போலீஸ் கான்ஸ்டபிள்கள், ஒரு புகைப்படகாரர், மருந்து கலக்குபவர் ஒருவர் ஆகியோரைப் பெருமைப்படுத்துவதற்கு நடந்த அணிவகுப்பாகும். சார் நிலைப் பணியாளர்கள் என்று இவர்கள் அழைக்கப்பட்டபோதிலும், இவர்களே சேவை அணியில் முக்கியப் பிரிவினர்.

பணியில் சேர்ந்த நாள் தொட்டு, ஓய்வு பெறும் காலம் வரையில் பணியாளர்களின் நலன்களைக் கவனிக்க வேண்டியவர்கள் அலுவலர்கள் என்ற நெறியை உணர்ந்து நானும் எனது அலுவலர்களும், பணியாளர்களுக்கு—குறிப்பாக சென்னை நகரப் போலீஸாருக்கு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அதனைச் செய்வதில் ஆர்வம் கொண்டிருக்கிறோம். நமது காவல் துறையினர் திறமையிலும், உழைப்பிலும் கடமை உணர்விலும், நாட்டின் எந்தப் பகுதியினருக்கும்—ஏன் உலகிலேயே எந்தப் பகுதியினருக்கும் சளைத்தவர்கள் அல்லர் என்பதையும் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

ஓய்வு பெற்றவர்கள், ஓய்வு கால நிதி வசதிகளைப் பெற நகரப் போலீஸ் அலுவலகம், சம்பளக் கணக்கு அலுவலர் அலுவலகம், அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகம், அத்துடன் தலைமைச் செயலகத்துக்கும் கூட, மாறி மாறிச் சென்று அலைய வேண்டிய நிலை பலகாலமாக இருந்து வந்திருக்கிறது. ஓய்வூதியம், பணிக் கொடை, வருங்கால நல நிதி சம்பந்தப்பட்ட ஆணைகளைப் பெறவும் சான்றிதழ்கள் பெறவும் வாரக் கணக்கில், ஏன் மாதக் கணக்கிலும் கூட காத்திருக்க





சுற்றுலா வார விழாவின் முதல் நாளான 14-1-1973 அன்று முதல் பயணியாக சென்னை விமான நிலயத்தில் வந்து இறங்கிய இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த ஆலிவர் பேட்டர்சன் என்பவருக்குத் தஞ்சாவூர்த் தட்டு பரிசு தருகிறார் முதல்வர் கலைஞர்



வெளிநாட்டாரைக் கவரும் தந்தத்தாலான சிற்பங்கள்



சுற்றுலா வார விழாவின் தொடக்க விழாவுக்கு வருகை புரிந்திருந்த சில வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள்



மாமல்லபுரத்தின் அருகேயுள்ள புலிக்குகை









செல்வி காஞ்சனா, செல்வி கௌரி சகோதரிகளின் போணி நாட்டியமும் தாங்கமும், விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் கவர்ந்தது குறிப்பிடத் தக்கது

# மீன் வளம் பெருக்குவோம் மீனவர் வாழ்வினை வளப்படுத்துவோம்



நமது நாடு மிகவும் தொன்மை வாய்ந்தது! ஆனல் ஒரு புதிய நாடாகும்- விரைந்து வளரும் ஒரு நாடாகும்! நமது பொருளாதாரம், ஈட்டும் பணிகளில் சிலவும், தொழில்களும் உலகிலேயே மிகவும்பழமையானவைகளாகும். ஆனல் பொருளாதார வளர்ச்சியானது நமக்குப் புதிய சவால்களை விடுக்கின்றன.

மீன் பிடிக்கும் தொழில் நமது கடலோரப் பகுதிகளில் நீண்டகாலமாக நிலவிவரும் தொழிலாகும். அது போலவே, கடல் வாணிபமும் நமது புராதனத் தொழில்களில் ஒன்ருக இருந்து வருகிறது.

சிலகாலத்திற்கு முன்பு நான் பூம்புகார் சென்றிருந்த பொழுது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகார் இருந்த நிலைமையைப் பற்றிய எண்ணத்திலாழ்ந்தேன். அப்பொழுது, கடல் வாணிபத்திலும், மீன் பிடிக்கும் தொழிலிலும், சிறப்புற்று விளங்கிய பூம்புகார் துறைமுகத்தை என் மனத் திரையில் கண்டு மகிழ்ந்தேன்! ஆனல் இன்று அந்தப் பூம்புகார், தூங்கிவழியும் ஒரு குக்கிராமமாக உள்ளது. அங்குள்ள மீனவப் பெருங்குடி மக்கள் இன்றும், நமது பழந் தொழில்களில் ஒன்ருன மீன் பிடிக்கும் தொழிலைப் பரம்பரையாகச் செய்து வரும் பாணியிலேயே செய்து வருகின்ருர்கள். அவர்களைச் சுற்றியுள்ள உலகம் பெரிதும் மாறியுள்ளது! ஆனல் அவர்கள் அந்த மாற்றங்களால் ஒரு சிறிதும் மாற்றப்பட வில்லை! பூம்புகாரின் பண்டையச் சிறப்புகளில் சிலவற்றை உயிர்ப்பிக்க அண்மையில் தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். பூம்புகாரில் வாழுகின்ற மீனவர்களுக்கு ஏதும் பலனளிக்காமல், பூம்புகாரின் பழஞ் சிறப்புகளுக்கு மட்டும் உயிரோட்டம் கொடுப்பதினல் எந்தவித பயனும் இல்லை என்று எண்ணினேன்! அதனலேயே, நான் அங்கே உள்ள மீனவப் பெருமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், அவர்கள் நவீன வாழ்க்கையின் அறைகூவல்களைச் சமாளிப்பதற்கும் உரிய திட்டங்கள் சிலவற்றை அப்பொழுது அறிவித்தேன்.

## முதல்வர் கலைஞர்

நான் சென்றிருந்த அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான் முதலிய அயல் நாடுகளில், மீன் வளப் பெருக்கம் அந்நாடுகளின் பொருளாதாரா முன்னேற்றத்தில் பெருமைக்குரிய இடத்தைப் பெற்றுள்ளது! நமது நாட்டில் அவ்வாறில்லை! இதற்காக யார் மீதும் நான் பழிசுமத்த விரும்பவில்லை! கடல் மீன் வளத்தைப் பெருக்கிட நாம் இதுவரை செய்துள்ளதை விட இனிமேல் மிகவும் வேகமாகக் கடல் மீன் வளத்தைப் பெருக்க வேண்டியது இன்றியமையாதது என்பதை வலியுறுத்திட விரும்புகிறேன்.

### உலகப் படத்தில் மேல் இடம்!

இக்கருத்து தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, நமது நாடு முழுவதற்குமே பொருந்தும்! மீன் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களும், மைய, மாநில அரசுகளும் ஒருங்கிணைந்து அவர்களுடைய முயற்சியை முனைப்பாக்கவேண்டும். அப்பொழுதுதான் மீன் பிடிக்கும் தொழில் தொடர்புடைய உலகப் படத்தில் நமது நாடு மேல் இடம் வகிக்க முடியும்! நீண்ட கடலோரப் பகுதியையும், கடல் வளத்தையும் தொன்றுதொட்டு மீன் பிடிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளதால் நல்ல அனுபவமும், பயிற்சியும் பெற்றுள்ள மீனவப் பெருமக்களையும், இத் தொழிலுக்குத் தேவையான எல்லாக் கருவிகளையும் உற்பத்தி செய்யக் கூடிய அடிப்படைத் தொழில் அமைப்புகளையும் நாம் கொண்டுள்ளதால், இவை அனைத்தையும் உடனடியாக உபயோகப் படுத்திட முடியும்!

தமிழ்நாட்டில் நாம் இதை உணர்ந்து செயலாற்றுகின்ருேம். மீன் பிடிக்கும் தொழிலை இயந்திரமயமாக்கும் நமது திட்டம், கட்டு மரம் கட்டிக் கொண்டு, கடல் கடந்து சென்று மீன்பிடித்து வந்து கொண்டிருந்த ஏராளமான மீனவப் பெருமக்கள் சிறு சிறு விசைப் படகுகளைப் பெற்றிட உதவியுள்ளது. மீன் பிடிக்கும் தொழிலில் தனிப்பட்ட தொழிலதிபர்களை ஈடுபடுத்திட ஊக்குவிக்கக் கூடிய திட்டம் ஒன்றை வைத்துள்ளோம். கடலோரப் பகுதிகளில் மீன்களைப் பதப்படுத்துவதற்கும், குளிர்பதனப் படுத்துவதற்கும் உரிய நிலையங்களை அமைத்து வருகிருேம். பதப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும், பொது மக்கள் இந்நிலையங்களைப் பயன் படுத்திக் கொள்ளலாம்!

மண்டபம் படகு கட்டும் தளத்தில், ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு உதவும் இழுவைப் படகுகளை விரைவில் தயாரிக்க விருக்கின்ருேம். சிறு சிறு மீன் பிடிக்கும் துறை முகங்களையும், மீன் பிடி படகுகள் வந்து சேருவதற்கான தகுந்த கரையமைப்புகளையும் ஏற்படுத்திடுவதில் தமிழ்நாடு அரசு சிறப்பாகப் பணியாற்றி உள்ளது. தூத்துக்குடி மீன் பிடித் துறைமுகம் விரைவில் பயனுக்கு வரவிருக்கின்றது. தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள மல்லிப்பட்டினம், கோடிக்கரை, ஆகிய ஊர்களிலும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சின்ன முட்டம் என்ற ஊரிலும் மீன் பிடிக்கும் படகுகள் வந்து சேருவதற்கும், தங்குவதற்கும் உரிய வசதிகளை ஏற்படுத்தவிருக்கின்ருேம். இத்தகைய வசதிகளைக் கொளச்சல், பழவேற்காடு, வாலிநோக்கம், பரங்கிப்பேட்டை மற்றும் சில இடங்களில் ஏற்படுத்திடத் திட்டமிட்டுள்ளோம். மீன் பிடிக்கும் தொழிலை இயந்திரமயமாக்குவதற்கு வேளாண்மை மறுநிதிக் கழகம், வணிக வங்கிகள், இதர நிதி நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து பெருமளவு நிதி உதவியை எதிர்பார்த்திருக்கின்ருேம்.

ஐந்தாவது ஐந்தாண்டுக் திட்டக் காலத்தில் மீனளத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மீனளத்தை மேம்படுத்தத் திட்ட மிட்டுள்ளோம்! உள்நாட்டு மீன்கள் மற்றும் கடல் மீன்கள் உற்பத்தியைக் கணிசமாகப் பெருக்குவதற்குத் தேவையான முதலீடு செய்ய எண்ணியுள்ளோம். பெருகி வரும் மக்கள் தொகைக்குத் தேவையான உணவினை வழங்க வேண்டும், அவ்வாறு வழங்கப்படவிருக்கும் உணவும் ஊட்டச் சத்து மிகுந்ததாக இருக்க வேண்டும் என்ற இரு நோக்குடன், மீனளத்திற்கு அதிக அளவு முதலீடு செய்ய எண்ணியுள்ளோம்.

தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்டுள்ள இத்தகைய முயற்சிகளிலெல்லாம், மிகவும் முக்கியமானது தங்கள் வாழ்வுக்குக் கடலையையே நம்பியுள்ள மீனவப் பெருமக்கள் வாழ்க்கையை வளப்படுத்த வேண்டும் என்பதேயாகும்! நவீன முறையில் மீன்பிடிப்பதற்கு அதிக அளவு முதலீடு செய்ய வேண்டியுள்ளது. தனிப்பட்ட தொழில் நிறுவனங்கள் மீனள மேம்பாட்டில் தங்களுக்கென ஒப்புக் கொள்ளப்பட்ட பணியைச் சிறப்பாக நிறைவேற்றுவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை! இதனல் தனியார் தொழில் நிறுவனங்களின் நிருவாகத் திறமையும், நவீன தொழில் நுட்பமும் மீனளத் துறைக்குக் கிடைக்கக்கூடும்! ஆனல் தனியார் தொழில் நிறுவனங்கள் தொன்று தொட்டு மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவப் பெருமக்களுக்குப் போட்டியாக இருக்கக் கூடாது என்றும், மீனவப் பெருமக்களின் பரம்பரைத் தொழில் திறமைக்கும், கடல் அனுபவத்திற்கும் ஏற்பத் தனிப்பட்ட தொழில் நிறுவனங்கள் மீனவப் பெருமக்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு விரும்புகிறது.

### மீனவர் நன்மைக்கு மீன்பிடிக்கும் துறைமுகங்கள்!

தமிழ்நாடு அரசு, தொன்று தொட்டு மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவப் பெருமக்களுக்கு ஊக்கமளிக்க விரும்புகிறதே தவிர, அவர்கள் தொன்று தொட்டு மீன் பிடிக்கப் பயன் படுத்தி வருகின்ற முறையையோ, சாதனங்களையோ ஊக்குவிக்க விரும்பவில்லை. மீனவப் பெருமக்கள் பயன் படுத்திவரும் சாதனங்களை விரைவாக நவீன மயமாக்கத் தமிழ்நாடு அரசு விரும்புகின்றது! மீனவப் பெருமக்களுக்குச் சிறு இயந்திரப் படகுகளைக் கொடுத்திடுவதுடன், மீன் பிடிக்கப் பரம்பரையாகப் பயன்படுத்தி வரும் கட்டுமரத்தில் நவீன இயந்திரங்களைப் பொருத்தி மேம்படுத்திக் கொள்ளவும் தமிழ்நாடு அரசு உதவுகிறது. மீனவச் சமுதாயத்தில் உள்ள ஆள்பலத்தைக் கொண்டு பெரும் பெரும் இயந்திரப் படகுகளைப் பயனுக்குக் கொண்டு வரவும், பதப்படுத்தல், குளிர்பதனம் படுத்

போன்ற பணிகளில் ஈடு படுத்திடவும் தமிழ்நாடு அரசு விரும்புகிறது.

தற்பொழுதுள்ள மீன் பிடிக்கும் பயிற்சிப் பள்ளிகள் மேம்படுத்தப்பட்டு, நவீன மய மாக்கப்படும்!

இதனால் மீனவர்கள் நவீன இயந்திரப்படகுகள், 'கியர்' போன்றவைகளைப் பயன் படுத்துவது பற்றிய பயிற்சி பெற இயலும். இதுபோலவே தனிப்பட்ட தொழில் நிறு வனங்களும் மீனவர் சமு தாயத்தில் உள்ள ஆள் பலத்தைப் பயன் படுத்தி, மீன் தொடர்புடைய தொழி லில், அவர்களைப் பல்வேறு வகைகளில் பயன் படுத்திடப் பயிற்சி அளித்திட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு விரும்புகிறது. இப்பயிற்சி யினால், மீனவர்கள் தங்கள் பொருளாதாரத்தினை மேம் படுத்திக்கொள்ள முடியும். இவ்வாறாகத் தமிழ்நாடு அரசு மீன்பிடிக்கும் தொழிலை நவீன மயமாக்க விரும்புகிறதே தவிர, தங்கள் பிழைப்புக்குக் கடலோடு போராடி வரும் மீனவர்களுக்குச் சங்கடம் ஏற்படும் அளவுக்கு நவீன மயமாக்க விரும்பவில்லை! மீனவர் சமுதாயத்தையும், நவீன தொழில் நுட்பத்தை யும் ஒருங்கிணைக்க வேண்டிய அவசியத்தை மனத்திற் கொண்டே, திட்டம் தீட்டு பவர்கள் திட்டமிடுவார்கள் என்று நம்புகிறேன்!

### மீன் ஏற்றுமதியை ஊக்குவிப்போம்

எறால், செங்கெறால் போன்ற விலைமதிப்புள்ள கடல் மீன்கள் நம்நாட்டிலிருந்து பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப் படுகின்றன. இவ்வகையில் தமிழ்நாடு சிறப்பாகப் பணி யாற்றி வந்துள்ள போதிலும் தமிழ் நாட்டிலிருந்து எறால், செங்கெறால் போன்றவை மட்டுமன்றித் தரமான மீன் களின் ஏற்றுமதியையும் பெருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். நம் மாநிலத்தில், ஏற்றுமதி செய் வதற்குத் தகுந்தாற்போல் பதனப்படுத்துவதற்குரிய வசதி படுத்திடத் தொழில் நிறு வனங்கள் முன்வர வேண்டும் கள் போதிய அளவில் இல்லை! இத்தகைய வசதிகளை ஓரள வுக்கு அரசே செய்து கொடுக்க முடியுமெனினும், நம் மாநிலத்தில் இத்தகைய வசதிகளைப் பெருமளவில் ஏற் படுத்திடத் தொழில் நிறு வனங்கள் முன்வர வேண்டும் எனவும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

உள்நாட்டில் மீன் விற்பனை செய்வதற்குரிய அமைப்பினை ஏற்படுத்துவதும் அவசிய மாகும். தற்பொழுது பிடிக்கப் படும் கடல் மீன்களில் பெரும் பகுதி, கடலோரப் பகுதி களிலேயே உண்ணப்பட்டு விடுவதாகக்கேள்விப்பட்டேன்! மீன்கள், நம் மக்களுக்குத் தேவையான புரத உணவை அளிக்கின்றன. எனவே, கடல் மீன்களை உள்நாட்டிற்குக் கொண்டு செல்ல ஆவன செய்யவேண்டும். இதற்குத் தேவையான போக்குவரத்து, பதப்படுத்தல், பாதுகாத்து வைத்தல் ஆகிய வசதிகளைச் செய்வதற்குரிய முக்கிய அமைப்புகள் ஏற்படுத்தப் பட வேண்டும். மக்களின் நன்மைக்காக இத்துறையில் தனியார் தொழில் நிறுவனங் கள் தங்களுடைய வருவாயை முதலீடு செய்ய முடியும். இவ்வகையில் பணியாற்றத் தனியார் தொழில் நிறுவனங் கள் முன்வரும் என்று நம்பு கின்றேன்.

### கடல் வளம் பெருக்குவோம்

கடல் மீன்வள மேம்பாட் டைப் பொறுத்தமட்டில் பல் வேறு பணிகள் நம் முன்னால் நிற்கின்றன! நாம் அப் பணிகளை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ, அவ்வளவு விரைவாகச் செய்ய வேண் டிய நிலையில் உள்ளோம்! இத்துறையில் வளர்ச்சி ஏற் படுத்த பெரும் வாய்ப்பு உள்ளது! இது ஒரு அறை கூவலாகவும், கிடைத்தற்கரிய வாய்ப்பாகவும் உள்ளது! இக்கருத்தரங்கில் நீங்கள் கூறப்போகும் பரிந்துரைகள் அறைகூவலைச் சமாளிக்கவும், வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவும் உதவியாக இருக்கும் என்று நம்புகின் றேன்.

**[மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் சென்னையில் 1-8-1973 அன்று, இராஜாஜி அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு கடல் வளப் பெருக்கக் கருத்தரங்கைத் துவக்கி வைத்து ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்]**

**வெண்பாப் போட்டி 62**

ஈற்றடி : நெஞ்சமே யஞ்சாதே நீ

முடிவு நாள் 1—9—73

**வெண்பாப் போட்டி 63**

ஈற்றடி : இரந்துண்டு வாழோம் இனி

முடிவு நாள் 10—9—73

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்
சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.





"கோலவண்டு யாழ்செய்யும் குற்றாலத் தண்ணருவியின் வெள்ளமும் அதில் குளித்தின்பம் பெறும் மக்கள் வெள்ளமும்



உதகமண்டல ஏரியில் உல்லாசப் படகுப் பயணம்



கதிரவன் எழும் காட்சியைக் கண்ணுக்கு விருந்தாக்கும் கன்னியாகுமரிக் கடற்கரை



சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற ஒகேனக்கல் அருவி

# 24வது குடியரசுநாள் விழா

## சென்னை

## 26-1-73



குடியரசு நாள் இன்று! சென்னையில்
தமிழகத்தின் பல்வேறு துறையினர்
பங்கேற்ற அணிவகுப்புக்களை
இன்று கண்ட பல லட்சம் மக்கள்,
கடற்கரையில் கண்டு களித்தனர்.
காந்தியடிகள் சிலை அருகே தொடங்கி
இன்று கட்டம் வரையில் மக்கள்
வெள்ளம். இந்த தொடக்கத்தில்
அணிவகுப்பு. ராணுவத்தினர், காவல்
துறையினர், மாணவர்கள், விடுதலை
சேவை இலாகாவினர், அணிவகுப்பில்
பங்கு பெற்றனர்.
தமிழகத்தின் தொன்மை மிகுந்த
கலைகளைச் சித்தரிக்கும்
அழகு மிகு வண்டிகளின் ஊர்வலம்
கிராமியக் கும்மி கோலாட்டம்,
காவடி, கரகம், புலியாட்டம்,
நாதஸ்வர இசை, நடனம் போன்ற
கொண்டாட்டங்களும், தமிழகக்
கலைகளின் சிறப்பை
மக்களிடையே புத்துணர்ச்சியை
உண்டாக்கும் வண்ணம் அமைந்தன.

பதிவு எண். M. 8676






உழுபவனுக்கே நிலம் உடைமையாகச் சட்டம்:
பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரு மடங்காவதற்கு
அடித்தளத்திலிருந்து திட்டமிடும்
மாநில திட்டக்குழுவின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட
குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் - மின்வசதி!
கிராமப் புறங்களிலும் வீட்டுவசதி!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை!
பசுமைப் புரட்சியில் முதலிடம்!

இந்தத் திட்டங்கள்
இன்றையத் தலைமுறைக்கு நன்மை நல்க
நாளையத் தலைமுறைக்கும் நல்வாழ்வு அளித்திட
தமிழகத்தில் பொற்காலம் அமைந்திட
நாம் ஆற்றவேண்டிய பேருதவி

சீரான வாழ்வுக்கு மட்டுமல்ல
சிறு குடும்பம்—
செழித்திடும் நன்மைகளை-நாட்டில்
நிலைத்திடச் செய்ய

அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.

குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு




[illegible]

[illegible]

[illegible]





[illegible]





[illegible]

[illegible]

[illegible]

[illegible]









[illegible]



# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்



செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசிய மானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 ☐ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 ☐ Post Bag 5247, சென்னை 2.



[illegible]









[illegible]



[illegible]



[illegible]







குடியரசு — திராவிடநாடு கேட்டோம் —
இந்தியக் குடியரசின்
பொறுப்புக்களை, ஏற்ற
மாநிலங்களுள் ஒன்று
[illegible] [illegible] இந்தியப்
பெருநாட்டின் ஒருமைப்பாட்டை
[illegible] கேட்டோம் —
[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
கேட்கின்றோம்!

[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
[illegible] — [illegible] —
[illegible]; [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible]
குடியரசு [illegible] [illegible]
எடுத்துக் கொள்வோம்.

வணக்கம்.

[illegible signature]

(முதல்வரின் வானொலி உரை. 26-1-73)



# தியாகத்தைப் போற்றிடுவோம்!

# தியாகிகளை மதித்திடுவோம்!

இன்று நடைபெறுகின்ற இந்த விழா எவ்வளவு உணர்ச்சியை — உற்சாகத்தை நம்முடைய உள்ளத்திலே ஏற்படுத்துகிறது என்பதனை நம்முடைய ஆளுநர் அவர்களும் நாவலர் அவர்களும் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்திய நாடு விடுதலை பெற்ற 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா நிறைவு விழாவை நாம் கொண்டாடுகிற நேரத்தில் இந்த ஓராண்டுக் காலத்திலே அரசின் சார்பில் தியாகிகளைப் போற்றுகின்ற அளவுக்கு—பாராட்டுகின்ற 'அளவுக்கு, எப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் செய்திருக்கிறோம் என்பதனை நீங்கள் வெகு நன்றாக அறிவீர்கள்.

இந்தியப் பொன்னாடு முழுவதும் இன்றைய நாள் மிகக் குதூகலமாகக் கொண்டாடப்படுகிறது என்கிற போதிலும்—விழாக்கோலத்திற்கு இடையிலே இன்றைக்கு நாட்டிலே இருக்கிற நிலைமைகளையும் எண்ணிப் பார்த்து—அவைகளைக் களைந்தெறிவதற்கான வழிமுறைகளைக் காணவும்—அந்த முறைகளைத் தயவு தாட்சண்யமின்றிச் செயல்படுத்தவும்—ஆளுகின்றவர்களும் — ஆளப்படுகின்றவர்களும் உறுதியேற்கச் சூளுரை மேற்கொள்ள 'வேண்டிய நாள் இந்நாளாகும்!

இந்த நாளில், மூதறிஞர் ராஜாஜி அவர்களுடைய பெயரால் அமைந்துள்ள இந்த மாமன்றத்தில்—நாட்டின் விடுதலைக்காகப் போரிட்ட தியாகச் செம்மல்களாம் உங்களை எல்லாம் காண்பதிலும்—உங்களுக்கெல்லாம் வணக்கம் செலுத்துவதிலும்—இந்த நாட்டின் மண்ணுக்குச் சுதந்தரம் பெற்றுத் தந்த உங்களது வீரத் திருவடிகளுக்குத் தொழுகை நடத்துவதிலும் நான் இந்த நாட்டின் குடிமகன் என்கின்ற முறையிலே பெருமை அடைகின்றேன்—கௌரவம் கொள்கின்றேன்.

இந்த அரசு தியாகிகள்பால் எவ்வளவு பற்றும், பாசமும், அன்பும் கொண்டு நடந்து வருகிறது என்பதைக் கடந்த காலப் பல்வேறு சாதனைகள் எடுத்து விளக்கிக் கொண்டிருக்கின்றன.

தியாகிகளுடைய பட்டியலை நம்முடைய நாவலர் அவர்கள் இரண்டு பெரிய புத்தகங்களாக இங்கே வெளியிட்டு அதை ஆளுநர் அவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பட்டியலைத் தயாரிப்பதற்காக 1964-ஆம் ஆண்டிலேயே தமிழக அரசு முயற்சி எடுத்துக்கொண்டு — அந்த முயற்சி நல்ல வெற்றிக் கனியாக ஆகின்ற அளவுக்கு இந்தப் பட்டியலைத் தயாரித்துக் கொடுத்த செல்வி விஜயலட்சுமிக்கும் அவர்களோடு ஒத்துழைத்த ஏனைய குழுவின் உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது வெறும் பெயர்ப் பட்டியல் கொண்ட புத்தகம் மட்டுமல்ல. இந்திய நாட்டினுடைய தியாக வரலாற்றுப் புத்தகமாகும். அந்தப் புத்தகத்தைத் தான் இங்கே நாவலர் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளில் சுப்பிரமணியன், கந்தன், கந்தசாமி என்றெல்லாம் பெயர்கள் இருக்கலாம். ஆனால் ஏறத்தாழ 15 ஆயிரம் பெயர்கள் அடங்கிய அந்தப் புத்தகங்களில்—கந்தன், கந்தசாமி, சுப்ரமணியம் என்பதல்ல அதில் உள்ள பெயர்கள். எல்லாப் பெயர்களுக்கும் உள்ள ஒரே பெயர், இந்திய நாட்டின் மண்ணுக்காகப் போராடிய 'தியாகி, தியாகி, தியாகி' என்பதுதான் அதன் பொதுப் பெயராகும்!

அந்தப் பொதுப் பெயர் இணைந்து தான்—தொகுக்கப் பெற்றதுதான் இங்கே வெளியிடப்பட்ட புத்தகமாகும்.

தமிழக அரசு, பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலே பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு—தியாகிகளுக்காகச் செய்யப்பட வேண்டிய காரியங்கள் செய்யப்படுமா என்கின்ற ஐயப்பாடு சிலருக்கு எழுந்த நேரத்தில்—அதற்கு உதட்டளவிலே இல்லாமல்—செயல் அளவிலே சாதனையைச் செய்து காட்டியவர்—எங்களையெல்லாம் பயிற்றுவித்த பேரறிஞர் அண்ணா அவர்கள்!

கிட்டத்தட்ட இந்த நான்கைந்து ஆண்டுகளில் தமிழகத்திலே உள்ள 7500 தியாகிகளுக்கு மானியம் வழங்கி வருகிறோம்.

தொடக்கத்திலே ரூ. 50 மானியம் என்றிருந்தாலும் வெள்ளி விழா ஆண்டுத் தொடக்கத்தின் போது — சென்ற ஆகஸ்ட் மாதம் சட்டப் பேரவையிலே அறிவித்த தற்கிணங்க அந்த ரூ. 50, இன்றைக்கு ரூ. 75 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதனை அறிவீர்கள்.

தில்லையாடி வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி போன்றவர்களுக்கு — தென் ஆப்பிரிக்காப் போராட்டத்திலே உத்தமர் காந்தியடிகளோடு உடனிருந்து கலந்து கொண்ட அந்த உத்தமத் தியாகிகளுக்கு அவர்களுடைய மூதாதையர் வாழ்ந்த திருநகரம்—தில்லையாடியில்—வள்ளியம்மை நகரென்றும், நாகப்பன், நாராயணசாமி பெயரால் நினைவுச் சின்னங்கள் என்றும் இந்த அரசு அமைத்திருப்பதையும் நீங்கள் உணர்வீர்கள்.

பழம் பெரும் தியாகிகளை எல்லாம் தமிழக அரசு அலட்சியப்படுத்தி விடாமல்—அவர்களுடைய குடும்பப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு ஆவன செய்து வந்திருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். அது மாத்திரமல்லாமல் செக்கிழுத்த சிதம்பரனாருக்குச் சிலை—கவிச்சக்கரவர்த்தி பாரதியாருக்குச் சிலை என்பது போல் இந்த அரசு தியாகிகளை எல்லாம் மதித்திருக்கிறது.

என்றைக்கோ தியாகி சிதம்பரனாரால் இழுக்கப்பட்டு—எங்கேயோ ஒரு மூலையில் கிடத்தப்பட்டு — சீந்துவாரற்றுக் கிடந்த அந்தச் செக்கை எடுத்து—இன்றைக்குச் சென்னை மாநகரத்தில்—அனைவரும் காணத்தக்க வகையில் ஓர் அழகான இடத்தில் சிதம்பரனார் இழுத்த செக்கை வைத்திருக்கின்ற பெருமையை இந்த அரசு பெற்றிருக்கின்றது என்று சொன்னால்—அது அந்தத் தியாக சீலனிடத்தில் நாம் கொண்டிருக்கிற அன்பின் அடையாளமாகும்.

இந்த விழாக்கள் கட்சிச் சார்பற்ற முறையிலே நடைபெற வேண்டும் என்பது என் ஆசை. அந்தக் காரணத்தினாலேதான் நான் முதலமைச்சர் பொறுப்பையேற்ற பிறகு கடந்த நான்கைந்து ஆண்டுக் காலமாக ஆகஸ்டு 15 அன்று மாலை நேரங்களில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்கின்ற கூட்டம் ஒன்று நடத்த வேண்டுமென்று திட்டமிட்டு அவ்வாறு செய்யப்பட்டு வந்தது.

நான் எல்லாக் கட்சிகளுக்கும் ஒவ்வோர் ஆண்டும் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். இந்த ஒரு நாளை—கட்சிகளை மறந்து விட்டுக் கொண்டாடுவோம்: இந்த ஒரு நாளில் கட்சிகளை, காழ்ப்பு உணர்ச்சிகளை, மனமாச்சரியங்களையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, எல்லாரும் இந்தியர்—எல்லாரும் தமிழ்நாட்டுக்காரர்—எல்லாரும் தமிழர்கள்—எல்லாரும் இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் என்ற எண்ணத்தோடு கொண்டாடுவோம்: இந்த நாளை இந்திய நாட்டின் பொது நாளாகக் கொண்டாடுவோம். ஆகவே தனித்தனியாகக் கட்சிக் கூட்டங்கள் தேவையில்லை. இந்த நாளில், அனைவரும் ஒரே கட்சி—இந்தியாவின் கட்சி: என்று ஒன்றாகக் கொண்டாடுவோம் என்று வேண்டுகோள் விடுத்திருந்தேன்.

ஆனால், விடுத்த அந்த வேண்டுகோள் விழலுக்கு இறைத்த நீராகிவிட்டதே என்று வேதனைப்படாமல் என்னால் இருக்க முடியாது.

ஆனாலும் இந்த உருக்கமான எனது வேண்டுகோள் உயிரற்றுப் போய்விட்டது என்று எண்ணாமல், எதிர்காலத்திலாவது கட்சியினுடைய தலைவர்கள் எல்லாம் மீண்டும் கூடி யோசித்து, இந்திய அளவிலே இந்த ஒரு நாளைக் கட்சிச் சார்பற்ற முறையிலே அனைவரும் கொண்டாடுகின்ற ஒரு நல்ல நிலையை உருவாக்க வேண்டும். அதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு வேளை எனது வேண்டுகோளில் உள்ள மதிப்பு என்

**முதல்வர் கலைஞர்**


கன்னியாகுமரிக் கடலில் உள்ள பாறை யில் கட்டப்பட்டுள்ள விவேகாநந்தர் நினைவு மண்டபம் சுற்றுலாப் பயணி களைக் கவரும் தனிச் சிறப்புக் கொண்டது




நாயக்க மன்னர்களின் கட்டடக் கலைக்குச் சான்றாக விளங்கிவரும், மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை


திருமலை நாயக்கர்

மற்றொரு தோற்றம்


கன்னியாகுமரிக் கடற்கரையில் அண்ணல் காந்தியடிகளின் நினைவுக் காக எழுப்பப் பெற்றுள்ள காந்தி மண்டபம்

வயதின் காரணமாகக் குறைந்திருக்கலாம்.

ஆகவே என்னைவிட வயதிலே பெரியவர்கள் அத்தகைய வேண்டுகோளின் கர்த்தாக்களாகி, அந்த வேண்டுகோளுக்கு இந்திய நாட்டிலே இருக்கிற எல்லாக் கட்சிக்காரர்களும் இணங்கி வருவார்களேயானால் எங்களைப்போல மகிழ்ச்சி அடைபவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. இந்த நல்ல நாளில் எனது வேண்டுகோளைச் சிந்தித்துப் பார்த்திட வேண்டும். இந்திய அரசின் சார்பில் விடுதலை வீரர்களுக்குத் தாமிரப் பத்திரம் வழங்குகின்ற விழா சென்ற ஆண்டு நடைபெற்ற நேரத்தில், நம் தமிழகத்திலே மாத்திரம் இதுவரை 1922 தாமிரப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இன்றைக்குத் தமிழகம் முழுவதும் மத்திய அரசின் தாமிரப் பத்திரங்கள், 253 தாமிரப் பத்திரங்களாகத் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டால், 2175 தாமிரப் பத்திரங்கள் வழங்கி நிறைவு பெறுகின்றன என்று பொருளாகும்.

அதன்னியில் மூன்று மாதம் சிறை சென்றவர்கள்—தாமிரப் பத்திரங்கள் வழங்குவதற்குச் சில விதிமுறைகளுக்கு உட்பட்டாக வேண்டும் என்ற நிலையிலே உள்ளவர்களுக்கு, அந்த விதி தளர்த்தப்பட்டு—இதனைப் பெறுவதற்காகத் தகுதி பெற்றவர்கள் என்கின்ற அளவில் சிலர்'—எங்களுடைய முறையீடுகளை, ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசிடத்திலே கேட்டு மத்திய அரசு ஒன்றிரண்டை ஏற்றுக்கொண்டாலும், இந்த மூன்று மாதச்சிறைத் தண்டனைகளை ஏற்றுக் கொண்டதன் காரணமாக அவர்களுக்கிருந்த சங்கடங்களினால், நான் சட்டமன்றப் பேரவையிலும் மேலவையிலும் அளித்த உறுதிக்கிணங்க, தமிழக அரசின் சார்பிலேயே தியாகச் செம்மல் பட்டங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு முன் வந்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட பட்டயங்கள் தமிழக முழுவதும் இதுவரை எடுத்த கணக்கின்படிப் பத்தாயிரம் பட்டயங்கள் வழங்கப்பட இருக்கின்றன. மேலும் விவரங்கள் வந்தால் இன்னும் ஓராயிரம்—இரண்டாயிரம் கூடுதலாகலாம். அதற்காகும் செலவையும் இந்த அரசு பொருட்படுத்தப்போவதில்லை.

இன்றையத் தினம் மாத்திரம் 4749 பேருக்கு இந்தப் பட்டயங்கள் தமிழக அரசின் சார்பிலே வழங்கப்படுகின்றன. சென்னையிலே இன்றைக்கு 274 பட்டயங்கள் வழங்கப்படுகின்றன. அதைப் போலவே இன்றைக்குத் தாமிரப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

தாமிரப் பத்திரங்களைப் பெறுவதற்காக வந்தவர்களையும், தமிழக அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற தியாகச் செம்மல் பட்டயங்கள் பெறுவதற்காக வந்தவர்களையும், நான் வரவேற்று நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் வழங்குகிறோம். அதனால் எங்களையும் ஒரு பொருட்டாக மதித்து வந்ததற்காக நன்றி கூறிப் பாராட்டுகிறேன். அவர்களது நல்ல உள்ளங்களுக்கெல்லாம் என் வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கிறேன்.

தாமிரப் பத்திரங்களைப் பெறுகிறவர்களை விடத் தமிழக அரசின் பட்டயங்களைப் பெறுகின்றவர்கள் ஓரளவுக்குக் கொஞ்சம் அதிர்ஷ்டசாலிகள் என்று சொன்னால், தாமிரப் பத்திரங்கள் பெறுபவர்கள் பொறாமைப்படக் கூடாது. எதிர்காலத்திலே அவர்களுடைய பேரக் குழந்தைகள் இந்தி படித்திருந்தால்தான் இதில் என்ன இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் தமிழக அரசின் பட்டயங்களைப் பெறுகிறவர்கள் எதிர்காலத்தில் பேரன் பேத்திக் காலம் வரையில் படித்து என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். காரணம் நாங்கள் தருகின்ற பட்டயங்கள் தமிழில் தரப்படுகின்றன.

எப்போதுமே நம் எதிர்காலத்திலே வருகின்ற நம் வாரிசுகள், நம் பரம்பரையினர் நம்முடைய பாட்டன், பூட்டன் நம் குடும்பத்திற்கு எதைச் செய்து விட்டுப் போனான் என்று அக்கறை செலுத்துவதுண்டு! இன்றைக்கு கூட என் தகப்பனார் பயன்படுத்திய வெற்றிலைப் பெட்டியைப் பார்த்துப் பார்த்து, 'என் தகப்பனார் பயன்படுத்திய வெற்றிலைப் பெட்டி அல்லவா' என்ற உவகை எனக்குப் பிறக்கத்தான் செய்கிறது, அதைப்போலத்தான் ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கிற பேரன், பேத்திகள், தங்களது முன்னோர்கள் வைத்துவிட்டுப்போன பொருட்களை எடுத்துப்பார்ப்பதும், அந்தப் பசுமையான நினைவால் உள்ளம் உருகி நிற்பதும், உரிய இயல்பு.

அதைப்போலத்தான் இன்றைக்கு நீங்கள் பெறுகின்ற இந்தப் பட்டயங்களை உங்கள் வாரிசுகள் படித்துப்பார்த்து, 'ஆகா' நம் குடும்பத்திலே இந்த நாட்டைக் காப்பாற்றப் போரிட்ட ஒரு விடுதலை வீரன் இருந்திருக்கிறான் என்று புரிப்படைவதற்குப் பயன்படும் என்கிற அந்த வகையிலேதான், இந்தப் பட்டயங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

நீங்கள் நம் ஆளுநர் இங்கு கூறிய கருத்துக்களையெல்லாம் உள்ளத்திலே பதிய வைத்திருக்கிறீர்கள். நமது இந்தியாவின் பலத்தை — ஒற்றுமையை — வலிவை, நாம் என்றென்றும் நம் உணர்வுகள் கெடாமல், நம் உரிமைகள் பாதிக்கப்படாமல் பாதுகாத்து நிற்க வேண்டும் என்ற சூளுரையை இன்றையத் தினம் எடுத்துக் கொள்கிறோம்.

இந்த நன்னாளில், தமிழக அரசு மேலும் ஓர் அளவுக்கு விதிகளைத் தளர்த்தி, நேதாஜி படையிலே இருந்த ஐ.என்.ஏ. வீரர்களுக்கும், இந்தப் பட்டயங்கள் வழங்குவது ஒரு சிறப்பான அம்சமாகும்.

எப்படியும் இந்தியா விடுதலை பெற்றாக வேண்டும்! ஏன்—இப்படிப் பெற்றால் என்ன! என்று ஆர்த்தெழுந்தார் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். அவர்களுடைய படையிலே அணிவகுத்து எதிரிகளின் துப்பாக்கி முனைகளுக்கு ஈடு கொடுப்பதற்காக அன்றைக்குச் சென்ற வீரர்கள், இன்றைக்கு இந்தப் பட்டயங்களைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

மத்திய அரசின் தாமிரப் பத்திரத்தில் வெறும் தாமரை மலர் மாத்திரமே போடப்பட்டிருப்பதைக் காண்கிறீர்கள். மாநில அரசின் தமிழ்ப் பட்டயத்தில், அன்னம் ஒன்றும்—, யானை ஒன்றும் போடப்பட்டிருப்பதைக் காண்கிறீர்கள். அன்னம்போல் மென்மையாகவும் இருப்போம். எதிரிகள் வந்தால் யானைபோல் பலம் பெற்று இருப்போம் என்பதைக் குறிக்கின்ற விதத்தில் அந்த அடையாளங்கள்—இலச்சினைகள் பொறிக்கப்பட்டிருக்கின்றன என்பதனைத் தெரிவித்துப்பட்டயம் பெறும் அனைவரையும் வரவேற்று வாழ்த்துகிறேன்.

—15–8–73 அன்று ராஜாஜி மண்டபத்தில் ஆற்றிய உரை ●





# தமிழகத் தலைநகரில் விடுதலை நாள் விழா

இந்த ஆண்டு விடுதலை நாள், இந்தியாவின் இருபத்தாறாவது விடுதலைநாள் ஆகும். எனவே, இது வெள்ளி விழா, நிறைவு நாளாக நாடெங்கிலும் கொண்டாடப்பட்டது.

சென்னைக் கோட்டையில் 15—8—1973 அன்று காலை 8 மணி அளவில் மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்கள் நாட்டுக் கொடியை ஏற்றுவித்தார். அமைச்சர்களும், அரசு அலுவலாளர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் கொடி வணக்கம் செலுத்தினார்கள்.

அன்று காலை 10 மணி அளவில் இராஜாஜி மண்டபத்தில் மேதகு ஆளுநர் கே. கே. ஷா அவர்களின் தலைமையில் விடுதலை வீரர்களுக்கு மத்திய அரசின் தாமிரப் பத்திரம், தமிழ்நாடுஅரசின் தாமிரப் பட்டயம் ஆகியவை வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமையேற்ற ஆளுநர் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டார்:

''விடுதலைப் போராட்டத்தில் மூன்று மாதமோ ஆறு மாதமோ சிறை சென்றிருந்தாலும் அவர்களுக்கெல்லாம் தமிழக அரசு சிறப்புச் செய்ய முன் வந்துள்ளதை நினைத்து உள்ளம் பூரிக்கிறது.

''ஜனநாயகத்திற்கு மேலும் வலுவூட்டவே கட்சிகள் துணை புரிய வேண்டும். பெற்ற சுதந்தரத்தை எப்பாடு பட்டாகிலும் பேணிக் காத்துப் போற்ற வேண்டும்.''

ஆளுநர் உரைக்குப் பிறகு, டாக்டர் விஜயலட்சுமியின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவினால் உருவாக்கப்பட்டுள்ள 'விடுதலை வீரர்கள் யார், யார்?' என்ற இரண்டு தொகுப்புகளைக் கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் வெளியிட ஆளுநர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தொகுப்புகளை வெளியிட்ட நாவலர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''மைய அரசின் வேண்டுகோளுக்கு இணங்கத் தமிழ்நாட்டு விடுதலை வீரர்களின் வரலாற்றுத் தொகுப்புப் பணி 1964–ஆம் ஆண்டே மாநில அரசால் தொடங்கப் பெற்றது. பதினையாயிரத்திற்கு மேற்பட்ட விடுதலை வீரர்களின் வரலாற்றுக் குறிப்புகளைக் கோவைப்படுத்தித் தொகுத்து வெளியிடக் குழு ஒன்று நிறுவப்பட்டது. குறிப்புகளை மூன்று தனித்தனித் தொகுப்புகளாக வெளியிட முடிவெடுக்கப்பட்டு இன்று இரண்டு தொகுப்புகள் வெளியிடப்படுகின்றன. இந்தத் தொகுப்பு நூல்கள் வருங்காலத் தலைமுறையினரின் உணர்ச்சிக் களஞ்சியமாகத் திகழும் என்று நான் நம்புகிறேன்''

அதன்பிறகு, முதல்வர் கலைஞர் அவர்கள் விடுதலை வீரர்களுக்குத் தாமிரப் பத்திரமும் தாமிரப் பட்டயமும் அளித்து உரையாற்றினார்கள். (முதல்வரின் உரை முந்திய பக்கங்களில் வெளியாகியுள்ளது).

இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த 80 வயது நிறைந்த கருப்பையாத் தேவர் மற்றொருவரின் துணையோடு சிரமத்துடன் மேடைக்குச் செல்ல முயன்றபோது, அவரது நிலையை உணர்ந்த முதல்வர் கலைஞர் அவர்கள் மேடையை விட்டுக் கீழே இறங்கிச் சென்று அந்த முதியவருக்குத் தாமிர பத்திரத்தை வழங்கிய காட்சி, முதல்வரின் இரக்க உள்ளத்தை எடுத்துக் காட்டியது.

இந்திய நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத ஒரு புதுமையைத் தமிழகம் செய்துள்ளது.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்துப் போர்க் கொடி ஏந்திய நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அமைத்த இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த வீரர்களுக்குத் தமிழக அரசு தாமிர பட்டயம் வழங்கிப் பெருமைப் படுத்தியதுதான் அந்தச் சிறப்பு.

விருது பெற வந்த இ.தே.ரா. வீரர் சிலர் காக்கி உடையில் வந்து நின்று, 'சல்யூட்' அடித்து விருது பெற்ற நிகழ்ச்சி அனைவரின் இதயங்களையும் கவர்ந்துவிட்டது.

பத்திரம், பட்டயம் பெற்றவர்களின் சார்பில் திரு ஆர். வி. சாமிநாதன், எம். பி, அவர்களும், சட்டமன்ற மேலவை உறுப்பினர் சக்திமோகன் அவர்களும் நன்றி தெரிவித்துப் பேசினர்.

திரு ஆர். வி. சாமிநாதன், தமது உரையில் குறிப்பிட்டார்:

''தியாகிகளைப் போற்றிச் சிறப்பிப்பதில் தமிழக அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை இந்த விழா தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

''நாட்டு விடுதலைப் போராட்டக் காலத்தில் ஆறு மாதத்திற்கும் குறைவாகச் சிறைத் தண்டனை பெற்ற தியாகிகளை இதுவரை எந்த மாநில அரசும் சிறப்பிக்கவில்லை. தமிழ்நாடு அரசுதான் அவ்வாறு செய்திருக்கிறது. தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இதில் முந்திக் கொண்டுவிட்டார்.

நன்றி உரை—தமிழக அரசின் சாதனைக்குச் சூட்டிய பாராட்டு உரையாகத் திகழ்ந்தது—தமிழ்நாடு எல்லா நற்பணிகளிலும் பிறமாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது என்ற கருத்து மெய்யானதுதான் என்பதற்குச் சான்றுரையாக அமைந்தது.

மொத்தத்தில் பட்டயம் வழங்கும் விழா—தமிழக வரலாற்றுப் பட்டயத்தில் பாங்காக இடம் பெற்ற விழாவாக அமைந்துவிட்டது!



## இந்திய விடுதலை வெள்ளி விழா நிறைவு நாள்.

இந்திய நாட்டு விடுதலையின் வெள்ளி விழாவையொட்டி விடுதலைப் போரில் ஈடுபட்டு 6 மாதங்களுக்குக் குறையாமல் சிறை சென்ற தியாகிகளைப் பாராட்டுமுகத்தான் அவர்களுக்குத் தாமிர பத்திர விருது அளிக்க இந்திய அரசு முடிவு செய்து, இதுவரை தமிழ்நாட்டில் 1922 தியாகிகளுக்குத் தாமிர பத்திரம் வழங்கப்பட்டுள்ளது. 15-8-72-ல் தமிழ் நாடெங்கும் நடைபெற்ற விழாவில் 553 தியாகிகள் தாமிர பத்திரம் பெற்றனர்.

சுதந்திரப் போரில் ஈடுபட்டுள்ள எல்லா தியாகிகளுக்கும், அவர்கள் சிறைத் தண்டனை அனுபவித்த காலவரம்பு பாகுபாடின்றி தாமிர பத்திரம் வழங்க வேண்டுமென்று பல கோரிக்கைகள் வந்தன. இக்கோரிக்கைகளுக்கிணங்க, விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைத் தளர்த்தி, எல்லோருக்கும் தாமிர பத்திரம் வழங்க வேண்டுமென்று இந்திய அரசை, இம்மாநில அரசு கேட்டுக் கொண்டது. ஏற்கனவே இத்திட்டத்தின்கீழ் பல பிரிவினர் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அதனால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைத் தளர்த்த இயலாதென்றும் இந்திய அரசு அறிவித்துள்ளது. எனவே தமிழக அரசே மூன்று மாதங்களுக்குக் குறையாமல் சிறைத் தண்டனை பெற்ற தியாகிகளுக்கும், முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தினர் அனைவருக்கும், வருமான வரம்புப்பாகுபாடின்றிப் பட்டயம் வழங்க முடிவு செய்தது.

15-8-73 அன்று எல்லா மாவட்டத்தலைநகர்களிலும் மாவட்ட ஆட்சியாளர்கள் பட்டயம் வழங்கினார்கள். சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் ஆளுநரின் தலைமையில் தமிழக முதல்வர் அவர்கள் பட்டயம், தாமிர பத்திரம் விருதுகளை வழங்கினார்கள்.

15-8-73 அன்று நடைபெற்ற விழாவில் மாவட்ட வாரியாக தாமிர பத்திரம், பட்டயம் பெற்ற தியாகிகளின் பட்டியல் விவரம் வருமாறு:—

### 15-8-1973 அன்று தாமிர பத்திரம் பெற்ற தியாகச் செம்மல்கள்.

| மாவட்டம். | | 25-7-73 வரை. | 15-8-73 அன்று. |
|---|---|---|---|
| 1. | சென்னை ... | 227 | 16 |
| 2. | செங்கற்பட்டு ... | 79 | 1 |
| 3. | வட ஆர்க்காடு ... | 157 | 23 |
| 4. | தென் ஆர்க்காடு ... | 79 | 1 |
| 5. | மதுரை ... | 204 | 34 |
| 6. | இராமநாதபுரம் ... | 206 | 41 |
| 7. | திருச்சி ... | 128 | 7 |
| 8. | தஞ்சாவூர் ... | 216 | 21 |
| 9. | சேலம் ... | 115 | 9 |
| 10. | தர்மபுரி ... | 28 | 6 |
| 11. | திருநெல்வேலி ... | 151 | 11 |
| 12. | நீலகிரி ... | 20 | ... |
| 13. | கன்னியாகுமரி ... | 18 | 19 |
| 14. | கோயம்புத்தூர் ... | 294 | 64 |
| | மொத்தம் | 1,922 | 253 |

### 15-8-73 அன்று பட்டயம் பெற்ற தியாகச் செம்மல்கள்.

| மாவட்டம். | | எண்ணிக்கை. |
|---|---|---|
| 1. | சென்னை ... | 274 |
| 2. | செங்கற்பட்டு ... | 127 |
| 3. | வட ஆர்க்காடு ... | 89 |
| 4. | தென் ஆர்க்காடு ... | 246 |
| 5. | மதுரை ... | 200 |
| 6. | இராமநாதபுரம் ... | 1,050 |
| 7. | திருச்சி ... | 516 |
| 8. | தஞ்சாவூர் ... | 1,652 |
| 9. | சேலம் ... | 183 |
| 10. | தர்மபுரி ... | 27 |
| 11. | திருநெல்வேலி ... | 214 |
| 12. | நீலகிரி ... | 19 |
| 13. | கன்னியாகுமரி ... | 26 |
| 14. | கோயம்புத்தூர் ... | 126 |
| | மொத்தம் ... | 4,749 |







பிறநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு
வியப்பை விருந்தாக்கும் மாமல்ல
புரத்துச் சிற்பங்கள்



வேடந்தாங்கலில் சரண்புகுந்து பறந்து
மகிழும் வெளிநாட்டுப் பறவைகள்



கொடைக்கானல் மலைக்கு எழிலூட்டும்
ஓங்குநீர் வெள்ளருவி (Silver Cascade)



கிளிஞ்சல்களினால்
உருவாக்கப்பட்டுள்ள
எழில்மிகு பொம்மைகள்





மதுரையில்
நடைபெற்ற
ஜல்லிக்கட்டு



ரேக்ளா பந்தயங்கள்




# மீன் பிடித்தலைத் தொழில் மயமாக்குவோம்

"பிழைப்புக்காக மீன் பிடித்தல்" என்றிருந்த் நிலைமை மாறி, "மீன் பிடித்தல் ஒரு தொழில்" என்ற நிலைமை விரைவாக மலர்ந்து வருகின்ற இந்த நேரத்திலே, தமிழ்நாடு அரசின் மீனளத் துறை, கடல் பொருள் உற்பத்தியை மேம்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் பற்றி விவாதித்து, பயன்தரும் முடிவு காண வேண்டும் என்ற நோக்குடன் "தமிழ்நாடு கடல்வளப் பெருக்கக் கருத்தரங்கை" ஏற்பாடு செய்திருப்பது அறிந்து மன மகிழ்வு அடைகின்றேன். பொதுத் துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளும், பல்வேறு நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகளும், தொழிலில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள நிருவாகிகளும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டுள்ளதை அறிந்து என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொழிலின் பல்வேறு கூறுகளிலும் சிறந்த அனுபவம் பெற்றுள்ள நீங்கள் இரண்டு நாள் நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில், தமிழ்நாட்டின் கடல் வளப் பெருக்கத்திற்கு உகந்த உத்திகளைப் பயன்படுத்தித் தமிழ்நாடு அரசு திட்டமிடுவதற்குப் பயனுள்ள யோசனைகளைக் கூறி உதவுவீர்கள் என்று நம்புகின்றேன்.

நீண்ட காலமாகப் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு மீன்பிடித்தல் ஒரு பிழைக்கும் வழியாகவே இருந்து வந்துள்ளது. மீன் பிடித்தலை ஒரு தொழிலாக—நவீன மயமாக்கும் முயற்சியில் நாம் விரைவாக மேற்கொள்ளும் மேம்பாட்டுப் பணிகள், பரம்பரையாக மீன் பிடித்து வாழ்ந்து வரும் மீனவப் பெருமக்களுக்குப் பெருஞ் செலவை ஏற்படுத்துவனவாக இருக்கக் கூடாது! மீன்பிடிக்கும் தொழிலை நவீன மயமாக்குவதால் மீனவ சமுதாயத்தினரின் வாழ்வு பாதிக்கப்படாமல் இருக்க வகை செய்யும் முகத்தான், மேம்பாட்டுத் திட்டங்களின் அமைப்பில் பெரும்பாலான மீனவப் பெருமக்கள் பயன்பெறுவதற்குத் தமிழ்நாடு அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. இதன் காரணமாகவே, மீன் பிடிப்பதற்காக விசைப் படகுகளையும், பிடிக்கும் மீன்களின் அளவு கணிசமாக உயருவதற்காக இதர நவீன சாதனங்களையும மீனவப் பெரு மக்களுக்குத் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு மீனவர்களுக்குக் கடனுதவி செய்தும் வருகிறது. பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாத்துச் சேமித்து வைப்பதற்காகச் சில குளிர்பதன நிலையங்களையும் தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

நமக்கு மிக மிக இன்றியமையாது தேவைப்படும் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கும், உள்நாட்டுத் தேவையை ஈடு செய்வதற்கும் தேவையான உபரி நிலைமையை உருவாக்க வேண்டி மீன் பிடிக்கும் தொழிலை நவீன மயமாக்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டுள்ளதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய நேரம் வந்து விட்டது. இக்குறிக்கோளை எய்திடக் கடலோரப் பகுதிகளிலும், ஆழ்கடல் பகுதிகளிலும் பெருமளவில் மீன் பிடிப்பதற்கு உதவிடும் விசைப் படகுகளும், இழுவைகளுஃ நமக்கு ஏராளமாகத் தேவைப் படுகின்றன.

கடல் மற்றும் உள்நாட்டு மீன் வளத்தைப் பெருக்குவதற்குரிய வசதியையும், வாய்ப்பினையும் தமிழ்நாடு நிறையப்பெற்றுள்ளது. 1,000 கிலோ மீட்டர் கடற்கரையும் 35,000 சதுர கிலோ மீட்டர் கடற் பரப்பையும் பெற்றுள்ளதால், தமிழ்நாட்டில் கடல் மீன் வளத்தைப் பெருக்கப் பெரும் வாய்ப்பு உள்ளது! மேலும், தமிழ்நாட்டில் உள்நாட்டு மண்வளத்தைப் பெருக்குவதற்குரிய ஆதாரங்களான—எப்பொழுதும் நீர் தேங்கி நிற்கக்கூடிய ஏராளமான பெரிய நீர்த்தேக்கங்களும், பருவ மழைக் காலத்தில்





ல்லெல்லாம் கதை சொல்லும்
கடல் மல்லையில் வெளிநாட்டுச்
சுற்றுலாப் பயணிகளை
நாளும் காணலாம்




சுற்றுலாத் துறை என்பது தொழில் துறையை விட, அதிக வருமானம் தரத்தக்க வலிவுள்ள துறையாகும். சுற்றுலாத் துறைக்குச் செலவிடப்படுகிற பணம் அந்த நாட்டு மக்களுடைய—அரசுடைய வருமானத்தை நான்கு மடங்காகப் பெருக்கிப் பொருளாதார முன்னேற்றத்தை உண்டாக்குவதாக இருந்து வருகிறது.

உலகில் பல நாடுகள், குறிப்பாக ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற நாடுகள் பெரும்பாலும் சுற்றுலாத்துறை வருமானத்தின் மூலமே நல்ல பலனை இன்று அனுபவித்து வருகின்றன.

ஒரு நாட்டின் சுற்றுலாத் துறைக்குப் பயணிகளைக் கவர்ந்திடப் புராதனச் சின்னங்கள், சிற்பங்கள், எழில்மிகு நீர்வீழ்ச்சிகள், வனப்பு மிக்க மலைத் தொடர்கள், கடலோரப் பகுதிகள் மிகமிக முக்கியமாகத் தேவைப்படுவதோடு, அந்த நாட்டில் ஏற்ற தட்ப வெப்ப நிலையும், வரலாற்றுச் சிறப்பும் இருந்திடல் வேண்டும்.

இந்த அடிப்படையில், இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு கலை, மொழி, நாகரிகக் கலாச்சாரத் தொடர்புடைய புராதனச் சின்னங்கள், சிற்பங்கள் நிறைய இருக்கின்றன. குறிப்பாகத் தமிழ் நாட்டில் மிகத் தொன்மையான, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய, திராவிட நாகரிகத்தை விளக்கிடும் புராதனச் சின்னங்களும், சிற்பங்களும், கோயில்களும், கட்டடங்களும் மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கின்றன. அவை மட்டுமல்லாது தமிழ்நாட்டின் மூன்று பக்கங்களும் கடல் சூழ்ந்து இயற்கையான—உலகிலேயே சிறந்தவையாகக் கருதப்படும்—கடற்கரைகளும், குற்றாலம், சுருளி, ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிகளும், உதகை, கோடை, ஏர்க்காடு போன்ற மலைவாழ் நிலையங்களும், முதுமலை, ஆனைமலை, முண்டன் துறை (நெல்லை) வனவிலங்கு இல்லங்களும், வேடந்தாங்கல், கோடிக்கரை பறவைச் சரணாலயங்களும், அதிகக் குளிரோ, அதிக வெப்பமோ இல்லாத தன்மையான தட்ப வெப்ப நிலையும் தமிழகத்தில் நிறைந்திருக்கின்றன.


சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு ஏ.வி.பி.ஆசைத்தம்பி

இத்தகைய சிறப்பு மிக்க இந்தியத் துணைக்கண்டத்திற்கு 1971-ஆம் ஆண்டு 3,00,995 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வந்ததாகவும், அவர்கள் மூலம் இந்தியாவுக்குக் கிடைத்த வருமானம் ரூ. 40 கோடி என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. அந்த மூன்று இலட்சம் வெளிநாட்டுப் பயணிகளில், தமிழ்நாட்டுக்கு 38,074 வெளிநாட்டுப் பயணிகள் மட்டும் வருகை தந்திருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு இந்தியாவில் இருக்கிற சிறப்பு அம்சங்களைப் போல், உலகில் வேறுநாடுகளில் கிடையாது. என்றாலும் மற்ற நாடுகளுக்கு இதே 1971-ஆம் ஆண்டு அதிகப்பயணிகள் சென்றிருப்பதாகவும், அதன் மூலம் நம்மை விடப்பன்மடங்குஅதிகவருமானம் அந்நாடுகளுக்குக் கிடைத்திருப்பதாகவும் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இதிலிருந்து இந்தியாவில் என்னதான் சிறப்புகள் இருந்தாலும், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏதோ சில குறைகள் இருப்பதால்தான் அதிகமாக வரவேண்டிய சுற்றுலாப் பயணிகள் வராமலிருக்கின்றனர் என்ற உண்மை தெரிகிறது.

இந்தியாவில் சுற்றுலாப் பயணிகள் தங்க வசதியான ஓட்டல்களும், போக்கு வரத்து (கார், விமானம்) வசதிகளும் சரிவரச் செய்துகொடுக்கப்பட்டுப் போதிய விளம்பரமும் உலகில் செய்தால் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவுக்கும் அதிகமாக வருவார்கள் என்பதை உணர்ந்து, இன்று இந்திய அரசாங்கம் நவீன ஓட்டல்களைத் தானே அமைப்பதிலும், இதர மாநிலங்களை அவ்வாறு கட்டத் தூண்டுவதிலும், விமானப் போக்குவரத்தை விரிவாக்குவதிலும் ஈடுபட்டுள்ளது.

1966 வரை தமிழகத்தில் சென்னை நகரில் ஓரிரண்டு நட்சத்திர ஓட்டல்கள் மட்டுமே இருந்தன. தமிழகத்தில் அரசுத் துறையில் திருச்சி, மதுரை, உதகை ஆகிய மூன்று இடங்களில் மட்டுமே சுற்றுலா மாளிகைகள் இருந்தன.

1971-ல் சுற்றுலாத் துறையின் முக்கியத்துவத்தைத் தமிழக அரசு உணர்ந்து இதற்கென்று தனி அமைச்சகத்தையும், தனிக் கழகம் ஒன்றையும் அமைத்துச் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான காரியங்களைச் செய்ய முனைந்தது. இதன் பலனாகக் கன்னியாகுமரி, திருச்செந்தூர், குன்னூர், கொடைக்கானல், ஏர்க்காடு போன்ற இடங்களில் சுற்றுலா மாளிகைகள் பயணிகளுக்காகத் திறக்கப்பட்டுள்ளன.

நீர் பிடிக்கக் கூடிய குளங்களும், சில ஆற்றுப் பள்ளத்தாக்குகளும், உப்பங் கழிகளும் நிறைந்துள்ளன. நீண்டு கிடக்கும் நமது கடலோரப் பகுதிகளில் மட்டுமே தற்போது மீன் பிடிக்கப்பட்டு வருகிறது. கடற்கரை ஓரத்திலும், கடற்கரையின் வெகு தூரத்தில் உள்ள ஆழ்கடலிலும் இருந்து 9 இலட்சம் டன்னிற்கும் மேற்பட்ட அளவு மீன் பிடிக்க முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பெரும் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவே, சாதாரண முறையில் மீன் பிடிக்கப் பட்டு வருவதற்கு உதவும் வகையிலும், படிப்படியாகக் கடல் மீன் பிடிப்பதை இயந்திர மயமாக்கிடவும் வழி வகுக்கும் ஒரு பேராவல் திட்டத்தைத் தமிழ்நாடு துவக்கியுள்ளது.

இது வரை மீன் பிடிக்கப் படாத இடங்களைக் கண்டு பிடித்து மிகவும் திறமையானதும் அதே நேரத்தில் குறைந்த செலவில் செய்யப்படக் கூடியதுமான படகுகள், 'கியர்' மற்றும் இதர சாதனங்களை உருவாக்குவது, அந்நியப் பொருள்களையே நம்பி இருக்காமல், நம் நாட்டிலேயே தகுந்த இறக்குமதி மாற்றுப் பொருள்களைக் கண்டு பிடித்து மீன் பிடிப்பதில் இயந்திர மயமாக்குவதை அதிகப்படுத்துவது ஆகியவற்றின் மூலம் கடல் மீன் பிடிப்பைப் பெருக்குவதே நமது கொள்கையாகும். இவைகளின் மூலம் கடலில் வெகுதூரம் சென்று, ஆழ்கடலில் உள்ள மீன்களையும் தற்பொழுது பிடிக்கப்படுவதைவிட அதிக அளவில் பிடிக்க முடியும். உள்நாட்டு உணவுத் தேவைக்கான மீன்களைப் பாதுகாத்தல், பதப்படுத்தல் ஆகியவற்றில் தொழில் நுட்பங்களை மேம்படுத்துவது, சேதாரத்தைக் குறைப்பது, பொருளாதாரச் சிறப்பற்ற மீன் வகைகளை முழு அளவில் பயன்படுத்துவது போன்றவற்றில் மிகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

மீன் பிடிக்கும் தொழிலில் மேம்பாடு அடைந்துள்ள நாடுகளில் மீன் பிடிக்கும் தொழிலை விரிவுபடுத்துவதற்குப் பல்வேறு நோக்கங்கள் இருக்கலாம். பொருளாதார சமநிலைப் படுத்துவதும், கடலோரப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் அந்நோக்கங்களில் இடம் பெற்றிருக்கலாம். அதிக அளவில் உணவு கிடைக்கச் செய்வதே அந்த நோக்கங்களில் மிகவும் முக்கியமானதாகும். வளர்ந்து வரும் நாடுகளில் வாழும் மக்களின் உணவில் மீன் முக்கிய இடம் பெறுகிறது. எனவே, மீன்களைப் பிடிப்பது, பதப்படுத்துவது, விற்பனை செய்வது ஆகியவற்றில் மேம்படுத்துவதும், நவீனப் படுத்துவதும் மிகவும் இன்றியமையாததாக உள்ளன. இம்மேம்பாட்டுப் பணிகளில் பலவற்றிற்கு அரசின் ஊக்குவிப்பும், சிலவற்றிற்கு முதலீடும் தேவைப் படுகிறது!

மேற்கூறிய குறிக்கோள்களை எய்தித், தமிழ்நாடு அரசு சிறப்பாக இரு தொழில்களை வளர்த்து வருகிறது. அவைகளின் மூலம், நமது கடல் பகுதிகளில் ஆழ்கடல் மீன் பிடிப்பதை ஊக்குவிப்பதற்கு வழிகோல முடியும்! விசைப் படகுகளுக்கு டீசல் இயந்திரங்கள் ஏராளமாகத் தேவைப்படுவதால், கடலில் பயன்படுத்துவதற்குரிய டீசல் இயந்திரங்களை உற்பத்தி செய்யும் திட்டத்தைத் துவக்கிடத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இத் திட்டத்திற்கு 3 கோடி ரூபாய் மூலதனமிட வேண்டியிருக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இத் திட்டம் எண்ணூரில் துவக்கப் படக்கூடும். தமிழ்நாடு மேம்பாட்டு நிறுவனம் (TIDCO) இத்திட்டத்திற்கான அனுமதியை முன்பே பெற்றுள்ளதுடன், இத்திட்டத்தைத்துவக்கிட ஆவன செய்து வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான தகுந்த தொழில் நுட்பக் கூட்டுறவும் பெறப்படும்.

தற்பொழுது, கடலோர மீன்பிடிப்பிலிருந்து, ஆழ் கடல் மீன் பிடிப்பில் கவனம் செலுத்தப்படுகிறது. ஆழ் கடல் மீன் பிடிக்க உதவும் இழுவைகள் ஏராளமாகத் தேவைப்படுகின்றன. இத்தகைய இழுவைகளைத் தொடர்ந்து இறக்குமதி செய்வதால், நமது அந்நியச் செலாவணி பாழாகிறது, ஆழ்கடல் மீன் பிடிக்க உதவும் இழுவைகளை நாமே தயாரித்துக் கொள்ளும் வகையில் மண்டபத்தில் அத்தகைய இழுவைகளை உற்பத்தி செய்ய தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது, அந்த நிலையம் கடலில் மீன்பிடிக்க உதவும் விசைப்படகுகளைப் பாராமரித்தல், பழுது பார்த்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளும். அதன் மூலம் அந்நியச் செலாவணியையும் ஈட்ட முடியும். அந்நிலையத்தை அமைத்திட ஏறத்தாழ 1.5 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இவ்விரு நிலையங்களும் அமைக்கப்படுவது, தமிழ்நாட்டில் இயந்திரம் மூலம் மீன் பிடிப்பதில் துரித முன்னேற்றம் ஏற்படுத்துவதற்கு வழி வகுக்கும்!

மீன் பிடித்தலைப் பெருமளவு இயந்திரமயமாக்க, படகுகள் வந்து தங்குவதற்குரிய வசதிகள் தேவை. இத்தேவையை ஈடு செய்யவே தமிழ் நாடு அரசு மீன் பிடி துறைமுகங்களை அமைப்பதில் தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. படகுகள் கரை வந்து சேருவதற்கும் தங்குவதற்கும் உரிய வசதிகளை விரிவு படுத்த ஐந்தாவது திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

பிடிக்கப்படும் மீனின் அளவை நாம் அதிகப் படுத்தும் பொழுது, மீன்களைப் பதப்படுத்திச் சேமித்து வைக்கப் போதிய வசதி இல்லாத பிரச்சினை எழுகிறது. குளிர்பதன நிலையங்கள் ஏராளமாக அமைக்கப்படுமானால், இப்பிரச்சினை தீர்ந்து விடும்! 'சிப்காட்' எனப் படும் மாநிலத் தொழில் ஊக்குவிப்புக் கழகம் சென்னைக்கு அருகில் ஒரு குளிர் பதன நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு நிதி உதவி செய்யவிருக்கிறது. இத்திட்டம் குளிர்பதன நிலையம் அமைப்பதுடன், ஆழ்கடல் மீன் பிடிக்க உதவும் இழுவைகளை வாங்கவும் வழி வகுக்கும். 28 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படவிருக்கும் இத்திட்டத்தின் பயனாய் 180 மெட்ரிக் டன் இறால்களை ஏற்றுமதி செய்யவும், 350 மெட்ரிக் டன் இதர வகை மீன்கள், 400 மெட்ரிக் டன் உப்பிட்ட மீன்கள், ஆகியவைகளை உள்நாட்டில் விற்பனை செய்யவும் இயலும்.



1973-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் புழக்கத்திலிருந்த ரூபாய் நோட்டுக்களின் மதிப்பு ரூ. 4,915 கோடி ஆகும். இந்தத் தொகையில், 224 கோடி மதிப்புள்ள ரூபாய் நோட்டுகள் வங்கிகளிடமிருந்தன. மீதமுள்ள 4,691 கோடி ரூபாய் நோட்டுகள் பொது மக்களிடம் புழக்கத்தில் இருந்தன.

* * *

வங்கிகள் நாட்டுடைமை செய்யப்பட்ட பொழுது மொத்தம் 8,262 வங்கி அலுவலகங்கள் இருந்தன. 1972-ஆம் ஆண்டில் 14,739 வங்கி அலுவலகங்கள் இருந்தன. அதாவது வங்கிகள் நாட்டுடைமையாகிய பின்னர் 6,477 புதிய கிளைகள் தோன்றியுள்ளன. 1973-ஆம் ஆண்டில் 1,500 கிளைகளும், 1974ல் 2,000 கிளைகளும் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; மொத்தத்தில் 1974-ல் 18,000 கிளைகள் இருக்கும்.

* * *

குசராத்தில் ஒரு சலவைத் தொழிலாளியின் கழுதை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இறந்து விட்டது. அது ஒன்றையே நம்பியிருந்த அந்தத் தொழிலாளி மிகவும் துன்பப்பட்டார். வேறொரு கழுதை வாங்குவதற்குப் பணம் கடன்தரவேண்டுமென்று ஒரு வங்கியில் மனுச் செய்தார். வங்கி, அவருக்குப் பணம் தருவதற்கு உடனடியாகச் சம்மதித்துப் பணமும் தந்தது. சலவைத் தொழிலாளி அந்தப் பணத்தைப் பெற்றுக் கழுதை வாங்கிக், குறித்த தவணைகளில் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டாராம்.

ஏற்றுமதி செய்வதற்குப் பெரும் வாய்ப்பு உள்ளமையே மீன் பிடிக்கும் தொழிலின் சிறப்பாகும் தமிழ் நாட்டிலிருந்து 1972-ஆம் ஆண்டில் 5.41 கோடி ரூபாய் மதிப்புள்ள 26 இலட்சம் கிலோ மீன்கள், குளிர்பதனப் படுத்தப்பட்ட மீன்கள், இதர கடல் உற்பத்திப் பொருள்களின் தயாரிப்புகள் ஆகியவை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 1972-ஆம் ஆண்டில் 41 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 14 இலட்சம் கிலோ உலர்ந்த கடல்வளப் பொருள்களும் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன.

தமிழ்நாடு திட்டக் குழுவின் மீனளத் துறை பற்றிய செயல் அணி, ஐந்தாவது திட்டக் காலத்தில் 33.75 கோடி ரூபாய், ஆறுவது திட்டக் காலத்தில் 75.7 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் உணவுகளை ஏற்றுமதி செய்ய முடியும் என்று மதிப்பிட்டுள்ளது இப்பேராவல் குறிக்கோளை எய்திட நாம் பெரும் முயற்சி செய்திட வேண்டும். இந்த இலக்கினை எய்திட, தமிழ்நாடு அரசு அனுபவ சாத்தியமான திட்டத்தைத் தயாரித்திடுவதற்குத் தகுந்த யோசனைகளை இக்கருத்தரங்கு தெரிவிக்கும் என நம்புகின்றேன்.

மீன் பிடிக்கும் தொழிலை சரியான வழியில் நவீன மயமாக்கினால், மீன்பிடிக்கும் தொழில் தமிழ்நாட்டின் பொதுவான பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுவதுடன் நம் நாட்டு மக்களுக்கு மிகமிகத் தேவைப்படும் புரதச் சத்தைத் தரும் ஆதாரமாகவும், அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டவும், ஏராளமான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், கிராமப்புற வருவாயை உயர்த்தவும், பொதுவாக, சமூக - பொருளாதாரத்தேவைகளின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமையக்கூடும்.

(தொழில் அமைச்சர் திரு மாதவன் அவர்கள் சென்னை இராஜாஜி அரங்கில் 1—8—1973 அன்று நடைபெற்ற கடல் வளப் பெருக்கக் கருத்தரங்கில் சிறப்பு மலரை வெளியிட்டு ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.)



# மீன் பிடித்தலை இயந்திரமயமாக்குவோம்



**அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து**

தமிழ்நாடு கடல் வளம் மிகுந்தது என்பது உலகறிந்த உண்மையாகும். நாம் ஏறத்தாழ 1,000 கிலோ மீட்டர் கடற்கரையைப் பெற்றுள்ளோம். சற்றேறக் குறைய ஒரு இலட்சம் மீனவப்பெரு மக்கள், கடலில் மீன் பிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். ஏறத்தாழ 30,000 கட்டுமரங்களும், ஓடங்களும், மீன் பிடிக்க உதவும் இதர பழமையான சாதனங்களும் தமிழ்நாட்டில் உள்ளன. தமிழ்நாட்டில் 1,300 சிறு விசைப் படகுகளும் உள்ளன.

கடல் மீன் பிடிப்பதில் கேரளா, மகாராட்டிரம் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு உள்ளது. கடல் மீன் மற்றும் உள்நாட்டு மீன் ஆகிய இரண்டின் உற்பத்தியையும் சேர்த்து நோக்கினுல், இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தியில் 16 சத அளவைத் தமிழ்நாடு வழங்குகிறது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

மீனளப் பொருட்களை ஏற்றுமதி செய்வதிலும் தமிழ்நாடு ஓரளவுக்குச் சிறப்பான இடம் பெற்றுள்ளது. தமிழ் நாட்டின் எருல்களும், செங்கெருல்களும் தவளைக் கால்களும், தரமான மீன்களும், உலர்ந்த மீன்களும் நாளுக்கு நாள் உலகமெங்கும் விற்பனை வாய்ப்பைப் பெற்று வருகின்றன; அதுவும்குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஜப்பானிலும் நல்ல விற்பனை வாய்ப்பைப் பெற்றுள்ளன.

மீன்களைப் பதப்படுத்தி, குளிர்பதனப் படுத்துவதற்கு உள்ள வசதிகளைப் பொறுத்த வரையில், கேரளாவிற்கு அடுத்த நிலையிலேயே நாம் இருந்து வந்த போதிலும், அண்மைக் காலத்தில் இத்தகைய வசதிகள் பொதுத் துறை மூலமாகவும், தனியார் நிறுவனங்கள் மூலமாகவும் பெருமளவில் அமைக்கப்பட்டு வருகின்றன. சில திங்களுக்கு முன்பு, மண்டபத்தில் மீன் தூள் தயாரிக்கும் நிலையத்தைத் துவக்கிவைக்கும் பொழுது, நமது அன்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள், கூடிய விரைவில் நமது கடலோரப் பகுதி எங்கும் விசைப்படகுகளும், பதப்படுத்தல் மற்றும் குளிர்பதனப் படுத்தும் நிலையங்களும் நிறைந்திருக்க வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தார்' அவருடைய விருப்பத்தை எவ்வளவு குறுகிய காலத்தில் நிறைவேற்ற முடியுமோ, அவ்வளவு குறுகிய காலத்தில் நிறைவேற்றிட நாங்கள் எல்லா வகையிலும் சிறப்பாகப் பணியாற்றி வருகிருேம்.

நாள்தோறும் ஐம்பது டன் கச்சா மீன்களிலிருந்து 10 டன் உற்பத்திப் பொருள் தயாரிக்கக்கூடிய—இந்தியாவிலேயே மிகப் பெரிய— மீன்தூள் தயாரிக்கும் நிலையத்தை நாம் பெற்றுள்ளோம். இந்நிலையம் நார்வே நாட்டு உதவியுடன் மண்டபத்தில் அமைக்கப் பட்டுள்ளது.

நமது மீனவர்களிடையே மீன்பிடிக்க உதவும் 'கியர் களில் நைலான் உபயோகம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. மீனளத் துறையில் தொழில் நுட்ப மாற்றங்கள் தோன்றிடத் துவங்கியுள்ளன!

இவ்வாருக, மீன் பிடிப்பது விரைவாகத் தொழில்மயமாகும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. பரம்பரையாக மீன் பிடிப்பதில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் பெரும்பாலும் கடலோரப் பகுதிகளிலேயே மீன் பிடித்து வருகின்ருர்கள். அவர்களுடைய நடமாட்டம்,வேகம் விசை ஆகியவை, அவர்கள், மீன்பிடிக்கப் பயன்படுத்தும் சாதனங்களுக்கு ஏற்பக்கட்டுப் படுத்தப்படுகின்றன. இதன் காரணமாகக் கடலில் மீன் பிடிக்கும் பெரும்பாலான மீனவர்களின் பொருளாதார நிலைமை தொடர்ந்து கீழ்த்தரமாகவே உள்ளது. பரம்பரையாகக் கடலில் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் கடலில் ஏறத்தாழ 10 'பாத்தம்' ('பாத்தம்'என்பதுகடல் மைல் தூரத்தைக் குறிக்கும் சொல்லாகும்) அளவு தூரத்திற்கே சென்று மீன் பிடித்து வருகின்றனர். இத்தூரத்திற்கும் மேலே சென்று, அவர்கள் அதிக மீன் பிடிக்க வேண்டுமாளுல், அதிக சக்தியும், கடல் நீர் அரிப்பையும், கடல் அலை ஆட்டத்தையும் தாங்கிக் கொண்டு, நன்கு இயங்கக் கூடியதுமான பெரிய விசைப் படகுகளைப் பயன்படுத்த வேண்டும்.

மீன்வளவு ஆய்வு மூலம், 10 'பாத்தம்' தூரத்திலிருந்து 100 பாத்தம் தூரம் வரையான ஆழ்கடலிலேயே கடலின் ஆழத்தில் வாழக்கூடிய மீன்களையும், கடலின்மேல் அல்லது நடுமட்டத்தில் வாழக்கூடிய மீன்களையும் பெருமளவில் பிடிக்க முடியும் என்பது தெளிவாகியுள்ளது. இவ்வாறு மீன்பிடித்தால், கடலின் அடிமட்டத்தில் வாழக் கூடிய மீன் வகைகளைப் பொறுத்த வரையில் தற்பொழுது கிடைக்கும் அளவைவிட 3 மடங்கு மீன் பிடிக்க முடியும் என்று தெரிய வருகிறது. அது போலவே தற்பொழுது கிடைக்கும் மேல்மட்ட அல்லது நடு மட்டத்தில் வாழக்கூடிய மீன்களின் அளவைவிட 4 முதல் 5 மடங்கு மீன் பிடிக்க முடியுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கட்டு மரங்களும் ஓடங்களும் செல்ல முடியாத தூரத்

உள்ள ஏராளமான ...ளைப் பிடித்திட மீன் ...தும் சாதனங்களை நவீன ...க்க வேண்டியது அவசி ...ன்பதை ஒப்புக் கொள் ...ா என நம்புகிறேன்.

...ன் காரணமாகவே, ...கைக்கொள்முதல் திட்டத் ... அடிப்படையில் சிறுசிறு ...ப் படகுகளை வழங்கிடும் ...த்தைப் புகுத்திஞேம். ...ட்டம் பெரும் வெற்றி ...துள்ளது. இதனுல் மீன ... தொழில் நுட்ப மாற் ...ரப் பயன்படுத்திக்கடலில் மநெடுந்தூரம் சென்று மீன் பிடிக்க இயலுகிறது. சென்னை, செங்கற்பட்டு, மாவட்ட மீனவர் கழகமும், திருநெல் வேலி மாவட்ட மீனவர் கழகமும் வேளாண்மை மறுநிதிக் கழக நிதி உதவியுடன் —அரசின் வாடகைக் கொள் முதல் திட்டத்தைப் போன்ற ஒரு திட்டத்தின் கீழ்—சிறு சிறு விசைப்படகுகளை வழங்கி வருகின்றன. தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சிறுசிறு விசைப்படகுகளை வழங்குவதற்கு உரிய திட்டங்களும் தயாரிக்கப் பட்டுவருகின்றன. வேளாண்மை மறுநிதிக் கழகத்திலிருந்து கிடைக்கும் நிதி உதவியையும் இத்திட்டங்களுக்குப் பயன் படுத்திட எண்ணியுள்ளோம்.

ஆண்டாண்டுக் காலமாக அலைகடலில்மீன்பிடிக்கப் பயன் படுத்தப்பட்டு வந்த கட்டு மரங்களை எல்லாம் குறுகிய காலத்தில் அகற்றிவிட்டு, அவைகளுக்குப் பதிலாகச் சிறு சிறு விசைப் படகுகளைக் கொண்டு வருவதென்பது மிகவும் சிரமமான செயலாகும்.

ஏனெனில் இதற்குப் பெருமளவில் பண முதலீடு செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே, கட்டு மரங்களின் மேலும், உள்ளும் இயந்திரங்களைப் பொருத்தி அதன் மூலம் அதிக சக்தி, வேகம், இயக்கம் ஏற்படுத்திக் கொள்ளும் திட்டத்திலும அரசு தீவிரக் கவனம் செலுத்தி வருகிறது. இது பற்றிய பரிசோதனைத் திட்டம் ஒன்று இந்திய— பெல்ஜியம் மீனளத் திட்டத்தின் கீழ், கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அப் பரிசோதனைத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில் இத் திட்டத்தை மற்ற மாவட்டங்களிலும்—குறிப்பாக தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களிலும்— விரிவுபடுத்த எண்ணியுள்ளோம்.

சிறு சிறு விசைப்படகு மூலம் 20 'பாத்தம்' அளவுக்கு மேல் கடலில் சென்று மீன்பிடிக்க முடியாது. அதற்கும் மேல் அதிக தூரம் சென்று மீன்பிடிக்க, குதிரை ஓட்டச் சக்தி அதிகம் உடைய பெரிய இயந்திரப் படகுகள் தேவைப்படுகின்றன. நமது நாட்டில் உள்ள மிகப் பெரிய இயந்திரப் படகு 57 அடி நீளம் உடையதாகும். ஆனுல் அது மன நிறைவு தருகின்ற வகையில் இயங்கவில்லை. குறிப்பிட்ட அளவு பெரிய இயந்திரப் படகுகளை இறக்குமதி செய்ய இந்திய அரசு அண்மையில் முடிவு எடுத்துள்ளது. நம் நாட்டிலுள்ள எந்தப் படகு கட்டும் நிலையமும், மிகப் பெரிய இழுவையை (Trawlers) உற்பத்தி செய்யவில்லை. ஆழ் கடலில் மீன் பிடிப்பதற்கு உதவும் பெரிய விசைப் படகுகளும், சாதனங்களும் கிடைக்காததனுலும், அவைகளை இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதனுலும், தமிழ் நாட்டிலுள்ள மீனவர்கள் ஆழ் கடலில் மீன் பிடிக்க முடியாமல் கட்டுப்படுத்தப்படுகின்ருர்கள். ஆழ்கடலை நாம் பயன்படுத்த முடியாதிருக்கும் பொழுது, நமது ஆழ்கடல் மீன் பிடி தளங்களில், அயல் நாட்டினுடைய பெரிய இயந்திரப் படகுகள் தொடர்ந்து மீன் பிடித்து வருவதாகக் கேள்விப் படுகின்ருேம். எனவே, நமது மக்களுக்குரிய விலை மதிப்புள்ள மீன் உணவு, ஏற்றுமதி மூலம் கிடைக்கும் கிட்டற்கரிய அந்நியச் செலாவணி ஆகிய இரண்டையும் நாம் இழந்து விடுகின்ருேம். இது போன்ற நிலைமையை நீண்ட காலத்திற்கு நீடிக்க விடக் கூடாது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள். எனவே, 'இந்தச் சந்தர்ப்பத்தில் ஆழ் கடல் பகுதிகளில் இருந்து கடல் வள உற்பத்தியைப் பெருக்குவதற்காக — தகுந்த பெரிய இயந்திரப் படகுகளைக் கட்டுப்பாடின்றித் தாராளமாக இறக்குமதி செய்து கொள்ள இந்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ' கடல் பயன்பாடு மற்றும் இயந்திரம் மூலம் மீன் பிடித்தல்' பற்றிய அனைத்து இந்திய கருத்தரங்கைத் துவக்கி வைத்தபோது, மண்டபத்தில் இழுவைப் படகு தயாரிக்க ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பெனியை அமைக்க விருப்பது பற்றி குறிப்பிட்ட அறிவிப்பையும் இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் நினைவுக்குக் கொண்டுவர நான் விரும்புகின்றேன். இதன் தொடர்பாக நாங்கள் குறிப்பிடத்



பாசின்' வலையை முதல்வர் கலைஞர் பார்வையிடுதல்

தகுந்த முன்னேற்றம் கண்டுள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மண்டபத்தில் மீன்பிடிக்க உதவும் இழுவைப் படகுகள் தயாரிக்கத் தனியாரும் அரசும் கூட்டு சேர்ந்து ஒரு பொது வரையறுக்கப்பட்ட கம்பெனியை அமைக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்திய அரசின் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு வாரிய அலுவலர்களும், இந்திய அரசின் மேல் நிலை அலுவலர்களும் மண்டபத்தில் உள்ள வசதிகளைப் பார்வையிட்டுள்ளனர். அவர்கள் மண்டபத்தில் இழுவைப் படகு தயாரிப்பதற்குள்ள நல்ல வாய்ப்புக் கண்டு திருப்தியும் அடைந்துள்ளனர். கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு வாரியத்திலிருந்து இறுதி அறிக்கை கிடைத்த பிறகு, தமிழ்நாடு அரசு இதுபற்றிய மேல் நடவடிக்கை எடுக்க விருக்கின்றது.

கடலில் பிடிக்கப்பட்ட மீன்களைப் பதப்படுத்துவதற்கும், குளிர் பதனப் படுத்துவதற்கும் போதிய வசதி தமிழ்நாட்டில் இல்லாததால், தமிழ்நாட்டில் கடலில் பிடிக்கப்பட்ட எருல்களும், செங்கெருல்களும் பதப்படுத்துவதற்காகவும், ஏற்றுமதி செய்வதற்காகவும் கேரளாவிற்குக் கொண்டு செல்லப்படுகின்றன. மீன்களைப் பெருமளவில் ஏற்றுமதி செய்வதற்குத் தேவையான இட வசதி கொண்ட சரக்குக் கப்பல்கள் சென்னைத் துறைமுகத்திற்கு வருவதில்லை. பதப்படுத்துவதற்கும், குளிர் பதனப் படுத்துவதற்கும் உள்ள வசதிகளைப் பெருக்கியும், சரக்குக் கப்பல்கள் சென்னைத் துறைமுகத்திற்கு வருவதற்கு ஏற்பாடு செய்தும், ஏற்றுமதி செய்வதற்குள்ள இரு இடர்பாடுகளையும் தவிர்த்திட வேண்டியுள்ளது. இவ்விரு வகையிலும் ஆவன செய்யத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இம் முயற்சிகளில் தமிழ்நாடு அரசு வெற்றிபெறும் என்று நம்புகின்றோம்.

தமிழ்நாட்டில் மீன்களைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதை ஊக்குவிப்பதற்காக, சிறந்த முறையில் ஏற்றுமதி செய்பவர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தை நிறுவியுள்ளோம். மீன் ஏற்றுமதி செய்பவர்கள் தமிழ்நாடு அரசு அளிக்கும் வசதிகளையும், சலுகைகளையும் பயன்படுத்திக் கொண்டு, தமிழ்நாட்டிற்கு வந்து, பெருமளவில் தமிழ்நாட்டிலிருந்து மீன் ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளை அமைப்பார்கள் என்று நம்புகின்றேன்.

தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு உலர்ந்த மீன் ஏற்றுமதி செய்வதே, அண்மைக் காலம் வரை நம்முடைய முக்கிய ஏற்றுமதிப் பொருளாக இருந்து வந்துள்ளது. பல்வேறு காரணங்களில் இந்த ஏற்றுமதி விரைவாகக் குறைந்து வருகிறது. இது தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் பாதித்துள்ளது. நம் நாட்டிலிருந்து இலங்கைக்குப் பெருமளவு ஏற்றுமதி செய்வது பற்றிய பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒரு குழு அண்மையில் இலங்கைக்குச் சென்றது. இலங்கைக்குப் பெருமளவில் உலர்ந்த மீன் ஏற்றுமதி செய்வதற்கும், நம்முடைய பொருளாதார நிலைமை பாதிக்கப்படாமல் **இருக்கவும் ஆவன செய்ய வேண்டும் என்று இந்திய அரசைக் கேட்டுக் கொள்கின்றேன்.**

**(சென்னை இராசாசி அரங்கில் 1—8—1973 அன்று நடைபெற்ற கடல் வளப் பெருக்கக் கருத்தரங்கின் துவக்க விழாவில் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழ்நாடு அரிசன நல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்).**

## பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டாமா ?

சென்னை நகரில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை 31 இலட்சமாகும். 1971-ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள் தொகைக் கணக்கில், இந்தத் தகவல் வெளியாகி உள்ளது.

இதன்படி, இந்திய மக்கள் தொகை 54 கோடியே 79 இலட்சத்து 49 ஆயிரத்து 809 ஆகும். இவர்களில் 80 சதவிகிதம் பேர் (100-க்கு 80 பேர்) கிராமங்களிலும், 20 சதவிகிதம் பேர் நகரங்களிலும் வசிக்கிறார்கள்.

சென்னை முதலான 9 பெரிய நகரங்களின் மக்கள் தொகை வருமாறு :

கல்கத்தா 70,31,000. பம்பாய் 59,71,000. டெல்லி 36,47,000. சென்னை 31,70,000. ஐதராபாத் 17,96,000. ஆமதாபாத் 17,42,000. பெங்களூர் 16,54,000. கான்பூர் 12,75,000. புனா 11,35,000.

உலகத்திலேயே அதிக மக்கள் வசிக்கும் பெரிய நகரம் நியூயார்க் (அமெரிக்கா) ஆகும். நியூயார்க் நகர மக்கள் தொகை 1 கோடியே 15 இலட்சம். 7-வது பெரிய நகரம் கல்கத்தா. 12-வது பெரிய நகரம் பம்பாய்.

இந்தியாவில் பெண்களைவிட ஆண்களே அதிகம். ஆண்களின் எண்ணிக்கை 28 கோடியே 39 இலட்சத்து 36 ஆயிரத்து 614. பெண்களின் எண்ணிக்கை 26 கோடியே 40 இலட்சத்து 13 ஆயிரத்து 195.

10 ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை, மொத்த மக்கள் தொகையில் 24 சதவிகிதமாகும். இப்போது அது 29½ சதவிகிதமாக உயர்ந்துள்ளது.



# நிலப் புரட்சிக்கு — ஒரு தொலைநோக்குத் திட்டம்

**ஆ**யிரம் கிலோ மீட்டர் நீளமுடைய கடற்கரைப் பகுதியையும், ஆறுகள், நீர்த் தேக்கங்கள், ஏரிகள், குளங்கள், பெரிய கிணறுகள் போன்ற ஏராளமான உள்நாட்டு நீர் வளங்களையும் பெற்றுள்ளதால் தமிழ்நாடு கடல் மீனள வளமும், உள்நாட்டு மீனள வளமும் நிறைந்ததாக உள்ளது. பருவ மாறுபாடு இல்லாத ஆண்டுகளில் சராசரியாக 400 மில்லி மீட்டர் மழையைத் தமிழ்நாடு பெறுகிறது. நீண்டு கிடக்கும் நமது கடலோரப் பகுதிகளில் மட்டுமே கட்டு மரங்களையும், படகுகளையும், சிறுசிறு விசைப் படகுகளையும் பயன்படுத்தி மீன்பிடித்து வருகிறோம். தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் இருந்தும், ஆழ்கடல் பகுதிகளில் இருந்தும் 9 இலட்சம் மெட்ரிக் டன்னுக்கும் மேற்பட்ட அளவு மீன்களைப் பிடித்திட முடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் தற்பொழுது 2 இலட்சம் மெட்ரிக்டன்னுக்கும் குறைவான அளவு மீன்களே— பெரும்பாலும் கடலோரப் பகுதிகளில் இருந்தே பிடிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் மீன் உற்பத்தி 1950-ஆம் ஆண்டில் 1,19,900 மெட்ரிக் டன்னாக இருந்தது. இது 1960-ஆம் ஆண்டில், 1,50,900 மெட்ரிக் டன்களாக உயர்ந்து, 1970-ஆம் ஆண்டில் 2,78,500 மெட்ரிக் டன்களாக மேலும் உயர்ந்தது. மீன் உற்பத்தி 1950 முதல் 1960 வரையான காலத்தில் ஆண்டிற்கு 2.6 சதமாகவும், 1960 முதல் 1970 வரையான காலத்தில் ஆண்டிற்கு 8.5 சதமாகவும் பெருகியுள்ளது. இவ்வுற்பத்தியில் கடல் மீன்களும், உள்நாட்டு மீன்களும் அடங்கும். 1950-ஆம் ஆண்டில் 85,900 மெட்ரிக் டன்களாக இருந்த கடல் மீன்பிடிப்பு, 1960-ஆம் ஆண்டில் 1,07,800 மெட்ரிக் டன்களாகவும், 1970-ஆம் ஆண்டில் 1,58,500 மெட்ரிக் டன்களாகவும் உயர்ந்தது. கடல்மீன் உற்பத்தி 1950 முதல் 1960 வரையான காலத்தில் ஆண்டிற்கு 2.5 சதமாகவும் 1960 முதல் 1970 வரையான காலத்தில் 4.7 சதமாகவும் உயர்ந்துள்ளது. உள்நாட்டு மீன்பிடிப்பு 1950-ஆம் ஆண்டில் 34,000 மெட்ரிக் டன்களாகவும், 1960-ஆம் ஆண்டில் 43,100 மெட்ரிக் டன்களாகவும், 1970-ஆம் ஆண்டில் 1,20,000 மெட்ரிக் டன்களாகவும் உயர்ந்துள்ளது. இவ்வுயர்வு முதல் பத்து ஆண்டுக்காலத்தில் ஆண்டிற்குச் சராசரியாக 2.7 சத அளவிலும் மறு பத்து ஆண்டுக் காலத்தில் ஆண்டிற்குச் சராசரியாக 17.8 சதமாகவும் அமைந்துள்ளது.

### கடல் மீன் உற்பத்தி

முதல் பத்தாண்டுக் காலத்தில் கடல்மீன் உற்பத்தி ஆண்டிற்குச் சராசரியாக 2.5 சதமாகவும். மறு பத்தாண்டுக் காலத்தில் ஆண்டிற்குச் சராசரியாக 4.7 சதமாகவுமே இருந்துள்ளதால், கடல் மீன் உற்பத்தி உயர்வு ஏறத்தாழ சீரான முன்னேற்ற நிலையிலே அமைந்துள்ளது எனக் கருதலாம். இச்சீரான முன்னேற்றத்திற்கு இயந்திரப் படகுகள், நைலான் வலைகள் ஆகியவைகளைப் புகுத்தியதும், கடலோர மீன்வள ஆய்வு நிலையம் மேற்கொண்ட ஆய்வின் பயனாக எருல்களும், செங்கெருல்களும் ஏராளமாக வாழும் இடங்களைக் கண்டு பிடித்தமையுமே காரணமாகும். இதன் காரணமாகவே, மீன்பிடிப்பு அளவு அதிகமாகியுள்ளது. கடலோர மீன்வள ஆய்வு நிலையம் மேற்கொண்ட செயல் விளக்கங்களாலும், மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியினாலும் இழுவை வலைகளும், கடல் அடியில் அமைக்கப்படக் கூடிய வலைகளும் மீனவர்களிடையே பரவி வருகின்றன. உள்நாட்டு விற்பனைக்காக, பிடிக்கப்பட்ட மீன்களை எடுத்துப் பாதுகாத்தல், வேறிடங்களுக்கு அனுப்புதல் ஆகியவைகளிலும் ஏற்றுமதி செய்வதற்காகப் பதப்படுத்துவதிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1960 முதல் 1970 வரையான பத்தாண்டுக் காலத்தின் பின் பாதியில்தான் தமிழ்நாடு குளிர்பதனப் படுத்தப்பட்ட எருல், செங்கெருல், தவளைக் கால்கள் ஆகியவைகளை ஏற்றுமதி செய்யத் துவங்கியது. இக்காலத்திலேயே இலங்கைக்கு உலர்ந்த மீன் ஏற்றுமதி செய்வதை மீண்டும் தொடரவும் மனப்பூர்வமான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### உள்நாட்டு மீன் உற்பத்தி

உள்நாட்டு மீன் உற்பத்தியில் 1960 முதல் 1970 வரையான பத்தாண்டுக் காலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிவிகிதம் மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகும். 'பிட்யூட்ரி' சுரப்பியை ஊக்குவிக்கும் ஊசி மருந்துமூலம் (Hypophysation மீன்களைத் தூண்டுதல் முறையில் முட்டையிடச் செய்து மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ததும், உள்நாட்டு நீர் நிலைகளில் பரவலாகவும், தீவிரமாகவும் மீன் குஞ்சுகளை விட்டு வளர்த்ததுமே உள்நாட்டு மீன் உற்பத்திப் பெருக்கத்திற்கு மூலகாரணங்களாகும். நீர்த் தேக்கங்களில் மீன் வளம் மேம்பட்டதற்கு நல்ல நிருவாகமே துணை நின்றுள்ளது. எப்பொழுதும் வற்றாது தண்ணீர் நிற்கக் கூடிய நீர்த் தேக்கங்களில் செய்த மேம்பாட்டுப் பணிகளால், தொடர்புடைய ஆற்றுத் திட்டங்களும் பயனடைந்துள்ளன.

### மீனளம் தரும் வருவாய்

மீனளத் துறைப் பொருள்களின் மூலம் 1960—61-ஆம் ஆண்டில் நிலவிய விலைப்படி, தமிழ்நாட்டிற்கு 1970-71-ஆம் ஆண்டில் ரூபாய் 20·35 கோடிவருவாய் கிடைத்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. தொலைநோக்குத் திட்டக்காலத்தில் மீன் உற்பத்தி பெருக வேண்டிய சராசரி விகிதம் பின்கண்டவாறு உள்ளது.

| ஆண்டு | | சதவிகிதம் |
|---|---|---|
| 1971—74 | .. | 26.5 |
| 1974—79 | .. | 9·2 |
| 1979—84 | .. | 14.0 |

அட்டை சொல்லும் கட்டுரை

இந்தச் சுற்றுலா மாளிகையில் வெளிநாட்டுப் பயணிகளும் தங்கத் தக்க வசதிகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன. ஒரு மாதத்திற்குள், சுற்றுலா மாளிகையிலுள்ள ஒவ்வொரு அறையிலும் தொலைபேசியும், இசைக் கருவியும் அமைக்கப்படுவதோடு அவர்கள் உபயோகத்திற்கு ஒரு துண்டும், சோப்பும், அதிகாலையில் காபியும் வழங்கப்பட ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் 100 பயணிகள் தங்கத் தக்க அளவுக்குச் சுற்றுலா மாளிகை கட்டும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. இவை தவிர, மகாபலிபுரம், ஒகேனக்கல், ஓசூர், சிதம்பரம், இராமேசுவரம், தூத்துக்குடி, குற்றாலம் ஆகிய இடங்களிலும் சுற்றுலா மாளிகைகள் கட்டத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இவைகள் அனைத்தும் மூன்றாண்டுகளுக்குள் நிச்சயம் கட்டி முடிக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத் தலைநகரான சென்னையில் இந்திய அரசு உதவியோடும், தமிழக அரசு உதவியோடும் இந்த ஆண்டிற்குள்ளேயே சில நட்சத்திர ஓட்டல்கள் ஆரம்பமாகவிருக்கின்றன. மூன்றாண்டுகளுக்குள் தமிழகத்தில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான ஓட்டல்கள் முழுவதும் பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் கட்டி முடிக்கப்பட்டுவிடும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு இடைஞ்சலாக உள்ள பிச்சைக்காரர்கள் தொல்லையும், நீக்கப்படுவதற்கு மூன்றாண்டுகளுக்குள் தமிழகத்தில் பிச்சைக்காரர்களே இல்லை என்ற நிலையில் தமிழக அரசின் திட்டம் நிறைவேற்றப்பட்டுவிடும்.

சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டின் சிறப்புகளை ஆங்காங்கே பார்த்து மகிழ்ந்திட வசதிமிக்க சொகுசுப் பேருந்துகள் நான்கு தற்போது இந்திய அரசாலும், தமிழக அரசாலும் விடப்படுகின்றன ; மூன்றாண்டுகளுக்குள் மாவட்டத்திற்கு மாவட்டம் திறமையான வழிகாட்டிகளுடன் இவை இயங்க ஆரம்பித்துவிடும்.

மொத்தத்தில் இந்தியாவுக்குக் குறிப்பாகத் தமிழகத்திற்குச் சுற்றுலாத் துறை இறைக்க இறைக்க வற்றாத ஊற்றாகத் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை !


தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ.10
அரை ஆண்டு ரூ.5
தனிப்பிரதி 40 காசு

நிருவாகி:
தமிழரசு அலுவலகம்
அரசினர் தோட்டம்
சென்னை-2



## சர்வதேசத் தேவைக்கான இணைப்பு ரயில் பெட்டிகள்

உலகின் பெரிய ரயில் பெட்டித் தொழிற்சாலைகளில் ஒன்றான இணைப்புத் தொழிற்சாலை (Integral Coach Factory) ஆண்டு தோறும் 700-க்கு மேற்பட்ட பல ரக ரயில் பெட்டிகளைத் தயாரித்து வருகின்றது.

கடந்த 17 ஆண்டுகளாக I. C. F. தயார் செய்த ரயில் பெட்டிகள் நம் நாட்டு ரயில் பாதைகளில் ஓடிக் கொண்டிருக்கின்றன.

இப்பொழுது I. C. F. ரயில் பெட்டிகள் அயல் நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பர்மாவிற்கு 66 போகிகளும், தாய்லாந்துக்கு 45 போகிகளும், தாய்வானுக்கு 100 போகிகளும், மேலும் தாய்வானுக்கு 113 பிரயாணி ரயில் பெட்டிகளும் ஏற்றுமதியாகியுள்ளன.

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை
(இந்திய ரயில்வே நிர்வாகத்தின் ஓர் பிரிவு)
சென்னை.




# சுற்றுலாச் சென்று சுவை நூல் தந்தவர்

தமிழகத்திலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், பல்வேறு வெளிநாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்து 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்னும் நன்னோக்கத்துடன் தாம் பெற்ற அனுபவங்களைச் சுவைபடத் தொகுத்து நூலாக வடித்துத் தந்தோர் ஏராளம். அந்நூற்கள், இனிப் பயணம் செய்வோருக்குப் பயன்படுவதோடு, பல்வேறு செய்திகளை-நாடுகளின் பழக்கவழக்கங்களைப்—பண்பாடுகளை—நாகரிகங்களை அறிந்து கொள்ளவும் பெரிதும் உதவும். அவ்வாறு பயன்படும் வகையில் பயண நூற்கள் தந்தோர் பெயர்களையும், அவர்கள் ஆக்கித்தந்த நூல்களின் பெயர்களையும், ஓரளவு இங்கே தொகுத்துத் தந்திருக்கிறோம். இந்தப் பட்டியல் முழுமையானதோ, முற்ற முடிந்ததோ அன்று என்பதை நினைவிற் கொண்டு, பட்டியலைக் காணுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

யான் கண்ட இலங்கை—டாக்டர் மு. வரதராசனார்.

எனது இலங்கைச் செலவு—திரு. வி. க.

கடலின் கண்முத்து அல்லது யான் கண்ட இலங்கை—சி. எம். இராமச்சந்திரன்.

இலங்கையில் ஒருவாரம்—கல்கி.

எழிலார் இலங்கை—ப. மீ. சுந்தரம்.

அமெரிக்கப் பயண நினைவலைகள்—மேரி மாசிலாமணி.

அமெரிக்காவைப் பார்—சோமலெ.

அமெரிக்காவில்—கே. எம். ஜார்ஜ்.

அமெரிக்காவைப்பார்—எஸ். எஸ். மாரிசாமி.

அதிசய நாடு அமெரிக்கா—எஸ். ஆர். சண்முகம்.

நான் கண்ட ஜெர்மனி—மேரி மாசிலாமணி.

கிழக்கு ஜெர்மனியில் சில நாட்கள்—எச். ஆர். அய்யர்.

நான் கண்ட ஜெர்மன்—ஜி. டி. நாயுடு.

புதிய ஜெர்மனி—எஸ் சங்கரன்.

நான் கண்ட மலேயா—கா. இராமநாதன்.

மலேயா முதல் கனடா வரை—ஏ. கே. செட்டியார்.

மலேசியாவில் ஒருமாதம்—ம. பொ. சிவஞானம்.

சிங்கப்பூர் வழிகாட்டி—சொ. ஐ. துரை.

தென்கிழக்கு ஆசியாவில்—க. இராசாராம்.

அக்கரைச் சீமையில்—சோமு.

உலகம் சுற்றிய தமிழன்—சோமலெ.

உலகநாடுகள்—சோமலெ.

உலகத் தமிழ்—நெ. து. சுந்தரவடிவேலு.

ஒன்றே உலகம்—தனிநாயக அடிகள்.

உலகப் பயணம்—கே. பி. எஸ். மேனன்.

உலகம் சுற்றினேன்—சி. சுப்பிரமணியம்.

நான் கண்ட வெளிநாட்டுக்காட்சிகள்—சோமலெ.

என் பிரயாண நினைவுகள்—சோமலெ.

பிரயாணம் ஒரு கலை—சோமலெ.

பிரயாணக் கட்டுரைகள்—ஏ. கே. செட்டியார்.

பிரயாண நினைவுகள்—க. அருணசலம்.

பிரயாண இலக்கியம்—நீரா. சீனிவாசன்.

ஜீவன் லீலா—கா. கா. கலேல்கார்.

தென்னாட்டு மலையூர்கள்—எம். எஸ் கல்யாண சுந்தரம்.

மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில்—கோ. சிவபாதசுந்தரம்.

புத்தர் அடிச்சுவட்டில்—கோ. சிவபாத சுந்தரம்.

தமிழ்நாடு பயணக் கட்டுரைகள்—ஏ. கே. செட்டியார்.

உதயசூரியன்—தி. ஜானகிராமன்.

புன்னகை பூத்த நாடு—எம். ஆர். பாலகிருஷ்ணன்.

செல்வம் கொழிக்கும் சீமை—கலையன்பன்.

பிரிட்டனில் கண்ட புதுமைகள்—அருண்.

ஐரோப்பாவில் ஐந்து நாட்கள்—கலையன்பன்.

அங்கும் இங்கும்—நெ. து. சுந்தரவடிவேலு.

வால்காவிருந்து—சா. கணேசன்.

மாஸ்கோவிலிருந்து லண்டன் வரை—ம. பொ. சிவஞானம்.

நான் கண்ட சோவியத் ஒன்றியம்—நெ. து. சுந்தரவடிவேலு.

லண்டன் முதல் மாஸ்கோ வரை—வ. ஈஸ்வர மூர்த்தி.

சோஷலிச நாட்டில் ஜனநாயகத் தலைவர் ஆர். வெங்கட்ராமன்.

மீனளத் துறை மூலம் 1974-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிற்கு 36.54 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் வளர்ச்சி விகிதம் 1971-ஆம் ஆண்டினைக் காட்டிலும் 5.4 சதவிகிதம் அதிகமாக இருக்கும். அதுபோலவே 1979-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு மீனளத் துறை மூலம் 53.54 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும்என்றும், 1984-ஆம் ஆண்டில் 90.75 கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இவ் வருவாய். உயர்வின் விகிதம் முறையே 1974 -ஆம் ஆண்டினைக் காட்டிலும் 3.4 சதவிகிதம் அதிகமாகவும், 1979-ஆம் ஆண்டினைக் காட்டிலும் 7.5 சதவிகிதம் அதிகமாகவும் இருக்கும்.

### தொலை நோக்குத் திட்டம்

இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாமல் பரம்பரை முறையிலேயே மீன் பிடித்து வரும் மீனவப் பெருமக்களுக்கு எல்லாவகையிலும் உதவிட திட்டத்தில் போதிய அளவு நிதி ஒதுக்கப்படும். மீனவப் பெருமக்களின் சமுதாய—பொருளாதார மேம்பாட்டுப் பணிகளும் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும்.

மீன்பிடி துறைமுகங்களில் உள்ள வசதிகளின் அடிப்படையில், தொலைநோக்குத் திட்டக் காலத்தில் சிறு விசைப் படகுகளும், பெரிய இழுவைகளும் பயன்படுத்தப்படும். இத்தகைய படகுகள் அரசுத் துறை, தனியார் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவைகளிடையே ஒதுக்கப்படும். 13.8 மீட்டர் நீளத்திற்கு மேற்பட்ட விசைப் படகுகள் கடற்கரையிலிருந்து நெடுந்தூரம் சென்று ஆழ்கடல் மீன்களைப் பிடிப்பதற்கு மட்டுமே பயன்படுத்தப்படும். இத்தகைய பெரிய விசைப் படகுகளைக் கட்டுவதற்கு மானியம் கொடுக்க வேண்டியது மைய அரசின் பொறுப்பு ஆகும். சிறிய, பெரிய விசைப் படகுகளைக் கட்டுவதற்கு ஆகும் மொத்தச் செலவில் உச்ச அளவாக 20 சத அளவைத் தனியார் துறையினரும், கூட்டுறவுத் துறையினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மீதமுள்ள மூலதனம் வணிக வங்கிகளிலிருந்தும், நிதி நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கவேண்டும். 9.8 மீட்டர் நீளத்திற்குக் குறைந்த சிறிய படகுகளைக் கட்டுவதும், பயன்படுத்துவதும் நாளடைவில் குறைக்கப்படும். இயந்திரமயமாக்கும் திட்டம் விரிவு படுத்தப் படுவதாலும், பெரிய விசைப் படகுகள் பயனபடுத்தப்படுவதாலும், அவைகளைப் பராமரிக்கவும், பழுதுபார்க்கவும் தேவையான வசதிகளை ஏற்படுத்திட வேண்டியுள்ளது. சிறுவிசைப் படகுகளும் ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற மீன்களையும். எறுல்களையும் பிடிப்பதுடன், அந்நியச் செலாவணியையும் ஈட்டித்தருகின்றன. எனவே, சிறு விசைப் படகுகளுக்கும் மானியம் தர வேண்டியது நியாயமாகும். இவ்வாறு மானியம் தருவதன் மூலம் கடலில் நெடுந் தொலைவு சென்று ஆழ்கடல் மீன்களைப் பிடித்து வரக்கூடிய—சிறு விசைப்படகுகளைப் பயன்படுத்தும் மீனவர்களுக்கு ஊக்கம் ஏற்படுத்தலாம்!

விசைப் படகுகளைப் பயன்படுத்தி மீன் பிடிக்க ஆகும் செலவில் பெரும்பகுதி 'டீசல்' எண்ணெய்ச் செலவேயாகும். இந்தியாவில் 'டீசல்' எண்ணெய் விலை மிகவும் அதிகமாக உள்ளது. இதற்குக் காரணம் அதிக சத அளவில் வரி விதிக்கப்படுவதேயாகும். மீன்பிடித்தல் தொடர்ந்து நடைபெற 'டீசல்' எண்ணெய்க்கு விதிக்கப்படும் வரியின் அளவுக்கு மானியம் வழங்கி விற்கவேண்டும்.

மீன் பிடிக்க உதவும் வலைகளை உற்பத்தி செய்யும் நிலையங்கள் அமைக்க ஊக்குவிக்க வேண்டும். அத்துடன் அனுமதிக்கப்பட்டுள்ள மீன் பிடி துறைமுகங்களைக் கட்டும் பணியை முக்கியத்துவ அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். புதிய மீன் பிடி துறைமுகங்களை அமைக்கும் ஆய்வுப் பணிகள் விரைவாக நடைபெற வேண்டும். அவைகளை அமைப்பதற்குரிய அனுமதி வழங்கும் முன்னேற்பாடுகளும், அவைகளைக் கட்டும் வேலைகளும் குறிப்பிட்ட கால வரையறையின் அடிப்படையில் நடைபெற வேண்டும். மீன் பிடி துறை முகங்களில் பதப்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும் தேவையான வசதிகளைஏற்படுத்திட வேண்டும்.




மீன் விற்பனையைப் பெருக்குவதற்குரிய குளிர்பதன வசதி பொருந்திய 'வேன்'களும், ரயில் பெட்டிகளும் அதிக அளவில் கிடைத்திடச் செய்ய வேண்டும்.

விசைப் படகுகளை இயக்குவதற்கும், பதப்படுத்தும் நிலையத்தில் பணியாற்றுவதற்கும், நிருவாகம், ஆராய்ச்சி ஆகியவைகளில் ஈடுபடுவதற்கும் தேவையான மனித சக்தியைப் பெற வேண்டுமானால், பயிற்சித் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

கடலில் நெடுந்தூரம் சென்று மீன் பிடிப்பதிலும், ஆழ்கடல் மீன்களைப் பிடிப்பதிலும், நாம் பெற்றுள்ள அறிவும் அனுபவமும் மிகவும் குறைவு! ஆழ்கடல் மீன் பிடிப்பதில் மிகுந்த ஆர்வமுடைய தொழில் முனைபவர்கள் ஈடுபட வேண்டும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. தொழில் முனைபவர்களுக்கு ஆழ்கடல்மீன்கள் பிடிப்பதற்கு ஏற்ற இடங்கள் பற்றிய போதிய தகவல்களைக் கொடுத்தால்தான், ஆழ்கடல் மீன்பிடிப்பு கவர்ச்சியானதாகவும், வெற்றியளிப்பதாகவும் இருக்கும். எனவே, ஆழ்கடல் மீன் பிடிக்கும் இடங்களை அறிய ஓர் ஆய்வு இன்றியமையாததாகும். இத்தகைய ஆய்வுகளை மேற்கொள்வது மைய அரசின் கடமையாகும். மைய அரசு, மாநில அரசின் மீனளத் துறையுடன் இணைந்து ஆய்வுப் பணிகளில் ஈடுபட வேண்டும். ஏனெனில் மைய அரசின் ஆய்வுப் படகினால் வரையறுக்கப்பட்ட இடங்களில், பரிசோதனை மீன்பிடிப்புத் திட்டத்தின் கீழ் மாநில அரசு மீன்பிடித்துப் பார்த்து ஆய்வினை முறைப்படுத்திக் கொள்ளமுடியும். கடலில் நெடுந்தொலைவு சென்று மீன் பிடிக்கவும், ஆழ்கடல் மீன் பிடிக்கவும் ஐந்தாவது திட்டக் காலத்தில் 9 நடுத்தர, பெரிய இழுவைகளையும், ஆறுவது திட்டக் காலத்தில் 15 பெரிய விசைப் படகுகளையும் பயன்படுத்தப் படும். இதன் முக்கிய நோக்கம் ஐந்தாவது, ஆறுவது திட்டக் காலத்தில் சோதனை ஆய்வினை முடித்து விட வேண்டும் என்பதேயாகும்.

தொலை நோக்குத் திட்டக் காலத்தில் மீன் பிடிப்பதற்காக 7 கப்பல்களை வாங்கவும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

### மீன் ஏற்றுமதி

கடல் மீன்களுக்கு உள்நாட்டில் தேவை பெருகி வந்தபோதிலும், ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கத்தின் அடிப்படையிலேயே, கடல் மீன் பிடிப்பை அதிகப்படுத்தப்படும். உயர்ந்த தரமுடைய குளிர்பதனப்படுத்தப்பட்ட எறுல் (Shrimps) செங்கெறுல் (Lobsters) போன்றவைகளை ஏற்றுமதி செய்வதிலேயே உலகமெங்கும் கவனம் செலுத்தப்படுகிறது. பதப்படுத்தப்பட்ட எறுல், 'சார்டின்', 'டுனு' போன்றவைகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பு நிறைய உள்ளது. 1968-ஆம் ஆண்டில் கடல் பொருள்களை ஏற்றுமதி செய்யத் தமிழ்நாடு துவங்கியது. அதன் மூலம் அந்த ஆண்டில் 1·7 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைத்துள்ளது. தமிழ்நாட்டின் ஏற்றுமதி ஆண்டிற்கு ஆண்டு அதிமாகி வருகிறது. தற்பொழுது 6,000 மெட்ரிக் டன் கடல் உற்பத்திப் பொருள்களே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஏற்றுமதியை 1974-ஆம் ஆண்டில் 15,000 மெட்ரிக் டன் அளவுக்கும், 1979-ஆம் ஆண்டில் 39,000 மெட்ரிக் டன் அளவுக்கும், 1984—ஆம் ஆண்டில் 77,900 மெட்ரிக் டன் அளவுக்கும் அதிகப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.



நூலக நாட்டில் நூற்றிருபது நாட்கள்—அ. திருமலைமுத்துச்சாமி.

நான்கண்ட எகிப்து—கே. சீனிவாசன்.

இதயம் பேசுகிறது—மணியன்.

நான் சென்ற சில நாடுகள்—சி. சுப்பிரமணியம்.

கால்நடையில் 28 ஆயிரம் மைல்கள்—டி. கே. இராசகோபால்.

வடஇந்திய யாத்திரை—பகீரதன்.

ஜப்பான் செலவு—தி. மாணிக்கவாசகம்.

ஜப்பானில் சில நாட்கள்—சு. இராமசாமி நாயுடு.

நான் கண்ட ஜப்பான்—சு. இராமசாமிநாயுடு.

வேங்கடம் முதல் குமரி வரை—தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்.

உல்லாசப் பிரயாணம்—ஆற்றலரசு.

நடந்தாய் வாழி காவேரி—சிட்டி-ஜானகிராமன்.

இமயத்தின் எல்லையில்—எம். எஸ். பி. சண்முகம்.

காஷ்மீர்—என். ஆர். வெங்கட்ராமன்.

காஷ்மீரைக் காண்போம்—அ. வேதாசலம்.

திருக்கயிலாய யாத்திரை—சுவாமி சித்பவானந்தா.

கயிலை அழைக்கிறது—என். வி. அனந்தராமன்.

நேபாளமும் கேதாரமும்—த. ச. மீனாட்சிசுந்தரம்.

நேபாளம்—கே. சீனிவாசன்.

நமது தலைநகரம்—சோமலெ.

பாரத யாத்திரை—புரவலன்.

காசியாத்திரை விளக்கம்—சபாபதிசுவாமிகள்.

நான்கண்ட நவசீனா—கே. வைகுந்தவாசன்.

நான் கண்ட செஞ்சீனம்—பிரஜாக்திஷோர் சாஸ்திரி.

புதிய சீனா—எஸ். சந்திரசேகர்.

எழுவர் நாங்கள்—கோவைக் கிழார்.

நான்கண்ட திபெத்—ஹென்றிச் ஹேர்ரர்.

பல்கேரிய நினைவுகள்—அனந்தநம்பியார்.

ஆஸ்திரேலியாவில் சில நாட்கள்—சு. இராமசாமிநாயுடு.

நான்கண்ட ஆஸ்திரேலியா—சு. இராமசாமி நாயுடு.

ஆப்பிரிக்கா—எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்.

கண்டறியாதன கண்டேன்—கி. வா. ஜகந்நாதன்.

கருங்கடலும் கலைக்கடலும் (அச்சில்)—தி. ஜானகிராமன்.

இனியவை இருபது (அச்சில்)—டாக்டர் கலைஞர்.


விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

SDSIC/1813TMA

# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**வினா:** எங்கள் கிணறு 27 அடிக்குக் கீழ் பாறையாகப் போய் விட்டது. அதன் கீழ் 8½ அடி ஏகமாக வெட்டியும் அதன் கீழ் 9 அடி 'போரிங்' போட்டும் தண்ணீரில்லை. இதற்குக் கீழே வெட்ட வசதியில்லை. 8½ அடி வெட்டுவதற்கே வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ரூபாய் 2,000 கடன் பெற்றுள்ளோம். வெவ்வேறு ஊரிலிருந்து நீரோட்டம் பார்ப்பதற்காகக் கூட்டி வந்த 3 நபரும் எங்கள் நிலத்திலேயே மேற்குப் புறத்தில் (தற்போதைய கிணற்றிலிருந்து 200 அடி தள்ளி) 7 முதல் 10 கெஜத்திற்குள் நல்ல ஊற்று உள்ளதாகவும், தற்போதைய கிணற்றில் இன்னும் எவ்வளவு ஆழம் வெட்டினாலும் பயனில்லை என்றும் கூறி விட்டார்கள். ஒருவருக்கொருவர் சம்பந்தமில்லாத மூவரும் ஒரே இடத்தையே குறிப்பிட்டுள்ளார்கள்! எனவே, அதில் குழாய்க் கிணறு அமைக்கலாமா? அதற்கு அரசு கடன் கொடுத்து உதவுமா? நிலத்தடி நீரைக் கண்டு கொள்ள நவீன கருவியுள்ளதா? யாருக்கு விண்ணப்பிக்க வேண்டும்? தயவு செய்துவிளக்கமான பதிலளித்துப் படித்து விவசாயத்தில் இறங்கியுள்ள என் போன்றவர்களுக்கு உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—துரை முருகேசன்,
நவீன விவசாய முன்னேற்றக்குழு, மாவுத்தன்பட்டி, நிலக்கோட்டை வட்டம், மதுரை மாவட்டம்.

**விடை:** தங்களுடைய கேள்வி மிகவும் சிக்கலானது. நீரோட்டம் பார்த்தவர்கள் மூவரும் குறிப்பிட்ட இடத்தில், தாங்கள் குழாய்க் கிணறு அமைக்கலாம் என்றோ அல்லது அமைக்கக் கூடாது என்றோ நாங்கள் கூறக் கூடாது. ஏனெனில், நீரோட்டம் பார்ப்பவர்களின் பேச்சைக் கேட்டுக் கெட்டவர்களும் உண்டு; முன்னேறியவர்களும் உண்டு! எனவே, இது பற்றி நீங்களே முடிவு செய்துகொள்வது நல்லது. உங்களுடைய கேள்விக்கு நேரடியான பதில் அளிக்க முடியாமைக்கு வருந்துவதுடன், அறிவியல் அடிப்படையான நீரோட்டம் பார்க்கும்முறையினை மேற்கொண்டு இது பற்றி முடிவு செய்யுங்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிலத்தின் கீழேயுள்ள நீரைப் பற்றிய முழுவிவரமும் அறிந்து கொள்வதற்குத் தற்பொழுது 'கம்ப்யூட்டர்' என்னும் கருவிகள் பயன் படுத்தப் படுகின்றன. இக்கம்ப்யூட்டர்களைக் கொண்டு எந்த இடத்தில், எத்தனை அடி ஆழத்தில், எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்பதை அறிய முடியும்.

பூண்டி என்ற இடத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் திரு பி. குமாரசாமி அவர்கள் கண்டுபிடித்துள்ள "Direct Simulation Anlog Computor" என்னும் கருவியைக் கொண்டு நிலத்தின் அடியில் 3 மைல் ஆழம் வரையில்—நிலத்தைத் தோண்டியோ அல்லது துளையிட்டோ பார்க்காமல்—தண்ணீர் இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டு பிடிக்க இயலும்!

மேற்கூறப்பட்ட கருவிகளைப் பயன்படுத்திச் சோதனை செய்து பார்த்துதண்ணீர்கிடைக்கும் என்பது உறுதியான பிறகு, குழாய்க் கிணறு அமைப்பதே சிறந்தது. உங்களைப்போன்ற பலருக்கு இவ்வகையில் உதவி செய்யவே, இன்றையத் தமிழ்நாடு அரசு நிலநீர் ஆய்வுக்கெனத் தனித் துறையை 1970-ஆம் ஆண்டு ஏற்படுத்தியது. அத்துறையினர் நிலநீர் பற்றிய ஆய்வினைத் தமிழ் நாடெங்கும் மேற்கொண்டுள்ளனர். அவ்வாய்வு முடிந்தவுடன் எந்தெந்தப் பகுதியில் எத்தனை அடி ஆழத்தில், எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்பதெல்லாம் திட்டவட்டமாகத் தெரியும். எனினும், தாங்கள் உடன் 'கம்ப்யூட்டர்' கருவிக் கொண்டு சோதனை செய்து பார்க்க விரும்பினால், உங்கள் அருகாமையில் உள்ள உதவி வேளாண்மைப் பொறியாளர் அவர்களின் உதவியை நாடலாம். அல்லது பின்கண்டவர்களிடமிருந்து தாங்கள் இது பற்றிய உதவியைக் கேட்கலாம்.

திரு எஸ். பஞ்சநாதன்,
இயக்குநர்,
நிலநீர் ஆய்வுத்துறை,
10-ஏ, தண்டபாணித் தெரு,
தியாகராயநகர்,
சென்னை-17.

திரு பி. குமாரசாமி,
இயக்குநர்,
நீர்ப்பாசன ஆராய்ச்சி
நிலையம்,
பூண்டி (அஞ்சல்),
திருவள்ளூர் (வழி)
செங்கற்பட்டு மாவட்டம்.

அடுத்து, முன்பு வாங்கிய கடன் முழுவதையும் திருப்பிக் கட்டுவதற்குள், புதிய கடனைப் பொதுவாகப் பெறமுடியாதென்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே, பழைய கடன் முழுவதையும் திருப்பிக் கட்டிவிட்டு, தாங்கள் புதிதாகக் கடன் பெற முயற்சி செய்யவும்.

குழாய்க் கிணறு அமைக்க உங்கள் பகுதியிலுள்ள நிலவள வங்கியிலிருந்து நீங்கள் கடன் பெறமுடியும். அவ்வாறு கடன் கோரும் போது, கூட்டுறவுத் துறையில் உள்ள பொறியாளர்கள் தாங்கள் குறிப்பிடும் இடத்தில் குழாய்க் கிணறு அமைப்பது சாத்தியமாக இருக்குமா என்பதை ஆராய்ந்து, நிலநீர் ஆய்வுத் துறையினரின் ஆலோசனையையும் பெற்ற பிறகே, கடன் அனுமதிக்கப் பரிந்துரை செய்வார்கள். தாங்கள் நிலத்தில் குழாய்க் கிணறு அமைப்பது சாத்தியமில்லை என்றால், கடன் கொடுக்க மாட்டார்கள். எனவே, நிலவள வங்கி மூலம் குழாய்க் கிணறு அமைக்கக் கடன் பெற முயற்சிப்பதே சிறந்தது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வினா:** எங்கள் பகுதியில் தற்பொழுது அதிகப் பரப்பளவில் சூரியகாந்தி பயிரிடப்பட்டுள்ளது. சூரிய காந்தி விதையும், அதன் மற்றப் பாகங்களும் என்னென்ன தொழில்களுக்கு உதவும்?

சூரிய காந்தி பிண்ணாக்கை மாடுகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தலாமா?

—வ. ர. ஐயப்பன், பி.ஏ.,
அமைப்பாளர்,
உழவர் ஆய்வு மன்றம்,
சக்காம்பட்டி,

இவ்வாறு ஏற்றுமதியை உயர்த்துவதனால் 1979-ஆம் ஆண்டில் 32 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியையும், 1984-ஆம் ஆண்டில் 77 கோடி ரூபாய் அந்நியச்செலாவணியையும் ஈட்ட இயலும். ஏக காலத்தில் நமது உள்நாட்டு விற்பனையையும் மேம்படுத்த வேண்டும். குளிர்பதனப் படுத்தப்பட்ட மீன்களை உண்ணும் பழக்கத்தை மக்களிடையே பரப்புவதுடன், தமிழ்நாட்டின் உள் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் குளிர் பதனப் படுத்தப்பட்ட மீன்கள் கிடைத்திடச் செய்ய வேண்டும்.

உள்நாட்டு மீனளத்தைப் பெருக்க, எல்லா நீர்நிலைகளிலும் வளர்ப்பதற்குத் தேவையான அளவில் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய வேண்டியது மிகவும் முக்கியமாகும். 'புல் கெண்டை; வெள்ளிக் கெண்டை' ஆகியவைகளைப் பெருமளவில் வளர்க்க வேண்டியுள்ளது. பருவகாலத்தில் மட்டும் நீர் பிடிக்கக்கூடிய குளங்களிலும், பாசனக் கிணறுகளிலும் 'டிலாபியா' கெண்டைகளை வளர்த்திட வேண்டும்.

மீனளத்துறையின் ஆராய்ச்சிப் பிரிவை விரிவுபடுத்தி வலிவூட்டுவதுடன், அப்பிரிவுக்கு ஓர் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற தகுதியையும் ஏற்படுத்திட வேண்டும். ஆராய்ச்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக உதவியுடன் ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டங்களையும் மேற்கொள்ளவேண்டும். மீனளம் பற்றிய ஆராய்ச்சி நிலையம் நடைமுறையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும், இயன்ற இடங்களில் முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ்நாட்டின் கடலோரத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட இடங்களில் கடல் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. உள்நாட்டு மீன் பிடிப்பின் நிலைமை நன்கு அமையவில்லை. ஏனெனில், ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், இதர நீர் நிலைகளின் கரைகளிலும் இருந்தே உள்நாட்டு மீன்பிடிப்பு செய்ய வேண்டியுள்ளது. சில இடங்களில் பிடிக்கப்படும் கடல் மீன்களின் அளவு பற்றிய புள்ளி விவரங்களை மீனளத் துறை சேகரித்து வருகிறது.

### திட்ட முதலீடு

நான்காவது திட்டக் கால இலக்குகள் முழு அளவில் எய்தப்படும் என்ற எண்ணத்தில், ஐந்தாவது, ஆறுவது திட்டங்களுக்குப் பின்கண்டவாறு முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



| | | (ரூபாய் இலட்சத்தில்) | சதவிகிதம் |
|---|---|---|---|
| **ஐந்தாவது திட்டம்** | | | |
| 1. அரசுத் துறை | .. | 3,668·04 | 42·65 |
| 2 மைய அரசு உதவி | .. | 675·00 | 7·84 |
| 3 மைய அரசுத் துறை | | 1,227·58 | 14·27 |
| 4 தனியார் துறை | .. | 666·04 | 7·74 |
| 5 கூட்டுறவுத் துறை | .. | 100·00 | 1·16 |
| 6 நிறுவன நிதி .. | .. | 2,268·54 | 26·34 |
| மொத்தம் | .. | 8,605·20 | 100·00 |
| **ஆறுவது திட்டம்** | | | |
| 1 அரசுத் துறை | .. | 7,121·60 | 46·50 |
| 2 மைய அரசு உதவி | .. | 317·50 | 2·08 |
| 3 மைய அரசுத் துறை | .. | 1,165·38 | 7·60 |
| 4 தனியார் துறை | .. | 1,985·60 | 12·96 |
| 5 கூட்டுறவுத் துறை | .. | 330·75 | 2·16 |
| 6 நிறுவன நிதி .. | .. | 4,394·67 | 71·31 |
| மொத்தம் | .. | 15,315.50 | 142·61 |







மேற் குறிப்பிட்டவாறு மீனளத் துறையில் ஐந்தாவது திட்டக்காலத்தில் 86·50கோடி ரூபாயும், ஆறுவது திட்டக் காலத்தில் 153·15 கோடி ரூபாயும் முதலீடு செய்ய தொலை நோக்குத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

### மனித சக்தியின் தேவை

கடல் மீனளம், உள்நாட்டு மீனளம் ஆகிய இரு பிரிவிற்கும் தொலை நோக்குத் திட்டக் காலத்தில் தேவைப்படும் மனித சக்தியின் அளவும் மதிப்பிடப்பட்டுள்ளது. நான்காவது திட்ட இறுதிக்குள் விசைப்படகுகளையும், இழுவைகளையும் இயக்குதல், மீன்களைப் பதப்படுத்தல், விற்பனை செய்தல், மீன் அடிப்படையான தொழில்கள் ஆகிய பணிகளில் மேலும் புதிதாக 12,500 பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கும். ஐந்தாவது திட்ட இறுதிக்குள் மேலும் 57,500 பேர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். ஆறுவது திட்ட இறுதிக்குள் மேலும் 55,000 பேர்கள் வேலைவாய்ப்புப் பெறுவார்கள். உள்நாட்டு மீனளத்தைப் பொறுத்த வரையில் நான்காவது திட்ட இறுதிக்குள் 22,000 பேர்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்புக் கிடைக்கும். அது போலவே, ஐந்தாவது திட்டக் கால இறுதிக்குள் 12,000 பேர்களும், ஆறுவது திட்டக் கால இறுதிக்குள் 28,000 பேர்களும் புதிதாக வேலை வாய்ப்புப் பெறுவார்கள்.

### மீன்வள மேம்பாட்டுக் கழகம்

தொலை நோக்குத் திட்டக் காலத்தில் மீனள மேம்பாட்டிற்குரிய பெரும் திட்டங்களைச் செயல்படுத்தவும், மீனளத் துறையின் பணிகளை வணிக அடிப்படையில் நடத்திடவும் மீன் வள மேம்பாட்டுக் கழகத்தை ( Fishery Development Corporation ) உடனடியாக அமைக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அக்கழகத்தில் வங்கிப் பணிப் பிரிவு, மேம்பாடு மற்றும் செயற் பிரிவு என இரு பிரிவுகள் இருக்கும். வங்கிப்பணிப்பிரிவு நிதி ஆதாரங்களைப் பெருக்குவதிலும் முதலீடு செய்வதிலும் கவனம் செலுத்தும். மேம்பாடு மற்றும் செயற் பிரிவு, படகுகள், பதப் படுத்தும் நிலையங்கள் ஆகியவற்றை இயக்குதல் போன்ற வணிக மற்றும் மேம்பாட்டுப் பணிகளைக் கவனிக்கும்.

இவ்வாறு மேற்கொள்ளப் படவிருக்கும் பல்வேறு திட்டங்களின் பயனாய், தொலை நோக்குத் திட்டத்தின் இறுதியில் தமிழ்நாட்டில் நீலப்புரட்சி நிலவிடும் என்பது நிச்சயம் !

— ஆர்.எம்

1972-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வருகை புரிந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 3,42,950 ஆகும். இது, முந்திய ஆண்டை விட 14 சதவிகிதம் அதிகம். 1978-ஆம் ஆண்டில் ஏறக்குறைய 8,00,000 சுற்றுலாப் பயணிகள் வெளிநாட்டிலிருந்து வருவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.



## கரும்பில் ஊடுபயிர் செய்திடுவீர்!
## அதிக வருவாய் பெற்றிடுவீர்!

கரும்பில் ஊடுபயிர் சாகுபடி செய்வது பற்றிய சோதனைகள் கடலூர் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையில் நடைபெற்றன. உளுந்து, வெண்டை, பச்சைப்பயறு, மணிலா, எள், சூரிய காந்தி, கேழ்வரகு போன்ற பல்வேறு பயிர்களை ஊடுபயிராகச் சாகுபடி செய்ததில் ஏக்கருக்குக் கிடைத்த அதிக வருவாய் பின்வருமாறு உள்ளது.

| | |
|---|---|
| எள் (டி. எம். வி. 3) | 465 ரூபாய் |
| கேழ்வரகு (கோ. 7) | 365 ,, |
| சூரிய காந்தி (கே. 1) | 263 ,, |
| உளுந்து | 146 ,, |
| மணிலா (டி. எம். வி. 2, 9) | 131 ,, |
| வெண்டை | 110 ,, |

ஊடு பயிரிட்டதால், கரும்பு மகசூல் பாதிக்கப்படவில்லை. மாறாக உளுந்து, மணிலா ஊடு பயிர் செய்ததில், கரும்பு மகசூல் கூடியுள்ளது; களைத் தொல்லையும் குறைந்துள்ளது!

**ஊடு சாகுபடியில் கவனிக்க வேண்டியவை!**

* மூன்று மாதத்திற்குட்பட்ட குறுகிய காலப் பயிராகத் தேர்ந்தெடுங்கள்.
* தண்ணீர் தட்டுப்பாடற்ற இடங்களிலும், பருவங்களிலுந்தான் ஊடுபயிர் செய்திட வேண்டும்.
* பருவத்திற்கேற்ற ஊடு பயிரைத் தேர்ந்தெடுங்கள்.
* உயரமாய் வளரும் சூரியகாந்தி, எள் போன்றவற்றைக் கரும்பு வரிசைகளுக்கு இடையில் ஒற்றை வரிசையிலும், குட்டையாக வளரும் உளுந்து, மணிலா, கேழ்வரகு போன்றவற்றை இரட்டை வரிசைகளிலும் பயிரிடலாம்.
* கரும்பு நட்ட 2 அல்லது 3-வது நாளில் இடைவெளிப்பாரை சமன் செய்து ஈரப் பதமுள்ளபோதே ஊடுபயிரை விதைக்கவும்.
* தகுந்த இடைவெளி விட்டுப் போதிய அளவு பயிர்களின் எண்ணிக்கை இருக்கச் செய்வதுடன், தேவையான பயிர்ப்பாதுகாப்பும் செய்திட வேண்டும்.

கரும்பு சாகுபடி செய்யும் உழவர் பெருமக்கள் தக்க ஊடுபயிரைத் தேர்ந்தெடுத்து, உரிய கவனிப்புடன் சாகுபடி செய்தால், மூன்றே மாதங்களில் அதிக வருவாய் பெறுவது திண்ணம்.

(தகவல்: ஏ. வெங்கட்டராமன், கூடுதல் வேளாண்மை இயக்குநர், ஆராய்ச்சி, திருச்சிராப்பள்ளி-18.)



# பொறாமைத் தீ

மயிலை சீனிவேங்கடசாமி

பாரசீகத்திலிருந்து நாதிர்ஷா டில்லிமேல் படையெடுத்து வருகிறார் என்னும் வதந்தி நாடெங்கும் பரவிற்று. வட இந்தியாவில் இந்த வதந்தி பொது மக்களிடையே பீதியையும் அச்சத்தையும் உண்டாக்கிற்று. அக்காலத்தில் மொகலாயச் சக்கரவர்த்தியாக இருந்த முகம்மது ஷா திறமையற்றவர். அரசியல் வேலைகளை விட்டுச் சிற்றின்பத்தோடு பழகிக் காலங் கழித்தார். அனுபவமுள்ள அமைச்சர்கள் கூறும் யோசனைகளைக் கேளாமல் அரசியல் கடமைகளைத் தட்டிக் கழித்தார். நாட்டில் அரசாங்கம் முறையாக நடைபெறாமல் சீர்கெட்டிருந்தது. இந்த நிலையில்தான் நாதிர்ஷா படையெடுத்து வருகிற செய்தி நாடெங்கும் பரவி மக்களிடையே பரபரப்பையும் பீதியையும் உண்டாக்கிற்று. காபூல் தேசத்துக் கவர்னரான நாஸிர்கான் மொகலாயச் சக்கரவர்த்திக்குக் கடிதம் எழுதி பாரசீகத்திலிருந்து வருகிற பகைவரை விரட்டியடிப்பதற்குச் சேனையைப் பலப்படுத்தப் பணம் கேட்டார். சக்கரவர்த்தி முகம்மதுஷா பணம் அனுப்பாமல் வாளா இருந்துவிட்டார். காபூல் தேசத்துப் பட்டாளத்து வீரர்களுக்கு ஐந்து ஆண்டு சம்பளம் கொடுக்காமல் பாக்கியிருந்தது. 1738-ல் நாதிர்ஷா காபூலுக்கு வந்தார். அவரை எதிர்த்துப் போர் செய்ய வழியில்லாமல், மொகலாய கவர்னர் நாஸிர்கான் பெஷாவருக்கு ஓடிவிட்டார். நாதிர்ஷா எளிதாகக் காபூலைக் கைப்பற்றிக்கொண்டு, அங்கிருந்த மொகலாயச் சேனையைத் தன்னுடைய சேனையோடு சேர்த்துக் கொண்டார். எல்லைப்புற நாடுகளைக் கைப்பற்றிக் கொண்ட நாதிர்ஷா பஞ்சாபுக்கு வந்தார். பஞ்சாபைக் கைப்பற்றிக்கொண்டு டில்லியை நோக்கி வந்தார். வந்து பானிப்பட்டு என்னும் ஊரில் பாளையம் அடித்துத் தங்கினார்.

மொகலாயச் சக்கரவர்த்தி முகம்மது ஷா, நாதிர்ஷா பானிபட்டில் பாளையம் அடித்திருப்பதையறிந்து, தம்முடைய அமைச்சரான நைஜாமூல் முல்கை யோசனை கேட்டார். அமைச்சர், சக்கரவர்த்தி பானிபட்டுக்குச் சென்று பாளையம் இறங்கிப் போர் செய்யவேண்டுமென்று யோசனை கூறினார். அந்த யோசனைப்படி மொகலாயச் சக்கரவர்த்தி, புர்ரானுல் முல்க் ஸதாக்கான், ஸம்ஸாமுத் தெளலா, இதிமாதுத் தெளலா என்னும் மூன்று உயர்தர உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் சேனைகளோடு பானிப்பட்டுக்குப் போய்ப் பாளையம் அடித்துத் தங்க வேண்டும் என்றும் தீர்மானித்து அவர்களைப் பானிப்பட்டுக்கு அனுப்பினார். சக்கரவர்த்தியாகிய முகம்மது ஷாவும் தம்முடைய பரிவாரங்களோடு பானிப்பட்டுப் பாசறைக்குப் போய்ச் சேர்ந்தார். மேற்சொன்ன மூன்று சேனாபதிகளும் சக்கரவர்த்தியும் அமைச்சரான நைஜாமுல் முல்கும் சேர்ந்து போர் செய்வது பற்றி ஆலோசனை நடத்தினார்கள். சிப்பாய் பட்டாளத்தார் 30 நாட்களாக வழிநடந்து களைத்திருப்பதனால், சில நாள் ஓய்வு கொடுத்துப் பிறகு போரைத் தொடங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

நாதிர்ஷாவின் சிப்பாய்கள் மொகலாயச் சக்கரவர்த்தியின் பாளையத்தில் புகுந்து தானியங்களையும், விறகு, புல் முதலிய பொருள்களையும் கொள்ளையடித்துக் கொண்டு போனார்கள். இந்தப் பொருள்கள் கிடைப்பது அருமையாக இருந்தது. கிடைத்தாலும் அதிக விலையாக இருந்தது. ஸா ஆதத்கானுடைய பாளையத்தில் நாதிர்ஷாவின் சிப்பாய்கள் புகுந்து பொருள்களைக் கொள்ளையடித்தனர். அவனுடைய சிப்பாய்கள் பாரசீக வீரர்களை எதிர்த்துப் போரிட்டார்கள். இந்தக் கைகலப்பில் ஸா ஆதத்கானுடைய வீரர்கள் சிலர் இறந்து போனார்கள். இதையறிந்த ஸா ஆதத்கான் சினங்கொண்டான். சக்கரவர்த்தியின் அனுமதி பெற்றுக் கொண்டு தன்னுடைய பட்டாளத்தை அழைத்துக்கொண்டு நாதிர்ஷாவின் பாளையத்தை நோக்கிப் போர் செய்யச் சென்றான். நாதிர்ஷா தன்னுடைய சேனையோடு இவனை எதிர்த்தான். அந்தச் சேனையோடு ஊடாட முடியாமல் ஸா ஆதத்கான், உதவிக்காகச் சேனையை அனுப்பும்படி சக்கரவர்த்திக்குச் செய்தியனுப்பினான்.

**விடை.:** சூரிய காந்தி விதை பின் கண்ட தொழில்களுக்கு உதவும்.

1. வார்னிஷ், பெயின்டுகள், சோப்பு முதலியன செய்யும் தொழில்களுக்கு உதவும்.

2. கம்பளி தயாரிக்கும் தொழில்களுக்கும், மரச்சாமான் கள் தயாரிக்கும் தொழிலுக்கும் உதவும்.

3. கால்நடை மற்றும் கோழி களுக்கான தீவனம் உற்பத்தி செய்யும் தொழிலுக்குப் பயன் படும்.

4. எண்ணெய் எடுத்து 'வனஸ் பதி' செய்யும் தொழிலுக்குப பெரிதும் உதவும்.

5. மருந்துப் பொருள்கள் செய் யும் தொழில்களுக்கும் பயன் படும்.

சூரிய காந்தி விதை மேற் கண்ட தொழில்களுக்கு உதவுவ துடன், இரத்த அழுத்தம், இருதய நோய், நீரிழிவு போன்ற நோய்களினுல் அவதியுறு வோர்க்கு மிகவும் ஏற்றதாகவும், அன்றுட வாழ்வில் பயன்படுத்து வதற்கு ஏற்ற எண்ணெய்யாகவும் உதவக்கூடியது. சூரிய காந்தி எண்ணெய்யில் உயிர்ச் சத்துக்கள் 'ஏ', 'பி', 'டி', 'கே' ஆகியவை உள்ளதால் உடல் நலத்திற்கு ஏற்றது. சூரிய காந்தியினுடைய விதைகளின் மேல் தோலை அகற்றி விட்டு, நிலக்கடலைப் பயறுகளை வறுப்பது போல் வறுத்து, உப்பு, மசாலா பொடியெல்லாம் கலந்து நேரடியாக உண்ணலாம். சூரிய காந்தி விதையில் உள்ள பருப் பினைக்கொண்டு 'முந்திரி அல்வா' போன்ற அல்வா செய்யவும் பயன்படுத்தலாம். சூரியகாந்தி விதையில் உள்ள பருப்பில் புரதச் சத்து மிகுந்துள்ளதால் உடல் நலத்திற்கு நல்லது.

சூரிய காந்திப் பூவிலிருந்து மஞ்சள் நிறச் சாயம் தயாரிக்க லாம்.



சூரிய காந்தி விதைகளை நீக்கிய பின், பூக்களிலுள்ள சதைப்பிடிப் பான பாகத்தை நேரடியாக மாட்டுத் தீவனமாகப் பயன் படுத்தலாம் அல்லது 'சைலோ' முறையில் பதப்படுத்தி வைத்துக் கொண்டு பின்பு தேவையான பொழுது தீவனமாக உபயோகிக் கலாம்.

சூரிய காந்தி செடிகளைக் காகிதம் தயாரிக்கப் பயன்படுத்த லாம். அல்லது காயவைத்து விறகாகவும் பயன்படுத்தலாம்.

சூரிய காந்தி பயிர் செய்தால், வயலில் தேன் கூடுகள் (பெட்டி கள்) அமைத்துத் தேன் சேகரிக்க லாம்.

சூரிய காந்தி பிண்ணுக்கில் பின் கண்ட சத்துக்கள் உள்ளன.

| | சதவீதம். |
|---|---|
| தழைச்சத்து | 4·2 |
| மணிச்சத்து | 2·3 |
| சாம்பல் சத்து | 1·4 |
| புரதச் சத்து | 26·3 |
| கொழுப்பு | 3·1 |
| சுண்ணும்புச் சத்து | 1·5 |

எனவே சூரிய காந்தி பிண்ணுக்கைக் கால்நடை மற்றும் கோழிகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தலாம்.

**வினு.**—அவரைக் கொடியில் அசுவணிப் பூச்சிகள் தாக்காமல் இருக்கத் தற்காப்புக்கு என்ன செய்யலாம்? அசுவணிப் பூச்சிகள் தோன்றித் தாக்க ஆரம்பித்த பிறகு அவைகளை ஒழிக்க என்ன செய்யவேண்டும்?

—எஸ். ராசுப் பிள்ளை,
கண்டித் தெரு,
சிரங்கம் (அஞ்சல்),
திருச்சி மாவட்டம்.

**விடை.**—அவரைக் கொடியில் அசுவணிப் பூச்சிகள் தாக்காம லிருக்கப் பதினைந்து நாளைக்கு ஒரு முறை வீதம் தொடர்ந்து பி.எச்.சி. 10 சதத் தூளையும், டி.டி.டீ. 5 சதத் தூளையும் சம அளவில் கலந்து தூவி வரவேண் டும். இக்கலவையை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவுதல் சிறந் தது. அல்லது கார்பரில் (செவின்) 10 சதத் தூளையும் ஏக் கருக்கு 10 கிலோ வீதம் தூவ லாம்.

அசுவணிப் பூச்சிகள் தாக்கும் பொழுது அவைகளை ஒழிக்க ஏக் கருக்கு 400 மில்லி லிட்டர் மாலத்தியான் 50 சத இ.சி. மருந்தை 200 லிட்டர் தண்ணீ ரில் கலந்து அல்லது 400 கிராம் கார்பரில் (செவின்) 50 சத நனையும் தூள 200 லிட்டர் தண் ணீரில் கலந்து தெளிப்பான்



மூலம் தெளிக்கவும். இதுபோல் 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிப்பது சிறந்தது.

**வினு.**—'சோயாபீன்ஸ்' என் பதும் மார்க்கெட்டுகளில் வழங் கும் பீன்சும் ஒன்ரு அல்லது வேரு? அவை எங்கே கிடைக்கும்? ஏட்டளவில் போடாமல், செயல் படும் அளவில் தெரிவிக்கவும்.

—கோ. ஜெயராமன்,
உதவி ஆசிரியர்,
பஞ்சாயத்து யூனியன்
இளையோர் ஆதாரப்
பள்ளி, புந்திரங் கவுண்
டன் பாளையம், சேலம்
மாவட்டம்.

**விடை.**—'சோயாபீன்ஸ்' என் பது வேறு; மார்க்கெட்டுகளில் விற்பனையாகும் 'பீன்ஸ்' வேறு. 'சோயாபீன்ஸ்' விதைகள் அல் லது 'மாவு' மளிகைக் கடைகளில் விற்பனையாகின்றன. 'பீன்சு' என்பது காய்கறியாகவே விற் பனை செய்யப்படுகின்றன. 'சோயாபீன்ஸ்' நமது நாட்டிற்கு ஏற்றதாக இருப்பதாலும், அதை நாம் இறக்குமதி செய்ய வேண் டிய இக்கட்டான நிலையில் இருப்பதாலும், அதன் பயன் களைக் கருதியும் தான், 'சோயா பீன்ஸ்' பற்றிய விரிவான விளக்கங்களை 'தமிழரசு' இதழில் வெளியிட்டோம். அக்கட்டுரையி லேயே விதை எங்கே கிடைக்கும் என்பதும் குறிப்பிடப்பட்டுள் ளது. அதன் பிறகு வந்த, 'தமிழரசு' இதழ்களிலும் 'கேளுங் கள் கொடுக்கப்படும்' பகுதியில் விடையளிக்கப்பட்டுள்ளது. அவைகளைப் படிக்காமல், ஏட் டளவில் போட்டு விட்டதாகக் குறை கூறியுள்ளீர்கள். சோயா மொச்சை விதை வேண்டுமெனில் உங்கள் வேளாண்மை வளர்ச்சி அலுவலரின் உதவியை நாடுங்கள் அல்லது பின்கண்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

'தகவல் தொடர்பு நிலைய
விற்பனைக் கூடம், தமிழ்
நாடு வேளாண்மைப் பல்
கலைக் கழகம், கோயம்
புத்தூர்-3.

சோயா மொச்சை கோவை மாவட்டத்திற்கு மிகவும் ஏற்ற தென்று 'தமிழரசு' இதழில் குறிப்பிட்டதால், கோவை மாவட்ட உழவர் பெருமக்கள் பலர் சோயாபீன்ஸ் பயிரிட்டுள் ளார்கள் என்று ஆதாரப் பூர்வமாகச் செய்திகள் வெளி வந்துள்ளன. எனவே, ஏட்டள வில் போட்டுவிட்டுப் போவதல்ல 'தமிழரசு' என்பதையும், செயல் படும் அளவில் உள்ளதையும், செயல் படுத்தப்படும் திட்டங் களையும் தெரிவிப்பதே 'தமிழரசு' என்பதையும் உங்களுக்கு வலி யுறுத்த விரும்புகின்ருேம். இது போன்ற முறையற்ற வார்த்தை களை ஆசிரியராகப் பணியாற்றும் தாங்கள் கூறுவது முறையல்ல, என்பதையும் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகின்ருேம்.

**வினு.**—'தமிழரசு' டிசம்பர் 1-ஆம் தேதி இதழில் 'கோ-1 பப்பாளி' பற்றி விவரிக்கப்பட் டிருந்தது. அதைக் கண்டு பப்பாளித் தோட்டம் வைக்க உற்சாகம் ஏற்பட்டு விட்டது. பப்பாளி விதைகள் அல்லது செடிகள் எங்கு வாங்காலம் என்பதைத் தயவு செய்து தெரி விக்கவும்.

—சையத் மகமூத்,
11, பூந்தோட்டம்,
விழுப்புரம்,
தென்ஞர்க்காடு மாவட்டம்.



**விடை.**—கோ-1 பப்பாளி விதைகளையோ அல்லது கன்று களையோ கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகத்தைச் சார்ந்த பழத் தோட்டத்திலிருந்து நேரடியாகப் வாங்கிக் கொள்ளலாம். அல்லது பின் கண்ட முகவரிக்கு எழுதி, விலை விவரம்; முன்பணம் அனுப்ப வேண்டியது பற்றிய விவரமெல்லாம் கேட்டறிந்து பின்பு பணம் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.



பேராசிரியர், தோட்டக்கலைப்
பிரிவு, தமிழ்நாடு
வேளாண்மைப் பல்கலைக்
கழகம், கோயம்புத்
தூர்-3.

**வினு.**—நான் 50 செண்ட் நிலத்தில் எள் விதைக்க நினைக் கின்றேன். எனவே, மாசிப் பட்டத்தில் (பிப்ரவரி) கருப்பு எள் விதைக்க எந்த ரக எள் விதைக்கலாம்? விதைக்கும் காலம், தண்ணீர் விடுவது, உரம் இடுதல், களை எடுத்தல், பயிர்ப் பாதுகாப்புப் போன்ற எல்லாச் சாகுபடி முறைகளையும் தயவு செய்து விளக்கமாகக் குறிப்பிடும் படி கேட்டுக் கொள்கின் றேன். மேலும், எல்லா வகைப் புன்செய் தானிய சாகுபடி முறைகளும் அடங்கிய புத்தகம் எனக்குத் தேவை. எங்குக் கிடை கும்? முகவரி கூறவும்.

—வி. ஜெயராம்,
பி.எம். புதுப்பட்டி,
கட்டங்குடி அஞ்சல்,
இராமநாதபுரம் மாவட்டம்.

**விடை.**—மாசிப் பட்டத்தில் இறைவையாகச் சாகுபடி செய்ய 'டி.எம்.வி. 3' என்ற எள் ரகம் மிகவும் சிறந்தது. இந்த ரகத்தை டிசம்பர் முதல் மார்ச்சு வரையான காலத்தில் இறைவை யில் பயிரிடலாம். மணற்பாங் கான வண்டல், செம்மண், மற் றும் கரு வண்டல் மண் இந்த ரகத்திற்கு மிகவும் ஏற்றது.

'டி. எம்.வி. 3' எள் பயிரிட நிலத்தை இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை உழுதல் நல் லது. கடைசி உழவில் ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 9 கிலோ மணிச்சத்து, 9 கிலோ சாம்பல் சத்துக் கொடுக்க வல்ல இரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவு சத்துக்கள் கிடைக்க ஏக்கருக்கு 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியா, 87 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட் ஆப் பொட் டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும்.

கடைசி உழவின்போது ஏக் கருக்கு 2 கிலோ வீதம் மாங்கனீசு சல்பேட் தூவுவதால், எள் மக சூல் பெருகும்.

ஒரு ஏக்கருக்கு $2\frac{1}{2}$ கிலோ விதையை விதைக்க வேண்டும். விதைக்கு விதை 1 அடி இடை வெளி இருக்குமாறு விதைத்தல் நல்லது.

விதைத்தவுடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மூன்ருவது நாளில் முளைநீர் விட வேண்டும். பிறகு 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர் பாய்ச்சவும்.

விதைத்த 10-வது நாள்,முதல் முறையாகக் கும்பல்கும்பல்களாக இருக்கும் எள் செடிகளைக் கலைத்து விட்டு, செடிக்குச் செடி 1 அடி இடைவெளி இருக்குமாறு செய்ய வேண்டும். விதைத்த 20-வது நாள் முதல் களை எடுப்பையும், இரண்டாவது முறை செடி கலைப் பதையும் மேற்கொள்ள வேண் டும். தேவையாஞல் விதைத்த 35-வது நாளுக்குள் இரண்டாம் முறை களை எடுக்கவும்.

எள் செடிகளின் குருத்தினைத் தாக்கும் கொண்டைப் புழு, காய்களைத் துளைக்கும் புழு ஆகிய வைகளைக் கட்டுப்படுத்த ஏக்க ருக்கு 200 மில்லி லிட்டர் என்ட் ரின் அல்லது 100 மில்லி லிட்டர் பாரத்தியான் அல்லது 400 கிராம் டி.டி.டீ. 50 சத நனையும் தூள 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, விதைத்த 4-வது வாரம் முதல் 15 நாடிகளுக்கு ஒரு முறை வீதம் 3 முறை தெளிக்கலாம்.

மேற்கூறிய சாகுபடி முறை களை மேற்கொண்டால் எள்ளில் நல்ல மகசூல் எடுத்துப் பெரும் இலாபம் பெறலாம்.

தாங்கள் கேட்டுள்ளதுபோல் எல்லா வகைப் புன்செய் தானி யங்களின் சாகுபடி முறைகளும் அடங்கிய புத்தகம் [illegible]

டில்லிச் சக்கரவர்த்தி முகம்மது ஷா, ஸம்ஸா முத்தௌலா தலைமையில் ஒரு சேனையை உதவிக்கு அனுப்பினார். ஆனால், இரண்டு சேனைகளும் ஒன்று சேராதபடி நாதிர்ஷாவின் சேனைகள் தடுத்துவிட்டன. தடுத்துவிட்டு இரண்டு சேனைகளோடு தனித்தனியே போர் செய்தார்கள். ஸா ஆதத்கானுடைய சேனைகள் நாதிர்ஷாவின் பீரங்கிக்கு எதிர் நிற்க முடியாமல் சிதறி ஓடினார்கள். போர்க்களத்தில் குழப்பம் ஏற்பட்டது. ஸா ஆதத் கானுடைய யானையை அவன் போர்க்களத்துக்கு அப்பால் செலுத்தினான். ஆனால், அந்த யானை பாரசீகச் சேனைக்குள் புகுந்தது. பாரசீகர் அவனைப் பிடித்துக் சிறைப்படுத்தி நாதிர்ஷாவிடம் கொண்டு போனார்கள். மொகலாயச் சக்கரவர்த்தியின் சேனாபதி ஸா ஆதாத்கான், நாதிர்ஷாவிடம் சிக்கிக் கொண்டு சிறைச்சாலையில் அடைப்பட்டான். அவனுடைய சேனை தோல்வியடைந்தது.

ஸம்ஸாமுத் தௌலாவின் தலைமையில் உதவிக்குப் போன மொகலாயச் சேனையும் தோல்வியடைந்து சிதறிப் போயிற்று. மொகலாயச் சேனைகள் இரண்டையும் ஒன்று சேராதபடிக்குத் தடுத்துப் பிரித்து பாரசீகர்கள் இரண்டு சேனைகளோடு தனித்தனியே போர் செய்தார்கள். உதவிக்குச் சென்ற சேனை பாரசீகர்களின் பீரங்கி வெடிகளுக்கு முன்னிற்க முடியாமல் சிதறுண்டன. இச்சேனையின் தலைவனான ஸம்ஸாமுத்தௌலா போரில் பலத்த காயமடைந்து விழுந்துவிட்டார். தன்னுணர்வில்லாத நிலையில் அவர் மொகலாயச் சக்கரவர்த்தியின் பாளையத்துக்குத் தூக்கிக் கொண்டு போகப்பட்டார். மொகலாயச் சேனை படுதோல்வி அடைந்தது. இருபதினாயிரம் வீரர்கள் போர்க்களத்தில் கொல்லப்பட்டிறந்தார்கள். போர்க்களத்திலே பல பிரமுகர்களும் இறந்து போனார்கள்.

படுதோல்வியடைந்த மொகலாயச் சக்கரவர்த்தி முகம்மது ஷா, தம்முடைய பாளையத்தில், என்ன செய்வது என்று தோன்றாமல் திகைத்துக் கொண்டிருந்தார். பாளையத்தில் குழப்பமும் பரபரப்புமாக இருந்தது.



போர்க்களத்தில் வெற்றி பெற்ற நாதிர்ஷா தம்முடைய பாளையத்துக்குப் போனார். போய்த் தம்மிடம் சிறை வைக்கப்பட்டிருந்த மொகலாயச் சேனாபதி ஸா ஆதத் கானை அழைத்து மொகலாய அரசாங்கத்தின் நிலைமைகளைப் பற்றி விசாரித்தார். அதற்கு அவர் விடை கூறினார்: "மொகலாய அரசாங்கத்தின் முதல் அமைச்சர் நைஜாமுல் முல்க் அவர் ஒருவர்தான் எதையும் சரியாகச் செய்யும் ஆற்றல் உள்ளவர். மாட்சிமை தங்கிய ஷா அவர்கள் அந்த அமைச்சரை அழைத்து அவர் மூலமாக எதையும் முடிவு செய்யுங்கள்!"

அடுத்த நாள் காலையில் நாதிர்ஷா, மொகலாயர் பாளையத்துக்கு ஒரு தூதன் மூலமாக ஒரு கடிதமும், குர்ரான் புத்தகமும் அனுப்பினார். கடிதத்தில், அமைச்சர் நைஜாமுல் முல்க், நாதிர்ஷாவின் பாளையத்துக்கு வந்து அவருடன் சமாதானப் பேச்சுத் தொடங்க வேண்டும் என்று எழுப்பப்பட்டிருந்தது. இனி என்ன நேருமோ என்று அஞ்சின மொகலாயச் சக்கரவர்த்திக்கு அமைச்சர் நைஜாமுல் முல்க்தான் உற்ற துணையாக இருந்தார். சக்கரவர்த்தி அமைச்சரைப் பார்த்து, இதில் ஏதேனும் சூது இருக்குமோ என்று கேட்டார்.

அமைச்சர் நைஜாமுல் முல்க் "கடிதத்தோடு குர்ரான் அனுப்பப்பட்டிருக்கிறது. ஏதேனும் சூது நடந்தால் அல்லா கவனித்துக் கொள்வார். மோசமான நிலை ஏற்படுமானால், மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி அவர்கள், மண்டூ கோட்டை அல்லது வேறு ஏதேனும் கோட்டைக்குச் சென்று தக்காணத்திலுள்ள அடியேனுடைய மகன் நாஸர் ஜங்கைச் சேனையோடு வரும்படி அழையுங்கள். அழைத்து நாதிர்ஷாவுடன் போர் செய்து அவரைத் துரத்துங்கள்.''

மொகலாயச் சக்கரவர்த்திக்குப் பலர் பலவித யோசனைகளைக் கூறினார்கள். சக்கரவர்த்தி முகம்மது ஷா, அமைச்சர் நைஜாமுல் முல்கை முழுவதும் நம்பினார். அவருடைய கருத்துப்படி என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்து வரும்படி முழு சுதந்தரம் கொடுத்து நாதிர்ஷாவிடம் அனுப்பினார்.

நாதிர்ஷா, நைஜாமுல் முல்கை வரவேற்றுப் பொதுவான விஷயங்களைப் பற்றிச் சிறிது நேரம் பேசினார். பிறகு நாதிர்ஷா, '' நாம் இரண்டு முறை டில்லிக்குத் தூது அனுப்பினோம். அதற்கு டில்லி அரசாங்கம் பதில் கூறாமலே இருந்துவிட்டது '' என்று டில்லி அரசாங்கத்தின் மேல் குற்றஞ்சாட்டினார். அதற்கு நைஜாமுல் முல்க், ''அப்போது டில்லி அரசாங்க அதிகாரிகள் தங்களுக்குள் சச்சரவுகளும் பிணக்குகளும் செய்து கொண்டிருந்தார்கள். அமைச்சர்கள் அனுப்பும் உத்தரவுகளை அவர்கள் நிறைவேற்றாமல் போனார்கள்'' என்று விடை கூறினார்.

'' இரண்டு அரசாங்கமும் உடன்படிக்கை செய்துகொண்டிருந்தால் ஆப்கானிஸ்தானத்தில் போர்களைச் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. மொகலாய அரசாங்கம் அப்போது உடன்படிக்கை செய்து கொள்ளாத காரணத்தினால் நாம் பல போர்களைச் செய்ய வேண்டியதாயிற்று. போர் செய்ய நாம் பெருந் தொகையை வட்டிக்குக் கடன் வாங்கியுள்ளோம். இந்தத் தொகையை யார் கொடுப்பது ? உமது சக்கரவர்த்தியைப் போரில் கொன்று விடுவது என்று முடிவு செய்து கொண்டிருந்தோம். இப்போது அவரை மன்னித்து விடுகிறோம். நீர் போய், உமது சக்கரவர்த்தியை நம்மிடம் வந்து உடன்படிக்கை செய்து கொள்ளும்படி அனுப்புவீர்''.

அமைச்சர் நைஜாமுல் முல்க், நாதிர் ஷாவிடம், கீழ்க் கண்ட சமாதான உடன்படிக்கையைக் கூறினார்:—1. ஐம்பது இலட்ச ரூபாய் நட்டஈடாக நாதிர்ஷாவுக்கு டில்லி அரசாங்கம் கொடுக்கச் சம்மதிக்கிறது. பாரசீக சேனை டில்லிக்குள் நுழையக் கூடாது. 2. உடனடியாக இருபதுஇலட்சரூபாய் கொடுக்கப்படும். இலட்சத்தில் பத்து ரூபாய் செலுத்தப்படும். அட்டாக் என்னும் ஊரில் பத்து இலட்ச ரூபாய் செலுத்தப்படும். கடைசி பத்து இலட்ச ரூபாயைக் காபூலில் கொடுக்கப்படும். 3. எல்லைப் பிரிவினை ஒன்றும் கிடையாது.

நாதிர்ஷா இந்த உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டார். அடுத்த நாள் சக்கரவர்த்தி முகம்மது ஷா நேரில் வந்து ஒப்புக்கொள்ள வேண்டும் என்னும் முடிவோடு பேட்டி கலைந்தது.

பாளையத்தில் மொகலாயச் சக்ரவர்த்தியும் மற்ற பிரபுக்களும் நைஜாமுல் முல்கின் வரவை ஆவலோடும் கவலையோடும் எதிர்பார்த்திருந்தார்கள். நைஜாமுல் முல்க் வந்து இந்த உடன்படிக்கையைத் தெரிவித்த போது எல்லாரும் இதை வரவேற்று ஏற்றுக் கொண்டார்கள்.

அடுத்த நாள் (1739 பிப்ரவரி 15-ஆம் தேதி) முகம்மது ஷா சக்கரவர்த்தி பாரசீகர் பாளையத்துக்குச் சென்று நாதிர் ஷாவைச் சந்தித்தார். நாதிர்ஷா சக்கரவர்த்தியை வரவேற்று உபசரித்தார். பிறகு இருவரும் இரண்டு மணி நேரம் உடன்படிக்கையைப் பற்றியும் மற்ற விஷயங்களைப் பற்றியும் பேசினார்கள். சக்கரவர்த்தி தம்முடைய பாளையத்துக்குத் திரும்பி வந்த போது, போர்க்களத்தில் காயமடைந்து படுக்கையாகக் கிடந்த சேனாபதி ஸம் ஸாமூத் தௌலா இறந்துபோன செய்தியை அறிந்தார்.

அமைச்சர் நைஜாமுல் முல்க், இராச்சியத்துக்குச் செய்துள்ள சேவைக்காக சக்கரவர்த்தி முகம்மது ஷா அவருக்கு அமீருல்-உமரா பக்ஷீ-இ-முமாலிக் (அரசாங்கச் சம்பள இலாகா அதிகாரி) என்னும் பட்டத்தைக் கொடுத்தார். இந்த உத்தியோகத்தை, ஸா ஆதத்கானுக்கு (நாதிர்ஷாவிடம் சிறைப்பட்டிருந்தவர்) கொடுப்பதாக முன்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஸா ஆதத்கான், நாதிர் ஷாவின் சிறைச்சாலையில், இந்தப் பதவி நைஜாமுல் முல்குக்குக் கொடுக்கப்பட்ட செய்தியை கேள்விப்பட்டார். உடனே அவருக்குப் பொறாமை தோன்றிற்று. அப்பொறாமை கனல்விட்டது. கனல் விட்டு அவருடைய மனத்தில் தீயாக எரிந்தது. அவருக்குப் பொறாமையுடன் கோபமும் வளர்ந்தது. தனக்குக் கிடைக்கவிருந்த இந்தப் பதவியை நைஜாமுல் முல்க் பெற்றதை அவர் மனம் பொறுக்கவில்லை. எப்படியாவது நைஜாமுல் முல்கை வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவர் தீர்மானித்தார். அவர் நாதிர் ஷாவிடம் வந்து, அவர் முகம்மது ஷா சக்கரவர்த்தியுடன் செய்து கொண்ட உடன்படிக்கை நல்லதல்ல என்றும் இன்னும் பெருந்தொகையை அவர் கேட்டிருந்தால்



மைத் துறையினர் ஒவ்வொரு பயிரைப் பற்றியும் தனியே துண்டு வெளியீடுகள் கொடுப்பார்கள். அவைகளைத் தொகுத்துப் படித்துப் பயன் பெறலாம். 'தமிழரசு' இதழிலும், வானொலியிலும் அவ்வப்பொழுது இது பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, தொடர்ந்து 'தமிழரசு' இதழைப் படித்தும், வானொலியைக் கேட்டும் வந்தால் புன்செய் தானிய சாகுபடி முறைகளை ஓரளவிற்குப் புரிந்து கொள்ளலாம்.

**வினா.**—கிராமப்புற விவசாயிகளிடமிருந்தும், மற்றவர்களிடமிருந்தும் சுலபமான முறையில் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் மாதம் 30 ரூபாய் சேமிக்கச் செய்து, நீண்டகாலத் தவணை முறையில் வீடுகட்டிக் கொடுத்து உதவி செய்ய அரசு முன்வந்திருப்பதாகவும், அநேக வங்கிகள் மூலமாக இவ்வாறு சேமிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் கேள்விப்பட்டேன். எந்தெந்த வங்கிகள் அத்தகைய உதவி செய்ய முன் வந்துள்ளன? கிராமப்புறங்களிலுள்ளவர்களுக்கும் அவ்வுதவி கிடைக்குமா என்பதைத் தயவு செய்துதெரியப்படுத்தவும்.

—வி. ஏ. செல்லையா,
மருங்கூர் கிராமம்,
காவனூர் அஞ்சல்.
(ஸ்ரீமுஷ்ணம் (வழி),
விருத்தாசலம் வட்டம்,
தென்னார்க்காடு மாவட்டம்.




**வினா.**—ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் சேமிப்பவர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் 5 ஆண்டு முடிவில் அழகான வீடு கொடுக்க ஆவன செய்து வருகிறது. 'சின்டிகேட்' வங்கியின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் இத்திட்டம் செயல்படத் துவங்கியுள்ளது. 'சின்டிகேட்' வங்கி மட்டுமே இத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் நாள்தோறும் தவறாமல் சேமித்து வந்தால், ஒவ்வொரு மாதக் கடைசியிலும் சேமித்த தொகையை, சேமிப்பவரின் கணக்கில 'சின்டிகேட்' வங்கி வரவு வைக்கும். இவ்வாறு 5 ஆண்டுக்காலம் சேமித்த தொகையையும், அதற்கான 5 சத வட்டியையும் சேர்த்துக் கணக்கிட்டு, அதைப் போல் நான்கு மடங்கு தொகையை முன் பணமாகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் 5-வது ஆண்டு இறுதியில் 'சின்டிகேட்' வங்கி கொடுக்கும்.

அந் தொகை மதிப்புக்குரிய—சேமிப்புத் தொகையைப் போல் 4 மடங்கு தொகை மதிப்புள்ள—வீட்டைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சேமித்தவருக்குக் கொடுக்கும். பிறகு 10 அல்லது 12 ஆண்டுக் காலம் வரை, மீதித் தொகையைச் செலுத்தும் முகத்தான், முன்போலவே, ஒவ்வொரு நாளும் ஒரு ரூபாய் வீதம் 'சின்டிகேட்' வங்கி உதவியுடன் சேமித்து வரவேண்டும்.

இத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் கிராமப்புறங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. எனவே, உங்கள் ஊருக்கு அருகில் 'சின்டிகேட்' வங்கி இருப்பின் அங்கே சென்று இத் திட்டத்தில் சேர மனுக் கொடுக்கலாம்.

—ஆர். எம்.








# வெண்பாப் போட்டி

## 49. நிலத்தை நிறைத்ததே நெல்

மார்கழிக்குப் பெண்ணுக வந்தாளே தைமங்கை
சீர்கொழிக்கச் செய்தாள் செகத்தினில்—ஏர்கொண்
டுலகுக் குணவளிப்போ னுள்ளம் மகிழ
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. சண்முகானந்தம், பி.எஸ்ஸி., பி.டி., தே. காளிபாளையம்.

போர்க்களத்தில் வீரர் புகழ்த்தலை காண்டல்போல்
கார்கால முத்தின் கவினழகாய்ச்—சீரார்
நலத்தைக் குவிக்கின்ற நல்மணியாய்ப் பாரில்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—பி. சி. அசனல்லி, அரக்கோணம்.

தக்க கலையறிவுந் தண்புகழும் நற்பேறும்
மிக்க குணநலனும் வேய்ந்திலகு—மக்கள்
பலத்தைக் குறைக்கும் பசிப்பிணியைப் போக்க
நிலத்தை நிறைத்ததே நெல்.

—கண. சீனிவாசன், மதுரை–1.

சொல்லுக்கோ ரண்ணுபோல் தோன்றுபுகழ் நெல்லுக்கு
வல்ல கருணு வாய்த்ததே—நல்ல
மலைத்தலைய காவிரிபாய் மல்குபுகழ்த் தஞ்சை
நிலத்தை நிறைத்ததே நெல்.

— தி. உதயகுமார், தூத்துக்குடி.

புள்ளி னொலியில் பொழுதினைக் கண்டுழவன்
பள்ளியின் நீங்கிப் பழஞ்சோற்றை—அள்ளிக்
கலத்திலிட் டேகிவயற் காட்டி வுழைக்க
நிலத்தை நிறைத்ததே நெல்!

—வசந்தன், சுவால்பேட்டை

மேகமெனும் தேன்கூட்டை மின்னலெனும் அம்புதான்
வேகமுடன் தாக்க விழுந்ததுளி—தாகம்
விலக்க வருங்கால் விரைந்ததனுல் நஞ்சை
நிலத்தை நிறைத்ததே நெல்.

—அரங்க. முத்துமணி, கீழப்பழூர்.

வேளாண் மகவை விரைவாய்த் தமிழரசு
தாளாண் சிறப்போடு தாலாட்ட—மாளாப்
பலத்தால் உரத்தால் பசுமைப் புரட்சி
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் அ. ஆறுமுகம், எம்.ஏ., பி.டி., திருச்சி-20.

உழைப்பின் சிரிப்பேபோல் ஊக்கத்தின் புன்னகைபோல்
பிழைப்பின் உறுபொருளாம் பெருணவாய்க்—கழனித்
தலமெல்லாம் புத்தொளியைத் தான்வீசும் பொன்போல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

சிவ. கிருட்டிணன், காளியூர்.

பாலை நிலந்திருத்திப், பற்றுக் குறைநீக்கிச்,
சோலைக் கவின்கொழிக்கும் சூழ்பசுமைக் —கோல
நிலத்துப் புரட்சியினுல் நெற்கழனி, இம்மா
நிலத்தை நிறைத்ததே நெல்!

—எழில் வேந்தன், சென்னை.28

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
திரு ப. சண்முகானந்தம், பி.எஸ்ஸி., பி.டி.,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
தேவம்பாடி காளிபாளையம்,
கோவை மாவட்டம்.

நைஜாமுல் முல்க் சம்மதித்திருப்பார் என்றும் இந்த உடன்படிக்கையினுல் நாதிர் ஷா ஏமாற்றப்பட்டார் என்றும் கூறினுர். மொகலாயச் சக்கரவர்த்தி முகம்மது ஷாவையும் அவருடைய அமைச்சரான நைஜாமுல் முல்க்கையும் சிறைப்படுத்தி, நாதிர்ஷா உடனே டில்லிக்குப் போய் அங்குள்ள பெரும் நிதியைக் கைப்பற்றிக் கொள்ளும்படியும் யோசனை சொன்னுர். இந்த யோசனை நாதிர்ஷாவுக்கு உகந்ததாக இருந்தது. இந்த யோசனைப்படியே செய்ய அவர் உறுதி செய்து கொண்டார்.

நாதிர்ஷா, நைஜாமுல் முல்குக்குக் கடிதம் எழுதி உடனே வந்து தன்னைக் காணும்படித் தெரிவித்தார். அவர் வந்தவுடனே அவரைக் கைது செய்து சிறையில் வைத்தார். ஐம்பது இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு போதாதென்றும் இருபது கோடி ரூபாய் தரவேண்டும் என்றும் கூறினுர். இதைக் கேட்ட நைஜாமுல் முல்க் திடுக்கிட்டு ஆச்சரியமடைந்தார். ''மொகலாய ஆட்சி ஏற்பட்டது முதல் அரசாங்கக் கஜாஞவில் 20 கோடி ரூபாய் இதுவரையில் சேர்ந்ததே இல்லை. ஷாஜகான் சக்கரவர்த்தி காலத்தில் அவருடைய பெரு முயற்சியால் 16 கோடி ரூபாய் சேமிக்கப்பட்டது. ஆனுல், அந்தத் தொகை முழுவதும் அவ்ரங்கசீபு ஆட்சிக் காலத்தில் தக்காண தேசத்தில் போர் செய்ததன் காரணமாகச் செலவாகி விட்டது. தற்போது கஜாஞவில் ஐம்பது இலட்சம் ரூபாய் கூட இல்லை'' என்று கூறினுர்.

நாதிர்ஷா, நைஜாமுல் முல்கைச் சிறையில் அடைத்து, அவர் கையிலேயே சக்கரவர்த்திக்குக் கடிதம் எழுதி அவரை வரவழைத்தார். உடன்படிக்கையைப் புதிதாகத் தீர்த்துக் கொள்ள வருமாறு சக்கரவர்த்திக்குக் கடிதம் எழுதும்படி நாதிர் ஷா நைஜாமுல் முல்கைக் கட்டாயப் படுத்தினுர். அவர் எழுதிய கடிதத்தின் படியே சக்கரவர்த்தி முகம்மதுஷா, நாதிர்ஷாவின் பாளையத்துக்குப் போனுர். போனபோது அவரும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சக்கரவர்த்தியும் நைஜாமுல் முல்க்கும் சிறை செய்யப்பட்ட செய்தி பரவிற்று. மொகலாயப் பாளையத்தில் ஒரே குழப்பமும் சந்தடியும் பரபரப்புமாக இருந்தது. தலைவர்கள் இல்லாத மொகலாயச் சேனை பாளையத்தை விட்டுப் போய் விட்டது.

ஸா ஆதத் கான் சக்கரவர்த்தியையும் நைஜாமுல் முல்க்கையும் நாதிர்ஷா மூலமாக வஞ்சம் தீர்த்துக் கொண்டார். அவருடைய பொருமைத் தீ இன்னும் தனியவில்லை. ஸா ஆதத் கானையும், தஃமாஸ்ப் கானையும் உடனடியாக டில்லிக்குப் போய் அரசாங்கப் பொக்கிஷத்தையும், மற்றும் பொருள்களையும் கைப்பற்றிக் கொள்ளும்படி நாதிர்ஷா அவர்களை டில்லிக்கு அனுப்பினுர். அவர்களுக்கு உதவியாக 4,000 பேர் அடங்கிய குதிரைப் படையையும் அனுப்பினுர். அவர்கள் டில்லிக்குச் சென்றபிறகு நாதிர்ஷா, தன்னுடைய சேனைகளோடும் சிறைப்படுத்தப்பட்ட சக்கரவர்த்தி முகம்மது ஷா வோடும் ஏனைய பிரபுக்கள் முதலியவர்களோடும் டில்லிக்குப் போனுர். டில்லியில் ஷாலாமார் பூங்காவின் அருகில் பொருமை காரணமாகச் சக்கரவர்த்தியைக் காட்டிக் கொடுத்த துரோகியாகிய ஸா ஆதத் கான், நாதிர் ஷாவை வரவேற்ருன். தேசத்துரோகியும் இராஜத்துரோகியுமான அவனை நாதிர்ஷா உயர் பதவியில் அமர்த்தினுர்.

டில்லி நகரம் அலங்கோலமாகக் காணப்பட்டது. கூச்சலும் குழப்பமும் அச்சமும் பீதியும் நகரத்தில் காணப்பட்டது. நாதிர்ஷா, டில்லி அரண்மனையில் தங்கினுர். அவருடைய சேனைகள் நகரத்தில் பல இடங்களிலும் யமுனு ஆற்றங்கரைகளிலும் தங்கினுர்கள். ஸா ஆதத் கானை நஷ்ட ஈட்டுப் பணம் 20 கோடி ரூபாயை வசூல் செய்து கொடுக்கும் படி நாதிர்ஷா நியமித்தார். பொருமைத் தீயினுல் உந்தப்பட்டு வஞ்சம் தீர்த்துக் கொண்ட துரோகிக்கு 20 கோடி ரூபாய் எங்கிருந்து கிடைக்கும்? அவ்வளவு பெருந்தொகையைச் சேர்க்க முடியாமல் அவர் தவித்தார். தொகை வராததைக்கண்டு ஏமாற்றமடைந்த நாதிர்ஷா சினங்கொண்டு ஸா ஆதத் கானை அழைத்துக் கண்டித்தார்.



சொன்ன தொகை வராமற்போனுல் நகரத்தின் மத்தியில் மரத்தில் கட்டி வைத்துக் கசையடி கொடுக்கப் போவதாகக் கண்டிப்பாகக் கூறினுர். நோயும் பலவீனமும் உள்ள ஸா ஆதத் கான், தொகையைச் சேர்க்க முடியாமல் தண்டனையும் அவமானமும் அடைய விரும்பாமல் தன் உயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிந்தார். பொருமைத் தீயினுல் தன்னுடைய அரசனையும் அமைச்சனையும் வஞ்சம் தீர்த்துக் கொண்ட அவர் நிம்மதியாக வாழ முடியவில்லை. அவமானத்துக்கும் தண்டனைக்கும் அஞ்சி அவர், நஞ்சு குடித்துப் படுக்கைக்குச் சென்ருர். உயிர் உடம்பை விட்டுச் சென்றபடியால் அவர் அடுத்த நாள் எழுந்திருக்கவில்லை. பொருமைத் தீ அவனையே சுட்டுப் பொசுக்கி விட்டது.





நாதிர் ஷா தம்முடைய கருத்தை வெளிப்படையாக விளம்பரம் செய்தார். தமக்கு டில்லி இராச்சியத்தை அரசாள விருப்பமில்லை என்றும் தனக்குச் சேர வேண்டிய தொகையைக் கொடுத்தால் முகம்மது ஷாவையே சக்கரவர்த்தியாக்க விரும்புவதாகக் கூறினுர். ஆகவே, சக்கரவர்த்தி முகம்மது ஷா தம்முடைய அமைச்சர்களான நைஜாமுல் முல்கையும் இதிமாதுத் தௌலாவையும் நிதியைத் திரட்டும்படி நியமித்தார். டில்லியிலுள்ள செல்வர் வாணிகர் முதலியவர்களிடமிருந்து நிதித் தொகை வசூல் செய்யப்பட்டது. நாதிர்ஷா தம்முடைய சிப்பாய்களுக்கும் ஆட்களுக்கும் ஒழுங்காக நடந்து கொள்ளும்படி கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தும், அவர்கள் அப்படி நடந்து கொள்ளவில்லை. மக்களைப் பலாத்காரப்படுத்தவும் அவமானப்படுத்தவும் செய்தார்கள். கொள்ளை அடிக்கவும் குழப்பம் உண்டாக்கவும் செய்தனர். அரசாங்கப் போர் வீரர் சிலரைக் கொன்றனர்.

இதற்கிடையில் வதந்தியொன்று நகரமெங்கும் பரவிற்று. நாதிர்ஷா அரண்மனையில் அந்தப்புரத்தில் பெண் காவலர்களால் கொல்லப்பட்டார் என்று வதந்தி பரவிற்று. இந்த வதந்தி காரணமாக நாதிர்ஷாவின் சிப்பாய்களில் சிலர் கொல்லப்பட்டனர். இந்தச் செய்தியைக் கேட்ட நாதிர்ஷா கோபங்கொண்டு தன்னுடைய உடைவாளை உரையிலிருந்து எடுத்து நகர மக்களை வெட்டிக் கொல்லும்படிக் கட்டளையிட்டார். அவருடைய சிப்பாய்கள் நகரத்தைக் கொள்ளையடித்து வீடுகளை இடித்துத் தள்ளி கடைகளுக்கும் கட்டடங்களுக்கும் தீ வைத்துக் கொளுத்தி மக்களை வெட்டிக் கொன்றனர். 30,000 பேர், ஆண்களும் பெண்களும் கொல்லப்பட்டனர். நகரமெங்கும் இரத்தக்கறை படிந்திருந்தது. தெருக்களிலும் வீதிகளிலும் பிணங்கள் சிதறிக் கிடந்தன. டில்லி நகரம் தீயினுல் எரிந்து போய் வெறும் மைதானமாகக் காணப்பட்டது. ஒருவரும் நாதிர்ஷா விடம் செல்ல முடியவில்லை. அவரிடம் போக எல்லாரும் அஞ்சினர். கடைசியாக நைஜாமுல் முல்க், நாதிர்ஷாவிடம் சென்று மக்களிடம் தயவு காட்டும்படி வேண்டிக் கொண்டார்.

நாதிர் ஷா உம்முடைய நரைத்த தாடியின் பொருட்டு மன்னிக்கிறேன் என்று மன்னித்துவிட்டார். இவ்வாறு டில்லி படுகொலை முடிவடைந்தது.

டில்லியில் முறையாகவும் ஒழுங்காகவும் நிதி வசூல் செய்யப்பட்டது. இந்திந்தப் பகுதியில் இந்திந்த தெருவில் இன்னின்னுர் இவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்று முறைப்படுத்தி நிதி வசூல் செய்யப்பட்டது. பிறகு குறிப்பிட்ட நிதி கிடைத்தவுடன் அதை நாதிர்ஷாவுக்குக் கொடுத்தார்கள். நிதியைப் பெற்றுக் கொண்ட நாதிர்ஷா சிந்து நதிக்கு மேற்கிலுள்ள மொகலாய ஆட்சிக்குட்பட்டிருந்த நாடுகளைத் தன் இராச்சியத்துடன் சேர்த்துக் கொண்டு டில்லியை விட்டுப் போய்விட்டார். போவதற்கு முன்பு தன்னுடைய தலைப்பாகையை எடுத்து டில்லி பாதுஷாவின் தலையில் வைத்து அவரை அரசனுக்கினுர்.

முகம்மது ஷா டில்லியில் முன்போலவே அரசரானுர். இரண்டு மாதம் வரையில் நாதிர் ஷாவின் பெயரினுல் காசு அடித்தார். நாதிர்ஷாவின் பெயரினுல் மசூதிகளில் குத்பா செய்தார். நல்லவிதமாக, சுமுகமாக நடக்கவிருந்த உடன்படிக்கை, ஒரு பொருமைக் காரனுடைய துரோகச் செயலினுல், டில்லி நகரம், எரிந்தது, வீடு வாசல்கள் தகர்க்கப்பட்டன. மக்கள் கொள்ளையிடப் பட்டனர், ஆயிரக் கணக்கானவர் கொலை செய்யப்பட்டு உயிர் இழந்தனர். நகரம் செல்வத்தை இழந்து வறுமையடைந்தது. பழைய நல்ல நிலையை அடையப் பல ஆண்டுகள் சென்றன.



# வெண்பாப் போட்டி

திங்கள் முகமுடையாள் தென்னுட்டுத் தைப்பெண்ணுள்
பொங்கலிட நற்கழனி போந்தக்கால்—மங்கை
நலத்திலும் என்றன் நலங்குறைவோ வென்றே
நிலத்தை நிறைத்ததே நெல்.

—இரத்தின. மாணிக்கம், கொம்பேரிபட்டி.

பொன்றுப் பசுமைப் புரட்சிக்கே வித்திட்டார்
நன்றுய்நம் நாடாள்வோர் ! நாயகியே !—என்றன்
உளத்தை நிறைத்திடும் உன் புன்னகைபோல் எங்கும்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சி. மு. சிவலிங்கம், ஐ.எம்.எஸ்.ஸி., மதுரை-21.

பாளை வெடித்தாற்போல் பற்காட்டி நிற்கையிலே
ஆளை மருட்டுதடி அன்பரசி—நாளை
மலர்சூட்டி உன்னை மணந்திடவே தையில்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—மெய். அருண்மொழியன், கல்பூர்.

ஊட்டமீகு வித்தளித்தும் ஊக்கும் உரம்தந்தும்
வேட்டையிடும் பூச்சிகளை வேரறுத்தும்—நாட்டில்
நலங்குவியப் பாடுபட்ட நல்லரசால் இன்று
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

பொன்னிக் கருணைப் புதுப்புது நெல்மணிகள்
இன்னும் பலவாக எத்தனையோ—உன்னி
வளத்தைப் பெருக்க வயலில் விதைத்தோம்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ஆ. இராசரெத்தினம், பி.எஸ்ஸி., பி.டி., தாமரங்கோட்டை.

பைந்தமிழ்சால் நாட்டில் பசுமைப் புரட்சியினல்
ஐந்திணையும் நல்வளங்கள் ஆர்ப்பரிக்க—நைந்தோர்
கலங்கலமாய்க் கண்டுமுதல் கண்டுவக்க என்றும்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர். நா. தண்டபாணி, பூங்குடி.

வான்மழை பெய்து வளரும் பயிர்செழித்துக்
கூன்நிமிர்ந்து வாழக் குறைநீக்கும்—சான்றுய்
விலைமலிந்து வியப்புடன் உய்ய
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

உழுது வயல்குழப்பி ஓங்குவிதை நாற்றைப்
பழுதின்றி நட்டிட்டார் பாங்காய்ப்—பொழுதும்
நலமாம் எருவிட்டே நன்னீரும் பாய்ச்ச
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. குப்புசாமி, பொன்மலை.

ஆற்றைத் தடுத்தும், அழகார் குளந்தொட்டும் ;
ஊற்றுக் குழாய்க்கிணற்றை ஊடமைத்தும் ;—சாற்றும்
நலஞ்சார்ந்த நீர்வளத்தை நம்மரசு பேண ;
நிலத்தை நிறைத்ததே நெல்.

—வித்துவான் நா. சிவராமமுத்துக்குமரவேல், தேனி.

ஐயாரெட் டென்னும் அதிசய நெல்லுடனே,
ஐயா ரிருபதையும் ஆய்ந்தெடுத்தே—வையம்
நலத்தைப் பெறவிதைக்க நாட்டினிலே நன்செய்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—குமரகுருபரபாண்டியன், தேனி.

கங்கையும் காவிரியும் ஒன்றாகும் காட்சிகண்டேன்
வங்கக் கடலுமதை வாழ்த்தியதே—எங்கும்
புலர்ந்ததுநல் வாழ்வு புதுவளங்க ளோடு
நிலத்தை நிறைத்ததே நெல்.

—பகவதி அப்பன், சென்னை-5.

கழனியிலே கால மெலாங்கிடந்(து) ஆடி
உழன்றே உணவுநமக்(கு) ஊட்டும்—உழவர்
குலத்தைக் குதூகலமாய்க் கூடிவாழ வைக்க
நிலத்தை நிறைத்ததே நெல்.

—இரா. இராமகிருட்டினன், கந்தர்வகோட்டை.

திக்கெட்டும் போற்றுகின்ற தீந்தமிழர், ஆட்சியிலே
நிற்கட்டும் நேராக, நீள்கவென—மக்கள்
குலத்தை மகிழ்விக்கக் கோலமிடும் வண்ண
நிலத்தை நிறைத்ததே நெல்.

—பூங்குழலி, பொருளூர்.

வாட்டும் பசிப்பிணி வாராது காத்திடவும்
நாட்டின் வளமெல்லாம் நாடோறும் - கூட்டி,
நலமான செல்வத்தை நல்லுழைப்பால் ஊட்ட,
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் கே. மு. கிருட்டிணமூர்த்தி, தேவிகாபுரம்.

# வெண்பாப் போட்டி

புலத்தில் பொழிந்த மழையும் , குறிஞ்சி
நிலத்தில் உருண்ட புனலும்,—பலநாள்
கலத்தை நிறைத்த சுரபி தனைப்போல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சேவுரையன், கடையநல்லூர்.

பேட்டி கண்டவர் :

பொம்மை உரமிட்டால் பொங்கி விளைகருணை
இம்மையில் யாதுபயன் ஈயுமோ ?—செம்மைப்

பேட்டி அளித்தவர் :

புலத்தினைப் போற்றுவார் போற்றக் களத்து
நிலத்தை நிறைத்ததே நெல்.

—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்.

இல்லோரின் வாழ்வில் இருளைக் களைந்திடவே
நல்லோர் வகுத்திட்ட நற்செயலால்—வல்லார்
புலத்தை நிறைக்கும் புலவோரின் நூல்போல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர். வை. கண்ணையன், அருப்புக்கோட்டை.

பொன்னி கரிகாலன் பூம்புகார்க் கண்ணகி
அன்னை எனக்காக்கும் ஐயாரெட்—டின்னும்
நலத்தை மிகத்தருமோர் நற்கருணை வந்து
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் எஸ். திருநாவுக்கரசு, தூத்துக்குடி.

தையை வரவேற்றுத் தண்டமிழர் இல்லமெலாம்
தையலர்கள் பொங்கலிடும் தைநாளில்—தையின்
வளங்கண் டுழவர் மகிழ்ந்தாடும் வண்ணம்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—கு. பாரதஜோதி, பி.எஸ்ஸி., பி.டி., திருமங்கலம்.

கட்டுக் கலமும், கதிருழக்கும் நெற்காணக்
கட்டி எடுத்துவந்த கட்டெல்லாம்—தட்டக்
கலங்கலமாய்ச் சேர்ந்து, கதிரடிக்கும் மேட்டு
நிலத்தை நிறைத்ததே நெல்.

—க. ச. சூசை, சம்பு குட்டப்பட்டி.

நாவமகள் பெற்றெடுத்த காவிரித்தாய் தண்ணளியால்
ஓலமிடும் பஞ்சத்தை ஓட்டிடவே—சோழ
வளநாடு சோறுடைத்தாய் மாண்புறவே எங்கும்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

மாட்டினெடு போட்டியிடும் மாசற்ற பேருழைப்பால்
நாட்டினர்க்குச் சோறளிக்கும் நல்லுழவர்—கூட்டம்
பலத்தை மிகத்தேக்கிப் பாடுபட்ட தாலே
நிலத்தை நிறைத்ததே நெல்.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

உழைக்கும் திறம்பெற்றேம் ; ஓங்கநிலம் அற்றேம் ;
பிழைக்கும் வழியுமற்றேம் ! பீடு—தழைக்குங்
கலைத்தமிழ்க்கட் ருள்வோர் கனிந்தெமக்கே ஈந்த
நிலத்தை நிறைத்ததே நெல்.

—பா. ஐ. முகம்மது அலி, சென்னை-39.

கஞ்சிக் கலயத்தை நூலிடையில் ஏந்திவரும்
அஞ்சுகத்தைப் போற்றுதல்போல் ஆருயிராய்—'நஞ்சை'த்
தலத்தை உழுகுலத்தார் தாங்கும் தவத்தால்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் திருஞானசம்பந்தன, பி. ஏ., திருச்சி.

மண்உடையக் கொத்தி மாடுழவே சேறுகி
எண்ணரிய துன்புறினும் ஏற்றபயன்—கண்டே
நிலத்தாய்தான் புன்னகைக்கும் நித்திலப்பல் போன்றே
நிலத்தை நிறைத்ததே நெல்.

—கோதை. இரகுபதி, பாத்திமா நகர்.

தேங்கிப் பசிக்கொடுமை தீய்த்த வறுமைதனை
நீங்கும் படிக்குணர்த்த நேர்மையினுல்—ஓங்கி
வலுத்த பசும்புரட்சி ஏழை உழவன்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ப. செல்லபாண்டியன், கிருஷ்ணகிரி அணை.

காலந் தவருக் கடமை, உழைப்பாகி
மேலோர் பெருக்கை மிகுப்பதொடு—பாலாய்
நலத்தை, வளத்தை, வளர்க்கின்ற நன்செய்
நிலத்தை, நிறைத்ததே நெல்.

—புலவர் சிரான, கோம்பை.

குளத்தை நிறைத்தது கொண்டல் ; வயலின்
வளத்தை நிறைத்தது வண்டல் ;—தளரா
நலத்தை நிறைத்திடும் நல்லுழவர் தாளால்,
நிலத்தை நிறைத்ததே நெல்.

—வித்துவான் இலெ. சி. குப்புசாமி, கோவிந்தாபுரம் கிராமம்.

# வெண்பாப் போட்டி

நல்ல கருணைவாய் நாடுபுகழ் பத்மாவாய்
வல்லார்கள் கண்டஐ யாரெட்டாய்—நல்லார்
உளத்தை நிறைத்திட்ட உண்மைத்தை நாளில்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ம. சக்குபாய், உடுமலை.

நெல்விதையில் ஒன்றும், நிலத்தில்ஓர் அங்குலமும்
இல்லை பயனென்ருல், இந்நாட்டின்—செல்வ
நலமழியும் ; மானம் நலியும் எனஉழைத்தேன் ;
நிலத்தை நிறைத்ததே நெல்.

—அரிமதி தென்னகன், குயவர்பாளையம்.

உழுதுவிதை பாவி உயிர்போற் கதிரைப்
பழுதின்றிக் காத்த பயனல் - முழுதும்
கலத்தை நிறைத்துக் கலங்காமல் உண்ண
நிலத்தை நிறைத்ததே நெல்.

—கதி. பழநியப்பன், பேராம்.

ஊற்ருய் அறிவுதர ஊருலகைத் தான்நிறைத்த
நூற்றுக் கணக்கான நூல்அதுபோல் - சோற்றுச்
கலத்தை நிறைத்துக் கடும்பசியைத் தீர்க்க
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சி. சௌ. கருப்பன், திருச்சி-15.

நெஞ்சம் கவர்ந்தான் நிலமுழுதான்! வஞ்சிமகள்
கஞ்சிக் கலயம் சுமந்திட்டாள் - பஞ்சம்
அலறியோடத் தைநாளில் ஆடையாய்நிர் வாண
நிலத்தை நிறைத்ததே நெல்.

—முத்தமிழ்த்தாசன், சிறுகூடல்பட்டி.

கார்த்திகையில் பெய்த கவின்மழையால் இட்டபயிர்
மார்கழியில் ஓங்கி வளம்பெற்றே - நீர்மை
நிலத்துடனே தைப்பொங்கல் நன்ருளில் நன்செய்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—உ. தாமோதரன், சென்னை-7.

வாட்டும் வறுமைப்பேய் வையகத்தை விட்டகலத்
தீட்டிடுவோம் சாகுபடித் திட்டங்கள்; - நாட்டின்
நலம்பேணி நல்கிடும்; நல்லுழைப்பால் நஞ்சை
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சு. கா. சுந்தரராசன், நாரைக்கிணறு.

பொன்னி பொருநை புரண்டோடித் தண்டமிழர்
நன்ருட்டிற் பாய்ந்து நலம்பயக்கத் - தென்ருடு
உலகிற் சிறந்தே உயர்ந்திடவே குன்ருமல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் ந. புலியரசு, களக்காடு.

காற்ருல் கடும்பேய் மழையால் கடும்பனியால்
சேற்ருல் எதிலும் சிதறியதால்—நாற்ருல்
நலத்தோடு செய்வித்த நற்கழனி எங்கும்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—ஏ. பெரியசாமி, மடத்துக்குளம்.

கல்லா லடிக்குங் கயவரே காழ்ப்பிருல்
சொல்லாலு முள்ளத்தைச் சுட்டாலும் - இல்லார்
குலத்தை உயர்த்துங் குணமுடையோர் போல
நிலத்தை நிறைத்ததே நெல்.

—தி. சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி-6.

காலை இளம்பரிதி காட்சி யளிக்குமுன்
ஓலைக் குடிசை உழவர்கள் - காளை
களைப்பூட்டி ஏருழக் கண்டபலன் காணீர்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—வை. இரத்தினசாமி, தேந்தாகுடி வடக்கு.

மண்ணில் முகம்விழித்து மாடுகட்டி ஏர்உழுது
கண்ணுய் இருந்து கவனித்து - வன்னைக்
கலத்தை நிறைக்கும் கவளம் தருவோர்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—மு. தேவராசன், மதுரை-10.

காலமழை கண்டு கழனி தனையுழுது
சிலமுடன் சீரியன செய்தபின் - கோலக்
குலமகள் கண்ணகியின் குன்ருப் புகழ்போல்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

பார்மகிழக் கார்பொழியப் பார்த்திருந்த ஏர்உழவர்
நீர்பெருக்கி நன்னிலத்தே நெல்விதைக்க - ஏர்ப்பின்
உலகு சுழன்றுவரும் உண்மை விளங்க
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சோ. தமிழரசு, ஆலம்பட்டு.

கருமுகில்கள் நீர்சொரிய, கன்மாய்கள் விம்ம,
எருதுகளோ ஏரிழுக்க, என்றும் - விரும்பிக்
கலப்பைப் பிடித்துலகைக் காப்போர்தம் நன்செய்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—சே. சி. இளந்திரையன், செல்லியம்பாளையம்.

நெற்றி வியர்வை நிலத்தின்கண் சிந்தி;ஏர்
பற்றி உழும்நல்ல பாட்டாளி - சற்றும்
தளராது தன்னுழைப்பைத் தந்திடக்காண் ; குன்ருய்
நிலத்தை நிறைத்ததே நெல்.

—அன்பு. செயராமன், அரக்கோணம்



தமிழக மாவட்டங்களில் எத்தனையோ நற்பணிகள், சீர்திருத்தங்கள், வளர்ச்சிப் பணிகள் முதலியன நடந்த வண்ணமுள்ளன. ஒரு மாவட்டத்தில் என்ன நடக்கின்றன என்பதைப் பிற மாவட்டத்தினரும், பொதுவாகப் பொதுமக்களும் தெரிந்து கொள்வது வளர்ச்சிப் பணிக்கு மேலும் வித்திடுமல்லவா? இதனை விளக்குகிறது இந்தப் பக்கம்.

### தருமபுரி மாவட்டத்தின் தொழில் வளப்பெருக்கம்

தருமபுரி மாவட்டத்தின் தொழில் வளப் பெருக்கத்தைத் துரிதப்படுத்துவதற்கு மாபெரும் முயற்சி தேவைப்படும் என்று சென்னையிலுள்ள மத்திய அரசு சிறுதொழில்கள் சேவை நிலையத்தின் ஆய்வுக்குழு ஒன்று கருத்துத் தெரிவித்திருக்கிறது. நம் நாட்டில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று 8 மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் தருமபுரியும் ஒன்று. இந்த மாவட்டத்தில் தொழில் துவக்குவதற்கு நிதி நிறுவனங்கள், சலுகை முறையில் நிதியுதவி வழங்கும்.

எண்ணெய் விதைகளிலிருந்து எண்ணெய் எடுப்பது, புளியங் கொட்டையிலிருந்து புளியங் கொட்டை மாவு, டார்டாரிக் அமிலம் ஆகியவை எடுப்பது, கொப்பரை, கொட்டாங்கச்சி மாவு, தேங்காய் நார்க் கயிறு தயாரிப்பது, மரவள்ளிக் கிழங்கிலிருந்து குளுக்கோஸ், டெக்ஸ்டிரின் தயாரிப்பது, பழங்களைப் பக்குவப்படுத்துவது, மாட்டுத் தீவனம் தயாரிப்பது போன்ற 25 சிறுதொழில்களைத் தருமபுரி மாவட்டத்தில் துவக்குவதற்கு வாய்ப்பிருப்பதாக அறிக்கை கூறுகிறது.

பெங்களூரிலும் அதைச் சுற்றியும் உள்ள அரசுத்துறை நிறுவனங்களுக்கு வேண்டிய தொழிற் பொருள்களைத் தயாரிப்பதற்கென ஒசூரில் சிறுதொழில்களைத் துவக்கலாம் என்றும் அறிக்கை யோசனை கூறியிருக்கிறது.

சேலம் எஃகு ஆலை அமைக்கப்படும்போதும் அமைக்கப்பட்ட பிறகும் எத்தகைய பொருள்கள் தேவைப்படும் என்பதையும் அறிக்கை குறிப்பிடுகிறது. ஏற்றுமதி வாய்ப்புள்ள மெருகூட்டிய கிரானைட் கற்களைத் தயாரிக்கலாம் என்பது குழுவின் மற்றொரு யோசனையாகும். அலுமினியப் பாத்திரங்கள், மேசை நாற்காலிகள் தயாரிப்பு நிலையங்கள், டிராக்டர் பழுதுபார்க்கும் நிலையங்கள் போன்றவற்றைத் துவக்கலாம் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் 42 பொருள்கள் தயாரிப்புக்கான 'மாதிரித் திட்டங்கள்' அடங்கியுள்ளன. பெரும்பாலான தொழில்களுக்கு 29 ஆயிரம் ரூபாயிலிருந்து 3 இலட்சம் ரூபாய் வரை மொத்த முதலீடு தேவைப்படும். இது சாதாரண சிறுதொழில் முனைவர்களின் வசதிக்கு உட்பட்டது தான். உதாரணமாகக் குளுக்கோஸ் திரவம் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைப்பதற்கு நிலத்துக்கும் - கட்டடத்துக்குமாக 20 ஆயிரம் ரூபாயும், இயந்திரச் சாதனங்களுக்கு 53 ஆயிரம் ரூபாயும், அலுவல்களுக்கு 63,500 ரூபாயுமாக மொத்தம் ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 500 ரூபாய் முதலீடு செய்ய வேண்டும். கிரானைட் கற்கள் தயாரிப்பதற்கு மொத்தம் 80,000 ரூபாய் முதலீடு செய்ய வேண்டும். இப்படிப் பல தொழில்களுக்கு ஆகும் முதலீட்டுச் செலவு, அலுவல் செலவு கிடைக்கக் கூடிய இலாபம் போன்றவற்றை அறிக்கையில் விளக்கிக் கூறியிருக்கிறார்கள்.

* * *

### அகதிகள் அகம் மகிழ்ந்திட...!

மதுரை மாவட்டம் முழுவதிலும் 346 இலட்ச ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு 6,086 டன் யூரியா உரமும், 1,644 டன் அமோனியா சல்பேட் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 2,755 டன் யூரியா உரமும், 306 டன் அமோனியா சல்பேட் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

பர்மா அகதிகளுக்குத் தொழிற் கடனாக 77 குடும்பங்கள் பயன் பெறும் அளவில் ரூ. 5,90,210-ம் வீட்டுக் கடனாக 422 குடும்பங்கள் பயன் பெறும் அளவில் ரூ. 12,72,815-ம் வழங்கப்படுகிறது. இலங்கை அகதிகளுக்குத் தொழிற் கடனாக ரூ. 4,64,900-ம், வீடு கட்டும் கடனாக 26 குடும்பங்களுக்கு ரூ. 7,75,000-ம் வழங்கப்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் பழனி வட்டம், நெய்க்காரன்பட்டிக் கருகில் பெருமாள் புதூர் சாலை மேம்பாட்டிற்குத் தமிழ்நாடு அரசு 3 இலட்ச ரூபாயினை ஒதுக்கீடு செய்துள்ளது.

* * *

### முதியோர் கல்வி பெருகிட...

மதுரைக் கிழக்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ. 43,760 வசூல் செய்யப்பட்டுள்ளது. சீரணித் திட்டத்தின் கீழ் இரண்டு திறந்த வெளி அரங்கம் கட்டவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

இளைஞர் அணியால் முதியோர் கல்வித் திட்டம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. வாலி பால், சடுகுடு விளையாட்டுப் பயிற்சி நடத்தியும், கிராம மக்களை ஊக்குவித்து வருகிறது இளைஞர் அணி. பொய்யகரைப் பட்டியிலுள்ள கோழிப் பண்ணை நல்ல முறையில் இயங்கி வருவதைக் குறிப்பிட வேண்டும்.

* * *

### மாணவரின் மகத்தான பணி

டிசம்பர் 30-ஆம் நாளன்று திருச்சி திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கூத்தப் பாரில் தேசிய மாணவர் பணிப் படையினரின் (என்.எஸ்.சி.) சாலை செப்பனிடும் பணி நிறைவு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் வெள்ள நிவாரணப் பணியாற்றிய எல்லா மாணவர்களுக்கும் அன்பளிப்பாகக் கோட்டாட்சித் தலைவர் திருக்குறள் வழங்கினார்.



தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் அதிக வருவாய் பெற்று வளமான வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காக, கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பல புதிய பயன்மிகு ரகங்களையும், கருவிகளையும், சாகுபடி முறைகளையும் கண்டு பிடித்து வருகின்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச்சார்ந்த 'தகவல் தொடர்பு நிலையம்', அப்புதிய பயன்மிகு கண்டு பிடிப்புகளை அவ்வப் பொழுது வெளியிட்டு வருகின்றது.

உழவர் பெருமக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டுள்ள 'தமிழரசு', தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகளைத் தொகுத்து உழவர் உலகத்திற்கு அவ்வப்பொழுது பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. அண்மையில் கிடைக்கப் பெற்ற புதிய கண்டுபிடிப்புகள் பற்றிய செய்தியைத் தொகுத்து, வேளாண்மை உற்பத்தியை விரைந்து பெருக்கிட ஓயாது உழைத்து வரும் உழவர் பெருமக்களுக்குக் காணிக்கையாகக் கீழே படைத்துள்ளோம். உழவர் பெருமக்கள் அவைகளைப் படித்துப் பயன் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம்.

**சாமந்திச் செடிகளில் விரைந்தும் நிறைந்தும் மலர்கள் தோன்றச் செய்வது எப்படி?**

சாமந்தி, மனத்தைக் கவரும் மலராக மட்டுமல்ல, மலிவான விலையில் கிடைக்கும் மலராகவும் விளங்குகிறது! தற்பொழுது சாமந்திப் பூக்கள் தமிழ்நாடு எங்கும் ஒரே நேரத்தில் அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு வருவதால், விற்பனைக் கூடங்களில் சாமந்தி மலர்கள் விற்பனையாகாமல் தேக்க நிலையடைந்து விடுகின்றன. இதன் காரணமாகச் சாமந்தி மலர்களைக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய இக்கட்டான நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஒரு பருவத்தையொட்டிப் பயிராகும் பயிராகச் (Seasonal Crop) சாமந்தி இருப்பதாலேயே, சாமந்திப் பூக்களை மலிவான விலைக்கு விற்பனை செய்யவேண்டி நேரிடுகிறது. இதற்கு இயற்கையும் ஒரு காரணமாக உள்ளது.

அதிக இரவு நேரம் உள்ள நாட்கள் (Longer night days) சாமந்திச் செடிகளில் மொட்டுகள் தோன்ற ஏதுவாக உள்ளன. எனவே, தமிழ்நாட்டில் சாமந்திக் கன்றுகளை 'மே' அல்லது, 'சூன்' திங்களில் நடவு செய்ய வேண்டியுள்ளது. சாமந்திக் கன்றுகளின் நடவு ஒரு குறுகியகால வரையறைக்குள் செய்யப்பட வேண்டியிருப்பதால், ஒரே காலத்தில் நிறையச் சாமந்திப் பூக்கள் விற்பனைக்குத் தயாராகி விடுகின்றன.



இயற்கையே இந்நிலைமை ஏற்படக் காரணமாக இருப்பதால் இயற்கைக்கு எதிராகச் செயற்கை முறைகளால், குறுகிய காலத்தில் கிடைக்கும் சாமந்திப் பூக்களைப் பரவலாக அதிக நாட்களுக்குக் கிடைக்கச் செய்து, விற்பனைக் கூடங்களில் சாமந்திப் பூக்களுக்குத் தேக்கமில்லாமல், விற்பனை செய்ய வழிசெய்யும் பொருட்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

இந்த ஆராய்ச்சியில் செயற்கை முறையில், சாமந்திச் செடிகளுக்கு இரவில் வெளிச்சம் அளிப்பதன் மூலமும், 'ஜிப்ரலிக் அமிலம்' என்னும் திரவத்தைத் தண்ணீருடன் கலந்து தெளிப்பதன் மூலமும், ஏறத்தாழ ஒரு மாத காலம் முன்னதாகவே சாமந்திச் செடிகளிலிருந்து பூக்களைப் பெற இயலும் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

செயற்கை வெளிச்சம் கொடுக்கப்பட்ட செடிகள் 24 நாட்கள் முன்னதாகவும், 'ஜிப்ரலிக் அமிலம்' தெளிக்கப் பெற்ற செடிகள் 33 நாட்கள் முன்னதாகவும் பூக்கள் கொடுத்துள்ளன. அச்சோதனையின் விவரம் கீழே விளக்கப்பட்டுள்ளது.

சாமந்திச் செடிகளில் மூன்று வெவ்வேறு நிலையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இச்சோதனைக்கு 3 பாத்திகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒரே நாளில் அவைகளில் சாமந்திக் கன்றுகள் நடப்பட்டன.

ஒரு பாத்தியில் இருந்த செடிகளுக்கு, நடவு செய்த 30-வது நாள் முதல், இரவில் செயற்கையாக வெளிச்சம் அளிக்கப்பட்டது.



மற்றொரு பாத்தியில் இருந்த செடிகளுக்கு நடவு செய்த 30வது நாள் முதல், 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 3 முறை 'ஜிப்ரலிக் அமிலம்' தெளிக்கப்பட்டது. இவ்வாறு தெளிக்க 10 இலட்சம் பங்கு தண்ணீரில் 400 பங்கு 'ஜிப்ரலிக் அமிலம்' வீதம் கலந்து தெளிப்பான் மூலம் தெளிக்கப்பட்டது.

மூன்றாவது பாத்தியில் உள்ள செடிகளில் எந்தவித முறையும் மேற் கொள்ளப்படாமல், வழக்கத்தில் உள்ள சாகுபடி முறையே மேற்கொள்ளப்பட்டுத் தடுப்புத் தலையாக (Control plot) அமைக்கப்பட்டது. இச்சோதனைகளில் பின்கண்ட 3 உண்மைகள் தெரிய வந்துள்ளன.

நடவு செய்த நாளில் இருந்து முதல் பூ தோன்ற ஆகிய காலம்

| | நாட்கள். |
|---|---|
| எந்தவித முறையும் மேற் கொள்ளாத தடுப்புத் தலையில் உள்ள செடிகளில் முதல் பூ தோன்ற ஆகிய காலம் | 128 |
| இரவில் வெளிச்சம் பெற்ற செடிகளில், முதல் பூ தோன்ற ஆகிய காலம். | 104 |
| ''ஜிப்ரலிக் அமிலம்'' தெளிக்கப் பெற்ற செடிகளில் முதல் பூ தோன்ற ஆகியகாலம் | 95 |

**பூக்கள் பூத்த மொத்த நாட்கள்**

| | |
|---|---|
| தடுப்புத் தலை | 93 |
| வெளிச்சம் பெற்ற தலை | 116 |
| 'ஜிப்ரலிக் அமிலம்'தெளி ''ஜிப்ரலிக் அமிலம்'' தெளித்த தலை | 128 |



**ஒருசெடியில் மலர்ந்த பூக்கள்**

| | பூக்களின் எண்ணிக்கை. |
|---|---|
| தடுப்புத் தலைச்செடி | 21 |
| வெளிச்சம் பெற்ற தலைச் செடி | 33 |
| '' ஜிப்ரலிக் அமிலம் '' தெளித்த தலைச் செடி | 45 |

மேற்கூறிய விவரங்களிலிருந்து சாமந்திச் செடிகளுக்கு ''ஜிப்ரலிக் அமிலம்'' தெளிப்பதால் வழக்கத்தில் உள்ள சாகுபடி முறையினால் பூக்கள் கிடைப்பதைவிட 33 நாட்கள் முன்னதாகச் சாமந்திப் பூக்கள் பெற முடிவதுடன், அதிகப்படியாக 35 நாட்களுக்குப் பூக்கள் பெற முடிகிறது. மேலும், ஒவ்வொரு செடியிலும் 24 பூக்கள் அதிகமாகப் பெற முடிவதால், அதிக மகசூல் எடுக்க முடியும் என்பதும் தெளிவாகியுள்ளது.

இவ்வாறு செய்தால், அதிக நாட்கள் சாமந்தி மலர்களை விற்பனைக் கூடங்களில் விற்க முடியும். அத்துடன், ஒரே சமயத்தில் சாமந்திப் பூக்கள் விற்பனைக்கு வந்து, விற்பனையில் தேக்க நிலை ஏற்படுவதையும் தடுக்க இயலுகிறது. இதனால் சாமந்தி பயிரிடும் உழவர்பெருமக்களுக்கு அதிக இலாபம் கிடைக்கும் என்பது உறுதியாகின்றது.

**புதிய வீரிய மாவகை!**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பெரியகுளம் பழ ஆராய்ச்சி நிலையம் ''2/9'' என்ற புதிய வீரிய மா வகையை உருவாக்கியுள்ளது. இது 'சின்னச் சுவர்ண ரேகா' என்னும் வகையையும், நீலம் வகையையும் இனக்கலப்பு செய்து கண்டு பிடிக்கப்பட்டதாகும்.

செம்மண் கலந்த வடிகால் வசதியுள்ள குறுமண் நிலம் இதற்கு உகந்தது.

இப்புதிய மா வகையை 40 அடிக்கு 40 அடி இடைவெளியில் சதுர முறையில் நட வேண்டும். 3 அடிக்கு 3 அடி என்ற அளவில் குழி வெட்டி அதில் தொழு உரத்தையும், மேல் மண்ணையும் மாற்றி, மாற்றி நிரப்பி ஒரு ஆண்டு ஒட்டுகளைச் சூலை-செப்டம்பர், திங்களில் நடலாம்.

குழியின் நடுவில் இந்தப் புதிய வகை மா பதியத்தை நட்டு, மண் அணைத்து நீர்



ஊற்ற வேண்டும். பதியத்தின் அடிப்பாகத்திலிருந்து வரும் சிம்புகளை ஒடித்துவிட வேண்டும். தேவையானபோது களையெடுத்து செப்டம்பர் திங்களில் இரு முறை உழவு செய்வது சாலச் சிறந்தது. இம்மாவகை காய்க்க ஆரம்பிப்பதற்கு முன்பு மாந்தோப்பின் இடைவெளிகளில், குறுகிய காலப் பயிர்களான காய்கறிகளைப் பயிரிடலாம்.

ஓர் ஆண்டு வயதுள்ள மாஞ்செடிக்கு 20 கிலோ தொழு உரம் இடவும். 227 கிராம் (1/2 பவுண்டு) தழைச்சத்து, 454 கிராம் (1 பவுண்டு) தழைச்சத்து, 681 (கிராம் 1½ பவுண்டு) தழைச்சத்து ஆகியவற்றைக் முறையே 2 ஆண்டு, 3 ஆண்டு, 4-5 ஆண்டுச் செடிகளுக்கு அம்மோனியம் சல்பேட் வடிவத்தில் முறையே இட வேண்டும். இந்த இரசாயன உரத்தை, மரத்தைச் சுற்றி வட்ட வடிவத்தில் பள்ளம் தோண்டிப் போட்டு மூட வேண்டும்.

இப்புதிய மா வகை நட்ட 5-வது ஆண்டில் பலன் கொடுக்கும். அதற்கு முன்பு விடும் பூக்களை ஒடித்துவிட வேண்டும். டிசம்பர்-சனவரித் திங்களில் பூப்பூத்து, சூன் திங்களில் பலன் கொடுக்கும். இம்மாவகை, சில சமயம் கார்ப்பட்டமான பிப்ரவரியிலும் காய்க்க வல்லது.

12 ஆண்டு வயதுள்ள ஒரு மரம் சராசரியாக கவர்ச்சியான சுவைமிக்க 600 பழங்களைக் கொடுக்க வல்லது. இந்த வகை மாவிற்கு உள்ள ஒரு சிறப்புக் குணம் என்ன வென்றால், உள்ளூரில் பயிரிடப்படும் நீலம் ரகத்தைவிட 30 சதம் அதிக விளைச்சல் அளிக்க வல்லது.

**பருத்தியில் புதிய வாடல்நோய்!**

பருத்தி பயிரிடப்படும் பகுதிகளில் கோவை மாவட்டம் முதன்மை வாய்ந்தது. அதிலும்

# தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை - 600007.

தொலைபேசி எண் : 30800 தந்தி : "ஹவுஸ்பாங்க்"

தபால் பெட்டி எண் : 486

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி. எஸ்ஸி., பி.எல்., எம். எல். ஏ.
உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை.
பொருளாளர் : திரு என். பழனிசாமி எம். ஏ.

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... ... | ரூ. 2·5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... | ரூ. 1,87,69,500 |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை. | ரூ. 10,12,30,217 |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.

| | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு |
|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ... ... ... | ரூ. 25,000 |
| கிராமப்புறங்களில் புதியவீடு கட்ட ... ... ... | ரூ. 10,000 |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்... | ரூ. 10,000 |

பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.
இணைப்பதிவாளர்—செயலாளர்.

ஸ்தாபிதம் : 1913 தொலைபேசி எண் : 23839

# கோயமுத்தூர் கூட்டுறவு வீடு அடமான சங்கம் லிமிடெட், நெ. 1081

கோபாலபுரம். கோயமுத்தூர்-641018.

| | |
|---|---|
| திரு. M. S. பழனியப்ப முதலியார், B.A. ... ... | தலைவர் |
| திரு. K. V. நாராயணஸ்வாமி அய்யர், B.A., B.L. ... | உப-தலைவர் |
| திரு. S. R. P. பொன்னுசாமி செட்டியார் ... ... | டைரக்டர் |
| திரு. T. S. இராமலிங்கம், B.Sc. ... ... ... | ,, |
| திரு. S. R. நஞ்சுண்டைய்யா ... ... ... | ,, |
| திரு. A. சின்னசாமி நாயுடு, B.A., B.L. ... ... | ,, |
| திரு. C. P. நாகரத்தினம், B.A. ... ... ... | ,, |
| டாக்டர் C. V. ராமராஜ், M.B.,B.S. ... ... ... | ,, |
| திரு. G. சுந்தரவேல், B.Com. ... ... ... | ,, |

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... ... | ரூ. 10,00,000 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... ... | ரூ. 8,50,597 |
| காப்பு நிதி ... ... ... ... ... | ரூ. 2,39,499 |
| நடைமுதல் மூலதனம் ... ... ... ... ... | ரூ. 73,50,509 |
| டிபாசிட்டுகள் ... ... ... ... ... | ரூ. 54,48,513 |
| அங்கத்தினர்களின்பேரில் கடன் நிலுவை ... ... ... | ரூ. 70,64,247 |
| மத்திய சங்கத்தில் எடுத்துள்ள பங்கு ... ... ... | ரூ. 1,00,000 |
| 1972-'73-ம் ஆண்டு நிகர இலாபம் ... ... ... | ரூ. 1,21,039 |

| | | |
|---|---|---|
| பிக்சட் டிபாசிட்டுகள் : | 36 மாதங்கள் ... ... | $8\frac{1}{4}\%$ P. A. |
| | 60 மாதங்கள் ... ... | $8\frac{1}{2}\%$ P. A. |
| | 84 மாதங்கள் ... ... | $8\frac{3}{4}\%$ P. A. |

நமது சங்கத்தில் வைத்திருக்கும் சொத்துக்களின் மதிப்பு ரூ. 2 கோடிக்கு மேல்.

C. V. ராஜகோபாலன், B.Com., உதவிக்காரியதரிசி. K. மணி, B.A., காரியதரிசி.


# கேளுங்கள் கொடுக்கப்படும்!



விஞு:—'தமிழரசு' ஜூலை 1, 1973 இதழில் நாற்று மூலம் வளர்க்கப்பட்ட சாதா எலுமிச்சைக் கன்றுகளும், பதியங்கள் மூலம் வளர்க்கப்பட்ட கன்றுகளும் பற்றிய மிகப் பயனுள்ள செய்திகளைப் படித்து மகிழ்ந்தேன். இந்த இருவகைக் கன்றுகளும், வாங்கும் இடம் பற்றிய விவரமான பதிலைத் 'தமிழரசு' மூலம் கொடுக்க வேண்டுகின்றேன். மேலும் கலப்பின புதுவகைத் தென்னங் கன்றுகளும், "டி×டி" ரகக் கன்றுகளும் கிடைக்கும் விலாசம் கொடுக்க வேண்டுகின்றேன்.

—டி. நடராசன்,
தலைவர், திருப்புடைமருதூர் ஊராட்சி மன்றம், அம்பா சமுத்திரம் வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

விடை:—நாற்று மூலம் வளர்க்கப்பட்ட சாதாரண எலுமிச்சைக் கன்றுகளையும், பதியம் மூலம் வளர்க்கப்பட்ட கொடி எலுமிச்சைக் கன்றுகளையும் அரசினர் பழத்தோட்டம்—நாற்றுப் பண்ணைகளிலிருந்து (Government Orchard -cum-Nurseries) பெற்றுக் கொள்ளலாம். கீழ்க்கண்ட 9 இடங்களில் தற்பொழுது பழத்தோட்ட நாற்றுப் பண்ணைகள் உள்ளன.

| | |
|---|---|
| ஆத்தூர் .. | செங்கற்பட்டு மாவட்டம். |
| குடபட்டு .. | வட ஆர்க்காடு மாவட்டம். |
| மருங்குளம் .. | தஞ்சாவூர் மாவட்டம். |
| கோடைக் கானல். .. | மதுரை மாவட்டம். |
| பெரியகுளம் .. | மதுரை மாவட்டம். |
| பூவாணி .. | இராமநாதபுர மாவட்டம். |
| குற்றாலம் .. | திருநெல்வேலி மாவட்டம். |
| திம்மாபுரம் .. | தருமபுரி மாவட்டம். |
| குன்னூர் .. | நீலகிரி மாவட்டம். |

மேற்கூரிய இடங்களிலிருந்து தேவையான நாற்றுகளையும், பதியங்களையும் உரிய தொகை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். தாங்கள் குற்றாலத்தில் உள்ள பழத்தோட்ட நாற்றுப் பண்ணையிலிருந்து தேவையான எலுமிச்சைக் கன்றுகளையும், கொடி எலுமிச்சைப் பதியங்களையும் பெற்றுக் கொள்வது சிறந்தது.

குட்டையான, நடுத்தர உயர கலப்பின (Tall×Dwarf Hybrid) வகைத் தென்னங் கன்றுகள், தஞ்சாவூர் மாவட்டம், வேப்பங்குளம் என்ற ஊரில் உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் இவ்வாராய்ச்சி நிலையத்தில் 5,000 கலப்பினத் தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்து, உழவர் பெருமக்களுக்கு வழங்கப்படும். இத்தகைய கலப்பினத் தென்னங் கன்றுகள் பெறவேண்டுமானால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்கள் மூலமாக உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்களுக்கு மனு அனுப்புங்கள். உங்களுக்குத் தேவையான கலப்பினத் தென்னங் கன்றுகள் கிடைக்க உங்கள் மாவட்ட வேளாண்மை அலுவலர் அவர்கள் ஆவன செய்வார்.

* * *

விஞு:—கோ. 1 உளுந்து விதைக்க ஏற்ற பருவம் எது? விதையளவு, உர அளவு ஆகியவைகள் யாவை? ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் தரும்?

—எஸ். தங்கராசு,
சின்ன சேலம்,
தென்னார்க்காடு மாவட்டம்.

விடை:—மானாவாரியாக கோ. 1 உளுந்து விதைக்க செப்டம்பர்—அக்டோபர் மாதங்கள் மிகவும் ஏற்றவை. ஏக்கருக்கு 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் ($1\frac{1}{2}$ அடி) இடைவெளியும், வரிசையில் செடிக்குச் செடி 20 சென்டி மீட்டர் (8 அங்குலம்) இடைவெளியும் இருக்குமாறு விதைப்பது சிறந்தது. அடியுரமாக ஏக்கருக்கு 4 வண்டி (2 டன்) தொழு எரு, 25 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 11 கிலோ யூரியா, 57 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகிய உரங்களை இடவேண்டும்.

கோ. 1 உளுந்து மானாவாரியில் ஏக்கருக்கு 300 கிலோ மகசூல் கொடுக்கவல்லது.

* * *

விஞு:—ஆகஸ்ட் 1-ஆம் தேதிய 'தமிழரசு' இதழில் எச். பி. 3 கம்பில் சர்க்கரை நோய் தோன்றினால் நனையும் கந்தகத்தைக் கரைத்துத் தெளிக்கச் சொல்லியுள்ளீர்கள். பொதுவாக நனையும் கந்தகத்திற்குப் பதிலாக வேறு என்ன மருந்து தெளிக்கலாம்? அடி உரம் இடாமல் ஏக்கருக்கு எவ்வளவு யூரியா போட வேண்டும்? விதைக்கும் பொழுது யூரியாவைப் போட்ட பிறகு விதைக்க வேண்டுமா? அல்லது விதைத்து விட்டு யூரியாவைப் போடலாமா? பயிரடித்த பிறகு யூரியா எவ்வளவு போட வேண்டும்? எச். பி. 3 கம்புடன் மானாவாரி கேழ்வரகு பயிரிடலாமா?

—எஸ். சண்முகம்,
உழவர் விவாதக்குழு அமைப்பாளர், செட்டி மலன்பட்டி, புதுப்பட்டி அஞ்சல், திருநெல்வேலி மாவட்டம்.

விடை:—எச். பி. 3 கம்பில் தோன்றும் சர்க்கரை நோயைத் தடுக்க ஆகஸ்ட் 1-ஆம் தேதிய 'தமிழரசு' இதழில் பக்கம் 55, 56-ல் 'சிராம்' அல்லது

'சினெப்' அல்லது தண்ணீரில் கரையும் கந்தகத்தைப் பயன் படுத்துமாறு குறிப்பிடப் பட்டுள்ளது. தாங்கள் அப்பகுதியைச் சரியாகப் படிக்க வில்லை என்று எண்ணுகின்றோம். அதனால்தான் தாங்கள் 'சிராம்' அல்லது 'சினெப்' என்ற மருந்துகளைப்பற்றித் தெரிந்து கொள்ள இயலவில்லை. தங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண் மைக் கிடங்கில் 'சிராம்' அல்லது 'சினெப்' என்னும் மருந்து கிடைக்கக்கூடும். அம்மருந்துகள் அங்குக் கிடைக்கவில்லை எனில், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் சொல்லி, அம்மருந்துகளை வர வழைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். 'சிராம்' அல்லது 'சினெப்' மருந்தை, 1 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் கலந்து ஏக்கருக்கு 200 லிட்டர் மருந்துக் கலவை வீதம் தெளிக் கலாம். ஆனல் இந்த நோய் தோன்றிய இடங்களில் மட்டும் உடன் மருந்து தெளித்தால் போதும். வயலெங்கும் தெளிக்க வேண்டியது அவசிய மில்லை. வயலெங்கும் சர்க்கரை நோய் காணப்படின், வயலெங் கும் தெளிப்பது அவசியமாகும். மாணவாரி எச். பி. 3 கம்புக்கு ஏக்கருக்கு 40 கிலோ யூரியா வையே அடியுரமாக இட வேண்டும். மாணவாரி கம்புக்கு மேலுரமாக யூரியா வைப் போடக்கூடாது. அவ்வாறு போட்டால், தகுந்த மழை இல்லாதபோது, யூரியா பயிர்களைச் சுட்டுவிடும். எனவே, பயிருழவு செய்த பிறகு யூரியாவை மேலுரமாகப் போட வேண்டும்.

யூரியாவை அடிஉரமாக இட்ட பிறகே விதைகளை விதைக்க வேண்டும். விதைத்த பிறகு யூரியாவைப் போடக் கூடாது.

மாணவாரி எச். பி. 3 கம்புடன் மாணவாரி கேழ்வரகு பயிரிடுதல் பொதுவாகப் பயன் தராது. எனவே இம்முயற்சியில் ஈடுபட வேண்டாம்!

*   *   *

**வினு:**—நன்ருகக் காய்த்துக் கொண்டிருந்த 25 வயது சென்ற தென்னை மரங்கள் நல்ல தண்ணீர் வசதியிருந்தும் நாலைந்து வருடங்களாகச் சரி யாகக் காய்க்கவில்லை. இனி நல்ல முறையில் காய்க்கும் படிச் செய்ய என்ன செய்ய வேண்டும்? காய்க்காத காரணமென்ன? உரமிட வேண்டுமானல் எந்த அளவு உரமிட வேண்டும்? தயவு செய்து விளக்கம் தரும்படிக் கேட்டுக் கொள்கின்றேன்.

—பி. கணேசன்,
கடையாலுருட்டி, குலைய நேரி (அஞ்சல்), நெல்லை மாவட்டம்.

**விடை:**—நன்ருகக் காய்த்துக் கொண்டிருந்த 25 வயதுடைய தென்னை மரங்கள் நீர்ப்பாசன வசதியிருந்தும் தற்பொழுது



சரியாகக் காய்க்காததற்கு நிலத்திலிருந்து போதிய சத்துக் கள் தென்னை மரங்களுக்குக் கிடைக்காமையே காரண மாகும். மீண்டும் அத் தென்னை மரங்கள் நன்கு காய்க்க இரசாயன உரமிடுதல் அவசியமாகும்.

ஒவ்வொரு தென்னை மரத்திற் கும் ஆண்டுதோறும் 3 கிலோ அமோனியம் சல்பேட், 1 கிலோ சூப்பர்பாஸ்பேட், 1 கிலோ மூரியேட் ஆப் பொட் டாஷ் ஆகிய உரங்களை இட வேண்டும். அல்லது 3-ஆம் எண் கலப்பு உரத்தில் (6 : 6 : 12) ஒவ்வொரு மரத் திற்கும் 5 கிலோ இடவேண் டும். தென்னை மரத்திலிருந்து 1·2 மீட்டர் சுற்றளவில் 30 சென்டி மீட்டர் ஆழமும், 30 சென்டி மீட்டர் அகலமும் உள்ள சுற்று வட்டப் பள்ளம் தோண்டி அதில் இரசாயன உரங்களையும், 50 கிலோ தொழு எரு அல்லது தழை எருவையும் இட்டு மண்ணல் மூடிவிட வேண்டும். உரமிடு வதற்குச் சிறப்பாக ஐப்பசி-கார்த்திகை மாதங்கள் ஏற்றவையாகும். கோடைக் காலத்தில் நீர் பாய்ச்சினல் உரமிட்டதன் பலன் அதிக மாகும்.

தென் மேற்குப் பருவ மழை ஆரம்பித்தவுடன் தென்னந் தோப்புகளை உழுது, சணப்பை போன்ற தழை உரப் பயிர்களை விதைத்து, அவைகளை 40 நாளில் உழுது மடக்கி விட்டால், அவை தென்னந் தோப்பின் நிலவளத்தைப் பெருக்குவதுடன் நிறையக் காய்க்கவும் வழிசெய்யும்.

மேற்கூறியவாறு ஆண்டு தோறும் இரசாயன உரமிட்டு, தழை உரப்பயிர் சாகுபடி செய்தும், கோடைக் காலத்தில் தண்ணீர் பாய்ச்சியும் வந்தால் தென்னை மரங்கள் நிறையக் காய்க்கும்.

*   *   *

**வினு:**—புதிய கண்டுபிடிப்பு களுக்குப் பரிசுதரும் 'தேசிய ஆராய்ச்சி அபிவிருத்திக் கார்ப்பரேஷன்' என்ற அரசு நிறுவனத்தின் முகவரி தந்து உதவுக.

—கவிஞர் டி. கே. தங்க வேலு, பெரிய கோட்டை, வெ. ஆலை அஞ்சல், உடு மலை வட்டம், கோவை மாவட்டம்.

**விடை:**—புதிய கண்டுபிடிப்பு களுக்கும், இறக்குமதி மாற்றுப் பொருள் கண்டுபிடிப்புகளுக் கும் 'புதிய கண்டுபிடிப்பு ஊக்குவிக்கும் வாரியமே' (Inventions Promotion Board) பரிசு கொடுத்து வருகிறது. அவ்வாரியம் புதுடெல்லியில் உள்ளது. அவ்வாரியத்துடன் தொடர்பு கொள்ளப் பின் கண்ட முகவரிக்கு ஆங்கிலத்தில் எழுதவும்.

The Director,
Inventions Promotion Board,
39, Ring Road,
New Delhi-24.

—ஆர். எம்.



# பணத்தை அள்ளித் தரும் பருத்தி பயிரிடுவீர்!




தமிழ்நாட்டில் உழவர் பெரு மக்களுக்குப் பணத்தை அள் ளித் தருவதில் பருத்திக்கு நிக ரில்லை என்று கூறலாம். பணத்தை அள்ளித் தரும் பணப் பயிர்களில் (Cash crops) பருத்தியே முக்கியமானதாக விளங்குகிறது. அதுமட்டுமன்றி பல்லாயிரக் கணக்கான மக்க ளுக்கு வாழ்வளிக்கும் முக்கிய வாணிபப் பயிராகவும் (Commercial Crop) பருத்தி விளங்குகிறது.

தமிழ்நாட்டில் ஆண்டு தோறும் ஏறத்தாழ 10 இலட்சம் ஏக்கர்களில் பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஆண்டுதோறும் ஏறத்தாழ 4 இலட்சம் பேல் பஞ்சு உற்பத்தியாகிறது. ஆனல் தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகளின் தேவையை நிறைவு செய்ய, குறைந்தது 7 இலட்சம் பேல்பஞ்சு தேவை படுகிறது; உயர்ந்த அளவாக 13 இலட்சம் பேல் பஞ்சு தேவைப்படும். இந்த அளவுக்குத் தமிழ்நாட்டில் பஞ்சு உற்பத்திசெய்யப்படாத தால், தற்பொழுது பஞ்சுப் பற்ருக்குறை நிலவுகிறது. இப்பற்ருக்குறையும் கடு மையான அளவில் உள்ள தாலேயே, தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாலைகள் பெரு மளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர்க்க பிற மாநிலங் களிலிருந்தும், வெளிநாடுகளி லிருந்தும் தற்பொழுது பெருஞ் செலவில் பஞ்சு இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. வெளிநாடு களிலிருந்து மட்டும் தமிழ் நாட்டிற்காக ஆண்டுதோறும் ஏறத்தாழ 3 இலட்சம் பேல் சிறப்பு ரகப் பஞ்சு இந்திய அரசினல் வரவழைக்கப்படு கிறது. இதனல் நாம் ஆண்டு தோறும் 40 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை இழந்து வருகிருேம்.

தற்பொழுதுள்ள பஞ்சுப் பற்ருக்குறையைத் தீர்ப்ப தற்கும், அந்நியச் செலாவணி யை மீதப்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு பெருமுயற்சி செய்து வருகிறது. கோவை மாவட்டத்திலுள்ள பருத்திப் பயிரிடும் பரப்பு முழுவதை யும், திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டி பகுதியில் உள்ள மாணவாரி பருத்தி பரப்பு முழுவதையும், மும்முர வேளாண்மை மேம்பாட்டுத் திட்ட நோக்குடன் பருத்திச் சாகுபடியின் கீழ்க் கொண்டு வந்து, பஞ்சு உற்பத்தியை 4 இலட்சம் பேலில் இருந்து 8 இலட்சம் பேலாக உயர்த்து வதற்கான முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு மேற் கொண்டுவருகிறது. இவ்விலக் கினை எய்துவதற்காக, சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வரும் பருத்தி முனைப்புத் திட்டப் பகுதிகளில் (Cotton package areas) ஏறத் தாழ 2.05 இலட்சம் ஏக்கரில் (82,000 எக்டேர்) பருத்தி சாகுபடிக்கான பல்வேறு அறி வியல் நுட்ப முறைகளை மேற்கொள்ளவும் தமிழ் நாடு அரசின் வேளாண்மைத் துறை முயன்று வருகிறது. இந்த ஆண்டில் (1973—74), ஒவ்வொன்றும் 180 கிலோ பஞ்சு கொண்ட 5.35இலட்சம் பேல் பஞ்சு உற்பத்தி செய்ய தமிழ்நாடு அரசின் வேளாண் மைத்துறை முனைந்து வரு கிறது.

தமிழ்நாடு அரசு பருத்தி உற்பத்தியைப் பெருக்க மேற் கொண்டு வரும் முயற்சிகளால் குறிப்பாகப் பருத்தி சாகுபடி செய்யும் உழவர் பெருமக்க ளுக்கு அதிக வருவாய் கிடைக் கும்! அதன்மூலம் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரும்! எனவே, தமிழ்நாட்டில் பருத்தி சாகுபடி செய்யும் உழவர் பெருமக்கள் அடுத்து வரவிருக்கும் புரட்டாசி, ஐப்பசி பட்டத்தில், அதிநீள இழைப்பருத்தி வகைகளைச் சாகுபடி செய்து, வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கான வழிமுறைகளை விளக்குவதைத் தன் கடமையாகக் கருதும் 'தமிழரசு' இதழ் அவை களைக் கீழே விவரித்துள்ளது.

### குளிர்காலத்திற்கு ஏற்ற பருத்தி ரகங்கள்

தமிழ்நாட்டில் குளிர் காலத்தில் இறைவையாகவும், மாணவாரியாகவும் பருத்தி பயிரிடப்படுகிறது. கோயம் புத்தூர், சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் குளிர் கால இறைவைக் கம்போடியா பருத்தி ஏறத்தாழ 2.05 இலட்சம் ஏக்கர்களில் பயி ரிடப்பட்டு வருகிறது. இப் பகுதிகளில் பயிரிட 'எம். சி. யு. 5' என்ற பருத்தி ரகம் மிகவும் சிறந்தது.

சிறப்பாகக் கோவை வட்டம், பருத்தி தீவிர வேளாண்மை முறைகளைக் கையாளுவதில் தலை சிறந்தது. மாசிப் பட்டத்தில் பயிரிடப்படும் கம்போடியா—உகண்டா ரகப் பருத்தியில் கோவை மாநகரத்தை அடுத்த வட்டாரங்களில் ஒரு புதியவாடல் நோய் ஒன்று மிக வேகமாகப் பரவி வருகிறது. இந்நோய் 1968-ஆம் ஆண்டில் கோவைக் கருகே கத்தரிச் செடியிலும், பருத்திச் செடியிலும் முதன் முதலாகத் தோன்றியது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஆண்டு சர்க்கார் சாமக்குளம், பெரியநாய்க்கன் பாளையம், பேரூர், சூலூர், கல்நாயக்கன்பேட்டை ஆகிய வட்டாரங்களில் இந்த நோய் தற்போது வெகுவாகப் பரவியுள்ளது. இந்த நிலை நீடித்தால், பருத்திச் சாகுபடியில் விளைச்சல் வெகுவாகக் குறைவதுடன், உழவர்களுக்குப் பெரும் நட்டமும் ஏற்படும்.

இந்த நோயானது 'வெர்ட்டிசீலியம் டாலியே' என்னும் பூசணத்தால் உண்டாகிறது. குளிர் பிரதேசத்தில் பரவும் இந்நோய், கோவை மாவட்டத்தில் இந்த மாதிரி வெப்பநிலை உள்ள நவம்பர்—சனவரி மாதங்களில் பரவ ஆரம்பித்துள்ளது. இந்தப் பூசணத்தின், வித்துக்கள் மண்ணில் பல்லாண்டுகள் (சுமார் 15 ஆண்டுகள்) வீரியத்துடன் இருந்து இனவிருத்தி செய்ய வல்லது. மண்ணிலுள்ள பூசண வித்தானது வேர் மூலம் உட்சென்று, செடியைத் தாக்கித் திசுக்களுக்கு ஊட்டம் செல்வதைத் தடுப்பதால் செடி வாட ஆரம்பிக்கும்.

முதலில் கீழ் இலைகளில் தோன்றி மேற் பகுதி இலைகளுக்குப் பரவி வெளுத்து, மஞ்சள் நிறமாகக் காணப்படும். இலைக்காம்புகள் கீழ் நோக்கித் தொங்குவதுடன், நரம்புகளின் இடையே உள்ள இலைப்பரப்பு காய ஆரம்பித்து, பின்பு இலைகளின் ஓரங்களும் காய்ந்துவிடும். கடைசியாக இலைகள் உதிர்ந்து வெறும் கிளைகள் மாத்திரம் நிற்கும். பின் செடிகள் உலர்ந்து விடும். இலை நிறம் மாற ஆரம்பித்தவுடன் சப்பையும், பூவும், இளங்காயும் உதிர ஆரம்பிக்கும். இம்மாதிரி உலர்ந்த செடியின் தண்டைப் பிளந்து பார்த்தால் மேல் நோக்கி வரும் தண்டில் கருஞ் சிவப்புக் கோடுகள் காணப்படும். இந்த நோய் பெரும்பாலும் மூன்று அல்லது நான்கு மாதப் பயிரைத் தாக்கிச் சேதம் செய்யவல்லது. சாதாரணமாக இந்த நோய் உள்ள பூமியில் 5 முதல் 10 சதவிகிதச் செடிகள் பாதிக்கப்படும். நோய் மிகுதியாக உள்ள இடங்களில் 80 சதவிகிதம்வரை செடிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நோய் குளிர்கால வெப்ப நிலையான 12-20 டிகிரி சென்டிகிரேடில் நன்கு பரவும். இதன் வித்துக்கள் இலைக்காம்பிலும், தண்டுகளிலும் தோன்றும். இது தவிரப் பூசண நூலிழைகளிலான 'மைக்ரோகிளிரோஷ்யா' செடிகளின் தண்டுகளிலும், இலைகளிலும் உண்டாகிறது. இந்தப் பூசன வித்துக்களும், ' மைக்ரோஸ்கிளிரோஷ்யாக் ' களும் மண்ணில் விழுந்து, முளைத்து அவைகளினால் பருத்திச் செடியின் வேர்ப் பாகம் பாதிக்கப்பட்டு இந் நோய் உண்டாகிறது.

இந்நோயைக் கட்டுப்படுத்துவது சிரமம். எனினும், இதற்கான தடுப்பு முறைகளுக்கான ஆராய்ச்சியைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக நோய் இயல் துறை மேற்கொண்டுள்ளது. இந்நோயைத் தடுக்கச் சிறந்த முறையைக் கண்டறியும் வரை, உழவர் பெருமக்கள் கீழ்க்கண்ட முறைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடுமையாகத் தாக்கப்பட்ட நிலங்களில் மேற்கொள்ள வேண்டிய முறைகள்

1. நோய் தாக்கிய நிலத்தைத் தனிமைப் படுத்தி, பருத்திக்குப் பதில் கம்பு, சோளம் போன்ற மாற்றுப் பயிர்களைப் பயிரிட வேண்டும்.

2. விதைகளை 'அக்ரசான்' போன்ற மருந்துடன் கலக்கி விதைப்பதுடன், விதைகளுக்குக் கந்தக அமில சிகிச்சை செய்வது சாலச் சிறந்தது.

3. இந்த நோய் தாக்காத 'சுஜாதா ' ரகப் பருத்தியைப் பயிரிடலாம்.

4. களர் நிலத்தில் இந்நோய் அதிகம் பரவுவதால், இம்மாதிரி நிலத்தில் பயிரிடாமல் தவிர்த்தல் வேண்டும்.

5. இவை பயிரிடப்படும் நிலத்துக் கருகில் கத்தரி, தக்காளி போன்றவைகளைப் பயிரிடக் கூடாது.

6. நோய் தாக்கிய செடிகளிலிருந்து கிடைத்த விதைகளை உபயோகிக்கக் கூடாது.

நோய் தாக்கிய நிலத்தில் கையாள வேண்டிய முறைகள்

1. அதிகமாக நீர்ப்பாய்ச்சாமல் இருப்பதும், நீரை நன்ருக வடிப்பதும் சிறந்த முறைகள்.

2. யூரியா போன்ற தழைச் சத்து உரங்களை போடக் கூடாது.

## பெருகிவரும் சுற்றுலாப் பயணிகள்

சென்ற ஆண்டு மட்டும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வெளிநாட்டிலிருந்து, தமிழ்நாட்டுக்கு வந்திருக்கிருர்கள். இவர்கள் எப்படிக் கணக்கிடப்படுகிருர்கள் தெரியுமா? ரயிலில் வருபவர்கள் கணக்கெடுக்கப்படுவதில்லை. விமானங்களில் பயணம் செய்தவர்கள்தான் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிருர்கள். ரயிலில் பயணம் செய்து வந்தவர்களையும் கணக்கெடுத்தால் இன்னும் அதிகம் இருக்கலாம்.

* * *

ஸ்பெயின் நாட்டில் வாழும் மக்களின் தொகை 3 கோடி. சென்ற ஆண்டு அங்குச் சென்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 3½ கோடி.

உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு

**'ப்ளேனோ:பிக்ஸ்'**

தேவை

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனோ:பிக்ஸ்" உபயோகித்தீர்களானால், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேனோ:பிக்ஸ்" மருந்தைப் பல்லாண்டுகள் பயன் படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

அசல் தயாரிப்புத்தானா என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாறுதீர்கள். உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.



M&B May & Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.


# இத்தியோப்பியா நாட்டில் இன்பத் தமிழ்

டாக்டர் ந. சஞ்சீவி தரும் செய்தி

இத்தியோப்பியா நாட்டில் எத்தனையோ மொழிகள் வாழ்கின்றனவாம். இங்ஞா் என்றால் மொழி என்று பொருளாம். அத்தகைய இங்ஞாக்களுள் சிறப்பு வாய்ந்த ஒன்று கல்லாஸ்(Gallas) பழங்குடி மக்கள் பேசுவதாம். மன்னர் மன்னரின் மொழி அமரிங்ஞா என்பதாம். அவர்களுடைய மனைவி 'கல்லாஸ்' என்ற குடியினைச் சார்ந்த பெண்மணியாம். இந்தக் கல்லாஸ் வகுப்பு மாணவர் பலர் என் நண்பர் திரு. கிருஷ்ணசாமியிடம் மாணவர்களாக இருக்கிறார்களாம். அவர்கள் தங்கள் முன்னோர்கள் தென்னிந்தியாவிலிருந்து இத்தியோப்பியாவிற்குக் குடியேறியவர்கள் என்றுதிரும்பத் திரும்பச் சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்கிறார்களாம். அவர்களுடைய அன்றாடப் பேச்சில் உள்ள இரு தமிழ்ச் சொற்கள் 'முறமும் முற்றமும்' என்று மகிழ்ச்சியுடனும் வியப்புடனும் என் நண்பர் கூறியபொழுது "ஆறு ஆண்டுகள் இருந்து இரண்டே சொற்களைத் தானே கண்டு பிடித்திருக்கிறீர்கள். திரும்பப் போய் இன்னும் எவ்வளவு தமிழ்ச் சொற்கள் அவர்கள் மொழியில் உள்ளன என்று அறிந்து அறிவியுங்கள்" என்று கேட்டுக் கொண்டேன். அவர்களிடம் இருக்கக் கூடிய பழந்தமிழ்ப் பழக்கவழக்கங்களையும் பார்த்து அறிவிக்குமாறு வேண்டிக் கொண்டுள்ளேன்.

## எம். சி. யு. 5

'எம்.சி.யு. 5' என்ற ரகம் அதி நீள இழைப்பருத்தி (Extra-long stable cotton) வகையாகும். இப்பருத்தியின் இழைகள் நுண்ணியதாகவும், வலிவுள்ளதாகவும் விளங்குவதால், இந்த ரகப் பஞ்சைக் கொண்டு 70-ஆம் எண் நூல் நூற்க முடியும். இதுவரை இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ள கம்போடியா பருத்தி ரகங்களில், எம். சி. யு. 5 ரகமே சிறந்ததாக விளங்குகிறது.

இந்த ரகத்தின் தரம், தற்பொழுது இறக்குமதி செய்யப்பட்டு வரும் சூடான் பருத்திக்குச் சமமானதாக விளங்குவதால், இந்த ரகத்தைத் தமிழ்நாட்டில் குளிர் கால இறவைக் கம்போடியா பருத்திப் பரப்பான 2.05 இலட்சம் ஏக்கர்களிலும் பயிரிட்டால், ஏறத்தாழ 3 இலட்சம் பேல் 1 $\frac{6}{32}$ அங்குல இழை நீளமுள்ள, அதி நீள இழைப் பஞ்சு உற்பத்தி செய்ய முடியும். இதன்மூலம், தற்பொழுது தமிழ்நாட்டிற்காக 3 இலட்சம் பேல் அதி நீள இழைப் பஞ்சு இறக்குமதி செய்வதை நிறுத்தி விட முடியும்! அதன் பயனால் 40 கோடி ரூபாய் அந்நியச் செலாவணியை மீதப்படுத்திவிட இயலும்! மேலும் தமிழ்நாட்டில் எம். சி. யு. 5 பருத்தி சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்கு 8 கோடி ரூபாய் கூடுதல் இலாபமும், தனிப்பட்ட ஒரு உழவர் பெருமகனுக்குக் குறைந்தது ஏக்கருக்கு ரூபாய் 400 கூடுதல் இலாபமும் கிடைக்கும்! ஆகவே குளிர் கால இறவைப் பருத்திச் சாகுபடி செய்ய விரும்பும் உழவர் பெருமக்கள் அனைவரையும் எம். சி. யு. 5 பருத்தி பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

அதுபோலவே, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் செம்மண் நிலங்களில் குளிர்கால மானாவாரி கம்போடியா பருத்திச் சாகுபடி செய்ய விரும்பும் உழவர் பெருமக்கள் அனைவரையும் எம். சி. யு. 5 பருத்தியை மானாவாரியாகப் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

## பாரதி

அடுத்து, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் கரிசல் மண்ணில் 'லட்சுமி' பருத்தி பயிரிட்டு வரும் உழவர் பெருமக்கள் அனைவரையும் 'எம். சி. யு. 6 என்னும் 'பாரதி' பருத்தி பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

'பாரதி' பருத்தி 'லட்சுமி' பருத்தியைவிட 50 சதம் அதிகப் பஞ்சு மகசூல் அளிப்பதுடன், 26 மில்லி மீட்டர் இழை நீளமும், 40-ஆம் எண்ணுக்கும் மேற்பட்ட நூற்புத் திறனும் கொண்டது. தற்பொழுது லட்சுமி பருத்தி பரவியுள்ள 1.8 இலட்சம் ஏக்கர்களிலும், 'பாரதி' பருத்தி பரவிவிடுமானால், தமிழ்நாட்டிற்குக் கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும். 'பாரதி' பருத்திப் பயிரிடும் தனிப்பட்ட உழவர் பெருமகனுக்கு ஏக்கருக்கு ரூபாய் 200 அதிக வருவாய் கிடைக்கும். எனவே, 'லட்சுமி' பருத்திக்குப் பதிலாகப் 'பாரதி' பருத்தியைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

### 'சுஜாதா'

அடுத்து, கோவை மாவட்டத்தில் 'சுஜாதா' என்னும் 'பார்படென்ஸ்' ரகப் பருத்தியைப் பயிரிடுவதற்கு பெரும் வாய்ப்புள்ளதால், கோவை மாவட்ட முற்போக்கு உழவர் பெருமக்கள் அனைவரையும் 'சுஜாதா' பயிரிடும் முயற்சியில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'சுஜாதா' பருத்தியின் இழை நீளம் $1\frac{1}{4}$ அங்குலம் உள்ளதாலும், இழைகள் அதிக வலுவுள்ளதாக இருப்பதாலும் 'சுஜாதா' பருத்தியைக் கொண்டு 80 முதல் 100 ஆம், எண் நூல்வரை நூற்கமுடியும். இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ள முதல் எகிப்திய வகைப் பருத்தி இதுவேயாகும். தற்பொழுது எகிப்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் 'கிசா-68' 'மெனோபி' என்ற அதி நீளஇழைப் பருத்திகளைவிட, 'சுஜாதா' தரத்தில் சிறந்தது. இந்தஉயரியரகத்தை கோவையிலுள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக மண்டல ஆராய்ச்சி நிலையம் 1969-ஆம் ஆண்டில் வெளியிட்டது என்பது பெருமைக்குரிய செய்தியாகும். மற்றெல்லாப் பருத்தி வகைகளைக் காட்டிலும் சுஜாதா பருத்திக்கும், பஞ்சுக்கும் அதிக விலை கிடைப்பதாலும், அதி நீள இழை பஞ்சு இறக்குமதி செய்வதால் ஏற்படும் அந்நியச் செலாவணி இழப்பைத் தவிர்ப்பதற்கு 'சுஜாதா' பேருதவியாக இருப்பதாலும் கோவை மாவட்டத்தின் முற்போக்கு உழவர் பெருமக்கள் அனைவரையும் 'கொங்கு நாட்டின் வெள்ளைத் தங்கம்' என்று கூறப்படும் 'சுஜாதா' பருத்தியைப் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

கோவை மாவட்டத்திலுள்ளசில முற்போக்கு உழவர் பெருமக்கள் 'கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள்' என்று கூறப்படும் ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of Practices) மேற்கொண்டு 'எம். சி. யு. 5', 'சுஜாதா' ஆகிய பருத்தி ரகங்களை இறவையில் பயிரிட்டு ஏக்கருக்கு 10 முதல் 12 குவிண்டால் பருத்தி மகசூல் எடுத்துள்ளதுடன், ஏக்கருக்கு ரூபாய் 1,200 முதல் ரூபாய் 1,600 வரை நிகர இலாபம் பெற்றுள்ளனர். எனவே, பணத்தை அள்ளித்தரும் பருத்தியைப் பயிரிடவிருக்கும் எல்லா உழவர் பெருமக்களும் பெரும் இலாபம் பெற்றிட வேண்டி, கீழ்க்கண்ட ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை ஈண்டு படைத்துள்ளோம்.

## ஒருமித்த செய் நேர்த்தி முறைகள்

### 1. குளிர்கால இறவைக் கம்போடியாப் பருத்தி

ஏற்ற ரகம்:—குளிர் கால இறவைக் கம்போடியா பருத்திப் பயிரிட விரும்பும் உழவர் பெரு மக்கள் 'எம். சி. யு. 5' என்னும் பருத்தி ரகத்தைப் பயிரிடுவதே சிறந்தது.

மண்வகை:—குளிர் கால இறவைக் கம்போடியா பருத்தி பயிரிட மணல் கலந்த வடிகால் வசதியுள்ள செம்மண் நிலங்கள் ஏற்றது.

வயது :—165 நாட்கள்.
விதைக்கும் பருவம் :—



# உண்மையின் சந்நிதி

சோம. மகாதேவன்

## 18. சென்று வருவோம்

மதுரையிலிருந்து கிழமேலாக ஓடிக்கிடக்கும் நாகமலைக் காட்டின் வடபக்கத்து அடிவாரத்தை ஒட்டியே செல்லும் சாலை தொன்று தொட்டது. வைகையின் படுகையைப் பார்த்துக் கொண்டே, அந்தப் பசுமையில் மூழ்கிவிடும்போது, உள்ளத்திலும் உடலிலுமே ஒரு புத்துணர்வு ஏற்படத்தான் செய்கிறது.

நான் இறங்க வேண்டிய இடத்தைச் சொல்லி, வண்டியை நிறுத்தினார் கண்டக்டர்.

நினைவுகளிலிருந்து விடுபட்டவனாக, அவசரத்துடன் கீழிறங்கி நின்று சுற்றிலும் பார்த்தேன். இடையிலே எத்தனையோ மாதங்களாகி விட்டன, நான் இந்த இடத்தை விட்டுப் பிரிந்து சென்று. அந்தக் கிராமத்தில், ஏன் அந்த வட்டாரத்தில் வாழும் அனைத்துக் குடும்பங்களையும் அறிந்தவன்—அவர்களின் நலனுக்காக, அவர்களின் மத்தியிலே பல ஆண்டுகள் வாழ்ந்து, பணியாற்றியவன் நான்.

எதிரே, குறுக்கு வசமாக நீண்டு கிடக்கும் வைகையின் மணல் படுகை, அடுத்து, முல்லைக் காலுக்கும் அப்பால், தூரத்துக் காட்சியாகத் தெரிகிறது கிராமம்.

நான் அங்கிருந்து வரும் பொழுது, எது எப்படி முடியும் என்பதை நிர்ணயிக்க முடியாதபடி, கிராமமே இரண்டாகப் பிரிந்து, ஒரு பரபரப்பில் மூழ்கி இருந்தது. இன்றைய நிலைமை என்னவோ ?

கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தேன்.

பாண்டியன்மீது தூக்கி வைத்திருந்த கொலை வழக்கு எப்படி முடிந்தது? தகப்பனும் மகனும் ஒன்று சேர்ந்தார்களா ? அந்த வாயாடிப் பெண் டெய்சியின் கனவுகள் நனவாயிற்றா ? பாண்டியனையும்—லிங்கத்தையும் கம்பிக்குள் தள்ளாமல் விடுவதில்லையென வரிந்து கட்டிக் கொண்டு நின்றார்களே வேலாயுதமும், உருட்டி முத்தையாவும், அவர்களின் திட்டம் என்னவாயிற்று ? என்பன போன்ற கேள்விகள் என்னுள்ளே ஒன்றன்பின் ஒன்றாக எழுந்து, நீர்க்குமிழிகளாக உடைந்து போகின்றன. எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் என்னை இங்கே உந்தித் தள்ளியிருக்கிறது.

இன்னும் சற்று நேரத்தில் எல்லாமே தெரிந்துவிடும்.

ஆற்றின் குறுமணலில் பாதங்கள் பதிந்து, சற்று நின்றபோது, பின்பக்கமிருந்து யாரோ குரல் கொடுப்பது கேட்டது.

நான் திரும்பிப் பார்த்தேன்.

கையில் ஒரு பையோடு குருவையா வந்து கொண்டிருந்தார்.

முதன்முதலாக, பொறுப்பான ஆளாக, அதிலும் இப்படியொரு தனிமையில் குருவையாவைச் சந்தித்து விட்டதில் எனக்குப் பெருமகிழ்வு உண்டாயிற்று.

அவரை எதிர் நோக்கித் திரும்பி நின்றேன்.

'' ஐயா. . . . . . . . இப்பத்தான் வர்றிங்களா ? சுகம் தானுங்களா ? ஒரேயடியா எங்க ஊரை மறந்திட்டிங்களே'' என்று சொல்லிக் கொண்டே நெருங்கி வந்தார் குருவையா.

'' நல்ல சுகம். எல்லோரையும் பார்த்து விட்டுப்போகத்தான் வந்துகிட்டிருக்கேன்!'' என்றேன் நான்.

'' குருவித் துறையிலே ஒரு கல்யாணம். போயிட்டுத் திரும்புகிறேன். வாங்க பேசிக்கிட்டே போவோம் '' என்றார் குருவையா.

இருவரும் மணற் பரப்பிலே நடந்தோம்.

'' அந்த வழக்கு இன்னும் முடியலையா ? '' என்று கேட்டேன் நான்.

குருவையா நடந்துகொண்டே என்னைத் திரும்பிப் பார்த்தார். அவர் முகக்குறியிலிருப்பது சோகமா அல்லது மகிழ்வா என்பதை என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை.

''அதுக்குப் பிறகு நடந்தது எதுவுமே தெரியாதுங்களா உங்களுக்கு ?'' என்று கேட்டார் குருவையா.

'' அதான் கண்ணுக்கு மறைந்தாலே ஆளையே மறந்து போறிங்களே ?'' என்றேன் நான்.

'' அதெல்லாம் ஒண்ணுமில்லீங்க. நேத்துக்கூடத் தோப்பிலே உங்க பேச்சைத்தான் பேசிக்கிட்டிருந்தோம்'' என்றார் குருவையா சாவதானமாக.

எனக்குப் பொறுக்கவில்லை. கிராமத்திற்குள் நுழைவதற்கு முன்பாக நடந்தவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டாமா ?

'' எதை உங்ககிட்ட முதல்லே கேட்கிறதுன்னு புரியலே. நீங்களே தொடர்ச்சியா சொல்லுங்க'' என்றேன் நான் அவசரத்துடன்.

[illegible]

கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆகஸ்ட் மாதம் 15-ஆம் நாளிலிருந்து செப்டம்பர் மாதம் 10-ஆம் நாளுக்குள் விதைப்பது சிறந்தது. மற்ற இடங்களில் செப்டம்பர் மாதத்தில் அல்லது அக்டோபர் மாதத்தில் வட கிழக்குப் பருவ மழை துவங்கிய உடன் விதைப்பது சிறந்தது.

விதையளவு :—ஏக்கருக்கு 8 கிலோ.

விதைப் பராமரிப்பு :—ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து வீதம் கலந்து 6 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். பிறகு, செம் மண்ணும், மாட்டுச் சாணமும் 3 : 1 என்ற விகிதத்தில் சேர்த்துத் தண்ணீர் கலந்து பசைபோல் செய்து கொண்டு, அதில், விதைகளைக் கலந்து தரையில் தேய்த்து, நிழலில் உலர்த்தவும்.

நிலம் தயாரித்தல் :—இரும்புக் கலப்பை அல்லது டிராக்டரால் நிலத்தை நன்கு-புழுதியாகும் வரை—உழுதுவிடவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 10 முதல் 20 வண்டி (5முதல் 10 டன்) தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) இட வேண்டும். பிறகு பார் கலப்பையைப் பயன்படுத்தி 75 செண்டி மீட்டர் (2½ அடி) இடைவெளியில் பார்கள் அமைக்கவும்.

அடியுரமிடுதல்:—ஏக்கருக்கு 12 கிலோ தழைச்சத்து, 8 கிலோ மணிச்சத்து, 8 கிலோ சாம்பல் சத்து அளிக்கவல்ல இரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும். இந்த அளவுச் சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 60 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 27 கிலோ யூரியா, 50 கிலோ சூப்பர் பாஸ்பேட், 20 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவேண்டும். மேற்கூறிய அளவு இரசாயன உரங்களைப் பார்களின் ஒரு பக்கத்தில் விதை ஊன்றும் இடத்திற்குக் கீழே, 2 முதல் 3 அங்குல தூரம் தள்ளி சீராக இட்டு மண்ணால் மூடிவிட வேண்டும்.

விதைத்தல் :—பார்களின் ஒரு பக்கத்தில் மட்டும் வரிசையாக குழிக்குக் குழி 30 செண்டி மீட்டர் (1 அடி) இடைவெளி விட்டு, குழிக்கு மூன்று விதைகள் வீதமும் ஊன்ற வேண்டும். விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்சவும்.

பின்செய் நேர்த்தி :—விதைத்த 20-வது நாளில் களைக் கொட்டினால் கொத்திக் களை எடுப்பதுடன், குழிக்கு 2 நன்கு வளர்ந்த செடிகள் வீதம் விட்டு, மற்றவைகளைக் களைத்துவிட வேண்டும். விதைத்த 35 முதல் 40 நாளில் இரண்டாம் முறை களையெடுத்து, ஊடு உழவு செய்து, மேலுரமிட்டு மண் அணைக்க வேண்டும். விதைத்த 60-வது நாளில் மூன்றும் முறை களையெடுத்தல் வேண்டும்.




மேலுரமிடுதல்:—விதைத்த 35 முதல் 40 நாளில் 'ஜூனியர் ஹோ' எனப்படும் கொத்துக் கலப்பையால் அல்லது நாட்டுக் கலப்பையால் இடையுழவு செய்து, ஏக்கருக்கு 12 கிலோ தழைச் சத்து அளிக்கும் 60 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 27 கிலோ யூரியாவை மேலுரமாக இட்டு பார் கலப்பையால் அல்லது மண் வெட்டியால் செடிகளுக்கு மண் அணைத்துப் பார்களைச் சரி செய்ய வேண்டும்.

நீர்ப்பாசனம் :—விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 3 அல்லது 4 நாளில் இரண்டாம் முறை நீர் பாய்ச்ச வேண்டும். பிறகு 20 நாட்களுக்குத் தண்ணீர் தேவைப்படாது. விதைத்த 25-ஆம் நாளில் மூன்றும் முறை தண்ணீர் பாய்ச்சவும். பிறகு மண்ணில் உள்ள ஈரத்தைப் பொருத்து 10 முதல் 12 நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர்ப் பாய்ச்சி வர வேண்டும். சாதாரணமாக விதை ஊன்றிய 130 நாட்களுக்குப் பிறகு தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை.



பயிர்ப்பாதுகாப்பு :—

1. குளிர் கால இறைவைக் கம்போடியா பருத்தி விதை ஊன்றிய 2-வது வாரத்தில் பருத்திச் செடிகளில் உள்ள சாற்றினை அசுவணி தத்துப் பூச்சி, பேன் ஆகியவை உறிஞ்சி, செடிகளுக்குத் தீங்கு விளைவிப்பதைத் தடுக்க மெட்டாசிஸ்டாக்ஸ் 0·025 சதம் (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்க வேண்டும்.

2. பருத்திக் காய்களைச் சேதப்படுத்தும் காய்ப்புழுக்களைத் தடுக்க கார்பரில் 0·1 சதத்தையும் (1 கிலோ), அரை கிலோ நனையும் கந்தகத்தையும் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்குத் தெளிக்க வேண்டும். இவ்வாறு விதை ஊன்றிய 4-வது வாரத்திலிருந்து 15 நாட்களுக்கு ஒரு தடவை வீதம் 8 தடவை மருந்து தெளிக்க வேண்டும்.

அல்லது,

பாரத்தியன் 0·025 சதம் (50 மில்லி லிட்டரை 100 லிட்டர் தண்ணீர் கலந்து) மருந்தை 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 8 தடவை தெளிக்க வேண்டும்.

அல்லது,

மெட்டாசிட் கோம்பி 450 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 8 தடவை தெளிக்க வேண்டும்.

அல்லது,

குளிர்கால இறைவைக் கம்போடியாப் பருத்திக்கு, கீழே பட்டியலில் குறிப்பிட்டுள்ளது போல 10 தடவை மருந்து தெளிப்பது சிறந்தது.



பருத்திப் பயிரில் ஜூனியர் கலப்பையால் ஊடு உழவு செய்தல்



கம்போடியாப் பருத்திக்கு மேலுரம் இடுதல்



பருத்திப் பயிருக்குப் பூச்சி மருந்தைத் தெளித்தல்




| இறவை எம். சி. யு. 5 பருத்திக்கான பயிர்ப்பாதுகாப்பு முறைப் பட்டியல். | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒரு ஏக்கருக்குத் தேவைப்படும் | |
| தடவை எண். | பருத்திச் செடி வயது பின் (நாட்கள்). | பயன்படுத்த வேண்டிய மருந்தின் பெயர். | மருந்தின் அளவு. | நீரின் அளவு (லிட்டர்) |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 15 | என்ட்ரின் 20 இ.சி. + ஊடுருவிப் பரவும் மருந்து. | 200 மி.லி. + 150 மி.லி. | 200 |
| 2 | 30 | ஷை | ஷை | 200 |
| 3 | 45 | கரையும் செவின் 50 சதம் + கரையும் கந்தகம். | 700 கிராம் + 350 கிராம். | 280 |
| 4 | 55 | என்ட்ரின் 20 இ.சி. + நோய் தடுக்கும் மருந்து. | 350 மி.லி. + 1,260 கிராம். | 280 |
| 5 | 65 | கரையும் செவின் 50 சதம் + கரையும் கந்தகம். | 900 கிராம் + 450 கிராம். | 360 |
| 6 | 75 | கரையும் செவின் 50 சதம் + மிதைல் பாரத்தியான் 50 இ.சி. | 900 கிராம் + 180 மி.லி. | 360 |
| 7 | 85 | கரையும் செவின் 50 சதம் + கரையும் கந்தகம். | 1,200 கிராம் + 600 கிராம். | 480 |
| 8 | 95 | கரையும் செவின் 50 சதம் + மிதைல் பாரத்தியான் 50 இ.சி. | 1,200 கிராம் + 240 மி.லி. | 480 |
| 9 | 110 | கரையும் செவின் 50 சதம் + கரையும் கந்தகம். | 1,400 கிராம் + 700 கிராம். | 560 |
| 10 | 125 | கரையும் செவின் 50 சதம் + மிதைல் பாரத்தியான் 50 இ.சி. | 1,400 கிராம் + 280 மி.லி. | 560 |

குறிப்பு:—(1) மிதைல் டெமடான் 25 இ.சி. (மெட்டாசிஸ்டாக்ஸ்), திமெடேன் 25 இ.சி. (எக்கட்டின்) டைமெதோவேட் 30 இ.சி. (ரோகார்), மார்ஷேதியான் 25 இ.சி. (அன்தியோ) ஆகியவை ஊடுருவி பரவும் மருந்துகளாகும். இவைகளில் ஏதேனும் ஒன்றை 1 லிட்டர் தண்ணீரில் 0·75 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது பாஸ்பாமிடான் 100 (டைமெக்ரான்) மருந்தைப் பத்து லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

(2) பைட்டலான், குப்ராமர், நீல காப்பர் ஆகியவை நோய் தடுக்கும் தாமிரக் கலவை மருந்துகளாகும். இவைகளில் ஏதேனும் ஒன்றை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 4·5 கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும் அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1·5 கிராம் 'ஜினெப்' அல்லது 'சிர்ரம்' வீதம் கலந்து தெளித்தும் நோய்களைத் தடுக்கலாம்.

பார்த்து ஆரம்பத்திலிருந்து எனக்குத் திகைப்பாத்தான் இருந்திச்சு. ஆனா, பாண்டியன் கடைசி வரைக்கும் சிரிச்சுக்கிட்டுத்தான் இருந்தான் '' என்று சொல்லிக்கொண்டே நடந்தார் குருவையா.

'' இப்பப் பாண்டியன் சிரிக்கலேயா ? வழக்கு நடந்துக்கிட்டுத்தான் இருக்கா ? ''

என்று கேட்டேன் ஆத்திரத்துடன்.

குருவையா சொன்னார்.

'' வழக்கு—ஊரைக் கடந்து வெளியே போகலேயே. அதுக்குள்ளே உண்மை இன்னதுன்னு வெளியாகிப் போச்சு. வேலாயுதமும், உருட்டி முத்தையாவும் ஒரு ஒப்பந்தம் செய்துக்கிட்டுத்தான் இந்தக் காரியத்திலே இறங்கி இருக்காங்க. மைனர் நடேசனுக்காவது தன் பேத்தியைக் கட்டி வச்சுப் போடணும்ன்னு தவிப்பு முத்தையாவுக்கு. வேலாயுதமும் இதுக்கு ஒப்புக் கொண்டிருக்கார். இடையிலே நடேசன் ஒரேயடியா தலையைக் குழுக்கி இருக்கான். முத்தையாவோட எண்ணம் கைகூடுறதாத் தெரியலே. இதுவே ரெண்டு பேருக்கும் மத்தியிலே புகைஞ்சு தகராறு ஆரம்பமாகியிருக்கு. பிறகு நிபந்தனை ஜாமீன்னு ஆகி, மறுநாள் பொழுது விடிய, பாண்டியனும் லிங்கமும் ஊரைவிட்டே போக வேண்டிய கட்டம். சுத்துப்பட்டி பூராவுமே ஊருக்குள்ளே வந்து சேர்ந்திருக்கு. 'உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டே' ன்னு வேலாயுதத்துக்கும் முத்தையாவுக்கும் வாக்குவாதம் நடந்து, குழப்பத்திலே தவிச்சுப்போய் ராத்திரி பத்து மணிக்கு மேலே வீட்டுக்கு வந்திருக்கார் முத்தையா. அந்த நேரத்திலே சடையன் வேறே வந்து, '' பொழுது விடியிறதுக்குள்ளே உண்மையைச் சொல்லுங்க '' அப்படின்னு அதட்டியிருக்கான். கொஞ்ச நேரத்துக்குள்ளே குருபாதமும் முத்தையாவைக் கூப்பிட்டு வரசொல்லி ஐயனுவை அனுப்பியிருக்காரு. எல்லாரும் சேர்ந்து வர்றதைப் பார்த்து முத்தையா மிரண்டு போயிட்டார். சொல்ல வேண்டியதை நெஞ்சுக்குள்ளே புதைச்சு வச்சிருக்கவும் தைரியம் இல்லாம, உயிரோட இருந்தா எப்படியும் சொல்லித்தானே ஆகணும்ங்கிற நடுக்கத்திலே செத்துப்போறதே மேலுங்கிற முடிவுக்கு வந்திட்டார் முத்தையா.

'' செத்தே போயிட்டாரா ?'' என்று கேட்டேன் நான் அனுதாபத்துடன்.




குருவையா சிரித்தார். தொடர்ந்து சொன்னார்.

'' இப்படி ஏதாவது நடக்கும்ன்னு எதிர்பார்த்துத்தான்—பாண்டியன், நான், எல்லாருமே முத்தையாவோட வீட்டுக்குப் போனேம். அவர் இருந்த அறைக்கதவு உள்பக்கமா பூட்டியிருந்துச்சு. வழக்குச் சம்பந்தமா வந்திருந்த போலீசார் கூடக் கூடவே இருந்தாங்க. தட்டினதுக்குக் கதவு திறக்கலே. தாமதிக்காம கதவை உடைச்சு உள்ளே நுழைஞ்சோம். முத்தையா வாயெல்லாம் நுரை தள்ளி மயங்கிக் கிடந்தாரு. நல்லகாலம் டாக்டரும் தற்செயலா வந்திருந்தாரு. செத்துப் போவோம்ன்னு நினைச்சு, மரண வாக்கு மூலமாவேதான் நடந்த உண்மையைச் சொன்னாரு '' என்று சொல்லி நிறுத்தினார் குருவையா.

'' பொன்னையாவை அடிச்சது அவர்தானமா ? ''

'' அவர் அடிச்சிருந்தா அவரே வழக்கைக் கொண்டு போயிருப்பாரா ? நடந்ததே வேறே. அந்தச் சம்பவம் நடந்ததுக்கு முதல் நாள் களத்து மேட்டிலே பாண்டியனுக்கும், பொன்னையாவுக்கும் தகராறு நடந்திருக்கு. மறுநாளும் இந்தக் கொதிப்பிலே இருந்திருக்கான் பொன்னையா. வேலாயுதமும் முத்தையாவும் பொன்னையா வண்டியோட்டத் தோப்புக்குப் போயியிருக்காங்க. எதிர்முகமா வந்துக்கிட்டிருந்த பாண்டி, லிங்கத்தோட தகராறு நடத்திருக்கு. '' உனக்கு நாள் குறிக்கப் போறேன் ''னு சபதம் போட்டிருக்கார் முத்தையா. இந்தக் கொதிப்போட அவரும் வேலாயுதமும் தோப்பிலே போய் இறங்கி இருக்காங்க. பொன்னையா வண்டியை அவிழ்த்து விட்டு மாடுகளுக்கு வைக்கோல் போட்டிருக்கான். அந்தக் காளைகளிலே ஒண்ணு புதுசாச் சந்தையிலே இருந்து வாங்கியாந்தது. கடுமையா பாயும். கரையடியிலே தகராறு நடந்தப்ப, லிங்கம் அந்தக் காளையோட மூக்குக்கயிற்றைப் பிடிச்சுத்தானே வண்டியை நிறுத்தியிருக்கான். அந்த வெறியிலே நின்ன காளை, பொன்னையா தன்னை மறந்து நெருங்கி வரவும், பாய்ந்து முட்டித் தள்ளியிருக்கு. சத்தம் கேட்டு, வேலாயுதமும் முத்தையாவும் ஓடி வந்திருக்காங்க. அந்தச் சமயத்திலே தோப்புக்குள்ளேயும் வேறே யாரும் இல்லே. நெஞ்சிலே ஊமைக் காயமா குத்துப்பட்டு அரை குறையா மயங்கிக் கிடந்தவனை வீட்டுக் குள்ளே தூக்கிட்டுப் போயிருக்காங்க. அப்பத்தான் முத்தையாவுக்கு இப்படியொரு யோசனை தோன்றியிருக்கு. பொன்னையா கிட்ட, 'நீ எப்படியும் பிழைச்சுக்குவே. எவ்வளவு செலவானாலும் நாங்க பாத்துக்குறேம். இதை வச்சுப் பாண்டியனைப் பழி வாங்கிப் போடலாம். நாங்க சொல்ற மாதிரி வாக்குமூலம் சொல்லு. செலவெல்லாம் போக மூவாயிரம் தாரோம்'னு சொல்லி வற்புறுத்தி இருக்காங்க. பொன்னையாவும் அப்பப் பாண்டியன் மேலே இருந்த கோபத்திலே ஒத்துக்கிட்டிருக்கான். இருந்த விரோதத்திலே வேலாயுதமும் முத்தையாவோட பேச்சிலே மயங்கிட்டாரு '' என்றார் குருவையா.

'' முத்தையா என்ன ஆனார்?''

'' செத்துப் போவோம்ன்னு நினைச்சுத்தான் முத்தையா எல்லாத்தையும் ஒத்துக்கிட்டாரு. ஆனா, டாக்டருங்க அந்த நல்ல மனுசனைச் சாகவிடலே. எப்படியோ பிழைக்க வைச்சிட்டாங்க. பொய்ச் சாட்சி சொன்னதுக்கும், தற்கொலை செய்ய முயற்சி செய்த குற்றத்துக்கும் இப்பத் தண்டனை அனுபவிச்சுக்கிட்டிருக்காரு ''

'' வேலாயுதம்?''

'' ஆத்திரத்திலே கொலையே செய்திடலாம். ஆனா, அண்ணன் மகன் மேலேயே பழியைச் சுமத்தி, ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லி, அது நாடறிய வெட்ட வெளிச்சமாகும்போது, அவன், இருந்தும், செத்தவன் தானே. அன்னிக்குப் போனவர் தான் வேலாயுதம், திரும்பி ஊருக்குள்ளே வரலே. மதுரையிலேயே இருக்காரு. பெரியவருக்கு வேலாயுதத்துக்கிட்ட அப்படியொரு நம்பிக்கை இருந்திச்சு. முத்தையாவோட வாக்குமூலத்தைப் பக்கத்திலே இருந்து கேட்டு, எல்லாமே பொய்யின்னு அறிந்தப்பவே குருபாதம் துடிச்சுப் போயிட்டாரு. மகனைக் கட்டித் தழுவிக்கிட்டாரு. இப்பப் பாண்டியன் சொல்றதுதான் அவருக்கு வேத வாக்கு !'' என்றார் குருவையா.

நிம்மதியாக மூச்சு வாங்க... நான் சற்று நின்றேன்.

நடந்தது இதுவாக இருக்கும் போது என்ன பாடுபடுத்தி விட்டார்கள் ? உருட்டி முத்தையாவுக்கு இதுவே தொழிலாக இருந்தது. ஆனால், வேலாயுதம் எப்படித்தான் இப்படியொரு கெடுமதிக்கு உள்ளானர்.

நீண்ட பெருமூச்சு உடலைக் குலுக்கக் குருவையாவைத் தொடர்ந்து நடந்தேன்.

'' இப்பவும் ஒரு நல்ல நேரத்திலேதான் நீங்க வந்திருக்கிங்க. பெரிய வீட்டிலே இப்ப ஒரு சுபகாரியம் நடக்கப் போகுது. அதை நினைச்சுத்தான் நான் அவசரமாகத் திரும்பிக்கிட்டிருக்கேன்'', என்று சொல்லிச் சற்று வேகமாக அடியெடுத்து வைத்தார் குருவையா.

'' எது......, கல்யாணமா? '' என்று கேட்டேன் ஆவலுடன்.

'' கல்யாணம் நடந்துதான் நாலு மாசமாகுதே. ஒரு வீட்டுக் காரியம்ன்னு இல்லாம, இந்த வட்டாரமே கூடி நின்னுல்ல பாண்டியனோடே கல்யாணம் நடந்திச்சு. நீங்க இல்லாத குறைதான் பெருங் குறை '' என்றார் குருவையா.

'' பொண்ணு யாரு?'' என்று சிரிக்காமலேயே கேட்டேன்.

## வெண்பாப் போட்டி-52

ஈற்றடி : மிகைநாடி மிக்ககொளல் மேல்

முடிவு நாள் : 15-2-1973.

பரிசு : ஓராண்டு 'தமிழரசு' அன்பளிப்பு

வெண்பா அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-2.

குறிப்பு :
அஞ்சல் அட்டையில் வரும் வெண்பாக்களே ஏற்றுக்கொள்ளப்படும்.

(3) மருந்து தெளிக்க விசைத் தெளிப்பான் பயன்படுத்தினால், மேற்குறிப்பிட்டுள்ள அளவு தண்ணீரில் 3-ல் ஒரு பகுதியை மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஆனால் மருந்தின் அளவைக் குறைக்கக் கூடாது.

அறுவடை:— நன்றாக வெடித்த பருத்தியை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். பருத்தி பறிப்பதற்கு காலை வேளையே சிறந்தது. பருத்திகளைப் பறிக்கும் பொழுது சருகுகள் ஒட்டாமல் பறிக்க வேண்டும். பூச்சிகளால் தாக்கப்பட்டு நிறம் மாறிய பருத்திகளை நீக்கி விட வேண்டும். பறிக்கப்பட்ட பருத்தியை நிழலில் உலர்த்தி சேமிக்க வேண்டும். எடுக்கப்பட்ட பருத்திகளை வகைக்குத் தக்கவாறு தரம் பிரித்து விற்பனை செய்தால் நல்ல விலைக்கு விற்கலாம்.

எம். சி.யு. 5 பருத்தி பயிரிட்டால் ஏக்கருக்குச் சராசரியாக 8 குவின்டால் பருத்தி மகசூல் எடுக்கலாம். மேலே பரிந்துரைக்கப்பட்ட முறையில் ஒரு ஏக்கர் எம். சி. யு. 5 பருத்தி சாகுபடி செய்ய ரூபாய் 1,000 முதல் 1,200 வரை செலவாகக் கூடும். ஒரு ஏக்கர் பருத்தி மூலம் மொத்தம் ரூபாய் 2,400 வருவாய் கிடைக்கக் கூடும். ஆகவே, செலவு போக ஏக்கருக்கு நிகர இலாபம் ரூபாய் 1,200 முதல் ரூபாய் 1,400 வரை கிடைக்கும்.

**2. குளிர் கால மானாவாரி கம்போடியாப் பருத்தி**

ஏற்ற ரகம் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, ஆகிய மாவட்டங்களில் உள்ள செம்மண் நிலங்களில் குளிர் கால மானாவாரி கம்போடியா பருத்தி பயிரிட எம். சி. யு. 5 ரகமே சிறந்தது.

மண்வகை:—எம். சி. யு. 5 ரகத்தை மானாவாரியாகப் பயிரிட பெரியகுளம், தேனி, கம்பம், பழனி ஆகிய பகுதிகளில் உள்ளது போன்ற மணல் கலந்த செம்மண் நிலம் மிகவும் ஏற்றது.

விதையளவு :— ஏக்கருக்கு 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். விதைப் பராமரிப்பு செய்திட இறைவைப் பருத்திக்குக் கூறியது போலவே செய்யவும்.

நிலம் தயாரித்தல் :—நிலத்தை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது கட்டிகளை உடைத்துவிட்டுப் புழுதியாக்கிச் சமப்படுத்தவும். பிறகு ஏக்கருக்கு 10 வண்டி (5டன்) தொழு எரு அல்லது கலவை எரு இட்டுக் கடைசி உழவு செய்யவும். கடைசியாக நிலத்தைக் குண்டகாவினால் சமப்படுத்தல் நல்லது.

அடி உரமிடுதல் :—விதைப்பதற்கு முன் ஏக்கருக்கு 16 கிலோ தழைச்சத்தும், 8 கிலோ மணிச்சத்தும் அடி உரமாக இட வேண்டும். இந்த அளவுச் சத்துக்கள் கிடைக்க ஏக்கருக்கு 80கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 36 கிலோ யூரியா, 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் ஆகியவைகளை இட வேண்டும்.

விதைத்தல் :— ' கொரு ' கலப்பையால் வரிசையில் விதைப்பது சிறந்தது. வரிசைக்கு வரிசை 75 சென்டி மீட்டர் (2½ அடி) இடைவெளியும் செடிக்குச் செடி 30 சென்டி மீட்டர் (1 அடி ). வீதம் இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

பின்செய் நேர்த்தி :—விதைத்த 20-ஆம் நாளில் முதல் களை எடுப்பதுடன் குழிக்கு ஒரு நல்ல செடி வீதம் விட்டு மற்றவைகளை அகற்றி விட வேண்டும். விதைத்த 40-ஆம் நாள் இரண்டாம் களை எடுத்தல் வேண்டும்.

களை எடுப்பதுடன் 'தந்துலு' என்னும் கலப்பையால் செடி வரிசைகளுக்கு இடையில் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம்—பூக்கும் காலம் வரை—இடையுழவு செய்து வருதல் நல்லது.

பயிர்ப் பாதுகாப்பு:—விதை ஊன்றிய ஒரு மாதத்தில் 10 சத செவின் தூளையும், கந்தகத் தூளையும் சம அளவில் கலந்து ஏக்கருக்கு 4 முதல் 5 கிலோ வீதம் தூவ வேண்டும். பிறகு மாதம் ஒரு முறை வீதம் மேற்கூறியவாறே தூவி விட வேண்டும். பருத்தி வெடிக்கும் வரை இவ்வாறு தூவுதல் வேண்டும்.

அறுவடை:— குளிர் கால இறைவைப் பருத்திக்குக் கூறியுள்ள படியே செய்யவும்.

செலவும் வரவும் :—ஒரு ஏக்கரில் மானாவாரியாக எம். சி. யு. 5 பருத்தி பயிரிட சராசரியாக ரூபாய் 500 செலவாகும். மேற் கூறிய முறையில் சாகுபடி செய்தால் சராசரியாக 3 குவின்டால் பருத்தி கிடைக்கும். அதன் மூலம் ரூபாய் 900 வருவாய் பெறலாம். எனவே, செலவு போக ஏக்கருக்கு ரூபாய் 400 நிகர இலாபம் கிடைக்கும்.

**3. கரிசல் நில மானாவாரிக் கம்போடியாப் பருத்தி**

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் தற்பொழுது 'லட்சுமி' பருத்திச் சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலங்களில் பயிரிட, ' பாரதி ' (எம்.சி.யு. 6) பருத்தியே சிறந்தது. இதன் வயது 180 நாட்கள்.



பாரதி - மானாவாரிக்கேற்ற சிறந்த கம்போடியாப் பருத்தி



' பாரதி ' பருத்திக்கு வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளியும், செடிக்குச் செடி 25 சென்டி மீட்டர் (10 அங்குலம்) இடைவெளியும் விட்டு, ' கொரு ' கலப்பையால் விதைக்க வேண்டும். மற்ற சாகுபடி முறைகள் அனைத்தும், மானாவாரி எம். சி. யு. 5 பருத்திக்குக் குறிப்பிட்டுள்ளது போலவே செய்ய வேண்டும்.

' பாரதி ' பருத்தி சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூபாய் 450 செலவாகும். ஒரு ஏக்கரிலிருந்து சராசரியாகக் கிடைக்கும் 3 குவின்டால் பருத்தி மூலம் ரூபாய் 750 வருவாய் பெறலாம். எனவே, பாரதி பருத்தி மூலம் ஏக்கருக்குச் சராசரியாக ரூபாய் 300 நிகர இலாபம் பெறமுடியும்.

**4. குளிர்காலப் 'பார்படென்ஸ்' பருத்திச் சாகுபடி முறைகள்**

ஏற்ற ரகம்:—அதி நீள இழைகளைக் கொடுக்க வல்லதும், 100-ஆம் எண் நூல் நூற்க வல்லதுமான 'சுஜாதா' பருத்தியைச் சிறப்பாகக் கோவை மாவட்டத்தில் பயிரிடலாம்.

வயது:—180 நாட்கள்.

விதைக்கும் பருவம் :—ஆகஸ்ட்—செப்டம்பர்.

விதையளவு :— ஏக்கருக்கு 4 கிலோ விதைகளை விதைக்க வேண்டும்.

விதைச் செய் நேர்த்தி :—ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் ' அக்ரசான் ' அல்லது ' செரசான் ' மருந்து கலக்க வேண்டும். தேசிய விதைக் கார்ப்பரேஷன் மூலம் வாங்கும் விதைகளில், முன்பே மருந்து கலக்கப்பட்டு இருப்பதால், மீண்டும் மருந்து கலக்க வேண்டிய அவசியமில்லை.

நிலம் தயாரித்தல்:—நிலத்தை 4 முறை இரும்புக் கலப்பையால் அல்லது டிராக்டரால் நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு இட்டுக் கடைசி உழவு செய்ய வேண்டும். பார் கலப்பையால் 75 முதல் 90 சென்டி மீட்டர் (2½ முதல் 3 அடி) இடைவெளியில் கிழக்கு மேற்காக அல்லது நிலத்தின் சரிவிற்கு ஏற்பப் பார்கள் அமைக்க வேண்டும்.

அடியுரம் இடுதல்:—சுஜாதா பருத்தி பயிரிட ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும் . இந்த அளவுச் சத்து அளிக்க, 31 கிலோ


சுஜாதா - 100-ம் நெம்பர் நூற்புத்திறன் கொண்ட பார்படன்ஸ் பருத்தி

யூரியா அல்லது 70 கிலோ அமோனியம் சல்பேட், 87 கிலோ சூப்பர் பாஸ்பேட், 23 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஸ் ஆகிய உரங்களை இட வேண்டும். அல்லது

> இந்தியாவில் தற்போது ஆண்டுதோறும் சுமார் 30 கோடி ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் தீ விபத்துக்களில் அழிந்து போகின்றன.

14 : 14 : 14 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 100 கிலோவை அடியுரமாக இட வேண்டும். மேற்கூறிய இரசாயன உரங்களைப் பார்களின் ஒரு பக்கத்தில் மட்டும், விதை ஊன்றும் இடத்திற்குக் கீழே 2 முதல் 3 அங்குலம் தள்ளிச் சீராக இட்டு மண்ணால் மூடி விட வேண்டும்.

விதைத்தல்:— பார்களின் ஒரு பக்கத்தில் மட்டும் குழிக்குக் குழி 35 முதல் 45 சென்டி மீட்டர் (14 முதல் 18 அங்குலம்) இடைவெளிவிட்டு, குழிக்கு 3 விதைகள் வீதம் ஊன்றவும். விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்சவும்.

பின்செய் நேர்த்தி:—நிலத்தில் களை தோன்றாமல் இருக்க 20-வது நாளும் 40-வது நாளுமாக 2 தடவை களைக் கொட்டினால் கொத்திக் களை எடுக்க வேண்டும். விதைத்த 6 வாரங்களில் அதாவது செடிகள் 1½ அடி உயரம் வளர்ந்திருக்கும் பொழுது ' ஜூனியர்ஹோ ' எனப்படும் கொத்துக் கலப்பையால் அல்லது நாட்டுக் கலப்பையால் ஊடு உழவு செய்து செடிகளைப் பார் நடுவில் இருக்கச் செய்து இரு பக்கமும் மண் அணைக்க வேண்டும்.

மேலுரமிடுதல்:— விதை ஊன்றிய 50 முதல் 60 நாட்களில் ஊடு உழவு செய்து, மேலுரமாக 14 கிலோ தழைச்சத்து அளிக்க 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியாவை இட்டு மண் அணைத்துக் கொடுக்க வேண்டும்.

நீர்ப்பாசனம்.—விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நான்காவது நாள் இரண்டாம் முறையாக தண்ணீர் விடவேண்டும். பிறகு தேவைக்கேற்ப 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் தண்ணீர் விட்டு வரவேண்டும். மேலுரமிட்டவுடன் கண்டிப்பாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு:— ' சுஜாதா ' பருத்தியில் நல்ல மகசூல் பெற கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது போல் பயிர்ப் பாதுகாப்பு செய்ய வேண்டும், என்று பரிந்துரைக்கப்படுகிறது.

குருவையா சிரித்தார்.

'' தெரிஞ்சுக்கிட்டே கேட்குறிங்களே? நம்ம மைக்கேல் மக டெய்சிதான் '' என்றார்.

பேச்சு மயக்கத்திலே முல்லைக் கால்வாயை நெருங்கிக் கொண்டிருந்தோம்.

'' எதுக்கே யாரு வர்றது கவனிச்சிங்களா? '' என்று கேட்டார் குருவையா.

'' யாரு . . . . . . சடையரு? '' என்றேன் வியப்புடன்.

முடியை ஒட்ட வெட்டியிருந்தான். நடை, உடை, பாவனை எல்லாமே மாறி இருந்தது.

'' ஆளு இப்பத் தங்கக் கட்டியாயிட்டான். பெரிய விட்டு நஞ்சையிலேதான் ரெண்டு ஏக்கர் உழவடை செய்யிறான். இந்தப் போகம் நட்டிருக்கான் '' என்றார் குருவையா.

அதற்குள் சடையனும் நெருங்கி வந்து விட்டான்.

'' ஐயா வாங்க! '' என்று வரவேற்போடு வணங்கவும் செய்தான். தோளிலே மல் வெட்டி தொங்கிக் கொண்டிருந்தது. சடையன் என்றால் அழுத பிள்ளை வாய் மூடுமே!

நான் வியப்போடு பார்த்தேன்.

'' என்னங்க பாக்கிறிங்க. கடைசியிலே அந்த உருட்டிக் கிழவன் போட்ட முடிச்சு, எனக்கும் ஒரு திருப்பமாப் போச்சுங்க. இதுவரைக்கும் எல்லாரும் வெட்டுக் குத்துன்னு தான் எங்கிட்ட பேசிக்கிட்டிருந்தாங்க. தம்பி பாண்டியன் தான் கத்தியைக் கீழே போட்டுட்டு, கலப்பையைத் தூக்குன்னு எனக்குச் சொல்லிக் கொடுத்தாரு '' என்றான் சடையன்.

கேட்பதற்கே எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது.

'' வாய்க்கால் வரைக்கும் போயிட்டு வாரேங்க '' என்று சொல்லிவிட்டுச் சடையன் சென்றதும், நாங்களும் மேலே நடந்தோம்.

முத்தாலம்மன் கோவில் சுற்று மதில் தெரிந்தது. தென்பக்கம் அம்மன் கோவில் கிணறு. பக்கத்திலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் தொட்டிகட்டும் வேலை பாதிக்கு மேல் முடிந்திருக்கிறது.

நான் வியப்புடன் நின்றேன்.

குருவையா சொன்னார்.

'' அடுத்த மாதம் வேலை தீர்ந்து போகும். தொட்டியையும் கட்டி முடிச்சு, ஊருக்குள்ளேயும் குழாய் போட்டு, பூராச் செலவையுமே தானே ஏத்துக்கிட்டு, பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப் போடுறேன்னு சொல்லிட்டாரு குருபாதம் '', என்ற குருவையா, சற்றுத் தள்ளி மந்தையிலே, போய்க்கொண்டிருந்த ஒரு பெண்ணைச் சுட்டிக் காட்டி, '' யாருன்னு தெரியுதா? '' என்று கேட்டார்.

நான் திரும்பிப் பார்த்தேன்.

தலையில் பசும்புல் கட்டோடு, இடுப்பிலே குழந்தையையும் இடுக்கிக்கொண்டு, கையிலே ஒரு வெள்ளாட்டையும் பிடித்தவாறு, சென்று கொண்டிருந்தாள் அவள். எனக்கு முகம் தெரியவில்லை.

என் நினைப்பைக் கண்டு குருவையா சொன்னார்.

'' நம்ம சிவந்திதான். ரொம்ப வைராக்கியமான பொண்ணு! '' என்றார்.

> **ஆனைமலையில்**
> **மிகப் பெரிய**
> **வனவிலங்குக் காப்பகம்**
>
> கோவை மாவட்டம் ஆனைமலையில் 900 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உருவாகியுள்ள வனவிலங்குகள் காப்பகம், முதுமலை வனவிலங்குகள் காப்பகத்தையடுத்த மிகப் பெரிய காப்பகமாகும். இங்கு பல்வேறு வனவிலங்குகளும், பல்வகைப் பறவைகளும், ஊர்வனவும் உள்ளன.
>
> இந்த ஆனைமலைத் தொடர்ப் பகுதியில் ஏராளமான ஆறுகளும் நீர்ப்பாசனத் திட்டங்களும் உள்ளன. இப்பகுதி வளமாக்கப்பட்டால், இது இந்தியாவிலேயே சிறந்த வனவிலங்குக் காப்பகமாகவும், மகிழ்வுப் பயணத்திற்குகந்த இடமாகவும் விளங்கும். தமிழ்நாடு அரசு, ரூ. 10 இலட்சம் செலவு மதிப்பீட்டில் இதற்கான திட்டத்தை உருவாக்கி, நடப்பு ஆண்டிற்கு ரூ. 1 இலட்சத்தை ஒதுக்கியுள்ளது.
>
> இங்கு சோலையாறு அணையில் உல்லாசப் படகு விடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

'' சடையன் கட்டிக்கப் போறதா சொல்லிக்கிட்டிருந்தானே!'' என்று கேட்டேன் நான்.

'' சிவந்தி ஒரு மனசுக்காரி. புருசன் நினைவுக்கு ஒரு பிள்ளை இருக்கு; இவனை வளத்து ஆளாக்கினாப்போதும். இனிமே தாலி கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டு, தனியாத்தான் உழைக்கிறா'' என்றார் குருவையா.

மெதுவாக நடந்தேன்.

'' எட்டி நடங்க. இப்பா பெரியவர் வீட்டிலே, அரசிக்கு வளைகாப்புப் போடுறாங்க. இதுக்காவது நீங்க பொறுத்தமா வந்திருக்கிங்க '' என்று சொல்லி முந்தி நடந்தார் குருவையா.

* * *

குருபாதத்தின் வீட்டு வாசலில் அறிந்தவர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தபோது, குரல் கேட்டுக் குருபாதமே எழுந்து வாசலுக்கு வந்து விட்டார்.

'' வாங்க . . . . வாங்க . . . . . . இந்த நல்ல நாளன்னிக்காவது வந்திங்களே . . . .'' என்று சொல்லி உள்ளே அழைத்துச் சென்றார்.

திண்ணையில் கூடி இருந்தவர்களுக்கு வணக்கம் சொல்லிவிட்டு, குருபாதத்தின் முன்பாக உட்கார்ந்தேன்.

இன்றைக்குத்தான் இவர் முகத்தில் பொலிவையும், அந்தக் கம்பீரத்தையும் காண முடிகிறது.

'' நீங்களும் போன பிறகு இங்கே என்னென்னமோ எதிர்பாராததெல்லாம் நடந்து போச்சு. குருவையா சொல்லியிருப்பாரே!'' என்றார் குருபாதம்.

'' நல்லதையே நினைக்கும் போது, அதுக்கு அழிவே இருக்காது '' என்றேன் நான் பொதுப்படையாக.

'' ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளே வாழ்ந்தே பழகிப்போனவங்களுக்கு, கால மாறுதலுக்குத் தக்கபடி புதுசா எதையும் ஏத்துக்கிறதுக்கு மனப்பக்குவம் வேண்டியிருக்கு. ஏதோ ஒரு ஆத்திரத்திலே அதை இழந்து நான் குழம்பிப் போயிருந்தேன். உண்மை இன்னதுன்னு தெரிஞ்சதுக்கப்புறம் தெளிவும் வந்திருக்குப் பாருங்க. இப்ப எல்லாமே பாண்டியன் பொறுப்புத்தான். எதையெதையோ துணிச்சலா செய்து கிட்டே போறான் '' என்றார் குருபாதம்.

'' நேற்று நடந்ததையும், இப்ப நடக்கிறதையும் நினைக்கிறப்ப மனசுக்கு எவ்வளவோ ஆறுதலா இருக்கு '' என்றேன் நான் என்னை மறந்து.

'' கடைசி கடைசியின்னு— நானும் நடுங்கிப் போயிட்டேனே. ஆனா பாண்டியனுக்கு அந்தச் சிரிப்பு மாறலையே, கலங்கலையே '' என்று ரசித்துச் சொன்னார் குருவையா.

'' அது அவன் பிறவி. எப்பவுமே இப்படித்தான் '' என்றார் குருபாதம் பெருமிதத்துடன்.

அப்போது வீட்டிற்குள்ளிருந்து ஐயனு வந்தான்.

குருபாதம் நிமிர்ந்து பார்த்தார். முகத்திலே சிரிப்புப் படர்ந்தது.

'' இவனுக்கும் வர்ற மாசம் கல்யாணம் முடியப்போகுது. பொண்ணு யாரு தெரியுமா? உருட்டி முத்தையாவோட பேத்தி. அடிக்கொருதரம் இவனைக் குலம் கோத்திரம் தெரியாத பயல்னு பேசுவாரு '' என்றார்.

நான் சிரித்தேன். ஐயனுவுக்கு வெட்கம் வந்துவிட்டது.

'' உங்களை அம்மா கூப்பிடுறாங்க '' என்றான் வந்து நின்றதை நினைத்து.

'' போங்க, அரசிக்கு வாழ்த்துச் சொல்லுங்க '' என்றார். குருபாதம்.

நான் எழுந்து உள்ளே சென்றேன்.

மையப் பட்டகசாலை முழுவதிலும் பெண்கள் நிறைந்து நிற்கிறார்கள்.

சிவகாமியம்மாள் பச்சைப் பட்டுடுத்தி முன்னால் நிற்பது தெரிகிறது. வலது பக்கம் நிற்பது அரசியா? பொன்னிறமாகப் பூத்துக் குலுங்கி நிற்கும் மாங்கன்றைப் போல, உள்ளும் புறமும் பூரித்து, புன்னகைத்துத் தலை குனிந்து நிற்கிறாள். கை நிறைய வளையல்கள் குலுங்குகின்றன. தாழம்பூ தைத்த பின்னல் முன் பக்கம் சரிந்து, அவள் கையிலே விழுந்து புரளுகிறது.

> **சீனநாட்டுச்**
> **சுற்றுலாப் பயணி**
>
> கி.பி. 640-ல் சீன நாட்டிலிருந்து யுவான் சுவாங் என்பவர் தமிழ் நாட்டுக்குச் சுற்றுலா வந்திருக்கிறார். பாண்டிய நாட்டைப் பற்றிய செய்திகளையும், சோழ நாட்டைப் பற்றிய செய்திகளையும் அவர் தமது குறிப்புகளின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார். பின்பு, நரசிம்ம வர்ம பல்லவரின் ஆட்சிக் காலத்திலும் யுவான் சுவாங் தமிழகத்திற்குச் சுற்றுலா வந்திருப்பதாக வரலாறு தெரிவிக்கிறது.
>
> அவரது குறிப்புகளால் அக்காலத்திய தமிழ் நாட்டின் ஆட்சி முறைகள்—இயற்கை அமைப்பு — மக்களின் வாழ்க்கை முறை ஆகியவை தெளிவாகத் தெரிகின்றன.

ஒரு நாள், இவள், பதினாறும் நிறையாத பேதையாக, பொட்டிழந்து, பூவிழந்து, வெள்ளையுடுத்தி, இதே இடத்தில், கண் கலங்கி நின்ற கோலத்தை நினைத்துப் பார்க்கிறேன்.

என் மெய் சிலிர்க்கிறது.

சிவகாமியம்மாள், குனிந்து பொங்கிவரும் ஆனந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மகளைத் திரும்பிப் பார்த்த போது, அரசி முன்னால் வந்து மண்டியிட்டு என்னை வணங்குகிறாள்.

'' பெருவாழ்வு வாழ்வாயம்மா '' என்று ஆசியளிக்கிறேன்.

அதற்குள் பாண்டியனும், அவனுக்குப் பின்னால் லிங்கமும் வந்து விட்டார்கள்.

'' நீங்க வந்திருக்கிறதைச் சொன்னதுமே ஓடியாரேன் '' என்கிறான் பாண்டியன் சிறுவனைப் போல.

'' எங்களையெல்லாம் மறந்திட்டிங்களே '' என்று குறைப்பட்டுக் கொள்கிறான் லிங்கம்.

'' நினைத்தது நிறைவோடு முடிந்தது. இனி என்றும் இந்தக் கிராமத்துக்கு எந்தக் குறையும் வராது '' என்கிறேன் நான்.

பின்னால் மறைந்து நின்ற டெய்சியை முன்னால் இழுத்து விடுகிறான் பாண்டியன்.

டெய்சி நாணத்தினால் முகம் சிவந்து தலைகுனிந்து நிற்கிறாள்.

'' சார் . . . . . . டெய்சி வாயாடிப் பொண்ணுன்னு சொல்லுவிங்களே. இப்பப் பாருங்க. நாலு வார்த்தை பேசுறதுக்கு ரெண்டு நாழிகையாகுது '' என்று சொல்லிச் சிரிக்கிறாள் அரசி.

'' தம்பி நடேசனுக்கும் எனக்கும் ஒரே நாளிலேதான் கல்யாணம் நடந்திச்சு. அந்தச் சகுந்தலையைப் பார்க்கலையே நீங்க. அம்மாவுக்குப் பக்கத்திலே முகத்தை முதுகுப்பக்கம் திருப்பிக்கிட்டு நிக்கிதே அந்தச் சகுந்தலைதான் பிடிச்ச பிடியிலே மைனர் தம்பிக்கு மாலை போட்டது '' என்கிறான் பாண்டியன்.

நான் அவளைப் பார்க்கிறேன்.

சகுந்தலை பெயருக்கேற்ற அழகிதான். குடிசையிலே பிறந்தவள், பெரிய வீட்டு மருமகளாகி, ஒளி விளக்காக நிற்கிறாள்.

நினைவு வந்து '' நடேசன் எங்கே '' என்று கேட்கிறேன் நான்.

'' பழையபடி விளையாடப் போயிட்டானோ என்னமோ? '' என்கிறான் பாண்டியன் சகுந்தலையைப் பார்த்தபடி.

'' இல்லே, அவர் இப்பச் சீட்டாடப் போறதே இல்லையே. வயலுக்குப் போயிருக்கார் '' என்கிறாள் அந்தச் சகுந்தலை தன்னை மறந்த படபடப்புடன்.

சிரிப்பொலி அந்த இடத்தையே நிறைக்கிறது.

தனித்தனியாக அல்லாமல், எல்லாரையும் பார்க்கிறேன்.

அன்புள்ளம் கொண்டவர்களை மீண்டும் பிரிந்து செல்வதை நினைக்கும்போது, கண்களில் நீர் திரையிடுகிறது.

கரம் குவித்து விடை பெறுகிறேன்.

### சுஜாதா பருத்திக்குப் பயிர்ப் பாதுகாப்பு முறைகள்.

| வரிசை எண். | விதைத்தபின் பயிரின் வயது (மருந்து தெளிக்கும் நாட்களில்.) | பூச்சி கொல்லி அல்லது நோய் தடுக்கும் மருந்தின் பெயர். | ஒரு ஏக்கருக்கு வேண்டிய மருந்தின் அளவு. | ஒரு ஏக்கருக்கு வேண்டிய மருந்துடன் கூடிய நீர்க்கலவை. | |
|---|---|---|---|---|---|
| | | | | கையினல் இயங்கும் தெளிப்பான். | விசைத்தெளிப்பான். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | 40 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 540 மி.லி. | 270 லிட்டர் | 60 லிட்டர் |
| 2 | 55 | கார்பரில்–50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெட்டாஸிட்–50). | 750 கிராம் + 150 மி.லி. | 270 ,, | 90 ,, |
| 3 | 60 | என்டோஸல்ஃபான் (தையோடான் 35). | 750 மி.லி. | 360 ,, | 120 ,, |
| 4 | 75 | கார்பரில்–50 (நனையும் செவின்)+ மிதைல் பாரத்தியான் (மெடாஸிட் 50). | 1 கிலோ + 200 மி.லி. | 360 ,, | 120 ,, |
| 5 | 85 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 900 மி.லி. | 450 ,, | 150 ,, |
| 6 | 95 | கார்பரில்–50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்–50). | 1 கிலோ + 200 மி.லி. | 450 ,, | 150 ,, |
| 7 | 105 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 1,100 மி.லி. | 540 ,, | 180 ,, |
| 8 | 120 | கார்பரில்–50 (நனையும் செவின் ) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்–50). | 1·25 கிலோ + 250 மி.லி. | 540 ,, | 180 ,, |
| 9 | 135 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 1,100 மி.லி. | 540 ,, | 180 ,, |
| 10 | 150 | கார்பரில்–50 (நனையும் செவின்) + மிதைல் பாரத்தியான் (மெடாஸிட்–50). | 1·25 கிலோ + 250 மி.லி. | 540 ,, | 180 ,, |
| 11 | 165 | என்டோ ஸல்ஃபான் (தையோடான் 35). | 1,100 மி.லி. | 540 ,, | 180 ,, |

குறிப்பு:—*(1) விதைக்கும் சால்களில் குருணை வகை மருந்துகளாகிய டைசல்ஃபோடான் (டைஸிஸ்டான 5 ஜி அல்லது சால்விரக்ஸ் 5 ஜி-8 கிலோ) அல்லது ஃபோரேட் (தைமட் 10 ஜி-4 கிலோ) போடலாம்.



*(2) விதை போடும் சாலில் குருணை மருந்து போடுவதற்குப் பதில், 'மெட்டாஸிஸ்டாக்ஸ்', 'எக்கட்டின்', 'ரோகார்' 'ஆன்தியோ' ஆகிய மருந்துகளில் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 175 மி. லி. அல்லது 'டைமெக்ரான்' மருந்து ஏக்கருக்கு 30 மி. லி. வீதம் 180 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைத்த 10, 25-ஆவது நாட்களில் தெளிக்கவும்.

3. 'ஃபைடலான்,' 'குப்ராமர்', 'ப்ளுகாப்பர்' போன்ற தாமிர பூசணக் கொல்லி மருந்துகளில், ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 1¼ கிலோ வீதம் அல்லது 'சிரம்', 'சினெப்' போன்ற மருந்துகளில் ஒன்றை ஏக்கருக்கு 420 கிராம் வீதம் 55-வது நாள் மருந்து அடிப்பதுடன் சேர்த்துத் தெளிக்கவும்.

பிந்திய பயிர் பருவத்தில், காய்ப் புழு தொந்திரவு மிகுந்து காணப்பட்டால் 7-வது மருந்து தெளிப்பதிலிருந்து மருந்து அடிப்பதை 10 நாட்களுக்கு ஒரு முறையாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

மழை நாட்களில், மருந்துடன் கூடிய நீர்க் கலவை 4½ லிட்டருக்கு 1 மில்லி லிட்டர் வீதம் 'சான்டோவிட்' மருந்தையும் கலந்து கொள்ளவும். இதனல் மருந்து பருத்திச் செடிகளில் நன்கு ஒட்டிக் கொள்ளும். மழையால் மருந்து பாதிக்கப்படாது.

அறுவடை:—விதை ஊன்றிய 4 மாதத்தில் சுஜாதா பருத்திச் செடிகளில் காய்கள் வெடிக்க ஆரம்பிக்கும். பிறகு பருத்தி வெடிப்பு மேலும் 2½ மாத காலத்திற்கு நீடிக்கும். காலை வேளையில் பருத்தி எடுப்பதே சிறந்தது. காய்ந்த இலைச் சருகுகள் ஒட்டாமல் பருத்தி எடுக்க வேண்டும். மிகவும் தூய்மையாக உள்ள நீண்ட இழைப் பருத்தி ரகங்களுக்கு விற்பனைக் கூடங்களில் நல்ல விலை கிடைப்பதால், காய்களைப் பிடுங்காமல், நன்ருக மலர்ந்து வெடித்த பருத்திகளை மட்டுமே பறிக்க வேண்டும்.

வரவும் செலவும்:— மேற்கூறிய முறைகளை மேற்கொண்டு 'சுஜாதா' பருத்தி பயிரிட்டால் ஒரு ஏக்கரிலிருந்து 8 முதல் 12 குவின்டால் பருத்தி எடுக்க முடியும். ஒரு ஏக்கர் 'சுஜாதா' பருத்தி பயிரிட ரூபாய் 1,400 செலவாகும். ஒரு ஏக்கர் 'சுஜாதா' பருத்தியிலிருந்து ரூபாய் 2,800 முதல் ரூபாய் 3,000 வரை வருவாய் பெறலாம். எனவே, செலவு போக ஏக்கருக்கு ரூபாய் 1,400 முதல் ரூபாய் 1,600 வரை நிகர இலாபம் கிடைக்கும்.

**வேண்டுகோள்!**

பருத்தி, பணத்தை அள்ளித் தரும் பயிராக இருப்பதால், அடுத்துவரும் புரட்டாசி மாதத்தில் 'எம்.சி.யு. 5' சுஜாதா' ஆகிய பருத்தி ரகங்களை இறைவையாகவும், ஐப்பசி மாதத்தில் 'எம்.சி.யு. 5', 'பாரதி' ஆகிய பருத்தி ரகங்களை மானவாரியாகவும் பயிரிட்டு பயன்மிகு பெற்று வளமோடு வாழுமாறும், நாட்டின் வளர்ச்சிக்கு உதவுமாறும் தமிழ் நாட்டு உழவர் பெரு மக்களை வேண்டிக் கொள்கின்றோம்.

—ஆர்.எம்.

நன்கு வளர்ந்துள்ள "சுஜாதா" பருத்தி



### வசதிகள்

இங்குத் தங்குவோருக்கு உணவு உடை, உறையுள், சிகிச்சை ஆகிய அனைத்தும் இலவசமாக அளிக்கப்படுகின்றன. தொழு நோய்க்கென்று பொதுவாகச் சிகிச்சையளித்தாலும், அவர்களுக்குள்ள வேறு நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டு அவற்றிலிருந்து விடுவிக்கப்படுகின்றனர். அவசியப்பட்டால் இவ்வில்லங்களில் உள்ள மருத்துவப் பகுதியில் வைத்துச் சிகிச்சையளிக்கப்படுகின்றனர்.

பெரியவர்களுக்கு ரூ. 1-50-க்கு மேல் போகாத அளவிலும், குழந்தைகளுக்கு ரூ. 0-75-க்கு மேல் போகாத அளவிலும் நாள் தோறும் உணவு அளிக்கப்படுகிறது. தேசிய விழாக்களின் போதும், மறுவாழ்வு இல்ல ஆண்டு விழாவின் போதும் இவர்களுக்குச் சிறந்த முறையில் விருந்து அளிக்கப்படும். தேங்காய் எண்ணெய்யும், சோப்பும் கூட இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

ஆண்களுக்கு, சட்டை, வேட்டி, துண்டு ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டும், பெண்களுக்குச் சேலை, பாவாடை, ரவிக்கை, துண்டு ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் படுக்கப் பாய், தலையணை, அலுமினியத் தட்டு, குவளை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. இந்த இல்லங்களில் தங்கும் எல்லா நோயாளிகளுக்கும் சிறப்பு வசதியுடன் கூடிய காலணிகள் கொடுக்கப்படுகின்றன. நோயின் கொடுமையால் கைவிரல்களை இழந்து விட்டவர்களுக்குப் பல் துலக்கப் பற்பொடியும், பிரசும் கொடுக்கப்படுகிறது. பருகூரில் அமைக்கப்பட்டுள்ள மறுவாழ்வு இல்லத்தில் இருப்பவர்களுக்கு அப்பகுதியில் உள்ள கடுங்குளிர் காரணமாக அவர்களுக்குக் கம்பளிப் போர்வை வழங்கப்பட்டுள்ளது.

அறுவைச் சிகிச்சைக்குள்ளாக வேண்டிய நிலையில் உள்ள தொழு நோயாளிகள் தர்மபுரி அல்லது போளம்பாக்கத்திலுள்ள தொழு நோய் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். அங்கு இவர்களுக்கு, மாநிலத் தொழு நோய் அலுவலராகப் பணியாற்றும் மருத்துவரோ, தொழு நோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களின் சிறப்பு அலுவலராகப் பணியாற்றும் மருத்துவரோ அறுவைச் சிகிச்சை செய்வர்.

இந்த இல்லங்களில் வந்து சேருவோர் கல்வி அறிவு பெறுவதற்காக வகுப்புகள் நடத்தப்படுகின்றன. முதியோர் கல்விப் புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவர்களது பொழுது போக்கிற்காக விளையாட்டு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. திரைப்படக் காட்சிகளும், இசைப்போட்டிகளும் நடத்தப்படும். நீதிநெறிகளையும், ஒழுங்கினையும் வலியுறுத்தும் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும். இவர்களது குழந்தைகள் மறுவாழ்வு இல்லங்களுக்கு அண்மையில் உள்ள அனாதை இல்லங்களில் சேர்க்கப்பட்டு இயன்றவரை கல்வியும் அளிக்கப்படுகின்றனர்.

### மறுவாழ்வு நடவடிக்கைகள்

இந்த இல்லங்களில் அனுமதிக்கப்பட்ட தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இங்கு இவர்களுக்குப் பல்வேறுபட்ட தொழில்களில் அளிக்கப்படும் பயிற்சியின் மூலமும், பயனுள்ள வகையில் இவர்களது நடைமுறையை ஆக்குவதன் மூலமும் இந்நோக்கம் ஈடேறுகிறது. முக்கியமாகப் பாய் பின்னுதல், காலணி தைத்தல், தையற்கலை, கோழிவளர்த்தல், தோட்டக்கலை ஆகியவற்றில்தான் இவ்வில்லங்களிலுள்ளோர் ஈடுபடுத்தப்படுகின்றனர். இப்பணிகளில் ஈடுபடுவோர் கைகளில் புண் ஏற்படாமல் இருக்க ரப்பர் உரைகள் போட்டுக் கொள்கின்றனர். இவர்கள் ஆற்றும் பணிக்கு ஏற்ப, வாரத்திற்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை கூலியாகக் கொடுக்கப்படுகிறது. எந்தப் பணியிலும் ஈடுபட முடியாத ஒவ்வொரு நோயாளியும் சொந்தத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காக வாரத்திற்கு ஒரு முறை 25 காசுகளைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.



தொழுநோயாளி ஒருவர் பாய் பின்னுகிறார்.

தமிழகத்தில் உள்ள தொழு நோய்ப் பிச்சைக்காரர் வாழ்வு இல்லங்கள் அனைத்தும் மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை இயக்குநரின் நேரடி நிர்வாகத்தில் செயல்படுகின்றன. அவருக்குத் துணையாகச் சிறப்பு அலுவலவலர் ஒருவர் பணியாற்றுகிறார். ஒவ்வொரு இல்லமும் கோட்டாட்சித் தலைவர் (R.D.O.) தகுதியில் உள்ள மேலாளர் ஒருவரின் கீழ் இயங்குகின்றது. முழுநேர மருத்துவர் ஒருவரும் அவருக்குத் துணையாக மருத்துவப் பணியாளர்களும் இங்குப் பணியாற்றுகின்றனர்.

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ''நான் கேட்கும் பிச்சை'' என்ற தலைப்பில், பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு நிதி தாருங்கள் என வேண்டுகோள் விடுத்ததும், ஒரு கோடி ரூபாய் அளவுக்கு வாரி வழங்கிய தமிழ்நாட்டுப் பெருங்குடி மக்கள், தங்கள் தங்கள் பிறந்த நாளின்போதும், அவரவர் குடும்ப விழாக்களின் போதும், மனித தெய்வங்கள் வாழும் இந்த மறுவாழ்வு இல்லங்கள்-இளங்குழவியின் தளர் நடைபோடும் இவ்வில்லங்கள், தங்கு தடையில்லாமல், தளர்ச்சி ஏதுமில்லாமல் வெற்றிநடைபோடப் பொருளுதவியும், பிறஉதவிகளும் நல்கிட முன்வர வேண்டும்.

—எல். முத்துராமலிங்கம்.

குருவையா சிரித்தார்.

# இன்னும் ஓர் ஆலயம்



புதுக்கோட்டை அன்று புதுமைப் பொலிவோடு விளங்கியது. சாலைகளில் வரவேற்பு வளைவுகள், தோரணங்கள், இன்னபிற. தமிழக முதல்வருக்கு வரவேற்பளிக்கும் வகையில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் அனைத்தும் மக்கள் தங்கள் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பிறந்த அன்பின் அடையாளமாகத்தான் அமைந்திருந்தன. அதுமட்டுமா? ஏழை எளிய மக்களின் உள்ளத் துடிப்பறிந்து அவர்கள் துயர் துடைக்கப்பட வேண்டும்—அவர்களது வாழ்வில் இன்பஞ் சேர்க்க வேண்டும்—ஒளி உண்டாக்க வேண்டும்—'வெந்ததைத் தின்போம், விதி வந்தால்-சாவோம்' என்ற சலிப்புணர்வோடு அவர்களை வாழ விடக் கூடாது—உற்சாகமும், ஊக்கமும் மகிழ்ச்சியும் நிரம்பியது வாழ்வு; தொய்வும் சோர்வும் கொள்ளத் தேவையில்லை— தென்போடும் தெளிவோடும் அவர்களது வாழ்வு அமைய வேண்டும்—அதற்கான வழி வகைகளைக் காண வேண்டும் என்ற அடிப்படையில், பந்தயக் குதிரையை விட வேகமாகச் சுழன்று சுழன்று பணியாற்றி வருகிறது தமிழ்நாடு அரசு; பற்பல வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதன் மூலம்.

இதற்காக நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1971-ஆம் ஆண்டு தான் விடுத்த பிறந்த நாள் செய்தியில்,'......நமது தமிழக அரசு ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்களே இல்லாத அளவுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தப் பணியாற்றிவருகின்றது என்பதைஅனைவரும் அறிவர். அதற்காக விடுதிகள் அமைக்கப்பட்டு ஆங்குப் பிச்சைக்காரர்களுக்குத் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப் பெரிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னோடியாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள், அமைத்து, அவர்களை வீதியில் அலையவிடாமல் அந்த விடுதிகளில் சேர்த்து, வியாதிக்குச் சிகிச்சையளிப்பதோடு, வேலைகள் கற்றுக் கொடுக்கும் பயிற்சியும் தரப்பட இருக்கிறது. அந்த விடுதிகளிலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். அதற்கெனத் திரட்டப்படும் நிதிதான் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி எனக் கூறி '.....பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு அரசு எடுக்கும் அரிய முயற்சிக்குத் தமிழகத்தார் அனைவரின் பங்கும் இருந்திடல் வேண்டும். அது ஒன்றே இந்த ஆண்டு பிறந்த நாளில் நான் கேட்கும் பிச்சையாகும், என வேண்டினார். தமிழகத்துப் பெருமக்களும் வாரி வழங்கினார்கள்.

அரசும், 'பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி' க்காகச் சிறப்புச் பரிசுச்சீட்டுத் திட்டம் ஒன்றை நடத்தி அதன் மூலமும் நிதி சேர்த்தது. இப்படிப்பட்ட பெரு முயற்சிக்குப் பின்னே, பரனூர், உளுந்தூர்பேட்டை, பருகூர் ஆகிய இடங்களில் மூன்று இல்லங்கள் திறக்கப்பட்டுச் செயல்பட்டுவருகின்றன. நான்காவதாக, புதுக்கோட்டை மச்சுவாடியில் கட்டி முடிக்கப்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தைத் திறந்து வைக்க வந்த மாண்புமிகு முதல்வருக்கு—பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களுக்குச் சென்று அங்குள்ள மனித தெய்வங்களோடு அளவளாவி வருவதைப் புனிதப் பயணமாகக் கருதும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு 'வருக ! வருக!!' என வரவேற்புக் கூறும் முகத்தான், புதுக்கோட்டை புதுப் பொலிவோடு விளங்கியது.

புதுக்கோட்டை மச்சுவாடியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள 'தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம்' புதுக்கோலம் கொண்ட மங்கல அணிகலன்கள் பல பூண்ட அழகு மிக்க மணப் பெண் போலக் காட்சி தந்தது. அகில உலக விமானத்தளம் இரவு நேரத்தில் பல வண்ணமின்மினி விளக்குகளோடு எவ்வளவு அலங்காரமாகக் காட்சி தருமோ அத்தகைய எழில் மிக்க காட்சியைத்தந்தது அந்த மறுவாழ்வு இல்லம். அதன் திறப்பு விழாதான் 7—1—1973-ல் நடந்தேறியது. அதோ, மாண்புமிகு முதல்வரும் விவசாயத் துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்களும், அரிசன நலத்துறை அமைச்சர் மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களும் வந்து விட்டார்கள். மறுவாழ்வு இல்லத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு, மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்த விழா மேடைக்கு வந்து சேர்ந்தனர் அமைச்சர் பெருமக்கள். பிச்சைக்காரர்களிடமும் அக்கறை கொண்டு அரசு விழா நடத்துகிறது என்றால் அதுவோர்புதுமை விழாத்தானே !

## நோக்கம்

இப்படிப்பட்ட மறுவாழ்வு இல்லங்கள் திறக்கப்படுவதன் நோக்கம் என்ன ? பிச்சையெடுத்து வாழும் நிலையை இந்த நாட்டிலிருந்து ஒழிக்க வேண்டும். அதன் முதல் திட்டமாகத் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு என மறுவாழ்வு இல்லங்கள் அமைக்க வேண்டுமென்று 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. அதன்படி பத்து மறுவாழ்வு இல்லங்களை அமைக்க அரசு ஆணை பிறப்பித்தது. செங்கற்பட்டு மாவட்டம் பரனூரிலும், தென் ஆர்க்காடு மாவட்டம் உளுந்தூர்பேட்டையிலும், தர்மபுரி மாவட்டம் பர்கூரிலும் இவ்வில்லங்கள் ஏற்கெனவே திறக்கப்பட்டுச் செயல்படுகின்றன. திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை மச்சுவாடியில் அமைந்துள்ள நான்காவது மறுவாழ்வு இல்லத்தின் திறப்பு விழாதான் அண்மையில் நடைபெற்றது. வட ஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலையிலும், தஞ்சை மாவட்டம் மனையேறி பட்டியிலும், கோவை மாவட்டம் வின்னப்பள்ளியிலும், சேலம் மாவட்டம் தேவியக்குறிச்சியிலும், தர்மபுரி மாவட்டம் செல்லியம்பட்டியிலும், மதுரை மாவட்டம் புதுப்பட்டியிலுமாக ஆறு மறுவாழ்வு இல்லங்கள் இவ்வாண்டு பிப்ரவரி மாத இறுதிக்குள் திறக்கப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு மறுவாழ்வு இல்லத்திலும் 500 தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இருப்பர். அவர்களை முறையாகப் பராமரித்து, சிகிச்சையளித்து, மறுவாழ்வு பெறச் செய்வது இவ்வில்லங்களின் பொறுப்பாகும். தொழுநோய்ப் பிச்சைக்காரர்களின் மருத்துவத் தேவைகளும் இங்கு நிறைவு செய்யப்படுகின்றன. மிகக் குறைந்த முதலீட்டுடன் சிறுதொழில் நடத்தும் முறையில் நடத்தப்படும் தொழில்களில் இந்த இல்லங்களில் குடியேறியோர் ஈடுபடுத்தப்பட்டு, உடல் உழைப்பு, கடும் முயற்சி ஆகியவற்றுக்குப் பின்னர் பல்வேறு வகையான பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தங்கள் வாழ்வைச் சுயமரியாதையுடன் நடத்த அவரவர் அறிந்த தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இறுதியாகச் சமுதாயத்தில் மீண்டும் பிச்சை எடுக்கும் நிலையிலேயே அவர்கள் விடப்படாமல், தங்கள் சொந்தக் காலிலேயே நிற்கும் நிலை உருவாக்கப்படுகிறது.

## கட்டட அமைப்பு

ஒவ்வொரு மறுவாழ்வு இல்லமும் பிச்சைக்காரர்களுக்கென நான்கு கட்டடங்களைக் ( 4Blocks) கொண்டிலங்கும். ஒவ்வொரு-கட்டடத்திலும் ( Block ) 125 பேர் தங்க முடியும். இக்கட்டடங்களின் தரைப் பகுதிகள் சிறு சிறு அறைகளாகத் தடுக்கப்பட்டு அங்கெல்லாம் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தங்கள் குடும்பத்தோடு வாழ அனுமதிக்கப்படுகின்றனர்.

இவை தவிர, இவ்வில்லங்களில் தனிச் சமையலறையும், 10 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனையும், ஆய்வுக் கூடம் ஒன்றும், அறுவைச் சிகிச்சைக் கூடம் ஒன்றும், நிர்வாகப் பகுதி ஒன்றும், அவசியமான அலுவலர்கள் குடியிருப்பதற்கான வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட அனைத்துத் தேவைகளையும் உள்ளடக்கிய சிற்றூராகவே இவை திகழ்கின்றன. மேலும் இங்குள்ள தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் விவசாயம் செய்ய, கோழி வளர்க்க, தோட்ட வேலை நடத்தத் தேவையான நிலமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தொழுநோய்க் கிருமிகளை நுண் உருப்பெருக்கியின் வாயிலாக வேளாண்மை அமைச்சர் திரு அன்பில் தருமலிங்கம் அவர்கள் பார்வையிடல்.



தொழுநோயாளிகளுக்கெனவே உருவாகியுள்ள காலனியை முதல்வர் கலைஞர் அவர்களும் வேளாண்மை அமைச்சரும் பார்வையிடுகிறார்கள்.





மழைஇருட் டில்ஓர் மாமரத் தருகினில்
ஒளிவிளக் கேந்திநீ உலவினாய் மின்மினி !
விரிந்தஇவ் வுலகில் விளக்குக் கையொடு
திரிந்தொரு ஞானி தேடினான் மனிதனை !
மேனி விளக்குடன் தேனீபோல் திரிகிறாய் ;
ஞானிபோல் யாரைநீ தேடினாய் பூச்சியே ?
நற்பெயர் பெற்ற நைட்டிங் கேல்எனும்
பொற்புடை மங்கையைப் புகழ்பவர் இன்றும்
கைவிளக் கேந்திய காரிகை என்கிறார் !
மெய்விளக் கேந்தி மிளிரும்நீ அவர்போல்
தாதியா ? அந்தச் சேதியைத் தெரிவி !
வீதி விளக்குகள் விழித்திருக் கின்றன !
அணைந்து அணைந்து எரியும் விளக்குடன்
துணிந்துநீ இருளில் தொடர்கிறாய் பயணம் !
அசோக வனத்தின் அந்நாள் கைதி
சீதையை மீட்கச் சேது சமுத்திர
அணைகட்டு வேலையில் அணில்துணை புரிந்ததாம் !
கள்வனைப் பிடிக்கும் காவலர் தமக்குப்
பொல்லா இருளில் புரிகிறாய் துணைநீ !
பறந்து திரிந்த பறவைகள் தம்மை
மறந்து தூங்கும் மரப்பொந்து வீட்டின்
விடிவிளக் காநீ ? வியப்புசேர் நீலப்
பொடிவிளக் காநீ ? புதுத்திரி, எண்ணெய்
மின்சாரம் இவையிலா- மேனியில் எரியும்
தன்சார விளக்கின் தாய்நீ ! என்பேன் !
மரணம் தழுவி மண்மேல் குட்டிக்
கரணம் அடித்த கவின்மிகு விண்மீன்
மறுபிறப் பெடுத்த மாதிரி இருக்கிறாய் !

புலவர் பொன்னிவளவன்

# கொய்தவை





■ இந்தியாவில் மொத்தம் 17 இராணுவப்பள்ளிகள் உள்ளன. இவற்றில் ஆண்டுதோறும் மொத்தம் 1,000 முதல் 1,200 மாணவர்கள் வரை சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இராணுவப் பள்ளிகளில் படித்த பின்தங்கிய வகுப்பு, பழங்குடிப் பிரிவு மாணவர்களின் எண்ணிக்கை

1972-73ல் 41,

1971-72ல் 76,

1970-71ல் 118,

1969-70ல் 59 ஆகும்.

■ இப்போது இந்தியாவிலுள்ள வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை நாடு விடுதலை பெற்றபோது இருந்ததைப் போல 50 மடங்கு ஆகும். 1972 டிசம்பர் முடிவில் நாட்டிலிருந்த உரிமம் பெற்ற வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கை 129 இலட்சமாகும். வானொலிப் பெட்டிகளின் எண்ணிக்கையில் முதலிடம் பெறும் மராட்டிய மாநிலத்தில் மொத்தம் 19 இலட்சமும், பஞ்சாபில் 14 இலட்சமும், தமிழ் நாட்டில் 13 இலட்சமும் உள்ளன. வானொலி உரிமக் கட்டணம், உபரிக் கட்டணம் ஆகியவை மூலம் 1972-ஆம் ஆண்டு 16 கோடியே 64 இலட்சம் ரூபாய் வருவாய் கிடைத்திருக்கிறது.

■ 1972 டிசம்பர் நிலவரப்படி, நாட்டில் 68 இலட்சத்து 96 ஆயிரம் வேலையில்லாதவர்கள் வேலைகோரிப் பதிவு செய்திருந்தார்கள். வேலை கோரியவர்களில் 32 இலட்சத்து 74 ஆயிரம் பேர் படித்தவர்கள். பள்ளி இறுதி வகுப்புக்குக் குறைவாகப் படித்தவர்களின் எண்ணிக்கை, எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் உட்பட 36 இலட்சத்து 22 ஆயிரம் ஆகும்.

■ இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் பிளாஸ்டிக், லினோலியம் ஆகியவற்றின் மதிப்பு 1972-73ல் 8 கோடியே 43 இலட்சம் ரூபாய் அளவை எட்டியது. இதில் பிளாஸ்டிக் பொருட்களின் பங்கு 4 கோடியே 86 இலட்சம் ரூபாய் அளவிலிருந்து 7 கோடியாக உயர்ந்தது. உருக்கி வார்த்த பிளாஸ்டிக் பொருட்களின் ஏற்றுமதி 1972-73ல் ஒரு கோடியே 98 இலட்சம் ரூபாய் அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்தது. மூக்குக் கண்ணாடி ஃபிரேம்கள் ஏற்றுமதியும் 1971-72ல் 42 இலட்சம் ரூபாய் அளவில் இருந்தது. 1972-73ல் ஒரு கோடியே 53 இலட்சம் ரூபாய் அளவுக்கு உயர்ந்தது.

■ பெரும்பாலும் ஆஸ்திரேலியா, ஆஸ்திரியா, பெல்ஜியம், கனடா, ஆலந்து, இத்தாலி, கென்யா, குவைத், பிரான்சு, மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், சாம்பியா, மலாவி, சுவீடன், ஸ்பெய்ன், சுவிட்சர்லாந்து, தாய்லாந்து, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, போலந்து போன்ற நாடுகள் இந்திய விளையாட்டுச் சாதனங்களை வாங்குகின்றன.

■ தமிழ்நாடு ஆந்திரம், குசராத், ஜம்மு காஷ்மீர், கேரளம், மைசூர், நாகாலாந்து, அந்தமான நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள், அருணாசலப் பிரதேசம், தாத்ரா மற்றும் நாகர்அவேலி, புதுவை ஆகியவற்றில் பள்ளி இறுதி வகுப்பு வரை "சிறுவர், சிறுமியர்களுக்கு" இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது. உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மணிப்பூர், ஒரிசா, ராஜஸ்தான், திரிபுரா ஆகியவற்றில் "சிறுமிகளுக்கு மட்டுமே" பள்ளி இறுதி வகுப்பு வரை, இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படுகிறதாம்!

## மாவட்டங்களிலிருந்து



### தஞ்சை மாவட்டம்

பூம்புகார்க் கலைக்கூடம்:— காவிரிக் கரையில் பூ விரித்து நின்ற பொன்னகரம் பூம்புகாரில் எழுநிலை மாடத்தின் எழில் காண மக்கள் பெரும் திரளாக வந்த வண்ணமிருக்கின்றனர். காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை கலைக்கூடம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாள் வரை ஒரு இலட்சத்துப் பன்னிரெண்டாயிரம் பேர் இக்கலைக் கூடத்தைப் பார்வையிட்டுள்ளனர். ஜூலை 29-ஆம் நாள் சனிக்கிழமை மட்டும் பதினோராயிரம் பேர் கண்டு களித்தனர்.

கலைக்கூடம் காண வரும் மக்களை மகிழ்ந்து வரவேற்றிட, கலைக்கூடத்தின் மாண்பினை விளக்கிட, அவர்களை மகிழ்வித்து அனுப்பிட வரவேற்பு அலுவலர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இரவு 8 மணிக்கு மேல் மாயூரம், சீர்காழி ஆகிய இடங்களுக்குச் சென்றிடப் பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. விடுமுறை நாட்களில் கலைக் கூடம் காணச் சோழன் போக்கு வரத்துக் கழகத்தினர், தனிப் பயணிகள் பேருந்துகளை அனுப்புகின்றனர்.

### இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுநகர் அரசு மருத்துவ மனையில் 1-7-73 முதல், தாய்மார்களுக்கான குடும்ப நல அறுவைச் சிகிச்சை முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது. மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பதினொரு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தாய்மார்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் பொருட்டு விருது நகர் முகாமிற்குத் திரள் திரளாக வருகை தந்தனர். ஜூலை 31-ஆம் நாள் முடிய 416 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

சிவகெங்கை அரசு மருத்துவ மனையிலும் ஜூலை 17 முதல் தாய்மார்களுக்கான குடும்ப நல அறுவைச் சிகிச்சை இரண்டாவது முகாம் தொடங்கி மும்முரமாக நடைபெற்று வருகிறது. 27-ஆம் நாள் முடிய இதுவரை 180 தாய்மார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. சிவகெங்கையைச் சுற்றியுள்ள 12 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து தாய்மார்கள் அழைத்து வரப்பட்டனர். அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளும் தாய்மார்களுக்கு வழக்கமான உதவித் தொகை ரூ. 30 தரப்பட்டதோடு, கவர்ச்சியான ஸ்டீல் கைப்பிடியுடன் கூடிய பெரிய டபேட்டா சிலக் குடையும் தரப்பட்டது. குலுக்கல் மூலம் ரொக்கப் பரிசுகளும் வழங்குதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அறுவைச் சிகிச்சைக்குப்பின் தாய்மார்கள் ஆறு நாட்கள் வரை மருத்துவ மனையில் தங்கி ஓய்வு பெற வசதி செய்யப்பட்டது. அவர்களை மருத்துவ மனைக்கு அழைத்து வரவும், திரும்பக் கொண்டு போய் விடவும் இலவச வாகன வசதிகள் எப்போதும் தயாராக இருந்தன. அவர்களுக்கும், அவர்களது கைக் குழந்தைகட்கும், உதவிக்கு உடன் வரும் உறவினருக்கும் ஆறு நாட்கள் வரை அறுசுவை உணவும் வழங்கப்பட்டது.

### மதுரை மாவட்டம்

மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ஜூலைத் திங்களில் நடைபெற்றுள்ள சில வளர்ச்சிப் பணிகள்:

கிராம அளவுத் திட்டத்தின் கீழ் 4732 மண் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. நவீன விதைகள் விவசாயிகளுக்கு அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளன. இவ்வலுவலகத்திலிருந்து முதல் போகத்திற்குக் கருணை, காஞ்சி முதலிய நெற்பயிரைப் பயிரிடும்படி விவசாயிகளுக்கு விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது.

இவ்வூராட்சி ஒன்றியப் பகுதிகளில் சிறுசேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ. 56,645 இத்திங்களில் வசூல் செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்களை முன்னிட்டு 19 இளைஞர் அணியினர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். திருமோகூர், புதுத்தாமரைப்பட்டி, சிட்டம்பட்டி ஆகிய கிராமங்களில் முதியோர் கல்வி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குன்னத்தூர், ஒத்தக்கடை ஆகிய ஊராட்சி மன்றங்களில் திறந்தவெளி அரங்கம் அமைப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வூராட்சி ஒன்றியப் பகுதியில் இத்திங்களில் 14 மகளிர்க்கு காந்தி கிராமத்திலும், 7 மகளிர்க்கு மதுரை அரசினர் மருத்துவத்திலும் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

### செங்கற்பட்டு மாவட்டம்

ஜூலை 31-ஆம் நாள் கும்மிடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த குருவாட்டுச்சேரியில் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் அவர்களால் புதிய பள்ளிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. குருவாட்டுச்சேரி குடியிருப்பில் ரூ. 10,000 மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மின் அழுத்தர் குடிநீர்க்குழாயினை அமைச்சர் இயக்கி வைத்தார். பின்னர் நடைபெற்ற விழாவிற்குத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கா. வேழவேந்தன் அவர்கள் தலைமை தாங்கினார். கிராமங்கள் அனைத்தும் சுயதேவை நிறைவேற்றுவதன் அவசியத்தை வற்புறுத்தியும், தமிழக அரசின் அருஞ் சாதனைகளை விளக்கியும் அமைச்சர் பேசும் போது குறிப்பிட்டார்.



பெருநெருப் பெடுத்துப் பெருமாள் உடன்வரின்
தீவட்டி என்றொரு திருப்பெயர் கிடைக்கும்!
நீகுட்டி நெருப்பை நிதநிதம் சுமந்து
மின்னி மின்னி மின்மினி யானாய்;
எண்ணி எண்ணி என்உளம் மகிழ்கிறேன்!
இலையின் இடுக்கில் ஏற்றிய தீபமே!
அலையும்நீ மின்னலின் ஆசைத் தங்கையா?
சித்தாப்பு மாந்தரின் கிளிமொழிக் குழந்தைகள்
மத்தாப்புக் கொளுத்துவர்; அத்தனைப் பொறியும்
உதிர்ந்தபின் கரிதான்! உயிர்மத் தாப்புநீ!
ஆயுத மில்லா அன்புப் பூச்சிநீ!
வாய்,இதழ் இனிக்க வைத்திடும் தேனைக்
கொடுக்கும் தேனீயோ கொடுக்குத் தேனீ:
தொடாதே நெருப்பை! என்போம்! நீயோ
சுடாத நெருப்புச் சுமையைச் சுமக்கிறாய்!
பகல்வெளிச் சம்தான் பலபேர் வெளிச்சம்!
தகுவெளிச் சம்நீ தருகிறாய் இரவிலே!
திருப்பதி சென்று திரும்பியோன் தலையைக்
குறிப்பது போல்தீக் குச்சியின் கருந்தலை
மொட்டை அதற்குள் முடங்கிடும் நெருப்பு;
பட்டையில் தீட்டினால் குட்டு வெளிச்சம்!
ஆய்விடும்! அதுவோ பதுக்கல்ஆ சாமி!
நீயோ உண்மையின் நேர்மையின் நிலைக்களம்
வெட்ட வெளியெலாம் வெட்டவெ ளிச்சம்நீ!
திட்டோ திடலோ குட்டையோ குளமோ
அவனியில் எங்கும் அடிக்கடி அழகாய்ப்
பவனி வருகிறாய்; கவனி! என் கின்றாய்!
பறக்கும் விளக்கே! பற! பற! மேலே!

# சுற்றுலாப் பெருமை



1972-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, முந்திய ஆண்டினை விட அதிகம் என்று புள்ளி விவரம் கூறுகிறது.

1972-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வருகை புரிந்த சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை குறைந்திருந்ததற்குக் காரணம், இந்திய-பாகிஸ்தான் போரும், வங்க நாட்டுச் சிக்கலும்தான்.

1972-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் வரை இந்தியாவுக்கு 3,10,357 சுற்றுலாப் பயணிகள் வந்திருக்கின்றனர். 1971-ஆம் ஆண்டில் நவம்பர்த் திங்கள் வரை 2,84,736 சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தார்கள். 1973-ஆம் ஆண்டு இறுதியில் சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 3,25,000 ஆக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி ஆண்டான 1973–74-ல் திட்டக் குறியளவான ( Target ) 4 இலட்சத்தை உறுதியாக எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெளிநாடுகளில் செய்யப்படும் விரிவான விளம்பரங்களின் உதவியினாலும், உள்நாட்டில் விரிவுபடுத்தப்பெற்ற சுற்றுலாத் தலங்களாலும், சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்தியாவில் அதிகமாகியுள்ளது.

* * *

1973 ஏப்ரல் திங்கள் முதல், இந்தியாவிலிருந்து இங்கிலாந்து வழியாக அமெரிக்கா செல்லும் ஏர் இந்தியாவின் போயிங் 747 விமானப் போக்குவரத்தினை வாரத்துக்கு எட்டுமுறை ஆக்கிட ஏர் இந்தியா நிறுவனம் முடிவு செய்துள்ளது (தற்போது ஏழு முறை செயல்படுகிறது)

நான்காவது திட்டக் காலத்தில் இந்தியன் ஏர் லைன்ஸ் நிறுவனம் எட்டுப் புதிய நிலையங்களைத் தனது அமைப்பில் இணைத்துள்ளது. இவை: நாசிக், ராய்ப்பூர், ஜோத்பூர், முஜஃபர்பூர், தியாபூர் திருப்பதி, கயா, குவாலியர் முதலியவை யாகும்.

* * *

திருப்பதியில் விமானப் போக்கு வரத்து அண்மையில் துவக்கப்பெற்றது. 7—11—72ல் ஐதராபாத்திலிருந்து திருப்பதிக்குச் செல்லும் விமானப் போக்குவரத்தினை மத்திய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் டாக்டர் கரன்சிங் துவக்கி வைத்தார்.

நாள்தோறும் ஐதராபாத்திலிருந்து பிற்பகல் 3-10 மணிக்கு விமானம் புறப்பட்டு மாலை 4-35 மணிக்குத் திருப்பதியை அடைகிறது. அங்கிருந்து மாலை 5-00 மணிக்குப் புறப்பட்டு 6-25 மணிக்கு ஐதராபாத்தை அடைகிறது.

சென்னையிலிருந்து திருப்பதிக்குச் செல்லும் விமானப் போக்குவரத்தினைத் தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு க. இராசாராம் அவர்கள் நவம்பர் 10-ஆம் நாள் துவக்கி வைத்தார்கள்.

நாள்தோறும் சென்னையிலிருந்து காலை 6 மணிக்கு விமானம் புறப்பட்டு, 6-30 மணிக்குத் திருப்பதி போய்ச் சேர்கிறது. 20 நிமிடங்கள் கழித்துப் புறப்பட்டு, 8-15 மணிக்கு ஐதராபாத்தை அடைகிறது. ஐதராபாத்திலிருந்து 9-30 மணிக்குப்



# உலகில் இரண்டு கிளிகள்





7

டி. என். சுகி சுப்பிரமணியன்

கொத்தித் திரியும் கோழியும், கூவித் திரியும் குருவியும், கத்தும் பசுவினமும் குந்தும் குஞ்சுகளையும், கன்றுகளையும், காக்கத்தான் முயற்சி செய்கின்றன. அறிவுடைய ஒருவனும், அன்புடைய ஒருத்தியும் இந்த மிருக இனத்து அறிவையோ பறவை இனத்து அறிவையோ தான் பெற்றிருக்கிறார்கள்.

குழந்தைப் பாசத்தைத் துறவிகள் கூட அடக்க முடியாது என்பது ஞானிகளும் நல்லவர்களும் கண்ட முடிவு.

மணிவாசகன் கற்ற கலை ஞானங்களையும், பெற்ற பட்டங்களையும் செய்யும் முயற்சிகளையும் வித்தாக வடித்தால்? அவை :

தன்னைத் தான் நம்பவேண்டும்.

தன்னைத் தான் அறிதல் வேண்டும்.

தன்னைத் தான் காக்க வேண்டும்.

தன்னையே உயர்த்தல் வேண்டும்.

தன்னை மையப் புள்ளியாக வைத்துப் பாண்டித் துரையின் பணத்தால் படித்த காலம் முதல் செண்பகா 'மில்'லில் சட்ட ஆலோசகன் பதவியடைந்தது வரை அவன் செய்யும் காரியங்கள் யாவும் தன்னை உயர்த்தும் காரியங்களாகவே இருந்து வந்தன.

டாக்டர் நர்மதாவுக்கு ஆண் குழந்தை! செவிக்கினிய தேன் சொட்டும் சேதி!

மனத்தை மலர்விக்கும் மகிழ் ஊட்டும் சேதி. உடனே, தன் குழந்தையின் வருங்கால வாழ்வுக்குத் திட்டம் போடும் முயற்சியில் மணிவாசகன் மனம் இறங்கிவிட்டது!

மருந்தகத்தின் டெலிபோனை அவன் சுழற்றினான்!

"ஹலோ. . நான்தான் மணிவாசகன் வழக்குரைஞர் பேசுகிறேன்"

"நான் தான் கோவை வடிவேலு! என்ன உன் குரலில் மகிழ்ச்சி....!"

"உங்கள் தயவு வேண்டும்"

"என் தயவு உனக்கா? தயவுக்குத் தலை தாழ்த்திப் பழக்கமே கிடையாதே!" அவர் அட்டகாசமாகச் சிரிக்கிறார்.

"இல்லை, சற்று முன் பிறந்த என் மகனுக்கு உங்கள் தயவு வேண்டும்!"

"மிக்க மகிழ்ச்சி. பேரனுக்கு அவன் தாத்தா பாண்டித்துரை இருந்தால் எத்தனைய ஆசியும் அன்பும் தருவாரோ அதனை நான் தருகிறேன்!"

"நீங்கள் தருவீர்கள் என்று எனக்குத் தெரியும். நானும் நர்மதாவும் உதகையில் முதன் முதலாகச் சந்தித்தோமே!"

"நான் தான் கண் குளிரக் கண்டேன்; முதற்கண் கண்டேன்"

"அதனால் தான் காது குளிரும் சேதியை உங்களுக்கு முதற்கண் சொல்லுகிறேன்!"

"மிக்க மகிழ்ச்சி!"

கோவை வடிவேலு போனை வைத்துவிட்டார். தமக்குள்ளாக வளர்ந்து வெடிக்க இருக்கும் வெறுப்பை வெளிக் காட்டாமல் போனை வைத்து விட்டார்! தமது மகனுக்குப் பெண் கேட்டு ராதையை மருமகளாக அடைய நினைத்தவருக்கு ராதையும் மறுத்துவிட்டாள். ராதைக்குப் புத்தி சொல்லும் ஆர்வமும் ஆற்றலும் இல்லாத மணிவாசகனுக்குப் பிறந்த குழவி ஆணாகப் பிறந்தால் என்ன, அம்மிக் குழவியாக இருந்தால் அவருக்கு என்ன?

அவருக்குள்ளாக, கோபம் குளவியின் கொடுக்குப் போலக் கூர்மையாக இருந்தது. உதட்டளவில் பேசிவிட்டு உள்ளத்துக்குள் பொறுமையைப் பொங்கவிட்டுக் கொண்டிருந்தார்.

மீண்டும் போன் மணி ஒலிக்கிறது. நிதானமாக இருந்து நினைத்ததைச் சாதிக்க அவர் நினைத்தார்.



"ஹலோ" என்றான் மணிவாசகன்.

"ஆமாம் இடையில் நின்று விட்டது. தாயும் சேயும் நலந்தானே!"

"இருவரும் நலம். குழந்தை பிறந்த சேதியைச் சொல்வதற்கு முக்கிய காரணம் இருக்கிறது."

"என்ன?"

"உதகையில் நானும் நர்மதாவும் குதிரைச் சவாரி போகும்போது எங்களைப் பார்த்தீர்கள்"

"பார்த்தேன்"

"என் மகன் பாபுவுக்கு உதகையில் நடக்கும் பள்ளியிலே நீங்கள் இடம் பிடித்துத் தரவேண்டும்"

கோவை வடிவேலுவின் அலைச் சிரிப்பு டெலிபோன் வழியாக மணிவாசகன் காதை வந்து நிரப்புகிறது.

"என்ன சிரிக்கிறீர்கள்?"

"பிள்ளை பிறந்து ஒரு மணி நேரம் ஆகவில்லை. அதற்குள் நீ உதகைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதற்கு சிபாரிசு செய்ய என்னைத் தேடுகிறாய்! இடம் பிடிக்கிறாய்"

**மாவைக் குறிக்கும் பல சொற்கள்**

தமிழ் இலக்கியங்களில் இடி, நுவணை, பிண்டி, அருப்பம், பிட்டம் என்னும் பல்வேறு சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தனை சொற்களுக்கும் மாவு என்பதுதான் பொருள்.

நீங்கள் மறுக்கக்கூடாது! நான் யாரிடமும் கெஞ்சமாட்டேன்; வணங்கமாட்டேன். உதகையில் - நர்மதாவைச் சந்தித்தபோது என் உள்ளத்தில் எழுந்த ஓர் ஆசை! எனக்குப் பிறந்தவன் பையனாக இருந்தால் அவன் உதகைப் பள்ளியில் படிக்க வேண்டும். அதற்கான உதவியை உங்களிடம் கேட்க வேண்டும். என்ன சொல்லுகிறீர்கள்?''

''உன்னை அவசரக்காரன் என்பதா? இல்லை பேரறிவாளன் என்பதா? உங்கள் வீட்டு ராதையை எங்கள் வீட்டுக்கு அனுப்பவில்லை என்பதற்காக, உதகைப் பள்ளியில் இன்னும் மூன்றாண்டு நாலாண்டுக்கு அப்பால் உனக்கு இடம் வாங்கித் தருகிறேன்!''

''இது உறுதிதானே?''

''உறுதி!''

''மிக்க நன்றி!''

மணிவாசகன், மாபெரும் வெற்றிச் செயலைச் செய்துவிட்டவன் போன்று ஆனந்தம் கொப்புளிக்க உட்கார்ந்திருக்கிறான். அவன் அருகாக வந்து நின்ற ராதை அவன் பேசிய டெலிபோன் பேச்சைக் கேட்டுச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

''அத்தான்''

''குழந்தை எப்படி இருக்கிறது?''

''அம்மாவைப் போலச் சிகப்பு. அப்பாவைப் போல் காரியவாதி! அழகும் அறிவும் சங்கமமாகிய சிங்கக் குட்டி போல் இருக்கிறான்.''

''ராதை!''

''என் பிள்ளை இருக்கிறானே! அவன் நான் படிக்கக் கஷ்டப்பட்டது போல - பிறர் தயவிலே பிறர் கையை எதிர்பார்த்துப் படிக்கக் கூடாது! என் உழைப்பையும் உதிரத்தையும் கொட்டிக் குவித்து ஓர் இளவரசனைப் போன்று படிக்க வைப்பேன்!''

''அவ்வாறு செய்ய உங்களுக்கு அந்தஸ்து இருக்கிறது. அவன் அம்மாவுக்குத் தகுதி இருக்கிறது.''

''பாப்பு எப்படி இருக்கிறான்?''

''ஆண்கள் அவசரப்படக் கூடாத இடங்களில் பிரசவ ஆஸ்பத்திரியும் ஒன்று!''

''இன்னும் அரை மணியில் உங்கள் மனைவியைக் கட்டிலிலும் உங்கள் மகனைத் தொட்டிலிலும் பார்க்கலாம்!''

பிஞ்சுக் கரத்தையும், மிரள விழிக்கும் குழந்தைக் கண்களையும் அதன் பட்டுடலையும் தொட்டுப் பார்க்க மணிவாசகன் கனவு கண்டு நிற்கிறான். மற்றைய உலகம் யாவும் அவனுக்கு மறந்துவிட்டன.

''அத்தான், அடையாற்றுப் பங்களாவிற்கு - செண்பகத்திற்கும் உங்கள் நண்பர் ரோமியோவிற்கும் சேதி சொன்னீர்களா?''

''இல்லை. அவசியமும் இல்லை''

''நீங்கள் சொன்னால் உங்கள் நண்பரும் அவர் மனைவியும் மகிழ்ச்சியடைவார்கள்!''

அவன் மனம் வானத்திற்கு மேலே எங்கோ வட்டமடித்து மகிழ்ச்சிப் புறாவைப் போலச் சுழன்று கொண்டிருக்கிறது.

நண்பனை நினைக்கிற நேரமா!

நீ, சேதியைச் சொன்னால் மகிழ்ச்சியடைய மாட்டார்களா?''

''உங்களுக்காக— தனக்குக் கிடைக்கவிருந்த சட்ட ஆலோசகர் பதவியை வாங்கித் தந்த நண்பருக்கு நீங்கள் சொன்னால்தான் மரியாதை! சொல்ல வேண்டுவது கடமையும் கூட''

''எனக்கு எது மரியாதை, எது அவமரியாதை என்பது தெரியும். நான் சற்றே மனசு வைத்து வாதத்தைத் திருப்பி இருந்தால், ரோமியோவின் மாமனார்....''

''ஆமாம். உங்கள் முதலாளி!''

''செண்பகத்தின் தந்தை''

''ஆமாம். உங்கள் முதலாளி''

''திருவாளர் முத்தையா கம்பி எண்ணும் நிலைமையை உண்டாக்கி இருப்பேன். அவ்வாறு அவரைக் காப்பாற்றியதற்கு ஒரு நன்றி கூடச் சொல்லத் தெரியாமல், எனக்கு முட்டாள் பட்டம் கட்டியவன் ரோமியோ! அவனுக்குத் துணை நின்றவள் செண்பகம். இவர்களுக்குச் சேதி சொல்லும் தகுதியும் துன்மையும் என்னிடம் எதிர்பாராதே!''

சுய காரியப் புலிகள் தங்கள் நலனுக்காகப் பிறரைத் தாழ்த்திப் பேசுவார்கள். மணிவாசகன் இவ்வாறு பேசியது வியப்பில்லை!

''மிக்க நன்றி''

பரபரப்பாக உள்ளே ஓடிப் போனாள் ராதை. டாக்டர் நர்மதா, தாய் நர்மதாவாகத் துவண்டு கிடக்கும் அனிச்சப் பூவைப் போல இருப்பதைக் கண்டாள். குழந்தைக்குத் தாயான வெட்கம்; அதே சமயம் ஒருவகைப் பெருமிதம், குழந்தை பெற்ற பெண்கள் முகத்தில் ஜொலிக்குமே, அதனை ரசித்துக் கொண்டிருந்தாள் ராதை.

பட்டுத் துகிலோ, பவள மல்லிச் செண்டோ என விளங்கிய சின்னஞ்சிறு மதலை, தன் விரல்களை வாயில் போட முயற்சி செய்து கொண்டிருந்தது. பிறந்து அரைமணி நேரத்திற்குள் அதற்குப் பசி போலும்!

முயற்சியே செய்யாமல் எந்த உயிருக்குள்ளும் இயங்கிக் கொண்டிருப்பது பசி ஒன்றுதானே!

மருந்தகத்து நர்சு தங்கம் ஓடியாடித் தூய ஆடைகளை எடுத்துக் கால் முதல் கழுத்து வரை போர்த்தினாள்.

சாறு பிழியப்பட்டுத் துவண்டு போன வாழைத்தண்டு போன்று படுத்திருக்கும் நர்மதாவைக் காண, மணிவாசகன் உள்ளே வந்தான். மனைவி முகத்தின்மீது மனக்கண் லயித்தது.

தாய் நர்மதாவின் கன்னங்களில் குழைவு. கண் நிறையக் கள்ளச் சிரிப்பு. மணிவாசகன் கண்கள் அவள் கண்களுடன் சந்தித்தன. குழந்தையைப் பார்த்தான். அதைத் தொட்டுத் தூக்குவதற்குப் பயம்....

ராதை ''தூக்கி உங்கள் கையில் தரட்டுமா?'' எனக் கேட்கிறாள்.

வாங்க வேண்டுமென்ற ஆசை உந்துகிறது. நழுவி விழுந்துவிடுமோ என்ற பயம் எச்சரிக்கை செய்கிறது.



கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்து ஆயிரம் கனவுக் கதைகளைக் கண்களுக்குள் தேக்கிக் கொண்டார்கள். அது காமக் கனவு இல்லை. சேமக் கனவு! குழந்தை நலம் பற்றிய குடும்பக் கனவு.

''நர்மதா! இவனுக்கு உதகைப் பள்ளியில் இடம் பிடிக்கும்படியாக வடிவேலு மாமாவுக்கு 'டிரங்கால்' பேசினேன்.''

சிரிக்க முயன்றாள் பனிமலர் போலப் படுத்திருந்த நர்மதா; முடியவில்லை.

''பிறந்த பிள்ளைக்குப் படிக்க அக்கறை காட்டுகிறீர்கள். அது தந்தையின் கடமை''

''அதுவும் உயர்தரமான பள்ளியில் என் மகன் படிக்க வேண்டும். நான் படித்த தரித்திரப் படிப்போ, நான் கற்ற மட்டக் கல்வியோ கற்கக் கூடாது. பிறர் கையேந்தி நான் படித்தது போல இவன் படிக்கக் கூடாது. அவன் பணக்கஷ்டம் தெரியாதபடி, கலையும், கல்வியும் இணைந்த பள்ளியில் கர்வத்துடன் படிக்க வேண்டும்,,

''படிக்கட்டும். ராதை சட்டக் கல்லூரிக்குப் போனாளா? படித்தாளா? அதை நீங்கள் கவனிக்கவும் இல்லை! அக்கறை காட்டவும் இல்லை! விசாரிக்கவும் இல்லையாம்!''

''நல்ல சமயத்தில் கசப்பான நினைவுகளைப் பேசுவதே உனக்குப் பழக்கம். அவள் படித்தாலும் சரி, பாழாகப் போனாலும் சரி, எனக்குக் கவலை இல்லை!''

பாழாகப் போவதாமே!

நெஞ்சில் பொறுமைத் தீப் பிடித்தால், நாக்கில் பொறி தெறிக்கும்!

தியாகங்களைச் செய்தவள் பாழாகப் போவதுதான் மரபா?

நன்மையை, நல்லதைக் கணத்துக்குக் கணம் துடிப்பாகச் செய்தவர்கள் பாழாகப் போக வேண்டியதுதான் நியாயமா?

நல்லவர் அழிவதும் அல்லவர் வாழ்வதும் நியாயமா?

பிள்ளை பெற்ற சோர்வில் சோர்ந்து கிடந்த நர்மதா உள்ளத்துள்ளே, மகிழ்ச்சி மலர்வதற்குப் பதிலாகத் துக்கம் சுட்டுக் கொண்டிருந்தது. ரத்தம் வற்றி வெளிறிய முகத்தில் கோபம் துடிக்க ஆரம்பித்தது.

''உன் கவலை எப்போதும் தனி. என் கவலை எப்போதும் தனி.''

''நமது கவலையாக ராதையின் படிப்பை நீங்கள் இன்று முதல் எண்ண மாட்டீர்களா?''

''என் குடும்பக் கவலை எனக்குத் தலைக்கு மேலாக இருக்கிறது!''

''வக்கீல் சார் உங்களை போனில் கூப்பிடுகிறார்கள்'' என்று நர்சு தங்கம் வந்து சொன்னாள். டெலிபோன் பக்கம் போவதற்குள் தொட்டில் அருகாகப் போய்க் கொண்டிருந்தான் மணிவாசகன்.

குனிந்து 'குழந்தையின் பொற்கரங்களை முத்தமிட்டு' அறையைவிட்டு வெளியே போனான். சுயநலத்தின் நெடிய உருவம் வெளியே போவதாக டாக்டர் நர்மதாவின் கண்ணில்பட்டது.

ஒவ்வொரு விநாடியும் தன்னைப் பேணும் ராதையின் செய்கையில் தாய்மை அன்பையும், பெண்மையின் பேரெழிலையும் கண்ட நர்மதாவின் உள்ளம்—

ஒவ்வொரு விநாடியும் தன்னையோ, தன் செய்கையையோ மதிக்காத ஆண்மைத் திமிரையும், அடங்காத தன்னல உருவத்தையும் கணவன் செயலில் கண்ட நர்மதாவின் உள்ளம்—

கலங்கித் தவித்தது.

ராதை எதிர்பார்க்காத ஒரு சொல் நர்மதாவின் சோர்வுள்ள உடம்பிலிருந்து ஒலித்தது.

''ராதை! உன்னை அலட்சியப்படுத்தினார். என்னை அவர் லட்சியமாக்கினார். என்னை இனி அலட்சியப்படுத்தி என் குழந்தையை லட்சியப்படுத்தினாலும் ஆச்சர்யப்படுவதற்கு இல்லை!''

''நிறுத்தக்கா! யாரோ பெற்றெடுத்த அனாதைக் குழந்தை உங்களைப் பாலமாக இணைத்து வைத்தது. நீங்கள் இருவரும் பெற்ற இக்குழந்தை உங்கள் இருவரையும் கோபுரமாய் வளர்த்து உயர்த்திக் காட்டும்!''

**1971-72-ஆம் ஆண்டில் வெளிநாட்டுக்குப் பழ ஏற்றுமதியின் மூலமாக 634 மில்லியன் ரூபாய்க்கு மேற்பட்ட அந்நியச் செலாவணியை இந்தியா தேடிக் கொண்டிருக்கிறது.**

''கேள்விக் குறியாக வளர்த்துக் காட்டுமா? இல்....லை'' என்று நர்மதாவிற்குக் கேட்கத் தோன்றுகிறது. கேட்கவில்லை.

நர்சு தங்கம் அங்கே வந்தவள், ''டாக்டரம்மா! முன்பு இங்கே மோட்டார் விபத்துக்கு ஆளாகிய கேசாக அட்மிட் ஆகி இருந்தாளே அஞ்சலை'' என்று ஆரம்பித்தாள்.

''ஆமாம் கூலிக்கு மில்லில் வேலை வாங்கிக் கொடுத்தாளே ராதை....'' என்றாள் நர்மதா.

''அவள் புருஷன் சண்முகத்திற்கு நாலு வருஷம் சிறைவாசம் கிடைத்திருக்கிறதாம். இன்றுதான் தீர்ப்பு ஆச்சுதாம். இப்போதுதான் டெலிபோனில் சேதி சொன்னார்கள்! வக்கீல் கேட்டுக் கொண்டிருந்தார்''

டாக்டர் நர்மதாவின் கண்கள் குளமாயின. அது கணவன் திறமையை நினைத்த பெருமையா? சட்டத்தின் இரும்புப் பிடியை எண்ணிய ஏக்கமா?

குழந்தை 'வீல்' என்று கத்தியது!

தண்டனை பெற்ற காரோட்டியை மறந்தாள். கணவனின் கடின உள்ளத்தையும் மறந்தாள். கதறியழும் குழந்தையின் பவளவாய், அவள் நெஞ்சுக்கும் நினைவுக்கும் குளிர்ச்சியைத் தந்தது!

## 8. புயலன்ன பூசல்

பத்தாம் நாள் தாயும் குழந்தையுமாக ராஜா அண்ணாமலைபுரம் வீட்டிற்கு வந்து சேர்ந்தார்கள். குழந்தை பெற்றவர்களுக்குக்கிடைக்கும் பேறுகால லீவு, டாக்டர் நர்மதாவுக்கு இருந்தது.

வக்கீல் மணிவாசகன் முன்னைவிடச் சுறுசுறுப்பாகத்




புறப்பட்டு, 10-55-க்குத் திருப்பதியை அடைகிறது. அங்கிருந்து 20 நிமிடம் கழித்து 11-15-க்குப் புறப்பட்டு, 11-45 மணிக்குச் சென்னை வந்து சேர்கிறது.

பெங்களூரிலிருந்து திருப்பதிக்குச் செல்லும் விமானப் போக்குவரத்து நவம்பர் 12 முதல் தொடங்கியது.

பெங்களூரிலிருந்து காலை 7-15 மணிக்குப் புறப்படும் விமானம் 8 மணிக்குத் திருப்பதியை அடைகிறது. திருப்பதியிலிருந்து 8-20 மணிக்குப் புறப்பட்டு 9-05 மணிக்குப் பெங்களூர் போய்ச் சேர்கிறது.

திருப்பதி விமானப் போக்குவரத்து ஏற்பட்டது எண்ணற்ற சுற்றுலாப் பயணிகளுக்கு மிகுந்த வசதியை உருவாக்கியிருக்கிறது. வெளிநாட்டிலிருந்து நமது தென் பகுதிகளுக்கு வருகை புரிகின்ற பல நூற்றுக் கணக்கானவர்கள் திருப்பதிக்கு விமானப் போக்குவரத்தில்லாததால் அல்லல்பட்டு திருப்பதிக்குப் போகாமல் திரும்பிப் போயிருக்கிறார்கள். அத்தகையவர்களின் மனக்கவலை தற்போது ஓரளவு நீங்கி விட்டது என்றே சொல்லலாம். அதிலும் குறிப்பாகச் சென்னையிலிருந்து திருப்பதி செல்ல எண்ணுகின்றவர்கள் அரைமணி நேரத்தில் ரூபாய் 34 செலவில் திருப்பதியை அடைய முடிவது மிகப் பெரும் வசதி நிறைந்த நிகழ்ச்சி.

வெளிநாட்டுச் சுற்றுலாக்காரர்களைக் கவரவேண்டும் என்ற கருத்துடன் உருவாக்கப்பட்டுள்ள திருப்பதி விமான நிலையம் ரூ 56 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது 45 பேர் பயணம் செய்யும் ஆவ்ரோ ரக விமானங்கள்தான் திருப்பதிக்கு வருகின்றன. விரைவில் 115 பயணிகள் பயணம் செய்யும் போயிங் ரக விமானங்கள் இறங்குவதற்குரிய வசதிகள் செய்யப்படும்.



## சான்றோர் மறைந்தார்

அனைத்திந்திய முஸ்லிம் லீக் தலைவர் சங்கைக்குரிய சையத் அப்துர் ரகுமான் பஃபக்கி தங்கல் மறைவுச் செய்தி, அனைத்திந்திய இஸ்லாமிய சமுதாயத்தினரை மட்டுமல்ல-தமிழகத்தையும் ஓர் உலுக்கு உலுக்கி விட்டது.

பஃபக்கி தங்கல், அண்மையில் புனித ஹஜ் யாத்திரை சென்று, மெக்காவில் பக்ரீத் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடிவிட்டு, சவூதி அரேபியாவின் தலைநகரான ரியாத்துக்கு வந்தார். அங்கு 18-1-73 இரவு திடீரென நோய்வாய்ப்பட்டு, அந்நோயினின்றும் மீளாமலேயே மறுநாட் காலை 2 மணி அளவில் இயற்கையெய்தினார்.

பஃபக்கி தங்கல், கேரளமாநிலத்தைச் சேர்ந்தவராயினும், உன்னதமான தொண்டினால் அவர் முஸ்லிம் சமுதாயம் முழுவதுக்குமே சொந்தமாகி விட்டார். முஸ்லிம் சமுதாயத்திற்கு அவர் ஆற்றியுள்ள அரும்பணிகள் ஓங்கிய இமயத்தின் உயர்ந்த மணிமுடி போல என்றும் நின்று நிலவும்.

## தமிழக முதல்வரின் இரங்கற் செய்தி

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பஃபக்கி தங்கல் மறைவுச் செய்தியறிந்து கொடுத்துள்ள இரங்கற் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழக மக்களுக்குக்-குறிப்பாக முஸ்லிம் சமூகத்தார்க்கு --அவரது மறைவு பேரிழப்பாகும்; அவர் மிகுந்த பண்பாடு உள்ளவர்; அடக்கம் மிக்கவர்; நிலை குலையா நெஞ்சினர்."

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, அண்ணாசாலை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-2


கண்கவர் வண்ணங்களில், எண்ணில் அடங்கா
டிசைன்களில், சகாய விலையில், காஞ்சீபுரம்
பட்டுப்புடவைகளை தேர்ந்தெடுக்க சிறந்த இடம்
கோ-ஆப்டெக்ஸ்
குறளகம், தி. நகர், லஸ், மற்றும்
காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி

"எனக்கு அவர் ஐம்பதினுயிரம் ரூபாய் வழக்காடல் தொகை தந்தது உன் நேர்மை நெஞ்சை உறுத்துகிறது!.."

"எப்படி வேண்டுமானுலும் வைத்துக் கொள்ளுங்கள்! நான் தனிப்பட நர்சிங் ஹோம் நடத்துவதாக இருக்கிறேன்"

"அதற்கு, என் பணம் உனக்குத் தேவை!"

"உங்கள் பணம் பணமாக இருக்கட்டும். உங்கள் அனுமதியின் பேரில் நான் மில் ஆஸ்பத்திரியிலிருந்து விலகப் போகிறேன். தனி நர்சிங் ஹோம் வைக்கப் போகிறேன்'

"பணம்? நீ வைத்திருக்கிருயா?"

"பணம் எனக்கு இருக்கிறது!"

"எவ்வளவு பணம்?"

"பேரனுக்கு அவன் தாத்தா சிங்கப்பூரிலிருந்து பணம் அனுப்பியிருக்கிருர்!"

"மில்கார தாத்தா ஐம்பதிஞயிரம் பரிசு கொடுத்தார்!"

"அது பரிசு அல்ல. உங்கள் சட்ட ஞானத்திற்கு லஞ்சம்! சண்முகம் குடும்பத்தார் தொட மறுத்த நஞ்சுப் பணம். என் அப்பா சிங்கப்பூரிலிருந்து ஓர் இலட்சம் பணம் எனக்காகவும் என் பிள்ளைக்காகவும் அனுப்பியிருக்கிருர்!"

"அனுப்பட்டும்! எனக்கு ஒரு தம்பிடி தேவையில்லை. நீ டாக்டராக நர்சிங் ஹோம் நடத்தினுலும் சரி, அல்லது மில்லில் வேலை பார்த்தாலும் சரி....எனக்குக் கவலை இல்லை. உன் தொழிலில் நான் உரிமையோ, ஆதிக்கமோ செய்ய மாட்டேன்"

"மிக்க நன்றி"

டாக்டர் நர்மதா தன் பதவியை ராஜிநாமா செய்யும் கடிதத்தை எழுதிக் கொண்டிருந்தாள்.

விளை நிலத்தை அவமதித்து அதன்மீது நின்று கதிரைப் பெருமையுடன் அறுக்கிறவன் போன்று குழந்தையைப் பெரிதாக எண்ணி, மனைவியை அலட்சியம் செய்யும் இறுமாப்பை ராதை உணர்ந்தாள்.

அதை மணிவாசகனுக்கு உணர்த்தவோ, இவ்வாறு மனக்கிலேசம் கொள்ளாதே என்று எச்சரிக்கை செய்யவோ, தெம்பும் திறனுமற்ற பொம்மையாக நிற்கிருள் ராதை.

இருதலைக் கொள்ளிக்கு ஊடாக அகப்பட்டுக் கொண்ட சிற்றெறும்பு போலத் தவித்து நின்ருள் ராதை!

இரு எரிமலைக்கு ஊடாக நிற்கும் துரும்பு வாழ்க்கை தான் அவள் தலையெழுத்தா?

(வளரும்)


ஊரடங்கல்

பண்டைத் தமிழகத்தில் 'ஊரடங்கல்' என்னும் முறையில், மக்கள் தொகை கணக்கிடப்பட்டது. அகஸ்தஸ் சீசர் குடிக்கணக்கு எடுப்பதற்கு வாய்ப்பாக அனைவரும் தத்தம் சொந்த ஊருக்குச் சென்று குலத்தின் தலைமுறை கூறி வரிப்பொருளும் குடிக்கணக்கும் கொடுக்குமாறு கட்டளையிட்ட செய்தியை விவிலியமும், தேம்பாவணியும் விளக்குகின்றன. ஐரோப்பியர் ஆட்சியில் இந்தியாவில் முதன் முதலாகக் குடிக்கணக்கு எடுக்கப்பட்டது, 1872-ஆம் ஆண்டுதான். இன்றைய இந்தியாவில் 1971-ஆம் ஆண்டு திரட்டப்பட்ட குடிக்கணக்கீடு 11-வது குடிக்கணக்காகும்.

'தேசபக்தன்'

சுதந்திரப் போராட்டக் காலம்; 1931-ஆம் ஆண்டில் சென்னையில் 27 பத்திரிகைள் வெளிவந்து கொண்டிருந்தன. அப்போது, விடுதலை வேட்கை மீதூர்ந்த ஒருவர், ஒரு தம்பிடி விலையில் 'தேசபக்தன்' என்னும் பெயரில் ஒரு பத்திரிகை ஆரம்பித்தார். 'தேசபக்தன்' முதலில் வாரப் பத்திரிகையாகவும் பின்னர் வாரம் மும்முறைப் பத்திரிகையாகவும் தொடர்ந்து வெளிவந்து, விடுதலைப் போரில் அரும்பணி புரிந்தது. இந்தச் சாதனையை நிகழ்த்திக் காட்டிய சிதம்பரம் திரு என். தண்டபாணிபிள்ளை 81 வயதுடைய முதியவராக இன்று நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிருர்.





# ஓர் ஆய்வு
# தமிழகத்தில் மின் வளர்ச்சி

வேளாண்மை வளர்ச்சிக்கும் தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் இன்றியமையாத ஒன்ருனபடியால், ஐந்தாண்டுத் திட்டங்களில் மின் உற்பத்திக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. பல நீர் மின்சார நிலையங்களும், அனல் மின் நிலையங்களும் தமிழகத்தில் தோற்றுவிக்கப்பட்டன. ஆனல், மின்சாரத்தின் தேவை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. 1973-74-ல் தமிழகத்தின் மின்சாரத்தின் தேவையானது 1,675 மெகாவாட்டாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நான்காவது திட்டக் கால முடிவில் இந்தப் பற்ருக் குறை இன்னும் அதிகமாகிவிடும். ஆகவே நான்காவது திட்ட இறுதியில் எதிர்பார்க்கப்படுகின்ற அதிகப்படியான பற்ருக்குறையைச் சரிக்கட்ட, நான்காவது திட்டத்திலேயே தமிழ் நாட்டில் மேலும் கூடுதலான மின்சக்தித் திட்டங்களை உருவாக்குதல் இன்றியமையாததாகும். மாநிலத்தில் நீர் மின்சாரத்தைத் தோற்றுவிக்கின்ற கூறுகள் குறைவாக உள்ளதால், எதிர்பார்க்கப்படுகின்ற பற்ருக்குறையைச் சமாளிக்க அனல் மின் நிலையங்களையோ அணு மின் நிலையங்களையோ உருவாக்குவது அவசியமாகும். அப்படியே செய்தாலும், உற்பத்தி செய்கின்ற முழுமையான செலவினத்தைக் குறைப்பதற்காகவும், அன்ருட உச்ச மின் சுமையைச் சமாளிப்பதற்கும் நீர் மின்சார நிலையங்களைப் பெருக்குவது விரும்பத்தக்கதாகும். இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, வருகின்ற திட்டக் காலங்களில் செயல்படுத்துவதற்காக வேண்டி கீழ்க்கண்ட கூடுதல் துவக்க திட்டப் பணிகள் துவக்கப்பட இருக்கின்றன. இந்தத் திட்டங்களின் கீழ், கிடைக்கப்பெறும் மொத்தம் நிறுவனத்திறன் 1,500 மெகாவாட்டுகளாகும். இந்தத் திட்டங்களில் சிலவற்றிற்கு அனுமதி முன்பே கிடைத்துவிட்டது. சிலவற்றில் பணிகள் நடைபெற்று வருகின்றன. சிலவற்றிற்கு இன்னும் அனுமதி கிடைக்கவில்லை. எல்லாத் திட்டங்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இவ்வாண்டு (1972-73) வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## நடந்தேறிவரும் பணிகள்

1972-73, 1973-74, ஆண்டுகளில் நடந்தேறி வந்துள்ள நடந்தேறிவரும் பணிகளின் சுருக்கம் வருமாறு :—

(1) குந்தா நீர் மின் உற்பத்தித் திட்டம் III-வது நிலை.

(2) பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின் திட்டம்.

(3) கோதையாறு நீர் மின் திட்டம்.

(4) சென்னை மின் நிலைய விரிவுப்பணி IV-வது நிலை.

(5) எண்ணூர் அனல் மின் திட்டம்.

(6) எண்ணூர் அனல் மின் திட்ட நீட்டிப்புப் பணி.

(7) பாண்டியாறு, புன்னம்புழா நீர் மின் திட்டம்.

(8) குந்தா நீர் மின் உற்பத்தித் திட்டம் IV-வது நிலை.

## 1. குந்தா நீர் மின் உற்பத்தித் திட்டம் III-வது நிலை

இத்திட்டத்தின் கீழ் மூன்று புதிய மின் உற்பத்தி நிலையங்களும் இப்பொழுதுள்ள மின் நிலையங்களில் கூடுதலாக 2 யூனிட்டுகளும் அமைக்கப்படும். இவற்றின் மொத்த நிறுவனத் திறன் 245 மெகாவாட்டாக இருக்கும். இதற்காகும் மதிப்பீட்டுச் செலவு சுமார் 3,689·44 இலட்சங்களாகும்.

## 2. பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின் திட்டம்

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஆனைமலையில் நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம் ஆகிய ஆறுகளின் நீரைப் பயன்படுத்தி திட்டமிட்டுள்ள பாசன நீர் மின்சக்தி திட்டத்தின் ஒரு பகுதியே பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின் திட்டமாகும். இத்திட்டத்தில் நான்கு மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன.

(1) சர்க்கார்பதி மின் உற்பத்தி நிலையம்—30 மெகாவாட்டுகள். இம்மின் நிலையம் 1965-66ல் செயல்படத் தொடங்கியது.

(2) ஆழியாறு மின் உற்பத்தி நிலையம்—60 மெகாவாட்டுகள். இந்த மின் நிலையம் 1970 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது.

(3) சோலையாறு மின் உற்பத்தி நிலையம் I—70 மெகாவாட்டுகள்—இம்மின் நிலையம் 1971 ஏப்ரலில் செயல்படத் தொடங்கியது.

(4) சோலையாறு மின் உற்பத்தி நிலையம் II—25 மெகாவாட்டுகள். இம் மின் நிலையம் 1971 மார்ச்சில் செயல்படத் தொடங்கியது.

இந்த நான்கு மின் உற்பத்தி நிலையங்களில் மொத்த நிறுவனத் திறன் 185 மெகாவாட்டுகளாகும். இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 2,636·75 இலட்சங்களாகும்.

## 3. கோதையாறு நீர் மின் திட்டம்

தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு நீரைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்ய இத்திட்டம் வழி வகை செய்கிறது. இந்த மலைப் பகுதி

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட வழக்குகளில் பங்கு பெற்றுத் திறமையைக் கூர்மையாக்கிக் கொண்டிருந்தான். காலத்தின் விநாடிகளைக் 'கரன்சி'யாக்கிக் கொண்டிருந்தான்.

அன்றைக்குச் சிங்கப்பூரி லிருந்து பதிவுக் கடிதம் ஒன்று வந்திருந்தது. தமது பேர னுக்கு ஓர் இலட்ச ரூபாய் அன்பளிப்பு அனுப்பியிருந் தார். மகள் பெயருக்கு டிராப்டு இருந்தது.

டாக்டர் நர்மதாவின் உள் ளம் ஒரு வார காலமாக அலை மோதிக் கொண்டிருந்தது. இதற்குரிய காரணங்களில் செண்பகா மில்லின் உரிமை யாளர் முத்தையா கொடுத்த பரிசுத் தொகை ஒரு காரணம். அதனைத் தன் கணவன் ஏற்றுக் கொண்டது மற்று மொரு காரணம். அறிவைக் கொண்டு வாழும் கணவனோடு, உணர்ச்சி யைக் கொண்டு வாழும் மனைவி யால் இணங்கிப் போக முடியாது.

அதிலும் அந்தத் தொகையை மில் முதலாளி இனமாகக் கொடுத்திருக்க லாம், அல்லது வக்கீலுக்குரிய வழக்காடல் தொகையாகக் கொடுத்திருக்கலாம். அவ் வாறு அவர் கொடுக்கவில்லை.

"வக்கீல் மணிவாசகன் உன் வாதத்திறமைக்கு நான் ஏற் கெனவே உனக்குச் சம்பளம் மாதாமாதம் தருகிறேன்"

"ஆமாம் தருகிறீர்கள்"

"எந்தப் பணத்தைக் காரோட்டி சண்முகம் அவ மதித்தானோ, எந்தப் பணத்தை ஆசுபத்திரி அறை யில் அஞ்சலை அவமதித்தாளோ, அதே பணத்தை உனக்குப் பரிசு தருவதற்காக அப்படியே கொண்டு வந்திருக்கிறேன்."

"நீங்கள் கொடுக்கப் பிறந் தவர்கள். கொடையை மறுப்பது மதியீனம்"

இந்த வார்த்தை நர்மதா வின் பச்சை உடம்பில் துப்பாக்கி ரவையாகப் பாய்ந்து கொண்டிருந்ததை அறியவில்லை!

"உன் குழந்தைக்குப் பேரிடும் நாளில் நான் இருக்க மாட்டேன். டில்லிக்குப் போகும் முக்கிய வேலை இருக் கிறது"



"குழந்தையின் ஓராண்டு வைபவத்தைக் கூட நான் கொண்டாடுவதாக இல்லை!"

"ஆனாலும் செய்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை என் பது வான்புகழ் வள்ளுவர் வாக் கல்லவா?"

"என் கடமையைச் செய் தேன்"

"உன் கடமையைச் செய் தாய். என் கண்ணியத்தைச் செய்கிறேன். இந்த வீட்டை விலைக்கு வாங்கி விடு! மேலும் பணம் தேவைப்பட்டால் என் னிடம் தெரிவித்தால் போதும்"

"ஆகட்டும் முதலாளி!"

மணிவாசகன் தன் வாய் திறந்து 'முதலாளி' என்று கூறுகிறான். முதலாளியின் பணம் அத்தனை சக்தி வாய்ந் தது. ரூபாய் ஐம்பதினாயிரம் குழந்தைக்குப் பரிசாகக் கிடைத்திருக்கிறது. மணிவாச கன் மரியாதையுடன் எழுந்து "உள்ளே வாருங்கள் குழந் தையைப் பார்க்கலாம்" என்று கனியும் குரலில் அழைத் தான்.

"ராதை! காப்பி டிபன் கொண்டா!" என்று அதே சமயம் கர்ச்சனை செய்தான்.

உள்ளே முதலாளி முத்தையா வருகிறார். குழந் தையைப் பார்த்து "இவன் கோடீஸ்வரன் ஆவான்! உன்னைவிட ஏமகாதகனாக இருப்பான்" என்று வாழ்த்து கிறார்.

உள்ளே முதலாளி முத்தையா வரப்போவதை அறிந்த நர்மதா அவர் முகத் தில் விழிக்க எரிச்சல்பட்டு விரைவாகப் பக்கத்து அறைக் குள் நுழைந்து கொண்டாள்.

"நர்மதா! நம்ம முதலாளி வந்துள்ளார். நம்ம குழந் தைக்கு ஐம்பதினாயிரம் பரிசு தந்துள்ளார்"

அதாவது வெளியே வந்து முதலாளியை வரவேற்பாயாக! வணங்குவாயாக! அவர்தம் ஆசி பெறுவாயாக! என்னும் பொருள் தொனிக்கும் குறிப் பில் பேசுகிறான்.

அவளோ மூச்சை உள்ளே அடக்கிச் சும்மா இருந்துவிட் டாள்.

"வக்கீல் மணிவாசகன்! பிள்ளை பெற்ற பெண்களுக்கு எத்தனை உடல் அசௌகரியங்

## பூம்புகாரில் அகழ்வாராய்ச்சி



சோழர் காலத்துத் தலைநக ராக விளங்கி அழிந்துபட்டுத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் அரும் பெரும் முயற்சியால் இன்று புதுப்பொலிவு பெற்றுவரும் பூம்புகார் எனப்படும் காவிரிப் பூம்பட்டினத்தில் மத்திய தொல்பொருள் அகழ் வாய்வுத் துறையினர் இப் போது ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

புகழ்பெற்ற இந்தப் பழம் பெரும் நகரத்தின் பெரும் பகுதி கடலில் மூழ்கிவிட்ட வரலாற்றையொட்டிப் பூம் புகார்க் கடலின் அடியிலும் அகழ்வாராய்ச்சி நடத்துவது பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்யும்; இந்த ஆராய்ச்சி யின் மூலம் பயனுள்ள பொருள்கள் கிடைக்கும் என்று தெரிந்தால் 5ஆவது திட்ட காலத்தில் இது மேற்கொள் ளப் படலாம்; கடலில் மூழ்கி ஆராய்ச்சி நடத்துவதற்காகத் தனிப் பயிற்சியும் அளிக்கப் படும்.

கள் இருக்கும். டில்லி போய் வந்த பின்னர் ஒரு நாள் வருகி றேன்" என்றவர் குழந்தை யைத் தூக்கி முத்த மிட்டார்.... சிரித்தார்... குழந்தையைக் கண்டால் எத் தனை கொடிய உள்ளங்களும் குழந்தைத் தன்மையடைந்து விடுவதை ஒளிந்து நின்று பார்த்த நர்மதாவுக்கு வியப் பாக இருந்தது.

"அத்தான்! காப்பி டிபன் ரெடி. உங்கள் முதலாளியும் நீங்களும் சாப்பிட வரலாம்"

முத்தையா இயந்திரமாக மறுகணம் மாறிவிட்டார். காப்பி, டிபன் யாவற்றையும் மூடியைத் திறந்து ஜாடிக்குள் ஊற்றுவது போலக் கடகட வென முடித்தார், அவருக்கு எதிலும் அவசரம்; எதிலும் வேகம்!

"மணிவாசகன்! ராதை சட்டக் கல்லூரியில் படிக்கி றாளா?"

"இந்த ஆண்டும் பரீட்சை எழுதுகிறாள்!"

"ஆண்டும் என்று 'உம்' போட்டால் பரீட்சைக்கும் இந்தப் பெண்ணுக்கும் அதிர்ஷ்டமில்லை! ஒருவேளை மாஸ்டர் மணிவாசகன் பிறந்த அதிர்ஷ்டம் இவள் பரீட்சை யில் வெற்றி பெறுவாள்."

"நான் படிப்பிலே மக்கு, மாமா!"

"நீ பண்பிலே மாமேதை! உனக்கும் நல்ல காலம் வரும். டாக்டர் நர்மதாவிடம் நான் போவதைச் சொல்லிவிடு. மணிவாசகன் இந்த வீட்டை விலை பேசி முடித்துவிடுங்கள். நான் டில்லியிலிருந்து வரும் போது இது உங்கள் சொந்த வீடாக இருக்க வேண்டும்"

"சொந்த வீடாக இருக் கும்!"

செண்பகா மில்லின் முதலாளி விடை பெற்றுக் கொண்டு போய்விட்டார். பணத்தையெடுத்து இரும்பு அலமாரியில் பூட்டிக் கொண் டிருந்தான்.

"அத்தான்!"

"உம்"

"நான் அன்றைக்கு டிரங்க் கால் பேசி, குழந்தை பிறந் ததை உங்கள் முதலாளிக்குச் சொன்னேன். உங்களுக்கு இன்று அதிர்ஷ்டம்!"

"எல்லா அதிர்ஷ்டங்களும் உன்னால்தான் என் வீட்டிற்குள் வருகின்றன. ஒப்புக்கொள்ளு கிறேன்."

பணம் கையில் இருக்கும் போது மூர்க்கனும் முரடனும் கூடக் குளுமையாகப் பேசு வான்! மணிவாசகன் குரலில் குளுமை இருந்தது. டாக்டர் நர்மதா மனத்தில் கொதிப்பு கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது! ஆனாலும் அவள் பெண் தற்சமயம் பச்சை உடம்புடன் கூடிய பூங் கொடி. சின்னஞ்சிறு பூவை; பூத்த பூங்கொடி.

வக்கில் மணிவாசகன் அறைக்குள் வந்தான்.

"உனக்கு முத்தையா மீது என்ன கோபம்? அவரை 'வாருங்கள்' என்று கூடக் கேட்க அன்பு இல்லையா? உனக்கு மாதாமாதம் சம்பளம் தந்த முதலாளி!"

"அந்த வகையில் நான் கடமைப் பட்டவள். உங்கள் முதலாளியாக இருப்பதால் என் மனசு ஒப்புக் கொள்ள வில்லை!"

"! அப்படியானால்?......"

"நான் மில் ஆஸ்பத்திரி யிலிருந்து விலகிவிடத் திட்டம் போட்டிருக்கிறேன்!"

## கைத்தறித் துணி

இந்தியாவில் தயாராகும் கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடுகளில் நல்ல 'கிராக்கி' இருந்து வருகிறது.

1971 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து ரூ. 26 கோடியே 84 இலட்சம் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப் பட்டன. கடந்த ஆண்டு இதைவிட அதிகமான அளவில் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. கடந்த ஒரு ஆண்டில் மட்டும் (1972) ரூ. 43 கோடியே 95 இலட்சம் மதிப் புள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதி ஆயின.



கைத்தறித் துணிகளில் குறிப்பாக, பருத்தியில் இருந்து தயாரிக்கப்படும் கைத்தறித் துணிகளுக்கு வெளிநாடு களில் நல்ல வரவேற்பு இருக்கிறது. 1971-ஆம் ஆண்டில் ரூ. 19 கோடியே 57 இலட்சம் மதிப்புள்ள பருத்திக் கைத்தறி துணிகள் ஏற்றுமதி செய்யப் பட்டன. 1972ஆம் ஆண்டில் ரூ. 35 கோடியே 8? இலட்சத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது.





அதுபோல் ரெடிமேட் ஆடைகளையும் அங்கு விரும்பி வாங்குகிறார்கள். ஆகவே ரெடிமேட் ஆடைகளும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டன.




# சிறு தொழிலுக்கோர் உறுதுணை...... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

• பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

• சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.

LT. 3856


ஊர் வளர்ச்சிச் சிறப்பிதழ்

# தமிழரசு



தமிழ்நாட்டில் ஊராட்சி நிருவாக அமைப்பு சென்னை மாநகரமில்லாது ஏனைய 13 மாவட்டங்களில் இயங்கி வருகிறது.

இந்த 13 மாவட்டங்களும் 23 வளர்ச்சி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 23 வளர்ச்சி மாவட்டங்களும் 48 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 48 கோட்டங்களில மொத்தம் 374 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன, இதில் மொத்தம் 12,628 ஊராட்சிகளும் 598 பேரூராட்சிகளும் 12 நகரியங்களும் உள்ளன.

நமது அரசின் திட்டங்களை அந்த உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்றி வருவதால் ஊர்கள் வளர்ச்சி அடைகின்றன. நாள் தோறும் வளர்ச்சி அடைந்து வரும் அந்தச் செய்திகளை தொகுத்து வெளியிடும் முயற்சியின் விளைவே இந்த இதழ் தமிழரசு ஊர் வளர்ச்சிச் சிறப்பிதழாக வெளி வருவதாகும்.

எல்லாச் செய்திகளையும் ஒரே இதழில் வெளியிடுவது எளிதான செயலல்ல எனவே, ஊராட்சி வளர்ச்சிப்பணிகளை ஒரு சோறு பதம் என்பது போல இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். தொடர்ந்து வளர்ச்சிப் பணிகளைப் பற்றிய செய்திகள் வெளியிடப்படும்.

1966—67 ஆம் ஆண்டில் ஊராட்சி வளர்ச்சித் திட்ட நிதிநிருவாகச் செலவு ஏறத்தாழ ரூபாய் 47 கோடியே 47 இலட்சம் ஆகும். இத்தொகை ஆண்டு தோறும் படிப்படியாக வளர்ந்து 1973—74-ஆம் ஆண்டில் ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 94 கோடியே 69 இலட்சத்துக்கு அதிகமாகும்.

ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் ரூ. 94 கோடியே 69 இலட்சம் மட்டும் உள்ளாட்சி மன்றங்களுக்காகவும் ஊர்வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் செலவிடப்படும் தொகை அல்ல. நமது அரசின் பல்வேறு துறைகளும் ஊரக வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளன. அந்தந்தத் துறைகளின் சார்பில் செய்யப்படும் செலவுகளும் ஊரக வளர்சிக்குப் பயன்படுகின்றன.

வடக்கில் மணிமுத்தாறு வடிநிலப் பகுதியையும் தெற்கில் கோதையாறு வடிநிலப் பகுதியையும் பிரிக்கின்றது. கோதையாறு இறுதியில் பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தை வந்தடைகிறது. கோதையாறு அணைக்கட்டு I, கோதையாறு அணைக்கட்டு II ஆகிய இரண்டு அணைக்கட்டுகளை அமைத்து தனித் தனியான நீர் கடத்தி ஏற்டாடுகளின் மூலமாக இரண்டு மின் உற்பத்தி நிலையங்களுக்கும் நீர் அனுப்பி மின் சாரத்தை உற்பத்தி செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். I-வது மின் உற்பத்தி நிலையத்தில் 60 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒறறை உற்பத்திப் பிரிவு இருக்கும். II-வது மின் உற்பத்தி நிலையத்தில் 40 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஓர் உற்பத்திப் பிரிவு இருக்கும். கோதையாறு மின் உற்பத்தி நிலையம் I-வது, 1971 சனவரியில் தமிழ்நாடு மின் இணைப்புடன் தொடர்புபடுத்தப்பட்டது. II-வது மின் உற்பத்தி நிலையம் 1971 நவம்பரில் செயல்படத் தொடங்கியது. இந்த இரண்டு மின் உற்பத்தி நிலையங்களின் மொத்த நிறுவனத்திறன் 100 மெகாவாட்டுகளாகும். இத்திட்டத்திற்காக மதிப்பீட்டுச் செலவு 1,817·02 இலட்சங்களாகும்.

### 4. சென்னை மின் நிலைய நீட்டிப்பு IV-வது நிலை

30 மெகாவாட்டு டர்போ ஆல்டர்னேட்டர் செட் ஒன்று, மணிக்கு 1 இலட்சத்து 75 ஆயிரம் பவுண்டு நீரைக் கொதிக்க வைக்கும் கொதிகலன் 2, ஆகியவற்றை, பேசின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையத்தில் நிறுவ இத்திட்டம் வகை செய்கிறது. 30 மெகாவாட் டர்போ ஆல்டர்னேட்டர். செட் 1969 சூனில் செயல்படத் தொடங்கியது. முதல் கொதிகலன் 1971 செப்டம்பரிலும் 2-வது கொதிகலன் 1972 ஏப்ரலிலும் செயல்படத் தொடங்கின. இத்திட்டத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 621·66 இலட்சங்களாகும். இந்தச் செலவு ரூ. 653 இலட்சத்திற்கு உயரலாம்.

### 5. எண்ணூர் அனல் மின் திட்டம்

எண்ணூரில் அனல் மின் நிலையம் இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளது. இந்த மின் நிலையத்தின் நிறுவனத் திறன் முதற்கண் 340 மெகாவாட்டுகளாகும். அதாவது 60 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு பிரிவுகளும் 110 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்ட இரண்டு பிரிவுகளும் இதில் அடங்கும். முதல் 60 மெகாவாட் யூனிட் 1970 மார்ச்சிலும் 2-வது 60 மெகாவாட் யூனிட் 1971 பிப்ரவரியிலும் முதல் 100 மெகாவாட் யூனிட் 1972 மே திங்களிலும் செயல்படத் தொடங்கின. 2-வது 110 மெகாவாட் யூனிட் 1973 மே. மாதத்தில் செயல்படத் துவங்கியது. இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 5,814 இலட்சங்களாகும். இந்தச் செலவு மேலும் உயரலாம்.




### 6. எண்ணூர் அனல் மின் திட்ட நீட்டிப்பு

எண்ணூர் அனல் மின் திட்டத்தில் 110 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 5-வது உற்பத்திப் பிரிவு ஒன்றுக்கு இத்திட்டம் வகை செய்கிறது. இதனால் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் மொத்த நிறுவனத் திறன் 450 மெகாவாட்டுகளாக ஆகிறது. இத்திட்டத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவு ரூ. 1,685 இலட்சங்களாகும். 1970 – 71-ல் இருந்தே இதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டு விட்டன. இப்பிரிவு 1974-75-ல் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. கொள்கை அளவில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### 7. பாண்டியாறு புன்னம்புழா நீர் மின் திட்டம்

50 மெகாவாட் நிறுவனத் திறன் கொண்ட இரண்டு உற்பத்திப் பிரிவுகளை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த கேரள மாநில எல்லைக்கு அருகேயுள்ள புன்னம்புழா, கலக்கப்புழா பள்ளத்தாக்கில் கார்குடபுழா ஆற்றின் வலப்புறத்தில் இம் மின் நிலையம் அமையும். இதற்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 5,125 இலட்சமாகும். கேரள மாநில அரசுடன் கலந்து உரையாடி பாசனக் காரியங்களுக்காக மோயாறு பள்ளத்தாக்குக்கு நீரைத் திருப்பி விடும் பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும் வரையில், பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டமானது மறு ஆய்வு செய்யப்பட்டு, பாண்டியாறு-மோயாறு திட்டம் பற்றிய ஓர் முன்னோடி அறிக்கை கேரள அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காகத் தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### 8. குந்தா நீர் மின் திட்டம் IV-வது நிலை

குந்தாவிலுள்ள 3-வது மின் உற்பத்தி நிலையத்தில் 60 மெகாவாட் நிறுவனத் திறன் கொண்ட 3-வது பிரிவு ஒன்றையும், குந்தாவிலுள்ள 4-வது மின் உற்பத்தி நிலையத்தில் 50 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 2-வது பிரிவு ஒன்றையும் நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு இந்திய அரசு அனுமதி வழங்கிவிட்டது. கனடா நாட்டிலிருந்து மின் உற்பத்திப் பொறிகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ. 625 இலட்சமாகும்.

## புதிய திட்டங்கள்

### நடுவட்டம் நீர் திருப்புத் திட்டம்

மொய்யாற்றின் கிளை ஆறுகிய நடுவட்டம் ஆற்றுநீரை கிளன் மார்கன் விரிகுடா முன் அமைவினுள் திருப்பிவிட்டுப் பயன்படுத்தி மோயாறு மின் உற்பத்தி நிலையங்களின் மின் உற்பத்தி அளவினை 60 மில்லியன் யூனிட்டுகள் அதிகரிப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ. 72 இலட்சமாகும். மதிப்பீட்டுச் செலவு ரூ. 165 இலட்சமாக அதிகரிக்கலாம்.

### சோழாட்டிப்புழா நீர் மின் திட்டம்

தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களின் எல்லைக்குள் குறுக்கே வருகின்ற நீர்த்தேக்கம் விரிகுடா முன் அமைந்துள்ள அணையிலிருந்து நீலகிரியிலுள்ள சோழாட்டிப்புழா ஆற்று நீரைப் பயன்படுத்தி நீலகிரி மலையில் மேற்குப் பகுதியில் 60 மெகாவாட் மின் உற்பத்தித் திறனுடைய ஒரு மின் நிலையத்தை அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

1970 பிப்ரவரியில் இத்திட்ட அறிக்கையானது மைய நீர்—சக்தி ஆணைக்குழுவிற்குத் தமிழ்நாடு அரசினால் அனுப்பி வைக்கப் பட்டது. மைய நீர்—சக்தி ஆணைக் குழுவிலிருந்து (நீர்ப்பிரிவு) பெறப்பட்ட இரண்டாவது செட் குறிப்புகளுக்கு 1971 மார்ச்சில் பதில்கள் அனுப்பப்பட்டன. இத்திட்டத்திற்கு உடன் ஒப்புதல் அளிப்பதற்காக வேண்டி தமிழ்நாடு அரசு கேரள அரசுக்கு எழுதியுள்ளது. கேரள அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்ற பிறகுதான் இத்திட்ட வேலை துவங்கப்பட வேண்டுமென மைய நீர்—சக்தி ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இத்திட்டத்திற்காகும் செலவு மதிப்பீடு ரூ. 739 இலட்சமாகும்.

### காடம்பாறை நீர் மின் திட்டம்

நீரைத் தலைகீழாகத் திருப்பக்கூடிய பம்ப் டர்பைன் உற்பத்திப் பிரிவுகள் 2×100 மெகாவாட் திறனுடன் நிறுவ (ஆரம்பத்தில் ஒன்றும் இறுதியில் இரண்டுமாக)வும், காடம்பாறை விரிகுடா முன் அமைந்த அணையுடன் ஒரு நீர்த்தேக்கத்திற்கும் இத்திட்டம் வகை செய்கிறது. மின் நிலையமானது நிலத்திற்குக் கீழே நிலத்தடி நீர் அனுப்பு முறையுடன் அமைக்கப்படும்.

1971 செப்டம்பரில் திட்ட அறிக்கை மைய நீர்—சக்தி ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அக்குழுவின் ஒப்புதல் கிடைக்கப்பட்டு விட்டது. பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காகும் செலவு மதிப்பீடு ரூ. 3,512 இலட்சமாகும்.

### சேர்வலாறு மின் நிலையம் (30 மெகாவாட்) மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டத்தின்கீழ் முண்டன் துறைப் பிரிவு

தாம்பிரபரணி, சேர்வலாறு, கள்ளாறு, கருணையாறு வடிநிலங்களிலிருந்து கிடைக்கப்பெறக் கூடிய மின் சக்தியை ஆறு மின் நிலையங்களில் பயன்படுத்துவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது. இந்த ஆறு மின் நிலையங்களிலிருந்து மூன்று, மேல் வாலாறு, வாலாறு கொடுமுடிப் பிரிவுகள் என அழைக்கப்படும். மின் நிலையங்கள் I, II, III சேர்வலாறு வடி நிலத்திலும் மற்றும் ஒன்று (பானதீர்த்தம் பிரிவு என்ற மின் நிலையம்) தாம்பிரபரணி வடி நிலத்திலும் அமைய உள்ளது. இப்பொழுதுள்ள பாபநாசம் விரிகுடா முன் அமைவில் மேல் நீரோடையில் அமையவிருக்கும் முண்டன் துறைப் பிரிவு, மின் நிலையம் IV ஆகும். சேர்வலாறு, தாம்பிரபரணி ஆறுகளிலிருந்து கிடைக்கப்படும் முழு நீரையும் பயன்படுத்தி இப்பொழுது உள்ள தாம்பிரபரணி அணை, பாபநாசம் விரிகுடா முன் அளவு அணையில் உள்ள 233 அடி மொத்த உயரத்தின் மேல்




RR No. 1161/23
4




# பணி தருவது போதாது பகுத்தறிவும் தரவேண்டும்!

கல்வித்துறையில் ஒரு நாடு பெற்றிருக்கின்ற முன்னேற்றத்தைப் பொறுத்தே அதன் பொருளாதார வளம் இருக்கிறது. இதில் நாம் பெற்றிருக்கிற வளர்ச்சி, எத்தனை பேர் படித்தார்கள் என்பதில் இல்லை. எத்தனை கல்லூரிகள் திறக்கப்பட்டது என்பதில் இல்லை. எத்தனை கட்டடங்களில் அதற்கான வசதிகளைச் செய்து தந்தோம் என்பதில் இல்லை. எத்தனை ஆசிரியர்கள், ஆசிரியைகள் இருக்கிறார்கள் என்பதில் இல்லை. இவைகளுடன் தரமான கல்வியை, தகுதியான கல்வியை, விஞ்ஞான பூர்வமான கல்வியை—பகுத்தறிவூட்டும் கல்வியை எந்த அளவுக்குப் பெறுகிறோம் என்பதில்தான் இருக்கிறது.

கல்வியை நாம் தேர்வுக்காகவோ — உத்தியோகத்திற்காகவோ குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகவோ — பெறுவதில் அர்த்தமில்லை. நாட்டின் எதிர்கால முன்னேற்றத்தையும் எண்ணிப் படிக்க வேண்டும். அந்த எண்ணம் மாணவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டாக வேண்டும்.

பொதுவாக மாணவர்களிடத்தில் அமைதியின்மை அண்மைக் காலமாக ஏற்பட்டுவருவதை அறிவீர்கள். இதற்கு என்ன காரணம் என்பதைப் பிரதமர் இந்திரா காந்திஅவர்கள் கூறுகையில்,''சமுதாய சுயநலமிகள் இளம் உள்ளங்களில் இயற்கையாகக் கொதித்தெழுகின்ற உணர்ச்சியைத் தூண்டிவிட்டு அமைதியின்மையை ஏற்படுத்துகிறார்கள்'' என்றார்கள்.

இந்த நிலைமையை நாடு முழுவதும் காண்கிறோம். மற்ற பிற நாடுகளை, வேறு இடங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் அதிகமில்லை என்றே கூறவேண்டும்.

இங்கொன்றும், அங்கொன்றுமாகச் சில நேரங்களில் இத்தகைய நிலை ஏற்பட்டாலும் இதை மற்ற இடங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் அதிகமாக இல்லையென்றே கூற வேண்டும்.

இந்தத் தொல்லையும் இல்லாமல் இருந்தால், அதனால் ஏற்படுகின்ற நிம்மதியான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டத்தைச் செலுத்தி—கல்வி வளர்ச்சிக்காகவும், மற்றவைகளுக்காகவும் நல்ல பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்த முடியும்.

இதற்கு மாணவிகள் உதவி செய்ய முடியும். அவர்கள் தங்கள் இல்லத்தில் அவர்களுடன் இருக்கும் சகோதரர்களிடத்தில் இதுபற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அக்கம் பக்கத்தில் உள்ள தாய்மார்களுடன் தொடர்பு கொண்டு அந்தந்தக் குடும்பத்தில் உள்ள மாணவர்களுக்கு எடுத்துச் சொல்வதை ஒரு பிரச்சாரமாகவே மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, மாணவர்களிடையே கோபம் ஏற்பட்டால் அதற்கு முதல் இலக்காவது பொதுமக்கள் சொத்தான பஸ், அரசு அலுவலகங்களாகத்தான் இருக்கின்றன. இதனால் அரசுக்கு மட்டும் நட்டமல்ல, எதிர்காலச் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்பட வேண்டிய பொருளாதார முன்னேற்றமே தடைப்படுகின்றது. இதைத் தாய்மார்களாகிய நீங்கள்தான் உணர்த்தவேண்டும்.

ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்க—தாய்மார்கள் அந்த வகையில் உதவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

—சென்னை [illegible] மேரிக் கல்லூரியில் [illegible] —73

முதல்வர்

தாம்பிரபரணி, சேர்வலாறு ஆறுகளின் 98 சதுர மைல் பரப்பளவு உள்ள ஆற்று நீர் வடிகால் அமைப்புப் பிரதேசத்தில் உள்ள நீரைப் பயன்படுத்த வகை செய்கிறது. மின் நிலையத்தில் 30 மெகாவாட் திறனுடைய மின் நிலையம் ஒன்றினை நிறுவ உத்தேசித்துள்ளது. V-வது மின் நிலையம் கருணையாறு வடிநிலத்தில் அமையும். அதற்குக் கருணையாறு பிரிவு என்று பெயர். மேல் தாம்பிரபரணி, நீர் மின் திட்டத்தின் கீழ் அமையவிருக்கும் ஆறு மின் நிலையங்களில் சேர்வலாறு நீரைப் பயன்படுத்தவும், பாசனத்தை நிலைப்படுத்தவும் முதலாவதாக முண்டன் துறைப் பிரிவைச் செயல்படுத்தப்பட உத்தேசித்துள்ளது. ரூ. 549 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ள இந்தத் திட்டமானது, விரிவாக ஆய்வு செய்யப்பட்டு இந்தப் பிரிவுக்கான திட்ட அறிக்கை இந்திய அரசுக்கு செப்டம்பர் 1970-ல் அனுப்பப்பட்டுள்ளது.

மைய நீர் சக்தி ஆணைக் குழுவினிடமிருந்து பெறப்பட்ட முதல் வரிசை விமர்சனங்களுக்குப் பதில் அனுப்பப்பட்டு விட்டது. ஒப்புதல் கிடைப்பதற்கு முன் பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

### நெல்லித்துறை நீர் மின் திட்டம்

குந்தா மின் நிலையம் IV-ன் கீழ் உள்ள பவானி ஆற்று நீர் வீழ்ச்சியைப் பயன்படுத்தி நெல்லித்துறை கிராமத்திற்கு அருகில் 50 மெகாவாட் நிறுவனத் திறனுடன் கூடிய அணைக்கட்டு மின் நிலையத்திலிருந்து மின் உற்பத்தி செய்ய இத்திட்டம் வகை செய்கிறது. குந்தா மின் நிலையம் IV கடைமடை நீருக்கும் கீழ் பவானி பாசன நீர்தேக்கத்திற்குமிடையே 244 அடி அளவுக்கு வீழ்ச்சி உள்ளது. இதில் 135 அடி அளவினை நெல்லித்துறை மின் நிலையத்திற்காகப் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. குந்தா மின் நிலையம் IV-லிருந்து ஓடி விழுகிற நீரினையும் பில்லூர் அணையின் கீழ் ஓடுகின்ற நீரினையும் 266 சதுர மைல் பிரதேசத்திலிருந்து கல்லுமைத்துறைப் பள்ளத்திலிருந்து திருப்பிவிடப்படும் நீரினையும் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கு ரூ. 670 இலட்சம் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மைய நீர்—சக்தி ஆணைக் குழுவிற்கு அறிக்கை ஏப்ரல் 1970-ல் மாநில அரசினல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மைய நீர்—சக்தி ஆணைக் குழுவினிடமிருந்து பெறப்பட்ட முதல் வரிசை குறிப்புகளுக்குப் பதில் அனுப்பப்பட்டுவிட்டது. ஒப்புதல் கிடைப்பதற்கு முன் பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.




### பரளியாறு நீர் மின் திட்டம்

கன்யாகுமரி மாவட்டத்தில் கோதையாற்றின் ஒரு கிளை ஆருன பரளியாற்றிலிருந்து கிடைக்கும் சக்தி ஆதாரங்களிலிருந்து ஒரு 30 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம் இதன் கீழ் அமையும். திட்ட அறிக்கை மார்ச்சு 1971-ல் மைய நீர்சக்தி ஆணைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது.

### சுருளியாறு நீர் மின் திட்டம்

மதுரை மாவட்டத்தில் உள்ள சுருளியாறு நீரைப் பயன்படுத்தி, 35 மெகாவாட் நிறுவனத் திறனுடைய ஒரு மின் நிலையத்திலிருந்து மின் சக்தியைப் பெற இத்திட்டம் வழிவகை செய்கிறது. சுருளியாறு, எரவங்கலாறுகளில் 15 சதுர மைல்கள் பரப்பளவு உள்ள நீர் வடிகால் பிரதேசத்திலிருந்து ஓடி விழும் நீரை இத்திட்டத்திற்காகப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

திட்டத்தின் செலவு மதிப்பீடு ரூ. 659 இலட்சம். திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு (மைய நீர்—சக்தி ஆணைக்குழு) தமிழ்நாடு அரசினல் அனுமதிக்காக 1970 மே திங்களில் அனுப்பப்பட்டு, அதற்கான ஒப்புதல் பெறப்பட்டு விட்டது. கட்டட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

### தூத்துக்குடி அனல் மின் திட்டம்

தூத்துக்குடியில் ஓர் அனல் மின் நிலையத்தினை நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆரம்பப் பணியாக 400 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட மின் நிலையம் நிறுவுவதும், இறுதியில் 600 மெகாவாட்டாக உயர்த்துவதுமே இத்திட்டத்தின் நோக்கமாகும். 400 மெகாவாட் திட்டம் பற்றி திட்ட அறிக்கையானது மத்திய நீர்—மின்சக்தி ஆணைக் குழுவிற்கு 1971 ஜூலைத் திங்களில் அனுப்பப்பட்டுள்ளது. அக்டோபர் 1972-ல் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அவ்வறிக்கையும் அக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான செலவு மதிப்பீடு ரூ. 70 கோடியாகும். முதல் 200 மெகாவாட்பிரிவு 1977-78லும் இரண்டாவது 200 மெகாவாட் பிரிவு 1978-79லும் செயல்படத் தொடங்கலாம். என எதிர்பார்க்கப்படுகிறது.

### மேட்டூர் அணை அனல் மின்திட்டம்

ஒவ்வொன்றும் 110 மெகாவாட் நிறுவனத் திறன் கொண்ட மூன்று பிரிவுகளைக் கொண்ட அனல் மின் நிலையம், ஒன்றினை மேட்டூர் அணை அருகே நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் பற்றிய செயல்படுத்தக்கூடிய அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் மின்சக்தி ஆணைக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதற்காகும் செலவு மதிப்பீடு ரூ. 6,553 இலட்சமாகும். 5-வது திட்டக் காலத்திலும் 6-வது திட்டக் காலத்திலும் இத்திட்டத்தின் பயன்களைப் பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து பல நீர் மின் திட்டங்களை ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன:—

(1) தூத்துக்குடி அனல் மின்திட்டம்—400 மெகாவாட் (இறுதியில்—600 மெகாவாட்)

(2) மேட்டூர் அணை அனல் மின் திட்டம்-330 மெகாவாட்

(3) மணிமுத்தாறு நீர் மின் திட்டம்-90 மெகாவாட்

(4) மேல் அமராவதி நீர் மின் திட்டம்—20 மெகாவாட்.

(5) கீழ்மோயாறு நீர் மின் திட்டம்—30 மெகாவாட்.

(6) கீழ்மோயாறு மின் திட்டம்—குக்குலத்துறைபிரிவு 40—மெகாவாட்.

(7) குன்னூர் கல்லாறு நீர் மின் திட்டம்—50 மெகாவாட்.

(8) கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம்—200 மெகாவாட்.

(9) அக்காமலை நீர் மின் திட்டம்—25 மெகாவாட்

(10) சண்முகாநதி நீர் மின்திட்டம்—30 மெகாவாட்.

(11) மேல்தாம்பிரபரணி நீர் மின் திட்டம்—மற்ற 5 பிரிவுகள்—165 மெகாவாட்.

(12) மேல்தாம்பிரபரணி நீர் மின்திட்டம் முண்டன் துறை பிரிவு—20 மெகாவாட்

(13) குந்தா நீர் மின் திட்டம்—இறுதி நிலை—205 மெகாவாட்.

(14) மேல் கொடுமுந்து—லோன் பள்ளத்தாக்கு நீர்த் திருப்புத் திட்டம்-பைக்காரா, மோயாறு மின் நிலையங்களில் கூடுதல் மின் உற்பத்தி செய்தல்.

(15) பைக்காரா இறுதி நிலை—100 மெகாவாட்.

(16) இரண்டாவது சுரங்கம் வெட்டுவதின் மூலம் நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம்—800 மெகாவாட்.

(17) தூத்துக் குடியில் இரண்டாவது அனல் மின் நிலையம்—1000 மெகாவாட்.

(18) சென்னை கல்பாக்கம் அணு மின் நிலையம்—(இந்திய அரசினுடையது)—470 மெகாவாட்.

மின்சார உற்பத்தி, மிகப் பெரிய அளவில் மின்சாரத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். வளமான வாழ்வுக்கு, சமுதாய மறுமலர்ச்சிக்கு, வேகமான தொழில் புரட்சிக்கு மின்சாரம் அடித்தளமாக இருப்பது மட்டுமில்லாமல், கிராம மக்களின் நல்வாழ்வுக்கும் தமிழகத்தின் பசுமைப் புரட்சிக்கும் அடிகோலுகிறது. மின் உற்பத்தியில் தமிழ்நாடு கண்டுள்ள சாதனைகள் தமிழ்ப் பெருங்குடி மக்களின் வளமான வாழ்க்கைக்கு வலுவானதொரு அடித்தளத்தை அமைத்துக் கொடுப்பதுமட்டுமில்லாமல், தமிழக மக்களின் எதிர்கால வாழ்வு வளம்பெற்றுத்திகழ, அவர்களின் வாழ்வு மலர வழி வகுத்துக் கொடுத்துள்ளன என்று சொன்னல் மிகையாகாது.

— வ-ச.






முத்திரைத் தொடர்கதை

தமிழரசில் வெளிவரும் ''உலகில் இரண்டு கிளிகள்'' தொடர்கதை ஆரம்ப முதல் விறுவிறுப்புடன் செல்கிறது. ஆழமான உவமைகள்—அழகிய கருத்துக்கள்—எழில்மிகு வருணனைகள் கொண்டு சிறகடித்துப் பறக்கின்றது. ஒவ்வோர் அத்தியாயத்திலும் ஆசிரியரின் முத்திரை பிரதிபலிக்கிறது.

—எச். சேக்அப்துல்லா,
திருப்பாச்சேத்தி.

அட்டையின் பெருமை

தமிழரசு இதழின் அட்டைப் படங்களைப் பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்கும் வண்ணம் ஆங்கிலப் பத்திரிகை போல அருமையாக உள்ளது.

—எஸ். எஸ். மணி,
திருவனந்தபுரம்.

பாராட்டுக்குரிய இதழ்

கோவை மாவட்டச் செய்தித் தொகுப்பு இதழ் எங்கள் உள்ளங்களை எல்லாம் கொள்ளை கொண்டு விட்டது. அரசு ஆற்றியுள்ள சாதனைகள் ஏராளம் என்பதை எங்களுக்கு எடுத்துரைத்த கோவை மாவட்டச் செய்தித் தொகுப்பு இதழுக்கு எங்கள் பாராட்டு.

—எஸ். ஆர். சந்திரன்,
கோவை.

தேன் விருந்து

தொழில் வளம், விளையாட்டு அரங்கம் வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய செய்தித் தொகுப்புகளுடன் வெளியாகியுள்ள கோவை மாவட்டச் சிறப்பிதழ் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தளித்தது. மொத்தத்தில் மார்ச் 16 இதழ் திகட்டாத தேன் விருந்து.

—என். எஸ். மணி,
குமராட்சி.

கற்கண்டுக் கோவை

கவிஞர் ஈரோடு தமிழன்பன் தீட்டிய 'கோக்காத கோவை'யைப் படித்து இன்புற்றேன். வளமான சொல்லாட்சி நிறைந்த கற்கண்டுக் கவிதை.

—எல். கணபதி,
பல்லடம்.

**இந்த இதழுடன் இலவச இணைப்பு**

**முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை**



# ஊர் வளர்ச்சிப் பணிகளில் உயர்ந்து நிற்பது தமிழகமே!

சமூகநலன் கருதியும், வட்டார வளர்ச்சி நலன் கருதியும் இந்த மானியக் கோரிக்கைகள் இங்கே வைக்கப்பட்டு, அதற்காக ரூ. 30,65,87,200 இரண்டு வகைகளிலும் கோரப்பட்டிருக்கின்றன. சமூக் வளர்ச்சி கருதியும், வட்டார வளர்ச்சி கருதியும் பலரும் பல கருத்துக்களை எடுத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆக, இதில் இரண்டு பெரும் பணிகள் அடங்கியிருக்கின்ற காரணத்தால், பொது மக்களுடைய நேரடித் தொடர்பு, பொது மக்களுடைய ஊக்கமும், ஆர்வமும், அக்கறையும் இந்தத் துறையிலே வேறு எந்தத் துறையையும் விட மிகப் படிந்து இருக்கிறது, என்பது இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூறிய கூற்றுக்களிலிருந்து மிகத் தெளிவாகிறது.

இங்கே ரூ. 30,65,87,220-க்கு மானியக் கோரிக்கைகள் வைக்கப்பட்டாலும், இந்தத் துறையின் மூலமாக இந்த ஆண்டு மட்டும் நிறைவேற்றப் படுகின்ற பணிகள் ரூ. 9,469 லட்சமாக அமைகிறது. பல் வேறு துறைகள் தனித்தனியாக இருந்தாலும் கூட, அவற்றின் நன்மைகளை மக்களிடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கின்ற இந்த ஊராட்சித் துறையும், ஊராட்சி ஒன்றியத் துறையும், வேறு துணைத் துறைகளாக இருந்து பாடுபடும் துறைகளும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கி வந்திருக்கின்ற பாங்கினையும் நன்றாகக் காண்கிறோம். 1961—62-ல் 1,575 இலட்ச ரூபாய் அளவுக்கு இந்தத் துறைகளின் மூலமாகப் பணிகள் ஆற்றப் பட்டு, 1966—67-ல் ரூ. 4,748 இலட்சமாக வளர்ந்து, இப்போது 9,469 லட்சமாக வளர்ந்தோங்கி நிற்கிறது. 1961-67-ஆண்டுகளுக்கு இடையேஇருக்கிற 6 ஆண்டுக் காலத்தில் மாத்திரம் ரூ. 198 கோடி 83 இலட்சம் அளவுக்குப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன என்று கணக்கிட்டால், 1967-லிருந்து 1972—73 வரையில் 6 ஆண்டுக் காலத்தில் ரூ. 378 கோடி 95 இலட்சம் அளவுக்குச் சமுதாய, வட்டார வளர்ச்சிப் பணிகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதை நாம் காணலாம். 1973—74-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் 473 கோடியே 64 இலட்சம் ரூபாயாகும். 6 ஆண்டுக் காலத்திற்கு முன்பு இருந்ததை விட இப்போது எவ்வளவு செலவழிக்கிறோம் என்று பார்த்தால் 99 சதவிகிதம் அதிகமாக — கிட்டத் தட்ட 'சென்ட் பர்ஸன்ட்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதிகமாகச் செலவழிக்கிற ஒரு துறையாக இந்தத் துறையைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆக இந்தத் துறை மிகப் பலன் அளிக்கக் கூடியதாக இருக்கிறது என்று சொல்வதில் நான் பெருமைப் படுகிறேன்.

வேறு பல மாநிலங்களிலே இருக்கின்ற அமைப்புகளோடு நமது தமிழகத்தை ஒப்பிட்டுப் பார்த்தோமானால் நிலைமை இன்னும் தெளிவாகப் புரியும். வேறு பல மாநிலங்களிலே 'ஜில்லா பரிஷத்' என்ற அமைப்புக்களை ஏற்படுத்தி, சமுதாய வளர்ச்சிப் பணி, வட்டார வளர்ச்சிப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவைகளிலே சிறப்பாகச் சொல்லப் பட்டது மகாராஷ்டிர மாநிலம். ஊராட்சி ஒன்றிய அமைப்புகளை வைத்துச் செயல்படுகின்ற சில மாநிலங்களை விட மகாராஷ்டிர மாநிலத்தில் 'ஜில்லா பரிஷத்' அமைப்புகளின் மூலம் வளர்ச்சிப் பணிகளைச் சிறப்பாக நடத்துவதாகச் சொல்லப்பட்டது. அதனால், அவர்கள் எப்படிச் செயல்படுத்துகிறார்கள், எந்தெந்த முறைகளில் பணிகளை நிறைவேற்றுகிறார்கள் என்பதை ஆராய்ந்து அறிந்து வருவதற்காக நமது மாநில அதிகாரிகள் குழு ஒன்றை அங்கே அனுப்பி வைத்தோம். நமது மாநிலத்தைவிட எந்த வகையிலே சிறந்திருக்கிறது என்பதை அறிந்து, நமக்கு ஏற்றதாக இருந்தால் அதைச் செயல்படுத்தலாம் என்பதற்காக அதிகாரிகள் குழுவை அனுப்பி வைத்தோம். அவர்கள்அங்கே போய்ப் பார்த்துவிட்டு, அங்கே திட்டங்களைச் செயல் படுத்துவதிலே உள்ள கஷ்டங்களையும் சங்கடங்களையும் மற்றக் காரியங்களையும் ஆராய்ந்து பார்த்து அறிக்கை கொடுத்தார்கள். அவர்கள் அறிக்கையிலே '374 ஊராட்சி ஒன்றிய அமைப்புகளை வைத்து வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் நமது முறைதான் மகாராஷ்டிரத்தை விடச் சிறந்ததாக இருக்கிறது' என்று தெரிவித்திருக்கிறார்கள்.



கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன்

ஆக, கடந்த 12, 13 ஆண்டுக் காலமாக வேறு பல மாநிலங்களை விட நமது மாநிலத்தில் இந்த ஊராட்சி ஒன்றிய அமைப்புகளின் மூலம் வளர்ச்சிப் பணிகள் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன என்பதை நாம் தெள்ளத் தெளியப் புரிந்து கொள்கிறோம்.

மொத்தத்தில் இந்த 12, 13 ஆண்டுக் காலத்தில் ஊராட்சித் துறை ஒப்புக்கொண்டிருக்கின்ற பணிகள் நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வந்திருப்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். இப்படிப் பொறுப்புக்கள் அதிகரித்திருப்பதனால் ஒன்றியங்கள் சிறப்பாகப் பணியாற்றுவதற்காக ஊராட்சித் துறையை வருவாய்த் துறையிலிருந்து தனியாகப் பிரிக்க வேண்டுமென்று பலர் சொன்னார்கள். மாவட்ட அளவிலே இப்படி நிருவாகத்தை இரண்டாகப் பிரித்தாலும் இரண்டு துறைகளுக்கும் மாவட்ட

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண். 226, சென்னை-600001.

தந்தி: "அப்பாங்க்" தொலைபேசி எண்: 20367, 28068

*எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும்; விவசாயத் தொழிலுக்கும் உதவி செய்யும்.*

**வட்டி விகிதங்கள்**

(வருடத்திற்கு %)

| | |
|---|---|
| நடப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | வட்டி இல்லை. |
| சேமிப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | 4·00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது).

காலாந்திர கணக்கு:—ரூ. 1,000/-ம் அதற்கு மேலும்;

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை ... ... ... ... | 2·75 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை ... ... ... ... | 3·25 |

நிரந்தர கணக்கு:—ரூ. 100/-ம் அதற்கு மேலும்:

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 6.00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய ... ... ... | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் ... ... ... ... ... ... | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000/-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேல் குறிப்பிட்டதைவிட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

தொடர் கணக்கு: தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128/50 | 201 | 278 | 362/50 | 452 | 548/50 |

குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி,
துணைத் தலைவர்.




# நாட்குறிப்பும் வரலாறு சொல்லும்

சோவியத் நாட்டிலிருந்து இந்தியாவுக்குச் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வது இந்த நாட்களில் மிகமிகச் சாதாரணமாகியுள்ளது. என்றாலும் அங்கிருந்து சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவது 500 ஆண்டுக் காலமாகவே நடைபெற்று வருகிற நிகழ்ச்சி என்பதை ஒருவரது நாட்குறிப்பு தெளிவாக்கியுள்ளது.

சோவியத் நாட்டிலுள்ள துவெர் நகரத்தைச் சேர்ந்தவர் அபனுசி நிகிதன் என்னும் வணிகர். அவர் 1472-ஆம் ஆண்டில் உயிர் துறந்தார். இந்தியாவுக்கு வந்து சென்ற அவர், நாட்குறிப்பு (டைரி) எழுதும் பழக்கத்தைக் கைக் கொண்டிருந்ததால் இந்தியாவுக்கு வந்து சென்றதையும், இங்கே கண்ட நிகழ்ச்சிகளையும் தமது டைரியில் எழுதி வைத்துள்ளார்.

வால்கா நதிக்கரையிலுள்ள துவெர் நகரிலிருந்து புறப்பட்ட அந்த வணிகர், பாலைவனங்களையும் புயல் வீசும் கிழக்குக் கடல்களையும் கடந்து, தாம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்ததை விவரித்து எழுதியுள்ளார். 15-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியா எவ்வாறு இருந்தது என்பதை விளக்குகின்ற செய்திச் சித்திரமாக அவரது நாட்குறிப்பு விளங்குகிறது.

'மூன்று கடலுக்கு அப்பால் செய்த சுற்றுலாப் பயணம்' என்று அந்த நாட்குறிப்புக்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

# ரப்பர்ச் சாலை

தார், கருங்கல், ஜல்லி இவற்றால் சாலை போடப்பட்டு வருகிறது. சில பகுதிகளில் காங்கிரீட் சாலை போடுகிறார்கள். கேரள மாநிலம் புதிய வகையில் ரப்பர்ச் சாலை போடத் திட்டமிட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் கோட்டயத்திலும், போக்குவரத்து அதிகமுள்ள சில பகுதிகளிலும் ரப்பர்ச் சாலைபோடும் பணியை மேற்கொள்வதற்கு, இந்திய ரப்பர் கழகம் ஓர் ஆய்வுத் திட்டத்தை அனுமதித்திருக்கிறது. இந்தியாவில் முதல் முறையாக உருவாகவிருக்கும் இந்த ரப்பர்ச் சாலைக்குரிய செலவு சாதாரணச் சாலைகளுக்கு ஆவதைவிட 15 சதவிகிதம் அதிகம் ஆகிறது; என்றாலும் குறைந்தது 30 ஆண்டுகளுக்கு நீடித்திருக்கும் தன்மை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



# இனிக்கும் செய்தி

1972 அக்டோபர் முதல் நாளிலிருந்து 1973 ஜூன் 22-ஆம் நாள் வரையுள்ள ஒன்பது மாதங்களில் 37·84 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதே காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையோடு ஒப்பிடுகையில் இது 7·39 இலட்சம் டன்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

1973 ஜூன் 22-ஆம் நாள் வரை 25·65 இலட்சம் டன்கள் சர்க்கரை வெளியே அனுப்பப்பட்டது. கடந்த ஆண்டு இதே காலத்தில் 29·18 இலட்சம் டன்கள் சர்க்கரை வெளியே அனுப்பப்பட்டது.

1973 ஜூன் 22-ஆம் நாளன்று சர்க்கரைக் கையிருப்பு 18·11 இலட்சம் டன்கள். கடந்த ஆண்டு இதே நாளன்று சர்க்கரைக் கையிருப்பு 15·31 இலட்சம் டன்கள்தான். 1973 ஜூன் 29-ஆம் நாளன்று 8 சர்க்கரை ஆலைகள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. கடந்த ஆண்டு இதே தேதியில் 5 சர்க்கரை ஆலைகள் மட்டுமே உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன.

ஆட்சித் தலைவர்தான் தலைவராக இருக்க முடியும். அந்த அடிப்படையில்தான் இந்தத் துறையை முழுக்கவனம் செலுத்திப் பார்ப்பதற்காகத் தனி அதிகாரிகள் இருந்தாலும் — ஆர். டி. ஓ. அதிகாரம் பெற்றவர்கள் இந்த வட்டார வளர்ச்சி அதிகாரிகளாக அல்லது கோட்டாட்சித் தலைவர்களாக இருந்தாலும் — மேலதிகாரம் படைத்தவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருப்பதால் கோட்டாட்சித் தலைவர்களுக்கு அதிக வாய்ப்பும், வசதியும் ஏற்படாமல் போகக்கூடிய ஒரு நிலைமை ஏற்படலாம். இருப்பினும் சிறந்த நிருவாகத்தை முன்னிட்டு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கருத்தைக் கொள்கை அடிப்படையில் ஏற்கெனவே நாங்கள் ஒப்புக் கொண்டிருக்கிறோம். எந்தெந்த வகையிலே அதைச் செய்யலாம் என்பதற்கு நிருவாகச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கருத்துரை கேட்டிருக்கிறோம். அவர்கள் அறிக்கை வந்த பின்னால் அதிலே நல்ல முடிவுகள் ஏற்படும் என்று கருதுகிறேன்.

பொதுவாக நமது நாட்டில் ஊராட்சி வளர்ச்சித் துறைகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை ஆராய்வதற்காக ''நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்யூனிட்டி டெவலப்மென்ட்'' என்ற அமைப்பிலிருந்து யுனைட்டெட் கிங்டம், பிரிட்டனைச் சேர்ந்த வல்லுநர் குழு ஒன்று வந்தது. அவர்கள் தமிழ்நாடு, ஆந்திரம், மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய நான்கு மாநிலங்களையும் பார்வையிட்டு அறிக்கையைச் சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையிலே தமிழகத்தில் ஊராட்சி வளர்ச்சித் துறை செயல்படும் முறை சிறப்பானது என்று பாராட்டியிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றிய அமைப்பு வேளாண்மைத் துறை வளர்ச்சியில், தமிழ்நாடு 68 சதவிகித வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும், மத்தியப் பிரதேசம் 5 சதவிகிதம் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும், குஜராத் 34 சதவிகிதம் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும் அவர்கள் மேலும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களை அணுகி, உழவர் பெருங்குடி மக்கள் பெறுகின்ற நிதிவசதிகளைப் பற்றியும் கணித்திருக்கிறார்கள். தமிழகத்தில் 71 சதவிகிதம் வேளாண்மைப் பெருங்குடி மக்கள் நிதி வசதியைப் பெறுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களை அணுகியிருக்கிறார்கள் என்றும், ஆந்திரப் பிரதேசத்தில் 39 சதவிகிதம் என்றும், குஜராத்தில் 19 சதவிகிதம் என்றும், மத்தியப் பிரதேசத்தில் ஒரே ஒரு சதவிகிதம் என்றும் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அளவுக்கு மற்ற மாநிலங்களைவிட நமது தமிழகம் இந்தத் துறையிலே முன்னேறியிருக்கிறது என்பது நன்கு தெளிவாகிறது.

பொதுவாக, தமிழகம் நீண்ட நெடுங்காலமாக இந்தத் துறையில் வளர்ச்சி பெற்று வருகிறது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். நமது தமிழகத்தில் மேலும் இந்தத் துறை வளர்ச்சிபெற நல்ல வாய்ப்புகள் இருக்கின்றன. 1971-ஆம் ஆண்டு சென்சஸ் கணக்குப்படிப் பார்த்தால் நகரங்களைப் பிரிப்பதற்காக வகுக்கப்பட்ட இலக்கணப்படி இந்தியா முழுவதிலும் உள்ள எல்லா மாநிலங்களிலும் கணக்கிட்டு ஒவ்வொரு மாநிலத்தையும் எத்தனை நகரங்களாகப் பிரிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்ப்போமானால் உத்தரப் பிரதேசத்தில் 294 நகரங்கள் என்றும், மகாராஷ்டிரத்தில் 289 நகரங்கள் என்றும், குஜராத்தில் 217 நகரங்கள் என்றும், அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் 443 நகரங்கள் என்றும் சென்சஸ் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். 8 கோடி மக்கள் வாழ்கின்ற உத்தரப்பிரதேசத்தில் நகரங்களைப் பிரிக்கின்ற இலக்கணப்படி 294 நகரங்கள் தான் வருகின்றன என்று அந்த ரிப்போர்ட்டிலே தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், நமது தமிழகத்தில் 443 நகரங்கள் வருகின்றன என்றால் அது எவ்வளவு பெருமைக்குரியது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.




இப்படித் தமிழகத்தில் பல கிராமங்கள் சிற்றூர்கள் பேரூர்களாகவும், பேரூர்கள் நகரங்களாகவும், நகரங்கள் பெருநகரங்களாகவும் மாற்றமடைந்து வரும் அளவிற்குப் பல்வேறு கிராமங்கள் வளர்ச்சி பெற்று இருக்கின்றன என்பதை அறியலாம். மற்ற மாநிலங்களிலுள்ள நிலைமைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நமது தமிழகத்தில் வளர்ச்சி பரவலாக அமைந்திருப்பதையும் அறியலாம். வங்காளத்தை எடுத்துக் கொண்டால் கல்கத்தா போன்ற இரண்டொரு நகரங்களைத் தவிர மற்றப் பகுதிகளெல்லாம் மிகச் சாதாரணமாகத்தான் இருக்கின்றன. மராட்டியத்தை எடுத்துக்கொண்டால் பம்பாய் வளர்ந்த நகர்; பூனா வளர்ந்த நகர்; அது போன்று மைசூரை எடுத்துக் கொண்டால் மைசூர் வளர்ந்த நகர், பெங்களூர் வளர்ந்த நகர். ஆனால், மற்றப் பகுதிகளெல்லாம் மிக மிகச் சாதாரணமாகவே இருக்கின்றன. ஆனால், தமிழகத்தை எடுத்துக் கொண்டால் வளர்ச்சியுற்ற நகரைப் பார்க்க வேண்டுமானால் 300 அல்லது 400 மைல்களைக் கடந்து வந்தால் தான் பார்க்க முடியும் என்ற நிலையில்லாமல் சென்னையும், சென்னைக்கு அடுத்த படியாக மதுரையும், கோவையும், திருச்சியும், திருநெல்வேலியும், சேலமும், வேலூரும் இப்படி மாவட்டத்திற்கு மாவட்டம் பெரும் நகரங்கள் வளர்ச்சியுற்று இருப்பதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட வளர்ச்சி இன்று நேற்று ஏற்பட்டது என்று சொல்லவில்லை. வெள்ளைக்காரர்கள் காலத்தில் சென்னை வளர்ச்சி அடைந்தது என்று சொன்னாலும், சேர சோழ பாண்டியன் காலத்திலிருந்தே இப்படிப்பட்ட வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறேனே தவிர இதற்குக் காரணம் வெள்ளைக்காரன் மட்டுமில்லை.

நான் குறிப்பிட்டதைப்போலச் சென்னைக்கு மட்டும்தான் வெள்ளைக்காரன் காரணமாக இருக்கலாம். காஞ்சி, மதுரை, உறையூர் மற்றவையெல்லாம் நீண்ட நெடுங்காலமாக வளர்ந்துவரும் நகரங்களாகும். அத்துடன் நமது அரசு எடுத்துவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் காரணமாகக் கிராமங்களும், நகரங்களும் மேலும் விரிவடைந்து வருகின்றன என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறைந்தது 300 மக்கள் தொகையுள்ள பகுதிகளுக்கு ஒரு துவக்கப் பள்ளியும், 2½ மைல் வட்டாரத்திற்கு ஓர் உயர் துவக்கப்பள்ளியும், ஐந்து மைல்வட்டாரத்திற்கு ஓர் உயர்நிலைப் பள்ளியும் நிறுவவேண்டும் என்பது நமது திட்டம். நிதிநிலையினையொட்டி மேலும் மேலும் வளர்ந்துவரும் இந்தப் பகுதிகளின் தேவைகளையும் முடிந்த அளவிற்கு நிறைவேற்றி வருகின்றோம். கல்வியினைப் பொறுத்த மட்டில் அது மேலும் மேலும் பரவலாக்கப்பட்டு வருகின்றதைப் பார்க்கலாம். 1966–67-ல் ஆரம்பக் கட்டத்தில் கற்பவர்களுக்கு ரூ. 17·90 கோடி செலவழித்தோம் என்றால் 1973–74-ல் இது ரூ. 34·32 கோடிக்கு வளர்ந்துள்ள நிலைக்குக் கல்வி பரவலாக்கப்பட்டிருக்கின்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக இதை நான் குறிப்பிடுகின்றேன். இன்னும் இத்துறையில் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளமாக இருக்கின்றன. கல்வியினைப் பொறுத்த மட்டில் ஊராட்சி ஒன்றியங்கள்தான் இப் பணியினைப் பெரும்பாலும் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. ஆறு வயதிலிருந்து பதினொரு வயது வரையிலுள்ள சிறுவர்கள், சிறுமிகள் நூற்றுக்குத் தொண்ணூற்று நான்கு பேரைப் பள்ளிக்குக் கொண்டு வந்தோம் என்றாலும் இன்னும் ஆறு பேர் பெற்றோர்கள் கைக்கும் அகப்படாமல், ஆசிரியர்களுடைய கண்களுக்கும் அகப்படாமல் அங்கங்கே சுற்றிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். அவர்களையும் பள்ளிகளில் கொண்டு வந்து சேர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருக்கின்றன. அவற்றை அவை திறம்பட மேற்கொண்டும் இருக்கின்றன.

சிற்றூர் வளர்ச்சி வாரியம் என்று அழைக்கப்படும் 'ரூரல் டெவலப்மென்டு போர்டு' ஒன்றினை ஏற்படுத்தி அதன் மூலம் கடன் வசதிகளைப் பெற்றுப் பள்ளிக்கூடக் கட்டடங்களைக் கட்டுதல், இணைப்புச்சாலைகளை அமைத்தல், மார்க்கெட்டுக்கான கட்டடங்களைக் கட்டுதல் போன்றவற்றுக்கான நிதி உதவியைக் கடனாகக் கொடுக்க ஏற்பாட்டினைச் செய்யக் கருதிக்கொண்டிருக்கிறோம். அரசாங்கத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாகவாவது அல்லது தேசிய பாங்குகளிலிருந்தாவது கடன் உதவி பெற்று 'ரூரல் டெவலப்மென்டு போர்டு' என்ற ஒன்றினை அமைத்து உதவ வேண்டும் என்று முதலில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினை அணுகினோம். அன்றிருந்த தலைவர் ஒப்புதல் தந்தார். ஆனால், அதை முறையாகப் பெறுவதற்கு முன்னம் அவர் மாறிவிட்டார். இப்போது அவருக்குப் பதிலாக வேறு ஒருவர் தலைவராக வந்திருக்கின்றார். வந்துள்ள இவரிடம் நமது கோரிக்கை போயிருக்கின்றது. இவர் ஒப்புதல் அளித்தபிறகு ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதியினைப் பெற்று, நாம் இப்போது யோசித்துக் கொண்டிருக்கும் சிற்றூர் வளர்ச்சி வாரியத்தினை அமைப்பதன் மூலம், கிட்டத்தட்ட எண்ணாயிரம் பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டிக்கொடுக்க முடியும். இரண்டு ஆண்டுக் காலத்தில் எல்லாக் கட்டடங்களையும் கட்டி முடித்துவிட்டுப் பின்னர் இந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் அதற்கான செலவுகளைத் திரும்பப் பெறலாம். ஒருக்கால் ஆயுள் காப்பீட்டுக் கழகம் இந்த உதவியினைச் செய்ய முன் வராவிட்டாலும் தேசிய பாங்குகளோடு தொடர்பு கொண்டு இந்த வாரியத்தினை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கின்றது.

**முகப்பில்**

**முகப்பில் காணப்படும் மலையும் மலையைச் சார்ந்த இடமும் மதுரை மாவட்டத்திலுள்ளவை. ஆத்தூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யம்பாளையத்துக்கு அருகிலுள்ளது. எங்குப் பார்த்தாலும் பசுமையான தென்னந் தோப்புகள் நிறைந்துள்ள இப் பகுதியில் மருதா நதி நீர்த் தேக்கம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இப்பொழுது அங்கு அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன.**

அடுத்து, சாலைவசதிகள் பற்றி இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கிராமச்சாலைகள் அபிவிருத்தித் திட்டம் என்ற அடிப்படையில் 'ரூரல் ரோட்ஸ் ப்ரோக்ராம்' என்ற வகையில் நாம் ரூ. 230 இலட்சம் சென்ற ஆண்டு நிதி ஒதுக்கிச் செலவழித்திருக்கிறோம். தவிர வேலை வாய்ப்பினை அளித்திடும் திட்டத்தின் கீழும் 6,032 கிலோ மீட்டர் தூரத்திற்குச் சாலைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அதற்காக ரூபாய் 240 இலட்சம் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. இதுபோன்று, காவேரி ஆற்றுப் பகுதியில் 'காவேரி கமேண்டு ஏரியா'வில் 'லிங்க் ரோட்ஸ்' போடுவதில் 38·72 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதே போலப் போக்குவரத்து மற்றும் மார்க்கெட்டிங் காம்ப்ளெக்ஸ் என்ற அளவில் 13·82 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மேலும், வறட்சிப் பகுதிகளில் பணிகளுக்கு என ட்ரௌட் ப்ரோன் ஏரியா என்ற அளவில் ரூபாய் 16·49 இலட்சம் செலவழிக்கப்பட்டுச் சாலை வசதிகளை ஏற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தைப்பற்றி நான் அடிக்கடி சட்ட மன்றத்தில் சொல்லி வந்திருக்கிறேன். மாவட்டத்தில் வேலைவாய்ப்பு இல்லாதவர்களில், குறைந்தது ஆயிரம் பேர்களுக்காவது தொடர்ச்சியாகப் பத்துத் திங்களுக்கு வேலையளிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்திய அரசு உருவாக்கியுள்ள திட்டம் இது. இத்திட்டம் 1971-72-ல் 230 ஒன்றியங்களில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதற்காக ரூ. 2·93 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. 84·04 இலட்சம் மனித நாட்கள் பயன்பட்டிருக்கின்றன. அதேபோல் 1972–73-ல் ரூ. 2·40 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. நம்முடைய இலக்கு 53·20 இலட்சம் மனித நாட்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது ஆகும். அதற்காகவே நாம் 1973–74-ல் ரூ. 3·02 கோடி செலவிடத் திட்டமிட்டிருக்கிறோம்.

முனிசிபாலிட்டிகளைப் பொறுத்தவரையில், மிச்சப்படும் தொகையில் ஒரு பங்கைக் கல்விக்காகச் செலவிட வேண்டுமென்ற தன்மையிலே, இப்பொழுது பொதுவாக ஆராய்ந்து அங்கே துண்டு விழுகிற நிலைமையிலே, 75 சதவிகிதத்திற்காகவாவது அவர்கள் கட்டாயம் வரியை வசூலிக்க வேண்டும். வசூலித்து, அதை மிச்சப்படுத்துகிற தொகையிலே ஓரளவுக்குக் கல்விக்கு ஒதுக்க வேண்டுமென்று சொல்லி, அதற்கும் பிறகு துண்டு விழுமானால் அரசாங்கம் ஏற்றுக் கொள்வது என்று முடிவெடுத்து அந்த உத்தரவு, இப்பொழுது பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 75 சதவிகிதத்திற்குக் குறைந்த வரியை வசூலித்து, அந்தத் துண்டு விழுந்து, அதை அரசாங்கத்திலோ செலுத்த வார்களானால், ...

சதவிகிதத்திற்குத்தான் துண்டு விழுகின்ற தொகையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமே தவிர, மற்றத் தொகையைக் கடனாகத்தான் தரும், அதை அவர்கள் எப்படியாவது தர வேண்டுமென்று இப்பொழுது தெரிவித்திருக்கிறோம். கல்வித் துறையிலே, நகராட்சி மன்றங்களிலே எந்த இடுக்கண்ணும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இது செய்யப்படுகிறது. இதன் காரணமாக, அரசாங்கத்திற்கு ரூ. 78 இலட்சம் செலவாகிறது என்றாலும்கூட, நகராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டிருக்கிற சங்கடங்களை நீக்க இந்த முயற்சியினை அரசு மேற்கொண்டிருக்கிறது.

1—4—1973 முதல் எல்லா நகராட்சி மன்றங்களிலும் சைக்கிள் வரி நீக்கப்படுவதை அரசாங்கம் கொள்கை அளவிலே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது ஒருசில நகராட்சிகளிலே சைக்கிள் வரி விதிக்கப்படுகிறது. ஒரு சில நகராட்சிகளிலே சைக்கிள் வரி விதிக்கப்படவில்லை. எல்லா நகராட்சிகளும் 1—4—1973-லிருந்து சைக்கிள் வரி போட வேண்டாமென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. எல்லா நகராட்சி மன்றங்களுமே அந்தப் பணியிலே ஈடுபடும்.

'நகராட்சி நிதி ஆய்வுக்குழு' ஒன்றை நியமிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. நகராட்சியினுடைய நிதிநிலைமைகளைக் கண்டு ஆராய்ந்து, அவர்கள் தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்வது எப்படி என்பதையும், தங்களுடைய செலவினத்தை எப்படிச் சீரமைக்கலாம் என்று அறியவும் ஓர் ஆய்வுக் குழு அமைத்து, அவர்கள் அளிக்கின்ற அறிக்கையை ஆராய்ந்து, எந்த எந்த இனங்களில் வரி விதிக்கலாம், எந்த எந்த இடங்களுக்கு நான்-டாக்ஸ் ரெவின்யூ பெறலாம் என்ற யோசனையை அவர்களிடத்திலே பெற்று, அதன் மூலம் நகராட்சி மன்றங்களுடைய வருவாயைப் பெருக்குவதற்கு வழிவகை பெறலாம் என்ற அளவிலே ஒரு நகராட்சி நிதி ஆய்வுக்குழு, 'முனிசிபல் பிஞன்ஸ் என்குயரி கமிட்டி' அமைக்கலாம் என்றும், அதன் மூலம் அறிக்கை பெறவும் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

நகராட்சிகள் 40 ஆக இருந்தது, இப்பொழுது 90-க்கு




மேல் உயர்ந்து விட்ட காரணத்தால், பணிகள் அதிகம் ஆகியுள்ளன. ஆகவே, இரண்டு வட்டார இயக்குநர்கள் (தனி நிலை-செலக்ஷன் கிரேட் என்ற அளவுக்கு, ஆணையர் ஒப்பான நிலையில்) நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. ஆகவே, இரண்டு ரீஜினல் டைரக்டர்களை நியமிப்பதன் மூலமாக இந்த நகராட்சிப் பணிகள் இலிச் செம்மையாக இருக்கும். 4 பேர் வேண்டுமென்று கேட்டாலும் இப்பொழுது இருக்கிற சூழ்நிலையில் 2 ரீஜினல் டைரக்டர்கள் செலக்ஷன் கிரேட் ஆணையர்க்கு ஈடான வகையில் நியமிக்கப்பட்டு, அந்தப் பணிகளைச் செம்மைப்படுத்துவதற்கான முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக வளர்ச்சி, வட்டார வளர்ச்சியைப் பொறுத்தவரையிலே, செய்யவேண்டிய பல பணிகள் இருக்கின்றன என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். எல்லா ஊர்களும் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். 5, 6 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததை விட அதிகமாக 2 மடங்கு அளவுக்கு மேம்பாடு செய்தாலும்கூட, செய்யவேண்டிய பணிகள் இன்னும் ஏறித்தான் இருக்கின்றன. அவைகள் எல்லோருடைய ஒத்துழைப்பினுடைய அடிப்படையிலே நிறைவேற்றுகின்ற அளவுக்கு இருக்கின்றன. பொதுமக்களும் இதிலே ஒத்துழைக்கவேண்டும். இதிலே பாரபட்சம் காட்டுகிறோம் என்று எடுத்துச் சொன்னார்கள். 1 இலட்சத்து 25 ஆயிரம் ஊராட்சிகள் இருக்கும் போது, ஓரிடத்தில் மட்டும் பாரபட்சம் காட்டுவேன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும். யார் எங்கே தவறு செய்தாலும், சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கிற முறையிலே, காரியங்களைச் செய்கிறோம். நகராட்சி மன்றத்திற்குப் புறம்பான ஒரு தீர்மானம் போடுகிற பொழுது, அந்தத் தீர்மானத்தை ஏன் ரத்துச் செய்யக்கூடாது என்று கேட்கிற அந்தப் பழக்கம் தொடர்ந்து இருந்து வருகிறது. நகராட்சி மன்றங்கள் அவைகளுக்கு உரிய அளவிலேதான் இருக்கவேண்டும். தீர்மானங்கள் போடவேண்டும். ஓரிடத்தில் அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தான் என்று குறிப்பிட்டார்கள். ஆக, அவர் கொண்டு வந்தாலும் சட்டம் சட்டம்தான் என்பதை நிரூபிப்பதற்காக அதை நிராகரித்தோம். அதுவே சிறந்த எடுத்துக்காட்டு. விதிமுறைகளுக்குப் புறம்பான தீர்மானங்கள் கொண்டு வந்தால் ரத்துச் செய்வோம். காங்கிரஸ் உறுப்பினர் கொண்டு வந்தால் தான் ரத்துச் செய்வோம், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கொண்டு வந்தால் ரத்துச் செய்யமாட்டோம் என்று சொல்கிறவர்களுக்குத் தான் இது பயன்படும் என்ற பாளையங்கோட்டை நகராட்சி மன்றம் போட்ட தீர்மானத்தை ரத்துச் செய்தோம். மேலும் மேலும் பணி ஆற்றுவதற்கு எல்லாருடைய ஒத்துழைப்பும் வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு பொதுமக்களுக்குடைய ஆதரவு இதற்கு நிரம்ப இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு இந்தக் காரியங்கள் நல்ல முறையிலே நடைபெறும். மற்ற மாநிலங்களை விட எல்லாத் துறையிலேயும் முன்னே நிற்கிறோம் என்றாலும், இந்தத்துறை எல்லாருடைய ஒத்துழைப்புடன் மேலும் முன்னேறமுடியும். அதற்கு உறுதுணையாக இருந்து யோசனைகளைக் கூறிய மன்ற உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, இந்தத் துறையிலே பணியாற்றிய, பணியாற்றுகின்ற அதிகாரிகள், அலுவலாளர்கள், இயக்குநர்கள், அத்தனை பேருக்கும் அவர்களுடைய பணிகளுக்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



(ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கை விவாதங்களுக்குக் கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் நாவலர் அவர்கள் தந்த பதிலுரை).



# கிராமங்களில் கல்வி வளர்ச்சி

தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஒன்றியங்கள் அதனதன் நிதி வசதிக்கேற்றவாறு ஒரு நியாயமான நிதியை ஒதுக்கி, தொடக்கப் பள்ளிகளைத் திறந்து, பேணி, தொடக்கக் கல்வியின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்துவதும், தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதும் 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 (ஈ) பிரிவின்படி ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கடமையாகும்.

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தொடக்கக் கல்வியை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 27,830 பள்ளிகள் (தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் சுமார் 22,140 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன. எஞ்சியவை உதவி பெறும் பள்ளிகளாக உள்ளன. ஊராட்சி ஒன்றியத் தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளில் 1,24,100 ஆசிரியர்கள் பணியாற்றி 42,00,000 மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.

அரசின் செலவும், ஊராட்சி ஒன்றியச் செலவின் பங்கு விவரமும் வருமாறு :—

| ஆண்டு | | அரசின் செலவு | ஊராட்சி ஒன்றியச் செலவின் பங்கு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1966—67 | .. | 1,190·00 | 314·00 |
| 1967—68 | .. | 1,621·00 | 347·00 |
| 1968—69 | .. | 1,916·00 | 358·00 |
| 1969—70 | .. | 2,147·00 | 373·00 |
| 1970—71 | .. | 2,350·00 | 392·00 |
| 1971—72 | .. | 2,839·00 | 414·00 |
| 1972—73 | .. | 3,200·00 | 570·00 |
| 1973—74 | .. | 3,432·41 | 372·00 |

முன்னுள்ள மூன்றும் பிரிவில் கூறியுள்ளவாறு, ஊராட்சிக் கல்வி நிதிநிலை ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக் கொண்டு, தொடக்கக் கல்விக்கென ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் மானியங்களை மாற்றியமைத்துள்ளது. இதன் விளைவாக, முன்னர்க் கிடைத்த ஒதுக்கீட்டிற்கும் மேலாக, 1972—73-ஆம் ஆண்டு தொடக்கம் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதலாக ரூ. 7 கோடி கிடைக்கும்.

## பள்ளிக் கட்டடங்கள்

ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் மானியங்களை அரசு உயர்த்தியுள்ளது. தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4,000-லிருந்து ரூ. 8,000-க்கும், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ. 7,000 முதல் ரூ. 13,000 வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளது. தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4,000-ம் உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 6,000-ம் குறைந்த அளவில் நன்கொடையாகத் திரட்டப்படவேண்டும்.

அரசு முயற்சி செய்த போதிலும், தொடக்க, உயர் தொடக்கப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய இயலவில்லை. 22,140 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 16,213 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களிலேயே செயற்படுகின்றன. 1,160 பள்ளிக் கட்டடங்கள் கட்டப்படுகின்றன, இம்மாநிலத்திலுள்ள தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகளுக்குப் பள்ளிக் கட்டடங்களைப் படிப்படியாகக் கட்டி முடிப்பதற்கென, ஒரு விரிவான திட்டத்தை அரசு உருவாக்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் அனைத்திற்கும் நிதி உதவி பெற, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை அணுகுவதே இந்தத் திட்டமாகும். மூன்றாண்டுக் காலத்தில் ரூ. 13·83 கோடி செலவில், 7,377 தொடக்கப் பள்ளிக்கட்டடங்கள் 1,112 உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடனுதவியைப் பெற, சட்ட அடிப்படையில் ஊரக வளர்ச்சி வாரியம் ஒன்றினை அமைக்க அரசு ஆலோசனை செய்து வருகிறது. அவ்வாறு அமைப்பதன் மூலம், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடன்களைப் பெற்று, உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கொடுத்து, பின்னர் அவற்றிடமிருந்து திரட்டி, ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்குத் திருப்பியளித்து விடலாம். இது தவிர, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைக்கப் பெற்ற, தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்தும் பள்ளிக் கட்டடங்கள் அமைக்க அரசு உதவி செய்கிறது. " மாநிலப் பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைத்த உதவியினால், சிறப்பு நல நிதியைக் கொண்டு, இப்பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டது " என்ற சொற்கள் கொண்ட ஒரு கல், அக்கட்டடத்தில் பொருத்தப்பட வேண்டும்.




# எண்ணும் எழுத்தும் உருவாகும் விதம்

தழ்களென்ருல், அறிவுக்கு விருந்தூட்டும் கட்டுரைகள், மனதை மயக்கும் சிறு கதைகள், உள்ளத்தை உருக்கும் கவிதைகள் முதலானவற்றைத் தருவது வார-திங்கள் இதழ்கள் அன்றோ?

இவையன்றிப் புதிய புதிய புத்தகங்கள் பல, புதிய புதிய உருவிலே அவ்வப்போது வெளி வந்த வண்ணமிருக்கின்றன. அவற்றிலே உள்ள அச்சு அமைப்புகள் தெளிவாகவும், அழகாகவும், அமையும் போது அந்தப் புத்தகத்தின் மதிப்பு மேலும் உயர்கிறது.

நாளிதழ்கள், வார-திங்கள் இதழ்கள், புத்தகங்கள், துண்டு வெளியீடுகள் முதலியன, அச்சு எழுத்துக்கள் இல்லாமல் குறித்த காலத்தில், குறித்த நேரத்தில் வெளி வர முடியுமா? இவற்றுக்கெல்லாம் அச்சு எழுத்துக்களும், அச்சகங்களே அன்றோ முதற் காரணம்!

அச்சுக்கலை வளர்ந்திரா விட்டால், பண்டைக்கால ஓலைச் சுவடி இலக்கியங்களை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்குமா? மொழி வளம், இலக்கியவளம், அறிவு வளர்ச்சி, சமுதாய வளர்ச்சி என்றெல்லாம் இன்று பரந்து விரிந்து வளர்ந்திருக்குமா? சுருங்கச் சொன்னால் அறிவு வளர்ச்சிக்கு அருந்துணைபுரிவது அச்சுக்கலையே என்று அறுதியிட்டுச் சொல்லலாம்.

அச்சுக் கலையின் உயிர் அச்சு எழுத்துக்கள் என்ருல் அது தவறல்ல. சிறிய பெரியஅளவுகளில், வகை வகையான எழுத்துக்கள் — அவற்றை உருவாக்கும் எழுத்துவார்ப்பட சாலைகள் (Type Foundry) இன்று அச்சுக்கலைக்கு மெருகூட்டிக் கொண்டிருக்கின்றன.

"பான்ட் (Fount) என்னும் சொல், ஓர் எழுத்தினத்தின் எல்லா வகை எழுத்துக்களையும் குறிப்பதாகும். இது முதலில் பவுண்ட் (Found) என்று அச்சு உருக்கி வார்த்தலையோ அச்சு அடித்தலையோ குறிக்கப் பயன்பட்டது. இதிலிருந்துதான் வார்ப்படக்காரர் (Founder), வார்ப்படச் சாலை (Foundry) என்பன வந்தன. முன்னது இலத்தீனச் சொல்லான

என ஆயிற்று".

சில வார்ப்படச் சாலைகளில் கையால் இயங்கும் இயந்திரங்கள் மூலம் எழுத்துக்களைத் தயாரிக்கின்றனர். ஆனால், இங்கோ முழுக்க முழுக்க 'மோனோடைப்' என்னும் நவீன இயந்திரங்கள் மூலம் எழுத்துக்களைத் தயாரிக்கின்றனர். இவற்றில் எழுத்துக்கள் உருவாகும் விதமே விந்தையாக இருக்கும். கண் மூடித் திறப்பதற்குள் எழுத்துக்கள் உருவம் பெற்று வெளி வந்து விடுகின்றனவே!

**அச்சு எழுத்தின் தந்தை!**

உலோக எழுத்துக்கள் கி.பி. 14-ஆம் நூற்றுண்டில்தான் சீனவிலும் கொரியாவிலும் வழக்கில் வந்தன. மரக்கட்டைகளில் எழுத்துக்களைச் செதுக்கி அவற்றை மணலில் அழுத்தி, அதில் உலோகத்தை உருக்கி வார்த்தனர்.

அச்சு எழுத்துக்கள் வார்ப்படத்தில் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் ஜான்கூட்டன்பர்க். அவர் தான் முதன்முதலில் 1450-ல் தனித்தனி எழுத்துக்களைத் தயாரிக்கும் முறையை ஏற்படுத்தினர். இதனால் அவரை 'அச்சு எழுத்தின் தந்தை' என்று கூறுவர்.

1884-ல் லின்பாயிட் பெண்ட்டர் என்ற அமெரிக்கர் எழுத்துக்கரு (Matrix) செய்யும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

'மோனோடைப்' இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ள வார்ப்படச் சாலைகளில் உலகிலேயே மிகப் பெரியது நார்ட்டன் கம்பெனிதான் என்று எழுதுகிறது பிரிட்டனிலிருந்து வெளிவரும் 'மோனோடைப்' என்னும் இதழ்.

அச்சுக்கள் (Types) அச்சு உலோகம் என்ற மூவகை உலோகக் கலவையால் உருவாக்கப்படுகின்றன. அவை, ஈயம், வெள்ளீயம், ஆண்டி

மலேசியா, பெல்ஜியம் ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கின்றன. இம் மூவகை உலோகம் கலப்பதால் என்ன நன்மை?

வெறும் ஈயத்தினால் மட்டும் எழுத்துக்களை உருவாக்கினால் அந்த எழுத்துக்கள் மென்மையாகவும், விரைவில் மழுங்கித் தேய்ந்து போகக் கூடியவையாகவும் இருக்கும். இதைத் தவிர்க்கவே இந்த உலோகங்கள் கலக்கப்படுகின்றன. ஈயக் கலவை குளிர்ந்துவிடும் போது அதனைச் சுருங்க விடாமல் காக்க ஆண்டிமனியும், எழுத்துக்கள் தேய விடாமல் பாதுகாக்க வெள்ளீயமும் பயன்படுகின்றன.

மாதிரி ஒன்று எஃகினுல் அமைக் கப்படுகிறது. இது மிருது வான பித்தளையின் மேலோ, செம்பின் மேலோ வைத்து அழுத்தப்படுகிறது. இது தான் அச்சின் வார்ப்பாகும். அச்சு உலோகத்தை உருக்கி இதற்குள் வார்த்து அது இறுகு மாறு செய்யப்படும். உலோ கம் குளிர்ந்த பின் வார்ப்பி லிருந்து அச்சு வெளியே எடுக் கப்படுகிறது. முன்பெல்லாம் இந்த வேலையினைக் கையினுல் செய்து வந்தார்கள். ஆனுல் இன்ருே, தானே இயங்கும் இயந்திரங்கள் இப்பணியை விரைவில் செய்து முடிக்கின் றன.

எழுத்துக்களைத் தயாரிக்கும் 'மோனேடைப்' இயந்திரத் தில், உருக்கும் ஈயக் குழம் புள்ள ஒரு தொட்டி இணைக்கப் பட்டுள்ளது. எழுத்துக்கான அச்சுரு ( Mould ) இயந் திரத்தில் பொருத்தப்படுகிறது. இயந்திரம் இயங்கும்போது எழுத்துக்கள் மிக விரைவாக உருவாக்கப்பட்டு வரிசை வரிசையாக வெளி வருகின் றன. இந்த விந்தையினை நேரில் கண்டு மகிழ வேண்டும்.

எழுத்துக்களுக்கான அச்சுரு (Mould) இலண்டனில்

60 பேர் பணியாற்றும் இவ் வார்ப்படச் சாலையில், ஒரு மாதத்திற்கு ஏறத்தாழ 12 டன் எழுத்துக்கள் தயாரா கின்றன. தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் எழுத்துக்கள் இங்குத் தயாரிக் கப்படுகின்றன.

அச்சுஎழுத்துக்களின் அளவுப் புள்ளி ( point ) என்ற அலகினுல் குறிப்பிடப்படு வதை நாம் அறிவோம். இவ்வார்ப்படச் சாலையில் 3 புள்ளியிலிருந்து 72 புள்ளி வரையிலான எழுத்துக்கள் தயாராகின்றன. இங்குத் தயாரிக்கப்படும் எழுத்துக்கள் நல்ல தரமாக இருப்பதால் இதற்கு உலகெங்கும் நல்ல வர வேற்பு இருந்து வருகிறது.

—

தமிழ்நாட்டில் மட்டுமின்றி, டில்லி, அமிர்தசரஸ், ஜலந்தர், லூதியானு, பம்பாய், ஆம தாபாத், சூரத், நாசிக், கல்கத்தா, கட்டாக், முதலிய நகரங்களுக்கும் நார்ட்டனின் எழுத்துக்கள் விற்பனையாகின் றன. இவை மட்டுமா? மலேயா, சிங்கப்பூர், நைஜீரியா, ஈராக், போன்ற நாடுகளுக்கும்

குத் தயாரான எழுத்துக்கள் அனுப்பப்படுகின்றன. தமிழ் நாட்டில் தயாரான எழுத் துக்கள் மேலை நாட்டில் நூல் களாக வெளிவருகின்றன என் ருல் நமக்கெல்லாம் பெருமை தானே!

வார்ப்படச் சாலைகளில் உருவாகும் எழுத்துக்களைப் போல வேறிரு சாதனங்களி லும் எழுத்துக்களை உருவாக்க லாம். அவைதான்: 1. லைனே டைப் (Lino type) 2. மோனேடைப் (Mono typ3) லைனே டைப் வரிவரியாக அச் சுக்களைக் கோக்கும்; மானே டைப் தனித்தனியே அச்சுக் களை வார்த்துக் கோக்கிறது.

லைனே டைப் இயந்திரத் தில் ஒவ்வொரு முறையும் புது அச்செழுத்துக்களைத் தயாரிப்பதால் அச்சுக்கள் தேயாமல் தெளிவாக இருக் கும். பல அளவுள்ள எழுத் துக்களையும் இம்முறையில் வார்த்துக் கொள்ளலாம். இது திறமையுள்ள ஐந்து தொழிலாளர்கள் செய்யும் வேலையைச் செய்ய வல்லது.

ஒட்மர் மெர்கன் தேலர் என் பவர் கண்டுபிடித்தார்.

மோனே டைப் முறையில் அச்சுக் கோப்பதும், எழுத் துக்களை வார்ப்பதும் ஒரே இயந்திரத்தில் செய்யப்படுவ தில்லை. இந்த இயந்திரத்தில் எழுத்துக்கள் குறித்த பொத் தான்களை அழுத்தினுல், ஒரு நீண்ட காகிதச் சுருளில் ஒவ் வொரு எழுத்திற்கும் சரியாக ஒரு துவாரம் ஏற்படும். இவ் வாறு துவாரங்கள் கொண்ட சுருளை, வார்ப்பட இயந்திரத் தில் மாட்டி விட்டால் அது துவாரங்களுக்கு ஏற்ற எழுத் துக்களைத் தனித் தனியே வார்த்து வரிவரியாக தக்கபடி சேர்த்துக் கொண்டே வரும். இம்முறையிலும் பல அள வுள்ள எழுத்துக்களை வார்க்க லாம். மோனே டைப் முறை யை 1898-ல் டால்பர்ட் லான்ஸ்டன் என்பவர் வழக் கத்திற்குக் கொண்டு வந்தார்.

லைனே டைப் முறையில் ஒரு வரியில் ஒரு பிழை ஏற்பட்டா லும் அந்த வரி முழுவதையும் திருப்பி வார்க்க வேண்டும்.



மோனே டைப் முறையில் பிழையான எழுத்தை மட்டும் வார்த்தால் போதுமானது.

இவ்விரு சாதனங்களும் பத்திரிகை அலுவலகங்களில் மிகுதியாகப் பயன்படுகின்றன,

'எண்ணும் எழுத்தும் கண் ணெனத் தகும்' என்பதற் கிணங்க எழுத்தறிவு வளர்ச் சிக்குத் துணை நிற்கும் இத் தகைய அருஞ் சாதனங்கள், வாழ்க்கை வளத்துக்கு மிக இன்றியமையாததாக விளங்கு கின்றன. எழுத்துக்களின் அருமையை உணர்ந்த வள் ளுவர்கூட,

"எண்ணென்ப ஏனை எழுத்
தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்ருர்.

எழுத்துச் செல்வம் நமக் குக் கிடைத்தற்கரிய செல்வ மாகும். அதனைப் பயன்படுத் திக் கொள்வார்தான் பெரு மளவில் பெருக வேண்டும். எழுத்துச் சுதந்தரம் இருக் கிறது என்பதற்காக எதை யும் எழுதாமல், நடுநிலை நின்று, கண்ணியம் தவருமல், கடமையினின்று வழுவாமல், எழுதுதல் வேண்டும், அந்த எழுத்துக்கள்தான் சமுதாய வளர்ச்சிக்குப் பயன்தரும்.

அறிவுக்கு விருந்தூட்டும் கையெழுத்துப் பிரதிகள், அச்செழுத்துக்களால் நூல் வடிவம் பெற்றுப் பெருகிட வேண்டும், நல்ல நூல்கள் பெருகப் பெருக சமுதாயத் தில் மறுமலர்ச்சியும் விழிப் புணர்ச்சியும் ஏற்படும், இதற்கு வழிகோலும் அச்சு எழுத்துக்கள் — அச்சகங்கள் பல்கிப் பெருகிட வேண்டும்!

—பி.வி.ஐ



# அச்சுக் கலை வரலாறு

மேடு பள்ளங்கள் கொண்ட பரப்பொன்றின்மேல் மை தட விக் காகிதத்தின் மேலோ, வேருெரு பரப்பின்மேலோ அழுத்திப் பரப்பிலுள்ள உருவத்தை அதில் தோற்று விப்பது அச்சடித்தல் எனப் படும். பல நூற்ருண்டு களாகவே இம்முறை இந்தியா விலும், சீனுவிலும் வழங்கி வந்துள்ளது. ஐரோப்பாவில் இது 15-ஆம் நூற்ருண்டில் தான் அறியப்பட்டது. சீனு வில் ஒரு பலகையில் எழுத் துக்களைச் செதுக்கிப் பக்கம் பக்கமாக அச்சடித்தார்கள். துணிகளில் அச்சடிக்க இம் முறை நம் நாட்டில் நிலவி யது. ஐரோப்பாவிலும் இதே அச்சடிப்பு முறை முதலில் ஏற்பட்டது. ஆனுல் இது மிகத் தொல்லையானதாக இருந்ததோடு இம்முறையில் ஒரு பக்கத்தை அச்சடிக்கப் பல நாள் பிடித்தது. ஆகை யினுல் ஒவ்வொரு எழுத்திற் கும் ஒவ்வொரு அச்சைச் செதுக்கிச் சொற்களுக்கேற்ற எழுத்துக்களை ஒன்று சேர்த்து அச்சடிக்கும் முறை வழக்கத் திற்கு வந்தது. முதலில் மரத்தில் செதுக்கப்பட்ட எழுத்துக்களைப் பயன்படுத்தி ஞர்கள். உலோகத்தில் வார்க்கப்பட்ட எழுத்துக்கள் பின்னர் புழக்கத்திற்கு வந்தன.

தமிழ்நாட்டில் 16-ஆம் நூற்ருண்டில் மேனுட்டி லிருந்து வரவழைக்கப்பட்ட மர எழுத்துக்களைக் கொண்டு சில கிறித்தவ நூல்கள் அச் சடிக்கப்பட்டன. தற்காலத் தில் உள்ளவை போன்ற அச்சு எழுத்துக்களையுடைய அச்ச கங்கள் பின்னர்த் தோன்றின. 1713-ல் தரங்கம்பாடியில் நிறுவப்பட்ட லூதரன் மிஷன் அச்சகமும், சென்னையில் தொடங்கிய எஸ். பி. சி. கே. அச்சகமும் இந்தியாவிலேயே முதன்முதலில் இவ்வாறு அமைக்கப்பட்ட அச்சகங்கள் எனலாம். இந்தியர் அச்ச கங்களை நடத்தக்கூடாதென்ற சட்டம் 1835-ஆம் ஆண்டு வரை அமலில் இருந்ததால் நெடுநாள் வரையில் நம் நாட்டில் அச்சகங்கள் ஏற்பட வில்லை.

பள்ளிக் கட்டடங்களுக்கென, இதுவரை ரூ. 52·60 இலட்சம் தான் ஒதுக்கப்பட்டது. ஆனால், பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டிய திட்டத்தின் முதன்மையைக்கருதி 1973–74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 92·27 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியைக் குடியிருப்புகள்:—ஊர்ப்பகுதியில் பணியாற்றும் ஆசிரியைகளுக்குத் தகுந்த போதுமான இருப்பிட வசதி அளிக்கவேண்டுமென்பதை அரசு உணர்ந்துள்ளது. எனவே இதற்கென 1973–74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரை 1,485 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

புதிய உணவுத் திட்டம்:—ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நிறுவியதனால் அவற்றின் துணைகொண்டு, நாட்டை உருவாக்கும் இம்மதிய உணவுத் திட்டத்தைச் சீராகச் செயற்படுத்த முடிகிறது. இம்மாநிலத்திலுள்ள எல்லாத் தொடக்கப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயற்பட்டு வருகிறது.



**தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்களால் அண்மையில் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த சிந்துப்பட்டியில் திறந்துவைக்கப்பட்ட பள்ளி**

அரிசன நலப்பள்ளிகளில் கற்கும் மாணவர்கள் உட்பட, இம்மாநிலத்தில் 19 இலட்சம் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மதிய உணவுக் குழு உள்ளது. அதற்கு ஊராட்சித் தலைவர் தலைவராகவும், பள்ளித் தலைமையாசிரியர் செயலாளராகவும் பணியாற்றுகிறார். 1973–74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 218·34 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## நலவாழ்வுப் பணிகள்

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் :—ஆரம்பச் சுகாதார நிலையம் மேல் நிலையாக நிறுவப்பட்ட பல நோக்கப் பிரிவாகும். சமுதாயத்திற்குத் தடுப்புச் சிகிச்சையளிப்பதிலும் அக்கறை கொண்டு, மக்களின் உடல்நலனை நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். இரண்டு வட்டாரங்கள் தவிர, ஏனைய எல்லா வட்டாரங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஆத்தூர், துரிஞ்சாபுரம், கீழ்ப்பெண்ணாத்தூர், முடக்குறிச்சி, கொடுமுடி, வெள்ளக்கோயில், தூக்கநாயக்கன் பாளையம் ஆகிய இடங்களில் இரண்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் இரண்டாவதாக இன்னொரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது நிலையத்திற்காக 5 ஏக்கர் நிலத்தையும் 10,000-ரூபாயையும் மக்கள் நன்கொடையாகத் தரவேண்டும்.

தாய்–சேய் நலநிலையங்கள் :—தாய்—சேய் நலப் பணிகளைத் தங்கள் பகுதிகளில் வளர்ப்பது, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத்திட்டத்திற்காகும் செலவை ஊராட்சி ஒன்றியம் சமாளிக்கும் வகையில், மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை, அரசு உதவி மானியமாகத் தருகிறது. இலட்சம் பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய ஊராட்சி ஒன்றியங்களில் 10-க்கும் மேற்பட்ட தாய், சேய் நல நிலையங்களைப்படிப்படியாகத் தொடங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் தாய், சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,880 ஆகும்.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் :—மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்குத் தேவையான நிதிகளை ஊராட்சி ஒன்றியங்கள் ஒதுக்குகின்றன. இம்மாநிலத்தில் 195 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் உள்ளன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களைத் தவிர, ஊரக மருந்தகங்களும் ஊராட்சிகளில் உள்ளன. மாநிலத்தில் 260 ஊரக மருந்தகங்கள் உள்ளன. மருந்தகங்களை நிர்வகிப்பதற்கும் மொத்தச் செலவில் 50 சதவீதம், அது ஆண்டொன்றிற்கு ரூ. 5,400-க்கும் மேற்படாமல் நிதியுதவியைப் பெற, ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது.

குடும்ப நலத்திட்டம் :—குடும்ப நலத் திட்ட வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட குடும்ப நல வேலைத் திட்டத்தின் கீழ், இம்மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன. 1974-ஆம் ஆண்டில், பிறப்புத் தொகை ஆயிரம் பேர்களுக்கு 40 என்பதை 25 எனக் குறைப்பதே அரசின் குறிக்கோளாக இருக்கிறது. வெவ்வேறு மாநிலங்களில் உள்ள மக்கள் தொகை, பிறப்பு விகிதம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே, பல்வேறு நலத்திட்ட முறைகளிலும் திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. குடும்ப நலத்திட்டத்தின் கீழ் ஊராட்சிகளால் ஊக்குவிக்கப்பட்டு, அதன் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் அறுவைச் சிகிச்சைக்கும் 10-ரூபாயை ஈட்டு மானியமாகப் பெற ஊராட்கள் தகுதியுடையன. அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளச் செல்பவரின் போக்குவரத்துச் செலவுக்கும், ஒன்றியப் பகுதிகளில், குடும்ப நலத் திட்டத்தை விளம்பரப்படுத்துவதில் ஏற்படும் செலவிற்கும் இத்தொகை அளிக்கப்படுகிறது.

ஒவ்வோராண்டும் மறு பயிற்சி முகாம் ஒன்றினை ஊராட்சி ஒன்றியங்கள் நடத்துகின்றன. இவற்றில் ஊர்த்தலைவர்கள் பங்கு பெறுகின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது.

# ஊர் வளர்ச்சித் திட்டங்கள் சில தகவல்கள்

**ஊ**ர்ப்பணிகளில் மானியங்களில் கிடைக்கும் நிதிகளைக் குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகளை அமைத்தல், பள்ளிக் கட்டடங்களை அமைத்தல் ஆகியவற்றில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவிடுகின்றன. 31—12—1972 ஆம் நாளைய நிலவரப்படி, செய்து தரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரங்கள் வருமாறு :—

1. மேல்நிலை நீர்த் தொட்டிகள்—5,699.

2. கிணறுகள்—72,567.

3. அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள் (கி.மீ.)—36,644.

4. பள்ளிக் கட்டடங்கள் (கட்டப்பட்டவை)—16,123

1973–74-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீட்டில் ஊர்ப் பணிகள் திட்டத்திற்கென 7384·2 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு முதன்மையான இடம் அளித்துள்ள போதிலும் கூட, பிரச்சினையில் ஒரு சிறிய பகுதியினைத்தான் இதுவரை அணுக முடிந்துள்ளது. விரிவான அடிப்படையில், பெருந்திட்டமிட்டு, இப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வு காணப் புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஊர்ப்புறங்களில், குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொண்டு செயற்படுவதற்கெனத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை அரசு 1969-ஆம் ஆண்டில் உருவாக்கியது.

சேகரிக்கப்பட்ட தகவல்களிலிருந்து, 5,551 ஊர்கள், சிற்றூர்களில் நிலையான குடிநீர் ஆதாரங்களே இல்லையென்றும், 12,858 ஊர்கள், சிற்றூர்களில் தற்போதுள்ள குடிநீர் ஆதாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டுமென்றும் நோய் பரவக் கூடிய 2,059 ஊர்கள், சிற்றூர்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்படவேண்டுமென்றும் அறியப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மூன்றினங்களுக்கும் ரூ. 40 கோடி தேவைப்படுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

பற்றுக்குறை, "காலரா" தொற்றும் ஊர்கள் தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊரகப்பணிகள்) கண்டறிந்துள்ளார். அவ்வூர்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தையும் அவர் உருவாக்கியுள்ளார். அத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் பாறைகள், படிந்துள்ள எல்லா இடங்களிலுமுள்ள பற்றுக்குறை, 'காலரா' தொற்றும் ஊர்களில் "யூனிசெப்"பின் உதவியைக் கொண்டு ஐந்தாண்டுகளுக்குள்ளாக 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவ, இத்திட்டம் வகை செய்கிறது. துளைக்கருவிகளையும், இதர அவசியமான சாதனங்களையும் "யூனிசெப்" உதவியாக அளிக்கும். 8,850 குழாய்க் கிணறுகளை நிறுவ, அவற்றினைப் பராமரிக்கும் செலவு ரூ. 271 கோடியாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறைவேற்றப்படுகிறது.

100 சதவீத மைய உதவியுடன் கூடிய ரூ. 20 கோடி திட்டமொன்றினை 1972–73-ஆம் ஆண்டிற்கு, நாடு முழுவதற்குமாக, இந்திய அரசு உருவாக்கியுள்ளது. 1973–74-ஆம் ஆண்டிற்கு ரூ. 40 கோடி கொண்ட ஒரு திட்டமும் மைய அரசிடம் உள்ளது. நிலையான, பாதுகாப்பான குடிநீர் அவசரமாகத் தேவைப்படும் மண்டலங்கள் அல்லது பகுதிகளுக்கு, குடிநீர் வழங்க ஆவன செய்வதே இந்த மைய அரசுத் திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும். ஊர்ப்புறங்களின் குடிநீர் வழங்கும் இவ் விரைவுத் திட்டத்தினைச் செயற்படுத்தும் பொறுப்பு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் விடப்பட்டது. அந்த வாரியமும், ரூ. 252·13 இலட்சத்திற்குத் திட்டத்தை உருவாக்கி, இந்திய அரசிற்கு அனுப்பியுள்ளது. இதனுல் 41 திட்டங்கள் தருமபுரி மாவட்டத்திலும், 295 இராமநாதபுரம் மாவட்டத்திலும் நிறைவேற்றப்பட வகை செய்கிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுப்பிய திட்டத்திற்கு ஒப்புதல் தந்த மைய அரசு, இம்மாநிலத்திற்கென, 1972–73-ல் ஒதுக்கப்பட்ட ரூ. 1 கோடி மதிப்புள்ள திட்டம் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டுமென்று கூறியுள்ளது. ஆனல், இந்த ரூ. 1 கோடிக்குள்ளே நிறைவேற்றப்படக்கூடிய திட்டங்களைத் தேர்ந்தெடுக்கும் தீர்ப்புரிமை மாநில அரசிடம் விடப்பட்டுள்ளது. 1973–74-ஆம் நிதியாண்டில், இம் மாநிலத்திற்குக் கிடைக்கக் கூடிய ஒதுக்கீடு ரூ. 2 கோடியாக இருக்கலாம்.

## எல்லைகளைப் பராமரித்தல்

தங்களுடைய பொறுப்பிலுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்கென ஊராட்சி ஒன்றியங்களுக்கு 'உள்ளூர்ச் சாலைகள் மானியம்' என்ற மானியம் அளிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலுமுள்ள மக்கள் தொகையில் தலைக்கு 18 காசுகள் வீதம் என்ற வீதத்திலும், ஊராட்சி ஒன்றியங்கள் பராமரிக்கும் சாலைகள் சாதாரணமானவையா, அல்லது கடற்கரைப் பகுதியா மற்றும் கழிமுகப் பகுதியா அல்லது மலைப்பாங்கான பகுதியா என்ற அடிப்படையில் மைல் ஒன்றிற்கு முறையே, ரூ. 600, 800, 1,500 என்ற வீதத்திலும் வழங்கப்படுகிறது. 1973–74-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 119·31 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எல்லா ஊர்களையும் முக்கியமான சாலைகளுடன் இணைக்கும் வகையில் தரமான சாலைகளை அமைப்பதே, அரசின் தற்போதைய கொள்கையாகும். சாலைகளை அமைக்கும் பணிகளால், ஊர்ப்புறங்களிலுள்ள மக்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக் கிடைக்கிறது. இதனைக் கருத்திற்கொண்டு, 1,500-க்கும் மேற்பட்ட மக்களைக் கொண்ட குடியிருப்புக்கள் எல்லாவற்றையும் முக்கியச் சாலைகளுடன் இணைக்கும் ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றினை அரசு தீட்டியுள்ளது.

# வெண்பாப் போட்டி

## தொழில்துறையில் தமிழக அரசின் தொண்டு

●செல்வத்தை நம்நாட்டில் சேர்க்கும் தொழில்வளத்தைக்
கல்லில், இரும்பில், கனிப்பொருளில்,—சில்லருவி
நீர்மீதும் கண்டோம் ; நெருங்குகிறோம் மின்னணுவால்
பாரறியும் நம்மையினிப் பார்.

— சு. மலர்க்கொடி, குளக்காநத்தம்

சர்க்கரையா? காகிதமா? சார்ந்த பிறபொருளா?
அக்கரைக்கு நாம்சென்ற தக்காலம்—தக்கபடி
ஆலைத் தொழிலமைத்தே அத்தனையும் இந்நாட்டில்
வாழ வகுத்தார் வழி!

— ம. சக்குபாய், உடுமலைப்பேட்டை

நெய்வேலி, சேலம் நெசவுக்குக் கோயமுத்தூர்
நெய்மணக்கும் தஞ்சாவூர் நெல்லுக்குப்—பொய்யில்லை
தூத்துக் குடிமுத்து தொல்புகழாம் பல்தொழிலைப்
பார்த்தால் வடித்திடலாம் பா!

— புலவர் கு. பழனிச்சாமி, கவுந்தப்பாடி

வாழ்வில்லம், நோயுதவி, வைப்புநிதி, சேமிப்பும்
தாழ்வின்றிப் பாட்டாளி தானடையக்—காழ்ப்பகற்றி
ஆலையிலே கண்ணியமாய் ஆற்றும் தொழிலுறவால்
நாளை உலகம் நமது.

— து. ம. இராமசாமி, துடியலூர்

நாளும் தொழில்வளர்த்து நாட்டின் நலிவகற்றி
ஆளும் தமிழரசை ஆர்எதிர்ப்பார்?—பாழும்
வறுமையினை வீழ்த்தி வளங்காண வேண்டிப்
பொறுப்பேற்றுக் கொண்டவரைப் போற்று!

— சண்முக தாயுமானவன், பொன்மலை

இந்திய நாட்டில் இணையற்ற மாநிலமாய்
செந்தமிழ் நாடு செழிப்புறவே—விந்தையுடன்
பாட்டாளி செய்தொழிலில் பங்குபெற வேசட்டம்
போட்டார் கலைஞர்இப் போது.

— கோ. புகழேந்தி, புதுவை

தொழில்துறை யாவும் தொழிலாளர் யாரும்
செழிப்பில் திளைத்திடச் செய்யும்—அழிவிலாத்
திட்டங்கள் பண்ணியே தேர்ந்தாளும் நல்லரசு
சுட்டபொன் ஒக்குமெனச் சொல்.

— விநோதலீலன், இரா. வெள்ளோடு

சிற்றூரும் பேரூரும் சீராய்த் தொழில்பெருகி
பொற்காலம் என்றெவரும் போற்றிடவே—பற்பலவாய்
ஊக்கப் படுத்தி உதவும் தமிழரசைக்
காக்கும் தமிழினம் காண்!

— கோ. அருளாழி, புதுவை

நிலத்தில் பிறந்தாலும் நீலக் கடலில்
குலம்வாழச் சென்றுழைக்கும் கோனார்—நலம்மலர
நல்லவலை தந்திட்டார்; நாவாயும் கொள்ளென்றார்;
தொல்லை ஒழிக்கும் துணை.

— கா. அப்துல்லா, கனியூர்

●பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்
சு. மலர்க்கொடி,
குளக்கா நத்தம் (அஞ்சல்),
பெரம்பலூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

## வெண்பாப் போட்டி

வெட்ட வெளிகள் வியனுர் தொழிற்சாலைக்
கட்டடங்க ளாகநற் காட்சிதரும்—பொற்புதனைப்
பாடுதற்கு நான்குவரிப் பாட்டால் முடிந்திடுமோ?
ஈடுண்டோ எம்மரசுக் கிங்கு!

— புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை

பல்தொழிலும் நல்வளனும் பாரிற் பெருகிடவே
இல்லைகாண் துன்பமே என்றுக—நல்லபல
திட்டமிட்டு நாடித் தொழில்வளர்த் தார்தம்மை
இட்டமுடன் பாடிடுவேன் இன்று.

— புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனா

தொழிற்கல்வி கற்றோர் தொழில்துவங்க வங்கி
வழங்கும் கடனுதவி வாய்த்த—தொழிற்சலுகை!
இன்னும் தமிழக மெங்கும் தொழில்பெருகப்
பன்னீராண் டுத்திட்டம் பார்.

— வை. இரத்தினசாமி, தேத்தாகுடி

கைத்தொழில்கள், பட்டறைகள், கைவினைகாண் கூடங்கள்,
மெத்தத் தொழிலகங்கள், ஏற்படுத்தி—எத்தொழிலும்
நாட்டுடைமை ஆக்கிவரும் நம்மரசின் நற்பணிவெண்
பாட்டதனில் பாடலே பாங்கு.

— புலவர் இரா. சுப்பிரமணியன், காஞ்சி

தேர்விட்டான் முல்லைக்கு வேள்பாரி; செந்தமிழின்
பேர்விட்டார் 'சாராபாய் பேட்டை' யென்றார்—சூர்விட்ட
அன்பு மடமென்போம்; யாரிதனைத் தெற்றென்பர்?
நன்று தொழில்வளர்க்கும் நட்பு.

— தமிழ்மணி, பல்லடம்

ஆய்ந்த தனிச்சலுகை, ஆற்றலறிந் தேற்றதொழில்,
வாய்ந்த கடனெல்லாம் வந்துதவி,—தோய்ந்திடும்
மக்களுக்கு வேலை மனமார வாய்ப்பளிப்பு,
தக்கதல்ல திட்டமிது தான்.

— மா. சே. இராசு, திருப்பூர்

ஏட்டுப் படிப்பையே எந்நாளும் நம்பாமல்
வாட்டும் பசிநீங்கி வாழ்தற்கு—நாட்டினிலே
கைத்தொழிலும் செய்யக் கடனுதவும் நம்மரசை
எத்தினமும் போற்றல் இனிது.

— புலவர் ப. சம்பந்தன், திருக்கோவலூர்

சிறுதொழில்கள், வேளாண்மை சீர்பெறவே நாளும்
உறுபொருளைத் தந்துதவி, ஊக்கிப்—பெருமளவில்
நாட்டில் தொழில்கள் நலமுறவே நம்மரசு
காட்டிடுதே நல்லார்வம் காண்.

— புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்

எழிலோங்கும் இந்நாட்டில் எங்கெங்கும் ஆலைத்
தொழிலோங்கச் செய்திட்டார், ஏழை—விழியெங்கும்
இன்பம் தழைத்தோங்கும் இவ்வரசின் நற்றொண்டால்,
நன்றி வழிந்தோங்கும் நன்கு.

— புலவர் கோமுகி, ஆதமங்கலம்

நாடெங்குஞ் சீராக நற்றொழிற் கூடங்கள்
தேடி அமைத்தே திறமாக;—வீடெங்கும்
கொல்பசி போக்கவே கூட்டுப் பணியாற்றும்
நல்லரசின் சாதனையை நாடு.

— ப. சக்திவேலன், திருச்சி

தொழிற்றுறையில் நல்லமைதி தோன்றிவர, நாட்டின்
தொழிலாளர் வாழ்வியலில் துய்க்க—விழிபோன்றே
உற்றுதவி செய்யும் உயர்தமிழ் நாட்டரசைப்
பொற்செல்வி நீபாடிப் போற்று!

— வி. மு. உலகநாதன், கு...

நாடு வளம்பெற நற்றொழில் ஏற்றமுற
ஈடில்லாச் சேலத்து இரும்பாலை—பீடுறவே
எண்ணில் தொழிலகங்கள் ஏராளம் செய்திட்ட
வண்ணத் தமிழரசை வாழ்த்து.

— புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி

இத் திட்டத்தினை நிறைவேற்ற, ஊர்திகளின் பேரில் 10 சதவீத மேல் வரி விதித்து, அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, ஊர்ப்புறச்சாலைகள் வளர்ச்சி நிதியை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. இந்த ஊர்ப்புறச் சாலைகள் வளர்ச்சி நிதியினை, இந்திய அரசின் நன்கொடைத் தொகையுடன் இணைத்து, சிறப்பு வேலை வாய்ப்புத் திட்டச் செலவில் இந்திய அரசும், மாநில அரசும் 50:50 சதவீதம் பகிர்ந்து கொள்ளும்.

281 கிலோமீட்டர் நீளத்திற்கு, எல்லாப் பருவங்களுக்கும் ஏற்ற இணைப்புச் சாலைகளை அமைக்கவும், தற்போதுள்ள 4,280 கிலோமீட்டர் ''கச்சா''ச் சாலைகளை மேம்படுத்தி, எல்லாப் பருவங்களுக்கு மேற்ற சாலைகளாக அமைக்கவும் ரூ. 19 கோடி மதிப்புள்ள ஒரு கோரிக்கையை ஊரக வளர்ச்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை, ஊரகப் பணிகள்) அனுப்பினார். அக்கோரிக்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தலைமைப் பொறியாளரின் (நெடுஞ்சாலை, ஊரகப் பணிகள்) 'முதல்நிலைத் திட்டம் ரூ. 6 கோடி மதிப்புள்ளதாகும். அதில் அடங்கியுள்ளவை வருமாறு :—

(அ) குறுக்கே செல்லும் வடிகால் பணிகளையும் உள்ளடக்கி, 200 ஊர்களை இணைத்து 281 கிலோமீட்டர் நீளமுள்ள எல்லாப் பருவத்திற்குமேற்ற இணைப்புச் சாலைகள்—இதற்கு ரூ. 1·50 கோடி செலவாகும்.

(ஆ) ஊர்ப்புறச் சாலைகளுக்குக் குறுக்கே வடிகால்களை அமைப்பதில் தற்போது எல்லாப் பருவத்திற்கு மேற்றவாறில்லாத '' கச்சா '' சாலைகளில் 1,427 கிலோமீட்டர் சாலைகளின் தரத்தை உயர்த்தி, எல்லாப் பருவத்திற்கும் ஏற்ற சாலைகளாக அமைத்தல்—இதற்கு ரூ. 4·50 கோடி.

குறைந்த நிதி வசதியின் காரணமாக, இத்திட்டம் ஐந்தாண்டுக் காலத்திற்குள் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தினுல் பெருவாரியான மக்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புள்ளது. மறைமுகமாகக் கிடைக்கும் வேலைகளைத் தவிர, நேரடியாகவே 15,000 சாதாரண மானவர்களுக்கும், 500 விற்பன்னர்களுக்கும் வேலை கிடைக்கும்.

1972–73-ஆம் ஆண்டுக்குரிய திருத்திய மதிப்பீட்டில் ரூபாய் 300 இலட்சமும், 1973–74-ஆம் ஆண்டிற்கு ரூ. 300 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பேருராட்சிப் பகுதிகளில் புழுதிபடியாச் சாலைகளை அமைப்பதில் பேருராட்சிகளுக்கு அரசு பாதி மானியத் திட்டம் ஒன்றினை நிறைவேற்றி வருகிறது. 1973–74-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் இதற்கென ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சிறிய நீர்ப்பாசனம்

தமிழ்நாட்டில் சுமார் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் உள்ளன. அவற்றுள் ஊராட்சி ஒன்றியங்களிடம் பேணுதற்காக சுமார் 24,000 ஒப்படைக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசன வாயில் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையாவது கவனம் பெற வேண்டுமென்ற அடிப்படையில், பேணுதல் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு யோசனை கூறப்பட்டுள்ளது.

சிறிய நீர்ப்பாசனத்திற்கான ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒவ்வோராண்டும் அவ்வாண்டுத் தேவையினையொட்டி, ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 1973–74-ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 90·44 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைகள்

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தின் தொழில் நுட்ப உதவி, ஆலோசனைகளை ஏற்று, கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில்திட்ட வேலைகள், ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படுகின்றன.

இதுவரை ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்ட கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைப் பிரிவினைகள் அனைத்தையும் தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மாற்றும் பிரச்சினை அரசின் ஆய்வில் உள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு இவை தொடர்பாகவுள்ள சொத்துக்கள், கடன்கள், மற்றும் இப்பிரிவுகளைச் செயற்படுத்துதற்குரிய விதி வரம்புகள் ஆகியவை உருவாக்கப்பட்டு வருகின்றன.

கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில்கள் திட்டத்திற்கு 1973–74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

செங்குளம் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத்தின் கிணறு வெட்டப்படுகிறது





# மாலைக்கு ஏங்கிறள் ஒரு மங்கை

" மாலையாவது வாங்கிக்கலாமா ?''

—அமுதாவின் குரலில் ஏக்கம் இழையோடிற்று; விரக்தியின் விளிம்பும் அதில் நிழலாடிற்று.

அவளோடு நெருங்கி அமர்ந்து அவளது தோள்பட்டை மீது கையை வைத்திருந்த கதிரவன், அவளது நிலா முகத்தைத் தன் விழிகளுக்கு நேராகத் திருப்பினுன்.

'' என்ன அமுதா இது ? உன் கேள்வி ஒரு மாதிரியாக இருக்கிறதே !''—வறட்டுச் சிரிப்பினூடே வருத்தத்தையும் குழைத்துக் கேட்டான் அவன்.

'' அதற்கில்லை ; நம்முடைய திருமணத்திற்கு எந்த மங்கலப் பொருளையும் வாங்கவில்லையே ! அதைப் போல மாலையும் தேவையில்லைதானே என்று நினைத்தேன்.''

''பகுத்தறிவுத் திருமணத்திலே மாலை மாற்றிக்கொள்வது தானே முக்கியமான நிகழ்ச்சி !''

'' ஆனுல், நாம் செய்துகொள்ளப்போவது பதிவுத் திருமணம் தானே! அதற்குக் கையெழுத்து மட்டும் போதாதா ?''—வழக்கமான கேலிச் சிரிப்பு அமுதாவின் பவள வாயிலிருந்து வழிந்தது ; ' குத்தலும் ' அதில் கொடி கட்டிப் பறந்தது.

கதிரவன் அவளுடைய குத்தல் சிரிப்பைக் கண்டு கோபங் கொள்ளவில்லை ; அந்த மணிச் சிரிப்புத்தானே அவனை மயக்கி சார்த்த மதுக் கிண்ணம் !

அவன் விளக்கம் அளித்தான்.

'' நாம் செய்துகொள்ளப் போவது பதிவுத் திருமணந்தான் என்றுலும், எல்லா வகையிலும் பகுத்தறிவோடு இசைந்த திருமணந்தான். இதிலே மாலை மாற்றிக்கொள்வதை மட்டும் முக்கியமானதாக வைத்திருப்பது ஏன் தெரியுமா ?''

'' ஏனும் ?''

'' நாம் செய்துகொள்ளப் போகிற வாழ்க்கை ஒப்பந்தத்தைக் குறிக்கும் அருமையான சொல் ' மணம் ' என்பது அல்லவா ? அந்த மணத்தையே பிரதிபலிக்கின்ற ஒரு காட்சிப் பொருள்—ஒரு பருவப் பொருளும்—இந்த வாழ்க்கைத் திருப்பத்தில் இடம் பெற்றுக் கண்ணுக்கு அழகையும், நெஞ்சுக்குள் மணத்தையும், நினைவெல்லாம் இனிப்பையும் தவழவிட வேண்டும் என்பதற்காகத் தான் மாலையை முக்கியமாக மாற்றிக் கொள்கிறேம்.''

''உங்கள் விளக்கம் பிரமாதம். எங்கே நீங்கள் மாலையையும் வேண்டாம் என்று சொல்லிவிடுவீர்களோ என்று நான் எவ்வளவு பயந்தேன் தெரியுமா ?''

—மகிழ்ச்சிப் பெருக்கோடு அமுதா எதிரே தெரியும் சிறு கண்ணுடி மூலம் தங்களைக் காரோட்டி கவனிப்பாரே என்கிற கூச்சங்கூட இல்லாமல் அவனுடைய கழுத்திலே தன் முகத்தையும் பதித்தாள்.

'' டிரைவர் ! அந்தப் பூக்கடைப் பக்கம் வந்ததும் மறக்காமல் நிறுத்துங்கள்'' —என்ருன் கதிரவன்.

* * * *

அந்த வாடகைக் கார் விரைந்து பறந்தது ; அதை விட வேகமாகப் பறந்தன அமுதாவின் நினைவுகள்.

கு. மனோரமேலியான்

பலத்த எதிர்ப்புகளுக்கிடையே தான் கதிரவனின் கரத்திலைப் பற்றத் துணிந்தாள் அமுதா.

உயர்நிலைப் பள்ளியில் பயின்று கொண்டிருந்த அந்தச் சின்ன வயதிலிருந்தே அவளது உள்ளத்தினுள்ளே பெரிய ஆசையொன்று நெட்டிலிங்க மரம்போல நெடிதாக வளர்ந்து கொண்டிருந்தது.

காந்தியடிகளை — லெனினை— சர்ச்சிலை — ரூஸ்வெல்ட்டை — மணந்துகொண்ட அந்தந்த மனைவியர்கள் தத்தம் கணவர்களுக்கு வந்து சேரும் புகழ்மாலைகளைக் கண்டுகண்டு எத்தகைய பூரிப்பு வெள்ளத்திலே மிதந்து மிதந்து திளைத்திருப்பார்கள் ! அத்தகைய பெருமித நிலையைப் பெறுகின்ற வகையில்—பொதுவாழ்வில் ஈடுபட்டுப் புகழொளியை வீசுகின்றவரே தனக்கும் கணவராக வாய்த்தால் எவ்வளவு நன்ருக இருக்கும் என்பதே அமுதாவின் ஆசை.

ஆனுல், அது அவ்வளவு எளிதில் நிறைவேறக்கூடியதாக இல்லை.

ஏழ்மையின் தீ நாக்குகள் இடையருது அவளது குடும்பத்தைச் சுட்டுப் பொசுக்கிய வண்ணமே இருந்தன. எட்டுப்பேர்களுக்கு நிம்மதியான முறையில் இரைபோட முடியாமல், அவளுடைய அப்பா பட்ட பாடுகள் கொஞ்ச நஞ்சமல்ல ; கடன் சுமைகள் அவரது கழுத்தை நெரித்த வண்ணமே இருந்தன. அந்த வறுமைச் சிறையிலிருந்து ஓரளவாவது விடுதலை பெறுவதற்காகவேனும், குடும்பத்தில் மூத்த பெண்ணுகப் பிறந்து தொலைத்துவிட்ட அமுதா ஏதாவது அலுவல் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்கிற கட்டாய நிலைக்கு ஆளானுள்.

அலுவலகத்திலோ எத்தனை எத்தனையோ கழுகுக் கண்கள் அவளை விழுங்கிவிடுவதற்குச் சுற்றிச் சுற்றிப் பறந்து வந்தன. எனினும், காற்றடித்த பக்கமெல்லாம் தலை சாயும் நாணலைப் போல நாணிக் கோணுமல், நெருப்புப் பிழம்பாகவே நிமிர்ந்த நடை போட்டுக் கொண்டிருந்தாள் அவள். தம்பி—தங்கைகளைக் கரையேற்ற வேண்டுமே என்கிற கவலையே, அவளது பருவக் கிளர்ச்சிகளை, கரை தொட்ட அலைகளாகக் கரைய வைத்துவிட்டது.

அலுவலகத்தை அடைக்கலம் அடைந்த பின்னர் பத்தாண்டுகள் இப்படியே பாலைவனமாக மரத்துக்கொண்டிருந்தது அவளது இளமை.

# வெண்பாப் போட்டி

கனிவளமும் கைத்திறனும் கூற்றதனுல் வந்து
தனியறிவும் கொண்ட தமிழா!—இனிமேலே
பல்தொழிலும் செய்யப் பணவுதவி உண்டென்ருர்;
தொல்லை மறையும் தொலைந்து.

— தேவத்தூர் அ. காந்தி, தேவத்தூர்

பழமுதிர் சோலையெனப் பட்டண மெங்கும்
தொழிற்பேட்டை தோன்றிற்றே தோதாய்!—எழிலார்ந்த
எந்தமிழ் நாட்டின் இளைஞர்க்கே வாழ்வளிக்க
வந்த தமிழரசை வாழ்த்து.

— மு. க. மூர்த்தி, மானம்புச்சாவடி

ஆக்கத் தொழில்கள் அனைத்திற்கும் வாய்ப்பீந்தார்!
ஏக்கப் பிணியகற்றி இன்ருேள்கள்—வீக்கமுற
வெற்றிப் படியமைக்க வேண்டும் தமிழ்மகனே
பற்றிமேல் சென்றிடுவாய் பாய்ந்து.

— அ. பொன்னையன், தொட்டியம்

விஞ்ஞான வித்தகர்கள் வேறெங்கும் போகாமல்
எஞ்ஞான்று மிங்கே இயங்கிடவே—செஞ்ஞாயி
றன்ன தமிழரசு ஆய்ந்தே தொழில்துறை
முன்னேற்றங் கண்டார் முனைந்து.

— நா. மணிமேகலை, வந்தவாசி

வேலையில்லை என்றுதினம் வீதியிலேச் சுற்றியநாம்
ஆலையிலே இன்றுபணி யாற்றுகின்ருேம்—கோலமலர்ச்
சோலைநிழ லீயும்! தொழில்பெருக்கும் நம்மரசு
வேலையுலர்க் கீயும் விரைந்து.

— த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை

பெய்யும் முகிலினமும் பெய்யாக் குளிர்வின்றிச்
செய்வார் திறமிருந்துஞ் செய்யார்காண்—மைவிழியே!
வேண்டும் பொருளிலதால் வேண்டியாங் கெய்துவித்தார்
நீண்டுறைக! நீரும் நிறைவு.

— மா. சு. ஜெயராமன், ஓலைப்பாடி

மின்மய மானதொழில் மிக்குடைய எந்நாடும்
குன்றுப் பொருள் வளத்தைக் கொண்டோங்கும்;—நின்று
வளர்தொழிற்கு நம்மரசு வாய்ப்பளிக்குந் தொண்டு
நலத்தினைப் போற்றிடும் நாடு.

— சு. கா. சுந்தரராசன், நாரைக்கிணறு

சேலத் திரும்பு சிறப்பான மின்நிலையம்
கோலக் குடிமுத்தும் கொண்டோம்நாம்—சாலவே
சொந்தமாய்ச் செய்யும் தொழிலுயர்த்தி வாழ்விக்க
வந்த தமிழரசை வாழ்த்து.

— சைதை சுந்தரமூர்த்தி, பொன்மலை

தொழிலும் வளமும் தொழிலாளர் ஏற்றம்
எழிலும் வளர்கவென இன்று—முழங்கும்
ஒலிகேட்டோம்! உள்ளம் உவந்தோம்! உயர்ந்தோம்!
நலிவில்லை என்றும் நமக்கு!

— சிவ. கிருட்டினன், கணியூர்

சிக்கல்கள் நீங்கிச் சிரமமே இல்லாமல்
மிக்கவே நன்குழைப்போர் மேன்மையால்—எக்காலும்
வாழ வழிவகுக்கும் வண்டமிழ் நாடாள்வோர்
ஏழைகள் கூட்டாளி ஏத்து!

— உ. தாமோதரன், சூளை

வறுமையில் வாழ்வோரின் வாட்டத்தைக் கண்டே
சிறுதொழில் செய்தேனும் சீரார்—மறுவாழ்வை
ஈட்டிடுவீர் என்றுதவி ஈந்திட்ட நற்றமிழ்
நாட்டரசே நல்லதென நாடு!

— புலவர் பாக்கியமணாளன், மட்டப்பாறை

சீர்புகழ் சென்னையில் பார்புகழ் 'சாரா'வின்
கூர்த்தமதி கூறுந் தொழிற்கூடம்—தேர்ந்த
தொழில்துறையின் மேன்மை துலங்குவதே ஈண்டு
தொழுதேத்தும் எம்மரசின் தொண்டு.

— ப. திருவேங்கடம், திருச்சி-4



ஒருமுறை அமுதா பணிபுரிகின்ற அலுவலக மனமகிழ் மன்றத்தின் சார்பில் இலக்கியக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. அதிலே சொற்பொழிவு ஆற்றுவதற்கு வந்திருந்தான் கதிரவன்.

அதுதான் அவர்களுடைய முதல் சந்திப்பு.

அதற்குப் பிறகு கதிரவன் கலந்துகொள்ளும் இலக்கியக் கூட்டம் எங்கே நடைபெற்றாலும் அவனுடைய சொற்பொழிவுக் கற்கண்டைச் சுவைத்துத் திளைப்பதற்குத் தவறாமல் சென்று விடுவாள் அமுதா.

ஒருநாள் கூட்டம் முடிவதற்கு நெடுநேரம் ஆயிற்று. இரவு பதினொரு மணிக்கு மேல் இருக்கும். தன் வீட்டிற்குச் செல்லப் பேருந்து கிடைக்காதே, ஆட்டோ — ரிக்‌ஷாக்காரர்களும், டாக்சிக்காரர்களும் தன்னால் தாங்க முடியாத அதிகக் கட்டணம் கேட்பார்களே என்று அமுதா குழம்பிக் கொண்டிருந்த போது—

தான் ஏறிய வாடகைக்காரை அவள் அருகே கொண்டுபோய் நிறுத்துமாறு கூறினான் கதிரவன். அவளை ஏறிக்கொள்ளுமாறு வற்புறுத்தினான். அவள் முதலில் மறுத்துவிட்டாள். ஆனால், அவன் பின்னிருக்கையிலிருந்து வெளியே வந்து முன்னிருக்கையில் தான் அமர்ந்துகொள்ளும் எண்ணத்துடன், அவளுக்குப் பின்னிருக்கைக் கதவைத் திறந்துவிட்ட 'கண்ணியம்' அமுதாவின் இதயத்தைக் கவர்ந்தது. அவளுடைய கால்கள் தாமாகக் காரை நோக்கி நடந்தன.

வழியில் சிறிது நேரம் சென்று கதிரவன் இப்படிக் கேட்டான்.

"நீங்கள் பத்து மணிக்கே வீட்டிற்குக் கிளம்பியிருக்கலாமே! ஏன், இவ்வளவு நேரம் காத்திருந்தீர்கள் ?"

"உங்கள் பேச்சு பத்து மணிக்குள் முடியவில்லையே !"

"அப்போ 'வளவள' வென்று நீண்டநேரம் பேசி உங்களுடைய பொறுமையை எல்லாம் அறுஅறு என்று அறுத்துவிட்டேன் என்று சொல்லுங்கள் ?"

—கதிரவன் சிரித்தவாறே கூறினான்.

"அய்யய்யோ ? இன்றைக்கு உங்கள் சொற்பொழிவு மிகவும் அற்புதமாக இருந்தது ; எனக்கு ரொம்ப ரொம்பப் பிடித்திருந்தது"

[illegible] மொழிந்தாள் அமுதா.

"உங்களைப் போன்ற ஒரு பெண் என்னுடைய பேச்சைக் கேட்பதற்காக இவ்வளவு நேரம்வரை காத்திருந்ததை நினைத்துப் பார்க்கும்பொழுது என் நெஞ்சுக்கு எவ்வளவு பெருமிதமாக இருக்கிறது தெரியுமா ?"

கதிரவனின் இந்தச் சொற்களுக்கு ஏதோ மறுமொழி கூற வேண்டும் என்றுதான் அமுதா நினைத்தாள்.

வார்த்தைகளே வரவில்லை.

வீடு வந்துவிட்டது.

காரைவிட்டு அமுதா கீழே இறங்கினாள். "மிகுந்த நன்றி"—என்று கரங்குவித்தாள்.

கதிரவன், கூட்டத்தில் தன் கழுத்துக்குப் போடப்பட்ட மாலையைக் கையில் இருந்தவாறே அவளை நோக்கி நீட்டினான்.

"வேண்டாங்க ; உங்கள் வீட்டிலே உள்ளவர்கள் நாளைக்குத் தலையிலே வைத்துக் கொள்ளலாமே."

—என்றாள் அமுதா.

"என் வீட்டிலே யார் இருக்காங்க ? உங்களுக்காவது இந்த ரோஜாப்பூக்கள் பயன்படட்டும். பிடியுங்கள்"

—சொல்லிக்கொண்டே மாலையைத் தூக்கி மெள்ள வீசினான்.

அவள் தாவிப்பிடிப்பதற்குள் அந்த மாலையோ மண்ணில் விழுந்துவிட்டது.

"அய்யய்யோ"

— என்றான் கதிரவன்.

"பரவாயில்லை"



—என்றவாறே கீழே குனிந்து மாலையை எடுத்துக் கொண்டாள் அமுதா.

• • •

பூக்கடை வந்துவிட்டது.

கதிரவன் இறங்கிப் போய் இரண்டு ரோஜாப்பூ மாலைகளை வாங்கி வந்தான் ; அவற்றை முன்னிருக்கையில் போட்டான்.

வாடகைக்கார் மீண்டும் பறக்கத் தொடங்கியது.

பழைய நினைவுகளிலிருந்து மீண்டு கொண்டிருந்த அமுதா தனக்குத் தானே சிரித்த வண்ணம் இருந்தாள்.

"என்ன அமுதா, நீயாகச் சிரித்துக் கொள்கிறாய் ? அதை எனக்கும் கொஞ்சம் சொல்லக் கூடாதா ?

—என்று கேட்டான் கதிரவன்.

"ஒன்றுமில்லை ; அன்றைக்கு ஒருநாள் நீங்கள் மாலையைத் தூக்கிப் போட்டபோது அதைச் சரியாக நான் தாவிப் பிடிக்காததாலே அது கீழே விழுந்துவிட்டது இல்லையா ?"

"ஆமாம்"

"இன்றைக்கும் நீங்கள் மாலையைத் தூக்கிப் போட்டால் என்ன செய்கிறது ? அது கீழே விழுந்துவிடாதபடி ஒட்டகம் மாதிரி கழுத்தை நீட்ட வேண்டுமே என்று நினைத்தேன் ; என்னை அறியாமல் சிரிப்பு வந்துவிட்டது."

"ஓ ! இதற்குத்தானா ? ஆனால், அன்றைக்குத் தூரத்தில் இருந்தேன் ; தூக்கிப் போட்டேன். இன்றைக்குப் பக்கத்தில் நெருங்கிவந்து பக்குவமாகப் போட மாட்டேனா ?"

"ரொம்பப் பக்கத்தில் வந்துவிடாதீர்கள் ; பார்க்கிறவர்கள் சிரிக்கப் போகிறார்கள் !"

— கேலியாகச் சிரிப்பலைகளை எழுப்பினாள் அமுதா ; தானும் சிரித்தான் கதிரவன்.

ஒரு தேநீர்க் கடைப்பக்கம் வந்ததும்—

வாடகைக் கார் 'சரக்'—என்று ஒரு குலுங்குக் குலுங்கி நின்றது.

"சார், கொஞ்சம் மன்னிச்சுக்குங்க ; ஒரு டீ குடிச்சுட்டு வந்துடறேன்."

—என்று காரோட்டி கீழே இறங்கிப் போனார்.

அமுதா, என்னென்னவோ இன்ப நினைவுகளில் மிதந்தவளாகக் கதிரவனையே கண்கொட்டாமல் பார்த்தாள் ; ஆசை பொங்கப் பார்த்தாள்.

"ஆமாம், இன்றைக்கு நம் திருமணத்திற்கு உன்னுடைய தோழி உமாவும் வருவாள் இல்லையா ?"

— கதிரவன் கேட்டான்.

"ஊகூம் ; வரமாட்டாள்; நான் அவளுக்குச் சொல்லவில்லை"

"ஏன் ?"

"அவள் உங்களைப் பற்றி ஒரு மாதிரியாகப் பேசினாள் ; அதனால்தான்."

"என்ன பேசினாள் ?"

"வேண்டாங்க"

"சும்மா சொல் ; நான் ஒன்றும் தொட்டாற் சுருங்கி இல்லே ; வார்த்தையாலே எவ்வளவு சுட்டாலும் தாங்கிக் கொள்வேன்"

"நீங்கள் இவ்வளவு வற்புறுத்துகிறதாலே சொல்கிறேன்; அதாவது.......... மேடைப் பேச்சாளிகளையெல்லாம் நம்பவே கூடாதாம் ; நாணயம் இல்லாதவர்களாம் ; நடத்தையும் கெட்டவர்களாம்...... இன்னும் அப்படி இப்படியென்று என்னென்னவோ அவிழ்த்துவிட்டாள். ஆனால் நான் , அவளுக்கு எப்படிச் சாட்டையடி கொடுத்தேன் தெரியுமா ?"

"................"

"குறை இல்லாத மனிதப் பிறவியே கிடையாது. அந்தக் குறை என்பது குறைவாக உள்ளவர்களைத்தான் நாம் நல்லவர்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். அசிங்கத்தையே பார்த்துப் பழகியவர்களுக்கு அழகான பூக்களை ரசிக்க முடியாதுதான். கண்ணுக்கு அருவருப்பான தரையிலிருந்துதான் கவர்ச்சி மிகுந்த மலர்கள் சிரிக்கின்றன. வாதத்திற்காக நீ சொல்வது உண்மையென்றே நான் எடுத்துக் கொண்டாலும் —நான் பலாப்பழத்தின் முள்ளைப் பார்த்துப் பயந்து விட்டால் அதன் உள்ளே இருக்கும் சுளை இனிக்குமா ? மனிதர்களிடம் நீ முள்ளை மட்டுமே பார்க்கிறாய் ; நான் சுளையைப் பார்க்கிறேன். பலாப்பழத்திலே முள்ளை மட்டும் பார்த்தால் சுளை இனிக்காது ; சுளையை மட்டும் பார்த்தால் முள் உறுத்தாது !" என்றேன். அவ்வளவுதான் ; அந்த உமாவுக்கு முகமே செத்துப் போய் விட்டது."

"நல்ல வேளையாக நான் பிழைத்துக்கொண்டு விட்டேன். நீ மட்டும் ஒரு சில பெண்களைப்போல ஆழ்ந்து சிந்திக்காத அரை வேக்காட்டுக்காரியாக இருந்திருந்தால் என் நிலைமை என்ன ஆகியிருக்கும் ? ஆமா, உமாவுக்கு என்மேலே ஏன் அவ்வளவு கோபம் ?"

"எல்லாம் பொறுமைதான் ; அழுக்குத்தான். உங்களைப் போலப் புகழுள்ள ஒருத்தர் தனக்குக் கிடைக்கவில்லையே என்கிற வயிற்றெரிச்சல்தான்"

—அமுதா இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே காரோட்டி தேநீர்க் கடையிலிருந்து திரும்பி வந்து விட்டார்.

முன்னிருக்கையில் அமரப் போனவர்—

"என்னங்க இது ! ஒரு மாலையைக் காணோம்"

—என்று திகைப்புடன் கேட்டார்.

"என்ன ! ஒரு மாலையைக் காணோமா ?"

—பதறிப் போனாள் அமுதா.

கதிரவனுக்கு வியப்பாக இருந்தது.

"எப்படிக் காணாமல் போகும் ? கீழே விழுந்து கிடக்கிறதா பாருங்கள்"

"இல்லைங்க ; நல்லாப் பார்த்திட்டேன்"

—என்றவாறே காரோட்டி கீழே இறங்கினார்.






ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்:
சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.



அமுதா ஒரு சந்தேகத்துடன் சுற்று முற்றும் தன் பார்வையைப் பறக்கவிட்டாள்.

வெகு தொலைவிற்கு அப்பால் ஒரு பையன் மாலையைத் தூக்கிக் கொண்டு ஓடுவது தெரிந்தது.

காரோட்டி அவனை நோக்கி ஓட்டம் பிடித்தார்.

கதிரவன் — அமுதா இருவருக்கும் இருப்புக் கொள்ளவில்லை. அவர்களும் அந்தத் திசையை நோக்கி ஓடத் தொடங்கினார்கள்.

பையனோ ஒரு குடிசைப் பக்கம் திரும்பி மறைந்துவிட்டான்.

காரோட்டியோ தளரவில்லை. அவரும் குடிசைப் பக்கம் நுழைந்தார். எப்படியோ பையனைப் பிடித்துத் தெருப்பக்கம் இழுத்துக் கொண்டு வந்துவிட்டார்.

அவன் கையிலோ மாலை இல்லை.

'' மாலையை ஏன்டா திருடிக்கிட்டு ஓடி வந்தே? இப்போ உன்னை நான் சும்மா விடப் போறதில்லை ! ''

— ஆங்காரமாகக் கூறிக் கொண்டே பையனின் கன்னத்தில் 'பளார் பளார்' என்று அறைந்தார் காரோட்டி.

'' அய்யா ! என்னை விட்டு விடுங்கய்யா ! என்னை விட்டு விடுங்கய்யா ! ''

— கதறித் துடித்தான் பையன்.

இதற்குள் மணமக்கள் இருவரும் அங்கே வந்துவிட்டார்கள், கும்பலும் கூடிவிட்டது.

பையனை நையப் புடைத்த காரோட்டியின் கையைப் பிடித்துக்கொண்டான் கதிரவன்.

'' சரி, ஏம்பா தம்பி மாலையைத் திருடிக்கொண்டு ஓடி வந்தே ? ''

— என்று நயமாகக் கேட்டான்.

சிறுவன் அடக்கமுடியாத அழுகையுடன் கண்ணீர் மழையைப் பொழியவிட்டுத் தேம்பித் தேம்பிக் கொண்டே இப்படிச் சொன்னான்.

'' என் அம்மாவுக்குப் பூ மேலே உசிரு. அதுக்கு எப்பவுமே தாங்கமுடியாத வவுத்து வலி. அதனாலே 'சீக்கிரம் செத்திடுவேன் — செத்திடுவேன்'னு சொல்லிக்கிட்டே இருந்துச்சு. ஒருநாள் என்னைப் பக்கத்திலே அழைச்சு அணைச்சுக்கிட்டு 'நான் செத்திட்டா என் கழுத்துக்கு எப்படியாச்சும் ஒரு மாலையைக் கொண்டாந்து போடுவியாடா கண்ணு'ன்னு கேட்டுச்சு. 'கண்டிப்பா போடுவேம்மா'ன்னு சத்தியம் பண்ணிக் கொடுத்தேன். இன்னைக்கு எங்க அம்மா செத்துப் போயிடுச்சு. எப்படியாச்சும் பிச்சை எடுத்தாச்சும் மாலை வாங்கணும்னு நெனச்சுக்கிட்டு சாலைப் பக்கம் போனேன். உங்க கார் நின்னுக்கிட்டு இருந்துச்சு. சும்மா எட்டிப் பார்த்தேன். நீங்களும் அம்மாவும் வெளியே பாக்காமே பேசிக்கிட்டு இருந்தீங்க. முன்னாலே பளபளன்னு மாலை தெரிஞ்சுது. அம்மாவோட ஆசையை நிறைவேத்தணுமேன்னு தூக்கிக்கிட்டு ஓடி வந்துட்டேன் ''

— பையன் சொன்னதைக் கேட்டதுமே எல்லோருடைய கண்களிலிருந்தும் நீர் வழியலாயிற்று.

அமுதாவோ குமுறிக் குமுறியே அழத் தொடங்கிவிட்டாள்.

கதிரவன் அந்தப் பையனைக் கட்டிப் பிடித்துக்கொண்டான்: அவனாலும் கண்ணீரை ஒளிக்க முடியவில்லை.

சில விநாடிகளில் அனைவரும் குடிசைக்குச் சென்றார்கள். அங்கே......மரணச் சிரிப்பை மலரவிட்டு மாலையும் கழுத்துமாகக் கிடந்தாள் அந்த ஏழைத் தாய்.

மணமாலை பிணமாலையாக மாறிக்கிடந்தது. ஓர் ஏழைத் தாயின் கடைசி ஆசையை நிறைவேற்றி முடித்த பெருமிதத்தோடு அது கிடந்தது.

அமுதா கீழே குனிந்து சவமாகிவிட்டவளின் கால்களைத் தொட்டுக் கும்பிட்டாள். அவள் விழியிலிருந்து கண்ணீர் வெள்ளம் பெருகி அந்தத் திருவடிகளை நனைத்தன.

அவள் முகமோ........?

'பதிவுத் திருமணத்திற்குப் பயன்படாவிட்டாலும் பரவாயில்லை. புதை குழிக்குப் போகிற ஏழை அன்னைக்குப் பயன்பட்டதே இந்த மாலை!' என்கிற தெளிவை ஒளியாக வீசியது

## இலங்கை அகதிகளுக்குத் தமிழக அரசின் உதவி

தமிழ்நாடு அரசு, இலங்கையிலிருந்து வெளியேறி, இந்தியா வந்த, இந்தியக் குடும்பங்களின் மறுவாழ்விற்காக இதுவரை 2 கோடியே 15 இலட்சம் ரூபாயைக் கடனாகவும் 52 இலட்சம் ரூபாயை மானியமாகவும் அளித்துள்ளது.

இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் வரை, இலங்கையிலிருந்து மொத்தம் 85 ஆயிரத்து 627 பேர் வெளியேறி இந்தியாவில் குடிபுகுந்தனர். இவர்கள், மொத்தம் 20 ஆயிரத்து 609 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவற்றில், 5,113 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு, மைசூர், கேரளா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும், அந்தமான் தீவுகளிலும் குடிபுகுவதற்காக அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மீதமுள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையிலிருந்து எடுத்து வந்த சொத்துக்களைக் கொண்டோ அல்லது இந்தியாவில் அவர்கள் முன்பு விட்டுச் சென்ற சொத்துக்களை வைத்துக் கொண்டோ தாங்களாகவே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டுள்ளனர். இவர்களில் சிலர் மறுவாழ்விற்கான நிதி உதவியைப்பெற விண்ணப்பித்துக் கொள்ளவில்லை.

(9-3-73-ல் மக்கள் அவையில், மத்திய தொழிலாளர் நல மறுவாழ்விப்பு அமைச்சர் திரு கே. வி. இரகுநாத ரெட்டி)



# ஆத்தூர் ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகள்

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் 22 ஊராட்சி மன்றங்களையும், 3 பேரூராட்சி மன்றங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏறத்தாழ 87·89 சதுர மைல் பரப்புடையது. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் படி 65,930 ஆண்களும், 53,812 பெண்களும் வாழும் இந்த ஒன்றியம் விரிந்து பரந்து கிடக்கின்றது. இதன் அரணாக அமைந்துள்ள மலைகளும் அதிலிருந்து உற்பத்தியாகும் குடவனாறு, மருதாநதி, ஆகிய இரண்டு ஆறுகளும் மேலும் அழகு படுத்துகின்றன. குடிநீர் வசதிக்குக் குடவனாற்றின் குறுக்கே எழுப்பப்பட்டுள்ள நீர்த்தேக்கம் இந்த ஒன்றியத்தின் பெரும்பான்மை மக்களுக்கும் அருகிலுள்ள திண்டுக்கல் நகர மக்களுக்கும் தாகத்தைத் தணிக்கும் அருங்கொடையாக அமைந்துள்ளது.

### பாசனம்

இப்பகுதியில் மக்களின் அயராத உழைப்பினாலும் ஊக்க சக்தியினாலும், அரசு உதவியினாலும், ஆயிரக் கணக்கான கிணறுகள் தோண்டப்பட்டு இறைவைச் சாதனங்கள் பொருத்தப்பட்ட கிணறுகளும் மற்றும் 234 மின், எண்ணெய் இயந்திர சாதனைகள் உள்ள கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன. 6 பொதுப் பணித் துறைக் கண்மாய்களும் மற்றும் 23 பாசன வசதிகள் பெற்ற கண்மாய்களும் உள்ளன. அவ்வப்பொழுது அரசுச் செலவில் அந்தக் கண்மாய்கள் மராமத்து செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவைகளின் மூலம் 5,095 ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளது.

### விவசாயம்

இவ்வொன்றியத்தின் 80 சத விகிதத்தினர் வேளாண்மைத் தொழிலையே மேற்கொண்டுள்ளனர். விவசாயத்திலோ மறுமலர்ச்சி காணவும், உணவு உற்பத்தியைப் பன் மடங்கு பெருக்கவும், இந்த ஒன்றிய விவசாயிகளுக்குப் பலவகைகளிலும் உதவி செய்யப்பட்டு வருகின்றது. விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், மருந்துகள், மற்றும் இதரக் கருவிகள் வழங்குவதற்காக அவர்களின் வசதிக்கேற்ப ஆத்தூரிலும், அய்யம்பாளையத்திலும் விவசாயப் பண்டகசாலைகள் திறக்கப்பட்டுள்ளன. நல்ல விவசாயக் கருவிகள் உயர் ரக வித்துக்கள் அவ்வப்பொழுது வழங்கப்படுகின்றன. இயந்திரக் கலப்பை கொண்டு வேளாண்மை செய்ய விவசாய மக்களிடையே ஆர்வம் எழுப்பப்பட்டு அது வளர்ச்சி பெற்று வருகிறது.

வறுமையையும் வாட்டத்தையும் போக்க வந்த மிகு விளைச்சல், ரகமான ஐ.ஆர். 8, ஜெயா, பத்மா, கருணா போன்ற நெல் வித்துக்களையும் வீரிய ஒட்டுக் கம்பு, சோளம், சிறுதானிய வகைகளையும் இந்த ஒன்றிய விவசாயிகள் பயிர் செய்வதற்கு வேண்டிய உதவிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன. மேலும் இவ்வட்டாரத்தில் உள்ள மலைகளில் காப்பி, மிளகு, வாழை, பலா, ஆரஞ்சு, போன்றவைகள் அதிக அளவில் விளைவதற்குப் போதிய உதவிகளும் அறிவுரைகளும் கொடுக்கப்பட்டு வீரியக் கன்றுகள் பாதி விலையில் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் நெல், கரும்பு, வாழை, போன்ற நன்செய்ப் பயிர்களும், பருத்தி, கடலை சிறு தானியங்கள் போன்ற புன்செய்ப் பயிர்களும் பெரும் அளவில் சாகுபடி செய்வதற்கு வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன. நன்செய் நிலங்கள் 7,157 ஏக்கரும் புன்செய் நிலங்கள் 41,851 ஏக்கரும் தீவிரச் சாகுபடிக்கு ஏற்றவையாக அமைக்கப்பட்டுள்ளன.

### கால்நடை

ஆத்தூர் ஒன்றியப் பகுதிகளில் கால்நடைகள் நிறைய உள்ளன. உயர் இனப் பசுமாடுகள், எருமை மாடுகள், ஆடுகள், கோழிகள் வளர்ப்பதற்கு வழி வகைகள் செய்யப் பட்டுள்ளன. காந்தி கிராமத்தில் பெரிய கோழிப் பண்ணையும், ஆத்தூரில் 1,000 கோழிகள் கொண்ட ஒரு பெரிய பண்ணையும் மற்றும் கிராமப் புறங்களில் 40 தனியார் கோழிப் பண்ணைகளும் உள்ளன. கால்நடைகளையும் பேணிப் பாதுகாக்க ஆத்...

ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யம்பாளையத்தில் உள்ள குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகள் விளையாடுதல்.




எழிலார்ந்த ஒரு பொருள் என்றுமே இன்பம்!
இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு
முதல் பரிசு:
ரூ. 1,00,000
(ஒவ்வொரு வரிசைக்கும்)
முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.
59-வது குலுக்கல் நாள்: 12-9-1973
பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்
கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி.
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை 9.
செலவு ஒரு ரூபாய்
ரூ. 1,00,000
வரவோ லட்ச ரூபாய்

# தமிழரசு

16-9-1973 40 காசு



P
R.R-No. 1466/73

அம்பாத்துரை ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவ நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. மற்றும் 6 கேந்திர கிராமக் கால்நடை விளை நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளன. இங்குச் செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறை கையாளப்பட்டு மாடுகளின் இன விருத்திக்கு வழிவகுக்கப்பட்டு வருகிறது. கோழிப் பண்ணைகளிலிருந்து கிடைக்கக் கூடிய முட்டைகள் பாலவாடிப் பிள்ளைகளுக்கு இலவசமாக விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

### குடிநீர்த் திட்டம்

கடந்த ஐந்தாண்டுகளில் 25 பாதுகாக்கப்பட்ட மேல்நிலைக் குடிநீர்த் தொட்டிகளும் 5 தரை மட்டத் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன. மேலும் அனைத்துக் கிராமங்களிலும் குடிநீர்க் கிணறுகள் போதிய அளவில் வெட்டப்பட்டும், அபிவிருத்தி செய்யப்பட்டும் உள்ளன. இதற்காக மொத்தம் சுமார் 2,40,000 ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளன.

### கிராம இணைப்புச் சாலைகள்

மிக அதிகப்பரப்பளவுள்ள இவ்வட்டாரத்தில் போக்கு வரத்துக்காகப் போதிய சாலை வசதிகள் இல்லாமல் இருந்தது. கடந்த 5 ஆண்டுக் காலத்தில் சுமார் 1,80,000ரூபாய் செலவில் 10 பாலங்களும் 17 சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. சீரிய போக்கு வரத்துக்கான வகைகளும் செய்யப்பட்டுள்ளன.

### கல்வி

ஆத்தூர் ஒன்றியத்தில் 6 உயர் நிலைப் பள்ளிகளும், 15 உயர் தொடக்கப்பள்ளிகளும், 69 தொடக்கப் பள்ளிகளும் திறக்கப்பட்டுள்ளன. காந்தி கிராமத்தில் கிராமியக் கல்லூரியும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் மக்கள் நல்வாழ்வுக் கல்வி மற்றும் குழந்தைகள் நலத்திட்டப் பயிற்சி நிலையமும் உள்ளன.

குழந்தைகளுக்கான 16 பாலர் பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 22 பாலவாடிகள் திறக்கப்பட்டுள்ளன. இந்தப் பாலவாடிகளில் 2 முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்கும்இலவசஉணவுடன் கல்வியும் தரப்படுகின்றன.

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் ஆத்தூர் ஒன்றியம் பெருமளவில் கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளது பெருமைக்குரிய சாதனையாகும். 22 பள்ளிக் கட்டடங்கள் புதியதாகக் கட்டப்பட்டும், 37 பழைய பள்ளிக் கட்டடங்கள் சீர் செய்யப்பட்டும் மற்றும் 13 குழந்தைகள் காப்பகக் கட்டடங்கள் புதிதாகக் கட்டப்பட்டும் உள்ளன. மேலும் பெண் ஆசிரியக் குடியிருப்பு மனை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. மதிய உணவுத் திட்டத்தில் 76 நிலையங்கள் திறக்கப்பட்டு இலவசமாக ஏழைக் குழந்தைகளுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது.

### மருத்துவ வசதி

இவ்வட்டாரத்தில் இரண்டு, முதல் நிலை நல்வாழ்வு நிலையங்களும் இரண்டு கிராமிய சுகாதார நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தாய்சேய் நலன்களைப் பாதுகாக்க 21 தாய் சேய்நல விடுதிகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் பெற்றோர்கள் வளமான வாழ்க்கை நடத்துவதற்கு ஏற்ப அறிவுரைகள் வழங்கப்பட்டும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

### சமூகக் கல்வி

அயராது உழைத்துப் பாடுபடும் இவ்வட்டார மக்கள் சற்று ஆறுதல் பெறவும் அவர்களின் அறிவை வளர்ப்பதற்கும் அன்றாட அரசியல், பொருளாதார, சமூக நிலைமைகளைத் தெரிந்து கொள்வதற்கும் அமைக்கப்பட்ட சமூகக் கல்வி மன்றங்கள் 22 உள்ளன. பொழுது போக்கிற்காகவும் புதிய செய்திகளைத் தெரிந்து கொள்வதற்காகவும் 8 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இரண்டு சிரணி அறிவகங்கள், இரண்டு செய்தி நிலையங்கள், இரண்டு இளைஞர் மன்றங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### மகளிர் நலம்

ஒவ்வொரு ஊராட்சியிலும் ஒரு மகளிர் மன்றம் அமைக்கப்பட்டுக் குழந்தைகள் நலம், மக்கள் நல்வாழ்வு, சிறு சேமிப்பு, பொதுப்பணி ஆற்று



← ஆத்தூர் ஒன்றியத்தில் சின்னாளப்பட்டி அருகிலுள்ள மேல்நிலை நீர்த்தொட்டி.

ஆத்தூர் ஒன்றியப் பகுதியில் கட்டப்பட்டுள்ள புதிய குடியிருப்புகள். ↓



தல், தையல் கலை போன்றவை கற்றுத்தரப்படுகின்றன. இவை தவிர 3 தையல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு மகளிருக்குத் தையல் மற்றும் ஆதாயம் தரக்கூடிய பூவேலைகள் கற்றுத் தரப்படுகின்றன.

### கூட்டுறவு

இந்த ஒன்றியத்தில் 19 விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள், 1 அர்பன் வங்கி, 11 பால் விநியோகச் சங்கங்கள், 2 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், 2 பண்டகசாலைகள், 2 கிராம தானங்கள் மற்றும் 19 இதர கூட்டுறவுச் சங்கங்களும் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு வேண்டிய கடன் வசதிகள், உர விநியோகம் போன்றவற்றைப் போதிய அளவில் பெற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் அய்யம் பாளையத்தில் ஸ்டேட் பாங்க் கிளை ஒன்று திறக்கப்பட்டுப் பொது மக்களுக்குத் தொழில் செய்வதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன.

### வறட்சி நிலை துயர்துடைப்புப் பணிகள்

இந்த ஒன்றியத்தில் வறட்சிப் பணியின் கீழ் 3 குளங்கள் தூர் எடுக்கப்பட்டன. 65 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. 15 குடிநீர்க் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ. 1,25,000.

### சிரணித் திட்டம்

சிரணித் திட்டத்தின் கீழ் ரூ. 14,200 செலவில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. ரூபாய் 10,000 செலவில் 1 பள்ளிக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளது.

### கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 76 வீடுகள் கொண்ட நெசவாளர் காலனி ரூ. 2,28,000 செலவில் சின்னாளப்பட்டியில் அமைக்கப்பட்டுள்ளது.

### குழந்தைகள் நலத் திட்டம்

14—11—1969-ல் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் குடும்பக் குழந்தைகள் நலத் திட்டம் மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஓ. பி. இராமன், அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இது 5 ஆண்டுத் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் 7 பாலர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதில் தலைமை நிலையம் ( Main Centre ) ஒன்றும், உப நிலையங்கள் ( Sub-Centres ) 5-ம், துணை நிலையம் (Aided Centre) ஒன்றும் உள்ளன.

மேட்டுப்பட்டி— தலைமை நிலையம்.

பித்தளைப்பட்டி உப நிலையங்கள்.

ஆலமரத்துப்பட்டி. ,,

பாளையங்கோட்டை ,,

சித்தரேவு ,,

அய்யம்பாளையம் ,,

கே. சிங்காரக்கோட்டை— துணை நிலையம்.

மேலும் சமூகப் பொருளாதாரத் திட்டத்தின்கீழ் சித்தரேவில் தொழிற்கூடம் ஒன்று 24—8—1972-ல் திறந்து வைக்கப்பட்டது.

### பாலர் பள்ளிகள்

இவ்வொன்றியத்தில் 16 பாலர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 14 பாலர் பள்ளிகள் 'கேர்' நிறுவன ஆதரவுடன் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் 1 வயது முதல் 4 வயது வரை உள்ள குழந்தைகளுக்குச் சத்துணவு மற்றும் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது.

பிள்ளையார்நத்தம்.

செட்டியபட்டி.

அம்பாத்துரை.

பெருமாள்கோவில்பட்டி

தெற்குமேட்டுப்பட்டி.

வக்கம்பட்டி.

ஜே. புதுக்கோட்டை.

சித்தையன்கோட்டை.

அக்கரைப்பட்டி.

நரசிங்கபுரம்.

சித்தையன்கோட்டை.

தேவரப்பன்பட்டி.

மஞ்சள் பரப்பு.

இந்திராபுரம்.

**கேர் ஆதரவு இல்லாமல் நடைபெற்றுவரும் பள்ளிகள்**

ஆத்தூர்.

கீழக்கோட்டை.

குழந்தைகள் காப்பகங்களில் மதிய உணவு அளிக்கப்படுகிறது.



# அரசு—மிகவுயர்ந்த தரமான

# போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

## தமிழ்நாடு சிமெண்ட்ஸ்

(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

## அரசு —வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16

மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் வேலையாய்ப் பற்றுள்ளோரில் குறைந்தது 1,000 பேர்களுக்குத் தொடர்ச்சியாக 10 திங்களுக்கு வேலையளிக்க வேண்டுமென்ற நோக்கத்தில், கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டு செயல்படுத்தப் படுகிறது. உழைப்பையும், உற்பத்தியையும், மையமாகக் கொண்டு, பல்வேறு ஊர்ப்புறத் திட்டங்களை இணைத்துக் கூடுதலான வேலைவாய்ப்புகளை உண்டாக்கும் விதத்தில் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் பணிகளாவன :—

(அ) பெருந்திட்ட அடிப்படையில் சாலைகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட உள்ளமைப்பு வேலைகள்.

(ஆ) தரிசுகளை விளை நிலங்களாக்குதல், ஊராட்சி நிலங்களைச் சீராக்குதல் போன்றவை.

(இ) கழிவுநீர்வசதி, கரைகள் அமைத்தல் போன்றவை.

(ஈ) நீரைப் பாதுகாத்து, நில அடி நீரைப் பயன்படுத்துதல் போன்றவை.

(உ) பாசனத் தேக்கங்களை அமைத்தல், சீராக்குதல் போன்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்.

(ஊ) மண்வளப் பாதுகாப்பு, அல்லது மனித உழைப்புத் தேவைப்படும் காடு வளர்ப்புத் திட்டங்கள்.

(எ) தொடக்கப் பள்ளிகளுக்கு வகுப்பறைகள் கட்டுதல்.

இது நூற்றுக்கு நூறு மைய அரசுத் திட்டமாகும். நான்காம் திட்டத்தில் எஞ்சிநிற்கும் ஆண்டுகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கன்னியாகுமரி, நீலகிரி, தருமபுரி, திருநெல்வேலி மாவட்டங்களைத் தவிர, ஏனைய மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 20 வட்டாரங்கள் வீதம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. நீலகிரி, கன்னியாகுமரி, தருமபுரி மாவட்டங்களில் முறையே 4, 9, 16 வட்டாரங்களே உள்ளமையால், இத்திட்டம் இம் மாவட்டங்களிலுள்ள வட்டாரங்கள் அனைத்திலுமே செயற்படுத்தப்படுகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் இத்திட்டம் 21 வட்டாரங்களில் நிறைவேற்றப் படுகிறது. இவ்வாறாக இம் மாநிலத்திலுள்ள 374 மொத்த வட்டாரங்களில், 230 வட்டாரங்களில் இத்திட்டம் தற்போது செயற்படுகிறது.



செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியக் கட்டடம்.

கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர்த்து, ஏனைய மாவட்டங்கள் அனைத்திற்கும் வட்டாரங்கள் ஒன்றிற்கு ரூ. 1·25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு மாவட்டங்களிலும் வட்டாரங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொள்ளாது, ஒரு மாவட்டத்திற்கு ரூ. 12·50 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்தந்தப் பகுதிகளிலுள்ள நிலவரப்படி ஊதியம் அளிக்கப்படுகிறது.

1971–72-ஆம் ஆண்டில் இத்திட்டத்தினால் அடைந்த சாதனைகள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | இணைப்புச் சாலைகள் (கி.மீ.). | 6,031·85 |
| 2. | கட்டப்பட்ட பாசன வேலைகள் (எண்ணிக்கை) | 288 |
| 3. | பாசனம் செய்யப்பட்ட மொத்தப் பரப்பு(ஹெக்டேர்) | 6,475·29 |
| 4. | கட்டப்பட்ட மதகுகள் (எண்ணிக்கை) | 310 |
| 5. | கழிவுநீர், நீர் தேங்காமைக்கு வழிவகுத்தல் (ஹெக்டேர்) | 4,973 |
| 6. | தூரெடுக்கப்பட்ட, ஆழப்படுத்திய குடிநீர்க் குளங்கள் (எண்ணிக்கை). | 51 |




1971–72-ஆம் ஆண்டில், 293·05 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, 84·04 இலட்ச வேலை வாய்ப்பு நாட்கள் இத்திட்டத்தினால் உண்டாக்கப்பட்டுள்ளன. 1972–73-ஆம் ஆண்டுக்குரிய திருத்தப்பட்ட மதிப்பீட்டில் ரூ. 302 இலட்சமும், 1973–74-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் அதே தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அன்பால் நிறைந்த நெஞ்சம் அலைகடல்போல் விசாலமானது. ஆழ்கடல்போல் அமைதியானது. பாறையைப்போல் உறுதியானது. பனிமலரைப் போல் குளுமையானது.

ராதையின் நெஞ்சம் இத்தனை இலக்கணங்களும் நிறைந்த நெஞ்சம். அதனால்தான், வாசலில் வந்து நிற்கும் நர்மதாவைக் கண்டவுடன் '' வாருங்கள் நர்மதா! '' என்று அகமும் முகமும் அழகாய் மலர வரவேற்க முடிந்தது.

நர்மதா திகைத்துப்போகிறாள்.

தான் யார் என்ற விவரத்தை எப்படிக் கூறுவது, தான் வந்திருக்கும் நோக்கத்தை எப்படி உணர்த்துவது என்றெல்லாம் தன்னை முகம் கோணாமல் வரவேற்க முடிகின்றது?—நர்மதாவின் வியப்புந் தீரவில்லை....

''ராதை....நான் வந்த-''

''காரணம் எதுவாக இருந்தாலும் சரி, நீங்கள் காணத் துடிக்கிற அத்தானை இன்னும் பத்து நிமிடங்கள் கழித்துத் தான் பார்க்க முடியும். அது வரையில் நான் கூறும் விவரங்களைச் சகித்துக்கொண்டுதான் தீரவேண்டும்..ம்....உட்காருங்கள்..காபி கொண்டு வருகிறேன்..'' என்று கூறியபடி உள்ளே செல்லத் திரும்பியவள், ''மிஸ்டர் ரோமியோ..இவர்களை நான் அறிமுகம் செய்யத் தேவையில்லை என நினைக்கிறேன் '' என்று தயங்குகிறாள்.

ஆவலைச் சுமந்த இதயத்தோடு அவளும், அனலைச் சுமந்த விழிகளோடு அவனுமாக எதிரெதிராக உட்கார்ந்திருக்கிறார்கள். ஏறிட்டு நோக்கிய அவன் பார்வையில் எச்சரிக்கைகள் ஓராயிரம். ''ராதையின் முல்லைப்பூ இதயத்தை முள்ளைக்கொண்டு கீறி நாசப்படுத்திவிடாதே! '' என்ற கோரிக்கை..கருணைமனு எல்லாம் ரோமியோவின் ஒரு நிமிடப் பார்வையில் அலை மோதுகின்றன.

நர்மதாவின் விழிகளில் இருந்த தயக்கம் எப்போதோ விடைபெற்றுப் போய் விட்டிருந்தது. ராதையின் இதயம் எப்படிப்பட்டதென்று மணிவாசகன் கூறியது நூறு பங்கென்றால், நேருக்குநேர் ராதை

## 7. ஒவ்வொரு ரோஜாவுக்கும் ஒரு முள் நண்பனாக இருக்கும்

தவித்துப் போய் வந்தவள், தன்னை அறிமுகப் படுத்திக் கொள்வதற்கு முன்னால் அறிந்து கொண்டதற்கான அடையாளமும் இத்தனை அன்பான வரவேற்பும் கிடைக்கும் என்பதை எதிர்பார்க்கவில்லை.

''வாருங்கள் நர்மதா!'' என்று இரண்டாம் முறையாக ராதை அழைத்த பிறகுதான் நர்மதா சுய உணர்வு பெறுகிறாள்.

''அத்தான் வீட்டு வாசலை மிதித்ததுமே உங்களுக்கு இந்த உலகம் மறந்து, இன்ப உலகத்தில் பறக்கத் தொடங்கிவிட்டீர்களா?'' என்று உரிமையோடு கேலி செய்தபடியே நர்மதாவின் கைகளைப் பிடித்து உள்ளே அழைத்து வருகிறாள் ராதை.

''நீங்கள்தானே ராதை....'' என்று நர்மதா ஒரு நிமிடத் தயக்கத்திற்குப் பின்னர் கேட்கிறாள்.

'' பின்னே ? என்னைத் தவிர வேறு எவருக்கு இந்த உரிமை இருக்க முடியும் ? ''

வாசலைத் தாண்டி வரவேற்பறைக்குள் நின்றதும் ரோமியோவைக் கண்டு ஒரு கணம் திகைக்கிறாள் நர்மதா. உதகைப் பயணத்தில் நர்மதா-மணிவாசகன் இருவரையும் இணையாகப் பார்க்கும்போதெல்லாம் எரிமலையின் தீக்கனல்களை இருவிழிகளிலும் தேக்கியபடி சீறிச்சீறி வந்தாரே அந்த உற்ற நண்பர் ராதையிடம் என்னென்ன போதனைகளைச் செய்திருப்பாரோ...? அவரிடம் பேசிக்கொண்டிருந்த பிறகும், இந்த ராதையால் எப்படித்

''ஓ....இவர்களை நன்றாகத் தெரியுமே!'' என்று சிரித்துச் சமாளிக்கிறான் ரோமியோ.

''பின்னே அந்நியரைப் போல் உம்மென்று உட்கார்ந்திருப்பானேன்..? பேசிக் கொண்டிருங்கள்..இதோ வருகிறேன்..''

ராதை அந்தப் பக்கமாக நகர்ந்ததும் ரோமியோ நர்மதாவை நிமிர்ந்து நோக்குகிறான்.

யைச் சந்தித்தபோது அது ஆயிரம் மடங்காக உயர்ந்தது! இருந்தாலும் அவளுக்கென்று ஓர் இதயம் இருக்குமே......! —அத்தான் என்ற உறவுக்காரனைத் திருமணம் செய்து கொள்ளத் துடிக்கும் உரிமை மனம்-தன்னை எப்படி வரவேற்குமோ என்ற தயக்கத்தில் வந்தவளுக்கு, ராதையின் வரவேற்பு, திகைப்பையும் வியப்



# பார்த்தோம் படித்தோம்

**புதுப்பொலிவு !**

'தமிழரசு' இப்பொழுது புதுப்பொலிவுடன் வெளிவருவது எனக்கு மன நிறைவைத் தருகிறது. அழகிய, தெளிவான அச்சு அமைப்புகளோடு புதிய புதிய தகவல்களையும் தெரிந்து கொள்ள அது வழிகாட்டியாக விளங்குவதைப் பாராட்டுகிறேன்.

—பொன். மறைமலை,
சென்னை-1.

**அச்சடிப்பு அருமை !**

இப்பொழுது தமிழரசில் வெளிவரும் படங்கள் அனைத்தும் அருமையாக அச்சடிக்கப்பட்டுள்ளன. ஆனால் எங்கள் ஊருக்குத்தமிழரசு தாமதமாக வருவதைத் தவிர்க்கக் கூடாதா ?

—திரு. சிதம்பரநாதன்,
திருநெல்வேலி.

**ஒரு பொற்காலம் !**

'தியாகத்தைப் போற்றிடுவோம்! தியாகிகளை மதித்திடுவோம்' என்று தமிழக முதலவர் கலைஞர் ஆற்றியுள்ள முதல் நாள் உரை, கழக அரசின் ஆட்சிக் காலம், 'தியாகிகளுக்கு ஒரு பொற்காலம்' என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

—எஸ். சுப்பிரமணியம்,
தேவகோட்டை.

**புரட்சிக் கட்டுரை !**

மீன் பிடி தொழிலைப் பற்றி மிக விளக்கமான கட்டுரை வெளியிட்டிருந்தீர்கள். அமைச்சர்களின் கருத்துக்களும், 'நீலப்புரட்சிக்கு ஒரு தொலைநோக்குத் திட்டம்' என்ற கட்டுரையும் மிக்கப் பயனுள்ளதாக அமைந்திருக்கின்றன.

—பி. திருமலை, திருவள்ளூர்.

**சுற்றுலா போகவில்லையே !**

சுற்றுலா சுந்தரம், சுற்றுலாக்கள் சென்று வருவதை நாங்கள் படிக்க முடியாமல்—பார்க்கமுடியாமல் முடித்து விட்டீர்களே ! விறுவிறுப்பான நல்ல கதை !

—டி. தெய்வசிகாமணி,
பெங்களூர்.

**காக்கை பாடினியார் !**

புலவர் பொன்னிவளவன் எழுதிய 'காகம்' கவிதையைப் படித்தேன். 20-ஆம் நூற்றாண்டின் காக்கைப் பாடினியார் என்று அவரை அழைக்கலாம் போல் தோன்றுகிறது!

—த. வில்லவன்,
வேலூர்.

**அச்சுக் கதை !**

அச்சான நூல்களைப் பார்க்கிறோம்; படிக்கிறோம். ஆனால் அச்சின் கதையைத் தெரிந்து கொள்கிறோமா? இந்தக் குறையைப் போக்குகிறது 'எண்ணும் எழுத்தும் உருவாகும் விதம்' என்ற கட்டுரை.

—பொன். செந்தில்நாதன்,
தஞ்சாவூர்.

**சிறந்த கதை !**

மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதிய 'பொருமைத் தீ' என்னும் சிறுகதை சிந்தைக்கு விருந்தூட்டும் சிறந்த சிறுகதையாய் விளங்குகிறது. இதுபோன்ற கதைகளை நிறைய வெளியிடவேண்டும்.

—ஆர். மதிவாணன், மதுரை.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பது முதுமொழி. அந்த எண்ணும் எழுத்தும் உருவாகும் விதத்தை—அச்சுத் துறையின் தோற்றம்—வளர்ச்சி ஆகியவற்றை, திரு. பி.வி.ஜி. யின் கட்டுரை அருமையாக விளக்குகிறது.

—சி. கனகசுந்தரம்,
வண்ணாரப்பேட்டை.

**அழகான மின்சாரம் !**

தமிழகத்தில் மின்சாரத் துறையில் ஏற்பட்டுள்ள அபார வளர்ச்சியை வரிசையாகக் கூறும் அழகான கட்டுரை திரு. வ.ச. அவர்கள் எழுதியுள்ள 'தமிழகத்தில் மின்வளர்ச்சி'.

—ம. சண்முகநாதன்,
மதுரை.


தமிழரசு

மலர்-4 செப்டம்பர் 16 இதழ்-6

யையும் மதிப்பையும் தந்திருக்கின்றது. ஆனல் ரோமியோவின் பார்வை அச்சத்தையும் அதிர்ச்சியையுமே அதிகப்படுத்துவதாக அமைந்திருக்கிறதே....!

'என் வாழ்வை நீ கெடுத்து நாசம் பண்ணிவிடாதே!' என்று நர்மதாவும் பார்வையாலேயே எதிர் மனு கொடுத்துக் கொண்டிருக்கிருள்!

காபியும் பிஸ்கெட்டும் எடுத்துக் கொண்டு—வழக்கமான கலகலப்புச் சற்றும் குறையாமல் வந்து நிற்கிருள் ராதை.

''சாப்பிடுங்கள்........''—அமைதியைக் கலைக்கின்றவள் ராதைதான்!

நர்மதா மௌனமாகப் பார்க்கிருள்..........

''ஏதாவது பேசுங்களேன் நர்மதா......!'' என்று ராதை மீண்டும் கூறுகிருள்.

நர்மதா, அப்போதும் அமைதியாகவே இருக்கிருள். உணர்ச்சிப்பெருக்கில் அவள் உள்ளம் நனைந்து உதடுகள் துடிதுடிக்கின்றன. பேச்சுவரவில்லை.

''பேசுங்களேன்...... என்னிடம் பேசப் பிடிக்கவில்லையா என்ன?''

''பேச முடியவில்லை ராதா.. என் நெஞ்சு விம்மி உடைந்து விடும் போல் கனமாக இருக்கிறது............''

''சுமையோடு இந்த வீட்டுக்குள் நீங்கள் வந்திருக்கக் கூடாது நர்மதா........அல்லது வந்த பின்னராவது சுமைகளைத் தூக்கி எறிந்துவிடும் மனபலம் வந்திருக்க வேண்டும்.......''

''நான் சுமப்பது உங்கள் அன்பைத்தான்!''

''அன்பு காற்றைப் போல் இலேசானது, தாயைப் போல் உண்மையானது. அன்பைச் சுமப்பதானல் உங்கள் இதயம் உடைந்து விடும் என்ருல், என் அன்பிலே உண்மையில்லை என்றுதான் அர்த்தம்!''

''ராதா......!'' என்று மேலே பேசச் சக்தியற்று அவள் இருகரங்களையும் பற்றித், தன்னேடு அணைத்துக் கொள்கிருள் நர்மதா........ எதிரே ஒரு ஆடவன் இருப்பதையும் மறந்து சிறு குழந்தைபோல் கண்ணீர் சிந்துகிருள்.



''நர்மதா....இந்த வீட்டுக்குள் வந்த பிறகு யாரும் எதற்காகவும் அழக்கூடாது....ஒரு சொட்டுக் கண்ணீர்கூட நீங்கள் சிந்தக்கூடாது. சிந்தவிடமாட்டேன்!''

ரோமியோ இடைமறித்து,

'அவர்கள் பங்கையும் சேர்த்து அழுது தீர்க்கத்தான் நீங்கள் உங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கிறீர்களே, இல்லையா ராதா?'' என்று கேட்கிருன்.

''மிஸ்டர் ரோமியோ.... இது பெண்கள் விஷயம் அதுவும் குடும்ப விஷயம். நீங்கள் குறுக்கிடுவது எனக்குப் பிடிக்கவில்லை!''

''நான் உங்கள் குடும்ப நண்பனில்லையா ராதா?''

''அந்த கௌரவத்தை நீங்கள் தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் பரிவுடன் கூறுகிறேன்.''

நர்மதாவின் விழிகளில் பெருகிய கண்ணீரில் இருசொட்டுக்கள் ராதையின் கரங்களைச் சூடாக்குகின்றன.

''நர்மதா!''

''ராதா....உங்கள் பெருந் ... என்னைத் தலை வணங்காமல் இருக்க முடியவில்லை..உங்கள் தியாகத்தின் முன்னல் நான் ஒரு துரும்புக்குச் சமம்.''

''தியாகம் பெருந்தன்மையெல்லாம் கிடக்கட்டும். நீங்கள் இனிமேல் அழக்கூடாது..ம்.. கண்ணீர் கோழைகளின் ஆயுதம்!''

''ராதா! நல்லவர்களுக்கும் கண்ணீரே நன்றியின் அடையாளம்!''

''நீயா நல்லவள்?'' என்ற ஆவேசக் கேள்வி ரோமியோவின் இதயத்தில் பிறந்தது; 'நீ நல்லவள்தான்' என்ற நம்பிக்கை ராதையின் இதயத்தில் வளர்ந்தது.

''ராதா....என்னைப் பற்றி ஏதாவது—''

''எதுவுமே புதிதாக நீங்கள் சொல்லிவிடமுடியாது......எல்லாவற்றையும்——''

''மிஸ்டர் ரோமியோ சொன்னரோ?''

''மிஸ்டர் ரோமியோ சொல்லவில்லை; உங்கள் ரோமியோ மணிவாசகன்தான் ஒன்றுவிடாமல் சொன்னர்; தேனைக் கண்ட வண்டாக, வானம், வையம், பூச்செடி பொன்மலர் யாவற்றையும் மறந்த கதையைக் கலகலப்பாகச் சொன்னர்.''



''என்னை மன்னித்து விடுங்கள் ராதா!''

''எதற்காக மன்னிக்க வேண்டும்?''

''உங்களுக்குச் சொந்தமாக வேண்டிய இதயத்தைக் கவர்ந்தது எனது தவறுதானே?''

''தெரியாமல் எடுப்பதற்குப் பெயர்தான் திருட்டு........ தெரிந்தே கொடுப்பதற்குப் பெயர் பரிசு.........''

''சகோதரி....· நீ எவ்வளவு உயர்ந்தவள்.......'' என்று பெருமிதத்தால் விம்மியபடி ராதையை அணைத்துக் கொள்கிருள் நர்மதா.

அந்தக் காட்சி ரோமியோவுக்குத் தன்னை யாரோ சவுக்கால் அடிப்பது போல் இருக்கிறது. பெண் மனத்து ஆவல், ஆதங்கம், ஏக்கம், இதயக் குமுறல் எதையுமே உணராமல் இதென்ன போலியான பூச்சு வேலைகள்..

''ராதா....நான் குறுக்கிடுவது உனக்குப் பிடிக்காதுதான்! இருந்தாலும் என்னல் பொறுமையாக இருக்க முடியவில்லை. ..உன்னை மணக்கவேண்டிய மணிவாசகன் இவர்களை மணக்கப் போகிருன்....இது உன் அன்புக்குச் செய்த துரோகம்! உன் உதவிகளுக்குச் செய்த துரோகம். உன் அப்பா தரும் பணத்தில் படித்தவன்—அவன் படிப்புக்காகச் செலவழித்த பணத்துக்காவது அவன் துரோகம் பண்ணுமல் இருப்பானு ?''

''மிஸ்டர் ரோமியோ...... வாழ்க்கையை ... யாக்கி ... திற்கும் கணக்கு வழக்கிற்கும் அப்பாற்பட்ட புனிதங்கள்! என் அப்பா சம்பாதித்த பணத்தை என் அத்தானின் படிப்புக்காகத்தான் பூட்டிவைத்திருந்தார்!''

''பூட்டி வைத்த பணத்தை யாருக்கும் வழங்கலாம் மிஸ் ராதா''

ரோமியோ குறுக்கிட்டான். ராதா தொடர்ந்து சொன்னுள்.

''பூட்டி வைத்த பணத்தை யாருக்கும் வழங்க என் அப்பாவுக்கு உரிமையுண்டு. இதே போன்று பூட்டி வைத்த என் பாசத்தையும் என் அன்பையும் டாக்டர் நர்மதாவுக்குக் கொடுக்க நான் பூட்டி வைத்திருந்தேன், மிஸ்டர் ரோமியோ''

''இந்தச் சமாதானம் போலி



''போலியல்ல, பொருத்தமானது! நான் பித்தளை, என் அத்தான் வெள்ளி. வெள்ளிக்காகப் பித்தளையை இழந்தேன். தங்கத்துக்காக வெள்ளியைத் தானம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். டாக்டர் நர்மதா தங்கம். மாற்றுக்குறையாத சொக்கத் தங்கம்'' என்று ராதை சொல்லச் சொல்ல நர்மதாவின் உள்ளம் உருகிக் கரைகிறது!

''ராதா....என்னைப் பற்றி உன் மனத்தில் எவ்வளவு உயர்வாக மதிப்பு வைத்திருக்கிறாய்!''

''அத்தனையும் என் அத்தான் என்னுள்ளே ஏற்படுத்திய மதிப்பு....அவர் மனம் எதை விரும்புகிறதோ அது உயர்வானதாகத்தான் இருக்கும்.... அதைத்தான் என் மனமும் விரும்பும்; என்மதியும் மதிக்கும்!''

''ராதா....என்னால் உனக்கு எத்தனையெத்தனை—''

''இனிமைகள் வருகின்றன தெரியுமா? இன்பங்கள் பிறக்கின்றன தெரியுமா? ஒப்பற்ற உங்கள் அழகால் அவர் இதயத்தைக் கவர்ந்ததைப் போல் உயர்வான உங்கள் குணத்தால், உங்கள் அன்பால் அவர் வாழ்வை என்றென்றும் வளமாக்குங்கள்........ இதுதான் உங்களிடம் நான் கேட்கும் வரம்.''

''பக்தையிடம் வரம் கேட்கும் தெய்வத்தை இப்போது தான் நான் பார்க்கிறேன்.'' என்கிறாள் நர்மதா.

ஒன்றிக் கலந்த உள்ளங்களுக்கு மத்தியில் ரோமியோ ஒரு துரும்பாகத் தவிக்கிறான். ஐயோ, இந்த அப்பாவிப் பெண் ராதை தெரிந்தே தன்னைப் பலிகொடுக்கிறாளே என்ற நியாயமான அனுதாபத்தில் அவன் நெஞ்சு துடிக்கிறது.

குளியலறைக் கதவைத் திறந்து வெளியே வருகிறான் மணிவாசகன். நர்மதாவைக் கண்டதும் அவன் இதயம் மலர்கின்றது. இதயத்தின் மலர்ச்சி இரு விழிகளிலும் பிரதிபலிக்கிறது. ''ஹலோ....!'' என்றபடி பரபரப்பாக அறையினுள் வருபவனைத் தடுக்கிறாள் ராதை.

''உடை மாற்றிக் கொண்டு வருவதற்குள், உங்கள் நர்மதாவை நாங்கள் விழுங்கிவிட மாட்டோம் ....ம்.... போங்கள்'' என்று திருப்பி அனுப்புகிறாள்.

அவள் அவசரமாக அவனை விரட்டுவதற்குக் காரணம்—ரோமியோ அங்கே இருப்பது தான். தன்னை முன்னிட்டு நண்பர்கள் இருவரும் வாதம் புரியத் தொடங்கினால் அது நர்மதாவுக்கு வருத்தத்தைத் தந்துவிடுமே என்ற பயத்தால் மணிவாசகனை அடுத்த அறைக்குள் தள்ளுகிறாள். அதே வேகத்தில் ரோமியோவை வெளியேற்றவும் திட்டம்.

''மிஸ்டர் ரோமியோ.... அத்தானும் நர்மதாவும் பேசும் போது நாம் இருவருமே இங்கே இருப்பது அவ்வளவு நாகரிகமாகப் படவில்லை. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்......! வக்கீல் சார்!''

''சொல்ல என்ன பாக்கி வைத்திருக்கிறீர்கள்? எல்லாவற்றையும் சுலபமாக முடித்து வைத்துவிட்டீர்கள், நூற்றுக் கிழவி மாதிரி. இனிமேல் எனக்கென்ன வேலை....!''

''கல்யாணத்துக்கு வரவேண்டியதுதான் உங்கள் வேலை!'' என்று கூறிக் கலகலப்பாகச் சிரிக்கிறாள் ராதை.

''கல்யாணமா! ரோமியோவுக்குக் கல்யாணமா?'' என்று கேட்டபடி அறையினுள் வந்து நிற்கிறான் அழகுடையணிந்த மணிவாசகன்.

''என் கல்யாணமில்லேடா முட்டாள்! உன் கல்யாணத்தை எப்படிக் கோலாகலமாகக் கொண்டாடலாம் என்றுதான் நாங்கள் ரொம்பவும் தீவிரமாக யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறோம்''

''இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது.....ராதை எப்படித் தீர்மானம் பண்ணுகிறாளோ அப்படியெல்லாம்தான் நடக்கும். அவள் விருப்பத்திற்கு விரோதமாக எதுவுமே நடக்காது.... இல்லையா ராதா!''

''ஆமாம்....ஆமாம்....'' என்று சேர்ந்து சிரித்துச் சமாளிக்கிறாள் ராதை. இந்தவரைக்கும், மணிவாசகனும் ரோமியோவும் சிங்கமும் புலியுமாகச் சீறிப்பாயாமல், சிரித்தாவது பேசுகிறார்களே என்று ராதைக்கு நிம்மதி......

''கல்யாணம் ஆபட்ஸ்பரியில் தானே ராதா?'' என்கிறான் ரோமியோ. அவன் பேச்சிலே உள்ள குத்தலைக் காணாதவளைப் போல் சமாளித்து, ''ஆமாம்.. அதைவிடப் பெரிய இடம் கிடைக்கவில்லையே....'' என்று கூறிவைக்கிறாள்.

''கல்யாணத்திற்குக் கச்சேரி ஏதாவது உண்டா? சொல்லுங்கள் தெரிந்து கொள்கிறேன்!'' என்று மேலும் சீண்டுகிறான் மணிவாசகன். நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து கொள்ளாமல் விளையாட்டுப் பேச்சிலே பொழுதைக் கழிக்கிறார்களே என்ற தவிப்பு நர்மதாவுக்கு.

''கச்சேரி உண்டு........ ஆனால் சங்கீதக் கச்சேரி இல்லை ........காற்றாடிக் கச்சேரி.. பம்பரக் கச்சேரி......பட்டம் விடும் கச்சேரி......''

''பட்டம் விடும் கச்சேரியா?'' என்று கேட்டுக் கலகலவெனச் சிரிக்கிறான் மணிவாசகன்.

''ஆமாம். மாப்பிள்ளையும் பெண்ணும் பட்டதாரிகள் இல்லையா? மணிவாசகன், எம்.ஏ., பி.எல்., டாக்டர் நர்மதா எம்.பி.பி.எஸ்., இரண்டு பேரும் தொழில் முறையில், யாருடைய பட்டம் உயர உயரப் பறக்கப் போகிறது........யாரை விட யார் அதிகமாகப் புகழ்க் கொடி கட்டப் போகிறார்கள் என்பதை வெள்ளோட்டம் விட்டுப் பார்க்க விளையாட்டாகப் பட்டம் விட்டுப் பார்க்கலாம்.. யாருடைய வாழ்க்கைப் பம்பரத்தை யார் ஒரே வீச்சில் சாய்க்கிறார்கள் என்ற வலுவைச் சோதிக்கப் பம்பரம் விட்டுப் பார்க்கலாம்....'' என்று ஒரே மூச்சாகப் படபட வென்று ரோமியோ பொரிந்து தள்ள, ''ஏன் சடுகுடுப் போட்டிகூட வைக்கலாமே...... யார் காலை யார் அழகாக வாரி விடுகிறார்கள் என்ற பலப் பரீட்சையையும் பார்த்துவிடலாமே...........'' என்று இடைமறிக்கிறான் மணிவாசகன்.

**மதுரை மாவட்டத்தில்—மதுரை நகருக்கருகில் பர்மா அகதிகளுக்கு 400 இலவச வீடுகள் கட்டப்படும். ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ. 4,000 செலவிட்ப்படும். மொத்தம் இந்த வீடுகளுக்கு 16 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

**(9-3-1973-ல் தமிழக சட்ட மன்றத்தில் வீட்டு வசதி வாரிய அமைச்சர் திரு கே. இராசாராம்)**

'' நல்ல சொல்லே வராதா உங்கள் நாக்கில்.... அத்தான்! நர்மதா முதன்முதலாக நம் வீட்டிற்குள் காலடி எடுத்து வைத்திருக்கிறாள்.... அதும் முன் பலப்பரீட்சையாம்...... பட்டம் அறுக்கும் போட்டியாம் .... இந்த ஆண்களுக்குக் கொஞ்சம்கூட நயந்தக்க நாகரிகப் பேச்சே வாயில் வருவது கிடையாது!'' என்று கண்டித்து விட்டு நர்மதாவை வீட்டினுள் அழைத்துப் போகிறாள் ராதை.

'' அப்பா....!'' என்று அங்கு நின்றபடியே குரல் கொடுக்கிறாள் ராதை.

'' என்னம்மா....'' என்றபடியே மாடியிலிருந்து இறங்கி வருகிறார் பாண்டித்துரை.

அவர் கண்களில் கலக்கம்.

கையில், அச்சிடப்பட்ட வெள்ளைத்தாள்.

''அப்பா! இவர்கள்தான்....''

'' டாக்டர் நர்மதாவா ?'' என்கிறார் பாண்டித்துரை.

'' ஆமாம்.... உங்கள் மூத்த மகள் '' என்று ராதை, அறிமுகத்தை அழுத்தமாக்குகிறாள்.

'' வணக்கம் '' என்று கரம் குவிக்கிறாள் நர்மதா.

'' வணக்கம்....வா.... அம்மா......'' என்று மறுமொழி கூறிவிட்டு, பாண்டித்துரை தம் கையிலிருக்கும் தாளை ராதையிடம் கொடுக்கிறார்.

'' என்னப்பா இது ?''

'' சட்டக் கல்லூரியில் சேருவதற்கான நுழைவுத் தாள்.''

'' அப்பா.... !'' என்று திகைக்கிறாள் ராதை.

'' உனக்குத்தானம்மா...... பூர்த்தி செய்து கொடு........ இந்த ஆண்டு உன்னைச் சட்டக் கல்லூரியில் சேர்த்துவிட முடிவு செய்துவிட்டேன் '' என்று அமைதியாக— அழுத்தமாகக் கூறுகிறார் பாண்டித்துரை.

'' என் படிப்புக்கு இப்போது என்னப்பா அவசரம் ?''

''இப்போது என்னப்பா அவசியம் என்று வெளிப்படையாகவே கேட்டிருக்கலாம் ராதா.. உன் எதிர்காலம் பற்றி நான் எடுத்திருக்கும் முடிவு......''

**நிலமற்ற உழவர்கட்குப் பட்டா**

கடந்த ஆறு ஆண்டு காலத்தில் 2 இலட்சத்து 65 ஆயிரம் நிலமில்லா விவசாயிகளுக்கு 5 இலட்சத்து 30 ஆயிரம் ஏக்கர் நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

1972-73-ல் நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்குவதில் இத்துறையினர் போற்றத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளனர்.

ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 745 ஏக்கர் நிலம் மிச்ச மிருப்பதாகக் கணக்கிடப்பட்டதில் 1972-73-ஆம் ஆண்டில் 75 ஆயிரம் ஏக்கர் அளவுக்குப் பட்டா செய்யப்பட வேண்டும் என்று அரசு இலக்கு நிர்ணயித்தது. இதில் 1972 டிசம்பர் முடிய 63 ஆயிரத்து 700 ஏக்கர் நிலம் பட்டா செய்யப்பட்டு உள்ளது.

(10-3-1973-ல் தமிழகச் சட்டப்பேரவை முன் வைக்கப்பட்ட நிலவரி வருவாய்த் துறையின் பணிகள் பற்றிய குறிப்பிலிருந்து.)

'' என் எதிர்காலம் பற்றி நீங்கள் கொண்டிருக்கும் அக்கறைக்கு என் நன்றி என்றென்றும் உண்டு அப்பா....ஆனால் அதைச் செயல்படுத்தும் நேரம், செயல்படுத்தும் வேகம் இருக்கிறதே அதுதான் அவ்வளவு நல்லதாக எனக்குப் படவில்லை. என்னை மன்னித்து விடுங்கள் '' என்று கூறியபடியே சட்டப் படிப்புக்கான விண்ணப்பத்தாளைக் கிழித்து எறிகிறாள் ராதை. ●

சட்டப் படிப்புக்கு வழி காட்டும் விண்ணப்பத்தைப் பழைய பேப்பர் போன்று கிழித்துவிட்டாள். மாஜி பேப்பர் வியாபாரி பாண்டித்துரையின் கண்கள் கலங்குகின்றன. அதைப் பார்த்த நர்மதாவின் இதயம் நடுங்குகிறது.

'' ராதா '' இந்த வீட்டுக்குள் நான் வந்தபோது, ' யாரும் எதற்காகவும் அழக் கூடாது. ஒரு சொட்டுக் கண்ணீர் கூடச் சிந்தக் கூடாது. சிந்தவிட மாட்டேன் ' என்றாயல்லவா ?''

'' உம் '' என்றாள் சிலைபோல அசையாமல்.

'' இப்போது உன் அப்பாவைக் கண்கலங்க வைத்து விட்டாயே !

தந்தையைப் பார்க்கிறாள் மகள். மகள் மனம் மாறி பி.எல். படிக்க ஒப்புக்கொள்ளுவாள் என்ற ஆசையில் தந்தை மகிழ்கின்றார்.

'' அக்கா தான் படிப்பிலே மக்கு ''

'' உனது மிகப் பெரிய மனிதர்களிடம் ஒரு குணம் உண்டென்று படித்திருக்கிறேன். அவர்கள் அறிவுக்கும், அன்புக்கும் அடியிலே பச்சைக் குழந்தையின் இதயம் அமைந்திருக்கும். அதனை உன்னிடம் பார்க்கிறேன்.''

'' நீங்கள் டாக்டர் ''.

'' நீ வக்கீலுக்குப் படிக்க வேண்டும் ராதை......''

தந்தை கண்குளிர மகளைப் பார்த்தார்; காது குளிர மகள் சொல்லும் சம்மதத்தை எதிர் பார்க்கிறார்.

நர்மதா '' நீ வக்கீலுக்குப் படிக்க வேண்டும். இந்த முடிவைச் சொல்லத்தான் வீடு தேடி வந்தேன். பி.எல். படிக்க நீயும், உன் அப்பாவும் சம்மதம் தந்தால்தான்....'' என்று நிறுத்தினாள்.

'' தந்தால்தான் ?..'' என்று எதிரொலி செய்தாள் ராதை.

'' உன் அத்தானுக்கும் எனக்கும் திருமணம் நடக்கும். உதகையில் எங்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்தங்களில் இதுவும் ஒன்று .''

'' இது பெரிய விதி. கடுமையான விதி.''

'' கடமைதான் விதியை நிர்ணயம் செய்கிறது. ; எங்கள் திருமணம் உன் சட்டக் கல்லூரிப் படிப்பைப் பொறுத்திருக்கிறது. நீ படிக்கச் சம்மதம் தெரிவிக்காத வரை........''

ராதை விரைந்து நர்மதாவின் வாயைப் பொத்தினாள். அப் சகுனமாக எதையும் சொல்லி விடக் கூடாதே !

'' ஒவ்வொரு ரோஜாவுக்கும் ஒருமுள் நண்பனாக இருக்கும் உங்கள் திருமணத்திற்கு நான் முள்ளாக இருக்க மாட்டேன்

'' படித்து வக்கீலாக வரப் போகிறாய்!''

ராதை பேச முடியாமல் நின்றாள்.

அரசின் முடிவுக்காகக் காத்திருக்கின்றன. இவைகளைப் பற்றி உடனடியாக முடிவெடுக்க வேண்டும் என்று மாநில அரசு கேட்டுக் கொள்கிறது. இந்தக் காலதாமதங்கள், குறிப்பாக முடிவு எடுக்கும் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டிய தின் அவசியத்தை வெளிப்படுத்துகின்றன.

அண்மைக் காலத்தில், விலைவாசியே வளர்ச்சியைப் பற்றி முடிவு செய்யும் காரணியாக ஆகியுள்ளது. பண வீக்கத்தினால் ஏற்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவு, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைப் பயமுறுத்துவதாக உள்ளது. இதனால் திட்டங்களிலும், நடவடிக்கைகளிலும் குறைந்த அளவில் அணுக வேண்டியுள்ளது இது. விரைவிலோ அல்லது நாளடைவிலோ பற்றாக்குறை மற்றும் விலை உயர்வு என்னும் கெடுதியான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் அச் சூழ்நிலை, திட்டத்தின் வேகத்தை மேலும் குறைத்திடும். நாம் விலைவாசி நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வராவிட்டால், வளர்ச்சியின் இலட்சியத்தை நாம் அடைந்திட முடியாது. விலை, கூலி, இலாபம், வரிகள் போன்ற பிரச்சினைகளில் ஒருங்கிணைந்த தேசிய முறையில் அணுகுவதற்கும், அவைகளை நிறைவேற்றுவதற்கும் இதுவே—எப்பொழுதையும் காட்டிலும் நல்ல தருணம் என்று தமிழ் நாடு நம்புகிறது.

நாட்டின் இன்றியமையாத பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான தேவைப் பொருள்கள் (inputs) இறக்குமதி யாவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். மின்விசை, இரசாயன உரம், பூச்சி மருந்துகள், எரிபொருள் (Fuel) போன்ற இன்றியமையாத பொருள்களைப் பெருமளவில் கிடைத்திடச் செய்யும் முக்கிய திட்டங்களுக்கு உடனடியாக அனுமதியளிக்க வேண்டும். முதலீடு மற்றும் உரிமம் வழங்கும் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இதனால் நாட்டில் நுகர்வுப் பொருள்கள் பெருமளவில் கிடைத்திடச் செய்ய முடிவதுடன், நிலையான விலைவாசி நிலைமை நிலைபெறுவதற்கு உதவிட முடியும்.



பெரும்பாலான மக்களால் பயன்படுத்தப்படும் பொருள்களின் விலையின் மேல் விதிக்கப்படும் இடை நிகழ் செலவுகளைக் குறைத்தல், சேமிப்பவர்களுக்கு அதிக சலுகைகள் அளித்தல் மற்றும் உற்பத்திப் பயன் தரும் தொழில்களில் முதலீடு செய்தல் ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் வரி விதிக்கும் முறையினை மாற்றி அமைக்க வேண்டும். பெருமதிப்புள்ள பணநோட்டுகளைச் செல்லுபடியாகாமல் செய்யும் துணிகர கொள்கைகளின் மூலம் கணக்கில் கொண்டு வராத கறுப்புப் பணத்தின் கொடுமைகளைப் போக்க வேண்டும்; அதே நேரத்தில் வரிவிதிக்கும் அமைப்புகளை, மாநில அரசுடன் கலந்தறிந்து மாற்றி அமைக்க வேண்டும்.

திட்டம் மற்றும் நாட்டின் எதிர்காலத்தை முடிவு செய்வதற்குத் தேசியப் பொருளாதார முக்கியத்துவமுள்ளவைகளில் விவாதத்தின் அடிப்படையில் உடனடி முடிவு எடுத்தல் இன்றியமையாததாகும். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவிட்டால், திட்டம் பற்றி இறுதியான முடிவெடுப்பதில பெரும்பயன் கிட்டாது. இப்பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் உரிமை மாநில அரசுகளுக்கு உண்டு. மாநில அரசுகள் பங்கு கொள்ளும் தேசிய மாநாட்டிற்கு ஏற்பாடு செய்து, அதில் முதலமைச்சர்களின் முன்னிலையில் பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றிய உண்மை விவரங்களை வைக்க வேண்டும். தற்பொழுதுள்ள இக்கட்டான நிலைமையைத் தவிர்த்துச் சீராகக் கொண்டு செல்வதற்குக்கான பல்வேறு மாற்றுத் திட்டங்கள் பற்றிய கருத்துகளை முதலமைச்சர்களிடமிருந்து அறிய வேண்டும். அதன் பிறகே, ஐந்தாவது திட்டத்தின் அமைப்பு மற்றும் அளவு பற்றிய இறுதி முடிவு எடுக்க இயலும்!



(இந்திய அரசின் திட்டக்குழுவிடம் கொடுத்துள்ள தமிழ் நாட்டிற்கான ஐந்தாவது திட்டக் குறிப்பில் உள்ள முன்னுரையின் தமிழாக்கம்).






| | | நான்காவது திட்ட காலத்தில் எதிர்பார்க்கும் செலவு. (1) | வரைவு ஐந்தாவது திட்ட மதிப்பீடு. (2) | 1974–75-ஆம் ஆண்டிற்கான வரைவு ஆண்டுத் திட்டம். (3) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1. | வேளாண்மை மற்றும் தொடர்புடைய திட்டங்கள் (சிறியநீர்ப்பாசனம் நீங்கலாக). .. | 57·74 | 108·09 | 19·83 |
| 2. | கூட்டுறவு .. .. .. | 8·14 | 19·23 | 3·16 |
| 3. | சமுதாய\|கிராம வளர்ச்சி .. | 10·04 | 64·77 | 5·80 |
| 4. | நீர்ப்பாசனம்—சிறிய நீர்ப்பாசனம் உள்பட .. | 65·36 | 188·02 | 20·92 |
| 5. | மின்விசை .. .. .. | 197·25 | 446·20 | 50·53 |
| 6. | தொழில் .. .. .. | 37·12 | 107·09 | 12·23 |
| 7. | சாலைகள் .. .. .. | 22·69 | 101·18 | 11·00 |
| 8. | இதர போக்குவரத்து வசதிகள் .. | 8·06 | 25·21 | 3·57 |
| 9. | கல்வி, தொழில் நுட்பக்கல்வி மற்றும் கலாச்சார திட்டங்கள். .. | 48·70 | 116·82 | 13·60 |
| 10. | நல்வாழ்வு, குடும்பநலத்திட்டம் .. | 15·33 | 60·58 | 7·11 |
| 11. | குடிநீர் வழங்கல், துப்புரவு .. | 32·29 | 108·87 | 20·00 |
| 12. | ஊட்ட உணவு .. .. | 0 54 | 21·00 | 2·50 |
| 13. | பிற்பட்ட இனத்தவர்களின் நல்வாழ்வு .. | 19·19 | 23·99 | 3·41 |
| 14. | மற்றவை .. .. | 35·14 | 140·83 | 28·19 |
| | மொத்தம் .. | 557·59 | 1,531·88 | 201·95 |

பிற்பட்ட இனத்தவர்களின் நல்வாழ்விற்காக நான்காவது திட்ட காலத்தில் 53·68 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, ஐந்தாவது திட்ட காலத்தில் திட்டம் மற்றும் திட்டம் கீழ் அல்லாத பணிகளின் கீழ் மொத்தம் 91·56 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு
# ரெட்டியார் சத்திரம் ஒன்றியம்



ஊராட்சி ஒன்றியங்கள் அடைந்துவரும் வளர்ச்சிக்கு நாள்தோறும் புதிய பணிகள் மூலம் வளர்ந்து வருவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது மதுரை மாவட்டத்திலுள்ள ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம்.

வேளாண்மைத் துறையில் கடந்த ஐந்தாண்டுகளில் மகத்தான வளர்ச்சிஅடைந்திருக்கிறது ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியம்.

பொறுக்கு விதைகள் விநியோகத்தின் கீழ் நெல் விதைகள் கடந்த ஐந்தாண்டுகளில் 50 டன்கள் வழங்கப்பட்டன. சுமார் 2,545 ஏக்கர் நிலம் பயிர்செய்யப்பட்டும் ஏறத்தாழ 7,440 டன் நெல் விளைவிக்கப்பட்டுள்ளது.

பருத்தி விதைகள் 41 டன் வழங்கியும் 5,000 ஏக்கர் பயிரிட்டும் சுமார் 6,500 டன் பருத்தி விளைவிக்கப்பட்டுள்ளது. மிகு விளைச்சல் தானிய வகைகள் வேளாண் பெருங்குடியினருக்கு 15 டன் வழங்கப்பட்டும், 2,000 ஏக்கர் நிலம் பயிரிட்டும் 3,550 டன் தானியங்கள் விளைவிக்கப்பட்டுள்ளது. எண்ணெய் வித்துக்கள் 26 டன் வழங்கி 2,600 ஏக்கர் பயிரிடப்பட்டு, சுமார் 1,00,000 டன் விளைவிக்கப் பட்டது. மேலும் தென்னங்கன்றுகள் விவசாயிகட்குச் சலுகை விலையில் 15,000 வழங்கப்பட்டு, 12,000 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிட்டுச் சுமார் ஒரு இலட்சம் டன் தேங்காய்கள் விளைவிக்கப்பட்டுள்ளன.

பயிர்ப் பாதுகாப்பின் கீழ் 18 விதைத் தெளிப்பான்களும், 87 மருந்துத் தெளிப்பான்களும், 42 மருந்து தூவும் கருவிகளும் விவசாயிகளின் நலன் கருதிக் கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப் பட்டுள்ளன. மேலும் இரசாயன உரங்கள் சுமார் 3,000 டன் வழங்கப்பட்டுள்ளன.

### வேளாண்மைக் கூடங்கள்

கடந்தஐந்தாண்டுகளில்இரண்டு வேளாண்மைக் கிடங்குகளும், ஒரு தொழில் கருவிக் கூடமும் கட்டப் பெற்றுள்ளன. மேலும் பல துணைக் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் ஒன்றிய விவசாயிகளின் நலன் கருதி உழுவடை இயந்திரம், எண்ணெய்யால் இயங்கும் நீரேற்றும் பம்பு, ஓர் தானியக் கதிரடிக்கும் இயந்திரம் ஆகியவை இந்த ஐந்தாண்டுகளில் பெறப்பட்டு விவசாயிகட்குக் குறைந்த வாடகையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், சிறு விவசாயிகளின் மேம்பாடு குறித்து, இவ்வொன்றிப்பில் ஓர் நிலவள வங்கி நிறுவி, விவசாயிகளுக்குப் போதிய கடனுதவி செய்து வருகிறது.

### கூட்டுறவு வளர்ச்சி

ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் கடந்த ஐந்தாண்டுகளில், 3 கிராம நாணயச் சங்கங்களையும், 7 பால் விநியோகச் சங்கங்களையும் இரண்டு கூட்டுறவு விடு கட்டும் சங்கங்களையும், ஓர் நிலவள வங்கியையும், இரண்டு கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்கங்களையும், இரண்டு கூட்டுறவு வேளாண்மைப் பொறியியல் சங்கங்களையும் இரு கூட்டுறவுக் கிடங்குகளையும் நமது அரசு அமைத்துள்ளது.

இவ்வொன்றிப்பைச் சார்ந்த கிராம விவசாயிகளின் நலனுக்குப் பாடுபட்டுள்ளது. இதற்காகச் சுமார் 12 இலட்சம் மூலதனமாகச் செலவிட்டுள்ளது.

### கல்வி வளர்ச்சி

கடந்த ஐந்தாண்டுகளில் இவ்வொன்றியத்தில் ஓர் உயர்நிலைப்பள்ளி நிறுவப்பட்டுச் செயல்படுகிறது. தனியார் பள்ளிகள் இரண்டு, ஒன்றியத் தரப் பிற்குக்கொண்டுவரப்பட்டுள்ளன ஒன்றிய உயர் தொடக்கப் பள்ளிகளில் பட்டப்படிப்பு ஆசிரியர்கள் நியமனத்திற்கு மூன்று பள்ளிகட்குச் சுமார் ரூ. 4,03,000 செலவில் புதிய பள்ளிக்கட்டடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

கிராம வானொலி மன்றங்கள் கூடுதலாக 24 நிறுவப்பட்டதுடன், ஊராட்சிக்குச் சுமார் 54 வானொலிப் பெட்டிகள் வழங்கப் பட்டுள்ளன.

### குடும்ப நலம்

நாட்டின் இன்றைய மிக முக்கியமான பிரச்சினையான, குடும்ப நலத் திட்டத்தின் கீழ், 1,907 ஆண்களுக்கும், 1,270 பெண்களுக்கும் அறுவைச் சிகிச்சையும், 453 பெண்களுக்குக் கருத்தடை வளையங்களும், பொருத்தப்பட்டுள்ளன. குடும்ப நல முனைப்பியக்கம் 1972 மற்றும் 1973-ஆம் ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்டுக் கிராம மக்கட்குக் குடும்ப நலத்தின் அவசியம் உணர்த்தப்பட்டுள்ளது.

மகளிரின் நலன்கருதிப் பல மகளிர் மன்றங்கள் நிறுவப்பட்டும். மகளிர்கட்குத் தையல் கலைப் பயிற்சி கற்றுக் கொடுக்கப்பட்டும் வருகிறது. குடும்பத் தலைவி-களான 10,000 பெண்களுக்குத் திட்டமிட்ட குடும்பம், சிக்கனமான வாழ்வு ஆகியன போதிக்கப்படுகிறது. இவர்கள் பிறருக்கு வழிகாட்டிகளாகவுமுள்ளனர்.

### மக்கள் நல்வாழ்வு

இவ்வொன்றிப்பிலுள்ள அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்குப் பல துணைக் கட்டடங்கள் கட்டப்பட்டுக் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி பெருகியுள்ளது. மருத்துவம் மற்றும் குழந்தை நல நிலையங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுத் தாய்மார்களின் மகப்பேறுகளையும், குழந்தைகளின் நல்வாழ்வுகளையும், செவ்வனே கவனித்து வரப்படுகிறது. அவற்றிற்கு இந்த ஐந்தாண்டுகளில் சுமார் ரூபாய் 15,000-க்கு மருந்துகள் பெற்று விநியோகிக்கப்பட்டுள்ளன. மருத்துவ உதவியாளர்கள் மகப்பேறு, குழந்தைநலம் பேணல் போன்ற பணிகளுடன் தீவிரக் குடும்ப நலத் திட்ட உதவியாளர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

### கால்நடை வளர்ச்சி

கடந்த ஐந்தாண்டுகளில் ஓர் கால்நடை மைய நிலையக் கட்டடமும், 2 துணைநிலையக் கட்டடமும் கட்டப்பட்டுள்ளன. இதற்கெனச் சுமார் ஓர் இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. செம்மறி ஆடுகளின் வளர்ச்சிக்குச் சுமார் 572 கடாக்களும், கோழிகளின் அபிவிருத்திக்கு 470 சேவல்களும் வழங்கப்பட்டன. மேலும் மீன் குஞ்சுகள் 80,000 வழங்கப் பட்டுள்ளன. 24 மாட்டுத் தொழுவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

## கிராம வளர்ச்சிப் பணிகள்

### குடிநீர் வசதி

67 புதிய குடிநீர்க் கிணறுகள் வெட்டுவதற்குச் சுமார் ரூபாய் 2,21,000 செலவிடப் பட்டு அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தற்போது குடிநீர்க் கிணறுகள் இல்லாத கிராமங்கள் இவ்வொன்றியத்திலில்லை. அத்துடன் பழைய குடிநீர்க்கிணறுகளை ஆழப் படுத்த ரூபாய் 3,00,000 செலவிடப்பட்டுள்ளது. மேலும் முக்கியக் கிராமங்கட்கு-மூன்று, தரை மட்டக் குடிநீர்த் தொட்டிகள் ரூபாய் 50,000 செலவிலும், 17 நீர்மட்டக்குடிநீர்த் தொட்டிகள் சுமார் ரூ. 2.5 இலட்சம் செலவிலும் அமைத்து இந்த ஐந்தாண்டுக் காலத்தில் இருபது கிராமங்கட்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் 5 குடிநீர்த் தொட்டிகள் அமைக்க வேலை செய்யப் பட்டு வருகிறது.




### போக்குவரத்து

இவ்வொன்றிப்பின் கண்ணுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்துச் சாலைகளற்ற கிராமங்களில்லை எனலாம். கடந்த ஐந்தாண்டுகளில் 64 புதிய இணைப்புச் சாலைகள் ரூபாய் 6 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ளன. 117 கி. மீ. நீளமுடைய 20 சாலைகள் ரூபாய் 4.80 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டன. மேலும் இவ்வொன்றியப் பகுதியின் முக்கிய கிராமங்களுக்குப் பேருந்து வசதிகளும் நகர்ப் பேருந்து வசதிகளும் செய்யப்பட்டு, மக்களின் போக்குவரத்து வசதியில் மிக அக்கறை காட்டப்பட்டது.

> திண்டுக்கல்லிலிருந்து பழனிக்குச் செல்லும் சாலையில் உள்ளது ரெட்டியார் சத்திரம் என்ற ஊர். இந்த ஊருக்கு ரெட்டியார் சத்திரம் என்று பெயர் எப்படி வந்தது?
>
> அந்தக் காலத்தில் பழனி முருகன் கோவிலுக்குச் செல்பவர்கள் நடந்தே செல்வார்கள். அவர்கள் வழியில் இளைப்பாறுவதற்கு ரெட்டியார் ஒருவர் சத்திரம் ஒன்று கட்டி வைத்திருந்தார். அந்த இடம் ரெட்டியார் சத்திரம் என்று அழைக்கப் பட்டு, நாளடையில் ஊரின் பெயரே ரெட்டியார் சத்திரம் என்று மாறிவிட்டது.

### வறட்சி நிவாரணப் பணி மூலம் சாலை வசதிகள்

நமது தமிழ்நாடு அரசு இதற்கு முன்பைவிட, இந்த ஐந்தாண்டுகளில், இவ்வொன்றியத்திற்கு நான்கு இலட்சம் ரூபாய் தொகை வழங்கி அதன் மூலம் இவ்வொன்றியத்தில், சீர்கெட்ட நிலையிலிருந்த கிராமங்கட்குக்-குடிநீர் வழங்குதல், கண்மாய் மராமத்துப் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் இது நாள் வரை போக்குவரத்து வசதியற்றிருந்த இவ்வொன்றியத்தைச் சார்ந்த ஆடலூர், பன்றிமலை ஆகிய மலைப் பகுதி ஊராட்சிகட்கு ரூபாய் 50,000 செலவில் வறட்சி நிவாரணத்தின் கீழ் மலைச்சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.




தண்ணீர் பற்றுக்குறையாகவுள்ள பலக்கனூத்து, கம்பளி நாயக்கன்பட்டி, போத்திநாயக்கன்பட்டி, குரும்பப்பட்டி, கரட்டுப்பட்டி, சந்தம நாயக்கன் பட்டி ஆகிய கிராமங்கட்குக் குழாய் கிணறுகள் நிறுவப்பட்டு இப்பகுதி வாழ் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையில் தன்னிறைவு கண்டுள்ளது.

### புதிய பாசனத் திட்டங்கள்

கடந்த ஐந்தாண்டுகளில், இவ்வொன்றிப்பிற்குச் சுமார் ரூபாய் 4.14 இலட்சம் ஒதுக்கீடு செய்து, 71 கண்மாய்கள் மராமத்துச் செய்யப்பட்டுள்ளது. தற்போது பொதுப் பணித்துறை மூலமாக மிக முக்கியமான பெரிய கோம்பையாறு அணைத்திட்டம், சின்னக் கோம்பையாறு அணைத் திட்டம், நாயோடை அணைத் திட்டம், சங்கன்குளம் சீரமைப்பு, கதிரயன்குளம் சீரமைப்பு, புதுக்குளம் கோம்பையாறு போன்ற பல பெரிய அணைத்திட்டங்கட்கு அடிகோலி அத்திட்டங்களனைத்தும் அரசின் செயல் முறையிலுள்ளது. இவைகளனைத்தும் இவ்வாண்டில் விரைந்து செயல்படுத்தப்படும் என்று தெரிகிறது. இதன் மூலம் இவ்வொன்றிப்புக்குச் சுமார் ரூபாய் 25 இலட்சம், அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமென எதிர் பார்க்கப்படுகிறது.

### மின்சார இணைப்பு

கடந்த ஐந்தாண்டுகளில் இவ்வொன்றிப்பிலுள்ள 208 சின்னஞ்சிறிய கிராமங்கட்கும் மின் வசதி செய்யப்பட்டு, அனைத்துக் கிராமங்கட்கும், மின்சாரக்குழல் தெருவிளக்குகள் போடப்பட்டுள்ளன. இவ்வொன்றியம் மின்சார இணைப்புப் பணியிலும் தன்னிறைவு [illegible] பதனைச் சிறப்பாக[illegible] லாம்.

# தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டித் தெரு, அஞ்சல் பெட்டி எண் 226,
சென்னை—600001.

தந்தி : " அர்பாங்க் "  தொலைபேசி எண் : 20367, 28068.

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும், விவசாயத் தொழில்களுக்கும் உதவி செய்யும்.

---

| வட்டி விகிதங்கள். | | (வருடத்திற்கு %) |
|---|---|---|
| நடப்புக் கணக்கு | .. | வட்டி இல்லை |
| சேமிப்புக் கணக்கு | .. .. | 4.00 |
| (குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது) | | |
| காலாந்திரக் கணக்கு—ரூ. 1000-ம் அதற்கு மேலும். | | |
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை | .. .. | 2·00 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை | .. .. | 3·00 |
| நிரந்தரக் கணக்கு— | | |
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக | .. .. | 4·25 |
| 6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்குக் குறைவாக | .. .. | 4·75 |
| 9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்குக் குறைவாக | .. .. | 5·25 |
| 1 வருடத்திலிருந்து 2 வருடங்களுக்குக் குறைவாக | .. .. | 6·00 |
| 2 வருடங்களிலிருந்து 3 வருடங்கள் வரை | .. .. | 6·50 |
| 3 வருடங்களுக்கு மேல் 5 வருடங்கள் வரை | .. .. | 7·00 |
| 5 வருடங்களுக்கு மேல் | .. ... | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1000-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்தர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேலே குறிப்பிட்டதை விட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

| தொடர் கணக்கு | தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128·50 | 201 | 278 | 362·50 | 452 | 548·50 |

---

ஆர். கனகசபை, தலைவர்.

குடவாசல் சி. கிருட்டிணமூர்த்தி, துணைத்தலைவர்.

டி. வர்த்தமானன், செயலர்.



"செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் இம்மாதம் 21-ஆம் நாள் வழங்கப்பட இருக்கும் சைக்கிள் ரிக்ஷாக்களையும் சேர்த்து சுமார் 900 பேருக்கு வழங்கப்பட்டு இத்திட்டம் முடிவுறுகிறது இத்திட்டம் முடிவுற ஆகும் செலவில் மொத்த மதிப்பீடு 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஆகும்".

"மொத்தம் வசூலான தொகை சுமார் 25 லட்சம் ரூபாய் இதில் மீதி சுமார் 13 லட்சம் ரூபாய் இருக்கிறது. இந்தப் பணத்தைக் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் மேலும் சுமார் 1500 பேருக்கு சைக்கிள் ரிக்ஷா வழங்கப்படும்".

# சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம்

"ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் வீதம் திருப்பிச் செலுத்த வேண்டும் என்கிற அடிப்படையில் ஆயிரம் நாட்களில் திருப்பிச் செலுத்தி உரிமை கொள்ளலாம்".

"கைரிக்ஷாக்களை அகற்றிய நேரத்தில் அந்தத் தொழிலாளிகளுக்கு அன்றாடப்படி வழங்கிய வகையில் 50 ஆயிரம் ரூபாய் செலவாகியுள்ளது.

"தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் திட்டமாக வெளியிடப்படுகிறது. அதன் மூலமாக 1500 பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்".

—முதல்வர் டாக்டர் கலைஞர்

(சென்னை மாநகராட்சி சார்பில் சைக்கிள் ரிக்ஷா வழங்கிய விழாவில்)



# தூத்துக்குடி அனல் மின் திட்டம்



மின் வளர்ச்சியில் தமிழ்நாடு சிறப்பான இடத்தினைப் பெற்றுள்ளது. மின் சக்தியைப் பயன்படுத்தும் பயனீட்டாளர்கள் தமிழ் நாட்டில்தான் அதிகம். வேளாண்மைக்கு மின் சக்தியைப் பயன்படுத்துதலில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முன்னணியில் உள்ளது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, வளமான எதிர் காலம் சமைத்திட, மின் வளர்ச்சி இன்றியமையாத ஒன்றாகும். எல்லா வளர்ச்சிக்கும் மின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. தொழில் வளம் பெருக, வேளாண்மை சிறக்க, வளம் கொழிக்க, வாழ்வு மலர மின் திட்டங்கள் பயனுள்ள உறுதுணையாக அமைந்துள்ளன.

மின் வளர்ச்சியின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் பல மின் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறது. மின்சாரத்தின் தேவை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாகவே மின் சாரம் ஆகிவிட்டபடியால், வளர்ந்துவரும் தேவையைச் சமாளிக்க, பல புதிய மின் திட்டங்களை மின் வாரியம் செயல்படுத்த முனைந்துள்ளது.

தமிழகத்தின் நீர் ஆதாரங்களை அநேகமாக முழுமையான அளவுக்குப் பயன்படுத்தியாகி விட்டது. அத்துடன் நீர் மின் திட்டங்களையே நம்பியிருப்பதற்கில்லை. பருவமழை பொய்த்துப்போய் விட்டால் பயங்கரமான நெருக்கடி நிலை உருவாகி விடுவதை அண்மையில் கண்டோம். நீர் மின் திட்டங்களோடு, அனல் மின் திட்டங்களையும் அணு மின் திட்டங்களையும் உருவாக்கிச் செயல்படுத்தினால் தான், வளர்ந்து கொண்டே போகும் மின் தேவையை ஓரளவுக்காவது சமாளிக்க முடியும்.

இந்தக் கருத்தின் அடிப்படையில்தான், தூத்துக்குடி அனல் மின் திட்டத்தினை (Tuticorin Thermal Project) செயல்படுத்தத் தமிழ்நாடு மின் வாரியம் உத்தேசித்துள்ளது. சென்னைக்கு 600 கிலோ மீட்டர் தொலைவில் கிழக்குக் கடற்கரையில் தூத்துக்குடியில் இந்த அனல் மின் நிலையம் அமையும்.

முதற்கட்டமாக ஒவ்வொன்றும் 200 மெகவாட் நிறுவனத்திறன் கொண்ட இரண்டு பிரிவுகள் நிறுவப்படும். பின்னர், 1,500 லிருந்து 2,000 மெகவாட் திறனுக்கு மின் நிலையமானது விரிவாக்கப்படும்.

தமிழகத்தின் இன்றைய மின்சாரத்தேவை சுமார் 1,325 மிலியன் யூனிட்டுகளாகும். இந்தத் தேவையின் அளவானது 1978—79-ல் 3,500 மிலியன் யூனிட்டுகளாக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. வளர்ந்து கொண்டே போகும் இந்தத் தேவையைச் சமாளிக்க செயல்படுத்தப்பட விருக்கும் பல புதிய மின் திட்டங்களில் முக்கியமான திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டமாகும்.

அனல் மின் நிலையம் அமைக்க தூத்துக்குடி மிகவும் பொருத்தமான இடமாக அமைந்துள்ளது. தூத்துக்குடியில் துறைமுகம் கட்டப்பட்டு வருவதினால் வங்காளத்திலிருந்து மின் நிலையத்திற்குத் தேவையான சரியினைக் கடல் மூலமாகத் தூத்துக்குடிக்கு கொண்டு வருவது சுலபமானது. வங்காளம்— பீகார்ப் பகுதிகளில்தான் கரி கிடைக்கிறது. ரயில் வண்டிகள் மூலமாகக் கரியைக் கொண்டு வருதல் என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்று. ரயில் வேகன்கள் கிடைப்பதில்லை; போதுமான ரயில் வசதிகளும் கிடையாது. ஆகவே கடல் மூலமாகத்தான் கரியைக் கொண்டு வர வேண்டியுள்ளது. எதிர்காலத்தில் அனல் மின் நிலையங்கள் அமைப்பதென்றால், அவை கடற்கரை ஓரங்களில் தான் அமைக்கப்பட வேண்டும். அதனால் ரயில் மூலமாகக் கரி கொண்டு வருதல் தவிர்க்கப்படும் என்பதினால், பெரிய அனல் மின் நிலையங்கள் கடற்கரை ஓரங்களில் அமைய வேண்டும் என்பது இந்திய அரசின் கொள்கையாகும். தமிழகத்தின் தெற்குப் பகுதிகளில் இப்பொழுது பெரிய மின் உற்பத்தி நிலையம் ஒன்றுமில்லை. அத்துடன், 'ஸ்பிக்' (Spic), ஹெவி வாட்டர் பிளாண்ட், தூத்துக்குடித் துறைமுகத் திட்டம், இரசாயனப் பொருள்கள் மற்றும் சிமெண்ட் உற்பத்தி நிலையங்கள் ஆகியவை அமையப் பெறுவதினால், இந்தப் பகுதியில் தொழில் வளம் பெருகத் தொடங்கியுள்ளது. ஆகவே இந்தப் பகுதியில் பெரிய அளவிலான ஒரு மின் உற்பத்தி நிலையம் அமைவது இன்றியமையாத ஒன்றாகும்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம் 1974-ல் செயல்படத் தொடங்கிவிடும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்தத் துறைமுகத்தின் முக்கியப் போக்குவரத்துப் பொருள் கரியாகத்தான் இருக்கும். 400 மெகவாட் நிறுவனத் திறன் கொண்ட மின் உற்பத்திப் பிரிவுகளுக்கு ஆண்டொன்றுக்கு சுமார் 1·2 மிலியன் டன் கரி தேவைப்படும். இதற்கென்று இந்தத் துறைமுகத்தில் தனியாக ஒரு கரித்தளம் (Coal berth) அமைக்கப்படும். கப்பலிலிருந்து கரி இறக்கப்பட்டு, கன்வேயர்கள் மூலமாக நேரடியாக மின் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

# சுருளி மின் திட்டம்

தென்கிழக்கு ஆசியாவிலேயே மிக உயரமான இடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவரப்பட்டு மின்விசை உற்பத்தியாவது, கோதையாறு நீர் மின் திட்டம் ஆகும். அதைவிட உயரமான நீர் மின் திட்டம் ஒன்று அமைக்கப்படும் பணிகள் மதுரை மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

அந்தத் திட்டம்தான் சுருளியாறு மின் திட்டம். சுருளியாறு நீர் மின் திட்டத்தினால் இன்னொரு நன்மையும் உண்டு. சுருளித் தீர்த்தம் என்று அழைக்கப்படும் சுருளி அருவியில் எப்பொழுதுமே தண்ணீர் வந்து கொண்டிருக்கும். ஆனால் மழைக் காலத்தில் மிக அதிகமாகவும், சில நேரங்களில் குறைவாகவும் தண்ணீர் வரும். ஆனால் சுருளி நீர் மின் திட்டம் அமைவதால் சுருளி அருவியில் எப்பொழுதும் ஒரே சீராகத் தண்ணீர் வரும். இதனால் சுற்றுலாப் பயணிகள் மேலும் கவரப்படுவார்கள்.

சுருளியாறு நீர் மின் திட்டத்தின் கீழ் 35 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் ஒன்று அமைக்கப்படும்.

இந்த மின் நிலையமானது, மதுரை மாவட்டத்தில் கம்பம் அருகே, பெரியாறு மின் உற்பத்தி நிலையத்திலிருந்து ஏறத்தாழ 5 மைல் தொலைவில் அமையும்.

சுருளியாறு வைகை ஆற்றின் கிளை ஆறாகும். சுருளியாறு, மற்றும் அந்த ஆற்றின் முக்கிய கிளை ஆறுகளான மணலாறு, வெண்ணீர் ஆறு, எரவங்கலாறு ஆகிய ஆறுகளின் தண்ணீரைப் பயன்படுத்தி, ஒரு மின் உற்பத்தி நிலையத்தினை அமைக்கச் சுருளியாறு நீர் மின் திட்டம் வகை செய்கிறது. சுருளியாறு, பச்சைக் குமாச்சி என்ற மலைத் தொடரிலிருந்து பிறக்கிறது. மதுரை குமுளி சாலையின் மூலமாக இந்த மின் நிலையம் அமையும் இடத்தை அடையலாம். மதுரை மாவட்டம் கம்பம் நகரிலிருந்து மூன்று அல்லது நான்கு மைல் தொலைவில் உள்ளது மின் நிலையம் அமைக்கப்படும் இடம்.

இந்த மின் நிலையத்தின் உயரம் (Maximum Gross Head) 1030 மீட்டர்களாகும். தென்கிழக்கு ஆசியாவில் உள்ள எல்லா மின் நிலையங்களைக் காட்டிலும் இதுவே மிக உயரமானதாக இருக்கும். இந்த மின் நிலையத்தின் மூலமாகச் சுமார் 114 மிலியன் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்படலாம்.

இந்த மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சக்தி, தமிழ்நாடு மின் இணைப்புடன் (Grid) பெரியாறு மின் நிலையத்தில் தொடர்பு படுத்தப்படும்.

35 மெகாவாட் நிறுவனத்திறன் கொண்ட சுருளியாறு நீர் மின் திட்டம் குறித்த திட்ட அறிக்கை (Project Report) தமிழக அரசினால் 1970 மே திங்களில் மத்திய அரசின் திட்டக் குழுவுக்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான அனுமதி ஆகஸ்ட் '72-ல் கிடைக்கப் பெற்றது. இலக்குகளின் படி, கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மின் நிலையத்திற்குத் தேவையான டர்பைன்கள், மற்றும் இயந்திரப் பொறிகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது குறித்து, இன்னும் இந்திய அரசு முடிவு எடுக்க வேண்டியுள்ளது.

இந்த மின் நிலையம் 1977-78ல் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வங்காளத்திலிருந்து கடல் மார்க்கமாகத் தூத்துக்குடிக்கு, அதிகச் செலவில்லாமல் கரியினைக் கொண்டு வர முடியுமாகையால், கரியினுல் இயங்கக்கூடிய ஓர் ஆயிரம் மெகவாட் திறனளவு கொண்ட அனல் மின் நிலையம் அமையத் தூத்துக்குடியே ஏற்ற இடமாக இருக்கும். தமிழ்நாடு மின் வாரியம் இந்தக் காரணங்களை ஒட்டியே தூத்துக்குடியைத் தேர்ந்தெடுத்துள்ளது. அது மட்டுமல்ல; எதிர்காலத்தில் இலங்கை மின் இணைப்புடன் மின் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள, இந்த நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடல் மூலமாகக் கரியினைக் கொண்டு வருதல், இன்று அதிகச்செலவு ஆகும் பிரச்சினையாக உள்ளது. சிறுஅளவு கொள்ளளவு கொண்ட கப்பல்கள்தான் கல்கத்தாத் துறைமுகத்தினுள் நுழைய முடிகிறது. ஆட்கள் மூலமாக இந்தப் பணி செய்யப்பட வேண்டியுள்ளதால், இதற்காகும் செலவும் அதிகமாகிறது. கல்கத்தா அருகே உருவாகி வரும் ஹால்டியா துறைமுகம் பெரிய கப்பல்கள் உள்ளே வரக் கூடிய நிலையில் இருக்கும். தூத்துக்குடி துறைமுகத்திலும் அதே அளவு பெரிய கப்பல்கள் உள்ளே வரக்கூடியதாக இருக்கும். ஆட்கள் மூலமாக அல்லாமல் மணிக்கு 1,000 லிருந்து 2,000 டன்கள் வரை கையாள்கின்ற அளவில் இயந்திரங்களே கரியினைக் கையாள்கின்ற அமைப்பு முறை இந்த இரு துறைமுகங்களிலும் அமைக்கப்படும். இதனுல் கப்பல்கள் துறைமுகங்களில் கரியினை ஏற்றவும் இறக்கவும் காத்துக் கிடக்கின்ற நேரமானது வெகுவாகக் குறைக்கப்பட்டு, போக்குவரத்துச் செலவில் இப்பொழுதுள்ள செலவு அளவில் மூன்றில் ஒரு பங்கு குறைந்துவிடும்.

அது மட்டுமல்ல; வங்காளம்—பீகாரிலிருந்து தரமான கரி கிடைக்கிறது; கடல் மூலமாக அதைக் கொண்டு வரும் செலவும் குறைகிறது. இதன் விளைவாக, அமையவிருக்கும் தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 7·25 பைசாதான் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சிங்கரேணிக் கரிச் சுரங்கங்களிலிருந்து பெறப்படும் மட்டமான கரியினைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் செலவும் ஏறக்குறைய இதேதான்.

தூத்துக்குடியில் அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக ஏன் ஓர் அணு மின் நிலையம் ஏற்படுத்தக் கூடாது என்ற கேள்வி எழும்புவது இயற்கையே. கல்பாக்கம் அணு மின் நிலையமே 1977–78-ஆம் ஆண்டில்தான் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரிசையில் நான்காவதான அடுத்த அணு மின் நிலையம் உத்தரப் பிரதேசத்தில் அமைய உள்ளது. தெற்கே அடுத்து அமையப்போகும் அணு மின் நிலையமானது ஒரு மாநிலத்திற்கென்றில்லாமல் தென்னகம் முழுமைக்குமான மின்சக்தித் தேவையைச் சமாளிக்க வேண்டும் என்ற கருத்தினை அணுசக்தி ஆணைக் குழுவும் மத்திய அரசும் கொண்டுள்ளன. இந்த அணு மின் நிலையத்தை நிறுவுவதற்காகப் பல்வேறு இடங்களை அவர்கள் முன்பே ஆய்ந்து வருகின்றனர். ஆகவே, அனல் மின் நிலையத்திற்குப் பதிலாக அணு மின் நிலையத்தை அமைக்கலாம் என்ற கருத்து அவ்வளவு சரியானதல்ல. இன்னும் சொல்லப்போனுல், வளர்ந்து வரும் மின் தேவையைச் சமாளிக்க அனல் மின் நிலையம், அணு மின் நிலையம் ஆகிய இரண்டு நிலையங்களுமே மிகவும் தேவைப்படுகின்றன. முன்பே சொல்லியுள்ளபடி, 1978–79 வாக்கில் தமிழகத்தின் மின் தேவை 3,500 மிலியன் யூனிட்டுகள் என்ற அளவில் பெருகி இருக்கும். கிடைக்கின்ற மின் உற்பத்தியின் அளவோ அதைவிடக் குறைவாக இருக்கும். ஆகவே, இரண்டாவது அணு மின் நிலையம் தமிழகத்தில் அமைவது என்றென்றும் தேவைப்படுகின்ற ஒன்ருகும்.



தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் முதல் கட்டப் பணிகளுக்கான மதிப்பீட்டுச் செலவு ரூ. 73 கோடியாகும். மின் நிலையம் செயல்படத் தொடங்கி மூன்ருவது ஆண்டில் 12·1 சதவிகித அளவுக்கு ஆதாயம் திரும்பக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியானது இப்பொழுதுள்ள தமிழக மின் இணைப்புடன் தொடர்புபடுத்தப்படும். இந்த நிலையத்திற்கான மத்திய அரசின் அனுமதி இன்னும் வரவில்லை. விரைவில் இதற்கான அனுமதி கிடைத்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அனல் மின் நிலையம் சம்பந்தமான தொடக்கப் பணிகள் முன்பே தொடங்கப்பட்டுவிட்டன. முதல் 200 மெகவாட் பிரிவு 1977–78-லும், இரண்டாவது பிரிவு 1978–79-லும் செயல்படத் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. தகுந்த நேரங்களில், மேலும் கூடுதலான உற்பத்திப் பிரிவுகளுக்கான திட்டங்கள் தீட்டப்படும்.

தமிழகத்தின் மின் வளர்ச்சியில் தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஒரு மைல் கல்லாக அமையும் என்பது உறுதி.

—வ. க.




# தமிழ்நாடு வாரி வழங்கிடும் வற்ருத செல்வங்கள்



இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

ரூ. 1,00,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

60-வது குலுக்கல் நாள்: 12-10-1973

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

செலவு ஒரு ரூபாய்
வரவோ லட்ச ரூபாய்

# இதன் வயது 105!



வரலாற்றில் வைர எழுத்துக்களால் பொறிக்கப் பெற்ற காஞ்சி, கலை எழில் மிக்கதாய் விளங்கியதை நாமறிவோம்; நம்மைச் சுற்றியுள்ள உலகமும் அதனை நன்கறியும்!

இலக்கிய வரிகளிலே இன்றளவும் இடம் பெற்றுத் திகழும் காஞ்சி மாநகர் இன்று படிப்படியாய்ப் பல்வளமும் பல நலமும் பெற்று விளங்கி வருகிறது. இதற்கு அருந்துணையாய் நின்று பெரும் பணியாற்றி வருகிறது காஞ்சி நகராட்சி!

வாழ்க்கையையும், தேவையையும் இரட்டைக் குழந்தைகள் எனலாம். வாழ்க்கையோடு முடியாத் தொடர் கதையாய் வருவதுதானே தேவையும்? அன்றுடத் தேவைகளில் மிக முக்கியமானது தண்ணீர். இன்னும் கல்வி, சுகாதாரம், சாலை போன்ற பல பிரச்சினைகள்—தேவைகள் நிறைய உள்ளன. இவற்றையெல்லாம் நிறைவேற்றி வைக்கும் பெரும் பொறுப்பை ஏற்றிருக்கின்றன நகராட்சிகள். இந்த நற்பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு வரும் காஞ்சி நகராட்சியின் கதை மட்டுமல்ல, கடும் உழைப்பினையும் நாம் தெரிந்து கொள்வோம்.

பாலாற்று வளம்பெற்ற வேகவதி ஆற்றின் கரையில் அமைந்துள்ள காஞ்சி, சென்னையின் தென்மேற்கில் 72 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காஞ்சிமாநகர் முதல்நிலை நகராட்சியாக விளங்கி வருகிறது.

காஞ்சி நகராட்சியின் தொடக்கம் இன்று, நேற்று ஏற்பட்டதல்ல. அது தோன்றி இன்றைக்கு 105 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்றால் அதன் பழைமை நன்கு விளங்கும்.

நகரமைப்புத் திட்டங்கள் மூலமே ஒரு நகரம் ஏற்றமும் தோற்றமும் பெற்றிட முடியும் என்பதற்குக் காஞ்சி ஓர் எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறது.

"காஞ்சிபுரத்தின் நகரமைப்புகளுக்கு இணையான ஒன்று உலகில் வேறெந்த நகரத்திலும் இல்லை" என்று மேனாட்டு நகரமைப்பு வல்லுநர் கெட்டின் என்பவர். 1915-ல் காஞ்சி மாநகரைச் சுற்றிப் பார்த்துப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

காஞ்சி, தொழில் வளம் மிக்கது என்பதை நாமறிவோம். காஞ்சிப் பட்டு கவர்ச்சிப் பட்டு என்பது உலகம் உணர்ந்த உண்மையாகும்.

இங்கே பட்டுத் தொழிலும், பருத்தி நெசவுத் தொழிலும் குடிசைத் தொழில்களாகவே வளர்ந்து வருவதை நாம் பார்க்கிறோம். பட்டு நெசவுத் தொழில் பாங்காய் வளர்வதற்கு ஏற்ற வகையில்





காஞ்சித் தலைநகர் தொடக்க விழாவில்

தமிழக அரசு, இந்நகர எல்லைக்குச் சற்றுத் தொலைவில் சரிகை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை உருவாக்கி வருகிறது. இந்தத் தொழிற்சாலை வேலை செய்யத் தொடங்கினால், சரிகைக்காகப் பிற மாநிலத்தை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டிய அவசியம் நமக்கு இல்லாமல் போய்விடும்.

இவை தவிர, ஓரிக்கை என்னும் கிராமத்தில் அமைந்துள்ள தொழிற்பேட்டையும், காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலையும், பிற தொழிற்கூடங்களும் காஞ்சிக்கு வளமூட்டுகின்றன.

காஞ்சி மாநகர் செங்கை மாவட்டத்தின் தலைநகரானது, தமிழ்த்தாயின் தலைமகனும் அறிஞர் அண்ணா அவர்களின் அரிய முயற்சியினாலன்றோ? இத் திருத்தலை நகரிலே வேகவதி ஆற்றின் தென்பால் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகமும், மாவட்டக் காவல் துறையினர் அலுவலகமும் நகருக்கு எழிலூட்டி நிற்கின்றன.

சென்னையிலிருந்தே செயல்பட்டுவந்த செங்கற்பட்டு மாவட்ட அலுவலகங்கள் 1968 சூலைத்திங்கள் முதல் நாளிலிருந்து காஞ்சிக்கு மாற்றப்பட்டன. இதையொட்டி, காஞ்சித் தலைநகர் விழா சூலைத்திங்கள் ஆறும்நாள் காஞ்சியில் மிகச் சிறப்பாக நடந்தது, விழாவுக்கு முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகித்துப் பேசுகையில்,

"ஒரு சர்க்கார் அலுவலகம் எங்கிருந்தால் என்ன, எங்கே மாற்றப்பட்டால் என்ன என்றில்லாமல் நாட்டு மக்கள் அக்கறை காட்டுவது—நீண்ட நாள் விருப்பம் நிறைவேறுகிறது என்பதற்கு அரிய எடுத்துக்காட்டு" என்ற அவர், நகைச்சுவையாக இப்படிக் குறிப்பிட்டார்:

"சிங்காரச் சென்னையிலிருந்து கடற்கரைக் காற்று வீசும் சென்னையிலிருந்து பதிவு பெரு ஊழியர்களைக் கதகதப்பான இந்த இடத்திற்கு மாற்றியது பற்றிச் சிலர் கவலைப்படலாம்.

கடற்கரைக் காற்று இங்கு இல்லை. ஒருபுறம் வேகவதியும் மறுபுறம் பாலாறும் இருக்கின்றன, அவற்றை நீரோட்டம் உள்ளதாக ஆக்கினால் சென்னையைவிடக் குளிர்ந்த காற்றை இங்கே அனுபவிக்கலாம்!

"சென்னைக் கடற்கரைக் காற்றை மன்னர்கள் உண்டதில்லை. வேகவதி—பாலாற்றின் காற்றை மன்னர்கள் உண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களை அப்படிப்பட்ட இடத்திற்கு அழைத்து வந்திருக்கிறோம்!"

1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 12-ஆம் நாள், புதிய தலைமையகக் கட்டடம் முதல்வர் கலைஞர் அவர்களால் துவக்கி வைக்கப் பெற்றது.

சீரும் சிறப்புமிக்க இந்த மாவட்டம் உருவாகிய கதை வரலாற்றில் சுவையான பகுதியாக மிளிர்கிறது.

1760-ஆம் ஆண்டில் ஆர்க்காடு நவாபிடமிருந்து ஆங்கிலேயர்கள் இதனை அன்பளிப்பாகப் பெற்றனர் என்றாலும், 1801-ல் தான் அவர்கள் நேரடி நிர்வாகத்தைத் தொடங்கினார்கள். 1860-ல் சென்னை, செங்கற்பட்டு இரண்டையும் இணைத்துச் 'சென்னை மாவட்டம்' என்று பெயரிட்டனர். 1870-ல் செங்கற்பட்டு மாவட்டத்தைத் தனியாக ஆக்கினர். தற்போது செங்கற்பட்டு மாவட்டத்திற்கு 102 வயதாகிறது!

'கேடில் விழுச் செல்வம் கல்வி' யன்றோ? இந்தச் செல்வத்தை வாரி வழங்கிட வள்ளல் பச்சையப்பர் கல்லூரியும், மகளிர் கல்லூரியும், பொன்னேரிக் கரையில் தொழிற் பயிற்சிக் கல்லூரியும், இங்கே கம்பீரமாய்க் காட்சியளிக்கின்றன. நகராட்சியின் சார்பில் நடத்தப்பெறும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும், 25 ஆரம்பப் பள்ளிகளும் மற்றும் தனியார் பள்ளிகளும் இங்கே நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவர்களை உருவாக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டுள்ளன.

நகர மன்றப் பள்ளிகளில் இலவசப் பகல் உணவுத் திட்டத்திற்காக ஆண்டு தோறும் ரூ. 15 ஆயிரம் நன்கொடை வழங்குகிறது

நிலக்கோட்டை வட்டம். செ குத்தூர் கிராமத்தில் ச. எண். 78-ல் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் ரூ. 74,000 மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளரால் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 84.81 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கவும் 16.55 ஏக்கர் விடுபட்டுப்போன ஆயக்கட்டு சாகுபடிக்கு கொண்டு வரப்படவும் ஏதுவுண்டு.

## புதிய திட்டங்கள்

நிலக்கோட்டை வட்டம்-கரந்தலங்கி கிராமத்தினருகில் கரந்தாங்கி ஓடையின் குறுக்கே ஓர் அணைகட்டி, அதன் மூலம் சம்பகுளம் கண்மாய்க்குத் தண்ணீர் வசதி செய்யும் திட்டம் ரூ. 85,000 மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளரால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 32.73 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி உறுதியாகும். விடுபட்டுப்போன ஆயக்கட்டு 5.92 ஏக்கர் நிலம் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட வாய்ப்பு உள்ளது.

ரெட்டியார் சத்திரம் பகுதியில் ஏறத்தாழ 20 ஆண்டுக் காலமாகப் பொது மக்களின் வேண்டுகோளில் இருந்து வந்த சின்னக் கோம்பையாறுத் திட்டம் அரசினர் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நிலக்கோட்டை வட்டம் கச்சைகட்டி கிராமப் பகுதியைச் சார்ந்த அழகு நாச்சியம்மன் ஓடைப் பகுதியில் சிறிய நீர்த்தேக்கம் ஒன்று ஏற்படுத்த அரசு 7,08,000 ரூபாய் அனுமதித்துள்ளது. இத் தேக்கத்தின் பயனாக 191 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைப்பதோடு 128 டன்கள் அதிக உற்பத்தி கிடைக்கும்.

திண்டுக்கல் வட்டம் தாமத்துப்பட்டியில் புதுக்குளம் கோம்பையாற்றில் சிறிய அணை ஒன்று கட்ட அரசு ரூ. 9,40,000 அனுமதித்துள்ளது. இந்த அணையின் பயனாக 246 ஏக்கருக்குப் பாசன வசதி கிடைப்பதோடு, 182.23 டன்கள் உற்பத்தி அதிகரிக்கும்.

திருமங்கலம் வட்டம் பெரிய உலகாணி கிராமம் கல்லணை, மேலப்புலிக்குண்டு ஆகிய கண்மாய்களுக்கு முறையான பாசன வசதியைச் சீர்திருத்தும் திட்டம் ரூ. 1.33 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளரால் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 272.67 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி உறுதியாகும். விடுபட்டுப்போன ஆயக்கட்டு 31.55 ஏக்கர் நிலம் புதிதாகச் சாகுபடிக்கு வரும் வாய்ப்புள்ளது.

நிலக்கோட்டை வட்டம் தாதக்கவுண்டன்பட்டியில் ஒரு சிறிய நீர்த்தேக்கம் நிர்மாணிக்க அரசு ரூ. 4,50,000 அனுமதித்துள்ளது. இந்தச் சிறிய நீர்த்தேக்கம் கட்டி முடிக்கப்பட்டதும், 75 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைப்பதால், உற்பத்தி 54.74 டன்கள் அதிகரிக்கும்.



ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அய்யம்பாளையத்திலிருந்து மருதாநதி அணைக்கட்டுத் திட்டத்துக்குப் புதிதாகச் சாலை போடப்படுகிறது.



ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் குடவுளூற்றில் அனுமந்தராய கோட்டையில் மூன்று இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட



பசுமைப் புரட்சி எங்கும் பரவிட உறுதுணையாக அமைந்துள்ளது கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகம்.

மதுரை மாவட்டம் செங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள செங்குளம் கூட்டுறவு நீர்ப்பாசனக் கழகத்தின் சார்பில் பன்னிரண்டு கிணறுகள் வெட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் ஐந்து புதிய கிணறுகள் வெட்டப்பட்டு வருகின்றன. ஐந்து கிணறுகள் வெட்டவும் பம்பு செட்டுகள் வைக்கவும் மொத்தம் ரூபாய் 1,56,000 செலவாகும். இதில் அரசு அளிக்கும் மானியத் தொகை ரூ. 60,506·60 ஆகும்.





ஓடும் ரயிலிலே ஒரு நாளென்ன, பல நாட்கள் கூடச் சென்றுவர இன்று பல வசதிகள் செய்யப் பட்டிருக்கின்றன. பயணிகள் சுகமாகப் பயணம் செய்வதற் கான எல்லா வசதிகளும் கொண்ட நவீன ரயில் பெட்டி கள் இன்று தயாரிக்கப்படுகின் றன.

சென்னைப் பெரம்பூரிலுள்ள ஐ.சி.எஃப். முதலில், அகலப் பாதைக்கான (பிராட் கேஜ்) கூண்டுப் பகுதிகளை மட்டுமே தயாரிப்பதென்ற முடிவுடன் ஆரம்பிக்கப்பட்டது. 1955-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இரண்டாம் நாளில் துவக்கப் பெற்ற இத்தொழிற்சாலை, இன்று ஆண்டிற்கு 650 முழுதும் முடிக் கப்பட்ட பெட்டிகளைத் தயார் செய்கிறது.

பெட்டிகளில்தான் எத்தனை வகை! எத்தனை வண்ணம் இதுவரை நாற்பதுக்கு மேற் பட்ட ரகங்கள் தயாராகியுள்ளன. சென்னையில் உருவாகும் இந்தப் பெட்டிகள் இன்று இந்தியா முழுவதும், ஏன் உலக நாடுக ளிலும் ஓடிக்கொண்டிருக்கின் றன என்றால் நமக்கெல்லாம் பெருமையாக இல்லையா?

ரயில் வண்டிகளில் பயணிப் பெட்டிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் பொருட்டுத் தொடங்கப்பெற்ற இத்தொழிற் சாலை, உலகிலேயே ரயில் பெட் டிகள் தயாரிக்கும் மிகப்பெரிய தொழிற்சாலையாக விளங்கு கிறது.

1973 மார்ச் இறுதி வரை ரயில் பெட்டியின் உட்பகுதி முற்றிலும் கட்டி முடிக்கப் படாத 8,703 ரயில் பெட்டிகளை யும்; கட்டி முடிக்கப்பட்ட [illegible] ரயில் பெட்டிகளையும் ஐ.சி. எஃப். தயாரித்துள்ளது. 1974-ஆம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் ஆண்டிற்கு 750 முற்றிலும் கட்டி முடிக்கப்பட்ட ரயில்பெட்டிகளை இது தயாரிக்கும் என [illegible] பார்க்கப்படுகிறது.

[illegible]

வன்முறை!
ரயில் பெட்டிக்குத் தீ!
ரயிலைக் கவிழ்க்கச் சதி!
கல்லெறி!
கண்ணாடிகள் நொறுங்கின!
பயணிகள் பலருக்குப் படுகாயம்!

இப்படிப் பரப்பரப்பான செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கிறோம்; நெஞ்சம் துடிக் கிறோம். அதே சமயத்தில் நெஞ்சம் இப்படியெல்லாம் எண்ணுகிறது;

"ரயிலைச் சேதப்படுத்த நினைப்பவனும் ஒரு பயணி தானே? இதனால் யாருக்கு நட்டம்? நம்மை நாமே தாக் கிக் கொள்வதற்குச் சமமல் லவா இந்த வன்முறைகளெல் லாம்?"

இத்தகைய வன்முறையாளர் களின் வறண்ட நெஞ்சம் மாறிட வழியே இல்லையா?

வேர்வைத் துளிகள் நிலத்தில் சிந்திட ஒவ்வொரு மணித் துளியையும் வீணாக்காமல் அங்கே தொழிலாளர்கள் உழைக் கும் உழைப்பைப் பார்த்தால், "இவ்வளவு பாடுபட்டுத் தயா ரிக்கும் ரயில் பெட்டியையா நாம் ஒரு நொடிக்குள் நொறுக்கிவிடு கிறோம்? இவ்வளவு பண மதிப் புள்ள ரயிலையா கவிழ்த்து, விலை மதிப்பற்ற உயிர்களைக் கொல்ல வழி கோலுகிறோம்?" என்ற நினைப்பு நிச்சயம் வரும். அந்த நினைப்பே அவர்களை நன்முறை யாளர்களாக ஆக்கிவிடும்!

உலக நாடுகளில் பெருமதிப் பையும், நல்ல வரவேற்பையும் பெற்றுத் திகழ்ந்து வருகின்ற ஐ.சி.எஃப். என்னும் இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை (Integral Coach Factory) உழைப் பின் வெற்றியைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

அன்றாட வாழ்க்கையில் போக்குவரத்துக்கு மிக இன்றி யமையாத சாதனங்களாகத் திகழ்பவை பல. அவற்றுள் ரயிலும் ஒன்று என்று நமக் குத் தெரியும். மாட்டு வண்டி, சைக்கிள், கார், பேருந்து போன்ற சாதனங்கள் போக்கு வரத்துக்கு உதவுவன போன்று, விமானமும், கப்பலும் உதவு கின்றன. ஆனால், இவற்றில் நடுத்தர மற்றும் ஏழை மக்கள் போய்வர முடியுமா? ஆகவே தான் ஏழை, எளியவர்களின் மிகச்சிறந்த போக்குவரத்துச் சாதனமாக ரயில் இன்று உலக மெங்கணும் ஓடிக் கொண்டிருக் கிறது.



இந்நகராட்சி. அண்மையில் காஞ்சிபுரம் நகராட்சிப் பள்ளிக்கான இரு வகுப்பறைகள் அரசினர் உதவித் தொகையுடன், சீரணித் தொண்டர்களால் கட்டி முடிக்கப் பெற்றது பாராட்டத் தக்கதாகும்.



நீர் வளமிக்கது காஞ்சி என்பதைப் பாலாறு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இந்நகருக்குப் பெரும்பாலான தண்ணீர் பாலாற்றிலிருந்தே எடுக்கப்படுகிறது. தற்போது இங்கு அமைக்கப்பட்டுள்ள மொத்தக் குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை 5,976. பொதுக் குழாய்களின் எண்ணிக்கை 592.



நகராட்சியின் சார்பில் வடிகால் திட்டமொன்று மிகச் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது. சுமார் 105 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் இத்திட்டத்தின்கீழ், கழிவு நீர்ப்பண்ணை ஏற்படுத்தும் திட்டமொன்றும் உள்ளது.



நல்வாழ்வுக்கு வழிகோலும் 3 மருத்துவ மனைகளும், 7 தாய் சேய் நலவிடுதிகளும், 1 குடும்ப நல நிலையமும் இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ளன, காஞ்சியில் ஆண்டுதோறும் நடக்கும் ஏகாம்பரநாதர், வரதராசப் பெருமாள் கோயில்களின் திருவிழாக்களின்போது பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் பெருமளவில் வருவர். அந்தச் சமயங்களில் நகராட்சி, சுகாதார ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றது.

வாழ்க்கையோடு இணைந்த கலைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நோக்கோடு, நகராட்சியின் சார்பில் நான்கு இலட்ச ரூபாய் செலவில் அறிஞர் அண்ணா அரங்கு ஒன்று நகராட்சியின் எதிரே அழகுடன் காட்சியளிக்கிறது. நாடகம், நடனம் முதலான நிகழ்ச்சிகளுக்கு ஏற்ற வகையில் இந்த அரங்கம் வசதி மிக்கதாய் அமைந்துள்ளது. குழந்தைகளுக்காக, 'பாரதியார் குழந்தைகள் கலை அரங்கு' ஒன்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளித் திடலில் அமைந்துள்ளது. இந்த அரங்கம் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும்கூடக் கலைவிருந்து படைக்கிறது.

கலை மணக்கும் காஞ்சி, சுற்றுலாவுக்கும் ஓர் சிறந்த இடமாக மக்களைக் கவர்ந்து வருகிறது. பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் பயணிகளுக்கு வசதியாக மைய அரசின் பயணிகள் விடுதி ஒன்று இங்கே உள்ளது. தமிழக அரசின் பயணிகள் விடுதி ஒன்று விரைவில் துவங்கப்படவிருக்கின்றது. நகராட்சியின் சார்பில் ஒரு பயணிகள் விடுதியும் தற்போது நடத்தப்பெற்று வருகின்றது. மேலும் இரு விடுதிகள் கட்டவும் நகராட்சி திட்டமிட்டுள்ளது. இவை மட்டுமா?

நவீனப் பேருந்து நிலையமும், அங்கே பயணிகள் தங்கிச் செல்ல விடுதியும் நகராட்சி அமைத்துள்ளது. பேருந்து நிலையத்தினுள் திரைப்படக் கொட்டகை ஒன்றும், பல்வேறு கடைகள் கட்டவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. வசதிமிக்க இந்தப் பேருந்து நிலையத்தை 'பி' வகுப்பாக மாற்றவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காஞ்சியின் சிறப்பு மேலும் வளர்ந்திடும் வண்ணம், நகரின் மத்தியில் 7 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 ஏக்கர் பரப்பளவுள்ள விளையாட்டு அரங்கம் ஒன்றும், அதன் அருகில் 3 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அழகிய திருமண மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றன.

வரிகளையும் வரி இல்லாத இனங்களையும் நூற்றுக்கு நூறு வசூலித்து, அதற்காக அரசு அளித்துள்ள சுழற்கேடயத்தை இந்நகராட்சி தொடர்ந்து பல ஆண்டுகளாகத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. தணிக்கையில் ஆட்சேபனைகள் குறைவாயுள்ள நகர மன்றம் காஞ்சி என்பது குறிப்பிடத் தக்கது.

எழில் பொங்கும் பொன்னேரிக் கரைப் பாதையிலே, பொன்னொளி வீசும் மின் விளக்குகள் அமைத்து, இடை இடையே இளைப்பாற வசதிகளும் செய்யப்படவிருக்கின்றன.

நகர மக்கள் நன்மைக்காக ராஜாஜி சந்தையை விரிவுபடுத்தவும், 'மினி சூப்பர் மார்க்கெட்' ஒன்றை அமைக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பலவகையிலும் காஞ்சி மாநகர் சிறப்புடன் விளங்கிட நகராட்சி பற்பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகின்றது. மக்கள் நல்வாழ்வுக்கு நற்பணிகள் புரிந்து வரும் காஞ்சி நகராட்சி, ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ஏறுநடை போடுகின்றது என்ருல் அது மிகையல்ல!

—பி. வி. ஜி.







# காஞ்சிப் பெருமை!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சீரும் சிறப்புமாக விளங்கிய நகரம் காஞ்சி என்பதை நாமறிவோம். கல்லிலே கலை வடித்த பல்லவருக்குத் தலைநகராக விளங்கியது காஞ்சிபுரம். பின்னர் சோழர்கள், விசயநகர மன்னர்கள் ஆகியோரின் ஆளுகைக்கும் உட்பட்டுக் கலை மலிந்த கோயில்கள் பல அவர்களால் கட்டப்பட்டன. பல்லவர் காலத்துக் கோயில்களான கைலாசநாதர்கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் ஆகியவை கலைச் சிறப்பு மிகுந்தவை.

நால்வகைச் சமயங்களும் இந்நகரில் தொன்மையில் சிறப்போடு விளங்கின என்பதற்கு எடுத்துக்காட்டாகச் சிவ காஞ்சி, விஷ்ணு காஞ்சி, ஜைன காஞ்சி, புத்த காஞ்சி என நால்வகைப் பகுதிகள் இன்னும் பெயர் பெற்று விளங்குகின்றன.



காஞ்சிபுரத்தை அப்பர், 'கல்வியில் கரையிலாக் காஞ்சி' என்று புகழ்கிருர். சந்திரகுப்தரின் அமைச்சர் சாணக்கியரும், திருக்குறளுக்குத் தலைசிறந்த உரை தந்த பரிமேலழகரும், அறிவுக் கண்களைத் திறந்திட செல்வத்தை அளளி வழங்கிய வள்ளல் பச்சையப்பரும், இன உணர்வும், மொழி உணர்வும், அரசியல் விழிப்புணர்ச்சியும் உண்டாக்கிய பேரறிஞர் அண்ணு அவர்களும் பிறந்த இடம் காஞ்சியே அன்ருே?



உட்படப் பல்வேறு வகையான முதல் வகுப்பு, மூன்றாம் வகுப்புப் பெட்டிகளும், குளிர் சாதனப் பெட்டிகளும் தயாரிக்கப்படுகின்றன. நாட்டின் புறநகர் ரயில் போக்குவரத்துக்காக விடப்படும் மின்சார ரயில் வண்டிகளுக்குத் தேவையான மின்மோட்டார் ரயில் பெட்டிகளையும் இது தயாரிக்கிறது. எஃகுப் பாகத்தைத் தவிர இங்குத் தயாரிக்கப்படும் அகலப் பாதைக்கான ரயில் பெட்டிகளில் உபயோகப்படுத்தப்படும் கருவிகளில், உள்ளூரிலேயே செய்யப்பட்ட கருவிகள் 97·5 சதவிகிதம். மீட்டர் கேஜ் இருப்புப் பாதைக்காகத் தயாரிக்கப்படும் ரயில் பெட்டியில் உள்ளூரிலேயே செய்யப்பட்ட கருவிகள் 92·8 சதவிகிதம் ஆகும்.

12,500 தொழிலாளர்களைக் கொண்டுள்ள இந்த மிகப் பெரிய தொழிற்சாலை, உறுதியான, பாதுகாப்பான, நவீனமான, சுகமான, விலைமலிவான ரயில்பெட்டிகளைக் கண்ணைக் கவரும் வகையில் தயாரிப்பதால், இந்தப் பெட்டிகளுக்கு உலக நாடுகளில் நல்ல வரவேற்பு இருந்து வருகிறது.



அண்மையில் ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்ட 113 பெட்டிகள் தாய்வான் நாட்டுக்காக ஆகும். சுமார் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த ரயில் பெட்டிகள் கடந்த ஆண்டு அக்டோபர்த் திங்களில் செய்து முடிக்கப்பட்டன. இந்தப் பெட்டிகள் முற்றிலும் புதிய அமைப்புகள் கொண்டவையாகும்.

தென்கிழக்கு ஆசியாவில் ஏற்றுமதிச் சந்தையை வெகுவாகக் கவர்ந்துள்ள நாடு ஜப்பான் என்று அனைவரும் அறிவர். தாய்வான் நாட்டிற்கும் இதுவரை ஜப்பானே ரயில் பெட்டிகள் செய்து கொடுத்து வந்தது. ஆனால், இப்பொழுது ஜப்பானுக்கும், இந்தியாவுக்கும் கடும் போட்டி! இதில் வெற்றி பெற்றது இந்தியாவே! இதற்குக் காரணம், தரமும், குறைந்த விலையுமேயாகும்!



இதற்கு முன் பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும், தாய்வானுக்கும் "போகிகள்" எனப்படும் ரயில் பெட்டிகளின் சக்கர அமைப்புகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 1968-ஐக்கிய பர்மா நிறுவனத்திற்கு 66 போகிகள் செய்து கொடுக்கப்பட்டன. இதுவே ஐ.சி.எஃப்.இன் முதல் ஏற்றுமதிக்கான வாய்ப்பாகும். பிறகு 100 போகிகள் தாய்வான் ரயில் நிறுவனத்திற்கும், 45 போகிகள் தாய்லாந்து நாட்டிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இரண்டடுக்கு மாடிப் பேருந்துகளைப் போல, இரண்டடுக்கு ரயில் பெட்டியும் இங்குத் தயாரிக்கப்பட இருக்கிறது. அகலப் பாதையில் செல்லக்கூடிய மூன்று, மூன்றாம் வகுப்பு இரண்டடுக்கு ரயில் பெட்டிகள் இங்கு உருவாகும். குறைந்த தூரம் ஓடுபவையும், அதிகப் பயணிகளை ஏற்றிச் செல்பவையுமான 'டெக்கான் குயின்', 'தாஜ் எக்ஸ்பிரஸ்' போன்ற ரயில் வண்டியுடன் இப்பெட்டிகள் இணைக்கப்படும். இப்பெட்டிகள் செயற்படும் விதம், இவைகள்பற்றிப் பயணிகளின் கருத்து ஆகியவற்றை ஆராய்ந்த பிறகு இரண்டடுக்குப் பெட்டிகளை மேலும் அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஐ.சி.எஃப்-இல் கம்ப்யூட்டர் ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது. இதே போலச் சித்தரஞ்சன் ரயில் என்சின் தொழிற்சாலையிலும், வாரணாசி டீசல் என்சின் தொழிற்சாலையிலும் அமைக்கப்படும். சேமிப்பு நிலையம், கட்டுப்பாட்டுப் பட்டியல், ஊதியப் பட்டியல், செலவுக் கணக்கு விவரம் முதலியவற்றைத் தயாரிப்பதோடு, உற்பத்தி பற்றிய செயல்திட்டத்தை வரைவதற்கும் இந்தக் கம்ப்யூட்டர் பயன்படும்.

இரயில்வேத் துறை இன்னொரு புதிய சரக்கு ரயில் பெட்டியையும் அறிமுகப்படுத்துகிறது. சி.ஆர்.டி. என்று அழைக்கப்படும் இந்தப் புதிய



சரக்கு ரயில் பெட்டி அதிகப் பளுவை ஏற்றிச் செல்லும் சக்தி வாய்ந்தது.

இந்தப் பெட்டியை அரசுத் துறையிலும், தனியார் துறையிலுமுள்ள பல தொழிற்சாலைகள் இப்போது உற்பத்தி செய்யத் துவங்கியிருக்கின்றன. முதலாவதாகத் தயாரிக்கப்பட்ட சில ரயில்பெட்டிகள் இப்போது சரக்கேற்றிச் செல்ல ஆரம்பித்திருக்கின்றன.

பெரிய சரக்கு ரயில் பெட்டிகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள இயலாத சிறிய வியாபாரிகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சி.ஆர்.டி. ரயில் பெட்டி உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய ரயில் சரக்குப் பெட்டியில் பழைய நான்கு சக்கரச் சரக்கு ரயில் பெட்டிகளில் இல்லாத நன்மைகள் பல உள்ளன.

புதிய வண்டி 27·54 டன் எடையுள்ள சரக்குகளை ஏற்றிச் செல்லக்கூடியது. பழைய வண்டியில் 21·73 டன் எடை மட்டுமே ஏற்ற இயலும். ரயில் வண்டி ஓடும்போது தண்டவாளத்திலிருந்து தடம் புரளாமல் இருப்பதற்கும், ரயில் பெட்டியிலுள்ள சரக்குகளைச் சமூக விரோதிகள் எளிதில் களவாடாமல் இருப்பதற்கும் இந்தப் பெட்டியில் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மொத்தம் 14 ஆயிரம் சி.ஆர்.டி. சரக்கு ரயில் பெட்டிகளை உற்பத்தி செய்ய இரயில்வேத் துறை தீர்மானித்திருக்கிறது.

இவைமட்டுமா? பயணிகள் சுகமான பயணத்துக்காக ரயில் பெட்டிகளில் எத்தனையோ வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்போது புதிதாக ஒரு விரைவு வண்டி வந்துள்ளது. அதன் பெயர் [illegible]. இதுவும் இங்கே [illegible] பெற்ற பெட்டிதான். இந்தப் பெட்டியில் இன்று எத்தனை எத்தனை வசதிகள் செய்திருக்கிறார்கள் தெரியுமா?

இந்த ரயில் வண்டியிலுள்ள பயணிகள் ரயில் ஓடிக்கொண்டிருக்கும் போதே ஒரு பெட்டியிலிருந்து மற்றொரு பெட்டிக்குச் செல்லலாம். இதில் ஒரு நூல்நிலையமும், புத்தகக் கடையும் இருக்கும். புத்தகங்கள் இங்கு விற்கப்படுவதுடன், இதழ்கள், புத்தகங்கள் ஆகியவற்றை இரவல் பெற்றும் செல்லலாம்.

புது தில்லியிலிருந்து மங்களூர் வரையிலான 3,020 கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்கும் இந்த ரயில்வண்டி இந்தியாவிலேயே அதிக தூரம், செல்லக்கூடிய ரயில் வண்டியாகத் திகழும். ஒரு ரயில் கண்காணிப்பாளரின்கீழ் இந்த ரயில் வண்டி ஒழுங்காக ஓடும்.



இந்த ரயில் வண்டியின் பெட்டிகள் சிவப்பு இளமஞ்சள் நிறத்தில் கண்ணுக்கினியதாகக் காட்சி அளிக்கும். இந்த ரயிலுடன் உணவு வழங்கப்படும் ரயில் பெட்டி ஒன்றும் இணைக்கப்பட்டிருக்கும். கோடைக் காலங்களில் குளிர்ந்த நீர் கிடைப்பதற்கான வசதியும் செய்யப்பட்டிருக்கும்.

இந்த ரயில் வண்டியில் நெடுந்தொலைவு பயணம் செய்வோருக்கு ஓர் இரவுக்கு 1·25 ரூபாய் செலவில் படுக்கை வசதி அளிக்கப்படும். அல்லது அவர்கள் பயணம் செய்யும் மொத்தத் தூரத்திற்கு 2 ரூபாய் செலவில் படுக்கை வசதி கிடைக்கும். படுக்கை வசதி வேண்டுவோர்க்கு ஒரு கம்பளம், இரண்டு போர்வைகள், ரப்பர் தலையணை ஆகியவை வழங்கப்படும். இந்த ரயில் வண்டியில் இரவில் 487 பேர் தூங்கவும், பகலில் 320



பயணிகள் உட்கார்ந்து கொள்ளவும் முடியும்.

இந்த ரயில் வண்டியில் ஆறு பெட்டிகளில், சோதித்துப் பார்ப்பதற்காகவே பொது அறிவிப்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்கும். டேப் ரெக்கார்டர் மூலம் மெல்லிசை, பயணிகளின் ஆர்வத்தை கவரக் கூடிய விஷயங்கள், செய்தி ஆகியவை இந்த அறிவிப்புச் சாதனங்கள் மூலம் ஒலிபரப்பப்படும். குளிர் சாதனவசதி அல்லாத ரயில் வண்டியில் பொது அறிவிப்புச் சாதனம் பொருத்தப்படுவது இதுவே முதன் முறையாகும்.

இந்த ரயில் வண்டியில் கண்காணிப்பாளர் மட்டுமல்லாது பயணச் சீட்டுப் பரிசோதகர்கள், துப்புரவாளர்கள், இயந்திரம் மற்றும் மின்சாரத்தைப் பழுது பார்ப்பவர்கள் ஆகியோரும் பயணம் செய்வார்கள்.

இத்தனை வசதியும் வாய்ப்புமுள்ள ரயில் வண்டிகளில்



யார்தான் பயணம் செய்ய முன்வரமாட்டார்கள்?

பொதுவாக, ரயில் வண்டிகளில் பயணிகள் போக்குவரத்து கடந்த ஆண்டு நவம்பர்த் திங்களில் அதிகரித்துள்ளது. இது முந்தைய ஆண்டின் இதே திங்களோடு ஒப்பிடுகையில் 7·8 சதவிகிதம் அதிகமாகும். கடந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நவம்பர்த் திங்கள் வரையிலான எட்டுத் திங்களில் ரயில் வண்டிகளில் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கையை 1971-ஆம் ஆண்டின் மேற்கூறிய கால வரையறையோடு ஒப்பிடுகையில் 7·70 சதவிகிதம் அதிகமாக உள்ளது.

இவ்வாறு பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்க ரயில் பெட்டிகளின் தேவையும் அதிகரிக்கின்றன. ஐ.சி.எஃப். தொடர்ந்து ஏற்றுமதிக்கான ஏற்றமிகு பணியில் இறங்கியிருக்கிறது.

இப்போது ஆப்பிரிக்காக் கண்டத்திலுள்ள 'ஜாம்பியா' நாட்டிற்கும் நான்கு ஆய்வு ரயில் பெட்டிகள் இங்குத் தயாராகின்றன.

மற்றும் இந்திய இரயில்வேத் துறைக்குப் போலந்து, சூடான் ஈரான், கிழக்கு ஆப்பிரிக்கா, யூகோஸ்லாவியா நாடுகட்கும் ரயில் பெட்டிகள் தயாரித்து அளிப்பதற்கான 'ஆர்டர்கள்' வந்துள்ளதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

பயணிகளின் வசதிக்காக மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டிகளில் இன்னும் பல வசதிகள் செய்யப்படவிருக்கின்றன. ட்யூப் விளக்குகள், அதிகத் திறமையுடன் இயங்கும் மின் விசிறிகள், [illegible] சன்னல் அமைப்புகள் [illegible]






# அண்ணாவின் வாழ்விலே....!

புலவர் தமிழ்ப்பித்தன்

விடுதலைப் போர்த் தியாகிகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார் அண்ணா. தமிழகத்தில் நீண்ட நாட்களாக நிறைவேறுமல் இருந்த ஒரு தியாகியின் மனைவியின் வேண்டுகோளை நிறைவேற்றினார். வாஞ்சி என்னும் தியாகியின் மனைவி தனக்கு வாழ்க்கைப் பென்சன் வேண்டும் என்று பல்லாண்டுகளாகக் கேட்டு வந்தார். ஆனால் அவரது வேண்டுகோள் நிறைவேற்றப்படாமலேயே இருந்து வந்தது.

அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அந்த அம்மையாரின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தார். பாவம், அந்த அம்மையார் முதுமை அடைந்திருந்ததால் அண்ணா தந்த பென்சன் பணத்தை நீண்ட காலம் வாங்கி அனுபவிக்க இயலாமல் இயற்கை எய்திவிட்டார்.

என்றாலும், தியாகிகளிடமும் அவர்களது குடும்பத்தவரிடமும் அண்ணா கொண்டிருந்த மரியாதையை இந்த நிகழ்ச்சி எடுத்துரைத்து வருகிறது.

முதன்முறையாக அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது கூட, அண்ணா அவர்கள் அந்தப் பயணத்தை வெறும் சுற்றுலாப் பயணமாக்கிவிடாமல் மிகப் பெரும் தியாகி ஒருவரின் வாழ்விலே மலர்ச்சி ஏற்படுவதற்குரிய வாய்ப்பாக்கிக் கொண்டார்.

கோவா விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு, நீண்ட காலமாகச் சிறையில் கிடந்து துன்பப்பட்டுக் கொண்டிருந்தார் ரானடே. அவரது துன்பத்தை இந்திய அரசோ, அண்ணாவுக்கு முன்பு இருந்த மாநில அரசோ பொருட்படுத்தவில்லை. ஆனால் விடுதலை வீரர் ரானடே படும் துன்பம் அண்ணா அவர்களின் இதயத்தை மிகவும் வருத்தியது. அவரது விடுதலைக்கு வழி என்ன என்று தமக்குள் சிந்தித்து வைத்துக் கொண்டார்.

அமெரிக்கச் சுற்றுலாவைத் தொடங்கியபோது, இத்தாலி நாட்டுக்குச் சென்று, வாடிகன் நகரில் உள்ள போப்பாண்டவரைச் சந்தித்தார். கோவா வீரர் ரானடே விடுதலை செய்யப்படவேண்டிய அவசியத்தை போப்பாண்டவரிடம் எடுத்துரைத்தார். அண்ணாவின் வேண்டுகோளை அன்புடன் ஏற்றுக் கொண்ட போப்பாண்டவர், போர்ச்சுக்கீசிய அரசிடம் தொடர்பு கொண்டு ஆவன செய்தார். பல்லாண்டுகளாகச் சிறை இருந்த ரானடே விடுதலை பெற்றார்.

கோவா மக்கள் அனைவரின் இதயங்களும் குளிர்ச்சி பெற்றன. அண்ணாவுக்கு வாயார வாழ்த்துக் கூறினார்கள் கோவா மக்கள்.

* * *

அண்ணா அவர்கள் நோய் வாய்ப்பட்டு, அமெரிக்கா சென்று அறுவைச் சிகிச்சைக்கு ஆளானார்கள். சிகிச்சையெல்லாம் முடிந்து, ஓரளவு உடல் நலம்பெற்றுத் தாயகம் திரும்பினார்.

டாக்டர்கள் அண்ணாவைப் பலவிதத்திலும் கடுமையாக எச்சரித்து வைத்திருந்தார்கள். அதிகம் உரையாடக்கூடாது. அலுவல்களில் அதிகம் ஈடுபடக் கூடாது என்றெல்லாம் டாக்டர்கள் அவருக்குத் தடைவிதித்திருந்தார்கள். ஓடுகின்ற ஆற்றை, உயரே இருந்து அழகு சொரியக் குதித்துவரும் அருவியை எவராலும் கட்டுப்படுத்த முடியுமா? அருவி போன்ற இலட்சிய எண்ணங்களை இதயத்திலே கொண்டிருந்த அண்ணா அவர்களால் டாக்டர்களின் ஆணைகளை மீறாமல் இருக்க முடியவில்லை.

சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் சட்டமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தாலும் — பெயர்சூட்டும் விழா நடைபெறாமல் இருந்தது.

அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் அண்ணா அவர்கள் முதன் முதலாகக் கலந்து கொண்டு சொற்பொழி வாற்றியது— தமிழ்நாடு பெயர் மாற்ற விழாவில் தான்.

அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு அண்ணாவின் குரல் கம்பீரமாக இருக்குமா? அல்லது அதற்கு ஊறு நேர்ந்திருக்குமா? என்றெல்லாம் மக்கள் எண்ணிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்த நேரத்தில், அண்ணா அவர்கள் மெலிந்த உடலோடு எழுந்து நின்று, ''தலைவர் அவர்களே!'' என்று மொழிந்த உடனே, அந்தக் கம்பீர ஒலி கேட்டு, மக்கள் கர ஒலியை எழுப்பியது —வானத்தையே பிளந்தது என்றுதான் கூறவேண்டும். மக்கள் ஒருமுறை கரஒலி எழுப்பியதோடு நிற்கவில்லை— மீண்டும் மீண்டும்—நினைத்து நினைத்துக் கரஒலி எழுப்பினார்கள், 'தலைவர் அவர்களே' என்ற இரண்டு வார்த்தைகளைக் கேட்டவுடனேயே!

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளக்கூடாது என்றும், கலந்து கொண்டால் உடல் நலம் பாதிக்கும் என்றும் மருத்துவர்கள் அண்ணாவுக்கு எச்சரிக்கை செய்திருந்தார்கள். என்றாலும் அண்ணா அவர்கள் அதனைப் பொருட்படுத்தவில்லை. தமது அரும்பெரும் இலட்சியம் நிறைவேறும் இனிய விழாவில் கலந்துகொண்டார்; அந்த விழாவிலே அண்ணா குறிப்பிட்டார்—

''இந்த விழாவிலே கலந்து கொள்ளவேண்டாம், உடல் நலம் பாதிக்கும் என்று டாக்டர்கள் கூறினார்கள். நான் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எந்தவொரு இலட்சியத்திற்காக இத்தனை காலம் போராடி வந்தோமோ, அந்த இலட்சியம் நிறைவேறும் இந்த இனிய விழாவில் கலந்துகொண்டால் உயிருக்கு ஆபத்து வரும் என்றால்—இந்த உயிர் இருந்தென்ன, போய் என்ன?'' என்று உயிரை வெறுத்து— உணர்வை மதித்து உரை ஆற்றினார்கள்.

இலட்சியம் நிறைவேறிட உயிரையும் பொருட்படுத்தாதவர் அண்ணா என்ற செய்தி இந்த நிகழ்ச்சியின் வாயிலாக வரலாற்றில் பொறித்து வைக்கப் பெற்றது.

சாதன வசதி, பெட்டிக் குள்ளேயே குளிர்நீர் வசதி, நன்கு வசதியாக உட்காரப்



படுக்க வசதிகள், ஆகியவை செய்வதற்கான ஏற்பாடுகளை இத்தொழிற்சாலை பரிசீலித்து வருகிறது.

ரயில் வண்டிகள் மேலும் விரைந்து செல்வதற்கான புது வகை 'போகிகள்' பலவும் இங்குத் தயாரிக்கப்படவிருக்கின்றன. ஏற்கெனவே தயாராகியுள்ள இத்தகைய 'போகி' ஒன்று இப்பொழுது சோதனை ஓட்டத்தில் உள்ளது. மணிக்கு 160 கிலோ மீட்டருக்கு அதிகமான வேகத்தில் செல்லக் கூடிய ரயில் பெட்டிகளையும் இந்தத் தொழிற்சாலை தயாரித்திருக்கிறது.

இப்படி உழைப்பிலே உருவாகின்ற ரயில் வண்டிகள், 'மக்கள் சொத்து' என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் வர வேண்டாமா? ரயில் பெட்டிகளிலுள்ள மின் விளக்குகள், மின் விசிறி போன்ற பொருள்களைக் களவாடுதலும், இருக்கைகளைக் கிழித்தலும், சேதப்படுத்தலும் ஒவ்வாத செயல்கள் அல்லவா?

'இந்தியச் சாரண-சாரணியர் சங்கம்' இந்த இழிசெயல்களை எடுத்துக் காட்டி, ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிகாட்டுகிறது. இவர்கள் ரயில் நிலையங்களில் பயணிகளை ஒழுங்குபடுத்தி டிக்கெட்டுகள் பெற்றுக் கொள்ளச் செய்கின்றனர். ரயில் நிலைய நடை-



பாதையிலும், அங்கே உள்ள சிற்றுண்டிச் சாலைகளிலும் துப்புரவின் அவசியத்தை எடுத்துக் கூறுகின்றனர். காரணமின்றி அபாயச் சங்கிலியை இழுப்பது, டிக்கெட்டின்றிப் பயணம் செய்வதைத் தவிர்ப்பது, ரயில் பெட்டிகளைச் சுத்தமாக வைத்



திருப்பது போன்ற துண்டு வெளியீடுகளையும் இவர்கள் அவ்வப் போது பயணிகளுக்கு வழங்கி அவர்கள் திருந்திட வழி கோலுகின்றனர்.

எனவே, உலக அரங்கில் ஓர் உன்னத இடத்தை வகித்து, தரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழுகின்ற ஐ.சி.எஃப். இந்திய நாட்டின் பெருமையை மேலும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

நமது வீட்டுச் சொத்தைப் போல, நாட்டுச் சொத்தாம் ரயில் வண்டிகளையும் இரு கண்களைப் போலக் காப்போம். ஒழுங்காக, ஒரே சீராகத் தொடர்ந்து போகும் தொடர் வண்டியிடம் நாமும் ஒழுங்கைக் கற்றுக் கொள்வோம்.

—பி.வி.ஜி.


## சிமெண்ட் உபயோகிப்போர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் தற்போது அமுலில் இருக்கும் மின்வெட்டு, சிமெண்ட் உற்பத்தியையும், விநியோகத்தையும் பாதித்துள்ளது. இதனால் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் உங்கள் சிமெண்ட் தேவையை உடனடியாகவும், முழுமையாகவும் நிறைவேற்ற இயலாத நிலையில் இருக்கிறார்கள். இதன் விளைவாக உங்கள் அவசரத் தேவையை முன்னிட்டு, அங்கீகாரம் பெறாத விற்பனையாளர்களிடமிருந்து நீங்கள் சிமெண்ட் வாங்க முற்படலாம். இதனால் நீங்கள் நிர்ணயித்த விலைக்குமேல் கொடுப்பதுடன், கலப்பட சிமெண்ட் வாங்கவும் நேரிடலாம்.

உங்கள் நலனை முன்னிட்டு, எப்போதும் அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்தே சிமெண்ட் வாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடம், தயாரிப்பாளர்களால் அளிக்கப்பட்டுள்ள ஸ்டாக்கிஸ்டு சர்டிபிகேட்டும் விலைப்பட்டியலும் உள்ளன. அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகள் சிமெண்ட் வாங்குபவர் ஒவ்வொருவருக்கும் அவரவர் வாங்கிய சிமெண்ட் அளவு, விலை இவை குறித்துள்ள காஷ் மெமோ அல்லது பில் கொடுப்பார்கள்.

உங்கள் தேவையை ஸ்டாக்கிஸ்டுகள் உடனுக்குடன் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் உங்கள் தேவைக்கு அவர்களிடம் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். அவர்களும் அதே வரிசைக்கிரமமாக உங்கள் தேவையைப் பூர்த்தி செய்வார்கள்.

அங்கீகாரம் பெற்ற ஸ்டாக்கிஸ்டுகளிடமிருந்து அசல் சிமெண்டை நிர்ணயித்த விலைக்கே பெறுங்கள்.

பொதுமக்களின் நலனை உத்தேசித்து வெளியிடுவோர் :

**இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்,**

175/1, மவுண்ட் ரோடு, சென்னை-2.

SANKAR CEMENT

சங்கர் சிமெண்ட்

உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு

'ப்ளேனோ்:பிக்ஸ்'

தேவை.

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனோ்:பிக்ஸ்" உபயோகித்தீர்களானல், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேனோ்:பிக்ஸ்" மருந்தைப் பல்லாண்டுகள் பயன் படுத்தியதிலே, திருப்திகரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

அசல் தயாரிப்புத்தானு என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாளுதீர்கள். உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.



M&B May&Baker

மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.

பம்பாய். கல்கத்தா. கவுஹாத்தி. இந்தோர் லக்னோ. சென்னை. புதுடெல்லி. பாட்னு.

"ப்ளேனோ்:பிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. ரகத் தயாரிப்பு. உடிமேடு மார்க்

# குடகனாறு நீர்த் தேக்கத் திட்டம்

எல்லா வகையிலும் ஏற்றம் காணும் தமிழக அரசு, நாட்டின் முன்னேற்றத்திற்காக, உணவு உற்பத்திக்காக நல்ல பல மாபெரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. இவ்வகையில் தற்பொழுது குடகனாற்றில் குறுக்கே வேடசந்தூர் வட்டத்தில் உள்ள அழகாபுரி கிராமத்திற்கருகில் ரூபாய் 2 கோடியே 12 லட்சத்தில் ஒரு நீர்த்தேக்கம் கட்ட அனுமதி அளித்துள்ளது.

குடகனாறு நீர்த் தேக்கத் திட்டம் மதுரைமாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் வேடசந்தூரிலிருந்து 9 கிலோ மீட்டர் தூரத்தில் அழகாபுரி கிராமத்திற்கருகில் அமைக்கப் பட்டு வருகிறது. இந்த நீர்த் தேக்கத்திற்குக்கிடைக்கக் கூடிய நீர் வரத்து 785 மில்லியன் கன அடிகளாகும்.

குடகனாறு அமராவதி ஆற்றின் துணை நதியாகும். இது பழனி மலையின் கிழக்குச் சரிவில் உற்பத்தியாகித் திண்டுக்கல், வேடசந்தூர், கரூர் வட்டங்களின் வழியாகச் சென்று கரூர் நகரின் அருகில் அமராவதி ஆற்றில் கலக்கிறது. இதன் நீளம் சுமார் 68 மைல்கள் இவ்வாற்றின் குறுக்கே 14 அணைக் கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. இவற்றால் 3,236 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்துள்ளது. மழைக் காலங்களில் மிதமிஞ்சி வெள்ளப் பெருக்கால் தேவைக்கு மீறிய தண்ணீர் அமராவதி ஆற்றில் வீணாகப் போய் விழுகிறது. இதைச் சரிவரப் பயன்படுத்தவே இந்தக்குடகனாறு நீர்த் தேக்கத் திட்டம் உருவாக்கப் பட்டுவருகிறது.

குடகனாறு நீர்த் தேக்கம் 12·3 மில்லியன் கன மீட்டர் அல்லது 434 மில்லியன் கன அடி கொள்ளளவு உடையதாக இருக்கும். இத்திட்டத்திற்கான கட்டட அணையின் நீளம் 73·15 மீட்டர் அல்லது 240 அடிகளாகும். மண் அணையின் நீளம் 2,425 மீட்டர் அல்லது 7,956 அடிகளாகும். இந்த நீர்த் தேக்கத்திலிருந்து இடதுபுறம் ஒரு கால்வாயும் வலதுபுறம் ஒரு கால்வாயும் வெட்டி, தண்ணீர் பாசனத்திற்குக் கொண்டு செல்லப்படும். இடதுபுற வாய்க்கால் 9 கிலோ மீட்டர் நீளமுடையது. இதன் மூலம் மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் உள்ள சல்வார்ப்பட்டி கிராமம், திருச்சி மாவட்டம் கரூர் வட்டத்தில் பெரிய மஞ்சுவெளி கிராமம் ஆகிய இரு கிராமங்களும் பயனடையும். வலதுபுறக்கால்வாய் 48 கிலோ மீட்டர் நீளமுடையது. இதன் மூலம் மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டத்தில் உள்ள பள்ளப்பட்டி, கம்பூர் ஆகிய இரு கிராமங்களும், திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் ஆத்தூர் வேலம்பட்டி, அம்மாப்பட்டி, கூடலூர், வெள்ளியணை, உப்பிடமங்கலம் ஆகிய ஆறு கிராமங்களும் பயனடையும். இந்த வலதுபுறக் கால்வாய் தற்பொழுதுள்ள வெள்ளியணை, உப்பிடமங்கலம், புதூர், வீரராக்கியம் ஆகிய நான்கு குளங்களுக்கு நீர் கொண்டு செல்வதுடன் இடையில் உள்ள நிலங்களுக்கு நேரடிப்பாசன வசதி அளிக்கவும் சாத்தியமாகும். எனவே இத்திட்டத்தின் மூலம் மதுரை மாவட்டத்தில் சுமார் 2,230 ஏக்கர் நிலங்களும், திருச்சி மாவட்டத்தில் சுமார் 4,085 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும்.

மேற்படித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கும் கூடுதல் உணவு உற்பத்தி 4,483·9 மெட்ரிக் டன்களாகும். இத்திட்டத்திற்காகச்சுமார் 1,151·75 ஏக்கர் நிலங்களை அரசுக் கையகப்படுத்தும். திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 212 லட்சங்களாகும். கூடுதல் உணவு உற்பத்திக்காகும் செலவு டன் ஒன்றுக்கு ரூ. 4,728 ஆகும்.

குடகனாறு நீர்த் தேக்கத் திட்டப்பணியைத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கடந்த 25—8—1973 அன்று உப்பிடமங்கலத்தில் துவக்கிவைத்தார். இந்த விழாவுக்குப் பொதுப்பணித்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையேற்ருர்கள். ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் அவர்களும் பங்கேற்ருர்கள்.




திருச்சி—தஞ்சை மாவட்டங்களை இணைக்கும் வகையில் கொள்ளிடம் ஆற்றில் திருமானூர்—விளாங்குடிக்கு இடையே, தமிழகத்திலேயே மிகவும் நீண்டதொரு பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்தப் பாலம் நீண்ட—நெடுநாளையத் தேவையாக இருந்து வந்தது. இப்பாலம் கட்டப்பட்டமையால் தஞ்சையிலிருந்து, திருச்சி மாவட்டத்தின் வடபகுதிகளுக்குச் செல்லும் தூரம் குறைவதுடன், தஞ்சையிலிருந்து தமிழகத்தின் தலைநகராம் சென்னைக்குச் சென்றிடும் தூரமும், காலமும் குறைவதனுல் போக்குவரத்து, மேலும் பெருக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இச்சிறப்புமிகு பாலம் தஞ்சை—திருச்சி மாவட்டங்களை இணைக்கும் வகையில் 'இணைப்புப் பாலம்' என்கின்ற சிறப்பினையும் எய்தியுள்ளது. இப்பாலம் கட்டி முடிக்கப்பட்டதன் காரணமாக நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்த வரையில் இது ஓர் 'பொற்காலம்' என்று கூறின் மிகையாகாது.

இத்தகு வரலாற்றுச் சிறப்புமிக்க இப்பாலத்தின் கட்டுமான வேலை 20—10—69 அன்று தொடங்கப்பெற்று 30—4—73-ல் முடிவுற்றது. இப்பாலம் கட்டி முடிப்பதற்குச் செலவான தொகை ரூபாய் 65·70 இலட்சமாகும். இப்பாலத்தின் நீளம் 3,762 அடிகளாகும். இதுவே, தமிழகத்தின் மிகப் பெரிய பாலம் என்னும் சிறப்பினைப் பெற்றுள்ளது. அண்ணு (ஜெமினி) மேம் பாலத்திற்கு அடுத்து அதிகச் செலவில் கட்டப்பெற்ற பாலம் இது. அண்ணு மேம்பாலம் ரூபாய் 66 இலட்சம்.

தமிழகத்தின் எழில்மிகுத்த இப்பாலத்தினை மாண்புமிகு அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமை வகிக்க தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 19—8—73 அன்று திறந்து வைத்தார்கள். விழாவில் உள்ளாட்சித்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம அவர்களும், போக்குவரத்துத்துறை அமைச்சர் இராமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவினைக் கண்டுகளிக்கத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் திரளாக வருகை தந்து அவர்கள் அகமும், முகமும் மலரக் களிப்படைந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விருந்தளித்தது. பாலத்திலும், ஆற்று மணலிலும் மக்கள் கூடியிருந்த காட்சி மதுரை சித்திரைத் திருவிழாவை, ஆற்றில் அழகர் இறங்கும் காட்சியை நினைவூட்டியது. அவர்களின் நெஞ்சங்களில் இவ்வினிய நிகழ்ச்சி நீங்கா நினைவாக என்றென்றும் இருந்திடும் என்பதில் ஐயமில்லை.

கட்டி முடிக்கப்பட்ட இப்பாலம் தஞ்சை—திருச்சி மாவட்டங்களுக்குத் தனி எழில் தருவதோடு அம்மாவட்டங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் பெருமளவில் துணையாக அமைந்திடும் என்பது திண்ணம்.



திருமானூர் கொள்ளிடம் பாலம்

# பிறந்த நாள்

நகர் விழாக்கோலம் கொண்டு விளங்குகின்றது. தெருவெல்லாம் தோரணவாயில். இல்லமெல்லாம் புதுமைப் பொலிவு. மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கின்றனர். சான்றோரும், புலவரும், கலைஞரும் மன்னன் அரண்மனை நாடிச் சென்று கொண்டுள்ளனர். சிறை வீடுகள் திறக்கப் பட்டு யாவரும் விடுதலை பெறுகின்றனர். மன்னன் அந்தணர்க்கு ஆக்களொடு பொன்னைப் பரிசளிக்கின்றான். நாவன்மை மிக்கோர் மலைபோன்ற களிற்றைப் பரிசாகப் பெற்று அதன் மீது ஏறிச் செம்மாந்து செல்கின்றனர். மங்கல இயங்கள் முழங்குகின்றன. எங்கும் மன்னனை வாழ்த்தும் வாழ்த்தொலியே கேட்கின்றது. இவற்றிற்கு இடையே ஓர் அழுகுரல் கேட்கின்றது. '' ஐயோ, என் குடிசை போயிற்றே'' என்று, தன் எட்டுக் கால்களையும் உதறிக் கொண்டு ஒரு சிலந்தி அழுகின்றது. காரணம் அதன் கூடு —வலை போய்விட்டது. ஏன் போயிற்று ?

அன்று இரேவதி விண்மீனுக்குரிய நாள். அவ்விண்மீன், சோழ மன்னன் கிள்ளிவளவன் பிறந்த நாள்மீன். ஊரெல்லாம் ஒப்பனை செய்யப்படும்போது வீடெல்லாம் தூய்மை செய்யப்படும் அன்றோ ! அவ்வாறு செய்யப்படும்போது ஒட்டடையாக இருந்த சிலந்தியின் கூடும் போயிற்று. இதுதான் சிலந்தி தன் கூடு இழந்தவாறு.

இக்காட்சியை முத்தொள்ளாயிரப் புலவர் கண்டார் ; பாடினார்.

'' அந்தணர் ஆவொடு பொன்பெற்றார் ; நாவலர்
மந்தரம் போலும் களிறூர்ந்தார் — எந்தை
இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் ; என்னோ
சிலம்பிதன் கூடிழந்த வாறு ''

இது பிறந்த நாள் விழாவை நயம்பட வண்ணிக்கும் பாட்டு. 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் பிறந்த நாள் பெருமையாகக் கொண்டாடப் பட்டது. அதற்கு இது சுவைகூட்டும் சான்று.

சேலத்து இரும்பு செருமனிக்குப் போய் ஒலி பெருக்கியாக உருப்பெற்று, மெருகு ஏறிப் ' பள பள ' என்று சேலத்திற்கே வரும். அதன் கோலத்தைக் காணும் சேலத்தார் அதற்குள் சேலம் இருப்பதை அறியார். அந்தக் கோலத்தின் மூலம், சேலம் என்பதை நினையார்.

குருதிக் கொதிப்பு நோய் போக்க அமெரிக்க நாட்டிலிருந்து வந்து இறங்கும் '' செர்ப்பசில் '' மருந்தில் '' சருப்பகந்தி '' என்னும் நம் நாட்டு மூலிகை இருப்பதை நாம் நினைத்தும் பார்த்ததில்லை.

இவ்வாறே நம் தமிழகத்தின் பண்டைக் கால மரபுகள் — பழக்க வழக்கங்கள் பல, வெளிநாடுகள் சென்று மெருகுடன் மீண்டுள்ளன. மேலை நாட்டார் நம் மரபுகளைக் கண்டு உவந்தனர். தாமும் கடைப்பிடித்துத் தம் நாட்டின் வழக்காக்கிக் கொண்டனர். நம்மிடமிருந்து சென்றவை அன்னார் மூலமாக நம்மை அடையும்போது அவற்றை ஒரு புதுமையாகவே காண்கின்றோம். அப்புதுமைக்குள் நம் பழைமை ஒளிந்து கொண்டிருப்பதை உணர்வதில்லை.

அவற்றுள் ஒன்று, பிறந்த நாள் கொண்டாட்டம்.

இக்காலத்தில் பிறந்த நாளை மேனாட்டுப் பழக்கமாகவே நினைந்து கொண்டாடுகின்றனர். மேலைநாட்டுக் கிறித்துவ மதத்தைப் பின்பற்றும் நம் நாட்டவரும் மேலை நாட்டு நாகரிகத்தைப் பின்பற்று பவரும் சிறுபான்மையினராகத் தமிழரும் கொண்டாடுகின்றனர். மேலைநாட்டுப் பாங்கிலேயே கொண்டாடுகின்றனர்.

நம் நாட்டு மரபாகக் கொண்டு கொண்டாடுவதும் அற்றுப் போய்விடவில்லை ; அருகிக் காணப்படுகின்றது.

## பிறந்த நாள் பொதுவிழா

ஒருவர் பிறந்த நேரத்தில் அமையும் விண்மீனை அறிந்து அவ்விண்மீன் ஒத்து வரும் நாளில் பிறந்த நாளைக் கொண்டாடுவது நம் நாட்டு மரபு. அந்நாள், அவ் விண்மீன் பெயராலேயே வழங்கப் படும். முதலில் கண்ட முத்தொள்ளாயிரச் செய்யுளில் கிள்ளிவளவன் பிறந்த நாள் '' இரேவதி நாள் '' எனப்பட்டதைக் கண்டோம்.

சேர மன்னன் கோக்கோதை மார்பன் பிறந்த விண்மீன், சதயம். அவன் பிறந்த நாள் '' சதய நாள் '' என்றே குறிக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாமன்னன் முதல் இராச ராசன பிறந்த நாள் அவன் பிறந்த விண்மீனும் சதயத்தின் பெயரால் '' சதயத் திருவிழா '' வாகத் தஞ்சைப் பெரிய கோவிலில் ஆண்டு தோறும் கொண்டாடப் படுகின்றது. அவன் தன் ஆட்சிக் காலத்திலேயே தன் பிறந்த நாள் சேரநாட்டில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட ஏற்பாடு செய்தான்.

கலிங்கத்துப் பரணியும் இதனை,

'' சதய நாள்விழா உதியர் மண்டலம்

தன்னில் வைத்தவன் ''—என்று பாடுகின்றது

திருவனந்தபுரத்து மன்னர் ஒருவரது பிறந்த நாள் '' சுவாதித் திருநாள் '' என அவர் பெயரால் கொண்டாடப் படுவதும் அவர் எழுதிய இசைப்பாடல்கள் '' சுவாதி இசைப் பாடல்கள் '' என்று பெயர் பெற்றிருப்பதும் பிறந்த நாள் பெருமை ஆகும்.

இவை போன்று, கடவுளர்க்குரிய விண்மீன்களைக் கொண்டு ' திருவாதிரைத் திருநாள் ' சிவபெருமானுக்கும், ' திருவோணத் திருநாள் ' திருமாலுக்கும் கொண்டாடப் படுகின்றன.

இக்காலத்தும் புகழுடம்பில் நிற்கும் காந்தியடிகள், அறிஞர் பெருந்தகை அண்ணா முதலியோர் நினைவாக அவரவர்தம் பிறந்த நாள்கள் பொதுவிழாவாகக் கொண்டாடப் படுகின்றன.

## பிறந்த நாள் உருவும் கருவும்

பிறந்த விண்மீன் வரும் நாளன்று நீராடி, வெண்ணிறப் புத்தாடை உடுத்தி, விளக்கேற்றி, நெல்லும் மலரும் தூவி வழி பட்டு, விருந்தளித்து அறம் செய்து பரிசளித்து, பகையையும் நட்பாகக் கொண்டு, வாழ்த்துப் பெற்று மகிழ்ந்தனர்.

இக்காலத்தில் மேலைநாட்டுப் பாங்கில் வெண்ணிறப் புத்தாடை உடுப்பதும் மெழுகு விளக்கேற்றுவதும், உரொட்டித் துண்டு வெட்டி வழங்கலும், வாழ்த்தும் பரிசும் பெறுதலும் தமிழகப் பழைமை மரபையே நினைவூட்டுகின்றன. மெழுகு விளக்கை அணைப்பது மட்டும் பொருந்தாத ஒன்றாக உள்ளது.

இப்பொருத்தத்தில் பண்டைப் பிறந்த நாள் உருமாறி உள்ளதேயன்றிக் கரு மாறவில்லை என்பதைக் காண்கின்றோம்.

இது தமிழ்க் கரு ஆகும். எவ்வாறு ?

தமிழகத்துப் பிறந்த நாள் மரபு நீண்ட பெரும் வரலாற்றைக் கொண்டது. அவ் வரலாறு நமக்குக் கிடைக்கிற அளவில் ஏறத்தாழ 3,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனலாம்.

## பிறந்த நாள் இலக்கணம்

'' சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங்கலமும் ''

என்று தொல்காப்பியம் (பொருளதிகாரம் : 91) பிறந்த நாளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. ''பிறந்த நாள் பெருமங்கல நாள் '' எனப்படும். அந்நாளில் போர் விட்டுச் சினமின்றி, ஈகை செய்து அறம் புரிவர். இதை அறிவிக்கும் தொல்காப்பியம் 3,000 ஆண்டுகளுக்குப் பிற்பட்டதில்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுந்த புறப்பொருள் வெண்பா மாலை என்ற இலக்கண நூலும்,

'' அறந்தரு செங்கோல் அருள்வெய் யோன்
பிறந்தநாட் சிறப்பு உரைத்தன்று ''

—என்று பிறந்த நாள் சிறப்பை அறிவிக்கின்றது.

## வெள்ளணி நாள்

மங்கல நாள்களில் பிறந்த நாள் பெருமைக்குரிய மங்கல நாள் என்னும் கருத்தில் '' பெருமங்கலம் '' என்று பெயர் பெற்றது.

வாழ்நாளில் பிறந்த நாள் பெருமைக் குரிய நாள் என்னும் கருத்தில் '' பெருநாள் '' எனப் பெயர் பெற்றது. (இவ் வழக்கையே இசுலாமியப் பெருமக்கள் நபி பெருமானின் பிறந்த நாளை '' பெருநாள் '' என்று கொண்டாடுகின்றனர்.

பிறந்த நாள் தூய்மையான நாள் என்பதன் அறிகுறியாய் வெண்ணிறப் புத்தாடையும் அந்நிற அணிகலன்களும் கொள்வதால் '' வெள்ளணி நாள் '' எனப்பட்டது.

வடநாட்டிலிருந்த சேரன் செங்குட்டுவன் பிறந்த நாளில் தன் நகரில் இருக்க எண்ணி விரைந்து வந்தான். அதனைப் பாடும் உழவர்,

'' மன்னர்
அடித்தளை நீக்கும் வெள்ளணி நாள் ''

என்று பிறந்தநாளை '' வெள்ளணி நாள் '' என்று பாடினர்.

குழந்தைபிறந்ததைத் தலைவனுக்கு அறிவிக்க விரும்பும் தலைவி தோழிக்கு வெள்ளணி அணிந்து அனுப்புவாள். அவன் அதனால் குழந்தை பிறந்ததை அறிவான். இல்லத்திற்கு மீண்டு நிற்பான். இதனை,

'' வெள்ளணி அணிந்து விடுத்துழிப் புள்ளணி
மலைவேல் அண்ணல் வாயில் வேண்டலும் ''

என்று நம்பியகப் பொருள், என்னும் இலக்கண நூல் குறிக்கின்றது.







கோவை இளஞ்சேரன்




கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியம் மதுரை மாவட்டம் திருமங்கலம்வட்டத்தில் திருமங்கலத்திலிருந்து தெற்கே 14 கிலோ மீட்டர் தூரத்தில் திருமங்கலம்-விருதுநகர்ச் சாலையில் அமைந்துள்ளது. இவ்வொன்றியத்தின் பரப்பளவு 98·55சதுர மைல்கள். மக்கள் தொகை 58,700. ஆண்கள் 28,345, பெண்கள் 29,725. இவ்வொன்றியம் கள்ளிக்குடி வட்டாரம் முழுவதும், கல்லுப்பட்டி, திருமங்கலம் வட்டாரங்களில் சிறிய பகுதிகளைக் கொண்டது.

இவ்வொன்றியத்தில் 36 ஊராட்சிகள் உள்ளன. 42 ரெவின்யூ கிராமங்களும், 34 உட்கடைக் கிராமங்களும் இவ்வொன்றியத்தில் உள்ளன. பெரும்பாலும் கரிசல் மண் பிரதேசமாகும். மானாவாரி விவசாயமே அதிகம். மக்கள் தொகையில் படித்த ஆண்கள் 15,058, பெண்கள் 6,444 ஆவார்கள்.

### கல்வி வளர்ச்சி

இவ்வொன்றியத்தில் 13 ஒன்றிய உயர் துவக்கப் பள்ளிகளும், 42 ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. தனியார் துறையில் ஓர் உயர் தொடக்கப்பள்ளியும், 8 தொடக்கப்பள்ளிகளும் உள்ளன. ஒன்றியத்தில் ஓர் ஆசிரியரைக் கொண்ட பள்ளிகள் 5 உள்ளன. ஒன்றியத்தில் மொத்தம் 217 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.

இவர்களில் 95 ஆசிரியர்கள் உயர் துவக்கப்பள்ளியிலும், 122 ஆசிரியர்கள் துவக்கப்பள்ளியிலும் பணிபுரிகின்றனர். 6,486 பிள்ளைகள் பள்ளியில் பயில்கின்றனர். 96 சதவிகிதப் பிள்ளைகள் இவ்வட்டாரத்தில் கல்வி பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளிக்கு 46 கட்டடங்கள் உள்ளன. மீதப் பள்ளிக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 5 ஆசிரிய மையங்கள் செயல்படுகின்றன. 10 பள்ளிகளில் பகுதிநேர ஆசிரியர்களும், 7 கடைநிலை ஊழியர்களும் பணிபுரிகின்றனர். தேவையான தளவாடங்கள் ரூ.6,000க்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவ்வட்டாரத்தில் 65 மதிய உணவு மையங்கள் உள்ளன. மொத்தம் 3,769 மாணவர்கள் மதிய உணவு உட்கொள்கின்றனர். மதிய உணவு உட்கொள்ளும் மாணவர்கட்கு நமது அரசு இலவசமாக பாடப் புத்தகங்கள், சிலேட்டுகள் வழங்கியுள்ளது.

### சீரணித் திட்டம்

இத்திட்டத்தில் மைட்டாம்பட்டி, மருதங்குடி, குராறூர், கிராமங்களில் ஊராட்சி மன்றக் கட்டடங்களும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் வடக்கன்பட்டி, கள்ளிக்குடி கிராம ஊரணிகள் தூர் எடுக்கப்பட்டுக் கரைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. மருதங்குடி என்னும் கிராமத்தில் சீரணி அறிவகம் செயல்படுகிறது. 30 உறுப்பினர்கள் உள்ளனர். குளத்துள்வாய்ப்பட்டி கிராமத்திற்குச் சாலை அமைக்கும் வேலை 1972—73-ல் செயல்பட்டுள்ளது. இத்திட்டத்தில் எல்லாப் பள்ளிகளிலும் சீரணிப் படையினர் வெள்ளை அடித்துத் திருக்குறள்களை எழுதியுள்ளனர்.



### சிறு சேமிப்புத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வளரும் மாதாந்திரச் சேமிப்புத் திட்டத்தில் 259 நபர்கள்சேர்க்கப்பட்டுள்ளனர். சென்ற 5 ஆண்டுக்காலமாக ரூ. 7,00,000 வசூல் மேற்கொள்ளப்பட்டது. 30 மகளிர் மன்ற கன்வீனர்கள், இத்திட்டத்தில் பங்கேற்றுள்ளனர். ஒன்றிய ஊழியர்கள்அனைவரும் ஓராண்டுக் காலச் சேமிப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

### வேளாண்மைப் பணிகள்

கள்ளிக்குடி ஒன்றியத்தில் பொது மராமத்துத் துறைக் கண்மாய்கள் 67. கண்மாய்கள் சிறிய நீர்ப்பாசன வசதி படைத்தனவாக உள்ளன.

இந்தக் கண்மாய்கள் மூலம் மொத்தம் 6,000 ஏக்கர் முதல் 7,000 ஏக்கர் வரை நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதரப் பகுதிகளில், புளி, பருத்தி, தோட்டங்களில் மிளகாய், கம்பு முதலிய பயிர்கள் சாகுபடி செய்யபடுகிறது.

இந்த ஒன்றியத்தில் பொறுக்கு விதை நெல் 15 டன், இதர சிறு தானியங்கள் 20 டன் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மற்றும் அமோக விளைச்சல் தரும், ஐ.ஆர். 8, ஐ.ஆர் 22, ஐ.ஆர். 20 கருணு, அன்னபூர்ணு, கே. 29, போன்ற நெல் வகைகளும் ஒட்டுக் கம்பு எச். பி. 1, எச்.பி. 3, எச். பி. 4, சி. எச். எஸ். 3, செரணு சோளம் போன்ற சிறு தானிய விதைகளும் விநியோகம் செய்து 4,000 ஏக்கர் பரப்புக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

பசுந்தாள் உர விநியோகத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் மான்ய விலையில் 4 டன் விதைகள் விநியோகிக்கப்பட்டு, உரமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

ரசாயன உர விநியோகத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அவ்வப்பொழுது தேவையான உரங்கள் 8 கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விவசாய சங்கங்கள் மூலமாகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

காய் கறி விதை விநியோகத் திட்டத்தின்கீழ் 50 சதவீதம் மான்ய விலையில் 75 கிலோ விதைகள்ஒவ்வொரு ஆண்டும்விநியோகிக்கப்பட்டு வருகிறது.

பருப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எச். ஏ. 1 இதுவரை பைசாகி பாசிப் பயிறு, ஜி.டி.என் துவரை போன்ற உயர்ரக விதைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.



## பிறந்த நாள் இலக்கியம்

பிறந்த நாள் அரசர்க்கே கொண்டாடப் பட்டுப் பின்னர் தலைமக்கள் பொதுமக்கள் என்று வளர்ந்தது. பிறந்தநாள் பற்றிய மரபுகள் பெருகின. அதனால், பிறந்த நாளுக்கு இலக்கியத்தில் தனி நூலே எழுந்தது. 96 வகையான சிற்றிலக்கியங் களில் '' பெருமங்கலம் '' என்றொரு வகை இலக்கியம் உண்டு, அது பிறந்த நாள் சிறப்பை மட்டும் பாடும் தனி நூல். இது பிறந்த நாள் பெற்ற தனி இலக்கியம்.

## பிறந்த நாளால் பெயர்

உத்திரட்டாதியான், பரணியான் ஆதிரை யான் என்று பிறந்த நாளால் பெற்ற பெயர் களாக இலக்கண நூல்கள் அறிவிக்கின்றன. புலவர்களில் ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார் என்னும் இருவர் மூல விண் மீனிற் பிறந்ததால் பெயர் பெற்றவர்கள். திருமூலர் என்னும் சைவப் பெரியாரும் அவ்வாறே பெயர் பெற்றவர்.

இறையவரும் அவ்வாறு பெயர் சூட்டப் பெற்றனர் :

" ஆதிரையான் ஆதிரையான் என்றே அயருமால்
ஊர்திரை நீர்வேலி உலகு "

—என்று முத்தொள்ளாயிரம் சிவ பெருமானுக்கு ஆதிரை விண்மீனால் பெயர் சூட்டியது.

''கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள் ''

—என மதுரைக் காஞ்சி திருமாலுக்குத் திருவோண நாள் பெயர் சூட்டியது. பிறப்பு இறப்பு இல்லாதவர் என்று சொல்லிக் கொண்டே அவர்க்கும் பிறந்த நாள் கண்டனர் தமிழர் ; விழாவும் கொண்டாடினர்.

## பிறந்த நாளின் தனித்தகுதி

" எற்றைப் பகலினும் வெள்ளணிநாள்
இருநிலப் பாவை நிழலுற்ற
கொற்றக் குடையினைப் பாடீரோ ;
குலோத்துங்க சோழனைப் பாடீரோ "

—என்று பாடும் கலிங்கத்துப் பரணி எந்த நாளிலும் பிறந்த நாள் சிறந்தது என்றும், அன்று மன்னனது வெண்கொற் றக் குடை அருளின் தனிச்சின்னமாகும், அதனைப் பாடுக என்றும் பாடிப் பிறந்த நாளுக்கு ஒரு தனித்தகுதியைக் காட்டு கின்றது.

சீவக மன்னன் மிக இளமையிலேயே பகைவரை வென்று அடிப் படுத்தினான். இதனைச் சீவக சிந்தாமணி,

" வெள்ளணி அணிந்த ஞான்றே
வேந்தர்தம் முடியிற் கொண்ட
கள்ளணி மாலை மோந்து
கனைகழல் இலங்கு நோன்றாள் "

—என்று பாடிக் காட்டுகின்றது.

## பிறந்த நாள் நலம்

பிறந்த நாளில் மன்னர் போர்செய்யார் என்பதை,

''தேர்வேந்தன் தென்னன் திரு உத்திராட நாள்
போர்வேந்தன் பூசல் இலன்''

—என்று முத்தொள்ளாயிரமும்,

பிறந்த நாளில் மன்னனை வாழ்த்திப் பகை மன்னர் கூட்டம் சிறையிலிருந்து விடுதலை பெறுவர் என்பதை,

''மலைச்சிறைநீர் வாட்கண்டன்
வெள்ளணியை வாழ்த்திக்
கொலைச்சிறைநீர் வேந்தர் குழாம்''

—என்றொரு பழம் பாடலும் பிறந்த நாள் நலத்தைக் காட்டுகின்றன.

சேரமான் கோக்கோதை மார்பனது சதய நாளில் மன்னர்களை அழைத்து அவனது முரசு பேசியதாம்.

''ஏமாரு மன்னீர் ; எயில்திறமின் !எங்கோமான்
வாமான்தேர்க் கோதை சதயநாள் — ஆமாறு
காமம் நுகருமின் ; கண்படுமின் என்னுமே
ஏம முரசின் குரல்''

கோதைக்கு அஞ்சிக் கோட்டைக் கதவை அடைத்து ஒளிந்திருந்த மன்னர்கள் அவன் பிறந்த நாளில் அச்சம் நீங்கி மனைவியோடு குலாவிக் கவலையின்றிக் கண்படுத்திருப்பர்.

## பிறந்த நாளில் போர்

பிறந்த நாளில் மெய்ப்போர் நீங்கினாலும் பொய்ப்போர் நிகழும். அது பிறந்த விழா வில் நிகழும் போட்டிகளுள் ஒன்று. அது சேரிப்போர் எனப்பட்டது.

திருவோண நன்னாளில் திருமாலுக்கு எடுத்த பிறந்த நாள் விழாவில்

''மறங்கொள் சேரி மாறுபடு செருவில்
மாறுது உள்ள வடுபடு நெற்றி''



—என மதுரைக் காஞ்சி சேரிப்போர் நிகழ்ந்த தையும், அது விளையாட்டுப் போராயினும் அதிலும் வீரம் காட்டி நெற்றியில் விழுப் புண் பெற்றதையும் காட்டுகின்றது.

நன்னன் என்ற தலைவனுடைய பிறந்த நாள் விழாவிலும் இத்தகைய சேரிப்போர் நிகழ்ந்ததாக அந்நூல் பாடுகின்றது.

சென்னை மயிலாப்பூரிலும் இச்சேரிப் போர் நிகழ்ந்ததாகத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

''கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரியில்
கார்தரு சோலைக் கபாலீச்சுரம் அமர்ந்தார்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்''

—என்று போன பூம்பாவையைப் பிறந்தநாள் விழாக் காண அழைக்கின்றார். இவ்வாறு பிறந்தநாள் கேளிக்கைகளோடு கொண்டா டப்பட்டதை அறிகின்றோம்.

மன்னனையோ மற்றவரையோ வாழ்த்து வதற்கும் பிறந்த நாள் பயன்பட்டது. ''அவரவர் பிறந்தநாள் விண்மீன் நிலைத் திருப்பதாக'' என்று கூறி வாழ்த்துவது மரபாக இருந்தது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனை

''நின்று நிலைஇயர் நின் நாள்மீன்''

—என்று மாங்குடி மருதனார் வாழ்த்தினார்.

இத்துணை பெருமைகளையும் நலன்களையும் கொண்ட பிறந்த நாள் ஏதேனும் ஒரு குறை இல்லாதிருந்தால் கண்ணேறு பட்டு விடும் என்று கருதி அதற்கொரு குறையும் சொல்லி வைத்தனர். நோய்வாய்ப்பட்ட வர்க்கு அவரது பிறந்த நாளில் நோய் மிகுமாம். இதனை முத்தொள்ளாயிரம், பிரிந்து வாடும் தலைவிக்கு வாடைக்காற்று வருவது எவ்வளவு கொடுமையானது என்ப தற்கு உவமையாக

''பிணிகிடந் தார்க்குப் பிறந்தநாள் போல
அணியிழை அஞ்ச (வாடைக்காற்று சீறிக்கொண்டு)
வரும்''

—என்று பாடுகின்றது. தமிழ் மருத்துவ நூல்களும் பிறந்த நாளில் சில மருந்துகளைக் கொள்ளக்கூடாது என்று அறிவித்துள்ளன.

இப்பெரும் வரலாற்றுடன் தமிழகத்தில் பிறந்த நாள் :

3000 ஆண்டுகளுக்கு முன் கருக்கொண்டு
இலக்கணத்தில் இயைந்து,
இலக்கியத்தில் இசைபெற்று,
மங்கலத்தில் மலிந்து,
விண்மீனில் விளங்கி,
இல்லம் அழகுபெற,
உள்ளம் உவகைபெற,
வெள்ளணி அணிந்து,
கள்ளணி மாலை சூடி,
அறுசுவை விருந்தளித்து,
சிறைக்கதவைத் திறந்து,
செருவெல்லாம் துறந்து,
சேரிப்போர் நிகழ்த்தி,
வாரிப் பரிசு வழங்கி,
வாழ்த்தில் ஒளிர்ந்து,
வளத்தில் மிளிர்ந்தது.

நம் நாட்டுப் பண்டைப் பாட்கள் முடியுடை மன்னர், குறுநில மன்னர், நிலப் பெருஞ் செல்வர், மேம்பட்ட சான்றோர் ஆகியோர்மேல் பாடப்பட்டவைகளாகவே உள்ளன. எனவே, பிறந்த நாள் செய்தி களும் அவர்களைப் பற்றியனவாகவே கிடைக்கின்றன. வழி வழி வந்த தமிழ் மக்கள் இதனால் பிறந்த நாள் கொண்டாட் டத்தை வளம்படைத்தோர்க்கே உரியது எனக் கருதினர் போலும். தனி மாந்தர் விழாவாகக் கொண்டாடுவதை விட்டனர்.

இன்று நாம் நாட்டுத் தலைமக்கள் எளியவர் களாயினும் அவர்களுக்குப் பிறந்த நாள் விழா எடுக்கின்றோம். அவ்விழாவையும் பொது நலத்தில் வைக்கின்றோம்.

அண்ணல் காந்தியடிகள் நாள்—சருவோதய விழா.

அறிஞர் அண்ணா நாள்—எளியோர் வாழ்வு விழா.

பண்டித நேரு நாள்—குழந்தைகள் விழா.

டாக்டர் இராதாகிருட்டினனார் நாள்—ஆசிரியர் விழா.

டாக்டர் கலைஞர் நாள்—கண் வழங்கும் விழா; மிதி இழுப்பு வண்டி வழங்கு விழா.

தமிழ்மக்கள் பிறந்தநாள் கொண்டாடி வாழ்க !

வளர்க பிறந்த நாள் விழா !





கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நவீன கருவிகள் விநியோகத்தின் கீழ் இது வரை சுமார் 150 நவீன இரும்புக் கலப்பைகளும், 40 களை மிதிக்கும் கருவிகள், 200 திருந்திய கமலேச் சக்கரங்கள், 40 மருந்து தூவும் கருவிகள், 150 மருந்து தெளிப்பான்கள் 10 விசைத் தெளிப்பான்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் தலைமை இடத்தில் 10 விசை தெளிப்பான்களும் கையினால் இயக்கும் 22 தெளிப்பான்களும், 5 தூவான்களும் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்பு நிமித்தம்வழங்கப்படுகின்றன. மேலும் ஓர் இயந்திரக் கலப்பையும், ஆயில் எஞ்சினும் விவசாய வேலைகளுக்கு குறைந்த வாடகையில் கொடுக்கப்பட்டு வருகின்றன.




தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 1,500 கன்றுகள் மான்ய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

செயல் விளக்கப் பாத்திகள் ஆண்டுதோறும் பலதரப்பட்ட பல பயிர் செயல் விளக்கமும் செய்து காட்டப்பட அதற்குண்டான விதை உரம் இலவசமாகவே வழங்கப்பட்டு வருகிறது.

இவ் வட்டாரத்தில் உள்ள களர் நிலச் சீர்திருத்தத்தின் கீழ் 100 ஏக்கரில் ( குறித்த பகுதியில் ) இலவசமாக சிப்சம் வழங்கிச் செயல் விளக்கம்செய்து காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வட்டாரத்தின் சிறு விவசாயிகளின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்குக் குறுகிய கால, நீண்ட காலக் கடன் வசதிகள் ஏராளமாகச் செய்து தரப்பட்டுள்ளன.

### கால்நடை

கள்ளிக்குடி ஒன்றியப் பகுதியில் மொத்தம் 51,375 கால்நடைகள் இருக்கின்றன. இவற்றில் பால் உற்பத்திக்காக 3,972 கால்நடைகளும்வேலைகளுக்குப்பயன்படுத்துவதற்காக 6,805 கால் நடைகளும், 11,970 செம்மறியாடுகளும் ஒன்றியம் முழுவதிலும்

பரவலாக உள்ளன. 4,685 பசுக்கள், எருமைகளுக்குச் செயற்கை முறை இன விருத்தி செய்து முறையே 521 உயர் இனக்கன்றுகள் பிறந்துள்ளன. இவ்வொன்றியத்தின் தலைமை இடத்தில் ஒரு கால்நடை மருத்துவ மனையும், உள் கிராமங்களில் 5 கால்நடை இன விருத்தி கிளை நிலையங்களும் அமைந்துள்ளன. இக் கிளை நிலையங்கள் கால்நடை மருத்துவ மனையின் மூலமாக 2,639 கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கி 6,391கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கால் நடைகளுக்குப் பருவ காலங்களில் வரும் தொற்று நோய்கள் வராமல் தடுக்கும் முகத்தான் 3,831 கால்நடைகளுக்குச் சப்பை நோய் தடுப்பூசியும், 4,159 கால்நடைகளுக்குத்தொண்டையடைப்பான் நோய்த் தடுப்பூசியும் 10,166 கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுப்பூசியும் 11,762 கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய்த் தடுப்பூசியும் போட்டுக் கால்நடைகளுக்கு அவ்வப்போது நோய்கள் பீடிக்காத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்றியத்தில் உயர் இனக் கோழிகள் உற்பத்தி செய்வதற்காக 406 உயர் இனக்கோழி முட்டைகளும் 702 உயர் இனக்கோழிகளும் வாங்கி விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இது தவிர 1970–71 ஆம் ஆண்டில் ஒன்றியத்தின் மூலம் 3 கோழி பண்ணைகளுக்கு மொத்தம் 600 ரூபாய் செலவிடப்பட்டது. தனி நபர்கள் மூன்று பேர் அமைத்த ஆழ்கூழ் கோழிப் பண்ணைகளை ஊக்குவிக்கும் முகத்தான் அவர்களுக்குத் தலா ரூபாய் 100 வீதம் ரூ. 800மானியமாக வழங்கப்பட்டுள்ளது. தீவனப் புல் சாகுபடி திட்டத்தின் கீழ் ரூ. 278 மானியமாக வழங்கப்பட்டுள்ளது. கிளை நிலையங்களுக்கு வேண்டிய பொருள்கள் வாங்கி விநியோகித்த வகையில் ரூ.332 செலவிடப்பட்டுள்ளது. 1971–72 ஆம் ஆண்டில் 82 நபர்களுக்கு வீட்டுப்புறக் கோழிப் பண்ணைகளுக்கான உயர் இனக் கோழிகளும், சேவல்களும் வாங்கி ஒன்றியம் முழுவதிலும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ரூ. 125 தீவனப்புல் சாகுபடித் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டுள்ளது. மீன் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிதி ஆண்டில் ரூ. 400 பெறுமான முள்ள விரலளவு மீன் குஞ்சுகள் வாங்கிக் கிராமப்புறங்களில் உள்ள குளங்களில் மீன் வளர்த்து விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் அரசினரால் இலாகா சம்பந்தப்பட்ட செலவினங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 2,200-ல் ரூ. 2000 இருபது நபர்களைக் கொண்டு தனியார் வங்கியின் மூலம் கடன் பெற்று வீரிய இனக்கோழிகளைக் கொண்டு அமைக்கவிருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஊக்குவிக்கப்பட்ட கோழிப்பண்ணை அமைப்பாளர்களுக்குத் தலா ரூ. 100 வீதம் ரூ. 2,000 மானியமாக வழங்கப்படுகிறது.

ஒன்றியப் பகுதியில் கால் நடைகள் காட்சிகளும், தீவிரக் கால் நடைப் பராமரிப்பு நாள் இயக்கங்களும், பால் கறவைப் போட்டிகளும் நடத்தி மக்களை உயர் இனக் கால்நடைகளைக் கொண்டு உற்பத்தியைப்பெருக்குவதற்காக அவ்வப்பொழுது இலாகா சம்பந்தப்பட்ட திரைப் படக் காட்சிகளும், கிராமங்கள் தோறும் ஏற்பாடுசெய்து மக்களை ஊக்குவித்துக் கால் நடை இலாகாவின் வளர்ச்சி, விவசாயப் பெருங்குடி மக்களின் வளர்ச்சி என்ற அடிபடைப் பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

### செய்யப்பட்ட பணிகள்

மேல்நிலைத் தொட்டிகள் 4 கட்டப்பட்டுள்ளன. இதில் தரை நீர்மட்டத் தொட்டி 1, குடி நீர்க் கிணறுகள் 24 ஆகும்.

புதிதாகக் கட்டப்பட்ட பள்ளி கட்டடங்கள் 12 ஆகும்.

புதிதாகப் போடப்பட்ட சாலையின் தொலைவு 15 கிலோமீட்டர் ஆகும்.

புதிதாக 3 குடியிருப்புகள் ஆசிரியர்களுக்காகக் கட்டப்பட்டுள்ளன.

40 கிலோ மீட்டர் முக்கியச் சாலைகள் இவ் வொன்றியத்தினுல் பராமரிக்கப்படுகிறது.

25 கண்மாய்கள் கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்படுகிறது.






ராஜ்ய நாட்டில் ஒரு மன்னர் இருந்தார். அவருக்குக் கதைகள் கேட்பது என்ருல் கொள்ளை ஆசை. ஒவ்வொரு நாளும் அவருக்குக் கதைகள் கேட்காமல் பொழுது போகாது.

நாள்தோறும் புதிய புதிய கதைகள் கேட்டு மகிழ்வதில் அவர் மிக்க ஆவலாக இருந்தார். புதிய கதைகளுக்கு எங்கே போவது?

அதற்காகத் தமது வேலையாட்களை நாட்டின் நாலா பக்கங்களுக்கும் அனுப்பினுர். புதிய கதைகள் சொல்வதற்கு ஆட்கள் யாராவது இருக்கிருர்களா என்று கண்டுபிடித்து, அவர்களை அழைத்து வரச் சொன்னுர்.

வேலையாட்களும் தேடித்தேடி அலைந்து கதை சொல்பவர்களை அரண்மனைக்கு அழைத்து வருவார்கள். அவர்கள் நல்ல சுவையான கதைகள் சொல்வார்கள். கதைப் பிரியரான அந்த மன்னர் அவற்றைக் கேட்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைவார்.

ஒரு சமயம் ஒருவர் கதை சொல்வதற்கு மிக்க ஆவலாக வந்தார். ஒரு நாட்டு மன்னருக்கே கதை சொல்லப்போகிருேம் என்ற பெரும் மகிழ்ச்சியில் அந்த மனிதர் அரண்மனைக்கு வந்திருந்தார். மன்னர் கதை கேட்கத் தயாரானுர். வந்தவர் கதைசொல்ல ஆரம்பித்தார்.

கதையைக் கேட்டுக் கொண்டே வந்த மன்னருக்குக் கோபம் கோபமாக வந்தது. உடனே அவர் கதை சொல்பவரைப் பார்த்து, ' வேண்டாம் உம்முடைய பழைய கதை· இந்தக் கதையை நான் ஏற்கெனவே கேட்டிருக்கிறேன்'' என்று உரக்கக் கத்தினுர். அத்துடன் சும்மா இருந்தாலும் பரவாயில்லையே. உடனே தமது வீரர்களை அழைத்தார். வீரர்கள் ஓடோடி வந்தனர்·

''இவன் தலையை வெட்டி விடுங்கள்!'' என்று கட்டளையிட்டார். சொல்ல வந்தவர் திடுக்கிட்டார். வீரர்கள் கூட இதைக் கேட்டு வியந்தனர். ஆனுல், மன்னர் இட்ட கட்டளையாயிற்றே ! உடனே கதை சொல்ல வந்தவரைக் கொல்வதற்காக இழுத்துச் சென்றனர். பாவம்! ஏற்கெனவே சொன்ன கதையைச் சொன்னதற்காக அவர் தலையைத் துண்டித்து விட்டனர்!

இந்தச் சம்பவத்திலிருந்து கதை சொல்ல வந்தவர்கள் கதி கலங்கினுர்கள். தம்முடைய தலையும் துண்டிக்கப்படுமோ என்று அஞ்சினுர்கள். மன்னர் முன்னே கதை சொல்ல ஒருவருக்கும் துணிவு இல்லை. சிலர் கதை சொல்லவே நா எழாமல் ஏதேதோ உளறினுர்கள்!

மன்னருக்குப் புதிய கதை எது, பழைய கதை எது என்று தெரியும். ஆனுல், அது மற்றவர்களுக்குத் தெரியுமா? முதலிலேயே இது பற்றி மன்னர் அறிவித்திருந்தால், கதை சொல்பவர்களுக்குப் புதிதாகக் கதை சொல்ல முடிந்திருக்கும். ஆனுல், அவ்வாறு அறிவிக்காததால் அப்பாவிகளின் தலைகள் பல உருண்டன!

இப்படி இருந்தால் யார்தான் கதை சொல்ல முன் வருவார்கள்? ஆகவே, கதை சொல்பவர்கள் எங்குமே கிடைக்கவில்லை. வீரர்கள் தேடித் தேடி அலுத்துப்போய் வந்தனர். மன்னர் அவர்களைப் பார்த்து, ''கதை சொல்பவரை ஏன் அழைத்து வரவில்லை? மறுபடியும் போய்த் தேடிப் பார்த்து அழைத்து வாருங்கள். இல்லையென்ருல் உங்கள் தலைக்கும் ஆபத்து!'' என்று மிரட்டினுர்.

அந்தச் சமயம் ஒரு இளைஞன், ''கதை சொல்ல வந்திருக்கிறேன்!'' என்று துணிச்சலுடன் வீரர்கள் முன்னே வந்து நின்ருன். வீரர்களோ தம் தலை தப்பியது என்று மகிழ்ந்து அந்த இளைஞனை மிகுந்த வரவேற்போடு மன்னரிடம் அழைத்துச் சென்றனர்.

மன்னர் மகிழ்ச்சியுடன் கதை சொல்லவந்திருக்கும் இளைஞனை வரவேற்று உட்கார இடம் தந்தார். ''தம்பி! கதையை ஆரம்பிக்கலாமே!'' என்ருர் ஆர்வமாக. இளைஞனே எதற்கும் பயப்படாமல் கதைசொல்ல ஆரம்பித்தான்.



**பருத்திப் பயிர்ச் செல்வமதை**
**பலியிடலாமோ செம்பேனுக்கு!**
**தெளித்திடுவீர்**
**கெல்தேன்**
**அளித்திடுவீர்**
**பாதுகாப்பு!**



பாழ்படுத்தும் செம்பேன்களுக்குப் பலியாகாமல் பருத்திப் பயிருக்குப் பழுதற்ற பாதுகாப்பை அளிப்பது இண்டோ:.பில் கெல்தேன்.
பயிர்களை எவ்வகையிலும் பாதிக்கா-மல், செம்பேன்களை அழித்து, நீடித்திருந்து பயிரை காக்கும் திறனுள்ளது. முதல் தெளிப்பிலேயே செம்பேன்களை முற்றிலும் ஒழித்துக் கட்டும் கெல்தேனின் பலன் நீண்ட நாட்களுக்கு நீடித்திருக்கும் தன்மை வாய்ந்தது. உங்கள் தேவைகளுக்கு இண்டோ:.பில் விற்பனையாளரோடு தொடர்பு கொள்ளுங்கள்.




இண்டோஃபில்—பசுமை நிறைந்த எதிர்காலத்திற்கு

இண்டோஃபில்
கெமிக்கல்ஸ் லிமிடெட்,
பம்பாய்-25

® கெல்தேன் மற்றும்
:.ப்ளாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனியின் ட்ரேட் மார்க்குகளாகும். இவை யூ. எஸ். பேடெண்ட் ஆபீஸ் மற்றும் இதர நாடுகளில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவை.

IF 6213

## புதிய கோணம்

# நாலும் இரண்டும்

சிங்கப்பூர் பா. கேசவன்

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் பழமொழி நமக்கு அறிமுகமானதுதான். இப் பழமொழியிலுள்ள "நாலும்", "இரண்டும்" என்னும் சொற்கள் முறையே நாலடியாரையும் திருக்குறளையும் குறிக்கின்றன என்றும் விளக்கம் தரப்படுகின்றது. இந்தப் பழமொழியிலுள்ள "நாலும்", "இரண்டும்", எனும் சொற்கள் மேற்கண்ட இரு நூல்களையும் குறிக்கின்றன என்பது பொருத்தமானதுதானா? இந்த வினாவிற்கு விடை காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாலும் இரண்டும் என்னும் சொற்கள் நாலடியாரையும் திருக்குறளையும் குறிப்பன அல்ல என்பதே எனது கருத்தாகும். இவ்வாறு நான் கருதுவதற்குப் பல காரணங்கள் உள்ளன.

திருக்குறள் "உலகப் பொதுமறை", "தமிழ்மறை" என்றெல்லாம் சிறப்பித்துப் பேசப்படுவது. நீதி நூற்களிலே திருக்குறளுக்கு நிகரான ஒரு நூல் இல்லை என்பதே அறிஞர் பெருமக்களின் ஒருமித்த கருத்தாகும், அத்தகைய உயர் மிகு சிறப்பு வாய்ந்த திருக்குறளையும் நாலடியாரையும் சமமாக வைத்துப் பேச முடியுமா என்பது நாம் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். அதற்காக நான் நாலடியாரைக் குறைத்து மதிப்பிடுவதாக யாரும் தவறாகக் கருத வேண்டா. நாலடியார் சிறந்த நீதி நூல் என்பதிலே கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை. அதே சமயத்தில் நாலடியாரைப் போன்ற நீதி நூல்கள் பல உள என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் திருக்குறளுக்கு நிகரான ஒரு நீதி நூல் தமிழ் மொழியிலே மட்டுமன்று, வேறு எந்த மொழியிலேனும் இருக்கின்றதா என்பதும் ஐயத்திற்குரியதே! இந்த வகையில் பார்க்குமிடத்துத் திருக்குறளையும் நாலடியாரையும் ஒரே இடத்தில் வைத்துப் பேசுதல் பொருத்தமானதன்று என்றே கருத வேண்டியுள்ளது.

அடுத்து, நாலடியார் என்னும் பெயரே நாலடி வெண்பா என்பதனை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததாகும். ஆனால், திருக்குறளுக்குப் பொதுமறை, தமிழ்மறை, முப்பானூல்—இப்படிப் பல பெயர்கள் குறிக்கப்படுகின்றன. ஆனால், "இரண்டு" என்னும் பெயர் இருந்ததாகவோ, இருப்பதாகவோ தெரியவில்லை.

திருக்குறளில் இல்லாதது எதுவுமே இல்லை என்று நாம் திட்டவட்டமாக—அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றோம். ஆனால், நாலடியாருக்கு இது பொருந்துமா?

நாடு, இனம், மொழி, மதம் என்னும் குறுகிய எல்லைகளைக் கடந்து நிற்பதால்தானே குறள் "உலகப் பொதுமறை" ஆகின்றது. இந்தச் சிறப்பு நாலடியாருக்கு உண்டா?

நீதி நூல்களுக்கெல்லாம் சிகரமாக விளங்கும் திருக்குறள் ஒன்று மட்டுமே போதுமே சொல்லுறுதி பயக்க! பின்னர் நாலடியாரையும் துணைக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன?

அவ்வாறாயின், இந்த "நாலும்", "இரண்டும்" என்னும் சொற்களுக்குப் பொருள் தான் என்ன? இதற்கு விடை காண நாம் உலக வழக்கைச் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். நாலு, இரண்டு என்பன எண்களைக் குறிக்கும் சொற்கள் என்பதிலே ஐயத்திற்கிடமில்லை. மற்ற எண்களுக்கு இல்லாத சிறப்பு இந்த எண்களுக்கு மட்டும் ஏற்படக் காரணம் யாது? இந்த இரண்டு சொற்களையும் பொதுவாகப் பார்க்குமிடத்து மற்ற எண்ணுப் பெயர்களைப் போலவேதான் இவையும் என்று தோன்றும். உலக வழக்கிலே இந்தச் சொற்கள் பயன்படும் விதத்தை எண்ணிப் பார்த்தால்தான் அவற்றின் சிறப்புப் பொருள் புலனாகும்.

"நாலும் தெரிந்தவன்", "நாலு பேருக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்கள்? "நாலு பேர் மதிக்க வேண்டாமா?"—இப்படி இந்த நாலு என்னும் சொல்லைப் பாமர மக்கள்கூட எடுத்ததற்கெல்லாம் பயன்படுத்துவதைக் காண்கிறோம். "நாலும் தெரிந்தவன்" என்றால் என்ன பொருள்? எல்லாம் தெரிந்தவன் அல்லது அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்திருப்பவன் என்பது தானே பொருள்? நாலு பேருக்குத் தெரிந்தால் என்ன நினைப்பார்கள்?" என்னும் வாக்கியத்திலே "நாலு" என்பது "பல" என்னும் பொருளைத்தானே தருகின்றது? எனவே, இந்த "நாலு" என்பது சில இடங்களில் பல, பெரும்பான்மை என்னும் பொருளிலும், சில இடங்களில் எல்லாம் என்னும் பொருளிலும் வழங்கி வருவது தெளிவாகும்.

நாலு என்னும் சொல் இன்று பல என்னும் பொருளில் வழங்குவது போன்று முன்னாளில் ஏழு, எழுபது என்னும் சொற்கள் பல என்னும் பொருளில் வழங்கி வந்துள்ளன. எழுமை, எழு பிறப்பு, எழுபது கோடி என்னும் சொற்கள் பல என்னும் பொருளில் திருக்குறளில் எடுத்தாளப்பட்டுள்ளன.

"ஏதோ இரண்டெழுத்துப் படித்திருக்கிறான்", வாயைத் திறந்து இரண்டு வார்த்தை பேசினால் என்ன?", "ஐந்துக்கு

''நெடுங்காலத்திற்கு முன் உங்கள் தாத்தாவும், என்னுடைய தாத்தாவும், ஒன்று சேர்ந்து ஒரு நெற்களஞ்சியத்தை கட்டினார்கள். அது எவ்வளவு பெரியது தெரியுமா? அந்தக் களஞ்சியத்தின் ஓர் மூலையிலிருந்து ஓர் அணில் மற்றொரு மூலைக்கு ஓட ஒரு நாள் பிடிக்கும். அவ்வளவு பெரியது அந்தக் களஞ்சியம்! அதைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா, அரசே?'' என்று இளைஞன் கேட்டான். அதற்கு மன்னர் ''இல்லை, நான் கேள்விப்பட்டதில்லை'' என்றார்.

''அப்படியானால் இன்றைக்கு இவ்வளவு போதும். மீதிக் கதையை நாளை வந்து சொல்கிறேன்!'' என்று சொல்லிவிட்டுச் சென்றான் அந்த இளைஞன்.

மறுநாள், மன்னர் மீதிக் கதையைக் கேட்க இளைஞனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். இளைஞனும் வந்தான். மேற்கொண்டு கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

''நேற்று எதுவரை கதை சொன்னேன்?'' என்று மன்னனைப் பார்த்துக் கேட்டான் இளைஞன்.

''உங்கள் தாத்தாவும், என் தாத்தாவும் நெற்களஞ்சியம் கட்டியது வரை சொன்னாய்....'' என்றார் மன்னர்.

உடனே இளைஞன், ''மேற்கொண்டு கேளுங்கள். அந்த நெற்களஞ்சியத்தில் அவர்கள் இருவரும் சேர்ந்து ஒரு பெரிய காளையை வளர்த்தார்கள். அதன் கொம்புகள் மிக அகலமாக இருந்தன. எவ்வளவு அகலம் தெரியுமா? ஒரு குருவி ஒரு கொம்பிலிருந்து மற்றொரு கொம்பிற்குப் பறந்து செல்ல ஒரு நாள் ஆகும்! அவ்வளவு அகலம் அந்தக் கொம்புகள். அதைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா அரசே'' என்று கேட்டான்.

அதற்கு மன்னர் ''இல்லை! என்று தலையாட்டினார். அப்படியானால் இன்றைக்கு இது போதும்! நான் நாளைக்கு வருகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே சென்றான் இளைஞன்.

இதைக் கேட்ட மன்னருக்குக் கோபம் பொத்துக் காண்டு வந்தது. ''டேய் பயலே! நீ என்னையா ஏமாற்றப்பார்க்கிறாய்? உன்னை என்ன செய்கிறேன்பார்!'' என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்டார்,

மறுநாள் காலை!

மன்னர் அவசரம் அவசரமாகத் தம் அவையைக் கூட்டினார். அவையிலிருந்த அனைவரிடமும், ''இன்று அந்த இளைஞன் கதை சொல்ல வருவான். அவன் கதை சொல்லும்போது, நான் அதை ஏற்கெனவே கேட்டிருப்பதாகக் கூறுவேன். அப்போது நீங்களும், 'நாங்களும் அதை மன்னருடன் சேர்ந்து கேட்டிருக்கிறோம்' என்று சொல்ல வேண்டும்!'' என்று உத்தரவிட்டார்.

மூன்றாவது நாளாக இளைஞன் கதை சொல்ல அரண்மனைக்கு வந்தான். மன்னர் கேலிச் சிரிப்புடன் அவனை வரவேற்றார். இளைஞனோ அதைப் பொருட்படுத்தாமல் கதை சொல்ல ஆரம்பித்தான்.

''பிறகு என்ன நடந்தது தெரியுமா? உங்கள் தந்தையும் என் தந்தையும் அண்டை நாட்டு மன்னர்களாக இருந்த போது, உங்கள் தந்தையார், என் தந்தையாரிடமிருந்து 40 மூட்டைத் தங்கத்தைக் கடனாக வாங்கி, அதை நாற்பது குதிரைகளில் ஏற்றிச் சென்றார். அதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?'' என்று மன்னரைப் பார்த்துக் கேட்டான் இளைஞன்.

அவையில் இருந்தவர்களுக்கு மன்னன் ஏற்கெனவே உத்தரவிட்டது நினைவில் இருந்தது. உடனே அவர்கள் அனைவரும், 'ஆமாம், ஆமாம். நாங்கள் அதைக் கேட்டிருக்கிறோம்!'' என்றார்கள்.

''அப்படியானால், நீங்கள் அந்தக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், அரசே'' என்றான் இளைஞன்.

மன்னர் திடுக்கிட்டு ஒன்றும் புரியாமல் விழித்தார். அவையில் இருந்தவர்களோ மன்னர் கடனாளிதான் என்று உறுதிப்படுத்தினர். வேறு வழி இல்லாமல் மன்னர், தம் கருவூலத்திலிருந்து தங்கம் முழுவதையும் சுரண்டி எடுத்தார். அப்படி எடுத்தும் ஒரு மூட்டை தங்கமே கிடைத்தது!

இளைஞனே அந்த ஒரு மூட்டைத் தங்கத்தை எடுத்துக் கொண்டு, மீதியைப் பிறகு வந்து வாங்கிக் கொள்வதாகச் சொல்லி ஓட்டமும் நடையுமாக விரைந்தான்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு மன்னருக்குக் கதை கேட்கும் ஆசையே போய்விட்டது.

(ஒரு ரஷ்யக் கதையைத் தழுவி எழுதியது.)

### பின்தங்கிய வட்டங்களுக்கு அரசு தரும் உதவி

புதிதாகத் தொழில்கள் துவங்குவதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மதுரை மாவட்டத்தில் பின்வரும் வட்டங்களை தொழில்களில் பின்தங்கிய வட்டங்களாகத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது:—

| | |
|---|---|
| மேலூர் | திருமங்கலம் |
| உசிலம்பட்டி | நிலக்கோட்டை |
| திண்டுக்கல் | வேடசந்தூர் |

இந்த வட்டங்களில் தொழில் துவங்குபவர்களுக்கு அவர்களது முதலீட்டில் 10ல் 1 பாகம், அரசு நிதி உதவியாக அல்லது மானியமாக வழங்கப்படும். இந் நிதி உதவி, உயர்ந்த அளவு ரூ. 50,000 வரை வழங்கப்படும்.



# திருமங்கலத்தில் அரிய வளர்ச்சி



உசிலம்பட்டிக் கோட்டம் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தின் பரப்பளவு சுமார் 339.32 சதுர கிலோ மீட்டர். இந்த ஒன்றியப் பகுதியில் சுமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். மொத்தம் 39 ஊராட்சிகளைக் கொண்டது இந்த ஒன்றியம். இதில் திருமங்கலம் பேரூராட்சி உள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு அரசு இவ்வட்டாரப் பகுதியில் பல்வேறு துறைகளில் ஏராளமான பொருட் செலவில், பல சாதனைகளைச் செய்துள்ளது.

### இணைப்புச் சாலைகள்

இவ்வட்டாரப் பகுதியில் உள்ள சாலைகளில் கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிதாகப் போடப்பட்ட இணைப்புச்சாலைகளின் விவரமும் அதற்கெனத் தமிழக அரசு செலவிட்ட தொகையும், வருமாறு :—

| ஆண்டு | புதிய சாலைகளின் அளவு (கி. மீ.) | அரசு மானியம் மட்டும். (ரூபாய்) | இணைக்கப்படும் கிராமங்கள் |
|---|---|---|---|
| 1967—68 | 3·4 | 26,210 | 3 |
| 1968—69 | 2·0 | 20,841 | 2 |
| 1969—70 | 11·6 | 21,500 | 3 |
| 1970—71 | 11·6 | 29,333 | 4 |
| 1971—72 | 3·80 | 30,086 | 4 |

### சாலைப் பராமரிப்பு

திருமங்கலம் ஒன்றியப் பகுதியில் ஒன்றியப் பராமரிப்பின் கீழ் உள்ள சாலையின் நீளம் 16·60 கி.மீ. அதைப் பராமரிக்கத் தமிழக அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் வழங்கிய மானியம் வருமாறு :—

| ஆண்டு | | | | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1967—68 | .. | .. | .. | 30,129 |
| 1968—69 | .. | .. | .. | 31,291 |
| 1969—70 | .. | .. | .. | 38,714 |
| 1970—71 | .. | .. | .. | 19,708 |
| 1971—72 | .. | .. | .. | 29,568 |

### குடிநீர் விநியோகம்

குடிநீர் வசதிக்காகக் கிணற்று நீர்த்திட்டம், குழாய்த் தண்ணீர்த் திட்டம் ஆகிய இரு வகையாகப் பிரித்து வேலையை மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ளன. இதில் 5 ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு வழங்கிய நிதி மட்டும் வருமாறு.

| ஆண்டு | | | | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1967—68 | .. | .. | .. | 23,363 |
| 1968—69 | .. | .. | .. | 19,159 |
| 1969—70 | .. | .. | .. | 31,035 |
| 1970—71 | .. | .. | .. | 34,586 |
| 1971—72 | .. | .. | .. | 38,624 |

### கல்வி

கல்வி வளர்ச்சி சம்பந்தமாக இவ்வொன்றியப் பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மதிய உணவு வழங்குவதற்காக அரசு வழங்கிய மானியம் வருமாறு:—

| ஆண்டு | | மதிய உணவு வழங்கிய பள்ளிகளின் எண்ணிக்கை | அரசு மானியம் (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967—68 | .. | 72 | 50,567·52 |
| 1968—69 | .. | 72 | 49,200·00 |
| 1969—70 | .. | 72 | 12,300·00 |
| 1970—71 | .. | 74 | 51,512·00 |
| 1971—72 | .. | 74 | 51,098·47 |

ஒவ்வொரு ஆண்டும் புதிதாகப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்காகத் தமிழ்நாடு அரசு மானியம்

இரண்டு பழுதில்லை''—இப்படி இரண்டு என்னும் சொல் அன்றாட வழக்கிலே பயன்படுத்தப் படுவதையும் காண்கிறோம். இங்கே இரண்டு என்னும் சொல் சில, சிறிதளவு என்னும் பொருளை உணர்த்துவது சொல்லாமலே விளங்கும்.

எனவே, ''நாலும்'', ''இரண்டும்'' என்னும் சொற்கள் முறையே பல, சில என்னும் பொருள் தருவதாகக் கொள்ளல் வேண்டும்.

அப்படியானால், பலவற்றையும் தெரிந்திருத்தல் சொல்லுக் குறுதி பயக்கும் என்று கூறினால் போதுமே! ''பல'' வுக்குள்ளேயே ''சில'' அடக்கம் அல்லவா? ''நாலும் இரண்டும்'' என்று ஏன் கூற வேண்டும்? நாலும் தெரிந்த பின்னர் இரண்டுக்கு என்ன வேலை? சரியான கேள்விதான். அதே வேளையில், ''நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்னும் கூற்றும் தவறன்று. ஒவ்வொருவரும் தத்தமது தகுதிக்கும், செயலுக்கும், வாழ்க்கை முறைக்கும் ஏற்பச் சில துறைகளை முழுமையாக அறிந்திருக்க வேண்டும், மற்றத் துறைகளை ஓரளவு அறிந்திருந்தால் போதும். அதாவது, ஒவ்வொருவர்க்கும் அவர்தம் தனிப்பட்ட இயல்புக்கும், தகுதிக்கும் ஏற்பச் சிலவற்றில் ஆழ்ந்த பயிற்சி வேண்டும், மற்றவற்றில் மேலெழுந்தவாரியான பயிற்சி இருந்தாலே போதும். குறிப்பாகச் சொன்னால் ஒரு மனிதனுக்கு எல்லாத் துறைகளிலும் மேலெழுந்தவாரியான அறிவு இருத்தல் வேண்டும். அதே சமயத்தில் அவன் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடைய சில துறைகளில் ஆழ்ந்த பயிற்சி இருத்தல் அவசியமாகும். இங்கே நாலு என்பது ஆழ்ந்த அறிவையும், இரண்டு என்பது மேலெழுந்தவாரியான அறிவையுமே குறிக்கின்றன. 'நாலும் இரண்டும்' என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்ளுதலே பொருந்தும்.

எனவே, ''நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'' என்னும் முதுமொழியில் உள்ள ''நாலும் இரண்டும்'' என்னும் சொற்கள் முறையே நாலடியாரையும் திருக்குறளையும் குறிப்பன அல்ல என்னும் முடிவுக்கே வர வேண்டி இருக்கின்றது.



## அண்ணாவின் அமுத மொழிகள்

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக் கொண்டால் நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும்.

* * * * *

இலக்கியம் மனிதனது அறிவை வளர்க்கிறது. மனிதனுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறது; நன்மை தீமைகளை எடுத்துக் காட்டுகிறது. மனிதனது சிந்தனையைக் கிளறி விடுகிறது.

* * * * *

பகுத்தறிவை முன்நிறுத்தி உழைப்பதே இந்தியாவின் தற்கால இன்றியமையாத் தேவை.

* * * * *

கலை என்பது நெறி, முறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

* * * * *

தோழமைதான் சமத்துவத்தின் கனி; சமதர்ம மணம்; இதைக் காணத்தான், சாதி தொலைய வேண்டும் என்று பாரதியார் சொன்னார்.

* * * * *

அறிவாலும் ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

* * * * *

கருத்துத் தெளிவு மிகவும் இன்றியமையாதது. வெளியிடாமல் மனத்திலே மட்டும் உள்ள கருத்து மனிதத் தன்மைக்கு ஏற்றதல்ல: அது காட்டிலே உள்ள ஒரு முறை.



# ..ந்நாட்டவரும் போற்றும் எழில் மிகு மெரினா



சென்னை மாநகரத்தின் நிலா முற்றம் மெரினா! கோடையிலே இளைப்பாறிக் கொள்ள விரும்புவோர்க்கு, வெள்ளி மணலின் மெத்தை விரிப்பும், சுகமான பூங்காற்றும், நீலக்கடலின் காட்சியும் தந்து, புதுத் தெம்பினை அளிக்கும் கற்பகம் இது. தெம்பும், மகிழ்வும் நாடி வருவோர்க்கு அவற்றினை இது பெருக்கித் தருகின்றது. உடல் அசதி, உள்ளத்தில் அலுப்பு, மனத்தில் சஞ்சலம், அனைத்தையும் குன்ற வைக்கும் துக்கம் இவற்றைக் கரைத்துக் கொள்ள, குறைத்துக் கொள்ள இதனைக் காட்டிலும் சிறந்த புகலிடம் சென்னை மாநகர மக்களுக்கு வேறு இல்லை.

அசைந்தாடி வரும் மதலைகள், துள்ளிக் குதிக்கும் குழந்தைகள், வளர்ச்சி வேகம் புடைத்துப் பீறிட ஓடி ஆடும் சிறுவர்கள், கன்னியர், காளையர், கணவன் மனைவியர், முதியோர், உடல் நலம் குன்றியோர் யாவருக்கும், வலியோர்—வசதி குறைந்தோர் என்ற எவ்வித வேறுபாடுமின்றி அனைவருக்கும் புத்துணர்ச்சி தந்து வருகின்றது சென்னை நகரின் இந்த அழகிய கடற்கரை.

### தனிமைச் சுகம்

காடு, மலை, வனாந்திரம், அவற்றின் பசுமை நிழல், அருவிகள், ஓடைகள், பாடும் பறவைகள், கற்பனைகளுக்குச் சிறகளிக்கும் இயற்கைச் சூழல்கள், இவற்றினூடே தனிமைச் சுகம் என்பது பட்டினவாசிகளுக்கு எளிதில் கிடைக்கக் கூடிய பேறு அல்ல. ஆனால் அந்த இயற்கை வளமைகள் அனைத்தையும் ஓரளவு ஈடுசெய்கின்ற அரிய ஒன்றைச் சென்னை மக்கள் பெற்றிருக்கிறார்கள். அதுதான் மெரினா கடற்கரை!

சிங்காரச் சென்னையின் எழிலுக்குப் பேரெழில் சேர்க்கும் மெரினாவைப் பற்றிச் சொல்லுவது 'காக்கைக்கும் தன் குஞ்சு' கதை அல்ல. உலகத்திலேயே மிக அழகிய கடற்கரைகளில் ஒன்று என்ற பெருமையைப் பெற்றது மெரினா. வேறு நாட்டவர்களும் இதன் எழிலையும், இக்காற்றின் சுகத்தையும் வியந்து போற்றியிருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் சென்னை மாகாண கவர்னராக இருந்த ஆங்கிலேயர், தமது நண்பர் ஒருவருடன் பேசும் போது சொன்னார்: ''இந்தியாவுக்குச் செல்லுவாயானால் சென்னைக்குப் போகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள். சென்னைக் கடற்கரையில் ஒரு பன்னிரண்டு மணி நேரம் இருப்பாயானால் அதன் சுகம் அற்புதமாய் இருக்கும்'' என்றாராம்.

மெரினா என்றால் என்ன?

சென்னை மாகாணத்துக்கு



குமரன்--



**செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் மிகு விளைச்சல் தர நெல் பயிரிடப்பெற்று அறுவடை நடைபெறுகிறது.**

கொடுத்து வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் மேற்கண்ட வேலைகளுக்காக வழங்கப்பட்ட தொகை ரூபாய் 72,000 ஆகும்.

இது தவிரப் பள்ளிகளில் சுகாதாரப்பராமரிப்புக்காகவும் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு வழங்கப் பட்டு வருகின்றது. இவ்வொன்றியத்தில் உள்ள பள்ளிகளில் வேலை பார்த்து வரும் ஆசிரியைகளுக்குக் குடியிருக்க வால்நாயக்கன்பட்டி கிராமத்தில் வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

திருமங்கலம் ஒன்றியப் பள்ளிகளில் (1 முதல் 8 வகுப்பு வரை) மாணவ மாணவிகளுக்கு விஞ்ஞான விளக்க மாதிரிப் பொருள்கள் ஒவ்வொரு ஆண்டும் வாங்கி விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கான நிதியைத் தமிழக அரசே வழங்கி வருகிறது.

### விவசாயம்

விவசாயத் துறையில் தமிழ்நாடு அரசு கடந்த ஐந்து ஆண்டுகளில் கீழ்க் கண்ட பல்வேறு இனங்களுக்கு நிதி வழங்கிச் சாதனைகள் புரிந்துள்ளது.

| | 67—68 | 68—69 | 69—70 | 70—71 | 71—72 |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய்) | | | | |
| 1. பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்தல். | 150 | 150 | 179 | .. | 600 |
| 2. தனியாருக்கு விவசாயக் கருவிகள் வழங்கியது | 1,500 | 1,000 | 1,498 | 1,500 | 990·75 |
| 3. பழக்கன்றுகள் விநியோகம். | 900 | 9,000 | 899 | .. | 487 |
| 4. செயல் விளக்கப் பாத்திகள் அமைக்க | 3,000 | 3,000 | 3,000 | 1,500 | 2,400 |
| 5. ஒன்றியங்களுக்கு விவசாய விசைக் கருவிகள் | 6,000 | .. | 500 | 2,500 | 298·70 |
| 6. விவசாயக் கால் நடைக் கண் காட்சிக்கு | 250 | 250 | 250 | 260 | 750 |
| 7. சிறுதானிய வீரிய வித்துக்கள் விநியோகம். | .. | .. | .. | 1,500 | 1,500 |

இவ்வொன்றியத்தில் கூடுதல் விவசாயக் கிடங்கு ஒன்று கட்டி முக்கப்பட்டுள்ளது. அதன் மதிப்பீடு ரூபாய் 25,000. மேற்கண்ட தொகை 1969-70-லிருந்து தமிழக அரசால் வழங்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

இவ்வொன்றியத்திலுள்ள பாசனக் கண்மாய்களைப் பராமரிக்கக் கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழக அரசு ரூபாய் 1,30,000 வரை வழங்கி உள்ளது.

1969-70 வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூபாய் 2½ இலட்சம் நிதி வழங்கப்பட்டு 13 சமுதாயக் கிணறுகள் வெட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேற்படித் திட்டத்தின் கீழ் 27 கால்வாய் மராமத்து வேலையும், 7 கண்மாய் மராமத்து வேலையும் மேற்கொள்ளப்பட்டன. மேற்படித் திட்டத்தில் 280 குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்திக் குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்கத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. அதோடு திருசங்குளம் என்னும் கிராமத்திற்கு ஒரு புதிய சாலை அமைத்துக் கொடுக்கப்பட்டது.

### கால்நடைப் பராமரிப்பு

கால் நடைப் பராமரிப்புத் திட்டத்தில் திருமங்கலத்தில் உள்ள கால் நடை மருத்துவ மனையைச் சுற்றி வேலி அமைத்தும், புதிதாகக் கிணறு ஒன்று வெட்டியும், வேலைகள் மேற்கொள்ளப் பட்டன.

**கிராமந்தோறும் பள்ளிக் கட்டடம்.**



### மீன்வளம்

மீன் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், கடந்த ஐந்தாண்டுகளில் மீன் குஞ்சுகளை வாங்கிக் குளங்களில் விடப்பட்டது. மேலும் எஸ். வலையபட்டி, டி. புதுப்பட்டி, மேலக்கோட்டை, கரடிக்கல் ஆகிய கிராமங்களில் மீன் பண்ணைகளைப் புதுப்பிக்கும் வேலைகள் மேற்கொண்டு முடிக்கப்பட்டன.

| ஆண்டு | | | வழங்கப்பட்ட மீன் குஞ்சுகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967–68 | | .. | 8,000 |
| 1968–69 | .. | .. | 15,500 |
| 1969–70 | .. | .. | 10,000 |
| 1970–71 | .. | .. | 18,000 |
| 1971–72 | .. | .. | 33,500 |

### வேலை வாய்ப்புத் திட்டம்

தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 2,50,000 கடந்த இரு ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

புதிய சாலை போடுதல், சாலைகளை அகலப்படுத்தும் வேலைகள், கால்வாய் மராமத்து வேலைகள், குளம் மராமத்து வேலைகள் முதலியன மேற்கொள்ளப்பட்டு, அதன் மூலம் 850 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

### சிரணி வேலைகள்

தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டுத் திட்டத்தின் கீழ் 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 8,000 அரசு மானியம் வழங்கப்பட்டு, அதைக் கொண்டு புதுமங்கலம் என்னும் கிராமத்தில் ஒரு புதிய பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

சிரணித்திட்டத்தின் கீழ் சுமார் ரூ. 12,000 நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அச்சம்பட்டி, அழகுசிறை ஆகிய இரு கிராமங்களில் பள்ளிக் கட்டடம் கட்டும் வேலைகளும் செங்குளம் கிராமத்தில் ஒரு கலையரங்கம் கட்டும் வேலையும், மேற்கொள்ளப்பட்டன.

**வாடிப்பட்டியில் ஊராட்சி ஒன்றியம்.**



**முருங்கைக்கு ஓர் ஊர்.**

**முருங்கை மரங்களைத் தோப்பாகப் பார்ப்பதே அரிது. ஆனால், கண்ணுக்கு எட்டிய தொலைவு வரை ஊர் முழுவதும் எந்தப் பக்கம் பார்த்தாலும் - எல்லா நிலங்களிலும் முருங்கை மரமாக உள்ள ஓர் ஊர் தமிழ் நாட்டிலுள்ளது.**

**மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பரலமேடு என்ற ஊர் தான் அந்தப் பெருமைக்குரியது.**

**முருங்கைக்குப் பெயர் பெற்ற இந்த ஊரிலிருந்து குடுமியாமலை அண்ணா பண்ணைக்கு ஆயிரம் முருங்கைப் பதிகங்கள் அனுப்பவிருக்கிறார்கள்.**

### மகளிர் நலம்

மாதர் நலம், குழந்தைகள் நலம் என்ற திட்டத்தின்கீழ், தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பல்வேறு இனங்களுக்கு நிதி அளித்து வருகிறது.

இவ்வொன்றியப் பகுதியில் 30 மகளிர் மன்றங்கள் நடத்தி வரப்படுகின்றன. கிராமப் புறப் பெண்களுக்கு, குழந்தைகள் வளர்ப்பு, குடும்பக் கட்டுப்பாடு, சமையல் செய்முறை விளக்கங்கள், காய்கறித் தோட்டங்கள் போடுதல், தையல் பயிற்சி அளித்தல், சிறு சேமிப்பு அறிவுரைகள், கோழி ஆடு மாடுகளை நல்ல முறையில் வளர்த்தல், சமூகக் கல்வி கற்பித்தல் போன்ற வேலைகளுக்கு மகளிர் மன்றங்களுக்கான மானியம் செலவிடப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் செலவிட்ட தொகைகளின் விவரம் வருமாறு:—

| ஆண்டு | | | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 3,020·00 |
| 1968–69 | .. | .... | 1,649·85 |
| 1969–70 | .. | .. | 4,200·00 |
| 1970–71 | .. | .. | 4,000·00 |
| 1971–72 | | .. | 4,055·00 |

இவைபோக 1969–70 முதல் 1971–72 ஆம் ஆண்டு முடிய இவ்வொன்றியப் பகுதியில் 6 பாலர் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. இவற்றில் 2½ வயது முதல் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. மேற்கண்ட பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருள்கள், பாலர் சேவிகாக்களுக்கு ஊதியம் ஆகியவைகளுக்கு அரசு நிதி தந்துள்ளது. அவை பின் வருமாறு:—

| ஆண்டு | | | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1969–70 | .. | .. | 400 |
| 1970–71 | .. | .. | 384 |
| 1971–72 | .. | .. | 1,119 |

**இவ்வாறு இவ்வொன்றியப் பகுதிகளில் பல்வேறு இனங்களுக்கென்று தனித்தனியே நிதி வழங்கியதன் மூலம் பற்பல பணிகள் நிறைவேறியுள்ளன.**



1881 முதல் 1886 வரை கவர்னராக இருந்த மவுண்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டன் கிராண்ட் டப்ஃ என்பவர் தான் முதன் முதலாக இந்த எழிலார்ந்த கடற்கரையின் சிறப்பை உணர்ந்து, மேம்பாடு வேலைகளை மேற்கொண்டார். இக்கடற்கரைக்கு மெரினா என்று பெயர் வைத்தவரும் அவர் தான். அப்பெயர் குறித்து அவர் ஒரு சமயம் சொன்னார்: ''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு கடலோர அத்துவான மணற்பரப்பாக இருந்த பகுதியை உலகிலேயே மிகச் சிறந்த கடலோர உலா மேடையாக்கி, சென்னைக்கு நன்மை செய்திருக்கிறோம்'' என்றார் அவர். மெரினா என்றால் உலா மேடை அல்லது கடலோர உலா மேடை என்று பொருள்.

வைரம் எங்கிருந்தாலும் வைரம்தான் என்றாலும் மண்ணுக்குள் இருக்கும் வரை, எடுத்துப் பட்டை தீட்டப் படாதவரை அதன் ஒளியும் பயனும் பிறருக்குத் தெரிவதில்லை. அதேபோல தமிழகம் தோன்றிய போதே இந்த அழகுக் கடற்கரையும் தோன்றியது என்றாலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் பின்னரும், இதனை அழகுபடுத்தப்படுத்தத் தான் இதன் எழிலும் புகழும் எங்கும் அறியப்படலாயிற்று.

## குதிரைத் தடம்

கூவம் முகத்துவாரத்தில் தொடங்கி, சாந்தோம் வரையில் நீண்டு அகன்ற இந்த மெரினா கடற்கரைப் பரப்பில் குறிப்பிடத்தக்க ஒன்று: பற்பல ஆண்டுகளாக இக்கடற்கரை ஓரத்தைக் கடல் அரித்ததும் கிடையாது. கடல் நீர் தள்ளிப் போய், இக்கரைப் பகுதி விரிவடைந்ததும் இல்லை. மேடு புதர்கள் மறைந்தன. பள்ளங்கள் பல தூர்ந்தன. மரங்களும் கூட மறைந்தன. ஆனால் திட்டமிட்டு, மேடையிட்டு, வரிசையிட்டு அமைத்த பூங்காக்கள், பூப்பாத்திகள், செடிகள், புல்தரைகள், இக்கடற்கரைக்குப் புதியஎழில் சேர்க்கின்றன.



காந்தியண்ணல் சிலையருகே கண் கவரும் புதுத் தோற்றம்

அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் இந்தக் கடலோர உலா மேடைக்கு பிரிட்டிஷ் அலுவலர்கள், பெருபெரும் வணிகர்கள், பெருமக்கள் முதலானோர்தான் அதிகம் வருவார்கள். அது. கார் இல்லாத காலம். குதிரைகள் பூட்டிய பீட்டன் வண்டியில் அல்லது குதிரை வண்டியில் வருவார்கள். சிலர் குதிரை மீதேறியும் உலாவருவார்கள். தெற்குக் கடற்கரைச் சாலையின் மேற்கு ஓரமாக, நெடுக, குதிரைகள் ஓடுவதற்கென்றே ஒரு தடமும், அமைக்கப்பட்டிருந்தது. நடைபாதைத் தடம் மாதிரி, காதலர்பாதை மாதிரி, அது குதிரைச் சவாரித் தடம். அந்தத் தடத்தில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வாட்டில் பட்டைகளை சிறு பிளாச்சுகளாக உடைத்துப் போடுவார்கள். குதிரையின் குளம்புக்கு மெத்தென்று இருப்பதற்காக! மெரினா பூப்பாத்திகளில் முன்பெல்லாம் சூரிய காந்திச் செடிகள், டபில் பால்சம் பூக்கள் அதிகம். கடற்கரையில் வானொலி அமைக்கப்படுவதற்கு முன்பு, அந்தப் பீடத்தில் ஞாயிற்றுக் கிழமை தோறும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை நாதசுரம் வாசிக்கும் ஏற்பாடு சில காலம் இருந்து வந்தது. வானொலி வந்ததும் அம்முறை நீங்கியது. குதிரைப்படை வீரர்கள் காலை நேரங்களில் மெரினா கடற்கரை நெடுக, குதிரை மீதமர்ந்து சென்றுவரும் முறை வெகுநாள் இருந்து வந்தது.



வெண் சங்கெடுத்து விளையாடும் வெள்ளையுள்ளச் செல்வங்கள்!

கடற்கரை வழியாக உடற்பயிற்சிக்காக அல்லது மகிழ்ச்சிக்காக குதிரைச்சவாரி செய்து வந்தவர்களில் அதிகம் ஆங்கிலேயர்கள்தான். அன்று அப்படி குதிரைச் சவாரி சென்றவர்களில் கிரிக்கெட் ஆட்டக்காரர் பாலையா நாயுடு, சர். சி.பி. ராமசாமி அய்யர் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். குஜராத்திகள் பலர் பீட்டன் வண்டியில் செல்லுவார்கள்.

## பாரதியார் அமர்ந்த இடம்

'அடிவானத்தே அங்கு பரிதிக்கோளம் அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்' என்று எழுதினாரே கவியரசர் சுப்பிரமணியபாரதியார், அவர் நாள் தவறாமல், சில சமயம் வேளை நேரம் கூட இல்லாமல் கடற்கரைக்கு வருவார். கடற்கரையில் அமர்ந்தே அரையணா நோட்டுப் புத்தகத்தில், தமது கோட்டு ஜேபியில் வைத்துள்ள துண்டுப் பென்சில்களைக் கொண்டு எழுதித் தள்ளுவார். . காலத்தால் அழியாத அவரது கவிதைகள் பல பிறந்த இடம் — கடற்கரையில் பொதுப் பணித்துறைக்கு எதிரே உள்ள இடம்! இப்போது பாரதியார் சிலை அமைக்கப்பட்டிருக்கும் இடத்துக்குச்



# கிராம வேலைவாய்ப்பு முன்னேடித் திட்டம்

நேரம் நெருக்கப் பட்ட மாவட்டங்களில், ஒருங்கிணைந்த பகுதிகளில் சில முன்னேடித் திட்டங்களை மேற்கொள்ள இந்திய அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி அப் பகுதியிலுள்ள பொருளாதார வாழ்க்கை அனைத்தையும் தழுவிய திட்டங்களை மேற்கொண்டால், அங்குள்ள 15 முதல் 59 வயது வரையிலான மக்கள், வேலை செய்ய முன்வரின், அவர்களுக்கு வேலையளிக்க வசதி ஏற்படுமென்பது இதன் உள்நோக்கமாகும். அதற்கேற்ப, இம் மாநிலத்திற்கென, ஒரு திட்டத்தை இந்திய அரசு அளித்துள்ளது. அத்திட்டம் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மங்களூர் வட்டாரத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. இத் திட்டத்திற்கு, இந்திய அரசு மூன்றாண்டுக் காலத்திற்கு ஒதுக்கியுள்ள நிதி விவரம் வருமாறு :—

1972–73—ரூ. 10 இலட்சம்.

1973–74—ரூ. 15·79 இலட்சம்.

1974–75—ரூ. 20·57 இலட்சம்.

இத்திட்டத்திற்காகும் முழுச் செலவும் இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்படும். அலுவலர்களின் செலவிற்கென 5 சத விகிதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கிராம வேலைவாய்ப்பு முன்னேடித் தீவிரத் திட்டத்தின் வாயிலாகக் கிடைக்கும் நிதியினைப் பயன்படுத்தி, இதர துறைகளின் திட்டங்களையும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களையும் ஒன்றிணைத்து, மங்களூர் வட்டாரப் பகுதிக்குரிய வளர்ச்சித் திட்டத்தை உருவாக்கி, இவ்வட்டாரத்தை ஒரு முன் மாதிரி வட்டாரமாக உருவாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டத்திலும் பல்வேறு துறைகளின் திட்டத்திலும் கிடைக்கக் கூடிய நிதிகளை இணைத்து, 'ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா', வீட்டு வசதி வாரியம், ஆகியவற்றிடமிருந்து பெறவேண்டிய கடன்களையும் கூட்டி இந்திய அரசிடமிருந்து இத்திட்டத்திற்குக் கிடைக்கும் நிதியையும் உள்ளடக்கி, ஒரு திட்ட அறிக்கையைத் தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் உருவாக்கியுள்ளார். இவற்றையெல்லாம் கொண்டு மங்களூர் வட்டாரத்தை, ஒரு முன்மாதிரி வட்டாரமாகச் செய்து காட்ட இயலும். மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின்படி, இத்திட்டத்திற்கு, மூன்றாண்டுக் காலத்தில் ரூ. 175·54 இலட்சம் முதலீடு செய்யப்படும். இத் தொகை கீழ்க்கண்டவை மூலம் திரட்டப்படும்.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (அ) கிராம வேலை வாய்ப்பு முன்னேடித் தீவிரத் திட்ட நிதி. | 44·21 |
| (ஆ) மங்களூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு அரசு அளிக்கும்மானியமும், பொது நிதிகளிலிருந்து ஊராட்சி ஒன்றியம் அளிக்கும் நன்கொடையும். | 30·84 |
| (இ) கடன்களையும் சேர்த்து அரசின் இதரத் துறைகளில் நிதிகள். | 24·60 |
| (ஈ) 'ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா' போன்ற வெளியாரிடமிருந்து கிடைக்கும் கடன் | 75·89 |
| | 175·54 |

1972–73-ஆம் ஆண்டுத் தொடக்கம் மூன்றாண்டுகளுக்கு ரூ. 175·54 இலட்ச மொத்தச் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்ற, திட்ட அறிக்கைக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்வட்டாரத்தில், இத்திட்டங்களை வெற்றியுடன் நிறைவேற்றுவதற்கு தென் ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்புள்ளவராக்கப்பட்டுள்ளார். இத்திட்டத்தின் வெற்றியில் ஊர்ப்புறங்களின் புதிய தோற்றமே உருவாக இருக்கிறது. வருங்காலத்தில் ஊர்ப்புறங்களை வளர்ச்சியடையச் செய்தற்கு இஃதொரு முன் மாதிரியாகவும் விளங்கும். இங்கு நடைபெறும் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, இத்திட்டம் இதர பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். இப் பகுதியின் தேவைகளை முதன் முதலாக நிறைவேற்றுவதில் இவ்வரசு பேரவாக் கொண்டுள்ளதென்பதையும், அதே தருணத்தில் ஊர்ப்புறங்களில் மலிந்துள்ள வேலையில்லா நிலைமைக்குத் தீர்வு காண மண்டல வளர்ச்சியின் வாயிலாக நிலையானதொரு திட்டத்தை உருவாக்கவும் முனைந்துள்ளது தெரியவரும்.

அலங்காதல்லூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் இறைவைப் பாசனக் கிணற்றுக்காகத் துளை போடுகிறார்கள்.



# வெண்பாப் போட்டி

## 53. வாய்மை வழுவாமை மாண்பு

சான்றருள் பசித்தாள் ; இனியமகன் பித்தனுனன் ;
ஊன்கொடுத்த உன்மனைவி ஓய்ந்துவிட்டாள்—வான்குறளின்
வாய்ப்பொருளாய் வந்தவனே ! வாழ்வே முடிந்தாலும்,
வாய்மை வழுவாமை மாண்பு.

—ஐ. திருவருட்பாவை, பி. கே. புரம்.

மண்அடுப்பில் பூனை வசித்தாலும், கைப்பிடித்த
பெண்மணியே நெஞ்சைப் பிழிந்தாலும் ;—கண்கண்ட
தாய்வெறுத்துத் தூற்றினும் ; தன்நெஞ்சின் பொன்முடியாம்
வாய்மை வழுவாமை மாண்பு.

—த. ஜனார்த்தனன், அரக்கோணம்.

பொய்யே முதலாப் புறங்கூறும் புல்லர்கள்
உய்யும் பொழுதோ ஒருசிறிதாம்—தையலே !
தேயத்தே எஞ்ஞான்றும் தீதில்லா வாழ்வளிக்கும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—சி. மு. அரசு, களக்காடு.

என்னாமை, நன்மைகளைத் தள்ளாமை, இன்பத்தில்
துன்னாமை, என்றுந் துவளாமை—கள்ளாமை
தூய்மை தவறாமை, துன்பில் நெகிழாமை,
வாய்மை வழுவாமை மாண்பு.

—வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

நிலவுக் கழகு நெகிழ்ந்திடும் தன்மை
மலருக் கழகு மணமே—நிலவுலகில்
வாழ்மலர் செப்பும் மனிதர் அனைவருக்கும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ச. அருணன், புதுவை-3.

தாயார் இரந்துண்ணத் தாரம் சினந்துரைக்கக்
காய்பசியால் பிள்ளை கதறியழ—ஆயினுமென் ?
தூய்மை தவறாமல் தொண்டுசெயும் நல்லார்க்கு
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் க. முனிசாமி, விழுப்புரம்.

மக்கள் அரசாட்சி மாண்பாய் இயங்கிவரத்
தக்கதுணை செய்யும் தனிக்கடமை—மிக்கதனல்
சேய்மை நிலைகூறும் செய்தித்தாள் நல்குவோர்
வாய்மை வழுவாமை மாண்பு.

—இளங்கோ, ஆலங்குடி.

சொன்னதை யெந்நாளும் சோர்வின்றிச் செய்திடும்
தன்னலம் பாராத் தமிழரசை—என்னெஞ்சே !
தாய்போன்று காப்போம் தருணத்தில் என்கின்ற
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் வெ. குமாரசாமி, கோபிச்செட்டிபாளையம்.

தெள்ளிய நீர்கொண்டு தேக மதைக்கழுவின்
கொள்ளரிய இன்பநலம் கூடுதல்போல்—உள்ளமதும்
தூய்மை பெறவேண்டின் தொல்லுலகீர் என்றென்றும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் செந்தமிழ்க்கிழார், குமாரபாளையம்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
செல்வி. ஐ. திருவருட்பாவை,
மே/பா ஐசக் (ஆசிரியர்)
பி. கே. புரம், கீ. வ. குப்பம் (அஞ்சல்)
குடியேற்றம் (வ. ஆ. மாவட்டம்).





சற்றுக் கிழக்கே தள்ளி, வெறும் மணல் பரப்பில் உட்கார்ந்து எழுதுவார். வெய்யில் நேரமாக இருந்தால், படகு நிழலில் அமர்ந்து கொண்டு எழுதுவார். 'தனிமை கண்டதுண்டு அதிலே சாரம் இருக்குதம்மா' என்று எழுதிய கவிஞர், பல நாட்கள் இக்கடற்கரையில் தனிமையில் கழித்தவர். நண்பர்கள் என்று யாரும் அவருடன் வராவிட்டாலும் அவர் உள்ளம் அப்போது களி போடுமாம். கடற்கரைக்குச் செல்லுகையில் ஒரு விதமாகக் குதித்தபடி நடப்பாராம்.

அதிகாலையில் பல்வேறு துறைகளையும் சார்ந்த பெருமக்கள் பலர், கடற்கரைக்கு வந்து காலார நடப்பதைத் தினசரி உடற்பயிற்சியாகக் கொண்டுள்ளனர். அலை வீசும் இந்தப் பெருங்கடலின் தோற்றம் பகல் முழுதும் எடுப்பாகத் தெரிவதில்லை. அது எந்த மாதிரி இருக்கிறது என்று பார்ப்பதற்கு மக்களுக்கும் நேரம் இருப்பதில்லை. ஆனால் மாலையாகிவிட்டால் கடற்கரை; களை கட்டிவிடுகிறது. காற்றில் இனிமையும் குளுமையும் சேர்ந்து விடுகிறது. மணல் பரப்பு வெள்ளித்துகள் விரிப்பாகிறது. சென்னை மாநகரின் மக்கள் தொகை ஒன்றுக்கு 5 மடங்காகப் பெருகியிருப்பதாலும், மேலும் வளர்ந்து கொண்டு வருவதாலும், மக்கள் தொகைக் கூட்டமும், கடைகள், விற்பனைப் பண்டங்கள் ஆகியனவும், மீனவர் பொருட்களினால் காற்றோடு வரும் நெடியும் அதிகம் தான். ஆனாலும் தண்ணொளி பரப்பும் குழல் விளக்குகளும் மலர்ச் செடிப் படுகைகளும் புதிய எழில் கூட்டுவதனாலும் தூய்மையான அகன்ற சாலையினாலும் மெரினாவின் எழில் புதுமையுடனேயே குலுங்குகின்றது.

**அண்ணா சதுக்கம்**

எதையும் தாங்கும் இதயத்தைத் தன்னுள் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் துயில் கொள்ளும் அண்ணா சதுக்கம், செயற்கைக் குன்றும் கனை நீரும் பூச் செடிப் பந்தல்களும் பசுமைப் பரப்பும் தோப்பும் துரவும் கொண்டு, மக்களின் இதயங்களை எல்லாம் கவர்ந்திழுக்கும் நினைவகமாக, மெரினா கடற்கரைக்குப் புதிய பெருமையும் எழிலையும் சேர்க்கின்றது. மெரினாவின் தென் பகுதியில் காந்தி சிலைப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகளால் மெரினா பெற்றுள்ள புதிய எழில்-கோலம், தமிழ் வளர்த்த ஆன்றோர்க்கும் சான்றோர்க்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது அமைக்கப்பட்ட சிலைகள், பாங்குடன் பேணப்படும் பூங்காக்கள் இவை அனைத்தும் சாலையின் ஒருபுறமும், பழங்காலப் பாணியில் அமர்ந்த பிரம்மாண்டமான கட்டடங்கள், இக்காலக் கட்டடக் கலைக்கு ஏற்ற முறையில் கட்டிய எழிலகம் போன்ற நெடிதுயர்ந்த புதிய கட்டடங்கள், இவை எல்லாம் மற்றொரு புறமுமாக மெரினாவின் அழகுக்கு அரண் செய்து நிற்கின்றன. சீரமைக்கப்பட்ட கூவத்தில் படகோட்டும் வசதி, நீச்சல் குளங்கள் ஆகியவை இக்காலத்துக்கேற்ற பொழுதுபோக்கு, உடற்பயிற்சி வசதிகளைத் தருகின்றன. இந்த வசதிகள் மிகப் பெரும்பாலும் ஏழை, எளிய மக்களுக்குத்தான் அதிகம் பயன் படுகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். அழகும் மகிழ்வும் நாடிச் செல்வந்தர்கள் தொலைதூர இடங்களுக்கும் செல்ல முடியும். பெரும் செலவு செய்து அவற்றைப் பெற முடியும். ஆனால் ஏழை மக்களால் அது இயலாதே!

**வரலாற்றில் இடம் பெற்ற நிகழ்ச்சிகள்.**

விடுதலைப் போராட்ட காலத்திலும், நாடு சுதந்திரமடைந்த பின்னரும் மக்களின் எழுச்சியைக் காட்டவும், கருத்து வளங்களை எடுத்துக் கூறவும் உற்றதோர் மாபெரும் திடலாகவும் மெரினா கடற்கரை பயன்படுகிறது. காந்தியடிகளும், திலகரும் இக்கடற்கரையில் பொது மேடையிட்டுப் பேசியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் கடற்கரைக் கூட்டங்கள், இலட்சக்கணக்கில் மக்களை ஈர்த்தது அண்மைக் காலத்தில் நாடறிந்த நிகழ்ச்சியாகும். 1947 ஆகஸ்டு 15-ல் நாடு விடுதலை பெற்றபோது, 1948 பிப்ரவரியில் காந்தியடிகளின் சாம்பல் வங்கக்கடலில் கரைக்கப்பட்டபோது, இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு கூடியபோது, பேரறிஞர் அண்ணா அவர்கள் இறுதி யாத்திரைக்குப் பின் அவர் பொன்னுடல் அடக்கம் செய்யப்பட்டபோது இந்த மெரினா கடற்கரையில் கடலுக்கு ஒப்பாகத் திரண்ட மக்கள் கூட்டங்கள், வரலாற்றில் இடம் பெற்றவையாகும். அண்மையில் கட்டப்பெற்ற சீரணி அரங்கு பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்கு ஒரு நிலையான மேடையாகப் பயன்பட்டு வருகின்றது.

**ஒளி வண்ண நீரூற்றுகள்!**

மெரினாவை மேலும் அழகுபடுத்த, ஏற்ற மேம்பாட்டுத் திட்டங்களைத் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. அண்ணா சதுக்கத்திலிருந்து, 'ஐ.ஜி.' அலுவலகம் எதிரே தற்போது கட்டப்பட்டுவரும் புதிய கலங்கரை விளக்கம் வரை, நீண்ட பகுதியில் இன்னும் அகலமான, எடுப்பான புல்தரைகள், பூப்பாத்திகள், செடிகள், நீரூற்றுகள் முதலியன அமைக்கப்படும். இதற்காக ரூ. 16·40 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. கலங்கரை விளக்கம் கட்டப்படும் பகுதியிலிருந்து காந்தி சிலைவரையில் முதல் கட்ட வேலைகள் ரூ. 2·85 இலட்சம் செலவில் இப்போது நடைபெற்று வருகின்றன.

இதன் விளைவாகச் சாலை மட்டத்துக்குக் கீழாக உள்ள பூங்காப் பகுதிகள் மேடாக்கப்பட்டு, பூங்கா எடுப்புடன் விளங்கும் நல்ல பாதைகள் அமைக்கப்படும். பொதுமக்கள் வசதிக்காகச் சிற்றுண்டி விடுதி ஒன்றும் அமைக்கப்பெறும். புதிய கழிப்பிட வசதிகள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. மெரினாவில் சிறிய அளவில் மீன் காட்சிச் சாலை இருந்து வருகின்றது. இந்தக் காட்சிச் சாலை மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட வேண்டும் என்று மாநிலத் திட்டக்குழுவின் நகர்ப்புற மேம்பாடு, சுற்றுலா வசதி பற்றிய செயல் அணி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

மேம்பாட்டுப் பணிகளின் விளைவாக வண்ண ஒளிச் சிதறல்கள் அமைத்த நீரூற்றுகள், விளம்பரம் செய்வோருக்குப் பயன்படும் வகையில் வண்ண ஒளி விளம்பரப் பலகைகள், பசுந்தரைகளில் புதுவகை ஒளி அலங்காரம் இவற்றைக் கொண்டு சென்னை மரினா கடற்கரை, சென்னை மாநகர மக்களை மட்டுமல்ல, மற்ற மாநிலத்தவரும் வெளிநாட்டவரும் கண்டு மகிழும் அழகுச் சோலையாகத் திகழும்! — சி.க.ரா.





## மாவட்டங்களிலிருந்து

**இராமநாதபுரம் மாவட்டம்.**

1973–74-ஆம் ஆண்டிற்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள தொழில் தேர்ச்சிபெற்ற இந்து, அரிசன' வகுப்பினரது வாழ்க்கைத் தரம் முன்னேற அவர்களது தொழிற் தேர்ச்சிக்குத் தக்கபடி தையல், சலவை, முடி திருத்துதல், தச்சுவேலை, கொல்லு வேலை, செருப்பு தைத்தல், தையல் இயந்திரத்தில் செருப்பு தைத்தல் ஆகிய தொழில்களுக்கான கருவிகள் இலவசமாக வழங்கப்படவிருக்கிறது.

இந்தத் தொழிற் கருவிகளைப் பெற விரும்புவோர் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்தோ அல்லது தாசில்தார், துணைத் தாசில்தார்களிடமிருந்தோ அல்லது அரிசன நல தாசில்தாரிடமிருந்தோ விண்ணப்பங்களைப் பெற்று பூர்த்தி செய்து 30—9—73-க்குள் அனுப்ப வேண்டும். விண்ணப்பதாரர் இந்து, அரிசன வகுப்பைச் சார்ந்தவர் என்பதற்கான சான்றிதழை, தாசில்தார், துணைத் தாசில்தார், சட்டமன்ற அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். அவ்வாறு சான்றிதழ் இல்லாத விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. அரிசன நலத் துறையிடமிருந்து ஏற்கனவே மேற்கண்ட வகைகளில் ஏதாவதொன்றில் சலுகை பெற்றிருப்பவர்களும், தொழிற் கருவிகள் வாங்கியிருப்பவர்களும் விண்ணப்பம் செய்யக்கூடாது. ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்கு மட்டுமே தொழிற் கருவிகள் வழங்கப்படும்.

**மதுரை மாவட்டம்.**

மதுரைமாவட்டம், குஜிலியம் பாறையில் மக்கள் குறை தீர்க்கும் மனுநீதி நாள் விழா 23—8—73 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு 5,000 பேர் கூடியிருந்து தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள வந்திருந்தனர். மாவட்டத்திலுள்ள பல்வேறு துறை அலுவலர்கள், இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர்.

இந்த முகாம், மதுரை மாவட்டத்தில் 9-வது மனுநீதித் திட்டமாகும். இத்திட்டத்திற்கு ஏறக்குறைய 5,047 மனுக்கள் பொது மக்களிடமிருந்து வந்திருந்தன. இவை நல்ல முறையில் பரிசீலிக்கப்பட்டு வேண்டிய தேவைகளை நிறைவேற்றும் வண்ணம் முடிவு காணப்பட்டு வந்துள்ளன. இது வரை பெற்ற 4,224 மனுக்களில் பரிசீலனைக்கு 1,041 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மனுதாரர்களுக்குச் சாதகமான முடிவுகள் கையாளப்பட்டுள்ளன. மீதி 1,185 மனுக்கள் நடவடிக்கையில் உள்ளன. இம்மனுக்கள் பெரும்பாலும் பட்டா கேட்டும், முதியோர் தொகை வேண்டியும், கடன் தொகை வேண்டியும் வந்துள்ளன.

வந்த மனுக்களில் புதிய முறையான மனு ஒன்றும் வந்திருந்தது. மணம் செய்து கொள்ள விரும்பிய மணமக்களான ஆண், பெண் இருவரும் தங்கள் திருமணத்திற்குப் போதிய நிதி வசதி இல்லை என்ற காரணத்தினால், இம்மேடையிலே தங்கள் திருமண நிகழ்ச்சியை நடத்திட வேண்டினார்கள். (திரு தங்கராசு என்ற மணமகனுக்கும், ஜானகி என்ற மணமகளுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் திருமணம் மனுநீதி நாள் விழா மேடையில் சிறப்புற நடந்தேறியது!)

● ● ●

மதுரை மாவட்டத்தில் இது வரை 47,807பேர்களுக்கு நிலப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட நிலம் 1,10,676 ஏக்கர் நிலமாகும். 35 ஆயிரம் பேர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு இம்மாவட்டத்தில் கிராம இணைப்புச் சாலைத் திட்டத்திற்கு 50 இலட்ச ரூபாயும், இவ்வாண்டு 40 இலட்ச ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்திற்கு அரசு 1 கோடியே 75 ஆயிரத்து 638 ரூபாய் செலவிட்டுள்ளது. 11 கண் சிகிச்சை முகாம் நடத்தப்பட்டு 55,000 கண் பார்வையற்ற ஏழை மக்களுக்குக் கண் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. நீர்ப்பாசனத் திட்டம் சிறந்த முறையில் நிறைவேற 14 கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது. இம்மாவட்டத்தில் சுமார் 12 இலட்சம் பேருக்கு நிலஉரிமை குறிப்பேடு வழங்கப்படவுள்ளது. இது வரை உசிலம்பட்டி, திருமங்கலம், மேலூர் ஆகிய பகுதிகளில் இந்த குறிப்பேடு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வட்டாரத்தில் 44 ஆயிரம் பேருக்கு இந்த நில உரிமை குறிப்பேடு வழங்கப்படும்.

**செங்கற்பட்டு மாவட்டம்.**

தமிழக அரசின் திட்டத்தின் படி செங்கைக் கோட்டத்தில் உள்ள சுமார் 600 'காங்மஸ்தூர்'களுக்கு 23–7–73 அன்று செங்கை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை கோட்டப் பொறியாளர், திரு ஏ. வெங்கட்டரங்கராசு அவர்களால் 'காலணிகள் வழங்கப்பட்டன. தமிழ் நாட்டிலேயே செங்கையில் தான் முதன் முதலாக இந்த ஊழியர்களுக்குக் காலணி வழங்கப்படுதறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

● ● ●

செங்கற்பட்டு மாவட்டம் மாதவரத்தில் விவசாயம் மற்றும் கால்நடை பற்றிய கருத்தரங்கு ஒன்று சிறப்பாக நடந்தது. கருத்தரங்கின் முடிவு விழா மாதவரம் ஊராட்சி ஒன்றியத்தில் நடந்தது. விழாவில் கலந்து கொண்ட சிறந்த கால்நடைகளுக்கும், நெல் விளைச்சலில் அதிக மகசூல் செய்த விவசாயிகளுக்கும் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ஆதித்தனார் பரிசுகள் வழங்கினார்.

கொடுங்கையூரைச் சேர்ந்த ஆறுமுக கிராமணி, ஒரு ஏக்கர் நிலத்தில் 52 மூட்டை 'ஐ.ஆர். 8' நெல் சாகுபடி செய்து முதல் பரிசு பெற்றார். கதிர் அடிக்கப் பயன்படும் 'டிராம்ப்ளர்' இயந்திரம், அவருக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டது.

விளவங்காடுபாக்கம் ஊராட்சித் தலைவர் துரைபாபு, ஒரு ஏக்கர் நிலத்தில் 45 மூட்டை நெல் பயிர் செய்தார். அவருக்கு இரண்டாவது பரிசாக 2 கலப்பைகள் பரிசாக வழங்கப்பட்டன.

மூன்றாவது பரிசு வடபெரும்பாக்கத்தைச் சேர்ந்த சீனுவாசனுக்குக் கிடைத்தது. அவர் ஒரு ஏக்கர் நிலத்தில் 37 மூட்டை 'ஐ.ஆர். 20' நெல் விளைவித்து இருந்தார். அவருக்குக் கலப்பை ஒன்று பரிசாகக் கொடுக்கப்பட்டது.

இவை தவிர, கலப்பினப் பசுக்கள், நாட்டினப் பசுக்கள், எருமைகள், பசுக்கிடேறிகள், எருமைக் கிடேறிகள், கலப்பினக் கிடேறிகள், கலப்பினக் காளைக் கன்றுகள், பசுவின இளங்காளைகள், எருமையின இளங்காளைகள், எருமைக் கிடேறி கன்றுகள் மற்றும் கோழி இனங்கள் ஆகியவற்றில் சிறந்தவைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.





# காக்கும் புருவம்

### கவிஞர் கருணானந்தம்

நன்முத்துச் சிப்பியினை நாடித் தேர்ந்து
நல்லொளியைக் காணகையிலே நழுவி வீழ்ந்த
தன்மைத்தாய்—நல்லாட்சி நிறுவி யோரைத்
தாங்கவொணு தொளித்தனையோ, இயற்கை அன்னய்?
உன்மத்தம் பிடித்தவராய்த் தமிழ மக்கள்
உலவிடில்இந் நிலவுலகம் நினைப்ப ழிக்கும்
பின்மற்ற செயலனைத்தும் நிற்கும் : என்று
பிழையற்ற வழித்தோன்றல் கண்டு வைத்தாய் ?

அண்ணலுக்குப் பின்வந்து தென்னுட் டாரின்
அண்ணலென எம்அண்ணன் பெயரைப் பெற்றுர் !
கண்ணனைய தம்பியர்க்குப் பாவை போன்றும்,
காக்கின்ற புருவங்கள் போன்றும் நின்றுர் !
அண்ணனுடன் அருகிருந்தோர் ஆள்வ தால்தான்
அவர்வழியில் தவருமல் நடக்கின் ருர்கள் !
மண்ணகத்தில் நன்றியுள்ள மாந்தர் யாரும்
மறக்கவொண்ணு அறச்செயல்கள் நிறைக்கின் ருரே !



அவர்பெயரில் மன்றங்கள் அமைக்கின் ருர்கள் ;
அருளுருவச் சிலைகளெலாம் நிறுவு கின்ருர் ;
எவரெவரோ தழைப்பதற்கும் வாழ்வ தற்கும்
இடமளிக்கும் கடமைநிறை ஏந்தல் : அன்னர்
சுவரனையார் ! ஓவியர்கள் விருப்பம் போலே
சுவைக்கேற்பத் தீட்டிடலாம் ! ஆனல், என்றும்
இவர்வாழ்வார், தமிழ்நாடு வாழு மட்டும் :
இவர்சமைத்த நன்னெறியே நிலைத்து நிற்கும் !



## வெண்பாப் போட்டி

சோதனைகள் வாழ்வில் தொடர்ச்சியாய் வந்திடினும்
வேதனையால் உள்ளம் மெலிந்தாலும்—மேதினியில்
தூய்மையாய் வாழுதற்குத் தொல்லைகள் ஏற்படினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—விமலாசெல்வன், தஞ்சை.

எம்மாப் பணியேனும் எந்தமிழர் நாட்டிற்கு
நம்மால் இயன்றவரை நன்றாற்றி—செம்மைசேர்
தாய்மொழியைப் பேணித் தலைமகனும் வள்ளுவர்சொல்
வாய்மை வழுவாமை மாண்பு.

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

இரந்துண்டு வாழும் இழிநிலையால், யாக்கை
உரங்காணு நாற்றும் உருவில்—நரம்பாகிக்
காய்ந்தே உயிர்பிரியும் காலத்தும், நெஞ்சேநீ
வாய்மை வழுவாமை மாண்பு.

—எழில்வேந்தன், சென்னை 2-8.

கொய்யும் மலரனைத்தும் கூந்தல் மணப்பதில்லை,
செய்யும் செயலனைத்தும் சீர்மல்கி—உய்வதில்லை
தூய்மை நலங்காத்துத் துன்பம் மிகவரினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ஆர். கலைச்செல்வி, அம்மனூர்.

மொட்டைப் பனைமரமாய் மொய்க்கின்ற துன்பமெனும்
குட்டையிலே வீழ்ந்து குலைந்தாலும்—எட்டியாம்
காய்போல என்றும் கசப்பாகும் பொய்மறந்து
வாய்மை வழுவாமை மாண்பு.

—கா. வாலிதாசன், பச்சையப்பன் கல்லூரி.

வாட்டும் துயர்பலவும் வந்தாலும் வாழ்நாளில்
ஈட்டும் பொருளை இழந்தாலும்—ஊட்டுகின்ற
தாய்பசிக்கக் கண்டாலும் தன்னுடலைத் தீய்த்தாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—சி. புனிதவதி, கீழ்நாயகன்பாளையம்.

அன்பே விளக்காய் அறமே திரியாக
இன்பமெனும் நெய்யால் எரியவிட்டு—மன்பதையில்
தூய்மை நெறிநின்று தொண்டாற்றி இல்லறத்தில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—அரங்க. முத்துமணி, கீழப்பழுவூர்.

நாளும் நலம்பெருக, நல்லார் இசைபெருக,
கேளும் பெருகக் கிளிமொழியே !—நீளுலகில்
தூய்மை நிறைவுடனே தாளாற்றி எக்காலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—எஸ். பானுமதி, வேப்பூர்.

மின்னலது மின்னுவது மேதினியில் சின்னேரம்
இன்னலுறு பொய்மை இனிதாகும்—புன்னகையாய் !
நோய்மையில் லாமலே நூறாண்டு வாழ்வளிக்கும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் ந. புலியரசு, கலக்காடு.

உள்ளம் தளராமை ஊக்கம் ; உலைவிடத்தும்
கள்ளம் கலவாமை கற்பொழுக்கம் ;—எள்ளளவும்
தூய்மை குறையாமை அப்புரவு ; தொல்லுலகில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—செ. ஜெய்லானி, நாகர்கோவில்.

நன்றியைக் கொல்லாமை நல்லோரை நீங்காமை
கொண்டநற் கொள்கையிலே கோடாமை—என்றென்றும்
ஆய்வலையாய் ! இந்த அவனியே தான்பெறினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் வள்ளிவேலன், நாயக்கனூர்.

பட்டா ! பசுமைப் புரட்சி ! தொழுநோயர்
கட்டடங்கள்! கடன் ! கண்ணொளி !—விட்டவை
ஆயிரம் இந்த அரசுமேல் பொய்கோடி !
வாய்மை வழுவாமை மாண்பு.

—மலேமா. ஆறுமுகம், மணிமங்கலம்.

கற்றோர், அறிவதனைக் கற்பிப்போர், நல்வழியில்
நிற்போர், குடிநாடி நின்றுள்வோர் ;—நற்பெண்ணை
வாய்மணக்கக் காதலித்து வாக்களித்தோர், என்றென்றும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—இலக்கியன், ஆலங்காயம்.

பாதைமாற வேண்டாம் பசிவறுமை வாட்டிடினும் !
தீதைத் துணிந்தெதிர் ! தூளாக்கு—வேதனையை !
ஏய்த்துப் பிழைக்காதே ! ஏற்றப் பெறுதற்கு
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

கொஞ்சி மகிழ்ந்த குடும்பம் நிலைகுலைந்தே
எஞ்சும் வறுமை எக்களிக்க—மஞ்சுசூழ்
தேய்பிறையும் ஓர்நாள் திரண்டநிலா ஆகுமென
வாய்மை வழுவாமை மாண்பு.

—து. ம. இராமசாமி, துடியலூர்.

சாதிக் கொடுமையால் சாகும் புழுவான
நாதியற்ற ஏழைமக்கள் நன்மைபெற—மேதினியில்
தூய்மை வழிநின்ற தூமணியாம் அண்ணலவர்
வாய்மை வழுவாமை மாண்பு.

—பாரதி சங்குப்பிள்ளை, அமராவதி நகர்.

## வெண்பாப் போட்டி

ஏற்ற மழிந்தாலும் இல்லாமை சூழ்ந்தாலும்
தூற்று மிழிச்சொல் தொடர்ந்தாலும்—கூற்றென
மாய்க்கின்ற துன்பம் மழையாய்ப் பொழிந்தாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

இன்றோ ? பிறகோ ? இனிச்சிறிது நாள்கழித்தோ ?
என்றோ ? ஒருநாள் இறப்பதுயிர்—நன்றாக
ஆய்மின் புகழோ அழியா துயரறினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—அரு. கிருட்டிணன், கணியூர்.

ஊரார் மறந்தாலும் உற்றார் துறந்தாலும்
சீரான வாழ்வு சிதைந்தாலும்—சோராது
தூய்மை குலையாமல் தொல்லுலகில் வாழ்வோர்க்கு
வாய்மை வழுவாமை மாண்பு.

—பெ. தியாகராசன், குன்னம்.

உண்மையே தெய்வமென்ற ஒப்பில்லா வாழ்க்கையில்
தன்மையே நாளும்செய் திட்டநல்—அண்ணலின்
தூய்மை நெறிநின்று தொண்டாற் றிடும்போது ;
வாய்மை வழுவாமை மாண்பு.

—கவிதைப்பித்தன், உளுந்தூர்ப்பேட்டை.

ஆய்மயிலும் தோற்குமெழில் ஆரணங்கே யுன்னழகு
போய்மறையும் ஓர்காலம் ! போற்றிடுக—வாய்மொழியில்
தூய்மை வளர்ப்பில் தன்னலமில் நல்லறத்தில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் வி. துரைசாமி, தேவத்தூர்.

எச்செயலைச் செய்திடினும் எத்துணை மேம்படினும்
பச்சைக் கிளியே ! பதறுமல் — அச்செயலில்
தூய்மைக் குணம்நாடித் தொல்லுலகில் எஞ்ஞான்றும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—முத்தமிழ்த்தாசன், சிறுகூடல்பட்டி.

தாயை வணங்கவேண்டும் தண்டமிழைப் போற்றவேண்டும்
நோயை ஒடுக்கவேண்டும் நொந்தோரைச்—சேயைப்போல்
தாய்மை உணர்வுடனே தாம்காத்துச் செல்லுகின்ற
வாய்மை வழுவாமை மாண்பு.

—குமாரி கோ. தேன்மொழி, இராயபுரம்.

பதவியின் காலத்தில் பட்டமுறு நாளில்
உதவிபிறர்க் கீற்றும் பொழுதில்—மதியொளியே !
காய்தல் உவத்தல் அகற்றிக் கணிப்பதில்
வாய்மை வழுவாமை மாண்பு.

—லை. வைரவன், சிறுகூடல்பட்டி.

நெஞ்சிற் பிழையின்றி நேர்மையுடன் வாழுங்கால்
அஞ்சி இருத்தல் அழகாமோ ?—கொஞ்சமும்
தூய்மை அறியாமல் தூற்றுவரே யானாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—அ. காந்தி, தேவத்தூர்.

ஏழ்மை அடைந்தாலும் ஏற்றத்தைப் பெற்றாலும்
வாழ்விலே என்றும் வழுவாது—தாழ்வில்லா
தூய்நெறி பின்பற்றித் தொல்லுலகில் வாழுங்கால்
வாய்மை வழுவாமை மாண்பு.

—ப. குப்புசாமி, பொன்மலை.

பெற்றெடுத்துத் தான்வளர்த்துப் பேராற்றல் ஈந்துநிதம்
உற்றதுணை யாகி உயர்ந்திருக்கும்—நற்கருணைத்
தாய்மைக்கே இன்னல் தருமென்ற போதிலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—கண்ணுகாந்தி, தாராபுரம்.

கோடிப்பொன் அள்ளிக் கொடுத்தாலும், தம்நண்பர்
ஊடிக் கொடுநஞ்சை யூட்டிடினும்—சூடில்லாத்
தாய்தந்தை நல்லுயிரைத் தாம்காக்க நேர்ந்தாலும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் ந. கருணாநிதி, வங்கனூர்.

காட்டிப் பிழையாமை கண்ணியத்தைக் கொல்லாமை
ஏட்டைப் புரட்டாமை ஏசாமை—கூட்டுறவு
தேய்வடையச் செய்யாமை தீவைக்கத் தூண்டாமை
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

நெஞ்சே உடைந்து நிலைதளர்ந்து போனாலும்
வஞ்சகரே வாழ்விழக்கச் செய்தாலும்—வஞ்சியே !
தாய்நாடு போற்றும் தலையாய நற்பண்பாம்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் இரெ. சுப்பையன், கள்ளிமந்தயம்.

பேசநா வாராத பித்தமனங் கொண்டோரின்
நாசத்தால் அல்லலுறும் நல்லோரின்—மாசற்ற
தூய்மை நிறைவாழ்வில் துன்பமே வந்திடினும்
வாய்மை வழுவாமை மாண்பு.

—கே. முருகாண்டி, அனுப்பானடி.

மாற்றானைக் கண்டால் மதிக்கின்ற நெஞ்சோடு
தூற்றுத கொள்கைத் துணிவோடும்—போற்றுகின்ற
தூய்மை அறம்மூன்றும் சொல்லிவைத்த வள்ளுவரின்
வாய்மை வழுவாமை மாண்பு.

—புலவர் க. கோபண்ணன், வரகனேரி.


வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
• சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு,
தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்),
வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
மாதம் செலுத்தும் தொகை
5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்
ரூ. 5 ரூ. 355
ரூ. 10 ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு
ரூ. 5 ரூ. 337.50
ரூ. 10 ரூ. 675.00
தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும்
புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப்
பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத
விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய
தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத்
திட்டமும் அளிப்பதில்லை,
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு
தமிழரசு



# சிற்றூரிலும் சிறந்து வரும் வீட்டு வசதித் திட்டம்

அன்றாட வாழ்க்கையில் வீட்டுப் பிரச்சினை மிக இன்றியமையாத ஒன்று என்பதை நாமறிவோம். இந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அரும்பாடுபட்டு வருவதைத் தமிழகம் நன்கறியும்.

வீட்டு வசதி என்றதும், அது நகரத்தில் உள்ளவர்களுக்கு மட்டுந்தான் என்ற எண்ணத்தை அறவே போக்கி, இன்று கிராமங்களிலும், கிராமப்புறங்களிலும்கூட வீட்டு வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதற்கான 'கிராம வீட்டு வசதித் திட்டம்' 'கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்' ஆகியவை செயற்கரிய செயல்களைச் செய்து வருகின்றன.

### கிராம வீட்டு வசதித் திட்டம்

தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சிப் பகுதியிலும், தேசிய வளர்ச்சிப் பணிப் பகுதியிலும் உள்ள தெரிந்தெடுத்த கிராமங்களின் வளர்ச்சிக்கான இத்திட்டம் மாநில அரசின் வேலைத் திட்டமாகும் ''தன்னுதவி'' அடிப்படையில், தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளக் கிராமவாசிகளை ஊக்குவிப்பதற்கு ரூ. 3,000-க்கு மிகாமல் தற்போது ரூ. 4,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது, மூன்று தவணைகளில் கடன் வழங்கப் படுகிறது.

அவ்வாறு கடன் வழங்கப்படும் நபர்கள் சொந்த நிலம் வைத்திருப்பதோடு, கடன் தொகையை வட்டியுடன் இருபது சம ஆண்டுத் தவணைகளில் திருப்பித்தரும் திறனுடையவராகவும் இருக்க வேண்டும். வீட்டிற்கு ரூ. 4,000 கடன் தொகையானது கட்டடத்திற்காகும் மதிப்பீட்டுச் செலவில், 80 சத வீதமாகும். எஞ்சிய 20 சதவீதம் பயன் துய்ப்பவர்களால் உழைப்பு, உள்ளூரில் கிடைக்கும் பொருள்கள், பணியின்போது ஏற்படும் சேமிப்பு ஆகியவற்றின் மூலம் கொடுக்கப்பட வேண்டும். ''தன்னுதவி'' அடிப்படையில் உதவி பெற்றுக் கட்டப்பட்ட வீடு, இருபது ஆண்டுகளில் அவருக்குத் தங்குமிடமாகவும், சொத்தாகவும் ஆகின்றது.

தமிழ்நாட்டில் 15,000 கிராமங்களுக்கு மேல் உள்ளன. 223 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1,640 கிராமங்களுக்குத் தனிச்சிறப்பு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்னள. இத்திட்டம் மக்களால் பெரிதும் விரும்பி வரவேற்கப்படுகிறது. இத்திட்டத்தை மேலும் பல கிராமங்களில் நிறைவேற்ற வேண்டும் எனக் கிராம மக்களிடமிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் வந்த வண்ணம் உள்ளன.

கிராம வீட்டு வசதித் திட்டத்திற்காக, அரசு, தமிழ் நாடு சிறப்பு நல நிதியிலிருந்து ரூ. 50 இலட்சம் ஒதுக்கியுள்ளது. இத்தொகை, 1972—73-லும், 1973—74-லும் செலவிடப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளிலும் எதிர்பார்க்கப்படும் செலவினம் முறையே ரூ. 2 இலட்சமும் ரூ. 48 இலட்சமும் ஆகும். இந்த நிதி ஒதுக்கீட்டைக் கொண்டு 1,100 வீடுகள் கட்டப்படும்.

வீடு கட்டப்படும் கிராமங்களில் கிராம வாசிகளுக்குத் தெருக்கள், சாக்கடை முதலிய வசதிகளுக்கும் இத் திட்டம் வகை செய்கின்றது. இதற்கான கிராமம் ஒன்றுக்கு ரூ. 10,000க்கு மிகாமல் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. தெருக்கள், சாக்கடைகள், இவற்றையமைக்க 1973—74-க்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 0·50 இலட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

### விடுதலைப்போர் வீரர்கள் ஓய்வூதியம்

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1966-ல் கொண்டுவரப் பட்டது; 1966-ஆம் ஆண்டு 5 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டது. அதன்பிறகு, 1-1-1967 முதல் 21-3-1973 வரையில் உள்ள காலத்தில் ஓய்வூதியம் பெறும் விடுதலை வீரர்களின் எண்ணிக்கை 7,673 ஆக உயர்ந்திருக்கிறது.

### கிராம வீட்டு வசதித் திட்டச் சாதனைகள்

இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள் 2,053. இரண்டாவது, மூன்றாவது திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 34·91 இலட்சம். 1966—67-லிருந்து 1968—69 வரை ஆண்டுத் திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள் 472. 1966—67-லிருந்து 1968—69 வரை செலவிடப்பட்ட தொகை ரூ.29·73 இலட்சம். நான்காவது திட்டத்துக்கான நிதி ஒதுக்கம் ரூ. 50 இலட்சம். நான்காவது திட்ட இலக்கு (வீடுகள்) 1,500. 1969—70-ல் கட்டப்பட்ட வீடுகள் 218. 1969—70-ல் செலவிடப்பட்ட தொகை ரூ.7·75 இலட்சம். 1970—71-ல் கட்டப்பட்ட வீடுகள் 240. 1970—71-ல் செலவிடப் பட்ட தொகை ரூ. 10·93 இலட்சம். 1971—72-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 15·38 இலட்சம். 1971—72-ல் கட்டப்பட்டவீடுகள் 309. 1972—73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 16·50 இலட்சம். 1972—73-ல் (1972 டிசம்பர் வரை) செலவிடப்பட்ட தொகை ரூ. 10·05 இலட்சம். 1972—73-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு வீடுகள் 350. 1972—73-ல் (1972 டிசம்பர் வரை) கட்டப்பட்ட வீடுகள் 257. 1973—74 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 28·99 இலட்சம். 1973—74-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு (வீடுகள்) 600.

### கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்

இத்திட்டம் 1950-ஆம் ஆண்டிலிருந்தே நிறைவேற்றப் படுகிறது. கிராமப்புறச் சூழல் நிலவுகிற பெரிய, சிறிய ஊராட்சிகளில் வீடுகள் கட்டுவதற்குக் கடன் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கூட்டுறவுப் [illegible] மூலம் இந்தத் திட்டம் [illegible]

# கலை மலர்கள் பல பூக்கும்







தம்பியர்தம் இதயமெனும் இதழ டுக்கித்,
    தனியன்பாம் மகரந்தப் பொடிநி றைத்து,
வெம்பகைக்கும் இனியசெயும் கருணை என்னும்
    விள்ளரிய மணங்கொடுத்துக், கல்வி தன்னைத்
தெம்புடைய தண்டாக்கி, அறிவாம் செந்தேன்
    தேக்கிவைத்துக், காஞ்சிஎனும் பொய்கை தன்னில்
அம்புவியை வாழ்விக்க இயற்கை யன்னை
    அழகியநல் மலரொன்றைப் படைத்துத் தந்தாள்.

அம்மலரில் தேன்பருகி நாளும் நாளும்
    ஆயிரம்பல் லாயிரமாய்ப் பாடிப் பாடித்
தும்பிபல பறந்திங்கு வளர்ந்த துண்டு;
    தும்பிகளால் மகரந்தப் பொடிப ரந்தே
அம்புவியில் பலமலர்கள் பூக்கக் கண்டோம்;
    அவற்றிலுறு நறுமணங்கள் பரவிச் சென்று
மொய்ம்புடைய கோட்டையெலாம் மணக்கக் கண்டோம்
    மொய்த்திருந்து நுகர்வோரின் கூட்டங் கண்டோம்.





நெஞ்சமெலாங் குடிபுகுந்து மெச்ச நின்றான்,
    நெடும்புகழின் படியேறி உச்சி சென்றான்,
செஞ்சுடர்போல் ஒப்பரிய தலைவன் என்றே
    சேராரும் உணர்ந்துதலை வணங்கி நின்றார்,
வஞ்சமிலான் 'நானேநும் தலைவன்' என்று
    மதங்கொண்டு வெறிகொண்டு சொன்ன தில்லை;
நெஞ்சுருகச் 'சாமான்யன்' என்றே சொன்னான்;
    நெல்முதிர—விளைந்தபயிர் வளைந்தே தோன்றும்.

திருவெண்காட் டின்னிசையும், சொக்க வைக்கும்
    சீர்த்திருவா வடுதுறையின் மிடுக்கும், சேர்ந்தே
உருவங்காட் டுங்காரு குறிச்சி மன்னன்
    ஊதிவந்த நாதசுரம்; மதங்கொண் டோடும்
பொருவெண்கோட் டானைதனை அடக்கி வந்த
    புலியனையான் உதயணன்பால் இருந்த நல்யாழ்;
மருவுங்காட் டானிரைகள் மயங்கி நிற்க
    வாயூது மாயன்கைக் குழலும் ஆவான்.





குற்றால மலைமுகடும் நாணும் வண்ணம்
    கொட்டுகிற சொல்லருவி, எங்கள் அண்ணா
வற்றாத கலையூற்று, கோலார் போல
    வளமான சிந்தனைகள் நிறைசு ரங்கம்,
கற்றோரின் நூல்களெலாம் தேக்கி வைத்துக்
    காக்கின்ற அணைக்கட்டு, மேகம் வந்து
பற்றாத முழுமதிசேர் நீல வானம்
    பண்பாறு பாய்கின்ற கடலும் ஆவான்.

அடிமையெனும் இருளகற்ற வந்த காஞ்சி
    அறிஞரெனு செம்பரிதி, உரிமைபூத்துப்
படிவளரத் தமிழ்மாரி பொழியும் மேகம்,
    பரவிவரும் தம்பியராம் உடுக்க ணங்கள்,
தொடருமொரு முழுத்திங்கள், மூடச் செய்கை
    தூரோடு சாய்ந்துவிழக் கடிது வீசிப்
படருமொரு புயற்காற்று, வறிய மாந்தர்
    படரெல்லாம் துடைக்கின்ற தென்றற் காற்று.





கலைமலர்கள் பலபூத்துக் கொத்துக் கொத்தாய்க்
    கண்குளிர மனங்குளிரக் காட்சி நல்கும்,
பலவகைய புகழ்மணமெந் நாளும் வீசும்,
    பாடிவருந் தம்பியராம் தும்பி கட்கு
நலமருவும் அறிவுத்தேன் சொரிந்து நிற்கும்,
    நாவசைய மொழித்தென்றல் உலவி நிற்கும்,
உலகிலுளார் இன்புமுற வளர்ந்து தோன்றும்
    உயர்சோலை போலஅவன் வளர்ந்து நின்றான்.

பொறுமை எனும் உயர்பண்பு கொண்ட உள்ளம்
    பொறாமைதனை எள்ளளவுங் காணா உள்ளம்
வறுமையினைக் காணுங்கால் இரங்கும் உள்ளம்
    வளர்தமிழின் வாழ்வுக்கே வாழ்ந்த உள்ளம்
சிறுமையினைக் காணுங்கால் சீறும் உள்ளம்
    சினமென்னும் சுடுநெருப்பைச் சேரா உள்ளம்
வருபவரைக் கைகொடுத்து வளர்க்கும் உள்ளம்
    வாய்த்திருந்த ஏந்தலினை நினைப்போம் நாளும்!

சாமி...

**கவியரசு முடியரசன்**

வேற்றப்படுகிறது. திட்டத்தின் கீழ் வராத மாநில நிதிகளிலிருந்து இத் திட்டத்திற்கான நிதி வழங்கப்படும். இந்திட்டத்தின் கீழ், கட்டுமானச் செலவில் 80 சதவிகிதம் வரையில் (செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தைப் போல் நான்கு மடங்குத் தொகைக்கு இது மேற்படக் கூடாது) ரூ. 10,000 கடன் மேல் வரம்பிற்குட்பட்டு, கடன்கள் வழங்கப்படுகின்றன. வீட்டிற்கான செலவு மதிப்பீடு ரூ. 15,000-க்கு மேற்படக் கூடாது. ரூ. 10,000 கடன் மேல் வரம்பிற்குட்பட்டு கடனைப் போல் இரு மடங்கு மதிப்புடைய வில்லங்கமற்ற நிலங்களைச் சொந்தமாகக் கொடுக்கும் நேர்வுகளில், பங்கு மூலதனத்தைப் போல் ஏழு மடங்குத் தொகை கடனுதவியாக அளிக்கப்பட்டுள்ளது. அதற்காகத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கிராமப்புற வீட்டு வசதித் திட்டச் சாதனைகள்

முதல் மூன்று திட்டக் காலங்களில் கட்டப்பட்ட வீடுகள் 906. முதல் மூன்று திட்டக் காலங்களில் பயன்படுத்தப்பட்ட தொகை ரூ. 56·87 இலட்சம். 1966—67-லிருந்து 1968—69 வரை கட்டப்பட்ட வீடுகள் 324. 1966—67-லிருந்து 1968—69 வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 26·16 இலட்சம். 1969—70-இல் கட்டப்பட்ட வீடுகள் 153. 1969—70-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 10·41 இலட்சம். 1970—71-ல் கட்டப்பட்ட வீடுகள் 140. 1970—71-ல் செலவிடப்பட்ட தொகை ரூ. 10·27 இலட்சம். 1971—72-இல் செலவிடப்பட்ட தொகை ரூ. 10 இலட்சம். 1971-72-ல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 150. 1972—73-ஆம் ஆண்டுக்கான திட்ட மதிப்பீடு ரூ. 10 இலட்சம். 1972—73-ல் செலவிடப்பட்ட தொகை (1972 டிசம்பர் முடிய) ரூபாய் 4·05 இலட்சம். 1972—73-ஆம் ஆண்டுக்கான குறிக்கோள் அளவு 120 வீடுகள். 1972—73-ல் கட்டப்பட்ட வீடுகள் (1972 டிசம்பர் வரை) 80. 1973—74-க்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 10 இலட்சம். 1973—74-க்கான குறிக்கோள் அளவு 120 வீடுகள்.

## வெள்ளிவிழாச் சீரூர் தமிழ்நாட்டில் திட்டம்

இந்தியா முழுவதிலும் 15—3—1972 முதல் 14—3—1973 வரையிலான ஓராண்டுக் காலத்திற்கு, இந்திய நாட்டின் விடுதலை வெள்ளி விழா கொண்டாடப்படுகிறது. இவ் வெள்ளி விழாவிற்கு ஏற்றவாறு நிலையான சாதனைகளை உருவாக்குவதற்கு, ஒவ்வொரு வட்டத்திலும் ஓர் ஊர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று மாநில அரசுகளை, இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. 'வெள்ளி விழாச் சீரூர்' எனத் தேர்ந்தெடுக்கப்படும் ஊர்களில் நிறைவேற்றப் படுவதற்குரிய திட்டங்களுக்குத் தேவையான நிதிகளை, மாநிலத் துறைகளைச் சார்ந்த திட்ட, திட்டத்திலடங்காத வேலைத் திட்டங்கள், மைய அரசுத் திட்டங்கள், மைய அரசால் ஊக்குவிக்கப்படும் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் நிதிகளைத் திரட்டிப் பயன்படுத்த வேண்டுமென இந்திய அரசு கூறியுள்ளது. மேற்கண்ட முறையில் திரட்டப்படும் நிதிகளைக் குடிநீர் வழங்கல் திட்டங்கள், நலிவுற்ற மக்களுக்குச் சிறந்த வீட்டு வசதி, பள்ளிக் கூடங்கள், கிணறுகள் போன்றவற்றிற்கு ஒதுக்கலாமென்றும் மைய அரசு கூறியுள்ளது. அதற்கேற்ப, ஒவ்வொரு வட்டாரத்திலும், ஓர் ஊரைத் தேர்ந்தெடுத்து, அவ்வூர்களில் நிலையான நன்மைகளை உருவாக்க வேண்டுமென்றும், அவற்றிற்கென மாநில, மைய அரசுத் திட்டங்கள் மூலம் கிடைக்கும் நிதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்றும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் கூறப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரத்திலும் ஓர் ஊர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவேயுள்ள திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதிகள் அத்திட்டங்களுக்கென்றே செல, வழிக்கப்பட்டுவிட்டதென்றும் தற்போது தெரிந்தெடுக்கப்பட்டுள்ள ஊர்களில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களுக்கு மேலும் நிதிகள் தேவைப்படுமென்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அரசின் கவனத்திற்குக் கொணர்ந்துள்ளனர். இதற்கெனத் தேவைப்படும் நிதியளவைப் பற்றியும் அவர்கள் கூறியுள்ளனர். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊர்களில் திட்டங்களை நிறைவேற்றுவதற்குரிய நிதிகளை அளிக்கும்படி, இந்திய அரசை, இவ்வரசு கேட்டுக் கொண்டுள்ளது.

திட்டம் முன்னேற்றமடையாத காரணத்தால், இந்திய அரசிடமிருந்து கிடைக்கக்கூடிய நிதி ஒதுக்கீட்டை, எதிர்நோக்கி நடப்பாண்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிகளில் எஞ்சியுள்ள நிதிகளையும், 1973—74-ஆம் ஆண்டிற்கு நிதிநிலை மதிப்பீட்டில் கிடைக்கக்கூடிய ஒதுக்கீட்டையும் பயன்படுத்தி, வெள்ளிவிழாச் சீரூர்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை முடிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

ரூபாய் 3 இலட்சத்திற்கு மேலும், மிகுதியான நிதிகளைப் பெற்றுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், அந்நிதிகளைப் பயன்படுத்தி, வெள்ளிவிழா சீரூர்களில் பள்ளிக் கட்டடங்கள், சாலைகள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இச் செலவு ஒரு வட்டாரத்திற்கு ரூ. 50,000-க்கு மேற்படக் கூடாது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள முன்னுரையை ஒரு நினைவுக் கல்லில் செதுக்கி ஒவ்வொரு வட்டாரத்திலுள்ள ஒரு பள்ளியில் அமைக்க வேண்டுமென்றும் இந்திய அரசு கூறியுள்ளது. ஒவ்வொரு நினைவுக் கல்லிற்கும் ரூபாய் 15,000க்கு மேற்படாது ஏற்படும் செலவை ஏற்றுக் கொள்ளவும் இந்திய அரசு ஒத்துக் கொண்டுள்ளது. ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பள்ளிகளில் இந்நினைவுக் கற்கள் பொருத்தப்படும்.

14—8—1973 அன்று 374 நினைவுக்கற்கள் நிறுவப்பட்டுவிடும்.



## மதுரை மாவட்டத்தில் மறுவாழ்வு இல்லம்



மதுரை மாவட்டத்தில் புதுப்பட்டியில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் கட்டப்பட்டு வருகிறது. இந்த இல்லம் கட்டுவதற்காக அரசு அளித்துள்ள மொத்தத் தொகை ரூ. 10.20 இலட்சம்.

இந்திட்டத்தின் கீழ் 4 தனிக் கட்டடங்கள் கட்டப்படும். ஓர் மாடியோடு இந்த நான்கு கட்டடங்களும் கட்டப்படும். இதில் கீழ்த்தளத்தில், ஒரு அறைக்கு இரண்டுபேர் வீதம் 32 அறைகளில் 64 பேர்களாக, நான்கு கட்டடங்களிலும் 256 பேர் தங்கலாம். மாடியில் ஒரு கட்டடத்தில் 62 பேர் வீதம் 4 மாடிகளிலும் 248 பேர் தங்கலாம். ஆக, இந்த இல்லத்தில் 504 தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வு அளிக்கப்படும். இந்த நான்கு கட்டடங்களில் உள்ளவர்களுக்கும் பொதுவாகக் குளியல் அறைகளையும், கழிப்பறைகளையும் கொண்ட தனிக் கட்டடம் ஒன்றும் கட்டப்படவிருக்கிறது.

இதைத் தவிர, நிருவாகத்திற்கும், மருத்துவத்திற்கும் சேர்த்து ஒரு தனிக் கட்டடம் கட்டப்படும். சமையலுக்குத் தனி இடமும், வேலை செய்வதற்கு இரண்டு தொழிற்கூடங்களும் கட்டப்படும். மேலும், இல்லக் கண்காணிப்பாளருக்கும், இல்ல மருத்துவ அதிகாரிகளுக்கும், மருத்துவ உதவியாளர்கள் இருவருக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் தங்கும் இல்லங்களும் கட்டப்படும். கட்டட வேலைகள் துவக்கப்பட்டுத் தொடர்ந்து நடந்து வருகின்றன.

## இந்தியாவில் சுற்றுலா

1972-ஆம் ஆண்டில் இந்தியாவைச் சுற்றிப்பார்க்கப் பல்வேறு நாடுகளிலிருந்து மொத்தம் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 950 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவுக்கு வந்தனர். இதற்கு முந்தைய ஆண்டை விட இந்த எண்ணிக்கை 14 சதவிகிதம் அதிகம் ஆகும்.

சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை, இதேபோன்று அதிகரித்து வந்தால், 1978-ஆம் ஆண்டில் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வரும் வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 8 இலட்சமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுற்றுலாப் பயனிகளின் ஆர்வத்தைத் தூண்டவல்ல இந்தியாவிலுள்ள பல முக்கியமான இடங்களைப் பற்றி எடுத்துக் கூறும் விளக்கப்படம் ஒன்று தற்போது வெளிநாடுகளில் திரையிடப்படுகிறது. இதனால் இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

நடுத்தர வருவாய் குறைவான வருவாய் உடைய சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்க இடவசதி அளிக்கும் பொருட்டு, வனவிலங்குப் புகலிடங்களில் ஓய்வு விடுதிகளும், சுற்றுலா மாளிகைகளும், இளைஞர் விடுதிகளும் பல்வேறு மாநிலங்களில் இருக்கின்றன.

# மானிடத்தின் தலைமகனை வணங்குகின்றேம்!



விண்பாடும் பறவையெனத் தமிழினத்தின்
விடுதலையைப் பாடியவன்; பகைத்தார் மாட்டும்
நண்பாடும் குணமுடையான்; மாந்த ரெல்லாம்
நலம்பாடித் துதிக்கின்ற பேறு பெற்றான்;
பண்பாட்டிற் கொடுமுடியன்; காஞ்சி தந்த
பகுத்தறிவு ஞாயிற்றை நினைத்து விட்டால்
என்பாடும் நமக்கெல்லாம் விழியி ரண்டும்
எழிலருவி நீராடும்; 'எதையும் தாங்கும்

நெஞ்சத்தைப் பெற்றிடுவாய் தம்பி' என்று
நெடுநாளாய் வற்புறுத்திக் கூறி வந்த
வஞ்சத்தை உணராமற் போனேம்: அந்த
வார்த்தையினைத் தம்பியர்கள் பொன்னே போல
நெஞ்சத்திற் கொண்டாரா என்று பார்க்க
நினைத்தாற்போல் சென்றுவிட்டார்; இதய மென்னும்
மஞ்சத்தில் இருக்கின்றார்! அவர்கொ டுத்த
மதிநலத்தால் மனிதரென வாழு கின்றேம்!

"தாக்குபவன் என்தம்பி யல்லன்; தீமை
தாங்குபவன் என்தம்பி: பகைக்கண் ணாலே
நோக்குபவன் என்தம்பி யல்லன்; அன்பில்
நுடங்குபவன் என்தம்பி; இனநலத்தைப்
போக்குபவன் என்தம்பி யாகான்; மாற்றார்ப்
போற்றுபவன் என்தம்பி; உலகம் வாழ
ஆக்குபவன் எவன்அவனே எனக்குத் தம்பி
ஆகின்றான்" எனச்சொன்ன சால்புக் கோமான்!

தொண்டிருக்கும் அவரிடத்தில்; இருக்கும் வாய்மை;
துணிவிருக்கும் மலைபோல; சங்க மென்னும்
பண்டிருக்கும் இலக்கியத்தின் நெறியோ நெஞ்சில்
பதிந்திருக்கும்; பைந்தமிழில் எழுது வாரேல்
கண்டிருக்கும் அவர்எழுத்தில்; விழியி ரண்டில்
கனிவிருக்கும்; எப்பொழுதும் எளிமைக் கோலம்
கொண்டிருக்கும் அண்ணாபோல் நமக்கு வாய்த்த
குலமிருக்கும் நற்றெய்வம் பிறந்த தில்லை!

புகைபடிந்த கண்ணாடி காண்பார் தம்மைப்
புலப்படுத்த முடிவதில்லை: மதிகெ டுக்கும்
புகைபடிந்த நெஞ்சங்கள் உறவு சேர்க்கும்
பண்பாட்டை அறிவதில்லை; உதடும் உள்ளும்
நகைபடிந்த பொழுதன்றே புகழ்த்தேன் சொட்டும்
நற்பண்புப் பூமலரும்; பலகு ணத்துத்
தகைபடிந்த நெஞ்சுடையார் ஆத லாலே
தமிழினத்தின் தலைமகனாய் விளங்கு கின்றார்!

சீறுவதும் சினங்கொண்டு, சிறியார்க் காணின்
செற்றத்தால் மோதுவதும், நாவ ரம்பை
மீறுவதும்; மிகையாக்கிப் பழியாம் சேற்றை
மேலெறிந்து தாக்குவதும், அடுத் தடுத்து
நூறுவது போற்செயல்கள் செய்வா ரேனும்
நோக்கிலாய் அவையெல்லாம் மறந்து, கோபம்
ஆறுவதும், அணைப்பதுமே பண்பா மென்ற
அரிச்சுவடி கற்பித்த ஆசா னானர்!

கண்களிலே நிற்கின்றார்: உளமு ருக்கும்
கலைகளிலே ஒளிர்கின்றார்; இசைவ ளர்ப்பார்
பண்களிலே தவழ்கின்றார்; கவிக்கு லத்தின்
பாடல்களில் சிரிக்கின்றார்; வானம் வந்த
தண்துளியின் ஓசையிலே பேசு கின்றார்
தமிழகத்தார் நெஞ்சமெல்லாம் ஆளு கின்றார்
மண்புகழும் சிறப்பெல்லாம் ஒருங்கே பெற்ற
மானிடத்தின் தலைமகனை வணங்கு வோமே!

புலவர் ஆ. பழநி



# கதரைப் பற்றிச் சில புதிய உண்மைகள்!

டி. கங்கப்பா
ஐ. ஏ. எஸ்.

கதர்த் துணி என்றாலே, அது விலை, அதிகமானது அது மோட்டாவாக இருக்கும், நீடித்து உழைக்காது அதில் ரகங்கள் குறைவு என்ற தவறான எண்ணம் பலருக்கு இருந்து வருகிறது. மிகச்சிறந்த மில் துணிகளைக் காட்டிலும் மென்மையான துணிகள் கதரில் இருக்கின்றன என்று சொன்னால் நம்புவதற்குக் கஷ்டமாகக் கூட இருக்கும். ஆனால் அது உண்மை. பண்டை நாளில் இந்தியாவில் புகழ் பெற்று விளங்கிய மஸ்லின் துணி இப்போது கதரில் உற்பத்தி செய்யப்படுகின்றது. கையால் நூற்பதில் திறன் வாய்ந்தவர்கள் 250-ஆம் நெம்பர் நூல் கூட நூற்கிறார்கள். ஆனால் மிக நவீனமான மில்களில் கூட 150-ஆம் நெம்பர் நூல்தான் உற்பத்தி செய்ய முடிகின்றது. புதிய உத்திகளையும், முறைகளையும் உருவாக்குவதில் இடைவிடாத, விடாப்பிடியான முயற்சிகளின் காரணமாக அண்மைக் காலத்தில் கதர்த் துணி உற்பத்தியில் அற்புதமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கதர், பலர் எண்ணுவது போல மோட்டாத்துணி அல்ல. அதில் மென்மை வகைகள் உள்ளன. கதரில் எண்ணற்ற ரகங்களும் இருக்கின்றன.

காஞ்சீபுரம், ஆரணி, சேலம், ராசிபுரம், கும்பகோணம், தர்மாவரம், காசி முதலிய இடங்களில் நெய்யப்படும் பட்டுப் புடவைகள், தரத்தில் மிக உயர்ந்தவையாகவும், மற்ற பட்டுத் துணிகளைக் காட்டிலும் நீடித்து உழைப்பானவாகவும் இருப்பது யாவரும் அறிந்த உண்மை. கதர்த் துணித் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தற்கால வர்த்தக முறையில் விளம்பரம் என்பது மிகப் பயனுள்ள சாதனம் என்றாலும், கதருக்காக மிகுதியான விளம்பரம் செய்வதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அதிக விளம்பரம் செய்தால், அதற்கான கூடுதல் செலவும், துணி வாங்குவோரைத்தான் சாரும்.

## விற்பனை பத்துக்கோடி

தமிழ் நாட்டில் 1960 வாக்கில் ஆண்டு ஒன்றுக்குக் கதர் விற்பனை சில லட்சம் ரூபாய் என்ற அளவிலேயே இருந்தது. 1972–73-ல் இது ரூ. 1,009·81 லட்சம் என்ற அளவினை அடைந்தது. பட்டுப் புடவைகள் வகையில், மட்டும் மாதம் ஒன்றுக்கு ரூ. 8·9 லட்சம் மதிப்புள்ள பட்டுக்கள் உற்பத்தியாகின்றன. சென்னை மயிலாப்பூரில் குளிர்ச்சிச் சாதன வசதி உள்ள பட்டுப் புடவைக் கடை அமைக்கப்பட்டிருக்கிறது.

கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்வதற்காக மாநிலம் முழுவதிலுமாக 178 கடைகள் இருக்கின்றன. குறளகக் கட்டடத்தில் அமைந்துள்ள விற்பனைப் பிரிவு இவ்வகைக் கடைகளில் இந்தியாவிலேயே மிகப் பெரியது என்று சொல்லலாம். குறளகம், கதர் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனைக் கடையில் நாளொன்றுக்கு சுமார் ரூ. 13,000-க்கு விற்பனை ஆகின்றன.

## அரசு தரும் உதவி

ஒரு பொருளை உற்பத்தி செய்வதில் முக்கியமான செலவினங்கள் என்ன என்பதும் இங்கு ஆராயத் தக்கது. மனித உழைப்பு எங்கு மிக மிகுதியாகக் கிடைக்கின்றதோ அப்பகுதிகளில் இத்துணி தயாரிக்கப்படுகின்றது. துணி நெய்யும் தொழிலுக்குரிய மூலப் பொருட்கள் என்ற வகையில்—கதர்த் துணிக்குப் பஞ்சு, பட்டுப்புடவைக்குப் பட்டு நூல், கதர்க் கம்பளத்துக்கு கம்பளி நூல் ஆகியவற்றில் கதர்த் துறைக்கும், மில் துறைக்கும் வேறுபாடு கிடையாது. இவ்விரு துறைகளும் ஒரே இடத்தில்தான் மூலப் பொருட்களை வாங்குகின்றன. கதர், ஏழை, எளிய மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்துக்கு உரிய திட்டம் என்பதால் மூலப் பொருட்கள் வாங்கவும் நூற்போர்—நெசவாளர் ஆகியோருக்கு ஊதியம் கொடுக்கவும் விற்பனைவசதி ஏற்பாடுகளுக்கும் வட்டியில்லாக் கடன் உதவி கிடைக்கின்றது. தவிரவும் கதர் கிராமத் தொழில் கமிஷனில் மத்திய சான்றுக் குழு, "விலை அட்டவணை" (cost chart) ஒன்றை உருவாக்கியுள்ளது.

மூலப் பொருட்களின் விலை, இடத்தின் நிலவரத்தைப் பொறுத்துக் கூலியாகத் தரும் தொகை அளவு, நிருவாகச் செலவுகளைச் சரிகட்ட சிறு அளவில் இலாபம் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு இந்த அட்டவணை தயாரிக்கப்படுகிறது. கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள எல்லா மாநில வாரியங்களுக்கும் சான்று பெற்ற நிறுவனங்களுக்கும் இந்த அட்டவணை பொருந்தும். இந்த ஒரு அம்சத்தில் மில் துறையிலிருந்து கதர்துறை அடிப்படையிலேயே மாறுபடுகின்றது. அதிகப்பட்ச இலாபம் காண்பதுதான் மில் துறையின் குறிக்கோள், ஏனெனில் அதற்கு வட்டி இல்லாமல் பணம் கிடைப்பதில்லை. அத்துறையில் நிருவாகச் செலவுகளும் அதிகம். விளம்பரத்திற்கோ கணக்கில்லாமல் செலவிடப்படுகிறது.

## அதிக விலை அல்ல

கதர்த் துணித் தயாரிப்பில் இயந்திர ஈடுபாடு இல்லை. அதற்குப் பதிலாகக் கை உழைப்பு மிகுதி. அரசினரிடமிருந்து இந்தக் கதர்த் துறைக்குக் கிடைக்கும் வட்டியில்லாக் கடன் உதவி அந்த மிகு உழைப்புக்கு ஈடு செய்து விடுகின்றது. மற்றபடி, கதர்த் துணிக்கு அதிக விலை என்று சொல்லுவதற்குக் காரணமே இல்லை. குறிப்பாக இந்த ஆண்டில் மின்சார வெட்டு, கதர்த் துறையைப் பொறுத்த வரை மறைமுகமாக ஒரு நன்மையைச் செய்தது. மில் நூல் விலை உயர்ந்ததினால் மில் துணிகள் விலை மிக ஏறியது. ஆனால் கதர்த் துணிக்கு அப்படிப்பட்ட பிரச்சினை கிடையாது. கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நூற்பாளர்களுக்கும், நெசவாளர்களுக்கும் மின்சாரம் தேவையே இல்லை.




# முன்னோடி நல்வாழ்வு நிலைய அறிமுகமும் முனைப்பு இயக்க நிறைவும்

எஸ். முத்துராமலிங்கம்

தமிழ் வளர்த்த முச்சங்கங்களின் நினைவு—இளங்கோவடிகள் தந்த சிலப்பதிகாரம் பற்றிய எண்ணம் — பாண்டியன் நெடுஞ்செழியனின் கோல்கோணா ஆட்சி முறை — அன்னை அங்கயற்கண்ணி ஆலயத்தின் தோற்றம்- தமிழ் வளர்த்த வெளிநாட்டுப் பெரியார்களான இராபர்ட் நொபிலி, வீரமா முனிவர் என்று அழைக்கப்பட்ட ஆன்றோர் பெஸ்கி ஆகியோரின் நினைவு, என்ற இன்னோரன்ன காட்சிகள் மதுரை பற்றிய எண்ணம் ஏற்பட்டவுடன் உள்ளத்தில் நிழலாடுகின்ற காட்சிகளாகும். இவற்றுடன் இன்னும் எத்தனையோ சிறப்புக்களுக் குரிய மதுரை, மாநகராட்சியாய் இருப்பதோடு, மாவட்டத்தின் தலைநகராய் விளங்குகிறது. இராமநாதபுர மாவட்டத்தின் தலைநகரும் மதுரைதான் என்று சொல்லத்தக்க அளவுக்கு அம்மாவட்டத்தின் தலைமை அலுவலகங்கள் பல, மதுரையிலே இயங்கி வருகின்றன. அண்மைக்காலத்தில் தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டப்பணிகளால் மதுரை மாவட்டம் முன்னேறியுள்ளது.

வீரிய விதைகள் வழங்குதல், உரவிநியோகம் ஆகியவற்றின் மூலம் விவசாயத்தில் புரட்சி உண்டாகியிருக்கிறது. மதுரையிலே உள்ள அரசு பால் பண்ணை, மக்களுக்குத் தட்டுப்பாடு ஏதுமின்றிப் பால் கிடைக்க வழிவகை செய்து வருகிறது. குடிசை மாற்று வாரியப் பணிகள், குடிநீர் வடிகால் திட்டப் பணிகள், இலவசக் கண்சிகிச்சை முகாம், பிச்சைக் காரர் மறுவாழ்வு இல்லம் தோற்றுவித்தல் போன்ற தமிழக அரசின் சமுதாய மேம்பாட்டுப் பணிகளால் மதுரை மாவட்டம் நற்பலன் அடைந்து வருகிறது. தொழில் துறையிலும் உரிய வளர்ச்சியடைந்து வருகிறது இந்த மாவட்டம் என்பதற்குக் கப்பலூருக்கும் திருமங்கலத்திற்கும் இடையில், வெட்டவெளியாய்க் கிடந்த இடங்களில் ஏற்பட்டுள்ள தொழிற்பேட்டைகளும், நூற்பாலைகளுமே சான்றுகளாகும். அதேபோல மதுரை மாநகரை, மாநகராட்சியாக்கியது காரணமாக நகராட்சியாக இருந்த மதுரை மாநகராட்சியாகிற அளவுக்கு மக்கள் தொகைப் பெருக்கம் அங்கு ஏற்பட்டிருக்கிறது என்ற குறிப்புக் கிடைத்த போதிலும், மதுரை மாநகரில் வாழும் மக்கள் நல்ல பல வசதிகளைப் பெற்று வருகின்றனர். அரசின் திட்டப்பணிகளால் மேம்பாடு அடைந்துள்ள — அடைந்துவருகிற மதுரை மாவட்டம் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுக்குள் நிலைநிறுத்தி, அரசுக்குக் 'கை கொடுக்க', சென்ற பல ஆண்டுகளில் உதவியது போல் 1972—73-ஆம் ஆண்டில் குடும்ப நல முனைப்பு இயக்கத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியுள்ளது. எதிர் காலத்தில் தொடர்ந்து இப்படிப் பட்ட வெற்றிகளை நல்கி, அரசுப் பணிக்குக் 'கை கொடுக்கும்' துரை மாவட்டம் என்பதில் ஐயப்பாடு இல்லை.

## இலக்கு

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையில், மாவட்டக் குடும்ப நலத் துறையின் துணையோடு, 1972—73-ஆம் ஆண்டு இறுதியில் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கம் செயல் படுத்தப்பட்டது. தமிழ் நாட்டில் சென்ற ஆண்டு முனைப்பு இயக்கத்தை இறுதியாகச் செயல் படுத்திய மாவட்டம் மதுரை மாவட்டமாகும். வருவாய்த் துறையினரும், உள்ளாட்சித் துறையினரும், குடும்ப நலத் துறையினரோடு இணைந்து செயல்பட்டு முனைப்பு இயக்க வெற்றியை உருவாக்கியுள்ளனர். உள்ளாட்சித் துறையின் கீழ் ஊராட்சி ஒன்றியங்கள் மக்களிடையே நெருங்கிய தொடர்பும் பிடிப்பும் கொண்டு செயல்படுவதால், குடும்ப நலத்துறை ஊழியர்கள் ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் முனைப்பு இயக்கம் காலம் முழுவதும் இயங்கி இயக்க வெற்றிக்கு உழைத்தனர். குடும்ப நலத்திட்ட முனைப்பு இயக்கத்தை யொட்டிய சேவை இயக்கம் 16-1-1973 முதல் 28-2-1973 வரை இம்மாவட்டத்தில் செயல்படுத்தப் பட்டது. அதற்கு முன் ஒரு மாத காலம்வரை குடும்ப நலத் திட்ட விளம்பர இயக்கம் முனைப்போடு செயல் படுத்தப் பட்டது. முனைப்பு இயக்கக் காலத்தில் மதுரை மாவட்டம் 20 ஆயிரம் தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடிக்க வேண்டுமென இந்திய அரசு இலக்கு நிர்ணயித்தது.

## பரிசுத் திட்டம்

குடும்ப நல முனைப்பு இயக்கத்தை ஒட்டி மக்களிடையே ஆர்வத்தை உண்டாக்க வேண்டுமெனக் கருதிய மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்ட அளவில் பரிசுத்திட்டம் ஒன்றைச் செயல்படுத்தினார். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட தந்தைமார்களுக்கான இப்பரிசுத் திட்டத்தில் முதற் பரிசுபெறும் ஒரு தந்தைக்கு ரூ. 1,000 ரொக்கப் பரிசாகவும், இரண்டாவது பரிசு பெறும் இரு தந்தைகளுக்கு ரூ. 500 வீதம், ரூ. 1,000 ரொக்கப் பரிசாகவும், மூன்றாவது பரிசு பெறும் நான்கு தந்தைமார்களுக்கு ரூ. 250 வீதம் ரூ. 1,000 ரொக்கப் பரிசும், நான்காவது பரிசு பெறும் பத்துத் தந்தைமார்களுக்கு ரூ. 100 வீதம் ரூ. 1,000 ரொக்கப் பரிசும் ஆக மொத்தம் ஒரு கோட்டத்தில் ரூ. 4,000 அளவிலான ரொக்கப் பரிசுகள் தந்தைமார்களுக்கு வழங்கப்படும் என அறிவித்திருந்தார். மதுரை

## விளம்பரம் இல்லை

தூய, எளிய பருத்தி நூல் ஆடைகள், எளிய, கவர்ச்சிகர மான ரேடிமேடு ஆடைகள், மனங்கவரும் தூய பட்டுப் புடவைகள் இவை எல்லாம் ஏழை, எளிய மக்களுக்கு சாமா னிய மக்களுக்கு எட்டாப் பொருட்கள் என்ற எண்ணம் எப்படி வந்தது என்பது புதிராக இருக்கின்றது. விளம்பரம் இல் லாதது இதற்குரிய காரணமாக இருக்கலாம். இக்கால வர்த்தக முறையில் விளம்பரம், அவசிய மானதுதான் என்பதில் ஐய மில்லை. ஆனால் கதர் விஷயத்தில் கண்கூடான உண்மையை மறந்து விடலாகாது. கதருக் காக அதிக விளம்பரம் செய்வோ மானால், அத்துணியை வாங்கு வோருக்குத்தான் அந்தக் கூடு தல் செலவும் வந்துசேரும். துணி விற்பனைக்குத் தயாராக இருக் கிறது என்று சொல்லாமலேயே இருந்து விடுகிறோம் என்பது இதற்குப் பொருள் அல்ல. ஆனால் அதே நேரத்தில் வாங்கு வோரைக் கவர வேண்டும் என்பதற்காக மிகுந்த பொருட் செலவில் விளம்பரம் செய்வது கதர்த்துறைக்கு இயலாது.

## சலவைச் செலவு

கதருக்கு அதிகச் செலவா கிறது என்று கூறி, அதற்கு மற்றொரு காரணமும் சொல்லு வோர் உண்டு. கதர்த் துணிக்கு விலை அதிகம் இல்லை. ஆனால் சலவைச் செலவுகள் முதலியன தான் அதிகமாகிறது என்பது அவர்களுடைய கருத்து. ஆனால் சலவைச் செலவு என்ப தெல்லாம் அவரவர் காத்துக் கொள்ள விரும்பும் தூய்மை யின் தரத்தைப் பொறுத்தது.

உடல் ஆரோக்கியத்துக்காகத் தினசரி குளிப்பதும் தூய ஆடை களை அணிவதும் அவசியமாகின் றது. கதர், அணிவதற்கு மிக நல்ல துணி என்பதை மறுப்பவர் யாரும் இல்லை. பட்டுப் புடவை களும், தூய பட்டுகளைக் கொண்டு செய்யப்பட்ட மற்ற ஆடைகளும், நரம்புகளுக்கும் இதய ஓட்டத்துக்கும் மிக நன்மை செய்ய வல்லவை என் றும் நம்பப்படுகின்றது. அப்படி இருக்கும்போது கதருக்கு அதிகச் செலவாகிறது என்பது தப்பான எண்ணமே அல்லவா?

கதர்த் துணிக்கு அதிகம் செலவாவதில்லை. அது எளிய, சிறந்த ஆடையே என்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் புலப்படுத்தும்.

கதர் ரெடிமேடு ஆடைகள்.

| | | விலை ரூ. பை. |
|---|---|---|
| வெள்ளை ஸ்லாக்குகள் | 32" | 8·40 |
| | 36" | 9·20 |
| கலர் ஸ்லாக்குகள் | 32" | 9·05 |
| | 36" | 9·90 |

குழந்தைகளுக்கான ஆடைகள்

| | ரூ. பை |
|---|---|
| பாபா சூட் | 6·50 |
| பெல்பாட்டம் | 12·75 |
| படுக்கை விரிப்புகள் 6'×3' | 11·25 |
| டி. ட்டி வகைகள் 7'×4' | 19·80 |

உறை போடுவதற்கான துணிகள், அலங்காரத் துணிகள் மீட்டர் விலை - - 7·30

| பருத்தி நூல் துணிகள். | நூல் நெம்பர். | அகலம். செ.மீ. | விலை. ரூ.பை. |
|---|---|---|---|
| வெள்ளை சட்டைத் துணி | 32 | 127 | 3·60 |
| | 44 | 127 | 4·25 |
| | 75 | 127 | 5·70 |

முகில் (லோக் வஸ்திரா)— டொசுட்டி

| | | செ.மீ. | ரூ.பை. |
|---|---|---|---|
| | 2/32 | 71 | 3·00 |
| டிரில் | 2/33 | 76 | 3·71 |




சோப்பு, தேன், எண்ணெய் போன்ற கிராமத் தொழில் பொருட்களின் விலை, இவ்வகை மற்றப் பொருட்களுடன் ஒப் பிடும்போது மலிவாகவே இருக் கிறது. சமூகத்தில் நலிந்த பிரிவினருக்கு வேலையும், வாழ்க்கை வசதியும் அளிக்க வேண்டும் என்பதே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரி யத்தின் குறிக்கோளும், திட்ட மும் ஆகும். அரசு நிறுவன மான இந்த வாரியம் அரசினரின் விதிமுறைகளுக்கு உட்பட்டுப் பணியாற்றுகின்றது. இலாப நோக்கம் என்பதற்கு இதில் இடமே இல்லை.


# லண்டன் முரசு
## சிறுகதைப் போட்டி

லண்டனிலிருந்து வெளி வரும் 'லண்டன் முரசு' தமிழ் இதழின் மூன்றும் ஆண்டை முன்னிட்டு சிறு கதைப் போட்டி நடத்தப் படுகிறது. எழுத்தாளர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

சிறுகதை முழுத்தாளில் சாதாரண எழுத்தளவில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். சிறுகதைகள் அனுப்ப வேண்டிய கடைசிநாள் 30—9—73.

அனுப்ப வேண்டிய முகவரி :

"Editor, London Murasu,
8, Ashen Grove,
London, S.W. 19".




## சுற்றுலாப் பயணிகள்

ஜப்பானிலிருந்து இந்தியா வுக்கு வரும் சுற்றுலாப் பயணி களின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. 1973 ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலத்தில் ஆஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவுக்கு வந்த சுற்று லாப் பயணிகளின் எண் ணிக்கை, அதற்கு முந்தைய ஆண்டில் இதே காலத்தோடு ஒப்பிடுகையில் 54·5 விழுக் காடு அதிகரித்துள்ளது.

## கலப்படமும் முடக்கு நோயும்

டில்லியில் விற்பனையாகும் கடலை மாவில், 80 சதவிகி தத்திற்குக் கேசரிப் பருப்புக் கலப்படம் செய்யப்படுகிறது. இந்தக் கடலை மாவைத் தொடர்ந்து உபயோகித்தால், கால்கள் முடங்கிக் கொண்டு முடக்கு நோய் வந்துவிடும்.

டில்லியிலுள்ள, விற்பனை யாளர்கள், மாவு அரைக்கும் மில்கள் ஆகியவற்றிலிருந்து கொண்டு வரப்பட்ட 43 மாதிரிகளில், 34 மாதிரிகள் கலப்படக் கடலை மாவாக உள்ளன.

# கேளுங்கள்? கொடுக்கப்படும்

வினா :—அரசினர் தோட்டக் கலைப் பயிற்சி நிலையம் எங்கு உள்ளது? அதில் பயிற்சி பெற என்னென்ன தகுதிகள் தேவை என்பதைத் தெரிவிக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—கோ. முத்துக்குமாரசாமி,
ஓலையாம்புத்தூர்,
பட்டவிளாகம் அஞ்சல்,
சீர்காழி வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

விடை :—தற்பொழுது தோட் டக் கலைப் பயிற்சிக்கெனத் தனி நிலையம் இல்லை. ஆனால் வேளாண்மைப் பள்ளிக்கூடங் களில் பயிற்சி பெறும் இளம் உழவர்களுக்குத் தோட்டக் கலை பற்றிய பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. இது பற்றிய முழு விவரமும் ஜூலை 1, 1973 'தமிழரசு' இதழில் பக்கம் 57-ல் கொடுக்கப் பட்டுள்ளது. சென்னையில் உள்ள வேளாண்மைத் துறை யின் தோட்டக் கலைஞர் அவர் களால் தோட்டக் கலை பற்றிய குறுகிய காலப் பயிற்சியும் தேவைக்கேற்ப அவ்வப் பொழுது கொடுக்கப்பட்டு வருகிறது. இதுபற்றிய அறி விப்புகள் நாளேடுகளில் வெளி யிடப்படுவதால், அதைத் தெரிந்து, மனுச் செய்து கொள்ளலாம்.

தோட்டக் கலை பற்றி நன்கு பயிற்சி பெற வேண்டுமானால், கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் தால் நடத்தப்படும் பி. எஸ். சி. (தோட்டக்கலை) [B. Sc. (Horti-culture)] பட்டப் படிப்பில் சேருவதே சிறந்தது. இதில் சேருவதற்குக் கல்லூரிப் புகுமுக வகுப்பில் தாவரப் பாடம் படித்து வெற்றி பெற்றிருக்க வேண்டும்.



1730-ஆம் ஆண்டில் மனிதர் கள் இழுத்துச் செல்லும் தீ யணைப்பு வண்டிகள் உபயோகத் திற்கு வந்தன. பின்னர் 1829-ஆம் ஆண்டில் நீராவி யால் இயங்கும் தீயணைப்பு வண்டிகள் உபயோகத்துக்கு வந்தன. 1908-ஆம் ஆண்டில் தான் பெட்ரோலில் ஓடும் தீயணைப்பு வண்டிகள் இந்தியா வுக்கு வந்தன. கல்கத்தா தீயணைப்புப் படை 1922-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. கல் கத்தா போலீஸ் படையின் ஒரு பகுதியாக இருந்து அது இந்தி யாவில் துவக்கப்பட்ட முத லாவது தீயணைப்புப் படை யாகும்.

* * *

1865-ஆம் ஆண்டில் இங்கி லாந்திலிருந்து 5 தீயணைப்பு வண்டிகள் இறக்குமதி செய்யப் பட்டன. இவற்றுள் மூன்று வண்டிகள் குதிரைகள் பூட்டி யவை. இரண்டு வண்டிகளை மனிதர்கள்தான் இழுத்துச் செல்ல வேண்டியிருந்தது. 1907-ஆம் ஆண்டில் முதலா வது மோட்டார் தீயணைப்பு வண்டி பம்பாய்க்கு வந்தது. 1912-ஆம் ஆண்டில் கல்கத்தா தீயணைப்புப் படை, தன்னிட மிருந்த குதிரைப் பூட்டிய தீ யணைப்பு வண்டிகளையும்; ஆட் களால் இழுத்துச் செல்லப்படும் வண்டிகளையும் நீக்கிவிட்டு, இங்கிலாந்திலிருந்து இறக்கு மதி செய்யப்பட்ட மோட்டார் தீயணைப்பு வண்டிகளைப் பயன் படுத்தத் துவங்கியது.

* * *

சாதாரணமாக மோட்டார் தீயணைப்பு எஞ்சினிலுள்ள தீ யணைப்பு சாதனம் நிமிடத்துக்கு 1,800 லிட்டர் தண்ணீரைப் பீச்சியடிக்கும் திறன் பெற்றது.

**வினா:**—நான் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் பாதிநாள் படித்து நின்று விட்டேன். இதுவரை யாதொரு வேலையும் கிடைக்கவில்லை. வேலை இல்லாமல் இருக்கும் நான் ஒரு சிறு தொழில் நடத்தலாம் என்று இருக்கின்றேன். நான் அருந்ததியார் இனத்தைச் சேர்ந்தவன். அத் தொழில் நடத்த அரசாங்கம் கடனுதவி அளிக்குமா?

—த. தங்கவேலு,
வை. மேட்டுக்காடு,
வைகுந்தம் அஞ்சல்,
சங்ககிரி வட்டம், சேலம் மாவட்டம்.



**விடை:**—தாங்கள் அருந்ததியர் இனத்தைச் சார்ந்தவர் என்று கூறுவதால், தாங்கள் தொழில் நடத்துவதற்கு அரசாங்கக் கடன் பெற முடியும். தங்களுக்குத் தொழில் அனுபவம் இருப்பின் அதை விவரித்து உங்கள் மாவட்ட நல அலுவலர் (District Welfare Officer) அவர்களுக்கு மனு அனுப்பவும். நிதி ஒதுக்கீடு இருப்பின் அவர் உங்களுக்குக் கடன் கிடைக்க ஆவன செய்வார்.

உங்கள் பகுதியில் உள்ள பரோடா வங்கியில் (Bank of Baroda) அல்லது ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவில் தாங்கள் தொழில் தொடங்குவதற்குக் கடன் பெற முடியும். நேரில் சென்று விசாரித்து அவர்கள் கூறும் முறைப்படி மனுச் செய்யவும்.




**வினா:**—'பவர் ஸ்ப்ரேயர்' பழுது பார்க்கத் தமிழில் ஏதேனும் புத்தகம் உண்டா? விலை எவ்வளவு? விலாசம் என்ன? 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' ஏட்டின் தமிழ்ப் பதிப்பு விலாசம் என்ன? ஆண்டுச் சந்தா எவ்வளவு?

—கே. கரியப்பன்,
கரியப்பன்பட்டி,
இராசிங்கபுரம்.

**விடை:**—'விசைத் தெளிப்பான்' (பவர் ஸ்ப்ரேயர்) பழுது பார்க்கும் முறை பற்றிய புத்தகம் தமிழில் இல்லை. ஆனால் விசைத் தெளிப்பானை இயக்குவது, மருந்துக் கலவையை நிரப்புவது, தெளிப்பது ஆகியவை பற்றிய விவரங்கள் அடங்கிய 'விசைத் தெளிப்பான்' என்ற பெயருடைய சிறு புத்தகத்தைத் தஞ்சாவூரில் உள்ள தீவிர சாகுபடித் திட்ட அலுவலகம் வெளியிட்டுள்ளது. இப் புத்தகத்தைத் தாங்கள் இலவசமாகவே பெற்றுக் கொள்ளலாம். பின்கண்ட முகவரிக்கு எழுதி இப்புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

"இணை வேளாண்மை இயக்குநர்,
தீவிர சாகுபடித் திட்ட அலுவலகம், தஞ்சாவூர்."

'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்' ஏட்டின் தமிழ்ப் பதிப்பு ஆகஸ்ட் மாதத்துடன் நிறுத்தப்படவிருக்கிறது என்பதாக அந்த ஏடு தெரிவித்திருக்கிறது

**வினா:**—கிணறு வெட்டினால் தாராளமான ஊற்றுக்கிடைக்குமா என்பதை எப்படித் தெரிந்து கொள்ளலாம்? நீண்ட சதுரக் கிணறு, சதுரக் கிணறு, வட்டக் கிணறு இவைகளில் சுமார் 2 ஏக்கர் பாசனத்திற்கு இலாயக்கானது எது? அளவு விவரங்கள் தேவை.

—எஸ். ராமசாமி ஐயங்கார்,
ஆராசூர் கிராமம்,
வந்தவாசி வட்டம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

**விடை:**—குறிப்பிட்ட இடத்தில் கிணறு வெட்டினால் ஊற்றுக்கிடைக்குமா என்பதை நிர்ணயிக்கக் கருவிகள் உள்ளன. ஆனால் அத்தகைய கருவிகள், தற்பொழுது தனிப்பட்ட உழவர்களின் வயலில் பயன்படுத்திப் பார்ப்பதற்கு கிடைக்காது. உங்கள் வயலுக்கு அருகில் ஏதேனும் கிணறு இருப்பின், அதைப் பார்வையிடுங்கள். அந்தக் கிணறு தண்ணீர் கொடுக்கும் நிலையிலேயே, ஏறத்தாழத் தாங்கள் வெட்டவிருக்கும் கிணறும் அமையும். இந்த அடிப்படையை மனத்தில் கொண்டு தாங்கள் கிணறுதோண்டலாம். தனிப்பட்ட சிலர் நீர் ஊற்றுக் கண்டுபிடித்துத் தருவதாக விளம்பரங்கள் வருகின்றன. ஆனால் அவர்கள் காட்டும் இடம் வெற்றி தரும் என்று அறிவியல் அடிப்படையில் முடிவு கூற முடியாததாக இருப்பதால், அத்தகையவர்களை நாடுமாறு நாங்கள் பரிந்துரைப்பதில்லை. தாங்கள் விரும்பினால் அவர்களின் உதவியையும் நாடலாம்.

நீண்ட சதுரக் கிணறு, சதுரக் கிணறு, வட்டக் கிணறு ஆகியவை, நிலத்தின் அடியில் உள்ள தன்மையைப் பொருத்தே அமைகின்றன. நிலத்தின் கீழே மணல் இருக்குமானால் வட்டக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. நிலத்தின் கீழே பாறை அல்லது கல்லாக இருக்குமானால் சதுரக் கிணறு அல்லது நீண்ட சதுரக் கிணறு அமைக்கப்படுகின்றன. அதிகப் பரப்பிற்கு நீர்ப்பாசனம் செய்ய வேண்டியிருந்தால் மட்டுமே பொதுவாக நீண்ட சதுரக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. மற்றபடி சாதாரணமாக, சதுரக் கிணறுகளே பெரும்பாலும் பாறை அல்லது கல் அடியில் உள்ள இடங்களில் வெட்டப்படுகின்றன. தங்கள் நிலத்தின் கீழே எப்படிப்பட்ட அமைப்பு இருக்கும் என்பதை அருகில் உள்ள கிணறுகளைப் பார்த்துத் தெரிவித்தால்தான், தாங்கள் 2 ஏக்கர் நீர்ப்பாசனம் செய்ய எந்த அளவு கிணறு வெட்டலாம் என்பதைத் தெரிவிக்க முடியும்.



**வினா:**—சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு எப்போது அமலுக்கு வரும் என்னும் விவரத்தைத் தெரிவிக்கவும்.

—பி. என். கஜபதி,
சிங்கப்பெருமாள்
கோவில் சன்னதித்
தெரு, காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

**விடை:**—'சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம்' தற்பொழுது தென்னார்க்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் மைய அரசு நிதி உதவியுடன் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கு விரிவு படுத்தும் எண்ணம் தற்போதைக்கு இல்லை. மேற்கூறிய 3 மாவட்டங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு—மைய அரசு நிதி உதவி செய்யுமானால்—மற்ற மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவு படுத்தப்படலாம். ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு இத்திட்டம் எப்பொழுது விரிவு படுத்தப்படும் என்பதை இப்பொழுது தெரிவிக்க இயலாது.





## தீயணைக்க...

எல்லாச் சமயத்திலும் தண்ணீரை மட்டுமே பயன்படுத்தித் தீயை அணைத்து விட முடியாது. தீப்பற்றிய பொருட்களின் தன்மைக்கு ஏற்ப தீயணைப்பு முறைகளும் மாறுபடவேண்டும். மரம், துணி, காகிதம், ரெக்ஸின், ரப்பர், பிளாஸ்டிக், தோல், லினோலியம் போன்ற பொருட்கள் தீப்பற்றும்போது தண்ணீரை உபயோகிப்பது பயன் தரும். எண்ணெய், கொழுப்புப் பொருட்கள் வர்ணம், ஸ்பிரிட், கரைப்பான்கள், பெட்ரோல், மண்ணெண்ணெய், டீசல் போன்றவை சம்பந்தப்பட்ட தீ விபத்துக்களின் போது மணல் அல்லது உலர்ந்த ரசாயனத் தூளை தீயணைப்புக்குப் பயன்படுத்த வேண்டும். இத்தகைய தீ விபத்துக்களின் போது தண்ணீரைப் பயன்படுத்தினால் தீ மேலும் தீவிரமாகப் பரவும். சமையல் எரிவாயு போன்றவை தீப்பற்றிக் கொண்டால் மேற்கொண்டு எரிவாயு வெளிவராதபடி சிலிண்டரை மூட வேண்டும். தண்ணீரைப் பயன்படுத்தி குளிர்விக்க வேண்டும். தீப்பற்றிய பகுதியில் வெளிக்காற்று புகுமாறு ஏற்பாடு செய்யவேண்டும். தீயணைப்புப் படையினரையும் சிலிண்டர் விநியோகஸ்தர்களையும் உடனடியாக அழைக்கவேண்டும். எரிவாயு சம்பந்தப்பட்ட தீ விபத்துக்களின்போது தண்ணீரைப் பயன்படுத்தக்கூடாது.

முத்து

**வினா:**—எச். பி. 3 கம்பு ரகத்தை நாற்றுவிட்டு நடலாமா? நாற்றை எத்தனை நாட்களில் பறித்து நட வேண்டும்? உர விவரமும் வயதும் கூறவும். தஞ்சை மாவட்டத்தில் கோதுமை பயிரிடலாமா? அதன் விதை எங்குக்கிடைக்கும்? நாற்றின் வயது, பிற விவரங்கள் கூறவும்.

—கே. வெங்கட்ராமன்,
11, கீழச்சன்னதித்
தெரு, திருவாரூர்,
தஞ்சை மாவட்டம்.

**விடை:**—எச். பி. 3 கம்பு ரகத்தை மார்ச்சு-ஏப்ரல் பருவத்தில் நாற்றுவிட்டு நடலாம். மானாவாரிக்கு நாற்றுவிட்டு நடுவது சிறந்ததல்ல. ஒரு ஏக்கர் நடுவதற்கு 1 கிலோ விதையை 4 சென்ட் நிலத்தில் நாற்றுவிட வேண்டும். நாற்று விட்ட 18 முதல் 20 நாட்களில் நாற்றைப் பறித்து நட வேண்டும். எச். பி. 3 கம்பு ரகத்தின் வயது 85 நாட்கள். எச். பி. 3 கம்பு பயிரிட ஒரு ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச்சத்து, 9 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக கடைசி உழவில் இடவும். இந்த அளவு சத்துக் கொடுக்க ஏக்கருக்கு 90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா, 88 கிலோ சூப்பர் பாஸ்பேட், 15 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இட வேண்டும். நாற்று நட்ட ஒரு மாதத்தில் 10 கிலோ தழைச் சத்தளிக்க 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 25 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும்.

கோதுமை பயிரிடக் கூடிய காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் பெருமழை இருக்குமாதலின், தஞ்சைமாவட்டத்திற்குக் கோதுமை ஏற்றதல்ல!

ஆர். எம்



மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கோட்டத்திலும் இப் பரிசுத் திட்டம் செயல்படுத்தப் பட்டது. நல்வாழ்வு நிலையங்கள் அமைத்து, ஈட்டுத் தொகை வழங்கி, முனைப்பு இயக்கம் செயல்படுத்தப் பட்டதோடு ஏறத்தாழ அனைத்து ஊராட்சி ஒன்றியங்களும் அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் வேட்டி துண்டு வழங்கின. கொடைக் கானல் ஊராட்சி ஒன்றியம், மலைவாழ் மக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு கம்பளி வழங்கியது.

### பரிசுத் திட்டம்

மாவட்டம் முழுமைக்குமான இப்பொதுப் பரிசுத் திட்டம் தவிர, ஊராட்சி ஒன்றியங்களும் பரிசுத் திட்டங்களை அறிவித்து, தம் வட்டாரத்துத் தந்தைமார்களிடையே ஊக்க மூட்டி அறுவைச் சிகிச்சை ஏற்கச் செய்துள்ளன. சிறப்பாகச் செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தந்தைமார்களிடையே பரிசுக் குலுக்கல் நடத்திப் பரிசு பெறும் ஒரு தந்தைக்கு ரூ. 1,500 மதிப்புடைய கட்டை வண்டியும், இரு மாடுகளும் பரிசாக வழங்கப்படும் என அறிவித்திருந்தது. மேலும் இந்த ஊராட்சி ஒன்றியம், சிறு குடும்ப நெறிக்கு ஏற்பத் தன் குடும்பத்தை அளவானதாக அமைத்து ஆனந்தமான குடும்பமாக விளங்கும் —முப்புரம் எரித்த விரிசடைக் கடவுள்— முழு முதற்கடவுள் எனச் சொல்லப்படும், சிவபெருமானின் குடும்பத்தை விளக்கும் சித்திரத்தோடு, 1973-ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியை அச்சிட்டு அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஒவ்வொரு தந்தைக்கும் வழங்கியுள்ளது. திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் ரூ. 1,500 பெறுமானமுள்ள கறவை மாடு, பரிசுக் குலுக்கலின் மூலம் பரிசு பெறும் ஒரு தந்தைக்கு வழங்கப்படும் என அறிவித்திருந்தது. அதேபோல் சேடப்பட்டியில் ஆடுகள் பரிசாக வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டிருந்தது. பரிசு பெறும் தந்தைமார்களுக்குக் கோழிப் பண்ணை வைத்துக் கொடுப்பதாகவும் சில ஒன்றியங்கள் அறிவித்திருந்தன.

### முன்னோடி நல்வாழ்வு நிலையம்

திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்துக்கான நல்லாழ்வு நிலையம் செக்கானூரணி ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அமைக்கப் பட்டிருந்தது. தஞ்சை மாவட்டப் பாணியில் நல்வாழ்வு நிலையம் ஒன்று செயல் பட்டதோடு, 'முன்னோடி நல்வாழ்வு நிலையம்' (Pre-Health Centre) ஒன்றும் இங்குச் செயல்படுத்தப்பட்டது. செய்தியாளர்கள் உட்பட அனைவரின் கவனத்தையும் ஈர்த்து விட்ட 'முன்னோடி நல்வாழ்வு நிலைய' முறை சென்ற ஆண்டு பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் பிறந்த ஒன்றாகும். 1971–72-ஆம் ஆண்டு நடந்த முனைப்பு இயக்கத்தின் போது மிகுந்த பிற்பட்ட சமுதாயமான 'பிரமலைக் கள்ளர்' இனத்தைச் சார்ந்த மக்கள் வாழும் இப்பகுதியில் 94 தந்தைமார்களுக்குக் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டது. மிகுதியான முயற்சிக்குப் பின் அறுவைச் சிகிச்சை செய்து கொள்வதற்கென ஒப்புதல் அளித்து வந்திருந்த 14 தந்தைமார்கள், கடைசி நேர மனமாற்றத்தால் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளாமலே திரும்பி விட்டனர். இதைத் தடுத்திட வழி என்ன என்ற சிந்தனையிலேயிருந்து உதித்ததுதான் 'முன்னோடி நல்வாழ்வு நிலை முறை'யாகும்.

### சாதனை ஏற்படுத்திய ஒன்றியங்கள்

மதுரை மாவட்ட முனைப்பு இயக்கத்தில் திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் 1,209 தந்தைமார்களுக்கும், கண்ணந்திரி ஊராட்சி ஒன்றியம் 1,209 தந்தைமார்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்து மாவட்டத்திலேயே முதலிடத்தைப் பெற்றுள்ளன. பெரிய குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 'அம்மாவரம்' என்ற கிராமம் 25—2—1973-ஆம் நாள் வரையிலான புள்ளி விவரப்படி, தகுதி வாய்ந்த தம்பதியர்களில் 95 சதவீதம் பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்துள்ளது. அதையொட்டிக் கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வில்பட்டி என்ற கிராமமும், திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தங்களாச்சேரி என்ற கிராமமும், தங்கள் தங்கள் ஊரில் உள்ள தகுதி வாய்ந்த தம்பதிகள் அனைவருக்கும்—நூறு சதவிகிதத்தினருக்கும் அறுவைச் சிகிச்சை செய்து முடிக்கப் பாராட்டத் தக்க வகையில் முனைந்து முயற்சித்துக் கொண்டிருந்தன.

### பரிசளிப்பும் பாராட்டும்

மதுரை மாவட்டத்தில் குடும்பநல முனைப்பு இயக்கம் நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் இலவசக் கண் சிகிச்சை முகாமும் நடந்தது. திண்டுக்கல் 'அங்கு நகரில்' நடைபெற்ற கண் சிகிச்சை முகாமின் நிறைவு விழா 16—2—1973-ஆம் நாள் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு, சிகிச்சை பெற்றவர்களுக்குக் கண்ணாடி வழங்கினார்கள். மேலும் குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தையொட்டி ஊராட்சி ஒன்றியங்கள் அறிவித்திருந்த பரிசுப் பொருள்களை வெற்றி பெற்ற தந்தைமார்களுக்கு வழங்கினார். செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம் அறிவித்திருந்த ரூ. 1,500 பெறுமான கட்டை வண்டி, இரு மாடுகள் ஆகியவற்றை வழங்கியதன் அடையாளமாகச் சதங்கையும், சாட்டையும் கொண்ட 'பிளாஸ்டிக்' பையைப் பரிசு பெற்ற தந்தைக்கு வழங்கினார். திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம் அறிவித்திருந்த ரூ. 1,500 பெறுமான கறவை மாட்டை வழங்கியதன் அடையாளமாகப் 'பால்கறக்கும் பாத்திரம்' கொண்ட பிளாஸ்டிக் பையைப் பரிசு பெற்ற தந்தைக்கு வழங்கினார். திண்டுக்கல் கோட்டத்திலேயே முனைப்பு இயக்கத்தில் முதலிடம் பெற்றுள்ள பழனி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. வேலப்ப நாயுடு அவர்களுக்கும், ஆயிரத்துக்கும் அதிகமான தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்த மதுரை மாநகராட்சி மேயர் திரு. முத்து அவர்களுக்கும் பொன்னாடை போர்த்திப் பாராட்டிப் பேசினார்கள்.

### மாவட்டத்தின் சாதனை

மதுரை மாவட்டம் 16—1—1973-ஆம் நாள் முதல் 28—2—1973-ஆம் நாள்வரை நடத்தி முடித்த குடும்ப நலத் திட்ட முனைப்பு இயக்கத்தில் 22,504 தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்து, 20 ஆயிரம் தந்தைமார்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முடித்திட வேண்டுமென்ற இந்திய அரசு கொடுத்த இலக்கையும் மீறிப் பெருஞ் சாதனையை ஏற்படுத்தியுள்ளது. 'முன்னோடி நல்வாழ்வு நிலைய' முறையை அறிமுகப்படுத்தியுள்ள மதுரை மாவட்டம், 1972–73-ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலேயே முனைப்பு இயக்கத்தை இறுதியாக நடத்தி இலக்குமீறிய வெற்றியை ஈட்டி நிறைவு செய்து வைத்துள்ளது!



# கண் சிகிச்சை முகாம் நிதி



| | |
|---|---|
| முந்திய இதழின்படி ரூ. | 43,48,084·00 |
| **30–12–1972** | |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. | 688·00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. | 2,400·00 |
| **2–1–1973** | |
| பத்திரப் பதிவுத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், சென்னை. | 250·00 |
| திரு. கே. நடேசன், கூட்டுறவு வட்டார வளர்ச்சி அலுவலர், மாயூரம். | 25·00 |
| **5–1–1973** | |
| திரு. கே. பி. பாண்டியன், செயலாளர். | 5·00 |
| **8–1–1973** | |
| டாக்டர் எப். டி. வில்சன், ஜி. எம். விலி. பி. வி. எஸ்சி. மண்டலக் கால்நடை வளர்ப்புத் துணை இயக்குநர். | 8·00 |
| **9–1–1973** | |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், காஞ்சிபுரம். | 3,525·00 |
| தமிழ்நாடு மின்வாரியக் கணக்காளர்கள் சங்கம் 8–1–73 அன்று மாநில முதல் மாநாட்டின் போது முதலமைச்சரிடம் வழகியது. | 2,501·00 |
| திரு. எஸ். பாண்டுரங்கம், தலைவர், அனைத்துலக சைக்கிள் ரிக்ஷா முன்னேற்றக் கழகமும், ரிக்ஷா தொழிலாளர் சங்கத் தலைவர், திரு. எஸ். கணேசன் அவர்களும், சென்னை. | 5·00 |
| **10–1–1973** | |
| மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அலுவலகம், சேலம்-1. | 100·00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் .. | 310·00 |
| வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சியாளர், வேலூர். | 353·00 |
| **11–1–1973** | |
| மெஸர்ஸ் முத்துஓயின்ஸ், அரக்கோணம். | 101·00 |
| **17–1–1973** | |
| இராமநாதபுர மாவட்ட ஆட்சியாளர், மதுரை. | 522·00 |
| மீன்வளத் துறை இயக்குநரின் நேர்முக உதவியாளர், சென்னை-6. | 120·00 |
| பத்திரப் பதிவுத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், சென்னை-1. | 355·00 |
| அசோக் நகர் சேரிவாழ்வோர் சங்கம், சென்னை-29. | 51·00 |
| திரு. கே. கல்யாணசுந்தரம், 38, தாதா முத்தியப்பன் தெரு, சென்னை-1. | 65·00 |
| திரு. துரைவேல், முதல்டிவிஷன் .. | 1·00 |
| **19–1–1973** | |
| மண்டலக் கால்நடை வளர்ப்புத் துணை இயக்குநர், சென்னை | 10·00 |
| ௸ | 25·00 |
| சேலம் மாவட்ட திருச்செங்கோடு கூட்டப் பள்ளி, கால்நடைப் பராமரிப்பு உதவி இயக்குநர். | 60·00 |
| உதகை அரசினர் கலைக் கல்லூரி முதல்வர். | 1,000·00 |
| **20–1–1973** | |
| மாவட்ட ஆட்சியாளர், தஞ்சை. | 1,000·00 |
| **22–1–1973** | |
| உதவி வேளாண்மைப் பொறியாளர் (பிரைவேட் டியூப் வெல்ஸ் திட்டம்), விழுப்புரம். | 27·25 |
| தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியாளர், கடலூர். | 4,204·00 |
| **23–1–1973** | |
| திரு. மாரியப்பன், தி.மு.க. வட்டச் செயலாளர், கள்ளக்குறிச்சி, தென்னார்க்காடு. | 100·00 |
| திரு. சுப்பிரமணியம், மே/பா. நாச்சியப்பன், எம். எல். ஏ., சங்கராபுரம், தென்னார்க்காடு. | 5·00 |
| **24—1—1973** | |
| பத்திரப்பதிவுத்துறைத் தலைமை ஆய்வாளர், சென்னை-1. | 155 00 |
| **27—1—1973** | |
| திரு. ஓடியன் மணி, சென்னை-2. | 1,001 00 |
| இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 32 30 |
| திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. | 75,601 00 |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், கோயம்புத்தூர் .. .. | 266 00 |
| ௸ | 52 00 |
| **29—1—1973** | |
| திரு. கே. வி. கே. சாமி படிப்பகம், சென்னை, (நல்வாழ்வு அமைச்சர் மூலமாக) .. | 27 00 |
| வேளச்சேரிப் பொது மக்கள், (நல்வாழ்வு அமைச்சர் மூலமாக) .. .. .. | 5 00 |
| தமிழ்நாடு அரசு மருந்தாளுநர் கழகம், சென்னை .. .. | 303 00 |
| சென்னை நகரசபைச் சுகாதார அலுவலர்கள் .. .. | 555 00 |
| வேலூர், மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர். | 45 00 |

## வழங்கியோர் பட்டியல்






# நம்பிக்கை ஒளி தரும் வங்கியின் திட்டம்

முன்னேறும் நாட்டுக்கு இரு விழிகள் போன்றன அரசியல் விடுதலையும், பொருளாதார விடுதலையும். இரண்டில் எது இல்லையானாலும் அந்த நாடு முன்னேற முடியாது. அது மட்டுமல்ல—அந்த நாடு முடமான நாடுதான். இதனை நன்கு உணர்ந்திருந்த காரணத்தாலேயே காந்தியடிகள் இந்த நாட்டுக்கு 1947 ஆகஸ்ட் 15-ஆம் நாள் அரசியல் விடுதலை கிடைத்ததும், தொடர்ந்து இந்த நாடு பொருளாதார விடுதலை பெற்றாக வேண்டும் என்பதை வலியுறுத்திப் பல்வேறு பொருளாதாரத் திட்டங்களையும் — கருத்துரைகளையும் வழங்கினார். இந்தியாவைப் பொறுத்தவரையில், ஆகஸ்ட் 15-ம், ஜூலை 19-ம் மிக மிக முக்கியமான—குறிப்பிடத்தக்க நாட்கள். ஆகஸ்ட் 15 இந்தியா அரசியல் சுதந்திரம் பெற்ற நாள். ஜூலை 19 இந்தியா பொருளாதார சுதந்திரம் பெற்ற நாள். ஆம். இந்த நாட்டினுடைய 14 பெரிய வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட நாள் ஜூலை 19. வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்ட 1969 ஜூலை 19-ஆம் நாள் இந்திய மக்களுக்கு—சமுதாயத்தின் சாதாரண, நடுத்தர மக்களுக்கு நம்பிக்கை ஒளியூட்டிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள்.

நாட்டுடைமை ஆக்கப்பட்ட பின்பு வங்கிகள், சமுதாயத்திலுள்ள நலிந்த பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு உதவும் வகையில் துணிகரமான சில புதிய திட்டங்களை வகுத்தன. சமூக ரீதியிலும், பொருளாதாரக் கண்ணோட்டத்திலும் வாய்ப்பும், வசதியும் உள்ளவர்களுக்கே வங்கிகள் ஏகபோகம் என்றிருந்த நிலை மாறியது. ஈடு, பொறுப்பு என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும் நியதி சூள் மறைந்து, அவசியத்துக்கும் தேவைக்கும் ஏற்பக் கடன் தருவது என்ற நியதிகள் உருவாயின. நாட்டுடைமை ஆக்கப்பட்டது—என்ற ஒரே செய்கையினால் மட்டும் அனைத்தும் நிறைவு பெற்று விடுவதில்லை. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கவும் மக்களின் எல்லாப் பிரிவினருக்கும் வளமான வாழ்வுக்கு வகை செய்யவும் அது ஒரு வழி, வலிமையான, ஆரோக்கியமான பொருளாதாரத்துக்கும் அது துணை செய்யும்.

எந்தெந்த வகையினருக்குத் தனி நிதி உதவி வசதிகள் அளிக்கலாம்? அப்படிக் கடன் கொடுப்பதில் கையாளத்தக்க வழிமுறைகள் என்ன என்பதில் வங்கிகள் வகுத்துக் கொண்ட திட்டங்களை ஆராய, இந்திய ரிசர்வ் வங்கி 1970 அக்டோபரில் ஒரு குழு அமைத்தது. இக்குழுவின் தலைவராகச் செயல்பட்டவர், அப்போது பரோடா வங்கியின் கூட்டுப் பொது மேலாளராக இருந்த திரு வி. டி. தக்கர் ஆவார். எனவே இக்குழுவின் அறிக்கை 'தக்கர் குழு அறிக்கை' என்று சொல்லப்படுகின்றது. வேலை

| | | |
|---|---|---|
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், தஞ்சாவூர் .. .. .. | 115 | 00 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 1,650 | 00 |
| துணைப் பதிவாளர், மேட்டூர், இருப்பு, சேலம் .. .. | 30 | 00 |
| அரிசன நல இயக்குநர், சென்னை-5 .. .. .. | 71 | 00 |
| 30—1—1973 | | |
| வடஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 10,222 | 00 |
| 2—2—1973 | | |
| நகரசபை நிருவாக இயக்குநர், சென்னை-1 .. .. .. | 69 | 00 |
| கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில் .. | 2,856 | 74 |
| 5—2—1973 | | |
| 4—2—1973 அன்று புதுவையில் நிகழ்ந்த பொதுக்கூட்டத்தில் உண்டி மூலமாக | | |
| புலவர் பிச்சை குழந்தைசாமி. | 10 | 00 |
| கவிஞர் புதுவை மறவன் .. | 2 | 00 |
| புலவர் அரிமதி தென்னகன் .. | 2 | 00 |
| மார்டின் இராயன், பி.ஏ., பி.டி.. | 2 | 00 |
| 6—2—1973 | | |
| மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 515 | 00 |
| சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 4,146 | 00 |
| முதல்வர், இராசேசுவரி வேதாசலம் அரசினர் கலைக் கல்லூரி, செங்கற்பட்டு .. | 189 | 00 |
| தென்காசித் துணைப்பதிவாளர். | 850 | 00 |
| 6—2—1973 | | |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், தஞ்சை .. .. .. | 260 | 00 |
| 7—2—1973 | | |
| திருமதி இராசேசுவரிநடராஜன், சென்னை-20 .. .. | 101 | 00 |
| 9—2—1973 | | |
| ஆணையர், ஊராட்சி ஒன்றியம், சேதுபாவாச்சத்திரம், தஞ்சை | 475 | 00 |
| 10—2—1973 | | |
| திரு. டி. கிருஷ்ணமூர்த்தி, விசுவநாத் டிரேடிங் கம்பெனி, புதுப்பேட்டை, சென்னை .. | 2 | 01 |
| 12—2—1973 | | |
| இயக்குநர், கருவூலக் கணக்குத் துறை, சென்னை .. .. | 13 | 00 |
| திரு. கெ. அப்துல் ரகிம், சென்னை-3 .. .. | 250 | 00 |
| கிருஷ்ணபுரம் கூட்டுறவு வேளாண்மை வங்கி லிட்., கிருஷ்ணபுரம் .. .. | 50 | 00 |
| 13—2—1973 | | |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், தஞ்சை .. .. | 242 | 00 |
| 15—2—1973 | | |
| மாவட்டக் கல்வி அலுவலர், தக்கலை .. .. .. | 1,199 | 80 |
| தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் .. .. .. | 380 | 15 |
| மண்டலக் கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர், திருநெல்வேலி .. .. | 101 | 00 |
| திரு. கிட்டப்பா, எம்.எல்.ஏ. .. | 42 | 00 |
| 16—2—1973 | | |
| சென்னை கால்நடைப் பராமரிப்புத் துணை இயக்குநர் .. | 10 | 00 |
| உதவிப் பதிவாளர், மயிலம் .. | 60 | 75 |
| 17—2—1973 | | |
| திரு. எஸ். சி. கிருஷ்ணன், செயலர், தமிழ்நாடு சென்னை, அண்ணாசாலை மின்தொழிலாளர் சம்மேளனத் தொழிலாளர் சார்பில் .. | 1,001 | 00 |
| 19—2—1973 | | |
| திரு. சோ, துக்ளக் ஆசிரியர், சென்னை-2. .. .. | 5 | 00 |
| செயலாளர், தமிழ்நாடு பதிவுபெரு அலுவலர் சங்கம், செங்கற்பட்டு .. .. | 101 | 00 |
| துணைப் பதிவாளர், மேட்டூர் இருப்பு, சேலம் .. .. | 290 | 00 |
| 20—2—1973 | | |
| கோட்டப் பொறியாளர், புதுக்கோட்டை .. .. | 11 | 00 |
| இயக்குநர், நகர அமைப்புத் திட்டம், சென்னை .. .. | 37 | 00 |
| செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் .. .. .. | 23,436 | 00 |
| 21—2—1973 | | |
| தமிழ்நாடு மின்வாரியம் கிடங்குப் பணியாளர் .. .. | 20 | 00 |
| இராயபுரம் பொதுக்கூட்டத்தில் தியாகராயக்கல்லூரி தி.மு.க. மாணவர்கள் முதல்வரிடம் கொடுத்தது. | | |
| சின்னமணி .. | 2 | 00 |
| 64 ரிக்ஷாத் தொழிலாளர்கள் | 15 | 00 |
| இராஜேந்திரன். | 1 | 00 |
| கேசவன் .. | 2 | 20 |
| இராமகிருஷ்ணப் பள்ளி மாணவன். | 2 | 00 |
| திரு. இராசுச் செட்டியார் | 10 | 00 |
| 4-ஆம் வட்ட அவைத் தலைவர் .. | 30 | 00 |
| திரு. இராசு .. | 1 | 00 |
| திரு. சுந்தரம் .. | 1 | 00 |
| கிருஷ்ணன் .. | 1 | 00 |
| 21—2—1973 | | |
| பொறிப்படகுத் தொழிலாளர் சங்கம் | 10 | 00 |
| செல்வி குமாரி .. | 1 | 05 |
| திரு. இராசு .. | 1 | 00 |
| திரு. கே. பாலு—8-வது வட்டம் | 5 | 00 |
| பட்டுக்கோட்டைப் பொதுக் கூட்டத்தில் முதல்வரிடம் கொடுத்தது. | | |
| திரு. கோவிந்தராஜு, பட்டுக்கோட்டை .. .. | 101 | 00 |
| பட்டுக்கோட்டைப் பொதுக் கூட்டத்தில் உண்டியல் வாயிலாக .. .. | 7 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியப் பணியாளர், கும்பகோணம் .. | 101 | 00 |
| மின்வாரிய அலுவலர் மாநாட்டில் வழங்கியது .. | 29 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியத் தலைமைச் செயலக அலுவலர் சங்கம் .. | 1,001 | 00 |
| தமிழ்நாடு மின்வாரியப் பொறியாளர்கள் சங்கம் .. .. | 101 | 00 |
| மொத்தம் .. | 44,94,183 | 34 |



# உசிலம்பட்டியில் ஒப்பற்ற பணிகள்

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 17 ஊராட்சி மன்றங்களும், ஒரு பேரூராட்சி மன்றமும் இயங்கி வருகின்றன. 1971-ஆம் ஆண்டு மக்கள் கணிப்பின்படி மக்கள் தொகை 79,337 ஆகும். 18 உறுப்பினர்களும் அறுவர் நியமன உறுப்பினர்களாகவும் உள்ளனர். அறுவரில் மூவர் பெண்கள். மற்ற மூவரும் அரிசன உறுப்பினராவர். இந்த ஊராட்சி ஒன்றியக் குழுவில் எவ்வித இடர்ப்பாடுமின்றிச் சிறப்பாக இயங்கி வருகின்றது.

ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த உசிலம்பட்டி (திம்மநத்தம்) உத்தப்பநாயக்கனூர்—பேரணைச் சாலையும் சீரிய முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டுப் பேருந்துப் போக்குவரத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. 18 பள்ளிக்கட்டடங்களும், 30 இணைப்புச்சாலைகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இணைப்புச்சாலை இல்லாததாய்க் கிராமம் எதுவுமில்லை. சொந்தமாகப் பள்ளிக் கட்டடம் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளியும் எதுவுமில்லை.

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய வறட்சியான பகுதியாகும். பாசனக் கிணறுகள் மூலம் பெரும்பாலும் வேளாண்மைப் பணி மேற்கொள்ளப்படுகிறது. மானுவாரி—பயிர்கள்தான் பெருமளவு பயிரிடப்படுகின்றன. 1967 முதல் 1971 முடிய 2,66,500 செலவு செய்யப்பட்டுள்ளது. 1967 முதல் 1971 முடிய விவசாயிகளுக்கு ரூ. 1,53,000 மதிப்புள்ள விதைகள் வழங்கப்பட்டுள்ளன. எழுபது விவசாயிகளுக்கு ரூ. 22,500 மதிப்புள்ள நவீன மருந்து தெளிக்கும் கருவிகள் வழங்கப்பட்டன. ரூ. 51,000 மதிப்புள்ள நவீன விவசாயக் கருவிகள் 350 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு புதிய உழவு இயந்திரம் வாங்கப்பட்டு ஆயிரக் கணக்கான ஏக்கரில் உழவுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தழை உரக் குச்சிகள் பெருமளவு பயிரிடப்பட்டு வருகின்றன. உரப் பெருக்குத் திட்டம் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஊர்நல உதவியாளர்களுக்கு நவீன வேளாண்மைக் கருவிகள் பல வழங்கப்பட்டுள்ளன.

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் பள்ளி வயதடைந்த பள்ளிப் பிள்ளைகள் அனைவரும் கடந்த ஐந்தாண்டுகளில் பள்ளிகளில் சேர்க்கப்பட்டனர். 35 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 128 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 13 ஆசிரியைகளுக்கான குடியிருப்புகள் புதிதாகக் கட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இரண்டு சீரணி அறிவகங்கள் திறம்படச் செயல்பட்டு வருகின்றன. சீரணிப் படையில் 100 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் 3 புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டவும், 4 சாலைகளைச் செப்பனிடவும், 4 புதிய சாலைகள் அமைக்கவும் உதவி செய்துள்ளனர்.

மகளிர் குழந்தை நலத் திட்டத்தின்கீழ் உசிலம்பட்டியில் குழந்தைகள் காப்பகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகிறது. இந்த ஒன்றியத்தில் 30 மகளிர் மன்றங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

1967 முதல் 1971-ஆம் ஆண்டுவரை கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நீண்ட காலக் கடன் வழங்கியது ரூ. 5,82,435. குறுகியக் காலக் கடன் வழங்கியது ரூ. 22,77,740.

**கூட்டுறவு இயக்கச் சாதனைகள்:**

உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் செயல்பட்டு வந்த கள்ளர் கூட்டுறவுச் சங்கங்களின் 32 சங்கங்கள் இணைக்கப்பட்டு 12 பெரிய விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களாக இயங்கி வருவதைச் சேர்த்து இவ்வட்டாரத்தில் 18 தனித்து இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஒரு கூட்டுறவு விவசாய வங்கி செயல் புரிந்து வருகிறது. ஒரு வீடு கட்டும் சங்கம் உசிலம்பட்டியில் பணியாற்றி வருகிறது. 4 சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு உர விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ஆகியோருக்கு முறையே ஒரு கூட்டுறவு நாணயச் சங்கம் செயலாற்றி வருகிறது. அரசுப் பணியாளர்களுக்கு என்றே ஒரு கூட்டுறவுப் பண்டகசாலை உசிலம்பட்டியில் இயங்கி வருகிறது.

மானுவாரி நிலங்களில் புதிய கிணறுகள் வெட்டித் தோட்ட நிலங்களாக மாற்றி, விவசாய விளைபொருள்களைப் பெருக்கவும், கிராம மக்களின் வருமானத்தை அதிகரிக்கவும் நீண்ட காலக்கடன் வழங்குவதற்கு இங்கு ஒரு நிலவள வங்கி 5—7—1968 முதல் செயலாற்றி வருகிறது. இதுவரை உசிலம்பட்டி நிலவள வங்கி மூலம் உசிலம்பட்டி வட்ட விவசாய மக்களுக்கு நீண்ட காலக்கடன் 57,88,000 வழங்கப்பட்டுள்ளது.

மக்களிடையே சமுதாய ஒத்துழைப்புப் பெருகிடவும், கூட்டுப் பொறுப்பு வளர்ந்திடவும், முக்கியமாகச் சிறு விவசாயிகள் பெரிதும் பயனடையவும், தரிசு நிலங்களைத் தோட்ட நிலங்களாக மாற்றுவதென்ற அடிப்படையில் இங்கு 6 கூட்டுறவு இறைவைப்பாசனச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எம். பாறைப்பட்டி கிராமத்தில் 9 புதிய கிணறுகள் வெட்டி, கூட்டுறவு இறைவைப் பாசனச் சங்க அங்கத்தினர்கள் பயனடைய நீண்ட காலக்கடன் வழங்கி,



ரூ. 3,25,100க்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது போன்று திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கு இங்கு ஒரு வேளாண்மைப் பொறியியல் கூட்டுறவு மையம் துவக்கப்பட்டுள்ளது.

சிறு விவசாயிகள் வருமானத்தைப் பெருக்கிட ஆடு வாங்குவதற்கு 40 கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்களுக்கு ரூ. 80,000 1971–72-ஆம் ஆண்டில் மத்திய காலக்கடன் வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர வேளாண்மைக் காலத்தில் பயிருக்குத் தக்கவாறு குறுகிய காலக்கடன் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. 1971–72-ஆம் ஆண்டில் ரூ. 2 இலட்சம் குறுகிய காலக்கடன் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

**கிராமத் தொழில்கள்**

கிராமக்கலை கைவினைத் தொழில் திட்டத்தின் கீழ் உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் உசிலம்பட்டியில் 1—4—1965 முதல் 23—10—1965 முடிய தச்சுத் தொழில் பயிற்சி நிலையமாகவும், 24—10—1965 முதல் தொடர்ந்து இவ்வூராட்சி ஒன்றிய நிர்வாகத்தின் கீழ்த் தச்சுத் தொழில் உற்பத்தி நிலையமாகவும் செயல்பட்டு வருகிறது.

அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளுக்குத் தேவையான மேசைகள், நாற்காலிகள், பெஞ்சுகள் மற்றும் அலமாரிகள் போன்ற மரத்தளவாடச் சாமான்கள் தச்சு உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. கடந்த 1968 முதல் 1972 முடிய ரூ. 1,15,000 மதிப்புள்ள மரத் தளவாடச் சாமான்கள் தயாரிக்கப்பட்டுப் பல்வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மற்றும் இவ்வூராட்சி ஒன்றியத்தின் சார்பில் விவசாய அடிப்படையில் ரூ. 1,00,000 மதிப்பீட்டில் ஒரு சேம்பர்-செங்கல் சூளைத் தொழில் தொடங்கும் திட்டமும் உள்ளது.

## மேதையின் பெருமை



**ஆ**ங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சு நாட்டுச் சர்வாதிகாரி நெப்போலியனுக்கும் தீவிரமான முறையில் போர் நடந்து கொண்டிருந்தது. இரு திறத்திலும் கணக்கற்ற வீரர்கள் மடிந்தார்கள். எப்படியோ, சில நாட்களுக்குள் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டுப் போர் நிறுத்தப்பட்டுவிட்டது. ஆனாலும் பிரான்சில் சிறை வைக்கப்பட்டிருந்த கைதிகளை நெப்போலியன் விடுதலை செய்யவில்லை. "எங்களைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்புங்கள்", என்று அந்தக் கைதிகள் நாள்தோறும் எழுப்பிய வேண்டுகோள்களை எல்லாம் நெப்போலியன் மறுத்து வந்தான்.

ஒரு நாள்..........

"ஆங்கிலக் கைதிகளை எல்லாம் அருள் கூர்ந்து விடுதலை செய்யுங்கள்" என்று ஒரு தனி நபர் வேண்டி எழுதியிருந்த கடிதத்தை, நெப்போலியனிடம் வாசித்தாள் அவனது மனைவி ஜோஸப்பைன். எழுதியவரின் பெயரை அவள் வாசித்தவுடன் நெப்போலியனின் மனம் நெகிழத் தொடங்கிவிட்டது.

"இந்தப் பெயருடைய மனிதரின் வேண்டுகோளை நாம் எந்த வகையிலும் புறக்கணிக்க முடியாது"............என்று வாய் விட்டுக் கூறினான் நெப்போலியன்.

பயங்கர சர்வாதிகாரியென்று கூறப்பட்ட நெப்போலியனே, மனப்பூர்வமாய் மதித்துப் போற்றும் அளவுக்குப் புகழ் பெற்றிருந்த அந்த மனிதர் யார் தெரியுமா!

அவர்தான்....

அம்மை நோய்க்கு மருந்தும் கண்டு பிடித்த டாக்டர் எட்வர்டு ஜென்னர்!





# வால்பாறை நகரியமே ஊராட்சி ஒன்றியம்!

**கோ**வை மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்திலுள்ள வால்பாறை நகரியம் மலைப்பகுதியில் அமைந்துள்ளது. இங்குக் காஃபி, தேயிலைத் தோட்டங்களும், தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான கொயினாத் தோட்டமும் உள்ளன. தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான விளைநிலங்கள் இங்குக்கிடையாது. இந்த நகரியத்தின் பரப்பளவு 152 சதுர மைல் ஆகும். இதன் மக்கள் தொகை 92,609. வால்பாறை ஒரு துணை வட்டமாகவும் ( Sub-Taluk ) இயங்கி வருகிறது. அரசு அலுவலர்களையும், வியாபாரிகளையும் தவிர ஏனையவர் அனைவரும் தோட்டத் தொழிலாளர்களே. இவர்களில் பெரும்பாலோர் கோவை, திருச்சி, மதுரை, இராமநாதபுர மாவட்டங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களாவர்.

வால்பாறை நகரியமாகவும், ஊராட்சி ஒன்றியமாகவும், இயங்கி வருகிறது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஒரே ஒரு ஊர் மட்டுமே உள்ளது. அது வால்பாறையே! அதுவும் நகரியமாக உள்ளது. வால்பாறை ஊராட்சி ஒன்றியத்தின் தலைவராக, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே பொறுப்பு ஏற்று நடத்தி வருகிறார். இதனால் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த வால்பாறை பகுதி விரைந்து வளர்ந்து வருகிறது.

வால்பாறை மலைப்பகுதியில் வால்பாறை நகரமே வியாபாரச் சிறப்பு மிக்கதோர் நகரமாகும். தொழிலாளர்கள் தங்கள் விடுமுறை நாட்களாகிய ஞாயிறு தோறும் வால்பாறைக்கு வந்து தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்கின்றனர். வால்பாறையில் ஒரு நாளங்காடியை (Market) ரூபாய் 17·5 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டும் வேலைக்கு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 30—4—1972 அன்று அடிக்கல் நாட்டியுள்ளார்கள். வெள்ளிவிழாச் சுதந்தர நாள் வேலையாக இந்த வேலை மேற்கொள்ளப்பட்டு வெகுவிரைவாக நடைபெற்று வருகின்றது. பழைய நாளங்காடியில் வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் அவர்கள் தம் சொந்தச் செலவில் கடைகளைக் கட்டி வியாபாரம் தொடங்கிவிட்டனர். நாளங்காடியிலேயே குடியிருந்து வந்த சுமார் 70 வியாபாரிகளுக்குப் புதிய வீடுகள் கட்ட வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

வால்பாறையில் ஏராளமான அரசு அலுவலகங்கள் உள்ளன. இங்குள்ள அரசு அலுவலர்களுக்கும், அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கட்கும் வசிக்க வீடில்லாத காரணத்தால், அவர்கள் மனைவி மக்களைப் பிரிந்து தனித்து வாழும் நிலையைப் போக்குவதற்காக வாடகை வீடுகள் கட்டுவதற்கு அண்மையில் 3 ஏக்கர் நிலம் வீட்டு வசதி வாரியத்திடம் கொடுக்கப்பட்டுள்ளது. வாடகை வீடுகள் கட்டித்தரும் பணியை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டு வருகிறது.

வால்பாறை மலைப்பகுதியில் 6 மாதம் மழை பெய்யும். கொட்டும் மழையில் சின்னஞ்சிறு குழந்தைகள் அன்றாடம் நெடுந்தூரம் நடந்து சென்று படித்துவிட்டு, மீண்டும் வீடு திரும்பும் பரிதாப நிலை இருந்து வந்தது! இந்நிலையைப் போக்கச் சென்ற ஆண்டில் நகரியப் பொது நிதியிலிருந்து 20,000-ரூபாயைக் கல்வித் துறையினருக்குச் செலுத்திச் சோலையார் நகர், சின்கோனா ஆகிய இடங்களில் இரு புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறக்கப்பட்டன. இட நெருக்கடி காரணமாக வால்பாறை உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் 'ஷிப்டு' முறையில் அரைநேரப் படிப்புப் படித்து வந்தனர். சென்ற ஆண்டில் இரு புதிய உயர்நிலைப் பள்ளிகள் திறந்த காரணத்தாலும், நடப்பு ஆண்டில் இரு நடுநிலைப் பள்ளிகள் திறக்கப்பட்ட காரணத்தாலும், 'ஷிப்டு' முறை மாறி, முழு நேரம் படிக்க வசதி ஏற்பட்டுள்ளது.

பள்ளி இறுதி வகுப்புத் தேர்வில் தவறிய மாணவர்கள் இதுவரை 64 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பொள்ளாச்சிக்குச் சென்று தேர்வு எழுதி வந்தனர். அடுத்த ஆண்டு முதல் இவர்கள் வால்பாறையிலேயே தேர்வு எழுத வகை செய்யப்பட்டுள்ளது.

வால்பாறையில் ஒரு கலைக் கல்லூரி துவக்குவதற்குத் தேவையான 5 இலட்சம் ரூபாயை நன்கொடையாக வசூல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பெரும்பாலும் பன்னெடுங் காலமாக இத்தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றிய தொழிலாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பதால், இவர்கள் வால்பாறையைச்

வசதிகளைப் பெருக்கும் முறையில், சிறு அளவில் கடன் வசதிக்கும், தேவைக்கு ஏற்ற கடன் வசதிக்கும் வழிமுறையை வகுத்தது இந்த அறிக்கையின் சிறப்புக்கள்.

சொந்தமாகத் தொழில் செய்வோர், மற்றும் இதர தொழில் பிரிவினருக்கு உதவுவதில் வங்கிகளுக்கு ஆலோசனை கூற ஓர் அமைப்பினை ஏற்படுத்த வேண்டும் என்று தக்கர் குழு கூறியிருக்கிறது, நாளாவட்டத்தில் இந்த அமைப்பு, கச்சாப் பொருட்கள் கிடைக்கும் நிலை, விற்பனை வசதிகள், நிருவாகம் தொழிற் சட்டங்கள், வரிகள், கணக்குப் பிரச்சினைகள் முதலியன குறித்து வழி துறைகளைக் கூறும்.

பல்பணி நிறுவனங்களை அமைப்பதில் பாங்க் ஆஃப் பரோடா முக்கிய பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. அதன் சார்பில், முதல் பல்பணி நிறுவனம் பம்பாயில் 1972 ஏப்ரல் 26-ஆம் நாள் திரு வி. டி. தக்கர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதன் வெற்றியையும் பம்பாய்ப் பகுதியில் பல்பணி நிறுவன நடவடிக்கைகளின் வளர்ச்சியையும் கண்ட பாங்க் ஆஃப் பரோடா நிருவாகிகள், நாடு முழுவதிலும், கான்பூர், அலகாபாத், சாண்டிகார், சென்னை போன்ற நகரங்களில் கிளைகளும், குழுமங்களும் அமைத்து இந்த நிறுவனப் பணியைப் பரப்பவும், விரிவாக்கவும் முடிவு செய்தனர். இதுவரை கவனிக்கப்படாமல் இருந்த தனிப்பட்டவர்களின் தேவைகளை நிறைவு செய்ய முக்கியமான நகரங்களில் குழுமங்கள் நிறுவப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டு முதல் மூன்று மாதங்களில் 73 பல்பணி நிறுவனக் குழுமங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவற்றுள் 47 குழுமங்கள் 'லெட் பாங்க் திட்டத்தின்' கீழ், பாங்க் ஆப் பரோடா பொறுப்பில் விடப்பட்ட 6 மாவட்டங்களில் அமைக்கப்படும். நான்கு தென் மாநிலங்களில் 6 குழுமங்கள் ஏற்படுத்தப்படும்.

பம்பாயிலும் மற்றும் இதர நகரங்களிலும் பல்பணி நிறுவனக் கிளைகள் அற்புதமான வளர்ச்சியையும், சாதனைகளையும் காட்டியுள்ளன.

**உருவான ஈடு, பொறுப்பு வசதி கேட்காமல் சாமானிய மக்களுக்கு உதவும் முறையினால் கடன் தரும் லேவாதேவி முறையில் குறிப்பிடத்**தக்க மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. கடன் பத்திரங்கள் எளிமையாக்கப்பட்டுள்ளன. கடன் வாங்குவோர், ஈடு பொறுப்புத் தந்தாக வேண்டும் என்ற அவசியம் இல்லை. பம்பாய்ப் பகுதியில் எலக்ட்ரானிக், பிளாஸ்டிக் தொழில்களுக்கு உதவுவது குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. தகுதி வாய்ந்த பொறியாளர்கள் சொந்தமாகத் தொழில் துவக்க முன்வந்தால் அவர்களுக்குத் தேவையான செயல்முறைப் பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அண்மையில், சென்னை அசோகா ஹோட்டலில் பாங்க் ஆப் பரோடாவின் பல்பணி நிறுவனத் திட்டத்தைச் சிறு தொழில்கள் சங்க சம்மேளனத் தலைவர் திரு எம். எஸ். பார்த்தசாரதி துவக்கி வைத்தார். அவர் தம் துவக்க உரையில், இத்திட்டத்தின் கீழ், இயந்திரங்கள் இதர வசதிகளுக்காகக் கடன் பெறுவோர்களில் நேர்மையானவர்கள் மிகுதியும் உள்ளனர் என்றும் அத்தகையவர்களுக்குத் தேவையில்லாத தொல்லைகள் ஏற்படாமலிருக்க வங்கிகள் இன்னும் சாதகமான நேரடியான போக்குகளைக் கையாள வேண்டும் என்றும், குறிப்பிட்ட காலத்துக்குள் வங்கிகளும் நிதி நிறுவனங்களும் புதிய தொழில் முயற்சிகளும் இணைந்து முயற்சித்தால், 2,500 கோடி ரூபாய்க்கான திட்டங்களை வகுக்க முடியும் என்றும், 2 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

வங்கியின் பிராந்திய நிருவாகி திரு கே.பி. தாக்கூர் பல மாநிலங்களிலும் பல்பணி நிறுவனத் திட்டம் வெற்றி பெற்றுள்ளதை விவரித்தார்.

பின்னர், சலவைத் தொழிலாளர், முடி திருத்துவோர், செருப்புத் தைப்போர் முதலிய பல தொழிலாளர்கள் சொந்தமாகத் தொழில் துவக்கக் கோரியிருந்த தொகைக்கான காசோலைகளை திரு எம். எஸ். பார்த்தசாரதி வழங்கினார்.

**இந்தக் கடனுதவித் திட்டத்தின்கீழ், வக்கீல்கள் சட்டப் புத்தகங்கள் வாங்கவும், அலுவலகம் அமைக்கவும், மருத்துவர்கள் தொழில் கருவிகள் வாங்கவும், பரிசோதனைக் கூடங்களுக்குத் தேவையான கருவிகள் வாங்கவும் கூடக் கடன் வழங்கப்படுகிறது.**

சென்னை எரபாலு செட்டித் தெரு, 3-ஆம் எண்ணிலுள்ள பாங்க் ஆப் பரோடா என்னும் தனியமைப்பு எம் எஸ் ஏ. செல் இந்தப்பணியை ஏற்றுச் செய்து வருகிறது.

இத்திட்டத்தின்கீழ்க் கடன் பெற்றவர்கள் வங்கிக்குப் போய்த் தான் தங்கள் தவணைத் தொகையைச் செலுத்த வேண்டுமென்பதில்லை. கடன் பெற்றுத் தொழில் புரிவோர் இருக்கும் இடங்களுக்கே சென்று தவணைகளை வசூலித்துக் கொள்வது என்பது இதுவரை இல்லாமல் இப்போது புதிதாகத் துவக்கப் பெற்றுள்ள ஏற்பாடாகும்.

இப்போது இந்தத் தவணை வசூலிப்பிற்காக 100 பேருக்கு மேல் வசூலிப்பாளர்களாக வேலையமர்த்தப் பட்டுள்ளனர். வேறெந்த வங்கியிலும் இல்லாத ஒரு முறை இது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

''இதுகாறும் நடைமுறையில் இல்லாத இந்தப் புதிய ஏற்பாட்டினால் பல்பணி நிறுவனமும் பயனடைகிறது—கடன் பெற்றோரும் பயனடைகின்றனர்'' என்கின்றார்கள் நிறுவனத்தினர்.

இந்த ஆண்டு இறுதிக்குள் இத்திட்டத்தின்கீழ் 2,000 பேருக்கு 20 லட்சம் ரூபாய் வரை கடன் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும், பெரும்பாலானவர்கள் கடன் தவணைகளைத் திருப்பிக் கட்டுவதில் மிகவும் ஒழுங்காக நடந்து கொள்கின்றனர் என்றும் நிறுவனத்தினர் பெரிதும் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

கடன் வசதி உதவி பெறத் தக்கவர்கள் என்று 86 பிரிவினரைப் பல்பணி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. மேலும் பல பிரிவினரை இப்பட்டியலில் சேர்க்கவும் முயன்று வருகின்றது.

**நாட்டின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்துச் சாமான்யர்கள் வாழ்வில் முன்னேற்றம் காண உதவும் 'நம்பிக்கை ஒளி' யாக இத்திட்டம் விளங்கும் என்பதில் ஐயமில்லை.**



# உலகம் இரண்டு கிளைகள்

## 9 சட்டப் பிரச்னை

டி. என். சுகி சுப்பிரமணியன்

சிறு உதவி செய்வதைவிட பெரிய உபாதை செய்வது எளிது. அன்பே, அபாயமாகப் போவதும், அபாயமே அன்பாகப் போவதும் உலகத்தில் இயற்கை.

டாக்டர் நர்மதா பிரசவ காலத்திற்குரிய விடுப்பைப் பயன் செய்யாமல், தனக்கு டாக்டர் பதவியிலிருந்து விடுதலை கேட்டு எழுதியிருந்தாள். மலையில் விளைந்த பொருளானாலும் உரலுக்குள் வந்து இடிபடவேண்டும் என்பது இயற்கையின் நியதி.

டாக்டரின், மன உளைச்சல் வக்கீல் கையில் வந்து மாட்டிக் கொள்ளும் என்று அவளுடைய மதியும் விதியும் யூகிக்கவில்லை !

செண்பகா மில்லின் அதிபர் முத்தையா தில்லிக்கு 'பெர்மிட்' விஷயமாகப் பறந்து போயிருந்தார். பணம் பண்ண வேண்டுமானால் இந்நாளில் பறக்கத் தெரிந்திருக்க வேண்டும் ; காசு குவிக்க வேண்டுமானால் சொந்தக் காரில் செல்லத் தெரிந்திருக்க வேண்டும்.

பணம் பண்ணுவதில் மட்டுமன்று. பாவம் பண்ணுவதற்கும் ஒரிஜினலிட்டி இருக்க வேண்டும்; புண்ணியம் பண்ணுவதிலும் ஒரிஜினலிட்டி இருக்க வேண்டும் ; பணம் பண்ணுவதில் முத்தையா ஒரிஜினலிட்டி உள்ளம் படைத்தவர்.

தமது நிறுவனத்தில் ஏற்றுமதி இறக்குமதி காரியமாக அவர் தில்லியை வட்டமடித்து வெற்றிவாகை சூடிக் கொண்டு அடையாற்று பங்களாவிற்குத் திரும்பியிருந்தார்.

டாக்டர் நர்மதா எழுதிய ராஜிநாமாக் கடிதம் அவர் கைக்குக் கிடைத்தது. அவர் அந்தக் கடிதத்தை 'சட்ட ஆலோசனைக்கும் தக்க நடவடிக்கையும்' என்னும் குறிப்பையெழுதி தமது வக்கீலுக்கு அனுப்பி வைத்தார்.

மலையிலே பிறந்த பொருள்—இன்று உரலுக்குள் வந்து மாட்டிக் கொண்டது.

மனைவி எழுதிய கடிதத்தைப் பார்த்த மணிவாசகன் சிரித்தான்: சிந்தித்தான்: சினங் கொண்டான்.

குழந்தையோடு புத்தம் புதிய பூவோடு கொஞ்சிக் குலவி மகிழ்ந்து கொண்டிருந்த ராதையை ஒருகணம் 'ருதய்' என்று கத்தினான். ராதை, குழந்தையுடன் அங்கு வந்தாள்.

''குழந்தையை அதன் தாயிடம் விட்டுவிட்டுவா ! நாம் சட்ட ஆலோசனை செய்ய வேண்டிய அவசியம் வந்திருக்கிறது ''

'அதன் தாயிடம்' என்ற சொல் கூரிய முள்ளாக ராதைக்குத் தைத்தது. தன் மனைவி என்று கூறாமல் அந்நியமாக்கிப் பேசிய மணிவாசகன் சுடுசொல், நெருப்புக் குழம்பாய் அவள் நெஞ்சுக்குள் ஓடிற்று. குழந்தையைக் கொண்டுபோய் 'அக்கா நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்' அத்தான் கோபமாக இருக்கிறார்!' என்றாள்.

'' இதுநாள் வரை வாடகை வீட்டில் இருந்தோம். இதனைச் சொந்த வீடாக மாற்றிவிட்ட பெருமையில் அவருக்குக் கோபம் வருவது இயல்பு ! நியாயங்களைக் கண்டால் கண்ணை மூடிக் கொள்வது அவருக்குப் பழக்கம். அவர் வக்கீல் ! ''

'' ஊமையாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். ஒற்றுமை உண்டாகும் ! ''

'' கல்லிலே சிலையைக் காணலாம். இவர் தம் சொல்லிலே கொலையைக் காணலாம் ! ''

'' உங்கள் கடிதம் ஒன்று அவர் மேஜையில் இருக்கிறது அக்கா ! ''

'' என் கடிதமா ?'' நெஞ்சம் பதறினாள் நர்மதை.

மீண்டும் ஒரு கர்ஜனை 'ராதை'! மானாகத் துள்ளி, மயிலாக ஓடி மணிவாசகன் அருகாக வந்து நிற்கிறாள்.

'' ராதை ! உனக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி தருவதே என் பிறவிப் பயனாகப் போய்விட்டது. இந்தப் பங்களாவை நான் சொந்தமாக வாங்கியது உன் அக்காள்—டாக்டர் நர்மதை அவர்களுக்குப் பிடிக்கவில்லை! ''

'' அவள் வாயே திறக்கவில்லையே அத்தான் ! ''

'' புலி புன் முறுவல் செய்தாலும் புள்ளி மானுக்கு அபாயம் உண்டு. புலியின் புன்முறுவலுக்குப் புள்ளிமான் சிரிக்கவும் கூடாது. சீறவும் கூடாது. நீ ஒரு மக்கு. வக்கீலுக்குப் படிக்கவில்லை. உனக்கு நான் வக்கீல் வகுப்புக்கு உரிய பாடங்களைச் சொல்லி வைக்கவில்லை. இப்படி டாக்டரம்மாவான அந்தத் தியாகி நினைக்கிறாள் ! நம்மிடம் இருக்கும் பொருளின் அருமை அதனை இழந்த பிறகுதான் தெரியும் ? உன்னை படிக்க வைப்பேன் என்னும் தைரியத்தில் ஆலையின்

டாக்டர் பதவியை ஆசைப்பட்டு அவசரப்பட்டு அவள் தானாக வலிந்து ஒப்புக்கொண்டாள்! முதலாளி முத்தையாவும் கொடுத்து உதவினார். எனக்குச் சட்ட ஆலோசகன் வேலை கிடைக்காதபோது வலிந்து போய் டாக்டர் பதவியை ஒப்புக்கொண்டார்கள்''

''நீங்கள் என்ன கதா காலட்சேபம் செய்கிறீர்களா? பூர்வத்தைச் சொல்ல! பூப்போல ஒரு ராஜகுமாரன் வீட்டிற்குள் வந்திருக்கிறான். வீடெங்கும் ஒலி, ஒளி அமைக்கிறான். நம்மையெல்லாம் நாடகப் பாத்திரமாக ஆட்டுவிக்கிறான். அதன் பிஞ்சு விரல்களைத் தொட்டுக் கொண்டிருக்கலாம். ஆசைதீர அதன் குறுகுறு விழிகளைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். இதை விட்டு விட்டு அக்காவின் தொழிலைப்பற்றிய சர்ச்சையில் இறங்கி எவர் மனசையும் புண்படுத்தாதீர்கள்!''

''ராதை, நீ இந்த வீட்டின் ராஜதந்திரி. உன்னுடைய அன்புக்கயிற்றால் எங்களையெல்லாம் கட்டிப்போட்டு நீ நினைக்கிறபடி ஆட்டி வைத்துக் கொண்டிருக்கிறாயே! கொம்பு கேட்கப் போன குதிரை குளம்பையும் இழந்ததாம் என்னும் கதை உனக்குத் தெரியுமா?''

''நீங்கள் வக்கீல். புதிர் போடுவீர்கள்!

''நீயும் வக்கீலுக்குப் படிக்க ஆரம்பித்திருக்கிறாய்!

இன்னும் பத்தாண்டில் நீ வக்கீலாகப் பரீட்சை எழுதி வெற்றி பெறுவாய்!''

''இந்த மக்கு வக்கீலாக வந்து என்ன பயன்? நீங்கள் கைநிறைய சம்பாதித்தால் போதும். அக்காள் கை நிறைய சம்பாதித்தால் போதும்....புதிதாக என்ன தகராறு உங்களுக்குள் முளைத்தது?''

வக்கீல் மணிவாசகன் மனம் சொல்ல நினைத்தது. மீண்டும் விழுங்கிக் கொண்டது. மனிதர்கள் வளர வளர வல்லவர்கள் ஆகிறார்கள்; நல்லவர்கள் ஆவதில்லை. பிறரைக் கூண்டில் ஏற்றும் வக்கீல்களுக்கு மனசாட்சி கிடையாதோ அல்லது கிள்ளி எறிந்து விடுவார்களோ! தனக்கு, முத்தையா தந்த ஐம்பதினாயிரம் ரூபாயை அவன் சொல்ல விரும்பவில்லை.

'' உன் அக்கா உன்னிடம் உயிரையும் உணர்வையும் அள்ளி அள்ளிக் கொட்டி வைக்கிறாளே!''

'' அது உண்மைதான். என் வாழ்க்கையில் கவனம் கண்காணிப்பு உள்ளவள் எனது அக்காள். ''

அது உண்மையாக இருந்தால், தான் ராஜிநாமாக் கடிதம் எழுதியதை உன்னிடம் ஒளிக்காமல் சொன்னாளா?''

எரியீட்டி ஒன்று அவள் நெற்றிப் பொட்டில் வந்து செங்குத்தாக இறங்கியது போலிருந்தது. மின்னல் ஒன்று அவள் அறிவுக் கண்ணைப் பறித்து எடுத்துப் போவது போலத் தவித்தாள்.

''ராஜிநாமா செய்துவிட்டாளா? ஏன்?''

''அதைத்தான் ஆலைமுதலாளி முத்தையா சட்ட ஆலோசகனான என்னிடம் கேட்டு அனுப்பியிருந்தார். விடுதலை கொடுக்கலாமா? இல்லை. சட்டப்படி உன் அக்காள் மீது வழக்குத் தொடுக்கலாமா என்று என் யோசனையைக் கேட்டிருக்கிறார்! எவ்வளவு பெரிய தர்ம சங்கடம். மனைவியின் ராஜிநாமா சட்டப்படி செல்லாது என்று நான் எழுதினால் டாக்டர் நர்மதா தாங்கிக் கொள்வாள். நீ ஆமாம் நீ பனி மலரைப் போல கன்னைக் கசக்குவாய். உருகி நைந்து போவாய். என்னை ராட்சசன் என்று எண்ணுவாய். எரி தழலை என் தலையில் கொட்டுவாய். உன் அன்பின் முன்னால்

> முட்டாள்களைப் பார்த்து நமக்குத் திட்டுவதற்குத் தோன்றலாம்; ஆனால் பொறுமைப்படத் தோன்றாது; ஏனெனில் 'பொறுமைப்படுதல்' என்பதுகூட எதிரிக்கு நீ தரும் ஒரு வகைப் புகழ்ச்சியே.
>
> — ஜான் கே.

நான் கண்கலங்க வேண்டும். எனக்கு முதலாளியிடம் விசுவாசியாக இருப்பதா? இல்லை மனைவியிடம் சுகவாசியாகப் பெயர் பெறுவதா? நீயே தீர்ப்பைச் சொல்!''

ஆறறிவும் ஒருசேர இழந்துவிட்ட சிலையாக நிற்கிறாள்.

மேசை மீது இருந்த கடிதத்தைப் படித்துப் பார்த்தாள். முத்து முத்தான எழுத்தில் 'எனக்குரிய பிரசவ விடுப்பு முடிந்ததும் தங்கள் மருந்தக வேலையிலிருந்து விடுதலை கேட்கிறேன்''.

''ஆமாம்! அக்காள் எழுதியிருக்கிறாள்''.

''இன்றைக்குத் தான் பார்க்கும் ஆலையின் டாக்டர் வேலையிலிருந்து விடுதலை கேட்கிறாள்! நாளைக்கு இக் குடும்பத்திலிருந்து விடுதலை கேட்பாள்! அன்புள்ள மனைவி அகத்தில் இருப்பாள்; அறிவுடைய மனைவி அலுவலகத்தில் இருப்பாள்''.

ராதை, எரித்துவிடுபவள் போன்று கண்ணை வெறிக்கப் பார்க்கிறாள். ''விவாகரத்து'' என்று மறைமுகமான சொல் விஷத்துளிகளாக அவள் நெஞ்சுக்குள் ஈரம் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

''ராதை! பொருள்தனைத் தேடிவிட்டால் தன்னைப் புத்திசாலி என்று இந்நாளில் எல்லாரும் எண்ணுகிறார்கள். நானும் அப்படித்தான் எண்ணுகிறேன், உன் அக்காளும் அப்படியே எண்ணுகிறாள். இவள் கேட்டுவிட்ட ராஜிநாமா சரி என்று எழுதுவதா? இல்லை, இவள் செய்தது தவறு என்று எழுதுவதா? உன்னிடம் ஒருமுறை சொல்லிவிட்டு என் அபிப்பிராயத்தை எழுதி, முதலாளிக்கு அனுப்பப் போகிறேன். நீ சிந்தனை செய்வாயோ! இல்லை நிந்தனை செய்வாயோ! முடிவு என் கையில். ஆனாலும் உனக்கும் தெரிந்திருக்கட்டும். நீ போகலாம். ராஜகுமாரனின் ஒளி ஒலி அமைப்பைப் போய் ரசிக்கும்போது ராஜிநாமா நாடகத்தின் கதைக் கருவை சற்றே சிந்தனை செய். போ.''

''நான் எங்கே போவது?''

''சட்டம் படிக்கப் போவது அல்லது உன் அக்காளின் உடம்பு தேறுவதற்கான




டானிக்கைக் கொடுப்பது. உன் அக்காவின் பிஞ்சு மதலையைக் குளிப்பாட்டுவது. பவுடர் போடுவது, சொக்காய் மாற்றுவது! இத்தனையும் நீ செய்தாக வேண்டும். இதற்கிடையில் ராஜிநாமாக் கடிதத்திற்கு என் பதிலை நான் எழுதுவேன் என்பதனையும் கற்பனை செய்து பார்க்கவேண்டும்.''

''அத்தான் எனக்கு உங்கள் அன்பு, அக்காளது அன்பு இரண்டும் புரிகிறது. எனக்குக் குடும்பம் என்னவென்றும் புரிகிறது. ஆனால் இந்தக் குடும்பத்திற்கும் இதற்குள் குமிழிவிடும் சட்ட ஞானத்திற்கும் போதிய அறிவுத்திறன் இல்லை. குடும்பத்தைப் பொறுத்தவரை அறிவே சூன்யமாகப் போனவர்களால்தான் அன்பு மயமாக வாழ முடியும் என்று நினைக்கிறேன்''.

ராதையின் சொற்களில் இருந்த தத்துவம் சட்ட மூளைக்குள் சலனத்தைத் தந்தது. குடும்பம் என்பது சட்டப் புத்தகப் படிப்பு அல்ல. அதுபடிப்புக்கூட அல்ல. பண்புள்ள மனப் பயிற்சி. சிறந்த

தங்கள் சொந்த ஊராகவே கருதி வருகின்றனர். இவர்கள் இங்கேயே நிரந்தரமாகத் தங்கிடவும், வீடுகள் கட்டிக் கொள்ளவும், வால்பாறை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையினரிடமிருந்து வீட்டு மனைகளைப் பெற்றுச் சங்கத்தைப் பதிவு செய்து வீடு கட்டும் வேலையைத் துவக்கத் தீவிரமாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

வால்பாறை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் வீட்டுக் காய்கறி மற்றும் பழத்தோட்டங்கள் அமைத்திட மானிய விலையில் காய்கறி விதைகளும், பழச்செடிகளும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. கோழி வளர்ப்பதற்காக மானிய விலையில் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படுகின்றன. இங்கு 'சிந்தி' இன மாடுகள் வளர்க்கப்படுகின்றன. சென்ற ஆண்டில் 13 'சிந்தி' பொலி காளைகள் மானிய விலையில் விநியோகம் செய்யப் பட்டுள்ளன. சென்ற ஆண்டில் வால்பாறை நகரிலுள்ள சாலைகளுக்குத் தார் போடப்பட்டது. ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கு நடப்பு ஆண்டிலும் தார் போடப்பட்டு வருகிறது.

வால்பாறையில் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வால்பாறை நகரிய நிதியிலிருந்து ஒரு திரையரங்கம் கட்டும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது.

நகரியத்தாலும், ஊராட்சி ஒன்றியத்தாலும் இம்மலைப் பகுதியின் வளர்ச்சிக்கு இன்னும் பல வழிகளில் ஆவன செய்யப்பட்டு வருகின்றன.

> தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 4,11,03,125. ஆகும் ஆண்கள் 2,07,72,549; பெண்கள் 2,01,30,576 பேர். படித்தவர் தொகை 1,61,89,712 பேர். இவர்களில் ஆண்கள் 1,07,34,758 பேர்; பெண்கள் 54,44,954 பேர். மொத்தம் படித்தவர்கள் தொகை 39.39 சதவீதம். இவற்றில் ஆண்கள் 51.68 சதவீதம்; பெண்கள் 26.83 சதவீதம்.

# கிராமங்களில் டெலிவிஷன்



டில்லியிலுள்ள தொலைக் காட்சி வசதிகளை வலுப்படுத்தவும், ஐந்து புதிய இடங்களில்—குறிப்பாக, பம்பாய், கல்கத்தா, சென்னை போன்ற இடங்களில்—தொலைக் காட்சி வசதிகளை விரிவாக்கவும் மைய அரசு திட்டமிட்டுள்ளது. 1973–74-ஆம் ஆண்டில், இந்தியா முழுவதும் துணைக் கோள் மூலம் தொலைக்காட்சி ஆய்வு (Satellite Instructional Television Experiment) மேற்கொள்ள அணுசக்தி ஆணைக் குழு ஏற்பாடு செய்துள்ளது. இதனால், அமெரிக்க நாட்டிலுள்ள 'நாசா' (NASA) விலிருந்து வான துணைக்கோள் (Sky Satellite) ஒன்று வாடகைக்குப் பெறப்பட்டு நாகபுரியில் நிறுவப்படும். இதனால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இந்தியாவிலுள்ள பல்வேறு பகுதிகளும் நன்றாகக் கண்டு களிக்க முடியும்.

நாட்டின் பல்வேறு ஒருங்கிணைந்த பகுதிகளில், குறிப்பாக, ஊர்ப்புறங்களில் சுமார் 5,000 தொலைக்காட்சிக் கருவிகளை அணுசக்தி ஆணைக்குழு நிறுவும். தொலைக்காட்சி மூலம் விளைந்துள்ள நன்மைகளை வருங்காலத்தில் கண்டறிவது ஒருபுறமிருக்க, மக்களின் அன்றாட நிலையையும் மக்களின் வாழ்க்கையையும் உயர்த்தத் தொலைக்காட்சி பெரிதும் பயன்படும்.

தொடக்கமாகச் சென்னை மாநகரிலும், அதனைச் சார்ந்துள்ள அண்மை மாவட்டங்களிலும், வருங்காலத்தில் மாநில முழுவதிலும் தொலைக் காட்சிக் கருவிகளை நிறுவுவதற்கான திட்டப்பணிகள் பலவற்றைச் சேர்த்து, ஒருங்கிணைக்கும் வழி முறைகளைக் கூறுதற்கென "ஊரக தொலைக் காட்சிக் குழு" ஒன்றை அரசு அமைத்துள்ளது. அக்குழுவில் கீழ்க்காணும் எண்மர் உறுப்பினராவர்.

தலைவர் :—

1. அரசுத் தலைமைச் செயலாளர்.

உறுப்பினர்கள் :—

2. அரசுச் செயலாளர், ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித் துறை.

3. அரசுச் செயலாளர், கல்வித் துறை.

4. அரசுச் செயலாளர், நிதித் துறை.

5. செய்தி, மக்கள் தொடர்பு இயக்குநர், பொதுத் (செய்தி—மக்கள் தொடர்பு) துறை.

6. ஊரக வளர்ச்சி இயக்குநர்.

7. வானொலி தலைமை அலுவலர்–ஊராட்சி வானொலிப் பராமரிப்பு நிறுவனம்.

8 மக்கள் தொடர்பு அலுவலர், ஊர் வளர்ச்சி—உள்ளாட்சித்துறை—அமைப்பாளர்.

"ஊரகத் தொலைக் காட்சிக் குழு" தேவையெழும் போதெல்லாம் கூட்டப்படும். துவக்கக் கட்டமாகச் சென்னை மாநகரிலும் அதனைச் சார்ந்துள்ள அண்மை மாவட்டங்களான வட ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களிலும், வருங்காலத்தில் மாநில முழுவதிலும் தொலைக் காட்சிக் கருவிகளை நிறுவுவதற்குத் தேவையான வழி முறைகளை இக்குழு ஆய்ந்து கருத்துக்களை வழங்கும்.

ஆசிரியர், வெளியிடுபவர் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு அச்சக எழுதுபொருள் இயக்குநரால், சென்னை, [illegible]






பதிவு எண். M. 8676



# குழந்தையும் அறியுமே!
# தமிழ்நாடு பரிசுச் சீட்டு
# தன்மையில் சிறந்தது!

*இன்றே வாங்குங்கள்*

## தமிழ்நாடு அரசு
## பரிசுச் சீட்டு

முதல் பரிசு:

# ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

54-வது குலுக்கல் நாள்

## 10-4-1973

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.
2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.

'காஸ்பியன்' கடலுக்கு 150-க்கு மேற்பட்ட பெயர்கள் உண்டாம். உலகிலே வேறு எந்தக் கடலுக்கும் இவ்வளவு அதிகமான பெயர்கள் கிடையாது.

நாளுக்கொரு பயத்தை வெல்லாதவன் வாழ்க்கையின் முதல் பாடத்தையே கல்லாதவன்.

—எமர்சன்.

பாரம்பரியத்திற்கான துறையை அமைக்கும் ஒரு பாதைதான் குடும்ப வாழ்க்கை. குடும்பம் நடத்தப் பொருள் கூடத் தேவையில்லை. பொறுமை மிகமிகத் தேவையென்பதை, ராதை உணர்த்தியதை ரசித்தான் மணிவாசகன். யோசனையில் ஆழ்ந்தான்.

''என்ன யோசிக்கிறீர்கள்?'

''எங்கள் வாழ்க்கையில் எப்போதும் புதிர் புதராக வளர்கிறது. பிரச்சினை மண்டுகிறது!''

''இருவரும் அறிவைப் பரிபூர்ணமாக நம்புகிறீர்கள். கொஞ்சம் அன்பைக் கலந்து கொள்ளுங்கள். தங்கத்தில் செம்பு கலந்த ஆபரணம் பளிச்சென்று இருக்கும். அறிவுக் கூர்மையை மட்டுப்படுத்தி, அன்புக் கூர்மையை அதிகப்படுத்துங்கள்! அதுவும் என்னைக் கோபிக்காமல் இருந்தால் என்னிடம் யோசனை கேட்டால் நன்மை விளையும் என்று எண்ணினீர்களா? தீமை விளையும் என்று எண்ணினீர்களா?'

''வெற்றியாளர்கள் பிறரிடம் யோசனை கேட்பது இல்லை. சும்மா விவரம் சொல்லி வைத்தேன். அவ்வளவே''.

எவ்வளவு தீர்க்க தரிசனமான எச்சரிக்கை! ராதை தொடர்ந்தாள்.

''அத்தான் நாம் காயமடைகிறோமா? இல்லை காயப்படுத்துகிறோமா என்று எண்ணிப் பாருங்கள். இது டாக்டர் நர்மதா வக்கீல் மணிவாசகன் இருவரைப் பொறுத்த பிரச்சினை மட்டும் இல்லை.''

''ராதை அவர்களைப் பொறுத்த பிரச்சினையா?''

''உங்கள் மகன் பாபுவைப் பொறுத்த பிரச்சினை! தந்தை மகனுக்கு ஆற்றும் உதவியை, நான் சொல்லித் தெரிய வேண்டியது இல்லை. உங்கள் பாபுவுக்கு எது நன்மை தருமோ அதைச் செய்யுங்கள். உங்கள் பாபுவுக்கு எது தீமை தருமோ அதைத் தடை செய்யுங்கள்!''

வக்கீல் மணிவாசகன் எரிமலை உள்ளத்துக்குள் குடங்குடமாகத் தேனை யாரோ கொட்டுவது போல உணர்ந்தான். தன் ஆணவம், தன் அகங்காரம் இரண்டையும் அடக்கும் ஒரே மாமருந்து பாபு! குழந்தையின் குரல்! குழந்தையின் குமிண் சிரிப்பு. அவனது மாமனத்தின் பலவீனத்தை அவள் தொட்டுக் காட்டிவிட்டாள். கணவனுக்கும் மனைவிக்கும் பாலமாய்-பாசமாய் - பந்தமாய் இருக்கும் ரத்த ஓட்டத்தை அவள் துடிக்கத் துடிக்கச் சொன்னாள்.

அந்தத் துடி துடிப்பின் பெயர் பாபு!

''நான் நர்மதைக்கு நன்மை செய்வேன் என்று நினைக்கிறாயா? இல்லை தீமை செய்வேன் என்று நினைக்கிறாயா?''

இது விஷமத்தனமா? விளையாட்டுப் பேச்சா?

ராதையின் அன்பு உள்ளத்திலும் அடக்கம் நிரம்பி இருந்ததால் மந்திரச் சொல் ஒன்று துள்ளித் தெறித்தது.

''நீங்கள் எப்போதும் நன்மையைச் செய்வீர்கள். சில சந்தர்ப்பங்களில் நன்மையைச் செய்யாமல் இருந்து விடுவீர்கள்''.

அவள் தன் காது குளிரக் கேட்பது என்ன மொழி? தெய்வத் திருவாக்கா? இல்லை தங்கத்தால் கூர்மைப்படுத்திய ஊசி முனையா?

டாக்டர் நர்மதாவின் ராஜிநாமாக் கடிதத்தின் மறுபுறம் மளமளவென்று சட்ட ஆலோசகன் என்னும் முறையில் எழுத ஆரம்பித்தான் மணிவாசகன்.

## 10 பணம் தரும் மதிப்பினை

வாழ்க்கையை விரும்புகிறவர்களும் உலகத்தில் இருக்கிறார்கள். வாய்மையை விரும்புகிறவர்களும் உலகத்தில் இருக்கிறார்கள். இந்த இரண்டும் கிடைக்க வேண்டுமென்று எண்ணாத மனித இதயங்கள் இரா. நாளாக ஆக வாய்மை வேண்டாம் வாழ்க்கை போதும் என்பாரும் பலர்; வாழ்க்கையே வேண்டாம் வாய்மை போதும் என்பாரும் சிலர்—

இந்த உபதேசத்தை யார் யாருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார் என்பதை வாசகர்களுக்குச் சொல்லவேண்டும்.

செண்பகா மில் முதலாளி முத்தையா தமது மருமகன் ரோமியோவிடம் சொல்லிக் கொண்டிருந்தார்! சொல்வதற்குக் காரணம் இருந்தது.

''மாப்பிள்ளை! நீங்கள் என் மகளை மணந்தவர்கள். எனவே, என் மகனைப்போல உரிமையுடன் பேசலாம். பணத்தால் நான் பல சாதனைகளைச் செய்துவிட்டேன்: அதே சமயம் பல தவறுகளை மறைத்துவிட்டேன் என்று மணிவாசகனிடம் போய் ஒரு நாள் நீங்கள் சீறினீர்களாம். இளமையில் உங்களைப் போல எனக்கும் குறிக்கோள்கள் இருந்தன! நிரம்ப இருந்தன''.

''காலத்தால் மனிதனின் மதிப்பீடுகள் மனத்தின் மாண்புகள் மாறுகின்றன. எனவே, நீங்கள் செய்வது நியாயம் என்று வாதாடுகிறீர்கள்! அப்படித்தானே மாமா!''

''நான் வாதாடவும் இல்லை. வழக்காடவும் இல்லை. ஒன்று தெரிந்து கொண்டவன் நான்''

''பணத்தால் எதையும் சாதிக்கலாம். தீமைக்குத் திரையிடலாம்.... என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்!''

ஆர்வமும் உள்ளத்து எழுச்சியும் இல்லாமல் உயர்ந்த சாதனைகளை ஒரு போதும் அடைய முடிந்ததில்லை.

— ரால்ஃப் வால்டோ எமர்சன்

''மாப்பிள்ளை! நான் பட்டம் பெறாதவன். சட்டம் படிக்காதவன். நான் அறிந்த அனுபவ உண்மையை நீங்கள் அறிய வேண்டும். பணத்தை விட, மிக முக்கியமான பண்டங்கள் எத்தனை எத்தனையோ இவ்வுலகில் இருக்கின்றன. அவ்வரிய பெரிய பண்டங்களை விலைக்கு வாங்கத்தான் பணம் சேர்க்க வேண்டியிருக்கிறது. பணக்காரனைக் குற்றவாளியாகப் பார்ப்பதும், பணம் சேர்ப்பவனை முட்டாளாக எண்ணி ஒதுக்குவதும் இன்றையச் சமுதாய அமைப்பின் மதியீனம். இச்சமயம் நீங்களும் செண்பகமும் வக்கீல் மணிவாசகன் வீட்டு விழாவுக்குத் தானே போகிறீர்கள்?''

''ஆமாம் மாமா!''

''அந்தக் குழந்தையின் பெயர் சூட்டு விழாவிற்குப் பரிசுப் பொருள் வாங்கி விட்டீர்களா?''

''வாங்கி விட்டோம்.''

''உலகத்தில் யாரை மகிழ்விக்க வேண்டுமானாலும், யாருக்கு நன்மை செய்ய வேண்டுமானாலும் வெறும் சொற்கள் என்ன பயனுமில்லை. பை நிறையப் பணம் இருப்பின் எல்லாப் பயனும் அதன் பாலுள! நான் இதனைச் சொல்வதற்கும் காரணம் இருக்கிறது.'

''என்ன காரணம்?''

''உங்களை என் ஆலையின் சட்ட ஆலோசகனாக ஆக்காமல் உங்கள் நண்பரை, பாண்டித்துரையின் மருமகனை நான் சட்ட ஆலோசகனாக ஆக்கினேன். ஏன் தெரியுமா?''

'' உங்கள் மகளுடைய மனம் கோணக்கூடாது. உங்கள் மகள் திருமணம் நடக்க வேண்டும் என்பதற்காக!''

''தம் மக்களுக்காக ஒவ்வொரு தந்தையும் தன் ரத்தத் துளிகளை உழைப்புச் செல்வமாக்குகிறான். நேற்றுப் பிறந்த குழந்தை பாபுவுக்காக மணிவாசகன் மிக அக்கறையுடன் தன்னுடைய பொறுப்பைச் செய்கிறான். அதுபோல உங்கள் வாழ்க்கை வளம் பெற வேண்டும். அதனை நினைவு படுத்தினேன்''.

செண்பகம், பவுடர் இலங்கும் முகத்துடன் பளபளத்த உடையுடன் நறுமணம் கமழும் பூவும், ஜொலிக்கும் பொட்டுமாக வாசனைக் குன்றமாக அங்கு வந்து நின்றாள்.

''என்ன படிப்பினை நடத்துகிறீர்கள் அப்பா?''

''உன் கணவரிடம் நான் பாடம் கற்றுக் கொள்கிறேனம்மா. பள்ளிப் படிப்புக்குப் பட்டம் கொடுக்கிறார்கள். வாழ்க்கை அனுபவத்துக்குப் பட்டம் தர வேண்டாம். பாராட்டுக்கள் தந்தால் போதும். பணம் சேர்ப்பவனை முட்டாள்—கொலைகாரன் ஈவு இரக்கமில்லாத அரக்கன் என்றெல்லாம் எண்ணவேண்டாம். உன் கணவன் என்னருமை மாப்பிள்ளை, மணிவாசகனுக்குத் திருமணப் பரிசாக ஒன்று கொடுத்தார். நினைவு வருகிறதா உனக்கு?''

செண்பகம் ஒரு குழந்தை போல தந்தைக்கும் கணவனுக்கும் நடுவே அமர்ந்தாள்.

''என்ன பரிசு?''

''நான் சொல்லுகிறேன் சட்ட ஆலோசகன் பதவி நியமனத்தை அவனது திருமணப் பரிசாக நான் கொடுத்தேன்'' என்றான் ரோமியோ.

''எவ்வாறு கொடுக்க முடிந்தது? தியாக உள்ளம் முதற் காரணம். அதன் அடித்தளம் இடையறாது உழைக்கும் என் போக்கு அடுத்த காரணம். நான் வேராகவும் நீங்கள் மலராகவும் இருப்பதற்குப் பணம் தேவை. குழந்தை 'பாபு'வை ஏற்கனவே நான் பார்த்து விட்டேன். எனக்கு இன்று வேலை இருக்கிறது. என் ஆசியைக் குழந்தைக்குச் சொல்லுங்கள். நான் பங்களூர் செல்ல வேண்டியதிருக்கிறது''

''கோவை வடிவேலு மாமா, இந்த விசேடத்திற்காக வந்திருக்கிறார். ஓட்டலில் தங்கியுள்ளார்''

''அவருக்கு இன்னும் அந்த எண்ணம் இருக்கிறது. தன் வீட்டு மருமகளாக ராதையைக் கொண்டு போகலாம் என்னும் எண்ணம்! அதனால் அவர் வருவது நியாயம். உன் கணவர் அவரது தோழர் வீட்டுக்குப் போகிறார். நீ உன் தோழி வீட்டுக்குப் போகிறாய்..........நான் அங்கு வர இயலவில்லை என்பதைத் தெரிவியுங்கள்''

✱

முழுமையாயிராத காரணங்களைக் கொண்டு முழுமையான முடிவுகளை வகுக்கும் கலையே வாழ்க்கையாகும்.

— சாமுவேல் பட்லர்

ரோமியோவிற்குத் தன் மாமன் பேசியதன் போக்கு புதுமையாக இருந்தது. புதிய சூட்டுக் கோலை முதுகில் போட்டது போலவும் இருந்தது. மாமனாரின் பணத்தை நம்பி வாழும் தன்னிடம் வெறும் குறிக்கோள் இருந்து பயனில்லை. தியாக உள்ளம் இருந்து பயனில்லை. பணம் இல்லாமல் குறிக்கோள்கள் வைத்திருப்பவன் தூசுக்குச் சமம். பணத்தோடு குறிக்கோள் வைத்திருப்பவன் இரும்புத் தூணுக்குச் சமம். இதனைப் புரிய வைத்தார் முத்தையா.

—கடைப்பிடிக்கக் கூடிய குறிக்கோள்களை மனசில் சுமந்து செல்; நினைவில் வைத்திருக்கும் தியாகங்கள் நிழலுக்குச் சமம்! எதைக் கடைப்பிடிக்க முடியாதோ அதனை நினைவில் வைப்பது பயனற்ற காரியம்— இதனையும் சொல்லாமல் சொன்னார் முத்தையா.

''மாப்பிள்ளை! மணிவாசகன் குணத்தைக் கொள்ளும்படியாக உங்களுக்குச் சொல்லவில்லை. குறிக்கோள்களைக் கடைப் பிடியுங்கள். அதே சமயம் எந்தக் குறிக்கோள்களையும் நிறைவேற்றப் பணம் தேடுங்கள். பணம் தேடுபவர்களைக் கயவர்களாக எண்ண வேண்டாம். காலிகளாகத் தூற்ற வேண்டாம்''

செண்பகம் ''போதுமப்பா, உங்கள் உபதேசம்! நாங்கள் இருவரும் குழந்தை 'பாபு'வின் நாமகரணத்துக்குப் போகிறோம்'' என்றாள்.

''போகும்போது கடிதம் ஒன்று தருகிறேன்.''

''யாருக்கு?'' என்றாள் மகள்.

''டாக்டர் நர்மதா அவர்களுக்கு.''

''என்ன கடிதம்?''

''அவர்கள் வீட்டுத் திருமணத்திற்கு என் மாப்பிள்ளை ஒரு நற்செய்தியைப் பரிசளித்தார். அவர்கள் குழந்தை பெயர் சூட்டு விழாவிற்கு நீ ஒரு பரிசைக் கொடு.''

''எத்தனை ஆயிரத்துக்குச் செக்?''

''டாக்டரம்மா பார்த்துக் கொள்ளட்டும்''

முதலாளி முத்தையா மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார். செண்பகமும் ரோமியோவும், ராஜா அண்ணாமலைபுரம் நோக்கித் தங்கள் காரில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

''என்ன யோசனை செய்கிறீர்கள்? அப்பா சொன்ன சொற்களை நினைக்கிறீர்களா? அசைபோடுகிறீர்களா?''

''உன் அப்பாவின் பேச்சிலே நான் ஞானம் இருக்காது என்று நினைத்தேன். அவர் பேச்சில் ஞானம் இருக்கிறது. பணம் சம்பாதிப்பதன் நோக்கம் பணத்தைவிட உயர்ந்த பொருள்கள் உலகத்தில் இருக்கின்றன. அதனை வாங்கப் பணம் தேவை. இது எவ்வளவு பெரிய உண்மை. எவ்வளவு பெரிய ஞானம்''

''இந்தக் கடிதத்தில் என்ன இருக்கும்?'' என்று திசை திருப்புகிறாள் செண்பகம்.

''காசோலை இருக்கலாம் அல்லது வாழ்த்துச் சேதி இருக்கலாம்''

ராமகிருஷ்ணபுரம் தாண்டி வரும் வழியிலே குப்பை மேட்டிலே பன்றி ஒன்று படுத்திருந்தது. பன்றியின் குட்டிகள் பால் பருகிக் கொண்டிருந்தன. ரோமியோவின் சிந்தனைக்குள் இக்காட்சி புதிய உண்மையை ஒளிபாய்ச்சியது. பசு, எருமை, ஒட்டகம், இவற்றின் பால் மக்களுக்கும் பயன்படுகிறது. அதனதன் கன்றுகளுக்கும் பயன்படுகிறது. பன்றி, புலி, சிங்கம், யானை போன்றவற்றின் பாலோ அவற்றின் குட்டிகளுக்கு மட்டுமே பயன்படுகிறது. எனவேதான் மக்களுக்குப் பயன்படும் பால் சிறந்தது. மக்களுக்குப் பயன் படும் பாலைத் தரும் பசுவும் எருமையும் சிறப்புடைய பிறவி. மக்களுக்குப் பயன்படும் பணம் சிறந்தது. பன்றியின் பாலைப் போல பன்றிக் குட்டி போன்ற மக்களுக்கே பயன்படும் பணம் இழிவுடையது !

இந்த எண்ணத்தோடு, வக்கீல் மணிவாசகன் பங்களாவின் பக்கம் வந்து இறங்கினார்கள். மேளம் முழங்கியது. நாதம் பரவியது. சந்தனம் மணத்தது. எங்கும் பூக்களின் நறுமணம். இனிமை, குதூகலம் துள்ளி விளையாடின.

அதிக உறவினர்கள் இல்லாது போனாலும் நண்பர்கள் நிறைய வந்து கொண்டிருந்தார்கள்.

ராதை பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள். பன்னீரை எங்கும் தெளித்துக் கொண்டிருந்தாள்.

டாக்டர் நர்மதாவின் கையிலே குழந்தைக்கு வாங்கி வந்த பரிசுகளை, பட்டுச் சட்டைகளை, விளையாட்டுச் சாமான்களைக் கொடுத்தான் ரோமியோ.

செண்பகம் கடிதம் ஒன்றைக் கொடுத்தாள்.

''இது என்ன?''

''என் அப்பா கொடுக்கச் சொன்னார்கள்.''

''என்ன கடிதம்.''

''உங்கள் திருமணத்திற்கு என் கணவர் மிஸ்டர் ரோமியோ ஒரு பரிசு கொடுத்தார். பாபுவின் பெயர் சூட்டு விழாவிற்கு என் பரிசாக இருக்குமென்று எண்ணுகிறேன்.''

அறைக்குள் போய்ப் பரபரப்பாகக் கடிதத்தைப் பிரித்தாள். அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை. மீண்டும் மீண்டும் படித்தாள். குழந்தைத் தனமான பரிசு.

''டாக்டர் நர்மதை,

எங்கள் ஆலையின் டாக்டர் பதவியை வகிக்கும் தாங்கள், ஓய்வு இருக்கும் காலத்தில் தனிப்பட நர்சிங் ஹோம் நடத்த அனுமதி தருகிறேன். இதற்காக எந்த விதமான சம்பளப் பிடித்தமும் இருக்காது. உங்கள் உதவிக்கு மற்றொரு டாக்டரையும் எங்கள் மருந்தகத்திற்கு நியமனம் செய்துகொள்ளலாம். நன்றி.

எம். முத்தையா,
செண்பகா மில் உரிமையாளர்.

டாக்டர் நர்மதாவுக்குத் தன் கண்ணை நம்ப முடியவில்லை.

கண்ணெதிரே நிற்கும் கணவன் அப்படி ஒரு யோசனையை எழுதி முதலாளிக்கு அனுப்பியிருக்க முடியுமா ?

குழந்தை 'பாபு' வுக்கு எத்தனையோ பரிசுகள் வந்திருந்தன. வாழ்த்துக்கள் வந்திருந்தன. 'பாபு' வைப் பெற்ற தாய்க்கு வந்த இக்கடிதம் எல்லாவற்றுக்கும் சிகரமாக இருந்தது.

இந்தக் கடிதம் முதலாளியின் பெருந்தன்மைச் சிப்பியில் விளைந்த முத்தா ?

இந்தக் கடிதம் கணவன் கருணையில் பிறந்த அன்பு வெள்ளமா ?

ராதையின் முயற்சியால் ஏற்பட்ட முதலீட்டு இலாபமா?

திகைத்தபடி நின்றபோது 'பாபு' வின் அழுகுரல் கேட்டது. கன்றின் குரல் கேட்ட பசுவாக ஓடினாள் நர்மதா.

(வளரும்)

> வதந்திகள், கதைகளை வடித்துப் பகுத்ததே வரலாறு என்பதாகும்.
>
> — தாமஸ் கார்லைல்

> உடலைத் துறந்தபின் உலகோர் உள்ளங்களில் வாழும் நிலை எய்தினால் அது மரணம் அன்று.
>
> — தாமஸ் காம்பெல்



இராமநாதபுர மாவட்ட

# கூட்டுறவு மத்திய வங்கியின் பணிகளும் சாதனைகளும்

விவசாய உற்பத்திக் கடன் வழங்குதல், கைத்தறித் துணி உற்பத்திக் கடன் வழங்குதல் ஆகியவைகளைச் செய்துவரும் இராமநாதபுரம் மாவட்டம் கூட்டுறவு மத்திய வங்கியின் உற்பத்திப் பெருக்கம், வேலை வாய்ப்பினை அளித்தல், விலையேற்றத்தைச் சமநிலைப்படுத்துதல், சீரான வினியோகம் முதலியவற்றில் பெருஞ்சாதனையைச் செய்துள்ளது.

மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு மத்திய வங்கிகள் கடன் வழங்கி லேவாதேவி செய்து வருகிறது என்ற அளவில் தோற்றம் அளித்தாலும் அந்த லேவாதேவி மூலம் மாவட்டத்தில் விவசாய உற்பத்திக்கும் கைத்தறித் துணி உற்பத்திக்கும் பெருமளவு உதவி செய்து அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் பெரிய அளவில் வேலை வாய்ப்பினை அளிக்கும் பணியில் மத்திய வங்கி பெரும் பங்கு வகிக்கிறது என்பதற்குக் கீழ்க்கண்ட விளக்கம் சான்றாக அமைகிறது.

1920-ஆம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் வங்கி யூனியன் என்ற பெயரில் ஆரம்பித்த நிறுவனம் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுகாக்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டும் சேவை செய்து பின் மதுரை, இராமநாதபுரம் கூட்டுறவு வங்கியில் லேவாதேவி பெற்று வந்த -இராமநாதபுரத்தில் இதர தாலுகாக்களையும் தனது விவகார எல்லையில் சேர்த்துக் கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கென்று ஒரு தனி மாவட்ட மத்திய வங்கி 28-11-1945 முதல் செயல்படத் துவங்கி 50 ஆண்டு சேவையைப்பூர்த்தி செய்து 29—10—1971-ஆம் நாள் வங்கியின் பொன் விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. விழாவில்மாண்புமிகு டாக்டர், கலைஞர், முதல்வர் மு. கருணாநிதி, மாண்புமிகு சி. பா. ஆதித்தனார், எம். ஏ., பார்-அட்-லா, (கூட்டுறவுத் துறை அமைச்சர்), மாண்புமிகு செ. மாதவன், பி. காம். பி. எல்., (தொழில் துறை அமைச்சர்) ஆகியோர் பங்கு பெற்றது மாவட்டத்திற்குத் தனிச் சிறப்பாகும்.

வங்கியின் மொத்த உறுப்பினர்கள் ஆரம்பத்தில் இருந்ததை விடப் பல மடங்கு அதிகரித்து தற்போது 1284 உறுப்பினர்கள் உள்ளனர். தமிழக அரசும் வங்கியில் அங்கம் பெற்று ரூ. 12·70 இலட்சம் பங்கு செலுத்தியுள்ளது. வங்கியின் செலுத்தப்பட்ட மொத்தப் பங்கு மூலதனம் ரூ. 94·52 இலட்சமாக உயர்ந்துள்ளது.

29 நிருவாகக் குழு உறுப்பினர்களைக்கொண்டவங்கியின் நிருவாகம் அன்றாட அலுவலர்களைக் கவனிக்க ஏழு பேர் கொண்ட செயற்குழு ஒன்று நிறுவி வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுக்குட்பட்டு நிருவகித்து வருகிறது.

போதிய நிதிகளை டிபாசிட்டுகள் மூலம் பிற கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்தும், பொது ஸ்தாபனங்களிடமிருந்தும், தனி நபர்களிடமிருந்தும் சேகரித்து இணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வசதி அளித்தலும் கிராம நாணயச் சங்கங்களின் பணிகளை மேற்பார்வை செய்யும் மேற்பார்வைக் கழகங்களுக்கு அபிவிருத்தி சம்பந்தமாக உதவுதலும், இணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தையும் மேற்பார்வை செய்தலும் இதன் முக்கிய நோக்கமாகும்.

மத்திய வங்கியின் நிதி நிலைமை — கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் நிதி நிலைமையை விளக்குகின்றன.

| | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|
| 1. சொந்த நிதி— | |
| (1) பங்கு மூலதனம் | 94·52 |
| (2) காப்பு நிதி, இதர ரிசர்வு நிதிகள். | 62·31 |
| | 156·83 |
| (3) நடைமுறை மூலதனம். | 769·67 |
| (4) விவசாயக் கடன் காப்பு நிதி. | 9·91 |

மத்திய வங்கியின் முக்கியப் பணி கிராமப்புற சேமிப்புகளைத் திரட்டுவது. தலைமை அலுவலகத்தின் மூலமும் மாவட்டத்திலுள்ள வங்கியின் 28 கிளைகளின் மூலமும் சேமிப்புகளைத் திரட்டி அந்த நிதிகளைச் சமுதாயத்தில் உள்ள பல்வேறு துறையிலுள்ள மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு ஆங்காங்கே உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் கடன் வழங்கி உதவி செய்கிறது. உபரி நிதி வைத்துள்ள கூட்டுறவுச் சங்கங்கள், அறநிலைய பொது ஸ்தாபனங்கள், கோயில்கள், ஸ்தலஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள், பல்கலைக் கழகம் இன்னும் பல்வேறு பொது நிறுவனங்கள், தனி நபர்கள் தங்களுடைய உபரி நிதியை வேறு பொது வங்கியில் இட்டு வைக்கிறார்கள்.

ஏனைய வணிக வங்கிகளைப் போல் நிரந்தர இட்டு வைப்பு, ரெக்கரிங், கரண்ட், சேவிங்ஸ் முதலிய வகை இட்டு வைப்புகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் கவர்ச்சிகரமாக வட்டி விகிதங்கள் அளிக்கப்படுகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் டிபாசிட் நிலை 3 மடங்காக அதிகரித்துள்ளது மட்டுமல்லாமல் தற்போது ரூ.315·12 லட்சமாக உயர்ந்து காணப்படுகிற நிலை வங்கியின் மேல் மக்களின் வளர்ந்து

# உங்களுக்கு தெரியுமா?




**உங்களுக்குத் தெரியுமா?**

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.
உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2



# தமிழரசு

மலர்: 3 இதழ்: 22
16-5-1973



OFFICE OF THE STATE EDITOR ... UNIT, MADRAS
81/Gw/73





## சமதர்மச் சாதனைகளில் பெருமைக்குரியது!

### முதல்வர் டாக்டர் கலைஞர்

"இன்று எனக்கு ஒரு மகிழ்ச்சிகரமான நாள். இங்கிருந்து முதல் கணை கிளம்புகிறது. இந்தக்கணை பிற்போக்கு வாதிகளுக்கு அக்கினிக் கணையாகத் தோன்றலாம். முற்போக்கு வாதிகளுக்கு மலர்க் கணையாகத் தோன்றலாம்.

"கண்ணகிக்கு யார் யாரோ சிலை எழுப்பியிருந்தாலும், முதன் முதலாகச் சிலை எழுப்பியவன் சேரன் செங்குட்டுவன்தான். அதேபோலத் தொழிலாளர்களுக்கு நிருவாகத்தில் பங்கு என்கின்ற திட்டம் முதன் முதலாகத் தொடங்கிவைக்கப் பெறுவது இந்தச் சேரன் போக்குவரத்துக் கழகத்தில்தான்!

வரும் நம்பிக்கைக்கும் சான்றாகும்.

கிராம சங்கங்களின் அங்கத்தினர்கள் சங்கங்கள் மூலம் தங்களுடைய விவசாயத்திற்குத் தேவையான பயிர்க் கடன்களைக் குறுகிய காலக் கடன்களாகவும் குறிப்பிட்ட நீர்ப்பாசன வசதிக்குத்தேவையான கடன்களை மத்திய காலக் கடன்களாகவும் தங்கள் பயிர்க் கடன் தேவைக்குத் தகுந்தவாறு மத்திய வங்கியிலிருந்து பெற்றுக் கொள்கின்றனர். விவசாயிகள் பயிர்க்கடன் தேவைகள் தாங்கள்வைத்திருக்கும் நிலப் பரப்பையும் பயிர் செய்யும் வகையையும் அனுசரித்து ஆண்டுதோறும் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு வகைப் பயிருக்கும் ஒரு ஏக்கருக்கு ஏற்படும் உத்தேசச் செலவு விவசாயக் கூலி உள்பட கணிக்கப்பட்டு அந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக ஒரு விவசாயி 4 ஏக்கர் நெல் பயிர் செய்பவராக இருந்தால் நெல் பயிருக்கு நிர்ணயிக்கப்பட்ட உத்தேச செலவு ஒரு ஏக்கருக்கு ரூ. 300 என்ற அடிப்படையில் ரூ. 1,200 அவருடைய தேவை என்று கணக்கிடப்பட்டு கடன் வழங்கப்படுகிறது. கடன் வழங்கவும், திரும்பவும் வசூலிக்கவும் பருவகாலம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் விவசாயக் கடன்கள் வழங்க குறியீடு நிர்ணயம் செய்து பல்வேறு தாலுகாக்களுக்கும் அந்த குறியீட்டைப் பகிர்ந்து குறியீட்டை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நடப்பாண்டில் (1973–74-ஆம் நிதி ஆண்டிற்கு) குறுகிய காலப் பயிர்க் கடன் ரூ. 380 இலட்சமும் மத்திய காலக் கடன்கள் ரூ. 5·00 இலட்சமும் வழங்கத் திட்டமிட்டதில் ரூ. 33·93 இலட்சம் வரை குறியீடு அடைந்து எஞ்சிய அளவை நிறைவேற்ற முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இவ்வகைக் கடன்கள் வழங்குவதன் மூலம் மாவட்டத்திலுள்ள பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள், நலிவுற்ற விவசாயிகள் அனைவரும் குறைந்த வட்டியில் கடன் பெற்று தங்கள் விவசாயத் தொழிலை நடத்த வங்கி உதவி செய்வது மாவட்டத்தில் விவசாய உற்பத்தித் துறைக்கு செய்யும் சிறந்த பணியாகும்.

விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் மத்திய வங்கி பெரும் பங்கு வகித்தாலும் இணைக்கப்பட்ட கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு பணி மூலதனக்கடன் வழங்குவதின் மூலம் கைத்தறித் துணி உற்பத்தியைப்பெருக்குவதிலும் அதன் மூலம் நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் பணியிலும் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு நெசவாளர் சங்கங்கள் திறம்பட அலுவலாற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய வங்கி ஆண்டுதோறும் இத்துறைக்கு அதிகக் கடன்கள் வழ்ங்குவதின்மூலம் சங்கங்கள் தங்களது கைத்தறித் துணி உற்பத்தியை அதிகரித்துக் கொள்ளவும், அதன் மூலம் அதில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு நிரந்தரமாக கூலி பெறவும் உதவி செய்வது வங்கி மேற்கொள்ளும் சமுதாயப்பணிகளாகும். இத்துறைக்கு வங்கி செய்து வரும் பணியைக் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் விளக்குவதாயிருக்கின்றன.


தந்தி : ''கோடிஸ்ட்பேங்க்''

தொலைபேசி எண் வங்கி : 33447
(மூன்று லைன்)
பெருந்தலைவர் : 31304

## கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்

திரு. ஏ. எம். இராசா, எம்.ஏ., எம்.எல்.ஏ., பெருந்தலைவர்.

அஞ்சல் பெட்டி எண் : 1398 — கோயமுத்தூர்-18 — பின் கோட். 641018

எங்களது வங்கியில் பிக்சட் டிபாசிட்களுக்கு கீழ்க்கண்ட விகிதப்படி வட்டி அளிக்கப்படும்.

ரூபாய் 1,000-மும் அதற்கு மேலும் :—

15 நாட்களுக்கும் அதற்குமேல் 45 நாட்கள் முடிய 3% வருடத்திற்கு
46 நாட்களுக்கும் அதற்கு மேல் 90 நாட்கள் முடிய 3·50% வருடத்திற்கு

ரூபாய் 100-ம் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் :—

| | | |
|---|---|---|
| 91 நாட்களுக்கும் 6 மாதங்களுக்குள்ளும் | 5·25% | வருடத்திற்கு |
| 6 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்குள்ளும் | 5·75% | ,, |
| 12 மாதங்களுக்கும் 24 மாதங்களுக்குள்ளும் | 6·50% | ,, |
| 24 மாதங்களுக்கும் 60 மாதங்களுக்குள்ளும் | 7·50% | ,, |
| 60 மாதங்களுக்கும் 72 மாதங்களுக்குள்ளும் | 7·75% | ,, |
| 72 மாதங்களுக்கு மேல் | 8·00% | ,, |

குறிப்பு :—தர்ம ஸ்தாபனங்கள், மத ஸ்தாபனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் பிக்சட் டிபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதத்திற்குமேல் ½% வட்டி சேர்த்து கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

36 மாதங்களும், அதற்கு மேலும் உள்ள பிக்சட் டிபாசிட்டுகளின் அசலுக்கும் வட்டிக்கும் (கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குத் தவிர) அரசாங்க உத்திரவாதம் உண்டு.

சேவிங்ஸ் டிபாசிட்டுகள் :—1—4—1972 முதல் 4½% வட்டி வழங்கப்படுகிறது.

எம. பழனிசாமி, பி.காம். எச்.டி.சி.,
செயலாளர்.




| வருடம் | வழங்கிய கடன் உதவி | துணி உற்பத்தி மதிப்பு | நெசவாளர்கள் பெற்றதுண்டுக் கூலி |
|---|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்) | | |
| 1968 | 110·00 | 146·00 | 44·00 |
| 1969 | 195·00 | 159·00 | 48·00 |
| 1970 | 194·00 | 183·00 | 50·00 |
| 1971 | 264·00 | 225·00 | 62·00 |
| 1972 | | 274·00 | 70·00 |

1972-ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராக உள்ள நெசவாளர்கள் தறிக் கூலியாக ரூ. 70·00 இலட்சம் கூலி பெற்றிருக்கிறார்கள் என்றால், அந்த அளவுக்கு வேலை வாய்ப்பினை அளிக்க மத்திய வங்கி நிதி உதவி செய்துள்ளது என்பது பெருமைக்குரிய செய்தியாகும்.

அது மட்டுமல்லாது மாவட்டத்தில் 68 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்றி வருவதால் மாஸ்டர் வீவர்களும் தங்களிடம் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு நியாயமான கூலி கொடுக்க வேண்டும் என்ற உணர்வை வற்புறுத்துவதுடன் ஒரு சில வட்டாரங்களில் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள அங்கத்தினர்கள், மாஸ்டர் வீவர்களிடம் வேலை செய்யும் அங்கத்தினர்களைக்காட்டிலும் அதிகக் கூலி பெறும் சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

ஆக இந்தத் துறைக்கு மத்திய வங்கி செய்யும் உதவி சமுதாயப்பணி என்று சொன்னால் அது மிகையாகாது. இம்மாதிரியான வங்கியின் சேவையைப் பணக்கணக்கில் கணித்து கொடுக்க இயலாது.

வங்கி மாவட்டத்திலுள்ள பல்வேறு கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்குப் பணி மூலதனக் கடன் வழங்குவதின் மூலம் பண்டகசாலைகள் தங்களுடைய வியாபாரத்தை அபிவிருத்தி செய்து, அதன் மூலம் பண்டங்களின் விலையேற்றத்தைச் சமநிலைப் படுத்த மிகுந்த உதவியாக இருக்கிறது. தனியார் துறையினர் தாங்கள் பண்டங்களுக்கு உசிதம்போல் விலை நிர்ணயம் செய்வதை இப்பண்டகசாலைகள் தடை செய்ய உதவுகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

அதுமட்டுமல்லாது மாவட்ட அளவில் இயங்கி அவரும் இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனை சங்கம் நியாயமான விலையில் பண்டங்கள் மொத்தமாகக் கொள்முதல் செய்து நியாயமான விலையில் இணைக்கப்பட்ட பண்டகசாலைகளுக்கு விநியோகம் செய்து வருகிறது. மேலும் மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் மாவட்டத்திலுள்ள பல்வேறு வகைப் பயிர்கள் விவசாயத்திற்குத் தேவையான உரங்களை உற்பத்தி செய்து தாலுகாக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு விநியோகம் செய்வது மட்டுமல்லாமல் மாவட்டத்தில் அரசினர் உரங்களை விநியோகம் செய்வதில் பெரும் பங்கு வகிக்கின்றது.

பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களில் அபிவிருத்தி, கிராமப்புறங்களிலுள்ள மக்களுக்குப் புதிய வேலைவாய்ப்பை அளிக்க மிகுந்த உதவி செய்கிறது.

மத்திய வங்கி, மாவட்டத்திலுள்ள பால் வழங்கும் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதின் மூலம் கூட்டுறவுச் சங்க அங்கத்தினர்கள் பால் மாடு வாங்க உதவி செய்து அதன் பயனாக உற்பத்தி செய்யும் பாலை, சங்கங்கள் மூலமாக விற்பனை செய்து பயன் பெறுகின்றனர். ஒரு கிராமத்தில் ஒரு பால் சங்கம் ஏறத்தாழ குறைந்தது 100 அங்கத்தினர்களுக்காவது கடன் வழங்கி ஒவ்வொரு அங்கத்தினரும் பால் விற்பதின் மூலம் மாதம் ரூ. 50 பெற உதவி செய்கிறது. பால் விற்பனை மூலம் கிராமப்புற மக்களுக்கு உப தொழில் கிடைக்கும் வாய்ப்பை அதிகரிக்க மத்திய வங்கி நிதி உதவி செய்கிறது. இந்தக் கண்ணோட்டத்தில் தான் மத்திய வங்கி பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி செய்கிறது.

விருதுநகர் பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் பால் உற்பத்தியில் சிறந்த முன்னேற்றம் கண்டு வளர்ச்சி பெற்று ஒரு சிற்றுண்டிச் சாலையைச் சிறப்பாக நடத்தி வருகிறது. வசதி மிக்க சொந்தக் கட்டடத்தில் சிற்றுண்டிச்சாலை அமைத்து சுத்தமான சுவையான சிற்றுண்டி வழங்குவதில் பொது மக்களுக்குச் சேவை செய்து வருகிறது.

எங்கள் வங்கியானது ஏனைய வங்கிகளைப் போல் வாடிக்கைக்காரர்களுக்குப் பில்கள் மாற்றுதல், உண்டியல் மாற்றுதல், டிராப்டுகள் வழங்குதல் முதலி சேவைகளையும் குறைந்த கமிஷன் பெற்று வழங்கி வருகிறது.

தமிழக அரசின் புதிய திட்டப்படி வட்டாரத்திற்கொரு கிளை திறக்க வேண்டுமென்ற திட்டத்தில் தற்சமயம் மாவட்டத்தில் 28 கிளைகள் அலுவலாற்றி வருகின்றன.

> உழைப்பும் பயிற்சியும் இன்றி எழுதி வைத்தது படிப்பவர்களுக்கு உவகையளிப்பதில்லை.
> — டாக்டர் சாமுவேல் ஜான்சன்

கிளைகள் மூலம் அருகாமையிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு விவசாயக் கடன் பட்டுவாடா செய்யும் பணியையும் மேற்கொண்டு வருவதுடன் பிற வங்கிகள் அளித்துவரும் பாங்கிங் சேவைகளையும் வழங்கி வருகிறது.

வங்கியின் 20 கிளைகள் பொது மக்களுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் நகைக் கடன்கள் வழங்கி வருகிறது. பிற கிளைகளிலும் நகைக் கடன்கள் வழங்க ஏற்பாடு நடந்து வருகிறது.

வங்கியானது பங்கு மூலதனம், இட்டு வைப்பு, கடன் வழங்குதல் போன்ற இனங்களில் நல்ல அபிவிருத்தியடைந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமாகக் கீழ்க்கண்டபுள்ளி விவரங்கள் கொடுக்கப்படுகின்றன.

''இந்தியப் பூபாகத்திற்குள்ளே ஏற்கெனவே இருந்த, இந்தியாவில்–இன்றைக்குப் பங்களா தேசமாக ஆகியிருக்கிற அந்தப் பகுதியில், அது பங்களா தேசமாக மாறுவதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலில் முஜிபுர் ரகிமான் அவர்கள் ஒரு தேர்தல் பிரகடனத்தை வைத்தார்கள்.

''அதிலே இந்தத் திட்டத்தையும் அறிவித்தார்கள். அதற்குப் பின் தேர்தல் முடிந்து அதிலே முஜிபுர் ரகிமான் வெற்றி பெற்று அதன்பின் அந்த நாட்டிலே பெரும் புரட்சி கிளம்பிப் பின் அமைதி அடைந்து, இன்றைக்கு வேறு ஒரு நாடாக அமைந்திருக்கிறது. அதற்குப் பின்னும் ஒரு பொதுத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது! அந்தத் தேர்தல் பிரகடனத்தையும் நான் படித்துப் பார்த்தேன்! அவர்களும் செய்யாத அந்தத் திட்டத்தை நாம் இன்றைக்கு இங்கு முதன் முதலாகத் தொடங்கி வைக்கிறோம்!

பேரறிஞர் அண்ணா அவர்களிடம் ஒரு முறை நிருபர்கள் கேட்டார்கள். 'நீங்களும் [illegible] லிஷம் கேட்கிறீர்கள்; இந்தியாவில் இருக்கிற பல்வேறு கட்சிகளும் சோஷலிஷம் கேட்கிறார்கள்! இப்படி எல்லோரும் [illegible] கும் போது உங்களுக்கு [illegible] ஏன் தனியாக ஒரு கட்சி?' என்று கேட்டார்கள்.

அதற்கு அண்ணா அவர்கள் ''அவர்கள் எல்லாம் சோஷலிசத்தை வாயளவில் பேசுவதற்காகவே கட்சி வைத்திருக்கிறார்கள். நான் அதனைச் செயல்படுத்துவதற்காகக் கட்சி வைத்திருக்கிறேன்'' என்று பதில் கூறினார்கள்.

அண்ணா வழியில் நடைபெறுகின்ற இந்த அரசு அண்ணா சொன்ன அந்த மொழியை இதயத்தில் ஆழமாகப் பதிய வைத்துக் கொண்டு சமதர்மத் திட்டங்களை உதட்டளவு உச்சரிப்பாக ஆக்கிவிடாமல், அதை உருவாக்கிட - செயல்படுத்திட அவைகளை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்திட ஆர்வத்துடன் பல்வேறு கூட்டங்களில் [illegible] தொடர்ந்து [illegible] பெற்றிருக்கிறது; சமதர்மப் பயணத்தை [illegible] [illegible] பவர் [illegible] யில் மாத்திரமல்ல; [illegible] ணி யாற்றுகிறவர்கள் மாத்திரமல்ல –தொழிலாளர்; ரிக்ஷா [illegible] வர்களும் தொழிலாளர்கள்தான்; காலையிலிருந்து மாலைவரை கழனி திருத்துபவனும் தொழிலாளிதான்; மூட்டை தூக்குபவனும் தொழிலாளிதான்; சலவை செய்கிறானே அவனும் தொழிலாளிதான்—சிகை அலங்காரம் செய்கிறானே அவனும் தொழிலாளிதான். ஆகவே, காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்; அவன் காணத் தகுந்தது வறுமையும், பூணத் தகுந்தது பொறுமையும் என்ற நிலை இருக்கலாமா?

''காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்—அவன் காணத் தகுந்தது வறுமையாம்!



பூணத் தகுந்தது பொறுமையாம்!''
என்று புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் கேட்டார்.

அவன் காணத் தகுந்தது வறுமை அல்ல; அவன் பூணத் தகுந்தது பொறுமை அல்ல. அந்த வறுமையை விரட்டுவோம்! கொடுமைக்கும் ஓர் எல்லை உண்டு அதனை அந்தக் கொடுமை மீறிப் போகாமல்-அவன் பொங்குமாங் கடலாக மாறாமல் அதனை அடக்குகின்ற ஒரே ஆயுதம் அடக்குமுறை அல்ல; அதை அடக்குகின்ற ஒரே ஒரு ஆயுதம் துப்பாக்கிவேட்டுச் சத்தமல்ல; அதனை அடக்குகின்ற ஆயுதம் சமதர்மத் திட்டங்கள்தான் என்பதை உணர்ந்த அரசு இன்றைக்குத் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

என்னை இங்குப் பலமாகப் பாராட்டினார்கள். மாலைகள் எல்லாம் மலைபோல் குவிந்தன. நான்தான் உரியவன் இவ்வளவு பாராட்டுகளுக்கும் என்று எண்ணிக் கொண்டால் என்னைப் போன்ற பைத்தியக்காரன் வேறு யாருமல்ல!

ஏனென்றால், இதுபோன்ற காரியங்களில் நான் ஒருவன் தனியாக நின்றல்ல; நம் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அமைச்சரவையிலே வீற்றிருப்பவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுவுடைமைத் தத்துவத்திலே மனம் கொண்ட தோழர்கள், அத்தனை பேரும் என்னை இயக்கி வைக்கிறார்கள். எனக்குக் கட்டளை இடுகிறார்கள்; அவர்கள் வில்லாக இருக்கிறார்கள்; நான் அம்பாக இருக்கிறேன் என்பதை மாத்திரம் யாரும் மறந்துவிடக்கூடாது! அப்படிப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த வகையிலே தான், நான் இப்படிப் பட்ட காரியங்கள் நடைபெறுகிற நேரத்திலே பெருமையும் உற்சாகமும் கொள்கிறேனே அல்லாமல், என்னால் அல்லவா இது நடக்கிறது-நானல்லவா இதற்குக் காரணம் என்று இதற்கெல்லாம் 'நானேதான் காரணம்' என்று எல்லாம் நானேதான் என்று கூறிக்கொள்கிற 'ஆணவம்' என் தலையிலே என்றைக்கும் ஏறாது என்பதைக் கூறிக் கொள்கிறேன். நாங்கள் அனைவரும் சேர்ந்து செய்கிற காரியம் என்றுதான் இங்குக் குறிப்பிடுகிறேன்.

அதன் வெற்றியைத்தான் இங்கே பார்க்கிறீர்கள்! இன்றைக்குச் சேரன் போக்குவரத்துக் கழகத்திலே கிட்டத்தட்ட 1,500 பேர் நிர்வாகத்திலே பொறுப்பேற்க முன் வந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பங்குதாரர்களாகும் உரிமை இன்றைக்குக் கிடைத்திருக்கிறது. முதலீட்டில் பங்கு பெறுகின்ற உரிமையை இன்று அவர்கள் பெற்றிருக்கிறார்கள்!



| வருடம் | பங்குத் தொகை | இட்டுவைப்புகள் | காப்பு நிதி | லாபம் | வரவேண்டிய கடன்கள் |
|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | | |
| 1966–67 | 55·61 | 145·72 | 15·25 | 5·95 | 301·59 |
| 1968–69 | 61·23 | 149·42 | 16·52 | 5·07 | 36·420 |
| 1970–71 | 73·79 | 221·93 | 21·38 | 7·11 | 482·56 |
| 1971–72 | 75·58 | 230·85 | 21·38 | 7·40 | 653·53 |
| 1972–73 | 94·52 | 315·12 | 22·87 | .. | 704·14 |

மாவட்டத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு விவசாய உற்பத்திப் பெருக்கம் இன்றியமையாத அடிப்படையாகும். அதைத்தொடர்ந்து விவசாயத் தொழிலுக்கு அடுத்து முக்கியத்துவம் பெறும் நெசவுத் தொழில் வளர்ச்சியும் மிக மிக முக்கியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இந்த இருபெரும் தொழில்களில்ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தங்களுடைய தொழிலை திறம்பட மேற்கொள்ள நிதி வசதி தேவை என்பதையும் யாரும் மறுப்பதற்கில்லை. ஆகவேதான் இந்த இருபெரும் தொழில்களை வளர்ச்சியடையச் செய்யும் கட்டத்தில் மத்திய வங்கியின் நிதி வசதி முக்கியத்துவம் வகிக்கிறது.

> திறமையற்றவர்கள் வாழ்வில் பொருள் வளம் என்பது இல்லை.
>
> — பெஞ்சமின் டிஸ்ரேலி

மேலும் மாவட்ட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு மத்திய வங்கி ஒரு மிகப்பெரிய இன்றியமையாத கருவி என்பதை அனைவரும் தங்கள் கடமையெனக் கருதி செயல்பட வேண்டுமென்பதையும் உணர்த்துவதாயிருக்கிறது.

இவ்வங்கியின் தலைவராக திரு. சுப. தங்கவேலன் அவர்களும், செயலாளராக திரு. சோ. சிவராசன்அவர்களும் சிறப்புற பணியாற்றி வருகின்றனர்.

சட்டம்– ஒழுங்கு, அமைதிக்கு உட்பட்ட சுதந்திரத்தையே நான் சுதந்திரம் எனக் கூறுவேன். கட்டுப்பாடு, உயர் பண்புகள் இவற்றுடன்தான் சுதந்திரம் இருக்க முடியும் என்பதுடன், இவையன்றிச் சுதந்திரம் இல்லை என்பதும் உறுதி.

*    *    *    *    *    *

சுதந்திர நாடு ஒன்றில் அரசியல் கட்சிகள் எப்போதும் இருக்க வேண்டியது அவசியம்.

*    *    *    *    *    *

அரசியலில் பெருந்தன்மை காட்டுதல் உயர்ந்த உண்மையான அறிவுப்பாடு ஆகும்; பரந்த பேரரசைக் குறுகிய உள்ளங்கள் ஆளுதல் இயலாது.

*    *    *    *    *    *

ஏதோ ஒரு மாயையால் கவரப்பட்ட நிலையிலன்றி, மக்கள் தங்களது சுதந்திரத்தையும் உரிமைகளையும் ஒருபோதும் விட்டுக் கொடுப்பதில்லை.

*    *    *    *    *    *

மக்கட் சமுதாயத்தில் இக்கணந்தோன்றி மறுகணம் மறையும் தனிப்பட்டவர்கள் வெறும் நிழல்களே; மக்கட் சமுதாயத்தின் பொதுநலனே உண்மையானதும் நிலையானதும் ஆகும்.

*    *    *    *    *    *

கடந்த காலத்தில், முன்னோர்களது வாழ்க்கையில் படிப்பினைக் கற்க விரும்பாத மக்கள் வருங்கால வழித்தோன்றல்களின் நன்மையைக் கருதிப் பார்க்க மாட்டார்கள் எனலாம்.

— எட்மண்ட் பர்க்.


## * அதிசய நீர் ஊற்று நிபுணர் *

குழாய் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும், (பழைய கிணற்றில் போரிங்கு இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற்கு திசையிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு திசையிலிந்து கிழக்கு நோக்கியும் சென்றுகொண்டு இருக்கும் நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள இரண்டு நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டுபிடித்து குறிக்கப்படும். நீர் ஊற்றுக்கள் உள்ள ஆழமும், அவைகளில் உள்ள தண்ணீரின் அளவும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் போதுமான அளவு தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதப்படி ரூ. 6 ஆயிரம் வரை நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு—20 பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K.கந்தசாமி,**
(Member of the British Society of Dowers, London),
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி அஞ்சல் :: கோயமுத்தூர்-6.
தொலைபேசி எண் 31912.




# வெண்பாப் போட்டி




(62)

## ஈற்றடி: நெஞ்சமே அஞ்சாதே நீ!

நீதிக்குப் போரிடவும் நேர்வரவும் அஞ்சும்கீழ்ச்
சாதியிலே பெண்பெறவும் தாய்மொழிக்குச் சேதமென்றால்
துஞ்சாது மெய்க்குருதி சொட்டிடவும் என்றென்றும்
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—புலவர் மா. புகழேந்தி, ஓலைப்பாடி.

உள்ளத்தே தூய்மை யொருசிறிது மில்லாமல்
வெள்ளை யுளத்தர்போல் வேடமிடும்—பொல்லாத
வஞ்ச மனத்தர்களின் வாய்மிரட்டுக் கென்றென்றும்
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—நாகு, ஆறுமுகா், அரிக்காரன்வலசு.

''இந்திய நாட்டில் இருக்கின்ற மாநிலத்தில்
'செந்தமிழ் நாடு' சிறப்புடைத்தாம்,—எந்நாளும்
பஞ்சம் பசியின்றிப் பாங்குடனே வாழ்ந்திடலாம்
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—ப. குப்புசாமி, திருச்சி-4.

செந்தமிழ்ச் சொல்லெடுத்துத் தேன்கவிதை பாடிடுவாய்
ஈந்தமிழர் வாழ்வுயர நாடோறும்—உந்தியெழும்
பிஞ்சுளங்கள் மேன்மைபெறப் பேசிடுவாய் வையகத்தில்
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—புலவர் ப. சம்பந்தன், திருக்கோவலூர்.

சந்தக் கவியழகும், சந்தனச் சொல்லழகும்,
நந்தம் மொழியில் நனியுண்டு!—எந்தமிழை
பஞ்சமொழி தாக்கத்தான் பாயுமோ? கொஞ்சமும்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

— ஐ. திருவருட்பாவை, பழையகிருஷ்ணபுரம்.

ஏர்த்தொழிலில் மேம்படுவோம் எந்தம் தமிழரசின்
சீர்த்த வழியே செயல்படுவோம்—ஆர்த்துவரும்
பஞ்சம் அகற்றப் பசுமைப்புரட்சி செய்வோம்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ச. சுந்தரராசன், கும்பகோணம்.

இஞ்சி எலுமிச்சை ஈயும்நற் சாற்றினொடு
கொஞ்சம் நறுந்தேன் கலந்துண்டால்—எஞ்ஞான்றும்
தஞ்சம் எனப்பித்தம் தாள்பணியும் நல்மருந்தாம்!
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—மு. வரதராசன், பி.ஏ., புதுக்கோட்டை.

புன்னை மரத்தடியில் போயிருங்கள் என்றவள்ஏன்
இன்னும் வரக்காணோம்? ஏய்த்தாளோ!—கன்னியவள்
வஞ்சிக்க மாட்டாள் வருவாள் தனைத்தருவாள்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—விரேதலீலன், இரா. வெள்ளோடு.

வென்ற தமிழ்முன்னே வீழ்ந்த பகையாவும்
குன்றாய் எழுந்து குவிந்தாலும்—மன்றினிலே
அஞ்சா அரிமாப்போல் ஆட்சி நிலையாக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

கத்திகொண்டு உன்றன் கழுத்தறுக்க வந்தாலும்
கத்துங் கடலில் கரைகாண—வைத்தாலும்
வஞ்சகரை எஞ்ஞான்றும் வையத் தெதிர்ப்பதற்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—இனியன், அரக்கோணம்.

நித்தம் நினைவிழந்து நிம்மதியாம் நித்திரையில்
சித்தம் தடுமாறிச் சிற்றிடையைச்—சத்தமின்றி
வஞ்சித் தணைக்க வருவார் கொடிறுடைக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—அ. இராமச்சந்திரன் அம்மனூர்.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :—
புலவர் மா. புகழேந்தி,
ஓலைப்பாடி அஞ்சல்,
வேப்பூர் வழி,
பெரம்பலூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.



இவை சாதாரணமான விஷயங்கள் அல்ல. ஒரு வங்கி விழாவில் பேசும் போது நண்பர் இராஜாவினிடத்தில் கூறினேன். ஒரு காரியம் நடைபெறும் வரை பெரிதாகத் தோன்றும். நடைபெற்று முடிந்த பிறகு 'என்ன பிரமாதம்?—இது சாதாரணம் இது நம்மால் முடியாதா?' என்று கூடப் பலருக்கு எண்ணத் தோன்றும்!

ஆனால், நடை பெறுகிற வரையில் அதை யார் நினைத்தார்கள்? யார் செயல் படுத்தினார்கள்? எந்த உள்ளத்திலே இது தோன்றியது? அல்லது யார்—எந்த அரசு—எந்த இயக்கம்—எந்த ஆட்சி நடத்துபவர்கள் செய்தார்கள்? என்பதுதான் முக்கியம்.

எங்களுக்கு இருப்பதெல்லாம் இதைச் செய்து எங்களைச் சாதாரணமானவர்கள் என்று பிறர் கருதினால் அதை நாங்கள் மிகப் பெருமையாகக் கருதுவோம்!

ஆகவேதான், இது மாதிரியான மிகச் சாதாரணமான காரியங்களைச் சாதாரணமான நாங்கள் சாதாரணமாகவே செய்திருக்கிறோம். பெரியவர்களுக்கு அது சாதாரணமாகத் தெரியும். ஏனென்றால் கருணாநிதியின் உள்ளத்திலே இருந்து கிளம்பியதால் மிகச் சாதாரணமாகத் தான் தெரியும்.

எங்களைப் பொறுத்தவரையிலே இந்தக் காரியங்களை நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம்.

இந்த நாட்டு மக்களுக்காக—தொழிலாளி சமுதாயத்துக்காக—பாட்டாளி வர்க்கத்துக்காக—இன்றைக்கு நாம் ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க் கட்சியாக இருந்த அன்று எவை எவை செய்திட வேண்டும் என்று அன்று இருந்த ஆளுங் கட்சியைப் பார்த்துச் சொன்னோமோ, அவைகளை எல்லாம் நடத்திக் காட்ட வேண்டிய பொறுப்பிலே நாம் இருக்கின்ற காரணத்தால், அதைச் செய்தே தீர வேண்டும்.

இன்றைக்கு இந்தப் போக்குவரத்துக் கழகத்திலே இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோமென்றால், நான் கூடச் சற்று எண்ணிப் பார்த்தேன். இதிலே 1,500 பேர் சேர்கிறார்கள் என்றால் எங்கே இதில் தொழிலாளர்கள் சேர்வார்களோ முன் வருவார்களோ என்று அச்சப்பட்டேன்.

ஏனென்றால், இந்த அச்சத்தை உருவாக்கிடுவதற்குத்தான் நிறைய 'நல்லவர்கள்' இருக்கிறார்களே என்பதால் சந்தேகப்பட்டோம்.

ஆனால், இவை அனைத்தையும் மீறி 1,500 பேர் இந்தத் திட்டத்திலே சேர்ந்து அரசாங்கத்தின் திட்டத்துக்கு அனுகூலமாக இருக்கிறார்கள் என்றால், மிச்சமுள்ளவர்களும் இன்னும் ஒரு வாரம், இருவார காலத்திற்குள் சேர்ந்து விடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு!

குறைந்த பட்சம் 500 ரூபாய் செலுத்தி அவர்கள் இந்தத் திட்டத்திலே பங்குதாரராகச் சேருவார்கள் என்றால் அவர்கட்குக் குறைந்த பட்சம் 8 சதவிகிதமாவது அந்த 500 முதலீடு செய்வதற்காக, அவர்களுக்குக் கிடைத்திட வேண்டும். இலாப நட்டக் கணக்குப் பார்க்கின்ற காலத்தில், எழுதுவதைவிடச் செலவினக் கணக்குகள் எழுதப்படுகிற நேரத்திலேயே அந்த 8 சதவிகிதக் கணக்கும் தொழிலாளர் கணக்காக எழுதப்பட்டாக வேண்டும், அதற்கு வருமான வரி விலக்கு வேண்டும். அதற்குச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம்.

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் எழுதிய கடிதத்தில் மிக உற்சாகமான திட்டமிது. அனைவரையும் கவரக் கூடிய திட்டமிது; இதைப்பற்றிப் பரிசீலித்து கொண்டிருக்கிறோம். என்று எழுதியிருக்கிறார்கள். உள்ளபடியே அதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆகவே, விரைவில் நமக்கு மத்திய அரசின் அனுமதி கிடைக்கும்.

இதிலே 500 ரூபாய் பங்கு போட்டவர்கள், எங்கே நமக்கு அந்த 500 ரூபாயாவது கிடைக்குமா என்று கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால் சோஷலிசத்தின் மாதா இன்று இந்தியாவின் பிரதமராக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள்!

ஆகவே, அந்த அனுமதி நிச்சயம் நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய உண்டு. அந்த நம்பிக்கையோடு இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டும்.

இதற்கு அடுத்தபடியாக மற்ற போக்குவரத்துக் கழகங்களிலும் நாம் இந்தத் திட்டத்தைத் தொடங்குவதாக இருக்கிறோம்!

முதலிலே சேரன் போக்குவரத்து; அடுத்ததாகப் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் ஜூன் திங்கள் பத்தாம் தேதி இந்தத் திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. இதைப் பாண்டியனின் சார்பாகச் சேரனுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

அம்பு வேகமாகப் போகக் கூடியது. ஆகவே, முதலில் ஆரம்பித்திருக்கிறோம். மீனும் அம்புக்குச் சளைத்ததல்ல—அது நீந்திப் போகக்கூடியது. ஆகவே நீந்திச் செல்கின்ற பாண்டியன் போக்குவரத்தில் அடுத்தபடியாக செயல்படுத்தப்படுகிறது, வில்லுக்கு அடுத்து மீனுக்குத் தந்திருக்கிறாயே! சோழனுக்குத் தரவில்லையே என்று தஞ்சை மாவட்டத்துக்காரர்கள் கேட்டால் புலி எப்போதும் சற்றுப் பதுங்கித்தான் பாயும் என்பதால் அதில் அடுத்துத் துவங்கும்!

பல்லவன் போக்குவரத்துக் கழகம் சிங்கச் சின்னம்! என்றைக்கும் சிங்கம் அவசரப்படாது. சிங்கம் என்றும் திரும்பிப் பார்த்துத்தான் முன்னேறும்! அடுத்து அண்ணா போக்குவரத்துக் கழகத்திலும், படிப்படியாக இந்த ஆண்டுக்குள்ளாக எல்லாப் போக்குவரத்திலும் இந்தத் திட்டம் அமலுக்கு வரும்.

போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்திருக்கிற இந்த நேரத்தில் இதைவிடத் தொழிலாளர்கட்கு நன்மை செய்கிற சர்க்கார் எது இருக்க முடியும் என்று செழியன் அவர்கள் கேட்டார்கள். தொழிலாளர் சமுதாயத்திற்குச் சங்கடங்கள் இல்லாமலில்லை. இன்றைக்கு மின்வெட்டின் காரணமாகத் தொழிலாளர்கள் சமுதாயத்திலே பலர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவற்றைக் களைவதற்காக நாம் முயற்சித்துப் பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டு வருகிறோம்! இங்கு என்னைச் சந்தித்த நிருபர்களெல்லாம் அதைப்பற்றிப் பல விளக்கங்களைக் கேட்டார்கள்.

நூல் பற்றாக் குறையின் காரணமாகத் கைத்தறித் தொழிலாளர்கள் மிகுந்த இடருக்கு ஆளாகியிருக்கிறார்கள். மூன்று இலட்சம் பேர் இன்று அவதிக்கு ஆளாகியிருக்கிறார்கள்.

தமிழக அரசின் சார்பாக நமது அமைச்சர் மாதவன் எவ்வளவு தீவிரமாகத் திட்டங்கள் தீட்டிப் பற்றாக் குறையைத் தீர்த்திட முயன்றார்கள்!

நூல் பற்றாக்குறையின் காரணமாக நூல்களை அளிக்கின்ற அந்த முழு உரிமையை நாம் இன்னும் பெறவில்லை! அந்தப்பெரும் பொறுப்பு மத்திய அரசிடத்தில் இருக்கிறது. நான் மத்திய அரசையும் குறைகூறவில்லை. அவர் [illegible] சில சங்கடங்கள் இருக்[illegible] ஆகவேதான் [illegible] பற்றாக்குறை காரணமாகக் கைத்தறித் தொழிலாளர்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியிருக்கின்றனர். இங்கு கூட அவர்களைச் சார்ந்தவர்கள் சிலர் என்னைச் சந்தித்துப் பேசினார்கள்; மோட்டா நூல் கிடைக்கவில்லை என்றார்கள்!

கடைசியாக அவர்கள் என்னிடத்தில் கேட்டார்கள்! இந்த மின்வெட்டுத் தீர்கிற வரையாவது எங்களுக்கு ஏதாவது கடன் உதவியாவது செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள்.

நானும் அதைப்பற்றி யோசித்தேன். மாவட்ட ஆட்சித் தலைவரைக் கலந்து பேசினேன். இது கோவை மாவட்டத்துப் பிரச்சினை மாத்திரம் அல்ல. தமிழ்நாடு முழுவதும் உயர்ந்த ரக நூல் கிடைக்காத காரணத்தினால் கைத்தறியாளர்கள் மிகுந்த சங்கடத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவேதான் சென்னையிலிருக்கின்ற நிதித்துறைச்செயலாளரோடுதொடர்பு கொண்டு பேசினேன்.

பேசியதற்குப் பின்னர் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறேன். தொழிலாளருக்காக நடைபெறுகிற இந்தக் கூட்டத்தில் கைத்தறித் தொழிலாளருக்காக ஓர் அறிவிப்பினைத் தருவது முறை என்று கருதுகிறேன். ஏன் அவர்களுக்குக் கடன் நிவாரணம் தரக்கூடாது என்று காலையிலே பேசிய நிருபர்கள் கேட்டார்கள்.

இப்படி ஒரு நிலையை வந்து எந்த மாநிலத்திலாவது செய்திருக்கிறார்களா என்று கேட்டேன்.

அவர்களிலே ஒரு நிருபர் "ஆலைகள் மூடப்பட்ட நேரத்தில் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ரூ. 6 இலட்சம் அளித்தீர்களே! எந்த மாநிலத்திலாவது கொடுத்தார்களா"! என்று என்னையே திருப்பிக் கேட்டார்.

'இல்லை' என்று சொன்னேன்!

'அதுபோல் இப்போதும் இவர்களுக்கு உதவி செய்து மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டியாக இருக்கக் கூடாதா?' என்று கேட்டார்

அவர் கேட்டதை மனத்திலே வைத்துக்கொண்டு பல்லாயிரக் கணக்கில் அவதிப்படுகின்ற உயர் ரக நூல் கிடைக்காமல் அவதிப்படுகின்ற கைத்தறியாளருக்குக் கடனாக ஒரு கோடி ரூபாய் தமிழ்நாடு அரசாங்கம் தருகிறது என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த ஒரு கோடி ரூபாயில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் பயன் பெறுகிற அளவுக்கு, இந்த மாதம் 15ஆம் தேதியிலிருந்து தலைக்கு ரூபாய் நூறு கடனாகத் தரப்படும். அதனை அவர்கள் ஆகஸ்டு மாதத்திலிருந்து மாதம் பத்து ரூபாய் வீதம் கட்டினால் போதுமானது என்ற அறிவிப்பினையும் தருகின்றேன்!

### ஏர் இந்தியா

வருகின்ற ஜூன் திங்களில் ஏர் இந்தியாவின் பணி தொடங்கி 25 ஆண்டுகள் நிறைவேறுகின்றன. அகில உலக நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இது சாதாரணமானதுதான். உலகத்தில் 18வது இடத்தைப் பெறுகிறது.

ஏர் இந்தியா, ஆடவர், பெண்டிர் உட்பட ஏறக்குறைய 10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிறது. 1971-72-ல் 79·92 கோடி ரூபாய் தேடியுள்ள இந்த நிறுவனம், 81·58 கோடி ரூபாய் செலவிட்டிருக்கிறது.

### தீத் தடுப்பு

நல்ல நாகரிக வாழ்வில், தீத்தடுப்புப் படையினரின் தொண்டு மிக மிகத் தேவைப்படுகிறது. தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம், அரியானா, மேற்கு வங்கம், கேரளம் ஆகிய மாநிலங்களில் மாநில அரசினரின் பொறுப்பில் உள்ள இந்தப் படை மராட்டியம், குசராத், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் நகராட்சியின் நிருவாகத்திலுள்ளது.

சென்னையில் மட்டும் 13 தீத்தடுப்பு நிலையங்களும், பல்வேறு சிறிய நகரங்களிலெல்லாம் சேர்த்து 47 நிலையங்களும், மதுரையில் 2 நிலையங்களும் ஆகத் தமிழ் நாட்டில் [illegible] 62 தீத்தடுப்பு நிலையங்கள் உள்ளன.

# வருவாய்த்துறையில்...

விவாதத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள் வருவாய்த் துறையைக் குறை சொல்லாமல் பேசினார்கள். நிரம்பவும் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். அதிலே அலட்சியம் காட்டினார்கள் என்று நான் கருதவில்லை. அதிகம் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. ஏனென்றால், வருவாய்த்துறை அவ்வளவு சிறப்போடு நடக்கிறது என்று எல்லாரும் ஒத்துக்கொள்கிறார்கள் என்று கருதுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் பேசும்பொழுது, உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படிக்கும் போது உழுபவன் நிலத்தை வாங்கிக் கொள்கிற அளவிலே சட்டம் வர இருக்கிறது என்று சொன்னார்கள். சட்டம் வர இருக்கிறது. அதைப்பார்க்கப் போகிறீர்கள். அந்தச் சட்டம் வரும்போது அதுபற்றி விரிவாகப் பேசலாம்.

நிலம் வழங்குவதிலே குறைபாடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது எனக்குப் புரியவில்லை. சாதாரணமாக, புறம்போக்கு நிலத்தைக் கொடுக்கும் போது தவறு நடக்கிறது என்று சொல்கிறார்களா, அல்லது 1 இலட்சத்து 57 ஆயிரம் பேருக்குக் குடியிருப்பு மனை கொடுத்ததில் தவறு ஏற்பட்டது என்று கருதுகிறார்களா என்று தெரியவில்லை. 1 இலட்சத்து 57 ஆயிரம் பேருக்கு மனை கொடுத்தும்கூட, சில பேருக்கு வழங்கியதில் தகராறு இருக்கிறது.

பேசிய அத்தனை பேரும் குடியிருப்பு மனைக்கு 5 சென்ட் வேண்டுமென்று கேட்டார்கள். 3 சென்டுக்கு மேல் குடியிருப்பு மனை தேவையில்லை யென்று அரசு கருதுகிறது. இப்பொழுதே ஏராளமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. இப்படிச் சொல்வதால், குடியிருப்புச் சட்டத்தின் கீழ் எவ்வளவு நிலத்தை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்களோ, அது முழுவதுமே பட்டா செய்து கொடுக்கப்படும். அது 10 சென்டாக இருந்தாலும், 5 சென்டாக இருந்தாலும், 3 சென்டாக இருந்தாலும், 2 சென்டாக இருந்தாலும், 1 சென்டாக இருந்தாலும் முழுவதும் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். ஆனால், புறம்போக்கு நிலத்திலே 3 சென்ட் கொடுத்தால் போதும் என்று விதிவைத்து அதற்கேற்றவாறு பிரித்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

பொதுவாக, பீனல் வாட்டர் ரேட் கூடாது என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா கூட பேசினார்கள். தண்டத் தீர்வை இருக்கக் கூடாது என்று பேசினார்கள். அதை விதிக்காமல் இருக்க முடியாது. அது தேவையில்லை யென்றுசொன்னால்கீழ் ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் பாயாது. ஒரு அணை கட்டும் பொழுது, மேல் ஆயக் கட்டுக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கும், கீழ் ஆயக்கட்டுக்கு எவ்வளவு தண்ணீர் கிடைக்கும் என்று திட்டம் போட்டுக் கட்டுகிறோம். தண்டத் தீர்வை விதிப்பதில்லை யென்றால், கீழ் ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் போகாமல், மேல் ஆயக் கட்டில் வைத்திருப்பவர்களுக்கே தண்ணீர் போகும். ஆகவே, கீழ் ஆயக் கட்டிலிருப்பவர்கள் பயன்படுத்தாமல் மேல் ஆயக் கட்டிலிருப்பவர்களே பயன் படுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்வது நியாயம் அல்ல. இது நீதி மன்றத்திற்குச் சென்றால் கீழ் ஆயக்கட்டை வைத்திருப்பவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பாகும். ஆகவே, தண்டத் தீர்வையை எடுக்க வேண்டுமென்று சொல்வது நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். தவருகத் தண்ணீரை யார் எடுத்தாலும் நிச்சயமாகத் தண்டத் தீர்வை விதிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதில் யாருக்கும் ஆட்சேபனை தேவையில்லை யென்றும் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கணபதி அவர்கள் இராதாபுரம் பகுதியில் பெரும் பகுதி பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றும் வரியையெல்லாம் நீக்கவேண்டும், ரத்துச் செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். பொதுவாக, தமிழ்நாட்டிலே இப்படி இருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறோம். எந்த எந்தப் பகுதியிலே வறட்சி நிலைமையிலாயினும் சரி, மின்சார வெட்டினாலாயினும் சரி, பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால், முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள், பஞ்சமோ, வெள்ளமோ வந்தால் எப்படிவிவசாயிகளுக்குச் சலுகைகள் அளிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட சலுகைகள் மின்சார வெட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அளிக்கப்படும் என்று.

கடன் ஒத்திவைப்புப் பற்றி வலியுறுத்திச் சொல்கிறார்கள். கடனைத் திருப்பிச் செலுத்திட வசதியிருந்தாலும் அவர்களுக்கும் கடன் வசூலை ஒத்திவைக்கவேண்டுமென்றுசொல்வது சரியல்ல. ஆனால், கெடுபிடி செய்து வசூலிப்பதாக இல்லை. கெடுபிடி செய்வதாக இல்லை யென்ற காரணத்திற்காகக் கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டாம், கொடுக்கத் தேவையில்லையென்ற அளவுக்கு வந்துவிடக் கூடாது

மாண்புமிகு உறுப்பினர் சுப்பையா அவர்கள் பேசும் பொழுது, 5 ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்து, வசூலிக்க முடியாமல் இருக்கிற வரிகள் அத்தனையும் ரத்துச் செய்ய வேண்டுமென்று சொன்னார்களென்று கருதுகிறேன். அப்படிச் சொல்வது சரியல்ல; அவர்கள் திருப்பிச் செலுத்தியாக வேண்டும். 5 பசலி, 6 பசலி செலுத்த வேண்டியிருக்குமானால், பாக்கி இருக்குமானால், இப்பொழுது நடைமுறைக்கான வரியையும், பழைய பாக்கியில் ஒரு பசலிக்கான வரியையும் சேர்த்து வசூலிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம்.



முதலிலே இருக்கிற பாக்கியில் ஒரு பசலி வரி, கரன்ட் பசலிக்கான வரி, இரண்டையும் சேர்த்துத் தொகை வசூலித்தால் போதும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. எல்லாவற்றையும் சேர்த்து வசூலிக்க வேண்டாமென்று சொல்லியிருக்கிறேன். இது விவசாயிகளுக்குச் சலுகையாக இருக்கும். ஆகவே, அவர் அதை வற்புறுத்தத் தேவையில்லையென்று சொல்லிக் கொள்கிறேன்.

கடனுக்கு, வட்டிக்கு வட்டி போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது எனக்குப் புரியவில்லை. இதை, திரு பொம்மன் அவர்கள் தெரிவித்தார்கள். வட்டிக்கு வட்டி கேட்பதில்லை. ஐ.எம்.எஸ் லோனோ, நக்காவி லோனோ வாங்கி இருப்பார்களானால், அந்தக் குறிப்பிட்ட தேதியன்று அதைக் கட்டியாக வேண்டும். அடுத்த நாள் கட்டினால் கூட, ஒரு வருடத்திற்கான வட்டியையும் சேர்த்துக் கட்டவேண்டுமென்று முன்பு ஏற்கெனவே உத்தரவு இருந்தது. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டார்கள். அதனால், அதை மாற்றி எத்தனை மாதம் பொறுத்துக் கட்டுகிறார்களோ அத்தனை மாதத்து வட்டியை வாங்கினால் போதும், ஒரு நாளைக்காக ஒரு வருடத்து வட்டியை வாங்க வேண்டாம் என்று தெரிவித்து இருக்கிறோம். அது விவசாயிகளுக்குச் சலுகையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாய வருமான வரியை ரூ. 5,000 ஆக இருப்பதை மேலும் அதிகமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று பொன்னப்ப நாடார் அவர்கள் தெரிவித்தார்கள். உண்மையை ஒத்துக் கொண்டு ஒன்று சொல்கிறேன். ஏற்கெனவே இருந்த அரசு விவசாய வருமானத்தின்மூலமாக எவ்வளவு வரும் என்று எதிர்பார்த்தார்களோ, அதைவிடக் குறைவாகத் தான் இப்பொழுது வருமானம் வருகிறது. அவ்வளவு சலுகைகளைக் கொடுத்திருக்கிறோம். நாம் கொடுத்திருப்பது ஏராளம். பொம்மன் அவர்களும் மற்ற நண்பர்களும் பேசும் பொழுது மத்திய அரசினுடைய விவசாய வருமான வரியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த விவசாய வருமானத்தை, இன்கம் டாக்சுக்கு, ஸ்லாப் ரேட்டுக்குக் கணக்கில் சேர்க்கப் போகிறோம் என்று அவர்கள் சொன்னால், மறைமுகமாக விவசாய வருமானத்திற்கு வரிபோல் ஆகும் என்று ஒத்துக்கொள்கிறேன். ஆனால், பெரும்பாலும் இன்கம் டாக்ஸ் கொடுப்பவர்களைத்தான் பாதிக்கும்.

ஆனால், அவர்கள் கணக்கு வைக்கவேண்டும். கணக்கை வைக்கவேண்டாம் என்று தமிழக அரசு சொல்லிற்று. ஆனால், மத்திய அரசு உத்தரவுப்படி கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். எவ்வளவு வருமானம் என்பதற்குத் தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையில் கணக்கு வைக்கவேண்டியதில்லை. என்ன பயிர் வைக்கிறார்களோ, அதற்கு ஏற்றவாறு, ஸ்டாண்டர்டு ஏக்கர்களாக மாற்றி அதன் மீது வரி கட்டினால் போதும் என்று சொன்னோம். ஆனால், மத்திய அரசு போட்டிருப்பதில் கணக்கு வைக்கவேண்டுமென்பது இப்பொழுதிருக்கிறது. முன்பு விவசாயிகள் போராட்டத்தின்போது, தமிழக அரசு கணக்கு கேட்கலாமா, இதைச் செய்யலாமா, என்று சொன்னவர்கள் இப்பொழுது என்ன பேசுகிறார்களோ எனக்குத் தெரியாது.

நிரந்தரமாகப் பட்டா வழங்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது புரவிசனல் பட்டா அளித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். விரைவிலே நிரந்தரமான பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சில மாவட்டங்களைப் பிரிக்கவேண்டுமென்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இராமநாதபுர மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இது நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற கோரிக்கை. இதிலே அரசியல் புகுந்து விடுகின்ற காரணத்தினால் யார் ஆட்சியிலே இருந்தாலும் பிரிப்பது கஷ்டமாகப் போய்விடுகிறது. எல்லாக் கட்சியினரும் ஒத்துக்கொண்டால் செய்வதிலே கஷ்டம் இருக்காது. இராமநாதபுரத்தைப் பிரிக்க வேண்டுமென்றால் சிலர் விருதுநகர்தான் இருக்கவேண்டுமென்று சொல்வார்கள், சிலர் சிவகங்கைதான் இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். இப்படிச் சில அரசியல் ஆகிவிடும்.




பப்ளிக் டிரஸ்டுகளின் கீழ் 20 ஸ்டான்டர்டு ஏக்கருக்குமேல் பயிர்செய்யக்கூடாது என்று இருந்தாலும் சிலர் அதற்கு மேல் பயிர் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். எவ்வளவு நிலம் பயிர் செய்யலாம் என்று ஏற்கெனவே உத்தரவு இருக்கிறது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு புதிதாக எதையும் அனுமதிக்கவில்லை. பழைய அரசு இருந்த பொழுது இரண்டு பேர்களுக்கு அனுமதி கொடுத்திருந்தார்கள். அவர்கள் அதிகமாக உழுது கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றிக் கூட அரசு இப்பொழுது ஆலோசித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பப்ளிக் டிரஸ்டுகளின் கீழ் 20 ஸ்டான்டர்டு ஏக்கருக்கு மேல் இருந்தாலும் அதை ஆதரைஸ்டு ஆபிசர்ஸ் எடுத்துக் கொடுப்பதற்குச் சட்டத்தின் மூலமாக வழி இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஸ்ரீபாதம் பற்றிச் சொன்னார்கள். அதிலே சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை ஒப்புக் கொள்கிறேன். அது புறம்போக்கு நிலமில்லை. ஸ்ரீபாதம் நிலம் யாருக்கு இருக்கிறதோ அவர்களுக்கே அடமானம் செய்து கொடுக்கிறோம். அடுத்த நாளே நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படும். அதனால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள். புறம்போக்கு நிலங்களைப் பிரித்துக் கொடுப்பதைப் பொறுத்த வரையிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே எந்த விதத் தகராறும் இல்லாமல் பிரித்துக் கொடுத்திருக்கிறோம். எங்காவது தகராறு இருந்தால் அதைப்பற்றித் தெரிவித்தால் அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அதிக நேரம் பதில் சொல்ல விரும்பவில்லை. எல்லா உறுப்பினர்களும் பாராட்டியிருக்கிறார்கள். எனவே வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டார்கள் என்று நினைக்கிறேன்; நன்றி!

(தமிழ்நாடு சட்டப் பேரவையில் 1—4—1973-ல் வருவாய்த் துறை பற்றிய விவாதத்திற்கு அளித்த பதிலுரையிலிருந்து)

# வெண்பாப் போட்டி

இல்லாமை இந்நாட்டில் இல்லா தொழிந்திடவும்
நில்லாது சாதிமதம் நீங்கிடவும்—பல்வகையில்
துஞ்சாது நம்மரசும் தொண்டிங்கே ஆற்றுவதால்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.

சொற்றமிழால் பாடென்று சொன்ன இறைமுன்னே
நற்றமிழ் ஓதல் நலமிலவாம்—எற்றைக்கும்
பஞ்சமன் தெய்வம் பராவும் தொழில்நீதாம்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

——பல்லவன், திருக்கழுக்குன்றம்.

ஆறாத் தொழுநோயால் ஆதரவு யாருமின்றித்
தீராத் துயரில் இளைத்திருந்தாய்—சீரோடு
தஞ்சமென இல்லங்கள் தான்திறந்தார் நம்கலைஞர்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர். வே. நடராசன், ஏரகுடி.

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேண்டுமிங் கெல்லார்க்கும்—புஞ்செய்யை
நஞ்செய்யாய் மாற்றுதல்போல் நாட்டவரை மாற்றுதற்கு
நெஞ்சமே யஞ்சாதே நீ.

—புலவர் கோம்பைச்சீரான், கோம்பை.

பெற்றதாய் நாட்டுரிமை பேணிடவே வன்சிறைக்கண்
உற்றாலும் வேதனைகள் ஒன்றாகப்—பெற்றாலும்
வெஞ்சமரில் ஆவிபோய் வீழ்ந்தாலும் எற்றுக்கும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ஜீ.வி. அர்த்தநாரி, வேலூர்.

சாதிபேதம் காட்டிச் சதிராடுஞ் சாத்திரங்கள்
பாதியில் நம்நாட்டைப் பற்றியதால்—வீதியிலும்
அஞ்சிநடப் பாரின் அடிமைத் தளையறுக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—க.கா. சுந்தரராசன், நாரைக்கிணறு.

உள்ளத் துணர்வுகளை ஊமை நிலையாக்கிப்
பள்ளியின்பம் காணாப் பருவத்—திளவிதவை
அஞ்சாது மாயும் துயரைத் துடைத்தழிக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—எஸ். ஆஞ்சலாமேரி, நாச்சியாபுரம்.

நாதியிலான்; கைக்காசு நாலுமிலான்; உன்அன்பன்
சாதியிலும் கீழ்தான் சரிசொல்ல—ஏதுமுண்டா?
நஞ்செனக்குத் தந்து நடத்துமணம் என்பாள்தாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—பு. புனிதா, ஓலைப்பாடி.

வஞ்சனை செய்கின்றார் வாழார்; நெருப்பினில்
பஞ்சினைப் போலவர்தான் பாரீரோ—கொஞ்சுதமிழ்
நெஞ்சுக்கு நீதி தரவல்லா ருண்டிங்கே
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—ப. வெங்கடகிருஷ்ணன் எம்.ஏ.,பி.டி., நாமக்கல்.

அன்னைத் தமிழுக்(கு) அவமானம் என்றக்கால்
உன்னுயிர் தந்தே உயர்வடைவாய்—மன்பகைவர்க் (கு)
அஞ்சியஞ்சி வாழ்வதிலும் அன்றே மடிவதுமேல்
நெஞ்சமே அஞ்சதே நீ.

—பகவதி அப்பன், பி. எஸ்ஸி., சென்னை-5.

அஞ்சுகமே அன்பேவென் ஆருயிரே என்றழைத்தார்
மஞ்சம் நுகர்ந்தபின் நஞ்சானேன்—கெஞ்சியும்
வஞ்சித்தாா என்பிள்ளை வஞ்சியான் ஆகலின்
நெஞ்சமே யஞ்சாதே நீ.

—ம. சலீம், காயாமொழி.

தன்னைப் பழித்தாலும் தாழ்ந்துபோ; தாரணியில்
உன்னை உயர்த்தும் உறுமொழிக்கோர்—இன்மைவரின்
வஞ்சம் களைந்ததன் வண்ணம் புரப்பதிலே
நெஞ்சமே அஞ்சாதே நீ!

— வசந்தராசன், வெள்ளக்குட்டை.

கண்ணாய்த் தமிழரசைக் காத்தளிக்கும் நற்கலைஞர்
மண்ணுள் திறமொப்ப மாட்டாமல்—புண்ணான
வஞ்சமனத் தீயவரின் மாயை யகன்றொழியும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—தாரைவில்லவன், தாராபுரம்.

தாய்மொழி மேன்மையுற தன்னாட்சி நாடுபெறத்
தூய்மையுடன் நம்கலைஞர் தொண்டாற்ற—வாய்மையிலார்
கொஞ்சமும் உண்மையின்றிக் கூறும் புகார்களுக்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ!

— கோ. புகழேந்தி, புதுவை-4.

# ஒரு நூறு பல நூறு ஆகட்டும்!



## நூறு திரைப்படங்கள்!

தமிழ்நாடு அரசு செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் தமிழ்நாடு அரசுத் திரைப் படப்பிரிவு இதுவரை நூறு செய்திப்படங்களை எடுத்து வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் மத்திய அரசு திரைப்படப் பிரிவுக்கு அடுத்த நிலையில் தமிழ்நாட்டில் தான் மாநில அளவில் சிறப்பான முறையில் திரைப்படப்பிரிவு இயங்கி வருகின்றது. இன்று மராட்டிய மாநிலம், காஷ்மீரம், மைசூர்மாநிலம் முதலிய இடங்களில் திரைப்படப் பிரிவு இருந்தாலும், தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு போன்று தொடர்ச்சியாகச் செய்திப்படங்களை வெளியிட்டு வரவில்லை.



## வெண்பாப் போட்டி

''நல்வழிவுப் பெட்டகத்தின் நாயகர்கள் நம்மவர்க்குச்
சொல்லிவைத்த நற்கருத்தை மேற்கொண்டால்—தொல்லேபோம்!
வஞ்சக(ம்) மேவினும் வானமே வீழ்ந்திடினும்
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—சா. துரைராஜ், பெரியதச்சூர்.

நம்மரசின் முற்போக்குத் திட்டத்தால் நாட்டினிலே
எம்மருங்கும் பூத்துவரும் ஏற்றங்காண்,—நம்மிடையே
நஞ்சான பேதங்கள் நீக்கி நலங்குவிப்பார்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.

நாட்டில் வளங்குவிக்கும் நல்லபல திட்டங்கள்
ஏட்டில் எழுதாத காவியங்கள்!—ஓட்டிடுமே
எஞ்சியுள்ள வேலையில்லாத் திண்டாட்டம் என்பதனல்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ப. அறவாழி, தளவாய்ப்பட்டணம்.

துஞ்சும் புலியிடறித் துன்பம் பெறநினைக்கும்
வஞ்சகரின் வாய்ப்பேச்சு வாழ்ந்திடுமோ—மிஞ்சுகிறுர்
தஞ்சமென வந்தவரும் தாக்குகிறுர் என்றெண்ணி
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் சேறைநேசன், சோழூர்.

எடுத்த செயல்கள் இனிதுநிறை வெய்த
அடுத்தடுத்துத் துன்பங்கள் அண்டிக்—கெடுத்தாலும்
கொஞ்சமும் மாருது கொள்கையில் நின்றுவிட்ட
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் வி. இளங்கோவன், நாகமங்கலம்.

வெற்றி உனதே ! விளையும் நலம்யாவும்!
புற்றீசல் போல்பெருகும் புல்லரிங்கேன்?—சற்றுமே
துஞ்சாமல் அன்னுரைத் தூளாக்க, என்றுமே
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—இராமலிங்கன், சின்னமணல்மேடு.

நல்லவனைப் பேர்பெற்று நானிலத்தி லெந்நாளும்
பொல்லானைக் கள்ளப் பணஞ்சேர்க்கும்—சொல்லரிய
நஞ்சனையான் தீச்செயலை நாளுமே காட்டிடவே
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—வி. இராமனுதன், மகிபாலன்பட்டி.

ஆழவே உள்ளூடி அன்பாகி நிற்பவரும்
தாழவே மாட்டாமல் தம்பகையை—வாழவிட்டே
வஞ்சம் புரிந்திடுவார் ! மாண்பழிக்க முன்னிற்பார் !
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—ப. அ. இசுமாயில், கல்கத்தா-1.

நன்றே கருதிடுக ! நற்செயலே ஆற்றிடுக !
வென்றுலும் தோற்றுலும் வெற்பெனவே—நின்றிடுக !
வஞ்சனையால் எந்நாளும் வாழ்க்கை நிறையாது !
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—ரா. மோகன், உடுமலைப்பேட்டை.

''எதையுமே தாங்கும் இதயங்கொள்'' வாக்கை
விதையாக்கி நின்பால் விளைப்பாய்—சிதைபகைவர்
கொஞ்சமே யல்லாமல் கோடியாய்க் கூடிடினும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் வள்ளிவேலன், நாய்க்கனூர்.

ஏழையின் வாழ்வினிக்க ஏற்றபல திட்டங்கள் ;
தாழைபோல் நாற்றமுள்ள சட்டங்கள் ;—வாழைபோல்
பஞ்சமின்றி வாழ்ந்திடவே பட்டாக்கள் இன்னுமுண்டு
நெஞ்சமே யஞ்சாதே நீ !

—இராம. மறைமுதல்வன், வடபாதிமங்கலம்.

காட்டிக் கொடுத்தாலும் கல்லால் எறிந்தாலும்
வாட்டும் கொடுமைகள் வந்தாலும்—கூட்டத்தில்
நஞ்சன்ன சொல்தொடுத்து நாவினல் வைதாலும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் மு. சிக்கந்தர், பழனி.

தன்னுடு காக்கத் தலைபோவ தென்றுலும்
பொன்னனை வாய்ப்பெனப் போய்வருவாய்—பின்னுளில்
எஞ்சி நிலைப்பது ஏற்றமிகு நற்புகழால்
நெஞ்சமே அஞ்சாதே நீ

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

குருத்திருந்து வாழை குமுறுயி ராக
இருள்விரட்டும் தீபம் எரிந்தே—உருகுதல்போல்
தஞ்சமென வந்தோர்க்குத் தன்னையே விற்றுதவ
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—இரத்தின. மனோகரன், சென்னை-11.

புழுத்துளைக்கும் புண்ணில் நீரொழுகும் நீங்காத்
தொழுநோயின் துன்பம் துடைத்தே—குளிர்தருபோல்
தஞ்சம் கொடுத்திட்டார் தாயனைய நம்கலைஞர்
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—வா. கணபதி, சலங்கம்பாளையம்.

## வெண்பாப் போட்டி

இன்ன துயரிங் கெவருமில ரென்கின்ற
நன்மை பயக்குமொழி நானறிந்து—நன்னெறியில்
எஞ்ஞான்றும் நின்றே இணையில் செயல்முடிப்பேன்,
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

அச்சடிப்பு, வீக்கம், அறமல்லாச் செல்வத்தால்
உச்சநிலை ஏற்றம்! உணர், முன்னே!—இச்சமயம்
கொஞ்சுதமிழ் நாட்டரசின் கொள்கை சுயாட்சி, காண்
நெஞ்சமே! அஞ்சாதே நீ.

—மலை. ம. ரா. ஆறுமுகம், மலைப்பட்டு.

பொன்கொழிக்கும் நன்செய்ப் புகழ்ஆரூர்ச் செல்வன் தன்
அன்பான ஆட்சி அரவணைக்கும்—எந்நாளும்
''பஞ்சம் வருமோ, பசிவருமோ?'', என்றெண்ணி
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

நேர்மை உணர்வுகளால் நெஞ்சம் நிறையட்டும்
சீர்மேவி நாடு செழிக்கட்டும்;—பார்கெடுக்கும்
வஞ்ச மனம்தன்னை வேரோடு சாய்ப்பதற்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—நா. செளந்தரனன், அரக்கோணம்.

நாட்டிற்கு நல்லுடலை நற்போரில் ஈந்தவனின்
வீட்டில் இளமனைவி வெம்புகிறுள்—வாட்டுமவள்
பிஞ்சுள்ளம் நோகாமல், பேதைக்கு வாழ்வளிக்க
நெஞ்சமே அஞ்சாதே நீ

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

ஏழை வளம்பெறலோ டேக்கம் பறந்துசெலக்
கோழை தலைநிமிரக் கொஞ்சுதமிழ்—வாழவிங்கே
அஞ்சாத நெஞ்சன் அருந்தமிழ வேளாள்வான்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—க. இரத்தினம், ஆயக்காரன்புரம் (2).

''பித்தனென்பார்; பேடியென்பார்; பேராசைக் காரனென்பார்;
எத்தனென்பார்; கள்வனென்பார்; எக்கலையும்—சித்தனென்பார்;
கஞ்சனென்பார்; காய்மரத்தின் கல்லடிபோல் சொல்லடிக்கு
நெஞ்சமே அஞ்சாதே நீ.''

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

நஞ்சனையார் என்றும் நயந்திருந்து தான்பிரிந்தால்
வஞ்சனைகள் சூழ்ந்து வசைபொழிவார்—கொஞ்சுமெழில்
அஞ்சுகமே! என்றன் அழகுதமிழ் வாழிடமே!
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் எழில்வேலன், கோபி.

''மாநிலத்தில் நம்மாட்சி மையத்தில் கூட்டாட்சி
நானிலத்தில் நன்மைசேர் நாட்டமுடன்—நீணிலத்தில்
விஞ்சுபுகழ் நம்முதல்வர் வீறுகொண்டார் வெற்றிவரும்
நெஞ்சமே அஞ்சாதே நீ''.

—க. துரைசாமி, கரட்டூர்.

வஞ்சனை யின்றியே வாழ்ந்த நமக்கேதான்
பஞ்சமும் வந்ததென்று பாரினில்—அஞ்சியே
தஞ்சம் அடைந்தாரைத் தாங்கிடும் நம்மரசு
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—எஸ். டி. சின்னசாமி, ஆலாம்பாளையம்.

மொழிகாக்கப் போரிடுதல் மாண்பன்றோ! மென்மை
மொழிகூட்டி மெய்யால் முயல்க—பழிவரினும்
கஞ்சிக்கும் இன்றிக் கலக்கத்தை யெய்திடினும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—வெ. இரா. இராசகோபாலன், ஆலங்குடி.

பஞ்சசீ லம்சொன்னேம், பாகிசுதான் போர்வென்றேம்,
தஞ்சம் அடைந்தவர்க்குத் தாயானேம்—வஞ்சமிலை
துஞ்சும் நிலைநீங்கின் துன்பம் விரைந்தேகும்
நெஞ்சமே அஞ்சாதே நீ !

—தாஜ்பால், கல்லம்.

தாய்நாடும் தாய்மொழியும் சால்புறவே நன்றுழைக்கத்
தூய்மைசால் அன்புடனே நீதுணிந்தாய்—தீயையும்
மிஞ்சிடும் எண்ணிலாத் துன்பங்கள் உற்றுலும்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—பன்னீர். மதிவண்ணன், சென்னை-1.

கஞ்சிக்குப் பிள்ளைகள், கைக்குழந்தை பாலுக்கு
வஞ்சியரும் சோற்றுக்கு வாடுவதேன் ?—பஞ்சமிலை
அஞ்ஞானம் நீக்கி அளவோடு பெற்றிடுக
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—புலவர் மு. மணவாளன், மாசேனூர்.

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்காமல் ஆள்கின்றுர் நின்றமிழர் !—ஓங்குயரும்!
பஞ்சம் பசியனைத்தும் பாழ்போகும்! வீணுக
நெஞ்சமே அஞ்சாதே நீ!

—சி. அரங்கசாமி, இராமேஸ்வரம்.

கஞ்சிக்கும் போக்கின்றிக் காலமெல்லாம் நொந்தகதை
பஞ்சாய்ப் பறந்த பழங்கதையாம்—பஞ்சையர்க்குத்
தஞ்சம் அளிக்கத் தமிழகத்தில் திட்டமுண்டு
நெஞ்சமே அஞ்சாதே நீ.

—சு. தங்கப்பன் பி.எஸ்ஸி., பி.டி. சின்கோனா.

39,433 டன். 1972–73-க்கு 1,58,285 டன் தேவை. ஆனல் கொடுத்தது 32,459 டன். அடுத்து, 'மட்டன் டேலோ'. 1972-ஆம் ஆண்டுக்கு நமக்குத் தேவை 6,000 டன். ஆனல் கிடைத்தது 1,284 டன். அடுத்தபடியாக, 'பாரபின் வேக்ஸ்' 1972-ஆம் ஆண்டுக்குத் தேவை 8,000 இன். ஆனல் கொடுத்தது 3,500 டன். 'காஸ்டிக் சோடா' 1972-ஆம் வருடத் தேவை 12,000 டன். ஆனல் கொடுத்தது 389 டன் ஆகவே, மூலப்பொருள் கொடுப்பதிலே மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது என்று கூடச் சொல்ல மாட்டேன். கொள்கையை எடுத்து, ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலப்பொருள்களைக் கொடுப்பதற்கு முன்வந்தாலொழிய தொழில் வளர்ச்சி குன்றும் நிலை தொடர்ந்து நீடிக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொழில் வளர்ச்சிக்குத் தீவிரமான முயற்சிகளை எடுத்திருக்கிறோம். பின் தங்கிய மாவட்டங்களாகப் பல மாவட்டங்களை அறிவித்திருக்கிறோம். இவைகளில் சில பகுதிகளை எடுத்து, தனிச் சலுகை 10 சதவிகிதம் இனமாக, 'கிராண்ட்'டாகத் தொழில் துவங்குவதற்குத் கொடுத்து முயற்சியெடுக்கிறோம். ஆகவே தொழில் வளர்ச்சியிலே மாநில அரசைப் பொறுத்தவரையில் சுற்றுச் சூழ்நிலை, 'இன்ப்ரா-ஸ்ட்ரக்சர் பெசிலிடீஸ்' இவைகளைத் தான் உருவாக்க வேண்டும். உருவாக்குகிறோம்.

எந்தெந்தத் துறையிலே தொழில் வளரவேண்டும். இது வாதப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை. நான் தனியார் துறை வேண்டுமென்றும் சொல்ல விரும்பவில்லை, எல்லாம் பொதுத்துறையிலேயே இருக்க வேண்டுமென்றும் சொல்லவில்லை என்னைப் பொறுத்தவரையில். நமது அரசைப் பொறுத்தவரையில், எப்படியாவது தொழில் வரவேண்டும் இந்தத் தமிழ்நாட்டிற்கு. எங்களுடைய 'ப்ரேக்மாடிக் பாலிசி'யைக் சிலரால் ஒப்புக்கொள்ள முடியவில்லை; முதலாளிகளின் கையாட்கள், முதலாளிகள் கொழுப்பதற்குப் பயன்படுகிறது என்று சொல்கிறார்கள். ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்பதைப் போல் பேசுவது சுலபம். ஆனல் உண்மையில் அகில இந்திய அளவிலே

> **அணுயுகம் எப்போதிலிருந்து . . .**
>
> இந்தக் காலத்தை அணுயுகம், அணுயுகம் என்கிறார்கள். அணுசக்தியைப் பற்றித் திட்டவட்டமான முடிவு-அதாவது அணுசக்தியைக் கட்டுக்குள் அடக்கி முறையாக வெளிப்படுத்த முடியும் என்பது 1942-ஆம் ஆண்டு டிசம்பர் 2-ஆம் நாள் தான் உறுதியாயிற்று. இந்த நாளிலிருந்து தான் அணுயுகம் தொடங்கியது.

எந்தத் தொழில்கள் எந்தெந்தத் துறையிலே வளர வேண்டுமென்று திட்டமிட்டு முடிவெடுத்தாலொழிய இதற்குப் பரிகாரம் இல்லை. என்னுடைய கவலையைப் பகிரங்கமாக அங்கத்தினர்களுக்குச் சொல்வதைப் பற்றிக் கவலையில்லை. இந்திய அரசாங்கத்தின் சார்பில், எந்தத் துறையானலும் பொதுத்துறை தான் என்று தெரிவித்தால் மறுநாளே தமிழகத்தில் நடத்தப்பட்டு வரும் தொழிற்சாலைகள் பல நிறுத்தப்படும். நாம் கேட்பதெல்லாம், அகில இந்திய அளவிலே தொழிற் கொள்கையைத் தெளிவாகச் சொன்னலொழிய நாம் மட்டும் முட்டிக் கொள்வதால் தொழில் வளர்ச்சி குன்றும்.

உ.பி.யைப் பற்றிச் சொன்னர்கள். அதைத் கூடத்தெரிந்து கொண்டு பேசலாம். அல்லது கேள்வியாகக் கேட்கலாம். உடனே இந்த அமைச்சருக்கு ஒன்றும் தெரியாது என்று சொல்லிவிடுகிறார்கள். உ.பி.யில் அனுமதி கொடுத்திருப்பது எல்லாம் சில மில்களை, சரியாக இயக்கமுடியாமல் மோசமான நிலையில் இருக்கும் சர்க்கரை ஆலைகளை எடுப்பதற்கு அனுமதி கொடுத்தார்கள். அனுமதி கொடுக்கவேண்டுமென்பதுகூட அல்ல. அதை ஒரு கொள்கையாக, இனிமேல் தனியார் துறையில் சர்க்கரை ஆலைகள் இல்லையென்று தெரிவித்தால் நாம் அதை ஏற்றுக் கொள்ள முடியும். இதிலே நாம் மட்டும் முடிவு செய்துவிட்டால் பிறகு சர்க்கரை ஆலைகள் பிற மாநிலங்களுக்குக் போகக் கூடிய சூழ்நிலைதான் ஏற்பட்டுவிடும்.

மால்கோ தொழிற்சாலையைப் பொறுத்தவரை திரு சுரேந்திரன் அவர்களுக்கு நன்ருகத் தெரியும். அந்தத் தொழிற்சாலையை ஏன் எடுக்க வேண்டும். மூல காரணங்கள் என்ன, பின்னணி என்ன, இந்த அரசைப் பொறுத்தவரை தமிழகத்து மக்களைப் பொறுத்தவரை அது எவ்வளவு தேவையானது என்கிற புள்ளி விவரங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் அவர்கள் சொல்லமாட்டேன் என்கிருர்கள். எங்களைப் பொறுத்தவரை அலுமினியத் தொழிற்சாலை அத்தியாவசியமான தொழிற்சாலை, பல தொழிற் சாலைகளுக்கு மூலப் பொருள்களைத் தரும் தொழிற்சாலை தமிழ்நாட்டில் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்கு நாம் என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட தொழிற்சாலை மக்களுக்குப் பயன்பட வேண்டுமென்றல் அது பொதுத் துறையில்தான் இருக்க வேண்டுமென்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது. இதை மாண்புமிகு அங்கத்தினர்கள் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

பின்தங்கிய பகுதியில் தொழில் வளர வேண்டுமென்ற முறையிலே முதன் முதலிலே மத்திய அரசாங்கம், ஒரு மாவட்டத்தை மட்டும் எடுத்து 10 பர்சன்ட் சப்சிடி கொடுக்க முன்வந்தது. நாம் கேட்டுக் கொண்டதன் மூலம் இரண்டு மாவட்டங்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிருர்கள். நம்முடைய அரசு மூன்று மாவட்டங்களைச் சேர்த்து இணைத்திருக்கிறது. அவர்கள் இரண்டு மாவட்டங்கள் என்று சொல்லியிருக்கிருர்கள். அந்த இரண்டு மாவட்டங்களையும் நான்கு மாவட்டங்களுக்கு இணைத்து ஒரு தொடராக எங்கெங்குப் பின்தங்கிய பகுதிகள் இருக்கின்றன என்று அனுப்பியிருக்கிறோம். அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிருர்கள். அந்தப் பகுதிகளில் விரைவாகத் தொழில் வளர வாய்ப்பு இருக்கிறது.

தொழிலுக்கு அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படக் கூடாது. ஹண்டே அவர்கள் ரீஜினல் ஆபீஸ் வேண்டுமென்று கேட்டார்கள். நானும் வரவேற்கிறேன். ஆனல், அதனல் பயன் கிடைக்குமென்று நம்பத் தயாராக இல்லை. மனுக்களை டெல்லிக்கு அனுப்புவதற்குப் பதிலாக இங்கேயே கொடுத்து விடலாம். ஆனல், இதிலே முடிவு எடுப்பதிலே ஏற்படும் காலதாமதம் தான்பயங்கர மானது.



டயர் பாக்டரி வேண்டுமென்று ஓராண்டுக்கு முன்னல் அனுமதி கேட்கப்பட்டது. நேற்றுத்தான் அமெரிக்காவில் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஒரு அனுமதி கிடைத்துவிட்டாலும் உற்பத்தி செய்வதற்கான வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு ஆகியவை கிடைக்க முடிவு எடுப்பதில் கால தாமதமாகிறது. ஓராண்டுக்கு முன்னல் முயற்சித்து நேற்றுத்தான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிருர்கள். 'எந்தெந்தத் துறையில் தொழில்களைத் தொடங்க வேண்டுமென்று தெளிவாகச் சொல்லிவிடுங்கள். ஒரு பக்கம் மொனபலி கூடாது என்று சொல்லுகின்றீர்கள். அதே சமயத்தில் தொழிற்சாலைக்கு அனுமதி கொடுப்பதில் தெளிவான கொள்கை இல்லாமல் இருக்கிறீர்கள். மொனபலி ஹவுஸஸ் முழுவதும் அவர்களிடம் இருப்பதன் காரணமாக, அந்த ஆற்றல் காரணமாகத் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருப்பதன் காரணமாக அவர்களுக்குத் தடைபோட வேண்டுமென்ற கொள்கையை எடுத்தால், அவற்றை நாமே நடத்தினல் தொழில் வளர்ச்சிக்கு வாய்ப்புக் கிடைக்கும்' என்ற கருத்தைச் சொன்னர்கள்.

அடுத்து, வெளிநாட்டுத் தொழில் நுட்ப அறிவு பெறுவதில், காலத்தை விரயமாக்காமல் இந்திய நாடு முழுவதற்கும் எந்தத் தொழில் நுட்ப அறிவு டெக்னிகல் நோஹௌ எந்தத் தொழிலுக்குத் தேவைப்பட்டாலும் அதை மத்திய அரசாங்கமே முடிவு செய்து, ஜப்பானைப் போல் உலகத்தில் எந்த நாட்டிலே—முன்னேற்றம் அடைந்த நாடுகளிலே தொழில் நுட்ப அறிவு இருக்கிறதோ அதை இந்திய அரசே பெற்றுத் தருவதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டும்' என்று முதல் அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிருர்கள். அதைப் பற்றியும் மத்திய அரசு திட்டவட்டமாக முடிவு எடுக்கவில்லை என்ருல், தொழில் நுட்ப அறிவில் நாம் பின் தங்கித்தான் இருப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் இந்தத் தொழில்களைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமென்ற முறையில் பல்வேறு நிறுவனங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்னெரு நிறுவனத்தை நம்முடைய அரசின் சார்பில் ஏற்படுத்தவும் திட்டம் இருக்கிறது. மத்திய அரசின் நேஷனல் இன்டஸ்ட்ரியல் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் போல் தொழில் தொடங்குபவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்காகத் தனி நிறுவனம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அது வருமானல் இன்னும் அதிக அளவில் பயன்படும்.

தொழில் வளர்ச்சியோடு வேலையில்லாத்திண்டாட்டம் பற்றியும், எந்த அளவுக்குச் சேர்த்துப் பரிசீலிக்க வேண்டுமென்பதை நான் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. தமிழக அரசின் சார்பில் 1971–72-ல் 48 இலட்சம் ரூபாய்க்குச் சிறு தொழில்களைத் தொடங்கி வேலை இல்லாதவர்களுக்குப் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கும் திட்டத்தை நிறைவேற்றினேம். 1972–73-ல் 70 இலட்சம் ரூபாய் அளவுக்கு அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவருகிறோம். புதிதாக வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தடுப்பதற்காக, புதிதாக வேலை கொடுக்க 14 கோடி ரூபாய்க்குத் திட்டங்களை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம். அதெல்லாம் வருமானல் பெரும்பாலும் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும் என்று நம்புகிறேன்.

தருமபுரி மாவட்டத்திலே சில்க் உற்பத்திக்காக 25,000 ஏக்கரில் மல்பரி உற்பத்தி செய்ய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 387 இலட்சம் ரூபாய் செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்காகத் திட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகப் போடப்பட்டுள்ள ஆயிரம் கோடி ரூபாய்த் திட்டத்திலே இதையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

> **வாழ்க்கையில் வெற்றி**
>
> தனக்குள்ள திறமையை மனிதன் பயன்படுத்தாவிட்டால் வாழ்க்கையில் தோல்வி அடைகிருன். தன் திறமையில் பாதியை மட்டும் அவன் பயன்படுத்தினல் வாழ்க்கையில் ஓரளவு தோல்வி அடைகிருன். தன் திறமையை முழுதும் அவன் பயன்படுத்தினல் வாழ்க்கையில் பெரும் வெற்றி அடைகிருன். பலருக்கும் கிடைக்காத திருப்தியும், வெற்றிப் பெருமிதமும் சிலருக்குக் கிடைப்பதன் இரகசியம் இதுதான்.
>
> —தாமஸ் உல்ஃப்

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க ஆங்காங்குக் கிராமங்களில் தொழில் தொடங்க வருகின்றவர்களுக்கு — வியாபாரத்திற்குக்கூடப் புதிய திட்டத்தை உருவாக்கித் தருமபுரி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, சேலம், வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் அரசாங்கக் காரண்டியுடன் ஸ்டேட் பாங்கியில் 5,000 ரூபாய் கடன் பெற்றுச் சிறிய தொழில்கள் செய்ய முன்வருகின்றவர்களுக்குக் கொடுப்பதன் மூலம் வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்கும் முறையில் புதிய முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை தொழில்களுக்கு அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுத்துவதைத் தவிர்க்கப் புதிய முயற்சி ஒன்றை எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரியைப் போட்டு எல்லா இலாகாவிலிருந்தும் அனுமதி பெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அவரே மேற்கொண்டு அந்த அனுமதியைப் பெற்றுத் தரும் வண்ணம், ஹெல்த் டிப்பார்ட்மெண்டாலும், டவுன் பிளானிங் இலாகாவாலும் எல்லாவற்றையும் அவரே அணுகி அனுமதியை விரைவில் பெற்றுத் தரும் முயற்சிக்காகப் புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். அதிலே வெற்றி அடைய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

கைத்தறித் துறைக்கு எதுவுமே செய்யவில்லை என்ற வாதம் ஓரளவு தொனித்தது. நான் ஒரு புள்ளி விவரத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசு இந்தத் [illegible] 1967–68-ல் கொடுத்தது [illegible] இலட்சம் ரூபாய். [illegible] 249·82 இலட்சம் [illegible] இதற்காக நாம் [illegible] முன் வந்திருக்கிறோம். [illegible] மென்ட் [illegible] 1967–68-ல் [illegible] 5,000 [illegible] 1967– [illegible]



'கண் கெட்டபிறகு' படத்தில்

தமிழ்நாடு அரசு திரைப படப்பிரிவு தொடங்கப்பட்டு முதன் முதலாக எடுக்கப்பட்ட செய்தித் தொகுப்பின் வெளி யீட்டு விழா 4-5-1968 அன்று நடைபெற்றது.

இப்பொழுது கலைவாணர் அரங்கமாக மாறி, புதிய வனப்பும் புதிய உருவமும் பெற்று வரும் அந்தநாள் சிறுவர் அரங்கத்தில் தான் முதல் திரைப்படச் செய்தித் தொகுப்பின் வெளியீட்டு விழா நடைபெற்றது.

அப்பொழுது தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாள ராகவிருந்த திரு. சி. ஏ. இராமகிருட்டிணன் ஐ.சி.எஸ். அவர்கள் வரவேற்புரை நிகழ் தினார். அவருடைய வர வேற்புரையே, தமிழ்நாடு அரசின் திரைப்படப் பிரிவு அமைத்ததின் குறிக்கோளைச் சுருக்கமாக வெளியிட்டது. அவர் குறிப்பிட்டார்:—

"இந்திய அரசு செய்திப் படங்களை வெளியிட்டு வரு கிறது. ஆனால், இந்திய அரசின் செய்திப்படங்களில் தமிழ் நாட்டில் நடைபெறும் எல்லா முக்கிய நிகழ்ச்சி களையும் காட்ட முடியாத நிலை இருந்தது. அதை மாற்றி மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டிட நமது செய்தித் தொகுப்பு வெளியிடப்படுகின்றது."

செய்தித் தொகுப்பு வெளி யீட்டு விழாவைத் தொடக்கி வைத்த மாண்புமிகு கல்வி யமைச்சர் நாவலர் அவர்கள் நமது உரையிலே குறிப்பிட்ட தாவது :—

"தமிழக அரசின் செய் தித்துறைதனியானஅமைப்பை ஏற்படுத்திச் 'செய்தித் தொகுப்பை' வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டி ருக்கிறது. உரிய முறையில் இந்த அமைப்பு செய்யும் காரி யங்களால் மக்களுக்கு நன்மை ஏற்படும்.

"மத்திய அரசு செய்திக் கதிரில் தமிழகத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள்—செய்திகள்— இரண்டு நிமிடம் கூட இடம் பெறுவதில்லை. பரந்த நிலப் பரப்பான இந்த நாட்டில் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சி களையும் தொகுத்துக் காட்டு வது எளிதல்ல. எனவே தமிழக அரசின் சார்பில் தமிழக மக்கள் நன்மையடையும் விதத் த்தில் செய்தித் தொகுப்பு அமையும். கருத்தையும் கண் ணையும் ஈர்க்கும் செய்தித் தொகுப்பால் எல்லா வகையி லும் எல்லாத் தரப்பினரும்— நிலையினரும் — காட்சிகளோடு கருத்துக்களைப் பெறும் நிலை ஏற்படும்.

"தமிழக அரசின் சாதனை களையும் புள்ளி விவரங்களையும் தீட்டியுள்ள திட்டங்களையும் நிறைவேற்றியுள்ள பணிகளை யும் நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு, அறிவிக்கச் செய்தித் துறையின் இந்தச் செய்தித் தொகுப்பு நன்கு பயன்படும்.

"பல்வேறு துறைகளில் தமிழகம் முன்னணியில் நிற் பது போலச் செய்தித் தொகுப் புத்திரைப்படத்திலும் முன்ன ணியில் நிற்கவேண்டும்".

செய்தித் தொகுப்பு முத லாவது படம் திரையிடுவதைத் தொடங்கி வைத்து அப்பொழுது பொதுப்பணித் துறை அமைச்சராகவிருந்த கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது .

"பல்வேறு செய்திகளைத் தொகுத்தளிக்கின்ற காரணத் தால் நாம் பெரிதென்று நினைக்கின்ற நாம் சிறப்பான தென்று கருதுகின்ற நம் மாநிலத்திற்குத் தேவையானது என எண்ணுகின்றவற்றை இந்திய அரசின் செய்திப் படப் பிரிவால் நிறைவேற்ற முடியவில்லை. அப்படிப்பட்ட குறைகளை நீக்கிட நமது செய்திக்துறைச் செய்திக்



சீரணியின் சிறப்பை விளக்கும் 'வீட்டுக்கு ஒருவர்' படத்தில்





தொகுப்புத் திரைப்படத்தை வெளியிட முன்வந்துள்ளது. தொடர்ந்து பல்வேறு படங் களைச் செய்தித் துறை தொகுக்கவிருக்கின்றது. ஒவ் வொரு பட நிலையத்திலும் செய்தித் தொகுப்பைத் தமிழக மக்களுக்குக் காட்டுவதற்கான வகை செய்யப்பட்டுள்ளது.

"செய்யப்படும் நல்ல காரி யங்களை விரைவாக மக்கள் அறிந்து கொள்ளவும் அப்ப டிப்பட்ட நல்ல பணிகளைச் செய்வோருக்கு மக்கள் ஒத்துழைப்புத் தரவும் செய் தித் தொகுப்பு மெத்தவும் பயன்படும்"

இவ்வாறு அன்றைய விழா வில் அமைச்சர் பெருமக்கள் ஆற்றிய உரைகளை நனவாக்கிக் காட்டியுள்ளது நமது செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் திரைப்படப் பிரிவு.

இதுவரை நூறு படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

1968-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தயாரிக்கப்பட்ட திரைப்படத் தொகுப்பு முதன் முதலாக மே திங்கள் 4-ஆம் நாள் வெளியிடப்பட்டது. அது முதல் தொடர்ந்து மாதந்தோறும் இரண்டு படங் களைத் திரைப்படப் பிரிவு வெளியிட்டு வருகிறது.

அண்ணல் காந்தியடிகள் சிலை யிலிருந்து துவங்கும முதல் செய்தித் தொகுப்பு முடிவில் பேரறிஞர் அண்ணா அவர்கள் வெளிநாட்டுப் பயணத்தின் போது விமான நிலையத்தில் வழியனுப்பி வைத்த மக்கள் வெள்ளத்தோடு முடிவடைந் தது. இதில் குடும்பநலத் திட்டம் பற்றிய சிறு துணுக் கும் இடம் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு திரைப் படப்பிரிவு, அடையாற்றி லுள்ள திரைப்படத் தொழில் நுட்பக்கல்லூரியில் அமைக் கப்பட்டு இயங்கி வந்தது. நமது அரசு 1971-ஆம் ஆண்டு மே திங்களில் திரைப் படச் செய்தித்தொகுப்பு மேலும் திறம்பட வெளி வரத் தனியாக இயங்கும் வகையிலே திரைப்படப் பிரிவை அமைத்தது. இப்பிரிவு செய்தித் தொகுப்பு எண் 45 முதல் இப்பொழுது வெளியிட் டுள்ள நூறாவது படம் வரை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு திரைப்படப் பிரிவு எடுத்துள்ள படங்களில் தமிழக மக்களால் என்றும் மறக்க முடியாத படங்கள்.

'அண்ணாவின் இறுதியாத்திரை' 'அண்ணா இருக்கின்றார்' போன்றவையாகும்.

'Anna and after' என்ற ஆங்கிலப் படத்தை உலகின் பலபாகங்களில் உள்ளவர்களும் பார்த்துப் பாராட்டியுள்ளனர்.

அரசின் சாதனைகளை விளக்கும் சில படங்களும் மக்களால் பெரிதும் பாராட் டப்பட்டன.

ஆசியா 72, பூம்புகார்— போன்ற படங்களும் எல்லோ ரையும் வெகுவாகக்கவர்ந்தன.

செய்தித் தொகுப்புப் படங்கள் தவிரத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு பல பொருள் விளக்கப் படங் களையும் தயாரித்துள்ளது.

சென்னை அரும்பொருட் காட்சியகத்தைப் பற்றி விளக்கும் 'கலனும் சொல்லாதோ வி' என்ற திரைப் படத்தைப் பார்த்தவர் அனை வரும் பாராட்டினர். ஒளிப் பதிவு முறையிலும் இசை யிலும் தேர்ந்து விளங்கிய படம் இது.

'நெடுங்கடல் மேலே' என்ற மீன் துறையைப் பற்றிய படமும், ஊர் நல வாழியரின் பணிகளை விளக்கும் 'உதவிக்கரம்' என்ற படமும் சிறப்பாக அமைந்திரு திருந்தன.

'தீயைத் தடுப்போம்' என்பது தீவிபத்துக்கான கார ணங்களையும் தடுப்புமுறைகளை யும் தீவிபத்து ஏற்பட்டால் செய்யவேண்டிய முறைகளை யும் விளக்கும் படம்.

அண்ணல் காந்தியடிகள் பற்றிய 103-வது பிறந்தநாள் விழா (வண்ணப்படம்).

'உரமே உணவு' என்ற படம் விவசாயிகளுக்கு உரங் களைப் பற்றிய தெளிவான விவரங்களைத் தரும் படம்.

ஐ.ஆர்.—8, ஐ.ஆர்.—20 போன்ற நெற்பயிர்கள், கம்பு, சோளம், கரும்பு போன்ற விவசாய நுண்முறைகளை விளக்கும் படம் 'உயர் விளைச் சல் தரும் உன்னதப் பயிர்கள்'.

பயிர்ப் பாதுகாப்பு-பயிர் களை அழிக்கும் பூச்சிகளி லிருந்து பயிர்களைக் காக்கும்

தமிழ் நாட்டில் மொத்தம் சுமார் 32,000 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இவற்றுள் சுமார் 22,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன.

இந்த மாநிலத்தில் உள்ள சுமார் 2,700 உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்கு 1973–74-ஆம் ஆண்டில் ஆகும் மொத்தச் செலவு ரூ. 29 கோடியாகும்.

1973–74-ல், 14–17 வயதுப் பிரிவைச் சேர்ந்த 40,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கவும், கூடுதலாக 375 ஆசிரியர்களை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

• • •

அறிவியல் சாதனங்களை வாங்குவதற்கும், ஆய்வுக் கூடங்கள் அமைப்பதற்காகவும் (கருவிகள் வாங்க ரூ. 15,000, ஆய்வுக்கூடக் கட்டடங்களுக்கு ரூ. 25,000) உயர்நிலைப் பள்ளிகளுக்கு உதவி மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயற்படுத்துகிறது. இந்தத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் 800 உயர்நிலைப் பள்ளிகள் பயனடைந்துள்ளன. இத்திட்டம் 1973–74-லும் தொடரும். இதற்கு ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 40 உயர்நிலைப் பள்ளிகள் பயனடையும்.

தற்போது உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியற் கருவிகளும் கொண்டுள்ள இரு ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் இயங்குகின்றன. ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒன்று என்னும் வீதத்தில் மேலும் 12 ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் வாங்கப்படும்.

• • •

1973–74-ல், 'அறிவியல் பொருட்காட்சி' என்ற புதியதொரு திட்டம் கொண்டுவரப்படும். இத்திட்டத்தின் கீழ் உயர்நிலைப் பள்ளிகள் சிறப்பான அறிவியற் கல்வியை விளக்கக் கூடிய அறிவியல் சங்கங்களையும், பொருட்காட்சிகளையும் அமைக்கும். இத்திட்டம் 1973–74-ல் இரண்டு மாவட்டங்களில் தொடங்கப்படும். பின்னர் அது ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும். இந்தப் பொருட்காட்சிகளில் கலந்துகொள்ளும் பள்ளிகள், அவற்றிற்காகும் செலவைப் பகிர்ந்து கொள்ளும். அரசு இணை மானியம் வழங்கும்.

• • •

எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் நல்ல நூலகங்களை அமைப்பதற்கான திட்டத்தின் கீழ் இதுவரையில் 1,388 பள்ளிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1973–74-ல் மேலும் 200 உயர்நிலைப் பள்ளிகளில் நூலகங்கள் அமைக்க, பள்ளிக்கு ரூ. 500 வீதம் மானியம் வழங்கப்படும்.

• • •

கல்வி விளக்கப்படங்கள் ( Audio-visual Education ) மூலம் கல்வி கற்பிக்கப்படுவதற்காக 180 படச்சுருள்களும் 500 துண்டுப் படச்சுருள்களும் ( Film Strips ) வாங்கும் பொருட்டு 1973–74-ல் ரூ. 1 இலட்சம் செலவிடப்படும். இதனால் கல்வி விளக்கத் திரைப்படச் சுருள் தொகுப்பில் பழையனவற்றுக்குப் பதிலாகப் புதியவை இடம் பெறும்.

### கடைநிலை ஊழியர்க்கு வீட்டு வசதித் திட்டம்

மாதம் ரூ. 200-க்குக் குறைவாக ஊதியம் பெறுகின்ற கடைநிலை ஊழியர்களுக்கு வாடகை முறையில் வீடளிக்கும் திட்டத்தை விரிவாக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அரசு ஊழியர் வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியில் 10 சதவீதம் கடைநிலை ஊழியர் வீட்டு வசதிக்கென ஒதுக்கப்படும்.

சென்னை மாநகரிலுள்ள தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள சுமார் 5,000 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்வதற்காக முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. மற்றும் வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் மருத்துவர்கள், இயல் ஊர்திகளில் சென்று, பள்ளி மாணவர்களின் உடல்நலனை ஆய்வு செய்கிறார்கள்.

• • •

குழந்தைகளுக்கான நூல்களைத் தமிழில் எழுதுவோருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ், ஒவ்வோர் ஆண்டும், ரூ. 500-க்கு மேற்படாமல், பத்துப்பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்கு இந்திய அரசு ஆதரவளிக்கிறது. குழந்தைகளுக்கான சிறந்த நூல்களைத் தமிழில் படைப்போருக்கு 1,000 ரூபாய் மொத்தப் பரிசு வழங்கப்படுகிறது.

• • •

உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காகத் தற்போது இம்மாநிலத்தில் 28 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவர்களுக்காக 8 பள்ளிகளும், காது கேட்காத ஊமைச் சிறுவர்களுக்காக 10 பள்ளிகளும், கண், காது, வாய் ஊனமுள்ள சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும், உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காக 4 பள்ளிகளும், தொழுநோயால் வருந்தும் சிறுவர்களுக்காக 4 பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் 2,700 மாணவர்கள் தற்போது பயின்று வருகின்றனர்.

• • • •

அனாதைச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யும் அனாதை இல்லங்களுக்கு, அரசு நிதி உதவி அளிக்கிறது. தற்பொழுது 380 அனாதை இல்லங்கள் அரசு நிதி உதவி பெறுகின்றன. அவற்றுள் 7 இல்லங்கள் 1972–73 முதல் நிதி உதவி பெறுகின்றன. இவற்றின் வாயிலாகக் கிட்டத்தட்ட 63,000 அனாதைச் சிறுவர்கள் பயன் பெறுகின்றனர்.

• • • •

1961-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 31.4 சதவீதம் ஆகும். 1971–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இது 39.39 சதவீதமாக உயர்ந்தது. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஆண்களில் 51.68 சதவீதத்தினரும், பெண்களில் 26.83 சதவீதத்தினரும் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தனர். எழுத்தறிவின்மையைப் போக்குவதற்காக 22 முதியோர் கல்வி நிலையங்கள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.



வழிகளை விளக்கும் படம்.

சிறுசேமிப்பின் சிறப்புகளை விளக்கும் ' நமது கடமை என்ற படம்.

சீரணியின் தொண்டுகளையும் சாதனைகளையும் விளக்கும் ' வீட்டுக்கு ஒருவர் ' என்ற படம்

குடும்ப நலத் திட்டத்தை விளக்கும் ' வள்ளுவர் வாக்கு'

ஐ.ஆர்.—20 நெற்பயிர் வேளாண்மை பற்றி விஞ்ஞான முறையில் விளக்கும் படம் ' நெல் வேளாண்மைக்கு வழி முறைகள் ' என்ற படம்.

குடும்ப நலத்திட்டம் பற்றிய சிறிய வண்ணப்படங்களாக '' போதும் ஐயா '', ''வெற்றிகள் குவிந்தாலும் '' முதலிய படங்கள் வெளிவந்துள்ளன.

இப்பொழுது தயாரிப்பிலுள்ள பொருள் விளக்கப் படங்கள் (Documentaries) வருமாறு :

கண்கெட்ட பிறகு
வளமான வாழ்வு
வாழ்க்கை வளம் பெற
அன்னையர் இருவர்
மனம் ஒரு குரங்கு
எந்நாளும் காப்போம்
இருண்ட வீடு
பருத்தி விளைச்சல்
தெளிப்பான்களின் பணி
தொழில் வளம்
விவசாயக் கூட்டுறவு அங்காடிகள் (வண்ணப்படம்)
உயர்விளைச்சல் ,,
சிற்பக் கலை ,,
பரிசுச் சீட்டு ,,
சுற்றுலா ,,
ஆசியா 72 ,,
கைத்தறி ,,
பூம்புகார் ,,

கண்சிகிச்சை முகாமகள்-பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லங்கள் முதலியன பற்றிய வண்ணப்படம்.

இப்படி நீண்ட பட்டியல் திரைப்படப் பிரிவில் உருவாகும் படங்களை விளக்குகிறது.

நமது திரைப்படப் பிரிவின் பொருள் விளக்கப்படங்களில் திரையுலக நட்சத்திரங்கள் பலரும் பங்கேற்று நடித்து வருவது குறிப்பிடத்தக்கது !

திரைப்படப் பிரிவின் செய்திப்படங்கள் திரையரங்குகளில் திரையிடப்படுவது தவிர, மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலமாக (16 எம்.எம். படங்களாக எடுக்கப் பெற்று பட்டி தொட்டி முழுவதும் திரையிடப்படுகின்றன.

குடும்பநலத்துறை அலுவலகங்கள் மூலமாகவும் திரையிடப்பட்டு வருகின்றன.

திங்கள் தோறும் இரண்டு படங்களை வெளியிட்டு வரும் நமது திரைப்படப் பிரிவின் வருவாயும் ஆண்டுதோறும் கூடுதலாகிக் கொண்டு வருகிறது.





இந்தியாவில் உள்ள மாநில திரைப்படப் பிரிவுகளில் முதன்மை வகிக்கும் நமது மாநில திரைப்படப் பிரிவின் படங்களைப் பார்த்துப் பல மாநிலத்தவரும் பாராட்டியுள்ளனர்.

நமது திரைப்படப் பிரிவுக்காக இப்பொழுது தனியான நிருவாக அமைப்புக்கூடங்களும் திரையரங்கும் கட்டப்பட்டுள்ளன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ் நாடு அரசு திரைப்படப் பிரிவு மேலும் வளரப் பல்வேறு வாய்ப்புகளும் உள்ளன.

எனவே, நமது திரைப்படப் பிரிவின் நூறாவது படம் பல நூறாக வளர வாய்ப்புகளுக்கு குறைவில்லை. ஆகவே நூறு பல நூறாக மலரும் காலமும் தொலைவிலில்லை.

-மாமூலன்.



குடியானவர் கல்வி—தொழில் எழுத்தறிவுத் திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப் பேட்டை, பொள்ளாச்சி ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை வட்டத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும் நடத்தப்பட்டது. இத்திட்டம், 1972—73-ஆம் ஆண்டில், தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் கொண்டுவரப் பட்டது.

• • • •

நூலகச் சட்டம்இயற்றி, நூலக இயக்கத்திற்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் ஒரு சில மாநில அரசுகளுள் தமிழ்நாடு அரசும் ஒன்றாகும். தற்போது இம்மாநிலத்தில் மாவட்டமைத்திய நூலகங்கள் 13-ம், கிளை நூலகங்கள் 1,437-ம், புத்தகம் வழங்கும் நிலையங்கள் 1,882-ம் உள்ளன. இயங்கும் நூலகப் பணி, புத்தகங்களை இல்லங்களில் கொண்டு தரும் பணி, சிறுவர்கள், மகளிர் ஆகியோருக்கான நூலகப் பணி, சுற்றுலாப் பயணிகளுக்கான நூலகப்பணி, கைதிகளுக்கான நூலகப் பணி, காவல் துறைப் பணியாளர்களுக்கான நூலகப் பணி, மருத்துவமனை நூலகப் பணி ஆகிய பணிகளை மாவட்ட நூலக மையங்கள் செயல் படுத்து கின்றன.

• • • •

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், கல்லூரி மாணவர்களுக்காக இது வரையில் 457 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. தற்போது 50 நூல்கள் அச்சில் உள்ளன. நாடு முழுவதும் இந்தி உட்பட எல்லா வட்டார மொழிகளிலும் 1971 டிசம்பர் 31 முடிய வெளியிடப்பட்ட கல்லூரிப் பாட நூல்கள் 652 தான். இதனோடு ஒப்பிட்டால் தமிழ்நாட்டுச் சாதனை குறிப்பிடத் தக்கதாகும். மேலும் 546 புத்தகங்களை எழுத, பாடநூல் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிறுவனம் இதுவரை வெளியிட்டுள்ள நூல்களுள் 328 மூல நூல்களாகும். 129 மொழி பெயர்ப்புக்களாகும்.

• • • •

சட்டக் கல்லூரி மாணவரின் எண்ணிக்கை 1966—67-ல் 1,045 ஆக இருந்தது. 1972—73-ல் சுமார் 2,500 ஆக உயர்ந்துள்ளது. சட்டப் படிப்பில் சேர்வதற்கான ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில் 1966—67-ல் மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டன. 1972—73-ல் மாலை நேர வகுப்பு மாணவரது எண்ணிக்கை 660 ஆகும். பட்ட (மேற்படிப்பு எம்.எல்) வகுப்புகள் 1969—70-ல் தொடங்கப்பட்டன. தற்போது இந்த வகுப்புகளில் சுமார் 40 மாணவர் உள்ளனர்.

• • • •

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 10 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (3,368 மாணவர்கள்) செயல்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை 30 ஆக (9,59 மாணவர்கள்) உயர்ந்தது. தற்போது 31 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (13,112 மாணவர்கள்) உள்ளனர்.

கல்வித் தர உயர்வு நடவடிக்கை மையமாகச் செயல்படவும் மாவட்டத் தலைமை இடத்துக்கு வரும் ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்கு என்று 1970—71-ல் வேலூரில் ஆசிரியர் இல்லம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்கள் தாமாகவே திரட்டிய வசூலோடு மாநில அரசு ரூ. 50,000 மானியம் வழங்கியது. உதகமண்டலத்தில் ஆசிரியர் இல்லம் ஒன்று கட்டுவதற்கு ரூ. 1 இலட்சம் மானியம் தரப்பட்டுள்ளது. கோடைக்கானலிலும் ஆசிரியர் இல்லத்திற்கு மானியம் அளிப்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

---

# வளரும் சுற்றுலா!

1972-ஆம் ஆண்டின் இறுதி ஆறுமாத காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த பயணிகளின் எண்ணிக்கை 1971-ஆம் ஆண்டில் இதே காலத்தில் வந்த வெளிநாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையை விட 25·5 சதவிகிதம் அதிகமாகும். 1971-ஆம் ஆண்டில் மொத்தம் 3 இலட்சத்து 42 ஆயிரத்து 950 வெளிநாட்டுப் பயணிகள் இந்தியாவுக்கு வந்தனர். இதற்கு முந்திய ஆண்டில் இந்தியாவுக்கு வந்த வெளி நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 3 இலட்சத்து 995.

ஒருங்கிணைந்த முறையில் சுற்றுலாவுக்கான இடங்களை வளரச் செய்வதற்கான திட்டம் தற்போது அமல் நடத்தப்பட்டு வருகின்றன. கோவளம் கடற்கரை, அனைத்துலகத் தரத்தின்படி ஓர் உல்லாசக் கடற்கரைப் பகுதியாக அமைக்கப்பட்டு வருகிறது.

ஐ. நா. வளர்ச்சித் திட்டத்தின் கடற்கரைப் பகுதி வளர்ச்சி ஆய்வுக் குழு, கோவளம், மாமல்லபுரம், கோவா ஆகிய இடங்களிலுள்ள கடற்கரைப் பகுதிகளை எவ்வாறு மேலும் வளரச் செய்வது என்பது பற்றி ஆராய்ந்து வருகிறது.

1972-ஆம் ஆண்டில் விமானப் போக்குவரத்தும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. பரிசிலனை ஆண்டில் இந்திய விமானங்கள் 31 இலட்சத்து 59 ஆயிரத்து 245 பயணிகளைப் பல்வேறு இடங்களுக்கு ஏற்றிச் சென்றுள்ளன. கடந்த ஆண்டைவிட இந்த எண்ணிக்கை 24 சத விகிதம் அதிகமாகும். இதே காலத்தில் பல்வேறு விமானங்கள் பறந்த [illegible] விட 7·3 சதவிகிதம் அதிகமாகும்.

பட்டு என்றதும் நமக்குப் 'பட்'டென்று நினைவுக்கு வருவது பளபளக்கும் பாங்கான பட்டாடைகளே !

இந்த ஆடைகளை அணிவதற்கு அடிப்படையாக விளங்குவது பட்டுத்தொழில். இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் தமிழக அரசின் செயற் திட்டங்களைத் தெரிந்து கொள்வோம்.

பட்டுத் தொழில் ஒரு வேளாண்மைத் தொழிலாகும். தருமபுரி மாவட்டத்தில் ஓசூர், தேன்கனிக்கோட்டை வட்டங்கள், கோயம்புத்தூர் மாவட்டம், கோபி வட்டத்தில் தாளவாடி பிர்க்கா, சேலம், வட ஆர்க்காடு மாவட்டங்களின் சிறு பகுதிகள் ஆகிய இடங்களில் உழவர்கள் இத்தொழிலை ஒரு துணைத் தொழிலாகவே செய்து வருகின்றனர்.

பட்டுப் புழுக்களுக்குத் தேவையான முசுக்கொட்டை மரங்களைப் பயிரிடுதல், பட்டுப்புழு உற்பத்தி, பட்டுப்புழு வளர்ப்பு பட்டுப்புழுக் கூடு உற்பத்தி, முடிவாகப் பட்டுப்புழுக் கூட்டினின்று கச்சாப் பட்டுப் பிரித்தெடுத்தல் போன்றவை இத்தொழிலில் அடங்கும். தற்பொழுது 3,501·48 ஹெக்டேர் நிலத்தில் முசுக்கொட்டை மரங்கள் பயிராகின்றன, 10,000 குடும்பங்கள் இத்தொழிலைச் செய்து வருகின்றன.

கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பை அளிக்கும் இத்தொழிலை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், முசுக்கொட்டை மரம் நடுவதற்கான பதியன்களைப் பட்டுப்புழு வளர்ப்பவர்களுக்கு இலவசமாக வழங்குதல், பெயரளவு விலைகளில் சிறு புழுக்களை வழங்குதல், கிணறுகள், வெட்டுவதற்காகக் கடன் வழங்குதல், உதவித் தொகை வழங்குதல், பட்டுப் புழு வளர்ப்புக் கொட்டகைகள் கட்டுதல், ஈடுசெய் விலைகளில் பட்டுப் புழு வளர்ப்பதற்கான கருவிகளை வழங்குதல் போன்ற பல திட்டங்களைத் தொழில் — வணிக இயக்குநர் அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இத்துடன், பட்டுப் புழுக்களை வளர்த்தல் குறித்துப் புதிய தொழில் முனைவோர்களுக்கும், மக்களுக்கும் கற்றுக் கொடுப்பதற்காக இம்மாநிலத்தில் 10 செய்முறை விளக்கப் பண்ணைகள் உள்ளன. பட்டுப் புழு வளர்ப்போர் பெருமளவில் பயனடைவதற்காக அவர்களுக்குச் சிறு பட்டுப் புழுக்களை வழங்குவதற்காக 7 பட்டுப் புழுப் பண்ணைகள் உள்ளன. இவை தவிர இம்மாநிலத்தில் உள்ளூர் இனப் புழுக்கூடுகளை உற்பத்தி செய்வதற்காக அண்மையில் 4 ஆரம்ப விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டில் பட்டுப் புழு வளர்ப்போரின் தேவையை நிறைவு செய்யும் வகையில் ஓசூரில் ஒன்றும், தாளவாடியில் மற்றொன்றுமாக இரண்டு பட்டுப்புழுக் களஞ்சியங்கள் (முட்டை உற்பத்தி செய்யப்படும் நிலையங்கள்) உள்ளன. மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப் புழுக் கூடுகளை வாங்குவதற்காக 5 பட்டுப்புழுச் சந்தைகள் உள்ளன. ஓசூரில் உள்ள அரசு பட்டு வளர்ப்புப் பிரிவிலும் தாளவாடியிலுள்ள கூட்டுறவுப் பட்டு வளர்ப்புச் சங்கத்திலும், இக்கூட்டுகளினின்று நூல் பிரித்தெடுக்கப்பட்டு பட்டாக மாற்றப்படுகிறது. முசுக்கொட்டை மரம் பயிரிடுவது ஆதாயமான தொழிலாக உள்ள வட ஆர்க்காடு, கடலூர், சேலம், தென் ஆர்க்காடு, மதுரை ஆகிய மாவட்டங்களில் அதிக உயரமில்லாத பகுதிகளில் வாழும் விவசாயிகள் அண்மையில் இத்தொழிலை மேற்கொண்டுள்ளனர்.

இத்தொழிலை வளர்ச்சியடையச் செய்வதற்காகத் தருமபுரி மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு அரசு தரிசு நிலங்களைக் குத்தகைக்கு விடுவதற்கான திட்டம் ஒன்று அண்மையில் மேற்கொள்ளப்பட்டது. இது வரை குத்தகைக்கு வழங்குவதற்காக 6,000 ஏக்கர் நிலம் சமப்படுத்தப்பட்டுள்ளது. சுமார் 1,000 ஏக்கர் நிலத்தில் முசுக் கொட்டை மரம் பயிரிடப்படுகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முடிவில் சுமார் 10,000 ஏக்கர் அளவுக்கு முசுக்கொட்டை மரங்களைப் பயிரிடுவது என்ற இலக்கை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

1971 மார்ச்சுத் திங்களில் குன்னூரில் ஆராய்ச்சி வளர்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இந்நிலையம் பட்டுப் புழு இனப் பெருக்கச் சோதனைகளை ஏற்கெனவே நடத்தத் தொடங்கிவிட்டது. சுமார் 8 சிறந்த சேர்க்கை இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன ; அண்மையில் இவை, களச் சோதனைகளில் பயன்படுத்தப் பட்டன. இவை, அதிக அளவு பட்டுப் புழு உற்பத்தி செய்வதற்கும், தரமான பட்டுப்புழு வளர்ப்புக்கும் ஏற்றவையாகும் ; கோயம்புத்தூர் மாவட்டத்தின் அதிக உயரமல்லாத பகுதிகள், வெப்ப மண்டலங்கள் ஆகியவற்றுக்கு இவை ஏற்றதாகும்.

புதிய முசுக்கொட்டை மர வளர்ப்புப் பண்ணைகளைத் தொடங்குதல், தருமபுரி, சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் முன்னோடி வளர்ச்சி நிலையங்களை ஏற்படுத்துதல், ஓசூரில் உள்ள கலப்பினப் பட்டுப் புழுக்களஞ்சியத்தை விரிவு படுத்துதல், பேரிகை, தளி, வாணியம்பாடி ஆகிய இடங்களில் புழுக் கூடு சந்தைகளைத் தொடங்குதல், ஓசூரில் பட்டுத் தொழில் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் தொடங்குதல், பத்னுபுரத்தில் பட்டுப் புழு இன வளர்ச்சி இல்லம் ஒன்று ஏற்படுத்துதல், ஆசனூரில் உள்ள பட்டு வளர்ப்பு இல்லத்தை மேம்படுத்துதல் ஆகிய வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றை 1973—74-ஆம் ஆண்டில் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

# 10,000 குடும்பங்கள் பயன்பெறும் பட்டுத் தொழில்

## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண் : 151.

சேலம் - 1.  தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

| | |
|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) | 3½% |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் | 4½% |
| **பிக்சட் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு : | |
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் | 5½% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் | 6½% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | 7¼% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | 7½% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் | 7¾% |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் | 8 % |
| நடப்பு கணக்கு ½% | சேமிப்பு கணக்கு 4½% |

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு ½% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/–க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., தலைவர்.  வை. இராமலிங்கம், செயலாளர்.  தி. இராஜமாணிக்கம், நிர்வாக அலுவலர்.

## காலக் கண்ணாடி

காலததைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந்திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?



**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**

பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

உயர் ரகத்தைக் குறிக்கும் வாட்டர் மார்க்

FDSSPB 777TMA


# மானாவாரி உளுந்து

## மகசூல் பெருகிட....

புலால் மறுத்தோர்க்குப் புரதச் சத்து அளிப்பவை பருப்பு வகைகளே! உடலுக்கு ஊட்டம் அளிக்கும் பருப்பு வகைகளில் மிகவும் முக்கியமானதாக விளங்குவது உளுந்து! தமிழ் நாட்டில் நீண்ட காலமாகவே, சிறப்பு உணவுப் பொருள்கள் பல தயாரிக்க உளுந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. தமிழர்களின் உணவில் முக்கிய அங்கம் வகிக்கும் உளுந்து, ஊட்டச் சத்து மிகுந்தது. நூறு கிராம் உளுத்தம் பருப்பில் கீழ்க்கண்டுள்ளவாறு ஊட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன;

புரதம்—24·0 கிராம்;
கொழுப்பு—1·40 கிராம்
மாவுப் பொருள் — 60·30 கிராம்.
சுண்ணம்பு — 0·20 கிராம்.
பாஸ்பரஸ்— 0·37 கிராம்.
இரும்பு — 9·80 மி. கிராம்.
வைட்டமின் ஏ — 64 ஐ. யூ.
வைட்டமின் பி1 — 0·42 மி. கிராம்;
வைட்டமின் பி2 — 0·32 மி. கிராம்;
நிக்கோட்டினிக் அமிலம் — 2·00 மி. கிராம்;
சக்தி — 350 கலோரி;

மேற்கண்டுள்ளவாறு ஊட்டச் சத்துக்கள் மிகுந்துள்ளதன் காரணமாகவே உளுந்திலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருள்கள் சிறப்பானவைகளாக விளங்குகின்றன.

தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 1,09,970 ஏக்கரில் உளுந்து சாகுபடி செய்யப்பட்டு, 14,070 மெட்ரிக் டன் உளுந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இவ்வுற்பத்தி தமிழ் நாட்டின் உளுத்தம் பருப்புத் தேவையை ஈடு செய்யப் போதுமானதாக இல்லை. எனவே தமிழ் நாட்டின் உளுத்தம் பருப்புத் தேவையை ஈடு செய்ய வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியுள்ளது. இதன் காரணமாகவே உளுத்தம் பருப்பின் விலை உயர்ந்து காணப்படுகிறது!

ஊட்டச் சத்து மிகுந்த உளுத்தம் பருப்பு ஏழை எளியவர்களுக்கும் குறைந்த விலையில் தொடர்ந்து கிடைத்திட வேண்டுமானால், தமிழ் நாட்டின் உளுந்து உற்பத்தியை உடனடியாகப் பெருக்க வேண்டும். தற்பொழுது பெரும்பாலான உழவர் பெருமக்கள் உளுந்து சாகுபடிக்கு இரசாயன உரம் இடுவதில்லை; பூச்சி மருந்துகள் தெளிப்பதில்லை; உற்பத்தியைப் பெருக்க உதவும் நுண்ணுயிர்களை விதைகளுடன் கலந்து விதைப்பதில்லை; அதிக மகசூல் தரும் புதிய ரகங்களை விதைப்பதில்லை. இத்தகைய நவீன சாகுபடி முறைகளை மேற்கொள்ளாததனாலேயே உளுந்து உற்பத்தி பெருகவில்லை.

தமிழ் நாட்டில் தற்போது சராசரியாக ஏக்கருக்கு 135 கிலோ (எக்டேருக்கு 334 கிலோ) அளவிலேயே உளுந்து உற்பத்தியாகி வருகிறது. ஆனால் 'கோ-1' என்ற உளுந்து ரகத்தை நவீன சாகுபடி முறைகளைப் பயன்படுத்தி மானாவாரியாகச் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 300 கிலோ வரை உளுந்து மகசூல் பெறமுடியும்! எனவே தமிழ் நாட்டின் தற்போதைய உளுந்து உற்பத்தியை 'கோ 1' ரக உளுந்தின் மூலம் இருமடங்காகப் பெருக்க இயலும்!

தற்பொழுது தமிழ் நாட்டில் ஏறத்தாழ 1 இலட்சம் ஏக்கரில் மானாவாரியாக உளுந்து பயிரிடப்பட்டு வருகிறது. இப்பரப்பு முழுவதிலும் செப்டம்பர் — அக்டோபர் மாதங்களில் 'கோ. 1' உளுந்து பயிரிடப் படுமானால் 110 நாட்களில் ஏழத்தாழ 30,000 மெட்ரிக் டன் உளுந்து உற்பத்தியாகிவிடும்! இவ்வாறு உற்பத்திப் பெருகினால் உழவர் பெருமக்களுக்கு அதிக வருவாய் கிடைப்பதுடன், உளுத்தம் பருப்பின் விலையும் கணிசமாகக் குறையும். எனவே கீழே குறிப்பிட்டுள்ள சாகுபடி முறைகளை மேற்கொண்டு உளுந்து உற்பத்தியைப் பெருக்கிடுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

### கோ. 1 உளுந்து சாகுபடி குறிப்புகள்

சிறப்பு :—மானாவாரியாகச் சாகுபடி செய்வதற்கு ஏற்ற சிறந்த ரகம் கோ. 1 உளுந்து. இதை எல்லா மாவட்டங்களிலும் பயிரிடலாம்.

பருவம் :—செப்டம்பர்—அக்டோபர் மாதங்களில் விதைப்பது சிறந்தது.

வயது :—110 நாட்கள்.

விதையளவு :— ஏக்கருக்கு 8 கிலோ.

நிலம் தயாரித்தல் : — நிலத்தை நன்கு உழுது புழுதியாகச் செய்ய வேண்டும்.

அடி உரம் :— கடைசி உழவில் ஏக்கருக்கு 4 வண்டி (2 டன்) தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்), 4·4 கிலோ தழைச்சத்து (22 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 10 கிலோ யூரியா), 8·8 கிலோ மணிச்சத்து (55 கிலோ சூப்பர் பாஸ்பேட்) ஆகியவைகளை இட வேண்டும்.

விதைத்தல் :— விதைகளை 'ரைசோபியம்' என்னும் நுண்ணுயிர்களுடன் கலந்து விதைப்பது சிறந்தது. வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடைவெளியும், வரிசையில் செடிக்குச் செடி 20 சென்டி மீட்டர் (8

அங்குலம்) இடை வெளியும் இருக்குமாறு விதைகளை விதைக்க வேண்டும்.

பின் செய் நேர்த்தி:—விதைத்த 15-ஆம் நாள் களைக் கொட்டினால் கொத்தி விட்டுக் களை எடுக்க வேண்டும். பிறகு ஒரு மாதம் கழித்து இரண்டாம் முறையாகக் களை எடுக்கவேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு:—உளுந்துச் செடிகளை அசுவணி (Aphid) இலைப் புழுக்கள் (Leaf caterpillars), செடி வண்டு (Plant Bug) ஆகியவை தாக்காமலிருக்க, விதை முளைத்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் பி.எச்.சி. 10 சதத் தூளையும், டி.டி.டி. 5 சதத் தூளையும் சம அளவில் கலந்து—அதாவது 1 : 1 என்ற அளவில் கலந்து — ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

காய்ப்புழுக்களின் தாக்குதலைத் தடுக்க உளுந்துச் செடி பூ பூத்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 2 முறை டி.டி.டி. 5 சதத் தூளையோ அல்லது கார்பரில் 10 சதத் தூளையோ ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும்.

வாடல் நோய், வேர் அழுகல்நோய், தண்டு அழுகல் நோய் ஆகியவை தோன்றினால், நீரில் கரையும் செரசான் 0·1 சத கரைசலைத் (1 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்க வேண்டும்.

மகசூல்:— மேற்கூறிய முறையில் 'கோ 1' உளுந்து பயிரிட்டால், ஏக்கருக்கு 800 கிலோ உளுந்து மகசூல் பெறலாம். எனவே கோ. 1 உளுந்து பயிரிட்டு அதிக வருவாய் பெறுமாறும், உளுத்தம் பருப்பு விலையைக் குறைக்க உதவுமாறும் உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.

## வெண்பாப் போட்டி 64

ஈற்றடி: தெள்ளிதில் காணலாம் தேர்ந்து

முடிவு நாள்: 1·10·73

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.

## அடுத்த இதழில்...

* வானும் வள்ளுவரும் இலக்கியக் கட்டுரை
* அண்ணலின் வாழ்விலே..!
* புன்னகை (சிறுகதை)
* விரைந்து முன்னேறும் வெள்ளி விழாச் சீரூர்

தமிழ் நாட்டில் ஏறத்தாழ 10,542 ஆலயங்கள் உள்ளன. பதினைந்து மாவட்டங்களிலுள்ள இந்த ஆலயங்களில், தஞ்சை மாவட்டத்தில் மட்டும் உள்ள ஆலயங்களின் எண்ணிக்கை 1,809 ஆகும். இது தவிர ஏராளமான சிறிய ஆலயங்களும் தஞ்சை மாவட்டத்திலுள்ளன.



ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

78269



பதிவு எண். M. 8676




நாம்
இந்நாட்டு மன்னர்கள்!
இன்றைய சமுதாயம்!
எதிர்காலத்தை உருவாக்குபவர்கள்!
வருங்காலத்தின் வாழ்வும் வளமும் நம் கையில்!
நமது அரசுத்
திட்டங்களின் பட்டியல் இதோ....
உணவு உற்பத்தியில் தன்னிறைவு!
மாநிலத் திட்டக்குழுப் பணிகள்!
குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்!
குடிசை மாற்றுவாரியப் பணிகள்!
தொழில் வளர்ச்சிக்குப் புதிய அமைப்புகள்!
நமது அரசின் இத்திட்டங்களும் முயற்சிகளும்
முழு வெற்றி ஈட்டிட நாம் ஆற்றும் கடமையே
அளவான குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்.
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்.
குடும்ப நலத் துறை தமிழ்நாடு அரசு


தமிழரசு

வாழ்க்கை வாழ்வதற்காகவும் இருக்கலாம், பிறரை வாழ் விப்பதற்காகவும் இருக்கலாம் என்பதற்கு ராதை—நர்மதா இருவரின் வாழ்க்கையுமே சான்று.

ராதையின் தியாகம் நர்ம தாவின் மணவாழ்வுக்கு வழி செய்துள்ளது. நர்மதாவின் நன்றியுள்ள நெஞ்சம் ராதை யின் சட்டப் படிப்புக்கு வழி செய்துள்ளது. ஒருவருக்கொரு வர் செய்து கொண்டிருக்கும் உதவிக்கும் சேவைக்குமிடையே மணிவாசகன் சாட்சிப் பொரு ளாக மட்டுமே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிருன் ; அவனைச் சம் பந்தப் படுத்தியோ அவன் சம்மதம் பெற்ருே இரண்டு பெண்களும் செயல்படவில்லை.

இது, அவன் ஆற்றலுக்கும், அறிவுச் செருக்குக்கும் விழுந் திருக்கும் அடியல்லவா?

'செண்பகா மில்ஸ்' முதலாளி அவனுக்கு வேலை தரத் தயங்கு கிருர் ; அதே ஆலையில் நர்மதா ——டாக்டர் நர்மதா, எம்.பி. பி.எஸ்., கம்பெனி டாக்டராக வேலை பார்க்கப் போகிருள் ; அவள் பெறும் மாதச் சம்பளத் தில் இவனுடைய மாமன் மகளைப் படிக்கவைக்கப் போகிருளாம்!

எத்தனை பெரிய அவமானம் இது .. அவன் சம்பாத்திய சக்திக்கு விழுந்துவிட்ட சுருக்குக் கயிறு.



## 11. குமாரி ராதா

'' ராதா! ''

—புலியின் உறுமல் வந்த திசை நோக்கித் திரும்பிப் பார்க்கிருள் ராதை. பொங்கி வரும் ஆவேசம் அலைமோதும் அனல் விழிகளோடு நிற்பவன் மணிவாசகன்.

எந்தவிதப் பெரிய பிரச்சினை களுமே பிறந்துவிடவில்லை என் பதைப்போல் முகத்தை மலராக மாற்றிக் கொண்டு, புன்முறுவல் பூத்து வரவேற்க முனைகிருள் ராதை.

ஒளி படைத்த கண்களும் உறுதிகொண்ட நெஞ்சமுமாக நிமிர்ந்து நிற்கிருள் நர்மதா. மணிவாசகனின் குரலில் ஏற் பட்டிருக்கும் கோபத்தை அவள் பொருட்படுத்தவில்லை.

மீண்டும், '' ராதா !'' என்று அழைக்கிருன் மணிவாசகன்.

'' என்னத்தான்?''

'' ஆலை முதலாளி முத்தையா, எனக்கு வேலை தர முடியாது என்பதை எப்போது சொன் ஞர்? ''

'' தரமுடியாது என்று சொல்ல வில்லை அத்தான். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று தான் சொல்லியிருக்கிருர் ''

'' அவர் அப்படித் தயங்கு வதற்கு என்ன அர்த்தம்? என்ன அவசியம் ஏற்பட்டது? ''

'' என்னைக் கேட்டால்? ''

'' நானே சொல்கிறேன் ... பாண்டித்துரையின் மருமகன்— ராதையின் வருங்காலக் கணவன் என்ற முறையில் தான் அவர் எனக்கு வேலை தரும் எண்ணத் தோடு இருந்திருக்கிருர் '' என்று மணிவாசகன் கூறியதும் ராதை கலகலவெனச் சிரிக்கிருள்.

'' சிரிக்காதே! '' என்று சீறு கிருன் மணிவாசகன்,

'' என்னுல் சிரிக்காமல் இருக்க முடியவில்லை அத்தான். ஒரு ஆலையின் சட்ட ஆலோச கனுக நியமிக்கப் படுவதற்கு ராதையின் கணவன் என்ற ஒரு தகுதி மட்டும் போதுமா? ஒரு பெண்ணின் தயவினுல் தான் உத்தியோகம் கிடைக்க முடியு மென்னும் தலையெழுத்து, என் அத்தானுக்கு என்றும் கிடை யாது. இது எனக்கு நன்ருகத் தெரியும்! நீங்கள் அனுவசிய மாகக் குழம்ப வேண்டாம்....'' முத்தையா மாமாவிடம் நான் பிறகு பேசிப் பார்க்கிறேன். முதலில் உங்கள் திருமணக் காரியங்களைக் கவனியுங்கள்'' என்று துரிதப்படுத்துகிருள் ராதை.

'' ராதா இது என்னுடைய கௌரவப் பிரச்சினை.. ..! வேலையா? விவாகமா? இந்த முடிவு தெரியாமல் கல்யா ணத்தைப் பற்றிப் பேசுவதில் கூட எனக்கு விருப்பமில்லை '' என்கிருன் மணிவாசகன்.

'' உங்கள் திருமணத்தைப் பற்றி, இன்னும் பேசித் தீர்த்துக் கொள்ள, என்னதான் பெரிய பெரிய பிரச்சினைகள் வந்து விடப் போகிறதோ! '' என்று அங்கலாய்க்கிருள் ராதை.

அவளுக்கு மறுமொழி கூருமல் நர்மதாவையே ஆழ்ந்து நோக்கு கிருன் மணிவாசகன். [illegible] அலட்சியும் அவளுக்கு! [illegible]





செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசியமானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 ☐ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 ☐ Post Bag 5247, சென்னை 2.

3506



# காவலர்க்குப் பரிசளிப்பு! கடமைக்குப் பெருஞ்சிறப்பு!

மாநிலக் காவல் துறைத் தலைமை அதிகாரி அவர்களே! உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களே! தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே! காவல் துறை நண்பர்களே, பெரியோர்களே, அரசு அலுவலர்களே, தாய்மார்களே!

1969-ஆம் ஆண்டு முதல் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த இந்நன்னாளில் முதல் அமைச்சர் பதக்கம் என்ற பெயரில் காவல் துறையில் நீண்ட நாள் நற்பணி ஆற்றிய அதிகாரிகளுக்கும், வீரச்செயல் விளைத்திட்ட அதிகாரிகளுக்கும் பதக்கம் வழங்குதல், பொற்கிழி அளித்தல் எனும் புதிய முடிவினையேற்று, 69, 70, 71, 72, 73 ஆகிய இந்த ஆண்டுகளில் இன்றோடு ஐந்தாவது தடவையாக இந்த விழா நடைபெறுகிறதென்று நான் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

காவல் துறையினர் எந்த அளவுக்குத் தங்களுடைய கடமைகளை ஆற்றிட வேண்டுமென்பதைப் பொது மக்கள் நன்கு அறிவார்கள். காவல் துறை நண்பர்கள் சில நேரங்களில் தங்களுடைய உயிரையும் பணயமாக வைத்துத் தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்ற பொறுப்பினை நிறைவேற்ற வேண்டிய அளவுக்கு ஆளாகிறார்கள். இந்தியாவிலேயே உள்ள மாநிலங்களில் தமிழ்நாடு, மிகுந்த அமைதியோடும், சட்டம் ஒழுங்கு நல்ல அளவுக்குக் காப்பாற்றப்படும் என்ற அளவுக்கும் இன்றைக்கு விளங்குவதற்கு மிக முக்கியமான காரணங்களில் காவல்துறை நண்பர்களுடைய ஒத்துழைப்பும் ஒன்றாகும். குறிப்பாக நம்முடைய மாநிலக் காவல் துறைத் தலைமை அதிகாரி நண்பர் திரு. அருள் அவர்கள் மிகச் சிறந்த நிர்வாகத்தைத் தமிழகத்திலே நடத்தி வருகிறார்கள் என்பதை அனைவரும் அறிவீர்கள். அவர்கள் இந்த அரசின் கொள்கையறிந்து, இந்த அரசின் குணமறிந்து தன்னுடைய பணியை வெகு நல்ல முறையில், பாராட்டத் தக்க வகையில் நிறைவேற்றி வருகிறார் என்பது மாத்திரமல்ல- தமிழின்பால் இந்த அரசுக்குள்ள ஆர்வத்தை அறிந்து தன்னுடைய பேச்சைத் தமிழிலேயே நிகழ்த்தியிருக்கிறார் என்பதும் சிறப்புக்குரிய அம்சமாகும். அவர்களால் பொது மேடையில் தமிழில் சரளமாகப் பேசவியலாதுஎன்றாலும் தமிழிலே பற்றுக் கொண்ட முதலமைச்சருக்கு முன்னால் தமிழிலே பேசுவதற்கு --- அதற்கு அவர் எத்தனை நாள் பயிற்சி எடுத்துக் கொண்டாரோ தெரியாது-நன்றாகவே பேச வேண்டும் என்ற ஆர்வம் காரணமாகத் தமிழிலே பேசியிருக்கிறார். தமிழகத்தில் தமிழ் முக்கியமாகக் கருதப்படுகிற மொழிதான் என்பதற்கு, நேற்றைய தினம் பத்திரிகைகளில் வெளிவந்த 'நீதிமன்றத் தீர்ப்பு'' என்ற ஒரு செய்தியைக் கூறலாம். ஒரு பதுக்கல்காரர் -- அரிசி வியாபாரி--அவரைக் கைது செய்வதற்கான உத்தரவை ஆங்கிலத்தில் அடித்த காரணத்தால் அது சரியாகப் புரிந்து கொள்ளப்படாமல் அவர் கைது செய்யப்பட்டார்.

ஆகவே அது புரிகின்ற தமிழில் அடித்து இருக்க வேண்டுமென்று கூறி, நீதி மன்றத்தில் விடுதலை அளிக்கப்பட்டு இருக்கிறார். உயர்நீதி மன்றத்தில் கூடத் தமிழ் எந்த அளவுக்கு உபயோகப் படுத்தப்படுகிறது, --பயன்படுத்தப்படுகிறது என்பதும், தமிழை வளர்ப்பதற்கான பாதுகாப்பு முயற்சிகள் எந்த அளவு நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

அன்பர்களே!

காவல் துறையினருக்கு ஊதியத்திலும் வேறு பல வசதி வாய்ப்புக்களிலும் என்னென்ன உதவிகளை வழங்கலாம் என்று ஆராய்வதற்கு 69-ம் ஆண்டு போலீஸ் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டு அந்தக் குழுவின் சிபாங்ரிசுகள், ஏறத்தாழ 130 சிபாரிசுகளில், கிட்டத்தட்ட 120 சிபாரிசுகளைத் தமிழக அரசு சிலவற்றை முழுமையாகவும், சிலவற்றில் சில திருத்தங்களோடும் ஏற்றுக்கொண்டு அவ்வற்றை நடைமுறைப்படுத்தி வருகிற

பகா மில்லில் மணிவாசகனுக்கு வேலை தரத் தயங்குகிறார்கள் என்பதைக் கேட்டதும், அதிர்ச்சியடையவில்லை, ஒரு கணம் கூட அவனுக்காக அனுதாபப்படவில்லை; கொஞ்சங்கூடத் தயங்காமல் "அதே ஆலையில் 'கம்பெனி டாக்டராக' நான் பணிபுரியப் போகிறேன்" என்று கூறும் அளவுக்கு என்ன திமிர் இருக்க வேண்டும் இவளுக்கு.... தன் கணவனின் கஷ்ட நஷ்டங்களுக்காகக் கலங்காமல், அவனுக்கு வரவிருக்கும் இழப்புகளுக்காக வருந்தாமல், அவனுடைய இழப்புகளைத் தன் உயர்வுக்கான ஏணிப்படிகளாக்கிக்கொள்ள நினைக்கும் இதயம்— ஒரு பெண்ணுக்கு இருக்கலாமா? ராதைக்கு, இந்த நர்மதையைப் போல் சுயகாரியப்புலியாக இருக்கத் தெரியுமா? என்ற கோபம் மணிவாசகனின் இதயத்துள் குடிக்கொள்ளத் தொடங்குகிறது.

இந்த நிலைமையை நீடிக்க வைப்பது பெரி[illegible] கொண்டு போய் [illegible]விடும் என்று ராதையின் உள்ளம் உணர்த்துகிறது.... மணிவாசகனை எப்படியேனும் அங்கிருந்து அமைதியாக அனுப்பி வைத்தால் போதும் என்று கவலைப்படுகிறாள். அவளுக்கு உதவி செய்வது போல் வாசலில் அழைப்பு மணி ஒலிக்கிறது.

"அத்தான் யாரோ வந்திருக்கிறார்கள் போலிருக்கிறதே"

"இதோ போகிறேன்...." என்று முணுமுணுத்த படியே வாசலுக்குப் போகிறான் மணிவாசகன்.

வாசலில் ஒருவன் நிற்கிறான். அவன் கையில் இரண்டு பெயர்ப் பலகைகள்!

"ராதா!" என்று வாசலிலிருந்தபடியே கூச்சல் போடுகிறான் மணிவாசகன்.

அலைகள் ஓய்வதில்லையோ!

"இப்போது என்ன புது ஆபத்து?" என்று பயந்தபடியே வாசலுக்கு வருகிறாள் ராதை, அவளைத் தொடர்ந்து நர்மதாவும் வந்து சேருகிறாள்.

"ராதா! உன் வேலைதானா இது?"

"எது" என்று அப்பாவித்தனமாகக் கேட்கிறாள் ராதை. வாசலில் வந்து நிற்கும் பையனையும் அவன் கையிலிருக்கும் பெயர்ப் பலகைகள் இரண்டையும் பார்த்தவுடன் அவளுக்கு

**சேதங்கள் எத்தனை! எத்தனை!**

கடந்த ஆறு மாதக் காலத்தில் இரயில்வே சொத்துக்களுக்கு ஏராளமான சேதங்கள் ஏற்பட்டன. ரயில் பெட்டிகள்; ரூ. 42,18,144. மின்சாரச் சாதனங்கள்; ரூ. 85,945. சிக்னல், தகவல் தொடர்புக் கருவிகள்: ரூபாய் 13,99,949. ரயில் நிலையக் கட்டடங்கள், ரயில் பாதைச் சாதனங்கள்: ரூ. 8,51,142. ரயில் நிலைய மேசை, நாற்காலிகள், ரொக்கம், டிக்கெட்டுகள் மற்றும் பிற பொருள்கள்: ரூ. 5,81,500. சரக்குகள்: ரூ. 1,92,000.

ஒரு கணம் 'திக்'கென்றது. அவன் வந்த நேரம் புயல் வீசும் நேரம்.

மணிவாசகனின் அனுமதியில்லாமல் பெயர்ப் பலகை தயாரிக்க 'ஆர்டர்' கொடுத்திருந்தாள் ராதை. கடைச் சிப்பந்தியோ நேராக மணிவாசகனிடமே கொண்டு வந்து பலகைகளை நீட்டுகிறான்!

'மணிவாசகன் எம்.ஏ., பி.எல்.—வழக்குரைஞர்' என்ற பலகை ஒன்றும்,

'டாக்டர் (மிஸஸ்) நர்மதா மணிவாசகன், எம்.பி.பி.எஸ்.' என்ற பலகை ஒன்றும் அவர்களைப் பார்த்துச் சிரிக்கின்றன.

"உனக்கு இவ்வளவு அவசரம் கூடாது ராதா!" என்று உரிமையுடன் கடிந்து கொள்கிறாள் நர்மதா—மிஸ் நர்மதா!

"இதிலே அவசரம் ஒன்றுமில்லை அக்கா. கல்யாணப் பரபரப்பில் உங்கள்தொழிற்பெயர்ப் பலகைகளைக் கவனிக்க மறந்துவிடுவேன்.... கல்யாண தினத்தன்று இந்தப் பலகைகளை மறவாமல் நம்வீட்டு வாசலில் மாட்டி வைக்க வேண்டும் என்றுதான் முன்னேற்பாடாக...." அவளால் சொல்லைப் பூர்த்தி செய்ய முடியவில்லை.

"கல்யாணப் பரிசாகவா?" என்று இடைமறிக்கிறான் மணிவாசகன்.

"அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன்!" என்று கூறிவிட்டுப் பெயர்ப் பலகைகளை வெடுக்கென்று பறித்துக்கொண்டு வீட்டுக்குள் ஓடி மறைகிறாள் ராதை.

"இன்னொரு பெயர்ப் பலகைக்கும் ஆர்டர் கொடுக்கப் போகிறேன் ராதா!" என்கிறாள் நர்மதா.

"யாருக்காக?" எனக் கேட்கிறான் மணிவாசகன்.

"ராதாவுக்காக!"

"ஓ.... அவள் சட்டப் படிப்புத் தொடங்குவதற்கு முன்னால் பெயர்ப்பலகையைத் தயாரிக்கப் போகிறாயோ....! தாராளமாகச் செய்........" என்று இடக்காகக் கூறிய மணிவாசகன், பெயர்ப் பலகைக் கடைச் சிப்பந்தியை நோக்கி, 'தம்பி! குமாரி ராதா, பி.ஏ., பி.எல்.,! என்று பலகை ஒன்றும் எழுதிக் கொண்டுவா!" என்கிறான்.

"என்ன பெயரைச் சொன்னீர்கள்?" என்று நர்மதா குறுக்கிட்டுக் கேட்கிறாள்.

"குமாரி ராதா, பி.ஏ.பி.எல்."

"காலமெல்லாம் அவளைக் கன்னியாகவே விட்டு வைத்துவிடத் தீர்மானித்து விட்டீர்களா?"

நர்மதாவின் குரலில் கொஞ்சங் கொஞ்சமாகச் சூடு பிறக்கிறது. முதலில் ராதையின் மேல் படிப்புப் பற்றித் தயக்கம்; இப்போது அவள் திருமணம் பற்றிய தர்க்கம்.... ஆண்டவனே.... புதுமணத் தம்பதிகளின் பூசலுக்கு ராதை ஒருத்தியே காரணப் பொருளாக இருந்துவிடுவாளோ....?

எதிரும் புதிருமாய் நின்றபடி ஒருவரை ஒருவர் அழுத்தமாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். கையில் பணத்துடன் வாசல் அறைக்குள் வந்த ராதை இருவரும் நிற்கும் நிலையைப் பார்த்ததும் தொண்டையை இலேசாகச் செருமிக் கொண்டு, "என்னத்தான்...... வாய்ச்சொற்கள் என்ன பயனுமிலாமல்.." என்று குறும்பாகச் சிரித்தபடி அவர்களைக் கடந்து சென்று கடைச் சிப்பந்தியிடம் பணத்தைக் கொடுக்கிறாள்.

"ஆமாம்.... இனிமேல் வாய்ச் சொற்களுக்கு அவசியமில்லை.... காரியத்தில்தான் கண்ணும் கருத்துமாக இருக்கப் போகிறேன்." என்று அழுத்தமாகக் கூறுகிறான் மணிவாசகன்.



"ராதைக்குச் சட்டப் படிப்புக்கு என் பொறுப்பு" என்கிறாள் நர்மதா.

"ராதைக்குத் திருமணம் செய்வது என் பொறுப்பு!" என்று கூறியபடி வெளியேறுகிறான் மணிவாசகன். அவன் மனத்துள் ராதை மணமகள்; மணமகன் யார்? மணமக்கள் கோலத்தில் ராதையும், ரோமியோவும் மகிழ்வுடன் காட்சி தருகிறார்கள்! மணிவாசகன் மனத்துள் இப்படி ஒரு இன்பக் காட்சி அலைமோதுகிறது!

## 12. மனச்சாட்சியின் மறுபிறவி

ஆலை முதலாளி முத்தையா, சென்னையிலுள்ள தமது பங்களாவில் வந்து தங்குவது வழக்கமான காரியம். அதிலும் தமது ஆருயிர் நண்பரின் மகள் திருமணம் நடக்குமென்று எதிர்பார்த்தார்; நண்பரின் மருமகன் மணிவாசகன் திருமணம் நடக்க இருக்கிறது! எனவே, திருமணம் முடியும் வரை சென்னையில் தங்கியிருந்தார்.

அவரது அறையின் சுவரில் ஏழ்மைக் கோலத்தில் என்றோ நாமும் தம் நண்பருமாக எடுத்த போட்டோ அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

"பாண்டித்துரை, நீ ஏமாந்து விட்டாய்! உன்னுடைய மகள் ஏமாந்துவிட்டாள்" என்று சொல்லிக் கொண்டிருந்தபோது,

"மாமா"! என்ற குரல் கேட்டது.

கூப்பிடும் குரலில் பாசம் இல்லை; ரோசம் இருந்தது.

வந்து நின்றவள் ராதை, ஏனோ பாண்டியன் சபைக்குள் கண்ணகி வந்து நிற்பதுபோல் உணர்ந்தார் முத்தையா....

"ஏன் மாமா—ஆறு மாதங்களுக்கு முன் இறந்து போனது உங்கள் நண்பர் பாண்டித்துரையா? அல்லது அவர் உங்கள் மேல் வைத்திருந்த நம்பிக்கையா?"

அவள் பேசியது சொல் அன்று; கூரிய அம்பு!

ராதையின் கேள்வி அவரைச் சிந்திக்க வைக்கிறது. இத்தனை வேகத்துடன் ராதை தன் பங்களாவைத் தேடி வருவாள் என்பதை அவர் எதிர்பார்க்கவில்லை. மணிவாசகனைத் தம்முடைய ஆலையின் சட்ட ஆலோசகனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில் அவர் தயக்கம் காட்டியிருந்திருக்க வேண்டாம்......இந்தப்பெண் ராதை இவ்வளவு பெரிய வார்த்தைகளால் தம்மைச் சாடும் நிலை—ஏன், சுட்டுப் பொசுக்கும் நிலை——வந்திருக்கவும் வேண்டாம்....

"என்னை மன்னித்துவிடு ராதா......என் ஆலையின் சட்ட ஆலோசகன் பதவிக்கு [illegible]ணிவாசகனையே நியமித்து [illegible]கிறேன்.......... இது [illegible]" என்கிறார்





தென்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். இங்கே நம்முடைய காவல் துறைத் தலைமை அதிகாரி அவர்கள் என்னைக் குறிப்பிட்டுப் பேசும்போது, 'காமதேனுவைப் பற்றிச் சொல்கிருர்கள், கண்டதில்லை. ஆனுல் இங்கே நமது முதல் அமைச்சர் வடிவத்தில் அந்தக் காமதேனுவைக் காண்கிருேம்.' என்று புகழுரை தந்தார்கள். அப்படி அவர்கள் புகழும் போதே அடுத்து, தொடர்ந்து ஏதோ கோரிக்கைகள் வருகின்றன என்பதைப் புரிந்து கொண்டேன். நான் உள்ளபடியே காமதேனுவாக இருந்தால் நீங்கள் கேட்டதையெல்லாம் கொடுக்கலாம். அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் மிகுந்த தொல்லைக்கிடையே பணியாற்றுகிற காவல்துறையினரின் நண்பர்களுக்கு என்னுல் இயன்றதைச் செய்ய வேண்டுமென்ற இதயம் படைத்தவன் என்ற காரணத்தால் போலீஸ் கமிஷனின் பரிந்துரைகளை மட்டுமல்லாமல், பேரறிஞர் அண்ணு அவர்கள் பிறந்த நாளில், இந்தப் பதக்கம், பரிசளிப்பு நிகழ்ச்சியில் ஒன்றிரண்டு கோரிக்கைகளைக் காவல்துறை சார்பாக வெளியிடுவதும்— முடிந்தவற்றை அந்த மேடையிலேயே நிறைவேற்றித் தருவதும் ஒரு மரபாக இருக்கிறது.

அந்த வகையில் இன்றைக்கு அவர்கள் இரண்டு கோரிக்கைகளை எனக்கு முன்னுல் வைத்தார்கள். அவற்றில் முதல் கோரிக்கை காவல்துறையில் உள்ள காவலர்கள், தலைமைக் காவலர்கள், அவர்கள் பத்தாண்டுக் காலம் நற்பணி புரிந்து இருப்பார்களேயானுல் அவர்களுக்கு ஊதிய உயர்வு ஒரு ரூபாய் என்றும், 15 ஆண்டுக் காலம் தலைமைக் காவலராகப் பணி புரிந்திருந்தால் ஒன்றரை ரூபாய் என்றும், 20 ஆண்டுக் காலம் காவலராகவோ, தலைமைக் காவலராகவோ பணியாற்றியிருந்தால் ஊதிய உயர்வு 2 ரூபாய் என்றும், ஒரு ஊதிய உயர்வை இப்போது 4000 பேருக்குத்தான் அளிப்பது என்று உச்ச வரம்பு செய்யப்பட்டிருக்கிறது. அந்த உச்ச வரம்பைத் தளர்த்தி அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். எந்தனையோ காரியங்களுக்கு உச்ச வரம்பு தேவைப்படுகிறது. ஆனுல் இது போன்ற காரணங்களுக்கு உச்ச வரம்பு தேவையில்லை என்பது எனது எண்ணம்.

ஐ. ஜி. அருள் அவர்களின் இந்தக் கோரிக்கையை இதே இடத்தில் அறிஞர் அண்ணு பிறந்த இந்த நன்னுளில் ஏற்றுக்கொள்கிறேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவித்து, அப்படிப் பயனடையக் கூடியவர்களால் காவல்துறை மேலும் பயனடையும் என்ற நம்பிக்கையோடு, உங்களது அடுத்த கோரிக்கையும் விரைவில் பரிசீலிக்கப்படும் என்று எடுத்துக் கூறி, கேட்டதையெல்லாம் கொடுத்து விட்டால் அடிக்கடி காமதேனு என்று என்னைக் கூறிக் கேட்டுக் கொண்டேயிருப்பீர்கள் என்ற என் கடந்த கால அனுபவங்கள் காரணமாக அவைகள் ஒவ்வொன்றுக நிறைவேற்றப்படும் என்று கூறி, மேலும் ஒன்றை ஏற்றுக் கொண்டு அவற்றை அரசின் பரிசீலனைக்கு வைக்கிறேன் என்று குறிப்பிட்டு, அருமையாகப் பணியாற்றிய காவல் துறையினருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு காவல் துறை அதிகாரிகள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் கூறி இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்!

தஞ்சையில் 15-9-73 அன்று நடைபெற்ற "காவல் துறையினருக்கு முதலமைச்சர் விருது வழங்கும் விழா" வில் முதல்வர் கலைஞர் ஆற்றிய சிறப்புரை:





## முதல்வர் காவல் விருது பெற்றவர் விபரம்.

**துணிவுடமைச் செயலுக்காக வீரப் பதக்கம் பெற்ருேர்**

திரு. செ. சு. ஆறுமுகம்,
காவல்துறை உதவிக் கமிஷனர்,
சட்டம், ஒழுங்கு, மத்தியச் சரகம்,
சென்னை.

திரு. பெ. வேங்கட ராமானுஜம் ரெட்டி,
ரிசர்வ் இன்ஸ்பெக்டர், மதுரை.

திரு. அ. ராஜகோபாலன்,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
ஆயத் தீர்வைத் துறை.

திரு. சி. எஸ். திரிலோகசந்திரன்,
ஆய்வாளர், சென்னை நகரக் காவல்துறை.

திரு. தே. ராமசாமி, தீயணைப்பாளர்.

**தன்னிகரற்ற பணிக்காகச் சிறப்புப் பதக்கம் பெற்ருேர்.**

திரு. ஜே. எ. சாமுவேல்,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
செங்கற்பட்டு--கிழக்கு.

திரு. ஹ. தீ. துக்காராம்,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
காவல்துறை உதவிக் கமிஷனர்,
சட்டம், ஒழுங்குப் பிரிவு, மேற்குச் சரகம்,
சென்னை.

திரு. சி. அ. குப்புசாமி,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
நாமக்கல், சேலம் மாவட்டம்.

திரு. தி. ர. ராமானுஜம்,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
ஆராய்ச்சி நிலையம், குற்றப் புலனுய்வுத் துறை, சென்னை.

திரு. எம். ஏ. ராதாகிருஷ்ணன்,
காவல்துறை டெபுடி சூப்பிரண்டு,
தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 4-வது பிரிவு, கோவைப்புதூர்.

திரு. வி. ரா. கணபதி,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
சிறப்புப் பிரிவு, குற்றப்புலனுய்வுத்துறை,
சென்னை.

திரு. ஜெ. இரா. ஸ்ரீராமுலு,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
குற்றப்பிரிவு, குற்றப் புலனுய்வுத் துறை,
சென்னை.

திரு. சி. பிரம்மானந்தம்,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
உணவுப் பொருள் கடத்தல் குற்றங்கள் பிரிவு, குற்றப் புலனுய்வுத் துறை,
சென்னை-4.

திரு. வி. என். சீனிவாச ராவ்,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
சென்னை மாநகரம்.

திரு. ம. செ. பார்த்தசாரதி,
காவல்துறை பதிவு இன்ஸ்பெக்டர்,
தமிழ்நாடு சிறப்புக் காவல்படை 3-வது படைப் பிரிவு, மணிமுத்தாறு.

திரு. பரனூர் வேதகிரி,
காவல்துறை ஆய்வாளர்,
இலஞ்ச ஒழிப்பு, ஒழுக்கக் கண்காணிப்புத் துறை, வட ஆர்க்காடு பிரிவு.

ஒரே காரியத்திற்கு எத்தனை முறை எத்தனை பேர்களிடம் உறுதிமொழி கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறீர்கள் மாமா ! '' என்கிறாள் ராதை. ஏளனம் அவள் குரலில் விம்மி வெடிக்கிறது.

'' ராதா...... என் நண்பன் பாண்டித்துரையிடம் நான் வாக்குக் கொடுத்தது உண்மைதான். மணிவாசகன் இந்த வேலைக்கு வருவானோ என்று நான் தயங்கியதும் உண்மைதான்......ஆனால், இப்போது நானே கொஞ்சம் தயங்கிவிட்டேன் என்றால் அதற்கான காரணம் உனக்குப் புரிய வேண்டுந்தானே ! ''

'' நானே புரிந்துகொண்டு விட்டேன் மாமா. உங்கள் நண்பரின் மருமகன்—அதாவது உங்கள் நண்பர் மகளை மணந்தவன்—உங்கள் ஆலையின் நிருவாகத்துள் சட்ட ஆலோசகனை இடம் பெற வேண்டும். இதனை நீங்கள் விரும்பினீர்கள். ஒரு திறமைசாலி தேவை என்பதை நீங்கள் உணரவில்லை. அத்தான் மணிவாசகன் என்னை மணக்கவில்லை என்றதும், உங்கள் ஆலையின் உயர் பதவியை அவருக்குக் கொடுக்க உங்களுக்கு மனம் இல்லை. இது தானே உங்கள் அன்பின் எதிரொலி ''

'' உன் திருமணத்தை மையமாக வைத்துத்தான் வக்கீல் மணிவாசகனின் எதிர்காலம் மலரவேண்டும் என்று நாங்கள் முடிவுசெய்தது உண்மைதான் ராதா. ஆனால்.... ''

'' என்னை முன்னிட்டுத்தான் என் அத்தானின் எதிர்காலம் உயர்வாக அமைய வேண்டும் என்ற கட்டாயமில்லை மாமா.. என் அத்தானின் திறமையில் எனக்கிருப்பது அசைக்க முடியாத நம்பிக்கை. என் நம்பிக்கையின் உயரத்தைவிட அவரது சுய கௌரவம் இன்னும் சிகரம் போன்றது. உங்கள் உதவிகள், உத்தரவாதங்கள் அனைத்திற்கும் என் அத்தானின் சார்பில் நன்றி. வருகிறேன். வணக்கம்.... '' என்று முழங்கி விட்டுப் புயலைப் போல் அறையை விட்டுப் புறப்படுகிறாள் ராதை.

திரும்பினால் வாசல் நிலையில் தென்றல் நிற்கிறது.

அவளை இருகை நீட்டி எதிர்கொண்டழைக்கிறது, இத்தனையும் செண்பகத்தின் உருவத்தில் ! முத்தையாவின் மகள் செண்பகம்.

காலம்

காலத்திற்காகத்
தான் கருத்துக்கள்,
கருத்துக்களுக்
காகக் காலமல்ல !
காலத்திற்கேற்பக்
கருத்துக்களை மாற்ற
வேண்டும்; காலத்
திற்கு ஒவ்வாத
கருத்துக்களை ஒதுக்
கித்தள்ளவேண்டும்.

—பேரறிஞர் அண்ணா

'' ஹலோ ராதா...... ! எப்போது வந்தாய்........ ? வந்தவள் என்னைப் பார்க்காமல் நேராக அப்பாவிடம் சண்டை போடுவதற்குப் போய் விட்டாயே..... ''

'' ஆமாம்....எந்த விஷயத்தைப் பற்றி யாரிடம் சண்டை போட வேண்டுமோ அவர்களிடம் போட வேண்டும் ; உன் அப்பாவிடம்தான், உரிமையுடன் சண்டை போட முடியும்.... ''

'' சண்டையில் வென்றது யார் ? நீ தானே ? '' குறும்பாகக் குமிழ்விழும்படி சிரித்தாள் ஆலை முதலாளி மகள்.

'' நேர்மைக்கு இங்கு வெற்றியில்லை. நியாயத்துக்கு வெற்றி இங்கு இல்லை. சமயோசிதமும், சந்தர்ப்பவாதமும்தான் வெற்றி பெற்றுள்ளது. பணத்துக்குக் கிடைத்த வெற்றி, பாண்டித்துரையின் மகளுக்குக் கிடைக்கவா போகிறது ? '' என்று படபடவெனப் பொரிகிறாள் ராதை.

செண்பகத்துக்குத் திகைப்பு. இமைமூட மறந்தவள் போன்று திகைப்பு.

அவள் தன் தோழியிடம் எதிர்பார்க்கும் மறுமொழியே வேறு. ஆனால், ராதை பேசி விட்டுப் போகும் வேகமே வேறு மாதிரியாக இருக்கிறதே !

'' என்னவோ ராதா...... என் அப்பா மேல் கோபம் என்றாலும், என் கல்யாணத்திற்கு மட்டும் வராமல் இருந்து விடாதே ! '' என்று சிறு குழந்தையைப் போல் பரிதாபமாகக் கூறுகிறாள் செண்பகம்.

'' உன் கல்யாணமா ? '' என்று திகைக்கிறாள் ராதை திருமணச் சேதி கேட்டதும் அவள் கோபம் குறைந்தது. மிகவும் வாஞ்சையுடன் செண்பகத்தின் கரங்களைப் பற்றியபடி, '' என் வாழ்த்துகள் செண்பகம் '' யாரடி உன் ரோமியோ ? '' என்று கேட்கிறாள்.

'' மிஸ்டர் ரோமியோதான் என் ரோமியோ ! '' என்று நாணத்துடன் தலை குனிகிறாள் செண்பகம். பெண்மையின் அத்தனை நாணமும் அவள் முகத்தில் குடியாட்சி செய்து கொண்டிருந்தது.

'' கடல் ஆழத்தைக் காணலாம்; கன்னியரின் மன ஆழத்தைக் காண முடியாது என்பார்கள். கன்னியரின் மன ஆழத்தைக் காணலாம். அவர்கள் யாரைக் காதலிப்பார்கள் என்பதைத்தான் அறியமுடிவதில்லை இக்காலத்தில். உங்கள் திருமணம் எப்போது செண்பகம் ? ''

'' அப்பா உன்னிடம் சொல்லவில்லையா ? பின்னே இவ்வளவு நேரம் அப்பாவிடம் எதைப் பற்றிச் சண்டைபோட்டாய் ? ''

'' அது வேறு விஷயம் ''

'' உன்னிடம்கூடச் சொல்லாமல், என் திருமணத்தை முடிவு செய்து விட்டதற்காகத்தான் நீ சண்டை போட வந்திருக்கிறாய் என்றல்லவா நான் தப்பாக நினைத்து விட்டேன் ! '' என்கிறாள் செண்பகம்.

மீண்டும் தென்றலாகத் திரும்புகிறாள். கண்ணகியாகக் கண்ட உருவம் சகுந்தலை போலத் தெரிகிறது.

முத்தையாவை நோக்கித் திரும்புகிறாள் ராதை. தன் மகளும், தன் நண்பர் மகளும் மனம் விட்டுப் பேசுவதை அமைதியாக ரசித்துக்கொண்டிருந்த முத்தையா தன் மனமும் காற்றைப் போல இலேசாகியிருப்பதாக உணர்கிறார். அவர் மனத்துள் பஞ்சுப்பொதிகளாக ஆனந்தக் குமிழ்கள் மிதந்தன.

அமைதியின் உருவத்திற்கு உள்ளமாகி நின்றாள் ராதை.

'' மாமா.... ! உங்கள் ஆலையின் உயர்பதவி என் அத்தானுக்குத் தேவையில்லை என்று கோபமாகச் சொன்னேன். திட்டினேன். இதற்காக என்னை மன்னியுங்கள் ''

'' மன்னிப்பதா ? நான் உன் கடுஞ்சொற்களை மறந்துவிட்டேன் ராதா.......... நீ என்னிடம் கோபம் கொண்டு புறப்பட்டுப் போனாலும் அந்த உயர்பதவியினை உன் அத்தான் ஒருவனுக்குத்தான் தருவது—இதுவே என் தீர்மானம்.

'' என் தீர்மானத்தை நான் கூறுகிறேன் மாமா....உங்கள் ஆலையின் உயர்பதவி என் அத்தானுக்குத் தேவையில்லை. இதை மிகவும் அமைதியாகவும், உறுதியாகவும் கூறுகிறேன். ஆத்திரத்தோடு பேசவில்லை. அன்புடன் வேண்டுதல் செய்கிறேன். ''

'' ராதா ? '' எனத் திடுக்கிடுகிறார்.

'' ஆம். மாமா....நீங்கள் முடிவு செய்தபடி உங்கள் சொந்த மருமகன் ரோமியோவுக்கே அந்தப் பதவியைக் கொடுங்கள். உங்கள் திட்டம்—தீர்மானம் பற்றி எதுவுமே தெரிந்துகொள்ளாமல் பெரிய வரும் நல்லவருமான உங்களை என் சுயநலத்துச் சொல்லால் சுட்டுவிட்டேன் ''

'' சங்கு சுட்டாலும் வெண்மை தரும் ''

'' உங்களிடம் மன்னிப்புத்தான் கேட்கிறேன் ''. ராதை அழுது அவர் பார்த்ததில்லை. முத்தையா அதிர்ந்து போய் உட்கார்ந்து விட்டார். தன் ஆலையின் உயர் பதவியும் அதிகார பலமும் தன் மருமகனுக்குக் கிடைக்க வேண்டுமென்று அவர் உள் மனம் கொண்டிருந்த ஆசையை—நியாயமான உணர்வுகளை இந்தப் பெண் இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு துல்லியமாகப் புரிந்து கொண்டிருக்கிறாளே ! பணம் பணத்தோடு சேரும் ; இனம் இனத்தோடுதான் சேரும் என்பதை உணர்ந்திருப்பாளோ ! ''

'' ஆலையின் உரிமை உங்கள் மகளுக்கும், சட்டத்தின் அதிகார பலம் உங்கள் மருமகனுக்கும் கிடைக்கவேண்டும். இது நியாயமான முடிவு. நான் மனப்பூர்வமாக இவற்றை ஏற்றுக் கொள்ளுகிறேன், மாமா.......உங்கள் நண்பர் பாண்டித்துரை உயிரோடு இருந்தாலும் உங்களுடைய முடிவைக் கட்டாயமாக வரவேற்பார். வாழ்த்தியிருப்பார். நான் அவர் மகள் ! உங்கள் முடிவை எதிர்க்கவில்லை. ஏற்றுக்கொள்ளுகிறேன். நான் போய் வருகிறேன்...... ''

ஆலையின் சட்ட ஆலோசகர் பதவியைச் சண்டையிட்டு வாங்க வந்த அவள் சரணடைந்து திரும்புகிறாள்.

'' நில் ராதா ! ''

'' ஓ, நீங்கள் ! மிஸ்டர் ரோமியோ ! இந்த வீட்டின் மாப்பிள்ளை. செண்பகா மில்லின் வருங்காலச் சட்ட ஆலோசகர். இரண்டுக்கும் என் வாழ்த்துகள். செண்பகம் மலர் போன்றவள் ; அந்த மலருக்குத் தேன் மலராக இருங்கள்.... ! ''

'' உன் வாழ்த்தும் தேவை ; உன் சான்றிதழும் தேவை. ஆனால், நீ சற்றுமுன் சரண் அடைந்து நின்ற காட்சி என் மனத்தைத் தீய்த்தது ''

'' நான் குமாரி ராதா.... என்று அனுதாபப்படுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லை ''

பங்களாவின் நடைபாதையைக் கடந்து பதுமைபோல் போய்க் கொண்டிருந்தாள். மனச்சாட்சியாக வந்தாள் ; அதன் மறுபிறவிபோலத் திரும்புகிறாள்.

ரோமியோ அவளது தோல்வியைக் கண்டு சிரித்தபடியே நின்றான்.

செண்பகம் நமது திருமணம் நடக்க வேண்டுமானால், ஒரு நிபந்தனை விதிக்கிறேன்.''

செண்பகம் ' என்ன ? ' என்று கேட்டாள்.

'' ஒருவருக்கு அதிர்ஷ்டமாக இருக்கும் தாய் ; மற்றவருக்கு அதே அதிர்ஷ்டம் மாற்றான் தாயாக இருக்கும் ! ''

செண்பகத்திற்கு இதனைப் புரியும் திறமை இல்லை.

'' எப்போதும் நன்மையே செய், சில சந்தர்ப்பங்களில் அதைச் செய்யாமல் இரு என்பதனை ராதை கற்றுக்கொண்டிருக்கிறாள் ! ''

ரோமியோவின் சொற்கள் புதிராக இருந்தன. மில் முதலாளி, ''செண்பகம், என் மகளே ! ரோமியோவின் சொற்களை நான் விளக்குகிறேன். அவர் உன் செல்வங்கள் அத்தனையும் விரும்புகிறார் ; உன் அப்பாவுக்குச் சொந்தமான மில்லின் சட்ட ஆலோசகனாக இருக்கவும் ஆசைப்படுகிறார். இதுதானே உண்மை ! ''

இதைக் கேட்டு ரோமியோ சிரித்தான்.

(வளரும்)


தமிழரசு

சந்தா விளம்பரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 10-00 |
| அரையாண்டு | ரூ. | 5-00 |
| தனி இதழ் | | 40 காசு |

# கன்று வளர்த்திட...



டாக்டர் பா. சின்னதுரை

இன்றையக்கன்று நாளையப் பசுவாகும், அல்லது காளையாகும். கன்று வளர்ப்பானது ஒரு சினை மாட்டைப் பராமரிப்பதிலிருந்து தொடங்குகிறது என்று கூறலாம். அதாவது நல்ல திடமான கன்றைப் பெற அதன் தாய்ப்பசு கருவான காலத்திலிருந்தே நன்கு கவனிக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி ஆரம்ப காலத்தில் கவனிப்பின்றி, பின்னர் கன்று, பசுப் பருவத்தை அடைந்தபின் எவ்வளவு தான் செலவு செய்து ஊட்டச் சத்து வழங்கினாலும் அது முழுப்பயனைத் தர முடியாது. ஆகவே ஒரு கன்றின் தோற்றத்திலிருந்து அது பருவமடைந்து கன்று ஈனும் வரை கவனிக்க வேண்டிய வழி முறைகளைக் கவனிப்போம்.

### சினைப்பசுவின் பராமரிப்பு

சினைப்பசுவானது கன்று ஈனுவதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பே நன்கு பராமரிக்கப்பட வேண்டும். ஏனென்றால் பசுவின் கருப் பையிலிருந்து கன்று கருவுற்ற காலத்தில் கடைசி 2 மாதத்திலிருந்து வேகமாக வளர்கிறது. ஆகவே பிறக்கும் கன்று திடமாக இருக்கவும், பின்னால் கன்றுக்கு வேண்டிய பால் சுரப்பதற்கும் போதிய அளவு சத்தான தீனி கொடுக்கப்பட வேண்டும். இந்தத் தீனியில் (போதுமான அளவு) தாது உப்புக்களும், உயிர்ச் சத்துக்களும் போதிய அளவில் இருக்க வேண்டும். போதுமான அளவு பசும்புல் கொடுக்க வேண்டும். பசும்புல் மலச்சிக்கலைத் தவிர்ப்பதோடு கருவிலிருக்கும் கன்றுக்குப் போதிய அளவு உயிர்ச்சத்து 'ஏ' யும் தாது உப்புக்களும் பெற வழி செய்கிறது.

இப்பருவத்தில் தனது உடம்பைப் பேணவும், கருவிலிருக்கும் கன்று வளரவும் கூடுதல் அளவு கலப்பு உணவைச் சினைப் பசுக்களுக்குக் கொடுக்க வேண்டும். தினசரி 15 முதல் 20 கிலோ பச்சைத் தீவனம் போதுமானது. நார்ப் பொருள் அதிகமான வைக்கோல், கம்பந் தட்டை முதலியவற்றின் அளவைக் கணிசமாகக் குறைத்து விடலாம். சினைப் பசுவிற்குக் கீழ்க்கண்ட கலப்பு உணவில் தினசரி 3 கிலோ வரை கொடுக்கலாம். இந்தத் தீனியைக் காலையில் பாதியும், மாலையில் பாதியுமாகக் கொடுக்கலாம்.

1. கடலைப் பிண்ணாக்கு—35 பாகம்.
2. பருத்திக் கொட்டை—33 பாகம்.
3. கோதுமைத் தவிடு—30 பாகம்.
4. உப்புக் கலவை—1 பாகம்.
5. சாதாரண உப்பு—1 பாகம்.

மொத்தம்—100 பாகம்.

நிறை சினைப்பசுக்களை மற்ற மாடுகளுடன் மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. வேகமாகவோ, அதிகத் தொலைவாகவோ, நடத்துதல் கூடாது. அடிக்கவோ, துன்புறுத்தவோ கூடாது. அன்பாக நடத்த வேண்டும்.

ஈனுவதற்குப் பத்து நாட்களுக்கு முன்னதாகவே சினைப் பசுவைத் தனியான இடத்தில் ( Calving Pen ) கட்ட வேண்டும். தனியாக இடம் இல்லாவிடில் தொழுவத்தில் ஓரமாகத் தனியாகக் கட்டலாம். தொழுவம் சுத்தமாகவும் காற்றோட்டமுள்ளதாகவும் இருக்க வேண்டும். தரை சிமெண்டினால் பூசப்பட்டுச் சொரசொரப்பாக இருத்தல் அவசியம். இதனால் வழுக்கு நிலை ஏற்படாது. தரையில் வைக்கோலைப் பரப்பிச் சினைப் பசு நன்கு படுப்பதற்கு வசதி செய்து தர வேண்டும். இது குளிர் காலத்தில் பசுவிற்கு மிகவும் இதமாயிருக்கும். கிடேரிகள் முதல் தடவையாகக் கன்று ஈனுவதால் அவற்றைச் சில வழிகளில் பழக்க வேண்டும். அவற்றின் மடியைக் கன்று ஈனுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே தடவிக் கொடுக்கவேண்டும். இதனால் பால் மடியில் இரத்த ஓட்டம் அதிகரித்து மடி நன்கு வளர்ச்சியுறும். கிடேரிக்கும் கூச்சம் நீங்கிப் பின்பு பால் கறப்பதற்கு வசதி ஏற்படும். கன்று போடும் நாள் நெருங்க நாம் பசுவை மிகவும் கவனமுடன் கவனிக்க 280 நாட்களாகும். பசுவைக் காளைக்குச் சேர்த்த தேதியை நாம் குறித்து வைத்திருந்தால் கன்று போடும் நாளை உத்தேசமாகத் தெரிந்து அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகளைச் செய்வதற்கு வசதியாக இருக்கும். எருமையின் கருக் காலம் சராசரி 305 நாட்கள். கன்று ஈனும் நாளைக் கீழ்க்கண்ட அறிகுறிகளால் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

1. பசியின்மை.
2. பெண் உறுப்பு வீங்குதல்—பெண்ணுறுப்பிலிருந்து மஞ்சள் நிறமான, பிசு பிசுப்பான திரவம் வடிதல்.
3. அடிக்கடி சிறு அளவில் சிறுநீர் கழித்தல்.
4. மடியும் மடிக் காம்புகளும் பெரிதாகுதல்.
5. பிட்டியில் பள்ளம் விழுதல்.
6. மாடு தனிமையை விரும்புதல்.
7. அமைதியின்மை — வாலை அடிக்கடி ஆட்டுதல்.
8. அடிக்கடி படுத்து எழுந்திருத்தல்.

குறிப்பு : கன்று ஈனும் தருவாயில் நாம் குறுக்கிடுதல் கூடாது. தேவை ஏற்படின் கால்நடை மருத்துவரின் உதவியை உடன் நாட வேண்டும்.

### கன்று பிறந்தவுடன்......

ஈரம் போக்கி, நாசி சுத்தம் செய்தல்.

கன்று பிறந்ததும் அதன் மேல் ஒட்டியிருக்கும் பிசு பிசுப்பான திரவத்தையும், நாசித் துவாரங்களை அடைத்துக் கொண்டிருக்கும் பொருள்களையும் தூய்மையான துணியால் துடைக்க வேண்டும்.

தொப்புள் கொடியைச் சுமார் மூன்று செண்டி மீட்டர் விட்டு முடிச்சுப் போட்டு முடிச்சிற்குக் கீழே சுத்தமான கத்தரிக் கோலினால் கத்தரித்து விடவும். உடனே, டிஞ்சர் அயோடினால் தொப்புள் கொடியில் நன்றாகத் தடவ வேண்டும். டிஞ்சர் அயோடின் இரண்டு மூன்று நாட்கள் தடவ வேண்டும். இதனால் தொப்புள் வீக்கமும், தொப்புள் கட்டியும் ஏனைய வியாதிகளும் ஏற்படாமல் தடுக்கலாம்.

கன்று பிறந்தவுடன் மூச்சு விடத் திணறினால் விலாப் புறத்தை அழுத்தி விடவும். அல்லது குளிர்ந்த தண்ணீரைக் கன்றின் மேல் ஊற்றலாம். பின்பு நாசித் துவாரங்களின் வழியாக நமது வாயினால் காற்றை ஊதலாம். இவ்விதம் செய்யக் கன்று நன்றாக மூச்சு விடும்.

பிறந்தவுடன் கன்றைத் தாய் பசுவைக் கொண்டு நக்க விட வேண்டும். தாய்ப்பசுவிற்குக் கன்றை நக்கும் உணர்ச்சி இல்லாவிடில், சிறிதளவு உப்புத் தண்ணீரைக் கொண்டு கன்றின் மேல் தெளிக்கவும், பின்பு தாய்ப் பசுவை நக்க விடலாம்.

நல்ல திடமுள்ள கன்று பிறந்த அரை மணியளவில் எழுந்து நிற்கும். எழுந்து நிற்கக் கஷ்டப்பட்டால் குளம்பின் நுனியில் உள்ள சவ்வுப் பாகத்தை அகற்றி விட்டால் கன்று சிரமமில்லாமல் நிற்கும்.

கன்று பிறந்த பின் பசுவின் பால் மடி, தொடை, வால் புட்டம், பெண்ணுறுப்பு முதலிய பாகங்களைக் கிருமி நாசினி கலந்த தண்ணீரால் கழுவ வேண்டும்.

### நஞ்சுக் கொடி (PLAUENTA)

பசுவின் கருப்பையில் இருக்கும்போது கன்று நஞ்சுக் கொடி என்ற பையில் வளர்கிறது. இக்கொடியின் வெளிப்புறத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பித்தான் போன்ற கோளங்கள்(Cotyledons) உள்ளன. இவை போன்ற கோளங்கள் கருப்பையிலும் உள்ளன. நஞ்சுக் கொடியில் உள்ள கோளங்களும், கருப்பையில் உள்ள கோளங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து உள்ளன. இக்கொடியின் மூலம் தான், தாயிடமிருந்து வளரும் கருவிற்கு உணவுச் சத்துகள் அனுப்பப் படுகின்றன.

பொதுவாக, நல்ல உடல் நிலை உள்ள பசுவுக்கு, கன்று ஈன்ற 3 முதல் 8 மணி நேரத்திற்குள் இக்கொடி வெளியே விழுந்து விடும். அப்படி விழாவிட்டால் பின் வேறு ஏதாவது ஒரு கோளாறுக்கு வழி காட்டியாக அமைய வாய்ப்பு உள்ளது.

> **வங்கி தரும் கடனுதவி**
>
> பிற்பட்ட வகுப்பினர், சிறு தொழில்கள் தொடங்குவதற்கு, ஸ்டேட் பாங்க் மூலம் ஐயாயிரம் ரூபாய் வரை கடனுதவி பெறுவதற்குத் தமிழ்நாடு அரசு வழிவகை செய்துள்ளது.

நஞ்சுக் கொடி தானாக விழாமல் இருப்பதற்கு உண்டான காரணங்கள் :

1. கருப்பையின் கோளாறுகள்.
2. முதுமை.
3. கருவுற்றிருக்கும் போது ஊட்டக் குறைவு.

மறுபடியும் பசு தாய்மை அடையும் போது நஞ்சுக்கொடி தங்கிவிடுவதால் மிகவும் பாதிக்கப்படலாம். நஞ்சுக்கொடி தங்கிவிடுவதால், கருப்பை அழற்சி, மலட்டுத் தன்மை முதலிய நோய்கள் உண்டாகின்றன. ஆகையால், நஞ்சுக் கொடி தங்கிவிட்டால் அருகாமையில் இருக்கும் கால் நடை மருத்துவரின் உதவியை உடனே நாடுதல் மிகவும் அவசியம். மருத்துவரின் உதவியோடு வெளியேற்றப்பட்ட கொடியை ஆழமான பள்ளத்தில் இட்டுப் புதைக்க வேண்டும்.

பின்னர் கன்று ஈன்ற இடத்தைக் கிருமி நாசினி கலந்த தண்ணீரால் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். பசுவின் பிறப்பு உறுப்பு, தொடை போன்ற பகுதிகளையும் கிருமி நாசினி கலந்த தண்ணீரால் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும்.

பிறந்த கன்றுகளைக் கீழ்க் கண்ட முறைகளில் வளர்க்கலாம் :

1. பிறந்தவுடன் கன்றுகளைத் தாய்ப் பசுக்களிடமிருந்து பிரித்துப் புட்டிகளின் மூலம் ஊட்டி வளர்ப்பது.
2. தாய்ப் பசுவோடு கன்றை விட்டு வளர்ப்பது. இம் முறையில் கன்றுகள் தன்னிஷ்டப்படி பாலைக் குடித்து வளரும்.
3. கன்றுகளை முதலில் தாய்ப் பசுவிடம் பாலைக் குடிக்க விட்டுப் பாலைக் கறந்து வளர்ப்பது.

இம்முறைகளில் கன்று பிறந்தவுடன் பசுவிடமிருந்து பிரித்து வளர்ப்பதுதான் சாலச் சிறந்ததாகும். இம் முறையினால் ஏற்படும் நன்மைகள் :—

1. பசுவின் பால் உற்பத்தியைக் கணக்கிட முடியும்.
2. பிறந்தவுடன் கன்று இறந்து விட்டால் பசுவின் பால் உற்பத்தித்திறன் குறையாது.
3. சுத்தமான பாலைப் பெறலாம்.
4. துரிதமாகப் பாலைக் கறக்கலாம்.
5. கன்றுகளுக்குத் தேவையான அளவு பால் கிடைக்கும்.

குறைபாடுகள் :

1. கன்றுகளுக்குத் தனியாக பால் ஊட்ட வேண்டியதிருக்கும்.
2. அதிக நேரமாகும்.
3. கன்றுகளுக்குப் பால் ஊட்டத் தனியாக வேலையாள் நியமிக்க வேண்டும்; இதனால் செலவு அதிகம்.
4. பால் புட்டிகள், இதர பால் பாத்திரங்களின் மூலம் கன்றுகளுக்கு நோய் பரவலாம்.

மற்ற இருமுறைகளில் பசுவின் பால் உற்பத்தித் திறன் அளவிடல் சிரமம். பால் சுத்தமாயிராது. சில கன்றுகள் பாலை அதிகமாகக் குடித்துவிடலாம். வயிற்றுக் கோளாறுகள் ஏற்படும். கன்றுகள் இறந்துவிடின் பசுவின் பால் சுரப்பு பாதிக்கப்படும். தாய்ப்பசு இறந்தவுடன் கன்றை வளர்ப்பது சிரமம்.

திரு. மா. வேங்கடாசலம்,
காவல்துறை இன்ஸ்பெக்டர், சென்னை
மாநகரம்.

திரு. தே. இ. சார்லஸ்லி,
காவல்துறை இன்ஸ்பெக்டர்,
பரங்கிமலை.

திரு. இஸ்மாயில் கான்பைலம்,
காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்,
தஞ்சாவூர்--மேற்கு.

திரு. கி. வேணுகோபால்,
காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்,
திருச்சிராப்பள்ளி.

திரு. வி. சின்னத்தேவர்,
காவல்துறை சப்-இன்ஸ்பெக்டர்,
மதுரை வடக்கு மாவட்டம்.

திரு. கு. தங்கப்பன்,
ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்,
இராமநாதபுரம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி,
தலைமைக் காவலர், செங்கற்பட்டு கிழக்கு.

திரு. இராமலிங்கம்,
தலைமைக் காவலர், சிறப்புப் பிரிவு,
குற்றப் புலனாய்வுத் துறை, சென்னை.

திரு. கோபால பணிக்கர்,
தலைமைக் காவலர், நீலகிரி

திரு. மு. மீனாட்சி நாயுடு,
தலைமைக் காவலர்,
ஒழுக்கக் கண்காணிப்புப் பிரிவு,
உயர்நீதி மன்றம், மதுரைப் பிரிவு.

திரு. குப்புசாமி ராஜு,
தலைமைத் நியமனப்பாளர்,
சென்னை மாநகர்க் கோட்டம்.

திரு. வீர ராகவன்,
ரயில்வே காவல்துறை
திருச்சிராப்பள்ளி.









பிறந்த கன்றுக்கு முதல் ஆகாரம் சீம்பாலே. கன்றைத் தாய்ப் பசுவிடமிருந்து பிரித்து வளர்த்தாலும் முதல் ஆகாரம் சீம்பால்தான் கொடுக்க வேண்டும். சீம்பாலில் கன்று வளர்ச்சிக்கு வேண்டிய புரதச் சத்தும்—உயிர்ச் சத்து—'ஏ'யும் (வைட்டமின்—'ஏ') நோயை எதிர்க்கும் சக்தி அணுக்களும் இருக்கின்றன. சீம்பாலைக் குடிப்பதனுல் கன்றுகளுக்கு நோய்களை எதிர்க்கும் சக்தி ஏற்படுகிறது. சீம்பால் ஒரு மல மிளக்கியாவதால் பிறந்த கன்றின் குடலிலுள்ள ஒருவித நச்சுப் பொருள் வெளியே வந்து விடுகிறது.

பிறந்த கன்றைத் தாயிடமிருந்து பிரித்து வளர்க்க—கன்று பிறந்தவுடன் பிரித்து விடவும். அடுத்த ஈற்றுகளிலும் இம் முறையைப் பின்பற்ற வேண்டும். உடனே சீம்பால் கொடுக்க வேண்டும். குறிப்பாக இந்திய நாட்டுப் பசுக்களுக்குத் தாய்மை உணர்ச்சி அதிகம். உடனே கன்றைப் பிரிக்காவிடில் பின்பு கன்றுகளைப் பிரித்து வளர்ப்பது சிரமம். பசுவின் பால் சுரப்பும் குறையும்.

அடுத்தபடியாகக் கன்று எந்த முறையில் வளர்க்கப்பட்டாலும் பாலைத் தேவையான அளவில் குறிப்பிட்ட நேரங்களில் கொடுப்பது உசிதம். ஏனெனில் ஆவினங்களின் வயிற்றில் நான்கு அறைகள் உண்டு. பிறந்த கன்றுக்கும், பெரிய மாட்டிற்கும் வயிற்றைப் பொறுத்த மட்டில் வித்தியாசம் உண்டு. பிறந்த கன்றின் அபமேசம் என்று சொல்லப்படும் பாகம் 70 சத வீதம்; ரூமன் என்று சொல்லப்படும் பாகம் மிகவும் சிறிதே. இதனுல் பிறந்த கன்றுகள் தங்கள் வயிற்றில் உணவுப் பொருள்களை நிரப்பிக்கொள்ள முடியாது. இதனுல் பிறந்த கன்றுகள் பாலைக் குடிக்கும் பொழுது பாலானது நேராக அபமேசம் என்ற அறைக்குச் செல்கிறது. கன்றுகள் அதிகமாகப் பாலை குடிக்கும் போது பால் ரூமன் என்ற வயிற்றுக்குச் செல்கிறது. இதனுல் பால் திரிந்து விடுகிறது. இந்த வயிற்று அறையானது இளங் கன்றுகளில் முழு வளர்ச்சி அடைந்திராது. இதனுல் இது நன்கு செயல்பட முடியாது. ஆகவே, இவ்வறைக்குச் சென்ற பாலானது அங்கே தங்கித் திரிந்து, புளித்து, வயிற்றுக் கோளாறுகளை உண்டாக்கும். இதனுல் இளங் கன்றுகளுக்குக் குறைந்த அளவில் குறிப்பிட்ட நேரங்களில் பாலைக் கொடுப்பது நல்லது.

### பால் குடிக்கப் பழக்குதல்

கன்றுகளைத் தனியாகப் பிரித்து வளர்க்கும் பொழுது அவைகளை அதற்கென உண்டான பாத்திரத்திலிருந்து குடிக்கப் பழக்க வேண்டும். முதலில் நமது கைகளின் விரலைப் பாலில் நனைத்துக் கொள்ள வேண்டும். இக்கைகளை முதலில் கன்றை நக்குவதற்குப் பழக்க வேண்டும். பின்பு பாத்திரத்தில் பாலை ஊற்றிக் கையின் விரலைப் பாலில் அமிழ்த்திக் கன்றை, பாலை கையின் விரல்களின் வழியாக உறிஞ்சப் பழக்க வேண்டும். ஒருவர் இரு கைகளையும் உபயோகித்து ஒரே சமயத்தில் இரு கன்றுகளுக்குப் பால் ஊட்டலாம். நன்கு பழக்கப்பட்ட கன்றுகள் சில நிமிடங்களில் பாலை உறிஞ்சிக் குடித்து விடும். இம் முறையில் பாலின் உஷ்ண நிலை 40 டிகிரி சி.-க்கு இருக்க வேண்டும். குளிர்ந்த பால் கழிச்சலை ஏற்படுத்தும்.

> **கோடைக்கானலில் சுற்றுலாக் குடில்கள்**
>
> கோடைக்கானலில் சுற்றுலாப் பயணிகளுக்காகப் பத்துக் குடில்கள் கட்டப்பட்டுள்ளன. இது போன்ற குடில்களைக் கன்னியாகுமரி மற்றும் குற்ருலத்தில் கட்டவும் அரசு தீர்மானித்துள்ளது. மதுரைக்கருகே பர்மா அகதிகளுக்காக ரூ. 16 இலட்சத்து இருபத்து மூவாயிரம் செலவில் வீடுகள் கட்டித் தரவும் திட்டமிட்டுள்ளது.

### பாலின் அளவு

ஒரு கன்றின் எடையில் 10 சதவிகிதம் பால் கொடுக்க வேண்டும். வயிற்றுக் கோளாறே, கழிச்சலோ ஏற்பட்டால் பாலின் அளவைக் கணிசமாகக் குறைக்கவும். ஆரோபாக் அல்லது டெராமைசீன் போன்ற மருந்துகளைப் பாலுடன் கொடுத்தால் கழிச்சல் போன்ற வியாதிகள் ஏற்படாது.

கன்றுகளை மற்ற முறைகளில் அதாவது பசுவுடன் விட்டு வளர்க்கும் பொழுது கன்றுகளுக்கு விடப்படும் பாலின் அளவை எப்படி நிர்ணயப்படுத்துவது? வாரத்தில் ஒரு நாள் கன்றுகளுக்குப் பாலை ஊட்ட விடாமல் பாலை முழுவதும் கறந்து விட வேண்டும். இதனுல் பசுவின் பால் உற்பத்தியின் அளவு தெரியும். இந்த அளவிலிருந்து இதற்கு முதல் நாள் கறந்த பாலின் அளவைக் கழிக்கக் கன்று குடித்த பாலின் அளவு தெரிய வரும். இதைக் கண்டு பிடித்த பின் கன்றுக்கு வேண்டிய அளவு பால் கிடைக்கிறதா —இல்லையா என்பதைத் தெரிந்து கொண்டு பால் கறப்பவர்களுக்கு வேண்டிய அறிவுரைகள் வழங்கலாம்.

கன்று பால் குடித்தவுடன் அதன் நாக்கில் சிறிதளவு உப்பைத் தடவவேண்டும். இளங் கன்றுகளுக்கு வாய்ப்பூட்டுப் போடுவது நல்லது. இதனுல் கன்றுகள் ஒன்றையொன்று நக்கும் பழக்கம் நின்றுவிடும். கன்றுகள் ஒன்றையொன்று நக்குவதால் உரோமம் வயிற்றுக்குள் சென்று உருண்டைகளாகத் திரண்டு குடலில் ஆகாரம் செல்வது தடுக்கப்படலாம். இதனுல் கன்றுகள் இறக்க நேரிடும். கன்றுகள் வளர வளர பாலின் அளவைக் குறைக்க வேண்டும். கலப்பு உணவு கொடுக்க வேண்டும். ஆறு மாத வயதானவுடன் பால் ஊட்டுவதை அறவே நிறுத்தி விடலாம்.

### கன்றுகளுக்குக் கலப்பு உணவு (Calf starter)

கன்றுகளுக்கு வேண்டிய கலப்பு உணவில் கன்றுகளுக்கு வேண்டிய புரதம், மாவுப் பொருள், தாதுஉப்புக்கள், உயிர்ச் சத்துக்கள் அடங்கியுள்ளன. கன்றுகளின் கலப்பு உணவைக் கீழ்க்கண்ட உணவுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கடலைப் பிண்ணுக்கு | 38 | பாகம் |
| 2. | கேழ்வரகு மாவு | 30 | ,, |
| 3. | கோதுமைத் தவிடு | 20 | ,, |
| 4. | ஆளி விதை | 10 | ,, |
| 5. | தாது உப்பு | 1 | ,, |
| 6. | உப்பு .. | 1 | ,, |
| | மொத்தம் | 100 | ,, |

கன்று பிறந்த 15 நாட்களிலிருந்து சிறிது பசும் புல்லைக் கொடுக்கலாம். அருகம்புல் சிறந்தது. வயது செல்லச் செல்ல பசும்புற்களின் அளவை அதிகரிக்கலாம். 2-வது மாதத்திலிருந்து வைக்கோல் கொடுக்கலாம்.

[தஞ்சாவூர் மாவட்டம் வடசேரி கால்நடை வளர்ச்சி முகாம் சிறப்பு மலரில் வெளியாகிய கட்டுரை]



## கேளுங்கள்??? கொடுக்கப்படும்

கரிகாலன் என்ற நெல் ரகத்திற்கு எவ்வளவு உரமிட வேண்டும்? அடியுரம் எவ்வளவு இட வேண்டும்? மேல் உரம் எந்தெந்த நேரத்தில் எவ்வளவு இடவேண்டும்? என்ன மகசூல் காணும்?

—எ. எம். அகமது மொகைதீன்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக்குழு,
ஆழ்வார் திருநகரி,
திருச்செந்தூர் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

'கரிகாலன்' (வளர்ப்பு எண். 5652) என்ற நெல் ரகத்திற்கு ஏக்கருக்கு 55கிலோ தழைச்சத்து 25கிலோ மணிச்சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவை இடவேண்டும். இதில் 33 கிலோ தழைச்சத்தையும், 25 கிலோ மணிச்சத்தையும், 25 கிலோ சாம்பல் சத்தையும் அடியுரமாகக் கடைசி உழவில் இடவேண்டும். நடவு செய்த




25 முதல் 30 நாட்களுக்குள் மீதமுள்ள 22 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும்.

மேற்கூறிய அளவில் அடியுரமிட 165 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 73 கிலோ யூரியா, 157 கிலோ சூப்பர் பாஸ்பேட், 42 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளைக் கடைசி உழவில் இடலாம். அல்லது 147 கிலோ 17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தையும் 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 18கிலோ யூரியாவையும் அடியுரமாக இடலாம்.

மேலுரமிட 110 கிலோ அமோனியம் சல்பேட், அல்லது 49 கிலோ யூரியாவைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு கரிகாலன் நெல் ரகத்திற்கு உரமிட்டால் ஒரு ஏக்கரிலிருந்து 2,500 கிலோவுக்குக் குறையாமல் மகசூல் பெற முடியும்.

'கரிகாலன்' நெல் ரகம் ஜுலை மாத விதைப்பில் பெரும் மகசூல் கொடுத்துள்ளதால், நீங்களும் ஜுலை மாதத்தில் நாற்றுவிட்டு, நடவு செய்து பெரும் மகசூல் எடுக்கலாம்.

கடந்த 4-3-1973 தேதி தினமணி ஞாயிறு சுடரில் கண்ணகி நெல் பற்றி சுமாரான விவரங்கள் வெளியாகியுள்ளது. கண்ணகி எப்பட்டத்திற்கு ஏற்றது? என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் 17:17:17 கூட்டு உரம் ஏக்கருக்கு எத்தனை கிலோ? நாற்றைச் சேர்த்து எத்தனை நாட்களில் அறுவடையாகிறது? இக் கேள்விகளுக்கு விடையளிக்குமாறும், இன்னும் சில விவரங்களையும் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

—மு. சுப்பரமணியன்,
ப.யூ.உ.ஆ. பள்ளி,
மெய்யூர் (அஞ்சல்),
திருவண்ணமலை வட்டம்,
வடஆர்க்காடு மாவட்டம்.

கற்புக்கரசி கண்ணகியின் நினைவாக வெளியிடப்பட்டுள்ள 'கண்ணகி' நெல் ரகம் தமிழ் நாடெங்கும் குறுவைப் பட்டத்திலும், நவரைப் பட்டத்திலும் பயிரிடுவதற்கு ஏற்றது. இந்த ரகம் சன்ன ரக அரிசி கொடுக்க வல்லது. பூசா 2-21 (ஐ.இ.டி. 1983) என்ற நெல் ரகத்திற்கே 'கண்ணகி' என்று




பெயரிடப்பட்டுள்ளது. அதிக மகசூல் அளிக்கும் 'ஐ.ஆர். 8' நெல் ரகத்தையும், சன்ன அரிசி அளிக்கும் 'டி.கே.எம். 6' என்னும் 'ஒட்டுக் கிச்சிலி' ரகத்தையும் கரு இணைப்பு செய்த வகையில் 'கண்ணகி' நெல் ரகம் உருவாகியதால், 'கண்ணகி' நெல் ரகம் அதிக மகசூலையும், சன்ன அரிசியையும் அளிக்கும் ஆற்றல் கொண்டதாக உள்ளது.

கண்ணகி நெல் பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 33 கிலோ தழைச்சத்து, 25 கிலோ மணிச் சத்து, 25 கிலோ சாம்பல் சத்து ஆகியவை இடவேண்டும். இந்த அளவில் அடியுரமிட 17 : 17 : 17 காம்ப்ளெக்ஸ் உரத்தில் 147 கிலோவையும், 40 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 18 கிலோ யூரியாவையும் கடைசி உழவில் இடவேண்டும். நாற்றையும் சேர்த்து இந்த ரகத்தின் வயது 110 நாட்களாகும். நாற்றுவிட்ட 25 நாளில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 25 நாளில் ஏக்கருக்கு 49 கிலோ யூரியா அல்லது 110 கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவேண்டும். 'கண்ணகி' ரகம் ஏக்கருக்கு 2 முதல் 2½ டன் மகசூல் அளிக்கவல்லது.

கடந்த 22-2-1973 அன்று இரவு திருச்சி வானொலியில் ஒலி பரப்பான விவசாய நிகழ்ச்சியில் பண்ணைச் செய்தி என்ற தலைப்பில் பானி என்ற புதிய உயர் விளைச்சல் ரகம் பற்றிச் சொன்னார்கள். அந்த விதை எங்குக் கிடைக்கும்? அதற்கான சாகுபடி குறிப்புகளையும், அதனுடைய உச்ச மகசூல் எவ்வளவு கிடைக்கும் என்பதனையும், தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதா என்பதையும் தயவு கூர்ந்து தெரிவிக்கவும்.

—எஸ். வெங்கடேசன்,
மெயின்ரோடு,
எ. கிளியனூர் அஞ்சல்,
தஞ்சாவூர் மாவட்டம்.

'பவானி' என்ற நெல் ரகத்தை, அண்மையில்




தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது. இதன் சாகுபடி குறிப்புகளையும், மகசூல் அளிக்கும் திறனையும் பற்றிய கட்டுரை 16-4-73




# பாம்பன் கடல் மீதினிலே பாலம் அமைப்போம்..!

இராமேசுவரம் செல்லும் பயணிகள் புகைவண்டிப் பாதையில்தான் செல்ல முடியும் என்ற நிலை பல்லாண்டுக் காலமாக இருந்து வருகிறது. அந்நியர் ஆட்சியின்போது பாம்பன் கடலில் புகைவண்டிப் பாலம் போடப்பட்டதும்—கடலில் கப்பல் வரும்போது அந்தப் பாலம், கப்பலுக்கு வழி விட்டு வருவதும் உலகறிந்த வரலாற்றுச் செய்தி.

இராமேசுவரத்தையும் மண்டபத்தையும் தரை வழியில் இணைக்க வேண்டும் என்றும் அதற்காக ஒரு பாலம் அமைக்க வேண்டுமென்றும் தமிழ்நாடு அரசு நீண்ட நாட்களாக முயன்று வந்தது. இந்த அரும் பெரும் திட்டத்துக்கு—மைய அரசு அண்மையில் ஒப்புதல் அளித்து விட்டது.

கடந்த 19—9—73 அன்று இந்த இணைப்புப் பாலத்துக்கு அடிக்கல் நாட்டும் விழா இனிது நடைபெற்றது.

விழாவுக்குத் தலைமை தாங்க இருந்த முதல்வர் கலைஞர் அவர்கள், உடல் நலக் குறைவின் காரணமாக, விழாவில் பங்கு கொள்ள இயலவில்லை. அதனால், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் விழாவிற்குத் தலைமை ஏற்க, மைய அரசின் கப்பல்—போக்குவரத்து அமைச்சர் ராஜ்பகதூர் அவர்கள் வரவேற்புரை ஆற்ற, இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அப்போது நிகழ்த்திய உரையில், அவர் குறிப்பிட்டார்:

''இந்தப் பாலத்தின் மூலம் இந்தப் பகுதி மக்களுக்குப் புது வாழ்வு கிடைக்கும் என்று நம்புகிறேன். பாலத்தின் மூலம் எப்படி இரு பகுதிகள் இணைகின்றனவோ, அது போல் நாம் சமுதாயங்களை ஒன்றாக இணைக்க வேண்டும்!''

விழாவில் கலந்து கொள்ள முடியாததால் முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தி அனுப்பினார்கள்:

''நீரில் பிரிக்கப்பட்ட இராமேசுவரம் தீவை, மண்டபத்துடன் இணைக்கும் மகத்தான திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் தலைமை ஏற்கக் கிடைத்த வாய்ப்பைப் பெருமையாகக் கருதுகிறேன் என்றாலும் உடல்நிலை காரணமாக விழாவில் கலந்து கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன்.

''மண்டபம் — இராமேசுவரம் இரண்டையும் இணைக்கும் பாலம் ரூ. 5·5 கோடி செலவில் கட்டப்படவிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

''இந்தியாவில் மிக நீளமானதும் முதன்முதலில் கடல் மீது கட்டப்படுவதுமான இந்தப் பாலம்—இந்தியாவுக்கு—குறிப்பாக, தமிழ்நாட்டுக்குச் சிறப்பானதாகும். தமிழக அரசின் வேண்டுகோளை ஏற்று, பாலம் அமைக்கும் முயற்சி மேற்கொண்ட ராஜ்பகதூருக்கும் அடிக்கல் நாட்டு விழாவுக்கு வந்த பிரதமருக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





சென்னைப் பல்கலைக் கழகத்தில் நேரு நினைவுச் சொற்பொழிவு நடத்துவதற்காக வழங்கப் பெற்ற ரூ. 10 ஆயிரத்துக்குரிய காசோலையைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களிடம் தருகிறார் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி.

''பாலம், இரண்டு வேறு பகுதிகளில் இருக்கிற மக்களையும் — ஊர்களையும் ஒன்று சேர்ப்பது மாத்திரமல்ல—பொருளாதார வளர்ச்சியில் மிகவும் முக்கிய இடம் பெறுவதும் ஆகும். இந்த வகையில் இந்தப் பாலத்தால் கிடைக்கும் பயன் மிகவும் பெரியது.

''வடக்கே, காசிக்கு உள்ள பெருமை தெற்கே இராமேசுவரத்துக்கும் உண்டு. இந்தப் புகழுக்குரிய பகுதியில் விழா நடப்பதும், அதில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்வதும் என்றென்றும் நினைவில் நிற்கும் நிகழ்ச்சியாகும்.

''நான், விழாவில் கலந்து கொள்ள முடியாமைக்கு மீண்டும் என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்; பிரதமருக்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

—இவ்வாறு முதல்வர் கலைஞர், தாம் அனுப்பிய செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் கலைஞர் கூறியுள்ளபடி இந்தியாவுக்கு—அதிலும் குறிப்பாகத் தமிழகத்துக்கு—இந்தப் பாலம் புகழ் தேடித் தரும் என்பது உறுதி!



பாம்பன் பாலத்தின் மாதிரி வடிவத்தை இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி பார்வையிடுதல்.

தேதி 'தமிழரசு' இதழில் பக்கம் 54, 55-ல் வெளியிடப்பட்டுள்ளது. அதை மீண்டும் வெளியிட இயலாததலின் அதைப் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

'பவானி' நெல் பற்றிய சோதனைகள் பல்வேறு நிலையில் இருப்பதால், தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை, இந்த விதையை இன்னும் பெருமளவில் வழங்கவில்லை. பரிசோதனைகள் முடிந்த பிறகு, பயனுடையதாக இருக்குமானால், 'பவானி' நெல் விதைகளை உழவர்களுக்கு வழங்கத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை ஆவன செய்யும். தற்பொழுது 'பவானி' நெல் விதை வேண்டுமெனில், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தகவல் தொடர்பு நிலையத்தைச் சார்ந்த விதை விற்பனை நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

'பவானி' நெல் தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதாக இருக்குமா என்பதை, இன்றைய நிலையில் கூறமுடியாத நிலையில் இருக்கின்றோம். ஏனெனில், 1970, 71-ஆம் ஆண்டுகளின் தாளடிப் பட்டங்களில் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து ஐ.ஆர் 20, பொன்னி ஆகிய இரண்டு ரகங்களும் பவானியைவிடச் சிறந்தவை என்பது தெளிவாகின்றன. ஆனால், பேராவூரணியைச் சார்ந்த உவர்நிலப் பகுதியில் நடைபெற்ற பரிசோதனைகளில் இருந்து, 'பவானி' நெல் ரகம் உவர் நிலங்களில் மற்ற ரகங்களை விட அதிக மகசூல் கொடுக்க வல்லது என்று தெரிய வருகிறது.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர்த்திங்களில் பெய்த பெருமழையில், மற்றெல்லா ரகங்களும் பெருமளவு பாதிக்கப்பட்டிருந்தும், 'பவானி' நெல் ரகம் மட்டும் தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்படவில்லை என்பதும் தெரிய வந்துள்ளது.

எனவே, 'பவானி', நெல் ரகம் தஞ்சை மாவட்டத்திற்கு ஏற்றதா என்பது இந்த ஆண்டின் சோதனைகளுக்குப் பிறகே நன்கு தெளிவாகும். எனினும், நீங்களும் பரிசோதனையாக 'பவானி' நெல் ரகத்தைச் சிறு அளவில் பயிரிட்டுப் பார்க்கலாம்! உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையும் இது பற்றிக் கலந்தாலோசிப்பது நல்லது.

நெல்லை மாவட்டத்தில் உள்ள என் நிலத்தில் கோடைப் பயிராக அவுரிப் பயிர் செய்ய விரும்புகின்றேன். இதன் பொருட்டு விதைகள் எங்குக் கிடைக்கும்? அவுரி எத்தனை மாதப்பயிர்? இதன் இலை அல்லது காய் எந்த சாயத்திற்குப் பயன்படுகிறது? இது இலாபகரமான பயிரா? அவுரி பற்றித் தயவுசெய்து பதில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

—பி. ஜமீல் அகமது,
கைலாசபுரம்,
திருநெல்வேலி.

டிசம்பர் — சனவரி முதல் சூன்-சூலை வரை அவுரியைப் பயிரிடலாம். அவுரி விதை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்கக் கூடும். அங்குக் கிடைக்காவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றியத்துணைவேளாண்மைஅலுவலர் (வளர்ச்சி) அவர்களைச் சந்தித்து, அவுரி விதை வரவழைத்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளலாம். அவுரியின் வயது 150 முதல் 200 நாட்களாகும். அவுரியின் தழையில் இருந்து முன்பெல்லாம் சாயம் எடுக்கப் பட்டது. தற்பொழுது அவுரியிலிருந்து சாயம் எடுக்கும் தொழில் மறைந்துவிட்டது. அவுரி களிமண் நிலங்களில் நன்கு வளரும். நல்ல மழைக்குப் பிறகு ஏக்கருக்கு 7 முதல் 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். வேறு பயிர் இட முடியாத நிலத்தில் தழைஉரப் பயிராக அவுரியை விதைக்கலாம். அவுரி சிறந்த தழை உரமாகப் பயன்படும். ஒரு ஏக்கரில் இருந்து 5,000 கிலோ தழை கிடைக்கும். ஒன்று அல்லது இரண்டு முறை பாசனம் அளித்தால், ஒ ஏக்கரிலிருந்து 7,500 கிலோ தழை பெற முடியும். நிலம் பயிரிடப்படாமல் வெறுமனே கிடக்கும் காலத்தில் அவுரியைப் பயிரிடுவதால், தழை உரம் பெற முடிவதுடன், நிலவளத்தை மேம்படுத்த இயலும்!

தற்பொழுது நான் ஐ.ஆர். 20 நெல் பயிரிட்டுள்ளேன். அறுவடைக்குப் பின் மே மாதத்தில் அந்நிலத்தில் கோ. 7 கேழ்வரகை இறவைப் பயிராகப் பயிரிடலாமா? உர அளவையும் பயிரிடும் முறையையும் அறிவிக்கவும். நிலம் களிமண் தன்மையுடையது. கேழ்வரகு நன்கு வளருமா?

—இர. நடராசன்,
76, சின்னச் செட்டித்தெரு,
காஞ்சிபுரம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

தங்களுடைய ஐ.ஆர் 20 நெல் அறுவடைக்குப் பிறகு தங்கள் நிலத்தில் மே, சூன் மாதங்களில் கோ. 7 கேழ்வரகு பயிரிடலாம். வேறு எப்பயிருக்கும் ஏற்றதாக இல்லாத நிலங்களிலும் கேழ்வரகு பயிரிடலாம். தங்கள் நிலம் களிமண் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அந்நிலத்தில் கேழ்வரகு நன்கு மகசூல் தரும். கோ. 7 கேழ்வரகு ரகத்தை இறைவையாகச் சாகுபடி செய்யப் பின்கண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

கோ. 7. கேழ்வரகின் வயது 100 முதல் 102 நாட்களாகும். ஒரு ஏக்கர் கேழ்வரகு பயிரிட $1\frac{1}{2}$ கிலோ கோ. 7 கேழ்வரகு விதைகளை 3 சென்ட் நிலத்தில் நாற்று விட வேண்டும். நாற்றுவிட்ட 21-ஆம் நாள் நடவு செய்ய வேண்டும்.




கேழ்வரகு நடும் வயலுக்கு ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு இட வேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 18 கிலோ மணிச் சத்து, 18 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். இந்த அளவு உரமிட 125 கிலோ 14:14:14 அல்லது 15:15:15 காம்ப்ளெக்ஸ் உரம் அல்லது 105 கிலோ 17:17:17 காம்ப்ளெக்ஸ் உரமிடவேண்டும்.

நடவு வயலில் 6×6 அங்குலம் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த 4-வது நாள் உயிர்த்தண்ணீர்ப் பாய்ச்ச வேண்டும். பிறகு வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. நடவு செய்த 3 வாரம் கழித்துக் களை எடுக்க வேண்டும்.

நடவு செய்த 30-ஆம் நாள் ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்தை (40 கிலோ யூரியா அல்லது 90 கிலோ அமோனியம் சல்பேட்) மேலுரமாக இடவேண்டும்.

பூச்சி, நோய்கள் தாக்கினால் உங்கள் ஊராட்சிஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களைக் கலந்து கொண்டு, அவர் கூறும் முறையில் மருந்து தெளிக்கவேண்டும்.



மேற்கூறிய முறைகளில் கோ. 7 கேழ்வரகு பயிரிட்டால் ஏக்கருக்கு 2,000 முதல் 2,500 கிலோ வரை மகசூல் பெறலாம்.

**வினா : 'ஒயிட் லெக்கார்ன்' கோழிக்குஞ்சுகள் 50 வேண்டும். சிறு கோழிப்பண்ணை அமைக்கத் தென்னார்க்காடு, சென்னை ஆகிய மாவட்டங்களில் எங்கு 'ஒயிட் லெக்கார்ன்' கோழிக் குஞ்சுகள் கிடைக்கும்? முகவரி தெரிவிக்கவும்.**

—ப. ஜெயராஜ்,
ரயிலடி,
சீர்காழி (அஞ்சல்),
தஞ்சாவூர் மாவட்டம்.

'ஒயிட் லெக்கார்ன்' கோழிக் குஞ்சுகள் பெற உங்கள் ஊராட்சி ஒன்றியக் கால்நடை விரிவாக்க அலுவலர் (Extension Officer for Animal Husbandry) அவர்களின் உதவியை நாடினால், அவர் உங்கள் மாவட்டத்திலுள்ள ஒரத்தநாடு கோழிப் பண்ணையில் இருந்து, கோழிக் குஞ்சுகளை வரவழைத்துக் கொடுக்கக்கூடும். அல்லது உங்கள் ஊருக்கு மிக அருகாமையில் உள்ள கோழிப்பண்ணைகளிலிருந்தும் கோழிக்குஞ்சுகளை வரவழைத்துக் கொடுக்கக் கூடும். எனவே, தாங்கள் அந்த அலுவலரை நாடுவதே சிறந்தது. இருப்பினும் தங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, பின்கண்ட முகவரிகளைத் தெரிவித்துள்ளோம்.

1. சிக்ஸ் இந்தியா கோழிப் பண்ணை அலுவலகம்,
10, பீச் ரோடு,
கடலூர்-1.

2. கண்காணிப்பாளர்,
அரசினர் கோழிப்பண்ணை,
காட்டுப்பாக்கம் (அஞ்சல்),
செங்கற்பட்டு மாவட்டம்.

3. செட்டி கோழிப்பண்ணை,
16, சாட்டையப்பர்
தெற்குத் தெரு,
நாகப்பட்டினம்.

4. ஹை-சிக்ஸ் கோழிப்பண்ணை,
42, பாஷயம் ரெட்டியார்
தெரு,
கடலூர்-1.

5. அக்ரோ சப்ளிமெண்டல்
இண்டஸ்ட்ரீஸ் அண்ட்
லேபரட்டரீஸ்,
13, ஹண்டர்ஸ் ரோடு,
வேப்பேரி,
சென்னை-7.

**என்னுடைய தந்தை 'பொரி வறுக்கும்' தொழிலில் சுமார் 20 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர். தினமும் கூலிவேலை தான் செய்கிறார். அவர் சொந்தமாக அந்தத்தொழிலைச் செய்ய விரும்புகிறார். ஆனால் அதற்குப் பொருளாதார வசதி இல்லை. சுமார் ரூபாய் 1,000 தேவைப்படுகிறது. அதற்கு அரசு நடத்திவரும் சிறு தொழில் நிறுவனம் கடன் கொடுக்குமா ? அப்படிக் கொடுப்பதாய் இருந்தால் எப்படிக் கடன் பெற வேண்டும் என்பதைத் தெரிவிக்க வேண்டுகின்றேன். அல்லது பேங்க் கடன் கொடுக்குமா ? என்பதையும் தெரிவிக்கவும். அதனால் தினந் தோறும் சுமார் 10 பேர் பயன் பெறுவார்கள். தயவுசெய்து விளக்கமான பதில் தருமாறு வேண்டுகின்றேன்.**

—அ. குமார், பி.எஸ்சி.,
இளைஞர் அணி,
மெதூர் அஞ்சல்,
பொன்னேரி வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம்.

தங்கள் தந்தையார் சொந்தமாகப் 'பொரி வறுக்கும்' தொழிற்கூடம் துவங்கத் தமிழ்நாடு தொழில் வணிகத் துறை அல்லது தமிழ் நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தில் ('சிட்கோ') கடன் உதவி பெறலாம். 'ஸ்டேட் பேங் ஆப் இந்தியா' அல்லது 'பேங் ஆப் பரோடா', 'இந்தியன் ஓவர்சீஸ் பேங்', 'இண்டியன் பேங்' போன்ற நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகளில் ஏதேனும் ஒன்றில் மூலமும் சிறு தொழில் தொடங்கக் கடன்பெற முடியும்!

தமிழ்நாடு தொழில் வணிகத் துறை மூலம் அல்லது தமிழ்நாடு சிறு தொழில் (சிட்கோ) வளர்ச்சிக் கழகம் மூலம் கடன் பெறுவதற்குரிய விவரங்களைத் தங்கள் ஊராட்சி ஒன்றியத் தொழில் விரிவாக்க அலுவலர் (Extension Officer for Industries) ) அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளலாம். பொன்னேரியில் உள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கியிலும் இது பற்றி நேரில் விசாரித்து விவரம் தெரிந்து கொள்ளலாம். தங்கள் ஊராட்சி ஒன்றியத் தொழில் விரிவாக்க அலுவலரிடமிருந்தும் இது பற்றி ஆலோசனையைப் பெறலாம்.




**எங்கள் நிறுவனத்தில் ஏராளமான மண்ணெண்ணெய் விளக்கு (லேட்) பல ரகம் தயாரிக்கின்றோம். எனக்கு இப்பொழுது கண்ணாடிக் குடுவை கிடைக்கவில்லை. அதன் கம்பெனி முகவரி (கண்ணாடிக் குடுவை விற்பனையாளர் முகவரி) தெரியவில்லை. எங்கள் கம்பெனியை நல்ல முறையில் நடத்திவருவதற்கு ஆலோசனை வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.**

சாலி லாம் இண்டஸ்டிரீஸ்
22, பள்ளி வாசல் மூப்பன் தெரு
திருநெல்வேலி-5.

தங்களுக்கு ஒரு தனிப்பட்ட கம்பெனியின் முகவரியைத் தெரிவிப்பது தவறாகும். எனவே, தமிழ்நாடு அரசின் தொழில் வணிகத் துறையைச் சார்ந்த நிறுவனத்தின் முகவரியை மட்டுமே 'தமிழரசு' இதழ் மூலம் தெரிவிக்க முடியும். மதுரையில் உள்ள அரசினர் கண்ணாடிச் சாமான்கள் தயாரிப்புப்பயிற்சி நிலையத்தில் ஓரளவிற்குச் சிமினி விளக்குக் கண்ணாடிகள் தயாரிக்கப்படுகின்றன அங்கிருந்து தாங்கள் கண்ணாடிக் குடுவைகளைப் பெற்றுக் கொள்ளலாம். இதுபற்றித் தாங்கள் திருநெல்வேலியில் உள்ள "உதவி இயக்குநர், தொழில் வணிகத் துறை" அவர்களிடம் ஆலோசனை பெறுவதே நல்லது!




**சிறுதொழில் செய்ய நிலம், வீடு இல்லாத ஏழைகளுக்கு அரசாங்கம் கடன் கொடுப்பதாகக் கூறுகிறார்கள். இக்கடன் ஜாமீன் பேரில் தருகிறார்களா ? அல்லது எந்த முறையில் கொடுக்கிறார்கள் ? என்னென்ன தொழிலுக்கு எவ்வளவு கடன் ? எத்தனை ஆண்டு தவணை ? இது சம்பந்தமாக நான் யாருக்கு மனுக் கொடுப்பது ?**

—பொன்முடி,
தலைவி,
உழவர் விவாதக்குழு,
சின்ன மாம்பட்டு,
கள்ளக்குறிச்சி வட்டம்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.



# அருந்தமிழ்க் கவிஞர்கள் அண்ணலுக்குச் சூட்டிய பாமாலைகள் !

வாழ்கநீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மாநீ வாழ்க ! வாழ்க !

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்
குடிமையி லுயர்வு, கல்வி
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்

—சுப்பிரமணிய பாரதியார்



காந்தியார் இறந்தார் என்று கழறினர் கலங்கிற் றுள்ளம் !
ஏய்ந்தஇம் முப்பா ணுண்டில் எழுந்தஅவ் வுணர்வின் ஊற்றால்
மாந்தரின் வறண்ட நெஞ்ச வயலெல்லாம் விளைச்சல் கண்டோம்!
வீழ்ந்தநாட் டெழுச்சி கண்டோம்! வையகம் வியக்கக் கண்டோம்!

இறந்தனர் காந்தி யாரென் றியம்பினர் எரிந்த துள்ளம் !
சிறந்தனர் எவரும் ஏத்தச் சிறந்தனர் ! நாம்சி றக்கப்
பிறந்தனர் ! வாழார் வாழும் பெருநெறி காணக் காட்டிப்
பறந்தனர் ; இசைமு ழக்கப் பறந்தது வானம் பாடி !

பாவேந்தர் பாரதிதாசன்.



*மந்திரங்கள் ஏவாமல் மயங்க வைத்தான்*
*மாயங்கள் புரியாமல் மலைக்கச் செய்தான்*
*தந்திரங்கள் இல்லாமல் தலைவன் ஆனான்*
*தண்டனைகள் பேசாமல் தணியச் செய்தான்*
*அந்தரங்க ஒற்றரில்லா அரச னானான்*
*அண்ணலெங்கள் காந்திசெய்த அற்பு தங்கள்*
*எந்தவொரு சக்தியினால் இயன்ற தென்று*
*எல்லாரும் கூர்ந்தறிய எண்ண வேண்டும் !*

— நாமக்கல் கவிஞர்



# வாளும் வள்ளுவரும்



சு.செல்லப்பன்



பண்டைத் தமிழர்கள் போர்க்களம் சென்று, வீரம் விளைத்து, விழுப்புண் தாங்கி, வெற்றி சூடுவதைப் பெருமையாகக் கருதினர். புலவர் பொன்முடியார், ''வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடமை'' என்றும், ''ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளையின் கடமை'' என்றும் குறிப்பிட்டுப் போந்தார். பிறக்கும் குழந்தை இறந்து பிறந்தாலும் அல்லது சதைப் பிண்டமாக வெளிவந்தாலும் 'இவை வாள் வாய்ப்பட்டு இறந்தாலல்லது நலமின்று' எனக் கருதி அவற்றையும் வாளால் போழ்ந்து அடக்கம் செய்வது வழக்கமாக இருந்தது. அதியமான் நெடுமானஞ்சி தன் பகைவர்களை வென்று திரும்பிய காலை ஔவையார்,

''பெருந்தகையே! உன் பகைவர்கள் உன்னோடு சண்டையிட்டு நின் வாள் பாய்ந்தமையால் சிதைந்து அழிந்தனர். அதனால் அவர்களுடைய சுற்றத்தார் கூடி வாளால் போழ்ந்து அடக்கம் செய்யும் சிறுமையில்லாது ஒழிந்தனர்'' என்றார். மார்பில் வாட்புண் பெருமை இழிவு என்ற நிலை அன்று இருந்து வந்தது. வீரர்களை என்றும் விட்டுப் பிரியாது உடன்மருவி உறைந்த பொருளாக வாள் இருந்தது. வாள் மறவ, வாள் மேம்படுந, வாள்வலத்த வாளின் வாழ்ந என்பன வீரர்களுடைய விளிப் பெயர்களாக விளங்கின. என்றும் சுற்றிக் கொண்டே இருக்கக் கூடிய ஒருவனை ''இவன் காலில் சக்கரத்தோடு பிறந்தவன்'' எனக் குறிப்பிடும் வழக்கமுண்டல்லவா? பிறக்கும் போதே காலுடன் சக்கரமும் சேர்ந்து பிறந்தது என்பது இதற்குப் பொருளாகாது. கற்றித் திரியும் தன்மை சுற்றும் இயல்புடைய சக்கரத்தோடு இணைக்கப்பட்டு நயம்படப் பேசப்படுகிறது. இவ்வாறே, அன்றைய தமிழர் வீரம் செறிந்தவர்களாய், வாளைவிட்டு எப்போதும் பிரியாதவர்களாய் இருந்தமையால் 'வாளொடு பிறந்தவர்கள்' என்று சொல்லும் சிறப்பைப் பெற்றனர்.



புறப்பொருள் வெண்பா மாலை,

''கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்த குடி''

எனத் தமிழ்க் குடியைப் பேசி மகிழ்கிறது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த வாளை உவமையாக்கி —சுட்டிக்காட்டி— வளம் மிக்க கருத்துக்கள் பலவற்றை வள்ளுவர் எடுத்தோதுகின்றார்.

நமக்கு நண்பர்கள் உள்ளனர்; பகைவர்களும் இருக்கக் கூடும். சீரிய நண்பர்கள் வாய்த்து விட்டால் ஒருவனுக்கு அதை விட வேறு சிறப்புத் தேவையில்லை. நல்லவர்களுடைய நட்பு நாளும் வளரும். 'சேரிடம் அறிந்து சேர்' என்பது சான்றோர் உரை. நட்புக் கொள்வதில் பெரு விழிப்பு வேண்டும். உள்ளத்தே பகைமை கொண்டு, முகம்நக நண்பர்கள் போல நடித்து வாழ்வாரும் உண்டு. இவர்கள் வெளிப்படத் தோன்றும் பகைவர்களை விட அஞ்சத் தக்கவர்கள்.

பகைவர்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒருசாரார் 'வாள்' போல வெளிப்படத் தோன்றி நிற்கும் பகைவர். பகைவர் என்று நாமறிதலாலும், அவர்களால் நேரிடக் கூடிய தீமைகளினின்று தற்காத்துக்கொள்ள முடியுமாதலாலும் அவர்களைக் கண்டு அஞ்சவேண்டியதில்லை.

மற்றொரு சாரார் இருக்கிறார்களே, அவர்களுடைய செயல் மிகக் கொடுமையானது. அவர்களுக்குத் திருவள்ளுவர் சூட்டியுள்ள பெயர் 'கேள் போல் பகைவர்' என்பதாம். உறவினர் போல நடிப்பார்கள்; உள்ளத்தே பகையிருக்கும்; உயிரனையவர் என்று பறைசாற்றித் திரிவர்; வாய்ப்பு நேரும் போது நம் உயிர்க் கொல்லியாகவும் மாறுவர்; கைகூப்பி முகமன் பேசி எங்கும் முந்தி நிற்பர். எதுவரை? தாம் எதிர்பார்க்கும் ஆதாயம் கிட்டும் வரை! இவரோடு இருப்பதில் இனி நமக்குப் பயனில்லை என்று உணர்ந்தாலோ அல்லது தம் வஞ்சகத் தன்மையை அறியும்நிலை வந்துற்றது என்றாலோ அந்தக் கணமே பழகிய பாங்கையும் மறந்து பகைவர்களாகக் காட்டிக் கொள்வர். பகைமைத் தன்மையை நட்புப் புனைவு கொண்டு மறைத்து வாழும் இவர்கள் வெளிப்பட நிற்கும் பகைவர்களினும் அஞ்சத்தக்கவர். நண்பர்கள் போலவே நடித்து வந்து திடீரெனப் பகைவர்களாக மாறுவதால் தீமை பற்றிய முன்னறிவிப்புக்கு இடமின்றிப் போகிறது. எனவே இந்த உட்பகையே கொடிய பகையாகும். வெளிப்பட நிற்கும் பகைவர்கள் அறிய வேண்டியவர்கள்; உட்பகைவர்களோ அஞ்ச வேண்டியவர்கள். வள்ளுவர் குறிப்பிடுகிறார்:

'வாள்போல் பகைவரை
அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு''

உட்பகைவர்கள் அடுப்புத்தீ போல அடங்கி நடந்து, வாய்ப்பு நேரும் போது இருந்த வீட்டையே அழிக்கும் கொள்ளித் தீயாக மாறிவிடும் வஞ்சகர்கள். 'கேள் போல் பகைவர்'க்கு ஓர் அரிய எடுத்துக் காட்டாக, வடிவமாக, நாடகப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் மனோன்மணீயம் நாடகத்தில் வரும் குடிலனை எடுத்துக் கொள்ளலாம்.

குடிலன், பாண்டிய மன்னன் சீவக வழுதியின் அமைச்சன். சூழ்ச்சியே உருவானவன். திறம்பட நடித்து யார் யார் மன்னனிடம் உண்மை அன்புடன் இருக்கிறார்களோ அவர்களை விடத் தன்னையே உண்மையானவன் என்று நம்பும்படிச் செய்தவன்; குலகுரு சுந்தர முனிவரைவிடத் தன்பால் அன்பும் மதிப்பும் கொள்ளுமளவுக்கு மன்னனை வயப்படுத்தியவன். உண்மையில்,

''....................குடிலனே
சூதே உருவாய்த் தோன்றினன்
அவன்தான்
ஓதுவ, உன்னுவ, செய்குவ,
யாவும்
தன்னலம் கருதி அன்றி
மன்னனைச்
சற்றும் எண்ணான்; முற்றும்
சாலமா
நல்லவன் போலவே நடிப்பான்
பொல்லா
வஞ்சகன்''

அரசனோ அவனைப் பெரிதும் நம்பி விட்டான். குடிலனின்றி யாதொரு செயலையும் அவன் செய்வதில்லை. வெளுத்ததெல்லாம் பால் என்று எண்ணும் மன்னன் தன்னை அழிக்க நிழல் போல உடலுறையும் குடிலனின் சூழ்ச்சியை அறியாது

''குடிலா! உன்னைப்போல கூரிய
மதியோர்
இடையார் இடையார்...........











எனப் பாராட்டினான். 'என் உடல், பொருள், ஆவி, சுற்றம் அனைத்தும் நின்னுடையதேயன்றோ' என்று அவ்வஞ்சகன் பகன்ற மொழிகளை உண்மையென்று கருதி, ''அஆ! நமது பேறல்லவா இவனை நாம் அமைச்சனாகப் பெற்றது'' என்ற பெருமிதத்தில் திளைத்தான். குடிலனோ தனிமையில் இருக்கும் போதெல்லாம்

''மன்னவன் நமது நிழலில்
மறைந்தான்
பிடித்தால் சுற்றை விட்டாற்
கூளம்''

என்று ஏளனமாக மனத்துள்ளே எண்ணி வந்தான்.

மன்னன் மகள் மனோன்மணிக்குச் சேர மன்னன் புருடோத்தமனே ஏற்ற கணவன் என்றும், மணம் பேசிவர நடராசனைத் தூதாக அனுப்பலாமென்றும் குலகுரு கூறினார். குடிலன் மன்னனிடம் இனிக்கப் பேசி இத்திட்டத்தை மாற்றித் தன் மகன் பலதேவன் தூது செல்லும் நிலையை ஏற்படுத்தினான். பலதேவன் தூதால் சேர நாட்டுக்கும், பாண்டி நாட்டுக்கும் போர் மூண்டது. குடிலனும் இதையே எதிர்பார்த்தான். போரில் சீவக வழுதி தோற்க வேண்டும். சேரனிடம் நயந்து பேசிப் பாண்டி நாட்டு அரசுரிமையைத்தான் பெற்று விட வேண்டும். இது வஞ்சகன் குடிலனின் எண்ணம். முதல் நாள் போரில் சீவகன் தோற்றான். புறமுதுகிட்டோடவிரும்பாத மான வீரனாகிய வழுதி, மறுநாள் போரில் உயிர்விடத் துணிந்தான். சுந்தர முனிவர் தாயில்லாத பெண் மனோன்மணியின் ஆதரவற்ற நிலையைக் கூறி, மறுநாள் போருக்குச் செல்வதன் முன் அவளுக்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்றார். திருமண ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. அந்த வேளையில் குடிலன் எதிர்பாரா விதமாகச் சேர மன்னனை அவன் படை வீட்டருகே சந்தித்தான். தன் துரோக சிந்தையை அவனிடம் வெளிப்படுத்தினான். ''போரில் சீவகன் தோற்பது உறுதி! மன்னன் என்ற பெயரை எனக்குத் தந்தால் போதும். உன் அடி பணிந்து நீ இட்ட ஏவலைச் செய்து வருவேன்'' என்றான். துரோகத்தைத் தூள் தூளாக்க விழையும் உயர் உள்ளம் கொண்ட புருடோத்தமன், குடிலனை விலங்கிட்டுப் பாண்டியன் இருக்குமிடத்திற்குச் செலுத்தினான்.

பாண்டி மன்னன் அரண்மனையிலோ மண நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன. குடிலன் அங்கில்லை. அதைக் கண்ட மன்னன், அவனைப் புகழ்ந்து பேசினான்! அதே நேரத்தில் அவன் தன்னை எதிரியிடம் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறான் என்பதை அவன் அறியவில்லை. பாவம்! மன்னன் பேசினான்:

''அறிவுள்ள யார்தான் அவன் மதியைக் கண்டு வியக்காதிருக்க முடியும்!

உண்மைக்கு உறைவிடம்;
திண்மைக்கு அணிகலம்
சத்திய வித்து ; பக்திஉன்
மத்தன்;
ஆள்வினை தனக்காள் ;
கேள்விதன் கேள்வன்

இன்னும் சொல்வேன். இந்த நடுநிசியிலும் யான் அறியாது எனக்காக உழைக்கச் சென்றுள்ளான் பார்த்தீர்களா! நல்ல வேளை அவன் இங்கில்லை; இருந்தால் தன் புகழ் கேட்க விரும்ப மாட்டான்''. ஏமாற்றியவனுக்கு ஏமாந்தவன்சூட்டிய புகழாரம் இது.

அவ்வேளை புருடோத்தமன் குடிலனோடு அங்கு வந்து சேர்ந்தான். கனவில் கண்டு தான் காதலித்தவன் எதிரில் நிற்பதைக் கண்ட மனோன்மணி அவனுக்கு மாலை சூட்டினாள். புருடோத்தமன் வஞ்சனையாக நுழைந்து விட்டதாகப் பாண்டியன் கருதினான். வஞ்சகன் யார் என்பது புரியாமலேயே. புருடோத்தமனோ, அமைதியாக,

''மன்னவ! உன் அமைச்சனே சூதின் உருவம். இவனுடைய சூதும் துரோகமும் சொல்லி உன்னைத் தெருட்டவே இங்கு வந்தேன். வந்த இடத்தில் என் உயிர் மருந்து மனோன்மணியையும் பெற்றேன். இதோ போகின்றேன். விடை கொடு. விரும்பினால் நாளை போர்க்களத்தே சந்திப்போம்'' என்றான். சீவக மன்னன் குடிலனை நோக்கி ''உண்மையா? குடிலா! உரையாய்......'' என்றான். வஞ்சகன், முகம் கவிழ்ந்து நின்றான்.

'கேள்போல் பகைவர்க்கு' இக்குடிலனைவிடச் சரியான உருவாக வேறு எவர் இருக்க

விடற்றோர்க்கு வீட்டு மனையும், நிலமற்றோர்க்கு நில மும் கொடுத்து வரும் தமிழ் நாடு அரசு, சிறுவியாபாரம்




செய்துவரும் அரிசன மக்களை ஊக்குவிக்க வட்டியில்லாக் கடன் கொடுத்து உதவுகிறது. இக்கடன் நபர் ஜாமீனிலும், சொந்தப் பொறுப்பிலும் கொடுக்கப்படுகிறது. வெற்றிலை பாக்குக் கடை அமைத்தல், வாடகை சைக்கிள் கடை வைத்தல், உணவு விடுதி நடத்தல், தையல் கடை வைத்தல், தோல் பதனிடுதல், தச்சுவேலை முதலிய 21 வகைத் தொழில்களுக்கு, தொழிலுக்கு ஏற்றவாறு ரூபாய் 250 முதல் ரூபாய் 10,000 வரை வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகிறது. இக்கடனைக் கடன்பெற்ற ஓராண்டுக் காலத்திற்குப் பிறகு ஆரம்பித்து 100 சமமான, சுலபமான தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். இக்கடன் பெற உங்கள் மாவட்ட நல அலுவலர் அவர்களுக்கு மனு அனுப்ப வேண்டும்.

ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண முயலும் தமிழ் நாடு அரசு, வீடும் நிலமும் இல்லாமல் உள்ள எல்லா இனத்தைச் சார்ந்த ஏழைகளுக்கும் கடன் கொடுத்து உதவும் காலம் விரைவில்வரும் என்று நம்பலாம்.

நான் 1968 — 69-ல் எஸ்.எஸ்.எல்.சி பாஸ் செய்தேன். அதன்பின் 1970-ல் நடந்த லாரி விபத்தில் எனது வலது காலை எடுக்க வேண்டியதாகிவிட்டது. என் குடும்பம் மிகவும் ஏழ்மையானது. நான் என் பெற்றோருக்கு ஒரே மகன். என் தந்தை வயோதிகர். என் குடும்பத்தைக் காக்கும் பொறுப்பு என்னைச் சார்ந்த போது, எனக்கு இந்த நிலை ஏற்பட்டு விட்டது. நானும் பலதுறைகளுக்கு வேலைக்காக மனுச் செய்தேன். இதுவரை எனக்கு எந்த வித வேலையும் கிடைக்கவில்லை. வாழ்விழந்த நான் மறுவாழ்வு பெற வேலை கிடைக்க வேண்டும். ஆகையால் நான் எவ்வாறு வேலையில் அமர்வது எனவும், என் போன்ற ஊனமுற்றோர்க்குத் தமிழ் நாடு அரசு அளிக்கும் சலுகைகளையும் உதவிகளையும் தெரிவிக்கவும். நான் மறுவாழ்வு பெற வழி வகைகளையும் தெரிவிக்கும்படி சிரம் தாழ்த்தி வேண்டுகின்றேன்.

மா. சுப்பிரமணியன்,
சாந்தநுபுரம் 4-ஆம் வீதி,
புதுக்கோட்டை அஞ்சல்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

தங்கள் கடிதம் கண்டு மிகவும் வருத்தப்படுகிறோம். முயற்சி செய்தால் தங்களுக்கு வேலையும் கிடைக்கும்; மறுவாழ்வும் கிடைக்கும். கீழ்க் கண்ட வகையில் முயற்சி செய்யுங்கள். உடல் ஊனமுற்றோர்களுக்குத் தொழிற் பயிற்சி அளித்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்பதற்காக, தமிழ் நாடு அரசின் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் திட்டப்படி கிண்டியிலுள்ள தொழிற் பயிற்சி நிலையத்தில் 22,300 ரூபாய் செலவில் புத்தகம் 'பைண்ட்' செய்யும் நிலையம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு துவங்கியுள்ளது. அந் நிலையத்தில் முதற் கட்டமாக 16 பேர்களுக்குப் (உடல் ஊன முற்றவர்கள்) புத்தகங்களைப் 'பைண்ட்' செய்வது பற்றிய பயிற்சி அளிக்கத் திட்




டமிடப்பட்டுள்ளது. பயிற்சிக் காலம் 6 மாதமாகும். பயிற்சி பெறும் ஒவ்வொருவருக்கும் மாதம்தோறும் ரூபாய் 25 உதவித்தொகை வழங்கப்படும். 6 மாதப் பயிற்சிக்குப் பிறகு தேர்வு நடத்தப்படும். தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு அரசினர் அச்சுக் கூடத்தில் வேலை அளிக்கப்படும்.

தாங்கள் இப்பயிற்சி பெற்றுத் தேர்வில் வெற்றி பெற்றுவிட்டால், புதுக்கோட்டையில் உள்ள அரசினர் அச்சுக் கூடத்திலேயே தங்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது! இதனால் தங்களுக்கு மறுவாழ்வும் கிடைக்கும்; தங்கள் பெற்றோர்களையும் காப்பாற்ற முடியும்!

எனவே, உடனடியாகத் தாங்கள் ஊனமுற்றுள்ளதைக் குறிப்பிட்டுப் புத்தகம் 'பைண்ட்' செய்யும் பயிற்சிக்குத் தங்களையும் தேர்ந்தெடுக்கும்படி வேண்டுகோள் மனு ஒன்றை எழுதிப் பின்கண்ட முகவரிக்கு அனுப்ப முயலுங்கள்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும்
பயிற்சித்துறை,
சேப்பாக்கம்,
சென்னை-5.

இது தொடர்பாகப் புதுக்கோட்டையில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்களின் உதவியையும் நாடலாம். தாங்கள் சிரமம் பாராமல் நேரில் சென்றால், வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடும். யாரும் மனமிரங்கித் தங்களுக்கு உதவ முன் வருவார்கள்.

—ஆர். எம்.

### விண்வெளியில் வலம் வரும் ஒரு வீடு

விண்வெளியில் பறக்கும் ஆய்வுக்கூடமான அமெரிக்காவின் விண்வெளி மேடை 'ஸ்கைலாப்' மே திங்கள் பதினைன்காம் நாள் முதல், 1974 சனவரித் திங்கள் நான்காம் நாள்வரை ஏறத்தாழ எட்டு மாதங்கள் விண்வெளியில் வலம் வரும்.

ஒன்பது விண்வெளி வீரர்கள் மூவர் மூவராக மூன்று முறை சென்று இந்த ஆய்வு நடத்துவார்கள். அதன் உட்புற வசதி 322 கன மீட்டர் ஆகும். 'ஸ்கைலாப்' கலத்தில் 58 ஆராய்ச்சிக் கருவிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு விண்வெளி வீரர்கள் 270 தனி ஆய்வுகள் நடத்துவர்.






மதுரை மாவட்டம் நிலக்கோட்டை வட்டத்தில் கிராம மின்வசதித் திட்டத்திற்குச் சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. 1973 இறுதிக்குள்ளாகத் தமிழகத்தில் மின்வசதி பெறாத கிராமமோ, சிற்றூரோ இருக்காது என்ற நிலையினை உருவாக்கத் தமிழ்நாடு மின் வாரியம் முழு மூச்சுடன் பாடுபட்டு வருகிறது. அந்த இலட்சியப் பணியில் மேலும் ஒரு படி மேலே போய் தெரு விளக்குகள் மூலமாக மின்வசதி அளிப்பது என்பது மட்டுமல்லாமல்—மேலும் பல வகைகளிலும் மின்வசதியை நீட்டிப்பது என்ற நிலையினை உருவாக்குவது நிலக்கோட்டை மின்வசதிச் சிறப்புத் திட்டம்.

மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டத்தில் வாடிப்பட்டி,அலங்காநல்லூர் வட்டாரங்களில்—இந்த வட்டாரத்தில் உள்ள நான்கு பேரூராட்சிகள் தவிர—மற்ற 52 மக்கள் கணக்கெடுப்புக்குட்பட்ட எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதியை மேலும் பல்வேறு வகையிலும் நீட்டிப்பதே இந்தச் சிறப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் இவ்விரு வட்டாரங்களில் உள்ள 52 மக்கள் கணக்கெடுப்புக்குட்பட்ட கிராமங்களில் மேலும் பல்வேறு துறைகளிலும் மின் இணைப்பு அளிக்கப்படும்.

இந்த இரு வட்டாரங்களில் உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்குட்பட்ட எல்லாக் கிராமங்களும் இத்திட்டத்தின் கீழ் அடங்கும்.

மதுரை மாவட்டத்திலுள்ள நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள், அரிசனக் குடியிருப்புகள் அனைத்துக்கும் மின்வசதியளிக்கும் பணி முழுமை பெற்றுவிட்டது.

> பலர் புகழ வாழ்வது, நம் மீது பிறர் பொறாமைப்பட இடம் தராத தூய நெறி. பிறருடைய தீய குணங்களை மனத்தில் கொள்ளாமல் அவர்களிடமும் அன்பு கொள்வது, அன்பில்லாதவரையும் அரவணைப்பது—இந்த உன்னதப் பண்புகளைப் பணத்தால் வாங்க முடியாது. இந்தப் பண்புகள் இல்லாமல் பணத்தால் மட்டும் எந்த இன்பத்தையும் பெற முடியாது.
>
> —ராபர்ட் லூயிஸ்ஸ்டீவன்சன்.

மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டத்தில் (1) வாடிப்பட்டி (2) அலங்காநல்லூர் (3)வத்தலகுண்டு (4) நிலக்கோட்டை ஆகிய நான்கு வட்டாரங்கள் உள்ளன.

இந்தச் சிறப்புத் திட்டத்தின் கீழ் வாடிப்பட்டி, அலங்காநல்லூர் ஆகிய இரு வட்டாரங்களில் மேலும் பல்வேறு வகைகளில் மின் இணைப்பு நீட்டிக்கப்படும். இந்த வட்டாரத்தில் 52 மக்கள்தொகை கணக்கெடுப்புக்குட்பட்ட கிராமங்களில் உள்ளன.

இந்த இரு வட்டாரங்களில் இப்பொழுது 1,059 வேளாண்மை விசையேற்றங்கள், 3,975வீடுகள் 644 வணிகக் காரியங்கள், 110 தொழில் குறைவழுத்த சர்வீசுகள், 2,031 தெருவிளக்குகள் ஆகியவற்றிற்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டு உள்ளது.

வாடிப்பட்டி, அலங்காநல்லூர் ஆகிய இரு வட்டாரங்களில்,இச்சிறப்புத் திட்டத்தின்கீழ், இப்பொழுதுள்ளதற்கு மேல் மேலும் 360 வேளாண்மை விசையேற்றங்கள், 150 குறைவழுத்த மின் சக்தி பயன்படுதுத்ம் தொழில்கள் 2,470 வீடுகள், 290 வணிகக் காரியங்கள், 1,130 தெருவிளக்குகள், ஆகியவற்றிற்கு ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாக மின்வசதி நீட்டிக்கப்படும்.

இந்த இரு வட்டாரங்களில் 460 கிணறுகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்படக்கூடிய வகையில் போதிய நிலநீர் இருப்பதாக நிலநீர் ஆய்வு இயக்குநர் சான்றளித்துள்ளார். ஆகவே, திட்டமிடப்பட்டுள்ள 360 விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிப்பது, இந்த எண்ணிக்கை அளவுக்குள்ளாகவே உள்ளது.

இந்தத் திட்டத்திற்காகும் செலவு மதிப்பீடு ரூ. 37.735 இலட்சமாகும். இந்த 37.735 இலட்சம் ரூபாயினைப் புதுடில்லியில் உள்ள கிராம மின் வசதி இணையம் கடனாக வழங்க அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.

தமிழகத்தின் கிராமங்கள்—சிற்றூர்கள் அனைத்திலும் [illegible] தெரு விளக்குகள் மூலமாக மின்வசதி அளித்தல் என்பது மட்டுமல்லாமல், மேலும் பல்வேறு வகைகளிலும் மின்வசதி நீட்டிக்கப்பட வேண்டும் என்ற புனிதமான பணியில் இந்த [illegible] அலங்காநல்லூர் சிறப்பு [illegible] டம், அந்தப் பகுதி [illegible] களின் முன்னேற்றத்த[illegible] கோலும் ஒரு [illegible] அ[illegible]


செய்தியே
ரூ.1 கோடி
கைத்தறி நெசவாளர்
துயர் தவிர்த்திட
ஒரு கோடி ரூபாய் கடனுதவி
தமிழக அரசு வழங்கும்.
தமிழ்நாட்டில் 1973-
74-ஆம் ஆண்டில்
சூரியகாந்தி 2.5 லட்சம்
ஏக்கரில் பயிரிடப்படும்.
தமிழ்நாடு அரசு.
போக்குவரத்துக் கழகங்களில்
பணியாற்றும் தொழிலாளர்களுக்கு
முதலீட்டில் பங்கும்
நிருவாகத்தில் பொறுப்பும்
அளிப்பதை மத்திய அமைச்சர்
டி.ஏ.பாய் 'சோசலிசத்தை
நோக்கி எடுக்கப்பட்டுள்ள
மிகவும் துணிச்சலான திட்டம்
என்று பாராட்டியுள்ளார்.
சித்திரமே!


தமிழ்நாட்டு உயர்நிலைப்
பள்ளிகளில் மேலும் 375
பி.டி. பட்டதாரி ஆசிரியர்
களையும், 1100 செகண்டரி
கிரேட் ஆசிரியர்களையும்
நியமித்திட தமிழக அரசு
அனுமதி வழங்கியுள்ளது.
கோவை வேளாண்மைப்
பல்கலைக் கழகத்தில் புதிதாக
விதை நுட்பத் துறை ஆராய்ச்சிக் கூடம்
தொடங்கப்பட்டுள்ளது.
விதை நுட்பத் துறை
எட்டயாபுரத்தில் பாரதியார் பிறந்த வீட்டை
வாங்கித் தமிழக அரசு தொல்பொருள் துறை
நினைவுச் சின்னமாக்கியுள்ளது.
எட்டயாபுரம்
சாமு...




# மாவட்டங்களிலிருந்து...

### சேலம் பவானிசாகரில் இளைஞர் அணி

எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவைப் புகட்டுவதும், நல்வாழ்வியலைக் கிராம மக்களிடையே பரப்புவதும், சமூகத் தீமைகளை நீக்கிட உதவுவதும் இளைஞர் அணித் திட்டத்தின் நோக்கம் என்பதை நாமறிவோம். குறிப்பாகப் படித்த இளைஞர்களின் மனத்தில் தொண்டு செய்யும் எண்ணத்தை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம் எனலாம்.

கோவை மாவட்டத்திலுள்ள பவானி சாகரில் தேர்ந்தெடுக்கப் பட்ட இளைஞர்களுக்கு இளைஞர் அணியில் இரண்டு திங்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியின் போது அனுபவம் மிக்க ஆசிரியப் பெரு மக்களால் இந்தியச் சமுதாய நிலை, முதியோர் கல்வி, நல்வாழ்வியல், வேளாண்மை, சமுதாய இயலாமைகளைக் களைதல், கிராம மக்களை அணுகும் முறைகள், குடும்ப நலத்திட்டம், விளையாட்டுகள் முதலியன பற்றிப் போதிக்கப்படுகின்றன. வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், கோழிப்பண்ணை, மீன்துறை ஆகியவற்றை நேரில் கண்டு நிலையறியும் வாய்ப்புகள் அளிக்கப் படுவதுடன், பத்து நாட்கள் கிராம நிலைப்பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

சேலம் மாவட்டத்திலுள்ள பள்ளிப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் பதினெட்டு இளைஞர் அணியினர் பணியாற்றி வருகிறார்கள். பள்ளிப்பாளையம் ஊராட்சி மன்றப் பகுதியில் உள்ள வெடியரசம்பாளையம் என்னும் கிராமத்தைத் தலைமையிடமாகக் கொண்டு மூவர் பணியாற்றி வருகின்றனர்.

வெடியரசன் பாளையம் ஒரு சிறிய கிராமம். இக்கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஒன்றும், தானியங்கித் தண்ணீர்ப் பொறிகள் இரண்டும், வானொலிப் பெட்டி ஒன்றும் உள்ளன. இடையறாது இயங்கிக்கொண்டிருக்கும் விசைத் தறிகளும் பல உண்டு. இவ்விசைத்தறிகள் பலருக்கு வாழ்வளித்து வருகின்றன.

முதியோர்களுக்கு எண்ணையும் எழுத்தையும் கற்றுக் கொடுப்பதோடல்லாமல், அவ்வப்போது சுற்றுப்புறச் சுகாதாரத்தையும் நல்வாழ்வையும் பற்றி எடுத்துக் கூறப்படுகிறது. அன்றாட நிகழ்ச்சிகளைச் செய்தித் தாள்கள் மூலம் படித்து அறிவிக்கப்படுகிறது. அவர்களுக்கு வரும் கடிதங்களைப் படித்துக் காட்டியும், அவர்கள் கூறுகிற செய்திகளை எழுதிக்கொடுத்தும் உதவி புரிகின்றனர், இளைஞர் அணியினர். முதியோர் கல்வி தவிர, மாலை நேரங்களில் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்குக் கல்வியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

பொதுச் சுகாதாரம் பேண வேண்டிய அவசியத்தையும், பேணுவதால் ஏற்படும் நன்மைகளையும், கழிவுப்பொருள்களை அப்புறப்படுத்தும் முறைகளையும் வீட்டுத் தோட்டம் போடுவதால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கமாக எடுத்துக் கூறப்படுகின்றன. சிறுசேமிப்புத் திட்ட இயக்கம், குழந்தைகள் காப்பகம் வைத்து நடத்துதல் போன்றவற்றில் ஒன்றிய ஊழியருக்கு ஒத்துழைப்பும் தருகிறது, இளைஞர் அணி.

### மதுரை மாவட்டத்தில் மகளிர் நலம்

குடும்பநலனைப் பேணவும், மகளிர்க்குப் பல வகையிலும் கல்வி புகட்டவும், சமுதாய நலனில் முன்னேற்றம் காண அவர்கள் சமுதாயத்தில் பங்கேற்றுப் பணியாற்றவும், வருங்காலச் செல்வங்களான குழந்தைகளை நன்முறையில் வளர்க்கவும், மதுரை மாவட்டத்தில் மகளிர் மன்றங்களும், குழந்தைகள் காப்பகங்களும் சிறப்பாக இயங்கி வருகின்றன.

இம்மாவட்டத்தில் 34 வட்டாரங்களில் ஒவ்வொன்றிலும் 30 மகளிர் மன்றங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு மன்றமும் அவ்வூரிலேயே சமூக நலனில் ஈடுபாடுடைய பெண்மணியால் சிறப்பாக நடத்தப்படுகின்றது. இந்த மகளிர் மன்றங்களில் குழந்தை வளர்ப்பு, சுகாதாரம், சமூக நலம், முதியோர் கல்வி ஆகியவை பற்றிய விளக்கக் கூட்டங்களை நடத்தவும், சத்துணவு பற்றிப் பேசவும், செயல்படவும், நலிவு, எருக்குழி, வீட்டுத் தோட்டம் போடுதல் முதலியவற்றைச் செய்முறையில் காட்டவும், குடும்பநலக் கொள்கை விளக்கம் செய்யவும் அதனைச் செயலாற்றவும் வழி காண்கின்றனர்.

இவை மட்டுமா? சிறு சேமிப்பிலும் தீவிர அக்கறை காட்டுகின்றனர். தையல், கூடை பின்னுதல், கோழி வளர்த்தல், ஆடுமாடு வளர்த்தல் முதலியன பற்றி அறிதலும், செயலாற்றுதலும் வருவாயைப் பெருக்க வழியேற்படுகிறது.

மதுரை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒவ்வொன்றாக மொத்தம் 34 வானொலி மன்றங்கள் மகளிருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் கோடைக்கானல் வட்டாரத்தில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 10 சிறுவர் பள்ளிகளிலும் வானொலிப் பெட்டிகள் உள்ளன. கோவில்பட்டி மகளிர் மன்ற அங்கத்தினர் 5 பேருக்கும், குழந்தைகள் காப்பகக் குழந்தைகளுக்கும் பாலளிக்க 5 பால் மாடுகள் வாங்கியளிக்கப்பட்டுள்ளன. 10 வானொலிப் பெட்டிகள் 10 மகளிர் மன்றங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்ட வட்டாரங்களில் மொத்தம் 127 குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப் பட்டு வருகின்றன. ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திற்கும் பயிற்சி பெற்ற பால சேவிகா நியமிக்கப் பட்டுள்ளார். 2 முதல் 5 வயதுவரையுள்ள 40 குழந்தைகள்வரை ஒரு காப்பகத்தில் உள்ளனர்.

குழந்தைகள் அறிவு வளர்ச்சி உடல் வளர்ச்சி பெறவும், வாய்மொழிக் கல்வி, பெரியோர்களிடம் பணிவு, ஒற்றுமை, அன்போடு இணைந்து பழகிப் பகிர்ந்துண்ணல், நற்பழக்கம் பெறுதல் ஆகியவற்றைக் கற்றுத்தரவும், கதைகள், பாடல்கள், பேச்சுப் போட்டிகள், உடற்பயிற்சி, பார்த்தறிதல், செய்து காட்டல் முதலானவைகளில் பயிற்சி [illegible] தல் பால சேவிகாவின் [illegible] ம்.



முடியும்? குடிலர்கள் ஒன்றனை
உணர வேண்டும். எவ்வளவு
தான் வஞ்சனைகள் புரிந்தா
லும், வெற்றி கிட்டுவது
போல வெளிக்குத் தோன்றி
னாலும், சிலகவழுதிகளை
ஏமாற்றி விட்டதாக மனப்
பால் குடித்தாலும், அவர்
களை அடக்கப் புருடோத்த
மர்கள் தோன்றியே தீர்வர்.
இது திண்ணம். நீதியின் முன்
னால் அவர்கள் தலைகவிழ்ந்து
நின்றேயாக வேண்டும்.

மக்கள், முயற்சி உள்ளவர்
களாக இருக்க வேண்டும்.
முயற்சி எல்லா வகையான
வளங்களையும் சேர்க்கும்.
'தீப்பந்தத்தைத் தலைகீழாகப்
பிடித்தாலும் தீச்சுடர் எப்
போதும் மேல் நோக்கியே
இருப்பது போல' எத்தகைய
இடையூறுகள் நேர்ந்தாலும்
முயற்சியுடையோர் தளர்ச்சி
யடையார். எடுத்த செயலைத்
தளர்வின்றிச் செய்து முடிக்கும்
ஆற்றலுடையவர்களே பிற
ருக்கு உதவியாக இருக்க
முடியும்; பொதுநலத் தொண்
டாற்ற முடியும். பிறர்க்கு
உதவ வேண்டும் என்ற
எண்ணம் மட்டும் இருந்தால்
போதாது. அதை நிறை
வேற்றுவதற்கு ஓயாத உழைப்
பும், மலை குலைந்தாலும்
நிலைகுலையாத் தன்மையும்
இருக்க வேண்டும். முயற்சி
இல்லாதவன்—ஊக்கம் இல்
லாதவன் பிறர்க்கு உதவி
யாக இருக்க முயல்வது பேடி
யின் கையில் இருக்கின்ற
வாளைப் போன்றதாகும்.

**தாளாண்மை இல்லாதான்**
**வேளாண்மை பேடிகை**
**வாளாண்மை போலக் கெடும்.**
**(614)**

எண்ணுவது வேறு; செய
லாற்றுவது வேறு; எண்ணமே
செயலாகி விட முடியாது.
எண்ணியதை எண்ணியாங்கு
எய்த ஏற்ற செயற்றிறம்
வேண்டும். வாள் வைத்திருப்
பவனுக்கு அதை ஆள வேண்
டிய ஆண்மை வேண்டும்.
ஆண்மையின்றேல் வாளிருந்
தும் பயனில்லை. அதைப்
போலவே முயற்சியில்லாத
வன் பிறர்க்கு உதவ வேண்
டும் என்ற எண்ணம் கொண்
டிருந்தாலும் அதனால் பய
னேதும் விளையப் போவ
தில்லை. கையில் வாளைத்
தந்தால் கோழை அதைக்
கண்டு அஞ்சுவான். ஊக்க
மில்லாதவர்களைப் பொதுநலத்
தொண்டு என்ற எண்ணமே
கலக்குவதாகவும் அமைந்து
விடக் கூடும்.

அவையிலே பேசுதல் ஓர்
அரிய கலை. எல்லார்க்கும்
கைவந்து விடக் கூடிய ஒன்று
அன்று. பேசும் ஆற்றல் பெற்றி
ருந்தாலும் பேசும் பொருளைத்
தெளிவுடன் விளக்குவது அரிய
செயல். பொருளில் தெளிவு
இருக்கலாம். ஆனல் கேட்
போர் மனம் கொளப்பேசு
தல் அருமை. நண்பர்கள்
முன்னே அல்லது தனி உரை
யாடல்களில் பேசும் ஆற்றல்
பெற்றோர் அவையில் பேச
அச்சப்படுவதும் உண்டு.
''அவையஞ்சி மெய் விதிர்ப்
பார் கல்வி துடித்தலிற் றுவாமை
நன்று'' என்பார் நீதி நெறி
விளக்க ஆசிரியர். திரிகடுகம்
ஆசிரியரோ 'பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற அருநூல்
துஞ்சூமன் கண்ட கனு!'' என்
பார். சிலர், கற்றறிந்தார்
கூடியுள்ள அவையைக்
காணும்போது அஞ்சி நாவினை
அடக்கிக் கொள்வர். ஆனல்
ஒன்றுமறியாதார் முன்னலோ
கடல் மடைத் திறப்பெனப்
பொழிவர். இது, ''போர்க்
களத்தில் படையைக் கண்டு
அஞ்சிப் பின் வாங்குபவன்,
தன் வீட்டினுள்ளே இருந்து
கொண்டு சட்டி பானைகளை
நோக்கி அம்பு விடுகின்ற
செயலைப் போன்றது'' என்
கிறது பழமொழி.

அவையஞ்சாது, தெளி
வாக, கொள்வோர் மனம்
கொளக் கொடுக்கும் போது
தான் சொல்லப்படும் செய்தி
பெருமை பெற முடியும்.
அரிய செய்தியுங்கூட, சொல்
வோர் திறமையற்றவராயின்
பொலிவு பெருது. போருக்கு
அஞ்சுபவன் கையில் வாள்
இருப்பதில் பயனில்லை. அது
போன்றே அவைக்கு அஞ்சு
பவன் அரிய நூல்களைக் கற்
றிருந்தாலும் அதனால் பயன்
எதுவும் விளையப் போவதில்லை.

**வாளொடென் வன்கண்ணர்**
**அல்லார்க்கு நூலொடென்**
**நுண்ணவை அஞ்சு பவர்க்கு.**
**(726)**

அவையினிடத்தில் அஞ்சுகின்
றவன் கற்ற நூல், போர்க்
களத்தே அஞ்சுகின்ற கோழை
யின் கையில் ஏந்திய கூரிய
வாளைப் போன்றது.

**பகையகத்துப் பேடிகை**
**ஒள்வாள் அவையகத்து**
**அஞ்சு மவன்கற்ற நூல். (727)**

வாள், கூர்வாளாக, மட்டும்
இருந்தால் போதாது; அது
யார் வாள்? என்பதிலேதான்
மதிப்பு அடங்கியுள்ளது. வாள்,









அதனை எடுத்து வீசும் ஆற்றல்
மறவன் கையிலிருக்கும் போது
பயனுடையதாக இருக்கும்.
பேடி கையில் இருக்கும்
போது பயன்படாது போவது
மட்டுமின்றித் தன் மதிப்பை
யும் இழக்கிறது. அறிவுச்செறி
வுடன் கூடிய நூலாக இருந்
தாலும் அதனைத் தக்காங்கு
எடுத்துக் கூறினுற்றுன்
அந் நூலினலாகிய பயனை
நாம் எய்த முடியும்.

நாள்கள் கழிவதைப் பற்
றிச் சிறிதும் கவலைப்படாத
நல்லவர்களும் நாட்டில்
இருக்கக் காண்கிறோம்.
பொழுது போதவில்லையே'
என்று எண்ணி ஏங்க வேண்
டியது போலப் 'பொழுது
போகவில்லையே' என்றுகுறைப்
படும் புல்லறிவாளர்களையும்
காணத்தான் செய்கிறோம்.
நாள்கள் என்ற தாள்களின்
இணைப்பே வாழ்க்கைச் சுவடி.
தாள் நீங்க நீங்கச் சுவடியின்
அளவு குறைவது போல,
நாள் கழியக் கழிய ஆயுளும்
குறைகிறது என்ற எண்ணமே
பலருக்குத் தோன்றுவதில்லை.
கடிகாரம் அடிக்கின்ற ஒவ்
வொரு மணியும்; 'உன் ஆயு
ளின் ஒரு பகுதி குறைந்து
விட்டது' என்ற அறிவிப்பு
மணி என்பதை மறந்துவிடக்
கூடாது. நாட்காட்டியில் நாள்
தோறும் தாளைக் கிழிக்கும்
போது ஏதோ வெற்றுத்
தாளைக் கிழித்தெறிவது
போன்ற உணர்வோடு செயல்
படுகின்றோமே யொழியச் சிந்
திப்பதில்லை. தாளைக் கிழிக்
கும் முன் நன்றாகச் சிந்திக்க
வேண்டும். 1-ம் நாள் உள்ள
தாளை கிழிப்பதாகக் கொள்
வோம். இந்த 1-ம் நாள்
உள்ள தாளை இனிக் கிழிக்க
நமக்கு வாய்ப்புண்டா? இருப்
பது போலத் தோன்றும்.
செப்டம்பர் 1 என்றால்அடுத்து
அக்டோபர் 1 வரப் போகிற
தல்லவா? மேலே சிந்திக்கிறோம்;
செப்டம்பர் 1-ஆம் நாள் உள்ள
தாளை இனிக் காண முடியுமா?
1973 செப்டம்பர் 1 என்றால்
1974 செப்டம்பர் 1 வந்து
தானே ஆக வேண்டும்?
இன்னும் மேலே சென்று 1973
செப்டம்பர் 1-ஆம் நாள்
உள்ள தாளை இனி நமக்குக்
கிழிக்க வாய்ப்பு இருக்கின்
றதா என்று நினைக்கும் போது
தான் சென்ற நாள் சென்றது
தான்; இனித் திரும்பாது
என்பது புரிகிறது. ''நாள்
என்பதை வெறும் தோற்ற
மாகக் கொள்ளாதே;
உண்மையில் அது உன் உயிரை
அறுக்கும் வாள் என்று
அறிந்து கொள்'' என்று
திருவள்ளுவர் குறிப்பிடுகின்
றார்.

**''நாள்என ஒன்றுபோல்**
**காட்டி உயிர்ஈரும்**
**வாள்அது உணர்வார்ப்**
**பெறின்'' (334)**

பெரிய மரங்களைச் சவ்வாள்
(இரம்பம்) கொண்டு அறுப்
பதைப் பார்க்கின்றோம்.
வாளின் இரு பக்கங்களில்
இருவர் அதைப் பற்றிக்
கொண்டு முன்னும் பின்னு
மாகத் தள்ளுகின்றனர். இழுக்
கப்படும் வாளை நன்கு கவ
னித்தால் மரத்துக்கு வெளி
யேயுள்ள பகுதி நம் கண்க
ளுக்குப் புலப்படும்; மரத்தி
னுள்ளே உள்ள போது வாள்
கண்ணுக்குத் தெரியாது; கண்
ணுக்குத் தெரியாது மரத்தி
னுள் மறைகின்ற அந்த
வேளையில் அது மரத்தைக்
கொஞ்சம் கொஞ்சமாக
அறுத்து வந்து இறுதியில்
சாய்த்தும் விடுகின்றது. இழுப்
போர் இருவரும் இரவும்,
பகலுமானல் இரவும் பகலும்
மாறிமாறி வர, நாள் என்ற
சவ்வாள், உயிர் மரத்தைக்
கொஞ்சம்கொஞ்சமாக ஈர்த்து
இறுதியில் சாய்த்தும்
விடுகின்றது.

வீட்டை இழந்தோமா?
விலை கொடுத்து மீட்டுக்
கொள்ளலாம். நாட்டை
இழந்தோமா? அதைக்
கூட இடைவிடாது போரிட்டுத்
திரும்பப் பெற்றுக்கொள்
ளலாம். அரிய செல்வங்களை
இழந்தோமா? உழைப்பினல்
மீட்டுப் பெறலாம். ஆனல்
நாளை இழந்து விட்டால்
இழந்தது இழந்தது தான்;
திரும்பப் பெற எந்த வழியும்
இல்லை. இந்த உண்மையை
நன்கறிந்தால் நாம் வாழ்
நாட்களை வீண் நாட்களாகக்
கழிப்போமா?







# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு


# அண்ணல் சீர் போற்றுவோம்!

மனசை ப. கீரன்





காவிரிப்பூம் பட்டி னத்தில் தாவியுயர் ஏற்காட்டில்,
ஓவியம்போல் ஒளிர்கோடைக் கானலிலே, இயற்கைதவழ்
குற்றாலம் எங்கெங்கும் குடிமக்கள் எல்லோரும்
அற்றையநாள் பெருமையுடன் இற்றையநாள் திறல்யாவும்
கலைமணக்க நுகர்ந்திருக்கக் கருத்தெல்லாம் கவர்ந்திழுக்கத்
தலைமையுறும் அலுவலர்கள் சால்புடனே வரவேற்கக்
கோவிலிலே திரண்டெல்லாம் கூடுதல்போல் இந்நாளில்
காவியங்கள் படைக்கவல்ல கருவூல நிகழ்ச்சியெலாம்
நடக்கின்ற நடப்புகளை நவிலுதற்கு நாவில்லை !
அடக்கவொண்ணு ஆர்வமுடன் குற்றால அருவியிலே
குடைந்தாடிக் குலவுதற்குக் குழந்தையென அணைந்திட்டேன் !
அடைந்தங்கே நெல்லையிலே பரவுகிற ஆற்றினையும்
நாற்புறமும் சூழுகிற நலமான பசும்பயிரும்,
ஆற்றெழுக்காய்ச் செந்தமிழில் உரைபயிலும் அருநிலையும்,
ஐம்புலனும் புளகமுற விம்மிதத்தில் ஆழ்கையிலே,
பைம்புனலே சிறுதுளியாய் விசும்பிருந்தே பரவுதலை
''மழைவந்த'' தென்றாலே, மக்களெலாம் முறுவலித்துப்
''பிழையையா, சாரலன்றோ வந்த''தெனப் பேசலுற்றார் !
சிறுதுளியால் உடைநனையச் சிலகணத்தில் உலர்ந்துவிடும் !
வருகின்ற குற்றாலப் பருவமென மடுத்திடுவார்
குற்றால அருவியினைக் குறுகமிக விரைகையிலே
புற்றுக்குப் போகின்ற எறும்புகள்போல ஊர்கின்றார் !
அன்பாலே கண்டதுமே அரவணைத்தும் முதுகின்மேல்
என்புமிக நொந்திடவே இடித்திழுத்தும் மெல்லெனவே
பழகியுமே நட்பாடும் பலதிறத்தோர் பாங்கேபோல்
அழகொழுகும் ஐந்தருவி வெவ்வேறும் வேகத்தில்
பெருகுகின்ற நீரழகும் பிள்ளையென மழைநீரில்
துருதுருவென் றெல்லாரும் துள்ளமிக மகிழ்விக்கும் !
தேனிகர்த்த தமிழகத்தில், தெளிந்தோடும் காவிரியில்,
கரிகாலன் கட்டுவித்த கல்லணையில், நீர்பெருகும்
அணையிடையில் அருவியினை எதிர்த்தொருங்கு தூண்சார்பில்
அணைகின்ற மீன்களென அதிகம்பேர் நெருங்கிமிக
வானிருந்தே இழிவதென வருகின்ற பேரருவி
நீரினிலே நீராடும் நிலைநம்மைக் கவர்ந்தீர்க்கும் !
வெகுளியினைப் பண்பாட்டால் மிதமாக்கும் தகவேபோல்,
மிகுவெள்ளம் பதமாக வியன்பாறை படிப்படியாய்
வெட்டுவித்து மாமல்லன் பாறையெழில் விளைத்ததுபோல்
தொட்டமைத்த தொல்லருவி துலங்குவதும் சொல்லாற்றேன் !
தன்னிறைவு பெற்றோங்க மன்னுகிற கைத்தொழில்கள்
பொன்னாகப் போற்றென்றார், காந்தியண்ணல் பொய்யில்லை !
மன்னுபுகழ் இயற்கையெழில் வாழிடங்கள் பலவற்றில்
மென்கலைகள் களியாட விழாவெடுக்கும் தமிழரசே
அண்ணலவர் அருள்நெஞ்சின் ஆர்வமெலாம் செயற்படுத்தும
உண்மைநெறி போற்றுவமே ! கலைவளர்த்தே ஓங்குவமே !



# தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி இந்த ஆண்டுத் திட்டங்கள்

"பழைய முறை மாற்றிப் பயிர் செய்தால்
நிறையப் பலன் கிடைக்க வழி யுண்டு;
உழக்குத்தான் மிச்சமென்னும் இருட்டு நிலை
கிழக்கு வெளுத்தது போல்
மறைந்து விடும்!''

என்று மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்ட தற்கிணங்க, பழைய சாகுபடி முறைகளைக் கைவிட்டு, புத்தம் புதிய உயர் விளைச்சல் தரும் ரகங்களையும், சாகுபடி முறை களையும், நவீனக் கருவிகளையும் பயன்படுத்தி—இயற்கை அடுத் தடுத்துப்பல இன்னல்களை ஏற் படுத்திய போதிலும், மனந் தளராமல்—காலமெல்லாம் கடு மையாகப் பாடுபட்டுப் தமிழ் நாட்டின் வேளாண்மை உற் பத்தியை விரைந்து பெருக்கி வரும் தமிழக உழவர் பெரு மக்களே!

புத்தம் புது ரகங் களையும், சாகுபடி முறைகளை யும், நவீன உழவுக் கருவிகளை யும் கண்டுபிடித்துக் கொடுக் கும் வேளாண்மை விஞ்ஞானி களே!

உழவுத் தொழிலை உழவர்கள் விழுமிய முறையில் செய்ய உதவும் வேளாண்மை, கூட்டு றவு, பொதுப்பணி, வருவாய், மின்சாரம், ஊரக வளர்ச்சி, அனைத்து இந்திய வானொலி ஆகிய துறைகளைச் சார்ந்த அலுவலர்களே! ஊழியர்களே!

தமிழ்நாட்டின் வேளாண்மை வளர்ச்சிக்கு உதவும் தனியார் துறையினரே!

உழவர் சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்களே! தம்பிகளே! தங்கைகளே!

உங்கள் அனைவருக்கும் முதற் கண் என் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து சென்ற ஆண்டில் அதாவது 1972—73-ஆம் ஆண்டில் வறட்சி வாட்டிய போதிலும், வெள்ளமும் புய லும் வெகுவாகச் சேதப்படுத்திய போதிலும், ஏறத்தாழ 72.02 இலட்சம் டன் உணவு தானியங் களை உற்பத்தி செய்துகொடுத்துத் தமிழ்நாடு அரசின் இலட்சியம் நிறைவேற ஒத்துழைப்புக் கொடுத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எந்த ஒரு நாட்டில் உணவுப் பிரச்சினை இல்லையோ, அந்த நாட்டில்தான் அந்த நாட்டு மக்களிடத்தில்தான் அறிவு வளர்கிறது; அன்பு தழைக் கிறது; வீரம் செறிந்து காணப் படுகிறது; கலை மிளிர்கிறது; மொழி வளர்கிறது; எல்லா வற்றிற்கும் மேலாக அமைதி யும், சமத்துவமும் நிலவுகிறது என்பது வரலாறு காட்டும் சான்றுகளாக உள்ளன.

பாரதப்போர் நடந்த காலத்தில் பாண்டவர்களின் படைகளுக்குத் தமிழகந்தான் உண்டி கொடுத்து உதவிய தென்று பழந்தமிழ் இலக்கியங் கள் பகர்கின்றன!

காவிரிப் பூம்பட்டினத்துக் கடற்கரையிலே, பிற நாடு களுக்கு மரக்கலங்களின் மூலம் அனுப்புவதற்காகச் செந்நெல் மணிகள் குன்றுகளெனக் குவியல் குவியல்களாக குவித்து வைக்கப் பட்டிருந்ததாக ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான 'சிலப் பதிகாரம்' செப்புகிறது.

கரிகாற் சோழன் காலத்திலே ஒரு வேலி நிலத்தில், 1,000 கலம் நெல் விளைந்தது எனப் 'பொரு நர் ஆற்றுப்படை' என்ற பழந் தமிழ் நூல் பறைசாற்றுகின்றது.

இவ்வாறு பழங்காலத்தில், தமிழ்நாட்டில் உணவு உற்பத்தி பெருகியிருந்த காரணங்களால் தான், அன்று தமிழரின் அறிவும் ஆற்றலும், அன்பும், வீரமும், கலையும், நாகரிகமும் வளர்ந்து பிற நாட்டினரும் புகழும் வண் ணம் தனித்துவம் பெற்று விளங்கியுள்ளன. அந்நாடன் தமிழ் வளர்ந்தது! தமிழர் வாணிபம் சிறந்திருந்தது! தமிழ்நாட்டின் புகழ் தரணி எங்கும் பரவியிருந்தது! இவை களைப் பற்றிக் குறிப்பிட்டு, 'டாலமி', 'யுவான் சுவாங்' போன்ற பிறநாட்டு வரலாற்று அறிஞர்களும் பாராட்டியுள்ள னர்.

எனவே, வேளாண்மையே ஒரு நாட்டின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும், முக்கிய மானது என்பது தெளிவாகிறது. வேளாண்மையின் முக்கியத்து வத்தை விளக்க,

''சுழன்றும் ஏர்ப் பின்னது
உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை!''

என்ற குறள் ஒன்றே போதும்! உலகுக்கெல்லாம், உழவுத் தொழிலின் இன்றியமையா மையை இத் திருக்குறள் எடுத்தியம்பி வருகிறது! இத் தகைய சிறப்பினைப் பெற்றுள்ள உழவுத் தொழிலே, தமிழ் நாட்டின் வளர்ச்சிக்கும், பொரு ளாதார மேம்பாட்டிற்கும் மூலா தாரமானது என்றால் மிகையல்ல!

## வேளாண்மையின் மேன்மை

தமிழ்நாட்டின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 41 சத அளவைக் கொடுத்து வருவ துடன், தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 60 சத அளவினருக்கு வேலைவாய்ப்பை அளித்து வருவது வேளாண் மையும், அதன் அடிப்படையான தொழில்களுமே என்பதை நன்கு உணர்ந்துள்ளதாலேயே இன்றையத் தமிழ்நாடு அரசு வேளாண்மை வளர்ச்சிக்கு—பசுமைப் புரட்சிக்கு—முதலிடம் கொடுத்து வருகிறது.

## பசுமைப் புரட்சி!

காலமெல்லாம் உழைத்து ஓடாகி, கூனிக் குறுகிப்போன ஏழை உழவர்கள் நிமிர்ந்து நடக்க வேண்டும்! குழிவிழுந்து ஒளியிழந்துபோன ஏழை உழவர் களின் கண்களிலே ஒளி பிறக்க வேண்டும்! வயிற்றுக்கும், வாய்க் கும் பற்றாத நிலையிலே வாழ்ந்து வரும் எண்ணற்ற புன்செய் நில உழவர்களின் வாழ்விலே வளம் சேர்க்க வேண்டும்! என்ற இலட் சியங்களை மனத்திற்கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடம் கொடுத்துப் பசுமைப் புரட்சியைத் தோற்றுவித்தார்! பேரறிஞர் அண்ணாவிற்குப் பிறகு, அவர் வழியில் ஏழை உழவர் களின் வாழ்வை வளமாக்க முயன்றுவரும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு முதலிடம் அளித்து, அண்ணாவால் தோற்றுவிக்கப் பட்ட பசுமைப் புரட்சியைப் பரவச் செய்து, 'ஆல்போல் தழைத்து அருகுபோல் வேர் விட்டு' நீண்ட காலத்திற்கு நிறைவான பயன்தர, ஆவன செய்து வருகின்றார்!

இதன் பயனாய்த் தமிழ்நாட் டின் வேளாண்மை, பிற மாநிலத்தவரும், பிற நாட்டின ரும் பார்த்துப் பாராட்டும் அளவுக்கு வளர்ச்சி பெற்றுள் ளது! 1967-68-ஆம் ஆண்டு வரை உணவுப் பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழ்நாடு, இன்று உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்றுள்ளதோடு பிற மாநிலங்களின் பசிப்பிணி தீர்க்கும் மாநிலமாகவும் வளர்ந் துள்ளது!

## வறட்சியும் வெள்ளமும்

சென்ற ஆண்டில், மே மாதம் முடிவதற்குள் தென் மேற்குப் பருவ மழை பொழிய ஆரம்பித்தது! ஆனால், தென் மேற்குப் பருவ மழை போதிய அளவுக்குப் பெய்யாததாலும், பெய்த மழையும் பரவலாகப் பெய்யாததாலும் தமிழ்நாட் டின் பல மாவட்டங்களில் பல பகுதிகளில் வறட்சி நிலை நிலவியது. இதனால் சென்ற ஆண்டின் குறு வைப்பட்ட காலத்தில் உணவு தானிய விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட் டது. இதன் காரணமாக உணவு தானிய உற்பத்தி யில் 1 இலட்சம் டன் அரிசி, 0.86இலட்சம் டன் சோளம், 0.58 இலட்சம் டன் கம்பு, 0.10 இலட் சம் டன் பருப்பு வகை கள் ஆக மொத்தம் 2.54 இலட்சம் டன் அளவுக்கு உணவு தானியங்களில் உற்பத்திக் குறைவு ஏற் பட்டது.

சென்றஆண்டில் அக் டோபர்த் திங்களில் துவங் கிய வடகிழக்குப் பருவ மழையும், அக்டோபர் இடைப்பகுதி வரை தீவிரமாகப் பெய்யவில்லை; பிறகு நல்ல மழையைக் கொடுத்தது. நவம் பர் முடிவதற்குள்ளாகவே, வட கிழக்குப் பருவ மழையால் பயன் பெறும் நீர்த்தேக்கங்களெல்லாம் நிரம்பி வழிந்தன! அதைப்பயன் படுத்தி, நவரைப் பருவத்தில் உற்பத்தியைப் பெருக்கிடலாம்; அதன்மூலம் தென்மேற்குப் பருவ மழை பொய்த்ததால் ஏற்பட்ட உற்பத்திக் குறைவை ஈடுகட்டிட லாம் என்ற எண்ணத்துடன் உழவர் பெருமக்கள் ஆற்றுப்பாச னங்களின் கீழும், ஏரிப் பாசனங் களின்கீழும் சாகுபடிவேலைகளைத் தீவிரப்படுத்தினர்! ஆனால் டிசம் பர்த் திங்களில் வங்காள விரிகுடா வில் ஏற்பட்ட குறைந்த காற்ற முத்தத்தால் தமிழகமெங்கும் கனத்த அடைமழை பெய்தது; புயல் தோன்றியது! டிசம்பர் முற்பாதியில் தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, வடஆர்க்காடு சேலம், கோயம்புத்தூர், தரும புரி, நீலகிரி ஆகிய மாவட்டங் கள் புயற்காற்றின் கொடுமை களுக்கும் வெள்ளத்தின் தாக்கு தலுக்கும் உள்ளாயின.

வெள்ளத்தினால் தமிழ்நாட்டில் 2.20 இலட்சம் ஏக்கர் நெற்பயி ரும், 50,000 ஏக்கர் பருத்திப் பயிரும், 12,000 ஏக்கர் கரும் பும், 22,000 ஏக்கர் இதர பயிர் களும் பாதிக்கப்பட்டன. வெள் ளத்தின் காரணமாக 13,500 ஏக் கர் விளைநிலங்கள் மணலால் மூடப்பெற்று, மணலை அகற்றி னாலன்றிச் சாகுபடி செய்ய முடி யாது என்ற நிலையை அடைந் தன. எனவே, வெள்ளத்தினாலும் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது.



மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர்
அன்பில் தருமலிங்கம்

வேளாண்மை உற்பத்தியைச் சீர்குலைக்கும் இரட்டைப் பிறவி கள் என்று சொல்லப்படும் வறட் சியும், வெள்ளமும் சென்ற ஆண்டில்அடுத்தடுத்து தோன்றித் தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தியை வெகுவாகச் சீர் குலைத்துவிட்ட போதிலும், தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாகச் சென்ற ஆண்டில் தமிழ்நாட்டில் 55.00 இலட்சம் டன் அரிசியும், 15.10 இலட்சம் டன் சிறு தானியங்களும், 1.92 இலட்சம் டன் பருப்பு வகை களும் ஆக மொத்தம் 72.02 இலட்சம் டன்கள் உணவு தானி யங்கள் உற்பத்தியாகி உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ள மகிழ்ச்சியான நிலை மலர்ந்துள் ளது.

## ஆறாண்டுச் சாதனை

தமிழ்நாட்டில், 1965-66-ஆம் ஆண்டில் 35.24 இலட்சம் டன் களாக இருந்த அரிசி உற்பத்தி, 1972-73-ஆம் ஆண்டில் 55 இலட்சம் டன்களாக உயர்ந்துள் ளது.!

தமிழ்நாட்டில், 1966-67-ஆம் ஆண்டில் 54.58 இலட்சம் டன் களாக இருந்த தானிய உற்பத்தி 1972-73-ஆம் ஆண்டில் 72.02 இலட்சம் டன்களாக உயர்ந் துள்ளது!

எனவே, கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி விரைந்து பெருகி வரு கிறது என்பதும், இதற்குக் கார ணம் இன்றைய அரசு மேற் கொண்டுவரும் திட்டங்களே என்பதும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாத உண்மை களாகும்! 1966-67-ஆம் ஆண் டில் 5.27 இலட்சம் ஏக்க ரில் மட்டுமே உயர் விளைச் சல் ரகங்கள் சாகுபடி செய்யப் பட்டிருந்தன, ஆனால், தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் காரணமாக வும், உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடமுன் வரும் உழவர் பெருமக் களுக்குத் தமிழ்நாடு அரசு கொடுத்துவரும் ஊக்கத் தின் காரணமாகவும், உயர் விளைச்சல் ரகங்களின் சாகுபடிபரப்பு, ஆண்டிற் காண்டு பன்மடங்காகப் பெருகி, 1971—72-ஆம் ஆண்டில் 64.14 இலட்சம் ஏக்கர் என்ற நிலையை அடைந்தது. 1972-73-ஆம் ஆண்டில் [illegible] ஏக்கரில் உயர் [illegible]ல்

தரும் நெல் வகைகளும், 4.15 இலட்சம் ஏக்கரில் ஒட்டு வீரிய சிறுதானிய வகைகளும், 11 இலட்சம் ஏக்கரில் எச்.பி. 3 கம்பும் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில், இலக்கினை மிஞ்சும் அளவுக்கு உயர்விளைச்சல் ரகங்கள் பயிரிடப் பெற்றுள்ளன.

### முனைப்பான முயற்சிகள் !

சென்ற ஆண்டில் வறட்சியிலும், வெள்ளத்திலும் ஏற்பட்ட உற்பத்திக் குறைவை ஈடு செய்யத் தமிழ்நாடு அரசு அவசரக்காலப் பின் பருவத் திட்டத்தைத் (Emergency Rabi Programme) தீட்டிச் செயல்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ், சென்ற ஆண்டு நவரைப் பருவத்தில் தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு ஆகிய 3 மாவட்டங்களிலும் 4.82 இலட்சம் ஏக்கரில் ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20 போன்ற உயர் விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் பயிரிடத் திட்டமிட்டு, திட்டமிட்டபடி பயிரிடப்பட்டுள்ளது. அது போலவே கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் 4.13 இலட்சம் ஏக்கரில் சிறு தானிய வகைகளை இறைவையாகப் பயிரிடவும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5.5 இலட்சம் ஏக்கரிலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சிதம்பரம் வட்டத்தில் 60,000 ஏக்கரிலும் பருப்புவகைப் பயிர்களைப் பயிரிடவும் முனைப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பெற்றன.

அவசரக் காலப் பின்பருவத் திட்டத்தின்கீழ் நெல், சிறுதானியங்கள், பருப்பு ஆகியவைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மேற்கொள்ளப் பெற்ற முயற்சிகள் பெரும் வெற்றியடைந்துள்ளன. இத் திட்டத்தின் கீழ் பயிரிடப் பெற்ற பயிர்கள் தற்பொழுது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. இவ்வாறு இடைவிடா முயற்சியுடன் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயன்று வந்துள்ள தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் அதாவது 1973–74-ஆம் ஆண்டில் பல முனைப்பானத் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

### தேவைக்கு ஏற்ற உற்பத்தி !

விரைந்து பெருகிவரும் தமிழ்நாட்டு மக்களின் தேவைக்கேற்ப உணவு, உடை முதலிய இன்றியமையாப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதும், வேளாண்மையே தங்களின் பிழைப்புக்கு வழியாகக் கொண்டுள்ள உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்துவதும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்கி அவர்களின் அன்றாட வருவாய்க்கு உறுதி ஏற்படுத்துவதும் தன் கடமையே எனக் கருதி, அந்நிலையை உருவாக்கத் தமிழ்நாடு அரசு முழு மூச்சுடன் உழைத்து வருகிறது.

தமிழ் நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும், ஆக்கப் பணிகளுக்கும் தேவையான அந்நியச் செலாவணியை ஈட்ட ஓரளவுக்கேனும் தமிழ்நாடு அரசு, தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வேளாண்மைப் பொருள்களை ஏற்றுமதி செய்ய வேண்டியுள்ளது.

தமிழ் நாட்டில் ஏதேனும் ஒரு ஆண்டில் பருவ நிலை பாதித்து விடுமானால், அந்த ஆண்டில் ஏறத்தாழ 10 இலட்சம் டன் உணவு தானிய உற்பத்தி குறைந்துவிடும் என்பது கடந்த காலம் நமக்குக் கற்றுத் தந்த பாடமாகும்! எனவே, தமிழ்நாட்டில் எப்பொழுதும், 10 இலட்சம் டன் உணவு தானியங்களை இருப்பு வைத்துக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம்.

இக்காரணங்களின் அடிப்படையிலேயே, வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 18 அவுன்சு உணவு தானியம் வழங்குவதற்காக 61·50 இலட்சம் டன்கள், ஏற்றுமதி செய்வதற்காக 3 இலட்சம் டன்கள், இருப்பு வைப்பதற்காக 10 இலட்சம் டன்கள், விதைக்காக 1.50 இலட்சம் டன்கள், ஆக மொத்தம் 79 இலட்சம் டன்கள் உணவு தானியங்களைத் தமிழ் நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலட்சியத்திற்கேற்ப, இந்த ஆண்டில் 79 இலட்சம் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.



அது மட்டுமல்ல; சத்துணவு ஆராய்ச்சியின்படி தமிழ்நாட்டிலுள்ள வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 10 அவுன்சு காய்கறிகளும், 3 அவுன்சுப் பழங்களும், 3 அவுன்சு பருப்பு வகைகளும் கிடைத்திடச் செய்வதற்காகவும் தமிழ்நாடு அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

### மிகுபயன் தரும் தானிய வகைத் திட்டம் !

ஒரு மணி தானியம் விளைந்த இடத்தில் இரு மணி தானியமும், ஒரு கதிர் விளைந்த இடத்தில் இரு கதிர்களும், ஒரு போகம் விளைந்த நிலத்தில் இரு போகமும் இரு போகம் விளைந்த நிலத்தில் முப்போகமும், முப்போகம் விளைந்த நிலத்தில் நான்கு போகமும் விளைவிப்பதையே இலட்சியமாகக் கொண்டு இயங்கிவரும் இன்றையத் தமிழ்நாடு அரசு, உயர் விளைச்சல் தரும் தானிய வகைத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 55 இலட்சம் ஏக்கரில் உயர்விளைச்சல் நெல்வகைகளையும் 4·15 இலட்சம் ஏக்கரில் ஒட்டு வீரிய சிறு தானியங்களையும், 11 இலட்சம் ஏக்கரில் எச். பி. 3. கம்பு ரகத்தையும் பயிரிடத் தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

மேலும், சென்ற ஆண்டில் ஏற்பட்ட உணவு உற்பத்திக் குறைவை இந்த ஆண்டின் துவக்கத்திலேயே ஈடு செய்யத் தற்பொழுது நீர் நிலைகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தி அவசரக்காலக் கோடைப் பருவப் திட்டத்தைச் (Emergency Summer Programme) செயல் படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டுள்ளோம். இத்திட்டத்தின் கீழ் ஐ. ஆர். 8. மற்றும் இதர உயர் விளைச்சல் தரும் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு ரகங்களை 2.75 இலட்சம் ஏக்கரில் பயிரிட முனைப்பான முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.



### பருப்பு உற்பத்தி

வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்குக் குறைந்தது 56 கிராம் பருப்பு வகைத் தேவைப்படுகிறது ! ஆனால், நமக்குத் தற்பொழுது நாளொன்றுக்கு 8 கிராம் பருப்பு வகைகளே சராசரியாகக் கிடைக்கிறது. எனவே, பருப்பு வகைகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பருப்பு வகை விரைவுத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் தனிப் பயிராகவும், ஊடு பயிராகவும் மொத்தம் 23.5 இலட்சம் ஏக்கரில் பருப்பு வகைப்பயிர்களைப் பயிரிடத் திட்டமிட்டுள்ளோம் !

### எண்ணெய்ப் பற்றுக்குறை நீங்கிவிடும் !

நம் ஒவ்வொருவருக்கும் உணவுக்காக நாளொன்றுக்கு 57 கிராம் எண்ணெய் தேவைப்படுகிறது ! இந்த அளவு எண்ணெய் கிடைக்கத் தமிழ் நாட்டில் 31 இலட்சம் டன் எண்ணெய் வித்துகள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். ஆனால், தற்பொழுது தமிழ்நாட்டில் 11 இலட்சம் டன் எண்ணெய் வித்துகள்மட்டுமே உற்பத்தியாகி வருகிறது. எனவே, உணவுக்காகத் தேவைப்படும் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்காக இந்த ஆண்டில் 3.75 இலட்சம் ஏக்கரில் சூரியகாந்தியைப் பயிரிடவும், 500 சூரியகாந்திச் செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும் முயற்சி செய்யப்பட்டு வருகிறது. மேலும், இந்த ஆண்டில் எண்ணெய் வித்துகள்மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் 13 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்வதற்காக, நிலக்கடலை முனைப்புத் திட்டத்தின் கீழ் 3·65 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடவும், 240 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும், நிலக்கடலை ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் 8.58 இலட்சம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடவும், 1,540 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும், ஆமணக்கு செய்முறை விளக்கத் திட்டத்தின் கீழ் 200 செயல் விளக்கப் பாத்திகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இந்த ஆண்டின் முடிவில் எண்ணெய் உற்பத்தி பெருகி, எண்ணெய்ப் பற்றுக்குறை நீங்குவதுடன், எண்ணெய் விலையும் கணிசமாகக் குறைந்துவிடும் என நம்பலாம்.

பல பயிர் முன்னோடித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் முசிறி வேளாண்மைக் கோட்டத்தில் 14,375 ஏக்கரிலும், கடலூர் வேளாண்மைக் கோட்டத்தில் 13,160 ஏக்கரிலும் பட்டுக்கோட்டை வேளாண்மைக் கோட்டத்தில் 12,675 ஏக்கரிலும் கூடுதலாகப் பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### உலகம் வியக்கும் அமைதிப் புரட்சி !

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் எனப்படும் தஞ்சை மாவட்டத்தில் 1966—67-ஆம் ஆண்டில் 8.77 இலட்சம் டன்களாக இருந்த அரிசி உற்பத்தி, 1971—72-ஆம் ஆண்டில் 13·59 இலட்சம் டன்களாக உயர்ந்துள்ளது. இதற்கு மூலகாரணம் இன்றையத் தமிழ்நாடு அரசு கொண்டு வந்த இருபோகச் சாகுபடித் திட்டமே! பரம்பரை பரம்பரையாக ஒரு போகமே சாகுபடி செய்யப்பட்டு வந்த தஞ்சை மாவட்டத்தில், இரு போகச் சாகுபடி முறையைக் கொண்டு வந்து உலகம் வியக்கும் அமைதிப் புரட்சியை (Silent Revolution) ஏற்படுத்தியவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களுமே என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். Intensive Agricultural District Programme எனப்படும் தீவிர வேளாண்மை மாவட்டத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் தஞ்சை மாவட்டத்தின் உணவு உற்பத்தியை, இந்த ஆண்டில் மேலும் கணிசமான அளவிற்கு உயர்த்திட எல்லா வகையான முயற்சிகளையும், தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

"Intensive Agricultural Area Programme" எனப்படும் மும்முர வேளாண்மைப் பகுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுவரும் செங்கற்பட்டு திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய 5 மாவட்டங்களிலும் இந்த ஆண்டில் 1,405 ஒருங்கிணைந்த செய்முறை விளக்கப் பாத்திகளும், தண்ணீரை விவேகமுடன் பயன்படுத்திச் குறைந்த அளவு நீரைக்கொண்டு நிறைந்த பயனைப் பெறுவது பற்றி 76 செய்முறை விளக்கப் பாத்திகளும் அமைக்கப்படவிருக்கின்றன.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப்பகுதியில் நடப்பாண்டில் 103 பயிர்முறை விளக்கப் பண்ணைகள் அமைக்க ரூபாய் 49,500 ஒதுக்கப்பட்டுள்ளது. சித்தாறு—



பட்டணங்கால் திட்டப் பகுதியில் 46 பயிர் முறை விளக்கப் பண்ணைகள் அமைக்க ரூபாய் 8,500 ஒதுக்கப்பட்டுள்ளது.

### நீலமலை மேம்பாடு

நீலகிரி மாவட்டத்தினை வளப்படுத்தும் நோக்குடன் துவக்கப்பட்ட, இந்திய—ஜெர்மனி நீலகிரி மேம்பாட்டுத் திட்டத்தை இந்த ஆண்டில் மேலும் தீவிரமாகச் செயல்படுத்திட ஆவன செய்து வருகிறோம். உருளைக் கிழங்கு உற்பத்தியைக்குறைக்கும் பொன்னிற நூற்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு '' தாசனிட் '' என்ற மருந்து இறக்குமதி செய்யப்பட்டு, குறைந்த விலையில் உருளைக் கிழங்குச் சாகுபடியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இம் மருந்தை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்படும் சுங்கவரிக்கு விலக்கு அளிக்குமாறு இந்திய அரசைத் தொடர்ந்து கேட்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பழத்தோட்டம் அமைப்போம்

தமிழ் நாட்டின் பழ உற்பத்தியைப் பெருக்குவதற்காக, புதிதாகப் பழத் தோட்டம் அமைக்க முன்வரும் ஒவ்வொருவருக்கும் திராட்சை பயிரிடுவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1,500 வீதமும், உயர்ந்த அளவாகத் தனிப்பட்ட ஒருவருக்கு ரூ. 6,000 வீதமும், மா, கொய்யா போன்ற இதர பழத் தோட்டம்அமைப்பதற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 300 வீதமும், உயர்ந்த அளவாகத் தனிப்பட்ட ஒருவருக்கு ரூபாய் 2,000 வீதமும் இன்றைய அரசு நீண்ட காலக் கடன் வழங்கி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில்1,800ஏக்கரில் புதிதாகப் பழத்தோட்டம் அமைக்க நீண்ட காலக் கடன் வழங்கப்படும்.

வாழை பயிரிடுவது குறித்த முனைப்புத் திட்டத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 1,000 முதல் 1,500 வரை கூட்டுறவு, வணிக வங்கி ஆகியவைகளின் மூலம் குறுகிய காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 25,000 ஏக்கரில் வாழை பயிரிடப்படும். காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ஏற்றுமதி செய்யத்தக்க வாழை வகைகளை உற்பத்தி செய்யும் திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 7,500 ஏக்கர் பரப்பில் வாழை பயிரிடப்படும்.

கோடைக்கானல், கல்ராயன், ஜவ்வாது, கொல்லிமலை, பச்சை மலை ஆகிய 5 மலைப் பகுதிகளில் இந்த ஆண்டில் 1,160 ஏக்கரில் தோட்டப் பயிர்கள், காய்கறிகள் முதலியன பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### தென்னை வளர்ப்போம் !

புதிதாகத் தென்னந்தோப்பு ஏற்படுத்த முன்வரும் உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூபாய் 300 வீதமும், தனிப்பட்ட ஒருவருக்கு உயர்ந்த அளவாக ரூபாய் 3,000 வீதமும், நீண்ட காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 2,000 ஏக்கர் பரப்பில் தென்னை பயிரிடப்படும். நிலமற்ற ஏழைக் குடும்பங்களையும், இலங்கை அகதிகளையும் குடியமர்த்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் கிழக்கு இராமநாதபுரம் தென்னை வளர்ப்புத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதியில் தென்னை, முந்திரி வளர்க்கும் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் 750 ஏக்கரில் தென்னை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் தென்னை நாற்றுப் பண்ணைகளிலிருந்து 8. 10 இலட்சம் தரமான தென்னங் கன்றுகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. வேப்பங்குளம் தென்னை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து உயரமான, குட்டையான கலப்பினத் தென்னங்கன்றுகள் 5,000 வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

### 'டாலர்' தரும் முந்திரி!

தமிழ் நாட்டிற்கு ' டாலர் ' சம்பாதித்துக் கொடுப்பதில் முக்கியமானது முந்திரி ! புதிதாக முந்திரி பயிரிட ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 150 வீதமும், தனிப்பட்ட ஒருவருக்கு உயர்ந்த அளவாக ரூபாய் 3,000 வீதமும் நீண்ட காலக் கடன் கொடுக்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் புதிதாக 5,000 ஏக்கரில் முந்திரிப் சாகுபடி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. முந்திரிப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 7,900 ஏக்கர் முந்திரிக்கு மருந்து தெளிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதன் மூலம் முந்திரி உற்பத்தி 20 சத அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பருத்தி உற்பத்தியைப் பெருக்குவோம் !

தமிழ் நாட்டின் வாணிகப் பயிர்களில் முக்கியமானது பருத்தி. தமிழ் நாட்டிலுள்ள ஆலைகளுக்கு 7 இலட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் உற்பத்தியாவதோ 4 இலட்சம் பேல். இதனால் தமிழ்நாட்டில் பஞ்சு பற்றாக் குறை உள்ளது ! எனவே பருத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பருத்தி பயிரிடும் முழுப் பரப்பையும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கோவில்பட்டிப் பகுதியைச் சார்ந்த மானாவாரி பருத்திப் பரப்பு முழுவதையும் மும்முரப்படுத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்து பஞ்சு உற்பத்தியை 8 இலட்சம் பேல்களாக உயர்த்த இன்றைய அரசு பெரு முயற்சி செய்து வருகிறது. பருத்தி கட்டுப்கோப்புச் சாகுபடித் திட்டப் பகுதிகளில் 2·05 இலட்சம் ஏக்கரில் பல்வேறு அறிவியல் நுட்பங்களை மேற்கொண்டு பருத்திச் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் 5·35 இலட்சம் பேல் பஞ்சு உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

புகையிலைக் கட்டுக்கோப்புச் சாகுபடித் திட்டத்தின்கீழ் 8,090 ஏக்கரிலும், எல்லா வளர்ச்சியும், அடங்கிய புகையிலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 12,000 ஏக்கரிலும் புகையிலை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது

### கரும்பு உறபத்தியை உயர்த்துவோம் !

நடப்பாண்டில் தமிழ் நாட்டில் 3·20 இலட்சம் ஏக்கரில் கரும்பு பயிரிட்டுப் பல்வேறு திருந்திய முறைகளையும் மேற்கொண்டு கரும்பு உற்பத்தியை 112 இலட்சம் டன்களாகவும், வெல்ல உற்பத்தியை 11 இலட்சம் டன்களாகவும்உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

தமிழ் நாடெங்கும் 3,200 ஏக்கரில் காய்கறி பயிரிட, ஏக்கருக்கு ரூபாய் 120 வீதம் கடன் கொடுக்கவும், தருமபுரி மாவட்டம் ஓசூர் பகுதியிலும் கோடைக்கானலிலும் 5,200 ஏக்கரில் உருளைக் கிழங்கு பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### தரமான விதை வழங்கிடுவோம்

உயர்ந்த மகசூலுக்கு விதைகளே மூலாதாரமாக உள்ளதால், சான்றளிக்கப்பட்ட தரமான விதைகளை உழவர் பெருமக்களுக்கு வழங்குவதை முக்கியக் கடமையாகக் கொண்டுள்ள தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை, இந்த ஆண்டில் 2,780 டன் முதல் நிலை நெல் விதைகளையும், 41,700 டன் இரண்டாம் நிலை நெல் விதைகளையும், 60 டன் முதல் நிலை சிறுதானிய விதைகளையும், 1,528 டன் இரண்டாம் நிலை சிறுதானிய விதைகளையும் வழங்கிடவிருக்கிறது.

### இரசாயன உரங்கள்

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குதவற்கு விதைகளுக்கு அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்றது இரசாயன உரங்கள் ! தேவையான உரங்களைத் தேவையான அளவில், தேவையான காலத்தில் வழங்கிடுவதற்குத் தமிழ்நாடு அரசு மிகுந்த முயற்சி எடுத்துவருகிறது ! இந்த ஆண்டின் முன்பருவ காலத்திற்கு மட்டும் 1·20 இலட்சம் டன் தழைச்சத்துத் தேவைப்படும் என்று முன் கூட்டியே மதிப்பிட்டு, அந்த அளவு உரங்களை வழங்கிட ஆவன செய்யப்பட்டுள்ளது.

### பயிர்ப் பாதுகாப்பு

உழுது பரம்படித்து, உரமிட்டு விதைத்துவிட்டால் மட்டும் விளைந்துவிடுமா ? விளையாது! பயிர்ப்பாதுகாப்புச் செய்தால்தான் எதிர்பார்க்கும் மகசூல் கிடைக்கும் ! எனவே தான், திருவள்ளுவர்.

'' ஏரினும் நன்றும்
எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு !''



என்று குறிப்பிட்டுள்ளார். பயிர்ப் பாதுகாப்பின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தே, இன்றையத் தமிழ்நாடு அரசு இந்த ஆண்டில் ரூபாய் 570 இலட்சம் மதிப்புள்ள பூச்சி-பூஞ்சாள மருந்துகளை வழங்கத் திட்டமிட்டுள்ளது. கைகளால் இயக்கப்படும் தெளிப்பான்களையும், தூவான்களையும் உழவர் பெருமக்களுக்குக் குறைந்த விலையில் வழங்கவும், தேவையான விசைத் தெளிப்பான்களை வாங்கி உழவர்களுக்கு வேளாண்மைத் துறையில் வைத்திருந்து, வாடகைக்குக் கொடுத்து உதவவும் திட்டமிடப்பட்டுள்ளது. பூச்சி-பூஞ்சாள மருந்துகளை ஆய்வு செய்து தரமான மருந்துகளை வழங்கவும் பழுதடைந்த தெளிப்பான்களையும், தூவான்களையும் உடனுக்குடன் பழுது பார்த்து உழவர்களுக்கு வழங்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது.

பயிர்களுக்குப் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும்போது உயிர் இழப்பவர்களின் குடும்பத்திற்கு இந்த ஆண்டுமுதல் ரூபாய் 1,000 உதவித் தொகை வழங்கவும் இன்றையத் தமிழ் நாடு அரசு முடிவு எடுத்துள்ளது.

களைகள் விளைச்சலை வெகுவாகப் பாதித்து விடுவதால் களைக் கொல்லிகளைப் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்கிட இன்றையத் தமிழ்நாடு அரசு ஆர்வம் காட்டி வருகிறது. களைக் கொல்லிகளின் விலை அதிகமாக இருப்பதால், உழவர்கள் களைக் கொல்லிகளைப் பயன்படுத்த முன்வருவதில்லை! எனவே இந்த ஆண்டில் இரசாயனக் களைக்கொல்லிகளை 75 சத விலையில் வழங்கி 25,000 ஏக்கர் பரப்பில் களைக் கொல்லிகளைப் பயன்படுத்தும் திட்டத்திற்காக ரூபாய் 3·75 இலட்சம் செலவு செய்யத் தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

### காஃபி—தேயிலை

வேளாண்மை மறுநிதிக் கழக உதவியுடன், இந்தஆண்டில்ஏரிக்காடு, பழநி மலைப்பகுதிகளில் 1,300 ஏக்கரில் காஃபி பயிரிடவும், தீவிரத் தேயிலைச் சாகுபடித் திட்

# தமிழ்நாடு கடற்பொருள்கள் ஏற்றுமதி விவரம்

தமிழ்நாட்டுக் கடற்பொருள்களின் ஏற்றுமதி ஆண்டிற்காண்டு அதிகமாகி வருகின்றன. 1972-ஆம் ஆண்டில் மட்டும் 5·82 கோடி ரூபாய் மதிப்புள்ள 4,008·10 மெட்ரிக் டன் கடற்பொருள்கள் ஏற்றுமதி செய்யப் பட்டுள்ளன. அவ்வாறு ஏற்றுமதி செய்யப் பட்டவைகளில் சில முக்கியமானவைகளைக் கீழே கொடுத்துள்ளோம்.

| ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் பெயர். (1) | ஏற்றுமதி செய்யப் பட்ட அளவு (மெட்ரிக் டன்). (2) | ஏற்றுமதி செய்யப் பட்ட அளவின் மதிப்பு (இலட்சம் ரூபாய்) (3) |
|---|---|---|
| உறைந்த எருல்கள் ... | 359 | 91·40 |
| உறைந்த தவளைக் கால்கள். | 3 | 0·25 |
| உறைந்த செங்கெருல்கள் | 4 | 1·18 |
| உலர்ந்த மீன்கள் ... | 2,891 | 60·52 |
| உலர்ந்த எருல்கள் ... | 2 | 0·12 |
| சுரு பீலி ... ... | 88·4 | 14·73 |
| மீன் 'மாஸ்' ... ... | 28·8 | 3·00 |
| இதர இனங்கள் ... | 86·6 | 4·65 |

எனவே, அலைகடலும் நமது தமிழ்நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதாக இருப்பதால், கடற்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது நமது கடமை.




**'பிளாஸ்டிக்' அடையாளமிட்ட எருல் கண்டுபிடித்துக் கொடுப்போருக்கு மூன்று ரூபாய் இனம்!**

ஏருல் வளர்ச்சி, அவைகளின் நடமாட்டம் ஆகியவற்றை ஆராய்வதற்காக மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம், படத்தில் காட்டியுள்ளது போல் வண்ண 'பிளாஸ்டிக்' அடையாளம் இணைக்கப் பட்ட எருல்களைப் பழவேற்காடு ஏரியிலும், சென்னையை அடுத்துள்ள கடலிலும் விட்டுள்ளது. 'பிளாஸ்டிக்' அடையாளமிட்ட எருல்கள் கிடைத்தால், அவைகளைக் கொண்டு வந்து கீழ்க் கண்ட அலுவலகங்களில் ஏதேனும் ஒன்றில் கொடுத்துப் பிடிபட்ட இடம், தேதி ஆகியவைகளைத் தெரிவித்தால், ஒவ்வொரு அடையாளமிட்ட எருலுக்கும் மூன்று ரூபாய் வீதம் அன்பளிப்புப் பெறலாம். எருல் இல்லாமல், 'பிளாஸ்டிக்' அடையாளங்களை மட்டும் அஞ்சல் மூலம் அனுப்பி வைத்தாலும், ஒவ்வொரு 'பிளாஸ்டிக்' அடையாளத்திற்கும் ஒரு ரூபாய் வீதம் பெறலாம்.

'பிளாஸ்டிக்' அடையாளத்தை அஞ்சல் மூலம் அனுப்பும்போது கீழ்க்கண்ட விவரங்களையும் கொடுக்க வேண்டும்.

1. அனுப்புகின்றவரின் பெயர், முகவரி.
2. பிடிபட்ட இடம், தேதி.
3. பிடிப்பதற்குப் பயன்படுத்திய வலை.
4. எருலின் நீளம் (அங்குலம் அல்லது சென்டிமீட்டரில்—படத்தில் கண்டவாறு அளந்து தெரிவிக்கவும்.)

அடையாளமிட்ட எருல்கள் கொடுக்க வேண்டிய அல்லது அடையாளம் அனுப்ப வேண்டிய முகவரிகள்:

(1) மத்திய கடல்மீன் ஆராய்ச்சித் துணை நிலையம், 9, கமாண்டர்–இன்–சீப் சாலை, எழும்பூர், சென்னை-600008.

(2) மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலையக் களப்பணி மையம். மாமல்லபுரம், செங்கற்பட்டு மாவட்டம்.

(3) மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலைய ஆய்வு மையம், மே/பா. மீன்துறை இயக்குநர், பாண்டிச்சேரி.

(4) மத்திய கடல்மீன் ஆராய்ச்சி நிலைய ஆய்வு மையம், 45, காசுக்கடைத் தெரு, கடலூர் ஓ. டி., தென் ஆர்க்காடு மாவட்டம்.

இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு அந்நியச் செலாவணியை அள்ளித் தரும் எருல்கள் பற்றிய ஆராய்ச்சி வெற்றி பெற ஒத்துழைப்பு நல்கவேண்டியது குறிப்பாக மீனவப் பெருமக்களின் கடமையாகும்.



# உலகில் இரண்டு கிளிகள்

## டி.என்.சுகி சுப்பிரமணியன்

11

பிரச்சினைகள் மறைவதில்லை.

நமது வாழ்க்கை முன்னேற்றம் காண வேண்டுமானால் நமக்காக வாழ்ந்து காட்டியவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும் அல்லது நமக்காக வழி காட்டியவர்களை நினைத்துப் பார்க்க வேண்டும்.

டாக்டர் நர்மதை, வாழ்ந்து காட்டும் ராதையின் தியாக வாழ்வை உள்ளம் நெக்குற நெக்குற நினைந்து நினைந்து அவளைக் கண்ணுரக் கண்ட தெய்வமாக எண்ணினாள்.

டாக்டர் நர்மதை, வழியைக் காட்டிய பலருக்குள் தன் கணவன் மணிவாசகனையும், நர்சிங் ஹோம் தனிப்பட அமைத்துக் கொள்ள அனுமதி தந்த முதலாளி முத்தையாவையும் நினைத்துப் பார்த்துக் கொண்டாள். இருவருக்குமே தனது நன்றியைச் சொன்னதுடன் அவள் கௌரவப் பிரச்சினை இல்லாமல் தொழிற் திறமையால் புகழ்ச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் குவிக்க நினைத்தாள்.

வக்கீல் மணிவாசகன் தன் வாக்குச் சாதுர்யத்தாலும், உழைப்பாலும் தன் சட்ட ஞானத்தை நிலை நாட்டத் தொடங்கினான்.

கணவனுக்கும் மனைவிக்கும் வேறு வேறு வேலைகள்; அதுவும் கடினமான பொறுப்புள்ள வேலைகள். இதன் காரணத்தால் இவர்களுக்குச் சண்டையிடவோ சரசமாடவோ சிறிதே நேரம் கிடைத்தது.

வீடு பலம் பெறப் பணத்தைச் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் இருவருக்கும் இருந்து விட்ட காரணத்தால் அவர்கள் இருவரும் தத்தம் கௌரவப் பாய்ச்சலை ஒதுக்கிவிட்டு, ஒருவரை விட்டு ஒருவர் ஒதுங்கி வாழ்வது என்று கடைப் பிடித்தார்கள்.

இந்த ஏற்பாட்டில் விரிசல் வெடிப்பு எதுவும் வராமல் ராதை கவனித்துக் கொண்டாள். 'பாபு'வைத் தாயாகவும் தந்தையாகவும் நின்று வளர்க்கும் பொறுப்பையும் அவளே மேற்கொண்டாள்.

வீட்டுப் பொறுப்பையும் 'பாபு'வைக் கவனிக்கும் பொறுப்பையும் மேற்கொண்ட காரணத்தால் சட்டக் கல்லூரிக்கு அவள் போய் வந்தாலும் அவளுக்கும் படிப்புக்கும் தொடர்ந்தம் உண்டாகவில்லை.

ஒரு நாள் பஸ் ஸ்டாண்டில் ராதை நின்று கொண்டிருந்தாள். அவ்வழியே வந்த வக்கீல் ரோமியோ—அவன் மனைவி செண்பகம் இருவரும் பார்த்தனர்.

'ராதை! படிப்பு எப்படி இருக்கிறது?'

''என்னைப் பொறுத்தவரை கசப்பாக இருக்கிறது''

''என் கணவரைச் சொல்லித் தரும்படிக் கேட்டுக் கொள்ள அனுமதிப்பாயா?''

''நான் படித்து என்ன செய்யப் போகிறேன், செண்பகம்?''

''அன்றைக்கு உன் டாக்டர் அக்கா சொன்னாள்''

''என்ன?''

''வக்கீல் ராதை என்னும் பெயர்ப் பலகையைத் தன்வீட்டில் மாட்டாமல் விடப் போவதில்லை என்று என்னிடம் சொன்னாள்''.

''அவள் தொல்லைக்குப் பயந்து தான் நான் சட்டக் கல்லூரிக்கு வருகிறேன்; சட்டத்தைப் படிப்பதைவிடச்சாம்பார் வைப்பது ருசிகரமான விஷயம்! பெர்மிட் லைசென்ஸ் சட்டங்களைப் படிப்பதைவிட 'பாபுப் பையனைக் கொஞ்சிக் கொண்டிருப்பது இன்னும் சுவைதரும்!''

''வண்டிக்குள் ஏறிக் கொள் ! உன்னை வீட்டில் கொண்டு போய் விடுகிறோம்'' என்றான் ரோமியோ.

''உன் அத்தான் கார் வாங்கி இருக்கிறாராமே !''

''அது அவரது கார். அதில் எவரும் ஓசிக்குச் சவாரி செய்யக்கூடாது. இது கரார்!''

''நீ கூடவா!''

''ஆமாம்!''

''அப்படியானால் நீதி மன்றத்துக்கு வரும் அவர், உன்னைச் சட்டக் கல்லூரியில் கொண்டு வந்து விடுவதில்லையா ?''

''கொண்டுவந்து விடவும் மாட்டார்! நானும் வற்புறுத்த மாட்டேன். ஒரு நாள் டாக்டர் அக்காள் இதைச் சொல்லப் போய். . . . . . . . . . . . வம்பில் மாட்டிக் கொண்டாள்''.

''வக்கீல் மணிவாசகன் சுயகாரியப்புலி. அவன் தனக்குச் சமமாக எவரையும் நினைக்க மாட்டான். ஆதிமுதல் ஏமாந்து போன நீ, இன்று பஸ் ஸ்டாண்டில் நிற்கிறாய் ! இன்னும் எங்கு போய் நிற்கப் போகிறாயோ? வண்டியில் ஏறிக் கொள்'' என்று ரோமியோ வற்புறுத்தினான்.

''வழக்கம்போல பஸ்ஸில் போகிறேன்''.



> தனது குழந்தை யுள்ளத்தை ஒரு போதும் இழக்காதவன் தான் சிறந்த மனிதன் என்று சொல்லப்படுகிறான்.
>
> —மென்சியஸ்

''ஒரு நாள் மட்டும் எங்களுடன் வா!'' என்று, செண்பகம் வலிந்து ஏற்றிக் கொண்டாள். கார், நீதி மன்றத்தைவிட்டு கடற்கரைச் சாலை வழியாக ஓடிக் கொண்டிருந்தது.

செண்பகம் ''வீட்டில் சமையலுக்கு ஆள் இருக்கிறதா?'' என்றாள்.

''சமையலுக்கு ஆள் இருக்கிறது. பாபுவைக் கவனிப்பதற்கென்று நர்சு ஒருத்தியை வக்கீல் ஏற்பாடு செய்திருக்கிறார்!''

''அடேயப்பா! அவனுக்கு வயது இரண்டு இருக்குமா?''

''இரண்டு முடியப் போகிறது!''

காலந்தான் எத்தனை வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது!

செண்பகத்தின் காதருகே குனிந்து ''உன் நிலைமை என்ன?'' என்று கேட்டாள்.

''நாங்கள் அதிர்ஷ்டசாலிகள். எனக்கு இவர் குழந்தை; அவருக்கு நான் குழந்தை''.

ராதை பண்புடன் பேச்சைத் தொடங்கியும், செண்பகம் பச்சையாகப் பதில் கூறி விட்டாள்!

ரோமியோவிற்கும் செண்பகத்திற்கும் தங்களுக்குக் குழந்தை இல்லையே என்ற ஏக்கமோ வருத்தமோ இல்லை! அவர்கள் இன்பமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

''ஒரு வாரத்திற்கு முன்பு உன் அப்பாவிடமிருந்து போன் வந்தது''

''என்ன சமாச்சாரம்? மறுபடியும் யார் மீதாவது காரை ஏற்றி விட்டாரா?'' என்று சிரித்தான் ரோமியோ.

''இல்லை! டாக்டர் நர்மதாவிடம் பேச வேண்டுமென்று சொன்னார்''

''என்ன பேச்சு நடந்தது?''

''செண்பகத்தை டாக்டர் நர்மதா சோதனை செய்ய வேண்டும் என்று பேசியதாகத் தெரியவந்தது''.

ரோமியோ சிரித்தான். ''என் மாமனாருக்குப் பேரனோ, பேத்தியோ பிறக்கவில்லையென்று கவலை! செண்பகம்! நீ டாக்டர் அம்மாவைப் போய்ப் பார்த்தாயா?'' என்று கேட்டான்.

''அப்பா வற்புறுத்தினார். நான் மறுத்துவிட்டேன்!''

''ராதையைப் பார்த்ததும் நம் காரில் ஏற்றிக் கொண்டதும் நல்லதாகப் போயிற்று. உன் அப்பாவுக்குரிய கவலையைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு இன்று கிடைத்துவிட்டது!''

''குழந்தை இருப்பவர்கள் ஐயோ ஏன் இருக்கிறது என்று அலறுகிறார்கள். இல்லாதவர்கள், இல்லையே, அடடா இல்லையே என்று அங்கலாய்க்கிறார்கள். அப்படியென்ன நமக்கு வயசாகி விட்டதா?'' என்று கேட்டாள், செண்பகம்.

ரோமியோ, ''காலம் ஒவ்வொரு நாளும் நமது ஆயுளை விநாடிக்கு விநாடி விழுங்கிக் கொண்டிருக்கிறது. எனக்குக் கூட டாக்டர் ஒருவரைப் பார்க்க வேண்டுமென்ற எண்ணம் இப்போது உண்டாகிறது'' என்று சொன்னான். அத்துடன் நில்லாமல் ''ராதை! உனக்கு உங்கள் குடும்பத்தில் எத்தனை அக்கறையோ அத்தனை அக்கறை எங்கள் குடும்பத்திலும் இருக்கிறது! உனக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று மனமாரச் சொன்னான். அவன் உள்ளத்துள் எங்கோ ஒளிந்து கொண்டிருந்த பிள்ளைப் பாசம் விசுவரூபம் எடுத்தது!

மூவரும் படித்தவர்களாக இருந்த காரணத்தால் பிள்ளையில்லாப் பிரச்சினையை வாய் விட்டுப் பேசிக் கொள்ள முடிந்தது.

''உன் அத்தான் வக்கீல் மணிவாசகன் முன்சீப்பு வேலைக்கோ, சர்க்கார் வக்கீலுக்கோ முயற்சி செய்வதாகக் கேள்விப் பட்டேனே!''

''அவர் மறுத்துவிட்டார். அவர் சுதந்திரப் பறவை. தனிப்பட்ட முறையில் வழக்காடினால் நிரம்பப் பணம் சம்பாதிக்கலாம். அரசாங்க ஊழியராக மாட்டிக் கொண்டால் வருமானம் குறைந்து போகும். இதற்கு அவர் பயப்படுகிறார்!''

''உயர் நீதிமன்றப் பதவி கிடைத்தால்?'' என்னும் கொக்கியுடன் நிறுத்தினான்.

''இந்த வயதில் இவருக்குக் கிடைக்குமா? நீதிபதிப் பதவி கிடைத்தால் அல்லவா, உயர் நீதி மன்றப் பதவிக்கு வர முடியும்!''

கார், ராஜா அண்ணாமலைபுரத்திற்குள் திரும்பியது. வீட்டு வாசலில் இளம் நர்சு ஒருத்தி சின்னஞ்சிறு சைக்கிளில் பாபுவை உட்கார வைத்து விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்.

''அம்மா!'' என்று ராதையைப் பார்த்து ஓடிவந்தான்.

''ரோஸி! இவர்கள் இருவருக்கும் காபி-டிபன் கொண்டு வரச் சொல்லு!''

''ஆகட்டும்'' என்றவள் போய்விட்டாள். பாபு தனக்குத் தெரிந்த ஆங்கிலம்—தமிழ் வார்த்தைகளைச் சொல்லி, வந்தவர்களை மகிழ்வித்துக் கொண்டிருந்தான். அந்த மழலைச் சொல், அந்த மலர்ச் சிரிப்பு, தத்தி நடக்கும் தளிர் நடை, பிஞ்சு விரல்கள், பேசும் கொஞ்சல் யாவும் சேர்ந்து செண்பகத்தின் உள்ளத்துள் பிள்ளைப் பேற்றின் பெருமையை நினைவு படுத்தின.

டாக்டர் நர்மதை அப்போதுதான் டாக்சியில் வந்து இறங்கினாள். எல்லோரையும் வரவேற்றாள். பாபுவை எடுத்துக் கொஞ்சினாள்.

''செண்பகம் உன் அப்பா சொன்னார்கள். நீ வரவே இல்லையே! என்றைக்கு வருகிறாய்?''

செண்பகம், ''அடுத்த வாரம் வருகிறேன்'' என்றாள்.

ரோமியோ தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அங்கே காபி-பலகாரம் யாவருக்கும் வந்தன. சின்னஞ்சிறு மேசையில் பாபுவுக்குத் தனியே டிபன்-காப்பி வைக்கப்பட்டிருந்தது.

''தனியாக இருந்து இவனுக்கு உண்ணத் தெரியுமா?''

''இவ்வாறு பழக்கப்படுத்த வேண்டுமென்று நர்சு ரோஸிக்கு உத்தரவு செய்திருக்கிறார் அவன் அப்பா'' என்றாள் நர்மதை.

''ஏன்?''



'' இன்னும் இரண்டு மாதத்தில் இந்தக் குழந்தை படிக்கப் போகிறது; தனியே உதகையில் போய்த் தங்கப்போகிறது. அதற்குரிய பழக்கங்களை இப்போதே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம்!'' என்று விளக்கினாள், ரோஸி.

டாக்டர் நர்மதையின் கண்ணில் நீர்முட்டியது. இன்னும் இரண்டு மாத காலத்தில் உயர்தரப்பள்ளியில் படிக்கக் குழந்தையைப் பிரிந்தாக வேண்டும். இது கணவனின் கட்டளை. இதனை அவள் எதிர்க்கவோ மறுக்கவோ கூடாது என்பதையும் அவள் அறிவாள்!

வக்கீல் ரோமியோ, ''மணிவாசகன் போக்கு எதிலும் அதிசயமாகவிருக்கிறது! இத்தனை பிஞ்சுக் குழந்தையைப் பிரிந்து எப்படி உங்கள் யாவராலும் இருக்க முடியும்?'' என்று கேட்டான்.

ரோஸி, ''இந்த மாதிரிக் குழந்தைகளைப் பள்ளியில் சேர்த்து அவர்களே வளர்த்துப் பாடமும் விளையாட்டும் சொல்லி வைக்கிறார்கள்! பணம் தான் நிரம்ப ஆகும்!'' என்றாள். பழகிய பாசத்தால் குழந்தையைப் பிரிவது அவளுக்கே கஷ்டமாகவிருந்தது.

ரோமியோ, ''கோழி தன் முட்டையை அடைகாக்க வொட்டாமல்'' இன்குபேட்டரில் வைத்து அடைகாக்கும் இயந்திர யுகத்தில் நாம் வாழுகிறோம். இதேபோன்று, பெற்றவர்கள் அருகாகச் சின்னஞ்சிறு குழந்தை நடமாடிக் கல்வி கற்பதைவிட, ஹாஸ்டலில் தங்கிப் படிப்பதும் விளையாடுவதும் இயந்திரக் கல்வியாக இருக்கும்! மணிவாசகன் அதிசயமான வக்கீல், அதிசயமான கணவன்! இப்போது அதிசயமான தகப்பனாகவும் மாறுகிறான்!'' என்று உள்ளம் திறந்து பேசிவிட்டு ராதையைப் பார்த்தான்.

டாக்டர் நர்மதை, ''ராதையினாலும் குழந்தை பாபு உதகைப் பள்ளிக்குப் போவதைத் தடுத்து நிறுத்த முடியாது'' என்று பேச்சை நிறுத்தினாள்.

''குழந்தை பிறந்த தினத்தன்று அவர் இக்குழந்தையை உதகைப் பள்ளியில் சேர்க்கக் கோவை வடிவேலு அவர்களிடம் சிபாரிசைப் பெற்றுவிட்டார்! அதாவது மூன்றாண்டுக்கு முன்னரே இக்குழந்தை அங்கே படிக்க வேண்டுமென்று ஏற்பாடு! இதனை மும்மூர்த்திகள் வந்தாலும் தடுக்க முடியாது!'' என்று ராதை விளக்கினாள்.

''மணிவாசகன் மனசு இரும்பா, இல்லை கல்லா? இச்சிறு குழந்தையைப் பிரிந்து இருக்க அவன் உள்ளம் சம்மதிக்கலாம். தாயும் ராதையும் எவ்வாறு இருப்பார்கள்?''

டாக்டர் நர்மதை, ''நாங்கள் இருக்க ஒப்புக் கொண்டோம்'' என்று சிரித்தாள். அது சிரிப்பன்று; நீறுபூத்த நெருப்பு.

வக்கீல் மணிவாசகன் சொந்தக் காரை ஒட்டிக் கொண்டு வந்து நின்றான்.

''வருக! வருக! எல்லோருக்கும் வணக்கம். டேய் பாபு! நீ எங்கே படிக்கப் போகிறாய் சொல்!''

''உதகைப் பள்ளிக்கு!'' என்று அவன் தட்டுத்தடுமாறிச் சொன்னான்.

வக்கீல் மணிவாசகன் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டான்.

காப்பி டிபன் சாப்பிட்ட நண்பர்கள் விடைபெற்றுப் போனார்கள். இயந்திரம் போன்று அவர்களை வழியனுப்பி விட்டு ''ரோஸி நீதான் இவனைக் கூட்டிக் கொண்டு போய்ப் பள்ளியில் சேர்க்க வேண்டும்'' என்று சொன்னார் வக்கீல்

''ஆகட்டும்!''

''உன் வேலையில் திருப்தியிருந்தால் டாக்டரம்மா தன் சொந்த நர்சிங் ஹோமில் உனக்கு வேலை தரலாம். அல்லது நீ வேறு இடத்தில் வேலைக்கு முயற்சி செய்யலாம்''.

அந்தச் சட்ட இயந்திரம் பேசிக் கொண்டே தன் அறைக்குள் போய்விட்டது.

ரோஸி விடை பெற்றுக் கொண்டு சிரித்த முகத்துடன் தனது வீடு திரும்பிக் கொண்டிருந்தாள்.

டாக்டர் நர்மதை பாபுவுடன் சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்தாள். ''ராதை! நீ முதல் வருடமே தேர்வு அடையவில்லை. அதற்காகக் கலங்க வேண்டாம். தொடர்ந்து படி. இன்று நர்சிங் ஹோமிற்கு வயதான கிழவர் ஒருவர் வந்தார். அவர் பி.ஏ. பி.எல்., தம் மனைவியை அழைத்து வந்தார். அவரிடம் உனக்கு 'டியூஷன்' சொல்லித் தர முடியுமா என்றும் கேட்டேன். அவர் ஒப்புதல் தந்தார்'' என்று நிறுத்தினாள்.

> ஒரு மனிதனின் அழகு அவனது உடலமைப்பில் இல்லை—அவனது குண நலத்தில்தான் இருக்கிறது.
>
> —காந்தியடிகள்

''எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நானே படித்து வெற்றி காண்பேன். இது உறுதி'' என்று அழுத்தமாகச் சொன்னாள்.

''நான்கூட ஒரு மோட்டார் வாங்கலாம் என்றிருக்கிறேன்''

''அத்தான் என்ன சொன்னார்?''

''கார் வாங்குவதும் ஓட்டுவதும் அதனைப் பராமரிப்பதும் அவரவர் சாமர்த்தியம். தனது காரை என் வேலைக்கு எதிர்பார்க்க வேண்டாமென்று சொல்லிவிட்டார்''

''நீ ஒரு காரை வாங்கினால் அவருக்கு எதிராக வாங்கிவிட்டதாகக் கூச்சல் போடமாட்டாரா?''

''அவர் கூச்சல் போடுவதில் நியாயம் இருக்கிறதோ இல்லையோ நான் கார் வாங்கப் போவதில் நியாயம் இருக்கிறது'' என்று சொல்லி முடித்தாள்.

அச்சமயம் அங்கு வந்த மணிவாசகன் ''ஏய் அசட்டு ராதை! உனக்கு உலகம் தெரியாது. இந்த ஏழை நாட்டில் தன் உயிருக்குப் பயந்து பணம் செலவழிக்கும் ஏழைகள் நிரம்பப் பேர் இருக்கிறார்கள். பணக்காரர்களும், தத்தம் உயிரைக் காப்பாற்ற நிரம்பப் பேர் இருக்கிறார்கள். எந்த முட்டாள் டாக்டரும் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதித்து விடலாம். புத்திசாலியான உன் அக்காள் கார் வாங்குவதில் ஆச்சர்யம் இல்லை! என் காரை முந்திச் செல்லாமல் இருந்தால்அதுவே நான் செய்த பாக்கியம்'' என்று சொல்லிவிட்டு எவர் பதிலையும் எதிர்பாராமல்தன்னறைக்குள் போய்விட்டான்.



''அம்மா வாங்கும் காரில் நான் உதகைக்குப் போவேன்'' என்று பாபு சொன்னான்.

''நீ ரெயிலில் போகப் போகிறாய்! இது என் முடிவு'' என்ற பதில் அறைக்குள்ளிருந்து பளிச்சென வந்தது.

அந்தவீட்டிற்குள் அதிர்ஷ்டங்கள் ஆறாய்ப்பெருகின; ஆயினும் அர்ச்சனைகள் அன்புக் கரையை உடைக்கும் வண்ணம் அலை மோதிக் கொண்டிருந்தன. பெண்கள் இருவரும் வாய் திறக்கவில்லை.

## 12 முன்னாள் கைதிக்கு வேலையில்லை!

நான்காண்டு காவச் சிறைவாசத்தை முடித்துக் கொண்டு வீடு திரும்பிய காரோட்டி சண்முகம் தன் குடிசை வீட்டில் வளத்தைக் காணவில்லை. வாளிப்பாக இருந்த மகள் கனகாம்பரத்தைக் கண்டான்.

''நான்தான் முதலாளிக்காக ஒரு பொய் சொன்னேன். உன் அம்மா எதற்காக ஒரு பொய் சொன்னாள்!''

''நீங்கள் எதற்காகச் சொன்னீர்களோ அதற்காகத் தான் அம்மாவும் தொடர்ந்து பொய் சொன்னாள்!''

''நான் முதலாளியைக் காப்பாற்றச் சொன்னேன். அவர் தரவிருந்த பணத்துக்கு ஆசைபட்டுச் சொல்லவில்லை!''

''அம்மாவும் அந்தப் பணத்தை வாங்கவில்லை! உங்கள் வாக்குப் பொய்யாகக் கூடாது என்பதற்காகச் சொன்னாள். அவள் மில்லுக்குப் போயிருக்கிறாள்''.

''மில்லில் வேலைதந்து நம்மை ஏமாற்றிவிட்டார் முதலாளி! எந்த முதலாளியும் இளிச்சவாயன் இல்லை. நமது குடும்பம் பாழ்பட்டு நொறுங்கிப் போய்விட்டது''

மில் வேலையை முடித்துக் கொண்டு அங்கே வந்தாள் அஞ்சலை. கணவனைக் கண்டதில் மகிழ்ச்சியும் இருந்தது. அதிர்ச்சியும் இருந்தது.

''நடந்தது நடந்துவிட்டது. என்னால் இனி வேலை பார்ப்பது கடினம். நீதான் வேலை பார்த்துப் பணம் சேர்க்க வேண்டும்''

''முதலாளியிடம் கேட்டுப் பார்ப்பது தானே அஞ்சலை''

''நீ தான் அதைச் செய்ய வேண்டும். உனக்கு முதலாளி. நான் அவருக்கு ஊழியம் செய்யவில்லை; தியாகம் செய்யவில்லை. உன் வார்த்தையைப் பொய்யாக்கக் கூடாது என்பதற்காக நீயே காரையோட்டி விபத்தை உண்டாக்கினாய் என்றேன்!''

''என் செயலைக் காப்பாற்ற, என் சொல்லைக் காப்பாற்றத் தான் நீ பாடுபட்டாயா?''

''பிறகு என்ன?''

''இந்தப் பெண் கனகாம்பரத்திற்கு மாப்பிள்ளை பார்க்க வேண்டும். முதலாளியிடம் பணம் கேட்கப் போகிறேன்''

''அது உன் இஷ்டம்!''

இரண்டு நாள் கழித்து முதலாளி முத்தையாவின் மாளிகைக்குள் வந்து நின்றான், சண்முகம்.

''எப்போது விடுதலை பெற்றாய்?''

''இரண்டு நாள் ஆச்சு''

''உனக்கு என்ன வேண்டும்? நம்முடைய காருக்குப் புதிய காரோட்டி வைத்துவிட்டேன். அவனை நீக்க முடியாது. நல்ல இடமாக உனக்குச் சிபாரிசு செய்கிறேன். ஒப்புக் கொள்ளுவாயா?''

''என் மகள் கலியாணத்திற்கு எனக்குப் பண உதவி தேவை''

''நான் உதவி செய்தபோது நீ பணத்தை அலட்சியம் செய்தாய், உன் மனைவி அலட்சியம் செய்தாள். நான் பணம் தருகிற சமயம் தருவேன்; அல்லது மறுப்பேன். உன்மீது அனுதாபப் பட்டு வேலைக்கு நான் சிபாரிசு செய்கிறேன், நல்ல இடம்.''

''செய்யுங்கள். என் மகள் கலியாணம் உங்கள் தயவால் நடக்க வேண்டும்''

''உன் குடும்பம் என் உப்பைத் தின்றுதான் வளர்கிறது. டாக்டர் நர்மதா புதிய கார் வாங்கி இருக்கிறாள். அதற்கு டிரைவர் தேவை''

உடனே போனில் டாக்டர் நர்மதாவைக் கூப்பிட்டார்.

''ஹலோ, முதலாளி முத்தையா பேசுகிறேன்''

''குட்மார்னிங்! டாக்டர் நர்மதா''

''உங்கள் வண்டிக்கு டிரைவர் கிடைத்து விட்டானா?''

''இல்லை!''

''நான் ஒரு நபரை அனுப்புகிறேன். அனுபவம் உள்ளவன்''.

''அனுப்புங்கள்''

போனில் பேசிய பின்பு டாக்டர் நர்மதையின் வீட்டு முகவரியைக் கொடுத்தார் முத்தையா.

வந்து பார்த்தபோது வியர்த்து வெலவெலத்துப் போனான்.

டாக்டர் நர்மதை, ''நீ அஞ்சலையின் கணவன்தானே?'' என்று கேட்டாள். அவள் குரலில் பரிவும் பச்சாத்தாபமும் இருந்தது.

''ஆமாம் அம்மா. முதலாளி முத்தையா அனுப்பினார்''

அச்சமயம் தன்னறையை விட்டு வெளியே வந்த வக்கீல் மணிவாசகன் ''ஓ! நீ மாஜிக் கைதியல்லவா? உனக்கு இங்கு வேலையில்லை. ஆனாலும் சண்முகம், நீ நல்லவன். தியாகி; பணம் பெரிதில்லையென்று பேசும் ஞானி. டாக்டரம்மாவின் காரைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனாலும் என் முதலாளியை—அவர் பணத்தை அவமானப்படுத்தியவன் நீ! எனவே......''

''இல்லீங்க! அவர்தான் இங்கே வேலைக்கு அனுப்பி வைத்தார்''

''என் வீட்டிற்குள் அந்தக் கார் நிற்கும்வரை அதனை நீ ஓட்ட முடியாது. வேறு வீட்டுக்கு டாக்டரம்மாள் குடி



> நினைவு—நாம் நம்மோடு எப்போதும் எடுத்துச் செல்லும் நாட்குறிப்பாகும்.
>
> —ஆஸ்கார் ஒயில்டு

> திருப்தி செய்யும் வடிவம், இடையருது சிபாரிசு செய்யும் கடிதம் போல.
>
> —பேகன்

டத்தின்கீழ், நீலகிரி மாவட்டத்தில் 1,000 ஏக்கர் பரப்பில் தேயிலை பயிரிடவும், தேயிலை சாகுபடியாகும் பரப்பை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ், 3,000 ஏக்கரில் புதிதாகத் தேயிலை பயிரிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு நிலக்கிழார் மேம்பாட்டிற்கு உதவும் சிறு நிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டமும், குறு நிலக்கிழார் மற்றும் பண்ணைத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கு உதவும் குறு நிலக்கிழார் — பண்ணைத் தொழிலாளர் மேம்பாட்டுத் திட்டமும் இந்த ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

ஒருங்கிணைந்த புன்செய் நில வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் கோவில்பட்டி பகுதியில் 8,000 ஏக்கரும், புதுக்கோட்டைப் பகுதியில் 6,000 ஏக்கரும பயன்பெறும்.

### இயந்திர மயமாக்குவோம் !

மாடுகளோடு பிணைந்த தொழிலை இயந்திரமயமாக்கி, உற்பத்தியை பெருக்கிடுவதற்காக அனைத்து நாடுகள் வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் மூலம் 3·75 கோடி ரூபாய் மதிப்புள்ள 1,500 டிராக்டர்களையும், உதிரிப் பாகங்களையும், 2·025 கோடி ரூபாய் மதிப்புள்ள துளைக்கிணறு அமைக்கும் இயந்திரங்களையும், மண்வாரி இயந்திரங்களையும் இறக்குமதி செய்யத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் நடப்பாண்டில் 12,000 ஏக்கர் நிலத்தைச் சமப்படுத்தவும், 54,000 ஏக்கரில் இயந்திர முறைச் சாகுபடி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிற் கழகம் இதுவரை 2,145 இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களை விற்றுள்ளது. இக்கழகம், வேளாண்மைக் கருவிகளைத் தயாரிப்பதற்காகக் கிண்டி தொழிற்பேட்டைக்கு அருகில், ரூபாய் 5.82 இலட்சம் செலவில் அமைத்து வரும் நவீனப் பணிக்களரி இந்த ஆண்டில் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டில் சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 2,750 தனியார் குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 900 கிணறுகளில் துளையிடவும், 3,300 வடிமுனைக் குழாய்க் கிணறுகள்

### இனிய கனி கிடைத்திட...!

பழத் தோட்டங்களை வளர்ப்பவர்களுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்குவதன் மூலமும், பழ உற்பத்தி குறித்து இலவசமாகத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதன் மூலமும் பழத் தோட்டங்கள் உள்ள பகுதியை அதிகப்படுத்தவும் தமிழ் நாட்டின் பழ வளர்ச்சித் திட்டம் உதவுகிறது. ஒவ்வொரு தனியாருக்கும் திராட்சை பயிரிடுவதற்காக நபர் ஒருவருக்கு ரூ. 6,000 என்கிற உயர்ந்த அளவுத் தொகைக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வீதமும், ஏனைய பழ மரங்களை வளர்ப்பதற்கு நபர் ஒருவருக்கு ரூ. 2,000 என்ற உயர்ந்த அளவுக்குட்பட்டு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 வீதமும் நீண்ட காலக் கடன்கள் வழங்கவும் இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டம் தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1973–74-ஆம் ஆண்டில் 1,800 ஏக்கர் நிலம் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர முடிவுசெய்யப்பட்டுள்ளது.

பழத் தோட்டங்களை அறிவியல் முறையில் வளர்ப்பதற்கும், பழ உற்பத்தியாளர்களுக்குத் தேவைப்படும் நாற்றுகளை வழங்குவதற்கும், தரமான பயிரிடு பொருட்களை வழங்குவதற்கும் விளக்கப்பாத்திகளாகப் பணிபுரியும் பழத் தோட்டங்களை நிறுவுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போது தமிழகத்தில் 9 பழத் தோட்ட நாற்றுப் பண்ணைகள் உள்ளன. ஒவ்வொரு பழத் தோட்டத்திலும் வழங்கப்படும் பயிரிடு பொருட்கள் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

ஏற்படுத்தவும், 900 கிணறுகளை ஆழப்படுத்தவும், 10 சமுதாயக் கிணறுகளை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 1.20 இலட்சம் ஏக்கரில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

### புதிய ரகங்கள் !

பசுமைப் புரட்சிக்கு உதவும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் சென்ற ஆண்டில் ' பவானி ' நெல், ' கோ. 10 ' கேழ்வரகு, ' கோ. 1 ' சப்போட்டா, ' எம். சி.யு. 7 ' பருத்தி ஆகிய முக்கிய ரகங்களைக் கண்டுபிடித்து வெளியிட்டுள்ளது. மேலும் பல புதிய, பயன் தரும் ரகங்களை இந்த ஆண்டில் வெளியிட முயன்று வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைத் துறையின் கீழ் உள்ள ஆராய்ச்சி நிலையங்களில் நடப்பாண்டில் குறுகிய கால ரகங்கள், வறட்சி தாங்கும் ரகங்கள் ஆகியவைகளைக் கண்டுபிடித்து வெளியிடவும், குறிப்பாகப் புன்செய் நிலச் சாகுபடியை இலாபகரமானதாக ஆக்குவதற்கான முறைகளைக் கண்டறிந்து தெரிவிக்கவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு இந்த ஆண்டில் தமிழ் நாட்டின் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கத் திட்டமிட்டுள்ள தமிழ் நாடு அரசு, தமிழ் நாட்டின் விளைபொருள்களின் உற்பத்திச் செலவை ஆராயவும், அவைகளுக் கேற்பக் கட்டுப்படியாகக் கூடிய விலைகளை நிர்ணயம் செய்து பரிந்துரை வழங்கவும் ஒரு குழுவை அமைக்க முடிவு செய்துள்ளது என்பதைத் தமிழ் நாட்டின் உழவர் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### ஒத்துழைப்பு நல்குவீர்!

பசிப்பிணி தீர்க்கும் மருத்துவர்களாகவும், நாட்டின் முதுகெலும்புகளாகவும் விளங்கும் உழவர் பெருமக்களின் வாழ்வை வளமாக்கிட முயன்று வரும் இன்றையத் தமிழ்நாடு அரசுக்கு உங்கள் முழு ஒத்துழைப்பையும் நல்கிட வேண்டும் என்று தமிழ்நாட்டு உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கின்றேன்.

(12—4—1973 அன்று மாலை 7-03 மணிக்கு திருச்சி வானொலியில் ஒலிபரப்பப் பெற்ற சொற்பொழிவு)





# குட்டுவன் எடுத்த கோட்டம்

கோவை இளஞ்சேரன்

கண்ணகிக்கு ஆர் விகுதி கொடுத்தவர் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். '' கண்ணகியார் மதுரை மூதூர் யாதெனவினவின் திறத்தையுடைய'' என்பது அவர் தொடர். சேரன் செங்குட்டுவன், கண்ணகியார்க்குச் சிலை வடித்துக் கோட்டம் எடுத்த நிகழ்ச்சி,

தமிழக வரலாற்றில் ஒரு புகழ்முடி ;
உலக வரலாற்றில் ஒரு புதுமை ஏடு ;
தமிழர் மறக்கமுடியாத பெருமைச் சின்னம்.
அது,
மறுக்க முடியாத வைரத் தூணுகவும்
திகழ வேண்டும்.
அதற்கு,
ஓர் ஆராய்ச்சி முத்திரை குத்தியாகவேண்டும்.

கண்ணகியார் தம் இறுதிக் காலத்தில் ஏறி நின்ற நெடுவேள் குன்றம் எது? அக்குன்றில் 14 நாட்கள் நின்று இயற்கையெய்திய வேங்கைக் கானலின் தடம் காண இயலுமா? சேர மன்னன் எடுத்த கோட்டம் எங்கே? வடித்த சிலையைக் காணக் கூடுமா ?

—இவ்வினாக்கள் நிறைவாக விடுக்கப்படாத புதிர்களாகவே நின்றன. அவிழ்க்க முடியாத முடிச்சுகளாகவும் இறுகியிருந்தன.

புதிர்கள் சிறிது, அதிரக் கேட்கின்றோம்;
இறுகிய முடிச்சுகள், நெகிழக் காண்கின்றோம்.

அதிர்வுக்கும் நெகிழ்வுக்கும் காரணமாகக் கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர் சி. கோவிந்தராசனாரும், கேரள ஆராய்ச்சியாளர்களும் தம் தம் ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

பேராசிரியர் கோவிந்தராசனார் சிலப்பதிகாரத்தை அடியொற்றிய ஆராய்ச்சிப் பணியைப் பத்தாண்டுகள் மேற்கொண்டார். வேங்கைக் கானலின் தடங் கண்டேன் என்கிறார். அக்கானல் சுருளிமலை மீது உள்ளது என்கின்றார். அங்குதான் குட்டுவன் எடுத்த கோட்டம் உள்ளது என்கின்றார். அவன் வடித்த இமயக் கற்சிலை ' இதோ ' என்று படமெடுத்துக் காட்டியுள்ளார். தாம் கண்டுபிடித்ததை இதழ்களில் எழுதினார் ; வாய்ப்பு நேரின் பேசினார். நாகைத் தமிழ்ச் சங்கத்தில் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் பேசச் செய்தோம். ஆறு ஆண்டுகளுக்கு முன் யான் மலைநாடு சென்றபோது அந்நாட்டுக் கிழைக் கடற்கரையிலுள்ள மாச்சாங் என்னும் ஊரில் வாழும் தமிழன்பர் டாக்டர் துரைசாமி அவர்கள் இதனைக் கேட்டு உணர்ச்சி வயப்பட்டார். ஒரு நூறு உருவா இப் பேராசிரியர்க்கு வழங்குமாறு என்னிடம் அளித்தார்.

இருப்பினும். இக்கண்டுபிடிப்பு குடத்திலிட்ட விளக்காகவே இருந்தது. ஒளிக்கும் ஒளியூட்டும் நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் பறம்புமலைப் பாரி விழாவின் போது இக்கண்டுபிடிப்பைக் கூறினேன். பேரார்வமுடன் கேட்ட கலைஞர் அவர்கள் பேராசிரியரை அழைத்து வருமாறு பணித்தார். அழைத்துச் சென்றக்கால் விவரமாக உசாவி அறிந்தார். செயற்படும் செம்மலாம் அவர் கேரள அரசுடன் தொடர்பு கொண்டார். கேரள அரசினர் தம் ஆராய்ச்சியாளர் இது பற்றி ஆராய்ந்து வருவதாக விடை வந்தது. அவர்களது ஆராய்ச்சி முடிபையும் அறிவித்துள்ளனர்.

'' கேரள நாட்டிலுள்ள கிரங்கனூர்—பகவதிக் கோவிலே குட்டுவன் எடுத்த கண்ணகிக்கோட்டம்'' —இதுதான் கேரள ஆராய்ச்சியாளரின்—கேரள அரசின் அறிவிப்பாயிற்று.

இந்த அறிவிப்பிற்குப் பின்னர் '' தமிழரசு '' மூன்று இதழ்களில் தொடர் கட்டுரையாகக் கண்ணகிக் கோட்டம் பற்றிப் பேராசிரியர் சி. கோவிந்தராசனர் எழுதியுள்ளார்.

கேரள ஆராய்ச்சியாளர் முடிபும் , தமிழ்ப் பேராசிரியர் முடிபும் மாறுபடுகின்றன. இவ்விரண்டையும் ஒருங்கு நினைந்து, மேலும் ஆராய்ச்சிகள் தொடர்தல் வேண்டும். இரு முனைகளிலும் இவ்வாராய்ச்சி நிகழ வேண்டும். இருவகைக் கருத்துக்களையும் அவ்வப்படியே தூங்கவிட்டுவிட்டால் உண்மை வெளிப்படாது. மேலும், ஒரு வரலாற்று உண்மையை நிலைநாட்ட முடியாத எளியவர்கள் என்னும் பழிச்சொல் தென்னக ஆராய்ச்சியாளர்களைச் சாரும்.

எனவே, ஆராய்ச்சி தொடர வேண்டும். ஆராய்ச்சிகளின் ஒருமித்த முடிபு ஒரு கருத்திற்கு அரண்கட்ட வேண்டும். உண்மை ஒன்றுகத்தானே இருக்கும். அவ்வுண்மையை ஏற்றுப் போற்றி மதிப்பது ஆராய்ச்சியாளரின் இயல்பு என்பதும் உண்மையாக வேண்டும்.

இந்நோக்கில் இக்கட்டுரை எழுகின்றது.

நம்முன் எழுந்துள்ள இவ்வாராய்ச்சிக்குக் களமாக அமைந்த கருத்துக்கள் இரண்டு.



ஒன்று, கண்ணகி ஏறி நின்ற வேங்கைக் கானல். இரண்டு, செங்குட்டுவன் இமயக் கல்லில் சிலை வடித்து எடுத்த கண்ணகிக் கோட்டம்.

முதற் கருத்தாகிய சிலப்பதிகாரத்தில் குறிக்கப் படும் வேங்கைக் கானல் அமைந்த நெடுவேள் குன்றம் திருச்செங்கோடு என்றும், திருச்செங் குன்று என்றும் தமிழகத்து இலக்கிய அறிஞர் களால் கருதப்பட்டது. இந்த அடிப்படையில் ஆங்காங்கு விழாக்களும் நிகழ்த்தப்பட்டன.

இதுபோது கம்பம் பள்ளத்தாக்கை அடுத்துள்ள சுருளிமலைதான் நெடுவேள் குன்றம் என்னும் கருத்து வெளிப்பட்டுள்ளது.

இவ்வேங்கைக்கானல் நெடுவேள்குன்றம் பற்றிய கருத்தைக் கேரள ஆராய்ச்சியாளர்கள் அணுகிய தாகத் தெரியவில்லை. நெடுவேள் குன்றம் சுருளி மலை அன்று என்பதை மறுத்தும் கருத்து அறிவிக்கப் படவில்லை. எனவே, அன்னோர் இதில்—கண்ணகி நின்று மறைந்த வேங்கைக் கானல் கருத்தில் — கருத்தைச் செலுத்த வேண்டியதில்லை என்று கருதி யிருக்கலாம் ; அன்றி, உடன்பாடாகவும் அமைய லாம்.

ஆனல், இந்த முதற் கருத்து இரண்டாவது கருத்திற்குத் துணை நிற்பது மட்டுமன்றி அரண் கோலுவதும் ஆகும்.

எவ்வாறு ?

எந்த ஆராய்ச்சிக்கும் அகச்சான்றுகள், புறச் சான்றுகள், தடயங்கள், சின்னங்கள் முதலிய வற்றை நாடவேண்டும். இந்த ஆராய்ச்சிக்கும் அவையே கைகொடுப்பன. அவற்றுள், மூலச் சான்றாகத் தலைநிமிர்ந்து நிற்பது சிலப்பதி காரம் என்பது முடிந்த முடிபு. இது மறுக்கப் பட்டால் ஆராய்ச்சிக்கு அடித்தளமே இல்லாமற் போகும். எனவே, சிலம்பைத் தட்டிக் காண் போம் :

மதுரை தீக்கிரையாயிற்று ; கண்ணகியார் மதுரை நகரின் மேற்குத் திசை வாயில் வழியாக மதுரை நகரைவிட்டு வெளியேறினார். இரவும் பகலும் மயங்கிய நிலையில்,

'' உரவுநீர் வையை ஒருகரை கொண்டு''— மேற்கு நோக்கி நடந்தார். மேடு, பள்ளம், மலை–பள்ளத்தாக்கு எங்கும் ஏறி இறங்கி நடந்தார். பாண்டி நாட்டு எல்லையை நீங்கிச் சேர நாட்டு அக எல்லையில்,

'' நெடுவேள் குன்றம் அடிவைத் தேறிப்

பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ் '' பதி னான்கு நாட்கள் நின்றார். பின் இயற்கை எய்தினார்.

இந்த அகச்சான்றை அடியொற்றிச் சென்றால் கம்பம் பள்ளத்தாக்கை அடைந்து, சிறு மடிப்பு மலைகளில் ஏறி இறங்கிச் சுருளிமலையை அடைய லாம். இம்மலையே முருகனுக்குரியதாகச் சிலப்பதி காரம் குறிக்கும் நெடுவேள் குன்றமாகின்றது. சுருளிமலை முருகன் இடங்கொண்ட மலை என்பதை,

'' சுருளிமலை மீதில் மேவும் சீலா—உன்னைத்

தோத்தரித்தேன் சுப்பிரமணிய வேலா ''— எனும் பிற்காலப் பாடலும் கூறுகிறது.

எனவே, சிலம்பின் கருத்துப்படி நடந்து சென்ற தமிழ்ப் பேராசிரியர் கண்டுள்ள சுருளிமலையே நெடு வேள் குன்றம் என்பது பொருத்தமாகவும் உண்மை யாகவும் அமைகின்றது.

தொடர்ந்து சிலம்பு ஒலிபரப்பும் கருத்து இதனை உறுதிப்படுத்துகின்றது.

மலைவளங் காண வந்த செங்குட்டுவனிடம் மலைவாழ் குறவர் தாம் வேங்கைக் கானலில் கண்ட கண்ணகியார் பற்றி அறிவித்தனர். செங் குட்டுவன் கண்ணகியார்க்குச் சிலை வடித்துக் கோட்டம் அமைக்க முனைந்தான். வடநாடு சென்று இமயத்தில் கல்லெடுத்துக் கனக விசயர் தலைமேலேற்றிக் கங்கைக்கரை வரை தூக்கிவரச் செய்து நீராட்டிச் சேரநாடு மீண்டு சிலைவடித் துக் கோட்டம் எடுத்தான்.

கண்ணகியார் இயற்கையெய்திய சில திங்க ளுக்குப் பின்னரே குன்றக் குறவர் சேரனிடம் அறிவித்தனர். இமயக் கல்லெடுக்கச் சேரன் வஞ்சி நகரிலிருந்து நீங்கிக் கல்லெடுத்துக் கங் கையாற்றில் நீராட்டிக் கரையில் தங்கியிருந்த நாளில் காலத்தைக் கணித்துரைக்கும் கணி எழுந்து,

'' எண்ணுக்கு மதியம் வஞ்சி நீங்கியது '' என்றான். எனவே, இந்த இடைக்காலம் 32 திங்க ளாகின்றது. பின்னர் வடநாட்டினின்றும் வஞ்சி நகர் மீண்டு சிலை வடித்துக் கோட்டம் அமைக்க 30 திங்களேனும் ஆகியிருக்கும். எனவே, கண்ணகி மறைவிற்குப் பின்னர் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் கழிந்த பின்னரே கண்ணகியார் கோட்டம் அமைக் கப்பட்டிருக்க வேண்டும் என்றாகிறது.

கோட்டம் அமைந்த செய்தி சோழநாட்டிலும் பரவியது. கண்ணகியாரின் வளர்ப்புத் தாயா கிய காவற்பெண்டு தோழி தேவந்தி முதலி யோர் கண்ணகிக் கோட்டம் கண்டு கண்ணகிச் சிலையைக் காணும் ஆர்வத்தில் புறப்பட்டனர். இச்செய்தியைச் சிலப்பதிகாரத்து வாழ்த்துரை காதையின் முன்னுரையாக அமைந்த உரைப் பாட்டுமடை பின்வருமாறு அறிவிக்கின்றது :

''.....................காவற்பெண்டும் அடித் தோழியும் கடவுட் சாத்தனுடன் உறைந்த தேவந்தியும் உடன்கூடிச் சேயிழையைக் (கண்ண கியைக்) காண்டும் என்று மதுரை மாநகர் புகுந்து, முலைப்பூசல் கேட்டாங்கு அடைக்கலம் இழந்து உயிர் இழந்த இடைக்குல மகள் இடம் எய்தி, ஐயை அவள் (மாதரி) மகளோடும் வையையொடு வழிக்கொண்டு, மாமலை மீமிசை யேறிக் கோமகள் தன் கோயில் புக்கு, நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவன் திறம் உரைப்பர்மன் ''

இப்பகுதியில் தடித்த எழுத்தில் உள்ளவை கவனத்திற் கொள்ளத் தக்கவை. காவற்பெண்டு முதலியோர் கண்ணகிப் படிமத்தைக் காணப் புறப்பட்டனர்; மாதரி மகள் ஐயையை (வழிகாட் டுதற்காகவும்) உடன் கூட்டிக் கொண்டனர் ;—கண் ணகியார் சென்ற வழியாம் வையைக் கரையை வழியாகக் கொண்டனர் ; மலையின் உச்சியில் ஏறினர்; (அங்கிருந்த) கண்ணகிக் கோட்டத்துள் புகுந்தனர்—என்னும் இவை கண்ணகியார் வையை வழியே சென் றேறிய இடம் சுருளிமலை வேங்கைக்கானல் என்பதை உறுதிசெய்கின்றன. மேலும், அங்கு தான் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதை இறுதித் தொடர் சுட்டுகின்றது. இக்கோட்டமே மங்கல தேவிக்கோட்டம் என்னும் பெயரால் பிற்கால மக்களால் வழங்கப்பட்டுள்ளது. மங்கலதேவி என் பது கண்ணகியாரைக் குறிக்கும் என்பது தமிழ் ஆராய்ச்சியாளர் கட்டுரையில் அகச்சான்றுடனும் புறச்சான்றுடனும் நிறுவப்பட்டுள்ளது. கண்ணகிக் கோட்டம் மங்கலதேவிக்கோட்டம்என்றபெயரால், வரந்தருகாதையில்,

'' மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
செங்கோட் டுயர்வரை சேணுயர் சிலம்பில்''
-எனவும்,

'' மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
அங்குறை மறையோ னாகத் தோன்றி ''

எனவும் இரண்டு இடங்களில் குறிக்கப்படு வதும் நினைக்கத் தக்கது. இம்மங்கல தேவிக் கோட்டமாம் கண்ணகிக் கோட்டமே இதுபோது இடிபாடுகளோடு காணப்படும் சின்னங்கள் கல் வெட்டுகள் எல்லாம் இதுதான் சேரன் அமைத்த இமயக் கற்சிலைக் கோட்டம் என்பதற்குச் சான்றுகளாக நிற்பதைப் பேராசிரியர் விளக்கி யுள்ளார்.

மேலும் இக்கண்ணகிக் கோட்டம் காலப் போக்கில் விரிவடைந்துள்ளது. இக்கோட்டம் அமைந்த பரப்பில் மேலும் கோட்டங்கள் பக்கத்தில் எடுக்கப்பட்டுள்ளன. கண்ணகிக் கோட்டத்தின் பக்கத்தில் சமாதி அமைப்பான சிறு கோட்டம் இடிபாடுகளுடன் தென்படு கின்றது. இது கோவலனுக்கு அமைக்கப்பட்ட தாகலாம். இதற்கு இயைபான கருத்து மணி மேகலைக் காப்பியத்தில் உளது.

கண்ணகிக் கோட்டத்திற்கு மணிமேகலை வந் தாள். இதனை அறிவிக்கும் மணிமேகலை காப்பிய அடிகள் ஒரு புதுச் செய்தியையும் தருகின்றன. அது கோவலனுக்கும் படிமம் அமைக்கப்பட்டது என்பதாம். அக்காப்பியத்து வஞ்சிமாநகர் புக்க காதையின் தொடக்கத்தில் மணிமேகலை,

'' தணியாக் காதல் தாய் கண் ணகியையும்
கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்
கடவுள் எழுதிய படிமம் காணிய
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
வணங்கி நின்று குணம்பல ஏத்தி'' னாள்.

இதுகொண்டு கண்ணகிக் கோட்டம் எடுக்கப் பட்டதற்குப் பின்னர் சேரன் செங்குட்டுவ னாலோ, பிறர் எவராலோ அக்கோட்டத்திலேயே கோவலனுக்கும் படிமம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு பல்வகைப் பொருத்தங்களும், சான் றுகளும் கூடிநிற்கும் சுருளிமலை மங்கலதேவிக் கோட்டமே நெடுவேள் குன்றத்துக்குக் கண்ணகிக் கோட்டம் எனக் கொள்ளவைக்கிறது.



கேரள ஆராய்ச்சியாளர் காட்டும் கிரங்கனூர்ப் பகவதி கோவில் எவ்வகைச் சான்றுகளுடன் கண் ணகிக் கோட்டமாகக் (இமயக்கல்லில் சிலைய மைந்த கோட்டமாக) கொள்ளப்பட்டது என்ப தற்கு விளக்கம் வெளிவரவில்லை. பெரும்பாலும் செவிவழிச் செய்திகளாலும் அப்பக்கத்துக் கதை வழக்காலும் கொள்ளப்பட்டுள்ளது.

கேரள ஆராய்ச்சியாளர் கருத்திற்கும், தமிழக ஆராய்ச்சியாளர் கருத்திற்கும் ஒரு பெரிய முரண் பாடு உள்ளது. அது மலைக்கும் மடுவுக்கும் உள்ள முரண்பாடாகும். ஆம், கேரளத்தார் அறிவிக்கும் பகவதிக்கோவில் உள்ள கிரங்கனூர் நிலமட்டத்தில் உள்ளது. தமிழறிஞர் அறிவிக் கும் மங்கலதேவிக் கோட்டம் மலையுச்சியில் உள்ளது. இது மலைக்கும் மடுவுக்கும் உள்ள முரண்பாடு அன்றோ? இம்முரண்பாட்டின் முடிபு காண இரண்டு வினாக்கள் எழுதல் இயல்பு. கண்ணகிக் கோட்டம் அமைந்த இடம்,

நிலமட்டமா ?
மலை உச்சியா ?

இவ்விரு வினாக்களுக்குக் கிடைக்கும் ஒரு விடை ஆராய்ச்சியின் முடிவிற்கு உறுதி கட்டும்.

சிலப்பதிகாரம் விடை கூறுகின்றது. காவற் பெண்டு, தேவந்தி முதலியோர் கண்ணகிக் கோட் டம் காணவந்த செய்தியை அறிவிக்கும் உரைப் பாட்டுமடையில் விடை துவங்குகின்றது.

''வையையொரு வழிக்கொண்டு மாமலை மீமிசை யேறிக் கோமகள்தன் கோயில் புக்கு'' —இத்தொடர் குறிக்கும் கருத்து மலைமீது கண் ணகியார்க்குக் கோயில் இருந்தது ; அதிற் புகுந்தனர் என்பதன்றோ? இந்த ''மாமலை மீமிசை கோமகள்தன் கோயில்'' என்பது மலைமேல்தான் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதற்கு முதற்சான்று.

இத்தொடரைத் தொடர்ந்து வரும்,
'' நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவன்

திறம் உரைப்பர்மன்''

—என்னும் தொடர் அவர்கள் வந்த போது அம்மலைமேல் கோட்டத்தில் சேரன் செங்குட்டு வன் இருந்தான் என அறிவிக்கின்றது. பின்ன ரும், வரந்தருகாதையில்,

''தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்
கொய்தளிர் குறிஞ்சிக் கோமான் தன்முன்
கடவுள் மங்கலம் காணிய வந்த
மடமொழி நல்லார் ''—எனத் தேவந்தி

கூறுவதாக உளது.

குறிஞ்சிக் கோமான் (மலையரசன் செங்குட்டு வன்) முன் கடவுள் மங்கலம் என இங்கே குறிக் கப்படுவதும் சேரன் மலைமீது கண்ணகிக் கோட் டத்தில் இருந்தான் என்பதைக் காட்டுகின்றது. இம்மலைமேல் கண்ணகிக் கோட்டத்தில் நிற்கும் செங்குட்டுவன் கண்ணகியாரின் மின்னொளிக் காட்சியைக் காணுகின்றான். கண்டு வியந்து பேசு கின்றான் :

''பொன்னஞ் சிலம்பில் புனைமே கலைவளைக்கை
மின்னுங் கொடியொன்று மீவிசும்பில்
தோன்றுமால் ''

—என்னும் அடிகள் பொன் போன்ற அழகிய மலையில் கண்ணகியின் காட்சியைக் கண்டதாகக் குறிக்கிறது. மலைமேல் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதற்கு இஃது இரண்டாவது சான்று.




பிலிப்ஸ், HRC-16 எகானமி லாண்டர்னை அறிமுகப் படுத்துகிறது. HPL 125 W MV லாம்புக்கேற்ற சிக்கனமான ஃபிட்டிங்.

சிறியதும், அதிக நடமாட்டமுமில்லாத தெருக்களில் இனி நீங்கள் செலவைப் பெருக்கும் லாம்ப் ஃபிட்டிங்குகளை உபயோகிக்கத்தேவையில்லை. HRC-16 உங்களுக்குத் தெருப்பாதுகாப்பை மலிவாகக் கிடைக்க வழி செய்கிறது.

HRC-16 ஒரு கச்சிதமான ஃபிட்டிங்காகும். இதன் உள்ளேயே பலாஸ்ட் யூனிட் மற்றும் தெருவை நோக்கி ஒளியைப் பாயவைக்கும் சிறந்த ரிஃப்ளெக்டர் இவற்றின் இணைப்பு உள்ளது. இப்போதுள்ள தெரு விளக்கின் பிராக்கெட்களிலேயே இதை எளிதில் பொருத்தலாம்.

ஹை ட்ரான்ஸ்பேரென்ஸி மற்றும் அக்ரிலிக் கவருடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ HRC-16 கிடைக்கும்.

**சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?**
**பிலிப்ஸ் வாங்குங்கள்**



**பிலிப்ஸ்**

பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
கல்கத்தா • பம்பாய் • புதுடில்லி • சென்னை

'யேறிப் போனுல் நீ காரோட்டியாக அங்கு போகலாம்''

ராதையும் செவி குளிரக் கேட்டாள். முதலாளி முத்தையாவுக்கு இருந்த இரும்பு நெஞ்சம் இளகிய மாதிரி தன் அத்தானுக்கு ஏன் இளகாமல் எஃகுபோல் உறுதியாக இருக்கிறது?

அல்லது டாக்டர் நர்மதாவுக்கு உதவும் நபர் காரோட்டி சண்முகமாக இருக்கக்கூடாதா?

இது என்ன புதிர்?—அவள் கேட்கவும் துணியவில்லை.

''வக்கீலய்யா! உங்கள் சட்ட ஞானத்தால் நான் நாலாண்டுச் சிறைச்சாலைக்குள் இருந்தேன். உங்கள் வீட்டுக் காரை ஓட்டாமல் நான் பிழைத்துக் கொள்ள முடியும்! என்னைப் போய் பெரிய விரோதியாக நினைத்தீர்களே, நீங்கள் வாழ்க! என்னையும் என் குடும்பத்தையும் குழந்தைகளையும் பிரித்த நீங்கள் என்ருவது இதன் பலனை அனுபவிப்பீர்கள்!''

''சாபம் கொடுத்துவிட்டுப் போகும் முனிவருக்குப் பயப்பட வேண்டாம். மாஜிக் கைதி! என்னுல் சிறை சென்றவன். நம் குடும்பத்திற்கு எதிராக எதையும் செய்யும் துணிவு இவனுக்குப் பிறக்கும். கிரிமினல் வழக்கில் ஈடுபட்டவன் எத்தகைய செயலையும் செய்வான். டாக்டர் தன் காருக்கு எந்த டிரைவரையும் நியமிக்கலாம். இதே டிரைவர் வேண்டுமென்ருல் இந்தக் காம்பவுண்டுக்குள் அவன் கால்படக் கூடாது!''

டாக்டர் நர்மதை ஆச்சரியப் படவில்லை. குற்றமற்ற அவனைச் சிறைச் சாலைக்கு அனுப்பியது யார்? இதை அவள் வாய் திறந்து கேட்கவில்லை. கணவனின் கண்ணியமான வாதத் திறமையைக் கலங்கிய கண்களுடன் கவனித்துக் கொண்டிருந்தாள்.

''வேறு டிரைவர் ஏற்பாடு செய்யலாம் அக்கா!''

''ஆமாம் ராதை! இதற்காக வேறு வீடு வாங்க முடியுமா?'' என்று நறுக்கென்று பதில் கூறினுள்.

''நீ வாங்காது போனுல் நான் வாங்கிக் கொண்டு போகும் காலம் வரும்! என்று எச்சரிக்கை செய்தான்.

இது எச்சரிக்கையா? இல்லை அவள் வாழ்க்கை மீது எரியப் பட்ட தீப்பந்தமா? அவன் சிந்திக்கவில்லை. சொல்லைச் சிதறிவிட்டுப் போய்க்கொண்டிருந்தான்!

டாக்டர் நர்மதா, முதலாளி முத்தையாவிற்கு டெலிபோன் செய்தாள்.

''நான் நர்மதா பேசுகிறேன். மோட்டார் ஓட்டி சண்முகம் என் கார் ஓட்டியாக வருவது உங்கள் வக்கீலுக்குப் பிடிக்கவில்லை. அதனுல் நான் உதவி செய்யும் நிலையில் இல்லை சார்''

முத்தையா, ''வக்கீல் ஏதாவது நல்ல காரணத்திஞல் தடுத்திருப்பார். அதுவும் நல்லதுதான். சண்முகம் வேறு இடத்தைத் தேடிக் கொள்ளட்டும்'' என்றபடி போனை வைத்துவிட்டார்.

ராதை, ''நீங்களே காரை ஓட்டிச் சமாளிக்கலாம்!'' என்று ஆரம்பித்தாள்.

''நடுவீதியில் நின்ருல் அதனை யார் ரிப்பேர் செய்வது, வேறு டிரைவர் இல்லாமல் தீராது!''

டெலிபோன் கிணுகிணுத்தது.

''ஹலோ டாக்டர் நர்மதா?'' என்றது ஒரு பெண் குரல்,

''ஆமாம்!'' என்ருள் நர்மதை.

''உதகையிலிருந்து டிரங்கால்'' என்ருள் டெலிபோன் இலாகா பெண்மணி.

''ஹலோ ....... யாரது பாபுவா?''

''ஆமாம்மா .... நல்லா படிக்கிறேன். இங்கே வசதியா இருக்குது, முதல் வகுப்பு பாஸ் செய்திட்டேன்! ராதாச் சித்திக்குச் சொல். அப்பாவுக்குச் சொல்''

''சொல்றேண்டா கண்ணு! உனக்கு எப்போது லீவு?''

''விடுமுறைக்கு நீயோ, சித்தியோ, அப்பாவோ உதகைக்கு வந்து என்னைக் கூட்டிப் போக வேண்டும்''

''அப்படியே செய்கிறேன்''

''நீ புதுக் கார் வாங்கி இருப்பதாகக் கடிதம் எழுதியிருந்தாயே!''

''வாங்கி இருக்கிறேன்''

''அதில் வாயேன் உதகைக்கு!''

''வருகிறேன்''

பிறகு ராதையும் பாபுவும் டெலிபோன் பேசினுர்கள். அப்பா வீட்டில் இல்லாததால் போனை வைத்துவிட்டான் பாபு.

பாபு 'டிரங்கால்' பேசுவதைக் கண்டு ராதைக்கும் நர்மதைக்கும் பெருமை சொல்லி முடியாது.

(வளரும்)

# என்ன என்ன என்ன?

1. மொல கொலு கொலு
2. குட்டி அக்குலு
3. மெட்ட சன்னலு
4. பஸ்மாதி
5. தில்பசந்த்
6. சமுந்திர சோக்
7. ஹிராநகி
8. காமினி
9. கோவிந்த்போக்
10. கலாஜிரா
11. அம்பே மோஹர்
12. ஜிரே சால்
13. காலிகமோட்
14. சுதார்
15. நவாபிகோலம்
16. கோசுவிட்டு
17. சம்பாவி
18. மயிலா

இவை எல்லாம் என்ன தெரியுமா?

அடுத்த பக்கத்தைப் பாருங்கள்!

# அண்ணலின் வாழ்விலே...



புலவர் தமிழ்ப்பித்தன்

குசராத்தில் ஒரு கல்வி நிறுவனம் கிஷோர் என்பவர் அதன் நிருவாகத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர் சிறந்த காந்தியத் தொண்டர்.

ஒருநாள் மாணவிகள் சிலர் அவரை அணுகிச் சென்று, ''சில மாணவர்கள் எங்களிடம் குறும்பு செய்கிருர்கள்; அவர்களை என்ன செய்வது? எப்படித் தடுப்பது?'' என்று கேட்டார்கள்.

வினு பிறந்த மறு விநாடியே கிஷோர் பதிலளித்தார்:

''நீங்கள் காலணி அணிவதுண்டல்லவா? அவற்றைக் கழற்றித் தைரியமாக அவர்கள் கன்னத்தில் கொடுப்பது தானே!''

மாணவிகள் இந்தப் பதிலை எதிர்பார்க்கவில்லை.

''அகிம்சைத் தொண்டரின் அறிவுரையா இது! இம்சை நிறைந்த செயலல்லவா இது!'' என்றெல்லாம் அந்த மாணவியர் எண்ணினர்.

''இது கொடுஞ் செயல்! அகிம்சை முறை ஏதாவது சொல்லுங்கள்'' என்ருள் ஒரு மாணவி.

''எனக்குத் தெரிந்த அகிம்சை முறை இதுதான். இது உங்களுக்குப் பிடிக்கவில்லையென்ருல் காந்தியடிகளிடம் போய்க் கேளுங்கள். அவர் சரியான அறிவுரை கூறுவார்'' என்ருர் கிஷோர்.

'அதுவும் சரிதான்' என்று எண்ணிய மாணவிகள் காந்தியடிகளிடம் சென்ருர்கள். தாங்கள் கிஷோரிடம் கேட்டதையும் அவர் சொல்லிய மறுமொழியையும் காந்தியடிகளிடம் தெரிவித்தார்கள்.

உடனே காந்தியடிகள் தமது பதிலைத் தெரிவித்தார்:

''காலணியாலா அடிக்கச் சொன்னுர் கிஷோர்? தவறு; மிகமிகத் தவறு: என்னைக் கேட்டால் கத்தியால் குத்திக் கொன்று போடுங்கள் என்பேன். கன்னிப் பெண்களிடம் தாறுமாருக நடந்து கொள்பவர்களுக்கு இதுதான் தகுந்த தண்டனை! இதை நான் அகிம்சையாகவே மதிக்கிறேன். இதில் சிறிதும் இம்சை இல்லை'' என்ருர்.

காந்தியடிகளின் அகிம்சைக் கோட்பாட்டை அந்த மாணவியர் ஒருவாறு தெரிந்து கொண்டனர். மன மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்ருர்கள்.

காந்தியடிகள் தமது ஆச்சிரமத்தில் இருந்தார். அமெரிக்க நாட்டிலிருந்து ஓர் இளம் மதப் பிரச்சாரகர் காந்தியடிகளைக் காண வந்திருந்தார். காந்தியடிகளும் அந்த மதப் பிரச்சாரகரும் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

மதப்பிரச்சாரகர் காந்தியடிகளிடம்,

''உங்கள் மதம் என்ன? எதிர்காலத்தில் இந்தியா எந்த மதத்தைத் தழுவி நிற்கும்?'' என்று கேட்டார்.

உடனே காந்தியடிகள், அறையில்படுத்திருந்த இரண்டு நோயாளிகளைச் சுட்டிக் காண்பித்து,

''தொண்டாற்றுவது என் மதம்; எதிர்காலத்தைப் பற்றி நான் அல்லற் படுவதில்லை'' என்ருர்.

பாவம்! அந்த அமெரிக்க மதப் பிரச்சாரகர் பதில் பேசவே இல்லை.

காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்தில் இருந்த சமயம், அப்போது அங்கே மலேரியாக் காய்ச்சல் பரவி இருந்தது. காந்தியடிகள் கவலைப்பட்டார். மற்றவர்களுக்கு வராமல் தடுப்பது எப்படி என்று மருத்துவரிடம் கேட்டார்.

''எல்லாரும் கொசு வலை கட்டிக் கொண்டுதான் தூங்க வேண்டும்'' என்ருர் வைத்தியர்.

''எல்லாருக்கும் கொசுவலை எப்படித் தேடுவது? என் போன்ற ஏழைகள் என்ன செய்வது?'' காந்தியடிகள் கேட்டார்.

''உடலை நன்ருகப் போர்த்திக் கொண்டு முகத்தில் சிறிது மண்ணெண்ணெய் பூசிக் கொண்டால் கொசு வராது'' என்ருர் வைத்தியர்.

வைத்தியர் சொன்ன எளிய முறையை ஆர்வத்துடன் பின்பற்றினுர் காந்தியடிகள்.

## என்ன! என்ன! என்ன! விடை

இவை இந்தியாவின் வேறு மாநிலங்களில் பயிராகும் நெல் வகைகளே!

1, 2, 3 ஆந்திர மாநிலத்திலும், 4 உத்திரப் பிரதேசத்திலும், 5, 6, 7 மத்தியப் பிரதேசத்திலும், 8, 9, 10 வங்க மாநிலத்திலும், 11, 12, மராட்டியத்திலும், 13, 14, 15 ராஜஸ்தானத்திலும், 16, 17, 18 கேரளத்திலும் சாகுபடி செய்யப்படுகின்றன.



# கேளுங்கள் கொடுக்கப்படும்



வினு:—போர்டோ கலவை தயார் செய்வதாக இருந்தால் மயில் துத்தம், சுட்ட சுண்ணும்பு ஆகியவைகளை எந்த விகிதத்தில் கலந்தால் சரியான போர்டோ கலவையைப் பெற முடியும்? பயிர்களில் தோன்றும் பூஞ்சாள நோய்களைக் கட்டுப்படுத்த 1 ஏக்கர் நிலப்பரப்பில், எவ்வளவு கலவையை உபயோகப் படுத்த வேண்டும் என்பதையும் விளக்கமாகத் தெரிவிக்கும்படிப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—எம். மணி,
வேளாண்மைக் கண்காணி,
ப. ஆ. திட்டம்,
பொள்ளாச்சி,
கோவை மாவட்டம்.

விடை:—சரியான முறையில் 'போர்டோ' கலவை (Boardeaux mixture) தயாரிக்க 2¼ கிலோ மயில்துத்தம் (Copper Sulphate), 2¼ கிலோ சுட்ட சுண்ணும்பு (Lime), 225 லிட்டர் தண்ணீர், 2 பெரிய மண் பானைகள் அல்லது மரத்தொட்டிகள், 2 சிறிய மண் பாத்திரங்கள் ஆகியவைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

முதலில் 2¼ கிலோ மயில்துத்தம் முழுவதையும் 112½ லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கிக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்ய ஒரு சிறிய மண் பாத்திரத்தில் 112½ லிட்டர் தண்ணீரிலிருந்து கொஞ்சம் தண்ணீர் எடுத்துக் கொண்டு அதில் மயில் துத்தம் முழுவதையும் நன்கு கலக்கிக் கரையச் செய்ய வேண்டும். பிறகு இக்கலவையை மீதியுள்ள தண்ணீரில் ஒரு பெரிய பானை அல்லது மரத்தொட்டியில் நன்கு கலக்கிக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது ஒரு சிறிய மண் பாத்திரத்தில் 2¼ கிலோ சுட்ட சுண்ணும்பில் கொஞ்சம் தண்ணீர் விட்டுக் கலக்க வேண்டும். பிறகு ஒரு பானை அல்லது மரத்தொட்டியில் அக்கலவையை வடிகட்டி எடுத்து தனியாக 112½ லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கிக்கொள்ள வேண்டும்.

மூன்ருவதாக மயில் துத்தக் கரைசலைத் தூக்கிச் சுண்ணும்பு நீர்க்கரைசலில் ஊற்றி, ஒரு குச்சியினுல் நன்கு கலக்க வேண்டும். இதுதான் 'போர்டோ' கலவை. இது சரியான கலவையா என்பதை அடுத்துச் சோதிக்க வேண்டும்.

நான்காவதாக 'போர்டோ' கலவையில் நன்ருகத் தீட்டப்பட்டு பளபளப்பாகவுள்ள ஒரு கத்தியை நனைத்துச் சோதனை செய்யவேண்டும். மயில் துத்தம் அதிகமாக இருக்குமாளுல், கத்தியின் பளபளப்பான பகுதியில் செங்கற்பொடி போன்ற பொருள் படிந்திருக்கும். இவ்வாறு இருந்தால் இக்கலவைப் பயிருக்குத் தீங்கு விளைவிக்கும். எனவே இதைச்சரிசெய்ய வேண்டும்.

ஐந்தாவதாக மேலும் கொஞ்சம் சுட்ட சுண்ணும்பை முன்பு கூறியது போலவே தண்ணீரில் கலக்கிக்கொண்டு சுண்ணும்புக் கரைசலை மேற்கூறிய வகையில் கலவையில் ஊற்றிக் கலக்க வேண்டும்.

ஆருவதாக மீண்டும் பளபளப்பான கத்தியை அக்கலவையில் நனைத்துப் பார்க்க வேண்டும். கத்தியின் பளபளப்பான பகுதியில் செங்கல் நிறப் பொடி படிந்திருக்காவிட்டால், அதுவே சரியான போர்டோ கலவையாகும்.



செங்கல் நிறப்பொடி படிந்திருக்குமாளுல், மேலும் கொஞ்சம் சுண்ணும்புக் கரைசலைச் சேர்த்து, மீண்டும் கத்தியினுல் சோதிக்க வேண்டும். கத்தியில் செங்கல் நிறப் பொடி போன்ற பொருள் படியவில்லையாளுல் அக்கலவை, சரியான நிலைக்கு வந்து விட்டதாகக் கொள்ளலாம். இவ்வாறு சரியான முறையில் கவனமாகத் தயாரிக்கப்பட்ட கலவையே சிறந்த 'போர்டோ' கலவையாகும்.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட 'போர்டோ' கலவையை ஏக்கருக்கு 225 லிட்டர் அளவில் தெளித்துப் பூஞ்சாள நோய்களைக் கட்டுப்படுத்தலாம். அந்தந்தப்பயிருக்கு ஏற்பவும், அவைகளின் வளர்ச்சிக்கும், அடர்த்திக்கும், நோயின் கடுமைக்கும் தக்கவாறு 'போர்டோ' கலவையின் அளவைக் கூட்டியோ அல்லது குறைத்தோ தெளிக்கலாம். இதுபற்றி முடிவு செய்ய, உங்கள் துணை வேளாண்மை அலுவலர் கூறும் அளவினை ஏற்றுக் கொள்ளுங்கள். (எச்சரிக்கை: 'போர்டோ' கலவை தயாரிக்க இரும்பு அல்லது தாமிரப் பாத்திரங்களைப் பயன்படுத்தக்கூடாது).

* * *

வினு:—நான் எனது வீட்டுத் தோட்டத்தில் வாழை பயிரிட விரும்புகிறேன். அதற்கு நல்ல உயர்ந்த வகை வாழைக் கன்றுகள் கிடைக்கும் இடம், பயிரிடும் காலம், முறை ஆகியவைகளை விளக்கமாக அறிவிக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

— இரா. அட்சயலிங்கம்,
கீவளூர், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

விடை:—வாழைப்பழம் உற்பத்தி செய்வதற்காகவா அல்லது வாழைக்காய் உற்பத்தி செய்வதற்காகவா என்பதைத் தாங்கள் தெளிவாகக் கூறவில்லை. எனினும், வீட்டுத் தோட்டத்தில் வாழை பயிரிட விரும்புகின்றேன் என்று தாங்கள் கூறியுள்ளதால், சிறந்த வாழைக்காய் தரவல்ல சிறந்த ரகத்தைப் பற்றி மட்டும் கீழே குறிப்பிட்டுள்ளோம்.

வீட்டுத் தோட்டத்தில் 'மொந்தன்' என்ற வாழை ரகத்தைப் பயிரிடலாம். ஆனல் அண்மையில் புதிதாக வந்துள்ள சமையலுக்கு ஏற்ற 'காஞ்சிகேலா' என்ற வாழையைப் பயிரிடுதல் மிகவும்

இதைத் தொடர்ந்து கண்ணகியாரின் வான் நிழல் ஒலியாக, "வென்வேலான் குன்றில் விளையாட்டு யான் அகலேன்"

—என்று குறிக்கப்படுகின்றது. இங்கும் நெடுவேள் (வென்வேலான்) குன்றின்மேல் (கோட்டத்தில்) எனப்படுவது,

மூன்றாவது சான்று.

வரந்தரு காதையில் தேவந்தி தெய்வமுற்றுப் பேசுகின்றாள் ;

"மங்கல மடந்தை கோட்டத்து ஆங்கண்
செங்கோட்டு உயர்வரை சேணுயர் சிலம்பில்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய
அணிகயம் பலவுள"

—என்னும் இவ்வடிகளில் கண்ணகியார்க்குக் கோட்டம் அமைந்த மலை நேராக உயர்ந்த உச்சியை உடைய உயர்ந்த மலை என்று குறிக்கப்படுகின்றது. இது,

நான்காவது சான்று.

இம்மலைப் பகுதியில் பல அழகிய சிறு நீர்ப் பள்ளங்கள் இருந்தன எனப்படுகின்றது. இதற்கேற்ப நீர்ப்பள்ளங்கள் சுருளிமலைப் பகுதியில் காணப்படுவன,

ஐந்தாவது சான்று.

சிலப்பதிகாரம் நிறைவேற்றும் இறுதிப் பகுதியில் மலைமேல் நிற்கும் சேரன் செங்குட்டுவன்,

" பத்தினிக் கோட்டம் படிப்புறம் வகுத்து

தேவந் திகையைச் (பூசை) செய்கென் றேவி

வலமுற மும்முறை வந்தனன் வணங்கி "

நின்றான் எனப்படுகிறது.

ஆறாவது சான்று.

இவ் ஆறு அகச்சான்றுகளையும் தொடர்புடன் நோக்குங்கால் கண்ணகிக் கோட்டம் மலைமேல் எடுக்கப்பட்டதே என்பது உறுதியாகின்றது.

கேரளத்தார் கூறும் கிரங்கனூர் மலைப்பகுதியன்று ; 20 கல் தொலைவிலேயே மலை உள்ளது. அம்மலை மேலும் குறிக்கப்படும் பகவதி கோவில் இல்லை. எனவே, எவ்வகையிலும் கிரங்கனூர் ஈடுகொடுக்க இயலாததாகின்றது.

மற்றொன்று இங்கே நோக்கத்தக்கது. சேரன் செங்குட்டுவன் முன்னர் மலைவளம் காணச்சென்ற செய்தி அது. அவன் வஞ்சிமாநகரிலிருந்து புறப்பட்டுக் கிழக்கே செல்பவன், யானை முதலிய கூட்டத்துடன் சென்றதால் மடிப்பு மலைகளை ஏறிக் கடக்காமல் பள்ளத்தாக்குகளின் வழியாக வளைந்து வளைந்து நெடுந்தொலைவு கடந்து மலைமேல் ஏறினான். அவன் சென்றதை,

" பைந்தொடி ஆயமொடு பரந்தொருங்கு——
ஈண்டி—

வஞ்சி முற்றம் நீங்கிச் செல்வோன் "—என இளங்கோவடிகள் அறிவிக்கின்றார். " நீங்கிச் செல்வோன் " என்பது கொண்டு இதனை ஒரு பயணமாகவே கொள்ளலாம். இதனை (செல்வோன் என்பதை) மனத்தில் கொண்டு பின்னர் வரும் கண்ணகிக் கோட்டத்தில் கண்ணகிச் சிலையினைக் கடவுள் மங்கலம் செய்ய முனைந்த நிகழ்ச்சியோடு காணவேண்டும்.

இமயக் கல்லில் கண்ணகியார் வடிவம் வடித்தாகி விட்டது. அதற்கெனக் கோட்டமும் எடுத்தாகிவிட்டது. அதிற் சிலையை நாட்டிக் கடவுள் மங்கலம் செய்ய வேண்டும். அதற்கு முனைந்தான் செங்குட்டுவன். இதைக் குறிக்கும் சிலப்பதிகாரம், வஞ்சிமாநகரிலிருந்து " சென்று" அப்பணியை நிறைவேற்றிய குறிப்பைக் காட்டுகின்றது. செங்குட்டுவன், அந்தணன், ஆசான், பெருங்கணி,

" சிறப்புடைக் கம்மியர் தம்முடன் சென்று

பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து "—
கடவுள் மங்கலம்

செய்ததாகப் பேசுகின்றது. இங்கு, "சென்று" என்று குறித்திருப்பதையும் முன்னர் " நீங்கிச் செல்வோன் " என்றதோடு இணைத்து நோக்கினால் சிலையை நாட்டவும் வஞ்சியிலிருந்து ஒரு பயணம் சென்றதாகவே கொள்ள நேரும். அப் பயணம் எவ்விடம் கருதியது ? அண்மையில் உள்ள கிரங்கனூர்க்கு எனக் கொள்ள இயலாது. கண்ணகி மறைந்த இடத்தில் கோட்டம் எடுப்பது பொருத்தமானது என்னும் கருத்தோடு இயைவதால் அம்மலை நோக்கிய பயணமாகக் கொள்ளலாம். இதற்கு முன்னர் கண்டுள்ள கருத்துக்களோடு பொருத்திப் பார்த்தால் இக்கருத்து



வலிந்து கொள்வதாகாது. எனவே, " சென்று" என்னும் சொற்குறிப்பு, பக்கத்துணையாய் நின்று கண்ணகிக் கோட்டம் அமைந்தது வேங்கைக் கானல் அமைந்த நெடுவேள் குன்றமாம் சுருளி—மலையே என்பதைக் குறிக்கிறது.

இறுதியாகக் கண்ணகியார் சிலையை ஆராய வேண்டும்.

இதுபோது காணப்பட்டுள்ள சிலை (சுருளிமலை மீது காணப் பட்டுள்ளது) அமர்ந்த தோற்றமுடையது. அடிப்பீடமும் சேர்ந்து இரண்டு அடிக்கும் குறைவான உயரமும், ஓர் அடி அகலமும், முக்கால் அடி பருமனும் கொண்ட தாம். இஃது ஓர் அம்மி அளவினதேயாகிறது. இந்த அளவுக் கல்லை இருவர் தூக்கலாம். நின்ற கோலத்தில் உள்ள கிரங்கனூர் பகவதிச் சிலைக் கல் இருவர் எந்நிலையிலும் தூக்கவோ, தாங்கவோ இயலாததாகும்.

மேலும் சுருளிமலைச் சிலையின் அடிப்பகுதியில் ஒரு மூளி உண்டாகி வேறு வகையான கல் பொருத்தப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. ஓரளவு கவனத்தோடு நோக்கினாலும் இதனைக் காண முடிகிறது. இவ்வாறு நேர்வதற்குக் காரணம் உண்டு.

கனக விசயர் தலையில் கல்லை ஏற்றினான் என்பது அவர்களைத் தூக்கச் செய்ய வேண்டும் என்பதன் அறிகுறிச் செயலே அன்றி, இமயத்தில் ஏற்றி வஞ்சியில் இறக்கினான் என்பதன்று. ஆயிரம் கல் தொலைவு தூக்கிவரச் செய்தல் இயலாத ஒன்று. சிலப்பதிகாரப்படி நோக்கினும் கல்லை எடுத்த இடத்திலிருந்து நீராட்ட வேண்டிய கங்கைக் கரை வரைதான் கனக விசயர் தலையில் கல் கொணரப் பட்டது என்பதை உணரலாம். அவ்வாறு கங்கைக் கரைவரை வந்த கல் அல்லது சிலை பின்னர் வஞ்சிமாநகர் வரையும், மேலும் கோட்டம் அமைந்த இடம் வரையும் கொண்டு வரப்பட்ட போக்குவரத்து வகையால் விழுந்தோ, மோதியோ மூளி உண்டாக்க வழி உண்டு. எனவே இந்த மூளியும் ஒரு சான்றாகின்றது.

மேலும்,

(1) சுருளிமலையில் காணப்பட்ட கண்ணகிச் சிலைக்கல் 1,800 ஆண்டுகள் பழமையைக் காட்டும் தேய்மானத்துடன் உள்ளது.

(2) அந்தத் தேய்மானத்திலும்,

" கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
வித்தகர் இயற்றிய விளங்கிய கோலம் "—எனச் சிலப்பதிகாரம் குறிப்பதற் கேற்பக் கலைத்திறம் விளங்குகின்றது. அதில் மேலோட்ட வரிகளாக அணிகலன் அமைப்பும் தெரிகின்றது.

(3) சிலையில் இடப்புற மார்பின் காப்புப் பகுதி சிதைந்து தோற்றமளிக்கிறது. (கண்ணகியார் திருகி எறிந்தது முலைக்காம்பு என்பதைத் " தமிழரசு " இதழில் " முடிச்சவிழ்க்கும் சொல் " என்னும் எனது கட்டுரையில் தெளிவாக்கப்பட்டுள்ளது).

(4) சிலையமைப்பு தெய்வப் படிவமேயாயினும் தெய்வ வடிவக் குறிகளுடன் மாந்தர் வடிவக் குறிகள் தென்படுகின்றன.

(5) கல்லின் நிறம் வெளிரிய மஞ்சள் நிறமாகத் தோற்றமளிப்பது, கந்தகக் கலப்புடைய இமயக் கல்லின் தன்மையைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

இவ்வைந்து சான்றுகளோடு முன்னர்க் காட்டப்பட்ட ஆறு சான்றுகளையும், பிற சின்னங்களையும் தடயங்களையும் இயைத்து நோக்குங்கால் சுருளிமலை மங்கல தேவிக் கோட்டத்தில் காணப்பட்டுள்ள கண்ணகிச் சிலையே சேரன் செங்குட்டுவன் வடித்த சிலை என்று கொள்ளும் உறுதி நிலைக்கிறது. இதன் இயைபில் குட்டுவன் எடுத்த கோட்டம் சுருளிமலை என்று இதுபோது வழங்கப்படும் நெடுவேள் குன்றத்தின் மீது உள்ளதுதான் என்ற உறுதியும் நிலைக்கின்றது.

இவ்வுறுதிக்கும் ஒரு முத்திரை குத்த இறுதியானதும், வேறு எவ்வகை மறுப்பும் கூற இயலாமற் போவதுமான ஆராய்ச்சி ஒன்று உண்டு. கருத்து மாறுபாடு எழுந்துள்ள இரு சிலைக் கற்களின் சிலை ஒவ்வொன்றை எடுத்து ஆராய்வதே அது. இக்கால அறிவியல் துணை கொண்டு எக்கல் இமயக் கல்லின் தன்மை கொண்டது எனக் கண்டு விடலாம். அவ்வாறு காண்பது முடிந்த முடியான முத்திரையாகும்.

இம்முத்திரையையும் நம் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களே குத்த மனம் பற்றியுள்ளார்கள்.

மேலும் இருமுனையிலும் ஆராய்ச்சிகள் தொடர்தல் பல உண்மைகள் வெளிப்பட வாயிலாகும். கேரளப்பகுதியினரும், தமிழக ஆராய்ச்சியாளரும், குறிப்பாக மதுரைப் பகுதிப் புலவர்களும் அறிஞர்களும் இது குறித்த தம் கருத்துக்களையும் தாம் தாம் அவ்வப்பகுதிகளில் காணும் சின்னங்கள் தடயங்களையும் வெளிப்படுத்தி உண்மை நிலைக்கத் துணைபுரியுமாறு வேண்டுகின்றேன்.

## சூரியகாந்தி எண்ணெய் உடல் நலத்திற்கு உகந்ததே!

சூரியகாந்தி எண்ணெய்யின் பயன், அதிலுள்ள சத்துணவு பற்றித் தமிழக அரசு ஏற்கெனவே ஆராய்ந்து, அது உணவுடன் உட்கொள்ள உகந்தது என்றும் எவ்விதத் தீமையையும் பயப்பதில்லை என்றும் அறிவித்துள்ளது. சென்னையிலுள்ள, தமிழக அரசின் நல்வாழ்வு மற்றும் குடும்பக் கட்டுப்பாடு திட்ட உதவி இயக்குநர் அவர்கள் சூரிய காந்தி எண்ணெயையும், அதன் பிண்ணாக்கையும் ஆராய்ந்து விஞ்ஞான ரீதியான தன் கருத்தைப் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

வளர்ந்து வரும் நாடுகளில் சூரிய காந்தியின் உபயோகம் பலப் பல! அதிலும் சத்துணவில் அது முக்கிய இடம் பெற்றுள்ளது. சூரிய காந்தி எண்ணெய் சமையலுக்கு ஏற்றது. அதிலுள்ள " லினோலிக் அமிலம் " மனித உணவில் நாள் தோறும் இடம்பெற வேண்டிய கொழுப்புச் சத்தின் ஒரு பகுதியாகும். இரத்தக் குழாய்கள் கடினமாகி இரத்தக் கொதிப்பு உண்டாகும் நிலையைத் தவிர்த்து " Artherosclerolosis " என்னும் வியாதி வராமல் தடுக்கிறது. இந்த லினோலிக் அமிலம் நீரிழிவு நோயாளிகளுக்கும் பயன்தர வல்லது.

சூரிய காந்திப் பிண்ணாக்கு புரதம் நிறைந்ததாகும். இதை ரொட்டி முதலிய தின்பண்டங்களில் இருபது சதம் வரை கலந்து உபயோகிக்கலாம்.

இவ்வாறு ஒரு நல்ல எண்ணெயையும், புரதம் நிறைந்த பிண்ணாக்கையும் கொண்ட இந்தச் சூரிய காந்தி அதிக அளவில் பயிரிடப்பட்டு, குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்கும் சக்தியும், புரதமும் உள்ள பொருளாக விளங்க வேண்டும்.

மேற்கண்ட மருத்துவ நிபுணரின் கருத்துப்படி சூரியகாந்தி எண்ணெய் உடல் நலனுக்கு உகந்தது. பொதுமக்கள் இதுபற்றி எவ்வித ஐயப்பாடும் கொள்ளத் தேவையில்லை.

[தகவல் : கூடுதல் வேளாண்மை இயக்குநர், (ஆராய்ச்சி), திருச்சிராப்பள்ளி—18.]

(கும்பகோணத்தைச் சேர்ந்த திரு. சேஷகிரி என்பவர் 14—3—1973 நாளிட்ட " இந்தியன் எக்ஸ்பிரஸ் " இதழில் சூரியகாந்தி எண்ணெயைச் சமையலில் சேர்ப்பதால் சில தீமைகள் வரலாம் என்று ஐயப்பாடு தெரிவித்துள்ளார். இதனால் சிலருக்குச் சூரிய காந்தி எண்ணெய் பற்றிய ஐயம் ஏற்பட்டுள்ளது. அவர்களது ஐயத்தைப் போக்கிட மேற்கண்ட விளக்கம் உதவிடும்.)

சிறந்தது, 'காஞ்ச்கேலா' வாழை, மொந்தன் வாழையைவிடச் சிறந்தது என்பதைப் பின்கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

**'காஞ்ச்கேலா' வாழையின் சிறப்புப் பற்றிய அட்டவணை.**

| விவரம். | மொந்தன். | காஞ்ச்கேலா. |
|---|---|---|
| ஒரு தாரின் எடை (கிலோ). | 16·5 | 31·00 |
| ஒரு தாரில் உள்ள சீப்புகள். | 6 | 9 |
| ஒரு தாரில் உள்ள காய்கள். | 67 | 110 |
| ஒரு காயின் நீளம் (செ.மீ.) | 19.9 | 25 |
| ஒரு காயின் சுற்றளவு (செ.மீ.). | 18·0 | 19·5 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து மொந்தன் ரகத்தைவிட, 'காஞ்ச்கேலா' ரகம் 2 மடங்கு மகசூல் அளிக்க வல்லது என்பது தெளிவாகிறது.

மொந்தன் காயைச் சமைத்தால் நார்ப்பொருள் கலந்த காய்கறிபோல் இருக்கும். 'காஞ்ச்கேலா' ரகக்காயைச் சமைத்தால், உருளைக்கிழங்குபோல் இருக்கும். இதற்குக் காரணம் 'காஞ்ச்கேலா' வாழைக்காயில் மாவுப் பொருள் மென்மையானதாக இருப்பதேயாகும்.

மேற்கூறிய காரணங்களால் தாங்கள், தங்கள் வீட்டுத் தோட்டத்தில் 'காஞ்ச்கேலா' ரக வாழையைப் பயிரிடுவதே சிறந்தது. இந்த ரகக் கன்றுகளைத் தஞ்சை மாவட்டம் ஆடுதுறையில் உள்ள வாழை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தங்கள் வீட்டுத் தோட்டத்தில் 'காஞ்ச்கேலா' அல்லது மொந்தன் ரகங்களை ஆடி-ஆவணி அல்லது கார்த்திகை-மாசி அல்லது பங்குனி-சித்திரை மாதங்களில் பயிரிடலாம். இந்த ரகக் கன்றுகளை 7 அடி × 7 அடி இடைவெளியில் நடவேண்டும். கன்றுகளை நட்ட 3-வது மாதத்திலும், 5-வது மாதத்திலும் கீழ்க் கண்ட அளவில் இரசாயன உரமிடவேண்டும்.

**மூன்றுவது மாதத்தில் இடவேண்டிய உரஅளவு.**

(ஒரு மரத்திற்கு)

| | | |
|---|---|---|
| தொழு எரு | — | 12 கிலோ |
| அமோனியம் சல்பேட் | — | 300 கிராம் |
| சூப்பர் பாஸ்பேட் | — | 250 கிராம் |
| மூரியேட் ஆப் பொட்டாஷ் | — | 310 கிராம் |
| கடலைப் பிண்ணுக்கு | — | 145 கிராம் |

மேற்கூறிய இரசாயன உரங்களும், பிண்ணுக்கும் கிடைக்கா விட்டால், 6 : 6 : 18 கலப்பு உரத்தில் ஒவ்வொரு மரத்திற்கும் 415 கிராம் இடலாம்.

**ஐந்தாவது மாதத்தில் இடவேண்டிய உர அளவு.**

| | | |
|---|---|---|
| தொழு எரு | — | 12 கிலோ |
| அமோனியம் சல்பேட் | — | 150 கிராம் |
| மூரியேட் ஆப் பொட்டாஷ் | — | 310 கிராம் |
| கடலைப் பிண்ணுக்கு | — | 140 கிராம் |

மேற்கூறப்பட்ட இரசாயன உரங்களும், பிண்ணுக்கும் கிடைக்கா விட்டால், 10 : 0 : 30 கலப்பு உரத்தில் ஒவ்வொரு மரத்திற்கும் 520 கிராம் இடலாம்.

இரசாயன உரமிட்டவுடன் தண்ணீர் விடவேண்டும். மற்ற காலங்களில் வீட்டுத் தோட்ட வாழைக்கு 10 அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் தண்ணீர் விடவேண்டும். பொதுவாக வீட்டுத் தோட்டத்தில் உள்ள வாழைகளில் பூச்சிகளும், நோய்களும் தோன்றுவதில்லை. அப்படித் தோன்றினால், உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களைக் கலந்தாலோசித்து அவர்கூறும் மருந்தைத் தெளியுங்கள்.



விஞ:—நான் சிறிய அளவில் புறுக்கள் வளர்த்து வருகின்றேன். யாதொரு செலவும் இல்லாமல் மாதம் 500 ரூபாய் புதையல் கிடைப்பதுபோல இலாபம் தருகிறது. இதன் குஞ்சுகளுக்கு மார்க்கெட்டில் கிராக்கி இருப்பதால், வியாபார ரீதியாக...... கோழிப் பண்ணையைப் போன்று விரிவாக "புறுப் பண்ணை" அமைக்க விரும்புகின்றேன். இதற்கு எவ்வாறு செய்ய வேண்டும்? கோழிப் பண்ணைக்குச் சர்க்கார் கடன் கொடுப்பதுபோல் இதற்கும் கடன் வழங்குவார்களா? இதற்கு யாரை அணுக வேண்டும்? மேலும் உயர்ரக ஜாதிப் புறுக்கள் எங்கு கிடைக்கும்? எந்த ரகப் புறுக்கள் அதிக வருவாய் கொடுக்கும்? இவை களுக்குத் தாங்கள் விரிவாகப் பதில் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—து. முத்துவேல் முருகன், தேனி,
மதுரை மாவட்டம்.

விடை:—தங்களுக்குப் புறுக்களின் மூலம் எந்தவிதச் செலவும் இன்றி புதையல் கிடைப்பது போல் மாதம் ரூபாய் 500 இலாபம் கிடைப்பது அறிந்து தங்கள் முயற்சியைப் பாராட்டுகின்றோம். வியாபார ரீதியில் "புறுப் பண்ணை" அமைக்கப் பின் கண்ட குறிப்புகள் தங்களுக்குப் பயனுடையதாக இருக்கும்.

புறுக்களுக்கு மக்காச்சோளம், கோதுமை ஆகியவை கலந்த கலவை, 'பிஸ்கட்' போன்றவைகளை உடைத்துப் பட்டாணிகளை உடைத்துக் கொடுக்கலாம். புறுக்களுக்குக் கொடுக்கும் நல்ல தண்ணீர் குடிப்பதற்கு வேண்டும். ஒவ்வொரு நாளும் காலையில் தண்ணீரை மாற்றி, புதிய பாத்திரத்தில் உள்ள தண்ணீரை வைக்க வேண்டும். தீனி தின்ற பிறகு புறுக்கள் தண்ணீர் குடிக்க விரும்பும். ஆனால் தீனி தின்பதற்கு முன்பு, தண்ணீர் குடிக்கச் செய்யும் பழக்கத்தைப் புறுக்களுக்கு ஏற்படுத்துதல் சிறந்தது.

புறுக்கள் தின்ற தீனி நன்கு செறிக்க வும், புறு முட்டையின் ஓடு வலுவுடைய வும், பழைய சுண்ணாம்புச் சாந்து, பழைய செங்கற்கள், கரித்தூள், நத்தை ஓட்டுத் தூள் ஆகியவைகள் கலந்த கலவையில் சிறிது கொடுப்பதும் சிறந்தது. புறுக்களுக்குச் சிறிது உப்பு கொடுப்பதும் சிறந்தது. மேற்கூறிய கலவைகளுடன் சிறிது கல் உப்பைக் கலந்துவிடலாம்.



புதிதாகப் புறுக்களை வளர்க்க ஆரம்பிக்கும் பொழுது ஏறத்தாழ 15 நாட்களுக்குப் புறுக்களைக் கூட்டிலேயே அடைத்து வைத்திருந்து, தானியம், தண்ணீர் ஆகியவைகளை அளித்து பழக்கப்படுத்த வேண்டும். ஆனால் அவைகள் பறக்கவும், நடக்கவும் போதிய இடமும், வெளிச்சமும் போதிய வெப்பமும் உள்ள இடத்திலேயே அடைக்க வேண்டும்.

புறுக்கள் நலமாக இருக்க அதன் கூடுகள் வெப்பத்தினால் தாக்கப்படாமலும், மழைத் தண்ணீரால் பாதிக்கப்படாமலும் அமைக்கப்பட வேண்டும். புறுக்களைப் பூனை பிடித்துவிடுமாதலின், புறுக்கூண்டுகளை பூனை ஏருதவாறு கம்பத்தின் மேலே அமைப்பது சிறந்தது. புறுக்கூண்டின் வாசல் கிழக்கு நோக்கியோ அல்லது தெற்கு நோக்கியோ அமைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் புறுக்களுக்கு அதிக அளவு சூரிய வெளிச்சம் கிடைக்கும்; வாடைக் காற்றிலிருந்தும் பாதுகாப்புக் கிடைக்கும்.

புறுக் கூண்டில் ஒவ்வொரு புறுவுக்கும் குறைந்தது 9 அங்குல நீளம், 9 அங்குல அகலம், 9 அங்குல உயரம் உள்ள தனித்தனி அறை இருப்பது அவசியம். ஒன்றின் அறையில் மற்றொரு புறு இருட்டுத் தனமாகப் புகுந்து கொள்ளும் தன்மையுடையதாக இருப்பதால், ஒவ்வொரு புறுவுக்கும் தனித்தனி அறை இருப்பது இன்றியமையாததாகும். ஆனால் புறுக்களை இணை இணையாகத் தங்கவிடுவதற்கு ஏற்ற வகையில் இரண்டு அறைகள் இணைந்தாற்போலும், ஓர் அறையிலிருந்து மற்றொன்றிற்குச் செல்வதற்கு ஏற்றாற்போலும் அமைப்பது சிறந்தது.

புறுக்கூண்டினைத் தூய்மைப்படுத்துவதற்கு வசதியாக அடிப்பாகத்தில் மணல் அல்லது மரத்தூளைப் பரப்பி



தமிழ்நாட்டின் அழகெல்லாம் தழுவிமிகச் சுவைப்பதற்குக்
குமிழ்போன்ற வாழ்வொன்று குறைவோரும் மிகக்குறைவாம் !
பிறவியின் பின் பிறவியெனப் பிறங்குகிற தமிழினத்தில்
திறமாகப் பிறந்தால்தான் சிறிதேனும் நுகர்ந்திடலாம் !
நலத்திட்டம் பற்பலவும் நடக்கின்ற தன்மையினைப்
புலத்தினிலே பூரிக்க அறிந்துவரப் போய்வந்தேன் !

குமரியிலே குலவுகிற சுழல்விளக்குச் சுடர்உமிழ
அமருகிற தென்முனையின் அழகொழுக ஆர்த்துவரும்!
அதனடியில் தமிழ்நாட்டின் சுற்றுலவின் அகமோங்கி
இதமூட்டும் இல்லம்போல் வசதியெலாம் பொதிந்தினிக்கும் !
அமைதிக்கே இடமாக ஆழ்கடலில் நிமிர்ந்திருக்கும்
இமையத்தே அமர்ந்தங்கே சிந்தித்த நரேந்திரனின்
நினைவாக நிலவுகிற மண்டபத்தை நெருங்கிடவே
முனைநாடிப் பாரதத்தோர் மொய்ப்பதனால் மெய்சிலிர்த்தேன் !

நெல்லையிலே இயற்கையெழில் நிலவுகிற குற்றாலம்
அல்லென்றும் பகலென்றும் அறியொண்ணா விழியிழந்தோர்
பல்லாண்டும் தொல்லையுற்ற பாமரரும் கலைஞர்தம்
நல்லரிய திட்டத்தால் நாடுவதைக் கண்ணுற்றேன்!
சத்துணவை உண்ணாமல், தவறான பச்சிலைகள்
மெத்தவுமே விட்டதனால் விழியிழந்த கதையெல்லாம்
தொண்டாற்றும் மருத்துவர்கள் தொகுத்துரைக்கத் துணுக்குற்றேன் !
மண்டுகிற அறியாமை வறுமையினால் விழியிழந்த
பலநூறும் ஆயிரத்துப் பாமரரை அரவணைத்தே
நலவழியில் விழியளிக்கும் நலத்திட்டம் போற்றிட்டேன் !

எளியவரை வண்டிகளில் ஏற்றிவந்தே இருப்பித்தார் !
ஒளிமீட்டுத் திருமணத்தின் விருந்தைப்போல் உபசரித்துக்
கண்ணீரைத் துடைத்தெறிந்து கண்ணளிக்கும் திட்டமதன்
நன்மையினை எடுத்துரைக்க நாவுக்குத் திறனில்லை !

தஞ்சையிலே தாய்மார்கள் மகப்பேற்றைத் தடுத்திடவே
அஞ்சாமல் அணியணியாய் அறுவையினைச் செய்தேற்க
மருத்துவநன் மனைகளிலே மஞ்சத்தே வீற்றிருக்கக்
குருத்துகளாம் குழந்தைகட்குக் காப்பகத்தை அணித்தேயே
நிறுவியங்கு விளையாட நிறைச்சத்தின் உணவூட்டி,
வறுமையினால் வரும்நலிவைத் தடுப்பூசி போட்டு,
நல்லாடை அணிவித்து நற்றுயும் படுத்திருந்தே
புல்லரிக்கப் பார்த்துவக்கும் ஈடில்லாப் பொற்பணிகள்
கண்டுவந்தேன் ; தாய்சேயின் நலப்பணிகள் கருத்தாகத்
தொண்டர்தம் செயல்திறனால் துலங்குவதால் துள்ளுகிறேன் !
மக்கள்தம் மனவெழுச்சி தூண்டிவிடும் கவியுலகின்
பக்குவத்துப் பாட்டியவர் ஔவைக்குக் கனிதந்த
அதிகனது பதியான தருமபுரி மாவட்டம்
புதிதான விழாக்கோலம் பூண்டிடுதல் பார்த்துவந்தேன் !
விடுதலையின் வெள்ளிவிழா கொண்டாடும் முகத்தானே
நெடுகபல ஊர்களிலும் நெடிதோங்கும் மாவட்ட
அதிகாரி அனைவருமே ஒவ்வொருநாள் ஓரூரில்
பதியெழுந்து செல்வதுபோல் பணிமனையே நகர்ந்ததுபோல்
திரண்டொருங்கு மக்களது சிக்கலெல்லாம் செவியுற்றே
இரண்டொன்றே மணித்துளியில் இடுக்கண்கள் களைந்தகற்றி,
இனிநடக்க வேண்டியதை எழிலாகத் தெரிவித்து.
தனிநடந்த விழாவதனைக் கனிவாக மாவட்ட
ஆட்சியதன் தலைவருமே அலுவல்செய் பாங்கான
காட்சியினைக் கண்டுவந்தேன் ! கண்ணான குடியரசின்
தத்துவமே செயற்படுத்தும் தருமபுரி தகவுணர்ந்தேன் !
மெத்தவுயர் தமிழகத்தின் மேன்மையெல்லாம் காணவல்லேன் !
நலத்திட்டம் பற்பலவும் நாட்டகத்தின் மக்களினை
இலக்காக அடைதவனால் இறும்பூதே எய்துகிறேன் !
தமிழாளும் தரணியிலே வாழ்வதற்கே தலைநிமிர்வேன் !
அமிழ்தான செயற்றிறனை அகமார வாழ்த்துவனே !



தமிழகத்தில் இன்றுள்ள 81,80,930 குடும்பங்களின் வீட்டுத் தேவைகளை நிறைவேற்றுவது கடினமான பணியாகும். பத்தாண்டிற்கு 22.01 விழுக்காடு மக்கள் தொகை பெருகி வருவதால் இப் பிரச்சினை தீர்க்க முடியாத அளவிற்கு வளர்ந்துவிடக் கூடும்.

இப்பிரச்சினையை ஒரு அறைகூவலாக ஏற்றுக் கொண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அதனை மிகக் குறுகிய காலத்தில் தீர்ப்பதற்கான தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

சென்ற பத்தாண்டுகளில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சுமார் 4,178 ஏக்கர் நிலத்தைக் கையகப் படுத்திச் சுமார் 30,000 வீடுகளை எல்லா வருமான வகுப்பினருக்கும் கிடைக்க வகை செய்துள்ளது.

செங்கற்பட்டு, மதுரை, சேலம், திருச்சி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள இராமப் புற மக்களின் வருவாய்க்குத் தகுந்த நவீன வசதிகள் கொண்ட எழில்மிகு வீடுகள் கட்டுவதற்கான முன்னோடித் திட்டங்கள் உருவாகி வருகின்றன.

வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் ரூபாய் 8·63 கோடி செலவில் கொரட்டூர் கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர், கோட்டூர்புரம் ஆகிய பகுதிகளில் கவர்ச்சிகரமான குடியிருப்புகள் உருவாகி வருகின்றன.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தன் திட்டங்களுக்கான கட்டடப் பொருள்களை உருவாக்கும் பணியினையும் மேற்கொண்டுள்ளது. இதன்

## வீடு பெற...

அரசு ஊழியர்களுக்காக, சுமார் 4,925 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

நீதித்துறை, வருவாய்த் துறையைச் சார்ந்த அலுவலகங்களுக்காகக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்தையும் இவ்வாரியம் செயலாற்றிக் கொண்டு வருகிறது.

தொழிலாளர்களுக்காகத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டிவருகின்றது. தமிழக அரசின் சாதனைகளில் ஒன்றாக குடிசைவாழ் மக்களுக்காகவும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இப்பணியை, கோவை, தஞ்சை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களிலும் மேற்கொண்டுள்ளது.

வாயிலாகத் தொழிலாளர்களுக்கான வேலை வாய்ப்புகள் பெருகி வருகின்றன.

இயந்திர உதவியுடன் கூடிய செங்கல் சூளை, மொசைக் ஓடுகள், சுகாதாரத் துப்புரவுச் சாதனங்கள், குழாய்கள், கதவுகள், சன்னல்கள் தயாரிக்கும் துணைத் தொழில் முயற்சிகளை விரைவில் வாரியம் மேற்கொள்ள இருக்கிறது.

ஆசியாவிலேயே முதன் முதலாகத் தக்கைக்கல் (செல்-கிரீடு) உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று 1972-ஆம் ஆண்டு எண்ணூரில் தொடங்கப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும், அவரவர் வசதிக்கும் ஏற்ப நவீன வீடுகள் கட்டித் தருவது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் குறிக்கோளாகும்.

# நாட்டு வளமே நாட்டு வளம்!



நாட்டின் இயற்கை வளத்தையும், தொழில்களுக்கான மூலப் பொருள்களையும் வழங்குவது காடுகளேயாகும். காட்டு வளமே நாட்டு வளம் என்பதனை உணர்ந்த தமிழக அரசு காடுகளைப் பாதுகாத்து வளர்ப்பதில் தீவிர அக்கறை காட்டி வருகிறது.

காட்டு வளத்தினைப் பெருமளவில் பெருக்க அரிய திட்டங்கள் பலவற்றைத் தீட்டி வரும் வனத் துறையின் அரும்பணிகள் என்னென்ன என்பதனை அறிந்து கொள்வோம்!

வனத் துறையின்கீழ் வரும் மொத்தப் பரப்பளவு 21,400 சதுர கிலோ மீட்டராகும். இதில் 17,228 சதுர கிலோ மீட்டர் ஒதுக்கக் காடுகளும், 3,812 சதுர கிலோ மீட்டர் ஒதுக்க நிலங்களும் ஆகும். இம்மாநிலத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பில் காடுகள் 16 சதவிகிதமேயுள்ளது. ஏற்றத் தாழ்வில்லாத பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் அனைத்திந்தியக் காடுகள் உள்ளனவாய் இருத்தல் வேண்டும்.

வேளாண்மைக்கு அடுத்தபடி, காடுகளே நிலப்பயன் பாட்டில் முக்கிய இடம் பெறுவதாகும். விவசாயமும், காடுகளும், மக்களுக்குப் பலவகையில் பயனளிப்பவையாகும். விவசாயம் மக்களுக்கு உணவு அளிப்பதோடு விலங்குகளுக்குத் தீவனங்களையும் அளிக்கிறது. அதே போலக் காடுகளும், வெட்டு மரங்கள், விறகு, தொழிற் கூடங்களுக்குத் தேவையான மரங்கள், உரம் ஆகியவற்றை அளிக்கின்றன. இது தவிர முக்கியமாக, நிலவளப் பாதுகாப்பிற்கும், நிலத்தில் ஈரப் பசையைக் காப்பதற்கும், சுற்றுப் புறக் காற்று பாழ்படுதலைத் தடுக்கவும் காடுகள் பணிபுரி

1971–72-ஆம் ஆண்டில் 35,241 ச.கி.மீ. பரப்பு காடுகளல்லாப் பிற காரியங்களுக்காகவும், நிலமில்லாத ஏழைகளுக்கு நிலங்கள் ஒதுக்கவும், வழங்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

தொழில் வளப்பெருக்கம், நகர்ப் புறங்கள் விரிவடைதல் ஆகிய காரணங்களால் சுற்றுப் புறக் காற்றின் தூய்மையைக் காத்தல், காடுவாழ் விலங்குகளை அழிவின்றிக் காத்தல் ஆகியவைகளுக்காகக் காடுகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியமாகும்.

பல தொழிற் கூடங்களுக்குத் தேவையான மூலப் பொருள்களைக் காடுகள் வழங்குகின்றன. முக்கியமாகக் காகிதம், ரேயான், தோல் பதனிடல், பெட்டிக்குரிய அட்டை தயாரித்தல் ஆகியவைகளுக்குக் காடுபடு பொருள்கள் பயன்படுகின்றன. இவைகளுக்காகவும், காடுகளைப் பேணுதல் அவசியமாகும்.

1971–72-ஆம் ஆண்டில் வனத் துறையின் வருவாய் ரூ. 456 இலட்சம். 1972–73-ஆம் ஆண்டில், ரூ. 357 இலட்சம் எதிர்பார்க்கப்படுகின்றன. சந்தன மரங்கள் மூலமாகக் கிடைக்கும் தொகை, இத்துறையின்



வருவாயில் கணிசமான பங்காகும். அதாவது, ஏறக்குறைய ரூ. 124 இலட்சம் கிடைத்து உள்ளது. மரங்களிலிருந்து வருவாய் ரூ. 85 இலட்சமும், விறகுகளால் வருமானம் ரூ. 99 இலட்சமும் 1971–72-ல் கிடைத்திருக்கின்றது.

காடுவளர்ப்பு நீண்டகாலத் திட்டமாகும். இவைகளின் வளர்ப்புக்கு முதலீடு செய்து பயன்பெறுவதற்கு நீண்ட காலம் ஆகும். இருந்தும், முந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட பல திட்டங்களின் வாயிலாக நமது மாநில வருவாயும், தொழில் வளர்ச்சியும் பெரிதும் மேம்பாடு அடைய அவை வழிகோலியுள்ளன. 1972-ல், முந்திரித் தோட்டங்கள் மூலம் சுமார் ரூ. 18 இலட்சம் கிடைத்துள்ளது. கன்னியாகுமரியிலுள்ள அரசினர் ரப்பர் தோட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கியதோடு, இந்த ரப்பரை விற்றதன் மூலம் 1971–72-ல் ரூ. 7·81 இலட்சம் கிடைத்துள்ளது. ரப்பர் தோட்டங்களில் பால் எடுக்கும் மரங்களின் தொகை மேலும் அதிகமாகி, வருவாயும் பெருக நல்ல வாய்ப்புகள் காணப்படுகின்றன.

காடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளாகிய காகித ஆலை, ரேயான் தொழிற்சாலை போன்ற தொழிற் கூடங்களுக்குப் பயன்படும் மூலப் பொருள்களை நீலகிரித் தைல மரங்களும், கற்பூர மரங்களும், மூங்கில் காடுகளும் தொடர்ந்து வழங்கி வருகின்றன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் தொடங்கிய வனப்பண்ணைக் காடுகளும் தற்போது பயன் தரும் நிலையை அடைந்து வருகின்றன. கிராம மக்களுக்கு வேண்டிய விறகு வெட்டுமரம் போன்ற [illegible]

1971–72-ல் வனத் துறையின் மொத்தச் செலவு ரூ. 365 இலட்சமாகும். 1972–73-ல் ரூ. 442 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1971–72-ல் வளர்ச்சித் திட்டங்களுக்கு ரூ. 101·78 இலட்சம் செலவிடப்பட்டது. இத்தொகையில் ரூ. 80 இலட்சம் ஆதாயம் தருகின்ற தொழில்களுக்குத் தேவைப்படுகின்ற தோட்டங்களை வளர்த்தல், பண்ணைக் காடு வளர்ப்புத் திட்டம், காடுகள், குறித்த ஆய்வு, செயல் திட்டங்கள், வன விலங்கு வாழ் இடங்களைப் பேணிப் பராமரித்தல், வைகை மேட்டுச் நீர் கோள் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு ஆகியவற்றிற்குச் செலவாயின.

இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில், வறட்சித் துயர் தணிப்புப் பகுதித் திட்டத்தின்கீழ் 1971–72-ல் ரூ. 4·89 இலட்சம் செலவில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை அகதிகளுக்குப் புது வாழ்வு அளிக்கும் பொருட்டுக் காடுகள் துறை, நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தோட்டம், கன்னியா குமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டம் வைத்துப் பயிரிட முற்பட்டுள்ளது. இத்திட்டங்களுக்கு மத்திய அரசு நீண்ட காலக் கடனுதவி வழங்குகிறது. 1971–72-ல், ரூ. 53·44 இலட்சம் இத்திட்டங்களுக்காகச் செலவிடப் பட்டுள்ளது.

முக்கியமான காடுபடு மூலப் பொருள்களை வழங்குவதன் வாயிலாக, வனத்துறை மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகள் சிலவற்றின் வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாக இருந்து வந்துள்ளது.



1971–72-ல் சேலம் மாவட்டத்தில் உள்ள சேஷசாயி காகிதத் தொழிற்சாலைக்கு 55,047 டன் உலர்ந்த மூங்கில் வழங்கப் பட்டது. காகிதம் தயாரிப்பதற்குக் கற்பூர மரங்கள் போன்ற கடினமான மரங்களையும் இத் தொழிற்சாலை பயன்படுத்துகிறது. நடப்பாண்டில் இவ்வாலைக்கு 3,766 டன் கற்பூர மரங்கள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சன் காகித ஆலை, பாபநாசம் மலைகளிலிருந்து 'ஈட்டா' புல் எடுத்துக் கொள்வது தொடர்பாக வனத்துறையுடன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. 1971–72-ல் இந்த ஆலை சுமார் 4,212 டன் 'ஈட்டா' வகைப் புல்லைக் கொண்டுவந்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், சிறுமுகை என்னும் இடத்தில் உள்ள சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்தார், ரேயான் கூழ் தயாரிக்க, கற்பூர மரக் கட்டைகளையும், மிலாறு மரக் கட்டைகளையும் பயன்படுத்துகின்றனர். 1971–72-ல் நீலகிரி, கோடைக் கானல் குன்றுகளில் 1,007 ஏக்கர் கற்பூர மரத் தோட்டங்களும், 3,267 ஏக்கர் மிலாறுத் தோட்டங்களும் இத் தொழிற்சாலையின் மூலப் பொருள்களுக்காக ஒதுக்கப் பட்டன.

இத்துறை, மிலாறுப் பட்டைகளை மேட்டுப் பாளையத்திலுள்ள டான் இந்தியா நிறுவனத்திற்குத் தோல் பதனிட உதவும் மிலாறுச் சாரம் எடுக்க வழங்கின. 1971–72-ல் 6,647 டன்கள் மிலாறுப் பட்டைகள் வழங்கப்பட்டன.

இத்துடன் இராச பாளையத்திலுள்ள 'மதரூஸ் சிப் போர்ட்ஸ், ஆலைக்கு 685 கன மீட்டர் மென்மரங்கள் வழங்கப்பட்டன. 1,352 டன் உலர்ந்த புல், பவானிசாகரிலுள்ள தமிழ்நாடு கார்டு போர்டு மற்றும் காகித ஆலைக்கு அளிக்கப்பட்டது.

வைகை அணையிலுள்ள காடு வளர்ப்புப் பயிற்சிக்கூடம், இத் துறையைச் சேர்ந்த வனப் பணியாளர்களுக்கும், வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்கிறது. 1971–72-ல் 60 வனப்பணியாளர்களுக்கும் 47 வனக்காப்பாளர்களுக்கும் பயிற்சி அளித்தது.

வனத்துறையில் நல்ல முன்னேற்றம் காண்பதற்கு அடிப்படையாக, நன்கு அமைக்கப்



பட்ட சிறந்த ஆராய்ச்சிப் பிரிவு ஒன்று அவசியமாகும். வன ஆராய்ச்சிக்குப் பொறுப்பு வகிக்கும் மாநில வனவியல் பிரிவு, மரவளர்ப்புப் பற்றியும் சில முக்கியமான மரவகைகள் பற்றியும் ஆராய்ச்சிகள் செய்து வருகிறது. காடுபடு பொருள்களை மூலமாகக் கொண்டு செயல்படும் தொழில்களின் தேவையை நிறைவு செய்ய, வெளிநாட்டு மர இனங்களைப் பயிரிடல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இவ்வினங்களை அதிக அளவில் காடுகளில் உண்டாக்குவதே இந்த ஆராய்ச்சியின் நோக்கம். காடு வளர்ப்புத் தொடர்பாகவும், முக்கியமான இனங்களில் பிற கூறுகள் தொடர்பாகவும், மண்வளம் பற்றிய பகுப்பாய்வு, வனப் பயிர்களின் நோய் பற்றிய ஆய்வு முதலிய பிரிவுகள், மாநில வனவியல் ஆராய்ச்சி அலுவலரின் கீழ் இயங்கி வருகின்றன.

தமிழ்நாட்டில் பலவித வன விலங்கினங்களும், பறவைகளும் மிகுதியாகக் காணப்படுகின்றன கீழ்க்கண்ட வனவிலங்கு உய்விடங்கள் நமது மாநிலத்தில் உள்ளன.

1. முதுமலை வனவிலங்கு உய்விடம். 2. முண்டந்துறை புலிகள் உய்விடம். 3. கோடியக்கரை வனவிலங்குய்விடம். 4. கிண்டி மான் பூங்கா. 5. வேடந்தாங்கள் நீர்ப்பறவைகள் உய்விடம். 6. ஆனைமலை வனவிலங்குய்விடம்

சென்னைக்கருகாமையில், கிண்டிப் பூங்கா ஒதுக்கக் காட்டில், ஒரு தனிநபர், பாம்புப் பண்ணை நடத்தி வருகிறார். இப் பண்ணை, மக்களை வெகுவாகக் கவர்கிறது. இந்தப் பாம்புப் பண்ணையை அமைப்பதற்காக, அரசு குத்தகைஅடிப்படையில்ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுத்துள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கிளிக்கூடு என்ற கிராமத்தில் ஒரு முதலைப் பண்ணையும் உள்ளது.

இவ்வுய்விடங்கள் சரியானபடி பராமரிக்கப்பட்டால் பெரிய அளவில் சுற்றுலாப் பயணிகளை நிச்சயம் ஈர்க்கும் ஆகவே, பல வசதிகளை, முக்கியமாகத் தங்கும் விடுதிகள், சாலைகள், போக்குவரத்து வசதிகள் போன்றவைகளை இங்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு அதிக அளவில் செய்துகொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

காடுகளிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு, சந்தனமர விற்பனையின் மூலம் கிடைக்கிறது. சந்தன மர வளர்ப்பைப் பெருக்கும் நோக்குடன், செயற்கை முறையில் வளர்க்கும் பணி, தகுந்த இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நான்காவது திட்டக் கால அளவில், 1,000 ஹெக்டேர் பரப்பளவில், ரூ. 10 இலட்சம் செலவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1972–73-ல் ரூ. 2·87 இலட்சம் செலவில், 113 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்கள் வளர்க்கக் கருதப் பட்டுள்ளது.

1973–74-இல் 200 ஹெக்டேர் பரப்பளவில் சந்தன மரங்களை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ரப்பர் தொழில், மோட்டார் தொழில் போன்றவற்றின் பெருக்கத்தால் ரப்பரின் தேவையும் விரைவாகப் பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில், கன்னியாகுமரி மாவட்டம்தான் ரப்பர் பயிரிடுவதற்கு ஏற்றதாக உள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 2,000 ஹெக்டேரில், ரூ. 100 இலட்சம் செலவில் ரப்பர் பயிரிடப்படும்.

1972–73-ல் 174 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடப்படும். இதற்காக ரூ. 15·06 இலட்சம் செலவிடப்படும்.

1973–74-ல் 200 ஹெக்டேரில் ரப்பர் பயிரிடக் கருதப் பட்டுள்ளது. இதற்கு ரூ. 18·86 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.



ஏறத்தாழ, 3,800 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள முன்னாள் ஜமீன் காடுகளை வனத் துறை தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டுள்ளது. சிறந்த பாதுகாப்பிற்காக, இக்காடுகள் நில அளவை செய்யப்பட்டு, முறையாக எல்லை வகுக்கப்பட்டு, தமிழ்நாடு காடுகள் சட்டத்தின் கீழ் இவை ஒதுக்கக் காடுகளாக அமைக்கபடவிருக்கின்றன. இத்திட்டத்திற்காக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நமது மாநிலத்திலுள்ள காடுகளில் பலவகையான விலங்குகளும், பறவைகளும் உள்ளன. எனினும், விலங்குகளைக் கண்மூடித் தனமாகவும், சட்டத்திற்குப் புறம்பாகவும் சுடுதல், பொறி வைத்துப் பிடித்தல், நஞ்சிட்டுக் கொல்லுதல் காரணமாகவும், வேளாண்மை, நீர் மின்சாரத் திட்டங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்காக வனப் பகுதிகளை அழித்து வருவதன் காரணமாகவும், விலங்குகளின் எண்ணிக்கைவெகு வேகமாகக் குறைந்து வருகிறது. வன விலங்குகளைப் பாதுகாப்பதில், வன விலங்கு உய்விடங்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இவை சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதாகவும் உள்ளன. ஆகவே, மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கான திட்டத்தில், வன விலங்கு உய்விடங்களுக்கு உரிய சிறப்பிடம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.



தமிழ்நாட்டில், வன விலங்கு உய்விடங்களின் மேம்பாட்டிற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1972–73-இல் ஓய்வு விடுதிகள் கட்டுதல், சாலைகளை அமைத்தல், அதிக அளவில் போக்குவரத்து வசதி செய்தல், தேவையான இடங்களில் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல் ஆகிய பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். வன விலங்குகளைப் பாதுகாத்து அவற்றின் எண்ணிக்கையை அதிகரித்தல், தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வன விலங்குகள் கணக்கெடுப்பு, மற்றப் பணிகள் முதலியன திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. 1972–73-ல் கோயம்புத்தூர் மாவட்டத்தில், ஆனைமலை வன விலங்கு உய்விடம் என்ற புதிய உய்விடம் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு 1972–73-ல் எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 4·08 இலட்சம் ஆகும்.

1973–74-ல் சாலைகளை மேம்படுத்துதல், ஆனைமலை வன விலங்கு உய்விடத்தில் ஓய்வு இல்லம் ஒன்று கட்டுதல் மற்றும் தேவையான வசதிகள் செய்தல் ஆகிய பணிகள் ரூ. 5·25 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

புளி, கோக்கோ, இலவங்கம், குங்கிலியம், கற்பூரத் தைல மரம், எலுமிச்சை வகைச் செடிகள், கடுக்காய் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல் நல்கும் மரங்களைச் செறிவாக வளர்ப்பதன் மூலம், விலை மதிப்புள்ள காடுபடு சிறு பொருள் நல்கும் மரங்களைச் செறிவாக வளர்ப்பதன் மூலம், விலை மதிப்புள்ள காடுபடு சிறு பொருள்களிலிருந்து வருவாய் அதிகரிக்கச் சாத்தியக் கூறுகள் உள்ளதால், இத்தகைய மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 19 இலட்சம் செலவில் 1,500 ஹெக்டேரில் காடுபடு சிறு பொருள்கள் பயிரிடப்படும். 1972–73-இல் ரூ. 2·28 இலட்சம் செலவில் 431 ஹெக்டேரில் காடுபடு பொருள்கள் நல்கும் [illegible] வளர்க்கப்படும் என [illegible] பார்க்கப்படுகிறது.

**விதைத்தல்:**—'கொர்ரு' என்னும் கலப்பையையோ அல்லது விதைக் கலப்பையையோ பயன்படுத்தி விதைகளை வரிசை வரிசையாக விதைக்க வேண்டும். மூன்று வரிசைப் பருத்திக்கு ஒருவரிசை 'கோ. 1' உளுந்து வீதம் விதைக்க வேண்டும். பருத்தியை விதைக்கும் பொழுது வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் (1 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.

**பின்செய் நேர்த்தி:**—விதைத்த 21-ஆம் நாள் முதல் களை எடுப்பதுடன், செடிக்குச் செடி 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளி விட்டு, நெருக்கமாக உள்ள செடிகளை அகற்றி விட வேண்டும். பயிர்க் கலைப்புச் செய்ததிலிருந்து 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம்—பூ பூப்பதற்கு முன்பு வரை—'தந்துலு' என்னும் கலப்பையால் இடையுழவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதால், மண்ணில் வெடிப்பு ஏற்படுவதையும், மண்ணின் அடியில் உள்ள ஈரம் காய்ந்து விடுவதையும், களைகளால் பயிருக்கு ஏற்படும் சேதத்தையும் குறைத்திட இயலும். முக்கியமாக மண்ணின் ஈரத்தைப் பாதுகாக்கத் 'தந்துலு' மூலம் இடையுழவு செய்வது மிகவும் இன்றியமையாததாகும்.

விதைத்த 40 முதல் 42 நாட்களில் 2-வது முறையாக களை எடுக்க வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு:**—விதைத்த 1 மாதம் கழித்து 'கார்பரில்' கந்தகத்தூள் ஆகியவற்றைச் சமஅளவில் கலந்து, ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். பிறகு பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை வீதம் 5 முறை மேற்கூறியவாறே மருந்து தூவ வேண்டும்.

**அறுவடை:**—நன்ருக வெடித்த பருத்தியை மட்டும் காலை வேளையில் எடுக்க வேண்டும். எடுத்த பருத்தியை நிழலில் உலர்த்த வேண்டும். பூச்சிகளால் தாக்கப்பட்டு நிறம் மாறிய பருத்திகளை நீக்கிவிட வேண்டும். பருத்தியை வகைப் படுத்தித் தரம் பிரித்துச் சேமித்து வைக்க வேண்டும். பருத்தியைத் தரையில் குவித்துச் சேமிக்கக் கூடாது. சாக்கு அல்லதுபாயின் மேல் குவித்துச் சேமிக்க வேண்டும்.



**அறுவடைக்குப் பின்:**—பருத்தி அறுவடை முடிந்த பிறகு, உடனடியாகப் பருத்திச் செடிகளைப் பிடுங்கிவிட வேண்டும். பிறகு உடனே நிலத்தை நாட்டுக் கலப்பையால் உழுது விட வேண்டும். இதனால் பூச்சிப் பூசணங்கள் பரவுவதைத் தடுக்க முடிவதுடன், மண் வெடிப்பதையும் தடுத்திட இயலும். பிறகு மாதம் ஒருமுறை வீதம் நாட்டுக் கலப்பையால் உழுது நிலம் வெடிப்பதைத் தவிர்க்கலாம்.

**பயிர்ச் சுழற்சி:**—ஆண்டு தோறும் தொடர்ந்து கருங்கண்ணிப் பருத்தியையே தங்கள் நிலத்தில் பல உழவர் பெருமக்கள் பயிரிட்டு வருகின்றனர். இதனுல் நிலவளம் குன்றி, பருத்தி மகசூல் குறைந்து விடும். எனவே, கரிசல் மண்நிலங்களில் தகுந்த பயிர்ச் சுழற்சியை மேற்கொள்ள வேண்டும். கம்பு விதைத்து அறுவடையான பிறகு பருத்தி விதைத்தால், பருத்தியில் நல்ல மகசூல் பெறலாம். சோளம் விதைத்து அறுவடையான பிறகு பருத்தி விதைத்தால், பருத்தியின் மகசூல் மிகவும் குறைந்துவிடும். இதைச் 'சோளத்தீங்கு' (Cho'am effect) என்று கூறப்படுகிறது. இத்தீங்கினைக் குறைக்க, சோளத்துடன் அவுரியை விதைக்க வேண்டும். அல்லது சோளம் அறுவடையான பிறகு விதைக்கப்படும் பருத்திக்கு ஏக்கருக்கு 60 கிலோ வீதம் சூப்பர் பாஸ்பேட் இட வேண்டும். கம்பு பயிரிட்ட பிறகு பருத்தி என்ற முறையில் பயிரிடுதல் சிறந்தது. எனவே மானுவாரி கருங்கண்ணிப் பருத்தி பயிரிட முயரும்புவோர், அதற்கு முந்திய பயிர் என்ன என்று அறிந்து, அதற்கேற்பப் பருத்தி பயிரிடுதல் சிறந்தது.

**வருவாய்:**—மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு 'கே. 7' பருத்தி பயிரிட்டால், ஏக்கருக்குக் குறைந்தது 1·5 குவிண்டால் பருத்தி மகசூல் பெறலாம். இம்மகசூல் பெற ரூபாய் 175 செலவு செய்ய வேண்டியிருக்கும். 1·5 குவிண்டால் பருத்தியை ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் மூலம் விற்றல் ரூபாய் 375 வருவாய் பெறமுடியுமாதலின் சாகுபடிச் செலவு போக ஏக்கருக்குக் குறைந்தது 200 ரூபாய் நிகர இலாபம் பெற முடியும். உளுந்து மூலமும் மேலும் வருவாய் பெற இயலும்!

எனவே, கரிசல் மண் நிலங்களில் மானுவாரி கருங்கண்ணிப் பருத்தி பயிரிடும் உழவர் பெருமக்கள் அனைவரையும் மேற்கூறிய முறையில் 'கே. 7' அல்லது 'கே. 8' பருத்தி பயிரிடுமாறு கேட்டுக் கொள்கின்ருேம்.

'கே. 7' அல்லது 'கே. 8' பருத்தியுடன் 'கோ. 1' உளுந்தை கலப்புப் பயிராகப் பயிரிட மறந்துவிடாதீர்கள் என்றும் நினைவுபடுத்துகின்ருேம். ஏனெனில் அவ்வாறு செய்வது உங்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் நன்மையளிக்கும்!

ஆர். எம்.



சிறுவர் பகுதி

# அழகு

புலவர் சி. துரைசுவாமி




அன்பிற் கழகு மன்னுயிர் காத்தல்
ஆற்றற் கழகு போற்ற விளங்கல்
இல்லோர்க் கழகு நல்லறம் வினைத்தல்
ஈட்டற் கழகு வாட்டம் தவிர்த்தல்
உடையோர்க் கழகு விடைபோல் விளங்கல்
ஊருக் கழகு பேர்வளம் ஓங்கல்
எளியோர்க் கழகு பழியற வாழ்தல்
ஏழ்மைக் கழகு ஊழ்வென் றுயர்தல்
ஐம்புலன் அழகு மெய்வகை உணர்தல்
ஒற்றுமைக் கழகு வெற்றி வினைத்தல்
ஓதற் கழகு தீதற் றுறைதல்
கலைஞர்க் கழகு நிலைப்புகழ் படைத்தல்
காதற் கழகு ஆதலில் பொருதல்
கிளைகட் கழகு நிழலாய்த் திகழ்தல்
கீழ்மைக் கழகு தாழ்வற உழைத்தல்
குடிகட் கழகு அடிமையில் வாதல்
கூடற் கழகு கோடா நட்பு
கெட்டோர்க் கழகு திட்டமிட் டுயர்தல்
கேட்டற் கழகு ஊட்டும் அறிவுரை
கைவாட் கழகு எய்பகை வெல்லல்
கொடுத்தற் கழகு அடுத்தது வேண்டேல்
கோயிற் கழகு தாய்வழி போற்றல்
சக்திக் கழகு தக்கது பயத்தல்
சான்றோர்க் கழகு ஆன்றோர் கடன்செயல்
சிந்தனைக் கழகு வித்தை வினைத்தல்
சிருக் கழகு பாருயர் ஆற்றல்
சுற்றத்திற் கழகு அற்றது போற்றல்
சூடற் கழகு வாடா மணமலர்
செய்தற் கழகு எய்பயன் வினையே
சேவைக் கழகு தீவினை ஒழித்தல்
சைகைக் கழகு மெய்நடை மாடல்
சொல்லுக் கழகு நல்லவை போற்றல்
சோதிக் கழகு ஆதவன் மதியே
தந்தைக் கழகு தந்திடல் கல்வி
தாய்மைக் கழகு தூய்மை அளித்தல்
திடத்தோர்க் கழகு கடமை முடித்தல்
தீட்டற் கழகு பாட்டும் இசையும்
துறவுக் கழகு அறவினை காத்தல்
தூதுக் கழகு தீதற ஆற்றல்
தெளிந்தோர்க் கழகு வழிமுறை காட்டல்
தேடற் கழகு நாடகம் போற்றல்
தையலற் கழகு மெய்ந்நிலைக் கற்பு

தொழில்மிக் கழகு உழவினைப் போற்றல்
தோப்புக் கழகு மாத்தெங்கு கமுகு
பண்புக் கழகு எண்ணும் உயர்வு
பாட்டுக் கழகு நாட்டும் சிறப்பு
பிழையார்க் கழகு தோழமை இகழேல்
புத்திக் கழகு நத்திடல் உலகு
பூண்பதற் கழகு ஆண்மையில் அடக்கம்
பெண்ணுக் கழகு நண்ணும்நாற் குணங்கள்
பேணுதற் கழகு பூணுடை மானம்
பைந்தமிழ்க் கழகு பார்முத் தமிழே
பொறுமைக் கழகு சிறுமை பொறுத்தல்
போற்றற் கழகு ஏற்பது உலகம்
நடுதற் கழகு கெடுநிலை காத்தல்
நாட்டுக் கழகு வேட்டம் வினைத்தல்
நினைத்தற் கழகு எனைத்தெய் துதவி
நீதிக் கழகு நிறைகோல் தீர்ப்பு
நுண்மைக் கழகு உண்மை உணர்தல்
நூலுக் கழகு வாலறி வூட்டல்
நெறியோர்க் கழகு மறைபோல் விளங்கல்
நேர்மைக் கழகு பார்போற் றெருழுகல்
நொந்தோர்க் கழகு சிந்தித் தாற்றல்
நோன்புக் கழகு சான்றோர் வழிபடல்
மக்கட் கழகு தக்கது பயத்தல்
மாண்புக் கழகு காண்பழி போக்கல்
மின்னுக் கழகு பொன்னும் மணியும்
மீட்டற் கழகு கேட்கவ் விசையாழ்
முடிகோற் கழகு குடிநலம் பேணல்
மூத்தோர்க் கழகு மூதுரை வழங்கல்
மெய்மைக் கழகு செய்வகை காட்டல்
மேலோர்க் கழகன் னூலாய் விளங்கல்
மையற் கழகு வையகம் வாழ்த்தல்
மொழிதற் கழகு பிழையறப் பேசல்
மோதற் கழகு நீதிக் கவையில்
மௌனிக் கழகு மேவிடல் துறவு
யாவர்க் கழகு தாவழி நடத்தல்
வழங்குதற் கழகு உழல்பசி போக்கல்
வானோர்க் கழகு ஞானம்செய் தானம்
விழைதற் கழகு பழைமைபண் பாடு
வீட்டிற் கழகு மாட்சிமை இல்லாள்
வெறுத்தற் கழகு வினைதீண் டாமை
வேண்டற் கழகு விழுமியர் தொடர்பு
வையத்திற் கழகு செய்வன செய்முன்

# மானவாரி கருங்கண்ணிப் பருத்தி மகசூல் பெருகிட

தமிழ்நாட்டில் பருத்தி பயிரிடப்படும் மொத்தப் பரப்பில் ஏறத்தாழ 46 சத அளவுப் பரப்பில் கருங்கண்ணிப் பருத்தி, சாகுபடி செய்யப்பட்டுவருகிறது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 3·77 இலட்சம் ஏக்கரில் கருங்கண்ணிப் பருத்தி பயிரிடப்படுகிறது. கருங்கண்ணிப்பருத்தி குறைந்த அளவு மகசூலே கொடுப்பதாக இருப்பதாலும், பருத்தி சாகுபடியாகும் மொத்தப் பரப்பில் பெரும் பகுதியில் கருங்கண்ணிப் பருத்தியையே மானுவாரியாகச் சாகுபடி செய்வதாலும், குறிப்பாகத் தமிழ் நாட்டின் தென் மாவட்ட உழவர் பெருமக்கள் தங்கள் வாழ்க்கை வசதிக்குக் கருங்கண்ணிப் பருத்தியையே நம்பி இருப்பதாலும், தமிழ் நாட்டில் கருங்கண்ணிப் பருத்தி உற்பத்தியைப் பெருக்குவது மிகமிக இன்றியமையாததாக உள்ளது. ஏதேனும் ஓர் ஆண்டில் கருங்கண்ணிப் பருத்தியின் மகசூல் குறைந்து விடுமானால், தென் மாவட்ட உழவர் பெருமக்களின் பொருளாதார நிலைமை மிகவும் பாதிக்கப்படுகிறது. எனவேதான், கருங்கண்ணிப் பருத்தியின் மகசூலைப் பெருக்குவதற்கான வழிமுறைகளைக் கடமையுணர்வுடன், ''தமிழரசு'' இதழ் இங்கே படைத்துள்ளது.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள கரிசல் மண்ணில் (Black soil) மானுவாரியாகப் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பகுதிகளில், 195 நாட்கள் வயதுடையதும், ஏக்கருக்குச் சராசரியாக 1·5 குவிண்டால் மகசூல் தரக்கூடியதுமான 'கே—7' என்னும் கருங்கண்ணிப் பருத்தியைப் பயிரிடுமாறு தமிழ்நாடு வேளாண்மைத் துறை பரிந்துரைக்கிறது.

**கரிசல் மண்ணிற்கேற்ற புதிய பருத்தி!**

'கே—7' என்ற கருங்கண்ணிப் பருத்தியைவிட அதிக மகசூல் தரவல்ல 'கே-8' என்ற பருத்தி ரகம் கோவில்பட்டியில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த ரகம் தமிழகமெங்கும் உள்ள கரிசல் நிலங்களுக்கு ஏற்றது. இந்த ரகம் ஏக்கருக்கு 2 குவிண்டால் பருத்தி மகசூல் அளிக்க வல்லது. இப்புதிய ரகத்தின் இழை நீளம் 27 மில்லி மீட்டர்.

'கே. 8' என்னும் பருத்தி ரகத்தைக் கொண்டு 40—ஆம் எண் நூல் நூற்கமுடியும். இந்தியாவில் இதுவரை வெளியிடப்பட்டுள்ள நாட்டுப் பருத்தி ரகங்களில் 'கே. 8' ரகமே மிகவும் சிறந்தது. இப்புதிய ரகம் 'கே. 7' ரகத்தைக் காட்டிலும் ஏக்கருக்குக் குறைந்தது 35 ரூபாய் அதிக இலாபம் தருகிறது. இந்த ரகத்தைத் தமிழ் நாட்டிலுள்ள மானுவாரி கரிசல் நிலங்கள் முழுவதும் பயிரிட்டால், தமிழ்நாட்டிற்கு 58 இலட்சம் ரூபாய் அதிக வருவாய் கிடைக்கக் கூடும்!

தற்பொழுது 'கே. 8' ரகப் பருத்தி விதைகள் பெருமளவில் உழவர்களுக்குக் கிடைக்காது. எனவே, இந்த ரகப் பருத்தி விதைகளை அடுத்து வரும் ஆண்டுகளில் பெருமளவில் வழங்கத் தமிழ்நாடு அரசு முயன்று வருகிறது. ஆகவே, கரிசல் நிலங்களில் 'கே. 7' அல்லது 'கே. 8' என்னும் பருத்தியைக் கீழ்க் கண்ட முறையில் பயிரிடுமாறு பரிந்துரைக்கின்றோம்.

**சாகுபடிக் குறிப்புகள்.**

**விதைக்கும் பருவம்:**—அக்டோபர் மாதம் முதல் 15 நாட்களில் விதைப்பது சிறந்தது.

**விதை அளவு:** ஏக்கருக்கு 6 கிலோ விதை வீதம் விதைக்க வேண்டும்.

**விதைப் பராமரிப்பு:**— ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து வீதம் கலந்து, 6 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். பிறகு மாட்டுச் சாணமும், செம்மண்ணும் 1:3 என்ற விகிதத்தில் கலந்த கலவையில் விதைகளைத் தேய்த்து விதைகளில் ஒட்டியுள்ள பஞ்சுகளை அகற்றிவிட்டு நிழலில் உலர்த்த வேண்டும்.

**நிலம் தயாரித்தல்:**—பருவ மழை பெய்தவுடன் நாட்டுக் கலப்பையால் நிலத்தை 2 முறை உழவேண்டும். பிறகு 'குண்டகா' (Guntaka) என்னும் கலப்பையை உபயோகித்துக் கட்டிகளை உடைத்துச் சமப்படுத்த வேண்டும்.

**அடியுரமிடுதல்:—கடைசி உழவில் ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) போட வேண்டும். விதைப்பதற்குச் சற்று முன்னதாக ஏக்கருக்கு 16 கிலோ வீதம் தழைச்சத்து அளிக்க 80 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 36 கிலோ யூரியாவையும், 8 கிலோ மணிச்சத்து அளிக்க 50 கிலோ சூப்பர் பாஸ்பேட்டையும் அடியுரமாக இடவேண்டும்.**

**கலப்புப் பயிர்:—கருங்கண்ணிப் பருத்தியுடன், உளுந்தைக் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்தால், பருப்பு உற்பத்தி பெருகுவதுடன், உழவர் பெருமக்களுக்குக் கூடுதல் வருவாயும் கிடைக்கும்! எனவே, 'கே. 7' பருத்தியுடன், 'கோ. 1' உளுந்தைக் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்ய வேண்டும் என்று பரிந்துரைக்கின்றோம்.**

# கைத்தறி.... கைத்தறி.... கைத்தறி!

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் மிகத் தொன்மையான பெரிய குடிசைத் தொழிலாகும். இங்கு முறையே சுமார் 5.50 இலட்சம் கைத் தறிகள் உள்ளன. ஏறத் தாழ 20 இலட்சம் மக்கள் இத் தொழிலை நம்பியுள்ளனர். ஆண்டொன்றுக்கு ரூ. 48 கோடி மதிப்புள்ள சுமார் 39 கோடி மீட்டர் கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்வதற்கான வாய்ப் புள்ள இத் தொழில் மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கிய இடம் வகிக்கிறது.

• • •

தமிழ்நாட்டிலுள்ள 2,000 பட்டுத் தறிகளில், 1972–73-ல் இராசிபுரத் தில் புதிதாகத் தொடங்கப்பட்ட பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றுடன் 14 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ், 3,352 தறிகள் கூட்டுறவுத் துறையில் இயங்கி வருகின்றன

பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சராசரி ஆண்டுதோறும் உற் பத்தி செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 1,45·00 இலட்சமாகும். இவை விற்பனை செய்யும் சரக்கின் மதிப்பு ரூ. 1,67·98 இலட்சமாகும்.

• • •

கைத்தறித் துணிகளின் ரகங்களை வண்ணங்களை மேம்படுத்தும், நோக்கத்தோடு, நெசவாளர் சங் கங்களின் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கும் திட்டமொன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இப்பயிற்சி நீலகிரி, சென்னை நீங்கலாக, ஒவ்வொரு மாவட்டத் திலும் ஒரு பயிற்சி நிலையமாக 12 இடங்களில் பயிற்சி அளிக்கப் பட்டு வருகிறது. அந்தந்த மாவட் டத்திலுள்ள நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கம் இத்திட் டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்கும். தகுதி வாய்ந்த கைத்தறித் தொழில் நுட்ப ஆசிரியர்களின் பணி, அரசுச் செலவில் இச்சங்கத்திற்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு நிலை யத்திலும் ஓராண்டில் 30 நெச வாளர்களுக்கு ஒவ்வொரு பாட முறையிலும் பயிற்சி அளிக்க, 5 பாட முறைகள் இருக்கும். அந்தத் திட்டத்தை நடத்தும், சங்க உறுப் பினர்களிலிருந்தும், அப்பகுதி யில் உள்ள பிற சங்கங்களிலிருந்தும் நெசவாளர்கள் இப்பயிற்சிக்குத் தெரிந்தெடுக்கப்படுவர்.

• • •

கைத்தறித் துணிகளில் புதிய கவர்ச்சிகரமான துணி வகைகளைத் தயாரிப்பதற்குக் கூட்டுறவு அமைப் பில் சேர்ந்துள்ள நெசவாளர் களுக்கும், கூட்டுறவு அமைப்பில், சேராத நெசவாளர்களுக்கும், மற்றும் தறி முதலாளிகள், நெசவுத் தொழிற்சாலை முதலாளிகள், துணி வடிவமைப்பாளர்கள் ஆகியவர் களுக்கும் நேரடியான ஊக்க மளிப்பதன் மூலம், கைத்தறித் துணிகளை மக்கள் பெரிதும் விரும்பச் செய்யும் நோக்கத்துடன், இம் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் போட்டி நடத்தி ஒவ் வொரு வகையிலும் சிறந்த ரகத் துணிக்குப் பரிசளிக்கும் திட்டம் அரசினால் ஆண்டு தோறும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய பரிசுகள் வழங்கப்படுவதற்காக மொத்தம் 10,000 ரூபாய் அரசால் செலவிடப்படுகிறது.

• • •

இம்மாநிலத்தில் 42 இலட்சம் கதிர்கள், 9,124 தறிகள் நிறுவப் பட்ட திறனுடன் 208 பஞ்சாலைகள் (184 நூற்பு, 24 நூற்பு நெசவு) உள்ளன. இம்மாநிலத்திலுள்ள கைத்தறித் தொழிற்சாலைகளின் மொத்த உற்பத்தித் திறன் திங்க ளொன்றுக்கு ஏறத்தாழ 20,000 பேல்களாகும். விசைத்தறிகள், உள்ளாடைத் தயாரிப்பு நிறுவனங் கள், பிற துணைத் தொழிற்சாலை களுக்குத் திங்களொன்றுக்கு 9,000 தேவைப் படுகின்றன. எல்லா ஆலை களின் மொத்த உற்பத்தியைக் கருதிப் பார்க்குமிடத்து, பருத்தி நூலுற்பத்தி யைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு எப்பொழுதும் உபரி நிலையிலேயே உள்ளது.

சரிகையுடன் கூடிய பட்டு நெசவுத் தொழிலில் ஏறத் தாழ 20,000 விசைத் தறிகள் ஈடுபட்டுள்ளன. இவற்றில் திங்களொன்றுக்கு 10,000 மார்க்குகள் (Mares) பொன் சரிகைப் பட்டு, நெசவில் கலந்து நெய்யப்படுகிறது. தமிழ் நாட்டுச் சரிகை நெசவுத் தொழில் தனது பொன் சரிகைத் தேவைக்குச் சூரத்தையே பெரிதும் சார்ந்துள்ளது.

சரிகைக்காகச் சூரத்தைச் சார்ந் திருக்க வேண்டிய நிலையைத் தவிர்க்கும் பொருட்டுக், காஞ்சி புரத்தில் சரிகை உற்பத்தி செய்யும் பிரிவு ஒன்றைத் தொடங்க அரசு முனைந்துள்ளது.

சரிகைத் தொழிற்சாலைக் கட்டடம் கட்டுவதற்காக, 4.05 ஏக்கர் நிலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப் பிரிவு 1973 ஏப்ரல் மத்தியில் உற் பத்தியைத்தொடங்குமென எதிர்பார்க் கப்படுகிறது. ரூ. 25 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட் டிருக்கிறது. இப்பிரிவின் பங்கு மூலதனத்திற்கு 1971–72-ல் ரூ. 2.00 இலட்சமும், 1972–73-ல் ரூ. 5.00 இலட்சமும் அரசு முதலீடு செய்துள்ளது.

• • •

தமிழ்நாட்டில் கூட்டுறவு நூற் பாலைகள் 12 உள்ளன. கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலை யில் நூல்களை வழங்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நூற்பு ஆலைகள் அமைக்கப்பட்டன. இந்த ஆலை கள் 20-ம் எண் நூலிலிருந்து 100-ம் எண் நூல் வரை, பல்வேறு எண்களில் நூல்களை உற்பத்தி செய்கின்றன. கூட்டுறவுத் துறை யில் மொத்தம் நிறுவப்பட்ட திறனுக 1.98 இலட்சம் கதிர்களைக் கொண்டு 12 ஆலைகள் ஏற்படுத்தப்பட்டதால், இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்கு நியாயமான விலையில் நல்ல தரமான நூல் கிடைக்கிறது.

**கைத்தறியாளர் துயர் நீங்கிட....**

*கைத்தறி நெசவுத் தொழிலாளருக்கு ஏற்பட் டுள்ள இன்னலை ஓரளவு தணித்திட, தமிழ்நாடு அரசு அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடனுகத் தருகிறது. ஏறக் குறைய ஓர் இலட்சம் பேர் இதனால் பயனடைவர். ஆளுக்கு 100 ரூபாய் வீதம் கடனுகத் தரப்படும். இதைப் பெறு வோர் ஆகஸ்டு மாதத்தி லிருந்து பத்துப் பத்து ரூபாயாகத் திருப்பிச் செலுத்தலாம்.*

# வெண்பாப் போட்டி

முன்னுல் இருந்தகொடை வள்ளல்கள் செய்தவற்றை
என்னுல் இயலுமென்(று) ஏற்றனையே !—சொன்னுலே,
பாரிநன்னி ஓரிகாரி அதியனும் பேகனென
வாரியமாய் வந்தாய் வழங்கு.

—கவிதை, வே. கள்ளிப்பாளையம்.

வீடின்றி வாழ்வோர்க்கு வீடளிக்கும் நல்லரசு
நாடின்றி நற்குடிசை மாற்றளிக்கும்—கோடிபெறும்
திட்டத்தால் நற்பயனும் சீர்பெறுவர்—ஏழையரே
இட்டமுடன் வாழ்வோம் இனிது.

—கே. மு. கருணுகரன், கேட்டவரம்பாளையம்.

'கிரிகோரி வோட்டா' பெருவியப்பில் சொன்னுர் ;
"அரிதாம் செயலொன்றை ஆற்றித் — திருநாட்டை
முன்னேடி யாக்கி முழுப்பெருமை நீர்பெற்றீர் ;
பின்னேடு சேர்வார் பிறர்"

— சிவ. கிருட்டிணன், கணியூர்.

எத்தனையோ நன்மைகள் ஏழைகட்குச் செய்யினும்
அத்தனைக்கும் வித்தாகும் ஆய்ந்திடில்—இத்தரையில்
நில்லாக் குடிசைகளை நீக்கி நிலைவீடு
நல்லரசு தந்ததே நன்கு.

—புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

ஓட்டைக் குடிசையெலாம் ஓடிப் பறந்தனகாண் ;
நாட்டில் விரைந்தோங்கும் நான்மாடக் — கூடங்காண்!
நாட்டம் மிகக்கொண்டே நற்றூதர் பற்பலரும்,
நோட்டம் விடுகின்றுர் நோக்கு.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

பண்டைத் தமிழகம்போல் பற்பலநல் வாரியங்கள்
தொண்டாற்றும் மேம்பாட்டைச் சொல்லிடுங்கால்-கண்ணே!
விடிவுபெற ஏழைகட்கு விடளித்துப் போற்றும்
குடிசைமாற்று வாரியத்தைக் கூறு.

—புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன் கோட்டை.

ஓலைக் குடிசைகள் உள்ள இடமெல்லாம்
வேலைப்பா டுள்ளநல்ல வீடுகளாய்க் — கோலஎழில்
காட்டிநிற்க ஏழைகட்குக் கட்டுவித்த வாரியத்தின்
மாட்சிக் கிணையில்லை மற்று.

—உ. தாமோதரன், சூளை, சென்னை 7.

வெள்ளமே வந்தாலும் வெய்யிலே காய்ந்தாலும்
உள்ளம் கலங்காமல் உய்வதற்கு ; — வெள்ளடுக்கு
மாடிகட்டி வேய்குடிசை மாற்றும் தமிழரசை
நாடிப் புகழ்ந்திடுவோம் நாம்.

—அ. இராமச்சந்திரன், அம்மனூர்.

கள்ளி செழுங்கரும்பாய் ஆனதுபோல் காணுதடா
குள்ளக் குடில்மாற்றிக் கோலமனை — விள்ளரிய
காரியத்தை மெத்தக் கவனமொடு செய்துவரும்
வாரியத்தை நெஞ்சார வாழ்த்து.

— ந. ச. நவமணி, அருப்புக்கோட்டை.

ஈசலின் புற்ருய் இருந்த குடிசையெலாம்
வாசமலர்த் தேன்கூடாய், வான்முட்டும் — பாசறையாய்
மாறியதைக் கண்டோம் ; மனத்தாலே அக்குடிசை
வாரியத்தைப் போற்றுவோம் வா.

—அரங்க. பூந்துமணி, கிழப்பழுவூர்.

வறுமை யொழிந்து வளத்தைப் பெருக்கிச்
சிறுகுடிசை மாளிகையாய்ச் செய்யப் — பெறுகின்ற
நல்லபல திட்டத்தை நங்கலைஞர் ஆற்றுவதால்
எல்லாரும் வாழ்வோம் இனிது!

—இரத்தின கோபால கிருட்டிணன், அலச்குடி.

கூடிக் குடிசையிலே கொந்தளிப்போர் மாடிபெற
நாடி நலம்புரியும் நம்மரசைச் — சேடியே!
"கோடியி லொன்றேநம் கொற்ற" மென் றேபாடு!
வீடுபே றீவார்க்கே தீடு!

—புலவர் பூங்குழலி, பொருளூர்.

நாற்புறமும் சாக்கடைநீர் நாற்றமிகு குப்பைமணம்
காற்றுவர அஞ்சும் கழிவிடத்தில் — நேற்றுவரை
நின்றிருந்த மண்குடிசை நீடுயர்ந்த மாடிகளாய்
இன்றைக்குச் செய்தார் இசைந்து.

—கண்ணுகாந்தி, தாராபுரம்.

ஓலைக் குடிசைகளில் ஒட்டுத் துணியுடனே
நாளைக் கழித்தே நலிவுற்ற — ஏழைகள்தாம்
வாழக் குடிசைமாற்று வாரியத்தார் கட்டியவை
போலப் பிறிதுண்டோ புகல்!

—நெல்லை ஆ. கணபதி, சைதை.

# வெண்பாப் போட்டி

பாடுபட்டு வாழ்கின்ற மக்கள் பறவைபோல்
கூடுகட்டி வாழ்வார் குடிசையிலே — கேடுகெட்ட
இந்நிலையை நீக்க இசைவுடனே முன்வருவார்
தந்நிலையைப் போற்றிடுவோம் சார்ந்து.

— புலவர் செந்தமிழ்க்கிழார், அருப்புக்கோட்டை.

மலடியெனும் பேர்போய் மகவடைந்தேன், வீடாம்
கலைஞர் குடில்மாற்றில் கண்டேன் — நிலைவாழ்வே
இல்லார் இருப்பாரென் றில்லா நிலைவந்தே
எல்லாம் பெறுவோம் இனி.

—எஸ். சூசையம்மாள், நாச்சியாபுரம்.

எட்டடுக்கு மாளிகையில் ஏழையரை வாழ்விக்கத்
திட்டமிட்டுச் செய்யும் திருத்தொண்டால் — பட்டாங்கில்
மக்கள் நலங்காக்கும் மாண்புடைய வாரியத்தை
நெக்குருகி வாழ்த்துமென் நெஞ்சு!

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

தலைநிமிர்ந்து வாழும் தமிழன்றன் வீட்டில்
தலைகுனிந்து செல்லும் தகாத —நிலைஉணர்ந்து
வாரியத்தால் சேரிவாழ் மக்களுக்கு வீடளிக்கும்
காரியத்தை ஆற்றினரே காண்.

—கே. ஏ. அர்ஜுனன், உத்தமபாளையம்.

குடியரசு நாட்டில் குடிசைவாழ் மக்கள்
படுகின்ற துன்பத்தைப் பார்த்து ; — அடியேகேள்!
வாடி இருந்தோர்க்கு வாகாய்த் 'தமிழரசு'ம்
மாடிகட்டித் தந்தார் மகிழ்ந்து.

—ப. குப்புசாமி, பொன்மலை.

நேற்றிங்கே கண்டதென்ன? கீற்றுக் குடிசைகளே!
மாற்றினுர் ஓர்நொடிக்குள் மாளிகையாய்!—ஆற்றல்பார்!
அண்ணுவின் தம்பியர்கள் ஆட்சியிலே ஏழைமக்கள்
எந்நாளும் வாழ்வா ரினிது.

—மெய். சிவநேசன், கலையனூர்.

ஓட்டைக் குடிசையிலே ஒன்றிவாழ் ஏழையர்க்கு
வீட்டை வழங்கியவர் வேதனையை — ஓட்டியபே
நாட்டைத் திருத்துகின்ற நற்பணியைக் கூட்டுபவர்
கோட்டையிலே வாழ்கவெனக் கூப்பு.

—புலவர் வி. துரைசாமி, தேவத்தூர்.

பொத்தலுள இக்குடிசை பொன்வேய்ந்த மாளிகையாய்
இத்தரையில் மாறுவதும் எந்நாளோ? — அத்தனே!
என்றவளே! என்னவளே! இன்றைக்கே மாறியது
மன்றிலுயர் வாரியத்தி னல்.

—வி. சேசாசலம், அரடாப்பட்டு கிராமம்.

இல்லார் எனும்நிலையை இல்லாது போக்கிடவே,
இல்லம் பலகட்டி ஈந்துவரும் — நல்லரசார்
சொல்லால் கவிதைச் சுவையூட்டச் செய்திடுவார்
செல்லாப் புகழைநிதம் சேர்த்து!

—வசந்தராசன், வெள்ளக்குட்டை.

வேற்றுரும் கண்டு வியக்கும் வகையினிலே
மாற்றினர் மண்குடிசை மாளிகையாய் — சீற்றூலே
வீடெல்லாம் மாற்றும் விளங்குபுகழ் நம்மரசின்
பீடெல்லாம் வாயாரப் பேசு.

—புலவர் சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

மாடியிலே வாழ்கின்ற மாசெல்வர்க் கிடாகக்
கூடிக் குடியிருக்கச் செய்திடவே — தேடிக்
குடிசைமாற்று வாரியத்தைக் கோலமுடன் தந்தார் ;
விடிவுண்டோ மக்கட்கு வேறு.

—கவிப்பித்தன், ஆர்ப்பாக்கம்.

நாளும் உழைத்துவந்து நன்ருகத் தூங்கவரின்
தேளும் சரப்பானும் தீண்டுதற்குச் —சூளுரைக்கும்
பாழும் குடிசைகள் பற்பலவும் மாற்றியருள்
வாழும் அரசுக்கென் வாழ்த்து.

—இல. ஆலையழகன், வல்லம்.

கனவும் கற்பனையும் கைக்குவர இங்குத்
தினமும் புதுத்திட்டம் தேர்ந்து — மனமகிழ்வாய்
எல்லாரும் வாழ்ந்திடவே இல்லம் எளிதாக
நல்குமோர் வாரியத்தை நம்பு.

—அ. அகத்தியன், தவசி.

சாலையின் ஓரத்தில் சாக்குத் திரைக்குள்ளும்
ஓலைக் குடிசையிலும் ஒன்றியோர்—காலைக்
கதிரின் முகத்தில் விழிக்கின்றுர் கட்டடத்துள்
கதியாம் தமிழரசால் காண்.

—அன்பழகன், மயிலாடுதுறை,

# அண்ணலின் அமுத மொழிகள்

பெண்களின்நிலை உயரும் போது ஆண்களின் நிலையும் உயரும்; இவ்விருவரின் நிலையும் உயரும்போது மனித சமுதாயத்தின் நிலையே உயர்ந்துவிடும்.

ஏழைகளுக்குத் தொண்டு புரிவதே என் உள்ளத்தில் குடி கொண்டிருந்த பெரு விருப்பமாகும். இவ் விருப்பமே என்னை எப் போதும் ஏழைகளிடையில் போய்ச் சேர்த்தது. ஏழை களுடன் கலந்து அவர் களில் ஒருவனாகும் ஆற்றலை யும் எனக்குத் தந்தது.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன் களை நல்ல முறையில் செய்வதே தொழில்படச் உண்மையான அறிவிற்கு என்பது என் வளர்ச்சி கருத்து. அறிவும் உடலும் ஒன்ருக வளர்ச்சி யடையும் போது இதயத் தத்துவத்திற் கும் ஒரு விழிப்பு ஏற்பட வேண்டியது அவசிய மாகும்.

உங்கள் எண்ணங்களை ஒருபோதும் ஒளித்து வைக் காதீர்கள். அவற்றை வெளியே சொல்வது கேவலமானது என்ருல் அவற்றை எண்ணுவது இன்னும் கேவலமாகும்.

இந்தியாவிற்குத் தேவை யானது ஒரே மாதிரியான நல்ல ஆடையல்ல; ஒரே மாதிரியான நல்ல இதயமே.

அன்பு என்பது ஒரு போதும் கேட்பதில்லை; எப் போதுமே கொடுக்கும்.

கள்ளங் கபடமற்ற இளமை என்பது விலை மதிக்க முடியாத ஒரு சொத் தாகும். இன்பம் என்று தவருகக் கருதப்படும் ஒரு கண நேரக் கிளர்ச்சிக்காக அந்த விலை மதிப்பற்ற சொத்து ஊதாரித்தனமாக வாரி இறைத்து விடுவதற்கு ஏற்பட்டதல்ல.

குழந்தையின் உடற் பண்பையும் உயிர்ப் பண்பையும் வளர்க்கும் போது, இதயப் பண்பை யும் வளர்த்து வந்தால்தான் உள்ளம் வளர்ச்சியடைய முடியும். இவை மூன்றை யும் தனித்தனியே பிரிக்க முடியாது. ஒன்ருய் இயங்குவன அவை.

வறுமையில் அமிழ்ந்து கிடக்கும் மக்களுக்கு வாழ் வின் இன்றியமையாப் பொருட்கள் தாம் கண் கண்ட தெய்வம்! அதை வழிபடுவதற்கு வேளாண் மையே சரியான நெறி.

இசை எனக்கு அமைதி யளிக்கிறது. ஏதாவதொன் றைப் பற்றி நான் பரபரப் படைந்திருக்கும் சமயத்தில் இன்னிசையானது உடனே எனது உள்ளத்திற்கு அமைதி தந்தது உண்டு; கோபத்தை வெல்வதற்கு இசை எனக்குப் பேருதவி தருகிறது.

சத்தியமே என் கடவுள்; அகிம்சையே அதைக் காணும் வழி.

கோழைகளின் அகிம்சை யைவிட வீரர்களின் அகிம்சையே நமக்குத் தேவை. சத்தியத்திற்காக உயிரைக் கவராது, தம் உயிரையே கொடுப்பவர் கள்தான் வேண்டும்.

எதையும் கண்மூடித் தனமாக நம்புகிற மூட நம்பிக்கை என்னிடம் இல்லை யென்றே நம்புகிறேன்.

உண்மையான அகிம்சை ஒருநாளும் எதிரியின் இத யத்தை மாற்ருமல் வீண் போவதில்லை என்றே நான் கருதுகிறேன். அது எதிரி யின் இதயத்தை மாற்ருமல் போகுமானுல் அந்த அள விற்கு அது குறைபாடு உள்ளதேயாகும்.

மனிதனைப் பிடிக்கும் நோய்களிலெல்லாம் மிக மிகக் கொடியது—மோச மானது—அச்சம் என்னும் நோய்தான்.

என்னுடைய மதம் சிறைச் சாலைபோல மற்றவர்களை வெளியே ஒதுக்கும் மதமல்ல! அதன் வாசல் எப் போதும் திறந்தே கிடக்கும். கடவுள் படைப்பிலே மிகத் தாழ்ந்த உயிருக்கும் அங்கே இடமுண்டு; ஆனல் இறு மாப்பு; சாதித் திமிர்; நிறத் திமிர்; மத விரோதம் ஆகிய வற்றிற்கு அங்கே இடமில்லை!



மக்களிடையே உண்டாகி யிருக்கும் விழிப்பு உண்மை யானதாகவும் மக்களிடம் முழுவதும்காணப்படுவதாக வும் இருந்தால் அவர்கள் தாங்கள் போற்றும் இலட்சி யத்தை அடைந்தே தீருவார் கள். எவ்வித அடக்கு முறை யும் அதைத் தடுத்துவிட முடியாது.

தாய்நாட்டின் சேவைக் காக, என் வாழ்வு அனைத் தையும் நான் அர்ப்பணித் திருக்கிறேன். இந்தச் சேவை இல்லாவிடில் என் வாழ்க் கையே எனக்குத் தாங்க முடியாத சுமையாகிவிடும்.

நடுத்தர வர்க்க மக்கள் பிழைப்பிற்காக அயல்நாடு செல்ல நேர்வது நாட்டு நலத்தின் சின்னமாகாது.

தூய்மையான இதயம் இல்லாத எந்த ஆணும் பெண்ணும் இறைவன் சந் நிதியை நெருங்கவே முடி யாது.

குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டியது மிகவும் விரும்பத் தக்கதுதான். ஆனல் அமைதி ஒன்றே அதற்கு இறுதியான இலட் சியமாகிவிட முடியாது! மணவாழ்வின் நிலை என்பது கட்டுப்பாடான வாழ்வின் நிலை என்றே நான் கருது கிறேன்.

உண்மையான அலங் காரம் என்பது உடல் முழுதும் உலோகத்தையும் கற்களையும் சுமந்து கொண் டிருப்பது அல்ல-இதயத் தைத் தூய்மைப்படுத்தி ஆத்மாவின் அழகைப் பெருக்கிக் கொள்வதே யாகும் என்பதைப் பெண் கள் உணரவேண்டும்.

எவ்வளவு பயங்கரமான இம்சையையும் எதிர்த்து நிற்பதற்கேற்ற சக்தி வாய்ந்த ஆயுதம் அகிம்சை யைத் தவிர வேறு எதுவும் இல்லை.

தீய எண்ணங்கள் உள்ளே நுழையாதபடி மனக்கதவைப் பூட்டும் சாவி மனிதனிடம் இருக்கிறது.

## திருச்சி மாவட்டத்தில் சீரிய பணிகள்

சிறு சேமிப்பு.—1972—73-ஆம் ஆண்டிற்கு இம் மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கீடு ரூபாய் 80 இலட்சம் மட்டுமே. ஆனால், இம்மாவட்டத்தில் 31—3—1973வரை ரூ. 90,43,996 வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் மற்றொரு சிறப்பான அம்சம் ரூ. 53 இலட்சம் வரை குறிப்பிட்ட கால டிபாசிட்டில் பெறப்பட்டுள்ளது.

* * * *

வறட்சித் துயர் தணிப்புப் பணி.—இம் மாவட்டத்திற்கு 1972—73-ல் வறட்சி நிவாரணத்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ. 4 இலட்சமும் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்தவும், புதிய கிணறுகள் அமைக்கவும், தாத்தையங்கார் பேட்டை, ஆண்டிமடம், தா.பழூர் ஆகிய வட்டாரங்களில் 10 குடிநீர்க் குழாய்க் கிணறுகள் அமைக்கவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

* * * *

### வெள்ள நிவாரண வேலை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 5,738 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ. 4,08,212 நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இந்தக் குடும்பங்களுக்குப் பாதிக்கப்பட்ட நேரத்தில் உணவு வழங்க ரூ. 13,005 செலவு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புதுப்பிக்க வீடு ஒன்றுக்கு ரூ. 250 வீதம் கடனுகக் கொடுக்க ரூ. 4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப் பெற்று, அவை வேப்பந்தட்டை, வேப்பூர், திருமானூர், முசிரி, செந்துறை ஆகிய ஒன்றியங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

சாலைகள் பழுது பார்க்க ரூ. 11 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பெற்று அதன் மூலம் 211 சாலைகள் பழுது பார்க்கப்பட்டு ரூ. 10·88 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. அதே போல் ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிமன்றச் சாலைகளைப் பழுது பார்க்க ரூ. 7 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதன் மூலம் 187 சாலைகள் பழுது பார்க்கப்பட்டு ரூ. 7·58 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சிறு பாசனக் குளங்களைப் பழுது பார்க்க ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன்மூலம் 136 வேலைகள் நடைபெற்று வருகின்றன. ரூ. 1·63 இலட்சம் செலவாகியுள்ளது. அதேபோன்று பொதுப் பணித்துறைக் கட்டுப்பாட்டில் உள்ள பாசனக் குளங்களைப் பழுது பார்க்க ரூ. 2·47 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 36 வேலைகள் நடைபெற்று வருகின்றன. ரூ. 1·80 இலட்சம் செலவாகியுள்ளது.


உங்கள் பணத்தை சுலபமாகப் பெருக்க கார்பொரேஷன் பாங்கின் சீரிய திட்டங்கள்!

எங்களது மாதவருவாய்த் திட்டங்களில் சேர்ந்திருக்கிறீர்களா?

நிரந்தர டெபாசிட்டுகள், தொடர் டெபாசிட்டுகள் மற்றும் ஜனதா டெபாசிட்டுகளுக்கும் கார்பொரேஷன் பாங்க் கூடுதலாகவே வட்டி கொடுக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்குப் பின் உங்களை மகிழ்ச்சியிலாழ்த்தும் வகையில் பணம் சேர்ந்திருக்கும். இன்றே உங்கள் அருகாமையிலுள்ள கார்பொரேஷன் பாங்க் அதிகாரிகளை அணுகுங்கள்.

சில சமயம் குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே உங்களுக்குப் பணம் தேவைப்பட்டால் இந்த டெபாசிட்டுகளிலிருந்து வட்டியுடன் பணத்தைப் பெற யாதொரு தடையும் இருக்காது. ஆனால் பணமுடையிருக்கும் காலங்களிலும் கூட எடுக்காமல் பேணி காத்து வந்தால் குறிப்பிட்ட காலத்தில் முழுமையான பலனை அடைவீர்கள்.

—சிநேக மனப்பான்மையுடன் விளங்கும் வங்கி

கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்

(கனரா பாங்கில் கார்பொரேஷன் லிமிடெட் என்று முன்னாளில் அழைக்கப்பட்டது)

ESTD. 1906

பதிவு அலுவலகம் : உடுப்பி நிர்வாக அலுவலகம் : மங்களூர்

mea/CBL/246 Tam






# ஒப்பற்ற ஓமியோபதி

நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பம் வளர்ந்து வரும் இக் காலத்தில் ஓமியோபதி போன்ற மருத்துவ முறைகள், ஆங்கில மருத்துவ முறைக்கு அடுத்த தாகவே இருக்கின்றன. இவ்வாறு இருந்த போதிலும் இந்த மருத்துவ முறை மனிதனின் உடல் நோயைப் போக்கும் பணியில் தனது பங்கை ஆற்றி வருகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எந்த ஒரு மருத்துவ முறையும் சிறந்ததெனக் கூறமுடியாது; ஒரு மருத்துவ முறையின் மூலம் பெற முடியாத சிகிச்சையை மற்றெரு மருத்துவ முறையின் மூலம் பெறலாம். ஆஸ்துமா நோய், நோயாளிகளைத் துன்புறுத்தி வருகிறது. இதனால் இவர்களுக்குச் சில நோய்கள் தோன்றுகின்றன. ஆனால், நவீன மருத்துவர்களால் இத்தகைய நோய்களை விரட்டியடிக்க முடியவில்லை. இத்தகைய நோய்கள் அவர்களைத் திணறடித்து வருகின்றன. நவீன மருத்துவ விஞ்ஞானத்திற்கு ஊறு செய்யும் பொருட்டே இத்தகைய நோய்கள் இருந்து வருகின்றன என்று பிரபல மருத்துவர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர். ஆனால், ஓமியோபதி மருத்துவர்கள் இந் நோய்களை ஓட ஓட விரட்டியடித்துள்ள...கக் கூறுகின்றனர்கள்; எந்த அளவுக்கு இத்தகைய நோயாளிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சைகள் அளிக்க முடியும் என்பது பற்றிப் பிரபல ஓமியோபதி மருத்துவர் மிகவும் அழகாகத் தமது கருத்துகளை இங்குக் கூறியுள்ளார்.

தொற்று நோய்கள் ஏற்படாமல் இருப்பதற்காகவும், அவற்றை விரட்டியடிப்பதற்காகவும் மனித உடலில் சில எதிர்ப்புப் பொருட்கள் உள்ளன. இவை, நோய்க் கிருமிகள் உடலில் எந்தவிதத் தீங்கையும் ஏற்படுத்தா வண்ணம் கவனித்துக் கொள்கின்றன. இவை, பாக்டீரியா போன்ற தொற்று நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடுவதோடு மட்டுமல்லாமல், சில சமயங்களில் உயிரற்ற சில அங்ககப் பொருட்களை எதிர்க்கும் திறன் வாய்ந்ததாகவும் விளங்குகின்றன. ஆகையால் உயிரற்ற பொருட்களை எதிர்ப்பதைத் தான் நாம் 'அலர்ஜி' என்று கூறுகிறோம். இந்த 'எதிர்ப்புப் பொருட்கள்' மிகவும் துடிப்பு மிக்கதாக உள்ளன. இத்தகைய எதிர்க்கப்படும் உயிரற்ற பொருட்களை மருத்துவர்கள் 'அலெர்ஜன்' அல்லது 'ஆன்டிஜென்' என்று கூறுகிறார்கள்.

மனித உடலில் இந்த அலெர்ஜெனை எதிர்த்து 'எதிர்ப்புப் பொருட்கள்' போராடுகின்றன. இந்த எதிர்ப்புப் பொருட்கள் எவ்வாறு, எதற்காக ஏற்படுகின்றன என்பது மிகவும் சிக்கலான விஷயமாகும். இவை பல பேருக்குப் பரம்பரையாக இருந்து வருகின்றன. உங்கள் தகப்பனாரோ அல்லது முப்பாட்டனாரோ ஆஸ்துமா அல்லது 'அலெர்ஜி' நோய்களால் அவதிப்பட்டிருந்தால், உங்களுக்கு இத்தகைய நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன.

அன்றாட வாழ்க்கையில் நாம் உபயோகிக்கும் பொருட்களில் நமது உடலுக்கு ஒத்துக் கொள்ளாத பொருட்கள் பல இருந்த போதிலும், மருந்துப் பொருட்கள், சுற்றுப்புறச் சூழ்நிலை, அசுத்தம் ஆகியவை நமக்கு அதிகமாக ஒத்துக் கொள்வதில்லை. 30, 40 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்களைவிடத் தற்போது வாழும் மக்களில் அதிக எண்ணிக்கையினருக்குப் பல பொருட்கள் ஒத்துக் கொள்வதில்லை. துரதிஷ்டவசமாக நவீன மருத்துவ முறையின் மூலம் இத்தகைய நோய்களைப் போக்க முடியாது. அதிக அளவு இத்தகைய நோய்களினால் ஏற்படும் உடல் துன்பத்தைக் குறைக்கலாம்.

நோயாளியின் உடல் பாகங்களை மரத்துப் போகச் செய்து பின்னர் மேல்தோல் பரிசோதனைகள் பல செய்து நோயாளிக்கு எந்தப் பொருள் ஒத்துக் கொள்ளவில்லை என்று கண்டுபிடிப்பதற்கும், நவீன மருத்துவ முறை பயன்படுகிறது. இதைக் கண்டுபிடித்த பின்னர், அலெர்ஜி நோயை உண்டு பண்ணக்கூடிய பொருளினால் தயாரிக்கப்பட்ட திரவத்தை ஊசி மூலம் சிறிது சிறிதாக நோயாளியின் உடலில் செலுத்திக் குணப்படுத்தலாம். இத்தகைய நோய்களைச் சிறந்த முறையில் ஓமியோபதி மருத்துவ முறையின் மூலம் குணப்படுத்தலாம்.

ஓமியோபதி மருத்துவத்தின் மூலம், சதச் சவ்வு அழற்சி, தோல் சம்பந்தப்பட்ட சொறி, சிரங்கு, ஆஸ்துமா போன்ற நோய்களைக்கூட குணப்படுத்த முடியும். நவீன மருத்துவப் பொருட்களை முதலில் உபயோகிக்காமல் இருந்தால் ஓமியோபதி மருத்துவத்தின் மூலம் குணப்படுத்துவது மிகவும் எளிதாகும். நவீன மருந்துகளை உபயோகித்த நோயாளிகளுக்கு ஓமியோபதி மருத்துவச் சிகிச்சை பலன் அளிக்காது.

# அண்ணலின் நினைவாற்றல்

**1920-ஆம் ஆண்டு!**

காந்தியடிகள் ஒரிசா மாநிலத்தில் முதன் முதலாகச் சுற்றுப் பயணம் செய்த போது, அங்கு மக்கள் வறுமையால் தொல்லையுறுவதைக் கண்டு மனம் நொந்தார். அந்தப் பகுதியில் நாட்டுப் பணிபுரிந்து வந்த சில பட்டம்பெற்ற இளைஞர் சிலர் அந்தச் சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்டார்கள்.

ஒரு சிற்றூரில் நிலக்கிழார் ஒருவர் காந்தியடிகளின் குழுவினருக்குக் கரும்புச் சாறு வழங்கினார். தொண்டர்களில் சிலர், கரும்புச் சாற்றுக்குப் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அங்கு வந்த அண்ணல், ஓர் இளைஞர் ஏதோ தகராறு செய்து கொண்டிருப்பதைக் கண்டார். உடனே, என்ன செய்தி'' என்று வினவினார். அருகிலிருந்த ஒரு தொண்டர் அண்ணலை நெருங்கி வந்து, ''அந்த இளைஞருக்கு ஒரு குவளை கரும்புச் சாறு கொடுக்கப்பட்டது; அவர் அதனை அருந்திவிட்டு, இன்னொரு குவளை கரும்புச் சாறு வேண்டும் என்று கேட்டார். கொடுக்க முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதனால் அந்த இளைஞர் சண்டை போடுகிறார்''—என்று விளக்கம் செய்தார். காந்தியடிகள் ஒருவழியாக அனைவரையும் சமாதானம் செய்து—அனைவரையும் நல்ல விதத்தில் உபசரிக்கச் செய்துவிட்டுச் சென்றார்.

சில ஆண்டுகள் கழிந்தன!

ஒரிசாவில் காங்கிரஸ் அமைச்சரவை ஏற்பட்டது. அமைச்சரவையில் இடம் பெற்ற ஒருவர், ஒரிசாப் பிரச்சனைகளைப் பற்றிக் காந்தியடிகளிடம் கலந்து பேசுவதற்காக வார்தாவுக்கு வந்தார்.

ஆசிரமத்தில் உள்ள ஊழியர்களில் சிலர் அவரை வரவேற்றுவிட்டு, அவரது வருகையைக் காந்தியடிகளிடம் தெரிவிக்கச் சென்றார்கள்.

சில விநாடிகளில் ஆசிரமப்பெண்களில் ஒருத்தி, ஒரிசா அமைச்சரின் கரத்தில் ஒரு குவளை கரும்புச் சாறு தந்தாள்.

''இது எதற்கு?''—அமைச்சர் வியப்புடன் கேட்டார்.

''நீங்கள் கரும்புச் சாற்றை மிக விரும்பி அருந்துவீர்கள் என்றும் உங்களுக்கு ஒரு குவளை கரும்புச் சாறு அளிக்க வேண்டும் என்றும் காந்தியடிகள் தெரிவித்தார்கள்''—புன்னகையுடன் கூறினாள் அந்தப் பெண்.

அமைச்சர் வியப்படைந்தார். பிறகு சிறிது நேரம் சிந்தனை செய்தார். பதினெட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரிசாவில் காந்தியடிகளின் முன்னிலையில் கரும்புச் சாறு குடிப்பதற்குப் போட்டியிட்டது நினைவுக்கு வந்தது. காந்தியடிகளின் நினைவாற்றலை வியந்தபடி, கரும்புச் சாற்றைப் பருகினார்.

காந்தியடிகளைச் சந்தித்து, தம் வியப்பையும், நன்றியையும் தெரிவித்து வணங்கிச் சென்றார் இளைஞராகவும்—ஒரிசா அமைச்சராகவும் திகழ்ந்த திரு நித்யானந்த கனுங்கோ!





## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண். 226, சென்னை-600001.

தந்தி: "அப்பாங்க்" தொலைபேசி எண்: 20367, 28068

எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும்; விவசாயத் தொழிலுக்கும் உதவி செய்யும்.

**வட்டி விகிதங்கள்**

(வருடத்திற்கு %)

| | |
|---|---|
| நடப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | வட்டி இல்லை. |
| சேமிப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | 4·00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது).

காலாந்திர கணக்கு:—ரூ. 1,000/-ம் அதற்கு மேலும்;

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை ... ... ... ... | 2·75 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை ... ... ... ... | 3·25 |

நிரந்தர கணக்கு:—ரூ. 100/-ம் அதற்கு மேலும்:

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 6.00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய ... ... ... | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் ... ... ... ... ... ... | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000/-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேல் குறிப்பிட்டதைவிட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

தொடர் கணக்கு: தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128/50 | 201 | 278 | 362/50 | 452 | 548/50 |

குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி,
துணைத் தலைவர்.

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.

நெ. 11, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை - 600007.

தொலைபேசி எண் : 30800 — தந்தி : "ஹவுஸ்பாங்க்"

தபால் பெட்டி எண் : 486

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி. எஸ்ஸி., பி.எல்., எம். எல். ஏ.
உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை.
பொருளாளர் : திரு என். பழனிசாமி. எம். ஏ.

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... ... | ரூ. 2·5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... | ரூ. 1,87,69,500 |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை. | ரூ. 10,12,30,217 |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.

| | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு |
|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ... ... ... | ரூ. 25,000 |
| கிராமப்புறங்களில் புதியவீடு கட்ட ... ... ... | ரூ. 10,000 |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்... | ரூ. 10,000 |

பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.
இணைப்பதிவாளர்—செயலாளர்.

ESTD : 213-52. — Govt. Regd. 3072.

தபால் மூலம்

## இலவசக் கல்வி போதனை

"F குரூப்" வகுப்புகள் ஆரம்பம் : 11—10—1973

ஆண், பெண் இருபாலரும் கீழ்க்கண்ட வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்று 1973-74-ம் வருட சர்க்கார்—பல்கலைக்கழக தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதற்கு உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி பயிற்சி அளிக்கப்படும்.

1. S.V.B.A., B.Com., (P.U C. தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 2. பீகார் B.A., B.Com., B.Sc., (S.S L.C. (அ) மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்). 3. போபால்-டெல்லி—ஆக்ரா P.U.C. (S.S.L.C. தவறியவர்களும் — தேறியவர்களும், 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும் எழுத தகுதி உடையவர்கள்) 4. M.A., L.L.B. (Degree holders are eligible). 5. சென்னை, மதுரை, ஆந்திரா மெட்ரிகுலேஷன். 6. மதுரை-சென்னை P.U.C. 7. தமிழ் வித்துவான் - புலவர் வகுப்புகள். 8. கைத்தறி நெசவு. 9. விவசாயம். 10. ஓவர்சியர். 11. போஸ்டல் கிளார்க். 12. போஸ்ட்மேன். 13. கிராம மணியம்-கர்ணம். 14. ஹோமியோபதி டாக்டர். 15. பேசிக் ஆங்கிலம். 16. பிரி-மெட்ரிக். 17. சர்விஸ் கமிஷன். 18. அக்கவுண்டன்ஸி. 19. S.S.L.C. (XI Std.) எட்டாம் வகுப்பு, III, IV, V படிவம் வாசித்துள்ள மாணவர்களும், மாணவியர்களும் S.S.L.C. தேர்வில் கலந்து கொள்ளலாம். 20. D.Com., B.Com., M.Com., (S S.L.C. (அ) P.U.C. தேறியவர்களும், தவறியவர்களும் கலந்து கொள்ளலாம்). 21. கம்பாசிடர்.

மேற்கண்ட வகுப்புகளின் முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

—தமிழகத்தின் தனிப்பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்—

### ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்,

ரிஷிவந்தியம் S. O. தென்ஆற்காடு ஜில்லா, தென்இந்தியா.

கிளைகள்: சென்னை, சிலோன், மலேசியா, தென் ஆப்பிரிக்கா, மாரிஷஸ்.


# பொருளாதாரச் செழிப்புக்கு வழிவகுக்கும் திட்டம்

தமிழகம் செழிப்படைவதற்கு உதவும் நீண்ட காலத் தொலைநோக்குத் திட்டத்தின் ஓர் அங்கமாக ஐந்தாண்டுத் திட்டத்தைத் தமிழகம் அணுகுகிறது. மாநில திட்டக்குழு, 1984-ஆம் ஆண்டுடன் முடியக்கூடிய 12 ஆண்டுக் காலத்திற்கு வரைவுத் திட்ட அமைப்பைத் தயாரித்துள்ளது. இத் திட்டம் மற்றவைகளுடன் கூட, கீழ்கண்ட முக்கிய இலட்சியங்களை எய்திட வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.

(அ) நிலையான விலைவாசியில், மாநிலத்தின் தனி மனித வருவாயை இரட்டிபாக்குதல்.

(ஆ) ஏழ்மை மற்றும் சமுதாய-பொருளாதார ஏற்றத் தாழ்வை அகற்றுதல்.

(இ) வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே போக்குவதுடன், வேலைவாய்ப்பின்மையைக் குறைத்தல்.

(ஈ) மாநிலத்தின் சமுதாய - பொருளாதார அமைப்பைக் காலத்திற்கு ஏற்ற வகையில் நவீனப்படுத்தல்.

பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக-நீதியுடன் கூடிய நல் வாழ்விற்கும் வழி வகுக்கும் [illegible] இலட்சியங்களின் அடிப்படையிலேயே, மைய அரசிடம் அளித்துள்ள வரைவு ஐந்தாவது திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

மாநில திட்டக்குழு, 1972 முதல் 1984-ஆம் ஆண்டு வரையான காலத்திற்குக் தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரிக்க, தொழில் மற்றும் பல்வேறு வாழ்வுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பிரதிநிதிகள் அடங்கிய பல செயல் அணிகளை (Task Forces) அமைத்தது. அச்செயல் அணிகள் அளித்த அறிக்கையின் அடிப்படையில், தமிழ் நாட்டிற்குரிய நீண்டகால தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் மாநில திட்டக்குழு ஈடுபட்டுள்ளது. இப் பணியின் அடிப்படையில், ஐந்தாவது திட்ட காலத்துக்குரிய ஒரு வரைவுத் திட்டத்தையும் மாநில திட்டகுழு தயாரித்து அதை 1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ் நாடு அரசுக்கு அனுப்பியது. மாநில திட்டக்குழுவின் செயல் அணிகளுடைய செயலாளர்களும் அடங்கிய பல்வேறு அலுவல் குழுக்களில் (Working Groups) அரசு மட்டத்தில் இத் திட்டம் கலந்து பேசப்பட்டது. மாநில திட்டக்குழு அளித்த திட்டம், அலுவல் குழுக்களின் பரிந்துரை ஆகியவற்றின் அடிப்படையில் தற்பொழுது அளிக்கப்பட்டுள்ள வரைவுத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

### மாவட்டத் திட்டங்கள்!

கீழ்மட்டத்திலிருந்து திட்டமிடவேண்டியது மிகவும் இன்றியமையாதது என்ற கருத்தைக் கொண்டுள்ள தமிழ் நாடு அரசு, மாநிலத்தில் உள்ள 23 வளர்ச்சி மாவட்டங்களுக்கும் உரிய மாவட்டத் திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான நிருவாக அமைப்புகளை ஏற்படுத்தியது. இப்பணியின் முழுப் பொறுப்பையும் மாநில திட்டக் குழு ஏற்றுள்ளது. இந்த மாவட்டத் திட்டங்களை, கிடைக்கக் கூடிய வருவாய் அமைப்பிற்குள்ளும், இறுதியாக அனுமதிக்கப்பட்ட மாநிலத் திட்டத்திற்குள்ளும் அடங்கச் செய்யும் பணி அண்மையில் துவக்கப்பட்டுள்ளது. மையத் திட்டக் குழுவுடன் கலந்து பேசி, மாநிலத் திட்டம் பற்றிய இறுதி முடிவு எடுக்கப்பட்ட பின், மாவட்டத் திட்ட அமைப்புக்களுடன் மேற்கொண்டு பேச்சு வார்த்தைகள் துவக்கப்படும். இதன் பயனாய், மாநிலத் திட்டத்துடனும், தேசியத் திட்டத்துடனும் ஒருங்கிணைந்த மாவட்டத் திட்டங்கள், ஐந்தாவது திட்ட காலத் துவக்கத்தில் நிறைவேற்றுவதற்குத் தயாரான நிலையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நல்வாழ்வு அளிப்போம்!

தனி மனித வருவாய் என்ற அளவில் பொருளாதார வளர்ச்சியை அளவிடுதல் அவசியமாகும்; ஆனால் பொது மக்களின்

வளர்ச்சியை எடுத்துக்காட்டும் போதிய அறிகுறியாக அமையாது. பொது மக்களுக்கு அதிக அளவில் நல்வாழ்வு கிடைக்கச் செய்வதே நமது இறுதி இலட்சியமாக இருக்க வேண்டும் என்று நாங்கள் நினைக்கின்றோம். அதிக அளவு நல்வாழ்வு அளிக்க வேண்டும் என்ற முக்கிய இலட்சியத்திற்கு உதவிடும் அளவிற்கே, தனி மனித வருவாய் வளர்ச்சி பயன் தரத்தக்கது.

ஏற்றத் தாழ்வைக் குறைத்தல்.

ஏழ்மையைப் போக்குதல்:

வேலையில்லாமையை அறவே நீக்குதல்.

ஆகியவையே நிகர பொருளாதார வளர்ச்சி, பொது மக்களின் சமூக நல்வாழ்வு ஆகியவைகளை அதிகப்படுத்தக் கூடிய முக்கிய கருவிகளாகும்.

**வேலை வாய்ப்பைப் பெருக்கிடுவோம் !**

வேலை வாய்ப்பு அளிப்பதென்பது திட்டத்தின் முக்கிய இலட்சியங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்று தமிழ் நாடு விரும்புகிறது. வேலை வாய்ப்பில்லாத கிராமபுற மக்கள், வேலை வாய்ப்பில்லாத படித்தவர்கள் ஆகியவர்களின் தொகை அதிகமாகி வருவது, சமூகப் பொருளாதார உறவின் அமைப்பையே உடைத்துவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது! சாலைகள், வீட்டு வசதிகள், குடிநீர் வழங்கல் ஆகிய இன்றியமையாத அடிப்படைத் தேவைகளை உருவாக்கிட வல்ல மாபெரும் வேலை வாய்ப்பு நல்கும் திட்டங்கள், நம்முடைய மேம்பாட்டு முயற்சிகளில் இணைக்கப்பட வேண்டும். தமிழ் நாட்டின் வருவாய் குறைந்த நிலையிலேயே இருப்பதால் சாலைகள், வீட்டு வசதிகள், குடி நீர் வழங்கல் ஆகியவற்றிற்காக ஓரளவிற்கே ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒதுக்கீடுகளை அதிகப்படுத்த மைய அரசு, அதிக வருவாய் அளித்திட வேண்டும்; இந் நோக்கத்தின் அடிப்படையில் மைய அரசு தன்னுடைய உற்பத்திக் கொள்கைகளைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்.



**ஏழ்மையை அகற்றுவோம் !**

ஏழ்மையை அகற்றுவது ஒரு முக்கிய இலட்சியமாகும்! இது தனி ஒரு திட்டத்தினால் இயலக் கூடியதல்ல! திட்டங்களின் முழுக் கட்டுக்கோப்பின் பயனாகவே இந் நிலை மலரும்! இந்நிலை மலருவதற்குப் பல்வேறு தன் முயற்சித் திட்டங்களைத் தமிழ் நாடே முதன் முதலாகத் துவக்கியுள்ளது! நகர்ப்புற ஏழைகளின் வருவாயைப் பெருக்கிடுவதற்கு மறைமுகமாக வழி செய்யும் மாபெரும் குடிசை மாற்றுத் திட்டத்தைத் தமிழ் நாடு துவக்கியுள்ளது. கிராமங்களில் வீடுகட்டிக் கொள்ள இடமில்லாவதர்களுக்கு 4·23 இலட்சம் வீட்டு மனைப் பட்டாக்களை அளித்துள்ளதும், சாகுபடி செய்து வரும் குத்தகைதாரர்களை நில உரிமை உடையவர்களாக ஆக்கியதும், 3·29 இலட்சம் நிலமற்ற ஏழைகளுக்கு 6·41 இலட்சம் ஏக்கர் நிலங்களைப் பட்டா செய்து கொடுத்ததும் நான்காவது திட்டக் காலத்தில் தமிழ் நாடு மேற்கொண்ட முன்னோடித் திட்டங்களாகும். இவ்வகையில் மேலும் தீவிரமாகச் செயல்பட ஐந்தாவது திட்டம் வழிவகுக்கும். ஏற்றத் தாழ்வைக் குறைத்தல், ஏழ்மையைப் போக்குதல் ஆகிய நோக்கத்தின் அடிப்படையில், பிற்பட்ட இனத்தவரின் நல்வாழ்விற்கு வழிசெய்யும் திட்டங்களுக்குத் தமிழ்நாடு முக்கியத்துவம் அளிக்கிறது. பிற்பட்ட இனத்தவரின் நல்வாழ்விற்கான திட்டங்களில் ஐந்தாவது திட்டத்தில் 91·56 கோடி ரூபாய் மொத்தத்தில் செலவிடப்படும். தமிழ் நாட்டின் ஏழைக் குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச் சத்துணவுப் பற்றாக்குறையைப் போக்கிட 5,000 குழந்தைகள் காப்பகம், 1,000 ஊட்டச் சத்துணவு மறுவாழ்வு நிலையங்களை ஏற்படுத்தி, தமிழ் நாடு ஊட்டச் சத்துணவு திட்டத்தை நிறைவேற்றும்.

**உணவு உற்பத்தியை உயர்த்திடுவோம் !**

வரைவு ஐந்தாவது திட்டம் 67·00 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி, 3·50 இலட்சம் மெட்ரிக் டன் பருப்பு உட்பட மொத்தம் 90·50 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி என்னும் இலட்சியத்தை எய்திடுவதற்குத் தலையாய முக்கியத்துவம் அளிக்கிறது.

**மின்விசைக்கு முதலிடம் !**

வருவாய் ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் மின்விசை மற்றும் பாசனத்திற்கே மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பெற்றுள்ளது. மூலப்பொருள்களையும், இதர பகுதிகளிலிருந்து பெறப்படும் இடைநிலைப் பொருள்களையும் பதப்படுத்துவதற்கு மூலகம் மற்றும் இதர ஆதாரங்கள் மாநிலத்தில் குறைவாக இருப்பதால்—உள்ளூர்த் தொழிற்சாலைகளுக்கு உதவிடுவதற்குப் போதிய மின்வசதி அளித்திட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அது போலவே, ஏறத்தாழ மாநிலத்தின் பாசன ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப் பட்டுவிட்டதால், நாம் பெருமளவில் நில நீரையும், அதை வெளியே கொண்டு வரும் பம்புசெட்டுகளுக்கு மின்சாரத்தையும் நம்பி இருக்க வேண்டியுள்ளது. மின்விசை உற்பத்திக்கும், அதை வழங்குவதற்கும் ஐந்தாவது திட்டத்தில் 440 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பாசனத்திற்காக 188 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதில், தற்பொழுதுள்ள பாசனத் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள உதவும் திட்டங்களுக்கும், பாசன நிருவாக மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் ஏறத்தாழ 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்கு 61 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நாட்டின் உள் அமைப்பு மேம்பாடு, வேலைவாய்ப்பு ஆகிய கண்ணோட்டத்தின் அடிப்படையில் சாலைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. கிராமப்புறச் சாலைகளுக்கு-குறிப்பாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 5 ஆண்டுகளுக்கு 55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற குடிநீர் திட்டம் 82 கோடி ரூபாய் செலவில் அமையும். கல்வி உட்பட இதர சமூகப் பணிகள், மொத்த ஒதுக்கீட்டில் 24 சதம் அளவைப் பெற்றுள்ளன.

## மேதையா? பைத்தியமா?

அண்மையில் காலமான உலகப் புகழ் பெற்ற மார்டன் ஓவியர் பிக்காசோவிடம் மூடப் பழக்க வழக்கங்கள் பல மண்டிக் கிடந்தன. அவற்றில் ஒன்று இது.

அவர் முடிவெட்டிக் கொள்ளாமலேயே பல ஆண்டுகளைக் கழித்தார். ஒருவர் முடிவெட்டிக்கொண்டால் அவரது வலுவேபோய்விடும், எதிரிகள் அவரை வெற்றி கொள்வார்கள் என்னும் மூடக் கொள்கை ஐரோப்பாவில் நிலவி வந்தது. தப்பித் தவறிச் சலூனுக்குச் சென்று முடிவெட்டிக் கொள்பவர்கள், தங்களது முடிகளைத் தாங்களே எடுத்துக் கொண்டு வந்து அழித்துவிடுவார்கள். ஏன் என்றால் எதிரிகளின் கையிலே அவை சிக்கினால் முடியின் சொந்தக்காரர்களுக்கு ஆபத்து நேரும் என்பது கருத்து. அதனால் பிகாசோ, சலூனுக்குச் செல்வதில்லை. முடியை வெட்டுமாறு தனது மனைவியிடம் சொல்வார்; அந்த அம்மையாரும் அவ்வாறே செய்வார்; மனைவி அவ்வாறு செய்யாவிட்டால் தாமே கத்தரிக்கோல் கொண்டு தமது முடியை வெட்டிக் கொள்வார்; வெட்டப்பட்ட உரோமங்களை எல்லாம் அவரே எடுத்துச் சென்று அழித்துவிடுவார்.. இந்த வழக்கத்தை, பிக்காசோ மிக நீண்ட காலத்திற்குக் கைக் கொண்டிருந்தார். பிறகு, ஸ்பானியரான ஒரு முடிவெட்டும் தொழிலாளி பிகாசோவின் நம்பிக்கைக்கு உரியவராகவே, அவரிடம் முடி வெட்டிக் கொள்ளுவார். அப்போது கூட அந்தத் தொழிலாளியின் கத்தரியைப் பயன்படுத்த அனுமதிப்பதில்லை. தாம் சொந்தமாக வைத்திருக்கும் கருவியையே கொடுத்துப் பயன்படுத்தினார். முடிவெட்டி முடிந்ததும், உரோமக் கற்றைகளை பிக்காசோ, மிகுந்த கவனத்துடன் எடுத்து அழித்து விடுவார். பிகாசோவின் இது போன்ற பல நடவடிக்கைகளைக் கவனித்த ஒரு விமரிசகர் 'அவர் ஓர் அரைப் பைத்தியம்' என்று கூறினார்.

**திட்டத்தின் பரிமாணம் !**

மாநில ஐந்தாவது திட்டத்தின் பரிமாணம்.

(அ) மாநிலத்தேவைகள்.

(ஆ) திட்டங்களைச் செயல்படுத்தும்வேகம்.

(இ) கிடைக்கும் வருவாய் ஆதாரங்கள்.

ஆகிய மூன்றின் அடிப்படையில் அமைகிறது. கடந்த நான்கு திட்டங்களில், நாம் செயலாற்றிய வேகம் பின்கண்டுள்ளவாறு உள்ளது.

| | ரூபாய் கோடியில் |
|---|---|
| முதல் திட்டம்.. | 80 |
| இரண்டாவது திட்டம்.. | 188 |
| மூன்றாவது திட்டம்.. | 348 |
| மூன்று ஆண்டுத் திட்டங்கள்.. | 267 |
| நான்காவது திட்டம்— | |
| (1) திட்டமிட்டது | 624 |
| (2) அனுமதிக்கப் பட்டது | 519 |
| (3) எதிர்பார்க்கும் செலவு | 557 |
| 1973-74-ஆம் ஆண்டுத் திட்டத்தில் எதிர்பார்க்கும் செலவு | 134 |

திட்டத்தின் பௌதீக நிலை அடக்கம் வளர்ச்சியின் தேவைக்கு ஏற்ப அமைந்துள்ளது. பண முதலீட்டின் அளவினை வைத்து மட்டுமே திட்டத்தை அளவிடமுடியாது. உண்மையான உள்ளடக்கம் கணிப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டால்தான், ஐந்தாவது திட்டத்திற்கு, திட்ட அளவை இருமடங்காக்குதல் என்ற சூத்திரம், (Formula) பொருள் உடையதாக இருக்கும். இக்கருத்தின் அடிப்படையில் பணவீக்கத்தை ஈடுகட்ட, நான்காவது திட்ட அளவை விட 100 சதம் அதிகமாக ஒதுக்குவது அவசியமாகும். இதன் அடிப்படையில்-தற்பொழுதுள்ள விலைவாசியில்—ஐந்தாவது திட்ட அளவை 1,500 முதல் 1,600 கோடி ரூபாய் எனக் கொள்ளுதல் பொருத்தமானதாக இருக்கும்.

உதாரணமாக, குழந்தைகளுக்கு வரும் ஆஸ்துமா நோய், அவர்கள் பருவம் அடைந்தவுடன் குணமாகிவிடும். இருந்தபோதிலும் ஓமியோபதி சிகிச்சை மூலம் இந்நோயிலிருந்து விரைவாக முழுவதும் விடுபடலாம். ஆஸ்துமா நோய் கிட்டத்தட்ட 10-வது வயதில் ஒரு சிறுவனைப் பிடிக்கிறது. சிறுமிகளைவிடச் சிறுவர்கள்தான் இந்நோயினால் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

பரம்பரையாக ''அலெர்ஜி' ஏற்படக் கூடிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்குத் தொண்டைச் சதை வளர்ச்சியைத் தடுக்க நவீன மருந்துகளைக் கொடுத்தாலோ அல்லது அறுவைச் சிகிச்சை செய்தாலோ சாதாரணமாக அவர்களது சுவாசப் பைகளில் சில விளைவுகள் ஏற்படுகின்றன. ஆகையால், இத்தகைய குழந்தைகளுக்கு ஓமியோபதி மருத்துவம்தான் சிறந்ததாகும். சரியான ஓமியோபதி மருந்துப் பொருட்கள் கிடைக்கவில்லை என்றால்தான் இத்தகைய குழந்தைகளுக்கு நவீன மருந்துப் பொருட்களைக் கொடுக்க வேண்டும். இத்தகைய குழந்தைகளுக்கு அடிக்கடி தொண்டையில் சதை வளர்ச்சி ஏற்பட்டுத் துன்பப்படுகிறார்கள். மேலும், நவீன மருந்துப்பொருட்களால் இது குணமடைவதில்லை. 40 வயதுக்கு மேல் ஒருவருக்கு ஆஸ்துமா நோய் பிடித்தால் அவர் மிகவும் துன்பப்படுவார். ஆனால் இத்தகைய நோயாளிகளையும் ஓமியோபதி மருத்துவ முறை மூலம் பூரணமாகக் குணப்படுத்த முடியும் என்று ஓமியோபதி மருந்துவர்கள் கூறுகின்றனர். இந்நோயை ஓரளவு குணப்படுத்திவிட்டு, பிறகு சிகிச்சையை நிறுத்திக் கொள்ளக் கூடாது. இந்நோயை மறைத்து வைக்கவும் கூடாது. இவ்வாறு செய்யாமல் இருந்தால் செலவும் மிச்சப்படும். நோயும் கணிசமான அளவுக்குக் குறையும்;

தற்போதுள்ள நவீன மருந்துப் பொருட்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால், உடலில் ஏற்படும் விளைவுகளின் எண்ணிக்கையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளது. தொடர்ந்து பல புதிய மருந்துப் பொருட்கள் புகுத்தப்பட்டு வருவது, நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. இம்மருந்துகள் தனி மனிதனின் உடல்நிலையில் பல்வேறு மாறுதல்களை விளைவிக்கின்றன. இதனால் சில பொருட்கள் சிலருக்கு ஒத்துக்கொள்வதில்லை. ஆனால், இதற்காக நாம் நவீன மருந்துகளை உபயோகிக்காமல் இருக்க முடியாது. ஏனெனில், அவை ஓரளவிற்கு நோய்களைக் குறைக்கின்றன. மூச்சுக் குழல், மூக்கு போன்ற சுவாச உறுப்புகளில் நீர்ப்பிடித்தல் தொண்டையில் சதை வளர்ச்சி, போன்றவை ஏற்பட்டால், மிகப் பிரமாதமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஆனால் இத்தகைய நோய்களை ஓமியோபதி மருத்துவத்தின் மூலம் மிகச் சிறந்த முறையில், எளிதில் குணப்படுத்தலாம்.

ஓமியோபதி மருந்துப் பொருட்கள் எவ்வித அலர்ஜியையும் ஏற்படுத்துவதில்லை. மேலும், உடலில் நச்சுப் பொருட்களினால் ஏற்படும் விளைவுகளையும் ஓமியோபதி மருந்துகள் தடுக்கின்றன.

தற்போதுள்ள எல்லா மருத்துவமனைகளிலும் நவீன மருத்துவர்களுடன், திறன் மிக்க ஓமியோபதி மருத்துவர்களும் பணிபுரிய வேண்டும் என்று ஓமியோபதி மருத்துவ முறையை ஆதரிப்பவர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

சாதாரணமாக ஏற்படக்கூடிய அலெர்ஜியை மிக எளிய முறையில் ஓமியோபதி மருந்துகள் மூலம் குணப்படுத்துவது பற்றிய தீவிரப் பயிற்சி வகுப்புகள், நவீன மருத்துவர்களுக்காக நடைபெற வேண்டும்.

சிக்கன வழியில், சிறந்த முறையில் உடல் நோயை அதிக அளவுக்குக் குறைக்க ஓமியோபதி மருத்துவ முறை மிகவும் அவசியமாகும்.

## வெண்பாப் போட்டி - 56

அரசு போக்குவரத்துக் கழகங்களில் தொழிலாளர்களுக்கு முதலீட்டில் பங்கும் நிருவாகத்தில் பொறுப்பும் அளிக்கும் தமிழக அரசின் சமதர்மச் சாதனையைப் பற்றி வெண்பா எழுதுக.

முடிவு நாள்: 2—6—1973.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.









ஆட்டுக்கு யாருக்குச் சொந்தம்?

இதைப் பற்றி இரண்டு பெண்களுக்கிடையே தகராறு வந்தது.

முதல் பெண் ''இது என் ஆடுதான். நான்தான் இதை வளர்த்து வருகிறேன்!'' என்று சொந்தம் கொண்டாடினாள்.

இரண்டாமவளோ ''இல்லை, இல்லை. இந்த ஆடு எனக்குத்தான் சொந்தம். இல்லாவிட்டால் இதற்குப் பணத்தைச் செலவழித்துத் தீனி போட்டு வளர்ப்பேனா?'' என்று உரக்கக் கத்தினாள்.

இப்படி இருவருமே ஆடு எனக்குச் சொந்தம் என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தால் யாருக்குப் பயன் கிடைக்கப் போகிறது? பிறகு இருவரும் ஒரு முடிவுக்கு வந்தார்கள்' அதன்படி நேரே காவல் நிலையம் சென்று புகார் செய்தார்கள்.

இருவரும் ஆடு என்னுடையதுதான் என்று பிடிவாதம் பிடித்ததைக் கண்ட காவல் நிலைய அதிகாரிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆடோ, அனைவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தது!

காவல் நிலைய அதிகாரிக்குத் திடீரென ஒரு யோசனை வந்தது. உடனே அவர் இருவரையும் பார்த்து. ''இந்த ஆட்டை இங்கே விட்டு விட்டு நீங்கள் வீட்டுக்குப் போங்கள். இங்கிருந்து ஆடு யார் வீட்டுக்குப் போகிறதோ அந்தப் பெண்ணுக்குத்தான் அது சொந்தமாகும் என்று தீர்ப்புக் கூறினார்.

அதற்கு இருவரும் சரியென ஒப்புக் கொண்டு தத்தம் வீட்டுக்கு விரைந்து சென்றார்கள். 'ஆடு நம்ம வீட்டுக்குத்தான் வரப் போகிறது!'' என்று அதை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள் ஒருத்தி. 'நிச்சயம் அந்த ஆடு என்னைத் தேடித்தான் வரும்!' என்று ஆவலுடன் காத்திருந்தாள் மற்றொருத்தி.

இரண்டு பேரும் வீட்டை அடைந்ததும் காவல் நிலைய அதிகாரி ஆட்டை அவிழ்த்து விட்டார். ஆடு யார் வீட்டுக்குப் போகிறது என்பதைப் பார்க்கப் பலர் அதன் பின்னாலேயே சென்றனர். ஆடு நேரே தன் வீட்டுக்குச் சென்றது. அதாவது இதுவரை தான் யாரிடம் இருந்து வந்ததோ, அந்தப் பெண்ணிடமே வந்து சேர்ந்தது. அவள் அன்புடன் அதைத் தடவிக் கொடுத்துப் பெரிதும் மகிழ்ந்தாள். ஆடும் துள்ளிக் குதித்தது. இதைப் பார்த்தவர்கள் 'இவள் தான் ஆட்டுக்குச் சொந்தக்காரி!'' என்று பேசிக் கொண்டார்கள்.

ஆடு தனக்குத் தான் சொந்தம் என்று வீண் பிடிவாதம் பிடித்த மற்றவளோ, வெகு நேரமாகியும் ஆடு வராததைக் கண்டு ஏமாற்றமடைந்தாள்.

பொய்பேசி ஆட்டைத் தனதாக்கிக் கொள்ள நினைத்தவளுக்கு என்ன கிடைத்தது? அவமானமும், ஏமாற்றமும் ஏற்பட்டது!

பிறர் பொருளின் மேல் ஆசை வைப்பதும், அதைக் கவர நினைப்பதும் மனிதனுக்கு அழகில்லை என்பது இந்த உண்மைச் சம்பவத்திலிருந்து தெரிகிறதல்லவா?

அண்மையில், உண்மையில் நடந்த இந்த ஆட்டுக்கடா வழக்கைப் போல, அந்தக் காலத்திலும் ஒரு குதிரை வழக்கு நடந்தது.

ஒருவர் குதிரையிலேறிக் கொண்டு கடைத்தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு முடவன் போவோர் வருவோரிடம் தனக்கு உதவி செய்யும்படி வேண்டிக் கொண்டிருந்தான். குதிரையில் வந்தவர், முடவன் மீது இரக்கப்பட்டுப் பணம் கொடுத்து உதவினார். பணத்தைப் பெற்றுக் கொண்ட முடவன், ''ஐயா! என் வீடு இங்கிருந்து ஒரு கல் தொலைவில் இருக்கிறது. எனக்கோ கால்கள் இல்லை. ஆகவே, தயவு செய்து என்னை அங்கே கொண்டு போய் விட்டுவிட்டால் மிகவும் நன்றியுடையவனாயிருப்பேன்!'' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

குதிரையில் வந்தவரும் சரியென அவனைத் தம் குதிரையில் ஏற்றிக் கொண்டார். குதிரை

## 1,500 கோடி கேட்பது நியாயமா?

திட்டங்களை 1973-74- ஆம் ஆண்டில் நிறைவேற்றும்வேகத்தின் அடிப்படையிலும், திட்டத்தின் அளவு பற்றிய பிரச்சினையை மறுவழியில் அணுக வேண்டும். கிராமப்புற சாலைகளுக்கான ஒதுக்கீடு, நேரடியாக மைய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுவதும்,—எதிர்காலத்தில் மாநிலத் திட்டத்தின் ஓர் அங்கமாகச் செயல்பட விருப்பதுமான—வேலைவாய்ப்புத்திட்டம், நமது மின்விசை, குடிநீர்த் திட்டங்களுக்காக நிறுவனங்கள் அளிக்கும் நிதி ஆகியவைகளைச் சேர்த்து, இந்த ஆண்டின்ஒதுக்கீடு 160 கோடி ரூபாயாக இருக்கும்.



நான்காவது திட்டத்தின் முதல் ஆண்டின் ஒதுக்கீடு 80 கோடி ரூபாயாக இருந்தது. ஒதுக் கீட்டில் ஆண்டு உயர்வு சராசரியாக 20 சத அளவில் இருந்துள்ளது. இதே அடிப்படையில், 1974–75-ஆம்ஆண்டிற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டியது இயலக் கூடியதும், தேவையானதுமாகும். இதே அடிப்படையில் திட்டத்தின் நடு ஆண்டிற்கு 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு தேவைப்படுகிறது. இது, மீண்டும் திட்டத்திற்கு 1,500 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டும் என்பதை நியாயமென நிரூபிக்கிறது.

மாநிலத் திட்டக் குழு, மூலதனச் செலவு உற்பத்தி விகிதம் பற்றியும், வேலை வாய்ப்புப் பெருக்கம் பற்றியும் விரிவாகக் கணக்கிட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்க்கும் பொழுது, தமிழ் நாட்டிற்கு 1974 முதல் 79 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு மொத்தம் 3,900 கோடி ரூபாய் மூலதனமிட வேண்டும் என்று மாநிலத் திட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. இதில் ஏறத்தாழ 1,600 கோடி ரூபாயைத் தற்பொழுது மாநில அரசுத்துறை திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ள திட்டங்களுக்காகச் செலவிட வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு கணித்துள்ளது. (மாநில திட்டக் குழுவின் சூத்திரப்படி இத்தகைய திட்டங்கள் பல, மைய அரசுத்துறைத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படுமானல், மாநில அரசுத்துறை ஒதுக்கீட்டை 1,300 கோடி ரூபாய் எனக் காட்டலாம்). இவைகள் தற்பொழுது மாநில திட்டத்தில் காட்டப்பட்டுள்ளதால் திட்டத்தின் அளவு ஏறத்தாழ 1,500 கோடி ரூபாயை அடைகிறது. இக் கண்ணோட்டத்தின் அடிப்படையிலும், மாநிலத்தின் வளர்ச்சித் தேவைக்கு ஏற்பவும் நாங்கள் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 1,532 கோடி ரூபாய் ஒதுக்கீடும் 1974–75-ஆம் ஆண்டிற்குரிய ஆண்டுத் திட்டத்திற்கு 202 கோடி ரூபாய் ஒதுக்கீடும் கேட்டுள்ளோம்.

## மைய அரசின் உதவி கேட்கிறோம்!

பொதுத்துறையின் தேசியத் திட்டம் 34,800 கோடி ரூபாய் அளவில் அமையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதில் 15,600 கோடி ரூபாய் மாநில அரசுத் துறையில் அமையும். மீதி 19,200கோடி ரூபாய் மைய அரசுத் துறையில் அமையும். மைய அரசு, முதலீடு செய்வதில் நியாயமான பங்கினை மாநிலத்தில் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு எதிர்பார்ப்பது நியாயமானதாகும். இவ்வாறு செய்யப்படா விட்டால் மாநிலத்தில் மேலும் வளர்ச்சி ஏற்படுத்துவதற்கு மிகவும் இடையூறு ஏற்படும். கீழ்க்கண்டவைகள் மைய அரசுத்துறையின்கீழ் உள்ள — துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய—முக்கிய திட்டங்களாகும்.

1. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டி, அதிலிருந்து கிடைக்கும் அதிகப்படியான பழுப்பு நிலக்கரியைக் கொண்டு 1,000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய அனல் மின் நிலையம் ஏற்படுத்துதல்.
2. கரையோரத் துறைமுகமாகக் கடலூரை மேம்படுத்துதல்.
3. சேலம் இரும்புத் தொழிற்சாலை அமைக்கும் பணிகளைத் தீவிரப்படுத்துதல்.
4. கல்பாக்கம் அணுமின்சார நிலையத்தை விரிவுபடுத்தல்.
5. தூத்துக்குடியில் மற்றுமொரு அணுமின் நிலையம் அமைத்தல்.
6. காவிரி கழிமுகப் பகுதியிலும், தமிழ் நாட்டின் கடற்கரை யோரப் பகுதிகளிலும் எண்ணெய் வள ஆய்வுப் பணிகளைத் தீவிரப்படுத்தல்.
7. சென்னை — திருச்சிராப்பள்ளி—மதுரை—தூத்துக்குடி இருப்புப் பாதையை அகன்ற வழிப் பாதையாக மாற்றுதல்.
8. கரூர் — திண்டுக்கல் இடையே புதிதாக ஒரு அகன்ற வழி இருப்புப் பாதை அமைத்தல்.
9. சென்னைப் பெருநகர் பகுதியில் நிலைமாற்று முறைகளைப் பெருமளவில் கட்டுதல்.
10. சேதுசமுத்திரம் திட்டத்தை நிறைவேற்றுதல்.
11. தூத்துக்குடியில் கப்பல் கட்டும் தளம் அமைத்தல்.
12. தூத்துக்குடியில் தொழில் வள எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை ஏற்படுத்தல்.
13. காவிரி கழிமுகப் பகுதியில் ஓர் இராசயன உர ஆலை அமைத்தல்.
14. பாதுகாப்புத் தொழிற்சாலைகளை நிறுவுதல்.

(இந்திய அரசின் திட்டக்குழுவிடம் கொடுத்துள்ள தமிழ்நாட்டிற்கான ஐந்தாவது திட்டக் குறிப்பில் உள்ள முன்னுரையின் தமிழாக்கம்).

[தமிழாக்கம்: ஆர்.எம்.]



# விரைந்து முன்னேறும் வெள்ளி விழாச் சீரூர்



### உலகின் அச்சாணி எது?

உழவர் பெருங்குடி மக்களை ஒருங்கே பெற்ற கிராமம் தானே? கிராமமே இல்லை என்றால், நகரத்தின் நடப்புகள் கிரமமாக நடைபெற முடியுமா? உலகின் உயிர்நாடியாக விளங்கும் கிராமங்கள் வளமும் நலமும் பெற்றிடத் தமிழக அரசு பல வகையிலும் பெருந்துணை புரிந்து வருவதை தமிழகம் நன்குணரும்.

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஒரு குக்கிராமம். பெயர்: திம்ம சமுத்திரம் (சமுத்திரத்துக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.) இரண்டாண்டுகளுக்கு முன் இந்தக் கிராமத்துக்குப் போய் வருவதே பெரும்பாடாயிருந்தது. ஆனல், இன்று? அந்த நிலை அப்படியே மாறி, அந்தக் கிராமம் மறுமலர்ச்சி பெற்று விளங்குகிறது!

குடி தண்ணீர் வசதியோ, நல்ல சாலைகளோ, தெரு விளக்குகளோ இல்லாத திம்ம சமுத்திரம் இன்று அனைத்தையும் பெற்று அழகாய்க் காட்சியளிக்கிறது.

கிராமத்துக்குள் எங்களை ஏற்றிச் சென்ற ஊர்தி, சாலையில் தங்கு தடையின்றிச் செல்வதைப் பார்க்கிறோம்; தெருக்களில் மின்விளக்குகளை ஏந்திய தூண்கள் நிற்பதைக் காண்கிறோம்; தண்ணீர் இல்லாமல் பெண்கள் கண்ணீர் வடிக்கத் 'தேவையில்லை' என்று சொல்வது போல, மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டிருப்பதையும், அதற்கருகே பெண்கள் குழாய்களில் உடனுக்குடன் தண்ணீர் பிடித்துச் செல்லும் காட்சியையும் பார்க்கிறோம்; மனம் நிறைகிறது; மகிழ்ச்சி பொங்குகிறது!

அழகிய தெருக்கள்—ஆடவர் மகளிர் ஏர்த்தொழிலுக்குச் செல்லும் காட்சி—சிறுவர் சிறுமியர் ஏடு தூக்கிப் பள்ளி செல்லும் பாங்கு அனைத்தும் பார்த்து மகிழ்தற்குரியது.

விடுதலை வெள்ளி விழாவினைக் கொண்டாடும் முறையில், 'வெள்ளி விழாச் சீரூர்' என்ற பெயரில் எல்லா வசதிகளும் நிறைந்த புதுமைக் கிராமங்கள், மாவட்டங்கள்




பொதுவாக மருந்தென்றால் கசக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆனால், இனிக்கும் மருந்தொன்று இருக்கிறது. அதுதான் தேன்! இந்தத் தித்திக்கும் தேன் ஊட்டந்தரும் உணவாகவும், உடற்பிணிகளைப் போக்கும் அரு மருந்தாகவும் பயன்பட்டு வருகிறது.

பேரிச்சம்பழத்திற்கு அடுத்தாற் போல அதிக ஊட்டம் தருவது எது?

கிலோவுக்கு 3,200 கலோரி ஊட்டம் தந்து உடலுக்கு உரம் கொடுப்பது எது?

பாலைவிட 6 மடங்கு அதிகமாகப் பயன் தருவது எது?

எல்லாம் இந்த இனிக்கும் இன்னமுதான தேன்தான்!

தேனீக்கள் ஒன்று சேர்ந்து வாழும் இயல்புள்ளவை. அவை, கூட்டம் கூட்டமாக வாழ்கின்றன. ஒரு கூட்டத்தில் பல பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனி அலுவல்கள் உள்ளன. ஒரு தேனீக் கூட்டத்தில் ஒரு இராணி ஈ இருக்கும். அதுதான் அந்தக் கூட்டத்திற்கே தலைவி. ஆண் ஈக்களும் உள்ளன. இவற்றின் பணி இனவிருத்திக்கு உதவுவது மட்டும்தான். அடுத்தாற்போல் பணி ஈக்கள் உள்ளன. தேனீக் கூட்டத்தில் மிக அதிக எண்ணிக்கையில் இருப்பவை பணி ஈக்களே; தேனீக் கூட்டத்தின் நலனைப்பேணுவது இவற்றின் அலுவலாகும்.

தேனீக்கள் புழு அறைகளையும் தேன் அறைகளையும் பூசும் வேலைகளையும், கொண்டு வரும் உணவுப் பொருள்களைச் சேமித்துப் பாதுகாக்கும் வேலையையும் கவனித்துக் கொள்கின்றன. ஆண் ஈக்கள், குஞ்சுகள் ஆகியவற்றின் தேவைகளைக் கவனித்துக் கொள்வது, ஈ மெழுகை உற்பத்தி செய்வது, தேன் கூட்டைச் சுத்தி செய்வது ஆகியவையெல்லாம் கூட்டுக்குள் இருக்கும் இளம் ஈக்களின் பணிளாகும். 20, 25 நாட்கள் இத்தகைய வேலை செய்த பிறகு தான் அவை வெளியே பறக்கத் துவங்குகின்றன. வெளியே சென்று பூந்தேனைச் சேகரிக்கின்றன.

ஒரு சாதாரண தேனீக் கூட்டத்தில் 20,000 லிருந்து 30,000 வரை பணி ஈக்கள் இருக்கும். ஒவ்வொரு ஈயும் பலதடவை வெளியே பறந்து சென்று வரும். ஒவ்வொரு தடவையும் கிட்டத்தட்ட இரண்டு கிலோமீட்டர் வரை பறக்கும். ஒரு பணி ஈ தனது வாழ்நாளில் இலட்சக்கணக்கான மலர்களுக்குச் சென்று வரும்.

ஒரு ஈ ஒரு கிலோ தேனுக்குத் தேவையான பூந்தேனைச் சேகரிப்பதற்குப் பூமியை நான்கு தடவை சுற்றி வருவதற்குத் தேவையான தூரம் பறந்து செல்ல வேண்டியிருக்கும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்!

பூந்தேனை மலரிலிருந்து உறிஞ்சிய பிறகு, உமிழ்நீருடன் தேன் பையில் விழுங்குகிறது. தேன் பையில் பல வால்வுகள் உள்ளன. தேன் பையிலிருந்து தேனை மறுபடியும் வாய்க்குக் கொண்டுவர முடியும். பணித் தேனீயின் முன் பக்கத்து கால் ஒவ்வொன்றிலும் மயிர் வரிசைகள் உள்ளன. இதைச் சீப்பு என்று சொல்வார்கள். வயிற்றிலிருந்து வாய்க்குக் கொண்டுவரும் தேனை இந்தச் சீப்புக்களுக்கிடையேயுள்ள இடைவெளியில் வைத்திருக்கும். அந்த இடைவெளியில் தேன் நிறைந்ததும், அதன் மேல் மெழுகினால் பூசி விடுகிறது. ஒரு தேனீக் கூட்டம் நாலு கிலோ தேன் வரை சேகரிக்கும்.

தேனுக்குப் பல சுவைகளும், பலவிதமான நறுமணமும், வண்ணமும் உள்ளன. வெள்ளைத் தேனும் இருக்கிறது, மஞ்சள் தேனும்இருக்கிறது.

டெக்ஸ்ட்ரோஸ், லெவுலோஸ் எனும் இருவகை சர்க்கரைப் பொருள்கள் தேனில் அடங்கியிருக்கின்றன. வலிவான உடலுக்குத் தேவைப்படும் தாதுப் பொருள்களும், விட்டமின் சத்துக்களும் தேனில் அடங்கியுள்ளன.

200 கிராம், அதாவது 10 மேசைக் கரண்டி தேனை அருந்தினால் ஒரு லிட்டர் பாலையோ, 330 கிராம் இறைச்சியையோ, 8 ஆரஞ்சுப் பழங்களையோ, 10 முட்டைகளையோ உண்பதால் கிடைக்கும் சத்துப் பொருளை விட அதிகச் சத்துப்பொருள் கிடைக்கிறது என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்!

21 கிராம் [illegible] ஒரு மேசைக்கரண்டி தேன், 67 கலோரி ஊட்டம் தருகிறது. 1938-லேயே ஒரு அமெரிக்க விஞ்ஞானி தேனின் சத்துணவுச் சிறப்பை மெய்ப்படுத்திக் காட்டினார். அவர் பாலையும் தேனையும் மட்டுமே அருந்தி 12 வாரங்கள் அவரது வழக்கமான அலுவல்களை எந்தவிதச் சிரமமுமின்றிக் கவனித்து வந்தார்.

அதிகமாக வேலை செய்து களைப்புற்றிருக்கும் எந்த மனிதனும் 1 மேசைக் கரண்டி தேனை ஒரு கோப்பைத் தண்ணீரில் கலந்து அருந்தினால் உற்சாகமும் சுறுசுறுப்பும் பெற முடியும்.

கண்நோய், தொண்டைப்புண், இருமல், நீர்ப்பிடித்தல், மலச்சிக்கல், காய்ச்சல் ஆகியவற்றைத் தடுப்பதற்குத் தேனைப் பயன்படுத்துகிறார்கள். ஆயுர்வேத, சித்த மருத்துவ முறைகளில் தேனை மிகவும் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

இரத்தத்தைச் சுத்தப்படுத்துவதற்கும், நெருப்புப் புண்களுக்கும் இதைப் பயன்படுத்துவது உண்டு. டை பாயிட் அணுக்களைத் தேன் இரண்டே நாட்களிலும், நிமோனியா அணுக்களை நன்கே நாட்களிலும் வயிற்றுப் போக்குக் காரணமாக உள்ள அணுக்களை 10 நாட்களிலும் கொன்று விடுவதாக மதிப்பிட்டிருக்கிறார்கள்.

தேயிலை, காப்பி, பால் அல்லது எலுமிச்சம் பழச்சாற்றில் கலந்து தேனை அருந்தலாம். ரொட்டி, கேக், பிஸ்கட்டுகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் போது தேனைப் பயன்படுத்தினால் அவை நல்ல தரமுள்ளவையாகக் கிடைக்கின்றன.

தோல் பராமரிப்பு, அழகுப் பராமரிப்பு ஆகியவற்றுக்கான திரவங்களை உற்பத்தி செய்வதற்குத் தேனைப் பயன்படுத்துகிறார்கள். கறவைப் பசுக்களுக்குத் தேன் கொடுத்தால் அதிகப் பால் கிடைக்கிறது. பந்தயக் குதிரைகளுக்குத் தேன் [illegible]தால் அவை மேலும் வே[illegible] ஓட முடிகிறது.




விரைந்து சென்றது. முடவனின் வீடும் வந்தது.

" தம்பி ! இதோ உன் வீடு. இறங்கிக் கொள். நான் சீக்கிரம் போக வேண்டும். எனக்கு நிறைய வேலை இருக்கிறது... " என்றார் குதிரையில் வந்தவர்.

" என்ன ? என் குதிரையில் ஏறிக்கொண்டு என்னையே இறங்கச் சொல்கிறீரா ? அதெல்லாம் நடக்காது. பேசாமல் குதிரையைவிட்டு இறங்கி, வந்த வழியே போங்கள் ! " என்றான் முடவன்.

குதிரைக்குச் சொந்தக்காரரோ இதைக் கேட்டுத் திடுக்கிட்டார். உதவி செய்யப் போய் உபத்திரவம் வந்ததே என்று மிகவும் மனம் வருந்தினார். இருவரும் ' இது என் குதிரை ' என்று தகராறு செய்து கொண்டிருந்தனர். இதைக் கண்ட வழிப்போக்கர்கள் கூட்டங் கூடிவிட்டனர் 'ஐயோ பாவம் ! முடவனுடைய குதிரையில் ஏறிக் கொண்டு, இந்தஆள் பிடிவாதம் பிடிக்கிறானே !" என்று முடவனுக்கு ஆதரவாகப் பேசினர். ஆனால், குதிரைக்குச் சொந்தக்காரன் எவ்வளவு சொல்லியும் அவர்கள் கேட்பதாயில்லை !

இறுதியில் அவர்கள் ஒரு முடிவுக்கு வந்து அவ்வூர் நீதிபதியான மரியாதை இராமனிடம் சென்று முறையிட்டனர். நீதிபதி இருவரையும் விசாரித்தார். இருவரும் ' குதிரை என்னுடையது ' என்றனர். நீதிபதி சிறிது நேரம் யோசித்து விட்டு, " சரி, குதிரையை இங்கே விட்டுவிட்டுப் போங்கள். நாளை காலை இருவரும் இங்கே வாருங்கள் !" என்று அவர்களை அனுப்பிவிட்டுக் குதிரையை ஒரு குதிரைக் கொட்டிலில் கட்டி வைக்கச் சொன்னார்.

மறுநாள் காலை !

இருவரும் நீதிபதியிடம் வந்தனர். நீதிபதி அவர்கள் இருவரையும் தனித் தனியாகக் குதிரைக் கொட்டிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கே நிறையக் குதிரைகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருந்தன.

நீதிபதி குதிரைக் காரரைப் பார்த்து " எங்கே உங்கள் குதிரையை அடையாளம் காட்டுங்கள் பார்க்கலாம் ? " என்று கேட்டார். அவர் உடனே தன் குதிரையைத் தொட்டுக் காட்டினார். அவர் போன பிறகு முடவனை அடையாளம் காட்டச் சொன்னார். உடனே அவனும் அதே குதிரையைத் தொட்டுக் காட்டினான் !

ஆனால், குதிரைக்குச் சொந்தக்காரர் தொட்டதும் அது அன்பு காட்டி அவரை நெருங்கி வந்தது; முடவன் தொட்டதும் அது கனைத்துக் கொண்டு அவனை உதைக்கத் தொடங்கியது. இந்தக் குறிப்பிலிருந்து குதிரை முடவனுடையது அல்ல என்றும் அவன் வேண்டுமென்றே குதிரையைத் தனதாக்கிக் கொள்ளப் பேராசை கொண்டான் என்பதையும் அறிந்து அவனைத் தண்டித்துக் குதிரையை உரியவரிடம் சேர்ப்பித்தார் நீதிபதி.

இதிலிருந்து நாம் அறிந்து கொள்வதென்ன?

உழைத்துச் சம்பாதித்தால் நாம் விரும்பியதை வாங்கிக் கொள்ளலாம். உழைப்பதற்கு அஞ்சிப் பிறர் பொருளை எளிதில் களவாடவும் தனதாக்கிக் கொள்ளவும் எண்ணினால் அது அவனுக்கே தீங்காய் முடியும், அத்தகையவர்களால் வாழ்க்கையில் கொஞ்சங் கூட முன்னேற முடியாது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

### சுருக்கெழுத்தின் சரித்திரம்

இப்பொழுதுள்ள சுருக்கெழுத்து முறை இருபதாம் நூற்றாண்டின் தேவைக்காக ஏற்பட்டதல்ல. சுருக்கெழுத்துக்கு நீண்ட சரித்திரம் உண்டு.

இந் நூற்றாண்டில் சுருக்கெழுத்து நல்ல வளர்ச்சி பெற்றிருக்கலாம். ஆனால் கி. மு. முதலாம் நூற்றாண்டில் ரோமாபுரியில் சுருக்கெழுத்து புழக்கத்தில் இருந்ததாம். சிசிரோ என்ற சொற்பொழிவாளர் தனது பேச்சுக்களை எடுக்கத் திரானி என்ற சுருக்கெழுத்தாளரை வைத்திருந்தாராம்.

தோறும் தோற்றுவிக்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்துக்கு ஒன்று வீதம் கிராமங்கள் தேர்ந்தெடுக்கப் பெற்று, குடிநீர், சாலைகள் அரிசனங்களுக்கான வீட்டு மனைகள், தெரு விளக்குகள், வடிகால், பள்ளிக்கட்டடங்கள் முதலிய நிலையான வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

செங்கை மாவட்டத்தில் 27 ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 27 வெள்ளி விழாச் சீரூர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கின்றன. அவை இன்று புதுப் பொலிவு பெற்றுவரும் பாங்கினைப் பார்க்கிறோம்.

திம்ம சமுத்திரத்தில் கடந்த ஆண்டு விடுதலைநாள் விழாவில் தொடங்கப்பெற்ற இந்தச் சீரமைப்புப் பணிகள், இவ்வாண்டு விடுதலை நாள் விழாவில் முடிக்கப் பெற்று முழுமை பெற்றுள்ளன.

பழைய கிணறு ஒன்றில் ஆழத் துளை போட்டு மோட்டார் பொருத்தி குழாய் மூலம் கிராமத்திற்கும், காலனிக்கும் குடி தண்ணீர் வழங்க ரூ. 20,500 மதிப்பீட்டில் வசதி செய்யப் பெற்றுள்ளது; ரூ. 3,000 மதிப்பீட்டில் குழாய் மதகும் சீரணித் தொண்டர்களால் சாலையின் இருமருங்கிலும் 1,000 மீட்டர் நீள வடிகால் ஒன்றும் வெட்டப்பட்டுள்ளன. இவை மட்டுமா? இருளைக் கிழிக்கும் 20 தெரு விளக்குகள் கூடுதலாகப் போடப்பட்டுள்ளன. தொடக்கப் பள்ளிக் கட்டடம் ஒன்று ரூ. 1,500 செலவில் பழுதுபார்க்கப்பட்டுப் புதுமை பெற்றுள்ளது. ஏழை எளிய அரிசன மக்களுக்கு 10 வீட்டு மனைகள் வழங்கிடவும் தக்க ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன.

திருபெரும்புதூர், காஞ்சிபுரம், பூவிருந்தவல்லி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் வெள்ளி விழாச் சீரூர்ப் பணிகள் அண்மையில் உள்ளாட்சி அமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றுள்ளது.

பூவிருந்தவல்லியில் வெள்ளி விழாச் சீரூர் கிராமமாக நேமம் என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப் பெற்று, அங்கே ஒரு மேல்நிலைத் தண்ணீர்த்



தொட்டியும், மேலும் ஒரு பள்ளியும் கட்ட வேலைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. அரிசனங்களுக்கான 45 வீட்டு மனைகள், 1.40 கி.மீ. சாலைகள் முதலான வசதிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளன.

இதேபோன்று திருபெருந்தூரிலும் மொலசூர் என்ற கிராமம் தேர்ந்தெடுக்கப் பெற்று அங்கு மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தண்ணீர்க்குழாய்களை விரிவாக்கவும் சிறிய மேல் நிலை நீர்த் தொட்டியும், கழிவிடமும், பள்ளிக் கட்டடமும் கட்டவும் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் அங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் விடுதலை வெள்ளி விழாவினையொட்டி நினைவுக்கல் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நினைவுக் கல்லின் மதிப்பு ரூ. 1,500. இது உள்ளூர் மக்கள் நன்கொடையால் வழங்கப்படுகிறது. இத்தகைய நினைவுக்கற்கள் காஞ்சிபுரம், சோழவரம், திருபெரும்புதூர்,மாதவரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் நாட்டப்பட்டுள்ளன. இந்த நினைவுக்கற்களில் காந்தியடிகளின் பொன் மொழிகள் பொறிக்கப்பெற்றுள்ளன.

இப்படிப் படிப்படியாக, ஒவ்வொரு கிராமமும் வேளாண்மை, கல்வி, மருத்துவம், தொழில், சாலை, மின் வசதி போன்ற பல துறைகளில் முன்னேறிக் கொண்டு வருகின்றன. வெள்ளி விழாச் சீரூர் என்ற இந்த அரிய திட்டம் கிராமங்கள் வளம் பெறவும், மக்கள் வாழ்வு நலம் பெறவும் துணை நிற்கும் என்று துணிந்து கூறலாம்.

ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் அமைந்திட ஏழை எளிய மக்கள் நிறைந்த கிராமங்கள் ஏற்றம் பெற்றிட—அண்ணல் காந்தியடிகள், பேரறிஞர் அண்ணா போன்றோர் கண்ட கனவுகள் இன்று நனவாகும் நன்னாள் நம்மை நெருங்கிக்கொண்டிருக்கின்றன. அந்த நல்ல செயல்களுக்குக் கைகொடுப்போம்; கரங்குவிப்போம்!

—பி.வி.ஜி.

# புன்னகை

**ச.சுந்திரசேகரன்**

விவசாயப் பட்டப்படிப்பைக் கோவைக் கல்லூரியில் முடித்த நான், என் படிப்பின் பயனை எங்கள் சொந்தத் தோட்டத்திலேயே பயன்படுத்த முடிவு செய்தேன்.

நான் எங்கள் தோட்டத்து மின்சார மோட்டாரை இயக்கினேன். அருவிநீர் கொட்டியது போன்று வீழ்ந்த நீர், வாழ்க்கையில் பல்வேறு இடையூறுகளைக் காட்டுவதுபோல் குழியும், மேடுமாயுள்ள வாய்க்கால் வழியாகச் சென்று புதிதாகப் பயிரிடப்பட்டிருந்த 'கருணா' நெல் வயலை அடைந்தது.

முத்தி நீர்த்தொட்டி அருகே தண்ணீர்க் குடத்தை எடுத்து அசையும் வாழை இலைபோல ஒய்யாரமாக நின்றுகொண்டிருந்தாள். களிமண் பானையின் நிறத்திற்கும் அவளுடைய மையிருள் உடம்பிற்குந்தான் எத்துணைப் பொருத்தம்!

சென்ற வாரம் எங்கள் அப்பா வாங்கிவந்த



கரம்பைப் பசுவிற்குத் தீவனம் போடச் சாலைக்குச் சென்றேன். வழியில் இரட்டைப் பானைகளைத் தூக்க முடியாதபடி முத்தி சிரமப்பட்டுக் கொண்டிருந்தாள். வேலைக்குச் சென்றுகொண்டிருந்த பெண்களில் ஒருத்தியைப் பார்த்து, ''ஏய் முருகாயி, இந்து ராவே'' என்று தன் பானையைத் தூக்கிவிடத் தன் ஒய்யாரக் குரலை உயர்த்தினாள். ' ''நீக்கு ஏமி, பணி' என்று பதில் குரல் கொடுத்து விட்டு வழி நடந்தாள். மற்றவர்களும் அப்படியே சென்றனர். வேலைக்குப் போகும் அவசரம் அவர்களுக்கு.

நான் அவளிடம் சென்று ''என்ன முத்தி! நான் பானை


கதை: இளவல்... சித்திரம்:
நீதானே தம்பி டூர் கிளம்புறே! நான் அழைச்சிட்டு போறேன்!
தம்பி, இந்தக் கார்மேகம் எதை நினைச்சாலும் அதை செய்து முடிப்பான்! நீயும் அடிக்கடி வா! உன்னிடம் நிறையப் பேசணும்...
வா மீரா! உனக்காகத்தான் காத்திருக்கிறேன்
செல்வமணி கடிதம் எழுதியிருக்கிறள்; அதைச் சொல்லத்தான் ஓடி வந்தேன்!
ஊட்டிக்கு எப்ப போகலாம்னு எழுதியிருக்கா...?
இப்ப வேண்டாம்னு எழுதியிருக்கா! அங்கே யாரோ இறந்துட்டாங்களாம்! என்ன செய்றதுன்னு எனக்குத் தெரியலே
சுந்தரமும் அருளும் சும்மா விட மாட்டாங்களே! சுற்றுலா போகவேண்டாம் தேர்வு முடிந்த பிறகு நானே அழைச்சிட்டுப் போறேன்னு சொன்னேன்! இப்ப என்ன செய்றது? செல்வமணி நம்மை இப்படி வம்பிலே மாட்டி விட்டுட்டானே....!
மீரா அத்தை ஆறு மணிக்கெல்லாம் வரச்சொன்னுங்க... நம்ம டூரைப்பத்தி முடிவு செய்யுறாங்களாம். மாலா அக்காவும் எங்க வீட்டுக்கு வர்றாங்க வா... போவோம்
டேய் அருள், இதிலிருந்து எப்படியாவது தப்பிக்கணும்..


சுந்தரம் நீதாண்டா அது இதுன்னு சொல்றே.... நானும் சரின்னு சொல்லி வர்றேன்... எனக்கு ஒண்ணுமே புரியலே... அவுங்களோட சேர்ந்து போனாலும் போவோம்! நாம கோட்டை விடவேண்டாண்டா
போடா மண்டு! நான் எவ்வளவு கஷ்டப்பட்டு பெரிய திட்டம் போட்டிருக்கேன். நான் கவனிச்சுக்கிறேன், நீ, நான் சொல்றதுக்கு ஆமாம் போடுடா போதும்!
அக்கா ஒரு நல்ல சேதி! அப்பாவும் ஒத்துக்கொண்டாங்க நீங்கள் இரண்டு பேரும் சேர்ந்து சொன்னல் அருளோட அப்பா-ராஜா மாமாவும் சரி என்பாங்க...
பீடிகை பிரமாதமா இருக்கே! விஷயம் என்ன?
எங்கள் ஓவிய ஆசிரியர், கன்னியாகுமரிக்கு உல்லாசப் பயணம் போகிறர். எங்கள் இரண்டு பேரையும் அழைத்துச் செல்கிறேன் என்றர். ராஜா மாமாவிடம் சொல்லுங்க.....
உம்... எங்களுடன் வர பிடிக்கலே....! மீரா.. ராஜா அண்ணவிடம் சொல்லி அனுமதி வாங்கிக் கொடு... சரி நீங்க போங்க....
மறு நாள் சுந்தரமும், அருளும் சுற்றுலாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்....
நம்ப வேலே சுலபமா முடிஞ்சிடுச்சு நம்ப நாடகத்துக்கே வேலே இல்லாமல் ஆக்கிட்டானே, சுந்தரம்!
செல்வமணி ஏமாற்றியதால் நம்ப டூரும் கான்சலாகிவிட்டது!
சார் தந்தி!
தொடரும்

யைத் தூக்கி விடறேனே'' என்றேன்.

''சாமீ நீங்க தூக்க வேணும் சாமி. உங்க அப்பாரு கண்டாருன்ஞ ஏசுவாரு. நீங்க உயர்ந்த சாதி! நான் கீழ்ச் சாதி சாமி. நானு எங்க அம்மாவைக் கூட்டியாந்து ஆளுக்கொன்ஞ தூக்கிட்டுப் போறமுங்க''.

நான் விடவில்லை. ''தூக்கறியா இல்லையா?'' ஆத்திரம் என்னையறியாமல் பீறிட்டு வந்தது.

''சாதியாம், மண்ணாங்கட்டியாம், நாம் பிறக்கறப்ப சின்னச் சாதி பெரிய சாதின்னு போர்டு மாட்டிக்கிட்டா பிறந்தோம்? இல்லையே! பேசாம தூக்கு பிள்ளை'' என்று கூறியவாறு பானையைத் தூக்கி அவள் இடுப்பில் வைக்கும் அளவுக்கு வந்துவிட்டேன். அவள் சிரித்தவாறே அந்த இடத்தைவிட்டு ஓடிவிட்டாள்; நான் பானையைத் தூக்கி எரிச்சலுடன் கீழே போட்டேன். பானை உடைந்து சிதறியது. இளம் உள்ளங்களின் கபடமற்ற வாழ்வைத் தடுக்கும் சமுதாய விதிச் சாக்கடையில் நான் உருளத்தான் வேண்டுமா? அலறித்துடித்தது எனது மனம்.

மற்ஞெரு நாள் எங்கள் ஊர்ப் பெரியவர் ஒருவர், தொட்டி நீரை மொண்டு குளித்துக் கொண்டிருந்தார். நான் அருகிலிருக்கும் மிளகாய் நாற்றுக்கு நீர்பாய்ச்சிக் கொண்டிருந்தேன். சேரிப் பெண்கள் என்று இழிதகையோர் கூறும் தமிழ்நங்கைகள் தொட்டியில் மண் பானைகளால் தண்ணீரை மொண்டு கொண்டிருந்தார்கள்.

''என்ன தம்பி... அக்கிரமமாப் போச்சு! நான் இங்கே குளிச்சிக்கிட்டு இருக்கேன். அவ அம்சம் தெரியாம தண்ணீரைத் தொட்டியில் மோக்கரு. இந்த நாய்களைத் தோட்டத்துக்குள்ள விடறதே தப்பு'' என்று பொரிந்து தள்ளினார் கிழவர்.

''என்னங்கய்யா, நீங்க ஒரு ஆள் குளிக்கறதுக்காக அவங்களை நாய் பேய்னு திட்டறீங்களே! உங்களுக்கு எத்தனை தரம் சொல்றது?''

அவர் என் வாயை அடைக்கப்பார்த்தார். ''நீ சும்மா இரு தம்பி! உலகம் தெரியாத புள்ளை! அதெல்லாம் உங்க காலத்திலே வைச்சுக்க! இவளுகளை இனிமேல் நம்ம தோட்டத்தண்டையே விடப்புடாது'' என்ஞர்.

நான் அவருக்கு நிதானமாக விளக்கினேன். ''ஐயா அவங்க பானையைத்தானே தொட்டியில் விட்டாங்க! அந்தத் தண்ணி உங்க உயிரையா போக்கிடும்? நீங்க குளிக்கற அழுக்கையெல்லாம், சாதி பேதம் பாராமே துரோகிகளான மனித உசிரைக் காக்கும் பயிர் பச்சை கூட பேசாம ஏத்துக்குது. அது என்ன விளையவா மாட்டேங்குது? சாதி பேதமெல்லாம் வச்சிக்கக் கூடாது ஐயா!''

''அட சும்மா இரு சின்னத் தம்பி...நீயும் உன் அறிவுரையும்'' என்றவாறே துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு செருப்பை நீரில் கழுவினார். நான் தொடர்ந்தேன். ''ஐயா நீங்க கழுவுற செருப்பு அவ மாமன் ரங்கன் தைச்சது தானே! அதை எதுக்குப் போடறீங்க'' என்றேன்.

''விதண்டாவாதம் பேசாதே தம்பி...'' என்று இழுத்தவாறு அவர் நடையைக் கட்டினர்.

''அம்மா! அம்மா! என்று ஒருபக்கம் கரம்பைக் கன்றின் ஒலி. பால் கரக்கும் நேரம் வந்துவிட்டதை உணர்ந்தேன். வீட்டிற்குள் நுழைந்ததும் நுழையாததுமாக எனது 10 வயதுத் தங்கை ''அம்மா!அண்ணன் வந்திருச்சும்மா..முத்திப் பிள்ளைக்குப் பானையைத் தூக்கறேன்னு சொல்லி அவங்க பானையையெல்லாம் தொடுதும்மா'' என்ஞள். என்னதான் அவள் ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்ற பாரதியின் பாடலை பள்ளிக்கூட வாத்தியார் தன்னுடைய இரட்டை நாடியில் எழுவது தரம் திரும்பத் திரும்பச் சொல்லிப் படித்திருந்தாலும் அது அவளுடைய இளம் உள்ளத்தில் ஏஞே பதியவில்லை! நானே இந்தத் தரங்கெட்ட சமுதாயத்தில் சிக்கிக் கொண்டு திணறும் பொழுது, அவள் என்ன செய்வாள் பாவம்!

அம்மா ஒரே ஒரு வார்த்தைதான் சொன்ஞள். ''ஏண்டாப்பா சேகர், ஊருலே நாலு பேர் நாலு விதமாகப் பேசுவாங்க! இந்த வம்பெல்லாம் உனக்கு எதுக்கடா? அதான் ரேடியோவிலும், மேடையியிலும், சாதியை ஒழிக்கணும், ஒழிக்கணும்னு எல்லோரும் பேசருங்களேடா, அது போதாதா?'' என்ற தன் வழக்கமான பல்லவியை ஆரம்பித்து விட்டாள்.

என்னதான் இருந்தாலும் மகனின் உள்ள உணர்ச்சிகளைப் புரிந்து கொள்பவளல்லவா தாய்?

எங்கள் தோட்டத்திற்கு வேலைக்குவரும் ஏழைத்தாய்மார்களின் குழந்தைகளுக்கு என் அன்னை அவ்வப்போது, பால், சோறு முதலியவை கொடுத்து உதவுவது வழக்கம். ஏழைக் குழந்தைகளைக் கண்டால் என் அன்னைக்கு அவர்கள் மேல் ஓர் இனம் தெரியாத பற்று. அந்தக் கள்ளங்கபடமற்ற குழந்தைகளை எடுத்து முத்தமிடுவாள்.

இதைக் கண்டு ''எனக்கேற்ற என் தங்க அம்மா'' என்று நான் பாராட்டி வருவேன்.

ஒருநாள் மாலை ஏரை அவிழ்த்துவிட்டு வீட்டுக்கு வந்தபொழுது அம்மாவின் குரல் அப்பாவின் குரலோடு மெதுவாக மோதியது.

''என்னங்க...நம்ம சின்னத் தம்பிக்கு வயசு ஆகுது. வெறசா ஒரு பொண்ணைப் பாருங்க''

''ஆமாமா ... நான் பார்த்துத்தான் கிடக்கு! நீயே பாரு! அம்மா ஆச்சு, பிள்ளை ஆச்சு.

''நம்ம பிரசிடெண்டு முனிசாமி தலைமையிலே நடந்த ஒரு கூட்டத்திலே கூட வரதட்சிணைக் கொடுமையைப் பத்திப் போடுபோடுன்னு போட்டானே உன் மவன். நம்ம பய சாதியிலே அதானே முக்கியம். என்னமோம்மா, உன் பயல் காலேஜுக்குப் போனதிலே இருந்து புத்தி வேற பக்கம் போயிருச்சு. உலகத்தோட ஒட்டமாட்டேன்னு குதிச்சிக்கிட்டு இருக்கான். என்னமோ—எனக்குப் பிடிக்கலே! நீயே அவனைக் கேட்டு முடிவு செய்'' என்று தப்பித்துக் கொண்டு வீட்டைவிட்டு வெளியே வருவதைப் போல் இருந்தது. நான் அப்பொழுதுதான் வீட்டிற்குள் நுழைவதைப் போலே நுழைந்தேன்.

அன்று இரவு முழுவதும் 'திருமணம்' பற்றிய பேச்சுத்தான் எனக்கும் அம்மாவுக்கும். ''அம்மா! என்னைப்பத்தித் தான் உனக்குத்தெரியுமே? நான் கலப்பு மணந்தான் செய்யப் போறேன். எப்படியோ நீதான் உதவி செய்யனும்'' என்றேன்.

''தம்பீ.... சீர்திருத்தம், கலப்பு மணம்னு ஆச்சுன்ஞ நம்ம குடும்ப கதி என்ன? ஊருக்குள்ளே தலை காட்ட முடியுமா? சொந்த பந்தம் அத்துப் போகுமே! அதுவும் நீ முத்தாளைக் கட்டப் போறதாச் சொல்றே''—அழுது புலம்பினள் அன்னை.

என் காலில் விழுவதற்கு வேண்டுமாஞலும் தயாராயிருந்தாள் என் அன்னை. அவளைச் சொல்லி என்ன செய்ய?

இந்தத் திருமணப் பேச்சு இன்று நேற்று நடப்பதல்ல! தந்தைக்குத் தெரியாமல் அம்மாவிடம் கடந்த ஒரு வருடமாகவே என்னுடைய பிரச்சினைக்காக வாதாடிய வண்ணமே இருக்கின்றேன்.

காலம் வந்தது. ஆயிரம் இருந்தாலும் மகனின் ஆசையை எந்தத் தாய்தான் வேரறுப்பாள்? தந்தைக்குத் தெரியாமல் முடிவில் சம்மதமும் பெற்றுவிட்டேன்.

கடந்த ஈராண்டுகளாக முத்தாளுக்கு நான் செய்த உபதேசங்கள் ஒன்றல்ல இரண்டல்ல. கல்வி கற்ரேர்கள் பலபேரிடமே இந்நாளில் சாதி உணர்வு இன்னும் தொத்திக் கொண்டிருக்கும் பொழுது, முத்தாளைப் போன்ற கல்வியறிவில்லா ஏழைப் பெண்ணின் உள்ளத்தில் பதிந்துபோன சாதி உணர்வை, ஏற்றத்தாழ்வு உணர்ச்சியைப் போக்குவதென்ருல் எனக்கு எவ்வளவு சிரமம் ஏற்பட்டிருக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை.

நான் வானத்தை நோக்கினேன். எங்கோ இரண்டு ஜோடிப் புருக்கள் பறந்து சென்றன. நீலவானம் ஆழ்ந்த நீலமாகியது. மறுநாள் எனக்கும் தேன்மணி ரங்கன் மகள் முத்தாளுக்கும் பதிவாளர் அலுவலகத்தில் திருமணம். ''துன்பத்திலே தான் இன்பம் இருக்கின்றது'' என்ற வாக்குப்படி எனது மனம் துணிந்துவிட்டது.

''காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும்'' என்று சொன்ன அறிஞர் அண்ணாவின் ஆன்மா நிச்சயம் மகிழும் என்ற உறுதியோடு என் வீட்டை நோக்கி நடந்தேன்.

எங்களைக் கண்ட என் தந்தையின் முகம் முத்தாளின் முகத்திற்குப் பதில் சாய்ந்தது. ''உலகில் நிலையானது குணம்தான்'' என்ற மகாத்மாவின் அறிவுரையை அவர் நிச்சயம் ஏற்றுக் கொண்டு விட்டார் என்றே எண்ணுகின்றேன். இருப்பினும் சமுதாயச் சட்டங்களைக் கண்டு அவர் பயப்படாமல் எங்களை உடனே ஆதரித்தது எனக்கு ஆச்சரியத்தையே அளித்தது. அவர் என்னை நோக்கி ஒரு வெற்றிப் புன்னகை பூத்தது எனது இதயத்தைத் தொட்டது. ''காலத்திற்கேற்பக் கருத்தில் மாறுதல் வேண்டும்'' என்பதை அவரும் புரிந்து கொண்டார்.

**அனைத்து நாட்டுப் பேரவை**

**1945-ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் நாள் 50 நாடுகள் ஒருங்கிணைந்து உருவாக்கிய ஓர் அமைப்புத்தான் அனைத்து நாட்டுப் பேரவை. இன்று, 131 நாடுகள் இந்தப் பேரவையில் அங்கம் வகிக்கின்றன.**

ஊராரின் ஏச்சுப் பேச்சுக்கள் முளைவிடத் தொடங்கின. அம்மாவின் உள்ளம் அதற்காகச் சில சமயங்களில் கண்ணீர் சிந்தத்தான் செய்தது! ஆஞல் அவளுக்கு நான்தானே முக்கியம், ஊரல்லவே! ''அறிவுடையோர் உயர் குலம், அறிவிலிகள் இழிகுலம்'' என்ற கருத்து இந்த நாட்டின் விழிப்பு உணர்ச்சிக்கு எத்துணை அவசியம்!

நாட்கள் மழை நீரென உருண்டு மறைந்து கொண்டிருந்தன. சாலையில் நடக்கும் பொழுதுகூட ஒருசிலர் என்னை நோக்கிக் கேலி பேசுவது என் காதில் விழத்தான் செய்தது. என்னைக் கண்டு ஒரு சிலர் ஒதுங்கிப் போஞர்கள் என்ற வருந்தத் தக்க செய்தியையும் நான் கூறித்தான் ஆகவேண்டும். உலகின் மலிவான சரக்கான அன்பை சாதி, மத பேதமில்லாமல் பெற்றுவிட்டதால் எனது உள்ளத்தில் ஏற்பட்ட உவகைக்கு முன்ஞல் ஊராரின் செயல்கள் எம்மாத்திரம்?

என்ரே ஒருநாள் எனது உள்ளத்து உணர்ச்சிகளைத் தூண்டிவிட்ட எங்கள் ஊர்ப் பெரியவரை, திருமணம் முடிந்தபின் ஒருநாள் தற்செயலாகச் சந்தித்தேன். என்னைக் கண்ட அவர்,

''சின்னத் தம்பி ... படு அழுத்தக்காரன்தாம்ப்பா நீ'' என்று கூறிவிட்டு வினயமாகச் சிரித்தார்.

வீட்டிற்குச் சென்றதும என் மார்பில் முத்தாள் சாய்ந்தாள். அவள் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுப்பதைக் கண்ட நான் திடுக்கிட்டு ''என்ன நடந்தது முத்தி'' என்று அவளை வாஞ்சையுடன் கேட்டேன்.

அவள் தொடர்ந்தாள்; ''சேகர்சாமி ஊருக்காரக் குடியானவங்கள்ளாம், இந்த நாய்க்கு வந்த திமிரைப் பார்த்தியா? அப்படி இப்படின்னு பேசிஞங்க!''

''முத்தி, அழாதே! யார் எப்படிப் பேசிஞலும் நான் ஒருத்தன் உன்மேல் உசிரை வச்சிக்கிட்டிருக்கறதை மறந்திடாதே! மோட்டார் நிக்கறதுக்குள்ள போய்த் தண்ணி எடு'' என்று அவளுக்கு அன்போடு ஆறுதல் கூறி அனுப்பி வைத்தேன்.

''இனிமேல் சாமி சாமின்னு கூப்பிட்டே, உன்கூட டூ விட்டுடுவேன்'' என்று அன்போடு ஓர் ஆணையும் இட்டேன். அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டுத் தண்ணீர் எடுக்கச் சென்று விட்டாள்.

காலச்சக்கரம் உருண்டோடியது. என் அன்பு மனைவி முத்தாளின் கள்ளங் கபடமற்ற முகத்தில் இன்பப் புன்னகை பூத்துக் குலுங்கியது. அந்த இன்பமயமான புன்னகையில் சாதிமத வேறுபாடு தலை காட்டவே இல்லை!




3064

ஆசிரியர், வெளியிடுபவர் : செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்.
அச்சிட்டவர் தமிழ் நாடு அரசு அச்சக எழுது பொருள் இயக்குநர்,
தமிழ் நாடு அரசினர் அச்சகம், சென்னை-1.




Criterion CO 2882


உழுபவனுக்கே நிலம் உடைமையாகச் சட்டம்:
பன்னிரண்டு ஆண்டுகளில் வருவாய் இரு மடங்காவதற்கு
அடித்தளத்திலிருந்து திட்டமிடும்
மாநில திட்டக்குழுவின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிட
குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள்!
எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலைகள் - மின்வசதி!
கிராமப் புறங்களிலும் வீட்டுவசதி!
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை!
பசுமைப் புரட்சியில் முதலிடம்!
இல்லாமல் இனிய வாழ்வு உருவாக்கும்
இந்தத் திட்டங்கள்
இன்றையத் தலைமுறைக்கு நன்மை நல்க
நாளையத் தலைமுறைக்கும் நல்வாழ்வு அளித்திட
தமிழகத்தில் பொற்காலம் அமைந்திட
நாம் ஆற்றவேண்டிய பேருதவி
அளவான குடும்பம்
சீரான வாழ்வுக்கு மட்டுமல்ல
சிறு குடும்பம்—
செழித்திடும் நன்மைகளை-நாட்டில்
நிலைத்திடச் செய்ய
அமையட்டுமே அளவான குடும்பம்!
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்.
குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு


HOIST 20 TONS
தமிழரசு
ஆகஸ்ட் 1 1973 40 காசு

# வெண்பாப் போட்டி

* பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு. தாஜூபால்,
11, மாரியம்மன் கோயில் தெரு,
வல்லம் அஞ்சல்,
தஞ்சை மாவட்டம்.

ஈற்றடி : இரந்துண்டு வாழோம் இனி

* தட்டேந்த வாகைகள்? தாவென்ப தற்காவாய்?
எட்டுத் திசையுமடி ஏந்துநிலை—விட்டுக்
கரந்துண்டு பட்டாலும் கல்லறை சென் றாலும்
இரந்துண்டு வாழோம் இனி.

—தாஜூபால், வல்லம்.

பெற்றவளே நொந்தாலும் பிள்ளைபசி என்றாலும்
உற்றதோர் இல்லாள் உழன்றாலும்—இற்றுக்
கரந்துவண்டு வீழக் கடிதுழைத்தே வாழ்வோம்
இரந்துண்டு வாழோம் இனி!

—அரு. கிருட்டிணன், வன்னியர் வலசு.

திருவோடு போக்கித் திருவோடு வாழ
உருவாகும் எம்விடுதி உய்ய—ஒருவாய்
இரந்துழலா வேண்டி நிதிகொடுத்தார் எங்கும்
இரந்துண்டு வாழோம் இனி.

—பாலகிருட்டிணன், எண்டப்புலி.

தாளாண்மை கொண்டு தமிழரசார் நல்குரவை
வேளாண்மை யாலின்று வென்றுவிட்டார்—காளான்
தரைவிளைக்கும் தானியத்தால் தன்னிறைவைக் கண்டோம்
இரந்துண்டு வாழோம் இனி.

—பு. புனிதா, ஒலைப்பாடி.

நோயற்ற வாழ்வின்றி நொந்தோம்! உடல்அழுகித்
தாயற்ற சேய்போல் தவித்திட்டோம்—நோயர்
இருந்துண்டு வாழ எழில்விடுதி கண்டோம்!
இரந்துண்டு வாழோம் இனி.

—மலே. மா. ஆறுமுகம், மலைப்பட்டு.

பிச்சை யெடுத்துப் பொருளைத் தொகுத்தேனும்
பிச்சை யெடுப்பவர் பேர்வாழ்வை—நச்சிப்
புரக்கத் தமிழரசு புக்கதால் நெஞ்சே
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் வெ. வா. நடராசன், பி.ஏ., சென்னை-5.

மண்ணொளிரக் கண்ணொளிர, மக்கள் நலமொளிர
எண்ணரிய திட்டங்கள் ஈங்கிருக்க,—மண்ணில்
கரந்துண்டு வாழுங் கயவர்பால் நாடி,
இரந்துண்டு வாழோம் இனி.

—சு. கிருஷ்ணகுமார், ஞாயிறு கிராமம்.

இரந்துழன்ற எம்மை இரந்துகுறை கேட்டு
இருந்துண் ணும் நன்மறுவாழ் வீந்து—புரந்தார்
இருந்தமிழ் நாட்டில் இருந்தரசு ஆள,
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் வள்ளிவேலன், நாயக்கனூர்.

கல்லைக் குடைந்து கலைகள் வடித்திடுவோம்
சொல்லாற் கவிதைச் சுவைவளர்ப்போம்—நெல்லின்
வரப்பைப் பெருக்கியே வாழ்வோம் பிறரை
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். தி. சிவசுப்பிரமணியன், திருநெல்வேலி-6.

எளியோர் நலங்காக்கும் இத்தமிழர் நாட்டில்
வழியா நமக்கில்லை வாழ—அழியா
உரங்கொண்டு நாளும் உழைப்போமே யன்றி
இரந்துண்டு வாழோம் இனி.

—வைகுண்டமணி, பி.எஸ்.ஸி., ஈரோடு.

தன்மானம் நம்குறிக்கோள்; தன்னாட்சி நம்மாட்சி;
கன்னல் தமிழ்நம் கருவூலம்—அன்புக்
கரம்தருவோம் ஒற்றுமைக்குக் காசினியில்; முன்போல்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

இல்லாமை இல்லாமல் எல்லார்க்கும் எல்லாமாய்
வல்லாண்மை கொண்டு வகுத்தாயும்—நல்லோன்
புரக்கும் தமிழரசு; பொற்கால ஆட்சி!
இரந்துண்டு வாழோம் இனி.

—தமி. எழும்பூர், குளமங்கலம்.

## வெண்பாப் போட்டி

அரசின் முயற்சியால் அன்புடன் யாங்கள்
உரைசெய் திறத்தால் உயர்ந்து—விரைந்து
பரந்துழைத்துச் சொந்தப் பசிதீர்த்துக் கொள்வோம்
இரந்துண்டு வாழோம் இனி.

—முருகுபாரதி, உதகை-2.

செப்பும் பசுமைப் புரட்சிச் செயற்றிறத்தால்
கப்பும் பசிநோய் களைந்திட்டோம்—ஒப்பும்
பரந்த புகழ்நாட்டிப் பாரளிப்போம், என்றும்
இரந்துண்டு வாழோம் இனி.

—தாரைவில்லவன், தாராபுரம்.

கரத்தை வலுப்படுத்திக் கண்ணீர் துடைக்க
உரமும் இதயத்தில் உண்டாம்—சிறப்பாய்
நரம்பில் முறுக்கேற நாமுழைப்ப தாலே
இரந்துண்டு வாழோம் இனி.

—சு. அசோகன், புளியம்பட்டி.

உழைக்கக் கரமிருந்தும் உண்டுடுத்தி நாளும்
பிழைக்க மனமிருந்த பின்னும்—தழையால்
உரம்சேர்க்கும் காவிரிநீர் ஓடிடும்தாய் நாட்டில்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் சேறைநேசன், சோலூர்.

சோற்றுக் கலைவாரும், சொந்தமென வீடின்றி,
நாற்றமிகு நோயால் நலிவாரும்—கூற்றுக்
கிரையாகிப் போகாமல் எம்மரசு காக்கும்!
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். சு. இராமானுசன், ஆ. தெற்கூர்.

"மறுவாழ்வு பெற்றோம்! மகிழ்வுடனே என்றும்
உறுதியொடு வாழ்வோம்! உயர்வோம்—வறுமைக்
கரமேந்திக் கால்வயிற்றுக்குக் கஞ்சிக்கு நாளும்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் சு. விசுவநாதன், நெற்குப்பை.

உண்ண உணவின்றி ஊரெல்லாம் சென்றநிலை
மண்ணில் மறைந்ததே மாயமாய்!—எண்ணி
அரசாற்றும் ஏற்றமிகு திட்டத்தால், என்றும்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனா.

கண்ணகி நன்செய்க் கதிராம் மணியுடைப்ப
எண்ணி வறுமை இறந்தொழிய—மண்ணில்
கருணை நிறைநெற் கனமெடுக்க வாழ்ந்தோம்;
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். இரசைஅதன், தெற்குத்தெரு அஞ்சல்.

உழுதுண்டு வாழும் உயர்கொள்கை கொண்டே
பழுதின்றி நெல்விளைத்த பாங்கால்—செழுமை
செறிந்தெங்கள் நாடு திகழுதலால் யாங்கள்
இரந்துண்டு வாழோம் இனி.

—த. ச. தவசிமணி, அருப்புக்கோட்டை.

மன்னுமெம தாட்சி மறுவாழ்வுத் திட்டத்தால்
என்னபயன் பெற்றோம்? எடுத்துரைப்பேன்—இன்றே
நிரந்தர நல்வாழ்வு பெற்றோம் நீதிக்குவெற்றி;
இரந்துண்டு வாழோம் இனி.

—பகவதிஅப்பன், சென்னை-5.

வேளாண்மை நுண்தொழில்கள் வெற்றிபெறு வீரமொடு
தாளாண்மை கொண்ட தமிழர்யாம்—நாளும்
புரந்துண்டு வாழ்ந்தோம் புவியில்; மறந்தும்
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர் டி. ஆர். சண்முகம், பண்ணைக்காடு.

எங்கிருந்த போதும் எமதிரண்டு கையிருக்க
அங்குழைத்து வாழ்வோமே அல்லாது—மங்கித்
தரங்கெட்டே எங்களது தன்மானம் கெட்டு
இரந்துண்டு வாழோம் இனி.

—சு. கிருஷ்ணன், திருப்பூர்.

கங்கையும் காவிரியும் கைகோத்தே ஒன்றாகப்
பொங்கி வழிந்தோடப் பூமியிலே—எங்கும்
சரஞ்சரமாய் நெல்விளையும் தானியமும் மல்கும்
இரந்துண்டு வாழோம் இனி.

—எஸ். டி. சின்னசாமி, ஆலாம்பாளையம்.

அங்கம் குறைந்தே அழுகிப்போய் ஆதரிப்பார்
எங்குமே இன்றிதுயர் ஏற்றோமே—மங்கா
மறத்தமிழர் ஆட்சி மறுவாழ்வீந் தார்நாம்
இரந்துண்டு வாழோம் இனி.

—சண்முக. தாயுமானவன், பொன்மலை.

அச்சங்கள் ஏதுமின்றி அன்றாடம் வாழ்ந்திடவே
பிச்சைக்கா ரர்க்குப்பே ரில்லங்கள்—இச்சை
சுரந்திடவே செய்தார் செகத்தில் எவரும்
இரந்துண்டு வாழோம் இனி.

—இராம. மறைமுதல்வன், வடபாதிமங்கலம்.

வண்ணப் புரட்சியால் வாழ்வளிக்கும் நல்லரசு
எண்ணற்ற நற்றெண்டால் இந்நாட்டின்—பண்ணை
பெருக்கெடுக்கும் பல்பயனும் பெற்றுவிட்டோம் நன்றே!
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். கோமுகி, ஆதமங்கலம்.



## சிறு தொழில்களுக்கோர் உறுதுணை... எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்

அரிசிமில், மாவுமில், ஆயில் மில், மர அறுவைத் தொழில் போன்ற சிறு தொழில் நிறுவனங்களில் இயங்கும் மோட்டார்களைச் சீராகச் செலுத்த, சிறந்த ஒரு சாதனம் எல் & டி ஸ்டார்ட்டர். எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

உங்கள் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டூப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

• பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று, வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்துகொடுக்கின்றனர்.

• சிறிய ஊர்களில் கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

L&T Switchgear

ஸ்விட்ச்கியர் டிவிஷன்,
லார்ஸன் அண்டு டூப்ரோ லிமிடெட்
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.


7866-55
6.8.73.



# வழிகாட்டும் தமிழ்நாடு!

## மேதகு தமிழக ஆளுநர் கே.கே.ஷா

இந்த மாநாட்டைத் திறந்து வைக்க என்னை அழைத்தமைக்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் காவல்துறை அலுவலர்களையும் சந்திப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இரண்டாண்டிற்கும் சற்று அதிகமான கால அளவில் நான் தமிழ்நாட்டில் தங்கி இருந்துள்ளதால், அறிவிக்கப்பட்ட ஜனநாயக சோஷலிசக் கொள்கைக் கேற்பத் தமிழ்நாட்டின் நிருவாகம் இணைந்து வருகிறது என்பதும், தமிழ்நாட்டில் சுமுகமான நிலை நிலவச் செய்து வருவதுடன், பொது மனிதனே உண்மையான எஜமான் என்பதை உணர்ந்து நடப்பதில் தமிழ்நாடே மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்கி வருகிறது என்பதும் ஒரு சிறிதும் ஐயமின்றி எனக்குத் தெளிவாகியுள்ளது. மக்களுக்கு அதிகாரம் அளிக்கும் ஒரு முயற்சிக்கு, ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக மனுநீதித் திட்டம் விளங்குகிறது என்பதைக் குறிப்பிடும் வாய்ப்பு, கடந்த ஆண்டு எனக்குக் கிடைத்தது. ஜனநாயக முறையில் வாழும் மனப்பாங்கை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதே மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

தமிழ்நாட்டில் கட்டுப்பாடு, உண்மை ஆகிய உணர்வுகளுடன் அரசியல் கட்சிகள் இயங்கி வருகின்றன. இது ஒரு குறிப்பிடத் தகுந்த சாதனையாகும். இந்த நிலைமை தோன்றுவதற்கு அரசு நன்கு பணியாற்றியுள்ளது.

அரசின் சார்பாகவோ அரசின் சார்பற்றோ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது பிறந்த நாள் விழாவையொட்டியோ இதர வகையிலோ மேற்கொள்ளப்படும் பணிகள் மக்கள் நலன் காக்கும் ஒரு மாநிலத்தின் நற்பணிகளையும், மக்கள் நலன் காக்கும் பணியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது என்பதையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளன. மக்கள் நலன் காக்கும் மாநிலத்தின் கொள்கைகள் படிவங்களாக உருவம் பெற்று வருகின்றன; மாவட்ட அளவில் திட்டமிடுதல், வட்டார அளவுக்கு வந்தடையக் கூடும்! அந்த நிலை ஏற்படும்போது நீங்கள் ஒவ்வொருவரும் கடும் சோதனைக் குள்ளாவீர்கள்! சாதி, இனம், மதம், மொழி போன்ற சிறு வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் முன்னுக்கு வரக்கூடிய கிராம மக்களின் திறமையையும் கண்ணியம், தூய்மை ஆகிய பண்புகளுடன் உள்ளாட்சி நிறுவனங்களை நிருவாகிக்கும் ஆட்சித் திறமையை ஏற்படுத்திக் கொள்ளும் அவர்களது ஆர்வத்தையும் பொறுத்தே வட்டார நிலையில் திட்டமிடுவதன் வெற்றி அமையும்.

உங்களுடைய விவாதத்தில் மாணவர்கள் போராட்டத்திற்கும், கல்வி நிலையங்கள் மூடப்படுதலுக்கும் முதலிடம் அளித்துள்ளதால், நான் மகிழ்ச்சி அடைகின்றேன். உலகம் முழுவதும் ஏற்பட்டுவரும் மாணவர்கள் போராட்டத்தில் ஓர் அங்கமாக இந்தியாவிலும் மாணவர்கள் போராட்டம் நடைபெறுகிறது என்பது உண்மை! ஆனால் மாணவர்களின் பிரச்சினையில் கவனமாக அணுகுதல் மூலமாக, மாணவர் போராட்டத்தின் கடுமையைக் குறைத்திட முடியும்! பயனற்ற முடிவுகளும், வாய்ப்பின்மையுமே இப்போராட்டங்களுக்கு முக்கிய காரணமெனினும் இவைகள் மட்டுமே காரணம் என்று கூறுவதும் தவறாகும்.

இளைஞர் சமுதாயம் பின்பற்றுவதற்குரிய வழிகாட்டும் பண்புகளைத் தேடி வருகின்றது. அவர்களுடைய தேடும் முயற்சி தோல்வி அடையும்பொழுது அவர்கள் பொறுமை இழந்து



மதி. மார்க்கரட் சாங்கரும் அப்படிக் கலந்துரையாடியவர்களாவர்.

திருமதி. மார்க்கரட் சாங்கர் இன்றைய குடும்ப நலத் திட்டத்திற்கு அடிகோலியவராவார். 1883-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாள் நியூயார்க்கில் பிறந்த இவர், செவிலியர் பயிற்சிப் பள்ளியில் பட்டம்பெற்று பின் மான்காட்டனில், கண், காது மருத்துவத்திலும் அவர் பட்டம் பெற்ருர். பெண்ணடிமை தீரவேண்டுமானுல் கருத்தடைத் திட்டம் அவசியம் என' உளமார நம்பினுர். 1916-ஆம் ஆண்டில் நியூயார்க்கைச் சேர்ந்த புருக்லினில் உலகத்தின் முதல் கருத்தடை நிலையத்தைத் துவக்கியதற்காக அவரை அரசு கைது செய்தது. சிறைவாசமேற்ருர். கருத்தடை பற்றிப் பேசினுலே குற்றம் என அன்றைய அமெரிக்க அரசு அறிவித்தது. அந்தக் குற்றத்தைத் தொடர்ந்து, மிகத் துணிவோடு உலக நன்மைக்காக திருமதி. சாங்கர் செய்து கொண்டு வந்தார். 1935–36-ல் இந்தியாவிற்கு வந்து கருத்தடை இயக்கத்தை நடத்திஞர். கொண்ட கொள்கையை விட்டுப் பிறழாது—ஏசல், இழித்துரை இவற்றைக் கண்டு துவளாது தன் பணியைத் திறம்பட ஆற்றிஞர். இன்றைக்கு உலகம் முழுவதிலுமுள்ள பல அரசுகள் அவரது கொள்கையின் இன்றியமையாமையைக் கருதிக் கருத்தடைத் திட்டத்தை அரசுத் திட்டமாகவே செயல்படுத்தி வருகின்றன. தன் கொள்கை பெற்றவெற்றியைக் கண்கூடாகக் கண்டு களித்த திருமதி. சாங்கர் 1966-ஆம் ஆண்டு மறைவெய்திஞர். கருத்தடைத் திட்டத்தின் முன்ஞேடி திருமதி. சாங்கரிடமும், திருமதி. நாயரிடமும் காந்தியடிகள் குடும்ப நலத் திட்டம் குறித்து, அதாவது கருத்தடைத் திட்டம் பற்றி என்ன கருத்தறிவித்தார் என்பதை அவர்களது உரையாடல் வாயிலாக நாம் அறியலாம்.

**திருமதி. நாயர் :** மகாத்மா அவர்களே! ஒரு பெண் தன்மேல் தாய்மைதிணிக்கப் படுவதை அனுமதிக்கக் கூடாது என்றும், தன் கணவனின் விருப்பத்திற்கு இணங்காது, 'முடியாது' எனக் கூறித்தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறுகிறீர்கள். இந்தியப் பெண்ணுக்குப் பொருளாதார அடிப்படையில் எந்தஒருதனித்தகுதியும் அல்லது நிலையும் அல்லது தகுதியும் இல்லை என்பதையும், வேறுவிதமாக அவள் நடக்க முற்பட்டால்—அதாவது 'மேல் கீழ்' என்ற நிலை (Lord and Master) ஏற்பட்டால் குடும்பத்தில் வேண்டாத விளைவுகள் ஏற்படுமென்பதையும், அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய குறைந்த அளவிலான வசதிகள் கூட மறுக்கப்படுமென்பதையும் தாங்கள் எண்ணிப் பார்க்கவில்லையா?

**காந்தியடிகள் :** பொருளாதார அடிப்படையில் பெண்களுக்குத் தனித் தகுதி இல்லை என்பது மிகமிகச் சொற்பமானவர்களுக்கே பொருந்தும் என்பதைப் புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் நீங்கள் அறிந்து கொள்ள முடியும். சாதாரணமாக இந்தியக் குடும்பங்களில் பெண்கள் தான் இல்லத்தரசிகளாக இருக்கிருர்கள் என்பதை நீங்கள் அறியமாட்டீர்களா?

**திருமதி. நாயர் :** 'சுயக் கட்டுப்பாடு' பற்றிய தங்கள் ஆய்வுகள் 'சபர்மதி' ஆசிரமத்தைப் பொறுத்த மட்டில் எந்த அளவு நிறைவேற்றப்படுகிறது என்பதை நான் அறிந்து கொள்ளலாமா?

**காந்தியடிகள் :** அதைப் பற்றிச் சொல்வது மிகக் கடினமான செயலாகும். தனிப்பட்டவர்களைப் பொறுத்தமட்டில் மிகப் பயங்கரமான பெருந்தோல்வியைத் தான் சபர்மதி ஆசிரமத்தில் நாங்கள் கண்டோம். மற்றபடி ஆசிரமத்திற்கு வருகை தந்தவர்கள், 'பால்' உணர்வு நோக்கின்றி அனைவரும் சுதந்தரமாய் இருப்பதைப் பார்த்துப் பாராட்டவே செய்தனர்.

உரையாடியபோது திருமதி. மார்க்கரட் சாங்கரிடம் காந்தியடிகள் தெரிவித்த கருத்துக்களைப் பார்ப்போம்.

**காந்தியடிகள் :** கணவன், மனைவி ஆகியோர் தங்கள் நடவடிக்கையின் தொடர்பாக ஏற்படும் பின்விளைவுகளை நினைத்துப் பாராமல், இருவரும் தங்கள் மிருக இச்சையைத் தீர்த்துக் கொள்ள விரும்பிஞல், அது காதலால் கனிவதல்ல; கழிகாமத்தால் பிறப்பதாகும். ஆஞல் தூய்மையான அன்பு, மிருக இச்சையை வரம்புக்குட்படுத்தி முறைப்படுத்தும். இது பற்றி நமக்குப் போதுமான கல்வி அறிவு இடையாது. ஒரு கணவன், 'நமக்குக் குழந்தை வேண்டாம், ஆஞல் கூடி இன்புறுவோம்' என்று சொன்ஞல் அது மிருக இச்சைதானே? அதிகக் குழந்தைகள் வேண்டாமென்ருல், உடலின்பம் துய்க்காமல் ஒதுங்கியிருக்க வேண்டும். மிருகத்தனமான உணர்வுகளைத் தணித்து நிறைவடைய முற்படும் அந்தக் கணமே காதல் அழிந்து காமவேட்கையாகிவிடுகிறது. உணவைப் பொறுத்த மட்டிலும் அதேநிலைதான். 'ருசி'க்காகப் புசித்தால் அதுவும் கழிகாமத்திற்கு ஒப்பான செயலேயாகும். பசியைத் தீர்த்துக் கொள்ள யாரும் 'சாக்கலேட்' மிட்டாய்களைச் சாப்பிடுவதில்லை. இனிப்பு என்பதால் சாப்பிட்டுவிட்டு, பின் மருத்துவரிடம் சென்று மாற்று மருந்து வாங்கிச் சாப்பிடுகிருேம். 'விஸ்கி' சாப்பிட்டால் மூளைக்கு ஒரு கிறக்கம் ஏற்பட்டு, மாற்று மருந்தாக அமைகிறது என்று கூட நீங்கள் மருத்துவரிடம் சொல்லக்கூடும். மிட்டாய்களையோ, 'விஸ்கி'யையோ சாப்பிடாமலேயே இருந்துவிடுவது நல்லதல்லவா?



அரசிதழ்

இந்தியாவில் அரசிதழ் (Gazette) முதன் முதலாக வெளியிடப்பட்டது 1835-ஆம் ஆண்டுதான்.



தெரிந்த, என் மதிப்பிக்கும் மரியாதைக்குமுரிய பல 'பிராட்டஸ்டண்டு' கிருத்துவ இறைமையில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், கற்றறிந்த பெரியோர்கள் டாக்டர்கள் ஆகியோரின் ஆதரவு கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தும் கருத்தடை முறைகளுக்கு உண்டு என்பதும் எனக்குத் தெரியும்,'' எனக் கூறியுள்ளார்.

ஆக தன் கருத்துக்குப் புறம்பாக, செயற்கை முறையிலான கருத்தடை முறைகளை வலியுறுத்தியவர்களைப் பற்றியும், அதற்கு ஆதரவு காட்டியவர்களையும், காந்தியடிகள் நன்கு உணர்ந்திருந்தார் என்பதும், நாட்டில் அப்படிப்பட்ட செயற்கை முறை கருத்தடை முறைகள் பரவி வருவதைத் தெரிந்திருந்தார் என்பதும் தெளிவு. அவரது நேரடிப்பார்வையில் இருந்த சபர்மதி ஆசிரமத்தில் தனிப்பட்டோரிடையே 'சுயக் கட்டுப்பாடு' முறையைச் செயல் படுத்துவதில் பெருந்தோல்வி கண்டதாக அவரே குறிப்பிட்டிருப்பதிலிருந்து, புலனடக்கத்தின்மூலம் கருத்தடைத்திட்டத்தை ஏற்பது என்பது எவ்வளவு சிரமமான ஒன்று என்பதை அனைவரும் உணரவேண்டும். 'புலனடக்கம்' என்ற அவரது கருத்தடைத் தத்துவம் தவருனது என்று யாரும் சொல்லவில்லை— சொல்ல முடியாது! நடைமுறையில் அதைத் செயல் படுத்த இன்றைய சமுதாயப் பின்னணியில் இயலாது — தனிப்பட்டவர்களாலேயே முடியாது!

இதை உணர்ந்த காரணத்திஞலேதாஞே என்னவோ, நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் 'காந்திய நோக்கில் அல்லது காந்தீயக் கண்ணேட்டத்தில் மக்கள் தொகைப் பிரச்சினை என்றதொரு கருத்தரங்கம் வாரணுசியில் நடந்தேறி நல்ல பல முடிவுகளை நாட்டுக்கு அறிவித்துள்ளது. இந்தக் கருத்தரங்கம் வாரணுசியில் இயங்கிவரும் ''காந்தீயக் கருத்தாய்வு நிலையத்தின்'', (Gandhian Institute of Studies, Varanasi) சார்பில் நடத்தப்பட்டதாகும். இந்தக் கருத்தரங்கில் காந்தீயக் கொள்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பல அறிஞர்கள் கலந்து கொண்டார்கள். காந்தியடிகளோடு உடன் இருந்தவர்—அவரோடு பழகியவர்—அவரை அறிந்தவர்—இந்திய அரசின் முன்ஞள் மக்கள் நல்வாழ்வு குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார் அவர்கள் இக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கியுள்ளார்கள். ''காந்தீய நோக்கில் மக்கள் தொகைப் பிரச்சினை'' என்ற அந்தக் கருத்தரங்கில் தலைமையுரையாற்றிய டாக்டர் சுசீலா நய்யார் ''நம் தேவைகள் நிறைவேற்றத்திற் கேற்றவாறு காந்தீயக் கருத்துகளுக்குப் பொருள் சொல்லக்கூடாது. காந்தியடிகளிடமிருந்து நாம் எந்த இடத்தில் அல்லது கட்டடத்தில் வேறுபடுகிருேம் என்பதைச் சொல்லுவதற்கும், இந்த அளவுதான் அவரோடு இணைந்து செல்ல முடியும், இதற்குமேல் இயலாது என்று சொல்லுவதற்குமுரிய மனப் பக்குவத்தை — திடத்தை— உறுதியை நாம் பெறவேண்டும்,'' எனக் கூறியுள்ளார். மேலும் படிக்காத, கல்வி, அறிவு இல்லாத மக்களிடையேதான் அதிகக் குழந்தைகள் இருக்கின்றன என்றும், அந்தச் சமுதாய மக்களிடம் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட காந்தீயக் கருத்துச் செறிவு மிக்கவர்கள், கருத்தடைபற்றி ஏற்கெனவே இருக்கின்ற காந்தியடிகளின் கருத்துக்களில் அவ்வளவாக அக்கரை காட்டவில்லை என்ருலும் காந்தீயத்தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கு இந்தியாவை நோக்கியுள்ள மக்கள் தொகைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய முடிவுகளை அறிவித்துள்ளனர்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட காந்தீய அறிஞர்கள் சுதந்தரமாகக் கருத்தடை முறைகளைப் பின்பற்ற விரும்புவோருக்குச் செயற்கைக் கருத்தடைக் கருவிகள் எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், புலனடக்கத்தின் அல்லது சுயக் கட்டுப்பாட்டின் சிறப்பை வலியுறுத்தும் அதே நேரத்தில், அதை நடைமுறைப் படுத்த முனையும் தம்பதிகள் செயற்கை முறையான கருத்தடை முறைகளைப் பின்பற்றிஞல் கண்டிக்க வேண்டிய அவசியமில்லையென்றும் கருத்தறிவித்துள்ள அவர்கள், பகுத்தறிவுக்கொப்பும்வகையில் (Rational approach) இந்திய மக்கள் தொகைப் பிரச்சினை அணுகப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்கள்.

மேலும், இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும், இருபாலாரின் (ஆண், பெண்) பொறுப்பை உணர்த்தும் வகையில் 'பால் உணர்வுக் கல்வி' (Sex Education) அளிக்க வேண்டுமென்றும், பால் உணர்வு, காதல் பற்றி சமுதாயக் கருத்துக்களையும் போதிக்க வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

குடும்ப நல விளக்கத் திட்டம் குறித்துப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ள இக் கருத்தரங்கம், பெண்ணடிமை போக்கப்பட வேண்டுமென்றும், பெண்ணை ஆண் ஆதிக்கம் செலுத்தும் நிலை மாற வேண்டுமென்றும், பெண்களிடையே விழிப்பு உணர்ச்சி ஏற்படுவதை ஏற்றுச் சமுதாயத்தில் அவர்களுக்குச் சரிசமமான இடம் அளிக்க வேண்டுமென்றும், பெண் குழந்தைகளை விட ஆண்குழந்தைகளுக்குச் சலுகைகள் காட்டக் கூடாது என்றும், பெண் கல்விச் சிறப்படைய ஆவன செய்ய வேண்டுமென்றும், பெண்களும் மனித குலத்தின் அங்கமெனக்கருதிப் பாராட்ட வேண்டுமென்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே, இந்தக் கருத்துக்களையெல்லாம் மனத்தில் நிறுத்தி, காந்தியடிகள் கூறிய சுயக்கட்டுப்பாடு முறை மூலம் இன்றையச் சூழ்நிலையில் குடும்ப நலத்திட்டம் ஏற்றுச் செயல் படுவது மிகச்



# நல்ல முடிவுகளை நாம் எடுப்போம்!

12 7 1973 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியாளர்கள், காவல் துறை அலுவலர்கள் மாநாட்டில், முதல்வர் கலைஞர் ஆற்றிய உரை

முதல்வர் கலைஞர்

ஆண்டுதோறும் நடைபெறும் இம்மாநாடுகள் நிர்வாகத் திறமையை வளர்க்கவும், மக்கள் நல்வாழ்விற்காக அரசு தீட்டு கின்ற திட்டங்களை நிறைவேற்றிட வும் பயன்படுகின்றன. அதிகாரி கள் தங்களுடைய அன்றாட அலுவல்களில் சந்திக்கும் பிரச் சினைகளைப் பற்றிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து தீர்வு காணவும் இந்த மாநாட்டை நாம் பயன்படுத்திக் கொள்கிறோம்.

வரி வசூலிப்பது, சட்டம் ஒழுங் கைப் பாதுகாப்பது மட்டுமே அரசின் கடமையல்ல; மக்களின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத் திற்கும் அரசாங்கமே பொறுப் பேற்கிறது. அதிகாரிகளை ஏழை மக்கள் சந்திக்க முடியாத ஒரு காலம் இருந்தது. இன்று அதிகாரி கள் தொண்டு மனப்பான்மை யுடன் பணியாற்றி, எல்லாத் தரப்பு மக்களின் முறையீடுகளை யும் பெற்று, அவைகளுக்கான தீர்வு காண்கிற முயற்சியில் முனைந்து நிற்கிறார்கள். நாம் வகுத்துள்ள மனுநீதித் திட்டத் தின் வாயிலாகச் சிற்றூர்களுக் கும், பட்டிதொட்டிகளுக்கும் அதிகாரிகள் நேரிலே சென்று இயன்றளவு கோரிக்கைகளை உட னடியாகத் தீர்த்து வைக்கிற பாங்கினை அனைவரும் பாராட்டு கின்றனர்.

தனிப்பட்ட குறைகளைத் தீர்க்க மனுநீதித் திட்டமும், கிராமங் களின் அல்லது ஒரு சாராரின் பொதுவான குறைகளைத் தீர்க்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அமைப்பு முறைகளும் இருக்கின்ற போது, இடையிலே சிபாரிசு செய்ய ஆட்கள் தேவையில்லை. எனினும், ஜனநாயக அமைப்பு களின் வாயிலாக அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவர இய லாத சில பொதுப் பிரச்சினைகளும் இருக்கக்கூடும். அவைகளுக்குத் தீர்வு காண மக்களின் பிரதிநிதி களோ, தனிப்பட்டவர்களோ அதிகாரிகளை அணுகுவதில் தவறில்லை. நியாயத்திற்கு முரண் பாடான சில காரியங்களைச் சாதித்துக் கொள்ள, செல் வாக்குப் பெற்றவர்கள் அதிகாரி களை அணுகக் கூடும். அவர்கள் முறையீட்டில் அல்லது பரிந்துரை யில் நியாயமிருந்தால் செய்யுங் கள்; நியாயமில்லையெனில் அப் படிப்பட்ட பரிந்துரைகளைச் செய் பவர்கள் எவ்வளவு பெரிய இடத் தில் இருந்தாலும் அதைச் செய்ய இயலாது என்று கண்டிப்பாகவே கூறிவிடலாம்.

சில நேரங்களில் நியாயங்களைச் செய்வதற்குக் கூட வீண் கால தாமதமும் அந்தத் தாமதத்தைத் தவிர்ப்பதற்கு இடையிலே நேர்மையற்ற சில காரியங்களும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்து விடுகின்றன. அந்தத் தவறான காரியத்தைச் செய்யச் சாடை காட்டுகிற அதிகாரி களானாலும், அல்லது அந்தத் தவறான காரியத்தைச் செய்ய அதிகாரிகளைத் தூண்டுகிறவர் களானாலும் இரு சாராருமே சமூகத் துரோகிகளாகக் கருதப் படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

அதுபோலவே, அதிகாரிகள் சிலர், தங்கள் சொந்த நலனுக் காக, செல்வாக்குப் பெற்றவர் களிடம் அல்லது மக்கள் பிரதி நிதிகளிடம் அணுகி அவர்கள் மூலமாக அரசுக்கு நிர்ப்பந்தங் களைத் தருவதும் சுட்டிக் காட்டப் பட வேண்டிய ஒன்றாகும். அவ் வாறு தங்கள் நலன்களுக்காகப் பரிந்துரையாளர்களை ஏற்பாடு செய்து கொள்கிற அதிகாரிகள் யாரானாலும் அவர்கள் கண்டிப் பாக ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு ஆளாக்கப்படுவார்கள் என்பதை யும் நான் திடமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களுடைய பொதுப் பிரச் சினைகள் தவிர, வேறு எந்தப் பிரச்சினைக்கும் நேரிடையாக அர

பொறுத்துக்கொள்ள முடியாத நிலையை அடைகின்றனர். அந்த நிலைமையை விரும்பத்தகாத வழி களில் வெளிப்படுத்துகின்றனர். சில மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், காவல் துறை அலுவலர்களும் சேர்ந்து தங்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே ஓர் அன்புப் பிணைப்பை –நல்லுறவை–ஏற்படுத்திக் கொள் வதில் வெற்றி பெற்றுள்ளதை நான் கண்டுள்ளேன். அது, மாண வர்களின் குறைபாடுகளைத் தீர்ப்ப துடன்–நல்ல மக்கள் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டால்—மக்கள் தொடர்பு, பெரும் பயன் நல்கும் என்பதைக் காட்டுகிறது. கல்வி நிலையங்களில் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திட ஒரு நிலையான குழுவை ஏற்படுத்திட வேண்டும் என்ற கருத்து வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

சில மாவட்டங்களில் மாண வர்கள் வெள்ளத் துயர் தணிப்பு வேலைகளில் சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளது கண்டு, நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். அண்மையில் மாணவர்கள் தங்கள் விடுமுறையின் போது கிராமப் புறங்களில் பஞ்சம் தடுக்கும் பணி களில் ஈடுபட்டுச் செயற்கரிய செய்துள்ளனர். இந்திய அரசின் 50 சத நிதி உதவியுடன் நமது மாநிலத்தில் செயல் படுத்தப் படும் இளைஞர் அணித் திட்டம், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு, மக்கள் பணியில் பயிற்சி ஆகிய இரண்டையும் அளிக்கிறது. இத் திட்டம் 'யூனிசெப்' நிறுவனத் தின் பாராட்டைப் பெற்றுள்ளது. இதர மாநிலங்களும் இத் திட்டத்தை அறிமுகப்படுத்த விரும்பி இத்திட்டம் பற்றிய விவ ரங்களைக் கேட்டுள்ளன. திறமை, உற்பத்திப் பணிகளுக்குப் பயன் படுத்தப்படுமானால், தங்களுடைய சக்தியை இதர பயனுள்ள வழி களில் மாற்றிவிடுவதை இளை ஞர்கள் ஒப்புக் கொள்கிறார்கள் என்ற உண்மையையும் இத்திட் டம் எடுத்துக்காட்டுகிறது.

தமிழ்நாட்டில் தொழில் அமைதி குலையவில்லை என்று நாம் சொல்ல முடியாது, ஆனால், அது மற்ற மாநிலங்களில் குலைந்துள்ள அளவுக்கு நமது மாநிலத்தில் குலையவில்லை. இதற்காக யாரும் அரசையோ நிருவாகத் தையோ குறைகூற முடியாது. ஏனெனில், தொழில் அமைதி குலைவு என்பது எங்கும் காணப் படும் ஒன்றாக உள்ளது. இந்நிலை கவலைக்குரிய ஒன்றாகும். உண்மை யிலேயே, தமிழ்நாடு அரசு, ஆங் காங்கே தோன்றக்கூடிய தொல்லை களை ஆராய்ந்து, அதற்குரிய தீர்வு காண்பதில் பெருமளவில் வெற்றி பெற்று வருகிறது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும். தமிழ்நாடு தொழிலா ளர் அமைப்பு, வேலை தேடி அலை யும் — முறையாக அமையாத தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் தனக்குள்ள பொறுப்பினை முழுமனதுடன் உணர்கிறது என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ள முடியும். வேலையின்றி வாடும் உடன் பிறந்தவர்களைப் பொறுத்தமட்டில், தொழிலாளர் களுக்குள்ள பொறுப்பினை மேலும் முழு மனத்துடன் உணர்த்து வதற்கு ஏதேனும் செய்யப்படு மானால், தொழில் அமைதி குலைவு, குறிப்பிடத்தகுந்த அளவுக்குத் தீர்ந்துவிடும்.

மைய அரசின் நிதி உதவியுடன் நாம் இதுவரை செயல்படுத்தி வரும் கிராமப்புற வேலைவாய்ப்பு விரைவுத் திட்டம், தமிழ்நாடு அரசே முழுமூச்சுடன் செயல் படுத்தி வரும் முற்போக்கு நிலச் சீர்திருத்தத் திட்டம், அண்மை யில் கொண்டுவரப்பட்ட குத்தகை தாரர்கள் — நிலச்சுவான்தாரர் களிடமிருந்து நிலம் பெறும் சட் டம், வீட்டு மனைப்பட்டா அளித் தல், கிராம வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மார்ச் 1973 வரை ரூபாய் 121·4 இலட்சம் செலவிட்டுள்ளமை, சமுதாயத் தில் ஏழை எளியவர்களாக உள்ள தனிப்பட்டவர்களும், குழுவின ரும் சொந்தத்தில் சிறு வியாபா ரம், தொழில் ஆகியவைகள் தொடங்குவதற்கு எளிதாக குறைந்த வட்டியிலும், அரசுப் பொறுப்பில் அல்லாமல் சொந்தப் பொறுப்பிலேயே ரூபாய் 500 முதல் ரூபாய் 3,000 வரை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கடன் கொடுத்து வரு தல் ஆகிய திட்டங்கள், பெரும்பா லானவர்களிடம் நீண்ட காலமாக இருந்து வரும் ஏழ்மையை நீக்கி, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மதிப்பிற்குரிய நிலைக்கு உயர்த்தி வருகின்றன. இவ்வகையில் தமிழ் நாடு வழிகாட்டியாக விளங்கு கிறது. இத்திட்டங்களை வெகு தீவிரமாக மேற்கொள்வதுடன், இடையறா முயற்சியுடனும், நியாயமாகவும் நிறைவேற்றுவது மாவட்ட ஆட்சி அமைப்பின் கடமையாகும்.

பருவம் வாய்ப்பாக அமையா மையும், முறையற்ற மழையும் மின்வெட்டை ஏற்படுத்திய துடன், வேளாண்மை உற்பத்தி யையும் குறைத்துவிட்டது என் பதை நாம் அறிவோம். எனவே, நமது நீர் நிலைகளைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் இன்றியமை யாததாக உள்ளது. சிறிய நீர்ப் பாசன ஏரிகளைச் சிறந்த முறையில் பராமரிக்க வேண்டியதன் அவசி யத்தை நீங்கள் விவாதிக்க இருக் கின்றீர்கள். அவ்வப்பொழுது தேவையான பழுதுபார்க்கும் பணிகளை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொள்வதற்கு ஏற்ற ஒருங் கிணைந்த திட்டம் தயாரிப்பதற்கு யோசனை கூறுவீர்கள் என்றும், நிலநீர் மட்டத்தை அதே நிலையில் பாதுகாப்பதற்குரிய வழிகளையும் நில நீரைப் பெருமளவில் பயன் படுத்துவதற்குரிய வழிகளையும் தெரிவிப்பீர்கள் என்றும் நம்புகின் றேன்.

1973–74–ஆம் ஆண்டில் சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழ், 20 கோடி ரூபாய் சேமிப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற இலக்கினை எய் திட வேண்டும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டிய அவ சியத்தில் உள்ளேன். சிறு சேமிப்பு வசூலுக்குச் சிறப்பு இயக்கம் ஏற்படுத்துவீர்கள் என நம்புகின்றேன். சம்பளப்பட்டி யல் சேமிப்புத் திட்டமும், பள்ளிக்கூடச் சேமிப்பு வங்கித் திட்டமும் வெகு தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டால், முடிவு சாதகமாக இருக்கும்

கள்ளச் சாராயம் காய்ச்சுவது நன்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகின்றேன். தற்பொழுது மீண்டும் படிப்படியாக மது விலக்குக் கொண்டு வரப்படவிருக் கிறது. அதனால் காவல்துறை அலுவலர்களின் பொறுப்பு அதிக மாகவிருக்கிறது. அவர்கள் மது பானக் கடத்தலையும், கள்ளச் சாராயம் காய்ச்சுதலையும் கட்டுப் படுத்த மிகமிக உன்னிப்பாக இருக்க வேண்டும். நீங்கள் இப் பணியைச் சிறப்பாக முடிப்பீர்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை!

திறமை மிகுந்த அலுவலர்களை யும், தனிப்பட்டவர்களின் வற் புறுத்தலுக்கோ விருப்பத் திற்கோ ஏற்றாற்போல் தங்களை மாற்றியமைத்துக் கொள்ளாத, கடமை தவறாத அலுவலர்களை யும் தமிழ்நாடு பெற்றுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். வெள்ளத்தினால் வேதனை ஏற் பட்டபோதும், மாணவர் போராட்டம் ஆகியவைகளின் போதும், நீங்கள் சிறப்பான பணி யாற்றியுள்ளதை நான் மிகவும் பாராட்டுகின்றேன்.

இந்த மாநாட்டில் நடைபெற விருக்கும் விவாதங்கள் உங்க ளுடைய அனுபவத்தின் அடிப் படையான கருத்துக்களாக இருக்குமாதலின், நமது முன் னேற்றத்தை ஆராயவும், அன்றாட நிருவாகத்தில் ஏற்படும் சிக்கல் களைக் களையவும், மக்களின் நன்மைக்காகவும், நல்வாழ்வுக் காகவும் மேம்பாட்டுப் பணிகளைத் திறமையாகச் செயல்படுத்தவும் அரசுக்குப் பேருதவியாக இருக்கும்.

## வெண்பாப் போட்டி

பாரிலுள்ளோர் போற்றப் பணிசெய் தமிழரசால்
சாரமுள்ள வாழ்வதனைச் சார்ந்திட்டோம்—ஈரம்
சுரந்திடும் உள்ளத்தால் சோம்பலாய் என்றும்
இரந்துண்டு வாழோம் இனி.

—பெ. கௌசல்யா, புதுப்பேட்டை.

செய்யென்னும் நன்மடந்தை சிந்தை குளிர அவள்
மெய்யில் விளையுள்பூண் மின்னிடவே—செய்து
பரந்த புகழோங்கும் பைந்தமிழ நாட்டில்
இரந்துண்டு வாழோம் இனி.

—ஜி.வி. அர்த்தநாரி, வேலூர் (சேலம்).

சாலையிற் கையேந்தச் சற்றும் சளைக்காதார்
வேலைகள் பெற்றார்; விளம்புகிறார்—ஏழை
கரையேறக் காரியங்கள் செய்யும் அரசில்
இரந்துண்டு வாழோம் இனி!

—ம. சக்குபாய், உடுமலை.

நாடா வளத்ததுவாய் நாடுயரத் திட்டமிட்டு
மாடாய் உழைத்தேனும் மாநிதிச்சீர்—வாடா
வரம்புகண்டு; வாழ்வாங்கு வாழ்வோமே யன்றி
இரந்துண்டு வாழோம் இனி.

—பாசி, ரெட்டியாரூர்.

உண்ண உணவில்லை உடுத்த உடையில்லை
என்னும் இழிநிலையோ இங்கில்லை—இன்னல்
மறந்தோடச் செய்கின்ற மாண்புடையார் ஆட்சியிலே
இரந்துண்டு வாழோம் இனி.

—சரோஜா சுந்தரம், வெண்பாவூர்.

கார்மாரி பொய்த்தாலும் கல்லைக் கிணறாக்கிச்
சீர்சேர் பசும்புரட்சி செய்விக்க—நேராய்
அரசிருக்கும் நேரமிதில் அண்டையரை வேண்டி
இரந்துண்டு வாழோம் இனி!

—மு. ஜெய்லானி தம்பி, சின்னதாராபுரம்.

உழவும் உயர்தொழிலும் ஓங்கி நம்நாடு
நலமுறவே சேர்ந்துழைப்போம் நாளும்—இலையென்று
பிறநாட்டார் கைபார்த்துப் பேதையர்போல் வாடி
இரந்துண்டு வாழோம் இனி.

—மா. சா. குருசாமி, அபிராமம்.

'சிரம்' கொடுத்து வாழென்ற செங்கைக் 'குமணன்'
பரம்பரையில் வந்துதித்த பண்பால்—உரைப்போம்!
நிரந்துண்டு வாழ்வதே யல்லாமல் நாங்கள்
இரந்துண்டு வாழோம் இனி!

—மலர்விழி மணாளன், விராமதி.

அச்சத்துள் அச்சம் இரவச்சம் அவ்வச்சம்
மெச்சப் படுமச்சம் என்றறிக—துச்ச
உயிரினும் மான முயர்ந்தது;நாங்கள்
இரந்துண்டு வாழோம் இனி.

—மா. சே. இராசு, திருப்பூர்.

பாடுபட நம்மரசு பன்முறையில் ஊக்குவதால்
நாடு வியந்திட நாமுயர்வோம்—வாடிக்
கரமேந்தி நிற்கின்ற காலமும் போச்சே!
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

எங்கும் பயிர்செழித்தே ஏற்றம் பலபெருகும்
தங்கத் தமிழரசின் சாதனையை—நங்காய்!
மறந்துண்டு வாழோம்நம் மண்ணின் பெருமை!
இரந்துண்டு வாழோம் இனி.

—புலவர். ச. மருதமுத்து, உடுமலை.

கூனாய்க் குருடாய்க் குறைந்தழுகும் மேனியராய்,
ஊனுருகி நாளும் உருக்குலைந்தோம்;—மானே!
அருளால் மறுவாழ்வு இல்லம் திறந்தார்;
இரந்துண்டு வாழோம் இனி.

—சம்பு இசைகொண்டான் போச்சம்பள்ளி.

முப்போகம் இங்கே முழுநெல் விளைவதால்
எப்போதும் பஞ்சமில்லை எம்நாட்டில்;—ஒப்பி
மருந்திற்கும் யாங்கள் மடிபசி தீர்க்க
இரந்துண்டு வாழோம் இனி

—ப. குப்புசாமி, திருச்சி-4.

# காந்தியடிகளும் குடும்ப நலமும்

எஸ். முத்துராமலிங்கம்

உலகநாடுகளில்பல இரத்தக் கறை படிந்த பின்னர்தான் விடுதலை பெற்றிருக்கின்றன—உரிமை யடைந்திருக்கின்றன. ஆனால் இந்தியப் பெருநாடு அன்றைய ஆங்கில ஏகாதிபத்தியத்தை அறப்போராட்டங்களினாலேயே வென்றது என்றால் அதற்கு முழு முதற் காரணம் காந்தியடிகளே ஆவார். கத்தியின்றி இரத்தமின்றி மிகப் பெரிய புரட்சியை நடத்திக் காட்டியவர் — தன்னைத் தானே வருத்திக் கொண்டுதான் இருந்த உண்ணாவிரதங்களின் மூலம் அரசுக்கும் மக்களுக்கும் பற்பலவற்றை வலியுறுத்திக் கூறியவர்—சத்தியாகிரகம், சட்ட மறுப்பு இயக்கம், தண்டி யாத்திரை போன்றவற்றின் மூலம் கொள்கைகளுக்காகப் போராடியவர் அடிகளாவார்! நாட்டு விடுதலையோடு கூட காந்தியடிகள் சமுதாயப் புரட்சியும் ஏற்பட வேண்டுமென எண்ணினார். அவர், எவை எவை இந்த நாட்டில் மலர வேண்டுமென விரும்பினார் எனக் கூறவந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், தமது 'உலகப் பெரியார் காந்தி', என்னும் நூலில்,

அன்னிய ஆட்சி ஒழிய வேண்டும்

மக்களாட்சி மலரவேண்டும்

இந்து-முஸ்லீம் ஒற்றுமை வேண்டும்

தொழில்கள் பெருக வேண்டும்

கல்வி பரவ வேண்டும்

ஜாதி பேதம் ஒழியவேண்டும்

தீண்டாமை போக வேண்டும்

கிராமம் சீர்படவேண்டும்

வறுமை நீங்க வேண்டும்

சுரண்டல் முறை ஒழிய வேண்டும்

ஏழை ஈடேற வேண்டும்

ஏழை உரிமை பெற வேண்டும்

ஒற்றுமை மலர வேண்டும் எனக் காந்தியடிகள் கருதினார் என்றும், 'இத்தகைய இந்தியா உருவாக வேண்டும். அதுவே என் இலட்சியம், அதற்கே நான் பாடுபடுகிறேன்' எனக் கூறினார் என்றும் குறிப்பிட்டு, காந்தியடிகளின் உளப்பாங்கை நமக்குத் தெளிவுபடுத்தி எளிதாக்கிக் காட்டியுள்ளார்கள். அப்படிப்பட்ட காந்தியடிகள் விடுதலை இயக்கத்தோடு தம்மைக் கட்டுப் படுத்திக் கொள்ளாது, வார்தா கல்வித் திட்டம் போன்றவற்றை அளித்தது போல், மனித சமுதாய உய்விற்கான பல்வேறுவழிகள் அல்லது துறைகள் ஆகியவற்றில் தனக்கெனத் தனிக் கருத்துக் கொண்டு வலியுறுத்தியதோடு ஒழுகியும் காட்டினார்! உலகிற்கே அகிம்சை நெறியை—திருவள்ளுவர் சொன்ன கொல்லாமை நெறியைத் தந்தவர்! இறுதியில் கயவன் ஒருவனின் குண்டுகளுக்குப் பலியாகி அண்ணல் மறைந்த நேரத்தில், இந்த நாட்டிற்குக் ''காந்தி நாடு'' என்று பெயரிட வேண்டும்—கி.மு. அல்லது கி.பி எனக் கூறிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக 'காந்தி ஆண்டு' எனக் குறிப்பிட்டுக் கூறவேண்டும், காந்தி மதம் எனப் பெயரிட வேண்டும் என்பன போன்ற கருத்துக்களை வலியுறுத்தித் தந்தை பெரியார் அவர்கள் எழுதினார் என்றால், காந்தியடிகள் இந்நாட்டு மக்களிடையே எந்தளவுக்கு இரண்டறக் கலந்திருந்தார் என்பது புலப்படும். அப்படிப் பட்ட உத்தமர் குடும்ப நலத் திட்டம் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள் என்ன ?

காந்தியடிகள் கருத்தடைத் திட்டம் பற்றித் தனக்கெனத் தனியொரு கருத்துக் கொண்டவராக வாழ்ந்தார் என்பதை நாடறியும். ஆனால் குடும்பம் சிறியதாகி இருக்க வேண்டுமென்பதில் அவர் கருத்து வேறுபாடு கொண்டவராக இருக்கவில்லை. வழி முறைகள் பற்றித்தான் கருத்துவேறுபாடு கொண்டிருந்தார். கருத்தடை முறையாகச் சுயக்கட்டுப் பாட்டை—புலனடக்கத்தை—ஆன்மீக ஒழுக்க நெறியை வற்புறுத்தினார். செயற்கை முறையில் கருத்தடை செய்து கொள்வது என்பதை ஏற்காதவர். 'சுயக்கட்டுப்பாடு' என்பது காந்தியடிகள் போன்றோராலேயே நிறைவேற்றப் படக் கூடியது என்பதை. எவரும் ஒப்புவர். 'அப்பல்லோ' வேகத்தில் சென்று கொண்டிருக்கும் இன்றைய மனிதவாழ்க்கையில் 'சுயக்கட்டுப்பாடு'—உள்ளத் துறவு—புலனடக்கம் என்பவற்றை யெல்லாம் சர்வ சாதாரண சாமான்ய மனிதனின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் கடைப் பிடித்து ஒழுகுவது என்பது இயலாத ஒன்று என்பது தெளிவு.

இந்நாட்டு மண்ணடிமை போக்கிய காந்தியடிகள் கருத்தடைத் திட்டம்பற்றி முடிந்த முடிவான கருத்துக்களைக் கொண்டிருந்தார் என்ற போதிலும் கருத்தடைத் திட்ட வெற்றிக்காக உழைத்தவர்களிடத்திலே மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார். அவர்களோடு மனம் விட்டு விவாதித்தார். கருத்தடை பற்றிக் காந்தியடிகளோடு திருமதி. நாயரும், திரு

சாங்க அதிகாரிகளை அணுகாமல், நியாயத்திற்குப் புறம்பான செயல்கள் எங்கே நடைபெற்றாலும் அவைகளை மக்களின் பிரதிநிதிகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அவர்கள் அரசு அதிகாரிகள் குறித்து எந்த விதமான பரிந்துரைகளையும் அரசுக்குக் கொண்டு வரக்கூடாது என்பதை நான் பல தடவை வலியுறுத்திக் கூறியுள்ளேன். அந்தக் கருத்தில் இந்த அரசு மேலும் அழுத்தந் திருத்தமாக இருக்கும் என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

கல்வி நிலையங்களிலும் உத்தியோகத் துறையிலும் சலுகைகள் அளித்தல், அரசு நிலங்களைப் பட்டா செய்து கொடுத்தல், குடியிருப்பு நிலங்களை அவர்களுக்கே உடைமையாக்குதல், தமிழகம் முழுவதிலும் சொந்தமாக வீடு இல்லாதவர்களுக்குக் குடியிருப்பு நிலம் வாங்கித் தருதல், உழுபவனுக்கு நிலத்தில்சொந்தம் என்ற நிலை ஏற்படுத்தல், தாழ்த்தப்பட்ட பெரு மக்களைக் கோயில்களில் அறங்காவலர்களாகவும், அர்ச்சகர்களாகவும் நியமித்தல், குடிசைகளில் வாழ்வோருக்கு மாடி வீடுகளைக் கட்டித் தருதல், பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளித்தல், கண்ணொளி வழங்குதல், கை ரிக்ஷாக்களை ஒழித்தல் இவையெல்லாம் அவர்கள் வாழ்க்கையில் முன்னேற இந்த அரசு அமைத்துத் தரும் படிக்கட்டுக்கள். இது அரிசனங்களையும், பிற்பட்டோரையும், நடுத்தர மக்களையும் முன்னுக்குக் கொண்டு வரும் ஓர் அமைதியான புரட்சியாகும். காழ்ப்புணர்ச்சியற்று, நடுநிலைமையோடு நோக்கும் எவருக்கும் இந்த அரசின் சாதனைகள் விளங்கும்.

எந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதானாலும் மாவட்ட ஆட்சியாளர்களின் ஒத்துழைப்புத் தேவைப்படுகிறது. அவர்கள் ஊக்கமின்றிச் செயல்படுவார்களேயானால், எத்திட்டமும் சரிவர நிறைவேறாது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை அமலாக்குவதிலும், சிறு சேமிப்பில் ஆர்வம் காட்டுவதிலும், தேர்தல் வேலைகளை முன் நின்று நடத்துவதிலும், சட்டம் – ஒழுங்கைப் பாது காப்பதிலும் எந்த வேலையானாலும் அவர்கள் அக்கறை காட்டுகிறார்கள்; சிறந்த முறையில் பணியாற்றுகிறார்கள். சென்ற ஆண்டு இறுதியில் பல மாவட்டங்களில் வெள்ளத்தால் சேதம் ஏற்பட்டுப் பயிர்களும், சாலைகளும், நீர்நிலைகளும் வீடுகளும் பாதிக்கப்பட்டன. மாவட்ட நிருவாகத்தினரும் அரசின் உயர்தர அதிகாரிகளும் விரைந்து செயல்பட்டதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆகவேதான், தமிழ்நாடு நிர்வாகம் இந்தியாவிலேயே நல்ல சிறந்த நிர்வாகம் என்று போற்றப்படுகிறது. நிர்வாகத் திறமை சற்றும் குறைந்துவிடவில்லை என்று நாம் உறுதியாகக் கூற இயலும். குறைந்துவிட்டது என்று கூறுவது அரசியல் நோக்கத்துடன் என்பது நடுநிலையாளர்கள் அனைவருக்கும் புரியும்.

இன்று உணவு உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெற்று விளங்குகிறோம். உணவுப் பொருட்கள் கிடைக்கவில்லை. என்ற நிலை இந்த மாநிலத்தில் இல்லை. எனினும், மாநில எல்லையோரப் பகுதிகளில் உணவுப் பொருட்களின் விலை சிறிது உயர்ந்து உள்ளது என்பதை மறந்துவிடுவதற்கில்லை. அப்பகுதிகளில் உணவுப் பொருட்களின் விநியோகம் செவ்வனே நடைபெறவும், விலைவாசிகள் கட்டுக்கடங்கி இருக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், இந்தப் பகுதிகளில் பணியாற்றும் அதிகாரிகள், சற்று விழிப்புடன் இருக்க வேண்டும். நிலைமைகளை அரசின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவந்து பற்றாக்குறை ஏற்படாமலும், விலைவாசிகள் உயராமல் இருப்பதற்கும் ஆவன செய்ய வேண்டும். காவல்துறை அதிகாரிகள் உணவுப் பொருட்கள் கடத்தலைத் தவிர்க்க உதவ வேண்டும்.

சென்ற ஆண்டில் வான் பொய்த்துப் பருவ மழை தவறியதால் நமது மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து போதிய அளவு மின்சார உற்பத்தி செய்ய இயலவில்லை. அண்டை மாநில அரசுகள் வழக்கம்போல் நமக்கு அளித்து வந்த மின்சக்தியை இந்த ஆண்டு அளிக்க இயலவில்லை. அது நமது விவசாயத்தையும் தொழில்களையும் ஓரளவு பாதித்து விட்டது. குறிப்பாக, ஆலைகளில் நூல் உற்பத்தி குறைந்ததால் கைத்தறி நெசவாளர் நேரடியாகப் பாதிக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் கடனுதவி வழங்குதல், கிடைத்த நூலை நல்ல முறையில் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை மாவட்ட அதிகாரிகளாகிய நீங்கள் செவ்வனே செய்து முடித்தீர்கள். இம்மாதிரிச் சூழ்நிலைகளில் பகிர்ந்தளிப்பதில் சிறு தவறுகளும் நிகழாமல் பார்த்துக் கொள்வது மாவட்ட ஆட்சியாளர்களாகிய உங்களுடைய கடமையாகும்.

மாணவர்கள், தொழிலாளர்கள் இவர்களின் சிறு சிறு கோரிக்கைகளை—பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டியவைகளைப் பெரிதாக்கிக் குழப்பங்கள் விளைவித்து அரசியல் இலாபம் தேட முனைவோரை நீங்கள் சந்திக்கக் கூடும். சட்டம் – அமைதியைப் பாதுகாக்கும் நீங்கள், எந்த ஒரு கிளர்ச்சியானாலும் வன்முறைகள் தலைதூக்கிக் கோரிக்கைகளின் நியாயத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். எந்தக் கிளர்ச்சியில், எந்த அதிகாரி, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அறுதியிட்டுக் கூற இயலாது. நிலைமைகளுக்கும் விதிகளுக்கும் தக்கவாறு விரைவாக, ஆனால் நிதானத்துடன் முடிவுகள் எடுத்து அமலாக்க வேண்டும். எடுக்கப்பட்ட முடிவுகள் குறை கூறப்படாமல் இருக்கும் அளவுக்குப் பார்த்துக் கொள்ள வேண்டும். நகராட்சித் தேர்தல்களும், இடைத் தேர்தல்களும் வரவிருக்கின்றன. தேர்தல் நேரங்களில் மனித இதயத்தில் உறங்கிக் கிடக்கும் பொறாமையும், வன்முறை யுணர்ச்சியும் வெளிக்கிளம்பி வன்செயலாக மாறி, சட்டம் ஒழுங்கிற்குப் பங்கம் விளைவிக்கும் கலவரங்களாக மாறக்கூடும். எந்தச் சிக்கல்களையும் கடந்த காலத்தில் நீங்கள் செவ்வனே சமாளித்தது போல் இனியும் சமாளிக்க வேண்டும்.

இன்றும் நாளையும், சட்டம்-ஒழுங்கினை அமலாக்குவதில் எழும் பிரச்சினைகள் பற்றியும், மக்களின் அன்றாடத் தேவைப் பொருள்களின் விநியோகம் பற்றியும், இளைஞர் அணித் திட்டம், கிராமப் புற வேலை வாய்ப்புக்கான திட்டம், எளிய பிரிவினர்களின் நலன்களுக்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் வழங்கும் கடன் திட்டம், நிலச் சீர்திருத்தச் சட்டங்களை அமல் செய்வதில் நாம் கண்டுள்ள முன்னேற்றம், பட்டா விவசாயக் குறிப்பேடுகள் விநியோகம், சிறு பாசன ஏரிகள் பராமரிப்பு, கிராம வீட்டு வசதி, வீட்டு மனைகள் வழங்குதல், பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பும் நம் மக்களுக்குப் புனர்வாழ்வு அளித்தல் போன்ற பல பொருள்கள் பற்றி விவாதிக்க இருக்கிறீர்கள். அவைகளைப் பற்றி நன்கு ஆராய்ந்து நல்ல முடிவுகளை நாம் எடுப்போம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, ஆளுநர் அவர்களை இந்த மாநாட்டைத் தொடங்கி வைக்கவேண்டுகிறேன்.

# சாராபாய் தொழிற்பேட்டை

"தமிழகத்தில் தொழில் வளம் பெருகிட வேண்டும் என்கிற சீரிய எண்ணத்தோடு பணியாற்றி வருகின்ற தமிழ்நாடு அரசின் முயற்சியில் இன்றைக்குத் தொடங்கப்பட்டுள்ள இந்தத் தொழிற்பேட்டை ஒரு மைல் கல் ஆகும்.

''சுமார் 45-லிருந்து 50 இலட்சம் ரூபாய் செலவில் அமையும் இந்தத் தொழிற்பேட்டையில் 25 வகைத் தொழில்களுக்கு வசதியும் வாய்ப்பும் செய்யப்பட்டுள்ளது. சிறிய அளவில் தொழில் வளர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கவும் தமிழகத்தின் தொழில் துறை நிபுணர்கள்—விஞ்ஞான வித்தகர்கள்— தொழிலாளர்கள் ஆகியோரின் அருந்திறனை அவனிக்கு எடுத்துக் காட்டிடவும் இங்கு முதலீடு செய்துள்ளவர்களையும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளவர்களையும் நான் பாராட்டுகிறேன். இவர்களைப் போலப் பலரும் முன்வர வேண்டும் என்று அழைப்புவிடுக்க—வரவேற்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சென்னை அடையாறு பலகை வாராவதி அருகில் (செங்கை மாவட்ட எல்லையில்) அமைக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டையை 11—7—1973-ல் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்கள். இந்தத் தொழிற் பேட்டையில் தயாரிக்கப்பட இருக்கும் பொருள்களின் தரத்தைப் பரிசோதிக்கப் பயன்படும் வகையில் நிறுவப்பட இருக்கும் பரிசோதனைக் கூடத்திற்கும் தொழிற்பேட்டையின் நிருவாக அலுவலகக் கட்டடத்திற்கும் முதல்வர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

அறிவையே மூலதனமாக வைத்துத் தொடங்கப்படுகிற மின் அணுத் தொழில்களுக்கு ஏற்ற இடம் தமிழ்நாடு என்றாலும், தமிழகப் பொறியியலாளர்களின் தொழில் நுட்பத் திறனை—தொழில் நுட்ப அறிவை— தொழில் துறைகளில் பெரிதும் முன்னேறியுள்ள ஜப்பானியர்களே வியந்து பாராட்டுகின்றனர் என்றாலும், தமிழக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டது போல, மின் அணு மூலம் நடைபெறுகின்ற தொழில்கள் தமிழ்நாட்டில் பெருமளவில் இல்லை என்பதையும், இப்போதுதான் அது முனைப்பாகத் தொடங்கப்பட்டிருக்கிறது என்பதையும் அதற்கான முதற் கட்டம் இது என்பதையும் நாம் ஒப்புக் கொண்டு தான் ஆகவேண்டும்.

''மைசூர் மாநிலத்தில் பெங்களூரைச் சுற்றியிருக்கிற இந்த மின் அணுத் தொழிற்கூடங்கள், தொழில் வளர்ச்சி—அதற்கடுத்தபடியாக ஐதராபாத்தில் அதன் சுற்றுப் புறத்தில் இருக்கிற இந்த அணுமின் தொழில் வளர்ச்சி ஆகியவற்றோடு போட்டி போடக் கூடிய அளவிற்கு நமது தமிழகத்தில் நாம் அந்த வளர்ச்சியைப் பெற்றாக வேண்டும் என்று நாம் விரும்புவதில் தவறில்லை'' என்று கூறிய தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில்,

''டில்லி, பம்பாய், மைசூர், ஐதராபாத் போன்ற இடங்களுக்கெல்லாம் இங்கேயிருந்து தொழில் நிபுணர்கள், தொழிலாளர்கள், அதிலே தேர்ச்சி பெற்றவர்கள் சென்று அங்கே அந்தத் தொழில் வளர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களெல்லாம் தமிழகத்தில் இருந்து, இங்கே தொழிலை வளர்க்கவும் அதற்குத் தேவையான நீர்வசதி, நிலவசதி இவைகளைச் செய்து தரவும், தமிழக அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது'' என்று கூறினார்கள்.

''மின் அணுத் திட்டங்களின் தொலைவுத் தொடர்புத் துறையில் (Tele Communication) தொழில்களைத் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் முதல்வர் அவர்கள் இந்திய அரசைக் கேட்டுக் கொண்டார்கள்.

1970-ஆம் ஆண்டு அரசினரால் அமைக்கப்பட்ட ஒரு பணிக் குழு தமிழ்நாட்டில் நல்ல வளர்ச்சி பெற வாய்ப்புக் கூறுகள் பொருந்திய மின் அணுத் தொழில்களைப் பற்றி ஆய்வு செய்தது.

இந்தக் குழுவில் தொழில் அதிபர்களும், தொழில்நுட்பக் கல்விக் கூடங்களும் பங்கேற்றன. இந்தத் தொழிற் பேட்டையில் தொழிற்சாலை தொடங்கும் தொழில் அதிபர்கள் இப்பணிக் குழுவின் பரிந்துரைப்படி குறிப்பிட்ட சில துறைகளில் திட்டமிட்டுச் செயல்பட ஊக்குவிக்கப்படுவார்கள்.

.. இந்தத் தொழிற்பேட்டை அமைக்க மொத்தச் செலவு ரூ. 45 இலட்சமாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மின் அணு, மின் அளவைக் கருவிகள், துணைக் கருவிகள் முதலியன உற்பத்தி செய்யும்

## தொலைவு பேசிகள்

இந்தியா விடுதலையடைவதற்கு முன்பு 1947 ஆகஸ்டுக்கு முன்பு, இங்கு ஒரு இலட்சம் தொலைவு பேசிகள்கூட இருக்கவில்லை; இன்று 1973-ல் 14 இலட்சம் தொலைவு பேசிகள் உள்ளன. எனினும், 500 பேருக்கு ஒரு தொலைவு பேசி என்னும் கணக்கில்தான் உள்ளது. அமெரிக்காவிலோ இரண்டு பேருக்கு ஒரு தொலைவுபேசி என்ற கணக்கில் இருக்கிறது.

✳ ✳




**திருமதி. சாங்கர் :** நான் இந்த வாதத்தை—ஒப்புவமையை ஒப்புக் கொள்ளவில்லை.

**காந்தியடிகள் :** நான் கூறியவற்றை ஏற்கமாட்டீர்கள் என்பது உறுதி. ஏனென்றால் பிள்ளைப் பேற்றிற்காக உடலுறவு கொள்ளாமல் சிற்றின்ப நுகர்ச்சிக்காக மட்டும் உடலுறவு கொள்வது, மனித வாழ்வுக்குத் தேவையானது எனக்கருதுகிறீர்கள். அந்தக் கருத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

**திருமதி. சாங்கர் :** ஆம்! பால் உணர்வு என்பது ஒரு நுண்ணுணர்வுத் தேவையாகும். ஏற்படும் விளைவைவிட, இவ்வுணர்வை முறையாக — தரமாகவெளிப்படுத்துவதே முக்கியம் என நான் கருதுகிறேன். விளைவுகளைப் பற்றிக் கவலையுறாமல் கூடுவதின் தரம் எப்படிப்பட்டது என்பது வெளிப்படையானது. 'கரு' உருவாக வேண்டும்-குழந்தை பிறக்க வேண்டும் என்ற எண்ணம் ஏதும் பெற்றோர்களுக்கு ஏற்படாத சமயத்தில்— எதிர்பாராத நேரத்தில், விபத்து ஏற்படுவதுபோலத் தான் பெரும்பாலானகுழந்தைகள் பிறந்து கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறிவோம். குழந்தை வேண்டும் என்றபோது மட்டும் கணவனும் மனைவியும் உடலுறவு கொள்வது என்பது அபூர்வமானதாகும். காதலால் கட்டுண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கும் கணவனும் மனைவியும், தங்களுக்குக் குழந்தை தேவை என விரும்பும் போது மட்டும்—அதாவது இரண்டாண்டுகளுக்கு ஒரு தடவை மட்டும் உடலுறவு கொள்வது என வகைப்படுத்தி அல்லது முறைப்படுத்தி வாழ முடியும் என்கிறீர்களா?

**காந்தியடிகள் :** என்னாலே அதைச் செய்ய முடியுமென்றாலும், என் ஒருவனாலேயே மட்டுந்தான் என்று பொருளல்ல.

**திருமதி. சாங்கர் :** வாழ்நாள் முழுவதிலும் மூன்று அல்லது நான்கு முறைதான் உடலுறவு கொள்ள வேண்டுமோ?

**காந்தியடிகள் :** மூன்று அல்லது நான்கு குழந்தைகளுக்கு மேல் பெறுவது நன்னெறிக்குப் புறம்பான கொடிய செயலென்றும், அப்படி மூன்று நான்கு குழந்தைகள் பெற்றுக் கொண்ட பின்பு கணவனும் மனைவியும் தனித்தனியே உறங்க வேண்டுமென்றும் மக்களுக்கு ஏன் நாம் கற்றுக் கொடுக்கக் கூடாது? அப்படிச் செய்தால் அது ஒரு வழக்கமாக —மரபாக உருவாகிவிடும். சமுதாய சீர்திருத்தப் பணிகளில் அல்லது தொண்டுகளில் இக்கருத்தை வலியுறுத்தி ஏற்கச் செய்ய முடியாது போனால் ஏன் சட்டமியற்றக் கூடாது? நான்கு குழந்தைகளையுடைய கணவன் மனைவி உடலுறவு கொண்டிருப்பார்கள். அதன்பின் அவர்களது காதல் ஒரு மேலான நிலையை அடைந்திருக்கும். போதுமானவரை உடலுறவு கொண்டார்கள். விரும்பிய அளவு குழந்தைகளைப் பெற்ற பின்பு, அவர்களது காதல் தெய்விகத் தன்மையான ஒரு உறவாக மாறுகிறது, பிறந்த குழந்தைகள் இறந்து, இன்னும் குழந்தைகள் வேண்டுமென அவர்கள் விரும்பினால் மீண்டும் உடலுறவு கொள்ளட்டும். சிற்றின்ப நுகர்வுக்கு மக்கள் ஏன் அடிமையாக வேண்டும்? கருத்தடை பற்றி அவர்களுக்குச் சொல்லும்போது அது கடமை என வலியுருத்துகிறீர்கள். அதைக் கடைப்பிடித்து ஒழுகாவிட்டால் படிப்படியான தெய்விக அல்லது ஆன்மீக வளர்ச்சியைத் தடைப்படுத்தும் என்கிறீர்கள். அதை வகைப் படுத்துவது பற்றி நீங்கள் கூறுவதே இல்லை. கருத்தடை பற்றிக் கல்வி அளித்த பின், 'இருப்பது போதும், இனி வேண்டாம்' என நீங்கள் சொல்லுவதில்லை. குறைவாகக்குடியுங்கள், மிதமாக இருக்கலாம் என மக்களிடம் சொல்லுவீர்களா? இப்படிப்பட்ட ''மிதவாதிகளைப்'' பற்றி நான் அறிவேன்.

இப்படிக் கருத்தடை பற்றி தனக்கென்று உள்ள கருத்துக்களை விட்டுக் கொடுக்காமல் திட்டவட்டமாகப் பேசிய காந்தியடிகள் திருமதி. சாங்கரைப் பற்றி உயர்ந்த கருத்துக் கொண்டிருந்தார். காந்தியடிகள், ''......, திருமதி. மார்க்கரெட் சாங்கரிடமும் அவரைப் பின்பற்றுபவர்களிடமும் எனக்குப் பெருமதிப்பும் மரியாதையும் உண்டு. தன் கொள்கையில் கொண்டுள்ள நம்பிக்கை, பிடிப்பு ஆகியவற்றின்மூலம் திருமதி. சாங்கர் என் உள்ளத்தில் தனக்கெனத் தனியொரு இடத்தை ஏற்படுத்திக்கொண்டார். விரும்பாத தருணத்தில் விளைந்துவிடும் 'கரு'வால், வயிற்றில் வளரும் குழந்தைகளைப்பத்து மாதம் சுமந்து, பெற்றபின் முறையாக வளர்த்து அவர்களை ஆளாக்குவதற்குத் துன்புறும் பெண்களிடத்தில் திருமதி. சாங்கருக்கு உண்மையிலேயே மிகுந்த பரிவுண்டு. எனக்கு நேரிடையாகத் தெரிந்த, என் மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய பல 'பிராட்டஸ்டண்டு' கிருத்துவ இறைமையில் வல்லுநர்கள், விஞ்ஞானிகள், கற்றறிந்த பெரியோர்கள் டாக்டர்கள் ஆகியோரின் ஆதரவு கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தும் கருத்தடை முறைகளுக்கு உண்டு என்பதும் எனக்குத் தெரியும்,'' எனக் கூறியுள்ளார்.

ஆக தன் கருத்துக்குப் புறம்பாக, செயற்கை முறையிலான கருத்தடை முறைகளை வலியுறுத்தியவர்களைப் பற்றியும், அதற்கு ஆதரவு காட்டியவர்களையும், காந்தியடிகள் நன்கு உணர்ந்திருந்தார் என்பதும், நாட்டில் அப்படிப்பட்ட செயற்கை முறை கருத்தடை முறைகள் பரவி வருவதைத் தெரிந்திருந்தார் என்பதும் தெளிவு. அவரது நேரடிப்பார்வையில் இருந்த சபர்மதி ஆசிரமத்தில் தனிப்பட்டோரிடையே 'சுயக் கட்டுப்பாடு' முறையைச் செயல் படுத்துவதில் பெருந்தோல்வி கண்டதாக அவரே குறிப்பிட்டிருப்பதிலிருந்து, புலனடக்கத்தின்மூலம் கருத்தடைத்திட்டத்தை ஏற்பது என்பது எவ்வளவு சிரமமான ஒன்று என்பதை அனைவரும் உணரவேண்டும். 'புலனடக்கம்' என்ற அவரது கருத்தடைத் தத்துவம் தவறானது என்று யாரும் சொல்லவில்லை— சொல்ல முடியாது! நடைமுறையில் அதைத் செயல் படுத்த இன்றைய சமுதாயப் பின்னணியில் இயலாது — தனிப்பட்டவர்களாலேயே முடியாது!

இதை உணர்ந்த காரணத்தினாலேதானோ என்னவோ, நாட்டு மக்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் 'காந்தீய நோக்கில் அல்லது காந்தீயக் கண்ணோட்டத்தில் **மக்கள் தொகைப் பிரச்சினை** என்றதொரு கருத்தரங்கம் வாரணாசியில் நடந்தேறி நல்ல பல முடிவுகளை நாட்டுக்கு அறிவித்துள்ளது. இந்தக் கருத்தரங்கம் வாரணாசியில் இயங்கிவரும் ''காந்தீயக் கருத்தாய்வு நிலையத்தின்'', (Gandhian Institute of Studies, Varanasi) சார்பில் நடத்தப்பட்டதாகும். இந்தக் கருத்தரங்கில் காந்தியக் கொள்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பல அறிஞர்கள் கலந்து கொண்டார்கள்.

> ✳ மனிதர்களின் செயல்கள், ஒரு நூலின் உள்ளுறை போல; மனிதர்களின் செயலில் குறிப்பிடத் தக்கவற்றை அது சுட்டிக் காட்டுகிறது.
>
> —தாமஸ்

காந்தியடிகளோடு உடன் இருந்தவர்—அவரோடு பழகியவர்—அவரை அறிந்தவர்—இந்திய அரசின் முன்னாள் மக்கள் நல்வாழ்வு குடும்பநலத் துறை அமைச்சர் டாக்டர் சுசீலா நய்யார்அவர்கள் இக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கியுள்ளார்கள். ''காந்திய நோக்கில் மக்கள் தொகைப் பிரச்சினை'' என்ற அந்தக் கருத்தரங்கில் தலைமையுரையாற்றிய டாக்டர் சுசீலா நய்யார் ''நம் தேவைகள் நிறைவேற்றத்திற் கேற்றவாறு காந்தியக் கருத்துகளுக்குப் பொருள் சொல்லக்கூடாது. காந்தியடிகளிடமிருந்து நாம் எந்த இடத்தில் அல்லது கட்டடத்தில் வேறுபடுகிறோம் என்பதைச் சொல்லுவதற்கும், இந்த அளவுதான் அவரோடு இணைந்து செல்ல முடியும், இதற்குமேல் இயலாது என்று சொல்லுவதற்குமுரிய மனப் பக்குவத்தை — திடத்தை— உறுதியை நாம் பெறவேண்டுடும்,'' எனக் கூறியுள்ளார். மேலும், படிக்காத, கல்வி, அறிவு இல்லாத மக்களிடையேதான் அதிகக் குழந்தைகள் இருக்கின்றன என்றும், அந்தச் சமுதாய மக்களிடம் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட காந்தியக் கருத்துச் செறிவு மிக்கவர்கள், கருத்தடைபற்றி ஏற்கெனவே இருக்கின்ற காந்தியடிகளின் கருத்துக்களில் அவ்வளவாக அக்கரை காட்டவில்லை என்றாலும் காந்தியத்தத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டு இன்றைக்கு இந்தியாவை நோக்கியுள்ள மக்கள் தொகைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய முடிவுகளை அறிவித்துள்ளனர்.

இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட காந்தீய அறிஞர்கள் சுதந்தரமாகக் கருத்தடை முறைகளைப் பின்பற்ற விரும்புவோருக்குச் செயற்கைக் கருத்தடைக் கருவிகள் எளிதாகக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும், புலனடக்கத்தின் அல்லது சுயக் கட்டுப்பாட்டின் சிறப்பை வலியுறுத்தும் அதே நேரத்தில், அதை நடைமுறைப் படுத்த முனையும் தம்பதிகள் செயற்கை முறையான கருத்தடை முறைகளைப் பின்பற்றினால் கண்டிக்க வேண்டிய அவசியமில்லையென்றும் கருத்தறிவித்துள்ள அவர்கள், பகுத்தறிவுக்கொப்பும்வகையில் (Rational approach) இந்திய மக்கள் தொகைப் பிரச்சினை அணுகப்பட வேண்டுமென்றும் கூறியுள்ளார்கள்.

மேலும், இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும், இரு பாலாரின் (ஆண், பெண்) பொறுப்பை உணர்த்தும் வகையில் 'பால் உணர்வுக் கல்வி' (Sex Education) அளிக்க வேண்டுமென்றும், பால் உணர்வு, காதல் பற்றி சமுதாயக் கருத்துக்களையும் போதிக்க வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

குடும்ப நல விளக்கத் திட்டம் குறித்துப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ள இக் கருத்தரங்கம், பெண்ணடிமை போக்கப்பட வேண்டுமென்றும், பெண்ணை ஆண் ஆதிக்கம் செலுத்தும் நிலை மாற வேண்டுமென்றும், பெண்களிடையே விழிப்பு உணர்ச்சி ஏற்படுவதை ஏற்றுச் சமுதாயத்தில் அவர்களுக்குச் சரிசமமான இடம் அளிக்க வேண்டுமென்றும், பெண் குழந்தைகளைவிட ஆண்குழந்தைகளுக்குச் சலுகைகள் காட்டக் கூடாது என்றும், பெண் கல்விச் சிறப்படைய ஆவன செய்ய வேண்டுமென்றும், பெண்களும் மனித குலத்தின் அங்கமெனக்கருதிப் பாராட்ட வேண்டுமென்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே, இந்தக் கருத்துக்களையெல்லாம் மனத்தில் நிறுத்தி, காந்தியடிகள் கூறிய சுயக்கட்டுப்பாடு முறை மூலம் இன்றையச் சூழ்நிலையில் குடும்ப நலத்திட்டம் ஏற்றுச் செயல் படுவது மிகச்



திருமதி. மார்க்கரட் சாங்கர்.

சிரமமான இயலாத ஒன்று என்பதை உணர வேண்டும்.

இன்றைக்கு உலக மக்கள் தொகை வரலாறு கண்டறியாத முறையில் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. 1650-ஆம் ஆண்டில் 50.8 கோடியாக இருந்த மக்கள் தொகை, 1750-ஆம் ஆண்டில் 71.1 கோடியாக வளர்ந்து, 1850-ஆம் ஆண்டில் 113.1 கோடி என்ருகி, 1950-ஆம் ஆண்டில் 251.6 கோடியானது. 1970-ம் ஆண்டு 363.5 கோடியாகியுள்ளது. 1950-ஆம் ஆண்டிற்கும் 1970-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் மட்டும் பெருகியுள்ள மக்கள் தொகை 111.9 கோடி என்ருல் அதன் வேகம் எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். 1980-ஆம் ஆண்டு 446.8 கோடியாகவும் 1990-ஆம் ஆண்டு 545.7 கோடியாகவும், கி.பி. 2000-ல் 651.4 கோடியாகவும் உயருமென உலக வங்கி கணித்துக் கூறியுள்ளது. இந்த வேகத்திற்கேற்ப உலக வளங்கள் அனைத்தும் உயருமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. உணவு உற்பத்தியை நினைத்தால் அச்சமே பிறக்கிறது.

கோதுமை, நெல் ஆகிய வற்றில் மிக அதிக விளைச்சலைத் தரக்கூடியவற்றை உருவாக்கித் தந்து மெக்சிக்கோ, இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் தீவுகள் போன்ற நாடுகளில் பசுமைப் புரட்சி ஏற்பட உதவியதற்காக டாக்டர் நார்மன்பர் லோக் 1970-ஆம் ஆண்டிற்கான நோபல் பரிசு பெற்ருர். மக்கள் தொகை வளர்ச்சி இன்றைய விகிதத்திலேயே, வேகத்திலேயே சென்று கொண்டிருக்குமானுல் எந்தப் பசுமைப் புரட்சியும் அதற்கு ஈடுகொடுக்க முடியாது போகும் என அவர் அறிவித்துள்ளார். காற்று, நீர், நிலம் அனைத்திலும் பற்ருக்குறை ஏற்படக்கூடும். இன்றைக்கே காற்று நச்சுக் காற்ருக (Air Pollution) மாறிக் கொண்டு வருகிறது. இந்த நிலை நீடித்தால் எதிர்காலம் இருண்டதாகத்தான் இருக்கும் என அஞ்சப்படுகிறது.

அறிஞர்கள் எல்லாம் மக்கள் தொகையை அதன் வழியில் வளர விடாமல் கட்டுக்குள் நிலை நிறுத்த வேண்டும். உடனடியாகச் செயல்பட்டாக வேண்டும்—மாணவப் பருவத்திலேயே, பிஞ்சு உள்ளங்களில் மக்கள் தொகை இயல் கல்வியின்மூலம், மக்கள் தொகை வேகமாகவளர்வதால் உருவாகும் பிரச்சினைகளைப் பற்றி எடுத்து விளக்கிப் பதியச் செய்ய வேண்டும்—இப்போதிருக்கும் கருத்தடைக் கருவிகளைவிட எளிதான, சுலபத்தில் பலனளிக்கக்கூடியவற்றைக் கண்டுபிடித்து உதவ வேண்டுமெனக் கூறிவருகின்றனர்.

எனவே பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்து, 'குடும்பத்தைப் பெருக்கிக்கொள்வது நன்னெறிக்குப் புறம்பான செயல்' என்ற அண்ணலின் வாக்கிற்கேற்ப சிறு குடும்ப நெறி ஏற்றிட வேண்டும்—காந்தியக் கருத்துக்களைக் காட்டி, குடும்ப நலத் திட்டதிலிருந்து நழுவாமல், விலகாமல், அரசு இலவசமாக அளித்து வரும் பல்வேறு விதமான சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டு, கருத்தடை முறைகளைப் பின்பற்றி,

''நாம் இருவர்
நாம் பெறுவதும் இருவர்''
''பிறந்ததைக் காப்போம்—
இனி பிறப்பதைத்தடுப்போம்''

என்ற வகையில் வாழ்ந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் உதவிட அனைவரும் முனைந்து செயல்பட வேண்டும்.






தமிழ்நாடு
வாரி
வழங்கிடும்
வற்ருத
செல்வங்கள்

இன்றே வாங்குங்கள்
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு:
ரூ.1,00,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

60-வது குலுக்கல் நாள்: 12-10-1973

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.



உங்கள் பருத்திப் பயிரிலே விளைச்சல் பெருக அதற்கு

## 'ப்ளேனோ:பிக்ஸ்'

தேவை.

சிபாரிசு செய்துள்ளபடி நீங்கள் "ப்ளேனோ:பிக்ஸ்" உபயோகித்தீர்களானல், பூக்களும் காய்களும் உதிருவதைத் தடுத்து, மகசூலைப் பெருக்க முடியும். பருத்திப் பயிரிலே "ப்ளேனோ:பிக்ஸ்" மருந்தைப் பல்லாண்டுகள் பயன் படுத்தியதிலே, திருப்தி கரமான பலன்கள் ஒருசீராகக் கிடைத்துள்ளன.

**அசல் தயாரிப்புத்தானு என்று பார்த்து உபயோகியுங்கள்... மாற்றுக்களை ஏற்று ஏமாருதீர்கள். உங்கள் பயிர் ஓர் ஒப்பில்லாச் செல்வம்.**



M&B May & Baker

**மே & பேக்கர் (இந்தியா) பிரைவேட் லிட்.**

பம்பாய். கல்கத்தா. கவுஹாத்தி. இந்தோர்
லக்னே. சென்னே. புதுடெல்லி. பாட்னு.

"ப்ளேனோ:பிக்ஸ்" என்பது ஒரு எம் & பி. சுத் தயாரிப்பு. ⊛ டிரேடு மார்க்

# தமிழரசு

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 10-00 |
| அரையாண்டு | ரூ. | 5-00 |
| தனி இதழ் | | 40 காசு |

## வெண்பாப் போட்டி—61

தொழில் துறையில் தமிழரசு செய்து வரும் தொண்டு பற்றி நேரிசை வெண்பா எழுதுக.

முடிவு நாள் : 16-8- 1973

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.

*சில சுவையான கேள்வி-பதில்கள்*

# அழகு மருத்துவம்!

எம். வி. ஜெயலட்சுமி

தலைமுடி உதிர்வதைத் தடுப்பது எப்படி ? — என்று ஓர் இளம் மாணவி கேட்கிறார். அதற்கு ஓர் அம்மையார் பதில் கூறுகிறார்கள்:—

இதுதான் இன்றைய இளைஞர்களிடம் காணப்படும் ஒரு பெரிய பிரச்சினை. இதற்கு முக்கிய காரணம், தலை முடியைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாததுதான். முடிந்த வரையில் தலைமுடியை அடிக்கடி சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். ஒரு வாரத்தில் குறைந்த பட்சம் நான்கு முறைகளாவது தலை குளித்தல் நல்லது. இப்படிக் குளிக்கும் பொழுது சீயக்காய் உபயோகித்துத் தலையைச் சுத்தப்படுத்துவதுதான் சிறந்த முறை. அல்லது, ஏதாவது ஒரு மென்மையான சோப்பினை உபயோகிக்கலாம். 'ஷாம்பு' அடிக்கடி உபயோகிப்பது நல்லதல்ல. முடிந்தவரையில் தலையில் பொடுகு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஜைதராய்டு சுரப்பி சரிவர இயங்காவிடினும் இந்த நிலை ஏற்படலாம்.

அதிக உயரம் வளராத ஓர் இளம் மாணவி கேட்கிறாள் :—

நான் என்னுடைய உயரத்தை அதிகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். இதற்கு ஏதேனும் வழியுண்டா ? என்று....

நம் நாட்டில் இதுவரை உயரத்தை அதிகப்படுத்துவதற்கு உதவும் கருவிகளோ வசதிகளோ இல்லை. எனவே சிறு வயது முதலே சில உடற்பயிற்சிகளைச் செய்தால் ஓரளவு உயரத்தை அதிகப் படுத்திக்கொள்ளலாம். நீச்சல், நுனி விரல்களில் நிற்பது போன்ற சில உடற்பயிற்சிகளைத் தொடர்ந்து செய்து வருவதன் மூலமும், உயரத்தை ஓரளவு அதிகப்படுத்தலாம். ஆனால் ஒன்று, இது போன்ற உடற்பயிற்சிகளைச் சிறு வயது முதற்கொண்டே செய்து வருதல் அவசியம்.

அப்போது அருகே அமர்ந்திருக்கும் மற்றொரு அம்மையார் கூறுகிறார் :—

25 வயதுவரை ஒருவர் வளர முடியும். அப்படி வளராவிட்டால்தான் என்ன ? இக்காலத்தில் கடைகளில் கிடைக்கும் நவீன காலணிகளை உபயோகிப்பதன் மூலம், ஒருவர் தன்னை உயரமாகக் காட்டிக் கொள்ள முடியும். அப்படியும் இல்லாவிட்டால் இதோ மற்றொரு சுலபமான வழி. எப்போதும் வெளி இடங்களில் நடக்கும் பொழுது, கூட்டத்தில் யாரையோ தேடுவது போல் குதி கால்களை உயர்த்தி வைத்துக் கொண்டு நடப்பதன் மூலம் உயரமாகத் தோற்றமளிக்க முடியுமே!

எங்கும் ஒரே சிரிப்பலைகள். முகம் சிவக்கச் சிரிப்பதுடன் நில்லாமல் சிந்திக்கவும் செய்கிறார்கள் மாணவிகள். 'எதைப் பற்றி' என்று கேட்கிறீர்களா ? அடுத்துக் கேட்க வேண்டிய கேள்வியைப் பற்றித்தான்.

இளைஞர்களுடைய மனத்தில் விடை காணுப் புதிராகப் பல ஊமைக் கேள்விகள் நாள்தோறும் அலை அலையாய் எழுந்து அடங்குகின்றன. பலவிதமான பிரச்சினைகள் பற்றிய அவர்களது பலவிதமான கேள்விகளுக்கு விடையளித்து, அவர்களுடைய ஐயங்களை நீக்கும் பொருட்டுச் சென்னை வானொலி நிலையத்தின் இளைய பாரதம் பிரிவு மாணவர்கள் நலவழி' அரங்கு (Students Health Forum) ஒன்றினைத் தொடர்ந்து நடத்த முன் வந்துள்ளது. இப்புதிய நிகழ்ச்சியின் குறிக்கோள், உடல் நலத்தொடர்புள்ள மாணவர்களின் பிரச்சினைகளை உண்டாக்கிய சில



நல்வாழ்வின் எல்லாவிதச் சிறப்புகள் பற்றியும் இளைஞர்களுக்குச் சரியான செய்திகளை அளிக்கும் நோக்கத்துடன் சென்னையிலுள்ள பல்வேறு கல்லூரிகளில் 'மாணவர் நல வாழ்வு அரங்குகள்' அமைக்கும் திட்டத்தைச் சென்னை வானொலி நிலையம் ஏற்று நடத்தவிருக்கிறது. ஒவ்வொரு கல்லூரியிலும் வெவ்வேறு வகுப்புகளைச் சேர்ந்த சுமார் 100 மாணவர்கள் இந்த அரங்குகளில் பங்குகொள்வார்கள். இந்த மாணவர்கள் அடிக்கடி கூட்டம் நடத்தி, நல வாழ்வு குறித்துச் சென்னை வானொலி நிலையம் ஒலி பரப்பும் நிகழ்ச்சிகள் பற்றி கலந்துரை நிகழ்த்துவார்கள்.

இது தவிர, நலவாழ்வுத் துறையில் ஏதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்தெடுத்துக் கலந்துரை நடத்துவதற்காக, செய்திக் கூட்டங்களையும் மாணவர்கள் நடத்துவர். துவக்கத்தில், சம்பந்தப்பட்ட கல்லூரித் தலைவரும், சென்னை வானொலி நிலையத்தாரும் கூட்டாக இந்தக் கூட்டங்களை நடத்துவர். இந்தக் கூட்டங்களில், அனைத்திந்திய வானொலியின் அழைப்பின் பேரில், தெரிந்தெடுத்த துறையில் புகழ்பெற்ற நிபுணர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்தி மாணவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பார்கள். கூட்ட நிகழ்ச்சிகள் ஒலிப் பதிவு செய்யப்பட்டுப் பின்னர் வானொலி இளைஞர் நிகழ்ச்சிகளில் ஒலிபரப்பப்படும்.

இந்தத் திட்டத்தின்படி 'மாணவர் நல வாழ்வு அரங்கு' ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் ஜூலை 2-ஆம் நாளன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் அழகுச் சாதனங்களைப் பயன்படுத்துவது பற்றியும், இளைஞர்களுக்குச் சத்துணவு பற்றியும் விவாதம் நடந்தது. அந்த விவாதம் இங்கே சுவையான கட்டுரையாக மாறியுள்ளது.

# தேர் மகாலைத் தெரியுமா?

திம்மராசன் கோட்டையைத் தெரியுமா உங்களுக்கு? அப்படியானால் தேர் மகாலை யும் தெரியும்!

செங்கற்பட்டிலுள்ள 'அர சினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளி' இருக்கும் இடம் தான் திம்மராசன் கோட்டை!

இப்பொழுது இந்தக் கோட்டை சிதைந்த நிலையில் உள்ளது. சுற்றிலும் தூர்ந்து போன அகழியும் காணப் படுகிறது. கோட்டைக்கு நடுவே 'தேர் மகால்' என்ற பழைய கட்டடம் இருக்கிறது. ஐந்து அடுக்குகள் உள்ள இந்தக் கட்டடத்தின் படிகள் சுற்றிச் சுற்றிப் போகும் வகையில் அமைந்துள்ளன.

இந்தக் கோட்டையில் இருந்த மன்னன் பெயர் திம்மராசன் என்றும், அவனும் அவன் மனைவியும் இதன் உச்சிக்குச் சென்று, அங்கிருந்து தெரியும் காஞ்சி வரதராசப் பெருமாள் கோவில் கோபுரத்தைக் கண்டு வணங்கு வார்கள் என்றும் கூறுகிறார் கள்.

இந்த மகாலின் மேலேறிப் பார்த்தால் காஞ்சிக் கோவில் கோபுரங்களும், திருக்கழுக் குன்ற மலைக் கோவிலும், பிற இயற்கைக் காட்சிகளும் தென்படுகின்றன.

இந்த மகாலில் சுரங்கப் பாதை ஒன்று இருக்கிறது என்றும், அதன் வாயில் அடைக்கப்பட்டு விட்டது என்றும் கூறி, அடைபட்ட வாயிலைக் காட்டுகிறார்கள். மகாலிலிருந்து 120 அடி தூரத் தில் ஒரு பெரிய கிணறு இருக்கிறது. அந்தக் கிணற்றுத் தண்ணீருக்குள் ஒரு கதவும், கதவோடு இணைந்த பெரிய பூட்டும் தென்படுகிறது. மகாலுக்கும் கிணற்றுக்கும் சுரங்கப்பாதை இருப்பதாகக் கருதுகிறார்கள். கிணற்று நீரைச் சீர்திருத்தப்பள்ளியினர் பயன்படுத்தி வருகிறார்கள்.

கோட்டையின் சில இடங் களில் தோண்டியபோது கிடைத்த சிதைந்த சிலைகள், கற்றூண்கள் முதலியன கிடைத்துள்ளன. இவற்றுள் ஒன்று கல்வெட்டு.

இந்தக் கல்வெட்டில் என்னென்ன பொறிக்கப் பட்டிருக்கின்றன?

ஒரு பூந்தொட்டி; அதற்குக் கீழே ஒருபுறம் மண்டை ஓடு; தொட்டியின் மேற்புறம் எழுத்துக்கள். இந்த எழுத்துக் கள் எதைக் குறிக்கின்றன என்று இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

இந்தக் கல்வெட்டானது மகாலை ஒட்டிப் பொருத்தப் பட்டு, இப்பொழுது அங்கே ஒரு கொடிமரத்தையும் நாட்டி யிருக்கிறார்கள்.

காஞ்சியின் சுற்றுப்புறங் களில் திம்மசமுத்திரம், திம்மராசன் பேட்டை, திம்மாவரம் என்ற ஊர்களெல் லாம் மன்னன் திம்மராசன் பெயரில் அமைந்தன போலும்! செங்கை மாவட்டம் ஊத்துக் கோட்டைக்கருகே கூடத்திம்ம பூபாலபுரம் என்ற ஓர் ஊர் இருப்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆராய்ச்சியாளர்கள் முயன் றால், இந்தத் திம்மராசன் யார், எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவன், இந்தக் கல்வெட்டுக் கூறும் கதை என்ன, என்பன போன்ற விவரங்கள் கிடைக்கலாம்.





# உடல் நலத்திற்கு உகந்த சஃபோலா எண்ணெய்

'சஃபோலா' எண்ணெய் சமையலுக்கு உகந்தது மட்டு மல்ல, உடல் நலத்திற்கும் உகந்த அரு மருந்தாகவும் பயன்படுகிறது! இதய நோய், இரத்த அழுத்தம் போன்ற கொடிய நோய் களால் பாதிக்கப்பட்டுள்ளவர் களுக்கான உணவினைத் தயா ரிப்பதற்கு மிகவும் ஏற்றது 'சஃபோலா' எண்ணெய். இரத்தத்தில் 'கொலஸ்டிரால்' எனப்படும் கொழுப்புப் பொருள் அதிகமாகும்பொழுது தான் இதய நோய், இரத்த அழுத்தம் முதலியன ஏற்படு கின்றன. 'சஃபோலா' எண் ணெய் இரத்தத்திலுள்ள 'கொலஸ்டிரால்' என்னும் கொழுப்புப்பொருளைக் குறைக் கிறது. இதனால் இதயநோயும், இரத்த அழுத்தமும் குறைந்து விடுகின்றன.

'சஃபோலா' எண்ணெய்யை ஆந்திரம், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் நெய்க்குப் பதி லாகப் பயன்படுத்துகிறார்கள் என்றால், அதன் சுவையும், மணமும், குணமுமே காரண மாகும். அண்மைக் காலத்தில் நல்லெண்ணெய், கடலை எண் ணெய் ஆகியவைகளை விட 'சஃபோலா' எண்ணெய் புகழ்பெற்று விளங்குகிறது.

சமையலுக்கும், உடல் நலத் திற்கும் உகந்த 'சஃபோலா' எண்ணெய் எளிதில் உலரும் தன்மை வாய்ந்ததாக இருப்ப தால், 'வார்னிஷ்' 'பெயிண்டு கள்' ஆகியவை தயாரிக்கவும், 'சஃபோலா' எண்ணெய் பயன் படுத்தப்படுகிறது. இந்த எண் ணெய்யைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட 'வார்னிஷ்' மரச் சாமான்களை நிறம் மாறா மல் பளபளப்பாக வைத்திருக் கவும், இயற்கையால் பாதிக்க படாமல் பாதுகாக்கவும் உதவு கிறது.

இவ்வாறு புகழ்பெற்று விளங்கும் 'சஃபோலா' எண் ணெய், 'குசும்பா' (safflower) எனப்படும் ஒருவகை எண் ணெய் வித்துப் பயிரின் விதை களிலிருந்து எடுக்கப்படுகிறது.

'குசும்பா' என்பது ஏறத் தாழ 3 அடி உயரம் வரை வளரக் கூடிய முட்செடியாகும் இச்செடியை ஆங்கிலத்தில் 'கார்த்தமஸ் டிங்டோரிஸ்' (Carthamus tinctoris) என்று கூறப்படுகிறது.

இதன் இலைகள் அகன்றும், இலை நுனி முள்ளைப் போல் கூர்மையாகவும் இருக்கும். குசும்பா செடியின் பூக்கள் பூத்தவுடன் மஞ்சள் நிறத்தி லும், காய்ந்த பிறகு 'ஆரஞ்சு' நிறத்திலும் காணப்படும்.

ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங் களின் வறண்ட பகுதிகளில் எல்லாம் பல்லாண்டு காலமா கவே 'குசும்பா' பயிரிடப்பட்டு வருகிறது. முன்பெல்லாம் பூக்களில் இருந்து சாயம் தயாரிப்பதற்காகவே குசும்பா பயிரிடப்பட்டு வந்தது. செயற்கைச் சாயங் கள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, குசும்பாவிலிருந்து சாயம் தயாரிப்பது அறவே நிறுத்தப்பட்டு விட்டது.

ஆனால், அண்மைக் காலத்தில் எண்ணெய் உற்பத்தி செய்ய வும், கால்நடைத் தீவனம் தயாரிக்கவுமே அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா, ஆசியா ஆகிய நாடுகளில் 'குசும்பா' பயிரிடப்படுகிறது.

'குசும்பா' பின் கண்டவாறு பல பயன் தரும் செடியாக இருப்பதால், தற்பொழுது இந்தியாவில் மிகுந்த முக்கி யத்துவம் பெற்று வருகிறது.



சஃபோலா எண்ணெய் தரும் குசும்பாச் செடி

**குசும்பாவின் பல்வேறு பயன்கள்**

1. விதையிலிருந்து சமைய லுக்கும், உடல் நலத்திற்கும் உகந்த எண்ணெய் உற்பத்தி செய்ய உதவுகிறது.
2. 'வார்னிஷ்', 'பெயிண்டு' தயாரிக்கவும் குசும்பா எண்ணெய் பயன்படுகிறது.
3. நெய்யுடன் கலந்து சாப் பிடவும், குசும்பா எண்ணெய் பயன்படுகிறது.
4. 'ஆரஞ்சு' நிறச் சாயம் தயாரிக்கக் குசும்பாவின் பூக்கள் உதவுகின்றன.
5. உலர்ந்த பூவிதழ்களைக் குங்குமப் பூவுடன் கலந்து உண்ணலாம்.
6. குசும்பா செடியின் இளம் துளிர்களைக் கீரைபோல் சமைத்துச் சாப்பிடலாம்.
7. குசும்பாவின் சிறு செடி களை மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்தலாம்.
8. விதைத்த 50 நாட்க ளுக்குப் பிறகு குசும்பா செடி யில் முட்கள் தோன்றுவதால், அதன்பின் அவைகளை ஆடு மாடுகள் தின்னாததால் வேறு பயிர்களைச் சுற்றி, வரப் போரம் மட்டும் குசும்பாவைப் பயிரிட்டால் ஆடுமாடுகளின் அழிவிலிருந்து பயிர்களைக் காப்பாற்ற இயலும்.

குறிப்பிட்ட தலைப்புகளில் உரை நிகழ்த்த அவ்வத் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள சிலரை அழைத்து, மாணவர்களுக்கு உரை நிகழ்த்த வாய்ப்பளிப்பதாகும். எடுத்துக்காட்டாக அழகு மருத்துவம் ( Cosmetology ) சத்துணவு ( Nutrition ) போன்ற தலைப்புகளைக் கொடுத்தல் ; அந்தத் துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றுள்ள சிலரை அழைத்து அவர்களை இளைஞர்களின் வினாக்களுக்கு விடையளிக்க வைப்பதாகும்.

இவ்வாறான ஒரு நிகழ்ச்சி, ஒவ்வொரு மாதமும் ஒரு மாணவர்கள் கல்லூரி, ஒரு மகளிர் கல்லூரி ஆகியவற்றில் நடைபெறும். ஒவ்வொரு கல்லூரியின் கூட்டத்தின் போதும் இந்த நிகழ்ச்சி மூலம் இளைஞர்கள் தங்கள் உடல் நலப் பிரச்சினைகள் பலவற்றுக்கு விடை அறிய வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும் பல்வேறு துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளவர் பலரை இந்த நிகழ்ச்சி மூலம் நேர்முகமாகச் சந்திக்க இளைஞர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைக்கிறது.

'' நலவழி அரங்கு'' நிகழ்ச்சியினை ஒவ்வொரு மாதமும் இரண்டு கல்லூரிகளில் மாணவ, மாணவிகள் முன்னிலையில் நடத்துவதுடன், இது போன்ற நிகழ்ச்சிகளை மற்ற இளைஞர்களும் கேட்டு இன்புறும் வண்ணம் ' இளைய பாரதம் ' இந் நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து, வானொலியில் ஒலி பரப்ப முடிவு செய்துள்ளது. எனவே நிகழ்ச்சிகளில் நேரடியாகப் பங்கு பெற வாய்ப்பில்லாத இளைஞர்களும், மற்ற மாணவ, மாணவிகளும் இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து வானொலியில் கேட்பதன் மூலம் பயன் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை. நிகழ்ச்சிகளைக் கேட்பதுடன் நிற்காது. குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றிய தங்கள் கருத்துக்களைக் கடிதங்கள் மூலம் நிலையத்தாருக்கு எழுதி மாணவர்கள் பயனடையலாம். மேலும் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் தமக்கு ஏதேனும் ஐயம் எழுந்தால் அதற்கான விளக்கத்தையும் இளைஞர்கள் நிலையத்தாரின் உதவியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த மாணவர்கள் நலவழி அரங்கின் முதல் கூட்டம் ஜூலைத் திங்கள் 2-ஆம் நாள் சென்னை ' ஸ்டெல்லா மேரிஸ் ' மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. ஏறத்தாழ 100 மாணவியர் கல்லூரியின் பல்வேறு பிரிவுகளிலிருந்தும் இதில் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் துவக்கத்தில் கல்லூரியின் முதல்வர் ரெவரண்ட் சிஸ்டர் ஜூலியட் ஜரீன் வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து சென்னை வானொலி நிலையத்தின் இயக்குநர் திரு. எஸ்.ஏ. தாக்கூர் வானொலி நிலையத்தின் பணிகள் பற்றியும் சிறப்பாக இளைய பாரதத்தின் பணிகள் பற்றியும் எடுத்துக் கூறினார். இளைய பாரதம் இளைஞர்களின் அறிவு வளர்ச்சிக்கு எந்தெந்த விதங்களில் துணை புரிகிறது என்பது பற்றிக் கூறிய அவர், இளைய பாரதம் என்பது இளைஞர்களுக்காக இளைஞர்களாலே நடத்தப்படும் ஒரு நிகழ்ச்சியாகும். இவ்வாறு நடத்தப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளில் மாணவர்கள் நலவழி அரங்கும் ஒன்று. இது இளைஞர்களுக்கு நிச்சயமாகப் பயன்படும் . என்று நம்புகிறேன் என்று கூறினார்.

பிறகு, சென்னை வானொலி நிலையத்தின் துணை இயக்குநர் திரு. கே. கஸ்தூரி உரை நிகழ்த்த வந்திருந்த டாக்டர் திருமதி. ஆர். அண்ணாமலை, திருமதி. கே. ஜே. ஷா, டாக்டர் திருமதி. ப்ளாரன்ஸ் தியோபிலஸ் ஆகியோரை மாணவிகளுக்கு அறிமுகப்படுத்தினார். டாக்டர் திருமதி. அண்ணாமலை ' காஸ்மடாலஜி ' எனப்படும் அழகு மருத்துவத்திலும், 'டெர்மடாலஜி ' எனப்படும் சரும மருத்துவத்திலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். டாக்டர் திருமதி. ப்ளாரன்ஸ் தியோபிலஸ் சத்துணவுத் துறையில் ஆராய்ச்சியாளர். திருமதி. கே. ஜே. ஷா என்பவர் 'பிக்ரேட்' எனப்படும் கட்டுடல் நிலையத்தின் உரிமையாளர்.

அழகை விரும்பாதவர்கள் உலகில் இல்லை. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்; முகத்தின் அழகு நிலைக்கண்ணாடியில்தானே தெரியும்! தன் முகத்தை அந்த நிலைக்கண்ணாடி எழிலுறக் காட்ட வேண்டும் என்று விரும்புகிறவர்கள் பலர். ஆனால் உண்மையில் அந்தக் கலையை அறிந்தவர்கள் வெகு சிலரே! அக்கலை பற்றி அறியாது ஐயங்களை எழுப்பிய மாணவிகளுக்கு விடையளிக்க முன்வந்த டாக்டர் திருமதி. அண்ணாமலை தமது உரையில் '' நாம் அனைவருமே அழகு மருத்துவம் அறிந்தவர்கள்தாம். நாம் அனைவருமே நீரையும் சோப்பையும் தாராளமாக உபயோகிக்கின்றோம். நாம் இந்தக் காலத்தில் முகத்தைச் சுத்தம் செய்யப் பலவிதமான நவீன முறைப்படி தயாரிக்கப்பட்ட சாதனங்களைப் பயன்படுத்துகிறோம். ஆனால் நமது முன்னோர்கள் ''பயத்த மாவு போன்றவற்றைப் பயன்படுத்தி அழகுடன் விளங்கினர். அழகு மருத்துவம் பயின்றவர்கள் எல்லாம் மந்திரவாதிகள். ஏனென்றால் ஓர் அழகு மருத்துவரை நாம் அணுகினால் குறுகிய கால அளவில் நம்மை பலவிதங்களில் மாற்றி விடுவார்கள். உதாரணமாக, ஒரு கதையைக் கூறுகிறேன். ஒரு

நிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவியர்





மேஜர் (காலிழந்தவர்) பெண் உதவிப் படையைச் சேர்ந்த ( Women Auxillary Corps ) (கையிழந்த) ஒரு பெண்ணை மணந்து கொண்டார். திருமணத்திற்குப் பிறகு மணப்பெண் தன்னுடைய பொய் முடி, பொய்க்கண் (இமைகள், மரத்தினால் செய்யப்பட்ட கை) முதலியவற்றைக் களைந்து கொண்டிருந்தாள். கணவன் பொறுமை இழந்தவனாக, நீ உன் உருவத்தை முழுமையாக இழப்பதற்குள் நான் உன்னைக் காண விரும்புகிறேன் என்று கூறினேன்'' என்று கூறி முடித்தார். அறையில் எங்கும் சிரிப்பொலி.

முகம் மட்டும் அழகாக இருந்துவிட்டால் போதுமா ? அந்த முகத்தின் அழகை அதிகப்படுத்திக் காட்டும்படியான உடலமைப்பையும் ஒருவர் பெற்றிருத்தல் அவசியமன்றோ? உடலை அதிகப் பருமனாகவோ அதிக ஒல்லியாகவோ இல்லாமல் கச்சிதமாக வைத்துக் கொள்வது எப்படி என்பது பற்றி திருமதி கே. ஜே. ஷா அவர்கள் கூறினார் :—

அழகாக இருக்க வேண்டும் என்று நினைக்கும் உரிமை, ஒவ்வொரு பெண்ணின் பிறப்புரிமையுமாகும். பொதுவாக அழகின் எதிரிகள், உறக்கமின்மை, கவலைகள், மகிழ்ச்சியற்ற தன்மை இவைகள்தான். சத்துள்ள பழங்களும், காய்கறிகளும், இயற்கை அழகை அதிகரிக்க அளித்துள்ள வரப்பிரசாதங்கள். முடிந்த வரையில் தசைகளுக்கு நல்ல ஓய்வு கொடுத்தல் அவசியம். சிறிது நேரமாவது நமது மனத்தைச் சிந்தனைகளினின்று வெறுமையாக வைத்துக் கொள்ளவேண்டும். எப்பொழுதும் அலங்காரம் செய்து கொள்ளும்போது நமது குறைகளை மறைத்து, நிறைகளை மட்டும் பிரகாசிக்கச் செய்ய வேண்டும். அழகு என்பது பெரும்பாலும் நாம் ஏற்படுத்திக் கொள்வதுதான். கடவுள் கொடுத்தது அல்ல. எனவே, நீங்களும் கிளியோபாட்ரா போல் அழகுடன் திகழ்ந்து ஒரு மார்க் ஆண்டனியின் உள்ளத்தைக் கவரலாம்.

உடல் அழகாக இருந்தால் மட்டும் போதுமா ? ஆரோக்கியம்தானே உண்மையான அழகு! எனவே, ஆரோக்கியமான உடலைப் பெறுவதற்கு முதல்படி நல்ல உணவுப் பழக்கம் அதுவும் உணவு என்பது சாதாரண உணவல்ல ; சத்துணவு. சத்துணவுப் பழக்கம் ஒருவரது உடல் ஆரோக்கியத்திற்கு எந்த அளவு இன்றியமையாதது என்று விளக்குகிறார் டாக்டர் திருமதி ப்ளாரன்ஸ் தியோபிலஸ்.



மாணவியரில் மற்றொரு பகுதியினர்

' சத்துக் குறைவான உணவு, நம் நாட்டின் தேசிய உடல் நலத்தையும், மக்கள் முன்னேற்றத்தையும் பாதிக்கிறது என்பது யாவரும் அறிந்ததாகும். ஐதராபாத்தில் உள்ள தேசிய உணவு ஆராய்ச்சிக் கழகம் நடத்திய ஆராய்ச்சியில் சத்துக் குறைவான உணவு உண்பதால் மக்களிடையே சோம்பலும், தளர்ச்சியும் ஏற்பட்டு ஊக்கம் குறைகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உணவே மனிதன். உங்கள் உடலில் உள்ள எல்லாமே உணவில் இருக்கின்றன. 'நுண்ணிய செல் ' ஆகத் தோன்றியது முதல் முழு மனிதனாக வளரும் வரை ஒருவனின் வாழ்நாள் முழுவதற்கும் உணவே முக்கிய அடிப்படையாகும்.

இவ்விதம் மூவரும் உரை நிகழ்த்திய பின்னர் மாணவிகள் பிரிவுகளில் தமக்கு ஏற்பட்ட ஐயங்களைக் கேட்டனர். மாணவிகள் கேள்விக் கணைகளைத் தொடுக்கத் தொடுக்க அம் மூவரும் சிறிதும் சளைக்காமல் மாறி மாறிப் பதில் சொன்ன விதம் மாணவிகளை மட்டுமல்ல : அங்குள்ள அனைவரையுமே மிகவும் கவர்ந்தது. அவ்விதம் மாணவிகள் கேட்ட சில கேள்விகளையும் அதற்கு நிபுணர்கள் அளித்த விடைகளையும்தாம் இக்கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்டேன். மற்ற சில கேள்விகளையும் அதற்கான விடைகளையும் இனிப் படியுங்கள்:

மாணவி:—ஒருவரது கண்களை ஒளிமிக்கதாய்ச் செய்வது எப்படி?

டாக்டர் திருமதி அண்ணாமலை: மனம் ஒளியுடன் திகழ்ந்தாலே போதும். கண்கள் தாமாகவே பிரகாசிக்கும். தவிர வைட்டமின் 'ஏ' அடங்கிய உணவுப் பொருட்களை உட்கொள்வதன் மூலம் கண்களை ஒளிரும்படிச் செய்யலாமே !

மாணவி:—உடல் பருமனாக இருப்பவர்கள் தமது உணவுப் பட்டியலில் நெய், வெண்ணெய், தயிர் போன்ற அதிகக் கொழுப்புச் சத்துள்ள பொருட்களைத் தவிர்க்க வேண்டுமா ? இது கட்டாயமா ?

டாக்டர் திருமதி ப்ளாரன்ஸ் தியோபிலஸ்:—உடல் பருமனாக இருப்பவர்கள் முடிந்தவரை தமது உணவிலிருந்து நெய், வெண்ணெய் போன்ற கொழுப்புப் பொருட்களை விலக்கிவிடலாம். ஆனாலும், முற்றிலும் விலக்கிவிட வேண்டும் என்று நான் கூறமாட்டேன். உணவு சரிவிகிதத்தில் இருப்பதற்கும், உடல் ஆரோக்கியத்திற்கும், இவையெல்லாம் ஓரளவு தேவை. எனவே, ஒரு குறிப்பிட்ட அளவு கொழுப்புப் பொருட்களை உடல் பருமனாக இருப்பவர்கள் உட்கொள்வதால் கெடுதல் ஒன்றுமில்லை. இப்படிப்பட்டவர்கள் தினமும் உடற்பயிற்சி செய்தல் அவசியம்.

மாணவி:—கண்களுக்கு விளக்கெண்ணெய் உபயோகிப்பதன் மூலம் நீண்ட அழகிய இமைகளைப் பெற முடியுமா ?

திருமதி ஷா அவர்கள்:— கண்களுக்கு ஒருவர், விடாமல் விளக்கெண்ணெய் போடுவதனால்

9. 'ஸ்வீட் ஆயில்' (Sweet oil) எனப்படும் எள்-நிலக்கடலை-குசும்பா ஆகிய மூன்றும் சம அளவில் கலந்த எண்ணெய் தயாரிக்கவும் பயன்படுகிறது.

10. குசும்பாவின் பிண்ணாக்கு, சிறந்த கால்நடைத் தீவன மாகப் பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறு பல்வேறு வகையில் பயன்படும் குசும்பா, தற்பொழுது இந்தியாவில் ஆந்திர மாநிலம் (ராயலசீமைப் பகுதிகள்), மைசூர் ஆகிய மாநிலங்களின் கரிசல் மண் பகுதிகளில் மானாவாரியாகப் பயிரிடப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் தருமபுரி, சேலம், கோவை ஆகிய மாவட்டங்களில் மட்டும் சிறு அளவில் குசும்பா பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டின் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கவும், தமிழ்நாட்டு மக்களின் உடல் நலத்திற்கு உதவவும், தமிழ் நாட்டில் பெரும் அளவில் குசும்பாவைப் பயிரிட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள கரிசல் மண் பகுதிகளில் மானாவாரியாகக் குசும்பாவைப் பயிரிடப் பெரும் வாய்ப்பு உள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு 'குசும்பா' பயிரிட வேண்டியது தமிழக உழவர் பெருமக்கள் வீட்டிற்கும், நாட்டிற்கும் செய்ய வேண்டிய நல்லதோர் தொண்டு ஆகும். எனவே, பின்கண்ட சாகுபடிக் குறிப்புகளைப் பயன்படுத்திக் கரிசல் மண் நிலங்களில் மானாவாரியாகக் 'குசும்பா' பயிரிடுமாறு தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

சாகுபடிக் குறிப்புகள்

**ஏற்ற மண் :**

கரிசல் மண்.

**விதைக்கும் பருவம்:**

புரட்டாசி-ஐப்பசி மாதங்களில் மானாவாரியாக விதைக்க வேண்டும்.

**விதையளவு:**

ஏக்கருக்கு 6 முதல் 8 கிலோ விதையை விதைக்க வேண்டும்.

**நிலம் தயாரித்தல்:**

நிலத்தை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 5 வண்டி வீதம் தொழு எருவிட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு உழுது விட வேண்டும்.

**அடியுரம் இடுதல்:**

விதைப்பதற்கு முன்பு ஏக்கருக்கு 40 கிலோ அமோனியம் சல்பேட் உரம் தூவி விட வேண்டும்.

**விதைத்தல்:**

நல்ல ஈரம் இருக்கும் பொழுது விதைப்பது சிறந்தது.

**களை எடுத்தல்:**

விதைத்த 25-வது நாளில் முதல் முறையும், 45-வது நாளில் இரண்டாம் முறையும் களை எடுக்க வேண்டும்.

**மேலுரமிடுதல்:**

தேவையில்லை.

**பயிர்ப் பாதுகாப்பு:**

பெரும்பாலும் குசும்பாவில் பூச்சிகளும், நோய்களும் அதிகம் தாக்குவதில்லை. இருப்பினும் முன் தடுப்பாக ஒவ்வொரு முறையும் களை எடுத்த பிறகு பாரத்தியான் அல்லது பாலிடாலுடன் டைத்தேன் கலந்து தெளிப்பது சிறந்தது.

**அறுவடை:**

விதைத்த 120 நாட்களில் குசும்பா அறுவடைக்கு வரும்.

குசும்பா செடிகளின் இலைகள் காய்ந்தவுடன், செடிகளை அறுத்து எடுத்து அல்லது பிடுங்கி வயலிலேயே கொத்துக் கொத்தாக வைத்துக் காயவிட வேண்டும். விதைகள் உள்ள பூங்கொண்டைகள் நன்கு காய்ந்த பிறகு அவைகளைத் தடியால் அடித்து விதைகளைப் பிரிக்க வேண்டும்.

**மகசூல்:**

ஏக்கருக்கு 300 முதல் 400 கிலோ விதை மகசூல் பெற முடியும். குசும்பாவின் வளர்ச்சிப் பருவத்தில் 2 தடவை போதிய மழை பெய்யுமானால், மேலும் அதிகமாக மகசூல் கிடைக்கக்கூடும்.

**எண்ணெய் எடுப்பது எப்படி?**

குசும்பா விதைகளைத் தனியாகவே செக்கில் இட்டு ஆட்டி எண்ணெய் எடுக்க முடியும். எள்ளுடன் கலந்து செக்கிலிட்டு ஆட்டியும் எண்ணெய் எடுக்கலாம்.

**ஆராய்ச்சி:**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் குசும்பா பற்றிய விரிவான ஆராய்ச்சி கடந்த ஜூன் மாதம் முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சிகளின் பயனாய்க் குசும்பாவின் மகசூலைப் பெருக்கி, தமிழ் நாட்டில் உண்ணத்தக்க எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கிடவும் தமிழக மக்களை இதயநோய், இரத்த அழுத்தம் ஆகியவைகளிலிருந்து காப்பாற்றவும் இயலும்! எனவே, குசும்பா பற்றிய ஆராய்ச்சி முடிவுகளை அறிய ஆவலோடு காத்திருப்போம்!

**வெண்பாப் போட்டி: 65**

ஈற்றடி : **எண்ணும் பெருமை இவை**

முடிவு நாள்: **16-10-73**

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி:—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600002.



# நெல் உழவியல் ஆராய்ச்சி



**த**மிழ்நாட்டின் முக்கியமான உணவுப் பொருள்களில் நெல் முதன்மையானதாகும். தற்போது நமது மாநிலத்தில், 23.47 இலட்சம் எக்டேரில் நெல், நன்செய்ப் பயிராகவும், 4.00 இலட்சம் எக்டேரில் புன்செய்ப் பயிராகவும் சாகுபடி செய்யப்படுகின்றது. நமது மாநில சராசரி மகசூல், எக்டேருக்கு 1,553 கிலோவாகும். இது, நம் நாட்டின் எல்லா மாநிலங்களையும் விட அதிகமானது. தற்போது ஆண்டுதோறும் 53 இலட்சம் டன் அரிசி உற்பத்தி செய்கிறோம். இந்த அதிக உற்பத்திக்கு அமோக விளைச்சல் ரகங்களும் சீரான கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகளும்தான் காரணமாகும்.

நமது மாநிலத்தில் நெல் மூன்று முறைகளில் சாகுபடி செய்யப்படுகின்றது. பெரும்பாலும் நன்செய்ப் பயிராகவும், சில இடங்களில் புன்செய்ப் பயிராக ஆரம்பித்துப் பின்னர் பருவ மழையினால் பாசன வசதி அதிகரித்த பின்பு நன்செய்ப் பயிராக மாற்றியும், வசதி அதிகரித்த பின்பு நன்செய்ப் பயிராக மாற்றியும், இன்னும் சில இடங்களில் பருவ மழையைப் பயன்படுத்தி மானாவாரியாகவும் பயிர் செய்யப்படுகின்றது.

நெற்பயிர், தொன்று தொட்டுப் பயிரிடப்பட்டு வந்த போதிலும், சமீப காலமாக நெல் உற்பத்தியில் அமோக விளைச்சல் ரகங்களின் அறிமுகத்தால் ஒரு புரட்சி ஏற்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள அகில உலக நெல் ஆராய்ச்சி நிலையத்தாரால் வெளியிடப்பட்ட ஐ.ஆர். குட்டை நெல் ரகங்கள் அதிக உரமேற்று, அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளது. இந்த அமோக விளைச்சல் ரகங்களை இனக் கலப்புச் செய்து பல புதிய ரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள, கோயம்புத்தூர் உழவியல் துறையில் நடுத்தர வயதுள்ள அமோக விளைச்சல் ரகங்களில் பல சோதனைகள் நடத்தப்பட்டன. 'ஜெயா', 'விஜயா', 'ஐ.ஆர். 20' என்ற நெல் ரகங்கள் கார்ப் பட்டத்தில் 150 கிலோ தழைச்சத்தை ஏற்று அமோக விளைச்சல் தர வல்லனவாக உள்ளன. 'ஜெயா' என்னும் நெல் ரகமும் 'கோ. 36' என்னும் நெல் ரகமும் எக்டேருக்கு 8,525 கிலோ மகசூல் கொடுத்துள்ளன.

'ஜெயா' நெல், நாள் ஒன்றுக்கு 58.8 கிலோ தானிய மகசூலும், 'கோ 36' எனும் நெல் 60.4 கிலோ தானிய மகசூலும் கொடுத்துள்ளன.

அதிக தழைச் சத்து உரத்தை ஏற்று அதிக விளைச்சல் தரும் குறுகிய கால நெல் ரகங்களில் 'காவேரி', 'கண்ணகி', 'ரத்னா' 'சி.ஆர். 44-35' (ஐ.ஆர். 8 டி.கே. எம். 6), 'கோ. 35' முதலிய நெல் ரகங்களை ஒப்பிட்டுப் பார்த்ததில், 'கோ. [illegible]' எனும் நெல்ரகம் கார்ப்பட்டத்தில் 150 கிலோ தழைச்சத்து உரத்தை ஏற்று அதிக விளைச்சலையும், 'சி.ஆர். 44-35' கோடைப் பட்டத்தில் அதிக விளைச்சலையும் கொடுத்துள்ளன. இந்த இரு நெல் ரகங்களையும் இரு போக சாகுபடியாகச் செய்யுங்கால் அதிக நிகர லாபம் கிடைக்கின்றது. இந்த இரண்டு நெல்ரகங்களும் சன்ன ரக அரிசியைக் கொடுக்க வல்லன. ஓரளவு நோயும், பூச்சிகளும் அதிகமாகத் தாக்குவதில்லை. கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை இந்த நெல் ரகங்களின் அதிக விளைச்சல் திறனைக் காட்டுகின்றது.

| நெல் ரகம் | தழைச் சத்து எக்டேருக்கு 150 கிலோ இடும்போது மகசூல் | |
|---|---|---|
| | கார் 1971 | ராபி 1972 |
| கோ. 36 ... | 6,418 | 5,073 |
| கிருஷ்ணா ... | 6,250 | 4,785 |
| ரத்னா ... | 5,645 | 5,332 |
| பூசா-2-21 ... | 5,610 | 5,111 |
| சி.ஆர். 44-35 ... | 5,074 | 5,911 |
| காவேரி ... | 4,871 | 4,518 |

மட்டும் நீண்ட அழகிய கண் இமைகளைப் பெற்றுவிட முடியாது.

*மாணவி*:—மாங்காய் அல்லது மாங்கனி உண்பதால் ஒருவரது உடல் உஷ்ணம் அடைவதாகக் கருதப்படுகிறது. இது உண்மையா ?

*டாக்டர் திருமதி அண்ணு மலை*:—என்னைப் பொறுத்த வரை எனக்கு மாங்காய் என்ருல் உயிர். எனவே நான் அவற்றை விரும்பி உண்பேன். ஆண்டு முழுவதும் நமக்கு மாங்காய்கள் கிடைப்பதில்லையே ! எனவே, கிடைக்கும் போது சாப்பிடுங்களேன் ! தவறென்ன ? உங்கள் வயிறு வேண்டாம் என்று சொன்னல் சாப்பிடாதீர்கள். (நகைச்சுவைபட அவர் அளித்திட்ட விடையைக் கேட்டு அனைவரும் கொல்லென்று சிரித்து விட்டார்கள்).

*மாணவி*:—அடிக்கடி காப்பி சாப்பிடுவது உடம்பிற்குக் கேடு என்கிருர்களே உண்மையா?

*டாக்டர் திருமதி ப்ளாரன்ஸ் தியோபிலஸ்*:— எதற்குமே ஒரு அளவு இருக்கிறது. அளவோடு சாப்பிட்டால் காப்பி ஒரு நல்ல பானம்தான். காலையில் உணவுடன் ஒரு கோப்பை காப்பி பருகுவதால் உடலுக்கு எந்தத் தீங்கும் நேரிடாது. ஒரு நாளைக்கு ஓரிரு முறைகள் காப்பி அருந்தலாம். ஆனல் நீங்கள் ஒவ்வொரு வேளையும் காப்பி, காப்பின்னு, காப்பி மட்டுமே அருந்துவீர்களானல் அது நிச்சயமாக உடல் நலத்தைப் பாதிக்கும்.

*மாணவி*.— உஷ்ணத்தால் ஏற்படும் தழும்புகளை (Sun burns) எப்படிக் குணப்படுத்துவது?

*திருமதி கே. ஜே. ஷா*.— உஷ்ணத்தால் ஏற்படும் இப்படிப் பட்ட தழும்புகளை நீக்க வேண்டு மானல் உங்கள் தோலை எப்போதும் ஈரப்பசையுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

இதுபோல் எண்ணற்ற கேள்விகளை மாணவிகள் கேட்கக் கேட்க நிபுணர்கள் தக்க விடைகளை அளித்தனர்.

மாணவர்கள் நலவழி அரங்கின் ' முதற் கூட்டமே மாபெரும் வெற்றி எனலாம். இந்த நிகழ்ச்சியின் அமைப்பு முறை மாணவ, மாணவி களிடையே ஒரு புத்துணர்ச்சி ஊட்டும் வண்ணம் அமைந்திருந்தது. நிகழ்ச்சி அமைப்பாளர் அவர்களைக் கேட்டபோது அவர் கூறினர் :—

ஒவ்வொரு மாதமும் இரு வேறு கல்லூரிகளில் இவ்வரங்கு கூட்டப்படும். அடுத்து வரும் கூட்டங்களில் இளைஞர்களின் மனநலம், புகைப்பழக்கம், மருந்துப் பழக்கம் முதலிய பல சுவையான பிரச்சினை மிக்க தலைப்புகள் இடம் பெறும்.

இந்த ' மாணவர் நலவழி அரங்கு ' இளைஞர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதன் மூலம் உண்மையிலேயே மாணவர்களுக்கு ஒரு வழி காட்டியாக விளங்குகிறது. இந்த நிகழ்ச்சி ஒவ்வொரு மாதமும் வெவ்வேறு கல்லூரிகளில் நடைபெறவிருப்பதால் மாணவர், மாணவிகளின் ஒத்துழைப்பு இதற்கு இன்றியமையாத ஒன்று. இளைஞர்களது இடைவிடாத ஆர்வத்தால் இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெற்று நிச்சயமாக இளைஞர்களின் உள்ளங்களை வெற்றி கொள்ளும்—இளைஞர் அறிவின் இருண்ட பகுதிக்கு ஒளியேற்றும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

# சாலை அமைப்பு-வரலாற்றுச் செய்தி

இந்தியாவின் தற்காலச் சாலை அமைப்புக்கு அடித்தளம் அமைத்தவர்கள் மொகலாய மன்னர்கள் ஆவர். இந்தியாவின் தென்பகுதி தவிர ஏனைய பகுதிகளுக்கெல்லாம் மொகலாய மன்னர்கள் சாலை அமைத்திருக்கிருர்கள்.

இந்தியாவின் சாலை அமைப்பு வரலாற்றைப் பொறுத்த அளவில் சீனநாட்டுச் சுற்றுலாப்பயணி யுவான் சுவாங் கி.பி ஏழாம் நூற்ருண்டில் இந்தியாவுக்கு வருகை புரிந்தபோது, 'தடங்கள் நல்லவகையில் உள்ளன' என்று குறிப்பிட்டிருக்கிருர்.

கி. பி. 14–ஆம் நூற்ருண்டில் வருகை புரிந்த, இபன் படுலா குறிப்பிட்டார்:

''டில்லி, தௌலதாபாத் ஆகிய இடங்களிலிருந்து அநேக முக்கியமான சாலைகள் செல்கின்றன. முக்கியமான தடங்களில் தெருவின் இருபுறங்களிலும் மரங்கள், தங்கும் இடங்கள், கிணறுகள் ஆகியவை இருக்கின்றன. டில்லியிலிருந்தும் தௌலதாபாத்திலிருந்தும் செல்லும் மனிதர்களுக்கு, சாலையில் செல்வதாகவே தோன்ருது. ஒரு தோட்டத்தின் வழியாகச் செல்வதாகவே அவர்களுக்குத் தோன்றும்''

கி. பி. 16–ஆம் நூற்ருண்டில் வடபகுதி பெருவழிச் சாலையை ஷெர்ஷா புதுப்பித்தார். டெல்லி, புர்ஹாம்பூர், ஜோத்பூர், சித்தூர், ஆக்ரா, ஆகிய பகுதிகள் நல்ல சாலைகளுடன் இணைக்கப்பட்டன. ஷெர்ஷாவின் மிகப் பெரும் சாதனைகளுள் ஒன்று — நாட்டின் கிழக்குப் பகுதியிலிருந்து— வடமேற்குப் பகுதிவரை சாலை அமைத்ததாகும். மௌரியர் காலத்திய ராஜபாட்டையைப் புதுப்பித்த பணி என்று இதனைக் கூறலாம். இன்றைய நவீன காலப்பெருவழிச் சாலை— ஏறக்குறைய அந்தப் பழைய தடத்தை ஒட்டித்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். மொகலாயர்களால் வளர்ச்சியுற்ற சாலை அமைப்பு, பல்லாண்டுகள் பயன்பட்டது.

கிழக்கிந்தியக் கம்பெனி, 1753–ஆம் ஆண்டு, 1763–ஆம் ஆண்டுகளில், அநேக சாலைகள் அழிவுற்றிருந்தன என்று ஆய்வு செய்தது. ஆனல், சாலைகளின் முன்னேற்றத்துக்குக் கம்பெனி எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.



கி. பி. 1848–56-ல் டல்ஹௌஸீ பிரபுவின் ஆட்சியின் போது, சாலை அமைப்பில் நல்ல சகாப்தம் உருவாகியது. இந்தியாவிலிருந்து மைய ஆசியாவுக்குச் சாலை போடும் பணியில் அவர் ஈடுபட்டார்.

# உலகம் இரண்டு ஊசிகள்

டி.என்.சுகி சுப்பிரமணியன்

4

**ப**ணத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை பத்துப் பேருக்கு வந்தால், பணத்தால் எதையாவது சாதிக்க வேண்டும் என்றஆவேசம்பலநூறுபேர்களுக்கு வந்துவிடுகிறது. அந்த வகையில் பார்த்தால் ஆலைமுதலாளி முத்தையா நூற்றிலே ஒருவர் !

முத்தையாவின் பணபலம் அவர் செய்த பாவத்தை மறைக்கிறது... மணிவாசகனின் சட்ட பலம், முத்தையாவை அவர் செய்துள்ள குற்றத்திலிருந்து விடுவிக்கப் பாடு படுகிறது.

பிறருடைய உரிமைகளில் தலையை நுழைத்துப் பிறர் மூக்கையுடைப்பவன் சட்ட ஞானம் உள்ளவனுக எண்ணப்படுகிருன். பிறராகவே கூப்பிட்டால் அவன் மிகப் பெரிய வக்கீலாக மதிக்கப்படுகிருன்.

கார்விபத்தில் கைது செய்யப் பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பவன் முத்தையாவின் காரோட்டி சண்முகம். குற்றத்தை வலியச் சென்று ஏற்றுக் கொள்கிற தியாக உள்ளம்— அல்லது பைத்தியக்காரத்தனம்– அவனிடம் நிறையவே இருக்கின்றது! அதையே சட்ட ரீதியாக நிரூபணம் செய்யும் சாமர்த்தியம் மணிவாசகனிடம் இருக்கிறது ... ஆனலும் சண்முகம்தான் இந்தக் குற்றத்தைச் செய்தான் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கு —அடிபட்ட அஞ்சலையின் வாக்கு மூலம் ஒன்றுதான் ஆணித்தரமான ஆதாரமாக இருக்கிறது.

''என் கணவன் என்மீது காரை ஏற்றி விபத்துக்குள்ளாகினன் '' என்ற வாக்கு மூலம் அஞ்சலையிடமிருந்து கிடைக்குமா ? அப்படிப்பட்ட வாக்கு மூலமே கிடைக்க வேண்டுமென்னும் பேராவல் முதலாளியின் மனத்துள் ; கிடைக்க வேண்டுமென்ற பிரார்த்தனை சண்முகத்தின் இதயத்துள். ஆனல் நியாயம் வெல்ல வேண்டும் என்ற உறுதி ரோமியோ—செண்பகம் இருவர் தம் இதயத்தினுள்ளும் துடித்துக் கொண்டு நிற்கின்றது.

டாக்டர் நர்மதா நர்சிங் ஹோம்.

அஞ்சலை கண் விழிக்கட்டும் என்று அக்கறையோடு காத்திருக்கிருர்கள் செண்பகமும் ரோமியோவும். செண்பகம் மில்லின் தொழிலாளர் நல மருத்துவ மனையில் அஞ்சலை படுத்திருக்கும் அறை வாசலில் அமைதியின்றித் தவித்து கொண்டிருக்கின்றனர் இருவரும். அஞ்சலைக்கு நினைவு திரும்பச்சற்று நேரமாகலாம் என்பதால்

## ✻ உடலும், உள்ளமும்

டாக்டர் நர்மதா தன் அறைக்குள் வந்து அமர்ந்திருக்கிருள். அன்று காலை முதல் அவள் இதயமும் அமைதியின்றித் தவித்துக்கொண்டுதானிருக்கிறது.

' கார் விபத்தில் அடிபட்டுக் கிடப்பவள் அஞ்சலை, காரோட்டி சண்முகத்தின் மனைவி ! என்ற உண்மையின் பயங்கரத்தை அவளால் அதிர்ச்சியுடன்தான் ஏற்றுக் கொள்ள முடிந்தது. பணபலத்தால் முத்தையா நடத்திவிட்ட பயங்கர நாடகத்துள் தன் கணவன் மணிவாசகன் ' வில்லன் வேஷங்கட்டி ' நிற்க வேண்டியிருக்கிறதே என்ற வேதனை அவள் நெஞ்சை அரிக்கிறது. நெஞ்சம் நிம்மதியை இழந்து நெடுநேரம் ஆகிவிட்டது. . . ஆனல் நாலுபேர் சாடுகிற நேரத்தில் கணவனைக் காப்பாற்ற வேண்டியது தன் பொறுப்பாயிற்றே என்று துடித்துத்தான் ரோமியோவிடம் படபடப்பாக மறுமொழி கூறினள். 'வக்கீலுக்குத் தன் கட்சியின் வெற்றிதான் முக்கியம் ' என்று கூறிய போதிலும், நர்மதாவின் உள் மனம் உறுத்திக் கொண்டுதான் இருந்தது.

இந்த விபத்தைப் பொறுத்த மட்டில் அவள் ஒரு டாக்டர். வழக்கைப் பொறுத்தமட்டில் அவள் வக்கீலின் மனைவி. விபத்தால் விளைந்த கொடுமையின் திவிரத்தை டாக்டர் நர்மதா தன் பணியால் தீர்க்க முடியும். வழக்கின் திருப்பத்தை, தீர்ப்பை திருமதி மணிவாசகன் மனமாரத் தாங்கிக் கொள்ள முடியுமா ? சட்ட ஆலோசகன் மணிவாசகனின் நாணயத்திற்கும் பங்கம் வராமல் சண்முகத்தின் தியாக நெஞ்சத்திற்கும் சோதனை வராமல் அமைதி பிறக்க வழி உண்டா ? இருக்கிறதே . . அஞ்சலையின் வாக்கு மூலம் தெரிந்தால் தெளிவு பிறக்கலாம் என்ற நம்பிக்கை படிப்படியாக நர்மதாவின் இதயத்துள் இடம் பிடிக்கிறது.

இறந்த காலத்தையும், நிகழ் காலத்தையும்பற்றித்தங்களுக்குள் சண்டையும் சர்ச்சையும் செய்தால், தங்களுடைய வருங்காலம் சூன்யமாகிப் போகும் என்பதை டாக்டர் நர்மதா எண்ணிப் பார்க்கவில்லை.

அஞ்சலையின் வாக்குமூலத்தால் சண்முகத்தின் தியாகம் பலனற்றுப் போகலாம். முத்தையாவின் பணபலம் தகர்ந்து தவிடு பொடியாகலாம். ஆனல் நியாயம் வெல்லும். நீதி தலை நிமிர்ந்து நிற்கும். அந்த நம்பிக்கை ரோமியோவுக்கும் செண்பகத்திற்கும் நெஞ்சு நிறைய நிமிர்ந்து நிற்கிறது . . !

நீதி என்பது மாய மான் என்பதை அவர்கள் அறியார்கள். நீதி ஏழைகளைச் சிறைச்சாலைக்குள்ளும், பணம் படைத்தவர்களைச் செல்வ மாளிகைக்குள்ளும்

**விதையுடன் மருந்து கலத்தல் :**

விதைக்கும் முன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் கரிம, பாதரச மருந்துகளான 'அக்ரசான்' அல்லது 'செரசான்' அல்லது 'டி.எம்.டீ.டி.' கலந்து விதைக்கவும்.

**நாற்றங்கால் தயாரிப்பு :**

ஒரு ஏக்கர் நடுவதற்கு 18 கிலோ விதையை 12 சென்ட் நாற்றங்காலில் விதைக்க வேண்டும். இவ்வாறு குறைந்த அளவு விதையை அதிகப் பரப்பில் விதைப்பதால், விதைகள் நன்கு முளைப்பதுடன், விரைவாக வளரும் திடமான நாற்றுகள் கிடைக்கும். இதனுல் பூச்சி பூஞ்சாளத் தாக்குதல் குறையும். நாற்றின் வளர்ச்சி குன்றி இருந்தால், நாற்றுப் பறிப்பதற்குப் பத்து நாட்கள் முன்பாக ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு 1-2 கிலோ அமோனியம் சல்பேட் வீதம் மேலுரமாக இடுவது நாற்றுகளின் வளர்ச்சியைத் தூண்டிவிடும். நாற்றுப் பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பாக 0.05 சத பாரத்தியான் தெளித்து பூச்சிகளின் தாக்குதலைக்கட்டுப்படுத்த வேண்டும்.

**நாற்றின் வயது :**

நாற்றின் வயது அந்த நெல் ரகத்தின் வயதைப் பொறுத்து மாறுபடும். உதாரணமாக நான்கு மாத வயதுடைய நெல் வானுல் நான்கு வாரங்கள் நாற்றங்காலில் இருக்கலாம். ஒரு மாதத்திற்கு ஒரு வாரம் என்ற விகிதத்தில் நாற்றங்காலில் இருத்தல் வேண்டும். நாற்றை உரிய பருவத்தில் பறித்து நடுவதால் நல்ல மகசூல் கிடைக்கின்றது.

**நாற்றின் அளவு :**

நாற்றுப் பறித்து நடும்போது 2, 4, 6, 8, 10 என்று நாற்றுக்களை வைத்து நடுகின்ருேம். இது தேவை இல்லை! மேற்கூறிய முறையில் நாற்றங்கால் தயாரித்திருந்தால் குழிக்கு 2 நாற்றுக்கள் வீதம் வைத்து நட்டால் போதுமானது. அதிக நாற்றுக்கள் தேவையில்லை. செழித்து வளர்ந்த நோய் நொடியில்லாத திடமான நாற்றுக்களை நடுவதால், கால தாமதமின்றிப் பச்சை பிடித்துப் பயிர் சீராக வளரும்.



**இடைவெளி :**

நெல் ரகத்திற்கேற்ப இடைவெளி விட்டு நடவேண்டும். பொதுவாக 20 × 10 செ.மீ. இடைவெளி விட்டு நட்டால் போதுமானது. முந்திய கார்ப் பருவத்தில் குறுகிய இடைவெளியான 15 × 10 செ.மீ. போதுமானது. நாற்றுக்களை 2 செ.மீ. ஆழத்திற்கு மேல் நட வேண்டியதில்லை. 'காஞ்சி', 'கண்ணகி' போன்ற குறுகிய கால ரகங்களுக்கு 10 × 10 செ.மீ. இடைவெளியும், ஒரு சதுர மீட்டர் பரப்பில் 100 குத்துகளும் (தூர்கள்) இருக்குமாறு நடவு செய்தால், எக்டேருக்கு 7,000 கிலோ மகசூல் எளிதில் கிடைக்கிறது.

**உரமிடல் :**

நெற் பயிருக்குத் தழைச் சத்து, தானியச் சத்து, சாம்பற்சத்து ஆகிய மூன்று சத்துக்களும் அவசியம் தேவை. சில இடங்களில் துத்தநாகச் சத்துக் குறைவாகக் காணப்படுகிறது. அந்த இடங்களில் 'துத்தநாக சல்பேட்' எக்டேருக்கு 20 கிலோ வீதம் இடுதல் நல்லது. மேற்கூறிய மூன்று வகைச் சத்துக்களும் பயிருக்கு ஒவ்வொரு விதத்தில் பயன்படுவதால் அவற்றைப் பயிருக்குத் தேவையான அளவு, தேவையான பருவத்தில் இட வேண்டும். குறிப்பாகத் தழைச்சத்து, பயிரின் வளர்ச்சியை அதிகரித்துப் பயிர் செழித்து வளர்ந்து தூர்கட்டி வளர ஏதுவாகின்றது. மணிச்சத்து, பயிர் நன்ருகத் தூர்கட்டி வளரவும், வேர்கள் நன்ருக வளரவும், தானிய மணிகள் திரட்சியாகவும் உதவுகின்றது. தழைச்சத்து, உரங்களை நல்ல முறையில் பயன்படுத்தவும், மணிச்சத்து உதவுகின்றது. சாம்பல் சத்து அதிக தழைச் சத்திஞல் ஏற்படும் கேடுகளைத் தவிர்க்கவும், தானியத்தின் தரத்தை அதிகரிப்பதற்கும் பயன்படுகிறது.

வளர்ச்சிக் காலம் முழுதும் உரச் சத்து, பயிருக்குக் கிடைக்குமாறு உரமிடல் வேண்டும். நெற் பயிருக்குக் கீழ்க்கண்டவாறு உரமிடலாம்.

கார்ப் பருவத்தில் இயற்கை எரு உரங்கள் இடாத பயிருக்கு 200 கிலோ தழைச் சத்தும், 60 கிலோ மணிச் சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும், இட வேண்டும் ; இயற்கை எரு இட்ட பயிருக்கு 180 கிலோ தழைச் சத்தும், 60 கிலோ மணிச்சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும் இட வேண்டும்.

தாளடிப் (ராபி) பயிருக்கு இயற்கை எரு இடாவிட்டால் 150 கிலோ தழைச் சத்தும், 80 கிலோ மணிச் சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும் இட வேண்டும்; பாக்டீரியல் பிளைட் போன்ற நோய்களினுல் பாதிக்கப்படும் பயிருக்கு எக்டேருக்கு 120 கிலோ தழைச் சத்தும், 60 கிலோ மணிச் சத்தும், 60 கிலோ சாம்பல் சத்தும் இடுதல் நல்லது.

இந்த அளவு உரங்களை இடும்போது, இடும் காலத்தையும் அறிந்து இடவேண்டும். மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களைக் கடைசி உழவின் போது இடவேண்டும். தழைச் சத்து உரத்தைக் குறுகிய காலப் பயிராஞல் 2/3 பாகத்தை நடவின் போதும், மீதியில் 1/3 பாகத்தை நட்ட 21 நாட்கள் கழித்தும் இட வேண்டும். நடுத்தர காலப் பயிராஞல் பாதி உரத்தை நடவின் போதும், மீதியில் பாதியை நட்ட 21 நாட்கள் கழித்தும், மீதியைக் கதிர் பிடிக்கும் ([illegible]) பருவத்திலும் இட்டால் நல்ல பலன்கிட்டும்.

நடுத்தர வயதுடைய நெல் வகைகளாகிய 'ஜெயா', 'விஜயா', 'ஐ.ஆர். 20', ஐ.இ.டி. 1039', 'வளர்ப்பு (கல்ச்சர்) 14503' ஆகிய 5 நெல் ரகங்களின் தழைச் சத்து உரத் தேவையைக் கண்டறிய நடத்திய ஆராய்ச்சியின் முடிவுகள் கீழே தரப் பட்டுள்ளன :

| நெல்ரகத்தின் பெயர் | மகசூல் (எக்டேருக்கு) தழைச்சத்து எக்டேருக்கு (கிலோவில்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 0 | 50 | 100 | 150 | 200 |
| ஜெயா ... ... | 4,406 | 4,956 | 6,288 | 6,519 | 6,379 |
| விஜயா ... ... ... | 3,663 | 4,278 | 5,418 | 6,033 | 6,033 |
| கல்சர் (1039) ... ... | 3,893 | 4,470 | 5,085 | 5,738 | 6,058 |
| கல்சர் (14503) ... ... | 3,458 | 4,771 | 5,405 | 5,686 | 5,840 |
| ஐ.ஆர். 20 ... ... | 3,701 | 4,342 | 5,182 | 5,546 | 5,738 |

மேற்கண்ட அட்டவணையில், உரத்தின் அளவு அதிகரிக்க அதிகரிக்க உயர் விளைச்சல் ரகங்கள் அதிக மகசூலைத் தரவல்ல தன்மையுடையதாக இருப்பது நன்கு தெளிவாகக் காணப்படுகிறது. அதே போல், நம் நாட்டு நெல் ரகங்களான டி. கே. எம். 6, கோ. 33 (கருணு) மற்றும் ஏ.டி.டி. 27 போன்ற நெல் ரகங்கள் 0 முதல் 200கிலோ வரை தழைச் சத்து உரங்கள் இடும் போது ஏற்படும் அதிக மகசூலையும் கீழே கண்ட அட்டவணையிலிருந்து தெரிந்து கொள்ளலாம் :

| ரகத்தின் பெயர் | மகசூல் தழைச்சத்து எக்டேருக்கு (கிலோவில்) | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 0 | 40 | 80 | 120 | 160 | 200 |
| டி.கே.எம். 6 ... | 2,351 | 2,881 | 2,967 | 2,593 | 2,413 | 2,054 |
| ஏ.டி.டி. 27... ... | 2,268 | 3,043 | 3,378 | 3,824 | 3,820 | 3,447 |
| கருணு (கோ. 33) ... | 1,727 | 2,902 | 3,458 | 3,927 | 4,196 | 4,416 |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து பின்கண்டவை தெளிவாகின்றன.

உள்ளூர் ரகமான 'டி.கே. எம். 6' எக்டேருக்கு 80 கிலோ தழைச்சத்து வரை இடும் போது அதிக மகசூல் தருகின்றது; உர அளவை மேலும் அதிகரிக்கும் போது மகசூல் குறைகின்றது.

'ஏ.டி.டி. 27' என்னும் நெல் 120 கிலோ தழைச் சத்து வரை இடும்போது மகசூல் அதிகரிப்பு ஏற்படுகின்றது.

'கருணு' என்னும் நெல் 200 கிலோ தழைச் சத்து வரை அதிக மகசூல் அளிக்கிறது.

மேற்கண்ட ஆராய்ச்சி முடிவுகள் நமக்கு எந்தெந்த நெல் ரகங்களுக்கு எந்தெந்த அளவுவரை உரத்தை அதிகரித்துப் போட்டு அதிக மகசூல் பெறலாம் என்பதையும், அதிக உரம் ஏற்காத நெல் ரகங்களுக்கு உரத்தை அதிகமாகப் போடுவதால் உரத்தை வீணுக்குவதோடு செலவை அதிகரித்து மகசூலையும் குறைத்து விடுகின்ருேம் என்ற உண்மையையும் நன்கு புலப்படுத்துகின்றன.

**பின்செய் நேர்த்தி :—**

தற்போது சாகுபடியிலுள்ள அமோக விளைச்சல் ரகங்களுக்கு அதிக உரமிடுவதாலும், பயிர் குட்டையாக இருப்பதாலும் களைகள் அதிகமாக வளர வாய்ப்பிருக்கின்றது. தற்போதைய சமுதாயச் சூழ்நிலையில், விவசாய வேலையாட்களை வைத்துக் களை எடுப்பது செலவு அதிகரிப்பதோடு, நல்ல முறையில் முழுமையாகக் களைத் தடுப்புச் செய்ய ஏதுவானதாக இல்லை.

எனவே களைக் கொல்லிகள் மூலம் சிறந்த முறையில் களை தடுப்புச் செய்யத் தற்போது வழி பிறந்துள்ளது.

## இரகசியத் தின்பண்டம்

சாக்கலேட்டு, கோக்கோ விதையிலிருந்து தயாரிக்கப்படும் ஒரு தின்பண்ட வகை. துவக்கத்தில் மெக்சிகோ நாட்டினர் கோக்கோ விதையிலிருந்து ஒரு வித பானத்தைத் தயாரித்துக் குடித்து வந்தனர். அவர்களிடமிருந்து ஸ்பெயின் நாட்டினர் கோக்கோ பானம் தயாரிக்கக் கற்றனர். பின், சாக்கலேட்டு தயாரித்தனர். சுமார் நூற்றுண்டுக்காலம் ஸ்பானியர் இதை இரகசியமாகவே வைத்திருந்தனர்; பின்னர் இத்தாலி, பிரான்சு, ஜெர்மனி முதலிய நாடுகளுக்கும் சாக்கலேட்டு தயாரிக்கும் முறை பரவியது. 1657-ல் இலண்டனில் சாக்கலேட்டு ஒரு பிரஞ்சுக்காரரால் முதன் முதல் விற்கப்பட்டது. அது முதல் அங்கும் பரவியது. 1700-ல் பால் கலந்து சாக்கலேட்டு செய்யும் முறையை ஆங்கிலேயர் கண்டுபிடித்தனர். 18-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் ஐரோப்பா முழுவதும் சாக்கலேட்டு பரவியது.

காத்து நிற்கும் என்பதை அவர்கள் அறியார்கள்.

டாக்டர் நர்மதாவின் அறைக் கதவைத் திறந்து கொண்டு மருத்துவமனைப் பணியாள் வந்து நிற்கிருன்.

'' என்னப்பா ''

'' போலீஸ் அதிகாரிகள் இரண்டுபேர் உங்களிடம் பேச வந்திருக்கிருர்கள் '' என்று பணிவாகக் கூறுகிருன் பணியாள்.

'' நானே வருகிறேன் '' எனக் கூறி இருக்கையை விட்டு எழுந்து வருகிருள் நர்மதா.

நர்மதாவின் அறைவாசலில் காக்கி உடை அணிந்த போலீஸ் அதிகாரிகள் இருவர் கப்பீரமாகக் காத்துக் கொண்டு நிற்கிருர்கள். பணிவாக அவர்களை நோக்கிக் கரங்குவித்து வரவேற்றுத் தன் அறைக்குள் அழைத்துச் செல்கிருள் நர்மதா. மருத்துவ மனையின் நெடிக்குள் வாழ்ந்து பழகிய நர்மதாவுக்குத் தன் மனப்புழுக்கம் தரும் நெடியைத் தாங்கும் வலு இல்லை.

போலீஸ் அதிகாரிகள் புன்முறுவலுடன் அறையினுள் நுழைகின்றனர். டாக்டர் நர்மதாவின் மேசைக்கு எதிரே உள்ள நாற்காலிகளில் அமைதியாக அமருகின்றனர். அவர்களின் வாழ்க்கையில் இதுமாதிரி எத்தனையெத்தனை விபத்துகளைச் சத்தித்தவர்கள். கான்சர் கண்ட டாக்டர், விபத்துக் கண்ட போலீஸ்காரர் தங்கள் திறமைக்குச் சவால் கிடைத்தது என்று மகிழ்வது கூட உண்டு. எத்தனையெத்தனை வழக்குகளோ...! தனிப்பட்ட ஈடுபாடோ பாதிப்போ இன்றி அதிகாரிகள் இருவரும் வந்து உட்காருகின்றனர்.

'' நாங்கள் இந்த வட்டத்தைச் சேர்ந்த காவல்துறை அதிகாரிகள் '' என்று அறிமுகம் செய்து கொண்டனர்.

'' வணக்கம் '' என்று கரங் குவிக்கிருள் நர்மதா. காவல் துறை அதிகாரிகளின் கண் பார்வை கழுகுப் பார்வை. செவிகள் பாம்புச்செவிகள். சிந்தனை முழுவதும் சேதிகளைச் சீர்தூக்கிப் பார்த்த படியே விழித்திருக்கும் அவர்களின் எதிரே நிற்கும்போதும், அவர்களின் பேச்சுக்கு மறுமொழி கூறும்போதும், சிந்தனைத் தெளிவும் செயல்திறனும் சேர்ந்திருக்க வேண்டும். குரல் நடுங்கினுலும் சரி, கூறுகின்ற முறையில் ஏற்றத் தாழ்வு பிறந்தாலும் சரி குற்றவாளி இதோ, இதோ என்று ...யச் சென்று நாமே காட்டிக் கொடுத்துவிடுவது போல் ஆகிவிடும்.. காவல் துறை அதிகாரிகள் எதிரே உட்கார்ந்திருக்கும் போது கண நேரத்திற்குள் நர்மதாவின் கண்ணுக்குள் ஓராயிரம் காட்சிகள் ஓடி மறைகின்றன... அத்தனையும் அவள் மனத்தின் பலவீனங்கள்.... பெண்ணுகப் பிறந்ததால் கூடவே பிறந்திருக்கும் மனக்கிலேசங்கள்.

பணத்தை வைத்துக்கொண்டு பணக்காரன் உட்கார்ந்திருப்பது போலத்தங்கள்இலாகா அனுபவங்களை வைத்துக் கொண்டு மேலும் அனுபவத்தை விருத்தி செய்ய உட்கார்ந்திருக்கிருர்கள் — இவ்வாறு எண்ணிருள் டாக்டர் நர்மதா.

டாக்டர் நர்மதாவே அறையில் நிலவும் அமைதியைக் கலைக்கட்டும் என்று காத்திருந்தனர் காவல் துறை அதிகாரிகள். காலம் தான் வீணுகிக்கொண்டிருந்தது ; பின்னர் அவர்களுள் ஒருவரே தொண்டையைச் சுருதி கூட்டிக்கொண்டு பேசத் தொடங்குகிருர்.

'' டாக்டர் '' இன்று காலை நிகழ்ந்த கார் விபத்தைப் பற்றி நீங்கள் அறிவீர்கள் என நம்புகிருேம் '' என்கிருர் முதல் அதிகாரி.

'' அறிவதாவது ? இவர்கள் தானே அடிபட்ட நபருக்கு வைத்தியமும் செய்கிருர்கள் '' எனத் திருத்துகிருர் இரண்டாவது அதிகாரி.

'' நல்லது .. அடிபட்ட நபர் இன்னும் மயக்கநிலையில் இருக்கிருர் என்று கேள்விப்பட்டோம்'' என்று அதிகாரி கூறும்போதே ஓரளவுதெளிவும் தெம்பும் பெற்றுவிட்ட நிலையில் டாக்டர் நர்மதா குறுக்கிட்டு, ''அடிபட்ட நபர் ஒரு பெண். பெயர் அஞ்சலை.... செண்பகா மில் முதலாளி முந்தையா அவர்களின் காரோட்டி சண்முகத்தின் மனைவி அவள்! அடிபட்ட வேகத்தில் அவள் அதிர்ச்சி யடைந்து மயக்கமடைந்துவிட்டாள். அவளுக்கு அதிர்ச்சி தான். ஆபத்து ஒன்றுமில்லை. இன்னும் சில நிமிடங்களுக்குள் அவள் மயக்கம் தெளிந்துவிடும்.......... .என்று மளமளவென விவரங்களை அடுக்கத் தொடங்குகிருள்..

அந்த நேரத்தில் அறைக் கதவைத் திறந்துகொண்டு நர்ஸ் தங்கம் எட்டிப் பார்க்கிருள்.

'' டாக்டர்.. கார்-விபத்து நோயாளிக்கு நினைவு திரும்பிவிட்டது..''என்று அறிவித்துவிட்டுப் போகிருள்.

''டாக்டர் நர்மதா அவசரமாக எழுந்து அஞ்சலை படுத்திருக்கும் கட்டிலை நோக்கி விரைகிருள். அதிகாரிகள் இருவரும் எழுந்து நிற்கின்றனர்.

''எக்ஸ்க்யூஸ் மி..நான் அஞ்சலையைப் பார்த்த பிறகு உங்களுக்குத் தகவல் அனுப்புகிறேன். அவளிடம் நீங்கள் வாக்குமூலம் பெற்றுப் போகலாம்..'' என்று கூறுகிருள் நர்மதா.

''மேடம்..'' என்று முதல் அதிகாரி ஏதோ பேச முற்படுவதற்குள் ''உங்கள் கடமையுணர்வும் கண்காணிப்பும் எங்களுக்குப் புரிகிறது சார்...என்னைத் தவிர வேறு எவரும் அஞ்சலையிடம் பேசவோ, பேசி அவள் மனத்தை மாற்ற முயற்சி செய்யவோ மாட்டார்கள். அதற்கு நான் பொறுப்பு'' என்று நர்மதா கூறிவிட்டுப் பரபரப்பாக அறையைவிட்டு வெளியேறுகிருள்.

அதிகாரிகள் இருவரும் தங்களுக்குள் கண்களால் ஜாடை பேசிக்கொள்கின்றனர். 'டாக்டர் நர்மதா சாதாரண ஆள் இல்லை! அடேயப்பா!' என்று அடிக்குரலில் கூறிச் சிரிக்கிருர் முதல் அதிகாரி.



இந்த இரசாயனக் களைத் தடுப்பை இரண்டு முறைகளில் செய்யலாம். ஒன்று 'முளைக்கும் முன் களை தடுப்பு' (Pre-emergence weed control) என்ற உத்தியின்படி 'மாசேடி' (Machete) குருணையை எக்டேர் ஒன்றுக்கு 2.00 கிலோ வீரிய மருந்து வீதம் விதைத்த பின் அல்லது நடவு நட்ட பின் ஆருவது நாளில் தூவ வேண்டும். குருணை மருந்துடன் தேவையான அளவு மணலையோ அல்லது உரத்தையோ கலந்து கொள்வதால் சீரான அளவு தூவுவதற்கு இயலும். குருணையைத் தூவுவதற்கு முன் வயலில் தண்ணீரை நன்ருக வடித்துவிட வேண்டும். தூவிய பின் 36 மணி நேரம்கழித்துத் தண்ணீர் விடுவது நல்லது.

'முளைத்த பின் களைத்தடுப்பு' (Post-emergence weed control) உத்தியின்படி நேரடியாகத் தூவி விதைக்கப்பட்ட நெற் பயிரிலும், 'ஸ்டாம் எப். 34' என்ற திரவ மருந்தை நட்ட அல்லது விதைத்த மூன்ருவது வாரத்தில் வயலில் உள்ள தண்ணீரை நன்ருக வடித்த பின் களைகளின் மீது படியும் விதமாக விசைத் தெளிப்பாளுல் எக்டேருக்கு 3.5 லிட்டர் வீரிய மருந்து வீதம் தெளிக்க வேண்டும்.

இந்தக் களைக் கொல்லிகளை உபயோகிப்பதளுல் செலவும் குறைவு; களை தடுப்பும் நல்ல முறையில் இருக்கின்றது. கீழே தரப்பட்டுள்ள அட்டவணை வெவ்வேறு களை தடுப்பு முறைகளில் கிடைத்த விளைச்சல் மற்றும் பொருளாதார மதிப்பீட்டைக் காட்டுகின்றது.

| செய்முறை | களைதடுப்புக்கு எக்டேருக்கு ஆகும் செலவு (ரூபாய்). | உழவர் செய்முறைக்கும், களைக்கொல்லி தெளிப்பதற்கு ஆகும் செலவுக்கும் உள்ள வேறுபாடு (ரூபாய்). | எக்டேர் விளைச்சல் (கிலோ). | உழவர் முறையை விட விளைச்சல் வேறுபாடு (கிலோ). | உழவர் முறையைவிட நிகரலாபம் (ரூபாய்). |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| அ. விதைக்கப்பட்ட பயிர்: | | | | | |
| 1. களையெடுக்காத பயிர் | ... | ... | 1,330 | ... | ... |
| 2. மாசேடி குருணை 2.00 கிலோ (வி.ம.) தூவிய பயிர் ... | 123 | ---111 | 5,000 | 670 | 546 |
| 3. கைக்களை மும்முறை எடுத்தது (உழவர் முறை) ... | 234 | ... | 4,330 | ... | ... |
| ஆ. நாற்று விட்டு நட்ட பயிர் : | | | | | |
| 1. களை எடுக்காத பயிர் | ... | ... | 3,330 | ... | ... |
| 2. மாசேடி குருணை 2.0 கிலோ (வி.ம.) இறைத்த பயிர் ... | 123 | ---33 | 5,200 | 700 | 587 |
| 3. ஸ்டாம் எப். 34 மருந்து 3.5 லி. (வி.ம.) தெளித்த பயிர் ... | 255 | ---99 | 4,500 | ... | ---100 |
| 4. கைக்களை இருமுறை எடுத்த பயிர் ... | 156 | ... | 4,500 | ... | ... |



நெல்லின் நீர்த் தேவையும், நீர்ப் பாசன நிருவாகமும்.

அதிகமாகப் பாசன வசதியுள்ள இடங்களிலேயே நெல் பயிரிடப்படுகின்றது. நெல் சாகுபடிக்குத் தண்ணீர் எப்போதும் வயலில் இருந்து கொண்டேயிருக்க வேண்டியுள்ளது. இதன் நீர்த் தேவையைப் பற்றி ஆராயும் போது ஐ. ஆர். 20 போன்ற நெல் ரகங்களுக்கு 5 செ.மீ. ஆழத்திற்குத் தண்ணீரை மூன்று நாட்களுக்கு ஒரு தடவை விடுவதும், நாள் தோறும் 5 செ. மீ. ஆழத்திற்குத் தண்ணீர் விடுவதும் முந்திய கார்ப் பருவத்தில் ஒரே மாதிரியான விளைச்சலைக் கொடுத்ததாகக் கண்டறியப்பட்டது.

உயர் விளைச்சல் நெல் ரகமான ஐ. ஆர். 20 போன்றவைகள் உள்ளூர் ரகத்தை விட அதிக நீர்த் தேவை கொண்டதா என்று கண்டறிய கோ. 32 என்னும் நெல் ரகத்தின் நீர்த் தேவையுடன் ஒப்பிடப்பட்டது. இதில் கோ. 32 நெல் ரகம் 936.00 மி. மீ. தண்ணீரும், ஐ.ஆர். 20 நெல் 923.00 மி.மீ. தண்ணீரும் வளர்ச்சிக் காலத்தில் எடுத்துக் கொள்வதாகத் தெரிந்துள்ளது. எனவே உயர் விளைச்சல் ரகங்கள், அளவிற்கு அதிகமான தண்ணீரை எடுத்துக் கொள்ளும் என்று ஐயப்பாடு வேண்டுவதில்லை. மேலும் இந்த நெல் ரகங்கள் அதிக உரத்தை ஏற்று, எடுக்கும் நீரை முழுமையாகப் பயன்படுத்தி அதிக மகசூலையும் அளிக்கின்றன.

தகவல் : உழவியல் துறை, வேளாண்மைக் கல்லூரி; கோவை.

தொகுப்பு :

தகவல் தொடர்பு நிலையம்;
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை-3.

# சர்க்கஸ் வரலாறு



சர்க்கஸ் நடத்தும் வழக்கம் சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்னரே ரோமானியரிடம் இருந்தது. 'சர்க்கஸ்' என்ற சொல்லுக்குக் கிரேக்க, லத்தீன் மொழிகளில் 'வட்டம்' அல்லது 'வளையம்' என்று பொருள். குதிரைப் பந்தயம் முதலான பந்தயங்களை வட்டமான இடத்தில் நடத்துவர். அவ்வட்டத்தைச் சுற்றிலும் மக்கள் உட்கார்ந்து வேடிக்கை பார்ப்பர். முதலில் சர்க்கஸ் திறந்த வெளியில் நடந்தது. பின்னர்க் கட்டடங்களில் நடத்தினர். இக்காலத்தில் சர்க்கஸ் பெரும்பாலும் கூடாரங்களிலேயே நடைபெறுகிறது.

சர்க்கஸ் மாக்சிமஸ் என்ற சர்க்கஸ் பண்டைய ரோமானிய சர்க்கஸ்களுள் மிகவும் புகழ் பெற்றது; பெரியது. 3,85,000 பேர் வீற்றிருக்கக் கூடிய வகையில் சர்க்கஸ் கட்டடத்தை அக்காலத்திலே அமைத்திருந்தனர். குதிரைப் பந்தயம், குதிரை வண்டிப் பந்தயம், குட்டிக்கரணமடித்தல், கயிற்றின்மீது நடனம் செய்தல் முதலான காட்சிகளை அக்காலத்திலே ரோமானியர் சர்க்கஸில் காட்டினர். ஆசியா மைனர், வட ஆப்பிரிக்கா, ஸ்பெயின், பிரான்சு முதலான நாடுகளின் மீது ரோமானியர் படையெடுத்து, அவற்றைக் கைப்பற்றியபின் அந்நாடுகளிலும் சர்க்கஸ் நடத்தினர். அவ்வாறு ரோமானியர் கட்டி நடத்திய சர்க்கஸ் கட்டடங்களின் சிதைந்த சின்னங்களை அந்நாடுகளில் இன்றும் காணலாம்.

ரோமானிய வீழ்ச்சியினுல் சர்க்கஸின் வளர்ச்சியும் குன்றியது. பிச்சைக்காரரும் கூத்தாடிகளும் தம் வயிறு வளர்க்க ஆங்காங்கே கடை வீதிகளிலும் சந்தைகளிலும் தமக்குத் தெரிந்த வித்தைகளைச் செய்து பிழைத்தனர். சிற்சில இடங்களில் நாய், பன்றி, கரடி போன்ற விலங்குகளையும் பழக்கி, அவற்றைக் கொண்டு சில வித்தைகளையும் பழக்கிச் செய்வித்து வந்தனர். 18-ஆம் நூற்ருண்டின் இறுதியில் சார்ஜண்ட் மேஜர் பிலிப் ஆஸ்ட்லி என்ற ஆங்கிலக் குதிரை வீரர் லண்டனில் புதிய முறையில் சர்க்கஸ் தொடங்கினுர். இதுவே நவீன சர்க்கஸின் தொடக்கம் ஆகும். ஆஸ்ட்லியைப் பின்பற்றிப் பலரும் சர்க்கஸ் நடத்தத் தொடங்கினர். இவருடைய சர்க்கஸில் முதலில் குதிரையேற்றமே முக்கியமான இடம் பெற்றது. பிறகு, கழைக்கூத்து, கோமாளியின் கேளிக்கைகள் முதலியவற்றையும் சர்க்கஸில் முதலில் காட்டியவர் இவரே !





# பார்த்தோம் படித்தோம்

சிங்கப்பூர் பா. கேசவன் படைத்
துள்ள கட்டுரை—நாலும் இரண்டும்
சிறப்பாக அமைந்திருக்கிறது. நீண்ட
நெடுங் காலமாகத் தமிழ் மக்கள்
கொண்டிருக்கின்ற கருத்தை மாற்ற
முனைவது—ஆராய்ச்சியின் அருந்
தொண்டாக இருக்கலாம். ஆனால்,
ஆய்வாளரின் கருத்து ஆணித்தரமாக
அமையவில்லை; வலிந்து கூறுவதாகவே
தோன்றுகிறது.

—சிவ. சிதம்பரம்,
திருச்சி.

அடேயப்பா! அண்மையில்தான்
அரசு செய்திப்படம் எடுக்கும் பணியில்
ஈடுபட்டதுபோல் தோன்றுகிறது.
அதற்குள் நூறு படங்கள் முடிந்து
விட்டன என்றால், வியப்பாக
இருக்கிறதே!

—ஜி. கோவிந்தராஜ்,
சென்னை-17.

'ஒரு நூறு பல நூறு ஆகட்டும்' என்ற
கட்டுரையைப் படித்தேன். தமிழ்
மக்களுக்குள்ள கஞ்சத்தனம் கட்டுரை
யாளரைப் பிடித்துக் கொண்டு விட்டது
போலும்; 'ஒரு நூறு பல ஆயிரம்
ஆகட்டும்' என்று வாழ்த்தினால் என்ன?

—ஏ. சுப்பிரமணி,
திருத்தணி.

பேரறிஞர் அண்ணாவின் புகழ்பாடும்
கவிதைகள் அனைத்தும் படிக்கப் படிக்க
ஆனந்தம் தருகின்றன.

—கே. சொக்கலிங்கம்,
இராமனுதபுரம்.

சென்னையின் மெரினா—நாள்தோறும்
வளர்ச்சியுற்று வருவதைப் புகைப்
படங்களின் வாயிலாகவும் சுவையான
கட்டுரையின் வடிவிலும் எடுத்துரைத்
துள்ள 'தமிழரசு' ஏட்டுக்கு நன்றி.

எஸ். ஆர். சந்திரன்,
கோவை-1.



''பிறந்த நாள் விழா''-தமிழகத்தில்
தொன்றுதொட்டு நடைபெற்ற விழா
—நடைபெறுகின்ற விழா என்னும்
உண்மையை ஆய்வு செய்து நிறுவி
யிருக்கும் கோவை இளஞ்சேரன்
பாராட்டுக்குரியவர். பல்கலைக் கழக
மாணவர்களுக்குரிய பாடப் புத்தகத்
தில் இடம் பெறும் தகுதி இந்த
இலக்கிய—ஆய்வுக் கட்டுரைக்கு
உண்டு என்று துணிந்து கூறலாம்.

—ஆர். ஏ. வி. பதி,
சேலம்.

விடுதலைத் தியாகிகளிடம் அண்ணா
வைத்திருந்த பாசத்தைத் தெளிவாகக்
கூறியுள்ளது 'அண்ணாவின் வாழ்விலே'
என்ற கட்டுரை. தமிழக மக்களுக்கு
மட்டுமல்ல—கோவா மக்களுக்கும்
மனமகிழ்வு தரும் பணியினை அண்ணா
செய்திருக்கிறார் என்பதைத் தெரிந்து
கொள்ள முடிகிறது.

—அன்புவேந்தன்,
மதுரை-1.

காஞ்சி நகராட்சிக்கு 105 வயதாகி
விட்டதா? வியப்பாக இருக்கிறதே!
இதைப்போல, நூற்றாண்டு கொண்டா
டிய வேறு நகராட்சிகளையும் 'தமிழரசு'
ஏட்டில் அறிமுகம் செய்யலாமே!

—இரா. வேலன்,
சென்னை-5.

தூத்துக்குடியில் உருவாகவிருக்கும்
அனல் மின் திட்டம் குறித்து மிக
விளக்கமான கட்டுரையொன்றினை
வெளியிட்டுச் சிறப்புச் செய்திருக்கிறீர்
கள். தமிழகத்து மின் வளர்ச்சியில்
தூத்துக்குடி அனல் மின் நிலையம் ஒரு
மைல் கல்லாக அமையும் என்பது
உறுதி என்று கட்டுரையின் முத்தாய்ப்
பாகக் கூறியிருப்பது பொருத்தமான
தாகும்.

—எஸ். காந்திமதி,
திருநெல்வேலி-1.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்.
சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு நர்மதாவே வந்து அவர்களை அழைத்துச் செல்கிறாள்.

அஞ்சலையின் வாக்குமூலத்தை எழுதிக் கொள்வதற்காக அதிகாரி குறிப்பேட்டுடன் தயாராக அவள் எதிரே வந்து நிற்கிறார். நர்மதாவின் இதயத்துள் ஆயிரமாயிரம் பிரார்த்தனைகள். தன் சட்ட ஞானத்தாலும் சாமர்த்திய வாதங்களாலும் முதலாளி முத்தையாவை வக்கீல் மணிவாசகன் விடுவித்துக் கொள்ளட்டும். முதலாளிமேல் கொண்ட விசுவாசம் காரணமாக அப்பாவி சண்முகம் சிறைவாசம் செய்யும்படி நேர்ந்துவிடக் கூடாது. அஞ்சலை என்ன வாசகம் சொல்லப் போகிறாளோ!

வந்த காவல் அதிகாரி கேட்கிறார்.

'' அஞ்சலையம்மா.. விபத்து நடந்தபோது நீ எங்கேயிருந்து எந்தப்பக்கம் வந்தாய்? கார் எந்தப் பக்கத்திலிருந்து வந்து கொண்டிருந்தது..? காரிலே வந்தது யார் என்று அடையாளம் கூறமுடியுமா?'' என்று ஒட்டு மொத்தமாகக் கேள்விகளைக் கேட்டுவிட்டு அஞ்சலையின் மறுமொழிக்காகக் காத்துநிற்கிறார் காவல்துறை அதிகாரி.

''காலையிலே.. வழக்கம் போல அஞ்சரை மணிக்கு எந்திரிச்சு.. எதிர்த்த டீக்கடையிலே போயி டீ வாங்கியாரலாம்னு பொறப்பட்டு வந்தேனுங்க.. அப்ப— தெக்காலேர்ந்து வேகமா ஒரு காரு வந்திச்சிங்க.. பக்கத்தில வந்ததும்தான் பாத்தேனுங்க.. நம்ப மொதலாளி ஐயா காருங்க அது..''

-பிசிறு எதும் இல்லாமல் தெள்ளத் தெளிவாகக் கூறிக் கொண்டிருக்கிறாள் அஞ்சலை.. நர்மதாவின் மனத்துள் நம்பிக்கைப் பொறி! 'முதலாளி ஐயாவின் கார்' என்று அடையாளம் காட்டுகிற தெளிவோடு பேசுகிறாளே..

அடுத்து.. ஆம் அடுத்து காரை ஓட்டிக் கொண்டு வந்தவர் முதலாளிதான் என்பதையும் இதே தெளிவோடு கூறிவிடுவாள்; இந்த உறுதியுடன் காத்துநிற்கிறாள் நர்மதா.

அஞ்சலையின் விழிகளில் திடீரென்று கண்ணீர் பெருகி வழிகின்றது.. யாரை நினைத்திருப்பாள். தன் கணவனையா ஐந்து குழந்தைகளின் எதிர்கால நலத்தையா? அல்லது கன்னிப்பருவம் கழிந்தும் கல்யாண வேளை கூடி வராமல் வளர்ந்து நிற்கும் பரிதாபத்திற்குரிய மூத்த மகளையா..?

அஞ்சலை கண் கலங்குவதைக் கண்டதும் காவல்துறை அதிகாரிகள் குறிப்பெடுப்பதை நிறுத்திக் கொள்கின்றனர். அஞ்சலை டாக்டரை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டபடி ''டாக்டரம்மா.. நான் இப்படிக் கெடக்குற கோலம் என் புருசனுக்குத் தெரியுமா.. தெரிஞ்சா அவரு ஏன் இன்னும் என்னை வந்து பாக்கலே? ஏனுங்க போலீசுக்காரய்யா.. எம் புருசன் இங்கே வந்து என்னைப் பாக்கவுட மாட்டீங்களா?'' என்று பரிதாபமாகக் கேட்கிறாள்.



காவல்துறை அதிகாரி மிகுந்த கருணையோடு, '''அதனால் என்னம்மா.. இன்னும் கொஞ்ச நேரத்தில் உன் கணவரைக் கூட்டிக் கொண்டு வருகிறோம்'' என்று கூறிவிட்டு மற்றவரிடம் ''காவலில் இருக்கும் சண்முகத்தைக் கூட்டிவரச் சொல்லுங்கள்'' என உத்தரவு கொடுக்கிறார்.

அதிகாரி கொடுத்த உத்தரவு அஞ்சலையின் இதயத்துள் ஆயிரமாயிரம் பேரிடிகளாய் இறங்கிற்று.. 'காவலில் இருக்கும் சண்முகத்தை' என்ற வரியில் பொதிந்து நின்ற உண்மையின் பயங்கரத்தை விபத்துக்குள்ளான அவள் நெஞ்சம் ஒரு நொடியில் உணர்ந்து கொண்டு விடுகிறது.

விபத்து நடப்பதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர்கூட, தம் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிக் கவலை தெரிவித்துப் பேசிக் கொண்டிருந்திருக்கிறானே சண்முகம்? 'முதலாளி ஐயா ஊரிலிருந்து இந்த முறை வரும்போது அவரிடம் மன்றாடியேனும் பணம்பெற்று மகளின் திருமணத்தை நடத்த வேண்டும்..' என்று அக்கறையுடன் பேசிக் கொண்டிருந்த சண்முகம் ஏன் கைதானான்? எதற்காகக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறான்? கருக்கல் நேரம் வரை தன்னோடு தன் குழந்தைகளோடு குடிசைக்குள் இருந்த சண்முகம் எப்படி முதலாளி ஐயாவின் காரில் வந்திருக்க முடியும்? கார் விபத்திற்காகக் கைதாகியிருக்க முடியும்? காவலில் வைக்கப்பட்டிருக்க முடியும்?

ஒரிரு விநாடிகளுக்குள் அஞ்சலைக்கு உலகமே சுழல்வதைப் போல் ஆகிவிடுகிறது.. விழிகளில் கண்ணீர் வெள்ளம். இதயம் சுமக்கும் வேதனையின் இறுக்கம் முகத்தில் பிரதிபலிக்கின்றது..

''டாக்டரம்மா..'' என்று துயரத்துடன் முனகுகிறாள் அஞ்சலை.

வாக்குமூலம் முழுமை பெறவில்லையே என்ற வருத்தம் அதிகாரிகளுக்கு. அவள் வாழ்வு சிதறிவிடப் போகிறதே, என்ற வேதனை டாக்டர் நர்மதாவுக்கு..

''டாக்டரம்மா.. எம் மவளைப் பார்க்கணும்.. பாக்கலாமுங்களா..?'' எனக் கேட்கிறாள் அஞ்சலை.

''அதற்கென்னம்மா.. பார்க்கலாம்.. வரச் சொல்லுகிறேன்'' என்று சமாதானம் கூறுகிறாள் நர்மதா.

அறைக்குள் வந்துநின்ற நர்ஸ் தங்கத்திடம் ஏதோ ஜாடை காட்டுகிறாள் நர்மதா. டாக்டரின் குறிப்பறிந்த நர்ஸ் தங்கம் அறை வாசலில் அழுதுகொண்டே நிற்கும் கனகாம்பரத்தை - அஞ்சலையின் மகள் கனகாம்பரத்தை அழைத்து வருகிறாள்.

குப்பையில் கிடக்கும் தங்கக் கட்டியாக வந்து நிற்கிறாள்.

கனகாம்பரத்தின் இளமையை, அவள் தந்தையின் ஏழ்மை பாழடித்துக் கொண்டிருக்கிறதே! பார்த்தவர்கள் இப்படித்தான் பரிதாபம் கொள்ளுவார்கள். அந்தப் பெண். மான் கண்ணும் மருட்சிப் பார்வையுமாய் வளர்ந்திருக்கிறாள்.. கவலை தோய்ந்த முகத்தோடும், கலங்கி வழியும் கண்ணீரோடும் தாயின் கட்டிலருகே வந்து நிற்கிறாள்.

''டாக்டரம்மா.. இவதாங்க எம் பெரிய பொண்ணு.. என் குடும்பத்துச் சுமை இவ தலையில தான்..!'' என்று விம்மலுடன் கூறுகிறாள் அஞ்சலை.



எதிர்காலத் தேக்கத்தைப் பற்றி அஞ்சலை கவலைப்படத் தொடங்கிவிட்டாள். காலையில் நடந்த விபத்தைப் பற்றி அவளிடம் முழுமையாக வாக்குமூலம் பெறும் வழி என்ன என்பதைச் சற்றுக் கடுமையாகச் சிந்திக்கிறார் காவல்துறை அதிகாரி.

''இந்தாம்மா அஞ்சலை.. கார் விபத்தைப் பற்றிய உனது வாக்குமூலத்தை இன்னும் முழுமையாகத் தந்தபாடில்லை'' என்பதை மீண்டும் நினைவூட்டுகிறார் அதிகாரி.

''வாக்குமூலம் என்னுங்கய்யா எம் புருசனே கண்ணுமண்ணு தெரியாம காரை ஓட்டிக்கிட்டு வந்தாரு; நான் காருக்கு குறுக்கே விளுந்திட்டேன் .. அடிபட்டு ஆசுபத்திரியிலே கெடக்குறேன்.. அவரு போலீஸ் டேசன்ல லாக் அப்புல இருக்கிறாரு.. இவ்வளவுதானுங்க. நடந்தது..'' என்று பள்ளிச்சிறுமி பாடம் வாய்ப்பாடு ஒப்பிக்கும் கதையாகக் கூறிமுடிக்கிறாள் அஞ்சலை.

கனகாம்பரத்தின் கண்களில் மருட்சி, 'காலையில் வீட்டில் இருந்தாரே அப்பா . அவராவது காரோட்டிக் கொண்டு வந்ததாவது.. அம்மாவுக்கு நினைவு மயங்கிவிட்டதா-இப்படிப் பிதற்றத் தொடங்கிவிட்டாளே' என்ற அதிர்ச்சியுடன் அஞ்சலையை ஏறிட்டு நோக்குகிறாள் கனகாம்பரம்.

'நான் சொல்வதற்கு மாறாக ஏதேனும் உளறித் தொலைக்காதே' என்ற எச்சரிக்கை அஞ்சலையின் விழிகளில் பதிலுக்குத் தெறிக்கிறது.

தாயின் தவறான வாக்குமூலத்திற்கு ஏதோ காரணம் இருக்கிறது என்பதை உணர்ந்து மௌனமடைகிறாள் கன்னிப் பெண் கனகாம்பரம்.

ஆனால்—

டாக்டர் நர்மதாவினால் அமைதியாக இருக்க முடியவில்லை. அவள் மனம் எரிமலையாய்க் குமுறுகிறது.......... முதலாளியைக் காப்பாற்றுவதில் சண்முகத்தையும் முந்திக் கொண்டு நிற்கிறாளே இந்த அஞ்சலை. ''எஜமான விசுவாசத்திற்கு இவர்கள்தான் கொடிமரங்களோ?'' என்ற வியப்பு நர்மதாவின் மனத்துள் பிறக்கிறது.

முள்ளும் கல்லும், மருந்தும் நெடியும் சூழ்ந்த இடத்தை விட்டு நிலவும் நட்சத்திரங்களும் நிரம்பிய வானத்திற்குள் பறக்கிற மாதிரி, பூக்களும் நறுமணத்தை தேக்கங்களும் நிரம்பிய பூக்கூடைக்குள் புகுந்த மாதிரி டாக்டர் நர்மதா ஒரு கணம் உணர்ந்தாள்.

போலீஸ் அதிகாரி கூறினார்.

''அஞ்சலையம்மா.... இந்தக் காகிதத்தில் கைரேகையைப் பதித்துத்தா.... நீ இப்போது சொன்னதை அப்படியே எழுதியிருக்கிறோம். நீதி மன்றத்திலும் நீ இப்படியே சொல்லுவாயா?......''

''சொல்றேனுங்க ....'' என்று கூறிவிட்டுக் காகிதத்தில் கைரேகையைப் பதித்துக் கொடுத்தனுப்புகிறாள் அஞ்சலை.''

காவல்துறை அதிகாரிகள் தம் கடமையை முடித்துக்கொண்டு புறப்பட்ட மறுகணம்—

டாக்டர் நர்மதா அஞ்சலையின் கட்டிலருகே வந்து நிற்கிறாள்.

''வாக்கு மூலத்தில் நீ கொடுத்ததெல்லாம் உண்மைதானே அஞ்சலை?''

'' ஆமாம்........உண்மைதான்!''

''அதாவது உன் கணவன் சண்முகம் உன்மீது காரை ஏற்றினான்—இது உண்மைதானே!''

''இப்படி ஒரு குற்றத்தைத் தாமாக ஒப்புக்கொண்டு தானே எம் புருசன் போலீஸில் சரணடைஞ்சிருக்காரு?'' என்று பதிலுக்குக் கேட்கிறாள் அஞ்சலை.

உடல் வாகுகளை, நோய்களைப் படித்துத் தேறிய டாக்டரின் கண்கள் மனித உள்ளத்தை ஆனா ஆவன்னா என்று படிக்கத் தொடங்குகிறது.

''சண்முகத்தின் வாக்குமூலம் அப்படித்தான் இருக்கிறது

''புருஷன்வாக்குமூலம் எதுவோ பெண்சாதி வாக்குமூலம் அதுதான்! என் புருசன் காரணமில்லாம அப்படி ஒரு காரியத்தைச் செய்திருக்க மாட்டாரு......அதனாலே அவர் சொன்னதுக்கு விரோதமா எனக்குச் சொல்லத் தெரியாது. என்னால் சொல்ல முடியாது!'' என்று உறுதி தெறிக்கும் குரலில் கூறுகிறாள் அஞ்சலை.

நம்மால் என்ன செய்ய முடியும் என்பதை வைத்தே நாம் நம்மை எடை போட்டுக் கொள்கிறோம். ஆனால், மற்றவர்கள் நாம் ஏற்கெனவே செய்ததைவைத்து நம்மை மதிப்பிடுகிறார்கள்.

—லாங்பெல்லோ

நோயாளியைத் தனியே விட்டுவிட்டுத்தனது அறை நோக்கி நடக்கிறாள் நர்மதா.... அவள் மனம் அலைபாய்கிறது.

பதிபக்திக்குள் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டாளா? இல்லை முதலாளித்துவ முதலையின் கோரப்பல்லுக்கு அஞ்சி அவள் பொய் பேசுகிறாளா? இல்லை பணத்தையும், பாசத்தையும், உடல் நட்பையும் தாண்டி மனிதத் தன்மை என்னும் சிகரத்துள் நிற்க எண்ணுகிறாளா?

தூக்குமேடைக்குப் போகின்ற நேரம் கணவனுக்கு வந்தாலும் சற்றும் மரண பயமின்றி மாறுபாடு ஏதுமின்றி ஒருமித்த கருத்துத் தெரிவிக்கிறாளே.... ஏழை ஜோடியின் இதய ஒற்றுமையை எண்ணியெண்ணி டாக்டர் நர்மதா வியப்பும் வேதனையும் பெறுகிறாள்.

அஞ்சலையின் உடலுக்கு எந்த வித ஊறும் ஏற்பட்டுவிடாமல், காப்பாற்றி விடமுடியும் என்ற நம்பிக்கை நர்மதாவுக்கு இருக்கின்றது. ஆனால் அஞ்சலை கொடுத்திருக்கும் வாக்கு மூலத்தினால் அவள் வாழ்வில் ஏற்படப் போகும் சரிவுகளுக்கும், சச்சரவுகளுககும் யாரால் எப்படி எந்தவித நிவர்த்திகளைத் தேடித் தர முடியும்..?

அவள் சிந்தனையைக் கலைப்பது போல அழைப்பு மணியடித்தது.

''நர்ஸ் உள்ளே வரச்சொல்!'' என்றாள் டாக்டர் நர்மதா. குழப்பமும், தவிப்புமாக நிலைபுரியாமல் நிற்கும் அதே நேரத்தில்—

கருணை பொங்கும் விழிகள்.....

கவலை தோய்ந்த முகம்.......

கைநிறையப் பணம் இத்தனையுடன் டாக்டர் அறைக்குள் வந்து நிற்கிறார் ஆலை முதலாளி முத்தையா........!

தொழுகிறார்.

அவர் முதலாளி! ஆயின் அவர் முகக்களையில் தொழு நோயாளியின் சலனம் இருக்கிறது.

(வளரும்)

# கோ-2 பப்பாளி



கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழகத் தோட்ட இயல் துறையைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் புதிய ரகங்களைச் சோதித்தும், தனித் தேர்வு செய்தும், இனக்கலப்பு செய்தும் பப்பாளியை அபிவிருத்தி செய்ய முயற்சியை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்த அயராத முயற்சியின் பயனாகச் சில நல்ல ரகங்கள் வெளியிடப்பட்டன. பப்பாளி, உண்பதற்கு உகந்த சிறந்த பழங்களைத் தருவதுடன், வணிகத் துறையில் விலையுயர்ந்த 'பப்பெய்ன்' (Papain) என்ற பொருளையும் உற்பத்தி செய்ய உதவுகின்றது. 'பப்பெய்ன்' என்பது பழுக்காத பப்பாளிக் காயிலிருந்து எடுக்கப்பட்ட, காய்ந்த பாலாகும். இந்த 'பப்பெய்ன்' பல தொழில்களுக்கும், மருந்துகள் செய்யவும்பயன்படுகிறது. மருத்துவத் துறையில் குடல் புண், ஜீரணக் கோளாறு ஆகியவைகளைக் குணப்படுத்தும் மருந்துகள் செய்ய உபயோகப்படுகிறது. 'பீர்' போன்ற மது வகைகளைக் குளிர்ச்சியாக வைக்கவும், தோல், மாமிசம் போன்றவற்றைப் பதப்படுத்தவும், சுவைக்கும் மிட்டாய் (chewing Gum) போன்ற மிட்டாய்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. இதைத் தவிர முகத்திற்குப் பூசும் 'ஸ்னோ' போன்ற வாசனைப் பொருள்கள் செய்யவும், பற்பசை செய்யவும் பயன்படுகிறது.

அயராத ஆராய்ச்சியின் முடிவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் அதிக 'பப்பெய்ன்' கொடுக்கக்கூடிய கோ. 2 என்ற பப்பாளி ரகத்தை அண்மையில் வெளியிட்டுள்ளது. இந்த கோ. 2 பப்பாளியானது பத்து ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளூர் பொறுக்கு ரகம் 7 (Selection No. 7) என்ற ரகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். இந்த ரகம், ஒவ்வொரு பழத்திலிருந்தும் சராசரி 4 கிராம் 'பப்பெய்ன்' கொடுக்கவல்லது. இதுஒரு ஏக்கருக்குச் சராசரியாக 120-150 கிலோ 'பப்பெய்ன்' கொடுக்கும் பப்பாளி ரகமாகும். மற்ற நாடுகளில் ஒரு ஏக்கருக்கு ஏறத்தாழ 80 கிலோ 'பப்பெய்ன்' மகசூல் மட்டுமே கிடைக்கிறது! எனவே, கோ. 2 பப்பாளியின் 'பப்பெய்ன்' கொடுக்கும் திறன், மற்ற நாடுகளில் உள்ள பப்பாளி ரகங்களின் 'பப்பெய்ன்' தரும் திறனைவிட அதிகம் என்பது தெளிவாகிறது. இந்த கோ. 2 ரகத்தில் 'பப்பெய்ன்' எடுத்தாலும், பழங்கள் கெட்டுவிடுவதில்லை. எனவே, 'பப்பெய்ன்' எடுத்த பிறகும் பப்பாளிப் பழங்கள் உண்பதற்கும், ஜாம், ஜெல்லி போன்றவைகள் தயாரிக்கவும் பயன்படுகின்றன.

இந்த ரகப் பப்பாளியைச் சாகுபடி செய்யவும், 'பப்பெய்ன்' எடுக்கவும், ஒரு ஏக்கருக்கு 2½ ஆண்டுகளுக்குச் செலவு ரூபாய் 2,000 ஆகிறது. நிகர வருவாய் ஒரு ஏக்கருக்குச் சுமார் ரூபாய் 3,000.

கோ. 2 பப்பாளி ரகம் தரமுள்ள பழங்களைக் கொடுப்பதுடன், தொடர்ந்து அதிக மகசூல் கொடுக்கவல்லது. இப் பப்பாளி மரங்கள் ஆண்டிற்கு இரு முறைகள் ஏப்ரல்–மே, நவம்பர்–டிசம்பர் மாதங்களில் காய்க்கும் திறன் உள்ளது.

இந்த கோ. 2 ரகத்தை இந்தியாவில் 12 மாநிலங்களுக்குச் சாகுபடிக்காக அனுப்பப்பட்டது. அங்கிருந்து இதன் சிறந்த குணங்களுக்கான நற்சான்றுகள் வந்தவண்ணமுள்ளன. இந்த ரகத்தை நோயும், பூச்சிகளும் அதிகம் தாக்குவதில்லை. குறிப்பாக வட இந்தியாவில் பப்பாளிக்கு வரும் 'சுருட்டை நோய்' (Mosaic diseases) இந்த ரகத்தைத் தாக்குவதில்லை. இதை நல்ல வடிகால் வசதியுள்ள நிலத்தில் கடல் மட்டத்திற்கு மேல் 800 மீட்டர் உயரம் வரை பயிரிடலாம்.

கோ. 2 பப்பாளி ரகம் தமிழ்நாடு, ஆந்திரம், மைசூர், கேரளம், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் பயிரிடுவதற்கு ஏற்றது.

ஆதாரம்: தோட்ட இயல் துறை, வேளாண்மைக் கல்லூரி, கோவை-3.

தகவல்: தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.

# இளைஞர் முகாமில் ஈடற்ற பணிகள்

மத்திய கல்வி, சமுதாய நல அமைச்சகத்தின் ஆதரவில், மதுரைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் தேசிய சேவைத் திட்டத்தின் இளைஞர் பஞ்ச ஒழிப்பு முகாம்கள் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் நடைபெற்றுள்ளன.

கல்லூரி மாணவர்களும், மாணவியரும் இந்த முகாம்களில் ஆர்வத்துடன் பங்கேற்றது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அகஸ்தீஸ்வரத்திலுள்ள விவேகானந்தா கல்லூரி நடத்திய இளைஞர் பஞ்ச ஒழிப்பு முகாமில் கல்லூரி மாணவர்கள் 61 பேர் கலந்து கொண்டனர். சரவணந்தேரி கிராமத்துக்கு அருகிலுள்ள விளக்கனூர் குளத்தின் ஆழத்தை இந்த மாணவர்கள் அதிகப்படுத்தியுள்ளனர். இந்த முகாம் மே திங்கள் 24-ஆம் நாளிலிருந்து ஜூன் திங்கள் 8-ஆம் நாள் வரை நடைபெற்றது.

ஈரோடுக்கு அருகில் வடுகபட்டியில் இளைஞர் பஞ்ச ஒழிப்பு முகாமைச் சார்ந்த இளைஞர்கள் 95 மீட்டர் நீளமுள்ள தடுப்பு அணை ஒன்றினைக் கட்டி முடித்திருக்கின்றனர். ஆண்டு முழுதும் நிலத்தைப் பண்படுத்துவதற்குத் தேவையான நீரைச் சேமித்து வைத்துக் கொள்வதற்கு இந்த அணை உதவும். இந்தப் பகுதியில் உள்ள கிணறுகளில் நீர் ஊறுவதற்கும் இந்த அணை உதவும்.



இந்தப் பணியில், சிக்கைய நாயக்கர் கல்லூரி, கந்தசாமி கண்டர் கல்லூரி, ஏ.எம். ஜெயின் கல்லூரி, பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய கல்லூரிகளைச் சார்ந்த 150 மாணவர்கள் ஈடுபட்டனர்.

வினோபா கிராமத்தில், இந்த இளைஞர் முகாமைச் சேர்ந்தவர்கள் முதியோர் கல்வி வகுப்பு ஒன்றினை நடத்தினர்கள். மருத்துவத்துறை இயக்குநரின் ஒத்துழைப்புடன் மக்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளும் நடத்தினர்கள். மே திங்கள் 4-ஆம் நாள் முதல் ஜூன் திங்கள் 3-ஆம் நாள் வரை இந்த முகாம் நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள அரியாவூரில் நடைபெற்ற முகாமில் பங்கு கொண்ட இளைஞர்கள் 6,200 அடி நீளமும், 12 அடி அகலமும் கொண்ட நீர் விநியோகக் கால்வாய் ஒன்றை அகழ்ந்து ஆழத்தை அதிகமாக்கியுள்ளனர். கால்வாயை அகலப்படுத்தும் பணியையும் அவர்கள் மேற்கொண்டனர். இந்த முகாமில் புனித சேவியர் கல்லூரி, ஜமால் முகம்மது கல்லூரி, பெரியார் ஈ.வே.ரா. கல்லூரி மாணவர்கள் 150 பேரும் மாணவரல்லாத இளைஞர் பலரும் கலந்து கொண்டனர்.

இலக்கியப் பேச்சுப் போட்டிகள் மூன்று, நான்கு பண்பாட்டுத் திட்டங்கள், ஒரு கருத்தரங்கு ஆகியவையும் இந்த முகாமில் பங்கு கொண்டவர்களால் நடத்தப்பட்டன.

## அந்நியச் செலாவணியை அள்ளித் தரும் அகர் பத்தி



கடந்த சில ஆண்டுகளாக அகர்பத்தி ஏற்றுமதி கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அகர்பத்தி ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

1970-71-ல் அகர்பத்தி ஏற்றுமதியின் மதிப்பு 27 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்; 1972-73-ல் 1 கோடியே 48 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய். 1973-74-ஆம் ஆண்டுக்கு 2 கோடியே 10 இலட்சம் ரூபாய்க்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமெனத் திட்டமிடப்பட்டுள்ளது.


பாவை
எழிலுக்கு பருவம் தரும்
வண்ணத்துப் பூச்சி!
● அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
● பருத்திப் புடவைகள் ● லுங்கிகள்
● வேட்டிகள் ● வீட்டு அலங்காரத் துணி வகைகள் ● துண்டுகள் ● கைக்குட்டைகள்
● பட்டு டைகள் ● கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
கைத்தறியே வண்ணத்துப் பூச்சி!

பதிவு எண். M. 8676




நாம்
இந்நாட்டு மன்னர்கள்
இன்றைய சமுதாயம்
எதிர்காலத்தை
உருவாக்குபவர்கள்
வருங்காலத்தின் வாழ்வும் வளமும் நம் கையில்!
உணவு உற்பத்தியில் தன்னிறைவு!
மாநிலத் திட்டக்குழுப் பணிகள்!
ஏழையர்க்கு வீட்டுமனை, நிலப்பட்டா!
குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்!
குடிசை மாற்றுவாரியப் பணிகள் நாட்டுடைமை
பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமை புதிய அமைப்புகள்!
தொழில் வளர்ச்சிக்குப் புதிய அமைப்புகள்!
நமது அரசின் இத்திட்டங்களும், முயற்சிகளும்
முழு வெற்றி ஈட்டிட நாம் ஆற்றும் கடமையே
அளவான குடும்பம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
இரண்டுக்குப்பிறகு எப்போதும் வேண்டாம்!
தமிழரசு


தமிழரசு
16-10-1973 40 காசு

# செய்திகள்

இந்தியாவின் விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி, சிலி நாட்டின் தலைநகரான சாண்டியாகோவில் தேசிய நூலகத்தில் இந்தியா குறித்துப் புகைப்படக் கண்காட்சி ஒன்று அண்மையில் நடைபெற்றது. புதுவை மாநிலத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் புதிய நகரம் ஆரோவில் குறித்த புகைப்படங்களும் அந்தக் கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. பொது மக்கள் இந்தப் புகைப் படங்களை மிகுந்த ஆர்வத்துடன் பார்த்திருக்கின்றனர்.

சாலை வரி என்னும் வகையில் இந்தியா முழுதும் ஆண்டொன் றுக்கு ரூ. 800 கோடி வருவாய் கிடைக்கிறது.

* * *

நெடுஞ்சாலைப் பணியில் ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்தால் 12,000 பேர்களுக்கு வேலைவாய்ப் புக் கிடைக்கும். ரூ. 2,500 கோடி இந்தப் பணிக்குச் செலவிட்டால் சுமார் 11 மில்லியன் பேருக்கு வேலை கிடைக்குமென்றும், நாடு முழுதும் உள்ள வேலையற்றோர் பிரச்சினையில் சரிபாதி தீர்ந்து விடும் என்றும் தேசிய பொருளா தார ஆய்வுக் குழு தெரிவித்திருக் கிறது.

# செய்திகள்

புகையிலை எப்போது வந்தது தெரியுமா? ஸ்பானிய ஆய் வாளர்களால், கி.பி. 16-ஆம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் அறி முகம் செய்து வைக்கப்பட்டது புகையிலை.

புகையிலையில் நச்சுச் சத்து நிறைந்திருக்கிறது. புகையிலை யில் உள்ள நிக்கோட்டின்தான் இதற்குக் காரணம். புகையிலை யால் ஏற்படும் நச்சுச்சத்து, சயனய்டுகளினுல் ஏற்படும் தீங் குக்கு அடுத்தபடியானது. ஒரு பவுண்டுப் புகையிலையில் 377 துளி நிகோடின் கலந்துள்ளது. அதாவது ஏறக்குறைய 0·5- லிருந்து 8 சதவிகிதம் வரை உள்ளது. ஒருதுளியில் பத்தில் ஒரு பாகத்தை ஒரு நாய்க்குச் செலுத்திலைே போதும்; நாய் இறந்துவிடும். சிகரெட் புகை யிலையில் 1·5 சதவிகிதம் நிகோ டின் உள்ளது. 10 கிராம் சிக ரெட்டில் 45 மில்லி கிராம் நிகோ டின் உள்ளது.

சிகரெட்டை வாயில் வைத்துப் பிடிக்கும் ஒருவருக்கு ஏற்படும் தீங்கைவிட, அந்தப் புகையை முகர்ந்து பார்ப்பவருக்கு ஏற்படும் தீமை அதிகம் என்பது தெளி வாகியுள்ளது.

ஸ்டான்போர்டு ஆய்வு நிறுவனத்தின் விஞ் ஞானிகள், டாக்டர்களுக்கு மிகமிகப் பயன்படும் ஒரு புதுவகை இயந்திரத்தை உருவாக்கியிருக் கிறுர்கள். இதன் உதவியால் நோயாளியின் உடல்வழியே பார்த்து நோயைத் தெரிந்து கொள்ள முடியும். அதாவது நோயாளியின் எலும்பு, இரத்த நாளங்கள் யாவும் தெளிவாகத் தெரியும்.

"புதிர்க் கதிர்" இயந்திரத்தைவிடப் பன் மடங்கு பயனுள்ளது. இதய சிகிச்சை செய்ய— கட்டிகள் ஏற்பட்டுள்ளதா என்று கண்டுபிடிக்க— இந்த இயந்திரம் மிகவும் பயன்படுகிறது.

இந்த இயந்திரம் ஒலி அலைகளை எழுப்புகிறது. அந்த அலைகளை நோயாளியின் உடல் வழியாக ஒலிபரப்புகிறது.

அண்மையில் ஒரு செய்முறை நிகழ்ச்சியில் இந்த இயந்திரத்தைத் திரு க்ரீன் என்னும் விஞ் ஞானி இயக்கிக் காட்டினுர்.

நீர் நிறைந்த ஒரு பெரிய தொட்டிக்குள் அவர் கையை நீட்டிக் கொண்டார். இயந்திரம் இயக் கப்பட்டது. எதிரே உள்ள டெலிவிஷன் திரை யில்—அவரது கையில் உள்ள எலும்புகள், இரத்த நாளங்கள், எல்லாம் தெளிவாகத் தெரிந்தன.

ஐ. நா. உணவு வேளாண்மை நிறுவனத்தின் தேயிலை உற்பத்தி செய்யும் பல நாடுகள் குழுக் கூட்டம் ஆகஸ்டுத் திங்கள் 2-ஆம் நாள் முதல், 6-ஆம் நாள்வரை ரோமில் நடைபெற விருக்கிறது. இக்கூட்டத்தில் இந்தியாவும் கலந்து கொள்கிறது, இக்கூட்டத்தில், தேயிலையின் பயன், தேயிலை உற்பத்திக் குழு சபைகளின் அலுவல்கள், தேயிலையைப் பயன் படுத்துதல் சம்பந்தமாக அனைத்துலக மட்டத் தில் இயக்கங்கள் நடத்துதல், தேயிலை உற் பத்தி அதிகரிப்பு சம்பந்தமாகச் சில நாடுகளைத் தெரிந்தெடுத்தல், பல நாடுகளில் உள்ள தேயிலை உற்பத்திக்கான சபைகளின் ஒத் துழைப்பு ஆகிய பல்வேறு பொருள்கள் கலந்துரையாடலில் இடம்பெறும்.

# செய்திகள்



## அறிவியல் மேதை

# ஹோமி பாபா



மின் ஆற்றல் பற்ருக்குறை யின் காரணமாகத்தான் மின் வெட்டு ஏற்படுகிறது. மின் வெட்டு ஏற்படாமல் இருப் பதற்கு எதிர்காலத்தில் அணு மின் நிலையங்கள் பெருகிட வேண்டும் என்பதை இன்று அகிலம் உணர்ந்துகொண் டிருக்கிறது.

தமிழகத்தில், மாமல்லபுரத் தின் அருகில் உருவாகிவரும் கல்பாக்கம் அணு மின் நிலை யம் 1975 அல்லது 1976- ஆம் ஆண்டில் பணி செய்யத் தொடங்கும் என்று தெரிய வருகிறது.

தமிழகத்துக்குப் பயன்பட விருக்கும் இந்த அணு மின் நிலையம் அமைவதற்குக் காரணமாக இருந்த உத்தமர் ஹோமி பாபா ஆவார். அவ ரது நீண்ட வரலாற்றில் ஒரு சில ஏடுகள் இங்கே தொகுத் [illegible]

பம்பாய் அருகே இந்தியா வின் பழைய பெருமைக்குச் சான்ருகத் திகழ்கிறது எலி பெண்டா குகைகள். சிற்ப வேலைப்பாடுகளில் சிறந்து விளங் கும் அந்தக் குகைகள், நமது தாயகத்தின் கலை உணர்வை வெளிநாட்டுக்கு எடுத்துச் சொல்லி வருகின்றன. அந்த உயிரோவியக் கூடத்திற்கு எதிரே இன்றைய புதிய இந்தியாவின் பெருமையை எடுத்துச் சொல்லி வருகிறது பாபா அணுசக்தி ஆராய்ச்சி நிலையம்.

டிராம்பே அணுசக்தி ஆராய்ச்சி நிலையம் என்று முத லில் பெரியரிடப்பட்ட நிலையம் தான் இன்று, 'பாபா அணு சக்தி ஆராய்ச்சி நிலையம்' என்ற பெயரைப் பெற்றிருக் கிறது. இந்தப் பெயர் மாற் றத்தில் ஒரு நெடிய வர லாறே அடங்கிக் கிடக்கிறது- சேவையின் உருவமெனத் திகழ்ந்த ஓர் அபூர்வ மனிதரின் புனித வாழ்க்கையே உறைந்திருக்கிறது.

மேல் நாட்டு விஞ்ஞானிகளுக்கு இணையான அந்த இந்திய விஞ்ஞானியின் வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்குள் நாம் அணுவைப் பற்றிக் கொஞ்சம் அறிந்து கொள்ள வேண்டும்:

இந்த உலகத்தில் நூற்றி நான்கு மூலப் பொருட்கள் உள்ளன. அந்த மூலப் பொருள் ஒவ்வொன்றிலும் அம் மூலப் பொருளின் தன்மைகள் முழுவதை யும், மிகச்சிறிய துணுக்குகள் உள்ளடக்கிக்கொண்டிருக்கின்றன. அந்தத் துணுக்குகளைத்தான் அணு என்கிருேம். அணு (Atom) என்னும் சொல்லுக்கே பிளக்க முடியாதது என்றுதான் பொருள்.

மந்திரவாதிகள் வேதாளங்களை யும்பேய் பிசாசுகளையும்அனுப்பிப் பிறருக்குத்தீமை செய்து வந்ததாக நமது நாட்டுப் பழங்கதைகளில் சொல்லப்பட்டிருக்கின்றன அல் லவா? அதைப்போலவே, விஞ் ஞானிகள் பலர், அணுவின் ஆற்றலைத் தீய பாதையில் பயன்படுத்தி வந்தார்கள். இரண் டாம் உலகப் போர் நடை பெற்ற காலத்தில் அணுகுண்டை உருவாக்கி, எதிரி நாடுகளின் மீது அவற்றை வீசி, நாட்டைச் சேதப்படுத்தி, நாட்டு மக்களின் உயிர்களையும் பறித்து வந்தார் கள். ஒருவனை மற்ருெருவன் கொன்றுவிட்டான் என்ருல், கொன்றவன் மீது கொலைக் குற்றம் சாட்டி, அவனைச் சிறை யில் தள்ளி, தூக்குத் தண்டனை தந்து வருகிறது அவனது நாட்டு அரசு. ஆனுல், அந்த நாட்களின்

# அரசு—மிகவுயர்ந்த தரமான
## போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலி மைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டி டங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடு களைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ்**
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** —வலிவும் வனப்பும் வாய்ந்தது

AC-16



தமிழரசு
16·10·1973 மலர் 4
இதழ் 8


# தமிழகம் ஓர் அமுதசுரபி



அள்ள அள்ளக் குறையாது அன்னம் வழங்குவது அமுதசுரபி! அதை நாம் பார்த்ததில்லை! ஆனால் அதைப் பற்றித் தமிழ் மொழியின் ஐம் பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை மிகவும் விரிவாகக் கூறுகிறது.

மணிமேகலையில் கூறப்படும் அமுதசுரபி யாகத் தமிழகம் இன்று விளங்குகிறது!

ஆம்! பல மாநிலங்களின் பசியைத் தீர்த் திடும் அமுதசுரபியாகத் தமிழகம் திகழ் கிறது!

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே!'' என்ற மணிமேகலையின் கூற்றுப்படி, இன்று தமிழ் நாடு அரசு பல மாநில மக்க ளுக்கு உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் உயர் தொண்டு செய்து வருகிறது!

கைம்மாறு கருதாது உழைத்து, உணவை உற்பத்தி செய்து கொடுக்கும் உழவர் பெரு மக்களைப் 'பசிப் பிணி மருத்துவர்கள்' என்று பாராட்டுகிறது மணிமேகலை! அதன்படி, தமிழக உழவர் பெரு மக்கள் இன்று பல மா நிலங்களின் பசிப் பிணி தீர்க்கும் மருத்துவர் களாக விளங்குகிறார்கள்!

''அரசன் எவ்வழி? குடிகள் அவ்வழி!'' என்னும் பழமொழி உண்மை என்பதைத்தமிழ் நாடு அரசும், தமிழக உழவர் பெரு மக்களும் மெய்ப்பித்து உள்ளனர்!

உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் தூய தொண்டு செய்து வருகிறது தமிழ் நாடு அரசு என்பதை இந்த ஆண்டில் இதுவரை பிற மாநிலங்களுக்குத் தமிழகம் கீழ்க்கண்டவாறு வழங்கியுள்ள அரிசியின் அளவிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

| எண் | தமிழகத்திலிருந்து அரிசி பெற்ற மாநிலத்தின் பெயர் | தமிழகம் தந்துள்ள அரிசியின் அளவு (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | கேரளா | ★ 1,21,000 |
| 2. | குசராத் | 6,000 |
| 3. | மராட்டியம் | 11,500 |
| 4. | மைசூர் | ★★ 2,000 |
| 5. | மேற்கு வங்காளம் | ★★★ 3,000 |
| | | 1,43,500 |

★3,000 டன் அரிசியைக் கேரளா அரசு இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை.

★★மைசூர் மாநிலத்திற்கு மேலும் 5,000 டன் குறுவை நெல் (இதிலிருந்து 3,250 டன் அரிசி கிடைக்கும்) அனுப்பத் தமிழ் நாடு முதல் வர் டாக்டர் கலைஞர் அண்மையில் ஆணை பிறப்பித்தார்.

★★★மேற்கு வங்காளத்திற்கு 3,000 டன் கொடுத்ததை அவர்கள் இன்னும் எடுத்துப் போகவில்லை. அதை அவர்கள் துர்க்கா பூசைக்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

அரிசியை மட்டும்தான் தமிழகம் அனுப்பி வைக்கிறதா?

கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற தானி யங்களையும் தமிழகம் பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

தமிழ்நாடு அரசின் உயிர் கொடுக்கும் தூய தொண்டிற்குத் தமிழக உழவர் பெரு மக்கள் உறுதுணையாக உள்ளார்கள் என்பதைக் கடந்த ஆறு ஆண்டுக் காலத்தில்—வறட்சியும் புயலும் அடுத்தடுத்து வாட்டிய போதிலும்—கீழ்க்கண்டவாறு உணவு உற்பத்தியைப் பெருக்கியுள்ளதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

| ஆண்டு | உற்பத்தி செய்யப்பட்ட அளவு (மெட்ரிக் டன்) அரிசி | மொத்த உணவு தானியம் |
|---|---|---|
| 1966—67 ... | 37.91 | 54.58 |
| 1967—68 ... | 38.46 | 54.59 |
| 1968—69 ... | 35.50 | 50.62 |
| 1969—70 ... | 45.32 | 62.53 |
| 1970—71 ... | 53.03 | 70.34 |
| 1971—72 ... | 54.00 | 70.45 |
| 1972—73 ... | 55.00 | 72.02 |
| 1973—74 ... (இலக்கு) | 59.00 | 79.00 |

ஆகவே, ''அரசன் எவ்வழி? குடிகள் அவ்வழி!'' என்னும் பழமொழிக்கு இணங்க. உண்டி கொடுத்து உயிர் கொடுக்கும் உயரிய பணியில் தமிழ் நாடு அரசும், உணவு உற்பத் தியைப் பெருக்கிப் பசிப் பிணி தீர்க்கும் பணி யில் தமிழ் நாட்டு உழவர் பெரு மக்களும் உளமார ஈடுபட்டுள்ளது உள்ளங்கை நெல்லிக் கனி என விளங்குகிறது! இதை யாரும் மறுக் கவோ, மறைக்கவோ முடியாது!

'தமிழ் நாட்டில் பஞ்சம் இல்லை! நமக்கென்ன கவலை?' என்று தமிழ் நாடு அரசு வாளா யிருந்துவிட வில்லை! பிற மாநிலங்களின் வேண்டுகோளை ஏற்று, உணவு தானியங்களை —குறிப்பாக அரிசியை—இலாபமும் நட்டமும் இல்லாமல் உடன் வழங்கி வருகிறது தமிழ் நாடு அரசு! தமிழ் நாடு அரசின் இத்தூய தொண்டு, இந்திய ஒருமைப்பாட்டிற்கு வழி காட்டுவதாக அமைந்துள்ளது! —ஆர்.எம்.



உரை நிகழ்த்தினார். அவரது தலைமை உரையில், பல குறிப்பிடத்தக்க பகுதிகள் இருந்தன.

தமது விஞ்ஞானக் கழகத்தில் அரங்கம் ஒன்றினை உருவாக்க நினைத்தார் பாபா. விஞ்ஞான விரிவுரைகள் நடத்துவதோடு நிறுத்திக் கொள்ளாமல் அந்த அரங்கத்தைக் கலை அரங்கமாகவும் பயன்படுத்த வேண்டும் என்று விரும்பினார். அவ்வாறே உருவாக்கினார். ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அங்கு அமரலாம். பேசுகின்றவர்கள் சொற்பொழிவை ஒரே நேரத்தில் நான்கு மொழிகளில் மொழி பெயர்க்கும் அமைப்பும் அங்கே உண்டு. ஐக்கிய நாடுகள் சபையில் உள்ளதுபோல் உருவாக்கப்பட்ட அமைப்பு அது !

பாபாவின் பெரு முயற்சி, அணுசக்திக்குழு இந்தியாவில் அமைவதற்கு வழி வகுத்தது. அந்தக் குழுவின் முயற்சி வெற்றி பெற, முழு உதவி, மறைந்த இந்தியப் பிரதமர் நேருவினால் கிடைத்தது. பாபாவின் ஆராய்ச்சி நிலையத்தில் 8500 பேர்களுக்கு மேல் பணியாற்றுகின்றனர். அவர்களில் 2000 பேர்கள் விஞ்ஞானிகள். அவர்கள் உறுதி படைத்த இளைஞர்கள். அந்த இளம் விஞ்ஞானிகளுக்குத் தந்தைபோல் விளங்கினார் பாபா.

அவர்களது நலனில் மிகுந்த அக்கறை காட்டினார். பம்பாய் நகரில் வாடகை வீடு கிடைப்பது என்பது உலக அதிசயங்களில் ஒன்று! ஆனால், பாபாவிடம் பணி புரிந்தவர்களுக்கு அந்தத் தொல்லை என்றால் என்னவென்று தெரியாது. வசதியான வீடுகளை, தமது ஊழியர்களுக்கு ஏற்பாடு செய்துதந்தார். தொல்லைகள் இல்லாமலிருந்தால்தான் விஞ்ஞானிகள் தமது ஆராய்ச்சிப் பணியை இடையூறின்றிச் செய்வார்கள் என்ற சிறிய விஷயம், பாபாவுக்குத் தெரியாதா என்ன? தம்மால் இயன்ற பொழுதெல்லாம், அந்த விஞ்ஞானிகளின் வீட்டுக்குப் போய் நலம் விசாரிப்பார்! அவர்களது வாழ்க்கையில் தாமும் ஒருவராக மாறி விடுவார். அவர்களது வீடுகளில் பயன்படுத்தப்படும் பொருள்கள்—நாற்காலி, மேசை, மேசைவிரிப்புப் போன்றவை எப்படிஅமைந்திருக்க வேண்டும் என்பதற்குக்கூட, பாபா கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

தமது ஆராய்ச்சி நிலையம் அணு ஆற்றல் பற்றியே ஆய்ந்து பார்த்துக் கொண்டிருக்காமல், நாட்டின் முக்கியப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குத் துணை புரிய வேண்டும் என்று நினைத்தார் பாபா. அரசினரின் குறிக்கோளை நிறைவேற்ற அநேக வழிகளில் துணை புரிந்தார். டிராம்பேயில் உள்ள உற்பத்தி பெருக, விவசாய ஆராய்ச்சியை ஏற்படுத்தினார். அங்கே உருவான விதைநெல், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது. சாதாரண விதைகளைப் போலல்லாமல், டிராம்பேயிங் விதைகள், மூன்று வாரங்களுக்கு முன்னதாகவே கதிர் முற்றுகிறது. இருபது சதவிகிதம் கூடுதல் பயனும் தருகிறது.

பாபா, எப்போதும் உழைப்பையே குறிக்கோளாகக் கொண்டவர். ஒரு முறை அப்சரா என்ற முதல் அணுசக்தி 'ரியாக்டர் கருவியை' வேலை செய்வதற்குத் தயாராக்க முனைந்தார். அதனைக் குறித்த நேரத்தில் இயங்க வைக்க உறுதியுடன் இருந்தார். ஆனால், குறித்த தினத்திற்கு, மூன்று நாட்களுக்கு முன்னதாக மழை கொட்டத் தொடங்கி விட்டது. மழையின் விளைவால், அப்சராவின் பணி தாமதம் ஆகலாம் போல் தோன்றியது. குறித்த நேரத்தைக் கோட்டைவிடக் கூடாது என்பதில் அக்கறை கொண்ட பாபா தமது சக விஞ்ஞானிகளுடன் எழுந்தார்; நினைத்தபடியே வேலை செய்தார்; உணவை மறந்தார்; உறக்கத்தைத் துறந்தார்; இவ்வளவு நோன்புகளுக்குப் பின்னும் அப்சரா இயங்காமலிருக்குமா? குறித்த நேரத்தில் 'கேரோ' பண்ணுமா? பாபாவுக்கு அஞ்சி நடுங்கி, இயங்க ஆரம்பித்து விட்டது! அதன் பின்புதான் பாபாவின் இதயத்தில் மகிழ்ச்சி அலைமோதத் தொடங்கியது!

மற்றொரு சுவையான நிகழ்ச்சி! அணு ஆராய்ச்சி நிலையத்தின் சில பகுதிகளை ஐதராபாத்துக்கு மாற்றத் தீர்மானித்தார் பாபா. அதற்குத் தகுந்த இடத்தைப் பார்வையிடச் சென்றிருந்தார். மிகப்பெரும் நிலப்பரப்பு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது; அதனைப் பாபாவுக்குக் காட்டுவதற்கு, ஆந்திர அமைச்சர்கள் அவருடன் சென்றனர். பல ஏக்கர் பரப்பு உள்ள அந்தப் பகுதியில், ஓய்வு கொள்வதற்காகச் சிறு துணிப்பந்தல்கள் ஒரு சில இடத்தில் போடப்பட்டிருந்தன. குளிர்ந்த தண்ணீரும் மற்றும் சில குளிர் பானங்களும் அங்கே வைக்கப்பட்டிருந்தன.

இரண்டாவது பந்தலுக்குச் சென்றவுடன் அமைச்சர்கள், காலைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டார்கள். குளிர் பானத்தை அருந்தத் தலைப்பட்டார்கள். ஆனால், அரைக்கால் சட்டையுடன் காணப்பட்ட பாபா அயரவில்லை. மூன்று மணி நேரமும் கொளுத்து'ம் வெய்யிலில் அந்த நிலப்பரப்பு முழுவதையும் சுற்றிப் பார்த்து விட்டுத் தெம்போடு வந்தார். மேசை மீது வைக்கப்பட்டிருந்த குளிர்நீரையும்அதுவைக்கப்பட்டிருந்த குவளைகளையும் அகற்றினார். தமது கையில் சுருண்டு கிடந்த வரை படத்தைப் பிரித்து வைத்தார். எந்தெந்த இடத்தில் எந்தெந்தக் கட்டடத்தை எழுப்ப வேண்டும் என்று பொறியியல் வல்லுநர்க்கு விளக்கத் தொடங்கி விட்டார். சுறுசுறுப்பிலும் அவருக்கு இணை அவர்தான் என்பதை இந்த நிகழ்ச்சி மெய்ப்பித்தது.



பாபா மிகச் சிறந்த ஓவியர். அணு ஆராய்ச்சிக் கழகக் கட்டடத்திலுள்ள வண்ண' ஓவியங்களெல்லாம், பாபாவினால் வரையப்பட்டவைதான். பாபா, கர்னாடக இசைப் பிரியருங் கூட! பம்பாயில் நடைபெற்ற கர்னாடக இசைக் கச்சேரிகளுக்கு மிகுந்த ஆர்வத்துடன் செல்வார். முன்வரிசையில் அமர்ந்து தலையை ஆட்டி ரசிப்பார். ஒரு முறை மாதுங்காவில் நடைபெற்ற கர்னாடக இசைக் கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருந்தார். விமானத்துக்குச் செல்ல வேண்டியதை மறந்து இசையிலேயே இதயத்தை இணைத்து விட்டார். ''கர்னாடக இசை எனக்குத் தெம்பூட்டுகிறது'' என்று மனப்பூர்வமாகச் சொன்னவரல்லவா பாபா! அதனால்தான் பயணத்தையும் மறந்து, பாட்டை ரசித்துக் கொண்டிருந்தார் போலும்! அவர் எல்லாத் துறைகளிலும் ஆற்றல் பெற்றிருந்தார் என்றுதான் சொல்ல வேண்டும். ''அரசியல் துறை தவிர மற்றெல்லாத் துறையிலும் தம் அறிவால் இந்தியாவை வளப்படுத்திய பெருமகன்'' என்று பாபாவைப் புகழ்ந்தார் டாடா!

இன்று, அணுசக்தித் துறையில் இந்தியா அடைந்திருக்கும் முன்னேற்றம் பாபாவின் சிறந்த தொண்டினால் கிடைத்த அணிகலன்! அவரது தூய தொண்டினை எவரும் மறக்க முடியாது. கல்வி, ஆற்றல், செயல்திறன் ஆகியவற்றில் பெருங்குன்று போல் காட்சியளித்த பாபாவின் வாழ்வும் ஒரு குன்றின் மீதே முடிந்தது. 1966-ஆம் ஆண்டு சனவரி மாதம் 24-ஆம் நாள் வெளிநாட்டுக்குப் பயணம் செய்து கொண்டிருந்த போது, அவர் சென்றவிமானம் வெள்ளிப்பனி உறைந்திருந்த ஆல்ப்ஸ் மலையில் மோதியது. பாபா மீளவே இல்லை. மலையுடன் ஐக்கியமாகிவிட்டார். அணு ஆற்றல் விஞ்ஞானி பாபாவை அந்த மலை அரவணைத்துக் கொண்டது. இயற்கை அழகை இதயத்தால் விரும்பிய பாபா, இயற்கையோடு, இயைந்து



விட்டார்.

இந்தியா தனது செல்வ மகனை இழந்து திண்டாடித் தவித்தது. அணுசக்தி, தன்னை ஆக்க வேலைக்குப் பயன்படுத்தும் அறிவுக் கருத்தைச் சொல்லிய தலைவன் மாண்டதை எண்ணிப் புலம்பித் திரிந்தது. அவரால் உருவாக்கப்பட்ட டிராம்பே ஆராய்ச்சி நிலையம் அவரது பெயரை நினைவில் நிறுத்துகிறது. அவரது சேவைக்குப் பாராட்டு தரும் வகையில், டிராம்பே ஆராய்ச்சி நிலையத்தைப் பாபா ஆராய்ச்சி நிலையமாக மாற்றிப் புனிதத் திருமகனின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தியது இந்திய அரசு!

— என். எஸ். சுந்தரம்

முதுமைக்குக் காரணம் 'தைமஸ்' என்னும் நாளமில்லாச் சுரப்பி உற்பத்தி செய்யும் ஒரு வகை ஆர்மோன்களே என்று டெக்சாஸ்பல்கலைக் கழக விஞ்ஞானிகள் கூறியுள்ளார்கள். 'தைமஸ்' என்னும் நாளமில்லாச் சுரப்பி கழுத்தின் அடிப் பகுதியில் உள்ளது. அது 'தைமோசின்' என்னும் ஆர்மோன்களை உற்பத்தி செய்து இரத்தத்துடன் கலக்கிறது.

இரத்தத்தில் உள்ள 'தைமோசின்' என்னும் ஆர்மோன், வயது ஏற ஏற வெகுவாகக் குறைந்து விடுவதே முதுமைக்கு முக்கிய காரணம் என்று அவ் விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். 'தைமோசின்' ஆர்மோன்களின் அளவு குறைந்து விடுமானால், உடலில் இயற்கையிலேயே உள்ள நோயை எதிர்க்கும் தன்மை குறைந்து, முதுமை ஏற்படும் என்று டாக்டர் கோலஸ்டின் அவர்கள் கூறுகின்றார்.

மேலும் அவர், "25 முதல் 45 வயதிற்கு இடையில் 'தைமோசின்' அளவு குறிப்பிடத் தகுந்த அளவுக்குக் குறைந்து விடும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார். வயது ஆக ஆக "தைமஸ்" சுரப்பியினால் "தைமோசின்" ஆர்மோன்களை உற்பத்தி செய்ய முடியாததனாலேயே நோயைத் தாங்கிக் கொள்ளும் சக்தி குறைகிறது என்ற கோட்பாட்டினை இந்தக் கண்டுபிடிப்பு உறுதி செய்கிறது.

"இரத்தத்தில் உள்ள 'தைமோசின்' அளவை அதிகரிக்கச் செய்து, நோயை எதிர்க்கும் சக்தியை நோயாளிகளுக்கு அதிகப்படுத்துவதற்குரிய ஒரு வழியைக் கண்டுபிடிக்க முடியும் என்று நம்புகிறோம். சுண்டெலிகளுக்கு 'தைமோசின்' ஆர்மோன்களை ஊசி மூலம் செலுத்துவதால் சுண்டெலிகளுக்கு நோயைத் தாங்கும் சக்தி அதிகமாகிறது என்பதைக் கண்டுள்ளோம். அது போலவே மனிதனுக்கும் செய்ய முடியும் என்று நம்புகின்றோம்" இவ்வாறு டாக்டர் கோல்ஸ்டின் கூறியுள்ளார்.

இவரது முயற்சி வெற்றி பெற்றுவிட்டால் முதுமையை வெற்றி கொள்வது எளிதாகிவிடும்.



## பருத்தித் துணியும் நைலான் துணியும்

செயற்கை இழையில் தயாரான துணிகள், இப்போது மக்களிடையே அதிகமாகப் புழங்குகின்றன. ஆனால் தீப்பிடித்துக்கொண்டால், இவ்விதத் துணிகள், மனிதனின் உயிருக்கு அதிக ஆபத்தை விளைவிக்கின்றன என்று ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு நிபுணர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

முற்றிலும் செயற்கை இழையில் தயாரான துணிகள் வெப்பத்தினின்றும் மனிதனுக்கு எவ்விதப் பாதுகாப்பும் அளிப்பதில்லை; தீக்காயங்களுக்கு, மேலும் தீங்கு விளைவிக்கின்றன என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது.

சோதனைக்குள்ளான இளைஞர்கள் முற்றிலும் செயற்கை இழையில் (நைலான்) நெய்யப்பட்ட ஆடைகள் அணிந்து இருந்தனர். சூடான தாமிரக் கம்பியை அருகே காட்டிய போது, 6 விநாடிகளில் அந்த இடத்தில் தோல் கருகி விட்டது. 14 நாட்களுக்குப் பின்னரும், புண் நீடித்து இருந்தது. ஆனால் இதேபோல, பருத்தித் துணி அணிந்தவர்களைச் சோதனைக்கு உட்படுத்திப் பார்க்கையில், துணி கருகிப் புண் ஏற்பட்டபோது, தீப்புண் சிறியதாக இருந்தது; 14 நாட்களுக்குள் புண் ஆறி விட்டது. நைலான் துணி கருகி ஏற்படும் தீப்புண் ஆறுவதற்கு அதிக நாட்கள் பிடித்தது.

பருத்தித் துணி, நல்ல பாதுகாப்புத் தருகிறது; செயற்கை இழையும், பருத்தி நூலும் கலந்த துணிகள் முற்றிலும் செயற்கை இழையில் தயாரான துணியைவிடப் பாதுகாப்பானவை.

ஒரு தீங்கும் செய்யாத மக்களின் மீது, அணுகுண்டுகளை வீசி எறிந்து, இலட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தனவே வல்லரசுகள், அப்போது, அந்தக் கொலைகாரர்களை எந்தக் காவலரும் கைது செய்யவில்லை — எந்த நீதிபதியும் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கவில்லை

மிகப் பெரும் நாட்டையே சில விநாடிகளில் சிதறடித்தார்கள் அணுசக்தியைப் பயன்படுத்தி! உலகமே, அதன் பின்பு அணு சக்தி என்று கேள்விப்பட்டாலே அஞ்சி நடுங்கத் தலைப்பட்டது.

ஆபத்தான அந்த அணு சக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்துகிற அறிவு, விஞ்ஞானிகளிடம் தற்போது காணப்படுகிறது. கொடிய சிங்கத்தைக் கூண்டிலே அடைத்துப் பின்னர் அதை அரங்கத்துக்கு வரவழைத்து, ஒரு சிறிய பலகையிலே அமர வைத்து, அதன் அருகிலே வெள்ளாடு ஒன்றையும் பசு மாடு ஒன்றையும் நிற்க வைத்து, அந்தப் பிராணிகளைப் பார்த்த பின்னும் அந்தச் சிங்கத்திற்கு, மாமிச ஆசை தோன்றாத வண்ணம் அதனை அமைதியாக இருக்கவைக்கும் அதிசயச் செயலை, சர்க்கஸ்காரர்கள் நிகழ்த்துகிறார்கள் அல்லவா? அதைப்போலத்தான் விஞ்ஞானிகளும், இன்று, அணு சக்தியின் கொடுமையை அடக்கி, அகிலத்தின் நல்வாழ்வுக்கு அதனைப்பயன்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு அணுவை ஆக்க சக்திக்குப் பயன்படுத்த முடியும் என்று முதன்முதலில் வாதிட்ட விஞ்ஞானி வேற்று நாட்டவரல்ல—நமது இந்திய நாட்டவர் தான்—டாக்டர் ஹோமிபாபா அவர்கள்தான்!

உலக மக்கள், அணுவின் ஆற்றல்பற்றி உணர்வதற்கு முன்னே ஹீரோசிமா நகரில் அணுகுண்டு வீழ்ந்து, மக்களைச் சாவூருக்கு அனுப்பியதற்கு முன்னரே, அணுவைப் பற்றிச் சிந்தித்தவர் பாபாதான்!

''அடுத்த தலைமுறைக்கு இந்தியாவிற்குத் தேவையான மின் சக்தியை அணுசக்தியால் கொடுக்கும்படிச் செய்தால், இந்தியாவிற்கு எந்த நாட்டின் உதவியும் தேவைப்படாது. எனவே, அயல்நாட்டு நிலையங்களுக்கு இணையாகப் பௌதிக ஆராய்ச்சி நிலையத்தை இந்தியா உருவாக்க வேண்டும்''—அணு சக்தி பற்றி மேல்நாட்டில் இரகசிய ஆராய்ச்சி நடைபெற்ற காலத்தில் பாபா தெரிவித்த கருத்து இது; நல்ல வழியைப் போதிப்பதல்லவா நமது நாட்டு மண்! எனவே, இந்த மண்ணிலே தோன்றிய பாபாவிடம் நல்லுணர்வு நிறைந்திருந்ததும்—பிறரை நல்வழிப் படுத்தும் எண்ணம் தவழ்ந்திருந்ததும் வியப்புக்குரிய செய்திகளல்ல.

1909-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ஆம் நாள் ஹோமிபாபா, வளம் மிகுந்த குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தையும், தாத்தாவும் ஆர்வம் கொண்டு சேர்த்து வைத்த புத்தகங்கள்—வண்ண ஓவியங்கள்—இசைத்தட்டுகள் ஏராளம்! அவைதான், பாபாவின் கலை உணர்வை—அறிவுத் தெளிவை வளர்த்து வந்தன.

பாபாவின் அத்தை (தந்தையின் சகோதரி) புகழ்பெற்ற வணிகத் துறையினரான டாடாவின் குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டார். அதன் காரணமாக நல்ல தொழிற் குடும்பத்தின் தொடர்பு பாபாவுக்குக் கிடைத்தது. வயது முதிர்ந்தவர்கள், இரும்பு உருக்காலை, மின்சார நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பது பற்றி உரையாடும் போதெல்லாம், சின்னஞ்சிறு பாபாவும் உடனிருக்கும் வாய்ப்புப் பெற்றார். நாட்டின் தொழில் வளத்தில் பெரியவர்களுக்கு ஏற்பட்ட பேரார்வம், சிறுவன் பாபாவின் இதயத்திலும் வேரூன்றி விட்டது.

அணு ஆராய்ச்சித் துறை மிகப் பெரும் முன்னேற்றங்களைக் கண்டிருந்த சமயம்! விஞ்ஞான மேதைகளான பிளாக்கெட், சாத்விக், டிராக், ருதர்போர்ட், ஹைட்லர் ஆகியோரிடம் பழகுகின்ற வாய்ப்பு அவருக்கு ஏற்பட்டது. இந்த விஞ்ஞானிகளில் பலர், நோபெல் பரிசு பெற்றவர்கள் என்பது குறிப்பிடத் தகுந்தது. பாபா மிகப் புகழ்பெற்ற பல கட்டுரைகளை எழுதி, விஞ்ஞான உலகத்துக்குக் காணிக்கையாக்கினார்.

உலகப்போர் தொடங்குமுன் தாயகம் திரும்பினார் பாபா. பெங்களூரில் இருந்த டாடா கழகத்தில் பௌதிக ஆசிரியராக அமர்ந்தார். தனது முப்பத்து ஒன்றாவது வயதில் அரசர்கழகத்தில் உறுப்பினர் பட்டம் பெற்றார். அதற்கு மறுவருடம் 'ஆடம்ஸ்'' பரிசும் அவருக்குக் கிடைத்தது. அதன் பிறகு ஏராளமான பட்டங்கள், அவரைத் தேடி வந்தன. என்றாலும் முதன் முதலாகக் கிடைத்த அந்த இரண்டு பட்டங்கள் தாம் அவரது இதயத்தில் நீங்காத நினைவு பெற்றிருந்தன. பெங்களூர் வாழ்வு, பாபாவின் இதயத்தைக கவர்ந்தது; இந்திய மண்ணில் ஈடில்லாத பற்றுதலை அவருக்குக் கொடுத்தது; நமது பண்பாட்டைப் பாராட்ட வைத்தது; நமது முதிப்பைப் போற்றச் செய்தது; நமது நாட்டின் நல்வாழ்விற்கு அவரைப் பாடுபட வைத்தது!



கேம்பிரிட்ஜில், பொறியியல் பட்டத்துக்குப் படிக்கும்படி கட்டளையிட்டார் அவரது தந்தை. அந்தக் கட்டளையை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டார். '' இந்தத் துறையில் முதல் வகுப்பில் வெற்றிபெற்றால் உன் விருப்பப்படி, வேறு துறைக்கு நீ செல்லலாம் '' என்று அவரது தந்தை உறுதி கூறினார். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்பதை அறிந்தவர் பாபா. அதனால், தந்தையின் விருப்பத்தைச் செயலிலே நிறைவேற்றினார். முதல் வகுப்பில் தேர்வு பெற்றார்! தமது விருப்பப்படி பௌதிகத் துறையில் இறங்கினார்.

தொழில் வளத்தால்தான் இந்தியா பொருளாதார முன்னேற்றம் காணமுடியும் என்று அவர் நம்பினார். அதுவும், விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களாக இருக்க வேண்டும் என்று கூறினார். தமது நாட்டை மேன்மையடையச் செய்ய நினைத்தார்; தமது உறவினரும் தொழில் வணிகருமான டாடாவுக்கு ஒரு முறை கடிதம் எழுதினார். அதிலே அவர் குறிப்பிட்டுள்ளார்.

''இன்று இந்தியாவில் விஞ்ஞானத்தை வளர்ப்பதற் குரிய தரமான ஆராய்ச்சி நிலையங்கள் கிடையாது. உண்மையைச் சொன்னால், விஞ்ஞானிகளுக்கு ஆதரவு இல்லை—அப்படியேஆதரவு இருந்தாலும் அவர்களது ஊழியத்திற்கு ஏற்ற ஊதியம் தரப்படுவதில்லை! எனவே் அறிவு மிகுந்த இந்தியன், விஞ்ஞானத் துறையை உதறி எறிந்துவிட்டு,—பலன் தருகின்ற நிருவாகத் துறையை நாடுகிறான்—அல்லது, விஞ்ஞானம் அல்லாத வேறு துறைகளுக்கு விருப்பத்துடன் சென்றுவிடுகிறான்.

'' போர் முடிந்தவுடன் கேம்பிரிட்ஜுக்கோ, பிரின்ஸ்டனுக்கோ சென்றுவிட வேண்டும் என்று நான் எண்ணியதுண்டு. அங்கேதான் எனக்குத் தேவைப்படும் சூழ்நிலை காணப்படுகிறது. என்றாலும் சென்ற இரு வருடங்களாக வேறொரு எண்ணம் என் இதயத்தில் எழுந்து வருகிறது. உழைப்புக்கு மதிப்பும் பண உதவியும் எனக்கு ஏற்பட்டால், மேல் நாட்டில் உள்ள நிறுவனங்களுக்கு இணையாக ஆராய்ச்சிக் கழகங்களை இங்கே தோற்றுவிக்க முடியும். இதுவே இந்திய விஞ்ஞானி ஒருவன் தனது நாட்டுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமையாகும் என்ற எண்ணமே எனக்குத் தோன்றுகிறது.''

பாபாவின் கடிதம் டாடாவை உருக்கி விட்டது. அதன் விளைவு, டாடாவின் ஆதரவு பாபாவுக்குக் கிடைத்தது. இருவரின் கூட்டுறவால், அணு யுகத்தில் நடைபோடும் வாய்ப்பு இந்தியாவுக்குக் கிடைக்கத் தலைப்பட்டது. டாடா தர்ம நிறுவனத்தின் உதவியுடன் 1945-ஆம் வருடம் கெனில்வொர்த் கட்டடத்தில் டாடா ஆராய்ச்சிக் கழகம் பிறந்தது. அதன் பரப்பளவு 600 சதுர அடிகள்தான். ஆனால், அதன் பெருமையை அடிக்கணக்கில் சொல்லிவிட முடியாது—மீட்டர் கணக்கிலும் குறிப்பிட முடியாது—அளவு கூற முடியாத பெருமை உடையது. இதிலே இன்னொரு சிறப்பும் உண்டு; ஆராய்ச்சிக் கழகம் பிறந்த இடத்தில் தான் அணுயுக விஞ்ஞானி பாபாவும் பிறந்தார்

அந்த ஆராய்ச்சிக் கழகத்தை 'அணுசக்தி வளர்த்த தொட்டில் என்றே கூறிப் பெருமைப்பட்டு வந்தார் பாபா. இன்று, அந்த நிலையம் 3,20,000 சதுர அடி பரப்பளவு உள்ள இடத்தில் மாபெரும் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கட்டடத்தின் அழகு, காண்பவர் மனத்தைக் கவர்கிறது. இங்கு இடம்



பெற்றுள்ள வண்ண ஓவியங்கள் மலைப்பை ஏற்படுத்துகின்றன. இங்கே அமைந்துள்ள பூங்கா, பார்ப்போரைப் பரவசப் படுத்துகிறது. ஆஸ்திரேலியாவிலிருந்தும் ஆப்பிரிக்காவிலிருந்தும் கூடச் சில செடிகள் தருவிக்கப்பட்டுப் பயிராக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்த இடத்தில் எந்தெந்த வகையான செடிகள் இடம் பெற வேண்டும் எந்தெந்த மலர்கள் எங்கெங்கே இருந்து எழில் பரப்ப வேண்டும் …ன்பதெல்லாம் பாபாவின் …ண்ணப்படிதான் நடந்தது.

…கட்டடத்தை, காண்ட்ராக்டரின் முழுப்பொறுப்…லும் விட்டு விடவில்லை அவர். சூழ்நிலையைக் கெடுக்காமலும், அழகு நடம்புரியும் விதத்திலும் அமைய வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை செலுத்தி…ந்தார். சொல்லப் போனால், …ட்டடக் கலையைக் கூட அவர் …றிந்திருந்தார்.

…கட்டடங்கள், கருவிகள் …கியவை மட்டும் ஓர் ஆராய்ச்சி …லையத்திற்குப் போதுமான…ல்ல என்பதை அவர் அறிந்…ருந்தார். ''நூற்றுக்கணக்கான …டங்கள் நிலைத்து நிற்கக்…டிய கட்டடத்தைச் சில நாட்…ில் கட்டிவிட முடியும்! தலை…றைதலைமுறையாகப் பயன்படக்… கருவிகளை நாம் செய்யா…ட்டாலும் வெளிநாடு…ிலிருந்து வரவழைத்து விட …டியும்! ஆனால், நிலையத்தில் …ணிபுரிபவர்கள்தான் மிகச்…றந்தவர்களாக இருக்க வேண்…ம்! விஞ்ஞானத் தொழில் கருவிகள் வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப் பட்டாலும் அவற்றை இயக்குகின்ற விஞ்ஞானிகள் திறமையற்றவர்களாக இருந்தால் என்ன பயன்? ஆகவே, திறமையும் தளராத உள்ளமும் கொண்ட இளம் விஞ்ஞானிகள் தேவை''—இவ்வாறு கருதிய பாபா, திறமை மிக்கவர்களைத் தேர்தெடுக்க முயன்றார். அதற்காகத் தேர்வ ஒன்றும் நடத்தினார். அவரது முயற்சி வீணாகி விடவில்லை. இந்தியாவின் ஆற்றல் மிக்க விஞ்ஞானிகள் பலர் கிடைத்தார்கள். அவர்கள் எல்லாம் பாபாவின் தலைமையில் பணி புரிவதைப் பெரும் பேறாகக் கருதி வந்தார்கள்.

பம்பாய் நகரத்தில் தெரு ஒன்றினை அகலப்படுத்த நினைத்தது நகராட்சி மன்றம். அந்தத் தெருவில் முதுமையான மரம் ஒன்று நின்றது. அகலப்படுத்தும் பணிக்கு அந்த மரம் இடையூறாக இருப்பதைக் கண்ட நகராட்சிமன்றம் அதனை வெட்டி வீழ்த்தத் திட்டமிட்டது. அந்தச் செய்தியை அறிந்தார் பாபா. நகராட்சி மன்றத்தினரை நாடினார். அந்த மரத்தைச் தமது ஆராய்ச்சிநிலையத்திற்குக்கொண்டு போய்வைத்துக் கொள்வதாகச் சொன்னார். நகராட்சி மன்றத்தார் மறு விநாடியே ஒப்புதல் தந்தார்கள். பாபா, அந்த மரத்தை வேரொடுபெயர்த்தெடுத்தார்; தமது அணு ஆராய்ச்சி நிலையப் பூங்காவிற்குக் கொண்டு சென்றார். மரத்தை மீண்டும் நட்டு விட்டார்.

புதிய கட்டடம் உருவாவதற்கு முன்பு, அதே இடத்தில் குடிசைகள் அமைத்துக் கொண்டு பணி புரிந்தார். புல்கானின், குருஷேவ், ஈரான் மன்னர், பண்டித நேரு ஆகிய வெளிநாட்டு, உள்நாட்டு அரசியல் தலைவர்கள், பாபாவின் குடிசைகளைப் பார்த்திருக்கிறார்கள். அந்தச் சமயத்தில் அணு சக்திக் குழுவின் தலைவராகவும் அணுசக்தி இலாகாவின் செயலாளராகவும் பணி புரிந்திருக்கிறார் பாபா.

துவக்கத்தில் டாடா குடும்…தாராலும், பின்பு பம்பாய் …ரசினராலும் ஆதரிக்கப்பட்ட …லயத்திற்கு, இந்திய அரசின் …ரும் உதவியும் கிடைத்தது. …ந்த நமது இந்தியப் பிரதமர் …டித நேரு அவர்களின் ஒத்…ழைப்பு பாபாவுக்கு மிகுந்த …ளவில் கிடைத்தது. அதன் …ின், ஆராய்ச்சித் துறைகள் …ிரிவடையத் தொடங்கின. இன்று மத்திய அரசு, தொண்ணூறு சதவிகிதத்துக்குப் பொருள் உதவி தருகிறது. ஜே. ஆர். டாடா, நிலையக் குழுவின் தலைவரானார்; பாபா, முதல் இயக்குநர் ஆனார்.

ஐ.நா.வின் அணு சக்தி ஆலோசனைக் குழுவில் இடம் பெற்றார் பாபா. முதல் உலக மாநாட்டில் 'ஆக்க வேலைக்கு அணு சக்தி' என்ற தலைப்பில், தலைமை

# மத்திய அரசு கடன் கொள்கையில் மாறுதல் தேவை!

சாமி

மத்திய மாநில நிதி உறவுகளில் சிக்கல்களைத் தீர்த்திட நிதிக் குழுவினுடைய பரிந்துரைகளை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். உண்மையில் இந்த விவகாரத்தைப் பற்றி ஆராயுமாறு நிதிக் குழு கோரப்பட்டிருப்பது இதுவே முதன் முறையாகும்.

பொதுக் கடன் என்பது விரிவானதொரு பொருளாகும். மாநில அரசுகளுக்கு நெருக்கமான தொடர்புள்ள பொதுக் கடனின் அந்தப் பகுதியைப் பற்றி மட்டும் அதாவது மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்குகிற கடன்களைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறேன்.

நிதிக் குழு இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழகத்திற்கு வந்திருந்தபோது மாநிலங்களின் கடன் நிலைமை பற்றி குறிப்பாகத் தமிழ்நாட்டின் கடன் நிலைமை பற்றி அவர்கள்முன் எடுத்துரைத்தோம். மாநிலங்கள் எதிர்நோக்க வேண்டியுள்ள பல நிதிப் பிரச்சினைகளும் மாநிலங்களுக்குக் கடன் வழங்குவதற்கென இப்போது உள்ள மத்திய அமைப்பு முறையே காரணமாக உள்ளது.

நான்காவது ஐந்தாண்டு திட்ட கால முழுவதிலுமாக மாநிலங்களுக்கு 6446 கோடி ரூபாய் அளவுக்கு மத்திய அரசு கடன் வழங்கும்.

இந்தத் தொகை பெரிதாகத் தெரியும். ஆனால் மத்திய அரசுக்கு இதே கால அளவில் மாநில அரசுகள் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை வட்டியும் அசலுமாக 5280 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும்.

ஆக மத்தியிலிருந்து மாநிலங்களுக்கு இந்தக் காலத்தில் கிடைக்கக்கூடிய மொத்தத் தொகை உண்மையில் 1166 கோடி ரூபாய் மட்டுமேயாகும்.

இதில் நியாயமாகக் கிடைக்க வேண்டிய மத்திய நிதியுதவியில் பங்கு வழங்கப்படாமல் மறுக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டைப் போன்ற மாநிலங்களின் நிலைமை இன்னும் மோசமாகும்.

நான்காவது திட்ட காலத்தில் தமிழ்நாடு அசலும் வட்டியுமாக மத்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 3 63 கோடி ரூபாய் அளவாகும்.

## முதல்வர் கலைஞர் உரை

இது மத்திய அரசினிடமிருந்து தமிழ்நாடு எதிர்பார்க்கக்கூடிய கடன் தொகைகளைக் காட்டிலும் ஓரளவு கூடுதலாகும்.

அதாவது மத்திய அரசுக்குத் தமிழ்நாடு திருப்பிச் செலுத்தும் தொகையில் அளவு கூடுதலாக உள்ளது. இம்மாதிரியான முரண்பாடான நிலைமை நீடிக்கின்றவரை வளர்ச்சிப் பணிகளுக்கு மத்திய உதவி என்பது கானல் நீராகவே இருந்து வரும்.

நிதிக் குழு இந்த நிலைமையைச் சரிசெய்யத் தக்க ஏற்பாடுகளை வகுக்குமென்று நான் நம்புகிறேன்.

மத்திய அரசுக்கு நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைகளைத் திருத்தி அமைத்திட வேண்டுமென்றும், கூட்டாட்சிக் கடன் குழு வேண்டுமென்றும், நாம் கேட்பதற்குக் காரணமே—இப்போது கடன் வழங்குவதற்குள்ள அமைப்பு முறையில் நிலவும் குறைபாடேயாகும்.

மாநிலங்கள் செய்கிற முதலீடுகள், பெரும்பாலும் சாலைகள், மின்விசை உற்பத்தி வழங்குதல், குடிநீர் வழங்கு திட்டங்கள், பள்ளிகள் ஆகிய அடிப்படை வசதிகளை உருவாக்கிடவே செலவிடப்படுகின்றன.

இவற்றிலிருந்து நல்ல பலன்கள் கிடைக்கும் என்பது உறுதி என்றாலும், அவை மெல்லவே கிடைக்கும்.

இந்த உண்மை மத்திய அரசினால் உணரப்படவில்லை.

ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்குத் தான் வழங்குகிற கடன் 15 ஆண்டுத் தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசு எதிர்பார்க்கிறது.

இது, நாம் செலுத்துகின்ற மூலதன முதலீடுகள் மெல்லவே பலனளிக்கத் தொடங்குகிறது என்ற உண்மை நிலையை ஒட்டிய ஏற்பாடாக இல்லை.

இத்தகைய சமுதாயப் பணிகளுக்கான கடன்கள் சொற்ப வட்டிக்கு—அதாவது மத்திய அரசு அனைத்து நாட்டு வளர்ச்சி சங்கத்தாரிடமிருந்து எந்த நிபந்தனைகளில் கடன் பெறுகிறதோ, அதேபோன்றதாக இந்தக் கடன்களும் இருக்க வேண்டும்.

50 ஆண்டுக்கால அளவில் திருப்பிச் செலுத்தக் கூடியதாக இக் கடன்கள் இருக்க வேண்டும். இந்தக் கடன்களையொட்டி வசூலிக்கப்படுகின்ற பணிக் கட்டணம் (வட்டி) அரை சதவிகிதம் அல்லது முக்கால் சத விகிதத்திற்கு மேல் போகக் கூடாது.

நம்முடைய இந்தக் கோரிக்கை தர்க்க ரீதியில் நியாயமான ஒன்றாகும்.

மாநிலங்களுடைய வருவாயில் ஏற்படுகிற நட்டத்தை ஈடு செய்வதற்காக மானியங்கள் அமைகின்றன.

ஆகவே, வட்டி விகிதங்கள் அதிகமாக இருந்தால், அதனால் ஏற்படுகிற நட்டத்தைத் தாங்க மத்திய அரசே மற்றொரு மானியம் வழங்க வேண்டி வரும். வழங்கப்படுகிற கடன்களைத் தாராளத் தன்மை கொண்டவையாகத் திருத்தியமைப்பதே உண்மை நிலைகளுக்கேற்றதாக இருக்கும்.

சிறு சேமிப்பின் மூலம் திரட்டப்படுகிற நிதியே அரசாங்கக் கடன்களில் முக்கியமானதாகும்.

ஒரு மாநிலத்தில் பல்வேறு தனி நபர்களிடமிருந்தும், நிறுவனங்களிடமிருந்தும் இந்த சேமிப்புத் தொகை திரட்டப்படுகிறது. இப்படித் திரட்டப்படுகிற நிதியிலிருந்து மூன்றில் இரண்டு பங்கினை மட்டுமே, மாநிலங்களுக்கு அளிப்பதென்ற திட்டம் கவர்ச்சியானதாக இல்லை.



மாநிலங்களுக்கு அளிக்கப்படும் கடன்கள் நிகர வரவின் அடிப்படையில் அமைந்திருக்கும்போது, மாநில அரசுகள் மத்திய அரசுக்குக் கடனைத் திருப்பித் தர வேண்டுமென்பதில் நியாயம் எதுவுமில்லை.

சிறுசேமிப்பின் மூலம் கிடைக்கும் நிகர வரவு, மத்திய அரசுக்கு நிரந்தரக் கடன்களாக அமைகின்றன. நெடுங் காலம் நிலைத்திருக்கக்கூடிய கடன்களாகத் தான் பெற்ற தொகைகளை குறுகிய காலக் கடன்களாக மாநிலங்களுக்கு மீண்டும் தருகின்ற இந்த அமைப்பு, மத்திய அரசின் ''வட்டித் தொழில்'' தன்மையில் அமைந்துள்ள மற்றொரு செயலாகும்.

மத்திய அரசானது மிகக் குறைந்த வட்டிக்கு உலக நாடுகளிடமிருந்தும் உலக நிதி அமைப்புகளிடமிருந்தும் கடன் பெறுகிற வாய்ப்புள்ளதென்பதால், மத்திய அரசு, தான் வழங்குகின்ற கடன்களை தாராளத் தன்மையோடு வழங்க வேண்டும் என்ற நம் கோரிக்கை வலுப்பெறுகிறது.

அது மட்டுமல்லாமல் பற்றாக்குறை நிதி ஏற்பாட்டின் மூலம் (நோட்டடிப்பதன் மூலம்) மத்திய அரசு தன்னுடைய நிதித் தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்து கொள்கிறது.

இவ்வகையில் ஐந்தாவது திட்டக் காலத்தில் மட்டும் மத்திய அரசுக்குக் கிடைக்கக் கூடிய ஆதாயம் ஆயிரங் கோடி ரூபாயாக இருக்கும். இந்தப் பற்றாக்குறை நிதி ஏற்பாட்டின் விளைவுகளை—விலைவாசி உயர்வு முதலானவற்றை மாநிலங்களும் தாங்கிக் கொள்கின்றன.

பற்றாக்குறை நிதி ஏற்பாட்டின் மூலம் கிடைக்கக்கூடிய சாதகங்களை — நன்மைகளை மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கையே.

இத்தகைய ஆதாயங்களைப் பெறுகிற மத்திய அரசு, மாநிலங்களுக்குத் தான் வழங்குகிற கடன்களுக்கு வட்டி இல்லை என்றாவது அல்லது மிகக் குறைந்த வட்டி என்றாவது நிர்ணயிக்கலாம்.

வெளிச் சந்தையிலிருந்து மாநிலங்கள் திரட்டுகின்ற கடன்களைப் பற்றி இப்போது குறிப்பிட விரும்புகின்றேன்.

இதில் அரசியலமைப்புச் சட்ட முக்கியத்துவம் உள்ள செய்திகள் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு மாநிலமும் கடனை எழுப்புவதற்கு முன்னால், மத்திய அரசின் அனுமதியைப் பெற்றாக வேண்டும் என்று இருக்கிறது.

இது, பழைய ஏகாதிபத்திய சகாப்தத்தின் மிச்ச சொச்சமாக விளங்குகிறது.

1935-ஆம் ஆண்டின் இந்திய அரசின் சட்டத்தின் பகுதிகள் கண்மூடித்தனமாகக் 'காப்பி' யடிக்கப்பட்டுள்ளன என்பதைக் காட்டும் மற்றொரு எடுத்துக் காட்டு இதுவாகும்.

மாநில அரசுகளை இது செய்வதறியா நிலையில் வைத்து விடுகிறது. மாநில அரசுகள் வகுக்கின்ற வரவு—செலவுத் திட்டங்கள் நெகிழ்வு அற்றவைகளாக ஆக்கப்படுகின்றன. மத்திய அரசு தருகின்ற மானிய உதவிகளுக்காகக் காத்துக் கிடக்க வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாக்கப்படுகின்றன மாநிலங்கள்.

மாநில அரசுகள் அவை யவற்ற்ன் வருவாய் சக்திக்கு ஏற்ப—அவை வகுக்கின்ற திறன் மிக்க திட்டங்களுக்கேற்ப வங்கிகளிடமிருந்து கடன் களைப் பெறும் சுதந்தரம் படைத்தவையாக இருக்க வேண்டும்.

இதுவே உண்மையான கூட் டாட்சிக் கோட்பாடுகளுக்கு உகந்ததாக இருக்கும் என நான் கருதுகிறேன்.

மாநில அரசுகள் மத்திய அரசுக்குத் தாங்கள் செலுத்த வேண்டிய கடன்களை ஒழுங்காக செலுத்தி வருகிற வகையில் அவை, தாங்கள் எழுப்பப் போகிற கடன்களுக்கு மத்திய அரசின் முன் அனுமதியைப் பெற வேண்டுமெனக் கூறுவது அவசியமற்றதாகும். தேவை யானல், மேல் வரம்பு நிர்ண யிக்கலாம்.

இதற்கொப்ப அவசியமான அரசியல் சட்டத் திருத்தங்கள் விரைவில் கொண்டுவரப்பட வேண்டுமென்று நாங்கள் கருது கிறோம்.

மற்றொரு முக்கியமான செய்தி, வெளிச் சந்தையி லிருந்து திரட்டப்படுகிற கடன் களில் பெரும் பகுதி மத்திய அரசே திரட்டிக் காள்வ தாகும்.

1971—72ல் மத்திய அரசு திரட்டிய கடன் 294 கோடி ரூபாயாகும். ஆனல், அவ் வாண்டு எல்லா மாநிலங் களுமாகச் சேர்ந்து திரட்டிய மொத்தத் தொகை 104 கோடி ரூபாய் மட்டுமேயாகும்.

1972—73ல் மத்திய அரசு 478 கோடி ரூபாய் கடன் திரட்டியிருக்கிறது. இதே ஆண்டில் மாநிலங்கள் 130 கோடி ரூபாய் மட்டுமே கடன் திரட்டியுள்ளன.

இந்தப் போக்கு கலக்கத்தை உண்டுபண்ணுவதாக உள்ளது. மாநில அரசுகளும் அவற்றின் நிறுவனங்களும் திரட்டக்கூடிய நிதி ஆதாரங்கள் அளவில் குறைந்தவையாக இருக்கின் றன. மத்திய அரசு செய்வது போல பற்ருக்குறை நிதி ஏற்பாடு எதுவும் அவர் களுக்குக் கிடையாது.

ஆகவே, வெளி சந்தையில் திரட்டப்படுகிற கடன்களில் கணிசமான அளவு மாநிலங் களைச் சார்ந்ததாக இருக்க வேண்டும்.




அரசாங்கக் கடன்களைப் பற்றிப் பேசுகிற இந்நேரத்தில் மின் உற்பத்தி மற்றும் நீர்ப் பாசனத் திட்டங்களுக்கான நிதி வழங்குவது பற்றி ஏற் கெனவே தமிழ்நாடு அரசு தெரிவித்திருந்த யோசனையை மீண்டும் வலியுறுத்த விரும்பு கிறேன்.

இந்தத் திட்டங்களுக்காக வழங்கப்படும் நிதி ஐந்தாண் டுத் திட்டப் பணிகளுக்காக ஒதுக்கப்படுகிற நிதி அளவுக் குள் அடங்கியதாக இருக்கக் கூடாது. அவற்றுக்கென தனியே நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

இதற்கென அனைத்திந்திய அளவில் வளர்ச்சி வங்கி ஒன்று அமைக்கப்பட வேண்டும். அந்த வங்கியில் மாநில அரசு களுக்கும் பிரதிநிதித்வம் இருக்க வேண்டும்.

ஒரு மின் உற்பத்தித் திட்டமோ அல்லது பாசனத் திட்டமோ திரம் மிக்கது என்று புலனுனவுடன் இந்த வங்கி அந்த திட்டங்களுக்குத் தேவை யான நிதியை வழங்குகிற பொறுப்பை எற்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் குறுகிய காலத்தில் அத்திட்டங் கள் நிறைவேற உதவலாம்.

இதை விடுத்து இம்மாதிரி திட்டங்கள் மாநில நிதி நிலைமைகளுக்கு உட்பட்ட தாகவே இருக்க வேண்டும். என்று சொல்வது குறுகிய கண்ணேட்டமாகும்.

ஆஸ்திரேலியா நாட்டில் உள்ளதுபோல 'கடன் கவுன் சில்' என்ற அமைப்பு இந் நாட்டிலும் ஏற்படுத்தலாம்.

ஆஸ்திரேலிய கடன் கவுன் சில் அந்நாட்டுத் தலைமை அமைச்சரையும் மாநில முதல்வர்களையும் கொண்ட தாக—இருசாராரும் வாக்களிக் கும் உரிமையுடையதாக இருக் கின்றது.

ஒரு மாநிலம் பெறவேண்டிய கடனைப் பற்றி கருத்து வேறு பாடு இக்கழகத்தில் ஏற்படு மானல் ஏற்கெனவே அவர்கள் தங்களுக்குள் வகுத்துள்ள உடன்பாட்டில் கண்டுள்ள முறைகளின்படியும், ஐந் தாண்டுகளில் ஒரு மாநிலம் வாங்கியுள்ள கடன்களின் அடிப்படையிலும் கடன் தொகை இன்னதென்று நிர்ண யிக்கப்படும்.

பி. வி. ராஜமன்னர் தலைமை யில் அமைந்து மத்திய—மாநில உறவுகள் பற்றி ஆராய்ந்த விசாரணைக் குழு. இத்தகைய 'கடன் கவுன்சில்' அமைப்பு இந்தியாவிலும் அமைக்கப்பட வேண்டும் என்று எடுத்துக் கூறியுள்ளது.

இக்கருத்தினை இம்மாநாட் டி நான் பரிந்துரைக் கிறேன்.

பல்வேறு முறைகளில் மக்க ளிடமிருந்தும், நிறுவனங்க ளிடமிருந்தும் நிதி திரட்டு வதற்குப் புதிய உத்திகளை வகுத்தாக வேண்டும்.

இன்றுள்ள நிலையில் வங்கி கள் மத்திய அரசினல் இறுக்க மான கட்டுப்பாட்டிற்கு உட் படுத்தப்பட்டுள்ளன.

வங்கிகள் செயல்படுவது பற்றிய கொள்கைகளை உரு வாக்குவதில் மாநில அரசுகள் முற்றிலும் கலந்தாலோசிக்கப் பட வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம்.

மாநில அரசுகள் புதிய முறை களில் வங்கி நிறுவனங்களை உருவாக்குவதற்கு வாய்ப்புகள் அமைய வேண்டும்.

மக்களின் சேமிப்புகளை திரட் டிப் பயன்படுத்த, மாநில அளவில் காப்புறுதி நிறுவனங் களையும், முதலீட்டுப் பொறுப்பு அமைப்பு அமைப்ப தற்கும் வகை செய்வதும் அவசியம். மாநில அரசுகள் இத்துறையில் முயற்சிகள் எடுக்க வகை செய்தால் மட்டுமே இவை உருவாக முடி யும். இதன் மூலம் அரசாங்கக் கடன்களை நிர்வகிப்பதில் செய லாற்றும் சுதந்தரம் ஏற்படும்.

அரசாங்கக் கடன் சிக்கலான அரசு செயல்முறை பற்றிய ஒன்ருகும். ஆனல் சமுதாய வகையில் அவசியமான, நியாய மான முதலீடுகளைச் செய்வதற் கான ஓர் ஏற்பாடே இது என்பதை நாம் நினைவில் கொள்வது முக்கியமாகும்.

தனிப்பட்ட நிறுவனங்களிட மும் பொது மக்களிடமும் உள்ள சேமிப்புத் தொகையை நிதி நிறுவனங்கள் மூலமாக மாநில அரசுகளும், மத்திய அரசும் பெறுவதற்கான ஒரு சாதனமாகவே இது அமைந் துள்ளது.

நிதி ஒதுக்கீடுகள், நிபந்தனை கள், கடன் திருப்பித் தருவதற் கான கால அட்டவணையை மாற்றியமைத்தல் என்றெல் லாம் நாம் பேசும்போது, இந்த அடிப்படை உண்மையை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இந்த நிதி வசதி நியாயமான வகையிலும் திறமையான ஜன நாயகக் கூட்டாட்சி அமைப் பின் தேவைகளை ஒட்டியும் பகிர்ந்தளிக்கப்படுவது அவசிய மாகும்.

[சென்னை ராஜாஜி மண்டபத் தில் நடைபெற்ற அரசு நிதி பொருளாதாரம் பற்றிய அனைத்து இந்திய மாநாட்டில் முதல்வர் டாக்டர் கலைஞர் ஆற்றிய தலைமையுரை].

# கிராமங்கள் அதிகமுள்ள மாவட்டம் எது?

தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களில் தென் ஆர்க்காடு மாவட்டத் தில்தான் மிக அதிகமான எண்ணிக்கையில் கிராமங்கள் உள்ளன. மிகக் குறைந்த எண்ணிக்கையில் கிராமங்கள் உள்ளது நீலகிரி மாவட்டம்.

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 2,333 கிராமங்கள் உள்ளன. அதற்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் உள்ளது தஞ்சாவூர் மாவட்டம். அதில் 2002 கிராமங்கள் உள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் 42 கிராமங்களே உள்ளன. அதற்கு அடுத்தபடியாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 66 கிராமங்கள் உள்ளன.

எனினும், சராசரி கிராமத்தில் வசிப்பவர்களின் எண்ணிக்கையை பொறுத்தவரையில் கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களில் உள்ள கிராமங்கள் முதலிடம் பெறுகின்றன.

இராமநாதபுரம், தர்மபுரி, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் கிராமமொன்றுக்கு 1500 பேர்களுக்கும் குறைந்த எண்ணிக்கையினரே வசிக்கின்றனர்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் கிராமத்தில் வசிப்பவர்களின் சராசரி எண்ணிக்கை 1067.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் 28,734,334 பேர் உள்ளனர். இவர்கள் 15,735 கிராமங்களில் வசிக்கிருர்கள்

தமிழ்நாட்டில் மக்கள் வசிக்கின்ற கிராமமொன்றில் சராசரி மக்கள் தொகை 1,286 ஆகும்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மக்கள் வசிக்கும் கிராமங்கள் எண்ணிக்கையும், சராசரி கிராம மக்கள் தொகையும் அடைப்புகளுக்குள் தரப்படுகின்றது.

கன்னியாகுமரி மாவட்டம்-66 (15426), நீலகிரி-42 (5971), கோயம்புத்தூர்-932 (3022), மதுரை-1013 (2580), சேலம்-958 (2294), திருச்சி-1314 (2277), திருநெல்வேலி-975 (2227), வட ஆர்க்காடு-1867 (1592), தஞ்சாவூர்-2002 (1525), இராமநாதபுரம்-1411 (1498), தர்மபுரி-1044 (1469), தென் ஆர்க்காடு-2333 (1331), செங்கற்பட்டு-1778 (1067).

1971-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மக்கள் தொகைக் கணக்குகளி லிருந்து இந்த விவரங்கள் தெரிகின்றன.



அட்டவணை-4

# காய்கறி பயிரிடுவதற்கான குறிப்புகள்

## ( 100 சதுர அடி பரப்பு )

| வ. எண் | காய்கறிகளின் பெயர் | நடும் முறை | 100 சதுர அடிக்கு விதை அளவு (சுமாராக) | செடிக்குச் செடி விட வேண்டிய இடைவெளி | வரிசைக்கு வரிசை விட வேண்டிய இடைவெளி | விதைப்பதற்கும் நடுவதற்கும் ஏற்ற பட்டம் | அறுவடை | வயது | 100 சதுர அடிக்கு இட வேண்டிய எரு, உரங்கள். | 100 சதுர அடியில் விளையக்கூடிய காய்களின் எடை. | பயிரிடுவதற்கு ஏற்ற சிறந்த ரகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1 | கத்தரி | மேடான பாத்திகளில் மணலோடு விதைகளைக் கலந்து விதைக்கவும், ஒரு மாத வயதான நாற்றுகளை நடவும். | 0.3 முதல் 0.4 கிராம் தேவை. ஆனால் ஒரு கிராம் விதைப்பது சிறந்தது. | 2 அடி. | $2\frac{1}{2}$ அடி. | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். 1. ஜூன் – ஜூலை, 2. பிப்ரவரி – மார்ச்சு விதைப்பு அதிக மகசூல் கொடுக்கும். | நட்ட 50 நாட்களில் முதல் காய்ப்பு அறுவடைக்கு வரும். | 3 முதல் 7 மாதங்கள். | நடுவதற்கு முன்னர் 25 கிலோ தொழு எரு, 230 கிராம் அமோனியம் சல்பேட், 275 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவும். நடவு செய்த 3 வாரம் கழித்து 115 கிராமும், 6 வாரம் கழித்து 115 கிராமும் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக வைத்து மண் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும். | 20 முதல் 36 கிலோ. | பூசா நீண்ட ஊதா, பூசா உருண்டை, கொத்து வெள்ளை (எஸ். எம்.62), கறுப்பு அழகு, நீண்ட ஊதா (எஸ். எம். 60), வரிக் கத்தரிக்காய் (எஸ்.எம். 68). |
| 2 | தக்காளி | ” | ” | 2 அடி. | 2 அடி. | 1. பிப்ரவரி-மார்ச்சு, 2. ஜூலை-ஆகஸ்ட், 3. அக்டோபர்-நவம்பர். | நட்ட 60 நாட்களில் முதல் காய்ப்பு அறுவடைக்கு வரும். | $3\frac{1}{2}$ முதல் 5 மாதங்கள். | அடியுரமாக 25 கிலோ தொழு எரு, 230 கிராம் அமோனியம் சல்பேட், 460 கிராம் சூப்பர் பாஸ்பேட், 70 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இடவும், 4 வாரம் கழித்து 230 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இட்டு மண் அணைத்துத் தண்ணீர் விடவும். | 24 முதல் 30 கிலோ | கோ.1 தக்காளி, பாண்டு ரோசா, மார்க்ளோப், ஆர்.இ.டி.சி. 1, மார்ட்டன், பெஸ்ட் ஆப் ஆல், மிருட்டி, ஆக்ஸ்ஹார்ட். |
| 3 | மிளகாய் | ” | ” | $1\frac{1}{2}$ அடி. | 2 அடி. | 1. மே-ஜூன், 2. ஆகஸ்ட்-செப்டம்பர், 3. டிசம்பர்-ஜனவரி. | நட்ட 2 மாதத்திற்குப் பின்னர் முதல் மகசூல் கிடைக்கும். | 7 முதல் 8 மாதங்கள். | அடியுரமாக 25 கிலோ தொழு எரு, 230 கிராம் சூப்பர் பாஸ்பேட், 60 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் இடவும். மேல் உரமாக நட்ட 30-வது, 50-வது, 75-வது நாட்களில் 115 கிராம் அமோனியம் சல்பேட் இடவும். | 10 முதல் 12 கிலோ. | கோவில்பட்டி.1 (கே – 1) |
| 4 | வெண்டை | பார்களில் விதையை ஊன்றவும். | 6 கிராம். | 1 அடி. | 2 அடி. | எல்லாக் காலங்களிலும் பயிரிடலாம்— 1. ஜூன்-ஜூலை. 2. பிப்ரவரி-மார்ச்சு. விதைப்பு அதிக மகசூல் கொடுக்கும். | விதை ஊன்றிய 40 நாட்களுக்குப் பின்னர் காய் பறிக்கலாம். | 3 முதல் 4 மாதங்கள். | அடியுரமாக 25 கிலோ தொழு எரு, 100 கிராம் அமோனியம் சல்பேட், 275 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் இடவும், 4 வாரம் கழித்து 100 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 6 முதல் 12 கிலோ | பூசா சவானி, சிவப்பு வெண்டை, இந்தியன் வெண்டை, வெள்ளை வெல்வெட். |
| 5 | காராமணி | பாத்திகளில் விதைகளை வரிசையாக விதைக்கவும். | 32 கிராம். | $2\frac{1}{2}$ அடி. | 3 அடி. | 1. ஏப்ரல்-மே, 2. ஜூலை -ஆகஸ்ட், 3. நவம்பர்-டிசம்பர். | 4 முதல் 6 மாதங்கள். | 4 மாதங்கள். | கத்தரிக்கு செய்வது போல் அடி உரம் இடவும். | 3 முதல் 4 கிலோ. | கோ. 1, கோ.2, இ.சி. 455, இ.சி. 419, பூசா பால்குனி. |

சப்போட்டா, பலவித வெட்பதட்ப நிலைகளைத் தாங்கிக்கொள்வதுடன், வறட்சியையும் தாங்கிக் கொள்ளக்கூடிய தன்மை வாய்ந்தது. சப்போட்டா, மிகக் குறைந்த சாகுபடிச் செலவில், உழவர்களுக்கு அதிக இலாபத்தைக் கொடுக்கவல்லது!

அந்தந்தப் பிரதேசங்களுக்கு ஏற்ற பல சப்போட்டா வகைகள் பயிரிடப்பட்டு வருகின்றன. அண்மையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 'ஓவல்' என்ற ரகத்தையும், 'கிரிகட் பால்' என்ற (Oval × Cricket Ball) ரகத்தையும் இனக் கலப்பு செய்து கோ. 1 என்ற பெயரில் ஒரு ரகத்தை வெளியிட்டுள்ளது. மேலும் ஒரு சிறந்த கோ. 2 என்ற ரகத்தைக் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகம் தேர்வு செய்து வெளியிட்டுள்ளது. இந்த ரகமானது முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'பாரமாசி' (Baramasi) என்ற ஒரு சப்போட்டா ரகம் கோவை வேளாண்மைக் கல்லூரித் தோட்ட இயல் துறையினரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு ரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டதாகும். இந்த தேர்வு பெற்ற ரகங்களில் ஒரு மரமானது தொடர்ந்து சிறந்த பழங்களையும், அதிக மகசூலையும் கொடுப்பதைப் பரிசீலனை செய்து அந்த மரத்திலிருந்து இந்த ரகத்தைத் தேர்வு செய்தனர்.

இந்த கோ. 2 சப்போட்டாவானது சராசரி ஒரு மரத்திற்கு 175 கிலோ பழம் கொடுத்தது. 1972–ஆம் ஆண்டு ஒரு மரத்திற்கு 265 கிலோ பழம் கொடுத்துள்ளது. ஒரு மரத்திற்குச் சராசரி 175 கிலோ மகசூல் கிடைப்பதாகக் கொண்டால், ஒரு கிலோ 70 பைசா வீதம் ஒரு மரத்திற்கு ரூபாய் 123 வருவாய் கிடைக்கும். 40 அடிக்கு 14 அடி என்ற இடைவெளியில் ஒரு ஏக்கருக்கு 27 மரங்கள் எனக் கொண்டால், ஏக்கருக்கு ரூபாய் 3,321 வருவாய் கிடைக்கும். சப்போட்டா சாகுபடிக்கு அதிகச் செலவு ஆகாது. உயர்ந்த அளவாக ஏக்கருக்கு ரூபாய் 300 செலவாகும்.

கோ. 2 சப்போட்டா நல்ல இனிப்பான, நடுத்தர, பருமனுள்ள, ஒவ்வொன்றும் 100–170 கிராம் எடையுள்ள முட்டை வடிவமான பழங்களைக் கொடுக்க வல்லது. இந்த ரகம் ஏப்ரல்–மே மாதங்களில் ஒரு முறையும், நவம்பர்–டிசம்பர் மாதங்களில் ஒரு முறையும் ஆக 2 முறை ஓராண்டில் மகசூல் கொடுக்கவல்லது. இந்த ரகம் நோய், பூச்சி ஆகியவைகளினல் அதிகம் தாக்கப்படுவதில்லை. இந்த ரகத்தின் பழங்கள் அறுவடை செய்யப்பட்ட பிறகு 10 நாட்கள் வரை கெட்டுவிடாமல் இருக்கும்.

கோ. 2 சப்போட்டா ரகத்தை மிக வெற்றிகரமாகத் தமிழ்நாடு, ஆந்திரம், மைசூர், கேரளம், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் பயிரிடலாம்.

ஆதாரம்: தோட்ட இயல் துறை, வேளாண்மைக் கல்லூரி, கோவை-3.

தகவல்: தகவல் தொடர்பு நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.









**வீட்டுத் தோட்டம் அமைக்கப் போதிய இடம் இல்லையானுல்என்ன செய்வது?**

5 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டுத் தோட்டம் அமைக்க 5 சென்ட் நிலம் தேவை என்ற விதிப்படி காலி இடம் இல்லை என்றாலும், பெரும்பாலான வீடுகளின் பின்புறத்தில் மிகக் குறைந்தது 100 சதுரஅடி பரப்பு இடமாவது காலியாகக் (வெறுமனே) கிடக்கிறது. அந்தக் காலி இடங்களில் கீழே படத்தில் கண்டபடி வீட்டுத் தோட்டம் அமைக்கவும்.

**100 சதுர அடி கொண்ட மாதிரி வீட்டுத் தோட்டம் அமைக்கும் முறை:–**

படத்தில் குறிப்பிட்டுள்ளது போல், நிலத்தைச் சுற்றிலும் மூங்கிலால் செய்யப்பட்ட வேலி ஒன்றை அமையுங்கள். இவ் வேலியில் பசலை, பாகல், பீர்க்கு, தொண்டங்காய் முதலிய கொடி வகைக் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

4 அடி நீளமும், 4 அடி அகலமும் கொண்ட 4 பாத்திகளை அமையுங்கள். அப்பாத்திகளை முன்பே குறிப்பிட்டுள்ளதுபோல் தயார் செய்யுங்கள்.

நிலத்தின் நடுவில் 2 அடி அகலத்திற்கு நடைபாதை அமையுங்கள். நடைபாதையின் இருபுறத்திலும் ஓரங்களில் கொத்தமல்லி, வெந்தயம், புதினு முதலியவைகளைப் பயிரிடுங்கள். நிலத்தின் குறுக்காகச் செல்லும் அடுத்த நடைபாதையின் இருபுறத்திலும் முள்ளங்கியினைப் பயிரிடுங்கள். முள்ளங்கி விதைகளை 1 அடி இடைவெளிக்கு ஒன்ருக நடுங்கள்.

அல்லது படத்தில் கண்டுள்ளது போல் தக்காளிக் கன்றுகளை நடவு செய்து, கம்புகள் அல்லது குச்சிகளுடன் இணைத்துக் கட்டுங்கள்.

100 சதுர அடி பரப்புள்ள வீட்டுத் தோட்டத்திலிருந்து ஆண்டு முழுவதும் தொடர்ந்து காய்கறிகளைப் பெற, 4 பாத்திகளிலும் அட்டவணை 3-ல் கண்டபடி பயிரிடுங்கள்.

ஏறத்தாழ எல்லா வீடுகளிலும் வீட்டுத் தோட்டம் போட, குறைந்தது 100 சதுர அடி இடம் கிடைக்குமாதலின் 100 சதுர அடியில் பயிரிடுவதற்கு ஏற்ற முக்கிய காய்கறிகள், அவைகளை விதைக்கும் காலம், அறுவடை செய்யும் காலம் மகசூல் ஆகியவைகளை அட்டவணை 4-ல் விரிவாகவும் விளக்கமாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாதிரி வீட்டுத் தோட்டம்
100 சதுர அடி.




- ++++++++ மூங்கில் தட்டி அல்லது வேலி. இதில் கொடி வகைக் காய்கறிச் செடிகளைப் படரவிடலாம்.
- ........ கீரை வகைகள்.
- xxxxxxxx தக்காளிக் கன்றுகளை நட்டு, குச்சி அல்லது கம்புகளில் இணைத்துக் கட்ட வேண்டும்.

### அட்டவணை-3

| பாத்தி எண் | பருவம் | காய்கறி பெயர் |
|---|---|---|
| பாத்தி 1 | ஜூன்—ஜூலை .. | கீரை வகைகள். |
| | ஆகஸ்டு—நவம்பர் | வெண்டை. |
| | டிசம்பர்—பிப்ரவரி | வெங்காயம். |
| | மார்ச்சு—ஜூன் .. | கத்தரி. |
| பாத்தி 2 | ஜூன்—செப்டம்பர் | வெண்டை. |
| | அக்டோபர்—மார்ச்சு | கத்தரி. |
| | பிப்ரவரி—மார்ச்சு | கீரை வகை. |
| | ஏப்ரல்—மே | முள்ளங்கி. |
| பாத்தி 3 | ஜூன்—செப்டம்பர் | தக்காளி. |
| | அக்டோபர்—டிசம்பர் | முள்ளங்கி. |
| | ஜனவரி—பிப்ரவரி | கீரை வகை. |
| | மார்ச்சு—ஜூன் .. | வெண்டை. |
| பாத்தி 4 | ஜூன்—செப்டம்பர் | கத்தரி. |
| | அக்டோபர்—நவம்பர் | கீரை வகை. |
| | டிசம்பர்—மார்ச்சு | வெண்டை. |
| | ஏப்ரல்—ஜூன் | காராமணி. |

# சமதர்மச் சமுதாயம் அமைத்திடுவோம்!



ஊர்வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சர்

அன்பில் **தர்மலிங்கம்**

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!'' என்ற இலட்சியத்துடன் செயலாற்றி வரும் இன்றையத் தமிழ் நாடு அரசு, சம தர்மச் சமுதாயம் அமைத்து எல்லார்க்கும் எல்லா வசதிகளும் கிடைத்திடச் செய்ய வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டு வருகிறது. சம தர்மச் சமுதாயம் அமைந்திட வேண்டுமானால், ஏழை, எளிய பாமர பாட்டாளி சாமான்ய மக்கள் நிறைந்த கிராமங்கள் முன்னேற வேண்டும் என்று இன்றையத் தமிழ் நாடு அரசு விரும்புகிறது. எனவேதான், கிராமங்களின் மேம்பாட்டிற்கு உதவும் சமுதாய நலத் திட்டங்களைச் செம்மையாகவும், சிக்கனமாகவும், விரைவாகவும் செயல்படுத்துவதில் தமிழ் நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. அந்த ஆர்வத்தின் காரணமாகவே, இன்று முதல் ஒருவார காலத்திற்கு நான்காவது சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா கொண்டாட இன்றையத் தமிழ் நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியாவின் எதிர் காலம், கிராமங்களின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைந்துள்ளது. கிராமங்கள் முன்னேறினால் தான் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிடைக்கும்! இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிராமமும், தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு, என்று தன்னிறைவு பெறுகிறதோ அன்று தான் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலை கிடைக்கும்!

இதைத்தான் அண்ணல் காந்தி அடிகள் அன்றே குறிப்பிட்டார். 'கிராம ராஜ்யம்' அமைய வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். அண்ணல் கூறிய கிராம வளர்ச்சித் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே இந்தியாவின் சமுதாய மேம்பாட்டுத் திட்டம் 1952-ஆம் ஆண்டு, அக்டோபர் 2--ஆம் நாளில்---அண்ணல் பிறந்த நாளில்---நாடெங்கும் துவக்கப் பெற்றது. அந்தத் திட்டத்தின் பயனாய் இந்தியாவின் கிராமங்கள் முன்னேறி வருகின்றன. இதை இல்லை என்று யாரும் கூறி விட முடியாது.

ஆனால் சமுதாய மேம்பாட்டுத்திட்டம் துவக்கப்பட்டு 21 ஆண்டுகள் முடிந்திருந்தும், இந்தியா விடுதலை பெற்று 25 ஆண்டுகள் முடிந்திருந்தும், இன்னும் அண்ணல் காந்தி அடிகள் கண்ட கனவு நிறைவேறவில்லை! ஆம்! இன்னும் இந்தியாவிற்கு உண்மையான பொருளாதார விடுதலைகிட்டவில்லை. ஆகவே, இந்தியாவின் பொருளாதார விடுதலைக்கு வழி வகுக்கும் கிராம முன்னேற்றத்திற்கு உதவும் சமுதாய மேம்பாட்டுத் திட்ட வேகம் போதவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. சமுதாய மேம்பாட்டுத் திட்டப் பணிகளை மேலும் தீவிரப் படுத்திடவே, அண்ணல் பிறந்த நாளான இன்று முதல் ஒரு வார காலத்திற்குச் சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா இந்தியாவெங்கும் கொண்டாடப்படுகிறது.

விழா நடத்தி விட்டால் சமுதாயம் மேம்பாடு அடைந்து விடுமா? என்று பலர் கேட்கலாம். விழா நடத்துவதனால் சமுதாயம் மேம்பாடு அடையாது. ஆனால் சமுதாயம் மேம்பாடு பெறுவதற்குரிய உள்ளுணர்வுகளையும், செயல் திறனையும் கிராம மக்களுக்கு ஏற்படுத்திவிட முடியும். இந்த நோக்கத்துடனேயே, நான்காவது சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா கொண்டாடப் பெறுகிறது.

கிராமப் புற மக்களிடையே அவர்களுக்குள்ள பிரச்சினைகளை உணரச் செய்வது, அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பணிகளில் அவர்களே முன் வந்து ஈடுபடச் செய்வது, கிராமத்தில் எல்லா வகையான முன்னேற்றமும் ஏற்படுத்திக் கொள்ளும் சக்தியை அவர்களுக்கு ஏற்படுத்துவது ஆகிய மூன்றும் சமுதாய மேம்பாட்டுத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும். இந்த அடிப்படை நோக்கங்கள் கிராமப்புற மக்களிடம் தெளிவாக விளக்கப்படுமானால், சமுதாய மேம்பாட்டுத்திட்டம்விரைந்து செம்மையாகச் செயல்படும். அவ்வாறு செயல்படுவதற்கு நான்காவது சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழா வழி வகுக்கும் என்று தமிழ் நாடு அரசு நம்புகின்றது. அந்த நம்பிக்கையின் அடிப்படையிலே நான்காவது சமுதாய மேம்பாட்டுத் திட்ட விழாவை ஊராட்சி ஒன்றியம், மாவட்டம், மாநிலம் ஆகிய மூன்று நிலைகளில் கொண்டாடத் தமிழ் நாடு அரசு முன் வந்துள்ளது.

சமுதாய மறுமலர்ச்சிக்கு அடிப்படையாக மூன்று நிறுவனங்கள் தேவை. அவை ஊராட்சி மன்றம், பள்ளிக்கூடம், கூட்டுறவுச் சங்கம் ஆகிய மூன்றுமாகும். இம் மூன்று அடிப்படைத் தேவைகளையும் தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களும் பெற்றுள்ளன என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எல்லா ஊர்களுக்கும் இணைப்புச் சாலை ஏற்படுத்தவும், எல்லா ஊர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் வழங்கவும், எல்லா ஊர்களுக்கும் பள்ளிக்கூடக் கட்டடம் கட்டவும் தமிழ் நாடு அரசு பெரு முயற்சி செய்து வருகிறது. இந்தியா விடுதலை பெற்று 25 ஆண்டுகள் முடிந்து விட்டன. ஆயினும் நமது கிராமப் புற மக்களுக்கு இன்னும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கவில்லை. பலகிராம மக்கள் குளத்திலும், குட்டையிலும் இருந்தே இன்றும் குடிநீர் எடுத்துக் குடித்து வருகின்றனர். இந் நிலை இனியும் தொடர்ந்து தமிழ்நாட்டில் இருக்கக் கூடாதென்பதற்காகவே குடி நீர் வடிகால் வாரியம் அமைத்து, இன்னும் 6 ஆண்டுக் காலத்திற்குள் எல்லாக் கிராமத்திற்கும் பாதுகாக்கப்பட்ட நல்ல குடி நீர் வழங்க ரூபாய் 40 கோடி செலவில் திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

தமிழ் நாட்டின் பொருளாதாரம் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது. வேளாண்மையின் வளர்ச்சியிலேயே கிராமப் பொருளாதாரம் செழிக்க முடியும். எனவே தான் கிராம முன்னேற்றத்திற்கு உதவும் ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும், வேளாண்மை வளர்ச்சியில் பேரார்வம் காட்டி வருகின்றன.

இன்று தமிழ் நாட்டில் அரிசிப் பஞ்சம் இல்லை. மற்ற மாநிலங்கள் ஒவ்வொன்றாகத் தமிழகத்திடம் அரிசி கேட்கின்றன. நாமும் கொடுத்து வருகின்றோம். இதிலிருந்தே மேம்பாட்டுத் திட்டம் தமிழகத்தில் வெற்றி பெற்றுள்ளது என்று கூறலாம். இந்த உபரி நிலை உருவாவதற்கு ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் பெருமளவுக்கு உதவியுள்ளன. தமிழ் நாட்டில் பசுமைப்புரட்சி பரவியதற்கும், பற்றாக்குறை மறைந்ததற்கும் சமுதாய மேம்பாட்டுத் திட்டமும் ஒரு வகையில் காரணம் எனலாம். எனவே, சமுதாய மேம்பாட்டுத் திட்டத்தின் இலட்சியத்தில் பெரும் பகுதி தமிழகத்தில் நிறைவேறி விட்டது என்பதில் ஐயமில்லை.

பசுமைப் புரட்சியில் நாம் கண்டுள்ள வெற்றியைப்போல் நமது சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை முனைப்பாக்க வேண்டிய நிலையில் உள்ளோம். இதுபோல் எல்லாத் துறையிலும் வெற்றிகாண கிராமப் புற மக்கள் ஒற்றுமையுடன் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான் எல்லாத் துறையிலும் வெற்றி ஏற்படும், கிராமப் பொருளாதாரம் செழிக்கும்.

அடுத்து, சமுதாயத்திலுள்ள சாதி வேறுபாடுகளையும், ஏற்றத்தாழ்வு மனப்பான்மையையும் போக்கச் சமூகக் கல்விப் பணிகளை விரிவுபடுத்த முயன்று வருகின்றோம். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வில் தமிழ் நாடு அரசு பேரார்வம் கொண்டுள்ளது. அது போலவே பிற்பட்டோர் நலனிலும் தமிழ் நாடு அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. ஆகவே சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றி ஏற்றத் தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் அமைத்திட முயன்று வரும் தமிழ் நாடு அரசுக்கு, உங்கள் முழு ஒத்துழைப்பையும் அளித்திட வேண்டும் என்று பொது மக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சமுதாயம் ஒவ்வொரு நாளும் மாறியமைந்து வருகிறது. நாளுக்குநாள் பெருகி வரும் தேவைகளை நிறைவேற்றத்தக்க அளவுக்குத் திட்டப் பணிகள் அமைய வேண்டும். இதன் அவசியத்தை உணர்ந்து செயலாற்றுவதில், தமிழ்நாடு அரசு, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது.

தமிழ் நாட்டில் உள்ள 12,628 ஊராட்சிக்கும், 598 பேரூராட்சிக்கும் மற்றும் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் 1973--74-ஆம் ஆண்டின் வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூபாய் 94·69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்குரிய நிதி நிர்வாகம் பெரிய அளவில் செயல்படுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.



நிர்வாகம்—பணிகள்—உற்பத்தித் திட்ட வேலைகள்—நலப் பணிகள் பற்றிய மாநில அளவிலான மூன்று கருத்துரைக் குழுக்கள் நமது பெருமதிப்புக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் கூடி, ஊராட்சி நிர்வாகம் குறித்த பிரச்சினைகளை ஆய்வு செய்கின்றன. வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்தும் போது, அதன் வேகத்தைத் தடுக்கும் நடைமுறைச் சிக்கல்களுக்கு, கருத்துரைக் குழுக்கள் தரும் ஆலோசனைகளின் அடிப்படையில் தீர்வுகள் காணப்படுகின்றன.

வளர்ச்சி அலுவலர்களுக்குப் போதிய அதிகாரங்களை அளித்து, நேரடிப் பொறுப்புகளை அவர்களுக்கு வழங்குவதனால், அவர்களும் தங்கள் பங்கினை முழுமையாக ஆற்றிட முடியும் என்பதைக் கருத்தில் கொண்டு, ஊராட்சி வளர்ச்சி நிர்வாகத்தைத் திருத்தியமைக்கும் முயற்சியைத் தமிழ் நாடு அரசு ஆழ்ந்து ஆய்ந்து வருகிறது. இது பற்றித் திருவாளர் வர்கீஸ் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவினர் உருவாக்கித் தந்த அறிக்கையை, விரிவாக ஆராய்ந்து வருகிறோம். எந்தெந்த வகையிலே மாற்றங்களைச் செய்யலாம் என்பதற்கு, நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழுவின் கருத்துரைகளின் மீது, தக்க முடிவுகள் ஏற்படும் எனக் கருதுகிறேன்.

தென் மாநிலங்களில் ஊராட்சிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை ஆராய்வதற்காக, பிரிட்டனைச் சார்ந்த சமுதாய வளர்ச்சித் துறையிலிருந்து வல்லுநர் குழு ஒன்று வந்தது. அவர்கள், தமிழ் நாடு, ஆந்திரம், மத்தியப் பிரதேசம், குஜராத் ஆகிய நான்கு மாநிலங்களையும் பார்வையிட்டுத் தங்கள் கருத்தைக் கூறினார்கள். அவர்கள் கொடுத்த அறிக்கையிலே, தமிழகத்தில் ஊராட்சித் துறை செயல்படும் முறை சிறப்பானது என்று பாராட்டியிருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றிய அமைப்புக்களும், வேளாண்மைத் துறையும் இணைந்து, தமிழ் நாடு 68 சத விகித வளர்ச்சியைக் கண்டிருக்கிறது என்றும் மத்தியப் பிரதேசம்

| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | அவரை | ஒரு குழிக்கு 5 விதைகள். | 5 விதைகள். | — | 10 அடி. | ஜூலை-ஆகஸ்ட். | நட்ட 60 நாட்களுக்குப் பின்னர் மகசூல் கிடைக்கும். | 6 முதல் 8 மாதங்கள். | விதை ஊன்றுவதற்கு முன்பு அடி உரமாக குழிக்கு 25 கிலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட், 115 கிராம் அமோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட் இட வேண்டும். பூப் பூக்கும் பொழுது 10 கிலோ தொழு எரு இட வேண்டும். | 8 முதல் 10 கிலோ | கோ. 2, கோ. 3, கோ. 4, கோ. 5. |
| 7 | ஒட்டு வீரிய அவரை. | வரிசை வரிசையாக விதைகளை ஊன்றவும். பந்தல் தேவை இல்லை. | 100 விதைகள் (20 கிராம்) | 6 அங்குலம் | 2 அடி | ஆண்டு முழுவதும் விதைக்கலாம். ஆனால் சூலை—ஆகஸ்டு, மார்ச்—ஏப்ரல் பருவங்கள் சிறந்தவை. | விதைத்த 45-ஆம் நாள் முதல் காய்கள் கிடைக்கும். | 4 மாதங்கள் | விதைக்கும் முன்பு 25 கிலோ தொழு எரு, 115 கிராம் அம்மோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட்டையும் அடியுரமாக இடவும். | 3 முதல் 6 கிலோ | கோ. 1, கோ: 6 கோ. 8, கோ: 7. |
| 8 | கொத்தவரை | விதைகளை வரிசைகளில் ஊன்றவும் | 10 கிராம் | 1½ அடி | 1½ அடி | (1) சூலை — ஆகஸ்டு, (2) சனவரி—பிப்ரவரி. | ஷை | 4 மாதங்கள் | கத்தரிக்கு இடுவது போல் அடி உரம் இடவும். | 5 முதல் 6 கிலோ | பூசாமௌஸ்மி |
| 9 | புடலை .. .. | ஒரு குழிக்கு 5 விதைகள் | 5 விதைகள் | — | 8 அடி | ஷை | விதைத்த 50 நாளில் அறுவடைக்கு வரும். | 5 மாதங்கள் | குழிக்கு 25 கிலோ தொழு எருவையும், 100 கிராம் 6:12:12 கலப்பு உரத்தையும் அடி உரமாக இடவும். விதை ஊன்றிய 30-ஆம் நாள் குழிக்கு ½ கிலோ அமோனியம் சல்பேட் இடவும். பூப் பூக்கும்பொழுது 10 கிலோ தொழு எரு இடவும். | 10 முதல் 16 கிலோ | ஆடுதுறை நீளம், நீண்ட பச்சை, நீண்ட வெள்ளை, கோடுகளுடன் கூடிய நீண்ட பச்சை, குட்டைப் புடல் (பன்றிப் புடல்) கோடைப் பருவத்திற்கு ஏற்றது. |
| 10 | பாகல் .. | ஷை | ஷை | .. | 8 அடி | ஷை | ஷை | மாதங்கள் | ஷை | 5 முதல் 10 கிலோ | ஆடுதுறை நீண்ட பச்சை, நீண்ட வெள்ளை. |
| 11 | பீர்க்கு .. .. | ஷை | ஷை | .. | 8 அடி | ஷை | ஷை | 4 மாதங்கள் | ஷை | 6 முதல் 12 கிலோ | அதி நீள உயர் ரகம். |
| 12 | பறங்கி .. .. | ஒரு குழிக்கு 5 விதைகள் | 5 விதைகள் | .. | 10 அடி | (1) சூலை — ஆகஸ்ட், (2) ஜனவரி—பிப்ரவரி. | விதைத்த 120 நாட்களில் அறுவடைக்கு வரும். | 6 முதல் 8 மாதங்கள். | புடலைக்குச் செய்தது போல அடி உரம் இடவும். விதைத்த 45வது நாள் ½ கிலோ அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 4 முதல் 5 காய்கள் | கோ. 1 பறங்கி. |
| 13 | பூசனி .. | ஷை | ஷை | .. | 10 அடி | ஷை | விதைத்த 90 நாட்களில் அறுவடைக்கு வரும். | 4 முதல் 6 மாதங்கள் | ஷை | 4 முதல் 5 காய்கள் | கோ. 1 பூசனி. |
| 14 | சுரைக்காய் .. | ஷை | ஷை | .. | 8 அடி | (1) சூன் — சூலை (2) டிசம்பர் — சனவரி | விதைத்த 80 நாளில் அறுவடைக்கு வரும். | 6 மாதங்கள் | ஷை | 12 முதல் 16 கிலோ வரை. | துடியலூர் ரகம். |
| 15 | முட்டைக்கோஸ் | கத்தரி போலவே நாற்றுவிட்டு நட வேண்டும். | 1 கிராம் | 2 அடி | 2 அடி | அக்டோபர்—நவம்பர் | நட்ட 45 நாளில் முதல் அறுவடை. | 4 மாதங்கள் | 25 கிலோ தொழு எரு, 75 கிராம் அமோனியம் சல்பேட், 230 கிராம் சூப்பர் பாஸ்பேட், 185 கிராம் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவும். நட்ட 30-வது, 60-வது நாட்களில் 75 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 20 முதல் 30 கிலோ | ஏர்லிட்ரம் ஹெட், கோல்டன் ஏக்கர், ஓ. எஸ். கிராஸ். |
| 16 | காலிபிளவர் .. | ஷை | 1 கிராம் | 1½ அடி | 2 அடி | ஷை | நட்ட 85 நாளில் முதல் அறுவடை செய்யலாம். | 4 முதல் 5 மாதங்கள். | ஷை | 16 முதல் 24 கிலோ | ஸ்னோபால், பூசா கட்கி, எர்... பாட்ஹ. |
| 17 | பீட்ருட் .. | விதைகளை வரிசைகளில் ஊன்றவும் | 5 கிராம் | 1½ அடி | 1½ அடி | செப்டம்பர்—அக்டோபர் | விதைத்த 90 நாட்களில் அறுவடை செய்யலாம். | 3½ முதல் 4 மாதங்கள். | 25 கிலோ தொழு எரு, 60 கிராம் அமோனியம்சல்பேட், 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 165 கிராம் பொட்டாஷ் ஆகியவைகளை அடி உரமாக இடவும். | 16 முதல் 20 கிலோ | கிரிம்சன்குளோப், டெட்ராய்ட் கரு... சிவப்பு. |
| 18 | கேரட் .. | ஷை | ஷை | ½ அடி | 1 அடி | ஷை | விதைத்த 3 மாதத்திற்கு பின்னர். | 3½ முதல் மாதங் கள். | ஷை | 16 முதல் 20 கிலோ | லேட் நான்... பூசா ... |





| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | சமவெளிக்கேற்ற உருளைக் கிழங்கு | பார்களில் நடவும். | 1 கிலோ முளை விட்ட கிழங்கு | 8 அங்குலம். | 2 அடி | (1) ஏப்ரல்—மே, (2)செப்டம்பர். (3) பிப்ரவரி. | விதைத்த 110 நாட்களில் அறுவடை செய்யலாம். | 110 முதல் 120 நாட்கள். | 25 கிலோ தொழு எரு, 460 கிராம் அமோனியம் சல்பேட், 1,400 கிராம் சூப்பர் பாஸ்பேட், 140 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். | 10 முதல் 12 கிலோ. | கோ. சிம்லா. |
| 20 | நூல்கோல் | நாற்று விட்டு 20 முதல் 25 நாட்கள் வயதுடைய நாற்றுகளை நடவும் | 2 கிராம் விதைகளை நாற்று விடவும். | 1 அடி | 2 அடி | (1) ஆகஸ்ட்—செப்டம்பர். (2) அக்டோபர்—நவம்பர். | 90 நாட்களில் அறுவடைக்கு வரும். | 90 முதல்100 நாட்கள். | 25 கிலோ தொழு எரு, 60 கிராம் அமோனியம் சல்பேட், 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 165 கிராம் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடிஉரமாக இடவும். | 18 முதல் 24 கிலோ. | வியன்ன வெள்ளை, வியன்ன பச்சை. |
| 21 | பீன்சு | பாத்திகளில் அல்லது பாத்திகளின் சரிவில் (அ) வரப்பு ஓரங்ளில் ஊன்றலாம். | 400 கிராம். | 6 அங்குலம் | 2 அடி | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். அக்டோபர்—நவம்பர் விதைப்பு அதிக மகசூல் தரும். | நட்ட 100 நாட்களில் அறுவடை செய்யலாம். (சிலகுறுகிய கால ரகங்கள் நடவு செய்த 40 நாட்களிலேயே மகசூல் தருகின்றன.) | 4 மாதங்கள். | 25 கிலோ தொழு எரு, 1 கிலோ 6 : 12 : 12 கலப்பு உரத்தை அடியுரமாக இடவேண்டும். | 8 முதல் 10 கிலோ. | .... |
| 22 | வெள்ளரி | ஒரு குழிக்கு 5 விதைகள். | 5 கிராம். | 6 அடி | 6 அடி | (1) ஜூலை—ஆகஸ்ட், (2)ஜனவரி—பிப்ரவரி. | நட்ட 75 நாட்களில் அறுவடைக்கு வரும். | 4 மாதங்கள். | குழிக்கு 25 கிலோ தொழு எரு, 100 கிராம் 6 : 12 : 12 கலப்பு உரத்தை நடுவதற்கு ஒரு வாரம் முன்பு இடவும். | 15 முதல் 20 காய்கள். | .... |
| 23 | சௌ-சௌ | வேலிகளின் ஓரத்தில் நட்டு, படரவிடலாம் அல்லது பந்தலில் படர விடலாம். | குழிக்கு 2 முளை விட்ட காய்களை நடவேண்டும். | 10 அடி | 10 அடி | ஜூன்—ஜூலை. | நட்ட 9 முதல் 10 மாதங்களில் அறுவடைக்கு வரும். | 2 முதல் 3 ஆண்டுகள் | குழிக்கு 25 கிலோ தொழு எரு, 100 கிராம் 6 : 12 : 12 கலப்பு உரத்தை நடுவதற்கு ஒரு வாரம் முன்பு இடவும். பிறகு 6 மாதங்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு குழிக்கும் 50 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 20 கிலோ (அ) 200 காய்கள். | .... |
| 24 | கோவைக்காய், (தொண்டங்காய்) | ஷை | ஒரு குழிக்கு ஒரு கொடித் துண்டு. | 6 அடி | 6 அடி | ஜூன்—ஜூலை. | நட்ட 6 மாதங்களில் அறுவடைக்கு வரும். | 2 முதல் 3 ஆண்டுகள் | ஷை | 10 கிலோ. | .... |





5 சத விகித வளர்ச்சியையும், குஜராத் 34 சத விகிதம் வளர்ச்சியைக் கண்டிருக்கிறதென்றும், தங்கள் மாநிலங்களை விட, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் முன்னேற்றத்தை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

பொதுவாகத் தமிழகத்தில், மற்ற மாநிலங்களை விடச் சிற்றூர்கள் பேரூர்களாகவும், பேரூர்கள் நகரங்களாகவும், நகரங்கள் பெரு நகரங்களாகவும் மாறுதலுக்கு உட்பட்டு, இன்று 443 நகரங்கள் உருவாகியிருக்கின்றன என்பதை நாம் நிறைவோடு எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழகத்தைப் போல இரண்டு மடங்கு மக்கள்தொகையுள்ள உத்திரப் பிரதேசத்தில் 293 நகரங்கள் தான் உள்ளன. மராட்டியத்தில் 289- குஜராத்தில் 217 நகரங்கள்தான் இருக்கின்றன. இதை ஒப்பிடும்போது, தமிழகம் எத்தகைய வளர்ச்சியைப் பரவலாகப் பெற்று வந்திருக்கிறதென்பதைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

ஊராட்சி ஒன்றியத்தின் பெருந் தலைவராக இருந்து பணியாற்றியதில், நேரிடையான அனுபவம் எனக்கு ஏற்பட்டுள்ளமை, நீங்கள் அறிந்ததே. உள்ளாட்சித் திட்டங்கள் அனைத்தும், வேரிலிருந்து தொடங்கி, முற்றிலுமாக மேல் நோக்கிச் சீராக்கும் பணியைத் தன்னகத்தே கொண்டவை. இதில் ஈடுபட்டுள்ளவர்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்கதொரு பணியில் பங்கு கொள்கிறோம் என்பதில் பெருமிதம் கொள்ள வேண்டும்.

பல ஐந்தாண்டுத் திட்டங்களை நாம் கடந்து வந்திருக்கிறோம். பல மாற்றங்களைக் காண முடிகிறது. மக்களிடையே நாம் கொள்ளக் கூடிய நம்பிக்கையை வளர்த்திருக்கிறது. தன்னம்பிக்கையையூட்டியுள்ளது. கடந்த காலத்தைவிட, பெரியஅளவில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளக்கூடிய துணிவைத் தந்துள்ளது.

அடுத்துச் செய்யவேண்டிய ஆக்கப் பணிகளும் நிறைய உள்ளன. அவற்றைப் பற்றித் திட்டமிடவும், மக்களின் சக்தியை ஒன்று திரட்டவும், இந்த சமுதாய நலத் திட்ட வார விழா பெரிதும் துணையாகுமென நம்புகிறேன். ஒவ்வொரு ஊராட்சி நிறுவனமும், தனது ஊரை மேலும் வளமுள்ளதாகவும், வசதியுள்ளதாகவும் செய்ய, என்னென்ன பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதில் முழுமையான கவனம் செலுத்துவதே, ஊர் ஆட்சித் தலைவர்களின் மாபெரும் பொறுப்பாகும். வளர்ச்சிப் பணிகள், அந்தந்த ஊர்களில் வாழும் மக்களின் அனுபவத்திலிருந்தே உருவாக வேண்டும்.



ஊர் வளர்ச்சி என்பது ஊர் ஆட்சித் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் ஆகியோர் ஆக்கப் பணிகளில் காட்டும் ஆர்வத்தைப் பொறுத்தே அமைய முடியும். மக்களால்தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள் எவ்வளவு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள் என்பதை விட, அந்தக் கால வரம்பிற்குள், மக்களுக்குப் பலன் தரத்தக்க நற்பணிகள் எத்தனை செய்து முடித்துள்ளனர் என்பதே, வரலாற்றில் பொறிக்கத் தக்க சாதனையாக அமைய முடியும். இதுவே, என்றென்றும் நம் புகழை எடுத்தியம்பும் விதமாக நிலைத்து நிற்கும்.

உலக உத்தமர் பிறந்த இத் திருநாளில், சமுதாய நலத் திட்ட வேலைகள் இன்னும் தீவிரமாக நடைபெற, அரசு அலுவலர்களும், மக்கள் தலைவர்களும், மக்களும் இணைந்து நின்று, நிலையான சமுதாயச் சொத்துக்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும். சமுதாயத்துக்குப் பயனளிக்கக்கூடிய பொது வேலைகள் தொடங்கப்பெற்று, இடையிலே தடைப்பட்டு நின்றிருந்கலாம். இவ்விழாவின் போது, மக்கள் மன்றத்துக்கு முன்னால் தடைகள் தகர்த்தெறிப்பட்டு, அப் பணிகளைப் புதிய எழுச்சியுடன் மீண்டும் தொடங்கி முடிக்கலாம். தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்கான வகையில் சிறந்த பணிகளை மேற்கொள்ளலாம்.

குறைபாடுகளைச் சொல்லிக் கொண்டிருப்பதை விட, வளம் பெருக்கும் நல்ல சமுதாயத்தை உருவாக்க, ஒவ்வொருவரும் தன் கடமையைச் செய்ய முன் வந்து பணியாற்றுவதே போற்றுதற்குரியது.

எனவே, ஊராட்சித் தலைவர்கள் இவ்விழாவின் நோக்கத்தை உணர்ந்து, விழாவைச் சீரும் சிறப்பும் உடையதாகச் செய்வார்களெனப் பெரிதும் நம்புகிறேன்.

'மாலையின் மாண்பு மணத்தில்; விளக்கின் பயன் ஒளியில், விழாக்களின் பயனோ நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய பொன் மொழிக்கேற்ப, பொறுப்புணர்ச்சியோடு கடமையாற்றுவோமாக!

•

[சமுதாய மேம்பாட்டு வார விழாவை ஒட்டி வானொலியில் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்பில் தரும லிங்கம் ஆற்றிய உரை].

**வெண்பாப் போட்டி-66**

ஈற்றடி : வேறெங்கும் உண்டோ விளம்பு

முடிவுநாள் :— 1—11—73.

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர் (வெண்பாப்போட்டி)

தமிழரசு அலுவலகம்

அரசினர் தோட்டம்

சென்னை—600002.



# ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மக்கள் தொகையியல் பணிகள்

எஸ்.முத்து ராமலிங்கம்.

ஐக்கிய நாடுகள் மன்றம் என்றதும், நடந்து முடிந்த இரு உலகப் போர்களைப்போல உலகில் இனிப் போர் ஏற்படக் கூடாது---ஏற்பட்டால் மனித இனமே பூண்டோடு அழிந்து விடும்--அந்த அளவுக்கு விஞ்ஞான வித்தைகளால் பிறந்துள்ள ஏவு கணைகளும் பிறவும் வாய்ப்பை எதிர் நோக்கிக் காத்துக் கொண்டிருக்கின்றன என்பதையெல்லாம் உணர்ந்து தக்க நடவடிக்கைகளால் உலக சமாதானத்தைக் காத்து வருகின்ற நிறுவனம் என்ற பொதுவான எண்ணம்தான் எழும்.

உலக சமாதானத்தைக் காப்பது, 1945-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24-ஆம் நாள் துவக்கப்பட்ட ஐ. நா. மன்றத்தின் உயிர் மூச்சான பணி என்றாலும், உலகம் உய்வதற்கான அளப்பரிய பல்வேறு பணிகளையும் அது ஆற்றி வருகிறது. இந்த ஆண்டு செப்டம்பர் 18-ஆம் நாள் ஐ.நா.வின் இருபத்தியெட்டாவது பொதுச் சபை கூடிய போது, கிழக்கு ஜெர்மனியும் மேற்கு ஜெர்மனியும் முறையே 133-வது 134-வது உறுப்பு நாடுகளாகியுள்ளன. அவற்றைத்தொடர்ந்து 'பாகாமாஸ்' (Bhamas) என்ற நாடும் உறுப்பு நாடாகியுள்ளது.

உலகப் போர் ஏற்பட்டால் என்னென்ன வேண்டாத விளைவுகள் ஏற்படும் என்பது எண்ணிப் பார்க்கக் கூடியது---கண்ணுக்குத் தெரிய நிகழக்கூடியதும் கூட! ஆனால் நம் கற்பனைகளுக்கும், எண்ணங்களுக்கும் எட்டாத வகையில்---நாம் உணர முடியாத முறையில்---கண்ணுக்குப் புலப்படாத தன்மையில் வளர்ந்து வரும் பிரச்சினை---உலகப் போரை விடக் கொடுமையானதாக உலகை அச்சுறுத்திவரும் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையேயாகும். உலக மக்கள் தொகை பெருகி வரும்வேகமே அதற்குச் சான்றாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக மக்கள் தொகை 170 கோடியாக இருந்தது. 1950-ஆம் ஆண்டில் அது 250 கோடியாக உயர்ந்தது. 1950-ஆம் ஆண்டிற்கும் 1970-ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் அது 360 கோடியாக உயர்ந்துள்ளது. இதில் ஏறத்தாழ 250 கோடி மக்கள் உலகின் குறைந்த வருமானமுள்ள பகுதிகளிலேயே வாழ்ந்து வருகிறார்கள். இன்றைய விகிதத்திலேயே மக்கள் தொகைப் பெருக்கம் இருக்குமானால் இந்த நூற்றாண்டின் இறுதியில் மக்கள் தொகை 800 கோடியாக உயரும் என்பது ஒரு கணிப்பு.

பிறப்பு விகிதம் உலகில் இனிச் சீராகக் குறையும் எனக் கூறும் இன்னொரு கணிப்பு, உலக மக்கள் தொகை கி.பி. 2000-த்தில் 650 கோடியாக இருக்குமென்றும், அதில் 500 கோடி மக்கள் வளர்ந்துவரும் நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்றும் தெரிவிக்கிறது. இந்தியாவின் மக்கள் தொகை அப்போது நூறு கோடியாக உயர்ந்திருக்கக் கூடும். தமிழ் நாட்டின் மக்கள் தொகை அப்போது ஏழு அல்லது எட்டு கோடி அளவுக்கு உயர்ந்திருக்கலாம்.

ஆகவே தான் உலகில் போர் ஏற்படாமல் இருக்க அயராது பணியாற்றிவரும் ஐ. நா. மன்றம் உலக மக்கள் பெருக்கத்தை மட்டுப்படுத்திக் கட்டுக்குள் நிலைநிறுத்துவதற்கான பணிகளையும் மேற்கொண்டு செயல்பட்டு வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மன்றத்தில் அங்கம் வகித்த உறுப்பு நாடுகள் 1950-லும் 1960 முற்பகுதி வரையிலும் மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளைச் சந்திக்க ஆர்வமற்றவையாய் இருந்தன. அரைகுறை மனத்துடனேயே அப் பிரச்சினையை அணுகின. அனைத்துலக அரங்கில் ஆசிய நாடுகள் தான் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையை உயிரோட்டமுள்ளதாக்கி, அதைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டித் திறமையாக செயல்படத் தொடங்கின. ஐ.நா.வின் 'சமூகப் பொருளாதாரக் கழகம்' (Economics and Social Council). 1964-ஆம் ஆண்டு ஐ. நா. மன்றம் மக்கள் தொகைப் பணிகளுக்கான உதவிகளை அளிக்கலாம் எனத் தீர்மானம் நிறைவேற்றியது. 1963-ஆம் ஆண்டு டில்லியில் நடந்தேறிய மக்கள் தொகை மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளும், செய்யப்பட்ட பரிந்துரைகளுந்தான், அடிப்படையாக அமைந்தன. முதல் ஆசிய மக்கள் தொகை மாநாட்டின் போது, இந்தியா, கொரியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் மட்டும், பிறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கான கொள்கைகளை வகுத்துக் குடும்ப நலத்திட்டத்தைத் தேசியத் திட்டமாக அறிவித்துச்செயல் படுத்தின.

| | (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 25 | முள்ளங்கி .. | ஷை | ஷை | $\frac{1}{2}$ அடி | 1 அடி | ஆண்டு முழுவதும் | விதைத்த 40 நாட்களில் அறுவடை செய்யலாம். | $1\frac{1}{2}$ முதல் 2 மாதங்கள். | ஷை | 20 முதல் 30 இலோ | வெள்ளைமுள்ளங்கி (எச். 113), சிவப்பு முள்ளங்கி. |
| 26 | டர்னிப் .. | விதைகளை வரிசையில் ஊன்றவும் | 5 கிராம் | $\frac{1}{2}$ அடி | 1 அடி | (1) ஆகஸ்ட்—செப்டம்பர், (2) அக்டோபர்— நவம்பர், (3) சனவரி—பிப்ரவரி. | விதைத்த 90 நாளில் அறுவடை செய்யலாம் | 3 முதல் 4 மாதங்கள். | பீட்ரூட்டுக்குச் செய்வது போலவே செய்யவும். | 9 முதல் 12 இலோ | பர்பிள்டாப், ஒயிட்குளோப். |
| 27 | கீரைகள் .. | 6 அடி × 6 அடி பாத்திகளில் விதைக்கவும் | 2 கிராம் | 4 அங்குலம் | $1\frac{1}{2}$ அடி | ஆண்டு முழுவதும் விதைக்கலாம் | விதைத்த 40 நாளில் அறுவடைக்கு வரும். | 3 மாதங்கள் | விதைப்பதற்கு முன் 25 இலோ தொழு எரு அல்லது கம்போஸ்ட், 275 கிராம் சூப்பர் பாஸ்பேட், 115 கிராம் அமோனியம் சல்பேட், 60 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரமிடவும் | வாரத்திற்கு 4 இலோ. | கோ. 1, தண்டுக்கீரை. |
| 28 | பெல்லாரி வெங்காயம். | நாற்று விட்டு பார்களின் இருபுறமும் அல்லது பாத்திகளில் நடவும். | 4 கிராம்கள். | 4 அங்குலம் | 4 அங்குலம். | 1. ஜூன்— ஜூலை, (2)டிசம்பர்—ஜனவரி. | 1. அக்டோபர்-நவம்பர் 2. மே—ஜூன். | 5 முதல் 6 மாதங்கள். | நடுவதற்குமுன் 24 இலோ தொழு எரு இடவும். 140 கிராம் அமோனியம் சல்பேட், 175 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் பொட்டாஷ் ஆகியவற்றை அடிஉரமாக இடவும். நட்ட ஒரு மாதத்திற்குப் பின் 140 கிராம் அமோனியம் சல்பேட் மேலுரமாக இடவும், | 9 முதல் 12 இலோ | ..... |
| 29 | நாட்டு வெங்காயம். | ஒரு அடி இடைவெளியில் பார்களை அமைத்து இருபுறமும் நட வேண்டும் அல்லது பாத்திகளில் நடவும். | 1 இலோ வெங்காயம். | 4 அங்குலம். | 4 அங்குலம். | ஆண்டு முழுவதும் பயிரிடலாம். (1) ஏப்ரல்—மே, (2) அக்டோபர் —நவம்பர் விதைப்பு அதிக மகசூல் தரும். | 80 முதல் 90 நாட்கள் | 80 முதல் 90 நாட்கள் | 12 இலோ தொழு எரு, 140 கிராம் அமோனியம் சல்பேட், 175 கிராம் சூப்பர் பாஸ்பேட், 50 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும், 30-வது நாள் 140 கிராம் அமோனியம் சல்பேட்டை மேலுரமாக இடவும். | 8 முதல் 12 இலோ. | கோ. 1 வெங்காயம். |
| 30 | மரவள்ளி | $2\frac{1}{2}$ அடி இடைவெளியில் பார்கள் அமைக்கவும். | 16 கரணைகள். | $2\frac{1}{2}$ அடி. | $2\frac{1}{2}$ அடி. | ஆண்டு முழுவதும் பயிரிடலால். ஆனுல் ஜூன்—ஜூலை, டிசம்பர்—ஜனவரி பருவங்களில் நட்டால் அதிக மகசூல் கிடைக்கும். | 8 முதல் 12 மாதங்கள். | 9 முதல் 12 மாதங்கள். | அடியுரமாக 25இலோ தொழு எரு, $1\frac{1}{4}$ இலோ 6 : 6: 12 கலப்பு உரம் இடவும். நட்ட 2 மாதங்களுக்குப் பிறகு $1\frac{1}{4}$ இலோ கலப்பு உரத்தை மேலுரமாக இடவும். | 24 முதல் 32 இலோ. | மலவெள்ளா, ஆனைக் கொம்பன், எச். 226, எச். 165, எஸ். 2, எஸ். 5, எம். 4. |
| 31 | சர்க்கரைவள்ளி. | பாத்திகளில் நடவும். | 40 முதல் 50 கொடித் துண்டுகள். | 1 அடி | 2 அடி | (1) ஜூன்—ஜூலை, (2)செப்டம்பர்—அக்டோபர் | 4 மாதத்தில் அறுவடை செய்யலாம். | $4\frac{1}{2}$ முதல் 5 மாதங்கள். | ஷை | 16 முதல் 24 இலோ | வி. 2, வி.6, வி.8, எச். 1, எச் 3. |
| 32 | சேனைக் கிழங்கு. | பாத்திகளில் நடவும். | 2 முதல் 4 இலோ கிழங்குகள். கிழங்குகளைத் துண்டுகளாக வெட்டி நடவும். ஆனுல் ஒவ்வொரு துண்டிலும் முளை இருக்க வேண்டும். | 1 அடி | 3 அடி | ஜூன்— ஜூலை. | 7 மாதம். | 8 மாதங்கள் | 25 இலோ தொழு எருஅடியுரமாக இடவும். நடவு செய்த 3-வது மாதத்தில் 115 கிராம் அமோனியம் சல்பேட், 185 கிராம் சூப்பர் பாஸ்பேட், 140 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் இடவும். | 20 முதல் 24 இலோ | .... |
| 33 | சேப்பங்கிழங்கு. | பாத்திகளில் நடவும். | 1 முதல் $1\frac{1}{2}$ இலோ முளைத்த கிழங்குகள். | 1 அடி | 3 அடி | (1) ஜூன்—ஜூலை, (2)பிப்ரவரி—மார்ச்சு. | நடவு செய்த 5 மாதங்களில் அறுவடைக்கு வரும். | 6 மாதங்கள் | நடவு செய்த 2 மாதத்தில் 460 கிராம் அமோனியம் சல்பேட், 290 கிராம் சூப்பர் பாஸ்பேட், 160 கிராம் மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட வேண்டும். | 8 முதல் 10 இலோ. | .... |

சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால் 1951-ஆம் ஆண்டில் முதன் முதலில் குடும்ப நலத் திட்டத்தைத் தேசியத் திட்டமாகச் செயல்படுத்தத் துவங்கிய நாடு இந்தியா தான்! அதன் பிறகுதான் ஆசிய நாடுகள் மக்கள் தொகைப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் அளித்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குடும்ப நலத் திட்டத்தைத் தேசியத் திட்டமாக மிகுந்த தொலை நோக்கோடு செயல்படுத்தத் துவங்கிய இந்தியா, நிபுணர் குழுவொன்றினை அமைத்து இதில் தனக்கு உதவ வேண்டும் என்று ஐ. நா. மன்றத்தைக் கேட்டுக் கொண்டது. அதற்கிணங்க ஐ.நா. மன்றம் தனித் திறமை வாய்ந்த நிபுணர் குழுவை 1965-ஆம் ஆண்டு நியமித்தது. இக் குழு அதே ஆண்டு பிரவரித் திங்கள் 20-ஆம் நாள் இந்தியாவில் தனது பணிகளைத் தொடங்கியது. ஓர் உறுப்பு நாடு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, குடும்ப நலத் திட்டப் பணிகளுக்கான செயல் முறைத் திட்டங்களை வகுத்தளிப்பதற்காக ஐ. நா. மன்றம் அமைத்த முதல் நிபுணர் குழு இதுவேயாகும்.

தன் உறுப்பு நாடுகளுக்கு நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் உதவ வேண்டி, ஐ.நா. மன்றமும் அதன் சிறப்பு நிறுவனங்களும் மக்கள் தொகைப் பணிகளை விரிவாக்கிக் கொள்ள வேண்டுமென, ஐ. நா.வின் மக்கள் தொகைப் பொறுப்பாண்மைக் குழு (U. N. Population Commission.) 1965-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஐந்தாம் நாள் முடிவுற்ற தனது 13-வது கூட்டத்தில் பரிந்துரைத்தது. பின், ஐ. நா. மன்றத்தின் பொதுச் சபை 1966-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 17-ஆம் நாள் கூடியபோது நிறைவேற்றிய தீர்மானம் மக்கள் தொகைப் பணிகளுக்கான ஐ.நா. மன்ற நிதி நிறுவனத்தை (United Nations Fund for Population Activities). 1967-ஆம் ஆண்டு ஏற்படுத்த உதவியது. அதே ஆண்டு கூடிய ஐ.நா. பொதுச் சபையின் 1084-வது தீர்மானத்தின் படி இந் நிதி நிறுவனம் துவக்கப்பட்டது.

ஐ. நா. மன்றத்தின் அங்கமான இந்நிதி நிறுவனத்தின் (UNFPA) முக்கியப் பணி, வளர்ந்து வரும் நாடுகளில் மக்கள் தொகைப் பணிகளை மேம்பாடு அடையச் செய்வதும், தனிப்பட்ட நாடுகளின் தேவைகளுக்கேற்ப நிதி உதவி அளித்தலுமாகும். மக்கள் தொகைப் பெருக்கத்தால் விளையும் சமூக--பொருளாதார பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல், சுற்றுப்புற சுகாதார வாழ்வு பாதிக்கப்படுவது குறித்து அறிவுறுத்தல், குடும்ப நலத் திட்டம் குறித்து மனிதாபிமான உரிமைகள் என்ன என்பதை விளக்குதல், குடும்ப நலத் திட்டப் பணிகளுக்கு முந்துரிமை அளித்து உதவுதல் ஆகியவை இதன் பணிகளில் சிலவாகும்.




ஐ. நா. மன்றத்தின் வெவ்வேறு நிறுவனங்கள் தங்கள் தங்கள் கொள்கை, கோட்பாடுகளுக்கேற்ப மக்கள் தொகைப் பணியாற்ற வகை செய்தலும், அவற்றின் துணையோடு தேசிய அளவில், மண்டல அளவில், அனைத்துலக அளவில் மக்கள் தொகை---குடும்ப நலத் திட்டம் ஆகிய பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்குதலும், ஐ.நா. மன்ற அமைப்புக்குட்பட்டு மக்கள் தொகைப் பணிகளை விரிவாக்குதலும் இந் நிதி நிறுவனத்தின் நோக்கங்களாகும்.

இது திறமையாக இயங்க வேண்டுமென்ற கருத்தில், 1969-ஆம் ஆண்டு, ஐ.நா.வின் வளர்ச்சித் திட்டப் பகுதியோடு (United Nations Development Programme) இணைந்து செயல் பட வகை செய்யப்பட்டது. இந் நிதி நிறுவனம், ஓராண்டு முழுமையாகச் செயல்பட்ட முதல் ஆண்டு1970-ஆம் ஆண்டாகும். மக்கள் தொகைப் பணிகளுக்கான ஐ. நா. மன்றத்தின் இந் நிதி நிறுவனம், தன்னிச்சையாக எதையும் செயல்படுத்தாமல், ஐ. நா. வின் வேறு நிறுவனங்களின் மூலம் தான் செயல்படுத்துகிறது. சரியெனப் பட்டால் ஐ. நா. மன்றத்திற்கு வெளியிலுள்ள நிறுவனங்களையும் மக்கள் தொகைப் பணிகளுக்காக இந் நிதி நிறுவனம் பயன்படுத்திக் கொள்கிறது.

ஐ.நாவின் பொதுச் சபை, சமூகப் பொருளாதாரக் கழகம், மக்கள்தொகைப் பொறுப்பாண்மைக் குழு.

ஆகியவை வகுக்கும் கொள்கைகளின் அடிப்படையிலேயே இந் நிதி நிறுவனம் செயல்படுகிறது. இந் நிதியினை எப்படியெப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என அறிவுறுத்த ஆலோசனைக் குழு ஒன்றும் மற்றொரு குழுவும் செயல்பட்டு வருகின்றன.

இந் நிறுவனம் உறுப்புநாடுகளிடமிருந்து நன்கொடையாகக் கிடைக்கும் நிதியினைக் கொண்டு இயங்குகிறது. நன்கொடைகளை அரசுகள் தன்னிச்சையாக வழங்குகின்றன. 1970-ஆம் ஆண்டு இறுதிக்குள் இதற்கு 20 நாடுகள் வரை நன்கொடை வழங்கின. 1971-ஆம் ஆண்டுநன்கொடை வழங்கும் நாடுகளின் எண்ணிக்கை அறுபதாக உயர்ந்துள்ளது. வளர்ச்சி பெறும் நாடுகளில் ஒன்றான இந்தியாவும் இந் நிதிக்கென நன்கொடை வழங்கியுள்ளது. எதிர்பார்த்த இலக்கிற்கும் மேலாக நிதி சேர்ந்தது. ஐ. நா. மன்றத்தின் உறுப்பு நாடாக உள்ள மிகக்குறைந்த வளர்ச்சி பெற்றுள்ள நாடுகளுக்கே இந் நிதியிலிருந்து உதவியளிக்கப்படும். இந்தியா இந் நிதியிலிருந்து பெருந் தொகையைப் (2,113,932 டாலர்கள்) பெற்றுள்ளது. இதில் 1972-ஆம் ஆண்டு நடந்த ஆண் அறுவைச் சிகிச்சை முனைப்பு இயக்கங்களுக்கென குறிப்பிட்ட தொகை (பத்து இலட்சம் டாலர்கள்) உதவித் தொகையாக வழங்கப்பட்டது. மீதித் தொகை குடும்ப நலத் திட்டத்தின் வெவ்வேறு கூறுகளின் வளர்ச்சிக்கெனவும், பயிற்சிக்காகவும் பயன்படுத்தப்பட்டது.

இந் நிதி நிறுவனம் ஐ.நா. மன்றத்தின் வேறு கிளை நிறுவனங்களான, 'மக்கள் தொகைப் பகுதி' உலக சுகாதார நிறுவனம் (WHO) கல்வி விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் (UNESCO) உலகக்குழந்தைகள் நிதி (UNICEF), உலகத்தொழிலாளர் நிறுவனம் (ILO), தொழில் வளர்ச்சி நிறுவனம் (UNIDO) ஆகியவற்றின் துணையோடு, மக்கள் தொகை பற்றிய தகவல், கல்வி, செய்தி முதலிய பணிகளாற்றுவதற்கு உதவுகிறது. உணவு, சுகாதாரம், வேலை வாய்ப்பு, கல்வி, பயிற்சி, தொழில் வளர்ச்சி, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கான வேறு கூறுகள் ஆகியவற்றிற்கும் மக்கள் தொகை வளர்ச்சிக்கும் உள்ள தொடர்புகள் குறித்த அறிவாற்றலை வளர்ப்பது என்பது இதன் முக்கியமான பணியாகும். தேசிய வளர்ச்சியின் குறிக்கோளை மையமாகக் கொண்டு மக்கள் தொகைக் கொள்கையை வகுத்தளிப்பது என்பதும், மக்கள் தொகை வளர்ச்சியின் போக்கு, அமைப்பு பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பது என்பதும் இதன் சிறப்புப் பணிகளாகும். குடும்ப நலத் திட்டப் பயிற்சிக்காகவும், திட்டச் செயலாக்கத்திற்கான வாகனங்களுக்காகவும் நிதியுதவி அளிக்கிறது. பள்ளிகளில் மக்கள் தொகை இயல் கல்வி அளிக்க வேண்டி ஆசிரியர், மருத்துவ அலுவலர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கு அது பற்றி விளக்கமளிக்கக் கல்வி, விஞ்ஞான பண்பாட்டுக் கழகம் உலக சுகாதார நிறுவனம், அனைத்துலக தொழிலாளர் நிறுவனம் ஆகியவற்றின் துணையோடு தக்க வெளியீடுகளை வெளியிடுகிறது. ஏராளமான கருத்தரங்குகளும் மாநாடுகளும் நடத்தி, உலகெங்கும் மக்கள் தொகை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

சிறப்பாக ஆப்பிரிக்க நாடுகளில் மக்கள் தொகைக் கணக்கெடுக்க (Cences Operation) இந் நிதி நிறுவனம் முனைந்திருப்பது, இது மேற்கொண்டுள்ள பெரும் பணியாகும். மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தொடர்பாக ஏற்படும் பெருஞ் செலவினைச் சந்திக்க இயலாத காரணத்தால் பதினெட்டு ஆப்பிரிக்க நாடுகள் இதற்கு முன் மக்கள் தொகைக் கணக்கெடுப்பே நடத்தவில்லை. மக்கள் தொகைப் பணிகளுக்கான ஐ. நா. மன்ற நிதி நிறுவனத்தின் உதவியோடு இதற்கென நான்காண்டுத் திட்டம் வகுக்கப்பட்டு இப்போது 21 ஆப்பிரிக்க நாடுகள் தங்கள் தங்கள் நாடுகளில் மக்கள் தொகைக்கணக்கெடுக்க முனைந்துள்ளன.

அடுத்த நான்காண்டுகளில் (1974--1977), மக்கள் தொகை சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களைச் சேகரிப்பதும் ஆய்வதுமே இந் நிதியின் முக்கியப் பணியாகும். சில நாடுகளில் மக்கள் தொகைவளர்ச்சி மிகக் குறைவாக இருப்பதால், பிறப்பு விகிதத்தை உயர்த்த வேண்டியதும் இந் நிதியின் பொறுப்பாகி விடுகிறது. மக்கள் தொகைப் பிரச்சினை வளர்ந்து வரும் நாடுகளுக்கு மட்டும் உரியது என்று இந்நிதி கருதவில்லை. அனைத்துலகும் முனைந்து செயல்பட்டுத் தீர்க்க வேண்டிய பிரச்சினை மக்கள் தொகைப் பிரச்சினை என இந் நிதி நிறுவனம் கருதுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் மக்கள் தொகைத் தீர்வுக்கான பணிகளில் ஐ.நா. மன்றம் ஈடுபடுவதையே எதிர்த்த நாடுகள், இந் நிதி நிறுவனம் ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டத் தலைப்பட்டிருப்பது அதன் தொண்டுக்கு வலியூட்டுவதாக அமைந்துள்ளது.

உலக உணவு உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயத்தை வளர்க்கவும் ஐ.நா. மன்றத்திற்குட்பட்டுத் தன்னிச்சையாகச் செயல்படும் நிறுவனம் உணவு--விவசாய நிறுவனமாகும். வறுமையை ஒழிக்கவும், ஊட்டச் சத்துணவுக்குறையை நீக்கவும், பசியைப் போக்கவும் உணவு உற்பத்தியைப்பெருக்கி முறையான பங்கீட்டிற்கு ஏற்பாடு செய்து, கிராமப் புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, உலகப் பொருளாதாரத்தை உயரச் செய்வதுமே இந் நிறுவனம் துவக்கப்பட்டதின் நோக்கமாகும். 1945-ஆம் ஆண்டில் இந் நிறுவனம் துவக்கப்பட்டது.

வாஷிங்டனில் முதன் முதலில் இயங்கிய இதன் தலைமைச் செயலகம் 1951-ஆம் ஆண்டு முதல் இத்தாலியின் தலைநகராகிய ரோமில் இயங்கி வருகிறது.

மக்கள் தொகைக்கும், உணவு உற்பத்திக்கும் உள்ள சம்பந்தம் பற்றி தகவல் அறிவித்தல், ஆய்வு நடத்துதல், எதிர்கால மக்கள் தொகைப் பெருக்கம் பற்றியும் உணவு உற்பத்தி பற்றியும் புள்ளி விவரம் தயாரித்து அளித்தல், கிராம மக்களிடையே கிராமப் பொருளாதாரத்தைக் கொண்டே மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவுகளை விவாதித்தல் ஆகிய பணிகளில் இந் நிறுவனம் ஈடுபட்டுச் செயல்படுகிறது. இதற்கான நிதியுதவியை, மக்கள் தொகைப் பணிகளுக்கான ஐ. நா. மன்ற நிதி நிறுவனத்திடமிருந்து உணவு--விவசாய நிறுவனம் பெறுகிறது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 'சோளிங்கர்' என்று அழைக்கப்படும் ஊரின் உண்மையான பெயர் சோழ சிங்கபுரம். இதுவே சோளங்கிபுரம் என்று அழைக்கப்பட்டு, ஆங்கிலேயர்களால் சோளிங்கர் என்று அழைக்கப்பட்டது. இவ்வூருக்குக் கடிகாசலம் என்ற பெயரும் உண்டு.

இவ்வூரில் சோழமன்னன் ஒருவன் சிவலிங்கத்திற்குக் கோவில் அமைத்தான். அதனால் சோழலிங்கபுரம் என்று பெயர்பெற்றது. சோழலிங்கபுரமே சோழசிங்கபுரம் என்று மாறிற்று என்றும் கூறுகிறார்கள்.

அமெரிக்காவிலுள்ள விடுதலைச் சிலையின் உயரம் நூற்று ஐம்பத்தோர் அடியாகும். பாரிஸ் நகரத்தில் உருவாக்கப்பட்ட இந்தச் சிலையைச் செய்திடப் பத்து ஆண்டுகளுக்கு மேல் பிடித்ததாம். இந்தச் சிலை செய்வதற்கான 2,50,000 டாலரையும் பிரெஞ்சு நாட்டு மக்களே கொடுத்தனர். 1886-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 28-ஆம் நாள் இந்தச் சிலை விடுதலைச் சின்னமாகத் திறந்து வைக்கப்பட்டது.

# மகப்பேறு மருத்துவ மனை பெற்ற மாபெரும் பேறு!

தமிழ் நாட்டில் ஆண்டுக்கு 800 முதல் 1000 பேர் மருத்துவர்களாகப் படித்து வருகிறார்கள். அவர்கள் அனைவருக்கும் அரசாங்க வேலை தர இயலுமா? இதற்கு என்ன செய்யலாம்?

நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் இதற்கு விடை தருகிறார் :

"அரசு மருத்துவ மனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் சொந்தமாகத் தொழில் நடத்துவதை அவர்களாகவே விட்டு விட வேண்டும். இப்போதுள்ள விதி முறைகளில் கூட மருத்துவர்கள் தனியார்ச் சிகிச்சை அளிக்கக் கூடாது; ஆலோசனை மட்டுமே கூற வேண்டும் என்று இருக்கிறது.

"அரசு மருத்துவ மனைகளில் உள்ள மருத்துவர்கள் வேலையில்லாமல் இருக்கும் மருத்துவரை அமர்த்திக் கொண்டு சொந்த முறையில் தொழில் நடத்தினால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும்.

"புதிதாகப் படித்து வருகிற மருத்துவர்கள் இரண்டு ஆண்டுகளுக்காவது கிராமப் புறங்களிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் பணியாற்ற முன் வர வேண்டும்."

சென்னை எழும்பூர் மகப்பேறு மகளிர் நோய் இயல் நிலையம் மற்றும் அரசினர் தாய்-சேய் நல மருத்துவ மனையில் சுமார் ரூ. 9.50 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள (1) தாய்—சேய் நலப் பகுதி (பேறு கால முன் பணிப் பகுதி), (2) வெளிப் புற நோயாளிகள் பகுதி (அவசர உதவிப் பகுதியுடன்),(3) மகப்பேறு மகளிர் நோய் இயல் நிலையம் ஆகிய கட்டடங்களை அக்டோபர் முதல் நாளன்று நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் திறந்து வைத்தார்.

நவீன வசதிகளுடன் கூடிய இந்தப் பகுதிகள் பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் பணியாற்றும்.



மருத்துவம் என்பது மிக இன்றியமையாத ஒன்று என்று நமக்குத் தெரியும். இவ்வசதியைப் பெறத் தலைநகரங்களுக்குச்செல்ல வேண்டிய அவசியமில்லாமல், சிற்றூர்களிலும், கிராமங்களிலும்கூட மருத்துவ மனைகள் அமைக்க வேண்டியதின் அவசியத்தை நன்குணர்ந்த தமிழ் நாடு அரசு விரைந்து பல ஆக்கப் பணிகளை ஆற்றி வருகின்றது. இப்படிப் பெருகி வரும் மருத்துவ மனைகளின் தேவைக்கேற்ப மருத்துவத்தில் பல கிளைகளில் பயிற்சி பெற்ற திறமை மிக்க மருத்துவர்கள் வேண்டும். இம்மருத்துவர்களை உருவாக்குவதற்கும் பொது மக்கள் பயன் பெறுவதற்கும் இந்தப் புதிய பகுதிகள் பெரிதும் உதவும்.

தாய்--சேய் மருத்துவமனை மற்றும் புற நோயாளிகள் மருத்துவ மனை கட்டுவதற்குத் தமிழக அரசு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 3.90 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

இக்கட்டடத்தில் தரைத் தளம் 378 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. இத்தரைத் தளத்தில் முன் வராண்டாவுடன் கூடிய 10 படுக்கைகள் கொண்ட இரு பகுதியும், செவிலியர் அறையும், தணிப்பு அறையும், சமையல் அறையும் அமைக்கப்பட்டுள்ளன.

புற நோய் மருத்துவ மனை, இரு தளங்களைக் கொண்டது. இத்தரைத் தளத்தில் சேர்ப்பு அறை, விபத்துத் துறை அறை, நோயாளி தங்கும் அறை, புற நோய்களை மறு பரிசீலனை செய்யும் அறை, இரத்தச் சேமிப்பு அறை ஆகிய வசதிகள் உள்ளன.

இரண்டாவது தளத்தில் நுண் கிருமி ஆய்வகமும், நோய்த் தடைக் காப்பு அறையும், 14 படுக்கைகள் கொண்ட கூடமும் அமைக்கப்பட்டுள்ளன. இதன் அருகிலேயே மகப் பேறு சம்பந்தமான பொருட்காட்சி ஒன்று ரூ. 2.50 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

நீராவிச் சலவை நிலையம் ஒன்று ரூ. 1.50 இலட்சம் செலவில் கட்டும் வேலைக்கான மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

மகப் பேறு மகளிர் நோய் இயல் நிலையம் இரண்டு தளங்களால் ஆனது. கீழ்த் தளத்தில் திரைப்படம் காட்டும் வசதிகளுடன் கூடிய விரிவுரைக் கூடம், இயக்குநர் அறை, அலுவலக அறை, ஆராய்ச்சிக்கான அறை, உயிரியல் விஞ்ஞான அறை, பண்டகசாலை அறை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

மேல் தளத்தில் நோய்த் தடுப்புக் காப்பு அறை, நூலக அறை, ஆய்வாளர்களுக்கான அறை ஆகியவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

எழும்பூரிலுள்ள இந்த அரசினர் மகப்பேறு மருத்துவ மனை இந்தியாவிலேயே மிகப் பெரிய, மிகப் பழமையான மருத்துவ மனைகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் வயது எத்தனை தெரியுமா? நூற்று இருபத்தொன்பது! 1844--ல் எழும்பூரில் கூவம் ஆற்றங்கரையில் தொடங்கப்பெற்ற இது, 1882--ல் இப்போதுள்ள இடத்துக்கு மாற்றப்பட்டது.

முதலாவது ஆண்டில் பேறு கால உதவி பெற்ற மகளிர் 100 பேர் ஆவர். ஆனால் இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டேபோய் இன்று 15,000 என்ற அளவில் வந்துவிட்டது! இந்நிலை நீடிக்கலாமா?

ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 4,000 கருச் சிதைவுகள் இம்மருத்துவ மனையில் நிகழ்கின்றன. மகப்பேறு இன்றி மகளிர் நோய் இயல் வகையில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை ஆண்டுக்குச் சுமார் 4,000.

எழும்பூரிலுள்ள இந்தப் பழம் பெரும் மருத்துவமனையில், கருப் பையில் புற்று நோய்ச் சிகிச்சைக்காக மட்டும் 88 படுக்கைகள் கொண்ட தனிப் பிரிவு உள்ளது. இந்தப் பிரிவில் ஆண்டுக்குச் சுமார் 1000 பேர் சிகிச்சை பெறுகிறார்கள்.

புற்றுநோய்ச் சிகிச்சைக்காகத் தற்சமயம் அறுவைச் சிகிச்சை முறை, கதிரியக்க முறை ஆகிய வசதிகள் உள்ளன. விரைவில் 'கோபால்டு' கருவியினை அமைக்கத் தமிழ் நாடு அரசு முனைந்துள்ளது. இது செயல்பட்டால் பெருமளவில் சிகிச்சை அளிக்கவும், தங்கிச் சிகிச்சை பெறும் கால அளவினைக் குறைக்கவும் முடியும். இவையன்றிக் கருப்பைப் புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிவதற்கான நிலையம் ஒன்றை அமைக்கவும் தக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

தொடக்கத்திலிருந்தே இந்த மருத்துவ மனை, மருத்துவக் கல்வி மாணவர்களின் பயிற்சிக்குப் பயன்பட்டு வருகிறது. பின்னர் மருத்துவச்சிகள், செவிலியர்கள் பயிற்சிக்

# வீட்டுத் தோட்டம் அமைக்க இடமே இல்லையென்றால்?

வீட்டுத் தோட்டம் அமைத்துக் காய்கறிச் செடிகளை வளர்க்க ஆர்வம் இருப்பினும், இடம் இல்லையே என்று நகரங்களில் உள்ள பலர் கவலைப்படக் கூடும்!

இடம் இல்லை என்று கவலைப்பட வேண்டாம்!

தொட்டிகளிலும், மரப்பெட்டிகளிலும், கூடைகளிலும், வீட்டுக் கூரைகளிலும், குடிசைகளிலும், மாடிகளிலும், வராந்தாக்களிலும், வீட்டிற்குள்ளும், உடைந்த பானைகளிலும், காலி டப்பாக்களிலும், தொங்கும் தொட்டிகளிலும், வேலிகளிலும், காய்கறிச் செடிகளைப் பயிரிடலாம்!

## எப்படி?

### 1. தொட்டிகளில் காய்கறி பயிரிடும் முறை.

மண்தொட்டிகளையோ அல்லது சிமெண்டு தொட்டிகளையோ உபயோகியுங்கள்.

தொட்டிகளின் அடிப்பாகத்தில் 1 அல்லது 2 துவாரங்களை ஏற்படுத்துங்கள்.

தொட்டிகளின் அடிப்பாகத்தில், ஒரு அடுக்கு சிறு கற்களையோ அல்லது கூழாங்கற்களையோ நிரப்புங்கள்.

அதன் மேல் உடைந்த ஓடுகளைப் பரப்புங்கள்.

ஓடுகளின் மேல் சிறிது நல்ல மணலைப் பரப்புங்கள்.

மணலின் மேல், பின்கண்டவைகள் கலந்த கலவை மண்ணைப் போட்டு தொட்டியில் முக்கால் அளவுவரை நிரப்புங்கள்.

| | | | |
|---|---|---|---|
| செம்மண் | .. | 2 | பாகம். |
| தொழு எரு அல்லது கலவை எரு. | .. | 2 | பாகம். |
| ஆற்று மணல் | .. | 1 | பாகம். |
| இலைமக்கு | .. | 1 | பாகம். |

இவ்வாறு நிரப்பப்பட்ட தொட்டிகளில் தக்காளி, கத்தரி, மிளகாய் போன்றவற்றின் நாற்றுகளை நடுங்கள்.

ஒவ்வொரு தொட்டியிலும் 1 அல்லது 2 நாற்றுகளை நடுங்கள். தொட்டிகளைக் காயவிடாமல் மூன்று நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் ஊற்றுங்கள்.

தக்காளி, பட்டாணி ஆகியவைகளுக்குக் கம்புகள் அல்லது குச்சிகளில் இணைத்துக் கட்டி வளர விடுங்கள்.



மண் தொட்டியில் கத்தரிச் செடி



நாற்று நட்ட 30-ஆம் நாள் ஒரு தேக்கரண்டி அளவு 6:12:12 கலப்பு உரத்தை ஒவ்வொரு தொட்டிகளிலும் போடவும்.

இதுபோலவே மீண்டும் பூக்கள் தோன்றுவதற்கு முன் போடவும்.

அல்லது நாற்று நட்ட ஒரு மாதத்திலிருந்து 15 நாட்களுக்கு ஒருமுறை ஒரு அவுன்சு (28 கிராம்) 6:12:12 கலப்பு உரத்தை 4.5 லிட்டர் (ஒரு காலன்) தண்ணீரில் கரைத்துப் போதிய அளவு ஒவ்வொரு தொட்டியிலும் ஊற்றி, செடிகளை வளமாக வளரச் செய்யுங்கள்.

பூச்சிகளைத் தடுக்க நாற்று நட்ட 15 நாட்களில் தொடங்கி 15 நாட்களுக்கு ஒருமுறை வீதம் 3 அல்லது 5 தடவை என்ட்ரின் (1 மில்லி லிட்டர் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது டி.டி.டீ. 50 சத மருந்தை (2 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) செடிகளின்மேல் தெளியுங்கள்.

பெரிய தொட்டிகளில் புடலை விதைகளை ஊன்றி, வளர்த்து கொடிகள் படர தொட்டிகளில் கம்புகளை நட்டுப் பந்தல் அமையுங்கள்.

நல்ல பலன் பெற, தொட்டிகளில் உரிய மண்ணை ஆண்டிற்கு ஒருமுறை மாற்றுங்கள்.

### 2. கூடைகளிலும், காலி டப்பாக்களிலும் உடைந்த பானைகளிலும் பயிரிடலாம்.

கூடைகளில் துவாரம் இருப்பதால், கூடைகளிலும் மேற்கூறியபடி கல், மண் ஆகியவைகளை நிரப்பி காய்கறி பயிரிடலாம்.

காலி டப்பாக்களின் அடியில் துவாரம் செய்துவிட்டு மேற்கண்டபடி நிரப்பியும், காய்கறி பயிரிடலாம்.

இதே முறையில் உடைந்த பானைகளிலும் காய்கறி பயிரிடலாம்.



### 3. மரப்பெட்டிகளில் சாகுபடி செய்யும் முறை :—

மரப்பெட்டியின் உட்புறம் தண்ணீரால் பாதிக்கப்படாமல் இருக்க 'வார்னிஷ்' பூசுங்கள். அடிப்பாகத்தில் துவாரம் செய்து நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்துங்கள்.

மரப்பெட்டிகளை நிற்க வைப்பதற்காக 4 பக்கத்திலும் கால்களைப் பொருத்துங்கள். இல்லையேல் உருளைகளைப் பயன்படுத்துங்கள்.

அதோடு மற்ற இடங்களுக்கு நகர்த்திச் செல்வதற்கு வசதியாக நாற்புறமும் கைப்பிடி அமைத்துக் கொள்ளுங்கள்.

மரப்பெட்டியில் முககால் அளவு உயரம்வரை அடிப்பாகத்திலிருந்து முறையே கற்கள், ஓடுகள், மணல், கலவைமண் ஆகியவைகளைப் போட்டு நிரப்புங்கள்.

பெரிய மரப்பெட்டிகளில் (75 செ.மீ. நீளம், 45 செ.மீ. அகலம், 50 செ.மீ. உயரம்) கத்தரி, தக்காளி, முட்டைக் கோஸ் போன்றவற்றின் நாற்றுகளை 30 செ.மீ. முதல் 40 செ.மீ. இடைவெளி விட்டு நடுங்கள்.

குறைந்த உயரமுள்ள (20 செ.மீ. முதல் 30 செ.மீ.வரை) மரப்பெட்டிகளில் தண்டுக்கீரை, புதினா, அரைக்கீரை, கொத்தமல்லி, வெந்தயக்கீரை ஆகிய குறுகிய கால கீரைகளைச் சாகுபடி செய்யலாம்.

எத்தகைய அளவு மரப்பெட்டிகள் கிடைத்தாலும் காய்கறி சாகுபடி செய்ய முயலுங்கள்.

### 4. குடிசைகளின் மேலும் வீட்டுக் கூரைகளின் மேலும் பயிரிடும் முறை :—

பூமியில் பறங்கி, பூசணி சுரை போன்றவற்றை வளர்த்து, அவைகளின் கொடிகளை குடிசைகளின் மேலும், கூரை வீடுகளின் மேலும் ஏற்றி, படர விட்டு, ஏராளமான காய்களை கிராமத்தவர்கள் பெறுகிறார்கள்

அதுபோலவே நகரங்களில் உள்ள குடிசைகளின் மேலும், கூரை வீடுகளின் மேலும் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

### 5. மாடிகளில் காய்கறிச் செடிகளை பயிரிடும் முறை :—

மாடிகளின் மேல் தளத்தில் குறுகிய அகலமுள்ள நீண்ட பாத்திகளைச் சிமெண்டினால் கட்டுங்கள்.

அப்பாத்திகளில் போதிய அளவு மண்கலவையை இட்டு கத்தரி, தக்காளி, வெண்டை, கொத்தவரை, மிளகாய் ஆகியவைகளைப் பயிரிடுங்கள்.





கான நிலையமாகவும் இது ஆயிற்று. 1930--ஆம் ஆண்டிலிருந்தே மேல் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு இது பயிற்சி தருகின்றது என்றாலும் 1952-ஆம் ஆண்டில்தான் இது உயர் தரக் கல்விக்குரிய நிலையமாக ஒப்புதல் பெற்றது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் வந்து இங்கே பயிற்சி பெறுகிறார்கள். இதன் தொடர்பாக ஆராய்ச்சி வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மானிடப் பிறப்பியல் குறித்து எல்லா அம்சங்களையும் ஆராய்வதற்காகத் தனியாக இப் பெரிய பகுதியைக் கட்டட வசதியுடன் ஏற்படுத்தக் கடந்த பத்து ஆண்டுக் காலமாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1970-ல் கட்டட வேலை தொடங்கி, 1973-ஆம் ஆண்டு செப்டம்பரில் வேலை முடிக்கப்பெற்றது. உரிய அலுவலர்கள் அமர்த்தப் பெற்றுப் பணி தொடங்கியதும் மிகச் சிறந்த ஆராய்ச்சி நிலையங்களில் ஒன்றாக இது திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

குடும்ப நலத் திட்டத்துக்காகப் போதிய அலுவலர் வசதியும், கருவிகள் வசதியும் உள்ள சிறந்த நிலையம் ஒன்று இந்த மருத்துவ மனையில் உள்ளது. நமது நாட்டிலும் மற்ற நாடுகளிலும் கடைபிடிக்கப்படும் எல்லா முறைகளையும் குறித்து இதில் ஆலோசனை வழங்கப்படுகிறது. அலுவலர்களுக்குப் பயிற்சி வசதியும் இங்குத் தரப்படுகிறது. குடும்ப நலம் சம்பந்தப்பட்ட பிற உதவிகளுடன் இதில் ஆண்டுக்கு 2,000 பெண்கள் கருத்தடைக்கான அறுவைச் சிகிச்சை பெறுகின்றனர்.





இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம், உலக மக்கள் நல்வாழ்வு நிறுவனம் ஆகியவை இந்தத் திட்டத்துக்கு ஓரளவு உதவுகின்றன. குடிசைப் பகுதிகளில் வாழும் வசதிக் குறைவான மக்களுக்கு இவ்வகையிலும் அவசரக் காலத்திலும் தனி உதவிகள் அளிப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. உரிய காலத்துக்கு முன் கூட்டியே பிறந்துவிடும் குழந்தைகளைப் பேணவும், தனி வசதி உள்ள பகுதி இங்கே இருக்கின்றது.

தமிழ் நாடு அரசுப் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து, இம் மருத்துவ மனையில் இரண்டு பகுதிகள் கட்ட அரசு ரூ. 4.5 இலட்சம் ஒதுக்கிக் கொடுத்தது. இதில் ஒரு பகுதி மகப்பேறு நோய்ச் சிகிச்சைக்காக 20 படுக்கைகள் கொண்டது. மற்றொரு பகுதி மகளிர் நோய் சம்பந்தமாக அவசர உதவிக்காக 24 மணி நேரமும் பணியாற்றும். இவை நீண்ட காலமாக வேண்டப்பட்டுவந்த தேவையாகும். அவசர முறையில் உடனடியாக உதவியளிக்க இது சிறந்த ஏற்பாடு ஆகும். அறுவைச் சிகிச்சைக்குப் பின்பு கவனிக்கப்பட வேண்டியவர்களுக்காக 14 படுக்கைகள் உள்ள பிரிவும் இங்கே இருக்கின்றது.

நித்தம் நித்தம் வரும் தாய்மார்களுக்கு என்று திறக்கப்பட்டுள்ள புத்தம் புதிய கட்டடங்களில் நிறைந்த வசதிகளைத் தந்து, அவர்கள் நல்வாழ்வுக்கு வழி வகுக்கின்றது தமிழக அரசு.

வேளாண்மை, தொழில், கல்வி, மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் வளமும் நலமும் பெறவும், தமிழகம் ஓர் முன்மாதிரியாகத் திகழவும் நாம் முன் வர வேண்டும். ஆம். அது நம்முடைய ஒத்துழைப்பில்தான் இருக்கிறது! அதுதான் ''நாம் இருவர்; நமக்கு இருவர்'' என்ற திருவாசகம். இதனை வாழ்க்கையில் கடைப்பிடித்தால் வளம் வந்து சேரும்; வளரும் மக்கள் தொகை எனும் பயங்கரப் பிடியிலிருந்தும் நாம் விடுபடலாம்.

—பி.வி.ஜி







## 1845 முதல் 1972 வரை!

வளர்ச்சியின் வைரி எது?

பெருகிவரும் மக்கள் தொகையே அன்றோ?

அரசின் திட்டங்கள் எத்தனை எத்தனையோ! அத்தனையும் செயல் வடிவம் பெற்றுச் செம்மையாவதறகுச் சிறந்த வழி மக்கள் தொகையினைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதுதான்.

வளமான குடும்பம் என்பது அளவான குடும்பம் அன்றோ? அதனால்தான் 'நாம் இருவர் நாம் பெறுவதும் இருவர்' என்றனர். இந்த வாசகத்தை வாழ்க்கையில் கடைப் பிடித்தால்தான் நாம் கடைத்தேற முடியும்!

இதோ, இந்தப் புள்ளி விவரங்களைப் பாருங்கள்! எழும்பூர் மகப்பேறு மருத்துவ மனையில் 1845-ல் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையையும், 1972-ல் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையையும் பார்க்கும்போது விந்தையாக மட்டுமல்ல, விபரீதமாக முடியும் என்று அஞ்சவும் வேண்டியிருக்கிறது.

இதோ! அந்தப் புள்ளி விவரம்: 1845-ல் 62 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அதேபோல 1855–740, 1865–1186, 1875–1136, 1885–1574, 1895–1762, 1905–2153, 1915–2118, 1925–2923, 1935–4035, 1945–6377, 1955–11112, 1965–15,534, 1972-ல் எத்தனைக் குழந்தைகள் தெரியுமா? 14,000.








# பயன்மிகு நெசவுக்குப் பாதுகாப்புத் தந்திடுவோம்!



உழவுதனை முதல்தொழிலாய் நம்பி வாழும்
ஒப்பரிய தமிழகத்தில் உழவர் கூட்டம்
பழகிவந்த பழையமுறை மாற்றி, இன்று
பண்பட்ட புதியமுறை புகுத்தி, மேலும்
அழகுமிகும் அணைகட்டி, ஏரி கால்வாய்
ஆழமாக்கி, நீர்இறைக்கக் குழாய மைத்தே,
எழவேண்டும் எருவளித்துக் கடன்கள் தந்தும்
ஈடின்றி மிகுவிளைச்சல் நிறைத்து விட்டோம்!

பற்றாத குறையெல்லாம் பழைய காதை
பயிர்வளர்ப்போர் உயர்வடைந்தார் புதிய உண்மை
மற்றோரும் உணவுவகை பெற்றுச் செல்ல
மகிழ்வோடு நம்மைத்தான் அணுகு கின்றார்
முற்றாத பிஞ்சுமனம் இல்லை யாக
முறுவலுடன் கேட்பவர்க்கு வழங்கு கின்றோம்
சற்றேனும் நன்றியுள்ளார் இதனை யெல்லாம்
'சாதனையின் உச்சமென மெச்சு கின்றார்

அடுத்ததாக மிகநீண்ட காலந் தொட்டே
அருமையுடன் போற்றிவந்த தொழிலொன் றுண்டாம்
உடுத்துகின்ற ஆடைவகை நெய்வ தைத்தான்
உயர்ந்ததொரு செய்தொழிலாய் வளர்த்து வந்தோம்
எடுத்ததெலாம் வெற்றியுடன் முடித்துத் தந்தோம்
இன்றுமிக நலிந்துவிட்ட நெசவா ளர்க்கே
தொடுத்துவரும் துயரங்கள் துடைத்து நல்ல
சுகவாழ்வின் தொடக்கத்தை விரைவில் காண்போம்



கைத்திறனைக் காட்டுகின்ற பருத்தி யாடை,
கவின்மிகுந்த பட்டாடை: தமிழ கத்தின்
கைத்தறிக்கு நிகராக உலகில் இல்லை!
கண்போல அதைக் காத்தல் கடமை யன்றோ?
தைத்திருநாள், திருமணங்கள், விழாக்கள் யாவும்
தழைத்திடுதல் பொன்னிழையால் மின்னும் சேலை
வைத்திருப்ப தாலன்றோ? வாழ்வு குன்றா
வகையாகப் பாதுகாப்புத் தருவோம் நன்றாய்!

கவிஞர் கருணானந்தம்



மழைக் காலத்தில் முட்டை கோஸ், பூக்கோஸ், டர்னிப், பீட்ரூட் போன்றவற்றைப் பயிரிடுங்கள்.

மொட்டை மாடிகளில் பந்தல் போட்டு அல்லது கயிறுகளால் வலைபோல் அமைத்து, அதில் தொட்டியில் வளர்க்கப்பட்ட பீர்க்கு, புடல், சுரை, பாகல் ஆகியவற்றைப் படர விடுங்கள்.

நகரங்களில் உள்ள மொட்டை மாடிகளிலும், கீழே பூமியில் வளர்க்கப்பட்ட செடிகளைக் கம்பிகள் அல்லது கயிறுகள் மூலம் ஏற்றி, கயிறுகளால் வலைகள் அமைத்து அல்லது பந்தல் அமைத்து அதன்மேல் கொடிகளைப் படரவிட்டுக் காய்கறிச் செடிகளைப் பயிரிடுங்கள்.

**6. வராந்தாக்களில் காய்கறி பயிரிடும் முறை :-**

வீட்டின் வெளிப்புற, உட்புற வராந்தாக்களில் சூரிய வெளிச்சம் படுமானால் பாகல், பசலைக் கீரை போன்றவைகளைத் தொட்டிகளில் வளர்த்து, மூங்கில் தட்டிகளில் படர விடுங்கள்.

**7. வீட்டிற்குள்ளும் பயிரிடும் முறை :**

வீட்டிற்குள்ளே நிழலிலும் வளர்ந்து பலனளிக்கக்கூடிய பசலை ( Basella ), சிலோன் பசலை ( Ceylon Spinach ) ஆகியவைகளைத் தொட்டிகளில் வளர்த்துப் பயன் பெறுங்கள்.

இதனால் வீட்டிற்குப் பசுமை கொண்ட அழகும், உங்கள் உணவிற்கு வேண்டிய கீரைகளும் கிடைப்பதால், மகிழ்ச்சியும், நல்வாழ்வும் கிடைக்கும்.

**8. தொங்கும் தொட்டிகளில் பயிரிடும் முறை :-**

தொங்கும் பெரிய தொட்டிகளில் பூச்செடிகளுக்குப் பதிலாக தவசிக்கீரை, கொடிப் பசலை போன்ற நிரந்தரப் பலன் தரும், கீரை வகைகளைப் பயிரிட்டு அழகும், பயனும் பெறுங்கள்.

தொங்கும் சிறு தொட்டிகளில் 'சிலோன் பசலை' வளர்த்துப் பயன் பெறுங்கள்.

**9. வேலியில் பயிரிடும் முறை :-**

வீட்டைச் சுற்றியுள்ள வேலிகளில் கொடிவகைக் காய்கறிச் செடிகளைப் படர விடுங்கள்.

மேற்கூறிய ஒன்பது வகைகளில் காய்கறி பயிரிட்டால் காய்கறிகளுக்காகும் செலவும் குறையும்! சிறந்த பொழுது போக்காக அமையும்! வாழ்வும் வளம் பெறும்!

வேண்டுகோள்.

வீட்டுத் தோட்டம் அமைப்பது, நாட்டிற்கு நல்லதோர் சேவையாக இருப்பதால், மேற்கண்ட முறைகளைப் பின்பற்றி காய்கறி உற்பத்தியைப் பெருக்கி காய்கறிக்காகும் செலவைக் கணிசமாகக் குறைத்துக் கொள்ளுங்கள்.

வீட்டுத் தோட்டம் அமைப்பதிலும், காய்கறிச் சாகுபடி முறைகளிலும், குறிப்பாகத் தாய்மார்களும், குழந்தைகளும் சிறந்த பொழுது போக்காகக் கருதி நாளொன்றுக்கு ஒருமணி நேரம் ஈடுபட்டால், புத்தம் புதிய, சுவையான காய்களைப் பெற்று வளமான வாழ்வு வாழலாம். எனவே மேற்கண்ட முறைகளை உடனே மேற்கொண்டு வீட்டுத் தோட்டம் அமைத்துக் காய்கறி பயிரிடுங்கள் என்று 'தமிழரசு' சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

நாட்டுக்கு நல்லசேவை செய்திட

வீட்டுக்கு ஒரு தோட்டம் அமைத்திடுவீர்!

— ஆர். மாணிக்கம்.





# கேளுங்கள் கொடுக்கப்படும்

**வினா:**—பசுமைப் புரட்சியை உண்டு பண்ணிய தமிழ்நாடு அரசு நீர்வள ஆராய்ச்சிக்கு முக்கிய இடம் தரவில்லையே ஏன்? உயர்ந்த ரக நெல்லையும், தானியங்களையும் பயிரிட ஊக்குவிக்கும் தமிழ்நாடு அரசு வளமான நீர்வளத்தைக் கண்டு பிடிப்பதில் ஆராய்ச்சி மேற்கொள்ளவில்லை. ஏனெனில் பல விவசாயிகள் கிணறு வெட்டியும் தண்ணீர் இல்லாமல் படு வேதனைப்படுகிறார்கள்.

மோரூர் மோகன், பி எஸ்சி,.

**விடை:**—தங்கள் கருத்து தவறு என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பரம்பரை பரம்பரையாக மழைநீரைக் கொண்டே தமிழ்நாட்டில் வேளாண்மை நடைபெற்று வந்துள்ளது. ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பருவ நிலை மாறி வானம் பொய்த்து, நாடெங்கும் வேளாண்மை உற்பத்தி குறைந்து விட்டது. இதனால், தமிழ்நாட்டிலும் உணவு உற்பத்தி குறைந்து, விலைவாசி ஏறி விட்டதுடன் பற்றாக்குறையும் ஏற்பட்டு விட்டது. அத்தகைய நிலையில் தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்ற பேரறிஞர் அண்ணா அவர்கள் பசுமைப் புரட்சிக்கு வித்திட்டதுடன், நிலநீர் எடுத்து நீர்வளம் பெருக்கப் பெரு முயற்சி செய்தார்.

அண்ணா அவர்களுக்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடெங்கும் பசுமைப் புரட்சி பரவுவதற்கு வழி கோலியதுடன், நிலநீர் எடுத்து நீர்வளம் பெருக்கும் பணிக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்.

அதன் பயனாகவே, நிலநீர் ஆய்வுக்காகத் தனித்துறை (Ground Water Directorate) தோற்றுவிக்கப் பட்டுள்ளது; பூண்டி நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்திலும் நிலநீர் ஆராய்ச்சி துரிதமாகநடைபெற்றுவருகிறது. தண்ணீரைப் பெருமளவு சேதமாக்காமல், சிக்கனமாக, குறைந்த அளவு நீரைக் கொண்டு நிறைந்த மகசூல் பெறுவதற்கான ஆராய்ச்சிகளைத் தமிழ்நாடு வேளாண்மைத்துறையும், பாசன நீர்பற்றிய ஆராய்ச்சிகளைத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் துரிதமாக மேற்கொண்டு வருகின்றன.

நிலநீர் எடுத்து நீர்வளம் பெருக்குவதற்காகவே இன்றையத் தமிழ்நாடு அரசு உலக வங்கியின் (World Bank) கடனுதவி பெற்றுத் தமிழ்நாடெங்கும் கிணறுகள் தோண்டக் கூட்டுறவுத் துறை மூலம் கடன் வழங்கி வருகிறது.

தற்போதுள்ள பிரச்சினை என்னவென்றால், எந்த இடத்தில் கிணறு வெட்டினால் போதிய அளவுக்கு நல்ல தண்ணீர் கிடைக்கும் என்பது உழவர் பெருமக்களுக்குத் தெரியவில்லை என்பதேயாகும். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே, நிலநீர் ஆய்வு தமிழ்நாடெங்கும் துரிதமாக நடைபெற்று வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நிலநீர் ஆய்வு முடிந்து விட்டது. மற்ற மாவட்டங்களில் ஆய்வுப் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. இவ்வாய்வுப் பணிகள் முழு அளவில் முடிந்த பிறகு எந்த இடத்தில் கிணறு வெட்டினால் போதிய அளவு தண்ணீர் கிடைக்கும் என்பதை உழவர் பெருமக்களுக்குக் கூற இயலும்! அந்த நாள் விரைவில் வரத்தான் போகிறது! எனவே, தமிழ்நாடு அரசு நீர்வள ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் தரவில்லை என்று கூறுவது தவறான கருத்தாகும்!



* * *

**வினா:**—'தமிழரசு' சூன் 15ஆம் தேதி இதழ் கண்டேன். சூரிய காந்தி கட்டுரையைக் கண்டு மகிழ்ச்சியுற்றேன். அதன் ஒவ்வொரு பாகமும் பயன்படுவது மகிழ்வுறத் தக்கது தானே! இலைகளைப் பற்றிக் கூறும் போது அவைகளை 'சைலேஜ்' முறையில் பதப்படுத்தி வைத்துக் கொண்டு கால்நடைகளுக்குத் தீவனமாகக் கொடுக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். 'சைலேஜ்' முறை பதப்படுத்தல் என்றால் என்ன? விவரமாகக் கூறுங்கள்.

—பா. சங்கரக்குமாரசாமி,
வீரப்பட்டி, முத்தலாபுரம் அஞ்சல், விளாத்திகுளம் வட்டம், நெல்லை மாவட்டம்.

**விடை:**—பசுமையாக உள்ள தீவனப் பயிர்களைக் குழிகளில் காற்று இல்லாமல் அடைத்துப் பதப்படுத்துவதற்கு 'சைலேஜ்' முறை என்று பெயர். சூரிய காந்திச் செடிகளை வெட்டி 'சைலேஜ்' முறையில் பதப்

பு

படுத்தப் பின் கண்டவாறு செய்ய வேண்டும்.

நீர்மட்டம் தரை மட்டத்திற்குக் கீழே 12 அடிக்கும் மேல் உள்ள இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்தில் 'சைலேஜ்' தயாரிப்பதற்கான குழிகள் தோண்ட வேண்டும். ஒரு டன் பசுந்தீவனத்தைப் பதப்படுத்த 90 கன அடி இடம் தேவைப்படுகிறது. இந்த அளவை அடிப்படையாகக் கொண்டு நம் தேவைக்கேற்பக் குழிகளின் நீள, அகல, ஆழத்தை நிர்ணயித்துக் கொள்ளலாம். பொதுவாக 8 முதல் 10 அடி ஆழமும், 6 முதல் 8 அடி அகலமும், தேவையான அளவு நீளமும் உள்ளதாகக் குழிகள் தோண்டப்பட வேண்டும். குழிகள் மேலே விரிந்தும், கீழே குறுகியும் அதாவது பக்கவாட்டில் சற்றுச் சாய்வாகவும் இருக்க வேண்டும்

சூரிய காந்திச் செடிகளைப் பூக்கும் சமயத்தில் வெட்ட வேண்டும். பிறகு அவைகளைச் சிறுசிறு துண்டுகளாக வெட்ட வேண்டும். காய்ந்த வைக்கோலைக் குழிகளின் அடியிலும், பக்கவாட்டிலும், அண்டை கட்டி வைத்துக் கொண்டு, சூரிய காந்திச் செடிகளின் துண்டுகளைக் குழியில் காற்றுப் புகா வண்ணம், நெருக்கமாக ஒருஅடி உயரம்வரை நிரப்ப வேண்டும். அதன்மேல் சர்க்கரை ஆலைக் கழிவாக வரும் வெல்லப் பாகு ஒரு பங்குடன் 3 அல்லது 4 பங்கு தண்ணீரைக் கலந்து அல்லது கூழ் வெல்லம் அல்லது வெல்லத்தைக் கரைத்துத் தெளிக்க வேண்டும். அதன் பின் அவைகளை நன்றாக மிதித்து அமுந்தச் செய்ய வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு அடி உயரமாகச் சூரிய காந்தித் துண்டுகளைப் போட்டு, வெல்லப்பாகு தண்ணீர் தெளித்து, நன்கு அழுத்தி நிரப்ப வேண்டும். தரை மட்டத்திற்கு மேல் 3 அல்லது 4 அடி உயரத்திற்கு இவ்வாறு நிரப்பிய பின் மேலே வைக்கோலைப்போட்டு மூடி அதன் மேல் 4 முதல் 6 அங்குல கனத்திற்கு மண் போட்டு மூடி விட வேண்டும். இதன்மேல் விழும் மழைத் தண்ணீர் எளிதில் வடிவதற்காக மேல் மட்டத்தை அரை உருண்டை வடிவில் (Dome shape) அமைக்க வேண்டும். குழியில் போடப்பட்ட தீவனம் நாளடைவில் சுருங்குவதால், மேல் மண் மூட்டத்தில் வெடிப்புகளும், குழிகளும் ஏற்படக்கூடும். வெடிப்புகளை ஈர மண்ணால் பூசி மறைப்பதுடன், குழிகளிலும், ஈரமண் போட்டு நிரப்பிச் சரி செய்ய வேண்டும்.



மூன்று மாத காலத்தில் சூரிய காந்தித் துண்டுகள் நன்கு பதப்படுத்தப்பட்ட தீவனமாகிவிடும். அதன்பின் குழியைச் சிறு அளவு திறந்து, அன்றாடத் தேவைக்கு வேண்டிய 'சைலேஜ்' தீவனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு அவ்வப்போது மூடி விட வேண்டும்.

வெல்லப் பாகுக் கரைசல் தெளிப்பதால், 'சைலேஜ்' முறையில் பதப்படுத்தப்பட்ட தீவனத்தை மாடுகள் விரும்பித் தின்னும். தரமான தீவனம் கிடைப்பதற்கு 'சைலேஜ்' குழியில் காற்றுப் புகாவண்ணம் பசுந் தீவனத் துண்டுகளை நெருக்கமாகப் பரப்பி நன்கு அழுத்தி விட்டு, நன்கு மூடுதல் மிகமிக இன்றியமையாததாகும்.

இதே முறையில் மக்காச் சோளம், சோளம், கம்பு, கினியாபுல் ஆகியவைகளையும் பதப்படுத்திச்சிறந்த கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தலாம்.

* * *

**வினா:**—'தமிழரசு' இதழில் சூரியகாந்திச் சாகுபடி செய்வதைப் பற்றிப் படித்தேன். சூரிய காந்திச் சாகுபடி செய்துள்ள நிலத்தில் களைகளை ஒழிக்கக் களைக்கொல்லிகளை உபயோகிக்க வேண்டாம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஏன் களைக் கொல்லிகளை உபயோகிக்கக் கூடாது என்பதை விளக்கமாகக் கூறுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அடுத்து, சூரிய காந்தி விதையை ஒரு கிலோவுக்கு 2 கிராம் வீதம் 'பிராசிகால்' அல்லது "கேப்டான்" மருந்து கலந்து 3 மணி நேரம் அப்படியே ஏன் வைத்திருக்க வேண்டும் என்பதையும் விளக்கமாகத் தெரிவிக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

—எம். மணி,
பொள்ளாச்சி, கோவை
மாவட்டம்.

> சாவு எல்லாருக்கும்
> வருகிறது. ஆனால் செய்
> துள்ள சாதனைகள் நினை
> வுச் சின்னமாக மாறி
> உலகம் அழியும் வரை
> நிலைத்து நிற்கிறது.
> —ஜார்ஜியஸ் பேப்ரிகஸ்

**விடை:**—களைக் கொல்லி மருந்துகளுக்குச் சூரிய காந்தி மிகவும் உணர்ச்சி வயப்படக் கூடியது. (Extremely Sensitive). பக்கத்துத் தளையில் தெளிக்கும் களைக் கொல்லிகளால் கூட, சூரிய காந்தி வாடி விடும்! சூரியகாந்தி ஆரம்பக்காலத்தில் மிகவும் மெதுவாக வளரக் கூடியதாதலின், களைக் கொல்லிகள் இளம் சூரிய காந்திச் செடிகளைச் சாகடித்து விடக் கூடும். இது வரை நடத்தப்பெற்றுள்ள சோதனைகளிலிருந்து, விதைகள் முளைக்கும் முன் தெளிக்கும் களைக் கொல்லிகளை (Pre-emergence Herbicides) சூரிய காந்திக்கு உபயோகிப்பதே பயனுடையது; என்பதும் விதைகள் முளைத்தபின் தெளிக்கும் களைக் கொல்லிகள் ( Post–emergence Herbicides ) சூரிய காந்திச் செடிகளுக்குக் கெடுதலையே ஏற்படுத்தும் என்பதும், தெரிய வந்துள்ளது. எனவே சூரிய காந்தி பயிரிடுவதற்கு முன் கூட்டியே களைக்கொல்லிகளைத் தெளிப்பதே சிறந்தது. ஆகவே தான், சூரிய காந்தி சாகுபடி செய்துள்ள நிலத்தில் -அதாவது சூரிய காந்தி விதைகள் முளைத்த பிறகு களைகளை ஒழிக்கக் களைக் கொல்லிகளை உபயோகிக்க வேண்டாம் என்று குறிப்பிடப் பட்டிருந்தது.

சூரிய காந்தி விதைகளை 'பிராசிகால்' அல்லது 'கேப்டான்' மருந்து கலந்து 3 மணி நேரம் அப்படியே வைத்திருந்தால்தான், விதைகளில் உள்ள பூஞ்சாளங்கள் மருந்தினால் கொல்லப்படக் கூடும். அவ்வாறு செய்தால் சிறு சூரிய காந்திச் செடிகள் அழுகல் நோயினால் இறந்துவிடுவதைத் தவிர்க்க முடியும். அவ்வாறின்றி உடனே விதைத்தால், விதைகளில் ஒட்டியுள்ள மருந்துகள் ஈர மண்ணுடன் ஒட்டிக் கொள்வதால் பூஞ்சாளங்களை அழிக்கும் சக்தியை இழந்து விடுகின்றன. எனவேதான், மருந்து கலந்து 3 மணி நேரம் அப்படியே வைத்திருந்து பிறகு, விதைக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

—ஆர்.எம்.

# பக்கிங்காம் கால்வாய்

**பக்கிங்காம் கால்வாயில் இயந்திரப் படகுகள் செல்லும் வகையில் கால்வாயை மேம்படுத்தும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத் திட்டத்துக்கு மொத்தம் ரூ. 6 கோடி செலவாகும்.**

தமிழகத்துக்கும் ஆந்திர மாநிலத்துக்கும் இடையே மிக நீண்ட நீர்வழித் தடமாகவும் பல்வேறு வழிகளில் பயன் மிகுந்ததாகவும் விளங்குவது பக்கிங்காம் கால்வாய். இக் கால்வாயின் மொத்த நீளம் சுமார் 451 மைல். இதில் பெரும்பகுதி ஆந்திர மாநிலப் பகுதியில் உள்ளது எனினும் தமிழகத்தில் உள்ள கால்வாய்ப் பகுதியும் முக்கியத்துவத்தில் குறைத்ததல்ல.

இன்று சீர்திருத்தம் செய்யப்பட்டு எழிற்கோலம் பெற்றுள்ள கூவம் ஆற்றைப் போலவே சென்னைப் பட்டினத்தின் வாழ்விலும் வரலாற்றிலும் தனியிடம் பெற்றுள்ளது பக்கிங்காம் கால்வாய். மாநகரம் மேலும் அழகுபெற—சுகாதாரக் குறைவான பகுதிகளைத் தூய்மைப்படுத்த — கால்வாய் மூலம் பயன்களைப் பெருக்கிக் கொள்ளப் பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுத் திட்டங்களைத் தமிழக அரசு முழு மூச்சுடன் மேற்கொண்டுள்ளது.

### 90 ஆண்டுக்காலம்

பக்கிங்காம் கால்வாய் வேலை, 19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் தொடங்கி 90 ஆண்டுக் கால அளவில் கட்டி முடிக்கப்பட்டது. இது முறையாகத் திட்டமிடப்பட்டு ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்பட்ட திட்டவேலை அன்று. கிழக்குக் கடற்கரை நெடுக ஆறுகள் கடலோடு கலக்கின்ற பகுதிகளில் உப்பங்கழிகள் இதர நீர்க்குட்டைகளைச் சிறிது சிறிதாக இணைத்து வளர்த்துப் படிப்படியான முறையில் வளர்ந்து இது நீட்டம் பெற்றது. 1806 ஆம் ஆண்டில் இக்கால்வாய் வேலை தொடங்கியது எனலாம். 1897-ல் கால்வாய் வேலை நிறைவு பெற்றது. இவ் வேலை நடந்த கால அளவினை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம்.

19-ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்து 1883 வரை முதல் காலக்கட்டம். 1883-லிருந்து 1891 வரை இரண்டாவது கட்டம்; 1892-லிருந்து 1897 வரை மூன்றுவது காலகட்டம். படிப்படியான முறையில்தான் வேலை நடந்து வந்தது. 1892 வரை இறுதியான வரைப்படம் இதற்குத் தயாரிக்கப்படவில்லை.

### வறட்சி நிவாரண வேலை

ஆந்திர மாநிலத்திலுள்ள கிருஷ்ணு ஆற்றிலிருந்து தொடங்கிச் சென்னை மாநகரத்தின் குறுக்கே தொண்டையார் பேட்டை, ஜார்ஜ் டவுன், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் வழியாகச் சென்று கோட்டூர், பாலிப்பட்டு, திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், மரக்காணம் வழியாகத் தென் ஆர்க்காடு மாவட்டத்தை யடுத்துப் புதுச்சேரி வரை பக்கிங்காம் கால்வாய் செல்லுகிறது. அன்றையச் சென்னை மாகாணத்துக்குக் கவர்னராக இருந்த பக்கிங்காம் காலத்தில் (1876–78) பஞ்சம் ஏற்பட்டது. வறட்சி உதவி வேலைகளில் ஒரு பணியாக இக்கால்வாயின் சில முக்கிய பகுதிகளை வெட்டுவதற்கு ஏற்பாடு செய்தார் கவர்னர் பக்கிங்காம். அவர் வெட்டச் செய்த கால்வாய்ப் பகுதி சில மைல் நீளம் தான் என்றாலும் முழுநீளக் கால்வாயும் அவர் பெயரையே பெற்றது. அதற்கு முன்னால் இக்கால்வாய் காக்ரேன் கால்வாய் என்றும் கிழக்குக் கரைக் கால்வாய் என்றும் வழங்கப்பட்டு வந்தது.

### மொத்த நீளம் 451 மைல்

இக்கால்வாய் ஒரு உப்பு நீர்க் கால்வாய். சென்னைக்குத் தெற்கே 66 மைல் வரையும் வடக்கே 195 மைல் வரையும் இது நீண்டுள்ளது. கிருஷ்ணு வரை செல்லும் இக்கால்வாயின் தொடர்பாகக் கோதாவரி டெல்டா கால்வாய் இணைப்புகளையும் கணக்கில் கொண்டால் காகினடாவிலிருந்து மரக்காணம் உப்பங்கழி வரை இதன் மொத்த நீளம் சுமார் 451 மைல் ஆகிறது. கிழக்குக் கடற்கரையோரமாகக் கடலிலிருந்து சுமார் அரை மைல் தொலைவில், மூன்று மைல் தொலைவுக்கு மேலே போகாமல் கடலோர மணல்பாங்கான பூமியில் இது அமைந்துள்ளது. சில இடங்களில் உயர எழும்பும் கடல் அலைகள், இக்கால்வாயின் கிழக்குக் கரையைத் தொடுமளவுக்குக் கடலுக்கு மிக ஒரமாகவும் இது செல்லுகின்றது.

### நாள் ஒன்றுக்கு 25 மைல்

இக் கால்வாயின் மிக முக்கியமான பயன், படகுப்போக்குவரத்து ஆகும். ரயில் வழிப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து ஆகியவைகளுடன் ஒப்பிடும்போது நீர் வழிப் போக்குவரத்துத் தான் மிக மலிவானது. அதாவது நீர் வழி, ரயில் வழி, சாலை வழி இவைகளில் பயணம் செல்லச் செலவு விகிதம் 1:3:10 என்று கணக்கிட்டிருக்கிறுர்கள். அந்தக் காலம் பஸ் போக்குவரத்து இல்லாத காலம். ரயில் வசதியும் அதிகமில்லாத காலம். எனவே மக்கள் இக்கால்வாயில் படகுகள் மூலம் சென்று வந்தனர். நாள் ஒன்றுக்கு இப்படகுகள் மூலம் சுமார் 25 மைல் தூரம் பயணம் போகலாம். விறகு, உணவுப் பொருட்கள், உப்பு, கட்டிடச் சாமான்கள், மளிகைச் சாமான்கள், நிலக்கரி, துணி,



இரும்புச் சாமான்கள், கிளிஞ்சல் முதலியன இக்கால்வாய் மூலம் படகுகளில் ஏற்றிச் செல்லப்பட்டன. எனவே மக்கள் அன்றுடத் தேவைப் பொருட்களைப் பெறுவதிலும், வணிக நோக்கிலும் முக்கியமாக விளங்கியது இக்கால்வாய். சென்னைக்குத் தெற்கே உள்ள தென்பகுதிக் கால்வாயைப் போல 6 மடங்கு சரக்குகள் வடக்குக் கால்வாயில் சென்றன என்று ஒரு கணக்குக் கூறுகின்றது. ஐந்து மாவட்டங்களுக்கிடையே மலிவான எளிதான போக்குவரத்து வசதிக்கு இக் கால்வாய் உதவியாக இருந்தது. காகினடா மசூலிப்பட்டினம், ஒங்கோல், நெல்லூர் மற்றும் பல வணிக நகரங்களுடன் சென்னை மாநகரத்துக்குத் தொடர்பு ஏற்பட இது உதவியது.

பக்கிங்காம் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் வகையில் மூன்றும் திட்டக்காலத்தில் சென்னை நகரப்பகுதியில் இரண்டு படகுத்துறைகள் அமைக்கப்பட்டன. நான்காம் திட்டக் காலத்தில் ரூ. 32 இலட்சம் செலவில் படகுத் துறை அமைப்பு, சாலை அமைப்பு முதலிய வேலைகள் செயல் படுத்தப்பட்டன.

### ரூபாய் 6 கோடி செலவில் மேம்பாட்டுப் பணிகள் :

ரயில் வசதி மற்றும் இதர போக்குவரத்து வசதிகள் காரணமாகவும், கால்வாய் தூரெடுப்பு வேலைகளும் செலவுகளும் அதிகமானதன் விளைவாகவும், இக் கால்வாயின் பயன்கள் சற்றுக் குறைந்தன. ஆனாலும் சரக்குப் போக்குவரத்து, நகரத்தூய்மை ஆகியவைகளையொட்டி, இக்கால்வாயை மேம்படுத்தி, இன்னும் சிறப்பாகப் பயன் படுத்தத் தமிழக அரசு முயற்சிகளை மேற்கொண்டது. இரு மாநிலங்களுக்கிடையே இக் கால்வாய் செல்வதால் ஆந்திர மாநிலம், தமிழகம் இரண்டும் சேர்ந்து ஒருங்கிணைந்த முறையில் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

தமிழ்கப் பகுதியில் இருக்கும் பக்கிங்காம் கால்வாய் 100 மைல் நீளப் பகுதியிலும் பெருமளவில் மேம்பாடு வேலைகளை மேற்கொள்வதற்காகத் தமிழக அரசு, மத்திய அரசாங்கத்துக்குச் செயற்குறிப்புகளை அனுப்பியிருக்கிறது. இந்த மேம்பாட்டுப் பணிகளுக்கு மொத்தம் ரூ. 6 கோடி செலவாகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது.

கூவம் ஆற்றிலிருந்து தமிழகத்தின் வடக்கு எல்லைப் பகுதி வரை இக் கால்வாயின் நீளம் 34 மைல். சென்னையிலிருந்து தெற்கே மரக்காணம் வரை இதன் நீளம் சுமார் 66 மைல். தற்போது சிறு படகுகள் செல்லக்கூடிய அளவில் நீர் ஆழம் 3 அடி மட்டுமே இருக்கின்றது. பெரிய இயந்திரப் படகுகள் செல்லத்தக்க அளவில் இந்த ஆழத்தை 6 அடியாக உயர்த்தவேண்டும் என்பது திட்டமாகும். வடபகுதிக் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளுக்கு மூன்றரைக் கோடி ரூபாயும், தென் பகுதிக் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளுக்கு இரண்டரைக் கோடி ரூபாயும் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சிற்சில பகுதிகளில் கால்வாயின் ஓரப் பகுதிகளுக்குக் காரை போடப்படும். பாலங்கள் மதகுகள் பகுதியில் காரைக் கட்டுமான வேலைகளைப் பலப் படுத்தவும் உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. கால்வாய் ஒரத்தில் குடிசைப் பகுதிகளும், கால்வாயில் வந்து விழும் சாக்கடை நீரும்தான் மேம்பாட்டுப் பணிகள் விரைந்து நடப்பதில் இடர்ப்பாடுகளாக இருந்து வருகின்றன. நகராட்சியின் ஒத்துழைப்புடனும் மக்களின் ஒத்துழைப்புடனும் இந்த இடர்ப்பாடுகளை நீக்க ஆவன செய்யப்பட்டு வருகின்றது.

### ஆய்வுக் குழு அறிக்கை

ஆந்திரப் பகுதியில் உள்ள கால்வாயில் சுமார் 160 மைல் நீளப் பகுதியில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள ஆந்திர அரசாங்கமும் மத்திய அரசாங்கத்துக்குச் செயற்குறிப்புகளை அனுப்பியிருக்கிறது.

தமிழகம், ஆந்திரம் ஆகிய இரு மாநிலங்களையும் சேர்ந்த பிரதிநிதிகள், மத்திய அரசாங்கப் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த ஒரு இன்சினியர், திட்டக் குழுவின் அலுவலர் ஒருவர் ஆகியோரடங்கிய ஆய்வுக் குழுவை மத்திய அரசு அமைத்தது. அந்தச் செயல் திட்டங்களுக்கு இறுதி வடிவம் தரவும், பொதுவான வரைமுறைகளை அமைத்துக் கொள்ளவும் அந்தக் குழுவினர் தமிழகத்திலும் ஆந்திர மாநிலத்திலும் பக்கிங்காம் கால்வாய்ப் பகுதிகளைப் பார்வையிட்டனர். இக்குழுவினர் டிசம்பரில் தங்கள் அறிக்கையை மத்திய அரசுக்குச் சமர்ப்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 5 ஆண்டுக் கால அளவில் மேம்பாட்டுப் பணிகள் செயல் படுத்தப்படும். வடக்கு பக்கிங்காம் காலவாயில் எண்ணூர் அருகே கால்வாயை ஆழப்படுத்தும் வேலைகள் ஏற்கெனவே தொடங்கி விட்டன. அடையாறு—கூவம் ஆகியவைகளுக்கிடையே இணைப்புக் கால்வாயிலும் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தமிழக அரசு இந்தப் பணிக்காக ரூ. 50 லட்சம் ஒதுக்கியுள்ளது.

சி.க.ரா



# கல்லூரி மாணவியரின் சமூகப் பணி



"சமூகப் பணிகளில் ஆடவர்க்கு மகளிர் இளைத்தவர்களல்லர்" என்பதை வலியுறுத்தும் வகையில், மதுரையிலுள்ள மீனாட்சி மகளிர் கல்லூரி, பாத்திமா மகளிர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 150 மாணவியர், 26-5-1973-ல் வேடசந்தூரிலுள்ள பெரிய குளம் கண்மாயில் தூரெடுத்துக் கரையமைக்கும் பணியைத் தொடங்கி 15 நாட்களில் அப்பணியைச் சிறப்புறச் செய்து முடித்தனர். கல்லூரி மாணவியர், மண் வெட்டியையும், மண் சுமந்து செல்லும் சட்டிகளையும் ஏந்திக் கூலியாட்களைப் போல் சுறுசுறுப்போடும், புன்னகையோடும் வேலைபார்த்த காட்சியைக் கிராமத்து மக்களெல்லாம் பார்த்து மகிழ்ந்து பாராட்டினார்கள்.

சமூகப் பணித் துவக்க நாளான 26-5-1973-ல் வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், 'சமூகப் பணி' மாணவியர்க்குப் பெரியகுளம் கண்மாயில் வரவேற்பு நடத்தப்பட்டது. வரவேற்பு விழாவிற்குச் சட்டமன்ற உறுப்பினர் திரு ப. முத்துச்சாமி, பி.ஏ.,பி.எல். தலைமை வகித்தார். நாகம்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு டி. திருமலைசாமி, பணியைத் துவக்கிவைத்தார். ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு எஸ். கதிரேசன், பி.எஸ்.சி., பி.எல். அனைவரையும் வரவேற்றார். புலவர் இரா. பழனியப்பன், எஸ்.எம்.ஜே. அலிமுகம்மது ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பெரியகுளம் கண்மாயில் தூரெடுத்துக் கரையமைத்த மாணவியரின் சமூகப்பணி பாராட்டுக்குரியது!



புகைப்படங்கள்: வி. நாகசுந்தரம்.



# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!




## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ.5 | ரூ.355 |
| | ரூ.10 | ரூ.710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ.5 | ரூ.337.50 |
| | ரூ.10 | ரூ.675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.

-சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு




# கேளுங்கள்? கொடுக்கப்படும்

**வினா:** எனது தோட்டத்தின் நிலம் களர். அந் நிலத்தில் எம்.சி.யு.5 பருத்தி பயிரிட்டு ஒருமாத காலம் ஆகிறது. அடியுரமாக 17 : 17 : 17 காம்பளெக்ஸ் மற்றும் மக்கிய எரு போட்டு ஒரு களையும் எடுத்து, ஒரு முறை 'என்ட்ரின்' மருந்தும் விசைத் தெளிப்பான் மூலம் தெளித்துள்ளேன். மேல் உரமாக எந்த உரம் போட வேண்டும். ஒரு ஏக்கருக்கு எவ்வளவு போடவேண்டும்? எப்பொழுது மருந்து தெளிக்க வேண்டும்? அறுவடை முடியும் வரை செய்ய வேண்டியவை களையும் தயவு செய்து கூறவும். இம் மாதத்தில் எனது நிலத்தில் நடுவதற்கு,

ஐ.ஆர்.-20, திருச்செங்கோடு சம்பா ஆகியவைகளை நாற்றுவிட்டு உள்ளேன். இந்த நாற்றுகளை நடும்பொழுது அடி உரம் எவ்வளவு போடவேண்டும்? பிறகு மேல் உரம் எவ்வளவு போட வேண்டும்? மற்றும் மருந்து ஆகியவை களையும் கூறவும். எனது நிலத்தில் மஞ்சள், கடலை, கரும்பு ஆகியவை களைப் பயிரிடலாமா?

—பு. ப. பழனிசாமி,
கலர்த்தோட்டம்,
அருந்தகிரி,
அவிளுசி வட்டம்,
கோவை மாவட்டம்.

**விடை:** களர் நிலத்தில் பருத்தி நல்ல மகசூல் தராது. இருப்பினும் தாங்கள் அதில் பருத்தி பயிரிட்டு விட்டதால், வெகு கவனமாகச் சாகுபடி முறைகளை மேற்கொள்ள வேண்டும். எம்.சி.யு. 5 பருத்தி விதை ஊன்றிய 35 முதல் 40 நாட்களில் ஏக்கருக்கு 27 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும். களர் நிலத்தில் இரசாயன உரமிடுவதற்கு அமோனியம் சல்பேட்டைப் பயன்படுத்தக் கூடாது. மருந்து தெளிப்பது, அறுவடை வரை செய்யவேண்டியவைகள் ஆகியவற்றைப் பற்றி 1—9—73 தேதிய 'தமிழரசு' இதழில் 'பணத்தை அள்ளித் தரும் பருத்தி பயிரிடுவீர்!' என்ற கட்டுரையில் வெகு விரிவாக விளக்கப்பட்டுள்ளதால், அக்கட்டுரையைப் படித்துத் தெரிந்து கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஐ.ஆர்.-20 நடுவதற்கு, ஏக்கருக்குக் கீழ்கண்ட அளவு இரசாயன உரங்களைக் கடைசி உழவில் இடவேண்டும்.

ஐ.ஆர்.-20 நட்ட 21-ஆம் நாள் ஏக்கருக்கு 33 கிலோ யூரியாவையும், நடவு செய்த 45 முதல் 50 நாளில் 33 கிலோ யூரியாவையும் மேலுரமாக இட வேண்டும்.

சூப்பர் பாஸ்பேட்—220 கிலோ

மூரியேட் ஆப் பொட்டாஷ்—60 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 100 கிலோ யூரியாவை அடியுரமாக இட வேண்டும்.

திருச்செங்கோடு சம்பாவிற்கு, ஏக்கருக்குக் கீழ்க்கண்ட அளவு இரசாயன உரங்களைக் கடைசி உழவில் இடவும்.

சூப்பர் பாஸ்பேட்—130 கிலோ.

மூரியேட் ஆப் பொட்டாஷ்—23 கிலோ.

நடுவதற்கு முன்பாக ஏக்கருக்கு 37 கிலோ யூரியாவை மேலுரமாக இடவும்.

திருச்செங்கோடு சம்பாவிற்கு நடவு செய்த 21-ஆம் நாள் 25 கிலோ யூரியாவை மேலுரமாக இடவேண்டும்.

மேற்கூறிய 2 ரகங்களுக்கும் நடவு செய்த 15-ஆம் நாள், வருமுன் தடுப்பாக, ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கையால் இயக்கும் தெளிப்பான் மூலம் தெளிக்கவும். விசைத் தெளிப்பான் பயன்படுத்தினால், மேற்கூறிய அளவு மருந்தை 60 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். ஐ.ஆர்.20 நடவு செய்த 30-ஆம் நாள் மேற்கூறிய அளவு மருந்துடன் 200 கிராம் டைத்தியோ கார்போமேட் மருந்தையும் கலந்து தெளிக்க வேண்டும். திருச்செங்கோடு சம்பா நடவு செய்த 30-ஆம் நாளில் பாரத்தியானை மட்டும் (15-ஆம் நாளில் தெளித்தது போலவே) தெளித்தால் போதுமானது.

மேற்கூறிய 2 ரகங்களுக்கும் கண்டு உருளும் தருணத்திலும் நடவு செய்த 15-ஆம் நாளில் தெளித்தது போலவே தெளிக்க வேண்டும்.

நெற்பூவில் பால் பிடிக்கும் தருணத்தில் ஏக்கருக்கு 10 கிலோ வீதம் பி.எச்.சி. 10 சதத் தூளை தூவி விட வேண்டும்.

தங்கள் நிலம் களர் என்பதால் மஞ்சள், நிலக்கடலை ஆகியவைகளைப் பயிரிடுதல் நல்ல பயன் தராது. ஆனால் கரும்பு, கேழ்வரகு ஆகியவைகளைப் பயிரிடலாம்.

களர் நிலத்திற்கு மேற்கூறிய அளவு உரங்கள் பொதுவான பரிந்துரையேயாகும். தாங்கள், அறுவடைக்குப் பிறகு, மண் மாதிரி எடுத்து மண் பரிசோதனை செய்து, மண்பரிசோதனை முடிவில் பரிந்துரைக்கப்படும் அளவில் உரமிடுவதே சிறந்தது.

*குறிப்பு: இப்படி ஏகப்பட்ட கேள்விகளைக் கேட்டால், பதில் அளிக்கப் பக்கம் வேண்டாமா? மற்றவர்களின் கேள்விகளுக்கும் பதில் அளிக்க வேண்டியிருப்பதால், தயவு செய்து ஓரிரண்டு கேள்விகளுடன் நிறுத்திக் கொள்ளும்படி, 'தமிழரசு' வாசகர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

# மலையிற் பிறந்த மகள்

கவியரசு முடியரசன்



விண்ணகத்து வான்வழியில் நடந்து வந்த
மின்விழியன் இடிக்குரலன் முகிலன் என்பான்
மண்ணகத்தே திமிர்ந்தெழுந்து நிமிர்ந்து நிற்கும்
மலைமுகட்டின் எழில்கண்டான்; காதல் கொண்டான்;
பண்ணிசைக்கும் குயிலினங்கள் பாடி நிற்கப்
பறந்துவரும் சுரும்பினங்கள் வாழ்த்தொலிக்கப்
பெண்ணவட்குக் கொழுநனென ஆகி விட்டான்
பின்னரவள் மெல்லுடலைத் தழுவி நின்றான்.

பலநிறத்துக் குலமலர்கள் விரிந்து நிற்கப்
பையவரும் மென்காற்று மெய்யில் வீச
நலமிகுத்த மலைமகளோ தழுவி நின்ற
நாயகன்றன் நெஞ்சத்தைக் குளிரச் செய்தாள்!
கலவிக்குப் பின்முகிலன் துளிகள் சிந்தக்
கருக்கொண்ட மலையரசி உயிர்த்து நின்றாள்
கலகலத்த குரலெழுப்பும் அருவி என்ற
காதல்மக வீன்றெடுத்தாள் அந்த நங்கை.

பெற்றெடுத்த பிள்ளையினைத் தனது மார்பில்
பேதையவள் தத்திவிளை யாட விட்டாள்;
கற்றெருடுத்த இடமெல்லாம் தவழ்ந்து தத்திக்
கனிமரங்கள் இடைப்புகுந்து குதித்துத் தாவி
மற்றடுத்த பள்ளமெலாம் விழுந்தெழுந்து
மலர்க்கொடிகள் செடிகள்பல பறித்தெறிந்து
கற்றடுக்கச் சலசலக்கும் மழலை பேசிக்
கண்குளிர ஆடிவந்த தந்தப் பிள்ளை.

தன்னிடையில் வைத்திருந்த பிள்ளை தன்னைத்
தரையின்மிசை இறக்கிவிட அருவி என்ற
முன்மருவும் பெயர்மாறி உருவம் மாறி
முழங்கிவரும் ஆறென்னும் பெயரைப் பெற்றாள்,
பின்னரவள் முல்லைநிலக் காடு புக்குப்
பீடுபெற நடந்துவந்தாள்: முல்லை என்ற
கன்னியொடு தோழமைகொண் டுலவி வந்தாள்;
காடெல்லாம் குழலோசை இனிக்கக் கேட்டாள்.

மருதமெனும் நிலம்புகுந்து தங்கித் தங்கி
மனமகிழ்ந்து நடைபயின்றாள்; உழவ ரெல்லாம்
வருகவென வரவுரைத்தார்; மகிழ்ந்து போற்றி
வாழ்த்துரைத்தார்; கலைபலவும் விரித்து வைத்தார்;
இருபுறமும் பசுஞ்சோலை செழித்து நிற்க
இயற்கைஎழில் எவ்விடத்துங் குலுங்கி நிற்க
மருவுகிற வயலெல்லாம் பசுமை யாக்கி
மாந்தருளம் செம்மையுற நடந்து சென்றாள்.





மலையகந்தான் ஆற்றுக்குப் பிறந்த வீடு;
வளமலிந்த கடற்பரப்பே புகுந்த வீடு;
தொலைவறியா வளமுடைய முல்லைக் காடு
தூயவட்குச் சிற்றன்னை தங்கும் வீடு
கலைமலிந்த காமலிந்த மருதம் அந்தக்
காரிகையின் மாமனுக்குச் சொந்த வீடு
தலைமகளைப் புக்ககத்துக் கனுப்பும் போது
தாயதந்த சீர்வரிசைக் களவே யில்லை!

சந்தனங்கள் தொகுத்தளித்தாள், தினைய ளித்தாள்,
சாதிமரத் தேக்களித்தாள், மதங்கொள் யானைத்
தந்தங்கள் பலவளித்தாள், மணியும் முத்தும்
தங்குதடை யில்லாமல் வாரித் தந்தாள்;
வந்தெங்கள் கலிதீர்த்த மகளே! வேண்டும்
வளமெல்லாம் வாரிப்போ என்றே சொன்னாள்
சொந்தங்கள் குறைசொல்லக் கூடா தென்றே
சொலற்கரிய சீர்வரிசை தந்தா ளன்னை!

முல்லையெனும் சிற்றன்னை தன்பால் வந்த
முதன்மகளைத் தலைநீவி உச்சி மோந்து
மல்லிகையால் தலைக்கோலம் செய்து விட்டு
மான்கன்றும் விளையாடத் தந்தாள் மேட்டுக்;
கொல்லைதரும் அவரையொடு வரகு சாமை
கொழுந்துவரை முதலான பொருள்கள் தந்தாள்;
பல்வகைய மலர்சூட்டிப் பாலும் நெய்யும்
பரிந்தளித்து வாழ்த்துரைத்து நின்றாள் அங்கு.

மருதமெனும் மாமனவன் தன்பால் வந்த
மலையரசி மகளைத்தா மரைமு கத்தால்
பெருமகிழ்வு காட்டிவர வேற்று நின்றான்;
பேராம்பல் மலர்சூட்டி வாழ்த்தி நின்றான்;
மருமகளின் மனமகிழ நெல்ல ளந்தான்
வாழையொடு கமுகுதரும் குலைகொ டுத்தான்;
திருவுடையன் வளம்பலவும் உவந்த ளித்துச்
செங்கரும்பும் வந்தவட்குத் தந்து நின்றான்.

பெற்றவளும் மற்றவரும் மகிழ்ந்து தந்த
பெருமைமிகு சீர்வரிசை அனைத்துங் கொண்டு
நற்றுணைவன் கடற்பேரான் அவனை நோக்கி
நயந்தோடி நலம்பாடி விரைந்து சென்றாள்;
மற்றவனும் பெருமகிழ்வால் அவளைத் தாவி
மார்பிறுக மனமுருக அணைத்துக் கொண்டான்;
'பெற்றுவரும் வரிசைஎலாம் கொள்க' என்றாள்
பெருமகனோ அலைக்கையால் 'கொள்ளேன்' என்றான்.

**வினு :** எங்கள் கிராமத்தில் உள்ள மணிலாவில் கம்பளிப் புழு இலைகளை எல்லாம் தின்று நாசம் செய்து விடுகிறது. அதற்கு என்ன மருந்து தெளிக்கவேண்டும்? அதற்கு அரசாங்கம் ஏதாவது சலுகை அளிக்கிறதா? விவரம் தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

**— என். இராமலிங்கம்,**
**அமைப்பாளர், உழவர் விவாதக்குழு,**
**புக்குளம், தியாகதுருவம் அஞ்சல்,**
**தென் ஆர்க்காடு மாவட்டம்.**

**விடை :** மணிலாவில் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றினுல் புழுக்களை அழிக்க உடன் மருந்து தெளிக்க வேண்டும். 200 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை அல்லது 100 மில்லி லிட்டர் 'நூவான்' (Nuvan) மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தால், வளர்ந்த சிவப்புக் கம்பளிப் புழுக்கள் இறந்துவிடும். ஒரு ஏக்கருக்குத் தெளிக்க 200 லிட்டர் மருந்துக் கலவை (மருந்தும், தண்ணீரும் கலந்தது) தேவை. 4 அல்லது 5 நாட்கள் வயதுடைய இளம் கம்பளிப் புழுக்களை அழிக்க ஏக்கருக்கு 10 கிலோ பி.எச்.சி. 10 சதத் தூளைத் தூவினுல் போதுமானது.

ஒரு முறை மணிலாவில் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றினுல், ஆண்டுதோறும் தொடர்ந்து சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றக்கூடும். எனவே, சிவப்புக் கம்பளிப் புழுக்களை அலட்சியப்படுத்தாமல், தோன்றிய உடனே மருந்து தெளிக்க வேண்டும். இவைகளை அறவே ஒழிக்க, மருந்து தெளிப்பதுடன், கீழ்க்கண்ட முறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

1. பருவ மழைக்குப் பின் மணிலா வயலில் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கு வைத்துத் தாய்ப் பூச்சிகளைப் (பட்டாம் பூச்சிகள்) பிடித்து அழிக்க வேண்டும்.

2. மணிலாச் செடியின் இலைகளில் இடப்பட்டுள்ள முட்டைகளை இலையுடன் சேகரித்து அழிக்க வேண்டும்.



3. ஒரு வயலில் இருந்து மற்ரெரு வயலுக்குச் சிவப்புக் கம்பளிப் புழுக்கள் ஊர்ந்து செல்வதைத் தடுக்க ஆங்காங்கே பள்ளங்களைத் தோண்டி வைத்து அதில் விழுந்துள்ள சிவப்புக் கம்பளிப் புழுக்களைச் சேகரித்து நெருப்பிலிட்டு அழிக்க வேண்டும்.

4. மருந்து தெளிக்காவிட்டால், நன்கு வளர்ந்த சிவப்புக் கம்பளிப் புழுக்கள் பூமியின் உள்ளே சென்று கூட்டுப் புழுக்களாக மாறிவிடும். இக்கூட்டுப் புழுக்களில் இருந்து, அடுத்த ஆண்டில் மழை பெய்தவுடன் தாய்ப் பூச்சிகள் வெளிவந்து மணிலாச் செடிகளில் முட்டையிடும். பிறகு முட்டைகளில் இருந்து சிவப்புக் கம்பளிப் புழுக்கள் தோன்றி மணிலாச் செடிகளைத் தின்னத் துவங்கும். எனவே, ஆழமாகக் கோடை உழவு செய்தும், வரப்போரங்களை மண் வெட்டியால் ஆழமாக வெட்டியும் கூட்டுப் புழுக்களைச் சேகரித்து எரித்து விட வேண்டும்.

மணிலாவில் தோன்றும் சிவப்புக் கம்பளிப் புழுக்களை அழிக்கத் தமிழ், நாடு அரசின் வேளாண்மைத் துறை தேவையான மருந்துகளை வழங்குவதுடன், தெளிப்பான், தூவான் ஆகிய கருவிகளை வாடகைக்குவழங்குவதுடன் ஏக்கருக்கு ரூபாய் 10 வீதமும், உயர்ந்த அளவாக ரூபாய் 100 வரையும் 'ஸ்பாட் லோன்' (Spot loan) என்னும் திட்டத்தின் கீழ் மணிலாச் சாகுபடி செய்யும் உழவர்களுக்குச் சிவப்புக் கம்பளிப் புழுக்களை அழிப்பதற்காகக் கடன் கொடுக்கப்படுகிறது. இக்கடன், பூச்சி மருந்துகளாகவே கொடுக்கப்படுகிறது. இக் கடன் மணிலா அறுவடைக்குப் பிறகு நிலவரியுடன் வசூல் செய்யப்படுகிறது. இக் கடன் பெற, உங்கள் ஊராட்சி ஒன்றிய துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை அணுகுங்கள்.







**வினு :** தற்பொழுது எங்கள் பகுதியில் முட்டைக் கோசு சாகுபடி செய்திருக்கின்றூர்கள். நாற்று நடுவதில் இருந்து 75 நாட்கள் வரை நிறைய மருந்து தெளிக்க வேண்டியிருக்கிறது. இலைகளில் நிறைய அந்துப் பூச்சிகள் இருக்கின்றன. இவற்றை அடிக்க எந்த மருந்தும் சரியாகப் பயன்பட வில்லை. தற்பொழுது கருப்பட்டியைத் தண்ணீரில் கரைத்து 'ஸ்ப்ரேயர்' மூலம் தெளித்து விட்டுப் பின் அரை மணி நேரம் கழித்துப் பூச்சி மருந்து(நூவான் டி.டி.டீ. 25 சதம்) அடித்தால் அந்துப் பூச்சிகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்த முடிகிறது. கருப்பட்டியைத் தண்ணீரில் கரைத்து அடித்தால் பயிர்களுக்கு ஏதேனும் சேதம் ஏற்படுமா? முட்டைக் கோசுப் பயிருக்கு ஒரு நல்ல மருந்து கூறுங்கள்.

**—எம். ஜெகன்னுதன்,**
**மே/பா. பாண்டியன் ஏஜென்சிஸ்,**
**48, மெயின்ரோடு,**
**சின்னமனூர் அஞ்சல்,**
**மதுரை மாவட்டம்.**

**விடை :** தாங்கள் குறிப்பிட்டுள்ள பூச்சி அசுவணிப் பூச்சியாகவே இருக்கும் என்று நம்புகின்றேம். அசுவணிப் பூச்சிகளையே தாங்கள் அந்துப் பூச்சி என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்று கருதுகின்றேம். ஏனெனில் அந்துப் பூச்சி என்பது தானியங்களை மட்டுமே தாக்கவல்லது.

அசுவணிப் பூச்சிகள் தான் முட்டைக்கோசுச் செடியினுடைய இலைகளின் அடிப்பாகத்தில் கூட்டம் கூட்டமாக இருந்து கொண்டு செடியின் சாற்றை உறிஞ்சி, இலைகளை வாடி உலர்ந்து விடச் செய்யும். இவைகள் சிறியனவாகவும், கருப்பு அல்லது பச்சை நிறத்துடனும் இருக்கும்.

மேற்கூறிய முறையில் இருப்பின் தங்கள் பகுதி முட்டைக்கோசுச் செடிகள் அசுவணிப் பூச்சியினுல் தாக்கப்பட்டுள்ளன என்று முடிவு செய்து கொள்ளுங்கள். உங்கள் ஊராட்சிஒன்றியத்துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களை நேரில் அழைத்துச் சென்று பூச்சிகளைக் காட்டி, அவர் பரிந்துரைக்கும் மருந்துகளைத் தெளிக்கலாம் அல்லது பின்கண்டுள்ளவாறு மருந்து தெளிக்கலாம்.

தங்கள் பகுதி முட்டைகோசுச் செடிகளை அசுவணி தாக்கியிருந்தால், முட்டைக்கோசுச் செடிகளின் 3 வார பருவத்தில், மாலத்தியான் 50 சத மருந்தில் 300 மில்லி லிட்டரையும், டி.டி.டீ 50 சத நனையும் தூள் 750 கிராமையும் 300 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பிறகு 6 வார காலத்தில் டிரைத்தியான் 20 சத மருந்தில் 1 லிட்டரையோ அல்லது மாலத்தியான் 50 சத மருந்தில் 700 மில்லி லிட்டரையோ அல்லது 'ரோகார்' 30 சத மருந்தில் 300 மில்லி லிட்டரையோ அல்லது 'ஆன்தியோ' 25 சத மருந்தில் 700 மில்லி லிட்டரையோ 350 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். செடிகளின் 9 வாரப் பருவத்தில் அசுவணி காணப்படின், கார்பரில் (செவின்) 50 சத நனையும் தூளில் 1 கிலோவை 450 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்க வேண்டும்.

கருப்பட்டியைத் தண்ணீரில் கரைத்துத் தெளித்தால் வேறு சில பூச்சிகளும் நோய்களும் தோன்றவும், முட்டைக்கோசின் சுவை மாறவும் கூடும். எனவே கருப்பட்டியைத் தண்ணீரில் கரைத்துத் தெளிக்க வேண்டாம். மேற்கூறிய முறையில் மருந்து தெளிப்பதே சிறந்தது.

---

**வினு :** நல்ல நிலையில் இருக்கும் 30 வயதுள்ள தென்னை மரத்தின் காய்கள் மிகவும் சிறுத்து உள்ளன. இவை ஏன் இவ்வாறு மாறிவிட்டன? காய்கள் பெரியதாக மாற வழி இருப்பின் தயவு செய்து விளக்கவும்.

**—என். பலராமன்,**
**நரசிங்கபுரம்,**
**குத்தம்பாக்கம் அஞ்சல்,**
**சென்னை—56.**

**விடை :** நல்ல நிலையில் இருக்கும் 30 வயதுள்ள தென்னை மரத்தின் காய்கள் சிறுத்து இருப்பதற்குக் காரணம், தென்னை மரத்திற்குப் போதிய சத்துக்கள் பூமியில் இருந்து கிடைக்காததே யாகும். எனவே, நீங்கள் உங்கள் தென்னை மரத்திற்கு இரசாயன உரம் இடுவது மிகவும் இன்றியமையாததாகும். ஒவ்வொரு மரத்திற்கும் 3கிலோ அமோனியம் சல்பேட், 1 கிலோ சூப்பர் பாஸ்பேட், 1 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய இரசாயன உரங்களையோ அல்லது 5 கிலோ 6:6:12 கலப்பு உரத்தையோ இட வேண்டும். இரசாயன உரமிட, தென்னை மரத்தில் இருந்து 1.2 மீட்டர் சுற்றளவில் 1 அடி ஆழமும், 1 அடி அகலமும் உள்ள வட்டக் கிடங்கு வெட்டி அதில் இரசாயன உரங்களையும், 20 கிலோ தழை அல்லது தொழு எருவையும் இட்டு மண்ணுல் மூடிவிடுதல் வேண்டும். இரசாயன உரத்தைச் சிறப்பாக மழைக் காலத்தில் அதாவது ஐப்பசி-கார்த்திகையில் இடுவது சிறந்தது. மழை இல்லாத போது இரசாயன உரம் வைதால், உரமிட்டவுடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். இரசாயன உரமிட்ட தென்னை மரங்களுக்குக் கோடை காலத்தில் தவருமல் தண்ணீர் விட்டு வர வேண்டும். இவ்வாறு இரசாயன உரமிட்டால், உங்கள் தென்னை அதிக அளவில் காய்ப்பதுடன், பருமனுன காய்களைக் கொடுக்கும்.





**வினு :** முதல் போகம் சூரியகாந்திப் பயிர் செய்த நிலத்தில் அடுத்த போகத்தில் எந்தப் பயிர் செய்தாலும் பலன் இல்லாமல் போய்விடுகிறது என்றும், நிலத்தில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் நிலம் இழந்து விடுகிறது என்றும் விவசாயிகள் பலர் நினைத்துப் பயிர் செய்ய அஞ்சுகின்றனர். அது தவறு என்பதற்குத் தக்க விளக்கங்கள் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும் சூரியகாந்திப் பயிர் பூக்கும் பருவத்தில் மழை இருந்தால் மகசூல் பாதிக்கும்; பலன் குறைந்து போகும் என்றும் சொல்கிறூர்கள். பூக்கும் பருவத்தில் மழை இருந்தாலும் பயிரைக் காத்து மகசூல் அதிகம் பெறுவது எவ்வாறு என்று மிகவும் விளக்கமாகத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**— எஸ். இராமசாமி,**
**வேளாண்மை கண்காணி,**
**ப. ஆ. திட்டம், தனித் துணை**
**வேளாண்மை இயக்குநர்**
**அலுவலகம், பொள்ளாச்சி,**
**கோவை மாவட்டம்.**





**விடை :** முதல் போகம் சூரியகாந்திப் பயிர் செய்த நிலத்தில் அடுத்த போகத்தில் எந்தப் பயிர் செய்தாலும் பலன் இல்லாமல் போய்விடுகிறது என்பதும், நிலத்தில் உள்ள சத்துக்கள் அனைத்தையும் சூரியகாந்தி இழுத்து விடுகிறது என்பதும் தவருன கருத்துக்களாகும். இக்கருத்து உண்மையெனில் வெளிநாடுகளில் இலட்சக் கணக்கான ஏக்கர்களில் சூரியகாந்தி ஆண்டு தோறும் பயிராகுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்! சூரியகாந்தியின் வேர்கள் ஆழமாகச்சென்று நிலத்தில் உள்ள நீரையும், சத்துக்களையும் இழுத்துக் கொள்ளக் கூடியதுவை என்பதனுலேயே, சூரியகாந்திப் பயிருக்கு இரசாயன உரமிடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் அளவில் சூரியகாந்திக்கு இரசாயன உரமிட்டு, அதன் அறுவடைக்குப் பிறகு அடுத்தாற்போல் சாகுபடி செய்யும் பயிருக்கும் வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் அளவில் இரசாயன உரமிட்டால், நிச்சயமாக அடுத்த பயிரின் மகசூலும் குறையாது; நிலவளமும் குன்றுது! இரசாயன உரமே இடாமலும், ஏதோ பெயருக்குக் கொஞ்சம் இரசாயன உரம் இட்டும் பயிர் செய்யும் போதுதான், அடுத்த பயிரின் மகசூல் குறையும். இது சூரியகாந்திக்கு மட்டுமல்ல, எல்லாப் பயிர்களுக்கும் பொதுவானதேயாகும். எனவே, சூரியகாந்திக்கும், அதை அடுத்துச் சாகுபடி செய்யும் பயிருக்கும் வேளாண்மைத் துறையினர் பரிந்துரைக்கும் அளவில் தவருது இரசாயன உரமிட வேண்டும்.

சூரியகாந்தி பூக்கும் பருவத்தில் மழை இருப்பின் மகசூல் குறையும் என்பது உண்மை. பூக்கும் பருவத்தில் மழை இருக்குமானுல், மகரந்தச்

# பேச்சுக் கலை வளர்க்கும் பெருமன்றம்



"இந்தியாவில் வழங்கும் மொழிகளைப் பொதுவாக நான்கு முக்கிய பிரிவுகளில் அடக்கி விடலாம். அந்தப் பிரிவுகள் யாவை?"

"தஞ்சைக் கோபுரம், பைசா நகரத்துக் கோபுரம் இரண்டில் எது பெரிது?"

"வ.உ.சி. ஓடவிட்ட கப்பல்களின் பெயர்கள் என்ன?"

* * *

இந்த வினாக்கள் எந்தத் தேர்விலும் கேட்கப்படவில்லை. சென்னை ஒய்.எம்.சி.ஏ. பட்டிமன்றத்தில், ஆண்டுதோறும் நடைபெறும் நொடி வினா-விடை நிகழ்ச்சியில் கேட்கப்பட்ட வினாக்களே இவை!

சென்னை உயர்நீதி மன்றத்திற்கு எதிரே அமைந்துள்ள ஒய்.எம்.சி.ஏ. கட்டடத்தில் பட்டிமன்றம் மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் சொற்போர்கள், உரைக்கோவைகள், கலந்துரையாடல்கள், கவியரங்குகள், ஆராய்ச்சிகள், கருத்தரங்குகள் முதலானவை செவ்வையாக நடந்து வருகின்றன.

உலகெங்கும் உள்ள இளைஞர்களின் உடல், அறிவு, உணர்வு ஆகிய முத்துறைகளையும், நன்னெறிப்படுத்தும் சிறந்த பேரமைப்பு ஒய்.எம்.சி.ஏ. என்பது நமக்குத் தெரியும்! இதன் ஓர் அங்கமாக விளங்குகிறது பட்டி மன்றம். 1945-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற இம் மன்றத்துக்குப் 'பட்டி மன்றம்' என்னும் பெயரைச் சூட்டியவர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்.

கடந்த இருபத்தேழு ஆண்டுகளாகத் தமிழ்ப்பணியாற்றிவரும் இம்மன்றத்தில் அவ்வத்துறைகளில் தேர்ந்த தமிழ் அறிஞர்கள், பிறநாட்டுப் பெரியோர்கள், பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியல் வல்லுநர்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், அரசியல்வாதிகள், எழுத்தாளர்கள், நாவலர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர்

சேர்க்கை முழு அளவில் நடைபெற முடியாததலின், சூரியகாந்திப் பூங் கொண்டைகளில் விதைகள் நன்கு உருவாவதில்லை; மேலும் விதைகள் நெருக்கமாக அமைவதில்லை. இதன் காரணமாகவே சூரிய காந்தி பூக்கும் சமயத்திலும் (விதைத்த 40 முதல் 50 நாட்கள்), மகரந்தச் சேர்க்கை நடைபெறும் சமயத்திலும் (விதைத்த 50 முதல் 60 நாட்கள்) மழை பெய்யுமானல் மகசூல் குறைந்து விடுகிறது. இதை ஆராய்ச்சி மூலமாகவே கோவில் பட்டி மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மெய்ப்பிக்கப் பட்டுள்ளது. இதைத் தவிர்க்க, சூரிய காந்தி விதைப்பதை முன் கூட்டியோ அல்லது பின் தள்ளியோ மேற்கொள்ள வேண்டும். உங்கள் பகுதியில் எப்பொழுது மழை பெய்யும் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, மழை பெய்யும் காலத்திற்குள் மகரந்தச் சேர்க்கை நடைபெற்று முடிந்து விடுமாறு அல்லது அறுவடைக்கு வருமாறு சூரியகாந்தியை முன் கூட்டியே விதைப்பது சிறந்தது. அல்லது சூரிய காந்திச் செடிகளின் வளர்ச்சிப் பருவத்தில் மட்டும் (விதைத்தது முதல் 40 நாட்கள் வரை) மழை இருக்குமாறு பின் தள்ளி விதைப்பது சிறந்தது. இதைத் தவிர வேறு வழி இல்லை. சூரிய காந்தி பூக்கும் பருவத்தில் மழை இருந்தால், பயிரைக் காக்க வேறு வழி இல்லை; மகசூல் குறையத்தான் செய்யும். ஆகவே அனுபவத்தின் அடிப்படையில் முன் கூட்டியோ அல்லது பின் தள்ளியோ சூரிய காந்தியை விதைக்குமாறு உழவர் பெரு மக்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

வினா : பருத்தி சாகுபடி செய்வதைப் பற்றி விளக்கமாகத் 'தமிழரசு' இதழின் மூலம் தெரிந்து கொண்டேன். வேர்ப்புழுக்களைத் தடுப்பதற்காக குருணை மருந்துகளை விதை நடும் சாலில் போடுகிறோம். ஆனல் ஊடுருவிப் பாயும் மருந்துகளை உபயோகிப்பதனல் எவ்விதத்தில் வேர் புழுக்களைத் தடுக்கிறது என்பதைத் தெரியப்படுத்துமாறு' பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எம். மணி,
வேளாண்மைக் கண்காணி,
ப. ஆ. திட்டம், பொள்ளாச்சி,
கோவை மாவட்டம்.

விடை: ஊடுருவிப் பாயும் மருந்துகளைத் தெளிப்பதனல், அம்மருந்துகள் செடிகளின் உள்ளே சென்று சாற்றுடன் கலந்து செடிகளின் எல்லா பாகங்களிலும் பரவி விடுகிறது. சாறுடன் கலந்த மருந்து அதிககாலம்தொடர்ந்து வீரியத்துடன் செயல்படுகிறது. வேர்ப் புழுக்கள் வேரைத் தாக்கிச் சேதப்படுத்திச் செடியின் சாற்றை உறிஞ்சுகின்றன. இதனல் சாற்றில் கலந்து உள்ள ஊடுருவிப் பாயும் மருந்துவேர்ப் புழுக்களை அழித்துவிடும். வேர் புழுக்களை மட்டுமல்ல, செடிகளை மென்று தின்னும் பூச்சிகள், உறிஞ்சும் பூச்சிகள், உண்ணும் பூச்சிகள் ஆகியவைகளையும் ஊடுருவிப் பாயும் மருந்து அழித்துவிடும்.

* * *



வினா : நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்கொண்டுபடிக்க வசதி இல்லாமல் தினக்கூலி வேலை செய்து வருகிறேன். நான் சொந்தமாகச் சமயபுரத்தில் ஒரு பழக்கடை வைத்துச் சொந்தமாகத் தொழில் நடத்த விரும்புகிறேன். எனக்கு எந்தவிதமான சொத்தும் இல்லை. அரசாங்கம் அல்லது வங்கிகள் மூலமாக எனக்குக் கடன் உதவி கிடைக்குமா? இது சம்பந்தமாக யாரிடம் தொடர்பு கொள்ளவேண்டும் என்பதைத் தெரியப்படுத்தும்படித் தங்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—வீ. வெங்கடாசலபதி,
மருதூர் (அஞ்சல்),
சமயபுரம் (வழி),
திருச்சி மாவட்டம்.



விடை: நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து தாங்கள் கடன் பெற்றுச் சொந்தமாகப் பழக்கடை வைத்து முன்னேறலாம். தங்கள் மாவட்டத்தில் 'பாங்க்ஆஃப் பரோடா' பல்வேறு பணிகளுக்குக் கடன் கொடுத்து வருகின்றது. எனவே தாங்கள் அருகாமையிலுள்ள 'பாங்க் ஆஃப் பரோடா'விற்குச் சென்று, உங்கள் கோரிக்கையைத் தெரிவித்து உதவி கோரலாம்.

'ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா' விற்குச் சென்றும் உதவி கோரலாம். தாங்கள் நாணயமாகக் கடனைத் திருப்பிக் கட்டுவீர்கள் என்று பரோடா வங்கி அல்லது ஸ்டேட் வங்கியில் கணக்கு வைத்துள்ள ஒருவர் தங்களுக்காக ஜாமீன் கொடுக்க முன் வந்தால், மேற்கூறிய 2 வங்கிகளில் ஏதேனும் ஒன்றிலிருந்து உடன் கடன் பெற்று பழக்கடை வைத்திடலாம்.

வினா : கோழி வளர்ப்பு முறைப் பற்றியும், அதனல் ஏற்படும் நன்மைகள் பற்றியும் இன்னும் மக்களுக்கு நன்ருகத் தெரியவில்லை. கோழி வளர்ப்புப் பண்ணையில் சரியாக விவரம் அறிய முடியவில்லை. நான் கோழிப் பண்ணை வைப்பதற்கு மிகவும் ஆவலாய் இருக்கிறேன். ஆனல் அதன் விவரங்கள் சரியாகத் தெரியவில்லை. ஆகையால் எனக்கும்,என்னைப்போன்ற ஆவல் உள்ளவர்களுக்கும் கோழி வளர்ப்பு முறை பற்றியும், அதனல் ஆகும் செலவுகளைப் பற்றியும் விவரமாக 'தமிழரசு' ஏட்டில் எழுதினல் மிகவும் நன்றியுள்ளவனக இருப்பேன்.

—கே. குருசாமி, 32, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு,
என்னர் பேக்கரி சென்னை—600007.

விடை : கோழி வளர்ப்புப் பற்றிய எல்லா விவ்ரங்களுக்கும் 1-11-1973 தேதிய 'தமிழரசு' இதழில் விளக்கமாக வெளியிடப்படும். எனவே, கோழி வளர்ப்புப் பற்றிய விவரங்களுக்குத் தயவுசெய்து 1-11-1973 தேதிய 'தமிழரசு' இதழை வாங்கிப் படித்து அறிந்து கொள்ளுங்கள்.

ஆர். எம்.






புரதச் சத்துப் பற்ருக்குறை நம் நாட்டில் மிகவும் கடுமையாக இருக்கிறது. நாம் வலிவோடும், வனப்போடும், அறிவோடும், ஆற்றலோடும் விளங்க வேண்டுமானல், நமது அன்ருட உணவில் தேவையான அளவு புரதச் சத்துக் கலந்திருக்க வேண்டும். ஆனல் நமது உணவாகப் பயன்படும் தானியங்களில் புரதச் சத்துக் குறைவாகவும், மாவுப்பொருள் அதிகமாகவும் இருக்கிறது. புரதச் சத்து மிகுந்த பருப்பு வகைகளோ இந்தியாவில் போதிய அளவில் உற்பத்தியாகவில்லை. அப்படியே கிடைத்தாலும் அவைகளின் விலையோ குறிப்பாக ஏழை எளியவர்களால்வாங்கமுடியாத அளவுக்கு உள்ளது! பொருள் வசதி படைத்தவர்கள் மட்டுமின்றி, ஏழை, எளிய, பாமர, சாமான்ய மக்களும் குறைந்த செலவில் புரதச் சத்துப் பெற வேண்டுமானல், மீன்களை உண்பதே சிறந்த வழியாகும்!

நூறு கிராம் முட்டையில் 13·3 கிராம் புரதச் சத்து மட்டுமே உள்ளது. 100 கிராம் ஆட்டு இறைச்சியில் 18·5 கிராம் புரதச் சத்து மட்டுமே இருக்கிறது. ஆனல் 100 கிராம் மீனில் 21·5 கிராம் புரதச் சத்து அமைந்திருக்கிறது. எனவே, மீன் புரதச் சத்து மிகுந்தது என்பது தெளிவாகிறது.



புரதச் சத்து மிகுந்திருப்பதோடு, விலை மலிவாகக் கிடைக்கக் கூடிய பொருளாகவும் மீன்கள் உள்ளன. ஆனல் பிடிக்கப்பட்ட மீன்களை உடனடியாகச் சமைத்து விட வேண்டும். இல்லாவிட்டால் மீன்கள் கெட்டு விடுகின்றன. இதனல் விரும்பிய நேரத்தில் நல்ல மீன்களை வாங்கிச் சமைத்துச் சாப்பிட முடிவதில்லை. இது மீன் உண்பவர்களுக்குப் பெரும் மனக்குறையாக இருந்து வருகிறது. இக்குறையைப் போக்கிடத் தமிழ் நாடு அரசு ஆங்காங்கே குளிர் பதனப்படுத்தும் நிலையங்களை அமைத்து, மீன்களைக் கெடாமல் பாதுகாத்து வைத்து தேவையானவர்களுக்குத், தேவையான பொழுது தேவையான அளவில் கொடுத்திடப் பெரு முயற்சி செய்து வருகிறது. தமிழ் நாடு அரசின் இம் முயற்சிக்கு இந்திய—நார்வே ஜியன் திட்டம் (Indo-Norwegian Project) பெருந் துணையாக உள்ளது.

இந்திய—நார்வேஜியன் திட்டத்தின் கீழ், தூய்மைப் படுத்திப் பக்குவப் படுத்தப் பட்டது முதல் விற்பனையாகும் காலம்வரை மீன்கள் மிகு குளிர் நிலையில் சேமித்து வைக்கப் பட்டுள்ளன. இவ்வாறு குளிர் பதனப் படுத்திய மீன்களை வாங்கி, குளிர் பதனக் கருவியின் (Refrigerator) பனிக் கட்டிப் பெட்டியில் (Ice-box) ஒரு வார காலம் வரை சேமித்து வைக்கலாம். குளிர் பதனக் கருவியிலேயே ஏறத்தாழ 24 மணி நேரம் வரை சேமித்து வைக்கலாம். குளிர் பதனக் கருவி இல்லாதவர்கள் இந்திய—நார்வேஜியன் திட்ட மீன்விற்பனைக் கூடத்தில் குளிர் பதனப்படுத்தப்பட்ட மீன்களை வாங்கி உடனடியாகச் சமைத்துச் சாப்பிடலாம்.

இந்திய—நார்வேஜியன் திட்டத்தின் கீழ், சென்னையில் ஒரு மீன் விற்பனைக் கூடம் தேனும் பேட்டையில் உள்ள மீனளத் துறை இயக்குநர் அலுவலகவாயிலின் அருகில் அமைந்துள்ளது. காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையிலும் இவ்விற்பனைக் கூடத்தில் மீன்கள் விற்கப்படுகின்றன. ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் மாலை 1-30 மணி வரை மட்டுமே விற்பனையுண்டு.

இவ்விற்பனைக் கூடத்திற்கு திங்கட் கிழமை விடுமுறை நாள்.

இந்த விற்பனைக் கூடத்தில் பின் கண்ட பொருள்கள் முக்கியமாக விற்பனை செய்யப்படுகின்றன :

(1) குளிர்பதனப்படுத்தப் பட்ட மீன் துண்டுகள். (Frozen fish fillets)

(2) குளிர்பதனப்படுத்தப் பட்ட மீன் கண்டங்கள். (Frozen sliced fishes)

(3) மீன் கைமா (Fish Kheema)

(4) குளிர் பதனப்படுத்தப் பட்ட உருண்டை (முழு) மீன்கள். (Frozen round fish)

(5) மீன் சூப்பு (Fish soup)

(6) புகையினல் வாட்டிப் பதப் படுத்தப்பட்ட மீன்பொருள்கள் (Smoked products)

மீன் துண்டுகள் (Fish fillets) என்பது முக்கிய முள்கள் (எலும்புகள்), தோல், தலை, குடல் முதலியவைகள் அகற்றப்பட்ட மீன் கறியேயாகும். இந்த மீன் துண்டுகள் முழுக்க முழுக்கப் புதிய மீன்களிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன.

இத் துண்டுகளை —18 டிகிரி (Minus 18 degree). சென்டிகிரேடு (0 டிகிரி பாரன் ஹீட்) அல்லது அதற்கும் குறைவான நிலையில் குளிர்பதனப்படுத்தும்பொழுது, மீன் துண்டுகளில் துவக்கத்தில் இருந்த புதுமைத் தன்மை (Freshness) மாருமல் நிலைத்து நிற்கிறது. எனவே, குளிர்பதனப்படுத்தப்பட்ட மீன் துண்டுகள் புதிய மீன்களின் துண்டுகளுக்கு ஒப்பானவையாகவே இருக்கின்றன.

முள்களும், இறக்கைகளும் சேர்ந்த புதிய முழு மீனின் எடையில் ஏறத்தாழ 35 சத வீத எடை மட்டுமே தனிக் கறியாக இருக்கிறது. இதன் அடிப்படையில், இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் 0.5 கிலோ மீன் துண்டுகளை வாங்குவது, ஏறத்தாழ 1.5 கிலோ முழு மீன்களை வாங்குவதற்குச் சமமானதாகும். எனவே, இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் மீன் துண்டு

# மேடைப் பேச்சு

மாலைக்கு முதற்பொருள் மணமுள்ள மலர்; அது போலப் பேச்சுக்கு முதற்பொருள், சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள். மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கத்தானே செய்வோம்! அது போலவே, பேசுபவரின் கருத்து பயன் தருமாயின், கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும் அவர்கள் ஏற்றுக் கொள்வர். எனவே மேடைப் பேச்சுக்குக் கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும்படிச் செய்வது மிக மிக முக்கியம்.

"தீயினாற் சுட்ட புண் ஆறும்—நாவினாற் சுட்ட புண் ஆறாது" என்ற வள்ளுவர் வாக்கு, தனிப்பட்ட உரையாடலுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும்; பேச்சு மேடையிலே ஆறிய புண் அதிகம்; நாவினால் சுட்ட வடு பெற்றதாக எண்ணிக் கல் வீசினோர், நல்வழி கண்டோம் அவர் உரையால் என்று பிறிதோர் நாள் உணர்ந்து, கல் தூக்கிய கரத்தால் கனத்த மாலையைத் தூக்கி வரும் காட்சிகள் நிரம்பிய விசித்திர புரி, மேடை!



கலந்துகொண்டு சிறப்பித்திருக்கிறார்கள்.

தொடக்கக்கால முதலே தமிழ்த் தென்றல் திரு.வி.க., அறிஞர் அண்ணா போன்ற தலைவர்களின் தொடர்பையும், வாழ்த்துதலையும் இம்மன்றம் பெற்றுவந்தது.

தமிழ்ப் பணி புரியும் தமிழறிஞர்களைப் பாராட்டிச் சிறப்பித்து வரும் இப்பட்டி மன்றம், 'மாதிரித் தமிழ்ப் பாராளு மன்றம்' நடத்திய நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கதாகும். நம்நாடு உரிமை பெறுவதற்கு முன்னாலேயே மக்களாட்சிக்குப் பார்க்கப்பெற்ற ஒத்திகைபோல் அமைந்தது இந்தப் பாராளு மன்றம்!

இன்று நாடாளு மன்ற, சட்ட மன்ற உறுப்பினரா யுள்ள பலர், பட்டிமன்றப் பாராளுமன்றத்தில் கலந்து பயன் பெற்றோரே யாவர். கட்டாயக் கலப்பு மண மசோதா, திரைப்பட தேசிய மசோதா போன்ற பல புரட்சிகரமான திட்டங்களைப் பட்டி மன்றப் பாராளுமன்றம் அக்காலத்திலேயே நிறைவேற்றியது.

தமிழார்வம் மிக்க இளைஞர்களுக்கு மேலும் ஊக்கமூட்டும் வகையில் அவர்களின் சொல்லாற்றலை வளர்க்க இம்மன்றம் பெருந்துணை புரிந்து வருகிறது. இம்மன்றத்தில் தமிழ்த் தொண்டாற்றிய பலர் இன்று பல்வேறு துறைகளில் சிறப்புற்று விளங்கி வருவதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

ஒரு மாதததில் 48 கூட்டங்களைத் தவறாமல் நடத்தி வரும் இம்மன்றம், தமிழில் அறிவியல் பற்றியும் பரிதிமாற் கலைஞர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், ஆகியோரின் எழுத்துத் திறமை பற்றியும் தொல்காப்பியத்தின் சிறப்புகள் பற்றியும் தனிச் சொற்பொழிவுகளை நடத்தி அறிஞர் பெருமக்களின் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறது.

ஆண்டு தோறும் கல்லூரி மாணவர்களுக்கான சொற்போர் ஒன்றையும், நொடி வினா விடை நிகழ்ச்சி ஒன்றையும், நிகழ்த்தி மாணவர்களின் சொல்லாற்றலையும், பொது அறிவையும் வளர்த்து வருகிறது; இந்நிகழ்ச்சியினை பெரும்பாலும் தமிழிலக்கியம் சார்ந்த நிகழ்ச்சியாகவே பட்டி மன்றத்து ஆட்சிக் குழுவிலுள்ள தக்கார் ஒருவர், ஆண்டுதோறும் நடத்தி வருகின்றார்.

1970-ஆம் ஆண்டில் வெள்ளி விழாக் கண்ட இப்பட்டி மன்றம், தமிழில் சட்டத்துறை வகுப்புகளைத் தொடங்கவும், தமிழிலுள்ள எல்லா இலக்கியங்களைப் பற்றிய தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தவும், தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

''பேச்சுகள் பல திறத்தன. அவற்றுள் ஒன்று மேடைப் பேச்சு. மேடைப் பேச்சு பேராற்றல் வாய்ந்தது; முத்தொழில் புரியும் வல்லமையும் வாய்ந்தது'' என்று தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் சொல்லியதற்கிணங்க ஒய்.எம்.சி.ஏ. பட்டி மன்றம் பேச்சுக் கலை வளர்க்கும் பெரு மன்றமாக விளங்கித் தமிழ் அன்னைக்கு அருந்தொண்டாற்றி வருகிறது.

—பி.வி.ஜி.

## தெரியுமா?

● சென்னைப் பல்கலைக் கழகத்தின் கௌரவ டாக்டர் பட்டம் பெற்ற இரண்டு தமிழறிஞர்களின் பெயர்களைச் சொல்ல முடியுமா?

அ. டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர்.

ஆ. டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை.

● 'தமிழவேள்' என்ற பட்டம் பெற்ற நல்லறிஞர்கள் யாவர்?

(அ) உமாமகேசுவரம் பிள்ளை (ஆ) பி. டி. ராசன் (இ) தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர்.

● 'இந்த நூல் 40 அடிகளையும், 216 சொற்களையும், 624 எழுத்துக்களையும் கொண்டுள்ளது' என்று ஒரு நூலைப் பற்றி எழுதுகிறார் 'அறிவுக்கடல்' மறைமலையடிகள், அந்நூல் எது?

'சிவஞான போதம்'

● பழந்தமிழ் நாட்டில், மூவேந்தர் வைத்திருந்த குதிரைகளுக்குத் தனித்தனிப் பெயர்கள் வழங்கப்பெற்றன. அவை யாவை?

சேரன் குதிரை—பாடலம்

சோழன் குதிரை—கோரம்

பாண்டியன் குதிரை—கனவட்டம்.

● திருக்குறளில் ஒரே பெயரில் வரும் இரண்டு அதிகாரங்கள் யாவை?

குறிப்பறிதல்; ஒன்று பொருட்பாலிலும், மற்றையது காமத்துப்பாலிலும் வருகின்றது.

—சென்னை ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றம் நடத்திய நொடி 'வினா-விடை' நிகழ்ச்சியில்.



பட்டிமண்டபம் நடைபெறும் ஒய். எம். சி. ஏ. கட்டடத்தின் வெளிப் புறத் தோற்றம்.

## பட்டிமன்றம் என்றால் என்ன?

பட்டி மண்டபம் என்பதுதான் இக்காலத்தில் பட்டி மன்றம் என்று சொல்லப்படுகிறது.

பட்டிமன்றம் என்பது ஒரு பழைய, இனிய பொருள் பொதிந்த பெயர். பண்டைக் காலத்தில் அறிஞர் பலர் குழுமித் துறைதொறும் தமிழ் துலக்கும் பேரவையாகவும், 64 கலைகளையும் வளர்க்கும் இடமாகவும் திகழ்ந்த பட்டி மண்டபங்களைப் பற்றிய குறிப்புகளைக் காவிய வாயிலாக அறிகிறோம்.

"மகத நன்னாட்டு வாள்வாய் வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்"

என்று சிலப்பதிகாரம் இசைக்கிறது. சோழ மன்னன் கரிகாற் பெருவளத்தானிடம் தோற்ற மகத நாட்டாசன், திறையாக—ஓர் ஓலக்க மண்டபமாகப் (கல்வியிற் சிறந்த அவையினர் கூடுமிடம்) பட்டிமண்டபம் கட்டி, அதில் சோழப் பெருவேந்தனை வரவேற்று வாழ்த்தினன் என்று பொருள்படும் வரலாற்றுக் குறிப்பு, பட்டி மண்டபத்தின் சிறப்பைப் பறைசாற்ற வல்லதாகும்.

பின்னால், சமயவாதிகள் ஒன்றுகூடி விவாதிக்கும் பாங்குள்ள இடமாகப் பட்டிமண்டபம் மாறியுள்ளதனை 'மணிமேகலை'யிற் காண்கிறோம்.

"ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள் பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்"

கல்வியிற் சிறந்த கம்பர், 'பன்னருங் கலைதெரி பட்டி மண்டபத்தை' இராமாயணத்தில் அறிமுகப்படுத்துகிறார்.

மாணிக்கவாசகர், தமது திருவாசகத்தில் "எட்டோடு எழும் எண்ணத் தெரியா தேனைப் பட்டி மண்டபம் ஏற்றினை" என்று பட்டி மண்டபத்தின் பெருமையை உய்த்துணர வைக்கிறார்.

வாங்குவது, மீன் அங்காடிகளில் வாங்குவதை விடக் குறிப்பிடத் தக்க அளவுக்குச் சிக்கனமானதாக இருக்கிறது.

சுறு (Shark), வாளை (Silver bar), கெளுத்தி (Cat fish), காணுங் கெளுத்தி (Mackerel) சைமன் (Baracuda), ஆகியவற்றின் குளிர் பதனப்படுத்தப்பட்ட மீன் துண்டுகள் இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்யப் படுகின்றன. அங்கு விற்பனை செய்யப்படும் மீன் சூப்பு, மீன்கைமா ஆகியவைகள் உடன் சமைப்பதற்குப் பயன் படுத்தும் தயார் நிலையில் உள்ளன. மீன் கைமாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல் வேறு வகை மீன்கள் சேர்க்கப்பட்டு நன்கு கொத்தி வைக்கப்பட்டுள்ளது. தேங்காய்ப்பாறை (Vatta), மத்தி (Sardines), எறுல் (Shrimp), செங்கெறுல் (Lobster) போன்றவை குளிர் பதனப்படுத்தப்பட்ட முழு மீன்களாக விற்கப்படுகின்றன. வஞ்சரம் (Perch), விலாங்கு (Eel) ஆகிய மீன்கள் குளிர் பதனப்படுத்தப்பட்ட கண்டங்களாக விற்கப்படுகின்றன. மேல் நாட்டினர் விரும்பும் புகையினுல் வாட்டப்பட்ட மீன் பொருள்களான மீன் துண்டுகளும், முழு காணுங் கெளுத்திகளும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் விற்கப்படும் குளிர் பதனப் படுத்தப்பட்ட மீன் துண்டுகளை வாங்கி வறுக்கவோ அல்லது மீன் குழம்பு வைக்கவோ வேண்டுமானுல், மீன் துண்டுகளில் ஒட்டியுள்ள பனிக் கட்டிகளை அகற்ற வேண்டியது அவசியமில்லை. பாதியளவு உறைந்த நிலையிலேயே உள்ள அத் துண்டுகளை அரை அங்குல அளவுள்ள துண்டுகளாக வெட்டி, குளிர் பதனப்படுத்தப்படாத புதிய மீன்களைச் சமைப்பது போலவே சமைக்கலாம்.

குளிர் பதனப்படுத்தப்பட்ட மீன் கண்டங்களையும், முழு மீன்களையும், மீன் சமைப்பதற்கு முன்பு அவைகளை மூடியுள்ள உறைகளைத் திறந்து அறையின் வெப்பநிலையிலேயே ஏறத்தாழ 1 முதல் 1 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். அது போலவே எறுல் மீன்களையும், செங்கெறுல்களையும் அறையின் வெப்ப நிலையில் ஏறத்தாழ 2 மணி நேரம் வைத்திருந்து அதில் உள்ள பனிக் கட்டிகளை ஆவியாகச் செய்ய வேண்டும்.

பனிக் கட்டிகளை அகற்றிட மீன்களைத் தண்ணீரில் கழுவக் கூடாது. பனிக் கட்டியினுல் உறைந்த மீன்களை மென்மையாக்கிட, அவைகளை மூடியுள்ள அட்டைப் பெட்டிகளையும், பாலித்தின் காகிதத்தையும் அகற்றி அறையின் வெப்ப நிலையில் அப்படியே வைத்திருக்க வேண்டியது மிகவும் முக்கியம்,

இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் விற்கப்படும் எறுல்களையும், செங்கெறுல்களையும் கொண்டு சுவை மிகு பொருள்களைத் தயாரிக்கலாம்.

புகையினுல் வாட்டப்பட்ட மீன்களில் சற்று உப்பு கலந்திருக்கும். அவைகளைத் தண்ணீரிலோ அல்லது பாலிலோ கொதிக்க வைத்தால், மேலும் சற்று உப்பு கலக்க வேண்டும். புகையில் வாட்டப்பெற்றுக் குளிர் பதனப்படுத்தப்பட்ட மீன் துண்டுகளை அறையின் வெப்ப நிலையில் திறந்து வைத்திருக்க வேண்டும். பிறகு, தண்ணீரில் அல்லது பாலில் அவை மென்மையாக ஆகும் வரை மெதுவாகச் சமைக்க வேண்டும். மணம் கூட்ட வெங்காயம், கறிவேப்பிலை முதலியவைகளைப் போடலாம். உருளைக் கிழங்கு, காய்கறிகள், வெண்ணெய், 'சாஸ்' முதலியவைகளுடன் கலந்து சாப்பிடலாம். புகையில் வாட்டப் பெற்ற மீன் துண்டுகளை வறுவலாகவும், முறுவலாகவும் செய்யலாம்.

புகையால் வாட்டப் பெற்ற காணுங் கெளுத்திகளையும் அறையின் வெப்பத்தில்திறந்து வைக்க வேண்டும். அவைகளையும் வறுக்கவோ, முறுவலாகச் செய்யவோ, வேக வைக்கவோ செய்யலாம். இக் காணுங் கெளுத்திகளில் மசாலாப் பொருள்களைத் திணித்துப் 'போளி' போல் செய்து வேக வைத்தால் மிகவும் சுவையாக இருக்கும். மசாலா தயாரிக்கப் பூண்டு, வெங்காயம், பச்சை மிளகு, தக்காளி ஆகியவைகளைப் பயன்படுத்தலாம். பூண்டு, வெங்காயம், மிளகு ஆகியவைகளைக் கொஞ்சம் மென்மையாக ஆகும் வரை எண்ணெய்யில் வதக்கி, பிறகு அத்துடன் தக்காளியைக் கலந்து கொண்டு ஏறத்தாழ 20 நிமிடம் வரை மெதுவாக வேக வைக்கவேண்டும். இவ்



வாறு வேக வைத்த பொருளைக் காணுங்கெளுத்தியின் உள்ளே திணித்துப், பிறகு அவைகளை எண்ணெய்யில் 170 முதல் 180 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தில் 20 முதல் 25 நிமிடம் வேக விட வேண்டும். அதன் பின் காய்கறிகளுடனும், தக்காளி சாஸுடனும் கலந்து சாப்பிடலாம்.

குளிர் பதனப்படுத்தப்பட்ட 'சூப்' கறியின் மேல் உள்ள உறையைப் பிரித்து விட்டு அப்படியே வைத்து விட்டால் அவை உருகிவிடும். அத்துடன் மசாலாப் பொடி கலந்து வழக்கமாகச் செய்யும் முறையில் 'சூப்' தயாரிக்கலாம். தேவையானுல் வெங்காயம், தக்காளி ஆகியவைகளையும் கலந்து கொள்ளலாம். இந்திய—நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் விற்கப்படும் மீன் பொருள்களில், பெரும்பாலோர் விரும்பி வாங்கும் பொருள் மீன் 'சூப்', மீன் கைமா என்பது குறிப்பிடத் தக்கது.

எனவே, இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக் கூடத்தில் குளிர் பதனப்படுத்தப்பட்ட மீன்களையும், மீன் பொருள்களையும் வாங்கி சமைத்துச் சாப்பிட்டு வலிவோடும், வனப்போடும், அறிவோடும், ஆற்றலோடும் விளங்குமாறு கேட்டுக் கொள்கின்ருேம்.

—ஆர். எம்.






# மீனிலிருந்து சூப், வறுவல், கட்லெட், தொக்கு

இந்திய-நார்வேஜியன் திட்ட மீன் விற்பனைக்கூடத்தில் விற்பனை செய்யப்படும் குளிர்பதனப்படுத்தப்பட்ட மீன்களிலிருந்தும் மீன் பொருள்களிலிருந்தும் சுவையும், மணமும் மிகுந்த 'சூப்பு', 'வறுவல்', 'கைமா' தொக்கு ஆகியவைகளைத் தயாரிக்கலாம். தயாரிப்பு முறை வருமாறு :

## • மீன் சூப்பு

ஒரு பாக்கட் (450 கிராம்) மீன் 'சூப்' (Fish soup) வாங்கிக் கொள்ளுங்கள். இதிலிருந்து சூப்பு தயாரிக்க பின் கண்ட பொருள்களை எடுத்துக் கொள்ளுங்கள்.

பெரிய வெங்காயம்---1

பெரிய தக்காளிப்பழம்---1

எண்ணெய் அல்லதுடால்டா — 1/2 மேசைக் கரண்டி

மீன் 'சூப்' பாக்கெட்டைப் பிரித்து அதில் உள்ள மீன் கறிகளை ஒருபாத்திரத்தில்போட்டு அப்படியே வைத்து விட வேண்டும். அறையின் வெப்பத்தில் மீன் கறி உருகிவிடும். துண்டு படுத்திய வெங்காயத்தையும், தக்காளியையும் பொன்னிற பழுப்பு நிறமடையும் அளவுக்கு வறுத்துக் கொள்ளவேண்டும். உருகிய சூப்பை இலேசாகச் சூடாக்கவும். பிறகு வறுத்த வெங்காயத்தையும், தக்காளியையும் சூப்புடன் கலக்கவும். மீன் சூப்புக் கறியில் உப்பு கலக்கப்பட்டு விற்கப்படுவதால், மேலும் தேவையானுல் உப்பு, மிளகுப்பொடி ஆகியவைகளைச் சேர்த்துக்கொள்ளலாம். சூடாக இருக்கும் பொழுதே இவ்வாறு தயாரிக்கப்பட்ட சூப்பினைச் சாப்பிட்டால் வெகு சுவையாக இருக்கும்.

## மீன் வறுவல்

வறுப்பதற்குத் தயாரான நிலையில் உள்ள 10 துண்டுகள் (200 கிராம்) கொண்ட மீன் துண்டுகள் (Fish fritters) அடங்கிய பாக்கெட் ஒன்று வாங்கிக் கொள்ள வேண்டும். 'டால்டா' அல்லது 'ஓ.கே' எண்ணெயை வாணலியில் சூடாக்க வேண்டும். பாக்கெட்டைப் பிரித்து உறைந்த மீன் துண்டுகளை எடுத்து, அவைகளின் மேல் சிறிது மிளகாய்த் தூள், உப்பு ஆகியவற்றைத் தூவி விட வேண்டும். எண்ணெய் போதிய அளவு சூடாகிய பிறகு, மீன் துண்டுகளை அதில் போட்டு நன்கு வறுக்க வேண்டும். (மீன் துண்டுகளை எண்ணெய்யில் பப்படம், அல்லது அப்பளம் வறுப்பது போல் வறுக்க வேண்டும்). மீன் துண்டுகளை நன்கு கலக்கப்பட்ட 1 முட்டையில் நனைத்து எடுத்த பிறகு கூட மேற்கண்டவாறு நன்கு வறுக்கலாம். இவ்வாறு வறுக்கப்பட்ட மீன் துண்டுகளைச் சூடாக இருக்கும் போதே துண்டாக்கப்பட்ட தக்காளி, வெங்காயம், காய்கறிகளுடனும், தக்காளி சாஸுடனும் கலந்து சாப்பிடலாம்.

## மீன் 'கட்லெட்'

மீன் கைமா (Fish Kheema) ஒரு பாக்கெட் (450 கிராம்) வாங்கிக் கொள்ளவும். 'கட்லெட்' செய்யப் பின் கண்டவைகளை எடுத்துக்கொள்ளவும்.

பெரிய வெங்காயம்—3

பச்சை மிளகாய்—6

கொத்தமல்லிக் கீரை—1 கொத்து

பொதினு இலைகள்—சில.

மேற்கூறியவைகளைத் துண்டாக்கிக் கொள்ளவும்.

இஞ்சி—ஒரு துண்டு.

பூண்டு—6 பல்.

இவ்விரண்டையும் பசையாக அறைத்துக் கொள்ள வேண்டும்.

மிளகாய்ப் பொடி—1·1/2 மேசைக் கரண்டி

கொத்தமல்லிப் பொடி---1 மேசைக் கரண்டி

மஞ்சள் பொடி--- 1/2 தேயிலைக் கரண்டி

பெரிய தக்காளிப்பழம்---3

பெரிய உருளைக் கிழங்கு---3

ரொட்டி---3 துண்டு

'வினீகார்' (Vinegar)--- 1/2 தேக்கரண்டி

எண்ணெய் அல்லதுடால்டா --வறுப்பதற்குப்போதிய அளவு.

உப்பு—சுவைக்கேற்றவாறு.

முட்டை---2






# வெண்பாப் போட்டி

## 59. உழுபவர்க்கே நிலவுடைமை

பெண்ணுக்குத் தாலியிட்டால் பேணுமுறை வேறன்றோ ?
மண்ணுக்குப் ' பட்டா ' மதிப்பீந்தால்—கண்ணனைய
சொத்தாகக் காத்துழைப்பர் ; சொந்தமண்ணில் ஒன்றுக்குப்
பத்தாய் பொருள்குவிப்பர் பார்.

— புலவர் அ. வே. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

உழைத்தார்க்கே சொந்தம் உழுநிலங்கள் என்றார் ;
எழுத்தால் உரிமையும் ஈந்தார்—' பிழைத்துப்போ '
என்றுனக்கே பிச்சை இடவில்லை நீயிதனை
நன்றறிவாய் நெஞ்சே நயந்து.

— புலவர் மு. ஆனந்தபாரதி, கோவை-17.

' உழுவார்க் குரிமைநிலம் ! ' என்னுமுயர் கொள்கை
வழுவாத் தமிழரசால் வாழப்—பழுதின்றி
ஏர்நடக்கும் ; சீர்நடக்கும் ; ஏத்தும் ' நிறை ' நடக்கும் !
பாரிற் பசிப்பிணியே பாழ்.

— ஜெ. மலர்விழி, செந்துறை.

உழுபவர்க்கே பூமி உரிமையெனும் தூய
பழுதிலாக் கொள்கையினைப் பற்றி—இழுக்குடைய
ஏழ்மையினை வீழ்த்துகின்ற ஈடில்லா நல்லரசை
வாழ்த்தாதோ மக்களின் வாய் !

— தா. ஆண்டாள், பொன்மலை.

உழுவோர் நிலம்பெறின், உண்டி இலாதே
அழுவோர் வறுமை அகலும்—பழிசேர்
நிலப்பறி என்னும் வழிப்பறி நீங்கும்
நலமே அடைந்திடும் நாடு.

— தாஜூபால், வல்லம்.

குத்தகையும் கட்டிக் குடிக்கூலி பெற்றிழந்து
மொத்த வரிகளிலும் மூழ்கியே—மக்கிழந்த
இப்பியாய்ச் சாகின்ற இல்லா உழவனே !
தப்பித்தாய் ; தந்தார் நிலம் !

—செல்வி தங்கமணி, மூலனூர்.

மேழி பிடிப்பார்க்கு மேதினியில் வாழ்விலையே
தோழி ! எனநீ துடித்ததற்கோர்—வாழும் நல்
திட்டமதை வரைந்து தெளித்தநம் நல்லரசால்
பட்டினி செத்ததென்றே பாடு !

— மு. தாயார் அலி, சின்னத்தாராபுரம்.

மாயா உலகில் மறைகின்ற மாந்தர்க்குத்
தூய உணவளிக்கச் சோர்வின்றி—ஓயா(து)
உழுபவர்க்கே சொந்தம் உழுநிலம் என்றார்
பழுதின்றி நாடாள் பவர்.

— காரை வே. இராமு, பூண்டி.

உழுகின்ற பாட்டாளி உள்ளம் மகிழப்
பழுதில்லாத் திட்டம் படைத்தார்—தொழுகின்றேன்
நல்லரசை, திட்டத்தால் நன்னிலத்தைப் பெற்றிட்டார்
பல்லாண்டு வாழ்த்தும் பணிந்து.

— புலவர் கோமுகி, ஆதமங்கலம்.

பரிசுபெற்ற வெண்பா எழுதியவர்

புலவர் அ. வே. காசிநாதன்,
அமிர்தராயன்கோட்டை,
கோடாலிக் கருப்பூர் அஞ்சல், திருச்சி மாவட்டம்.

2 முட்டைகளை உடைத்து, சிறு அளவு சமையல் சோடா உப்பு அல்லது கோதுமை மாவுடனும், ரொட்டித்தூளுடனும் (கட்லெட்டின் மேலே மூடுவதற்குப் போதிய அளவிற்கு) நன்கு கலக்க வேண்டும்.



மீன் கைமா பாக்கெட்டைப் பிரித்து எடுத்து, அறையின் வெப்ப நிலையில் 1 அல்லது 1 ½ மணி நேரத்திற்கு—மீன் கைமா மென்மையாக ஆகும் வரை—அப்படியே வைத்திருக்க வேண்டும். வாணலியில் ¼ கிண்ணம் எண்ணெய் (அ) 'டால்டா' விட்டுச் சூடாக்க வேண்டும். பிறகு எண்ணெய் சூடாக இருக்கும் பொழுது அதில் மேற்கூறிய துண்டாக்கப்பட்ட பொருள்களைப் போட்டு சிறிது பழுப்பு நிறம் அடையும் வரை வறுக்க வேண்டும். பிறகு அறைத்த இஞ்சி--பூண்டு பசையையும், உப்பையும் சேர்க்க வேண்டும். இவையும் வறுக்கப்பட்டபிறகு மிளகாய்ப் பொடி, கொத்தமல்லிப் பொடி, மஞ்சள்பொடி ஆகியவைகளைச் சேர்த்து வறுக்க வேண்டும். நன்கு வறுக்கப்பட்ட பிறகு, துண்டாக்கப்பட்ட தக்காளியைச் சேர்க்க வேண்டும். இவை அனைத்தும் நன்குவெந்தபிறகு, மென்மையாக ஆகிய மீன் கறியைச் சேர்க்க வேண்டும். மீன் கறி வேகும் வரை---தண்ணீர் சுண்டும் வரை---நன்கு கிளறிவிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். பிறகு அதில் 'வினீகார்' ஊற்றவேண்டும் அல்லது பாதியளவு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்துவிட வேண்டும். பிறகு வாணலியை அனலில் இருந்து எடுத்து வைத்து, வேக வைத்துப் பிசையப்பட்ட உருளைக் கிழங்கு, சிறு சிறு துண்டுகளாகச் செய்யப்பட்ட ரொட்டித் துண்டுகள் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். மீன் கறி மிகவும் வறட்சியாக ஆகியிருந்தால் ரொட்டித் துண்டுகளைச் சிறிது தண்ணீரில் நனைக்க வேண்டும். பிறகு இவை அனைத்தையும் நன்கு கலந்து, 'கட்லெட்' உருண்டைகளாகச் செய்ய வேண்டும். பிறகு உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப எந்த உருவத்தில் வேண்டுமானாலும், உருண்டைகளைத்தட்டையாகச் செய்து கொள்ளலாம். அவைகளைக் கலக்கிய முட்டையில் நனைத்து எடுத்து, கொஞ்சம் எண்ணெய்யில் வறுக்க வேண்டும். ('கட்லெட்' எண்ணெய்யில் மூழ்கும் அளவுக்கு அதிக எண்ணெய் தேவை இல்லை.) அல்லதுதட்டையாகச் செய்யப்பட்ட 'கட்லெட்டின்' மேல் கொஞ்சம் கோதுமை மாவைத் தூவி, ரொட்டித் தூளில் உருட்டி எடுத்துக் கொண்டு அவைகளைத் தோசை சுடுவதற்குச் செய்வது போல் கொஞ்சம் எண்ணெய் விட்டு, பொன்னிறம் அடையும் வரை வறுக்க வேண்டும். இவ்வாறு வறுக்கப்பட்ட 'கட்லெட்'சாப்பிடுவதற்குத் தயாராக ஆகிவிடுகின்றன. இவைகளைத் தக்காளி சாஸுடன் கலந்து சாப்பிட்டால் மிகுந்த சுவையாக இருக்கும்.

### மீன் தொக்கு

மீன் தொக்கு செய்வதற்கு ஒரு பாக்கெட் (450 கிராம்) கைமா (Fish kheema) வாங்கிக் கொள்ளவும். தொக்கு செய்வதற்குப் பின் கண்ட பொருள்கள் தேவைப்படுகின்றன.

பெரிய வெங்காயம்—1 (துண்டாக்கப்படவேண்டும்)

இஞ்சி—1 துண்டு

பூண்டு—சில பற்கள்

மேற்கூறிய இரண்டும் அரைக்கப்பட வேண்டும்.

மிளகாய்ப் பொடி—2 மேசைக் கரண்டி

கொத்தமல்லிப் பொடி—1 மேசைக்கரண்டி

மஞ்சள் பொடி--1 தேயிலைக் கரண்டி

தக்காளி—4

உப்பு—சுவைக்கு ஏற்ற அளவு.

எண்ணெய் (அ) டால்டா—¼ கிண்ணம்



மீன் கைமா பாக்கெட்டைப் பிரித்து அறையின் வெப்ப நிலையில் 1 அல்லது 1 ½ மணி நேரம் அப்படியே வைத்து, உறைந்த கைமாவை மென்மையாக ஆக்க வேண்டும். துண்டாக்கப்பட்ட வெங்காயத்தை ¼ கிண்ணம் 'டால்டா' (அ) எண்ணெய்யில் வதக்க வேண்டும். அவை பொன்னிறப் பழுப்பு நிறம் அடையும்போது அறைத்த இஞ்சி, பூண்டுகளைச் சேர்க்க வேண்டும். சற்று நேரத்திற்குப்பிறகு மிளகாய்ப் பொடி, கொத்தமல்லிப்பொடி, மஞ்சள் பொடி, உப்பு ஆகியவைகளைச் சேர்க்க வேண்டும். இவைகளை நன்கு வதக்கிய பிறகு, துண்டாக்கப்பட்ட தக்காளியைச் சேர்க்க வேண்டும். அவைகளையும் நன்கு வதக்கிய பிறகு, மீன் கைமாவைச் சேர்த்துக் கொஞ்ச நேரம் கிளறி விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். கொஞ்ச நேரம் வெந்த பிறகு, வேக வைப்பதற்குப் போதிய அளவு தண்ணீர் சேர்க்க வேண்டும். பிறகு பாத்திரத்தை மூடிவிட்டு மீன் கைமாவை நன்கு வேக வைக்க வேண்டும். பாத்திரத்தில் உள்ள மீன் கைமா, குழம்பு போல் ஆகும் பொழுது பாத்திரத்தை அனலில் இருந்து இறக்கி வைத்து அப்படியே வேக விட வேண்டும். இதுவே மீன் தொக்கு! இதைச் சோறு அல்லது ரொட்டி சாப்பிடப் பயன்படுத்தலாம்.

---சாந்தி பேட்ரிக்.







# வெண்பாப் போட்டி

' உழுவோர் உலகத்தார்க் காணி ' யெனுமநல்ல
வழிசொன்ன வள்ளுவர்தம் வாய்மை—நிலையதனைத்
தட்டாது திட்டங்க ளிட்டாளும் நம்மரசு
' பட்டா ' அளித்ததனைப் பார் !

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

உச்சவரம் பென்னும் உயர்திட்டம் செப்பனிட்டே
மிச்சவரம் பெங்கும் மிகக்கண்டு—கச்சிதமாய்
எல்லா உழவர்க்கும் ஏற்ப நிலம்வகுத்து
நல்தந்தமிழ் நாடரசே நாடு.

—அ. இலட்சுமியம்மாள், மூலனூர்.

தனியுடைமை என்னும் தளையறுந்து, நாட்டில்
புனிதப் பொதுவுடைமை பூக்கும்!—இனிமேல்
உழைப்பவர்க்கே சொந்தம் உள்ளநிலம் என்னும்
தழைக்கின்ற திட்டத்தால் தான்.

—பர்ப்பா பாண்டியன், இரா. வெள்ளோடு.

கோடிதவம் செய்தாலும் கூடுமோ இந்நாள்போல்,
வாடியோர் வாழ்வில் வளமிதக்க.—நாடியறப்
பாடுபட்ட பங்கதனைப் பாட்டாளி பாங்காக்கி
நாடுவிதி தீட்டியவிந் நாள்.

—பொன். கோவிந்தராசன், சங்கரன்பந்தல்.

உழுது பயிர்விளைத்தே உண்பொரு ளாக்கிப்
பழுதில்லா வாழ்வால்பார் பெற்றார்—உழுதுண்போர்
கொண்டதுயர் போக்கிடவே கோலத் தமிழரசார்
கண்டநலத் திட்டமிது காண்.

—புலவர் கா. நா. இலக்குவன், சின்னக்கோளு.

பாடெல்லாம் உன்பாடு! பையவரும் நல்லபயன்
பாடெல்லாம் என்பாடு! பங்குனக்காம்—ஓடொன்றே
என்றிருத்தல் நன்றோமோ! ஏற்றம் உழைப்பார்க்கே
என்றுரிமை செய்தாரே இன்று !

—கா. அப்துல்லா, கணியூர்.

நெல்லை விளைத்திந்த நீள்புவியில் வன்பசியே
இல்லையென் றாக்கும்சீர் ஏராளர்க்—கில்லை
நிலம்உழவே என்னும் நிலைஇல்லை யாக்கும்
வளம்சேர் தமிழரசே வாழ்.

—ஜி.வி. அர்த்தநாரி, வேலூர்.

உழவர் நிலஉரிமை உள்ளவராய்ச் செய்யும்
கழக அரசாட்சி காணீர்—அழகாய்ப்
பொதுவுடைமைக் கொள்கை பொலிவுறவே நாட்டில்
இதுவன்றோ ஏற்ற வழி?

—கோ. புகழேந்தி, புதுவை-4.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்பவர் என்னும்
பழுதற்ற செந்தமிழ்ப் பண்பைத்—தொழுதேத்தி
நாளும் தமிழரசார் நம்உழவர்க்(கு) ஆற்றுகின்ற
வாழும் நெறிமுறையே மாண்பு.

—கா. சென்னையா, சாத்தா கோவில்பட்டி.

நேற்றுவரை குத்தகைக்கு நெல்லளந்த காலம்போய்ச்
சேற்றில் உழைக்கின்ற சேரிவாழ்—காத்தான்
உழுநிலத்தில் பெற்றான் உரிமையின்று ;காணீர்!
விழுமியதோர் சாதனையின் வீறு.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி.

உழுபவர்க்கே சொந்தமென உற்றநிலந் தன்னை
வழுவின்றிக் காக்கும் வகையைப் —பழுதறவே
எண்ணிச் செயலாற்றும் எங்கள் தமிழரசைப்
பண்ணமைத்துப் பாடல் பயன்.

—வித்துவான் நா. சிவராம முத்துக்குமரவேல், தேனி.

நிலமுடையார் முன்னாலே நிற்பதற்கும் அஞ்சும்
உளமுடையார் ஆகி, உணர்வு—வளமின்றி
ஏன்வாழ வேண்டும்நீர்? ஏற்பீர் நிலமென்றார்
ஆன்றோர்கள் போற்றும் அரசு.

— கன்று காந்தி, தாராபுரம்.

காடு திருத்திக் கழனி பலவாக்கி
நாட்டிற் குணவூட்டும் நன்மக்கள்—வாட்டும்
நெடும்பசி நீக்க நிலத்தை உழவர்க்(கு)
உடைமையாய் ஆக்குவோம் ஓர்ந்து.

—கா. எழிலன், சொரணக்குடி.

'' உழுகின்ற பூமி உழுவோர்க்கே '' என்னும்
பழுதில்லாச் சட்டத்தால் பாரில்—உழுவோரின்
வேதனைகள் நீங்கி விளைச்சலும் ஓங்குவதால்
சாதனைதான் என்றிதனைச் சாற்று.

—கே.ஏ. அர்ச்சுனன், உத்தமபாளையம்

# வெண்பாப் போட்டி

மண்ணில் மணியெடுத்து மக்களுக்கு வாழ்வளிக்கும்
கண்ணோர் உழவர்தாம் காசினியில்—மண்ணுரிமை
கண்டிடவே சட்டத்தைக் கண்ட தமிழரசு
வண்டமிழ்போல் வாழ்க வளர்ந்து.

— தி. ப. சீதாராமன், குடந்தை.

உழைக்கும் நிலத்தில் உழவர்க் குரிமை
அழைத்தே அளித்தார் அரிதாய்த்—தழைத்துமனங்
கொண்ட மகிழ்வாலே கோடிப் பலன்குவித்தே
என்றும் உயர்வார் இனிது.

— ப. சக்திவேலன், கொட்டப்பட்டு.

நெற்றி வியர்வையை நீராகப் பாய்ச்சித்தான்
வற்றியே தேய்ந்தும் வயலுழுதார்—வெற்றியுறச்
சொந்தமாக்கித் தந்தார் தமிழரசார் ; இவ்வுரிமை
எந்தரசும் செய்ததில்லை இன்று !

— க. சுந்தரராசன், கருங்காலக்குடி.

உழுவார்க் குரிய துழுநில மென்னும்
வழுவில்லாச் சட்டத்தால் வாழும்—உழுபடையார்
உண்ணும் பொருளை உபரியா யாக்கிடத்
திண்ண முடனுழைத்தார் தேர்ந்து.

— புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

உழுவோர் நிலத்திற்(கு) உரியரெனப் பட்டா
எழுதிக் கொடுத்திட்டார் இன்னும்—அழுகையேன்
நல்லவர்கள் போற்றுகின்ற நம்மரசின் கொள்கைகள்
வெல்லும் உலகை விரைந்து.

— மெய். அருண்மொழியன், கலையனூர்.

குத்தகை யென்னும் கொடிய பெயர்சூட்டி
நித்தம் உழுபவனை நித்திரை—யற்றவனை
வாட்டும் நிலமுடையோர் வாயடைக்கச் செய்வதுவே
காட்டும் நிலவுரிமைக் காப்பு !

— புலவர் கு. பழனிச்சாமி, கவுந்தப்பாடி.

மின்னும் மணிகளுந்தன் மேனி நிறைவதற்கே
இன்றவிழ்த்தார் கைவிலங்கை என்முகம்பார்—மண்மகளே!
நானுனக்காம் நீயெனக்காம் நானிலத் தாரையினி
வானுயர வாழ்விப்போம் வா.

— புலவர் மா. புகழேந்தி, ஓலைப்பாடி.

ஒப்பரிய வாழ்வை உழவர்க் குரித்தாக்கிச்
செப்பரிய செல்வர் செருக்கழித்தார் ;—தப்பிலா
மாரிகுணங் கொண்ட மறக்கலைஞர் ; ஆட்சியின்
நேரினைநீ வாயாரப் பேசு.

—புலவர் சாமி. வரதராசன், கல்லணை.

அழுகின்ற பிள்ளைக்கிங்(கு) அன்னைதரும் பால்போல்
உழுதுண்ணும் மக்களின் உள்ளம்—பொழுதும்
விடிந்தது பூமிநம்கை வந்ததெனப் போற்றிக்
கடிதில் உழைப்பதைக் காண்.

—மு. அழகிரிசாமி, உதயமார்த்தாண்டபுரம்.

பூகம்ப மின்றிப் புரட்சிப் புயலின்றி
மாகுன்றம் சாய்த்த மடுப்போலத்—தோகாய்!
நிலமற்றார் இங்கே நிலம்பெற்றார்! நம்போல்
நலம்பெற்றார் உண்டோ நவில்?

—பல்லவன், திருக்கழுக்குன்றம்.

உழுபவர்க்கே சொந்த நிலமென் றரசே
முழங்கியதோ! ஏழ்மை ஒழியும்—எழு! எழு!
செப்பரிய சீர்திருத்தம் செய்த தலைவனின்
ஒப்பரிய கொள்கையென் றோது!

—மு.க. மூர்த்தி, மானம்புச்சாவடி.

இன்றும் வரவில்லை என்னத்தான் நேரத்தில்!
அன்றிலைப்போல் வாடுகிறேன் ஆறுதலே—இன்றி
உழுவோர்க்கு மண்ணை உரிமையென்று சொல்லப்
பொழுதோடு செய்கின்றேன் போர்.

—சு. மலர்க்கொடி, அரியலூர்

காணிநிலம் வேண்டுமென்ற பாரதியின் நற்கருத்தைப்
பேணிச் செயல்வடிவம் பெற்றளித்தார்—தூணென
நின்றே துணிவாய் நிலத்தை உழுபவர்க்
கென்றே அறைந்தார் எழுந்து.

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

நாள்தோறும் பாடுபட்டும் நல்லுணவும் உண்ணாமல்
மாள்கின்ற நல்லுழவர் மாத்துயரம்—வாள்கொண்டு
நீக்குதல்போல் இங்குழுவோர்க் கேநிலம் சொந்தமென்
றாக்கியதே சட்டம் அரசு.

—பண்ணை மதிவண்ணன், சென்னை-1.


செய்தியே சித்திரமே!
தமிழ்நாட்டில் ரூபாய் 84 லட்சம் செலவில் 14 சிறு பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படும்
குடும்ப நலத்திட்டத்திற்குத் தமிழ்நாட்டுக்கு அளித்து வந்த 6 கோடி நிதி உதவியை 2.94 கோடியாக மத்திய அரசு குறைத்தாலும் தமிழ்நாடு அரசு 1.25 கோடி ரூபாயை மேலும் அளித்துக் குடும்பநலத் திட்டப் பணிகள் தொடர உதவிடும்
ரூ 1.25 கோடி
மின் உற்பத்திக்குத் தனிக் கழகம் அமைக்கப்படும்


செய்தியே சித்திரமே!
சென்னைக்கு அருகில் வண்டலூரில் ஏறத்தாழ மூன்று கோடி ரூபாய் செலவில் புதிய மிருகக்காட்சிசாலை இயற்கைச் சூழலில் அமைக்கப்படும்
கோயில் இறை நிலங்களில் பயிரிடுவோர் பட்டா உரிமை பெறப் புதிய சட்டம் வரும்
புதுக்கோட்டை தனி மாவட்டமாகப் பொங்கலன்று உதயமாகும்
திருச்சிராப்பள்ளி மாவட்டம்
புதுக்கோட்டை மாவட்டம்
இராமநாதபுரம் மாவட்டம்






# புன்செய் விளையின் பஞ்சம் தீரும்!

"புன்செய் விளையின் பஞ்சம் தீரும்!" என்பது தமிழ்நாட்டில் நெடுங்காலமாக நிலவிவரும் பழமொழியாகும்! இப்பழமொழி முழுக்க முழுக்க உண்மையானது என்பது ஆராய்ந்து பார்ப்போர்க்கே நன்கு புலனாகும்.

தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் ஏறக்குறைய 160 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகிறது. அப்பரப்பளவில் ஏறக்குறைய 100 இலட்சம் ஏக்கர் புன்செய் நிலங்களாகவே உள்ளன. அப்பரப்பு முழுவதும் மானாவாரியாகவே பயிரிடப் படுகின்றன. தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான புன்செய் நில உழவர்கள் தங்கள் உணவுக்கும், கால்நடைகளின் தீவனத்திற்கும், வருவாய்க்கும் புன்செய் நிலங்களையே நம்பி இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் உள்ள மொத்த உணவு நானிய உற்பத்தியில் ஏறக்குறை நான்கில் ஒரு பகுதி, புன்செய் நிலங்களில் இருந்தே கிடைக்கின்றன. கிராமப்புற மக்களில் பெரும்பாலோர் புன்செய் தானியங்களையே அன்றாட உணவாக உண்டு வருகின்றனர். எனவே, புன்செய் நிலங்களில் மானாவாரியாகப் பயிரிடப்படும் சிறுதானியங்களும், பருப்பு வகைகளும் நன்கு விளைந்தால்தான் பஞ்சம் தீரும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகிறது.

மேலும் ஊட்டச் சத்துக்கள் நிறைந்த சிறுதானியங்களும், பருப்பு வகைகளும் புன்செய் நிலங்களிலிருந்தே கிடைத்து வருகின்றன. ஊட்டச் சத்துணவின் அடிப்படையில் அன்றாட உணவில் கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, சாமை, வரகு முதலிய சிறுதானியங்களைக் கலப்பு உணவாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது.

ஆகவே, ஊட்டச் சத்துணவின் அடிப்படையிலும், புன்செய் நிலப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

இவ்விரு காரணங்களையும் முன்னிட்டே புன்செய்ப் பயிர்கள் சாகுபடியில் உழவர் பெருமக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு புன்செய் நிலங்களுக்குரிய அடிப்படை நிலவரியைத் தள்ளுபடி செய்தது. புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்கிடும் முறைகளை உழவர் பெருமக்களுக்கு விளக்கிடச் செயல் விளக்கத் திடல்களையும், பண்ணைகளையும் நன்கு அமைத்திடவும், புன்செய்ப் பயிர்கள் சாகுபடிக்கான விதை, உரம், மருந்து போன்ற தேவையான பொருள்களை (inpats) வழங்கிடவும், கடன் உதவி அளித்திடவும் தமிழ்நாடு அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்து, புன்செய் நில உழவர் பெருமக்களின் வாழ்வை வளமாக்க முயன்று வருகிறது.

தமிழ்நாடு அரசு அளிக்கும் சலுகைகளைப் பயன்படுத்தி, புன்செய்ப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதற்காகக் கீழ்க் கண்டுள்ள வழிமுறைகளையும், ஒருமித்த செய்நேர்த்தி முறைகளையும், (Package of practices) புன்செய் நில உழவர் பெருமக்களுக்குத் 'தமிழரசு' சார்பில் காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

## மானாவாரி மகசூலைப் பெருக்கும் வழிமுறைகள்

மானாவாரி பண்ணைகளின் உற்பத்தி பெருகுவதோ அல்லது குறைவதோ மண்ணின் ஈரத்தைப் பொறுத்ததேயாகும். புன்செய் நிலங்களில் பெய்யும் மழை பின்கண்ட 3 வகைகளில் சேதம் அடைகிறது.

1. ஆவியாதல் (Evoporation)

2. மண்ணின் வழியே வடிந்து பூமியின் அடியில் சென்று விடுதல். (Percolation)

3. வெள்ளமாக ஓடி விரைந்து வடிந்து போதல் (Surface run-off)

இவ்வாறு மழைநீர் சேதமாவதைத் தகுந்த உழவியல் முறைகள் மூலமாகவும், மண் மற்றும் ஈரம் பாதுகாக்கும் முறைகள் மூலமாகவும் கணிசமான அளவுக்குக் குறைத்து

# IKEBANA



# இகபனா

"உங்கள் பெண்ணுக்குப் பாடத் தெரியுமா? ஆடத் தெரியுமா?" என்று மாப்பிள்ளை வீட்டார் கேட்பதைப் பார்த்திருக்கிறோம்.

ஆனால், "உங்கள் பெண்ணுக்கு மலர் அடுக்கத் தெரியுமா?" என்பதைக் கேள்விப்பட்டிருக்கிறோமா?

ஜப்பானில் மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைப் பார்க்கப் போகும்போது இந்தக் கேள்வியைக் கேட்கத் தவறுவதில்லை! ஜப்பானியர் மலரை அழகுக்காக மட்டுமின்றி, அதனைத் தெய்வமாகக் கூட மதிக்கின்றனர்.

'வாழ்க்கை வேறு, கலை வேறு என்று கூறுகிறார்கள். வாழ்க்கையும், கலையும் ஒன்றோடொன்று பிணைந்தது தானே?' என்று சொல்வது போல ஜப்பானியரின் வாழ்க்கை கலை வடிவாய் அமைந்திருக்கிறது. எதையும் கலைக் கண்ணோடு பார்க்கும் ஜப்பானியர் எந்தப் பொருளையும் வீணாக்குவதில்லை. ஒரு சிறு துரும்புகூடச் சித்திரமாகிவிடும், அவர்கள் கைவண்ணத்தாலே!

வீடு, அலுவலகம், பொது இடம் எதுவும் எழில் மிக்கதாய்க் காட்சி அளிக்கும். அதற்குக் காரணம் அவர்களுக்கிருக்கின்ற கலையுணர்வு தான் என்றால் அது மிகையல்ல. அவர்கள் இல்லங்களில் வண்ண வண்ண மலர்கள் வந்தாரை வரவேற்கும்! அழகின் சிரிப்பை அங்கே கண்டு மகிழலாம்.

நாம் கோலம் போடுவதை ஒரு கலையாகவே வளர்த்து வரவில்லையா? அதைப்போல, ஜப்பானியர் மலர்களைக் கிளையோடு பறித்துத் தொகுத்து, அதனை அழகாய் அடுக்கி வைக்கும் கலையை வளர்த்து . வருகின்றனர். இக்கலை இங்குப் பன்னெடுங் காலமாய் வளர்ந்து வருகிறது; அவர்கள் வாழ்க்கையோடு இணைந்த அருங்கலையாகவும் அது விளங்கி வருகிறது.

இப்படிப் பல்வேறு வகையான மலர்களை அடுக்கி வைக்கும் கலைக்குப் பெயர்தான் இகபனா! இந்த இகபனா (Ikebana) கண்காட்சி ஒன்று செப்டம்பர் 23, 24-ஆம் தேதிகளில் சென்னை இராசேசுவரி திருமண மண்டபத்தில் நடந்தது.

விழாவுக்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் யார் தெரியுமா? பெண்கள்தான் ! பூவையர் என்பதை மெய்ப்பிக்கவோ என்னவோ இந்தப் பூக்கண்காட்சிக்கு அவர்கள் வண்ணப் பூக்களைப் போல உடையணிந்து வந்திருந்தனர்!

'இந்தோ-நிப்பான் பண்பாட்டுக் கூட்டுறவுக் கழகம்' நடத்திய இந்தக் கண்காட்சி, கண் கொள்ளாக் காட்சியாக இருந்ததைக் குறிப்பிட வேண்டும்.

காட்சி அரங்கத்தினுள் நுழைகிறோம். எத்தனை எத்தனை மலர்கள்! எத்தனை எத்தனை வண்ணங்கள்! நம் எண்ணங்கள் மலரோடு ஒன்றிப் போகின்றனவே! அதோ! சிவப்பு, மஞ்சள், வெள்ளை, ஆரஞ்சு வண்ணங்களில் மலர்கள் புத்தம் புதியனவாய்க் காட்சி அளிக்கின்றனவே! அவையெல்லாம் இன்று காலை பறித்தனவா? அருகே போகிறோம். உற்று உற்று பார்க்கிறோம். நம் கண்களை நம்மால் நம்பவே முடியவில்லை. தொட்டுப்பார்க்கிறோம். (தயவு செய்து தொடாதீர்கள் என்ற அறிவிப்பைப்பொருட்படுத்தாமல்!) காகிதப் பூக்களா அப்படிக் காட்சியளிக்கின்றன என்று ஜப்பானியர் கைவண்ணம் கண்டு வியக்கிறோம்! கண்ணாடிப் பெட்டியில் உள்ள, பொம்மை என்ன உயிருள்ளவையா? ஜப்பானியர் கை
















# புன்செய் விளையின் பஞ்சம் தீரும்!

"புன்செய் விளையின் பஞ்சம் தீரும்!" என்பது தமிழ்நாட்டில் நெடுங்காலமாக நிலவிவரும் பழமொழியாகும்! இப்பழமொழி முழுக்க முழுக்க உண்மையானது என்பது ஆராய்ந்து பார்ப்போர்க்கே நன்கு புலனாகும்.

தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 160 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு வருகிறது. அப்பரப்பளவில் ஏறத்தாழ 100 இலட்சம் ஏக்கர் புன்செய் நிலங்களாகவே உள்ளன. அப்பரப்பு முழுவதும் மானாவாரியாகவே பயிரிடப் படுகின்றன. தமிழ் நாட்டிலுள்ள பெரும்பாலான புன்செய் நில உழவர்கள் தங்கள் உணவுக்கும், கால்நடைகளின் தீவனத்திற்கும், வருவாய்க்கும் புன்செய் நிலங்களையே நம்பி இருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் உள்ள மொத்த உணவு தானிய உற்பத்தியில் ஏறத்தாழ நான்கில் ஒரு பகுதி, புன்செய் நிலங்களில் இருந்தே கிடைக்கின்றன. கிராமப்புற மக்களில் பெரும்பாலோர் புன்செய் தானியங்களையே அன்றாட உணவாக உண்டு வருகின்றனர். எனவே, புன்செய் நிலங்களில் மானாவாரியாகப் பயிரிடப்படும் சிறுதானியங்களும், பருப்பு வகைகளும் நன்கு விளைந்தால்தான் பஞ்சம் தீரும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகிறது.

மேலும் ஊட்டச் சத்துக்கள் நிறைந்த சிறுதானியங்களும், பருப்பு வகைகளும் புன்செய் நிலங்களிலிருந்தே கிடைத்து வருகின்றன. ஊட்டச் சத்துணவின் அடிப்படையில் அன்றாட உணவில் கம்பு, கேழ்வரகு, சோளம், தினை, சாமை, வரகு முதலிய சிறுதானியங்களைக் கலப்பு உணவாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்படுகிறது.

ஆகவே, ஊட்டச் சத்துணவின் அடிப்படையிலும், புன்செய் நிலப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

இவ்விரு காரணங்களையும் முன்னிட்டே புன்செய்ப் பயிர்கள் சாகுபடியில் உழவர் பெருமக்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துவதற்காகத் தமிழ்நாடு அரசு புன்செய் நிலங்களுக்குரிய அடிப்படை நிலவரியைத் தள்ளுபடி செய்தது. புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்காக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், புன்செய்ப் பயிர்களின் மகசூலைப் பெருக்கிடும் முறைகளை உழவர் பெருமக்களுக்கு விளக்கிடச் செயல் விளக்கத் திடல்களையும், பண்ணைகளையும் நன்கு அமைத்திடவும், புன்செய்ப் பயிர்கள் சாகுபடிக்கான விதை, உரம், மருந்து போன்ற தேவையான பொருள்களை (inpats) வழங்கிடவும், கடன் உதவி அளித்திடவும் தமிழ்நாடு அரசு போதிய நிதி ஒதுக்கீடு செய்து, புன்செய் நில உழவர் பெருமக்களின் வாழ்வை வளமாக்க முயன்று வருகிறது.

தமிழ்நாடு அரசு அளிக்கும் சலுகைகளைப் பயன்படுத்தி, புன்செய்ப் பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதற்காகக் கீழ்க் கண்டுள்ள வழிமுறைகளையும், ஒருமித்த செய்நேர்த்தி முறைகளையும், (Package of practices) புன்செய் நில உழவர் பெருமக்களுக்குத் 'தமிழரசு' சார்பில் காணிக்கையாகப் படைத்துள்ளோம்.

### மானாவாரி மகசூலைப் பெருக்கும் வழிமுறைகள்

மானாவாரி பண்ணைகளின் உற்பத்தி பெருகுவதோ அல்லது குறைவதோ மண்ணின் ஈரத்தைப் பொறுத்ததேயாகும். புன்செய் நிலங்களில் பெய்யும் மழை பின்கண்ட 3 வகைகளில் சேதம் அடைகிறது.

1. ஆவியாதல் (Evoporation)
2. மண்ணின் வழியே வடிந்து பூமியின் அடியில் சென்று விடுதல். (Percolation)
3. வெள்ளமாக ஓடி விரைந்து வடிந்து போதல் (Surface run-off)

இவ்வாறு மழைநீர் சேதமாவதைத் தகுந்த உழவியல் முறைகள் மூலமாகவும், மண் மற்றும் ஈரம் பாதுகாக்கும் முறைகள் மூலமாகவும் கணிசமான அளவுக்குக் குறைத்து

வண்ணம் அதனை உயிரோவியமாய்க் காட்டுகிறது!

மலர்கள் நமக்கு மணத்தை மட்டுமா தருகின்றன? 'அன்றலர்ந்த செந்தாமரை போல் என்றும் மலர்ந்த முகத்தோடு இருங்கள்' என்றல்லவா அது திருவாய் மலர்கிறது!

உயர்ந்த மலை!

அதையொட்டி அழகிய ஏரி! ஆகா! எத்தனை அழகு! ஏரியிலே செல்லும் படகுகள்--பார்த்துக்கொண்டே போகிறோம். வானளாவிய கட்டடங்கள். நீண்ட பரந்த சாலைகள். ஆங்காங்கே அடுக்கடுக்கான பாலங்கள். அதில் விரைந்து செல்லும் ஊர்திகள். ஆடவர், மகளிர் அலுவலகம் செல்லும் காட்சி. திருவிழாக்கள். தீப அலங்காரங்கள். இயற்கைக் காட்சிகள். இதயத்தைத் தொடும் மலர் வண்ணங்கள்---



எதிரே வண்ணப்படம் காட்டப்படுகிறது! நாம் ஜப்பானுக்கே போய்வருகிறோம்!

இகபனா!

கமினோ ஹனா

ஓரி காமி . . . இப்படியெல்லாம் சொல்லி உங்களைப் புதிருக்குள் ஆழ்த்தவில்லை. இகபனா என்றால் மலர்களை எழிலுற அடுக்கி வைப்பது, கமினோ ஹனா என்றால், காகிதத்தாலான பூக்களை அழகுற அடுக்கி வைத்தல், ஓரி காமி என்றால்? காகிதத்தாலான பொம்மைகள் முதலானவற்றைச் செய்து காட்டுதல். இம்மூவகைக் காட்சிகளும் நம் மனத்தில் முத்திரையாய்ப் பதிகின்றன.

நாம் மலர் பறித்து மாலை தொடுக்கிறோம். கூந்தலில் அணிந்து மகிழ்கிறோம். ஆனால் ஜப்பானியர் மலரை வெறும் அழகுப் பொருளாக மட்டும் நோக்காது, அதை ஒழுங்குபடுத்தி பூத் தொட்டியில் தொகுத்து வைப்பதைச்சிறந்த பொழுதுபோக்காக — ஏன், தொழிலாகக் கூட கொண்டுள்ளனர். இப்பணியில் மகளிர் மட்டுமல்ல, ஆடவரும் கூட ஈடுபடுகின்றனர். புத்தர் பிறந்த நாளில் 'பூமாரி' விழாவொன்றை ஜப்பானியர் நடத்துகிறார்கள். தோட்டக்கலையிலும் அவர்கள் நிகரற்று விளங்குகிறார்கள்.

வீட்டில் உள்ள மலர் அலங்காரத்தைக் கொண்டே அவ்வீட்டின் நிலைமையை நாம் தெரிந்து கொள்ளலாமாம்! மலரை அடுக்கிவைக்கும் முறை இதனை வெளிப்படுத்துமாம். இவ்வாறு மலர்ந்த வாழ்வினையுடையவர்களாக ஜப்பானியர் விளங்குகிறார்கள்.

இம்மாதிரியான மலர்க் கண்காட்சிகள் இதுவரை நான்கு நடந்துள்ளன. இவற்றை ஏற்பாடு செய்து வரும் இந்தோ-நிப்பான் பண்பாட்டுக் கூட்டுறவுக் கழகம் 1971-ல் சென்னையில் துவங்கியது. இது ஜப்பான் நாட்டு ஓசாகாவில் உள்ள ஜப்பான் வேதாந்தக் கழகத்தோடு தோழமை கொண்டுள்ளது. இந்தியா--ஜப்பான் இரு நாடுகளிடையே கலை, இலக்கிய வழி தோழமை ஏற்படுத்துவதே இவ்வமைப்பின் தலையாய நோக்கமாகும்.

ஆமாம், 'நிப்பன்' என்றால் என்ன?

ஜப்பானை 'உதய ஞாயிற்றொளி பெறும் நாடு' என்று கூறுவர். ஜப்பானியர் தங்கள் நாட்டை 'நிப்பன்' என்றே சொல்கின்றனர். இச்சொல்லுக்குச் 'சூரியன் தோன்றும் இடம்' என்று பொருள். நிப்பன் என்பதுதான் பிறகு ஜப்பான் என்று மருவியது. ஜப்பான் நாட்டுக் கொடியில் கூட சூரியன் இருப்பது இதனை உணர்த்தும்.

சென்னையிலுள்ள இந்தக் கழகம் என்ன செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?





தமிழில் ஜப்பான் மொழியைக் கற்றுக் கொள்ள இது வகுப்புகள் நடத்துகிறது. இதற்காக 'ஜப்பான் மொழி பயில எளிய வழி' என்ற நூலைத் தமிழில் முதன் முதலாக வெளியிட்டிருக்கிறது. இம்மொழியில் துவக்கம், உயர்நிலை, மேல் உயர்நிலை என்ற மூவகைத் தேர்வுகள் உள்ளன. 9 மாதக் காலத்துக்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஜப்பான் மொழியைக் கற்றுத் தருவதற்கென்றே, ஜப்பானிலிருந்து புதிய புதிய ஆசிரியைகள் சென்னைக்கு வரவழைக்கப்படுகின்றனர்.

இவையன்றி, இகபனா, கமினோ ஹனா, ஓரிகாமி ஆகிய வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இவ்வகுப்புகளிலும், ஜப்பான் மொழிப் பயிற்சியிலும் தேர்வுபெறுபவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப் பெறுகின்றன. இத்தகைய சான்றிதழ்களைக் கண்காட்சியின் போது நிறையப் பேர் பெற்றனர்.

350 பேரை உறுப்பினராகக் கொண்ட இக் கழகம், திங்கள் தோறும் ஜப்பான் பற்றிய திரைப் படங்களைக் காட்டுகின்றது. ஆண்டுக்கோர் முறை ஜப்பான் நாட்டுக்குக் குறைந்த செலவில் போய் வரவும், இலவசமாக அங்கு ஒரு வாரக் காலம் தங்கவும் ஏற்பாடு செய்கிறது. இதுவரை மூன்று சுற்றுலாக்களை ஏற்பாடு செய்து உறுப்பினர்களை மகிழ்வித்திருக்கிறது.

'ஜப்பானிலும் இதற்குத் தொடர்பான கழகம் ஒன்று இருந்தால் நல்லதல்லவா?' என்று நீங்கள் கேட்பது புரிகிறது.

ஜப்பானிலும் இதற்குத் தொடர்பான கழகம் ஒன்று செயல்படுகிறது. சமூகத் தொண்டில் தற்போது ஈடுபட்டுவரும் அது, தமிழ்மொழியைக் கற்றுத் தரவும், தமிழ் இசையில் பயிற்சி தரவும் தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இங்கிருந்து ஜப்பானுக்குச் சுற்றுலா செல்வது போல, அங்கிருந்தும் இந்தியாவுக்குச் சுற்றுலா வருகின்றனர். அந்தப் பயணிகளுக்குச் சென்னையிலுள்ள கழகம் பல வகையிலும் உதவிகள் புரிகின்றது.

இவ்வாறு இரு நாடுகளிடையே பண்பாடு, கலை, இலக்கிய உறவுகளை வளர்ப்பதற்கு இந்த இரு கழகங்கள் பெருந்துணை புரிந்து வருகின்றன.

தமிழின் தொன்மை, அதன் பெருமை முதலானவற்றை விளக்கிடும் வகையில் ஜப்பானிலுள்ள கழகம் விரைந்து செயலாற்றிட முன்வர வேண்டும். மலர்க் கண்காட்சியைப் போன்று, தமிழர் சிற்ப, சித்திரக் கலைக்கண்காட்சி ஒன்றையும் ஜப்பானில் நடத்தலாம். தேமதுரத் தமிழோசை பரவும் வகை செய்வதற்கு இருநாட்டுப் பண்பாட்டு உறவுக் கழகங்களும் முன் வர வேண்டும்.

மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம் என்பதை உணர்த்திட, உணர்ந்திட இந்த மலர்க் கண்காட்சி நமக்கெல்லாம் ஒரு படிப்பினையைத் தந்துவிட்டது என்று நிச்சயமாகக் கூறலாம்!

—பி. வி. ஜி

## 10,200 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு

தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பின்றி உள்ள ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 1973-74ல் 10,200 ஆசிரியர் பதவிகளைப் புதிதாகத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியுள்ளது. அவற்றுள் ஹையர் கிரேடு பதவிகள் 500, செகண்டரி கிரேடு பதவிகள் 6,000, உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் 500, பி. டி. ஆசிரியர் பதவிகள் 1,200, கைத்தொழில் ஆசிரியர் பதவிகள் 2,000 ஆகும்.

இந்தியாவெங்கும் படித்து வேலை இன்றியிருப்பவர்களில் 5 இலட்சம் பேருக்கு 1973-74ல் வேலை வாய்ப்பளிப்பதற்கான திட்டத்தின்கீழ் இப்பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்படுவோர் அனைவரும் முறையான ஆசிரியர் பதவிகளில் உள்ளோரைப் போலவே சம்பளம், அகவிலைப்படி முதலியனவற்றைப் பெறுவர். இத்திட்டத்துக்கு 1973-74ல் ஆகும் மொத்தச் செலவு சுமார் ரூ. 150 லட்சமாகும் என்று மதிப்பிடப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்படுவோர் அனைவரும் 1974-75ம் கல்வி ஆண்டில் முறையான பதவிகளில் அமர்த்தப்படுவர்.

மேற்சொன்ன பதவிகளைப் பல்வேறு மாவட்டங்களிலுள்ள தலைமைக் கல்வி அலுவலர்களிடையே பள்ளிக் கல்வி இயக்குநர் பகிர்ந்தளிப்பார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்படும் பதவிகளை அம்மாவட்டத்தில் பல்வேறு வகை நிருவாகங்களின்கீழ் (அரசு, உள்ளாட்சி மன்றம் மற்றும் தனியார் நிருவாகங்கள்) உள்ள பள்ளிகளுக்குத் தலைமைக் கல்வி அலுவலர் பகிர்ந்தளிப்பார். ஆசிரிய—மாணவர் விகிதப்படி எவ்வெப்பள்ளிகளுக்குக் கூடுதல் பதவிகள் மிகவும் தேவையோ அவற்றுக்கு அப்பதவிகள் கிட்டும்.

ஏற்கெனவே தொழில் பழகு ஆசிரியர் திட்டம் என ஒன்று 1970 அக்டோபர் முதல் இம்மாநிலத்தில் செயல்பட்டு வந்துள்ளது. அத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட சுமார் ஆறுயிரம் பேரில், சுமார் 1,800 பேர் தவிர மீதியுள்ளோர் அனைவரும் ஏற்கெனவே முறையான பதவிகளில் நியமிக்கப்பட்டு விட்டனர். அந்த 1,800 பேருக்கும் பயன் அளிப்பதற்காகவென்றே இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள 10,200 பதவிகளுள், 1,800 பதவிகள் ஒதுக்கப்பட்டு அந்த 1,800 தொழில் பழகு ஆசிரியர்களும் இனிமேல் முறையான [illegible] முழுச் சம்பளம் பெற வகை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை அந்த 1,800 பேரும் ஹையர் கிரேடுக்கு மாதம் ரூ. 100, செகண்டரி கிரேடுக்கு மாதம் ரூ. 125, பி.டி. க்கு மாதம் ரூ 175 என்ற மொத்த ஊதியம் மட்டுமே பெற்று வந்துள்ளனர். இனி அவரனைவரும் முழுச் சம்பளம் ([illegible] முதலியன உட்பட) பெறுவர்.

விடமுடியும். அதன் பயனாய், மானாவாரிப் பயிர்கள் நன்கு வளர்ந்து நல்ல மகசூல் தரக் கூடும்.

ஆராய்ச்சி மற்றும் உழவர் பெருமக்களின் அனுபவத்தின் அடிப்படையில், மானாவாரியில் தனிப் பயிராகவோ அல்லது கலப்புப் பயிராகவோ பயிரிடுவதற் கேற்ற பயிர்களையும், அப்பயிர்களுக் கேற்ற சாகுபடி முறைகளையும் கீழே பரிந்துரைத்துள்ளோம்.

### மானாவாரி சாகுபடிக்குப் பத்துக் கட்டளைகள்

1. புன்செய் நிலங்களின் சம உயர வரப்பு (Contour band) அமைக்க வேண்டும்.

2. மண்ணில் ஈரத்தைப் பாதுகாக்க, புன்செய் நிலங்களை நாட்டுக் கலப்பை அல்லது இலேசான இரும்புக் கலப்பையால் 2 அல்லது 3 முறை உழவேண்டும்.

3. கடைசி உழவு சம உயர வரப்பு அமைத்துள்ள வாக்கில் (Contour) செய்யப் பட வேண்டும்.

4. புன்செய் நிலங்களில் வரப்பு அமைக்கவும், குறுக்கு வரப்பு அமைக்கவும் பார் கலப்பையைப் (Bund-fomer) பயன் படுத்த வேண்டும்.

5. புன்செய் நிலத்தில் சம நிலைக் கோட்டுவாக்கில் அதாவது சம உயர வரப்பு அமைந்துள்ள நிலத்தில் விதைக்க வேண்டும்.

6. புன்செய் நிலத்தில் தனி ஒரு பயிரைப் பயிரிடாமல், தகுந்த கலப்புப் பயிர்களைப் பயிரிட வேண்டும்.

7. புன்செய் நிலங்களில் வரிசை வரிசையாகவே விதைக்க வேண்டும். வரிசையாக விதைப்பதற்கு 'கொரு' (Gorru) எனப்படும் கருவி, விதைப் கலப்பை (Seed drill) ஆகியவைகளைப் பயன்படுத்த வேண்டும்.

8. புன்செய் நிலங்களில் களையெடுக்க 'தந்துலு' (Dantulu) எனப்படும் கருவி அல்லது புன்செய் நிலக் களையெடுக்கும் கருவியையே (Dryland weeder) பயன்படுத்த வேண்டும்.

9. புன்செய் நிலப் பயிர்களுக்குப் பரிந்துரைக்கப்படும் அளவில் தொழு எரு, இரசாயன உரம் ஆகியவைகளை இடவேண்டும்.



10. புன்செய்ப் பயிர்களுக்கும் பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள 10 கட்டளைகளையும் மேற்கொண்டு, மானாவாரி சாகுபடியை மேற்கொண்டால், மானாவாரி மகசூல் பெருகுவது திண்ணம்!

தற்பொழுது தமிழ் நாட்டில் முக்கியமாகச் சோளம், கம்பு கேழ்வரகு, தினை, சாமை, வரகு ஆகிய சிறு தானியங்களே மானாவாரியாகப் பயிரிடப்படுவதால், அப்பயிர்களின் மகசூலைப் பெருக்குவதற்குரிய ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள்) மட்டுமே கீழே விவரித்துள்ளோம்.

## செய்நேர்த்தி முறைகள்

### 1. மானாவாரி சோளம்

#### ஏற்ற ரகங்களும் வயதும்

| ரகங்களின் பெயர். | வயது (நாட்கள்.) |
| --- | --- |
| கோ. 19 | 125 முதல் 135. |
| கோ. 20 | 125 முதல் 135. |
| கே. 3 | 125 முதல் 135. |
| 'சொர்ணா' | 90 முதல் 100. |
| 'சி. எஸ். எச். 2' | 90 முதல் 100. |
| 'சி. எஸ். எச். 3' | 105 முதல் 115. |

விதைக்கும் பருவம் :—

ஜூலை.— ஆகஸ்ட் மாதங்களில் விதைப்பது சிறந்தது.

நிலம் தயாரித்தல் :—

நாட்டுக் கலப்பை அல்லது இலேசான இரும்புக் கலப்பையால் 2 முதல் 3 முறை உழவேண்டும்.

உரமிடுதல் :—

அடியுரமாக ஏக்கருக்கு 10 வண்டி (5 டன்) தொழு எரு அல்லது கலவை எரு. 18 கிலோ தழைச்சத்து (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா). 9 கிலோ மணிச்சத்து (56 கிலோ சூப்பர் பாஸ்பேட்) ஆகியவைகளை இடவேண்டும்.

விதையளவு :—

(அ) வரிசை விதைப்பு :— கோ. 19, கோ. 20, கே. 3 ஆகிய ரகங்களைப் பயிரிட ஏக்கருக்குக் 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். 'சொர்ணா' 'சி. எஸ். எச். 2', 'சி. எஸ். எச், 3' ஆகிய ரகங்களைப் பயிரிட ஏக்கருக்கு 6 கிலோ விதையை விதைக்க வேண்டும்.

(ஆ) பரவலாகத் தூவி விதைத்தல் : கோ. 19, கோ. 20 கே. 3 ஆகிய ரகங்களுக்கு ஏக்கருக்கு 10 கிலோ விதையும், 'சொர்ணா', 'சி.எஸ்.எச். 2' 'சி.எஸ்.எச். 3' ஆகிய ரகங்களுக்கு ஏக்கருக்கு 8 கிலோ விதையும் விதைக்க வேண்டும்.

விதையுடன் மருந்து கலக்குதல் :—

ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'கேப்டான்' அல்லது 'டீ.எம். டீ. டி.' மருந்து வீதம், விதை கலக்கும் கருவியில் இட்டு, நன்கு சுற்றி விதைகளும் மருந்தும் நன்கு கலக்குமாறு செய்ய வேண்டும்.

விதைத்தல் :—

மண்ணில் உள்ள ஈரம் காய்வதற்குள் பெரும் பரப்பில் விதைப்பதற்கு 'கொரு' அல்லது விதை கலப்பையைப் பயன்படுத்தி வரிசையில் விதைக்க வேண்டும்.

இடைவெளி :—

வரிசைக்கு வரிசை 45 செ. மீட்டர் (1½ அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 15 செ. மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும்.



கலப்புப் பயிர்:—

வரிசை வரிசையாக விதைக்கும் பொழுது 4 வரிசை சோளம், ஒரு வரிசை மொச்சை வீதம் விதைக்க வேண்டும்.

விதைகளைப் பரவலாகத் தூவி விதைக்கும் பொழுது 8 அடிக்கு ஒரு வரிசை மொச்சை வீதம் விதைக்க வேண்டும்.

களை எடுத்தல் :—

விதைத்த 15-ஆம் நாள் முதல் முறையும், விதைத்த 40-ஆம் இரண்டாம் முறையும் களை எடுக்க வேண்டும். களை எடுப்பதற்கு களைக் கொட்டு அல்லது 'தந்துலு' அல்லது புன்செய் நிலக்களையெடுக்கும் கருவியைப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு களை எடுப்பதால், மண்ணின் ஈரம் பாதுகாக்கப் படும்.

பயிர்க்கலைத்தல் :—

முதல்களை யெடுத்த உடன் பயிர்க் கலைப்புச் செய்ய வேண்டும். பயிருக்குப் பயிர் 6 அங்குலம் இடைவெளி விட்டு, இடையில் உள்ள பயிர்களை அகற்றி விட வேண்டும். பயிர்க் கலைப்புச் செய்வதை 20-ஆம் நாளுக்குள் செய்து விட வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு:—

குருத்துப் புழுவின் தாக்குதலைத் தடுக்க 150 மில்லி லிட்டர் 'என்ட்ரின்' 100 மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' ஆகிய மருந்துகளை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில் தெளிக்கவேண்டும். இவ்வாறு 15 நாட்கள் இடைவெளியில் 2 முறை தெளிக்க வேண்டும்.

இலைப்புள்ளி நோய் காணப் பட்டால் 400 கிராம் 'சினப்' மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கரில் விதைத்த 40-ஆம் நாளில் முதல் முறையும், அதன்பின் 15-ஆம் நாளில் இரண்டாம் முறையும், அதன்பின் 15-ஆம் நாளில் மூன்றும் முறையும் தெளிக்க வேண்டும்.

### 2. மானாவாரி கம்பு

ஏற்ற ரகங்கள் :— கோ. 4, எக்ஸ். 3, எச். பி. 3 ஆகிய ரகங்கள் மானாவாரிச் சாகுபடிக்கு ஏற்ற ரகங்களாகும். இவை 85 முதல் 90 நாட்களில் அறுவடைக்கு வரும்.

விதைக்கும் பருவம்:—
ஜூலை— ஆகஸ்ட்.

விதையளவு.—வரிசை வரிசையாக விதைத்தாலும், அல்லது பரவலாகத் தூவி விதைத்தாலும் ஏக்கருக்கு 3 கிலோ விதையை விதைக்கவேண்டும்.

விதையுடன் மருந்து கலக்குதல்:—ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'கேப்டான்' அல்லது 'டீ.எம். டீ.டி.' மருந்து வீதம் கலக்க வேண்டும். விதைகளுடன் மருந்தினை நன்கு கலப்பதற்கு விதை கலக்கும் கருவியைப் பயன் படுத்துதல் சிறந்தது.

நிலம் தயாரித்தல்:—நாட்டுக் கலப்பை, அல்லது இலேசான இரும்புக் கலப்பையால் வயலை 2 அல்லது 3 முறை உழ வேண்டும்.

அடிஉரம் இடுதல்:— ஏக்கருக்கு 10 வண்டி தொழு எரு அல்லது கலவை எரு அல்லது குளத்து வண்டல் மண்ணும், 18 கிலோ தழைச்சத்தும் (90 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 40 கிலோ யூரியா), 9 கிலோ மணிச் சத்தும் (56 கிலோ சூப்பர் பாஸ்பேட்) அடியுரமாக இடவேண்டும்.

விதைத்தல்:—மண் ஈரம் காய்வதற்குள் காலத்தில் பெரும் பரப்பில் விதைப்பதற்கு 'கொரு' அல்லது விதைக் கலப்பையைப் பயன்படுத்தி வரிசை வரிசையாக விதைக்கவும்.

இடைவெளி :— விதைக்கும் பொழுது வரிசைக்கு வரிசை 45 செ.மீ (12 அடி) இடைவெளியும், வரிசையில் விதைக்கு விதை 15 செ.மீ. (6 அங்குலம்) இடைவெளியும் விட்டு விதைக்க வேண்டும். பரவலாகத் தூவி விதைக்கும் பொழுது, விதைக்கு விதை 15 செ.மீ (6 அங்குலம்) இடைவெளி இருக்குமாறு விதைத்தல் சிறந்தது

களையெடுத்தல் :— விதைத்த 20 முதல் 25 நாட்களுக்குள் நாட்டுக் கலப்பையால் பயிருழவு (பயிர்களுக்கு இடையே உழவு செய்தல்) செய்யவேண்டும்

பயிர்க்கலைத்தல்:—வரிசை வரிசையாக விதைக்கப்பட்டுள்ள பயிரில் விதைத்த 20 நாட்களுக்குள் கைகளால் பயிர்க்கலைப்புச் செய்ய வேண்டும். பரவலாகத் தூவி விதைக்கப்பட்டுள்ள வயலில், பயிருழவிற்குப் பிறகு பயிருக்குப் பயிர் 15 செ.மீ. (6 அங்குலம்) இடைவெளி இருக்குமாறு செய்து அதிகமாக உள்ள பயிர்களை அகற்றி விட வேண்டும்.

பயிர்ப்பாதுகாப்பு:— 'மிட்ஜ்' ஈக்கள், கதிர் நாவாய்ப் பூச்சிகள் ஆகியவைகளின் தாக்குதலைத் தடுக்க, கம்பு பூக்கும் சமயத்தில் 'செவின்' தூளையும், கந்தகத் தூளையும், 1:1 என்ற விகிதத்தில் கலந்து கொண்டு ஏக்கருக்கு 6 முதல் 8 கிலோ வீதம் தூவவேண்டும்.

கம்பில் சர்க்கரை நோய் தோன்றினால், 1 லிட்டர் தண்



# பருத்திப் பயிர்ச் செல்வமதை பலியிடலாமோ செம்பேனுக்கு! தெளித்திடுவீர் கெல்தேன் அளித்திடுவீர் பாதுகாப்பு!

பாழ்படுத்தும் செம்பேன்களுக்குப் பலியாகாமல் பருத்திப் பயிருக்குப் பழுதற்ற பாதுகாப்பை அளிப்பது இண்டோ:பில் கெல்தேன்.

பயிர்களை எவ்வகையிலும் பாதிக்கா-மல், செம்பேன்களை அழித்து, நீடித்திருந்து பயிரை காக்கும் திறனுள்ளது. முதல் தெளிப்பிலேயே செம்பேன்களை முற்றிலும் ஒழித்துக் கட்டும் கெல்தேனின் பலன் நீண்ட நாட்களுக்கு நீடித்திருக்கும் தன்மை வாய்ந்தது. உங்கள் தேவைகளுக்கு இண்டோ:பில் விற்பனையாளரோடு தொடர்பு கொள்ளுங்கள்.






இண்டோஃபில்—பசுமை நிறைந்த எதிர்காலத்திற்கு

இண்டோஃபில்
கெமிக்கல்ஸ் லிமிடெட்,
பம்பாய்-25

® கெல்தேன் மற்றும்
:ப்னாஸ்க் சின்னம் ரோம் அண்ட் ஹாஸ் கம்பெனியின் ட்ரேட் மார்க்குகளாகும். இவை யூ. எஸ். பேடெண்ட் ஆபீஸ் மற்றும் இதர நாடுகளில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டவை.

IP 6219


# இந்தியப் பொருளாதாரத் துறையில் புள்ளியியலின் சிறப்பு!

ச. ரா. ஜெயவேலு
புள்ளியியல் இயக்குநர்

திருத்தகு தெய்வத் திரு வள்ளுவர், மக்களெல்லாம் இன்புற்று வாழ உறுதியெனப் புகர்ந்தவை அறம், பொருள், இன்பம் எனும் முப்பாலாம். இவற்றுள் 'நாடு, பொருள், செயல் வகை, ஒழிபியல், நல் குரவு முதலிய அதிகாரங்களை உள்ளடக்கிய பொருட் பாலி னடிப்படையில் பொதுவாகப் பொருளாதாரம் அமைந்துள்ள தெனலாம். இஃது சமூகத்தி லுள்ள தனி மனிதனுடைய உடைமைகள் மட்டுமின்றி பொது உடைமைகளைப் பற்றி யதுமாகும்,

ஒரு நாட்டின் பொருளாதார நிலை அந்நாட்டின் இயற்கை வளம், உற்பத்தி, மக்களது தொழில் வகை, மக்கள் தொகைச் செறிவு, தனி நபர் பகிர்வு இவற்றின்பால் பெரு மளவு சார்ந்திருக்கும்.

33 இலட்சம் சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், 55 கோடி மக்கட்தொகையும் கொண்ட நம் இந்திய நாடு ஒரு உபகண்டம் என குறிப் பிடப்படுகிறது. இப்பெரும் பரப்பில் நிலம், நீர், குளிர்-வெப்பநிலை பருவ காலங்கள், மழையளவு மற்ற இயற்கை வளங்கள், விளைபொருள்கள் தொழில் முதலிய உற்பத்தி, அவற்றின் பகிர்மான அளவு, இவற்றில் மட்டுமின்றி, வாழும் மக்களது சமுதாய அமைப்பு, மரபு, பழக்க வழக்கங்கள், பண்பாடு முதலியவற்றிலும் வேறுபாடுகள் நிறைந்துள்ளன. எனவே பொருளாதார நிலை யும் நாட்டின் எல்லாப் பகுதி களிலும் எல்லா மக்களுக்கும் ஒரே அளவு சமச்சீராக அமைய வில்லை. ஆகவேதான் நம் நாட்டுப் பொருளாதார முன் னேற்ற முயற்சிகளில் சிக்கல்கள் மிகுந்து காணப்படுகின்றன.

எனினும் சுதந்தரத்திற்குப் பிறகு நம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு மறு மலர்ச்சி ஏற்பட்டுள்ளது. அடிப்படையில் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு போன்ற வாழ்க்கைக்குத் தேவையானவற்றைக்குறைந்த பட்ச அளவிலேனும் உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்க பொருளாதார நடவடிக்கை (Economic Activity) எடுப்ப தோடல்லாமல், நாட்டின் பொருளாதார வளர்ச்சி நிலை (Level of Economic Development) யைக் குறிக்கும் தேசிய வருமான உயர்வினையும் கருத்தில் வைக்கப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப இயற்கை வளங்களைப் பண்டங்களாக மாற்றியும், இந்த நிகழ்ச்சியில் மக்கள் சேவை அல்லது பணி களைப் பயன்படுத்துவதாலும் (Production of Goods and Services) தேசிய வருவாய் (Net domestic Product) மாற்றி யமைக்கப்படுகின்றது.

இம்மாற்றத்தின் அளவு மற்றும் வேகத்தைப்பொறுத்து பொருளாதார வளர்ச்சி அமை கிறது.

இந்தப் பொருளாதார நட வடிக்கையில் நாட்டின் செல்வ வளங்கள், மக்கட் தொகை, சமூக அமைப்பு, பொது சுகா தாரம், கல்வி வளர்ச்சி, விவ சாயம், தொழிற்சாலைகளில் உற்பத்தி, கூட்டுறவு, போக்கு வரத்து, விலைவாசிகள், வாணி பம், நிதியமைப்பு, நிதியியல், வங்கியியல், உபரி உற்பத்தி மூலம் பன்னாட்டு உதவி, அன் னியச் செலாவணி முதலியவற் றின் நிலை மற்றும் வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சிகள் அனைத் தும் அடங்கியுள்ளன.

சமுதாயத்தில் ஏற்படும் இத் தகைய பொருளாதாரச்செயற் கூறுகள், அவற்றால் மாறுத லடையும் இயற்கை வளங்களை யும் மற்றும் இவற்றுக்குத் தொடர்பான விவரங்களையும் தொகுத்து, பகுத்து, வகைப் படுத்தி, இன்ன நடவடிக்கை யின் காரணமாக இன்ன நிகழ்ச்சி, இன்ன அளவில் ஏற் பட்டதென முடிவு காண்ப தோடு, வருங்காலத்தில் இன்ன அளவில், இன்ன மாறுதல்கள், இன்ன பலன்களை அளிக்கக் கூடும் என முடிவுகள் காண்ப தற்கான வழி வகைகளடங்கி யது புள்ளியியலாகும். அதா வது ஆங்கிலத்தில் (Statistics) என்பார்கள்.



இங்குத் தயாராகும் பல்வேறு வகையான பனியன்கள் தமிழ் நாட்டில் மட்டுமின்றி, ஆந்திரம், கேரளம், கர்நாடகம், குசராத், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், அரியாளு ஆகிய மாநிலங்களுக்கும் அனுப் பப்படுகின்றன. ஏன், இன்று அமெரிக்காவுக்குக் கூட ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றால் இதன் தரம் எத்தனை அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை நாம் அளவிடலாம். இந்தியாவிலேயே திருப்பூர் பனியன் ஒன்றே மேலை நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தகுதியையும், தரத்தையும் பெற் றிருக்கிறது என்பதை நாம் பெரு மிதத்தோடு சொல்லிக் கொள்ள லாம் அல்லவா?

**முகப்பில் காட்சி தருவது**

வீராணம் திட்டத்துக் காகச் செங்கை மாவட்டம் திருக்கழுக்குன்றம் அருகில் உள்ள மங்கலத்தில் உரு வாக்கப்பட்டுவரும் மிகப் பெரும் கான்கிரிட் குழாய்கள்.

நவீன இயந்திர வசதிகளைக் கொண்டு நாள்தோறும் ஆயிரக் கணக்கான பனியன்கள் தயாரா கும் திருப்பூரில், மோகன் பனியன் தொழிற்கூடமும் ஒன்று. இதன் உரிமையாளர் திரு பி. கந்தசாமி தென்னிந்திய பனியன் உற்பத்தி யாளர் சங்கத்தின் தலைவர். இவரது பெருமுயற்சியால்தான், இன்று தமிழனின் கைத்திறன் மிக்க பனியன்கள் அமெரிக்கா வுக்குச் சென்று கொண்டிருக் கின்றன.

மோகன் பனியன் தொழிற் கூடத்தினுள் நுழைகிறோம். வரிசையாக நூல் ஏந்திய இயந் திரங்கள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. ஒவ்வொரு இயந்திரத் தின் அருகிலேயும் ஒருவர் இருந்து கண்காணித்து வருகிறார். நூற்றுக் கணக்கான ஊசிகள் பொருத்தப் பட்டுள்ள இயந்திரம் மளமளவென பனியனைப் பின்னுகின்றது. பின் னப்படும் துணி நீண்ட உறை போலக் காட்சியளிக்கிறது. பிறகு அது வெண்மை நிறம் பளிச்சிடும் வண்ணம் சலவை செய்யப்படுகின் றது. சலவைக்குப் பிறகு அது பத்திரிகைக் காகிதச் சுருள் போல் நன்கு சுருட்டி வைக்கப்படு கிறது. இதற்குப் பிறகுதான் தேவையான அளவுக்கு வெட்டி யெடுத்துக்கொள்ளப்படுகிறது.

சட்டை தைக்கத் துணி வெட் டப்படுவதுபோல, கை, கை அல் லாத பனியன்களுக்கு ஏற்றவாறு அந்த உறைபோன்ற துணி கத்தரி யால் வெட்டப்படுகின்றன. பிறகு அவை தையல் பிரிவில் தைக்கப்படுகின்றன. இந்த நவீனத் தையல் இயந்திரம், சட்டை தைக்கும் இயந்திரத்தி லின்றும் மாறுபட்டது. கண் மூடிக் கண்திறப்பதற்குள் பனி யன்கள் தைக்கப்பட்டுவிடுகின் றன. பிறகு இவை ஒழுங்காக மடிக்கப்பட்டு 'இஸ்திரி' போடப் படுகின்றன. பிறகு ஓர் இயந் திரத்தின் உதவியால் நன்கு அழுத்தப்படுகின்றன. கடைசி யில் அழகிய அட்டைப் பெட்டி களில் டசன் கணக்கில் அடைக் கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப் படுகின்றன. ஐம்பதுபேர் பணி யாற்றும் இத்தொழிற்கூடத்தில், ஒரு நாளைக்கு 300 டசன் பனி யன்கள் தயாரிக்கப்படுகின்றன. பொதுவாகப் பனியன்கள் 18 அங்குல அளவிலிருந்து, 42 அங் குல அளவு வரை தயாரிக்கப்படு கின்றன. 18 அங்குல அளவு பனியன்கள் ரூ. 1லிருந்து ரூ. 4 வரையும், பெரிய அளவுப் பனி யன்கள் ரூ. 1லிருந்து ரூ. 8 வரை யும் விலைகள் இருக்கின்றன, நூலின் தரத்தைப் பொறுத்தே பனியன்களின் விலையும் கூடுதலா கின்றன என்பது இங்குக் குறிப் பிடத்தக்கது.

வெள்ளைப் பனியன்களைத் தவிரப் பல்வேறு வண்ணங்களிலும் பனி யன் தயாரிக்கப்படுகின்றன.; பல விதக் கோடுகள், பூக்கள், உருவங் கள் முதலானவை அவற்றில் பொறிக்கப்படுகின்றன. இத்த கைய பனியன்களை சிறுவர் சிறுமி யர் மிகவும் விரும்புகின்றனராம். ஏன், சில சமயங்களில் இவை பெரியவர்களையும் கவர்ந்துவிடுவ துண்டு!

இயந்திரம் என்றதும், அண்மை யில் அறிமுகப்படுத்தப்பட்டுத் தற் பொழுது பனியன் தயாரிப்பில் இயங்கிவரும் 'நிட்மேக்' நம் நினைவுக்கு வருகிறது. இந்த 'நிட்மேக்' எப்படி வந்தது?

முன்பு பனியன் தயாரிப்புக்குப் பயன்படுத்திய இயந்திரங்கள் பஞ்சாபிலிருந்தும், கல்கத்தாவி லிருந்தும் தருவிக்கப்பட்டன. ஆனால் இன்று அந்த நிலைமாறி, தென்னகத்திலேயே அத்தகைய இயந்திரங்களைப் பெறுகின்ற நல்ல நாள் வந்திருக்கிறது.



பனியன் உலகின் ஓர் மறுமலர்ச் சியாகக் கருதப்படும் இந்த 'நிட்மேத்' இயந்திரம், தென்ன கத்திலேயே முதன் முறையாகத் தயாரிக்கப்பட்டு அறிமுகப்படுத் தப் பட்டிருக்கிறது. இதற்கான விழாக்கூட ஜூன் திங்கள் 19-ஆம் நாள் மிகக் கோலா கலமாகத் திருப்பூரில் கொண்டா டப்பட்டது. அன்றையத் தினம் பனியன் தயாரிப்பாளர்கள் மிக உற்சாகமாகக் காணப்பட்டனர். அவர்கள் முகத்திலே தெம்பும், பெருமையும் இழைந்தோடின. பிற மாநிலத்தை எதிர்பார்த்து இயந்திரங்களை இறக்குமதி செய் யும் நிலைமாறித் தமிழகத்திலேயே இதனை உருவாக்கி உற்பத்தியைத் தொடங்கியிருக்கிறார்களென்றால், உற்சாகமிருக்காதா என்ன?

'நிட்மேக்கை' மூன்று பொறியா ளர்கள் உருவாக்கினர். திரு கே. பழனிச்சாமி, திரு எஸ். இராமசாமி, திரு கே. நாராயண சாமி ஆகிய இவர்களின் விடா முயற்சியால், இரண்டே ஆண்டு களில் இந்த இயந்திரம் உருவா னது. தமிழ்நாட்டில் தமிழர் களால் உருவாக்கப்பட்ட இந்தப் புதிய இயந்திரத்துக்கு இன்று நல்ல வரவேற்புக் கிடைத்து வரு கிறது.

ஆண்டொன்றுக்கு 25 கோடி ரூபாய் மதிப்புள்ள பனியன்களைத் தயாரிக்கிறது திருப்பூர். இந்த அளவு மேலும் அதிகரிக்கத்தக்க வகையில் செயலாற்றி வருகிறது, தென்னிந்திய பனியன் உற்பத்தி யாளர் சங்கம். சுமார் 500 பேர் உறுப்பினர்களாயுள்ள இந்தச் சங்கம், பனியன் தொழில் மேலும் மேலும்வளருவதற்கான ஆக்கப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

அரசின் ஆதரவோடு ஒரு பனியன் தொழிற்பேட்டையை உருவாக்க வும் இது திட்டமிட்டிருக்கிறது. பனியன் உற்பத்திக்கு மிக இன்றி யமையாத சாதனமாக விளங்கும் பனியன் ஊசிகளை மேலை நாடுகளி லிருந்து இறக்குமதி செய்யவும் தக்க ஏற்பாடுகள் நடந்து வருகின் றன. நவீனத் தையல் இயந்திரங் களை ஜப்பான், ஜெர்மனி, அமெ ரிக்கா போன்ற வெளிநாடுகளிலி ருந்து இறக்குமதி செய்து சங்க உறுப்பினர்களுக்கு இது வழங்கி வருகின்றது. பனியன் தொழிலில் முன்னணியில் இருக்கும் ஜப்பான் போன்ற மேலை நாடுகளைப் போல நல்ல வசதியான சலவை இயந் திரங்களை (Peroxide Bleaching Plant) நிறுவிடவும், லூதியானு வில் உள்ள பனியன் தொழில் பயிற்சிப் பள்ளியைப் போலத் திருப்பூரிலும் ஒன்றை அமைத்திட வும் சங்கம் முயன்று வருகிறது.

வெளிநாட்டு 'ஆர்டர்'களுக்குச் சரக்குகள் தயார் செய்ய அதிக மூலதனமும், பயிற்சியும் தேவை. இதற்குப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு ஏற்றுமதி வாணிகத்தை யும் அந்த நிறுவனமே செய்யக் கூடிய அளவுள்ள ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த நிறுவனம் அரசுடன் தொடர்பு கொண்டு வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யுமள வுக்குத் தரமுள்ள நூல்களை ஆலை களிலிருந்து நியாயவிலையில், போதுமான அளவு கிடைக்கும் படிச் செய்யலாம்.

மேலை நாடுகளைப் போல் நவீன முறைகளைக் கண்டுபிடித்து, உற் பத்தித் திறனையும், தரத்தையும் மேலும் மேலும் உயர்த்துவதற்கு ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றும் தேவை.

இப்படி இத்தொழில் வளர்ந் திட, அதன் மூலம் பல்லாயிரவர் வேலை வாய்ப்புப் பெற்றிட, தமிழ கத்தின் புகழ், தரணி உணர்ந்திட வழிவகுக்கின்றன திருப்பூர் பனி யன் தொழிற்கூடங்கள். பனியன் தொழிலுக்குத் தேவையான எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் கிடைக்குமானால் நிச்சயம் நமது திருப்பூர் ஒரு குட்டி ஜப்பானாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!

—பி. வி. ஜி.



## அடுத்த இதழில் ....!

* ஆசியாவிலேயே எந்த நாடும் இது போன்ற குழாய்களைப் பயன்படுத்திய தில்லை! தயாரித்ததில்லை!
* இந்தியாவில் வேறு எந்த மாநிலத் திலும் இவ்வளவு பிரம்மாண்டமான திட்டம் குடிநீருக்காக அமைத்த தில்லை!

இன்னும் ஏராளமான செய்திகளைப் புள்ளி விவரங்களுடன் விளக்கும் வீராணம் திட்டம் பற்றிய சிறப்புக்கட்டுரை

## பூமிக்குள் புதிய ஆறு

அடுத்த இதழில் இடம் பெறும்



இப்புள்ளியியல், தெரிந்த பொது ஞானத்தை எண் மதிப்பாக அல்லது புள்ளிகளாக வடித்துத் தருதல், மற்றும் அவற்றை ஆய்ந்து முடிவுகள் காணுதல் என்ற இரு பிரிவுகளையும் கொண்டதாகும். இப்புள்ளி விவரங்கள், அவற்றின் பாலெழுந்த முடிவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது அவை எதைக் குறிக்கின்றன என்பதை நன்கு புரிந்துகொள்'வதோடு அவற்றின் திட்பம், வரம்புகள் (Precision and Limitations) ஆகியவற்றையும் கருத்தில் கொள்ளல் அவசியம்.

உலக நடவடிக்கைகள் அனைத்தும் அலை மயமானவை என்பது ஒரு தத்துவம். அலை இயக்கங்களை மின்னியக்கங்களாக மாற்றி ''Oscilloscope'' என்னும் கருவியில் செலுத்தினுல் அழகழகான வரி வடிவங்கள் காணலாம். இதேபோல் நாட்டின் பொருளாதாரத் தொடர்பு கொண்ட புள்ளி விவரங்களை மையமாகக் கொண்டு வரி வடிவங்கள் வடித்தால் எளிதில் புரியக்கூடிய புள்ளியிட்ட கோலங்களாக (Graphical representations) அமைவதை யாவரும் அறிவர்.

புள்ளியியல், இந்தியப் பொருளாதாரத்தில் எத்துணை முக்கியத்துவம் பெற்றுள்ளதென ஒரு சில உதாரணங்கள் வாயிலாகப் பார்ப்போம்.

*1961* முதல் *71* வரையிலுள்ள பத்தாண்டுக் காலத்தில் இந்தியாவின் மக்கட்தொகை 44 கோடியிலிருந்து 55 கோடியாகப் பெருகியுள்ளது. இது ஒரு நிமிடத்துக்கு 40 குழந்தைகள் வீதமும், அதாவது மூன்று விநாடிக்கு இரண்டு குழந்தைகள் வீதமும் பிறந்து வருகின்றன என கணக்காகின்றது. இதே காலத்தில் உணவுதானிய உற்பத்தி 8 கோடி டன்னிலிருந்து 11 கோடி டன்ஞக உயர்ந்துள்ளது என்றுலும் தலா நபருக்குக் கிடைக்கக் கூடிய உணவு தானியம் 187 கிலோவிலிருந்து 197 கிலோவாக மாறியது. இப்புள்ளி விவரங்களிலிருந்து மக்கட்தொகை, உணவு உற்பத்தி, தலா நபருக்குக் கிடைக்கக் கூடிய உணவு தானிய அளவு, இவை மூன்றிற்குமான வளர்ச்சி விகிதங்களை (Compound growth rates) கணிப்பதோடு, எதிர் காலத்தில் எந்த விகிதங்களில் இவை வளரக்கூடும், எந்த விகிதங்களில் வளர்ந்தால் நன்மை விளையும் என்று கணிக்க புள்ளியியல் முறைகள் பயன்படுகின்றன.

மேலும் தனி நபருக்குக் கிடைக்கக் கூடிய உணவின் அமைப்பு, (Composition) வெவ்வேறு தானியங்கள், பருப்பு வகைகள், இவற்றின் அளவைகளை இன்ன வகையில் மாற்றி அமைத்தால் சத்தான—சீரான உணவாக அமையும் எனவும் கணிக்கக்கூடும். சுருங்கக்கூறினுல், சிக்கல்கள் அதிகமாக ஆக, அவற்றிற்கான முடிவுகள் காணும் பொறுப்பு ஒரு புள்ளியியல் வல்லுநர்க்கே உரியதாகி விடுகிறது.

பாரெங்கும் பரபரப்பினை எழுப்பியுள்ள விலைவாசிகளின் உயர்வு, வாழ்க்கைச் செலவின் ஏற்றம் ஆகியவற்றை அளவிடும் விலைக் குறியீட்டெண்கள் (Price Indices), வாழ்க்கைச் செலவுக் குறியீட்டெண்கள் (Cost of Living Index Numbers) புள்ளியியல் முறைப்படி அவ்வப்போது கணிக்கப்படுகின்றன. பிந்திய குறியீட்டெண்ணின் அடிப்படையில்தான் தொழிலாளர்களுக்கான அகவிலைப்படி (Dearness Allowance) நிர்ணயிக்கப்படுகின்றது.

உரிய புள்ளி விவரங்கள் தொகுக்கப் பெற்ருல், விலைவாசிகள், உயர்வில் எவ்வளவு சதவிகிதம் பற்ருக்குறை வரவு செலவுத் திட்டத்தினுல் (அதாவது Deficit Financing ஞல்), பண வீக்கத்தினுல், வங்கிகள் கொடுக்கும் வாங்கும் விகிதத்தினுல், சேமிப்பு அளவினுல், பொருள் உற்பத்தி அளவினுல், அப்பொருள்களுக்கான தேவை அளவினுல், ஏற்பட்டதென பகுத்துக்கூற முடியும்.

இதைக் கொண்டு இன்ன அம்சங்களின் எந்த அளவு திருத்தங்கள் (Correctives) மேற்கொண்டால் விலைவாசியினை இன்ன அளவு கட்டுப்படுத்தக்கூடும் என்றும் அறியக் கூடும்.

நாட்டின் பல்வேறு துறைகளில் எத்தனை நபர்கள் பணி புரிகின்றனர், எத்தனை இளைஞர்கள் வேலை வாய்ப்பினை நாடி நிற்கின்றனர், இவர்களுடைய கல்வி, பயிற்சி தகுதிகளுக்கேற்ப, பொருளாதார வளர்ச்சி பெறும் இன்னின்ன துறைகளில் முழு வேலை வாய்ப்பு கிட்டும் என்று புள்ளியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதே போல், உடை, வீட்டு வசதி போன்ற இதர தேவைகளில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப, உற்பத்தித் திறன் (Productivity) மொத்த உற்பத்தி முதலியன எப்படி மாற்றியமைக்க வேண்டுமென முடிவுகாண புள்ளியியல் ஆராய்ச்சி பெரிதும் பயன்படுகிறது.

ஒரு தொழிலின் அமைப்பு (Structure of the Industry), உற்பத்தித் திறன், முதலீடு—உற்பத்தி விகிதம் (Capital out-put ratio), தொழிலாளி உற்பத்தி விகிதம் (Labour out-put ratio) முதலீடு தொழிலாளி விகிதம் (Capital Labour ratio) எனப் பல அம்சங்களையும் ஆய்வதுடன், இன்னின்ன வகையில் உற்பத்தித் திறன் மொத்த உற்பத்தி முதலியவற்றில் சிறந்த முன்னேற்றங் காணக்கூடும் என்பதனை அறியவும் புள்ளியியல் முறைகள் பயன்படுகின்றன.





இதே போல் இருபது இலட்சம் ரூபாய் முதலீடும் ஆயிரம் தொழிலாளர்களையும்கொண்ட ஒரு தொழில் நிறுவனத்தின் ஐந்தாறு வெவ்வேறு பொருள்கள் உற்பத்தி செய்வதாகக் கொண்டால், இந்த நிறுவனத்தின் மொத்த உற்பத்தியினைக் குறைந்த செலவில் கூடுமான உச்ச அளவுக்கு அதிகரித்தல் (Maximisation of out-put value with minimum in-put costs( எவ்வாறு இயலும் என்பதை (Linear Programming) முறையின் அடிப்படையில் நிர்ணயிக்கக் கூடும்.

*1960*-ல் *100* என்றிருந்த இந்தியத் தொழிலுற்பத்திக் குறியீட்டெண் (Index of industrial Production) 73-ல் 200 ஆக உயர்ந்ததைக் கொண்டு வளர்ச்சி விகிதத்தை (Growth rate) கணித்து இந்த விகிதாசாரம் வருங் காலத்தில் எந்த அளவில் எத்தனை வருடத்திற்குள் தொழில் உற்பத்தி அடைந்தால் எந்த அளவு மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடும், மற்றும் தேவைக்கு அதிகமான உற்பத்தி என்ன அளவு அந்நியச் செலாவணியீட்டப் பயன்படும் எனக் கணிக்கலாம்.

நாடு முழுமைக்குமான புள்ளி விவரங்கள், எளிதில் பெற முடியாத சமுதாய நலன், குடும்ப நலன் போன்ற பிரிவுகளில், திட்டங்கள் எந்த வகையில் பயனுடையதாக அமைந்துள்ளன என்பதை ஆய்ந்தறிய தேர்ந்தெடுத்த சமுதாயப் பொருளாதார மாதிரி ஆய்வு மூலம் (Socio-Economic Sample survey) சேகரிக்கப்பட்ட துல்லியமான புள்ளி விவரங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இவ்வாய்வுகளில் முடிவுகள் எத்தனை சதவிகிதம் நாடு முழுமைக்கும் பொருந்தும் என்பதும் நிர்ணயிக்கப்படுகிறது.



## மக்கள் தொடர்புத் திட்டம்.

**''எங்கள் வீட்டுக் குழாயில் தண்ணீர் வரவில்லை!''**

''எங்களுக்கு நல்ல பாதை இல்லை!''

''முதலில் எங்களுக்கு ஒரு காவல் நிலையம் வேண்டும்!''

இப்படிப்பட்ட கோரிக்கைகளுக்கெல்லாம் ஒரு விடிவு காலம் ஏற்பட, ஓர் அரிய திட்டம் இன்று வீட்டு வசதி வாரியத்தினரால் தீட்டப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் பெயர் 'மக்கள் தொடர்புத் திட்டம்'. இதற்கான, தொடக்க விழா செப்டம்பர் 18-ஆம் நாள் அசோக் நகரில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் நடந்தது. திட்டத்தை வீட்டுவசதி, தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்தத் திட்டத்தின் நோக்கமென்ன ?

மக்களின் தேவைகளை நேரிலேயே அறிந்து நிறைவேற்றுவது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். மின் வசதி, சாலை, போக்குவரத்து வசதி, தண்ணீர் முதலான வசதிகளில் குறைகள் இருந்தால் அவற்றைப் போக்கிட இந்தத் திட்டம் உதவும்.

ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட நாட்களில், குறிப்பிட்ட இடங்களில் (1) வீட்டுவசதி வாரியம், (2) மாநகராட்சி, (3) மின்சாரம், (4) போக்குவரத்து ஆகிய துறைகளின் அலுவலர்கள் ஒன்ருக இருந்து, அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து அந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி சம்பந்தப்பட்ட மனை ஒதுக்கீடு, மற்றும் ஒதுக்கீடு சம்பந்தப்பட்ட தனிப்பட்டோர் பிரச்சினைகளையும், அந்தப்பகுதி சம்பந்தப்பட்ட பொதுப் பிரச்சினைகளையும் கேட்டறிந்து உரிய நடவடிக்கைகள் உடனே எடுக்கவும், ஒன்றிரண்டு மாதங்களில் முடிவான பதில்கள் தரவும் இந்தத் திட்டம் வகை செய்யும்.

உதாரணமாக, அண்ணு நகரை எடுத்துக் கொள்வோம். இங்குக் கூட்டம் நடைபெறும் இடம் எது? நாள், நேரம் என்ன? என்பன போன்ற விவரங்களை முன்கூட்டியே அறிவிக்கின்றனர். இதனுல் மக்கள் கோரிக்கைகளுடன் குறிப்பிட்ட இடத்திற்கு வரஏதுவாகிறது.

இந்த நல்ல திட்டம் வெற்றியுடன் செயல்பட்டு, மக்களின் அன்றுடத் தேவைகளை நிறைவேற்றும் என்று உறுதியாக நம்பலாம்.



## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண். 226, சென்னை-600001.

தந்தி: "அர்பாங்க்" தொலைபேசி எண்: 20367, 28068

*எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும்; விவசாயத் தொழிலுக்கும் உதவி செய்யும்.*

**வட்டி விகிதங்கள்**

(வருடத்திற்கு %)

| | |
|---|---|
| நடப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | வட்டி இல்லை. |
| சேமிப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | 4·00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது).

**காலாந்திர கணக்கு:**—ரூ. 1,000/-ம் அதற்கு மேலும்;

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை ... ... ... ... | 2·75 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை ... ... ... ... | 3·25 |

**நிரந்தர கணக்கு:**—ரூ. 100/-ம் அதற்கு மேலும்:

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 6.00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய ... ... ... | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் ... ... ... ... ... ... | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000/-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேல் குறிப்பிட்டதைவிட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

**தொடர் கணக்கு:** தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128/50 | 201 | 278 | 362/50 | 452 | 548/50 |

குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி,
துணைத் தலைவர்.




அரசாங்க வரவு செலவுத் திட்டங்களைச் சார்ந்த நிதியியல், நிலவரி, பாசன வரி, தொழில் வரி, விற்பனை வரி முதலியவை மூலம் பெறப்படும் வரவு சதவிகிதங்கள், ஒரு நபருக்கான தலா வரி அளவைகள் கணிப்பதுடன் இவ் வரவு செலவுகள் எந்தெந்த ஆக்கத்திற்கு என்னும் பொருளாதார ரீதியில் இன்னின்ன பாகுபாடுகளுக்கெனவும் பகுத்தாய்வு செய்யப்படுகின்றன. (Functional and Economic classification of Budgets).

நாட்டில் புழங்கும் ரூபாய் நோட்டுகள், நாணயங்கள், இவற்றின் மதிப்பு, வங்கிகளின் வரவு, செலவு மற்றும் இலாப நட்டக் கணக்குகள், இவ்வங்கிகள் இன்னின்ன துறையில் எந்த அளவில் உதவியளித்து வருகின்றன என்ற விவரங்களை ஆராய்ந்து இன்ன மாற்றங்கள் மூலம் குறிப்பிட்ட துறைகளில் உற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிக்கக் கூடும் என்று அறியப்படுகின்றன.

பலதரப்பட்ட மக்கட் தொகுதிகளில் நாட்டின் மொத்த வருவாய் எப்படி பகிர்ந்துள்ளது (Income Distribution) என்பதனை ஆய்ந்து, அதனை எப்படிமாற்றியமைத்தால் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் அதிக வேறுபாடுகளின்றி ஓரளவு சீராக அமைக்கலாம் என்பதற்கான வழி வகைகள் காணப் புள்ளி விவரங்கள் இன்றியமையாததால், தேசிய மாதிரி ஆய்வின் மூலம் வருமான அடிப்படையில் அல்லது வாழ்க்கைச் செலவின் அடிப்படையில் மக்களுள் இத்தனை நபர் அல்லது சத விகிதத்தினர் வறுமைக் கோட்டின் (Poverty Line) கீழ் உள்ளனர் என்று ஆய்ந்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி வகைகள் வகுக்க புள்ளியியல் பயன்படுகிறது.

அந்நியச் செலாவணி ஈட்டுவதற்கு அவசியமான வாணிபத் துறையிலே நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி அளவைகள் அவற்றின் அமைப்பு (Structure of the Import and Export Trade) மற்றும் விலைவாசிகள் போன்ற புள்ளிவிவரங்கள் அவ்வப்போது தொகுக்கப்பட்டு இவற்றுடன் சார்ந்த வாணிபம், போக்குவரத்துத் துறைகள் பற்றிய புள்ளி விவரங்களுடன் பயன் தரும் வகையில் ஆய்விடப்படுகின்றன.

நாட்டின் வளம் செழிக்க மேற்கொள்ளப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையில் கடந்த ஆண்டுகளுக்கான புள்ளி விவரங்கள் (Statistics of past trends) வளர்ச்சி விகிதங்கள், மற்றும் எதிர்காலத்தில் இன்ன வகையில் இன்ன துறையில் வளர்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்ற கொள்கைகளைக் கொண்டு மதிப்பீடுகள் (Projections) செய்யப்படுகின்றன.

எனவே, தொகுத்துக் கூறினால், ஒரு கட்டடத்துக்கு அடிக்கல் (Basement) எவ்வளவு முக்கியமோ அதுபோல நாட்டில் செயல்படுகின்ற திட்டங்களுக்கும் புள்ளி விவரங்கள் இன்றியமையாதனவாகும். அடிக்கல் உறுதியானதாகவும், செம்மையானதாகவும் இருந்தால் தான் அதன் மேல் எழுப்பப்படும் கட்டிடமும் உறுதியானதாகவும் நிலைத்து நிற்கக் கூடியதாகவும் இருக்கும். ஆக அடி மட்டத்திலிருந்து தொகுக்கப்படுகின்ற புள்ளி விவரங்கள் விஞ்ஞான ரீதியில் (Scientific Method) தொகுக்கப்பட்டவையாகவும், சரியான விவரங்களை உள்ளடக்கியவையாகவும் இருத்தல் மிக அவசியம். திட்டங்களில் எதிர்பார்த்த பலன்கள் எந்த அளவு கைகூடின என்று அறிய தொடர் மதிப்பீட்டு ஆய்வுகளும் (Concurrent Evaluations), செய்திறன் முறை வரவு செலவு திட்டமும் (Performance Budgeting) இன்னும் இவை போன்ற நுண்ணிய முறைகளை மேற்கொள்ள துல்லிய புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டுமென்பது நன்கு புலனாகும். மற்றும் ஒரு மாநிலம் முன்னேறியுள்ளதா, அல்லது பின் தங்கிய நிலையில் உள்ளதா என்று நிர்ணயிக்கவும் புள்ளி விவரங்கள் பெரிதும் பயன்படுகின்றன. இப்படிப் பல வெவ்வேறு அம்சங்களுக்கான புள்ளி விவரங்கள் ஒவ்வொரு தனி நபர், குடும்பம், கிராமம், மாநிலம் மற்றும் தேசிய மட்டங்களில் தொகுக்கப்பட்டு வருகின்றன.

எனவே 'புள்ளி விவரம்' சமுதாயத்துக்கு நல்ல சேவை புரியும் ஒரு 'சிறந்த சாதனம் அல்லது கருவியாகும்' என்று சொல்லவும் வேண்டுமோ!



பல குடும்பங்கள் சேர்ந்தது தான் ஒரு பெரிய சமுதாயமாகும். ஆகவே சமுதாயம் முழுமைக்கும் சீரான வாழ்வமைய திட்டம் வகுக்கும் போது குடும்பத்தில் உள்ளோருக்கான வரவு செலவுக் கணக்கு (Family Budget) கிராம, ஊராட்சி ஒன்றிய உற்பத்தித் திட்டங்கள் (Village and Panchayat production Plans) மற்றும் மாநில தேசிய திட்டங்களுக்கான விவரங்கள் முதலியவற்றை நாடி, அரசாங்கக் களப் பணியாளர்கள் (Field Staff) குடும்பத் தலைவரையோ அல்லது உங்களில் எந்த ஒரு நபரையோ அணுகும் போது, "அரசாங்கத்துக்குப் புள்ளி விவரங்கள் கண்களாகவும், காதுகளாகவும் இருந்து பயன்படுகின்றன (Statistics are the eyes and ears of the Government) என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு எந்தவித ஐயப்பாடுமில்லாமல் துல்லியமான விவரங்களை அளிப்பது நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், சமுதாய நலத்துக்கும் ஊக்கமளிப்பதாக அமையும்.





# உலகில் இரண்டு கிளிகள்




டி.என்.சுகிசுப்பிரமணியன்

## 13 அஞ்சலைக்கு ஆபத்து

மனிதனுக்கும் மற்றையப் பொருளுக்கும் சமுதாயத்தில் மதிப்பீட்டு முறையில் மாறுபாடுகள் உள்ளன. அதிலும் அந்த மனிதன் ஏழையாகவோ இயலாமை உள்ளவனாகவோ இருந்து விட்டால் அதோ கதிக்கு ஆளாக வேண்டும்.

'ஆன்மா' என்றும் 'எல்லோரும் இந்த நாட்டில் சமம்' என்றும் பொது மேடைகளிலும் கோவில் பிரகாரங்களிலும் பேசப்படலாம். நடை முறை வாழ்க்கை வேறு; ஏட்டு முறை வாழ்க்கை வேறு என்று சொல்லுவது போல அஞ்சலைக்கு ஒரு சோதனை மீண்டும் வந்தது. தங்கத்திற்கும் தாமரைக்கும் வராத சோதனை அவளுக்கு வந்தது. முத்துக்கும் சாமரத்துக்கும் வராத சோதனை அவளுக்கு வந்தது.

தாமரை தான் பிறந்த மண்ணை நோக்காது விண்ணை நோக்குவதும், தங்கம்தான் பிறந்த அழுக்கை எண்ணுமல் ஆரணங்குகள் கழுத்தை வலம் வருவதும் நாகரிகம் என ஒப்புக் கொள்கிறோம். முத்து தான் பிறந்த நாற்றம் பிடித்த சிப்பியை எண்ணுமல் மூன்று இலட்சத்திற்கு அதிபதியான ஒருவன் வீட்டுக்குள் பாதுகாவலாய் வந்து அமர்கிறது. சாமரத்தை 'மயில்' என்று ஒதுக்காமல் அதற்குக் கோவில் சிலை — சிற்பங்கள் — மடாதிபதிகள் வரவேற்புத் தருகின்றனர்.

புனுகும் சவ்வாதும் மிருகங்கள் தந்தவை; தேனே, தேனீயின் எச்சல்! ஆனாலும் ஏழைகள் எங்கிருந்தாலும் என்றும் ஏழைகளே. அவர்கள் மனிதர்கள் இனத்திலிருந்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள், இச் சூழ்நிலை நிறைந்த எண்ணத்தோடு முதலாளி முத்தையா முனைப்பாக நினைக்கிறார்! நிமிர்ந்து நிற்கிறார்.

வக்கீல் மணிவாசகன் அதற்கு ஆதரவு தருகிறான். செண்பகா ஆலையின் முதலாளியைச் சோதிப்பதற்காகவோ, இல்லை ஏழை அஞ்சலையை இன்னும் ஏழ்மைக் குழியில் தள்ளவோ, மருந்தகத்திற்குள் அனுமதிக்கப்பட்டிருந்தாள், அஞ்சலை.

மில்லில் வேலை பார்க்கும் போது அவள் வலக்கால் மாட்டிக் கொண்டு எலும்பு முறிந்து விட்டது. அவள் ஆஸ்பத்திரிக்குள் வைத்தியம் செய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாள். டாக்டர் நர்மதை தன்னால் இயன்ற திறமையுடனும், அஞ்சலையின் குடும்பத்திடம் ஏற்பட்ட அனுதாபத்துடனும் வைத்தியத்தைச் செய்து கொண்டிருந்தாள்.

அதே சமயம்—

வக்கீல் மணிவாசகன் வீட்டில் முதலாளி முத்தையா காரில் வந்து இறங்கினார். அஞ்சலை அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட விவரம் முதலாளி போன் வழியே அறிந்திருந்தார்.

"வாருங்கள் முதலாளி!"

"பட்ட காலிலே படும், கெட்டவர்களே மீண்டும் கெடுவார்கள்" என்னும் பல்லவியுடன் உள்ளே நுழைந்தாள்.







ஊர் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது ஊராட்சி ஒன்றியம் என்றால், நகர் எழிலுக்கு நன்பணைய்த் திகழ்வது நகராட்சி அன்றோ ?

தாம்பரம் !

சென்னை நகருக்குத் தெற்குப் பகுதியில் சுமார் 24 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ள இது, முப்பதாண்டுகளுக்கு முன் ஒரு சிறிய கிராமமாகக் காட்சியளித்தது. இன்றைய நகராட்சியில் அடங்கியுள்ள கடப்பேரி, புலிக்குரடு, இரும்புலியூர், சேலையூர் ஆகிய கிராமங்கள் சிறிய ஊராட்சிகளாகத் தனித் தனியே இயங்கிவந்தன.

ஆனால், இன்று ? எத்தனை வேகம் ! எத்தனை வளர்ச்சி ! தாம்பரம் மின்வண்டி நிலையம், சென்னை மாநகரின் முதன் மின் ரயில்வே நிலையமாகக் காட்சியளிக்கிறது. 1937-ஆம் ஆண்டில் சென்னையிலிருந்த கிறித்தவக் கல்லூரி தாம்பரத்துக்கு வந்தது. இதனால் அறிவொளி பெற வந்தோர் இங்கே குடியேறினர். இரண்டாம் உலகப்போர் தொடங்கியபின் தாம்பரத்தில் தென் கிழக்குக் கோடியில் இந்திய விமானப் படைப் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அங்குப் பணியாற்றுபவர்களுக்கு நூற்றுக் கணக்கான குடியிருப்பு மனைகள் கட்டப்பட்டன.

நல்வாழ்வுக்கு ஏற்ற இடமாக இங்கே பச்சைமலையும், ஊசி மலையும் பாங்காய்க் காட்சியளிக்கின்றன. பச்சை மலைச் சாரலில் காச நோய் மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளில் கல் உடைக்கும் தொழிலும் நடைபெறுகின்றது. இவ்வாறு பல்வேறு வசதிகளும் வாய்ப்புகளும் உள்ளதால் தாம்பரம் ஓர் அழகிய நகராமாக வளர்ந்து வருகிறது.

1964 முதல் தாம்பரம், நகராட்சியின் நிருவாகத்தில் மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. நகரமைப்புத் திட்டத்தின் கீழ், இதனை எப்படியெல்லாம் வளமும் நலமும் கொழிக்கும் நகராக்கலாம் என்ற எண்ணத்தைப் படிப்படியாகச் செயலாக்கி வருகிறது நகராட்சி. 20.72 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள தாம்பரம் ஒரு குடியிருப்பு நகரமாக வளர்ந்து வருகிறது. தாம்பரம் 1964-ல் நகராட்சியானபோது அன்றைய ஆண்டு வருமானம் 6 இலட்சம். அப்போதைய மக்கள் தொகை 83,600. இன்றைய மக்கள் தொகை 55,191. இப்போதைய ஆண்டு வருவாய் ரூ. 17 இலட்சம்.

மக்களின் குறைகளைப் போக்கி அவர்கள் மனநிறைவுடன் வாழ்வதற்குத் தேவையான வசதிகளை உண்டாக்கித் தந்திட, நகராட்சி நற்பணிகள் பல புரிந்து வருகின்றது. அண்மையில் மக்களின் குறைபாடுகளை நேரில் அறிந்து ஆவன செய்யும் திட்டம் போற்றுதற்குரியதாகும்.

இந்நகராட்சியின் பணிகள் செவ்வனே நடைபெற்று வருவதை, நகர வளர்ச்சியின் மூலம் நாம் கண்டறியலாம். 1964-ல் 40 கிலோ மீட்டர் நீளமாக இருந்த சாலைகள் இன்று 72 கிலோ மீட்டராக



''சட்டத்தை எப்படிவேண்டு மானாலும் பேச வைக்கலாம். நீங்கள் முதலில் கவலையை விடுங்கள். தாகத்திற்கு ஏதாவது சாப்பிடுங்கள்'' என்று சமையல்காரனைச் சிற்றுண்டி கொண்டு வரச் சொன்னான். அவர் உயிரையும் மானத்தையும் பிடித்துக் கொண்டு பதைபதைக்க வந்திருக்கிறார்! இவனோ அவரைப் பதறாமல் சிதறாமல் உண்ணச் சொல்கிறான்.

''முதலாளி உங்களுக்குப் பணம் பண்ணும் கலை தெரியும். நீதி-நிர்வாகம் பற்றிய கருத்தும் தெரிந்திருக்கும். தன் கட்சிக்காரனைக் காப்பது வக்கீல் தர்மம். நீதிபதியின் தர்மம் வேறு. நீதியைக் காப்பது அவர் தருமமன்று; அவர் இரு வக்கீல்களின் வாதத் திறமையில் ஒருவரை ஆதரிக்கிறார். ஒருவரைத் தள்ளிவிடுகிறார்! அதாவது வக்கீல்களைச் சரா சரியாக நீதிபதி ஆதரித்துக் கொண்டு வருவார். அதனால் உங்கள் வழக்கைப் பற்றிய முடிவு எதுவாக இருந்தாலும் நான் வெற்றி பெறமுடியும் அல்லது மேல் கோர்ட்டில் வெற்றி பெறமுடியும்!''

அஞ்சலை அடிபட்டு, ஆலையின் மருந்தகத்தில் இருப்பதைத் தொழிற்சங்கத்தலைவர் தமக்கு ஃபோன் பேசியதாகச் சொன்னார்.

''இவ்வளவுதானே! இங்கே டாக்டர் யார்? உங்கள் வேலையாள். இங்கே வக்கீல் யார்? உங்கள் வேலையாள்!''

''அதனால்தான் நான் கவலைப்படுகிறேன். என் வழக்கையும், என் மீது ஏற்படும் நஷ்ட வழக்கையும் தீர்ப்புச் சொல்லும் பொறுப்பு, கணவனுக்கும் மனைவிக்கும் ஊடாக இருக்கிறது. அதனால் பயப்படுகிறேன்''

''என்னிடம் வழக்கை ஒப்படைத்து விட்டீர்கள். கவலை என்னுடையது. நான் நர்மதையிடம் சொல்லி உங்களுக்குச் சாதகமாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்''.

முதலாளி முத்தையா பணத்துக்குப் பயந்தவர் அல்லர். தமது மானம் மரியாதையென்னும் ஜபர்தஸ்துகளை விட்டுக் கொடுக்காத காரியக் கழுகு.

''மோட்டாரோட்டி சண்முகம் திமிர் பிடித்து லஞ்சம் பெறுவதற்கு என்னிடம் மறுத்தான். அவன் உதவி கேட்ட காலத்தில் நான் பிகு பண்ணிக் கொண்டேன். தொழிற்சங்கத் தலைவன் பேசுவதைப் பார்த்தால் ஐயாயிரம் ஆறாயிரம் நாம் நஷ்ட ஈடு கொடுக்கும்படி ஏற்படலாமாம். நான் முதலாளி, ஐந்து இலட்சம் பத்து இலட்சம் செலவு செய்வேன். ஆனால் தொழிலாளிக்கு நஷ்ட ஈடு கேட்டு ஒரு தம்பிடி கொடுக்க மாட்டேன்''.

''நீங்கள் கொடுக்கும் நிலைமையை உண்டு பண்ணினால் உங்கள் சட்ட ஆலோசகன் என்ற பதவியும் அதற்குரிய சம்பளமும் எனக்கு எதற்கு?''



முதலாளி முத்தையா தமது தோல் பையைத் திறந்து ''மணிவாசகன், யாரைச் சரிக்கட்ட வேண்டுமோ, எப்படி சரிக்கட்ட வேண்டுமோ நீங்கள் செய்யுங்கள். இதோ இருபதினையிரம் ரூபாய் இருக்கிறது. தொழிலாளிக்கு நஷ்ட ஈடு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பானால் என் முதலாளித்துவப் பெருமை கரைந்த கற்பூரம் போல் ஆகிவிடும்'' என்று அலறினார். அவரது அந்தஸ்தைக் காப்பதில் அத்தனை அக்கறை!

''கற்பூரம் கரையாமல் இருக்க மிளகை உடன் வைப்பார்கள். மிளகுப் பொடியைத் தூவவேண்டிய இடத்தில் தூவி விடலாம். கட்சிக்காரரை





காப்பது என் கடமை. நான் உங்கள் வக்கீல்''

'பணத்தை எடுத்து உள்ளே வையுங்கள்''

பணத்தை எடுத்து உள்ளே வைத்தார். மணிவாசகன் அதே போன்ற தன் மனச்சாட்சியையும் பூட்டி வைத்துக் கொண்டார்.

''சாப்பிடுங்கள்!''

''உடனே நாம் ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும்'' என்று அவசரப்படுத்தினார்.

''அத்தனை அவசரமா ?''

''உங்கள் மனைவி உங்களைப் போல பிடிவாதம் உள்ளவர். அதனால் என் முன்னால் நடக்க வேண்டிய பேரங்களை நடத்தி என்னைக் காப்பாற்றுவது உங்கள் பொறுப்பு!''

மணிவாசகன் யோசித்தான். ஏற்கனவே சிறைச்சாலை சென்ற சண்முகம் கொதித்து எழுவான்; நஷ்ட ஈட்டுத் தொகை அதிகம் கேட்பான். தொழிற்சங்கத்து வழியே பெருந் தொல்லைகள் வரும். எனவே முத்தையா பயப்படுவதில் நியாயம் இருக்கிறது. சண்முகத்தைக் கண்டு பயப்படுவதுபோல டாக்டர் நர்மதாவைக் கண்டும் பயப்படுகிறார்! எனவே டாக்டர் நர்மதாவின் வாக்குறுதியைப் பெறுவது முதலுதவியாக இருக்கும்—இத்தனை யோசனைகளுடன் இருவரும் அவரது காரிலே ஏறி ஆஸ்பத்திரிக்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

வளர்ந்துள்ளது. சாலைகள் செப்பனிட இவ்வாண்டு ரூபாய் 11,088 செலவிட நிதி மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நகரில் விளக்கு வசதிக்கும் குறைவில்லை. இன்று 1802 மின் விளக்குகள் உள்ளன. முக்கியப் பாதையாகிய தெற்கு நெடுஞ்சாலையும், அதனை அடுத்துள்ள முக்கிய வீதிகளையும் எழில் பெறச் செய்திட ஒளிமயமான மின் விளக்குகள் அமைக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஒளி விளக்குகள் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் ரூபாய் 41,540 செலவிடப்படுகிறது.

அறியாமை அகன்றிடவும், அறிவொளி பரப்பிடவும் அரும் பணியாற்றுபவை கல்வி நிலையங்கள் அல்லவா? இங்கு நான்கு துவக்கப்பள்ளிகள் நகராட்சியின் நிருவாகத்தில் நடந்துவருகின்றன. உதவிபெறும் தனியார் பள்ளிகள் ஒன்பதும், அரசினர் நலத்துறைப்பள்ளி ஒன்றும் இங்கு உள்ளன. கல்விக்காக ஒரு மாணவனுக்கு ஏற்படும் செலவு, ஆண்டுக்கு, ரூபாய் 85.06 ஆகும்.

'நீரின்றமையாது உலகு' அல்லவா?

அதனால் இந்நகருக்கு 25 மைல் தூரத்திலுள்ள பாலாற்றிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. ரூபாய் 32.91 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள இத்திட்டத்திற்குத் தமிழக அரசும், ஆயுள் காப்பீட்டுக் கழகமும் உதவிகள் பல புரிந்துள்ளன. நாள் ஒன்றுக்கு 6 இலட்சம் காலன் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. 700 வீட்டிணைப்புகளும், 212 பொதுக் குழாய்களும், 2 மேல் நீர்த் தொட்டிகளும் உள்ளன.

மக்கள் நல்வாழ்வுக்குச் சுகாதாரம் மிக இன்றியமையாதது அன்றோ? துப்புரவாய் இருந்தாலன்றோ நகரம் எழிலாகக் காட்சியளிக்கும்? இந்தத் துப்புரவுப் பணியில் 107 தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நகராட்சியின் சார்பில் குடும்ப நல நிலையம் ஒன்றும் மிகச் சிறப்பாக நடந்து வருகிறது. கடந்த ஆண்டு 340 அறுவைச் சிகிச்சைகள் செய்து, செங்கை மாவட்ட நகராட்சிகளிலேயே முதன்மை பெற்றது.

மக்கள் நோயின்றி வாழ்ந்திட ஒரு சிறிய மருந்தகமும், மூன்று மகப்பேறு நிலையங்களும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 1971-72-ல் இந்நகராட்சியிலிருந்தும், வெளியிலிருந்தும் 24,504 நோயாளிகள் சிகிச்சை பெற்றுள்ளனர். மருத்துவ உதவிக்காக ரூபாய் 5,194 செலவு செய்யப்பட்டுள்ளது. ஒரு நோயாளிக்கு ஏற்படும் செலவு 21 காசுகள். இவை தவிரப் பகுதி நோய் மருத்துவமனை ஒன்று போதிய வசதிகளுடன் நகராட்சிக் கட்டடத்தில் உள்ளது. தொற்று நோய்த் தடுப்புப் பணியும் இங்குச் சிறப்பாக நடந்து வருகின்றன.

இருபது நகராட்சித் தொகுதிகளைக் கொண்டுள்ள தாம்பரம் நகராட்சி 24 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

நகராட்சி ஒரு பேருந்து நிலையத்தையும் பேணி வருகின்றது. இங்குப் பயணிகளுக்குத் தேவையான எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இந்நகராட்சி ஒரு பொது அங்காடியையும் பராமரித்து வருகின்றது. பேருந்து, அங்காடியின் மூலம் ரூபாய் 1,10,210 ஆண்டுதோறும் வருவாய் கிடைக்கிறது. இவையன்றிப் புதிதாக 30 கடைகள் கட்டி, வருவாயினை பெருக்கத் திட்டமிட்டுள்ளது.

இலவசப் படிப்பகங்கள் ஏழும் அழகிய பூங்காக்கள் பத்தும். காய்கறி அங்காடி ஒன்றும். வண்டி மேடு ஒன்றும், பொதுக் கிணறுகள் ஐம்பதும். குளங்கள் ஐந்தும் இப்படிப் புள்ளி விவரங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்..

சென்னை மாநகரின் அருகே, நாளும் வளரும் ஓர் நல்ல நகரமாக விளங்கிவரும் தாம்பரம், நகரமைப்புத் திட்டத்துக்கே ஓர் எடுத்துக் காட்டாய்த் திகழும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

—பி.வி.ஜி.

## அனுபவம் இது தான்!

[illegible]

[illegible] அனுபவம்!

[illegible] முறையினும் [illegible] ஒருவருக்கு எடுத்துக் கூறுகிறது — அனுபவம்!

—காந்தியடிகள்

அனுபவம் ஓர் அன்புப் பள்ளியை நடத்துகிறது:

—பிராங்க்ளின்

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்:
தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# 14
## கடமைக்கு விழுந்த அடி

நர்சு தங்கம், டாக்டர் அறைக்கு வந்து எட்டிப் பார்த்தாள்.

''என்ன? தங்கம் என்ன வேண்டும்?''

''அஞ்சலைக்கு பிரக்ஞை வந்திருக்கிறது. அவள் உங்களுடன் பேசவேண்டுமாம்''

''இதோ வருகிறேன். அடிபட்ட முழங்காலை. எடுக்க வேண்டுமா வேண்டாமா என்று யோசிக்கிறேன். டாக்டர் வத்சலாவிற்கு போன் பேசினேன். அவள் பதில் கூறுவதாகச் சொன்னாள். நீ போன் பக்கத்தில் இரு. நான் அஞ்சலையைப் பார்த்துவிட்டு வருகிறேன். டாக்டர் வத்சலா கிடைக்காவிட்டால் டாக்டர் சரளாவுக்குப் போன் பேசு!''

''அஞ்சலையின் கால் அத்தனை மோசமாக இருக்கிறதா?

''ஆமாம்''

அஞ்சலை துடித்துக்கொண்டு கிடக்கும் இடத்திற்கு டாக்டர் நர்மதை வந்தாள். அந்த நிலைமையிலும் அழுகையிலும் அதிக சிரமத்தோடு கை தூக்கிக் கும்பிட்டாள். கண்ணீர் மல்க அழுதாள்.

''அழாதே, இருக்கும் பலமும் போய்விடும். உன்னைக் காப்பாற்றுவது என் கடமை''

''டாக்டரம்மா! எனக்காக ஒரு காரியம் செய்ய வேண்டும்''

''உன் நன்மைக்கான நல்லதைச் செய்வேன்''

''நான் ஆறடி உயரம் இருக்கேன். முப்பது வருஷமா உழைக்கிறேன். என்னால் தினம் தினம் பாடுபட்டும் என் மகள் கனகாம்பரத்துக்குக் கண்ணாலம் செய்யமுடியவில்லை அதனால்....''

அஞ்சலை என்ன சொல்லப் போகிறாள் என்பதை நர்மதை கேட்க ஆவலாக இருந்தாள். ஓரளவு புரிந்தாலும் அஞ்சலைக்கு நியாயம் கிடைப்பதையும் அவள் உயிர் பெற்று எழுவதையும் டாக்டரது உள்ளம் விரும்பிக்கொண்டிருந்தது.

நர்சு தங்கம் எட்டிப் பார்த்தாள்.

''டாக்டர் வத்சலா வீட்டில் இல்லை. டாக்டர் சரளா உடனடியாக வந்துகொண்டிருக்கிறாராம்...''

''வரட்டும். டெலிபோன் பக்கம் நீ நில்''

நர்சு தங்கம் போய்விட்ட பின்பு, டாக்டர் நர்மதை ''உன் மகள் கனகாம்பரத்துக்குக் கண்ணாலம் செய்யப் பணம் இல்லை-அப்புறம் என்ன சொல்ல வந்தாய்?'' என்று நினைவூட்டினாள்.

அஞ்சலைக்கு அழுகை வந்தது. அவள் நெஞ்சம் விக்கித் தவித்தது. தன் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுமே என்ற கவலையும் இணைந்தது.

''அதனாலே! டாக்டரம்மா நீயும் உன்னுடைய பிள்ளை குட்டியுமாய் நன்றாக நீங்கள் இருப்பீர்கள். என் மகள் வாழ்க்கை உன் கையிலும் என் முழங்காலிலும் இருக்கிறது. என்னைவிட்டு ஒரு முழங்காலு போயிட்டா ... எனக்கு நஷ்ட ஈட்டுப் பணம் இரண்டாயிரம் மூவாயிரம் கிடைக்கும்! நான் சம்பாதிக்க முடியாத பணத்தை என்னைவிட்டுப் போகிற கால் சம்பாதிக்கும் படியாக எனக்கு உதவி செய்! டாக்டரம்மா !''

இதனைக் கொடுமை நிறைந்த வேண்டுகோள் என்றும் தாய்மை நிறைந்த தவிப்பு என்றும் கொள்ளலாம்!

''அஞ்சலை! உனக்கு நஷ்ட ஈட்டுப் பணம் கிடைக்குமோ கிடைக்காதோ! உன் உயிர் காப்பாற்றப்பட வேண்டும். அதுதான் நான் செய்யக்கூடியது!

டாக்டர் வார்த்தையை முடிக்குமுன் ஓட்டமும் பதற்றமும் நிரம்பியவளாக வந்த நர்சு தங்கம் ''டாக்டரம்மா! வக்கீல் ஐயா, முதலாளி ஐயா இருவரும் உங்கள் அறையில் இருக்கிறார்கள்!'' என்று கூறினாள்.

''இருக்கட்டும்''

டாக்டர் சரளா அங்கே வந்து கொண்டிருந்தாள். ''வணக்கம் டாக்டர் நர்மதா' என்றவளுக்கு ''உங்கள் உதவி இப்போது தேவை டாக்டர்'' என்றாள் நர்மதை.

''என்ன செய்ய வேண்டும்?''

அஞ்சலையின் பக்கம் சுட்டிக் காட்டினாள். அவசரமாக ஆபரேஷன் செய்யணும்'' என்றாள். மற்றைய நர்சுகள் சிட்டாகப் பறந்து வேலை செய்து கொண்டிருந்தார்கள்.

அஞ்சலை ''டாக்டரம்மா என்னை விட்டு அறுபட்டுப் போகும் கால் என் மகளுக்கு மாங்கல்யம் வாங்கித் தரப் போவுது. பெற்ற தாய் தர முடியாத வாழ்க்கையை இழக்கும் எனது கால் தரப்போவுது' என்று புலம்பினாள். அதிலும் ஒரு மகிழ்ச்சி.

''அஞ்சலை! உன் குடும்பத்தில் ஆயிரம் பணக் கவலை இருக்கலாம்; அதன் வரவு செலவைச் சரிக்கட்ட டாக்டராராக நான் பணிபுரியவில்லை. புரையோடின கால் உன் உயிருக்கு ஆபத்து. அதை நினைச்சுத்தான் ஆபரேஷன் செய்யறேன்''.

''நீங்க வாழ்க''

டாக்டர் தனது அறையில் மில் முதலாளியும் கணவன் மணிவாசகனும் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை அறிந்தும், அங்கு அவள் நகரவில்லை.

ஆஸ்பத்திரி வார்டுக்குள் இருந்த டெலிபோன் கிணுகிணுத்தது. அதனை நர்சு ஒருத்தியெடுத்துக் கேட்டாள்.

''டாக்டர் நர்மதா ரொம்ப கவலையோட இருக்காங்க ... நீங்க யார்?''

''நான் அவள் கணவன் மணிவாசகன். பேசச் சொல்லம்மா நர்சு''

''எங்கிருந்து பேசறீங்க?''



ஒரு கணத்தில் ஒளிர்வு பெறும் அறிவு சில வேளைகளில் ஒருவரது முழு வாழ்நாள் அனுபவத்திற்கு ஈடாகும்.

—ஆலிவர் வென்டல்ஹோம்ஸ்.

### விழாக்கால முன் பணம்.



அரசு ஊழியர்களுக்கு விழாக்கால முன்பணமாக (Festival Advance) இதுவரை ரூ. 150 கொடுக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு அக்டோபர் முதல் இந்தத் தொகையைத் தமிழ்நாடு அரசு ரூ. 200 ஆக உயர்த்தியுள்ளது.

''ஆஸ்பத்திரி மெயின் அறையில் உட்கார்ந்து பேசுகிறேன். இங்கு முதலாளியும் இருக்கிறார்''.

''இதோ பேசச் சொல்றேன்'' என்ற நர்சு, ''டாக்டர் உங்களுக்கு ஒரு சேதி. உங்கள் கணவர்'' என்று ஆரம்பித்தாள்.

''தெரியும். ஆஸ்பத்திரி அறையிலிருந்து பேசுகிறார். நீ போனைக் கீழே வை. நோயாளி அஞ்சலையை ஆபரேஷன் தியேட்டருக்குத் தள்ளிக் கொண்டு போ...வேண்டியதைக் கவனி''

நர்சு பயந்துகொண்டு போய் விட்டாள்.

''அலோ'' என்றாள் டாக்டர்.

''நான் தான் உன் ... ''

''புரிகிறது குரல். நான் முக்கியமான காரியமாக இருக்கிறேன்''.

''நானும் முக்கியமான காரியமாக உன் அறையில் காத்து இருக்கிறேன். அடிபட்டு வந்த அஞ்சலைக்கு....''

''அவளோட காலை எடுத்தாக வேண்டும்''.

''கால் தானே! எடுக்க வேண்டாம்''.

''டாக்டருக்கு யோசனை சொல்ல வேண்டாம். அந்த உழைப்பாளி பிழைக்க வேண்டும்''.

''சட்ட ரீதியாகக் கொடுப்பதை சம்பிரதாயமாகக் கொடுத்துவிடலாம். சம்திங்காகக் கொடுத்துவிடலாம்.

''இது அக்கிரமம். அநீதி. அவள் செத்துவிட்டால்?''

''நான் உன் கணவன் — என் முதலாளி என்னிடம் வழக்குத் தந்தவருக்காக வாதாடுகிறேன். இரண்டு நிமிடம் உனது அறைக்கு வந்துவிட்டுப் போ!''

''மன்னிக்கவும்.''

''இது உன் கணவனின் கட்டளை''.

''அது வீட்டில்! வாழ்க்கையில் என் கணவர்''.

''எனக்குள்ள மானம் மரியாதை கௌரவம்?''

''அத்தனையும் காக்க வேண்டியவள் மனைவி. அதனை அறிந்துதான் பேசுகிறேன்''.

''அஞ்சலையின் காலையெடுக்க வேண்டாம்!....''

''காலை யெடுக்கா விட்டால் அவள் நாளை அல்லது மறுநாள் இறந்து போவாள்''.

''நான் கொடுத்த வாக்குறுதி எனக்கு முக்கியம்''.

''எனக்கு என் நோயாளியின் உயிர் முக்கியம்!''

''சட்டம் படித்த வக்கீல் நான் சொல்லுகிறேன். என் கௌரவத்தை யோசி. நான் அங்கு வருகிறேன்''.

''சமுதாயத்தின் பொறுப் புணர்ந்த டாக்டர் நான். தீர்மானித்துப் பேசுகிறேன். கௌரவம் தனியார் சொத்து இல்லை. அது சமூகத்தின் பொதுச் சொத்து. டாக்டர்கள் நீதி மன்றத்துக்குள் சாட்சியாக நுழைவதற்குச் சட்டம் அனுமதிக்கும். ஆனால் வக்கீல்கள், ஆப்ரேஷன் அறைக்குள் ஆலோசகர்களாக நுழைவதை ஒரு நாளும் எங்கள் தொழில் தர்மம் அனுமதிக்காது'' என்று ஆத்திரத்துடன் பேசினாள்.

பிறகு ''நர்சு! யாரையும் வார்டுக்குள் அனுமதிக்காதே!'' என்றபடி ஆபரேஷன் தியேட்டர் நோக்கிப் போய்விட்டாள்.

அரை மணி வரை முதலாளி முத்தையாவும் வக்கீல் மணிவாசகனும் தனிமையை மென்று விழுங்கிக் கொண்டு இருந்தார்கள்.

அச்சமயம் டெலிபோன் கிணு கிணுத்தது. அது 'டிரங் கால்' என்றும் அறிவித்தாள் டெலிபோன் பெண்மணி.

''ஹலோ !''

''டாக்டரம்மாவா !''

''டேய் பாபுவா !''

''யார் அப்பாவா! நீ எதுக்கு ஆஸ்பத்திரிக்குப் போனே ! உனக்கு உடம்பு சரியில்லையா அப்பா?''

''அம்மாவைப் பார்க்க வந்தேன்''

''ஆமா. இந்த வருஷமும் ராதா சித்தி நம்பர் பேப்பரில் வரவில்லையே அப்பா!''

''வரும் வரும். இன்னும் அஞ்சு வருஷம் பத்து வருஷம் படிச்சா அவள் நம்பர் பேப்பரில் வரும்''.

''நீயேன் அவளுக்குப் பாடம் சொல்லி வைக்கக் கூடாது?''

''நீ நன்றாகப்படி. இன்னம் அரை மணி கழிச்சு போன் பேசு. . . . . . . . . . உன் அம்மா வருவாள்'' என்று போனை வைத்துவிட்டார்.

பாபுவுக்கு, அப்பாவின் எரிச்சலுக்குக் காரணம் தெரிய நியாயமில்லை.

முதலாளி முகத்தில் ஈயாடாமல் உட்கார்ந்திருந்தார். அவர் கடிகாரம் நேரத்தை விரட்டிக் கொண்டிருந்தது.

டாக்டர் சரளாவை நன்றியுடன் அனுப்பிவிட்டுத் தனது அறைக்குள் நுழைந்தார். ஒரு மணி நேரத்திற்குப்பிறகும் அங்கே இருக்கும் இருவரையும் பார்த்தாள். கையின் ஈரத்தைச் சவுக்கத்தால் துடைத்தபடியே வந்து ''வணக்கம்'' என்றாள்.

''டாக்டர் நர்மதா! சென்பகா மில்லை என் தாத்தா ஆரம்பித்தார். அன்று தொட்டு இன்றுவரை எந்த தொளிலாளிக்கும் நஷ்ட ஈடு என்ற முறையில் ஒரு தம்பிடி கொடுத்தது இல்லை''.

''மன்னிக்கணும். இதுவும் உங்கள் ஆசுபத்திரி. நான் உங்கள் பணியாள்!''

''நீங்கள் பணிகிற ஆளாக இல்லையே. அஞ்சலையைப் பார்க்கலாமா?''

''இன்னும் மூன்று மணி நேரம் ஆகும் அவள்மயக்கம் தெளிய!''

''அப்படியானால் அவள் கால் ஆபரேஷனை முடித்து விட்டு வருகிறாயா?'' கடுமையாகக் கேட்டார் வக்கீல்.



பாவை
எழிலுக்கு பருவம் தரும்
வண்ணத்துப் பூச்சி!
● அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
● பருத்திப் புடவைகள் ● லுங்கிகள்
● வேட்டிகள் ● வீட்டு அலங்காரத் துணி வகைகள் ● துண்டுகள் ● கைக்குட்டைகள்
● பட்டு டைகள் ● கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
கைத்தறியே வண்ணத்துப் பூச்சி!

மணிவாசகன் மூச்சிலும் நாக்கிலும் நாகப்பாம்பின் விஷம் சீறிக் கொண்டிருந்தது.

''உன்னிடம் கேஸைக் கொடுத்தது என் தப்பு! நீ கையாலாகாத வக்கீல்''

முதலாளி முத்தையா முள்வேலி கட்டத் தொடங்கினார்.

''எனக்கு ஏற்படும் தோல்வியை நீ வெற்றி மாலையாகச் சூட்டப்பபார்க்கிறாய்! நான் அவமானப் படுகிறேன். நீ ஆனந்தப்படுகிறாய்.

''இது கணவனுக்கும் மனைவிக்குமுள்ள பிரச்சினை இல்லை. இது மனச்சாட்சியின் பிரச்சினை''

''தூ! எனக்கு மனச்சாட்சியைப் பற்றி என் மனைவியே பாடம் சொல்லித் தர வேண்டுமா?''

''இது ஆஸ்பத்திரி, இங்கே மனைவிக்கும் கணவனுக்கும் விவாதம் நடக்கவில்லை!''

''பின்?''

''டாக்டருக்கும் வக்கீலுக்கும் நடக்கும் கௌரவப் பிரச்சினை!''

''ஏ! காளி......கர்வி. கல்நெஞ்சுக்காரி. கணவனை மதியாது பேசும் பத்திரகாளி.... என்பதாக என்றோ நினைத்தேன். இன்று காளியாக காரியத்தை முடித்துவிட்டாய்!''

''நான் காளிதான். பிறர் தரும் லஞ்சத்திற்காக அக்கிரமத்தைத் தாங்காத காளி. உண்மைக்காக எதையும் தியாகம் செய்யுங்கள். ஆனால் எதற்காகவும் உண்மையைத் தியாகம் செய்வது தொழிலுக்குச் செய்யும் துரோகம்!

து..ரோ..கம்!

இச்சொல் பிறந்த மறுகணம் மணிவாசகன் இரும்புக் கரங்கள் பளார் பளார் என்று நர்மதையின் கன்னத்தில் பதிந்தன.

''படித்தவர் செய்யக்கூடிய செயலா?'' என்று கத்தினாள்.

இந்த எதிர்பாராத வினைவைக் கண்டு முதலாளி முத்தையா பயந்து போனார். டாக்டரையும் வக்கீலையும் விலக்கி வைத்தார்.

''அடித்தவர் வக்கீல்; அடிபட்டவள் டாக்டர்!'' என்று மீண்டும் உரிமை பிரச்சினை எழுப்பினாள்.

''முதலாளி! நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பே இந்த ஆசுபத்திரியைவிட்டு விலக மனுச் செய்தாள். இதனை விட்டு விலக்குவது நன்மையென்றேன்! என் ஆலோசனையை மீறி வேலையும் தகுதியும் தனி நர்சிங் ஹோம் நடத்தும் உரிமையும் தந்தீர்கள். அந்தப் பெருந்தன்மைக்குப் பரிசு பெற்றீர்கள் இன்று''

வக்கீல் மணிவாசகன் பேச்சிலும் ஆத்திரம். சொல்லிலும் நெருப்பு ஜுவாலை.

''வாங்க போகலாம். வக்கீல்! உங்களைக் குற்றம் சொல்லிப் பயனில்லை! பிடிவாதம் பிடிச்ச பொம்பளையை மனைவியாகக் கட்டின கணவன் என்னதான் செய்ய முடியும்? கண்ணகியும் நளாயினியும் பிறந்த நாட்டிலே கணவனை அவமானப்படுத்தும் பெண்களும் பிறக்கிறாங்க. வாங்க போகலாம்''.

வக்கீல் மணிவாசகன் அடிபட்ட நாகம் போன்று ''என்னை அவமானப்படுத்திய இந்த நிகழ்ச்சி என் நெஞ்சத்திலிருந்து மறையாது. இது ஆறாத புண்....மாறாத ரணம்....பழிவாங்குவேன்; பழிக்குப் பழி வாங்குவேன்!'' என்று கத்தியவனைத் தள்ளிக்கொண்டு முதலாளி போய்ச் சேர்ந்தார்!

கையால் . அடிபட்ட வேதனையைவிடச் சொல்லால் அடித்த வேதனை அதிகமாக இருந்தது. ''என் ஆலோசனையை மீறி வேலையும் தகுதியும் தனிநர்சிங் ஹோம் நடத்தும் உரிமையும் தந்தீர்கள். அந்தப் பெருந்தன்மைக்குப் பரிசு பெற்றீர்கள் இன்று'' என்ற சொற்கள் அத்தனையும் அவளை நோக்கி எரியப்பட்ட வெடி குண்டுகள்! நெருப்பு மழைக்குள் புழுவாக நனைந்து கொண்டிருந்தாள்.

டெலிபோன் மணி!

''ஹலோ! பாபுவா! என்னடா! ஓ! நான் ஒன்றும் அழவில்லையடா...... அழுகிறேனா? சே! ஜலதோஷம் பிடிச்சிருக்கு ..மல்லிகா சித்திக்கு உன் அப்பா ட்யூஷன் சொல்லி வைக்கணுமா?.... இப்பதான் மூன்றாம் வகுப்பில் பாஸ் செய்தியா? அதுக்கு உனக்கு மெடல்

> ஆடை கட்டி வந்த எண்ணமே மொழி.
>
> —சாமுவேல் ஜான்சன்.

கிடைச்சுதா?.. எனக்குப் போடப் போறியா?....உன் அப்பாவின் கைக்குப் போடணும்..அவ்வளவு பெரிய காரியம் செய்திருக்கார்..நிஜமாக நான் அழவில்லையடா..சிரிக்கிறேன். உனக்காகச் சிரிக்கலே நிஜமாகச் சிரிக்கிறேன். உனக்கு நெய் லட்டு வேணுமா? ஒரு டின் அனுப்புறேன். உன் சிநேகிதன் முருகனுக்கும் சேர்த்து தேன்குழலா?....பார்சல் அனுப்புகிறேன்....''

குழந்தை பாபு டெலிபோன் பேசியதைக் கேட்டு அவள் உள்ளம் குளிர்ந்தாலும் தன்னைச் சுற்றி நெருப்புப் புயல் வீசுவதாக உணர்ந்தாள்.

என்னென்ன விளைவுகள் வீட்டுக்குள் உருவாகுமோ என்ற பயம் முளைவிட்டது! மூளையும் கலங்கியது.

டேலிபோன் மணியடித்தது.

ராதா பேசினாள். ''அக்கா! பாபு எனக்குக் கடிதம் போட்டிருந்தான். இந்தாண்டும் பெயில் ஆனதைக்குறித்து வருத்தம் தெரிவித்திருக்கிறான். அவன் நெய் லட்டும் தேன் குழலும் கேட்டிருக்கிறான். செய்து அனுப்பட்டுமா?'' என்றாள்.

''செய்! நான் இன்று வீட்டுக்கு வரவில்லை''

''ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டிய அவசியமா?''

''ஆமாம்''

''அத்தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் போன் செய்தார். ஒரு வாரம் வெளியூர் போகிறாராம்!''

''போகட்டும்....நான் வீட்டிற்கு வந்தாலும் வருவேன்! என்று போனை வைத்தாள்.

அடிபட்டு சிவந்த கன்னத்தை—அதன் வீக்கத்தை ராதை பார்க்க வேண்டாம் என்று எண்ணினாள். பிறகு அவள் பார்க்கவேண்டுமென்று தன் மனத்தை மாற்றிக்கொண்டாள் டாக்டர் நர்மதை....

(வளரும்)



# என்ன வண்ணத்தில் எவர்சில்வர் வேண்டும்?



வெள்ளை வெளேரென்று பளபளப்பாக உள்ள 'எவர்சில்வர்' பொருள்களைப் பார்க்கும் போதெல்லாம், ''இந்த 'எவர்சில்வர்' பொருள்கள் பல வண்ணங்களில் வராதா?'' என்ற ஏக்கம் சிலருக்கு ஏற்பட்டதுண்டு! அவர்களின் ஏக்கத்தைப் போக்கிட பிரிட்டன் முன்வந்துள்ளது!

அனைத்து நாட்டு 'நிக்கல்' நிறுவனம் உருவாக்கிய முறையின் அடிப்படையில், வண்ண வண்ண 'எவர்சில்வர்' உற்பத்தி பிரிட்டனில் துவக்கப்பட்டுள்ளது, புதிய முறையில் வண்ண 'எவர்சில்வர்' உற்பத்தி செய்யும் பிரிட்டன் நாட்டு நிறுவனத்தின் நிருவாக இயக்குநர், ''வண்ண 'எவர்சில்வர்' வந்துள்ளதால், உருவம் அமைப்பவர்களுக்கும், கட்டடக் கலைஞர்களுக்கும் பெரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டுள்ளார். சுவர் மற்றும் கதவில் பதிப்பதற்கு ஏற்ற அமைப்புகள், சாளரம் மற்றும் கதவின் சட்டங்கள், கடைகளை அழகுபடுத்தும் பொருள்கள் அடையாளங்கள், மேஜை-நாற்காலி போன்ற பொருள்கள், கலைப் பொருள்கள், மற்றும் சமைப்பதற்கு ஏற்ற பாத்திரங்கள் ஆகியவை செய்ய வண்ண 'எவர்சில்வர்' பயன்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மிகவும் முக்கியமாக, 'கார்' உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் 'கார்' சக்கரங்களை அச்சுடன் இணைக்கும் இடத்தில் பொருத்தும் மூடி (Wheel hubs) தயாரிப்பதற்கு வண்ண 'எவர்சில்வர்' உதவிடும் என்பது திண்ணம்.





எவர்சில்வரை வண்ணப்படுத்தும் முறை, 'பர்மிங்காம்' என்ற இடத்திலுள்ள அனைத்து நாட்டு நிக்கல் ஐரோப்பிய ஆராய்ச்சி—மேம்பாட்டு நிறுவனத்தில் உருவாக்கப்பட்டது. விஞ்ஞானிகள் அடங்கிய ஒரு குழு ஆறு ஆண்டுகாலம் ஆராய்ச்சி செய்து, வண்ண 'எவர்சில்வர்' தயாரிக்கும் முறையை வகைப்படுத்தியது. அதன் பயனாகச் சிவப்பு, தங்கம், பச்சை, நீலம் ஆகிய நான்கு அடிப்படை வண்ணங்களிலும், அந்நான்கு அடிப்படை வண்ணங்களும் கலந்த பல்வேறு வண்ணக் கலவையிலும் 'எவர்சில்வர்' உற்பத்தி செய்ய வழி பிறந்துள்ளது. இம்முறை, எந்தவகையிலும் எவர்சில்வரின் நல்ல தோற்றம், அரிப்பைத் தாங்கிக் கொள்ளும் தன்மை, நீடித்த உழைப்பு, எளிதில் பராமரிக்கும் தன்மை ஆகிய குணங்களைக் குறைத்துவிடவில்லை. மேலும், எப்படிப் பயன்படுத்தினாலும் தேய்ந்து விடாத தன்மையைக் கொண்டது.



இம்முறையின்படி வண்ண அமைப்புகளும், உருவங்களும், வரைந்த ஓவியங்களையும், புகைப்படங்களையும் எவர்சில்வரின் மேல் அச்சிடலாம். முன்பே வண்ணத்தில் தயாரிக்கப்பட்டுக் கெட்டியாக்கப்பட்டுள்ள எவர்சில்வரை அதன் வண்ணங் கெடாமல் குறுகிய கோணத்தில் வளைக்கவோ அல்லது உருளைகளுக்கு இடையே செலுத்தி வளையாமல் கெட்டியாக்கவோ இயலும். அதுபோலவே, பல்வேறு உருவ அமைப்புகளுக்கு உட்படுத்தப்படக் கூடிய, வண்ணத்தில் தயாரிக்கப்படாத சாதாரண எவர்சில்வரையும், உருவ அமைப்பிற்குப் பிறகு வண்ணமடையச் செய்யலாம்.

எனவே, வண்ண வண்ண எவர்சில்வரில் தயாரிக்கப்பட்ட அழகுமிகு பொருள்களை நாம் விரைவில் வாங்கிப் பயன்படுத்திடலாம்!

பதிவு எண். M. 8676




இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

முதல் பரிசு ரூ.100000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும்,
பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.
மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

58-வது குலுக்கல் நாள்:

10-8-1973

பரிசு சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/-தான்






கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9.

2 வரிசைகள் வெளியீட்டுக்கு உரியது.


# தமிழரசு

16-8-1973 40 காசு



# சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண் : 151.

சேலம் - 1. தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

| | |
|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | 3¼% |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) | 3½% |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் | 4½% |
| **பிக்சட் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு : | |
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் | 5½% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் | 6¾% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | 7¼% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | 7½% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் | 7¾% |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் | 8 % |
| நடப்பு கணக்கு ½% | சேமிப்பு கணக்கு 4½% |

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு ½% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/-க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., *தலைவர்.* வை. இராமலிங்கம், *செயலாளர்.* தி. இராஜமாணிக்கம், *நிர்வாக அலுவலர்.*



# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ மஹால போன்ற கவின்மிகு கட்டடங்கள் காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும, பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

உயர் ரகத்தைக் குறிக்கும் வாட்டர் மார்க்



FDSSPB 777TMA




## தஞ்சை மாவட்டத்தில்
# தாளடி மகசூல் பெருக...

தமிழ் நாட்டின் நெற் களஞ்சியமாய்த் திகழும் தஞ்சை மாவட்டத்தில் வழக்கமாகக் குறுவைப் பட்டத்தில் ஏறத்தாழ 5 இலட்சம் ஏக்கரிலும் சம்பா பட்டத்தில் 7 இலட்சம் ஏக்கரிலும், தாளடி பட்டத்தில் 4.5 இலட்சம் ஏக்கரிலும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. மகசூல் குறுவையில் ஏக்கருக்கு 1.5 டன்னும், சம்பாவில் 1.2 டன்னும் கிடைக்கும் பொழுது தாளடியில் ஏக்கர் மகசூல் ஒரு டன்னுக்கும் குறைவாகவே கிடைக்கும் நிலையினைக் காண்கின்றோம். ஏன் இந்த நிலை? தாளடியில் அதிக மகசூலைப் பெற முடியாதா? அதற்கான வழி என்ன என்ற கேள்விகள் எழுகின்றன. தாளடியிலும் அதிக மகசூலைப் பெற்றால்தான் உழவர்கள் அதிக வருவாய் பெற முடியும். எனவே, முதலில் தாளடியில் மகசூல் குறைவதற்கான காரணங்கள் என்ன என்பதனை ஆராய வேண்டும்.

**தாளடியில் மகசூல் குறையக் காரணங்கள் :**

(1) தாளடி நாற்றுவிடும் சமயம் மழை பெய்வதால், நாற்றுகளின் முளைப்பு பாதிக்கப்படுகின்றது: இதனால் குறிப்பிட்ட பரப்பு நடுதலும், குறிப்பிட்ட இடைவெளி விட்டு நடுதலும், முடியாமல் போகிறது.

(2) தாளடி நாற்றங்காலில் நெற் பேன் தாக்குதல் அதிகமாகக் காணப்பட்டு நாற்றுக்கள் வெளுத்து, மெலிந்து, நடுவதற்கு உபயோகமற்றதாகப் போகின்றன.

(3) தாளடி நடவு காலத்தில் மழை பெய்து கொண்டிருக்குமாகையால், நடவு வயல் தயாரித்தல், நடவு செய்தல் முதலிய வேலைகள் சரியான நேரங்களில் செய்ய முடிவதில்லை.

(4) வயல்களில் நீர்த்தேக்கம் இருப்பதால் சரியான இடைவெளிகளில் இளம் நாற்றுகளை நட முடிவதில்லை.

(5) முதல் போக பயிருக்கு இயற்கை எரு இடுதலும், அடியுரமிடுதலும், மேலுரமிடுதலும் செய்கிறோம். ஆனால் தாளடிப் பயிருக்கு குறுவைச் சம்பா பயிர்களுக்கு இடுவது போல் தொழு உரம் ,கலவை உரம் அல்லது பசுந்தழை இட முடிவதில்லை.

(6) வயலில் நாற்று நடும் காலத்தில் அதிக நீரும், அதிக மழையும் இருப்பின் இரசாயன உரங்கள் அடியுரமாக இடுவதும் தடைபடுகிறது.

(7) மழையிருந்தால் சரியான காலத்தில் மேலுரமிடவும் முடிவதில்லை.

(8) பயிர்ப் பாதுகாப்பு முறையில் கண்ணோட்டம் செலுத்தும்போது தாளடிப் பருவம் பூச்சிகள், நோய்கள் பரவ மிகவும் ஏற்றதாக அமைந்து விடுகிறது. காற்றில் ஈர நிலை அதிகமாகி, வெப்பமும் குறைந்த நிலையில் பூச்சிகள், நோய்கள் விரைவில் பெருகிப் பரவப் பெரும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும், மழையினால் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த காலத்தில் மேற்கொள்வது கடினமானதால், பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றை சரிவரக் கட்டுப்படுத்த முடியாமல் மகசூல் குறைகின்றது.

(9) தண்ணீர் வடிய வசதி இல்லாத இடங்களில், வயல்களில் நீர் தேங்கி, நட்ட பயிர் தண்ணீரில் மூழ்கிப் பாதிக்கப்பட்டு மகசூல் குறைய ஏது வாகிறது.

மேற்கூறிய காரணங்களால் தாளடியில் மகசூல் குறைந்து விடுகிறது. அவைகளை முடிந்த அளவு நீக்கி, மகசூல் பெருக்கிட பின் கண்ட வழி முறைகளைக் கையாள வேண்டும்.

முதலில், தாளடிப் பயிருக்கு எந்த ரகம் ஏற்றது என்பதனை நாம் ஆராய வேண்டும். மேட்டூர் அணை ஜனவரி இறுதியில் மூடப்படுகிறது. இந்த நீர் ஜனவரி 15-ஆம் தேதி வரை பாசனத்திற்குக் கிடைக்கும். மேலும் அறுவடைக்கு முன் 15 நாட்களுக்கு நெற் பயிருக்குத் தண்ணீர் தேவையில்லை. இந்த அடிப்படையில் எந்தெந்த ரகங்களைப் பயிர் செய்தால் தண்ணீர்த் தட்டுப்பாடின்றி சாகுபடி செய்ய முடியும் என்பதைத் தீர்மானித்து, அதன்படி தாளடிக்கு ஏற்ற ரகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அடுத்து, தாளடிப் பயிருக்கு எப்போது நாற்று விட முடியும் என்பதையும் தாளடி நடவு எப்போது முடியும் என்பதையும் எண்ணி, ரகங்களின் வயதுக்கு ஏற்ப, எந்த ரகத்தைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதையும் முடிவு செய்ய வேண்டும்.

# அரசு - மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தாமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ்**
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு** - வலிவும் வனப்பும் வாய்ந்தது.


OFFICE OF THE STATE ED...
166 Gul 73
AUG 1973
...T, MADRAS-8

# விடுதலை நாள் விழாவில் நாம் ஏற்கும் சூளுரை!



தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர்

இந்தியத் திருநாடு விடுதலை பெற்று இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறோம். அடிமைப் புதைகுழியில் கிடந்த அந்த நாள் நினைவில் மூழ்கிக் கிடந்த அதே நாடு 'விடுதலை ஒளி' பெற்று விழா கொண்டாடுவதைக் கண்டு மகிழாதார் இருக்க முடியாது. மகிழ்ந்தோம் ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று ஆடுவோமே என்று அன்று பாடிய மகிழ்ந்தோம், இன்னமுமவர்கள், தியாகச் சுடர்ப்புகழ் ஒன்றுக் கொள்ளையில், உயிர்நீத்தவர்கள் — அவரும் சுதந்திரத் தீயின் மணி முடியில் பிரகாசிக்கும் முத்துக்களாகப் போற்றப்பட்டார்கள். மண்ணின் விடுதலைக்காகப் போரிட்ட மாவீரர் பலரைத் தமிழக அரசு வாழ்த்திப் புகழ்ந்து தேடி மட்டுமன்றி அவர்தம் வாழ்க்கைப் பிரச்சினைகளிலும் நாட்டம் செலுத்தி வருவதை அறிவீர்கள். தியாகிகளுக்கு மேற்பட்ட தியாகிகட்கு திங்கள் தோறும் மானியம் வழங்கி வருகிறோம், ரொக்கமாகவே இப்படி போய் அன்றி உத்த மானியத்

ஆவணி 30-ஆம் தேதிக்குள் நாற்று விட்டு, ஐப்பசி 14-ஆம் தேதிக்குள் நட முடிந்தால் 165 நாட்கள் வயது கொண்ட கோ. 25 என்ற ரகத்தை 45 நாளில் நடலாம். அறுவடை மாசி 16-க்குள் வரும்.

புரட்டாசி 14-க்குள் நாற்று விட்டு, ஐப்பசி 14-ஆம் தேதிக்குள் நட முடிந்தால், 150 நாட்கள் வயது கொண்ட ஐ. ஆர். 5 அல்லது 140 நாட்கள் வயது கொண்ட 'பொன்னி' ரகத்தை 25 முதல் 30 நாளில் நடலாம். அறுவடை மாசி 6-க்குள் வரும்.

புரட்டாசி 15-ஆம் தேதியிலிருந்து புரட்டாசி 24-ஆம் தேதிக்குள் நாற்று விட்டு ஐப்பசி 15- முதல் 24-ஆம் தேதிக்குள் நட முடிந்தால் 140 நாட்கள் வயது கொண்ட பொன்னி அல்லது அம்பை 5 ரகத்தையும், 130 நாட்கள் வயதுடைய ஐ. ஆர். 20 ரகத்தையும், 135 நாட்கள் வயது கொண்ட கோ. 32 ரகத்தையும் 25 முதல் 30 நாட்களிலும் நடலாம். 'பொன்னி' அல்லது அம்பை 5 ரகம் மாசி 7-ஆம் தேதியிலிருந்து மாசி 16-ஆம் தேதிக்குள் அறுவடைக்கு வரும். ஐ. ஆர். 20 அல்லது கோ. 32, மாசி 3-ம் தேதியிலிருந்து மாசி 16-ஆம் தேதிக்குள் அறுவடைக்கு வரும்.

அடுத்து, புரட்டாசி 25-ல் இருந்து புரட்டாசி 29-க்குள் நாற்று விட்டு ஐப்பசி 25-ம் தேதியிலிருந்து ஐப்பசி 29-க்குள் நாற்று விட்டு நடுவதாய் இருப்பின் 135 நாட்கள் வயது கொண்ட கோ. 32 ரகத்தையும், 130 நாட்கள் வயதுடைய ஐ. ஆர். 20 ரகத்தையும், அம்பை 5 ரகத்தையும் 30 நாளில் நடலாம். அறுவடை மாசி 12-ம் தேதியிலிருந்து மாசி 16-ம் தேதிக்குள் வரும்.

வடிமுனைக் குழாய் அல்லது கிணறு மூலம் பாசனம் அளிக்க முடியுமெனின் ஐப்பசி 27 முதல் கார்த்திகை 15-க்குள் நாற்று விடுவதாய் இருந்தால் 95 நாட்கள்வயதுடைய அன்னபூர்ணு (கல்சர் 28) ரகத்தைப் பயிரிடலாம். இது மாசி 3 முதல் 22 தேதிக்குள் அறுவடைக்கு வரும்.

இதுகாறும் கூறியவற்றை எண்ணி, ஆராய்ந்து ஏற்ற ரகத்தைத் தேர்ந்தெடுத்துப் பயிர் செய்வதே சிறந்தது.

# சிற்றூர் செழித்திட...

தனியாகவோ அல்லது கூட்டாகவோ, பொருளாதாரத் தன்னிறைவு கொண்ட பிரிவுகளாகக் கிராமங்கள் உருவாக, காந்தியடிகள் விரும்பிய கிராம ராஜ்யத் திட்டத்திற்கு வலுவான அடித்தளம் உண்டு. அதில் அரசியல் விவேகம் பொதிந்து இருக்கிறது. லெனெல் கர்டிஸ் என்பவர் நமது கிராமங்களை 'மாட்டுச் சாணக் குவியல்' என்று வருணித்தபோது அவர் மிகவும் மனம் வருந்திஞர். அந்தக் கிராமங்களை 'மாதிரி கிராமங்களாக' மாற்றும் முயற்சியில் ஈடுபட்டார். ''ஏழு லட்சம் கிராமங்களில் இந்தியா வாழ்கின்றது..............அத்தகைய கிராமங்களில் ஒன்றுக்குச் சென்று அங்குக் குடியிருக்க நான் விரும்புகிறேன். அதுவே உண்மையான இந்தியா; அது எனது இந்தியா'' என்று அவர் கூறிஞர்.



மனித சக்தியையும், இதர வசதிகளையும் உயர்ந்த பட்சம் பயன்படுத்தி, நன்மை பயக்கச் செய்யத் திட்டம் தீட்ட முனைய வேண்டும். கிடைக்கும் வளங்களைக் கொண்டு அதிக அளவு பயன் பெறுவதற்குக் கதர்—குடிசைத் தொழில்கள் போன்றவை உயர்ந்த கருவிகளாகும். இது தான் காந்தியடிகளின் வீர முழக்கமாகும்:—

''நகரங்கள், கிராம வழியிலான வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். கிராமங்களை வாழவைக்க வேண்டும் ............இந்தியக் கிராமவாசியின் நிலைமையைப் பொறுத்தவரையில், ஒரு மிகத் தொண்மையான பண்பாடு மங்கிய நிலையில் மறைந்து உள்ளது. துருவினை எடுத்து விடுங்கள்; காலாகாலமாகப் பற்றியிருக்கின்ற அவனது வறுமையையும், அறியாமையையும் அகற்றுங்கள். நாகரிகமான பண்பாடுடைய தனித்த குடிமகனை நீங்கள் காணுவீர்கள். நிலையான உலகைச் சமைத்திட இந்திய நாகரிகம் முழு அளவில் தனது பங்கினைத் தந்திட வேண்டுமென்ருல், இப்பெரிய மனித குலம் மீண்டும் வாழ்வு பெற வேண்டும். நமது கிராமங்கள் மீண்டும் முழுமையாக வளர்ச்சியடைந்தால், திறமையும், கலை நுணுக்கமும், உயர்ந்த வாழ்வும் கொண்ட மக்களுக்கு அங்கே பஞ்சம் இராது.''

கிராம வளர்ச்சியும் கிராமப் பொருளாதாரமும்தான் தேசியப் பொருளாதாரத்தின் அடிப்படை என்று வலியுறுத்தியதோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. தனது எண்ணங்களிலும் குறிக்கோள்களிலும் அவர் ஆக்கபூர்வமாக இருந்தார். இந்திய நாடு முழுவதும் அவரது உள்ளத்தில் இருந்தது. இந்திய மக்களின் நலன்களுக்காகவே தனது எண்ணங்களை வெளியிட்டு வந்தார். சுற்றுப்புறச் சுகாதாரம், கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற சிறந்த கருத்துக்களின் அடிப்படையில் எழுந்த அவரது கிராம வளர்ச்சித் திட்டம் ஒரு தலை சிறந்த தத்துவமாகும். கிராமப் புறங்களிலிருந்து வந்து, மக்களின் வரிப் பணத்தில் பயின்று பட்டம் பெற்ற மருத்துவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணிபுரிய மறுக்கின்றனர். மருத்துவ வசதி இல்லாத இடங்களுக்கு மருத்துவ வசதிகளை அளிப்பதற்கு நாம் மிகவும் முயற்சி செய்தாக வேண்டும்.

ஆளுநர் கே. கே. ஷா,

(சென்னை காந்தி மண்டபத்தில் நடைபெற்ற காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில்).



தாளடி நடுவது தாமதமாளுல் வயதான நாற்றுக்களை நெருக்கி நடுங்கள். நாற்று விடும் சமயம் ஆங்காங்கே மழை பெய்து நாற்றுகள் பாதிக்க அதிக வாய்ப்பு உள்ளதால் தேவைப்படும் அளவை விட சற்று அதிகமான பரப்பளவில், அதிகமான விதையை விதைப்பது நல்லது. மேலும் நாற்றங்காலை மிக நல்ல முறையில் யில் மேடு பள்ளங்களில்லாமல் சமப்படுத்தி 4 அடி அல்லது 6 அடி அகலமுள்ள பாத்திகளாகப் பிரித்து, வடிகால்களும் அமைத்து நாற்று விட்டால் அதிகமான நீரை வடிப்பது சுலபமாகும். சாதாரணமாக ஒரு ஏக்கர் நட 18 கிலோ விதையை 12 செண்டு நாற்றங்காலில் நடலாம். தாளடிக்கு மேலும் அதிகப் பரப்பில் அதிக விதையை நாற்றுத் தயாரித்து நடுவது நல்லது. நாற்றங்காலுக்கு 2 வண்டி பண்ணை எருவோ கலவை உரமோ ஒரு வண்டி தழை எருவோ இடுங்கள்.

நடவு வயலுக்கு எரு இடுதல் பற்றி எண்ணும்போது ஏக்கருக்கு 5 வண்டி தழை எரு அல்லது 12 வண்டி பண்ணை எரு அல்லது கலவை எரு இட வேண்டும். ஆனுல் நடைமுறையில் தாளடிப் பட்டத்தில் பண்ணை எரு, கலவை எரு முதலிய எருக்களை வயல்களுக்கு ஏற்றிச் சென்று, வயல்களில் போடுவது சிரமமாகயிருக்கும். சாலை ஓரங்களில் உள்ள வயல்களுக்கு மட்டுமே இவ்வாறு எருவிட இயலும். பசுந் தழை உரம் இடுவதின் மூலம் இந்தக் குறையை நிறைவு செய்யலாம். புங்கன், பூவரசு, கிளைரிசிடியா முதலிய தழைகளை வெட்டி எடுத்துச் சென்று ஏக்கருக்கு 5 வண்டி வீதம் போடலாம். கிளைரிசிடியா கன்றுகளை வயல் வரப்புகளில் 6அடி இடைவெளியிட்டு நடுவதால் ஒவ்வொரு வயலுக்கும் தேவையான பசுந் தழையைத் தேவைப் படும் போது வெட்டி வயல்களுக்கு இடலாம். இது சிக்கனமானதாகும். சிறந்ததும் கூட!

நடவு வயலுக்கு உரமிட கடைசிஉழவுக்கு முன் 'ஐ.ஆர். 5' ரகத்திற்கு 54 கிலோ டை-அமோனியம்-பாஸ்பேட், 44 கிலோ யூரியா, 42 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவற்றை அடியுரமாக இடவும்.

'ஐ. ஆர். 20' ரகத்திற்கும், 'அன்னபூர்ணு' ரகத்திற்கும், 'பொன்னி' ரகத்திற்கும் அடியுரமாக 35 கிலோ டை-அமோனியம்-பாஸ்பேட், 30 கிலோ யூரியா, 25 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை இட வேண்டும். அம்பை 5, கோ. 32, கோ. 25 ஆகிய ரகங்களுக்கு ஏக்கருக்கு 45 கிலோ டை-அமோனியம்-பாஸ்பேட், 14 கிலோ யூரியா, 24 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். இதுவே குறைந்த செலவில் அதிகச் சத்துள்ள, எடுத்துச் செல்ல எளிதான உரக் கலவையாகும். ஐ. ஆர். 5 ரகத்திற்கு 30 : 25 : 25 என்ற அளவிலும் இரசாயன உரமிடலாம்.

நாற்றின் வயதைப் பொறுத்த வரையில் ஐ.ஆர். 20, ஐ. ஆர். 5, கோ. 32, அம்பை 5, ரகங்களை 25--30 நாட்களிலும், கோ. 25 ரகத்தை 40-45 நாட்களிலும் நட வேண்டும்.

## ஒரு மீட்டரில் 50 குத்துகள்.

நடவு செய்யும் பொழுது முக்கியமாக ஒரு சதுர மீட்டரில் கோ. 25 ரகத்திற்கு 33 குத்துக்களும், கோ. 32, அம்பை 5, ஐ. ஆர். 20, ஐ. ஆர். 5, பொன்னி ஆகிய ரகங்களுக்கு 50 குத்துக்களும் இருக்கும்படி நடவு செய்ய வேண்டும். இவ்வாறு செய்ய ஐ. ஆர். 20, ஐ. ஆர். 5, கோ. 32, அம்பை 5, ஆகிய ரகங்களை 8 அங்குலத்திற்கு 4 அங்குலம் (20 செ.மீக்கு 10 செ.மீ) இடைவெளி விட்டும், கோ. 25 ரகத்திற்கு 8 அங்குலத்திற்கு 6 அங்குலம் (25 செ.மீக்கு 15 செ.மீ.) இடைவெளியிட்டும் நடவு செய்ய வேண்டும். வளம் குன்றிய நிலங்களில் இதை விட நெருக்கமாகவும் நடலாம். அதாவது 8 அங்குலத்திற்கு 4 அங்குலம் என்பதை 6 அங்குலத்திற்கு 4 அங்குலம் அல்லது 7 அங்குலத்திற்கு 4 அங்குலம் என்றும் நடலாம். வயதாகிய நாற்றெனில் நெருக்கமாக மேலும் ஒரு நாற்று வைத்தும் நடலாம்

''பயிர் கிளைத்தால் ஆச்சு, களை கிளைத்தால் போச்சு'' என்ற பழமொழியைஉணர்ந்து நட்ட 20-25-வது நாளில் ஒரு முறையும் நட்ட 40-45 நாளில் ஒரு முறையும், ஆக 2 முறை நல்ல முறையில் களையெடுப்பது அவசியமாகும்.



[illegible]

[illegible] 1922 [illegible]

[illegible] 253 [illegible]

[illegible] 4749 [illegible]

[illegible]

தாளடி மகசூல் பெருக மேலுரமிடுதல் மிகவும் இன்றியமையாதது. மேலுரம் இடும்போது கீழ்க்கண்ட நுட்பங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பூக்கள் யாவும் மணியாக மாறவும், நெல் மணிகளின் எடை அதிகரிக்கவும் மேலுரமிடல் அவசியம். மேலுரமாகத் தழைச் சத்தைப் பயிர் சூல்கட்டும் பருவத்தில் அதாவது தொண்டைக் கதிர் சமயத்திற்கு 15 நாட்களுக்கு முன் இட வேண்டும். ஐ.ஆர். 5 ரகத்திற்கு 20 கிலோ தழைச் சத்தையும், கோ. 25, கோ. 32, அம்பை 5 ஆகிய ரகங்களுக்கு 14 கிலோ தழைச் சத்தையும் மேலுரமாக இட வேண்டும். ஐ. ஆர். 5 ரகத்திற்கும், பொன்னி ரகத்திற்கும் நாற்று விட்ட 80--85 நாட்களில் 45 கிலோ யூரியாவையும், ஐ. ஆர். 20 ரகத்திற்கு விதைத்த 70--75 நாட்களில் 45 கிலோ யூரியாவையும், கோ. 25 ரகத்திற்கும் விதைத்த 90---100 நாளில் 31 கிலோ யூரியாவையும், கோ. 32 ரகத்திற்கு விதைத்த 75 நாளில் 31 கிலோ யூரியாவையும் அம்பை 5 ரகத்திற்கு விதைத்த 80 நாளில் 31கிலோ யூரியாவையும் இட வேண்டும். தாளடிப் பருவத்தில் பயிர் வளர்ச்சி குறைவாக இருக்குமாதலால் மேலுரம் சரியான அளவில் இடுவது மிகவும் இன்றியமையாததாகும்.

அடுத்து,

'ஏரினும் நன்றும் எருவிடுதல் இட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு'

என்ற குறள் மொழிப்படி பயிர் பாதுகாப்பு மிக மிக அவசியமாகும். விதை மூலம் பரவும் இலைப் புள்ளி நோய், 'தூர் அழுகல் நோய்' முதலியனவற்றை 'அக்ரசான்' அல்லது 'செரசான்' அல்லது 'டில்லக்ஸ் அல்லது 'காப்டான்' அல்லது 'டீ.எம்.டீ.டி.' மருந்தைக் கலந்து பின் தெளிக்கவும்.

நாற்றங்காலில் நெற் பேன், குருத்துப் பூச்சி, இலை நோய் முதலியன தாளடிப் பருவத்தில் அதிகமான சேதம் ஏற்படுத்தக்கூடும். நெற்பேனை ஒழிக்க பி.எச்.சி. 10 சத தூளை ஏக்கருக்கு 10 கிலோ அளவில் தூவ வேண்டும். நாற்றுப் பறிக்க ஒரு வாரத்திற்கு முன், பூச்சிப் பூஞ்சான மருந்துகளை ஒரு முறை தெளிக்க வேண்டும். நடவு செய்த 20 நாளில் ஒரு முறையும், தொண்டைக் கதிர் சமயம் இரண்டாவது முறையும் பூச்சிப் பூஞ்சாள மருந்துக் கலவையைத் தெளிக்க வேண்டும். மேலே சொன்ன கலவையில் பூச்சிகளை ஒழிக்க 'பாரத்தியான்' 200 மில்லி லிட்டர் அல்லது 'என்டிரின்' 400 மி. லிட்டர் அல்லது 'பெனிட்ரோத்தியான்' 250 மி.லிட்டர் அல்லது 'பாஸ்போமிடான்' 110 மி. லிட்டர் அல்லது 'எண்டோசல்பான்' 30 மி. லிட்டரைக் கைத் தெளிப்பானுக்கு 200 லிட்டர் நீரிலும், விசைத் தெளிப்பானுக்கு 40 முதல் 60 லிட்டர் நீரிலும் கலந்து தெளிக்க வேண்டும். ஐ.ஆர். 5 ரகத்திற்கு 'சீராம்' 200 கிராம் அல்லது 'டைதேன் இசட்--78' 400 கிராம் அல்லது 'சினப்' 400 கிராம் மருந்தையும். கோ. 25; கோ. 32, அம்பை 5 ரகங்களுக்கு ஒரு தாமிரப் பூசணக் கொல்லி மருந்தில் 500 கிராமையும் மேலே சொன்ன பூச்சி மருந்துக்கரைசலில் கலந்து தெளிக்க வேண்டும்.

'மாடு மேய்க்காமல் கெட்டது, பயிர் பார்க்காமல் கெட்டது' என்னும் பழமொழி, பயிரை அடிக்கடி கவனியாமல் பார்க்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. தாளடிப் பருவத்தில் அதிகப் பூச்சிகளும், நோய்களும் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் அடிக்கடிப் பயிரைப் பார்த்துப் பயிர்ப்பாதுகாப்பு முறைகளைத் தவருமல் மேற்கொள்ள வேண்டும்.

இதுகாறும் கூறப்பட்டவைகளை மனதிற் கொண்டு, தாளடிப்பட்டத்திற்குச் சிறந்த ரகத்தைத் தேர்ந்தெடுத்து, சரியான காலத்தில் நாற்றுவிட்டு, சரியான வயதில் நட்டு, தக்க அளவில் அடியுரம், மேலுரம் ஆகியவற்றை இட்டு, பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொண்டு, கட்டுக் கோப்பான சாகுபடி முறைகளைக்கையாண்டால், தாளடி மகசூல் நிச்சயம் பெருகும். எனவே, ''ரகம்-உரம்--காப்பு என்ற மும்முனையில் முன்னேற்றம் கண்டு, தாளடி விளைவினை அதிகரித்து, வருவாய் பெருக்கி, வளம் சேர்த்து, நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கி பஞ்சம் இனி எங்கும் இல்லை என்கிற நிலைக்கு நெற் குவிப்பீர்! வளம் சேர்ப்பீர்! '' என்று தஞ்சை மாவட்ட உழவர் பெரு மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

## தாய்லாந்தில் முதலைப் பண்ணை.

முதலைகள், உலகில் வாழும் உயிரினங்களில் மிக நீளமானதாகும். அவை ஏறக்குறைய 10 அடி நீளம் இருக்கும். இருபது ஆண்டுகள் வரை உயிர் வாழும். தரையிலே செல்லும்போது அவற்றின் சிறிய—வலுவற்ற கால்கள் அவற்றை விகாரமாக்கிக் காட்டும். முதலைகள் கண்களும், மூக்குத் துவாரங்களும் வெளியே தெரியும் வகையில் தண்ணீருக்குள் படுத்திருக்கும். நீளமான—வலுவான வால் முதலைக்கு உண்டு. நீந்துவதற்கு இந்த வால் மிகவும் வாய்ப்பாக உள்ளது. வலுவான மனிதனின் எலும்புகளை ஒரே அடியில் நொறுக்குகின்ற அளவுக்கு வன்மை பெற்றது இந்த வால்.

தாய்லாந்தில் சாவோபியா நதி அருகில் முதலைப்பண்ணை ஒன்று உள்ளது. ஒருநாள் குட்டியிலிருந்து 50 வயது நிறைந்த முதலைகள் வரை அங்கே காணலாம்.

1950-ஆம் ஆண்டிலே தனியார் ஒருவரால் துவக்கப்பெற்ற இந்த முதலைப் பண்ணை தற்போது சுற்றுலாப் பயணிகளை நல்ல முறையில் கவர்ந்து வருகிறது. அதுமட்டுமல்ல—உலகத்தில் காணப்படும் அபூர்வ வகை முதலை இனங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கும் மிகச் சிறந்த நிலையங்களில் தாய்லாந்துப் பண்ணையும் ஒன்ருகத் திகழ்கிறது.

தற்சமயம் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட முதலைகள் உள்ளன. ஒவ்வொரு நாள் காலையும் இந்த முதலைகளைப் பலவகை வேடிக்கைகள் செய்ய வைக்கிருர் பயிற்சியாளர்.

இன்று, உலகத்தில் பலநாடுகளில் முதலைகள் சட்டத்தின் மூலமாகவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.





# வெண்பாப் போட்டி 64

ஈற்றடி :— தெள்ளிதில் காணலாம் தேர்ந்து

உண்மை உரையென்பார்; ஓயா துழையென்பார்;
நன்மை தருஞ்செயல் நாடென்பார்—புன்மையைத்
தள்ளென்பார்; அத்தனையும் தாம்கொள்ளார்; அன்னூரைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— த. இராமலிங்கன், சின்னமணல்மேடு.

தாய்பிறந்த நன்னாடும் தாயாரும் மண்மீது
சேய்க்கெல்லாம் கண்காணும் தெய்வமே—தாய்மொழியோ
உள்ளம் வளர்க்கும் உயிராகும் இச்சிறப்பைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— இராச. உமாமஹேஸ்வரி, கணியூர்.

ஏழையின் புன்னகையில் ஈசனைக் கண்டுதமிழ்
வாழக் கலைஞர் வழிவகுத்தே—ஆளுகின்ருர்!
கள்ளமிலாப் பேரறிஞர் கண்டவழி ஈதெனவே
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— க. இரத்தினம், ஆயக்காரன்புலம்-2.

குடிசைகள் மாறியே கோபுரமாய் ஆகும்;
வடிகால்கள் ஊரை வளைக்கும்;—குடிநீராம்
வெள்ளருவி கொட்டும்; வெறுக்காதே! சாதனையைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— புலவர் இரசை அதன், தெற்குத்தெரு.

அண்ணனன்று கண்ட அருங்கனவு தம்பியரால்
வண்ண உருப்பெறும்நல் மாட்சியெலாம்—பெண்ணேநீ
உள்ளத்தே காய்தல் உவத்தல் அகற்றுவையேல்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— பகவதி அப்பன் பி.எஸ்ஸி., சென்னை-5.

அன்பில், அரவணைப்பில், ஆர்த்தெழும் பாசத்தில்;
இன்ப இணைப்பில், எழும்உணர்வில்—துன்பத்தில்
துள்ளி விரைந்துதவும் தூய்மையில், மெய்நட்பைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— க. இளந்திரையன், வள்ளியூர்.

*பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு. த. இராமலிங்கன், சின்ன மணல்மேடு,
கந்தகுமாரன் அஞ்சல், (வழி) இலால்பேட்டை,
சிதம்பரம் வட்டம், (தென்னார்க்காடு மாவட்டம்)

தாழ்ந்தோரும் வாழ்ந்திடவே சட்டங்கள், கீழ்நிலையில்
பாழ்பட்டு நின்ருேர்க்கும் பல்நலங்கள்—வாழ்வளித்துக்
கள்ளமில் தொண்டாற்றிக் காக்கும் தமிழரசைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— தவமுத்து. அண்ணுமலை, தவசி.

வள்ளுவத்துக் கீடான வாய்மொழியைப் பாரகத்தில்
வள்ளுவரை யன்றியிங்கே யார்தந்தார்—உள்ளத்தில்
கள்ளமிலா தாராய்ந்தால் வள்ளுவருக் கீடில்லை!
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— சிவ. கிருட்டிணன், கணியூர்.

கல்வி, நறுங்கேள்வி, கட்டுப்பா டுற்றமனம்
வல்ல அறிஞர்தம் வாய்ச்சொல்லில்—நல்லரிய
உள்ளச் சிறப்பை, ஒளிகாட்டும் வாய்மையைத்
தெள்ளிதின் காணலாம் தேர்ந்து.

— கமலமணி, தும்மனட்டி.

ஆயிரந்தான் பூசை அகமுருகச் செய்திடினும்
கோயில் பலசென்று கும்பிடினும்—தாயிடந்தான்
உள்ளம் சரணடையு(ம்) உண்மையினைக் கண்டறிவீர்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— முருங்கை. சோமு, முருங்கப்பட்டி.

மாற்ருரும் போற்றி மதிக்கின்ற மாண்பைநாம்
ஏற்ரு விளக்காக என்றுமே—தோற்றுகிற
கள்ளமின்றித் தூங்கும் கடற்கரையில் அண்ணனிடம்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— புலவர் வெ. குமாரசாமி, கோரிக்கடவு.

மக்கள் நலங்கருதும் மாண்புடையோர் ஆட்சியிலே
மிக்கபல நன்மையெலாம் மேவுதலால்—மக்கள்தம்
உள்ளந் தனிலே உறைந்திடுவார் என்பதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— சு. தங்கப்பன், சின்கோனு.

[illegible]



## இந்த இதழுடன் இலவச இணைப்பு
# கருத்தோவியம்

[illegible]

# வெண்பாப் போட்டி

இந்திய மாநிலங்கள் எல்லாவற் றுள்ளும்நம்
செந்தமிழ் நாட்டரசார் செய்துவரும்—செந்நெல்லின்
கொள்முதலைக் கூட்டுதலில் கொண்டுள்ள ஆர்வத்தைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

தேடிவைத்த செல்வமா ? செல்லக் குழந்தைகளா ?
கேடகற்றும் நல்லறமா ? கீர்த்திதரும்—பாடிவற்றுள்
கல்வெட்டாய் நாளெல்லாம் காடுசென்றும் நிற்பதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—பு. புனிதா, ஓலைப்பாடி.

பெற்ற வளத்தைப் பெரிதென் றுணராமல்
கற்றவர்போல் பேசித் திரிகின்றார்—மற்றிவர்கள்
பள்ளமும் மேடும் பகுத்தறிவால் காணாரோ?
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—து. திருநாவுக்கரசு, எம். ஏ., அரியலூர்.

பித்தம், கிறுகிறுப்பு, தொண்டை கரகரப்பு,
ஒத்த புளியேப்பம் உண்டானால்—சுத்தம்தான்
உள்ள 'இஞ் சிமுரப்பா' உட்கொண்டால் உற்றகுணம்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—சாணுப்பாண்டி, சுந்தரராசபுரம்.

திட்டக் குழுவமைத்துத் தீட்டும்நல் திட்டத்தால்
மட்டின்றி வாழ்வு மலருமாம்—சட்டமுடன்
மெள்ளவே முன்னேற்றம் மேதினியில் நாமடைதல்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—ப. சக்திவேலன், திருச்சி-4.

துன்பம் வரினும் துணிவோடும் பண்போடும்
இன்பம் பயக்கும் வினையியற்றி—என்பெனினும்
தெள்ளுதமிழ்க் காகத் தியாகம் புரிந்தவரைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—புலவர் எழில்மாறன், ஆயக்குடி.

புத்தன் மறுபிறப்பாய்ப், பொய்வேடப் புல்லரிங்கே
நித்தம் பிறர்க்குரைப்பார் நீதிபல—அத்தகையோர்
உள்ளமதில் பூவா உதட்டிடுக்குப் புன்மலரைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—முத்தமிழ்முத்தன், திமிரி.

கோடிக் கணக்கில் குவியும் எழுத்தெல்லாம்
நாடியே ஆராய்ந்தால் ந லதெனத்—தேடி, அதில்
கொள்ளும் படைப்புக்கள் கொஞ்சமே, நீயிதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—சு. கிருஷ்ணன், திருப்பூர்.

சாதி யொழிந்து சமதர்ம மும்தழைத்து
நீதி நிலைத்து நிறைகல்வி—போதவிழ்ந்தால்
துள்ளிடு மின்பச் சுவையூறும் நல்வாழ்வைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— சா. துரைராஜ், பெரியதச்சூர்.

ஏழைதுயர் நீங்கி ஏற்றம் பலபெற்று
வாழைபோல் என்றும் வளர்ந்துய்யத்—தோழியே!
துள்ளி எழுந்து துயர்களைவான் தொண்டுள்ளத்தைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— நா. ரெங்கராசு, பொன்மலை.

செல்வம் மிகவுடையார் திண்டோள் மறக்குலத்தோர்
கல்வி அறிவில் கரைகண்ட நல்லோர்கள்
எல்லோருள் நாம்சிறக்க யார்வேண்டும் நாட்டுக்குத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

— புலவர் மா. புகழேந்தி, ஓலைப்பாடி.

பண்பாடு, காதல், பகைநடுங்கும் ஒள்வீரம்,
நண்பாடல், நாவன்மை, நாட்டுவளம்,—விண்பாடும்
வள்ளன்மை, ஆட்சி, தமிழ் எல்லாம் இலக்கியத்துள்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—மா. சு. ஜெயராமன், ஓலைப்பாடி.

கண்ணிலார் கண்பெற்றார் ; காலமெலாம் வாழ்ந்திட
மண்பெற்றார் நல்லுழவர் ; மாண்படைந்தார்—மண்ணகத்தார்
தெள்ளுதமிழ் ஆட்சியின் சீரியஇத் தொண்டுகளைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனா.

கொள்ளை யடித்தல் கொடுமை ; நிலைக்கேற்ப
அள்ளிக் கொடுத்தல் அறமாமே—உள்ளத்தைக்
கொள்ளைகொண் டின்புறுத்தல் கோடிபயன் ; வள்ளுவத்தால்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

ஆடிமுன் வைத்த அணிபொருள் தன்னையும்
கேடின்றிக் காட்டுமே கேண்மையுடன்—சேடியே !
உள்ளத்தின் எண்ணத்தை உள்ளவா(று) மென்முகத்தில்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—ப. குப்புசாமி, பொன்மலை.

ஓயா துழைப்போரின் ஊதியத்தைச் சீராக்கி
ஈயா(து) இருநிதியைத் தாம்சேர்க்கும்—தீயோரின்
கள்ளத் தனம்ஒழியும் காலம் கடுகிவரும்
தெள்ளிதிற் காணலாம் தேர்ந்து.

—எம். ஆர். சந்திரசேகரன், குட்டிப்பாளையம்.



# வெண்பாப் போட்டி

பண்பை மொழிவளத்தைப் பாவாக்கி யாப்படக்கி
விண்மீன்கள் மத்தியிலே வெண்மதியாய்—வெண்பாவை
வல்லோர் அவைக்கனுப்பின் வாழ்த்துபெறும் நற்பரிசைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—கு. பெரியசாமி பி. எஸ்ஸி., ஓலைப்பாடி.

நல்லரசார் நற்பணியை நல்லோர்கள் போற்றுவதும்
புல்லோர்கள் தூற்றுவதும் புதுமையல்ல!—எல்லாரும்
உள்ளம் நடுநிலையாய் ஊன்றிக் கவனித்தால்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—சாமி. அரங்கநாதன், மண்டகொளத்தூர்.

ஒருவ னொருத்தி யுளங்கலந் தொன்றி
இருவரும் வாழ்வி னினிமை—தருமழலைச்
செல்வ மிரண்டொடு நின்றார் சிறப்பினைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—அ. மோகனன், வங்கனூர்.

முத்தாய் மணியாய் முதிர்ந்த கதிர்க்கற்றைக்
கொத்தாய்த் தமிழ்மண்ணைக் கும்பிடுமோர்—சித்திரத்தில்
பள்ளத்தை மேவும் பசுமைப் புரட்சியினைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—கி. காளியப்பன் பி.ஏ., கோட்டையூர்.

எத்தனைதான் நூல்கள் எடுத்துப் படித்தாலும்
அத்தனைக்கும் மேலாய் அறநூலாய்—மெத்தபுகழ்
வள்ளுவன் செய்குறளே வாழ்க்கைவழி காட்டியெனத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—கோ. பு. பார்வதி, புதுவை-4.

உள்ளங் களிக்க உரைக்குந் தமிழ்நூல்கள்
அள்ளிக் கொடுக்கும் அறிவுரைகள்—வெள்ளமென
உள்ளத்தில் பண்டே உயர்ந்த தமிழ்ப்பண்பைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—வெண்ணெய்வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறமின்றி
அஞ்சி அலைக்கழியும் அவனியோர்—விஞ்சாது
வள்ளுவர் முப்பாலில் வாழும் வகைதன்னைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—பி. முருகேசன், காட்டுமன்னார்கோவில்.

வள்ளுவரின் வாயுறைபோல் வையகத்தில் எங்கணுமே
எள்ளளவும் ஏதமிலா ஏடுளதோ!—உள்ளபடி
விள்ளரிய தண்டமிழ்ப்பா வேறென்பர் யாரிங்கு?
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—தமிழ்மணி, வே. கள்ளிப்பாளையம்.

நாளும் நமக்காக நல்லெண்ணங் கொண்டிங்கே
ஆளும் அரசினை ஆதரிப்போம்—மூளுகின்ற
கள்ளப் பகையோட்டிக் காலமெல்லாம் வெற்றிதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—இராம. மறைமுதல்வன், வடமாதிமங்கலம்.

முள்ளார்ந்த கொள்கை முரணென்று மாநிலக்
கள்ளார்ந்த தன்னாட்சி தள்ளாதீர்—உள்ளாழ்ந்தால்,
வெள்ளை மலைபோல் விளங்கும் இதன்பொருளைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—மா. சே. இராசு, திருப்பூர்.

ஒன்றின்பம், மீறின் இரண்டாம், அதன்பின்னே
என்றென்றும் மூன்றை எதிர்நோக்கோம்—நன்றுய்ந்த
ஒள்ளிய நுண்பொருள்போ லோங்கும் சிறுகுடும்பம்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—தங்க அருண்மொழி, வே. கள்ளிப்பாளையம்.

வஞ்சமுடன் செயலாற்றி வரம்கேட்டால் பயனில்லை
அஞ்சிப் பிழைநீக்கி ஆராய்ந்தால்—நெஞ்சத்தின்
உள்ளிருந்து பேசும் உருவமிலா ஆண்டவனைத்
தெள்ளிதிற் காணலாம் தேர்ந்து.

—க. பாலசுப்பிரமணியன், சென்னை-33.

வாய்மை கடைப்பிடித்து, வண்மையு டனொழுகித்
தூய்மைமிகு தொண்டைத் தொடர்ந்தியற்றி,
—ஆய்ந்தெதையும்
கொள்ளுந் தகையான் குறைவிலா வாழ்வதனைத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—புலவர் சு. முத்துக்கருப்பன், பேரையூர்.

நீதிக்குப் போராடி நேர்மைக்கு வாதாடி
பாதிக்கு மேலவர்தான் போய்விட்டார்—மீதியுள்ளோர்
எள்ளி நகையாடி என்னதான் சாதித்தார்!
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—ப. வேங்கடகிருஷ்ணன் எம். ஏ. பி. டி., நாமக்கல்.

வறுமையைப் பேயென்றே வல்லோரும் சாடிச்
சிறுமையுற ஏசுதலு மேனோ?—வறுமையே
கள்ளமிலா நட்புறவைக் காட்டுங் கருவியெனத்
தெள்ளிதில் காணலாம் தேர்ந்து.

—கோ. மா. இராசகோபாலன், சென்னை-23.

ஒக்கும் இந்த அதிகார உலகை
கட்டியெழுப்புவதின் வாயிலாக!
அதற்குத் தேர்தலையின்ன
தோற் உடலை நெருக்கும்
கொடுமைகளைப் பிடிப்பதில்,
மக்களைப் பற்றிக் கவலைப்படாமல்
தங்கள் நாற்காலி நிலைபெறவே
உழைப்பைப் பெறத் தக்க
கொள்கையில்லாதவர்கள், கொள்கைக்
கொள்கைகளைப் பிடிப்பதில்,
மதம் அரசியலில் கலந்தும்
பெருக்கும் நாட்டை அரசியலுக்குள்
இடம் தேவைப் பெண்களுக்குத்தான்
கட்டுச் சாதிப்புரியில் நிறையவில்
தட்டிப் பேசுவோர் பேரவை உறுப்பினர்-
-கள் அழுத்தியும்மட்டில், அந்த
அடிப்படையில் தான் திட்டமிட்ட
முறைகளால் நிறைவேற்றுவது.
இன்றுள்ள நிலையில் இந்திய
பொதுவுடைமைச் சிந்தனைத்
தடுத்து நிறுத்தி, விட வழி உண்டு
வேலையின்மைத் திண்டாட்டம்
போன்றவை தாம் இன்றும்
மக்கள் வாழ்வில் பெரிது
ஒழுங்குபடுத்த நாளை அரசு, மக்கள்

அரசு எதேச்சை உரிய படைப்புத்-
-தொகையின் பக்கம் நிற்கவே
மாட்டார்கள். இந்த நிலைப்பாடு
முடிந்தவுடன், அரசு மட்டுமல்ல
நாமும் மக்களும் தங்கள்
அத்துமீறலைத் தடுக்க
வேண்டும். "அதிகாரத்தை,
சட்டத்தை, மனித நேயத்
தை!" என்பது விதிமுறை—
அது. மக்களுக்குச் செய்யப்
படும் மாபெரும் துரோகமாகும்.
இவைகளெல்லாம் உணர்ந்து
செயலாற்ற வேண்டும்.
உழைப்பவர்களைத் திரட்ட
வேண்டும். தொழிலாளர்களை
ஒன்று திரட்டுவதின் மூலம் தான்
முடிக்க வேண்டும்.
அதற்குத்தான் பல
அவைகள் பெருகிட, பரவிட
நாம் அனைவரும் பாடுபட
இப்போதாவது சிந்தித்துச்
செயல்பட முன்வருவோம்
நாடு!

விடுதலை, விழாக்
கோலத்தோடு முடிந்து
விடவில்லை,
வேதனை தீர,
வாட்டம் நீங்க,
வேலையின்மைத்
திண்டாட்டம் விலக,
வறுமை அகற்றிட,
விலைவாசி ஏற்றம்
தடுத்திட,
இவைகளுக்குப் பாடுபடுவோம்
என்று உறுதி எடுத்துக்
கொள்வோமாக!
தொண்டு உள்ளம் இவைகளைக்
கொள்கையாக ஏற்று அவைகளைத்
-தம் உடைமையாக்கப் பாடுபட்ட
தியாகிகள் அனைவருக்கும்
நம் வீர வணக்கத்தை
இந்நாளில் தெரிவித்துக்
கொள்வோமாக!
இந்தியாவில் திட்டமிட்ட
அறிவுப் பூர்வ இசை
இந்திய நீதியில் நடைமுறைப்

படுத்தப்பட வேண்டிய
கொள்கைகளை, அது போலவே
சாதியமுறையின் புனிதக்
கொள்கையால் மதவிலக்குக்
கொள்கையும் அரசியலிந்திய
நீதியில் நடைமுறைப்
படுத்த வேண்டிய தொன்றாகும்.
அதன் எண்ணத்தான்
தமிழகம் திராவிடப் பகுத்
தறிவாளர் சமூகத்தில்
இணைந்தபோது, மதவிலக்கை
முழுமையாக, மதவிலக்
கை அமைதியைக் காக்கும்
என்னுடைய இந்த அரசா
ங்கத்தார் எடுத்துக்கொள்ளப்
பட்டது.
கொண்டு விட்டதும்
நடைமுறைப்படுத்தியுள்ள
கொண்டுதப்படாத மனுவாக
தமிழரசு எதனால்
இவ்வளவு முடியும்? என்று
நான் கேட்கிறேன்,





நாட்டின்
முன்னேற்றத்திலும்
வளமையிலும்
எமது பங்கு



TANSI
டான்ஸி



தொழில் நுட்பத் துறைகளில் உங்கள்
தேவைகளை பணிவுடன் பூர்த்தி செய்கிறது

- மலிவானது
- உத்திரவாதமானது
- வார்ப்பட வேலைகளுக்கும், கட்டுமானகட்டமைப்புகளுக்கும். கருவிமற்றும் உருமாற்றத்திற்கும் மர சாமான்களுக்கும் "டான்ஸி"

விவரங்களுக்கு அணுகவும் : தொழிற் பட்டறைகளுடன் தொடர்பு கொள்ளுங்கள்

நிருவாக இயக்குனர்
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
"அருள்மனை", 26, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600014




# சென்னையில் அண்ணல் விழா!

சி.என். கிருஷ்ணபாரதி

தமிழ் மகன் என்று தன்னை அழைத்துக் கொள்ளுவதில் பெருமைப்பட்டுக் கொண்ட தன்னிகரில்லாத் தலைவர் காந்தியடிகளின் பிறந்தநாளைத் தமிழகம் சீரோடும் சிறப்போடும் கொண்டாடியது.

காந்தியடிகளின் வாழ்வில் தமிழர்கள் மாபெரும் மாற்றங்களைச் செய்துள்ளனர். தென்னாப்பிரிக்காவில் தனது முதலாளியால் தாக்கப்பட்டு இரத்தம் வழிய நின்ற பால சுந்தரம் என்ற தமிழன் வக்கீல் மோகனதாஸ்காந்திக்கு தொழிலாளர் படும் பாட்டினை எடுத்துக் காட்டினான். ஏன்? காந்தியடிகளைப் பொது வாழ்விற்கு ஈர்த்ததே இந்த நிகழ்ச்சி தான். தென்னாப்பிரிக்காவில் தமிழர்களோடு தமிழராக வாழ்ந்தவர் காந்தியடிகள். தன்னலமற்ற தியாகத்தின் பெருமையினை அவருள்ளத்தில் ஆழப் பதியச் செய்தவர்கள் வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி போன்றவர்களாவார்கள். அவர்களது தியாகத்திற்கு மதிப்பளிக்கும் முறையில் தமிழ் கற்கத் தொடங்கிய அண்ணல் தமிழின் இனிமையிலும் செம்மையிலும் தம்மையே மறந்ததாகக் கூறுகிறார்.

எளிய உடையாம் வேட்டியும், மேல் துண்டும் அணிவது என்று முடிவு மேற்கொண்டதும் தமிழகத்தில்தான். ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் போர் முழக்கமிடச் செய்து சத்தியாக்

அன்றியும்
எதிரி பொம்மை அமைக்க
வேண்டும் என்று கேட்டதின்
அடிப்படையில் தானே தவிர
வேறில்லை. மதவினத்தை
புகுத்திவைப்பதற்கல்ல;
ரத்து செய்யவில்லை என்பதற்கு
எடுத்துக் காட்டாகத்தான்
முதற்கட்டமாக கல்லூரிக்கடை
கள் மூட அனுப்பிக்கப்
பட்டது. அடுத்த கட்டமாக
சாராயக் கடைகளும்
அடுத்தாண்டு
மூடப்படும் என்பதை இந்த
வெள்ளிவிழா நினைவு நாளில்
மகிழ்வுடன் அறிவித்திடுகிறேன்.
இந்தியாவே முழுமையும்
மது விலக்கு செயல்
படுத்தப்பட எல்லாக் கட்சி
களும் ஆவன செய்திட
வேண்டும்

'ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் காண்போம்'

என்ற அண்ணாவின் பொன்
மொழிக்கேற்ப சாதனை வயல்களில்
நல்ல திட்டம் அறுவடைப்
பொறுத்தவரையில், அமைத்து
உள்ளோம். மேலும் இந்தப்
பணியில் தி. பேட்டை நாம்
வெற்றி கண்டு, அரசியல்
பாரம்பரியமும் தியாகவரலா
றும், கொள்கைப்பிடிப்பும்
கொண்ட கட்சியினர்
அனைவரும், ஒன்றுபட்டு
உழைத்து - பெரும் சாதனைச்
சேவைப் புகழ் பெறுவோம்
என்ற உறுதியுடன்
தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்
கும் விடுதலை நாள்
வாழ்த்துக்கள் வழங்குகிறேன்.

அன்பு
[signature]
15/8/73.

# கதவு

மா.முத்து (ஓவியர்)



கிரீச்......கி..ரீ. .ச்... யசோதரா சற்றுத் திரும்பிப் படுத்தாள். ஏன்? திருமணமான பிறகும், குழந்தைக்கு ஓராண்டு ஆனபிறகும், அந்த விதமான ஒலியை அவள் கேட்டதே இல்லை. அதுதான் அவள் கேட்ட முதல் ஒலி. ஆம். அதுவே தான் கடைசி ஒலியும் ஆகும்.

கதவு திறக்கப்பட்டது.

அந்த உருவம் வெளியேறியது, மீண்டும் கதவு லேசான இடைவெளியுடன் நின்றது. இடைவெளிக்குப்பின், அந்தக் கரங்கள் அதன் மீது பட்டதே இல்லை.

உப்பரிகையின் மீது, மார்பில் குழந்தையை அணைத்தவாறு கீழே உற்று நோக்குவதற்கும் ஓரிரு நட்சத்திரங்கள் யசோதாவைப் பார்த்துக் கலங்காதே என்று கூறுவதற்கும் சரியாக இருந்தது. கீழே நோக்கினாள். இருட்டில் ஓர் உருவம். ஆம். உருவமல்ல அவளின் உயிர். அவளது செல்வம் அவளைவிட்டு விட்டு வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது.... திரும்பவேயில்லை.

சித்தார்த்தர் அன்றிலிருந்து புத்தரானார். ஆம். கோடிக் கணக்கான மக்களின் இருட்டுக் கதவுகளையும், இதயக் கதவுகளையும் திறக்கக் காட்டிற்குச் சென்றார்......தவம் செய்யத் தொடங்கினார்.

கதவு படாரென்று திறக்கப்பட்டது. மணியோசைகள் எத்தனை வேகம் என்பதை அந்த ஆலயத்திற்குள் இருந்தவர்களின் காதுகளைப் பொத்தச் செய்தது. ஏன், ஆலயத்தையே ,ஒரு குலுக்குக் குலுக்கியது. உள்ளிருந்த புரோகிதர்கள் அனைவரும் கதவு திறக்கப்பட்டதையே நோக்கினர். ஓமகுண்டம் புகை மயமாகக் காட்சியளித்தது. புகை மண்டலத்திலிருந்து மெல்லிய உருவம் அசைந்து வந்தது. ஆம். புத்தர் பெருமான் அங்குள்ளவர்களையும் என்ன நடக்கப் போகிறது என்பதையும் உற்று நோக்கினார். அவரது பார்வையில் அங்குள்ளோர் அனைவருமே திகைத்து நின்றனர். கொழுந்து விட்டெரியும் ஓமகுண்டத்தின் யாகத்தை விட்டு எழுந்து நின்றனர். கால்கள் அவர்களை அறியாமலேயே நின்றது.

அனைவரும் அவ்வுருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். மே....மே....ஒரு குட்டியின் கதறல். கொடிக் கம்பத்தில் கட்டப்பட்டுக் கழுத்தில் மாலையுடன் காட்சியளித்த ஆட்டுக் குட்டியை எடுத்துத் தன் தோள்மீது போட்டுக் கொண்டார். ஆட்டுக்குட்டி திருதிருவென விழித்தது. அன்பு, சாந்தம், அமைதி கூரிய கண்கள் எதையோ தேடிக் கொண்டிருந்தன. மின்னல் வேகத்தில் பாய்ந்து பக்கத்திலுள்ள கொடிய வாளினை எடுத்தார். ஆட்டுக் குட்டியை மார்போடு அணைத்துக்கொண்டு

''ஜீவகாருண்யமற்ற இக்கொடிய செயல்கள் நிறுத்தப்படவேண்டும்.'' என்று கூறினார். எல்லாரும் திகைத்தனர். உயிர்களைப் பறிக்க நமக்கு அதிகாரமில்லை. உயிர் வாழ, உயிரைப் பலியிடுவது பாபம் எனக் கூறி வெளியேறினார்.

அதன்பின் அந்தக் கதவுகள், மூடப்படவேயில்லை. ஆம். அங்கு, அதன்பிறகு ஆண்டவனுல் படைக்கப்பட்ட உயிர்கள் வரவுமில்லை. பலியிடப்படவுமில்லை.

கதவு தட்டப்படுகிறது. இரண்டு தடவை தட்டும் சத்தம் கேட்டதும் யாரது என்ற உரத்த குரல். ஆம். அது ஆணின்குரல் தான் என்ற உணர்வு. குரல் இவ்வளவு சீக்கிரமாக வருகிறதே, யாராக இருக்கும். தட்டிய கைகள் அப்படியே மெய்மறந்து நிற்கிறது. மீண்டும் யாரது என்ற அதிகார தோரணையுடன் கேட்டதும் உருவம் வேகமாக ஓடுவதற்கும் கதவின் தாழ்ப்பாளைத் திறந்து பார்ப்பதற்கும் சரியாக இருந்தது.... அந்தத் தெருவின் கதவுகள் அனைத்துமே தட்டப்பட்டது. எல்லாரும் யார்? யார்? என்று வியந்தும் பயந்தும் போயினர். காலையில் அரசரிடம் போய்க் கூறலாம் என்று கதவைத் தாளிட்டனர்.

மறுநாள் வாயிற் கதவுகள் திறக்கப்பட்டது. அத்தெருவின் மக்கள் அரச மரியாதையுடன் அரசரிடம் முறையிட்டார்கள். என்ன வேண்டும் என்றார் மன்னர்.

அரசே நான் யாத்திரை சென்றுவிட்டு நேற்றுப்பகல் தான் திரும்பி வீடு வந்தேன்.

கிரகப் பாதையினை மேற்கொள்ள முடிவேற்றதும் சென்னை நகரில் தான்! இவையனைத்திற்கும் மேலாக, அவரது கதர்க் கொள்கைக்கு உருவமளித்துச் செயலாற்றிய முதல் மாநிலமும் தமிழகந்தான்!

இத்தகைய பெருஞ்சிறப்புக்களுடன் காந்தியடிகளின் வாழ்வோடு இணைந்த தமிழகம் காந்தியடிகளுக்கு அஞ்சலி செலுத்துவதிலும் பின் தங்கவில்லை. நாடு போற்றும் வகையில் காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவினை நடத்தியது தமிழகம்.

அண்ணலின் நினைவிற்கு நிலையான காணிக்கையாக அமைச்சர்களும், நீதிபதிகளும் வாழ்ந்த பெரும் இல்லமொன்றினைக் 'காந்தி இல்லமாக' மாற்றி அவரது வாழ்வினையும் கொள்கையினையும் பரப்பி வருகிறோம். நூற்றாண்டு நிகழ்ச்சிகளோடு நின்றுவிடாது ஆண்டுதோறும் மிகப் பெரும் அளவில் நாட்டிலுள்ள பேரறிஞர்கள், தலைவர்கள் ஆகியோரை அழைத்து காந்தியடிகளுக்கு நினைவஞ்சலி செலுத்தி வருகிறோம்.

வேறு எல்லா விழாக்களையும் விஞ்சிடும் வகையில் இவ்விழா தமிழகத்தில் நடப்பது தமிழர் தம் கடமையுணர்விற்குச் சான்றாகும்.

காந்தியடிகள் விழா இவ்வாண்டு அக்டோபர்த் திங்கள் அதிகாலையில் கடற்கரையில் கம்பீரமான காந்தியடிகளின் சிலைக்கு முன்னர் துவங்கியது. கல்வியமைச்சர் நாவலர் முதல்வரின் சார்பாகவும், தமிழ் மக்களின் சார்பாகவும் அழகியதொரு மலர் மாலையினை அண்ணலின் சிலைக்கு அணிவித்தார். அண்ணலுக்கு அஞ்சலியும், உழைப்பின் உயர்வை நினைவூட்டும் நூற்பு வேள்வியும் அவர் தம் பாதங்களுக்குக் கீழ் துவங்கின.

காலை ஏழு மணிக்கு முன்னர் அலைகளின் ஓசையைத் தவிர மற்ற ஒலியைக் காணாத கடற்கரை, அன்று இளைஞர், மகளிர் மாணவர்கள், பல்வேறு சங்கத்தினைச் சார்ந்தவர்கள் ஆகியோர் வந்து சேரும் பேரொலியினைப் பெற்றுத் திகழ்ந்தது. தமிழக ஆளுநரது துணைவியார் திருமதி மது பென் ஷா அம்மையார் வருகை தந்து அண்ணலுக்குப் பெண் குலத்தின் சார்பாக மலர் மாலை அணிவித்தார். சிறிது நேரத்தில் அணி வகுத்தது பெரும் படை!

பெருமளவில் வந்து கூடிய மக்கட் கூட்டம் கட்டுப்பாட்டுடன் அணி வகுத்து நின்றது. அப் பெரும் அணிக்குப் பின்னர் புன்னகை பூத்த மோகன காந்தி சிலையுருவில் அமர்ந்திருக்க இன்னிசையுடன் அனைவரும் புறப்பட ஆயத்தமாயினர். தேசிய மாணவர் படையினைச் சார்ந்த மாணவி ஏந்தி வந்த பந்தமொன்றிற்கு ஒளியூட்டி வழியனுப்பி வைத்தார் திருமதி மது பென் ஷா அம்மையார். எழுச்சியும், மாட்சியும் கொண்ட அவ்வொளி ஊர்வலம் கடற்கரை வழியாக சாந்தோம் வரை சென்று பின்னர் மயிலை வழியாக அண்ணா சாலையில் தேனாம்பேட்டை, சைதாப்பேட்டை ஆகிய இடங்களைக் கடந்து இரண்டரை மணி நேரத்திற்குப் பின்னர் கிண்டியில் எழிலுற நிற்கும் காந்தி மண்டபத்தினை அடைந்தது. அவ்வொளியினை ஏற்று விழாவில் ஒளியேற்றும் சிறப்பினை நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் செய்தார்கள். காந்தீய நெறியில் தமிழகம் நடைபோட இளைஞர்களின் பங்கினை எடுத்துக் காட்டினார் பேராசிரியர்.

இதே நேரத்தில் அரசினர் தோட்டத்தில் அமைந்த காந்தி இல்லத்தில் நூற்பு வேள்வியும், வழிபாடும் துவங்கின. குறளகத்தின் முன்னர் நடமாடும் கதர் விற்பனைத் துறையினை அமைச்சர் மாண்புமிகு கண்ணப்பன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

நாமகிரிப்பேட்டை கிருட்டிணனின் தென்னகத்துத் தொல்லிசையாம் நாதசுரம் முழங்க மாலை நிகழ்ச்சிகள் துவங்கின.

''தமிழகம் காந்தீயத் தத்துவத்தைக் கடைப்பிடித்து, அதன் வழியிலேயே சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய பிரச்சினைகளை அணுகுகின்றது. இவ் விழாவினைச் சிறப்பான முறையில் கொண்டாட வேண்டுமென்று அரசும், மக்களும், எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் தங்களுக்குள்ளாகவே போட்டி போட்டுக்கொண்டு செயல்பட முன் வருவது என்னைப் பெரிதும் கவர்கின்றது. காந்தியடிகள் போதித்த தத்துவத்தின் மீது அவர்கள் கொண்டிருக்கும் அசையாத நம்பிக்கையையே இது எடுத்துக் காட்டுகின்றது.

''காந்திஜியின் தத்துவத்தின்பால் காட்டுகின்ற இத்தகைய பெரிய மதிப்பு மக்களுடைய வாழ்க்கையில் ஒரு புது சகாப்தத்தை உருவாக்கிடும் என நான் நம்புகிறேன். பிரச்சினைகளை நேர்மையுடன் அணுகும் ஆவலும், மக்களிடம் தொண்டுபுரிந்து, சக ஊழியர்களிடமிருந்து பொறுப்பினைப் பெற்று பணியாற்றும் திறனும் படைத்தவர்களே அத்தகைய நிலையில் தலைமைப் பொறுப்பேற்க இயலும்.

''காந்தி மண்டபம் முழுவதும் உற்சாகக் குரல் ஒலிக்கிறது. காந்தியின் தத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்; அதைப் புகழ்ந்து பேச வேண்டும்; நடைமுறைப் படுத்திக் காட்ட வேண்டும்; நமது நாட்டின் பிரச்சினைகளுக்குக் காந்தியடிகள் காட்டிய வழியிலேயே தீர்வுகாண வேண்டும் என்று விரும்புகின்ற மக்களின் ஆர்வத்தையே இக்குரல் எதிரொலித்தது.

''காந்தியடிகள் விளக்கிவந்த 'வாய்மை நெறி முறையை' நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். நேர்மையான வழியில் இலக்கினை அடையவேண்டுமென்று காந்தியடிகள் வற்புறுத்தினார். நம் நோக்கமும் அணுகும் முறையும்





தூய்மையானதாக இருக்க வேண்டும் என்பதற்கு முக்கிய இடமளித்தார்.

''வாய்மை, தூய வழி முறையினை நல்கும். செய்தி—தொடர்பு வசதிகளையுடைய இக்காலத்தில், மக்கள் அவைகளால் தவறான பாதையில் வழி நடத்திச் செல்லப்படாமல் கண்காணித்துக் கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. செய்தி—தொடர்பு வசதிகளை மக்களுக்கு உண்மை நிலைகளை உணர்த்தப் பயன்படுமாறு செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் சுய நல அரசியல் வாதிகளால் மக்கள் ஏமாற்றப் பட மாட்டார்கள். செய்தித்தாள்கள், திரைப்படம், சுவரொட்டி, புத்தகம், ஆகிய சாதனங்களும் கட்டுரை எழுத்தாளர்களும், தலைவர்கள், அரசியல்வாதிகள், மேடைப் பேச்சாளர் ஆகிய அனைவரும் மக்கள் உண்மை நிலையினைப் புரிந்து கொள்ள நம்பிக்கையான தகவல்களை அளிக்க வேண்டும்.

''ஒவ்வொருவருக்கும் சம சந்தர்ப்பத்தைத் தருவது சோஷலிசம். ''தனிப்பட்டவரின் சக்தியைவிடக் கூட்டுச் சக்தியே சிறந்தது'' என்ற தத்துவத்தைச் சோஷலிசம் ஏற்றுக் கொள்கிறது. வலிமையுடைய பெரிய தலைவர்களும் ஒரு சில செல்வந்தர்களும் ஒரு நாட்டில் இருந்த போதிலும் பெரிய அடித்தளமும், பரவி விரிந்து வரும் கூட்டு வசதிகளும் இருந்தாலொழிய எந்த ஒரு நாடும் உலகில் வெற்றிகரமாகப் போட்டியிட்டு வளர இயலாது. உழைக்காமல், சுக



வாழ்க்கை வாழ்ந்த செலவாகளின் காலம் கடந்துவிட்டது. செல்வம் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பது மக்களாட்சிக்கு ஆபத்தாகும். இத்தகைய நிலையைப் போக்கத் திட்டமிடுதல், கீழ்த் தளத்தில் ஆரம்பமாக வேண்டும். அடித்தளத்திலுள்ளவர்கட்கு முதலிடம் அளிக்க வேண்டும். ஒவ்வொரு விழியும் சிந்தும் கண்ணீர் துடைக்கப்படவேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார்கள்.

''நாம் மீண்டும் காந்தியடிகளிடம் செல்வோம்; அவரை இளைய தலைமுறையினரிடம் அறிமுகப் படுத்துவோம், அமைதியும், வள வாழ்வும் பெற அதுவே வழியாகும்'' என ஆளுநர் தம் தலைமையுரையில் கூறி அனைவரையும் வரவேற்றார். மத்திய அரசின் நிதியமைச்சர் திரு. சவான் விழாவினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் ''தாழ்வுற்று, வறுமை மிஞ்சிச் செத்தவர்கள் போலிருந்த மனித சமுதாயத்திற்கு உயிரும், அச்சமின்மையும் ஊட்டியவர் காந்தியடிகள். வாழ்வில் கொள்கையோடும், இலட்சியத்தோடும் வாழ வேண்டுமென்றும் சூழ்நிலையினை உருவாக்கிய பெருமையும் அண்ணலையே சாரும். மக்களுக்கு நாட்டுப் பற்றினை ஏற்படுத்தி உரிமையினை அளித்தவர் காந்தியடிகள். அவரது வாய்மை நெறி இந்தியாவிற்கு மட்டுமின்றி மனித குல முழுவதிற்கும் பொதுவானது.

''நாம் பல இன்னல்களுக்கும் ஆளாயிருக்கிறோம், என்றாலும் அவற்றை வெற்றி கொள்ளும் உறுதியினை அவர் அளித்துள்ளார். நமது நாட்டின் இரு பெரும் பிரச்சினைகளான ஏழ்மை, வேற்றுமை ஆகியவற்றை ஒழிக்காத வரை காந்தியடிகளின் வழியில் நடக்கிறோம் என்று எப்படிப் பெருமையுடன் சொல்லிக் கொள்ள முடியும்? இப்பிரச்சினைகளை முழுமையாகத் தீர்ப்பதன் மூலமே நாம் அவர்க்கு அஞ்சலி செலுத்தமுடியும்.'' என்று கூறினார்.

பொருட்காட்சியினைத் துவக்கி வைத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், ''தமிழகத்தோடு இரண்டறக் கலந்து, தமிழக மக்களுடைய உணர்வில் ஒரு எழுச்சிப் புது மலராய், தியாகப் பெரும் மலராய் என்றென்றும், வணங்கத் தக்க அண்ணலாய், அறிவின் சுடராய், அடக்கத்தின் பெருவாய், மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சிலே நிறைந்து நிற்பவர்தான், உத்தமர் காந்தியடிகள்.

''திருவள்ளுவர்—புத்தர் ஏசுநாதர்—நபிகள் நாயகம்

இரவில், நடு இரவில் யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. யார் என்று பார்ப்பதற்குள் யாருமே இல்லை. என் மனைவி மீது எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. பக்கத்திலுள்ள மக்கள் எங்கள் வீட்டுக் கதவுகளும் தட்டப்பட்டன என்றனர். திகைத்தனர். மக்கள் இப்படிக் கூறியதும் மன்னர் கூறினார், '' உங்களுக்குத் துன்பம் விளைத்த அக்கயவனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம் '' என்றார். மக்களில் சிலர் தட்டிய கரத்தைத் துண்டாக்க வேண்டும் என்றார்கள். மன்னரது முகம் புன்னகையால் சிவந்தது. மறுகணம் கை உடைவாளை நெருங்கியது. அக்கணமே தட்டிய கை துண்டாகியது கண்டு மக்கள் அலறினார்கள். மன்னரே என்ன காரியம் செய்துவிட்டீர்கள். நீங்களா! என்று அவர்கள் அழுது புலம்பினர். பிறர்க்குத் துன்பம் விளைவித்த கைகள் மன்னரானால் என்ன மாற்றான் ஆனால் என்ன என்றார்.

யாத்திரைக்குச் சென்றவனின் இல்லத்தரசியைப் பாதுகாப்பதில் ஏற்பட்டதின் விளைவு கையை இழந்தார், மன்னர். ஆயினும், நீதி வழுவாப் பொற்கைப் பாண்டியன் என்று பெயர் பெற்று வரலாற்று நாயகனானார்.

இரவு ! கதவைத் திறங்கய்யா ! எத்தனை தடவப்பா சொல்ரது, கதவைத் திறக்க முடியாதுன்னு உங்களோட பெரிய தொந்தரவாப் போச்சு ! முதலாளியைப் பாக்கறதுக்கு நேரங். காலம் கிடையாதா ?

'' வீராசாமி என்னப்பா இப்படிப் பேசற, இதுவரைக்கும், நாங்க உன்னைத் தொந்தரவு செய்திருக்கோமா ? எப்படிப்பட்ட அவசரமான நேரத்திலே இந்த மாதிரி எரிஞ்சு விழரயப்பா ? நீயும் போய்ச் சொல்ல மாட்டேங்கற ! எங்களையும் சொல்லவிட மாட்டேங்கிறே ! நாங்கள்ளாம் வாழறதா சாகிறதாப்பா ?

கதவைத் திறக்க முடியாது! என் பிழைப்பிலே மண்ணைப்







போடப் பாக்கிறீங்களா ? போங்கய்யா காலையிலே வந்து பாருங்கய்யா .''

கதவு திறக்கப்பட்டது ! அந்தக் கதவுக்குச் சொந்தமாகப் பேசத் தெரியாது. ' லொள் லொள் ' என்ற ஒலி. பின்பு '' என்னடா வீராசாமி சத்தம் இங்கே '' என்ற அதட்டல் குரல் கேட்டது. அந்த நேரத்தில் ஹாரன் சத்தம் கேட்டது. வீராசாமி கத்தினான்.

'' சின்னய்யா வராங்க ! வழி விடுங்கய்யா '' வீராசாமியைத் தடுத்து நிறுத்திவிட்டு வாசலைக் கடந்து பத்துப் பதினைந்து விவசாயிகள் முதலாளியின் அருகே சென்றார்கள்.

காரின் கதவு திறக்கப்பட்டது.

சின்ன முதலாளி குமார் வேகமாகக் கீழே இறங்கி டார்ச் லைட்டை ஒவ்வொருவர் முகத்திலும் அடித்தான்.

''வெளியூரிலிருந்து இரவு 7 மணிக்குத்தானே அப்பா வந்திருக்கிறார்கள். தூங்கவிடாமல் இப்படித் தொல்லை கொடுக்கிறீர்களே! காலையில் வந்து பார்த்தாலென்ன குடியா முழுகிப் போய் விடும் ?'' என்றான் குமார்.

'' என்ன தம்பி இப்படிப் பேசறீங்க. கம்மாயில் இருப்பது கொஞ்சம் தண்ணி தானே தம்பி. நாலு நாளா பயிர் வாடிப்போகுது. உங்க ஆளுக தண்ணியைத் திறக்க விட மாட்டேங்கறாங்க ! கேட்டா கத்தி, கம்புகளைக் காட்டுறானுங்க '', என்றனர் விவசாயிகள்.

'' என்ன குமார் என்ன விவகாரம் ? என்றார் முதலாளி.

குமார், தகப்பனார் காதில் ஏதோ முணுமுணுத்தான். அவ்வளவுதான் முதலாளி முகம் ஏறி இறங்கியது.

'' போய் நாளைக் காலையில் வந்து பாருங்க'' என்றார். கதவு மூடியது. லொள்.. லொள்........ மூப்பனாரும், குமாரும் உள்ளே சென்றனர். அதன் எதிரொலிதான் இந்தக் குரல். வயலுக்குத் தண்ணீர் கேட்கச் சென்ற விவசாயிகள் இந்த இரக்கமற்ற செயலைக் கண்டு மனம் ஒடிந்து அவரவர்கள் குடிசைக்குச் சென்றனர். இரவு எப்பொழுது முடியும், எப்பொழுது விடியும் எனக் காத்திருந்தனர். அவர்களின் கண்களுக்கு நித்திராதேவி அடைக்கலம் கொடுத்தாள்.

'' மாடசாமி அண்ணே! மாடசாமி அண்ணே! நம்ப வயலெல்லாம் தண்ணி நிறைந்து வழியுதுன்னே '' என்ற குரல் காலையில் ஒலித்தது, மகிழ்ச்சி பொங்க!

அலறி அடித்துக்கொண்டு அனைவரும் வயலுக்கு ஓடினர். ஆம் ! அதிசயிக்கத்தக்க உண்மை நடந்தது. மூப்பனாரின் ஆட்கள் விழித்திருக்க எப்படி வயலுக்கெல்லாம் ஆள் வேலை செய்யாமல் தண்ணீர் கிடைத்தது! அதுதான், வரப்புகளுக்குச் சன்னல் அமைத்து அதற்குக் கதவு போட முடியாமல் திறந்த கதவுகளாகவே செய்து விட்டிருந்தன நண்டினங்கள். ஆம். அவைகள் தொண்டினங்கள். பண்ணையார் வயலுக்குப் பாய்ச்சப்படும் தண்ணீரிலிருந்து ஏழை விவசாயிகளுக்கு நீர் கிடைத்தது ! '' தொண்டிகள் மூலம் தொண்டு செய்த நண்டுகளே வாழ்க '' என்று விவசாயிகள் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

கதவு திறந்தும், பின் மூடியும் ஆடிக் கொண்டேயிருந்தது. வெளியில் காத்துக் கிடக்கும் ஓர் உயிரும் ஆடிக் கொண்டுதான் இருந்தது. ஆனால் அந்த உயிரை ஆடச் செய்து கொண்டிருந்தது அவன் மனம்தான். என்ன ஆகுமோ என்று அவன் பதைபதைத்துக் கொண்டிருந்தான். அப்போதுதான் வெற்றிநடையோடு டாக்டர் வெளியே வந்தார்.

டாக்டர் சார்....எப்படி சார் இருக்கு..என் வாழ்வைக் காப்பாத்துங்க சார். என்ற குரல் தழதழத்தது. கவலைப் பட வேண்டாம். ஐந்து நிமிடத்தில் சரியாகிவிடும். இது டாக்டரின் குரல். சொல்லிவிட்டுக் கதவைத் திறந்து வெளியேறினார், டாக்டர்.





கதவு ஆடிக் கொண்டேயிருந்தது. கதவின் இடுக்கிலிருந்து ஏதாவது தெரியாதா என்று ஆவலோடு பார்த்தான். வானிலிருந்து அமைதி தேவதை வெண்மையான மேகங்களுக்கிடையே தோன்றுவதுபோல் வெண்ணிற ஆடையுடன் நர்ஸ் கதவைத் திறந் வந்தாள். உங்களுக்கு ஆண் குழந்தைங்க! என்று கூறியதும் அவன் உள்ளமெல்லாம் பூரித்தது. ஆனந்தத்தின் எல்லைக்கே அவன் சென்றான்.

வேகமாக வந்து கொண்டிருந்த போலீஸ் லாரி நடுக்காட்டில் புதிதாகக் கட்டப்பட்டிருந்த வாயில் பக்கம் வந்துநின்றது.

திறக்கப்பட்டதும் சிறிது நேரத்திற்குப்பின் லாரியின் கதவும் திறந்துவிடப்பட்டது. இவர்களின் வருகையைத் தெரிந்து வைத்திருந்த பக்கத்துக் கிராம மக்கள் இப்படி ஒரு கற்பனையிலும் நடக்கக் கூடாத நிகழ்ச்சியைக் காண மிகுந்த ஆவலுடன் லாரியின் கதவுகள் திறக்கப்படுவதைக் காணத் துடிதுடித்தனர்.

இந்த அரிய நிகழ்ச்சி தமிழர்களின் வாழ்க்கையில் ஒரு பெரும் சகாப்தத்தின் திருப்பமாகவே அமைந்தது!

ஊம் எல்லாரும் இறங்குங்கப்பா ஒரு காவல் அதிகாரியின் குரல்.

ஆட்டு மந்தையைப் போல் மழமழவென்று தட்டுத் தடுமாறி இறங்கினார்கள். கூன் விழுந்தவர்கள், குருடானவர்கள், பல்வேறு விதமான ஊனம் அடைந்தோர், வாழ முடியாத பெண்கள், நோய் உள்ளவர்கள், வயதானவர்கள், தொழு நோய்க்காரர்கள் எல்லாரும் பலியிடப்போகு முன் திருதிருவென முழிக்கும் ஆடுகளைப்போல் என்ன நடக்கும் என்பது தெரியாமல் திகைத்தனர். 36, 73 எல்லாரையும் ஒழுங்கு பண்ணப்பா. என்ற குரல்.... இரண்டு காவல்காரர்கள் அவர்களை முறைப்படுத்தினர். அப்போது,

" ஐயா, " எசமான், நாங்க என்னய்யா குத்தம் செஞ்சோம் எங்களைக் கொண்டு போய் ஜெயிலில் அடைக்கிறீங்களே கடவுளே! உனக்குக்

சைவ, வைணவப் பெரியார்கள் காலத்தில் யார் யார் சமுதாயம் வளர, வாழ—ஒன்றுபட—நல் வாழ்வு நடந்திட—வாழு, வாழ விடு என்ற கொள்கைகளையெல்லாம் தெரிவித்தார்களோ, அந்தப் போதனைகளையெல்லாம் தொகுத்து, இந்திய நாட்டு மக்களுக்கு உத்தமர் காந்தியடிகள் வழங்கினுர்.

''அதை அவர் வழங்கிய நேரத்தில் அவைகளுக்கு ஒரு தனித் தன்மை இருந்தது என்பதை யாரும் மறந்திடவும் இயலாது. மறுத்திடவும் இயலாது. பெரியவர்கள், மூதாதையர்கள் வகுத்த கருத்துக்களுக்கெல்லாம் காந்தியடிகள் வார்த்தைகளின் மூலம் விளக்கம் தருவதை விட, செயல் மூலம் விளக்கம் தர வேண்டுமென்று விரும்பினுர்.

"காந்தியடிகளுடைய கொள்கைகள் அனைத்தையும் பின்பற்றவேண்டுமென்ருல் அந்தக் கொள்கைகளை காலத்திற்கேற்பத்தான் அதற்கான திட்டங்களையும், நடைமுறைகளையும், உருவாக்கிக் கொள்ள வேண்டும். காந்தியடிகள் தீண்டாமை ஒழிய வேண்டுமென்று சொன்னுரென்ருல்; நான் சொல்கிறேன், இன்றைக்குத் தீண்டாமை அறவே ஒழியாவிட்டாலும், இன்னும் 50 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, தீண்டாமை ஒழிந்துவிட்டது என்று நாம் ஒரு கற்பனையைச் செய்து கொண்டு அது நிறைவேற வேண்டிய கற்பனை—அப்படிப்பட்ட கற்பனையைச் செய்து கொண்டு—50 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, காந்தியடிகளின் தீண்டாமையைப் போதனை செய்து கொண்டிருந்தால், அது தேவைப்படுகிறதென்ரு, என்ருல் தேவைப்படாது. ஆனுல் அந்தத் தீண்டாமைக் கொள்கை எந்த இழையிலே தொடங்கியது? காந்தி அடிகள் அமைக்குக் கொண்ட அன்பு வழி இருக்கிறதே, சமத்துவ வழி இருக்கிறதே, அற வழி இருக்கிறதே அது ஆண்டாண்டுக்காலத்திற்கும் உலகம் உள்ள அளவிற்கும் இழையோடிக் கொண்டிருக்கிற ஒரு மையமான கருத்தாகும்.

''ஆகவே தான் இன்றைக்குச் சில கருத்துக்களை, சிலகொள்கைகளை நம்மால் நிறைவேற்ற முடியவில்லை.

"நம்முடைய ஆளுநருடைய குஜராத் மாநிலத்தில்தான் காந்தியடிகளுடைய மதுவிலக்குக்கொள்கைஇன்றைக்கு அமல் படுத்தப்படுகிறது. அதை அமல் படுத்த முடியாத குற்றவாளிகள் பட்டியலில் நானும் இருக்கிறேன். நம்முடைய நிதி அமைச்சர் சவான் அவர்களும் இருக்கிருர்கள்.

"நிதி அமைச்சர் சவான் அவர்கள் எனக்கு உதவி இருப்பாராஞல்—உதவாதது அவர் குற்றமல்ல—அவர் முடியாத நிலையிருக்கிருர். நான் காந்தியடிகளுடைய பாதையிலிருந்து கொஞ்சம் வழியை மாற்றி—அறவே வழியை ரத்துச்செய்து அல்ல—கொஞ்சம் பயணத்தை ஒத்தி வைத்து மறுபடியும் காந்தியடிகளின் பயணத்தைத் தொடர வேண்டிய நிதி நிலை நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறேன்.

" இந்திய ஒருமைப்பாடு பற்றி பேசுகிருேம். ஆனுல் மதுவிலக்குக் கொள்கை இந்தியா முழுவதும் நிறைவேற்றப்படுகிறதா? அந்த ஒருமைப்பாட்டு கொள்கை இன்றைக்கு நம்மிடையே இல்லை என்பதை வேதனையோடும், வெட்கத்தோடும் நாமனைவருமே ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரை மதுவிலக்கு மீண்டும் தொடரும், ஒத்திவைக்கப்பட்டது. ரத்துச் செய்யப்பட்டது என்று பொருள் அல்ல. நான் சட்டசபையிலே மதுவிலக்கை ஒத்தி வைக்கிறேன் என்று தான் நிதி நிலை அறிக்கையைப் படிக்கிற நேரத்தில் கூறினேனே தவிர, ரத்துச் செய்யவில்லை.

"நான்கு புறமும் வேடர்கள் சூழ்ந்து நடுவிலே சிக்கிய மானைப் போல தமிழகம் மதுவிலக்குக் கொள்கையில் இருக்கிறது. கொழுந்துவிட்டெரியும் நெருப்பு வளையத்திற்குள்ளே கொளுத்தப் படாத கற்பூரமாகத் தமிழ் நாடு எத்தனை நாள் இருந்திட முடியும் என்று தான் கேட்டேன். அதைக் கேட்டுவிட்டு, வேதனையோடு, காந்தி யடிகளிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுச் சில காலத்திற்கு மதுவிலக்கு தமிழகத்திலே ஒத்தி வைக்கப்படுகிறது என்று சொன்னேன். நான் இன்றைக்கும் சொல்கிறேன். முதல் கட்டமாக இன்றைக்கு கள்ளுக் கடைகள் மூடப்பட்டுவிட்டன.

" அடுத்த கட்டமாக, அடுத்த ஆண்டு பூரண மதுவிலக்கு தமிழ்நாட்டில் அமலாகும் என்று முன்பு நான் அறிவித்ததை, இப்போது மீண்டும் ஒரு முறை ஞாபகப்படுத்துகிறேன்.

"இந்த காந்தியடிகள் பிறந்த நாள் விழாவில் தமிழ் நாட்டு மக்கள் சார்பில் குஜராத் மாநிலத்திலிருந்து வந்திருக்கிற நம்முடைய ஆளுநர் அவர்களுடைய சார்பில் இங்கே கூடியிருக்கிற பெரு மக்களின் சார்பில் நிதி அமைச்சர் திரு. சவான் அவர்கள் மூலம் இந்தியாவின் பிரதமரைக் கேட்டுக் கொள்வேன்.

"அடுத்த ஆண்டு தமிழ் நாட்டிலே பூரண மதுவிலக்கு அமுல் படுத்தப்படும் நேரத்தில்—காந்தியடிகள் போற்றும் விதத்தில், அவரை மதிக்கும் வகையில் இந்தியா முழுமையும் மதுவிலக்கு அமல்படுத்தப் பட வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றுநான் கேட்டுக் கொள்கிறேன்.

"இவைகளை யெல்லாம் இணைத்துத்தான் காந்தி அடிகளுடைய வாழ்க்கைப் பாதை, அவருடைய வாழ்க்கை வரலாறு, அவர் வாழ்க்கையிலே விளைவித்த அற்புதங்கள் — அற்புதங்கள் என்ருல் அவதார மகிமையால் செய்தவை அல்ல—சாதாரண மனிதனை மிஞ்சுகிற அளவிற்குக் காரியங்களைச் செய்து காட்டி வெற்றி கண்ட அற்புதங்களை எல்லாம் விளைவித்த காந்தி அடிகளின் பெய



ரால், அருமையான, அழகான எழுச்சி நிறைந்த பொருட்காட்சி ஒன்றினை இங்கே அமைத்திருக்கிருர்கள். அதனைத் திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன் நான்'' என்று கூறினுர்.

காந்தியடிகளின் வாழ்வினையும், தத்துவங்களையும் விளக்கும் எழில் மிக்க பொருட்காட்சியினை முதல்வரும், மத்திய நிதி அமைச்சர் அவர்களும், ஆளுநரும், கண்டு களித்தனர். மத்திய அரசின் பொருட்காட்சிப் பிரிவு காந்தியடிகளின் வாழ்வினை விளக்கும் படங்களடங்கிய காட்சியினையும், மாநில அரசின் பல்வேறு துறைகளும் காந்தியடிகள் வழியில் ஆற்றும் பணிகளைச் செயல் முறை மூலமாகவும் விளக்கின. சமுதாயத்தின் அடித் தளத்தில் வாழுவோர்க்கெனச் செயல்படும் பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லங்கள், கண்ணெளித் திட்டம், கை ரிக்ஷாவினரின் மறு வாழ்வுத் திட்டம் ஆகியவற்றின் வேலை முறைகளை மத்திய நிதியமைச்சர் ஆர்வத்துடன் கேட்டுத்தெரிந்துகொண்டார். இவ்விழாவினையொட்டிச் செய்தி—மக்கள் தொடர்புத் துறை காந்தியடிகள் வாழ்வும்—வாக்கும் என்னும் சிறு நூலை வெளியிட்டது.

காந்தியடிகள் பிறந்த நாள் நிகழ்ச்சிகள் தொடர்ந்து 7-ம் தேதி முடிய மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெற்றன. மூன்ரும் தேதி உலகத் தலைவர் காந்தியடிகள், என்ற பொருள் பற்றி திரு. காமராஜ், எம். பி. அவர்கள் தலைமையில் திரு. சா. கணேசன் அவர்களும், திரு. சையத் அப்துல் புகாரி அவர்களும் சொற்பொழிவாற்றினர். அதற்கு அடுத்த நாள் சமூக சீர்திருத்தவாதி காந்தியடிகள், என்பது பற்றித் திருமதி மதுபென் ஷா, திருமதி செளந்திரம் கைலாசம், டாக்டர் எம். சந்தோஷம், திரு. வெங்கடாச்சாரி ஆகியோர் சொற்பொழிவாற்றினுர்கள். மற்ற நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளில் மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்ரமணியம், மேலவைத் துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு, மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் திரு. மு. வரதராசனுர், தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் ஆகியோர் காந்தியடிகளின் சிறப்பினை எடுத்துக் கூறினுர்.

இவ்வாண்டின் சிறந்த நிகழ்ச்சி காந்தியடிகளின் ஒப்புயர்வற்ற தத்துவங்களைப் பற்றிய கருத்தரங்காகும். அக்டோபர் 5, 6, 7-ம் நாட்களில் இவ்வரங்கு போற்றத் தக்க வகையில் நடைபெற்றது.



இவ்வாண்டின் மற்ருெரு சிறப்பு, மாணவர் முகாமாகும். ஒரு வார காலமாக மாணவர்கள் இன்ஜினியரிங் கல்லூரியில் முகாமிட்டுப் பல்வேறு ஆக்கப் பணிகள் செய்து வந்தனர். மாணவர் முகாமினைச் சென்னைப் பல்கலைக் கழக தேசியத் தொண்டர் அணியும், மாணவியர் முகாமினைக் கல்லூரி கல்வித் துறையினரும் சிறப்புற நடத்தினர்.

ஆறு நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளனைத்திலும் தமிழக ஆளுநர் அவரது துணைவியார் அவர்களுடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். எல்லா நாட்களிலும் மக்கள் இலட்சக் கணக்கில் காந்தி மண்டபம் நோக்கிவந்து கொண்டேயிருந்தனர்.

தமிழக மக்கள் காந்தியடிகளுக்கு எடுத்த விழாவில் கலந்து கொண்ட சிறப்பினைக் கண்டு உளம் நெகிழ்ந்த மேதகு ஆளுநர், இறுதி நாளன்று பேசுகையில் ''காந்தி அடிகளின் கொள்கைகளைக் காப்பாற்றும் திறன் படைத்தவர்கள் தமிழ் நாட்டு பெரு மக்கள் தாம்'' என்று பெருமையோடு குறிப்பிட்டார்கள்.

காந்தியடிகளுக்குத் தமிழகம் செலுத்திய அஞ்சலிபெருமைக்குரிய ஒன்றுதான். அவரது அமைதி வழியினை என்றுமே தங்கள் வழியாக ஏற்றுச் செல்லும்தமிழ்ப் பெரு மக்கள் தங்களது இலட்சியத்தின் முதல்வனுக அண்ணலை ஏற்று அவர் தம் வழியில் என்றும் நடந்து செல்லத் தங்களை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும் திருவிழாவாக இது அமைந்தது. இத்தகைய திருவிழாக்கள் மீண்டும் மீண்டும் மக்கள் தம் உள்ளத்தில் உயர்ந்த பண்புகளை வளர்க்கும் சிறந்த அறிவுக் கூடங்களாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.



கண்ணில்லையா, கண்ணில்லாத குருடன் ஒருவன், ஏய்யா எங்களை ஜெயிலுக்கா கூட்டி வந்தீங்க. போலீசா! நாங்க என்னய் தப்புப் பண்ணினோம். முருகா (ஒரு பெண்) குடும்பத்தோடு பிச்சை எடுத்து அரை வயிற்றுக் கஞ்சி சாப்பிட்டுக்கிட்டு இருந்தோமே எங்களை ஏய்யா ஜெயில்ல அடைக்கணும். நாங்க ஒரு தப்பும் பண்ணலியே.

(ஒருவன்) திருடர்களைப் பிடிச்சு அடைச்சு வைக்கிறதை விட்டுட்டு எங்க மாதிரி கால், கை போனவங்களை அடைச்சு என்ன இலாபம் இப்படி மாறி மாறிக் குரல்கள் கேள்விக் கணை எழுப்பின.

இத்தனையும் பொறுமையாகவும், ஓரமாகவும் நின்று கேட்டுக் கொண்டிருந்த காவல் அதிகாரி லாரியை விட்டுக் கீழே இறங்கி வந்தார்.

இந்தாப்பா உங்களை யாரும் ஜெயிலில் அடைச்சுக் கஷ்டப்படுத்துவதற்கு இங்கே கொண்டு வரவில்லை. இது ஜெயிலுமல்ல. நீங்கள் இனிமேல் பிச்சை எடுக்கக்கூடாது என்பதற்காகத்தான் இங்கே உங்களைக் கூட்டி வந்தோம்.

(ஒரு கிழவி) இது என்னய்யா அநியாயமா இருக்கு, எங்களுக்குச் சோறு போட ஆளில்ல சொந்தக்காரங்க இல்லை. நாங்க பிச்சை எடுக்காம எப்படி சாமி புழைக்கிறது? வயிறு இருக்கே!

(ஒரு நோயாளி) எங்க தலைவிதி பிச்சை எடுக்கிறோம் இது ஒரு குத்தமா? என்னது புதுசா இருக்கு!

போலீஸ் அதிகாரி புன்முறுவலுடன் நீங்க சொல்லுவது எல்லாம் சரிதான். அது பழைய நிலை. புதிய திட்டப்படி இந்த ஆட்சியில் உங்களுடைய வாழ்க்கையைச் சீரடையச் செய்யவும், தொழு நோய்க்காரர்களால் நோய் பரவுவதைத் தடுக்கவும், பிச்சை எடுப்பதைத் தடுக்கவும், பிச்சை எடுப்பது கேவலம், நாட்டுக்கும் அவமானம் என்பதால் இதற்கான பரிகாரம் காணவே



இப்படி ஓர் சிறந்த ஏற்பாட்டினைத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திட்டம் வகுத்து இன்றுதான் முதன் முறையாக இந்த விடுதியினைத் திறந்து வைத்துள்ளோம். ஒருவன் குறுக்கிட்டு அப்படியானால், நாங்க எல்லாம் இந்த மூணு தெருவுக்குள்ளேதான் பிச்சை எடுக்கணுமா சார் ?!

பக்கத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த மக்கள் எல்லாரும் சிரித்தனர். காவல் துறையினரும் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்தே விட்டனர்.

அதிகாரி, அப்படி அல்ல இந்தக் கட்டடத்தில் உங்கள் எல்லாருக்கும் தனித்தனி அறைகள், அங்கே உங்களுக்கு உடை, படுக்கை, சாப்பாடு எல்லாம் நேரத்திற்குக் கிடைக்கும். கவலைப் படாமல் இங்கே வாழலாம்.

நோயாளிகளுக்கும், தொழு நோய்க்காரர்களுக்கும், டாக்டர்கள் மருந்து கொடுப்பார்கள் என்றார்.

உடனே ஒருவர் ஐயா, நாங்கத் தெருத் தெருவா அலைஞ்சு பிச்சை எடுத்தால் காசுகள் கிடைக்குமே இங்கு கிடைக்குமா சார்.

அதுவும் கிடைக்கும். இங்கே உங்களுடைய திறமைக்கேற்பத் தொழில்கள் கற்றுத் தரப்படும். அதற்கான சிறு ஊதியமும் கிடைக்கும் என்றார்.

ஏன் சார் எங்களுக்காக சர்க்காரு ஏன் இவ்வளவு அக்கறை காட்டுறாங்க, ஒண்ணுமே புரியலியே!

(அதிகாரி) அதுதான் இன்றையப் பிரச்சினை. தமிழ்நாட்டில் பிச்சை எடுப்பதும் பிச்சை கொடுப்பதும் இழிவான செயல். பிச்சை எடுத்துப் பிழைப்பவர்களைக் கடவுள் தண்டனை கொடுத்துள்ளார் என்று விட்டு விடாமல் நாம் நமது உடன் பிறப்புக்களாக எண்ணி அரியதோர் மறுவாழ்வுத் திட்டம் தீட்டி அதை நாங்கள் செயல் படுத்துகிறோம். ஆகவே நீங்கள் எல்லாரும் அமைதியாக உங்கள் மறுவாழ்வைத் தொடங்கலாம். என்ன...?

அப்படியா சாமி நீங்க நல்லாயிருக்கனும் அந்த முதல்வர் அய்யாவும் நல்லாயிருக்கணும் என்று மகிழ்ச்சி பொங்க வரிசையாகச் சென்றனர்.

அவரவர்களுக்கான அறைக் கதவுகள் திறக்கப்பட்டன.

• • •

கதவைத் திறந்து படிக்கட்டுகளிலிருந்து இறங்கி, 'காலம் கண் போன்றது; கடமை பொன் போன்றது' என்ற விளம்பரப் பலகை மறைந்து பின் தெரிந்தது. ஆம். காலத்தை உணர்ந்து தமிழர்களின் கண்ணுனை வாழ்வை உயர்த்தப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் முதல்வர் கலைஞர் அவர்கள் படிக்கட்டிலிருந்து அவருக்கே உரித்தான முல்லை மலர்ச் சிரிப்புடன் 'என்ன செய்தி?' என்று கேட்டார்.

காத்துக் கொண்டிருந்த பத்திரிகைச் செய்தியாளர்கள் தங்களிடந்தான் செய்திகள் கேட்க வந்திருக்கிறோம். ஏதாவது செய்தி சொல்ல வேண்டும் என்று கதவில்லாத செவிகளைக் கூர்மையாக்கினர்.

புன்முறுவல்......அதுதான் அவரின் வாடிக்கையான தோற்றம்.

தமிழ்நாட்டில் பிச்சைக்காரர்களின் மறுவாழ்வு இல்லங்கள் பத்து கட்டி முடிக்கப்பட்டது தெரிந்தது தான். இனியும் செய்தி தெரியாமல் பிச்சை எடுப்பவர்களைப் பற்றி பொது மக்கள் காவல்துறை அலுவலகத்தில் தகவல் கொடுக்க வேண்டும்; அதற்கான சன்மானத் தொகையும் உண்டு என்றார்.

செய்தியாளர்கள் — நன்றி தெரிவித்துவிட்டு அவரவர் காரியாலயத்தின் அறைக் கதவுகளைத் திறந்து செய்தியைப் பத்திரிகைகளில் வெளியிட்டனர். ஒரே பரபரப்பு. என்ன தமிழகத்தில் பிச்சைக்காரர்களைக் காண்பதே அரிதாகி விட்டதா? அறிஞர் அண்ணாவின், கலைவாணர் அவர்களின் ஐம்பது —அறுபதின் நிகழ்ச்சிக் காவியம் கலைஞரின் ஐம்பதாவது ஆண்டில் நிறைவேறி விட்டதே! என்று மக்களின் மனக் கதவுகள் திறந்து கூறிய சொற்கள், சுவையோடு இழைந்தன.

# அண்ணாவின் அமுத மொழிகள்



**மாமரம் போல....**

மாமரம் மேலோங்கி வளர வளர அதன் கிளைகள் நாலாபக்கமும் பரவி, தாழ நோக்கி வளருகின்றன. அதே போன்று வலிமை படைத்தவர்களின் பலம் நாளுக்கு நாள் அதிகரிப்பதற்கேற்ப அவர்கள் படிப்படியாகப் பணிவுணர்ச்சியைப் பெருக்கி வரவேண்டியது இன்றியமையாததாகும்.

**தங்கம் அல்ல !**

உழைப்பு இல்லாதுபோனால் தங்கம், வெள்ளி, செம்பு ஆகியவை எல்லாம் வீண் சுமைதான். பூமியின் அடியிலிருந்து மதிப்பு வாய்ந்த உலோக மண்ணைத் தோண்டி எடுத்து வந்திருப்பது உழைப்புத்தான். உலோகங்கள் இல்லாமலேயே தொழிலாளர் வாழ்ந்துவிட முடியும். விலை மதிப்பில்லாதது உழைப்பேயன்றித் தங்கம் அல்ல !

**வாழ்க்கையின் மூச்சு !**

நாம் உலகில் வாழ்வதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டுமாயின் வாய்மைக்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டுமென்பதே அது. நமது செயல்களெல்லாம் வாய்மையை மையமாகக் கொண்டவையாக இருக்கவேண்டும். வாய்மையே நமது வாழ்க்கையின் மூச்சாக இருக்கவேண்டும். வாய்மையில்லாமல் வாழ்க்கையில் எந்த விதியையும் நாம் பின்பற்ற முடியாது.

**இமயமலை அது !**

சிறிய புயல் அடித்தாலும் வாடி வதங்கக் கூடிய மென்மலர் அல்ல நம்பிக்கை; அசைக்க முடியாத இமயமலை போன்றது நம்பிக்கை. எத்தகைய புயலும் இமயமலையை முட்டோடு பிடுங்கி எறிந்துவிட முடியாது.

**உடம்பைப் போல !**

சோஷலிசம் என்பது அழகான ஒரு சொல்; சோஷலிசத்தில் சமூகத்தில் எல்லா உறுப்பினர்களும் சமமானவர்கள். உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்று எவரும் இல்லை. நம்முடைய உடம்பின் உச்சியில் இருப்பதால் தலை உயர்ந்ததாகி விடாது; உள்ளங்கால்கள் தரையைத் தொடுவதால் அவை தாழ்ந்தவையாகி விடமாட்டா. உடம்பின் எல்லா உறுப்புக்களும் சமமாக இருப்பது போலவே, சமூகத்தின் எல்லா உறுப்பினர்களும் சமமானவர்கள். இதுதான் சோஷலிசம் !

**கலாச்சாரக் காற்று !**

என்னுடைய வீட்டைச் சுற்றிலும் சுவர்களை எழுப்பிச் சன்னல்களை இறுக மூடி வைப்பதை நான் விரும்பவில்லை. எல்லா நாடுகளுடைய கலாசாரங்களின் காற்றும் என் வீட்டைச் சுற்றிலும் மிகத் தாராளமாக வீசவேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால், அவற்றுள் எதுவும் என்னைத் தூக்கியெறிந்து விடக் கூடாது, மற்றவர்களின் வீடுகளில் அழையா விருந்தாளியாகவோ, யாசகனாகவோ, அடிமையாகவோ, வசிப்பதற்கு நான் சம்மதிக்க மாட்டேன்.




# ஓட்டுநரே உரிமையாளர்

எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்.

எனவே, ஏற்றத் தாழ்வு இல்லாத சமுதாய அமைப்பு உருவாக வேண்டும்.

உழைப்பவனே உரிமையாளனாக இருக்க வேண்டும்!

சமதர்ம சமுதாயத்தை விரும்பும் எல்லாருடைய எண்ணமும் இதுதான்.

இந்த எண்ணங்களை நனவாக்கி வருவதில் முன்னணியில் திகழும் நம் தமிழகத்தில்----

இந்த அரும் பணியை ஆற்றி வரும் அமைப்புகளில் ஒன்று தான்---சென்னை ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவு சங்கம்.

ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்களின் நன்மைக்காக--ஓட்டுநரே உரிமையாளராக வேண்டும் என்ற நோக்கத்தோடு கடந்த 17--9--1969-ல் பதிவு செய்யப்பட்டு 18--9--1969 முதல் இயங்கி வருகிறது.

இந்த ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கம் மூலம் இதுவரை 190 ஆட்டோரிக்ஷாக்கள் வழங்கப் பட்டுள்ளன.

ஆட்டோ ரிக்ஷா டிரைவருக்குரிய 'ஓட்டுநர் உரிமம்' பெற்றுள்ளவர்களே இச் சங்கத்திலே உறுப்பினராகலாம். ஒவ்வொருவரும் உறுப்பினராவதற்கு பங்குத் தொகையாக ரூபாய் ஐம்பது செலுத்த வேண்டும். இப்பொழுது சென்னை ஆட்டோ ரிக்ஷா சங்கத்தில் 366 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களுடைய பங்குத் தொகை மட்டும் ரூ. 1,79,050 ஆகும்.

தவணை முறையில் ஆட்டோ ரிக்ஷாக்கள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒரு ஆட்டோ ரிக்ஷாவின் மதிப்பு ரூ. 11,000 ஆகிறது. எனவே இதில் எட்டில் ஒரு பங்கு---அதாவது ரூ. 1,400 பங்குத்தொகையைச்செலுத்தி உறுப்பினர் ஆட்டோ ரிக்ஷாவைப் பெற்றுக் கொள்ளலாம்.

சங்கத்திலிருந்து ஆட்டோ பெற்ற ஒவ்வொரு உறுப்பினரும் நாள்தோறும் ரூ. 13 வீதம் செலுத்த வேண்டும்.




இச்சங்கம் பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையில் 457 எண்ணுள்ள இடத்தில் நடத்தி வரும் பெட்ரோல் பங்கில் ஆட்டோ ரிக்ஷா பெற்றவர்கள் மாதம் தோறும் 150 லிட்டர் பெட்ரோல் பிடிக்க வேண்டும்.

இந்தப் பெட்ரோல் பங்கில் 150 லிட்டரிலிருந்து 199 லிட்டர் வரை பெட்ரோல் பிடிப்பவர்களுக்கு 2 லிட்டர் பெட்ரோல் இனமாகவும், 200 லிட்டரிலிருந்து 299 லிட்டர் வரை பெட்ரோல் பிடிப்பவர்களுக்கு 3 லிட்டர் பெட்ரோல் இனமாகவும்,. 300 லிட்டரிலிருந்து 399 லிட்டர் வரை பெட்ரோல் பிடிப்பவர்களுக்கு 4 லிட்டர் பெட்ரோல் இனமாகவும் கொடுக்கப்படும்.

இப்படி இந்தச் சங்கத்தில் ஆட்டோ ரிக்ஷாப் பெற்றவர்களில் 56 பேர்கள் முழுத் தொகையையும் செலுத்தி உரிமையாளர்களாகி விட்டார்கள்

அந்த 56 ஊர்திகளை ஓட்டுநர்களுக்கே உரிமையாக்கும் விழா கடந்த 24-9-73 அன்று சங்கத் தலைவர் ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்களுடைய தலைமையில் நடைபெற்றது. தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும், கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தொழிலமைச்சர் செ. மாதவன் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். ராமச்சந்திரன் அவர்களும் பங்கேற்றார்கள்.

இச்சங்கத்தின் மூலம் ஆட்டோ ரிக்ஷா பெற்று, ஆட்டோ ரிக்ஷா உரிமையாளராகி விட்ட ஓட்டுநர் திரு. எம். ஜெயச்சந்திரனை சந்திப்போம்.

சென்னை ஆள்வார்பேட்டை சாலை நாலாவது சந்து 80 எண்ணுள்ள இல்லத்தில் வசிக்கும் ஜெயச் சந்திரன் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்.

இவருடைய ஆட்டோ ரிக்ஷா எம்.எஸ்.எல். 1390; லில்லை எண். 6722, சங்கப் பதிவு எண் 145 ஆகும்.

ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகி, ஆட்டோ ரிக்ஷாவைத் தவணை முறையில் பெற்று, தவணைகளை முழுவதும் செலுத்தி இன்று ஆட்டோ ரிக்ஷா உரிமையாளராகத் திகழும் இவர் உழைப்பாளிக்கு உயர்வு கிட்டியே தீரும் என்பதற்குச் சான்றாகவிளங்குகிறார்.

ஆட்டோ ரிக்ஷாவின் உரிமையாளராகிவிட்டபிறகும் ஆட்டோ ரிக்ஷாச் சங்கத்தின் பெட்ரோல் பங்குக்கே வந்து பெட்ரோல் பிடிக்க வரும் இவரை ஏன் இன்னும் இந்தப் பெட்ரோல் பங்கை நாடி வருகிறீர்கள் என்று கேட்டால் போதும்........

''நாங்கள் வளர்த்த பெட்ரோல் பங்க், இதனை நாங்களே மறந்து விட முடியுமா? ஒரு குடும்பம் போல் இருந்து இந்தப் பெட்ரோல் பங்கை வளர்த்து வந்துள்ளோம். அது மட்டுமில்லீங்க... வெளியிலே ஆட்டோ ஆயில் விலை ரூ.2.80 ஆகும். இங்கே எங்கள் பங்கிலே ரூ. 2.40 ஆகும். அது மட்டுமில்லே. மாதத்துக்கு 150 லிட்டர் பெட்ரோலுக்கு மேலே பிடித்தால் இரண்டு லிட்டர் பெட்ரோல் இலவசமாகக் கிடைக்கும். அளவும் குறையாது. லாபமும் தனிப்பட்டவர்களுக்குப் போகாமல் எங்களுக்கே கிடைக்கிறது...'' என்று அடுக்கிக் கொண்டே போகிறார் உரிமையாளராகி விட்ட அந்த ஓட்டுநர் நண்பர்.





# பிஞ்சு விரலில் பிறக்கும் சித்திரம்



" குழந்தைகளுக்கு எழுதக் கற்றுக் கொடுப்பதற்கு முன்னுல் சித்திரம் வரையக் கற்பிக்க வேண்டும்மென்று நான் தற்போது அபிப்பிராயப்படுகிறேன். பறவைகள், பூக்கள் முதலியவைகளைப் பார்த்துத் தெரிந்து கொள்வதுபோல் குழந்தைகள் முதலில் எழுத்தைப் பார்த்துக் கற்றுக் கொள்ளவேண்டும். பொருள்களைப் போல் சித்திரம் வரையக் கற்றுக் கொண்ட பிறகுதான் எழுத்து எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் அழகிய கையெழுத்துப் படியும் ''.

இவ்வாறு கூறுவது யாராயிருக்கலாம் என்று ஊகிக்கிறீர்கள் ? ஓவியத்தையே தொழிலாகக் கொண்டவர் சொன்ன கருத்தா இது ? இல்லவே இல்லை ! அண்ணல் காந்தியடிகள்தான் இந்தக் கருத்தைச் சொன்னவர் !

மணிமணியான கையெழுத்துக்கள் அமைய முதலில் சித்திரமே சிறந்த வழி என்பதை இக்கருத்து நமக்கு உணர்த்துகின்றதல்லவா ?

முதலில் அமைக்கின்ற கையெழுத்தே முடிவு வரை அமைந்து விடுகிறது. ' முதற்கோணல் முற்றும் கோணல் ' அல்லவா? கையெழுத்து என்பது பழகத்தால் வருவதுதான். ' சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் ' என்னும் மொழி இதனாலன்றோ எழுந்தது !

ஒழுங்கற்ற கையெழுத்து — கோணல் மாணலான கையெழுத்து ஒருவனுக்கு அமைவதென்பது, அவன் தலையெழுத்தாலல்ல ! எதையும் திருத்திக் கொண்டால் — பழக்கப்படுத்திக் கொண்டால் கோணல் நேராகும் ; கிறுக்கல் ஒழுங்காகும் !

சென்னை எழும்பூரிலுள்ள
அரும் பொருட்காட்சியகம்

உள்ளே நுழைகிறோம். வருங்கால ஓவிய மன்னர்கள் வரிசை வரிசையாக வருகின்றனர். அவர்களுக்கு வயது என்ன தெரியுமா ? மூன்றரையிலிருந்து ஆறு வயது ! அவர்கள் முகத்திலேதான் எத்தனை உற்சாகம் ! புதுத் தெம்பு !

சென்னை அரும்பொருட் காட்சியகம் ( Museum ) விடுதலை வெள்ளி விழாவினையொட்டி இந்தச் சிறுவர்க்கான சித்திரப் போட்டியை முதன்முறையாக நடத்துகிறது.

ஒவ்வொரு ஆண்டும் விடுதலை நாள் விழாவினையொட்டி பல்வேறு கலை விழாக்களை நடத்துகிறது இது. பள்ளி மாணவர்களைக் கொண்டு நடனம், நாடகம் முதலான கலை விழாக்களை நடத்திய அரும்பொருட்காட்சியகம், தமிழ் நாட்டுப் பழங்கால இசைக் கருவிகளை இசைத்துக் காட்டியும், தோல் பொம்மலாட்டங்களை நடத்தியும் மகிழ்வித்திருக்கிறது.

ஆகஸ்டு இரண்டாம் நாளன்று போட்டி தொடங்குகிறது. மூன்றரை வயதிலிருந்து ஆறு வயதுள்ள சிறுவர் சிறுமிகள் மண்டபத்துள்ளே ஆங்காங்கே வந்து அமருகின்றனர். படம் வரைவதற்கான தாள்கள் அவர்களிடம் தரப்படுகின்றன. வண்ண வண்ணப் பென்சில்கள் அவர்கள் அருகே இருக்கின்றன. அவர்களுடைய எண்ணமோ கற்பனை உலகுக்குச் சிறகடித்துப் பறக்கின்றது. சின்னஞ்சிறிய கைகளின் மூலம் சித்திரங்கள் பிறக்கின்றன !

பலவகையான மலர்கள், விலங்குகள், செடி கொடிகள், கப்பல்கள், காக்கை முதலான பறவைகள் — இப்படிக் குழந்தைகள் தாம் விரும்பிய படங்களை உற்சாகத்தோடு வரைகின்றன. ஒரு குழந்தை, வரையும் தாளின்மீதே படுத்துக் கொள்கிறது, தூங்க அல்ல ! ஒன்று சாய்ந்து சாய்ந்து வரைகிறது : மற்றொன்று வரைந்து வரைந்து சரிபார்க்கிறது !

இந்தப் போட்டிகள் மூன்று நாட்கள் நடைபெற்றன. ஆகஸ்டு 2, 7, 9 ஆகிய நாட்களில் முறையே மூன்றரை வயதிலிருந்து ஆறு, ஏழு வயதிலிருந்து பத்து, பதினொரு வயதிலிருந்து பதினாறு — வயது வரை இந்தச் சித்திரப் போட்டிகள் சிறப்பாக நடந்தன. ஒவ்வொரு வயதுப் பிரிவினருக்கும் ( Age Group ) ஐந்தைந்து பரிசுகள் வழங்கப்படும்.



அட்டை சொல்லும் கட்டுரை



# காகிதப் பிரச்சனை



**உலகத்தில் தயாராகும் காகிதத்தில் 0·6 சதவீதம் தான் நமது இந்தியா பயன்படுத்தி வருகிறது. நியூஸ் பிரிண்ட் என்று சொல்லப்படும் பத்திரிகைக் காகிதத்தை நாம் எந்தெந்த நாட்டிலிருந்து எவ்வளவு வாங்குகிறோம் என்பது தெரியுமா ?**

| | | |
|---|---|---|
| கனடாவிலிருந்து .. .. | 60 | ஆயிரம் டன். |
| சோவியத் யூனியனிலிருந்து .. | 28 | ,, |
| ஸ்கான்டிநேவியன் நாடுகளி லிருந்து. | 13 | ,, |
| பங்களா தேசத்திலிருந்து .. | 10 | ,, |
| போலந்து மற்றும் செக் நாட்டிலிருந்து. | 6 | ,, |

இந்தியாவில் மத்தியப் பிரதேசத்தில் 36 ஆயிரம் டன்-ஆக மொத்தம்—இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 153 ஆயிரம் டன் பத்திரிகைக் காகிதம் வெளியிடப்பட்டு வருகிறது. இதற்குத்தான் அண்மையில் 30 சதவீத வெட்டு ஏற்பட்டுள்ளது.

சீனர்கள்தாம் உலகத்தில் முதன் முதலில் காகிதத்தின் பயனை உணர்ந்தவர்கள். பேப்ரஸ் (Paprus) என்னும் ஒருவகைச் செடியிலிருந்து காகிதம் தயாரிக்கப்பட்டது. (அதனால்தான் அதன் பெயர் ஆங்கிலத்தில் பேப்பர் என்று சொல்லப்படுகிறது. கி. பி. 105-ஆம் ஆண்டில், சாய்லுன் என்பவர் செடிகளைக் கொண்டு காகிதத்தைத் தயாரித்தார். பிறகு காகிதம் தயாரிக்கும் கலை சீன நாட்டிலிருந்து அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கும், இறுதியாக ஐரோப்பா கண்டத்திற்கும் பரவியது. ஐரோப்பாவில் முதல் காகித ஆலை கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாட்டில் நிறுவப்பட்டது.

சென்னை ஆட்டோ ரிக்ஷா கூட்டுறவுச் சங்க உறுப்பினராகவுள்ள எல்லோரிடமும் இது போன்ற உறவு மனப்பான்மை நிரம்ப உள்ளது. அந்த அளவுக்குச் சங்க நிருவாகிகள் ஒவ்வொரு உறுப்பினருடனும் அன்புள்ளத்துடன் தொடர்பு கொண்டு செயல்பட்டு வருகின்றனர்.

திரு. ஏ.வி.பி. ஆசைத்தம்பி தலைவராகவும், துணைத் தலைவராக திரு. எஸ். வி. நல்லையாவும், செயலாளராக கே. நரசிம்மலு அவர்களும், இயக்குநர்களாகதிருவாளர்கள் நீல நாராயணன், எம்.எல்.சி., ஏ. தட்சிணாமூர்த்தி, எம். முத்துசாமி, டி. வேணு, தமிழ் நாடு தொழில் கூட்டுறவு வங்கியின் முகவர் ஆகியோரும் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களில் டி. வேணு, எம். முத்துசாமி, ஏ. தட்சிணாமூர்த்தி ஆகியோர் ஓட்டுநர்கள் ஆவார்கள்.

சேலம், கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களிலும் ஆட்டோ-ரிக்ஷாக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள இந்தக் கூட்டுறவுச் சங்கம்தான் அதிக அளவில் ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்கியுள்ளது. சென்னையிலுள்ள ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கத்திற்கு மட்டும் தான் பெட்ரோல் பங்க் சொந்தமாக உள்ளது.

இந்தப் பெட்ரோல் பங்க் நாள் முழுமையும் 24 மணி நேரம் பணியாற்றுகிறது. 3 பிரிவினர் எட்டு மணி நேரத்திற்கு ஒரு பிரிவாக இருந்து பணியாற்றுகின்றனர். மாதந்தோறும் இந்தப் பெட்ரோல் பங்கில் 45,000 லிட்டர் பெட்ரோல், 12,000 லிட்டர் டீசல், 3,000 லிட்டர் ஆட்டோ ஆயில் முதலியன விற்பனையாகிறது.

1970-71-ஆம் ஆண்டில் ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு 1970---71-ம் ஆண்டில் ரூ.20,053, 1971---72-ம் ஆண்டில் ரூ. 48,220-ம், 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 44,000 -ம் இலாபமாகக் கிடைத்துள்ளது.

பங்குத் தொகை அளித்துள்ள உறுப்பினர்களுக்கு ஆறு சதவிகிதம் டிவிடெண்ட் அளிக்கப்படுவதுடன், ஒரு ஜோடி சீருடைகளும் வழங்கப்படுகிறது. பொது நல நிதியிலிருந்து ஏழ்மை நிலையிலுள்ள உறுப்பினர்களுக்கு வேட்டிகளும் அவர்களுடைய குடும்பத்தாருக்குப் புடவைகளும் வழங்கப்படுகின்றன.

ஒரு குடும்பத்திலுள்ள பாச உணர்வோடு செயல் பட்டு வரும் இந்த ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கம் மிகச் சிறப்பாகவும் சங்கங்களுக்கு நல்ல முன்னோடியாகவும் விளங்கக் காரணம் என்ன?

நிருவாகிகளின் உழைப்பும் ஆற்றலும் தான் என்றாலும் அந்தக் கேள்வியை நாம் அங்குப் பணியாற்றுபவர்களிடம் கேட்டால் அவர்களிடமிருந்து வரும் பதில் ''சங்கத்தின் விதிமுறைகளைக் கடைபிடிப்பதில் கண்டிப்பாக இருந்து வருகிறோம். ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் தனிப் பதிவேடு போட்டுப் பணியாற்றி வருகிறோம். சங்கத் தலைவரும் மற்றவர்களும் தக்க ஆலோசனை நல்குகின்றனர்'' என்கின்றனர்.

இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தமிழ் நாடு தொழில் கூட்டுறவு வங்கிநிதி, உதவி அளித்து வருகிறது.

ஓட்டுநரே உரிமையாளராக பணியாற்றும் இந்தக் கூட்டுறவுச் சங்கம் போல இயங்கி வருவது இதன் சகோதர அமைப்பாக விளங்கும் சிட்டி-கேப் டிரைவர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம். இது பற்றிய விவரங்களை அடுத்த இதழில் காணலாம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்.
சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.





பிஞ்சு உள்ளங்களிலிருந்து
பிறந்த இந்தச் சித்திரங்
கள் — சிறந்தவை எனத்
தேர்தெடுக்கப்பெற்ற சித்தி
**ரங்கள் எல்லாம் தொகுக்**
**கப்பெற்றுக் கண்காட்சி**
ஒன்றை நடத்தவும் அரும்
பொருட்காட்சியகம் முடிவு
செய்திருக்கிறது.

செப்டம்பர்த் திங்களில்,
தமிழ் நாட்டுப் பழங்காலக்
குடிமக்கள் பற்றிய கண்காட்சி
ஒன்றை நடத்தவும், அதில்
குறவஞ்சி நடன நாடக
விருந்து படைக்கவும் அரும்
பொருட் காட்சியகம் ஆக்க
வேலைகளைக் கவனித்து வரு
கின்றது.



நாளையத் தலைமுறைகளான
இன்றையச் சிறுர்கள் சித்
திரத்திலும் சிறந்து விளங்கும்
வண்ணம் அவர்களுக்கு ஊக்க
மூட்டுகிறது இந்தப் போட்டி.
இதுபோன்ற மாணவர் மன
வளர்ச்சிக்கு வழி கோலும்
போட்டிகள், தேர்வுகள் முத
லியன வரவேற்கத்தக்க
னவாகும்.

வருகாலச் சமுதாயம் வள
முள்ளதாகத் திகழ்ந்திட —
எதிர்காலம் ஒளிமயமானதாக
விளங்கிட — இன்றைய
மாணவர்களை நாம் நல்வழி
களில் தயார்படுத்த வேண்
டும். அந்தப் பணியில் ஈடு
பட்டிருக்கும் எவரையும்
நாம் வாழ்த்தி வர
வேற்போமாக!

பி.வி.ஜி.

# அறிஞர் அண்ணாவின் அமுத மொழிகள்

**பலாச்சுளை!**

மேலே முள், முரட்டுத்தனமான உருவம்,
முட்களைக் கொண்ட தோல் மூடியிருக்கிறது.
ஆனால் உள்ளே உருசியான பழச்சுளைகள்; உண்ண
உண்ணத் தெவிட்டாத பழச்சுளைகள்; உடலுக்கு
உறுதியான பழச்சுளைகள். முள் நீக்கித் தோலை
உரித்தெடுத்துப் பெறும் பலாச்சுளையைப் போன்
றதுதான் இசை!

**தொடர்கதை!**

அறிவு ஒரு தொடர்கதை! அதற்கு ஆசிரி
யர்கள் தொடர்ந்து தோன்றியபடி இருக்கிறார்கள்;
இனியும் தோன்றுவார்கள்; உள்ளங் கவர் புத்த
கங்கள் மேலும் பலப்பல வெளிவந்தபடிதான்
இருக்கும்.

**விடை காணுங்கள்!**

தமிழில், வரலாறுகளில் வரும் விடுதலை வீரர்
களைத் தீட்டிக் காட்டுங்கள்—விஞ்ஞான முன்னேற்
றத்தை விளக்குங்கள். மத—மூடநம்பிக்கைகளைத்
தகர்த்தெறியுங்கள். வாழ்ந்த இனம் ஏன்
வீழ்ந்தது? எந்தக் கருத்துக்களைக் கையாள
நேரிட்டதால் என்றெல்லாம் கேளுங்கள். விடை
காணுங்கள்!

**மாந்தோப்பு!**

நல்ல மாந்தோப்பு அமைய—நல்ல களம்—
விளைநிலம் எப்படி முக்கியமாகிறதோ—மூலமாகி
றதோ அப்படியேதான் மனிதன் தரமும், பண்பும்
படைத்தவனாக நல்ல வாழ்வு—நாகரிக வாழ்வு
வாழ வேண்டுமானால், மனிதன் வாழ்ந்திடும் களம்-
நிலம், சமுதாயம், சமுதாயத்தின் நிலை, சூழ்நிலை
முக்கியமாகிறது—மூலமும் ஆகிறது!

**சிற்பியும் கற்பாறையும்!**

சிற்பியிடம் கற்பாறை தரப்படுகிறது. அவன்
வேலைக்கான மூலப்பொருள் — இனி அவனுக்குத்
தேவை சிறிய உளியும், பெரிய உள்ளமும்; சுதந்திர
இந்தியாவிலே இது போலவே வாலிபர்களுக்குப்
பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் தேவை,
புதுவாழ்வு பெற—முழு வாழ்வு பெற!

**மலர்மாலை!**

மலர் கொண்டு மாலை தொடுத்தலிலே கைத்
திறன் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் கைத்
திறன் முழுவதும் காட்டிக் காகிதப் பூமாலை தொடுத்
தால் பயன் என்ன? மாலைக்கு முதற்பொருள்
மணமுள்ள மலர். அதுபோலப் பேச்சுக்கு முதற்
பொருள் சுவையும் பயனும் உள்ள கருத்துக்கள்.






ஓலையிலே பிறந்திட்டேன் ஒருகா லத்தில்;
ஒளிவண்ணக் காகிதத்தில் மெருக டைந்தேன்;
சாலையிலே இளஞ்சிறுவர் என்னை வைத்தே
சந்தடியை எழுப்பிடுவர் அந்த நாளில்;
'வேலையிலே கூலியிலே' என்றி டாமல்
வெற்றிக்கு வித்திட்ட வித்த கன்நான்!
பாலையிலேலோர் சோலையெனக் கட்ட டத்தில்
பாருங்கள் உச்சியிலே நானி ருப்பேன்.

பட்டத்தில் உறவுண்டு; பறப்ப தில்லை;
பகைவர்கள் பாடுபஞ்சு பட்ட பாடே;
வட்டத்தில் சரிபாதி விட்டம்; வட்ட
வளையத்தின் மீதினிலென் ஆல வட்டம்:
சட்டத்தில். திட்டத்தில் மாற்றந் தோன்றும்;
சக்கரமோ நாற்சதுரம் ஆவ தில்லை;
கட்டத்தில பலகோணங் கள்போல், கால
கட்டத்தில் வடிவங்கள் காணு கின்றேன்.

எனக்குமறு பேருண்டு; 'விசிறி' என்பார்;
யார்யார்க்கோ விசிறியான மாணி டர்க்குத்
தனக்குநலம் பேணாத தொண்டன் ஆனேன்;
தாமிரப்பட் டயம்வாங்காத் தியாகி யானேன்
எனக்கொருவர் இல்லையன்பு பாராட் டத்தான்;
எல்லாரும் எடுத்தெறிந்தே வீசு கின்றார்!
மனக்கவலை கொண்டேறு இதனால் எல்லாம்?
மக்களுக்கே உழைக்கின்ற பிறவி நான்தான்!

எப்போதும் சுற்றிக்கொண் டிருப்பேன்; சற்றும்
என்னுடம்பு வேர்ப்பதில்லை உங்க ளைப்போல்
வெப்பத்தால் தெப்பமாக நனைந்து விட்டால்,
வீசுகின்ற பூந்தென்றல் ஆவேன்; கட்டில்
கப்பலிலே நீந்துங்கால் கொசுப்ப டைகள்
கட்டாயம் தாக்கிடாது நானி ருந்தால்!
தப்பென்ன செய்திட்டேன்? என்னை ஏனோ
தண்டித்துக் கண்டித்தீர் குளிர்கா லத்தில்?

தடையற்றுச் சுழலுவதால் தானே, ஆக்கும்
சக்தியானேன்; சங்கதியு மானேன் இன்று!
விடையற்றுப் போயிருந்தால் ஓடு வேனு?
விசையோடு பறப்பேனு விண்ணில்? நீரை
நடைமுற்றத் தொட்டியிலே நிரப்பு வேனு?
நடுக்கடலுக் கழைப்பேனு படகில்? வையம்
அடையாள மாய்வைத்த பேர்காற் றாடி;
ஐயாவே என்னாலே நன்மை கோடி!

காற்றினிலே ஆடிக்காற் றாடி யானேன்;
காற்றோடு போகின்ற புழுதி யல்ல;
காற்றுடன்மற் போர்புரிந்தே வாழு கின்றேன்
காலமெல்லாம் என்கோலம் எதிர்நீச் சல்தான்
சேற்றெருமை போல்குறிக்கோள் இல்லார் தம்மைச்
சேர்த்தென்னை டொப்பிடுதல் என்ன நீதி?
நேற்றைக்கும் இன்றைக்கும் கொள்கை யொன்றே
நிலையாக என்திசையில் நிமிர்ந்து நிற்பேன்!

இளங்கோ

# கலை செறிந்த நாட்டின் கவின்மிகுந்த படையல்!



இன்றே வாங்குங்கள்

**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

முதல் பரிசு:

# ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும்.
மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**61-வது குலுக்கல் நாள்: 13-11-1973**

**பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்**

*கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*
*இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2*
*விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,*
*மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை 9*

செலவு ஒரு ரூபாய்



வரவோ லட்ச ரூபாய்

# திருப்பத்தூர் வட்டாரத்தில் அணுசக்திப் பொருட்கள்



தமிழகத்தில், தொழில் மயமாகும் பணிகள் வேகம் பெற்று வருவதையும், கனிப் பொருள் வர்த்தகம் விரிவடைந்து வருவதையும் தொடர்ந்து, கனிச் செல்வப் பொருளாதாரத்தில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. கேந்திர கனிப் பொருள் வகையில் (Key Minerals) தமிழகம் பற்றாக்குறை மாநிலமாக உள்ளது என்றாலும், பொதுப் படையாகக் கனிப் பொருள்கள் உற்பத்தியில் மாநிலம் முக்கிய இடம் வகித்து வருகின்றது.

மாநிலத்தில் 1961–ல் எடுக்கப் பெற்ற கனிப் பொருள்களின் மதிப்பு 317 இலட்சம் ரூபாய். 1965–ல் இது 868 இலட்சம் ரூபாயாக உயர்ந்தது. 1970–ஆம் ஆண்டில் எடுக்கப் பெற்ற கனிப் பொருட்களின் மதிப்பு 1,125 இலட்சம் ரூபாய் ஆகும்.

கஞ்சமலை இரும்புக் கனியையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் பயன்படுத்தி உருக்குத் தொழிற்சாலை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மூன்றாம் திட்டக் காலத்தில் சேலம் அருகே கஞ்சமலை, கோடுமலை ஆகியவைகளில் இரும்புக் கனிவளம் குறித்து விரிவான ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து தமிழக அரசினர், சோதனைச் சுரங்கம், துளையிடு வேலைகள், மாதிரிகளைச் சோதித்தல், தரை இயல் குறிப்புகளைத் தயாரித்தல் முதலிய பணிகளை மேற்கொண்டனர். சேலம் மாவட்டத்தில் சுண்ணாம்புக் கல் படிவங்கள் நிலை குறித்தும், இரும்பு உருக்குத் தொழிலுக்கு அவை எந்த அளவில் பயன்படும் என்பது குறித்தும் விரிவான ஆய்வு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## சுண்ணாம்புக்கல்

இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் சுண்ணாம்புக் கல் படிவங்கள் குறித்தும் சிமிட்டித் தொழிற்சாலைகளுக்கு அவை எந்த அளவில் பயன்படும் என்பது பற்றியும் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வுகள் மற்றொரு குறிப்பிடத் தக்க சாதனையாகும். இந்த ஆய்வுகள், அளவு மதிப்பீடுகளின் பயனாக சிமிட்டி செய்வதற்குப் பயன்படக் கூடிய சுண்ணாம்புக் கல் படிவங்கள் சுமார் 20 கோடி டன் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இதன் தொடர்பாகத் தனியார் துறையில் இரண்டும், பொதுத் துறையில் ஒன்றுமாக மூன்று சிமிட்டித் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன.

அலுமினியம் செய்வதற்கான தாதுப் பொருளான பாக்சைட் வளம் குறித்து விரிவான ஆய்வுகளைத் தொடர்ந்து 75 லட்சம் டன் பாக்சைட் படிவங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. அதன் தொடர்பாக மேட்டூரில் ஆண்டு ஒன்றுக்கு 10,000 டன் அலுமினியக் கட்டிகள் தயாரிக்கும் திறனுடன் 'மால்கோ' தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுக்கு 20,000 டன் அலுமினியம் உற்பத்தி செய்யக் கூடிய வகையில் இந்தத் தொழிற்சாலை இப்போது விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் சிமிட்டித் தொழிற்சாலைகளின் கூடுதல் தேவையை ஈடு கட்டுவதற்கு உதவக் கூடிய ஜிப்சம் படிவங்கள் 20 லட்சம் டன் அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பீங்கான் பொருட்கள் செய்வதற்குப் பயன்படும் வெங்கச் செங்கல், ஃபெல்ஸ்பார் படிவங்கள் 5 லட்சம் டன் அளவில் உள்ளன.

## ஆய்வுப் பணிகள்

நான்காம் திட்டக் காலத்தில் கனிச் செல்வ வளத்தைக் கண்டறிந்து பயன்படுத்தும் பணிகள், முந்தைய திட்டப் பணிகளின் அடிப்படையில் அமைக்கப் பெற்றன. 1967, 1968, 1969 ஆகிய ஆண்டுகளில் ஆண்டு வாரித் திட்டப் பணிகளின் போது, இதுகாறும் இவ்வகையில் சர்வே செய்யப்படாத பகுதிகளில், குறிப்பாக திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகளில் முறைப்படி கனிவளச் சர்வே வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. நான்காவது திட்டக் காலத் தொடக்கத்தில், ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்ட பகுதிகளில் சுண்ணாம்புக்கல், கிராபைட், இரும்புக் கனிகள் ஆகியவற்றைக் குறிவைத்துக் குடைவு வேலைகள் (டிரில்லிங்) நடைபெற்றன. இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தின் சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதிகளில் 3 கோடி டன் சுண்ணாம்புக் கல் இருப்பது தெரிய வந்தது. இதன் தொடர்பாகத் தமிழ்நாடு சிமிட்டித் தொழிற்சாலையை அரசினர் ஏற்படுத்தினர்.

சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கண்டறியப்பட்ட உயர்ரகச் சுண்ணாம்புக் கல் படிவங்கள் மறு ஆய்வும் மதிப்பீடும் செய்யப்பட்டு, உத்தேச, சேலம் உருக்காலைத் திட்டத்துக்காக அப்பகுதிகளை ஒதுக்கி வைக்கவேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டத்தில் சிலிமனைட் கணிசமான அளவில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, 'சதர்னர் மைன்ஸ் அண்டு மெட்டல்ஸ்' நிறுவனத்தார் அதனை எடுத்துப் பயன் படுத்தி வருகிறார்கள்.

உற்பத்தியான கனிவளங்களின் மதிப்பைப் பொறுத்த வரை 1970–ஆம் ஆண்டில் தமிழ்நாடு இந்தியாவிலுள்ள மாநிலங்களில் 7வது இடத்தை வகித்தது.

> **ஒன்றுக்குப் பத்து மடங்கு வேலை வாய்ப்பு!**
>
> நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் உருக்கு உற்பத்திக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உருக்குத் தொழிற்சாலையில் ஒரு நபருக்கு வேலை கிடைக்கிறது என்றால், உருக்கை மூலப் பொருளாகப் பயன்படுத்தும் மற்ற தொழிற்சாலைகள் மூலம் ஏறத்தாழ 10 பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பது உண்மை நிலவரம். இந்தத் தொழிற்சாலை வேலைகள் தவிர்த்துச் சுரங்கம், போக்குவரத்து, கட்டுமானம் போன்ற துறைகளிலும் பலருக்கு வேலை கிடைக்கும். நாட்டின் பொருளாதார இயக்கத்துக்கு அளவு கருவியாக இருப்பது உருக்கு உற்பத்தி.

## ஐ. நா. வல்லுநர்கள் உதவி

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் ஆதரவில் 1968-ல் தமிழ்நாடு கனிவள அபிவிருத்தித் திட்டம் தொடங்கப் பெற்றது. மாநிலத்தில் புவியியல் ஆய்வுப் பணிகளில் இது மிக முக்கியமான திருப்பம் ஆகும். இந்த திட்டத்தின் கீழ் ஐ. நா. வல்லுநர்கள் மாநிலத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நவீன முறையில் கனிவளங்களை ஆராயும் பணிகளை மேற்கொண்டார்கள். இப்பணி சம்பந்தமான நிபந்தனைக்கிணங்க மாநில அரசினர் 1968லிருந்து 1971 வரை ஆன மூன்று ஆண்டுகளுக்கு ரூ. 34·62 லட்சம் நிதி தந்தனர். ஐ நா. அபிவிருத்தித் திட்ட நிறுவனம் ரூ. 78·79 லட்சம் தந்தது. மொத்தத்தில் இத்திட்டத்துக்குச் செலவு ரூ. 105·09 லட்சம் ஆகும். வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் 17,000 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள பகுதிகள் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் முனைப்பான விரிவான ஆய்வுப் பணிகளுக்கு உள்ளாயின. இந்த சர்வேயையும் தொடர்பான தரைமட்ட வேலைகளையும் தொடர்ந்து, வட ஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை கவுதிமலை காட்டுப் பதியில் பெருமளவில் இரும்புக் கனிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இரும்புக் கனிவளம் 1·4 கோடி டன் இருக்கலாமென வல்லுநர்கள் மதிப்பிட்டிருக்கிறார்கள். இந்தக் கனிகளில் இரும்பு 40–லிருந்து 44 சதவிகிதம் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. இந்த் இரும்புக் கனிகளைப் பயன்படுத்தக் கூடிய தொழிற்கூடங்களை ஏற்படுத்த இயலுமா என்பது பற்றி விரிவாக ஆராயும்படித் தமிழக அரசினர் ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பினைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## அணுக்கதிர்க் கனிகள் :

திருப்பத்தூர் வட்டத்தில் மற்றொரு அரிய கனிப்பொருள் கண்டுபிடிப்பும் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கதாகும். உரேனியம், நியோபியம், டான்டலம் ஆகிய கனிச் செறிமானங்கள் அடங்கிய கதிரியக்க பைரோக்ளோர் படிவங்கள் திருப்பத்தூர் வட்டம் சேவத்தூர் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக இந்த அரிய கனிச் செல்வம் குறித்து அணுசக்திக் கமிஷன் விரிவான ஆய்வு வேலைகளை மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அரிய கனிப் பொருட்களின் தன்மைகளை உய்த்துணர்வதில் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியும் கிடைத்துள்ளது. அட்டாமிக் அப்சார்ப்ஷன், ஸ்பெக்ரோபோட்டோமீட்டர், எலக்ட்ரோ மாக்னடிக் கருவிகள், காமா கதிரியக்கம் முதலிய விலையுயர்ந்த அரிய கருவிகள் கிடைக்கப் பெற்றுப் பூர்வாங்க ஆய்வுக் கூட வசதிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அமைப்பினர் இந்தக் கருவிகளைக் கையாளுவதில் பயிற்சியும் அளிக்கின்றனர்.

இந்தக் கனிச் செல்வ ஆய்வு குறித்து முனைப்பான வேலைகளில் இரண்டாவது கட்டமாகச் சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இதற்கான உதவி கோரப்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டத்தில் மேற்கொண்டு 13,000 சதுர மைல் பரப்பில் முனைப்பான ஆய்வு வேலைகள் மேற்கொள்ள வேண்டும் என்பது நோக்கம் ஆகும்.

மற்ற செல்வ வளங்களுக்கும் பூமிக்கடியில் உள்ள கனிச் செல்வ வளத்துக்கும் இடையே ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. கனிச் செல்வத்தை ஒரு தடவை எடுத்துப் பயன்படுத்தி விட்டால் அந்த ஒரே மகசூலுடன் அது தீர்ந்துவிடுகிறது. மீண்டும் மீண்டும் தழைப்பதில்லை கனிச் செல்வம். எனவே இந்தச் செல்வத்தைப் பாங்குடன் பேணுவதும் சேதமில்லாமல், முறையாக எடுப்பதும் அவசியம். விஞ்ஞான பூர்வ முறையில் ஆராய்ந்து இந்தச் செல்வத்தைப் பயன்படுத்துவதும், திறமையான நிருவாக அமைப்பும் இதில் முக்கியமானவை.

—சி. க. ரா.

# தமிழரசு

1-11-1973 40காசு

3-NOV 1973
11097



# இந்திய ராக்கெட்டுகள்



இந்தியாவிலுள்ள ராக்கெட் செலுத்தும் நிலையங்கள் அனைத்தும், இந்தியாவில் செய்த ராக்கெட்டுகளையே படிப்படியாகப் பயன்படுத்த வேண்டும் என்னும் புதிய கொள்கையை உறுதியாகக் கடைபிடித்து வருகின்றன. 1972-73-ஆம் ஆண்டில் தும்பா, ஸ்ரீஹரிகோட்டா ராக்கெட் நிலையங்கள் மொத்தம் 107 ராக்கெட்டுகளை வானில் செலுத்தின. இவற்றுள் 59 ராக்கெட்டுகள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 224 ராக்கெட்டுகள் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ராக்கெட்டுகள் அளவிலும், தொழில் நுட்பத் தன்மையிலும் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. இவை ஒவ்வொன்றின் விலையும் 5,000 ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வரையில் வேறுபடுகிறது.

இந்தியாவில் செய்யப்படும் ராக்கெட்டுகள் பல விதங்களில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ராக்கெட்டுகளைவிட மேலாக இயங்குகின்றன. இவற்றின் வடிவமைப்பும், தொழில் நுட்பத் திறனும் தேர்ச்சியடைந்த நிலையில் உள்ளன. இந்தியாவில் செய்யப்படும் ராக்கெட்டுகளில் உள்ள உந்துவிசைச் சாதனங்களும் திறம்பட இயங்குகின்றன.

மேற்கு ஜெர்மனி, ஜப்பான், பிரிட்டன், அமெரிக்கா, சோவியத் யூனியன் போன்ற பல நாடுகள் ராக்கெட் செலுத்தும் துறையில் உதவுவதற்காக இந்தியாவுடன் பல ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

காற்று மண்டலம், அயன மண்டலம் ஆகியவற்றில் கூட்டுப் பரிசோதனை செய்வதற்காக தும்பா ராக்கெட் நிலையத்திலிருந்து பரிசோதனை ராக்கெட்டுகளைச் செலுதத்துவது மட்டுமல்லாமல், இந்தியாவில் டெலிவிஷன், தகவல் தொடர்பு அமைப்புகளை மேலும் பரவலாக்குவதற்கும், உறுதிப்படுத்துவதற்கும் தகவல் தொடர்பு செயற்கைக் கோளைப் பயன்படுத்துவது பற்றி அமெரிக்காவின் உதவியுடன் ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.




# கேளுங்கள்? கொடுக்கப்படும்!



—'தமிழரசு' (1-6-73) வெளியீட்டின் வாயிலாக சப்போட்டாவைப் பற்றிப் படித்தேன். கோ. 1 சப்போட்டாக் கன்றுகளை என்னுடைய தோட்டத்தில் நட விரும்புகிறேன். எனவே, எந்த மாதத்தில் நட வேண்டும்? முக்கியமாக ஜூலை ஆகஸ்டு தவிர இதர மாதங்களில் நடலாமா? கன்றுகள் கிடைக்கும் கும் முழு விலாசமும் தயவு செய்து தெரிவிக்க வேண்டுகிறே கிறேன்.

—டி. நடராசன்,
ஊராட்சி மன்றத் தலைவர்,
திருப்புடைமருதூர் (அஞ்சல்)
அம்பாசமுத்திரம் வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

**விடை.**—கோ. 1 சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை ஜூலை, ஆகஸ்டு மதங்களில் நடுவதே சிறந்தது. தவிர்க்க முடியாத காரணங்களால் மேற்கூறிய மாதங்களில் நட முடியவில்லை எனில் செப்டம்பர் மாதத்திலும் கோ. 1 சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை நடலாம். ஆனல் செப்டம்பர் மாதத்திற்குப் பிறகு நடுவது நல்லதல்ல.

கோ. 1 சப்போட்டா ஒட்டுக் கன்றுகளை கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகப் பழத் தோட்டத்திலிருந்து அல்லது பல்கலைக் கழக விதை விற்பனை நிலையத்திலிருந்து நேரடியாக விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

தாங்கள் நிறைய கோ. 1 சப்போட்டாக் கன்றுகள் பெற விரும்பினல் பின்கண்ட முகவரிக்கு எழுதி 'எவ்வளவு முன் பணம் கட்ட வேண்டும்? எப்பொழுது கன்றுகள் கிடைக்கும்? என்பதை தெரிந்து கொள்ளலாம்.




முன் பணம் கட்டிவிட்டு, எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதையும், அருகில் உள்ள புகை வண்டி நிலைய முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதினல், உங்களுக்குத் தேவையான கன்றுகளை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்வார்கள்.

—கோ. 6304 கரும்பு புயிரிட்டு நான்கு மாதங்கள் ஆகின்றன. தற்பொழுது தோகை முழுவதும் வெளுத்து விட்டது. 'பெர்ரஸ் சல்பேட்' அடிக்க முடியாத படி வளர்ந்து விட்டது. இதற்கு வேறு வகையில் என்ன செய்யலாம் என்பதை விளக்க வேண்டும்.

—ஆ. சாமுவேல்,
அரசினர் உயர்நிலை' பள்ளி,
பூலாம்பாடி,
திருச்சி மாவட்டம்,

**விடை:**—கரும்புக்குத் தேவையான இரும்புச் சத்து நிலத்திலிருந்து கிடைக்காவிட்டால் தான் கரும்பின் தோகைகள் வெளுத்துக் காணப்படும். இதைக் 'குளோரோசிஸ்' (Chlorosis) என்றும், 'வெண்சோகை' என்றும் கூறப்படுகிறது. இந்த நோய் கரும்பின் வளர்ச்சியையும், மகசூலையும், சர்க்கரைச் சத்தையும் குறைத்துவிடும். 'வெண்சோகை' ஆரம்ப நிலையில் இருக்குமானல் நிலத்திற்குச் சிறிது அளவு அதிகத் தழைச்சத்து இட்டால், இந்நிலை மாறி, தோகைகள் பசுமை நிறமாக மாறக்கூடும். ஏக்கருக்குச் சுமார் 25 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 11 கிலோ யூரியா தூவித் தண்ணீர் கட்டவும். தழைச்சத்து இரும்புச் சத்தை விடுவிப்பதால், கரும்பின் தோகைகள் கரும் பச்சை நிறத்திற்கு மாறக்கூடும். இவ்வாறு செய்வதன் மூலம், கரும்புத் தோகைகளின் நிறம் மாறவில்லையானல், இரும்புச் சத்தை நேரடியாகத் தோகைகள் மூலம் கரும்புக்குக் கிடைக்கச் செய்வதே சிறந்தது. இதற்கு 'பெர்ரஸ் சல்பேட்' (Ferrous Sulphate) என்னும் இரசாயன உப்பைத் தண்ணீரில் கரைத்துத் தெளிக்க வேண்டும். 'பெர்ரஸ் சல்பேட்' 'அன்ன பேதி' என்னும் விற்பனைப் பெயரில் மருந்துக் கடைகளில் கிடைக்கக் கூடும்.

ஒரு ஏக்கருக்கு 0.5 சத 'பெர்ரஸ் சல்பேட்' மருந்தில் 500 கிராம் எடுத்து 100 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிப்பான் ( Sprayer ) மூலம் கரும்புத் தோகைகளின் மேல் தெளிக்க வேண்டும். கரும்பு மிகவும் உயரமாக வளர்ந்திருந்தால், 'ஹை-டிரீ ஸ்ப்ரேயர்' ( Hi-tree sprayer ) மூலம் எளிதில் தெளிக்க முடியும். இவ்வாறு வாரம் ஒரு முறை வீதம் 2 அல்லது 3 முறை தெளித்தால் கரும்பின் தோகைகள் கரும் பச்சை நிறமாக மாறிவிடும்.

உங்கள் பகுதியில் உள்ள துணை வேளாண்மை அலுவலர் (கரும்பு) அவர்களையோ உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களையோ அழைத்துச் சென்று தங்கள் கரும்பைக் காட்டி, வெண்சோகையினல் தங்கள் கரும்பு தாக்கப்பட்டுள்ளது என்று அவர்கள் கூறினல், அதன்பின், 'பெர்ரஸ் சல்பேட்' தெளிப்பதே நல்லது.










செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசிய மானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸடார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டுப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

. பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.

. சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

**ஸ்விட்சகியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டுப்ரோ லிமிடெட்**
P.O. Box 9922, ... P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 Post Bag 5247, சென்னை 2.




?—எங்களுடைய கிணற்றில் ஆள் உயரம் வேலம்பாசி வளர்ந்து தண்ணீரின் இயல்பை வேறுவித வாசனையாக்கி உள்ளது. இதனால் பயிர் பாதிக்கப்படுகிறது என்று நினைக்கின்றேன். இதைப் போக்க வழி என்ன ?

—எஸ். சிராமுலு.
மட்டத்தாரி கிராமம்,
ஆரணி வட்டம், வட
ஆர்க்காடு மாவட்டம்.

விடை:—தங்களுடைய கிணற்றில் உள்ள வேலம்பாசியினால், தண்ணீரின் நிறம் பசுமையாக மாறிவிடுவதுடன், சுவையும் மாறிவிடும்! இதனால் பொதுவாகப் பயிர்கள் பாதிக்கப்படுவதில்லை. ஆனால் வேலம்பாசியின் துண்டுகள் இறைக்கப்படும் தண்ணீருடன் வெளியில் வந்து நிலத்தில் படிந்தால், அவை எளிதில் வேரூன்றி நிலத்தில் பரவக்கூடும். ஆகவே கிணற்றில் உள்ள வேலம்பாசியை அகற்றிவிடுவதே நல்லது.

தங்கள் கிணற்றிலுள்ள வேலம்பாசியை அகற்றக் கிணற்றுத் தண்ணீரை நன்கு இறைத்து விட்டுக் கிணற்றில் உள்ள பாசியை அகற்றிவிட வேண்டும். கிணற்றின் சுவர்களைத் தேய்த்துச் சுத்தமாக வைத்திருந்தால் பாசிகள் முளைக்காது. கிணற்றுத் தண்ணீரை இறைத்து சுத்தமாக வடிக்க முடியாதெனின், கிணற்றில், மூழ்கி வேலம் பாசியை அரித்து எடுத்து விடலாம். அப்படி அரித்து எடுக்க முடியவில்லை எனில், கிணற்றுத் தண்ணீரில் மயில் துத்தத்தைக் கலக்க வேண்டும். கிணற்றுச் சுவரின் பக்கங்களை நன்கு சுத்தம் செய்தபின்பு, பத்து இலட்சம் பங்கு தண்ணீருக்கு அரைப்பங்கு மயில்துத்தம் என்ற அளவில் கலக்க வேண்டும். மயில் துத்தத்தை சிறுசிறு மூட்டைகளாகத் துணியில் கட்டிக் கிணற்றில் போட்டுவிட வேண்டும். ஒரு வாரத்தில் பாசி இறக்கவில்லை எனில், மீண்டும் ஒரு முறை மயில் துத்தத்தை மேற் குறிப்பிட்டவாறு கணக்கிட்டு எடுத்துக்கொண்டு துணியில் சிறுசிறு முடிச்சுகளாகக் கட்டிக் கிணற்றுநீரில் போடவும்.



குறிப்பிட்ட அளவிற்கும் அதிக அளவில் மயில்துத்தத்தைப் போட்டால், கிணற்றில் உள்ள மீன்கள் இறந்துவிடும். அத்துடன் கிணற்று நீரின் சுவையும் மாறிவிடும். அது கால்நடைகளுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடும். எனவே, மயில் துத்தம் போட்ட பிறகு, கிணற்று நீரை மனிதர்களோ, கால்நடைகளோ குடிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு மயில் துத்தத்தைக் கிணற்று நீரில் கலந்து வேலம் பாசியையும், இதர பாசிகளையும் அழித்து விடலாம்.





?—நான் கோழிப் பண்ணை ஒன்று வைக்க உத்தேசித்துள்ளேன். அதற்கு நான் எங்குக் கடன் வசதி பெற விண்ணப்பிக்க வேண்டும்? . வழி முறைகள் என்ன என்பதைத் தெரிவித்தால் பயனுடையதாய் இருக்கும்.

—வே. ந. உலகநாதன்,
31, காந்தி ரோடு, காமராஜ் நகர், சீனிவாச நகர், (அஞ்சல்), தாம்பரம்.

விடை:—தங்களுக்குக் கோழிப் பண்ணை வைப்பதற்காகத் தாம்பரத்தில் உள்ள 'ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா' கடன் கொடுத்து உதவும். அவ்வங்கி தாம்பரம் அருகில் உள்ள அஸ்தினபுரம் என்ற ஊரில் உள்ள பலருக்குக் கோழிப் பண்ணை அமைக்கக் கடன் கொடுத்துள்ளது. கடன் பெறுவதற்குரிய மனு, வழி முறைகள் ஆகியவைகளைப் பற்றித் தாம்பரம் ஸ்டேட் பாங்கியில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். உங்கள் அருகாமையில் உள்ள 'பேங் ஆப் பரோடாவும்' கோழிப் பண்ணை அமைக்கக் கடன் கொடுத்து வருகிறது. நீங்கள் அவ்வங்கிகளுக்கு நேரடியாகச் சென்று வங்கியின் முகவரைச் (Agent) சந்தித்து விவரம் கேட்டால், அவர் விவரம் கூறி உதவுவார்.

?—எனக்கு ஒரே இடத்தில் 2 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. அதில் தென்னம் பிள்ளையும், கொய்யாவும் வைக்கலாம் என்று இருக்கின்றேன். இதற்கு யாரிடம் கடன் வாங்க மனுச் செய்ய வேண்டும்? எவ்வளவு பணம் கடனாக கிடைக்கும் என்ற விவரத்தினையும், பம்பு செட் வைத்தால் அதற்கும் யாரிடம் கடன் வாங்க மனு செய்ய வேண்டும் என்ற விவரத்தினையும், தனிப்பட்ட நபர் என்ற முறையில் எவ்வளவு பணம் கடனாகக் கொடுப்பார்கள் என்ற விவரத்தினையும் தயவு செய்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் 2 ஏக்கர் புன்செய் நிலத்தில் அதிகச் சிரமம் இல்லாமல் அதிக இலாபம் தரும் பயிர்கள் என்னென்ன பயிரிடலாம் என்ற விபரத்தினையும், தயவு செய்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பால்மாடுகள் வாங்குவதற்குத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பணம் கடனாகக் கொடுப்பார்களா என்ற விவரத்தினையும் தயவு செய்து தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.!

—எஸ். நாராயணசாமி,
1164, கீழ இராச வீதி,
தஞ்சாவூர்.

விடை.—புதிதாகத் தென்னந் தோப்பு ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை மூலம் ஏக்கருக்கு ரூபாய் 300 வீதம் நீண்ட காலக் கடன் பெறலாம். அதுபோலவே புதிதாகக் கொய்யாப் பழத் தோட்டம் ஏற்படுத்துவதற்கும் ஏக்கருக்கு ரூபாய் 300 வீதம் வேளாண்மைத் துறை மூலம் கடன் பெறலாம். இக்கடனைப் பெறத் தஞ்சாவூரில் உள்ள மாவட்ட வேளாண்மை அலுவலருக்கு மனுச்செய்ய வேண்டும். அதற்குரிய மனுவை அவருடைய அலுவலகத்திலிருந்தே பெற்றுக் கொள்ளலாம். தென்னையையும், கொய்யாவையும் தனித்தனியே வைப்பதென்றால் தான் கடன் கொடுப்பார்கள். இரண்டையும் இணைத்துப் பயிரிடக் கடன் கொடுக்க மாட்டார்கள். கடனில் ஒரு பகுதி கன்றுகளாகவும் மீதம் பணமாகவும் கொடுக்கப்படும்.

பம்பு செட் வைக்கத் தங்கள் அருகாமையில் உள்ள நிலவள வங்கியில் கடன் பெறலாம். ரூபாய் 4,500 வரை கடன் பெற முடியும்.

புன்செய் நிலத்தில் அதிகச் சிரமம் இல்லாமல், அதிக இலாபம் தரும் பயிர்கள் என்னென்ன பயிரிடலாம் என்று கேட்டுள்ளீர்கள்.. புன்செய் நிலத்தில் சிரமப்பட்டால்தான் அதிக இலாபம் பெறமுடியும். சிரமப்படாமல் எந்த நிலத்திலும் அதிக இலாபம் எடுக்க முடியாது. தங்கள் புன்செய் நிலத்தில் நன்கு பாடுபடுவீர்களேயானால் 2 போகம் பயிரிட்டு நல்ல இலாபம் பெறலாம். ஆனி, ஆடி மாதங்களில் பெய்யும் தென்மேற்குப் பருவ மழையைக் கொண்டு டி. எம். வி. 7 அல்லது டி. எம். வி. 10 ரக நிலக்கடலையைப் பயிரிடலாம். நிலக்கடலையில் 6 அல்லது 8 அடி இடைவெளியில் சாலை சாலையாக எஸ். ஏ. 1 துவரையைப் பயிரிடலாம். ஐப்பசியில் நிலக்கடலை அறுவடை முடிந்துவிடும். அதன்பின் துவரை வரிசை வரிசையாக நிற்கும். கார்த்திகை மழையில் துவரை வரிசைகளின் இடையே 'பைசாகி மூங்' என்னும் பச்சைப் பயறு அல்லது பனிப்பயறு அல்லது கொள்ளு விதைத்து இலேசாக உழுதுவிட வேண்டும். இவ்வாறு செய்வதால் துவரையுடன் பயறு அல்லது கொள்ளும் பலன் தரும்.

தென்மேற்குப் பருவ மழையின் உதவி கொண்டு ஆனி, ஆடி மாதங்களில் புன்செய் நிலங்களில் மானாவாரி கொத்து நிலக்கடலை அல்லது சூரிய காந்தி பயிரிட்டால் ஐப்பசியில் அறுவடைக்கு வந்துவிடும். அதன்பின் பெய்யும் வட கிழக்குப் பருவ மழையைக் கொண்டு மானாவாரியாக எச். பி. 3 கம்பு பயிரிடலாம்.

எனவே, முயற்சியும், உழைப்பும் இருக்குமானால் புன்செய் நிலங்களிலும் இரு போகம் பயிரிட்டு அதிக இலாபம் பெற முடியும்.

நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகளும், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும் பால் மாடுகள் வாங்குவதற்குக் கடன் கொடுத்து உதவுகின்றன. தாங்கள் ஏதேனும் ஒரு வங்கிக்குச் சென்று விவரம் தெரிந்து கொண்டு மனு செய்வதே நல்லது.




?—அன்பார்ந்த 'தமிழரசு' ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்! தங்களது பத்திரிகையில் டாக்டர் பா. சின்னத்துரை என்பவர் கோழிப் பண்ணை பற்றி எழுதியிருந்த கட்டுரையைப் படித்தேன். நான் வெகு நாட்களாகக் கோழி வளர்ப்புப் பற்றி ஆலோசித்து வருகின்றேன். தற்சமயம் கோழிப் பண்ணை துவங்க விரும்புகின்றேன். எனது இருப்பிடம் குரோம்பேட்டை. தயவுசெய்து இதற்காக யாரிடம் ஆலோசனை பெறவேண்டும் என்பதையும், எந்த அலுவலர் கோழிப்பண்ணை வைக்க ஏற்பாடு செய்வார், அவருடைய அலுவலகம் எங்குள்ளது போன்ற விவரங்களைத் தெரிவிக்குமாறு கோருகிறேன்.

—திருமதி உமேஸ்வரி
இராம மூர்த்தி,
6, சம்பந்தன் தெரு,
பாரதிபுரம், குரோம்
பேட்டை, சென்னை-44.



விடை:—தாங்கள் கோழிப் பண்ணை அமைக்க விரும்பினால், தங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள கால்நடை வளர்ச்சி அலுவலர் (Extention office for Animal Husbandry) அவர்களது உதவியை நாடலாம். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் (Veterinary Assistant Surgeon) அவர்களது ஆலோசனையையும், உதவியையும் பெறலாம்.

தங்களது இருப்பிடம் குரோம் பேட்டை என்பதால், தாங்கள் சிட்லபாக்கத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் கால்நடை வளர்ச்சி அலுவலர் அவர்கள் உதவியைப் பெறலாம். அவர் மூலமாகவே கால்நடை உதவி மருத்துவர் உதவியையும் பெறலாம்.

— ஆர்.எம்



# சென்னை நகரத்திலேயே நீளமான பாலம்





1842-ஆம் ஆண்டு அடையாற்றில் கட்டப்பட்டது எல்பின்ஸ்டன் பாலம். ஏறக்குறைய 130 வயதை எட்டிவிட்டதால் இந்தப் பாலம் பலவீனமுற்றுவிட்டது. நாள்தோறும் பெருகி வரும் போக்குவரத்தின் காரணமாக மிகவும் நெரிசல் மிகுந்த பகுதியாக மாறிவிட்டது. எனவே, போக்குவரத்தைச் சமாளிக்கப் புதிய பாலம் ஒன்று தேவைப்பட்டது. இந்தப் பாலத்தின் அருகில் ஏறக்குறைய ரூ. 58 இலட்சம் செலவில் திரு.வி.க. பாலம் உருவாக்கப்பட்டிருக்கிறது.



பாலத்தின் இருபுறமும் இடம் பெற்றுள்ள யாளிகள்

போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக நான்கு வழிப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. பாலத்தின் இரு புறத்திலும் நடந்து செல்வோருக்கு நடைபாதைகளும் சைக்கிளில் செல்வோருக்குத் தனிப்பாதையும் கொடுக்கப் பட்டுள்ளன.

சென்னை நகரிலேயே மிக நீளமான பாலம் இது தான். இதன் நீளம் 298·2 மீட்டர் (960·6 அடி); அகலம் 19·65 மீட்டர் (65·5 அடி) இதனை உருவாக்கிட 980 டன் இரும்பு, 2500 டன் சிமெண்ட் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

20 மீட்டர் அகலமுள்ள 14 கண்கள் கொண்ட இந்தப் பாலத்தின் இருபுறமும் தண்ணீர் தேங்கி அரித்து விடாமல் இருக்கச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

திரு. வி. க. பாலத்தை 20—10—1973 அன்று பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையில் சென்னை நகர மேயர் திரு ஆறுமுகம் அவர்கள் முன்னிலையில், முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள்.

இந்தப் பாலத்திற்கு, முதல்வர் கலைஞர் அவர்கள் 4-6-1971 அன்று அடிக்கல் நாட்டும் பொழுது குறிப்பிட்டார்கள்,

''இப்பாலத்திற்கான செலவு மதிப்பீடு 58 லட்சம் ரூபாய் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டுத் தொகையை திருத்திய மதிப்பீடு என்று மாற்றாமல் இத் தொகைக்குள் கட்டி முடித்தால் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைவேன்''—என்று!

முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட படியே 58 லட்சம் ரூபாய் செலவிலேயே, திருத்திய மதிப்பீடு இல்லாமல் இந்தப் பாலம் கட்டி முடிக்கப் பட்டது குறிப்பிடத் தக்கதாகும்.

''வேண்டுகோள் நிறைவேறியிருக்கிற பாலம் இந்தப் பாலம் என்பதை எண்ணுகிற நேரத்தில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்'' என்று, பாலத் திறப்பு விழாவின் போது முதல்வர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

''இந்த வேண்டுகோள் இந்தப் பாலத்தோடு நின்றுவிடாமல், அடுத்தடுத்து எல்லாக் காரியங்களிலும் நிறைவேற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றும் முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

போக்குவரத்தினை எளிதாக்குவதற்கு இந்தப் பாலம் பயன்படும் என்பது உறுதி.






5

# உலகில் இரண்டு கிளைகள்

ஏ. என். சுப்பிரமணியன்.

## முத்தையா என்னும் முள்வேலி!

உலகத்தில் மிகவும் எளிதாகக் கிடைக்கக்கூடிய ஒன்று அறிவுரை. இதற்கு அடுத்த படியாக ஆறுதல் வார்த்தைகள்தாம்! ஆறுதல் கூறும் கலை, ஆலைமுதலாளி முத்தையாவுக்குக் கைவந்த கலைக்குள் முதற்கலையாகும். ஆபத்துக்குக் காரணமே தாம்தான் என்பதை அவரே அடியோடு மறந்துவிட்டு, வெகு அழகாக ஆறுதல் வார்த்தைகளை அள்ளி வீசிக் கொண்டிருப்பார்.

அருவிச் சிரிப்புச் சிரிப்பார். டாக்டர் நர்மதாவின் அறைக்குள் முத்தையா வந்துநின்ற போது, அவர் மடிநிறையப் பணம். மனம் நிறையப் பாசாங்கு.. இதனை டாக்டர் நர்மதாவும் நன்ருக உணர்ந்து தான் வைத்திருக்கிருள். அவரைப்போல் போலிப் புன்னகையைக் காட்டவோ, பொய்யாக உருகிக் கரையவோ நர்மதாவுக்குத் தெரியாது; தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதையும் அவள் விரும்பியதும் இல்லை....இருந்தாலும் மனப்புயலை வெளிக் காட்டிக், கொள்ளாமல், மிகுந்த சிரமத்துடன் குமுறலை அடக்கிக் கொண்டு முத்தையாவை—அந்த மருத்துவமனைக்குச் சொந்தக்காரர்—தனக்கு முதலாளி என்ற ஒரே மரியாதையுடன்-எழுந்து நின்று இருகரங் குவிந்து வரவேற்கிருள்.

'' விபத்துக்களை நம்மால் தடுக்க முடியாது .... ஆனல் விபத்தைத் தொடர்ந்து வரும் வேதனைகளை ஓரளவு நம்மால் தணிக்க முடியும்!'' என்று பேசியயடி வருகிருர் முத்தையா.

சிற்றுணர்வு மிக்கவர்கள் வெண்கலம்போல் ஓசை செய்வதும், முற்றுணர்வு மிக்கவர்கள் தங்கம் போன்று ஓசை உண்டாக்காமல் இருப்பதும் உலக இயல்பு.

பெரும் சிலுசிலுப்புடன் பேசியவர் முன்னல் ஓசை உண்டாக்கப் பயந்தவள் போன்று நின்ருள் டாக்டர் நர்மதா.

முத்தையாவின் கூற்றுக்கு என்ன மறுமொழி கூறினலும் அது நியாயத்திற்குப் புறம்பாகத்தான் போய் முடியும் என்பதை நர்மதா நன்கறிவாள். அதனலேயே அவள் எதுவும் கூருமல் அமைதியாக நிற்கிருள்.

''அடிபட்ட பெண் அஞ்சலையை நான் பார்க்கலாமா டாக்டர்?'' என்று மிகுந்த அக்கறையுடனும், அளவுக்கதிகமான பணிவுடனும் வினவுகிருர் முத்தையா. அவர் குரலில் இருப்பது பரிவா பரிகாசமா? டாக்டர் நர்மதாவால் இனங்காண முடியவில்லை.

வஞ்சகமுள்ளவர்கள், தாமரை போல மலர்ந்து பேச முடிகிறது. பேச்சிலும் சந்தன மன்ன குளுமை. மனமோ வெட்டும் கத்தரிக்கோல்!

அஞ்சலையை நான் பார்த்து ஆறுதல் சொல்ல வேண்டும்'' என்று மீண்டும் கூறுகிருர் முத்தையா.

''அஞ்சலை அதனை விரும்புகிருளா என்பதைத் தெரிந்து கொள்ளலாமே'' என்று சுடச்சுடக் கேட்டுவிடத் 'துடிக்கிறது நர்மதாவின் உள்ளம். ஆனல் அவள் கற்ற நாகரிகம் அதனைத் தடுக்கிறது. பண்பாடு பம்மிக் கொள்ளுகிறது.

''உங்கள் பொறுப்பிலிருக்கும் நோயாளியைத் தொந்தரவு செய்வது, டாக்டரம்மாவான உங்களுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது'' என்று மறுபடியும் கேட்கிருர் முத்தையா.

நம்பிக்கை வைக்க மறுக்கும் குணமுடைய முத்தையாவிற்கு ஆயிரம் விளக்கங்கள் சொன்னலும் பயன் இல்லை.

எனவே,

''போய்ப் பார்க்கலாம் வாருங்கள்'' என நர்மதா அனுமதி கொடுத்து அவரை அழைத்துச் செல்ல ஆயத்தமானுள். அதற்குள் அஞ்சலையின் மகள் கனகாம்பரம் ''கும்பிடறேனுங்க முதலாளி'' என்று உடலையே பாதியாகக் குறுக்கி வளைந்து வணங்கியபடி அறைக்குள் வந்து நிற்கிருள்.

''இவள் அடிபட்ட அஞ்சலையின் மூத்தமகள்—பெயர் கனகாம்பரம் .... இனிமேல் அந்தக் குடும்பத்தைத் தாங்கப் போகிற பொறுப்பு இவளுக்குத் தான்'' என்று அனுதாபத்தைத் தூண்டும் வகையில்....அறிமுகம் செய்துவைக்கிருள் நர்மதா.

காட்டுமல்லிச் செடிபோல், வனப்பும் வாளிப்புமாக வளர்ந்து நிற்கும் கனகாம்பரம், முதலாளியின் கருணையை முழுமையாகப் பெறத் துடிக்கிருள்! இதை நர்மதா ஒரு நொடியில் உணர்ந்து கொள்கிருள். ''இன்னர் இன்ன குணம் என்பதை இனங்காண இப்படி ஒரு விபத்தும் விபரீதத் திருப்பங்களும் தேவைப்படுகின்றனவா? 'அட கடவுளே!' என்று வேதனையும் விவேகமும் கலந்து நர்மதாவின் நெஞ்சில் முள்ளாய்த் தைக்கிறது.

''கவலைப் படாதே! குழந்தை....உன் அம்மாவைக் காப்பாற்றி முன்போல் தெம்பும் திடமுமாக நடக்கவைத்து-விடுவதாக டாக்டரம்மா உறுதி கொடுத்திருக்கிருள். உன் அம்மாவைக் காப்பாற்றுவது டாக்டரம்மாவின் பொறுப்பு''

என்று ஆறுதல் கூறுகிறார் முத்தையா.

அவரது குரலிலே அன்பின் அலைகள்; சொற்களில் சொந்தம் கொண்டாடும் உரிமை. அன்பை அடைக்கலமாகத் தருகின்றவர் போன்று அத்தனை குழைவுடன் பேசினார்.

கனகாம்பரம் சொல்லுவாள்:

"எங்க அப்பாவைக் காப்பாத்துறது உங்க வக்கீலய்யாவோட பொறுப்பு....இல்லிங்களா முதலாளி....?" என்று மிகுந்த கவலையோடும் பணிவோடும் கேட்கிறாள்.

"கண்டிப்பாகக் காப்பாற்றி விடலாம் பெண்ணே....என்னவோ, உன் அப்பாவுக்குக் கெட்ட காலம். இப்படி ஒரு விபத்து நடந்து போய்விட்டது...." என்கிறார் முதலாளி முத்தையா.

டாக்டர் நர்மதாவுக்கு ஒரு பொன்மொழி நினைவிற்கு வந்தது. விஷமுள்ள பாம்பிடம் மாணிக்கம் இருக்குமாம். இவரிடம் எத்தகைய ஒளி படைத்த சொற்கள் அடங்கிக் கிடைக்கின்றன! இந்த நினைவால் உடல் நடுங்கியது. சமாளித்துக் கொண்டாள்.

"அஞ்சலையைப் பார்க்க வேண்டாமா முதலாளி?" என்று முத்தையாவை அவசரமாக அங்கிருந்து அழைத்துப் போகிறாள் டாக்டர் நர்மதா.

முத்தையாவின் போலி நாடகத்தை மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருக்கும் பொறுமை அவளுக்கு இல்லை...

செண்பகா மில்லின் தொழிலாளர் நல மருத்துவ மனையில் அஞ்சலை படுத்திருக்கும் தனியறைக்குள்—

ஆலை முதலாளி முத்தையா, ஆறுதலும் அனுதாபமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு முந்திவர, நர்மதாவின் துணையுடனும் கனகாம்பரத்தின் கரங்குவித்த வரவேற்புடனும் வந்து நிற்கிறார். அரைகுறை நினைவோடு கண்விழித்தபடி படுத்திருக்கும் அஞ்சலை, முதலாளி வந்து நிற்பதை உணர்ந்ததும் எழுந்து, தன் மரியாதையைத் தெரிவிக்க முயலுகின்றாள். அஞ்சலையின் அருகே நிற்கும் நர்ஸ் தங்கம் அவளை எழுந்திருக்க விடாமல் கட்டிலோடு சேர்த்து இருத்திப் படுக்க வைக்கிறாள்..

கட்டிலின் மறுபக்கம் காவலர் துணையோடு சண்முகம் வந்து நிற்பதை முதலாளியும்

## யாழ் வகைகள்

பண்டைத் தமிழகத்தில் 5 வகையான யாழ்கள் புழக்கத்தில் இருந்தன. அவை ஆதியாழ், பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ் என்பன.

ஆதியாழ் 100 நரம்புகளையும், பேரியாழ் 21 நரம்புகளையும், மகர யாழ் 19 நரம்புகளையும், சகோட யாழ் 14 நரம்புகளையும், செங்கோட்டி யாழ் 7 நரம்புகளையும் கொண்டு விளக்கின.




கவனிக்கவில்லை, அஞ்சலையும் கவனிக்க முடியவில்லை.

"இந்தாம்மா....அஞ்சலை....நீ உன் குடும்பத்தைப் பற்றியோ குழந்தைகளைப் பற்றியோ எந்தவிதக் கவலையும் கொள்ளக் கூடாது.... என்னை உன் குடும்பத்தில் ஒருவனாக நினைத்துக்கொள்.. உன் குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளைத் தயங்காமல் என்னிடம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம் நான் செய்யும் செயலை உதவி என்று கூடச் சொல்ல முடியாது. தானுண்ட நீரைத் தலையால் தருவது தென்னை மரம். அது நீண்ட நெடுங்காலம் உதவி செய்து கொண்டே இருக்கும் என்னைத் தென்னை மரமாக நினைத்துக் கொள்" என்று பரிவுடன் கூறுகிறார் முத்தையா.

"நீங்கள் மகராசனா இருக்கணும் முதலாளி, வாழையடி வாழையாய்!" என்று வாழ்த்துகிறாள் அஞ்சலை.

"அஞ்சலை! வாழையல்ல நான்; பலநாள் உதவி செய்தால், ஒரே தடவை பலன் தருவது வாழை. நான் தென்னை மரமாக நின்று நீடூழி உதவி செய்வேன். என்னுடைய பணியாள், என் காரோட்டி செய்துவிட்ட குற்றத்தால் உன் குடும்பம் அவதிப்படக் கூடாது."

"இந்தக் குடும்பமே குற்றம் செஞ்சவரோட குடும்பந்தானுங்களே!" என்று கண்ணீர் வடிக்கிறாள் அஞ்சலை.

டாக்டர் நர்மதா குறுக்கிட்டு "ம்..அழக்கூடாது...அலட்டிக் கொள்ளக் கூடாது....இதோ பார்.....அஞ்சலை, உன்னைப் பார்க்க வந்திருக்கிறார் பார்...." என்று அவள் கவனத்தை மறுபக்கம் திருப்புகிறாள்.

"அவரு வந்திட்டாருங்களா....?" என்று ஆவலுடன் தலையைத் திருப்புகிறாள் அஞ்சலை. கணவனுக்கும் மனைவிக்குமிடையே மௌனப் பார்வைகள் பாலமாய் அமைகின்றன. பாசக் கயிறாக முறுக்கேறுகின்றது.

விபத்தின் அதிர்ச்சியும் அதைத் தொடர்ந்த வேதனைகளும் சேர்ந்து அஞ்சலையின் உடல் நலத்தைப் பெரிதும் பாதித்திருக்கின்றனவே என்ற கவலை டாக்டர் நர்மதாவின் இதயத்தில் சூழ்ந்திருக்கின்றது. ....நிரபராதியும் குற்றவாளியும் நேருக்கு நேர் சந்திக்கும் நேரத்தில் பாதிக்கப்பட்ட நபரின் உணர்வின் வேகங்கள்.. உள்ளக் குமுறல்கள் அவள் உடல் நலத்தை மேலும் பாதித்துவிடப் போகின்றனவே என்ற வேதனையும் அவள் மனத்துள் குமிழிவிடுகின்றது.

முதலாளி முத்தையா தம் கடமையை முடித்துவிட்டுப் புறப்படத் தயாராக நிற்கிறார். பண உதவி, மருத்துவ உதவி, சட்ட உதவி என்னும் ஆசை வலைக்குள் அக்குடும்பத்தினைப் பறவைகளாக்கிப் பிடித்துக் கொண்டு போகும் வேடனைப் போல நிற்கிறார்.

"டாக்டரம்மா......இந்த அம்மாள் உடல்தேறி எழுந்து நடமாட எத்தனை நாட்களானாலும் நாங்கள் தனிபட்ட முறையில் கவனித்துக் கொள்ள வேண்டும். அதுவரையில் அவர்கள் குடும்பத்துக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் என் மகள் செண்பகத்தை அனுப்பிச் செய்துதரச் சொல்லியிருக்கிறேன்....அஞ்சலை உடல்தேறி எழுந்ததும், நம்முடைய ஆலையிலேயே ஒரு வேலையும் போட்டுத்தர ஏற்பாடும் செய்துவிடுகிறேன்.... என்ன அஞ்சலையம்மா....

உங்களுக்குத் திருப்திதானே?" என்று அக்கறையோடு கேட்கிறார் முத்தையா.

"எங்க ஆயுசுக் காலம் வரைக்கும் உங்க பெரிய மனசையும் பெருந்தன்மையையும் மறக்கவே மாட்டோம் முதலாளி...." என்று கை குவிக்கிறாள் அஞ்சலை....



### பண்டைத் தமிழகத்துத் தலைநகர்கள்

**புகார் :** (காவிரிப்பூம்பட்டினம்) சங்க காலச் சோழ மன்னர்களின் முதல் தலைநகர்.

**மதுரை :** சங்க காலம் முதல், பாண்டிய மன்னர்களின் தலைநகர்.

**தஞ்சை :** விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றி அங்குச் சோழப் பேரரசை கி.பி. 850-ல் நிறுவினான். தஞ்சை, மூன்றும் இராஜ ராஜன் காலம்வரை சோழர் தலைநகராய் விளங்கியது.

**கங்கை கொண்ட சோழபுரம் :** முதலாம் இராஜேந்திரன் கங்கை வரை வெற்றி கொண்டு, கங்கை கொண்ட சோழபுரத்தை ஏற்படுத்தி அதைத் தலைநகராக்கினான். அதிலிருந்து, சோழப் பேரரசின் தலைநகராக அது விளங்கியது.

சண்முகம் என்ற காரோட்டி—சண்முகம் என்ற நன்றியின் சின்னம் அந்த அறைக்குள் நிற்பதை முத்தையா உணர்ந்ததாகவே காட்டிக்கொள்ளவில்லை. பஞ்சாலையின் முதலாளி இதயம் பஞ்சினைப்போல் மென்மையாகத்தான் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லையே! அதற்குள் இரும்பின் உறுதியும் எஃகின் கடினமும் இடியின் வலிமையும் இருக்கலாமே!

அறையை விட்டு முத்தையா அப்பால் போனவுடன்—ஒரு வினாடி தயக்கத்திற்குப் பிறகு சண்முகமும் சரேலென வெளியேறி வருகிறான்.

அஞ்சலைக்கு அதிர்ச்சி.... நர்மதாவுக்கும் நர்ஸ் தங்கத்திற்கும் வியப்பு. மனைவியைக் காணவந்தவன் அனுதாபக் கண்ணீர் சிந்தாமல், ஆறுதல் வார்த்தை கூறாமல், அன்னியனைப்போல் எப்படி வெளியேறிவிட முடியும்? கணவனின் பாசமும் பந்தமும் அவ்வளவு பலவீனப் பட்டுப்போய் விடக் கூடிய அளவுக்கு அஞ்சலை என்ன பாவம் செய்துவிட்டாள்....?

சண்முகத்தின் போக்கிற்கான காரணத்தைக் கண்டறிவதற்காக, அவனைத் தொடர்ந்து விரைந்து வருகிறாள் நர்மதா.

மருத்துவமனை வராந்தாவின் மறுகோடியில் நடந்து போய்க்கொண்டிருக்கும் சண்முகம், டாக்டர் நர்மதா தன்னைத் தொடர்ந்து வருவதை உணருகிறான். கால்கள் தாமாக நிற்கின்றன.

"சண்முகம்.... ஒரு விநாடி டாக்டர் அறைக்குள் வந்து விட்டுப் போ...." என்று அழைக்கிறாள் நர்மதா.

"மன்னிக்க வேண்டும் டாக்டரம்மா...." என் மனைவியின் முகத்தின் விழிக்க எனக்கு விருப்பமில்லை!" என்று மூர்க்கமாக வர மறுக்கிறான் சண்முகம்.

"உன் மனைவியைப் பார்க்க நீ போவதும் போகாததும் உன் சொந்த விருப்பம். நான் உன்னிடம் ஒரே ஒரு கேள்வி கேட்கவேண்டும். அதற்காகத்தான் என் அறைக்கு வரும்படி உன்னைக் கூப்பிடுகின்றேன்" என்று கூறிவிட்டுக் காவலரின் அனுமதிக்காகக் காத்திருக்கிறாள் நர்மதா.

"வருகிறேன் டாக்டரம்மா...." என்று பணிவுடன் அறைக்குள் வந்து நிற்கிறான் காரோட்டியான சண்முகம்.

'சண்முகம் — உன்னைப் பார்க்க வேண்டும். உன் குரலைக் கேட்க வேண்டும் என்று உன் மனைவி எப்படித் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தாள் என்பது மற்றவர்களைவிட எனக்குத்தான் நன்றாகத் தெரியும்...."

"அத்தனையும் நாடகம் டாக்டரம்மா. என்மேல் உண்மையான அக்கறை இருந்தால் நான்தான் அவள்மீது காரை ஏற்றினேன் என்று வாக்குமூலம் கொடுத்திருப்பாளா?" என்று புலியாய் உறுமுகிறான் சண்முகம்.

"அடப்பாவி - அவள் ஏன் அப்படிச் சொன்னாள் என்பதை நான் விளக்குகிறேன்...." என்று நர்மதா ஆரம்பம் செய்தாள்.

அதற்குள் சண்முகம் பொறுமை அற்றவனாகிப் படபடப்புடன், "மன்னிக்க வேண்டும் டாக்டரம்மா.... இரண்டு நாட்களாக எங்களுக்குள் மனத்தாங்கல் இருந்தது உண்மை...! மூத்த மகளுக்குக் கல்யாணம் பண்ணக் கூடத் துப்பில்லை' என்று அவள் என்னைக் குத்திக் காட்டியதால், நான் கோபப்பட்டதும் உண்மை. ஆனால் அதற்காகக் கார்விபத்து வழக்கில் அவளே என்னைக் குற்றவாளியாக்கி வாக்குமூலம் கொடுத்து வஞ்சந் தீர்த்துக் கொள்வாள் என்பதை நான் கனவிலும் நினைக்கவில்லை. இப்படி ஒரு வேஷக்காரியுடன் குடும்பம் நடத்துவதைவிடச் சிறைச்சாலைக் கொட்டிலைக் குடும்பமாக ஒப்புக் கொள்ளுவது மேலான காரியம். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கண்ணிமைக்கும் நேரத்தில் அறையைவிட்டு - ஏன், மருத்துவ மனையைவிட்டே வெளியேறிப் போகிறான் சண்முகம்.

நர்மதா கல்லாய்ச் சமைந்து நிற்கிறாள்.

கணவனே வலியச் சென்று குற்றத்தை ஏற்றுக் கொண்டிருப்பதால் அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று நம்பித்தானே அஞ்சலை அதையே தன் வாக்குமூலத்திலும் கூறியிருக்கிறாள். கணவனின் கருத்துக்கு முரணாகக் கூறக் கூடாதே என்றுதானே நெஞ்சு வெடிக்கக் கூடிய சோகத்தையும் தாங்கிக் கொண்டு, "என் கணவன் தான் குற்றவாளி" என்று எழுதிக் கையெழுத்திட்டும் கொடுத்தாள்? அவளுடைய நேர்மையைப் புரிந்துகொள்ள தெரியாமல் சண்முகம் அவளுடைய நோக்கத்திற்கே களங்கம் கற்பித்துப் பேசிவிட்டுப் போகிறானே....

அட ஆண்டவனே! ஆலை முதலாளி முத்தையாவின் அஜாக்கிரதையினால் இங்கே இரண்டு இதயங்களுக்கிடையே பெரும் பிளவு விழுந்து விட்டதே, முத்தையா என்னும் இந்த முதலாளி முத்தையா என்னும் இந்த முள்வேலி இன்னும் எத்தனை எத்தனை இதயங்களைக் கூறு போடப் போகிறதோ!

# 6

## அன்பின் கவசங்கள்

அன்பை விதைத்து அமைதியை அறுவடை செய்பவள் ராதை. எத்தனை யுகங்களானாலும் வற்றாமல் வளங்கொழிக்கும் விளைநிலம் அவள் இதயம். பண்பட்ட அந்த இதயமும் அவள் தந்தை பாண்டித்துரை விட்டுச் சென்ற ஒரே சொத்து!

தன்னுடைய அமைதியை விட, தன்னைச் சுற்றியுள்ளவர்களின் மன நிம்மதியையே பெரிதும் விரும்பும் இயல்பு கொண்ட ராதைக்கு, கார் விபத்துக் காரணமாகக் கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடு பிறந்திருப்பதை அறிந்ததும் வேதனை அதிகரிக்கின்றது. அதுவும் மற்றவர் இதயம் நோகக் கூடாதே என்பதற்காக ஒத்த கருத்துக்களைத் தெரிவிக்கப் போய் அதுவே கணவன் மனைவி 'இருவருக்கும் காலனாக வந்துவிட்டதே என்பதால் அவளுடைய பரிவிரக்கம் பன்மடங்காகிறது.

ராதையை மிகவும் அதிகமாகப் பாதித்த விஷயம், இந்த விபத்து-இதனைத் தொடர்ந்து பிறந்துவிட்ட வழக்கு - இவ்விரண்டின் காரணமாக நர்மதா - மணிவாசகன் இருவருக்கும் அதிகப்படியான வேலையும் அளவுக்கு மீறிய மன வேதனையும் வந்துவிட்டதே என்பதுதான்...!

கணவன் வக்கீல், மனைவி டாக்டர். கண் நிறைந்த உருவங்கள்; கை நிறையச் சம்பாத்தியம்; கௌரவமான வாழ்க்கை என்ற கணக்குகளுக்கும் அப்பால் தொழிற் பிணக்குகளுக்கும் இந்தக் குடும்பத்தில் இடங் கொடுத்துவிடக் கூடுமே என்ற பயம் அவளைப் பற்றிக் கொள்கிறது! அனுசரித்துக் கொண்டு போகிற இதயங்களாக இருந்தால் அந்த அளவுக்கு ராதையின் பொறுப்பும் கவலையும் குறையும்...! இந்த இரண்டு இதயங்களுமோ... தமக்குத் தாமே இடையூறாக நிற்கும் வீம்பு படைத்தவை.

குதிரைச் சவாரியில் தொடங்கிக் கொள்கைப் பிரச்சினை வரையில் வீம்பு பிடித்து வெற்றிக்குப் போட்டியிடுகின்ற வக்கிரங்கள்....!

அமைதிக்குரிய வழியைப் போற்றி அறியாத இதயங்கள்.

நர்மதா இப்போது நிறை மாதக் கர்ப்பிணி. புதிய உயிர் ஒன்றை உலகத்திற்கு அறிமுகப் படுத்தபோகும் பெருமையைச் சுமந்தபடி தன் தொழிற் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறாள்.

மருந்தகத்தில் நோயாளிகளின் உடல் வேதனைகளுடன் அவர்களது மன உளைச்சல்களையும் தீர்த்து வைக்கும் பொறுப்பைத் தானாக வலிய ஏற்றுக் கொண்டிருப்பவள் டாக்டர் நர்மதா. கார் விபத்தில் சிக்கி மருத்துவமனைக்குள் வந்த அஞ்சலை, உடல் நன்றாகத் தேறி நடமாடும் தெம்பும் பெற்று வீட்டுக்குப் போவதற்குள், நர்மதாவின் இதயத்துள் 'தனியான இடத்தைப் பெற்றுவிட்டிருந்தாள்.

அஞ்சலையின் மேல் பிறந்த அன்பு, அனுதாபத்தின் அடிப்படையில் பிறந்ததாயிற்றே? அதனால் அந்த அன்புக்கு ஆழம் அதிகம்; உறுதி அதிகம். இந்த உண்மையை உறுதிப்படுத்தும் அளவுக்கு மணிவாசகனிடமும் முத்தையாவிடமும் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறாள் நர்மதா.

"அஞ்சலைக்கு எனது ஆலையிலேயே ஒரு வேலை போட்டுத் தருகிறேன்" என்று கூறிவிட்டு மருத்துவமனையை விட்டு வெளியேறும்போதே அந்த எண்ணத்தையும் உதறிவிட்டுத்தான் புறப்பட்டிருக்கிறார் முத்தையா. அவர் ஆலைமுதலாளி. அனுபவம் மிக்கவர். சொல்வேறு செயல் வேறாக இருந்தால்தான் சொத்தும் சுகமும் ஒன்றாகும்படியாக வாழ முடியும் என்ற அடிப்படைத் தத்துவத்தில் அபார நம்பிக்கை கொண்டவர். அதனை நம்பி வாழ்க்கைப் பாதையில் அடியெடுத்து வைத்த கைகாரப் பேர்வழி.

அவர் தம் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்; நைந்து கிடக்கும் அஞ்சலையின் இதயத்திற்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்; அவர் வாக்களித்தபடி அஞ்சலைக்கு அவருடைய தொழிற்சாலையில் கௌரவமான வேலை ஒன்றைப் போட்டுத்தர வேண்டும்—இத்தனைக்கும் மணிவாசகனின் தூண்டுதலும் வேண்டுகோளும் துணைநிற்க வேண்டும்.

இதற்காக மணிவாசகனிடம் மாதக் கணக்கில் நர்மதா வாதாடிக் கொண்டிருக்கிறாள்.

"அத்தான். உங்கள் முதலாளிக்கு வரவிருந்த சிறைத் தண்டனையைச் சண்முகம் அனுபவித்து வருகிறான். அந்த நன்றியை அடுத்த கணமே மறந்தவர் உங்கள் முதலாளி! சண்முகத்தின் மனைவிக்கு மருந்தகத்தில் ஆறுதலாகச் சொன்னவர், அதையே நடைமுறையில் செயலாற்றத் தயங்குகிறார்; தாட்சணியம் பார்க்கிறார்; இந்தப் பழிபாவம் அவரைச் சும்மாவிடப் போவதில்லை. நீங்கள் மனம் வைத்த காரணத்தால் அவர் வெளியே மனிதனாக நடமாடுகிறார். இவரைப் போல் பணம் படைத்தவர்கள் பலர் சிறைச்சாலைக்குப் பதிலாகச் செல்வ மாளிகையில் வாழ முடிகிறது. ஏழைகள், இல்லாதவர்கள் வெளியுலகத்தில் வாழ வேண்டியவர்கள், சிறைச்சாலைக்குள் வாழ்கிறார்கள். காசுக்காக உங்கள் முதலாளியின்மேல் காட்டுகிற விசுவாசத்தைக் கருணைக்காக அந்த ஏழைப் பெண்மேல் அனுதாபமாக்கிப் பாருங்கள். அஞ்சலையின் குடும்பத்து விளக்கை அணையாமல் காப்பாற்றுங்கள்" என்று இரவும் பகலும் மன்றாடுகிறாள்.

முதலாளி முத்தையா கிடக்கட்டும்; அவரிடம் சம்பளம் பெறும் மணிவாசகனே அதற்கு மசிய மாட்டேன் என்கிறானே! "ஒரு தொழிலாளியின் தியாகத்திற்கு உடனே காசுபணத்

**உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை உயர்கிறது!**

1971-ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வந்து சென்ற உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 3,00,995.

1972-ல் இவ் வெண்ணிக்கை 3,42,950 ஆக உயர்ந்திருக்கிறது.




# பிற்பட்டோர் முன்னேறப் பெருந்தொண்டு புரிந்திடுவோம்!

**முதல்வர் கலைஞர்**

உத்தரப் பிரதேசம் இந்தியாவில் பெருமை வாய்ந்த ஒரு மாநிலமாகும். பண்டித நேருவினுடைய குடும்பம் இந்த மாநிலத்திற்குப் பெருமை சேர்த்தது என்று கூறலாம். இந்தியாவின் அடித்தள மக்களுடைய குரலைப் பிரதிபலித்த திரு. டாக்டர் லோகியாவும் இந்த மாநிலத்திலேதான் பிறந்தார். இந்தப் புகழ் பெற்ற ஊரான அலகாபாத்திற்கு வந்ததில் நான் பெருமை அடைகிறேன்.

யமுனையும், கங்கையும் கலக்குமிடமான திருவேணி சங்கமம் இங்கு இருக்கின்றது. இந்த மாநாட்டில் பின்தங்கியோரும், தாழ்த்தப்பட்ட மக்களும் கலந்திருக்கிறீர்கள். அதாவது யமுனையும் கங்கையும் கலந்திருப்பது போல நீங்கள் கலந்திருக்கிறீர்கள்.

திருவேணியில் சரஸ்வதி நதியும் கலப்பதாகச் சொல்லுவார்கள். ஆனால் அது கண்ணுக்குத் தெரிவதில்லை. அது போல நானும் பிரித்துப் பார்க்க முடியாதபடி, உங்களோடு கலந்திருக்கிறேன்.

தமிழர்கள், மலையாளிகள், வங்காளிகள், பஞ்சாபிகள், மராட்டியர்கள், இந்திக்காரர்கள் என்று மொழிவாரியாக ஒவ்வொருவருக்கும் தனித்தன்மை உண்டு. ஆனால் தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர் என்ற அடிப்படையில் இந்தியா முழுவதுமுள்ள மக்களுக்கு ஒரே தன்மைதான் வேண்டும். அதற்குப் பெயர் தான் சுயமரியாதைத் தன்மை.

பிரம்மாவினுடைய முகத்தில் பிறந்தவன் பிராமணன்; பிரம்மாவினுடைய தோளிலே பிறந்தவன் சத்திரியன்; பிரம்மாவினுடைய தொடையிலே பிறந்தவன் வைசியன்; பிரம்மாவினுடைய காலிலே பிறந்தவன் சூத்திரன். அதாவது நாமெல்லாம் காலிலே பிறந்தவர்கள் என்பது சிலருடைய கற்பனை. அதையே வாதத்திற்கு ஒப்புக்கொள்வதாக வைத்துக் கொள்வோம். கடவுளுடைய உடம்பில் எல்லா அவயவங்களும் ஒன்றுதான். இதில் எந்த அவயவத்தில் யார் பிறந்தாலும் எல்லோரும் மனிதர்கள்தான்.

தமிழ்நாட்டில் ஒரு மரம் இருக்கிறது. அதற்குப் பெயர் அத்தி மரம். அதுபோன்ற மரம் வேறு பெயரில் உங்கள் மாநிலத்தில்கூட இருக்கலாம். அந்த மரத்தில் இலைகளிலும் காய் காய்க்கும். கிளையிலும் காய் காய்க்கும். அடிமரத்திலும் காய் காய்க்கும். வேரிலும் காய் காய்க்கும். எல்லாக் காய்களையும் அத்திக்காய் என்றுதான் சொல்லுவோம். அதைவிட்டு, உச்சியில் காய்த்த காயை ஆப்பிள் காய் என்றும், அடிமரத்தில் காய்த்த காயை திராட்சை என்றும், வேரிலே காய்த்த காயை ஆவக்காய் என்றும் சொல்லமாட்டோம்.

அதைப்போலவே கடவுளுடைய உடம்பில் எந்த இடத்திலே பிறந்தாலும் அவன் மனிதனே தவிர, சாதி வாரியாகப் பிரிக்கப்படக் கூடியவன் அல்ல.

இன்றையதினம் சமுதாயத் துறையில் ஒரு பெரும் புரட்சியை நாம் எதிர்பார்க்கிறோம். இந்தப் புரட்சி உருவாக வேண்டுமென்று அரசியல் சட்டத்திலேயே நாம் முன்னுரை எழுதி வைத்திருக்கிறோம். சமுதாய நீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதி இவைகள் எல்லாம் வழங்கப்பட வேண்டுமென்று அரசியல் சட்டத்தின் முன்னுரை கூறுகிறது. சமத்துவம், தோழமை, சமவாய்ப்பு இவைகளெல்லாம் தேவை என்று அரசியல் சட்டத்தின் முன்னுரை எடுத்துச் சொல்கிறது. ஆனால் அந்த முன்னுரையில் நாம் பொருளாதார நீதிக்கும் அரசியல் நீதிக்கும், முயற்சித்ததுபோல் சமுதாய நீதிக்கு முயற்சிக்கவில்லை.

சமுதாய நீதிக்கான அரிச்சுவடிப் பாடத்தைக்கூட நாம் இன்னும் முடிக்கவில்லை. சமநீதி, சமவாய்ப்பு இவைகள் வழங்கப்பட வேண்டுமென்று யோசிக்கிற நேரத்தில் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஓட்டப் பந்தயத்தில் கொஞ்சம் பலவீனமாக இருக்கின்றவனைக் கொஞ்சம் முன்னால் நிறுத்தி ஓடச் செய்வதைப்போல, சமுதாயத்தில் பலவீனமாக இருப்பவர்களுக்கு முன்னுரிமைகள், சலுகைகள் வழங்கப்பட்டாக வேண்டும்.

அப்படிப்பட்ட சலுகைகளை வழங்கிச் சமநீதியை உருவாக்குவதற்கு எங்களுடைய தமிழ்நாட்டில் முயற்சி செய்து வருகிறோம். அந்தக் காரியங்களை நாங்கள் முழுவதும் செய்து முடிக்காவிட்டாலும் அதில் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பின்தங்கிய மக்களுக்கும் வேலை வாய்ப்பு, கல்வி வசதி அளித்தல் இவைகளில் குறிப்பிட்ட சதவிகிதத்தை நாங்கள் ஒதுக்கியிருக்கிறோம். கல்விச் சலுகை, கலைக்கல்லூரிகளில் மாத்திரமல்லாமல் மருத்துவக் கல்லூரிகளிலும் பொறியியல் கல்லூரிகளிலும் நாங்கள் வழங்குகிறோம்.

இப்படி நாங்கள் பின்தங்கிய மக்களுக்கும் அரிசன மக்களுக்கும் வழங்குகின்ற சலுகையினுடைய விகிதாச்சாரம் 49 சதவிகிதமாகும்.

வேலைவாய்ப்புகள் மூலமும், கல்வி மூலமும் பொருளாதார நீதியில் சமுதாயத்தில் உயர்வைத்தான் கொண்டு வரமுடியும். ஆனால் சமூக நீதி பெறுவதற்குச் சாதியின் பெயரால், மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் உள்ள கட்டுப்பாடுகள் உடைத்தெறியப் பட வேண்டும்.

உதாரணம் வேண்டுமென்றால், தாழ்த்தப்பட்ட தோழன் ஐ.ஏ.எஸ் அதிகாரியாக ஆக முடியும். ஆனால் கோவிலில் ஓர் அர்ச்சகராக ஆக முடியாது. அப்படி அர்ச்சகராக ஆக முடியாத நிலைமை எங்கள் மாநிலத்தில்



அலகாபாத் பொதுக் கூட்ட மேடை

முதல்வர் கலைஞர் தமிழில் பேசுவதை இந்திப் பயிற்சித் திட்டத்தின் வட்டார அலுவலர்(சென்னை) டாக்டர் சந்திரகாந்த் இந்தியில் மொழி பெயர்க்கிறார்.



இன்னமும் இருக்கிறது.

ஆகவே, ஆண்டவனைப் பூசிக்கின்ற அர்ச்சனைகளைச் செய்வதில் தேர்ச்சி பெறுகின்ற தகுதி படைத்த யாராக இருந்தாலும், அவர்கள் எந்தச் சாதிக்காரராக இருந்தாலும், அர்ச்சகராக ஆகலாமென்று இப்பொழுது நாங்கள் சட்டத்தைப் போட்டிருக்கிறோம்.

அந்தச் சட்டத்தின் மூலம் உயர்ந்த சாதிக்காரனும் பூசாரியாகலாம்; தாழ்ந்த சாதிக்காரனும் ஆண்டவனைப் பூசிக்கின்ற பூசாரியாகலாம். ஆனால் அந்தச் சட்டத்தினுடைய நிலைமை இப்பொழுது என்ன தெரியுமா? தமிழ்நாட்டிலே உள்ள சில சனாதனிகள் அந்தச் சட்டத்தை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனார்கள். சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்படி அந்தச் சட்டம் இப்பொழுது எழுந்து நடமாட முடியாத நொண்டியாக இருக்கின்றது. அந்தச் சட்டம் எழுந்து நடமாட வேண்டுமானால் அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

ராஜமான்யத்தை ரத்துச் செய்தது செல்லாது என்று சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு, சுப்ரீம் கோர்ட் ராஜமான்ய ரத்துச் செல்லாது என்று தீர்ப்பு அளித்தது. ஆனால் கொள்கையை நிறைவேற்றுவதென்று நாடாளு மன்றத்தில் புதிதாக ஒரு திருத்தம் கொண்டு வந்தார்கள். சில நூறு ராசாக்களுடைய பிரச்சினைக்காக அரசியல் சட்டத்தைத் திருத்தியபோது, ஏன் பல கோடி தாழ்த்தப்பட்ட மக்களுடைய பிரச்சினைக்காக அரசியல் சட்டத்தைத் திருத்தக்கூடாது என்று நான் கேட்கிறேன்.

தகுதியின் அடிப்படையில் மார்க்குகளைப் பெற்றவர்கள் கல்வியில் சலுகை பெற வேண்டும் என்று தமிழ்நாட்டிலே இருக்கிற பத்திரிகைக்காரர்கள் வாதாடுகிறார்கள். ஆனால் ஆண்டவனை வணங்குவதில் அர்ச்சகர்களுக்குத் தகுதி கூடாது. சாதிதான் தேவை என்கிறார்கள். மக்கள் ஆண்டவனின் குழந்தைகள் என்று சொல்லுகிறோம். எந்தத் தாயாவது இந்தக் குழந்தை தன்னைத் தொடலாம், இந்தக் குழந்தை தன்னைத் தொடக் கூடாது என்று சொல்லுவாளா? சொன்னால் அப்படிப்பட்டவள் தாயாக இருக்க முடியாது. பேயாகத்தான் இருக்க வேண்டும்.

இரண்டாவது முயற்சியாக, தமிழ்நாட்டிலே இன்னொரு புரட்சியை நாங்கள் செய்திருக்கிறோம். தமிழ்நாட்டிலே உள்ள ஆலயங்களை நிருவகிக்க அறங்காவலர்கள் இருக்கிறார்கள். அந்த ஆலய நிர்வாகிகளில் கட்டாயம் ஓர் அரிசன வகுப்பைப் சேர்ந்தவரும் இருக்க வேண்டுமென்று இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றிலேதான் இப்போது நாங்கள் விதி செய்திருக்கின்றோம்.

எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் எவ்வளவு வசதி, திறமை படைத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சாதியின் பெயரால், தாழ்த்தப்பட்டவர், பின்தங்கியவர் என்ற பெயரால் ஒதுக்கப்படுவது நீண்ட காலமாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் நந்தன் என்று ஓர் அரிசன பக்தன் இருந்தான். அவன் ஆண்டவனைத் தரிசிக்கக் கோவிலுக்குச் செல்ல நினைத்தான். அவன் தாழ்ந்த சாதி என்ற காரணத்தால் நெருப்பிலே குளித்து விட்டு உள்ளே வர வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அவன் நெருப்பிலே குளித்தான். நெருப்பிலே குளித்த பின்பு வெளியே வந்தானா? வரவில்லையா? என்று எனக்குத் தெரியாது.

யாதவர்களுடைய கடவுளான கிருஷ்ணனைப் பற்றிக் கூட ஒரு கதை சொல்லுவார்கள். அவன் திறமை படைத்தவன். பெரிய ராசதந்திரி என்றெல்லாம் புராணம் சொல்லுகின்றது. ஆனால் அவன் யாதவ வகுப்பைச் சேர்ந்தவன்; ஆகவே சத்திரியர்கள்தான் நாட்டை ஆளலாம் என்று சொல்லி அவனுக்கு ஆளும் உரிமை இல்லை என்று கூறி விட்டார்கள்.

அதனால்தான் உத்தரப் பிரதேசத்தில் பிறந்த கிருஷ்ணன் இங்கே ராஜ்யத்தை அமைக்க முடியாமல், குசராத்திற்குச் சென்று அங்கே 'துவாரகா என்ற புதிய ராஜ்யத்தை அமைத்தான். ஆக, சாதி வித்தியாசம் கிருஷ்ணன் என்ற அவதாரத்தையும் விடவில்லை.

மராட்டிய 'வீ ர ன் சிவாஜியைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவன் எதிரிகளை முறியடித்தவன்; மாபெரும் நாட்டை உருவாக்கியவன். ஆனால் பட்டம் சூட்டிக் கொள்ளக்கூடாது என்று உயர்சாதிக்காரர்களால் அவன் தடுக்கப்பட்டான். அவன் 'யாகம்' செய்து சத்திரியனாக மாறினால்தான் அரசாளத் தகுதி உடையவன் என்று சொல்லப்பட்டான். ஆகவே சாதி வித்தியாசம் சரித்திரக் காலம் தொட்டு இருந்து வருகின்ற ஒரு சாபக்கேடு.

சாதியை ஒழித்து, சமத்துவத்தை நிலைநாட்ட உதட்டளவு பேச்சுக்கூடாது, செயலில் காட்ட வேண்டும். நீ செய்து காட்டி இருக்கிறாயா என்று நீங்கள் என்னைக் கேட்பீர்கள்.

என் தந்தை செய்யத் தவறிய காரியத்தை நான் தந்தையாக இருந்து செய்திருக்கிறேன். ஆறு மாதங்களுக்கு முன்பு என்னுடைய மகனுக்கு ஓர் அரிசனப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தேன். அந்த வகையில் நான் அரிசனங்களுக்குச் சம்பந்தி.

என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கத்தைப் பரிசாக அளிக்கின்ற ஒரு முறையை அரசாங்கத்தில் கொண்டு வந்தார்கள். அதை நாங்கள் தொடர்ந்து அமல் நடத்தி





வருகிறோம். கலப்புத் திருமணம் என்றால் சர்மா வீட்டுப் பெண்ணுக்கும், சாஸ்திரி வீட்டுப் பையனுக்குமல்ல; யாதவ் வீட்டுப் பையனுக்கும் 'ஜாட்' வீட்டுப் பெண்ணுக்குமல்ல. மாப்பிள்ளையோ அல்லது பெண்ணோ இருவரில் ஒருவர் கட்டாயம் அரிசன வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். அதற்குப் பெயர்தான் கலப்புத் திருமணம். அவர்களுக்குத்தான் தங்கப்பதக்கம் பரிசு!

40 வருடங்களுக்கு முன்னே தமிழ்நாட்டில் ஒரு புதிய திருமண முறையை நாங்கள் கண்டிருக்கிறோம். அதற்குச் சுயமரியாதைத் திருமணம் என்று பெயர். அதற்குப் புரோகிதர் வருவது கிடையாது. புரோகிதர் பார்வையாளராகத்தான் வருவார். மந்திரமில்லை; மந்திரம் சொன்னாலும் யாருக்கும் புரிவதுமில்லை. அக்கினி சாட்சியில்லை. சாட்சிக்கு, கோர்ட்டுக்குத்தான் போகவேண்டும்; திருமணத்திற்கு வரத்தேவையில்லை! மணமகனும், மணமகளும் மாலை மாற்றிக்கொள்வார்கள். நூறு பேர் முன்னிலையில் எளிய முறையில் திருமணம் நடைபெறும். இந்த முறையை பெரியார் ஈ.வே. ராமசாமி அவர்கள் ஆரம்பித்தார்கள்.

இதற்கு ஆரம்பத்திலேயே பலத்த எதிர்ப்பு நாட்டிலே இருந்தது. சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டால், புரோகிதர் இல்லாமல் திருமணம் செய்து கொண்டால், குழந்தை பிறக்காது என்று கூறினார்கள். நான் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவன்தான். எனக்குக் குடும்பக் கட்டுப்பாட்டையும் மீறி ஆறு குழந்தைகள் இருக்கிறார்கள். புரோகிதத் திருமணம் செய்து கொண்டவர்கள் புத்திர பாக்கியத்திற்காகக் காசி, ராமேஸ்வரம் என்று அலைகிறார்கள். சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்களோ, போதும் போதும்! இனிக் குழந்தைகள் வேண்டாம் என்று அலறிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் திருமண முறை சட்டப்படி செல்லாத நிலைமை தமிழ்நாட்டில் இருந்தது. 1967-க்கு முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்தத் திருமணத்தை எல்லாம் சட்



டப்படி செல்லுபடி ஆக்க வேண்டுமென்று நாங்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு போனோம். ஆனால் வாய் அளவில் சீர்திருத்தம் பேசுகின்ற காங்கிரஸ் ஆட்சி எங்கள் கோரிக்கையை நிராகரித்துவிட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லும் என்று சட்டசபையிலேயே ஒரு மசோதாக் கொண்டு வந்து அதை நிறைவேற்றியிருக்கிறோம்.

இனிமேல் நடக்கின்ற சுயமரியாதைத் திருமணங்கள் மாத்திரமல்ல, இதுவரை நடந்திருக்கின்ற ஆயிரக்கணக்கான சுயமரியாதைத் திருமணங்களும் சட்டப்படி செல்லும் என்ற அந்த மசோதா கூறியது. அதற்கான ஒப்புதலை அளிக்க மத்திய அரசு முதலில் தயங்கியது. அதற்காக எங்களுடைய சட்ட அமைச்சர் டெல்லியிலேயே தவம் கிடந்தார். கடைசியாக அதற்குச் சம்மதம் கிடைத்தது.

சமுதாயத்தில் நல்ல விழிப்பு உணர்ச்சி ஏற்படுத்துவதற்குக் கல்வியும் ஒரு கருவியாகும். ஆகவேதான் தமிழ்நாட்டில் புகுமுக வகுப்பு வரையில் நாங்கள் இலவசக் கல்வியை ஏற்படுத்தியிருக்கிறோம்.

பின்தங்கிய மாணவர்களுக்கும் அரிசன மாணவர்களுக்கும் பட்டப் படிப்பில் 70 சதவிகிதம் உதவித் தொகை வழங்குகிறோம். இந்த மாநாட்டின் மூலம் மத்திய அரசுக்கு நான் ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுது மத்திய அரசு வேலை வாய்ப்பில் அரிசனங்களுக்கு மாத்திரம் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கியிருக்கிறது. இதைப் பிற்பட்டோருக்கும் அமல்படுத்த மத்திய அரசு முயற்சிக்க வேண்டும். மத்திய அரசு அரிசனங்களுக்கு வேலை வாய்ப்பில் இடம் அளிப்பது போல, பின்தங்கிய வகுப்பினருக்கும் இடம் ஒதுக்க வேண்டுமென்று இந்த மாநாட்டின் மூலம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது இந்தக் காரியம் மாநில அரசு அளவிலே தமிழ்நாட்டிலே நடைபெறுகிறது. பின்தங்கியோர் நலனை அறிய மாநில அளவிலே ஒரு குழுவைப் போட்ட முதல் மாநிலம் தமிழ்நாடுதான். பின்தங்கிய நலக்குழு செய்த பரிந்துரைகளை எல்லாம் ஏற்றுப் படிப்படியாக நாங்கள் காரியங்களைச் செய்து வருகிறோம்.

பின்தங்கிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இவர்களிடையே ஒரு பத்துப்பேர் உயர்ந்துவிட்டால் சமுதாயம் உயர்ந்து விட்டதாகப் பொருளல்ல. உயர்ந்துவிட்ட அந்த பத்துப்பேரும் மிச்சமிருக்கின்றவர்களைக் கைதூக்கிவிடப் பயன் படவேண்டும்.

இப்போது உள்ள நிலைமை என்னவென்றால் ஓர் அரிசனச் சேரியிலே ஒரு வாலிபன் படித்து முன்னேறி உத்தியோகத்திற்குப் போய்விட்டால் உடனே தனது வீட்டை வேறு இடத்திற்கு மாற்றி விடுகிறான். அதற்குப் பதிலாக அவன் இந்த இடத்திலேயே குடியிருந்து தன்னைப் போலவே மற்றவர்களையும் உயர்த்தி விடவேண்டும்.

ஒவ்வொருவனும் உயர்ந்த சாதிக்காரனாக ஆக ஆசைப்படக்கூடாது. எல்லோரும் மனிதர்களாக ஆக வேண்டுமென்றுதான் ஆசைப்பட வேண்டும்.

அமெரிக்காவிலேகூட நீக்ரோக்களில் சிலபேர் தாங்கள் வெள்ளை நிறமாக மாறு



வதற்கு ஊசி போட்டுக்கொள்கிறார்கள். சில நீக்ரோக்கள் சுருண்டு கிடக்கின்ற தங்கள் தலைமுடியை நீண்டதாக ஆக்கிக்கொள்ள முயற்சிக்கிறார்கள். இதை எதிர்த்து அங்கே உள்ள பெரும்பாலான நீக்ரோக்கள் நாங்கள் நீக்ரோவாக இருப்பதில்தான் பெருமை அடைகிறோம் என்கின்ற கோஷத்தை இப்பொழுது கிளப்பி இருக்கிறார்கள். ஆகவே மற்றவர்களையும் உயரச் செய்வதிலேயேதான் முனைந்திருக்க வேண்டுமே அல்லாமல், தாங்கள் உயர்ந்தால் போதும் என்று எண்ணி இருக்கக் கூடாது.

சாதி ஒழிய சமத்துவம் நிலை நாட்டப்பட இந்தியப் பூபாகத்தில் பல பெரியவர்கள் வழி காட்டியிருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் காந்தி அடிகளை மறக்க முடியாது. அம்பேத்காரை மறக்க முடியாது. தமிழ்நாட்டில் பெரியாரை மற்றும் அண்ணாவை மறக்க முடியாது. பின்தங்கிய மக்களுக்காகப் பாடுபட ஒவ்வொருவரும் சபதம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

நான் அப்படி ஒரு சபதத்தைத் தமிழ்நாடு சட்டசபையில் எடுத்துக் கொண்டேன். நான் சபதம் எடுத்துக்கொள்வது திரு. ராஜ் நாராயணைப்போல வெகு வேகமாக இருக்காது. நான் எடுத்துக் கொள்கிற சபதம் மென்மையான முறையில் இருந்தாலும் உறுதியானதாக இருக்கும்.

நான் சட்டசபையிலே எடுத்துக் கொண்ட சபதம் "என்னுடைய ஆட்சிக் காலத்தில் பின்தங்கிய மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும் என்னுடைய உயிரைப் பணயமாக வைத்து வாதாடுவேன், போராடுவேன்" என்பதாகும்.

பின்தங்கிய தாழ்த்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்காகப் பாடுபட இங்கே நாம் மாநாடு கூட்டியிருக்கிறோம். இந்த மாநாட்டில் நீங்கள் நல்ல பல தீர்மானங்களை எல்லாம் நிறைவேற்றுவீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். நெடுந்தொலைவிலிருந்து என்னை இந்த மாநாட்டிற்காக நீங்கள் அழைத்திருக்கிறீர்கள். நாம் இடையிலே உள்ள தூரத்தால்தான் இடைவெளி அதிகமாக உள்ளவர்களாகக் காணப்படுகிறோம். ஆனால் இதயத்தால் நாம் அதிகத் தூரத்திலில்லாமல் ஒன்றாக இருக்கிறோம்.

உங்களுடைய உணர்ச்சியை —என்னைப் புகைவண்டி நிலையத்தில் வரவேற்றபோதும், இங்கேயும் உணரமுடிகிறது. உங்களோடு இருப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். உங்களுடைய தலைவர்கள் பலரும் இங்கே பேச இருக்கின்றார்கள். நான் சமுதாய மறுமலர்ச்சிக் கருத்துக்களை மாத்திரம் இந்த மாநாட்டில் கூறி இருக்கிறேன்.

இதிலே நான் அரசியல் ரீதியிலே எடுத்துச் சொன்ன சமுதாயக் கருத்தை மத்திய அரசு நினைவிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் மீண்டுமொரு முறை கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு வேலை வாய்ப்புக்களில் அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஒழுங்காக, முழுமையாகப் பூர்த்தி செய்யப் பட வேண்டும். இது ஒன்று.

அதுபோல மத்திய சர்க்காருடைய உத்தியோகங்களில் இனிமேல் பின்தங்கிய மக்களுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இவ்வளவு இடம் என்று நிர்ணயிக்கப் பட வேண்டும். அதையும் மத்திய அரசு, உடனடியாகச் செய்ய வேண்டும்.

இந்த வேண்டுகோளை இந்த மாநாட்டின் மூலம் விடுக்கின்கிறேன்.

**14–10–73 அன்று அலகாபாத்தில் நடந்த உத்தரப்பிரதேச அரிசன, பிற்பட்டோர் மாநாட்டின் பிரதிநிதிகள் கூட்டத்தில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.**

---

## வெண்பாப் போட்டி 67

*'அரிசி' எனத் தொடங்கி*
*'அரசு' என முடித்தல்*

முடிவு நாள் 12–11–73

## வெண்பாப் போட்டி 68

*அகம்' எனத் தொடங்கி*
*புறம்' என முடித்தல்.*

முடிவு நாள் 24–11–73

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி)
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை–600002.





# உலகில் இரண்டு கிளிகள்

டி.என். சுகி சுப்பிரமணியன்.

## 15. கன்னியத்திற்குச் சோதனை.

உதகையில் படிக்கும் பாபுவுக்கு நெய் லட்டும் தேன்குழலும் செய்துமுடித்துப் பார்சல் வழியே ராதை அனுப்பிக் கொண்டிருந்தாள்.

"ராதை! நான் கோர்ட்டுக்குப் போகிறேன்"

"என்ன விஷயம்?"

"அஞ்சலையின் காலை நான் துண்டித்தது பற்றி நீதி விசாரணை"

"வக்கீல் யார்?"

"வக்கீல்-மணிவாசகன்"

"அட தெய்வமே"

தெய்வம் போல டாக்டர் நர்மதை காரில் போய்க் கொண்டிருந்தாள். நீதி மன்றத்தில் அவள் சாட்சியைக் கூறினாள். குறுக்கு விசாரணை செய்தவர் அவள் கணவன். பல கேள்விகளைக் கேட்ட வக்கீல் "டாக்டரம்மா நோயாளியைக் காப்பாற்றுவதற்காகவா அவள் முழங்காலை வெட்டி எடுத்தீர்கள்?"

"அப்படியானால் தான் பிழைக்கமுடியும்"

"நோயாளியா? நீங்களா?"

நீதிமன்றமே கலகலவெனச் சிரித்தது.

"இருவரும் பிழைக்க முடியும் அது நீதி" என்றாள் கோபமாக.

"இது நீதிமன்றம். விசாரணைக்குட்பட்டவர்கள் கோபப்படக் கூடாது. இன்னும் ஒரே கேள்வி. அதாவது இதே அஞ்சலை எப்போதாவது உங்களால் சிகிச்சை செய்யப்பட்டது உண்டா?"

"உண்டு. நாலைந்து வருடங்களுக்கு முன்பு கார் விபத்தில் காலில் அடிபட்டு இதே ஆஸ்பத்திரிக்கு வந்தாள்."

"யாரால் விபத்து ஏற்பட்டது என்பதைப் பத்திரிகையில் அறிந்திருப்பீர்கள்."

"ஆமாம். அவள் கணவன் ஓட்டிவந்த காரில் அவள் விபத்துக்குள்ளாகி காலில் அடிபட்டு ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் இருந்தாள்."

"அதே அஞ்சலை! அதே காலுக்கு ஆபத்து. அஞ்சலைக்கு எங்கே வேலையென்று தெரியுமா?"

"கார் விபத்து நடந்த நாலைந்து மாதத்திற்குப் பின்பு செண்பகா மில்லில் வேலை கிடைத்தது."

"மிக்க நன்றி டாக்டர். விபத்தினால் அஞ்சலையின் கால் ஊனமேற்பட்டது. அதே காலைத் துண்டிக்கும் வேலையும் உங்களுக்கே கிடைத்தது."

டாக்டர் பதில் கூறவில்லை.

மணிவாசகன் வாதத்திறமையால், ஊனமுள்ள கால் உள்ளவள் அஞ்சலை; அவள்மீது பரிவு காட்டினார் முதலாளி முத்தய்யா; ஐந்தாண்டுக்காலத்திற்குப் பின்னர் அதேகாலில் ஏதோ பளுவான பொருள் விழுந்து காலைத் துண்டிக்கும் படியான சூழ்நிலை உண்டாகி விட்டது.

ஊனந்தான்-பழைய ஊனந்தான் கால்முறிவுக்குக் காரணம். மில்லின் வேலைப்பளுவோ மில்லின் கவனக்குறைவோ காரணமில்லை. இது வக்கீலின் வாதத்திறமை.

வழக்குத் தள்ளுபடியாயிற்று.

அதேதினம் மாலை முதலாளி முத்தய்யா ரோஜாப்பூ மாலை ஒன்றை வாங்கிக் கொண்டுபோய் மணிவாசகன் கழுத்தில் போட்டுக் கை குலுக்கினார். பாராட்டினார்.
"என்னைக் காப்பாற்றினீர்கள் வக்கீல் ஸார்".

"அது என் கடமை."

"ஒன்று செய்யப் போகிறேன். ஆஸ்பத்திரியில், தனக்கு பணம் ஆயிரம் வரும், ஐயாயிரம் வரும் என்று கனவு கண்டுகொண்டிருக்கும் அஞ்சலையைப்பார்க்கப்போகிறேன்"

"பார்த்து?"

"உண்மையாகவே ஐயாயிரம் கொடுக்க எண்ணுகிறேன். நீதி நமக்குச் சாதகமாக இருந்தாலும் அநீதியாக ஐயாயிரம் பணம் கொடுக்கப் போகிறேன். அவளது மகள் திருமணம் நடக்கட்டுமே".

"பணக்காரர்கள் எதுவும் செய்யலாம்! ஏழைகள் எதையும் செய்யக்கூடாது—"

மலைப்பாம்பு ஒன்று பன்றியை விழுங்குவதைக் கண்டால், மான் குட்டி என்ன செய்ய இயலும்?

எட்டிநின்று தான். இரையாகிவிடாமல் பார்த்துக் கொண்டும் பயந்து கொண்டும் நிற்கும். இவ்வாறு நின்றாள் டாக்டர் நர்மதை.

ராதை அங்குவந்து, "அக்காள்! வழக்கைப் பற்றியோ வழக்கின் முடிவைப் பற்றியோ நீ எதுவும் பேசாதே" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

உள்ளே நுழைகிறான் மாலையுடன்
"ராதை".
"என்ன அத்தான்?"

இந்த மாலை நியாயமாக டாக்டர் நர்மதாவிற்குத் தான் கிடைக்க வேண்டும்.''

''நீங்கள் எது சொல்லுகிறீர்களோ, அதுதான் நியாயம்.''

''நீதி மன்றத்திற்குள்தான் நியாயம் இல்லை. சட்டம் இருக்கிறது என்று எண்ணினேன். இங்கேயும் சட்டம் இருக்கிறது.''

இது என்ன புதிய போர்க் கொடி. டாக்டர் நர்மதை வாய் திறக்காது போனாலும் அவள் மனத்தை இறுக மூடி வைக்க முடியவில்லை.

''ராதை! நீ என்னைச் சட்டம் படிக்கும்படி வளர்த்தாய். என்னைச் சட்டத்தில் ஊற வைத்தாய். டாக்டரம்மா அவர்கள் என் சட்ட ஞானத்திற்குச் சவால் விட்டு, என் அறிவுக்குச் சாணைக் கல்லாக நின்று கூர்மைப்படுத்தினார்கள். என்னைப் படிப்பால் வளர்த்தவர்களைவிட, பணத்தாலும் அறிவுச் செறிவாலும் வளர்த்தவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டவன். நான் எதை விரும்புகிறேனே அது உயர்வாக இருக்கும் என்பதை அடிக்கடி நீ சொல்வாய். நான் எதை விரும்புகிறேனே அது விஷமாக இருக்குமென்று டாக்டரவர்கள் சொல்லுவார்கள். அவர்களது படிப்பும் பழக்கமும் அப்படி. ஆனாலும் இனி யார்வது அறிவு பூர்வமாக சிந்தித்து, இதயபூர்வமாகச் செயலாற்றும்படி சொல்.''

''நீங்கள் சொல்வதை அக்காள் கேட்டுக் கொண்டிருக்கிறாள்.''

''கேட்டுக்கொண்டு இருக்கிறார்களா? இல்லை கெடுத்துக் கொண்டு இருக்கிறார்களா? ஆஸ்பத்திரியில் என்னை முத்தய்யா முன் அவமானப்படுத்தினார்கள். இன்று, வீட்டிற்கே வந்து மலர்மாலை போட்டு விட்டுப் போகிறார். டாக்டரே சாட்சிக் கூண்டில் ஏறி அஞ்சலையின் காலை விபத்துக்குள்ளாக்கியவன் அவள் கணவன் என்னும் உண்மையை மறக்காமல் சொன்னதற்கு என் நன்றியின் காணிக்கை இதே மாலை. இதனைக் கொடு.''

இதனை எதிர்க்கவும் ஏன் என்று வினவவும் ராதைக்கு அறிவு இருந்தும் அன்பு தடுத்தது. குழந்தை போல் அதனை எடுத்துக்கொண்டுபோய் டாக்டர் நர்மதையின் கையில் கொடுத்தாள். குரங்கு கையில் அகப்பட்ட பூமாலையாக அன்று, குரங்காட்டியிடம் அகப்பட்ட மந்தியாக விழித்தாள்; வெறித்துப் பார்த்தாள். அவமானப்படுத்துவதற்கும் எல்லைகிடையாதா? குரோதமே உருவான, தன் எண்ணமே முன்னே நிற்க வேண்டுமென்ற ஒருவரோடு தொடர்ந்து வாழவேண்டுமானால்.....''

அவள் செவிடாகிவிட வேண்டும்.

அவள் குருடாகி விட வேண்டும்.

அவளுக்கென்று தனித்த நன்மைகள் இருக்கக் கூடாது.

ஹால்பக்கம் நின்றால், ''அவள் கழுத்தில் மாலையை போடு'' என்று வக்கீல் சொல்லலாம். அவள் மறுக்கலாம். எனவே மீண்டும் போர்க்களம் ஆகலாம். பூக்களம் உதிரலாம். எனவே முன் யோசனைப்படி நர்மதையைத் தன் அறைக்குள் இழுத்துக் கொண்டு போனாள்.

இரண்டு கிளிகள் ஜோடியாகப் புறமுதுகுகாட்டிப் போகும் வெற்றியை எண்ணி விளையாட்டாகச் சிரித்துக் கொண்டிருந்தான் மணிவாசகன்.

## 16. வழக்கின் முடிவினிலே...

வழக்கின் முடிவை, காரோட்டி சண்முகம் வந்து சொன்னபோது மூன்றாம் முறையாக அவள் விபத்துக்குள்ளான உணர்ச்சியைப் பெற்றாள். ஆயிரம் வரும் ஐயாயிரம் வருமென்று எண்ணியதுபோக ''எந்தவிதமான நஷ்டஈட்டுப் பணமும் கொடுக்க வேண்டியதில்லை என்ற தீர்ப்பு அவளுக்குப் பெரிய விபத்தாக இருந்தது. தீர்ப்பு வேறு நியாயம் வேறு என்பதை எளிய உள்ளம் புரிந்து புழுவாய்த் துடித்தது. தன் வாழ்க்கை மட்டுமின்றித் தன் மகளின் வருங்கால வாழ்வும் ஒடிந்து விட்டதாக நைந்தே போனாள்.

என்றோ கார் விபத்துக்குள்ளான போது அவள் கண்ணீர் வடித்தாள்.

ஆலையில் அடிபட்டபோது அவள் கண்ணீர் வடித்தாள்.

> நன்றி—ஒருமனிதன் அவசியம் கைக் கொள்ள வேண்டிய கடமை; ஆனால், எவரும் எதிர்பார்க்கக் கூடாத உரிமை!
>
> நேரசேயு

நீதிமன்றத்தின் தீர்ப்புக் கேட்டு இப்போது அழுது கொண்டிருக்கிறாள்.

இனி மகளுக்கு வாழ்வு கிடைக்காது என்னும் முடிவையும் நெருங்கிக் கொண்டிருந்தாள்.

அவள் படுக்கை அருகாக முதலாளி முத்தய்யா சிரித்த முகத்தோடும் செண்டு தரும் மணத்தோடும் ஜம்மென்று நிற்கிறார். துக்கத்தைத்தொண்டைக்குள் அடைத்துக் கொண்டவளாக ''முதலாளி'' என்று பாதி மனசுடன் பழகிய பாசத்தால் கைகூப்பினாள்.

''அஞ்சலை! நீதியின் தீர்ப்பு உனக்கு எதிராகப் போய் விட்டது. இதற்கு முன்பு சண்முகம் விபத்தை ஏற்படுத்திய போது அதற்காக நான் பத்தாயிரம் தருவதாக வந்தேன். அவனும் மறுத்தான்; நீயும் வாங்க மறுத்தாய். இன்று நான் பணம் கொடுக்க வருவது உங்களுக்காக இல்லை. சின்னஞ்சிறுசு கனகாம்பரம். அவள் வாழட்டும் என்பதற்காக நான் பணம் தருகிறேன். இருவரும் இங்கு இருக்கிறீர்கள். என்ன சொல்லுகிறீர்கள்?

முதலாளித்துவம் என்பது என்றுமே கேள்விக்குறிதான். நல்லது செய்வாரா? அல்லது செய்யநினைப்பாரா?

அந்த ஏழைகள் இப்போது கோழைகளாக இருந்தார்கள்.

''முதலாளி! அன்றைக்கு நான் இருந்த நிலைமை வேறு. இது நீதி தராத பணம். ஆனால் நல்ல செயலுக்கு உரிய பணம். நான் வாங்கிக்கொள்கிறேன் முதலாளி.''

''புத்திசாலி! சண்முகம் நீ என்னப்பா சொல்லுகிறாய்?''

''நான் கஷ்டப்பட்டவன். வேலைக்கு அலைந்தவன்.''

''கஷ்டத்தை நீயாக வரவழைத்துக் கொண்டாய்.







வேலைக்காரன் மூடனாக இருக்கக்கூடாது. முதலாளி கஞ்சனாக இருக்கக்கூடாது. கார் விபத்துக்காக என் நெஞ்சம் பதறிப் பணஉதவி செய்தேன். அவமானப்படுத்தப் பட்டேன். இன்றும் அவமானம் செய்யும் வாய்ப்பைத் தந்திருக்கிறேன்.

''இல்லீங்க. உங்கள் உதவியை நானும் ஏற்றுக் கொள்கிறேன்.''

''நீதியும் நீதிமன்றமும் தராத காரியத்தை யாருக்கும் பயந்து நான் செய்யவில்லை. இனியும் உன் குடும்பம் துன்பமடையக் கூடாது. பொண்ணுக்குப் பையனைப் பார்த்து விட்டாயா?''

''பார்த்தாச்சு.''

''கல்யாணத்திற்கு எனக்குப் பத்திரிகை கொடு. இல்லை தகவல் கொடு.''

மறுகணம் அஞ்சலை கையில் ஐயாயிரம் ரூபாய் நோட்டுக்களை வைத்துவிட்டு அவர் புன்சிரிப்புடன் மறைந்தார். நெல்லிலிருந்து உமியும் துணியிலிருந்து அழுக்கும், நீங்கியது போல தம்மீதுள்ள குரோதம் அந்தக் குடும்பத்திலிருந்து நீங்கிவிட்ட திருப்தியில் அவர் போய்க் கொண்டிருந்தார். பாவ-புண்ணியங்களை அல்லது இகழ்ச்சி-புகழ்ச்சிகளை அவர் பணத்தை அளவாகக்கொண்டு கணக்குத் தீர்க்கும் வழியை அறிந்தவர்.

அவர் கணக்குத் தீர்ந்தது.

ஆனால் அந்தப் பணம் யார் கணக்கைத் தீர்ப்பதற்கு வெடி வைக்கப் போகிறதோ!

அன்பு பிறக்கவும் அமைதி உண்டாகவும் நல்கிய பணத்திலிருந்து அம்பொன்று பிறக்கும்; அது டாக்டர் நர்மதையின் இதயமாம் மன மலரை உதிர்த்து வைக்குமென்று யார் அறிவார்!

# 17. சட்டப்பூனையும் விஷக்கிளியும்

டாக்டர் நர்மதை குழம்பிய மனத்தைத் தெளிவு செய்து கொண்டாள். ''மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா'' பிறரைத் திருத்தாமல் தானுகத் திருந்துவது மிகப் பெரிய நாகரிகம் என்பதனை முடிவு கட்டினுள். தெய்வம் ''சித்தமிசை குடிகொண்ட அறிவாகவும் இருக்கும்; சித்தமிசை குடி கொண்ட அன்பாகவும் இருக்கும்''. தன் சித்தத்திற்குள் அறிவுக்கும் அன்புக்கும் போட்டி நிகழாமல் விட்டுக் கொடுக்கும் வித்தையை அவள் வளர்க்கக் கற்றுக் கொண்டால், அகத்துக்குள் வீசிய புயலை அவள் மறைத்து முகத்திலே புன்முறுவலுடன் வீட்டிற்குள் வாழ ஆரம்பித்தாள்.

கணவனுடன் எந்தக் கருத்திலும் மாறுபாடு கொள்வது இல்லை; இதனை மனமாரக் கடைப்பிடிக்கவும் எண்ணினுள். கணவனிடம் வலிந்து பேசி அவன் மனத்திற்குள் இருக்கும் ஆணவத்தைத் தன் ஸ்பரிசத்தால்—தன் சிரிப்பால்—தன் செயலால் மாற்றிக் கரைத்து அன்பைப் பெருக்கவும் செயற்பட்டாள்.

பழகிய யானை போல் டாக்டர் நர்மதா மாறி விட்டாலும், வக்கீல் உள்ளத்துள் பசுமையாக ஒரு விஷ வித்து ஒளிந்து கிடந்தது. ''என்னை அவமானப்படுத்திய இந்த நிகழ்ச்சி என் நெஞ்சத்திலிருந்து மறையாது; இது ஆறாத புண். மாறாத ரணம். பழிவாங்குவேன். பழிக்குப் பழி வாங்குவேன்'' என்ற விஷ வித்து கம்பும் கிளையுமாக வளர்வதற்கு ஈரப் பசையை எதிர்பார்த்துக் கொண்டு, தூண்டில் மிதப்பு சும்மா கிடக்குமே அவ்வாறு கிடந்தது. கணவனுகத் தலை நிமிர்ந்து மனைவியுடன் கூடிக் குலாவிப் பேசி மகிழ்ந்தாலும் மனத்தின் மேல் தளத்தில் தூண்டில் மிதப்பாகக் கிடந்த அந்தச் சபதம் அவன் நெஞ்சையும் நினைவையும் விட்டு மறையவில்லை!

மாதங்கள் ஓடின. மனம் மாறியது. டாக்டருக்கு மனம் கனத்தது.

அந்த விஷ வித்துக்கு உயிரூட்டுவது போல பழக்கூடையும் கையுமாகக் கனகாம்பரம் வந்து கொண்டிருந்தாள்.

அந்த வீட்டிற்குள் அதற்கு முன்பு அவள் நுழைந்தது இல்லை. ஒரு பகுதி டாக்டர் நர்மதையின் வீட்டுப் பகுதியாகவும், ஒரு பகுதி வக்கீல் மணிவாசகன் வீட்டுப் பகுதியாகவும் அமைந்திருந்தன. அவளுக்குப் படிப்பு வாசனை இல்லாத காரணத்தால், கூடையுடன் வந்த கனகாம்பரம் எங்கு நுழைவது எனத் தெரியாது திணறினுள்.

வாசலில் இருபக்கமும் நாற்காலிகள், பெஞ்சுகள் போடப்பட்டிருந்தன. டாக்டர் அறைக்குள் இருந்தவள் நோயாளிகள் வர வேண்டிய நேரத்தில் ஏதோ நடமாட்டம் இருக்கிறதே என்று எண்ணி எட்டிப் பார்த்தாள்.

வந்து நிற்பவள் கனகாம்பரம்?

''இதெல்லாம் என்ன?''

''மாம்பழம்'' என்று பழங்களை பெஞ்சியில் எடுத்து வைத்தாள்.

''இத்தனை பழங்களை யார் கொண்டு வரச் சொன்னது?''

''பதினைஞ்சு நாளைக்கு முன்னாலே விஷம் குடித்துச் சாகக் கிடந்த என்னைக் காப்பாற்றினீர்கள்''.

''அதற்காக?......''

''என் நன்றியைத் தெரிவிச்சுட்டுப்போக''

''ஒருபழம் போதும். மற்றதை கூடைக்குள் எடுத்து வை''.

''இல்லீங்க....''

''ஆமாம் நான் வக்கீலய்யாவிடம்''.

உன்வழக்கைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவர் வருகிற நேரம் நீ இத்தனை பழங்கள்வாங்கி வந்ததுமிகவும் தப்பு! அத்தனையும் எடுத்துக் கூடைக்குள் போட்டு உன் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போ''

ராதை அங்கு வந்தாள்.



''யாரக்கா உனது மாஜி நோயாளியா'' என்று கேட்டாள்.

''பதினைந்து நாட்களுக்கு முன் விஷம் குடித்து என் நர்சிங்ஹோமில் அனுமதிக்கப் பட்டிருந்த......''

''கனகாம்பரம் இவள் தானு? இத்தனை சிறிய வயதில் தற்கொலை செய்ய எப்படித்தான் உனக்கு மனம் துணிந்தது? உயிரை மாய்த்துக் கொள்ளும் பிரச்னை பற்றி அக்காள் சொன்னுள்''

ராதையிடம் சொல்லுவதா வேண்டாமா என்று தயங்கினுள்.

''கனகாம்பரம்! இவளிடம் சொன்னுல் உனக்கு இரட்டை லாபம்! வக்கீல் ஐயா இவள் சொன்னுல் உன் வழக்கை நன்கு யோசிப்பார்!''

''என்னுத்தை சொல்லறது? எம்மனசுக்குப் புடிக்காத ஒருத்தனைக் கூட்டிவந்து கட்டு தாலியின்னு சொன்னுங்கள்; என் அப்பாவும் அம்மாவும் பிடிவாதம் புடிச்சாங்க. எனக்கு இஷ்டமில்லை. வற்புறுத்தினுங்க. மூட்டைப் பூச்சி மருந்தை வாங்கித் தின்னிட்டேன்.''

''அப்பாவி! எத்தனை அழகா இருக்கே! உன் உயிரைக் கொல்லும் துணிச்சல் எப்படி வந்தது?''

''அதைக் காப்பாத்தினது நம்ம டாக்டரம்மா. அதுக்காக நன்றி சொல்லிவிட்டுப் போகலாமுன்னு வந்திட்டேன்''

வக்கீல் மணிவாசகன் தன் காரில் வந்து இறங்கியவன், ''அடடே! எனக்கு மாம்பழமுன்ன உயிர்! டாக்டரம்மாவுக்கு என் ருசி கூடத் தெரிய ஆரம்பிச்சுருக்கு: என்ன விலை சொல்லுகிருள் மாம்பழக்காரி!'' என்று கேட்டான் மணிவாசகன்.

''அவள் மாம்பழக்காரி இல்லை. உங்களிடம்ஒருவிஷயம்இரண்டு நாளைக்கு முன்பு சொன்னேனே! நினைவு இல்லை. விஷங்குடித்த ஒரு பெண்.... உங்களிடம் வழக்கைச் சொல்ல வருவாள் என்றேனே?''

''எனக்கு வழக்குக் கிடைக்காதென்று நீயே வழக்காளிகளைப் பிடிக்கிருயா?'' என்று உறுமினுன்.

''அவள் ஏழை! அவளுக்குக் கருணை காட்டுங்கள் என்பதற்காக நானே வரச் சொன்னேன்.''

மீண்டும் சாந்தம் தவழ்ந்தது.

''யாரோ கனகாம்பரம் விஷம் சாப்பிட்டு உன் நர்சிங்ஹோமுக்கு வந்தாள். அவளை நீ காப்பாறினே! அந்த விஷம் இவள் தானு?''

''இவளைப் பார்த்தால் அமிர்தம்மாதிரி இருக்கிருள்?'' என்று சான்றிதழ் தந்தாள் நர்மதை.

''நர்மதா. அமிர்தம் உருவெடுத்தால் உன்னை மாதிரி வடிவத்தில் இருக்கும். விஷம் உருவெடுத்தால் என்னை மாதிரி இருக்குமென்று இந்த விநாடி வரை நினைத்தேன். இப்போது மாற்றிக் கொள்ளுகிறேன். விஷம் கனகாம்பரம் மாதிரியும் வடிவெடுக்குமென்று தெரிய வருகிறது. இவளுடைய 'கேஸ்' என்ன?'' என்றவன் கைக்குள் அடங்கக் கூடிய இரண்டு மாம்பழத்தை எடுத்துக் கொண்டான்.

நல்லது செய்யப்போகிருேம் என்று நம்பிய டாக்டர் நர்மதை நெஞ்சத்துக்குள் இனிமை கொப்புளித்தது. இரக்கம் வேர் விட்டது. கருணை அருவியாகக் கொட்டிற்று.

''அத்தான்! இவள் வழக்கு விசித்திரமானது. இவள் விஷம் அருந்தியதும் உடனே நர்சிங்ஹோமுக்குள் அனுமதிக்கப் பட்டாள். அப்புறம்....''

''நானே அவள் வழக்கைக் கேட்டுக் கொள்ளுகிறேன். வா....உள்ளே....''

இந்த வார்த்தையை நம்பி வழக்குரைஞர் அறைக்குள் நர்மதை நுழைந்தாள்.

''உன்னை யார் வரச் சொன்னது. வழக்காளியை உள்ளே அனுப்பு, நீ போ வெளியே?'' என்று கர்ஜனை செய்தான். குரலில் எடுபிடி கெடிபிடி கடுமையாகக் குதிபோட்டன.

''இதோ'' என்று பயந்து நடுங்கிக் கொண்டு வெளியே வந்தவள் ''வக்கீலய்யா முன் கோபக்காரர்; உன் வழக்கின் விவரத்தை நிதானமாகச் சொல்!'' என்று நயமாகக் கூறி அனுப்பி வைத்தாள்.

சட்டப்பூனையின் கூண்டுக்குள், விஷக்கிளி நுழைவது போல கனகாம்பரம் நுழைந்து கொண்டிருந்தாள்.

அதே சமயம் ''அக்கா.. அக்கா, அடுப்பில் பால் பொங்கி விடப் போகிறது. டெலிபோனில் உங்களை 'பாபு' கூப்பிடுகிருன் என்று அவசரப் படுத்தினுள் ராதா.

டாக்டர் நர்மதை நல்லதைச் செய்துவிட்ட மகிழ்ச்சியில் 'டிரங்கால்' பேச ஓடினுள்.

வக்கீல் மணிவாசகன் சுழல் நாற்காலியில் உட்கார்ந்தவன் மானுக மிரட்சி பெற்றும் தேனுகத் திரண்டு நிற்கும் மாம்பழக்காரி கனகாம்பரத்தை நோக்கினுன்.

''இப்படி வந்து எதிர் நாற்காலியில் உட்கார்'',

''பரவாயில்லீங்க! நிற்கறேன்.''

''நீ மாம்பழக்காரி இல்லே நிற்பதற்கு! வழக்கைச் சொல்ல வந்தவள். கை ரேகை பார்ப்பவர்கள் காத தூரத்தில் நிற்கிற மாதிரி நிற்காதே. காதும் காதும் வைத்த மாதிரி சொல்....''

பயந்துகொண்டு எதிர் நாற்காலியின் விளிம்பில் அவள் உட்கார்ந்துசொன்னுள். டாக்டர் எச்சரிக்கை செய்திருந்த காரணத்தால் தன் தாய் அஞ்சலை தகப்பன் சண்முகம் என்பதை அவள் பேச்சு எடுக்கவில்லை. டாக்டரின் விழிகளைச் சந்திக்க அவள் விழிகள் நடுங்கின. வாய் குளறியது.

''கேட்கிற கேள்விக்கு பதில் சொல்''

''ஆகட்டுமுங்க''

''உன்னைப் பார்த்தா.... உனக்கு வயது .. இருபது..''

''போன மாசம் முடிந்தது!''

''இருபது வயசு மங்கை. கருங்கூந்தல். கருவிழி கண்மை. எல்லாம் கருப்பு. முகம் நிறைந்த விழி; விழி நிறைய மர்மம். கனகாம்பரம்.''

'ஐயாவுக்கு பீசு....தர.''

பேசித்தான் நான் பணம்

வாங்குவேன். ஆனு உன் முகத்தைப் பார்த்தா எனக்குப் பேசத் தோன்றவில்லே. உருவத்தைப் பார்த்தால் என் சர்வமே நடுங்குகிறது. கண்ணைப் பார்த்தா விண்ணைப் பார்க்கும் கவர்ச்சி இருக்குது. உங்ஙளைப் பார்த்தா?....

பயந்து "வக்கீல் சார்.... என் உயிரை அம்மா காப்பாத்திஞங்க. என் உடலுக்கு எந்த விஞடியும் அம்மா அப்பாவால ஆபத்து வரும்."

"வருமென்று கவலைப் படாதே. நீ மேஜர். உன் தாய் தந்தை பிடியிலிருந்து நீ விடுபடனும். இது தானே உன் எண்ணம்?"

"ஆமாங்க"

"சரி. நான் இருக்கிறேன். வழக்கை என்னிடத்தில் கவலைப் படாமல் பெரிய பெரிய முதலாளிகளே கொடுத்த பிறகு போய்ச் சேருவாங்க. நீ போய்ச் சேர்....."

"அப்புறம்?"

"நீ காரோட்டி சண்முகம் மகள். அஞ்சலையின் மகள். அதையேன் மறைத்தாய்?"

"அது... அது.. அது.... டாக்டரம்மாதான் மறைக்கும்படி சொன்னுங்க...... உதவி செய்ய மாட்டீங்க அவங்க உங்க விரோதியின்னு சொன்னுங்க...."

"அவங்க என் விரோதி இல்லேயே. கனகாம்பரம் நீ என் விரோதி இல்லே. நான் இருக்கிறேன். கவலேயை விட்டுவிட்டுப் போ...."

பயம் நீங்கிய தெளிவோடு பச்சைக் கிளியாக வெளியே வந்து கொண்டிருந்தாள்.

ஈரப்பசையை எதிர்பார்த்து மிதப்பாக இருந்த தூண்டிலுக்குள் கனம் பிடித்தது; ஈரம் பிடித்தது. அந்த மிதப்பு அடிமனத்திற்குள் ஆழ்ந்து கொண்டிருந்தது.

'பாபு' வுடன் பேசிக் களித்த நர்மதை கனகாம்பரத்திற்காகத் தன் அறை வாசலில் நின்ருள்.

"ஐயா என்ன சொன்னர்?"

"என் கையில் வழக்கை ஒப்படைத்தால் கவலேயை மறந்து விடலாம். 'நான் இருக்கேன் கவலேயை விடு' என்ருர்."

"இனிமேல் நீ கவலேப் படவேண்டாம். வழக்காடி ஜெயம் பெற்றுத் தருவார்."

கனகாம்பரம் பரமதிருப்தியுடன் போய்க் கொண்டிருந்தாள். அவள் வாழ்க்கை செவ்வையாக நடக்குமென்னும் ஆனந்தத்துடன் டாக்டர் நர்மதா தனதறைக்குள் போய்க் கொண்டிருந்தாள்.

"அத்தானைச் சாப்பிடக் கூப்பிடுங்கள் அக்கா. பாபு என்ன கேட்டான்? போன் பேசினீர்களே!"

"இந்த வருடம் நீ பாஸ் செய்து விடுவாயா? அதுதான் அவன் கவலேயாம்?"

"பாஸ் செய்வேன் என்று சொல்லி யிருப்பாய்"

"ஆமாம்...." என்றவள் மணிவாசகன் அறைக்குள் நுழைந்து "அந்தப் பெண் கனகாம்பரம் தெம்போடு போகிருள். அவள் வழக்குப் பிழைக்கும்" என்று நிறுத்திஞள்.

"அவள் பிழைத்துக் கொள்வாள். என்னிடம் ஒரு உண்மையை நீ மறைத்து விட்டாய்."

"என்ன?"

"அவள் அஞ்சலேயின் மகள் என்று ஏன் சொல்லவில்லே?"

நெருப்பை மிதித்தது போல இருந்தது.

"தவறு தான்? மன்னித்து விடுங்கள்".

"டாக்டர் உங்கள் தொழிலில் நோயாளியிடம் கேட்டும் கேளாமலும் தெரிய வேண்டிய வழிகள் உண்டு. வக்கீல் தொழிலில்...."

"தொழில் சம்பந்தமாக நமக்குள் விவாதம் வேண்டாம். நான் செய்தது தவறு.

"அதை நினைத்துக் கொண்டிருந்தால் போதும்! வக்கீலே ஏமாற்ற நினைப்பவர்கள் ஏமாறுவார்கள்."

"நீங்கள் சாப்பிட வாருங்கள்."

"இந்த இரண்டு மாம்பழங்களைச் சாப்பிடப் போகிறேன். நீ சாப்பிட்டுவிட்டு உன் வேலேயைக் கவனிக்கலாம்."

"சரி...."

டாக்டர் நர்மதை பயந்தபடியே வெளியே வந்தாள்.

ராதை, அத்தானே நான் சமாதானப் படுத்துகிறேன் நீ போ" என்ருள்.

"அத்தான்! உங்களுக்குப் பிடித்தமான பால்கறி! சிப்ஸ்.... முருங்கைக்காய் சாம்யார்."

"உனக்காக என் எண்ணத்தை மாற்றுகிறேன்"

"அக்காளே அழவைப்பதில் உங்களுக்கு என்ன குஷி?"

"என்னே ஏமாற்றுவதில் அவளுக்கு ஏன் அக்கறை?"

இனி பேசினுல் ஆபத்து என்று ராதை நகர்ந்தாள். மணமணத்துக் கொண்டிருக்கும் சாப்பாட்டு' அறைக்குள் மணிவாசகன் புகுந்தான். மூவரும் உண்ணத் தொடங்கிஞர்கள். மௌனமாக இருந்தது அறை.

ஒவ்வொருத்தர் மூளைக்குள் ஒவ்வொரு யோசனே; ஒவ்வொருவிதக் கற்பனே.

தான் தேர்வு பெற்றுவிடுவதாக ராதை நினைக்கிருள்.

தான் தக்க உதவி செய்து விட்டதாக டாக்டர் நினைக்கிருள்.

நர்மதைக்குத் தக்க பாடம் சொல்லிவைக்கக் கனகாம்பரத்தைப் பயன்படுத்த வக்கீல் நினைக்கிருர்.

உணவின் ருசியை விட உள்ளத்தின் ருசிக்குத் தானே மதிப்பு!

(வளரும்)

**விசைப்படகு இயந்திர உற்பத்திச் சாலை**

தமிழ்நாட்டில் மீனளத் தொழிலே நவீனப்படுத்துவதன் மூலமே மீனவர்களின வாழ்வில் நன்மைகள் பல சேர்க்க முடியும் - அவர்கள் வாழ்வில் வளம் பெருக்க முடியும் என்பதால், இந்தத் தொழிலே வேகமாக வளர்த்துச் செல்வதற்குத் தேவையான - தகுந்த அடித்தளம் இம்மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக, விசைப் படகுகளுக்குத் தேவையான இயந்திரங்களை உற்பத்தி செய்யச் சென்னே அருகே எண்ணூரில் 3 கோடி ரூபாயில் தொழிற்சாலே ஒன்று அமைக்கப்பட இருக்கிறது. தமிழகத் தொழில் முதலீட்டு நிறுவனமான யுட்கோ இதை அமைக்க இருக்கிறது.



# மாவட்டங்களிலிருந்து..

## மதுரை மாவட்டம்

மதுரை கிழக்கு: கிராம வளர்ச்சி அளவுத் திட்டத்தின் கீழ் மண் மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் செப்டம்பர்த் திங்களில் ரூ. 35,101 வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வூராட்சி ஒன்றியப்பகுதியில் இம்மாதத்தில் 13 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

மதுரை மேற்கு: இவ்வொன்றியத்திலுள்ள பரவை பேரூராட்சி சத்தியமூர்த்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள சமயநல்லூர் ஆரம்பச் சுகாதார குடும்பநல மருத்துவமனைக் குடியிருப்பு இல்லங்களே 19.7.73-ல் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் திறந்துவைத்துள்ளார்.

உசிலம்பட்டி: இவ்வூராட்சி ஒன்றியத்திலுள்ள தச்சு உற்பத்தி நிலேயத்தில் நடப்பு மாதம் ரூ. 1,773 பெறுமான தளவாடச்சாமான்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. சிறுசேமிப்புத்திட்டத்தின் கீழ் இம்மாதம் ரூ. 1,730 வசூல் செய்யப்பட்டுள்ளது.

சேடபட்டி: வெள்ளிவிழாச் சீரூர் கிராமமான குப்பல் நத்தத்திற்கு இணைப்புச்சாலே 1. கி. மீ. தூரம் செப்பனிடப்பட்டுள்ளது. சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 1,280 வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ்வட்டாரத்தைச் சேர்ந்த அணியினர் 4 உறிஞ்சு குழிகள் அமைத்துள்ளனர்.

கள்ளிக்குடி: சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 5,500 வசூல் செய்யப்பட்டுள்ளது. குடும்பநலத்திட்டத்தின் கீழ் 8 தாய்மார்களுக்குச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

தே. கல்லுப்பட்டி: கிராம வேலேத்திட்டத்தின் கீழ் ரூ. 1,231 செலவு செய்து இணைப்புச்சாலேகள் போடப்பட்டுள்ளன. ரூ. 4,223 செலவில் ஊராட்சி ஒன்றியச் சாலேகள் வளர்ச்சி பெற்றுள்ளன.

குசிலியம்பாறை: இவ்வூராட்சி ஒன்றியத்தில் கடந்த 23.8.73ம் நாள் மதுரை மாவட்ட ஆட்சித்தலேவரின் தலேமையில் மனுநீதித்திட்டம் சிறப்பாக நடைபெற்றது. ஏறத்தாழ 5500 விண்ணப்பங்களுக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. 44,000 பேர்களுக்குப் பட்டாவும், பாஸ் புத்தகங்களும் வழங்கப்பட்டன. இலவசமாகத் தொழிற் கருவிகளும், சீருடைகளும், மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பழனி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தாதநாயக்கன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த தெற்கு தாதநாயக்கன்பட்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் புதிய ஆரம்பப் பள்ளித் துவக்க விழா செப்டம்பர் 22ம் நாள் நடைபெற்றது.

## இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த சூலேத் திங்கள் 2-ம் நாள் தாய்மார்களுக்கான குடும்ப நல அறுவைச் சிகிச்சை முகாம் விருதுநகர் அரசாங்க மருத்துவமனேயில் தொடங்கி 42 நாட்கள் நடந்தன. சூலே 17-ம் தேதி சிவகெங்கை மருத்துவ மனேயில் துவங்கி 42 நாட்கள் நடைபெற்றது. ஆகஸ்ட் 17-ம் தேதியன்று தொடங்கி இராமநாதபுரம் தாய்-சேய் அரசாங்க மருத்துர மனேயில் 42 நாட்கள்வரை நடைபெற்று, அண்மையில் முடிவுற்றது. ஆரம்பச் சுகாதார நிலேயத்துக்கு 35 வீதம் 32 ஆரம்பச் சுகாதார நிலேயங்களுக்கும் சேர்ந்து மொத்தம் 1120 அறுவைச் சிகிச்சைகள் செய்ய வேண்டுமென்பது குறியீடு. ஆனல், இப்போது நடைபெற்றிருப்பதோ 1300 அறுவைச் சிகிச்சைகள். அதாவது குறியீட்டிற்கு மேல் 180 அறுவைச் சிகிச்சைகள் கூடுதலாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்து முடிந்துள்ள இந்த அறுவைச் சிகிச்சை முகாம்கள் மிக முக்கியமானவை என்று கருதப்படுகின்றன. இத்தகைய ஆறு வார முகாம்கள் இம்மாவட்டத்தில் நடைபெறுவது இதுவே முதல் தடவை. இங்கு மூன்று இடங்களில் முகாம்கள் நடைபெற்றன. முகாமுக்கு 6 வாரம் வீதம் மூன்று முகாம்களுக்கும் சேர்த்து 18 வாரங்கள் எடுத்திருக்கலாம். அவ்வாறில்லாமல் 12 வாரக் காலத்தில் மூன்று முகாம்களும் முடியும் விதமாக முகாம் காலங்கள் ஒன்றுக்கொன்று இணைத்து நடத்தப்பட்டுள்ளன.

வெளி மாவட்டத்திலிருந்து வந்த ஆறு வண்டிகளேக் கொண்டே மூன்று முகாம்களேயும் வெற்றிகரமாக நடத்தி முடித்திருப்பதும், குறைந்த செலவில் நிறைந்த சாதனேயாக 1300 அறுவைச் சிகிச்சைகள் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் கோயில் புலிக்குத்தி என்னும் கிராமத்தில் தகுதி வாய்ந்த பெற்ரேர்கள் நூற்றுக்கு நூறு பேரும் குடும்ப நல அறுவைச் சிகிச்சை மேற்கொண்டுள்ளனர். இராமநாதபுரம் மாவட்டத்தில் இப்படி ஒரு சாதனே இப்போதுதான் நடந்திருக்கிறது.

## தஞ்சை மாவட்டம்

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஒன்றியங்கள் 15.9.73 முதல் 21.9.73 வரை அறிஞர் அண்ணு பிறந்த வாரத்தைச்

சீரணி வாரமாகச் சிறப்பாகக் கொண்டாடின.

20-9-73 அன்று தஞ்சை மாவட்டச் சீரணி, தஞ்சைக் கோட்டத்திலுள்ள ஐந்து ஒன்றியங்களைச் சேர்ந்த சீரணியர்களுக்கு விளையாட்டுப் பந்தயங்களும், மாணவர்களுக்குச் சீரணிபற்றிய பேச்சுப் போட்டியும் நடத்தின. காலையில் மேலவெளி அரிசன காலனியில் துப்புரவுப் பணிநடந்தது. பேச்சுப்போட்டியிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் சீரணியின் குறிக்கோள்களையும் இதுவரையில் மாவட்டத்தில் செய்யப்பட்ட பல்வேறு பணிகளைப்பற்றியும் பலர் பேசினார்கள்.



## செங்கை மாவட்டம்

வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மூன்று குழந்தைகள் காப்பகத்தில் 1-9-73 அன்று மதிய உணவுத் துவக்க விழா நடைபெற்றது. முத்தியால்பேட்டை குழந்தைகள் காப்பகத்தில் மதிய உணவுத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியப்பெருந்தலைவர் துவக்கி வைத்தார். குழந்தைகள் 50 பேருக்கும், பாலூட்டும் தாய்மார்கள் 20 பேருக்கும், மதிய உணவு வழங்கப்பட்டது. ஆம்பாக்கம் குழந்தைகள் காப்பகத்தில் 50 குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் 20 பேர்களுக்கும் வேடல் குழந்தைகள் காப்பகத்தில் 70 பேருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ''மாவட்ட விளம்பர ஒத்துழைப்புக்குழு' நிறுவப்பட்டுள்ளது. மாவட்டத்தில் விளம்பரப் பணிக்காக ''விளம்பர ஒத்துழைப்புக்குழு'' மாத நிகழ்ச்சிகளை வரையறுக்கும். இந்த விளம்பர ஒத்துழைப்புக்குழு செய்தி-ஒலி பரப்புத்துறையின் மூலமாகவும், மாநில விளம்பரத் துறை மூலமாகவும் செயல்படும்.


**தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.**

நெ. 14, சித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை - 600007.

தொலைபேசி எண் : 30800 — தந்தி : "ஹவுஸ்பாங்க்"

தபால் பெட்டி எண் : 486

தலைவர் : திரு பழனிவேல் ராஜன், பி. எஸ்ஸி., பி.எல்., எம். எல். ஏ.
உபதலைவர் : திரு பி. கஸ்தூரி பிள்ளை.
பொருளாளர் : திரு என். பழனிசாமி, எம். ஏ.

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... ... | ரூ. 2·5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... | ரூ. 1,87,69,500 |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை. | ரூ. 10,12,30,217 |

இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.

| | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு |
|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ... ... ... | ரூ. 25,000 |
| கிராமப்புறங்களில் புதியவீடு கட்ட ... ... ... | ரூ. 10,000 |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்... | ரூ. 10,000 |

பூ. க. பத்மநாபன், பி.ஏ., எச்.டி.சி.
இணைப்பதிவாளர்—செயலாளர்.




# கோழி வளர்ப்பு



**கோ**ழி வளர்ப்பு ஓர் சிறந்த துணைத் தொழிலாகும். அதைக் கருத்துடன் மேற்கொள்வோர் தக்க ஊதியம் பெறுவதுடன், குழந்தைகளுக்கும், தாய்மார்களுக்கும் அவசியமாகத் தேவைப்படும் சத்துணவாகிய முட்டை, இறைச்சி ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் நற்பணியில் பங்கு பெறும் வாய்ப்பினைப் பெறுகிறார்கள். எத் தொழிலுக்கும் ஏற்பட்டுள்ளதைப் போல, கோழி வளர்ப்பிலும் சில விதி முறைகள் உண்டு. அவற்றை நன்கறிந்து நல்ல முறையில் பேணி வந்தால், கோழி வளர்ப்பு நல்ல பயனைத் தருகிறது. கோழிகளுக்கு வசதியான குடியிருப்பு, தரமான தீவனம், பாங்கான பராமரிப்பு, நோய் அற்ற வாழ்வு ஆகியவைகளை அளித்து, அதிகப் பயன் பெறுவதே கோழி வளர்ப்பு முறைகளின் நோக்கமாகும்.

**கோழி இனங்கள் :**

1. வெள்ளைக் கோழிகள்.
2. சிவப்பு போந்தாக் கோழிகள்.
3. கலப்பு இன வகைகள்.

மேற்கூறிய 3 இனங்களில், வெள்ளைக் கோழிகள் அதிக முட்டைகள் இடும் திறன் கொண்டவை. சிவப்புக் கோழிகள், இறைச்சி வகையைச் சேர்ந்தவையாகும். கலப்பு இனத்தில் பல வகைகள் உண்டு. பொதுவாக இவை யாவுமே அதிக முட்டைகளும், அதிக இறைச்சியையும் கொடுக்கும் தன்மையுடையவை. ஒவ்வொரு இனத்திலும், நல்ல முட்டைகள் இடும் தரமான கோழிகளும், அல்லாத மற்ற கோழிகளும் உண்டு. இத்தரமறிந்து நல்ல கோழிகளை வளர்ப்பதே இலாபகரமானதாக இருக்கும்.

**முட்டையிடும் தன்மையுள்ள தரமான கோழிகளின் தன்மைகள் :**

அ. நல்ல வளர்ச்சி.

ஆ. உடல் நலம்.

இ. சுறுசுறுப்பான தன்மை.

ஈ. பளபளப்பான கண்கள்.

உ. பெரியசிவந்தகொண்டை

ஊ. பரந்த மார்பு.

எ. ஆழ்ந்த உடலமைப்பு.

ஏ. 3 விரல்கள் அகலத்தில் உள்ள பின்புற அமைப்பு.

ஐ. மிருதுவான இறகுகள்.

ஒ. நடுத்தர எடை (0.5 முதல் 2 கிலோ.)

மேற்கூறிய தன்மைகளைச் சிறிது பழக்கத்திலேயே தெரிந்து கொள்ளலாம். இத்தன்மைகள் கொண்ட நல்ல கோழிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு வசதியான வீடு அமைக்க வேண்டும்.

**வசதியான வீடு (டீப் லிட்டர்—ஆழ்குப்பை)**

1. நல்ல காற்றோட்டம்.
2. ஈரம் கசியாத அமைப்பு.
3. பூனை, நரி, நாய் இவைகளிடமிருந்து நல்ல பாதுகாப்பு.



4. கோழிக்கு 2.5 சதுர அடி வீதம் இட வசதி.

5. தரமான ஆழ் குப்பை (மரத் தூள், உமி, உலர்ந்த சருகு).

6. தக்க தீவனம்.

7. தேவையான தண்ணீர்.

மேற்கூறிய ஏழு வசதிகளும் கொண்டதாகக் கோழி வீடு இருக்க வேண்டும்.

### குறைந்த செலவில் கோழி வீடு

கோழிக்கு 2.5 சதுர அடி வீதம், 40 கோழிகள் வளர்ப்பதற்கு 100 சதுர அடி கொண்டதாகக் கோழி வீடு இருக்க வேண்டும்.

அதாவது 10 அடி சதுரமாகக் கட்ட வேண்டும். நீண்டசதுர அமைப்பு விரும்பத் தக்கது. மேற்கூறிய அளவில் கோழிவீடு அமைக்கக் கீழேகண்ட அட்டவணையில் கண்டவாறு செலவு ஆகும்.

| | ரூபாய் |
|---|---|
| 1. தென்னை ஓலை 200 ... ... ... | 30.00 |
| 2. மூங்கில் கட்டு 4×25 ... ... ... | 32.00 |
| 3. கால்கள் (சவுக்கு) 4 ... ... | 8.00 |
| 4. கயிறு பானை 4 ... ... ... | 8.00 |
| 5. கம்பி வலை (3 அடி அகலம் × 40 அடி நீளம்) ... | 20.00 |
| 6. 6 அடி மூங்கில் குடைந்த தீனித் தொட்டி 2 ... | 5.00 |
| 7. மண் தண்ணீர்த் தொட்டி 4 ... ... | 2.00 |
| 8. முட்டையிடப் பானைகள் 4 ... ... | 5.00 |
| 9. கூலி ... ... ... ... | 15.00 |
| மொத்தம் ... | 125.00 |

தண்ணீர் தேங்காத மேடான இடத்தில் 10 அடிக்கு 10 அடிக் கடைக்கால் எடுத்து, மண் சுவர் 2 அடி உயரத்திற்கு எழுப்பிக் கால்களை நட்டு, கூரை வேய்ந்து, கம்பி வலை அடைத்து, வீட்டை அமைக்க வேண்டும். தரையைக் கெட்டித்து, மெழுகி, 6 அங்குல உயரத்திற்கு உமி அல்லது மரத் தூளை இட வேண்டும். தீனி, தண்ணீர் வசதிகளை அமைத்து, முட்டையிடப் பானைகளையும் சுவர் ஓரமாக அமைக்க வேண்டும். உமி மழையில் நனையாமல் இருக்கக் கூரையைத் தாழ்வாகவும், சரிவாகவும் அமைக்க வேண்டும்.

### கோழி வீட்டில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை

1. ஆழ்குப்பை எக்காரணம் கொண்டும் ஈரமாக இருக்கக் கூடாது.

2. 20 கோழிக்கு ஒரு 6 அடி மூங்கில் தீனித் தொட்டி இருக்க வேண்டும்.



3. 10 கோழிக்கு ஒரு தண்ணீர்த் தொட்டி வேண்டும்.

4. 10 கோழிக்கு ஒரு முட்டையிடும் பெட்டி அல்லது பானை வேண்டும்

5. கிளிஞ்சல் பொடி எப்பொழுதும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும்.

### தரமான தீவனம்

கோழிகள், அதிக முட்டைகள் இட, தரமான கலப்புத் தீவனம் அளிக்க வேண்டும். இத் தீவனம் அரசு நிறுவனங்களிலும், தனிப்பட்ட நிறுவனங்களிலும் தயாரித்து விற்கப்படுகிறது. கோழிகளுக்கு 24 மணி நேரமும், தீனி கிடைப்பதற்கு ஏற்ற வசதி செய்ய வேண்டும். கோழி ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 100 கிராம் வீதம் கணக்கிட்டுத் தீனியைத் தொட்டியில் விரவ வேண்டும்.

கோழிகள் தீனியை இரைத்து வீணாக்கக் கூடுமாதலால், ஒரு நாளைக்கு வேண்டிய தீனியை மட்டுமே இட வேண்டும். கோழி வளர்ப்பில் 75 சதம் செலவு தீனிக்குத்தான் ஆகிறது! ஆகவே அதை வீணாக்காமல் உபயோகப் படுத்த வேண்டும். எலிகளும் தீனியை விரயமாக்குவதால், இரவில் எலி அணுகா வண்ணம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

### பராமரிப்பு

கோழி வளர்ப்பில் இது முக்கியமானதாகும். நல்ல கோழிகளை வசதியான வீட்டில் வைத்துத் தரமான தீனி கொடுத்தாலும் வளமான பராமரிப்பு இன்றேல், தக்க பயனளிக்காது. காலையிலிருந்து மாலை வரை அவ்வப்போது கோழிகளைக் கவனித்துப் பின் கண்டவாறு தேவையானதைச் செய்து வருவதே பராமரிப்பாகும்.

1. காலையில் கோழி வீட்டைப் பார்வையிடுதல்.

2. தண்ணீர்த் தொட்டிகளைக் கழுவி, நல்ல நீரை நிரப்புதல்.

3. தீனித் தொட்டிகளைச் சுத்தம் செய்து தீனி நிரப்புதல்.

4. ஆழ் குப்பையைக் கிளறிவிடுதல்.

5. முட்டையிடும் பெட்டிகளைச் சரியாக வைத்தல்.

6. கோழிகளின் தன்மையைக் கவனித்தல்.

7. நலமற்ற கோழிகளைக் கவனித்தல்.

8. மழை, வெய்யில், காற்றுக் காலங்களில் தக்க பாதுகாப்புகளைச் செய்தல்.

9. தீவனம் வீணாகாமல் தடுத்தல்.

10. தண்ணீரில் மருந்துகள் கலப்பது.

11. வயிற்றுப் பூச்சிக்கு அவ்வப்போது மருந்து கொடுத்தல்.

12. பேன் மருந்து தெளித்தல்.

13. கோழிகள் ஒன்றை ஒன்று கொத்தாமல் தடுத்தல்.

14. முட்டை உடைப்பதைத் தடுத்தல.

15. தோற்று நோய்களைத் தடுப்பது.

16. மற்ற நோய்களுக்குச் சிகிச்சை.

இவையெல்லாம் பராமரிப்பின் கீழ் வருவதால், கோழி வளர்ப்பு இலாபகரமாக இருக்க அதிகக் கவனம் செலுத்த வேண்டும்.

### முட்டைகள் பாதுகாப்பு

முட்டைகள்கெடாமலிருக்கக் கோழிப் பண்ணைகளில் பின் கண்ட முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. மூன்று அல்லது நான்கு முறை முட்டைகளைச் சேகரிக்க வேண்டும்.

2. ஒன்றை ஒன்று ஒட்டாமல் முட்டைகளை வைக்க வேண்டும்.



கோழியின் மூக்கு நுனி கத்தரிக்கப்படுதல்

# சிக்ஸ் இந்தியா கோழிப்பண்ணை

## கடலூர் சித்தூர் ரோடு, நெல்லிக்குப்பம்

முதலாண்டு நிறைவு விழா !　　　　　வெற்றிச் சாதனை !!

முதலாண்டில், 1,90,503 ''ராணி ஷேவர்'' பெட்டைக் கோழிக்குஞ்சுகள் விற்பனை செய்யப் பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

விவசாயிகளுக்குக் கோழிகள் வாங்குவதற்காகக் கடன் வழங்கிய மாநில வங்கியினருக்கும், கால்நடை வளர்ப்புத் துறையினரால் கோழிப்பண்ணைகளை நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்தமைக்கும் எங்களுடைய உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போது எங்களிடம் 10 முதல் 16 வாரம்வரை வயதுள்ள உலகப் பிரசித்திபெற்ற உயரின ''ராணி ஷேவர் ஸ்டார் கிராஸ் 288'' பெட்டைக்கோழிக் குஞ்சுக்ள் முற்றிலும் நோய்த்தடுப்பு செய்யப்பட்டவை விற்பனைக்கு உள்ளன.

விலை விபரங்களுக்கு அணுகுங்கள் :

10. பீச் ரோடு, கடலூர்-1.

போன் : 18

# STANES

## தரமான கோழித் தீவனங்கள்

(கோழி மற்றும் குஞ்சுகளுக்கான முழுத்தீனிகள் மற்றும் அடர்த் தீனி)

**உத்திரவாதமுள்ள தீவன உப பொருட்கள் :**

(பக்குவப்படுத்தப்பட்ட எலும்புத்தூள், மீன்தூள், கிளிஞ்சல் கப்பி, சிளிஞ்சல் தூள் முதலியன)

# T. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிமிடெட்

**தபால் பெட்டி நெ. 1312 — கோயமுத்தூர் 641018.**

தந்தி : '' ஸ்டேன்ஸ் ''　　　　　போன் : 33514 To 33518.


3. கா ற பரு ட ட யா ல குளிர்ந்த இடத்தில் முட்டைகளைப் பத்திரப்படுத்த வேண்டும்.

4. கோழிகளுக்குக் கிளிஞ்சல் குறையாமல் கொடுத்துவர வேண்டும்.

5. முட்டைகளின் அகலமான பக்கம் மேலிருக்கும்படி வைக்க வேண்டும்.

6. உடைந்த முட்டைகளை, நல்லவைகளோடு வைக்கக் கூடாது.

7. முட்டைப் பெட்டிகளில் உமியோ, மரத் தூளோ இட்டு வைக்க வேண்டும்.

8. குளிர் காலங்களில் ஒரு வாரத்திற்கு மேல் முட்டைகளைச் சேகரித்து வைக்கக் கூடாது.

9. அழுக்கு, மற்றும் கறைகள் உள்ள முட்டைகளைத் துணியால் துடைத்து வைக்க வேண்டும்.

### குஞ்சுகள் வளர்ப்பு

கோழிக் குஞ்சுகள் மிக மென்மையானவை. அவற்றை பின்கண்டவாறு மிகக் கவனமாகப் பராமரிக்க வேண்டும்.

1. பொரித்த பிறகு 12 மணி நேரமாவது கோழிக் குஞ்சுகள் குஞ்சு பொரிக்கும் பெட்டியிலேயே இருக்க வேண்டும்.

2. பின் அவைகளைக் காற்றோட்டமுள்ள ஈரமில்லாத அறையில், உமியைப் பரப்பி வளர்க்க வேண்டும்.

3. வளர்ச்சிக்கு ஏற்ற சூடு அளிக்க, வகை செய்ய வேண்டும்.

**முட்டை ஓர் கலப்படமில்லாத சரிவிகித உணவு!**

வளர்ச்சிக்கு வேண்டிய புரதச் சத்தும்,
வலிமைக்கு வேண்டிய கொழுப்புச் சத்தும்,
எலும்புக்கும், பற்களுக்கும் வேண்டிய சுண்ணாம்புச் சத்தும்,
உடல் நலத்திற்கு வேண்டிய வைட்டமின் 'ஏ'யும்,
வேண்டிய அளவு உள்ளது முட்டையில்.

4. அவை ஒன்றின் மேல் ஒன்று ஏறி நசுங்கி விடாமல் இருக்கத் தடுப்புகள் வைக்க வேண்டும்.

5. தீவனம் எளிதில் கிடைக்குமாறு ஒரு தட்டில் தீனி வைக்க வேண்டும்.

6. பொரித்த 3 நாட்களுக்குள் எப். 1 கோழிக் கழிச்சல் தடுப்பு மருந்து செலுத்த வேண்டும்.

7. 15 நாட்களுக்குள் (பிஜியன் பாக்ஸ்) தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும்.

8. 6 வாரத்தில் 'ராணி கெட்' தடுப்பு மருந்துசெலுத்த வேண்டும்.

9. 8-வது வாரத்தில் (பௌல் பாக்ஸ்) தடுப்பு மருந்தைச் செலுத்த வேண்டும்.

10. 8-வது வாரத்தில், ஆண் குஞ்சுகளைப் பிரித்து, வேண்டாதவைகளை விற்று விட வேண்டும்.

11. குஞ்சுகளைத் தரம் பிரித்து நல்லவைகளை வைத்துக் கொண்டு அல்லாதவைகளை விற்று விட வேண்டும்.

12. ஒன்றை ஒன்று கொத்திக் கொள்ளாமல் இருக்க மூக்கு நுனியைக் கத்தரிக்க (Debeaking) வேண்டும்.

13. 12-வது வாரத்தில் வயிற்றுப் பூச்சிக்கு மருந்து கொடுக்க வேண்டும்.

14. 24-வது வாரத்தில் பேன் மருந்து தெளித்துக் கோழி வீட்டில் விடத் தயாராக வைக்க வேண்டும்.

15. 24-வது வாரத்தில் அதாவது 6-வது மாதத்தில் முன்னமே கூறியபடி நல்ல கோழிகளுக்கான சோதனைகளைச் செய்து, கோழி வீட்டில் விட வேண்டும்.

### கோழி வளர்ப்பில் தவிர்க்க வேண்டியவை!

1. நலமற்ற கோழிகளை விலக்காதிருத்தல்.

2. அதிகக் கோழிகளைக் குறுகிய இடத்தில் வைத்தல்.

3. ஈரமான ஆழ்குப்பை.

4. அசுத்தமான தீனி, தண்ணீர்த் தொட்டிகள்.

5. அசுத்தமான முட்டையிடும் பெட்டி.

6. பாதுகாப்பற்ற கோழி வீடு.

7. அடிக்கடி கோழிகளைக் கையாளுதல்.

8. அடிக்கடி இடம் மாற்றுதல்.

9. தட்ப, வெப்ப நிலைகளைப் பொறுத்துக் கொள்ளும் வசதியில்லாமல் இருத்தல.

10. வயதான கோழிகளை வைத்திருத்தல்.

11. இளங் கோழிகளையும், வயதானவைகளையும், ஒன்றாக வைத்திருத்தல்.

12. தேவைக்கு அதிகமான சேவல்களைக் கோழிகளுடன் வைப்பது.

13. தீவனம் இரைந்து வீணாவது.

14. சிக்கனத்தின் பெயரால் தரக் குறைவான தீவனம் அளிப்பது.

15. அடிக்கடி தேவைக்கு அதிகமான மருந்தளித்தல்.

16. மருத்துவரிடம் ஆலோசனை கேட்காமல் இருத்தல்.

17. உடனுக்குடன் செய்ய வேண்டியவைகளைக் கவனியாதிருத்தல்.

மேற்கூறிய முறைகளைத் தவிர்த்துக் கோழி வளர்த்தால் கோழி வளர்ப்பு இலாபகரமானதாக இருக்கும்.

—டாக்டர் அ. ராமச்சந்திரன்,





முட்டை வெளிவரும் பாதை

# முட்டையின் விசித்திரப் பயணம்

**கோ**ழி வளர்ப்பில் தற்சமயம் தமிழக மக்களிடையே ஆர்வம் ஏற்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் 43 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி மாநில வங்கிக் (State Bank of India) கடனுதவியுடன் சுமார் 5 இலட்சம் கோழிகள் வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோல், ஏனைய மாவட்டங்களிலும் கோழிப் பண்ணைகள் நாள்தோறும் ஏராளமாக நிறுவப்படுகின்றன. இதனால் தமிழ்நாட்டில் முட்டை உற்பத்தி கணிசமான அளவில் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. முட்டையின் உபயோகம் அதிகரிக்க அதிகரிக்க, மக்கள் தரமான முட்டைகளை விரும்புகின்றனர். இதனால் முட்டைகள் தரம் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தரமான முட்டைகளை விரும்புவோர் முட்டையின் அமைப்பு, முட்டையில் அடங்கிய பொருள்கள், அம்முட்டை எவ்விதம் உருப்பெறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள ஆர்வம் உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே, முட்டை எவ்வாறு உருவாகிறது என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம்.

> ''வீட்டுக்கு ஒரு பண்ணை!
> ஆளுக்கு ஒரு முட்டை!''
>
> '' ஆறிரண்டு கோழிகள்
> வாங்கிடுவீர்—அவை
> உலவிடவே வீடொன்றும்
> அமைத்திடுவீர்
> ஒன்று பலவாகும் புரிந்திடு
> வீர்—நல்ல
> உணவாகும் முட்டைதரும்
> கண்டிடுவீர்
> கூடிடும் முட்டைதனை
> விற்றிடுவீர்—தினம்
> நாடிடும் லாபமதைப்
> பெற்றிடுவீர்
> நாளும் பண்ணையதை
> வளர்த்திடுவீர்
> நல்லதோர் உரமதையும்
> அடைந்திடுவீர்
> பயிரெல்லாம் செழித்திங்கே
> வளமடைய—நம்ம
> பண்ணையிலே கோழிப்
> பண்ணை நிறுவிடுவீர்!
>
> —டாக்டர் சு. ஆறுமுகம்,

## முட்டை எப்படி உற்பத்தி ஆகிறது ?

ஒரு கோழியை அறுத்துப் பார்த்தால், வயிற்றின் மேல் பாகத்தில் திராட்சைக் கொத்தைப்போன்ற அமைப்புள்ள உறுப்பைக் காணலாம். இவையெல்லாம் பிற்கால முட்டை அணுக்களே. ஆயிரக் கணக்கான முட்டை அணுக்கள் ஒரு தண்டுடன் (Stalk) ஒட்டியிருப்பதைப் பார்க்கலாம்.

பாலூட்டும் மிருகங்களில் கரு, தாயின் கருப் பையில் வளர்ச்சியுறுகிறது. கருவில் வளரும் சிசுவிற்கு வேண்டிய உணவு, தாயின் கருப்பை வழியாகச் செல்கிறது ; முழு வளர்ச்சியடைந்த பின்புதான் மகப் பேறு ஆகிறது. ஆனால் கோழி போன்ற பறவைகளில் சிசுவான குஞ்சுகள் வளர்வது கோழிகள் முட்டையிட்ட பிறகுதான்.

முட்டையிலிருந்து வெளி வந்த சிறு குஞ்சுகள், ஒரு வாரம் வரை வளர்வதற்கு வேண்டிய உணவை முட்டையிலிருந்து வருமுன், முட்டையில் இருந்தே பெற்றுவிடுகின்றன. ஆகையால் முட்டையை உயிரூட்டும் உணவு என்றே அழைக்கலாம். கோழி முட்டைகளை, குஞ்சுகள் உருவாக்கும் தொழிற்சாலை என்றே அழைக்கலாம்.

ஒரு கோழியானது 5 முதல் 6 மாதங்களில் பருவ முதிர்ச்சியடைகிறது. அப்பொழுது முட்டை அணுக்கள் பெரிதாகின்றன. இந்த ஆயிரக் கணக்கான முட்டை அணுக்களில் ஒன்று பெரியதாகி, தண்டிலிருந்து பிரிந்து புனல்போன்ற அமைப்புள்ள 'இன்பன்டிபுலம் என்ற குழலின் ஆரம்ப பாகத்தை அடைகிறது. இம்மாதிரி முட்டை அணு முதிர்ச்சியடைந்து புனல் போன்ற பாகத்தை அடைவதற்கு 'முட்டைப் பெயர்ச்சி' (Ovulation) என்று பெயர். பல முட்டை அணுக்கள் ஒட்டியிருக்கும் தண்டுப் பாகத்தில் இரத்தக் குழாய்கள் கிடையாது. ஆனால் முட்டை அணுக்கள் தண்டைத் தவிர மற்ற இடத்திலிருந்து முட்டை அணு பையிலிருந்து பிரியும் பொழுது இரத்தக் குழாய்கள் உடைந்து இரத்தக் கசிவு ஏற்படலாம். இவ்வாறு வெளியேறிய இரத்தம் முட்டையின் வெள்ளைக் கருவில் கலக்கும் பொழுது இது இரத்தவளையம் அல்லது இரத்தப் பொட்டு (Blood Spot) என்று கூறப்படுகிறது. முட்டைப் பெயர்ச்சி ஏற்படுவதற்குச் சில நாட்களுக்குமுன் இவ்விதம் இரத்தக் கசிவு ஏற்படலாம். இவ்விதம் கசியும் இரத்தம் உறைந்து செம்பழுப்பு நிறமாகிறது. {இது ஊன் புள்ளி (Meat Spot) என்று கூறப்படுகிறது. கோழிகளின் கருக்குழல் சுமார் 25 முதல் 27 அங்குல நீளமிருக்கும். இந்த நீளமான பாதையில் முட்டை அணு செல்லும் பொழுது, முட்டையிலுள்ள பொருள்கள் உற்பத்தியாகி முட்டையுடன் சேருகின்றன.

உயரினக் கோழிகளில் நல்ல பராமரிப்பில், ஒரு முட்டையிட்டபின் மறுபடியும் சுமார் 30 நிமிடங்கள் கழித்து முட்டைப் பெயர்ச்சி நடைபெறுகிறது. கருக் குழலில் புனல் போன்ற இடம் ஆரம்ப இடமாகும். இது, முட்டை அணுவின் பையிலிருந்து பெயர்ந்து வந்த முட்டை சிறிது நேரம் தங்குவதற்கு இடமாகிறது. இது சுமார் 3 முதல் 4 அங்குல நீளமிருக்கும். இங்கிருந்துதான் முட்டையானது ஊனுடலை விட்டு வெளியுலகிற்குத் தனது பயணத்தைத்தொடங்குகிறது. விந்துவிலிருந்து வரும் ஆண் அணுக்கள் கருக் குழலின் வழியாக மேல் நோக்கி வந்து புனல் போன்ற பாகத்தை அடைந்து முட்டையைக் கருத் தரிக்கச் செய்கின்றன. கருத் தரித்த முட்டை புனல் போன்ற பாகத்தில் கீழே இறங்கி கருக் குழலின் அடுத்த பாகமாகிய 'மேக்னம்' என்ற பாகத்தை அடைகிறது. இதற்கு 15 நிமிடங்கள் ஆகின்றன. இப்பாகத்தில்தான் வெள்ளைக் கருவின் பெரும் பாகம்—ஏறத்தாழ 55 சத வீதம் 'அல்புமின்' பாகமும், வெள்ளைக் கருவிலுள்ள புரதத்தின் பெரும் பாகமும்—முட்டையுடன் கலக்கிறது. 'மாக்ன'த்தின் நீளம் சுமார் 15 அங்குலமாகும். இத்தூரத்தைக் கடப்பதற்கு முட்டைக்குச் சுமார் 3 மணி நேரமாகிறது. இதற்கு அடுத்த பாகம் 'இஸ்த்மஸ்' என்பதாகும். இப் பாகம் மிகவும் குறுகலானது. சுமார் 4 அங்குல நீளமுள்ளது. இப் பாகம் மிகவும் குறுகலாக இருப்பதால் இப் பாகத்தைக் கடக்க முட்டைக்குச் சுமார் 1-15 மணி நேரம் பிடிக்கும். இப் பாகத்தில் சிறிதளவு தண்ணீரும், உப்புகளும் முட்டையுடன் சேருகின்றன. கருக் குழலின் கடைசிப் பாகம் கருப்பை ஆகும். இது தடித்த சுவர்களையுடையது. சுமார் 4 அங்குலமுள்ளது. இப் பாகத்தில்தான் முட்டைக்கு வேண்டிய மற்ற பாகங்களும் உப்புக்களும், முட்டை ஓடும், அதற்கு வேண்டிய நிறமும் முட்டையுடன் சேர்ந்து முட்டை முழுமையடைகிறது. இங்கு முட்டை சுமார் 21 மணி நேரம் தங்குகிறது. இதன் பின்பு முட்டை இங்கிருந்து பெண்ணுறுப்பை அடைகிறது. இதன் நீளம் சுமார் 2 அங்குலமாகும். கடைசியாக ஆசன வாயை அடைந்து முட்டை

வெளி வருகிறது. இந்த முட்டையின் பயணத்திற்குச் சுமார் 25 மணி நேரமாகிறது. முட்டைக்கு முதலில் காற்றிடம் கிடையாது. கோழி உடம்பின் வெப்ப நிலை 107 டிகிரி பாரன்கீட் ஆகும். முட்டை வெளி வந்து குளிர்ச்சி அடைகிறது. இதனால் முட்டை ஓட்டின் உட்பாகத்தில் சுருக்கம் ஏற்பட்டு, காற்று அந்த இடத்தை அடைத்துக் கொள்கிறது.

### முட்டையில் ஏற்படும் கோளாறுகள்

**இரு கருவுள்ள முட்டைகள் :**

ஒரே சமயத்தில் இரு முட்டையணுக்கள் பெயர்ச்சி அடைந்து புனல் போன்ற பாகத்தை அடைகின்றன. இங்கே ஆண் அணுக்களால் கருத் தரிக்கப்படுகின்றன.

**முட்டையில் மற்றொரு முட்டை :**

சில சமயங்களில் கீழே இறங்கி வரும் முட்டை, கருக்குழல் மேல் நோக்கிச் சுருங்குவதால் மேல் நோக்கி வந்து அடுத்த நாள் முட்டையுடன் சேர்ந்து இரு முட்டைகளாகின்றன.

**ஓடு இல்லாத முட்டை :**

முட்டை முதிர்ச்சியடையாமல் பெயர்வதாலும், கருப்பையில் குறைந்த நேரம் தங்குவதாலும் ஓடு ஏற்பட வேண்டிய நேரம் கிடைப்பதில்லை.

**மெல்லிய ஓடுள்ள முட்டை :**

முட்டையில் ஓடு ஏற்படுவதற்கு வேண்டிய சுண்ணாம்புச் சத்தும், வைட்டமின் 'டி'யும், மாங்கனீஸ் என்ற தாது உப்பும் கோழியின் உணவில் இல்லாததால், முட்டை மெல்லிய ஓட்டுடன் வெளி வருகிறது. சில சமயங்களில் வம்ச வழிக் குணமாகவும் இருக்கலாம். சில நோய்களின் போதும், மிகவும் வெப்பமான நாட்களிலும் மெல்லிய ஓடுள்ள முட்டைகள் ஏற்படலாம். இஃது பெரும்பாலும் உணவுக் கோளாறே. மெல்லிய ஓடு உள்ள முட்டைகள், சில சமயங்களில் கருப் பையிலும், முட்டை வெளிவரும் போதும் உடைந்துவிடும்.

### அதிக முட்டைகள் பெறுவது எப்படி ?

கூடுதலாய் முட்டையிடும் 'கோழி' தேவையா ? அதற்கு நல்லதோர்கோழிக் குஞ்சு, நலந்தரும் தீவன வகைகள், நல்ல நிருவாகம் ஆகிய மூன்றும் தேவை.

இம்மூன்றும் சேர்ந்து இணைந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் அதிக முட்டைகளும் சத்தான முட்டைகளும் பெற்றிடலாம்.

**மாறுபட்ட நிறங்கொண்ட கருவுள்ள முட்டைகள் :**

கோழியின் உணவில் சிலவித உணவுப் பொருள்கள்இருக்கும் பொழுது மஞ்சள் வெண்மைக் கருக்களின் நிறம் மாறலாம்.

சூல்பையிலிருந்து பெயர்ந்து கருக் குழலில் அங்கங்குத் தங்கி தன்னிடமுள்ள கருவின்வளர்ச்சிக்கு வேண்டிய பொருள்களை, அங்கங்கே சேர்த்துக் கொண்டு சுமார் 25 மணி நேரத்தை எடுத்துக் கொண்டு பத்திரமாக வெளியே வந்து சேர்வது விந்தையிலும் விந்தையே! எனவே முட்டையின் பயணம் ஒரு விசித்திரப் பயணமாகும்.

—டாக்டர் பா. சின்னதுரை,


## மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட். நெ. ஜி-1628.

### படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ !

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர வினியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க !




# நோய்களும் தடுப்பும்

**பொ**துவாக முன்பெல்லாம் கோழிகளுக்குச் சில கொடிய நோய்கள் வந்து எல்லாக் கோழிகளும் இறந்து விடுவதுண்டு. அதனால் கோழிப் பண்ணை வைப்பதில் இலாபமில்லை எனப்பலர் கருதுகின்றனர். கோழிகளுக்கு நோய் வருவது உண்மையே! ஆனால் அந்த நோய்கள் கோழிகளைத் தாக்காமல் காத்துக்கொள்ள நோய்த் தடுப்பு முறைகள் உள்ளன. எனவே, குறித்த காலத்தில் கோழிகளுக்குத் தடுப்பு ஊசி போடுவதால் நோயைத் தடுக்க முடியும். கோழிப் பண்ணையில் நோய் வந்த பின் காப்பது சிரமம். ஆகவே மருத்துவ வசதிகள் எல்லா இடங்களிலும் கிடைப்பதால் கோழிகளுக்கு நோய்கள் வராமல் தடுக்கத் தடுப்பு முறைகளை மேற்கொள்வதே பயனுடையதாகும்.

### கோழிக் காய்ச்சல் நோய்

கோழிக் கழிச்சல் (இராணி கட்') நோயினால் குஞ்சுகள் அதிகம் பாதிக்கப்படும். ஆனால் எந்த வயதிலும் இந்நோய் வரலாம்.

**தடுப்பு முறைகள் :**

1. ஒரு நாள் குஞ்சுகளுக்குத் தடுப்பு ஊசியும், 8 முதல் 10 வாரக் குஞ்சுகளுக்குக் கோழிக் கழிச்சல்—தடுப்பு ஊசியும் கட்டாயம் போட வேண்டும்.

2. நோய் உள்ள கோழிகளைத் தனியாகப் பிரித்து விட வேண்டும்.

### கோழி அம்மை

இந்நோய் எல்லா வயதுக் கோழிகளையும் தாக்கும். இதன் அறிகுறிகள் பின்கண்டவாறு இருக்கும்.

1. கோழிகளின் கொண்டையிலும், கண்களைச் சுற்றிலும் சிவந்த புள்ளிகள் தோன்றும்.
2. சில சமயங்களில் 'மரு' தோன்றிய இடங்களில் புண்ணாகியும், கண்கள் இருட்டாக்கியும் பாதிக்கப்படுகிறது.

**தடுப்பு முறைகள் :**

1. இரண்டு வாரக் குஞ்சுகளுக்கு 'கோழிச்சின்ன அம்மை' தடுப்பு ஊசி (தொடையில் மயிர்க்கால்களில் தடவுவது)



6 வாரக் குஞ்சுகளுக்கு கோழி பெரிய அம்மைத் தடுப்பு ஊசி (இறக்கைகளின் இடுக்கில் போடுவது)

2. மரு 'தோன்றிய இடங்களில் 'டிஞ்சர் அயோடின்' அல்லது 'போரிக்' களிம்பு தடவலாம்.

3. கோழிகளை நெருக்கமாக வைக்கக்கூடாது.

## கோழிச்சளி நோய்

(Coryzar)

இந்நோய், குஞ்சுகளை அதிகம் பாதிக்கின்றது. முட்டையிடும் கோழிகளுக்கு வந்தால் முட்டை உற்பத்தி 50 சதவிகிதத்திற்குப் பாதிக்கப்படுகின்றது.

தடுப்பு முறைகள் :

1. குஞ்சுகளையும், பெரிய கோழிகளையும் தனித்தனியாக வெவ்வேறு இடங்களில் வைத்து வளர்க்க வேண்டும்.

2. பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு உடனே வைட்டமின் சத்துக்களைக் (ரோவிஸாபில்', விட்டாபிள்') கொடுக்கலாம்.

## கோழி 'ரூப்' நோய்.

இந்நோய் கோழிச்சளி நோயைப் போலவே தோன்றும். தீனியில் வைட்டமின் சத்து (வைட்டமின்-ஏ) குறைவால் நோய் வருகின்றது.

தடுப்பு முறைகள் :

1. வைட்டமின் சத்துக்கள் நிறைந்த பொருள்களைத் தீனியில் சேர்க்க வேண்டும்.

2. குதிரைமசால், அகத்தி, சணப்பை போன்றவைகளைக் கொடுக்கலாம்.

3. நோய்வாய்ப்பட்ட கோழிகளுக்கு 'ரோவிஸால்' 'விடாபிளன்டு' போன்ற மருந்துகள் கொடுக்கலாம்.

### கோழிக்கான தடுப்பு ஊசி அட்டவணை

| வயது | நோய் | தடுப்புமுறை |
| --- | --- | --- |
| ஒருநாள் குஞ்சு | கோழிக் கழிச்சல் | எஃப் தடுப்பு ஊசி (ஆர்.டி வி எஃப்) (நாசித்துவாரத்தில் செலுத்துதல்) |
| 2 வாரக் குஞ்சு | கோழிச்சின்ன அம்மை | பிபிவி (தொடையில், உரோமக் கால்களில் செலுத்துதல்.) |
| 5-7 வாரக் குஞ்சுகள் | கோழிப் பெரிய அம்மை | எஃப் பிவி (இறகின் அடியில் குத்தும் முறை) |
| 8 வாரக் குஞ்சுகள் | கோழிக் கழிச்சல் | ஆர்.டி.வி.கே (ஊசி மூலம் செலுத்தும் முறை) |

மேற்கூறிய தடுப்பு ஊசிகளைப் போக்கிக் கொள்ள, வைட்டமின் சத்துக்களைக் கொடுக்கலாம். ஊசி மூலம் செலுத்தும் கோழிக் கழிச்சல் தடுப்பு ஊசி போடும் முன்பு குடற் புழுக்களுக்கு மருந்து கொடுக்க வேண்டும்.

## இரத்தக் கழிச்சல் நோய்

கோழிகளுக்கு மிக எளிதிலும் விரைவாகவும் பாதிக்கும் ஒருவகைக் குடல்நோய் இரத்தக் கழிச்சல் நோயாகும். இந்நோய் 2 வாரம் முதல் 12 வாரம் வயதுள்ள குஞ்சுகளுக்கு எளிதில் வரும். இதில் இரண்டு வகை உண்டு. இரண்டு வாரம் முதல் 8 வாரம் வரை பெருங்குடலில் முதற் பகுதியையும், பெரிய கோழிகளில் பெருங்குடலையும் பாதிக்கும். இரண்டு வகைகளாலும் ஒரே சமயத்தில் பாதிக்கப்படலாம்.

தடுப்பு முறைகள் :

1. பழைய கோழி வீடுகள் நன்றாகச் சுத்தப்படுத்திய பின்னரே புதிய கோழிகளை விட வேண்டும். 10 சதவிகித அம்மோனியாவைத்தண்ணீரில் கலந்து தரையையும், பக்கச் சுவர்களையும், மற்றச் சாதனங்களையும் கழுவலாம்.

2. தீனியிலோ, தண்ணீரிலோ 2 வாரம் முதல் 12 வாரம் வரை இரத்தக் கழிச்சல் தடுப்பு மருந்துகளைக் கொடுக்கலாம் (எம்பசின் மிக்ஸ்', 'பைபுரான்', 'ஆம்புரால்' போன்ற மருந்துகள்).

3. நோய்வாய்ப்பட்ட கோழிகளுக்கு 'எம்பசின்', 'காட்ரினல்', 'பைபுரான்', 'அலமெட்', 'ஆம்புரல்', 'சால்', போன்ற மருந்துகளைக் கொடுத்தும்நோயைக்குறைக்க வேண்டும்.

## குடற் புழுக்கள்

குடற்புழுக்கள் குஞ்சுகளையும், வளர்ந்த கோழிகளையும் பாதிக்கின்றன. இவைகளில் தட்டைப் புழுக்களும், உருண்டைப் புழுக்களும் இருக்கின்றன. உருண்டைப் புழுக்களே முக்கியமாகக் கோழிகளைத் தாக்குகின்றன.

குடற் புழுக்களால் கோழிகளின் வளர்ச்சி பாதிக்கப்படும். நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து, மற்ற நோய்கள் வரக் காரணமாயிருக்கும். முட்டை உற்பத்தி குறையும்; பண்ணையில் இறப்பு விகிதம் அதிகரிக்கும்.

தடுப்பு முறைகள் :—

1. ஆழ்குப்பையை ஈரம் படாதவாறு பாதுகாக்க வேண்டும்.

2. குஞ்சுகளுக்கு 8-வது



வாரத்தில் குடற்புழு நீக்க மருந்து கொடுக்கலாம். பின் 2 மாதங்களுக்கு ஒரு முறை புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும்.

உருண்டைக் குடற்புழுக்களுக்கு 'சேஃபர்சால்', 'வென்மக்ஸ்', 'ஆண்டிபார்' போன்ற மருந்துகளைக் கொடுக்கலாம். தட்டைப் புழுக்கள் இருந்தால் 'டைசெஸ்டரல்' மருந்தைக் கொடுக்கலாம். ஒரு கோழிக்கு ஒரு மாத்திரை வீதம் கொடுக்க வேண்டும்.

| மருந்து | உபயோகிக்கும் அளவு (குடிநீரில் 100 கோழிக்கு) | கிடைக்கும் அளவு | 100 கோழிக்கு மருந்துக்காகும் செலவு |
| --- | --- | --- | --- |
| | | | ரூபாய். |
| 1. ஆண்டிபார் | 75 மி.லி. மருந்து | 100 மி.லி. | 2.40 |
| 2. சேஃபர்சால் | 15 மி. லி4 லிட்டர் குடிநீர் | 100 மி.லி. 450 மி.லி. | 2.40 |
| 3. வெர்பன் | 37.5 கி.கிராம் 16 லிட்டர் குடிநீர். | 60 கிராம் பாட்டில் | 3.17 |
| 4. ஆப்ரிகால் | 650 கிராம் 13 லிட்டர் குடிநீர். | 100 மி.லி. | 1.50 |
| 5. ஜெர்மக்ஸ் | பெரிய கோழிகளுக்கு 60 மி.லி. 4 லிட்டர் குடிநீர் (குஞ்சுகளுக்கு 30 மி.லி. 4 லிட்டர் தண்ணீர்) | 100 மி.லி. | 2.73 |
| 6. பைபிரசின் அடிபேட். | ½ மாத்திரை 1 கிலோ எடைக்கு மேல் உள்ள கோழிக்கு | 25 மாத்திரை 200 மாத்திரை (பெரிய கோழிக்கு) | 7.20 |

## பெரு ஈரல் நோய்

இந்நோய் சாதாரணமாக நன்கு வளர்ந்து முட்டையிடும் வயதையடைந்த போதும், நிறைய முட்டையிடும் தருணத்திலும் கோழிகளைத் தாக்குகின்றன.

தடுப்பு முறைகள் :—

1. நோய்வாய்ப்பட்ட கோழிகளையும் சந்தேகமுள்ள கோழிகளையும் உடனே நீக்கி விட வேண்டும்.

2. கோழித் தீனிகளில் 'நெப்டீன்', '3நைட்ரோடிஎம்-5', 'டெர்ராமைசின்' போன்ற மருந்துகளைக் கலந்து கொடுக்கலாம்.

## கோழிகளுக்கு ஒட்டுண்ணிகள்

கோழிகளுக்குப் பேன், உண்ணி போன்ற பூச்சிகளும் வருவதுண்டு. சரியான பராமரிப்பு இல்லாமல் இருந்தால் இத்தகைய பூச்சிகள் உருவாகும்.

தடுப்பு முறை :

1. கோழிகளை நன்கு வளர்த்துச் செழுமையாக வைத்துக் கொள்ளவேண்டும்.

2. கோழி வீடுகளில் மருந்துகளைத் தெளிக்க வேண்டும்.

3. பாதிக்கப்பட்ட கோழிகளுக்கு 1 சத டி.டி.டீ மருந்து அல்லது 1:500 பாகம் மாலத்தியான் கலந்த தண்ணீரைத் தெளிக்கலாம்.

மேற்கூறிய முறையில் கோழிகளுக்குத் தடுப்பு முறைகளைக் காலத்தில் செய்தால், கோழிப்பண்ணை தொடர்ந்து வருவாய் தரும் ஒரு தொழில் என்பதில் ஐயமில்லை!

## ஓசூர் கால்நடைப் பண்ணையின் பணி!

ஓசூர் கால்நடைப் பண்ணையில் 'வெள்ளை லெக்கார்ன், வெள்ளை போந்தா பர்க்லி, வெள்ளை போந்தா ஆஸ்ட், எம். லைன், ஆஸ்டிரலார்ப், கருப்பு மைனார்க்கா, சிவப்புப் போந்தா ஆகிய மேனாட்டுக் கோழி இனங்கள் வளர்க்கப்படுகின்றன. கோழி வளர்ப்பில் ஆர்வம் உள்ளோருக்கு முட்டைகள், கோழிகள், சேவல்கள் பஞ்சாயத்து யூனியன் மூலம் விற்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணை கோழி அபிவிருத்திப் பணியில், மாநிலத்தில் பெரும் பங்கு வகித்துள்ளதுடன், அகில இந்தியக் கண்காட்சியில் பல பரிசுகளும் பெற்றுள்ளது. 19—1—70 முதல் இப்பண்ணையில் அதிக அளவு கோழிக்குஞ்சு பொரிப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் செயல் முறைக்கு வரத் தொடங்கிற்று. இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் 20,000 குஞ்சுகள் கோழியின விரிவாக்க நிலையங்களுக்கு விநியோகிக்கப் படுகின்றன. கடந்த ஆண்டுகளில் இப்பண்ணையில் 2,62,323 குஞ்சுகளும், 12,78,527 முட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன; 3,04,026 முட்டைகள் இனவிருத்திக்காக விற்கப்பட்டன. 67,904 கோழிகள், 1,47,862 குஞ்சுகள் இனவிருத்திக்காக விற்கப்பட்டன.

# தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்



— பி. என். வேதநாராயணன் ஐ. ஏ. எஸ்.

செயலாளர்,
வேளாண்மைத்துறை,
தமிழ்நாடு அரசு.

தமிழகத்தின் உழவர் பெருமக்களில் பெரும்பாலோர் சிறு நிலக்கிழார்கள்! அவர்களுக்கு வேளாண்மை மூலமாகக் கிடைக்கும் வருமானம் போதுமானதல்ல! வேளாண்மை மூலமாக ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பும் கிடைக்கவில்லை. ஆகவே, ஒரு துணைத் தொழிலை மேற்கொண்டாலொழிய போதிய வருவாய் கிடைக்கும் வாய்ப்பில்லை. கோழி வளர்ப்பினைத் துணைத் தொழிலாகக் கொள்வதின் மூலம் அக்குறையை நிவர்த்தி செய்ய இயலும். இந்நோக்கத்துடன் உழவர் பெருமக்கள்—குறிப்பாகச் சிறு நிலக்கிழார்கள்—கோழி வளர்ப்பில் ஆர்வம் கொள்ளும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயலாக்கப் பெறுகின்றன. அவைகளில், சிறுநிலக்கிழார்கள் மேம்பாட்டுத் திட்டம், வேளாண்மைத் தொழிலாளர் மேம்பாட்டுத் திட்டம், கிராம வளர்ச்சித் திட்டம், ஸ்டேட் பாங்க் நிதி உதவியுடன் கோழி வளர்ப்பு மும்முரத்திட்டம் முதலியன குறிப்பிடத்தக்கவை. கடந்த இரண்டு ஆண்டுகளாக இத்திட்டங்கள் மூலமாக உழவர் பெருமக்களுக்குக் கோழி வளர்ப்பில் கணிசமான ஆர்வம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1,700 உழவர் பெருமக்களுக்குக் கோழிப் பண்ணை அமைப்பதற்காக உதவும் திட்டம் நவம்பர் 1972-ல் துவக்கப்பட்டது. இத்திட்டத்தில் இதுவரை 1,400 உழவர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களது கோழிகளும் முட்டை இட ஆரம்பித்துள்ளன. அதன் காரணமாக நாள் ஒன்றுக்கு சுமார் 50,000 முட்டைகள் உற்பத்தியாகும் நிலை இன்று உருவாகியுள்ளது. இது நாள்தோறும் அதிகரித்து வருகிறது. ஒரு இலட்சம் முட்டை வரை உற்பத்தியாகும் வாய்ப்பு உள்ளது. இந்நிலையை எதிர்நோக்கித் தமிழக அரசு துவக்கியுள்ள நிறுவனமே, 'தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்'.

கோழி வளர்ப்புத் தொழில் மூலமாக உரிய பலன் கிடைக்க வேண்டுமானால், உற்பத்தியாகும் முட்டைகள் தயக்கமில்லாமல், உழவர்களிடமிருந்து வாங்கப்பெறல் வேண்டும்; அதுவும் போதிய இலாபம் கிடைக்கும் விலையில் கொள்முதல் செய்யப் பெறல் வேண்டும். அதேபோன்று கோழிகளுக்கான சத்தான தீவனம் தட்டில்லாமல், நியாயமான விலையில் கிடைக்கவும் செய்வதும் அவசியம். அதிக முட்டையிடும் தன்மையுடைய உயரினக் கோழிகளும், உழவர்களால் வளர்ப்பதற்குத் தகுந்த பருவ வயதுடையனவாகப் போதிய அளவில் கிடைக்கச் செய்ய வேண்டும். ஆயிரக் கணக்கான உழவர் பெருமக்களைக் கோழிப்பண்ணை தொழிலில் ஈடுபடுத்தும் பொழுது, பல்லாயிரக் கணக்கான முட்டைகளுக்கான சந்தை நிலவரத்தை ஏற்படுத்துவதும், ஆயிரக் கணக்கான டன்கள் கோழித் தீவனத்தை உற்பத்தி செய்து, விநியோகிக்க ஏற்பாடு செய்வதும் அவசியமாகிறது. அதேபோன்று ஆயிரக்கணக்கான கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்வது, போதிய பருவம் வரை வளர்ப்பது, நோய் தடுப்பு முறைகளை மேற்கொள்ளுதல், விநியோகிப்பது ஆகியவைகளும் இன்றியமையாததாகின்றன. இவ்வாறு விரிவான அளவில் கட்டுக் கோப்பான முறையில் இம்மூன்று அடிப்படைத் தேவைகளையும் வழங்கி, வாணிப முறையில் செயலாற்ற ஒரு நிறுவனத்தினுல்தான் முடியும்.

இன்று பொதுவாக தமிழ்நாட்டில் உணவு நிலைமை திருப்திகரமாக உள்ளது என்றலும், மக்களின் நல்வாழ்விற்கு இன்றியமையாத புரதச்சத்துணவுகள் குறைவாகவே கிடைக்கின்றன. முட்டை ஒரு சிறந்த உணவு! இது, நியாயமான விலையில் பரவலாகக் கிடைக்க வேண்டுமானுல், அதற்கான ஏற்பாட்டையும் வாணிப முறையான நிறுவனமே ஏற்பாடு செய்ய இயலும். இக்காரணங்களாலேயே தமிழ்நாடு அரசு, கோழி வளர்ப்பை மேம்படுத்துவதற்காக அவ்வித நிறுவனம் ஒன்றை அமைக்க 8-5-'73 அன்று ஒப்புதல் அளித்தது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அலுவலர்களையும் நியமித்தது. 12-7-73 அன்று இந்திய கம்பெனிகள் சட்டங்களின்படி 'தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்' (The Tamil Nadu Poultry Development Corporation) பதிவு செய்யப்பெற்றுச் செயலாற்றத் துவங்கியுள்ளது.

இந்த நிறுவனம் முழுவதும் தமிழக அரசிற்கே சொந்தமான தனியார் நிறுவனமாகும் (Government owned private company). இதற்கு ஒப்புதல் அளிக்கப்பெற்ற மூலதனம் ஒரு கோடி ரூபாய். இதுவரை இந்நிறுவனத்திற்குப் பங்குத் தொகையாகப் பெறப்பெற்ற மூலதனம் பத்து இலட்சம் ரூபாய்.

தமிழகத்தில் 38 கோழி இன விரிவாக்க (விஸ்தரிப்பு) நிலையங்களும், மூன்று குஞ்சு பொரிப்பு கோழிப் பண்ணைகளும், கோழி உற்பத்தி, வளர்ப்பு, விநியோகம் ஆகிய பணிகளுக்காக கால்நடை வளர்ப்புத் துறையின் கீழ் செயலாற்றி வந்தன. இவைகளை—இயங்கும் நிலையிலேயே—தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது.

கோழித் தீவனம் உற்பத்தி செய்ய சென்னையில் ஒரு பெரிய தொழிற்சாலையும், கோவை மாவட்ட அரசூரில் ஒரு சிறிய தொழிற்சாலையும், செயலாற்றி வந்தன. இந்த இரு நிலையங்களும்—இயங்கும் நிலையில்—தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தினுல் பொறுப்பேற்கப் பெற்றுள்ளன. இந்த நிலையங்கள் உலக உணவு உற்பத்தி திட்டத்தின் உதவி பெறுபவை. இத்திட்டத்தின் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட 'மும்முர கோழி வளர்ப்பு வட்டாரத் திட்டம்' (Intensive Poultry Development Blocks) 9 வட்டாரங்களில் செயலாற்றுகின்றன. இந்தத்திட்டத்தைச் செயலாற்றும் பொறுப்பையும், படப்பை கிராம கோழிக் குஞ்சுகள் வளர்ப்புத் திட்டம் போன்ற மேம்பாட்டுத் திட்டங்களைச் செயலாற்றும் பொறுப்பையும் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் கால்நடை வளர்ப்புத்துறையிடமிருந்து பொறுப்பேற்றுள்ளது.

மேலே கூறிய விவரங்களிலிருந்து இந்த நிறுவனம் வாணிப முறையில் இயங்கும் நிறுவனமாகப் பதிவு செய்யப் பெற்றிருந்தாலும், கோழி வளர்ப்பிற்கான திட்டங்களைச் செயலாற்றவும் பொறுப்பேற்றுள்ளது என்பதும், இதன் காரணமாக கோழி வளர்ப்போரின் நலன் கோழி முட்டைகள், கோழி இறைச்சி உண்போரின் நலன் ஆகியவற்றையும் கவனிக்கும் நிலையில் செயலாற்றும் நிறுவனம் என்பதும் தெளிவாகும்.

அரசிடமிருந்து பொறுப்பேற்கப் பெற்ற நிலையங்களின் சொத்துக்கள் (ஆஸ்திகள்) உரிய முறையில் கணக்கிடப் பெற்று, அவற்றின் தொகை தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்திற்கு வட்டியில்லாக் கடன் தொகையாகக் கணக்கிடப் பெறும்.

இந்த நிறுவனம் தற்சமயம் கீழ்க்கண்ட ஐந்து இயக்குநர்கள் கொண்ட குழுவினுல் நிருவாகிக்கப் பெறுகிறது.

1. திரு. பி.என். வேதநாராயணன் ஐ.ஏ.எஸ்., செயலாளர், வேளாண்மைத்துறை.

2. திரு கே. வெங்கடேசன் ஐ.ஏ.எஸ்., இணைச் செயலாளர், நிதித்துறை.

3. திரு ந. ரகுபதி ஐ.ஏ.எஸ்., இயக்குநர், ஊர் வளர்ச்சித்துறை.

4. டாக்டர் வை. இரத்தின சபாபதி ஜி. எம். வி. சி., பி. எச். டி., இயக்குநர், கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சித் துறை.

5. டாக்டர் கே.எஸ். சண்முகசுந்தரம் ஜி.எம்.வி.சி., பி.ஜி., இணை இயக்குநர், கால்நடை வளர்ப்புத்துறை.

திரு. பி.என். வேதநாராயணன் அவர்கள் தலைவராகவும், டாக்டர் கே.எஸ். சண்முக சுந்தரம் அவர்கள் நிருவாக இயக்குநராகவும் செயலாற்றுகிருர்கள்.

இந்த நிறுவனம் செயலாற்ற ஆரம்பித்ததும், முதல் பணியாகத் திருச்சி மாவட்டத்தில் செயலாற்றும் மும்முரத் திட்டத்தினை ஆய்வு செய்து, உற்பத்தியாகும் முட்டைகளைத் தயக்கமில்லாத நிலையில் சேகரிப்பது, சேமிப்பது, சந்தைகள் வாய்ப்பை விரிவாக்குவது போன்றவற்றிற்கான திட்டங்களை வகுத்து செயலாற்ற ஆரம்பித்துள்ளது. சென்னையில் முட்டை விற்பனையையும் துவக்கியுள்ளது. அதேபோன்று, சென்னை தீவனக் கலவை நிலையத்தை விரிவுபடுத்தும் பணியையும் மேற்கொண்டு வருகிறது. புதிய உயரினக் கோழிகளை அதிகரிக்கும் நோக்குடன் 'ஹசர் கட்டா' மண்டல கோழிப் பண்ணையிலிருந்து குஞ்சுகளை வாங்கி வளர்க்கும் பணியும், புதிய கலப்பினக் கோழிகளை உற்பத்தி செய்யும் பணியும் துவக்கப் பெற்றுள்ளன.

எத்தொழிலுக்கும் ஆரம்ப நிலைப் பிரச்சினை காலம் உண்டு. அந்த நிலையில் இந்த நிறுவனம் தற்சமயம் செயலாற்றினுலும், விரைவிலேயே பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டு, சீரிய முறையில் பணியாற்ற எல்லா விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

கோழிப்பண்ணைத் தொழிலை இலாபகரமாக நடத்தவும், கோழிப்பண்ணையாளர்களின் வருவாயை அதிகப்படுத்தவும் தமிழ்நாட்டின் மக்களுக்குத் தேவையான அளவு ஊட்டச்சத்து மிகுந்த முட்டைகளையும், கோழி இறைச்சியையும் உற்பத்தி செய்யவும், கோழிப் பண்ணைத் தொடர்புடைய பல தொழில்கள் தமிழ்நாட்டில் மலரவும், பல்லாயிரக் கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்திடவும் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் உதவிடும் என்பதில் ஐயமில்லை.



உங்களது வருவாய் அதிகரிக்க—

**ஸ்டார்மாஷ் தீவனங்கள்**

**உபயோகியுங்கள்**

* நோய் அற்ற தன்மை,
* துரித வளர்ச்சி,
* அதிக முட்டையிடும் திறன்,
* தரமுள்ள முட்டைகள்,
* குறைந்த அளவுத் தீனி,
* அதிக தீனி திறன்.

இவை 'ஸ்டார்மாஷ்' தீவனங்கள் உபயோகிப்பதன் மூலம் கிடைக்கும்.

ஸ்டார்மாஷ் தீவனங்கள் விஞ்ஞான முறைப்படி சரியான அளவில் கலக்கப்பட்டுத் தயாரிக்கப்படுவதோடு அல்லாமல் அதன் மூலப் பொருட்களும் முற்றுப் பெற்ற தீவனமும் பரிசோதிக்கப்பட்ட பின்னே விற்பனைக்கு வருகின்றன.

மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்க :

தயாரிப்பாளர் :—

**ஷாவாலஸ் அண் கம்பெனி லிட்.,**
கால்நடைத் தீவனப் பிரிவு,
7, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600001.



# கோழித் தீனி

காட்டுக்கோழி ஓராண்டுக்கு சுமார் 30 முட்டைகளே இடுகிறது. அதிக முட்டையிடுவதற்காகவே உற்பத்தி செய்யப்பட்ட கோழி இதைப் போல் சுமார் எட்டு மடங்கு முட்டைகளிடுகிறது. கோழி வீட்டிலேயே அடைப்பட்டிருக்கும் இன்றைய கோழிக்கு, அதன் மிக அதிக தேவைக்கேற்ப தீனி கொடுப்பது மிகவும் அவசியம்.

கோழித் தீனியில் போதிய ரதமான புரதமும், போதிய புரதத்துடன் சரியான விகிதத்தில் சக்தியும், போதிய சரியான விகிதத்தில் வைட்டமின்களும், போதிய சரியான விகிதத்தில் தாதுப் பொருட்களும் இருக்க வேண்டும். இதைத் தவிர 'காக்சிடியோசிஸ்'' போன்ற வியாதியைத் தடுக்கும் மருந்துகளும், கிருமிகளை ஒடுக்கும் மருந்துகளும், கோழி குஞ்சுகளின் தீனியிலிருக்க வேண்டும். கோழிகள் நெருக்கடிகளிலிருந்து சீக்கிரம் மீள ''ஆண்டிபையாடிக்ஸ்' உதவுகிறது.

சிறு அளவில் கொல்லைப் புறத்தில் கோழி வளர்ப்பவர் தானே கோழித் தீனி கலந்து கொள்வது சிரமமும், செலவதிகமுமான செயலாகும். அதிக கோழி வளர்ப்பவர்களும் கூட்டுறவு முறையிலியங்கும் சிறு கோழிப் பண்ணை வைத்திருப்பவர்களும் அவர்களுக்குத் தேவையான கோழித் தீனியை அவர்களே கலந்து கொள்ளலாம்.

எட்டு வாரத்துக்குட்பட்ட வயதுடைய குஞ்சு, 9 முதல் 20 வாரம் வரை வயதுடைய குஞ்சு, 21 முதல் 72 வாரம் வயதுடைய முட்டையிடும் பெட்டை இவற்றின் தீனிகள் வெவ்வேறானவை. இவற்றின் தேவைகளும் வெவ்வேறு. இவற்றிற்கு கொடுக்கக் கூடிய மாதிரி உணவுப் பட்டியல் பின் வருமாறு அமையவேண்டும்.

| தீனி | | குஞ்சுத் தீனி (0—8 வாரம்) கிலோ | வளரும் குஞ்சுத்தீனி (9—20 வாரம்) கிலோ | முட்டையிடும் கோழித் தீனி (21—72 வாரம்) கிலோ |
|---|---|---|---|---|
| மக்காச் சோளம் | ... | 125.0 | 150.0 | 162.5 |
| கடலைப் பிண்ணுக்கு | ... | 62.5 | 37.5 | 25.0 |
| எள்ளுப் பிண்ணுக்கு | ... | 12.5 | 12.5 | 12.5 |
| அரிசித் தவிடு அல்லது கோதுமைத் தவிடு | ... | 25.0 | 25.0 | 25.0 |
| மீன் தூள் | ... | 25.0 | 25.0 | 25.0 |
| தாதுக் கலவை | ... | 6.25 | 6.25 | 6.25 |
| வைட்டமின் கலவை | ... | 0.05 | 0.05 | 0.05 |
| கிளிஞ்சல் தூள் | ... | ... | ... | 6.25 |

நல்ல தண்ணீரும், தீனியும் கோழிகள் எப்பொழுதும் உண்ணுதற்கேற்ப வைக்கப்பட வேண்டும். முட்டையிடும் கோழிகளுக்கு கிளிஞ்சல்துண்டுகள் எப்பொழுதும் உண்ணக் கிடைக்குமாறு வைக்கப்பட வேண்டும்.

—டாக்டர் க. வேதநாயகம்

## முட்டைகளின் தரத்தைக் காப்பது எப்படி?

1. சுத்தமான முட்டைகளையே உற்பத்தி செய்ய வேண்டும்.

2. நாள்தோறும் நான்கு முறை முட்டைகளைச் சேகரித்தல் அவசியம்.

3. முட்டைகளைக் குளிர்ந்த அறையில் 55 டிகிரி முதல் 60 டிகிரி பாரன்ஹீட் வெப்பத்தில் சேகரித்து வைத்திட வேண்டும்.

4. முட்டைப் பெட்டிகளைக் குளிர்ந்த இடத்தில் வைத்திருப்பது மிக நல்லது.

5. முட்டையின் குறுகிய பாகம் கீழ் இருக்கும் வண்ணம் பெட்டியில் அடுக்க வேண்டும்.

6. முட்டைகளை வாரம் இரண்டு தடவைகளாவது விற்பனை செய்து விடுவது மிக மிக அவசியம்.

—o—

# கிலோ ரூபாய் 6-50

காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையிலும் சைதாப்பேட்டை, மயிலாப்பூர் ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளிலும் பதப்படுத்தப்பட்ட கோழிகள் கிலோ ரூபாய் 6-50 வீதம் விற்கப்படுகின்றன.

காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையில் நவீன முறையில் துப்புரவாகக் கோழி இறைச்சி தயாரிப்பதை இப்பக்கத்திலுள்ள படங்கள் விளக்குகின்றன.



கோழிகளைக் கொல்வதற்காக உள்ள கருவியின் கூம்புவடிவக் குழாய்களில் கோழிகளைத் தொங்க விட்டு, அவைகளின் குரல் வளையை அறுத்து இரத்தம் வடிக்கப்படுகிறது. இவ்வாறு செய்வதால் கோழிகள் துடிப்பதில்லை.

இரத்தம் வடிந்த பிறகு கோழிகள் 'ஸ்கோல்டர்' (Scalder) என்னும் கருவியில் உள்ள 140 டிகிரி (பாரன்ஹீட்) வெந்நீரில் 2 முதல் 3 நிமிடம் வரை அமிழ்த்தப்படுகின்றன. இதனுல் இறகுக்கால்கள் மென்மை யாவதால் இறகுகளை எளிதில் நீக்க முடியும்.

வெந்நீரில் அமிழ்த்திய கோழிகளை 'பிளககர்' (Plucker) என்னும் கருவியில் இட்டு, கருவியைச் சுற்றச் செய்து இறக்கைகள் அப்புறப் படுத்தப்படுகின்றன.



இறகு நீக்கப்பட்ட கோழிகளின் கால்களும், விரல்களும், குடல்களும், துப்புரவான முறையில் நீக்கப்படுகின்றன (Evisceration).

கழுத்துப் பாகத்திலுள்ள தோலை அறுத்து சுவாசக் குழலும், இரைப்பையும் நீக்கப்படுகின்றன. வயிற்றின் அடிப் பாகத்தில் அறுத்து, குடல், ஈரல், இதயம் நுரையீரல் போன்ற உறுப்புகள் வெளியில் எடுக்கப்படுகின்றன.

பின் வயிறு உள்பாகம் நன்கு கழுவப்படுகிறது.

இதயத்தை இரண்டாக அறுத்து அதில் உள்ள இரத்தம் சுத்தப்படுத்தப் படுகிறது.

தூய்மைப்படுத்திய ஈரல், இதயம், இரைப்பை, கழுத்து ஆகிய உறுப்புகள் பிளாஸ்டிக் பையில் அடைக்கப்பட்டுச் சுத்தப்படுத்திய வயிற்றுப் பாகத்திற்குள் வைத்து மூடப்படுகின்றன.

தூய்மைப்படுத்திய கோழியை பிளாஸ்டிக் பைகளில் வைத்து உடனே குளிரச் செய்தல் (0 டிகிரி முதல் 1 டிகிரி சென்டிகிரேட்).

இவ்வாறு பக்குவப்படுத்தப்பட்ட கோழிகளை 0 முதல் 1 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலையில் 7 நாட்கள் வரையிலும், 23 முதல் 40 டிகிரி சென்டிகிரேடு வெப்ப நிலையில் உறைநிலை பதனப்படுத்தப்பட்டால் 6 முதல் 9 மாதங்கள் வரையிலும் கெடாமல் பாதுகாக்கலாம்.



# புழைக்கடைக் கோழிப் பண்ணை

பேராசிரியர் சி.ஏ.பெருமாள்

கோழி வளர்ப்பதைச் சற்று தரக்குறைவானதும், அசுத்தமானதுமான ஒரு வீண் பொழுது போக்கெனக் கருதியவன் நான். சுமார் எட்டாண்டுகளுக்கு முன்புதான், நான் கோழி வளர்ப்பை ஒரு பொழுதுபோக்காக மேற்கொள்ளலானேன். அதுவும் எதிர்பாராமல் ஏற்பட்டதே! அறுத்துக் கறி சமைப்பதற்காக வாங்கிய, சிலுவை என்று பொதுவாகக் கூறப்படும் நாட்டுக் கோழிகள் சில எனது கொல்லைப்புறத்தில், தங்கிப் போய்விட நேர்ந்தது. அவைகள் முட்டையிடத் தொடங்கிவிடவே, அவற்றைக் கொல்வதையும் தள்ளிப் போட வேண்டியதாயிற்று. அவைகள் பொன் முட்டையிடும் வாத்துகளாகத் தோன்றவே, கொல்ல மனமில்லாமல் வளர்க்க வேண்டியதாயிற்று. இதிலிருந்துதான் கோழி வளர்க்கும் ஆசை ஏற்பட்டது. சென்னைக் கால்நடைக் கல்லூரி, கோழி இன ஆராய்ச்சித்துறை நண்பர் ஒருவரின் உதவியால் முதன் முதலில் பத்து வெள்ளை 'மேயர் இன' கோழிகளை வாங்கி வளர்க்கலானேன். நாட்டுக் கோழிகளைக் கூண்டில் அடைத்து இரைபோட்டு முட்டை எடுப்பது நட்டமானது என்றும், 'வெள்ளை லக்கார்ன்' (White Leghorn) கோழிகள் அடை காக்காததனால் அதிக முட்டைகிடைக்க வாய்ப்பு உண்டு என்றும் அந்த டாக்டர் கூறியதனால்தான், நான் வெள்ளைக் கோழிகளை வளர்க்க சிறியதோர் கூண்டை அமைத்தேன். அதன் பின் 'வெள்ளை லெக்கார்ன்' இனத்தைச் சேர்ந்த பல்வேறு வகைக் கோழிகளையும் 'சிவப்பு போந்தா' (Rhode Island Red 'வெள்ளை ராக்' (White Rock), வான் கோழி முதலிய பலவினக் கோழிகளை வளர்ப்பதிலும், இன ஆராய்ச்சி செய்வதிலும் ஆர்வமடைந்தேன். முதன் முதலில் பொழுது போக்காக (Hobby) தொடங்கிய கோழி வளர்ப்பு, காலப்போக்கில் இலாபம் தரும் ஒரு தொழிலாக, என் வீட்டுப் பின்புறம் உள்ள கொல்லையில் வளர ஆரம்பித்தது. எனது அனுபவங்களையும், அதனால் பெற்ற அனுகூலங்களையும் இங்கே கூற விரும்புகின்றேன்.

எனது வீட்டிற்குப் பின்புறம் காலி இடமென் சிறிது இடமேயுள்ளது. ஒரு பெரிய கோழிப் பண்ணையைத் தொடங்குவது என்பது இயலாது. மேலும் நான் காலை 10 மணிக்கு மேல் மாலை 6 மணி வரையும் அலுவலக வேலையாகப் போய் விடுவதால், சுமார் 50 கோழிகளுக்கு மேல் பராமரிப்பதும் இயலாத காரியமாகும். ஆகவே நான் சுமார் 50 முதல் 75 கோழிகளையே வளர்ப்பது என்ற திட்டத்தில் வீட்டிற்குப் பின்புறமுள்ள காலிப் பகுதியில் (15'×12' 180 சதுர அடி) சுமார் 180 சதுர அடி பரப்பளவில் ஒரு கூண்டை நிறுவினேன்.

கூண்டின் அடியில் நல்ல காங்கிரீட் தளம் போட்டு 9'' அங்குல உயரத்துக்கு மரத்தூள் கொட்டியுள்ளேன். இதை ஆண்டுக்கொரு முறை மாற்றவிட்டுப் புதிய மரத்தூள் கொட்டி வருகிறேன். இரை போடுவதற்கான நான்கு பெட்டிகளும், தண்ணீர் வைப்பதற்கான வசதிகளும், முட்டையிடத் தேவையான மண்பானைகள், போன்ற வசதிகள் யாவும் செய்யப்பட்டுள்ளன. சுமார் 60 கோழிகள் வளர்க்கப்படும் இந்தக் கூண்டை இரண்டாகப் பிரித்து வைத்திருக்கின்றேன். சில சமயங்களில், ஒரு தனி ரகக் கோழி இனத்தைப் பெருக்க வேண்டுமென்றாலும், ஆராய்ச்சிகள் நடத்த வேண்டுமென்றாலும் இந்தத் தனி அறை உதவுகின்றது.

கோழிப் பராமரிப்பு மிகவும் இலகுவான ஒன்றே. விஞ்ஞானம் முன்னேறிவிட்ட இந்தக் காலத்தில், கோழிப் பராமரிப்பு ஒரு சிரமமான காரியமன்று. சென்னைக் கால்நடைக் கல்லூரி, கோழி இன வளர்ச்சித் துறையிலும் (Poultry Science Department) நந்தனம் கோழி ஆராய்ச்சி நிலையத்திலும் அடை வைப்பதற்குத் தேவையான கோழி முட்டைகளை வாங்கி, அடை வைத்துக் குஞ்சு பொரித்து வளர்த்துள்ளேன். இது கொஞ்சம் சிரமமான காரியமாகும். அடைகாக்கப் போதிய அளவு நாட்டுக் கோழிகள் கிடைப்பதில்லை. மேலும் 10 குஞ்சுகளுக்கு மேல், ஒரு கோழியின் மூலம் கிடைப்பதுமில்லை. ஓரிரு ஆண்டுகள் இம்முயற்சியில் ஈடுபட்டிருந்த நான், மேற்கூறிய துறை மற்றும் நிலையத்தினரின் ஆலோசனைப்படி இம்முறையைக் கைவிட்டுவிட்டு, அவர்களிடமே தேவையான கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்க்கலானேன். சாதாரணமாக 10 முதல் 12 வாரம் வரை அவர்களால் பாதுகாக்கப்பட்ட கோழிக் குஞ்சுகள், அங்கிருந்து வேறு இடம் சென்றாலும் ஒரு தொந்தரவுமின்றி செவ்வனே வளர்கின்றன. நான் இது வரையும் ஒரு வாரம் வயதான கோழிக் குஞ்சுகளில் இருந்து, 12 வாரம் வரை வயதான குஞ்சுகள் வாங்கி வளர்த்துள்ளேன். டாக்டர்களின் ஆலோசனையைப் பெற்று அவ்வப்போது 'ராணிக்கெட்' மற்றும் அம்மை நோய் போன்ற நோய்களுக்குத் தேவையான தடுப்பு ஊசி முதலானவற்றைக் கொடுத்து வருகிறேன். விஞ்ஞான ரீதியாக டாக்டர்கள் தரும் ஆலோசனையோடு, நானும் சில விதிகளைக் கடைப்பிடித்து வருகிறேன். பொதுவாகக் கோழிக் கூண்டு இயற்கைச் சூழ்நிலையை உடையதாக இருக்க வேண்டும் (Natural Environment) நாம் கோழிகளுக்குத் தேவையான இயற்கைச் சூழ்நிலையைக் கூண்டிற்குள் உருவாக்க வேண்டும். நாள்தோறும் கூண்டை மேலெழுந்தவாரியாகப் பெருக்கிச் சுத்தம் செய்ய வேண்டும். அன்றாடம் தண்ணீரை மாற்றுவதோடு, பாத்திரத்தையும் நன்றாகக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். பின்பு குளிர்ந்த சுத்தமான தண்ணீரை வைக்க வேண்டும். நாள்தோறும் ஒவ்வொரு கோழிக்கும் சிறிதளவேனும் 50 கிராம் கீரை கொடுக்க வேண்டும். அவ்வப்போது கொஞ்சம் கிளிஞ்சல் துண்டுகள் கொடுக்க வேண்டும். அவ்வப்போது ஏதாவது சிறு பிரச்சினைகளுக்கு டாக்டர்களைக் கலந்து வேண்டிய மருந்து கொடுக்க வேண்டும்.

நான் மேற்கூறியவாறுதான் எனது கொல்லைப்புறக்கோழிப் பண்ணையைப் பராமரித்து வருகிறேன்.

கோழிகளுக்குக் கோழித் தீவன வாரியத்திடமிருந்து ஒழுங்காக, நிரந்தரமாக உணவு கிடைத்துக் கொண்டிருந்தால் ஒருவிதத் தொல்லையும் இல்லை. ஏனெனில் கிலோ தீனி விலை 75 காசு. அதுவும் நல்ல தரமான தீனி. தீனிப் பிரச்சினைதான் முக்கியமான பிரச்சினையாகவும், கோழி வளர்ப்பதில் உள்ள முக்கிய முட்டுக்கட்டை யெனவும் கருதுகின்றேன்.

இந்த எட்டு ஆண்டு அனுபவத்தில் கோழி வளர்ப்பது மிகவும் இலாபகரமானது என்பதை நான் நன்றாகப் புரிந்து கொண்டேன். 50 அல்லது 60 கோழிகள் வளர்க்கும்போது, ஏதோ ஒன்றிரண்டு செத்துப் போவதுண்டு. அவற்றையெல்லாம் ஒரு பெரிய இழப்பாகக் கருதுவதற்கில்லை. சென்னைக் கால்நடைக் கல்லூரியினரால் ஆராய்ச்சி செய்து பராமரிக்கப்பட்ட வெள்ளை லெக்கார்ன் —மேயர் வம்ச (White Leghorn —Meyer Strain) கோழிக் குஞ்சுகளை, அவர்களது நந்தனம் ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து வாங்கினேன். இப்போது என்னிடம் அவைகள்தான் இருக்கின்றன. அவை 5-6 மாதங்களில் முட்டையிட ஆரம்பித்தன. இப்போது அவைகளுக்கு 9 அல்லது 10 மாதம் வயதாகிறது. அவை சராசரி நாள்தோறும் 40 முட்டைகள் இடுகின்றன. அதில் எனது வீட்டுத் தேவைக்குப் போக 35 முட்டையையாவது விற்க முடிகிறது. எனது அனுபவத்தில், கோழியின் விலை, கோழித் தீனி, மருந்து, கீரை போன்ற எல்லாச் செலவிற்கும் போக, கோழி ஒன்றுக்கு மாத மொன்றிற்கு இரண்டு ரூபாய் குறைந்த பட்சம் இலாபம் கிடைக்கிறது. இதைச் சொன்னால் விந்தையாக இருக்கும். சில சமயங்களில் இலாபம் இதை விடக் கூடுதலாய் இருக்குமே தவிர குறைவதில்லை.

சென்னை நகரில், நடுத்தர மக்கள் என்னைப்போல் கோழிப்பண்ணைகள் வைத்தால் அவர்களுக்குச் சற்று வருமானம் வருவதோடு, நாட்டிலிருக்கும் உணவுப்பஞ்சத்தைத் தீர்த்திட சற்றே உதவ முடியும் என்பதில் சற்றும் ஐயமில்லை!



## முட்டையின் பயன்

1. பிசின் தயாரித்தல்.
2. வண்ண வேலைப்பாடு.
3. ரொட்டி, 'கேக்' தயாரித்தல்.
4. சாயவேலை.
5. தோலினால் ஆன பொருட்கள் உற்பத்தி.
6. மருந்து தயாரித்தல்
7. 'வார்னிஷ்' தயாரித்தல், பெயிண்டு தயாரித்தல்.
8. பைண்டிங் வேலை.
9 தந்த வேலை.
10. சோப்பு தயாரித்தல்.
11. மை செய்தல்.
12. புகைப்படத் தொழில்.
13. அச்சு வேலை.
14. இரப்பர் தொழில்.
15. தடுப்பு ஊசி மருந்துகள் தயாரித்தல்.
16. உரம் உற்பத்தி.
17. செயற்கைக் கருத்தரிக்கச் செய்தல்.
18. மது தயாரித்தல்.




டாக்டர் ஜி. வெங்கடாசலம்

இயக்குநர்,

கால்நடை பராமரிப்புத்துறை

நம் நாட்டில் உணவு உற்பத்தியைப் பெருக்கவும், அதே நேரத்தில் நமது உணவில் ஊட்டச் சத்துக்களை அதிகரிக்கவும் உள்ள எளிய, விரைவான வழிகளில் ஒன்றாகக் கோழிப்பண்ணைகளின் வளர்ச்சி அமைந்துள்ளது. நமது நாட்டில் உணவுப் பற்றாக் குறையும், நமது மக்களின் உணவில் கடுமையான புரதச்சத்துப் பற்றாக்குறையும்நிலவும் இந்த நேரத்திலே, கோழிப் பண்ணைகளின் வளர்ச்சி மிகவும் இன்றியமையாததாக விளங்குகிறது.

கோழிப் பண்ணை, வேளாண்மையில் ஒரு முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது. நம் நாட்டு மக்களின் உணவைப் பெருமளவில் சம நிலைப்படுத்துவதில் கோழிப் பண்ணை முக்கிய இடம் பெற்றுள்ளது. ஏராளமான மக்கள் கோழிப் பண்ணைகளின் மூலம் துணை வருவாய் பெற்று வரும்போது, பலர் தங்கள் வாழ்வுக்குக் கோழிப் பண்ணைகளையே நேரடியாகவும், முழு அளவிலும் நம்பியுள்ளனர்.

கோழிப் பண்ணைத் தொழில் தமிழ் நாட்டில் வெகுவாக விரைவாக வளர்ச்சியடைந்துள்ளது. முன்பெல்லாம் வீட்டின் பின் புறத்தில் சிறு அளவில் கோழிப் பண்ணை அமைக்கப்பட்டு வந்தது. ஆனால், இன்று கோழிப் பண்ணைகள் 500 முதல் 10,000 கோழிகள் கொண்ட, வாணிப அடிப்படையில் இயங்கும் கோழிப் பண்ணைகளாக வளர்ந்துள்ளன. தற்பொழுது தமிழ்நாட்டில் ஏறத் தாழ 3,000 கோழிப் பண்ணைகள் உள்ளன. அவைகளில் சற்றேறக் குறைய 4 இலட்சம் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. ஆகவே, கோழிப் பண்ணை அமைப்பது ஆதாயம் தரும் தொழிலாக மாறியுள்ளது. கோழிப் பண்ணைகளைத் தரத்திலும், எண்ணிக்கையிலும் மேம்படுத்துவதற்காகவும், புரதப் பசியைப் போக்கிட வேண்டும் என்ற நோக்குடனும், தொழில் நுணுக்க உதவி, கோழிப் பண்ணை அமைப்பதற்குத் தேவையான குஞ்சுகள் வழங்குதல், வளர்ப்பதற்கான கோழிகள், தனிப்பட்டவர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நிதியுதவி செய்தல், வினியோகித்தல் போன்ற பல்வேறு முறைகளைத் தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை மேற் கொண்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையைத் திருத்தியமைப்பதற்கு முன்பு (1—1—70-க்கு முன்பு) தனிப்பட்ட கோழிப் பண்ணையாளர்களுக்குக் குஞ்சு பொரிக்கும் முட்டைகள், கோழிக் குஞ்சுகள், வளர்ப்பதற்குத் தகுதியான பருவமடைந்த கோழிகள் ஆகியவற்றை வழங்கவும், கோழிப் பண்ணை பற்றிய அறிவினைப் பரப்பிடவும் தமிழகமெங்கும் கோழி விரிவாக்க நிலையங்களே இருந்தன. அந்நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளும், கோழிகளும் வரையறைக்கு உட்பட்ட எண்ணிக்கையிலேயே இருந்தன. கால்நடைப் பராமரிப்புத் துறை திருத்தியமைக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைத் தொழில் பெரும் வளர்ச்சியுற்றது. கால்நடைப் பராமரிப்புத் துறை திருத்தியமைக்கப்பட்ட பிறகு, கோழி விரிவாக்க நிலையங்கள் 75-ல் இருந்து 39-ஆக (மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் உள்ள கோழிப் பண்ணை உட்பட) குறைக்கப்பட்டன. கடந்த ஆண்டில் இந்த 39 நிலையங்களும் 61.24 இலட்சம் முட்டைகளையும், 5.37 இலட்சம் கோழிகளையும் உற்பத்து செய்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கது. ஏனெனில் கால்நடைப் பராமரிப்புத் துறை திருத்தியமைக்கப்படுவதற்கு முந்திய ஆண்டில் 75 கோழி விரிவாக்க நிலையங்களாலும் 37.13 இலட்சம் கோழி முட்டைகளும், 5.20 இலட்சம் கோழிகளுமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது கோழிப் பண்ணை உற்பத்தி அதிகரித்து வருவதைக் காட்டுகிறது. இவ்வாறாகப் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளவும், உணவு உற்பத்தியைப் பெருக்கவும் கோழிப் பண்ணை அமைக்குமாறு உழவர் பெருமக்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

கோழி விரிவாக்க நிலையங்களும், கோழிப் பண்ணைகளும் கடந்த ஆறு ஆண்டுகளில் செய்துள்ள சாதனைகள் பின்வருமாறு உள்ளன :

**உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகள்**

| ஆண்டு | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1967—68... | ... | 30,97,249 |
| 1968—69... | ... | 37,13,786 |
| 1969—70... | ... | 29,97,026 |
| 1970—71... | ... | 41,79,826 |
| 1971—72 | ... | 56,31,295 |
| 1972—73 | ... | 61,24,118 |

**வளர்ப்பதற்காக விற்கப்பட்ட கோழிகள்**

| ஆண்டு | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1967—68 | ... | 1,38,600 |
| 1968—69 | ... | 1,08,412 |
| 1969—70 | ... | 1,18,549 |
| 1970—71 | ... | 72,953 |
| 1971—72 | ... | 1,90,533 |
| 1972—73 | ... | 1,79,578 |

**குஞ்சு பொரித்தல் மூலம் பெற்ற கோழிகள்**

| ஆண்டு | | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1967—68 | ... | ... | 4,10,465 |
| 1968—69 | ... | ... | 5,20,275 |
| 1969—70 | ... | ... | 2,06,290 |
| 1970—71 | ... | ... | 3,99,978 |
| 1971—72 | ... | ... | 5,37,032 |
| 1972—73 | ... | ... | 5,37,462 |

### குஞ்சு பொரிக்கும் நிலையங்கள்

தமிழ்நாட்டில் காட்டுப்பாக்கம், ஓசூர், கப்பலூர் ஆகிய 3 இடங்களிலும் குஞ்சு பொரிப்பு நிலையங்கள் உள்ளன. கோழி வளர்ப்பவர்களால் வாங்கப்படும் ஒரு நாள் வயதுடைய இனம் பிரிக்கப்பட்ட கோழிக் குஞ்சுகளில் பெரும்பாலானவற்றை ! இம்மூன்று கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையங்களே வழங்கி வருகின்றன. கோழிப் பண்ணைத் தொழிலில் ஏற்பட்டு வரும்முன்னேற்றத்தின் காரணமாக, ஏராளமான உழவர்கள் --தங்கள் கோழிகளைக்கொண்டு அடை காக்கச் செய்து குஞ்சு பொரிக்கச் செய்வதற்குப் பதிலாக—ஒரு நாள் வயதுடைய குஞ்சுகளையே வாங்குகின்றனர்.

குஞ்சு பொரிப்பு நிலையங்கள் முட்டைகளை, 'இன்குபேட்டர்' கருவியில் வைத்துக் குஞ்சு பொரிக்கச் செய்து, அவைகளைக் கோழி விரிவாக்க நிலையங்களுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்கும், பொது மக்களுக்கும் வழங்குகின்றன. இந்நிலையங்கள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் மாதத்திற்கு 20,000 கோழிக் குஞ்சுகளாகும். பொது மக்களின் உடனடித் தேவையை ஈடு செய்ய ஒவ்வொரு நிலையமும் ஓர் ஆண்டில் 2.5 இலட்சம் குஞ்சுகளை உற்பத்தி செய்யவல்லது. இம் மூன்று நிலையங்களும் கீழ்க் கண்டவாறு குஞ்சுகளை உற்பத்தி செய்துள்ளன.

| | | | |
|---|---|---|---|
| | **ஓசூர் நிலையம்** | | |
| **ஆண்டு** | | | **குஞ்சுகளின் எண்ணிக்கை** |
| 1970—71 | ... | ... | 1,22,936 |
| 1971—72 | ... | ... | 2,06,363 |
| | **காட்டுப்பாக்கம் நிலையம்** | | |
| **ஆண்டு** | | | **குஞ்சுகளின் எண்ணிக்கை** |
| 1970—71 | ... | ... | 64,578 |
| 1971—72 | ... | ... | 82,357 |
| | **கப்பலூர் நிலையம்** | | |
| **ஆண்டு** | | | **குஞ்சுகளின் எண்ணிக்கை** |
| 1970—71 | ... | ... | 98,811 |
| 1971—72 | ... | ... | 1,47,003 |

### கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்

கால்நடைப் பராமரிப்புத் துறை திருத்தியமைக்கப் பெறுவதற்கு முன்பு தமிழ்நாட்டில் 23 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களே இருந்தன. கடந்த 2 ஆண்டுகளில் கால்நடைப் பராமரிப்புத் துறையால் 139 கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச் சங்கங்கள், உழவர்களுக்குத் தேவையான நிதியுதவிகளும், இதர வசதிகளையும் சேவைக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கிடைத்திடச் செய்ய உதவுகின்றன.

ஒவ்வொரு சங்கத்திலும் 100 உழவர்கள் உறுப்பினர்களாக உள்ளதாலும், ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தது 100 கோழிகள் வளர்ப்பதாலும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்து நாளொன்றுக்கு ஏறத்தாழ 10 இலட்சம் முட்டைகளை உற்பத்தி செய்கின்றன.

கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கடன் கொடுத்து உதவ நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள்முன் வந்துள்ளன. ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா கடன் உதவியுடன், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டம் துவக்கப் பட்டுள்ளது. இவ்வங்கி திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், தென்னார்க்காடு ஆகிய 3 மாவட்டங்களில் கோழி வளர்ப்புக்காக மொத்தம் 1.28 கோடி ரூபாய் கடன் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் அதிக முட்டையிடும் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இக் கோழிப் பண்ணைகளை அவ்வப்போது பார்வையிட்டு, அவைகளின் வளர்ச்சிக்குக் கால் நடைப் பராமரிப்புத் துறையினர் உதவி வருகின்றனர். இது வரை கால் நடைப் பராமரிப்புத்துறை இலாபு நட்டமின்றி சம நிலை கோழித் தீவனத்தை வழங்கி வந்தது.

தீவிரக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் வெற்றி, முக்கியமாக விற்பனைத் திட்டத்தைப் பொறுத்தே உள்ளது. இதை உணர்ந்தே, விற்பனைத்திட்டம் துவக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் முட்டைகளுக்கு நிலையான விற்பனை வாய்ப்பு ஏற்படுத்தவும், நியாயமான விலை கிடைக்கவுமே விற்பனைத் திட்டம் துவக்கப்பட்டது.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் கோழி வளர்ப்பு பற்றிய வாணிபப் பணிகளையும் மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொள்ளும். இதனால் தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைகள் மேலும்வளர்ச்சியுறும்.



# நீரும் கோழியும்

**நீ**ர்—குடிநீர் —குடிப்பதற்கான தூய நீர்—கோழிகளுக்கு மிக மிக இன்றியமையாதது!

நீர்—குறை நீர்—தரையில் சிதறும் நீர்—மழைச் சாரல் நீர் அல்லது இதர காரணங்களால் ஏற்படும் நீர்—கோழிகளுக்கு மிகவும் கேடு விளைவிப்பது!

முன்னது இல்லாமல் கெடுவது கோழிகள்!

பின்னது இருப்பதால், ஏற்படுவதால், கெடுவது கோழிகள்!

உயிர் வாழும் எந்த உயிருக்கும் நீர்இன்றியமையாதது! ஏனெனில், உடலின் ஒவ்வொரு அணுவும் "நீர்க் கோர்வை" உள்ளது—"நீர்க் கோர்வையால்" சூழப்பெற்றது—நீர்க் கோர்வையின் மூலமாக ஊட்டச் சத்தைப்பெற்று கழிவை அகற்றி, உயிர் வாழ்வது, செயலாற்றுவது. ஒவ்வொரு உயிரின் உடல் வெப்பமும் ஒரு குறிப்பிட்ட நிலையில் அமையப் பெற்றது. இதை இயற்கையான வெப்ப நிலை என்பர். மனிதனின் இந்த நிலை 98.4 டிகிரி 'பாரன்ஹீட்' ஆகும். இந்த நிலைக்கு, ஒரு குறுகிய அளவு மேலாகவோ அல்லது கீழாகவோ ஏற்படும் நிலையை, உடல் தாங்கவல்லது. உரிய வெப்ப நிலையில் உடலிருக்கும் பொழுது தான், எல்லா அவயவங்களும் ஒரே சீராக இயங்கி, உற்பத்தித் திறன் அல்லது வேலை செய்யும் திறன் அதிகமாகும் நிலை ஏற்படுகிறது. இருக்கும் இடத்தின் வெப்ப தட்ப நிலை, உடல் வெப்ப நிலையைப் பாதிக்க வல்லது. அதற்கேற்றாற்போல் குடி தண்ணீரின் தேவையும் மாறுபடும்.

கோழிகளின் இயற்கை வெப்ப நிலை 106 டிகிரி 'பாரன்ஹீட்'. இதர கால் நடைகளைப் போல், கோழிகளால் தண்ணீரை உறிஞ்சிக் குடிக்க இயலாது. அலகால் சிறிய அளவு எடுத்து, தலையைத் தூக்கும்; அதன் காரணமாக தண்ணீர் உணவுக் குழாய் மூலமாக உள்ளே செல்லும். இவ்வகையில் தண்ணீரைப் பருகும் பழக்கம் உள்ளவை கோழிகள். ஆகவே, ஒரே சமயத்தில் சிறிய அளவு நீரையே பருகும் வாய்ப்பினைப் பெற்றுள்ளதால், கோழிகள் அடிக்கடி தண்ணீர் பருக வேண்டியுள்ளது. கோழிகள் தலமான நிலையிலும், சரியான அளவு முட்டை வைக்க வேண்டிய நிலையிலும் இருக்க வேண்டுமானால், கோழிகள் முன்பாக எப்பொழுதும் தட்டுப்பாடில்லாத வகையில் தண்ணீர் இருக்குமாறு செய்வது மிக அவசியமானது.

ஆழ் கூள முறையில் வீடு அமைத்துக் கோழிகளை வளர்க்கும் பொழுது ஒரு பக்கச் சுவரையொட்டித் தண்ணீர் வாய்க்கால் அமைத்து, அதில் எப்பொழுதும் தூய தண்ணீர் இருக்கும் வகையில் வீட்டை அமைப்பது மிகச் சிறந்த முறையாகும். இந்த வாய்க்கால் அமைப்பில் தண்ணீர் விடும்பொழுது, கோழி வீட்டின் உட்பகுதியில் தண்ணீர் வடியாதிருக்கும் வகையில் உள் விளிம்பை உயர்த்தி அமைப்பது சரியான முறையாகும். அதுவுமல்லாமல் தண்ணீர் வாய்க்காலின் அடிப்பாகம் தகுந்த உயரம் உள்ளதாக —தரை மட்டத்திலிருந்து ஏறத்தாழ 12 அங்குல உயரம் உள்ளதாக— அமைப்பதும் அவசியம். இவ்விதம் உயரமாக அமைப்பதின் காரணமாக கோழி நீரைப் பருகும் பொழுது, தரையில் தண்ணீர் சிந்துவது குறைவுபடும்.

இவ்விதமான கட்டட அமைப்பில்லாத கோழி வீடுகளில் தனியாகத் தண்ணீர் தொட்டிகள் வைக்கப் பெறல் வேண்டும். இவைகளைச் சரியான உயர நிலையில் அமைத்தால் தான், தண்ணீர் தரையில் சிந்தி ஆழ் கூளம் நனைவதைத் தடுக்க இயலும். தண்ணீர் வைக்க அகலமான பாத்திரங்கள்—மட்பாண்டங்கள் கூடப் போதுமானது. அவைகளை மேலிருந்து தொங்க விட்டுத் தண்ணீர் வசதி செய்வது சுலபமானதும், சிறந்ததுமாகும். எந்த விதமான அமைப்பானாலும் தண்ணீர் ஊற்றும் பொழுது, கீழே சிதறுதவாறும், கோழிகள் தண்ணீர் பருகும் பொழுது சிதறுவது குறையும் வகையிலும், தகுந்த உயரத்தில் தண்ணீர்ப் பாத்திரத்தை அமைப்பது மிகவும் அவசியம். அதிகமான அளவு பாத்திரங்களை உபயோகித்து பரவலாக அமைப்பதின் மூலமாகக் கோழிகளின் சமீபத்திலேயே எப்பொழுதும் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும்.

போதிய அளவு தண்ணீர் கிடைக்காமலிருக்கும் கோழிகளின் உடல் நலம் பாதிக்கப்படும். சிறகுகள் உதிர ஆரம்பித்து, முட்டை வைக்கும் தன்மை குறைந்து விடும்! ஆகவே நாம் எதிர் பார்க்கும் அளவிற்கு, கோழிகள் அவைகளின் முழு சக்தியின் அளவிற்கு முட்டையிட்டு, நமக்கு உரிய ஆதாயத்தைக்கொடுக்க, நாம் செய்ய வேண்டிய கடமை எல்லாக் கோழிகளுக்கும், எல்லா நேரத்திலும், எளிதில் பருகக் கூடிய நிலையில், தண்ணீர் இருக்குமாறு செய்வதேயாகும்.

தண்ணீர்ப்பாத்திரம் வறண்டால் முட்டை வருமானம் வறண்டுவிடும்!

தீவனப் பற்றாக்குறையை ஓரளவிற்குக் கோழிகள் சமாளிக்க வல்லது. ஆனால் தண்ணீர்ப் பற்றாக் குறையைக் கோழிகளால் சமாளிக்க முடியாது. தண்ணீர்ப் பற்றாக் குறை ஈடுசெய்ய இயலாத பேரிழப்பு—முதலுக்கே மோச

டாக்டர்
**கே. எஸ். சண்முக சுந்தரம்,**
நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு கோழி வளர்ப்பு
நிறுவனம்.

மாகக் கூடியது—என்ற உண்மையைக் கருத்தில் கொள்வது அவசியம்.

கோழிகளுக்கான வீடு அமைக்கும் பொழுது, கூரையின் பக்கங்கள் சுவரிலிருந்து நான்கு அடி அகலமிருக்குமாறு தாழ்வாக அமைக்கப் பெறல் வேண்டும். கூரையின் விளிம்பிலிருந்து குறைந்தது மூன்று அங்குல அகலத்திற்காவது 'விளிம்புத் தடுப்பு' அமைப்பதும் அவசியம். இவ்வாறு அமைப்பதால், காற்றுடன் கலந்த மழை பெய்தாலும், கோழி வீட்டில் மழைச்சாரல் ஏற்படாது. மழைச் சாரல் காரணமாகக் கோழிகள் நனையுமானால் பெரும் நோய் ஏற்பட்டு மரணமடையும். சரிவான முறையில் கூரை அமைக்காத காரணத்தினால் ஏற்படும் மழைச்சாரலைத் தவிர்க்கச் சிலர் கோணிப் பைகளை வலை அடித்த பகுதியில் தொங்க விடுகிறார்கள். இது இன்னும் மோசமானது! தடுப்புச் சாதனமில்லா திருந்தால் மழை பெய்யும் பொழுதுதான் சாரல் இருக்கும். ஆனால் கோணிப் பைகளைக் கட்டுவதால், கோணிகள் நனைந்து, மழை விட்ட பின்னரும் பல மணி நேரங்களுக்குக் கோணியில் உள்ள ஈரத்தினால் ஈரக் காற்று வீசும். இது கோழிகளுக்கு



மிகுந்த கேடு விளைவித்து, இழப்பை ஏற்படுத்தும்.

கூரை அமைப்புச் சரிவாக அமைக்கப் பெறவில்லையானால் மூங்கில் தட்டிகளைக் கூரை விளிம்பில் இணைத்து, 'சாரல் தடுப்பு' அமைப்பதுதான் சிறந்த முறை. சாரலால் நேரடி நனைவு ஏற்பட்டு, கோழிகள் பாதிக்கப் பெறுகின்றன. ஆழ் கூளம் நனைந்து ஈரமாக இருக்கும். தண்ணீர் தொட்டிகளைச் சரியான முறையில் அமைக்காத காரணத்தினால் அல்லது தண்ணீர்ச் சாதனங்களை நிரப்பும் பொழுது தண்ணீர் கீழேசிந்தி ஆழ்கூளம் நனைகிறது. ஆழ் கூளம் எந்தக் காரணத்தினாலாவது நனைந்தால், நனைந்த பகுதியை உடனடியாக அப்புறப்படுத்திவிடல் வேண்டும். இல்லாவிட்டால் கூளத்தில் ஈரம் அதிகமாக இருக்கும்காரணத்தினால், நோய்க் கிருமிகள் அதிக அளவில்பெருகி கோடானு கோடியாகப் பெருகி—பலவிதமான நோய்களுக்குக் காரணமாகி—பெரும் இழப்பைஏற்படுத்தும்.

கோழிகளுக்குக் குடி தண்ணீர் கிடைக்கச் செய்வது பார்ப்பதற்கும், கேட்பதற்கும், செயலாற்றுவதற்கும் சுலபமானது. சுலபம், என்ற காரணத்தினாலேயே கவனிக்கப் பெறாமலிருப்பதும் தண்ணீர் வசதியேயாகும். சிறகுகள் உதிர ஆரம்பிப்பது தண்ணீர் பற்றாக்குறையினால்தான்! சிறகுகள் உதிர ஆரம்பித்தால் 2 மாதங்களுக்கு முட்டையிடுவது பாதிக்கப் பெறும்!

கோழிப் பண்ணையில் வருவாய் இழப்பதற்கு முதல் காரணம் 'தண்ணீர் பற்றாக் குறையே'! எல்லா நோய்களுக்கும் அடிப்படைக் காரணங்கள் குடிதண்ணீர் பற்றாக்குறையும், நனைந்த ஆழ் கூளமும் தான் என்பதைக் கருத்தில் கொண்டு ஆவன செய்தால், உறுதியாக கோழிப் பண்ணையிலிருந்து உரிய வருவாய், உயர்ந்த வருவாய் பெறலாம்.

## உங்கள் கோழிகளுக்குச் செய்ய வேண்டிய நோய்த் தடுப்பு முறைகள்!

1 முதல் 5 நாட்களுக்குள்—'ராணிகட்' நோய்த்தடுப்பு ஊசி (RDVF).

2 வார வயதில்—கோழி அம்மைத் தடுப்பு ஊசி (புரு அம்மை மருந்து).

4 வார வயதில் — மூக்கு வெட்டுதல்.

6 வார வயதில் — மீண்டும் ராணிகட் நோய்த்தடுப்பு ஊசி (RDVK).

8 வார வயதில்—குடல் புழு நீக்குதல். மீண்டும் 2 மாதத்திற்கு ஒரு முறை செய்யவேண்டும்.

10 வார வயதில்—கோழி அம்மைத் தடுப்பு ஊசி.

12 வார வயதில்—கோழிப் பேன் நீக்குதல். மீண்டும் 2 மாதத்திற்கு ஒரு முறை பேன் நீக்குதல்.





# கோழி வீடு

முட்டையிடும் கோழிகள் சிறந்த முறையில் முட்டையிடக் கோழிவீடு தேவை. ஒவ்வொரு கோழிக்கும் குறைந்தது 3 முதல் 4 சதுர அடி அளவாவது இருப்பிடம் கொடுக்க வேண்டும். கோழிகளில் அதிக உற்பத்திக்குத் தகுதியான தட்ப வெட்ப நிலை 60 டிகிரி முதல் 70 டிகிரி வரை பாரன் ஹீட் (15·5 டிகிரி முதல் 21 டிகிரி சென்டி கிரேட்) ஆகும்.

**இடம் தேர்ந்தெடுத்தல்:**

1. கோழி வீடுகள் கட்ட மேட்டுப்பாங்கான இடமும், வடிகால் தன்மையுடனும் இருக்க வேண்டும். இத் தன்மையுள்ள இடம் தண்ணீர் தேங்காமலும், ஈரமாகாமலும் தடுக்கும்.

2. நிழல் தரும் மரங்களும், செடிகளும் இருந்தால் கோழி வீட்டிற்குச் சூரிய வெப்பத்தின் பிரதிபலிப்பைத் தடுத்துக் குளிர்ச்சியைத் தரும்.

3. பண்ணையைச் சிறந்த முறையில் நடத்துவதற்குக் கோழி வீடு, பண்ணையின் மேற்பார்வையாளரின் இருப்பிடத்திலிருந்து தக்க தூரத்தில் இருத்தல் வேண்டும்.

**கட்டடம் கட்ட திட்டமிடுதல்:**

அந்தந்த இடத்தில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு மிகவும் சிக்கன முறையில் கோழி வீடுகளைக் கட்டுதல் வேண்டும். கோழி வீடு கட்டும் பொழுது தெற்கு வடக்கு நீளவாக்கில் அமைத்தால் காலை மாலை சூரிய வெப்பத்தினால் ஏற்படும் தீங்கைத் தவிர்க்க ஏதுவாகும்—கோழி வீட்டினுள் எலிகள் நுழையா வண்ணம் அமைத்தல் வேண்டும்.

**கடைகால்:**

கடைகால் வாய்க்கால் 1½ அடி ஆழமும், 1½ அடி அகலமும் எடுத்தல் வேண்டும். அதில் 6 அங்குல அளவு செங்கல் சுண்ணாம்புக் கலவையோ அல்லது செங்கல்லுடன் கலந்த சிமெண்ட் கலவையோ அடைத்து 9 அங்குல அகலமுள்ள 1½ அடி உயரமும் உள்ள கடைக்கால் சுவர் மேலெழுப்பவேண்டும். அதாவது தரை மட்டத்திற்கு மேல் 6 அங்குலச் சுவர் இருத்தல் வேண்டும். அதற்கு மேல், மேல் சுவர் 4½ அங்குல அகலத்தில் 1½ அடி உயரத்திற்கு வீட்டின் அளவு முழுவதும் கட்டுதல் வேண்டும். கூரை விளிம்பின் உயரம் 6 அடியும், கூரை உச்சிமேடு 8 அடி உயரமும் தரை மட்டத்திலிருந்து இருத்தல் வேண்டும்.

**சுவர்:**

இவ்வாறு கட்டப்பட்ட சுவருக்கும் கூரை விளிம்பிற்கும் இடையில் உள்ள இடத்தை ½ முதல் 1 அங்குலம் வரை அகலமுள்ள கம்பிவலை கொண்டு அடைக்கவேண்டும்.

**கூரை:**

கூரையை 'லேட் ரூபிங்' அட்டையாலோ அல்லது 'ஆஸ்பெஸ்டாஸ்' அல்லது



அலுமினயம தகடுகொண்டோ அமைக்க வேண்டும். கூரையின் உச்சி உயரம் 6 அடி அளவும், கூரை விளிம்பின் உயரம் 8 அடியும் இருத்தல் அவசியம்.

**தரை:**

நல்ல 'கான்கிரிட்' தரை கோழி வீட்டிற்கு இன்றியமையாததாகும். (ஆழ் கூளங்கள்) (டீப் லிட்டர்) 6 அங்குல உயரமும், எப்பொழும் உலர்ந்த தன்மையுடனும் இருத்தல் வேண்டும். மர அறுவைத் தூள், நெல், உமி, கடலை உமி, கரும்புச் சக்கை இவைகளை ஆழ் கூளப் பொருட்களாக உபயோகிக்கலாம். பொதுவாக 3 முதல் 4 சதுர அடி தரை பரப்பளவு ஒவ்வொரு முட்டையிடும் கோழிக்கும் இருக்குமாறு அமைத்தல் வேண்டும்.

**ஒளி அமைப்பு:**

200 சதுர அடி தரை பரப்பிற்கு 40 'வாட்' மின் குமிழ் விளக்கு ஒன்று வீதம் 6 அடி உயரத்தில் பொருத்தினல் இரவில் கோழிகள் தீவனம் தின்பதற்கு ஏதுவாக இருக்கும்.

**மற்ற உபகரணங்கள்:**

**அ. தீவனத் தொட்டி:**

இவை வட்டமாகவோ அல்லது நீள வடிவமுள்ளதாகவோ மரத்தில் அல்லது உலோகத்தினல் செய்யப்பட்டதாக இருக்கலாம். ஒரு கோழிக்குத் தேவையான தீவனம் உண்ணும் இடஅளவு பின்வருமாறு இருக்க வேண்டும்.

| | நீளத்தொட்டிகள். | வட்டத் தொட்டிகள். |
|---|---|---|
| பருவமடைந்த கோழிகள் | ஒரு கோழிக்கு | (1 முதல் 1¼ அடி விட்டம். |
| (20 வாரத்திற்கு மேல்) | 3 முதல் 4 அங்குலம். | 20 கோழிகளுக்கு ஒன்று வீதம். |

**ஆ. தண்ணீர்த் தொட்டி:**

இவை தாமே இயங்குபவைகளாகவோ அல்லது நாள் தோறும் நிரப்பப்படுபவைகளாகவோ இருக்கலாம். நீள அல்லது வட்ட வடிவமுள்ளதாகவும், மரம், பிளாஸ்டிக் அல்லது சிமென்டினல் செய்யப் பட்டதாகவும் அமைக்கலாம்.

தண்ணீர் குடிக்க இடவசதி பின்வருமாறு இருக்க வேண்டும்.

| வயது | தண்ணீர் குடிக்கத் தேவையான இடம் | |
|---|---|---|
| | நீளத்தொட்டி. | வட்டத்தொட்டி. (18 அங்குல விட்டம்) |
| பருவமடைந்த கோழி | 1 அங்குலம். | 50 கோழிகளுக்கு ஒன்று வீதம். |



தண்ணீர், தீவனத் தொட்டிகள் கம்பி அமைப்புகளால் பாதுகாக்கப் பட வேண்டும்.

**இ. முட்டைப் பெட்டிகள்:**

சுத்தமான முட்டைகள் பெற, ஒரு கோழி மட்டும் ஒரு நேரத்தில் முட்டையிட வசதியுள்ள அல்லது பல கோழிகள் ஏக காலத்தில் முட்டையிட வசதியுள்ள பெட்டிகள் அமைக்கப்பட வேண்டும். இப்பெட்டிகள் மரத்தினலோ உலோகத் தகடுகளினலோ செய்யப்படலாம். இப்பெட்டிகள் தனிப் பெட்டிக்கு 15''×12''×15'' அளவுடனும் பல கோழிப்பெட்டிக்கு 5' நீளமும், 2' அகலமும் 3' உயரமும் அளவுடனும் அமைத்தல் வேண்டும்.

**ஈ. உட்காரும் சட்டங்கள்:**

இவை கோழிகளின் வசதிக்காகவும், கோழிகள் இரவில் தங்குவதற்கும் பொருத்தப் படுகின்றன. இம்மரச் சட்டங்கள் 2''×1½'' அளவுடன் தரை மட்டத்திற்கு மேல் 18'' உயரத்தில் அமைக்கப்படலாம். ஒரு கோழிக்கு 6 முதல் 9 அங்குலம் உட்காரும் வசதி தேவை.

**உ. கிளிஞ்சல் பெட்டி;**

மரத்தினலோ, உலோகத்தினலோ ஆன பெட்டிகளில் தூளாக்கப்பட்ட கிளிஞ்சல் வைக்கப்பட வேண்டும். 50 கோழிகளுக்கு ஒரு பெட்டி அவசியம்.

**ஊ. சாம்பல் தூள் பெட்டி:**

மரத்தினலோ உலோகத்தினலோ ஆன பெட்டிகளில் மருந்துடன் கூடிய சாம்பல் தூள்களுடன் டி.டி. டீ அல்லது 'கெமாக்ஸீன்' மருந்து நிரப்பப்பட்டு வைத்தால், கோழிகளின் மேல் உண்ணிகளோ, பூச்சிகளோ இல்லாமல் தடுக்கலாம்.

—டாக்டர் ஆர். டி. மைக்கேல்.





## " சிறு தவறு பெரு நட்டம் "

கோழிப் பண்ணையில் நாள்தோறும் நிகழும் சில சாதாரண தவறுகளை நாம் பொருட்படுத்துவதில்லை! அதனுல்பெரும் கேடு விளைகிறது என்பதையும் அறிவதில்லை! கீழே தொகுத்தளிக்கப் பட்டிருக்கும் தவறுகள் உங்கள் பண்ணையில் இருந்தால் அதை உடனே நீக்கிப்பயன் அடையுங்கள்.

| | தவறுகள் | கேடுகள். |
|---|---|---|
| 1 | அசுத்தமான தண்ணீர்த் தொட்டி | பல நோய்களுக்கு அடைக்கலம். |
| 2 | தண்ணீர்ப் பற்றுக்குறை | முட்டைகள் குறையும். |
| 3 | குறைவான தீனித்தொட்டிகள் | முட்டைக் குறைவு. |
| 4 | வைக்கோல் அல்லது மரத்தூள் இல்லாத முட்டையிடும் கூடு. | முட்டைகள் உடையும் |
| 5 | காற்ருேட்டம் இல்லாத வீடுகள் | நலக் குறைவு. |
| 6 | தீனித் தொட்டிகளை வழிய நிரப்புவதும் அளவான உயரத்தில் அமைக்காமையும். | தீனி வீணுகும். |
| 7 | சதா மருந்து கொடுத்தல் | தேவையானபோது மருந்துகள் பயனற்று விடும். |
| 8 | பேன்களைப் பெருக விடுதல் | முட்டை உற்பத்தி குறையும். |
| 9 | கட்டிப்போன லிட்டர் | நோய்கள் பரவும். |
| 10 | கிளிஞ்சல்கள் இல்லாமை | முட்டையோடு மென்மையாக அமைந்து உடைந்து விடும். |
| 11 | குறுகிய இடம், அதிக கோழிகள் | ஒன்றையொன்று கொத்திக் கொள்ளும். |
| 12 | இளங்கோழிகளை முட்டை இடுவதற்கு முன், கூடுள்ள வீடுகளுக்கு மாற்ருதிருத்தல், | தரையில் முட்டையிட்டு அவைகள் வீணுக நேரிடும். |
| 13 | வேண்டிய முட்டையிடும் கூடுகள் இல்லாது இருத்தல். | தரையில் முட்டையிட நேரிடும். |
| 14 | நான்கு தரமாவது முட்டைகளைச் சேகரிக்காமல் இருத்தல். | முட்டைகள் வீணுகும். |
| 15 | கால்நடை மருத்துவர்களின் அறிவுரைகளை அசட்டை செய்தல். | நட்டம் |
| 16 | நோய்த்தடுப்பு முறைகளில் கருத்தின்மை | பெருநட்டம். |
| 17 | முட்டைகளை அடுக்காமல் கூடையில் கொட்டி வைத்தல். | முட்டைகள் உடையும் அல்லது அழுகிவிடும். |
| 18 | உதவி இருந்தாலும், உடையவர் பண்ணையைப் பாராதிருத்தல். | நட்டம். |
| 19 | வேண்டாத கோழிகளை அவ்வப்போது நீக்காதிருத்தல். | தீனிக்குக் கேடு. |
| 20 | வயதான கோழிகளையும், இளங் கோழிகளையும் கலந்து வைத்தல். | நோய் பரவும்; முட்டைகள் குறையும். |



## முட்டையில் உள்ள ஊட்டச் சத்துக்கள்.

| வரிசை எண். | ஊட்டச்சத்துக்களின் பெயர். | அளவு. | சாதாரண மனிதனுக்கு நாள் 1-க்குத் தேவையான அளவு. | இரண்டு முட்டைகளில் உள்ள அளவு. | அன்றாடத் தேவைகளில், இரண்டு முட்டைகளில் இருந்து பெறும் சத்து (சதவீதம்). |
|---|---|---|---|---|---|
| 1 | சக்தி | கலோரிகள் | 3,000 | 180 | 6 |
| 2 | புரதச்சத்து | கிராம் | 70 | 13·2—14 | 20 |
| 3 | கொழுப்புச் சத்து | ,, | 50 | 11 | 22 |
| 4 | மாவுச் சத்து | ,, | 570 | .. | .. |
| 5 | சுண்ணும்புச் சத்து | ,, | 0·8 | 0·06 | 8 |
| 6 | பாஸ்பரஸ் | ,, | 0·9 | 0·24 | 30 |
| 7 | இரும்புச்சத்து | மி.கி. | 12 | 3·2 | 26 |
| 8 | அயோடின் | ,, | 0 1 | 0·01 | 10 |
| 9 | வைட்டமின் 'ஏ' | ஐ.யு. (I.U.) | 5,000 | 1,000—1,500 | 20—30 |
| 10 | வைட்டமின் 'டி' | ஐ.யு. (I.U.) | 400 | 100 | 25 |
| 11 | வைட்டமின் 'சி' | மி.கி. | 75 | .. | .. |
| 12 | வைட்டமின் 'பி1' | மி.கி. | 1.5 | 0·12 | 8 |
| 13 | வைட்டமின் 'பி2' | மி.கி. | 2.0 | 0·32 | 16 |
| 14 | நியாசின் | மி.கி. | 20 | 1·20 | 6 |



### முட்டை, பால், அரிசி கோழிக்கறி இவைகளில் உள்ள சத்துப்பொருள்கள்.

| வரிசை எண். | சத்துப்பொருட்களின் பெயர். | முட்டை | பால் | அரிசி | கோழிக்கறி |
|---|---|---|---|---|---|
| 1 | தண்ணீர் | 74% | 87·3% | 13% | 66% |
| 2 | புரதம் | 12·4% | 3·5% | 7% | 20·2% |
| 3 | கொழுப்பு | 11·7% | 3 5% | 1.1% | 12·2% |
| 4 | மாவுச்சத்து | 0·9% | 5% | 78% | 0·6% |
| 5 | நார்ப்பொருள் (ஃபைபர்) | .. | .. | 0·7% | 1% |
| 6 | தாது உப்பு | 1% | 0·7% | 0·8% | .. |
| 7 | கலோரிச் சத்து (100 கிராமில்) | 163 | 65 | 359 | 200 |
| 8 | வைட்டமின் 'ஏ' (ஐ.யு.-100 கிராம்) | 1,300 | 140 | .. | .. |
| 9 | வைட்டமின் பி1, (மில்லிகிராம்-100 கிராம்) | 0·26 | 0·04 | 0·26 | 0·2 |
| 10 | வைட்டமின் பி2, (மில்லிகிராம்-100 கிராம்) | 0.04 | 0·18 | 1·3 | 0·3 |
| 11 | பேண்டோதனிக் அமிலம் (மில்லி கிராம் - 100 கிராம்). | .. | 0·31 | 2·5 | 0·7 |



# கலப்பினமும் 'மேயர்' இனமும்

டாக்டர் வை. இரத்தினசபாபதி
கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித்துறை

அண்மைக் காலத்தில் கோழிப்பண்ணைத் தொழிலில் ஒரு புரட்சி ஏற்பட்டு வெகு விரைவாகப் பரவி வருவதை நாம் அனைவரும் அறிவோம். அதிக அளவில் தரமுள்ள கோழிகளை உற்பத்தி செய்து, நோயின்றி வளர்ப்பதற்குரிய சூழ்நிலைகள் உருவாகியிருப்பதே இதற்குக் காரணம். இப் புரட்சிக்கு அடிகோலியவை வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட 'ஆர்பரேக்கர்ஸ்' 'யுனிசிக்ஸ்', 'ஹை-லைன்', 'இராணி ஷேவர்ஸ்' முதலிய கலப்பின வீரியக் கோழிகளே (Hybrids) என்றால் அது மிகையாகாது. இவை 20, 22 வாரங்களுக்குள் முட்டையிடும் பருவம் எய்தி, ஆண்டுக்கு 200-க்கும் குறையாமல் முட்டையிடும் இயல்பு வாய்ந்தவை. ஆதலால் அவற்றிலிருந்து அதிகமான இலாபம் கிடைக்க வழி இருக்கின்றது.



ஆயினும், இக்கலப்பினக் கோழிக்குஞ்சுகள், காலத்தில் கிடைப்பதில்லை. இவற்றின் விலையும் அதிகமாக இருக்கின்றது. மேலும் ஒவ்வொரு தொழிற் பருவத்திற்கும் வேண்டிய கோழிக் குஞ்சுகளை நாம் மேற்படி கோழி இனங்களை விற்பனை செய்யும் நிறுவனங்களில் இருந்தே வாங்க வேண்டிய நீக்கமுடியாத நிர்பந்தம் இயற்கையில் அமைந்துள்ளது. இதற்குக் காரணம் இக்கலப்பின வீரியக் கோழிகளிலிருந்து இனவிருத்தி செய்து, அக்கோழிகளை அடுத்த பருவத்திற்கு நாம் உபயோகித்துக் கொள்ள முடியாது. எனவே, நிரந்தரமாக நாம் மேற்கூறப்பட்ட கலப்பினக் கோழி இனங்களின் குஞ்சுகளை வழங்கும் நிறுவனத்தினரையே கோழிப்பண்ணைத் தொழிலுக்கு நம்பி வாழ்வதுடன், அதற்கான அந்நியச் செலாவணியையும் நம் தேவைக்கு ஏற்ப அதிக அளவில் ஆண்டிற்கு ஆண்டு ஒதுக்க வேண்டியுள்ளது.

ஆகவே, கலப்பின வீரியம் என்றால் என்ன? கலப்பின வீரியக் கோழிகளை எவ்வாறு உற்பத்தி செய்வது? அவை ஏன் தம் சந்ததிகளுக்குத் தம் வீரியத்தைக் கொடுப்பதில்லை?' என்று விளக்குவது உடனடியாகத் தேவைப்படுகின்றது. கோழிகளைப் பொதுவாகப் பல இனங்களாகப் பிரிக்கலாம். இனம் என்று சொல்லப்படுவது பல பொதுவான குணங்களைத் தன்னகத்தே கொண்ட ஒரு கூட்டத்தைக் குறிக்கின்றது. 'வெள்ளை லெக்கார்ன்' (White Leghorn), 'சிவப்பு போந்தா' (Rhode Island Red), 'ஆஸ்ட்ரலார்ப்ஸ்' (Austrolorps), வெள்ளை ராக்' (White Rocks) போன்றவை ஒவ்வொன்றும் ஓர் இனத்தைச் சேர்ந்தவை. 'வெள்ளை லெக்கார்ன்' கோழிகள் அனைத்தும் வெள்ளை நிறமுடையவை; ஆண்டிற்கு அதிக முட்டை தரக்கூடியவை. 'வெள்ளைராக்' என்ற இனக் கோழிகள் பத்து வாரங்களுக்குள் அதிக உடல் வளர்ச்சியடைந்து சுவையுள்ள இறைச்சியைக் கொடுக்கக்கூடிய தன்மையுடையவை. ஆனால் அவைகளின் ஆண்டு




முட்டை உற்பத்தித்திறன் மிகக் குறைவாக உள்ளது.

''வெள்ளை லெக்கார்ன்'' இனக்கோழிகள் பொதுவாக அதிக முட்டைகள் இடக்கூடியவை எனினும், எல்லாக் கோழிகளும் ஒரே குறிப்பிட்ட அளவில் அதிகமாக முட்டையிடுவதில்லை. தனிப்பட்ட கோழிகளிடம் அதிக வேறுபாடுகள் இருக்கலாம். சில 120 முட்டைகளைக் கொடுக்கக் கூடியவையாகவும், சில, 230 முட்டைகள் கொடுக்கக் கூடியவையாகவும், பெரும்பாலானவை 150 முதல் 180 முட்டைகள் வரை கொடுக்கக் கூடியவையாகவும் இருக்கின்றன. இந்த வேறுபாடுகள் இயற்கையின் நியதி! இந்த வேறுபாடுகளை ஆராய்ச்சியின் மூலம், கோழிகளைத் தனித் தனியே. கூண்டில் முட்டையிடும்படிச் செய்து அளந்து, நிர்ணயிக்க முடியும். இவ்வித ஆராய்ச்சி மூலம் கணிக்கப்பட்டு 200-க்கும் மேற்பட்ட முட்டைகளை இடும் கோழிகளைத் தனியே பிரித்து அவற்றின் சந்ததிகளை ''உள்இனக் கலப்பு'' (In breeding) முறையில் இனப்பெருக்கம் செய்வதன் மூலம், அச்சந்ததிகள் அதிக முட்டைகள் கொடுக்கும் இயல்பைப் பெறுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு சந்ததியையும் அளந்து ''உள்இனக்கலப்பு''ச் செய்வதன் மூலம் அதிக முட்டைகள் தரக்கூடிய ஒரு வம்சத்தையே (Strain) நாம் உற்பத்தி செய்யமுடியும். இந்த வம்சங்களுக்கு இனங்களைப் போல், சிறப்பு இயல்புகள் உண்டு. அதேபோல் ஒவ்வொரு இயல்புக்கும் தனித் தன்மையுள்ள வம்சங்களைத் தேர்வு மூலம் நாம் உற்பத்தி செய்ய முடியும். உதாரணமாக வெள்ளையினக் கோழிகளிலிருந்து 20 வாரத்தில் முட்டையிடும் பருவம் எய்தக் கூடிய ஒரு வம்சத்தையோ, அதிக எண்ணிக்கையில் முட்டையிடக்கூடிய ஒரு வம்சத்தையோ, பெரிய முட்டையிடக்கூடிய ஒரு வம்சத்தையோ, நாம் உருவாக்க முடியும்.

ஒரு வம்சத்தை உற்பத்தி செய்வதற்குக் குறைந்தது பத்து ஆண்டுகளாவது பிடிக்கும்! மேலும் அதற்கென ஏராளமான கோழிகளை வைத்து, அவற்றிற்குத் தனித் தனியே கணக்கெடுத்து இனச் சேர்க்கை செய்வதற்குரிய ஆராய்ச்சிச் செலவுகளும் அதிகம். ஆராய்ச்சியின் முழுப் பலன் கிடைக்கும் போது ஆராய்ச்சிக்கெனச் செலவிடப்படும் தொகையானது வீண் போகாது என்பதை யாவரும் அறிவர்.

இரண்டு இனங்களையோ, அல்லது இரண்டு வம்சங்களையோ, நாம் வம்ச விருத்திக்காகக் கலப்புச் செய்யும்போது அவற்றின் சந்ததிகள் (Hybrids) தம் தாய் தந்தை இனம் அல்லது வம்சங்களைவிட அதிக வீரியம் உள்ளவையாக அமைகின்றன என்பது பாரம்பரிய இயலின் (Law of Genetics) ஒரு பொதுவான விதி. ஆயினும் எல்லாக் கலப்பின அல்லது கலப்பு வம்ச சந்ததிகளும் இந்த வீரியத்தைப் பெற்றிருப்பதில்லை. சில இனங்கள் அல்லது சில வம்சங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து அதிக வீரியத்தை அளிக்கும் இயல்பைப் பெற்றிருக்கின்றன. அவை எவை? எந்த இரண்டு இனங்களை, அல்லது எந்த இரண்டு வம்சங்களைச் சேர்ந்த கோழிகளைக் கலப்புச் செய்யும்போது, அதிக வீரியத்தைக் கொடுக்கின்றன என்பதைப் பரிசோதனை மூலமே நாம் • கண்டறிய முடியும். இப் பரிசோதனை மிகவும் கடினமானது; அதிகச் செலவுள்ளது; நாள் பிடிக்கக் கூடியது; முடிவில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வெற்றி கிடைக்கலாம்; அல்லது கிடைக்காமலும் இருக்கலாம்! வெற்றி கிடைத்தால் அதையே ஆராய்ச்சியின் பலன் என்று கூறுகிறோம்!






உதாரணமாக அதிக முட்டையிடக்கூடிய 5 வம்சங்களை நாம் உற்பத்தி செய்திருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். அவற்றின் ஆண்டுச் சராசரி முட்டை எண்ணிக்கை கீழ்க்கண்ட பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது.

**5 வம்சங்களின் (Strains) உற்பத்தித் திறன்**

| வம்சம் | ஆண்டு உற்பத்தித் திறன் (ஆண்டு சராசரி முட்டை உற்பத்தி) | மதிப்பு |
|---|---|---|
| 1 | 200 | 3 |
| 2 | 205 | 2 |
| 3 | 210 | 1 |
| 4 | 180 | 4 |
| 5 | 170 | 5 |

வம்சக் கலப்பு ஆராய்ச்சியில் ஒவ்வொரு வம்சத்தையும் மற்றொரு வம்சத்துடன் சேர்க்கை செய்து, அக் கலப்பு வம்சத்தின் முட்டைத் திறனை ஆராய்கின்றார்கள். கலப்பு வம்சத்தின் முட்டைத் திறன் கீழ்க்கண்ட பட்டியலில் தரப்பட்டுள்ளது.

**கலப்பினம் அல்லது கலப்பு வம்சக் கோழிகளின் சராசரி உற்பத்தித் திறன்**

**ஓர் ஆண்டில் அளிக்கும் முட்டையின் எண்ணிக்கை**

| இனம் அல்லது வம்சம் | | பெட்டைகள் 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|
| சேவல்கள் | 1 | | 200 | 210 | 205 | 180 |
| | 2 | | | 200 | 250 | 190 |
| | 3 | | | | 180 | 225 |
| | 4 | | | | | 200 |

மேற்கண்ட ஆராய்ச்சியின் முடிவைக் கூர்ந்து நோக்கும்போது வம்சம் 2-யும் 4-யும் கலப்புச் செய்யும்போது உண்டாகும் சந்ததிகளின் (Hybrids) உற்பத்தித் திறன் 250 முட்டைகள் என்றும் அவை மற்ற எந்த வம்சத்தையும்விட அதிகமாக இடுகின்றன என்றும் அறிகின்றோம். இது, வம்சம் 2-க்கும் வம்சம் 4-க்கும் உள்ள இயற்கையில் அமைந்த சிறப்பு இயல்பாகும். திரும்பத் திரும்ப இந்தச் சோதனைகளைச் செய்வதன் மூலம் இதே முடிவுகளே கிடைக்கின்றன. ஆகவே வம்சம் 2-யும், வம்சம் 4-யும் வம்ச வளர்ச்சி செய்து அதிக அளவில் உற்பத்தி செய்கின்றார்கள். இவற்றின் கலப்பினால் பிறக்கும் குஞ்சுகளை விற்பனைக்குக் கொடுத்து ஆராய்ச்சியின் பலனை உற்பத்தியாளர்கள் பெறுகின்றனர். மேற்படி தனி வம்சங்களை (2-யும் 4-யும்) ரகசியமாகவே இவர்கள் வைத்திருக்கின்றார்கள். அப்போது தான் அவர்கள் இந்த ஆராய்ச்சியின் முழு இலாபத்தையும் பெறமுடியும். இதே போல ஓரினக் கலப்பு, ஈரினக் கலப்பு, மூவினக் கலப்பு, நாலினக் கலப்புகளும் செய்ய முடியும். அவற்றில் பலன் இருக்கின்றதா, இல்லையா, என்பது புதையல் ஆராய்ச்சியைப் போன்றதாகும்.

இக்கலப்பின வீரியக் கோழிகள் வம்ச விருத்திக்கு ஏற்றவையல்ல! அவற்றின் குஞ்சுகள் தம் தாயைப் போல் இருப்பதில்லை. இதுவும் இயற்கையின் நியதியே! எனவே, கலப்பின வீரியக் கோழிகள் முட்டை உற்பத்திக்கு மட்டுமே சிறந்தவை.

நம்முடைய நாட்டில் தனி வம்சங்களை இதுவரை யாரும் பெரும் அளவில் உற்பத்தி செய்யவில்லை. இன்னும் ஆராய்ச்சி அளவிலேயே இங்கும் அங்குமாக ஓரளவுக்கு உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றனர். ஆராய்ச்சிக்கான நிதியும், இதர வசதிகளும் அதிக அளவில் கிடைக்காதவரையில் இது நம் நாட்டிற்கு ஒரு குறை எனலாம். குறைபாடுகள் விரைவில் நீக்கப்படுவதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் மேற்சொன்ன முறைகளின் மூலம் ஒன்றிரண்டு வம்சங்கள் உற்பத்தியாகி உள்ளன. 'மேயர்' என்ற இனம் ஒன்று இம்முயற்சியில் காணுவதற்குரிய நிலையை அடைந்துள்ளது. 1962 முதல் 72 வரை மரபியல் ஆராய்ச்சி மூலம் (Genetics and Breeding) தேர்வினச் சேர்க்கை செய்து, இந்த ''மேயர்'' வம்சம் உற்பத்தி செய்யப்பட்டு, அவை தற்போது சோதனையாகச் சில பண்ணையாளர்களிடம் வளர்ந்து வருகின்றன. கீழ்க்கண்ட சிறப்பு இயல்புகளை ''மேயர்'' இனம்பெற்றுள்ளது.

'மேயர்' இனத்தின் சிறப்பியல்புகள்

| | | |
|---|---|---|
| 1. | முதல் முட்டையிடும் வயது (சராசரி).. | 155 நாட்கள் |
| 2. | 30 விழுக்காடு (30%) முட்டைகள் கிடைக்கும்போது கோழிகளின் வயது | 174 நாட்கள் |
| 3. | 50 விழுக்காடு (50%) முட்டைகள் கிடைக்கும்போது கோழிகளின் வயது | 183 நாட்கள் |
| 4. | 36 வார வயதிற்குள் இடும் முட்டையின் சராசரி எண்ணிக்கை .. | 69 முட்டைகள் |
| 5. | 72 வார வயதிற்குள் இடும் முட்டைகளின் சராசரி எண்ணிக்கை | 200-க்கு மேல் |
| 6. | குஞ்சுகளின் மரண விழுக்காடு (0 முதல் 20 வாரம் வரை) .. | 12% |
| 7. | 20 வாரத்திலிருந்து 72 வாரம் முடிய உள்ள காலத்தில் மரண விழுக்காடு.. | 11.9% |

மேற்கூறிய தகவல்கள் இக்கோழிகளை வளர்க்கும் பண்ணையாளரிடம் இருந்தும் ஆராய்ச்சி நிலையத்திலிருந்தும் சேகரிக்கப்பட்டனவாகும். இந்த 'மேயர்' வம்சம் பல ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் வெப்ப தட்ப நிலைகளுக்குத் தகுந்த வகையில் பக்குவப்படுத்தப்பட்டுள்ளது.

ஒருநாள் வயதுள்ள பெட்டைக் குஞ்சின் விலை தற்போது அரசுப் பண்ணையில் இரண்டரை ரூபாய் ஆகும். இது தனிவம்சம் ஆதலால் இதற்குப் பிறக்கும் சந்ததிகளும் இதே மாதிரி வீரியம் உள்ளவையாக இருக்கும். இதை வம்ச விருத்தி செய்வது மிகவும் சுலபம்.

இவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்து மக்களுக்குக் கிடைக்கும் வகையில் வசதி செய்து கொடுப்பதற்கு தமிழக அரசு ஆவன செய்து கொண்டு இருக்கின்றது. மேலும் இதே போலப் பல உயர் ரக வம்சங்களை ஏற்படுத்திக் கலப்பு வீரியக் கோழிகளை உற்பத்தி செய்வதற்கும் திட்டங்கள் உருவாகிக்கொண்டிருக்கின்றன.








# கால்

கால்நான்தான்; காலென்றால் நாற்றங் காலா?
'கலகல'நீர் வாய்க்காலா? படியின் அண்ணன்
போல்இருக்கும் மரக்காலா? விழாநடத்தப்
போடுகின்றீரே! அந்தப் பந்தல் காலா?
நாலின்மேல் கோடிட்டே ஒன்று போட்டு
நாலிலொரு பாகமென்பீர்! அந்தக் காலா?
நூலினிலே 'கா'போன்ற நெட்டெழுத்தை
நோக்குங்கால் கால்காண்பீர்! அந்தக் காலா?

மணவீட்டின் அரசாணைக் காலா? அல்ல!
மண்ணுலகில் உமைநடக்க வைக்கும் கால்நான்!
உணவாக்கிக் கொள்ளும்மலைப் பாம்பு காற்றை!
உலகத்தில் அக்காற்றின் நிலைமை என்ன?
தினம்அதற்குப் பெரும்அலைச்சல்; அதைக்'கால்' என்று
தேன்தமிழில் குறிப்பிடுவர்! நானும் கால்தான்!
எனைஇதனால் நீர்அலைய வைத்திடாதீர்!
எங்கிடுவேனா?இல்லை! வீங்குவேன்-நான்!



பாம்புக்குக் கால்இல்லை; ஆனால் நீங்கள்
பாம்பின்கால் பாம்பறியும் என்று சொல்வீர்!
ஆம்! வீட்டில் கோழிக்கால் ஆட்டுக் காலால்
ஆன'ரசம்' எனச்சொன்னால் 'ஆகா!' என்பீர்!
நாம்எண்ண முடியாத வண்ணம் கால்கள்
நகரும்மரவட்டைக்கு! தாமரைக்கோ
காம்புக்கால்! அதுஒற்றைக் காலில் நிற்கும்!
கருவண்டிற்கோஎன்றும் கால்கள் ஆறு!

நாற்காலி முக்காலி தெரிந்திருக்கும்
நல்லோரே! காலிருக்கும் காரணத்தால்
மேற்போக்காய் எவனும்உமைக் காலி என்றால்
மேல்மண்டை அவனுக்குக் காலி என்பீர்!
போர்ப்போக்கே தன்பொழுது போக்காய்க் கொண்ட
புகழ்ச்சோழன் கல்லணையைக் கட்டி வைத்தான்!
பேர்கேட்டால் கரிகாலன் என்பீர்! இன்றும்
பெரும்யானைக் கால்காரன் 'கரிகாலன்தான்!'











சிவன்காலோ உதைத்ததுவாம் எமனை! தூணைச்
சினத்துடனே உதைத்ததுவாம் இரணியன்கால்!
'கவனிப்பேன்: நீர்என்றால் உதைக்கின்றீர்கள்
காற்பந்தை; சிலசமயம் மனைவி தன்னை!
தவறிப்போய் எவனையும்நான் மிதித்து விட்டால்
தாடையிலே ஏன்தட்டிக் கொள்ளுகின்றீர்?
அவன்அறையும் முன்னாலே தட்டிக் கொண்டால்
அறையாமல் விட்டிடுவான் என்பதாலா?

பெண்பெருமை திரு. வி. க. எழுதி வைத்தார்;
பிறர்முன்னால் நீர்பெருமை அடித்துக் கொள்வீர்!
என்பெருமை தெரியாது சண்டை வந்தால்
'ஏய்!காலை ஒடித்திடுவேன்!' என்கின்றீர்கள்!
பெண்தலைமேல் பேன்நடக்கும், சிக்கிக் கொண்ட
பின்மரண தண்டனையை அனுபவிக்கும்!
மண்இதனை நீர்பூமா தேவி என்பீர்!
மரணம்வரை இவள்மேலே நான்நடப்பேன்!

தையலதும் தறிநெசவும் நடக்கும் என்றால்!
'தை!தக்கா! தை! என்றே நடனமாடும்
தையலுக்கும் என்னால்தான் பணம்கிடைக்கும்!
தவழ்குழந்தை உதைக்கும்கால் பெறுமே முத்தம்!
வையாதீர் உண்மையினைச் சொன்னேன் என்று;
வாழ்வில்உம் பையனைநீர் உயர்த்த யாரோ
"ஐயாவின் காலினிலே விழு!" என்கின்றீர்!
"அவர்தலையில் விழு! என்று சொல்ல மாட்டீர்!"

முள்ளையெல்லாம் பேனாவின் முள்ளைப் போல
மூடியிட்டு மூடுங்கள்! மிதியடிக்குச்
சொல்லுங்கள் எனைக்கடிக்க வேண்டாம் என்று!
சிறுபிள்ளையாய்நீங்கள் இருந்த நாளில்
தள்ளாடிக் கொண்டிருந்தேன்; எனக்கு வாய்த்த
தக்ககுரு நாதர்நடை வண்டி என்பேன்!
இல்லைநான் என்றால்நீர் நொண்டி என்பேன்!
இன்னுடலின் சுமைதாங்கி நானே என்பேன்!

புலவர் பொன்னிவளவன்

# விளக்கும் விரிகுறளும்

சு. செல்லப்பன்

பொருள்களை விளங்கச் செய்வது விளக்கு, அது இருளில் ஒளியைத் தந்து இன்பமூட்டுகிறது. பண்டை நாட்களில் இருளுக்கு அஞ்சிய மனிதர்கள், அதனையோட்டிய ஞாயிறு, திங்கள், தீ ஆகியவற்றைத் தெய்வமெனக் கொண்டனர். காலப்போக்கில் ஞாயிறு, திங்களாகிய இயற்கை ஒளியேயன்றிச் செயற்கை ஒளியையேற்ற விளக்கினைக் கண்டது மனித அறிவு. மனித வாழ்வில் விளக்கு இன்றியமையாப் பொருள். மாலை மறைந்து இருள் சூழுமுன் விளக்கை ஏற்றி ஒளியை உலாவ விடுகின்றனர் இல்ல நங்கையர். மங்கையர் விளக்கேற்றும் காட்சியை இலக்கியங்கள் நயம்படப் பேசும்.

வெள்ளியிலாகிய வளை இறுகின முன்கையைக் கொண்ட மங்கை; அவள் மூங்கில் போலும் தோளினையும், மெத்தென்ற சாயலினையும், முத்தையொத்த பல்லினையும் உடையவள்; காதணிவரை நீண்டுள்ளதும் குளிர்ச்சி பொருந்தியதுமான கயற்கண்ணாள், மழைக்காலம்; மாலைப் பொழுதினை அறிய இயலவில்லை! வீட்டில் பூந்தட்டில் பசிய காம்பையுடைய பிச்சிமலர் அரும்புகள் இட்டு வைக்கப்பட்டுள்ளன; அவை பொழுது மறையும் வேளையில் மலரும் இயல்பு கொண்டவை; மாலை தோன்றியதும் அவ்வரும்புகள் இதழ் விரித்தமையால் இல்லமெங்கும் மணம் சூழ்கிறது; அதுகொண்டு மங்கை மாலைப் பொழுதினை அறிகின்றாள்; உடனே இரும்பாற் செய்த தகளியில் நெய்தோய்ந்த திரியைக் கொளுத்தி நெல்லையும் மலரையும் சிதறி இல்லுறை தெய்வத்தை வணங்கி நிற்கின்றாள்.



" வெள்ளி வள்ளி வீங்கிறைப் பனைத்தோள்
மெத்தென் சாயல் முத்துறழ் முறுவல்
பூங்குழைக் கமர்ந்த ஏந்தெழில் மழைக்கண்
மடவரல் மகளிர் பிடகைப் பெய்த
செவ்வி யரும்பின் பைங்காற் பித்திகத்து
அவ்விதழ் அவிழ்பதம் கமழப் பொழுதறிந்து
இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரி கொளீஇ
நெல்லும் மலருந் தூஉய்க்கை தொழுது "

விளக்கேற்றி நிற்கும் மங்கையரை ஓவியப்படுத்தும் இவ்வரிகள் நெடுநல்வாடையில் காணப்படுகின்றன.

இருளை ஓட்டி அச்சத்தை நீக்குவதால் விளக்கு மங்கலப் பொருளாகக் கருதப்படுகின்றது. நம் நாட்டில் மங்கல நிகழ்ச்சிகள் அனைத்திலும் விளக்குகள் ஏற்றி வைக்கப்படுகின்றன. மேனாட்டிலும் மங்கல நிகழ்ச்சிகளில் மெழுகுவர்த்திகளை ஏற்றி ஒளியூட்டுகின்றனர். நன்மை செயும் எதுவும், எவரும் விளக்கோடொத்துப் பேசப்படுவர். குடும்பத்தைத் திறம்பட நடத்தும் தலைவி 'குடும்ப விளக்கு' எனப் பாராட்டப்படுகின்றாள். நைந்து கிடந்த மக்கட் சமுதாயத்தைத் தம் அரிய உழைப்பினால் முன்னுக்குக்கொண்டு வருபவர்கள் நாட்டில் விளக்கேற்றி வைத்த நன் மக்களாகப் போற்றப்படுகின்றனர். மக்கள் மனத்தில் தோன்றும் அறியாமை, ஆணவம் போன்ற மாசுகள் இருள் என்றும், அவற்றை ஓட்டுபவை விளக்கு என்றும் உருவகிக்கப்படும் வழக்கம் இலக்கிய மரபாக இருந்து வருகிறது.

அகல், அதில் பெய்யப்படும் எண்ணெய், எண்ணெய்யில் நனைந்து கிடக்கும் திரி, திரியின் நுனியில் சுடர், அகலினைத் தாங்கும் தண்டு—இவற்றின் சேர்க்கையே விளக்கு. திருக்குறளில் விளக்குறுப்புகள் அனைத்தையும் காணுகின்றார் ஒரு புலவர். அறத்துப்பாலாகிய அகலில் பொருட்பாலாகிய திரி கிடத்தப்பட்டுள்ளது; அதன்மீது இன்பத்துப்பால் என்ற நெய் வளர்க்கப்பட்டுள்ளது. திரியின் நுனியில் வள்ளுவனாரின் செம்மைநலம் சான்ற சொல் சுடராக எரிகிறது. இந்த அகல் விளக்கை வெண்பாவாகிய தண்டு தாங்குகின்றது. இவ்வாறாகக் குறள் விளக்கு, வள்ளுவனாரால் ஏற்றப்பட்டுள்ளது. மற்ற விளக்குகளுக்கும், குறள் விளக்குக்கும் ஒரு பெரிய வேறுபாடுண்டு. பிற விளக்குகள் புற இருளை—உலக இருளை ஓட்டுவன. குறள் விளக்கோ உள்ளத்தில் படிந்துள்ள இருளை, மனமாசை அகற்றுகின்றது.

அறம்தகளி, ஆன்ற பொருள், திரி, இன்பு
சிறந்தநெய், செஞ்சொல், தீ, தண்டு—குறும்பாவா!
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

இவ்வாறு திருக்குறளை உள்ளிருள் நீக்கும் விளக்காக உருவகிக்கின்றவர் நப்பாலத்தனார் என்ற பெரும் புலவராவார்.

அழுக்காறு, அவா, வெகுளி ஆகிய மாசுகள் மனத்தை இருளடையச் செய்கின்றன. அம்மாசுகளற்ற ஒளி மனம், மக்கட்குத் தேவை. மனத்தே மாசுகொண்டு புறத்தே தூய்மையாக இருத்தல் பொருளற்றது. எது அறம்? என்ற வினாவிற்குத் திருவள்ளுவர்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்"

என்கிறார். ஒருவன் தன் மனத்தில் குற்றமற்றவனாக இருக்க வேண்டும். அறம் அவ்வளவே! புறத்தூய்மை கொண்டு அகத்தூய்மையின்றியிருத்தல் பொற்கலத்தில் நஞ்சைப் பெய்து வைத்திருப்பதற்கொப்பாகும். மனமாசினை அகற்ற வேண்டும் என்று சொல்வதோ எளிது; செயலிற் காட்டுவதோ அரிது.

"துணி வெளுக்க மண்ணுண்டு
தோல் வெளுக்கச் சாம்பருண்டு
மணி வெளுக்கச் சாணையுண்டு"



என்று கூறிய பாரதி, "மனம் வெளுக்க மார்க்கமில்லையே" என்று ஏங்கித் தவிக்கின்றார். திருவள்ளுவரோ, மனம் வெளுக்க வழி சொல்கிறார். வாய்மையே அவ்வழி. "புறத்தூய்மை நீரினால் ஏற்படும். அகத்தூய்மையோ வாய்மையால் உண்டாகும்" என்பது அவர் பொன்மொழி. ஒருவன் தன் நெஞ்சம் அறிய ஒரு பொய்யைச் சொல்லக் கூடாது. அவ்வாறு சொன்னால் அவன் நெஞ்சே அவனை வருத்தும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார். பொய்மை பாவமெல்லாம் விளைகின்ற பூமி. "தான் கெட்டுப் போனாலும் பெரியோர்களுக்குக் கெடுதி உண்டாக வேண்டும் என்று நினையற்க; தன் உடம்பிலுள்ள சதை முழுவதும் வற்றி உடல் வெறும் எலும்புக் கூடானாலும் உண்ணத்தகாத பகைவர்கள் கையில் உள்ள உணவைப் பெற்று உண்ணற்க! வான் சூழ்ந்துள்ள இவ்வுலகம் முழுவதும் கிடைப்பதாக இருந்தாலும் பொய்யோடு கலந்த சொற்களைப் பேசற்க" என்கிறது நாலடியார். பொய் அறவே அகன்று வாய்மையே எங்கும் நிலவ வேண்டும். "வாய்மையின் வழிநின்று மன்னுயிர் ஓம்பும் அருளாளர்க்கு எய்தாத அரும் பொருள் எதுவும் இல்லை" என்பார் இளங்கோவடிகள்.

இத்தகைய சிறந்த வாய்மையை வள்ளுவர் விளக்கு என்கிறார். புறத்திருளை ஓட்டுகின்ற உலக விளக்குகளெல்லாம் விளக்குகள் ஆகா. சான்றோர்க்கு மனத்திருள் நீக்கும் பொய்யாமையாகிய விளக்கே விளக்காகும்.

" எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு." (299)

இக்குறளுக்கு உரை எழுதும் பரிமேலழகர் "உலகத்தார் விளக்காவன ஞாயிறு, திங்கள், தீ என்பன. இவற்றிற்குப் போகாத அறியாமையாகிய இருளை வாய்மை ஓட்டுதலின் அதனைப் பொய்யா விளக்கு என்றார் வள்ளுவர்" எனக் குறிப்பிட்டுப் பொய்யா விளக்கின் பெருமையைப் புலப்படுத்துகின்றார். அகத்தூய்மையே-அக ஒளியே வேண்டப்படுவதாதலின் அடியவர்கள்கூட இறைவனை உள விளக்காகக் காண்கின்றனர்.

" அருள்ஒளி விளங்கிட ஆணவம் எனுமோர்
இருளற என்னுளத் தேற்றிய விளக்கே !
துன்புறு தத்துவத் துரிசெலாம் நீக்கிநல்
இன்புற என்னுளத் தேற்றிய விளக்கே ! "

என்கிறார் இராமலிங்கஅடிகள். குமரகுருபர அடிகள் மீனாட்சியம்மையை 'அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே' எனப் புகழ்ந்துரைக்கின்றார். "உண்மைக்குச் செய்யும் மிகப் பெரிய வழிபாடு யாதெனில் அதைப் பயன்படுத்துவதே ஆகும்" (The greatest homage we can pay to the truth is to use it). என்பது அறிஞர் எமர்சன் வாக்கு. இதைப் பின்பற்றி வாய்மையை நடைமுறைப்படுத்த வேண்டுவது மனித குலத்தின் தலையாய கடமையாகும்.

திருவள்ளுவர், ஒருவன் பிறந்த குடியை குன்றா விளக்கு என்று குறிப்பிடுகிறார். வாழையடி வாழையெனத் தொடர்ந்து அழிவின்றி இருத்தலான் அது என்றும் அவிதல் இல்லா நந்தா விளக்காகிறது. இந்த நந்தா விளக்கையும் அழிக்கும் வல்லமை படைத்த ஒன்று உண்டு. அதுவே சோம்பல் என்ற இருள்! விளக்கொளி பட்டவுடன் இருள்மாயும்; ஆனால் சோம்பல் என்ற இருளோ் தான் படர்வதன் மூலம் குடி என்னும் நந்தா விளக்கையே அவித்துவிடும் வல்லமையைப் பெற்றிருக்கிறது.



" குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்
மாசூர மாய்ந்து கெடும் " (601)

ஒருவன் தன் குடியாகிய மங்காத விளக்கின் மீது சோம்பல் என்ற இருளைப் படர விட்டு விடக்கூடாது. அழிக்கும் இயல்புடைய சோம்பலைத் தன்னிடம் கொண்டு நடக்கும் அறிவில்லாதவன் பிறந்த குடியானது அவனுக்கு முன்னரே அழிந்துவிடும் என்று மற்றொரு குறளிலும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். சோம்பல் மன உணர்வுகளை மரமரக்கச் செய்கின்றது. சோம்பலாளன் நடமாடும் பிணத்திற்கு ஒப்பாவான். எனவே பிறந்த குடியை மேன்மேலும் உயர்த்த வேண்டுமென்பவர் சோம்பலின் கொடுமையை நன்குணர்ந்து அதனை விலக்கி முயற்சியாளர்களாகத் திகழவேண்டும்.



பொருளின் பெருமையோ பேசும் தரமன்று! அதன் சிறப்பைப் பேசாத நூல்கள் இல்லை. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் நடுவணதாகிய பொருள் எய்த இருதலையும் உள்ள அறமும், இன்பமும் தாமே வந்தடையும் என்கிறது நாலடி.

" வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும் "

"அருளுடையாரும் மற்று அல்லாதவரும் பொருளுடையாரைப் புகழாதார் இல்லை" என்கிறது பழமொழி. வளையாபதியோ செல்வம், "குலம் தரும்; கல்வி கொணர்ந்து முடிக்கும்; அலந்த கிளைகள் அழிபசி தீர்க்கும்' எனப் பொருளின் பெருமையைப் பேசுகிறது. "கல்லானேயானாலும் கைப்பொருள் ஒன்றுண்டானால் எல்லாருஞ் சென்றங்கு எதிர்கொள்வர்"—இது பணத்தின் செல்வாக்கைப் பற்றி நல்வழி நவில்வது.

சீவகசிந்தாமணி,

" வென்றி ஆக்கலும் மேதகவு ஆக்கலும்
அன்றியும் கல்வி யோடழ காக்கலும்
குன்றி னார்களைக் குன்றென ஆக்கலும்
பொன்துஞ்சு ஆகத்தி னய்பொருள் செய்யுமே "

எனச் செப்புகின்றது. செல்வம் வெற்றியை உண்டாக்கும்; மேம்பாட்டைத் தோற்றுவிக்கும்; இவைகளேயன்றி, கல்வியையும் அழகையும் சேர்க்கும்; மெலிந்தவரையும் மலையென வலியுடையராக்கும்.

பொருள், குன்றினார்களையும் குன்றென ஆக்குமென்கிறார் திருத்தக்கதேவர். திருவள்ளுவர் இன்னும் அழகாக.

'' பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள் ''

எனப் புலப்படுத்துகின்றார். ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் பொருள் மதிப்புடையவராகச் செய்து விடுகின்றது எனின் அப்பொருளைவிடச் சிறப்புடைய பொருள் வேறென்ன இருக்கமுடியும்? பொருள் இல்லாதவர்களை அவர்களிடம் வேறு எத்தகுக சிறப்பு இருந்தாலும் எல்லாரும் இகழ்வர். எந்தவிதமான நன்மை இல்லாவிட்டாலும் செல்வரை எல்லாருஞ் சிறப்புச் செய்வர். இதுவே உலக இயற்கை.

இத்தகைய சிறப்புவாய்ந்த செல்வத்தைத் திருவள்ளுவர் விளக்காக உருவகிக்கின்றார். மற்ற விளக்குகளுக்கும் இந்தப் பொருள் விளக்குக்கும் வேறுபாடு உண்டு. சாதாரண விளக்கினை எடுத்துக்கொண்டு போனால் அது தான் உள்ள இடத்தில் மட்டுமே இருளை யொழிக்கும். பொருள் விளக்கோ அதனை வைத்துக்கொண்டிருப்பவன் நினைக்கின்ற இடத்திற்கெல்லாம் சென்று அங்குள்ள பகையிருளை ஓட்டுகின்ற அரிய விளக்காகும்.

'' பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று ''

(753)



''ஈட்டி எட்டியவரை பாயும்; பணம் பாதாளம்வரை பாயும்'' என்பது பழமொழியல்லவா?



பகைவர் செருக்கினை அறுக்கப் பணத்தை விடக் கூர்மையான வாள் இல்லை என்பதால் அதனை ஒருவன் தேடிச் சேர்க்க வேண்டும் எனக் கட்டளையிடுகிறார் திருவள்ளுவர். இவ்வாறு பொருளின் பெருமையைக் கூறுவதால் அதனை எந்த வழியிலாவது சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் வந்துவிடக்கூடாது என்பதால் பொருளை அறவழியில் ஈட்ட வேண்டும் என்ற அறிவுரையையும் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

''ஒருமனதாயினர் தோழி, இந்தத் திருமண மக்கள் என்றும் வாழி'' என உற்றோரும் மற்றோரும் வாழ்த்தத் தலைவனும் தலைவியும் இல்லறம் புகுகின்றனர்; கருத்தொருமித்து ஆதரவுபட்ட இன்ப வாழ்க்கையில் ஒழுகி வருகின்றனர். பொருளீட்டத் தலைவன் வெளியூர் செல்ல வேண்டியவனாகின்றான். தன் கருத்தைக் குறிப்பால் தலைவிபால் உணர்த்துகிறான். இதைக் கேட்ட தலைவியோ, வளைதளர, வாய் துடிப்ப, கண்கள் நீருகுக்க, ''கண்ணோட்டமின்றிப் பொருளை விரும்பி அகல்விரேல் அகல்க. அதனால் ஒன்றும் கெட்டுவிடாது'' என அழுது அரற்றுகிறாள். தலைவன் தான் பொருளீட்டப் பிரிய வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்தி, ''கார்ப்பருவத்தில் கட்டாயம் வந்துவிடுவேன், அதுவரை ஆற்றியிருத்தலே முறை'' என்று அவள் குழல் திருத்தியும் கன்னம் வருடியும் வேண்டி நிற்கிறான். அவளோ ''பிரிந்து செல்லாத நிலைமையிருந்தால் என்னிடம் சொல்லுங்கள்! பிரிந்து சென்றால் 'வந்தேன்' என்ற சொல்லை அப்போது வாழ்ந்திருப்பவரிடம் சொல்லுங்கள்'' எனப் பொருமுகின்றாள். பின்னர் ஒருவாறு தேற்றித் தலைவன் பிரிகின்றான். பிரிவினால் தலைவியின் மேனியில் பசலை படர்கிறது. காதலர் பிரிந்ததும்,





உடனே பசலை படரும் தன்மையைத் தன் வாழ்க்கை நிகழ்ச்சியை உவமையாக்கித் தலைவி ஒருத்தி கூறுவதாகக் குறுந்தொகையில் பரணர் ஒரு பாடலைப் பாடியுள்ளார். தான் நாள்தோறும் நீர் மொண்டு வரும் கேணியில் ஒருவகைப் பச்சைப் பாசி படர்ந்திருப்பதைத் தலைவி காண்கிறாள். நீர் முகக்கப் பாத்திரத்தை உள்ளே அழுத்தும்போது பாசி அகல்கிறது. பாத்திரத்தை எடுத்த மறுகணமே பாசி மீண்டும் படர்ந்து நீரை மறைக்கிறது. அந்நீர்ப்பாசியைப் போன்றே பசலையும் இருப்பதைத் தலைவி உணர்கிறாள். தலைவன் தழுவுங்கால் விலகியும் அவன் பிரியுங்கால் பரவியும் நிற்கிறது.

'' ஊருண் கேணி உண்துறைத் தொக்க
பாசி யற்றே பசலை, காதலர்
தொடுவுழித் தொடுவுழி நீங்கி
விடுவுழி விடுவுழிப் பரத்தலானே''

(குறுந்தொகை 397)

''நோக்கவே தளிர்த்து, நோக்காது இமைப்பினும் நுணுகும் நல்லாராகிய'' மகளிரின் பிரிவாற்றாமையை இன்னும் நுணுக்கமாக விவரிக்கின்றார் திருவள்ளுவர். அவர் படைத்துக் காட்டும் இல்லத் தலைவி பசலையூர்வதற்கு விளக்கொளியை உவமையாக்குகிறாள். நீர்ப்பாசி சிறிதுசிறிதாக அகல்வதையும் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக வந்து மூடுவதையும் நாம் கண்ணால் காண முடியும். ஆனால் இருளில் ஒளி பரவுவதையும், ஒளி நீங்கியதும் இருள் படர்வதையும் நாம் பார்க்க முடிவதில்லை. கண்ணால் பார்த்தறிய முடியாத அவ்வளவு விரைவில் அவை நடக்கின்றன. வள்ளுவரின் இல்லத் தலைவி, விளக்கினுடைய மறைவினால் இருள் வந்து மூடுகின்ற விரைவே போல், தலைவன் தழுவுதலைத் தவி..த்ததும் பசலை வந்து தன்மேல் ஊர்ந்து விடு..நாகக் குறிப்பிடுகின்றாள்.

''விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு'' (1186)

''தலைவனைத் தழுவிக் கிடந்தேன். அப்போதெல்லாம் இப்பசலை எங்கு மறைந்திருந்ததோ தெரியவில்லை. அவனைத் தழுவுதலினின்றும் சிறிது அகன்றேன். அவ்வளவுதான்! பசலைநிறம் உடனே வந்து பரவிவிட்டது'' என்று பசலையால் வரும் பருவரலை மேலும் விவரிப்பாள். தலைவன் விரைவில் திரும்புவானாக ! அவள் பசலை நிறமும் விளக்கொளி கண்ட இருள்போல் ஓடுவதாகுக !

வாய்மையே பேசவேண்டும்; சோம்பல் கூடாது; பொருளைச் சேர்க்க வேண்டும்; பிரிவற்ற, மகிழ்ச்சி பொங்கும் இல்வாழ்வு அமைதல் வேண்டும் என்பன திருக்குறளில் விளக்கு பரப்பும் ஒளியில் நாம் காணும் பொருள்களாகும்.



## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

19/20, லிங்கி செட்டி தெரு, தபால் பெட்டி எண். 226, சென்னை-600001.

தந்தி: "அப்பாங்க்" தொலைபேசி எண்: 20367, 28068

*எங்கள் வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள் நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயத்திற்கும்; விவசாயத் தொழிலுக்கும் உதவி செய்யும்.*

**வட்டி விகிதங்கள்**

(வருடத்திற்கு %)

| | |
|---|---|
| நடப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | வட்டி இல்லை. |
| சேமிப்பு கணக்கு ... ... ... ... ... ... ... | 4·00 |

(குறைந்த அளவு மாத நிலுவையின் பேரில் வட்டி கணக்கிடப்படுகிறது).

**காலாந்திர கணக்கு**:—ரூ. 1,000/-ம் அதற்கு மேலும்;

| | |
|---|---|
| 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை ... ... ... ... | 2·75 |
| 45 நாட்களிலிருந்து 90 நாட்கள் வரை ... ... ... ... | 3·25 |

**நிரந்தர கணக்கு**:—ரூ. 100/-ம் அதற்கு மேலும்:

| | |
|---|---|
| 91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 4·75 |
| 6 மாதங்களிலிருந்து 12 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 5·25 |
| 12 மாதங்களிலிருந்து 24 மாதங்களுக்குக் குறைவாக ... ... | 6.00 |
| 24 மாதங்களிலிருந்து 60 மாதங்கள் முடிய ... ... ... | 7·00 |
| 60 மாதங்களுக்கு மேல் ... ... ... ... ... ... | 7·25 |

ஓராண்டுக் காலத்திற்கும் அதற்கு மேலும் ரூ. 1,000/-க்கும் அதிகமாக உள்ள முதலீடுகளுக்கு மாதாந்திர வட்டி அளிக்கப்படுகிறது.

*மத, தர்ம மற்றும் கல்வி நிலையங்களின் முதலீடுகளுக்கு மேல் குறிப்பிட்டதைவிட ½% கூடுதல் வட்டி கொடுக்கப்படும்.

**தொடர் கணக்கு**: தவணைகளுக்குப் பெறும் மொத்தப் பணம்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாதத் தவணை ரூ. 5-ம் | 12 | 24 | 36 | 48 | 60 | 72 | 84 |
| அதன் மடங்குகளும் ரூ. | 62 | 128/50 | 201 | 278 | 362/50 | 452 | 548/50 |

குடவாசல் சி. கிருஷ்ணமூர்த்தி,
துணைத் தலைவர்.




# பார்த்தோம்! படித்தோம்!

'இகபனு' என்று எங்கேயோ கேட்டதாக எனக்கு நினைவு உண்டு. 'தமிழரசு' 16-10-73 இதழைப் பார்த்த பிறகுதான், ஜப்பான் நாட்டில் மலர்களை அடுக்கி வைக்கும் கலையைத்தான் 'இகபனு' என்று கூறுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்!

மேகலா, போடிநாயக்கனூர்.

மக்கள் தொடர்புத் திட்டம் என்ற கட்டுரையைப் படித்தேன். தமிழக அரசு உண்மையாகவே மக்கள் நலம் நாடும் அரசு என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்கிறது கட்டுரை....! தமிழக அரசின் திட்டம் அனைத்தும் மக்களுக்காகவே அமைந்துவருகின்றன என்பதற்கு இது ஒரு சிறந்த சான்று!

எஸ். முருகன், கோவில்பட்டி.

அப்பப்பா! புள்ளி விவரம் என்றால் என் அண்ணன் காத தூரம் ஓடுவார். 'தமிழரசு' இதழில் வெளி வந்த 'புள்ளியியலின் சிறப்பு' என்ற கட்டுரையைப் படித்து விட்டு மிகவும் பாராட்டிவிட்டார் போங்கள்!

அ. கன்னிகா, செய்யாறு.

'உலகில் இரண்டு கிளிகள்' தொடர் கதை சுவையாகவே வந்து கொண்டிருக்கிறது. ஆனால் எனக்கு ஒரு சந்தேகம். டாக்டர் நர்மதா—வக்கீல் மணிவாசகன் இருவருக்கும் மகனாகப் பிறந்த பாபு அடிக்கடி டிரங் கால் செய்கிறானே! அவன் ட்ரங் கால் சார்ஜ் கொடுப்பதில்லையோ?

கே. நஞ்சப்பன், ஊட்டி.

நஞ்செய், புஞ்செய் நிறைந்த எங்கள் தஞ்சை மாவட்டத்தில் தாளடி மகசூல் பெருகுவதற்கு அரிய வழிவகைகளைத் தெரிவித்திருக்கிறீர்கள். நன்றி.

க. முத்துக்குமார். பேராவூரணி.

மைய அரசு கொண்டிருக்கும் கடன் கொள்கை மாற்றப்பட வேண்டும்—நல்லவை செய்யப்பட வேண்டும்—மாநிலங்களும் கடன் வசூலிக்க அனுமதிக்கப்பட வேண்டும்—என்று தமிழக முதல்வர் கருதுவது நியாயமான கருத்து—மெய்யான வாசகம்! அனைத்திந்தியப் பொருளாதார மாநாட்டில் ஆணித் தரமாக இதனைத் தெரிவித்த முதல்வர் பாராட்டுக்குரியவர்.

தா. சண்முகநாதன், திருச்சி—4.

ஆட்டோ-ரிக்ஷா டிரைவர்கள் கூட்டுறவுச் சங்கம் எவ்வாறு இயங்கி வருகிறது என்பதை எளிய தமிழில் தெரிவித்திருக்கிறீர்கள்.....முதலில் ஏற்றுக் கொள்ளுங்கள் எனது பாராட்டை!

ஏ. செல்லையா, சென்னை—15.

பக்கிங்காம் கால்வாய் என்றால் நான் சாதாரணமாக நினைத்துக் கொண்டிருந்தேன்! அடேயப்பா! எவ்வளவு சிறப்புமிகு செய்திகளை அந்தக் கால்வாய் தந்திருக்கிறது?

கே. இராமநாதன், சென்னை-2.

அண்ணல் காந்தி அடிகள் கிராம ராஜியத்தை வலியுறுத்தினார். அவரது கருத்தைத் தமிழகஅரசு போற்றிப் புகழ்ந்து கொண்டாடி வருகிறது. இந்தக் கருத்தை, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள்.

முத்து. மாணிக்கம், நாமக்கல்.

ஐ. நா. மன்றத்தின் பணிகளைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறீர்கள். மக்கள் தொகைப் பணியிலும் ஐ. நா. மன்றம் ஈடுபட்டிருக்கிறது என்பதை இப்போதுதான் நான் தெரிந்து கொண்டேன்.

வே. இந்திராணி, மதுரை—1.



சாமி...



# வெண்பாப் போட்டி

## 65. எண்ணும் பெருமை இவை

* சாலை, அணை வாய்க்கால்; சான்ற குடியிருப்பு;
ஆலைத் தொழில்பலவும் ஆக்கினார்—கோலமிகு
கண்முகாம்; மின்வசதி; கல்வியென எம்மரசில்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

பண்ணார் தமிழோ பயிற்று மொழியாகி,
மண்ணுள் நிலைபெற்று வாழ்கிறது;—கண்ணொளியை
நண்ணரும் பெற்றார் நலங்காண்; நாமெல்லாம்
எண்ணும் பெருமை இவை.

—துறவி, அரியலூர்.

உண்ண உணவும் உடுத்திட நல்லுடையும்
கண்ணுக் கொளிவழங்கும் காரியமும்—'சென்னை'யினை
வண்ணத் தமிழ்நாடாய் மாற்றியதும் செந்தமிழர்
எண்ணும் பெருமை இவை.

—சு. தங்கப்பன், சின்கோனா.

வீட்டுமனை ஈதல், விளைநிலம் வித்திதல்
நாட்டின் தொழில்வளர்ச்சி நன்றுதல்,—நாட்டமுடன்
கண்ணொளி நல்கல், கருத்தில் இருத்தியே
எண்ணும் பெருமை இவை.

—புலவர் இரசை அதன், தெற்குத் தெரு.

சான்றோர்கள் கூட்டுறவு, சன்மார்க்க நன்னோக்கம்,
வேண்டாத சாதிகுல வேரழுகத்—தீண்டாதார்
பெண்கொண்டு நாட்டின் பெருமைக்கு வாழ்வேன்யான்
எண்ணும் பெருமை இவை.

—சுவித. வே. கள்ளிப்பாளையம்.

சேரன்தன் தம்பி சிலம்பில் இசைத்ததமிழ்
காருலவும் வங்கக் கடலோரம்—சீருடைய
கண்ணகி தன்கதையைக் கல்லில் வடித்தனர்காண்!
எண்ணும் பெருமை இவை.

—ம. சக்குபாய், உடுமலை.

வள்ளுவரும் பாரதியும் வாழ்ந்துயர்ந்த நாடிதுகாண்
துள்ளுதமிழ் அண்ணாவும் தோன்றினார்—கள்ளமிலா
எண்ணம் இவர்கொண்டார் எம்நெஞ்சில் வாழ்கின்றார்
எண்ணும் பெருமை இவை.

—இராச. உமாமகேஸ்வரி, கணியூர்.

விழியற்றார் மீண்டும் விழிபெறலும்; வாழ
வழியற்றார் வாழ்ந்திடலும்; பாழும்—தொழுநோயர்
புண்ணற்றிப் புத்தொளியைச் சேர்ப்பதுவும்; இவ்வாட்சி
எண்ணும் பெருமை இவை.

—து. திருநாவுக்கரசு, எம். ஏ., அரியலூர்.

அண்ணா பெயரால் அழகான மேம்பாலம்!
மின்னும் அணையா விளக்கு!—அண்ணாவின்
பொன்னும் பெயராலே போக்கு வரவுவண்டி
எண்ணும் பெருமை இவை.

—இரா. வேதநாயகன், வடமாதிமங்கலம்.

தாழ்த்தப்பட் டார்க்குச் சலுகை; நிலப்பட்டா;
ஏழ்மைதொழு நோயுற்றார்க்(கு) இல்லங்கள்—வாழ்வொத்த
கண்ணொளிவ ழங்கிடுதல் கண்டோம்; தமிழர்நாம்
எண்ணும் பெருமை இவை.

—பகவதி அப்பன், சென்னை—5.

தமிழரசின் மாண்பைத் தரைபுகழப் பாரீர்!
அமிழ்தாம் உணவதிகம்!—தமிழெழிலும்!
மண்ணும் உழவர்க்கே! மாத்தொழிலு ழைப்பார்க்கே!
எண்ணும் பெருமை இவை.

—திருஞானசம்பந்தன், திருச்சி—4.

*பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
புலவர் ச. மருதமுத்து, கன்னிகா பரமேஸ்வரி உயர்நிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை.

# வெண்பாப் போட்டி

கற்காடும் முட்புதரும் கா, கழனி யாயின; 'செய்'
அற்ருரும் பெற்றிட்டார்; ஆகா! நாம்—பெற்றவளம்
மின்னும்; தொழிற்பெருக்கம்; மேலாக நாட்டுடைமை;
எண்ணும் பெருமை இவை.

—மா. சு. ஜெயராமன், ஒலைப்பாடி.

உயிர்காக்கக் காற்றுதவும்; ஊன்காக்க நீராம்;
பயிர்க்கோ கதிரொளியாம் பாராய்!—துயிலற்று
மண்ணில்நாம் வாழ்ந்திடவே மாஉதவி செய்யியற்கை;
எண்ணும் பெருமை இவை.

—இல. ஆலேயழகன், வல்லம்.

கண்ணுள் கருமணியாம் கன்னித் தமிழொன்று;
அண்ணன் வழியாம் அறிவொன்று—மண்ணுள்ளே
விண்ணுலகும் காணும் வளமொன்று; சான்ருேர்கள்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் வெ. இரா. இராசகோபாலன், ஆலங்குடி.

விசுங் குளிர்நிலவும் வெண்முகிலும் வெள்ளியுடன்
பேசுங் கவிதையெனப் பெற்றதுதான்—காசினியில்
பண்ணே டுறவாடும் பாவலர்க் கென்றென்றும்
எண்ணும் பெருமை இவை.

—வசந்தராசன், வெள்ளக்குட்டை.

உண்ணுமை, கள்ளே! உறங்காமை, தன்பணியில்!
எண்ணுமை, தீமை! இரவாமை,—எந்நிலைக்கும்!
விண்ணுயர மண்வாழ்வின் வெற்றிக்குச் சான்ருேர்கள்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் புனிதாமணுளன், ஒலைப்பாடி.

ஒப்பிலா நன்குறள் ஓதரிய பன்னூற்கள்
செப்பரிய நுண்கலைகள், சீர்வளங்கள்—செப்பமுறும்
பண்ணும் பரதமும் பார்வியக்க என்நாட்டார்
எண்ணும் பெருமை இவை.

—பி.சி. அசனல்லி, அரக்கோணம்.

கண்ணுக்குங் கன்னித் தமிழ்புரத்தல்; உண்மகிழ்ந்
துண்ணு முணவிற்ருன் தன்னிறைவு;—விண்முட்டும்
வண்ணமலே; பேருந்து நாட்டுடைமை; எஞ்ஞான்றும்
எண்ணும் பெருமை இவை.

—பிச்சையம்மாள், செந்துறை.

ஆதித்தி ராவிடனும் அர்ச்சனைகள் செய்வதற்கு
நீதிதே வன்முன்பு நிற்கின்ருய்!—சோதிமிகும்
பொன்னும் உவந்தளித்துப் பொய்ச்சாதி யென்கின்ருய்
எண்ணும் பெருமை இவை.

—மா. சே. இராசு, திருப்பூர்.

பட்டியலைச் சொல்லிடவா? பைந்தமிழில் பாடிடவா?
மட்டில்லா நம்மரசின் மாப்பெரிய—திட்டமெலாம்
செந்நெற் கழனிக்குச் சேரும் உரம்போலாம்
எண்ணும் பெருமை இவை.

—ஜெயா தங்கமுத்து, வே. கள்ளிப்பாளையம்.

இயல்பாக முல்லை சையுநிலை கண்டு
இசையோடு தேரினை ஈந்தான்—திசையெங்கும்
பண்ணுள் உறையும் பைந்தமிழ் ஈகையினை
எண்ணும் பெருமை இவை.

—பாரதி சங்குப்பிள்ளை, பவானி.

தன்னுயிர் ஈந்தேனும் தாய்நாடு காப்பதும்;
என்றும் பிறர்க்கென வாழ்வதும்;—தன்மொழியைக்
கண்ணுக யெண்ணியே காத்தலும்; பண்புடையார்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனு.

முல்லைக்குத் தேர்கொடுத்தான்! முத்துநீர்க் கங்கையின்
எல்லைவரை போய்வென்ருன்! இன்னும்கேள்,—கல்லெடுத்தான்
கண்ணகிக்கு! கைப்பற்றி னன்கடாரம்! நற்றமிழன்
எண்ணும் பெருமை இவை.

—விஞேதலீலன், இரா. வெள்ளேவாடு.

அண்ணலார் காந்தியார் அன்பு நெறித்தொண்டும்
அண்ணுவின் கொள்கை அதன்வழி—நண்ணிய
ஒண்புகழ் ஆட்சியும், இம்மண்ணில் என்றென்றும்
எண்ணும் பெருமை இவை.

—வ. சீ. கிருட்டிணமூர்த்தி, தேசிபள்ளி.

தொழுநோயர்க் கில்லம்; தொழிலில் வளர்ச்சி
பழுதில்லாப் பாமரர்க்குப் பட்டா;—உழுவாரின்
எண்ணம்போல் வாழ்வு; எழுச்சியுள்ள ஆட்சியில்நாம்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் சாமி. வரதராசன், கல்லணை.

# வெண்பாப் போட்டி

கண்ணெளி காட்டினுர்; கைவண்டி மாற்றினுர்!
புண்படு வார்க்கும் புதுவாழ்வாம்!—கண்டோம்யாம்!
எண்ணம் பெரிதாம் எழிலார் கலைஞரை,
எண்ணும் பெருமை இவை.

—புலவர் வ. சிவசங்கரன், திருக்கழுக்குன்றம்.

காவிரி ஆறும் கனிந்த தமிழ்மொழியும்
பூவிரித்துப் போற்றும் புகழ்க்குறளும்—பாவாய்கேள்!
மண்ணுலகில் என்றும் மணித்தமிழ் நாட்டினர்
எண்ணும் பெருமை இவை.

—ப. தப்புசாமி, திருச்சி—4.

அண்ணலாம் காந்தி அடைந்த 'சுதந்திரம்', சீர்
அண்ணு 'தமிழ்நா(டு)என் ருக்கியபேர்,—அண்ணன்பின்
நண்ணுங் கலைஞர் நடாத்தும் 'தமிழாட்சி'
எண்ணும் பெருமை இவை.

—புலவர். கோம்பைச் சீரான், கோம்பை.

காடுமே டெல்லாம் கதிர்விளேயும் நஞ்செயெனப்
பாடுபட்ட ஏழைமகன் பசித்துன்பம்—ஓடுதற்(கு)
உண்ணும் உணவில் புரட்சிபல செய்தோம்காண்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் வே. நடராசன், எரகுடி.

நெல்லில் புதுமை, நிகரில்லா வாரியங்கள்,
சொல்லில் பொதுவுடைமை, சோர்வின்மை—தொல்லையிலாக்
கண்சிகிச்சை, எல்லார்க்கும் கல்விநலம் நம்மரசில்
எண்ணும் பெருமை இவை.

—வ. அண்ணுமலை, ஆ. தெற்கூர்.

கண்ணும் உயர்கல்வி ஈதலும்; ஏழைதன்
கண்ணுக்கும் நல்லொளி யூட்டலும்;—தண்மதியே
எண்டிசையுந் தமிழோங்கச் செய்தலும்; யாவுமே
எண்ணும் பெருமை இவை.

—கு. இராமசாமி, அத்திபட்டி.

தொகுத்த பொருளீட்டிச் சுற்றமெலாங் கூட்டிப்
பகுத்துண வூட்டிப் பயிற்றும்—பகுத்தறிவு
கண்ணும் கருத்தும் கலந்த மணவாழ்க்கை
எண்ணும் பெருமை இவை.

—தமி, எழும்பூர்.

பாவிரியப் பாடும் பசுமைப் புரட்சிக்குக்
''காவிரி'' யில் ''கங்கை'' கலக்கவிடின்,—காவிரியும்
கண்விரிய நெல்விரியும்; காராளர் சொல்விரிய
எண்ணும் பெருமை இவை.

—கே. சுதர்சனம், ஞாயிறு கிராமம்.

''பொங்கி வரும்அருவி, போர்வீரர் வ.உ.சி.,
எங்கும் தவழ்தென்றல், தண்பொருனை,—மங்காத
பண்ணிசைத்த பாரதியார் பார்'' என்று நெல்லையுளார்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் இரா. மதனகோபால், பி.ஏ., தென்காசி

உற்பத்திச் சாதனங்கள் ஊருக்குச் சொந்தமெனில்
அற்றுவிடும் செல்வந்தர் ஆதிக்கம்—பொற்கொடியே
கண்ணெளி தந்த கலைஞரினைதைச் செய்கின்ருர்
எண்ணும் பெருமை இவை.

—கோ. கலைமணி, புதுவை—4.

அன்னைமொழி வளர்த்தோம்! அந்தை அழித்தொழிக்க
முன்னின்ற பேரை முறியடித்தோம்!—இந்நிலத்தை
வண்டமிழே ஆள வழிவகுத்தோம்! மாற்ருரும்
எண்ணும் பெருமை இவை.

—த.ச. தவசிமணி, அருப்புக்கோட்டை

கண்ணெளியும் கல்விக் கருத்தொளியும் மாநிலத்தில்
தண்ணெனவே மின்னெளியும் தான்வழங்கி—உண்மகிழ
எண்ணத் தொலையாத ஏழையர்தம் வாழ்வே நீ
எண்ணும் பெருமை இவை.

—அ. மீனுட்சி அரங்கராசன், கூத்தங்குடி.

தாயாம் தமிழ்உணர்ந்தோம், தன்மானம் காத்திட்டோம்
காயாம் மொழித்தீ கடிந்தொறுத்தோம்—மாயாத
புண்ணுடைய நெஞ்சிற் புகழ்மருந்தாய் நாளைநாம்
எண்ணும் பெருமை இவை.

—புலவர் நா. தண்டபாணி, பூங்குடி.

அன்(பு) அகிம்சை, சத்தியம், ஆழ்ந்த தமிழ்ப்பற்று,
நன்றி மறவாமை, நல்லொழுக்கம்,—தன்னுட்டை
இன்னுயிர் ஈந்தேனும் காத்திடுதல் என்றென்றும்
எண்ணும் பெருமை இவை.

—கா. பவுன், எருமைலநாயக்கன்பட்டி.

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள், கவலை உனக்கில்லை, ஒத்துக் கொள்'' என்றார் நாமக்கல் கவிஞர்.



உண்மைதான்! ஏதேனும் ஒரு கைத்தொழில் நமக்குத் தெரிந்தால்—தளராத ஊக்கம்—அயராத உழைப்பு—புதுமை நாடும் உணர்வு முதலியன இருந்தால் நாம் நம்முடைய வாழ்க்கையை வளமுடையதாக்கிக் கொள்வதோடு நமது நாட்டையும் பொருளாதாரச் செழுமையுடையதாக்கிட முடியும். செல்வச் சீமைகளிலெல்லாம்—பொருள் வளம் கொழிக்கும் பூமிகளிலெல்லாம் கைத்தொழில்கள் நாளொரு




மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வருகின்றன. ஜெர்மனியின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 13 விழுக்காட்டினரைக் கைத்தொழில்கள் வாழ்விக்கின்றன. பல்வேறு தொழில்களும் பாங்குறத் திகழும் பர்மிங்ஹாம் நகரில் உள்ள தொழிற்சாலைகளில் பாதிக்கும்மேல் குடிசைத் தொழில்கள் தாம் என்பது குறிப்பிடத் தக்கது. தொழில் வளம் கொழிக்கும் ஜப்பானில், 5-க்கும் குறைந்த தொழிலாளரைக் கொண்ட குடிசைத் தொழில்களில் 55 விழுக்காட்டினர் ஈடுபட்டுள்ளனர். இன்னும், சுவிட்சர்லாந்து, பெல்ஜியம், ரான்சு, ஹாலந்து ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் பெரும் பகுதியும் குடிசைத் தொழில்களில் உருவாகும் பொருள்களே என்பது குறிப்பிடத் தக்கது.



பொதுவாகச் செல்வச் செழிப்பிலே நீந்தித் திளைக்கும் நாடுகளே—பொருளாதார வளம் கொழிக்கும் நாடுகளே கைத்தொழில் வளர்ச்சியில் இத்துணை ஈடுபாடு கொண்டுள்ளன என்றால், பொருளாதாரத் துறையில் பின்தங்கிய—இன்னும் வளர்ச்சியடையாத—ஏழை எளிய மக்களே மிகுதியுடைய நமது நாடு இத்துறையில் எத்துணை ஈடுபாடு கொள்ள வேண்டும்? நமது நாடு, கைத்தொழில் வினைஞர்கள் பல்கிப் பெருகியுள்ள நாடு. எனினும், தொழில் தெரிந்த ஏழைத் தொழிலாளர்கள் பலர், தொழில் புரிவதற்குத் தேவையான வசதிகளும் வாய்ப்புகளும் இல்லாத காரணத்தால் அவர்கள் நல்வாழ்வு பெற இயலாமல் ஏக்க வாழ்வு வாழ்வதை—வறுமையில் வாடி உழல்வதை நாம் அன்றாடம் காண்கின்றோம். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணா வழி நின்று விரைந்து பணியாற்றும் தமிழக அரசு, கைத்தொழிலாளர் கவலையைப் போக்கப் பல்துறை ஒத்துழைப்பும் உதவியும் நல்கி வருகிறது. அவ்வகையில் கைத்தொழில், வளர்ச்சிக்கும் கைத்தொழிலாளர்களின் நல்வாழ்வுக்குமாக அமைந்தது தமிழ்நாடு கைத்திறன் தொழில் வளர்ச்சி நிறுவனம்.



இது 1973 ஜூலை கடைசி வாரத்தில் கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. 1-8-73-லிருந்து அது பணியாற்றத் தொடங்கியுள்ளது. இதன் அதிகாரம் பெற்ற மூலதனம் 50 இலட்சம் ரூபாய். இதில் 75 விழுக்காடு தொகையை அரசாங்கம் போடும். பாக்கி 25 விழுக்காடு தொகையைத் தொழில் வினைஞர்களும் தொழில் வினைஞர் கூட்டுறவுச் சங்கங்களும் போடுகிறார்கள்.



தொடக்கப் பணியாக இந்த நிறுவனம் விற்பனைப் பணிகளை மட்டுமே மேற்கொண்டுள்ளது. மாநிலம் முழுவதிலும் பரவலாக உள்ள 9 அரசாங்க விற்பனை நிலையங்களை இது மேற்கொண்டுள்ளது. இனியும் தமிழ்நாடு தொழில் வினைஞர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களைச் சேர்ந்த 5 விற்பனை நிலையங்களை விரைவில் இது மேற்கொள்ளும். விரைவில் டில்லியில் ஒரு விற்பனை நிலையத்தை இது தொடங்க இருக்கிறது. தமிழ்நாடு அரசாங்கச் சுற்றுலாத் துறை இயக்குநரின் ஒத்துழைப்புடன் பம்பாயில் தனது பொருட்களை இது ஏற்கெனவே விற்கத் தொடங்கி விட்டது. முதல் ஆண்டிலேயே இந்த நிறுவனம் ரூபாய் 1 கோடி பெறுமானமுள்ள பொருட்களை விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது. எந்த ஒரு தனி நிலையத்தின் விற்பனையைவிட இது அதிகமானதாகும்.



தமிழ்நாட்டில் கைத்திறன் தொழில் பொருள்கள் பல திறப்பட்டன. மாமல்லபுரத்தில் கல்லைச் செதுக்கிச் செய்யப்படும் சிற்பங்கள், சுவாமிமலை வெண்கலப் பதுமைகள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் தயாரிக்கப்பட்ட வெண்கல உலோகப் பொருட்கள், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, வடஆர்க்காடு மாவட்டம் முதலிய பகுதிகளில் செய்யப்படும் பனை ஓலைப் பொருட்கள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் தயாரிக்கப்படும் கோரைப் பாய்கள், கலைத்திறன் மிக்க தஞ்சாவூர் தட்டுகள், தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் தயாரிக்கப்படும் ஆலய திரைச் சீலைப் பொருட்கள், சென்னை, விருத்தாச்சலம் ஆகிய பகுதிகளில் தயாரிக்கப்படும் கலைத்திறன் மிக்க பாண்டங்கள், நாகர்கோயில், விருதுநகர், மதுரை ஆகிய இடங்களில் தயாராகும் நுட்பமான மர வேலைப்பாடுகளைக் கொண்ட பொருள்கள் முதலியவை குறிப்பிடத் தக்கவை.

இன்று தொழில் வினைஞர்களையும், கைத்திறன் தொழிலையும் எதிர்நோக்கியுள்ள முக்கியப் பிரச்சினைகள் வருமாறு :—

கலைத்தொழில் திறன் படிப்படியாக மறைந்துவரும் நிலையை, தனிப்பட்ட தொழில் வினைஞர்களுக்கு நிதி வசதி கிடைக்காமை, உற்பத்தி முறைகளை மேம்படுத்த வல்லுநர்கள் கிடைக்காமை, விற்பனை வசதி இல்லாததால் இடைத்தரகர்கள், தொழில் வினைஞர்களின் உழைப்பைச் சுரண்டும் நிலை ஆகியவை குறிப்பிடத் தக்க சிக்கல்களாகும். இந்தச் சிக்கல்கள் அனைத்தையும் களையத் தமிழ்நாடு அரசாங்கத்தின் தொழில் துறை முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

பனை ஓலைப் பொருட்களிலிருந்து வெண்கலச் சிற்பங்கள் செய்வதுவரை பல்வேறு கைத்திறன் தொழில்களிலும் பயிற்சி அளிக்க 19 உற்பத்தி-பயிற்சி நிலையங்கள் உள்ளன. தந்தையிடமிருந்து மகனுக்கு என்று வழிவழியாக வரும் தொழில்திறன், குறைந்து மறைந்து போய்விடக் கூடாது என்பதே இந்த ஏற்பாட்டின் முக்கிய நோக்கமாகும். இந்த உற்பத்தி-பயிற்சி நிலையங்களின் விளைவாகத் தொழில் திறன் பரவலடைந்து, உற்பத்தியும் பெருகியிருக்கிறது. தொழில் வினைஞர்களுக்கு நிதி வசதி கிடைக்கச் செய்யவும், அவர்களுடைய பொருட்களுக்கு விற்பனை வசதி காணவும் தொழில் வினைஞர் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கவும் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்திருக்கிறது. தமிழகம் முழுவதிலுமுள்ள 300க்கு மேற்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் 50 விழுக்காட்டுக்கு மேற்பட்ட சங்கங்கள் தொழில் வினைஞர்கள் சம்பந்தப்பட்டவையாகும்.

தமிழ்நாடு கைத்திறன் தொழில் வளர்ச்சி நிறுவனம் 'பூம்புகார்' மூலம் விற்பனை மட்டுமே இப்போது மேற்கொண்டுள்ளது. படிப்படியாக இது, மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்தல், தொழில்உத்திகளை மேம்படுத்தல், திருந்திய முறைக் கருவிகளைத் தொழில் வினைஞர்களுக்கு வழங்குதல், திருந்திய முறைகளில் பயிற்சியளித்தல், வாங்குவோரின் தேவைக்கும் விருப்பத்துக்கும் ஏற்பப் பொருட்கள் உற்பத்தி ஆகியவைகளிலும் இது கவனம் செலுத்தும். தமிழ்நாடு அரசாங்கத்தின் தொழில்துறை அனைத்திந்தியக் கைத்திறன் தொழில் வாரியம் ஆகியவற்றுடன் இந்த நிறுவனம் இணைவான முறையில் ஒத்துழைத்துப் பணியாற்றும்.

கைத்திறன் தொழில்கள் கிராம மக்களுக்கு வேலை வசதி அளிக்கின்றன. அத்துடன் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணி வசதியையும் பெற்றுத் தருகின்றன. எனவே நாட்டின் பொருளாதாரத்தில் இந்தத் தொழிலுக்குரிய பங்கு மிகமிக முக்கியமானது.

அண்மையில் தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சிக் கழகம் சென்னை இராசாசி மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த 'பூம்புகார்' கைத்திறன் பொருட்காட்சியை 4-10-73ல் கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்தப் பொருட்காட்சியில் உலோகத்தாலான சிற்பங்கள், கல்லில் செதுக்கிய சிலைகள், கவின்மிக்க காகிதக் கூழ்ப் பொம்மைகள், மரத்தாலான கதைகள், தெரகோட்டி எனப்படும் சுட்டமண் சுதைகள், மெழுகால் துணிகளில் எழுதப்பட்ட வண்ணத் திரைச்சீலைகள், கடுக்காய் போன்ற பொருள்களிலிருந்து வண்ணங்கள் தயாரித்து அவற்றால் வரையப்பட்ட 'கலம்காரி' எனப்படும் திரைச் சீலைகள், பல்வேறு அளவுள்ள அழகிய வேலைப்பாடுள்ள குத்து விளக்குகள், நுட்பமான வேலைப்பாடமைந்த தஞ்சைக் கலைத் தட்டுக்கள், தாஜ்மகால் தஞ்சைப் பெருங்கோயில், திருவரங்கம் கோயில் போன்ற தோற்றப் பொலிவுடைய தக்கைப் பொருட்கள், பல வண்ணக் கண்ணாடி பதித்த பூரண கும்பங்கள், துணிப் பொம்மைகள், பனங்கொட்டையில் இயற்றை நார் கொண்டு தயார் செய்யப்பட்ட-சுவர்களில் அழகுறத் தொங்கவிடத் தக்க கலைகள், கொட்டாங்குச்சியைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்வேறு அமைப்புடைய அழகிய பூச்சாடிக்ள், ஒயின் கப்புகள், ஆமை ஓட்டினால் செய்யப்பட்ட பல்வேறு அலங்காரப் பொருள்கள், நமது பண்டைய இசைக்கருவிகள்-அவற்றின் வடிவமைப்புகள், எருமைக் கொம்பாலான பல்வேறு பறவைகள், மிருகங்களின் மாதிரிகள், பனைஓலைத் தடுக்குகள், அலங்காரக் கூடைகள், பனை ஓலையிலான வண்ணப் பூக்கொத்துக்கள், மூங்கிலிலான பூச்சாடிகள், கலை வண்ணம் காட்டும் மேசை விளக்குகள், பீங்கான் பொருட்கள், காட்பாடி அருகிலுள்ள காரிகிரி கிராமத்தில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டே அங்கு தயாரிக்கப்படும் காரிகிரி மட்பாண்டங்கள், மதுரையில் தயாராகும் புகழ்பெற்ற சுங்குடிச் சேலைகள், பத்தமடை, சீர்காழி முதலிய இடங்களில் தயாராகும் பட்டு-கோரைப் பாய்கள், சணப்பை நாரினால்



தயாரிக்கப்பட்ட அழகிய- நீடித்து உழைக்கக்கூடிய ரத்தினக் கம்பளங்கள், தரை விரிப்புகள், கார்களில் பயன்படுத்தும் விரிப்புகள் இப்படி எத்தனையோ பொருட்கள்! அத்தனையும் தமிழகத்திலுள்ள கைத்தொழிலாளர்களின் கைவண்ணத்தையும் தொழில் திறனையும், தொழில் நுட்பத்தையும் எடுத்துக் காட்டி நிற்பன!

இந்தப் பொருட்காட்சியைத் திறந்து வைத்துக் கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் உரையாற்றுகையில்,

''ஒருநாட்டின் கலையை, பண்பாட்டை, அந்த நாட்டின் கைத்திறன் மிக்க பொருட்கள் வெளிநாட்டினருக்கு எடுத்துக் காட்ட உதவுகின்றன. நமது நாட்டுக் கைத்தொழிற் பொருட்கள் இவ்வகையில் நமது கலாச்சாரத்தை எடுத்துக் காட்டக் கூடியவை.

நமது நாட்டில் சிறந்த கைத்தொழிற் பொருட்கள் அழகாகத் தயாரிக்கப்படுகின்றன. வெளிநாடுகளில் இருந்து வரும் உல்லாசப் பயணிகள் நமது நாட்டுக் கைத்தொழிற் பொருட்களை வாங்கிச் செல்ல விரும்புகிறார்கள். அப்படி வாங்கிச் செல்லும்போது, அவர்கள் நமது நாட்டுக் கலாசாரத்தையும் வாங்கிச் செல்கிறார்கள் என்று பொருள். அப்படிப்பட்ட நிலையிலுள்ள இத்தகைய கலைப் பொருட்களைத் தயாரிக்கும் கலைஞர்களுக்குப் பல உதவிகள் செய்ய இந்தக் கழகம் தொடங்கப்பட்டுள்ளது.

''இந்தப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்களுக்குப் 'பூம்புகார்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொருட்காட்சி பொது மக்களிடையே தமிழ்நாட்டுக் கைத்தொழிற் பொருட்களின் சிறப்பை எடுத்துக் காட்ட உதவும்'' என்று குறிப்பிட்டார்.

பொருட்காட்சி, 4-10-73 முதல் 11-10-73 வரை நடைபெற்றது. ஏராளமான மக்கள் பொருட்காட்சியைப் பார்வையிட்டு தமிழகக் கைவினைஞர்களின் தொழில் திறனை வியந்து சென்றனர். பொருட்காட்சியில் சுமார் 16,000 ரூபாய் மதிப்புள்ள கைத்திறன் தொழிற் பொருட்கள் விற்பனையாயின.

'பூம்புகார்' தமிழகத்தின் கைத்தொழில் வினைஞர்களின் வாழ்வில் எழுச்சியும் இன்பமும் ஊட்டி, நாட்டுப் பொருளாதாரத்திற்குப் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

—சாம் பழ

## பாக்கு உற்பத்தி

கொட்டைப் பாக்கு, இந்தியாவின் புகழ்பெற்ற ஒன்றாகும். நம்முடைய ஆண்டு உற்பத்தி 1·35 இலட்சம் டன்கள். இது ஏறக்குறைய ரூ. 60 கோடி பெறுமானமுள்ளது. அநேகமாக, பாக்குச் சேமிப்பின் அளவில் பாதி மைசூரில் கிடைக்கிறது. பாக்கினுடைய விலை—அதன் வடிவம், அளவு, சுவை, தரம் போன்றவைகளைப் பொறுத்திருக்கிறது!



மிகப் பழங்காலத்திலேயே பாக்கைப் பற்றிய குறிப்புகள் வடமொழி மத இயல் நூல்களில் காணப்படுகின்றன. பாக்கு முதன் முதலில், கி.மு. 340-ல் ஹெரோடோடஸ் என்பவரால் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உணவிற்குப் பின்னர் வெற்றிலை, பாக்குப் போடுதல் ஒரு சிறந்த பழக்கம் என கி.பி. முதல் நூற்றாண்டில் எழுந்த சில சாத்திர நூல்கள் கூறியிருக்கின்றன.

ஆசியாவில் வெற்றிலை பாக்குப் போடும் பழக்கம் உண்டென்பதை முதன் முதலில், 1298-ல் குறிப்பிட்டவர் ஐரோப்பாவைச் சேர்ந்த மார்கோ போலோ ஆவார். அதற்குப் பின்னர் அநேக ஐரோப்பிய எழுத்தாளர்களும் வாஸ்கோடகாமா போன்ற சுற்றுலாப் பயணிகளும் இதையே தெரிவித்திருக்கிறார்கள்.

பாக்கு, பண்டைய மலேசியாவைச் சேர்ந்ததாகக் கருதப்பட்டது. அது அங்கிருந்து கிழக்கு இந்தியா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கும் இறுதியில் இந்தியாவுக்கும் பரவியது. இருந்தாலும் இந்தியா, மலேசியா இலங்கை ஆகிய நாடுகள் பாக்கு உற்பத்தியில் முதன்மையாகத் திகழ்கின்றன. இந்திய விடுதலைக்குப் பின்னர் பாக்கு உற்பத்தியாகும் வங்காளத்தின் அநேக பகுதிகள் பாகிஸ்தானுடன் சேர்ந்து விட்டன. இந்தியாவில் கேரளம், மைசூர், அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் பாக்கு பயிராகின்றது. தமிழ் நாடு, மராட்டியம், மேற்கு வங்கம், கோவா போன்ற மாநிலங்களின் சில பகுதிகளிலும் இது பயிராகிறது.

நாட்டின் மொத்தப் பாக்கு உற்பத்தியில் மைசூர் 40 சதமும், கேரளம் 35 சதமும், அஸ்ஸாம் 20 சதமும் உற்பத்தி செய்கின்றன.

அனுபவமிக்க ஒரு தொழிலாளி எந்தவொரு வடிவங்கொண்ட பாக்கானாலும் மணிக்கு 6 முதல் 8 கிலோ வரை வெட்ட முடியும். பாக்கின் தரம் அதனுடைய வயது முதிர்ச்சியை ஒத்துக் காணப்படுகிறது. அதிக வயது முதிர்ச்சியடைந்தவை குறைந்த தரத்தைத் தருகின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்
சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002



# கலை செறிந்த நாட்டின் கவின்மிகுந்த படையல்!



இன்றே வாங்குங்கள்

**தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு**

முதல் பரிசு:

# ரூ. 1,00,000

(ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**61 -வது குலுக்கல் நாள்: 13-11-1973**

**பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்**




*கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:*
*இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2*
*விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,*
*மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை 9*

# தமிழரசு



# அரசு - மிகவுயர்ந்த தரமானது

## போர்ட்லேண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்றொரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனால் கட்டப்படும் எதையும் திண்மையும், நீக்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப் படுகிறது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ்**
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

**அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது**





# தமிழரசு

16-11-73
மலர்: 4 இதழ்: 10


குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

—திருவள்ளுவர்.

சொல்லு மழலையிலே—கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே—எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய்
இன்பக் கதைகளெல்லாம்—உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ
அன்பு தருவதிலே—உனைநேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ ?

—பாரதியார்.

இன்று குழந்தைகள் நீங்கள்; எனினும்
இனிஇந்த நாட்டினை ஆளப் பிறந்தீர் !
நன்றாய்ப் படியுங்கள் நாட்டின் குழந்தைகாள்
ஒன்றாய் இருங்கள்; உயர்வினை எண்ணுங்கள் !

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.



## சமுதாய மாற்றத்தைக் கடினமாக்கும் முயற்சிகளை முறியடிப்போம்!

திட்டங்கள் எல்லாம் திட்டப்பட்டு நிறைவேற்றப்பட்ட பின்னரும் ஏழையாக இருக்கிறுனே அந்தச் சாதாரண மனிதனுக்காகத்தான் இந்தத் தமிழக அரசு இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்தச் சாதாரண மனிதனை வறுமை எல்லைக்கோட்டிலிருந்து கைகொடுத்து எழச் செய்யும் திட்ட வினியோகச் செயல்முறைகள்தான் திட்டம் தீட்டுவதைவிட முக்கியமானது என்று கருதுகிறேன்.

இந்தியாவில் வறுமை எல்லைக் கோடு என்பது உலகத்திலே மிகவும் தாழ்ந்து இருப்பதாகும்.

அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஆண்டுக்கு முறையே ஏழாயிரம், மூவாயிரம் டாலர்கள் பெறுவோர்தான் ஏழைகளாகக் கருதப்படுகின்றனர்.

ஆனல் இந்தியாவில் 240 ரூபாய் ஆண்டு வருமானம் பெற முடியாதவர்களை ஏழையர் பட்டியலில் சேர்த்திருக்கிறோம்.

நமது மாநில மக்கள் தொகையில் 55 சதவிகிதத்தினருக்கு மேல் இந்த மாநிலத்தில் வறுமை எல்லைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறார்கள்.

மக்களின் மிகப் பெரும் நல்வாழ்வை அடைதல் எனும் இலட்சியத்திற்குச் செல்லும் வழிதான் திட்டமிடுதல் திட்டத்தைப் போலவே திட்டத்தை நடைமுறைப்படுத்துவதும் முக்கியமானதாகும்.

நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்தை உணர்ந்த காரணத்தால்தான், நாம் நிர்வாகச் சீர்திருத்தக்குழுவையும் அதே சமயம் திட்டக் குழுவையும் அமைத்திருக்கிறோம். மிகப் பெரும் திட்டங்களை நாம் நடைமுறை மூலம் உண்மையாகச் செயல்படுத்தினலொழிய அந்தத் திட்டங்கள் மிகச் சொற்பமான பயனையே தரும்.

எத்தகைய சூழ்நிலையில் நாம் திட்டங்களைத் தீட்டி அவற்றை செயல்படுத்த நினைக்கிறோம் என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இயற்கைச் செல்வ வளம் மிகக் குறைவாகவே உள்ளது. நீர் வளத்தைப் பொறுத்தவரை அதைப் பயன்படுத்தும் எல்லைகளையே தாண்டி விட்டோம்.

தனிநபர் வருமானத்தை உயர்த்தும் நமது முயற்சிகளை, மக்கள் தொகை அடர்த்தி என்பது முனை முறித்துவிடுகிறது.

அதே சமயம், நமது நிர்வாகம் என்பது அதன் சுய சரித்திரத்தின் கைதியாக நிற்கிறது.

விதிகள், நடைமுறைகள் எனும் தற்போதைய அமைப்பு முறையைச் சுற்றிச் சுயநலச் சக்திகள் வளர்ந்து நிற்கின்றன.

ஒரு சிறிய நடைமுறையை மாற்றினால்கூட, யாரோ சிலருக்கு வேலை வாய்ப்புப் போகிறது அல்லது ஒரு சிலருக்குப் பதவி இறக்கம் வருகிறது என்ற காரணத்தால் அந்த நடைமுறையே கடுமையாக எதிர்க்கப்படுகிறது.

இதிலுள்ள ஒரு பெரிய கஷ்டம் என்னவென்றால் எந்த நிர்வாகம் இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டுமோ அந்த நிர்வாகமே முதலில் இந்த நிர்வாகத்தை ஏற்க வேண்டியிருக்கிறது.



## முதல்வர் கலைஞர்

## திட்ட நடைமுறைகளின் வெற்றிக்கு விரைவான முடிவுகளே தேவை!

மத்திய-மாநில அரசுகளின் நிதி வருவாய்ப் பங்கீட்டைப் பொறுத்தவரை இதுகாறும் மகிழ்ச்சி அளிக்கும் ஏற்பாடுகள் இல்லை.

இதுவே, மாநில நிர்வாகத்தின் முயற்சிகளை முனைமுறிக்கும் சாதனமாகவும் இருக்கிறது. இத்தகைய தடைகள் ஒரு மாற்றத்தை கடினமாக்குகிறது — தாமதப்படுத்துகிறது.

இந்தப் பிரச்சினைகள் பற்றி நிர்வாகச் சீர்திருத்தக் குழு முழுமையாக அறியும். அந்தக் குழு, நான் மேலே சொன்ன 'உள்ளே உறைந்திருக்கும் எதிர்ப்பு'களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நமது விதிகளும் நடைமுறைகளும் நிதானமாகவும் கவனமாகவும் முடிவெடுக்கவுமே அமைக்கப்பட்டவை.

சட்டம் அமைதியை மட்டுமே விரும்பும் அரசுக்கு முடிவுகள் தாமதமாக இருக்கலாம். ஆனல் சமுதாய வளர்ச்சி பெறும் அரசுக்கு நடவடிக்கைகள் சுறுசுறுப்பாகவும் முன்னேற்றம் வேகமாகவும் இருக்கவேண்டும்.

மக்கள் இப்போது ஒரு மாற்றத்தை உடனடியாக விரும்புகிறார்கள் இன்னும் தரமான கல்வி, சுகாதாரம், வீட்டு வசதி, மிகப் பெரிய தொழில் வசதிகள், நல்ல போக்குவரத்து, செய்தித் தொடர்பு உயர்ந்த வாழ்க்கைத்தரம் போன்றவற்றை விரும்புகிறார்கள்.

பழைய கண்ணோட்டமுள்ள அசைவற்ற ஓர் அரசு இத்தகைய மாற்றங்களைக் கொணர முடியாது!

நிர்வாக அமைப்பின்பால் காட்டப்படும் வீரியமிக்க போக்கே வளர்ச்சித் திட்டங்களிடத்தில் நம்முடைய அணுகுமுறையை வீரிய மிக்கதாக இருக்கச் செய்யும்.

திட்ட அமுல்படுத்தல் என்பது பல்வேறு முடிவுகளை உட்கொண்டது. வளர்ச்சித் திட்டங்களைத் துவக்குதல், இயந்திரங்களை வாங்குதல், பணியை நிறைவேற்ற ஒப்பந்தக்காரர்களை நியமிப்பது ஆகியவை இதில் அடங்கும்.

• கொள்கை, நிர்வாகம் ஆகியவற்றை நாம் அணுகும்போக்கு எந்த அளவுக்கு இந்த விரைவான முடிவுகளை எடுக்க உதவுமென்று நாம் பார்க்கவேண்டும். எதிலும் குற்றம் கண்டு பிடிக்கும் போக்கு, பொதுவாகவே நம் நாட்டாரிடம் உண்டு. எந்த ஒரு முடிவிலும் முழுநிறைவை நாம் எதிர்பார்க்கிறோம்.

நிர்வாகத் தலைவராக உள்ள ஒருவருக்கு முன்னல் எந்த ஒரு நிலைமையிலும் சில உண்மைகளே இருக்கும். அவர் இந்த உண்மைகளை ஆதாரமாகக் கொண்டு முடிவு செய்ய வேண்டியவராகி முடிவு எடுக்கப்பட்ட பிறகு நமக்கோ அல்லது முடிவெத்தவருக்கோ தெரிய வருகிற உண்மைகளை வைத்துக் கொண்டு குறைகூற முயற்சிப் போமானல் சிறந்த உண்மைகள் பிறகு தெரிய வரலாம் என்று முடிவெடுக்காமல் தள்ளிப் போடுகிற பழக்கத்தை நாம் ஊக்குவிப்பவர்களாகிறோம். ஆகவே சிறந்தவை என்பவை நல்லவற்றின் எதிரியாக ஆகியது. முடிவெடுப்பதில் ஏற்படுகின்ற தாமதம் நாட்டை எல்லா மட்டங்களிலும் பாதகத்தை உண்டாக்குகிறது. ஓர் உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். உருக்குத் தயாரிப்பில் கையாள வேண்டிய முறை பற்றிய வாதங்களின் காரணமாக சேலம் உருக்காலைத் திட்டம் தாமதப்பட்டது. 1960க்கும் 1963க்குமிடையே முடிவு எடுக்கப்பட்டிருக்குமானல் இப்போது சேலம் உருக்காலை உற்பத்தி செய்து கொண்டிருக்கும்.

நம்முடைய அமைப்புகளுக்கு ஏற்படுகிற மற்றொரு பாதகம் குற்றம் காண்பதில் நாம் காட்டுகிற தீவிரத்தால் உண்டாவதாகும். பல்வேறு முடிவுகளை எடுக்கிற ஒரு நிர்வாகி, அவை எல்லாவற்றையும் சரியாக எடுத்தாக வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. என்னுடைய அதிகாரிகள் பெரும்பாலான முடிவுகளை சரியாகவும், விரைவாகவும் எடுக்க வேண்டுமென்று விரும்புவேனேயொழிய சரியாகவும் மெதுவாகவும் எடுப்பதை அல்ல. ஒரு தளபதியானவன் எல்லாக் களங்களிலும் வெற்றி பெற்றிட விழையக் கூடியவராக இருந்தும் போரில் அவர் தோல்வி யடையக்கூடும். முடிவு காணுகிற அந்தப் பணியில் அதிகாரிகள் காலத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதையே நாம் விரும்புகிறோம். நம்முடைய தணிக்கை முறைகளும் மதிப்பீட்டு முறைகளும் இதனையே வலியுறுத்த வேண்டும். தணிக்கையானது அற்ப விஷயங்களை நுணுக்கிக்கொண்டிருக்காமல் ஒட்டு மொத்தமாக ஒவ்வொரு முடிவின் சாதனைத் திரட்டு என்ன என்பதைக் கணித்துப் பார்ப்பதாக இருக்க வேண்டும். துணிந்து முடிவு காணும்போக்கினை நாம் ஊக்குவிக்க வேண்டும்.

மிக அதிகமாகத் தடைகளால் நமது நிர்வாக அமைப்புத் துன்புறுகிறது.

பழைய ஏகாதிபத்திய சகாப்தத்தின் மிச்ச, சொச்சங்கள் இவை. சாதாரண சிறிய விஷயங்களும்கூட மாநில அரசின் கவனத்திற்கு வரவேண்டும். காரணம், இவை மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டியவைகளாக இருக்கின்றன. சாதாரண முடிவுகளுக்கும் பல்வேறு கட்டங்களில் அங்கீகாரம் தேவைப்படுகிறது. நம்முடைய நாட்டைப் போல, பரந்து விரிந்து கிடக்கும் ஒரு நாட்டில் —சிக்கல் மிக்க பொருளாதார அமைப்பைக் கொண்ட ஒரு நாட்டில், இந்த முறைகளால் முடிவுகள் காணுவது தாமதப்படும்.

இந்தக் கோணத்தில்தான் மாநில சுயாட்சிக்கான நமது கோரிக்கை பார்க்கப்பட வேண்டும். எந்த வறுமையை ஒழிப்போம் என்று கூறி இந்தமாநில அரசு ஆட்சிக்கு வந்திருக்கிறதோ அந்த வறுமையை ஒழிக்கும் நியாயமான கடமையை நிறைவேற்றவே மாநில சுயாட்சி வேண்டும் என்கிறோம். பிறிதோர் இடத்தில் தான் இதை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். தீவிரமாகவும் திறமையாகவும் திட்டப்பணிகள் நிறைவேறிட மாநிலத்துக்கு அதிக அதிகாரங்கள் இருப்பது துணை செய்யும் என்று மட்டும் இங்குக் கூற விரும்புகிறேன். இந்த அரசினல் உருவாக்கப்பட்டுள்ள பொதுத்துறை நிறுவனங்கள் தங்களின் செயல்பாடுகளில் அரசு நடைமுறையைக் கையாளும் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். எந்த நோக்கத்தை அடைய அவை நிறுவப்பட்டனவோ அந்த நோக்கத்தை அடைகிற வகையில் அவை தங்கள் நிர்வாக நடைமுறைகளை மாற்றிக் கொள்ளவேண்டும்.

எனவே தொழில் நுணுக்க வல்லுநர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையே நடைபெறுகிற சர்ச்சை பற்றி என் கருத்தைக்கூற விரும்புகிறேன். இரு தரப்பாரும் ஒருவரை ஒருவர் சார்ந்து இருக்க வேண்டியவர்கள் என்பது என் கருத்து.

ஒரு பொது நிர்வாகியானவர், தொழில் நுணுக்கத் திறனில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அதேபோல ஒரு தொழில் நுணுக்க வல்லுநர் பொது நிர்வாகத் திறன் படைத்தவராகவும் ஆக வேண்டும். ஆக, எல்லா மட்டங்களிலும் பயிற்சி என்பது நிர்வாகம் சீர்பட்டு இயங்க உதவுகின்றன.

**கிராமப்புற வளர்ச்சிப் பணிகள் மாவட்ட அளவில் நெகிழ்வுத் தன்மை உள்ளவையாக இருந்திடல் வேண்டும் என்னும் யோசனையை இங்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட கிராமப் புற வளர்ச்சிக் கழகங்களை நிறுவுவது பற்றிய யோசனையை அரசு பரிசீலித்து வருகிறது.**

இந்தக் கழகங்கள் முழுக்க முழுக்க அதிகாரிகளால் — மாவட்ட ஆட்சித்தலைவரின் கீழ் - நிருவகிக்கப்படுபவைகளாக இருக்கலாம். இவை ஆங்காங்கு உள்ளூர் வளர்ச்சிப் பணிகளுக்கான சேமிப்புகளைத் திரட்டலாம். நன்கொடைகளும் பெறலாம். தேவைப்பட்டால் சில குறிப்பிட்டவர்களை இந்தக் கார்பொரேஷன்களுக்காகத் தனியாகவும் ஒதுக்கலாம்.

இந்தக் கண்ணோட்டத்தில் தான் அரசு அதிகாரிகள், திட்ட நிபுணர்கள், சமூக விஞ்ஞானிகள் ஆகியோரதுபொருட்செறிவுமிக்க இந்தக் கலந்துரையாடலை—எண்ணப் பரிமாற்றத்தை-நான் வரவேற்கிறேன்.

இந்தக் கருத்தரங்கு நமது சிந்தனையைத் தெளிவுபடுத்திப் புதிய கருத்துக்களை உருவாக்கும் என்பது திண்ணம்.

**(''திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்'' பற்றிய இரண்டு நாள் கருத்தரங்கை 26—10—73-அன்று இராஜாஜி மண்டபத்தில் துவக்கி வைத்து முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.)**

# மழலைகளே! மழலைகளே!



மழலைகளே! மழலைகளே! மனிதச் சோலை
  மண்ணரங்கில் பூத்தமலர் நீங்கள் அன்றே?
குழலினிதா, யாழினிதா என்றால், உங்கள்
  குரல்இனிதே எனச்சொன்னார் 'குறளார்' அன்றே!
மழை கண்டால் பயிர்சிரிக்கும்; நீங்கள் வந்து
  மடிதவழும் இல்லமொன்றே மகிழ்வைக் காணும்!
அழுகையுடன் பிறக்கின்றீர்! ஓ, ஓ! உள்ளோர்
  அழுகையினைத் துடைப்பதற்கா 'சைகை' சொன்னீர்!

நேருமகன் தான்பிறந்த பெருநாள் தன்னை
  நிலையாகக் குழந்தைகளின் 'திருநாள்' என்றார்!
வேரோடிச் சமுதாயம் தழைப்பதற்கே
  விதைகளென வந்தீரோ பூமிப் பந்தில்?
பாரோடு சேராத வானத் தூறல்
  பளிங்கைப்போல் தூய்மையுடன் காணும்; நீங்கள்
யாரோடும், ஊரோடும் சேரா முன்னர்
  எவ்வளவு துல்லியமாய் நகைக்கின் றீர்கள்?

எதிர்காலக் கனவுகளே! வரலாற் றேட்டில்
  இணைகின்ற புதுவரிகள் நீங்கள் அன்றோ!
புதிரான, புதிதான செயல்க ளாலே
  பொன்னுலகைச் சமைக்கின்ற 'ஆக்கம்' நீங்கள்!
கதிர்தோன்றி, நிலாத்தோன்றி, விண்மீன்தோன்றி,
  கண்டங்கள் தோன்றிவிட்டால் முழுமை உண்டா?
மதியாலே மாறிநிற்கும் புதுமை வையம்
  மனிதகுலக் கைவண்ணப் படைப்பே யன்றோ?

மூளையெனும் மூலதனம் பெற்ற நீங்கள்
  முழுநீள அளவினிலே பிறக்கின்றீர்கள்!
'நாளை' என்ற விடிவானம் தோன்றும் என்ற
  நற்சேதி தரும் 'வெள்ளி' மீனாய் வந்தீர்!
காளைகளாய் வளர்கின்றீர்; துள்ளு கின்றீர்!
  காதலிலும் மோதலிலும் மூழ்கு கின்றீர்!
வேளைஎன்ற இறப்புவந்து கொத்தும் முன்னர்
  வியனுலகில் நம்பெயரைச் செதுக்க வேண்டும்!



அன்னையென்றும் தந்தையென்றும் இருவர் சேர்ந்து
  அல்லிரவில் எழுதிவைத்த 'கவிதை' நீங்கள்!
பின்னர்வரும் உலகத்தார் உமைப் படிக்கப்
  பெருமை மிகு 'காவிய'மாய் வளர வேண்டும்!
தன்னாலே வளர்வதுதான் உடலம்; ஆனால்
  சலியாத படிப்பாலே, உழைப்பினாலே
பொன்னான மூளைவளம் வளர வேண்டும்!
  புவிநூல்கள் அத்தனையும் படிக்க வேண்டும்!

'விட்டி'லைப்போல் வாழ்வதுவோ அற்ப வாழ்வு!
  வெறுங்கவர்ச்சி நமையழிக்கும்! அதுவும் வாழ்வா?
'சிட்'டினைப்போல் வாழ்வதுவோ தன்ன லத்துச்
  சிறுவாழ்வு; அவ்வாழ்வால் சிறப்பே இல்லை!
நட்டுவைத்த 'தென்னை'யைப்போல் உலகம் வாழ
  நல்லிளநீர் தரும்வாழ்வு வாழ வேண்டும்!
தொட்டிலிலே அழுகையுடன் பிறந்தீர்; உம்மைச்
  சூழ்ந்துள்ளோர் மகிழ்ந்திடநீர் வாழ வேண்டும்!



'மீன்குஞ்'சாய் நீங்களெலாம் பிறந்தி ருந்தால்
  வெறிப்பாம்பின் வயிற்றுக்குள் போயி ருப்பீர்
'மான்குட்டி' யாய் நீங்கள் பிறந்திட் டாலும்
  வரிப்புலிக்கே இரையாகச் சென்றிருப்பீர்!
'தேனீக்க' ளாய் நீங்கள் பிறந் திருந்தால்
  தினம் சேர்த்து வைத்துவிட்டு மாண்டி ருப்பீர்!
ஏனென்று பகுத்தறியும் மரபில் வந்தீர்!
  எழுதுகின்ற 'நடுகல்'லால் நிலைக்க வேண்டும்!

கடலுக்குள் வீழ்ந்தபின்னர் ஆற்றைப்பற்றிக்
  கணமேனும் பேசுபவர் உண்டா? ஆனால்
நெடும்பயணம் நடத்துகின்ற நதியோ உள்ள
  நீள்வயலைச் சிரிக்கவைத்துப் புகழைச்சேர்க்கும்!
உடல்மறையும்; உயிர்மூச்சு மறையும்; ஆனால்
  ஒப்பற்ற செயலாலே உலகோர் நெஞ்சில்
நடமாடும் காந்தியைப்போல், நேரு வைப்போல்
  நம் தலைவர் அண்ணாபோல் வாழ வேண்டும்!

கவிஞர் கா. வேழவேந்தன்

# அழகுக்கு அன்புக்கு ஆரோவில்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்—மனித குல ஒருமைப்பாட்டைப் பற்றி வேறு யாரும் எண்ணிப் பார்ப்பதற்கு முன்னர்— ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்று கூறி உலக ஒருமைப்பாட்டை வலியுறுத்திய பெருமை புறநானூற்றுப் புலவரைச் சாரும். இன்று அந்தப் புறநானூற்றுப் பொன்மொழிக்கு இலக்கியமாக—எடுத்துக் காட்டாக அமையும் வகையில் உருவாகி வருவது தான் ''ஆரோவில்'' நகரம்.

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்கின்ற மக்களிடையே மனித இன ஒற்றுமை ஏற்பட வேண்டும். உலகில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய கலை, இலக்கியம், கலாச்சாரம், பண்பாடு போன்றவைகளை அறிந்திருக்க வேண்டும். இவைகள் மூலமாகவே உலக ஒருமைப்பாட்டினைக்காண இயலும்.

சுற்றுலாப் பயணிகள் கலாச்சாரம், கண்டு பிடிப்புக்கள், கோட்பாடுகள் போன்றவைகளை ஓரிடத்திலிருந்துமற்றொரு இடத்திற்கு கொண்டு சென்றிருக்கிறார்கள். அறிவியல் சாதனங்களும் இவைகளுக்கு உதவுகின்றன. இவைகளால் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் தான் மனித இன ஒற்றுமை, கலாச்சாரம், பண்பாடு முதலியவைகளை அறிய முடிந்தது. உலகின் எல்லாப் பகுதியினரும் ஒன்று பட்டு வாழ்ந்து அனைத்தையும் அறிய 'ஆரோவில்' நகரம் வகை செய்யும் என்பதில் ஐயமில்லை.

'ஆரோவில்' (AUROVILLE) என அழைக்கப்படுகின்ற புதிய உலக நகரம் பெரும் பகுதி தமிழ் நாட்டிலும், சிறு பகுதி புதுவையிலும் உருவாகின்றது. இந்நகரை உருவாக்குகின்ற பணியினை அரவிந்தர் ஐக்கிய சபை மேற்கொண்டுள்ளது. ஆரோவில் உளவியல், சமூகவியல், கல்வி, கட்டடக்கலைப் பயிற்சி போன்றவைகளில் தனித் தன்மையோடு விளங்க முயலும்.




ஆரோவில் நகருக்கான அடிக்கல் நாட்டு விழா 22—8—1968-இல் நடைபெற்றது. 124 நாடுகளைச் சார்ந்த இளைஞர்கள் ஒன்று கூடித் தங்கள் தங்கள் நாட்டிலிருந்து கொண்டு வந்திருந்த மண்ணை அடிக்கல் தளத்தில் இட்டார்கள். வட்டவடிவமாக அமைய விருக்கும் ஆரோவில் நகர் 2 மைல் விட்டமுடையதாகும். இந்நகரில் ஏறத்தாழ 50,000 பேர்கள் வரை குடி அமர்த்தப் பெறுவார்கள். நகரின் மையம் கடலிலிருந்து 4 மைல் தொலைவில் அமையும். நகரின் முன்னேற்றத்திற்கேற்ற வகையில் தரை அமைந்துள்ளது.

1970-ல் பாரிசில் நடைபெற்ற 'யுனெஸ்கோ' பொதுச் சபை 3-ஆவது தீர்மானத்தில் ஆரோவில் நகரமைப்புத் திட்டத்தை ஒருமனதாக ஏற்றது. பிற நாடுகளும் தங்களுடைய கலாச்சாரம் நாகரிகம் பண்பாடு போன்றவைகளை விளக்கிட அரங்கங்கள் அமைக்கும்படியும் வலியுறுத்தியது.

இந் நகர் குடியிருப்புக்கூடம் கலாச்சாரக் கூடம், தொழிற் கூடம் உலக நாடுகள் கூடம் என நான்கு வகைகளாக அமையும். இவையனைத்தும் ஒவ்வொரு மனிதனின் செயலில் ஒற்றுமை உறவு கொள்ளத் தக்க வகையில் செயலாற்றும். இந் நான்கு கூடங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து குவிந்திருக்கும்.

## குடியிருப்பு :

பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்தும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இளைய, திறமை வாய்ந்த பொறியியல் வல்லுநர்கள் ஆரோவில் நகர் குடியிருப்புப் பகுதியை உருவாக்க வந்துள்ளனர். தற்பொழுது 16 நாடுகளிலிருந்து ஏறத்தாழ 350 பேர் ஆரோவில் நகரில் தங்கியுள்ளார்கள். அவர்கள் தங்களுடைய திறமையால் பலவகையான கட்டடங்கள், குடியிருப்புக்கள், மாளிகைகளை உருவாக்குவார்கள். அவைகள் இயற்கையாகவும், தோட்டங்கள், குளங்கள், கண்கவர் நீருற்றுகள், பூப்பாத்திகள் கொண்டதாகவும் அமையும். இப் பகுதிகளில் மோட்டார் வண்டிகள் அனுமதிக்கப்படமாட்டா. போக்குவரத்துக்குப் புதிய வழிகள் கையாளப்படும்.

## கல்வியும் கலாச்சாரமும் :

கல்வி— கலாச்சாரத்தைப் பரப்ப ஆரோவில் நகர் முழுவதையும் ஒரு பல்கலைக் கழகமாக்கிடும் எண்ணம் உண்டு. தற்பொழுது நிருமாணிக்கப்பட்டுள்ள பள்ளியில் 10 நாடுகளைச் சார்ந்த சுமார் 140 பேர் பயில்கின்றனர். இப் பள்ளியில் 2 வயது முதல் 21 வயது வரையில் உள்ளவர்கள் கல்வி கற்கிறார்கள்.

ஆரோவில் நகரில் உலகப் பல்கலைக் கழகம் ஒன்றினை உருவாக்கும் திட்டம் உள்ளது. இப் பல்கலைக் கழகத்தில் கணிதம், பௌதிகம், இரசாயனம், தொழில் நுணுக்கவியல், மருத்துவம், மொழி இலக்கியம், தத்துவம், உளவியல், சமூக அறிவியல், இசை ஓவியம், சிற்பம், கட்டடக்கலை நாட்டியம், உடற் பயிற்சி போன்ற பல துறைகள் இருக்கும். மண்டலா (Mandala) எனப் படுகின்ற இடத்தில் பல்வகை ஆராய்ச்சிகள் நடைபெறும். அறிவியல் ஆராய்ச்சிக் கூடம் ஒன்றும் பிரமிட் வடிவத்தில் நூல் நிலையம் ஒன்றும் உருவாகிக் கொண்டு வருகின்றன.

## தொழிலும் நிருவாகமும் :

ஆரோவில் நகரில் வாழ்கின்ற எவரும் தங்களுக்கு ஏற்றதொழிலைத் தெரிந்தெடுத்துக்கொள்ளலாம். ஒவ்வொருவரும் தங்களது மன நிறைவுக்கும், பயிற்சியில் தேர்ச்சி பெறவும் உழைக்க விரும்ப வேண்டும். 'தற்காலத்து அறிவியல் முறைகளையும், தொழில் நுணுக்கத்தையும் கொண்டு தொழிலகங்கள் நிறுவப்படும்.

பெரிய தொழிற்கூடங்கள் குடியிருப்புப் பகுதிக்கும் நகரின் மையத்திற்கும் சற்றுத் தொலைவில் கட்டப்படுகின்றன சிறிய அச்சகம் ஒன்று சிறந்த முறையின் செயல்படுகிறது. பாலியிஸ்டர் (Poloyester) கூட்டம் ஒன்றில் மைக்காவால் கட்டடங்களுக்கு அழகு படுத்தும்பொருட்கள், கூரைகள் முதலியன தயாராகின்றன. காகித தொழிற்சாலை ஒன்று முடியுந் தறுவாயில் உள்ளது. சுமார் 100 கால்நடைகளைக் கொண்டுள்ள 'ஆரோ பண்ணை' ஆரம்பிக்கப்பட்டு, பல சமுதாயத்தினர்க்கும் பால் வினியோகம் செய்யப்படுகிறது. தொழில் துறையில் சிறந்த முன்னேற்றம் காணப் புதிய பொருட்களைச் சோதனை செய்யவும் 'ஆரேலா' என்னும் ஆராய்ச்சிக் கூடம் நிறுவப்பட்டுள்ளது.

ஆரோ நகரின் சிறப்பெனக் கருதப்படுவது மாத்ரி மந்திர் (Matri Mandir) எனப்படும் தியான மண்டபமாகும். இது நகரின் மையத்தில் உருவாகி வருகிறது. 12 தோட்டங்களை உள்ளடக்கியதாகக் காணப்படும். இவைகளில் புகழ் பெற்ற பூக்களும், தோட்டங்களின் ஒற்றுமையைக் காண்பிக்கப் பழமையான தனி ஆலமரம் ஒன்றும் உண்டாக்கப் படும்.

சூரிய ஒளியில் பிரகாசிக்கக் கூடிய பெரிய தங்கக் கோளம் ஒன்று பொருத்தப்படும். செங்குத்தான கம்பத்தில் அமைக்கப்படவிருக்கின்ற விளக்கின் ஒளி கட்டடத்தின் உச்சியில் ஊடுருவி, உட்பாகத்திற்குச் சென்று மீண்டும் அடியிலுள்ள நீரால் பிரதிபலிக்கும். தியான மண்டபத்தை உருவாக்குகின்ற பணி விரைந்து நடைபெறுகிறது.

ஒவ்வொரு நாடும் தங்களுக்கென ஒவ்வொரு அரங்கத்தை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையில் இந்தியா 'பாரத் நிவாஸ்' (Bharat Nivas) எனப்படுகின்ற இந்திய மாளிகையை உருவாக்கி வருகிறது. நாட்டிலுள்ள 19 மாநிலங்



களும் தங்களுக்கெனத் தனித் தனி அரங்கினை ரூ. 10 இலட்சம் செலவில் இந்திய மாளிகையிலேயே அமைக்கவிருக்கின்றன.

இந்தியாவின் பண்பாடு, கலாச்சாரத்தை எடுத்துக் காட்டும் வகையில் ஒரு கலைக் கூடம், முக்கிய மொழிகளில் கற்பிக்கும் ஒரு கலைக் கூடம், பெரிய நூல் நிலையம், இந்தியாவிலுள்ள எல்லா வகை உணவுகளையும் கொண்டிருக்கும் ஒரு உணவு விடுதி, பயிலுகின்ற மாணவர்கள்—அரசு அலுவலாளர்கள் தங்குவதற்கேற்ற உறைவிடம் போன்றவை பாரத மாளிகையில் அமைக்கப்படும். கலைக்கூடமும், உணவு விடுதியும் முடியுந் தறுவாயில் உள்ளன.

இந்திய நாட்டிலுள்ள 19 மாநிலங்களில் முதன் முதலில் தன்னுடைய அரங்கை உருவாக்க முன் வந்தது தமிழகம் ஒன்றுதான். தமிழக அரங்கத்திற்கான அடிக்கல் நாட்டு விழா 28—10—1973-இல் நடைபெற்றது. 1968-ஆம் ஆண்டு ஆரோவில் நகர அடிக்கல் நாட்டு விழாவிற்குப் பின்னர் நடைபெறுகின்ற விழா இதுதான். தமிழகம் முன்னதாக ஒரு இலட்சம் ரூபாயை அரங்கத்தை உருவாக்கக் கொடுத்துள்ளது.

ரூ. 10 இலட்சம் செலவில் அமையவிருக்கும் தமிழகத்தின் அரங்கத்திற்காகக் கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் தலைமையில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அடிக்கல் நாட்டும் விழாவிற்கு முன்னர் இருவரும் ஆரோவில் நகரைப் பார்வையிட்டனர்.

விழாவிற்குத் தலைமை வகித்துக் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் பேசுகையில், "உலக மக்கள் தொடர்பை நிலை நாட்டவும், ஒருவருக்கொருவர் உறுதுணை புரிந்து கொள்ளவும், ஒருவரையொருவர் தெரிந்து கொள்ளவும் பயன்படும் வகையில் இந் நகரம் உருவாக்கப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் முயற்சி வரவேற்கத் தக்கதாகும்.

"மனிதன் சந்திர மண்டலம் சென்று அது பற்றி அறிந்து வந்திருக்கிறான். இன்னும் இயற்கையின் மூலப் பொருட்களையெல்லாம் அறிந்து கொண்டிருக்கிறான். ஆனால் உலகத்திலுள்ள மனிதன் தன்னைத்தானே இன்னும் புரிந்து கொள்ளவில்லை."

"தனக்குப் பக்கத்தில் இருப்பவர்களை—ஊரில் இருப்பவர்களைப் புரிந்து கொள்வதில் அவன் வெற்றி பெறவில்லை."

"மனித சமுதாயத்தில் நல்லுறவு ஏற்படச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந் நகரம் உருவாக்கப்படுகிறது" என்று குறிப்பிட்டார்கள்.

தமிழக அரங்கத்திற்கான அடிக்கல் நாட்டி முதல்வர் உரை ஆற்றுகையில்,

"ஆரோவில் என்றால் பிரெஞ்சு மொழியில் 'புதிய நகர்' அல்லது 'புதிய வாழ்வு உதயம்' என்று பொருள்.

'ஆரோ' என்றால் உதயம் என்றும் 'வில்' என்றால் வாழ்வு பொலிகின்ற ஒரு புதிய நகரம் உதயம் என்றும் குறிப்பிட்டார்கள்.

"ஆங்கிலத்தில் 'ஆரோ' என்றால் 'அம்பு' என்பர். தமிழில் 'வில்' என்றால் உங்களுக்குப் பொருள் சொல்லத் தேவையில்லை; வில்லிலிருந்து அம்பு புறப்பட்டால் அதன்வேகத்தை எப்படி நாம்காண முடிகிறதோ அதைப்போல் இந்த நகரத்திலே புது வாழ்வை நோக்கிச் செயல் வீரர்கள் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப்போல் பணியாற்றுகின்ற காட்சியை நான் காலையிலிருந்து இதுவரை கண்டு களித்தேன்."



"ஆரம்பத்தில், இப் பகுதி மக்கள்—இந் நகரம் இங்கு உதயமாவது தங்களுக்குவாழ்க்கையிலே ஏதாவது இடையூறு ஏற்படுத்துமோ—இந்த நகரம் இங்கு எழுகின்ற காரணத்தினால் வாழ்வு பாதிக்கப்படுமோ என்கின்ற சந்தேகத்திற்கு ஆளானார்கள் என்பது உண்மை. ஆனால், இன்றைய தினம் அந்த மக்களிலே பெரும்பாலானவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கின்ற காட்சியை நான் காணுகின்றேன்".

"ஒரு இணைப்பு—அதாவது ஒரு சங்கமம் மாநிலத்துக்கு மாநிலம் அல்ல—நாட்டுக்கு நாடு—உலகத்திலே இருக்கும் பல் வேறு நாடுகளுக்கும் இடையே இங்கே உருவாகிறது. அந்த இணைப்புக்கு ஒரு அடையாளச் சின்னமாக விளங்குகின்ற தமிழ் நாடு அரங்க விழாவில் இன்று நாங்கள் பங்கேற்கிறோம்.

"நாங்கள் உலக அளவிலே கூட இணைப்பை விரும்புகிறவர்கள்—இணையாமல் இருக்கிற தன்மையை எந்த நேரத்திலும் நாங்கள் விரும்பாதவர்கள். நாங்கள் என்றைக்கும் உலக அரங்கத்திலே இணைப்பை விரும்புகிறவர்கள்.

"இங்கே 19 அரங்குகள் இந்தியப் பேரரங்கு என்கிற பெயரில்—கட்டப்பட இருக்கின்றன. பத்தொன்பதையும் ஒன்றாகச் சேர்த்து பாரத் நிவாஸ் என்று இங்கே கட்டவில்லை. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு அரங்கு என்று தனித் தனியாகக் கட்டி முடிவாக பாரத் நிவாஸ் என்று—இந்தியப் பேரரங்கம் என்று பெயர் வைக்கிறார்கள்."—என எடுத்துக் கூறினார்கள்.

ஆரோவில் நகரில் தமிழகத்திற்கெனத் தனி அரங்கம் ஒன்றினை உருவாக்கும் பணியைத் துவங்கி இந்தத் துறையிலும் ஏனைய மாநிலங்களுக்குத் தமிழகம் வழி காட்டியது. தமிழர்களின் கலை, இலக்கியம், கலாச்சாரம், பண்பாடு முதலியவைகளைக் கொண்டு மனித குல ஒற்றுமைக்கும், உலக ஒருமைப் பாட்டுக்கும் தமிழக அரங்கம் வழி காட்டும் என்பது திண்ணம். இந் நகரம் உலக ஒருமைப்பாட்டை எடுத்துக் காட்டுகின்ற புதுமைப் படைப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை!

—'ஆயிரம்'



# இனிப்புக் காவியம்!





'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை' என்பார்கள். ஆனால், நாம் ஆலை உள்ள ஊருக்கே போய் வருவோமா?

சென்னையிலிருந்து தெற்கே 45 மைல் தொலைவில் செங்கை மாவட்டத்தில் பாலாற்றங் கரையிலே அமைந்திருக்கும் படாளம் எனும் சிற்றூரில் மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை பாங்காய் (கரும்புப் பாகாய்) அமைந்துள்ளது!

இந்த ஆலை 1955-ஆம் ஆண்டில் பதிவு செய்யப் பட்டது. ஆலையின் முதல் அரைவை 18-3-1961-ல் துவக்கப்பட்டது. ஆரம்பத்தில் 642 அங்கத்தினர்களையும், ரூ. 40 இலட்சம் அதிகாரம் பெற்ற மூலதனத்துடனும் பதிவு செய்யப்பட்ட இந்நிறுவனம் இன்று ஐயாயிரத்துக்கு மேற்பட்ட அங்கத்தினர்களையும், ஒரு கோடி ரூபாய்க்கு மேல் மூலதனமும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது, என்றால் இதன் வளர்ச்சி நன்கு விளங்கும். இந்தச் சர்க்கரை ஆலையில் தமிழக அரசு பங்கு மூலதனம் ரூ. 30 இலட்சம் முதலீடு செய்துள்ளது.

இவ்வாலையை இப்பகுதியில் தொடங்குவதற்கு முன் இப்பகுதி விவசாயிகளுக்குக் கரும்பு பயிரிடுதல் என்பது முற்றிலும் ஒரு புதிய விஷயமாகவே இருந்தது. எனவே, ஒரு சர்க்கரை ஆலையை இப்பகுதியில் நிறுவி, இப்பகுதி மக்களுக்குக் கரும்பு பயிரிடுவதில் ஆர்வத்தை ஏற்படுத்தியதோடு, மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சர்க்கரையை உற்பத்தி செய்யும் தொழிலை வெற்றிகரமாகச் செய்து வரும் பெருமை இவ்வாலைக்கு உண்டு என்று நாம் உறுதியாகச் சொல்ல முடியும்.

செங்கை மாவட்டத்தில் மதுராந்தகம், செங்கை, காஞ்சி ஆகிய வட்டங்களிலும் உத்திரமேரூர் துணை வட்டத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்தில் ஒரு பகுதியிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் வந்தவாசி, செய்யார் ஆகிய வட்டங்களிலும் பயிரிடப்படும் கரும்பு இவ்வாலையின் அரைவைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பெருமளவில் பயன் தரும் கோ. 6304 ரகக் கரும்பைத் தமிழகத்திலேயே அதிக அளவு பயிரிடப்பட்டுள்ளது இந்த ஆலைப்பகுதியில்தான்!

துவக்க காலத்தில் நிறுவப்பட்ட ஆலையின் அரைவைத் திறன் நாளொன்றுக்கு 800 லிருந்து 1,000 டன் ஆகும். தற்போது அரைவைத்திறனை நாளொன்றுக்கு 1,200 டன்களாக உயர்த்தப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன; மேலும் அரைவைத்திறனை நாளொன்றுக்கு 1,500 மெட்ரிக் டன்களாக உயர்த்துவதற்கான திட்டமும் பரிசிலனையில் உள்ளது.

சர்க்கரைக்காகப் பையைத் தூக்கிக் கொண்டு இங்குமங்கும் ஓடுகிறோம்—வாங்குகிறோம் — சுவைக்கிறோம். ஆனால், சர்க்கரை ஆலைக்குள் சென்று அது எப்படித் தயாராகிறது என்று பார்த்திருக்கிறோமா? பார்க்கத்தான் விரும்புகிறோமா? வாருங்கள், பார்ப்போம்!

ஆலையினுள் பையப் பையச் செல்கிறோம். (பையுடன் அல்ல!)

இனிப்பின் சுமையைத் தாங்கிக்கொண்டு—கரும்புக் கத்தைகளைச் சுமந்துகொண்டு காத்துக் கொண்டிருக்கும் லாரிகள், ஒவ்வொன்றாகத் தத்தம் கரும்புச் சுமைகளை அகன்ற



கரும்புகளைத் துண்டாக்கும் இயந்திரம்

கால்வாய் போன்ற இடத்தில் கொட்டுகின்றன. கரும்புக் கத்தைகள் அங்குள்ள பட்டைச் செலுத்தி மூலம் சுழலும் கத்திகள் உள்ள ஓர் உருளையின் வழியே எடுத்துச் செல்லப்படுகின்றது. அங்கு ஒரே அளவுள்ள சிறு சிறு துண்டுகளாகக் கரும்புகள் வெட்டப்படுகின்றன. ஒரு நிமிடத்திற்கு 480 முறை சுற்றி வெட்டக்கூடிய திறனுள்ள கத்திகள் இதனுள் உள்ளன. இனி உள்ளே இந்தக் கரும்பு படும்பாட்டைப் பார்ப்போம்!

''உன்னைக் கரும்பைப்போல பிழிந்து விடுவேன்!'' என்று வீரம் பேசுவதைக் கேட்டிருக்கிறும். ஆனால், அந்தக் கரும்பு பிழியப்படுவதைப் பார்த்திருக்கிறோமா?

இங்கே கரும்புத்துண்டுகள் ஆலையின் உள் நுழைந்து அங்குள்ள ஒரு 'ராட்சச' இயந்திரத்தில் சாறு பிழியப்படுகின்றது; எஞ்சிய சாற்றுடன் உள்ள கருப்பஞ் சக்கை பட்டைச் செலுத்தி மூலம் இன்னொரு இயந்திரத்தில் நுழைந்து மறுபடியும் சாறு பிழியப்படுகிறது; ஓரளவு சாறுள்ள சக்கையோ மற்றொரு ஆலைக்குச் செலுத்தப்பட்டு இறுதியாகச் சாறு பிழியப்படுகின்றது. இப்போது கிடைப்பதுதான் வெறுஞ் சக்கைகள். அவற்றை வீணாக்காமல் கொதிகல அடுப்புக்கு எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். இந்தக் கொதிகலன் நீராவி மூலம் ஆலைக்குத் தேவையான மின்சாரமும் உற்பத்தி செய்து கொள்ளப் படுகிறது.

பிழியப்பெற்ற சாறு கருமையாகவும் ஒளி புகாத்தன்மையுடையதாகவும் இருக்கும். இதில் 12 முதல் 16 சதவீதம் வரை சுக்ரோசும், சிறு சதவீதங்களில் குளுக்கோஸ், புருக்டோஸ் முதலிய சர்க்கரை இனங்களும், நிறப்பொருள்களும், நைட்ரஜன் கூட்டுப் பொருள்களும், பசையும், உலோகப் பொருள்களும் இருக்கும். இப்பொருள்களெல்லாம் சாற்றிலுள்ள நீரில் கரைந்திருக்கும். நீரில் கரையாத பொருள்களாகிய நுண்ணிய நார்ப்பொருளும், மெழுகும், களிமண்ணும், வாயுக் குமிழிகளும் சாற்றில் இருக்கும்.

**இந்தச் சாறு எப்படிச் சுத்தம் செய்யப்படுகிறது?**

1,000 காலன் கருப்பஞ் சாற்றுக்கு 2 காலன் வீதம் சுண்ணும்புக் கூழைச் சேர்த்து, அதனுள் கந்தக டையாக்சைடு என்னும் வாயுவையும் செலுத்தப்படுகிறது. பிறகு கொதிக்க வைத்துப் பெரிய தொட்டிக்குள் இந்தச் சாற்றைச் செலுத்துகிருர்கள். சுண்ணும்பானது சாற்றை நடுநிலையாக்கும் தன்மை உடையது. இவ்வாறு அமிலங்களை நடுநிலையாக்காவிட்டால் சாற்றைச் சூடு செய்யும்போது சுக்ரோஸ், மற்ற இரண்டு சர்க்கரைகளாகிய குளுக்கோஸ் ஆகவும் புருக்டோஸ் ஆகவும் மாறிவிடும். இந்தத் தொட்டியில் ஒரு மணி நேரம் சாறு தேக்கி வைக்கப் படுகிறது. இதனுல் கரையாத அழுக்குகள் அப்படியே கீழே படிந்து விடுகின்றன.

தெளிந்த சாருனது பிறகு ஆவியாக்கும் கலத்திற்குள் செலுத்தப்பட்டுச் சூடாக்கப் படுகிறது. இதனுல் நீர் ஆவியாகிச் சாறு இறுகும் தன்மையை அடையும். பிறகு அதில் கரைந்திருக்கும் சுக்ரோஸ் படிகங்களாகப் பிரியும். வாயு மண்டல அழுத்தத்தில் நீரை ஆவியாக்குவதற்குச் சாற்றை 100 டிகிரி வெப்பநிலைக்கு மேல் சூடு செய்ய வேண்டும். அவ்விதம் சூடு செய்தால் சுக்ரோஸ் சிதைந்து பிற பொருள்களாக மாறிவிடும். ஆகவேதான், சாருனது வெற்றிடத்தில் சூடாக்கப்படுகிறது. இதனுல் நீர் குறைந்த வெப்பநிலையில் ஆவியாகும்.

இறுகிய சாறு ஒரு பெரிய கொப்பரைக்குள் செலுத்தப் படுகிறது. இங்குதான் சர்க்கரைப் படிகங்கள் உருவாகின்றன. பின்னர் சர்க்கரைப் படிகங்களிலிருந்து பாகைப் பிரித்தெடுக்கும் 'சுழலும் இயந்திரங்கள்' இயங்குகின்றன. இந்த இயந்திரத்திலிருந்து சர்க்கரை சுடச்சுட வெளிவருகிறது!

இப்படித் தயாராகும் சர்க்கரை பல ரகங்களில் கிடைக்கின்றன. சில சன்னமானவை; சில பருமனுனவை. இந்தச் சர்க்கரை வகைகள் இயந்திரத்தின் உதவியால் பிரித்தெடுக்கப் படுகின்றன. இப்போது சர்க்கரை தயார்! பிறகு சாக்குப் பைகளில் சர்க்கரை நிரப்பப்பட்டு இயந்திரத்தின் உதவியால் நன்கு தைக்கப்படுகின்றது. ஒரு மூட்டை சர்க்கரையின் கொள்ளளவு 100 கிலோ கிராம். சர்க்கரை மூட்டைகள் பெரிய கிடங்கில் அடுக்கி வைக்கப் பட்டு, அவ்வப்போது லாரிகளில் விற்பனைக்காக ஏற்றப் படுகின்றன.

ஒரு நாளைக்கு 800 முதல் 1,200 சர்க்கரை மூட்டைகள் இங்குத் தயாராகின்றன. இதன் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பது என்பது கரும்பின் சத்தைப் பொறுத்ததாகும்.



இங்கே எந்தப் பொருளும் வீணுவதில்லை. கரும்புச் சக்கை காகிதம் செய்ய மைசூருக்கு அனுப்பப்படுகிறது. கழிவுப் பாகு (Molasses) சாராயம் தயாரிக்கவும், பயிர்களுக்குச் செய்கை உரமாகவும், கால்நடைகளுக்குத் தீனியாகவும், எரிபொருளாகவும் பயன்படுகிறது. சுமார் 2800 டன்கள் கழிவுப் பாகைச் சேமித்து வைக்கப் போதுமான இரும்புத் தொட்டி ஒன்று சுமார் ரூ. 4 இலட்சம் செலவில் இங்குக் கட்டப்பட்டுள்ளது.

ஆலையினுள் ஒரு பரிசோதனைக்கூடமும் இருக்கிறது. இங்குக் கரும்பின் தரம், சத்து முதலியவை பரிசோதிக்கப் படுகின்றன. இயந்திரங்கள் ஏதேனும் பழுதடைந்தால் அவற்றைச் சீர்படுத்தவும் இங்கு ஒரு பணிமனை (Work Shop) உள்ளது.

1971-72-ல் 1,33,110 டன் கரும்பைப் பிழிந்து, 12,717 டன் சர்க்கரையை இந்த ஆலை உற்பத்தி செய்தது. முந்திய காலங்களில் பெறப்பட்ட சராசரி சர்க்கரை 8.61 சதவீதமாகும். இப்போது பெறப்பட்ட சராசரி சர்க்கரை 9.55 சதவீதமாகும்.



ஆலையின் ஒரு தோற்றம்



சர்க்கரைப் பாகு தயாரிக்கும் கொதிகலன்.

தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழிலில் கூட்டுறவுத் துறையின் பணி படிப்படியாக அதிகரித்துள்ளது. 1958-59-ஆம் ஆண்டில் இருந்த மொத்தம் 6 ஆலைகளில் ஒன்றுகூடக் கூட்டுறவுத் துறையில் இல்லை. ஆனால் இன்றோ தமிழகத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் 16 ஆலைகளில் 7 ஆலைகள் கூட்டுறவுத்துறையைச் சேர்ந்தவை. இயங்கிக்கொண்டிருக்கும் 16 ஆலைகளின் மொத்த நிறுவப்பட்ட சாறு பிழியும் திறன் நாளொன்றுக்கு 21,840 டன் கரும்பாகும். (உரிமம் வழங்கப்பட்ட திறன் 29,600 டன் ஆகும்).

சர்க்கரைக்கும், நம் நாட்டிற்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதை அறியும்போது நம் எண்ணமெல்லாம் இனிக்கிறது. இந்தியாவில் கரும்பு பயிரிடும் வழக்கம் சுமார் 2,000 ஆண்டுகளாகவே இருந்து வருகிறது என்றும், கரும்புக்குத் தாயகம் இந்தியாதான் என்றும், கரும்புச் சாற்றிலிருந்து சர்க்கரை செய்யும் சர்க்கரைத் தொழில் இந்தியாவில்தான் தோன்றியது என்றும் வரலாற்றுக் குறிப்புகள் நம்மை மகிழ்விக்கின்றன. உலகிலேயே மிக அதிக அளவில் சர்க்கரை உற்பத்தி செய்யும் நாடு எது தெரியுமா? இந்தியாதான்!



ரக வாரியாகச் சர்க்கரை சாக்குப்பைகளில் நிரப்பப்படுகிறது.

எளிதில் சீரணிக்கக்கூடிய இந்தச் சர்க்கரைக்குத்தான் எத்தனை பெயர்கள்! சுக்ரோஸ் குளுக்கோஸ், புருக்டோஸ், லாக்ட்டோஸ், மால்ட்டோஸ் இப்படி இதற்குப் பல பெயர்கள் உள்ளன. குளுக்கோஸ் சுக்ரோசைக் காட்டிலும் இனிப்புக் குறைவானது. மேப்பிள் என்பது ஒருவகை சர்க்கரை. இது மணமுள்ளது. 'ஏம்' என்பது ஜப்பானிய சர்க்கரை. இது டெக்ஸ்ட்ரின் மால்டோஸ் வகையினைச் சேர்ந்தது. சாக்கரின் இனிப்பு மிகுந்தது என்றாலும், இது சர்க்கரை வகையைச் சேர்ந்த தல்ல!

இப்படிச் சர்க்கரையின் பெருமையினைச் சொல்லிக் கொண்டே போகலாம். வெண்மை நிறமான சர்க்கரை நமக்கு எதை உணர்த்துகின்றன? 'வெள்ளை உள்ளம் இருந்தால் மட்டும் போதாது, இனிய சொல்லும் அதிலிருந்து பிறக்க வேண்டும்' என்று அதன் சுவை சொல்லாமல் சொல்கிறதல்லவா?

— பி. வி. ஜி.





பரிசோதனைக் கூடம்






தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்,
'அருள்மனை' 26, ஒயிட்ஸ் ரோடு,
சென்னை-600014.

ஆம்...வகை வகையான பீங்கான் சாமான்கள் மலர்க் கிண்ணங்கள், மற்றும் சுகாதார சாதனங்களையும் மரச் சாமான்களையும் தயாரிக்கும் டான்ஸியில் வாங்கியவை அவை.

விருத்தாசலத்தில் உள்ள டான்ஸி ஸிராமிக்ஸ் உங்களது இல்லத்துக்கு எழில் ஊட்டும் பீங்கான் பொருட்களை தயாரிக்கிறது.

விருத்தாசலத்தில் உள்ள டான்ஸி ஸ்டோன்வேர் பைப்ஸ் உப்பு மெருகிட்ட குழாய் வகைகளை தயாரிக்கிறது.

வீட்டுக்கும், காரியாலயத்திற்கும் தேவையான மரச்சாமான்கள் கடலூரில் உள்ள டான்ஸி பர்னிச்சா மற்றும் ஸ்மித்தி தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன.

*எழில் மிக்க பொருட்கள் வாங்க ஏற்ற இடம் 'டான்ஸி'.*

**ஆகா! என்ன எழில்!**





TA SI

மனித வாழ்க்கையில் மாறுதல் வேகம் தான் இன்றைய வாழ்வுக்கெல்லாம் அடிப்படையாக உள்ளது. என்னுடைய வாழ் நாளிலேயே வியப்பூட்டத்தக்க பெரு மாறுதல்களை நான் கண்டுவிட்டேன்; அணுயுகப் போர் வெற்றிக்கு இரையாகி மனிதப் பூண்டே அற்றுப் போனுலொழிய, அடுத்த தலைமுறைக்குள்ளாக ஏற்படக்கூடிய மாறுதல்களை இன்னும் வேகமானவையாக இருக்கும் என்பது என் உறுதியான நம்பிக்கை.



கடந்த கால இந்திய சுதந்தரக் கிளர்ச்சியையும் இன்று அரசு மேற்கொண்டு நடைபெறும் ஆக்க வழிப்பட்ட செயல்களையும், முற்றிலும் ஒரே மாதிரியானவையாக இணைத்துக் காட்ட முடியாது. ஏனெனில் காந்தியடிகளின் இயக்கம், அந்நிய அரசு ஒன்றைக் கீழிறக்குவதற்காக நடைபெற்றது; ஆனுல், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் முற்றிலும் ஆக்க வழிப்பட்டவை. ஆதலால், ஒருவகையில் இது மிகவும் கடினமானது. ஆயினும் ஒரு நாட்டை வளர்ச்சிப் பாதையில் உருவாக்கும் பெருமை மிக்க பணி.



நம்முடைய இலட்சியம் என்ன? பொதுவாகச் சொன்னுல், நம்முடைய மக்களுக்கும் நாட்டுக்கும் நன்மை தருவதற்காக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும். உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இது நாம் மேற்கொண்டுள்ள முயற்சி. நம்முடைய இலட்சியங்களை அடைவதற்கு உதவக் கூடிய உயர்தரமான சமூக அமைப்பை உருவாக்க நாம் முயன்று வருகிறோம்.



சமுதாயத்தில் பாதுகாப்புணர்சி (Security) வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். ஆனுல், அந்தச் சமுதாயப் பாதுகாப்புணர்ச்சி என்பது முன்னேற்றப் பாதையில் ஓரளவு கடந்த பிறகுதான் உண்டாகும். இல்லையென்றுல், சமுதாயப் பாதுகாப்பும் இராது, எந்தவகை முன்னேற்றமும் இராது.





நம் நாட்டிலுள்ள ஏராளமான விவசாயிகளுக்குச் சில கொள்கைகளை எடுத்துக்காட்டி ஊக்கம் ஊட்டிவிட முடியாது. கொள்கைகள் எவ்வளவுதான் நல்லவையாக இருந்தாலும் கொள்கைகளைக் காட்டி ஊக்கமூட்ட முடியாது. தம்மையே நம்பியிருக்கும் சிறப்பைப் பற்றி புரிந்துகொண்டும் ஒத்துழைக்கவும் அந்த உணர்ச்சியை வளர்க்கவும் அவர்களைப் பழக்குவதிலேதான் நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.



பலாத்கார முறையால் எந்தப் பெருஞ் சிக்கலையும் இன்று தீர்த்து விட முடியாது. பலாத்காரம் என்பது மிகக் கோரமான அழிவுத்தன்மை உடையதாகி விட்டது. நடைமுறைச் சாத்தியக் கூறு எது என்ற பார்வையிலே வன்முறை ஒழிப்பு என்பது ஒழுங்கு முறைக்கு ஒரு புது வலிமை ஊட்டியுள்ளது.



நம்முடைய நாடு பெரிய நாடு. இப்படி இருப்பதிலே பெருமையும் உண்டு. தொல்லையும் உண்டு. பெருஞ் சாதனைகளைப் பெரிய நாடுகள்தான் செய்ய முடியும் என்பதிலே நமக்குப் பெருமை உண்டு; தொல்லை என்னவென்றுல் ஒரு பெரும் மக்கள் கூட்டத்தை நெறிப்படுத்தி ஒரு குறிப்பிட்ட வழியிலே அனைவருடைய சக்தியையும் ஒருமுகப்படுத்துதல், அவ்வளவு எளியது அன்று. இத்தகைய முக்கியமான தன்மைகளைப் புரிந்து கொள்ளும் வரையில், இந்தப் பணியை நாம் மேற்கொள்வது கடினம்.



கிராமங்களில் எல்லா வசதிகளும் இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். இந்திய நாட்டின் பிறபகுதிகளை விடுத்து நெடுங்காலத்துக்குக் கிராமங்கள் தனியே ஒதுங்கிக் கிடக்க வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. இந்தியா மாறுதல் அடைய அடைய, எல்லா வகையான சக்திகளும் கிராமங்களைக் கவர்ந்து பற்றும் அந்தச் சூழ்நிலை வரவேற்கத் தகுந்த ஒரு மாறுதல் ஆகும்.



திரள் திரளாக உள்ள மக்களின் கூட்டத்துக்கு நம்பிக்கையூட்டுவதும், தங்களைத் தாங்களே சார்ந்திருக்கச் செய்வதும், தன்னம்பிக்கை தருவதும், கடுமையான உழைப்பாலும் ஒத்துழைப்பாலும் நம் குறிக்கோளை அடைவதற்கான வழி வகுப்பதும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் கடமைகளாகும்.

# நேருவின் மொழிகள்



நாம் நம் நாட்டு வறுமையை ஒழித்து மக்களின் நிலையை உயர்த்த வேண்டும். நம்முடைய சமுதாயத்தின் ஒரு பகுதியை மட்டும் வளப்படுத்துவது, நம் குறிக்கோளன்று. நம் மக்கள் எப்படி முன்னேற முடியும் என்று நாம் பார்க்க வேண்டும். இந்தச் சாதனையைச் சட்டத்தால் சாதிக்க முடியாது. 'இந்த நாடு முன்னேறியாக வேண்டும்' என்றும், 'உடல் வலிமை உள்ளோர்க்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டும்' என்றும் நம் பாராளுமன்றம் சட்டம் நிறைவேற்றிவிடுவதாலேயே எதுவும் நடந்து விடாது. அதிகபட்சமாகப் பார்த்தால், சமுதாயத்தில் உள்ள தடைகளைச் சட்டத்தால் நீக்கலாம்; ஆனுல் உண்மையில் செயலை நிறைவேற்றுவது மக்களே! திட்டச் செயல்களில் மக்களை ஈடுபடச் செய்வதற்கு நாம் அவர்களுக்கு ஊக்கமூட்டி, அவர்களுடைய உள்ளத்தில் ஆர்வக் கனலைத் தூண்டிவிட வேண்டும். எதிர்காலம் பற்றிய முழுச் சித்திரத்தை அவர்களுக்குப் புலப்படுத்த வேண்டும்; அது அவர்களுக்கு வழி காட்டும்; எழுச்சிஊட்டும்.



வரலாற்றின் நெடும் பாதையிலே நாம் கண்ட மேடு பள்ளங்களும், நாம் அனுபவித்த இன்ப துன்பங்களும், நாம் பெற்ற வெற்றி தோல்விகளும் எல்லாம் சேர்ந்துதான் 'இந்தியா' என்று நாம் சொல்லும் ஒரு தேசம் உருவாகியிருக்கிறது.



சமுதாய நீதி (Social justice) வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். 'நான் ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்க வேண்டும்' என்று நினைத்து, 'விதி', 'தலையெழுத்து' என்றெல்லாம் நினைத்துப் பேசுகிற பேச்சை இன்று மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே, செல்வர்க்கும் வறியவர்க்கும் இடையுள்ள வேற்றுமைகளை நீக்க முயல்வது தவிர வேறு வழி இல்லை. எல்லோருக்கும் சம வாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் முயலத்தான் வேண்டும்.

வெளியார் உதவி பெற்றே எந்த நாடும் முன்னேறிவிட முடியாது என்பதை மறவாதீர்கள். தன்னுடைய சொந்த வலிமையாலும் உழைப்பாலும்தான் ஒரு நாடு முன்னேறும். இன்னொரு மனிதனுடைய வலிமையைக் கொண்டு நம்முடைய வேலையை எப்படி முடிக்க முடியும்? இன்னொருவனின் வலிமையை நம்பி நாம் எப்படிப் போரிலே வெற்றி பெற முடியும்? நம் வலிமைக்குச் சோதனையாக அமைந்துள்ளது நாம் மேற்கொள்ளும் கடமை. ஆகவே, நம் நாடு களிப்பும் வளமும் கொண்ட நாடாக ஆகும் வகையில் இந்தப் பணியைத் தொடங்கி, ஊக்கத்தோடு உழைப்போமாக!

பாதுகாப்பு என்பது போர்முனையில் போர் வீரர்கள் செய்யும் வேலைமட்டுமல்ல; நம்முடைய உற்பத்தியை அதிகமாகப் பெருக்குவதும் பாதுகாப்பு வேலைதான். உற்பத்தியைப் பெருக்குவதற்காக விவசாயத்தில் புதுமுறைகளை நாம் கையாள வேண்டும்.



ஆணைகள் பிறப்பித்துச் செல்வத்தை உண்டாக்கி விட முடியாது; உழைப்புத்தான் செல்வத்தைப் படைக்கும்.

''என்னைப் பொறுத்தவரையில் வெளிப்படையாகவே சொல்லுகிறேன்—இன்றுள்ள இந்தியக் கிராமம் எனக்கு எவ்வகையிலும் கவர்ச்சி தருவதாக இல்லை. அது அடியோடு மாற வேண்டும். படிப்படியேதான் மாற வேண்டும்; ஆனுல் அடியோடு மாற வேண்டும்; இந்தியக் கிராமத்தின் பின் தங்கிய நிலையெல்லாம் நாம் ஏன் புகழ வேண்டும் என்பது எனக்கு விளங்கவில்லை. நகரத்து மனிதனைவிட நாட்டுப்புறத்து விவசாயி சிறந்தவன் என்பதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். அது உண்மைதான். ஆனுல், அவன் வாழ்க்கையிலே பின் தங்கிக் கிடக்கின்றனே! அவனை அதே பின் தங்கிய நிலையிலே ஏன் வைத்திருக்க வேண்டும்?''



சில சமயங்களில் நாம் திட்டங்கள் வகுக்கிறோம்; ஆனுல், போதிய அளவு வேகமாக அவற்றை நிறைவேற்றுவதில்லை. இன்று நம் முன் எழுகின்ற துன்பங்கள் எவ்வளவோ உண்டு; இப்படிப்பட்ட கஷ்டங்கள் தொடர்ந்து இருந்து கொண்டுதான் இருக்கும். இந்தத் துன்பங்களைப் பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், நாம் முன்னேறுவதன் விளைவாகவே இந்தத் துன்பங்கள் ஏற்பட்டுள்ளன என்பதை உணரலாம். ஆகையால், இந்தத் துன்பங்களைக் கண்டு நாம் தளர வேண்டியதில்லை. மேலும் முன்னேறுவதற்கான அறைகூவல்களாக அவை அமையவேண்டும்.





உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் ஒரே மாதிரியான கொள்கை பொருந்தும் என்று நான் சொல்லவில்லை. பொதுவான சில கொள்கைகள் இருக்கலாம். ஆனுல், அந்தந்த நாட்டின் உண்மைகளையும் நிலைகளையும் அவ்வவற்றுக்குரிய முறையிலே தான் மதிப்பிட வேண்டும்; ஒரு நாட்டிலுள்ள எதையாவது கொணர்ந்து, பொருந்தாத நிலையிலே இன்னொரு நாட்டின்மீது திணிக்கக்கூடாது!



# பயன்தரும் பால்

இல. பழனியப்பன்

பால் என்றாலே நமக்கு உடன் நினைவு வருவது, இனிமைதானே! இனிமை தரும் பால் எல்லாவற்றாலும் நம் வாழ்வில் பயன்படுகிறது. பிறந்த குழந்தை குவா குவா என்று குரலிடுவதே தாய்ப் பாலுக்காகத்தான். பால் ஒன்று மட்டுமே மனித இனம் மட்டுமின்றிப் பறவை, விலங்கு ஆகிய அனைத்து உயிரினங்களின் குழந்தைப் பருவ நிலையில் பயன்படும் முழு உணவாகும். எல்லா வயதினரும், எல்லாப் பருவத்தினரும் தங்கு தடையின்றி ஏற்றுக் கொள்ளுவதும் பாலை மட்டுமே உடல் நலம் குன்றியோரும் உட்கொள்ளும் உணவு பாலே யாகும். பாலும் பாலைப் பயன்படுத்தித் தயாரிக்கப் படும் உணவுப் பொருட்களும் நம் அன்றாடக் கட்டாயத் தேவைப் பொருள்கள்.

நாம் பாலைப் பலவகையில் உட்கொள்ளுகிறோம். பாலாகக் குடிக்கிறோம். தயிராக்கிச் சுவை பார்க்கவும் தயங்குவதில்லை. நெய்யாகவும், வெண்ணெய் ஆகவும் பாலாடைக் கட்டியாகவும் உட்கொள்ளுகிறோம். இவை எல்லாமே நல்ல ஊட்டச் சத்துணவுகளேயாகும்.

பொதுவாக, நாம் பசும் பாலும் எருமைப்பாலுமே அன்றாடம் உபயோகப்படுத்தினாலும் இன்றும் கிராமப் புறங்களில் ஆட்டுப்பால் ஒரு முக்கிய உணவுப் பொருளாகத் திகழ்கிறது. காந்தியடிகள் நாள்தோறும் ஆட்டுப்பால் உட்கொண்டமை நினைவு கூர்தற்குரியது. பொதுவாக, எல்லாப் பாலிலும் குறிப்பிட்ட அளவுக்கு எல்லாச் சத்துக்களும் அடங்கியிருந்தாலும், எல்லா வகைப் பாலிலும் ஒவ்வொரு வகைச் சத்தும் வெவ்வேறு அளவில் அடங்கியிருக்கிறது. தாய்ப்பாலிலுள்ள புரதச் சத்துப்போல, பசுப்பாலில் இரண்டு மடங்குப் புரதச்சத்து உள்ளது. ஆனால் தாய்ப்பாலை விடப் பசுப்பாலில் இனிப்புச் சத்துச் சற்றுக் குறைந்தே உள்ளது. அதனால்தான் தாய்ப் பாலுக்குப் பதிலாகப் பசுப் பால் உட்கொள்ளும் குழந்தைகளுக்குத் தண்ணீர் கலந்து சர்க்கரை கலந்து நம் தாய்மார்கள் கொடுக்கிறார்கள். அவ்வாறே எருமைப் பாலில் பசுப்பாலைப் போல் இரு மடங்குக் கொழுப்புச் சத்து உள்ளது. ஆனால் பசுப்பாலுக்கும் ஆட்டுப்பாலுக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை.

பிறந்த குழந்தைகள் பாலை மட்டும் உட்கொண்டு வளர்ச்சியடைவது கண்டு நம்மில் பலர் இன்றளவும் வியப்படைகின்றனர். அதற்குக் காரணம் பால் ஒரு முழுமையான உணவு. நம் உடல் வளர்ச்சிக்குத் தேவையான புரதச்சத்து, கொழுப்புச் சத்து, சர்க்கரைச்சத்து, தாதுச் சத்துப் போன்ற இன்றியமையாத சத்துக்கள் அனைத்தும் பாலில் அடங்கியிருக்கின்றன. உடல் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் சரிவிகித அளவில் அடங்கியிருப்பதுதான் பாலின் தனிச் சிறப்புத் தன்மையாகும். பால் எல்லாருக்கும் பயன்படும். அதில் உள்ள சத்துக்கள் குறையாவண்ணம் உற்பத்தி செய்வதையும், பயன்படுத்துவதையும் பொறுத்தே முழுப் பலன் கிடைக்கும்.

பாலில் அடங்கியிருக்கும் புரதச்சத்து மூன்றிலிருந்து நான்கு சதவீதம் என்றாலும் அதில் அடங்கியிருக்கும் அமினோ ஆசிட்டினால் (Amino Acid) பாலில் அடங்கியிருக்கும் புரதச்சத்து நல்ல பயன் அளிக்கவல்லதாக அமைந்துள்ளது. மரக்கறி உணவு உட்கொள்ளுவோரின் ஊட்டச்சத்துக் குறையினைப் போக்கவல்ல திறன் பால் ஒன்றுக்கு மட்டுமே உள்ளது.

பசுப்பாலில் உள்ள நான்கு சதவீதக் கொழுப்புச் சத்தும், எருமைப் பாலில் உள்ள எட்டு சதவீதக் கொழுப்புச் சத்தும் குறிப்பிடத்தக்கன. பாலில் வைட்டமின் 'ஏ' சத்தும் அடங்கியுள்ளது. ஆனால் பாலிலிருந்து வெண்ணெய்யை நீக்கும்பொழுது வைட்டமின் 'ஏ' வெண்ணெய்யுடன் சேர்ந்து விடுகிறது. ஆனால் மேற்படி 'ஏ' சத்து வேண்டிய அளவில் நல்லவிதமாக அடங்கியிருக்கிறது. மீண்டும் வெண்ணெய்யிலிருந்து நெய் தயாரிக்கும் பொழுது வைட்டமின் 'ஏ' சத்து ஓரளவிற்கு இழப்பு ஏற்படுகிறது. வைட்டமின் 'ஏ' சத்தே நம் கண் பார்வைக்கு அடிப்படை. இளம் வயதிலேயே மாலைக் கண் நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு வைட்டமின் 'ஏ' சத்துத்தான் காரணம். ஆகவே பாலைப் போதிய அளவில் குழந்தைகளுக்குக் கொடுப்பதால் அந்திமாலை என்னும் மாபெரும் நோயினின்றும் அவர்கள் விடுதலை பெறுகின்றனர்.

> ''ஒவ்வொரு மனிதனும், தன்னைப் பொறுத்தவரையில் ஓர் உலகமாக வாழ்கிறான்; ஒரு மனிதனின் மரணம் என்பது, உலகத்தின் மரணமாகும்.''
>
> —லியோ டால்ஸ்டாய்

நம் கண்களையும், தோலையும் நல்ல முறையில் வைத்துக் கொள்ள அடிப்படையான ரிபோ – ப்ளோவின் (Ribo flovin) என்னும் சத்து அடங்கிய 'பி' வைட்டமினும் பாலில் அடங்கியுள்ளது. ஆனால் பாலைச் சூரிய ஒளியில் திறந்தபடி வைத்திருந்தால் இந்தச் சத்தை நாம் பாலிலிருந்து இழக்க நேரிடும். இந்நிலையினைப் போக்க எப்பொழுதும் பால் பாத்திரங்களும், புட்டிகளும் மூடி வைக்கப்பட்டிருப்பது மிகவும் அவசியம்.

பாலில் இருக்கும் குறைந்த அளவு வைட்டமின் 'சி' சத்தும் பாலைக் கொதிக்க வைக்கும்போது போய்விடுகிறது. ஆகவே, குழந்தைகளுக்குப் பாலுடன், பழச் சாறுகளையும் அடிக்கடி கொடுத்து வருவதன் மூலம் வைட்டமின் 'சி' சத்து போதுமான அளவு கிடைக்க வழி ஏற்படும்.

நம் எலும்பு வளர்ச்சிக்குத் தேவையான சுண்ணாம்புச் சத்தும் பாலில் அடங்கியிருக்கிறது. இவ்வாறு பாலில் ஓரளவிற்கு எல்லாச் சத்துக்களும் அமைந்திருப்பதால் தான் பால் ஒரு முழுமையான சத்துணவாக அனைவருக்கும் பயன்படுகிறது.

பாலை எப்படி உட்கொள்வது? தயிராக உட்கொள்ளலாமா? அல்லது தனிப் பாலாக மட்டும்தான் உட்கொள்ளவேண்டுமா? இந்தச் சந்தேகம் நம்மில் பலருக்கு இன்றளவும் இருக்கிறது. இந்தச் சந்தேகத்திற்கு இடமேயில்லை. ஏனெனில் பொதுவாக, எப்படி உட்கொண்டாலும் எந்தச் சத்தும் வீணாவதில்லை.

பாலைப் பாதுகாக்கும் முறையின் அவசியத்தை அடிப்படையாகக் கொண்டே பால் நம் நாட்டில் மங்கலப் பொருளாகக் கருதப்பட்டு உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. பால் பாதுகாப்புக் குறைவினால் காசநோய், டைபாயிடு, வயிற்றுப்போக்கு, டிப்தீரியா, தொண்டைப் புண் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. இந் நோய்களுக்கு அடிப்படைக் காரணமான நோய்க்கிருமிகள் பாலில் கலக்காமல் பாதுகாப்பதே தலையாய கடமையாகிறது. குறிப்பாக நோய் வாய்ப்பட்ட பசுக்களாலும், பால்கறக்கும் இடங்களின் தூய்மையற்ற தன்மையாலுமே பெரும்பாலான நோய்கள் பரவுகின்றன. பசுக்களை நாள்தோறும் தேய்த்துக் குளிப்பாட்டுவதும், பால் கறக்கு முன் மடியைக் கழுவிச் சுத்தப்படுத்துவதும் மிகவும் அவசியம்.

பால் கறப்பவர்களின் தூய்மைக்குறைவும் சில சமயங்களில் நோய்கள் பரவக் காரணமாக அமைந்துவிடுகிறது. ஈ முதலிய பூச்சிகள் நம்நாட்டில் பாலில் நோய்க் கிருமிகள் பரவ முக்கியக் காரணமாகத் திகழ்கின்றன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாகப் பால் பாத்திரங்களின் பராமரிப்பும் பாதுகாப்பும் மிகவும் கவனிக்க வேண்டிய தொன்றாகும். பாலைக் கறந்த பாத்திரத்திலிருந்து பால் கொண்டு செல்லும் பாத்திரத்திற்கு மாற்றும்பொழுது சுத்தமான துணியில் வடிகட்டுதல் மிகவும் அவசியம். பால் பாத்திரங்களைக் கழுவச் 'சோப்' உபயோகிக்காமல் முதலில் குளிர்ந்த தண்ணீரில் அலசிச் சுத்தப்படுத்திச் சோடா உப்புக் கலந்து தேய்த்துப் பின்னர் வெந்நீரால் கழுவ வேண்டும். குளோரின் டி சோடியம் அல்லது கால்சியம் ஹைபோ குளோரைட் போன்றவைகளைக் கலந்தும் சுத்தப்படுத்தலாம். சுத்தப்படுத்திய பாத்திரங்களை வெய்யிலில் உலர்த்துதல் மிகவும் அவசியமானது. இவ்வாறு பால் உற்பத்தி முதல் பயன்படுத்துதல் வரை அறிவியல் முறையோடு ஒழுங்காகச் செய்தால் பாலின் பலனை நாமும் நம் சமுதாயமும் முழுமையாகத் துய்க்கலாம்.

தமிழ்நாடு பால்வள நிறுவனம் இத்துறையில் மேற்கொண்டு செயலாற்றி வரும் அனைத்துத் திட்டங்களும் நிறைவு பெறும்பொழுது தமிழகத்தில் பாலாறு ஓடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.



## காலணிப் பயன்

தோல் ஏற்றுமதியில் நமது நாடு முன்னணியில் நிற்கிறது. ஆடு, பன்றி ஆகியவற்றின் தோலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வதில் நமது நாட்டுக்கு இணையாக எந்த நாடும் இல்லை. இவ்வளவு ஏற்றுமதி செய்த பிறகும் நமது நாட்டில் செருப்பு, பூட்ஸ் போன்ற காலணிகள் மிகுந்த அளவிலே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் தோலினால் உற்பத்தி செய்யப்படும் காலணிகள் மட்டும் ஏறக்குறைய 172 மில்லியன் இணைகளாகும். தென்கிழக்கு ஆசியாவில் வேறு எந்த நாடும் இந்த அளவு காலணிகளை உற்பத்தி செய்யவில்லை. இவை தவிர ரப்பர், கேன்வாஸ், பிளாஸ்டிக் ஆகியவற்றால் ஆண்டு ஒன்றுக்கு 60 மில்லியன் காலணி இணைகள் தயாராகின்றன. நமது காலணித் தொழிலில் 88 இலட்சம் மக்கள் ஈடுபட்டுள்ளனர். நமது நாட்டில் இயந்திரமயமான மிகப் பெரும் காலணித் தொழிற்சாலைகள் 17 உள்ளன. 7,000 சிறுதொழில் நிறுவனங்கள் உள்ளன. என்றாலும் நமது நாட்டில் 5 பேருக்கு ஒருவர் தான் காலணிகளைப் பயன்படுத்துகிறோம்.







# உலகில் இரண்டு தீவுகள்

டி.என். சீசுப்ரமணியன்

## 18. பாபுவின் கடிதமும் பாவத்தின் விலாசமும்

**ப**ள்ளிப்பருவம் போல் இனிப்பான பருவம் வாழ்நாளில் இல்லையென்பது மனிதன் உழைத்து ஓய்வு பெறும் போது தெரிய முடியும். உதகைப் பள்ளியில் நாலாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த பாபு அறைக்குள் அவனது சகமாணவன் முருகன் வருகிருன். பாபு ஒரே கவலையுடன் அழுதுகொண்டிருக்கிருன்.

''ஏண்டா பாபு அழுகிருய்? தலையணை நனைந்திருக்கிறது. உனக்கு என்ன கவலை?''

''அப்பாவிடமிருந்து லெட்டரே வரவில்லை. அம்மாவும் ரெண்டு வரி லெட்டர் எழுதியிருக்கிருள். ராதைச் சித்திதான் வரிந்து வரிந்து எழுதுகிருள். எனக்குக் கடிதம் எழுதமுடியாத இவங்களுக்கு என்ன வேலை?''

''பெரியவங்க உங்கம்மா டாக்டர். சொந்த ஆசுபத்திரியிருக்கு; வேலை பார்க்கும் ஆசுபத்திரி ஆக ரெண்டு வேலை இருக்குது. வீட்டிலே வேறே நோயாளிகள் வருவாங்க!''

''டிரங்கால் பேசிஞ உடனே முடிச்சு விடுருங்க''.

''அதனுலே என்ன? நீ விவரமாகக் கடிதம் எழுது. அவங்க கஷ்டம் என்னமோ ஏதோ! அதுக்காக நீ அழக்கூடாது. ரைட்! எழுந்து உட்கார். நானே கடிதத்தின் வாசகம் சொல்லுகிறேன் நீ எழுது...''

பாபு அரைகுறை மனத்தோடு எழுந்தான். எழுதத் தொடங்கினன்.

''முதல் கடிதம் அம்மாவுக்கு! அடுத்த கடிதம் அப்பாவுக்கு! உன்னுல் அப்பாவையும், அம்மாவையும் திருத்த முடியும். பெரியவர்கள் அன்புக்குள் அகப்படுவார்கள்". என்று முருகன் சொன்னுன்.

பாபுவுக்குத் துக்கம் போய் விட்டது. முருகனைக் கண்டால் அத்தனை பாசம். திடுமென்று முருகன் கேட்டான்.

''ஏண்டா பாபு! உங்கப்பா கிரிமினல் வக்கீல். உங்கம்மா பெரிய டாக்டர். உங்கள் வீட்டில் இரண்டு கார். இத்தனை பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை நீ..''

''ஆமாம்! உன்னை அடுத்த பெரிய லீவுக்குக் கூட்டிக் கொண்டு போகிறேன்! பட்டணம் பார்க்கலாம்.''

''ஒரு பேச்சுக்குக் கேட்கிறன். ராமனைக் காட்டுக்குப் போன்னு அவனோட அம்மா சொன்னுள்! உன்னைக் காட்டுக்குப் போகச் சொல்லணுமானுல் அம்மா சொல்லுவாளா? அப்பா சொல்லுவாரா?''

''சொல்ல வேண்டிய சந்தர்ப்பம் வந்தால் இரண்டு பேரும் சேர்ந்து சொல்லுவார்கள்.''

''அவ்வளவு ஒற்றுமையான மனசு!''

''எல்லார் அறைக்கும் நீ போகிருய். முருகா பேசுகிருய். உன்னோட அப்பா அம்மாவைப்பத்தி சொல்லேண்டா!

''நான் சொன்னு நீ அழுவே!.''

''அழமாட்டேன்''

''சிரிக்கவே தெரியாத எனக்கு அழத்தெரியாத நீதான் நண்பன். எங்கம்மா அப்பா போல யாரும் இருக்க வேண்டாம்! நீகடிதம் எழுது''.

''நீ சொல்லு''

''உதகையில் டிபன் ஜோராக இருக்கிறது. தண்ணீர் இளநீர் மாதிரி இருக்கிறது. படிப்பும் உயர்வாக இருக்கிறது. வார்டன் சத்தியவான். நான் நன்ருகப் படிக்கிறேன். அடிக்கடி தின்பண்டம் பார்சல் அனுப்பு.....''

நண்பன் முருகன் சொன்னதை 'பாபு' எழுதிக்கொண்டிருந்தான்.

மேற்படி கடிதங்கள் சென்னை அண்ணுமலைபுரத்

துக்கு வந்து சேர்ந்தபோது அங்கிருந்த நிலைமை பரிதாபத்திற்குரிய நிலைமை.

ஒருவாரம் பத்து நாளாக வக்கீல் மணிவாசகன் தன் வீட்டிற்கு வரவில்லை. ராதைக்கும் இது தெரியும்.

''அக்கா அவரிடம் கோபமாக நடந்து கொண்டாயா?''

''இல்லை. என்னை அவர் தண்டித்திருக்கிறார். நான் அவரைத் திருத்தவே — பிழையை நீக்கவே போராடியிருக்கிறேன். அவரிடம் வெறுப்புக் கொண்டதே இல்லை!''

''நேற்று நான் ரோமியோவைக் காரில் பார்த்தேன். கோர்ட்டில் அவரைச் சந்தித்து விவரம் கேட்கச் சொன்னேன்.''

''நம் வீட்டிற்கு அவர் பத்து நாளாக வரவில்லையென்பதைச் சொன்னாயா?''

''அதைச் சொல்லவில்லை. அத்தான் கோபித்துக் கொண்டு எங்கே தங்கியிருக்கிறார் என்றேன். அவர் இன்று போன் செய்வதாகச் சொன்னார்.''

மறுவிநாடி போன் கிணுகிணுத்தது.

''நான்தான் ரோமியோ பேசுகிறேன். குமாரி ராதாவிடம் கொடுங்கள் டாக்டர்.''

''நர்மதை போனை ராதாவிடம் கொடுத்தாள்!

ரோமியோ சுருக்கமாகத் தந்தியடிக்கும் பாணியில் தகவல் சொன்னான்.

''கனகாம்பரத்திற்கு வயதும் வாளிப்பும் இருக்கு. அவளிடம் பிரிச்சுப் போட்ட கூரைக்குப் பிடிச்சு எரிய வைக்கும் நெருப்பும் இருக்கு. உன் அத்தான் கனகாம்பரத்தின் வீட்டில்-காந்திநகரில் நாலாவது கிராஸ் தெருவில் தனிக் குடித்தனம் செய்கிறான்!'' சேதியைச் செவிமடுக்க ராதைக்கு இருந்த துணிச்சல் அதனை நர்மதாவிடம் சொல்ல அந்தத் துணிச்சல் இருக்கவில்லை.

''என்ன சமாச்சாரம் சொல்!''

''நீ கண்ணகியாக மாருமல் காரியவாதியாக நடந்தாக வேண்டும். கொள்ளிக்கட்டையால் கூந்தலைச் சொரிந்த கதையாகிவிட்டது. நீ அத்தானை விரோதிக்க வேண்டாம். உன் விதியை நொந்து கொள்.''

''உன் அத்தானுக்குக் கிடைத்த மாதவி யார்?''

''உனது மாஜி நோயாளி கனகாம்பரம்''

''அவளது முகவரியைக் கொடு''

கொடுத்துத் தொலைத்தாள் ராதை. காரை ஓட்டிக் கொண்டு காந்திநகர் நாலாவது கிராஸ் தெருவை நோக்கிப் புறப்பட்டாள் நர்மதை.

கதவு தாழிடப்பட்டிருந்தது. படபடவென இடித்தாள் டாக்டர் நர்மதை.

''யாரு?''

''நான்தான்!''

''யாருங்க! ஐயா ஐக்கோர்ட்டுக்குப் போயிருக்காங்க''

''உன்னைக் காப்பாற்றின தெய்வம்!''

கதவு திறக்கப்பட்டது. அவள் கோபம் பொங்கியது.

''வஞ்சகியிடம் வரம் கேட்கவந்து நிற்கிறேன். பன்னீரில் குளித்துப் பழரசத்தில் நீந்தும் உன் கையால் விஷம் வாங்க வந்து நிற்கிறேன்.''

''டாக்டரம்மா.....''

''நான் டாக்டரம்மா மட்டுமில்லை! நான் வக்கீலின் மனைவி...''

''நாங்கூட அப்படித்தான்.'

''சீ...உனக்கு வெட்கம் மானம் இல்லை?''

''வாழ்வதிலே என்னம்மா வெட்கம்?''

''இதுவும் ஒரு வாழ்வா? இந்த வாழ்வு ஈனவாழ்வு! என்றோ நீ குடித்த விஷத்தை விட, இங்கு வாழும் வாழ்வு கொடுமையான விஷம். தூ! நீ ஒரு பெண்ணா?''

உள்ளங் குமுறினால் சொற்கள் கற்பாறையாகப் பறக்கும். கடப்பாறையாக இடிக்கும்.

''இந்தாம்மா. அவரு இருக்கும்போது வா. அவருகிட்டே நியாயம் கேள். என்னிடம் எதுவும் பேசாதே!''

''ஏன் பேசமாட்டாய்! நீ விஷம் குடித்தது போலீஸ் வழக்காக மாறினால் உன் வாழ்க்கை கெடும். உன் குடும்பம் பாழ்படும் என்று தடுத்து உன்னைப் பிழைக்கவைத்தேன். உன்னை வழக்காட அழைத்து உதவி செய்தேன். உன் வழக்கை எடுத்துக் கொள்ளச் சொன்னேன்! உன்னையே எடுத்துக் கொண்டார்.....நீ யோசித்துப் பார்.''

''நான் யோசித்துப் பார்த்துதான் இந்த முடிவுக்கு வந்தேன். என்னை ஆதரிக்கிறேன் காப்பாத்தறேன் என்றார். குடியும் குடித்தனமுமாக வைத்தார்.''

''கற்பு நெறி......''

''கற்பு நெறி களவு நெறி அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ கேட்கவேண்டியயதை அவரிடம் கேள்.''

''பழிகாரி! கொலைகாரி!''

''எதையும் கொலைச் சுட்டுப் போம்மா. எய்தவன் இருக்க அம்பை வந்து நோவானேன்?''

''என்ன நெஞ்சழுத்தம்! உன்னையும் சும்மா விடப்போவதில்லை. அவரையும் அவர் வக்கீலுக்குப் பெற்ற சன்னத்தையும் நான் பறிக்காமல் விட மாட்டேன்.''

இந்தச் சமயம் காரில் வந்து இறங்கிய மணிவாசகம் கடைசியாகச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

''வாருங்கள் உங்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்.''

''எங்கள் வீட்டிற்கு டாக்டர் வரும்படியான ஆபத்து யாருக்கும் வரவில்லை!

''இவள் யார்?''

''நீ செய்த அக்கிரம ஆட்சிக்கு இவள் நீ தந்த அச்சாரம். நீ தந்த ஆலவட்டம்.''

''என் இதயத்தை இரக்கமற்ற ஒருத்தியிடம் ஒப்படைத்துவிட்டு எப்படி நான் இருப்பேன்? என் அமிர்த கலசத்தில் விஷப் பாம்பைக் குடியிருக்கவிட மாட்டேன்''

''கதறியும் பயன் இல்லை. நீ டாக்டர்! உயர்ந்தவள்.''

''நீங்கள் பெற்ற பிள்ளை பாபுவின் ஆணையாகக் கேட்கிறேன்!''

''பெற்ற பிள்ளையைவிட நீ பெற்ற வைத்தியப் பட்டத்தைக் கேள்''

''நீங்கள் தொழில் செய்யும் வக்கீல் சன்னத்தின் சாட்சியாக இது நியாயமா?''

''அது தொழிலுக்குரிய சான்று. வாழ்வுக்குரிய சான்று இல்லை.''

''நான் வாதாடவில்லை... எனக்கு வாழ்க்கை கொடுங்கள்.''

''வாழ்க்கை! கடமை பெரிதென்று அஞ்சலையின் காலைத் துண்டித்த கடமைத் தெய்வமே! ஆலைத் தொழிலாளி கொடுப்பாள் உனக்கு வாழ்வு! உன் நேர்மையைக் கேள்—அது கொடுக்கும் உனக்கு வாழ்வு. உன் நியாய உள்ளத்தைக் கேள்—அது கொடுக்கும் உனக்கு வாழ்வு!''

மணிவாசகன் சற்றும் கலங்காமல் கனகாம்பரத்தை அழைத்துக் கொண்டு வீட்டிற்குள் போனான்.

''ஐயோ ஆண் குலமே! நேர்மைக்குப் பாடுபட்டு வைத்தியப் பணி செய்த எனக்கு இதுதான் பரிசா?''

மணிவாசகன் சிரிப்பொலி கேட்கிறது.

''நான் பட்ட அவமானத்திற்கும் நீங்கள் நடத்தும் அவல வாழ்வுக்கும் நான் பழிக்குப்பழி வாங்குவேன். இது ஆருத புண். தீராத பகை. தீர்த்து வைக்க முடியாத கொடுமை.......''

''அம்மணி எதைச் சொல்ல வேண்டுமானாலும் இந்த வீட்டு எல்லைக்கு அப்பால் போய்ப் பேசுக!''

கதவு 'படீ'ரென்று சாத்தப் பட்டது.

காரை எடுத்துக் கொண்டு விரைவாக வீடு திரும்பினாள் டாக்டர் -நர்மதை.

## 19. விவாகரத்து வழக்கு வருமா?

மில் முதலாளி முத்தையா பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தார். படமெடுத்துச் சீறும் பாம்பு போலப் பேசும் நர்மதைக்கு அவர் என்ன சமாதானம் செய்யமுடியும்! சொல்ல முடியும்?

''டாக்டர் நர்மதா! பணம் படைத்தவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு நபர்கள் செய்யும் தவறை உங்கள் கணவர் செய்திருக்கிறார். இது பணத்தினால் வந்து தீரும் நோய்களில் ஒன்று. பொறுமையைக் கடைப்பிடித்தால் இந்த நோய் விரைவில் நீங்கிவிடும்! பணம் படைத்தவர்களும் வாடகை மனைவிகளை உதறிவிடும் சந்தர்ப்பத்தையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். இதற்காக அவசரப்பட்டு நீங்களும் ராஜினாமாக் கடிதம் தந்ததை ஒரு வாரம் வைத்திருக்கிறேன். உங்கள் மனம் ஆறிய பிறகு யோசித்துச் சொல்லுங்கள்''

தலையில் இடிவிழுந்து கபாலமே பிளந்துவிட்ட ஒருவருக்கு இலவம் பஞ்சுத் துகள் விழுந்த மாதிரி அத்தனை சுலபமாகத் தட்டிவிடுகிறார் முத்தையா.

''என் ராஜினாமா கடிதத்தை நீங்கள் ஒப்புக்கொண்டதாக நான் போகிறேன். இதில் உங்கள் சட்ட ஆலோசகருக்கு''

''கொடுக்கமாட்டேன் ! இது உறுதி.''

''அதுபோதும் உங்கள் உதவிக்கு நன்றி. உங்கள் மாப்பிள்ளை ரோமியோ இருக்கிறாரா?''

''வந்ததும் போன் பேசச் சொல்லுகிறேன்.''

''எதற்காக? அவரைத் தூது அனுப்பி, புத்தி சொல்லி கனகாம்பரத்தை விலக்கிவிட எண்ணுகிறீர்களா டாக்டர்?''

''அதுவும் ஒரு யோசனை,''

''பெண் பித்துக்கு வேறு மருந்தும் இல்லை. வேறு வழியும் இல்லை. யார் சொன்னாலும் பிடிவாதமே வலுக்கும். புளியம்பழம் பழுக்கப் பழுக்கத் தானாக ஒட்டாததுபோல தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாததுபோல மணிவாசகன் மனநிலை பக்குவமடைய வேண்டும். உங்கள் வீட்டு ராதை சொன்னாலும் இதைத் தடுக்க முடியாது—''

''எவ்வளவு தீர்க்கமாகச் சொல்லுகிறீர்கள்?''

''பெண்ணுக்கு ஆண் எதிரியன்று. பெண்ணே எதிரி ! பேராண்மை மிக்க ராவணன் யோக்கியன். அவன் சீதையை விரும்பியது யாரால்? யோக்கியன் அயோக்கியன் ஆனது யாரால்? ஒரு பெண்ணும்...அதாவது அவன் உடன் பிறந்த தங்கை. அவன் மனத்திலே சீதையென்னும் காம நெருப்பை மூட்டி வைத்தாள். பெண்ணுக்கு விரோதி பெண் என்பது உலகம் அழியும் வரை உண்மை! பொறுமையுடன் இருங்கள். ஒரு வாரக் காலம் விடுமுறை போட்டுவிட்டு வீட்டில் ஓய்வு பெறுங்கள். அல்லது பாபுவைப் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள். எந்த விநாடியும் நான் ராஜினாமாக் கடிதத்தை ஒப்புக் கொள்ளுவேன். கவலை வேண்டாம்.''

முத்தையா பேச்சில் நழுவிக் கொண்டார். டாக்டர் நர்மதா தன் வீட்டிற்குள் வந்தாள்.

ராதை எந்தவித இடியையும் தாங்கி நிற்கும் இரும்புத் தூண் போல் நின்றாள்.

''உன் அத்தான் சந்தர்ப்பவாதி.''

''இதை இவ்வளவு காலங் கடந்து நீங்கள் சொல்வதில் அர்த்தமில்லை அக்கா. நோய் தீர்க்கும் மருந்து நமக்குக் கிடைக்கும். அத்தான் அறிவாளி. ஆசைக்கு அடிமைப் பட்டவரல்லர். பழி தீர்ப்பதாக நினைத்துப் பண்பை விட்டு விலகிப் போகிறார். இது ஆண்களுக்கு அழகு, பெண்களுக்கு இழுக்கு!''

''என்ன பேசினாலும் அவர் செய்த குற்றத்திற்குத் தண்டனை தந்தே ஆகவேண்டும்.''

''மன்னிக்கும் சுபாவமும் பிறர் செய்த தீமையை மறக்கும் எண்ணமுடையவர்கள் அமைதியாக வாழமுடியும். உன் கணவன் திசைமாறிப் போனதற்கு நீதான் காரணம். கனகாம்பரத்தை நீ அறிமுகம் செய்தது தவறு. தொழிற்போட்டி நியாயமா

நேரு கண்காட்சி அமைந்துள்ள தீன்மூர்த்தி இல்லத்தில் ஒளி-ஒலிக் காட்சி ஒன்றினை அமைக்கும் திட்டத்திற்கு நேரு நினைவு நிதிக் குழு ஒப்புதல் தெரிவித்திருக்கிறது.

நேருவைக் குறித்து ஒரு செய்திப் படத்தை வெளியிடுவதற்கும் இந்தக் குழு ஆவன செய்து வருகிறது. இந்தச் செய்திப் படத்தில் நேரு அவர்களின் குரலும் அவரது சொற்களும் இடம்பெறும் எனத் தெரிகிறது.

தவறு என்பது பற்றி நான் தீர்ப்புக் கூறவில்லை! அவர் உன்னைத் தேடி மீண்டும் வர வேண்டுமானால் அவர் செய்த தவறுகளை நீ மறக்கக் கற்றுக் கொள்.''

''அவரையே மறக்கக் கற்றுக் கொள்வது அதைவிட மேல்!''

ராதையின் வாக்கு யாவும் விழலுக்கிறைத்த நீரான பட்டுமன்று. நர்மதாவின் முரட்டுப் பெண்மையும் முன்னேற்றக் கருத்துக்களும் மணிவாசகனை மன்னிக்க மறுத்து விட்டன.

''அக்கா! பழமொழி ஒன்று சொல்லுவார்கள். பெண்களிடம் அன்பைக் கொடுத்து வைத்தால் அதனை இரட்டிப்பாக்கிக் கணவனுக்குத் தருவார்களாம். பெண்களிடம் குரோதத்தைக் கொடுத்து வைத்தால் தங்களையே இழந்து விடுவார்களாம். உன்னை நீ இழக்காதே. நர்சிங்ஹோம் போய் வேலையைப் பார். இல்லை ஆசுபத்திரிக்குப் போ.

''நான் ஒருவாரக் காலம் விடுமுறை போட்டிருக்கிறேன்.

''உன் கோபத்திற்கும் குணத்திற்கும் சூடு பிடிக்கலாம், குளுமை வரலாம். உன்னை நம்பிய நோயாளிகள் என்னுவது? உனக்கும் நோயாளிகளுக்கும் என்று முதல் விரோதம்?''

சாட்டை விழுந்தது முதுகில்! என்னை டாக்டராக எண்ணி குடும்பத்தைக் கவனிக்க மறந்தேன். குடும்பத்தை எண்ணி டாக்டர் தொழிலை மறக்கிறேன். நான் நர்சிங்ஹோம் புறப்படுகிறேன்.''

துன்பமடைந்தவர்கள் தனிமையில் இருந்தால் தனிமை அவர்கள் துன்பத்தைப் பெருக்கும். துன்பமடைந்தவர்கள் கடமைக்குள் புகுந்தால் துன்பம் விடைபெற்று இன்பம் எட்டிப்பார்க்கும்!

டாக்டர் நர்மதா சமாதானத்துடன் கிளம்பியவளை அனுப்பிவிட்டு ராதை டெலிபோனைச் சுழற்றினாள். ஏற்கனவே, அவள் ரோமியோவிடம் பேசியிருந்தாள். அத்தான் மணிவாசகன் மனதைத் திருப்ப முயற்சி செய்யும்படிக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

உயர்நீதி மன்றத்து அறையில் ரோமியோ டெலிபோனில் அகப்பட்டான்.

''நான் ரோமியோ பேசுகிறேன். குமாரி ராதை உன் அத்தான் மணிவாசகனை நடுக் கோர்ட்டில் சந்தித்தேன். வாதாடினேன். நீ அழுது புலம்புவதாகச் சொன்னேன். அவன் பிடிவாதமாக இருக்கிறான். இங்கேயுள்ள வக்கீல்கள் பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். டாக்டர் நர்மதா டைவர்ஸ்—விவாகரத்து வழக்குத் தொடரலாம் என்றும் பேசுகிறார்கள். விவகாரம் முற்றிப் போய்விட்டது! தன் சன்னத்தைப் பறிக்கும் உரிமையை டாக்டர் நர்மதாவுக்கு விட்டுக் கொடுக்கப் போகிறானாம்! முட்டாள்! பிடிவாதக்கார முரடன்! என்னால் பயனில்லை. நாளைக்கு பி.எல். பரீட்சை ரிசல்டு வருகிறதாமே''

''வருகிறது!''

''இந்த முறை...''

''வெற்றி கிடைக்கும்''

''உனக்கு மட்டுமல்ல, உன் அக்காள் டாக்டர் நர்மதைக்கும் கிடைக்கும். என் மாமனாரைப் பார்த்தாளாம். அவர் விடுமுறை கொடுத்து இருக்கிறாராம்''

''உங்களால் சமாதானம் செய்ய முடியாது என்றால் வேறு யாரால் முடியும்?''

''டாக்டர் நர்மதா சரணாகதி அடையவேண்டும்''

''விதி யாரைவிட்டது...சண்பகத்தைக் கேட்டதாகச் சொல்லுங்கள்!''

''அவள் வயிற்றுக்குள் இருக்கும் குழந்தையையும் கேட்டதாகச் சொல்லுகிறேன்!''

''பிறக்கப்போகும் குழந்தைக்கும் என் வாழ்த்துக்கள்''

''டைவர்ஸ் வழக்கு நடக்காமல் இருக்க என் வாழ்த்துக்கள்''

டெலிபோனுக்கு இரு பக்கமும் இருவரும் சிரித்தபடி டெலிபோனை வைத்து விட்டார்கள்!

## 20. புதிய வக்கீலுக்கு புதிய வழக்கு

டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கலையின் பொருட்டாகவே கலை வேண்டும் என்று நான் நினைத்திருந்தால் ஒரு சிறு வரி எழுதும் தொல்லையும் மேற்கொண்டிருக்க மாட்டேன்.

— பெர்னாட்ஷா

''ஒருவகையாக நானும் வக்கீலுக்குப் பட்டம் பெற்று விட்டேன்'' ராதை சிரிக்கிறாள் டெலிபோனில்.

''ஒருவகையாக நானும் தாய்மை பெற்றுவிட்டேன்'' செண்பகம் சிரிக்கிறாள்.

டெலிபோனை வைத்த ராதை காலைப் பத்திரிகை எடுக்கிறாள். அவள் எண் இருக்கிறது. அவளது மகிழ்ச்சியைத் தெரிவிக்க டாக்டர் நர்மதை அறைக்குள் போனாள். நர்மதை இரவு முழுவதும் அழுது புலம்பியவள் விடிந்தது கூடத் தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்தாள்.

''அக்கா அக்கா. ஒரு மகிழ்ச்சியான சேதி!''

எழுந்து உட்கார்ந்தாள் நர்மதை.

''என்ன?''

''நான் தேர்வு பெற்று விட்டேன்.''

''என் கனவு நனவாயிற்று. எனக்கு ஒரு வாக்குறுதி கொடு.''

''என்ன வேண்டும்?''

''நான் சொல்வதை நீ செய்வாய் என்று நினைக்கிறேன்!....''

ராதைக்கு இருந்த மகிழ்ச்சியில் வாக்குறுதி கொடுத்தாள். தன்னை வக்கீல் ஆக்கவேண்டுமென்ற அக்காள் எடுத்த முயற்சிக்கு நன்றிக் கடன் செய்தாகவேண்டும். அப்படி என்ன வாக்குறுதி கேட்டு விடுவாள்?''

டாக்டர் நர்மதை வாக்குறுதி பெற்ற மறுவிநாடி, ''நீதான் எனது விவகாரத்தை வழக்காட வேண்டும்!'' என்று சொன்னாள். அது சொல்லா? அணுகுண்டு! இரத்தக் குழாய்களைத் தூள் பண்ணும் கொடிய நோய்க் கிருமி!

''இந்தக் கண்மணிக்கு வழக்காடத் தெரியாது. எனவே, நீதிமன்றத்தில் எனக்காக வழக்காட வேண்டும்!''

''வழக்கில் நான் வெற்றி பெற்றாலும் தோல்வி; தோல்வி பெற்றாலும் தோல்வி! உன்னையும் அத்தானையும் சேர்த்து வைத்த நான் உங்களைப் பிரிக்கவா வக்கீல் பட்டம் பெற்றேன்?''

''நீ வெற்றி பெற்றாலும் எனக்கு வெற்றி. நீ தோல்வியடைந்தாலும் எனக்கு வெற்றி!''

''உங்கள் இருவர் உறவையும் முறிக்கவா நான் சட்டம் படித்தேன்? சட்டப் படிப்பு இல்லாமல் இருவரையும் கூட்டிவைத்தேன்? சட்டப் படிப்பு முடிந்ததும் இருவரையும் பிரித்து வைப்பது தீமை. சூதாட்டம் போன்ற இந்த வெறியாட்டத்துக்கு என்னை ஆளாக்காதே!''

''உன்னை நம்பித்தான் உங்கள் வீட்டிற்குள் வந்தேன் உன்னை நம்பித்தான் வாழ்க்கையைத் துவக்கினேன். உன்னை நம்பித்தான் வழக்கையும் துவக்கப் போகிறேன்.''

டாக்டர் நர்மதா சொல்லச் சொல்ல, ராதைக்கு அழுகை மாலை மாலையாக முத்துக் கோக்கிறது. துக்கம் பலூன் போன்று விரிகிறது. வேதனை தாங்காமல் தன் இதயம் வெடித்துவிடாதா, வெடித்து மடிந்து விடக்கூடாதா என்று அவள் துடித்தாள்.

''ஒரு வெற்றுப் பேப்பர் கொண்டுவா அக்கா''

''அதில் நான் கையெழுத்துப் போடுவேன். எனக்காக நீ ஆஜராகி எனக்கு விடுதலை வாங்கிக் கொடு!''

காகிதத்தில் கையெழுத்து போட்டுக்கொண்டிருக்கும் போது மணிவாசகன் உள்ளே வந்தான்.

ராதைக்குப் பார்வை மறைத்தது. கலங்காத நெஞ்சனாக மணிவாசகன் புன்முறுவலோடு, ''எனது பாராட்டுக்கள் குமாரி ராதை! மன்னிக்கவும். இன்று காலை முதல் வக்கீல் ராதை ஆகிவிட்டீர்கள்! வக்கீல் தேர்வு முடிவு வெளி வந்ததும் முதல் வழக்கும் கிடைத்திருக்கிறது! முதல்தரமான வழக்கு. வழக்கில் உனக்கு வெற்றி கிடைக்கட்டும்!'' என்று கூறினான்.

''அத்தான்....''

''ராதை! வக்கீல்கள் உள்ளத்தில் உறவு-பாசம் ஏதும் இருக்கக்கூடாது. சட்டம் - வெற்றி இவை இரண்டும்தான் இருக்கவேண்டும்.''

''உங்களிடம் ஜூனியராக நான் பணியாற்ற விரும்புகிறேன்.''

''நீ பிரதிவாதியிடம் பேசுகிறாய். இந்த வழக்கு முடிந்து நான் வக்கீல் சன்னத்தை இழக்காமல் இருந்தால் உன் ஆசை பலிக்கும். நீ முதல் வழக்கிலேயே என் சன்னத்தைப் பறித்து விட்டால் நான் வக்கீல் வேலையை விட்டு வேறு வேலைக்குப் போகவேண்டும். உன்னை நான் பாராட்டுவதற்கு வந்தேன்.''

''இருங்கள் .. ஏதாவது உண்ண வேண்டும்.''

''நீ வக்கீல் ஆனதற்கும் எனக்குச் சாப்பிட ஏதாவது கொடு. உனக்கு முதல் வழக்குக் கிடைத்ததற்குத் தித்திப்பு கொண்டுவந்து கொடு!'

கொஞ்சம்கூட துக்கம், கோபம், குரோதம் இல்லாமல் கொஞ்சும் குழந்தை போன்று கல்மிஷமே அறியாத ஞானியாக எவ்வாறு பேச முடிகிறது!

நம் மனசிற்கு உகந்தவர்கள் எதைச் சொன்னாலும் ஏற்போம். நம் மனசிற்குப் பிரியமில்லாதவர்கள் எதைச் சொன்னாலும் மறுப்போம். இது மனித மனத்தின் விசித்திர நிலை. நமக்குப் பிரியமில்லாதவர்கள் பேசுவதிலும் நன்மையைத் தேடும் அனுபவமுள்ள ஞானியாக அமர்ந்திருந்தான்.

அச்சமயம் இரண்டு கடிதங்களைத் தபால்காரன் டாக்டர் நர்மதா கையில்கொடுத்தான்.

கையெழுத்தைப் பார்த்ததும் 'பாபு'வின் கடிதம் என்று தெரிந்துவிட்டது. குமாரி ராதை தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தத் திட்டமிட்டாள்.

முதலில் சாக்லேட் எடுத்து வைத்தாள். பிஸ்கட் எடுத்து வைத்தாள். இரண்டையும் எடுத்து அந்த ராட்சசன் சிரித்தபடி தின்னத் தொடங்கினான்.

''இன்னும் என்ன இருக்கிறது?' என்றும் கேட்டான்.

ஸ்பெயின் நாட்டை ஆண்டு வந்த ஐந்தாம் சார்லஸ் ஒரு வேடிக்கையான செயலைச் செய்தாராம். தமது சாவுக்கு அவரே ஒத்திகை பார்த்துக் கொண்டார். இந்த ஒத்திகையை மாதாகோவில் ஒன்றில் நடத்திப் பார்த்திருக்கிறார். சவப்பெட்டியில் மரணமடைந்தவர் போலப் படுத்துப் பார்த்துக் கொண்டார். இந்த ஒத்திகை அவரைப் பொறுத்த வரையில் வெற்றியாகி விட்டது. எப்படித் தெரியுமா? ஒத்திகை பார்த்த இரண்டு வாரங்களில் அவர் மெய்யாகவே மரணமடைந்துவிட்டார்.

''இந்த வீடே உங்களுடையது; இருங்கள். நான் வெற்றி பெற்றதைப் பாராட்ட வந்த உங்களை வெறும் வயிற்றோடு அனுப்பக்கூடாது!''

''ஏதாவது சூடுபோட்டு அனுப்பப்போகிறாயா?''

அவனும் சிரித்தான். ராதையும் சிரித்தாள். டாக்டர் நர்மதாவுக்கு நெருப்புக்குண்டத்தில் நிற்பது போலிருந்தது. பாபு எழுதிய கடிதம் படித்து முடித்தவள் ''ராதை! இதை அவருக்குக் கொடு'' என்று நீட்டினாள்.

''டைவர்ஸ் லெட்டரா?'' இதைக் கோர்ட்டில் தாக்கல் செய்யும்படிச் சொல்'' என்றான்.

ராதை கடிதத்தை வாங்கியபடி ''அத்தான் இது பாபுவின் கடிதம்'' என்றாள்.

''எந்த பாபு? அது யார்?''

ராதைக்குக் கோபம் வந்தது. அல்லும் பகலும் அனவரதமும் பாபு பாபு என்று உயிரை விட்டீர்களே! மூன்று வயதில் படிக்க அனுப்பினீர்களே! மணிவாசகன் மகன் பாபு. எம். பாபு அனுப்பிய கடிதம். நல்லவேளை நீங்கள் வந்தது.''

''கடிதம் வந்தது பொல்லாத வேளை!''

''தாயே வேண்டாமென்ற பிறகு கன்றுக்கும் அதேகதி தான்''

கடிதத்தைப் பிரித்துப் படிக்

காமல் எட்டி வைத்துவிட்டான்.

''அத்தான் உங்களிடம் நான் எதையும் பிச்சையாக இதுவரை கேட்டது இல்லை. உங்களை இன்று விருந்து சாப்பிடும்படிக் கேட்பேன்!''

''மறுத்தேன் என்று வைத்துக்கொள்-மறுக்கவில்லை. ஒரு பேச்சுக்குச் சொல்லுகிறேன். நீ செய்துள்ள உதவிக்கு நான் கட்டுப்படும் மதயானை.''

''மதம் பிடித்த யானை இல்லை. மனிதர்களுக்குள் யானைபலம் படைத்தவர்கள். இங்கு உணவருந்தவேண்டும் முதலில்!''

''என் கேள்விக்குப் பதில் இல்லையே!''

''மறுத்தால் நாளைகாலை பேப்பரில் மகிழ்ச்சியான சேதி இருக்கும். குமாரி ராதை இறந்து போனாள்— இதையும் ஒரு பேச்சுக்காகச் சொன்னேன்.''

''விளையாட்டுக்காகக் கூட அவ்வாறு சொல்லாதே! உன் முன்னால் நான் குழந்தை! என்னைப் பெற்ற தாயாக உன்னை வணங்குகிறேன்! நீ வாழ வேண்டும். என்னை எதிர்த்து வழக்காடி விட்டு பேரும் புகழும் அடைந்து கொள். கோழையாக இருக்காதே!

கல்லுக்குள்ளிருந்து சிலை பிறப்பது போல, கடினச் சித்தமுள்ள வக்கீல் மணிவாசகன் நெஞ்சுக்குள்ளிருந்து அன்பெனும் அருவி கொட்டத் தொடங்கியது.

இத்தருணம் பார்த்து 'பாபு' வின் கடிதத்தை அவன் கையருகே நகர்த்தினாள் ராதை.

''உணவு வரட்டும். உட்கார்ந்திருக்கிறேன். கடிதம் எனக்கு முக்கியமில்லை என்றான்.

''உங்கள் திருவாக்குக்கு எதிர்வாக்கு இல்லை அத்தான்''

''எனக்குக் காரண குருவும் நீ, காரியகுருவும் நீதான்.

இதெல்லாம் விபரீதப் பேச்சா! விளையாட்டுப் பேச்சா என்று எண்ணாது தனதறைக்குள் போனாள் நர்மதா.

மணிவாசகன் தனதறைக்குள் புகுந்து பல சட்ட நூல்களையும் பல சாமான்களையும் தணிக்கை செய்து கொண்டிருந்தான். அவன் ராதையைப் பாராட்ட வந்ததோடு வேறு முக்கிய நோக்கத்தோடும் வந்திருக்கவேண்டும் என்பதை ராதை அறிந்து கொண்டாள்.

சமையலறை மணம் வீசி வீடெங்கும் வாசனையைப் பரப்பிக்கொண்டிருந்தது.

(வளரும்)

### வெளிநாடு செல்லும் பனைப் பொருள்கள்

தமிழ்நாட்டில் தயாராகும் பனைப் பொருள்களுக்குத் தற்போது வெளிநாட்டில் நல்ல வரவேற்பு ஏற்பட்டு வருகிறது. ஏறக்குறைய ஏழு இலட்ச ரூபாய் மதிப்புள்ள பனைப் பொருள்களுக்கு—குறிப்பாக தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் வகையிலுள்ள பனைநார்த் தூரிகைகளுக்கு வெளிநாட்டிலிருந்து ஆணை வந்துள்ளது.

கனடா நாடு, ஏறக்குறைய 1·5 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பனை ஓலைத் தொப்பிகளுக்குரிய தேவையைத் தெரிவித்திருக்கிறது.

ஹாலந்து நாடு, 3 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பனைநார்த் தூரிகைகளுக்கும், குவைத் நாடு 2·5 இலட்ச ரூபாய் மதிப்புள்ள தூரிகைகளுக்கும் ஆணை கொடுத்துள்ளன.

தமிழ்நாட்டின் பனைப்பொருள்களின் மொத்த மதிப்பீடு தற்பொழுது 4 கோடி ரூபாயாக உள்ளது. வருங்காலத்தில் இது, ரூபாய் 5·5 கோடியை எட்டிவிடும் எனத்தெரிகிறது.

உலகத்தில் ஏறக்குறைய 40 நாடுகள் தொழில்துறைக்காக இந்தியாவிலிருந்து பனைப்பொருள்களை இறக்குமதி செய்கின்றன.

அஞ்சலகத்தில் பணம் சேமித்து வைப்பவர்களை ஊக்குவிக்கும் வகையில், வரும் நிதியாண்டான 1973-74-ல் அதிருஷ்டப் பரிசு கொடுப்பதற்கு இந்திய நாடு முழுதும் ஒரு திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. முதற்பரிசு ரூ. 2·50 இலட்சம். முதல் குலுக்கல் 1974-ஆம் ஆண்டு ஜூலை முதல்நாள் நடை பெறும்.

இந்தத் திட்டத்தைப் பற்றிய மேலும் சில விவரங்கள்:

1973-ஆம் ஆண்டு டிசம்பர் 1-ஆம் நாளிலிருந்து மார்சு 31-ஆம் நாள் முடிய அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் குறைந்தபட்சம் 200 ரூபாய் மீத்து வைத்திருப்பவர்கள் தான் இந்த முதற் குலுக்கலில் கலந்து கொள்ளத் தகுதி படைத்தவர்கள். அடுத்துவரும் ஆண்டுக் குலுக்கல்களில், ஒவ்வொரு நிதியாண்டிலும் ரூ. 200 மீத்து வைத்திருப்பவர்கள் கலந்து கொள்ளும் தகுதி பெறுவார்கள்.

* * *

உடலியல் அல்லது மருந்து என்னும் வகைக்காக வழங்கப்பட்டு வரும் நோபெல் பரிசு இந்த ஆண்டு (1973) ஆஸ்திரியாவைச் சேர்ந்த பேராசிரியர் காரி வான்ஃப்பிரிஸ்க் டாக்டர் கோன்ராடு லோரஞ், நெதர்லாந்தைச் சார்ந்த பேராசிரியர் நிக்கோலஸ் டின்பெர்ஜன் ஆகிய மூன்று விஞ்ஞானிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மூவரும் விலங்குகளின் இயல்புகள் குறித்து ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். 'இயல்புகளின் ஒப்புமை' என்று அழைக்கப்படும் புதிய விஞ்ஞானத்தை இவர்கள் நிறுவியிருக்கிறார்கள்.

தேனீக்களின் மொழியை, தகவல்களைத் தமக்குள் அவை எவ்வாறு தெரிவித்துக் கொள்கின்றன என்ற நுட்பத்தை ஆய்வு செய்து புகழ்பெற்றவர் வான்ஃபிரிஸ்க். பறவைகளின் உணர்வுகளை, பழக்கங்களை 1920-ஆம் ஆண்டிலேயே ஆய்வு செய்தவர் டாக்டர் லோரஞ்.

# புது வாழ்வு பெற முழு வாழ்வு பெற..

## கல்வியமைச்சர் நாவலர் பேருரை

மதுரைப் பல்கலைக்கழக வேந்தர் அவர்களே!

துணைவேந்தர் அவர்களே!

ஆட்சிக் குழு உறுப்பினர்களே!

பட்டம் பெறும் சிறப்பிற்குரியவர்களே!

அன்பு கெழுமிய நண்பர்களே!

அறிவும் ஆற்றலும் சிறக்க, பொலிவும் வலிவும் தங்க, புகழும் பெருமையும் சேர வளர்ந்தோங்கி வரும் மதுரைப் பல்கலைக் கழகத்தின் இவ்வாண்டுப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு, விழாச் சொற்பொழிவாற்றும் பேறு பெற்றமை குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இது எனக்குக் கிட்டிய பெறற்கரிய பெருமையாகக் கருதிப் பெருமிதங் கொள்கிறேன். இந்த அரிய வாய்ப்பினை அன்புடன் வழங்கிய பல்கலைக் கழக வேந்தர் மேதகு திரு கே. கே. ஷா அவர்களுக்கும், பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரைப் பல்கலைக் கழகத்தின் பெருமைக்குரிய டாக்டர் பட்டத்தைப் பெறும் பேற்றினைச் சென்ற ஆண்டு பெற்றேன். எனக்குச் சிறப்பு அளித்து என்னைப் பெருமைப்படுத்திப் பாராட்டிய இந்தப் பல்கலைக் கழகத்திற்கு நான் என்றென்றும் நன்றி காட்டும் கடப்பாடுடையவனாவேன்.

பல்கலைக் கழகம் நிறுவப்பட்டுள்ள மதுரை மாநகர் செந்தமிழ்ச் சிறப்பும், தொன்மைப் புகழும், வரலாற்றுப் பெருமையும், கவின் கலைச் செறிவும் ஒருங்கே கொண்ட முது பெரும் நகரமாகும். மதுரைக்கும் புலமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் அரங்கம் ஏறி அறிமுகப் படுத்தப்பட்ட புலவர்கள் தமிழகமெங்கணும் புகழ்பெற்றுத் திகழ்ந்தார்கள். மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் விளைவித்தவீரம் இமயம் சென்று முட்டியது. மதுரையின் வெண் முத்துக்கள் கடல் கடந்து பல நாடுகள் சென்று விலை போயின. மதுரையின் இசை—நாட்டிய—ஓவிய—சிற்பக் கலைகள் உலகோரின் கண்களையும் காதுகளையும் கருத்துக்களையும் கவர்ந்த வண்ணமிருக்கின்றன. இப்படி அறிவுத்திறனையும், ஆற்றல் திறனையும் வெளிப்படுத்திய மதுரையில் அமைந்த பல்கலைக் கழகம் அறிவிற் சிறந்த, ஆற்றலில் மிக்க மாணவ மாணவியரை உருவாக்கி, உலகிற்கு வழங்கிடும் பொறுப்பினை ஏற்றிருப்பது போற்றுவதற்குரியதாகும்.

### நூலகத் திறப்பு

மதுரைப் பல்கலைக் கழகம் சில ஆண்டுகளுக்கு முன்புதான் தோற்றங் கண்டது என்றாலும், அழகான எடுப்பான பல்கலை நகரை உண்டாக்கி, நாட்டிற்குத் தேவைப்படும் புதிய புதிய பாடத் துறைகளை உருவாக்கி, பகுதி நேரக் கல்வியையும், அஞ்சல் வழிக் கல்வியையும் வளர்த்துக் கல்வி நலம் பெருகப் பாடுபட்டு வருவதை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

பட்டமளிப்பு விழாவோடு ரூ. 11,67,000 மதிப்பீட்டுச் செலவில் கட்டி முடிக்கப்பெற்ற அழகும் அருமையும் வாய்ந்த பல்கலைக் கழக நூலகக் கட்டிடத் திறப்பு விழாவையும் இணைத்து, அதனைத் திறந்து வைக்கும்படி என்னைப் பணித்திருப்பது பெரு மகிழ்ச்சியை அளிக்கிறது. இற்றைப்போது 90,000 நூல்களைக் கொண்ட நூலகம், அடுத்த ஆண்டில் 1,00,000 நூல்களைப் பெறும் நிலையை எய்த இருக்கிறது என்பதும், ரூ. 1,50,000 செலவில் கருத்திதழ்கள் வரவழைக்கப்படுகின்றன என்பதும் பாராட்டுவதற்குரியனவாகும்.



## பட்டதாரிக்கு வாழ்த்து

பல்கலைக் கழகத் தேர்வுகளில் வெற்றி பெற்றுப் பட்டங்கள் பெறுவோர், சிறப்புத் தகுதி பெறுவோர், பதக்கங்கள் பெறுவோர், பரிசுகள் பெறுவோர் ஆகிய அனைவரையும் நான் பாராட்டுவதோடு, அனைவர்க்கும் என் உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டதாரிகளாகும் தகுதி பெற்றுள்ள உங்களில் ஒரு சிலர் மேற்பட்டப் படிப்பில் நாட்டம் செலுத்தக்கூடும் ; பெரும்பாலோர் புதிய வாழ்வு அமைப்பதற்கான வழியை நாடக்கூடும். பலர்க்கு இது கல்விப் பயிற்சியின் முடிவாகவும், கடமை வாழ்வின் துவக்கமாகவும் இருக்கும். சிந்தனை ஆற்றலையும் செயலாற்றலையும் பெறுவதில் இதுவரையில் கவனம் செலுத்தி வந்த மாணவ-மாணவியர்கள், இனி அவற்றைப் பயன்படுத்திச் செய்து முடிக்கும் நிலையைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதுவரையில் பெற்றோர் அரவணைப்பாலும், அரசின் ஆதரவாலும் வளர்க்கப்பட்டு வந்த மாணவ-மாணவியர்கள், இனி தம் அறிவாற்றலிலே நம்பிக்கையும், தம் உழைப்பிலே மதிப்பும் வைத்துத் தம் பெற்றோர்க்கும், தம் நாட்டிற்கும் பாடுபட வேண்டிய கடப்பாடுடையவர்களாக இருக்கிறார்கள். பொறுப்புணர்ச்சியோடும், கடமையுணர்ச்சியோடும் பல்கலைக் கழகத்திலிருந்து புதிய வாழ்வு காணப்போகும் பட்டதாரிகளின் எதிர்காலம் ஒளி மயமாக அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

## அறியாமையை அகற்ற

வளர்ந்த மேலை நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் நமது நாடு எழுச்சி பெற, பல்கலைக் கழகங்கள் உருவாக்கிடும் சிந்தனையாற்றல் திறமையும், செயலாற்றல் திறமையுந் துணைபுரிய வேண்டும். உலகில் வளர்ந்த நாடுகள்—வளரும் நாடுகள்—வளராத நாடுகள் என்று நாடுகள் மூவகையாகக் காட்சியளிக்கின்றன. நமது இந்தியா வளரும் நாடுகள் என்ற வரிசையில் வருகிறது. வளர்ந்த நாடுகள் மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் வெற்றி பெற்று விளங்குகின்றன. வயிறார உண்ண உணவு, மானமார உடுக்க உடை, தேவையார இருக்க இடம், அறிவாரப் பெறக் கல்வி, வாழ வழி, ஓய்வு நேரம், இன்ப நுகர்வுக்கான வசதிகள் போன்றவற்றைப் பெறுவதில் வெற்றி பெற்றுள்ளன. நமது நாடு இப்படிப்பட்ட நிலையைப் பெற முடியவில்லை. பெற வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது; ஆனால் போதுமான முயற்சி இல்லை. வளர்ந்த நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நமது நாடு இயற்கை வளங்களில் குறைவுடையது என்று யாரும் சொல்லி விட முடியாது. சப்பான், செர்மனி, பிரிட்டன், சுவீடன், நார்வே, டென்மார்க்கு, போலந்து, ஆலந்து, சுவிட்சர்லாந்து போன்ற சிறிய நாடுகள் நம்மைவிடக் குறைந்த வளங்களையும்—வசதிகளையும் வைத்துக் கொண்டு நிறைந்த வாழ்வு வாழ்கின்றன. இந்தியாவின் கடல் வளம், காட்டு வளம், நீர் வளம், நில வளம், மலை வளம், கலை வளம், கனிப்பொருள் வளம், காய்கனி வளம், பணப்பயிர் வளம், உணவுப்பயிர் வளம், நாகரிகச் செம்மை, பண்பாட்டுத் தன்மை, மக்கள் பெருக்கம் ஆகியவை குறைவானவை என்று யாரும் சொல்லி விட முடியாது. இவ்வளவு இருந்தும் நாம் இல்லாமையோடு, போதாமையோடு, வறுமையோடு, ஏழ்மையோடு போராட வேண்டியிருக்கிறது. இல்லாமை—போதாமை—வறுமை—ஏழ்மை ஆகியவற்றிற்கு எது அடிப்படையான காரணமாக விளங்குகிறது என்றால், 'அறியாமை' தான். 'கல்லாமை' நீங்காமல் 'அறியாமை' நீங்காது; 'அறியாமை' நீங்காமல் மற்ற குறைபாடுகள் நீங்கா. எனவேதான், இந்தியா விடுதலை பெற்ற பிறகு, கல்வியின் நலனை வளர்ப்பதில் தமிழக அரசு ஆண்டுக்கு ஆண்டு மிகுந்த அக்கறை காட்டி மிகுதியான பொருளைச் செலவிட்டு வருகிறது. தமிழக அரசு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சுமார் ரூ. 15 கோடி செலவிட்ட பொதுக் கல்விக்கு இப்பொழுது சுமார் ரூ. 98 கோடி செலவிடுகிறது. "அறியாமையைக் காட்டிலும் காரிருள் வேறொன்றும் இருக்கமுடியாது" என்று இராபர்ட் கிரீன் இங்கர்சால் குறிப்பிட்டார். அறியாமை இருளை அகற்றி, அறிவு ஒளியினைப் பரப்பிடும் செயலைத்தான், இந்தக் காலத் தலைமுறையினர் தலையாய அறக்கடமையாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

## புதுமைக் கல்வி

கல்வியை முன்னைக் காட்டிலும் பெருக்கிப் (More than before) பரவலாக ஆக்கிடுவதில் முதலில் நாட்டம் செலுத்தினோம். பிறகு முன்னைக் காட்டிலும் சிறந்ததாக (Better than before) ஆக்கிடுவதில் கவனம் செலுத்த வேண்டியவர்களானோம். இப்பொழுது முன்னைக்காட்டிலும் புதுமையுடையதாக (Never than before) ஆக்கிடுவதில் நாட்டம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நமது நாட்டுக் கல்வி முறையில் புரட்சிகரமான மாற்றங்கள் பல செய்யப்படவேண்டும் என்று கல்வி வல்லுநர்களும், அவ்வப்போது அமைக்கப்படும் கல்விக்குழுவினர்களும் புகழ்பெற்ற அரசியல் தலைவர்களும் பல்லாண்டுகளாகக் கூறி வருகின்றனர். 1835-ஆம் ஆண்டில் லார்டு மெக்காலேயால் தரப்பட்ட கல்வித் திட்டம், 1854-இல் கொண்டு வரப்பட்ட 'உட் கல்வித்திட்டம்', 1882-இல் தரப்பட்ட 'கண்டர் குழுவின் திட்டம்' போன்றவற்றின் அடிப்படைக் கொள்கையும், நோக்கமும் மாற்றியமைக்கப்படாமல், நடைமுறைத் திட்டங்களில் மட்டும் சில பல மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பது பலரின் குற்றச்சாட்டாகும். சுவாமி விவேகானந்தர் கூட, "மற்றவர்கள் அன்னிய மொழியில் கூறியுள்ள கருத்துக்களை அப்படியே மனப்பாடம் பண்ணுதல், மூளையில் அவற்றை அடைத்து வைத்தல், அவற்றைக் கொண்டு பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெறுதல் ஆகியவை உண்மையான கல்வி ஆகா" என்று கல்வி முறையைக் கண்டித்துள்ளார். "மாணவர்கள் தாமே தம் சொந்த அறிவைத் துணையாகக் கொண்டு தம் கைகளையும், கால்களையும், காதுகளையும், கண்களையும் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளும் முறையில் அவர்களைப் பயிற்றுவிக்க நாம் மிகவாகப் பணி செய்ய வேண்டியிருக்கிறது" என்று விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார்.





## கல்வியின் நோக்கம்

கல்வியின் நோக்கம், படிக்கத் தெரிதல்—எழுதத் தெரிதல்—கணக்கறிதல் என்பதேயாகும் என்று ஒரு காலத்தில் கொள்ளப்பட்டது. இப்பொழுது அறிவு—ஆற்றல்—உணர்வு ஆகியவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதே கல்வியின் சிறந்த குறிக்கோளாக அமைந்திருக்கிறது. ஒவ்வொருவரிடத்திலும் தேங்கிக் கிடக்கின்ற சிந்தனை அறிவை வளர்த்தல்—செயல் ஆற்றலைப் பெருக்குதல்—உணர்ச்சி வயப்பட்ட மனத்தைப் பண்படுத்திக் கட்டுப்படுத்துதல் கல்வியின் மூலம் காண வேண்டிய விளைவுகளாகும். கல்வி மனிதனிடத்தில் படிந்து கிடக்கும் சிந்தனை அறிவைத் தூண்டி வளரச் செய்கிறது; சிந்தனை அறிவு செயலாற்றல் திறமையை வளர்க்கிறது; இரண்டும் சேர்ந்து இயற்கை வளத்தை வாழ்க்கை வளமாக மாற்றுகின்றன; அவை இன்ப வாழ்க்கையின் தேவைகளை ஈடேற்றிக் கொள்ளப் பயன்படுகின்றன.

## கல்வி முறையில் உள்ள குறைகள்

இப்பொழுதுள்ள கல்வி முறையில் சுட்டிக் காட்டப்படும் குறைபாடுகள் : இது படிப்பாளர்களை உருவாக்குகிறதே அல்லாமல் சிந்தனையாளர்களை உருவாக்கவில்லை; நடந்தவைகளையும், இருந்தவைகளையும் அறிமுகப்படுத்துகிறதே அல்லாமல், இனி நடக்க வேண்டியவைகளையும், இருக்க வேண்டியவைகளையும் சிந்திக்கச் சொல்லுவதில்லை. இது சொல்லித் கொடுத்தவைகளை மனத்தில் தாங்கிக்கொள்ள வேண்டிய சுமை தாங்கிகளாக மாணவர்களை ஆக்குகிறதே அல்லாமல், அவைகளைப் பயன்படுத்தும் ஆற்றலுடையவர்களாக ஆக்குவது இல்லை. கண்ணை மூடிக்கொண்டு மாணவர்களை மனப்பாடம் பண்ணச் செய்கிறதே அல்லாமல், அறிந்து புரிந்து ஏற்றுக் கொள்பவர்களாக ஆயத்தப்படுத்தவில்லை; படித்ததை நாளுக்கு நாள் மறந்து பத்தில் ஒரு பங்கை நினைவில் வைத்துக் கொள்ளத் தக்க நிலைக்கு மாணவர்களைக் கொண்டு வருகிறதே அல்லாமல், படித்ததைப் பயன்படுத்திப் பத்துப் பங்காக அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளும் நிலைக்குக் கொண்டு செல்லவில்லை. இப்பொழுது தேர்வில் வெற்றி பெறுவதுதான் குறிக்கோளாகக் கொள்ளப்படுகிறதே அல்லாமல், சிந்தனையறிவு செயலாற்றலிலே தேர்ச்சி பெறுவது குறிக்கோளாகக் கொள்ளப்படவில்லை. இப்பொழுதுள்ள தேர்வு முறையின் மூலம் மாணவரின் நினைவு ஆற்றல்தான் பெரும் பகுதி அளந்து பார்க்கப்படுகிறதே யல்லாமல், மாணவரின் அறிவுத் திறனையும் ஆற்றல் திறனையும் அளந்து பார்க்கும் முறை கடைப்பிடிக்கப்படவில்லை. மாணவர்கள் என்ன சிந்திக்க வேண்டும், எப்படிச் சிந்திக்க வேண்டும் என்று பயிற்றுவிக்கப்படுவதில்லை. பொதுவான அறிவு வழங்கப்படுகிறதே அல்லாமல் தனித் தனி மனிதனின் தனித் தனி அறிவு ஆற்றல் அவனவன் தன்மைக்கு ஏற்பத் தூண்டிவிடப்படுவதில்லை. அறிவியலறிவு சொல்லிக் கொடுக்கப்படுகிறதே யல்லாமல், அறிவியல் மனப்பான்மை வளர்க்கப்படவில்லை. தொழில்நுட்ப அறிவு சொல்லிக் கொடுக்கப்படுகிறதே யல்லாமல், அது பற்றிய தொழில்களில் நேரிடையாக ஈடுபடுத்தப்படுவதில்லை.







## பயன் தரும் கல்வி

அண்மைக் காலங்களில் சமூக—பொருளாதார—அரசியல்—துறைகளில், குறிக்கோள்—கொள்கை—மதிப்பீடு—செய்முறை ஆகியவற்றில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த மாற்றங்கள் விடும் அறைகூவல்களுக்கு ஏற்ற விடையிறுக்கும் ஆற்றலைக் கல்வி முறை பெறவில்லை; அந்த அளவுக்குக் கல்வி முறையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. சமூக—பொருளாதார—அரசியல் துறைகளில் ஏற்படும் தேவைகளை ஈடுகட்டும் ஆற்றலைக் குறிப்பாக ஒவ்வொருவருக்கும், பொதுவாக எல்லார்க்கும் தரும் கருவியாகக் கல்வி முறை பயன்பட வேண்டும். ஒருவன் எவ்வளவு படித்திருக்கிறான் என்பதற்கு விடை காணுவதை விட, ஒருவன் தான் படித்தபடிப்பை எதற்குப் பயன்படுத்துகிறான்? படித்த படிப்பினால் அவன் பெற்ற நன்மை என்ன? அவன் பிறந்த நாடு பெற்ற பலன் என்ன? என்பவற்றிற்கு விடை காணத்தான் இன்றைய உலகம் துடிக்கிறது.

மேற்கூறப்பட்ட குறைபாடுகளைப்போக்கி, பயன் தரும் புதிய கல்வி முறையை வகுப்பதற்கான நடவடிக்கைகளைத் தமிழகப் பல்கலைக் கழகங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பல்கலைக் கழகங்கள் இந்த வகையில் எடுக்கும் எல்லா நடவடிக்கைகளுக்கும் தமிழக அரசு என்றும் துணை நிற்கும்.

## கல்லூரிகளுக்குச் சுதந்திரம்

எல்லாக் கல்லூரிகளிலும் ஒரே விதமான பாடத் திட்டமும், எல்லாக் கல்லூரிகளுக்கும் பொதுவான ஆண்டு இறுதித் தேர்வு முறையும் இருப்பதால், தனிப்பட்டவர்களின் தனி அறிவாற்றல் திறன் வளர வழியில்லாமல் இருக்கிறது. பல்வேறு கல்லூரிகள் பல்வேறு விதமான அறிவு ஆற்றல் திறன்களை வளர்க்கும் நிலைக்கு விடப்பட்டால், மாணவர்கள் தத்தம் விருப்பத்திற்கேற்ப, தனித் தனி அறிவாற்றல் திறன்களை வளர்த்துக்கொண்டு சிறந்து விளங்க முற்படுவார்கள். மாணவர்களைப் பயிற்றுவிப்பதைப் பொறுத்து முழுச் சுதந்திரத்தைப் பல்கலைக் கழகம் அதனோடு இணைந்துள்ள கல்லூரிகளுக்கு வழங்கலாம். கல்லூரிகளில் கல்வியின் தரம் தாழாமல் பார்த்துக் கொள்ளுதல், நிருவாகத்தில் முறைகேடுகள் ஏற்படாமல் கண்காணித்துக் கொள்ளுதல் போன்ற மேற்பார்வையிடும் பொறுப்புக்களைப் பல்கலைக் கழகம் வைத்துக் கொள்ளலாம். எடுத்த எடுப்பில் எல்லாக் கல்லூரிகளிலும் இந்த மாற்றத்தைச் செய்ய முடியாவிட்டாலும், மேற்பட்டப் படிப்புக் கல்லூரிகளை முன்மாதிரியாகக் கொண்டு இந்த மாற்றத்தைச் செய்ய முயலலாம்.

விதவிதமான வேலைகளுக்கு, நூலறிவோடு தொழிலறிவும் இயைந்த தனித் தனி அறிவாற்றல் மிக்கவர்களை உருவாக்க, கல்லூரிகளுக்கிடையே போட்டியுணர்வு ஏற்பட வேண்டும். கல்லூரிகளும் தாம் பயிற்றுவிக்கும் கல்விக்கு உகந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்; மாணவர்களும் தம் விருப்பத்திற்கேற்ப, தமக்குத் தனி அறிவு ஆற்றல் வழங்கக்கூடிய கல்லூரியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

## தேர்வு முறையில் மாற்றம்

வினாவிற்கு விடை எழுதும் ஆண்டு இறுதித் தேர்வு முறையைக் கல்வி வல்லுநர்கள் அனைவரும் வெறுப்பதைக் காண்கிறோம். குறிப்பிட்ட துறையில் மாணவர்களைச் சிந்திக்கவும், செயலாற்றவும் விட்டு, அவர்களின் அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும் அளந்து பார்க்கும் முறைகள் பல்கலைக் கழகத்தால் கண்டு பிடிக்கப்பட வேண்டும். அந்தப்படி திட்ட வட்டமான செம்மையான அகமதிப்பீட்டு முறை கல்லூரிதோறும், பல்கலைக் கழகம் தோறும் போற்றி வளர்க்கப்பட்டுக் காப்பாற்றப்பட வேண்டும்.



## கல்வியின் தரம் உயர

கல்லூரிகளில் கல்வியின் தரம் உயர வேண்டும் என்ற கருத்து பரவலாகப் பலராலும் பேசப்படுகிறது. கல்வியின் தரம் உயர்வதற்குத் துணை புரியும் பல்வேறு துணைக் கருவிகளில், ‘ஆசிரியர்’ மிக முக்கியமான துணைக் கருவியாவார். தரமான கல்வியைப் பயிற்றுவிக்கத் தரமான ஆசிரியர்கள் தேவைப் படுகின்றனர். கல்லூரிகளில் முழுத் தகுதியும் திறமையும் கொண்ட ஆசிரியர்களை நியமிப்பதற்கு இப்பொழுது வரையறுத்த முறைஇல்லை. பள்ளியிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் ஓராண்டு ஆசிரியப் பயிற்சி பெற வேண்டும் என்று எப்படி விதி இருக்கிறதோ, அப்படியே கல்லூரி ஆசிரியர்களும் ஓராண்டு உயர் கல்வி ஆசிரியப் பயிற்சி பெற வேண்டும் என்று இருப்பது நலம் பயக்கும். இதனைப் பல்கலைக் கழகங்கள் ஆய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்வது நல்லது. ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளில் சேர்க்கப்படுவதற்கு முன்னரே ஆசிரியர் பணிக்கான முழுத் தகுதியும், திறமையும் பெற்றவரா என்று ஆராய்ந்து ஒவ்வொருவரையும் தேர்ந்தெடுக்கும் முறை வேண்டும்.

## இருமொழிக் கொள்கை

பாட மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையிலும் தமிழகத்தில் தமிழ்—ஆங்கிலம் என்ற இருமொழிக் கொள்கை கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழ் மொழியறிவும், ஆங்கில மொழியறிவும் ஒவ்வொரு மாணவ, மாணவியரிடமும் நனி சிறந்து விளங்க வேண்டும் என்பது நமது கொள்கை. எனவேதான் தமிழ் துவக்கப் பள்ளியின் முதல் வகுப்பிலிருந்தும், ஆங்கிலம் மூன்றும் வகுப்பிலிருந்தும் கட்டாய மொழிகளாகச் சொல்லித் தரப் படுகின்றன. பள்ளியிறுதி வகுப்பிலிருந்து வெளியேறும் மாணவர்கள் தமிழ்-ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் நன்கு படிக்கவும், எழுதவும், பேசவும் தெரிந்தவர்களாக விளங்க வேண்டும் என்பது குறிக்கோள். தாய் மொழி அல்லது வட்டார மொழியின் மூலம் முழுக் கல்வியையும் எல்லாரும் பெறவேண்டும் என்பதுதான் அண்ணல் காந்தியடிகள், விவேகானந்தர், தாகூர், பாரதியார், அறிஞர் அண்ணா போன்றவர்கள் வலியுறுத்தி வந்த கருத்தாகும். தமிழ் மொழி அறிவினைப் போலவே தமிழகத்தில் வாழும் எல்லார்க்கும், எப்பொழுதும் ஆங்கில மொழி அறிவும் வேண்டும். பாடப் பொருள்களைத் தமிழ் மொழியின் மூலம் பெற்றுத் தமிழர்கள் எல்லாரும் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்க வேண்டும். ஆங்கிலத்தைப் பயில்வது ஒன்று; ஆங்கிலத்தில் பயில்வது மற்றொன்று. நாம் ஆங்கிலத்தைப் பயில்வதைத் தடை செய்யவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் பயிலுவதற்கு மாறாகத் தமிழில் பயில வேண்டும் என்று கூறுகிறோம். தமிழில் அறிவியல்—கலையியல்—தொழில் நுட்பம் போன்ற எல்லாப் பாடங்களையும் கற்றுக் கொள்ளும் நிலை வர வேண்டும் என்பதற்குக் காரணம் தமிழ் வளர வேண்டும் என்பதல்ல, தமிழனின் அறிவு வளர வேண்டும், ஆற்றல் வளர வேண்டும் என்பது தான். அறிவு ஆற்றல் வளர்ச்சியில் சிறிதளவும் தடையேற்படாத முறையில், இந்த வகையில் மாற்றங் காண வேண்டியது பல்கலை கழகத்தின் பொறுப்பாகும்.



ஆண்கள் கல்லூரிகளில் பெண்களும் சேர்ந்து பயில வழி வகை வகுத்துள்ள மதுரைப் பல்கலைக் கழகத்தை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

## நல்வாழ்வுக் குழு

மாணவ மாணவியரின் நலம், ஆசிரியை ஆசிரியப் பெரு மக்களின் நலம், கல்லூரியின் நலம், கல்வியின் தரம், கல்வித் துறையின் கண்ணியம், நாட்டின் அமைதி ஆகியவை காக்கப்பட, கல்லூரிதோறும் நல்வாழ்வுக் குழு அமைத்து, அதில் ஆசிரியரின் பிரதிநிதிகள்—மாணவரின் பிரதிநிதிகள்—பெற்றோரின் பிரதிநிதிகள் ஆகியோரை இடம் பெறச் செய்வது நலம் பயக்கும்.

மத்திய அரசும், மாநில அரசும், தனியார் தொழில் துறையினரும் வேலை வாய்ப்புக்களை இயன்ற அளவு ஆண்டுக்கு ஆண்டு பெருக்கி வந்தாலும், வேலை தேடுவோரின் எண்ணிக்கை பன்மடங்கு பெருகி வருகிறது. வேலையைத் தேடுவோரின் எண்ணிக்கை பெருகாமல், வேலைகளைத் தோற்றுவிப்போரின் எண்ணிக்கை வளர வேண்டும். நிதியுதவி புரியும் பல்வேறு நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் எண்ணத்தோடும், முயற்சியோடும் இளைஞர்கள் முன்னேற வேண்டும்.

“சிற்பியிடம் கற்பாறை தரப்படுகிறது. அவன் வேலைக்கான மூலப்பொருள் அது – இனி அவனுக்குத் தேவை சிறிய உளியும், பெரிய உள்ளமும்; சுதந்தர இந்தியாவிலே, இதுபோலவே இளைஞர்களுக்குப் பகுத்தறிவும், சுயமரியாதை உணர்ச்சியும் தேவை – புதுவாழ்வு பெற – முழு வாழ்வு பெற” என்பது பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன் மொழியாகும்.

“எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்”.

வரக்கூடிய கேட்டினை முன் அறிந்து தம்மைக் காத்துக் கொள்ளக் கூடிய அறிவுடையவர்களுக்கு அவர்கள் நடுங்கும் படியாக வரும் துன்பம் ஒன்றும் இல்லை என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் வாக்காகும்.

புது வாழ்வு பெறவும், முழுவாழ்வு பெறவும் அடியெடுத்து வைக்கும் பட்டதாரிகள் அனைவர்க்கும் எனது பாராட்டுதல்களையும், வாழ்த்துக்களையும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சனநாயகம்—சமத்துவம்—சமதர்மம் ஓங்குக!

வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்! வாழ்க இந்தியா!

*மதுரைப் பல்கலைக் கழகத்தில் கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் 20-10-1973 அன்று ஆற்றிய பேருரை.*

## 1974-ஆம் ஆண்டின் அரசு விடுமுறை நாட்கள்.

| | | | |
|---|---|---|---|
| சனவரி | 1 | செவ்வாய் | புத்தாண்டு நாள் |
| சனவரி | 5 | சனி | பக்ரித் |
| சனவரி | 14 | திங்கள் | பொங்கல் திருநாள் |
| சனவரி | 15 | செவ்வாய் | திருவள்ளுவர் நாள் |
| சனவரி | 26 | சனி | குடியரசு நாள் |
| பிப்ரவரி | 4 | திங்கள் | மொகரம் |
| ஏப்ரல் | 5 | வெள்ளி | மீலாடி நபி |
| ஏப்ரல் | 12 | வெள்ளி | புதிய வெள்ளிக் கிழமை |
| மே | 1 | புதன் | மே திருநாள் |
| ஆகஸ்டு | 15 | வியாழன் | விடுதலை நாள் |
| அக்டோபர் | 2 | புதன் | காந்தியடிகள் பிறந்த நாள் |
| அக்டோபர் | 18 | வெள்ளி | ரம்ஜான் |
| அக்டோபர் | 24 | வியாழன் | ஆயுத பூசை |
| அக்டோபர் | 25 | வெள்ளி | ,, |
| நவம்பர் | 13 | புதன் | தீபாவளி |
| டிசம்பர் | 25 | புதன். | கிறித்து பிறந்த நாள், பக்ரித். |

*குறிப்பு :*—போகி பண்டிகை, தெலுங்குப் புத்தாண்டு நாள், தமிழ்ப் புத்தாண்டு நாள் முதலியன முறையே சனவரி 13-ஆம் நாள், மார்ச்சு 24-ஆம் நாள், ஏப்ரல் 14-ஆம் நாள் ஆகிய நாட்களில் வருகின்றன. இந்நாட்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் வருவதால் தனியாக விடுமுறை நாளாக அந்நாட்கள் குறிப்பிடப்படவில்லை.







**வழிபடும் தலங்களாக இருந்த ஆலயங்கள் இன்று மக்கள் பணியில் தம்மை ஈடுபடுத்திச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன. 'மக்கள் பணியே மகேசுவரன் பணி' என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் திருக்கோயில்களின் சார்பில் நடைபெறும் திருப்பணிகள்தாம் எத்தனை! எத்தனை! அவற்றை விளக்கிடும் வகையில் 'ஆலயம் ஆற்றும் அரும்பணிகள்' என்ற வரிசையில் திருத்தணிகை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பற்றிய இக்கட்டுரையை முதன்முதலாக வெளியிடுகிறோம்.**

'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்பது எத்துணை உண்மை!

அதோ! கள்ளமில்லா வெள்ளை உள்ளம் உள்ள சிறுவர்கள் வெண்ணிறச் சீருடையுடன் வரிசையாக சிறுவர் அன்பகத்திலிருந்து வெளியே வருகின்றனர். அவர்கள் முகத்திலே புன்னகை! நடையிலே சுறு சுறுப்பு! நாம் இறைவனையே காண்கிறோம்!

ஆலயங்கள் வெறும் வழிபடும் இடங்களாக மட்டுமில்லாது, ஆக்கப்பணிகளுக்கும் ஆதரவு தருகின்றன என்பதற்கு இன்று தமிழகமெங்கணுமுள்ள திருக்கோயில்களின் சார்பில் நடைபெறும் திருப்பணிகள் சான்று பகரும்.

திருத்தணிகை!

இத்திருத்தலம், செங்கற்பட்டு மாவட்டத்தில் சென்னைக்கு மேற்கே ஏறக்குறைய 85 கி.மீ. தொலைவில் உள்ளது.

ஆறுபடை வீடுகளுள் ஒன்றுகத் திகழும் இத்திருத்தலம், சங்ககாலம் முதல், புகழ்பெற்று விளங்குகிறது. கடைச் சங்கத் தலைவர் செந்தமிழ்ப்புலவர் நக்கீரரால் பாடப்பெற்ற பெருமையுடையது இத்திருக்கோயில்.

அன்னைத் தமிழுக்கு அணி சேர்த்த அருணகிரிநாதர், பட்டினத்தார், முத்துசாமி தீட்சிதர் போன்றோரின் பாடல் பெற்ற தலமாகவும் இத்தணிகை விளங்குகிறது.

சீபுரணகிரி, தணிகாசலம், மூலாத்திரி, அல்லகாத்திரி, நீலோற்பலகிரி, உற்பலகிரி, கல்லாரகிரி, காவிமலை, நீலகிரி குவளைச்சிகரி, செருத்தணி, கந்தகிரி, இப்படிப் பல பெயர்கள் இத்திருமலைக்கு உண்டு!

இத்தகு சிறப்புமிகு வரலாற்றினையுடைய இவ்வாலயம் எத்தனை எத்தனை அரும் பணிகளை ஆற்றி வருகின்றது!

சிறுவர் அன்பகம்!

# திருத்தணிகையிலே...!




பெற்றோரும் பேணுவோரும் இல்லாச் சிறுவர்களுக்கு அன்பு காட்டி ஆதரவு தருகிறது இவ்வன்பகம். தாய் தந்தையரின் அன்பைப் பெற வாய்ப்பிழந்த சின்னஞ்சிறு பிள்ளைகளுக்குத் தாயாகத் தந்தையாக இருந்து அன்பைப் பொழிகிறது இந்தச் சிறுவர் அன்பகம்.

அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் சார்பில் இயங்கும் இச்சிறுவர் அன்பகம், 1960-ஆம் ஆண்டிலிருந்து சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பத்து வயதிற்குட்பட்ட 19 மாணவர்களுடன் தொடங்கப்பெற்ற இது, முழுக்க முழுக்க சிறுவர்களை மட்டுமே சேர்த்துக் கொள்ளும் சிறுவர் அன்பகமாக மாறித் தற்போது 50 சிறுவர்களுடன் சீருடனும் சிறப்புடனும் இயங்கி வருகிறது.

இங்குள்ள சிறுவர்கள் ஆரம்பப்பள்ளியிலும், உயர்நிலைப்பள்ளியிலும் சீரிய முறையில் கல்வி பயின்று வருகின்றனர். 5-ஆம் வகுப்பு முடித்த மாணவர்கள் உயர்நிலைப்பள்ளியில் சேர்க்கப்பட்டு பள்ளி இறுதி வகுப்புவரையில் பயில்விக்கப்படுகின்றனர். சிறுவர்களைக் கண்காணிக்க ஒரு இளநிலை எழுத்தரும் (இல்லக்காப்பாளர்), இல்லத்தினைக் காக்க ஓர் கடைநிலை ஊழியரும் நியமிக்கப்பட்டுள்ளனர். பள்ளித் தலைமை ஆசிரியர்களும் மற்றைய ஆசிரியர்களும் சிறுவர்களை நன்கு கண்காணித்து அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று உதவி வருகிறார்கள். இவ்வன்பகத்தில் உள்ள சிறுவர்களுக்கு உணவு, உடை, உறையுள், மற்றும் கல்வி வசதிகள் அனைத்தும் திருக்கோயில் நிதியிலிருந்து அளிக்கப்படுகின்றன.

மாணவர்கள் காலை 5 மணிக்குத் துயிலெழுந்து தமக்குரிய காலைக் கடன்களை யாவையும் முடித்து பின் இறை



திருமணக் கூடம்

நூலகம்





சிறுவர் அன்பகத்தில் உணவருந்தும் காட்சி



சிறுவர் அன்பகத்தில்

தணிகை இல்லம் — குறைந்த வாடகையில் குடியிருப்புகள்



வணக்கம் செய்கின்றனர். இறைவணக்கத்தில் தமிழ்த் தாய் வாழ்த்து, திருப்புகழ், திருவருட்பா முதலியன பாடப் படுகிறது. பிறகு பள்ளி படிப்பு சம்பந்தமான பாடங் கள் மற்றும் எழுதுதல் போன்ற வைகள் முடித்துக் காலை உணவு அருந்தச் செல்கின்றனர். காலை 9.30 மணிக்குப் பள்ளி சென்று மதியம் 1 மணிக்கு வந்து மதியம் சாப்பாட்டினை முடித்து பின் 2 மணிக்குப் பள்ளி சென்று 4.30 மணிக்கு இல்லம் வருகின்றனர்.

''காலை எழுந்தவுடன் படிப்பு —பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு— என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா''

என்று பாடிய பாரதியின் பாட் டிற்கிணங்க மாலையில் விளை யாட்டில் ஈடுபடுகின்றனர். 6 மணிக்கு இறைவணக்கம். முடிந்ததும் 8.45 மணிவரை படிக்கின்றனர். பிறகு உணவு அருந்தி 9.30 மணிக்கு நாட்டு வாழ்த்துப் பாடிய பின் படுக்கைக்குச் செல்கின்றனர்!

இப்படி அன்றுட அலுவல் களை ஒழுங்காக வகுத்துக் கொண்டு, பொழுதை வீணாக் காமல் பயனுறு செயல்களைச் செய்கின்றனர். இவர்கள் அறிவு, ஒழுங்கு, நேர்மை முத லான நற்குண நற்செய்கை களுடன் விளங்கவும் பழக்கப் படுத்தப்படுகின்றனர்.

சிறுவர் அன்பகத்தின் அர வணைப்பில் உள்ள சிறுவர் களுக்கு இத் திருக்கோயில் நிதி யிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 40 ஆயிரம் ரூபாய் செலவும் செய்யப்பட்டு வரு கின்றது. அன்பகச் சிறுவர் களுக்குப் பள்ளியில் நிர்ண யிக்கும் சீருடைகளும், வேட்டி,

பல்லவ மன்னன் அபராசி
வர்மரால் கட்டப்பட்ட மி
பழமையான கோவில்





## 14,000 கோவில்களுக்குத் தல வரலாறு



ஆலயங்கள், மடங்கள் என்று தமிழ்நாடு அறநிலையத் துறையின் மேற்பார்வையின் கீழ் ஏற்கெனவே 12,000 கோயில்களுக்குமேல் இருந்தன. தகுந்த பாதுகாப்பு, கவனிப்பு இல்லாதிருக்கும் கோயில்களின் நிலங்களைக் கண்டறிந்து இந்தத் துறையோடு இணைக்குமாறு நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் ஆய்வின் காரணமாக இவ்வாண்டில் மேலும் இரண்டாயிரம் கோயில்கள் இத்துறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இவைகளில் பாடல் பெற்ற தலங்களில் உள்ள திருக்கோயில்களுக்குத் தல வரலாறு எழுதப்பட்டுள்ளன.

மற்ற கோயில்கள் ஒவ்வொன்றிற்கும், அக்கோயிலின் முக்கியத்துவம், தல விசேடம், முக்கியப் பின்னணி வரலாறு, இறைவனின் சிறப்பு அம்சங்கள் ஆகியவைகளை வைத்துத் தல வரலாறு எழுதி அச்சிட்டு நூல் வடிவில் விரைவில் வெளியிட வேண்டுமென்று அனைத்துக் கோயில்கள் அறங்காவலர் குழுவினரை அறநிலையத்துறை கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கான செலவுகளைக் கோயில் நிர்வாகமே ஏற்றுக் கொள்ளும்.

துண்டுகளும் வழங்கப்படுகிறது. ஆதரவற்ற ஏழைக் குழந்தைகள் இவ்வன்பகத்தில் முதல் வகுப்பு முதல் பள்ளி இறுதி வகுப்புவரை படித்து முடிக்க வகை செய்யப்படுகிறது.

இல்லத்திலேயே இரவு நேரங்களில் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களை வைத்துக் கல்வி பயில்விக்கப்படுவதையும் நாம் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். வாரம் ஒருமுறை அரசினர் மருத்துவமனை மருத்துவர், சிறுவர்கள் உடல்நலனைப் பரிசோதித்து ஆவன செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாரந்தோறும் ஞாயிறு, திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வாரவழிபாடு சிறப்பாக நடைபெறுகிறது. ஏழைக் குழந்தைகள் இங்ஙனம் ஏற்றமுறுவதற்கான எல்லா வசதிகளும் இங்குச் செய்யப்படுவதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மலைமீது ஏறிச் செல்லப்படிகளும் உண்டு. பையப்பையச் செல்ல வாகன வசதியும் உண்டு. அடிவாரத்திலிருந்து உச்சிக்குச் செல்ல வசதியான அழகான மலைப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. 1969-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்களால் துவக்கி வைக்கப் பெற்ற இம்மலைப்பாதை 1.4. கி.மீ. தூரமுள்ளது. ஒரு ரூபாய்க் காணிக்கையில் மலைக்குச் சென்றுவரத் திருக்கோயில் சார்பில் வாகனவசதி செய்யப்பட்டிருக்கிறது.

அறிவுக் கண்களைத் திறந்து வைத்திட அறிவு நூல்கள் நிரம்பிய ஒரு நூலகமும் இங்கே இயங்கி வருகின்றது. சுமார் 15,000 நூல்களும், நாள்தாள்களும், வார, திங்கள் இதழ்களும் கற்றுரைக் காந்தமென இழுக்கின்றன.

முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் பிறந்த இல்லத்தில் தற்போது சுப்பிரமணியசுவாமி அரசினர் கலைக்கல்லூரி ஒன்று நடந்து வருகின்றது. இக்கல்லூரிக்கான தனிக்கட்டடம் கட்டுவ்தற்கு அண்மையில் ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடையுடன், கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அப்பணி சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது.

தணிகையில் திருமணம் செய்ய விரும்புவோர்க்குத் 'தெய்வயானை' திருமண மண்டபம் குறைந்த கட்டணத்தில் நிறைந்த வசதியளிக்கிறது. மேலும் மூன்று திருமணக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மலையில் திருமணம் செய்ய விரும்புவோர் ரூ. 25 கட்டணத்தில் எல்லா வசதிகளுடன் திருமணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தணிகை மலை வருவோர்க்கு தங்க வசதியான குடியிருப்புகள் பல இப்போது உள்ளன. மூன்றடுக்கு மாடிகளுடன் எழில் பெறக் காட்சியளிக்கிறது 'தணிகை இல்லம்'. 54 அறைகள் கொண்ட இவ்வில்லத்தில் அறை ஒன்றுக்கு ஐந்து ரூபாய் குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதைவிட மிகுந்த வசதியான குடியிருப்புகளும் இதன் அருகில் கட்டப்பட்டுள்ளன. இவற்றை தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இவ்வாண்டில் திறந்து வைத்துள்ளார். மற்றும் கலைஞர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பெற்ற குடியிருப்புகள் பதினைந்தும், ஐம்பதுக்கு மேற்பட்ட அறைகளும் அண்மையில் கட்டி முடியும் நிலையில் உள்ளன.

இவை தவிர திருக்குளம் அருகில் உள்ள சரவணப் பொய்கை விடுதியில் 36 அறைகளும், மலைப்பாதை விடுதியில் 16 அறைகளும், குமரன் விடுதியில் 16 விடுதிகளும் உள்ளன. திருக்கோயில் ஊழியர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது.

திருத்தணிகைக் கோயிலின் சார்பில் பத்துக் கோயில்கள் இருக்கின்றன. இவை சார்புக் கோயில்கள் என வழங்குகின்றன. அவை. 1. திருவாலங்காடு, இரத்தினசபாபதி திருக்கோயில், 2. திருப்பாச்சூர் வரகீசுவரர் திருக்கோயில். 3. கரும்பேடு திருநாததீசுவரர் திருக்கோயில், 4. பெரிய நாகப்பூடி நாகேசுவரசுவாமி திருக்கோயில், 5. நெடம்பரம் கோதண்ட இராமசாமி திருக்கோயில், 6. சந்தான வேணு கோபாலபுரம் சந்தான வேணு கோபாலசுவாமி திருக்கோயில் 7. தணிகை ஆறுமுகசுவாமி திருக்கோயில், 8. தணிகை வீரட்டேசுவரர் திருக்கோயில், 10. சப்த கன்னிகைத் திருக்கோயில். இங்கு ஏழு சுனைகள் இன்றும் உள்ளன.

இவற்றில் திருத்தணிகை ஆற்றங்கரையிலுள்ள வீரட்டேசுவரர் திருக்கோயில் கி.பி. 8-ஆம் நூற்றுண்டில் பல்லவ மன்னன் அபராஜித வர்மரால் கட்டப்பட்ட மிகப் பழமையான கோயிலாகும். பல்லவ மன்னன் அபராஜிதன் வெண்பா இயற்றுவதில் வல்லவர் என்பதை இங்குள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. அக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள வெண்பா இதுதான்.

திருந்து திருத்தணியில் செஞ்சடை ஈசர்க்கு
கருங்கல்லால் கற்றளியா நிற்க—விரும்பிய
நற்கலைகளெல்லாம் நவின்றசீர் நம்பி அப்பி
பொற்பமையச் செய்தான் புரிந்து.

சில கோயில்களில் நாம் யானையைப் பார்த்திருக்கிறோம். கோயில் சார்பில் அது பராமரிக்கப்பட்டுத் திருவிழாக் காலங்களில் நன்கு அலங்கரிக்கப்பட்டு உலா வருவதையும் கண்டு மகிழ்ந்திருக்கிறோம். தணிகைக் கோயிலில் இதுவரை யானையே இருந்ததில்லை. ஆனால், இவ்வாண்டு இரண்டு வயது யானைக் குட்டி ஒன்று அன்பர் ஒருவரால் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருக்கிறது. இதன் பெயர் தெய்வயானை!:

சித்திரை, மாசித் திங்கள் திருவிழாக் காலங்களில் இக்கோயிலின் வெள்ளித்தேர் வீதியெங்கும் உலா வரும் காட்சியைக் கண்டு மகிழலாம். இப்போது தங்கத்தேர் ஒன்று 16 அடி உயர அளவில் உருவாகிக் கொண்டிருக்கிறது.

திருமலையில் ரூ. 52 ஆயிரம் நன்கொடை மூலம் அழகிய வசந்த மண்டபம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. ரூ. 1 இலட்சம் நன்கொடையுடன் வடக்குப்புறத்தில் ஒரு மண்டபமும் கட்டப்பட்டு வருகிறது. இவை தவிர, மலையில் ஒரு சித்த மருத்துவ நிலையமும் உள்ளது.

பொதுமக்கள் வசதிக்காக மிகப் பெரிய 108 கால் மண்டபம் ஒன்று உருவாகி வருகின்றது. மலையைச் சுற்றிலும் பிரகாரம் ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. இவை மட்டுமா? ஆறுபடை வீட்டின் அமைப்புகளும் மலைமீது அழகிய பூங்கா ஒன்று அமைக்கவும் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

இத்திருத்தலம் பாடிய அருணகிரிநாதர், பட்டினத்தார், முத்துசாமி தீட்சிதர் ஆகியோரின் பிறந்தநாள் விழாக்களும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இதுபோன்ற திருப்பணிகள் நடைபெறத் தமிழக அரசு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது. அதனைச் செயலாற்றிட இங்கு ஓர் அலுவலகம் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றது. சுமார் 200 பேர் திருக்கோயில் சார்பில் பணியாற்றி வருகின்றனர்.

பணிகள் சீர்பெற அறங்காவலர் குழு அரும்பணியாற்றி வருகிறது. அறங்காவலர் குழுத் தலைவராகப் புலவர் திரு மி.ச. நடேசனார் அவர்களும், உறுப்பினர்களாகத் திருவாளர்கள் கே. கன்னையா, வி.எம் துரைசுவாமி, ஏ. கோபால கிருட்டிணன் ஆகியோரும், நிருவாக அலுவலர் திரு. கி. சிதம்பரம் அவர்களும் சிறந்த முறையில் பணியாற்றி வருகின்றனர்.

ஆண்டுக்காண்டு தணிகை வரும் அன்பர்களின் தொகை பெருகுவதோடு கோயில் வருமானமும் கூடி வருகின்றது. 1971-ல் ரூ. 22 இலட்சமும், 1972-ல் ரூ. 26 இலட்சமும், 1973-ல் ரூ. 33 இலட்சமுமாக இக்கோயிலின் வருமானம் படிப்படியாக உயர்ந்திருக்கிறது. இதனால் பல்வேறு திருப்பணிகள் செய்ய நிர்வாகத்தினர் திட்டமிட்டுள்ளனர்.

திருத்தணிகைத் திருக்கோயில் சார்பில் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் ஒன்றும், தொழுநோயாளர் மறுவாழ்வு இல்லம் ஒன்றும் அமைக்கவிருக்கும் தகவலை அறியும் போது 'மக்கள் பணியே மகேசுவரன் பணி' என்பது நன்கு புலப்படுகிறதல்லவா?

—பி. வீ. ஜீ.

## படித்து வேலையில்லாமல் இருப்போருக்கு வேலை வாய்ப்பு

படித்த பின்னர் வேலையில்லாதிருப்போரில் 500 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கத் தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்புதிய திட்டத்தின்படி, தமிழ் நாட்டில் 500 கோழிப்பண்ணைகள் புதிதாகத் துவங்கப்பட்டு, 500 பேர்களுக்கு வேலையளிக்கப்படும். இதனால் ஆண்டொன்றிற்கு, ஒவ்வொரு கோழிப்பண்ணையும் ஓர் இலட்சம் முட்டைகளைத் தொடக்கத்தில் உற்பத்தி செய்யும். மேலும் இக்கோழிப் பண்ணைகளால் 5,000 சிறு உழவர்களுக்குக் கூடுதலான வேலைவாய்ப்புக் கிடைக்கவும் வழி ஏற்படுகிறது. தவிர 2,25,000 சோழிகள் புதிதாகத் தோன்றுவதோடு, உணவிற்கென 225 டன் கோழி இறைச்சியும் கிடைக்கும்.

வேலைவாய்ப்பில்லாமலிருக்கும் 500 பேர்கள் கோழிப் பண்ணைகளைத் துவக்க அரசு உதவி செய்யும். கூட்டுறவு நிறுவனங்களின் துணைகொண்டு தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இவர்களுக்குத் தேவையான பயிற்சியும், கடனும், கட்டடங்கள் கட்டுவதற்கும் கருவிகளை வாங்குவதற்கும் தேவையான உதவியும், கோழிக்குஞ்சுகள், தீனி போன்றவைகளும் அளிக்கப்படும். இவை தவிர ஒவ்வொருவருக்கும் ஒரு நாள் வயதுள்ள 600 கோழிக்குஞ்சுகளாவது, கோழிகளாவது அளிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும், ஒசூர் காட்டுப்பாக்கம், கப்பலூர் ஆகிய இடங்களில் அல்லது கோழிப்பண்ணை விரிவாக்க நிலையங்களில் 25 பேர்கள் வீதம் பயிற்சியளிக்கப்படும். இப்பயிற்சி பெறுவோருக்கு ரூபாய் 150 உதவித்தொகை அளிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ரூபாய் 15,000 கடன் அளிக்கப்படும். இத்தொகையை இவர்கள் கோழிப்பண்ணை அமைத்தல், கருவிகள் வாங்குதல், கோழிக்குஞ்சு, தீனி, மருந்துகள் வாங்குதல் போன்றவற்றிற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த 500 பேர்களுக்கும் இதற்காகும் மொத்தச் செலவு ரூபாய் 75 இலட்சமாகும்.

மைய அரசு ஊக்குவிக்கும் இத்திட்டம் மூன்றுண்டுகளுக்குச் செயற்படுத்தப்படும். இதற்காகும் மொத்தச் செலவு ரூபாய் 81 இலட்சமாகும்.

தகவல்: பி. என். வேதநாராயணன், I.A.S.,
செயலாளர்,
வேளாண்மைத்துறை,
தமிழ்நாடு அரசு.

# அடுக்கு மாடி வீடு மட்டுமல்ல...



# ஆனந்தமான வாழ்வுக்கும் வழி!

குடிசைவாழ் மக்கள் பெரும் மழை—கடும் புயல்—கொடிய தீ விபத்துக்கள் போன்றவைகளால் பாதிக்கப்பட்டு அல்லலுற்றார்கள். நிரந்தரமான வாழ்க்கையினைக் காண முடியாமல் அவதிப் பட்டார்கள். ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெற வேண்டும். குடிசைவாழ் மக்களின் அல்லல்கள் தீர்க்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தரமான வாழ்க்கை ஒன்றினை அமைத்துத் தர வேண்டும். நிரந்தரமான—பாதுகாப்பான குடியிருப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பன போன்ற சீரிய கொள்கைகளைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்து அவர்களுக்கு எரியாத வீடுகள் அமைத்துத் தர ஏற்பாடு செய்தார்கள். கலைஞர் அவர்கள் தலைமையில் அமைந்த இன்றைய அரசு, அண்ணா அவர்களின் கொள்கைகளைச் செயல்வடிவாக்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு குடிசைவாழ் மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டு அவர்களுக்கென ஒரு வாரியத்தை—குடிசை மாற்று வாரியத்தை ஏற்படுத்தியது. குடிசைவாழ் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

புதிய கணக்கெடுப்பில் சென்னை மாநகரில் காணப்பட்ட குடிசைவாழ் குடியிருப்புப் பகுதிகள் 1,203. இந்தப் பகுதிகளில் வாழுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை 1,63,804. இவற்றில் சொந்தக் குடிசைகளில் குடியிருக்கும் குடும்பங்கள் 87,210. வாடகைக்குக் குடியிருக்கும் குடும்பங்கள் 73,853. வாடகையின்றிக் குடியிருக்கும் குடும்பங்கள் 2,740. குடிசைவாழ் பகுதிகளில் வசிப்பவர்கள் மொத்தம் 7,37,531 பேர்கள். இவர்களில் 36 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள்.

குடிசை மாற்று வாரியம் உண்டான பின்னர் மொத்தம் 86 இடங்களில் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. 65 இடங்கள் எல்லா வசதிகளுடனும் முடிக்கப்பட்டு விட்டன. இது வரையில் ரூபாய் 9கோடி செலவிடப்பட்டுக் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. அவைகளில் சுமார் 52,000 பேர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

குடிசைவாழ் மக்களை மாடி வீடுகளில் குடியமர்த்தினால் மட்டும் போதாது. அவர்கள் வாழ்வு வளம் பெற வேண்டும்—ஏழ்மை என்னும் கொடிய நோய் விரட்டப்படவேண்டும். அறியாமை அகற்றப்பெற வேண்டும். ஆரோக்கியமான நல்வாழ்வினை அவர்கள் பெற வேண்டும்—என்பன போன்ற பல நல்ல காரியங்களில் குடிசை மாற்று வாரியம் ஈடுபட்டு வருகிறது.

குடிசை மாற்று வாரியம், கிறித்துவ சமூக சேவை, '77' சொசைடி மூன்றும் இணைந்து புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை (New Residents Welfare Trust) ஒன்றினை 30—12—1971-ல் ஏற்படுத்தியது. இது 13 இடங்களில் அமைக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. இந்தப் பேரவையில் ஒரு நிருவாக அலுவலர், 14 குடியிருப்பு நல்வாழ்வு அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவை, சமூக நலத்துறை முதலியவைகள் துணையுடன் குடிசை மாற்று வாரியம், வாரியக் குடியிருப்புகளில் உள்ள மகளிர்க்கும் கைத் தொழிற் பயிற்சி அளித்து வருகிறது. தையல் வேலை, பூ வேலை, பிளாஸ்டிக் கூடை முடைதல் போன்ற பயிற்சிகளை அளிக்கிறது. ஒவ்வொரு பகுதியிலும் சுமார் 500 பெண்கள் தினசரி 2 ரூபாய் முதல் 3 ரூபாய் வரை ஊதியம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

குடியிருப்புப் பகுதிகளில் இவ்வாறு தயாராகும் பொருட்கள் ஸ்வீடன், மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் பெருமளவில் விற்பனையாகின்றன. நல்ல ஆதரவும் உள்ளது. கதர் கிராமத் தொழில் மூலமாகவும் ஒவ்வொரு பகுதியிலும் சுமார் 120 பெண்களுக்கு வேலை வாய்ப்புத் தர ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பகுதிகளில் உள்ள படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் தச்சுத் தொழில், சிறு தொழில் போன்றவைகளை ஏற்படுத்த விருக்கிறது. அந்தந்தப் பகுதிகளில் வாழும் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்த இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்று பயிற்சி அளிக்கப்படுவர். இங்குத் தயாராகும் கதவு, சன்னல், தாழ்ப்பாள் முதலியன இந்த வாரியக் குடியிருப்புகளுக்குப் பயன்படுத்தப்படும்.

நாளையத் தலைமுறைகளாம் குழந்தைகளைப் பேணிக் காப்பதில் பெரும் அக்கறை கொண்டு ஆங்காங்கே குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.



சென்னை மாநகரில் மொத்தம் 23 காப்பகங்கள் உள்ளன. ஒரு பால சேவிகா, இரண்டு ஆயாக்கள் கொண்டு இயங்குகின்ற ஒவ்வொரு காப்பகத்திலும் 7 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சேர்க்கப்பட்டுப் பேணிக் காக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு காப்பகத்திலும் 60 குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'—எனவே நோயற்ற ஆரோக்கியமான வாழ்வு வாழ, மாடிக் குடியிருப்புப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு இலவச மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. வாலன்டரி ஹெல்த் சர்வீஸ் (Voluntary Health Service), இந்தியன் மெடிகல் அசோசியேஷன் (Indian Medical Association), 'பாலிகன்' (Polygons), ரெய்னி மருத்துவ மனை (Reiny Hospital) லெனின் மருத்துவ மனை (Lenin Clinic) போன்ற நிலையங்கள் பங்குகொண்டு சிறப்பான முறையில் மருத்துவ வசதி அளித்து வருகின்றன. புதுக் குடியிருப்பு நல்வாழ்வுப் பேரவையும் ஒரு தனி மருத்துவரை நியமித்து மருத்துவ வசதி அளித்து வருகிறது.



இவை மட்டுமின்றி குடிசை வாழ் மக்களின் பகுதிகளுக்குச் சென்று மருத்துவ வசதியளிக்க நடமாடும் மருத்துவ மனைகள் ஏற்படுத்த ''உலக லூதரன் மிஷன் சர்ச்'' 3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 6 நடமாடும் மருத்துவப் பேருந்துகளை அளிக்க முன் வந்துள்ளது.

மாடிக் குடியிருப்பு மக்களின் வசதிக்காக, வாரியம் சமூக நலக் கூடங்களையும் அமைத்து வருகிறது. அண்மையில் சென்னை தாண்டவராயன் பிள்ளை சத்திரத்தில் ஓர் இலட்சம் ரூபாய் செலவில் 6,300 சதுர அடி பரப்பில் கட்டப்பட்ட 'அண்ணு சமூக நலக் கூடத்'தை 22—10—73-ஆம் நாள், வீட்டு வசதி வாரிய அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அன்பில் தருமலிங்கம் அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்தச் சமூகக் கூடம் மாடிக் குடியிருப்புகளில் உள்ளோர்க்குத் திருமணம் போன்ற நல்ல காரியங்களுக்கு நாளொன்றுக்கு ரூபாய் 100 வாடகையில் தரப்படும். மாதம் ரூபாய் 400 வருமானமுள்ள மற்றவர்களுக்கு நாளொன்றுக்கு ரூ. 200 வாடகையாகப் பெறப்படும்.

குடிசை மாற்று வாரியப் பகுதியின் அருகிலேயே குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கென ரூ. 50 முதல் ரூ. 60 வரை வாடகையில் சில கூடுதல் வசதிகளுடன் குடியிருப்புகள் கட்டித் தருகின்ற திட்டமும் வாரியத்திடம் உள்ளது.

குடிசை மாற்று வாரியம் செய்து வருகின்ற சீரிய பணிகளைப் பொது மக்களுக்கு விளக்கவும், தமிழ் நாடு அரசு ஏழை எளிய மக்கள் ஏற்றம் பெறச் செய்து வருகின்ற காரியங்களை எடுத்துரைக்கவும் அண்மையில் சென்னை தாண்டவராயன் பிள்ளை சத்திரத்தில் இலவசக் கண்காட்சி ஒன்றினை அரசின் உதவியுடன் வாரியம் நடத்தியது. இது போன்ற ஒரு கண்காட்சியைக் குடிசை மாற்று வாரியம், சென்ற ஆண்டு எழும்பூர் குழந்தைகள் மருத்துவ மனையில் நடத்தியது. இவ்வாண்டு ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சியினை பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் 22—10—73 அன்று திறந்து வைத்தார்கள். கண்காட்சி 22—10—73 முதல் 31—10—73 வரை நடைபெற்றது.

இக் கண்காட்சியில் சென்னை மாநகராட்சி, தொழில் வணிகத் துறை, குடும்ப நலத் துறை, வேலை வாய்ப்புப் பயிற்சித் துறை, புதுக் குடியிருப்பு நல் வாழ்வுப் பேரவை, கதர் கிராமத் தொழில் வாரியம், செய்தித் துறை, வீட்டு வசதி வாரியம், கீழ்ப்பாக்கம் மருத்துவமனை போன்றவைகள் பங்கு கொண்டன.



கண்காட்சியின் வாயிலாகச் சுற்றுப் புறத் தூய்மை, குடியிருப்பு மகளிர்க்கு ஓய்வுநேர வேலை வாய்ப்பு, குழந்தைகள் பராமரிப்பு, சத்துணவு தயாரித்தல், மோட்டார் மெக்கானிக் பயிற்சி முதலியவைகள் விளக்கப்பட்டன. கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ மனை மருத்துவர்கள் பங்குகொண்டு, இலவச மருத்துவ வசதி அளித்தார்கள். மாநகராட்சி, குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புத் தெருக்களில் உண்டாகும் குப்பைகளைச் சுத்தம் செய்ய இருக்கின்ற திட்டத்தினை விளக்கியது.

பரிசு வழங்கும் திட்டம் ஒன்றினை ஏற்படுத்தி, கண்காட்சியினைக் காண வருபவர்களை ஊக்குவித்தது குடிசை மாற்று வாரியம். தாண்டவராயன் பிள்ளை சத்திரத்தில் உள்ள சுமார் 1400 குடிசை மாற்று வாரியக் குடியிருப்புக்களில் உள்ளவர்களுக்கு நாளொன்றுக்கு 175 பேர்களுக்குப் பரிசுச் சீட்டுக் கூப்பன்களை வழங்கி, அவர்களில் 10 பேர்களுக்குக் குலுக்கல் மூலம் கைத்தறிப் புடவைகளைப் பரிசாக வழங்கினூர்கள்.

விழாவுக்குத் தலைமை வகித்த அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள் பேசுகையில், மாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்கள் தங்களது குடியிருப்புகளை சுத்தமாக, சுகாதாரத்துடன் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்திஞர்கள். அடுப்புகளில் விறகுகளை உபயோகிப்பதற்குப் பதிலாக மண்ணெண்ணெய் ஸ்டவ் உபயோகித்தால் அதனைச் சுலபத் தவணைகளில் அவர்களுக்கு வழங்க அரசு ஏற்பாடு செய்யும் என்றும் உறுதியளித்தார்கள்.

ஏழை எளிய மக்களின் மேம்பாட்டுக்காகவும், குடிசை வாழ் மக்களுக்கு நிம்மதியான, நிரந்தரமான வாழ்வை அளிப்பதற்கும் பல காரியங்களைச் செய்து வரும் குடிசை மாற்று வாரியத்தின் சிறந்த பணிகளில் இப்பொருட்காட்சியும் ஒன்ருகும்.

— ஆயிரம்



# கல்வி என்னும் கண் இருக்கிறது!

குமரன்.

போன்னேரியிலிருந்து சென்னை மாநகருக்குச் சுமார் 25 மைல். தினமும் இவ்வளவு தூரம் பயணம் செய்து வந்து பேசின் பிரிட்ஜ் ஸ்டேஷனில் இறங்கி மூலக்கொத்தளம், தங்கசாலை இவைகளை எல்லாம் நடந்தே கடந்து, பிராட்வே வட முனையில் உள்ள வடசென்னை அரசினர் பெண்கள் கலைக்கல்லூரிக்கு வருகிருர்கள் — ஐந்து மாணவிகள்.

அந்த ஐந்து பேர்களில் மற்ற நால்வரின் துணைகொண்டு பயணம் செய்து வருகிற மாணவிதான் டி. சந்திரிகா. பிறந்த நாளிலிருந்தே பார்வையில்லாத பெண்! கல்லூரி என்னும் அறிவாலயத்தில் பயின்று கண் பெறுவதற்கு மட்டில்லாத ஆர்வத்தோடு வருகின்ருள் இந்த மாணவி. வயது—இருபத்தொன்று; படிப்பு—புகுமுக வகுப்பு.

இதே கல்லூரியில் இதே வகுப்பில் இதே நிலையில், விழி இல்லாவிட்டாலும், அறிவுச் செல்வமும் கல்விக் கண்ணும் பெறவேண்டும் என்ற உறுதியுடன் படித்துவரும் மற்ருெரு மாணவி சண்முகத்தாய். நெல்லை மாவட்டத்தை சேர்ந்த இம்மாணவியின் பார்வையிழந்த நிலை சற்று மாறுபட்டது. சண்முகத்தாய் பிறக்கும்போது ஊனம் ஏதுமின்றி எல்லா நலன்களும்தான் இருந்தது. ஆனுல் ஐந்து வயதுக் குழந்தையாக இருக்கும்போது அம்மை வார்த்து கண்ணின் கருமணி பட்டுப்போயிற்று.

இந்த இரு மணிகளுக்கும் கண் இல்லையே என்ற குறை உணர்ச்சியைவிட, படிப்பிலும் அறிவிலும் முன்னேற்றம் கண்டு வேலை பெற்று, மற்றவர்களின் உதவியையே நாடியிருக்கும் நிலை இல்லாமல், சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற வேட்கை மிகுந்திருப்பது பெருமைக்குரியது.



மாணவி சந்திரிகா

இருபத்தொன்று வயதான டி. சந்திரிகாவின் பெற்ருேர் சென்னை சூளையைச் சேர்ந்தவர்கள். இப்போது வசிக்கும் இடம் பொன்னேரி. இவர் தந்தை வி. துரைசாமி நாயுடு. ரயில்வே 'புக்கிங் கிளார்க்' ஆகப் பணியாற்றுகின்ருர். தாயார் பெயர் சுசிலா. நடுத்தரக் குடும்பம்.

பார்வையில்லாமல் போனது தன்னுடைய குடும்பத்தாரையும் சுற்றத்தாரையும் பற்றியிருந்த ஒரு குறை என்றும், தமது இளமைக் காலம், படிப்பு ஆகியவை பற்றியும் சந்திரிகா மேலும் கூறிஞர்.

''தன் உயிரைப் பணயம் வைத்து என்னை ஈன்றெடுத்த அன்னையின் இன்முகத்தைக் காணவொண்ணுத நிலையில் பிறந்தேன். குறையுடன் பிறந்த என்னை என் பெற்ருேர் குறையேதுமின்றி வளர்த்தார்கள். நான் என் வீட்டில் இரண்டாவது மகள். 12 வயது நிரம்பிய, பார்வையுள்ள என் அக்காள் நோய் வாய்ப்பட்டு இறந்தாள்.

எனக்குப் பின்னுல் பார்வையில்லாத ஒரு தங்கை, ஒரு தம்பி, பார்வையுள்ள ஒரு தம்பி உள்ளனர். ஆக குடும்பத்தில் 3 பேர்களுக்குக் கண் பார்வையில்லை. எனது உறவினர்களிலும் கண் பார்வையில்லாதவர்கள் உள்ளனர்.''

''இளமையில் கற்கும் இன்பம் எனக்குவாய்க்கவில்லை. 10 மாதக் குழந்தையாக இருந்த காலம் முதல் 5 வயது வரை மருத்துவச் சிகிச்சைகளிலும் பின்னர் கோயில், குளம் என்ற முறையிலும் பத்து வயது வரை பயன் ஏதுமின்றிக் கழித்து விட்டேன். பின்னர் பூந்தமல்லியில் அரசினர் அந்தகர் பள்ளி இருக்கிறது என்றும், அதில் பிள்ளைகளைச் சேர்த்து விட்டால், படித்து அறிவினை வளர்த்துக் கொள்ளுவார்கள், ஓரளவு வாழ்க்கையை நல்லமுறையில் அமைத்துக் கொள்ளுவார்கள் என்றும் சில பெரியோர்கள் என் பெற்ருேரிடம் எடுத்துச் சொன்ஞர்கள். என் தாய் வழித் தாத்தா எம். சி. ஜானகிராம் நாயுடு அவர்களின் விடா முயற்சியால் நாங்கள் மூவரும் பள்ளியில் சேர்க்கப்பட்டோம்.

## மாணவர் அரங்கம்

அப்போது என் வயது 10-ஆக இருந்தாலும் பாட்டியினுடைய உதவியால் இரண்டு வகுப்புக் குரிய பாடங்களைப் படித்திருந்ததால் மூன்றும் வகுப்பில் சேர்த்துக் கொள்ளப் பட்டேன்.

அந்தகர் பள்ளியில் உங்கள் பள்ளி வாழ்க்கை, படிப்பு எப்படி இருந்தது?

''அச்சத்துடன் ஆரம்பித்த அந்தப் பள்ளி வாழ்க்கை பின்னர் எனக்கு ஆனந்தமாகவே மாறியது. ஆசிரியர்கள் எங்கள் துயரத்தைத் தீர்க்க வந்தவர்கள் என்றே நினைத்துக் கொண்டேன். அங்கிருந்த சகோதரிகளும் சுவரை விட்டு நீங்காத ஓவியம்போல் என்னோடு மனங்கலந்து பழகினார்கள். விளையாட்டுகளிலும் ஆசிரியர்கள் என்னை ஊக்குவித்தார்கள். பள்ளி விழாக்களில் கலந்துகொண்டு பல பரிசுகள் பெற்றிருக்கிறேன். அந்தப் பள்ளியில் படித்த ஒன்பது ஆண்டுகளில் 6 ஆண்டுகள் நான் 'சேம்பியன் ஷிப்' பெற்றுள்ளேன். உலக அங்கவீனர்களை மகிழ்விக்கும் விளையாட்டு விழாவில் மூன்றாண்டுகள் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றுள்ளேன். பள்ளி வழிகாட்டியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு மற்ற மாணவிகளுடன் ஒவ்வொரு ஆண்டும் பாடி வாழ்க்கைக்காக செஞ்சி, திருவண்ணாமலை போன்ற இடங்களுக்குச் சென்று வந்துள்ளேன். சுற்றுலாக்களிலும் கலந்து கொண்டிருக்கிறேன்.''

''இனியவை இப்படிப் பல இருந்தாலும் மற்றவர்கள் வாழ்க்கையோடு என்னை ஒப்பிட்டுப் பார்ப்பதுண்டு. ஏடுகளில் இயற்கை இன்பத்தை இனிதாக ஏற்றுவரும் கவிதைகளைப் படிக்கும்பொழுது, கதிரவன் ஒளியையும் காரிருளையும் மட்டுமே காண்கின்ற இக் கண்கள் இத்துணைச் சிறப்பு வாய்ந்த இயற்கைச் செல்வங்களைக் கண்டு துய்க்கும் இன்பத்தினை அடையாதிருக்கிறதே என்ற துயரம் என்னை வாட்டுவதுண்டு. கவிஞர்களுக்குக் கவி இன்பத்தை ஊட்டும் நீல வானம், பசுமை நிறைந்த மலைகள், அருவிகள், கரை காணாத கருநீலக் கடல், பசும் புல் தரை, வண்ணமலர்கள், ஆடும் மயில், பாடும் குயில், பறக்கும் பறவைகளைக் காண முடியவில்லையே என்று வருந்துவதுண்டு.''

''மேலும் விஞ்ஞான முறையின் விளைவாக வந்துள்ள பாயும் விமானம், நீந்தும் கப்பல், ஓடும் ரயில், 'பறக்கும் தட்டு' இவற்றைக் காண என் இதயம் துடிப்பதுண்டு. இவ்வாறு துன்பம் வாட்டிய போதிலும் மற்ற சகோதரிகளுடன் பழகும்போது இவற்றையெல்லாம் மறந்துவிடுவேன்!''

''கல்லூரியில் சேர்ந்தது எப்படி? இங்குப் படிப்பும் வாழ்க்கையும் மனத்துக்கு மகிழ்வூட்டத் தக்க முறையில் இருக்கிறதா?'' என்று அவரிடம் வினவியபோது—''பள்ளி வாழ்க்கை சில நொடிகள் போலப் பறந்து விட்டது. 1973 ஏப்ரலில் நான் பள்ளியை விட்டு நின்ற நிகழ்ச்சி பார்வையை இழந்ததுபோல என்னைத் துன்பத்தில் ஆழ்த்தியது. பின்னர் தேர்வு முடிவுகள் நல்ல முறையில் வந்தன. கல்லூரியில் சேரவிழைந்த போது, கல்லூரி முதல்வர் தயக்கமின்றி என்னைச் சேர்த்துக்கொண்டார். பார்வையற்றவர் பள்ளியில் இதுவரை படித்து வந்த நான் பார்வையுள்ள இவர்கள் நடுவிலே எவ்வாறு படிக்கப் போகிறேனோ என்ற அச்சம் என் உள்ளத்தைப் பலமாக வாட்டிற்று. ஆனாலும் நல்லவர்களின் வாக்கு என்னைத் தேற்றியது. என்னுடன் படிக்கும் சகோதரிகளும், படிப்பிக்கும் ஆசிரியைகளும் இவ்வளவாக என்னோடு பழகுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல அச்சம் சிறிது சிறிதாக நீங்கியது'' என்று பதிலுரைக்கிறார் சந்திரிகா.

மற்றவர் உதவியை நாடி நிற்கும் நிலை இல்லாமல் தன் உழைப்பைக் கொண்டு தன் காலில் தான் நிற்கும் நிலையை அடைய வேண்டும். என்னையொத்த மற்றப் பெண்களும் சுயபலத்தில் வாழும் நிலை ஏற்படவேண்டும் என்பதே தம் உள்ளத்து வேட்கை என்று திரும்பத் திரும்பக் கூறிய சந்திரிகா, எம்.ஏ. படிக்க வேண்டும், ஆசிரியத் தொழில் செய்ய வேண்டும் என்பதே தம் உள்ளக்கிடக்கை என்றும் குறிப்பிட்டார்.

## மாணவி சண்முகத்தாய்

பதினெட்டு வயதான சண்முகத்தாய், வாழ்வில் பல சோதனைகளைக் கண்டவர். நெல்லை மாவட்டம் நாலாட்டின் புத்தூர் இவருடைய ஊர். தந்தை வெள்ளைச்சாமிக் கோனார். சண்முகத்தாய் இரண்டரை வயதுக் குழந்தையாக இருக்கும்போதே தந்தை இறந்து விட்டார். தாயார் கோமதி அம்மாள் விவசாயக் கூலி வேலைசெய்து இந்த ஒரே மகளைப் பேணி வளர்த்தார். சண்முகத்தாய்க்கு 5 வயதில் பெரியம்மை வார்த்ததையடுத்து, கண்கள் இரண்டும் இழந்தாள். ஒரு கண்ணில் மட்டும் மிகலேசாகப் பார்வை உள்ளது. அதாவது நல்ல



வெளிச்சம் இருக்கும் நேரத்தில் பேருந்து போன்றவை ஊர்ந்து செல்வது தெரியும். மற்றபடி ஆள் அடையாளங்கள் தெரியாது.

தமது இளமை வாழ்க்கை, படிப்பு குறித்து சண்முகத்தாய் கூறியது வருமாறு:

''கணவனை இழந்து துன்பத்தில் உழன்று கொண்டிருந்த என் அன்னைக்கு, என் நிலைமை வெந்த புண்ணில் வேல் பாய்ந்ததுபோல் ஆனது. அற்ற குளத்தில் அருநீர்ப் பறவை போல சுற்றத்தார் எல்லாம் விலகிப் போயினர். பலரின் வசைமொழிகளுக்கும் சிறுவர்களின் பரிகாசத்துக்கும் ஆளானேன். ஆனால் அப்போது நான் சிறுமியாக இருந்ததால் இந்த இன்னல்களை எல்லாம் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை.''

''காலத்தின் சுழற்சியால் அறிவு வளர, வளர, இந்தக் கொடுமைகளை எல்லாம் உணர ஆரம்பித்தேன். பட்டமரமாக நின்ற என்னுடைய வாழ்வைத் தழைக்க வைப்பதற்காக பராசக்தி என்ற ஆசிரியை சென்னை தேனாம்பேட்டையில் உள்ள செவிடர்-ஊமையர் பள்ளியில் அந்தகர் பிரிவில் கல்வி பயில என்னைச் சேர்த்தார்.''

''முதல் வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு வரை அங்குப் பயின்றேன். இலவசமாக எனக்கு எல்லா வசதிகளும் அளித்தார்கள். பள்ளியில் நடைபெற்ற பல போட்டிகளில்கலந்து கொண்டு முதல் பரிசுகள் பெற்று பலருடைய பாராட்டுதல்களையும் பெற்றேன். பள்ளியில் முதல் மாணவியாகத் திகழ்ந்தேன். இவற்றை அறிந்த என் அன்னை சற்று மன ஆறுதலடைந்தார்.'

''கல்வியில் என்னுடைய தேர்ச்சியைக் கண்ட தலைமை ஆசிரியை இராயபுரத்தில் உள்ள புனித அன்னம்மாள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தார். அங்கு ஆசிரியப் பெருமக்களும் தலைமை ஆசிரியையும் எனக்கு வேண்டிய உதவிகள் அளித்து நான் கல்வி பயிலப் பெரிதும் உதவினர். பள்ளி மாணவியர் விடுதியிலேயே தங்கிப் பயின்று வந்தேன். செலவுகளை அவர்களே ஏற்றுக் கொண்டார்கள்'

''பள்ளி இறுதித் தேர்வில் சிறப்பாகத் தேறினேன். அதிக மதிப்பெண் பெற்ற நிகழ்ச்சி என்னைப் பெரிதும் ஊக்குவித்தது. இதனால் கல்லூரியில் சேர்ந்து படிக்கப் பெரிதும் விழைந்தேன். தாய்மொழியாம் அருமைத் தமிழ் மீது இருந்த எல்லையில்லா ஆர்வத்தால் தமிழை விருப்பப் பாடமாகக் கொண்டு அனைத்தையும் தமிழ் மொழியிலேயே பயின்று வருகிறேன்.''

மாணவி சண்முகத்தாய்க்கு மேலும் மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் நிரம்ப இருக்கிறது. தமிழ் எம்.ஏ. ஆங்கிலம் எம்.ஏ., இரண்டிலும் வெற்றி பெற்று ஆசிரியத் தொழில் செய்ய வேண்டும் என்பதுதான் சண்முகத்தாயின் உள்ளக்கிடக்கை. சூட்டிகையான மதிநுட்பம் வாய்ந்த பெண் என்பதைப் பேராசிரியரும் உறுதிப்படுத்தினர்.

தமது வாழ்க்கையைப்பற்றி மாணவி சண்முகத்தாய் கூறிய சில சொற்கள் உள்ளத்தைத் தொடுவனவாக இருந்தன; ''என்மீது உள்ளத்தளவில் கருணை காட்டுபவர்களை நான் பெரிதும் விரும்புகிறேன். ஆனால் வாயளவில் கருணை காட்டுவதுபோல் பேசி, என் குறையை நினைக்கச் செய்வதை நான் விரும்பவில்லை. என் குறை ஒருவகையில் மேலானது; உலகில் எத்தனையோ பேர் கேளாதார், பேசாதார்.'

''செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்'' எத்தனையோ பேர் செவிச் செல்வம் இழந்து காணப்படுகின்றனர். அவ்வாறில்லாமல் கண்ணிழந்தாலும் அறிவைப் பெறும்



# பார்வையற்ற மாணவிகள் தேர்வு எழுதும் முறை.

வசதிக் குறைவான பிரிவு மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் வடசென்னை அரசினர் பெண்கள் கலைக் கல்லூரியில் சுமார் இரண்டாயிரம் மாணவிகள் படிக்கிறார்கள். இவர்களில் சந்திரிகா, சண்முகத்தாய் இருவரும் பார்வையற்றவர்களாக இருப்பினும் படிப்பில் உறுதி கொண்டவர்களாக விளங்குகிறார்கள். இவர்களுடைய கல்வி வளர்ச்சிக்கு, அறிவு மேம்பாட்டுக்கு இடையூறாக இருப்பது போதிய புத்தகங்கள் இல்லாத குறை. அந்தகர்களுக்கான பிரெய்லி முறை எழுத்துக்களைத்தான் இவர்களால் எழுதவும் படிக்கவும் முடியும். அந்த எழுத்துக்களில் கல்லூரிப் பாட நூல்கள் கிடையாது. மேற் படிப்புக்கு உதவும் வேறு பொது நூல்களும் இல்லை. வகுப்பில் ஆசிரியர்கள் சொல்லுவதுதான் இவர்களுக்கு எல்லாம். இவர்கள் பெறும் முழுஅறிவும் அதிலிருந்து கிடைப்பதேயாகும். ஆசிரியர்கள் சொல்லுவதை பிரெய்லி முறையில் குறிப்பெடுத்துக் கொள்கிறார்கள். கல்லூரி வகுப்புகளில் மாதாந்திர தேர்வுகள் நடக்கும்போது, இவர்கள் பிரெய்லி எழுத்துக்களில் தங்கள் விடைகளை எழுதி, பேராசிரியர்களிடம் அதனைப் படித்துக் காட்டுவார்கள். விடைக்கு ஏற்ற மதிப்பெண்களைப் பெறுவார்கள். ஆண்டு இறுதித் தேர்வு, அரசாங்கத் தேர்வு போன்றவைகளின் போது, இந்த மாணவிகள் வாய்மொழியாகச் சொல்லச் சொல்ல விரிவுரையாளர்கள் இவர்களுக்காக விடையை எழுதி வைக்கிறார்கள்.

நிலே இருப்பதை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன். என்னைப் போன்றவர்களுக்கு அரசாங்கம் அளிக்கும் உதவிகள் குறித்து மகிழ்கிறேன்.''

''உயிருக்கு நேரே பயன்படும் கல்வியையும், வாழ்க்கைக்கு நேரே பயன்படும் தொழிலேயும் பயில என் போன்ற நிலேயில் உள்ளவர்களுக்கு அரசு உதவுமாயின் பெரிதும் பயனடைவோம். எங்களுக்கும் உதவிக் கொண்டு நாட்டுக்கும் உதவுவோம்.''

'கண்ணுடையர் என்போர் கற்ருேர் முகத்திரண்டு புண்ணுடையார் கல்லாதவர்'

என்ருர் வள்ளுவப் பெருந்தகை. எனக்கு விழிகள் இல்லே; என்ருலும் கல்விக்கண் இருப்பதால் நான் கண்ணே உடையவளாவேன்'' என்று கூறும் சண்முகத்தாய் கேள்விகளுக்கு உடனுக்குடன் பளீரென்று பதிலளிக்கிருர்.

''நான் படித்து என் சொந்தக் காலில் நிற்க வேண்டும். நான் மட்டுமல்ல என்னேப்போன்ற மற்றவர்களும் படித்து சுயமுயற்சியால் வாழ வேண்டும்'' என்று வலியுறுத்திக் கூறினுர் இம்மாணவி.

### முட்டை ஓட்டின் பயன் !

முட்டை ஓடுகளே நாம் குப்பைத் தொட்டியில் போட்டு விடுகின்ருேம். இது தவறு! முட்டை ஓடுகளே உடைத்துப் பொடியாக்கிக் கிளிஞ்சல் தூளுடன் கலந்து முட்டையிடும் கோழிகளுக்குக் கொடுக்கலாம். முட்டை ஓட்டில் உள்ள சுண்ணும்புச் சத்துக் கோழிகளுக்குப் பயன்படுவதுடன், முட்டைகளின் மேல் ஓடு உற்பத்தியாகவும் உதவும் !

எவன் தன்னேப்பற்றியும் தன் காலத்தைப் பற்றியும் எழுதுகின்ருனே அவனே எல்லா மக்களேப் பற்றியும் எழுதும் எழுத்தாளன்.

— பெர்ஞட்ஷா

ஒரு நூல் என்பது, வாழ்வை அனுபவிக்கவோ, வாழ்வின் சோதனேகளேத் தாங்கவோ நமக்குக் கற்பிப்பதாக இருக்க வேண்டும்.

— சாமுவேல் ஜான்சன்

படித்து முடித்த பின்பு அன்பும் பரிவும் உள்ளவராக ஏற்ற மணமகன் கிடைத்தால் திருமணம் செய்து கொள்வீர்களா? என்று இந்த இரு மாணவிகளிடமும் கேட்ட போது இருவரும் ஒன்றுபோல ''திருமணம் செய்து கொள்ளப் போவதில்லே'' என்ருர்கள்.

''திருமணம் செய்து கொள்வதுபற்றி இப்போது சிந்தனே ஏதும் இல்லே; அப்படித்தானே?'' என்று அவர்கள் விடைக்கு சிறு விளக்கம் சேர்த்தபொழுது அதற்கும் அவர்கள் இடம் தரவில்லே.'' ''எப்போதும் வேண்டாம் '' என்று பதிலளித்தனர்.

சந்திரிகா சண்முகத்தாய் இருவருக்கும் கல்வி ஆர்வம், தன்முனேப்பு, தன்காலில் நிற்க வேண்டும் என்ற மன உறுதி உள்ளத்தில் நிறைந்திருக்கிறது. ''மானத்தோடு வாழ்வோம், மண்ணின் மரபைக் காப்போம்'' என்றனர் இம்மாணவிகள். இந்த உறுதிப்பாட்டுக்கு அடுத்தபடியாக— இணேயாகச் சொல்ல வேண்டுமென்ருல் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அது தான் இவர்கள் உள்ளத்தில் நிறைந்துள்ள நன்றி உணர்ச்சி.

—சி.சுரா.

விடுதலே பெற்ற புதிய வங்காள தேசத்தில், ஆறுவயதுக்குட்பட்ட குழந்தைகளில்ல் மிகப்பலர் கண் பார்வை தெரியாது தவிக்கிருர்கள். ஏறக்குறைய 60 லட்சம் குழந்தைகள் வாழும் வங்காள தேசத்தில், பாதிப்பேர், தங்களது ஆருவது பிறந்த நாளேப் பார்க்க முடியாதபடி, கண்பார்வையை இழந்து விடுகிருர்கள் 'ஏ' வைட்டமின் குறைவிஞல்தான் இந்த நிலே ஏற்படுகிறது.

ஐ.நா. மன்றத்தின் குழந்தைகள் நிதி நிறுவனம், உலக சுகாதார நிறுவனத்துடனும், வங்காள தேச அரசின் ஒத்துழைப்புடனும் குருடு தடுக்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகிறது.

வங்காள தேசத்தில் இந்தப் பணி 1973 பிப்ரவரித் திங்களில் முதன் முதலாக நடைபெற்றது. இன்னும் 3 ஆண்டுகள் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும். ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனேவருக்கும், வருகின்ற ஆண்டுக்குள் நல்வாழ்வு அளிக்கவேண்டும் என்பது இந்த நிறுவனத்தின் நோக்கம். அதற்காகக் குழந்தைகளுக்கு வைட்டமின் 'ஏ' நிறைந்துள்ள குழாய் மாத்திரைகளேயும் வேறு சில மருந்துகளேயும் கொடுத்து வருகிறது.

மழலேகளுக்குக் கண்ணெளி வழங்க-கண்நோய் வராமல் தடுக்க ஐக்கியநாடு மன்றம் செய்துவருவது மாபெரும் உதவியாகும்.



### ஏமாருதே ! ஏமாற்ருதே !

கோழிப் பண்ணேகளில் ஆண் குஞ்சுகளே வளர்ப்பதால் அதிக செலவாகும். ஏனெனில், ஆண் குஞ்சுகள், அதிக அளவுத் தீனியை உண்ணக்கூடியவை! ஆனுல் அதற்கேற்ப பயன்தரக் கூடியவை அல்ல! ஆகவே, பெருமளவில் கோழிக்குஞ்சுகளே உற்பத்தி செய்யக் கூடிய குஞ்சு பொரிப்பு நிலேயங்களில் குஞ்சு பொரித்த அன்றே, ஆண் குஞ்சுகளேப் பிரித்து விற்று விடுகிருர்கள். இவைகளே வாங்கி வந்து சிலர், 'பெட்டைக் குஞ்சு' என்று கூறி விற்பனே செய்து விடுகின்றனர். இவைகள் பெரியவையான பிறகே சேவல் என்று தெரிந்து, ஏமாற்றம் அடைகிருர்கள். இதைத் தடுக்க குஞ்சு பொரிப்பு நிலேயத்தினர் ஆண் குஞ்சுகளே விற்பனே செய்யாமல், அவைகளேக் கொன்று பொடியாக்கிக் கோழித் தீவனத்துடன் கலந்து கொடுத்தால், கோழிகளுக்குப் புரதச் சத்து கிடைக்கும்.



# 'பேட்ரிகேஜ்' முறையில் கோழிப் பண்ணே



வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் மக்கள் எத்துறையிலும், நவீன கருவிகள் மூலம் புதிய முறைகளேக் கையாண்டு குறைந்த உழைப்பில், குறைந்த செலவில் நிறைந்த பயன் தேடுகின்றனர். அதனுல் அவரவர் நாடுகளின் பொருளாதாரம் செழித்து, வறுமைப் பிணிக்குத் தீர்வு ஏற்படுகிறது. இந்த அடிப்படையில்தான், நமது நாட்டில் பொழுது போக்காகவும், குடிசைத் தொழிலாகவும் நடந்து வந்த கோழிப்பண்ணேகள், இன்று நாட்டின் வளர்ச்சியில் பெரும் வாணிபத் தொழிலாக மலர்ச்சியுற்று, மாற்றமும் கண்டு, ''கோழி வளர்த்துக் கோபுரம் கட்டலாம்'' என்ற நிலேக்கு வந்துள்ளது. நவீன முறையில் கோழிகளே வளர்ப்பதுதான் 'பேட்டரி கேஜ் முறை' என்பது.

### பேட்டரி கேஜ் முறை

''சிறிய மீனேப் போட்டுப் பெரிய மீனேப் பிடிப்பது போல்'' சிறியதோர் இடத்தில் பெரிய கோழிப் பண்ணே அமைப்பது. அதாவது ஓராயிரம் (1,000) கோழிகள் வளர்க்கும் இடத்தில் 'பேட்டரி கேஜ்' முறையில் மூவாயிரம் (3,000) கோழிகளே வளர்க்கலாம். தரையில் கோழிகளே வளர்க்கும் முறையில் ஓராயிரம் கோழிகளே வளர்க்கும் ஓர் இடத்தில், 'கேஜ்' முறையில் மூவாயிரம் கோழிகளே வளர்க்கலாம்.

### 'பேட்டரிகேஜ்' அமைப்பு

இது ஒவ்வொன்றும் (one box) 2 அடி அகலம், 1·5 அடி நீளம் 1·5 அடி உயரம் உள்ளது. இது இரும்புக் கம்பிகளால் (Weld mesh) ஆன கூடுகள். இவை ஒன்றின்மீது ஒன்ருக மூன்று அடுக்குகளாக அமைந்துள்ளன. இது கோபுரம் போன்று அமைந்துள்ளதால் ''பிரமிடு முறை'' (Pyramid system) என்றும் சொல்வார்கள். மேலே குறிப்பிட்டுள்ள அளவுகளேக் கொண்ட ஒரு கோழிக் கூட்டில் 6 கோழிகள் வளர்க்கலாம். அதாவது ஒரு கோழிக்கு 0·50 சதுர அடி பரப்புள்ள இடம் போதுமானதாகும். நிலப் பரப்புடன் சேர்த்துக் கணக்கிடும் பொழுது 0·75 சதுர அடி இடம் போதுமானது. ஓராயிரம் கோழிகள் வளர்க்கச் சுமார் 750 சதுர அடி நிலப் பரப்பு போதுமானது. கோழிகள் உணவு உண்ண அவற்றிற்குக் கூட்டை ஒட்டினுற் போன்று வெளிப்புறத்தில் தோணிகள் அமைக்கப்பட்டுள்ளன. 'டிராலி பீடார்'களினுல் தோணிகளில் தீவனம் நிரப்பப்படுகிறது. 'டிராலி பீடர்'களினுல் 1,000 கோழிகளுக்கு 2 நிமிடத்தில் தீவனம் போட்டு விடலாம். கோழி தன் தலேயை வெளியே நீட்டித் தீவனத்தைக் கொத்திக் கொத்திச் சாப்பிட வசதியாக முன் பக்க முகப்பில் இடைவெளி விடப்பட்டுள்ளது. தீவனத் தோணிக்குச் சற்று மேலாகத் தண்ணீர்த் தோணிகள் அமைக்கப்பட்டுள்ளன. தோணியின் ஒரு கோடியில் ஒரு தண்ணீர்க் குழாய் அமைத்துத் தோணியில் எப்போதும் தண்ணீர் நிறைந்திருக்கச் செய்யலாம். ஒரு கோழியின் மலம் ஒரு கூட்டிலிருந்து மற்ருெரு கூட்டில் தடுக்கப்பட்டு நிலத்தில் விழும்படி செய்யப்பட்டுள்ளது. கூட்டில் உள்ள கோழிகள் முட்டைகளே இட்டதும், அந்த முட்டைகள் உருண்டு வந்து கூட்டின் வெளியே வளேந்த பாகத்தில் நின்று விடுகின்றன. அவற்றை நாம் ஒரு நாளேக்கு ஒரு முறை சேகரித்துக் கொள்ளலாம்.

### பயன்கள்

இம்முறையினே நாம் செயல்படுத்துவதற்குக் கட்டடம் கட்டும் செலவு ஒரு கோழிக்கு 5 ரூபாய் கூட்டிற்கு ரூபாய்12 ஆக ரூபாய் 17 செலவாகும். கோழிகளேத் தரையில் வளர்க்கும் முறையில் கட்டிடம், தீவனப் பெட்டி, தண்ணீர்த் தொட்டி, முட்டையிடும் பெட்டி ஆகியவைகளுக்கெல்லாம் சேர்த்து ரூபாய் 11 செலவாகின்றது. நிலத்தின் பரப்பை ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டும் சமமாகவே இருக்கும். மேலும் கோழிகள் அங்குமிங்கும் போவதில்லே; அதனுல் கோழியின் சக்தி வீணுவதில்லே, அதிகமாக உணவு உட்கொள்ளாது. உணவும், தண்ணீரும் ஒரே சீராகக் கிடைக்கின்றன. இதனுல் நமக்கு அதிக முட்டைகள் கிடைக்கின்றன. கோழிகளுக்கு ஏற்படும் ரத்தக் கழிச்சல், குடல் புழுக்கள் போன்ற

சில வியாதிகள் வராமல் இருக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இம்முறையினால் வளர்க்கும் கோழிகள் மிகவும் சுத்தமாகவும், அழகாகவும் இருக்கின்றன. மேலும், கோழிகள் ஒன்றை ஒன்று கொத்திக் கொள்வதைத் தடுக்க அவைகளின் மூக்கை வெட்டுதல், திடீரென்று ஏற்படும் ஓசையினால் கோழிகள் பயந்து ஒன்றோடொன்று மோதிக் கொண்டு விழுந்து சாக நேரிடுதல் போன்ற பல தொல்லைகளும் இம்முறையில் இருக்காது. முட்டையிடாத கோழிகளையும், வியாதியுற்ற கோழிகளையும் மிக எளிதில் பிரித்து விடலாம். நல்ல வீரியக் கோழிகளை இம்முறையில் வளர்த்தால் ஒரு கோழியிலிருந்து சுமார் 260 முதல் 280 முட்டைகள் வரையில் பெறலாம். இம்முறையில் வளர்க்கும் கோழிகளுக்கு உணவு மிகவும் இன்றியமையாததாகும். சுண்ணம்புச் சத்து மிக்க (High energy food), கிளிஞ்சல் தூள் (Shell grit) தகுந்த அளவு கொடுக்கவேண்டும். அனைத்துக்கும் மேலாக இட நெருக்கடியான நகரங்களில் குறைந்த இடத்தில் நிறையக் கோழிகளை வளர்க்க இம்முறை பயன்படுகிறது.

### தீமைகள்

இம்முறையினால் சில தீமைகளும் ஏற்படுவதுண்டு. 2 சதவீதம் முட்டைகள் உடைந்து விட வாய்ப்பு உண்டு. ஆனால் கோழிகளுக்குச் சுண்ணாம்புச் சத்து அதிகமாகக் கொடுத்தால் முட்டைகள் உடைந்து விடாமல் தடுக்கலாம். இக்கூடுகளைச் செய்யும்பொழுது ஏற்படும் சில தவறுகளினாலும் (Manufacturing defects) சேதம் அதிகமாகலாம். இதனால் கோழிகளின் மலம் சிறிய இடத்தில் ஒன்று சேர்ந்து இருந்து விடுவதால் சீக்கிரமாக உலருவதில்லை. ஆகவே மலம் ஒரு பிரச்சினையாக உள்ளது. நாற்றம் ஏற்படுவதுண்டு. ஆனால் அவ்வாறு நாற்றம் ஏற்படாமல் செய்யச் சுண்ணாம்பு, சோடா உப்புக் கலந்த கலவையை அவ்வப்போது அதன் மீது தூவிவிட்டால் சிறிது தவிர்க்கலாம். நல்ல காற்று வசதி தேவைப்படுகின்றது. இதுபோலச் சில தொல்லைகள் இருந்தாலும், 'பேட்டரி கேஜ்' முறையில் நிறைந்த இலாபம் கிடைக்கின்றது.

—கே. சவுந்தரராஜன்,

## நிறைய முட்டையிடும் பெட்டைகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

1. கொண்டையும், தாடையும் சிவந்து செழித்து வழவழப்பாய், பளபளப்பாய் இருத்தல் வேண்டும்.

2. கலையோடு, ஒளி வீசக் கூடிய கண்களைப் பெற்றிருக்க வேண்டும்.

3. காது வழவழப்பாய் பருத்து மென்மையாக இருக்க வேண்டும்.

4. அலகு தடித்து வளைந்து கூர்மையாக இருக்க வேண்டும்.

5. கோழியின் முதுகு பரந்து வளைந்து நிமிர்ந்திருக்க வேண்டும்.

6. அகலமான ஆழ்ந்த அமைப்புள்ள உடம்பு, நேரான, பரந்த மார்பு எலும்பு, பரந்த மார்புக் கூடு இருக்க வேண்டும்.

7. மெதுவான, கொழுப்பில்லாத குறைந்தது இரண்டு விரல் இடைவெளியுடைய இடை எலும்பு இருக்க வேண்டும்.

8. வயிறு, நாலு விரலிடைக்குக் குறையாததாயும், மிருதுவாயும் இருக்க வேண்டும்.

9. ஆசனம் பெரியதாய், ஈரப் பசையுடனும், முட்டை வடிவானதாயும் இருக்க வேண்டும்.

10. தோல் மிருதுவாயும்—தொட்டுப் பார்த்தால் பட்டுப் போன்றும்—உடலோடு ஒட்டிக் கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

மேற்கூறிய 10 தன்மைகளும் கொண்ட பெட்டைக் கோழிகளே நிறைய முட்டையிடும். எனவே, இத்தன்மைகள் கொண்ட பெட்டைகளைத் தேர்ந்தெடுத்து வாங்கிடுவீர்.





## சிறந்த பயன் தரும் சிறு கோழிப் பண்ணை

வீட்டின் அன்றாடத் தேவைகளான கீரை, கொத்தமல்லி, புதினா, முதலியவற்றை வளர்க்கும் சிறு தோட்டத்தைப் போன்றது தோட்டத்துக் கோழிப்பண்ணை. இச்சிறு பண்ணை ஒரு குடும்பத்தின் அன்றாட முட்டைத் தேவைகளைத்தீர்த்து வைக்கும். நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 10 கோழிகள் போதுமானது. இவை நாள்தோறும் ஐந்துக்கும் குறையாமல் முட்டை தருவதால் இச்சிறு குடும்பத்தின் அன்றாட முட்டைத் தேவைக்கு இப்பண்ணை, வகை செய்யும். இம்முறையில் வளர்க்க 10 கோழிகளுக்கு 6 அடி×3 அடி உள்ள ஒரு சிறு வீடு வேண்டும். இவ்வீட்டைப் படத்தில் கண்டபடி தோட்டத்திலே வைக்கலாம். தோட்டம் இல்லாதவர்கள் தங்கள் வீட்டுத் தாழ்வாரங்களிலோ மொட்டை மாடிகளிலோ, வைக்கலாம். இவ்வித வீடுகளால் அசுத்தமோ, துர்நாற்றமோ ஏற்படுவதில்லை. வீட்டின் தேவைக்குப் போக எஞ்சிய முட்டைகளை அண்டை அயலாருக்கு விற்று விடுவதால் குடும்பத் தலைவியின் அன்றாட செலவுகளுக்கு அந்தச் சில்லறைக்காசு பயன்படும். பள்ளியினின்றும் திரும்பும் குழந்தைகளுக்கோ, அலுவலகத்தினின்றும் ஓய்ந்து திரும்பும் குடும்பத் தலைவனுக்கோ இச் சிறு கூண்டிலுள்ள கோழிகளைக் காணும் போது ஒரு மன மகிழ்ச்சி ஏற்படும். தன்னைச் சார்ந்து நிற்கும் சில உயிர்ப் பிராணிகளைக் காப்பதில் மனிதன் ஒரு மன நிறைவு பெறுகிறான்!

இச்சிறு கூண்டுகளை அமைக்க வேண்டிய பொருட்கள் பின் வருமாறு:

வேண்டிய பொருட்கள்.

| | | |
|---|---|---|
| மரத்துண்டுகள் | 6'×3''×3'' | —4 |
| ,, | 6'×3''×2'' | —4 |
| ,, | 3'×3''×2'' | —4 |
| மெல்லிய கூரை | | —6 |
| மோட்டு அட்டைகள் | | —2 |
| 3 4'' கம்பி வலை | | —20 |

மற்றும் ஆணி, கீல், தாழ்ப்பாள் போன்றவை.

கூண்டின் அளவுகள் 6 அடி நீளம் ,3 அடி அகலம், 3 முதல் 4 அடி வரை உயரம் உள்ளதாகவும், கூண்டின் தரை பலகையால் செய்யப்பட்டு, 'டீப் லிட்டர்' முறைக்கு உகந்ததாகவும் இருக்கலாம். இதற்கான பலகைகளை கள்ளி பெட்டிகளின்றும் பிரித்தெடுக்கலாம். அல்லது 16 காஜ் (gauge) கனமான சதுர வலையாகவும் இருக்கலாம். வலையை தரையாகக் கொண்ட கூண்டுகள் தோட்டத்தில் வைக்க உதவும். அதனின்றும் விழும் எச்சம் நல்ல உரமாகும். உரம் விழ கூண்டின் அளவிற்கு அதாவது 6 அடி நீளம், 3 அடி அகலம் உள்ள ஒரு குழி வெட்டி வைத்தால் அதில் எச்சம் விழும். அதன் மேல் சாம்பல், மரத்தூள் முதலியவைகளைத் தூவி வந்தால் ஈக்களின் தொந்தரவும் இராது. அக்குழியைச் சுற்றிலும் அழகான பூக்களை உடைய தொட்டிகளை வைத்தல் கண்ணுக்கு அழகாகவும் பார்ப்போர் மனத்தைக் கவருவதாகவும் அமையும். வீட்டின் தாழ்வாரங்களில் வைக்கக் கோழிக் கூண்டை வைக்க விரும்புவோர் நல்ல பலகைகளைத் தரையாக அமைத்து, அதன் மேல் மரத்தூள் போன்ற 'டீப் லிட்டர்' பொருட்களை உபயோகித்துக் கோழிகளை வளர்க்கலாம்.

இப்பண்ணைகளில் வளர்க்க 8 முதல் 12 வாரம் வளர்ந்த பெட்டைக் குஞ்சுகளை வாங்குவது சிறந்தது. இவ்வயதுக் குஞ்சுகள் அரசாங்கக் கோழிப பண்ணைகளில் கிடைக்கும். மேலும் இவ்வயதுக் குஞ்சுகளுக்குத் தொத்து நோய்களின்றும் காக்கக் கூடிய தடுப்பு ஊசிகளை எல்லாம் போட்டு வைத்திருப்பார்கள். ஆதலின் இவற்றைப் பராமரிக்கச் சிரமம் ஒன்றும் இராது.

இக்குஞ்சுகள் வளர்ந்து சுமார் 20 முதல் 22 வாரங்களில் முட்டையிட ஆரம்பிக்கும். பின் அவை தொடர்ந்து ஓர் ஆண்டுக் காலம் முட்டையிடும். சாதாரணமாக 'வெள்ளை லெக்கார்ன்' இனத்தைச் சேர்ந்த கோழிகள் ஒவ்வொன்றும் மாதம் ஒன்றுக்கு 15 முதல் 18 முட்டைகள் வரை இடும். ஆனால் அவை மாதம் ஒன்றுக்கு உட்கொள்ளும் தீனி 3.00 முதல் 3.30 கிலோ ஆகும். 15 முட்டைகளின் விலை 30 பைசா வீதம் 4.50 ரூபாய் ஆகும். ஆனால் 3.30 கிலோ தீனியின் விலை கிலோ 75 பை வீதம் 2.47 ரூபாய் ஆகும். இவ்விதச் சிறுபண்ணைகளுக்குத் தமிழ்நாடு அரசு கொடுக்கும் தரமான தீனியை சகாய விலைக்கு வாங்கிப் பயன் பெறலாம். முட்டை ஓடுகள் பலமாக இருக்கச் சுண்ணாம்புச் சத்து நிறைந்த கிளிஞ்சல் எப்போதும் முட்டையிடும் கோழிகளுக்கு அருகாமையில் இருக்க வேண்டும். கிளிஞ்சல் வைக்க 6''×6''×6'' உள்ள சிறு மரப் பெட்டியை உபயோகிக்கலாம்.

இவ்விதச் சத்து நிறைந்த முட்டைகளைத் தரும் கோழிகளை வீட்டுக்கு ஒரு பண்ணை என நம் தமிழ் மக்கள் போற்றி வளர்ப்பின் அது நாட்டில் நிலவும் ஊட்டச் சத்து உணவுப் பற்றாக் குறையைப் பெருமளவில் நீக்க வழிகோலும்!

—டாக்டர் அ. ரா. கிருஷ்ணன்



# எனது கோழிப் பண்ணை அனுபவங்கள்

கல்லூரி வாழ்க்கை முடிந்த பிறகு, கோழிப் பண்ணை ஆரம்பிப்பதற்கு முக்கியமாக எனக்கு இரண்டு காரணங்கள் தென்பட்டன. ஒன்று, எனக்குரிய எதிர்காலத்தை முடிந்த வரையில் நானே அமைத்துக் கொள்வது. இரண்டு, வேளாண்மைக்கு இணைத் தொழிலாக, அதே சமயத்தில் வேளாண்மைக்கும் இன்றியமையாததாக உள்ள ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற எண்ணம். இவ்விரு எண்ணங்களையும் கொண்டு 1965-ஆம் ஆண்டு, 100 'வெள்ளை லெக்கார்ன்' கோழிகளைக் கொண்டு கோழிப் பண்ணை ஒன்று ஆரம்பித்தேன்.

ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட சோதனைகள் மிகப் பல. கோழித்தீனி நிறுவனங்களின் தீனிகளைப்பற்றித் தெரியாது; அவைகளும் அப்பொழுது பிரபலமாகத் தென்படவில்லை. சரியான அளவு தீனி கொடுக்காத காரணத்தால், முட்டைகள் அதிகமாகக் கிடைக்கவில்லை. இறப்பு விகிதம் அதிகமாக இருந்தது. மேலும் தற்போது உள்ள மருத்துவ வசதிகளும், மருந்துகளும் அப்போது இல்லை. ஆகவே, ஆரம்ப நிலையில் மொத்தத்தில் இலாபத்தைவிட இழப்புதான் மிகுதியாக இருந்தது.

இருப்பினும் முயற்சி தளராது, கோழிப்பண்ணையில் வெற்றி பெற வேண்டும் என்ற ஊக்கத்துடன் உழைத்தேன். அப்போதுதான் கோயமுத்தூரில் 'ஹைலைன்' குஞ்சுகள் வெளிவரத் தொடங்கின. 31-11-1967 அன்று 300 ஹைலைன் குஞ்சுகளை வைத்து எனது இரண்டாவது முயற்சியைத் துவங்கினேன். எனது முந்திய தோல்விகள் நல்ல அனுபவங்களாக அமைந்தன. பல புத்தகங்கள், வெளி நாட்டில் இருந்துவரும் புத்தகங்கள், பத்திரிகைகள், ஆகியவற்றைப் படித்தேன். பலவேறு கால்நடை மருத்துவர்களுடன் மணிக்கணக்கில் பேசிப்பேசிப் பல அனுபவங்களையும், நோயின் தன்மைகளைப் பற்றியும் தெரிந்து கொண்டேன். ஹைலைன் கோழிகள் வீரியத் தன்மைகள் மிகுந்திருந்ததால் முட்டைகள் அதிக அளவுக்குக் கிடைத்தன. அப்போது சேலத்தில் சிறப்பு அங்காடி (Super Market) ஆரம்பிக்கப்பட்டதால், முட்டைகளின் விற்பனை நல்ல முறையில் அமையத் தொடங்கியது. நோயின் தன்மை குறைந்திருந்தது. கிடைத்த எருவைத் தோட்டத்திற்குப் பயன்படுத்தியதில் நல்ல மகசூல் கிடைத்தது.

ஆகையால் கோழி வளர்ப்பில் எனக்கு இயற்கையாகவே இருந்த ஆர்வம் இருமடங்காகியது.

அடுத்த முயற்சி 500 ஹைலைன் கோழிகளுடன் ஆரம்பமாகியது. இந்த முயற்சியிலும் நல்ல பலன் கிடைத்தது. ஆனால் அம்மைநோய் (Fowl Pox) அதிகமாகத் தோன்றி ஒரு சில இழப்புகள் ஏற்பட்டன. அதன் பின்னர்தான் அம்மைநோய்த் தடுப்புச் செய்வதன் அவசியத்தை உணர்ந்தேன். தற்பொழுது தவறுமல் அம்மைநோய்த் தடுப்புச் செய்து வருகிறேன்.

அதன் பின்னர் 500-800 ஆகி, 800-1,200 ஆகி தற்போது 1,800 கோழிகள் என்னிடம் உள்ளன. தற்பொழுது 'ஹைலைன்' (Hyline), ஆர்பர் ஏக்கர்ஸ்' (Arbor acres) இராணி ஷேவர் (Rani Shaver) போன்ற வீரியக் கோழிகள் உள்ளன.

பொதுவாகக் கோழிப் பண்ணை எந்த அளவுக்கு இலாபகரமாக உள்ளது என்ற கேள்வி பலருக்கு எழலாம். இலாபம் என்பது நம்முடைய முயற்சியைப் பொறுத்தே உள்ளது. ஒரே வீரியக் கோழி, ஆண்டு ஒன்றுக்கு 180 முட்டைகள் இட்டு அதோடு நின்று விடலாம். சரியான கவனிப்பும், சத்துள்ள தீனியும் அதற்குக் கிடைத்தால், 220 முட்டைகள் கொடுக்கக் கூடும். ஆகையால் இலாபம் பெறுவது நம் சொந்த முயற்சியைப் பொறுத்து உள்ளது. இருப்பினும் செய்த செலவுகள் போக, பொதுவாக மாதம் ஒன்றுக்கு ஒரு கோழிக்கு ஒரு ரூபாய் பெறக்கூடும் என்பதில் ஐயமில்லை.

கோழிப் பண்ணையில் கண்காணிப்பு மிக மிக அவசியம். சாதாரணமாக ஒருவர் ஒரு தொழிலாளியுடன் 100 கோழி முதல் 1,500 கோழிவரை நன்கு கவனிக்கக்கூடும். அவர், குறைந்தது நாள் ஒன்றுக்கு ஆறுமணி நேரமாவது கோழிப் பண்ணையைக் கண்காணித்தல் அவசியம். தூய்மையான தண்ணீர் எப்போதும் உள்ளதா? 24 மணி நேரமும் அவைகளுக்கு வெளிச்சம் உள்ளதா என்றும், கோழிகள், குஞ்சுகள் சோர்ந்து உள்ளனவா என்றும், நோய்கள் வரக்கூடிய சூழ்நிலைகள் உள்ளனவா என்றும், சுற்றுப்புறம் தூய்மையாக உள்ளனவா என்றும் நன்கு கவனித்தல் அவசியம்.

கோழிப்பண்ணையில் மறக்கக்கூடாத, ஆனால் மறுக்க முடியாத இன்றியமையாத தேவை, கணக்கு வைத்துக் கொள்ளுதலாகும்.

ஒவ்வொரு கூண்டிலும் உள்ள கோழிகளின் எண்ணிக்கை, அவைகளின் இறப்பு விகிதங்கள், அவைகளின் உணவு, முட்டையிடும் தன்மை முதலியவைகளைக் கணக்கு வைத்துக் கொள்ளுதல் இன்றியமையாதது. வாரம் ஒரு முறை அவைகளை ஒழுங்குபடுத்திப் பார்க்கும்போது முட்டையிடும் தன்மையும், தீனியின் தன்மையும், இறப்பு விகிதம் அதிகமாக இருந்தால் என் அப்படி உள்ளது? அதன் காரணம் என்ன? அவைகளை எப்படி நிவர்த்திக்க வேண்டும் என்ற எண்ணங்கள் ஏற்பட்டு அக்குறைகளைப் போக்கிட ஆவன செய்ய முற்படுவோம். பொதுவாகக் கணக்கு வைத்துக் கொள்ளாவிட்டால், நம்முடைய இழப்பு நம் கண் முன்னால் நிகழ்ந்தால்கூட நம்மால் கண்டு கொள்ள முடியாது. ஆகவே கணக்கு வைத்துக் கொள்ளுவது மிக மிக அவசியம்.

கடைசியாகத் தமிழ்நாட்டில் குறிப்பாகச் சேலம், கோயமுத்தூர், சென்னை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி போன்ற மாவட்டங்களில் கோழிப் பண்ணைகள் வியக்கத் தக்க அளவில் பெருகி உள்ளன.

— கி. சுந்தரம்,
பாலகிருஷ்ணு கோழிப்பண்ணை,
அரியாக்கவுண்டன்பட்டி,
சேலம் மாவட்டம்.



# கோழிமுட்டை சேகரிக்கச் சில குறிப்புகள்

முட்டைகளை ஒரு நாளைக்கு நான்கு தடவை சேகரிக்க வேண்டும். காலையில் இரு முறையும், மாலையில் இரு முறையும் சேகரிக்கலாம். வெயிற் காலங்களில் இரண்டு நாட்கள் வரையும், குளிர்க் காலங்களில் 4 நாட்கள் வரையிலும் முட்டைகளை அறையின் வெப்பநிலையில் வைத்திருக்கலாம்.

சேவல் இல்லாமல் முட்டையிடக்கூடிய கலப்பினக் கோழிகளின் முட்டைகள் பல நாட்களுக்குக் கெடுவதில்லை. அதிக முட்டைகள் இருந்தால் குளிர் சாதன அறைகளில் சேமித்து வைக்க வேண்டும்.

## முட்டைகளின் தரம்

முட்டைகளின் தரத்தைப் பொறுத்துத்தான் அதை விலை கொடுத்து வாங்குகிறார்கள். பெரிய முட்டைகள் அதிக விலைக்கும் விற்கும். எண்ணிக்கையில் அதிக முட்டையிடும் கோழிகளால் இலாபம் அதிகம். ஏனென்றால், பெரிய முட்டைகள் இடும் கோழிகள் குறைந்த எண்ணிக்கையான முட்டைகளே வைக்கின்றன. நோய்களால் பாதிக்கப்பட்ட கோழிகள் அவைகளின் முட்டை உற்பத்தித்திறனையும் இழந்து விடுகின்றன.

## தூய்மையான முட்டைகள் உற்பத்தி

முட்டை உற்பத்திக்கான செலவுகளில், அதாவது முதலீடு செய்யப்படுவதில் எவ்வளவுக்கெவ்வளவு கவனம் செலுத்தப்பட்டு, வீண்செலவுகள் குறைக்கப்படுகின்றனவோ, அந்த அளவுக்கு வருவாய் இலாபக் கணக்கில் கூடுகிறது. முட்டைகள் விற்பனைக்கு வரும் பொழுது வாங்குவோர் தூய நல்ல முட்டைகளையே வாங்குகின்றனர். அவற்றிற்குக்கூடுதல் விலையும் கிடைக்கிறது. தற்பொழுது கோழிப் பண்ணை வைத்திருப்பவர்கள் உபயோகிக்கும் உமி போன்ற பொருள்கள் மழை அல்லது குளிர் காலங்களில் ஈரம் அடைந்துவிடுவதால் அதன் மேல் இடப்படும் முட்டைகள் அசுத்தமடைய நேரிடுகிறது. எனவே பண்ணையிலிருந்து விற்பனையாகும் அழுக்கான முட்டைகளின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைக்க வேண்டும். அதிக இலாபமடைய கீழ்க்காணும் விவரங்களை கவனத்தில் கொள்ளுதல் நலம்.



## முட்டையிடுவதற்கான இடத்தின் அளவு

ஐந்து கோழிகளுக்கு ஒரு முட்டையிடும் பெட்டி அல்லது தொடர்நிலை முட்டையிடும் பெட்டியாய் இருந்தால் ஒவ்வொரு 100 கோழிகளுக்கும் 16 சதுர அடி பரப்பளவு என்ற விகிதத்தில் இருக்க வேண்டும்.

சுத்தமான காய்ந்த நிலையில் உள்ள மரத்தூள் அல்லது உலர்ந்த உமி முதலியவைகளையே உபயோகிக்க வேண்டும்.

## அடை வைக்கும் தன்மையைக் கைக்கொள்ளும் கோழிகள்

சில கோழிகள் அடை காப்பதைப்போல் முட்டைகள் மீது உட்கார்ந்து கொள்ளும் பழக்கத்திற்கு இலக்காகின்றன. அப்படிப்பட்ட கோழிகள் முட்டைகளைத் தன் கழிவுப் பொருட்களால் அசுத்தப் படுத்துகின்றன. இப்படி அசுத்தப்படுத்துவதினால் முட்டைகள் சீக்கிரம் கெட்டுவிடுகின்றன. உடையும் முட்டைகளின் எண்ணிக்கையும் அதிகமாவதற்கும் வாய்ப்பு உண்டு. எனவே இத்தகைய கோழிகள் முட்டையிட்டவுடன், முட்டைகளை உடன் சேகரித்துவிட வேண்டும்.

## காற்றோட்டம்

காற்றோட்டம் பற்றாக்குறையாக இருக்குமானால், சுத்தமான காற்று உட்புகுந்து வெளிவரத் தடைபடுமேயானால், குடிநீர்க் குவளைகள், மற்றும் கோழிகளின் உடலிலிருந்து ஆவியாக வெளிப்படும் நீர்ப்பகுதி ஆகியவை கூரைக்கருகில் சென்று நீர்த்திவலைகளாக மாறி மறுபடியும் கீழே இறங்கிக் கூளங்களை ஈரமாக்குகிறது. எனவே, சுத்தமான குளிர்ந்த காற்றோட்டம் எப்பொழுதுமே நிலைத்திருக்குமாறு கோழிவீட்டை அமைக்க வேண்டும். எவ்வளவு முன்னேற்பாடான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டாலும் ஓரளவுக்கு முட்டைகள் அசுத்தப்படவே செய்கின்றன. குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும் சுத்தப்படுத்தித்தான் முட்டைகளை விற்பனைக்கு அனுப்ப வேண்டும்.

## தூய்மைப்படுத்தும் முறைகள்

1. முட்டை ஓடுகளைக் காய்ந்த நிலையிலேயே தூய்மையாக்குதல்.

2. தண்ணீர் கொண்டு தூய்மையாக்குதல்.

தூய்மையான காய்ந்த சொரசொரப்பான துணியைக் கொண்டு முட்டை ஓடுகளை மெதுவாகத் தேய்த்தல் வேண்டும். தண்ணீர் கொண்டு தூய்மை செய்வதைவிட துணி மூலம் துடைப்பதே சிறந்தது. ஏனெனில் நுண்கிருமிகள் புகாமலிருப்பதற்காக முட்டைகளின் மேல் இருக்கும் இயற்கைத் தடுப்பை அது அகற்றிவிடாமல் இருக்க உதவுகிறது.

தண்ணீர் கொண்டு தூய்மையாக்க 110 டிகிரி முதல் 120 டிகிரி 'பாரன்ஹீட்' வரை, சூடுபடுத்தப்பட்ட தண்ணீரைக் கொண்டு முட்டை சேகரிக்கப்பட்டவுடன் கழுவலாம். குளோரினைத் தண்ணீரில் கலந்து கழுவப்பட்டவுடன் உடனடியாக ஈரத்தைப் போக்கவேண்டும். ஏனென்றால் அந்த நிலையிலேயே தானாகக் காய்வதால் முட்டையின் மேல் புள்ளி புள்ளியான தோற்றம் ஏற்படும். பிறகு 50 டிகிரி முதல் 56 டிகிரி வெப்பநிலையில் நல்ல காற்றோட்டமுள்ள அறையில் முட்டைகளைப் பெட்டியில் அல்லது தட்டுகளில் வைக்க வேண்டும்.

## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண் : 151.

சேலம் - 1. தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

| | |
|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைகளுக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) .. .. | 3½% |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) .. .. | 3¾% |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் .. .. | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் .. .. | 4½% |
| **பிக்சட் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு : | |
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் .. .. | 5½% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் .. .. | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் .. .. | 6½% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் .. .. | 7¼% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் .. .. | 7½% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் .. .. | 7¾% |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் .. .. | 8 % |
| நடப்பு கணக்கு ½% | சேமிப்பு கணக்கு 4½% |

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு ½% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/–க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., தலைவர்.
வை. இராமலிங்கம், செயலாளர்.
தி. இராஜமாணிக்கம், நிர்வாக அலுவலர்.



## காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள். அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. கடந்த காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை, புத்தகங்களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.

மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ !

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**
பள்ளிப்பாளயம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா



FDSSPB 777TMA


# கோழிப் பண்ணை அமைப்பது எப்படி?

அண்மைக் காலம் வரை சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் பிற்பட்டோர் செய்யும் ஒரு சிறு தொழிலாகக் கோழி வளர்ப்பு இருந்து வந்தது. அந்த நிலை மாறி இன்று பணக்காரர்களும் படித்தவர்களும் மேற்கொள்ளும் ஒரு தொழில் முறையாகவே கோழிப் பண்ணை உருவெடுக்கத் தொடங்கியுள்ளது. கோழிகளை அவைகளின் போக்கில் திரியவிட்டு, அவைகளிலிருந்து கிடைக்கும் குறைந்த எண்ணிக்கை முட்டைகளைக் கொண்டு, தம் வருவாயைச் சிறிது உயர்த்திக் கொள்ளும் நிலை மாறி, தரமான கோழிகளுக்கு நல்ல இருப்பிடமும், வளர்ப்பு வசதிகளும் தந்து அதன் மூலம் இலாபகரமான முறையில் நடக்கும் பல கோழிப் பண்ணைகள் இன்று நாடெங்கும் பரவலாகத் தோன்றத் துவங்கியுள்ளன.

நம் உழவர் பெரு மக்கள் ஆண்டில் ஏறத்தாழ ஆறு மாத காலந்தான் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். மற்ற ஆறு மாதங்களில் போதிய வேலையின்றி இருக்கின்றனர். எனவே அவர்கள் தங்களது எஞ்சியநேரத்தைப் பயனுள்ள, ஆக்க பூர்வமான பணிகளில் பயன்படுத்திடக் கோழிப் பண்ணைத் தொழில் ஒரு நல்ல வாய்ப்பினை நல்குகிறது.

கோழி வளர்ப்பு மூலம் கிடைக்கும் முட்டை, இறைச்சி முதலியவை செம்மையான ஊட்டச் சத்துக்கள் நிறைந்த உணவாகும். மேலும் முட்டையில் ஏறத்தாழ உடலுக்குத் தேவையான எல்லா உணவுச் சத்துக்களும், சரி விகித அளவில் இருக்கின்றன. மற்ற உணவுப் பண்டங்களைப் போல முட்டையைக் கலப்படம் செய்ய முடியாது.

"நாளுக்கு ஒரு முட்டை சாப்பிட்டால் மருத்துவரை நாட வேண்டியதில்லை" என்பது பழமொழி. முட்டையின் சத்துக்கள் குழந்தைகள், இளைஞர், முதியோர் ஆவர். பெண்டிர் என்ற பாகுபாடின்றி அனைவருக்கும் தேவைப்படுகின்றன. முட்டை, சைவர்களுக்கும் ஏற்ற உணவாகும். எனவே, இங்குள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகக் குறைந்த விலையில் முட்டைகள் கிடைக்கச் செய்ய வேண்டுமானால், நாம் கோழி வளர்ப்பு முறையில் மிகுந்த ஆர்வமும் அக்கறையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

கோழிப் பண்ணையில் கிடைக்கும் கோழி மல உரமும் பயிர்களுக்கு மிகச் சிறந்த ஊட்டத்தை அளிக்கின்றது. அதில் உள்ள தழைச் சத்து ('நைட்ரஜன்' சத்து.) மற்ற உரங்களைக் காட்டிலும் அதிகம்.

கோழிப் பண்ணை அமைத்து நல்ல முறையில் நடத்தினால் நல்ல இலாபம் பெற முடியும். இதற்குக் குறைந்த மூல தனமே தேவைப்படுகிறது. குடும்பத்தில் உள்ளவர்களே இப்பண்ணையைப் பராமரித்துக் கொள்ள முடியும். தமிழ்நாட்டில் தற்பொழுது ஓர் ஆண்டுக்கு 3.5 கோடி முட்டைகள் உற்பத்தியாகின்றன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் நமது தேவையோ 70 கோடி முட்டைகள். எனவே, தமிழகத்தில் முட்டை உற்பத்தி பெருக, வலுவுள்ள சமுதாயம் வளர, தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை மேலும் பெருக்க, மக்கள் வருவாயை அதிகரிக்க, கோழிப் பண்ணைத் தொழிலில் உடனடியாக ஈடுபட வேண்டியது நம்முடைய கடமையாகும்.



கோழி வளர்ப்புக்காக அரசினரால் பல தீவிரத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. எனவே, கோழிப் பண்ணை அமைக்க விரும்புகின்றவர்கள் அருகாமையிலுள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவன அலுவலர்களுடனும், கால் நடை வளர்ப்புத் துறை அலுவலர்களுடனும் தொடர்பு கொள்ளுவது அவசியமும் அவசரமுமாகும்.

## கோழிப் பண்ணை ஆரம்பித்தல்

ஒவ்வொருவரும் தங்கள் பொருளாதார வசதிக்கும், இட வசதிக்கும் ஏற்ற வாறு கோழிப் பண்ணையை அமைக்கலாம். ஒரு கோழிப் பண்ணையில் ஏற்படும் இலாபத்திற்கும் நட்டத்திற்கும் கீழ்க்கண்ட காரணங்களே முக்கியம் எனக் கருதப்படுகின்றன .

1. கோழிகளின் தரம்
2. கோழி வீடுகள்
3. அவைகளுக்குக் கொடுக்கப்படும் தீவனம்
4. கோழிகளின் உடல் நலம்—நோய்த் தடுப்பு முறைகள்
5. பண்ணையின் பராமரிப்பு முறைகள்.

இவைகளில் கோழிகளின் தரம்தான் மிக முக்கியம். கிராமங்களில் காணப்படும் நாட்டுக்கோழி இனம் பல விரும்பத் தகாத குணங்களைக் கொண்டுள்ளன. அவைகள் ஆண்டிற்கு 50 முட்டைகளுக்கு மேல் இடுவதில்லை! தீனி உண்பதற்கு ஏற்றவாறு அவைகளின் உடல் எடையும் கூடுவதில்லை. அதாவது ஈடுபடுத்தப் பட்ட முதலுக்கு வருவாய் இருப்பதில்லை. எனவே நாட்டுக் கோழிகள், பண்ணைத் தொழில் முறைக்குப் பயன்படா!

'வெள்ளை லெஃகார்ன்', 'சிவப்புப் போந்தா', 'ஒயிட் ராக்' போன்ற பல உயர் இனக் கோழி ரகங்கள் உள்ளன. இதில் வெள்ளை 'லெஃகார்ன்' கோழிகள் அதிக முட்டையிடும் தன்மை பெற்றவை. சிவப்புக் கோழிகள், 'ஒயிட் ராக்' போன்றவைகள் இறைச்சி வகையைச் சார்ந்தவை.

## வீரிய இனக் கோழிகள்

தற்பொழுது பல தனியார் நிறுவனங்கள் வீரிய இனக் கோழிக் குஞ்சுகளை (Hybrids). உற்பத்தி செய்து விநியோகம் செய்கின்றனர். தரம் உயர்த்தப்பட்ட இரு கோழி இனங்களைக் கலப்பினப் பெருக்கம் செய்யும் போது கிடைக்கும் கோழிக் குஞ்சுகளே வீரிய இன வகைகள்! இவைகள் தங்கள் தாய்க் கோழிகளை விட அதிக முட்டையிடும் தன்மை பெற்று இருக்கின்றன. எனவே, தொழில் துறையில் கோழிப் பண்ணை அமைக்க இந்த வீரிய இனக் கோழி இனங்களைத் தேர்ந்தெடுப்பதே சிறந்தது. இவ் வீரிய இனங்களை மறுபடியும் குஞ்சு பொரிக்க வைத்தால் அவைகள் வேண்டிய பலனைத் தரா. ஒவ்வொரு முறையும், நல்ல வீரிய இனக் கோழிக் குஞ்சுகளை, வீரிய இனக் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி செய்து விற்கும் நிறுவனங்களிலிருந்தே வாங்கிக் கொள்ள வேண்டும். மேற்படி நிறுவனங்களில் இவ் வீரிய இனக் குஞ்சுகள் இனம் பிரிக்கப்பட்டுப் பெட்டைக் குஞ்சுகளாகவே விநியோகிக்கப்படுகின்றன.

'மேயர்' என்ற வெள்ளை லெஃகார்ன் இனம் ஆண்டிற்கு 200 முட்டைகள் இடுவதோடு, நோய்களை எதிர்க்கும் சக்தி அதிகம் பெற்றிருப்பதால், அதன் சராசரி இறப்பு விகிதம் குறைந்துள்ளது. மேலும், இதன் முட்டைகளைக் குஞ்சு பொரிக்க உபயோகிக்கலாம். எனவே, பல இனங்களில் சிறந்து விளங்கும் 'மேயர்' இனக் கோழிகளைப் பண்ணையாளர்களுக்கு விநியோகிக்க எல்லா முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

### வீரிய இனக் கோழிகள் கிடைக்கும் நிறுவனங்கள்

| | |
|---|---|
| ஹைஹ-லைன் | இராமு சகோதரர்கள், கோழிப்பண்ணை மேட்டுப்பாளையம் ரோடு, கோவை-17. |
| | அல்லது |
| | இராமு சகோதரர்கள், கோழிப்பண்ணை 41, வெள்ளனூர். ஆவடி (அஞ்சல்), சென்னை—54. |
| ஆர்பர் ஏக்கர் | ஆர்பர் ஏக்கர்ஸ் பண்ணை இந்தியா லிட். ஜெனரல் ஆஸ்ப்பிட்டல் அஞ்சல், டெலிகோவன், பூனா. மராட்டிய மாநிலம். |
| | அல்லது |
| | உதயசூரியன் கேட்சரீஸ், 1 பி முதலாவது முக்கிய சாலை, சி.ஐ.டி. நகர், சென்னை— 35. |
| இராணி ஷேவர்ஸ் | டி. 324, டிபென்ஸ் காலனி, புது டெல்லி—3. |
| | அல்லது |
| | சிக்ஸ் இந்தியா கோழிப் பண்ணை அலுவலகம், 10, பீச் ரோடு, கடலூர்—1. |
| யூனிசிக்ஸ் | யுனிவர்சல் கோழி இனவிருத்திப் பண்ணை 11/2, மைல் டில்லி கார்கோவன் ரோடு, புது டெல்லி—37. |
| | அல்லது |
| | ஐவரி பண்ணை, 18-ஏ, சுத்தானந்த பாரதி தெரு, கணபதிபுரம், தாம்பரம், சென்னை—45. |
| கலப்பினக் கோழிகள் | வாணன் கோழிப் பண்ணை, 9, ரண்டல்ஸ் ரோடு, வேப்பேரி, சென்னை—7. |
| 'வெள்ளை 'லெஃ கார்ன்' விக்டோரியா' ஆஸ்ட்ரலார்ப்' எம். லைன்' | கண்காணிப்பாளர், கோழிப்பண்ணை, காட்டுப்பாக்கம், காட்டாங்கொளத்தூர் அஞ்சல், செங்கற்பட்டு மாவட்டம். |
| 'வெள்ளை லெக் கார்ன்' முதலியன | கண்காணிப்பாளர், கோழிக்குஞ்சு வளர்ப்புக்கூடம், கப்பலூர் (அஞ்சல்), மதுரை மாவட்டம். |
| 'வெள்ளை லெக் கார்ன்', 'எம். லைன்', 'ஆஸ்ட்ரலார்ப்' முதலியன | கண்காணிப்பாளர், மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (அஞ்சல்), தருமபுரி மாவட்டம். |







### இனப்பெருக்க வகைகள்

| | |
|---|---|
| இராணி ஷேவர்ஸ் | டி. 324, டிபென்ஸ் காலனி, புது டெல்லி—3. |
| 'யுனிபுரோ' | யுனிவர்சல் கோழி இனவிருத்தி பண்ணை 11/2, மைல் டில்லி கார்கோவன் ரோடு, புது டெல்லி—37. |
| 'ஒயிட் ராக்' 'மேயர்' | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை—7. |

மேற்கூறிய கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்க்க விரும்புவோர் அந்தந்த நிறுவனங்களுக்கு எழுதி விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

## பண்ணை அமைத்தல்

கோழிப் பண்ணை அமைக்கப்படும் இடம் கூடிய வரையில் எல்லா வசதிகளையும் பெற்றிருத்தல் வேண்டும். கோழிக் குஞ்சுகள், தீனி மற்றும் சாதனங்கள் எளிதில் பெறக் கூடிய இடமாகவும், கிடைக்கும் முட்டைகளையும், இறைச்சியையும் எளிதில் விற்பனை செய்வதற்கு விற்பனை அங்காடி வசதிகளும், அதற்கான சாலைப் போக்குவரத்து வசதிகளும் கொண்டதாக இருக்க வேண்டும். மேலும் பண்ணை அமைக்கப்படும் இடத்தில் நல்ல தண்ணீர் வசதியும், மின்சார வசதியும் இருப்பதோடு, தண்ணீர் தேங்காத இடமாகவும் இருத்தல் மிகவும் இன்றியமையாததாகும்.



## கோழி வீடுகள்

கிராமங்களில் சாதாரணமாகக் கோழிகளை இரவுக் காலங்களில் மட்டும் கூண்டுகளில் அடைத்துக் காலையில் வெளியே திறந்துவிடுகிறார்கள். இதனால் பல நோய்கள் வருகின்றன அவைகளைத் தடுப்பது கடினம். பல வயதுடைய கோழிகளை ஒன்றாக வைக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. கோழி வளர்ப்பில் நல்ல இலாபம் அடைய 'ஆழ் குப்பை' ('Deep Litter) முறை சிறந்ததாகும். உமி, நிலக் கடலைத் தோல், மரத் தூள், காய்ந்த இலை, மரச் சீவல், துண்டித்த வைக்கோல் போன்ற பொருள்கள் ஆழ் குப்பையில், ஈரமில்லாமல் பாதுகாக்கச் சிறந்த பொருள்களாகும். உபயோகப்படுத்திய ஆழ் குப்பையை எருவாக வயல்களுக்குப் பயன்படுத்த முடியும். தவிர முட்டைகளைச் சேகரிக்கவும், கோழிகளைக் கீரி, பூனை, நாய் முதலிய மிருகங்களிடமிருந்து பாதுகாக்கவும் ஆழ் குப்பை முறையே சிறந்த வழியாகும்.

## ஆழ்குப்பை வீடு கட்டுதல்

கோழி வீடுகள் சிக்கனமாகவும், செம்மையாகவும், சீரான தட்ப வெப்ப நிலைகளையுடையதாகவும் அமைக்கப்பட வேண்டும். நல்ல காற்றோட்டமும், துப்புரவான நிலையும் அமைந்திருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் கோழிகள் வளர்ச்சி குன்றி, நோய் வாய்ப்பட்டு முட்டை உற்பத்தி குறைந்து, நட்டம் உண்டாக்கும்.

கோழிகளின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு இட வசதி அளிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் ஒரே வயதான கோழிகளைத்தான் வைக்க வேண்டும். கீழ்க்கண்ட முறையில் இட வசதியளிக்கப்பட வேண்டும் :

| கோழி வயது | ஒரு கோழிக்குக் குறைந்தது தேவைப்படும் இடவசதி |
|---|---|
| 0 முதல் 4 வாரம் | 0.5 சதுர அடி |
| 4 முதல் 8 வாரம் | 1 சதுர அடி |
| 8 முதல் 12 வாரம் | 1.5 சதுர அடி |
| 12 முதல் 22 வாரம் | 2 சதுர அடி |
| 22 வாரத்திற்கு மேல் | 2.5 சதுர அடி |

கோழி வீடுகளைக் கட்டும் போது முடிந்த வரை வடக்கு, தெற்குப் பக்கம் முகப்பு வைத்துக் கட்டுதல் நல்லது. இதனால் நல்ல காற்று வசதி ஏற்படுவதுடன், சூரிய ஒளி அதிகம் உள்ளே வராதவாறும் இருக்கும்.

கோழி வீடுகள் கட்ட ஒரு குறிப்பிட்ட விதிப்படிதான் கட்ட வேண்டும் என்றில்லை. கூடுமான வரையில் உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு, இடத்திற்கேற்றவாறு நேர்த்தியான வீடுகளைக் கட்டலாம்.

தண்ணீர்க் கசிவோ, ஈரமோ இல்லாமல் இருக்க 'சிமெண்ட் கான்கிரீட்' தரை அல்லது நன்றாகக் கெட்டிப்படுத்தப்பட்ட தரை இருக்க வேண்டும்.

2.5 அடி முதல் 3 அடி உயரத்திற்கும் கட்டப்படலாம். தரையிலிருந்து கூரை முனை குறைந்தது 6 அடி உயரமும், கூரை முகடு (உச்சி) குறைந்தது 10 அடி உயரமும் இருத்தல் நல்லது. பக்கச் சுவர்களுக்கு மேல் கூரை முனை வரை சட்டங்களில் பொருத்தப்பட்ட 0.5 அங்குலக் கம்பி வலைகளால் மூட வேண்டும்.

பொருளாதார வசதிக் கேற்றவாறு ஓலைகள், ஓடுகள், 'ஆஸ்பெஸ்டாஸ்' ஓடுகள், தகரங்கள், 'லைட் ரூப்ஸ்' சாதனங்கள் போன்றவைகளைக் கொண்ட கூரைகளை அமைக்கலாம். ஓலைக் கூரைகள் அடிக்கடி மாற்ற வேண்டியிருப்பதாலும், எலித் தொந்தரவு இருப்பதாலும், முடிந்த வரை ஓடு போன்ற கூரைகளை அமைப்பதே நல்லது. 'லைட் ரூப்ஸ்' ஓடுகளைப் பயன்படுத்துவது சிக்கனமானதும், சிறந்ததுமாகும்.

மழைச்சாரல் உள்ளே வராதவாறு இருக்க இரு பக்கங்களிலும் கூரை முனைகளை, குறைந்தது 2 அடி நீளம் நீட்டிவிட வேண்டும். பக்கச் சுவர்கள் பூசப்பட்டுக் கோழி வீடு வெள்ளையடிக்கப்பட வேண்டும். பிறகு கோழித் தீவனப் பெட்டி, தண்ணீர்ப் பாத்திரம் முதலியவை வைக்க வசதி செய்து கொள்ள வேண்டும்.

## கோழித் தீவனம்

கோழிப் பண்ணை இலாபகரமாக அமைய வேண்டுமானால், கோழித் தீவனத்தில் போதிய கவனம் செலுத்த வேண்டும். பண்ணையின் மொத்தச் செலவில் தீவனத்திற்கு மட்டும் 60 சதவிகிதம் ஒதுக்க வேண்டியுள்ளது. குஞ்சுகளுக்கும், இளங் கோழிகளுக்கும், முட்டையிடும் கோழிகளுக்கும் வெவ்வேறு கோழித் தீவனங்கள் தயாரிக்கப்படுகின்றன. குஞ்சுகளின் தீவனக் கலவையில் 22 சதவிகிதமும், இளங் கோழித் தீவனக் கலவையில் 18 சதவிகிதமும் முட்டையிடும் கோழிகளுக்கு 16 சதவிகிதமும் புரதச் சத்துள்ளன.

| மாதிரி தீவனக் கலவை | குஞ்சுகளின் கலவை (பாகம்) | பெரிய கோழிகளின் கலவை (பாகம்) |
|---|---|---|
| மக்காச் சோளம் (சோளம், கேழ்வரகு) | 45 | 55 |
| கோதுமைத் தவிடு அல்லது அரிசித் தவிடு | 18 | 15 |
| கடலைப் பிண்ணாக்கு | 25 | 20 |
| மீன் தூள் | 10 | 8 |
| தாது உப்பு | 2 | 2 |
| வைட்டமின் கலவை (100 கிலோவிற்கு) | 25 கிராம் | 25 கிராம் |
| 'எம்பசின்' (100 கிலோவிற்கு) | 50 கிராம் | 50 கிராம் |

சொந்தத்தில் தீவனம் கலக்கும் போது வைட்டமின், 'எம்பசின்' போன்றவைகளை முதலில் ஒரு கிலோ தீவனக் கலவையில் நன்றாகக் கலந்து, பின் இரண்டு கிலோ தீனியுடன் கலந்து படிப்படியாக எல்லாத் தீவனக் கலவையிலும் நன்றாகக் கலக்கும்படிச் செய்ய வேண்டும்.

## குஞ்சுகள்

பொதுவாக, கோழி வளர்ப்பில் ஒரு நாள் குஞ்சுகளைக் கொண்டு தொடங்கப்படும் பண்ணைகளில், முதல் 6 மாதத்திற்கு அதாவது முட்டையிடும் பருவம் அடையும் வரை வருமானம் பெறுவதற்கு வழியில்லை. முதல் ஆறு மாதத்தில் பண்ணையில் மாத வாரியாகத் தேவைப்படும் தீனித் தேவைகளையும் முதலீடுகளையும் முன் கூட்டியே திட்டமிட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்.

கோழிக் குஞ்சுகள் பொரித்த 48 மணி நேரம் வரையில் தீவனமில்லாமல் இருக்க முடியும். இச்சமயத்தில்தான் குஞ்சுகள், விமான மூலமோ, இரயில் மூலமோ அனுப்பப்படுகின்றன.

கோழிக் குஞ்சுகளைச் சரிபார்த்துக் குஞ்சு வளர்ப்பு அறையில் விடலாம். அப்போதே அவைகளுக்கு 'கோழிக் கழிச்சல்' (எஃப். 1) தடுப்பு மருந்தையும் செலுத்த வேண்டும். பிரயாணத்தில் ஏற்பட்ட களைப்பையும் சோர்வையும் போக்க 'ஹோஸ்டா சைக்கிளின்', 'டெராமைசின்', 'ஆண்டிஜெரம்—77' போன்ற மருந்துகளைக் குடிநீரில் கலந்து கொடுக்கலாம்.

## குஞ்சு பொரித்தல்

**பருவம் :** குளிர்காலப் பருவத்திலும், மாரிக்காலப் பருவத்திலும் குஞ்சு பொரிப்பது மிக்க பயனை விளைவிக்கும். இளவேனிற் காலத்தில் குஞ்சு பொரிப்பது மிகச் சிறந்ததுடன், குஞ்சுகள் வளருவதற்கு ஏதுவாகக் காணப்படுகிறது. எனவே, குஞ்சு பொரிப்பதற்கு டிசம்பர் மாதத்திலிருந்து ஏப்ரல் மாதம் முதல் வாரம் வரை தேர்ந்தெடுப்பது நன்மை பயக்கும். குஞ்சு பொரிக்க 'இன்குபேட்டர்' பயன்படுத்துதல் சிறந்தது.



## குஞ்சுகளை வளர்க்கும் முறைகள்

பெட்டை அடைகாப்பதன் மூலமோ, அல்லது குஞ்சு பொரிக்கும் பெட்டியின் மூலமாகவோ குஞ்சுகள் பெறப்படும் நாளிலிருந்து எட்டு வாரம் வரை வளர்ப்பதற்கு மிகுந்த கவனத்தைச் செலுத்த வேண்டும். குஞ்சுகள் பின்கண்ட இரண்டு முறைகளில் வளர்க்கப்படலாம் :

### இயற்கையான முறை :

தாயும், சேயும் வளருதல் போன்று, பெட்டையும், குஞ்சும் நல்ல காற்றோட்டமுள்ளதாகவும், மழை, வெய்யில் போன்ற காலங்களில் தங்குவதற்கான இட வசதியும், சுற்றுப்புற இடம் சுத்தமாக உள்ளதாகவும், இரவில் தங்கும் இடத்தில் உண்ணியும், பேனும் இல்லாமல் இருக்கும் வசதிகளை உடையதாகவும் இருப்பின், குறைந்த பட்சம் 12 அல்லது 15 குஞ்சுகள் நல்ல உடல் அமையப் பெற்றுள்ள பெட்டையைக் கொண்டே வளர்க்கப்படலாம்.

### செயற்கையான முறை :

இம்முறையில் வளர்க்கப்படுவதால் பல நன்மைகள் ஏற்படுகின்றன.



(1) குஞ்சுகளை எப்பருவக் காலத்திலும் வளர்க்கலாம்.

(2) அதிக எண்ணிக்கையுள்ள குஞ்சுகளை வளர்க்கலாம்.

(3) நல்வாழ்வு (சுகாதார) முறையில் வளர்க்கலாம்.

(4) தேவையான அளவு வெப்பத்தினை அளிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

(5) உணவினைக் குஞ்சுகளுக்கு அளிப்பதற்குப் பகுதி வாரியாக அளிப்பதுடன் அவைகளுக்குத் தேவையான அளவு உணவைப் பெறுவதற்கு வழி வகை செய்யலாம்.

(6) குஞ்சுகள் வளர்க்கும் பெட்டிகள் (Brooder) குஞ்சுகளுக்குச் செவிலித்தாய் போன்று இருந்து வளர்ப்பதற்கு மிக்க பயனைத் தருகிறது.

தக்க பெட்டிகள் பல முறைகளில் செய்வதுடன் அல்லாது, போதுமான அளவு வெப்பத்தைத் தேவையான பொழுது பெற்றுக் கொள்வதற்கு, வெப்பத்தினை அளிக்கும் கருவியினைக் கொண்டுள்ளது. குஞ்சுகள் வளர்க்கும் பெட்டிகள் 25 குஞ்சுகள் முதல் 1,000 குஞ்சுகள் வரை வளர்ப்பதற்கான அளவில் செய்யப்படுகின்றன. இப்பெட்டிகள், தேவையான அளவு வெப்பத்தினை தேவையான பொழுது பெறுவதற்கான நிலையில்இருப்பதுடன், போதுமான அளவு காற்றும் சூரிய வெளிச்சமும் பெறத் தக்க வகையிலும், மேலும், குஞ்சுகளின் எதிரிகளிடமிருந்தும் நெருப்பின் அனலிலிருந்தும் காப்பதற்கும், முறைப்படி துப்புரவு செய்வதற்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும்.

## குளிர்ந்த நிலையில் வளர்த்தல்

இம்முறையில் அதிகமான அளவில் வெப்பத்தினை அளித்திடாமல், ஒரு சிறிய பெட்டியில் அல்லது பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட பெட்டிகளில் வளர்க்கப்படலாம். அதற்கு ''புல் வேயப் பெற்ற அடைகாக்கும் பெட்டி'' (Hay Box Breeding) என்று பெயர். நன்றாகப் பின்னப்பட்ட கூடையின் உட்புறத்தினைச் சுற்றித் தடித்த நிலையில் மிருதுவான நிலையிலுள்ள புல் வைக்கப்பட வேண்டும். மேலும் உள்ளிருக்கும் காற்றும், வெளியே செல்வதற்கு போதுமான அளவு ஒரு துவாரத்தினை மேற்புறத்தில் ஏற்படுத்த வேண்டும். 15 அங்குலம் கூடையில், 30 குஞ்சுகள் வளர்க்கலாம். இம்முறையினை அனுசரிக்கும் பொழுது முதல் 4 நாட்கள் அல்லது 5 நாட்கள் கூடையினைச் சுற்றிலும் (அடிப்புறத்தில்) குறுகிய அளவில் உள்ள வழியின் மூலமாக வெளிப்புறத்தில் தேவையானபடி திரித்துவிட்டு வந்து செல்வதற்கான இடத்தினைப் போதுமான அளவுஅளித்திடல் வேண்டும். இவ்வாறு செய்யப்படுவதால், தேவையான பொழுது கோழிக் குஞ்சுகள் வெப்பத்தினையும், குளிர்ந்த காற்றினையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. இம்முறை, இயற்கையாக அமையப் பெற்றுள்ள அதிக அளவு வெப்பத்திற்கும், குறைந்த அளவு வெப்பத்திற்கும், அதிக அளவில் வேறுபடாமல் அமையப் பெற்றுள்ள இடத்தில் வளர்ப்பதற்கு மிகச் சிறந்தது. மேலும் எளிதாகக் காணப்படுகிறது.

## வெதுவெதுப்பான முறையில் வளர்ப்பதற்குப் பெட்டிகள்.

இம் முறையில் பல வடிவங்களில் அமையப் பெற்றுள்ள பெட்டிகளுக்கு மண்ணெண்ணெய் அல்லது மின்சாரம் மூலமாக வெதுவெதுப்பான வெப்பத்தினை அளிக்கும் வகையில் செய்யப்பட்டுள்ளன. எவ்விடத்திற்கும் மாற்றுவதற்கான நிலையில் உள்ள வளர்க்கும் பெட்டிகள், தேவையான அளவு வெப்பத்தினை ஒரு குறிப்பிட்ட அளவு வரை பெறுவதற்கான அளவில் உள்ளன. இதனை ஆங்கிலத்தில் (Havers) என்று அழைக்கின்றனர்.

**விளக்கின் துணைகொண்டு வளர்க்கும் பெட்டிகள்:** அரிக்கேன் விளக்கின் துணைகொண்டு ஒரு சாதாரண மரப் பலகையில் செய்யப்பட்டுள்ள பெட்டிகளில் குஞ்சுகள் அதிகமான செலவு இல்லாது வளர்க்கப்படலாம்.

**கூடையில் குஞ்சு வளர்க்கும் முறை :** இம்முறையில் எளிதாகவும், அதிகச் செலவில்லாமலும் அரை வட்ட வடிவமுள்ள கூடையின் துணைகொண்டு குஞ்சுகளை வளர்க்கலாம். இக்கூடையின் பாதி அளவு கீழ்ப்புறத்தினைச் சுற்றிலும் காற்று நேரிடையாகப் புகாமலிருக்க கோணிப்பை அல்லது சிமெண்ட் கலவையின் துணைகொண்டு செய்ய வேண்டும். மேற்புறம் புகையும், உள்ளிருக்கும் காற்றும் வெளிப்புறம் செல்வதற்கான திறந்த வெளியாக அமைக்கப்படல் வேண்டும். வெப்பத்தினை அளிப்பதற்கு 'அரிக்கேன்' விளக்கினைக் கூடையின் நடுவில் வைத்து அதனைச் சுற்றிலும், 0.5 அங்குல அளவுள்ள கம்பி வலையினைக் கொண்டு, குஞ்சுகள் விளக்கின் மீது பட்டு புண் ஏற்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும். தரையின் மீது வைக்கோல் போட வேண்டும். இம்முறையில் செலவிடுவது விளக்கிற்கு மட்டும்தான் என்பது குறிப்பிடத் தக்கது.



## மரப்பலகையினால் செய்யப்பட்ட பெட்டியில் குஞ்சு வளர்க்கும் முறை.

மலிவான விலையுள்ள மரப் பலகையினைக் கொண்டு 3 அடி நீளம், 2 அடி அகலம், 2.5 அடி உயரமுள்ள பெட்டியினை மூடப்பட்டுள்ள நிலையில் செய்திடல் வேண்டும். கீழ்ப்புறத்திலுள்ள மரப் பலகையினை நீக்கி விட்டு 0.5 அங்குல அகலமுள்ள கம்பி வலையின் துணை கொண்டு அடிப்புறத்தினை மூட வேண்டும். 'அரிக்கேன்' விளக்கினைப் பெட்டியின் நடுவில் குஞ்சுகள் தொடாமல் வைக்க வேண்டும்.

வெப்பநிலை 95 டிகிரி (பாரன்கீட்) இருக்குமாறு அமைக்க வேண்டும். ஏனென்றால் அந்த அளவு வெப்பம் குஞ்சு வளர்ச்சிக்கு இதமானது. இன்றியமையாதது.

தரை மீது குஞ்சு வளர்க்கும் முறையைக் கடைப்பிடிப்பதாக இருந்தால் முதலில் சுண்ணாம்புத் தூளைத் தரையில் தெளித்து, அதன் மேல் 2 அங்குலத்திற்குத் தூய்மையான உடனடியாகக் கிடைக்கக்கூடிய காய்ந்த உமி அல்லது மரத்தூளைப் பரப்பி அதன் மேல் குஞ்சுகளை விட வேண்டும்.

## காற்று வசதி

குஞ்சுக்கு உயிர்வளி (பிராணவாயு) போது மான அளவு கிடைக்க வேண்டும். காற்றேட்டம் வெளி வெப்பநிலைக்கும், மாறுபடும் தட்ப வெப்ப நிலைக்கும் ஏற்ப இது சீராக்கப்படு கின்றது. குறைந்த வெப்பநிலைகளைக் கூடத் தாங்கும்படியான தன்மையில் 4 வார வயதிலிருந்தே குஞ்சுகளைப் பழக்க வேண்டும்.

... ...

## வளரும் கோழிகள்

21 நாட்கள் பெட்டியில் இருந்து (Brooder) எடுக்கப்பட்ட கோழிக் குஞ்சுகள் 5 அல்லது 6 மாதமாகும் வரை வளரும் குஞ்சுகள் என்று கூறப்படும்.

இவைகளைப் பெட்டியினின்று வெளியே எடுத்து விடும்பொழுது தக்க சூழ்நிலையில் பாது காப்பான இடத்தில் விட வேண்டும். இந்த வளரும் குஞ்சுகள் உள்ள இடம் நல்ல காற்றேட்டம் கொண்டதாய் இருக்க வேண்டும். இல்லாவிடில் குஞ்சுகள் வளர்ச்சியின்றி பல வீனமாக ஆகிவிடும். நோய்களுக்கும் இரையாக ஏதுவாகும். பெரிய கோழிக் குஞ்சுகள் எப்பொழுதும் தனியாக வைக்கப்பட வேண்டும். ஒரே இடத்தில் நிறையக் குஞ்சுகளை வைக்காமல் குஞ்சுகள் பரவலாக இட வசதியுடன் இருக்க வேண்டும். கோழிகளை ஒரு வீட்டிலிருந்து இன்னொரு வீட்டிற்கு மாற்றப் படும் முன்பு, குடற் புழு நீக்கும் மருந்துகளைக் கொடுப்பது முக்கியம்.

குஞ்சுகள் வளர வளர, தீவனத் தட்டுக் களைத் தரையிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக உயர்த்த வேண்டும். தீனித் தட்டின் அடிப் பாகம் கோழியின் முதுகிலிருந்து 1 அங்குலம் உயரத்தில் இருக்குமாறு வைக்க வேண்டும். தீனித் தட்டுகளை அடிக்கடி கொஞ்சமாக நிரப்ப வேண்டும். ஆழ் குப்பையை ஈரம் படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குஞ்சுகளுக்கு 8-வது வாரத்தில் 'கோழிக் கழிச்சல்' (RDVK) வீரிய ஊசி போடப்பட வேண்டும். அந்த ஊசி போடு முன் ஒரு வாரத்திற்கு முன்பே குஞ்சுகளுக்கு குடற் புழுக்களை நீக்கும் மருந்து கொடுத்து, அவைகளைத் தயார் படுத்த வேண்டும். 5 நாட்களுக்கு வைட்டமின் சத்துக்களையும் கொடுக்கலாம். இந்த ஏற்பாடு, ஊசி போடுவதால் பாதிக்கப்படும் குஞ்சுகளின் எண்ணிக்கையைக் குறைக்க உதவும்.

## முட்டையிடும் கோழிகள்

கோழிகள் 18-வது வாரத்தில் நன்றாக வளர்ந்து செழிப்பாகக் காணப்படும். 18-வது வாரத்திலிருந்தே கோழிகளில் முட்டைகள் வைப்பதற்குத் தயாரான அறிகுறிகள் தோன்றும். வீரிய இனக் கோழிகள் சாதாரணமாக 22 வாரங்களில் முட்டை வைக்கத் தொடங்கி விடுவதால் கோழி வீடுகளில் முட்டையிடும் பெட்டிகளை வைக்க வேண்டும். இதனால் பின்னர் தரைகளில் முட்டை இட்டு உடைவதைத் தவிர்க்கலாம். கிடைக்கும் முட்டைகளும் சுத்தமாக இருக்கும். 5 கோழிகளுக்கு ஒரு முட்டைப் பெட்டி (15 அங்குலம் நீளம், 15 அங்குலம் அகலம், 15 அங்குலம் உயரம்) வீதம் வைக்க வேண்டும்.



கோழிகளுக்கு 18-வது வாரம் முதல் 'கிளிஞ்சல் தூள்' கொடுக்க ஆரம்பிக்கவேண்டும். கிளிஞ்சல் தூளை அதற்கான சாதனத்திலோ, தட்டிலோ நிரப்பிக் கோழிப் பெட்டியில் வைக்கலாம். இதனால் மெல்லிய ஓடு கொண்ட முட்டைகளைத் தவிர்க்க முடியும்.

12 அல்லது 18 வாரம் முதல் குதிரை மசால், அகத்தி, சணப்பு போன்றவைகளை நறுக்கிக் கோழிகளுக்குக் கொடுக்கலாம். ஆனால் கோழிகள் நன்றாகத் தீனி சாப்பிட்ட பிறகே கீரைகளைக் கொடுக்க வேண்டும். நாள் தோறும் காலை 10 மணிக்கு மேல் இவற்றைப் போடலாம்.







## தரமான கோழிகளை வளர்க்க.........

கோழிப் பண்ணை இலாபகரமாக அமைய நன்கு வளர்ந்துள்ள, நிறைய முட்டைகள் வைக்கும் அறிகுறிகள் உள்ள கோழிகளையே வைத்திருக்க வேண்டும். முட்டையிடாத கோழிகளை உடனே பிரித்து விடவும்.

## தீவனமும், தண்ணீரும்

ஒரு முட்டையிடும் கோழிக்குக் குறைந்தது 2.5 சதுர அடி இடமாவது இருக்க வேண்டும். 20 கோழிகளுக்கு ஒரு தீனிப் பெட்டி, ஒரு தண்ணீர்க் குவளை என்ற கணக்கில் இருக்க வேண்டும். தீனிப் பெட்டிகளில் தீனி எப்பொழுதும் நிறைந்திருக்க வேண்டும். நாள் தோறும் காலையில் தீனிப் பெட்டியிலுள்ள தீனியை மட்டும் கிளறிவிட வேண்டும். முட்டையிடும் 100 கோழிகளுக்கு நாள்தோறும் சராசரி 10 கிலோ தீனியும், சுமார் 36 லிட்டர் தண்ணீரும் தேவைப்படும். கிளிஞ்சல் தூள் எப்பொழுதும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

## வெப்பநிலை

கோழி வீட்டின் உள் வெப்ப நிலை 75 டிகிரி முதல் 95 டிகிரி (பாரன்கைட்) இருக்குமாறு அமைக்க வேண்டும். அதிக வெப்பத்தால் முட்டை உற்பத்தி, முட்டையின் எடை, முட்டையோட்டின் தன்மை முதலியவை பாதிக்கப் படுகின்றன. தீனி உண்ணும் அளவும் குறைகிறது எனவே, உள் வெப்ப நிலை சீராக இருக்க, நல்ல காற்றேட்ட வசதி இருக்க வேண்டும். கோழி வீடுகளைச் சுற்றிப் பசும் கொடிகளையும், செடிகளையும் வளர்க்கலாம். கோடை காலத்தில் வெப்பக் காற்றின் கொடுமையைத் தடுக்க, நனைத்த கோணிப் பைகளைச் சுற்றிலும் தொங்கவிடலாம். குளிர்காலங்களில் குளிர்காற்று உள்ளே வரவிடாமல் தடுக்க வேண்டும்.

## வெளிச்சம்

கோழிகளுக்குப் பகல் நேரங்களில் கிடைக்கும் சூரிய ஒளியுடன் விளக்கு வெளிச்சமும் தேவை. இவவாறு அதிக நேரம் வெளிச்சம் கொடுப்பதால் முட்டை உற்பத்தித் திறன் அதிகமாகின்றது. கோழிகளுக்குக் குறைந்தது ஒரு நாளைக்கு 16 மணி நேரம் வெளிச்சம் தேவை.

## முட்டை உற்பத்தி

நன்கு முட்டையிடும் திறன் பெற்ற கோழி தான் பிறந்த நாளிலிருந்து 500 நாட்களுக்குள் 200 முதல் 250 முட்டைகள் வரை இடும். வீரிய இனக் கோழிகள் இத்திறனைப் பெற்றிருக்கின்றன.

கோழிகளை, முட்டையிட ஆரம்பித்தது முதல் ஓர் ஆண்டு வரை வைத்திருக்கலாம். அதன் பிறகு அக்கோழிகளை வைத்துப் பராமரிப்பது இலாபகரமாக இருக்காது.

— டாக்டர் கே. பவானிசங்கர்.



### குஞ்சுகளுக்குத் தேவையான சத்துப் பொருட்கள்

| | |
|---|---|
| மொத்தப் புரதம் | 20 (சதம்) |
| வைட்டமின்கள் : | |
| வைட்டமின் 'ஏ' | 1,200 |
| வைட்டமின் 'டி' | 90 |
| தையமின் | 0.8 கிராம் |
| ரைபோபிளேவின் | 1.3 கிராம் |
| பென்டோதீனிக் அமிலம் | 1.2 கிராம் |
| நயாசின் | 1.2 கிராம் |
| பைரிடாக்சின் | 1.3 கிராம் |
| பையோடின் | 0.04 கிராம் |
| கோலின் | 0.600 கிராம் |
| போலின் | 0.25 கிராம் |
| தாது உப்புக்கள் | |
| கால்சியம் | 1 சதம் |
| பாஸ்பரஸ் | 0.6 சதம் |
| உப்பு | 0.5 சதம் |
| பொட்டாசியம் | 0.2 சதம் |
| மாங்கனிஸ் | 0.25 மில்லிகிராம் |
| அயோடின் | 0.5 மில்லிகிராம் |
| மக்னீசியம் | 2.20 மில்லிகிராம் |

### 100 கோழிகளுக்குத் தேவையான தீனி. தண்ணீர் (சராசரி அளவு)

| கோழிகளின் வயது. (வாரம்) | ஒருவாரத் திற்குத் தேவை யான தீனி. (கிலோ) | அன்றுடம் தேவைப்படும் தண்ணீர். (லிட்டர்) |
|---|---|---|
| 1 | 7 | 2 |
| 2 | 13 | 3·5 |
| 3 | 19 | 5·5 |
| 4 | 26 | 7·0 |
| 5 | 32 | 9·0 |
| 6 | 40 | 11·0 |
| 7 | 45 | 13·0 |
| 8 | 48 | 15·0 |
| 9 | 50 | 17·0 |
| 10 | 52 | 19·0 |
| 11 | 55 | 21·0 |
| 12 | 57 | 23·0 |
| 13 | 59 | 25·0 |
| 14 | 63 | 27·0 |
| 15 | 65 | 29·0 |
| 16 | 67 | 29·0 |
| 17 | 77 | 29·0 |
| 18 | 77 | 29·0 |
| 19 | 77 | 29·0 |
| 20 | 77 | 29·0 |





# வெண்பாப் போட்டி

ஈற்றடி : வேறெங்கும் உண்டோ விளம்பு

* முத்துப்பல் காட்டி முறுவலிக்கும் வெண்ணிலவும்
தத்தி நடைபயிலும் தாமரையும்—இத்தரையில்
நீரெங்கும் கண்டால் நவில்கென்றூர், காதலியே!
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—க. இருஷ்ணன், திருப்பூர்.

சுற்றம் தழுவிடுவர் ; சூழும் வறுமையிலும்
உற்ற விருந்தை உயிரென்று—பெற்றுவைப்பர்
பாரெங்கும் போற்றுமிந்தப் பைந்தமிழப் பண்பாடு
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—சி. மு. சிவலிங்கன், மதுரை-21.

குழல்முழவு யாழாய்க் குமிழ்வாய் மழலைப்
பழச்சுவையாய் நற்பொழிலாய்ப் பைந்தண்—ணிழல்தருவாய்
சீரெழிலாய் நம்'ழ' கரம் செந்தமிழில் தானல்லால்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—இரத்தின மனோகரன், சென்னை-11.

உம்பர் உலகென்பர், உய்யானத் துள்ளென்பர்
அம்பிறை, வானம் அழகென்பர்;—தம்மழலை
ஈரவிதழ் ஓரம் இருக்கும் சிரிப்பின்பம்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—ஜெயா தங்கமுத்து, வே. கள்ளிப்பாளையம்.

கோலத் தமிழ்கொழிக்கும் கோதில் இலக்கணத்தில்
சீலத் தகம்புறம் சீர்மைகாண்—ஞாலத்தின்
கூறெங்கும் அம்மாண்பு கூறுமொழி நந்தமிழ்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—புலவர் இரத்தினவேலன், கொரட்டி வ. ஆ.

பேணுந் திறமற்றுப் பிள்ளை பலபெற்று
நாணும் பிழைப்பு நடத்திட்டால்—காணும்பல்
பேறேது நாட்டில்? பெருந்தொல்லை இஃதேபோல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—சாணுப்பாண்டி, சுந்தரராசபுரம்.

மாதமொரு கல்லூரி மாநிலத்தில் தோன்றியது;
வேதமந்த்ரம் ஏதுமில்லை! வீறுகொண்ட—சாதனையே
ஆறுண்டில் ஆறுபத்தும் ஈராறும் ஆயினவே!
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—புலவர் சி. தணிகாசலம், சென்னை—17.

கள்ளமிகும் உள்ளத்தார் காழ்ப்புணர்ச்சி கொண்டதினுல்
வள்ளலென வாழ்விக்கும் வல்லரசைப்—புல்லறிவால்
சேறெங்கும் வீசித் திசைமாறிப் பேசுதல்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—க. இராமசாமி, விளாநல்லூர்.

பல்லிகத்தி னுல்சகுனம்! பாய்பூனை யும்சகுனம்!
நல்லபடி தும்மினு லும்சகுனம்!—வல்லமையைக்
கூறுக்கி நாம்நம்மைக் கொல்லும் இழிவைப்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு!

—விநோதலீலன், இரா. வெள்ளோடு.

* பரிசுக்குரிய வெண்பா எழுதியவர்:—

திரு க. கிருஷ்ணன், 6, கே.பி.என். காலனி, யூனியன்மில் ரோடு,
திருப்பூர்—638601, கோவை மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

இன்றென் உயிர்பிரிந் திவ்வுலகை நீங்குமுன்னம்
நின்றே தமிழ்நாடு பேரிடுவேன்!—என்றுரைத்தார்
ஆருன தேமொழியே! அண்ணுவே; உன் செயல்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—சா. துரைராஜ், பெரியதச்சூர்.

சித்திரிப்பார் கல்லாச் சிறுமைதனைக் காசுதந்து
பத்திரிகை வாங்கப் பயப்படுவார்—கத்தரிக்காய்ச்
சோறுண்டு வாழ்தல் சுகமென்பார் தம்மவர்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—புலவர் செந்தமிழ்க்கிழார், அருப்புக்கோட்டை.

பத்துப்பாட் டெண்தொகையும் பாடும் பதினெட்டில்
சத்துள்ள கீழ்மேல் சரிக்கணக்கும்—தத்துவத்தின்
சாரங்கள் அத்துணையும் சாற்றுகின்ற காப்பியமும்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—சடையப்பன், ஆனத்தூர்.

வேற்றுமைகள் நீங்கிடவும் வேளாண்மை ஓங்கிடவும்
ஊற்றாய் அறிவெங்கும் ஓங்கிடவும்—போற்றுகின்றோம்
ஊரெங்கும் சீரணியால் உண்டாகும் நன்மைபோல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—மு. பொன்னுரங்கம், அனப்பத்தூர்.

அப்பப்பா! இவ்வரசின் ஆறுண்டுச் சாதனைகள்
செப்புதற்கு மூச்சுத் திணறுதய்யோ—எப்பொழுதும்
சீரெங்கும் காணச் செயலுறும்நம் ஆட்சியைப்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—நா. சுந்தரேசன், செங்காடு, வ. ஆ.

வேற்றுமையில் ஒற்றுமையும் வேதனையில் சாதனையும்
ஏற்றுகையில் சாய்ந்திட்ட பேரொளியைப்—போற்றவோ
பேறெங்கள் அண்ணு பெருமைக்குச் சான்றேபோல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—தங்க. வேதபுரி, செய்யாறு.

அல்லற் படுத்திடினும் ஆற்றித் துயர்நீக்கி,
இல்லிற் பெருநிதியாய்த் தானிலங்கி,—வல்லவனென்(று)
ஆரும் புகழத்தாய் ஆக்கிவிட்டாள்! நற்றெய்வம்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—ஜெ. மலர்விழி, செந்துறை.

நல்லறந் தான்கூறும் நாடும் பொருளுரைக்கும்
சொல்லரிய இன்பச் சுவைசேர்க்கும்—வள்ளுவம்போல்
பாரெங்கும் வாழநற் பண்புநெறி காட்டும்நூல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

கண்ணொளி குன்றினோர் கண்பார்வை பெற்றிடவும்
மண்ணகத்தில் பிச்சை மறைந்திடவும்—விண்புகழ
தீரமுடன் நற்பணிகள் செய்த கலைஞரைப்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—சீனிவாசம்மாள், சேலம்-9.

தந்தை நினைவுருவைத் தான்சுமந்து மெய்காத்துப்
பந்தாக மாதங்கள் பத்துருள—என்னுடலைப்
போராடி ஈன்றெடுத்துப் பூரித்த அன்புளம்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—பு. புனிதா, ஓலைப்பாடி.

கொஞ்சி விளையாடிக் கூந்தலாம் பெண்மேகம்
நெஞ்ச மலைமீது நின்றூட—அஞ்சுகமே
பாரென்று என்விழிக்குப் பாங்காகும் உன்னெழில்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—வசந்தராசன், வெள்ளக்குட்டை.

இழுவண்டி மாற்றிமிதி வண்டிகொளச் செய்தே
தொழுநோயர் வாழ்வு துலக்கி—'விழி' திறந்து
பேரறிஞர் வாரிசினர் பேணுதமி ழாட்சியைப்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—க. இரத்தினம். ஆயக்காரன்புலம்

உடன்பிறந்தே கொல்லும் பிணிபோல் உறவாடி
உடன்வளர்ந்தே கேடு புரிவார்—படைகூட்டி
ஆர்ப்பரித்துப் போர்தொடுக்கும் ஆய்விலார் தம்மைப்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—மு. மனோன்மணி, கொத்தங்குளம்.

கலைஎழில் வீசும் கவின்மிகு சிற்பச்
சிலைநட ராசரின் சீர்போல்—கலைமலி
நேரிலங்கு கோயில் நிறைந்ததமிழ் நாட்டைப்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—கோ. மா. இராசகோபாலன், சென்னை-23.

ஊரெங்கும் மின்சாரம்; ஊதியத்தால் நல்வாழ்வு;
சேரிவாழ் மக்கட்கு சீர்வீடு—வாரியத்தால்
நீர்வசதி; தார்ச்சாலை; நம்மரசார் சாதனைபோல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—ஓ. பி. சாமி, ஓலைப்பாடி

தூங்காமை கல்வி துணிவுடைமை நாட்டுநலம்
நீங்காமை; பேதம் நிலையாமை;—ஏங்காமை
வேறெங்கும் ஏதய்யா? வெல்தமிழன் நாட்டிலின்றி
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—வெ. கலைக்கூத்தன், பம்பாய்-19.

# வெண்பாப் போட்டி

"கண்ணே வருவேன்நான்; காத்திருநீ" என்றுரைத்தார்!
கண்கள் ஒளியிழந்துங் காணேனே!—இன்மொழியாய்!
ஆறெதுவோ காண்பதற்கு? ஆற்றுவனே . . .? இக்கொடுமை
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—லோ. வளர்மதி, செந்துறை.

ஒன்றேமுக் காலடியில் ஒண்பொருளை உள்வைத்து
முன்னூறும் ஆயிரமும் முப்பதுவும்—எண்கூட்டாய்
பார்நீதி கூறும் பழம்பெருநூல் வள்ளுவம்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—முத்து முருகேசன். ஓலைப்பாடி.

கற்பில்தன் மானத்தில் கானக் கவரியினம்
நற்சான்றும் எந்தமிழ நாட்டவர்க்குக்—கற்கண்டுச்
சாறணைந்த எங்கள் தமிழ்நூல்கள் சாற்றுமே
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—தமிழருவி, நாமக்கல்-

எத்திக்கும் போற்ற, இனிய அகத்துறையைத்
தித்திக்கப் பாடிச் செழித்திருக்கும்—முத்தமிழாம்
பேறிங்கு நாம்தானே பெற்றுள்ளோம்; இப்பெருமை
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—செ. ஞானபூபதி, திருப்பூர்-2.

சோழ வளநாடு சோறுடைத்து என்றக்கால்
வாழுந் தமிழகத்து வாய்ப்பரசும்—தாழாது
சோறளித்து மிஞ்சியதைச் சோறிலார்க் கீயுமாட்சி
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

கேட்ட சலுகையெல்லாம் கிஞ்சித்தும் காழ்ப்பின்றிக்
காட்டி நலமளித்தார் கண்ணியமாய்;—வேட்கையுடன்
பாரினில் தாயன்ன பாசமுள்ள நல்லாட்சி
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—ப. சக்திவேலன், திருச்சி-4.

ஆணவமும் பேரழகும் அச்சம் மடம்பயிர்ப்பு
நாணமதும் கொண்டிலங்கும் நங்கைமுன்—ஆணழகன்
வீரமெலாம் நீங்க வியர்த்துத் தவிப்பதுபோல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—ஆ. கணபதி, சென்னை-15.

கள்ளங் கபடமில்லை; கன்னல் மொழிபேசும்
பிள்ளைக் கனியை நிகர்த்தபொருள்—உள்ளபடி
கூறுங்கால் இல்லை குவலயத்தில், என்அன்பே
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—துறவி, அரியலூர்.

சிற்பமுடன், ஓவியமும், செந்தமிழர் நாட்டியமும்
அற்புதமாய்க் கோபுரங்கள் அத்தனையும்—நற்கதியில்
பாரெங்கும் காணுப் பண்பாடு நாகரிகம்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—து.ம. இராமசாமி, கோவை-3 .

கல்வி அரசியலும் காட்டும் கலைப்பண்பும்
பல்விதமாம் முன்னேற்றப் பாதைகளும்—நல்விதமாய்ப்
பாரெல்லாம் போற்றும் பசுமைப் புரட்சியதும்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—வெண்ணெய்வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

ஆண்டு பதினெட்டில் அன்பால் அரவணைப்பால்
வேண்ட உழைப்பீந்து வெற்றியுடன்—நீண்டபெரும்
பேறெய்து மாட்சியினைப் பெற்றிட அண்ணுபோல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—அ. ஆறுமுகம் எம்.ஏ.,பி.டி., திருச்சி-20.

இல்லாமை; நோய்நொடிகள்; ஏற்றமுற நூல்பலவும்
கல்லாமை; தீண்டாமை கற்பித்தல்—நல்லறத்தின்
வேரழிக்கும் சாதி விளங்குதமிழ் நாட்டைப்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—சண்முக தாயுமானவர், பொன்மலை.

செந்தமிழில் ஆய்ந்தாய்ந்து செய்துள்ள நூல்களைப்போல்
எந்தமொழி செய்துளதோ யாருரைப்பார்?—நந்தமிழர்
பாரெங்கும் செய்துவரும் பண்பான தொண்டினைப்போல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—இராம. மறைமுதல்வன், வடமாதிமங்கலம்

கண்ணொளி அற்றவர்க்குக் கண்வழங்கல், சீழ்வடியும்
புண்ணுடையார் வாழப் புகலிடங்கள்—மண்ணதனை
ஊரெங்கும் கொள்வார் உழுகுலத்தார் ஈங்கிவைபோல்
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன் பி.ஏ., திருச்சி-4.



வேலைதரும் திட்டமும் வீட்டுமனைப் பட்டாவும்
ஓலைக்குடிசை உயர்த்தியதும்—ஏழைகள்மேல்
ஈரமும் கொண்டுள்ள இவ்வரசு போலின்று
வேறெங்கும் உண்டோ விளம்பு.

—புலவர் ப. தேவகுரு, தேவதானப்பட்டி.

# கிராம மக்கள் வாழ்க்கையை வளமாக்கிட வகுத்திடும் வழிமுறைகள்

இன்று, தமிழ்நாடு மாநிலத் திட்டக்குழுவின் ஒரு கூறான கிராமிய வளர்ச்சிச் செயலணியின் அறிக்கையினை ஊரக வளர்ச்சி- உள்ளாட்சித்துறை அமைச்சர் என்கின்ற முறையில் வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஊரக வளர்ச்சியில் இன்றியமையாத முக்கியத்துவத்தை நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் வெகு அழகாகச் சொல்லியிருக்கின்றார்கள். இவ்வறிக்கையின் முதல் பகுதியிலும் அண்ணாவின் அவ்வுரைகள் அழகுறத் தரப்பட்டுள்ளன. அஃதாவது, ''சிற்றூர்கள் பெற்றிடும் வளர்ச்சியே சமுதாய மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாகும். நாட்டின் நல்வாழ்வுக்கும் எழுச்சிக்கும் அஃதே அடையாளமாகும். இந்த அறிவுரையினை என்றும் நினைவிற்கொண்டே நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் தமிழக அரசினரும் செயல்படுகின்றனர். இந்திய நாட்டினைப் போலவே, தமிழ்நாட்டின் பெரும்பகுதியும், கிராமப் புறங்களைச் சார்ந்ததே. தமிழ்நாட்டில், 100-ல் 70 பேர் கிராமங்களில் தான் வசிக்கின்றனர். அவர்களில் ' பெரும்பான்மையோர் ஏழைமக்கள். முன்னேற வாய்ப்பில்லாமல் தாழ்த்தப்பட்ட நிலையிலுள்ளோர். நாட்டின பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமுதாய மாற்றத்திற்கும் கிராமப்புறங்களில் வாழும் இப்பெரும்பாலான மக்களின் நல்வாழ்வே அச்சாணியாகும். இவ்வறிக்கை, இக்கருத்தினை மனத்தில்கொண்டு ஊரக வளர்ச்சிக்கான பல நல்ல திட்டங்களைத் தந்திருக்கிறது.

கிராமிய வளர்ச்சி என்பது அரசாங்கத்தின் ஒரு துறையினை மட்டும் சேர்ந்தது அன்று. கிராமிய வளர்ச்சியில், அரசின் 'கல்வி', 'தொழில்', 'உழவு', மற்றும் 'நீர்பாசனம்', 'கூட்டுறவு', 'கால்நடை வளர்ச்சி', மீன் துறை', 'போன்ற பல துறைகளின் வேலைகள் பிணைக்கப்பட்டுள்ளன. கிராமிய வளர்ச்சித் திட்டங்கள் முழுமையும் வெற்றி பெற வேண்டுமானால், இவ்வாறு பல துறைகளைச் சேர்ந்த முக்கியமான, சிக்கலான, முன்னேற்றத்திற்கான பிரச்னைகள் ஒருங்கே ஆராயப்பட்டு, அவ்வனைத்தையும் ஒரு சேர அணுகும் திட்டங்கள் உருவாக்கப்படல் வேண்டும். இவ்வாறு பல்துறைத் திட்டங்களையும் ஒருங்கிணைத்து உருவாக்கிய, ஒரு பெருந்திட்டமே இவ்வறிக்கை தந்துள்ள கிராம வளர்ச்சித் திட்டமாகும். இவ்வாறு இந்தச் செயலணி பல்துறை திட்டங்களையும் ஒருங்கிணைந்து மிகவும் பயன் தரத்தகக் வ்கையில் செயலாக்கப்படக்கூடிய ஒரு அரும்பெருந்திட்டத்தைத் தந்துள்ளது போற்றத் தக்க ஒன்றாகும். இந்த வகையிலே இந்தச் செயலணி மேற்கொண்ட பணி தமிழ்நாட்டின் முன்னேற்றத் திட்டத்திலேயே மிக முக்கியமானதும், மிக கடினமானதும் ஆகும்.

இன்று நாம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களையும், நான்காவது திட்டத்தில் ஒரு பெரும் பகுதியையும் வெற்றிகரமாக நிறைவேற்றி முடிக்கும் நிலையில் இருக்கின்றோம். இம்முன்னேற்றப் பணி தொடர்ச்சியானது. ஊரக வளர்ச்சிப் பணியில் இந்த அரசு எந்த அளவுக்கு அக்கறை கொண்டு செயல்பட்டிருக்கிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறத்தாழ 428 இலட்சம் ரூபாய் தான் சமுதாய வளர்ச்சித் துறையில் அரசின் செலவு. இப்பொழுது, இன்னும் சில திங்களில் நிறைவேற்றி முடிக்கவிருக்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் அரசின் செலவு ஏறத்தாழ 2,364 இலட்சம் ரூபாய்களாகும். இந்த அரசு ஊரக வளர்ச்சிக்காகச் சென்ற சில ஆண்டுகளில் எந்த அளவுக்கு அதிகப்படியான தொகைகளை ஒதுக்கியிருக்கின்றது — உயர்த்தியிருக்கிறது என்பதனையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்தச் செயலணியின் அறிக்கையின் 35-ஏ, 37-பி பக்கங்களில் உள்ள வரைபடங்கள் இதனை தெளிவாக விளக்குகின்றன.

முற்போக்கான கிராமியப் பகுதிகளில் தமிழ்நாடு தலை சிறந்து விளங்குகிறது. இதற்கு அடிப்படையான காரணம், இந்த அரசு கிராம மக்களின் வாழ்க்கை முறையை முன்னேறச் செய்வதில் பல துறைகளையும் ஒருங்கிணைந்து செயல்படச் செய்ததுதான். இத்தகைய முயற்சி இன்னும் முனைந்து செயல் ஆக்கப்பட வேண்டும் என்று இந்த செயலணியின் அறிக்கை மேலும் வலியுறுத்தியுள்ள தனைக் கண்டு நான் மகிழ்ச்சி யடைகிறேன்.

கிராம மக்களின் அடிப்படையான தேவைகளையாவது அவர்கட்குத் தந்து அவர்தம் வாழ்க்கையினை மேம்படுத்துதலும், கிராமங்களில் வாழும், இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வசதிகளை விரிவு படுத்தலுமே இந்தச் செயலணி வகுத்துள்ள திட்டங்களின் முக்கியமான குறிக்கோள்களாக அமைந்துள்ளன. இந்தச் செயலணி கிராம மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சமுதாயக் கல்வி, பல இலட்சக் கணக்கான கிராம மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி, வீட்டு வசதி, பெண்டிர் மற்றும் குழந்தைகளின் சமூக நலப் பணிகள், கிராமப்புறச் சாலை அமைத்தல், அச்சாலைகளின் முன்னேற்ற வேலைகள் முதலியவைகளுக்கான பல திட்டங்களை வகுத்துத் தந்துள்ளது. தலைமுறை தலைமுறையாக நல்ல கல்வி வசதி அளிக்கப்படாத ஏழைப் பெற்றோர்களின் குழந்தைகளுக்கு நல்ல கல்வி வசதிகள் செய்து தருவதில் தமிழ்நாடு, இந்திய நாட்டிற்கே வழிகாட்டியாக அமைகிறது.

மருத்துவ வசதி, பொதுச் சுகாதாரம் முதலிய வசதிகளைக் கிராமப் பகுதிகளில் பெருக்குவதினாலும் வேலை வாய்ப்புகள் மிகும் என்பதனையும் இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

சுற்றுப்புறங்களின் சுகாதாரத்தையும், மக்களின் உடல் நலத்தையும் பாதுகாப்பதற்கு தூய்மையான குடிநீர் வசதியும், வடிகால் வசதியும் மிக அவசியமாகும். ஓரளவிற்கு, கிராமப்புறங்களில், சென்ற சில ஆண்டுகளில், குடிநீர் வசதியினை ஏற்படுத்த இந்த அரசு தீவிர கவனம் செலுத்தி வந்திருக்கின்றது. ஆனால், இன்னும் பல ஆயிரக்கணக்கான கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யப்படவேண்டும் என்பதனை இந்த அறிக்கை சுட்டிக் காண்பிக்கின்றது. ஒவ்வொரு கிராமத்திற்கும் நல்ல குடி தண்ணீர் கிடைக்கச் செய்வது நாட்டின் திட்டக் குறிக்கோள்களில் அதி முக்கியமான ஒன்றாக அமைய வேண்டும் என்பதனையும் இந்த செயலணி வலியுறுத்தியுள்ளது. இதற்கேற்ற வகையில் இந்த அரசு ஏற்கனவே முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும் முனைந்து மேற் கொள்ளும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் நல்ல சாலை வசதிகள் தேவை. சாலை வசதியே பொருளாதார முன்னேற்றத்தின் உயிர் நாடியாகும். இந்த செயலணியின் திட்டம் கிராமப்புறச் சாலைகளை அமைக்கவும் அச்சாலைகளின் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் வகை செய்துள்ளது. இந்தக் கிராமச் சாலை பணிகள் மூலம் கிராமப் பகுதிகளில் அநேகருக்கு வேலை வசதிகளும் பெருகும்.

வீட்டு வசதித் திட்டங்கள் மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றைப் பூர்த்தி செய்வதோடு, கொத்தர்கள், தச்சர்கள் முதலிய தொழில் வினைஞர்களுக்கும், தொழில் நுட்பப் பயிற்சி இல்லாத பலருக்கும் வேலை வசதி அளிக்கின்றன. இந்தச் செயலணியின் திட்டம் இதனைக் கருத்தில் கொண்டு, கிராமப் புறங்களில் வாழும், ஏழை எளியவர்களுக்கு வீட்டு வசதி அளிப்பதற்கான திட்டங்களையும் பரிந்துரை செய்திருக்கின்றது. 'தமிழ்நாடு கிராமிய வீட்டு வசதி வாரியம் ஒன்று' அமைக்கப்படல்வேண்டும் என்பதனையும் இந்தச் செயலணியின் அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

இப்பொழுது சின்னஞ்சிறு சிற்றூர்களில் கூட பள்ளிக் கூடங்களை அமைத்திருக்கிறோம். ஆனால் அப்பள்ளிக் கூடங்கள் நடத்தப்படும் கட்டிடங்கள் குழந்தைகள் நல்ல முறையில் கல்வியறிவு பெறும்



ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறை அமைச்சர் அன்பில் தருமலிங்கம் உரை.

சூழ்நிலையில் அமைந்திருக்கவில்லை. கிராமப் புறங்களில் ஏழ்மை நிலையே இதற்குக் காரணமாகும். நல்ல கட்டிடங்களில் பள்ளிக்கூடங்களை அமைக்கக் கிராமப் பஞ்சாயத்துக்களிடம் பண வசதியில்லை. கிராமத்தில் வாழும் குழந்தைகளும் மற்ற நகர்ப்புறங்களில் வாழும் குழந்தைகளைப் போலவே, ஓரளவேனும் நல்ல சூழ்நிலையில் கல்வி பயில உடனடியாக வகை செய்ய வேண்டுமென்பதனை இந்தச் செயலணியின் அறிக்கை வலியுறுத்தியுள்ளது. இந்த வகையிலும் இதற்கான திட்டங்களைத் தந்துள்ளது.

மேற்கூறியவாறு பல வெகு முன்னேற்றமான குறிக்கோள்களைக் கொண்டுள்ள இந்த செயலணியின் திட்டம் கிராம மக்களின் வாழ்க்கையினை வளமாக்குவதில் பெருமளவில் வெற்றி பெறும். செயலணியின் திட்டம் நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்டதல்ல. முழு மூச்சுடன் அனைவரும் முனைந்து பணியாற்றினால் இந்தத் திட்டத்தினை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும். தமிழ்நாட்டின் வளமான முன்னேற்றத்தில் கிராமியத் தமிழ்நாடு மேலும் விரைந்து வழி நடக்கும், தமிழ்நாடு கிராம வளர்ச்சியில் பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக அமையும்.

இந்தச் செயலணியின் உறுப்பினர்கள் கல்வித்துறையிலும், நிர்வாகத்துறையிலும் பொருளாதார மற்றும் சமூக நலத்துறையிலும் ஈடுபட்டுள்ள அறிவிற் சிறந்த பெரு மக்களாவர். செயலணியின் தலைவர் பேராசிரியர் சண்முகசுந்தரம் அவர்களும், பிற உறுப்பினர்களும் இந்தச் செயலணியின் மூலம் தமிழ்நாட்டுக்குப் பெரும்பணி செய்துள்ளார்கள். செயலணியின் செயலாளர் திரு டி. நடராஜன் அவர்களும் வெகு திறம்பட இந்தச் செயலணியின் அறிக்கையினை வரைந்து நல்ல முறையில் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இது கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும் என்று நம்புகின்றேன். திரு நடராஜன் அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

> உங்களிடம் அன்பு இருக்கிறதா? இருந்தால் உங்களால் ஆகாதது ஒன்றுமில்லை.
>
> நீங்கள் தன்னலத்தைத் துறந்தவரா? அப்படியென்றால் உங்களை எதிர்க்கும் ஆற்றல் எதுவுமில்லை.
>
> —விவேகானந்தர்.

பல நல்ல ஆக்கத் திட்டங்களைக் கொண்டுள்ள இந்தச் செயலணியின் அறிக்கையினைத் தமிழக முதல்வரின் சார்பில் வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். செயலணிக்கும், மாநிலத் திட்டக் குழுவிற்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தமிழக முதல்வரின் சார்பிலும் அரசின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் கிராமிய வளர்ச்சிச் செயலணியின் அறிக்கையினை 1–11–73-ல் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் உயர்திரு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் வெளியிட்டு ஆற்றிய உரை.**


வெண்பாப் போட்டி - 69
ஈற்றடி :— சுற்றுலாவுக் கீடேது சொல்
முடிவு நாள் : 1—12—1973
அனுப்ப வேண்டிய முகவரி :—
ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
அரசினர் தோட்டம்,
சென்னை - 600002.



*** அதிசய நீர் ஊற்று நிபுணர் ***

குழாய் கிணறு இறக்கவும், புதிய கிணறு வெட்டவும், (பழைய கிணற்றில் போரிங்கு இறக்கவும்) குறிப்பிட்ட பூமியில் தெற்கு திசையிலிருந்து வடக்கு நோக்கியும், மேற்கு திசையிலிந்து கிழக்கு நோக்கியும் சென்றுகொண்டு இருக்கும் நீர் ஊற்றுக்களை எல்லாம் விஞ்ஞான முறைப்படி கண்டுபிடித்து அந்த நீர் ஊற்றுக்களிலேயே மிக அதிகமான தண்ணீர் உள்ள இரண்டு நீர் ஊற்றுக்கள் கிராஸ் செய்யும் சரியான இடம் கண்டுபிடித்து குறிக்கப்படும். நீர் ஊற்றுக்கள் உள்ள ஆழமும், அவைகளில் உள்ள தண்ணீரின் அளவும் தெரிவிக்கப்படும்.

என்னுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு நான் குறிக்கும் இடத்தில் குழாய் கிணறு இறக்குபவர்களுக்கு அதில் போதுமான அளவு தண்ணீர் சப்ளை கிடைக்கவில்லை என்று நிரூபித்தால் 2:3 என்ற விகிதப்படி ரூ. 6 ஆயிரம் வரை நஷ்ட ஈடு கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு—20 பைசா ஸ்டாம்பு அனுப்புக.

**K. கந்தசாமி,**
(Member of the British Society of Dowers, London),
நீர் ஊற்று நிபுணர்,
கணபதி அஞ்சல் : : கோயமுத்தூர்-6.
தொலைபேசி எண் 31912.

Advt.


# இரு புதிய பயறு வகைகள்

**ம**னிதனுக்கு இன்றியமையாத ஊட்டச் சத்துக்களில் புரதச் சத்தும் ஒன்று. நாம் அன்றாடம் அதிக அளவில் உட்கொள்ளும் அரிசி, சோளம், கோதுமை ஆகியவற்றில் மாவுச் சத்து மிகுந்துள்ளது. புரதச் சத்தைப் பயறு வகைகள் மூலம் தான் நாம் அடைய முடியும். அசைவ உணவிலிருந்து புரதச் சத்து—கிடைக்கப் பெற்றாலும், பெரும்பாலான மக்கள் புரதத்தைப் பயறு வகையிலிருந்துதான் பெறுகின்றனர். நமது உணவில் இன்றியமையாததாக உள்ள இப்பயறு வகைகள், நமது மாநிலத்தில் நமது தேவைக்கு ஏற்ற அளவு உற்பத்தியாகவில்லை; நமது தேவையில் ஏழத்தாழ மூன்றில் ஒரு பகுதியையே நாம் உற்பத்தி செய்து வருகிறோம்.

*1973*-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் *13*-ஆம் தேதி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிக்குழு, துணை வேந்தர் டாக்டர் கோ. அரங்கசாமி அவர்களின் தலைமையில் பல்கலைக்கழக ஆராய்ச்சியைப் பற்றி ஆய்வு செய்து நல்ல விளைச்சல் கொடுக்கக் கூடிய இரகங்களை உழவர் பெருமக்களுக்குப் பயிர் செய்ய வெளியிட்டுள்ளது.

தமிழகத்தில் அதிக விளைச்சல் தரும் நெல் ரகங்களைப் புகுத்தப்பட்ட நாள் முதல்——அதாவது கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக-குறைந்த வயதில் அதிக விளைச்சல் தரும் பயறு வகைகளின் அவசியத்தைப்பற்றி அறிவுறுத்தப்பட்டு வந்தது. நீண்ட நாட்களாக, நமது மாநிலத்தில் குறுகிய கால, அதிக விளைச்சல் பயறு வகைகள் இல்லாமையாலும், எல்லாப் பருவத்திலும் பயிரிடக்கூடிய இரகங்கள் இல்லாததாலும், பருப்பு வகைப் பயிர்களின் பரப்பளவு அதிகரிக்கவில்லை. நமது மாநிலத்தில் அண்மைக் காலத்தில் புகுத்தப்பட்ட 'பைசாகி மூங்க்' (அஞ்சுகம்) பச்சைப் பயறு போன்ற ரகங்கள் நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளன. ஆயினும் நமது மாநிலத்தில் பல்வேறு தட்பவெப்பநிலையில், எல்லா இடங்களுக்கும் பொருந்தக்கூடிய இரகங்களைத் தேர்வு செய்து வெளியிடுவது மிகவும் இன்றியமையாததாகும்.

எனவே, நல்ல விளைச்சல் கொடுக்கும், குறுகிய கால, எல்லாப் பட்டத்திற்கும் ஏற்ற பயறு வகைகளை உருவாக்குவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளது. ஆராய்ச்சியாளர்களின் அயராத முயற்சி மற்றும் ஆராய்ச்சியின் விளைவுகளே 'கோ.2 பச்சைப்பயறு', 'கோ. 2 உளுந்து' ஆகியவைகளாகும். இவற்றில் கட்டுக்கோப்பு, சாகுபடி முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



## கோ. 2. உளுந்து

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கோ.2 உளுந்து 65-70 நாட்கள் வயதுடையதாம். இந்த இரக உளுந்தை ஆண்டு முழுதும் பயிரிடலாம். சிறப்பாக மார்ச்சு-ஏப்ரல், ஜூலை-ஆகஸ்ட், செப்டம்பர்-அக்டோபர் மாதத்தில் பயிரிட்டால் நல்ல பலன் கிடைக்கும். நான்குமுறை நன்கு உழுத நிலத்தில், 'ரைசோபியல்' ராசியுடன் கலந்த விதைகளை விதைக்கவேண்டும். ஒரு எக்டேருக்கு 25 கிலோ விதை போதுமானது.

கடைசி உழவில் எக்டேருக்கு 50 வண்டி தொழுஉரம் அல்லது கம்போஸ்ட் உரம், 50 கிலோ மணிச்சத்து ஆகியவை போட வேண்டும். விதைப்பிற்கு முன் 25 கிலோ தழைச்சத்து இட வேண்டும்.

வரிசைக்கு 20 சென்டி மீட்டர் இடைவெளியும், செடிக்குச் செடி 10 சென்டி மீட்டர் இடைவெளியும் விட்டு 2.5 சென்டி மீட்டர் ஆழத்தில் விதைகளை நடவேண்டும்.

விதைத்ததும் நீர்பாய்ச்சி, விதைத்த மூன்றாவது நாளில் உயிர் நீர்பாய்ச்ச வேண்டும். அதற்குப் பின்பு 12 முதல் 15 நாட்கள் இடைவெளியில் தேவைக்கேற்ப நீர்பாய்ச்ச வேண்டும்.

நட்ட 15-வது நாளில் முதற் களையும், 30-வது நாளில் இரண்டாவது களையும் எடுக்க வேண்டும்.

இதில் தோன்றும் அசுவணி, தத்துப்பூச்சி, வெள்ளை ஈ மற்றும் இலையைத் தின்னும் புழுக்கள் ஆகியவற்றைத் தடுக்க பி.எச்.சி. 10 சத மருந்தையும், டி.டி.டீ. 5 சத மருந்தையும் சம அளவில் கலந்து தூவலாம். அல்லது 'ரோகார்' 'எக்காடின்' போன்ற ஊடுருவிப் பாயும் பூச்சி மருந்துகளில் ஒன்றைத் தெளிக்கலாம். காய்ப் புழுக்களுக்கு டி.டி.டீ. 5 சத அல்லது செவின் 10 சதத்தூள் அல்லது 'டிப்டிரக்ஸ்' 5 சத அல்லது 'டிரைதியான்' 2 சதத்தூளை எக்டேருக்கு 25 கிலோ விதம் தூவ வேண்டும்.




நட்ட 15-வது நாளில் முதற் களையும், 30-வது நாளில் இரண்டாவது களையும் எடுக்க வேண்டும்.

இதில் தோன்றும் அசுவணி, இலையைத் தின்னும் புழுக்கள் மற்றும் நாவாய்ப் பூச்சிகள் ஆகியவற்றைத் தடுக்க 'மெட்டாசிஸ்டாக்ஸ்' 1 மில்லி லிட்டர் மருந்தை ஒரு லிட்டர் நீர் என்ற அளவில் கலந்து விதைத்த 10-வது நாளிலும், 20-வது நாளிலும் தெளிக்கவும். காய்ப்புழுக்களைத் தடுக்க செவின் 10 சதத்தூள் அல்லது 'டிப்டிரக்ஸ்' 5 சதத்தூளை விதைத்த 30-வது நாளிலும், 45-வது நாளிலும் தூவ வேண்டும். பேன்களைத் தடுக்க 'டிரைதியான்' மருந்தை (4 மில்லி லிட்டர் மருந்துக்கு ஒரு லிட்டர் தண்ணீர் என்ற அளவில்) தெளிக்க வேண்டும்.

எக்டேருக்கு சுமார் 1,000-1,200 கிலோ வரை இறவையில் மகசூல் கொடுக்கவல்லது.

தகவல்: தகவல் தொடர்பு நிலையம்.
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோவை-3.

எக்டேருக்கு மானாவாரியில் சுமார் 600-700 கிலோ உளுந்தும், பாசனப்பயிரில் 1,000-1,300 கிலோ உளுந்தும் கிடைக்கும்.

**கோ. 2 பச்சைப்பயறு**

கோ.2. பச்சைப்பயறு 60-70 நாட்கள் வயதுடையது. இதை அக்டோபர் முதல் டிசம்பர் வரையான காலம் தவிர ஆண்டு முழுவதும் பயிரிடலாம். சிறப்பாக பாசனப்பயிராக மார்ச்-ஏப்ரல் நான்கு முறை நன்கு உழுத நிலத்தில், 'ரைசோபியல்' ராசியுடன் கலந்த விதைகளை ஒரு எக்டேருக்கு 25 கிலோ வீதம் விதைக்க வேண்டும்.

கடைசி உழவில் எக்டேருக்கு 50 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்ட், 50கிலோ மணிச்சத்து ஆகியவைகளைப் போடவேண்டும். விதைப்பதற்கு முன் 25 கிலோ தழைச் சத்து இடவேண்டும்.

வரிசைக்கு வரிசை 25 சென்டிமீட்டர் இடைவெளியும், செடிக்குச் செடி 10 சென்டிமீட்டர் இடைவெளியும் விட்டு விதைகளை விதைக்க வேண்டும். விதைத்ததும் நீர் பாய்ச்சி, விதைத்த நான்காவது நாளில் உயிர் நீர்பாய்ச்ச வேண்டும். அதற்குப் பின்பு 10 நாட்கள் இடைவெளியில் நீர் பாய்ச்சவேண்டும்.




ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர். சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
மூகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

பதிவு எண். M. 8676





...ஆனால்
தமிழ்நாடு பரிசுச் சீட்டு
சாலவும் நன்று!

முதல் பரிசு: ரூ.1,00,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

62-வது குலுக்கல் நாள்: 12-12-73

...ஒன்றின் விலை ரூ. 1/- தான்

...-600002

...600009





வண்ணத்துப் பூச்சியின்
வண்ணமித கோலங்கள்
• அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
• பருத்திப் புடவைகள் • லுங்கிகள்
• வேட்டிகள் • வீட்டு அலங்காரத் துணி வகைகள் • துண்டுகள் • கைக்குட்டைகள்
• பட்டு டைகள் • கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்

# தமிழரசு

1-12-1973 40காசு

OFFICE OF THE STATE EDITOR
3-DEC 1973
GAZETTEER UNIT, MADRAS





# செழுமையான விளைச்சலுக்கோர் சீரான சாதனம் எல் & டி மோட்டார் ஸ்டார்ட்டர்



செழுமையான விளைச்சலைப்பெற மிக அவசிய மானது சீரான நீர்ப்பாசனம். பம்ப் செட்களின் மூலம் வயல்களுக்குத் தடையின்றி நீர் பாய்ச்சவும், அவைகளை நல்ல முறையில் இயங்கச் செய்யவும் எல் & டியின் டைரெக்ட்-ஆன்-லைன் மற்றும் ஸ்டார் டெல்டா மோட்டார் ஸ்டார்ட்டர்கள் சிறந்தவை. இவை எல்லாவித மோட்டார்களுக்கும் ஏற்ற ரகங்களில் கிடைக்கின்றன.

விவசாயிகளின் நலனை மனதில் கொண்டு லார்ஸன் & டுப்ரோ கம்பெனியார் சில தனிப்பட்ட வசதிகள் செய்கின்றனர்.

- பிரசார வண்டிகள் மூலம் பல இடங்களுக்கு நேரில் சென்று அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் கூறி, உடனுக்குடன் ஸர்விஸ் வசதிகள் செய்து கொடுக்கின்றனர்.
- சிறிய ஊர்களில்கூட விற்பனையாளர்களை நியமித்துத் தேவையான ஸ்பேர் பார்ட்டுகள் அருகாமையிலேயே கிடைக்க வழி செய்துள்ளனர்.

ஏதேனும் உதவி தேவைப்பட்டால் எல் & டியின் விற்பனையாளர் அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தடையற்ற சேவைக்கோர் நிகரற்ற பெயர் எல் & டி.

CONTROL POWER WITH **L&T Switchgear**

**ஸ்விட்ச்கியர் டிவிஷன்,**
**லார்ஸன் அண்டு டுப்ரோ லிமிடெட்**
P.O. Box 8922, பம்பாய் 72 □ P.O. Box 323, புது டில்லி 1.
P.O. Box 619, கல்கத்தா 16 □ Post Bag 5247, சென்னை 2.



# தமிழரசு

மலர் 4 இதழ் 11
1-12-73

OFFICE OF THE STATE EDITOR
161/Go/72
3-DEC 1973
... UNIT, MADRAS




# நாவலர் நகர்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் திருவல்லிக்கேணியிலுள்ள பழைய 'லாக் நகர்' குடிசைப் பகுதிகள், புதிய மாடிக் குடியிருப்புகளாக உருவாக்கப் பெற்றுள்ளன. இப்பகுதி 'நாவலர் நகர்' என வழங்கப் பெறுகிறது. இதனை 7—11—1973 அன்று கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் தலைமையில் முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ரூபாய் 25 இலட்சம் செலவில் உருவாக்கப் பெற்றுள்ள இக்குடியிருப்புகள் 4 அடுக்குகளைக் கொண்டவை. மொத்தம் 304 குடியிருப்புகள் உள்ளன; ஒவ்வொரு குடியிருப்பும் சுமார் ரூபாய் 8,000 செலவில் கட்டப்பட்டுள்ளது.




# மூழ்கு பாலம்

திருவேற்காடு அருள் மிகு தேவி கருமாரியம்மன் கோயில் பக்தர்களின் நீண்ட நெடு நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் திருவேற்காடு அருகில் கூவம் ஆற்றின் குறுக்கே ரூ. 10.10 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட திருவேற்காடு மூழ்குபாலத்தை தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 9—11—73இல் திறந்து வைத்தார்கள்.

பாலத்தைத் திறந்து வைத்துத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில்,

“கடவுட் கொள்கையைப் பொறுத்த வரையில் ஆளும் கட்சியின் கருத்து எப்படிப்பட்டதாக இருந்தாலும் எந்த மதத்தினர் எந்தப் பிரிவினர் மனமும் புண்படாமல் அவர்களுடைய தேவைகள் புறக்கணிக்கப்படாமல் நடந்துகொள்வதே இந்த அரசின் கொள்கை. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் அலட்சியப் படுத்தப்படலாகாது என்று அரசு எண்ணுவதற்கு இது சான்று” என்று குறிப்பிட்டார் முதல்வர் கலைஞர் அவர்கள். தொடர்ந்து பேசுகையில்,

“கடந்த 3 ஆண்டுகளில் செங்கற்பட்டு மாவட்டத்தில் 67 இலட்சம் ரூபாய் செலவில் இந்தப் பாலத்தைத் தவிர 8 பாலங்கள் கட்டப்பட்டுள்ளன;

கிளியாறுபாலம் 5·05 இலட்சம்; கோவளம் பாலம் 25 இலட்சம்; பக்கிங்ஹாம் கால்வாய் பாலம் 2·52 இலட்சம்; வாலாஜாபாத் திரிபுவனம் சாலையில் தரைப்பாலம் 7·5 இலட்சம்; கீழக்கடற்கரைச் சாலைப்பாலம் 10·4 இலட்சம்; மாமண்டூர் உத்திரமேரூர்ச் சாலைப்பாலம் 4 இலட்சம்; நெல்வாய் திருக்கழுக்குன்றம் சாலையில் 3·3 இலட்சம்; அதே சாலையில் இன்னொரு பாலம் 1·7 இலட்சம்; சோளிங்கநல்லூரையும் குடுமியாண்டித் தோப்பையும் இணைக்கும் பாலம் 4·95 இலட்சம். இவை தவிர, வாயலூர் பாலாற்றின் குறுக்கே ஒரு பாலமும், தேன்பாக்கத்தில் ஒரு பாலமும் 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. பொதுவாக, 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும் பாலம் ஆனாலும், 1 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் பாலம் ஆனாலும், 10 ஆயிரம் செலவில் கட்டப்படும் பாலம் ஆனாலும் பாலங்களின் பலனை—பயனைக் குறைத்து மதிப்பிட முடியாது. இப்போது திறந்து வைக்கப்பட்டுள்ள திருவேற்காடு பாலத்தின் பயன், மிக மிக அதிகம்” என்றார்கள்.



திருவேற்காடு கிராமம், திருப்பெதும்புதூர் வட்டத்தைச்சேர்ந்த பூவிருந்தவல்லிக் வடகிழக்காக 4.8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த ஊரில்தான் அருள் மிகு தேவி கருமாரியம்மன் கோயில் உள்ளது. சென்னை நகரிலிருந்தும் சுற்றுப்புற கிராமங்களில் இருந்தும் இக் கோயிலுக்குவருகின்ற பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இப்போது இந்தக் கோயிலுக்குச் செல்வதற்கு, 2.6 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒரு சாலை, சென்னை பெங்களூர்ச் சாலையில் 16.8 கிலோ மீட்டரில் பிரிந்து செல்கிறது. அந்தச் சாலையில் 0.2 கிலோ மீட்டரில் ஒரு சிறிய மூழ்கு பாலம் ஏற்கெனவே உள்ளது. என்றாலும், மழைக் காலங்களில் வெள்ளமேற்பட்டு, உடைப்புக்கள் உண்டாகி அடிக்கடி போக்குவரத்துதடைபடும். திருவேற்காடும் துண்டிக்கப்பட்டுவிடும். இவ்வாறு ஏற்படாமல் பக்தர்கள் எப்போதுமே எவ்விதத் தடையுமின்றிக் கருமாரியம்மன்கோயிலுக்குச் சென்று வரும் பொருட்டு ஒரு பாலம் கட்டப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வந்தது. அந்தக் கோரிக்கையை ஏற்று, மாதர் வேடு சாலையில் 1.6 கிலோ மீட்டரில் மூழ்கு பாலம் ஒன்றைக் கட்டி முடிக்கத் தமிழ் நாடு அரசு ஆணையிட்டது. அதன் விளைவுதான், 9—11—73-இல் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட திருவேற்காடு மூழ்கு பாலம்.

## ஆளுநரின் பாராட்டு

அக்டோபர் 29-ஆம் நாளன்று, தமிழக ஆளுநர் மேதகு கே.கே. ஷா அவர்கள் பூம்புகாரில் உள்ள சிலப்பதிகாரக் கலைக்கூடத்தை பார்வையிடடுப் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

“ஒப்பற்ற காவியமான சிலப்பதிகாரத்தின் உண்மையான பிரதிபலிப்பாக இந்தக் கலைக் கூடம் அமைந்துள்ளது என்பதை உலகிலுள்ளோர் யாவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் திறமையாகத் திட்டமிட்டு, கவின்மிகு எழிலோடு அமைக்கப்பட்டிருக்கிறது”—இவ்வாறு பார்வையாளர் பதிவேட்டில் குறிப்பிட்டிருக்கிறார் தமிழக ஆளுநர்.

இந்த மூழ்கு பாலம் 3.04 மீட்டர் அகலமுள்ள, 66 கண்களைக் கொண்டது. இந்தப் பாலத்திற்கான அடித்தளம் நீண்ட சதுர வடிவிலான ஆழமற்ற கிணறுகளால் (CAISSON FOUNDATION) ஆனது. அவற்றின் மீது கான்கிரீட் தூண்களும் சார்புச் சுவர்களும் எழுப்பப்பட்டுப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. மேல் தளம் கம்பியிடப்பட்ட சிமெண்ட் கற்கலவையினால் ஆனது. பாலத்தின் மீதுள்ள சாலையில் அகலம் 7.31 மீட்டர்.

இப்பாலத்தின் மொத்த நீளம் 245 மீட்டர். 106 டன் இரும்புக் கம்பிகளும் 1,007 டன் சிமெண்டும் இந்தப் பாலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இப்போது திறந்து வைக்கப்பட்டுள்ள இந்தப் பாலம், திருவேற்காடு தேவி கருமாரி அம்மன் ஆலயத்தை மாத்திரமின்றிச் சென்னையையும் ஆலயத்தின் வழியாக அம்பத்தூரையும் இணைக்கிறது. மழைக் காலத்தில், அம்மன் கோவில் பிற கிராமங்களிலிருந்து துண்டிக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது. பக்தர்கள் எப்போதும் தடையின்றி சென்று வர நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.







# தூத்துக்குடியைத் தொடர்ந்து கடலூர்....

## முதல்வர் கலைஞர்

தொழில் வளர்ச்சித் துறையில் மற்ற மாநிலங்களோடு தமிழகம் போட்டி போட வேண்டும். அதிலே வெற்றி பெற வேண்டும் என்று நாம் முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

80 கோடி ரூபாய் அளவில் உருவாகும் இந்தத் தொழிற்சாலை, உற்பத்தியை வழங்கும் போது, உலகத்திலேயே பிரமாண்டமான தொழிற்சாலை என்ற பெயரைப் பெற இருக்கிறது.

இங்கே இந்தத் தொழிற்சாலையில் அரசுத் துறையும், தனியார் துறையும், அது தவிர்த்துப் பொதுவான பங்குதாரர்களும் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

இந்தத் தொழிற்சாலையில் 26 சதவீதம் அரசாங்கத்திற்கும். 25 சதவீதம் தனியாருக்கும், மீதமுள்ள 49 சதவீதத்தைப் பங்குதாரர்களுக்கும் கொடுத்திருக்கிறார்கள். இதிலே பங்குதாரர்களாக 33 ஆயிரம் பேர் இருப்பது மகிழத்தக்க ஒன்றாகும்.

உலகத்தில் சோஷலிசம்பற்றி மிக வேகமாகப் பேசப்படுகிறது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் சோஷலிசத்தைச் செயல்படுத்துவதில் முனைப்பாக இருக்கிறோம். அதையும் நாம் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறோம்.

எல்லாத் தொழில்களையும் தேசியமாக்க வேண்டும் என்பது கேட்பதற்கு இனிமையாகத் தான் இருக்கிறது. அதே நேரத்தில் நாம் வெறும் கோஷத்தில் மட்டும் மனத்தைப் பறிகொடுத்துவிடாமல் தமிழ்நாட்டில்தான் அதை படிப்படியாகச் செயல் அளவில் நிறைவேற்றி வருகிறோம்.

சிலர் வயல்களையெல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதனால் ஏற்படும் விளைவுகள் திகைப்பாகத்தான் இருக்குமே தவிர, செழிப்பாக இருக்காது.

பஸ்களை எல்லாம் தேசியமாக்க வேண்டும் என்று முனைந்த போது அறிஞர் அண்ணா அவர்கள் அது நியாயம் தான் என்றாலும், டி.வி.எஸ் போன்றவர்களின் அறிவாற்றலும் கிடைப்பதற்கு வாய்ப்புண்டாவென்று பார்க்க வேண்டும் என்று சொன்னார். அதை மனத்தில் வைத்துக் கொண்டு தான் பஸ்களை எல்லாம் தேசியமயமாக்கியிருக்கிறோம்.

இத்தகைய தேசீயமயத் திட்டத்தைக்கூடச் சிலர் எதிர்ப்பார்கள்; அதை அதிதீவிரவாதிகளும் எதிர்க்கிறார்கள். அவர்கள் மிதமாகச் சென்றாலும் எதிர்க்கிறார்கள். வேகமாகச் சென்றாலும் எதிர்க்கிறார்கள். ஆகவே இதைப் பற்றி எல்லாம் பொருட்படுத்தாமல் சோஷலிசத்தைப் படிப்படியாக-மெல்ல மெல்ல-ஆனால் உறுதியாகச் செயல்படுத்துவதில் நாம் முனைப்பாக இருக்கிறோம். செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

பஸ்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்க முற்பட்டபோது -இதனால் நட்டமேற்பட்டாலும் பரவாயில்லை; இதனால் மக்கள் பயனடைய வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுத்தி இருக்கிறோம்.

இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் இதன் உற்பத்தி துவங்கும்போது ஆசியாவிலேயே-ஏன் உலகத்திலேயே முதல் தரமானதாக இருக்கும். வரவிருக்கும் 74 ஜூலை மாதத்தில் இந்தத் தொழிற்சாலையில் நாளொன்றுக்கு உற்பத்தி 50 சதவீதமாக இருக்கும். ஓராண்டு முழுமை அடையும்போது இதன் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 1,500 டன் யூரியாவும் 1,100 டன் அமோனியாவும், 600 டன் காம்ப்ளக்சும் இருக்கும்.

> 14—11—1973-ல் தூத்துக்குடி 'ஸ்பிக்' நீராவி உற்பத்தி இயந்திரத்தைத் துவக்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து..................

மேலும் இது போன்ற தொழிற்சாலை ஒன்றைக் கடலூரிலும் அமைக்க விரும்பியிருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை இதைவிடப் பெரிய அளவில் அதிக உற்பத்தித் திறன் உள்ளதாக இருக்கும். இதைவிடப் பெரிதான ஒன்று வெளி நாட்டில் ஏதும் இருந்துவிடக்கூடாது என்றுதான்— தமிழ்நாட்டில்தான் அத்தகைய தொழிற்சாலை இருக்க வேண்டும் என்ற நினைப்பில்தான் கடலூரிலும் ஏற்படுத்த விரும்பியிருக்கிறோம். அதையும் 'ஸ்பிக்' நிறுவனத்தாரே அமைக்கவிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை அமைக்க அரசாங்கம் எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்று தொழில் அதிபர் சிதம்பரத்தைக் கேட்டேன். அவர் அதற்கு முதலீடே தேவையில்லை என்று கூறினார்.

ஆகவே இவர்களைப் போன்றவர்களின் துணையோடு அடுத்தடுத்துப் புதிய புதிய தொழில்களை மேலும் துவக்கவிருக்கிறோம்.

ஆகவே இவர்கள் கடலூரில் துவக்கப்படவிருக்கும் தொழிற்சாலையில் நாளொன்றுக்கு யூரியா 1,900 டன்னும், அமோனியா 1,500 டன்னும், காம்ப்ளக்ஸ் 1,200 டன்னும் உற்பத்தியாகும். இந்தத் தொழிற்சாலை ஏறத்தாழ ரூ. 400 கோடி முதலீட்டில் துவக்கப்படும்.

மாநில அரசைப் பொறுத்தவரையில் இதைத் துவக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். மத்திய அரசுதான் அனுமதிக்க வேண்டும். சிதம்பரத்தில் உள்ள நடராசர் ஒற்றைக் காலில் நின்றுதான் காரியங்களைச் சாதிப்பார் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அதுபோல இந்தச் சிதம்பரமும் ஒற்றைக் காலில் நின்று அந்தத் தொழிற்சாலையையும் நிறுவிடப் பெருமுயற்சி எடுத்துக் கொள்வார் என்று நம்புகிறேன். இதற்காகப் பெருமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.





# மனித வளம் பேணுவோம்

மாண்புமிகு
பிற்பட்டோர் நல அமைச்சர்
என். வி. நடராசன்

“மனித வளம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான சமுதாய மாற்றம்'' பற்றிய செயல் அணியின் அறிக்கையினை இப்பொழுது வெளியிடுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தச் செயல் அணிக்குக் கொடுக்கப்பட்ட பொருள்கள் பல தரப்பட்டவை, முக்கியமானவை, கடினமானவையும் கூட. சமுதாய மாற்றம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின் தங்கியோர் நலம், மனித வளம், வேலை வாய்ப்பு, தொழிலாளர் நலம், ஏழை எளியவர்களுக்கு மறு வாழ்வு என்பன போன்ற பல முக்கியமான, சிக்கலான பிரச்சினைகளை ஆராய்ந்து, அவற்றுக்கேற்ற பல திட்டங்கள் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளன. அரசின் பல துறைகளின் வேலை சம்பந்தப்பட்டதாகும் இவ்வறிக்கை.

நம்மிடமுள்ள இயற்கை வளங்களில் மிக முக்கியமான ஒரு வளம், நமது மக்கள் வளம் (Human resources) இந்த வளத்தினை எவ்வாறு ஆக்க முறையில், எல்லாருக்கும் நலம் பயக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும் என்பதனை விஞ்ஞான அடிப்படையில், முன்னேற்ற நோக்குடன், நல் வாழ்வு மற்றும் நேர்மையுள்ள சீரிய சமுதாயம் என்கின்ற இலக்கினை அடையும் நோக்குடன் ஆய்ந்தறிந்து பல பரிந்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். இந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கான பல செயல் திட்டங்களையும் விரிவாகக் கொடுத்திருக்கிறார்கள்.

பொதுவாக, இந்த அறிக்கை எடுத்துக் கொண்டுள்ள பொருள்கள் பற்றித் திட்டமிடத் தேவையான, நம்பகமான புள்ளி விவரங்கள் கிடைப்பது அரிது. இருப்பினும் பெரு முயற்சி செய்து அநேக விவரங்களைச் சேகரித்துள்ளார்கள். இந்த வகையில் இனி வருங்காலத்தில் நம்பகமான, உடனுக்குடன் கிடைக்கக்கூடிய விவரங்கள் சேகரிப்பதற்கான அவசியத்தை வலியுறுத்தி அதற்கான சில செயல் திட்டங்களையும் கொடுத்துள்ளார்கள்.

வேலை வாய்ப்பு, வசதி மற்றும் வேலையின்மையைப் போக்குவதற்காகக் கூறப்பட்டுள்ள வழி முறைகள் ஆகியவை சிறப்பாகக் கவனிக்கப்பட வேண்டியவையாகும். தொழில்வளம் பெருக தொழிற் பயிற்சி வசதிகளும், வேலைச் சந்தையமைப்பு முறைகளும் சீரிய முறையில் இயங்க வேண்டும், இவற்றைச் செவ்வனே செய்து முடிப்பதற்காகக் கூறப்பட்டுள்ள திட்டங்கள் பயனுள்ளவையாகும்.

நாட்டிலுள்ள வறுமையினைப் போக்க, வறுமை நிலையிலுள்ள மக்கள் எல்லாருக்கும் ஒரு குறிப்பிட்ட குறைந்த அளவு வருமானமாவது கிடைப்பதற்கான வழி வகைகள் செய்திடல் வேண்டும். இதன் மூலம் வேலையில்லாப் பிரச்சினையினைப் பெருமளவுக்குத் தீர்க்க முடியும். இவ்வாறு வேலையில்லாப் பிரச்சினையை வருமானக் கொள்கையுடன் இணைத்துச் செயற்படுதல் நலமாகும். நமது மாநில அளவில் ஒரு மனித வள ஆய்வு பிரிவினை (Man-Power Division) ஏற்படுத்த வேண்டியது மிக அவசியம். அதனை இவ்வறிக்கை வலியுறுத்தியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும். மாநில திட்டக் குழுவினால் நியமிக்கப்பட்ட பல்வேறு செயல் அணிகள்கொடுத்துள்ள திட்டங்களைச் செயல்படுத்தினால் ஏற்படக்கூடிய கூடுதலான வேலை வாய்ப்புகள் பற்றியும் இவ்வறிக்கை கணக்கெடுத்துக் கூறியுள்ளது. அதன்படி, அடுத்த பத்து ஆண்டுத் திட்டக் காலத்தினுள் வேலையில்லாப் பிரச்சினையை நல்ல முறையில் தீர்த்து வைக்க இடமிருப்பது பற்றி நான் உள்ளபடியே மிக மகிழ்ச்சிஅடைகிறேன். படித்து வேலையற்றிருப்போரின் நிலை பற்றி இவ்வறிக்கை சிறப்பாக ஆராய்ந்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க சில திட்டங்களைக் கொடுத்துள்ளது.

தொழிலாளர் நலம் பற்றி நன்கு ஆராய்ந்து, தொழில் துறை அமைதிக்கு நல்லெண்ணம் எவ்வளவு இன்றியமையாதது என்பதனையும் வலியுறுத்தியுள்ளது. தொழிலாளர் நலனுக்கான திட்டங்களைக் கூறுவதோடு, தொழிலாளர் நலக்

குழுவின் பரிந்துரைகளைப்பற்றியும், அவற்றின் மீதான நமது மாநிலத்தின் தேவைகளைப் பற்றியும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையின் மற்றொரு முக்கியமான அங்கம் 'சமுதாய மாற்றம்' (Social Change) என்பதாகும். பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு திட்ட முறையாக இது அணுகப்பட்டு, குறிப்பிட்ட செயல் திட்டங்களாகக்கொடுக்கப்பட்டிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். இவ்விதம் சமுதாய மாற்றத் திட்டங்களுக்குச் சிறப்பிடம் அளித்துத் திட்டம் வகுக்கப்பட்டிருப்பது ஒரு சிறந்த அம்சமாகும். ''கிராமச் சங்கங்கள்'' (Village Clubs) போன்ற செயல் திட்டங்கள் சமுதாய மாற்றத்திற்கு உதவி உள்ளன.

தமிழ்ப் பண்பு, பரந்த நோக்குடைய மனிதாபிமானம் மிக்க ஒரு பண்பாகும். ஆகவே நமது பழம் பெரும் பண்பினையும், நாகரிகத்தையும் மறுமலர்ச்சியடையச் செய்தால், அதுவே சாதி மற்றும் இன வேற்றுமைகளைக் களைந்தெறிய உதவியாயிருக்கும். இதன் மூலம் சமுதாய மாற்றமும் எளிதில் கைகூடும் என்று நம்புகிறேன். இந்த எண்ண அடிப்படையில் தமிழ் மறுமலர்ச்சிக்கான சில திட்டங்கள் கூறப்பட்டுள்ளன. இவை தவிர சாதி, மத வேற்றுமையற்ற, நேர்மையான சமுதாயத்தை உருவாக்கும் இலக்கினை நோக்கியும் சில செயல் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை யாவும் வரவேற்கத் தக்கவைகளாகும்.

தமிழர்கள் இயற்கையிலேயே உடல் பயிற்சியிலும், சல்லிக்கட்டு போன்ற விளையாட்டுக்களிலும் ஆர்வம் மிக்கவர்கள். இந்த இயல்பினை நன்கு பயன்படுத்தி நமது மக்களின் உடல் நலத்தை நன்கு பேணி வளர்க்கச் சில திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அகில உலக நிலையில் தமிழ் நாட்டின் பெருமையை அறியவும் இது பேருதவியாயிருக்கும்.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின் தங்கிய வகுப்பினரின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களின் கல்வியறிவு ஏனைய வகுப்பாருக்குச் சமமாக வளர வேண்டும் என்கின்ற இலக்குக்காகவும், அவர்களது (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின் தங்கியோர்) பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் சமுதாயத்தில் அவர்களும் நல்ல முறையில் பிணியின்றி, குறைவின்றி வாழவும் திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பொது முன்னேற்றத் திட்டங்களில் செலவிடப்படும் பணத்தில் ஒரு பகுதி அந்தந்தப் பிரிவின் கீழ் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பின் தங்கிய வகுப்பினருக்கு நலம் பயக்கும் வகையில் தனிப்பட்ட முறையில் செலவிடப்படவேண்டும்என்கின்ற கருத்து ஏற்கப்பட வேண்டிய ஒரு கருத்தாகும். அவ்வண்ணமே ஒவ்வொரு பொது முன்னேற்றத்திட்டத் துறையின் கீழும் ஒரு 'துணைத் திட்டம்' இந்த வகுப்பினருக்காக இருக்க வேண்டும் என்கின்ற கருத்தும் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

கலப்புத் திருமணங்களை ஊக்குவிப்பதற்காகக் கூறப்பட்டுள்ளவைகளில் 'கலப்புத் திருமண அறிவுரை நிலையம்'' நல்ல ஒரு திட்டமாகும். மலைச் சாதியினருக்காகத் '' திட்ட அணுகு முறையாக'' இந்த வகுப்பினரின் ''ஒருங்கிணைந்த பகுதி முன்னேற்றத் திட்டம்'' கூறப்பட்டுள்ளது. வெறுக்கத் தக்க சில பணிகளை இப்பொழுது சில தாழ்த்தப்பட்ட வகுப்பினர் செய்து வருகிறார்கள். இத்தகைய பணிகளைக் களைந்தெறியக் கூறப்பட்டுள்ள கருத்து காலத்தின் மாறுதலை உணர்ந்து வரவேற்க வேண்டியதாகும். அது மட்டுமல்லாமல் இது உடனடியாகச்செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றும் ஆகும்.




''சமுதாய முன்னேற்றத் திட்டம்'' (Social Development Planning) என்கின்ற ஒரு பொருளாதாரக் கருத்தினை நல்ல முறையில் உருவாக்கித் தந்துள்ளது இவ்வறிக்கை. சமூகத்திலுள்ள ஏனைய எளியவர்களைப் பற்றியும் ஆராய்ந்து அவர்கள் நிலை உயர வழி வகைகள் கூறப்பட்டுள்ளன. இந்த வகையில், மகளிர், குழந்தைகள் நலம், மூப்படைந்தோரின்—ஊனமடைந்தோரின் நலம்; மாணவர்களல்லாத இளைஞர்களின் நலம்; சிறையிலிருப்போர், கண்காணிப்பு நிலையங்களில் உள்ளோரின் நலம் ; பிச்சைக்காரர் மறுவாழ்வு ஆகிய பல தரப்பட்ட சமூக நலத் திட்டங்களையும் நன்கு ஆராய்ந்து அவற்றுக்கான முன்னேற்றத் திட்டங்களை விரிவாகவும், தெளிவாகவும் விளக்கியிருக்கிறார்கள்.

மேற்கூறிய திட்டங்களையெல்லாம் செயல்படுத்தச் சில நிர்வாக அமைப்பு மாற்றங்களும் தேவைப்படுகின்றன. அவை பற்றியும் பரிந்துரைகளை வழங்கியுள்ளார்கள். இவை அரசினரின் தீவிர கவனத்திற்குரியவை என்று கூறின் மிகையாகாது.

இந்தச் செயல் அணியில் உள்ள உறுப்பினர்கள் பொது வாழ்விலும, கல்வித் துறையிலும், நிர்வாகத் துறையிலும், தனியார் துறையிலும், சமூக நலத் துறையிலும்ஈடுபட்டுள்ள அறிவிற் சிறந்த பெருமக்களாவர். அவர்களது சிறந்த பணியினை நான் போற்றுகின்றேன்.

விஞ்ஞான அடிப்படையில் அமைந்த, ஏற்றத் தாழ்வற்ற சாதி மத வேற்றுமையற்ற, பொருளாதார முன்னேற்றமடைந்த, பிணிகள் அற்ற, கல்வி அறிவு மிக்க நேர்மையான, சீரிய ஒரு சமுதாயத்தை உருவாக்கவே நமது அரசு இயங்கி வருகின்றது. இந்த இலக்கினை அடையப் பல துறைகளில் பல வழிகளில் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டியது இன்றியமையாததாகும். அந்த வகையில் இப்பொழுதுள்ள நிலையினை நன்கு ஆராய்ந்து, நடைமுறைக்கேற்ற பல ஆக்கத் திட்டங்களைக் கொண்டுள்ள இந்தச் செயல் அணியின் அறிக்கையினைத் தமிழக அரசின் சார்பில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வணக்கம்.

[மாநிலத் திட்டக் குழுவின் ''மனித வளம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான சமுதாய மாற்றம்'' என்கின்ற பொருள் பற்றிய செயல் அணியின் அறிக்கையினை 24—10—73 காலை 10-30 மணி அளவில் வெளியிட்டு மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் திரு. என்.வி. நடராசன் அவர்கள் ஆற்றிய உரை]



# உலகில் இரண்டு கிளிகள்

21

## பாபுவின் பரிவுக் கடிதம்

டி.என். சுகி சுப்பிரமணியன்

நீக்க சமயத்தில் மனச்சாட்சியைப் பேசவிடவில்லையென்றால் மனச்சாட்சி நித்தியமாய் ஊமையாகப் போய் விடும். நாம் ஊமையாகலாம் குருடாகலாம்; நமது மனச்சாட்சிக்கு ஊமைத்தன்மை, குருட்டுத் தன்மை வந்துவிடக் கூடாது. மணிவாசகன் மனத்திற்குள் சிறிதே துளிர்விட்டு நிற்கும் மனச்சாட்சி ''ராதை பாராட்டுக்குரியவள்; அவளைப் பாராட்டவேண்டும்'' என்பதே. இந்தச்சந்தர்ப்பத்தை டாக்டர் நர்மதைக்காகப் பயன்படுத்திக் கொண்டிருந்தாள் ராதை. மணிவாசகனின் வருங்கால நன்மைக்காக, பாபுவின் வளர்ச்சிக்காக, டாக்டர் நர்மதையின் மனப்புயல் ஒடுங்கி ஓய்வதற்காக அவள் திட்டம் வகுத்துக் கொண்டே பரிமாறினாள். திட்டவட்டமாக வெற்றி பெற்று விடுவோம் என்றெண்ணிப் பரிமாறினாள்.

மனித பலவீனங்களுக்குள் ஒன்றுண்டு; உடற்பயிற்சிக்காக அதுகளை தாவினாலும் வயிற்றுப் பசிக்காகப் பழக்கமுள்ள பழகிய ருசியுடைய பக்குவத்தைத்தான் விரும்பும். புலி புல்வாயை விரும்புவதும், புல்வாய் பசிய புல்லை விரும்புவதும் உணவுப் பழக்கமே தவிர்த்து அது உல்லாச வாழ்க்கைப் பழக்கமன்று. காந்திநகர் வீட்டுச் சாப்பாட்டில் இல்லாத ருசியை, காலங்காலமாக உண்டு உரமேறிய ருசியை, அன்று ராதையின் கைவண்ணத்தில் கண்டான்.

''மிகப் பிரமாதம்!''

''இதைவிட மிகப் பிரமாதமாக எனக்கு நீங்கள் ஒன்று செய்யப் போகிறீர்கள்!''

''டாக்டரம்மாவை என்னோடு உட்கார வைத்து இன்னும் உணவு பரிமாறப் போகிறாயா?''

''இல்லை!''

''பிழைத்தேன். உனக்காக என்ன செய்ய வேண்டும்?''

''நான் படித்து வெற்றி பெற்றதை நீங்கள் பாராட்டியதில் எனக்கு மகிழ்ச்சி. உங்களை எதிர்த்து வாதாடப் போவதிலும் எனக்கு மகிழ்ச்சி!''

''இன்னும் கொஞ்சம் சாம்பார் போடு. அது எனக்கு மகிழ்ச்சி!''

ராதை பெரிய ராஜதந்திரி. உள்ளத்தின் சூட்சுமம் உணவில் இருப்பதை அறிந்தவள். மனம் அமைதியடைய நாக்கைத் திருப்திப் படுத்த வேண்டும்.!

''உனக்காக நான் என்ன செய்ய வேண்டும்?''

''நீங்கள் உங்கள் அறையில் புத்தகங்களையும் ரிக்கார்டுகளையும் தனித்து எடுத்து வைப்பதைப் பார்த்தேன்.''

''நான் வந்த நோக்கங்களில் அதுவும் ஒன்று. அதாவது நாளைக்கு இங்கே லாரி வரும். எனக்குத் தேவையுள்ள புத்தகங்கள் என் கட்சிக்காரரின் ரிக்கார்டுகள் என் வீட்டிற்குப் போகப் போகின்றன!''

''நானே உடன் இருந்து அடுக்குக் கலையாமல் ஏற்றி அனுப்பி வைக்கிறேன்!''

''அப்பாடா! அதற்குத் தடை சொல்லுவாயோ என்று நினைத்தேன்; ஏமாந்தேன்''

''நீங்கள் என்றும் எதிலும் ஏமாந்தவர்கள் இல்லை; பிறரை ஏய்ப்பதில் வல்லவர்கள்!''

இருவரும் சிரித்துக் கொண்டார்கள். இத்தனையும் பார்த்துக்கொண்டும் காதாரக் கேட்டுக் கொண்டும் இருக்கிறாள் நர்மதை.

''அத்தான்! நான் சொல்வது உங்களுக்குக் கசப்பாக இருக்கலாம். ஆனாலும் கடமையை நான் சொல்லியாக வேண்டும். 'பாபு' சின்னஞ்சிறு பிஞ்சு. அவன் எந்தத் தவறும் செய்யாதவன். அவனை நீங்கள் தண்டிக்க நினைப்பது தவறு. இது என் எண்ணம். அவன் அம்மா செய்தது தப்பிதம், தவறு என்றே வைத்துக் கொள்வோம். பசு தப்புச் செய்தால் அதன் கன்றினைத் தண்டிப்பது நியாயம் அல்லவே.''

''நான் 'பாபு'வை என்ன செய்து விட்டேன்?''

''வெற்றிலைத் தட்டம் இருக்கிறது. வெற்றிலை போட்டுக் கொண்டு 'பாபு'வின் கடிதத்தைப் படியுங்கள்''.

''வெற்றிலை போட்டுக் கொண்டால் உன் பேச்சுக்கு நான் பதில் கூற முடியாது. தலையாட்டிக்கொண்டிருக்க வேண்டும். இதுவும் நல்ல யுக்திதான்!''

''நீங்கள் அனுமதி தந்தால் கடிதத்தை நான் பிரித்துப் படிக்கிறேன். அனுமதி தாருங்கள்.''

''என்ன எழுதியிருக்கிறான், விவாகரத்துக் கோரும் நர்மதையின் பையன்?''

''அப்பா என்று உங்களைக் கூப்பிட்டு எழுதியிருக்கிறான்!''

''படி!''

பாபுவின் கடிதத்தைப் படித்தாள்.

''அன்புள்ள அப்பா!

ஏம்பா நீ எனக்குக் கடிதமே போடலே! எம்மேலே கோபமா? நான் என்ன தப்புச் செய்தேன்? நான் முதல் வகுப்பில் தேர்வு பெற்றதற்குத் தங்கமெடல் கிடைத்தது. அதை உன் கையால் போட்டிருப்பாய் என்று நம்புகிறேன். நான் வரும் போது உங்கள் கையால் நான் பெற்ற மெடல் கிடைக்க வேணும் இன்னொரு சமாச்சாரம்; என் நண்பன் ஜி. முருகன். அவனும் பத்து நாள் விடுமுறைக்குப் பட்டணம் பார்க்க வருகிருன். அவனை அழைத்து வர நீங்கள் அனுமதி தர வேண்டும். உங்களை அவன் பார்க்க வேணுமாம்! உங்கள் பதிலை எதிர்பார்த்து நாங்கள் புறப்படுகிறோம். நான் கூட்டிவரும்படியாக நீங்கள் சம்மதம் தர வேணும். அம்மாவுக்கு லெட்டர் எழுதினேன். அம்மாவும் பதில் போடவில்லை. உடனே பதில் போடுங்கள். நீங்கள் பதில் போடாவிட்டால் நான் விடுமுறைக்குப் பட்டிணம் வர முடியாது. என் நண்பனைக் கூட்டிப் போவதாகச் சொன்னது பொய்யாகப் போய்விடும். தயை செய்து எனக்கு அனுமதி தரவும்.

இங்ஙனம்,

உங்கள் அன்பு மகன்,

எம். பாபு.

நேரிலே நின்று பேசுவது போலப் பாபுவின் சொற்கள் வக்கீல் உள்ளத்துள் போயின. ஆனாலும் நாளைக்கு வீட்டைக் காலி செய்து முக்கிய பொருள்களோடு அவர் போக இருக்கிருர். இது எதிர்பாராத சங்கடம்.

''பாபுவுக்காக உங்கள் மனம் ஐம்பது சதவிகிதம் இறங்கட்டும். எனக்காக ஐம்பது சதவிகிதம் இறங்கட்டும்''.

''என்னை நீ குடும்ப வேலிக்குள் கட்டிப் போடப் பார்க்கிருயா?''

''நீங்கள் 'பாபு' இருக்கும் வரை இங்கே இருங்கள்! அவன் புறப்பட்டுப் போனதும் நீங்கள் காந்திநகர் வீட்டுக்குப் போகலாம்''.

''பத்து நாள் எனக்குச் சிறைவாசம் தருவதென்று தீர்மானித்துவிட்டாய்!''

டாக்டர் நர்மதா ''வருகின்ற பாபுவுக்குக் குடும்பத்தின் கசப்புத் தெரிய வேண்டாம். அவன் பிஞ்சுக் குழந்தை'' என்று பக்கத்தறையிலிருந்து அழுதபடியே சொன்னுள்.

''அந்த நீலிக்கண்ணீரை நிறுத்தச் சொல். பத்து நாட்களுக்குப் பிறகு கோர்ட்டில் விவாகரத்து வழக்கு நடக்கப் போகிறது. பத்து நாட்களுக்குப் பின்பு, ஊரும் உலகமும் அறியும். அப்போது பாபுவுக்குத் தெரியப் போகிறது; இப்போது தெரிந்தால் என்ன?''

''அவனும் அவனது நண்பன் சிறு குழந்தையும் வரவிருக்கிருர்கள். அதைத் தடை செய்யவேண்டாம். அதற்காகத்தான் உங்களிடம் இத்தனை தூரம் வரம் கேட்கிறேன்.''

மீண்டும் ராதையின் கண்கள் கெஞ்சின; நெஞ்சம் கெஞ்சியது;

''ஒரு கண்டிஷன் போடுவேன்.''

''என்ன விதியானாலும் விதியுங்கள்.''

''டாக்டரம்மா தன் வழக்கை வாபஸ் வாங்கக் கூடாது ! பாபு போன பின்பு ஒரு விநாடி கூட இங்குத் தங்கவும் மாட்டேன்.''

''ஒப்புக் கொள்கிறேன். பாபு வருகிறபோது நீங்கள் வரவேற்கலாம் இப்போதே நீங்கள் போகலாம்.''

ராதை! நீ உன் கட்சிக்காரிக்காக வாதாட உரிமை கோர்ட்டில்தான் உண்டு. வீட்··லெ அவளே பேசியாக சே

''செல்லேன் அக்கா!

''பாபு வீட்டில் இருக்கும் வரை நமக்குள் ஏற்பட்ட பிளவு தெரியாது. பாபு, உதகைக்குப்போன பின்பு கண்டிப்பாக வழக்குத் தொடருவேன். உங்கள் சன்னத்துக்குச் சங்கடம் வரும். என் அனுமதியின்றி மறுமணம் செய்த உங்கள் மீது நடவடிக்கையெடுக்கப்படும். அந்த வழக்கை ராதை நடத்துவாள்! வெற்றி தோல்வி உண்டு. ஆனால் வீம்பில் கொஞ்சம் கூட நான் சளைக்கவில்லை.''

''சபாஷ்! ராதை நீ கொடுத்த சுவை விருந்தைவிட

உனக்கு ஒரு நண்பன் கிடைக்க வேண்டுமா? அப்படியென்ருல் நீ ஒரு நண்பனுக மாறவேண்டும்! உனக்கு உதவி வேண்டுமா? நீ முதலில் மற்றவனுக்கு உதவி செய்!

—எமர்சன்.

இந்தச் செவி விருந்து மிகவும் சூடாகவும் இருக்கிறது. என் அறிவுக்குச் சவாலாகவும் இருக்கிறது!''

''அப்படியானுல் 'பாபு'வுக்குக் கடிதம் எழுதட்டுமா?''

''டிரங்கால் போடு. பாபுவுக்காக இந்த வீட்டில் இருக்க நான் சம்மதிக்கவில்லை. நானும் மனிதன். உன் தியாகங்கள் அத்தனைக்கும் நான் ஒரு பரிசு தந்தாக வேண்டும். 'பாபு'வுக்காக இங்கே தங்குவது; அவன் இருக்கும்வரை இருப்பது; அதன் பின்பு உன்னையும் உன் கட்சிக்காரி நர்மதையையும் விவாகரத்து வழக்கில் சந்திப்பது; இதில் எந்த மாற்றமும் இருக்காதே!''

''இருக்காது. நீங்கள் தங்குவதற்கு ஒப்புக் கொண்டதற்கு என் நன்றியை நான் தெரிவித்துக் கொண்டேன். இப்போது நீங்கள் கிளம்பலாம்.''

''ஆமாம் நானும் மறந்து போய் உட்கார்ந்துவிட்டேன்! பாபு எந்தத் தேதியில் இங்கு வருகிருன்?''.

''பத்தாம் தேதி இங்கு வருகிருன். இருபதாம் தேதி உதகைக்குப் புறப்பட வேண்டும்!''

''காலை ரெயிலில் வருகிருனு? மாலையிலா?''

டாக்டர் நர்மதா, ''காலை ரெயில் 8.30க்கு வருகிறது!'' என்று உள்ளறையிலிருந்து பதில் சொன்னுள்.

''நான் சரியாக 8 மணிக்கு இங்கே இருப்பேன்!'' காலை பத்து மணிக்கு லாரி வரும். சாமானை ஏற்றிப்போவதற்கு!''

''பாபு ஊருக்குப் போகும் வரை இருப்பீர்கள்!''



''ஆமாம். விவாக ரத்து சம்பந்தமான சட்டப் புத்தகங்கள் இந்த அறையில் அடி வரிசையில் இருக்கின்றன. அதனைப் படிப்பது உன் வழக்குக்கு உபயோகமாகயிருக்கும்.''

இத்தனையும் பேசிவிட்டு, மணிவாசகன் அறையைவிட்டு சில வழக்கு ரிக்கார்டுகள், இரண்டொரு சட்டப் புத்தகங்களுடன் காருக்குப் போனான். அவனுக்குரிய ரிக்கார்டுகளைச் சுமந்து சென்று காரேற்றி அதன் கதவைச் சாத்தி வழியனுப்பியும் வைத்தாள் புதிய வக்கீல் ராதை!

## 22

# பத்து நாள் பாசக்கயிறு

எந்தக் காலத்திலும் எல்லா இடங்களிலும் மனிதவாழ்க்கை இரண்டு தத்துவங்களுக்குள் அடங்கிக் கிடக்கிறது—ஒன்று பொருள் தத்துவம்; மற்றொன்று குடும்பத் தத்துவம். பொருளும் குடும்ப வாழ்க்கையும் ஒன்றை விட்டு ஒன்று விலக முடியாதவை. ஒன்று வளர்ந்தால் மற்றொன்றும் செழிக்க வேண்டும். ஒன்று வளர்ந்து மற்றொன்று அழியுமானால், அந்த மனிதர்கள் வாழத் தெரியாதவர்கள்.

உலகத்து அறிஞர்கள் யாவரும் மார்க்ஸ் முதல் பிரஸ்ட் வரை இந்த இரு அடிப்படையில்தான் மனித குலத்தைக் கணிதம் செய்கிறார்கள். பொருள் வளர்ச்சியால் குடும்ப வாழ்க்கை நிம்மதி பெறும் ; குடும்பத்து உறவு ஒழுங்காக இருந்தால் பொருள் வளர்ச்சிக்குக் குந்தகம் வராது!

மணி வாசகன் ஏழையாக இருந்த போது, தன் மாமன் குடும்பத்தில் பற்றுதலும் பாசமும் கொண்டு வாழ்ந்தான். ஒன்றாகப் பழகிய ராதையை மனத்தாலும் தொட்டு விட அஞ்சினான்! அவனுக்குக் குடும்பத்துள் கசப்பும் பழிவாங்கும் எண்ணமும் பிறந்தது. கனகாம்பரத்தை மனம் நாடத் தொடங்கியது. பொருளால் வளர்ச்சியடைந்த வாழ்க்கை, தடம் புரண்டது. இதனை அவன் எண்ணிப் பார்க்கவும் மறுத்தான். திருந்தவும் மனம் ஒப்பினான் இல்லை.



மாசைக் களைந்து மறு பிறவியாக வந்து வாழவும் மறுத்துவிட்டது அவனது செல்வச் செழிப்புள்ள மனம்.

டாக்டர் நர்மதை, சிறைக் கைதி போலத் தாயன்பு காணாமல் டாக்டருக்குப் படித்த காலத்திலும், பள்ளியில் படித்த காலத்திலும் வீட்டு நிர்வாகம் வீட்டுப் பண்பு என்று எதையும் பழகாமல் தனித்துவாழும் பறவையாக வளர்ந்துவிட்டாள். பொருளாதாரச் சுதந்தரமும் புதுமைப் பெண்ணின் பெரு மிதமும் அவள் நெஞ்சுக்குள் நிமிர்ந்து நின்ற காரணத்தால் அவளும் விட்டுக் கொடுக்க மறுத்தாள்.

கல் கிணற்றில் மோதிய இரும்புத் தோண்டியின் நிலைமை இவர்கள் குடும்பத்தில் உண்டாகி இருந்தது. பணம் வந்தால் பத்தும் பறந்து போகும்; பசி வந்தால் அல்ல என்பது இவர்கள் வாழ்க்கைக்கு பொருந்தும் சொல்லாகி விட்டது. இருவருமே முதலாளித்துவ அடிப்படையில் தங்கள் மனங்களை லயிக்கவிட்டு விட்டார்கள். தத்தம் தொழிலைப் பெரிதாக நினைத்தார்களே தவிர தத்தம் வாழ்க்கை, அதன் அடிப்படையான உடல் தத்துவம், உள்ளப் பாங்கு, குழந்தைப்பேறு யாவற்றையும் அறவே மறந்து போனார்கள்.

அன்பு என்பது பள்ளிக்கூடம் சொல்லித் தரும் பாடமில்லை. அது வாழ்க்கையில் மலர வேண்டிய அனிச்சப் பூ. ஆணின்றிப் பெண்ணும் பெண்ணின்றி ஆணும் வாழும் வாழ்க்கை மனித இன வாழ்க்கையன்று. அது ஐந்தறிவுக்கும் கீழான நிலையுள்ளவர்களின் வாழ்க்கை. குடும்பத்தின் நலம் யாருக்கு யார் எஜமானன் என்பதில் இல்லை; யாருக்கு யார் எச்சமயம் வலிந்து பணி புரிய வேண்டும் என்பதைப் பொறுத்தது.

இந்த ஒரு கலையைத் தத்துவமாகக் கடைப் பிடித்தவள் ராதை!

அவள்தான் ரெயிலடிக்குப் போனாள். உதகையிலிருந்து வரும் பாபுவையும் அவன் தோழன் ஜி. முருகனையும் உடன் அழைத்து வந்தாள்.

''இதுதான் உன் அம்மாவா?''

''எனக்கு இவள் தான் அம்மா! ராதையம்மா!''

> **வாழ்க்கை என்பது ஓர் அலை. அதன் வடிவமும் எண்ணமும் ஓயாமல் மாறிக் கொண்டேயிருக்கின்றன.**
> **—டிஸ்ரலி.**

''ஓகோ டாக்டரம்மா இல்லை. புது வக்கீலம்மா!''

இருவரையும் மோட்டார் வண்டியில் ஏற்றி வீட்டுக்குக் கூட்டி வந்தாள்.

டாக்டர் ஓர் அறையில் இருந்தாள்.

எட்டு மணிக்கு வந்த வக்கீல் தமது அறையில் இருந்தார்.

இருவரும் இரு அறைகளில் இருந்தவர்கள் மட்டுமல்லர்; இரு வேறு உலகத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தார்கள்.

கார் வந்து வீட்டிற்குள் நின்றதும் டாக்டரும் ஓடி வந்தாள், வக்கீலும் ஓடி வந்தார்.

''பாபு'' என்ற குரல் ஒன்றாக இணைந்தது.

காரின் கதவைத் திறந்து இருவரும் அவனைத் தூக்கிக் கொள்ள முயற்சி செய்தார்கள். இருவர் முகத்திலும் பொலிவு. ஒருவரை ஒருவர் தொட்ட சிலிர்ப்பு.

''இவன் என் நண்பன்'' என்றான் பாபு.

''என் பெயர் ஜி. முருகன்'' என்றான் சிறுவன்.

முருகனையும் பாபுவையும் அருகாக அணைத்துக் கொண்டு வீட்டிற்குள் நடந்தார்கள் தம்பதிகள்.

சண்டை போட்ட தம்பதிகளாக முகத்தை வைத்துக் கொள்ள வில்லை. அவர்கள் இருவரும் சண்டையை மறந்து விட்டார்களோ; இல்லை மறைத்துக் கொண்டு குடும்ப நாடக மேடையில் நடிக்கிறார்களோ!

பையன்கள் இருவரும் வீட்டிற்குள் வந்ததால் பெரும் பரபரப்பு. வெளிச்சம். சத்தம். ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு இடம் பார்க்க வேண்டுமென்று திட்டம் போட்டார்கள். வீட்டில் இருந்தாலும் வெளியே கிளம்பினாலும் இரு குழந்தைகளும் அப்பாவோடும் அம்மாவோடும் கை கோத்துக் கொண்டு கிளம்பின. இதன் காரணமாக டாக்டர் மனத் திரையைப் போட்டுக் கொண்டாலும் சொல்லிலும் செயலிலும் திரையைப் போட்டுக்கொள்ள முடியவில்லை.

வக்கீலுக்கும் இதே நிலைமை. ''நாம் அந்நியர்கள் இந்தப் புதியநாடகத்திற்காகத் தம்பதியர்களாக நடிக்கிறோம்'' என்னும் நாடகத்தை ஒத்திகை பார்ப்பது போல இரண்டொரு நாள் இருந்தது.

சென்னையின் அழகிய கடற்கரை, பூங்காக்கள், மிருகக் காட்சிச்சாலை, மியூசியம் என்று சுற்றினார்கள். வீட்டிலிருந்து எடுத்துப் போன உணவையும் உண்டார்கள்; சோர்ந்து போய் ஓட்டலில்உணவும் உண்டார்கள். சில நாள் ராதை வருவாள். சில நாள் வராமல் இருக்கும் காரணத்தைச் சொல்லி விடுவாள்.

பாபுவுக்குத் தன் வீட்டையும், தன் வீட்டு இரு கார்களையும் தன் தாய் தந்தையை முருகனுக்குக் காட்டியதில் பெருமையடைந்தான். தன் வீட்டுச் செல்வச் செழிப்பை அறிவிக்கும் வாய்ப்பு, தனக்குக் கிடைத்தது பற்றி மிகவும் பெருமைப் பட்டான் பாபு.

முருகன் பட்டணத்தின் சூழ்நிலையையும் பரபரப்பையும் முதல் தடவையாகப் பார்க்கிறான்.

மோட்டாரின் பாம்...பாம். ...சத்தம் கேட்டால், ''சின்னஞ்சிறு குழந்தை அம்மா அம்மான்னு கத்துகிற மாதிரி இருக்குது'' என்பான்.

கடலலையைப் பார்த்தால் 'தாய் மேல் வந்து விழுகிற குழந்தை போல இருக்குது' என்று பேசுவான்.

அடையாறு ஆல மரம் பார்த்த போது ''ஏண்டா பாபு ஒவ்வொரு விழுதும் இந்த மரத்தைப் பெரிசு பந்த்துது. ஒவ்வொரு குழந்தையும் தாய்க்கும் தந்தைக்கும் உதவி செய்தா குடும்பம் உருப்படும்' என்னும் ஆசையை வெளியிட்டான் முருகன்.

''தொங்கும் விழுது உதவாக் கரைப் பிள்ளக்குச் சமம். வேர் விட்ட விழுது உதவும் பிள்ளை யென்று எங்கள் வாத்தியார் சொன்னார்'' என்று பாபுவும் பேசினான்.

நீதி மன்றத்திற்குள் இருக்கும் கலங்கரை விளக்கைப் பார்க்க மாடி மாடியாக ஏறினார்கள். மிகவும் சிரமப்பட்டு வக்கீல் மணிவாசகன், டாக்டர் நர்மதை ஏறினார்கள். ஒவ்வொருத்தர் ஒவ்வொரு குழந்தையின் விரலைப் பிடித்துக் கொண்டார்கள்.

உயரமான இடத்தில் நின்று கடலையும், கடலுக்கு எதிரே இருக்கும் சின்னஞ் சிறு கட்டடங்களையும் பார்த்து மகிழ்ந்தார்கள்.

''இரவிலே இந்தக் கலங்கரை விளக்கு, சுழலும். இதன் வெளிச்சம் பார்த்ததும் கடலில் மிதக்கும் கப்பல்கள் துறை முகத்திற்கு வரும்'' என்று மணிவாசகன் இருவருக்கும் விளக்கினான்.

''இருட்டிலே தவிக்கிற குழந்தைகளுக்கு ஒலி கொடுக்கிற தாய்க்கு கலங்கரைவிளக்கு என்று பெயர் கொடுக்கலாம்''

இந்த உதாரணம் கேட்டு அறிவு செறிந்த வக்கீல் மனம் ஒரு கணம் அதிர்ச்சி பெற்றது. ஒளியாகப் பார்த்துப் பார்த்து அலுத்துப் போன கலங்கரை விளக்கிலிருந்து ஒலியை எழுப்பி விட்ட முருகனை நெஞ்சாரத் தழுவிக் கொண்டான்.

படிப்படியாக இறங்கி அவர்கள், கிண்டியிலுள்ள மான் பூங்கா பார்க்கப் போனார்கள்.

அங்கு பஞ்ச வர்ணக் கிளி ஒன்று தன் குஞ்சுக்கு இரை கொடுத்துக் கொண்டிருந்தது.

அதன் அருகே நின்று யாவரும் வேடிக்கை பார்த்தார்கள்.

''இது எப்படி இருக்கிறது முருகா?''

'' நீங்க இரண்டு பேரும் பாபுவிடம் காட்டுகிற அன்பு மாதிரி இருக்குது! கிளி, குஞ்சுக்கு இரை கொடுக்கும் அழகு வேறே எந்தப் பறவையிடம் இருக்க முடியும்?''

போலியாக வேஷம் கட்டிய இருவரும் திடுக்கிட்டார்கள்.



**பெரிய முட்டை 32 காசு**

**பெரிய கோழி முட்டைகள் தனியார் கடைகளில் 36 காசு முதல் 40 காசுகள் வரை விற்கப்படுகின்றன. ஊட்டச் சத்து மிக்க உணவான முட்டைகளைத் தமிழக மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைத் திடச் செய்ய வேண்டுமென்ற இலக்குடன், தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் பெரிய முட்டைகளை, ஒன்று 32 காசு வீதமே விற்பனை செய்து வருகிறது. 97, லாயிட்ஸ் சாலை, சென்னை என்ற முகவரியில் உள்ள தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் அலுவலகத்தில் மிகப் பெரிய (Extra Large) முட்டைகள் 34 காசுகள் வீதம் விற்கப்படுகின்றன.**

டாக்டரம்மா தன்னைத் தாயாக எண்ணினாள். தன் மகன் பாபுவைச் சின்னஞ் சிறு கிளிக் குஞ்சாக எண்ணிக் கற்பனை செய்தாள்.

மறுநாள்:

வடபழனியில் நடந்த சினிமா ஷூட்டிங் பார்த்தார்கள். வடபழனி முருகன் கோவிலுக்குப் போனார்கள்.

"பாபு நாம் வந்த இடத்துச் சாமியின் பெயர் தெரியுமா?"

"முருகன்! உன் பெயரும் அதுதான்!"

முருகன் சொல்லுவான், "எனக்கு ரொம்பப் பிடித்த தெய்வம் முருகன். ஏன் தெரியுமா? உலகம் என்பது வேறு; தெய்வம் என்பது வேறு. இது கணபதியின் எண்ணம். அம்மாவும் அப்பாவும் உலகம் என்று நினைத்தவன் முருகன். அதனாலே எனக்கு முருகன் என்றால் ரொம்பப் பிடிக்கும்!"

"அப்பாவும் அம்மாவும் இல்லாத உலகம் என்னடா உலகம்?"

"நரகலோகம்" என்றான் முருகன்.

டாக்டர் நர்மதைக்கும் தலையில் யாரோ குட்டுவது போல இருந்தது. வக்கீல் மணிவாசகனுக்கும் கன்னத்தில் யாரோ பளீர் என்று அறைந்தது போல இருந்தது. இருவரும் தத்தம் வலியை விழுங்கிக் கொண்டிருந்தார்கள்.

"நம்ம வாத்தியார் சொன்னாரே ஒரு நாள் நினைவு இருக்கா?"

"எதுடா முருகா?"

"தாயிற் சிறந்தொரு கோயில் இல்லை. தந்தைசொல் மிக்கதொரு வாசகம் இல்லை என்பதாக."

"இரண்டையும் நம்ம பக்கத்தில் பார்க்கிறோமே!"

குழந்தைகள் இயல்பாகச் சிரித்தார்கள்.

நடித்துப் பழகிய இருவரும் மனத்தில் நடித்துக் கொண்டு ஒன்றாக இணைந்த மாதிரிச் சிரித்தார்கள்.

"பாபு! பிறர் காட்டற அன்பும் பாசமும் நமக்கு லகுவாக இருக்குது. அதேபோல நாம அன்பு காட்டணுமானால் எத்தனை கஷ்டமாக இருக்குது?"

"எதைச் சொல்லறே?"

"பாபு! உன் அப்பா அம்மா ரெண்டு பேரும் உன்னிடம் எத்தனை அன்பையும் பாசத்தையும் பொழியறாங்களோ இதுபோல அன்பை வேறு எங்கடா நான் கண்டேன்? எங்கடா நான் அனுபவிச்சேன்? உனக்கும் எனக்கும் பேதமில்லாதபடி எந்த வீட்டிலே நடத்துவாங்க?"

கண்ணீர் மல்கத் தன் ஆனந்தத்தை முருகன் சொன்னான்.

பேதங்களை மனத்தில் மறைத்துக்கொண்டு கணவன்-மனைவியாக நடித்த அவர்களின் மனம் பேதலித்தது.

காணுமிடமெல்லாம் கண்ட பொருளெல்லாம் அன்னையாகவும் அன்புக் குழந்தையாகவும் உவகை காட்டிப் பேசிய முருகனைத் தம்பதிகளால் மறக்க முடியவில்லை.

தங்களை மறந்து கொண்டு வந்தார்கள்.

தங்கள் பத்து நாள் நாடகத்தையும் செம்மையாக நிறைவு செய்து கொண்டு வந்தார்கள்.

நாளைக்குக் குழந்தைகள் இருவரும் ஊர் திரும்ப வேண்டும்.

அவர்கள் நடித்த நாடகத் திரை விழ வேண்டும்!

(அடுத்த இதழில் முடியும்)

## தரம் பிரித்து விற்றிடுவீர்!

எப்பொருளையும் தரம் பிரித்து விற்பதனால் நல்ல இலாபம் பெறமுடியும். குறிப்பாக முட்டைகளை அவைகளின் எடைக்குத் தகுந்தவாறு தரம் பிரித்து விற்றால் விற்பனை அங்காடிகளில் அதிக விலைக்கு விற்க முடியும். படத்தில் கண்ட கருவி (Grading) முட்டைகளை எடைக்குத் தகுந்தவாறு தரம் பிரிக்கப் பயன்படும். இக்கருவியின் மூலம் மிகப் பெரிய (Extra Large), பெரிய (Large), நடுத்தர (Medium), சிறிய (Small) ஆகிய நான்கு வகையாகத் தரம் பிரிக்க இயலும். இக்கருவியைப் பயன்படுத்திக் காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் 45 கிராம் எடையும் அதற்கு மேற்பட்ட எடையும் உள்ள முட்டைகளைப் பெரியது (Large) என்றும், 45 கிராம் எடைக்குக் குறைந்த முட்டைகளைச் சிறியது (Small) என்றும் தரம் பிரித்து ,அவைகளை ஒவ்வொன்றும் முறையே 29 காசு என்றும், 26 காசு என்றும் விற்கப்படுகிறது.



# புத்துணர்வும் புதுவாழ்வும்



இந்த மண்ணுலகில் வாழ்கின்ற மக்களில் சிலர் விண்ணுலகம் சென்று நிலவில் இறங்கி, அங்கேயும் உயிரினங்களை வாழ வைக்க முடியுமா என ஆராய்ந்து வந்து அந்த அதிசயத்தை நாடெல்லாம் அறிவிக்கிறார்கள். ஆனால் இந்த விஞ்ஞான உலகத்தில் மக்களில் பலர் இந்த பூமியில் இடர்ப்பாடுகளையெல்லாம் கடந்து, தடைகளையெல்லாம் தகர்த்து வாழ்ந்து காட்டுவதையே மிகப் பெரிய சாதனையாகக் கருதுபவர்களாக இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இந்த மண்ணில் ஆண்கள், பெண்கள் குழந்தைகள் வடிவில் ஏதும் செய்ய இயலாத உடல்களாக, கண்பார்வை இழந்தவர்களாக, காது கேளாதவர்களாக, ஊமைகளாக, நோயாளிகளாக, நொண்டிகளாய், முடங்களாய், மூளைவளர்ச்சி குன்றியவர்களாய் இன்னும் ஏதேதோ வடிவில் காட்சியளிக்கிறார்கள். வாழ்க்கையில் ஏதாவது சாதனைகளைப் புரிய அவர்களுடைய உள்ளங்களும் தேடியலைகின்றன. ஊனமுற்றவர்கள் மற்றவர்கள் தங்களுக்குச் சந்தர்ப்பங்களை அளித்து வாழ வழிகாட்ட வேண்டுமென்று விரும்புகிறார்களேயல்லாமல் வெகுமதி கிடைக்குமா என்று ஏங்கி எதிர்பார்த்ததில்லை.

அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையில் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் சந்தர்ப்பங்களை அளிக்க வேண்டும். அவர்கள் பயனுள்ள வாழ்வைப் பெற, வாழ்வு உயர, உதவிகளை வழங்கிடவேண்டும். இன்றைய உலகில் ஊனமுற்று மறுவாழ்வுக்கான உதவிகள் தேவைப்படுகிறவர்கள் 3 முதல் 4 கோடி வரை உள்ளனர். இந்தியாவில் மட்டும் 1 கோடியே 20 இலட்சம் பேர் ஊனமுற்றவர்கள் இருக்கிறார்கள். மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் ஊனமுற்றவர்களுக்கு உயர்ந்த முன்னுரிமையும், சிறந்த வழிகாட்டுதலும், வளர்ச்சித் திட்டங்களை வகுத்தலும்தான் அரசின் நோக்கமாக உள்ளது. இதற்கான வேலைகள் மிகப் பெரிது. ஊனமுற்றவனாக ஒருவன் இருந்தபோதும் முழுமையாக எல்லாம் இயலக்கூடிய மனிதனைப் போலவே, தன்னுடைய திறமையையும் பயன்படுத்த வேண்டுமென அவனது ஆவலும் உணர்வுகளும் விரும்புகின்றன. குறைந்த பட்சம் அவனுக்கு வாழ வழி வேண்டும்; பயிற்சி வேண்டும்; பயன்படுத்த வாய்ப்பு வேண்டும்.

அரசு அலுவலர்கள், நிர்வாகிகள், சமூகப் பணியாளர்கள், மருத்துவர்கள், கல்வி நிறுவனங்கள், மற்றும் பொது மக்களும் பெற்றோர்களும் ஊனமுற்றவர்களுடைய இயலாமையைப் போக்க இணைந்து செயலாற்றி வாழ்வு தர வேண்டும். ஊனமுற்றவர்கள் தங்களுடைய திறமைக்கேற்றவாறு தங்களுடைய எதிர்காலத்தை வகுத்துக் கொள்வதும் அவர்களுடைய பொறுப்பாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ உரிமை இருப்பது போல், திறமையின் பங்கை உலகுக்குச் செலுத்துவதிலும் உண்டு. கல்வியின் மிகுந்த மதிப்பு அது சமுதாயத்தை அடையும் போதும், சமுதாயம் அதை ஏற்றுக் கொள்ளும்போதுந்தான் பிரகாசமாகச் சுடர் விடுகிறது. பயிலும் போதே சம்பாதிக்கும் அளவிற்குப் பணிக்கூடங்கள் திறக்கப்பட வேண்டும். கற்ற கல்வி நாட்டுக்கும் வீட்டுக்கும் பயனைத்தர வேண்டும்.

ஊனமுற்றவர்களை வேலையில் அமர்த்தத் தொழில் அதிபர்கள் தயங்கினார்கள். சரியான கல்வியும், பயிற்சியும் பெற்றவர்கள் ஆரோக்கியமான மனிதனைப் போல உற்பத்தி பெருக்கவும், பொறிகளை இயக்கவும் இயலும் என்பது நிரூபணமான பின்னர் தயக்கங்கள் பறந்துவிட்டன.

மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் ஊனமுற்றவர்களுக்கு மருத்துவ உதவியும், கல்வி, வேலை வாய்ப்பு வசதிகளும் அளிப்பதோடு மட்டுமல்லாமல், சமூகத்தில் ஒற்றுமையையும், அங்கீகாரத்தையும்,

அவர்களும் பெற ஏற்பாடு செய்ய வேண்டும். ஊனமுற்ற தாழ்வு மனப்பான்மையைப் பெற்றிருந்தாலும் சமுதாயம் அவர்களை ஒருங்கிணைத்து ஒத்துழைப்பு நல்கி அங்கீகாரம் வழங்கிட வேண்டும்.

குறிப்பாக ஊனமுற்ற குழந்தைகளுக்குத் தனிக் கவனமும், பேணுதலும் தேவைப்படுகின்றன. நாம் எவ்வளவு பணியைச் செய்தாலும், சரியான நபர்களுக்குச் சரியான நேரத்தில் கிடைக்கின்றனவா என்றும் கவனிக்க வேண்டும். அவர்களுக்குக் கல்வி வாய்ப்பையும் பயிற்சியையும் அளிப்பது, அவர்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்வதற்குப் பெரிய முதலீடாகும்.

அண்மைக் காலம் வரை, ஊனமுற்றவர்கள் பயனற்றவர்களாக, இருண்டு போன வாழ்க்கையோடு, எவரையாவது நம்பியே வாழ வேண்டியிருந்தது. வாழ்க்கையைப் பற்றிய நவீனத் தத்துவங்களும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், ஊனமுற்றவர்களுக்கும் அவர்களின் திறமைக்கேற்றவாறு பொருத்தமான வேலைக்கு வாய்ப்பளித்துச் சம்பாதிக்கவும், தங்களைக் காத்துச் சொந்தக் குடும்பம் நடத்தவும் வழிகோலியுள்ளன.

தமிழ்நாட்டில் மட்டிலுமே ஊனமுற்றவர்களுக்காகச் சிறப்பாக வாரியம் ( Board ) அமைக்கப்பட்டுள்ளது. ஊனமுற்றவர்கள்வேலை வாய்ப்பைப் பெறுவதன் மூலம், மற்றவர்களை நம்பி வாழ்ந்து அவர்களுக்குப் பாரமாய் இருப்பதிலிருந்து விலகிக் கொள்கிறார்கள். ஊனமுற்றவர்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பிலிருந்தும் மற்றவர்கள் விடுபடுகின்றனர்.



தமிழ்நாடு அரசு தனது அமைச்சர்கள் மூலமும் அலுவலர்கள் மூலமும் இவர்களுக்கெல்லாம் நிறைந்த வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறது. மறுவாழ்வளிப்பதென்பது தனி மனிதனால் மட்டுமோ அரசினால் மட்டுமோ இயலக்கூடிய காரியமல்ல. அரசும் மக்களும் இணைந்து செயலாற்றிட வேண்டும். ஒவ்வொருவரும் இதற்கான கல்வி நிறுவனங்கள் - நிலையங்களுக்கு உதவ முன்வர வேண்டும். தடைக்கற்களான சுமைகளைத் தாங்கிக் கொள்ள ஒவ்வொருவரும் முன்வர வேண்டும்.

பார்வையற்றோருக்கு அரசினால் ஆறு பள்ளிகளும் தனியார்களினால் நான்கு பள்ளிகளும் நடைபெறுகின்றன. பயிற்சி நிலையங்கள் அரசால் ஒன்றும், தனியார் நிர்வாகத்தின் மூலம் மூன்றும் உள்ளன. கல்வி நிலையத்தில் 1,000 பேரும், பயிற்சி நிலையத்தில் 81 பேரும் பயிலுகிறார்கள். ஊனமுற்றவர்களின் மாறுபட்ட தேவைகளையெல்லாம் கவனிக்க 38 நிறுவனங்கள் உள்ளன. 1970-க்குப் பின்னர் மட்டும், மேலும் 10 நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு பெற்றனர். பிறவிக்குருடனும் கண்பார்வை பெற முடிந்தது. கைவண்டி இழுத்தவனும் சைக்கிள் ரிக்ஷாவைப் பெற முடிந்தது. மனமுண்டானால் அனைத்திற்கும் மார்க்கமுண்டு. ஒத்துழைப்புத் தேவை; உதவுகின்ற மனம்தான் பெருக வேண்டும்.

இந்த மண்ணில் வாழ்கின்ற ஒவ்வொரு மகனும் வாழ்வது போல் அவர்களும் வாழ்க்கையை இனிதே அனுபவிக்க வேண்டும். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணுகின்ற தமிழ்நாடு அரசு ஊனமுற்றவர்களுக்கு மறுவாழ்வளிப்பதன் மூலம் அவர்கள் புன்னகையிலும்இறைவனைக்காணுகிறது.

—ம. அ.



# நிதி நிலைக் கூட்டம் அறிவித்த நீர்ப்பாசனத் திட்டங்கள்

**தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 15—11—73ல் நடைபெற்ற தமிழக அரசின் நிதிநிலைக் கூட்டத்தில் புதிய நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் விவாதித்து அனுமதிக்கப்பட்டன. அவை வருமாறு:**

மதுரை மாவட்டம், பழனி வட்டம் வரதமாநதி நீர்த்தேக்கம் 1 கோடி ரூபாய்.

நெல்லை, செங்கோட்டை வட்டக் குண்டாறு நீர்த்தேக்கம் என்ற கண்ணுபுள்ளிமேடு திட்டம் ரூபாய் 37 இலட்சம்.

கோவை, பவானி வட்டம், வறட்டுப்பள்ளம் நீர்த்தேக்கம் ரூபாய் 60 இலட்சம்.

வட ஆர்க்காடு செங்கம் வட்டம், சாத்தனூர் அணையில் புதிய வலதுபுற வாய்க்கால் அமைப்புத் திட்டம் ரூபாய் 2 கோடி.

மதுரை இராமநாதபுரம் மாவட்டத்தில் மேலூர், சிவகங்கை,திருப்புத்தூர் வட்டங்களில் பெரியாறு வாய்க்கால்களைச் சீரமைக்க 7·5 கோடி ரூபாய்.

கோவை கோபிசெட்டிபாளையம் வட்டம் குண்டேரி பள்ளம் நீர்த்தேக்கம் 46 இலட்சம் ரூபாய்.

கோவை தாராபுரம் வட்டம், வட்டமலைக்கரை ஓடை நீர்த்தேக்கம் ரூபாய் 74 இலட்சம்.

தஞ்சை, பட்டுக்கோட்டை அடைக்கத்தேவன் கிராமம் அம்புலியாறு குறுக்கே அணை கட்ட ரூபாய் 6·25 இலட்சம்.

சேலம், மேட்டூர் உள்ளுகோம்பை முள்ளிக்காடு கிராமம் பாலமலை ஓடை கண்மாய்த் திட்டம் ரூபாய் 8·5 இலட்சம்.

சேலம், மேட்டூர் பி. என். பட்டி கிராமம் புது ஓடை அணை கட்ட ரூபாய் 5 இலட்சம்.

சேலம் மேட்டூர் லக்கம்பட்டி கிராமம் கொத்த நேரி கண்மாய் சீர்திருத்த ரூபாய் 7 இலட்சம்.

சேலம், ஆத்தூர் வலசகால்பட்டி கிராமம் கல்லாற்றின் குறுக்கே அணை கட்ட ரூபாய் 13·5 இலட்சம்.

கோவை, கோபிசெட்டிபாளையம் வட்டம் ஆனந்தசாகரம் கண்மாய் - கால்வாய் திட்டம் ரூபாய் 3 இலட்சம்.

சேலம், தக்கம்பட்டி கிராமம் ஜம்பூத்து ஓடை கண்மாய் ரூபாய் 7 இலட்சம்.

தஞ்சாவூர், திருத்துறைப்பூண்டி வடிகால் திட்டம் ரூபாய் 21 இலட்சம்.

மொத்தம் ரூபாய் 12 கோடியே 38·5 இலட்சத்துக்கு நீர்ப்பாசனத் திட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் கொல்லிமலைப்பகுதியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் வாட்டில் மரம், பைன் மரம் பயிரிட முடிவு செய்து 10 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் செங்கல்பட்டு மாவட்டத்தில் 40 வீடுகளும் தர்மபுரி மாவட்டத்தில் 28 வீடுகளும் கட்ட ரூபாய் 9 இலட்சம் அனுமதிக்கப்பட்டு உள்ளது.

மணலியைச் சுற்றி அமைந்துள்ள தொழிற்சாலைகளுக்கு நாள் 1-க்கு 1 கோடியே 10 இலட்சம் காலன் தண்ணீர் விநியோகம் செய்யும் திட்டத்தை அமல்படுத்த 2 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் தேவையான நிர்வாக அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

கிராமங்களில் குடிநீர்வசதி செய்து கொடுக்கத் தேவையான துளைக் கருவிகள், மற்றும் சாதனங்கள் வாங்குவதற்குக் குடிநீர் வாரியத்துக்குக் அரசு ரூபாய் 43 இலட்சம் கடனுகக் கொடுக்க முடிவு செய்துள்ளது.

எழும்பூர் மகளிர், சிறுவர் மருத்துவ மனைக்கு 'கோயில்டு' கருவி வாங்க ரூபாய் 3·5 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கோவை, திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட, மருத்துவ மனை அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை நகரில், கண்காணிப்புப் பணிக்காக மேலும் 18 சப்-இன்ஸ்பெக்டர்கள் 18 தலைமைக் காவலர்கள் நியமிக்கப்படுவார்கள்.

1-12-3

* 10,602·72 ஏக்கர் நிலங்களின் மேல் 6 அங்குலம் முதல் 4 அடி உயரம்வரை வெள்ளம் குவிந்த மணலை இலவசமாக அகற்றிக் கொடுக்கத் தமிழ்நாடு அரசு முடிவு செய்தது.

* இம்மாபெரும் பணியை எட்டே திங்களில் 1·06 கோடி ரூபாய் செலவில் தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை செய்து முடித்துள்ளது.

* இதனால் 6 மாவட்டத்தைச் சேர்ந்த 6,088 உழவர் பெருமக்கள் பயன் பெற்றுள்ளனர்; தமிழ்நாட்டிற்கு ஆண்டு தோறும் ஏற்படவிருந்த ஒரு கோடி ரூபாய் நட்டம் தவிர்க்கப்பட்டு விட்டது.

இவைகுறித்து வேளாண்மைத்துறை இயக்குநர் இக்கட்டுரையில் விரிவாக விளக்கியுள்ளார்.

# வெள்ளம் குவித்த மணலை அகற்றினோம்! உள்ளம் மகிழ்ந்தனர் உழவர் மக்களே!

சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளம், தமிழ்நாட்டில் வரலாறு காணாத அளவுக்குச் சேதங்களை ஏற்படுத்தியது. அவ்வெள்ளத்தால் குறிப்பாகத் தென்னார்க்காடு, கோயம்புத்தூர், சேலம் தருமபுரி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் வளம் கொழிக்கும் நிலங்கள் பாழடைந்தன! வயல்களில் வளர்ந்திருந்த பயிர்கள் பாழ்பட்டதுடன், வயலெங்கும் 6 அங்குலம் முதல் 4 அடி உயரம் வரை மணல் குவிந்தது! அதனால் அந்நிலங்கள் சாகுபடி செய்வதற்குத் தகுதியற்றதாகிவிட்டன!

இயற்கையின் இக்கோர விளையாட்டினால் 6,088 உழவர் பெருமக்களின் நிலங்கள் சாகுபடி செய்வதற்குத் தகுதியில்லாத-மணல் மூடிய-நிலங்களாக ஆகிவிட்டன! தங்கள் வாழ்வுக்கு நிலங்களையே நம்பி இருந்த உழவர்கள். தங்கள் வாழ்வில் பேரிடி விழுந்துவிட்டதாக எண்ணி அழுதனர்! 'மணலை அகற்றுவது எப்படி?' என்று மலைத்தனர்!! 'பணத்திற்கு என்ன செய்வது?' என்று திகைத்தனர்!!!

நாட்டு மக்களின் வாட்டம் போக்குவதையே குறிக்கோளாகக் கொண்ட தமிழ்நாடு அரசு, உழவர் பெருமக்களின் கண்ணீரைத் துடைத்திடுவதற்கு ஓடோடி வந்தது! திக்கற்று நின்ற உழவர் பெருமக்களின் துயர் துடைத்திட தமிழ்நாடு அரசு விரைந்து முடிவு எடுத்தது!!

அதன் பயனாய், வெள்ளத்தால் பாழ்பட்ட பரப்பு பற்றிய விரைவான முன்னோடி ஆய்வு, தமிழ்நாடு வேளாண்மைத்துறையினரால் மேற்கொள்ளப் பெற்றது. அவ்வாய்வில் ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலங்கள் — மணலால் மூடப்பட்டோ அல்லது வெள்ளத்தால் அரிக்கப்பட்டோ இருப்பதால் — 'புல்டோசர்' இயந்திரம் பயன்படுத்திச் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டியநிலையில் இருப்பதாக மதிப்பிடப் பெற்றது.

**'அஞ்சாதீர்' என்றது அரசு!**

வெள்ளத்தால் பாழ்பட்ட பரப்புபற்றிய முன் அறிக்கை கிடைத்த உடனேயே, பாழ்பட்ட சாகுபடி நிலங்கள் முழுவதையும் சீர்திருத்துவதென்று தமிழ்நாடு அரசு முடிவு செய்தது. இயற்கை விளைவித்த இன்னலினால் பாதிக்கப்பட்ட உழவர்களின் ஏழ்மையை எண்ணியும், முக்கிய வேளாண்மைப்பட்டம் துவங்குவதற்குள் நிலச்சீர்திருத்த வேலைகளை விரைந்து முடித்திடக் கருதியும், தமிழ்நாடு அரசு மனிதாபிமானத்துடனும், தருமச் சிந்தனையுடனும் பாழ்பட்ட நிலங்களை இலவசமாகச் சீர்திருத்திக் கொடுத்திட முடிவு செய்தது. பெருமளவில் மணல் குவிந்த நிலங்களைச் சீர்திருத்தும் பணியை, வேளாண்மைத் துறையிடம் தமிழ்நாடு அரசு ஒப்படைத்தது.

பச்சைப் போர்வைப் போர்த்தி இருப்பதுபோல் இருந்த நெல் வயல்களையும், பத்து நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடக்கூடிய நிலையில் இருந்த நெல் வயல்களையும் மூடிய மணலை ஒரு சில நாட்களுக்குள்ளேயே சீர்திருத்தும் பணியைத் தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள 'திருவாமூர்' என்ற ஊரில் 23-12-72 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்து "மணல் அகற்றும் பணியைப் போர்க்கலப் பணிகளைப்போல் வெகுவிரைவாக மேற்கொள்ளுவோம்! அழாதீர்!! அஞ்சாதீர்!!!" எனக் கூறி உழவர் பெருமக்களுக்குத் துணிவு கூறினார்.

டி. வி. அந்தோணி, I.A.S.,
இயக்குநர்,
வேளாண்மைத் துறை,
சென்னை-5.

**விரிவான ஆய்வு!**

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பரப்புபற்றிய விரிவான ஆய்வு வேளாண்மைத்துறையின் மண்வளப் பாதுகாப்புப் பிரிவினரால்- நிலவருவாய்த் துறையினர் மற்றும் கிராம அலுவலர்கள் ஒத்துழைப்புடன் -மேற்கொள்ளப் பெற்றது. மண்வளப் பாதுகாப்புப் பிரிவைச் சார்ந்த அலுவலர்கள் விரிவான ஆய்வு வேலையை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டார்கள். வெள்ளத்தால் பாதிக்கப்பெற்ற நிலங்களின் பரப்பினைக் கணக்கிடவும், அந்நிலங்களைச் சீர்திருத்துவதற்கு ஆகும் செலவினைக் கணக்கிடவும் விரிவான ஆய்வு விரைவாக மேற் கொள்ளப் பெற்றது. இவ்விரிவான ஆய்வு மேடிட்டுள்ள மணலின் ஆழம், மண்ணரிக்கப்பட்ட பரப்பு,





திருவாமூர் கிராமத்தில் மணல் மூடிய நிலங்களைச் சீர்திருத்தும் பணியை முதல்வர் துவக்கி வைக்கிறார்.

சீர்திருத்துவதற்குத் தேவைப்படும் காலம், மணலை அகற்றுவதற்குக் கொண்டு செல்ல வேண்டிய குறுகிய தூரம் போன்ற சேதங்களின் தன்மையை வெகு தெளிவாகக் காட்டின. 'புல்டோசர்' இயந்திரம் மூலமாக சீர்திருத்த வேண்டிய-மணலால் மூடப்பெற்றதும், மண்ணரிக்கப்பெற்றதுமான- நிலங்களின் பரப்பு 10,500 ஏக்கருக்கும் சற்று அதிகமாகவே இருக்கும் என்று மதிப்பிடப்பெற்றது.

**'புல்டோசர்' படை புறப்பட்டது!**

மணலால் மூடப்பெற்ற நிலங்களைச் — சீர்திருத்துவதற்காக தென்னார்க்காடு, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய 5 மாவட்டங்களுக்கும் 101 'புல்டோசர்' இயந்திரங்கள் அடங்கிய படையை வேளாண்மைத்துறை அனுப்பியது. வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது தென்னார்க்காடு மாவட்டமாதலின், தென்னார்க்காடு மாவட்டத்தின் விளைநிலங்களில் மணலை அகற்றும் பணிக்காக மட்டும் 80-க்கும் மேற்பட்ட 'புல்டோசர்' இயந்திரங்கள் நாள்தோறும் 12 மணி நேரத்திற்கும் அதிகமான நேரமும், ஒரு திங்களில் தொடர்ந்து 25 நாட்களுக்கும் மேலாகவும் மணல் அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்பெற்றன. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் குறிப்பிடும் முக்கியத்துவ வரிசையில் நிலச்சீர்திருத்த வேலைகளைப் 'புல்டோசர்' இயந்திரங்கள் மேற்கொண்டன. குறிப்பாகத் தென்னார்க்காடு மாவட்டத்தில்—கருவிகள், இயந்திரங்கள் மட்டுமின்றி — ஏறத்தாழ எல்லா வேளாண்மைப் பொறியியல் பிரிவைச் சார்ந்த அலுவலர்களும், பணியாளர்களும் மணல் அகற்றும் பணிக்காக ஒருமுகப்படுத்தப்பட்டனர்.

**எட்டு திங்களில் ஏற்றமிகு சாதனை !**

விளைநிலங்களில் மூடிய மணலை அகற்றி, குறுகிய காலத்தில் அந்நிலங்களைச் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக ஆக்கவேண்டும் என்பதற்காக, எல்லா மாவட்டத்திலும் மணல்களை அகற்றும் பணி-முழு அளவில் முடியும்வரை-முன்னேற்ற நிலையிலேயே இருக்க ஆவன செய்யப்பட்டது. பின்கண்ட புள்ளி விவரங்கள், மணல் அகற்றும் பணி துவக்கம் முதல் இறுதி வரை முன்னேற்றப் பாங்கிலேயே இருந்துள்ளது என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

**மணல் அகற்றும் பணியின் முன்னேற்றம் !**

| காலம் | | | சீர்திருத்தப் பெற்ற நிலப்பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|---|
| 23-12-72 முதல் 31-1-73 வரை | | ... | 830.75 |
| பிப்ரவரி 1973 முடிய | ... | ... | 3,108.71 |
| மார்ச்சு 1973 முடிய | ... | ... | 4,952.27 |
| ஏப்ரல் 1973 முடிய | ... | ... | 6,068.65 |
| மே 1973 முடிய | ... | ... | 6,939.58 |
| ஜூன் 1973 முடிய | ... | ... | 8,042.64 |
| ஜூலை 1973 முடிய | ... | ... | 9,228.04 |
| ஆகஸ்டு 1973 முடிய | ... | ... | 10,206.04 |
| செப்டம்பர் 1973 முடிய | ... | ... | 10,541.00 |
| 12-10-73 முடிய | ... | ... | 10,602.72 |

நிலச்சீர்திருத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த 101 புல்டோசர் இயந்திரங்களும் 1,42,445 புல்டோசர்-மணி நேரம் வேலை செய்துள்ளன ; மணலால் மூடப்பெற்றதும், மண்ணரிக்கப் பெற்றதுமான 10,602.72 ஏக்கர் நிலங்களைச் சீர்திருத்தி மீண்டும் சாகுபடி செய்வதற்கு ஏற்ற நிலங்களாக ஆக்கியுள்ளன. மணல் அகற்றிச் செப்பனிடும் பணியில் பெரும் பகுதி 1973-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் இறுதியிலேயே-அதாவது வேலை துவங்கியதிலிருந்து 8 திங்களுக்குள்ளாகவே - முடிக்கப் பெற்றுள்ளது குறிப்பிடத் தகுந்ததாகும்.

### திறமைக்குச் சான்று!

ஒரு ஏக்கர் நிலத்தில் படிந்துள்ள மணலை 'புல்டோசர்' மூலம் அகற்ற, சராசரியாக ஏக்கருக்கு ஏறத்தாழ 1,200 ரூபாய் செலவாகும் என்று துவக்கத்தில் எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால் 'புல்டோசர்' இயந்திரத் தொகுதிகளை நியாயமாகவும், திறமையாகவும் இயக்கியதனால் மணலை அகற்றிச் சீர்திருத்த ஆகிய செலவு ஏக்கருக்குச் சராசரியாக ரூபாய் 850 என்ற அளவுக்குக் குறைந்தது (உதிரி பாகங்கள் மற்றும் பணியாளர்கள் செலவு சேராமல்). இது, இப்பணியில் ஈடுபட்டவர்களின் திறமைக்குச் சான்றாக விளங்குகிறது.

### ஒரு கோடி ரூபாய் இழப்பைத் தவிர்த்தோம்!

மணலை அகற்றிச் சீர்திருத்தப் பெற்ற ஒரு ஏக்கர் நிலத்தில் நிலக்கடலை, நெல், கரும்பு அல்லது பல பயிர் செய்ய முடிவதன் மூலம் ஆண்டுதோறும் குறைந்தது ரூபாய் 1,000 மதிப்புள்ள மகசூல் பெற முடியும் என மதிப்பிடப் பெற்றுள்ளது. என்வே, மொத்தம் சீர்திருத்தப்பெற்ற 10,602.72 ஏக்கர் நிலத்திலிருந்து ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமான வருவாய் பெறுவது உறுதியானது. இந்த நிலச்சீர்திருத்தும் பணி தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படாதிருக்குமானால், தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்தி இழப்பு, ஆண்டிற்குக் குறைந்தது ஒரு கோடி ரூபாய் என்ற அளவில் இருந்திருக்கும் என்பது திண்ணம்!

### சிறு நிலக்கிழார்கள் வாழ்வு செழித்தது!

அரசு மேற்கொண்ட இந்த மாபெரும் பணியினால் 6,088 உழவர் பெருமக்கள் பயனடைந்துள்ளார்கள். தமிழ்நாடு அரசு மட்டும் இம்மாபெரும் பணியைச் செய்யாதிருந்தால், ஏழை உழவர்கள் வளம் கொழிக்கும் தங்கள் நிலங்களை இழந்து, நிலமற்ற கூலிகளாக ஆகி இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை! இப்பணியினால் பயனடைந்த உழவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு உள்ளது.

**மணல் அகற்றிய பணியினால் பயனடைந்தவர்கள்.**

| நில உடைமையின் அளவு | | பயனடைந்த உழவர்களின் எண்ணிக்கை | சதவிகிதம் |
|---|---|---|---|
| ஒரு ஏக்கர் வரை | ... | 2,642 | 43.5 |
| 1 முதல் 2 ஏக்கர் | ... | 1,797 | 29.5 |
| 2 முதல் 3 ஏக்கர் | ... | 764 | 12.5 |
| 3 முதல் 4 ஏக்கர் | ... | 330 | 5.5 |
| 4 முதல் 5 ஏக்கர் | ... | 232 | 3.5 |
| 5 ஏக்கருக்கும் அதிகம் | ... | 323 | 5.5 |
| | | 6,088 | 100 |



மணல் மூடிய நிலங்களை முதல்வர் கலைஞர் பார்வையிடுதல்





பத்து நாளில் அறுவடைக்கு வரவிருந்த நெல்வயல்கள் பாழடைந்து கிடக்கின்ற பரிதாபக் காட்சி!

மேற்கண்ட அட்டவணையிலிருந்து, மணல் அகற்றிய பணியினால் பயனடைந்தவர்களில் 85.5. சத அளவினர் ஒன்று முதல் மூன்று ஏக்கர் வரை நிலமுடைய சிறு நிலக்கிழார்களே என்பது தெளிவாகிறது.

### பாராட்டிற்குரிய பணி!

வேளாண்மைப் பொறியியல் திட்டங்களுக்கு ஆண்டுதோறும் சராசரியாக ஏறத்தாழ 4.5 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இத்தொகைக்கான திட்டப்பணிகளைச் செய்ததுடன், கூடுதலாக மணல் குவிந்த நிலங்களையும், மண்ணரிக்கப்பட்ட நிலங்களையும் சீர்திருத்தும் மாபெரும் பணியை—கூடுதலாக இருதுணைக் கோட்டப் பணியாளர்களின் உதவியுடன்—எட்டே திங்களில் ஒரு கோடி ரூபாய்க்கும் சற்று அதிகமான செலவில் வேளாண்மைத் துறை முடித்துள்ளது. இதிலிருந்து இம்மாபெரும் பணியை வேளாண்மைத்துறை அவசர அடிப்படையில் வெகு வேகமாகவும், தீவிரமாகவும் நிறைவேற்றியுள்ளது என்பது புலனாகிறது.

இப்பணியில், 'புல்டோசர்' இயந்திரங்களை இயக்கும் பணியாளர்கள் 300 பேரும், மேற்பார்வை மற்றும் பராமரிக்கும் பணியாளர்கள் 50 பேரும் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் அனைவரும் எல்லா மாவட்டங்களிலும் இருந்து தங்கள் குடும்பத்தைத் தனியே விட்டுப் பிரிந்து வந்து-போர் வீரர்களை போல்-தென்னார்க்காடு மாவட்டத்தில் முகாம் அடிப்படையில், பணியாற்றினர். மணல் குவிந்ததாலும், மண்ணரிப்பாலும் பாழடைந்த நிலங்களை முக்கிய பட்டம் துவங்குவதற்குள் சீர்திருத்திச் சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக ஆக்கி விட வேண்டும் என்பதற்காக அவர்கள் நாள் முழுவதும் - பகலென்றும், இரவென்றும் பாராமல்-பணியாற்றினர் என்பது பாராட்டிற்குரியதாகும்.

### மாபெரும் வேலை!

அவர்களின் அயராத பணியினால் 10,602.72 ஏக்கர் நிலம் செப்பனிடப்பட்டது. அந்த நிலங்களில் 6 அங்குலம் முதல் 4 அடி ஆழத்திற்கு மணல் படிந்திருந்தது. சராசரியாக மணல் படிந்திருந்த ஆழம் 1.25 அடி என்று எடுத்துக் கொண்டு, 10,602.72 ஏக்கர் நிலப் பரப்பிலிருந்து அகற்றிய மணலின் அளவைக் கணக்கிட்டால், ஏறத்தாழ 577 மில்லியன் கன அடி மணல் அகற்றப் பட்டுள்ளது தெரியவருகிறது. இவ்வாறு அகற்றப்பட்ட மணல் சராசரியாக 200 அடி தூரத்திற்கு அப்பால் தள்ளப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கட்டப் பெற்றுள்ள மிகப் பெரிய மண் அணை, கோவை மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அணையே யாகும்! இவ்வணையில் ஏறத்தாழ 14 மிலியன் கன அடி கற்கட்டடப்பகுதியும், 160 மில்லியன் கன அடி மண் அணைப்பகுதியும் அடங்கியுள்ளது. ஆகவே, ஏறத்தாழ 200 அடி தூரத்திற்கு அகற்றப் பட்ட மணலின் அளவு, பவானி சாகர் அணையில் உள்ள மண் அணைப்பகுதியை விட 3 மடங்கிற்கும் அதிகமானது என்பது புலனாகிறது.

### திட்டமிட்டபடி செய்து முடித்தோம்!

திருச்சிராப்பள்ளி, தருமபுரி கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் 'புல்டோசர்' மூலம் சீர்திருத்தும்பணி 1973-ஆம் ஆண்டு மே திங்களிலேயே முடிவு பெற்றது. தஞ்சாவூர் மாவட்டத்தில் குறைந்த பரப்பளவே பாதிக்கப்பட்டி

ருந்ததால், அம்மாவட்டத்தில் மணல் அகற்றும் பணி 1973-ஆண்டு ஜூலைத் திங்களிலே துவங்கப்பட்டு, அத்திங்களிலேயே முடிக்கப் பெற்றது. மேற்கூறிய 5 மாவட்டங்களிலும் வேலை முடிந்த பிறகு, அம்மாவட்டங்களில் பணியாற்றிய 'புல்டோசர்' இயந்திரங்கள் அனைத்தும் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு -திட்டமிட்டபடி நிலச் சீர்திருத்தும் வேலையை முழு அளவில் முடித்திட—அனுப்பப்பட்டது. தென்னார்க்காடு மாவட்டத்தில் நிலச்சீர்திருத்தம் செய்யும் பணி ஏறத்தாழ முழு அளவில் 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களிலேயே முடிக்கப்பட்டது.

பிறகு பல்வேறு கிராமங்களில் சிறுசிறு அளவில் பாதிக்கப்பட்டிருந்த நிலங்களைச் சீர்திருத்தும் பணி மேற்கொள்ளப்பெற்றது. தென்னார்க்காடு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்த பரப்பு முழுவதையும் சீர்திருத்தும் பணி 12-10-1973 அன்று முடிவு பெற்றது.

**மாவட்ட வாரியாக மணலை அகற்றிச் சீர்திருத்தம் செய்யப்பட்ட நிலங்களின் பரப்பு பின்கண்டவாறு உள்ளது.**



| மாவட்டத்தின் பெயர் | | சீர்திருத்தப்பெற்ற நிலங்களின் பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| தென்னார்க்காடு | ... | 8,793.18 |
| கோயம்புத்தூர் | ... | 519.25 |
| சேலம் | ... | 680.93 |
| தருமபுரி | ... | 272.12 |
| திருச்சிராப்பள்ளி | ... | 282.78 |
| தஞ்சாவூர் | ... | 54.46 |
| மொத்தம் | | 10,602.72 |





மேலக்குமாரமங்கலம் கிராமத்தில் மணல் மேடிட்ட வயல்கள்

தென்னார்க்காடு, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஆகிய மாவட்ட நிலங்களில் வெள்ளத்தால் படிந்த மணலை அகற்றி, நிலங்களைச் சீர்திருத்திய உடனேயே, அந்நிலங்களின் சொந்தக்காரர்கள் பயிரிடத் தொடங்கிவிட்டனர்

தென்னார்க்காடு மாவட்டத்தில் சீர்திருத்தப் பெற்ற நிலங்களின் பெரும்பகுதியில், உழவர்கள் இரண்டாவது பயிராக 'ஜெயா', 'ஐ.ஆர்.20' போன்ற உயர்விளைச்சல் தரும் நெல் வகைகளையும், கம்பு, சோளம், நிலக்கடலை, கரும்பு ஆகியவைகளையும் பயிரிட்டுள்ளனர். தென்னார்க்காடு மாவட்டத்தில் 1973-ஆம் ஆண்டு ஜனவரி-பிப்ரவரி திங்களில் சீர்திருத்தப் பெற்ற நிலங்கள் அடங்கிய சில கிராமங்களில், மூன்றாவது பயிராக நெல் பயிரிடப்பட்டுள்ளது.

வளம் கொழிக்கும் வயல்களில் வெள்ளம் குவித்த மணலை அகற்றிடவும், வெள்ளத்தால் அரிக்கப்பட்ட வயல்களைத் திருத்தவும் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நிலச்சீர்திருத்தப்பணியின் பயனாய் 6,088 உழவர்கள் பயனடைந்தனர்.

**உழவர்களுக்கு உதவும் அரசு**

தமிழ்நாடு அரசு மட்டும் தக்க சமயத்தில் உதவாதிருந்திருந்தால்-துணிவுடன் இம்மாபெரும் திட்டத்தை 1.05 கோடி ரூபாய் செலவில் மேற்கொண்டு இலவசமாகவே நிலங்களைச் சீர்திருத்திக் கொடுக்க முன்வராதிருந்திருந்தால்-பின்கண்ட விளைவுகள் ஏற்பட்டிருக்கும்.

நமது மாநிலத்திலுள்ள 207 நூற்பு ஆலைகளுக்கு, மாத்திரம் சுமார் 11.14 லட்சம் பேல்கள் பஞ்சு தேவைப்படுகிறது. நமது சராசரி பஞ்சு உற்பத்தியோ, 3.63 லட்சம் எக்டேரில் விளைவிக்கப்படும் 4 லட்சம் பேல்கள்தான். எனவே, பருத்திச் சாகுபடி செய்யும் உழவர்கள் நோய் தடுப்பு முறை உட்பட்ட அனைத்து முன்னேற்ற முறைகளையும் மேற்கொண்டு அதிகம் விளைவிக்க முயல வேண்டும்; பிற நாடுகளிலிருந்து பருத்தியின் வரவை எதிர்பார்ப்பதை விரைவில் நிறுத்த-பருத்தி விளைச்சலில் தன்னிறைவு ஏற்படுத்த-உழவர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

(1) 6,088 உழவர்கள் தங்கள் நிலத்தை இழந்து, கூலி வேலை செய்து பிழைக்கும் நிலைக்கு ஆளாகி இருப்பார்கள்!

(2) 6,088 உழவர்களின் குடும்பத்தைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பசிப்பிணியால் வாடிக்கொண்டிருப்பார்கள்!

(3) தமிழ் நாட்டின் வேளாண்மை உற்பத்தியில் ஆண்டுதோறும் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள மகசூல் குறைந்திருக்கும்!

இத்தகைய கோர விளைவுகள் ஏற்படாதிருக்கவே, தமிழ்நாடு அரசு தக்க சமயத்தில் உதவியது!

தமிழ்நாடு அரசின் இம்மகத்தான பணி, 'நெருக்கடியான நேரங்களில், தமிழ்நாடு அரசு உழவர் பெருமக்களுக்கு உடனடியாகவும், உறுதியாகவும் உதவிட முன் வரும்' என்ற நம்பிக்கையை உழவர் பெருமக்களின் உள்ளத்திலே ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையல்ல!



மணல் அகற்றப்பட்டபின் மணிலா பயிரிடப்பட்டுள்ள வயல்

# கருணை என்னும் ஒளி!

— பேரை சுப்ரமணியன்

**கோ**லாபாவின் அமைதியான சூழ்நிலையில் அந்த மருத்துவ மனை ஒருவித கம்பீரத்துடன் தோற்றம் தந்து கொண்டிருந்தது.

மருத்துவமனையின் உரிமையாளரும்—தலைமை சர்ஜனுமான டாக்டர் நிதிதாசன் ஒரு அமெரிக்கர் பின்தொடர மருத்துவமனையினுள் இருந்த பிரத்தியேக அறையினுள் நுழைந்தார்.

அங்கு ஒரு கட்டிலில் கண்கள் கட்டப்பட்டவாறு குமரிப் பெண்ணொருத்தி படுத்திருந்தாள்.

''ஹலோ ஸ்டெல்லா... ! இதோ டாக்டர் வந்திருக்கிறேன் . . . . .டாடி வந்திருக்கிறார் . . !''

நிதிதாசன் உற்சாகமூட்டியவாறு பேசிக்கொண்டிருந்தார்.

ஸ்டெல்லாவின் தகப்பனார் ஹிக்ஸ் அளவிலா மகிழ்ச்சியில் திளைத்தார். டாக்டரின் பேச்சு அவருக்குக் களிப்பை நல்கிய போதிலும், சிறிது மனவருத்தத்தையும் கொடுத்திருக்க வேண்டும். அதனால்தானே என்னவோ இடையிட்டுப் பேசினார் நெகிழ்ச்சியுடன் :

''என்ன டாக்டர்... உங்களுக்கே நன்றாகப் படுகிறதா உங்கள் பேச்சு?''

ஹிக்ஸின் வினா நிதிதாசனை அதிர்ச்சிக்கு ஆளாக்கியது.

''மங்கலமான செய்தியைத் தானே சொல்லிக் கொண்டிருந்தேன். தவறாக ஏதும் சொல்லவில்லையே! . .பின் ஏன் இவ்விதம் வினா எழுப்பினார் . .''

எண்ணக் குழப்பம் நிதிதாசனைக் கலக்கமுறச்செய்தது. அவருடைய கலகத்தை அதிக நேரம் நீடிக்கவிடக் கூடாது என்பதற்காக ஹிக்ஸ் தனது பேச்சைத் தொடரலானார்.....

''டாக்டர்..!உங்களைத் தவறாக எண்ணி நான் ஏதும் பேசவில்லை. அவ்விதம் எண்ணினாலே இயேசு பிரான் என்னை மன்னிக்க மாட்டார். கண் கொடுத்த தெய்வம் நீங்கள். என் கண்மணி ஸ்டெல்லா உங்களைத்தான் முதல் முதலில் பார்க்கப் போகிறாள். பார்க்க வேண்டும் ! அதன் பிறகுதான் என்னை—என் மனைவியை—இந்த உலகத்தைப் பார்க்க வேண்டும்! அவ்விதம் உங்களை முதலில் பார்த்து உங்கள் நல்லாசிகளைப் பெறாவிட்டால் ஸ்டெல்லா நன்றி கெட்ட பாவத்துக்கு ஆளாகி விடுவாள். நீங்களோவெனில் உங்களை விட்டுவிட்டு எல்லோரையும் அவள் பார்க்கப்போவதாகச் சொல்கிறீர்களே . . . இது நியாயமா?''

ஹிக்ஸின் வார்த்தைகளில் நெகிழ்ந்தார் டாக்டர். தந்தைக்குச் சளைத்தவளாகத் தெரியவில்லை ஸ்டெல்லா. அவளது குரல் மிகத் தீவிரமாகவே இருந்தது.

''ஆமாம் டாக்டர் . . ! உங்களைப் பார்த்து நல்லாசி பெற்ற பின்பே என் பெற்றோரைப் பார்க்க விரும்புவேன். அவ்விதம் செய்யத் தவறினால் நான் பாவம் செய்தவளாகி விட்டதான ஒரு நினைப்பு என்னுள் வேரோடி என்னைப் பயமுறுத்திக்கொண்டேயிருக்கும். அப்படியொரு வேதனையை அனுபவிக்கும் போது பார்வையே கிட்டாமல் இருந்திருக்கக் கூடாதா என்ற எண்ணம் வலுப்பெறும். அத்தகு எண்ணம் முழுமுதிர்ச்சி அடையப்பெறுமானால் மீண்டும் குருடாகி விடுவதுதான் பிராயச்சித்தம் என்னுமொரு முடிவுக்கு வழியமைத்துக் கொடுத்தாலும் வியப்படைவதற்கு இல்லை!''

''குட்மார்னிங் டாக்டர் . . குட்மார்னிங் டாடி . . !''

''ஸ்டெல்லா . .! டாக்டர் ஒரு நற்செய்தி கொண்டு வந்திருக்கிறார்.. நாளை கண் கட்டுகளை அவிழ்த்து, தையலைப் பிரிக்கப் போகிறாராம் . .''—உடன் வந்த அமெரிக்கர் எழுச்சியுடன் மொழிந்தார். ஸ்டெல்லாவின் தந்தை அவர். ... பெயர் ஹிக்ஸ்.

''மிக்க மகிழ்ச்சி டாக்டர்!''—ஸ்டெல்லாவின் குரல் நளினம் நன்றியுணர்வின் 'தடம்' காட்டியது. .

''ஸ்டெல்லா . .! நாளைக் காலை கட்டுக்களை அவிழ்க்கப் போகிறேன். . உனக்குப் பார்வை கிடைக்கப் போகிறது. நீ பார்க்கப் போகிறாய்... உன் டாடியை—உன் மம்மியை.. எல்லோரையும் — எல்லாவற்றையும்—இந்த உலகம் பூராவையும் பார்க்கப் போகிறாய். பரவசம் அடையப் போகிறாய்! உனக்குப் பார்வை கிடைத்து விட்டது, ஸ்டெல்லா, உனக்குப் பார்வை கிடைத்து விட்டது!''

''ஸ்டெல்லா . .! ஏனம்மா இப்படிப் பேசுகிறாய்? பார்வை பெறப் போகும் நல்ல நேரம் நெருங்கி வந்து கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் இப்படி அமங்கலமாகப் பேசலாமா . .?''

''பின்னென்ன டாக்டர் ? கண்ணொளி வழங்கக் காரணமானவர் நீங்கள். உங்களை முதலில் பார்க்க வேண்டுமென்னும் ஆவல்தான் என்னுள் அதிகம். காரண கர்த்தாவான உங்களைப் பற்றிய பேச்சை விட்டு விட்டு, டாடியையும்—மம்மியையும் இந்த உலகத்தைப்பற்றியும் நீங்கள் பேசினால் என் மனம் புண்படாதா, என்ன?''

''நன்றாக உரைக்கும்படி சொல்லம்மா, ஸ்டெல்லா ! மின்னல்தான் கண்ணைக் குருடாக்கியது என்று விவரம் கூற முடியாத குழந்தைப் பருவத்தில் நீ கண்களை இழந்தாய். அந்த நாள் முதல் எத்தனையோ வல்லுனர்கள் பரிசோதித்தும் காரணத்தைக் கண்டு பிடிக்க இயலவில்லை. பிறவிக் குருடு என்றார்கள். அதனால் எவ்வகையான சிகிச்சை செய்வது என்று புரியாமல் குழம்பினார்கள். பதினான்கு வருடங்கள் கழித்து இந்திய மண்ணில் தமிழ் டாக்டர் ஒருவரால் காரணம் கண்டுபிடிக்கப்பட்டு—கண்ணொளியும் பெறவியலும் என்னும் செய்தியைப் பெற்றபோது அமெரிக்க டாக்டர்கள் வியந்தனர். நீ பம்பாய் வந்தாய். ஆறு மாத கால சிகிச்சைக்குப் பிறகு இதோ—நாளை பார்வைபெறப் போகிறாய். இவ்வளவுக்கும் காரணமானவர் டாக்டர் நிதிதாசன்! அவருக்குப் பிறகுதான் நான்,... உன் மம்மி ... எல்லோருமே!''

ஹிக்ஸின் பேச்சு நிதிதாசனைப் பூரிக்கச் செய்தது.

''மிஸ்டர் ஹிக்ஸ்! மிஸ் ஸ்டெல்லா! நீங்கள் இருவரும் காட்டும் அன்பு எல்லையற்றது. வரையறை இல்லாது "விரிந்து செல்லும் வானம் போன்றது! நான். தலை வணங்குகிறேன்.!'

''டாக்டர்! நாங்கள் காட்டுவது அன்பு மட்டும்தான் என்று எல்லை வகுக்காதீர். இது ஒரு பக்தி மனப்பான்மை. நிறைந்த மனத்துடன் உங்களைப் பூசனை புரியும் பக்திதான் உங்கள் தொண்டுக்கு நாங்கள் அளிக்கும் ஈடான கைம்மாறாகும். கோடீஸ்வரனாகிய நான் எவ்வளவுதான் பணம் கொடுத்தாலும் பக்தியால் பெறும் நிறைவைப் பெறவே இயலாது டாக்டர் . .!''

''மிஸ்டர் ஹிக்ஸ்! மிகையாகப் பேசிவிட்டீர்கள். இத்துணை அன்புக்கும்—பக்திக்கும் பாத்திரமாகி விட்ட எனது சுயநலம் ஆவலாதி காட்டினாலும் உண்மையில் நான் தகுதி பெற்றவனில்லை என்று மனச்சாட்சி கூறுகிறதே. அதை மறைத்து விட முடியுமா?''

''புதிராகப் பேசுகிறீர்கள் ; புரியும்படி கூறுங்கள்.''

நீங்கள் கட்டாயம் தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்றுதான். புரியும்படிக் கூறுகிறேன். கேளுங்கள் . . ''—

டாக்டர் நிதிதாசனின் பீடிகை ஒரு கதை, துவக்கம் கொள்ளப் போகிறது என்பதன் அறிகுறியாக இருந்தது.



''டாக்டர்! உங்கள் பீடிகையைப் பார்த்தால் ஏதோ கதை சொல்லப் போகிறவர் போல் தெரிகிறது. கதை கேட்பதில் எனக்கு ஆசை அதிகம். சொல்லுங்கள். . ''

''கதையில்லை ஸ்டெல்லா . . இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த உண்மைச் சம்பவந்தான்!''

* * * *

''டேய் மாரி .! கல்லுளி மங்கன் மாதிரி நின்று கொண்டேயிருக்கிறாயே! பலகையில் எழுதிப் போட்டதைப் படியேண்டா, எத்தனை நாள் எத்தனை முறை உன்னோடு மாரடிப்பது?''

கடைசி வரிசைப் பெஞ்சிலிருந்து எழுந்து நின்ற மாரி, பேந்தப் பேந்த விழித்தவனாய் மரமாக நின்று கொண்டிருந்தான்! கரும்பலகையில் ஆசிரியர் எழுதிப் போட்ட 'குறளை' அவனால் படிக்க இயலவில்லை!

தினமும் இந்த நிகழ்ச்சி தவறாது நடந்து வந்தது.—ஆசிரியரின் கோபம் ஒரு நாள் உச்ச நிலையை எட்டிவிட்டது. அதன் விளைவு—

பத்து வயதுச் சிறுவன் மாரியின் உடம்பு தாங்கிக் கொள்ள முடியாத வண்ணம் தாக்குதல் நடத்திவிட்டது ஆசிரியரின் கைத்தடி.

வீடு திரும்பிய பையனின் நிலை பெற்றோரைக் கண்கலங்க வைத்தது. ஏழைப் பெற்றோர் ... என்ன செய்ய இயலும்? பாமரரான பெற்றோரின் கலக்கம் பையனைப் படிப்பதினின்று நிறுத்தி வைத்துவிட்டது.

மாரி அடம் பிடித்தான், பள்ளி செல்ல. மற்றச் சிறுவர்களைப் போல் அல்ல அவன்; ஆர்வம் உள்ளவன். வீட்டில் முகத்தெதிரே புத்தகத்தைப் பிடித்துக் கொண்டு மணிக்கணக்கில் வாசித்துக் கொண்டேயிருப்பான். கணீரென்று உச்சரிக்கும் அவனது வாசிப்பில் ஒரு பிழை காண முடியாது. இயல்பான கெட்டிக்காரத்தனம் வேறு. பள்ளியில் அவ்வப்போது நடக்கும் பரீட்சைகளிலும் நல்ல மார்க்குகள் வாங்கத் தவறுவதில்லை. ஆனால் சொல்லி வைத்தாற்போல் ஆசிரியர் கரும்பலகையில் எழுதிப் போட்டுப் படிக்கச் சொல்லும்போது எல்லாம் அவனால் வாசிக்க முடிவதில்லை. அதன் காரணத்தை ஆராய ஆசிரியரும் முனைந்ததில்லை. 'தான் ஏன் இவ்விதம் இருக்கிறோம்?' என்று அவனுக்கும் புரிவதில்லை. அடி முதல் நுனி வரை விவரம் கேட்டறிந்து தெளிவு பெறும் அறிவு பாமரரான பெற்றோருக்கும் இல்லை!

தான் பெற்ற மகன் தினமும் பள்ளியினின்று திரும்பும்போது அடிபட்ட தழும்புகளைத் தாங்கிக்கொண்டு வருவது அன்னையின் நெஞ்சைத் தொட்டது. வேதனைக்கு ஆளாகி வந்த அவள் அதன் எல்லைக்கோட்டை அடைந்தபோது அதற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட முனைப்புடன் தீர்மானித்துவிட்டாள்.

மாரியின் பிடிவாதம் பலிக்கவில்லை.

அந்தச் சமயத்தில்தான் 'குறள்படிப்பகம்' ஒன்றைத் தொடங்கிவைக்கும் பொருட்டு அந்தக் கிராமத்துக்கு அரசியலைச்சார்ந்த ஒரு பெரியவர் வந்தார்.

மாரியும் அந்த விழாப் பந்தலில் நின்றுகொண்டிருந்தான். வந்த பெரியவர் அரசாங்கச் சார்புடையவர். மேடையில் விழாவைத் துவக்கி வைத்துப் பேசிக்கொண்டிருந்தார் அவர்.

''...உணவின் இன்றியமையாத தேவையைப் போலத்தான் கல்வியின் தேவையும். கல்வி பெறாதவன் மனிதனே அல்ல. கல்வி மூலம் கிடைக்கும் அறிவெழுச்சிக்கு இத்தகு படிப்பகங்கள் அளவிடற்கரிய துணை புரியுமென்பதால் 'குறள் படிப்பகம்' துவக்கிட முனைந்த நல்லவர்களைப் பாராட்டுகிறேன். இதே சமயத்தில் என்னுள் ஒரு ஆவல், அதனை நிறைவேற்றித் தரும் சிறுவனுக்குத்தக்க பரிசில் தரவும் விழைகிறேன். ''பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர் — சிறுமியரே! 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம்! என்று உணவின் தேவையைப் பாடிய கவிஞன் பாரதியைப்போல வள்ளுவனும் ஆவேசத்துடன் இதேகருத்தையொட்டிக்குறள் பாடியிருக்கிறான். 'குறள் படிப்பகம்' துவக்கிட வந்த நான் அந்தக் குறளை உங்கள் அமுத வாயால் கேட்டு மகிழ ஆவல் மிகக் கொண்டுள்ளேன். யாருக்; குத் தெரியும் அந்தக் குறள்? என் நெஞ்சுக்கு நிறைவைத் தரவல்ல அந்தச் சிறுவனை இங்கே அழைக்கிறேன்!''—

'மைக்' முன் நின்றுகொண்டு அந்தப் பெரியவர் விடுத்த அழைப்பைக் கேட்ட மறுகணமே மாரி, மேடைமீது ஏறிவிட்டான் துணிச்சலுடன்.

''இரந்து முயிர்வாழ்தல்
வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்''!

என்று தன் மணிக்குரலில் முழங்கிய மாரியைக் கண்ணுற்ற அந்தப் பெரியவர் மட்டிலா மகிழ்ச்சியுற்றார். வள்ளுவர் உருவம் பதித்த தங்க டாலர் ஒன்றினை அவனுக்குப் பரிசளித்தபோது மாரி அதனைப் பெற்றுக் கொண்டானில்லை!

'தனக்கு வேண்டியது கல்வி தான்!' என்று அவன் கூறிடக் கேட்டபோது அந்த அரசியல் வித்தகர் மேலும் உவந்தார். விழா முடிவுற்ற பின்னர் பையன் மூலம் விவரம் அனைத்தையும் அறிந்து கொண்டார். அவர் ஒரு சிந்தனைவாதி — அவரது எண்ணம் தீவிரமாகச் செயல்பட்டது. மாரியையும் தன்னுடன் காரில் அழைத்துக் கொண்டு பள்ளி சென்றார்.

வழக்கம்போல மாரியை அவன் அமரும் இடத்தில் நிற்கச் செய்தார். தானே கரும்பலகையில், மாரி மேடையில் முழங்கிய குறளை எழுதினார். அவனை வாசிக்கும்படிப் பணித்தார். மாரி பேந்தப் பேந்த விழித்தான். புரியாமல் விழித்தான். அவன் கண்கள் நீரைக் கொட்டின!''

''இப்படித்தான் சார்... தினமும் வேண்டுமென்றே என்னை அவமானப்படுத்துவான். இவனுக்குப் படிக்கத் தெரியாது என்றால் பரவாயில்லை. மன்னிக்கலாம்தான். ஆனால்....,''

குற்றச்சாட்டை நீட்டிக் கொண்டே போக முனைந்த ஆசிரியரைப் பார்த்துக் கையமர்த்தினார் அந்தப் பெரியவர்.

''மாரி! இப்போது முதல் வரிசைக்கு வந்து நின்று கொண்டு படி!'' பெரியவரின் கட்டளையைச் செயல்படுத்தும் பொருட்டு மாரி முதல் வரிசைக்கு வந்தான். கரும்பலகையில் இருந்த எழுத்துக்கள் தெளிவாகத் தெரிந்தன. புரிந்தன!

தனது மணிக் குரலில் உச்சரிப்பு பிறழாமல் அந்தக் குறளைப் படித்தான்.

அரசியல் பெரியவருக்கு அவனது 'பார்வைக்கோளாறு' புரிந்துவிட்டது. மறுகணம் மாரியை அழைத்துக்கொண்டு கண் டாக்டரிடம் சென்றார். கண்கள் பரிசோதிக்கப் பட்டன. கண்ணாடியின் தேவை புரிந்தது.

தனது சொந்தச் செலவில் அவனது கண்களுக்கு ஒளி வழங்கும் கண்ணாடி வாங்கி அணிவித்தார். அத்துடன் அவன் தனது படிப்பில் முன்னேற்றம் காட்டினால் அரசுச் சலுகை வழங்குவதாகவும் கூறிச் சென்றார்.

சென்றவரின் சிந்தையில் வெவ்வேறான எண்ணங்கள். நாட்டுக்காக உழைக்கும் நல்லவர் என்பதால் அவரது சிந்தனையை 'மாரியின்நிலை' வெகுவாகப் பாதித்திருந்தது.

'தனக்குப் பார்வைக் கோளாறு என்று புரிந்துகொள்ளக்கூட முடியாமல் படிக்கும் ஆர்வமுள்ள மாரியைப்போன்ற எத்தனையோ சிறுவர்கள் தங்கள் வாழ்க்கையை இருளாக்கிக்கொண்டு விடுகின்றனரென்றால், சிறிதளவுகூடப் பார்வை இல்லாத எத்தனையோ பேர்களின் கதி என்னவாக இருக்கும்?'

அரசியல் பெரியவரின் எண்ணம் ஒரு முடிவுக்கு வந்து விட்டது. அவர் அரசுச் சார்புடையவர் என்பதால் ''கண்ணொளி வழங்கும் திட்டம்'' உருவாகியது; செயல்பட்டது. பெருமளவில் மக்கள் பயனுற்றனர்.

பள்ளியில் படிக்கும்போதே மாரி அந்த அரசியல் பெரியவரின் செயற்கரிய செயலான அந்தத் திட்டத்தின் பலனைப் பார்த்தான்.

அவன் அதிதீவிரமாகப் படிக்கலானான்.

அரசின் முழு உதவியும் கிடைக்கப் பெற்றான்.

சிறந்த கண் டாக்டராகத் தன்னை உருவாக்கிக் கொண்டு விட்டான்!

கண்ணொளி வழங்குவதில் திறமை பெற்ற டாக்டர் என்னும் பெயர் பெறுவதற்கும்-அத்தகு தொண்டு செய்வதற்கும் காரணமாக இருந்தவர் அந்த அரசியல் பெரியவர் தான் என்பதை அவனால் எப்படி மறக்க முடியும்?''

> சட்டங்கள் ஒரு முறை தீட்டப்பட்டு விட்டால் பிறகு மாற்றக்கூடாது என்பது தவறு. காலத்திற்கும் தேவைக்கும் தக்கவாறு மாற்றி அமைக்கப்படத்தான் வேண்டும்.
>
> —அரிஸ்டாடில்.

> அகில உலகமும் புரிந்து கொள்ளக் கூடிய மொழி ஒன்றைப் படைக்கப் பல்லாண்டு முயன்றும் முடியவில்லை. அப்படிப்பட்ட மொழி ஏற்கெனவே நம்மிடம் உள்ளது. அதுதான் அன்பு.
>
> —பெர்னாட்ஷா.

நிதிதாசன் மூலம் கதை கேட்ட ஸ்டெல்லாவும் — ஹிக்ஸ்ும் ஏக காலத்தில் வினவினர்.

''அந்தப் பையன் மாரி நீங்கள்தானே... இல்லையா, டாக்டர்?''

''ஆமாம்..பெயரை மாற்றிக் கொண்டுவிட்டேன், அவர் மீதுள்ள பக்தியினால்!''

''டாக்டர்! உங்கள் மனம் நிறைவுபெற அவரது நல்லாசிகளை நிச்சயம் நான் கேட்டுப் பெறுவேன். நாளைக்கு அவரைக் கூட்டி வருவீர்களா?..''

''அவரால் எப்படி வர இயலும்? உடலின் மூப்பு இவ்வளவு தூரத்துக்கு அவரைப் பயணம் செய்ய அனுமதிக்காதே. ஆனாலும் அந்த மகானை நீ முதலில் பார்க்கத்தான் போகிறாய்!''

''இந்திய மண்ணில் மகான்களின் எண்ணிக்கை அதிகம் தான் போலும்!''

ஹிக்ஸின் பேச்சு நிதிதாசனைச் சிரிக்கவும் — சிந்திக்கவும் வைத்தது.

''ஜடாமுடியும் - காவியுடையும் - கமண்டலமும் - உருத்திராட்ச மாலையும்கூடிய கோலத்தில் இருப்பவரெல்லாம் மகான்கள் என்று கணக்கிட்டால் இந்திய மண்ணில் அவர்கள் அதிகம்தான்! ஆனால் மனத்தாலும் - எண்ணத்தாலும் - வாக்காலும் உயர்ந்தவர்களை சாதாரணக் கோலத்திலே பார்த்தாலும்— மகானாகத் தெளிந்து கொண்டால் அப்படிப்பட்டவர்கள் மிகச் சிலர்தான். அவர்களில் இந்த அரசியல் பெரியவரும் ஒருவர்! இதோ பாருங்கள். இந்த நிழற்படம் அவரதுதான்!

தனது கோட் பாக்கெட்டிலிருந்து எடுத்த பர்ஸில் இருந்த புகைப்படமொன்றைக் காட்டினார் நிதிதாசன்.

அந்தப் படத்தில்—

காவி இல்லை; ஜடாமுடி இல்லை; தாடி இல்லை; ஆனால்?

''நினைத்ததை முடிக்கும் செயல்வீரன்போல் தோற்றமளிக்கிறார், மிடுக்குடன்!''

''ஆமாம்! செயல்வீரர்தான்! நினைத்ததை முடிப்பவர்தான்.. ஆனாலும் ஒரு மகான்!''

''டாக்டர்! டாடிக்கு மட்டும் மாட்டி விட்டீர்கள். .நான் காண வேண்டாமா உங்கள் பக்திக்குரிய மகானை? எங்கே இப்படிக் கொடுங்கள் அந்தப் படத்தை!''

ஆவலுடன் கரங்களை நீட்டினாள் ஸ்டெல்லா.

''அவருடைய கருணையினால் தான் உனக்குக் கண்ணொளி கிட்டியிருக்கிறது. எனவே நாளைக்கு முதலில் நீ பார்க்கப் போவது இவரைத்தான். இந்தா, வைத்துக்கொள்''

பர்ஸிலிருந்து எடுத்த நிழற்படத்தை ஸ்டெல்லாவின் கரத்தில் வைத்தார் நிதிதாசன்.

ஸ்டெல்லாவின் பூவிரல்கள் படத்தைத் தடவித் தடவி நீவிவிட்டன.

கண்பார்வை கிட்டும்போது முதல் முதலாக உள்ளத்தால் உயர்ந்த ஒரு பெரியவரைப் பார்க்கப்போகிறோம் என்னும் பூரிப்போ - என்னவோ -அவள் அடுத்த நிமிடமே நித்திரை வசப்பட்டுவிட்டாள்.

கனவுகள் காண வேண்டாமா?

# தமிழ்நாட்டில் கோழி இன ஆராய்ச்சி

தமிழ்நாட்டில் கோழிப் பண்ணைகளின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக கோழிகள் மற்றும் கோழி வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சிகளைத் தமிழ் நாடு கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறை மேற்கொண்டு வருகிறது. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் இதுவரை மேற்கொள்ளப் பெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து கீழ்க்கண்ட பயனுள்ள முடிவுகள் கிடைத்துள்ளன.

**1. மேயர் இன வெள்ளை லெக்கார்ன் கோழிகளின் அபிவிருத்தி.**

1962 முதல் கோழியின இயல், மரபியல் வல்லுநர்கள் செய்த பல ஆராய்ச்சிகளின் பயனாகத் தோன்றியது மேயர் இன வெள்ளை லெக்கார்ன் கோழிகள். ஆண்டு ஒன்றுக்கு 200 முட்டைகள் இடும் இவ்வினக் கோழிகள் பல குணங்களிலும் பல்வேறு வீரிய கலப்பினக் கோழிகளை ஒத்துள்ளது. ஆயினும் (ஒருநாள்) மேயர் இன பெட்டைக் குஞ்சுகளின் விலை ரூ. 1.50தான். இவ்வின கோழிகள் பலராலும் போற்றி வளர்க்கப்படுகிறது. இவ்வினத்தைப் பெருக்கி, தமிழகத்தில் கோழி வளர்ப்போர் அத்தனை பேருக்கும் குறைந்த விலையில் தரமான குஞ்சுகள் கிடைக்க வழிவகைகள் செய்யப்படுகின்றன.

**2. 'ஐ.சி.ஏ.ஆர்.' இன வெள்ளை லெக்கார்ன் கோழிகள்.**

மேயர் இனத்தைப் போன்ற மற்றொரு இன வெள்ளை லெக்கார்ன் கோழிகள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. கடந்த ஆறு ஆண்டுகாலமாக நிறைய முட்டையிடும் இவ்வினம் அபிவிருத்தி செய்யப்பட்டவுடன் இரண்டு தரமான தனி இனங்கள் கிடைக்கும். பல தரமான தனி இனங்களை உண்டாக்கிய பின்பு அவற்றின் கலப்பே வீரியக் கலப்பின குஞ்சுகளைத் தரும்.



**3. 'அல்கலைன் பாஸ்படேஸ் என்சைம்' அளவும், முட்டையிடும் தன்மையும்.**

ஆறுவார வெள்ளை லெக்கார்ன் குஞ்சுகளின் இரத்தத்தில் அதிக 'அல்கலைன் பாஸ்படேஸ் என்சைம்' இருந்தால் அவை அதிக முட்டையிடுகின்றன என கணிக்கப்பட்டுள்ளது. இம்முறையிலேயே ஆறு வாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சேவல்களும், பெட்டைகளும் இனவிருத்திக்காகப் பெரிதும் பயன் படுகின்றன.

**4. முட்டைகளைப் பொரிக்க ஏற்ற பருவகாலம்.**

முட்டைகள் நன்கு சூல் தரிக்கவும், சூல் தரித்த முட்டைகள் நன்கு பொரிக்கவும் ஏற்ற பருவம் குளிர் காலமேயாகும் (டிசம்பர் முதல் மார்ச் வரை). குஞ்சுகளைப் பொரிக்க வைப்பதற்கு இது தான் ஏற்ற காலம். தென் மேற்குப் பருவக்காற்று வீசும் மாதங்களில் (ஜூலை, ஆகஸ்ட், செப்படம்பர்) குஞ்சுகள் சரியாகப் பொரிப்பதில்லை. இம்மாதங்களில் முட்டைகள் சரியாக சூல் தரிக்காமலும், சூல் தரித்த முட்டைகள் சரியாக பொரிக்காமல் போவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

**5. இளங்குஞ்சுகளுக்கு ஏற்ற தரை பரப்பு.**

இளங்குஞ்சுகள் நோயற்று வாழவும், செவ்வனே வளரவும், ஒவ்வொரு குஞ்சுக்கும் அளிக்கப்படவேண்டிய பரப்பளவு ஆராய்ச்சிக் கணிப்பின் படி பின்வருமாறு இருக்க வேண்டும்.

| வாரங்கள் | சதுர அங்குலம் |
|---|---|
| 0— 4 | 25 |
| 5— 8 | 40 |
| 9—12 | 83 |

**6. காற்றின் வெப்பமும் முட்டையின் எண்ணிக்கையும்.**

வெப்பம் அதிகரித்தவுடன், முட்டைகளின் எண்ணிக்கை குறைந்துவிடுகிறது. ஆராய்ச்சிக் குறிப்புகளின்படி வேனிற் காலத்தில் 1 டிகிரி வெப்பம் (பாரன்ஹீட்) கூடும்போது 2.1. சத முட்டைகள் குறைகின்றன. எனவே, கோழி வீடுகளில் வெப்பத்தைக் குறைக்கத் தக்க வகையில், ஏற்ற கூரைப் பொருட்களை உபயோகிக்க வேண்டும். மேலும் நல்ல காற்றோட்டத்திற்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

**7. நல்ல கூரை பொருட்கள்.**

கோழிகளின் வீடுகளுக்கு 'ஆஸ்பெஸ்டாஸ்' அட்டைகளையும், கலாய் தகடுகளையும் விட வளைந்த அலுமினியத் தகடுகளே உகந்தவை எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இத்தகடுகள் 5 டிகிரி பாரன்ஹீட் வெப்பத்தைக் கூண்டினுள் குறைக்க பயன்படுகிறது.

**8. கோழிகளுக்கேற்ற வீடுகள்.**

துப்புரவானதும், காற்றோட்டமுள்ளதும், நமது பொருளாதாரத்துக்கு ஏற்றதுமான கோழிகள் வளர்க்கும் வீடுகளின் தரைப்படங்கள் (Plans) தயாரிக்கப்பட்டுள்ளன.

**9. முட்டை உற்பத்தியில் செலவுகள்**

முட்டை உற்பத்தி செய்யும் பண்ணைகளிலே ஆகும் செலவுகளின் விகிதாசாரங்கள் பின்வருமாறு இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

| | சதம் |
|---|---|
| தீனி | —50—60 |
| வீடு | —10—12 |
| குஞ்சு | — 3 |
| வேலையாள் | —4.8 முதல் 5.0 |

**10. சேவலை வளர்த்தல் நட்டமானதே !**

வெள்ளை லெக்கார்ன் இனத்தைச் சேர்ந்த சேவல்களை ஆழ்கூள குப்பை முறையில் (Deep Litter) பேணிக் காத்து, கறிக்காக விற்பனை செய்வது நட்டமானதே என கணிக்கப் பட்டுள்ளது. ஆகவே குஞ்சு பொரித்தவுடன், பால் பிரித்து சேவல் குஞ்சுகளைக் கொன்று விடுதல் பயனுள்ளதாகும்.

**11. அசாதாரணத் தீனிகள்.**

மனிதனுக்குதவாத தீனிகளை இட்டுக் கோழிகளை வளர்க்க முயலும்ஆராய்ச்சியில், கடலில் முளைக்கும் ஒருவிதச் செடியை-மக்காசோளம், ராகி, கோதுமை போன்ற தானியங்களுக்குப் பதிலாக—5 சதம் வரைச்சே சர்க்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

**12. ஈரல் கறி.**

மருந்துகளைத் தயாரிக்கும் தொழிற் சாலைகளினின்றும் கிடைக்கும் துணைப் பொருள்கள் நல்ல புரதச்சத்து மிகுந்த உணவாக கோழிகளுக்கு பயன் படும் எனக் கணித்துள்ளனர். இது இப்போது பலராலும் பின்பற்றப்பட்டுள்ளது.

**13. நோய் தடுப்பு.**

பச்சைக் கழிச்சல் (Ranikhet Disease), அம்மை நோய் (Fowl-Pox), மரேக் நோய், ஏ. எல். சி. (A. L. C.) போன்ற நோய்களினின்றும் கோழிகளைப் பாதுகாக்க, தக்க நவீனத் தடுப்பு மருந்துகளைத் தயாரிக்கத் தக்க ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன.


**மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட். நெ. ஜி-1628.**

**படாளம்**

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ !

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க !

மனித வாழ்க்கையென்பது பெருமதிப்புள்ளது.
அதனுல் நாங்கள் சிக்கனமான
தெருப்பாதுகாப்புக்கு
வழி செய்துள்ளோம்



பிலிப்ஸ், HRC-16 எகானமி லான்டர்னை அறிமுகப் படுத்துகிறது. HPL 125 W MV லாம்புக்கேற்ற சிக்கனமான ஃபிட்டிங்.

சிறியதும், அதிக நடமாட்டமுமில்லாத தெருக்களில் இனி நீங்கள் செலவைப் பெருக்கும் லாம்ப் ஃபிட்டிங்குகளை உபயோகிக்கத்தேவையில்லை. HRC-16 உங்களுக்குத் தெருப்பாதுகாப்பை மலிவாகக் கிடைக்க வழி செய்கிறது.

HRC-16 ஒரு கச்சிதமான ஃபிட்டிங்காகும். இதன் உள்ளேயே பலாஸ்ட் யூனிட் மற்றும் தெருவை நோக்கி ஒளியைப் பாயவைக்கும் சிறந்த ரிஃப்லெக்டர் இவற்றின் இணைப்பு உள்ளது. இப்போதுள்ள தெரு விளக்கின் பிராக்கெட்களிலேயே இதை எளிதில் பொருத்தலாம்.

ஹை ட்ரான்ஸ்பேரன்ஸி மற்றும் அக்ரிலிக் கவருடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ HRC-16 கிடைக்கும்.

**சிறந்த ஒரு லாம்ப் வேண்டுமா?**
**பிலிப்ஸ் வாங்குங்கள்**



**பிலிப்ஸ்**
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
கல்கத்தா • பம்பாய் • புதுடில்லி • சென்னை


# புகழ் வளர்க்கும் பழனியிலே...



**தொ**ன்மைக் காலத்தில் தமிழகத் திருக் கோயில்கள் மக்கள் சமுதாயத்தின் வாழ்வியல் நன்மைகளைப் பேணிக் காக்கும் சமுதாய மைய நிலையங்களாக—துன்பக் கண்ணீர் துடைக்கும் அன்பு நிலையங்களாக விளங்கின. அதனையொட்டியே, 'திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணை' 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பனபோன்ற பொன்மொழிகள்' பிறந்தன.

தமிழகப் பெருங் கோயில்களின் சார்பில் பலகலைகளையும் பயிற்றும் கல்லூரிகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றைத் 'திருச்சுற்றுலைக் கல்லூரி' என்று கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

அடுத்து, திருக்கோயில்கள் சார்பில் மக்கள் உடற் பிணி தீர்க்கும் பொது மருத்துவமனைகள் நடைபெற்றிருக்கின்றன. அவற்றை 'ஆதுர சாலை' என்று கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

ஆதரவற்ற — பேணுவோர் இல்லாத—அனுதைகள் எனப்படுவோர்க்கு உடுக்க உடையும், உண்ண உணவும், உறையுளும் தந்து காத்த 'ஆதுலர் சாலைகள்' திருக்கோயில்களின் சார்பில் நடைபெற்றிருக்கின்றன.

அப்பரடிகள், ஆளுடைய பிள்ளை போன்ற அருளாளர்கள் எல்லாம் தொண்டின் நெறி நின்றே சமயம் வளர்த்திருக்கிருர்கள் — அவர்கள் சமயம், சமுதாயத்தைத் தழுவிய சமயமாகவே விளங்கின என்பதனை அவர்தம் வரலாற்றினைப் படிப்போர் உணர்வர்.

இடைக் காலத்தே தமிழகச் சமய உலகம், மக்கட் சமுதாயத்தை மறந்தது. கோயிலுக்கும் குடிசைக்கும் இடையே இடைவெளி ஏற்பட்டு, அந்த இடைவெளி நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வந்தது. இந்நிலையில், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று கூறித் தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பேற்ற தமிழ்த் தெய்வமான பேரறிஞர் அண்ணு அவர்கள் ஆட்சியில், தமிழகத் திருக்கோயில்களின் வரலாற்றில் ஒரு நல்ல—குறிப்பிடத்தக்க திருப்பு முனை ஏற்பட்டது. தமிழகத் திருக் கோயில்கள், வெறும் சமய நிறுவனங்களாக மட்டுமின்றிச் சமுதாயத்தைப் பேணிக் காக்கும் நிறுவனங்களாகவும் வளர்ந்தோங்கி வருகின்றன. அத்தகையதிருக்கோயில்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்.

## ஆலயம் ஆற்றும் அரும் பணிகள்

குறிஞ்சிக் குமரனுக்குரிய ஆறு படை வீடுகளுள் மூன்ருவதாக விளங்குவது, பழனி என்று இன்று வழங்கப்பெறும் திருவாவினன்குடி. இந்தத் திருத்தலம், வரலாற்றுப் பெருமையுடையதாகும். ஆவியர் குடியைச் சேர்ந்த மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தமையால், இதனை 'ஆவினன்குடி' என்றழைக்கின்றனர். இம் மூதூர்க்குப் 'பொதினி', 'வைகாவூர்', 'சிவகிரி', 'சித்தன் வாழ்வு' என்ற பெயர்களும் உண்டு.

பழனி, ஒரு காலத்தில் சேரர்க்கு உரியதாகக் கொங்கு நாட்டோடு இணைந்து இருந்தது. இப்போது, பழனி நகரம் மதுரை மாவட்டத்தில், பழனி வட்டத்தின் தலைநகராக விளங்குகிறது. இந் நகர், தென் மண்டல இருப்புப் பாதையில் திண்டுக்கல்



கார்த்திக் பள்ளியில் ஒலிப்பதிவுத் தட்டுகள் மூலம் கற்பித்தல்.

லிருந்து கோவை செல்லும் பாதையில் ஏறத்தாழ 47 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூரிலிருந்து கோவை—பாலக்காடு — திண்டுக்கல் ஆகிய நகரங்கள் வழியே செல்லும் இருப்புப் பாதையில் பயணம் செய்யலாம். மேலும், இங்கிருந்து, கோவை, மதுரை, தஞ்சை, நாகப்பட்டினம், கடலூர், சென்னை ஆகிய ஊர்களுக்குச் செல்லத் தமிழ் நாடு அரசு போக்குவரத்தின் விரைவு வண்டி வசதிகள் உள்ளன.

தொடக்க காலத்தில் சேர மன்னரான சேரமான் பெருமான், மலைமீது ஆண்டவனுக்குக் கருவறை அமைத்துத் திருக்கோயில் எழுப்பினார். காலப்போக்கில் பின் வந்த பாண்டியர்களும், நாயக்க மன்னர்களும் ஆலயத் திருப்பணிகள் செய்து, இவ்வாலயத்தின் பெருமையை அதிகப்படுத்தினர். 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் நக்கீரரும், கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் அருணகிரியாரும், கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் தண்டபாணி சுவாமிகள், மாம்பழக் கவிச் சிங்க நாவலர் போன்றவர்களும் தங்கள் அருட்பாடல்களை அள்ளியள்ளி வழங்கிப் பெருமானைப்பாடிப் பரவியுள்ளனர்.

பழனித் திருத்தலம், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்பும் கொண்டதாகும். இத்திருக்கோயில், கொடைக்கானல் மலைத் தொடரைச் சார்ந்துள்ளது. நிலப்பரப்பிலிருந்து சுமார் 450 அடி உயரத்தில் அமைந்துள்ளது. திருக்கோயிலுக்குச் செல்ல அமைந்துள்ள மலைச் சுற்றுப் பாதை 2.2 கிலோ மீட்டர் நீளமுடையது; 691 படிக்கட்டுகளையுடைய பாதை ஒன்றும் உள்ளது. இவைதவிர, அடிவாரத்திலிருந்து மலைக்குச் சென்றுவர, 'இழுவை இரயில்' (விஞ்ச்) போக்குவரத்தும் தேவஸ்தானத்தால் செய்யப்பட்டுள்ளது. இந்த இழுவை இரயில் அடிவாரத்திலிருந்து 7 மணித் துளிகளில் கோயிலைச் சென்றடைகிறது.

மலையின் மீது நீலமலைப் பின்னணியில் கோயில் கொண்டுள்ள ஞான தண்டாயுதபாணி குமரனை—குழந்தை வடிவேலனை—துறவியாகக் காட்சி தந்தருளுகிறார். அவரது எழில் மிக்க திருமேனி, போகசித்தர் உருவாக்கிய நவ பாஷாணத் திருமேனியாகும். எனவே, அந்தத் தண்டாயுதபாணி, தன்னை நஞ்சாக்கிக் கொண்டு, மற்றவரின் உளப் பிணிக்கும், உடற் பிணிக்கும் உற்ற மருந்தாக—கேடு தீர்க்கும் அமுதமாகத் திகழ்கிறார். அப்பெருமானின் திருமேனியிற் பட்டு வரும் பாலும், பஞ்சாமிர்தமும் பரிமளிக்கும் சந்தனமும் தனிச் சிறப்புடையன.

பழனித் திருக்கோயிலின் முக்கிய வருமானம் பக்தர்கள் ஆண்டவருக்குக் காணிக்கையாக இடும் உண்டியல் வருமானமேயாகும். இவ்வருமானம், 66—67-இல் 33,71,506 ரூபாய் ஆக இருந்தது. கடந்த ஆண்டில் 58,66,178 ரூபாய் ஆக உயர்ந்திருக்கிறது.

தமிழகத்திலுள்ள கோயில்களில் அதிக வருமானமுள்ள கோயில் அருள் மிகு பழனி ஆண்டவர் கோயில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் என்று எடுத்துக்கொண்டால், இது இரண்டாவதாகும். அதிகப்படியான கல்வி முதலிய பொது நிறுவனங்களை நடத்தி வருவதும் அருள் மிகு பழனி ஆண்டவர் கோயில் தான்.

இந்தக் கோயில் வருமானத்திலிருந்து ஆண்டவனுக்குச் செய்ய வேண்டிய அத்தனை காரியங்களுக்கும் போதுமான அளவு செலவு செய்து, மீதியிருக்கிற பணத்திலே பல்வேறு சமுதாயப் பணிகளைத் தேவஸ்தானம் மிகச் சிறப்பான முறையில் நடத்தி வருகிறது.



ஊமையர், செவிடர் பள்ளியில ஒலிபரப்புக் கருவி மூலம் கற்பித்தல்.



கார்த்திக் பள்ளியில் அறிவியல் வகுப்பு

தமிழகத்தில் கோயில்கள் சார்பில் நடைபெறும் 6 கல்லூரிகளில் நான்கு கல்லூரிகள் அருள் மிகு பழனியாண்டவர் திருக்கோயிலின் நிர்வாகத்தில் உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

கடந்த ஆண்டு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், இத் திருக்கோயிலின் சார்பில் 14—2—72-ல் ஊமையர் செவிடர் பள்ளி ஒன்றினைத் துவக்கி வைத்தார்கள். அப்போது, திருக்கோயிலின் சார்பில் நடைபெறும் அருள்மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரி, அருள் மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் செந்தமிழ் கல்லூரி, அருள் மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி ஆகியநான்கு கல்லூரிகளும் ஒரு சேர வரவேற்பளித்துப் பாராட்டின. அப்போது, அந்தப் பாராட்டுக்கு நன்றி கூறிய தமிழக முதல்வர் அவர்கள், ''இங்கு நான்கு கல்லூரிகளும் வரவேற்பளித்ததைக் காணும் போது ஆண்களும் படிக்க வேண்டும்; பெண்களும் படிக்க வேண்டும்; அதுவும் தமிழிலே படிக்கவேண்டும்; படிப்பதுடன் நில்லாமல் பண்பாட்டுடனும் திகழ வேண்டும் என்பதைக் குறிப்பிடுவதாக அறிகிறேன்'' என்று கூறியது குறிப்பிடத் தக்கது.

திருக்கோயிலின் சார்பில் இவ்வாறு நடைபெறும் நிறுவனங்கள் பலப் பல. அவற்றைப்பற்றிய செய்திகள் சிலவற்றை நாம் இங்கே காணலாம் :

### அருள்மிகு பழனியாண்டவர் கலைக் கல்லூரி

இக் கல்லூரி, திருக்கோயில் தேவஸ்தானத்தின் சார்பில், 24—6—63-இல் தொடங்கப் பெற்றுச் சிறப்புற நடந்து வருகிறது. இக்கல்லூரியில் இப்போது பட்டப்பின் படிப்புப் படிக்கின்ற 15 மாணவியர் உட்பட மொத்தம் 1,100 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.



ஊமையர், செவிடர் பள்ளியில் கற்பிக்கும் முறை



குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைகள் உணவருந்துகின்றனர்.

சுமார் 20 ஏக்கர் பரப்பில் 9,57,951 ரூபாய் செலவில் கட்டப்பெற்ற எழில் மிகு கட்டிடத்தில் இக் கல்லூரி நடைபெறுகிறது.

72—73-ஆம் ஆண்டு பட்டப் பின் படிப்பு (எம்.எஸ்ஸி) விலங்கியல் துறையில், மதுரை பல்கலைக் கழகத்திலேயே முதல் மாணவராகத் தேர்வு பெற்றுள்ள திரு முத்தையா இந்தக் கல்லூரி மாணவரே.

இக் கல்லூரியில், இரண்டு விடுதிகள் உள்ளன. ஒன்று கலைஞர் கருணாநிதி விடுதி; மற்றொன்று காமராஜ் விடுதி. கல்லூரி மாணவர்களுக்கு வசதியாக, கல்லூரிக்கென்றே பயில்கின்றனர்.

இக் கல்லூரியில் வருகிற கல்வியாண்டில், இளம் அறிவியல் கணிதம், இளம் அறிவியல் விலங்கியல், முதுகலை தமிழ் இலக்கியம் ஆகிய புதிய வகுப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

பல்கலைக் கழகத்தில் இக் கல்லூரியின் சார்பில் உள்ள அறக் கட்டளை ரூ. 5 இலட்சம். இக் கல்லூரிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 7 இலட்சம் செலவாகிறது. இதில், அரசின் உதவித்தொகை ரூ.3 இலட்சம்.

இப்போது இக்கல்லூரிக்கென, பழனியிலிருந்து 3 கல் தக்கது. இது தவிர, செல்வி எம். மனோரஞ்சிதம், செல்வி எஸ். நவமணி இருவரும் பல்கலைக் கழகப் பரிசு பெற்று இக் கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்துள்ளனர்.

இந்தக் கல்லூரிக்கும், திருக்கோயிலின் நிருவாகத்தில் இயங்கும் மகளிர் கலைக் கல்லூரிக்குமாக கூட்டு விடுதி ஒன்றுள்ளது. இந்தத் தமிழ்க் கல்லூரிக்கென நல்லதொரு நூல் நிலையம் உள்ளது. இந்த நூல் நிலையத்தில் 2,112 நூல்கள் உள்ளன. இது தவிர, நாள், கிழமை, திங்கள் இதழ்களாக 12 இதழ்கள் வரவழைக்கப்படுகின்றன. மாணவியர்



மகளிர் செந்தமிழ்க் கல்லூரியில் இலக்கிய வகுப்பு.

'பாங்க்' ஒன்றும், 'அஞ்சலகம்' ஒன்றும் உள்ளது.

இக் கல்லூரியில், வருகிற கல்வியாண்டில், பி.ஏ., எம். எஸ்ஸி, (தாவர இயல்), எம். காம், எம். ஏ. (ஆங்கிலம்) ஆகிய புதிய வகுப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

இக் கல்லூரியை நிர்வகிக்க ஓராண்டுக்கு ஆகும் செலவு ரூ. 7 இலட்சம். இதற்கு அரசு தரும் உதவித் தொகை ரூ. 2.5 இலட்சம்.

### அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி

பழனி நகரிலும், நகரைச் சுற்றிலும் உள்ள மகளிர்க்குக் கல்லூரிக் கல்வி அளிப்பதற்கென்றே 1—7—70-இல் இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இக் கல்லூரியில் இப்போது 299 மாணவியர் கல்வி தொலைவிலுள்ள சின்னக்கலையம் புத்தூர் நரேந்திர தேவ நகரில் சுமார் 40 ஏக்கர் நிலத்தில் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

### அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் செந்தமிழ்க்கல்லூரி.

திருக்கோயில் நிருவாகத்தனரால், மகளிர்க்கெனத் தனித் தமிழ்க் கல்லூரியாக 1-7-70-இல் தொடங்கப் பெற்றது. ஒரு முதல்வர், ஒரு விரிவுரையாளர், 30 மாணவியருடன் தொடங்கப் பெற்ற இக் கல்லூரி படிப்படியாக வளர்ந்து, இன்று ஆறு விரிவுரையாளர்களுடனும், 146 மாணவியருடனும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் பல்கலைக் கழகத்தேர்வு எழுதிய முதனிலை மாணவியர் எல்லாருமே வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிட இவற்றை நல்ல முறையில் பயன்படுத்துகின்றனர்.

### அருள்மிகு பழனியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி

இந்த நாட்டு இளைஞர்கள் சமய அடிப்படையிலான இந்தியப் பண்பாட்டினை நன்குணர்ந்து போற்றும் வகையில் அத் துறையில் கல்லூரிக் கல்வி அளிக்க வேண்டிய இன்றியமையாமை உணர்ந்து 23—7—60-இல் தொடங்கப் பெற்றது, இக் கல்லூரி. தென்னகத்தில், பண்பாட்டுக் கல்வியை இளைஞர்கட்கு வழங்கும் முதற் கல்லூரி இதுவேயாகும். இந்திய வரலாறு, தொல் பொருள் ஆய்வு, சமய தத்துவம், பண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய இந்தியப் பண்பாட்டில் பட்டமேற் படிப்புக் கல்விக்கும் (எம். ஏ. வகுப்பு) இங்கு வசதி செய்து கல்வி அளிக்கப் பட்டு வருகிறது. இந்த முறையில் அமைந்த பாடத் திட்டங்களைக் கொண்ட பண்பாட்டுக் கல்லூரிகள் இந்தியாவில் வேறெங்கும் இல்லை.

இக் கல்லூரிக்கு அரசு மானியம் தவிர தேவஸ்தானம் ஆண்டுதோறும் 1,25,000 ரூபாய் செலவு செய்கிறது.

இங்குள்ள நூலகத்தில் 7,000 புத்தகங்கள் உள்ளன. ஒரேயொரு பட்டப் படிப்பிற்கு இவ்வளவு அதிகமான புத்தகங்களைக் கொண்ட நூலகம் வேறெங்கும் இருப்பதரிது.

கிறித்தவ சமயத்தைச் சார்ந்த மாணவர்களும் இந்தக் கல்லூரியில் சேர்ந்து பயில்கின்றனர்.

அடுத்த கல்வி ஆண்டில், பண்பாட்டுக் கல்வியை ஆங்கிலம், தமிழ் இரு மொழிகளிலும்—புகுமுக வகுப்பில் புகுத்த ஏற்பாடு செய்து வருகின்றனர். பட்டப் படிப்பு மூன்றும் பகுதியில், சுற்றுலா, புவியியல், வரலாறு போன்ற பாடங்களும், பட்டப் படிப்பில் வரலாற்றுப் பாடங்களும் சொல்லிக் கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது; இங்கு பி.எச்டி. ஆரம்பிக்கவும் ஏற்பாடு ஆகியுள்ளது.

இக் கல்லூரியில் சேர, ஏனைய கல்லூரிகளில் புகுமுக வகுப்புப் பயின்ற யாரும் விண்ணப்பிக்கலாம்.

பண்பாட்டுக் கல்லூரியின் பாடத் திட்டத்திற்குத் தற்போது தமிழில் போதிய நூல்கள் இல்லை என்னும் பொதுவான குறை இருந்தாலும், அப்பாடத் திட்டத்திற்கு உதவக் கூடிய புத்தகங்களைத் தாம் தமிழில் தயாரித்துக்கொண்டிருப்பதாகக் கூறுகிறார் கல்லூரியின் முதல்வர் திரு டி. எஸ். இராமதாஸ், எம். ஏ.

இக் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்கள் வழக்கம்போல எல்லாத்துறைப் பணிகளுக்கும் செல்லலாம் எனினும், கோயில் நிருவாக அதிகாரிகளாகவும், சுற்றுலாத் துறை அலுவலர்களாகவும், சமயப் பரப்புனராகவும் பணி புரிவதற்குக் கூடுதல் வாய்ப்பு உள்ளதாக முதல்வர் பெருமையுடன் கூறுகிறார்.

அருள்மிகு பழனியாண்டவர் கோயிலுக்குச் சொந்தமான மேற்குறித்த கல்லூரிகளில் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் அலுவலர்களுக்கும் அவர்கள் தம் குடும்பத்தினருக்கும் தேவஸ்தான மருத்துவ மனைகளில் இலவச மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. அலுவலர்களின் குழந்தைகளுக்கு, மேற்குறித்த கல்லூரிகளில் இலவச படிப்புப் பெறுவதற்கான வசதியும் வழங்கப்படுகிறது.

### ஊமையர் செவிடர் பள்ளி

'அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பார்கள். அத்தகைய அரிய மானிடப் பிறவியைப் பெற்றிருந்தும், கூனாகவும், குருடாகவும், செவிடாகவும், ஊமையாகவும் வாழ்ந்தால் அவர்களுக்குச் சமுதாயத்தில் உரிய அந்தஸ்து கிடைக்காது. இவ்வகையில், அவர்களுக்கு நல் வாழ்வு அளிப்பது, உயரிய தெய்விகப் பணி என்பதில் ஐயமில்லை. அத்தகைய செவிடர் ஊமைகளுக்கு எழுத—படிக்க—பேசக் கற்றுக் கொடுக்கும் வகையில் பழனித் திருக்கோயிலின் சார்பில், 'ஊமையர் செவிடர் பள்ளி' ஒன்று நடைபெறுகிறது. இந்தப் பள்ளியைத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 14—2—72-இல் துவக்கி வைத்தார்கள். சென்ற ஆண்டு 20 குழந்தைகளுடன் தொடங்கப் பெற்ற இப்பள்ளியில் இப்போது 27 சிறுவர்கள் கல்வி பயில்கின்றனர். இந்தப் பள்ளியில், காது செவிடாயிருந்து ஒலியெழுப்பக் கூடிய ஊமைச் சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர். பரம்பரைச் செவிடர்களும் நோய் வாய்ப்பட்டு இடையே செவிடர்களான சிறுவர்களும் சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர். எனினும், இப்பள்ளியில், 10 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர். இங்கு பயிலும் சிறுவர்களுக்குப் பயிற்சியளிக்க ஆடியோமீட்டர் குரூப் ஆம்ளிஃபையர் ஆகிய விஞ்ஞானக் கருவிகள் வாங்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பு சுமார் 12,000 ரூபாய் ஆகும்.

இப் பள்ளியின் நிருவாகச் செலவிற்காக ஆண்டுதோறும் திருக்கோயில் பொது நிதியிலிருந்து ரூ. 25,000 செலவிடப்பட்டுவருகிறது. இங்குபயிலும் மாணவர்களுக்குத் திருக்கோயிலின் மற்றொரு நிறுவனமான அன்பில்லத்தில் இலவசமாக உணவும், உறையுளும் அளிக்கப்பட்டுள்ளது.. இவர்களுக்குத் திருக்கோயிலின் நிருவாகத்தில் உள்ள ஆங்கிலமுறை மருத்துவ மனையிலும் சித்த மருத்துவ மனையிலும் இலவசமாக மருத்துவ உதவிகள் அளிக்கப்படுகின்றன.

இந்த ஊமையர் செவிடர் பள்ளிக்குக் கட்டளை நிதியாக ரூ. 10,000 முதலீடு செய்யத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

### கார்த்திக் பள்ளி

திருக்கோயில் நடத்திவரும் கல்வி நிறுவனங்களில் ஒன்றான கார்த்திக் பள்ளி, கிண்டர்கார்டன் வகுப்புத் தொடங்கி சின்னஞ் சிறு குழந்தைகளுக்கு ஆங்கில மொழி வாயிலாகக் கல்வி அளித்து வருகிறது. 19—1—72-இல் தொடங்கப் பெற்ற இப் பள்ளியில் இப்போது 125 குழந்தைகள் கல்வி பயில்கின்றனர். ஐந்து ஆசிரியைகள் பணி புரிகின்றனர்.



இந்தியப் பண்பாட்டுக் கல்லூரியில் வகுப்பு நடைபெறுகிறது.

குழந்தைகளோடு அவர்கள் மிக நல்ல முறையில் அன்போடு பழகி, அவர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கின்றனர். பள்ளிக்கு வேண்டிய விளையாட்டுக் கருவிகள், ஒலிப் பதிவுக் கருவி, ரிக்கார்டு பிளேயர் ஆகியவை திருக்கோயில் நிதியிலிருந்து வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. மாண்டிசோரி முறையில் நடைபெறும் இப் பள்ளியில், குழந்தைகளுக்குச் சரியான ஆங்கில மொழி உச்சரிப்பைக் கற்றுக்கொடுக்க ஒலிப்பதிவுத் தட்டுகள் பயன்படுத்தப் படுகின்றன. இங்கு பயிலும் குழந்தைகளைக் கூட்டி வரவும், கொண்டு போய் விடவும், திருக்கோயில் நிதியிலிருந்து ஒரு 'வான்' வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் மாதச் சம்பளம் ரூ. 15-ம், 'வான்' கட்டணமாக ரூ. 5-ம் வசூல் செய்யப்படுகிறது.

குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கு உறு துணையாக அமையும் வகையில் 500 குழந்தைப் புத்தகங்களைக் கொண்ட நூலகம் ஒன்றும், சோதனைக் கூடம் ஒன்றும், மாணவர் அரும் பொருட்காட்சியகம் ஒன்றும் உள்ளன.

கோயிலுக்குச் சொந்தமான 'முருகன் அகம்' என்னும் அழகிய—நல்ல கட்டிடத்தில் கார்த்திக் பள்ளி நடைபெறுகிறது. மாதச் சம்பளமாகவும் வான் கட்டணமாகவும் கிடைக்கக்கூடிய வருமானம் ரூ.20 ஆயிரம். எஞ்சிய தொகை திருக்கோயில் வருமானத்திலிருந்தே செலவழிக்கப் பெறுகிறது. இப்பள்ளி முழுக்க முழுக்க ஒரு நல்ல ஆங்கில நர்சரிப் பள்ளியாகவே காட்சியளிப்பது குறிப்பிடத்தக்கது.

**குழந்தைகள் காப்பகம் :**

திருக் கோயிலின் சார்பில் குழந்தைகள் காப்பகம் ஒன்று 14—9—72-இல் தொடங்கப் பெற்றுச் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது. பட்டத்து விநாயகர் கோயிற் பின்புறத்தே உள்ள இந்தக் காப்பகத்தில் இன்று 81 குழந்தைகள் உள்ளன. 3 வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட இந்தக் குழந்தைகள் அனைவரும், காலை 9 மணி முதல் மாலை 4.30 வரை வெளியில் சென்று பணி புரியும் தாய்மார்களின் குழந்தைகளே! இந்தக் குழந்தைகளைப் பராமரிப்பதற்காக 3 ஆசிரியை



**மகளிர் செந்தமிழ்க் கல்லூரியில் பல்கலைக்கழகப் பரிசு பெற்ற செல்வி எம். மனோரஞ்சிதம், செல்வி எஸ். நவமணி**

களும் உதவியாளர்களும் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள், குழந்தைகளுக்குப் படிப்பும் கதையும், பாட்டும் சொல்லிக் கொடுப்பதோடு விளையாட்டுக் களையும் சொல்லிக் கொடுக்கின்றனர். காலையில் பாலும், மதியம் உணவும், மாலையில் 2 பிஸ்கட் முதலியனவும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. அள்ளியுண்ணத் தெரியாத குழந்தைகளுக்கு அந்த ஆசிரியைகள் உணவை ஊட்டி விட்டுப் பின்னர் கதை சொல்லித் தூங்க வைத்து, அவர்கள் எழுந்ததும் முகத்தைக் கழுவி, தலை நீவி, பவுடர் போட்டு, உடைகளைச் சரி செய்து விடுகின்றனர். மாலை 4.30 மணிக்கு மேல் பெற்றோர்கள் வந்து அந்தப் பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு செல்லும் வரை அக் குழந்தைகள் யாரும் தாங்கள் தாயைப் பிரிந்திருக்கின்ற உணர்ச்சியில்லாமலேயே ஒரு குடும்பத்தின் குழந்தைகளாகப் பழகுகின்றனர். குழந்தைகளுக்கு இலவச மருத்துவ வசதியும் செய்யப்படுகிறது. இந்தக் காப்பகத்திற்காகத் தேவஸ்தானம் ஆண்டுதோறும் சுமார் 24 ஆயிரம் ரூபாய் செலவு செய்கிறது.

**அன்பு இல்லம் :**

பெற்றோரை இழந்த—ஆதரவற்ற ஏழைச் சிறுவர்கள் தங்கி உணவும், கல்வி, மருத்துவ வசதிகளும் பெறுவதற்கு வாய்ப்பாக உள்ளது இந்த அன்பு இல்லம். இது 1-5-52ல் ஆரம்பிக்கப்பட்டது. பழனியிலுள்ள உயர்நிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி, ஊமை செவிடர் பள்ளி ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் இவ்வில்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்போது 111 மாணவர்கள் உள்ளனர்.

இவ்வில்லம் தெற்கு கிரி வீதியிலிருந்து சின்ன அய்யம் புள்ளிக்குச் செல்லும் பாதையில் சுமார் 3 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது.

மாணவர்களுக்கு 3 வேளையும் (காலை, மதியம், இரவு) நல்ல முறையில் உணவு தயாரித்து வழங்குகிறார்கள். மாலை நேரத்தில் தேநீர் மட்டும் கொடுக்கப்படுகிறது.

இவர்களுக்குப் பள்ளிச் சீர் உடை 2 செட்டும், ஒரு வேட்டி, ஒரு துண்டு விதம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகிறது.

அன்றாடம் குளியலுக்கு, லைப்பாய் சோப்பும், வாரமொரு முறை எண்ணெய்க்குளியலுக்கு எண்ணெய், சிகைக்காய்த் தூள் துணி துவைப்பதற்காக சோப் ஆகியனவும் கொடுக்கப்படுகின்றன. மாதம் ஒரு முறை முடி திருத்திக் கொள்ளவும் வசதி செய்யப்படுகிறது.

இங்கு 6 வயது முதல் 16 வயது வரையுள்ள ஆதரவற்ற—ஏழை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பெறுகின்றனர்.

அன்பு இல்லத்தில் உள்ள மாணவர்களின் சமய அறிவு தழைக்க, தனியாகத் தேவார



ஆசிரியர் ஒருவரை நியமித்துத் தேவாரம், திருமுறை, திருப்புகழ் போன்றவற்றிலிருந்து பாடல்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. இங்குள்ள மாணவர்களுக்கு தேவஸ்தான மருத்துவ மனையில் மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படுகின்றன. தேவஸ்தானம், இந்த அன்பு இல்லத்திற்கு ஆண்டுதோறும் 45 ஆயிரம் ரூபாய் செலவு செய்து வருகிறது.

**முதியோர் இல்லம்**

ஆதரவற்ற—தொழில் செய்து பிழைக்க முடியாத முதியவர்களின் நலன் பேணுவதற்கான முதியோர் இல்லம் ஒன்று 15—2—72-இல் தொடங்கப்பட்டுள்ளது. இந்த முதியோர் இல்லத்தில் நல்ல வசதியான கட்டில், மெத்தை, போர்வை, தலையணைகள் கொண்ட 10 படுக்கைகள் போடப்பட்டுள்ளன. இங்கு இப்போது பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 10 முதியவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளும் குறைவறச் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்களைச் சந்தித்து உங்களுக்கு எல்லா வசதிகளும் சரிவரச் செய்து கொடுக்கப்படுகின்றனவா என்று கேட்டபோது, 'எங்களுக்கு எந்தக் குறைவுமில்லை' என்று பெருமகிழ்ச்சியோடு கூறுகிறார்கள். இவர்கள் 10 பேரும் ஒருவருக்கொருவர் மிகவும் அன்போடும் பாசத்தோடும் பழகிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு மருத்துவ வசதி தேவைப்பட்டால் தேவஸ்தான வானில் தேவஸ்தான மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்று, மருத்துவ மனையிலேயே தங்கிச் சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டால், அங்கு படுக்கைகள் இல்லையென்றாலும் அருகிலுள்ள தேவஸ்தான சத்திரத்தில் தங்குவதற்கு வசதி செய்து கொடுத்து மருத்துவ வசதி செய்யப்படுகிறது.

**இலவச சித்த மருத்துவச் சாலை**

தேவஸ்தானத்தின் சார்பில் சித்த மருத்துவச்சாலை ஒன்று 8—11—64-இல் திறந்து வைக்கப்பெற்றது. இங்கு விஷக்கடிக்குச் சிறப்பான முறையில் மருத்துவம் பார்க்கப்படுகிறது குழந்தை வைத்தியமும் நல்ல முறையில் பார்க்கப்படுகிறது.

இம்மருத்துவச் சாலைக்குத் தேவஸ்தானம் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 7 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்கிறது.

**தேவஸ்தான மருத்துவமனை :**

திருக்கோயில் சார்பில் கடந்த 14—2—72-ல் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப் பெற்றது இம் மருத்துவமனை. பழனி புகைவண்டி நிலையத்திற்குச் செல்லும் சாலையில் மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள பழைய சத்திரத்தின் அருகில் அமைந்துள்ள இம் மருத்துவ மனையில் இப்போது இரண்டு டாக்டர்கள் (ஒரு பெண் டாக்டர் உட்பட) பணி புரிகின்றனர்.

தற்பொழுது நாள் ஒன்றுக்கு சுமார் 175 முதல் 200 நோயாளிகள் வரை சிகிச்சை பெற வருகின்றனர். முதலில் இத் திருக்கோயிலில் பணி புரியும் ஊழியர்களுக்கும் அவர் குடும்பத்தினருக்கும் மட்டுமே இலவச வைத்திய வசதிகள் கொடுக்கப்பட்டு வந்தது. பின்பு அது 'கார்த்திக் பள்ளி', நாதசுரப் பள்ளி, ஆகியவற்றில் படிக்கும் மாணவ, மாணவியர்க்கும் அன்பு இல்லத்தில் தங்கி இருக்கும் ஏழை மாணவர்கள், செவிடர்கள் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் 'குழந்தைகள் காப்பக'த்தில் உள்ள குழந்தைகள் இப்படியாக வளர்ந்துள்ளது.

பழனியாண்டவர் கலைக் கல்லூரி, பண்பாட்டுக் கல்லூரி பழனியாண்டவர் மகளிர் செந்தமிழ்க் கல்லூரி, ஆகமப் பள்ளி, கோசாலை, சித்த மருத்துவமனை, முதியோர் இல்லம் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்களுக்கும் அவரது குடும்பத் தினருக்கும் இவ்வசதி கொடுக்கப்பட்டு வருகின்றது.

தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்காக இம்மருத்துவ மனையில் இரண்டு வார்டுகள் உள்ளன. ஆண் பகுதி, பெண் பகுதி என இரு பகுதிகள் விதம் 20 படுக்கைகள் உள்ளன.

தூய உள்ளமே கோயில்;
நலிந்தோரைத் தேற்றுவதே
தோத்திரம்; மக்கட் பணியே
மகேசனுக்கு உகந்த பூசை;
ஏழை இதயத்திலே களிப்
பூட்டலே, பகவானுக்குத் தேர்,
திருவிழா.

—பேரறிஞர் அண்ணா

**நாதசுரப் பள்ளி :**

தகுதி வாய்ந்த 30 மாணவர்களுக்கு இலவசமாக உணவு, உறையுள், மருத்துவம் முதலிய வசதிகள் அளித்து நாதசுரம், தவுல் ஆகிய இசைத்துறையில் மூன்றாண்டுகளுக்கு இங்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**ஆகமப் பாடசாலை :**

தகுதி வாய்ந்த 24 மாணவர்களுக்கு ஆகமப் பயிற்சி அளித்துச் சிறந்த அர்ச்சகர்களாகவும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**தேவார இசைப் பள்ளி :**

கிரி வீதி வடக்கு துர்க்கை அம்மன் கோயிலில் பள்ளி விடுமுறை நாட்களான சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களில் ஆரம்பப் பள்ளி மாணவர்கள், சிறுவர் சிறுமியர் தேவாரம், திருப்புகழ் முதலான தெய்வப் பனுவல்களை இசையொடு பயில வாய்ப்பளிக்கிறது.

**மதிய உணவுத் திட்டம் :**

சுமார் 300 மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் தொண்டினைத் திருக்கோயில் மேற்கொண்டு செய்துவருகிறது.

**தங்கும் வசதிகள் :**

பழனிக்கு வரும் பயணிகள் தங்குவதற்கு வசதியாகச் சிறந்த தங்கும் விடுதிகளை, திருக்கோயில் சார்பில் கட்டப்பட்டுள்ளன. தேவஸ்தான சத்திரமும், தண்டபாணி நிலையமும் தவிர, தேவஸ்தானத்திற்குச் சொந்தமான குளிர்சாதனம் பொருத்தப்பட்ட வசதியான அறைகளும், சிறு குடில்களும் கூட உள்ளன.

இன்றையப் பழனியாண்டவர் திருக்கோயில் தொன்மைக் காலத் திருக்கோயில்களை நினைவுறுத்தும் வண்ணம், நல்லதொரு சமுதாயப் பணி நிலையமாகத் திகழ்ந்து புகழ் ஒளி வீசி வருவது பெரிதும் பாராட்டுக் குரியதாகும்.

—சாமி. பழ



# தாயே! தாலாட்டு!

நாங்கள்போய் நட்டகல்லே நடுகல் ஆகும்;
    நடுகல்லாய் இருக்கின்ற மலையே! நீயோ
ஓங்கார மாயுள்ள உருவம்; ஆனால்
    உனதுச்சிக் குடுமிஎங்கள் கையில்; என்ன
ஆங்காரம் உனக்குத்தான்? உயரங் காட்டி
    'ஆத்தாடி' எனவியப்பால் அயர வைப்பாய்;
சாய்ங்கால நேரத்தில் காற்று வாங்கச்
    சரியான இடம்உனது தாழ்வா ரந்தான்!

உல்லாச நிலையம் நீ; உடல்நோ யுற்றோர்
    ஓய்வெடுத்துக் கொள்ளுகின்ற மாளிகை நீ;
வில்லாக வளைந்துள்ள குறிஞ்சித் திட்டே!
    வீணாக ஏன்படுத்துக் கிடக்க வேண்டும்?
பொல்லாரின் படையெடுப்பைத் தடுக்கத் தானோ
    பொதுவான மதிற்சுவரே! எல்லைக் கோடே!
கல்லாக நின்றாலும் பொறுப்பை உன்போல்
    கல்லாமல் தாழ்ந்திட்டோம்; பொறுபொ றுப்பே!

'மலையசைந்து நகர்ந்தாலும் அசையேன்' என்பார்;
    வரலாற்றில் நீ அசைந்த சாட்சி ஏது?
தலையசைத்து நடக்கின்ற யானைக் கூட்டம்
    தான்எதிரே வருதல்போல் தோன்று கின்றாய்;
தொலைவினிலே உனைப்பார்க்குந் தோறும், வந்து
    தொடவேண்டும் போலிருக்கும்; ஏதோ மாய
வலைவீசி இழுக்கின்றாய், தெரிய வில்லை;
    மயக்கத்தைக் கொடுக்கின்றாய், புரிய வில்லை

'பச்சைமலை போலுமொரு மேனி' என்று
    பக்திப்பாப் பாடினனோர் புலவன்; ஆனால்,
இச்செகத்தில் இச்சகத்தார் உளரே யன்றி
    எங்கணுமத் திறத்தாரைக் காண வில்லை;
இச்சையினை எழுப்புகின்ற முகடே! நீயும்
    ஏற்றத்தாழ் வுக்குள்ளே சிக்கி னாயா?
பச்சைநிறம் பொதிகைமலை; ஒப்பு கின்றோம்!
    பாறையது பொன்மலையாம்; பொருத்தந் தானா?





உன்னிடத்தில் சமதருமம் உரைக்க வில்லை;
    உள்ளத்தைச் சொல்வதிலோர் ஆசை; நீயே
விண்ணுயரம் போய்வளர்ந்தாய்; கொடியை நாட்டி
    வெற்றிவெற்றி எனமுழங்கு கின்றோம் நாங்கள்,
மண்ணுலகின் சமவெளியை அன்றைக் கெல்லாம்
    வாய்பிளந்து பார்க்கின்ற வாய்ப்பே உன்னால்;
திண்ணமுடன் வையமொரு வட்ட மென்னும்
    தோற்றத்தைத் தந்தமுதல் தோற்று வாய் நீ!

திண்டுதிண்டாய் உள்ளதனால் திண்டு கல் நீ!
    சிலர்ஏனோ இருக்கின்றார் குத்துக் கல்லாய்?
சிண்டுமுடிப் பவர்இங்கே உண்டு: நீயோ
    தேனருவி முடிக்காமல் அவிழ்த்து விட்டாய்;
தொண்டுசெயும் உன்னுடைய தூதர் தாமோ
    சுறுசுறுப்பாய் ஓடுகின்ற நதிகள் எல்லாம்?
கண்டவரும் நுழைவதற்குக் கணவாய் கொண்டாய்
    கண்டுவரும் மலர்ச்சியைநீ கனவா கண்டாய்?



எரிமலையோ இல்லை, சிலர் சரிக்கட் டத்தான்
    எரிந்துவிழு கின்றாரோ? விறகெ ரிந்தால்
கரிமிஞ்சும்; இவரெரிந்தால் என்ன மிஞ்சும்?
    கற்கண்டாய் இனிக்குமலை வாழை; ஆனா
உரிஞ்சுகின்ற மலைப்பாம்பைக் காணும் போதே
    உளம்ஒடுங்கிப் போகாதோ? பெயரை மட்டும்
வரிந்துகொண்டால் பண்புமதில் நுழைந்தா கொள்ளும்?
    மலையமான் அஞ்சிஉன துறவா என்ன?

எறும்பூர்ந்து நீதேய்ந்து போவ தில்லை;
    இடிக்கின்ற வேட்டுகளால் சிதறு கின்றாய்;
பெரும்புயலும் உனைமோதிக் காலில் வீழும்;
    பிறந்தழியும் எம்மிடமா உனக்குத் தோல்வி?
திரும்புகின்ற திசையெல்லாம் நேர்க்கோட் டில் நீ
    தெரிகின்றாய்; இளம்பரிதி உன்னி டத்தில்
அரும்புகின்ற அழகுக்கா போட்டி? ஈன்ற
    அன்னையெனத் தாலாட்டு கின்றாய் நீயே!

— இளங்கோ




## எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!

## சேமிப்புப் பழக்கமே எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்

சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்) வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது. 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்கும் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

இந்த காப்புறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.

இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவக்குங்கள்.

— சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு



## கோடைப் பருவத்திற்கு ஏற்ற இரு புதிய வீரியச் சோளம்!

புதிதாகப் புகுத்தப்பட்டுள்ள சி. எஸ் எச். 5 (C. S. H. 5) கோவில்பட்டி உயரம் (Koilpatti tall) ஆகிய இரு கலப்பின வீரியச் சோள இரகங்கள், தற்பொழுது உழவர் பெருமக்களிடையே புகழ் பெற்று விளங்கும் 'கோ. 18' இரகத்தைவிட அதிக தானியமும், அதிக தட்டையும் கொடுத்துள்ளன. 'சி. எஸ். எச். 5' இரகம், 'கோ. 18' இரகத்தைவிட 53 சதம் அதிக தானியமும், 7 சதம் அதிக தட்டையும் கொடுத்துள்ளது. 'கோவில்பட்டி உயரம்' என்ற இரகம் 33 சதம் அதிக தானியமும், 14 சதம் அதிக தட்டையும் அளித்துள்ளது. இவ்விரு கலப்பின வீரியச் சோள இரகங்களும் பின் கண்ட சிறப்புக் குணங்களைப் பெற்றுள்ளன.

1. ஒரு வார காலம் முன்னதாகவே, அறுவடைக்கு வந்து விடுகிறது.
2. அதிக அளவு இரசாயன உரம் இவ்விரு இரகங்களுக்கும் தேவை இல்லை. 'கோ. 18' இரகத்திற்கு இடும் அளவு இரசாயன உரமே இவ்விரு இரகங்களுக்கும் போதுமானது.
3. தானியமணிகள் உருண்டையாகவும், முத்துப்போன்ற வெண்மை நிறமாகவும் உள்ளன.
4. விற்பனை அங்காடிகளில் இவ்விரு புதிய இரகங்களுக்கும் அதிக விலை கிடைக்கிறது.

கோவை மாவட்டத்தில், வேளாண்மைத் துறையினரால் மேற்கொள்ளப் பெற்ற அனுசரணை ஆராய்ச்சிப் பரிசோதனைகளிலிருந்து மேற்கூறிய உண்மைகள் தெரியவருகின்றன. எனவே இவ்விரு புதிய கலப்பின வீரியச் சோள இரகங்களும் கோவை மாவட்டத்திலும், மற்றும் இதர மாவட்டங்களிலும் கோடைப் பருவத்தில் இறைவைச் சோளம் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களின் வாழ்வை வளப்படுத்தும் என்பது திண்ணம்.

*[தகவல்: கூடுதல் வேளாண்மை இயக்குநர் (ஆராய்ச்சி), திருச்சிராப்பள்ளி-18].*

## தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406.

நெ. 14, ரித்தர்டன் சாலை, வேப்பேரி,
சென்னை-600007.

தொலைபேசி எண் : 30800 — தந்தி : "ஹவுஸ்பாங்க்"

தபால் பெட்டி எண் : 486

*தலைவர் :* திரு பழனிவேல் ராஜன், பி. எஸ்ஸி., பி.எல்., எம். எல். ஏ.
*உபதலைவர் :* திரு பி. கஸ்தூரி பிள்ளை.
*பொருளாளர் :* திரு எஸ். பழனிசாமி, எம். ஏ.

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ... .. | ரூ. 2·5 கோடி |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ... ... ... | ரூ. 1,87,69,500 |
| பிரதம சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவை. | ரூ. 10,12,30,217 |

*இச்சங்கத்துடன் இணைக்கப்பட்ட பிரதம வீடு அடமான சங்கங்கள், வீடு கட்டும் சங்கங்கள், கிராமியக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் அவைகளின் அங்கத்தினர்களுக்கு புதிய வீடு கட்ட 20 வருட நீண்டகாலக் கடன்கள் கீழ்க்கண்ட காரியங்களுக்கு வழங்கப்படுகின்றன.*

| | அங்கத்தினர் ஒருவருக்கு வழங்கும் உச்ச கடன் அளவு |
|---|---|
| புதிய வீடுகள் கட்டுவதற்கு ... ... ... ... | ரூ. 25,000 |
| கிராமப்புறங்களில் புதிய வீடு கட்ட ... ... ... | ரூ. 10,000 |
| பழைய வீடுகளை அபிவிருத்தி செய்யவும் புதுப்பிக்கவும்... | ரூ. 10,000 |

பூ. க. பத்மநாதன், பி.ஏ., எச்.டி.சி.,
இணைப்பதிவாளர்—செயலாளர்.





# அலைகடலோரத்திலே அண்ணா நீச்சல் குளம்

அலைகடலோரத்திலே — அறிஞர் அண்ணா சதுக்கத்தின் அருகிலே — அழகாய்க் காட்சி யளிக்கிறது அண்ணா நீச்சல் குளம்!



மனத்திற்கு மகிழ்வைத் தரும் வகையில் அமைக்கப் பட்டுள்ள இந்தக் குளம் ஈடு இணையற்றதாக விளங்கி வரு கிறது.

1973 ஜூன் முதல்நாள் துவக்கப்பட்ட இது, அனைத் துலக நீச்சல் விதிகளுக்குட் பட்டு அழகுற அமைக்கப்பட்டி ருக்கிறது. இங்கே பாய்ச்சல் குளம் (Diving pool), நீச்சல் குளம் (Swimming pool) என இருவகைக் குளங்கள் கண்ணைக் கவரும் வகையில் கட்டப்பட்டிருக்கின்றன.

பாய்ச்சல் குளம் அதாவது உயரே பலகை மேலிருந்து நீரில் குதிக்கும் குளம் 25 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும் கொண்டது. நீரின் ஆழமோ 5 மீட்டர். இதன் தெற்குப் பக்கத்தில், மேலே இருந்து நீரில் குதிப்பதற்கு வசதியாக ஒரு நான்கு அடுக்குக் கட்டடம் எடுப்பாய்க் காட்சி தருகிறது. இந்தக் கட்டடத் தில் 3, 5, 7·50, 10 மீட்டர் உயரங்களில் பலகைகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த அடுக்குக் கட்டடத்தின் கீழே மூன்று கண்ணாடிச் சன்னல்கள் பொருத்தப்பட்ட அறை ஒன்று உள்ளது. இது எதற்குத் தெரி யுமா?



நீச்சல் போட்டி நடக்கிறது என்று வைத்துக்கொள்வோம். நடுநிலையாளர், நீரில் குதிப்ப வரின் நிலை, குதிக்கும் விதம் முதலானவற்றைப் பார்க்க வேண்டும். இதை அவர் இந்த அறையிலிருந்து கொண்டே பார்த்து விடலாம்! ஆம். அவற்றையெல்லாம் இந்தக் கண்ணாடி நன்கு எடுத்துக் காட்டிவிடும்!

இம்மாதிரியான ஒரு நூதன அமைப்பு இந்தியாவிலேயே முதன்முறையாக இங்குதான் கட்டப்பட்டுள்ளது என்பதை நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

இங்குள்ள குதிக்கும் பலகை கள் (Diving Boards) நூலி ழைக் கண்ணாடியால் உருவாக் கப்பட்டு, பலகையினால் மூடப் பட்டவையாகும். இதனால் நன்கு எம்பி நீரில் குதிக்க முடியும். இம்மாதிரியான பலகைகள் இந்தியாவிலேயே முதன்முறையாக இங்குதான் வழக்கத்திற்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது!

இத்தனை சிறப்புமிக்க இந்த நீச்சல் குளம் உள்ளூர்க்காரர் களை மட்டுமல்ல, வெளிநாட் டினரையும் வெகுவாகக் கவர்ந்து வருகிறது. இதன் எழில்மிக்க அமைப்புகளைப் பார்த்து மேலைநாட்டினர் மன மாரப் பாராட்டுகின்றனராம். அமைதியான சூழ்நிலை, அழ கான தோற்றம், சுகாதார முறைப்படிக் குளங்களின் அமைப்பு இவை யாரைத்தான் கவரா?

தமிழ்நாடு அரசின் பொதுப் பணித்துறையினரால் ரூ. 20 இலட்சம் செலவில் கட்டப் பெற்ற இந்த எழில்மிக்க நீச்சல் குளம், காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை திறக்கப்பட்டுள்ளது. நீந்தும் போது விபத்துக்கள் ஏதேனும் ஏற்பட்டால் அவர்களைக் காப் பற்ற இங்கு 6 உதவியாளர்கள் இருக்கின்றனர். இரவைப் பகலாக்கும் வண்ணம் ஒளிமிக்க மின்விளக்குகள் குளத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்டி ருக்கின்றன.

தண்ணீர் அசுத்தமாகாமல் இருப்பதற்காக, பாய்ச்சல், நீச்சல் குளங்களிலுள்ள நீர் தொடர்ச்சியான சுழற்சி முறை யினால் (Continuous re-circulation method) சுத்தமாக் கப்படுகிறது. அதற்காக இங்கே 8 அடி அகலமும் 20



அடி நீளமுள்ள நான்கு வடி கட்டிகள் உபயோகிக்கப்படு கின்றன.

தொட்டியில் உள்ள நீரை 25 குதிரைச் சக்தியுள்ள இயந் திரத்தின் உதவியால் உறிஞ்சப் பட்டு, நான்கு வடிகட்டி களுக்கும் சீரான முறையில் அனுப்பப்படுகிறது. இந்நிலை யில் நீரைச் சுத்தப்படுத்தத் தேவையான மருந்துகளும் கலக்கப்படுகின்றன. பின்னர் வடிகட்டிகளினின்றும் வெளி வரும் நீர் பாய்ச்சல், நீச்சல் குளங்களுக்குத் தேவையான அளவு குளங்களின் அடிமட்டத் தில் செலுத்தப்படுகின்றது.



குளங்களில் நிரம்பி வழியும் நீர், இருபக்கங்களிலுமுள்ள வடிகால்களின் வழியாக மீண்டும் தொட்டிக்கே வந்து விடும். இம்முறையினால் குளங் களைச் சுத்தப்படுத்த வேண்டு மென்பதற்காக நீர் அனைத்தை யும் வெளியேற்றி, சுத்தப் படுத்தி நீர் நிரப்ப வேண்டும் என்ற அவசியம் இல்லை.



இந்தக் குளங்களில் நீந்து வதற்கும், குதிப்பதற்கும் கட்ட ணங்கள் வசூலிக்கப்படுகின்றன. பெரியவர்கள் 2 மணி நேரம் நீந்த ரூ. 1.50; சிறுவர்கள் 2 மணி நேரம் நீந்த ரூ. 1.

1972 அக்டோபரில் அனைத் துலக நீச்சல் போட்டி இங்கே சிறப்பாக நடந்தது. அந்தப் போட்டியைப் பார்த்தவர்கள், 'நீச்சல் அடித்தலும் ஒரு கலை தான். இதனைத் தெரிந்து கொண்டால் எத்தனை நன்மை!' என்பதை நிச்சயம் உணர்ந்தி ருப்பார்கள். ஏனென்றால், தப்பித்தவறி தண்ணீரில் விழுந்து விடுபவர்களை நாம் காப்பாற்றலாம் அல்லவா? அதுமட்டுமா? இந்தப் பயிற்சி உடல்நலத்துக்கும், மனவலி மைக்கும், மகிழ்ச்சிக்கும்கூட நமக்குத் துணை புரிகின்றதே!

ஒரு வேண்டுகோள்!

அருள்கூர்ந்து, நீச்சல் தெரி யாதவர்கள் மட்டும் இங்கே வந்து 'விஷப் பரீட்சை' யில் இறங்க வேண்டாம்!

—பி. வி. ஜி.

# தாவரங்களில் ஊடுருவி இருந்து தாக்கும் பூச்சிக் கொல்லிகள்

சாதாரணமாக நாம் தெளிக்கும் பூச்சி மருந்துகள் மழையினாலும், சூரிய வெப்பத்தாலும் தங்கள் வீரியத்தை இழந்துவிடுகின்றன. இவ்வித இழப்பைத் தடுக்கவே உட்கிரகிக்கப்படும் (ஊடுருவிப்பாயும்) பூச்சி கொல்லிகள் தெளிக்கப்பட்டால் அவைகள் இலைகள், தண்டுகளில் உள்ள மென்துளைகள் வழியாக உட்கிரகிக்கப்பட்டுச் செடியின் எல்லாப் பாகங்களுக்கும் காற்றுக் குழாய்களால் எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனால் செடியின் பாகங்கள் நச்சுத்தன்மை அடைகின்றன. இவற்றை இவ்வகை பூச்சிக் கொல்லிகள் பயிர்களின் ஊட்டச்சாற்றை உறிஞ்சும் பூச்சிகளான அசுவணி, தத்துப் பூச்சி , நாவாய்ப்பூச்சி, மாவுப் பூச்சிகள், செதிற் பூச்சிகள், மெழுகு இறக்கைப் பூச்சிகள், இலைப்பேன்கள் மற்றும் பயிர்ச் சிலந்திகளைக் கட்டுப்படுத்துவதில் தனிச்சிறப்புப் பெற்றுள்ளன.

**ஊடுருவிப்பாயும் பூச்சிக் கொல்லிகளின் நன்மைகள்:—**

1. தெளிக்கப்பட்ட பூச்சிக் கொல்லிகளது வீரியம் மழை, காற்று, வெப்பம் போன்றவற்றால் குறைவடைவதில்லை.

2. மருந்துச் சத்து உடனே பயிரால் உட்கிரகிக்கப்படுவதனால், பூச்சிகளின் இயற்கை விரோதிகளான ஒட்டுண்ணிகள், பூச்சி தின்னும் வண்டினங்கள் போன்றவைகள் பாதிக்கப்படுவதில்லை.

3. சாதாரணமாகப் பூச்சிக் கொல்லிகளால் எளிதில் அழிக்க இயலாத செதில் பூச்சிகள், பஞ்சுப் பூச்சிகள், பயிர்ச் சிலந்திகள் போன்றவை இவ்வகைப் பூச்சிக் கொல்லிகளால் எளிதாக அழிக்கப்படுகின்றன.

4. இவ்வகைப் பூச்சிக் கொல்லிகளில் சில பயிர்களுக்குள் சென்றதும் பூச்சிகளுக்கு மிகவும் நஞ்சுள்ளதாக மாறுகின்றன.

5. இவ்வகைப் பூச்சிக் கொல்லிகள் பயிர்களின் வளர்ச்சியில் விரும்பத்தகுந்த முன்னேற்றங்களை உண்டாக்கிவிடுகின்றன. வளர்ச்சியை அதிகரித்தல் இதில் முக்கியமானதாகும்.

6. பூச்சிகளால் பரப்பப்படும் 'பயிர் வைரஸ்' நோய்களை இப்பூச்சிக் கொல்லிகளை உபயோகித்துத் தடுக்கலாம்.

**குருணை வடிவப் பூச்சிக் கொல்லிகள்:—**

தற்சமயம் சிலவகை உட்கிரகிக்கப்படும் பூச்சிக்கொல்லிகள் 5 அல்லது 10 சதம் குருணை வடிவத்தில் கிடைக்கின்றன. இக்குருணைகளை விதைக்கும் போதோ, நடவு செய்த பின்னரோ பயிரைச் சுற்றி இட்டால் மருந்துச் சத்தானது நீரில் கலந்து, பயிர்களது வேர்களால் உட்கிரகிக்கப்பட்டு வேர் அழுத்தத்தாலும், பயிர்களது நீர்ப் போக்காலும், பயிர்களின் பல்வேறு பாகங்களுக்கும் செலுத்தப்படுகிறது. இம்முறையால், மருந்திடுதல் எளிதாக்கப்படுவதுடன் தெளித்தலால் ஏற்படக்கூடிய தீங்குகள் தவிர்க்கப்படுகின்றன. செலவும் குறைய வாய்ப்பு ஏற்படுகிறது.

**விதையுடன் மருந்து கலத்தல்:—**

பெரிய விதைகளான பருத்தி, வெண்டை முதலியவற்றுடன் உட்கிரகிக்கப்படும் பூச்சிக் கொல்லிகளைக் கலந்து விதைத்தால், அவ்விதைகள் முளைக்கும் போது மருந்துச் சத்தினை விதைகள் உறிஞ்சிவிடுகின்றன. பின்னர் அம்மருந்தானது செடியின் பல பாகங்களுக்கும் செலுத்தப்படுகிறது. இவ்வாறு மருந்து கலக்கப்பட்ட விதைகளிலிருந்து தோன்றும் செடிகள், உறிஞ்சும் பூச்சிகளிடமிருந்து ஒரு மாத காலம் வரை பாதுகாப்புப் பெறுகின்றன. 4 முதல் 6 சதம் மருந்துச் சத்து இருக்குமாறு விதைகள் கலக்கப்படுகின்றன. இதற்காகக் கரியில் கலக்கப்பட்ட தனித் தயாரிப்புகளும் கிடைக்கின்றன. இவைகள் விதைகளில் ஒட்டிக்கொள்வதற்கு 'மிதைல் செல்லுலோஸ்', வேப்பங் கோந்து முதலியன பயன்படுத்தப்படுகின்றன.

**உட்கிரகிக்கப்படும் பூச்சிக் கொல்லிகளின் வகைகள்:—**

**1. பாஸ்பரஸ் கலந்தவை:—**

**'மிதைல் டெமான்':**—இது 'மெட்டாசிஸ்டாக்ஸ்' என்று அழைக்கப்படுகிறது. விற்பனை செய்யப்படும் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' 25 சதமருந்தில் நச்சுப் பொருள் உள்ளது. ஒரு லிட்டர் நீரில், ஒரு மில்லி லிட்டர் 'மெட்டாசிஸ்டாக்ஸ்' கலந்து தெளிக்கலாம். பருத்தி, காய்கறிப் பயிர்களில் தோன்றும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இது பயன்படுகிறது.

**'டைமீதோவேட்':** விற்பனையில் உள்ள 'ரோகார்' என்னும் பூச்சிக்கொல்லியில் 38 சத 'டைமீதோவேட்' கலந்துள்ளது. இதை 0.30 சதம் (ஒரு லிட்டர் நீரில் ஒரு மில்லி லிட்டர்) என்ற விகிதத்தில் பயன்படுத்தலாம். இது 'ரோகார்' 5 சதம் என்ற குருணை வடிவத்திலும் கிடைக்கிறது. நெல், பருத்தி, காய்கறிகள், புகையிலை போன்ற பயிர்களுக்குப் பாதுகாப்பளிக்க இம்மருந்தை உபயோகிக்கலாம்.

**'தயோமிட்டன்';** 'எக்டின் என்ற பெயரில் 20 சதம் திறனில் இது கிடைக்கிறது. இது பருத்தி, புகையிலை போன்றவற்றிற்குப் பயன்படுகிறது.

**'பாஸ்பாமிடான்':** இது தண்ணீரில் கரையக் கூடிய பூச்சிக் கொல்லியாகும். 'டைமெக்ரான்' என்ற பெயரில் இது கிடைக்கிறது. ஒரு ஏக்கருக்கு 100 மி.லி. வீதம் இதைப் பயன்படுத்தலாம். நெல், பருத்தி, புகையிலை, மிளகாய் போன்ற பயிர்களில் இதைப் பயன்படுத்தலாம்.

**மானோகுரோட்டோபாஸ்':** இதுவும் நீரில் கரையக்கூடிய தன்மை பெற்றுள்ளது. 40 சதம் 'மானோகுரோட்டோபாஸ்' அடங்கிய' நூவக்ரான்', 60 சதம் 'மானோகுரோட்டாபாஸ்' அடங்கிய 'அசோட்ரின், ஆகியவை பருத்திப் பயிர்ப் பாதுகாப்பில் பெருமளவு பயன்படுத்தப் படுகின்றன. இது, 0.025 சதம் அளவில் உறிஞ்சும் பூச்சிகளுக்கெதிராகவும், 0.075 சதம் அளவில் காய்ப் புழுக்களுக்கெதிராகவும் உபயோகிக்கப்படுகிறது.

**'டைகுரோட்டோபாஸ்':** நீரில் கரையக்கூடிய வீரியம் வாய்ந்த இது 'பிட்ரின்' என்ற பெயரில் 24 சதம் திரவமாகக் கிடைக்கிறது. இதை 0.024 சதம் அல்லது 0.048 சதம் அளவில் தெளிக்கலாம். இதை 0.1 சதம் டி.டி.டீ. மருந்துடன் கலந்து தெளித்தால், பருத்திக் காய்ப்புழுக்களைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்தலாம்.

**'சிட்ரோலென்':** பத்து சதக் குருணைகளாகக் கிடைக்கும் இம்மருந்து எக்டேருக்கு 1—1.5 கிலோ அளவு மருந்துச் சத்தளவில் பயன்படுத்தப்படுகிறது. பருத்தி, நெல் போன்றவற்றில் இதைப் பயன்படுத்தலாம்.

**'பென்ஸ்ல்போத்யான்' :** இது 'டசானிட்' அல்லது 'டெராகர்பி' என்ற பெயர்களில் 5 சதம், 10 சதம் குருணை வடிவங்களில் கிடைக்கிறது. இது நீண்ட நாட்கள் நிலைத்துச் செயல்பட வல்லதாகும். எனவே, இதை நீண்ட காலப் பயிர்களான பருத்தி போன்றவற்றிற்குப் பயன்படுத்தலாம். இது நூற்புழுக்களை அழிப்பதில் சிறந்து விளங்குவதால் நூற்புழுக் கொல்லியாகவும் பயன்படுகிறது. உருளைக்கிழங்கின் பொன்னிற நூற்புழு, மிளகாய், கனகாம்பரம் போன்றவற்றைத் தாக்கும் வேர்முடிச்சு நூற் புழுக்கள் ஆகியவைகளைக் கட்டுப்படுத்த இதைப் பயன் படுத்தலாம். (தொடரும்)





தமிழக அமைச்சரவைக் கூட்டம், 14—11—73ல் முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்குக் கூலி வரையறை அறிவிக்கப்பட்டது. அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின் முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்.





''கார்த்திகேயன் தலைமையில் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு தந்துள்ள பரிந்துரையை அரசு ஏற்றுப் பரிசீலித்து அதை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது.

அக்குழுவில் இடம்பெற்றுள்ள திரு சி. நாராயணசாமி நாயுடு, திரு சாமிநாதன், எம்.எல்.சி., திரு ஏ. கே. சுப்பையா, எம் எல்.ஏ., திரு எஸ். நல்லசாமி, எம்.எல்.ஏ., ஆகியோர் ஒருமனதாகப் பரிந்துரை செய்துள்ள குறைந்த பட்சக் கூலி—கீழத் தஞ்சை நீங்கலாக மாநிலம் முழுதும் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டதாகும்.

உழவுக்கு மாடு, கலப்பையுடன் வருகிற தொழிலாளிக்குக் குறைந்தபட்சக் கூலி, நாள் 1-க்கு ரூ. 5·50; மாடு கலப்பையின்றி உழவுக்கு மட்டும் வந்தால் ரூபாய் 3.

அறுவடைக்கு வரும் ஆணுக்குக் குறைந்த பட்சக்கூலி ரூ.3·25; பெண்ணுக்கு ரூ.2·25 சிறியவர்களுக்கு ரூ. 1·50.

விதைத்தல், உழவு, நாற்று நடுதல் ஆகிய விவசாய வேலைகளுக்கு ஆணுக்கு ரூ. 3·00; பெண்ணுக்கு ரூ. 1·75; சிறியவர்களுக்கு ரூ. 1·25.

இந்த ஊதிய விகிதங்கள் குறைந்தபட்சக் கூலி விகிதங்களாகும். இதற்கு அதிகப்படியாகத் தற்போது இருந்து வரும் ஊதிய விகிதங்கள் குறைக்கப்படமாட்டா.




# வெண்பாப் போட்டி

## 67. 'அரிசி' எனத் தொடங்கி 'அரசு' என முடித்தல்.

** அரிசி, படியளந்தாய் ; அம்மனைதான் தந்தாய்
பரிசளித்துச் சாதி பழித்தாய்;—வரிகுறைத்தாய்,
கண்வழங்கிக் காத்தாய், கடையனுக்கும் வாழ்வீந்தாய் ;
அன்புத்தாய் ஆனாய் அரசு!

—சுவித, வே. கள்ளிப்பாளையம்.

அரிசிக் கடைதன்னில் ட அந்திவரை நின்று
வரிசை தினம்பார்த்த வள்ளி—சிரித்தின்று
என்றும் நிலைக்கட்டும் என்கிறாள் எஃதென்றால்
இன்றுவாழ் இந்நாட் டரசு !

—புலவர் ச. இராசு, கோவில்பட்டி.

அரிசி மிகவிளைந்த ஆள்வினையின் மாண்பால்
பரிசாய் நிலம்பெற்றேம் பாராய்—விரிபஞ்சின்
நூல்போல் மிகவிளைத்த நுண்ணிடையே! நீ வாழ்த்தாய்
ஆல்போல் தழைக்க வரசு !

—புலவர் ஆ. திருஞானசம்பந்தன் பி.ஏ., திருச்சி-4.

'அரிசி'னங் கொன்றே, அனைவரு மொன்றாய்
நரிசெயல் நாட்டில் நசுக்கித்—தரிசைப்
பரிசா யுயர்த்திப் பசி-நோ யகற்று
மரசே குடிக ளரசு

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

அரிசிவப் பூசைதான் அன்பென்று சொல்வர் ;
அரிசனங்கள் அர்ச்சித்தால் மட்டும்,—பரிவோடு
கற்பூரம் நாறுதோ ? கற்கண் டினிக்காதோ ?
அற்புதமே செய்தாய் அரசு !

—மா. சே. இராசு, திருப்பூர்.

'அரிசி' வனும் போற்றுகின்ற ஆன்றபிள்ளை யார்க்கே
இருக்க இடம்கொடுப்பேன், இன்னும்—விரிநிழலால்
உங்கட்கும் தண்ணென்பேன் உள்ள மரக்குலமாம்
எங்களிலே யானே 'அரசு'

—க. கிருஷ்ணன், திருப்பூர்.

அரிசிவாயில் ஏதென்றான் ஆவென்று முன்னே
பரிசொன்று தந்தான் பறந்து;—கரத்தை
இணைத்தான் இடையோடே; என்பதிலைக் கேளா(து)
அணைத்தான் அறிவுக் கரசு.

—புலவர் செந்தமிழ்க்கிழார், அருப்புக்கோட்டை.

அரிசி குவிந்ததடி ஆனமட்டும் உண்ண!
புரட்சியடி பாவாய்! புகல்வேன்!—வரட்சியுற்று
கண்கலங்கும் மாநிலத்தாக்(கு) அள்ளியும் தந்திடுதே!
அண்ணா அமைத்த அரசு!

—நா. மணிமேகலை, வந்தவாசி (வ. ஆ. மா).

''அரிசி''யின்றி நாளும் அயல்நாட்டார் சாத,
அரிசி குவிக்கும் அரசே!—உரசித்
தரிசு நிலத்தைத் தழைத்தோங்கச் செய்யும்
அரசே நலம்பெய் அரசு

—பி. சி. அசனல்லி, அரக்கோணம்.

அரிசி விழைவோர் அகமகிழ்ந் துண்ண
உரிய வழியெல்லாம் ஓர்ந்தே—அரிதாம்
பசுமைப் புரட்சியதால் பாலரிசி ஊட்டி
அசையாமல் ஆளும் அரசு.

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

அரிசியிலை என்னும் அவலநிலை மாற்றி
அரியதோர் சாதனையாய் அண்டை—அரசுகளாம்
கேரள, கர்நாடகத்தார்க் கேண்மைமிகத் தானுதவும்
ஆரா அமுதிவ் வரசு.

—கோ. மா. இராசகோபாலன், சென்னை-23.

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர்:
திரு. சுவித,
வே. கள்ளிப்பாளையம்,
பல்லடம் (வழி),
(கோவை மாவட்டம்).

# வெண்பாப் போட்டி

அரிசிவன்மால் என்றுதெய்வம் ஆயிரங்கள் சொல்வர்!
புரிசெயல்கள் அத்தனையும் புன்மை!—நரியாய்த்
தடங்காட்டும் அன்னவர்க்குச் சாவு மணியை
அடிக்கட்டும் இந்த அரசு.

—நாமக்கல் தமிழருவி, நாமக்கல்.

அரிசி இராக்கடைகள் அந்நாளில்; எங்கும்
முரசறைந்து விற்கின்ருர் இந்நாள்—பரிசு
வழங்குவதால் ஏருழவர், வாங்கும் பிறநாட்டார்
முழங்குஞ்சொல் 'வாழ்க அரசு'

--இல. சக்கரபானி, மடவாளம் (வ. ஆ.)

அரிசி கிடைக்காமல் அல்லலுற்ருேம் அன்று!
வரிசையில் நின்று வாட்டமுன்ருேம்!—அரிசிக்கு
நின்ற நெடுந்துயரம் நீக்கிய நல்லரசு
இன்றைக் கிருக்கும் அரசு.

—புலவர் மா. தமிழன்பன், சென்னை-30.

அரி, சிவா என்ருேதும் ஆன்மிகத் தாலே
அரிசி, வா என்றிடில் ஆமோ?—தெரிவாய்
நமதுழைப்பே தெய்வம் நவிலுமிக் கொள்கையதே
அமைந்தெமை ஆளும் அரசு.

—லாயக்கில்லுதாஞன கட்டிதாஞு, காளஞாறு.

அரிசி அரிசியென்று ஆலாய்ப் பறந்து
வரிசையிலே வாழ்ந்தநாள் மாய—தரிசுநிலம்
நன்செய்யாய் மாற்றி நிறைத்தும் பிறர்க்கீந்தும்
அண்டை அயல் வாழ்த்தும் அரசு.

—கவிஞர் சிவி. நடராசன், மாமல்லபுரம்.

அரிசி பெருகநல் லாராய்ச்சி செய்தே
கருணை ஐ யாரெட்டு, பத்மா—கரிகாலன்
நல்ல தமிழ்க் கண்ணகியாய் நாட்டிற் பலவகையை
அள்ளி அளிக்கும் அரசு.

—ம. சக்குபாய், உடுமலைப்பேட்டை.

'அரிசிவனே!' என்ருல் அரிசிவிலை யாதென்(று)
அறிந்தார்தம் ஆட்சியிஃ(து) அன்ருே!—நிறையுழைப்பால்
எங்கும் பயிர்செழித்தே ஏற்றம் பலகாணும்
எங்கள் அரசே அரசு!

—புலவர் ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

அரிசியினைக் கேட்க அணுகிவரு வோரை
வருகவெனக் கூறும் கருணை!—அருமைநிறை
பொன்னியுடன் உன்றனையும் பூரிப்பாய் ஈன்றதனல்
மன்னுபுகழ் பெற்ற தரசு.

—இரா. கூத்தரசன், கீழக்குறிச்சி.

அரிசியிலே தன்னிறைவை ஆக்கிக், கலைஞர்
அரிசியினைக் கேட்போர்க் களிக்கும்—விரிசெயலால்
ஏற்ற புகழ்கொண்டான், எம்மவர்கோன் நல்லாட்சி
ஆற்ற அமைந்த தரசு.

—வெண்ணெய்வேலன், திருவெண்ணெய்நல்லூர்.

அரிசிக்கே அன்ருெருநாள் அல்லலுற்ருேம்; இன்ருே
பிறருக்கும் ஈந்துபுகழ் பெற்ருேம்—திறமிக்கார்
நாடாள வந்ததனல் நாம்பெற்ற பேறிதன்ருே?
நீடூழி வாழ்க அரசு!

—க. இரத்தினம், ஆயக்காரன்புலம்.

அரிசிக்கு நாள்முழுதும் அங்காடி முன்னே
வரிசையாய் நின்றிருந்தோர் வாழ்வில்—சிரித்திடவே
கொள்முதலாம் நெல்குவித்தும் கோதில்லாத் திட்டத்தால்
அள்ளிக் கொடுத்த அரசு.

—து. ம. இராமசாமி, கோவை-34.

''அரிசி வளம்பெருக்கி, அன்பு மனம்பெருக்கித்
தரிசு நிலந்திருத்தித் தாய்போல், பரிந்துடனே
கண்ணொளியும் மின்னொளியும் காலமெல்லாம் தருகிறதே
அண்ணு வழிச்செல் அரசு''.

—மா. சிவக்குமார், கோவை-20.

அரிசியென்று வந்தவர்க்கே யன்புடனே வாரி
வரிசை கெடாதீந்து வண்மைப்—பரிசுபெறு
பாட்டிலொளிபெற்றுப் பண்பிற் சிறந்ததமிழ்
நாட்டரசே நல்ல அரசு.

—தாரைவில்லவன், தாராபுரம்.

அரிசிக்கு நிற்கும் அவலநிலை மாற்றி
வரிசை ஒழித்துவளம் காணப்—பரிசாய்க்
கருணைஐ ஆரெட்டுக் காஞ்சியுடன் பொன்னி
அருமையுற நல்கும் அரசு.

—புலவர் சு. இராமனுசன், ஆ. தெற்கூர்.

அரிசி கிடைக்காத அல்லலை நீக்க
தரிசும் விளைநிலமாய் ஆகப்—பரிசளித்தே
ஊக்கப் படுத்தி உழைப்போரை என்றென்றும்
காக்கும் கழக அரசு.

—கோ. புகழேந்தி, புதுவை-4.

அரிசியினைத் தேவைக்(கு) அதிகம் விளைவித்(து)
அருந்திறன் காட்டியதோ(டு) அன்றிப்—பெருமகிழ்வோ(டு)
அண்டைபல மாநிலங்கட்(கு) அன்னையென வேயளித்த(து)
அண்ணன் அமைத்த அரசு.

—நா. பகவதிஅப்பன் பி. எஸ்ஸி., சென்னை-5.

வீரத்தின் விளைநிலமாகத் தமிழகம் அன்றும் இருந்தது; இன்றும் இருந்து வருகிறது. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் இதனைப் பறைசாற்றி வருவதை உலகம் உணர்ந்துமிருக்கிறது.

அண்மையில்கூட இந்திய-பாகிஸ்தான் போரில் தமிழ் நாட்டு வீரர்கள் பங்கு பெற்ற உணர்ச்சிமிகு வரலாறு நமக்கெல்லாம் பெருமை தருகிறது.

நமது நாடு, நமது மக்கள் என்ற ஒருமைப்பாட்டுணர்ச்சியே நம் வெற்றிக்கெல்லாம் மூலகாரணம் என்பதை நாம் நன்கு உணர்ந்திருக்கிருேம்.

இது 1952-ல் புதுப்பேட்டையில் துவக்கப்பட்டது. இன்று தேனும்பேட்டையில் இயங்கி வருகின்றது. நாள்தோறும் நூற்றுக் கணக்கானவர்கள் இராணுவத்தில் சேர வரும் காட்சி நமக்கெல்லாம் பெருமிதம் தருகிறது.

அதோ! வரிசை வரிசையாக மாணவர்கள் கையில் சான்றிதழ்களுடன் நிற்கின்றனர். அவர்கள் முகத்திலே புதுத் தெம்பு—பட்டாளத்திலே சேர்ந்து நாடு காக்கும் நற்பணியிலே ஈடுபடப் போகிருேமே என்ற பெருமிதம் அவர்கள் முகத்திலே பளிச்சிடுகிறது.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று உடல் நலமுற்று வந்தால் அவர்கள் நிச்சயம் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பட்டாளத்தில் சேர வரும் மாணவர்களின் தகுதி, உடலமைப்பு, தோற்றம் முதலானவற்றைப் பார்க்கும் போதே, இவர் எந்த வேலைக்குப் பொருத்தமானவர் என்பதை முடிவு செய்துவிடுகின்றனர். உடனே, இவர் டிரைவருக்குத் தகுதியானவர், இவர் பொறியாளருக்குப் பொருத்தமானவர், இவர் சமையல் வேலைக்குச் சரியான ஆள் என்று தேர்ந்தெடுத்து இந்தியாவின் பல பாகங்களுக்கும் அனுப்பப்படுகின்றனர்.

இந்த மாதிரியான இராணுவ




நாடு காக்க வீட்டுக்கொரு வீரர் தேவையென பண்டைத் தமிழர் முரசொலித்தது இன்னும் நம் செவிகளில் கேட்கின்றதே! இன்றுங்கூட அந்த வழக்கம், அந்தப் பண்பு மறையாது குறையாது அணையா விளக்காய் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது.

வீணர்கள் நம் மண் மீது காலடி எடுத்து வைத்தபோது அதற்குப் பதிலடி கொடுத்துப் பகை முறித்த காட்சி நம் கண்முன் தெரிகிறது.

இவ்வாறு வீரவரலாறு படைக்க இளைஞர்களையெல்லாம் அழைக்கிறது, சென்னைத் தேனும்பேட்டையில் உள்ள இராணுவ ஆள்சேர்ப்பு அலுவலகம் (Branch Recruiting Office).

ஒவ்வொருவராக வருகின்றனர். இராணுவ அதிகாரி ஒருவர் அவர்களது சான்றிதழ்களைச் சரி பார்க்கிருர். எடை, உயரம் முதலானவற்றைக் குறித்துக் கொள்கிருர். இதற்குப் பிறகு அவர்களை மருத்துவ அதிகாரி சோதிக்கிருர். உடலில் ஒரு சிறு குறைபாடு இருந்தால்கூட அவர்கள் படையில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அதனல் அவர்களுக்கு இராணுவத்தில் சேரவே வாய்ப்பு இல்லை என்று முடிவு கட்டிவிட முடியாது. உடலில் நோயோ குறைபாடோ இருந்தால் அதனைக் குறித்து, வெளியிலுள்ள பொது அல்லது இராணுவ மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற இராணுவ மருத்துவர் உதவி புரிகிருர்.

ஆள்சேர்ப்பு அலுவலகம் ஒன்று திருச்சியிலும் உள்ளது. இந்த அலுவலகங்களில் ஆட்களைத் தேர்வு செய்வதல்லாமல், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அடங்கிய குழு மாவட்டந்தோறும் சுற்றுப் பயணமும் செய்து ஆட்களைத் தேர்ந்தெடுக்கின்றது.

மருத்துவர் அடங்கிய இந்தத் தேர்வுக் குழு, நாள், இடம், நேரம் முதலானவற்றை முன்கூட்டியே செய்தித்தாள்களிலும், வானொலியிலும் அறிவிக்கின்றது. இந்தக் குழு ஒவ்வோரிடத்திலும் நான்கு, ஐந்து நாட்கள் தங்கி ஆட்களைத் தேர்வு செய்கின்றது. இப்படி இந்தக் குழு சுற்றுப் பயணம் செய்வதின் நோக்கமே, இராணுவத்தில் சேர கிராமப்பு

மக்கள் செலவு செய்துகொண்டு சென்னை வந்து தொல்லைப் படாமலிருக்கவும், அவர்களுக்கு அங்கேயே அத்தகைய வாய்ப்புகளை ஏற்படுத்துவதும்தான். இவ்வாறு இவ்வலுவலக இராணுவக்குழு சேலம், தர்மபுரி, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்கள், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பயணம் செய்கிறது.

நாடு காக்கும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பலர் ஆர்வமுடன் இராணுவத்தில்சேருகின்றனர். ஆண்டுக்கு 1,000 பேர் இராணுவத்திலும், ஆண்டுக்கு சுமார் 100 பேர் கப்பற்படையிலும் இவ்வலுவலகத்தின் சார்பில் சேருகின்றனர்.

நமது இந்திய போர்ப்படை 1. இராணுவம் 2. கடற்படை, 3. விமானப்படை என மூவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

உலகில் தலைசிறந்த இராணுவப் படைகளில் இந்திய இராணுவப் படையும் ஒன்றாகத்திகழ்கிறது. எந்நேரத்திலும் நாட்டின் சுதந்தரத்தைப் பேணிக் காப்பதற்காக ஆயத்த நிலையில் இருக்கும் இராணுவத்தினரின் வீரமும் தீரமும் குன்றாமலிருக்க வேண்டுமாயின், இளைஞர்கள் தொடர்ந்து இராணுவத்தில் சேருவது அவசியமாகும்.

நாட்டிற்கு நற்பணிபுரிய வாய்ப்பு அளிப்பதோடு மட்டுமின்றி, கண்ணியமானதொரு வாழ்க்கைக்கும், ஒளி நிறைந்த வாழ்க்கைக்கும், எதிர்காலத்திற்கும் இராணுவப் படை வழி செய்கிறது; நம்மையும் நம்முடைய சந்ததியினரையும் முன்னேற்றப்பாதையில் அது அழைத்துச் செல்கிறது.

இராணுவத்தில் சேருவதற்கு ஒரு சில வகுப்பினர் மட்டுமே உரிமை பெற்றிருந்த காலம் மறைந்துவிட்டது. உடற்கட்டு மற்றும் கல்வி சம்பந்தமான சில தகுதிகளுடைய எவரும் இன்று சாதிமத வேறுபாடின்றி இராணுவத்தில் சேரலாம். தாய்நாட்டின் சுதந்தரத்தைக் காக்கின்ற பொறுப்பு, உடல் வலிமையுள்ள ஒவ்வொரு இளைஞனுக்கும் உண்டல்லவா?

**இராணுவம்**

இராணுவ வாழ்க்கை எப்படிப்பட்டது?

நமக்கும், நம் குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும், மற்றும் நாட்டிற்கும் நன்மை பயக்கும் நல்வாழ்வு நிறைந்ததொரு வாழ்க்கையை இராணுவப் படை நமக்கு அளிக்கிறது. சுறுசுறுப்பான பழக்க வழக்கங்களுள்ள ஒருவருக்கு இராணுவ வாழ்க்கை கடினமானதாகத் தோன்றாது. உழைப்பும் உடற்பயிற்சியும் நிரவலாக அமைந்துள்ள அவ்வாழ்க்கை ரசிக்கத் தக்கதாக இருக்கும்.

தேர்வு பெற்றவர் நல்லதொரு படை வீரராவதற்கு முறையான பயிற்சி அவசியமாதலால் அவர்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இது தவிர தொழில் நுணுக்கப் பயிற்சியும், கைத்தொழில் பயிற்சியும் கூட இராணுவப் படையினருக்கு அளிக்கப்படுவதால், அவர்கள் பல்வேறு கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

பயிற்சியில் செலவிடும் நேரம் தவிர ஒவ்வொரு நாளும் வெவ்வேறு விதமான விளையாட்டுகளுக்கும், உடற்பயிற்சிக்கும் நிறைய நேரம் கிடைக்கிறது. கால்பந்து, ஆக்கி, எறிபந்து, சடுகுடு போன்ற விளையாட்டுகளுக்கும் வசதிகள் செய்து தரப்படுகின்றன.

தம் படைவீரர்கள் மீது இராணுவம் காட்டும் அக்கறை அவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் நின்று விடுவதில்லை. ''ஒரு முறை படை வீரராக விளங்கியவர் என்றுமே படை வீரர்தான்,'' என்று சொல்கின்றவகையில் அவர்கள் சிவில் வாழ்க்கைக்குத் திரும்பிய பின்னும் இராணுவம் அவர்கள் மீதும் அவர்கள் குடும்பத்தின் மீதும் தொடர்ந்து அக்கறை செலுத்தி அவர்களது வாழ்நலத்தைப் பேணுகிறது. கூடுதலான கல்வியறிவுடனும் தொழிற் பயிற்சியுடனும் அவர்கள் சிவில் வாழ்க்கைக்குத் திரும்புவதால் மீண்டும் வேலை தேடுவது அவர்களுக்கு எளிதாகிறது. இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகும் படை வீரர்கள் சுறுசுறுப்புடனும் மன நிறைவுடனும் வாழ்வதற்கு உதவும் வகையில் அரசு பல திட்டங்களை வகுத்துள்ளது.

இராணுவப் படையானது வீரர்களுக்குப்பல வசதிகளையும் சலுகைகளையும் அளிக்கிறது—இலவசமாகச் சீருடை, உணவு, எரிபொருள் மற்றும் ஒளிவசதி, இருப்பிடம், மருத்துவ உதவி, கல்வி, முடிதிருத்தம், துணிச் சலவை முதலியன வழங்கப்படுகின்றன. இவை மட்டுமா? அவர்கள் குடும்பத்தினருக்கு இலவச மருத்துவ உதவி, கல்வி வசதி, குடும்பத்தின் பராமரிப்பு ஆகிய வசதிகளும் செய்து கொடுக்கின்றது.

ஒவ்வொரு படை வீரருக்கும், படை வீரரல்லாத (பதிவாகிய) இராணுவ ஊழியருக்கும், ஆண்டுதோறும் சொந்த ஊருக்குச் சென்று வர இலவச இரயில் பயண வசதியுடன் 60 நாட்கள் விடுமுறையும் அளிக்கப்படுகிறது. இவை தவிர, ஒவ்வோராண்டும் 30 நாட்கள் வரை சாதாரண விடுமுறைகளும் அவர்களுக்குத் தரப்படுகின்றன.



படையில் சேர வந்துள்ள மாணவர்கள்



உயரம் அளக்கப்படுகிறது.

இராணுவப் படை வீரராகச் சேருவதற்குக் குறைந்த அளவு வயது 17 ஆண்டுகளாகும். பெரும்பான்மையான தொழில் பிரிவுகளுக்கும் நிர்வாக அமைப்புகளுக்கும் விதிக்கப்பட்டுள்ள அதிக அளவு வயது வரம்பு 21 ஆண்டுகளாகும். எனினும், சில தொழில் பிரிவுகளிலும், நிர்வாக அமைப்புகளிலும் 27 வயதுவரை ஆட்கள் சேர்க்கப்படுகிறார்கள். பொதுவாகக் குறைந்த வயதுள்ளவர்கள்தாம் வரவேற்கப்படுகிறார்கள். படை வீரரல்லாத (பதிவாகிய) பிரிவில் சேருபவர்கள் 17 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

படைவீரர்களுக்கான வெவ்வேறு தொழிற் பிரிவுகளுக்குத் தனித் தனியே கல்வித் தகுதிகள் விதிக்கப்பட்டுள்ளன. ''தாய் மொழி மட்டும் அறிந்தவர்''களிலிருந்து, ''மெட்ரிகுலேஷன் மற்றும் அதற்கு மேலும் படித்தவர்கள்''வரை குறிப்பிட்ட வயது வரம்பிலும் நல்ல உடல்நலத்துடனும் இருக்கின்ற எல்லா இளைஞர்களுக்கும் இராணுவத்தில் வேலை வாய்ப்பு உள்ளது. படை வீரரல்லாத (பதிவாகிய) ஊழியர்களுக்குக் கல்வித் தகுதி குறிக்கப்படவில்லை.

இராணுவத்தில் சேருவோர் நல்ல உடற்கட்டோடும் நல்ல மனநிலையுடனும் இருக்கவேண்டும். வெவ்வேறு பிரிவுகளுக்கும் தனித்தனியே உடற்கட்டுத் தகுதிகள் விதிக்கப்பட்டுள்ளன 'ரெஜிமெண்டுகள், மற்றும் 'கோர்கள்' ஆகியவற்றைப் பொறுத்து இந்தத் தகுதிகள் வேறுபடக்கூடும்.

இராணுவத்தில் சேரும் அனைவருக்கும் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் நிறைய உண்டு. எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படுகிறது. தகுதி வாய்ந்தவர்கள் பதவி உயர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். திறமை மிக்க படை வீரர்கள் இராணுவத்தில் அலுவலர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்குப் பரிந்துரை செய்யப்படுகிறார்கள். குறிப்பிட்ட வயது வரம்பிலிருக்கும் இத்தகைய படை வீரர்கள் பூனாவிலுள்ள இராணுவப் பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்பப்படுவர். இந்தக் கல்லூரி வாயிலாக அலுவலர்கள் பதவி உயர்வு பெறுகின்றனர்.

**கப்பற் படை**

இந்தியக் கப்பற்படைக்குப் 'பாய்ஸ்', 'ஆர்ட்டிபிசர் அப்ரெண்டிஸ்கள்', 'ரேட்டிங்குகள்' என்ற வகைகளில் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இவர்களுக்கான வயதுத் தகுதிகள் சிறுவர்கள் (பாய்ஸ்) 15½ வயது முதல் 16½ வயதுவரை; ஆர்ட்டிபிசர் அப்ரெண்டிஸ்கள் 15 வயது முதல் 17½ வயது வரை; ரேட்டிங்குகள் 17 வயது முதல் 20 வயதுவரை.

சிறுவர்கள் (பாய்ஸ்) சம்பந்தப்பட்டவரை இந்தந்தப் பிரிவுக்கென அவர்களை நியமிப்பது 10 வார காலம் ஆரம்பப் பயிற்சி கொடுக்கப்பட்ட பின்னர்தான் முடிவு செய்யப்படுகிறது. நேரடியாகச் சேர்க்கப்படும் ரேட்டிங்குகள், ரிக்ரூட்டுகளின் விருப்பம்போல் -அவர்கள் வயது கல்வி சம்பந்தமான தகுதிகள் உடையவர்களாகவும், உடல்நலமுள்ளவர்களாகவும் இருந்தால்—குறிப்பிட்ட பிரிவுகளில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கு ஒருவர் நல்ல மன, உடல் நலமுள்ளவராக இருக்க வேண்டும். தன் கடமையைத் திறம்பட ஆற்றுவதற்கு இடையூறான உறுப்புக் குறைவு அற்றவர்களாகவும் அவர்கள் இருத்தல் முக்கியம்.

இவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் சம்பளம் தவிர, இதர படிகளும் வழங்கப்படுகின்றன. உணவு, உடை, மருத்துவம் போன்ற எல்லா வித வசதிகளும் இவர்களுக்குச் செய்து தரப்படுகின்றன.

கடற்படையின் கப்பல்களுக்குத் தேவையான பெருமளவு மாலுமிகளுக்கென்று சிறுவர்கள் பயிற்சி நிறுவனம் ஒன்று பயிற்சியளிக்கிறது. இந்தப் பயிற்சியின் முடிவாக, எல்லா மாணவர்களும் கடலுக்குச் சென்று கப்பலில் பணியாற்றுவர். கடற்பயிற்சி முடிந்த பிறகு அவர்கள் ஓ.டி (O.D.—Ordinery Seaman) அதாவது சாதாரண மாலுமி எனப்பெயர் பெறுவர். தே

தெடுக்கப் பெற்ற எல்லாப் பிரிவுகளின் மாலுமிகளும் அதற்கென முடிவு செய்யப்பட்ட தேர்வில் தேறிய பின்னர் பிரிவு அதிகாரிகளாகவும், கமிஷன் அதிகாரிகளாகவும் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதியுடையவராவர். பம்பாயிலுள்ள கப்பல் கட்டும் தளத்திற்கான தொழில் நுட்பப் பணியின் பல்வேறு பிரிவுகளில் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

**விமானப் படை**

விமானப் படையில் இளைஞர்கள் 'ஏர்மென்' களாகச் சேர்ந்து கொள்ள நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. இப்படையில் சாதாரணத் தகுதியுள்ள பணிகள் 'ஏர்மென்' என்றழைக்கப்படுகின்றன. இங்கு அவர்களுக்குத் தொழில் நுட்பம் உள்ளதும், அல்லாததுமான பல தொழில்களில் இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இந்திய விமானப்படையில் சேர விரும்புகிறவர்களுக்கு 43 விதமான தொழில்கள் இருக்கின்றன. ஆகவே, தங்கள் விருப்பம்போல் இதில் சேர்ந்து கொள்வதற்கு அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன. ஏர்மென்களுக்கும், வேலை பயிலுவோருக்கும் சம்பளம் தவிர இதரப்படிகளும் கொடுக்கப்படுகின்றன. இவர்கள் ஆண்டுக்கு 60 நாட்கள் விடுமுறை எடுத்துக் கொள்ளவும் உரிமையுண்டு. இவை தவிர, இலவசக் குடியிருப்பு, உணவு, உடை போன்ற எல்லா வசதிகளும் தரப்படுகின்றன.

உதாரணமாக, விமானம் ஓட்டிக் (பைலட்)கான தகுதிகள் எத்தனைக் கடினமானது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

முதலில் உடலுறுப்புக் குறைவற்றவராக அவர் இருத்தல் மிக முக்கியம். போர் அல்லது சமாதானத்தின்போதும், இரவு பகலின்போதும், எந்தத் தட்பவெப்ப நிலையிலும் விமானத்தில் பறக்கின்ற மனவலிமை, உடல்நலம் பெற்றிருத்தல் வேண்டும். சுறுசுறுப்பு, கூரிய புத்தியுடையவராகவும், இருதயத்துடிப்பு, சுவாசித்தல், சிறுநீர் கழிவு, நரம்பு சம்பந்தமானவை முதலியன சாதாரண நிலையில் இருக்க வேண்டும். உயரம், எடை முதலியன கணக்கிடுவது போல கால் நீளமும் கணக்கிடப்படுகிறது. கால் நீளம் 39 அங்குலத்திற்குக் குறையாமலிருக்க வேண்டுமாம். இவை மட்டுமா? கண்பார்வை மிகநன்றாக இருத்தல் வேண்டும்.

கண்ணாடி அணிந்தவருக்கு நிச்சயம் இந்த வேலை கிடைக்காது. 20 அடி தொலைவிலிருந்து பலமாக முணுமுணுக்கும் சத்தம் தனித்தனியாக



மார்பு அளவெடுக்கப்படுகிறது

ஒவ்வொரு காதிலும் கேட்க வேண்டும். எனவே, காதின் செவிப்பறையும் நன்றாக இருக்க வேண்டும். அடுத்தது பல்! இது போதுமான எண்ணிக்கையில் இருக்க வேண்டும்! பொய்ப் பல்லெல்லாம் இங்கே பலிக்காது!

விமானப் படையில் அதிகாரிகள் தரம் ஏழு பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. இப்படையில் சேருவதற்கு மட்டும் தாம்பரத்திலுள்ள விமானப் படைக்கான ஆள் சேர்ப்பு அலுவலகத்தில்சேர வேண்டும்.

**பிரதேச இராணுவப் படை**

முப்படைகளைப்பற்றி ஓரளவு தெரிந்து கொண்டோம். 'டெரிடோரியல் ஆர்மி' என்றால் என்ன?

இது 'பிரதேச இராணுவப் படை' என்று அழைக்கப்படுகிறது. தாமே முன்வந்து விரும்பிச் சேரும் வீரர்களைக் கொண்ட பகுதி நேர இராணுவப்படையாகும் இது. இப்படை குடிமக்களால் உருவானது. இதிலுள்ளோர் தொழில் சார்பில் முழுநேரப் போர் வீரர்கள் அல்லர். அவர்கள் நாட்டுப் பாதுகாப்புக்குத் தத்தம் பங்கினைச் செய்யும் ஆர்வத்துடிப்புள்ள குடிமக்கள் ஆவர்.

இளைஞர்கள் தம் ஓய்வு



வேளைகளில் இராணுவப்பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் இந்தப் படை உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டிற்குப் பெரும் நெருக்கடி ஏற்படும் காலத்தில் தாயகம் காக்கப் படைக்கலமேந்தி போர்க்களம் செல்ல அவர்கள் அழைக்கப்படலாம்.

இப்படையில் சேர 18 வயது முதல் 35 வயதுக்கு இடைப்பட்டோரனைவரும்— அவர்கள் உடற்கட்டுத் தகுதியும், மருத்துவத் தகுதியும் பெற்றவர்களாயின் இதில் சேருவதற்குத் தகுதி உடையவர்களாவர். இதில் சேர முன் வருவோர் பொதுவாழ்வில் நிலையான நல்ல பணியில் இருத்தல் வேண்டும். பயிற்சி பெறும் காலத்திலும், இராணுவத்தில் பணியாற்ற அழைக்கப்படும் காலத்திலும் சம்பளமும் படிகளும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறு, தாய்த் திருநாட்டின் தன்மானத்தைக் காக்கும் பொருட்டு வாழ்நாளில்பெரும் பகுதியைப் பட்டாளத்தில் கழித்துவிட்டுத் தாயகம் திரும்பும் இராணுவ வீரர்கள் பொது வாழ்வில் உள்ள வேலைவாய்ப்புகளைப்பற்றி தெரிந்து கொள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வேலை வாய்ப்பு நிலையம் இருக்கிறது.

பட்டாளத்தில் பெற்ற அனுபவத்தை வைத்துத் தனியாகத் தொழில் ஆரம்பித்துச் சுயமாகச் சம்பாதிக்க முடியுமா? அதிகநாள் காத்திராமல் விரைவிலேயே வேலை பெறுவது எப்படி? இவை போன்ற வினாக்களுக்கு இந்த வேலை வாய்ப்பகம் விடை தந்து நல்வழி காட்டுகின்றது.

1971-ஆம் ஆண்டு இறுதியில் 6486 முன்னாள் இராணுவத்தினர் வேலைவாய்ப்புக்காகத் தமிழ்நாட்டிலுள்ள வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்திருக்கிறார்கள்; இவர்களில் 1,303 பேர் இந்த ஆண்டில் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர் என்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.

நாடு காக்கும் நற்பணியில் ஈடுபட்டுள்ள நம் வீரர்களை வாழ்த்துவதோடல்லாமல், அவ்வாறு ஈடுபட விரும்புவோரையும் வாழ்த்தி வரவேற்போம்! நடந்து முடிந்த புனிதப் போரிலே வெற்றி வாகைசூடி மறைந்த மாவீரர்களுக்கும் வீரவணக்கம் செலுத்துவோம்! நாடு காப்போம்! நலங்குவிப்போம்!

—பி.வி.ஜி.



மருத்துவப் பரிசோதனை

கடமையைச் செய்வதற்குப் பலன்களை எதிர்பார்த்தல் கூடாது. ஆனால் நல்ல செயல் எதுவும் முடிவில் பயனளித்தே தீரும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

—காந்தியடிகள்.

பெரும்பான்மையோரால் தங்களுடைய துயரங்களைப் பொறுத்துக் கொள்ள முடிகிறது. ஆனால் மற்றவர்களின் இன்பத்தைத்தான் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.

—வில்லியம் பால்ஸ்.

# சிறந்த ஊர்நல உதவியாளர்



கடந்த 1971—72-ஆம் ஆண்டிற்கான தமிழகத்தின் சிறந்த ஊர்நல உதவியாளர் என்ற சிறப்பைப் பெற்று, அதன் வாயிலாக அனைத்திந்திய அளவில் டெல்லி 'க்ருஷி' பவனில் நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்டு 2-வது இடத்தைப் பெற்று, தமிழகத்திற்குத் தனிச் சிறப்பைத் தேடித் தந்துள்ளார், ஊர்நல உதவியாளர் திரு எம். அருணாசலம்.

இவர் பிறந்து வளர்ந்தது திருச்சி மாவட்டம். ஆயினும் இவரது பணி முழுவதும் கோவை மாவட்டத்திலேயே உள்ளது. 30 வயதே அடைந்துள்ள இவர், பள்ளி இறுதி வகுப்பு தேறியவர். பள்ளி இறுதி ஆண்டை முடித்துக்கொண்டு தமிழகத்தைச் சேர்ந்த பவானி சாகர் கிராமிய விஸ்தரிப்புப் பயிற்சி நிலையத்தில் இரண்டு ஆண்டுகள் ஊர்நல உதவியாளர்களுக்கான ஒருங்கிணைந்த பயிற்சி பெற்றுத் தேறி உள்ளார். பயிற்சிக் காலத்திலேயே துடிப்பும், சுறுசுறுப்பும் மிக்க இளைஞர்களுள் முதன்மையானவராகத் திகழ்ந்து, பயிற்சியின் பல தரப்பட்ட பாடங்களில் ஆர்வத்தோடு பயின்று, சமுதாயப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். இவரது மொத்த பணிக் காலம் 6½ ஆண்டுகள். இவர் 2-ஆம் நிலை ஊர்நல உதவியாளராகக் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டாமுத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணியாற்றி வருகிறார்.

தனது பணிக் காலம் மிகக் குறுகியதாயும், மற்ற ஊர்நல உதவியாளர்களுள் இவர் இளையவராக (ஜூனியர்) இருப்பினும், 'கடுகு சிறுத்தாலும் காரம் போகாது' என்ற பழமொழிக்கொப்ப, தனது பணியினை நிறைவேற்றும் திறமையில், நாட்டத்தில் அணுகு முறையில் இவர் முதியவர்களையும் மீறியவர் என்பதை இவரது சாதனைப் பட்டியல் படம் பிடித்துக் காட்டுகிறது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்த மட்டில் இவரது சாதனை வியப்பிற்கு உரியதாகும். போட்டிக்கான ஆண்டில் மட்டும் இவர் தனது தொகுதியில் கீழ்க்கண்ட பணிகளை ஆற்றியுள்ளார் :



(அ) வீரிய விதைகளை விதைக்கச் செய்து அபிவிருத்தி செய்தது 7068 ஏக்கர்கள்.

(ஆ) திருந்திய கம்போஸ்ட் குழிகள் வெட்டச் செய்தது ... 143
முன் ஆண்டில்: 300 டன்கள்

(இ) இரசாயன உரவிநியோகம் செய்து இரசாயன உரத்தின் அவசியத்தை அபிவிருத்தி செய்தது ... 10,578 குவிண்டால்கள்.

(ஈ) கம்போஸ்ட் உற்பத்தி செய்தது ... ஆண்டில் 1716 டன்கள்.

(உ) பசுந்தாள் உரப் பயிர் விதைப்பு ... 7,068 ஏக்கர்கள்.

(ஊ) உழவர்களுக்கு திருந்திய வேளாண்மைக் கருவிகள் வழங்கியது ...





| | | |
|---|---|---|
| கலப்பைகள் | ... | ... 247 |
| தூவான்கள் | ... | ... 54 |
| வரப்புக்கட்டும் கருவி | ... | ... 24 |
| சமப்படுத்தும் பலகை | ... | ... 18 |
| • தட்டுவெட்டி | ... | ... 48 |
| • பாக்குமரத்தெளிப்பான் | ... | ... 7 |
| • விசைத்தெளிப்பான் | ... | ... 57 |
| • தான்யம் பிரித்துத் தூவும் கருவி | | ... 6 |
| • டிராக்டர்கள் | ... | ... 5 |



(எ) பயிர்ப் பாதுகாப்பு அனுசரித்தது... ... 21,525 ஏக்கர்கள்.

(ஏ) கல உர நிருபணங்கள் செய்தது ... 32

(ஐ) பண்ணைத் திட்டங்கள் தயாரித்தது ...2,022

(ஒ) புதிதாகப் பாசன வசதிக்குக்கொண்டு வந்த பூமியின் பரப்பு ... ...2,865 ஏக்கர்.



(ஓ) ஒற்றைப்பயிர் முறையிலிருந்து இர (அல்லது) மூன்று பயிர் சாகுபடிக்குக் கொண்டு வந் ப ... 4,332 ஏக்கர்

(ஔ) பயிர் விளைச்சல் போட்டிகளு ற்பாடு செய்து நடத்தியவை

| | | | |
|---|---|---|---|
| நெல் | ... | ...30 ஏக்கர்கள். | |
| சிறு தானியங்கள் | ... | ... 3 | ,, |
| கடலை | ... | ...10 | ,, |
| மக்காச் சோளம் | ... | ...12 | ,, |
| அமோக விளைச்சல் தரும் நெல் ரகங்கள்...30 | | | ,, |
| பசுந்தாள் உரப்பயிர் | ... | ...30 | ,, |



உயர்விளைச்சல் ரகத் திட்டம் :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | கார் | | ராபி | |
| 1. கொடுக்கப்பட்ட இலக்கு | ... ... | 320 | எக்டேர் | 355 | எக்டேர் |
| 2. இவர் ஆற்றிய சாதனை: (அ) நெல் | ... ... | 698 | ,, | 443 | ,, |
| (ஆ) ஹெச்.பி.1 கம்பு | ... ... | 16 | ,, | 11 | ,, |
| (இ) வீரிய மக்காச் சோளம் | ... ... | 1,478 | ,, | 1,269 | ,, |

| | | |
|---|---|---|
| உயர் விளைச்சல் தரும் ரகங்களைச் சிறந்த சாகுபடி முறைகளைக் கையாண்டு பயிரிட்ட குடியானவர்கள் | | 1878 குடும்பங்கள்.1790 குடும்பங்கள் |
| பயிற்சி மற்றும் நிருபண முறை முகாம்கள் ஏற்பாடு செய்தவை | | 97 முகாம்கள் |
| பழச்செடிகள் விநியோகம் செய்தது | ... | 4,519 |
| காய்கறிகள் உற்பத்திக்குக் கொண்டு வரப்பட்ட பரப்பு | ... | 2,018 ஏக்கர்கள் |
| மண் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சீரமைத்த பரப்பு | ... | 1,478 ஹெக்டேர்கள் |

இவரது இதர துறைச் சாதனைகள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | காளைகளுக்குக் காயடித்து விரியப்படுத்தியது | ...975 | |
| 2. | செயற்கைமுறை கருத்தரிப்புக்கு ஏற்பாடு செய்தது | ... | 4798 |
| 3. | தீவனப்பயிர்களை அபிவிருத்தி செய்யத் தீவனப் பயிர் போடப்பட்ட பரப்பு: | | |
| | குதிரை மசால் ... | ... 307 ஏக்கர் | |
| | எருமைப்புல் ... | ... 60 ,, | |
| | யானைப்புல் ... | ... 72 ,, | |
| | தீவனச் சோளம் ... | ...1112 ,, | |
| 4. | தனிப்பட்டோர் கோழிப்பண்ணை ஆரம்பித்தது | ... | 28 |
| 5. | குஞ்சு பொறிக்கத் தக்க முட்டை விநியோகம் செய்தது... | | 6439 |
| 6. | மீன் வளர்ப்புக்குக்கொண்டு வரப்பட்ட நீர்ப் பரப்பு | | |
| | (அ) குளங்குட்டைகள் ... | ... 13 | |
| | (ஆ) கிணறுகள் ... | ... 303 | |
| 7. | மீன் குஞ்சுகள் கொடுக்கப்பட்டவை ... | ... | 30,000 |
| 8. | மீன் உற்பத்தி | ... | 3,050 கிலோ |





பொது :

இவரது முயற்சியில் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்தின் மதிப்பீடு அளவு—உணவுப் பயிர்கள் : 97 சவிகிதம்.

மற்றும் இவர் சிறு சேமிப்புத் திட்டத்தில் சிறந்த நாட்டம் கொண்டு ரூ. 50,000 வசூல் செய்து தந்தார். கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு 116 பங்குகள் சேர்த்துக் கொடுத்தார். நாட்டுப் பாதுகாப்பிற்கு என ஏற்பாடு செய்யப்பட்ட பரிசுச் சீட்டுக்களை ரூ. 3,500-க்கு விற்றுக் கொடுத்தார். மற்றும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் இலவசக் கண் சிகிச்சை முகாமுக்கு ரூ. 200-ம் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்ட நிதிக்கு ரூபாய் 3,000-ம் வசூலித்துக் கொடுத்ததோடு, இலவசக் கண் சிகிச்சை பெற்று, விழியிழந்திருந்தவர்களின் வாழ்வில் ஒளியேற்றினார்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்திலும் இவர் நாட்டம் மிகக் கொண்டு, பணியாற்றினார். 78 நபர்களை ஆண் அறுவைக்கு அழைத்து வந்து, சிகிச்சை செய்வித்து, அவர்களின் குடும்பங்களைச் சீர்மிகு குடும்பங்களாக மாற்றினார்.

இப்படிப் பல தரப்பட்ட பணிகளிலும், சிறந்த பணியாற்றி, ஊராட்சி வளர்ச்சித் துறையில் சீருடன் பணியாற்றி வரும், இவர் அனைத்திந்திய அளவில் 2-வது இடத்தைப் பெற்றது, தமிழகத்திற்கே தனிச் சிறப்பாகும்!

# மூன்று மாவட்டங்களின் முன்னேற்றப் பணிகள்

தசெ.

தென்னார்க்காடு, தஞ்சை, திருச்சி ஆகிய மூன்று மாவட்டங்களில் தமிழக அரசு செய்துள்ள சாதனைகளைப் பத்திரிகையாளர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக, ஐந்துநாள் சுற்றுலாவைத் தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்புத்துறை அண்மையில் ஏற்பாடு செய்தது.

சென்னையைச் சேர்ந்த பத்திரிகை நிருபர்கள், செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த நிருபர்கள், அகில இந்திய வானொலி நிலையத்தின் செய்தி நிருபர் ஆகியோருடன், அந்தந்த மாவட்டங்களில் உள்ள பத்திரிகை நிருபர் சிலரும் இந்தச் சுற்றுலாவில் கலந்து கொண்டார்கள்.

சுற்றுலா சுவையாக இருந்தது. பத்திரிகையாளர்களுக்கு உணவு, தங்கும் வசதிகள் அனைத்தையும் அரசே ஏற்றுக் கொண்டது. அரசுப் பீடத்திலும் பத்திரிகையாளர்கள் தான் இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக்கின பத்திரிகையாளர்களுக்குக் கிடைத்த வசதியும் வாய்ப்பும்!

சுற்றுலாவின் போது ஆங்காங்கே நாவுக்குக் கிடைத்த விருந்து ஏராளம். அதற்கு இணையாகவே செவிகளுக்குக் கிடைத்த விருந்தும், கண்களுக்குக் கிடைத்த விருந்தும் திகழ்ந்தன. தமிழக அரசின் சாதனைச் செய்திகளைக் கேட்ட போது செவிகள் இன்புற்றன! பார்த்தபோது கண்கள் மகிழ்வுற்றன.

பத்திரிகையாளர்கள் சென்று வந்த இடங்களில் எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்களும் மிக மிக அன்புடன் வரவேற்று ஒத்துழைப்புத் தந்து, தமிழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார்கள்.

சில பத்திரிகையாளர்களின் எல்லையற்ற வினாக்களுக்கு இனிதாகவும் இதயம் வருந்தாமலும், சுவையாகவும், அரசு அலுவலர்கள் பதில் கூறினார்கள் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அக்டோபர் திங்கள் 9-ஆம் நாள் நாங்கள் சுற்றுலாவைத் தொடங்கினோம்.

''உழுவார் உலகத்துக்கு அச்சாணி'' என்று வள்ளுவரும் ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்று பாரதியாரும், கூறியிருப்பதை எண்ணித்தானோ என்னவோ, சுற்றுலாவின்முதற்கட்டமாகத் திண்டிவனத்திலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்துள் அடி எடுத்து வைத்தோம்.



திண்டிவனத்தில் கண்டு பிடிக்கப் பெற்றுள்ள எண்ணெய் வித்துக்கள் திக்கெட்டும் புகழ் பரப்பி வருவதுடன், இந்தியாவின் தாவர எண்ணெய் உற்பத்தியைப் பெருக்கப்பெருமளவில் உதவி உள்ளன. ஒரு காலத்தில் 'மணிலாக் கொட்டை மாவட்டம்' என்று கூறப்பட்ட தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திண்டிவனத்தில் அமைந்துள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சியில் செயற்கரிய சாதனைகள் செய்து அனைத்து இந்தியப் புகழ் பெற்று விளங்குகிறது. சிறப்பாக, நிலக்கடலை ஆராய்ச்சியில் திண்டிவனம் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் இந்தியாவிற்கே வழி காட்டியாக உள்ளது.



கையினால் காகிதம் செய்யும் தொழிற் கூடத்தில்.........

திண்டிவனத்தில் உள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் 1925-ஆம் ஆண்டில் பலாக் குப்பம் கிராமத்தில் 6.5 எக்டேர் குத்தகை நிலத்தில் துவங்கப்பட்டது. தமிழ் நாட்டில் மிகவும் அதிகமாக நிலக்கடலை பயிரிடப்படும் பகுதியின் இதயம் போன்று விளங்கும் இவ்வாராய்ச்சி நிலையம், படிப்படியாக வளர்ந்து 61.55 எக்டேர் பரப்பில் எண்ணெய் வித்துக்கள் பற்றிய ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் இயங்கும் எண்ணெய் வித்துக்கள் பற்றிய அனைத்து இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் நிலக்கடலை பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளும் முக்கிய நிலையமாகவும் இந் நிலையம் இயங்கி வருகிறது.



கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் வாங்கியுள்ள டிராக்டர்

**குறிக்கோள் :**

திண்டிவனம் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள்கள் மூன்று; அவை :

(1) தமிழ் நாட்டின் முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களான நிலக்கடலை, எள், ஆமணக்கு ஆகியவற்றில் அதிக மகசூல், அதிக எண்ணெய் கொடுக்கும் தன்மை, பூச்சிகள் மற்றும் நோய்களைத் தாங்கிக் கொள்ளும் குணம் ஆகிய சீரிய பண்பு கொண்ட பொறுக்கு விதைகளை உருவாக்குதல்.

(2) நிலக்கடலை, எள், ஆமணக்கு ஆகியவற்றில் பெரு மகசூல் பெறுவதற்குரிய திருந்திய வேளாண்மைச் சாகுபடி முறைகளைக் கண்டறிதல்.

(3) எண்ணெய் வித்துப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள், நோய்கள் ஆகியவற்றை ஆராய்ந்து, அவைகளைக்கட்டுப் படுத்துவதற்கான முறைகளைக் கண்டுபிடித்தல்.

மேற்கூறிய மூன்று முக்கியக் குறிக்கோள்களுடன் இயங்கும் இவ்வாராய்ச்சி நிலையம், பயிர் வல்லுநர் ஒருவரின் தலைமையில் இயங்குகிறது. அவருக்கு உதவியாக பின் கண்ட இயல்களில், உதவி ஆராய்ச்சி அலுவலர்கள் பணியாற்றுகின்றனர்.

(1) இன மேம்பாட்டியல்

(2) உழவியல்

(3) இரசாயன இயல்

(4) பயிர்நோய் இயல்

(5) பூச்சி இயல்

அனைத்து இந்திய ஒருங்கு இணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின் கீழும் 3 உதவி ஆராய்ச்சி அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களின் அயராத உழைப்பினால் இது வரை கீழ்க் கண்ட சாதனைகள் ஏற்பட்டுள்ளன.

குறுகிய கால வயது, அதிக மகசூல், அதிக எண்ணெய் கொடுக்கும் தன்மை, அதிகப் பயறு அளிக்கும் பண்பு, வறட்சி, பூச்சிகள், நோய்கள் ஆகியவைகளைத் தாங்கும் குணம், பல்வேறு தட்ப வெப்ப நிலைமையிலும், மண் வகையிலும் பயிரிடுவதற்கு ஏற்ற பண்பு ஆகிய குணங்களைக் கொண்ட புதிய இரகங்களை உருவாக்க இப் பிரிவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. புத்தம் புதிய ரகங்களை உருவாக்கும் பணியின் முதற் கட்டமாக, உலகின் பல பகுதிகளைச் சேர்ந்த 1,150 நிலக்கடலை இரகங்களும் 9 காட்டு நிலக்கடலை வகைகளும் (Wild Species) கொண்டு வரப்பெற்று இப்பிரிவில் பயிரிடப்பெற்று அவைகளின் சீரியபண்புகள் ஆராயப் பெற்று இன மேம்பாட்டிற்கான கரு வூலமாக (Germplasm Bank) அமைக்கப் பெற்றுள்ளன. இவ்வளவு இரகங்கள் கொண்ட ஆராய்ச்சி நிலையம், இந்தியாவில் வேறெங்கும் இல்லை என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்ளும் பெருமையைப் பெற்றுள்ளது இந் நிலையம்.

இந்த ஆராய்ச்சி நிலையம் இதுவரை திண்டிவனம்-1 (டி.எம்.வி. 1), 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆகிய 10 இரகங்களை உருவாக்கி வெளியிட்டுள்ளது. இவைகளில் மிகவும் சிறந்ததாக டி.எம்.வி. 10 விளங்குகிறது. இந்தியாவில் வெளியிடப் பெற்றுள்ள நிலக்கடலை





வீராணம் திட்டத்திற்காகக் குழாய்கள் உருவாவதை நிருபர்கள் பார்வையிடுதல்

வி. 3 எள் இரகத்தை விட 10 சதம் அதிக மகசூல் அளிப்பதாக உள்ளது. பரிசோதனையில் உள்ள 'ஆர்' (R) என்ற கலப்பின எள் ரகமும் சிறந்த எள் இரகமாக வெளியிட ஏற்றதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

புதிய இரகங்களை உருவாக்கி வெளியிட முயலும் திண்டிவனம் மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் எண்ணெய் வித்து சாகுபடி முறைகள், பூச்சிகள் மற்றும் நோய்கள் தடுப்பு முறைகள் பற்றியும் விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பல பயன் தரும் முடிவுகளை உழவர் சமுதாயத்திற்கு வழங்கிவருகிறது.

உழவுத் தொழில் செய்யும் ஆண் உழவர்களுக்கும் பெண் உழவர்களுக்கும் உழவு பற்றிய பயிற்சிகளை நடத்துவதற்கு ''உழவர் பயிற்சி நிலையம்'' இங்கே இயங்கி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 7 பயிற்சி நிலையங்கள் உள்ளன. திண்டிவனத்திலுள்ள பயிற்சி நிலையம் 11.2.1971- லிருந்து பணிபுரிகிறது. தென்னார்க்காடு மாவட்டம் முழுதும் உள்ள 34 வட்டாரங்களுக்கும் இந்த நிலையம் பயன்படுகிறது. விவசாய விஞ்ஞானிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையே இணைபாலமாக இயங்குவதே இந்நிலையத்தின் நோக்கமாகும்.

இந்தப் பயிற்சி' நிலையம் செய்யும் தொண்டுகளைப் பார்ப்போம்.

ஒவ்வொரு பயிற்சிக் காலத்துக்கும் 25 உழவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்; ஒவ்வொரு வட்டாரத் தலைநகரிலும் ஐந்துநாள் பயிற்சி அவர்களுக்குத் தரப்படுகிறது. பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த அலுவலர்களாலும் சில சமயங்களில் சம்பந்தப்பட்ட நிபுணர்களாலும் உழவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன. இவை தவிரத் திரைப் படங்களின் (Visual Education) மூலமாகவும் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

பருவத்திற்கேற்றவாறு பயிரிடப்படும் பயிர்கள் சாகுபடி செய்வதற்கு முன் அப்பயிர்களின் கட்டுக்கோப்பு மற்றும் சாகுபடி முறைகளில் உழவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் மூலம் ஆராய்ச்சி முடிவுகள் அறிவிக்கப்படுவதோடு, பயிற்சியாளர்கள் அவற்றில் ஈடுபடும் வண்ணம் செயல்முறை விளக்கங்களும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு பயிற்சியிலும் பங்கு பெறும் உழவர்களுக்கு உணவுச் செலவுக்காக நாளொன்றுக்கு ஒருவருக்கு ரூபாய் 3.50 வீதம் பயிற்சி அளிக்கும் ஐந்து நாட்களுக்கும் அளிக்கப்படுகிறது.

ஆண் உழவர்களுக்குப் பயிற்சி அளிப்பது போலப் பெண் உழவர்களுக்கும் நிலையப் பயிற்சி ஐந்து நாட்களுக்குக் கொடுக்கப்படுகிறது. மனை இயல், விஞ்ஞான வேளாண்மை, தானியம் மற்றும் விதை சேகரிப்பு இவைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சிக்கு ஆண் உழவர்களைப் போலவே பெண் உழவர்களும் 25 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். நாளொன்றுக்குப் பெண் பயிற்சியாளர் ஒருவருக்கு ரூபாய் 3.50 சாப்பாட்டுச் செலவுக்காக வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சியின் போது, பெண் உழவர்களுக்குப் புதிய உயர் விளைச்சல் தானியங்களிலிருந்து சுவையானபண்டங்கள் செய்வது குறித்துச் செயல் விளக்கம் காண்பிக்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு பயிற்சிக்கும் ரூ. 50 வீதம் கொடுக்கப்படுகிறது. இதுவரை 21 செயல் முறைகள் நடத்தப் பெற்றுள்ளன.







ஆண் உழவர்களுக்கு 34 முகாம்களும், பெண் உழவர்களுக்கு 29 முகாம்களும் நடத்தப் பெற்றிருக்கின்றன. 759 ஆண் உழவர்களுக்கும் 633 பெண் உழவர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த முகாம்களில் வேளாண்மை குறித்துப் புதிய செய்திகளை எல்லாம் அறிந்து கொண்ட பயிற்சியாளர்கள் கிராமத்திலுள்ள ஏனைய உழவர்களும் புதிய உத்திகளைக் கையாள்வதற்கு வழிகாட்டி வருகிறார்கள்.

குறைந்த செலவில் அதிக விளைச்சல் காண்பதற்குப் புதிய முறைகள் வேளாண்மைத் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனால், தகவல்களும், வழிகாட்டுதலும் கிராமங்களில் தொடர்ந்து கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இந்தக் குறிக்கோளுடன் ஆண் உழவர் விவாதக்குழு 200, பெண் உழவர் விவாதக்குழு 100- இதுவரை-சில குறிப்பிட்ட கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விவாதக்குழுவில் 20 ஆண் அல்லது பெண்

உழவர்கள் இடம் பெறுவார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் தலைமையானவர் அமைப்பாளர் என்று சொல்லப்படுகிறார். அமைப்பாளர்களுக்கு ''டிரான்சிஸ்டர் செட்''டுகள் கொடுக்கப்படுகின்றன. அவற்றை இயக்கி, வானொலியில் ஒலிபரப்பப்படும் வேளாண்மைச் செய்திகளைக் கேட்டு அவை குறித்துக் கிராம மக்களிடம் விவாதம் செய்கிறார்கள். வேளாண்மைக் குடியினரின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு இந்த விவாதக்குழு ஒரு வாயிலாகப் பயன்படுகிறது.

அமைப்பாளர்களுக்கும் விவாதக் குழுவினருக்கும் வேளாண்மை குறித்த தகவல்கள் அறிந்து கொள்வதற்காக, 'விவசாய விளக்கங்கள்', 'சீர்மிகு சாகுபடி', ஆகிய விளம்பரச் செய்தி மடல்களும் 'தமிழரசு' இதழும் வழங்கப்படுகின்றன.

பயிற்சி பெறும், ஆண் பெண் உழவர்கள் பல்வேறு தேசிய விளக்கப் பண்ணைகளுக்கும் ஆராய்ச்சிப் பண்ணைகளுக்கும் அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இச்சுற்றுலாவிற்கு 1971-72 ஆம் ஆண்டில் ரூ. 1,000 செலவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு பல வகைகளிலும் வேளாண் . குடியினருக்குச் சிறந்த பயிற்சி தந்து வருகிறது இந்த நிலையம்.

ஒருழவர் பயிற்சி நிலையத்தை விட்டுப் புறப்பட்ட நாங்கள், அடுத்துச் சொல்லேருழவர்களுக்குப் பயன்படும் காகிதத் தொழிற்சாலையை நாடிச் சென்றோம். விழுப்புரம் அருகில் கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பிடாகம் என்ற ஊரில் இயங்கிவரும் கையினால் காகிதம் செய்யப்படும் நிறுவனத்தைப் பார்வையிட்டோம்.

நவீன காகித ஆலைகளுடன் போட்டி போடத்தக்க அளவுக்கு இங்கே கையினால் உருவாக்கப்படும் காகிதங்கள் சிறப்பாகக் காட்சி தருகின்றன. வித விதமான தாள்கள், பல வண்ணங்களில், பல தரங்களில் உருவாக்கப்படுகின்றன. தமிழ்நாடு காதி கிராமத் தொழில் வாரியத்தின் நிருவாகத்தில் உள்ளது இந்த நிறுவனம்.



தேவையில்லை என்று ஒதுக்கப்படும் பொருள்களைக் கொண்டு, செல்வத்தைத் திரட்டுவது இந்த நிறுவனத்தின் அரும் பணி என்றுகூற வேண்டும். எப்படித் தெரியுமா? காகிதம் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களைப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.



பழைய கந்தைத் துணிகள், கழிவுக் காகிதங்கள், வெட்டப்பட்ட காகித நறுக்குகள், பனியன் துணிகள், தையற்கடைத் துண்டுத்துணிகள் வீணான கோணிகள்-இவற்றுடன் முக்கிய இரசாயனப் பொருள்களான, அலுமினியம் சல்பேட், சோடியம் சிலிகேட், மற்றும் வண்ணக் கலவைகள் ஆகியவற்றைச் சேர்த்துக் காகிதங்களைச் செய்கிறார்கள். இங்கே உருவாக்கப்படும் காகித வகைகள்:

எழுதுதாள்

அச்சுத்தாள்

முத்திரைத்தாள்

பிரதிகள் எடுக்கும்தாள்

பத்திரத் தாள்

ஒத்தும் தாள்

மேலட்டைத்தாள்

அட்டைக் காகிதங்கள்

அழைப்பிதழ் அட்டை



இவை தவிரப் பலவகையான கோப்பு அட்டைகளும் (பைல்களும்) இங்கே தயாரிக்கப்படுகின்றன. இங்கே தயாராகும் புகைப்பட ஆல்பம் மிகச் சிறப்பாக உள்ளது. இங்கே தயாராகும் 'மார்பிள் காகிதம்' ஒவ்வொரு தாளும் ஒவ்வொரு டிசைனாக இருப்பதுடன் கவர்ச்சியாக உள்ளது. 1962-ஆம் ஆண்டிலே இந்த நிலையம் துவக்கப்பட்டது என்றாலும், 1967 வரை இது இலாபத்தில் நடைபெறவில்லை, அதற்குப் பின்னர்தான் முனைப்பான விற்பனை நடைபெற்று இலாபத்தை ஈட்டி வருகிறது.

1967-68-ஆம் ஆண்டில் ரூ. 19,825.05, 1968-69-ஆம் ஆண்டில் ரூ. 14,291.73 1969-70-ல் ரூ. 10,373.28, 1970-71-ல் ரூ. 5,708.67, 1972-73-ல் ரூ. 13,219.32 இலாபமாகக் கிடைத்திருக்கிறது.



காங்கிரிட் குழாயில் கம்பி பொருத்தப்படுகிறது

இருபத்தைந்து தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்புத் தந்து வரும் கிராமத் தொழிலான இந்தத் தொழில் எதிர்காலத்தில் வளம் பெறுவதற்கு மிகுந்த வாய்ப்பு உள்ளது. இங்கே தயாராகும் காகிதங்கள், பம்பாய், போன்ற வெளி மாநிலங்களுக்கும் செல்லவிருக்கின்றன என்ற செய்தி நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தந்து வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம் நல்ல முறையில் செயல்லாக்கப்பட்டு வருகிறது. 18,683 சிறுநிலக்கிழார்கள், 17,087 மிகச் சிறுநிலக்கிழார்கள் இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சமுதாயக் கிணறுகள் தோண்டுதல், மின்சார மோட்டார் பொருத்தப் படுதல், பழைய கிணறுகள் ஆழப்படுத்தல், ஆட்டு மந்தைகள், கோழிப்பண்ணைகள், பால் வழங்கு நிலையங்கள் உருவாக்குதல், வேளாண்மைக்குக் கடன் வழங்குதல் ஆகியவை இந்தத் திட்டத்தின் வாயிலாக உருவாகியுள்ள பணிகளில் ஒரு சில.

கோலியனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குச் சென்றோம். அங்கே ஒரு டிராக்டர் எங்களை வரவேற்றது. சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாகக் கிடைத்துள்ள 25,234.96 ரூபாயின் உதவியினால், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் 2-12-1972 அன்று வாங்கிய டிராக்டர்தான் அது. 13.3.73 முதல், இது உழவுப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. சாதாரண விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு விதை விதைப்பதற்கு (Puddling) ரூ. 40 வீதமும் உழுவதற்கு ரூ. 27 வீதமும் வசூல் செய்கிறார்கள்; ஆனால் சிறுநிலக்கிழார் விஷயத்தில் சலுகை காட்டப்படுகிறது. அவை, முறையே ரூ. 26.70 வீதமும், ரூ. 16 வீதமும் வசூலிக்கப்படுகின்றன.

சிறுநிலக்கிழார் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் மதுரை, திருநெல்வேலி, தென் ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில்தான் நடைபெறுகின்றது. தென்னார்க்காட்டில் இது முன்னோடித் திட்டமாகத் திகழ்கிறது. ஐந்தாண்டுக் காலத்திற்குள் ஏறக்குறைய 1.60 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்காகத் தென்னார்க்காடு மாவட்டத்தில் மட்டும் செலவிடப்பட இருக்கிறது.



அடுத்து, பண்ணுருட்டி ஊராட்சி ஒன்றியத்தை நோக்கி நாங்கள் புறப்பட்டோம், பலாப் பழங்களுக்கும் முந்திரிக்கும் பெயர்போன பண்ணுருட்டி தற்போது வேறொரு வகையிலும் புகழ் பெற்ற பதியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. வீராணம் திட்டத்திற்குத் தேவைப்படும் மாபெரும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னைக்கு அன்னை காவிரி பாய்ந்து வருவதற்குரிய வாயில்கள் இங்கே உருவாகிக் கொண்டிருக்கின்றன.

அகத்தியர் கமண்டலத்தில் காவிரியைக் கொண்டு வந்தார் என்ற கதை கேட்பதற்குச் சுவையாக இருக்கலாம்! ஆனால் காவிரியைச் சென்னைக்குக் கொண்டு வருவது எப்படி என்ற பிரச்சினைக்கு அந்தக் கதை எந்த விதப் பயனும் தராது.

காவிரியைச் சென்னைக்கு வரவழைப்பதற்கு-ராட்சத வடிவில் காங்கிரிட் குழாய்கள் பொருத்தப்பட வேண்டும் என்பது பொறியியல் நிபுணர்கள் கண்டுள்ள அறிவாராய்ச்சி. எனவே, அதற்குரிய குழாய்களைத் தமிழ்நாட்டு நிறுவனம் ஒன்று, அரசுக்காகச் செய்து வருகிறது. கிரீஸ் நாட்டுத் தொழில் நிறுவனம் ஒன்றின் அறிவுரைப்படியும் செயல் முறைப்படியும் கூட்டுறவுடனும் இந்த மாபெரும் பணி நடைபெற்று வருகிறது. ஏறக்குறைய 40 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் இது. ஏறக்குறைய 20 அடி உயரமும், 5.5 அடி அகலமும் கொண்ட இந்த சிமெண்ட் குழாய்கள் தயாரிக்கப்படும் காட்சி கண்களையும், கருத்தையும் விட்டு அகலவே அகலாது!

காங்கிரிட் குழாய்கள் உருவாக்கப்படுவதும், அவற்றைச் சுற்றிக் கம்பிகள் முடுக்கப்படுவதும், அதன் பிறகு கம்பிகள் தெரியாவண்ணம், குழாய்கள் மீண்டும் சிமெண்டினால் பூசப்படுவதும் - அதன் பின்னர் வீராணம் திட்டத்திற்காக அந்தக் குழாய்கள் வெளியேறிச் செல்வதும் கண்கொள்ளாக் காட்சிகள். இவை அனைத்தும் மாபெரும் இயந்திரங்களின் உதவியினால் நடைபெறுகின்றன. இயந்திரங்கள் இயங்கும் காட்சிகளைப் பார்க்கும் போது தமிழ்நாட்டில்தான் இருக்கிறோமா, இயந்திரமயம் நிறைந்த மேலைநாட்டில்தான் நிற்கிறோமா என்ற ஐயம் நமக்குத் தோன்றுகிறது.



18-1-73 அன்றுதான் குழாய் தயாரிக்கும் பணி, பண்ணுருட்டியில் துவக்கம் ஆகியது. நாள் ஒன்றுக்கு 16 குழாய்கள் தயாரிக்கப்படுகின்றன. அருவியெனப் பொங்கி வருகின்ற காவிரி அன்னை 5.5 அடி அகலம் கொண்ட குழாய்களின் வழியாகச் சென்னைக்கு விரைந்து வரப் போகிறாள் என்ற செய்தியை இராட்சதக் குழாய்கள் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் - கருவறைக்குச் செல்லுமுன் வாயிலில் இருக்கும் துவார பாலகர்களுக்கு மரியாதை செய்வது போல, சென்னைக்கு வரும் அன்னை காவிரிக்குத் தடம் அமைத்துக் கொடுக்கும் காங்கிரிட் குழாய்களை வாழ்த்தி விட்டுப் புறப்பட்டோம்.

பண்ணுருட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த காடாம்புலியூர் ஊராட்சி மன்றத்தைச் சார்ந்த மதுரா கிராமத்தில் ஆழ்குழாய்க் கிணறு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் பார்க்கும் வாய்ப்புப் பெற்றோம். காவிரி அன்னையின் வருகைக்குரிய ஆக்க வேலைகளைப் பார்வை யிட்டதாலோ என்னவோ, சில விநாடிகளிலேயே நீர்த்தேக்கத் தொட்டியைக் காணுகின்ற வாய்ப்புக் கிடைத்தது போலும்!

ஏறக்குறைய 1,050 பேர் வசிக்கும் இந்தக் கிராமத்தில் கிணறு வெட்டப்பட்டு 1971-ஆம் ஆண்டு மின்சார மோட்டார் பொருத்தப்பட்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. 567 அடி ஆழத்திற்குக் குழாய் இறக்கப்பட்டுள்ளது. ஆழ்குழாய்க்கிணறு தோண்ட ரூ. 77,318.80, மின்சார மோட்டார் பொருத்த, நீர்த்தேக்கத் தொட்டி கட்ட ரூ. 42,700.00 ஆக மொத்தம் 1,20,018.80 ரூபாய் அரசு செலவு செய்துள்ளது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் உருவான ஆழ்குழாய்க்

கிணறு இது. இந்தக் கிணறு தோண்டப்படுவதற்கு முன்பு இந்தப் பகுதி மக்கள் குளத்துத் தண்ணீரை அருந்திக் காலம் கழித்து வந்தார்கள். அதனால் பல்வேறு வகையான நோய்களுக்கு ஆட்பட்டார்கள். இப்போது நல்ல குடிநீர் இவர்களுக்குக் கிடைத்து வருகிறது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் குடிநீர்த் திட்டத்திற்கு அரசு மிகுந்த உதவி செய்து வருகிறது. குடிநீர் வசதி எதுவும் இன்றி அல்லற்பட்ட 10 கிராமங்கள் பாதுகாக்கப் பெற்ற குடிநீர் வசதியினைப் பெற்றிருக்கின்றன. இந்தத் திட்டத்திற்காக, இந்த மாவட்டத்தில்,

1969-70-ல் ரூபாய் 1,61,277
1970-71-ல் ,, 1,68,191
1971-72-ல் ,, 4,08,000
1972-73-ல் ,, 1,60,000
செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் கிராமப்புற வேலைவாய்ப்பு முன்னோடித் திட்டம் சிறப்பான முறையில் நடைபெறுகிறது. இந்தத்திட்டத்தின் கீழ், சாலை அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன. மேலமாம்பட்டு என்ற ஊரில் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் சாலை ஒன்றினைப் பார்த்தோம். 2 கிலோமீட்டர் நீளமுள்ள இந்தச் சாலைப்பணியின் திட்ட மதிப்பீடு ரூ. 80,000. சாக்கடைகள் உருவாக்க ஆகும் செலவு மதிப்பீடு ஒரு லட்சம்.

இவ்வாறு இம்மாவட்டத்தில் அநேக கிராமங்களில் முதன்மைச் சாலைகளும், இணைப்புச் சாலைகளும் அரசின் முயற்சியால் உருவாகி வருகின்றன.

கரும்பு ஆலைகள் இருக்கும் எல்லையில், சில சாலைகள் கரும்புக்கு விதிக்கப்படும் வரிப் பணத்தைக் (Chess) கொண்டே உருவாக்கப்படுகின்றன.

அடுத்து நெல்லிக்குப்பத்தை நோக்கிப் புறப்பட்டோம். 42 ரெவின்யூ கிராமங்கள் கொண்ட நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியம் ஏறக்குறைய 54.32 சதுர மைல் பரப்பளவும், 14,853 ஏக்கர் பாசன வசதியும் பெற்றதாகும். மக்கள் தொகை 96,940. நிலவரி மூலம் இந்த ஒன்றியம் 1,26,226 ரூபாய் வருமானத்தைப் பெறுகிறது.

பாசன வசதிக்காக உள்ள (Tube Well) குழாய்க் கிணறுகளின் எண்ணிக்கை 3,002 ஆகும். மின்சாரத்தினால் பயன்படுத்தப் பெறும் பம்ப் செட்டுகளின் எண்ணிக்கை 4,240, எண்ணெய் இயந்திரத்தால் பயன்படுத்தப்படுபவை 207.



கல்விப்பணி, நல்வாழ்வுப் பணி, அரிசன மக்களின் உயர்வுப்பணி, இளைஞர் அணிப் பணிகள் எல்லாம் இங்கே சிறந்து விளங்குகின்றன. சமூகக் கல்வி தருவதில் இந்த ஒன்றியம் சிறந்து விளங்கி வருகிறது. மகளிர் மன்றங்கள் 30 கிராம வானொலி மன்றங்கள் 44, இந்த ஒன்றியத்தில் உள்ளன. ஊராட்சிகளினாலும் ஊராட்சி ஒன்றியங்களினாலும் நடத்தப் பெறும் நூலகம் 22 உள்ளன. பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய சீரணியினர் ரூ. 3,000 மதிப்பில், நூலகம்-மற்றும் வானொலி அறையினையும் கட்டியிருக்கிறார்கள்.

மைய அரசு, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தும் முனைப்பு கிராமக் குடிநீர் வசதித் திட்டத்தின் கீழ் நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் 39 கிராமங்களில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்கும் வேலையைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டு, தற்சமயம் வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இன்னும் ஓரிரு திங்களுக்குள் வேலைகள் யாவும் முடிவுற்றுவிடும் எனத் தெரிகிறது. இந்தத் திட்டத்தின் மொத்தமதிப்பீடு, ஏறக்குறைய 32.5 லட்ச ரூபாய் ஆகிறது.

அண்மையில், மேல் குமாரமங்கலத்தில் வெள்ளத்தினால் சேதமான வயல்களெல்லாம், தமிழக அரசு கொடுத்த உதவித் தொகையின் பயனால் சீர்திருத்தம் பெற்றுள்ளன. அந்த வயல்களில் எல்லாம் இன்று நல்ல விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது.

ஏறக்குறைய 6 அடி, 8 அடி உயரத்துக்கு மண் மூடப்பட்ட வயல்கள் எல்லாம், அரசின் நிவாரணப் பணிகளால் காக்கப்பட்டன. இன்று உயர் விளைச்சலைத் தந்துள்ளன. முதலாம் போக அறுவடை ஏற்கெனவே முடிந்துவிட்டது. இந்த இதழ் அச்சாகும் போதில் இரண்டாம் போக அறுவடை நடைபெறலாம்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 3 போகம் பயிரிடப்படும் நிலங்கள்கூட இருக்கின்றன. ஓர் உழவருக்கு ஏறக்குறைய ரூ. 1,200-லிருந்து 1,500வரை இலாபம் கிடைக்கிறது.



பெரிய அளவில் காணப்படும் காங்கிரீட் குழாய்கள்

வேளாண்மையைப் பொறுத்த வரையில் தென்னார்க்காடு மாவட்டம் தமிழ்நாட்டில் இரண்டாம் இடத்தைப் பெற்றிருக்கிறது.

இந்த நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கிராமத்தை 'அண்ணா கிராமம்' என்று மாதிரி கிராமமாக ஆக்குவதற்குத் திட்டம் உள்ளது. மதுரை மாவட்டத்தில் உள்ள காந்தி கிராமத்தைப் போலவே, இங்கே 'தென்னாட்டுக் காந்தியின்' பெயரால் அண்ணா கிராமம் என்று உருவாக்கி, சமூகப் பணிகள், கல்விப் பணிகள் ஆகிய அருந்தொண்டுகளைச் செய்து, மாதிரி கிராமமாக ஆக்க நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியம் முடிவு செய்திருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு, இது ஓர் அழியாத நினைவுச் சின்னமாகத் திகழப்போவது உறுதி.

நெல்லிக்குப்பம் ஊராட்சி ஒன்றியத்தை விட்டு நாங்கள் புறப்பட்டபோது இரவு பத்து மணியிருக்கும். இரவு 11.30 மணி அளவில் சிதம்பரம் அண்ணாமலை நகரில் ஆல்போல் தழைத்திருக்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் விருந்தினர் இல்லத்தை அடைந்து அங்கே தங்கினோம்.

மறுநாள்-அக்டோபர் 10-ஆம் நாள், காலை 9 மணியளவில் தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

மாவட்டத்தின் வளர்ச்சி பற்றியும், தமிழக அரசு தென்னார்க்காடு மாவட்டத்தில் செய்துவரும் சாதனைகளைப் பற்றியும் விவரமாகவும் விளக்கமாகவும் தெரிவித்தார். அவர் தெரிவித்த சில கருத்துக்களை இங்கே குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

''தென் ஆர்க்காடு மாவட்டம் பல வகைகளில் தன்னிறைவு பெற்றுத் திகழ்கிறது.

''கரும்பு, நெல், முந்திரி, மணிலா ஆகியவற்றின் விளைச்சலிலும், கல்வித்துறையிலும் இந்த மாவட்டம் தன்னிறைவு பெற்றுள்ளது.

''வெள்ளத்தால் இந்தமாவட்டத்தில் 10,000 ஏக்கர் சேதமடைந்திருந்தன. தமிழக அரசு ஏறக்குறைய ஒருகோடி ரூபாய் செலவு செய்து சீர்படுத்தியுள்ளது.

''இங்கே 8 லட்ச ஏக்கரில் நெல் விளைகிறது. இவற்றில் 3 லட்சம் ஏக்கர் ஆழ்கிணறுகளின் மூலம் பாசனம் செய்யப்படுகின்றன. 4 லட்ச ஏக்கர்கள் நதிகளின் மூலமாகவும் அல்லது ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமாகவும் பாசனம் செய்யப்படுகின்றன. மீதியுள்ள 1 லட்சம் ஏக்கரில் பாசனம் செய்வதற்கு நீர் வசதியை உருவாக்குவதுதான் இந்த மாவட்டத்தின் பிரச்சினை.

''இந்த மாவட்டத்தில் தனியார்களாலும் கூட்டுறவுத் துறையினாலும் மொத்தம் 4 சர்க்கரை ஆலைகள் உள்ளன. விரைவில் மற்றொரு கூட்டுறவு சர்க்கரை ஆலை திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்தில் திறக்க வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது''

-இவை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்த கருத்துக்களில் ஒருசில......!

பொதுவாகத் தென்னார்க்காடு மாவட்டம் நெல் விளைச்சலில் தஞ்சை மாவட்டத்துக்கு அடுத்த இடத்தைப் பெற்றிருக்கிறது. தஞ்சையைப்போல இயற்கை அளிக்கும் நீர் இங்கே கிடையாது. ஆழ்குழாய்க் கிணறுகள் மூலமோ, சமுதாயக் கிணறுகள் மூலமோதான் பாசன வசதி பெற வேண்டியிருக்கிறது.

ஐந்து லட்சம் ஏக்கராவில் உயர்விளைச்சல் ரக நெல் பயிரிடப்படுகின்றது. ஐ.ஆர். 20 அதிகமாகப் பயிரிடப்படுகின்றது. அதற்கடுத்து பொன்னி, ஐ.ஆர். 8 ஆகியவை பயிரிடப்படுகின்றன. 15 சத மின்சார வெட்டின் காரணமாக இந்த மாவட்டத்தின் வேளாண்மைத் தொழில் எள்ளளவும் பாதிக்கப்படவில்லை. 60, 70 சதவீத வெட்டின்போதுகூடப் பாதிக்கப்படவில்லை என்று மாவட்ட உழவர்கள் சிலர் தெரிவித்தார்கள்.

மாவட்ட ஆட்சியாளரின் சந்திப்புக்குப் பிறகு, பரங்கிப் பேட்டைக்குச் சென்றோம். அங்கே துறைமுக முகத்துவாரத்தில் அக்காலத்திய நாளங்காடிபோல் பல கடைகள் காணப்பட்டன. அங்கிருந்தோரெல்லாம் ஆர்வமாகக் கடலையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். காரணம் என்ன தெரியுமா? வலைவீசி இறால் பிடிக்கச் சென்றவர்களின் வரவினை எண்ணித்தான் வியாபாரிகளும் பொதுமக்களும் காத்துக் கொண்டிருந்தார்கள். இந்தப் பகுதியில் பிடிக்கப்படும் இறால், மேல் நாட்டுக்கு ஏற்றுமதியாகின்றன. அமெரிக்காவில் இவ்வகை மீனுக்கு அதிக வரவேற்புக் கிடைத்து வருகிறது. நமது தமிழ்நாட்டு மீன்கள் வெளிநாட்டுக்குப் போவதை எண்ணி மகிழ்ந்தோம்.



பரங்கிப் பேட்டையில் சலவைத்துறை ஒன்று வேண்டுமென்ற கோரிக்கை கடந்த 20 ஆண்டுக் காலமாக நிறைவேற்றப் படாமல் இருந்து வந்தது. அந்தக் கோரிக்கையைத் தமிழக அரசு அண்மையில் நிறைவேற்றி வைத்திருக்கிறது. ஏறக்குறைய 80 ஆயிரம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சலவைத் துறைக்கு 50 விழுக்காடு தொகையை மானியமாகவும் 50 விழுக்காடு தொகையைக் கடனாகவும் கொடுத்துள்ளது தமிழக அரசு.

இங்கே துவக்கம் ஆகும் பக்கிங்காம் கால்வாயில் 3.5 இலட்ச ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டுவதற்கும், வெள்ளாற்றில் ஒரு பாலம் கட்டுவதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது. வெள்ளாற்றில் அமையவிருக்கும் இந்தப்பாலம் இப்பகுதி மக்களுக்குப் பல வகைகளிலும் பயன் தரும் என்பது உறுதி.

பரங்கிப் பேட்டையில் அமைந்துள்ள கடல்வாழ் உயிரினம் பற்றிய கல்வி நிலையத்தினைப் பார்த்தோம்.

இங்கே பரங்கிப்பேட்டையில் கிடைத்துள்ள கடல் வாழ் உயிரினங்களைக்கொண்டே ஒரு கண் காட்சியும் அமைத்திருக்கிறார்கள். பாம்புகள், எத்தனை ரகம்! மீன்கள் எத்தனை ரகம்!

கண்காட்சியை வியந்தபடியே அண்ணாமலைப் பல்கலைக் கழக விருந்தினர் இல்லம் நோக்கிப் பறந்தோம். எங்களுக்காக அங்கே காத்திருந்த நண்பகல் உணவை ஒருகை பார்த்து விட்டுப் புறப்பட்டோம்.... எங்கள் உந்து வண்டி நஞ்சை வளமும் கொஞ்சும் கலை வளமும் கொழிக்கும் தஞ்சை மாவட்டத்தை நோக்கி ஓடத் தொடங்கியது.

(அடுத்த இதழில் முடியும்)

தாவரங்களின் வளர்ச்சிக்குப் பல மூலகங்கள் அல்லது சத்துணவுகள் தேவைப்படுகின்றன. இவற்றில் சில சத்துணவுகள் அளவில் அதிகமாகவும், சில குறைந்த அளவிலும் தேவைப்படுகின்றன. அளவில் அதிகமாகத் தேவைப்படும் சத்துணவுகளைப் 'பெரு மூலகங்கள்' என்றும், குறைந்த அளவில் தேவைப்படுபவைகளை 'சிறு மூலகங்கள்' அல்லது 'சிறு அளவில் தேவைப்படும் சத்துணவுகள்' என்றும் அழைக்கப்படுகின்றன. பெரு மூலகங்களைப் பற்றிப் பலருக்கும் நன்ருகத் தெரியும். அவைதான் தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து எனப்படுபவை. இந்த மூலகங்களின் தேவையை இரசாயன உரங்கள் போடுவதன் மூலம் பூர்த்தி செய்கிருேம். இவற்றை எந்த அளவில் போட வேண்டும் என்பது பற்றி ஏராளமான ஆராய்ச்சிகளின் முடிவுகள் நமக்குத் தெரிந்திருக்கின்றன. இந்த அளவுக்கு, நுண்ணுணவுச் சத்துக்களைப் பற்றிய விவரங்கள் நம்மிடம் இல்லை.

சிறிது காலமாக நுண்ணுணவுகளைப் பற்றிய அவசியத்தை நாம் உணர ஆரம்பித்திருக்கிருேம். அதிக விளைச்சல் தரும் வகைகளை உபயோகிப்பதால் அதிக அளவு இரசாயன உரங்களை உபயோகிக்கிருேம். இதனுல் ஏற்கெனவே நிலத்திலுள்ள நுண்ணுணவுகளின் அளவு, பயிர்களுக்குத் தேவையான அளவு கிடைப்பதில்லை. ஆகையால் பயிர் வகைகள் அதிக உரமிடுவதால் ஏற்படக்கூடிய முழுப்பலனைக் கொடுப்பதில்லை. சில வகைப் பயிர்கள் நுண்ணுணவுகளின் தேவைகளைச் சிற்சில குறிகளால் (Deficiency symptoms) காட்டுகின்றன. மற்ற பயிர்கள் அவற்றை வெளிக் காட்டாமல் ''மறைவு பசியினுல்'' (Hidden Hunger) வாடுகின்றன; அதனுல் அவைகளுக்கு அதிக விளைச்சல் தரும் சக்தி இல்லாமல் போய் விடுகின்றன.

சில பயிர்கள் சில வகை மண்ணில் நல்ல மகசூல் தராமல் இருப்பதற்கும், அதே வகைப் பயிர்கள் மாறுபட்ட மண் வகையில் அதிகப் பலன் தருவதற்கும் இந் நுண்ணுணவுச் சத்துக்கள் தேவையான அளவுக்கு முறையே அங்கு இல்லாததும், இருப்பதுமே மூலகாரணமாகும்.

மண்ணில் இச் சிறு மூலகங்களின் குறைவு மூன்று காரணங்களால் ஏற்படுகின்றன. அவை :

(1) வெகு நாட்களாக அந் நிலம் வேளாண்மைக்கு உபயோகப்படுத்தப்பட்டிருப்பது.

(2) இடைவிடாமல் ஒரு நிலத்தில் இரசாயன உரங்கள் உபயோகித்து பயிர் செய்து வருவது.

(3) பல பயிர்த் திட்டத்தின்படி தொடர்ந்து பயிர் செய்தல்.

மேற்கூறியவற்ருல்— நுண்ணுணவுப் பற்ருக் குறையினுல் —பயிர்களில் 'மறைவுப் பசி' அதிக அளவில் ஏற்படக் கூடும். இதனுல் நுண்ணுணவின்றிப் பயிர்கள் தவிக்கின்றன. மேலும் இப் பயிர்த் தவிப்புச் சம கால நிலை (சீதோஷ்ணம்) நாடுகளில் இருப்பதைவிட, வெப்ப மண்டல நாடாகிய நம் நாட்டில் ஏற்பட அதிக வாய்ப்பு இருக்கிறது.

சாதாரணமாக, சிறந்த தாவர வளர்ச்சிக்குக் கீழ்க் கண்ட நுண்ணுணவுச் சத்துக்கள் தேவையெனக் கருதப்படுகின்றன. அவைகள் தேவையான அளவு இல்லாதிருப்பின், பயிர்களில் கீழ்க் கண்ட 'பற்ருக் குறை அறிகுறிகள்' காணப்படும்

# சிறுதுளி ஆனல் பெரும் தேவை!

| நுண்ணுணவுச்சத்து (1) | பயிர்கள் (2) | பற்ருக்குறை அறிகுறிகள் (3) |
|---|---|---|
| 1. வெண்காரம் | குதிரை மசால் | நுனி வெளுத்துக் காணப்படும். |
| | கோசுக் கீரை | நடுத் தண்டுப் பாகத்தில் கருமை படர்ந்திருக்கும். |
| | தக்காளி | இலைகள் வெளுத்துச் சுருங்கி இருக்கும். |
| | ஆப்பிள் | பழத்தின் நடுவில் கெட்டித்தன்மை ஏற்பட்டிருக்கும். |
| | எலுமிச்சை | நுனியிலிருந்து கருகி, இலைகள் மாறுபட்டிருக்கும். |
| 2. மாலிப்டினம் | பூக்கோசு (காலிஃப்ளவர்) | இலைகள் சுருண்டுவிடும். இலைப் பகுதிகள் மிகவும் குறைந்துவிடும். |
| 3. மாங்கனீசு | ஓட்ஸ் | சாம்பல் புள்ளிகள் காணப்படும். |
| | பச்சைப்பட்டாணி | நீர்த் திவலைப் புள்ளிகள் தோன்றும். |
| | கரும்பு | நீளக்கோடு வியாதி வரும். |
| | பசலைக் கீரை | மஞ்சள் இலை வியாதி தோன்றும். |
| 4. தாமிரம் | எலுமிச்சை | குருத்து வாடல் நோய் ஏற்படும். |
| | வெங்காயம் | மஞ்சள் நிற, கெட்டியில்லாத வெங்காயம் தோன்றும். |
| 5. துத்தநாகம் | மக்காச்சோளம் | இலை அடிப்பாகம் வெளுத்துப் போய்விடும். |
| | பழ மரங்கள் | நரம்பு இடைப்பகுதி வெளுத்துவிடும். |
| 6. இரும்பு | எல்லா வகைத் தாவரங்கள் | இலை வெளுத்துக் காணப்படும். |

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர்;
சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


பாவை
எழிலுக்கு பருவம் தரும்
வண்ணத்துப் பூச்சி!
அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
பருத்திப் புடவைகள் • லுங்கிகள்
வேட்டிகள் • வீட்டு அலங்காரத் துணி வகைகள் • துண்டுகள் • கைக்குட்டைகள்
பட்டு டைகள் • கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
கைத்தறியே வண்ணத்துப் பூச்சி!



# ...ஆனல் தமிழ்நாடு பரிசுச் சீட்டு சாலவும் நன்று!

ல் பரிசு: ரூ. 1,00,000 (ஒவ்வொரு வரிசைக்கும்)

முதல் மற்றும் இரண்டாவது பரிசு பெறும் இலக்கங்களுக்கு முன்னும், பின்னும் உள்ள இலக்கங்களுக்கு ஆறுதல் பரிசுகள் அளிக்கப்படும். மற்றும் ஏராளமான இதர பரிசுகள்.

**62-வது குலுக்கல் நாள்: 12-12-73**

பரிசுச் சீட்டு ஒன்றின் விலை ரூ. 1/- தான்

கடிதத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர் செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009

சேலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்


தமிழரசு
16.12.
40 க

அரசு-மிகவுயர்ந்த தரமான

போர்ட்லெண்ட் சிமெண்ட் உங்களுக்குக் கிடைக்கிறது

அரசு சிமெண்ட் தரத்தில் தலைசிறந்து விளங்குவது; தரமே உருவானது. வலிமைக்கு மற்ருெரு பெயரான அரசு, வலுவான கட்டுமானங்களுக்கு நேர் நிகரில்லாததாகும்.

அரசு சிமெண்டுக்குள்ள தனிச் சிறப்புத் தன்மைகள், அதனுல் கட்டப்படும் எதையும் திண்மையும், தீர்க்காத திறனும் கொண்டு நெடுங்காலம் நீடித்து விளங்கச் செய்கின்றன.

அரசு ஒரு நவீன, விஞ்ஞான ரீதியான தயாரிக்கப்படும் போர்ட்லெண்ட் சிமெண்ட் குடியிருப்பு இல்லங்கள், பண்ணைக் கட்டிடங்கள், அலுவலக கட்டிடங்கள், தானியக் குதிர்கள், குழாய் அமைப்புகள், அணைகள், பாலங்கள், நீர்த்தொட்டிகள், நீர்த் தேக்கங்கள், நீச்சல் குளங்கள், அலங்கார அமைப்புக்கள் போன்ற எத்தனையோ கட்டுமான வேலைக்கு அரசு அருமையானதொரு சிமெண்ட்.

அரசு தமிழ்நாட்டிலேயே முதலாவதான ஒரே அரசினர் துறை சிமெண்ட் ஆலை




யால், கடுமையான தரக்கட்டுப்பாடுகளைக் கையாண்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ்
(தமிழ்நாடு அரசுக்கு சொந்தமான நிறுவனம்)
ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

அரசு -வலிவும் வனப்பும் வாய்ந்தது


21 DEC 1973
...ER UNIT, MADRAS

# சட்டப்பேரவையில்...

அமெரிக்காவில் உள்ள தொழில் அதிபர், கலைப் பொருள்களைச் சேகரிக்கும் எண்ணத்தில் தஞ்சை மாவட்டம் சிவபுரத்தில் இருந்த நடராசர் சிலையை வாங்கியிருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பிரதம மந்திரிக்கும் தமிழக அரசு சார்பில் 2-7-73-ல் கடிதம் எழுதப்பட்டது. அதற்கு 2-8-73-ல் பதில் வந்தது. அதில் தேவையான எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுவதாகத் தெரிவித்து இருந்தார்.

சிலைகள் கிடைக்கக் கிடைக்க அவைகளை ஒரு கோவிலில் அல்ல—படிப்படியாக மற்ற கோவில்களிலும் வைத்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

* * *

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லத்திலிருந்து பிச்சைக்காரர்கள் வெளியேறும் அளவுக்கு அது வசதி குறைந்த இடம் அல்ல. வயிற்றுக்குச் சாப்பாடும் வசதியான படுக்கையும், தொழிற்பயிற்சியும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது. அங்குள்ள கோழிப் பண்ணைகளில் உள்ள முட்டைகளை விற்காமல் அவர்களுக்கே கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 10 தொழுநோய் இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்ட பிறகு, பிச்சை எடுப்பதைத் தடுக்கச் சட்டம் கொண்டு வரத் திட்டமிட்டு இருக்கிறோம். இவற்றில் 9 தொழுநோய் இல்லங்கள் கட்டப்பட்டுவிட்டன. மீதி உள்ள ஒன்றும் கட்டப்பட்ட பிறகு, பிச்சை எடுப்பவர்களைப் பிடித்து அடைக்கச் சட்டம் கொண்டு வரப்படும். இதற்கான சட்டம் சட்ட இலாகாவின் பரிசீலனையில் உள்ளது.

* * *

விடுதலைப் போராட்ட வீரர்களில் சென்னை மாவட்டத்தை சேர்ந்த 273 பேருக்கும், மற்ற மாவட்டங்களைச் சேர்ந்த 30 பேருக்கும் கடந்த சுதந்திர தினத்தன்று சென்னையில் தாமிரப் பட்டயங்கள் வழங்கப்பெற்றன.

## முதல்வர் கலைஞர்

மொழிப் போராட்டம் எல்லைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எல்லாம், எப்படி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கெல்லாம் மானியமும் கவுரமும் வழங்கப்பட்டதோ அதுபோல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டப் பேரவையின் குளிர்காலக் கூட்டத் தொடர் 19—11—1973 திங்கட்கிழமையன்று தொடங்கி 4—12—73-ல் நிறைவெய்தியது; இடைப்பட்ட நாட்களில்—இரண்டு வார காலம் நடைபெற்ற சட்டப் பேரவையில், உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் வழங்கிய பதிலுரைகளையும் அறிவிப்புகளையும் மட்டும் இங்கே ஓரளவு தொகுத்துத் தந்திருக்கிறோம்.

தமிழக அரசு வழங்கிய தாமிரப்பட்டயம், நமது தமிழ் நாட்டு 'டான்சி' நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது; ஒவ்வொன்றும் 65 ரூபாய். மொத்தம் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்டது. இது தமிழில் எழுதப்பட்டது.

டில்லி சர்க்கார் விதிகளின் படி போராட்ட வீரர்கள் என்போர் 16 மாதம் ஜெயிலில் இருந்திருக்க வேண்டும் என்று இருக்கிறது. அதைத் தளர்த்தும்படி மேலவையில் கேட்டார்கள். நாம் இதுபற்றி டில்லிக்கு எழுதினோம். டில்லி சர்க்கார் விதியைத் தளர்த்த விரும்பவில்லை. அதன்பேரில், மாநில அரசு மூலமாக, 2, 3 மாதங்கள் ஜெயிலில் இருந்தவர்களுக்கும்கூடத் தாமிரப் பட்டயம் வழங்க முடிவு செய்து 10 ஆயிரம் பட்டயங்கள் தயாரித்தோம். அவற்றில் 4,749 பட்டயங்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. மேலும் மனுக்கள் வந்தால் கவனிக்கப் படும்.

டில்லி சர்க்கார் கொடுக்கும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மானியத்துக்காக, 8 ஆயிரத்து 773 மனுக்கள் வந்தன. 5,333 மனுக்கள் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டன. மீதி 3,440 மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

* * *

பூம்புகாருக்கு இதுவரை செலவிட்டிருப்பது 6 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய். மேலும் 8 இலட்சம் ரூபாய் செலவிட ஒப்புதல் கேட்டிருக்கிறோம். சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் பல்வகை மண்டபங்களை அமைக்க இது செலவிடப்படும். இந்த ஆண்டு இலஞ்சி மன்றம், நெடுங்கல்

மன்றம், பாவை மன்றம் ஆகியவை அமைக்கவும், கரிகாலன் இளங்கோ அடிகள் ஆகியோரது உலோகச் சிலைகளை அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

• • •

பழம்பெரும் நினைவுச் சின்னங்கள் தமிழகத்தில் இருந்திட வேண்டும் என்னும் கொள்கை உடையது இந்த அரசு. அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே இதனை மனத்தில் கொண்டு உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் சிறப்பாக நடத்தினுர். தமிழ்ப் பெரியார்களுக்குச் சிலைகள் எழுப்பப்பட்டன.

சமீபத்தில் பாஞ்சாலங்குறிச்சிக்குச் சென்று இருந்த போது, கட்டபொம்மன் கட்டியதாகக் கூறப்படும் கோட்டை ஒன்று இருப்பதாக ஓர் இடத்தைக் காட்டினுர்கள். அடித்தளம் மட்டும் காணப்பட்டது. அந்த இடத்தை அகழ்ந்து பார்த்ததில், 1 அடி உயரக் கட்டடம் கிடைத்திருக்கிறது. அந்த இடத்தை அடையாளச் சின்னமாக்குவதுடன் அதற்கு அருகிலேயே அந்த மாளிகை எப்படி இருந்திருக்குமோ அதைப்போலவே ஒரு மாதிரி மாளிகை அமைக்கப்படும்.

சென்னை மயிலைப் பகுதியில் உள்ள திருவள்ளுவர் ஆலயத்தைப் புதுப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறேம். இந்த ஆலயத்தைப் புதுப்பிக்க 4, 5 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். அந்த நேரத்தில், வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளை கவரப் பெரிய அளவில், தமிழ்நாட்டில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லை என்று கூறும் விதத்தில் 20, 30 இலட்சம் ரூபாய் செலவில் பெரிய கட்டடம் ஒன்று தமிழக அரசின் சார்பில் வள்ளுவர் பெயரால் கட்டப்படும்.

மற்றப் பிரச்னைகளில் கவனம் செலுத்தாமல் இதைமட்டும் நாம் செய்து கொண்டிருக்கவில்லை. பூம்புகார்ச் சின்னம் அமைக்கும் அதே நேரத்தில் குடிசைகளை மாற்றி அமைக்க 40 கோடி ரூபாய் செலவில் குடிசை மாற்றுத் திட்டம் அமல் நடத்தப்படுகிறது. குறை கூறுபவர்கள் அதையும் எடுத்துக் கூறிட வேண்டும். ராஜாஜிக்கு நினைவுச் சின்னம், தில்லையாடியில் கட்டப்பட்ட வள்ளியம்மை நகர் ஆகியவைகளையும் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

தலைமைச் செயலகத்தில் புதிதாக ஒரு கட்டிடம் கட்ட 1 கோடி ரூபாய் செலவிடப்பட இருக்கிறது.

• • •

அரசு ஊழியர்களுக்கு நிதி உதவி செய்யும் திட்டம் ஒன்றை அரசு செயலுக்குக் கொண்டு வர வேண்டும் என அரசிதழ்பதிவில்லாத அரசு ஊழியர் சங்கமும் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசு ஊழியர்கள் குறிப்பிட்ட தொகையை மாதா மாதம் கட்டிப் பணியில் இருக்கும்போதே அரசு ஊழியர் இறந்து விட்டால் அவருடைய குடும்பத்துக்கு இந்த உதவித் தொகை அளிக்கப்பட வேண்டும். அல்லது அரசு ஊழியர் ஓய்வு பெறும்போது இந்தத் தொகை அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஊழியர்கள் சங்கம் கோரியுள்ளது.

இந்தக் கருத்துக்களை மனத்தில் கொண்டு அரசு ஒரு புதிய திட்டத்தை வகுத்துள்ளது.

இந்த புதிய திட்டம் ''தமிழ்நாடு அரசு ஊழியர்கள் குடும்ப நிதித்திட்டம்'' என்று பெயர் பெறும்.

இத்திட்டத்தின் கீழ் அரசு ஊழியர்கள் அனைவரும் மாதா மாதம் ரூ. 10 கட்ட வேண்டும். இந்தத் தொகை அவர்கள் மாதச் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து கொள்ளப்படும்.

இந்தத்திட்டம் கொண்டு வரப்பட்டபின், பணியில் இருக்கும்போது அரசு ஊழியர் ஒருவர் இறந்துவிட்டால் அவர் ஆற்றிய பணிக்கால அளவு எவ்வளவு குறைவாக இருந்தாலும் ரூ. 10,000 அவரது குடும்பத்துக்குக் கொடுக்கப்படும்.

தொகை செலுத்தும் அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் போது அல்லது பணியிலிருந்து விலகிச் செல்லும்போது அவர்களுக்கு இந்த நிதியிலிருந்து அவர்கள் செலுத்தியுள்ள தொகை, அதற்கேற்ப அரசு செலுத்தும் தொகை ஆகியவை அவர்களுக்குக் கொடுக்கப்படும். இத்திட்டம் ஜனவரி '74 முதல் செயலுக்குக் கொண்டு வரப்படும்.

* * *

4-6-73-லிருந்து 3 மாத காலத்திற்குத் தமிழ்நாடு போலீசில் 30 அதிகாரிகளுக்கு (அரசிதழ் பதிவு பெருதவர்) 'கராத்தே' பயிற்சி அளிக்கப்படுகிறது.

உடல் தகுதி உள்ளவர்களுக்கு இந்தப் பயிற்சி கற்றுத் தரப்படுகிறது. 30 வயதுக்கு மேற்படாதவர்களுக்கே கற்றுத் தரப்படுகிறது. இதைக் கற்றுத் தரும் ஆசிரியருக்கு மாதம் ரூ. 1,000 வழங்கப்படுகிறது.

போலீசாருக்குக் கராத்தே பயிற்சி அளிப்பதுபோல தனியார் பலரும் இப்பயிற்சியைப் பெறுகிருர்கள். அதில் பெண்களும் இருக்கிருர்கள். மாணவ மாணவியர் 10 வயது 7 வயது உள்ளவர்கள் எல்லாம் பயிற்சி பெறுகிருர்கள். பெண் போலீசார் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு இந்தக் கருத்தும் மேற்கொள்ளப்படும்.

இன்று இந்தியா முழுமைக்கும் கராத்தே பயிற்சியைக் கற்றுக் கொடுப்பதற்கான சான்றிதழைத் தமிழ்மணி பெற்றிருக்கிருர். இவர், ஜப்பானில் பயிற்சி பெற்றவர். உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளிலும் உள்ளவர்களுக்கு இக்கராத்தே பயிற்சியைக் கற்றுத் தரும் தகுதி பெற்றவர்களிடமே நமது தமிழ்மணி சான்றிதழ் பெற்றிருக்கிருர்.

'கராத்தே' என்ருல் வெறும் கையினுல் என்று ஜப்பானிய மொழியில் பொருள். அதில் 'ரா' வுக்கு உள்ள துணை எழுத்தை நீக்கிவிட்டு 'கரத்தே என வைத்துக் கொண்டாலும் அதன் பொருள் தரும். வெறும் கையினுலேயே தாக்கி பாதுகாக்கலாம் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

கராத்தே உடற்பயிற்சியுடன் உள்ளத்திற்கும் நல்ல பக்குவத்தை அளிக்கும். வெளிப்புற எதிரிகளை மட்டுமின்றி, மன ஒழுக்கத்திற்குக் கேடு உண்டாக்கும் கோபம், உணர்ச்சிவசப்படல், ஆசைகள் இவைகளையும் எதிர்த்துப் போராட முடியும் என்று கூறப்படுகிறது.

• • • •

பெண் போலீஸ் வேலைக்கு இப்போது குறைந்த அளவில் தான் ஆள் எடுக்கப்படுகிறது. இதன் எண்ணிக்கை பெருகும் போது, அரிசனப் பெண்களைப் போலீஸ் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று உறுப்பினர் கருத்தும் கவனத்தில் வைத்துக் கொள்ளப்படும். அரிசனப் பெண்களைப் போலீஸ் வேலைக்குத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்ற எண்ணம் இல்லை. இப்போது பலர் பெண் போலீஸ் வேலைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களில் அரிசனப் பெண்களும் இருக்கலாம்.

கல்வி அமைச்சர்

## நாவலர் இரா. நெடுஞ்செழியன்

இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் என்ற பாகுபாடு வேண்டியது இல்லைதான். அவர்களை இணைக்கும் வேலை ஆராயப்படுகிறது. எனவே, அதற்கான உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படும்.

* * *

1972-73-ஆம் ஆண்டில் தமிழகத்தில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் 6 பேருக்கும், உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் 3 பேருக்கும் தேசீய விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

* * *

தனிப்பட்ட முறையில் தமிழ்ப் புலவர் தேர்வு பெறுவதற்கான வயது வரம்பு முன்பு 30 ஆக இருந்தது. இப்போது 25 ஆகத் தளர்த்தப்பட்டிருக்கிறது.

நல்வாழ்வுத்துறை அமைச்சர்

## பேராசிரியர் க. அன்பழகன்

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள கிராமப் பகுதிகள் முழுவதிலும் உள்ள கிராமப் பகுதித் தொழுநோயாளிகளின் பயனுக்காகப் பல தொழுநோய்த் தடுப்புப் பிரிவுகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள நகர்ப்புற பகுதிகள் 1983-ஆம் ஆண்டிற்கும் முன்னதாகப் பயனடையத் திட்டமிடப்பட்டுள்ளது.

''இந்த மாநிலத்தில் ஏழரை இலட்சம் தொழுநோயாளிகள் இருப்பதாகப் புள்ளிவிவரம் எடுக்கப்பட்டுள்ளது. இவர்களில் நாலு இலட்சம் பேருக்கு தற்போது பாராமெடிக்கல் என்ற பிரிவினர் வாரத்திற்கு இருமுறை சிகிச்சை அளித்து வருகிருர்கள். மிச்சம் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கும் நடவடிக்கை இன்னும் ஐந்தாண்டுகளில் நிறைவேறும். தற்போது தொழுநோய்ப் பிச்சைக்காரர் விடுதிகளில் ஐந்தாயிரம் பேர்வரைதான் இருக்க இடமிருக்கிறது. படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும்''.

* * *

தமிழக அரசின் கண்ஒளி வழங்கும் திட்டத்தை டில்லி சர்க்கார் பார்த்துவிட்டு, இது போல் மற்ற மாநிலங்களிலும் செய்யலாமா என்று ஆராய்ந்து வருகிறது. ஜனதிபதி கிரி அவர்கள்கூட இங்கு வந்து பேசும்போது, இந்தத்திட்டம் அகில இந்தியாவுக்கும் முன்னேடியாக விளங்கும் என்று வரவேற்ருர். இந்தத் திட்டம் இதுவரை நன்கொடை மூலமே நடந்துவந்துள்ளது.

இதற்கான பொதுநிதியை நிதித்துறைச் செயலாளர்தான் கவனிக்கிருர். பணம் அனுப்புகிறவர்கள் யாரும் அவருக்கு அனுப்பலாம். மாவட்டங்களில் கலெக்டர்கள் மூலமே இந்தக் கண் ஒளி வழங்கும் திட்டச் செலவு விவரங்கள் நடைபெறுகின்றன.

இதுவரை தமிழ்நாட்டில் 53,146 பேருக்கு இந்தத் திட்டத்தின்கீழ் கண்ணில் வளர்ந்த சதை, அறுவைச்சிகிச்சை மூலம் நீக்கப்பட்டு உள்ளது.

மற்றும் 53,064 பேருக்குக் கண் பரிசோதனையும் அறிவுரையும் வழங்கப்பட்டது. 876 பேருக்கு இதர சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளன.

* * *

தமிழ்நாட்டில் ஓமியோபதி கவுன்சில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கவுன்சிலில் அங்கம் வகிப்போர் தமிழ்நாட்டில் பிறந்தவர்களாக — கடன் தீர்க்கும் சக்தியுள்ளவர்களாக — சித்தஸ்வாதீனம் பெற்றவர்களாக — ஒழுக்கமுள்ளவர்களாக — ஊதியம் எதிர்பார்க்காதவர்களாக — 25 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும். நிர்வாக வசதிக்காக அக்குழுவில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான திட்டங்கள் பதின்மூன்று தொகுப்புகளாகத் தொகுக்கப்பட்டு மத்திய அரசிடம் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. 14-வதுதொகுப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. அடுத்த தொகுப்பில் சேர்ப்பதற்காக அம்பலவாடியில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படும் திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது.

## பொதுப்பணித்துறை அமைச்சர்.

# ப. உ. சண்முகம்

அரசாங்கம், அலுவலகக் கட்டிடங்களுக்கு வாடகையாக 1 இலட்சம் ரூபாய் வரை கொடுக்க வேண்டியுள்ளது. இதன், காரணமாகச் சென்னை நகரில் பலமாடிக் கட்டிடங்களில் ஒரு பகுதி வியாபாரக் கடைகளாகவும் வடைகைக்கு விட்டு அதன்மூலம் வருமானம் பெருக்கப்படும்.

தேனாம்பேட்டை மருத்துவ அலுவலகத்தில் 80 இலட்சம் ரூபாயில் ஒரு கட்டிடம்; அரசாங்க அச்சகக் காம்பவுண்டில் ரூ. 91 இலட்சத்தில் கட்டிடம்; பூங்கா ரெயில்வே நிலையம் அருகில் ரூ. 19 இலட்சத்தில் கட்டிடம்; அரசினர் தோட்டத்தில் கலைவாணர் அரங்கத்தையொட்டி ரூ. 3 கோடியே 64 இலட்சத்தில் கட்டிடம்; கலைவாணர் அரங்கத்திற்குக் கிழக்கே ஒரு கோடியே 40 இலட்சத்தில் கட்டிடம்; கல்மண்டபத்தில் ரூ. 55 இலட்சத்தில் கட்டிடம்; உட்வார்ப் அருகே ரூ. 64 இலட்சத்தில் கட்டிடம் ஆகியவை கட்ட உத்தேசித்துள்ளோம். இப்படிப்பட்ட கட்டடங்களைக் கட்ட ஒரு 'கட்டிட வாரியம்' அமைப்பது பற்றியும் ஆலோசித்து வருகிறோம்.

* * *

பாண்டியாறு புன்னம்புழா ஆகிய ஆறுகளின் தண்ணீரின் ஒரு பகுதியைக் கொண்டு கோவை மாவட்டத்தில் 1 இலட்சம் ஏக்கர் புஞ்சை அல்லது 50 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலத்துக்குப் பாசன வசதி கிடைக்கச் செய்வது குறித்த தமிழக அரசின் மாற்றுச் செயற்குறிப்புக்குக் கேரளம் பதில் அனுப்பாமல் இருக்கிறது இதற்கிடையே பாண்டியாறு புன்னம்புழா ஆறுகளின் தண்ணீரைப் பயன்படுத்துவது பற்றிக் கேரளத்துக்கும் தமிழகத்துக்கும் இடையே 1965 ஆம் ஆண்டு ஏற்பட்ட மூல உடன்பாட்டிலிருந்து தமிழகம் பின்வாங்குவதாகக் கேரள முதலமைச்சர் அச்சுதமேனன் கடந்த மாதத்தில் வெளியிட்ட கருத்து வியப்புக்குரியது என்றாலும், அனாவசியமான கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிக்காமல் இருக்க வேண்டும், என்பதற்காக பதில் கூறாது இருக்கிறோம். என்றாலும், நேரில் வந்து சென்னையில் பேச்சு நடத்துமாறு கேரள அமைச்சர் திரு. திவாகரனை அழைத்திருக்கிறோம்.

* * *

பெரம்பலூர்த் தொகுதி வில்வகுடி மக்களுக்கும் வெங்குளம் கிராம மக்களுக்கும் இடையே பாசன தண்ணீர் சம்பந்தமாக 8-1-72-இல் ஒரு கலவரம் நடந்தது. எதிர் காலத்தில் இத் தகராறு ஏற்படாவண்ணம் — வெங்குளம் ஆயக்கட்டு பாதிக்கப்படாமல் பாசன வசதி செய்து தர வில்வகுடி எல்லையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## தொழில் அமைச்சர்

# சே. மாதவன்

அடையாற்றில் எலக்ட்ரானிக் காம்ப்லக்ஸ் டைனுசின் சார்பில் டெலிவிஷன் செட் தயாரிரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும். 1974-ல் உற்பத்தி தொடங்கும். ஆண்டுக்கு 10 ஆயிரம் டெலிவிஷன்கள் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

தற்போது சிமெண்ட் தொழிற்சாலைகளுக்குக் கிடைக்கிற நிலக்கரி 2 நாள் மூன்று நாள் என்கின்ற அளவில்தான் தமிழகத்திலுள்ள 7 சிமெண்ட் ஆலைகளிலும் வழங்கப்படுகின்றது.

இந்தியாவிலேயே சிமெண்ட் உற்பத்தியில் முன்னணியில் நிற்கும் தமிழகத்திற்கு இப்படி நிலக்கரித் தட்டுப்பாடு ஏற்படுவது மேற்படி தொழிலைச் சரிவர இயங்கவிடாமல் தடுக்கிறது.

சுரங்க இலாகாவினரிடம் கேட்டால் நிலக்கரி இருக்கிறது; ஆனால் அவற்றை அனுப்பி வைக்க வேன்கள்தான் இல்லை என்று கூறுகிறார்கள். ரயில்வே இலாகாவினரிடம் கேட்டால் வேகன்கள் இருக்கின்றன. ஆனால் நிலக்கரி இல்லை என்று சொல்கிறார்கள்.

இப்படி இலாகாவுக்கு இலாகா முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று மத்திய அமைச்சர்களிடம் பேசும்போது இதுபற்றி இந்த அரசின் சார்பில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

இதுபோன்ற முரண்பட்ட நிலைகள் மட்டுமில்லை; சமீபத்தில் எண்ணூர் மின் உற்பத்திக்குப் போதுமான நிலக்கரி இல்லை என்று பேசப்பட்ட நேரத்திலேயே — ரயில்வே இலாகாவினர் போதுமான நிலக்கரி இல்லை என்று ரயில்கள் நிறுத்தப்பட்டும் இருந்தன. இவையெல்லாம் பார்க்கும்போது நிலக்கரி உற்பத்தியை- நாட்டின் தேவைக்கேற்ப வழங்குவதில் ஒரு சீரான கொள்கை அமையவில்லை என்பதுதான் புலனாகிறது.

* * *

''தீப்பெட்டித் தொழிலுக்குப் பயன்படும் பொட்டாசியம் குளோரைடு தயாரிக்கும் தொழிற்சாலை, மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் நரசிங்கம்பட்டி என்ற கிராமத்தில் ரூ. 75 இலட்சம் செலவில் அமைய இருக்கிறது. தமிழ்நாடு தொழில்வளர்ச்சி நிறுவனமும், திருமங்கலம் மெட்டல் பவுடர் கம்பெனியும் கூட்டுத்துறையில் தொடங்கவிருக்கும் இந்த 'பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட் நிறுவனம், ஆண்டுக்கு 1825 டன் உற்பத்தித் திறன் கொண்டு 1974 ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கும். இதில் 49 சதவீதம் பங்கு, சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கே வழங்கப்பட்டுள்ளது.''

''தென்னை நாரைப் பயன்படுத்திக் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அனுமதிக்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் பட்டுக்கோட்டைச் சுற்றுவட்டாரத்தில் அமையலாம்.

''இந்தத் தொழிற்சாலை அமைவதற்கு 10 ஆயிரம் தென்னை மரங்கள் தேவைப்படும். இதன் உற்பத்தித் திறன் 1974 - ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கும்.''

* * *

''மதுரை, கோவை, திருச்சி சேலம் ஆகியபகுதிகளில் மின் சாரக் கருவிகள் (எலக்ட்ரானிக்) தொழிற்சாலைகளுக்காகச் செயல்படும் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப்படும்.

மின்கருவிகள் உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகளை வளர்ச்சி அடையச் செய்வது, தொழிற்சாலை நடத்துகிறவர்களுக்குத் தேவையான உதிரி உறுப்புகள் மற்ற துணைக்கருவிகள் கிடைக்க உதவுவது பற்றி ஆராயத் தனி அதிகாரி ஒருவரைச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் நியமித்துள்ளது.

மாநிலத்தில் மின்தொழிற்சாலைகளுக்கான 24 உதிரி உறுப்புகள் தயாரிக்க முடியுமென்று அரசு நியமித்த குழு முடிவு செய்துள்ளது.''

* * *

ஆத்துக்குடித் துறைமுகத் தென்பகுதி நெல்லை மாவட்டத்தில் வைப்பாறு, வேம்பாறுப் பகுதி, இராமநாதபுரம் மாவட்டத்தில் மரியூர்ப் பகுதி, செங்கற்பட்டு மாவட்டம் கோவளம் பகுதி ஆகிய இடங்களில் நவீன முறையில் உப்பளங்கள் அமைக்கும் முறையில் உப்பளங்கள் அமைக்கும் திட்டம்பரிசீலிக்கப் பட்டுள்ளது.

* * *

இப்போது தனியார் ஆலை அதிபர்களைச் சந்தித்துப் பேசி 9 ஆயிரம் பேல் நூல்வரை கிடைக்கப் பெற்றுள்ளோம். ஏற்கெனவே நமது (அரசுடைமையான) ஆலைகள் மூலம் 11 ஆயிரம் பேல் நூல் கொடுத்து வருகிறோம்.

இனிமேல் 1000 தறிகளுக்கு ஒரு 'சர்வக்கட்சிகுழு' என்ற முறையில் அமைத்து, நூல் வினியோகம் செய்யலாமா என்று யோசிக்கப்படுகிறது.

* * *

நைலான் நூல் தொழிற்சாலை நிறுவுதற்கான வெளிநாட்டுச் செலாவணி, வெளிநாட்டு இயந்திரங்கள் வாங்கும் விஷயத்திற்கு டில்லியின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலை பற்றி டில்லி சர்க்கார் மறுபரிசீலனை செய்வதாகவும் கூறப்படுகிறது.

* * *

நீதித்துறையைப் பொறுத்த வரையில், ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ளவர்கள் நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தை நன்றாக உணர்வார்கள். சுதந்திரமாகச் செயல்படவேண்டும்—யாருக்கும் கட்டுப்படாது செயல்பட வேண்டும்-நீதி வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் செயல்பட வேண்டும்—இதில் தனிமனிதனுடைய விருப்பு வெறுப்புகளுக்கு அல்லது ஒரு அரசியல் கட்சியினுடைய விருப்பு வெறுப்புகளுக்கு உட்படாது அந்த நீதிமன்றம் செயல்பட வேண்டும் என்ற கருத்தை முழுமனத்தோடு இந்த அரசு ஆதரிக்கிறது.

இந்த அரசைப் பொறுத்த அளவிற்கு உயர்நீதி மன்றத்திலேயே நீதிபதிகளை நியமிப்பதில் தான் நாங்கள் சம்பந்தப்பட்டிருக்கிறோம். ஆகவே எங்களுடைய கருத்துக்கள் உயர் நீதி மன்ற நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும்போது இந்த அடிப்படையில்தான் சுதந்திரமாக அவர்கள் செயல்பட வேண்டும். தனிநபர்கள் எந்தக் கருத்துக்களுக்கும் ஆட்பட்டிருக்கலாம். ஆனால் அந்த இடத்திலேபோய் அமர்ந்த உடன் அவர்கள் எந்தக் கருத்துக்கும் தங்களை ஆட்படுத்திக் கொள்ளாது சுதந்திரமாகச் செயல்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து.

நிருவாகத்துறைக்கும் கீழே நீதித்துறை செயல்பட வேண்டும் என்றோ ஒரு அரசியல்கட்சியின் ஒரு அரசினுடைய கருத்துக்களை ஏற்றுச் செயல்பட வேண்டும் என்றோ இந்த அரசாங்கம் என்றைக்கும் ஏற்றுக் கொள்ளாது.

## வேளாண்மைத்துறை அமைச்சர்

# சி பா. ஆதித்தனர்

தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் மூலம் டிராக்டர்கள் வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றைப் பழுது பார்க்கும் 12 நிலையங்களில் ரூபாய் எட்டு இலட்சத்துத் தொண்ணூறு ஆயிரம் செலவு செய்யப்படும்.

* * *

கரும்புத் தீர்வை நிதியிலிருந்து கிராமச் சாலைகள் அமைப்பதற்கான திட்டத்தின் கீழ், 47 சாலைகள் போடப்பட உள்ளன. இவற்றிற்கு 26.5 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் ஆகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

* * *

திருச்சி குடுமியா மலையில் அண்ணா பண்ணையையொட்டி விவசாயபாலிடெக்னிக் அமைக்கும் யோசனை உள்ளது. சற்றேறக்குறைய 24வேளாண்மை பாலிடெக்னிக்குகள் அமைக்கப்படலாம் என்று மாநிலத் திட்டக் குழு யோசனை கூறியிருக்கிறது.

குடுமியா மலையில் அண்ணா விவசாயப் பண்ணை 1972-73 ஆம் ஆண்டு பெற்றுள்ள இலாபம் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் ஆகும்.

## உள்ளாட்சித்துறை அமைச்சர்

# அன்பில் பெ. தர்மலிங்கம்

விரைவில் சிங்காநல்லூரையும் கோவையுடன் இணைத்துக் கோவையை மாநகராட்சி ஆக்கும் விஷயம் பரிசீலனையில் உள்ளது.

5 இலட்சம் மக்கள் தொகையையும் ரூ. 2 கோடிக்கு மேல் ஆண்டு வருமானத்தையும் கொண்டுள்ள திருச்சியையும் இது போன்று மாநகராட்சியாக மாற்றப் பரிசீலிக்கப்படுகிறது.

## உணவு அமைச்சர்
# மன்னை ப. நாராயணசாமி

தமிழ் நாட்டின் எல்லைப் பகுதிகளில் போதிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டே வருகின்றன; தாராளமாகவும் கிடைக்கிறது. எனவே அங்கு ரேஷன் தேவையில்லை.

நியாயவிலைக் கடைகளுக்கு அரிசி, சர்க்கரை சப்ளை செய்யப்படுகிறது. கோதுமை மாதம் 35 ஆயிரம் டன் ஒதுக்கியதை இப்போது 9 ஆயிரம் டன் ஆகக் குறைத்துவிட்டார்கள். இதைத்தான் பகிர்ந்து அளிக்க வேண்டியிருக்கிறது.

## தொழிலாளர் நல அமைச்சர்
# க. இராசாராம்

பொங்கல் பரிசாகத் தமிழ் நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் 1,500 வீடுகள் கட்டிக் கொடுக்கஇருக்கிறோம். ஒவ்வொரு வீடும் ரூ. 10,000 மதிப்புள்ளதாகும். இந்தியாவிலேயே அதிக வீடுகள் கட்டிக் கொடுப்பது தமிழக வீட்டு வசதி வாரியம்தான்.

மாவட்டத் தலைநகரங்களில் தான் இப்படி ரூ. 10,000 மதிப்புள்ள வீடுகள் கட்ட முடிகிறது. சென்னையில் இதைக் கட்டுவது சிரமமாகத்தான் இருக்கிறது. நிலம் அதிக விலை விற்கிறது. தொழிலாளர் கூட்டுறவு முறையில் நிலம்வாங்கித் தந்தால் நாங்கள் கட்டித் தரத் தயாராக இருப்பதாக கூறியுள்ளோம்.

## மின் துறை அமைச்சர்
# ஓ. பி. இராமன்

மின்சாரக் கட்டண பில்களை அனுப்புவதற்குப் பல்வேறிடங்களில் ஆட்கள் நியமிக்கப்படாததால் பில்களைத் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டது; இப்போது ஆட்கள் நியமிக்கப் பட்டுவிட்டார்கள். பில்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. இவைகளை எத்தனை தவணைகளில் கட்ட விரும்புகிறார்களோ அத்தனை தவணைகளில் கட்டலாம் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவிற்குத் தமிழ் நாட்டிலேதான் மின்சார வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

1966-67-இல் தொழிற்சாலைகளுக்குத் தரப்பட்ட மின்சாரம் ஆந்திரத்தில் 172 மில்லியன் யூனிட், இப்போது 306 மில்லியன் யூனிட்; கேரளத்தில் 31 மில்லியன் யூனிட், இப்போது 61 மில்லியன் யூனிட்; மைசூரில் 62 மில்லியன் யூனிட். இப்போது 203 மில்லியன் யூனிட்.

66-67-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 263 மில்லியன் யூனிட் தரப்பட்டது; இப்போது 1,403 மில்லியன் யூனிட் தரப்படுகிறது. தென் மாநிலங்களிலேயே தொழில் அபிவிருத்திக்குத் தமிழ் நாடு அரசுதான் அதிக மின்சாரம் கொடுத்திருக்கிறது. அதனால்தான் அகில இந்தியாவிலேயே தமிழகம் மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது.

## போக்குவரத்துத் துறை அமைச்சர்
# எஸ். இராமச்சந்திரன்

பேருந்துக் கட்டணத்தை 3 காசிலிருந்து 3.5 காசாக உயர்த்துவதற்கு டீசல் மட்டும் காரணமல்ல, விலைகளும் உயர்ந்திருக்கின்றன. எல்லா மாநிலங்களிலும் பஸ் கட்டணம் உயர்ந்திருக்கிறது என்று மத்திய அரசே தெரிவித்திருக்கிறது.

நமது மாநிலத்தில் மூன்றரைக் காசாகத்தான் உயர்த்தியிருக்கிறோம். ஆனால் பம்பாயில் 10 காசாக உயர்த்தியிருக்கிறார்கள்.

இன்று இருக்கின்ற பொருளாதார அமைப்பில் விலைகள் கூடிக் கொண்டு வருவதால் —அதைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இல்லாத நிலைதான் இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் முதலாளித்துவப் பொருளாதாரம் இல்லாமலிருப்பது தான் வழியாகும்.

தமிழ் நாடு அரசு போக்குவரத்துத்துறை நாகர்கோவிலில் ஜாயிண்ட் டைரக்டரின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் 12 வழித் தடங்களில் புதிய பஸ் ரூட்கள் நிறுவியுள்ளது.

## அறநிலையத் துறை அமைச்சர்
# மு. கண்ணப்பன்

"பால் வளப் பெருக்கத் திட்டத்தின் கீழ் சென்னைக்கு இரண்டாவது பால் பண்ணை ஒன்று அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைக்கப்பட இருக்கிறது. இங்கு நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படும். தேசீய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் திட்டப்படி இது செயல்படும்.

குழந்தை பால் பவுடர் உற்பத்தித் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. செயல் திட்டத்திலும் அது இருக்கிறது. புதிய பால் பண்ணை வளர்ச்சி வாரியத்தின் சார்பில் 8.5 கோடி ரூபாய் தரப்பட்டு, இந்தப் புதிய திட்டத்துக்கு 3 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருக்கிறோம். 2 இலட்சம் லிட்டர் பால் இங்கு உற்பத்தியாகும்.

# கேள்விகளுக்கு எழுத்துமூலம் அளித்த பதில்கள்

தமிழ் நாட்டில் மொத்தம் 21,300 லாரிகளுக்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கின்றது. அவற்றில் 20,213 லாரிகள் தனியாருக்குச் சொந்தமானவை. இந்தக் கணக்கு 30-6-1973-இல் உள்ளபடி குறிக்கப்பட்ட கணக்காகும்.

* * *

குழந்தைகள் காப்பகங்கள் தமிழ் நாட்டில் மொத்தம் 1,914 உள்ளன. 1973 மே வரையிலான கணக்கு இது.

* * *

1972-73-ஆம் ஆண்டு அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட திருமண முன் பணத் தொகை மொத்தம் ரூ. 40 இலட்சமாகும். மாவட்ட வாரியாக இத்தொகையில் அதிகம் பெற்றவர்கள் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ரூ. 10 இலட்சம் அவர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை, திருச்சி, கோவை, மதுரை ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு மூன்று இலட்சம் வீதமும் இதர மாவட்டங்களுக்கு இரண்டு இலட்சம் வீதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

தமிழ் நாட்டிலுள்ள தனியார் காடுகளின் எண்ணிக்கை மொத்தம் 259 ஆகும். இவற்றின் பரப்பு 4 இலட்சத்து 12 ஆயிரத்து 62 ஏக்கரும் 67 செண்டுகளும் ஆகும்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் 2.60 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மூன்று காடுகள் உள்ளன. எண்ணிக்கையில் அதிகமான காட்டுப் பகுதிகள் மதுரையில் உள்ளன. 95 காட்டுப் பகுதிகள் உள்ளன. இந்த 95-ம் சேர்ந்துமொத்தம் 19 ஆயிரத்து 842 ஏக்கர் 82 செண்டுகள்.

அடுத்து நீலகிரிப் பகுதியில் 72 எண்ணிக்கையுள்ளகாட்டுப் பகுதிகள் 58 ஆயிரத்து 542 ஏக்கர் 22 செண்டுகள் பரப்பில் உள்ளன.

* * *

சென்னை நகரிலுள்ள மாநகராட்சிப் பொறுப்பிலுள்ள பூங்காக்கள் மொத்தம் 137ஆகும். விளையாட்டு மைதானங்கள்71.

* * *

கோயமுத்தூர் தெற்குக் கோட்டம், நீலகிரி வடக்குக் கோட்டம், கோயமுத்தூர் வடக்குக் கோட்டம், கோயமுத்தூர் மத்திய கோட்டம் ஆகிய வனத் தோட்டங்களில் வளர்க்கப்படுவதுடன், இயற்கையாகவே கன்னியாகுமரியிலுள்ள காடுகளிலும், மதுரையில் சிறிதளவிலும் வளருகின்ற செம்மர (கருங்காலி) உற்பத்தி 1968-69 முடிய உற்பத்தி ஆன செம்மரத்தின் அளவு 3427.065 கன மீட்டர்கள் ஆகும்.

சென்ற ஐந்து ஆண்டுகளிலும் ரூ. 51 இலட்சத்து 42 ஆயிரத்து 444-க்கு இந்தச் செம்மரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. விற்பனைசெய்யப்பட்ட மொத்த செம்மர அளவு 2549.851 கன மீட்டர்கள் ஆகும்.

நாடு விடுதலை அடைந்த 25-ஆவது ஆண்டின் வெள்ளி விழா தொடர்பாக இந்திய அரசு சுதந்திர ஆண்டு விழாப் பதக்கம் தந்து பெருமைப்படுத்தியவர்கள்—எல்லாத் தரங்களையும் சேர்ந்த காவல் துறை படையினர், ஊர்க்காவல் படையினர், உட்பட தமிழகத்தில் மொத்தம் 52,587 பேர் ஆவர். இவர்களில் தகுதி வாய்ந்த அதிகாரிகளும், பணியாளர்களும் அடங்குவர்.

73-ஆம் ஆண்டு செப்டம்பர் முடிய சென்னையில் காலரா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் 944 பேர். அவர்களில் இறந்தவர்கள் 17.

1972-73-ஆம் ஆண்டில் தமிழக அரசினால் 827 முடி திருத்தும் தொழிலாளர்களுக்கும், 827 சலவைத் தொழிலாளர்களுக்கும் இலவசக் கருவிகள் மானியமாக அளிக்கப்பட்டுள்ளன. முடி திருத்தும்தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட கருவிகளின் மதிப்பு ரூ.62,025 சலவைத் தொழிலாளர்களுக்கான கருவிகளின் மதிப்பு ரூ. 1,40,590.

# பரிசு பெற்ற ஆசிரியர்

கல்வி இன்றியமையாவது தான். ஆனாலும் வெறும் ஏட்டுக்கல்வி வாழ்க்கைக்குப் பயன்பெறுவது அருமையிலும் அருமை. எனவே விரைந்து பொருளாதாரத் துறையில் முன்னேறிவரும் ஒரு நாட்டிற்கு தொழில் வளர்ச்சி இன்றியமையாத ஒன்று. வளர்ந்து வரும் சமுதாயத்திற்கு வாழ்வூட்டுவதும், அச்சமுதாயத்திற்குத் தெம்பூட்டுவதும் தொழில்களே ஆகும். எனவே அடிப்படைக் கல்விக்குப் பிறகு அவர்களுக்கு இன்றியமையாத தொழிற்கல்வியை அளித்திடுதல் அரசின் இன்றியமையாத கடமை. இதை உணர்ந்தே தமிழ்நாடு அரசு தொழிற்கல்வி அளிப்பதிலும், தொழிலில் பயிற்சி அளிப்பதிலும் தீவிரமான அக்கறையும் ஆர்வமும் காட்டி வருகிறது. இவ்வகையில்தான் சென்னை அரசினர் அச்சகத்தின் தொழிலாளர் ஆசிரியர் (Worker Teacher) திரு. எம். பி. ஜெயராமனுக்கு மண்டல தொழிலாளர் கல்வி இயக்ககம் பொற்பதக்கம் வழங்கிப் பாராட்டிச் சிறப்பு செய்தது.

சென்னை வட்டாரத்தில் அனுபவமிக்க தொழிலாளர் ஆசிரியர்களில் ஒருவராக விளங்கும் திரு. எம். பி. ஜெயராமன் முதன் முதலில் அரசினர் அச்சகத்தில் நகல் வாசகராகச் சேர்ந்தார். தற்பொழுது முதுநிலை வாசகராகப் பணியாற்றுகிறார்.

தொழிலாளர்களுக்குச் சிறந்த முறையில் பயிற்சியளிக்க வேண்டும். அவர்கள் தொழிலாளர் நலச் சட்டங்களை எளியமுறையில் தெரிந்து கொள்ளவும் வேண்டும். தொழிற்சங்க விவகாரங்கள் சட்டரீதியில் நடைமுறைப் படுத்த வேண்டும் போன்றவைகளைக் கருத்தில் கொண்டு இவர் தொழிலாளர்களுக்குத் தொழிற் கல்விப் பயிற்சியளித்து வருகிறார்.

சென்னை அரசினர் அச்சகத்தில் இவர் சுமார் 29 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறார். 10 ஆண்டுக் காலமாக தொழிலாளர் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். அரசினர் அச்சகத்தைச் சார்ந்த 26 அணிகளைக் கொண்ட சுமார் 700 தொழிலாளர்களுக்குப் பயிற்சியளித்து முதன்மையில் நிற்கிறார்.

1967-ஆம் ஆண்டில் அரசினர் அச்சகத்தில் நடைபெற்ற தொழிலாளர் கல்வி விழாவில் பங்கு கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் இவரது பணியைப் பெரிதும் பாராட்டியுள்ளார். அந்த ஆண்டிலிருந்துதான் தொழிலாளர் கல்வி சிறந்த முறையில் அரசினர் அச்சகத்தில் செயலாற்றி வருகிறது.

தொழிலாளர் — நிருவாகம் சுமுகமான முறையில் இயங்க, தற்பொழுது தொழிலாளர் முன்னேற்றப் பேரவையுடன் இணைந்துள்ள அரசினர் அச்சக தொழிற்சங்கத்தில் 25 ஆண்டுகள் செயற்குழு உறுப்பினராகவும், 18 ஆண்டுகள் செயலாளராகவும், உப தலைவராகவும் இவர் பணியாற்றி, கூட்டுப் பேரத்தின் வாயிலாகத் தொழிலாளர்களின் கடமை, உரிமை போன்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள உதவியுள்ளார். பேரறிஞர் அண்ணா, திரு. ராஜாஜி, குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி போன்ற தலைவர்களுடன் தொழிற்சங்கப் பிரச்சினைகள் குறித்தும் கலந்தாலோசித்துள்ளார்.

தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிப்பதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு நல்ல முறையில் கல்விப்பயிற்சியளித்தமைக்காக இவருக்கு அண்மையில் பொற்பதக்கம் ஒன்று வழங்கப் பெற்றது. தொழிலாளர் நல அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் இப்பொற்பதக்கம் வழங்கிப் பாராட்டினார்கள்.

திரு. எம். பி. ஜெயராமன் அவர்கள் "தமிழக அரசு, தொழிலாளர்கள் சீரியமுறையில் கல்விப்பயிற்சி பெற்றுத் தொழில்துறையில் முன்னேறுவதற்கு தன்னுடைய முழு ஒத்துழைப்பையும், எல்லா வகையான ஆதரவுகளையும், ஊக்கத்தையும் வழங்குகிறது. தொழிற்கல்விப் பயிற்சி அளிக்கின்ற ஆசிரியர்களாகிய எங்களுக்குப் பல சலுகைகள் வழங்கிச் சிறந்த முறையில் நாங்கள் பணிபுரிய உதவுகிறது. அரசு அளிக்கின்ற இந்த வகையான சலுகைகளையெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தித் தொழில் துறையில் முன்னேற்றம்காண நாங்கள் பெரிதும் பாடுபடுவோம்" எனப் பெருமையுடன் கூறிக் கொள்கிறார்.

தொழிலாளர்கள் கல்விப் பயிற்சி பெற எல்லாவித சலுகைகளையும் அளிக்கத் தமிழக அரசு தயாராக உள்ளது என்பது தெளிவாக விளங்குகிறது. கிடைக்கின்ற சலுகைகளை நல்லமுறையில் பயன்படுத்தி ஒவ்வொரு தொழிலாளர் ஆசிரியரும், பரிசும், பாராட்டும் பெறவேண்டும் என்கின்ற கருத்தில் பணியாற்றி நாட்டின் முன்னேற்றத்திற்கும் தொழில் துறை வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும்.

— ஆயிரம்



# தமிழகத்தில் செயற்கை முத்து



தமிழ்நாட்டில் தூத்துக்குடிக்கு அருகில் வேப்பலோடை என்னுமிடத்தில் மத்திய கடல் ஆராய்ச்சிக் கழகம் செயற்கை முத்துச் சிப்பி ஆய்வுக்கூடம் ஒன்று நிறுவியுள்ளது. இந்த ஆய்வுக் கூடத்தால் நடத்தப்படுகிற இணைந்த முத்துச் சிப்பி ஆளி வளர்ப்புப் பண்ணையில் புதிய முறையில் முத்துச் சிப்பி ஆளிகள் வளர்க்கப்படுகின்றன. முதன்முதலில், இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட முத்துச்சிப்பி ஆளி வளர்ப்புப் பண்ணை இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளும் செயற்கை முத்துக்களை உற்பத்தி செய்கின்றன. என்றாலும் வெளிநாட்டின் உதவியின்றிச் செயற்கை முத்துக்களை உற்பத்தி செய்வது ஜப்பானும் நமது நாடும் தாம்.

வேப்பலோடையிலுள்ள முத்துச்சிப்பி ஆளி வளர்ப்புப் பண்ணையிலிருந்து கிடைக்கும் செயற்கை முத்துக்கள் மிக அழகாகவும் முழு வடிவம் கொண்டவையாகவும் விளங்குகின்றன. ஜப்பான் முத்துச் சிப்பி ஆளிகளைவிட இங்கு மிக விரைவில் முத்துக்களை உருவாக்குகின்றன. இந்தியா, தற்போது ஜப்பானிலிருந்து பலகோடி ரூபாய் மதிப்புள்ள முத்துக்களை இறக்குமதி செய்கிறது. வேப்பலோடை முத்துச்சிப்பி ஆளிவளர்ப்புப் பண்ணையில் உற்பத்தி முழு அளவை எட்டும்போது, முத்துக்காக நாம் ஜப்பானுக்கு கொடுக்கிற பலகோடி ரூபாய் மிச்சப்படும்.


தமிழரசு

சுற்றுலாச் சிறப்பிதழாக மலரும்
சனவரி 1வ இதழுடன்
இலவச இணைப்பு!

1974-ஆம் ஆண்டு நாட்காட்டி

பொங்கல் இதழான
சனவரி 16வ இதழில்............

புதிய தொடர்கதை
பூவை. எஸ். ஆறுமுகம் எழுதும்
காணி நிலம் வேண்டும்
தொடங்குகிறது

—: முற்றிலும் கிராமியச் சூழ்நிலையில் உருவாக்கப்பட்டுள்ள உயிரோவியம் இது:—




# தலைநகரில் இசைபரப்பும் தமிழ் இசைக் கல்லூரி




சென்னை நகரத்தின் நெருக்கம் நிறைந்த இடம்—எண்ணற்ற மக்கள் எப்போதும் சென்று கொண்டிருக்கும் சாலை—வினாடிக்கு வினாடி விரைந்து செல்லும் ஊர்திகளின் இரைச்சல்—எந்நேரமும் மக்கட் கூட்டத்தை வரவேற்றுக் கொண்டிருக்கும் விரைவுப் பேருந்து நிலையம் — சாதாரணப் பேருந்துகள் நிற்கும் நிலையம்—இப்படி அநேக பகுதிகள் கொண்ட வடசென்னை 'எஸ்பிளனேட்' வட்டாரத்தில், எந்த இரைச்சலையும் கருத்தில் கொள்ளாமல்—எந்தச் சூழ்நிலையையும் பொருட்படுத்தாமல் மாலை நேரத்தில் .......

பொன்னார் மேனியனே புலித்
தோலை அரைக் கிசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே

என்ற தமிழ்ப்பாடல் ஏதோ ஒரு கட்டடத்திற்குள் ஒலித்துக் கொண்டிருக்கிறது என்றால் அந்த இடம் அண்ணாமலை மன்றத்தில் உள்ள தமிழிசைக் கல்லூரிதான் என்று எவரும் எளிதில் கூறிவிட முடியும்.

தேவாரம், திருவாசகம். திவ்வியப்பிரபந்தம், திருப்புகழ் எல்லாம் இங்கே நாள்தோறும் ஒலிக்கின்றன. சின்னஞ்சிறு குழந்தைகளும், வயது வந்த ஆடவர், பெண்டிர் இருபாலரும் இங்கே தமிழிசையை ஆவலுடன் கற்று வருகிறார்கள்.

தமிழ் இசைச் சங்கத்தின் முயற்சியால் 1943-ஆம் ஆண்டு உருவான இந்தத் தமிழிசைக் கல்லூரி தமிழ் இசையை வளர்க்க அயராது பாடுபட்டு வருகிறது.

தமிழ் இசையாகிய தேவாரம் திருப்பாவை, திருவெம்பாவை ஆகியவற்றைக் கற்பிப்பதோடு, வீணை, மிருதங்கம், வயலின் ஆகிய இசைக்கருவிகளை இயக்குவதற்கும் இங்கே கற்றுத் தருகிறார்கள்.

பொதுவாக இசைப்பள்ளிகளில் பயில, அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுவது உண்டு; ஆனால் இங்கே அப்படியில்லை. தமிழ் இசையின் ஆரம்பப்பயிற்சிக்கு மாதம் ஒன்றுக்கு 2 ரூபாய் வீதமும், இசைச் செல்வம் என்னும் பயிற்சிப் பிரிவுக்கு 3 ரூபாய் வீதமும், இசைமணி என்னும் பயிற்சிப் பிரிவுக்கு மாதம் ரூ. 5 வீதமும் பயிற்சிக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

பணம் கொடுத்துப் படிக்க வசதியில்லாவிட்டாலும் கூட ஆர்வமுள்ளவர்களுக்கு, இலவசமாகவும் இசைப்பயிற்சி தரப்படுகிறது. இதற்குக் காரணம், தமிழ் இசையைப் பரப்ப வேண்டும் என்ற குறிக்கோள்தான்!

வயலின், வீணை, மிருதங்கம் ஆகிய இசைக் கருவிகளை இயக்கக் கற்றுக்கொள்வதற்கு —மாதம் ஒன்றுக்கு. ஆரம்ப வகுப்பினர் ரூ. 5-ம் இசைச் செல்வம், இசைமணி வகுப்பினர் ரூ. 10-ம் பயிற்சிக் கட்டணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வோராண்டும் ஜூலை மாதத்தில் இங்கே வகுப்பு துவக்கம் ஆகிறது. வாரத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்கள் தவிர, மீதி ஐந்து நாட்களும் மாலை 4.30 மணியிலிருந்து இரவு 8 மணி வரை வகுப்புகள் நடைபெறுகின்றன.

இந்த இசைக் கல்லூரியில் இசை கற்பதற்கு வயது வரம்பு கிடையாது. ஐந்து வயதிலிருந்து அறுபது வயதுள்ளவர் வரை இங்கே பயிற்சி பெறுகிறார்கள். அதுமட்டுமல்ல — இங்கே பயில்வதற்குச் சிறப்புத் தகுதிகளோ -பட்டப்படிப்போ தேவையில்லை. இசை ஆர்வம் தான் முக்கியம்! மாணவ மாணவியர் மட்டுமல்ல; அலுவலில் இருப்போரும் தமிழ் இசை கற்றுக்கொள்ளலாம். மேட்டுக்குடியினர் மட்டும்தான் இங்கு வந்து பயில வேண்டும் என்ற நியதி இல்லை. எவர் வேண்டுமானாலும் வந்து இசை கற்கலாம். உணவு விடுதிகளில் பணிபுரிவோர், அரசு அலுவலகங்களில் பணியாற்றுவோர், மற்றும் வணிகச் சந்தையில் வேலை பார்ப்போர் இப்படிப் பல்வேறு பிரிவினரும் இங்கு வந்து பயில்கிறார்கள். ஏறக்குறைய நூறு





பேர் இங்கே பயிற்சி பெறுகின்றனர்.

அரசுப் போக்குவரத்துத் துறையில் வண்ணம் பூசுபவராகப் பணியாற்றிய தீனதயாளன் என்பவர் இந்த இசைக் கல்லூரியில் மிருதங்கம் கற்று வந்தார். அவர் அகில இந்திய வானொலி நடத்திய மிருதங்கப் போட்டியில் கலந்து வெற்றி பெற்றார் என்பதும், குடியரசுத் தலைவரிடம் பரிசு வாங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள்.

தற்போது, மருத்துவக் கல்லூரியில் பல் இயல் பிரிவில் (Dental Block) பயிற்சி பெறும் மைதிலி, புஷ்பராணி என்ற இரு மாணவியர் இந்த இசைக் கல்லூரியில் முறையே, மிருதங்கம், வாய்ப்பாட்டுப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த இசைக்கல்லூரியில் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உண்டு. இசைக் கருவிகளை இயக்குவதற்குக் கற்றுக் கொள்ள வருகின்றவர்கள் சொந்தமாக இசைக்கருவியைச் சுமந்து கொண்டு இங்கே வர வேண்டியதில்லை! கல்லூரியே அவர்களுக்கு இசைக் கருவியை வழங்குகின்றது.

நான்கு ஆண்டுப் பாடத்திட்டத்தை இந்த இசைக் கல்லூரி நடத்தி வருகிறது. பொதுவாகத் தேவாரம், திருவாசகம் ஆகிய தமிழ் இசைப் பாடல்கள் தாம் சொல்லித் தரப்படுகின்றன; என்றாலும், அரசுப்பள்ளிகளில் இசை ஆசிரியராகப் பணிபுரிய வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஒரு சிலர் இசை கற்க வருவதால், அவர்களது எண்ணம் ஈடேறுகின்ற வகையில் அரசினரின் இசைத் தேர்வுத்திட்டத்திற்குரிய வகையில் வடமொழிப் பாடல்களும் தெலுங்குக் கீர்த்தனங்களும் இங்கே கற்றுத் தரப்படுகின்றன. அரசினர் நடத்தும் கீழ்நிலை, மேல்நிலை ஆகிய இருநிலைகளுக்குமுரிய பாடத் திட்டங்களை இங்கே அனுசரித்து வருகிறார்கள்.

இசைபற்றிய பாட வகுப்புகள் (Theory Classes) பயிற்சி வகுப்புகள் (Practice Classes) இரண்டும் நடைபெறுகின்றன. தேர்வுக்கு இந்த இரண்டு பிரிவுகளுமே உண்டு! தேர்வு தமிழ் இசைச்சங்கத்தாராலேயே நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் மேல் வகுப்புகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

இந்தக் கல்லூரியின் கௌரவ முதல்வர்களாக அரியக்குடி ராமானுஜ அய்யங்கார், பி.எஸ் வீருசாமி பிள்ளை போன்ற புகழ்பெற்ற கலைஞர்கள் பணிபுரிந்திருக்கின்றனர்.

தற்போது பாலக்காடு திரு டி.எஸ். மணி அய்யர் கௌரவ முதல்வராகவும், திருமதி எம்.எல். வசந்தகுமாரி வருகை முதல்வராகவும் (Visiting Principal) பணியாற்றி வருகின்றனர்.

கல்லூரியின் இன்றைய இயக்குநர், திரு டி. சங்கரன், வீணை தனம்மாளின் பெயரர்.

இந்தத் தமிழ் இசைக் கல்லூரியைப் பொறுத்த வரையில் மாபெரும் வரலாறே அடங்கிக் கிடக்கிறது. அந்த வரலாற்றைச் சிறிது பார்ப்போம்:

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தின் இசை மேடைகளில் எல்லாம் தெலுங்குக் கீர்த்தனங்களும் வடமொழிப் பாடல்களுமே முழங்கி வந்தன. அன்னைத் தமிழில் பாடப்படும் பாடல்கள் மிகக் குறைவானதாக மட்டுமல்ல - கச்சேரியின் இறுதிப் பாடல்களாகவும் (மங்களப்' பாடல்களாகவும்) கருதப்பட்டு வந்தன. அந்த இழிநிலையைத் துடைக்க வேண்டும் என்ற எண்ணம் அண்ணாமலைப் பல்கலைக்கழக நிறுவனரும், செட்டிநாட்டரசருமான ராஜா சர் அண்ணாமலைச் செட்டியாரின் உள்ளத்தில் ஆழப் பதிந்தது. இசைமேடைகளில் தமிழ் இசை ஒலிக்க வேண்டும் என்று அண்ணாமலையார் ஒலித்தார். ஆனால் அவருக்குக் கிடைத்த பதில்.....!

''மேடைகளில் பாடப்படுவதற்குரிய இசைப் பாடல்கள் தமிழ் மொழியில் இல்லை''— இசைத் துறையைச் சேர்ந்த ஒரு சிலர் இவ்வாறு பதிலுரைத்தார்கள். அதன் விளைவு....!

1940-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அண்ணாமலையார் தமிழ் இசை வளர்ச்சிக்காகப் பத்தாயிரம் ரூபாயை நன்கொடையாகக் கொடுத்தார். புதிய தமிழ் இசைப் பாடல்கள் இயற்றுவதை ஊக்குவிப்பதற்காகவும், இசைவாணர் சிலரின் நினைவில் மட்டும் தங்கியிருந்த பழந்தமிழ் இசைப்பாடல்களைப் பொது மக்களிடையே பரவச் செய்வதற்கும் இசைப்பாடல்களை

அச்சிட்டு வழங்குவதற்கும் அந்தத் தொகை பயன்பட வேண்டும் என்று அண்ணாமலை யார் கருதினார்.

அதன்பின் தமிழ் இசை வளர்ச்சிக்காக முதன் முதலாக மாநாடு ஒன்றை அண்ணாமலை நகரில் ஏற்பாடு செய்தார். அரியக்குடி இராமானுஜ அய்யங்கார், எம்.கே. தியாகராஜ பாகவதர், சித்தூர் சுப்பிர மணியபிள்ளை, கீழ்வேளூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சிதம்பரம் ஜெயராம், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். அந்த மாநாடு, மக்களால் பெரிதும் மதிக்கப்பட்டது. தமிழ் இசை இயக்கத்தை மக்கள் பெரிதும் வரவேற்றனர். அந்நாளைய பத்திரிகைகள் பல அதற்கு ஆதரவு தந்தன. தமிழ் இசை இயக்கம் தேவையானது, நியாயமானது என்று தமிழ் நாட்டு மக்களும் தமிழ் அறிஞர்களும் கருதினார்கள். தமிழ் இசை இயக்கத்தை ஆதரித்து 15-9-1941-ல் இசைக் கலைஞர் பலர் சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். திருடி.என் இராஜரத்தினம்பிள்ளை, மதுரை மாரியப்ப சுவாமிகள், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஆகியோர் அந்த அறிக்கையில் கையெழுத்திட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

16-9-1941-ல் சென்னை விக்டோரியா மண்டபத்தில் தமிழ் இசை இயக்கத்தினை ஆதரித்தும், அண்ணாமலை நகர் தமிழ் இசை மாநாட்டுத் தீர்மானங்களை ஆதரித்தும் ஒரு கூட்டம் நடைபெற்றது. நாடகத் தந்தை பம்மல் சம்பந்த முதலியார் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களும் கலந்து கொண்டார்கள். என்பது குறிப்பிடத்தக்கது. அந்த மாநாட்டிற்குத் திரண்டு வந்திருந்த பொதுமக்களின் கூட்டம், தமிழ் இசை இயக்கத்திற்கு மாபெரும் ஆதரவு பெருகி வருகிறது என்பதை எடுத்துக் காட்டியது.

அதன் பிறகு தேவகோட்டை, திருச்சிராப்பள்ளி மதுரை, புதுக்கோட்டை, கும்பகோணம், திருப்பத்தூர், இப்படித் தமிழகத்தின் முக்கிய நகரங்களிலெல்லாம் தமிழிசை மாநாடுகள் நடைபெற்றன. தமிழிசைச் சங்கங்களும் உருவாகின. தமிழ் இசை இயக்கம் செழித்து வளர்ந்தது. 1943-ஆம் ஆண்டு மே திங்களில் சென்னையில் தமிழ் இசைச் சங்கத்தினை அண்ணாமலையார் உருவாக்கினார். பல மாவட்டங்களிலும் உருவாகி இருந்த தமிழ் இசைக் கழகங்களுக்குத் தாய்ச்சங்கமாகச் சென்னைச் சங்கம் தோன்றித் திகழ்ந்தது.

1943 டிசம்பர் திங்கள் 23-ஆம் நாளிலிருந்து 1944 சனவரி 4-ஆம் நாள் முடிய, பெரியதொரு தமிழ் இசை மாநாடு அரண்மனைக்காரத் தெருவில் உள்ள செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் இசைச் சங்கத்தின் முயற்சியால் நடைபெற்ற இம்மாநாட்டிற்குப் பொது மக்கள் வெள்ளமெனத் திரண்டு வந்தனர்.

''இனிய தமிழில் பாடி இசைக் கலையை வளர்ப்போம்''

''செந்தமிழ் இசையே செவி நுகர் இசையாம்''

என்பன போன்ற தொடர் மொழிகள் எழுதப்பட்ட அட்டைகள் மாநாட்டு அரங்கின் எல்லாப் பகுதிகளிலும் அணி செய்து கொண்டிருந்தன. மண்டபத்திற்குள் அமர்வதற்கு இடம் இல்லாமையால் பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியில் நின்றுகொண்டிருந்தார்கள். இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமை ஏற்க, அண்ணாமலையார் தொடக்க உரையாற்ற, மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா, கல்கி, இரா. கிருஷ்ணமூர்த்தி மற்றும் பல பெருமக்கள் சொற்பொழிவாற்றினார்கள்.



இந்த மாநாட்டில் இராஜாஜி குறிப்பிட்டார்:

''நம் தாய் மொழியில் பாடினால்தான் நம் ஆத்மாவிற்கும் திருப்தி கிடைக்கும். கடவுளுக்கும் காது கேட்கும்.''

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்:



மிருதங்க ஆசிரியரும் மாணவர்களும்

''இந்த இசை என்ற தமிழ்ச் சொல் உண்மையிலேயே இன்றைய தினம்போல் தலைவர்கள் வேறு காரியங்களில் இசையாவிட்டாலும், இந்தக் காரியத்திலாவது இசையும் வழியில் ஏற்பட்டதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ் இசை இயக்கம் தமிழருக்கு மிகவும் பயன்பட வேண்டும் என்பதை எடுத்துச் சொல்வதுடன் நானும் என்னைச் சேர்ந்தவர்களும் வேறு விஷயங்களில் மற்றவர்களிடமிருந்து வேறுபட்டாலும், இந்தத் தமிழிசையைப் பொறுத்த அளவில் மற்ற தலைவர்களுடன் ஒத்துழைக்கச் சித்தமாய் இருக்கிறோம்.''

இவ்வாறு, பெரும் ஆதரவுடன் தமிழிசை இயக்கம் வளர்ந்தது. என்றாலும் அதற்கு ஏற்பட்ட எதிர்ப்புகள் ஏராளம்! ஏராளம்! தமிழ்நாட்டிலே, தமிழ் மேடையிலே தமிழ் இசை பாடப்படுவது தகாது என்றும் தியாகராயர் கீர்த்தனங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிட்டது என்றும் பலர் பலவாறு கூறிவந்தனர். அவர்களுடைய எதிர்ப்புகளுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், இராஜாஜி, கல்கி ஆகியோர் தக்க மறுமொழிகளைக் கூறி எதிர்ப்பாளர்களின் கருத்துக்களை முறியடித்து வந்தனர்.

அண்ணா அவர்கள் தமிழ் இசை இயக்கத்தை ஆதரித்து அந்நாளில் 'தமிழரின் மறுமலர்ச்சி' என்று ஒரு நூலை எழுதியிருக்கிறார். அந்த நூலிலே அவர் குறிப்பிட்டுள்ளார்:

''இசை, இன்பத்தைத் தர வேண்டுமானால், அது கேட்போரின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள வேண்டுமானால், யார் முன்னால் பாடல் பாடப்படுகிறதோ அதை அவர்கள் புரிந்து கொள்ளக் கூடியதான மொழியில் இருத்தல் வேண்டும். இது அறிவுத் துறையில் அரிச்சுவடி; இதனைச் சிலர் மறுக்கின்றனர். இது அறிவீனம்!

''சங்கீதம் எந்த பாஷையாய் இருந்தால் என்ன?என்று கூறுபவர்கள்—'இராக லட்சணமே முக்கியம்; சாகித்திய லட்சணம் முக்கியமாகாது' என்று கூறுபவர்கள் திருவாவடுதுறை இராசரத்தினம் அவர்களின் நாதசுரமும் கும்பகோணம் இராசமாணிக்கம் பிள்ளையின் பிடிலுமிருக்க வாய்ப்பாட்டு வேறு ஏன் தேடுகிறார்கள்? அந்த நாதசுரத்தில் இராக லட்சணங்கள் 'போதும்' என்கிற அளவுக்குக் கேட்கலாம். ஜிலுஜிலுப்பு வேண்டுமா? கமகம் தேவையா? ஆலாபனத்தில் அலங்காரம் வேண்டுமா? எது நாதசுரக்காரரால் முடியாது? தாளவரிசைகளிலே திறமைகள் கேட்க வேண்டுமோ? பக்கத்திலிருக்கும் தவுல்காரரைப் பார்த்தால் போதுமே, கோடையிடி கேட்கும்! சங்கீதம் வெறும் இராக லட்சணம், நாதம் என்று பேசுவோர் நாதத்தை நாதசுரத்தில், பிடிலில், வீணையில், புல்லாங்குழலில் கேட்கின்றனர் என்றாலும், வாய்ப்பாட்டும் தேடுகின்றனர்; காரணம் என்ன? வாய்ப்பாட்டிலே நாதமும் நெஞ்சையள்ளும் சாகித்தியமும் இருக்கின்றன என்பதற்காகத்தான். நெஞ்சை அள்ளும் சாகித்தியம் தமிழருக்குத் தமிழில் இருத்தலே முறை''-தமிழ் இசைவளர்ச்சிக்காக வழக்கறிஞரைப்போல் அண்ணா அவர்கள் எடுத்துரைத்த வாசகங்கள் இவை.





சேர நன்னாட்டின் மங்கையர் வேழத்தை விரட்டிய தமது வீரக் காதலரை வாழ்த்திப் பாடியது, தமிழில்தான்! வெற்றிக்கொடி பறக்க, எதிரியை விரட்டி அடித்துத் திரும்பிய சோழ மன்னர்கள் சிறப்பைத் தமிழில்தான் பாடினார்கள்.

பாண்டியனின் குமாரிகளுக்குப் பாங்கிகள் பாடியது தமிழ்ப் பாட்டுகள்தான்.

கதிரவன் காய்வதை அடக்கிக் கொண்டு, மேனி சிவந்து மறையும் நேரத்தில், கடலோரத்தில், பட்டுக் கூடாரத்தினுள்ளே, பக்கத்தில் இருந்த கோவலனின் உள்ளம் குழைய மாதவி பாடியது தமிழில்தான்!

—பேரறிஞர் அண்ணா





தென் ஆப்பிரிக்காவிலிருந்து வந்து பயிற்சிபெறும் செல்வி சூர்யகுமாரி

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தமிழ் இசை இயக்கத்தைப்பற்றி அருங்கருத்து ஒன்றினைத் தெரிவித்தார். ''தியாகராஜர் தமிழ்நாட்டிலே வாழ்ந்தவர். தமிழை நன்கு அறிந்தவர். என்றாலும் தமிழிலே பாடலை எழுதாமல் தெலுங்கிலே எழுதினார். காரணம், தெலுங்கு அவரது தாய் மொழி. தாய் மொழியில் தியாகராயர் பாடல் எழுதியது எப்படி நியாயமானதோ, அதே போலத்தான் தமிழ்மக்கள் தங்கள் தாய்மொழியான தமிழ் மொழியில் பாடல்கள் இயற்றப்பட வேண்டும் என்று சொல்வதும் நியாயமானதாகும்!''

இவ்வாறு மாபெரும் அறிஞர்களின் ஒத்துழைப்பாலும் தமிழ் அன்பர்களின் முயற்சியாலும் உருவாகியுள்ள தமிழ் இசைச் சங்கத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள தமிழ் இசைக் கல்லூரி, ஆல்போல் தழைத்து வேரூன்றி நிற்கிறது. ஆண்டுதோறும் சில இசைப்பாடல் போட்டிகளை நடத்தி வருகின்றது. அவை கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல் போட்டி, திருப்பாவை, திருவெம்பாவை, தேவாரம், திவ்யப்பிரபந்தம், திருவாசகம், திருத்தாண்டகம், திருப்புகழ் பாடற்போட்டி, அண்ணாமலையார் அவர்கள் நினைவுப் போட்டி, திரு ஆர் கே. சண்முகம் செட்டியார் நினைவுப் போட்டி ஆகிய போட்டிகள் நடத்தப் படுகின்றன. சென்ற ஆண்டு முதல் கதாகாலட்சேபப் போட்டி ஒன்றினையும் ஏற்படுத்தியுள்ளார்கள். திரு சிடி.வி.வெங்கடாசலம் செட்டியார் நினைவுப் போட்டி என்று இது அழைக்கப்படுகிறது.

கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல் போட்டியில் பரிசு பெறுவோர்க்குச் சுமார் 400 ரூபாய் மதிப்புள்ள தம்புரா பரிசு தரப்படுகிறது. ஏறக்குறைய 20 ஆண்டுகளாகக் கொடுக்கப்பட்டு வரும் இந்தப் பரிசு 'இராஜாஜி தம்புரா பரிசு' என்று அழைக்கப்படுகிறது. காரணம், இராஜாஜி அவர்கள் கொடுத்த அன்பளிப்புத் தொகையைக் கொண்டு இது கொடுக்கப்பட்டு வருகிறது.

இந்தப் போட்டிகளுக்கு உரிய விதிமுறைகள் பல என்றாலும் ஒரு சிலவற்றை இங்கே குறிப்பிடுவது அவசியம்.

தம்புரா, சுருதி கூட்டக்கூடியவர்கள் மட்டுமே இராஜாஜி தம்புரா பரிசுப் போட்டி, அண்ணாமலை வள்ளல் நினைவுப் போட்டி, சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் நினைவுப் போட்டி ஆகியவற்றில் கலந்து கொள்ளலாம். அதன் பொருட்டு முதற்போட்டி நடைபெறும். அந்தப் போட்டியில் தேர்வு பெற்றவர்களே இறுதிப் போட்டியில் கலந்து கொள்ள முடியும் கதாகாலட்சேபப் போட்டியிலும், தேவார திவ்வியப் பிரபந்தப் போட்டியிலும் கலந்து கொள்கிறவர்கள் தம்புராவை இயக்கத் தெரிந்திருக்கவேண்டும் என்ற விதி இல்லை. தம்புரா சுருதியுடன் பாடினால் போதுமானது.

வாய்ப்பாட்டுப் பாடுபவர்கள் மட்டுமே போட்டியில் கலந்து கொள்ளலாம். மற்றொரு குறிப்பிடத் தகுந்த விதி, இசையைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்கள் இந்தப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது. முந்தைய ஆண்டு ஏதேனும் ஒரு போட்டியில் பரிசு பெற்றவர்கள் அதே போட்டியில் மீண்டும் கலந்து கொள்ள முடியாது.

ஒருவர் நான்கு போட்டியிலும் கலந்து கொள்ளலாம். ஆண்—பெண் இருபாலரும் வயது வரம்பின்றி இந்தப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம். ஒவ்வொரு போட்டிக்கும், தனித் தனி மனுச் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத் தக்கது. பரிசு பெற்றவர்களுக்குரிய பரிசுகள் தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவில் டிசம்பர் திங்களில் நடைபெறும் இசைவிழாவின்போது தலைமை ஏற்கும் விழாத் தலைவரால் வழங்கப்படும்.

ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் இசைவிழாவின்போது தமிழ் இசைக் கல்லூரியில் பயின்று இசைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு இசைச்செல்வர், இசைமணி என்ற பட்டங்களுக்குரிய சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறுகின்ற தமிழ் இசை விழாவில் புகழ் பெற்ற இசைமேதைகளை அழைத்து அவர்களுக்கு ''இசைப்பேரறிஞர்'' என்ற சிறப்புப் பட்டத்தைத் தமிழ் இசைச் சங்கம் வழங்கி வருகிறது.



இசைப்பேரறிஞர் என்ற பட்டம் பெறுபவர்கள் மேடையில் இசை பாடுபவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்பது இல்லை. இசையில் ஆர்வம் உள்ளவராக—இசைப் பாடலாசிரியராக— நாட்டியத் துறையில் வல்லவராக—கதாகாலட்சேபம் செய்பவராக— இவ்வாறு இசைத்துறையில் தொடர்பு உடையவராக இருந்தாலே போதும்.

கும்பகோணம் இராசமாணிக்கம் பிள்ளை, எம்.எம். தண்டபாணி தேசிகர், பேராசிரியர் சாம்பமூர்த்தி, திருவிடைமருதூர் வீருசாமி பிள்ளை, அரியக்குடி இராமானுஜ அய்யங்கார், வழுவூர் இராமய்யா பிள்ளை, மதுரை மணி அய்யர், முசிறி சுப்பிரமணிய அய்யர், சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, பாபநாசம் சிவன், திருமதி கே.பி. சுந்தராம்பாள், பாலக்காடு மணி அய்யர், திரு கிருபானந்த வாரியார், செம்மங்குடி சீனிவாச அய்யர், திருமதி எம்.எஸ். சுப்புலெட்சுமி, மதுரை எஸ். சோமசுந்தரம், திரு பெரிய சாமித்தூரன், ஆகியோர்க்கு இசைப் பேரறிஞர் பட்டம் வழங்கியுள்ளது தமிழ் இசைச் சங்கம். இந்த ஆண்டு தொடங்க இருக்கும் இசை விழவில் திருமதி டி.கே. பட்டம்மாள் இசைப்பேரறிஞர் என்ற சிறப்புப் பட்டத்தை அடைய இருக்கின்றார்.




கருநாடக மாநிலத்தில் நடைபெற்ற இசை மாநாட்டில் தமிழ் இசைச் சங்க ஆசிரியர்கள் பங்கு பெற்ற நிகழ்ச்சி.

தமிழ் இசைச் சங்கத்தின் வெள்ளி விழா 1967-ல் நடைபெற்றபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை ஏற்றார்கள் என்பதும் மூதறிஞர் இராஜாஜி துவக்கி வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்ல திரு கிருபானந்தவாரியார் அவர்களுக்கு அண்ணா அவர்கள் பொன்னாடை போர்த்து, 'இசைப்பேரறிஞர்' என்ற பட்டத்தையும் சூட்டினார்கள்.

இசைப் பேரறிஞர் பட்டம் பெறுவோர்க்கு 500 ரூபாய் பெறுமானமுள்ள தங்கப்பதக்கம் ஒன்றும் வெள்ளித்தட்டு ஒன்றும், நற்சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படுகின்றன.

1968-ஆம் ஆண்டு இசை விழாவை முதல்வர் கலைஞர் அவர்கள், பொதுப்பணி அமைச்சராக இருந்தபோது தொடங்கி வைத்தார்கள்.

தமிழ் இசைச் சங்க இசை விழாவில் நாதசுர நிகழ்ச்சிகளுக்குத் தனிச் சிறப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. விழாவில் நடைபெறும் முப்பது கச்சேரிகளில் ஏறக்குறைய எட்டுக் கச்சேரிகள் நாயனக் கச்சேரி ஆகும். நாயனத்துக்கு இங்கே இவ்வளவு தனிச் சிறப்புக் கொடுப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா?

ஒன்று, நாதசுரம் தமிழ்க்கலை! இரண்டு, வெளிநாட்டிலுள்ள தமிழ் மக்கள் வானொலியின் வாயிலாகக் கேட்கப்படும் நாயன இசையை வழிபாட்டுக்குப் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது.

இசைவிழா துவங்கிய மறு நாளிலிருந்து நான்கு நாட்கள் காலை நேரங்களில் தேவாரப் பன் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. கடந்த 25 ஆண்டுகளாக நடந்துவரும் இந்தப் பண் ஆராய்ச்சி, இசைத்துறையில் குறிப்பிடத் தகுந்த சாதனைகளை நிறைவேற்றுவதற்கு உதவி செய்து வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அமைதிக் கலை அரங்கம் ஒன்று நடைபெறுகிறது. அமைதிக் கலையரங்கம் என்றால் என்னவென்று திகைக்கிறீர்கள் அல்லவா? ஒலிபெருக்கிக் கருவியில்லாமல் இளம் இசைக் கலைஞர்கள் அரங்கத்தில் இசை பாடுகின்ற நிகழ்ச்சிக்குத்தான் அமைதிக் கலை அரங்கம் என்று பெயர்.

இசைவிழாக் காலங்களில் பொதுவாக மாலை 6 மணிக்கு மேல் புகழ்பெற்ற இசைவாணர்களின் நிகழ்ச்சி நடைபெறும். அதற்கு முன்னதாக 4 மணி முதல் 6 மணி வரை இளம் பாடகர்கள் அரங்கிலே தங்கள் இசைப் புலமையைக் காண்பிக்கும் வண்ணம் அமைந்துள்ளது, அமைதிக் கலையரங்கம் நிகழ்ச்சி! பார்வையாளருக்குக் கட்டணம் கிடையாது. அழைப்பிதழ் மட்டும் அனுப்பப்படுகிறது. இந்த நிகழ்ச்சியின் மூலமாகப் பாடகரின் இயற்கையான குரலைக் கேட்க முடிகிறது. இளம் பாடகர்களை உற்சாகப்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் இந்த நிகழ்ச்சி துணை செய்கின்றது.

இசைக் கருவிகளின் கண்காட்சி ஒன்று இங்கே உள்ளது. வீணை, மிருதங்கம், போன்ற இசைக் கருவிகள் நூற்றுக்கு மேல் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

இங்கே ஒரு கூடத்தில், தஞ்சை சின்னையா, தஞ்சை வடிவேல், மாயூரம் வேதநாயகம் பிள்ளை, காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை, திருப்பாம்புரம்

சுவாமிநாத பிள்ளை, பழனி சுப்பிரமணிய பிள்ளை, வீணை தனம்மாள், அனைவரும் ஏக காலத்தில் காட்சி தருகிறார்கள் —ஓவியங்களாக அமர்ந்து! ஆமாம்! புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள், பாடல் ஆசிரியர் ஆகியோரின் உருவப்படங்கள் ஒரு கூடத்தில் வைத்துப் பாது காக்கப்பட்டு வருகின்றன. தற்போது 26 இசைமேதைகளின் ஓவியங்கள் இங்கே இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வோராண்டும் புதிய ஓவியங்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. இந்த ஓவியக் கண்காட்சியை உற்று நோக்குவோருக்கு ஓர் உண்மை புரியும்.



உயிர் வாழும் இசைக் கலைஞர்கள் எவரும் இங்கே ஓவியமாகக் காட்சி தருவதில்லை; வாழ்ந்து மறைந்த இசைவாணர்களின் ஓவியங்கள்தாம் இங்கே இடம் பெற்றிருக்கின்றன, என்ற உண்மைதான் அது! இந்தக் காட்சிக் கூடத்திற்குள் நுழைந்து அனைத்து ஓவியங்களையும் பார்த்தவுடன் நமக்கு மகிழ்ச்சி அலை மோதுகின்றது. என்றாலும் நமது கண்கள் ஏனோ ஏக்கம் அடைகின்றன. நமது இதயத்திடம் மௌன மொழியில் எதையோ தெரிவிக்கின்றன. மறு வினாடியில் நமக்குப் புரிந்து விடுகிறது. புரட்சிக் கவிஞர்-பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் ஓவியம் இந்த ஓவியக் காட்சிக் கூடத்தில் இடம் பெறவில்லையே என்ற ஏக்கத்தைத்தான் இதயம், கண்களின் வழியாகத் தெரிவிக்கின்றது!

இந்த இசைக் கல்லூரியில் ஏறக்குறைய 3,000 புத்தகங்கள் கொண்ட ஒரு நூலகம் உள்ளது. 1962-ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட இந்த நூலகத்தில் இசை சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மட்டும் ஆயிரத்திற்கு மேல் உள்ளன.

சென்ற ஆண்டு நடைபெற்ற ஒரு சுவையான நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிடுவது அவசியம். சென்னையில் உள்ள தமிழ் இசைச் சங்கத்தைப் போலவே பெங்களூரில் 'கர்நாடக கான கலா பரிஷத்' என்ற ஒரு நிறுவனம், கன்னட இசையை வளர்த்து வருகிறது. அந்த நிறுவனம் சென்ற ஆண்டு இசை மாநாடு ஒன்றினை ஏற்படுத்தியது. இந்த மாநாட்டில் தமிழ்நாடு, ஆந்திரம், டெல்லி ஆகிய மூன்று மாநிலங்களும் கலந்து கொண்டன. தமிழ் நாட்டின் சார்பில் தமிழ் இசைக் கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர்கள் அங்கே சென்று தேவாரம், திருவாசகம், ஆகிய தமிழ் இசைப் பாடல்களைப் பாடிக் காண்பித்தார்கள். 'தேமதுரத் தமிழோசை' இசை மாநாட்டிற்கு வந்திருந்தவர் அனைவரையும் கவர்ந்தது. அந்த விழாவில் கலந்து கொண்ட அந்நாளைய மைசூர் மாநிலக் கல்வி அமைச்சர் திரு ஏ.ஆர். பத்ரிநாராயணு, ''இசைத் தமிழ் கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது. புதுமையாக இருக்கிறது — இசைவாணர்களுக்கு நன்றி'' எனக் குறிப்பிட்டார்.

வெளி மாநிலங்களுக்கும் சென்று வெற்றிக் கொடி நாட்டி வரும் அளவுக்குத் திறமை படைத்த இசை ஆசிரியர்கள் தொண்டாற்றி வரும் இந்தத் தமிழ் இசைக் கல்லூரியில் தமிழ் நாட்டவர் மட்டும்அல்ல, வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் இசை கற்கிறார்கள். தென் ஆப்பிரிக்காவில் இருந்து வந்திருக்கும் சூரியகுமாரி என்ற மாணவி தமிழ் இசையை ஆர்வத்துடன் கற்று வருகின்றார். அது மட்டுமல்ல நான்காண்டுப் பாடத்தை மூன்று ஆண்டிற்குள்ளேயே கற்றுக் கொண்டு விட்டார். வீணை, வாய்ப் பாட்டு இரண்டிலும் தேர்ச்சி பெற்ற இந்தக் குமாரி, வேறொரு நாட்டியப் பள்ளிக்குச் சென்று நாட்டியமும் கற்றுக் கொண்டிருக்கிறார்.

இங்கே பயின்று வெளிவந்த பலர், இசை உலகத்திலும் திரையுலகத்திலும் புகழ் பெற்றுத் திகழ்கிறார்கள். உள்ளம் கவர இசைபாடும் இசைமணி சீர்காழி எஸ். கோவிந்தராஜன் இந்தத் தமிழ் இசைக் கல்லூரியின் மாணவர்தான்!

கடந்த 6-10-1973 அன்று மயிலாப்பூரில் உள்ள சிருங்கேரி மடத்தில் ஒரு கிளைக் கல்லூரியை இந்த இசைக் கல்லூரி நிறுவியுள்ளது. இங்கே பயிற்சி காலை வேளையில் நடைபெற்று வருகிறது. வடசென்னையில் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல — தென் சென்னையில் இருப்பவர்களுக்கும் இப்போது ஒரு தமிழ் இசைக் கல்லூரி கிடைத்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய சேதியாகும்.

தமிழ் இசைச் சங்கம் இசை சம்பந்தமான சில நூல்களையும் வெளியிட்டுள்ளது. தண்டபாணி தேசிகர் அவர்கள் குறிப்புகள் (சுரம்) அமைத்துத் தந்துள்ள தேவார இசை நூலை வெளியிட்டுள்ளது.

தமிழ் இசையைத் தளராது வளர்த்து வரும் இசைக் கல்லூரி, புதிய திட்டம் ஒன்றை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. தனது சொந்தச் செலவில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் இசை ஆசிரியர்களை அனுப்பி வைத்து, அங்குள்ள மாணவ, மாணவியருக்கு வாரத்துக்கு மூன்று நாள் இலவசமாகத் தேவாரம், திருவாசகம் ஆகிய தமிழ் இசைப் பாடல்களைக் கற்றுத் தருவது என்பதுதான் புதிய திட்டம்.

''தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்'' என்று நாவுக்கரசர் கூறியுள்ளதுபோல,— தமிழ் இசையை எந்நாளும் வளர்த்துவரும் தமிழ் இசைச் சங்கத்தின் திட்டங்கள் வெற்றி பெறுவது உறுதி! தமிழ் இசைக் கல்லூரி, மென்மேலும் புகழ் பெறுவது திண்ணம்! தமிழ் இசை, தமிழ்நாட்டு மக்களின் செவிகளை எந்நாளும் நிறைத்து வரும் என்பது ஐயமில்லாத உண்மை!

— த.பி.



# உலகில் இரண்டு கிளிகள்

டி.என். சுகி சுப்பிரமணியன்

## 23. இணைந்த நெஞ்சங்கள்

மனித மனம் மிகவும் விசித்திரமானது. காரணம் குரங்குள்ளிருந்து இது பிறந்து வளர்ந்த பிறவி. எனவே எப்போதும் நேர் வழியைவிடக் கிளை வழி தாவுவதில் எவர் மனமும் பிரியங் கொள்ளும்.

வக்கீல் மணிவாசகன் பத்து நாளாக அன்புத் தந்தையாக அருமை விருந்தோம்பல் செய்தவராக மாறியிருந்தார். பாபுவும், முருகனும் இன்று உதகைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கணவன்—மனைவி நடிப்புக்குத் திரை விழும் நாள்.

அவர்கள் தம் பெட்டி படுக்கைகளை ராதை சரிபார்த்து, குழந்தைகளுக்கு பட்சணம், பலகாரம், புதிய துணிமணிகள் அடங்கிய பெட்டியை நிரப்பிக் கொண்டிருக்கிறாள்.

''ஏய், ராதை! அந்தப் பயலுகள் புறப்பட்டான்களா! இல்லையா?''

கத்தினான்! ராதை அதிர்ந்து போய் ''பத்து நாள் நீங்கள் சாதுவாக இருந்தீர்களே! இன்னும் பத்து நிமிடம் சாதுவாக இருங்கள். இருவரும் போய் விடுவார்கள். தயவு செய்யுங்கள்!'' என்று வந்து மெதுவாகக் குரல் கொடுத்தாள்.

''பத்து நாளா! பத்து யுகமாக இருக்கிறது. முகத்திலே ஒரு பேச்சு; மூச்சிலே ஒரு பேச்சாக இருந்தேன். பொய்யும் போலியுமாக வாழ்ந்தேன். பத்து நாளாக நான் அன்பிலே மிதந்தேனா? அக்கினி ஆற்றில் நீந்தினேன்! எல்லாம் உனக்காக, ராதை!''

''இன்னம் ஐந்தே நிமிஷம் குளுமையாகச் சிரித்த முகத்தோடு பையன்களை உதகைக்கு அனுப்பி வையுங்கள்!''

''தொலையட்டும், சீக்கிரம்! எங்கே அந்தச் சனியன்கள்?''

கையால் சைகை செய்து ''பிளீஸ்... அத்தான் வாயை மூடிக் கொண்டிருங்கள்'' என்று கெஞ்சாத வண்ணம் கெஞ்சினாள்.

''டைவர்ஸ்—விவாக ரத்து — பாயிண்ட்ஸ்கள் —விவரங்கள் சேகரம் செய்துவிட்டாயா ?''

''பாதி சேகரித்து விட்டேன்!'' என்றவள், பாபுவின் பூட்சுக் காலடி ஓசை கேட்கவே ''முகத்தைச் சிரித்த மாதிரி வைத்துக் கொள்ளுங்கள். வழியனுப்பச் சொல்ல பாபு வருகிறான்'' என்று எச்சரிக்கை செய்தாள். மணிவாசகன் முகத்தை மாற்றி, குரலை மாற்றி குளுமையுடன் ''ஹலோ பாபு! நான் கோர்ட்டுக்குப் போகணும். உன் அம்மா காரில் ஏற்றி சென்ட்ரலில் கொண்டு வந்து விடுவாள். எங்கே உன் நண்பன் முருகன்?'' என்று கேட்டார்.

''அவனைக் கூப்பிட்டேன். அவன் எனது அறையில் நின்றபடி விம்மி விம்மி அழுகிறான்.''

''ஏன்?''

ராதை ''நான் போய்ப்பார்க்கிறேன்'' என்று போனாள். போகும் போது பாபுவையும் இழுத்துக் கொண்டு போனாள்.

டாக்டர், ''அந்தப் பையன் முருகன் அழுதபடி நிற்கிறான். நீங்கள் வந்து சமாதானம் செய்யுங்கள்'' என்று கெஞ்சுகிறாள்.

தனிமையில் கண்டதும் ''ஏய் காளி! பழிக்குப் பழி நீ வாங்குவாயா? நான் வாங்குவேன்! கோர்ட்டில் பார்க்கலாம். எனது வக்கீல் சன்னத்தைப் பறித்து விட உன்னால் முடியுமா?'' என்று சீறினான்.

''அது வேறு விஷயம். முருகனைச் சமாதானம் செய்து அனுப்புங்கள்.''

''உடும்பு வேண்டாம். கை வந்தால் போதும் என்பார்கள். நான் நடித்த நாடகம் முடிந்தது.''

அரைகுறை மனத்துடன் எழுந்து பாபுவின் அறைக்குள் போனால், முருகன் அழுது கொண்டிருக்கிறான். அவன் அழும்படி என்ன நடந்தது! எத்தனை பெரிய அன்புத் தத்துவங்களை ஒவ்வொரு காட்சியிலும் தாய் அன்பை உதிர்த்த அறிவின் உருவம் அழுகையின் உருவமாக இருப்பானேன்? தாம் ஏதாவது புண்படுத்தி விட்டோமோ என்று கவலைப் பட்டார். குரலில் குளுமை, எளிமை, பவ்வியம் யாவும் தேக்கிக் கொண்டார்.

''ஏண்டா முருகா! ஏன் அழுகிறாய்? உன்னை யாராவது திட்டினார்களா?''

இல்லையென்பதற்குத் தலையாட்டினான்.

ராதை ''உன் மனத்தில் இருப்பதைச் சொல். நாங்கள் நிவர்த்தி செய்கிறோம்'' என்று கெஞ்சினாள்.

பாபுவும் ''சொல்லுடா முருகா! ரெயிலுக்கு நேரம் ஆகிறது. யார் என்ன தப்புச் செய்தார்கள்?'' என்று நண்பனுடன் கண் கலங்கினான்.

நர்மதையும், மணிவாசக னும் சேர்ந்து அவன் அழு கைக்கு அவன் முகத்தைப் பிடித்துத் தாங்கியபடி அன் பொழுகக் காரணம் கேட்டார் கள்.

பாபு ''டேய் எங்கம்மாவும் அப்பாவும் நல்லவங்கடா! நீ எது கேட்டாலும் வாங்கிக் கொடுப்பாங்க. கேளுடா முருகா'' என்று சொன்னான்.

எல்லாரும் அவன் எதனை நினைத்து எதற்காக அழுகிறான் என்பதைக் கேட்டார்கள்!

''என்ன நினைச்சு நான் அழு கிறேன். பாபு எத்தனை பெரிய அதிர்ஷ்டசாலி! அவ னிடம் நீங்கள் இருவரும் எவ் வளவு அன்பாக இருக்கிறீர்கள்? பாபு ... பாபு... பாபுன்னு உருகி உருகிக்கூப்பிடுகிறீர்கள்!'

ராதை ''உன்னையும் முருகா! முருகா முருகான்னு உங்கம்மா அப்பா கூப்பிடத்தானே செய் தாங்க'' என்று சமாதானம் செய்தாள்.

''இல்லேம்மா. என்னை அன் பாகக் கூப்பிடவும் ஆள் இல்லை அதிகாரம் செய்யவும் யாரும் இல்லை. எனக்கு யாரும் இல்லை. நான் அனாதை!''

''ஏண்டா! அதைப் போய் இப்போது நினைக்கிறாய்?'' என்று கண்ணீரைத் துடைத்து விட்டான் பாபு.

''பாபு! உனக்கு இத்தனை அன்பு வெள்ளம் கிடைக்குது. எனக்கு எங்கம்மா யாரு? எங் கப்பா ஆருன்னே தெரியாது! எனக்கு எப்படியடா உன்னை மாதிரி அன்பும் ஆசையும் கிடைக்கும்?''

''முருகா! நடந்ததை மறந் திடு. ஊருக்குப் போ. பாபு வுக்கு என்னென்ன அனுப்ப றமோ அத்தனையும் உனக்கு ஒரு செட் நாங்கள் அனுப்பு கிறோம்'' என்று சமாதானத் திற்கு இப்படி ஒரு குறுக்கு வழியைக் கையாண்டாள் நர் மதை.

''எனக்கா உங்களோட அன்பு தொடர்ந்துகிடைக்கும்? நான் அன்பு என்னது, பாசம் என்னது, இப்படித் தெரியாம வளர்ந்த பாலைவனத்துக் கள்ளிச் செடி.''

''அழாமல் குறையும் சொல்லு. உனக்கு இரண் டொரு நாள் இருக்கணும்னு ஆசைப்பட்டா இங்கே இரு'' என்று ராதை தைரியம் தந் தாள்.

''எனக்கு எங்கம்மாவும் அப் பாவும் கொடுத்ததண்டனையை நினைச்சு அழுகிறேன்.''

''நீ என்ன குற்றம் செய்தே?'' என்றார் வக்கீல்.

''நான் அனாதையாய்ப் பிறந் தது பெரிய குற்றம்! நான் பாலைவனத்துப் புல்.''

''உனக்குத் துணை நான் இருக்கேன் முருகா'' என்று பாபு உறுதியளித்தான்.

''உனக்கு அப்பாவும் அம்மா வும் இருக்கிறதினாலே தெம்பா இருக்கே! அழகா இருக்கே. அடிக்கடி வீட்டுக்கு கடிதம் எழுதறே, டிரங்கால் பேசறே! எனக்கு யாருடா இருக்கா?''

மனோதத்துவ ரீதியில் அவனைச் சமாதானம் செய்யப் பெரியவர்களான மூவரும் முனைந்தார்கள்.

''உன்னைப் பெத்தவங்க யாரு?''

''நான் அனாதையாய்த் திரு விழாவில் விடப்பட்டேன்!''

''எந்த ஊர்த் திருவிழாவில்?'' என்றாள் நர்மதை.

''ஏழெட்டு வருடங்களுக்கு முன்னாலே உதகைக்குப் பக்கம் சின்னக் கிராமத்திலே இருந்து திருவிழா பார்க்க வந்தாங்க ளாம்! என்னைத் திருவிழாக் கூட்டத்திலே விட்டுட்டுப் போயிட்டாங்க, என்னைப் பெத்த படுபாவிங்க!''

நர்மதை, மணிவாசகனைப் பார்த்தாள்.

மணிவாசகன் வெட்கத்தோடு நர்மதையைப் பார்த்தான்.

ராதை ''உன்னைத் தனியா விட்டு விட்டு பெத்தவங்க போனாங்க முருகா! அப்புறம் உன்னை யார் பார்த்தாங் களாம்?'' என்று கேட்டாள்.

''நான் போலீஸ்காரங்க கையிலே அகப்பட்டேன்! அங் கிருந்து நடந்து ஆற்றங்கரை ஓரமா நின்னேன்! அப்போது இரண்டு பேர் வந்தாங்களாம்.

## குழாய்த் தண்ணீரால் ஊர்தி ஓட்டலாம்

இத்தாலி நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி எஸ்ரிகோ என்பவர், பெட்ரோலுக்குப் பதிலாகக் குழாய்த் தண் ணீரை ஊற்றி ஊர்தியோட் டும் புதியதொரு சாதனையைப் புரிந்துள்ளார்.

ஊர்தியில் பெட்ரோலுக்குப் பதில் ஊற்றப்படுகிற குழாய் நீர், ஹைட்ரஜன், ஆக்சிஜன் வாயுக்களாகப் பிரிக்கப்பட்டு ஊர்தி செலுத்தப் பயன்படு கிறது. இதற்காகப் புதிதா கப் பொருத்தப்படும் கருவி யின் விலை ரூ. 7-00 ஆகிறது. விஞ்ஞானி எஸ்ரிகோ, இப் புதிய முறையில், 7 மைல் தொலைவுக்கு ஊர்தியை ஓட்டிச் சென்றார்.

ஆற்றில விழ இருந்த என்னை அந்தத் தெய்வங்கள் காப் பாற்றிச்சாம். அவங்க எங்கே இருந்தாலும் நன்றாக இருக்க வேணும்.''

முருகன் தன் பூர்வ கதையை ராதைக்குச் சொன்ன சமயம்--

மணிவாசகன் மனத்திலே மீண்டும் பழைய இளமை பூக்கிறது; பூரிக்கிறது.

குதிரைக்கார கோவிந்தன் வருகிறான்!

ஊட்டியின் குளுமை உடம் பெல்லாம் பரவுகிறது. பரவ சம் செய்கிறது.

குறும்பும், குறுகுறுத்த விழி யுமாக சண்டைக்குக் கொடி கட்டிய நர்மதையின் சவால் அவன் காதில் வந்து விழுகிறது.

நர்மதைக்கும் ஊட்டியில் நடந்த சம்பவங்கள் மனத் திரையில் ஓடிக் கொண்டிருந் தன.

''ஆண்கள் எல்லாருமே காரியக்காரர் வர்க்கம்.''

''பெண்கள் பிடிவாதத்தின் மொத்த உருவம்.''





''பெண்ணைக் கிள்ளுக் கீரையாக நினைத்த காலம் மலையேறி விட்டது, மிஸ்டர் . . . ''

''எத்தனை படித்தாலும் ஆண்களிடம் அடங்கி நடக்க வேண்டியவள் பெண்!''

''ஆணுக்குப் பெண் அடிமை என்று எந்தச் சட்டத்திலும் எழுதி வைக்கவில்லை!''

''அது எழுதாச் சட்டம் அம்மணி!''

என்ற ஏச்சும் சண்டையும் அவர்கள் காதில் கண்டாமணியாக ஓங்கி விழுந்து ஒலி எழுப்பின.

ஏட்டய்யா குழந்தையைத் தேடி வந்தது கற்பகத்தின் தாயன்பைக் கேட்டது.

''நீ டாக்டர்.''

''நீங்கள் வக்கீல்!..

''நாம் இருவருமே சமுதாயத்திற்கு நன்மை தர வேண்டியவர்கள்.''—

இச் சொற்களும் குழந்தையைப் பாதிரியாரிடம் ஒப்படைத்தோம் என்ற தகவலும் பசுமையாக அவர்கள் நினைவில் ஓடி வந்தன.

ஒரு கணத்தில் கணவனும் மனைவியும் காலம் என்னும் தத்துவத்தைக் கடந்து ஒரு விநாடிக்குள் பழைய வாழ்வை—சிரிப்பை—சண்டையை—காதலித்த சுகத்தை—அனுபவித்தபடியே நிற்கிறார்கள்!

அப்போது முருகன் ''என்னைக் காப்பாத்தின அவங்களை நான் கோடி கோடி காலம் கும்பிடணும்... உன்னோட வந்ததாலே தாயன்பைத் தெரிந்து கொண்டேன். தந்தையின் அன்பையும் கண்டேன்'' என்று நெஞ்சம் நெகிழ்ந்து சொன்னான் முருகன்.

கருங்கல் பாறையின் கண்கள் குளமாயின. போலியும் பொய்த் தன்மையான கௌரவமும் விட்டு விலகின. பண்பு பயனுக்குத் துடித்தது.

''ஏண்டா உங்கப்பா அழுகிறார்? பாபு!''

''உன்னைப் பிரியணுமே என்று நினைத்து அழுகிறார் முருகா!''

''சார் எனக்காகவா அழறீங்க? அழாதிங்க சார். அழப் பிறந்தவன் நான் ஒருத்தனாகவே இருக்கட்டும்.''

''உனக்காக அழலையடா, முருகா. உன் அழுகையில் ஒரு உண்மை தெரிந்தது.''

நர்மதை, ''நீ உத்தமன் முருகா!'' என்றாள். அவளது அன்பு ஆணவத்திலிருந்து விடுபட்டு அறத்திற்குள் சங்கமிக்கத் துடித்தது.

ராதைக்குப் பழங் கதையின் உட்பொருள் தெரியாத காரணத்தால் அவள் திகைத்து நின்றாள்.

குழந்தையைப் போல விக்கி அழுதார் மணிவாசகன். குழந்தையுள்ளமும் பெற்றார்.

''இத்தனை காலமும் அறிவுச் சூன்யத்தில் வாழ்ந்த எங்களை அழிந்து போகவொட்டாமல் காத்த மகான் நீ!'' – இது கணவன் பேச்சு.

''கணவனாக இருந்து குடும்பத்தைப் பார்க்கிறதும் தப்பு. மனைவியாக நின்று குடும்பத்தைப் பார்க்கிறதும் தப்பு. குழந்தையாக நின்று குடும்பத்தைப் பார் என்று எங்களுக்கு உபதேசம் செய்த ஞானி!'' – இது மனைவியின் கடமை வழிப் பேச்சு.

அழுத முருகன் அழுது பேசும் வக்கீலையும் டாக்டரையும் பார்த்து அழுகையை நிறுத்தினான்.

''உன்னோட நண்பன் ஜி. முருகன் அழியவிருந்த குடும்பத்தைத் தடுத்து நிறுத்தினான்" என்று தாய்மை சிறக்கப் பேசினாள் நர்மதை.

''பிளவு பட இருந்த வாழ்வை நீ கூட்டி வைத்த புனிதன் நீ!'' என்றார் வக்கீல்.

''எங்கள் பாபுவுக்குத் துரோகம் செய்யவிருந்த எங்களைத் தடை செய்த விதி நீ!''

தான் என்ற அகந்தை விடுபட்டுத் தாங்கள் தங்களது குடும்பம் என்னும் நினைவில் ஒன்றினார்கள்.

ராதை ''அப்பாடா. நான் பிழைத்தேன்...'' என்று பெருமூச்சு விட்டாள். பெரியவர்கள் பேசிய விவரம் குழந்தைகளுக்குப் புரியவில்லை!

## உங்களுக்குப் புரிகிறதா?

கீழே உள்ள பெயர்கள் எவற்றைக் குறிக்கின்றன என்பதை உங்களால் ஊகிக்க முடிகிறதா?

குழியடிச்சான், கத்தூரி வாணன், கறுத்த கார், மணல்கார், கிரோலினா, தங்கமணி, பங்காருதிலகம், மங்கல மட்டை, மலைகுலுக்கி, ஆனைக் கொம்பன், இரங்கல் மீட்டான், சிறை மீட்டான், மொழிக் கருப்பன்.........

இவை என்னவென்று கண்டு பிடித்து விட்டீர்களா? இவை எல்லாம் நெல் வகைகள்! நெல்லில் 300 வகைகள் இருப்பதாகக் கூறுகின்றனர்.

''இவங்க என்னபேசுறாங்கள் சித்தி?''

''பாபு, உங்கம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஒரு பந்தயம் நடந்ததுடா!''

''ஓட்டப் பந்தயமா? சித்தி?''

''வீட்டை விட்டு ஓட்டும் பந்தயம்!''

முருகன் ''அப்படின்னா என்ன சித்தி?'' என்று கேட்டான்.

மணிவாசகன் ''முருகா! நீ இனிமே அனாதை இல்லை!'' என்றான்.

நர்மதை ''நீ எங்கள் குழந்தை'' என்றாள்.

''நீ எனக்கு அண்ணன்!'' என்று பாபு, முருகனைக் கட்டிக் கொண்டான்.

''நான் எப்படியடா உனக்கு அண்ணன்?'' என் இனிசியல் ஜி. ஆச்சே!''

மணிவாசகன், ''முருகா! உனக்கு நீ அனாதை என்று தெரியும். எப்படி 'ஜி' என்று இனிசியல் வந்தது?'' என்றான்.

''என்னை அனாதையாக வளர்த்த பாதிரியார் பள்ளிக்கூடத்திலே கொண்டு போய்ச் சேர்த்தார்.''

''அப்போது வாத்தியார் என் இனிசியலை என்ன என்று கேட்டார். உடனே பாதிரியார் இவன் கடவுளின் குழந்தை அதனாலே இவனுக்கு இனிசியல் 'ஜி'. இவனுக்கு ஜி.முருகன் என்று வைக்கச் சொன்னார். அன்று முதல் நான் 'ஜி. முருகன்.''

''நீ கடவுளின் இனிசியலோடு எங்கள் குழந்தையாகவும் இரு!''

மணிவாசகனும் நர்மதையும் சேர்ந்து சொன்னார்கள்.

அழுத எல்லாரும் அமைதியாக இருந்தார்கள்.

''அண்ணா . . ''

''தம்பி! . . ''

பாபுவும் முருகனும் ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டார்கள்!

''நான் உங்கள் அப்பா''.

''நான் உங்கள் அம்மா''.

இரு குழந்தைகளுடனும் டாக்டர் நர்மதையும், வக்கீல் மணிவாசகனும் சேர்ந்து அணைத்து நின்றனர். சிரித்தபடியே வீட்டிற்குள் வந்தனர்.

ஏதோ ஒரு பேப்பரை ராதை கிழித்துக் கொண்டிருந்தாள்.

''ராதைச் சித்தி, என்னத்தைக் கிழிக்கிறே?''

''நான் வக்கீலுக்குப் பெற்ற பட்டம்.''

அவள் சொன்னது பொய் என்பது நர்மதைக்கும் மணிவாசகனுக்கும் தெரியும்.

விவாகரத்துக்காக நர்மதை கையெழுத்துப் போட்டு வைத்த வெறும் பேப்பரைக் கிழித்து எறிந்தாள்.

டெலிபோன் மணி அடித்தது.

''ஹலோ ... என்ன யார் வேண்டும்? வக்கீல் மணிவாசகன் வீடு தான்... அது என்ன லாரி.கம்பெனியா? ஐயா இருக்கிறாங்க... எத்தனை மணிக்கு வரச் சொன்னாங்க... பத்து மணிக்குச் சாமான் எடுக்கவா.? இருங்க...'' என்றவள் மணிவாசகனைப் பார்த்தாள்.

''லாரி கம்பெனியின் உதவி தேவை இல்லை. கொடுத்த அட்வான்ஸ் பணத்தை அவர்களையே வைத்துக் கொள்ளச் சொல்.''

''அதை நீங்களே சொல்லுங்கள்!''

வக்கீல் சொல்லிக் கொண்டிருந்தார்.

முருகன் ''ரெயிலுக்கு நேரமாகிவிட்டதே அம்மா'' என்று டாக்டர் முகத்தைப் பார்த்தான்.

நர்மதை கணவன் முகத்தைப் பார்த்தாள்.

''ரெயில் போனால் போகட்டும். நம்முடைய காரில் எல்லாரும் உதகைக்குப் போகலாம்''.

காரில் போகும் ஆனந்தத்தை எண்ணி இரண்டு கிளிக் குஞ்சுகள் குதித்துத் துள்ளி ஆனந்தப்பட்டன.

*முற்றும்*


## சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, எண் : 151.

சேலம் - 1. தொலைபேசி எண் : 2402

கிளைகள் : நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், சங்ககிரி, வேலூர், சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி. கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி, ஜலகண்டபுரம், ஆட்டையாம்பட்டி, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2, பெத்தநாயக்கன்பாளையம், மேட்டூர் டேம், நாமகிரிப்பேட்டை, ஏற்காடு, வாழப்பாடி, கொண்டலாம்பட்டி, மகுடஞ்சாவடி, எளம்பிள்ளை.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

| | |
|---|---|
| **கால் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 5,000/-க்கும் அதற்கு மேலும் மேற்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்) | $3\frac{1}{4}$% |
| ரூ. 10,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3 நாள் முன் அறிவிப்பின்பேரில்) | $3\frac{1}{2}$% |
| **சீசன் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 1,000/-க்கும் அதற்கு மேலும் 15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும் | 4 % |
| 31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும் | $4\frac{1}{2}$% |
| **பிக்சட் டெபாசிட்டுகள் :** | |
| ரூ. 50/-ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு : | |
| 91 நாட்களுக்கும் அதற்குமேல் 6 மாதத்திற்குள் | $5\frac{1}{2}$% |
| 6 மாதத்திற்கும் அதற்குமேல் 12 மாதத்திற்குள் | 6 % |
| 12 மாதத்திற்கும் அதற்குமேல் 24 மாதத்திற்குள் | $6\frac{3}{4}$% |
| 24 மாதத்திற்கும் அதற்குமேல் 36 மாதத்திற்குள் | $7\frac{1}{4}$% |
| 36 மாதத்திற்கும் அதற்குமேல் 60 மாதத்திற்குள் | $7\frac{1}{2}$% |
| 5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள் | $7\frac{3}{4}$% |
| 6 வருடத்திற்கும் அதற்கு மேலும் | 8 % |
| நடப்பு கணக்கு $\frac{1}{2}$% | சேமிப்பு கணக்கு $4\frac{1}{2}$% |

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு $\frac{1}{2}$% கூடுதலாக கொடுக்கப்படும். ரூ. 5,000/–க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுகிறவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்ஏ., தலைவர்.
வை. இராமலிங்கம், செயலாளர்.
தி. இராஜமாணிக்கம், நிர்வாக அலுவலர்.

# தாவரங்களில் ஊடுருவி இருந்து தாக்கும் பூச்சிக் கொல்லிகள்

சென்ற இதழ்த் தொடர்ச்சி



'ஆர்த்தீன்': இது நீரில் கரையக்கூடிய 70 சதம் திறனுள்ள தூள் வடிவத்தில் கிடைக்கிறது. பல்வகைத் தத்துப்பூச்சிகளையும், பேன்களையும் அழிக்கவல்லது.

'மீதமிடோபாஸ்': இது 'டாமரான்' என்ற பெயரில் 50 சதம் திறனுள்ள நீரில் கரையும் திரவ வடிவத்தில் கிடைக்கிறது. இதுவும் சாறு உறிஞ்சும் அசுவணி, தத்துப்பூச்சிகள், பேன் முதலியவற்றைக் கட்டுப்படுத்துகிறது. பயிர்களின் வளர்ச்சியையும் ஊக்குவிக்கிறது.

மேற்கூறிய மருந்துகள் தவிர 'பாக்சிம்', 'செஃபாஸ்' 'பார்மோதயான்', 'டமான்' போன்றவைகளும், பாஸ்வரம் கலந்த உட்கிரகிக்கப்படும் பூச்சிக்' கொல்லி வகையைச் சார்ந்தவையாகும்.

'போரேட்': இது மிகவும் நச்சுத் தன்மை கொண்டது. இப்பொழுது 'திமட் 10' என்ற பெயரில் 10 சதம் குருணைகளாகக் கிடைக்கிறது. எக்டேருக்கு 1 முதல் 1.5 கிலோ மருந்துச் சத்து உள்ள அளவுக்குப் பருத்தியில் தோன்றும் உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவுகிறது. சோளத்தில் குருத்து ஈயைக் கட்டுப்படுத்த சோளத்தை விதைக்கும் போது ஒரு மீட்டர் விதைச் சாலுக்கு 1.5 கிராம் 10 சதம் 'திமட்' குருணைகள் உபயோகிக்க வேண்டும். நெல்லைத் தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும் எக்டேருக்கு 1 கிலோ மருந்துச் சத்து அளவுக்கு இதைப் பயன்படுத்தலாம். இது பி.எச்.சி. மருந்துடன் கலக்கப்பட்டு 'பேடிகார்டு' என்ற குருணைகளாகவும் கிடைக்கின்றது.

'டைசல்போடான்': இந்த உட்கிரகிக்கப்படும் பூச்சிக் கொல்லியானது 'டைசிஸ்டான்', 'சால்வி ரெக்ஸ்' என்ற பெயர்களில் 5 சதம் குருணைகளாகக் கிடைக்கிறது. இது 1 அல்லது 1.5 கிலோ மருந்துச் சத்தளவில் பருத்தி, காய்கறிகள் போன்றவற்றில் தோன்றும் அசுவணி, தத்துப்பூச்சிகள், பேன், சிலந்தி போன்றவற்றை அழிக்கப் பயன்படுகிறது. சோளம், கம்புப் பயிர்களின் குருத்து ஈக்களை அழிக்கவும் இதைப் பயன்படுத்துகிறார்கள். எல்லா வகையான உறிஞ்சும் பூச்சிகளையும், பயிர்ச் சிலந்திகளையும், உடனே பூரணமாக அழித்து விடுகிறது. எலுமிச்சைச் சிலந்தி, ரோஜாவின் சிவப்புச் செதில் போன்றவற்றை அழிப்பதில் இது மிகவும் பயன்படுகிறது. வெண்டை, மிளகாய், கடுகு போன்ற செடிகளுக்குப் பயன்படுத்தலாம். சோளக் குருத்து ஈயைக் கட்டுப்படுத்த மீட்டர் விதைச் சாலுக்கு 1.5 கிராம் 10 சதம் குருணைகளைப் பயன்படுத்தல் நல்ல பலன் தருகிறது.

'ஆல்டிகார்ப்': 'டெமிக்' என்ற பெயரில் 10 சதம் குருணைகளாக இது கிடைக்கின்றது. மிகவும் நச்சுத் தன்மையுடையது இது. தண்ணீரில் எளிதாகக் கரையக் கூடியது. எனவே, உபயோகித்தவுடன் பெரும் பயன் அளிக்கிறது. பருத்திக்கு இது ஒரு அருமையான மருந்தாகும். எக்டேருக்கு 1—1.5 கிலோ மருந்துச் சத்தளவில் உபயோகித்தால் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பெரிதும் பயனளிக்கின்றது. தவிர இது 0.024 சதம் என்ற அளவில் பல்வேறு பயிர்களில் தோன்றும் உறிஞ்சும் பூச்சிகளைக் கொல்லப் பயன்படுகிறது.

'கார்போபியூரான்': இது 'பியூரான்' என்ற பெயரில் 75 சதம், 50 சதம் திறன்கொண்டகரையும் தூளாகவும், 3 சதம், 5 சதம், 10 சதம் திறன் கொண்ட குருணைகளாகவும் கிடைக்கிறது. இதுவும் நீரில் கரையக் கூடியதாகும். இது நெல், கரும்பு, பருத்தி, புகையிலை போன்ற பயிர்களுக்குக் காப்பளிக்கப் பயன்படுகிறது. எக்டேருக்கு 1 அல்லது 1.5 கிலோ மருந்துச் சத்தளவில் உபயோகிக்கவேண்டும். இதை 6 சதவிகிதத்தில் விதையுடன் கலந்தால் சோளக் குருத்து ஈயை வியத்தகு முறையில் கட்டுப்படுத்தலாம்.

இவை தவிர 'ஜெக்ட்ரான்' 'செர்த்தோபக்ஸ்' போன்றவைகளும் 'கார்பமேட்' வகையைச் சேர்ந்த உட்கிரகிக்கப்படும் பூச்சிக்கொல்லி வகையைச் சார்ந்ததாகும்.

தங்கு நஞ்சு: உட்கிரகிக்கப்படும் பூச்சிக்கொல்லிகளை உபயோகித்தால் பயிர்களின் விளைபொருள்களில், குறிப்பாகக் குறுகிய காலக் காய்கறிப் பயிர்களில் அவைகளது நச்சுத் தன்மை ஓரளவு தங்கிவிடுகிறது. எனவே கவனக்குறைவாக ஊடுருவிப் பாயும் பூச்சிக் கொல்லிகளை உபயோகித்தால் அபாயத்தை விளைவிக்க இயலும். இதன் காரணமாக இவ்வகைப் பூச்சிக்கொல்லிகளை உணவுப் பயிர்களில் உபயோகிக்கும் முன்னர், பூச்சியல் துறை அல்லது வேளாண்மை அலுவலர்களிடம் அறிவுரை பெற வேண்டும்.

[தகவல்:—
தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம்,
கோவை-3].

# பருத்தியைத் தாக்கும் இலைப்புள்ளி நோய்கள்

**கோ**வைப் பகுதியில் புரட்டாசிப் பட்டத்தில் சுமார் 25,000 எக்டோரில் பருத்தி விதைக்கப்படுகிறது. பருத்திச் செடியில் தோன்றும் சில நோய்களைத் தடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். ஏனெனில், கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாக புரட்டாசி-ஐப்பசி மழைக்குப் பின் பருத்திப் பயிரில் பல்வேறு இலைப்புள்ளி நோய்கள் தோன்றி, அதனால் மகசூல் 20 முதல் 30 சதவிகிதம்வரை பாதிக்கப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பூச்சியினால் ஏற்படும் இழப்பைப் பூச்சி மருந்துகள் உபயோகிப்பதன் மூலம் தடுப்பதுபோல், பூசணங்களினால் ஏற்படும் நோய்களையும் தக்க தருணத்தில் தடுத்தால் தான், சீர்மிகு சாகுபடியினால் கிடைக்கும் அதிக விளைச்சல் முழுவதையும் பெற இயலும்.

பருத்தி விதைத்த இரண்டு மாதங்களுக்குப்பின் தோன்றுவது 'ஆல்டர்நேரியா' என்னும் புள்ளி நோய். இப்புள்ளிகள் பழுப்பு நிறமுள்ளதும், ஒரு சென்டிமீட்டர் அகலமுள்ளதும், கருநிற வளையங்கள் பலவற்றை உள்ளடக்கியதுமாகக் காணப்படும்.

அடுத்து, ஓரிரு வாரங்களில் காணப்படுவது 'செர்க்கோஸ்போரா' புள்ளிநோய். இப்புள்ளிகள் அரை சென்டிமீட்டர் அகலமாயும், சாம்பல் நிற மையமும், கருஞ்சிவப்பு நிறக் கரையும் உள்ள வட்ட வடிவச் சிறு புள்ளிகளாகும்.

விதைத்து மூன்று மாதங்களுக்கு மேல், இறுதியில் தோன்றுவது 'ரஸ்ட்' எனப்படும் இலைத்துரு நோய். இலைகளின் அடியில் குண்டூசித் தலை அளவுள்ள சின்னஞ்சிறு கொப்புளங்கள் தோன்றி, அதனால் இலை மேற்புறம் காய்ந்து சிறு புள்ளிகள் தோன்றும்.

மேற்கூறிய மூன்று வித புள்ளிகள் இலைகளில் ஏராளமாய்த் தோன்றுவதால் இலைகள் கருகி, பெருமளவில் இலைகள் உதிர்ந்துவிடும். இதனால் பூ பூப்பதும், காய் பிடிப்பதும் பாதிக்கப்பட்டு மகசூல் 30 சதம் வரை குறையலாம். மழை அதிகமிருந்தால் இந்த நோய்கள் வேகமாகப் பரவி, இழப்பும் அதிகமாகும்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர நோயியல் துறையிலும், தாவர இயல் துறை—பருத்திப் பிரிவிலும் செயல்படும் அகில இந்திய ஒருங்கிணைந்த பருத்தி ஆராய்ச்சித் திட்டத்திலும் இந்த நோய்களைத் தடுக்க, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு மேற்கொண்டுள்ள ஆராய்ச்சிகளின் முடிவுப்படி, 'ஆல்டர் நேரியா' 'செர்க்காஸ்போரோ' புள்ளிகள் மற்றும் இலைத்துரு ஆகிய நோய்களை 'தாமிர ஆக்ஸிகுளோரைடு' என்னும் தாமிரக் கலவை மருந்துகளில் ஒன்றினாலோ, அல்லது 'ஆரியோ ஃபங்கின் சோல்' என்னும் எதிர் உயிர் மருந்தினாலோ (ஆண்டிபயாடிக்) தடுத்துவிடலாம்.

பருத்தி விதைத்து 6 வாரங்களுக்குப் பிறகு, முதல் மருந்து தெளிப்பு செய்ய வேண்டும். அதன்பின், மூன்று வாரங்கள் இடைவெளியில் ஐந்து தடவைகள் மருந்து தெளிக்க வேண்டும். அதாவது விதைத்து 6, 9, 12, 15, 18-வது வாரங்களில் மருந்து தெளிக்க வேண்டும். தாமிர ஆக்ஸிகுளோரைடு என்னும் தாமிரக் கலவை மருந்து 'பைட்டலான்', 'புளுகாப்பர்', 'பிளைடாக்ஸ்', 'காப்பர் சான்டோஸ்', 'ஷெல் காப்பர்', 'குப்ரமார்' என்னும் பெயர்களில் விற்பனை செய்யப்படுகிறது. விசைத் தெளிப்பான்களை உபயோகித்தால் இம்மருந்தை ஒரு தடவை தெளிக்க ஏக்கருக்கு 1 கிலோ முதல் 2 கிலோ வரை மருந்து தேவைப்படும். கையால் இயக்கப்படும் தெளிப்பான் மூலம் உபயோகித்தால் 1 கிலோ மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். 'தாமிர ஆக்ஸிகுளோரைடு' மருந்துடன் பூச்சி நாசினிகளான, 'மிதைல் பாரதியான்' 'என்டிரின்', 'டிரைதியான்' 'தியோடான்', 'பாஸ்பமிடான்' போன்ற திரவங்களுடன் கலந்தும் உபயோகிக்கலாம்.

'ஆரியோஃபங்கின்-சோல்' என்னும் மருந்தை இந்திய அரசுக்குச் சொந்தமான 'இந்துஸ்தான் ஆண்டிபயாடிக்ஸ் லிமிடெட், பிம்ப்ரி, பூனா-18, மகாராஷ்டிர மாநிலம் என்னும் முகவரியிலிருந்து நேரிடையாகத் தருவித்துக் கொள்ளலாம். 'ஆரியோஃபங்கின்-சோல்' ஒரு தடவை தெளிப்பதற்கு ஏக்கருக்கு 75 முதல் 100 கிராம் வரை தேவைப்படும். கையால் இயக்கப்படும் தெளிப்பான்களால் ஒரு கிராம் மருந்தை 6 லிட்டர் நீரில் கலக்க வேண்டும். இந்த ஆராய்ச்சி முடிவுகளை மேலும் உறுதிப்படுத்த இவ்வித ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பூசணக் கொல்லிகள் உபயோகிக்கப்படும் பொழுது பூச்சியொழிப்புக்கான மருந்துகளும் தவறாது பயன்படுத்தப்பட வேண்டும். மேற்சொன்ன 'தாமிர ஆக்ஸிகுளோரைடு' அல்லது 'ஆரியோஃபங்கின்-சோல்' உபயோகித்ததில், தமிழ்நாடு பல்கலைக் கழக வயல்களில் பருத்தி 20 முதல் 25 சதவீதம் அதிகரித்து, எக்டேருக்கு ரூபாய் 700 முதல் 800 வரை அதிக வருவாய் கிடைத்துள்ளது. இந்தத் தடுப்பு முறைகளைக் கையாளுவதால் 'ஆல்டர்நேரியா' புள்ளி, 'செர்க்காஸ்போரா' புள்ளி மற்றும் இலைத்துரு நோய்கள் தடுக்கப்படுவதோடு, பருத்திச் செடிகளில் தோன்றும் 'பாக்டீரியல் கருகல்' என்னும் நோயும், 'ஆந்திரக்நோஸ்' என்னும் நோயும், வேறு நோய்க் காரணங்களால் ஏற்படும் காயழுகலும் கட்டுப்படுத்தப்படுகிறது. எனவே, பருத்தி வேளாண்மையில் சிறந்து விளங்கும் கோவைப் பகுதி உழவர் பெருமக்கள் பயிர் நோயொழிப்பிலும் தன்னிகரற்று விளங்க வேண்டுவதோடு, நடப்புப் பட்டத்தில் பருத்தியின் இலை நோய்களைத் தவறாமல் தடுக்க உடன் செயலாற்றும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தகவல்: தாவரநோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப்
பல்கலைக் கழகம். கோவை-3.**



தமிழ் நாட்டில் ''சிட்கோ''வின் பெயர் அனைவரும் அறிந்ததே. சிறு தொழில்களுக்கு ''சிட்கோ'' அளித்துள்ள உதவிகள் பல.

**மூலப்பொருட்களை வழங்குதல்**
**தொழிற்கூடங்களை அமைத்தல்போன்ற**
தொண்டுகள் பல புரிந்து வருகிறது. சிட்கோ.

அம்பத்தூரில் நான்கு திங்கட்களுக்குள் 17 தொழிற்கூடங்களை சிட்கோ கட்டி முடித்துள்ளது. இத் தொழிற்கூடங்கள் ''உடமை உடனே, தொகை பிறகே'' என்ற தவணை முறைத் திட்டத்தின்படி உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களை சிட்கோ இதுகாறும் தவணை முறையில் அளித்துள்ளது.

**மகத்தான புதிய கடன் உதவித் திட்டம் ;**

கீழ்க்கண்டவற்றுக்கு கடன்கள் வழங்கப்படும்.

அ) தொழிற்கூடங்களைக் கட்ட
ஆ) இயந்திரங்களை வாங்க
இ) நடைமுறைத் தேவைக்காக கடன்களைப் பெற.

தனி நிறுவனம் ஒன்று ஒரு இலட்சம் ரூபாய் வரையில் கடன் வாங்க வாய்ப்பு உண்டு.
மற்ற விவரங்களை எம்மிடம் அறியவும்:

கிளைகள் : உதவி வளர்ச்சி அலுவலர், சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், வேலூர், கோவை, திருச்சி, மதுரை, தர்மபுரி, திருநெல்வேலி மாவட்ட தொழில் வணிகத்துறை உதவி இயக்குநர்களும் சிட்கோவின் திட்டங்களைப் பற்றிய விவரங்களை அளிப்பார்கள்.

**சிட்கோவின் உதவி பெறுங்கள்!**
**தொழில் நிறுவி வளமடையுங்கள்!**

**தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம்**
*(தமிழ்நாடு அரசு நிறுவனம்)*
கண்ணம்மைக் கட்டிடம்,
122 அண்ணா சாலை, சென்னை-6.

# கேளுங்கள் கொடுக்கப்படும்

*வினா :* கரும்பில் தோகையை அடிக்கடி உரிக்க வேண்டும் என்று கேள்விப் பட்டேன். இது அவசியமா?

—வி. ரெங்கசாமி,
மதுராந்தகம்,
செங்கற்பட்டு மாவட்டம்

*விடை :* கரும்பில் உள்ள தோகையை 4-வது மாதத்தில் ஒரு தடவையும், பிறகு 6-வது மாதத்தில் ஒரு தடவையும் ஆக இரு முறை உரித்து நீக்குவது அவசியம் ஆகும். அடிக்கடி கரும்புத் தோகையை உரிக்க வேண்டியது அவசியமில்லை. இவ்வாறு தோகையை நீக்குவதால் கரும்பு வரிசைகளின் இடையே நல்ல காற்றோட்டமும், சூரிய வெளிச்சமும் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இதனால் கரும்புகள் நன்கு வளர்ச்சி அடையும். மேலும் கரும்புத் தோகைகளின் அடிப்பாகத்தில் மறைந்து வாழும் மாவுப் பூச்சி, அரக்குப் பூச்சி ஆகியவைகளையும் ஓரளவிற்குக் கட்டுப்படுத்த இயலும்.

• • •



*வினா :* டி. எம். வி. 2 ரக எள்ளை ஜூன் மாதத்தில் விதைக்கலாமா?

—எஸ். தனபால்,
புதுப்பாளையம்,
கடலூர் அஞ்சல்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

*விடை :* டி. எம். வி. 2 ரக எள் குளிர் காலத்தில் சாகுபடி செய்வதற்கே ஏற்றது. இந்த ரகத்தை நவம்பர், டிசம்பர், மாதங்களில் விதைக்க வேண்டும். சூரிய ஒளி கிடைக்கும் கால அளவிற்கு ஏற்றவாறு எள் பயிரின் வளர்ச்சியும், மகசூலும் வேறுபடும். இவை பருவத்திற்குப் பருவம் மாறுபடக் கூடும். ஆகையால்குளிர் காலத்திற்கு ஏற்ற டி.எம்.வி. 2 ரக எள்ளை நவம்பர், டிசம்பர் தவிர வேறு மாதங்களில் விதைத்தால் மகசூல் மிகவும் குறையும்.



*வினா :* மரவள்ளிக் கிழங்கு நடுவதற்குக் குச்சி எடுப்பதற்கான செடியின் வயது என்ன? குச்சியின் கணுக்கள் மேல் நோக்கி இருக்குமாறு நடுவதா? கீழ்நோக்கி நடுவதா? எவ்வளவு அங்குல ஆழம் நட வேண்டும்? மர வள்ளி அறுவடைக்குத் தயார் என்று எப்படி அறியலாம்?

—எல். கமலம்,
அமைப்பாளர்,
பெண்கள் விவாதக் குழு
இடிகரை,
கோவை மாவட்டம்.

*விடை :* மரவள்ளிக் கிழங்கு நடுவதற்கான கரணைகள் எடுப்பதற்கு, 9 அல்லது 10 மாத வயதுடைய செடிகள் சிறந்தவை. கரணையில் கணுக்கள் மேல் நோக்கி இருக்குமாறு நட வேண்டும். கரணைகளை 2 முதல் 3 அங்குல ஆழத்தில் நடுவது சிறந்தது.

மரவள்ளிச் செடிகளில் உள்ள இலைகள் மஞ்சள் நிறமடைந்து வாடி உதிர்தல், செடியைச் சுற்றியுள்ள மண்ணில் இலேசான வெடிப்புகள் தோன்றுதல் ஆகியவை மர வள்ளிச் செடிகள் அறுவடைக்குத் தயார் என்பதைப் புலப்படுத்துகின்றன.

*வினா :* பெல்லாரி வெங்காயம் ஒரு ஏக்கர் பயிரிட எவ்வளவு விதை தேவைப்படும்? எவ்வளவு நிலத்தில் நாற்றுவிட வேண்டும்? எத்தனை நாளில் நாற்றைப் பறித்து நடவேண்டும்?

—கு. முனுசாமி,
அரக்கோணம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

*விடை :* ஒரு ஏக்கர் பெல்லாரி வெங்காயம் பயிரிட 4 கிலோ விதையை 4 முதல் 5 சென்ட் பரப்புள்ள நாற்றங்காலில் விதைக்க வேண்டும். நாற்றங்காலில் மேட்டுப்பாங்கான பாத்திகள் அமைத்து நாற்றுவிடுதல் சிறந்தது. 6 வார வயதில் நாற்றைப் பறித்து நட வேண்டும்.

வினா : நான் ஜனவரி மாதத்தில் கேழ்வரகு பயிரிட விரும்புகிறேன். எந்த ரகத்தைப்பயிரிடலாம்? எவ்வளவு விதை, உரம், தேவை என்பதைத் தெரிவிக்கவும்.

—மு. நல்லப்பன்,
பெரம்பலூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

விடை : ஜனவரி மாதத்தில் இறைவையாகப் பயிரிட கோ. 7 ரகக் கேழ்வரகு விதைப்பதே சிறந்தது. ஏனெனில், இது 100 நாட்களில், ஏக்கருக்கு 1,500 கிலோ வரை மகசூல் தர வல்லது. இந்த ரகமே, தற்பொழுதுள்ள கேழ்வரகு ரகங்களில் அதிக மகசூல் தரக் கூடியதாக உள்ளது.

ஒரு ஏக்கரில் கோ—7 ரக கேழ்வரகு பயிரிட வேண்டுமானால், 1.5 கிலோ விதையை 3 சென்ட் நாற்றங்காலில் விதைக்க வேண்டும். 21 நாட்களில் நாற்றைப் பறித்து நடவு செய்யலாம்.

கோ. 7 கேழ்வரகு பயிரிட ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எரு அல்லது கலவை எரு (கம்போஸ்ட்) இட்டு நன்கு உழுதுவிடவேண்டும். கடைசி உழவில் ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 18 கிலோ மணிச் சத்து, 18கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். இந்த அளவில் சத்து அளிக்க, 40 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட், 25 கிலோ யூரியா, 35 கிலோ மூரியேட் ஆஃப் பொட்டாஷ் ஆகியவைகளை இடுவது மிகவும் சிக்கனமானதாகும். டை-அமோனியம் பாஸ்பேட் கிடைக்காவிட்டால் 125 கிலோ 14 : 14 : 14 அல்லது 15 : 15 : 15 'காம்ப்ளெக்ஸ்' ; அல்லது 105 கிலோ 17 : 17 : 17 'காம்ப்ளெக்ஸ்' உரமிடலாம்.

நடவு செய்த 3 வாரங்கள் கழித்து ஏக்கருக்கு மேலுரமாக 18 கிலோ தழைச் சத்து அளிக்க வேண்டும். இந்த அளவில் சத்து அளிக்க 40 கிலோ யூரியா அல்லது 90 கிலோ அமோனியம் சல்பேட்டு உரத்தை மேலுரமாக இட வேண்டும்.

கோ. 7 ரக கேழ்வரகு விதைகளை உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.






வினா : கோ. 419 ரகக் கரும்பை விட, கோ. 658 ரகக் கரும்பு எவ்வளவு சதம் அதிக சர்க்கரைச் சத்துக் கொண்டது?

—ஆ. தேவநாதன்,
குளித்தலை,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

விடை : கே. 419 ரகக் கரும்பைவிட, கோ. 658 ரகக் கரும்பில் 2 சதம் அளவுக்கு அதிக சர்க்கரை கிடைக்கும். கோ. 419 ரகத்தில் 11 சதமும், கோ. 658 ரகத்தில் 13 சதமும் சர்க்கரை உள்ளது.

* * *

வினா : கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலத்தில் ஏராளமான களைகள் தோன்றுகின்றன. அவைகளை வெட்டி ஒழிக்க வேண்டுமானால் அதிக செலவு ஆகிறது. அடுத்த ஆண்டில் கரும்பு பயிரிடும் நிலத்தில் களைக் கொல்லி தெளிக்க முடிவு செய்துள்ளோம். எந்த களைக் கொல்லியை எப்படித் தெளிப்பது என்பதைத் தெரிவிக்கவும்.

—க. வீரய்யா,
சோழவந்தான்,
மதுரை மாவட்டம்.

விடை : கரும்பு வயலில் தோன்றும் களைகளை அழிக்க கரும்புப் பயிர் முளைக்கும் முன்பாக '2·4-டி' அல்லது 'டையூரான்' என்ற களைக் கொல்லிகளை ஏக்கருக்கு 2 கிலோ வீதம் அல்லது 'அன்சார்' என்ற களைக் கொல்லியை ஏக்கருக்கு 2 லிட்டர் வீதம் 225 லிட்டர் தண்ணீரில்கலந்து தெளிக்க வேண்டும்.





வினா: 1-11-73 தேதிய 'தமிழரசு' இதழ் கண்டு வியப்புற்றேன். கோழி வளர்ப்பின் மூலம் இவ்வளவு பயன்கள் உண்டு என்பது தெரியாமல் இதுவரை இருந்தோமே என, என்மீதே எனக்குக் கோபமும் வந்தது! இனி நானும் கோழிப் பண்ணை அமைக்க முடிவு செய்துள்ளேன். என்னை இப்பணியில் ஈடுபடச் செய்த 'தமிழரசு' இதழுக்கு என் நன்றி.

நான் நெல்லை மாவட்டம் புதூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்தவன். புதூர் ஊராட்சி ஒன்றிய விதைப் பண்ணையில் சூரியகாந்தி விதைகள் வாங்கி விதைத்துள்ளேன். ஆனால், அவை, சரிவர முளைக்காமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைத்துள்ளன. இதே போன்றுதான், வேறு சிலருக்கும் என் கிராமத்தில் சூரியகாந்தி விதைகள் முளைத்துள்ளன. இதற்குக் காரணம் யாது? சூரியகாந்தி விதைகள் முளைக்காமைக்குக் காரணம் எதுவெனத் தெரிவித்தால் நல்லது என வேண்டுகின்றேன்.

—பா. சங்கரக்குமாரசாமி,
வீரப்பட்டி, முத்தாலாபுரம் (அஞ்சல்), விளாத்திகுளம் வட்டம், நெல்லை மாவட்டம்.



விடை: சூரியகாந்தி விதைகள் பின்கண்ட காரணங்களால் முளைக்காமல் இருக்கக்கூடும்.

(1) நன்கு முற்றாத விதைகள்.

(2) விதைக்கும் நிலத்தில் போதிய ஈரம் இல்லாதிருப்பது.

தாங்கள் வாங்கிய சூரியகாந்தி விதைகள் நன்கு முதிர்ந்து விளையாமல் சாவியான விதைகளாக இருந்திருக்கக்கூடும். எப்பொழுதும் முளைப்புச் சோதனை செய்து பார்த்த பிறகு, விதைகளை வாங்குவதே சிறந்தது. சூரியகாந்தி, பூ பூத்ததிலிருந்து அறுவடை வரை பெரும் மழை இருந்திருக்குமானால், அப்போது உருவாகிய விதைகள் சாவியாக ஆகிவிடுவதுடன், முளைப்புத்திறன் குறைந்ததாகவும் ஆகிவிடுகின்றன. இத்தகைய விதைகளை விதைத்திருப்பின் சரியாக முளைத்திருக்காது.

போதிய ஈரம் இல்லாத நிலத்தில் சூரியகாந்தி விதைகள் நன்கு முளைக்கா. சூரியகாந்தி விதைகளின் மேல்தோல் கெட்டியாக அமைந்துள்ளதால், போதிய ஈரம் இல்லாவிட்டால் சூரியகாந்தி விதைகள் சரியாக முளைக்காது. இதற்காகவே, சூரியகாந்தி விதைகளை விதைப்பதற்கு முன்இரவு ஈரமண்ணுடன் கலந்து வைத்திருந்து விதைக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வாறு செய்தால் விதைகள் நன்கு ஊறி, விதைத்தவுடன்-நிலத்தில் போதிய ஈரம் இல்லாவிட்டாலும்-முளைத்துவிடும்.

அதிக ஈரம் நிலத்தில் இருந்தாலும், விதைகள் அழுகி முளைப்புக் குறைந்துவிடும்.

சென்ற ஆண்டு சூரியகாந்தி விதைத்த நிலத்தில் இந்த ஆண்டும் சூரியகாந்தி விதைத்தால், முளைப்புத்திறன் குறைந்திருக்கும் என்று தாங்கள் கருதினால் அது தவறு!

எனவே, நல்ல தரமான முளைப்புத்திறன் கொண்ட சூரியகாந்தி விதைகளைப் போதிய ஈரம் உள்ள நிலத்தில் விதைப்பதே சிறந்தது.



வினா: வேர்க்கடலைச் செடியில் 'டிக்கா' நோய் வருவது எதனால்? அதைப்போக்க வழி என்ன? விவரமாகக் கூறவும்.

—சிவகிரி இரா. மீனாட்சி சுந்தரம்.

விடை: ''டிக்கா'' இலைப்புள்ளி நோய் ஒருவகைப் பூசணத்தால் ஏற்படுகிறது. இந்நோய் நிலக்கடலைச் செடிகளில், விதைத்த ஒருமாத காலத்திற்குப் பிறகு தோன்றக்கூடும். இந்த நோய் தோன்றியவுடன் இலைகளில் வட்டமான சிவப்புக் கலந்த கரும்புள்ளிகள் காணப்படும். நோய் பரவப்பரவ, புள்ளிகளின் எண்ணிக்கை அதிகமாகி, இலைகள் முழுவதையும் பாதிக்கிறது. அதன் பின் இலைகள் வாடி உதிர்ந்துவிடும்.

''டிக்கா'' இலைப்புள்ளி நோய் தாக்கினால், நிலக்கடலைச் செடிகளின் வளர்ச்சி குன்றிவிடும். இந்நோய் கடுமையாகத் தாக்கினால் நிலக்கடலைச் செடியின் கொடிகளும், விழுதுகளும் (காம்பு) பாதிக்கப்படும். இதனால் மகசூல் பெருமளவில் குறைந்துவிடும்!

இந்த நோயைத் தடுக்க நிலக்கடலை விதைத்த 5-வது வாரத்தில், ஏதேனும் ஒரு தாமிரப் பூசணக் கொல்லியில் ஒரு, கிலோவை, 400 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். முதல்முறை மருந்து தெளித்த 15 நாட்கள் கழித்து மறுமுறையும் மருந்து தெளித்தல் சிறந்தது. கந்தகத்தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவியும் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.



வினா: எம்.சி.யு. 5 பருத்தியின் முழுவிவரங்கள் அடங்கிய கட்டுக்கோப்பு சாகுபடி முறையை தங்கள் இதழில் வெளியிட வேண்டுகின்றோம்.

—வேளாண்மை உதவியாளர்கள், தீவிர பருத்திச் சாகுபடித் திட்டம், சூலூர், கோவை மாவட்டம்.

விடை: 'எம்.சி.யு. 5' பருத்தி பயிரிடுவது பற்றிய ஒருமித்த செய் நேர்த்தி முறைகள் 1-9-73 தேதிய 'தமிழரசு' இதழில், 31,32,33,35,36 பக்கங்களில் விளக்கமாக தெரிவிக்கப்பட்டுள்ளன. எனவே, அந்த இதழைத் தயவு செய்து படித்து, அறிந்து கொள்ளும் படிக்கேட்டுக் கொள்கின்றோம்.



**வினா:** நான் புகுமுக வகுப்பு (பி.யு.சி.) படித்துப் பாஸ் செய்துள்ளேன். தற்போது நான் வீட்டில்தான் இருக்கின்றேன். எனவே, நான் 'கிராம முன்சீப்' தேர்வு எழுதலாம் என்று இருக்கின்றேன். அதற்குரிய வழிமுறைகள் யாவை என்றும், யாரிடம் சென்று கேட்பது என்றும், தேர்வு எழுதுவது எந்த மாதம் என்றும் அதற்குரிய விவரங்களையும் ''தமிழரசு'' இதழில் வெளியிடும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

—வீ. தங்கவேலு, சேர்குடி (அஞ்சல்), முசிறி வட்டம், திருச்சி மாவட்டம்.

**விடை:** 'கிராம முன்சீப்' தேர்வு எழுதுவதற்குரிய பயிற்சி அளிக்கும் தனியார் பயிற்சி நிலையங்கள் சில திருச்சி நகரில் உள்ளன. ஆனால் அவைகளின் சரியான முகவரிகள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. தாங்கள் திருச்சியில் உள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்குச் சென்று இதுபற்றி விசாரித்து அறிந்து கொள்வதே மேல்! 'கிராம முன்சீப்' தேர்வு ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. அது எந்த மாதத்தில் நடைபெறுகிறது என்பதைத் தங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திலேயே அறிந்து கொள்ள முடியும். முசிறியில் உள்ள வட்ட ஆட்சியர் (தாசில்தார்) அலுவலகத்தில் கூட இதுபற்றிய விவரங்களை அறிந்து கொள்ள முடியும். எனவே, அங்குச் சென்று விசாரித்து அறிந்து கொள்ளுங்கள்.




**வினா:** தமிழ்நாடு அரசு இரண்டாவது சம்பளக் கமிஷன் உத்தரவுப்படி நடுநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு (ஒரு நபர் கமிஷன் சிபாரிசுப்படி) அடிப்படைச் சம்பளம் ரூபாய் 250 என்று சொல்லப்படுகிறது. மேற்படி சம்பளத்திற்கு 'வெயிட்டேஜ்' உண்டா? அல்லது இல்லையா என்பதைத் 'தமிழரசு' மூலம் தெரிவிக்கவும்.

—ஏ.எஸ். வேலுசாமி, கலங்கல் அஞ்சல், சூலூர் வழி, கோவை மாவட்டம்.

**விடை:** இரண்டாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளில் கண்ட குறைபாடுகளை நீக்குவதற்காக நியமிக்கப்பட்ட தனிநபர் குழுவின் பரிந்துரைகளை ஏற்று, அரசு அளித்த ஆணைப்படி [எண். 1363 நாள் 7-10-'72 நிதி (சிறப்புத் துறை)] ரூபாய் 130-3-160-4-180-5-195 அல்லது 140-3-155-4-175-5-210 என்ற திருத்தப்பட்ட விகித அடிப்படைச் சம்பளத்தில் உள்ளவர்களுக்கு முன் பணிக்காலத்திற்கு 'வெயிட்டேஜ்' ஆக உச்ச அளவாக 5 உயர்வும் (5 increments) இதர விகித அடிப்படைச் சம்பளத்தில் உள்ளவர்களுக்கு உச்ச அளவாக 4 உயர்வும் உண்டு. இந்த ஆணைப்படி நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் முன்பணிக்காலத்திற்கு ஏற்ப 'வெயிட்டேஜ்' உண்டு. முன்பணிக்காலத்தைக் கணக்கிட்டுக்கொண்டு, முதல் நான்கு ஆண்டுப் பணிக்காலத்திற்கு, இரண்டு ஆண்டிற்கு ஓர் உயர்வு வீதமும், பிறகு உள்ள பணிக்காலத்திற்கு மூன்று ஆண்டிற்கு ஓர் உயர்வு வீதமும் 'வெயிட்டேஜ்' அளிக்கப்படும். ஆனால் மொத்தத்தில் உச்ச அளவாக 4 உயர்வுகளே 'வெயிட்டேஜ்' ஆக கிடைக்கும். இதே அடிப்படையில், 250 ரூபாய் அடிப்படை சம்பளத்தில் உள்ள நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் - முன்பணிக்காலத்திற்கு ஏற்ப-'வெயிட்டேஜ்' கிடைக்கும்.

•

**வினா:** 1-11-73, 16-11-73 தேதிய 'தமிழரசு' இதழ்களில் கோழிப்பண்ணை பற்றி இன்றியமையாத செய்திகளை வெளியிட்டிருந்தீர்கள். மிக்க மகிழ்ச்சி. நெல்லை மாவட்டத்தில் அரசாங்க கோழிப்பண்ணை எங்கு உள்ளது? எனது பண்ணைக்கு உயர்ந்த ரகக் கோழிக்குஞ்சுகளைப் பெற்றுக்கொள்வது எப்படி என்பது பற்றிய குறிப்புகளை வெளியிடவில்லை. ஆகவே, தயவு செய்து நெல்லை மாவட்டத்தில் உள்ள அரசாங்க கோழிப்பண்ணை பற்றிய விவரம், அரசாங்க உதவிகள், உதவிகளைப் பெறும்முறை ஆகியவைகளைப் பற்றி அறிய ஆவலுடன் எதிர்பார்க்கின்றேன்.

—ஜி. சொக்கலிங்கம், 'தமிழரசு' ஏஜெண்ட், கட்டப்பாறை-628304, நெல்லை மாவட்டம்.

**விடை:** நெல்லை மாவட்டத்தில் கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையம் இல்லை. மதுரை மாவட்டத்திலுள்ள கப்பலூர் கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையத்திலிருந்து நெல்லை மாவட்டத்தினர் தங்களுக்குத் தேவையான கோழிக்குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளலாம். உங்கள் அருகாமையில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் அல்லது கால்நடைப் பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் மூலம் தங்களுக்குத் தேவையான கோழிக்குஞ்சுகளை கப்பலூரிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தங்கள் பகுதியில் உள்ள கோழி விஸ்தரிப்பு நிலையத்திலிருந்தும் தரமான உயர்ரகக் கோழிக்குஞ்சுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

தாங்கள் கப்பலூரில் உள்ள கோழிக்குஞ்சு நிலையத்திலிருந்து தரமான உயர்ரகக் கோழிக்குஞ்சுகளை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். கோழிக்குஞ்சுகளை கூடைகளில் விட்டு, லாரியில் நெல்லை மாவட்டத்திற்குக் கொண்டு செல்லலாம். கோழிப்பண்ணை அமைக்க தற்பொழுது தமிழ்நாடு அரசு நேரடியாகக் கடன் கொடுப்பதில்லை. நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், ஸ்டேட் பாங் ஆப் இந்தியாவும் கோழிப்பண்ணை அமைக்க கடன் கொடுத்து வருகின்றன. கால்நடை. பராமரிப்புத்துறையினர் கோழிப்பண்ணை பற்றிய நுட்பங்களை உங்களுக்குத் தெரிவிப்பதுடன், நோய் தடுப்பும் செய்வார்கள். உங்கள் ஊராட்சி ஒன்றிய எல்லையில் பணியாற்றும் கால்நடை மருத்துவர்கள் தங்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய முன்வருவார். எனவே, அவர்களது சேவையைப் பயன்படுத்தி கோழிப்பண்ணை அமைக்க முற்படுங்கள்.

—ஆர்.எம்.





**நம்முடைய** வாழ்க்கைப் பிரச்சினைகள் நமக்கு எத்தனையோ உள்ளன. வீடு, நிலம், சொத்து, உயில் என்று பல சிக்கல்கள் பலரைச் 'சிக்'கெனப் பிடித்தாட்டுகின்றன. இந்தப் பிடியிலிருந்து விடுபடப் பெருந்துணை புரிகிறது பதிவுத்துறை! எப்படி?

அசையும், அசையாச் சொத்துக்கள், உயில் போன்றவைகளைப் பதிவு செய்வதைப் பத்திரப்பதிவு என்கிறோம். இவ்வாறு பத்திரத்தை அரசிடம் பதிவு செய்வதன் நோக்கமென்ன?

# பதிவுத் துறையின் பயனுள்ள பணிகள்!

முதலாவதாக அந்தப் பத்திரம் ஒன்று பிறந்துள்ளது என்று உலகத்துக்கு அறிவிப்பது; இரண்டாவது ஏமாற்றுதலும் பொய்க் கையெழுத்தும் உண்டாகாமல் தடுப்பது; மூன்றாவதாகப் பதிவு செய்ய வேண்டிய பத்திரத்தில் கூறும் சொத்தின் உரிமை, எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டுள்ளது என்ற முழு விவரங்களும் பத்திரப் பதிவு நிலையத்திலுள்ள பதிவுப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன என்று நம்பத்தக்கதாக இருப்பதுமாகும்.

பதிவுத்துறை 1864-ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி நிறுவப்பட்டது. இதற்கு முன்னர் இந்தியா முழுவதிலும் அமலாகத்தக்க பத்திரப்பதிவுச் சட்டம் எதுவும் இருக்கவில்லை. வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றுக்குமான சட்டவிதிகள் (Regulations) என்னும் தொகுதியில் பத்திரப்பதிவுக்கான விதிகள் அடங்கியிருந்தன.

இந்த விதிகள் அசையாச் சொத்து பற்றிய விற்பனை, அடைமானம், குத்தகைப் பத்திரங்கள், உயில்கள், சுவிகாரம் செய்ய அதிகாரம் அளிக்கும் பத்திரங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வது பற்றிக் கூறுகின்றன. ஆனால், பதிவு செய்வது அவரவர் விருப்பம்; சட்டப்படி கட்டாயமில்லை.

பத்திரங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்த முதல் பத்திரப்பதிவுச் சட்டம் 1864-ஆம் ஆண்டில் இயற்றப்பெற்ற பதினாறும் சட்டமாகும்.

1908-ஆம் ஆண்டுக்கு முன்னர் பத்திரப்பதிவு பற்றிய விதிகள் ஏழு சட்டங்களில் சிதறிக் காணப்பட்டன. 1908-ஆம் ஆண்டில் இவ்வாறு சிதறியிருந்த விதிகளெல்லாம் ஒன்றாகத் திரட்டப் பெற்று ஒரே சட்டமாகச் செய்யப்பட்டது. அதுதான் இப்போது அமலில் இருந்து வருகிறது.

கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டிய பத்திரங்கள் இவை என்றும், விரும்பினால் பதிவு செய்யக்கூடிய பத்திரங்கள் இவை என்றும் இந்தச் சட்டம் கூறுகிறது. எந்த விவகாரங்கள் பத்திரிகைகளில் எழுதப்பட வேண்டும் என்று பதிவுச் சட்டம் கூறாது; எந்தப் பத்திரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்றே அது கூறும். குறிப்பிட்ட விவகாரம் நடந்தது என்பதற்குரிய சான்றாகவே பத்திரப் பதிவு அமைகின்றது.

கடந்த நூற்றெட்டாண்டுகளாக மக்கள் தொண்டில் ஈடுபட்டிருக்கும் தொன்மையான துறை பதிவுத் துறையாகும். விடுதலைக்குப் பின்னர் பல திட்டங்களின் விளைவாக அரசுத்துறை விரிவடைவதற்கு முன்புவரை நமது நாட்டின் ஏழை உழவர்களுக்கு முதல் முதலில் அறிமுகமாகும் துறை இத்துறையாகவே இருந்து வந்துள்ளது.

ஆரவாரமற்ற, எளிய முறையில், சீரிய பணியைக் காட்சிக்கு எளியராக இருந்து, சார் பதிவாளர்கள் பணியாற்றி வந்ததன் பயனாகக் கிராம மக்களுக்கும் அரசுக்கும் ஓர் இணைப்பை இத்துறை ஏற்படுத்தி வந்துள்ளது. மேலும், சிற்றூர்களிலும் இத்துறை அலுவலகங்கள் பன்னெடுங்காலமாக இருந்து வந்துள்ளன. இச்சிற்றூர்களில் வேறு அரசு அலுவலகங்கள் ஏற்பட்டிராத நிலையில் பொது மக்கள் சார் பதிவாளர்களையே தங்களுடைய ஆலோசகர்களாகவும், நண்பர்களாகவும், வழிகாட்டிகளாகவும் கருதி வந்துள்ளனர்.

இத்துறையின் தலைவர், பதிவுத்துறைத் தலைவர் ஆவார். இவருக்கு உதவியாக ஓர் உதவிப் பதிவுத்துறைத் தலைவரும், ஒரு நேர்முக உதவியாளரும் உள்ளனர். இத்துறையின் அலுவலகம் முதலாவது கடற்கரைச் சாலையில், அதாவது கடற்கரை ரயில் நிலையத்துக்கு எதிரில் உள்ளது.

இம்மாநிலம் 21 பதிவு மாவட்டங்களாகவும், 416 சார் மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பதிவு மாவட்டமும் ஒரு மாவட்டப் பதிவாளர் என்ற கெஜட் பதிவு பெற்ற அலுவலரின் கீழ் இயங்கி வருகிறது. இந்தச் சார் பதிவகங்கள் ஒவ்வொன்றிலும், சார் பதிவாளரும் அவருக்குக் கீழ் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், பிரிவு எழுத்தர்கள், கடைநிலைப் பணியாளர்கள் போன்ற பணியாளர்கள் பணி புரிகின்றனர்.

இத்துறையில் ஒவ்வொரு இனத்தின் கீழும் உள்ள மேற்குறித்த அலுவலர்களின் எண்ணிக்கை வருமாறு; உதவிப் பதிவாளர்கள்448; உதவியாளர்கள் 559; இளநிலை உதவியாளர்கள் 729; பிரிவு எழுத்தர்கள் 617; கடைநிலைப் பணியாளர்கள் 965. இவர்கள் தத்தம் கடமைகளைச் செவ்வனே செய்ய மாநிலம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு கெஜட் பதிவு பெற்ற ஆய்வாளர் என்று நான்கு ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பதிவுத்துறைத் தலைவரும், அவரின் கீழ் பணியாற்றும் அலுவலர்களும் விழிப்புடன் கண்காணிப்பதன் பயனாக, பொதுமக்களுக்கு இத்துறையின்பால் முறையீடு எதுவும் இல்லாதநிலை ஏற்பட முயலப்படுகிறது. முறையீடு ஏதேனும் பெறப்படின் குறை நீக்கப்படும் வண்ணம் தக்க நடவடிக்கைகள் தாமதமின்றி எடுக்கப்பட்டு வருகின்றன.

1970-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதியில் இம்மாநிலத்தில் பத்திரப் பதிவு





மாவட்டங்களின் எண்ணிக்கை தொடர்ந்து 21 ஆக இருந்து வருகிறது. இந்த ஆண்டில், 6 இடங்களில் புதிய துணைப் பத்திரப்பதிவு அலுவலகங்கள் திறக்கப்பட்டன. இதனல் நமது மாநிலத்தில் உள்ள துணைப்பத்திரப் பதிவு அலுவலகங்களின் எண்ணிக்கை 375 ஆக அதிகரித்துள்ளது. 1970-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதியில் 'இம்மாநிலத்திலுள்ள பத்திரப்பதிவு அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 396 ஆகும்.

ஆரம்பத்திலிருந்து பதிவுத் துறை ஆற்றிவரும் முக்கியப் பணிகள் பத்திரங்களைப் பதிவு செய்தல், அவற்றின் படிகளை நிலையாகப் பாதுகாத்தல், அவற்றை ஆய்வு செய்ய மக்களை அனுமதித்தல், அவற்றின் படிகளையும், வில்லங்கச் சான்றுகளையும் வழங்குதல் ஆகியவையாகும். கூட்டுறவு வங்கிகளும், வணிக வங்கிகளும் தமிழகத்தில் மிகுதியாக செயல்பட்டு வருவதாலும், பொதுமக்களுக்கும், உழவர்களுக்கும் இவை கடன்களைத் தாராளமாக வழங்குவதாலும் பதிவுத் துறையின் பணி தனி முக்கியத்துவம் அடைந்துள்ளது.

பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் வரும் பணிகளே தலையாய பணிகள் எனினும், பல்வேறு சட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பும் இத்துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. அவற்றுள் மிகவும் முக்கியமானது தமிழ்நாடு சீட்டுநிதிச் சட்டம். இச்சட்டத்தின் கீழ் பதிவுத்துறைத் தலைவரே சீட்டு நிதிகள் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உதவியாக ஓர் இணை இயக்குநரும் நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்டப் பதிவாளர் தமது ஆட்சி எல்லையில் சீட்டு நிதிகள் ஆய்வாளராகவும், சார் பதிவாளர் தமது ஆட்சி எல்லையில் சீட்டுப் பதிவாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். பதிவின்றி நடைபெறும் சீட்டு நிதிகளை ஒடுக்கவும், பதிவுபெற்று நடைபெறும் சீட்டு நிதிகள் முறையாகச் செயல்படுவதைக் கண்காணிக்கவும் ஒவ்வொரு பதிவு மாவட்டங்களிலும் ஒரு புலனய்வு வழக்குச் சீட்டுப்பதிவாளர் செயல்படுகிறார்.

மேலும், சங்கங்கள் பதிவுச் சட்டம், திருவாங்கூர்-கொச்சிச் சட்டம், இந்திய கூட்டாண்மைச் சட்டம், இந்திய-கிருத்துவத் திருமணச் சட்டம், தனித் திருமணங்கள் சட்டம், பார்சி திருமணங்கள் மணமுறிவுச் சட்டம், பிறப்பு, இறப்பு, மற்றும் திருமணங்கள் பதிவுச் சட்டம், இந்து திருமணச் சட்டம், வரதட்சிணைத் தடுப்புச் சட்டம் முதலான சட்டங்களையும் இத்துறை செயற்படுத்தி வருகிறது. மேலும், சிற்சில இடங்களில் மழைப் பதிவு கருவூல அலுவல், சிறைச்சாலைக் கண்காணிப்பு போன்ற பல்வேறு அரசுப்பணிகளையும் இத்துறையினர் செய்து வருகின்றனர்.



ஓர் ஆண்டில் சராசரியாக 10 இலட்சம் பத்திரங்கள் இத்துறையில் பதிவு செய்யப்படுகின்றன. மூன்று இலட்சங்களுக்கு மேல் வில்லங்கச் சான்றுகளும், ஓர் இலட்சத்துக்கும் மேலான நகல்களும் வழங்கப்படுகின்றன. பதிவு செய்யப்படும் பத்திரங்களில் சுமார் 75 சதவீதம் பத்திரங்கள் பதிவான அதே நாளில் பொதுமக்களுக்குத் திருப்பி வழங்கத் தயார் செய்யப்படுகின்றன. இதேபோல் வில்லங்கச்சான்றுகளும், நகல்களும் காலதாமதமின்றி உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

பத்திரங்கள் மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் கிடைக்கும் முத்திரைத் தீர்வை சுமார் ரூ. 16 கோடிக்கும் மேலாகும். இத்துறையில் பல்வேறு கட்டணங்கள் மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் ரூ. 3 கோடிக்கும் மேலாகும். செலவு சுமார் ரூ. 1 கோடி மட்டுமாகும். இது தவிர சீட்டுநிதிச் சட்டத்தின் கீழ் ஆண்டு வருமானம் சுமார் ரூ. 6 இலட்சம், செலவு சுமார் ரூ. 4 இலட்சம்.

## எரிவாயுவினல் ஊர்தி ஓட்டலாம்!

நாம் சாதாரணமாக அடுப்புக்குப் பயன்படுத்துகிற எரிவாயுவின் உதவியால் ஊர்தியை ஓட்டமுடியும் என்பதை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார் காசியைச் சேர்ந்த இக்பால்சிங் என்பவர். 35 ரூபாய் விலையுள்ள எரிவாயுவைக் கொண்டு, 300 மைல் தொலைவுக்கு ஊர்தியை ஓட்டிச் செல்லமுடியும் என்கிறார் திரு. இக்பால்சிங்.



பத்திரங்களைப் பதிவு செய்வதற்கும், பதிவுப் புத்தகங்களில் விவரம் தேடுவதற்கும், பத்திரங்களுக்குப் படிகள் தரவும், பதிவு செய்வதற்காக வீடுகளுக்கு வரவும், இவை போன்ற காரியங்களுக்குரிய கட்டணங்களைக் குறித்து ஒரு பட்டி தயாரிக்கப் பத்திரப் பதிவுச்சட்டம் மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றது.

பதிவு பற்றிப் பொய் வாக்கு மூலம் தருதல், பத்திரங்களின் பொய்ப்படிகளைத் தருதல், ஆள் மாருட்டம் செய்தல் அல்லது அதற்குத் தூண்டுதல் ஆகியவை பத்திரப்பதிவுச் சட்டப்படி குற்றங்களாகும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

—பி.வி.ஜி.



## நேரு பிறந்தநாள் கவியரங்கம்

புதிய இந்தியாவை உருவாக்கும் பொன்னான பணிக்குத் தன்னையே முழு ஈந்த தலைவர் நேருவின் 85-வது பிறந்த நாள் விழாவினை யொட்டித் தமிழகக் கல்லூரிக் கல்வி இயக்ககமும் தமிழ்நாடு அரசு செய்தித்துறை இயக்ககமும் ஒருங்கிணைந்து, கல்லூரி மாணவர்களுக்காக ஒரு கவிதைப் போட்டியை ஏற்பாடு செய்தன. இந்தப் போட்டி, 11-11-73-ல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. போட்டியில், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 36 பேர் பங்கு பெற்றனர். இவர்களில் பெண்கள் 10 பேர்; ஆண்கள் 26 பேர். இவர்கள் அனைவரும் நேருவைப் பற்றித் தாம் எழுதிய கவிதைகளை 11-11-73ல் அரங்கேற்றினர். கவிஞர் கா. வேழவேந்தன், புலவர் பொன்னிவளவன் திருமதி கிருஷ்ணா சஞ்சீவி ஆகியோர் நடுவர்களாக இருந்து பரிசுக்குரிய கவிதைகளைத் தேர்ந்தெடுத்தனர்.

14-11-73ல் நேரு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் பரிசுகளை வழங்கினர்.

# தேவமலர்






இரா. வைரமுத்து

பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-30.


முதற் பரிசு பெற்ற கவிதை

வரங்களெலாம் தவமிருந்த காரணத்தால்
வந்துதித்த தேவமகன்; சிறைக்கோட்டத்தில்
நரம்பெடுத்து வலைபின்னிப் பின்னி, வெள்ளை
நதிகளுக்குள் சுதந்திரமீன் பிடித்த கைகள்!
இரவுகளைப் புலரவைத்து விடிந்த பின்னே
எரிந்துவிட்ட விடிவெள்ளி; எங்கள் நாட்டு
மரங்களுக்கே நிழல்கொடுத்த தெய்வப் பந்தல்,
மரணத்தின் நிழலுக்குள் மறைந்தா போகும்?

புன்னகைப்பூ மகுடியிலே சீனப் பாம்பின்
புற்றினையே ஆடவைத்தான்; இனிப்பைச் சிந்தும்
கண்ணசைப்பு வெடிகளினுல் வறுமைத் தீயைக்
, கருகவைத்துப் பூவுதிர்த்தான்; மனவானத்தில்
அன்னைநிலா ஆனவன்தன் பிள்ளைக் கெல்லாம்
ஆண்மையினுல் பால்கொடுத்தான்; காந்தி தந்த
இன்னமுதப் பூங்குழந்தை, நாங்கள் தூங்க
இழைபிரித்துக் கட்டியதே இதயத் தொட்டில்!

அந்திமுகில் அவன்பாதம் தொட்டுக் கொஞ்ச
ஆகாயக் கிண்ணத்தில் வழிந்து சிந்தும்!
சந்திரப்பூ, மலர்வதற்கு வரங்கள் கேட்டுத்
தங்கியவன் இமையடியில் தவங்கள் செய்யும்!
அந்தமகன் பேச்சொலிக்குக் கைகள் கொட்ட
அலைக்கைகள், கடலுடம்பை இழுத்துப் போகும்!
செந்தளிர்ப்பூ நெய்தெடுத்த தேவ மேனி,
தேனுற்றைத் தேக்கியதே அணையாய் மாறி!

விழிநாக்கில் மௌனங்கள் வார்த்தை யாகும்!
விடிவெள்ளி அவன்கண்ணில் திசையைக் காணும்!
பொழிந்தமழை தானியமே பொழிந்த தென்று
பூக்களெலாம் பயிர்வளர்த்த புனித நேரம்
அழிந்ததம்மா கவிவானம்! அதனுல் நாங்கள்
அதனின்றும் உதிர்ந்துவிட்ட விண்மீன் ஆனேம்!
விழிவிளக்கைக் கண்ணீரால் அணைத்தோம்; நாங்கள்
விரல்களையே இழந்துவிட்ட நகங்கள் ஆனேம்!

பங்குவைத்துக் கொண்டதம்மா மரணம்; இங்கு
பந்திவைத்த கைகளையே; தேவ தூதன்
அங்கமலர் பாடையிலே பூத்த தம்மா!
அல்லியுடன் எரித்தெடுத்த சாம்ப லாலே
கங்கை நதி தன்பாரம் கழுவிக் கொள்ளக்
கண்ணீரில் எம்மிமைகள் கரைந்து துள்ள
பொங்கி வந்த இமயநதி நெருப்பாய்ச் செல்ல
போகின்ரேம், இனிமேலும் என்ன சொல்ல?





# மனிதருள் மாணிக்கம்

வசந்தத்தில் பூத்த வாடாத "ரோஜா"
வாழ்வில் இன்பம் தேடாத "ராஜா"
"ஆனந்த பவனத்து" அஞ்சாத சிங்கம்
அண்ணல் காந்தி புடம்போட்ட தங்கம்
மேலை நாட்டில் "பாரிஸ்டர்" பட்டம்
மேதினி போற்றும் "ஐந்தாண்டுத்" திட்டம்
தேசத் தொண்டில் மனையகம் மறக்கும்
சிறையகம் புக்கால் புத்தகம் பிறக்கும்
புலியாம் "மோதிலால்" பெற்றிட்ட குட்டி
பகையர்ம் யானைமேல் பாய்ந்தது முட்டி
மனைவி "கமலா" மாணிக்கக் கட்டி
மாண்டது "இந்திரா" வைரத்தைக் கொட்டி
கொஞ்சு மழலையில் பிஞ்சு முகந்தனில்
"கொள்ளை ஆசை" அவர்க்கு;
பாரைக் கொத்தவரும் உயிர் தின்னவரும்
"போர்நச் சரவம்" எதற்கு?
பூசல் ஒழிந்திட "சோசலிஷம்" வர
போற்றுக "பஞ்சசீலம்" அதற்கு;
சீனத்துப் "பேயொன்று" போர்தொடுத்தேவரின்
சீறிச் சிங்கமென நொறுக்கு.
மாண்டபின்னேயென் "மேனியை" நெருப்பில்
மூட்டி எரிக்க வேண்டும்;
மீண்ட "சாம்பலை" முழுவதும் எடுத்து
மண்ணில் கொட்ட வேண்டும்;
காணும் இடமெல்லாம் "காற்ருய் நீராய்"
கலந்து வாழ வேண்டும்
மீண்டும் பிறந்தால் "பாரத மண்ணே!"
எனக்கு ஓரிடம் வேண்டும்
என வாழ்ந்த பிரான் எந்தைநே ருபிரான்
திருவடி போற்றுகின்றேன்;
அவர்வாழ்ந்த நாட்டிலே அடியேன் வாழும்
பேற்றினைப் போற்றுகிறேன்.


டி. அமிர்தலிங்கம்

இரண்டாமாண்டு,
முதுகலைத் தமிழ் இலக்கிய மாணவர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை-5.




இரண்டாம் பரிசு பெற்ற கவிதை



# புகழ் வாழ்க!

மணி மகுடம் புனையாத மன்னனவன்
மனிதரிலே மாணிக்கம்; மகாத்மாவின்
தனிச்சீடன்; தன்னலம் சிறிதுமில்லான்;
தமிழேபோல் இனிக்கின்ற குணமுடையான்;
இனத்தாரின் விடுதலைக்கு வெள்ளையர் தம்
எண்ணற்ற இன்னல்களைச் சகித்தோன்
சினம்வந்தால் சிங்கமென உறுமிநிற்பான்
சிற்றளவில் சிறுகுழந்தை யாய்த்திகழ்வான்.
அந்தமில் அழகனவன் ஆடையிலே
அன்றலர்ந்த ரோசா அழகு செய்யும்
சிந்தனைச்சிற்பி சீர் திருத்த செம்மல்
சிறுமைதனைக் காணுங்கால் சீறிடும் சிங்கம்
மந்திரத்தால் மாங்கனி வீழாதென்று
மனம்விட்டுப்பேசி மக்கள் தாம்
சந்ததமும் உழைத்தால்தான் உயர்வோ மென்ருர்
சரித்திர நாயகனுய் விளங்குகின்ருர்.
இந் நாடு விடுதலை பெற்ற பின்பு
இங்கிலாந்து சென்றிருந்தார் நேருமகான்
அந்நாட்டுப் பேரரசி ஆதி நண்பர்
அனைவரையும் சந்தித்து மகிழ்ந்தார் அண்ணல்
செந்நாய் முகமுடைய சர்ச்சிலையும்
சந்தித்தார் இறுதியிலே பகர்ந்தார் சர்ச்சில்
"மாந்தரிலே மாணிக்கம் இவர்தான்" என்ருன்
அச்சமொடு வெறுப்பினை வென்றதினுல் என்ருன்.
பெரும்பதவி வகித்திட்ட பெம்மான் நாளும்
பிறர்வாழத் தான் தேய்ந்த பெரியோன்
இறக்கின்ற போது அவன் எழுதிவைத்தான்
எவருமே வரையாத உயில் ஒன்றை
சுரக்கின்ற அன்போடு சொல்லிப் போனுர்
சுட்டெரித்த சாம்பலிலே ஒரு பிடியைத்
திரை மோதும் கங்கையிலே தூவுகென்ருர்
திண்தோள்கள் படைத்திட்ட உழவன் உழும்
கழனியிலே வயல்களிலே தூவு கென்ருர்
பிறந்த மண்ணோடு மக்களொடு ஒன்றிநிற்க
எழுத்தாலும் பேச்சாலும் எடுத்தியம்பா
எண்ணத்தின் எல்லையிது ஏற்றத்தின் சிகரம்.
தாழ்ந்து சென்னி வணங்கிடுவோம் நேருவிற்கு
தலைவரவர் மேதையவர் ஞானியுங்காண்!
வாழ்ந்திருக்கும் அவர் நாமம் கீர்த்தியுந்தான்
வையமுள்ளளவும், புகழ் வாழ்க வாழ்க!




ஏ. இராஜேஸ்வரி

இரண்டாமாண்டு, பி. எஸ்ஸி,
அரசினர் மகளிர் கலைக்கல்லூரி,
வடசென்னை.


மூன்றாம் பரிசு



# நேரு

பாரத நாட்டின் விடுதலை வேண்டிப் போரிடப்பலர் வந்தார்
ஆரும் துயரில் நீந்திட இங்கே அனைவரும் முன்வந்தார்
சீருற நாட்டின் பணிகளை யுன்றன் சிரமேற் றருகின்றேன்
நேரு இதனை யேற்றிடு என்று அண்ணல் தான்மொழிந்தார்
நேரிய வழியில் பாரதப் பணியைச் செய்தே முடித்தானே
ஆர்வத் தாலே அவனது புகழைப் பாடிட வந்தேனே;
கற்றவர் நடுவே பெற்றான் இடத்தைக் கல்வித் திறத்தாலே
மற்றவ ரிடையே பெற்றா னிடத்தை அன்பின் பலத்தாலே
ஆட்சிப் பீடம் ஏறிடற் கான ஆசை யங்கில்லை
மாட்சிமை குன்றும் செயலைத் தூண்டும் மனமு மங்கில்லை
சிந்தனை வேறாய்ச் செயலும் வேறாய்ப் புவியிற் பலர்வாழ
சிந்தனை செயலும் ஒன்றே என்று செயலில் காட்டினனே
மந்தைக ளென்று வாழ்ந்த மக்கள் மனத்தைத் தெளிவாக்கி
தந்திட வேண்டும் விடுதலை யென்னும் ஒலியைக் கொடுத்தானே
வெள்ளைய ராட்சி வீழ்கெனச் சொல்லிப் புரட்சிக் கனலாக
தொல்லைக ளேற்கத் துணிந்தே மொழிந்தான் தியாகச் சுடராக
அல்லும் பகலும் சிறையில் வாடி அந்தோ பரிதாபம்
செம்மல் நேரு ஏற்றிய தன்றே விடுதலைப் பெருந்தீபம்
இருளில் சிக்கி வாழ்ந்திடும் போது எல்லாம் சரியென்றோம்
இருளைப் போக்கி ஒளியைக் கண்டோம் எல்லாம் தவறென்றோம்
அண்ணல் காந்தி நெறியில் நின்று அமைதிப் பொருள் சொன்னான்
மண்ணில் மாந்தர் நலமே வேண்டித் தேறும்முறை சொன்னான்
ஐவகை வழியில் புவிதான் சென்றால் பகைமை யொழியாதோ?
உய்யும் நெறியை யுலக மேற்றால் உயிர்கள் மகிழாவோ?
அன்னை நாட்டை அந்நியம் தாக்கிட சிங்கம் என்றானும்
புண்ணிய பூமியின் புகழைக் காக்கப் போரைக் கண்டானே
எல்லா மக்களும் இன்புற வேண்டு மென்றே மொழிந்தானே
வல்லான் குவிக்கும் பொருளைத் தடுக்கத் திட்டம் வகுத்தானே
வறுமைப் பேயை யோட்டிட நாட்டில் தொழிலை மிகுத்தானே
உரிமை பெற்றே மக்கள் வாழ வழியும் உரைத்தானே
வீசும் தென்றல் காற்றும் அவன்றன் புகழை இசைத்திடுமே
பேசும் கிள்ளை மாமா வென்று உறவைக் கூறிடுமே
மாசில் அந்த மன்னவன் புகழைப் பாடச் சொன்னீரே
பேசும் கிள்ளை மொழியில் நானும் கவிதை சொன்னேனே!

ஆறுதல் பரிசு



வே. சுகுமாரன்

விவேகானந்தா கல்லூரி,
சென்னை.



குறிப்பாக உயர் தரக் கல்வியின் வளர்ச்சிக்காக இந்த வங்கி பத்தாண்டுகளுக்கு மேலாகப் பெரும் பணிபுரிந்து வருகிறது. அதாவது உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் தங்களுக்குப் பிடித்தமான துறைகளில் தேர்ச்சி பெற விரும்பும் மாணவர்களுக்குக் கடன் உதவி அளித்து வருகிறது.

1968-ஆம் ஆண்டு இறுதி வரையில் வெளிநாட்டுக்கல்விக்காக மட்டும் மொத்தம் ரூ. 40,43,000 கொண்ட 719 கடன்களை வழங்கி இருக்கிறது. இதனுல் 719 மாணவர்கள் பயனடைந்திருக்கிருர்கள்.

வெளிநாட்டில் கல்வி கற்பதற்காக ரூ.7,000 வரையிலும், உள் நாட்டில் உயர்தரக் கல்வி கற்பதற்காக ரூ. 3,000 வரையிலும் கடன்கள் வழங்கப்படுகின்றன. இவை மட்டுமா?

மாதந்தோறும் சேமிக்கும் திட்டம், கூடிப் பெருகும் திட்டம்(Cumulative Deposits), ஒரு தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வைத்து மாதந் தோறும் வட்டி பெறும் திட்டம் (Fixed Deposits), நாள்தோறும் நலிவில்லாமல் சேமிக்கும் திட்டம் (Pigmy Deposits) போன்ற பல்வேறு திட்டங்கள் இந்த வங்கிகளின் சார்பில் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நாள்தோறும் சேமிக்கும் திட்டத்தில், வங்கியில் உள்ளவரே வீடு தேடி வந்து நாம் சேமிக்க விரும்பும் எந்தத் தொகையையும் பெற்றுச் செல்வார். குறைந்த அளவு 25 காசுகள் சேமிப்பாகத் தரலாம்.



சேமிப்புத் திட்டங்கள் மட்டும் அல்லாமல் கடனுதவித் திட்டங்கள் பலவும் உள்ளன. சிறு தொழில் நடத்த, தொழில் வளம் பெருக்க, அன்றுட எதிர்பாராத செலவினங்களைச் சமாளிக்கக் கடனுதவி போன்ற பல நல்ல திட்டங்கள் உள்ளன.

1925-ஆம் ஆண்டு சிறு மூலதனத்துடன் அதாவது ரூ. 8,000 முதலுடன் துவக்கப்பட்ட இந்த வங்கி, இன்று 12 மாநிலங்களில் 600-க்கு மேற்பட்ட கிளைகளைக் கொண்டிருக்கிறது. இன்று இந்தியாவில் 8-வது இடத்தைப் பெற்றிருக்கும் இது, வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்படுவதற்கு முன்பே விவசாயிகளுக்குப் பெருமளவில் கடன் உதவிகள் புரிந்து வந்துள்ளது.

1968-ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணு அவர்களுடன் கலந்து இவ்வங்கியின் முன்னுள் தலைவர் திரு டி.ஏ. பாய் அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட விவசாயிகளுக்கு ரூ. 50 இலட்சம் கடனுதவியாக அளித்துள்ளார். இந்த வங்கியின் தமிழ் நாட்டுக் கிளைகள் மூலமாகச் சுமார் ரூ. 30 கோடி இருப்பாக வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வங்கி தமிழ்நாட்டில் கடனுதவியாக வழங்கியுள்ள தொகையோ சுமார் ரூ. 45 கோடி! கிராமப் புறங்களில் ரூ. 5 கூடக் கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது. இப்படி இவ் வங்கியின் மூலமாக ஏழ்மை நிலையில் இருப்பவர்களுக்கும், படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கும் சிறு தொழில் நடத்துபவர்களுக்கும் சிறப்பான திட்டங்கள் அமைத்துக் கொடுத்துக் கடனுதவியும் வழங்கப்படுவதை நாம் வெகுவாகப் பாராட்டவேண்டும்.

—பி. வி. ஜி.

## பல்கலைக் கழகம்-உருவாக்கிய பைந்தமிழ்க் கருத்தரங்கு

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, 'இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்' என்ற தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கினை நடத்தியது. அக்டோபர் 27, 28, 29 ஆகிய நாட்களில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்களும், பேராசிரியர்களும், ஆராய்ச்சி வகுப்பு மாணவர்களும் என மொத்தம் 40 கட்டுரையாளர்கள் கலந்து கொண்டனர்.

விடுதலைக்குப் பின் தமிழ்க் கவிதை, சட்டத் தமிழ் வளர்ச்சி, தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சித் துறையின் தோற்றமும் வளர்ச்சியும் திட்டங்களும், விடுதலைக்குப் பின் தமிழ் நாவல் வளர்ச்சியில்மகளிர் பங்கு, விடுதலைக்குப் பின் பக்தி இலக்கியங்கள், விடுதலைக்குப் பின்னர் தமிழ் நாடக வளர்ச்சி, விடுதலைக்குப் பின் கட்டுரை வளர்ச்சியில் மகளிர் பங்கு, விடுதலை இந்தியாவில் தமிழகம் பெற்ற புதுமை நூற்கள், தமிழ்நாட்டுச் சட்ட மன்றத்தில் இந்திய விடுதலை வெள்ளிவிழா உரைகள்—ஆகிய தலைப்புகளில் அறிமுகம் செய்யப்பட்ட கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

இந்தக் கருத்தரங்கிலே மேலும் ஒரு சிறப்புச் செய்தி உண்டு. கல்லூரிக்குச் சென்று பட்டம் பெருத தமிழ்க் கவிஞர் பெருமக்களின் கவிதை நூல்களைப் பட்டம் பெற்ற பேராசிரியர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் பாராட்டிப் பேசியதுதான் அந்தச் சிறப்புச் செய்தி.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர், நாமக்கல் கவிஞர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, முடியரசன், வாணிதாசன், தமிழ்ஒளி, கா. மு. ஷெரிப் ஆகியோரின் கவிதைகள் பேராசிரியர்களாலும், ஆராய்ச்சி மாணவர்களாலும் திறனுய்வு செய்யப்பட்டன.

மூன்றுநாள் கருத்தரங்கும், தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் எதிர்கால வாழ்வுக்கும் பல அரிய திட்டங்களை-உருவாக்கித் தந்துள்ளன என்பது உறுதி.

## மணிப்பூர் மான்

மணிப்பூரில் மட்டுமே காணப்படும் இந்தவகை மான் மிகவும் அரிய பிராணி. இந்தியாவுக்கு வெளியே, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளில்தான் இது வசிக்கிறது.

இந்த மானின் கொம்பு 106 சென்டிமீடர் நீளமானது. பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். கொம்புகள் உண்டு, வட்ட வடிவத்தில் தோற்றமளிக்கும். புருவ நுனியிலிருந்து கொம்பு கிளம்பி நளினமாக வளைந்து வளர்ந்திருக்கும். கொம்பில் இரண்டிலிருந்து பத்துக் கிளைகள் வரை இருக்கும். மான்களின் இரண்டாவது வயதில் கொம்பு தோன்ற ஆரம்பிக்கிறது. ஏழு வயதில் நல்ல வளர்ச்சியான கொம்புகள் இருக்கும். இந்த மானின் தோல் சற்று சொரசொரப்பானது. ஆனுல் மெல்லியது. ஆண் மான்களின் நிறம் ஆழ்ந்த பழுப்பாகவோ, கிட்டத்தட்ட கறுப்பாகவோ இருக்கும். சந்தன நிறம் கொண்டவை பெண் மான்கள். குட்டி மான்களுக்குப் புள்ளிகள் இருக்கும். பருவ காலத்திற்கேற்றபடி மான்களின் நிறமும் மாறுகிறது. குளிர் காலத்தில் ஆழ்ந்த பழுப்பு நிறமாக இருக்கும் மான், கோடையில் லேசான பழுப்பு நிறமுள்ளதாக மாறக்கூடும்.

குன்றுகளும், அடர்ந்த காடுகளும் இவற்றுக்குப் பிடிக்காது; திறந்தவெளி புதர்க் காடுகளையும், நதிக்கும் குன்றுக்கும் இடையேயுள்ள நிலப் பகுதிகளையுமே இவை விரும்புகின்றன. சிறிய கூட்டங்களாக வசிக்கும் இம்மான்கள் வெப்பம் அதிகமாக இருக்கும் நேரத்தில் நிழலில் பதுங்குகின்றன. காலையிலும் மாலையிலும் தீனி எடுக்கின்றன.

ஆண் மான்கள் ஆகஸ்டு மத்தியில் கிளைக் கொம்புகளை உதிர்த்துவிடுகின்றன. டிசம்பர் இறுதியில் மான்களின் 'வெல்வட்' போன்ற ரோமம் உதிர்ந்துவிடும்போது, மான்களின் கொம்பு நல்ல வளர்ச்சியுடன் காணப்படுகிறது.



# காதி கிராப்ட் — கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து
கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை
காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும்
பாண்டிச்சேரி மாநிலங்களில்
200 க்கும் மேலான காதி
கிராப்ட்கள் மக்களின்
தேவைகளைப் பூர்த்தி
செய்கின்றன.











தமிழ்நாடு கதர்—
கிராமத் தொழில் வாரியம்
குறளகம்
சென்னை-600001


# இராணிப்பேட்டை தொழிற்பேட்டையாகிறது!

பசி-பட்டினி-பஞ்சம் பறந்திட, நாடு செழிக்க, வளம் கொழித்து மக்கள் வாழ்வுயர வேளாண்மைத் துறையும், தொழில்துறையும் ஏற்றம் பெறவேண்டும். தமிழ்நாடு அரசு பசுமைப்புரட்சித் திட்டத்தை ஆரம்பித்துத் தீவிர சாகுபடித் திட்டத்தை ஏற்படுத்தி, உணவு உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கித் தன்னிறைவு பெற்றுள்ளது மட்டுமல்லாமல், மற்ற மாநிலங்களின் தேவையை அறிந்ததும் ஆயிரக்கணக்கான டன் அரிசியை அனுப்பி வருகிறது. தமிழ்நாடெங்கும் தொழில்மயமாக்க அரசு மிகுந்த முயற்சி செய்து வருகிறது. தொழில் தொடங்குவோருக்கு ஊக்கம் அளித்து, உதவிகள் பல புரிந்து உற்சாகப்படுத்துகிறது. தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட—தொழிலில் அமைதி நிலவிட, உற்பத்தியான பொருட்களுக்கு நல்ல விற்பனை கிடைக்க, வரிச்சலுகை அளித்தல், இப்படி ஏராளமான முயற்சியும் உதவியும் செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் கனிவளம் (Mineral resources) குறைந்திருந்தும், இந்தியாவில் தொழில்துறையில் முக்கிய இடத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது. நிலையான அரசும், தொழில் தொடங்க வருவோருக்கு வரவேற்புத் தரும் அளவிற்குப் பொருளாதாரச் சூழ்நிலையும், திறமைமிக்க நிர்வாகமும் தொழில் தொடங்க வாய்ப்பாக அமைந்துள்ளது. பொருளாதாரத்தைச் சரியான வழிகளில் திருப்பிவிட்டுத் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதன் மூலமாகவே, வேலை வாய்ப்பளித்தல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் போன்ற சாதனைகளைப் புரிய முடியும்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொழில்துறை உறுதியான அடிப்படையாக விளங்குகிறது. தொழில்துறையில் குறிப்பிடத்தக்க அளவிற்கான வளர்ச்சியை நாம் பெற்றிருக்கிறோம்; ஆனாலும் செய்ய வேண்டியவைகள் ஏராளமாக உள்ளன. பொதுவாகத் தொழிற்சாலைகளை நகர்ப்புறங்களில் கூட்டாக நிறுவுகிற வாடிக்கையான மனநிலை உள்ளது. காரணம்; உற்பத்தியான பொருட்களை விற்பதற்கு நல்ல வாய்ப்பாகவும், போதுமான பண வசதிக்காகவும் மற்றும் எண்ணற்ற சாதகங்களுக்காவுமே அந்த எண்ணம் தோன்றுகிறது. தொழிலில் பின்தங்கிய பகுதிகளின் வளர்ச்சிக்காகத் தொழிற்சாலைகளை நிறைந்த அளவில் பரவலாக்குவதே நமது அரசின் தொழிற்கொள்கையாகும். இந்த நோக்கத்தில் கொள்கையை நிறைவேற்றிடத் தமிழ்நாடு அரசு மாநிலத் தொழில் நிறுவனக் கழகத்தை (SIPCOT) ஏற்படுத்தியுள்ளது.

புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த அநேக பொது, மற்றும் தனியார் நிதி, நிறுவனங்கள் இருந்தபோதிலும், தொழில் நிறுவனக் கழகத்தின் தேவையின் காரணம்-இது பண உதவி தருவது மட்டுமல்லாமல் மற்ற துணை உதவிப் பணிகளையும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகச் செய்துவருகிறது. திட்டத்தின் வளர்ச்சியில் தன்னைப் பங்குதாரராகக் கருதி அக்கறையுடன் செயலாற்றுகிறது.

சிப்காட் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாகும். ரூ. 5 கோடி மூலதனத்தைக் கொண்டு இயங்கி வருகிறது. இயக்குநர் குழு (Board of Directors), தமிழ்நாடு அரசின் நீண்ட அனுபவமிக்க அதிகாரிகள், கீர்த்தி வாய்ந்த தொழிலதிபர்களைக்கொண்டு இணைந்து நிர்வகிக்கப்பட்டு வருகிறது. சிப்காட், திறமை மிக்க அலுவலர்களுடன் தொழில் நுட்ப நிபுணர்கள் மற்றும் பொறியாளர்களைக்கொண்டு செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் நடுத்தர, மற்றும் பெரிய தொழிற்சாலைகள் வளர்ச்சிபெறச் செய்வதும், தொழில் தொடங்கும் முன்னேற்றமான பங்குதாரர்களுக்குக் குறிப்பாகப் பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவோருக்கு ஊக்கமளிப்பதும் அரசின் நோக்கமாகும். சிப்காட், பிற்பட்ட மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில் வட்டாரத்தை வளர்ச்சி பெறச் செய்கிறது. தொழில் தொடங்குவோருக்குப் பல்வேறு வகையான உதவிகளைச் செய்கிறது.

பொது மற்றும் தனியார் நிறுவனத்திற்கு மட்டுமல்லாமல் கூட்டுறவுக் கழகம் மற்றும் பங்குதாரர்களின் நிறுவனத்திற்கும் உதவியளிக்கிறது. திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கு முன்னர் சமூகநலன், வேலை வாய்ப்பு, பிற்பட்ட வட்டாரத்தின் வளர்ச்சி இவற்றில் ஆராய்ச்சி முடிவெடுக்கப்படுகிறது. நிதியுதவி அளிக்கு முன்னர் திட்டத்திற்குத் தேவையான அனுமதி (Licence) மற்றும் இதர ஒப்புதல்களும் பெற்றிருக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு, தொழில் தொடங்குவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில், தொழிலின் ஆரம்ப வேலைக்கான பூர்வாங்கச் செலவுக்கு இத்திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்படுகிறது. இலாபகரமான தொழில்பற்றிக் கண்டறிவதற்கு 10,000 ரூபாய்க்குக் குறைவான பூர்வாங்கச் செலவை சிப்காட் நிறுவனமே முழுதும் ஏற்றுக்கொள்கிறது.

ரூ. 10,000 முதல் ரூ. 20,000 வரை 90 சதவிகிதமும் ரூ. 30,000 வரை 80 சதவிகிதமும், ரூ. 30,000க்கு மேற்பட்டால் 75 சதவிகிதமும் பூர்வாங்கச் செலவிற்கு மானியமாக சிப்காட் வழங்குகிறது. மீதித் தொகையை மட்டுமே தொழில் தொடங்குவோர் ஏற்க வேண்டும்.

தருமபுரி, கன்னியாகுமரி, மதுரை, வடஆர்க்காடு, இராமனாதபுரம், தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய எட்டு மாவட்டங்களில் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டால் விற்பனை வரி கட்ட வட்டியில்லாக் கடன் (Interest free Sales Tax loans) வழங்கப்படுகிறது.

சிப்காட் நிறுவனத்தின் பூரண ஒத்துழைப்புடன் வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டையில் பலதரப்பட்ட தொழிற்சாலைகள் நிறுவிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பலதரப்பான தொழில்கள் நிறைந்த அந்த இடம் 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. கனரகத் தொழிற்சாலை

2. இரசாயனத் தொழிற்சாலை

3. மின்னியல் தொழிற்சாலை


இராணிப் பேட்டையில் அமையவிருக்கும் தொழிற்பேட்டையின் மாதிரி அமைப்பை (Model) அமைச்சர்கள் பார்வையிடுதல்.

4. நடுத்தரத் தொழிற்சாலை

5. சிறு தொழிற்சாலை

ஆகிய ஐந்து தொழிற்சாலைகளுக்குத் தேவையான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலைகளுக்குப் போதுமான தண்ணீர் வசதி மிக முக்கியமான தேவையாக இருப்பதால், நாள் ஒன்றுக்கு 2 மில்லியன் கேலன் தண்ணீர் கொண்டு வருவதற்கு 46 இலட்சம் ரூபாய் செலவில் தண்ணீர் வழங்கும் திட்டம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. தொழிற்பேட்டையிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள பாலாறு, பொன்னை நதிகளிலிருந்து தண்ணீர் கொண்டு வரத் திட்டம் உள்ளது. 110/11 கேவி உள்ள தனியான துணை மின் நிலையம் தமிழ்நாடு மின்வாரியத்தால் கட்டப்பட இருக்கிறது.

தொழிற் பேட்டைக்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்லத் தனி இரயில் நிலையம் அமைக்கப்பட்டு, அது ராணிப்பேட்டை இரயில் நிலையத்துடன் இணைக்கப்பட உள்ளது. தொழிற்பேட்டைக்கு வடிகால் வசதியும் அமைக்கத் திட்டம் ஒன்று உள்ளது. நிர்வாகக் கட்டடம் கட்டிக் கொண்டுள்ளனர். சிப்காட்டின் நிர்வாக அலுவலகம், அஞ்சல் அலுவலகம், வங்கியின் கிளை, தீயணைப்பு நிலையம் இன்னும் பிறவும் அதில் அமைய உள்ளன.

ஐந்து திட்டங்களுக்கான ஆரம்ப வேலைகளுக்கு அடிக்கல் நாட்டுவிழா 1973 நவம்பர் 15-ஆம் நாளன்று தமிழ்நாடு குரோமேட்ஸ் மற்றும் கெமிகல் லிமிடெட், பிக்மெண்ட்ஸ் லிமிடெட், எஸ். ஆர். பி. டூல்ஸ் லிமிடெட், சீகால்ஸ் லிமிடெட், அப்போலோ டியூப் லிமிடெட் ஆகிய ஐந்து தொழில்களுக்கும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ப.உ. சண்முகம் அவர்கள் அடிக்கல் நாட்டி வைத்து உரையாற்றினார்கள். மின் துறை அமைச்சர் திரு ஓ.பி. இராமன் அவர்கள் மின்நிலையம் மற்றும் சிட்கோ தொழிற்பேட்டைக்கு அடிக்கல் நாட்டிவைத்து உரையாற்றினார்கள். இந்தத் தொழிற்சாலைகள் அனைத்திலும் 1974-ல் உற்பத்தி தொடங்கிவிடும் என்று உறுதி கூறப்பட்டது.

திருமலை கெமிகல் லிமிடெட், சதர்ன் சின்தெடிக்ஸ் லிமிடெட், டைமண்டுசாஸ் மற்றும் டூல்ஸ் பிரைவேட் லிமிடெட், ராஸ்ஸ்டன் கெமிகல் மேனுபேக்சரிங்கம்பெனி பிரைவேட் லிமிடெட் ஆகிய தொழில் திட்டங்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டு வேலைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் வேலைகள் தீவிரமான முறையில் தொடங்கும்.

பல்வேறு வகையான உற்பத்திக்கு இன்னும் அநேக தொழிற்சாலைகள் தொடங்கப்பட உள்ளன. இராணிப்பேட்டையில் அமைய இருக்கின்ற சில தொழிற்சாலைகள் வளர்ச்சிக்கான ஆரம்ப வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றன. அறிமுகமில்லாத அந்த இடங்களுக்குத் தொழில் தொடங்குவோரைக் கவர்ந்து இழுக்கும் அளவிற்கு எல்லா விதமான சிறந்த அடிப்படை வேலைகளையும் தமிழ்நாடு அரசும், சிப்காட் நிறுவனமும் செய்து கொடுத்துள்ளன.

விழாவிற்குத் தலைமை வகித்து, நிர்வாகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்துத் தொழிலமைச்சர் திரு மாதவன் அவர்கள் உரையாற்றினார்கள்.

''தொழில் துறையில் புது மலர்ச்சி பெறவும் பொருளாதாரத் துறையிலே வளர்ச்சி பெற வசதியாகவும் தொழிற்பேட்டை உருவாகிறது. இந்த ஆவலில் 1963-ல் 200 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. இன்று 7.5 கோடி ரூபாயில் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுகிறோம். 1975-ஆம் ஆண்டுக்குள்ளாக 700 ஏக்கர் பரப்பளவில் 70 கோடி ரூபாய் அளவில் திட்டத்தை நிறைவேற்ற உள்ளோம். பின்தங்கிய பகுதிகள் எல்லாம் முன்னேற வேண்டும் என்பது அரசின் கொள்கை. தொழில் வளர்ச்சிக்காக வட ஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. தருமபுரியில் ஓசூர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகள் தொடங்க உள்ளோம். அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 சர்க்கரை ஆலைகள் ஏற்படுத்த உள்ளோம். எந்தத் தொழில் தொடங்கினாலும் இனி கிராமம் நோக்கித்தான் செல்லும். இந்தியாவில் தொழிலில் நான்காவதாக இருந்த தமிழ்நாடு மூன்றாவதாக வந்துள்ளது.

தனியாரின் ஆற்றல் திறமையைப் பயன்படுத்தி அரசும் தனியாரும் சேர்ந்து தொழில் தொடங்க வேண்டும். போடுகின்ற முதல் முன்பு கடன்; தற்போது முதலாகப் போடுகிறோம். தொழிலாளர்களோடு சேர்ந்து பாடுபட வேண்டும். கூட்டுறவுத்துறை மூலம் தமிழ் நாடு இந்தியாவுக்கே வழி காட்டுகிறது.'' -இவ்வாறு தொழில் அமைச்சர் தமது உரையில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு வந்திருந்த பொதுமக்கள், இராணிப்பேட்டை தொழிற்பேட்டை யாவதன் மூலமும், வட ஆர்க்காடு மாவட்டம் விவசாயத் துறையில் முன்னணியில் இருப்பதுபோல், தொழில் துறையிலும் ஏற்றம் பெறும் பொற்காலம் வந்து விட்டது என்ற இனிய உணர்வுடன் இல்லம் திரும்பினர்.



—ம.அ.



## நீதிமன்ற மொழி

நீதிமன்றங்களில் தமிழ் ஒலிக்கவேண்டும் என்று தமிழ்நாடு அரசு கருதி வருகிறது. தமிழிலே சிறந்த மாதிரித் தீர்ப்பு எழுதும் நீதிபதிகளுக்குப் பரிசுத் தொகை தந்து சிறப்புச் செய்து வருகிறது. என்றாலும் ஆங்கிலம் தான் பொருத்தமான நீதிமன்ற மொழி என்று சிலர் கருதுகிறார்கள்; கூறிவருகிறார்கள். இந்தக் கருத்து, தவறானதாகும். ஏனென்றால் ஆங்கிலம் நீதிமன்ற மொழியாவதற்கு முன்பு இங்கிலாந்தில் நீதிமன்றங்களில் இலத்தீன் மொழியும், பிரெஞ்சு மொழியும் இடம் பெற்றிருந்தன. 1731-ஆம் ஆண்டு இரண்டாம் ஜார்ஜ் மன்னர் காலத்தில் நீதிமன்றங்களில், சட்டதிட்டங்கள் சம்பந்தப்பட்டவைகளில் பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளுக்குப் பதிலாக ஆங்கிலம்தான் இடம் பெறவேண்டும் என்று ஓர் அவசர ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதன்பிறகுதான் ஆங்கில நாட்டிலேயே ஆங்கிலம் நீதிமன்றங்களில் ஒலிக்கத் தொடங்கியது.

ஆங்கிலம்தான் நீதிமன்ற மொழியாக நீடிக்க வேண்டும் என்றும், தமிழ் நீதிமன்ற மொழியாவது சரியல்லவென்றும் சொல்லிவருபவர்களின் கருத்தினை உடைப்பதற்கு இரண்டாம் ஜார்ஜ் மன்னர் அவசர ஆணை விதித்த செய்தி, உதவி செய்கிறது.


# காலக் கண்ணாடி

காலத்தைக் கடந்து கம்பீரமாக நிற்கின்றன, தாஜ் மஹால் போன்ற கவின்மிகு கட்டடங்கள். காலம் பதித்துச் சென்ற சுவடுகளை நாம் அவற்றைக் கண்டதும் எளிதாக அறியமுடிவதில்லை. வனப்பு மிகுந் திருப்பினும் வாய் திறவாதவை, அந்தச் சின்னங்கள்.
அவற்றைவிட சாஸனங்களும் சரித்திரமுமே கால ஓட்டத்தைக் கண்ணாடிபோலத் தெளிவாகக் காட்டுகின்றன. கடந்த நூல்கள் அனைவருடனும் அளவளாவுகின்றன. புத்தகங் காலத்தை மெய்யாகப் பேணிப் பாதுகாப்பவை.
களும், பிற தஸ்தாவேஜுகளுமே; சரித்திரம் எங்கு, எப்படிச் சாகாவரம் பெறுகிறது என்பதை வருங்காலத்துக்கு விளக்கிக் கூறி வழி காட்டுகின்றன, அவை.
மகத்தான நிகழ்ச்சிகள் பற்றியும், வரலாற்றை வகுக்கும் வல்லவர் குறித்தும் எழுதுவதையும் படிப்பதையும் முன்னிலும் எளிதாக்கியுள்ளது நவீனமுறைக் காகிதத் தயாரிப்பு. சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் நிறுவனம் தற்போது தயாரித்துவரும் தரமான காகிதம் அமரநிலைக்குரிய 'அந்த நாளை' ஆராய்ந்தறியப் பேருதவி புரிகிறது என்பதைக் கூறவும் வேண்டுமோ?

**சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்,**

பள்ளிப்பாளையம், சேலம் ஜில்லா, தென்னிந்தியா

SPB

FOSSPB 777TMA






# பல்லாவரத்தார் பழத்தமிழ்க் காவலர்

தென்னாட்டுப் பெர்னார்ட்ஷா யார் என்றால் தயங்காமல், பேரறிஞர் அண்ணா என்று சொல்லி விடுவீர்கள். ஆனால், தமிழ்நாட்டு மில்டன் யார் என்று உங்களால் ஊகிக்கமுடிகிறதா?

'தனித்தமிழின் தந்தை' என்று தரணியிலுள்ளோர் போற்றிப் புகழ்ந்து வரும் மறைமலையடிகளார்தான் அவர்!

அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டினைத் தமிழகம் என்றும் மறந்திடாது. அவர் இசை, நாடகம் முதலியவற்றை வளர்த்தவர். அவருடைய சாகுந்தல மொழி பெயர்ப்பானது, பிறமொழியிலிருந்து ஒரு நூலை எத்தனை அழகுற மொழிபெயர்க்க இயலும் என்பதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். முல்லைப் பாட்டாராய்ச்சி, பட்டினப்பாலை ஆராய்ச்சி போன்ற பல ஆராய்ச்சி நூல்களை எழுதிய அவர், 'ஞானசாகரம்' (Ocean of wisdom) என்ற தமிழ்ப் பத்திரிகையை நடத்தியும், Oriental mystic myna' என்ற பெயரில் உள்ள ஓர் ஆங்கில இதழினை நடத்தியும் தமிழிலக்கிய உலகுக்குப் பெருந்தொண்டு புரிந்திருக்கிறார். குறிப்பாக இயல் தமிழுக்கு அவர் நூல்களனைத்துமே சிறந்த எடுத்துக் காட்டாய்த் திகழ்கின்றன.

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழ்ப் புலவராய் விளங்கிய மறைமலையடிகளார் வாழ்ந்த இல்லம், இன்று கவின்மிகு கலைமன்றமாய்க் காட்சியளிக்கிறது.

சென்னைப் பல்லாவரம் சாவடித் தெருவில் கம்பீரமாய் காட்சியளிக்கும் இந்த இல்லத்தை இன்று சுற்றுலாவுக்குச் சிறந்த இடமாகத் தமிழ்நாடு அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது.

இல்லம் அமைந்துள்ள சாலை, அதன் சுற்றுப்புறம் முதலானவை செம்மைப்படுத்தப் படவும், பெயர்ப்பலகைகள் முதலியன பொருத்தவும் தமிழக அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. தமிழக, மேலைநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வகையில் இந்த இல்லம் சீர்படுத்தப் பெறும் என்பதையும் இங்குக் குறிப்பிட வேண்டும்.

பல்லாவரத்திலுள்ள அரசினர் கழக உயர்நிலைப்பள்ளிக்கு 'மறைத்திரு மறைமலையடிகள் அரசினர் உயர்நிலைப்பள்ளி' என்று பெயரிடவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளதையும் நாம் பெருமையோடு குறிப்பிட வேண்டும்.

மறைமலையடிகள் 1911-ஆம் ஆண்டில் இந்த இடத்தை வாங்கி இக்கட்டடத்தைக் கட்டினார். இதனைக் கட்டுவதற்கு இவரது மருமகனார் திரு. வ. திருவரங்கம்பிள்ளை அவர்கள் கொழும்பிலிருந்து பணம் திரட்டி உதவி வந்தார்.

1962-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 12-ஆம் நாள் இந்த இல்லம் கலைமன்றமாகத் திறந்து வைக்கப் பெற்றது. இதற்கு மைய அரசும், தமிழக அரசும் பெருந்தொகைகளை நன்கொடைகளாக வழங்கியிருக்கின்றன.

அமைதியான சூழலில் அமைந்துள்ள இந்த இல்லத்தைச் சுற்றி அழகிய தோட்டமும், கூட்டங்கள் நடத்துவதற்கான ஒரு மண்டபமும் இருக்கின்றது. மாளிகையின் உட்புறச் சுவர் மழமழப்பாகவும், சுத்தமாகவும் காட்சியளிக்கிறது.

இக்கலை மன்றத்திலே அடிகளார் வாழ்ந்த காலத்தில் புழங்கிய பொருள்கள், எழுதிப் பதிப்பித்த முதற்பதிப்பு நூல்கள், பிற்பதிப்பு நூல்கள், கையெழுத்துப் படிகள், கடிதங்கள், அடிகளார் அணிந்த மாதிரி உடைகள், கட்டை கான்வாசு மிதியடிகள், கழுத்திலே அணிந்திருந்த உருத்திராட்ச மணிகள், மூக்குக் கண்ணாடி, பூதக் கண்ணாடி, விசிறி, விளக்கு, அடிகளாரின் பல்வேறு நிலை உருவப்படங்கள், புலவர் பெருமக்களின் கடிதங்கள், கைச் சாத்துக்கள், அடிகளார் தம் கைப்பட எழுதியுள்ள சோதிடக் குறிப்புகள் முதலியன காட்சிக்கு வைக்கப்பெற்றிருக்கின்றன.

அடிகளார் தம் அழகிய மாளிகையின் சுற்றுப்புறத்தில் உலாவி வரும்பொழுது உட்கார்ந்து கொள்ளுதற்கு ஏற்ற இரு திண்ணைகள் முன்பக்கத்திலும்பின்பக்கத்திலுமுள்ளன. வீட்டினுக்குள் அழகிய மேசையும், மேசையின் மேல் கண்ணாடி நூற்பேழையும் உள்ளன. நூற்பேழையில் படித்து முடிக்க வேண்டிய நூற்சுவடிகளே இருக்கும். படித்து முடித்த பின்னரே அவை நிலைப் பேழையிற்போய் நிலையுறும். மேசையின் முன்னுள்ள நாற்காலி, மெத்தை வைத்துத் தைத்ததாய் அழகியதாய்க் காணப்படுகிறது. அடிகளார் அதன் மீதமர்ந்து படிப்பார். இதைப் போல வேறிரு நாற்காலிகளும் உள்ளன. அவை விருந்தினராய் வருவோர்க்குப் பயன் பட்டன. பக்கத்தில் சாய்ந்து கொள்வதற்கு ஏற்ப ஒய்வு நாற்காலி யொன்றும் அமைந்திருக்கின்றது. அதில் அடிகளார் சிலவேளைகளில் சாய்ந்த வண்ணம் படிப்பதும் ஓய்வு கொள்வதுமுண்டு. இதுபோல் மேல் மாடியிலும் உள்ளன.

அவர் தாமே தம் புத்தகங்களுக்கு அட்டை போட்டு வைத்திருக்கும் ஒழுங்கை நாம் அவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும். இவர் பயன்படுத்திய சில நூல்கள் கண்ணாடிப் பேழைகளில் பார்வைக்காக வைக்கப் பெற்றுள்ளன.

அடிகளார் முதற்கண் பிறமொழி கலந்து எழுதியதைத் தனித் தமிழில் தாமே திருத்தியமைத்த கையெழுத்துப் பிரதிகளும் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன. மறைமலையடிகளாரின் மணிமணியான கையெழுத்துக்களை, அவரது கையெழுத்துப்படிகள் நமக்குக் காட்டுகின்றன. அவர் எழுதிய உயில் ஒன்றும் இங்கே இருக்கின்றது.

புத்தாண்டு பிறக்கிறது என்று வைத்துக் கொள்வோம். உடனே காலண்டர், டைரி என்று வாங்குவதற்காக நண்பர்களிடம் நாளும் நடையாய் நடக்கிறோம்! ஆனால், எத்தனை பேர் இன்று நாட்குறிப்பைத் தவறாமல் எழுதி வருகின்றனர்? ஆரம்பத்தில் ஏதோ ஆர்வத்தின் காரணமாக ஒரு சில தாள்களில் கிறுக்குவர்; பிறகு அடியோடு அதை நிறுத்துவர்!



முதல்வர் கலைஞர் அவர்களும், அன்றைய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ்.ஜே. சாதிக் பாட்சா அவர்களும் கலைமன்றத்தை 27—4—1972 அன்று பார்வையிடல்.

ஆனால், மறைமலையடிகளார் அவர்களோ எதுவும் கலையுணர்வோடு இருக்கவேண்டும் என்று விரும்புபவர் ஆயிற்றே! அதனால், அவர் சிறிதும் சோம்பலில்லாமல் நாளும் நாட்குறிப்பை எழுதி வந்துள்ளதை இங்கே கண்டு மகிழ்கிறோம். சுமார் 40 ஆண்டுகளாகத் தொடர்ந்து அவர் 'நாட் குறிப்புகள்' எழுதி வைத்திருக்கிறார் என்பதைப் பார்க்கும்போது நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

இவை மட்டுமல்ல; வீட்டுச் செலவுக் கணக்குகளையும் தம் கைப்பட எழுதி வைத்துள்ளார். அந்த நோட்டுப் புத்தகங்களையும் இங்கே கண்டு வியக்கிறோம்.

1932-ல் நடந்த ஒரு திருமணச் செலவுக் கணக்குகளை எழுதி வைத்திருக்கிறார் பாருங்களேன்!

துவரம்பருப்பு 8 படி ரூ. 2. உளுத்தம்பருப்பு 7 படி ரூ. 2. முந்திரி 1 வீசை ரூ. 1 . 7 சவரன் ரூ. 125. பட்டைக் கொலுசு, மூக்குத்தி ரூ. 16-6-0.

மறைமலையடிகளாரின் படுக்கை அறை கீழே ஒன்றும் மாடியில் ஒன்றும் உள்ளன 300-க்கு மேற்பட்ட தமிழக, மேலைநாட்டு அறிஞர் பெருமக்களின் திருவுருவப்படங்களும், தமிழ் இலக்கியக் குறிப்புகளும் இவ்வில்லத்தில் காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன.



அடிகளார் வாழ்ந்த இலலம்--கலைமன்றம்

இவையன்றி அடிகளார் பயன்படுத்திய பீங்கான் தட்டுகளும் இங்கே உள்ளன. பீங்கான் சாமான்களில் சாப்பிடுவதையே அவர் பெரிதும் விரும்புவாராம். இசையில் அவருக்கிருக்கும் ஈடுபாட்டினை அவர் பயன்படுத்திய கிராமபோனும், இசைத் தட்டுகளும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

இந்த இல்லத்தில் அடிகளார் சொந்தமாக ஓர் அச்சகத்தை நடத்தி வந்தார். அதற்குப் பெயர் 'திருமுருகன் அச்சகம்' (T. M. Press). அது இருந்த இடத்தில் இன்று காட்சிப் பொருள்கள் வைக்கப்பெற்றுள்ளன. அச்சகம் இருந்தபோது சில சமயங்களில் அடிகளாரே 'டிரெடில் மிஷினை' இயக்குவாராம்!

இவ்வில்லத்தின் மாடியில் அடிகளார் வழிபட்ட அம்பலவாணர் திருக்கோயிலும், அடிகளாரின் ஆசிரியர் சைவ சித்தாந்த சண்ட மாருதம் சோமசுந்தர நாயகர் அவர்களின் திருவுருவப் படமும் காட்சி தருகின்றன.



கலைமன்றத்தின் ஒரு தோற்றம்

இக்கலை மன்றம் காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்திருக்கின்றது. இங்கே உள்ள சிறு நூலகத்தில் 82 பேர் உறுப்பினர்களாக இருந்து பயன்பெற்று வருகின்றனர்.

மறைமலையடிகளார் துயிலெழுந்தபின் செய்வன என்னென்ன என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டாமா? இக்கலை மன்றத்தில் அவற்றை விளக்கமாய் எழுதி வைத்திருக்கின்றனர். அதில் அவரது ஒரு நாளைய பணிகள் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளன:

''அடிகளார் இரவு 1 மணிக்குப் படுத்துக் காலை 8 மணிக்குக் கண் விழிப்பார். எழும் பொழுதே 'தோலும் துகிலும்' என்னும் திருவாசகச் செழுமறை பாடிக்கொண்டேயெழுவார். எழுந்ததும் தம்மடிகளை மிதி பாயின் மீது வைத்துத் துடைத்துக்கொண்டு நிலத்தில் அடிபடாமல் இரட்டாலும் பயினு (இரப்பர்)லும் செய்த உறையில் நுழைத்துக் கொள்வார்.

''பின் மேன்மாடிக்குச் செல்வார். நிலைக்கண்ணாடியில் தம்மைக் காண்பார். பெரும்பாலும் காம்போதி, சுருட்டி, மோகனம் முதலிய இசைகளில் தேவார, திருவாசகப் பாடல்களைப் பாடிக் கொண்டே நூற்பேழைகளை நோக்குவார். ஆங்காங்கு மாட்டப்பட்டு விளங்கும் தெய்வத் திருவுருவப் படங்களையும் சிற்பங்களையும் வணங்கிக் கொண்டும் சாளரங்கள் காற்றுப் போக்கிகளைத் திறப்பார். அப்பொழுதும் பாடுவது நிகழ்ந்து கொண்டேயிருக்கும்! இறுதியில் மாடியில் நூல் நிலையத்தின் நடுநாயகமாக மாளிகையின் மேற்சுவரைச் சார்ந்த எண்கோண வடிவில் அமைந்துள்ள திருக்கோயிலில் அம்பலவாணர், அம்மை திருவுருவங்களின் திருமுன்னின்று மனமுருகப் பாடி வழிபடுவர். பின் கீழிறங்குவர். 8-30 மணிக்கு மாளிகையின் முன்புற மேடையை அடைவர். தம் அடிகளில் மர மிதியடிகளை அணிந்து கொள்வர். தோட்டத்திலிறங்கி மாளிகையைச் சுற்றி வருவர். சுற்றி வரும் போதே வேம்பு அல்லது ஆலங்குச்சிகளில் ஏதாவதொன்றினால் பல் துலக்கிக்கொண்டே விரைவாக உலாவி வருவர். நாட்கடன் முடிப்பர். நுணைத்தழையாற் பற்களையும் ஈறுகளையும் தூய்மை செய்து கொள்வர். வெந்நீரால் நீராடுவர். இதற்குள் மணி 10 ஆகும். பின் வெண்ணீறணிந்து மூச்சுப் பழக்கம் செய்வர். தணலமை இருப்புச் சட்டியில் நறுமணப் புகை கமழ்ந்து விம்ம நொசிப்பு என நுவலப்படும் நிட்டை புரிவர். பின் காலைச் சிற்றுணாச் சிறிதே அருந்துவர்.

''பின் 11 மணிக்கு அமர்ந்து 2 மணி வரையில் நூல்களைப் படித்தும் ஆராய்ந்தும் எழுதுவர். 2 மணிக்குப் பகலுணவு கொள்வர். 3 முதல் 4 வரையில் சற்றே படுத்து ஓய்வு கொள்வர். சிற்சில வேளைகளில் 4 மணி முதல் 6 மணி வரை மக்களையும் உடன் வைத்துக் கொண்டு தோட்டப் பணி புரிந்தும் புரிவித்தும் வருவர்......''

இவ்வாறு அன்றாட அலுவல்களை ஒழுங்காக அமைத்துக் கொண்டு செயலாற்றி வந்த அவரது வாழ்க்கை, நமக்கெல்லாம் ஒரு பாடமாகத் திகழ்கிறது.

வாழ்ந்து மறைந்த பெரியார்கள்-வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாய்த் திகழ்ந்த அறிஞர்கள்- அவர்கள் வாழ்ந்த இல்லம், அவர்கள் பயன்படுத்திய பொருள்கள் முதலானவை அரசினரால் பாதுகாக்கப்பட்டும், பொது மக்களுக்குப் பயன் தரத்தக்க வகையிலும் அமைவதை நாம் பார்க்கிறோம்.

மேலைநாட்டு அறிஞர் ஷேக்ஸ்பியர் பிறந்து வாழ்ந்த இடம், இன்று ஒரு பெரிய நகரமாகக் காட்சியளிக்கிறது. அவர் வாழ்ந்த இல்லமும். அவர் பயன்படுத்திய பொருள்களும் அங்கே கலைமன்றமாய் விளங்கி வருகின்றன. இதேபோல எடின்பரோவில் வால்டர் ஸ்காட் வாழ்ந்த இல்லமும், மாஸ்கோவில் டால்ஸ்டாயின் இல்லமும் பொதுமக்கள் பயன்பெறுவதற்காகப் பாதுகாக்கப்பட்டுக் கலைமன்றங்களாகக் காட்சியளிக்கின்றன.

அதைப்போலத் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த தகைமையாளர் மறைமலையடிகளாரின் இல்லத்தையும் இன்று நாம் கலைமன்றமாக, கலைக் கோயிலாகப் பாதுகாத்துப் பயன்பெற்று வருகின்றோம்.

''தமிழனுக்கென்று ஒரு தனி மொழி, கலை, நாகரிகம், பண்பாடு இருக்கிறதா?'' என்று 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் எழுதிக் கேட்டவர்கள் எத்தனை பேர்! அவர்களுக்கெல்லாம் விடை தரும் வகையிலே, ''தமிழுக்கென்று தனி மொழி உண்டு, அது தனியாக இயங்கும் தன்மையது, தனியே கலை, பண்பாடு, வரலாறும் உண்டு'' என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆணித்தரமாக எழுதி நிறுவிய பெருமகனார் மறைமலையடிகளார் அன்றோ? எனவே, அவர் வாழ்ந்த இந்த இல்லம் நமது உள்ளத்தில் என்றும் நின்று இலங்கும் என்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை!

—பி. வி. ஜி.



தமிழ் வளர்த்த மறைமலையடிகளை நினைவு செய்யும் வகையில் சைதையில் உள்ள மர்மலாங் பாலத்தை மறைமலையடிகளார் பாலம் எனத் தமிழ்நாடு அரசு மாற்றியுள்ளது! இந்தப் பாலம் இந்தியாவிலேயே அகலமானது என்பது.






# நெற்பயிர் காப்போம் நெல்மணி குவிப்போம்



உழுது பரம்படித்து, உரமிட்டு, நாற்றுநட்டு, தண்ணீர் விட்டுவிட்டால் மட்டும் நெல் விளைந்துவிடுமா? விளையாது! ஏன்?

பூச்சிகள், நோய்கள், கால் நடைகள் ஆகியவற்றின் தாக்குதலிலிருந்தும் நெற்பயிரைக் காத்திட வேண்டும். அப்பொழுதுதான், நெற்பயிர் நன்கு வளர்ந்து, செழித்து வளமான கதிர்களையும், மணிகளையும் கொடுத்திடும்.

"ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"

என்ற திருக்குறளும் பயிர்ப் பாதுகாப்பின் இன்றியமையாமையை நன்கு வலியுறுத்துகிறது. ஆனால் நாம் பயிர்ப் பாதுகாப்பில் போதிய கவனம் செலுத்தி வருகின்றோமா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டும்!

நமக்குத் தலைவலி என்றால் மாத்திரைகளைத் தேடுகின்றோம்!

நமக்குச் சிறு அளவு காய்ச்சல் என்றாலும் மருத்துவர்களைத் தேடி ஓடுகின்றோம்! ஆனால் நமது பசிப்பிணி தீர்த்து நம்மை வாழ வைக்கும் பயிர்களில் பூச்சிகள் வந்து தாக்கினால்—நோய்கள் தோன்றிச் சேதம் விளைவித்தால்—நாம் கவலையின்றி இருந்து விடுகின்றோம்! இது ஒருவகையில், நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு ஒப்பானதாக உள்ளது.

பயிர்ப்பாதுகாப்புமுறைகளை ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் நிரந்தரப் பண்ணை வேலைகளில் ஓர் அங்கமாகவே கருதுகின்றனர். ஆனால் நமது நாட்டு உழவர் பெருமக்களில் பலர் 'பூச்சிகள் அல்லது நோய்கள் வந்தபின் மருந்து தெளித்துக்கொண்டால் போகிறது' என்ற மனப்பான்மையுடன் இருந்து வருகிறார்கள்! 'நோய் வந்தபின் மருந்து கொடுத்துக் குணப்படுத்துவதைவிட வருமுன் காப்பதே சிறந்தது!' ("Prevention is better than cure!") என்பதை இன்னும் நமது நாட்டு உழவர் பெருமக்களில் பெரும்பான்மையினர் உணரவில்லை! இதன் காரணமாகவே, பயிர்ப் பாதுகாப்பு முறைகள் நமது உழவர் பெருமக்களிடையே பெரும்பாலும் அவ்வப்பொழுது தோன்றும் தற்காலிகத் தேவையாக உள்ளதே தவிர, பண்ணை நிருவாகத்தில் முக்கியமானதொரு பணியாகக் கருதப்படவில்லை!

ஜப்பான் நாட்டில் சராசரியாக எக்டேருக்கு 35 ரூபாயும், அமெரிக்காவில் சராசரியாக எக்டேருக்கு 110 ரூபாயும் பயிர்ப்பாதுகாப்பிற்காகச் செலவு செய்கின்றார்கள். ஆனால் நமது நாட்டில் பயிர்ப் பாதுகாப்பிற்காகச் சராசரியாக எக்டேருக்கு 1.50 ரூபாய் மட்டுமே செலவிட்டு வருகிறோம்! இதிலிருந்து பயிர்ப் பாதுகாப்பில் நாம் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதும், பயிர்ப்பாதுகாப்பில் மேலும் தீவிரக் கவனம் செலுத்த வேண்டும் என்பதும் தெளிவாகிறது.

பூச்சிகளும், நோய்களும் தாக்குவதால் சராசரியாக மொத்த மகசூலில் 10 சத அளவு குறைந்து விடுகிறது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இந்தியாவில், பூச்சிகளாலும், நோய்களாலும் ஆண்டு தோறும் சராசரியாக ஏறக்குறைய 1,000 கோடி ரூபாய் மதிப்புள்ள மகசூல் குறைந்துவிடுவதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

பூச்சிகளும், நோய்களும் வெகு தீவிரமாகப் பரவித் தாக்கும்பொழுது இன்னும் பல மடங்கு அதிக நட்டம் ஏற்படுகிறது. ஆகவே, பொதுவாக நமது நாட்டிற்கும், குறிப்பாக உழவர் பெருமக்களுக்கும் ஏற்படும் நட்டத்தைக் குறைத்திடப் பயிர்ப்பாதுகாப்பில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

அரிசி உற்பத்தியில் தன்னிறைவு நிலைமையையும், உபரி நிலைமையையும் ஏற்படுத்தியுள்ளதுடன், அனைத்து இந்தியாவிலும் சராசரி எக்டேர் நெல் விளைச்சலில் முதலிடம் எடுத்துள்ள தமிழக உழவர் பெருமக்கள், நெற்பயிர்ப் பாதுகாப்பில் தீவிரக் கவனம் செலுத்தினால், தமிழகம் அரிசி உற்பத்தியில் மேலும் சிறந்து தன்னிகரற்று விளங்கும் என்பது திண்ணம்!

தமிழ்நாட்டின் முக்கியப் பயிராக உள்ள நெல்லில், ஏறத்தாழ 85 வகையான பூச்சிகள் தோன்றி, மிகவும் கடுமையாகத் தாக்கிப் பெருஞ்சேதம் விளைவிக்கின்றன. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், நெல்லைத் தாக்கும் குருத்துப் பூச்சி மட்டும் கிட்டத் தட்ட 44 சத அளவுக்கு மகசூலைக் குறைத்து விடுகிறது!

நெற்பயிரின் பல கட்டங்களிலும் முக்கியமாகப் பின் கண்ட பூச்சிகள் தோன்றக் கூடும்.

### நாற்றங்காலில் தோன்றும் பூச்சிகள்

1. பேன்கள்,
2. தத்துப்பூச்சிகள்
3. படைப்புழுக்கள்
4. சிலந்திப் பூச்சிகள்

### நட்ட இளம்பயிரில் தோன்றும் பூச்சிகள்

1. குருத்துப்பூச்சிகள்
2. தத்துப்பூச்சிகள்.
3. ஆனைக்கொம்பன் ஈக்கள்.
4. நண்டுகள்.
5. சிலந்திப் பூச்சிகள்.

### தூர்கிளைக்கும் சமயத்தில் தோன்றும் பூச்சிகள்

1. குருத்துப்பூச்சிகள்.
2. ஆனைக்கொம்பன் ஈக்கள்.
3. மாவுப் பூச்சிகள்.
4. இலைசுருட்டும் புழுக்கள்.
5. வெட்டுக்கிளிகள்.
6. சிலந்திப் பூச்சிகள்.

## கதிர் தோன்றும் சமயமும், அதன் பிறகும் தோன்றும் பூச்சிகள்

1. குருத்துப் பூச்சிகள்.
2. மாவுப் பூச்சிகள்.
3. கதிர் நாவாய்ப் பூச்சிகள்.
4. புகையான் தத்துப்பூச்சிகள்

ஆகவே, நெற் பயிர்ப்பாது காப்பில் தமிழக உழவர் பெருமக்கள் தீவிரக் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக முக்கிய பூச்சிகளையும், அவைகளால் ஏற்படும் தீங்குகளையும், அவைகளைக் கட்டுப் படுத்தும் முறைகளையும் விளக்கமாகக் கீழே கொடுத்துள்ளோம்.

## நெற்பயிரைத் தாக்கும் பூச்சிகளும் தடுப்பு முறைகளும்

### குருத்துப் பூச்சி

அறிகுறி :—

*நடுக்குருத்து காய்ந்திருக்கும்; பிடித்து இழுத்தால் கையோடு வந்துவிடும்.

*வெளிவரும் கதிர் வெண் கதிராக இருக்கும்; இழுத்தால் வந்துவிடும்.

*குறுவையில் சேதம் குறைவு; சம்பாவில் அதிகம்.

*தாளடியில் அதிகமாக நட்டம் ஏற்படும். அதாவது ஏக்கருக்குச் சராசரியாக 3—4 மூட்டை நெல் மகசூல் குறைந்துவிடும்.

*தண்டில் சிறிது துவாரத்தையும் காணலாம்.

*தண்டை நன்கு பிளந்து சோதித்தால், சில சமயம் அதன் புழுவையும், சில சமயம் அதன் கழிவுகளையும், கூட்டையும் காணலாம்.

காரணம் :—

குருத்தில் உள்ள புழுவால் ஏற்படுகிறது.

இதன் தாய் ஒரு அந்துப் பூச்சியாகும்.

இப்பூச்சி, தோகையில் முட்டையிடுகிறது.

இதன் முட்டைகள் குவியலாக, இளம் மஞ்சள் நிற பஞ்சு போன்ற உரோமங்களால் மூடப்பட்டிருக்கும். எளிதில் கண்டு சேகரித்து அழிக்கலாம்.

முட்டைகளிலிருந்து ஏழு நாட்களில் புழுக்கள் வெளி வந்து, தண்டினுள் நுழைந்த பின்பு, குருத்தைத் தின்று வளருகின்றன. பின் அந்துப் பூச்சியாக வெளிவருகின்றன. அந்நிலையில் மேல் குருத்து துண்டிக்கப்பட்டு காய்ந்து விடுகிறது.

தடுப்பு :—

பொதுவாக அக்டோபர் மாதத்திலிருந்து இதன் தாக்குதல் அதிகமாகும். எனவே சம்பா, தாளடி பயிர்களுக்கு மருந்து தெளிப்பது அவசியமாகும்.

#### இட வேண்டிய மருந்துகள்

பாரத்தியான் 200 மில்லி லிட்டர்

அல்லது

எண்ட்ரின் 400 மில்லி லிட்டர்

அல்லது

பெனிட்ரோத்தியான் (சுமிதியான்) 250 மில்லி லிட்டர்

அல்லது

எண்டோசல்பான் (தியோடான்) 300 மில்லி லிட்டர்

அல்லது

பாஸ்பாமிடான் (டைமெக்ரான்) 110 மில்லி லிட்டர்

இவற்றில் ஒன்றினை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். விசைத் தெளிப்பானில் தெளிக்க 40—60 லிட்டர் நீரில் கலக்கவும்.

#### தெளிக்க வேண்டிய சமயமும், தவணைகளும்

நாற்றங்காலில் ஒரு தடவை.

நட்ட 15 நாளில் ஒரு தடவை.

நட்ட 36 நாளில் ஒரு தடவை.

தொண்டைக் கதிர் சமயம் ஒரு தடவை.

பாசன நீரில் 'காமா பி.எச்.சி' குறுணைகள், 'எண்ட்ரின்' குறுணைகள், காமா 'பி.எச். சி.-கார்பரில்' குறுணைகள், 'டயசினன்' குறுணைகள்முதலியவை இடுவது பயனுள்ளது எனத் தெரிய வந்துள்ளது.



குருத்துப் பூச்சி

### நெற்பேன்

அறிகுறி :—

*நாற்றங்காலில், நாற்றுக்கள் பசுமை இழந்து, மஞ்சள் நிறமடைந்து, தீய்ந்ததுபோல் காணப்படும்.

*நாற்றுக்கள் சேதமடையும்.

*தோகையைத் தட்டினுல், சிறு பூச்சிகள் நீரில் விழுந்திருப்பதைக் காணலாம்.

காரணம் :—

நெற்பேன்களால் இந்நிலை ஏற்படுகின்றது. இப் பூச்சிகள் நாற்றின் தோகைகளில் தங்கி வாழுகின்றன. இளம் பூச்சிகள், தோகைகளில் சாற்றை உறிஞ்சியும், பச்சயத்தைச் சுரண்டியும் சேதம் விளைவிக்கின்றது.






தடுப்பு :—

பி. எச். சி. 10 சத விகிதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். 'எண்ட்ரின்', 'பாரத்தியான்', 'பெனிட்ரோத்தியான்', 'பாஸ்பாமிடான்', 'எண்டோசல்பான்' முதலிய மருந்துகளை நீரில் கலந்து தெளித்தும் இதனைக் கட்டுப்படுத்தலாம்.

### தத்துப் பூச்சிகள்

அறிகுறி :—

நெற்பயிரின் தோகைகளில் நுனி காய்ந்து காணப்படும். கடுமையான தாக்குதலால், பயிர் பசுமை இழந்து, மஞ்சளாகி, பழுப்புத் தட்டிவிடும். மிகவும் அதிகமானுல், பயிர் காய்ந்துவிடும். தோகையைத் தட்டினுல் பச்சை, வெள்ளைப் பூச்சிகள் குதித்துத் தாவுவதை காணலாம்.

காரணம் :—

சிறிய பச்சை, வெள்ளைத் தத்துப் பூச்சிகளாலும், அவற்றின் குஞ்சுகளாலும் இந்நிலை ஏற்படுகிறது. இவைச் சாற்றை உறிஞ்சி வாழுகின்றன. விளக்கு ஒளியால் பச்சைத் தத்துப் பூச்சிகள் மட்டும் கவரப்பட்டு ஆயிரக்கணக்கில் குதித்துக் கொண்டிருக்கும். விளக்கு வைத்ததும்ஓரளவிற்கு பச்சைத் தத்துப் பூச்சிகளை மட்டும் ஒழிக்கலாம்.

தடுப்பு :—

பச்சைத் தத்துப் பூச்சிகள் மட்டும் இருந்தால் 'டி.டி.டி. 5' சதத் தூளைஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். வெள்ளைத் தத்துப் பூச்சிகள் மட்டும் இருந்தால் 'பி.எச்.சி. 10' சதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவ வேண்டும். இரு வகைத் தத்துப் பூச்சிகளும் இருந்தால் 5 கிலோ 'டி. டி. டீ. 5' சதத் தூளையும், 5 கிலோ 'பி. எச். சி. 10' சதத் தூளையும் கலந்து தூவ வேண்டும்.




குறிப்பு :—

தத்துப் பூச்சிகள், பயிரின் வலிமையைக் குறைத்து நோய்களுக்கு இலக்காக்குகின்றன.

நோய்களையும் துரிதமாகப் பரப்புகின்றன.

### நெல் மாவுப் பூச்சி

அறிகுறி :—

நெற் பயிரில், இங்குமங்குமாக, திட்டுத் திட்டாக பயிர் குழிந்து காணப்படும். நாளடைவில் இது அதிகரிக்கும். அதன்பின், பயிர் எரிந்து அழிந்தது போன்று காணப்படும். கதிர் வெளி வராமல், பதராகிக் குருத்தினுள்ளே அமுங்கியிருக்கும். மாவு போன்ற ஒரு வகைப் பொருளால் மூடப்பெற்ற முட்டை வடிவப் பூச்சிகளைக் காணலாம். பூச்சிகள் இராவிடினும், மாவு மட்டும் ஒட்டியிருப்பதைக் காணலாம்.

காரணம் :—

மாவுப் பூச்சிகள் நெற் பயிரின் சாறை உறிஞ்சுவதால் மேற்கூறிய அறிகுறி ஏற்படுகிறது. தாய்ப் பூச்சிகள் முட்டையிட்டு, குஞ்சுகள் வெளி வருகின்றன. அவை, செடியின் சாற்றை உறிஞ்சி வாழ்கின்றன. பாசன நீரில் மிதந்தும், ஊர்ந்தும் அடுத்தடுத்த இடங்களுக்குப் பரவுகின்றன. நெற் பயிர் இல்லாத நிலையில் புற்களில் வாழ்கின்றன.

தடுப்பு :—

வரப்புகளில் புற்கள் இல்லாமல் கவனிக்க வேண்டும். குழிந்து காணப்படும் இடங்களில் உள்ள பயிர்களை எடுத்துத் தீயிட வேண்டும். ஐ.ஆர். 8, ஐ. ஆர். 5 போன்ற அடர்ந்து வளரும் பயிரில், இவை தங்க வசதியிருப்பதால் தீயிட்டு அழிப்பது சிறந்தது. மற்றபடி 'பாரத்தியான்' மருந்தை 200—300 மில்லி லிட்டரை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிப்பது சிறந்தது.

'டி. டி. டீ.', 'எண்டிரின்' பயனற்றது.

குறிப்பு :—

பாரத்தியானை இந்த அளவில் விசைத் தெளிப்பானில் உபயோகிக்கக் கூடாது. இந்த பூச்சியை அழிக்க கையால் இயங்கும் தெளிப்பானை மட்டுமே உபயோகிக்க வேண்டும்.






காரணம் :—

பயிரின் அடிப் பகுதியில் இப் பூச்சிகள் பயிரின் சாற்றை உறிஞ்சி உண்டு வாழுகின்றன.

அதனால் பயிர் முன்னதாகவே சாய ஏதுவாகும்.

பயிர் சாய்ந்த நிலை அவற்றிற்கு நல்ல சுமுகச் சூழ்நிலையாக உள்ளது. அதனால் துரிதமாகப் பெருகி தாக்குதல் கடுமையாகிறது.

சாயாத பயிரிலும் சில சமயங்களில் அதிகமாகப் பெருகிச் சேதம் விளைவிக்கும்.

தடுப்பு :—

பயிர் சாயும் முன் மருந்தைத் தூவுவது ஏற்றது. நீரை வடித்து விட்டு, அடிப் பகுதியில் படும்படியாக ஏக்கருக்கு 10 கிலோ 'பி. எச். சி. 10' சதத் தூளைத் தூவ வேண்டும்.

ஒரு வார இடை வெளியில் இரு முறை மருந்து தூவ வேண்டும்.

## ஆனைக் கொம்பன் ஈ

அறிகுறி :—

சம்பா, தாளடிப் பயிரில் இளம் பயிராக இருக்கும் பொழுது, சுமார் 30—60 நாட்கள் வரை, பயிரில் கொம்புகள் போன்று குருத்துக்கள் காணப்படும். இக் கொம்புகள் குழாய் போன்று பச்சையாகவும், வெண்மையாகவும் இருக்கும். ஒரு நடவுக் குத்தில் 2, 3 தூர்கள் இவ்விதம் மாறி விடும்.

காரணம் :—

ஒரு வகை 'ஈ' இதற்குக் காரணமாகும். இந்த ஈக்கள் நெற் பயிரின் அடிப் பகுதியில் முட்டையிடுகின்றன. வெளிவரும் புழுக்கள் பயிரில் தண்டைத் துளைத்துக் கொண்டுஉட்சென்று நடுக் குருத்துத் தோன்றும் இடத்தில் தின்று வாழுகின்றன. அதனால் அந்த இடத்தில் வெளிப் பகுதி மட்டும் வளருகிறது. அதுவே குழாய் போன்ற ஆனைக்கொம்பு.

தடுப்பு : —

ஒன்று, இரண்டு ஆனைக் கொம்பன் தோன்றியவுடன் மருந்து தெளிக்க வேண்டும். ஏக்கருக்கு 200 மில்லி லிட்டர் பாரத்தியான் மருந்தை 15 நாட்களுக்கு ஒரு முறை, 3 முறை தெளிக்க வேண்டும். மருந்து தெளிக்கும் சமயம் நீரை வடித்து பயிரின் அடிப் பாகத்தில் மருந்து படியும்படியாகத் தெளிக்க வேண்டும்.

'பல்காரிட்' தத்துப பூச்சி
(புகையான்)

அறிகுறி :—

நெற் பயிரில் பயிர் பூக்கும் சமயம் தோன்றும். பாதிக்கப்பட்ட பயிர் துரிதமாகத் தங்க நிறமடைந்து மாறும். பால் பிடித்து இறுகு முன், பயிர் சாய்ந்து விடும். பயிரில் இதன் பாதிப்பு கூடுதலாக இருக்கும். தண்டின் அடியில் கூட்டமாக இப்பூச்சிகளைப் பார்க்கலாம்.









தடுப்பு :—

மேலாகத் தெரியும் புழுக்களை, 'பி.எச்.சி. 10' சதத் தூளைத் தூவிக் கட்டுப்படுத்தலாம். மற்றும், 'பி.எச்.சி.50' சத மருந்து (1.5 கிலோ)




## கதிர் நாவாய்ப் பூச்சி

அறிகுறி :—

கதிரில் பால் பிடிக்கும் சமயம் காணலாம். கதிரில் பல மணிகளில் பால் பிடிக்காமல் இருக்கும். இந்த மணிகளில் சிறு துவாரங்களையும் காணலாம். ஒரு அங்குல நீளமுடைய பழுப்புப் பூச்சிகளையும், பச்சை நிறமுடைய இளம் பூச்சிகளையும் காணலாம்.

இவை இருந்தால் வயல் பக்கம் ஓர் துற்நாற்றம் வீசும்.

கதிர் வராத பயிரில் தோகை நுனிகளில் சாற்றை உறிஞ்சி வாழும்.

காரணம் :—

நாவாய்ப் பூச்சிகள் இருப்பதால் இந் நிலை ஏற்படுகிறது. இவை புற் பூண்டுகளில் தங்கி, பின்பு நெற் பயிரைத் தாக்குகின்றன.

தடுப்பு : —

'பி.எச்.சி.' 10 சதத் தூளை இரு முறை, 3—4 நாட்கள் இடைவெளியில் தூவவும். ஏக்கருக்கு 10 கிலோ தூள் தேவை

## இலைப் புழுக்கள்

அறிகுறி :—

*இலைகளில் புழுக்களையே காணலாம்.

*சில இலைகளைச் சுருட்டி, உள்ளே சுரண்டி வாழும். நன்கு வளர்ந்த பயிரில் அதிகமாகவும், நிழல் உள்ள பகுதியிலும் காணப்படும். சில இலைகளை வெட்டி, கூடு கட்டிக் கொண்டு தொங்கும். சில இலைகளைக் கடித்துத் தின்று அங்கேயே வாழும். சில படை படையாக நாற்றங்காலிலும், இளம் பயிரிலும் தோகையைக் கடித்து உண்டு வாழும். இவை பகலில் மறைந்திருந்து, இரவில் சேதப்படுத்தும்.

காரணம் :—

புழுக்களால் ஏற்படுகிறது.

தாய்ப் பூச்சிகள்—வண்ணத்திப்பூச்சிகள்—இடும் முட்டைகளிலிருந்து தோன்றும் புழுக்கள், கூட்டுப் புழுவாக மாறும் வரை, பயிரை நாசப்படுத்துகின்றன.

அல்லது பாரத்தியான் (200 மில்லி லிட்டர்) அல்லது எண்டிரின் (400 மில்லி லிட்டர்) மருந்தைத் தக்க அளவு நீரில் கரைத்து அல்லது கலந்துத் தெளிக்கலாம்.

## வெட்டுக் கிளிகள்

அறிகுறி :—

*தோகைகளில் இவற்றைக் காணலாம்.
*தோகை கத்தரிக்கப்பட்டு இருக்கும்.
*மழைக் காலத்தில் அதிகமாக இருக்கும்.

காரணம் :—

புற்களில் வாழும் வெட்டுக் கிளிகளால் இந்த அபாயம் ஏற்படுகிறது.

தடுப்பு :—

'பி.எச்.சி. 10' சதத் தூளை ஏக்கருக்கு 10 கிலோ அளவில் தூவ வேண்டும். அல்லது 'பாரத்தியான்' மருந்தை ஏக்கருக்கு (200 மில்லி லிட்டர்) தக்க அளவில் நீரில் கலந்துத் தெளிக்கலாம்.

**நண்டுகள்**

அறிகுறி :—
*நண்டுகளையே காணலாம்.

*இளம் பயிரின் தோகைகள் கத்தரிக்கப்பட்டு, மிதந்து கொண்டிருக்கும்.

தடுப்பு :—

நண்டு வளைகளைத் தோண்டி அழிக்கலாம். 'பாரத்தியான்' 'எண்ட்ரின்' போன்ற மருந்துகளை வரப்பு ஓரங்களில் தெளிப்பது நல்லது. நடுவதற்கு முன், நிலத்தைச் சமப்படுத்தியபின், ஒரு முறை தெளித்து நட்ட பின் மறு முறையும் தெளித்தால் நண்டுகளை நன்கு கட்டுப்படுத்தலாம்

**எலிகள்**

அறிகுறி :—
*இளம் பயிர் கத்தரிக்கப்பட்டு இருக்கும். பொதுவாக, பயிர் பூட்டை வாங்கும் சமயத்திலிருந்து அதிகமான சேதம் ஏற்படும்.

*பயிர் துவைத்து வெட்டப்பட்டிருக்கும்.

*வளைகளில் கதிர் இழுத்துச் செல்லப்பட்டிருக்கும்.

காரணம் :—

எலிகளால் ஏற்படுகிறது. அத்துடன் வருடத்தில் ஒரு ஜோடி எலிகள் 140 எனப் பெருகுவதால் சேதம் அதிகமாகும். பயிர் துவைக்கப்படுவதால் நஷ்டம் அதிகமாக உள்ளது.

தடுப்பு :—

எலி வளைகளை, பயிர் அறுவடைக்குப் பின் வெட்டி, எலிகளைக் கொன்று விட வேண்டும் நன்கு சமப்படுத்தாத நிலையில், ஆங்காங்குள்ள மண் திட்டுகளில் வாழுவதால் வயலை நன்கு சமப்படுத்த வேண்டும். வரப்புகளின் உயரத்தையும் அகலத்தையும் குறைக்க வேண்டும். எலிப் பொறிகள், தஞ்சாவூர் கிட்டிகள் வைத்தும் எலிகளைப் பிடிக்கலாம். ஒரு பங்கு 'சிங்க் பாஸ்பைடு' என்ற நஞ்சுடன் 49 பாகம் உணவுப் பொருள் (நெல் பொரி, சோளப் பொரி, கருவாடு, தேங்காய் முதலியன) நஞ்சின் நிறம் தெரியா வண்ணம் கலந்து, வாரமொரு முறையாவது, ஆங்காங்கு, வைக்கோல் சுருள் அல்லது சட்டிகளில் வைக்க வேண்டும். மருந்து வைப்பதற்கு முன், ஓரிரண்டு நாட்களுக்கு மருந்து கலவாத உணவை வைத்துப் பழக்கப்படுத்துவது நல்லது. கையினால் கலக்கக் கூடாது. குச்சிகளையே உபயோகிக்க வேண்டும். மாலையில் வைத்து காலையில் எஞ்சிய பொருளைக் குழிகளில் இட்டுப் புதைக்க வேண்டும்.

(மருந்து ஒரு கொடிய நஞ்சு)





இலைப் புழுக்கள்

**சிவப்புப் பேன்**

அறிகுறி :—

நாற்றங்காலிலும் இளம் பயிரிலும் காணப்படும். இலைகளுக்கு அடிப்பகுதியில் பூச்சிகளைக் காணலாம். தோகைகளை மஞ்சள் நிறமாக்கிவிடும்.

காரணம் :—

ஆயிரக் கணக்கில் உள்ள சிலந்தி இனத்தைச் சேர்ந்த பேன்களால் ஏற்படுகிறது. இவை மஞ்சள் நிறமுடையவை. இவை பயிரின் சாற்றை உறிஞ்சுகிறது.

தடுப்பு :—

'டைமிதோயேட்' (ரோகார்) என்ற மருந்தை ஏக்கருக்கு 250 மில்லி லிட்டர் வீதம் தெளிப்பதால் கட்டுப்படுத்தலாம்.

'பி. எச். சி'., 'டி. டி. டி.' மருந்துகளைத் தெளிப்பதால் பயனில்லை. இம் மருந்துகள் சிவப்புப் பேனைக் கட்டுப்படுத்தாது.

மேற்கூறியவாறு நெற்பயிர் காத்து நெல் மணி குவித்திட உடனே முயற்சிக்குமாறு தமிழக உழவர் பெருமக்களை வேண்டுகின்றோம்.






# இணையற்ற தொண்டு

—பா. செயப்பிரகாசம்

தமிழகத்தில் உள்ள வேலை வாய்ப்பில்லாப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புத்தரும் நல்லெண்ணத்திலும், சமூகத் தொண்டு புரிய ஆர்வமுள்ள பட்டதாரி இளைஞர்களை ஊக்குவிக்கும் வண்ணமும், நிரந்தர வேலை கிடைக்கும் வரை இடைக்கால உதவியாக அமையுமாறு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ''இளைஞர் அணி'' எனும் அமைப்பை 1971-ஆம் ஆண்டு உருவாக்கினார்கள். இன்றையத் தினம், இளைஞர் அணியின் சீரிய பணியை அறிந்து மற்ற மாநில அரசுகள், தங்கள் மாநிலங்களிலும் இத்தகையதொரு திட்டத்தினைப் பின்பற்ற வேண்டும் என்று நினைக்கும் ஒரு நிலை உருவாகியிருக்கிறது. கிராமப்புற சுகாதார வசதியைப் பேணுதல், முதியோர் கல்வி, தீண்டாமை ஒழிப்பு முதலிய சமூக சேவைகளில் ''இளைஞர் அணி'' வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. அவர்களுக்கு ஊதியமாக மாதம் ரூ. 175 தரப்பட்டு வருகிறது. இவ்வணியில், 1971-72-ல் 1,800 ஆடவரும், 200 மகளிரும், 72-73ல் 1,450 ஆடவரும், 15 மகளிரும், '73-'74-ல் 1,525 ஆடவரும், 275 மகளிரும் சேர்க்கப்பட்டார்கள். நிரந்தர வேலை கிடைத்தவுடன் செல்லலாம் என்ற நிபந்தனைக்கேற்ப, வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்றவர்கள் தவிரத் தற்பொழுது ஆடவர் 3,382 பேரும், மகளிர் 481 பேரும் பணியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். தமிழக முதல்வர் எந்த நோக்கத்துடன் இத் திட்டத்தினை உருவாக்கினாரோ அது மிகச் சீரிய முறையில் நிறைவேறி வருகிறதென்பதை யாவரும் கண்கூடாகக் காண

தஞ்சைமாவட்டத்தில் அரசு மருத்துவ மனைகளில் இளைஞர் அணியினைச் சார்ந்த மகளிர் மிகச் சிறப்பான முறையில் சமூகத் தொண்டினைச் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு எழுத்து வேலை கொடுக்கப் படவில்லை; சமூகத் தொண்டு ஒன்றையே நோக்கமாகக் கொண்டு அவர்கள் செயல்படுகிறார்கள்.

தஞ்சை இராசா மிராசுதார் மருத்துவ மனையில் இளைஞர் அணியினைச் சார்ந்த ஐந்து மகளிர் புணி புரிந்து வருகிறார்கள். மருத்துவ மனையின் நூலகத்தில் ஒருவர் பணி செய்து வருகிறார். நூலகத்திற்கு வந்து படிக்கக்கூடிய நோயாளிகளுக்கு உதவி செய்வதுடன், நேரடியாக மற்ற நோயாளிகளுக்குப் புத்தகங்கள் எடுத்துச் சென்று விநியோகித்து, அவைகளைத் திரும்பப் பெறும் பொறுப்பையும் ஏற்றுச் செயல்பட்டு வருகிறார். மருத்துவமனை நோயாளிகளைக் கேட்டபோது, இத் தொண்டு தங்களுக்கு மிகவும் பயனுற்றதாக, அறிவுப் பெருக்கத்திற்கு வகை செய்வதாகத் தெரிவித்தார்கள்.

மருத்துவமனை சமையலறையில் ஒருவர் பணியாற்றி வருகிறார். வாங்கப்படும் பொருள்கள் சரியாக இருக்கின்றனவா, நோயாளிகளுக்குத் தரப்படும் உணவுப் பொருள்கள் குறித்த அளவு அளிக்கப்படுகின்றனவா என்பதையும் கண்காணிப்பது இவரது வேலை. இவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள பணியினைக் குறையின்றி மிகச் சிறப்போடு செய்து வருகின்றார்.

மன நோய்ப் பிரிவில் ஒருவர் தொண்டு செய்து வருகிறார். மன நோயுள்ள நோயா[illegible] வாறு பழகி மருந்து கொடுத்தல், அவர்களுக்குப் பொழுது போக்காக அவர்களிடம் உரையாடி மகிழ்வித்தல் முதலிய பணிகளைச் செய்து வருகிறார். மன நோயுள்ள ஆண் நோயாளியிடமும் பெண் நோயாளியிடமும் தைரியமாக அணுகி மிகத் திறமையான முறையில் தொண்டு செய்து வரும் அவரது பணி மிகவும் பாராட்டுக்குரியது.

குழந்தைகள் மருத்துவப் பிரிவில் ஒருவர் பணியாற்றி வருகிறார். நோயுள்ள குழந்தைகளுக்கு மருந்துகொடுத்தல் முதலிய பணிகளில் மருத்துவர்களுக்கு உதவியாக இருக்கிறார். தாய்மார்கள், தங்கள் குழந்தைகளை மற்றப் பிரிவுகளுக்கு அழைத்துச் செல்வதற்கு உதவுகிறார். நோய் வாய்ப்பட்ட மழலைகளிடம் அன்புடன் பழகிப் பணி புரிவதில் மன நிறைவு பெறுகிறார் இவர்.

எலும்பு முறிவுச் சிகிச்சைப் பிரிவிலும் ஒருவர் பணிபுரிந்து வருகிறார். எலும்பு முறிந்த நோயாளிகள் நடப்பதற்கும், பொருள்களை எடுப்பதற்கும், மருந்து சாப்பிடுவதற்கும் உதவுவது முதலிய நற்பணிகளைச் செய்து வருகிறார் இவர்.

மகளிர் இளைஞர் அணியினர் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை பொது நலப் பணி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு மன நிறைவோடு பணி புரிந்து வருகிறார்கள். அவர்களால் நோயாளிகளுக்கும் துயர் மறைந்து மன நிறைவு கிடைக்கிறது. அவர்கள் ஒவ்வொரு பிரிவிலும் மூன்று மாதங்கள் பணிபுரிந்த பின்னர் வேறு பிரிவிற்கு மாற்றப்படுகிறார்கள். இவ்விதம் வேலை கற்றுக்கொள்வதோடு பல தரப்பட்ட நோயாளிகளுக்கும் தொண்டு செய்வதற்குரிய வாய்ப்பையும் அவர்கள் அடைகிறார்கள்

வேலைவாய்ப்புத் திட்டத்தைப் பெருக்கிட வேண்டும் என்பதற்காகத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாகத் துவக்கிய இத் திட்டம் மிகச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது என்பதற்கு தஞ்சை இராசா மிராசுதார் அரசினர் மருத்துவ மனையில் புணி புரியும் இளைஞர் அணி மகளிரின் பணி சான்றாக [illegible]




# வெண்பாப் போட்டி

## 'அகம்' எனத் தொடங்கிப் 'புறம்' என முடித்தல்

அகம்நோவா ராயினும் ஆங்கவர் முன்னே
பகருதல் தான்மிகப் பண்பாம்—மிகஅவர்
செய்மையில் சென்றபின் சிரிலா வண்ணமாய்ப்
போய்மறைந்து பேசேல் புறம்.

—நோடுதீர மதமாடிசிதானு, காளனூரு.

அகமகிழக் கோயில் அறங்காப்போ ராகப்
புகச்செய்தே, அர்ச்சகமும் பூண்டு—தகவுடனே
ஆற்றுதற்குச் செய்கின்ற ஆட்சியின்று, நீக்கிடுதே
போற்றுத சேரி,புறம்.

—அ. கமலம், தவசிகிராமம்.

அகங்கொண்டு கன்றை அழித்தானென் றேதன்
மகனைத்தேர்க் காலில் மடித்துச்—சகத்தில்
நிகரில்லா தோங்கினர் நீடுவாழ் நம்நாட்டின்
புகழ்மணக்கச் செய்தார் புறம்.

—நா. கலைப்பிரியன், சத்திரப்பட்டி.

அகமே! திருநாட்டில் அஞ்சுவதற்(கு) அஞ்சு;
புகழ்மாய்க்கும் சாதிகுலப் பொய்மை—அகழ்ந்தெறிக!
சொல்லா தனசொல்லிச் சூதெல்லாஞ் செய்திடினும்
பொல்லாங்கைப் போக்கு புறம்.

—மா. சே. இராசு, திருப்பூர்.

அகத்துண்மை வாழ அறிஞர்சொல் ஆள
மிகத்தொன்மைப் பண்பு மிளிர—நகைத்தன்மை
இல்லாத நல்லாட்சி ஏற்றோர்க்கே என்றென்றும்
பொல்லார் கொடுப்பர் புறம்.

—புலவர் பழனி-அரங்கசாமி, கொத்தமங்கலம்.

அகம்பாவம் கொண்டவர்கள் ஆத்திரத்தில் பேசும்
பகராத நிந்தைமொழி கேட்டுத்—தகர்ந்துவிடின்
எஞ்சியுள்ள காரியத்தை யார்வந்து செய்திடுவார்
நெஞ்சே! ஒதுக்குப் புறம்.

—புலவர் சேறைநேசன், சோழூர்.

அகமென்னும் கோயிலின்கண் ஆடும் சிலையே!
சுகப்பாடம் கற்பிக்கும் தோகாய்!—செகத்திலுறும்
ஈரநிலவே! இளந்தென்றற் காற்றே! என்
பேரழகே! வாஅப் புறம்.

—இராம. குப்புசாமி, கொண்டிசெட்டிப்பட்டி.

அகம்நிறைந்த செந்தமிழே! அன்பார்ந்த பெண்ணே!
இகலில்லா உன்சுவையால் ஈர்த்தாய்—அகத்தின்
இருளோட்டும் உன்னணைப்பை எங்ஙன் மறந்தே
பொருளீட்டச் செல்வேன் புறம்?

—பாவலர் நாவை—சிவம், கொடும்பாளூர்.

அகம்குளிர இன்பம் அவனளித்தால் போதும்
முகம்மலர மங்கை மகிழ்வாள்;—நகம்சதைபோல்
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவர்; உற்றதொரு வாழ்நாளில்
மற்றவைகள் எல்லாம் புறம்.

—அ. ஈஸ்வரி, வடமாதிமங்கலம்.

அகம்வாழும் அண்ணன்; அழகுதமிழ் மன்னன்
முகம்மலர்ந்த மந்திரங்கள் மூன்று!—சுகம்வளர
என்னென்ன திட்டங்கள்; ஏற்பட்ட சட்டங்கள்
புன்மையிருள் போக்கும் புறம்.

—"நிலவன்", சென்னை-1.

பரிசுக்குரிய வெண்பா எழுதியவர் :

திரு. கோடுதீர மதமாடிசிதானு,
கன்னட ஆசிரியர்,
காளனூரு,
சில்லமரத்துப்பட்டி (அஞ்சல்),
மதுரை மாவட்டம்.

# வெண்பாப் போட்டி

## வெண்பாப் போட்டி - 70

ஈற்றடி : தொண்டாற்ற வேண்டும் தொடர்ந்து

முடிவு நாள் : 2—1—1974

நேரிசை வெண்பாக்களே அனுப்பப் பெறல் வேண்டும்.

அகத்தின் அழகை முகங்காட்டும்;காட்டும்
செகத்தின் அழகைச் செழிப்பே—புகழ்மேனிச்
செல்வ அழகைச் செயல்சேர்க்கு மென்றறியாப்
புல்லறிவோர் கூறும் புறம்.

—தவமுத்து, அண்ணாமலை, பி. ஏ. பி. டி., தவசி.

அகமகிழ்ச் சொல்லாடி, அன்புணர்வை நாட்டி,
தகவுடைய சொற்களால் தன்னை—மிகநல்ல
நண்பன்போல் காட்டிப்பின் நண்பர்கள் நன்னெஞ்சம்
புண்படவே பேசாய் புறம்.

—புலவர் க. விசுவநாதன், நெற்குப்பை.

அகத்தில் எரியிருக்கும் ஆனாலும் தங்கள்
முகத்தைப்பூ வாக்கி மொழிவார்—பகைத்தாலும்
வாள்போல் பகைத்தார் வஞ்சத்தை உள்ளடக்கிக்
கேள்போல் நடிப்பார் புறம்.

—மெய். அருண்மொழியன், கலையனூர்.

அகத்தூய்மை கொண்டுமே அன்பின் உருவாய்
மிகச்சிறந்தே மேதினியே மெச்ச—இகத்திலே
நன்னீரால் ஆடினால் நாளும் உடலெல்லாம்
பொன்னாய் விளங்கும் புறம்.

—சீனிவாசம்மாள், சேலம்-9.

அகந்தை அகற்றி அருந்தமிழ்ப் பண்புக்
குகந்த பணிகளில் ஒன்றி—முகமலர
ஏற்றாற்றும் தொண்டுகளை இவ்வவனி உள்ளமட்டும்
போற்றிப் புகழும் புறம்.

—புலவர் திரிபுரசுந்தரி, திருவண்ணாமலை.

அகம்மகிழும் வேந்தனுக்கும் அச்சாணி சோறு
இகம்புகழும் மெய்ம்மறைக்கும் ஆடை—சுகமளிக்கும்
நாமணக்கும் நற்கனிக்கு நாடிடுவோம் நாமென்றும்
பூமணக்கும் நாட்டுப் புறம்,

—ந. நடராசன், செங்கத்துறை.

அகத்தினிலே யாருமில்லை! ஆனதனால் பிச்சை
உகுப்பதற்கே ஏதுமில்லை! உள்ளம்—நெகிழ்கிறதே!
வாய்விட்டுச் சொல்கின்றேன் வாயிலிலே நிற்காமல்
போய்விட்டு வாஅப் புறம்.

—சிவல்புரி சிங்காரம், மேச்சிவல்பட்டி.

அகமே திருக்கோயில்; அன்பே இறையாம்!
சுகமே...! எனவெதும்பிச் சோரா(து)—இகவரையும்
பேராண்மை காத்தலே பேறங்காண்! காண்பாரோ
பேராண்மை பெற்றார் புறம்?

—கு. செல்லக்கண்ணன், ஓலப்பாடி.

அகம்திறந்து மெய்யதனை அத்தனையும் சொல்லி
முகம்சிவந்து போய்விட்டாள் முல்லை—சுகம்தந்த
கள்ளிருக்கும் சொல்லழகி கள்ளிதனைக் கண்டோரும்
புள்ளினமும் ஆங்கோர் புறம்.

—ஜே. ஜோதி, இராமநாதபுரம்புதூர்.

அகம்பாவம் கொண்டே அலைகின்ற எத்தர்
நகர்ப்புறத்தில் தான்உண்டு நண்பா—பகையற்றுக்
காவில் உலவிக் களிப்புற்று வாழ்ந்திடவே
போவீர் கிராமப் புறம்.

—ஆர். ஜெயா, காந்திக்கிராமம்.

அகம்நிறைந்தால் மக்கள் அகம்நிறையும்;பின்பே
முகம்மலரும் என்றே முயன்றார்—வகையுடனே
நல்லாட்சி செய்தார் நலஞ்சேர்த்தார் என்றாலும்
பொல்லாதார் சொல்வார் புறம்.

—கருங்காலக்குடி ரகீம், சின்னக்கற்பூரம்பட்டி.

அகத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றி அளவில்
மகப்பேற்றின் நல்குரவால் நைந்தால்—இகப்பேற்றில்
பேணுவ தென்றேசொல் பேரறம்? சூழ்வினையைக்
காணுவ தெங்கோ புறம்?

—சா. கா. சாகுல்அமீது, பி. ஏ., சித்தையன்கோட்டை.

அகமின்றி வாழும் அகதிகளின் வாழ்வில்
இகமதில் இன்பம் இலங்க—முகமலர்ந்தே
வண்ண "மலிவுவிலை வீடுகள்" ஈந்திடவே
புன்னகை பூத்தார் புறம்.

—செ. பெரியசாமி, குட்டுப்பட்டி.

அகவாழ்வுக் கேற்ற அணியாம் களவில்
மிகுமோர் களிப்பில் மிதந்தோம்—தகவார்
குறள்காட்டும் வாழ்வமைய கோதாய்! இனிநான்
பொருளீட்டப் போவேன் புறம்.

—இரத்தின. மனோகரன், சென்னை-11.

அகமென்ப துள்ளத்தா லொன்றிய ஆண்பெண்
சுகந்துய்த்த தெண்ணிச் சுவைத்து—மகிழ்தலாம்;
வீரங் கொடைமுதலா வெண்ணற்ற பண்புகளைப்
பூரணமாய்ப் போற்றல் புறம்.

—வே. அரங்கராசன், தாராசுரம்.

# வெண்பாப் போட்டி

அகத்திருக்கும் அன்பை அடையாளம் காணார்
முகம்பார்ப்பார் காசை மதிப்பார்—சுகமொன்றே
பாராட்டும் அத்தகைய பாவியரைத் தீமைபோய்ச்
சேராதோ தானப் புறம்.

—மா. இராமலிங்கம், புதுப்பாளையம்.

அகம்குளிர்ந்து காட்டிய அண்ணன் வழியில்
புகழ்பெற்ற ஆட்சி யமைத்து—நிகரற்ற
நுண்ணறிவுப் பாதை நெறிகாட்டி மக்களுக்குக்
கண்கொடுத்தார் மற்றோர் புறம்.

—"முகிலன்", ஆத்தூர்.

அகம்குளிர ஓர்சொல் அமுதே புகலாய்
இகழாமல் என்விருப்பை ஏற்பாய்—சுகம்பெற
ஆவலாய் உன்பால் அடர்இருளில் வந்தநான்
போவதோ வீணாய்ப் புறம்?

—மா. கா. குருசாமி, அபிராமம்.

அகம்பொருந்தும் இல்வாழ்க்கை ஆரமிழ்தும் தேனாய்
மிகப்பொருந்தி யின்பம் விளைக்கும்—புகழ்தமிழர்
வீரம், கொடைப்பண்பு, வெற்றிச் செயல்திறங்கள்
போரழித்துக் காக்கும் புறம்.

—புலவர் கோம்பைச்சிரான், கோம்பை.

அகம்நோக்கிச் சொல்வேன் அருமைசால் நெஞ்சே!
முகம்பார்த்தா நீமயங்கிப் போனாய்?—தகைஞர்தம்
தொண்டில் கடல்தாண்டிச் சென்றால் வழியனுப்பிப்
பின்எதற்கோ சொல்வாய் புறம்.

—கவிஞர் சிவ. நடராசன், மாமல்லபுரம்.

அகம்நன்றே கொள்வோம், அகிலத்தை வெல்வோம்;
முகம்கோடி வாழ முயல்வோம்!—யுகம்பேசும்
நல்ல செயல்தனையே நாம்செய்வோம் துன்பத்தின்
பொல்லாங்கைக் காண்போம் புறம்.

—இல. ஆலையழகன், வல்லம்.

அகமதில் அன்புடன், அல்லலுறும் ஏழை
சுகங்காண எண்ணிடும் நல்லார்—இகமதில்
நற்புகழும் ஈடில்லா நன்மையும் பெற்றேநற்
பெற்றி யுறுதல் புறம்.

—புலவர் கா. நா. இலக்குவன், சின்கோனா.

அகம்மலர அன்பு உரைமலர பால்போல்
முகம்மலர வாழ்வதுதான் வாழ்வாம்—நகைமலர
பூக்காத பூவாய்ப் புவிமீதில் வாழ்வோரை
நீக்கித் தொலைக புறம்.

—துறவி, அரியலூர்.

அகத்தூய்மை இல்லாதார் ஆக்கம்பெற் றுய்யார்
நகைமுகங் காட்டி நலிவர்—மிகவாய்
வெறுப்புள்ளம் மேலோங்க வெந்தழிவர்; வேண்டாம்
புறங்கூறும் பொய்மைப் புறம்.

—ப. திருவேங்கடம், திருச்சி-4.

அகந்தூய்மை; நல்ல அறிவாண்மை கொண்டு
முகம்மலர்ந் தின்சொல் மொழிந்தே—இகத்தினில்
என்றும் பிறர்க்கின்னல் எண்ணா மனத்தாரை
என்செய்யும் பொய்மைப் புறம்?

—ப. சக்திவேலன், திருச்சி-4.

அகம்பாவம் வேண்டாம் அதிசினமும் வேண்டாம்
அகத்தினுள் வேண்டாம்பே ராசை—செகத்தீரே!
வேண்டாத பண்புகள் வேண்டா முமதுபுகழ்
பூண்டோ டொழியும் புறம்.

—விநோதலீலன், இரா. வெள்ளோடு.

அகத்தில் அழுக்கிலார், அன்பார் உழவோர்,
முகத்தில் களங்கமில் மங்கை,—சுகத்தையே
நல்கும் இயற்கை நலங்களைக் கொண்டதே
பல்கிடும் நாட்டுப் புறம்.

—பி. சி. அசனல்லி, அரக்கோணம்.

அகம்மகிழக் காதல் அரும்புவதால் கொஞ்சும்
முகம்மலரத் தான்குழைந்து முன்கால்—நகம்கீறி
ஆவலினை உள்ளே அடக்கும் உணர்வெல்லாம்
பூவிதழால் தோன்றும் புறம்!

—நெல்லை ஆ. கணபதி, சென்னை-15.

அகஞ்செறி தண்டமிழன் பாலோர்நாள் சேரன்
புகழ்மோசிக் கீரனார் போற்றித்—தகவாக
ஒண்சா மரைவீசி ஓங்குயர் வெய்தியதைப்
பொன்போலப் போற்றும் புறம்!

—தங்க அருண்மொழி, வே. கள்ளிப்பாளையம்.

'அகத்துளதா அச்சம்?' அகராதி நாடும்
மகவினத்தைப் பெற்று, மறவர்—பகைமுடித்த
காவுண்டார் வாழ்ந்த கதைசொல்லும் தாய்க்குலத்தால்
பூவுலகில் வாழும் புறம்'.

—புலவர் மா. புகழேந்தி, ஓலைப்பாடி.

அகமும் கெடுத்தே அமைதியும் போக்கிச்
சுகவாழ்வு தன்னைத் தொலைக்கும்!—முகநோக்கிக்
கூசாமல் வன்சொற்கள் கூறிடினும் யாரிடமும்
பேசாதீர் என்றும் புறம்.

—சு. தங்கப்பன், சின்கோனா.

# மூன்று மாவட்டங்களின் முன்னேற்றப் பணிகள்!

— ஆ.பி

கலை மணம் கமழும் தஞ்சை மாவட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த எங்கள் உந்து, கொள்ளிடம் பாலத்தின் அருகே நிறுத்தப்பட்டது.

கொள்ளிடம் பாலத்தில் நீண்ட நெடுங்காலமாகச் சுங்க வரி வாங்கி வருகிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அதற்காகத்தான் உந்து நிறுத்தப்பட்டதோ என்று எண்ணியபடி, சன்னல்களின் வழியாக எட்டிப் பார்த்தோம்.

எங்கள் உந்துக்கு முன்னால் ஒரு ஜீப் கார் நிறுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து சில இளைஞர்கள் கை காட்டியபடி இறங்கி வந்தார்கள். யார் அவர்கள் என்று வியப்புடன் நோக்கிய போது, சில தெரிந்த முகங்கள் தென்பட்டன. சில விநாடிகளில் புரிந்துவிட்டது, வந்திருந்த இளைஞர்கள் தஞ்சை மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் செய்தித் துறை உதவியாளர்கள்தான் என்பது. பத்திரிகையாளர்களாகிய எங்களை வரவேற்பதற்கும் எங்களுக்கு வழி காட்டி உதவுவதற்கும் அவர்கள் வந்திருந்தார்கள்.

ஜீப் முன்னே செல்ல எங்கள் உந்து, பின்தொடர்ந்துசென்று கொண்டிருந்தது.

கரிகால் பெருவளத்தான் தலைநகராம் காவிரிப்பூம் பட்டினத்தை நோக்கி எங்கள் உந்து செல்கிறது என்பது தெரிந்தவுடனேயே உள்ளமெல்லாம் மகிழ்ச்சி அலை உருவாகியது.

பூம்புகார் வாயிலுக்குள் நுழைந்தோம். பின்னர் கரிகால் வளவன் வாயில்! மூன்றாவதாக எங்களை வரவேற்றது இளங்கோவடிகள் வாயில்! அதன் பின்னர் கோவலன் வாயில், பின்னர் கண்ணகி வாயில், பின்னர் மாதவி வாயில், அனைத்தையும் தாண்டி இறுதியாகச் சிலப்பதிகாரக் கலைக்கூட நுழைவு வாயிலுக்கு வந்தோம். ஒரே வியப்பு! கடற்கரைப் பட்டினமாம் காவிரிப்பூம்பட்டினத்தில் சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் இல்லாத ஒரு புதுக் கட்டடம்—எழு நிலை மாடம் இந்த ஆண்டு உருவாகி 'வானுற ஓங்கி வளம் பெற' நின்றால் வியப்பு எங்களை வந்து மோதியதில் வியப்பென்ன இருக்கிறது!

தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ்க் கலைக்கும் பெருந் தொண்டு புரிந்துவரும் தமிழக அரசு தஞ்சைத் தரணியில், புகார் மண்ணில் கற்பரசி கண்ணகிக்கு ஒரு கலைக்கோயிலை உருவாக்கியிருக்கிறது.

'தோள் கண்டார் தோளே கண்டார்—தொடுகழல் கமல மன்ன தாள் கண்டார் தாளே கண்டார்'—என்று கவிச்சக்கரவர்த்தி கம்பர் வருணித்ததைப் போல இந்தக் கோயிலின் வெளிப்புறத்தைப் பார்த்தவர்கள் அதையே பார்த்துக்கொண்டிருப்பதும்—உட்புறம் சென்று பார்த்தவர்கள் அதையே பார்த்துக் கொண்டிருப்பதும் நாள்தோறும் இங்கு வாடிக்கையாகிவிட்டது.

49 சுவர்ச்சிற்பங்கள்—சிலப்பதிகாரக் கதையை எடுத்துச் சொல்கின்றன. சிற்பங்கள் உயிரோவியங்களாகவே காட்சி தருகின்றன. ஒவ்வொரு சிற்பத்தின் கீழும் சிலப்பதிகார வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

பழைய பூம்புகார் எப்படி இருந்திருக்கும் என்பதற்குரிய மாதிரி ஒன்று அமைக்கப்பட்டு, கண்ணாடிப் பெட்டிக்குள் கொலுவேற்றப்பட்டு இருக்கிறது.

கலைக்கூடத்தின் உட்புறத்தில் உள்ள—வெளி இடத்தில் 8.5 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள மாதவியின் சிலை, எழில் தேவதையே எதிரில் வந்து நிற்பது போலத் தோன்றுகிறது. 'அழகெனும் தெய்வந்தான் அது எனக் கண்டேன்'



என்று பாரதியார் சொல்லிய வார்த்தைகளை இங்கேதான் பயன்படுத்த வேண்டும் என்று தோன்றுகிறது.

இதுவரை எவரும் செய்யாத அளவுக்கு ஒரு கலைக் கோயிலை உருவாக்கிய தமிழக அரசைப் பல நிருபர்கள் பாராட்டினார்கள். வியப்பினால் சிலருக்குப் பேச்சே வரவில்லை.

முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனையினாலும் ஆதரவினாலும் ஒத்து உழைப்பாலும் உருவாக்கப்பட்ட இந்தக் கலைக்கூடத்தில் 'எழுநிலை மாடம் அமைத்த ஏந்தல்' என்ற மெய்க் கீர்த்தி பொறிக்கப்பட்டிருப்பது அந்த நாள் பூம்புகாரை — வரலாற்றில் மட்டுமே நாம் படித்துணர்ந்த பூம்புகாரை — இந்த நாளில் நேரில் பார்ப்பது போல் ஓர் உணர்வு நமக்கு ஏற்படுகிறது.



பூம்புகார் சிலப்பதிகாரக் கலைக்கூடத்தின் முன்னே நிருபர்கள்



1973-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் நாளன்று முதல்வர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்தக் கலைக்கூடம் ஏறக்குறைய 6.5 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டதாகும். மேலும், பண்டைய பூம்புகாரில் இருந்த இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், பாவை மன்றம் போன்ற அமைப்புகளை இங்கே உருவாக்கும் திட்டமும் உள்ளது. அவற்றையெல்லாம் சேர்த்தால் மொத்தம் 15 இலட்ச ரூபாய் ஆகும் எனத் தெரிகிறது.

எழில் மிகுந்த இடத்தைப் பார்க்க எல்லா மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் — பிற மாநிலத்தவரும் வருவது இயற்கையல்லவா? அதனால், அண்ணா பெயரால் சுற்றுலா மாளிகை ஒன்று மிக விரைவில் உருவாகி வருகின்றது.

இந்தக் கலைக்கூடத்திற்கு நுழைவுக் கட்டணம் வைத்திருக்கிறார்கள். நுழைவுக் கட்டணம் என்றவுடன் அதிகமாக இருக்குமோ என்று அஞ்சத் தேவையில்லை. பத்துக் காசு தான்! இந்தப் பத்துக் காசு பெரிய தொகையல்ல என்பது மட்டுமல்ல—எத்தனை பத்துக் காசு ஒரு நாளைக்கு வசூலாகியிருக்கிறது என்பதைக்கொண்டு எத்தனை பார்வையாளர்கள் கலைக்கூடத்தைக் காண வருகிறார்கள் என்பதைத் துல்லியமாகச் சொல்லிவிட முடிகிறது. தற்போது, நாள் ஒன்றுக்கு ரூ. 100 வசூல் ஆகிறது—விடுமுறை நாட்களில் ரூ. 200 வசூல் ஆகிறது—பொது மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் இங்கே வருகிறார்கள் என்பதை இந்தப் புள்ளி விவரம் தெரிவிக்கின்றது.

கலை ஓவியங்களுக்கு மட்டும் தான் தமிழக அரசு சிறப்புச் செய்கிறது என்று எவரும் எண்ணி விட வேண்டாம், உயிர் வாழும் சமுதாய ஓவியங்களான ஏழை மக்களுக்கும் இந்த அரசு பல வகைகளில் உதவி செய்கிறது. கலையை ஆதரித்த கரிகால் மன்னன், நாட்டு மக்களின் கவலையை மறந்ததில்லை. அது போலவே தான் தமிழ்நாடு அரசும்!

பூம்புகார் கடற்கரை ஓரத்தில் குடிசைகளிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீனவ மக்களுக்கு 500 வீடுகள் கட்டித் தரப்போகிறது தமிழக அரசு.



பொலிவுடன் காட்சி தரும் குத்துவிளக்குகள்

இங்கு வாழும் மீனவர்களை 35 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு விசைப் படகு வழங்குவதற்கு அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது. 35 விசைப் படகுகளின் மொத்தச்செலவு எவ்வளவு தெரியுமா? ரூ. 18 இலட்சம்.

பூம்புகார் ஊரில் மட்டுமல்ல—பூம்புகார் வாழ் மீனவர்களின் வாழ்விலும் புது மாற்றத்தை—புதுச் சூழ்நிலையை— பொன்னான நல் வாய்ப்பை ஏற்படுத்தி வருகிறது தமிழக அரசு.

இரவு மணி ஏழாயிற்று! பூம்புகாரை விட்டு நாங்கள் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. பிரிவதற்கு மனமில்லாமல் பிரிந்து சென்றோம். இரவு எட்டு மணியளவில் மாயூரம் சென்று, ஒரு திருமண மண்டபத்தில் அனைவரும் தங்கினோம். இரவு உறக்கமே வரவில்லை. இரும்புக் கட்டில், இலவம் பஞ்சு மெத்தை, தலையணை, மின் விசிறி இவ்வளவு வசதிகள் இருந்தும் தூக்கம் வரவில்லை. காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தேன்! சில விநாடிகளில் புரிந்துவிட்டது! பூம்புகார்க் கலைக்கூடமும் அதிலுள்ள சுவர்ச் சித்திரங்களும் நெஞ்சத்தை விட்டு நீங்காமல், இமைகளில் நின்று கொண்டே இருந்தது தான் கண்கள் உறங்க மறுத்ததற்குக் காரணம் என்பது தெளிவாகியது. கற்பரசி கண்ணகியைக் கைதொழுது விட்டுக் கண்களை இறுக்க மூடிக்கொண்டேன். ஒரு வழியாகத் தூக்கம் வந்தது.

பொழுது விடிந்தது. என்னுடன் தங்கியிருந்த அகில இந்திய வானொலி நிலைய நிருபரின் கைக் கடியாரம் மணி 6-30 என்பதையும் தேதி 11 என்பதையும் சுட்டிக் காட்டியது.

காலைப் பணிகளை முடித்துவிட்டுச் சிற்றுண்டி அருந்தத் தொடங்கினோம்.

''சீக்கிரம் தயாராகுங்கள்! மாயூரம் புகைவண்டி நிலையம் வரை செல்ல வேண்டும்' என்ற குரல் கேட்டது.

''அடுத்த புரோகிராம்—ரயில் பிரயாணமா?'' என்று கேட்டார் ஒரு நிருபர்!

''அல்ல, அல்ல! மாயூரம் புகை வண்டி நிலையத்தின் அருகே உள்ள 'லெவல் கிராசிங்கின்' மேலே ஒரு பாலம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அதைப் பார்க்கப் போவோம்'' என்றார் அந்த உதவியாளர்.

சில விநாடிக்குள் மாயூரம் சட்ட மன்ற உறுப்பினர் திரு கிட்டப்பா அவர்கள் வந்தார்கள். பத்திரிகை நிருபர்களுடன் அறிமுகம் நடைபெற்றது. அந்தப் பாலத்தைக் காண்பிப்பதற்காகப் பத்திரிகையாளர்களை அழைத்துச் செல்வதற்குத்தான் அவரும் வந்திருக்கிறார் என்பது புரிந்தது.

அனைவருமாகப் பாலத்தைப் பார்க்கச் சென்றோம். 'பால

தின் இரண்டு பகுதி வேலைகளும் முடிவடைந்துவிட்டன. புகை வண்டி செல்லும் பாதையின் மேல் உள்ள பகுதிதான் இன்னும் முடிவடையவில்லை. விரைவில் முடிவடைந்துவிடும்.

பாலத்தின் மேலே நாங்கள் நின்று சில விநாடிகள் பேசிக் கொண்டிருந்தோம்; அதற்குள் எத்தனையோ ரயில்கள்—அந்தப் பகுதியில் சென்றன.

''இவ்வாறு நாலா திசைகளிலுமிருந்தும் ரயில்கள் வருவதால் இந்தப் பாதை எப்போதும் அடைக்கப்பட வேண்டியிருந்ததால்தான் இந்த மேல்பாலம் இங்கே கட்ட வேண்டிய அவசியம் நேர்ந்தது'' என்று சம்பந்தப்பட்ட பொதுப் பணித்துறை அலுவலாளர்களும், சட்ட மன்ற உறுப்பினரும் தெரிவித்தார்கள்.

நாகப்பட்டினம் வட்டாரத்தில் கும்பகோணம்—சீர்காழிப் பாதையில் மாயூரம் ரயில் நிலையத்தின் அருகில் இந்தப் பாலம் அமைவது அவசியந்தானா என்று ஆய்வு நடத்தியிருக்கிறார்கள். ஒரு நாளில் 24 மணி நேரத்தில் 11 மணி நேரம் இந்தப் பகுதியில்உள்ள ரயில் பாதைக் கதவு பூட்டப்பட்டிருந்தது என்பதையும் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது என்பதையும் ஆய்வாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதன் பின்னர், இந்த இடத்தில் மேல்பாலம் அவசியம் என்னும் முடிவுக்கு வந்தார்கள். 4-10-1971 அன்று பால வேலையைத் துவக்குவதற்கு அரசு ஆணையிட்டது. ஏறக்குறைய 4 இலட்ச ரூபாய்த் திட்டம் இது. இது வரை 33.84 இலட்சம் ரூபாய் செலவாகியுள்ளது. இதன் மொத்தச் செலவில் 50 சதவீதத்தை ரயில்வேத் துறையும் 25 சதவீதத்தை மாயூரம் நகராட்சியும், மீதி 25 சதவீதத் தொகையைத் தமிழக அரசும் ஏற்றுக் கொள்கின்றன.

இந்தப் பாலத்தின் மொத்த நீளம் 762 மீட்டர்—அதாவது 2499.36 அடிகள். அகலம் 9.8 மீட்டர் அதாவது 32 அடிகள். ஏறக்குறைய 5.13 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி உருவாக்கப்பட்டுவரும் இந்தப் பாலம் 1974-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களுக்குள் கட்டி முடிக்கப்பெறும் என்று தெரிகிறது.

மேலோராக இருந்த நாங்கள் திடீரென்று கீழோராக மாறி விட்டோம். அதாவது பாலத்தின் மேற் பகுதியில் நின்ற நாங்கள் மெதுவாக இறங்கிக் கீழ்ப் பகுதிக்கு வந்து சேர்ந்தோம்.

மாயூரம் மேல்பாலத்தைப் பார்த்து விட்டு நாகப்பட்டினத்தை நோக்கிப் புறப்பட்டோம். இரண்டு மணி நேரத்திற்குள் நாகப்பட்டினம் வந்து விட்டோம். உந்து ஓரிடத்தில் சென்று நின்றது.

''நாகப்பட்டினம் வந்து விட்டது, இறங்குங்கள்'' என்று ஒரு குரல் கேட்டது. வரவேற்பு அலுவலரின் குரல் தான் அது.

''அப்படீன்னு! காத்தான் சத்திரம் எங்கே இருக்கிறது?''—என்று கேட்டார் ஒரு நிருபர்.

''காத்தான் சத்திரமா! அப்படி ஏதும் இங்கே கிடையாதே!'' என்றார் உள்ளூர்க்காரர் ஒருவர்.

காளமேகப் புலவர் எழுதிய

கத்து கடல் சூழ் நாகைக்
காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில்
அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊர்அடங்கும்
ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.''

என்னும் செய்யுளை அந்த நிருபர் எப்போதோ படித்திருக்கிறார். அதனால்தான் அந்தச் சத்திரத்தைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

''சத்திரம் எதையும் இங்கே தேட வேண்டாம்! நமக்கு மதியச் சாப்பாடு திருவாரூரில்-ஆரூரான் திருமண மண்டபத்தில்'' என்று வரவேற்பு அலுவலர் சொல்லிய பிறகு தைரியமாக அந்த நிருபர் உந்தை விட்டு இறங்கி வெளியே வந்தார்.

ஒரு கட்டடத்திற்குள் நுழைந்தோம்! வாசலிலேயே ஒரு கரும் பலகை எங்களை வரவேற்றது! ''பத்திரிகையாளர்களே வருக! வருக!'' என்று அதிலே எழுதப்பட்டிருந்தது. உடனே எங்கிருந்தோ ஒரு தெம்பு—ஒரு பெருமிதம் எங்கள் அகங்களிலும் முகங்களிலும் தோன்றத் தொடங்கின. அந்தப் பெருமிதத்தை



அடக்கிக் கொண்டு எங்கே வந்திருக்கிறோம் என்று உற்றுப் பார்த்தோம். ''அரசு படகு கட்டும் தளம்'' என்ற பெயர்ப் பலகை கண்களில் பட்டது. மறு விநாடி, படகு கட்டும் தளத்தைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்கும் பணியில் இறங்கினோம்.

ஏறக்குறைய 14.23 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் ஒரு பகுதியில் படகு கட்டும் தளம் அமைந்துள்ளது. 15—6—64-லிருந்து படகு கட்டும் வேலை இங்கு நடைபெற்று வருகிறது.

படகு கட்டுவதற்கு முக்கியமாக, அயினி, வெண் தேக்கு, கருமருது, வேங்கை முதலிய மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. படகின் சில முக்கிய பாகங்களான ஏரா, அணியம், அட்டி முதலியவை உருவாக்க அயினி மரங்களும், பக்கப் பலகைகளுக்கு அயினி, வெண் தேக்கு மரங்களும் பயன்படுத்தப் படுகின்றன. இயந்திரம் பொருத்துவதற்கு கருமருது மரம் பயன்படுத்தப்படுகிறது. மற்ற பாகங்களுக்கு வேங்கை, வெண்தேக்கு ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. 30 அடி படகு கட்டி முடிக்க ஏறக்குறைய 10,500 க. மீட்டர் மரம் பயன்படுத்தப் படுகிறது.

படகுகள் செய்வதற்குத் தேவைப்படும் மரங்கள் வனத்துறையால் வழங்கப்படுகின்றன. இது தவிர ஒப்பந்தப் புள்ளிகளின் மூலமாகவும் வர வழைக்கப்படுகின்றன.

இங்கே 30 அடி நீளமுள்ள படகுகள் ஆண்டொன்றுக்கு 40 தயாரிக்கப்படுகின்றன. இத்தளத்தில் கட்டப்படும் படகுகள் மீன் துறை இயக்குநரால் மீனவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. பிறகு, சம்பந்தப்பட்ட மீன் துறை உதவி இயக்குநர்களிடம் படகு வழங்க ஆணை பெற்ற பின்னர் படகுகள் வழங்கப்படுகின்றன.

படகு கட்டும் நிலையத்துடன் படகுப் பராமரிப்பு நிலையம் ஒன்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. 1964-ஆம் ஆண்டு துவக்கப்பட்டதுதான் இது என்றாலும் தற்காலிகமாகவே இருந்து வந்தது. 20-7-1967 முதல் இது நிரந்தரமாக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

மீனவர்க்கு வழங்கப்பட்ட விசைப் படகுகளின் இயந்திரங்களை நல்ல முறையில் பராமரிப்புச் செய்வதற்குத் துணை புரிவதே இந்த நிலையத்தின் முக்கிய குறிக்கோளாகும். தஞ்சை மாவட்டக் கடலோரப் பகுதிகளில் இயங்கும் படகுகளை இந்த நிலையம் கவனித்து வருகிறது. திங்கள் தோறும் படகுப் பராமரிப்பு நிலையக் கடல் துறை முதல்வரும் பொருத்துபவரும் படகுகள் இயங்கும் பகுதிகளுக்குச் சென்று படகு உரிமையாளர்களுக்கு அவ்வப்போது படகுகளின் பராமரிப்புக் குறித்து அறிவுரை வழங்குகிறார்கள்.

இந்த நிலையத்தில் படகுகள் பழுது பார்க்கப்படுகின்றன. பழுது பார்க்கக்கூடிய பணிகளுக்கேற்றவாறு குறிப்பிட்ட தொகைகள் வசூலிக்கப் படுகின்றன. மேலும் இங்கேயுள்ள உதிரிப் பாகங்களான எயில்சா, பக், யான்மார், கிராக், டார்பிடோ ஆகியவை தேவையான படகுச் சொந்தக்காரர்களுக்கு விலைக்கு விற்கப் படுகின்றன.

ஆண்டுதோறும் இதன் வருமானம் அதிகரித்து வருகிறது. படகு கட்டும் தளம்—எதிர்காலத்தில் இன்னும் அதிக வருமானத்தைத் தரும் என்பது உறுதி.

இங்கே மீனவர் பயிற்சி நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. 1—10—1956-இல் சென்னையில் முதன் முதலாகத் துவக்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையம் 15—4—67 முதல் நாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

முன்னெல்லாம், சென்னை, செங்கை, தென் ஆர்க்காடு, தஞ்சை மாவட்டங்களிலிருந்து பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இப்போது தேவை அதிகரித்து விட்டது. அதனால், சென்னை, கடலூர், மண்டபம், தூத்துக்குடி, குளச்சல் ஆகிய இடங்களில் தனித் தனியாக மீனவர் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. அதனால் நாகப்பட்டினப் பயிற்சி நிலையத்தில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் மட்டுமே தற்போது பயிற்சியாளராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். புதுவை மாநிலத்திலென்று தனிப் பயிற்சி நிலையம் இல்லாததால் காரைக்கால் பகுதியிலிருந்து குறிப்பிட்ட அளவு மாணவர்களை நாகைப் பயிற்சி நிலையத்துக்கு அனுப்பி வருகிறது புதுவை அரசு.

### மீனவர் பயிற்சி நிலையம், நாகப்பட்டினம்

இரண்டாவது உலகப்பெரும் போருக்குப் பிறகு, மீன் பிடி தொழில் அதிக முக்கியத்துவம் பெற்றுச் சிறப்பானதொரு நிலையை எட்டியது. நவீன மீன் பிடி கப்பல்கள், கருவிகள் முதலியவைகளைக் கொண்டு, மீன் பிடி உற்பத்திப் பெருக்கத்திற்கு, மீன் பிடி தொழிலில் வளர்ச்சி காண வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இந்தியா போன்ற வளரும் நாடுகளில், இத் தொழிலின் முன்னேற்றத்திற்கு, மீனவர்களின் அறியாமை, பெரும் முட்டுக்கட்டையாக இருந்தது. இவர்களுக்குப் போதிய கல்வியறிவை அளிப்பதன் மூலமும் மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயரப் பலவகைத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமும்தான் இந்தியாவில் மீன் உற்பத்திஅதிகம் ஏற்படவாய்ப்பிருந்தது. மேலும் மீன் பிடி தொழிலை நவீனப் படுத்துவதற்கு, முதல் கட்டமாக, இத் தொழிலை இயந்திர மயமாக்கும் திட்டம் செயல்படத் துவங்கியது. மீன் பிடி இயந்திரப் படகுகள், அரசினரால் கட்டப்பட்டு மீனவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த வகை விசைப் படகுகளைக் கொண்டும் நவீன மீன் பிடி சாதனங்களைக் கொண்டும் மீன் பிடிக்க மீனவர்களுக்குத் தனியானதொரு பயிற்சித் திட்டம் தேவைப்பட்டது. இந்த அவசியத்தின் விளைவாகத்தான், கரையோர மீனவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காகத் தமிழ் நாடு அரசினரால், ஆங்காங்கே மீனவர் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வகை மீனவர் பயிற்சி நிலையங்களில் 10 மாத காலத்திற்கு மீனவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில்சேர்த்துக் கொள்ளக் கீழ்க்கண்டவாறு தகுதிகள் நிர்ணயிக்கப் பட்டுள்ளன :—

எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும். வயது வரம்பு 18 வயது முதல் 35 வரை. கடல் மீன் பிடி தொழிலில் குறைந்தது 5 வருட அனுபவமும் நல்ல உடல் அமைப்பும் பெற்றிருக்க வேண்டும்.

இப்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்குச் சிறப்பான முறையில், மீன்பிடி தொழில் சம்பந்தமாய் பல வகைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இவை தவிர பயிற்சியாளர்களுக்கு, முதலுதவி வகுப்புகள் நடத்தித் தேர்வு வைத்து, அதில் வெற்றி பெறுபவர்களுக்குச் சான்றிதழ் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

பயிற்சி முடியும் காலத்தில், பயிற்சியாளர்கள் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மீன் பிடிப்பு முக்கியத்துவம்வாய்ந்த இடங்களுக்கு அழைத்துச் சென்று, ஆங்காங்கே நடைபெறும் பணிகள் நேரில் காட்டப்படுகின்றன. இதற்காக அரசினரால் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ. 15 வழங்கப் படுகிறது.

மேலும் பயிற்சிக் காலத்தில் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 50 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும் கடலுக்குச் செல்லும் ஒவ்வொரு பயிற்சியின் இறுதி மாதத்தில் மாணவர்களுக்கு, தேர்ந்தெடுக்கப் பட்ட குழுவினரால், 1. மீன் பிடி இயல், 2. மாலுமி இயல், 3. இயந்திரப் பாடம் என்னும் செயல்முறைத் தேர்வு என்றும் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அதில் வெற்றி பெறும் மாணவர்களுக்குத் தமிழ் நாடு அரசு மீன் துறையினரால் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

நாகப்பட்டினம் பயிற்சி நிலையத்தில், வெளியூர் மாணவர்கள் தங்கிப் படிக்க இலவச விடுதி வசதிகள் உள்ளன. இதில் தங்கிப் படிக்கும் மாணவர்கள் அவர்கள் சாப்பாட்டுக்குச் சொந்தமாக ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மீனவர் பயிற்சி நிலையம், நாட்டின் மீன் உற்பத்தித் திட்டங்களுக்கு ஒரு முன்னோடித் திட்டமாகச் செயல்பட்டு வருகிறது. பயிற்சி பெற்ற மீனவர்கள், அரசினரால் வழங்கப்படும் விசைப் படகுகளின் மூலம் தொழில் செய்து பொருளாதார முன்னேற்றத்திற்கும், மீன் உற்பத்திக்கும் பலவகைகளிலும் உதவி புரிந்து வருகிறார்கள்.

மீன் பிடிப்பதற்கு உதவுகின்ற சில கருவிகள் இங்கே



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
[illegible]

காட்சிப் பொருளாக வைக்கப் பெற்றுள்ளன. மீன் பிடிக்கும் முறைகளைக் குறித்த விளக்கங் களுடன் பலகைகளில் எழுதி தொங்கவிட்டுள்ளனர்.

தற்போது நாகப்பட்டினத் தில் மீனவர் பயிற்சி நிலையத் தின் பொறுப்பில் ஒரு பனிப் பொறி குளிர் அறை நிலயம் செயல்பட்டு வருகிறது.

இப் பனிப் பொறி குளிர் அறை நிலயம் ஒரு நாளில் இரண்டு டன் பனிக் கட்டி உற்பத்தி செய்ய வல்லது. இதில் உள்ள குளிர் அறை யில் இரண்டு டன் மீன்களைச் சேமித்து வைக்கவும் வசதி யுள்ளது.

இதில் உற்பத்தியாகும்பனிக் கட்டியை மீனவர்களுக்கு கிலோ 9 காசு எனவும், 50 கிலோ கொண்ட ஒரு பார் ரூ. 4.50 எனவும், ஒரு டன் ரூ. 85.00 எனவும் விற்கப்படு கிறது. குளிர் அறையில் மீன் களைப் பாதுகாத்து வைக்க ஒரு நாளைக்கு கிலோ ஒன்றுக்கு 0.04 காசு எனவும் வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது இதனால் இப் பகுதியில் உள்ள மீனவர்கள் மிகவும் பயன் பெற்று வருகிறார்கள்.

படகு கட்டும் தளம், மீன் பிடி பயிற்சி நிலயம் ஆகிய வற்றை எல்லாம் பார்த்தவு டன் அனைவருக்கும் பசி ஏற் பட்டுவிட்டது. எங்கள் நிலையை யறிந்த நிருவாகத்தினர் பிஸ்கோத்து, பழம், காப்பி எல்லாம் வழங்கினார்கள். என் றாலும் யானைப் பசிக்குச் சோளப் பொரி என்பதுபோல இருந்தது அந்தச் சிற்றுண்டி. அவசர அவசரமாக உந்துக் குள் ஏறி அமர்ந்தோம். பகல் 1-30 மணியளவில் திருவாரூர் ஆரூரான் திருமண மண்ட பத்தை அடைந்தோம். அங்கே உணவு எங்களை எதிர்கொண்டு வரவேற்றது. உணவருந்தி விட்டுச் சில மணித் துளிகள் ஓய்வு எடுத்துக் கொண்டோம். புகழ் பெற்ற தேர் இருக்குமிட மறிந்து, வேகாத அந்த வெய்யி லிலும் ஓடிச் சென்று பார்த் தோம்! அப்பப்பா! எவ்வளவு உயரமான தேர், கண்டவர் வியப்பதில் வியப்பே இல்லை என்பது புரிந்தது.

4 மணியளவில் திருவாரூரை விட்டுப் புறப்பட்டோம். அடுத்து நாச்சியார் கோயிலை அடைந்தோம். அங்கே உள்ள உலோகத்தால் மணி செய்யும் நிலயத்தினுள் நுழைந்தோம்.

வகை வகையான மணிகள் — குத்து விளக்குகள் — சர விளக்குகள்—இப்படி ஆல யங்களில் பூசைக்குப் பயன் படுத்தப் பெறும் பொருள்கள் இங்கு மிகுந்த அளவில் தயா ராகின்றன. இந்துக்கள், கிறித் தவர்கள் என்று வேற்றுமை உலகத்தில் இருக்கலாம். ஆனால், அது மணி தயாரிக்கும் இந்த நிறுவனத்துக்குக் கிடை யாது. எப்படித் தெரியுமா? இங்கே தயாரிக்கப்படும் மணி கள் முருகன் கோயிலுக்கும் செல்கின்றன; அந்தோணியார் கோயிலுக்கும் செல்கின்றன.

சென்னை அடையாற்றில் உள்ள வேளாங்கண்ணி ஆல யத்தில் கடந்த செப்டம்பர் திங்களில் முதல்வர் கலைஞர் அவர்களால் திறக்கப்பெற்ற மணிக் கூண்டில் அமைக்கப் பட்டுள்ள பெரிய அளவு மணி இந்த நிலயத்தில் செய்யப் பட்டதுதான் என்பது குறிப் பிடத் தக்கது.

இந்த நிலயத்தின் தயாரிப் புகள் தொழில் துறையின் விற் பனை நிலயங்களின் வாயி லாகவே விற்கப்படுகின்றன. ஆலயங்கள், மற்றும் தனியார் ஆகியோருக்குத் தேவைப்படும் மணிகளையும், விளக்குகளையும் இந்த நிலயம் நேரடியாகக் கொடுத்து வருகிறது.

இங்கே பயிற்சி நிலயமும் உள்ளது, பணி நிலயமும் உள் ளது. பயிற்சி இரண்டாண்டுக் காலம். 15 மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்கள். பயிற்சி யாளருக்கு ரூ. 50 உதவித் தொகையாக வழங்கப் படுகிறது. பாட வகுப்புகளும், பயிற்சி வகுப்புகளும், ஓவிய வகுப்புகளும் நடத்தப் படுகின்றன.

உலோக மணி உருவாக்கும் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றினை அரசு உரு வாக்கியுள்ளது; இது தமிழ் நாட்டு அரசின் தொழில் துறையைச் சார்ந்த நிறுவன மாக விளங்குகிறது.

இங்குப் பயிற்சி பெற்றவர் களில் 90 பேர் அரசுத் துறை நிறுவனங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.

இந்த நிலயத்தின் தயாரிப் பான குத்துவிளக்குகள் காண்ப தற்கு மிகுந்த கவர்ச்சியைத் தருகின்றன. பித்தளைக் குத்து விளக்குகள்தாம் அவை! என் றாலும் வேலைப்பாட்டின் அருமைகண்களையும், கருத்தை யும் கவர்ந்து கொண்டிருந்தது.

''நல்ல வேளை ! தப்பித் தோம்! இல்லக் கிழத்தியை அழைத்துச் செல்லவில்லை ! சென்றிருந்தால் அங்குக் காணப்படும் அத்தனை விளக்கு களையும்வாங்கவேண்டும் என்று சொல்லியிருப்பாள்!'' என்று நினைத்துக் கொண்டே, நிலை யத்தைவிட்டு வெளியேறி, உந்துக்குள்அமர்ந்தோம்.

''அடுத்து சுவாமிமலைக்குச் செல்கிறோம்'' என்றார் வர வேற்பு அலுவலர்.

''சாமிநாதனைத் தரிசிப்ப தற்காகவா?''—சில நிருபர் கள் கேட்டனர்.

''அதுமட்டுமல்ல, சுவாமி மலையில் உள்ள உலோகச்சிலைப் பயிற்சி நிலயத்தையும் உற் பத்தி நிறுவனத்தையும் பார் வையிட வேண்டும்'' என்றார்.

உந்து, சுவாமிமலையை நோக்கிப் புறப்பட்டது . . .

(அடுத்த இதழில் முடியும்)



ாத்தில் உருவாகும் மேற்பாலம்


வண்ணத்துப் பூச்சியின்
வண்ணமிகு கோலங்கள்!
• அசல் காஞ்சிபுரம், ஆரணி, மற்றும் கும்பகோணம் பட்டுப் புடவைகள்
• பருத்திப் புடவைகள் • லுங்கிகள்
• வேட்டிகள் • வீட்டு அலங்காரத் துணி வகைகள் • துண்டுகள் • கைக்குட்டைகள்
• பட்டு டைகள் • கிளாசிக் ரெடிமேட் ஷர்ட்டுகள்
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்
கைத்தறியே வண்ணத்துப் பூச்சி!

பதிவு எண். M. 8676

# உங்களுக்கு தெரியுமா?




## உங்களுக்குத் தெரியுமா?

தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில் செலவிடப்படுகிறது.

## உங்களுக்குத் தெரியுமா?

இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும் பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.
உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.